1. பரிசுத்த வேதாகமம் - பெயர் விளக்கம்

வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தை. தேவன் பேசிய வார்த்தைகளும், அவருடைய சிந்தனைகளும் வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளன. தேவனுடைய மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு, பரிசுத்த வேதாகமத்தை எழுதினார்கள்.

ஆகமம் என்றால் புத்தகம் அல்லது நூல் என்று பொருள்படும். வேதாகமம் என்றால் தேவனைப் பற்றிய நூல் என்பது பொருளாகும். இந்த நூல் பரிசுத்த தேவனைப் பற்றிய ஆகமம். ஆகையினால், இந்த நூலை பரிசுத்த வேதாகமம் என்று அழைக்கிறோம்.

பரிசுத்த வேதாகமத்தை ஆங்கில மொழியில் "பைபிள்" என்று அழைக்கிறார்கள். பைபிள் என்னும் சொல் கிரேக்க மொழியிலிருந்து எடுக்கப்பட்டுள்ள சொல்லாகும். கிரேக்க மொழியில் "பிப்ளியா" என்னும் சொல்லுக்கு புஸ்தகங்கள் என்று பொருள். தானியேல் தீர்க்கதரிசி "புஸ்தகங்கள்" என்னும் சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார் (தானி 9:2).

பழைய ஏற்பாடு முதன் முதலில் எபிரெய மொழியில் எழுதப்பட்டது. இதைப் பிற்காலத்தில் கிரேக்க மொழியில் மொழிபெயர்த்தார்கள். இந்த கிரேக்க மொழிபெயர்ப்பிற்கு "செப்துவஜிந்து" என்று பெயர். இந்த மொழிபெயர்ப்பில் தானியேல் 9:2-வது வசனத்தில் "புஸ்தகங்கள்" என்னும் சொல்லைக் குறிப்பதற்கு "பிப்ளியோஸ்" என்னும் கிரேக்கச் சொல்லை முதன் முதலில் பயன்படுத்தினார்கள்.

ஆதித்திருச்சபையினர் "பிப்ளியா" என்னும் சொல்லால் பழைய ஏற்பாட்டைக் குறிப்பிட்டார்கள். நாளடைவில் முழு வேதாகமத்தையும் குறிப்பதற்கு "பிப்ளியா" என்னும் சொல்லைத் திருச்சபையார் பிரதானமாக பயன்படுத்தி வந்தார்கள். இதன் பொருள் "புஸ்தகங்கள்" என்பதாகும்.

ஆதித்திருச்சபைத் தலைவர்களில் ஒருவராகிய ஏரோம் என்பவர் பரிசுத்த வேதாகமத்தைக் குறிப்பதற்கு "தெய்வீக நூலகம்" என்னும் சொல்லைப் பயன்படுத்தினார். இவர் கி.பி. 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

கி.பி. 13-ம் நூற்றாண்டில் பரிசுத்த வேதாகமத்தைப் "புஸ்தகங்கள்" என்று பன்மையில் அழைப்பதற்குப் பதிலாக "புஸ்தகம்" என்று ஒருமையில் அழைத்தார்கள். பரிசுத்த வேதாகமத்திலுள்ள 66 புஸ்தகங்களும் "புஸ்தகம்" என்று ஒருமையில் அழைக்கப் படுவதினால், இதை ஒரே புஸ்தகமாகவே நாம் தியானிக்க வேண்டும்.

தமிழ் மொழியில் "பரிசுத்த வேதாகமம்" என்னும் பெயர் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. இதில் 66 ஆகமங்கள் இருப்பினும் இதைப் "பரிசுத்த வேதாகமங்கள்" என்று அழைக்காமல் "பரிசுத்த வேதாகமம்" என்று அழைப்பது மிகவும் பொருத்தமாக உள்ளது.

2. வேதாகம மொழி

வேதாகம ஆசிரியர்கள் பழைய ஏற்பாட்டை எபிரெய மொழியில் எழுதினார்கள். ஆயினும், கீழே கொடுக்கப்பட்டுள்ள வேதப்பகுதிகள் எபிரெய மொழியில் எழுதப்படவில்லை.

எஸ்றா 4:8 - 6:18; 7:12-26

எரேமியா 10:11

தானியேல் 2:4 - 7:28

இந்த வேதப்பகுதிகளை வேதாகம ஆசிரியர்கள் அரமாயிக் மொழியில் எழுதினார்கள். இது கல்தேயருடைய மொழி என்றும் அழைக்கப்படுகிறது. எபிரெய மொழியின் பேச்சு வழக்கே அரமாயிக் மொழியாகும். இஸ்ரவேலரின் சிறையிருப்புக்கு பிந்திய காலத்தில் அநேகமாக யூதர்கள் அனைவரும் அரமாயிக் மொழியிலேயே பேசினார்கள்.

புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் புதிய ஏற்பாட்டு நூல்களைக் கிரேக்க மொழியில் எழுதினார்கள். இந்தக் கிரேக்க மொழியிலும் எபிரெய மொழிக் கலப்பு அதிகமாக இருந்தது. கிரேக்க மொழியில் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டு நூல்களில் எபிரெயர்களின் பழக்கவழக்கங்கள், பழமொழிச் சொற்கள் ஆகியவை அதிகளவில் இடம் பெற்றுள்ளன. இயேசு கிறிஸ்துவின் காலத்தில் ரோமாபுரிப் பேரரசு முழுவதிலும் கிரேக்க மொழியே பொதுவான மொழியாக வழக்கில் இருந்தது. பல ஊர்களுக்கும் பயணம் செய்த வணிகர்கள் கிரேக்க மொழியிலேயே பேசினார்கள். கிறிஸ்தவ உபதேச நூல்களையும் கிரேக்க மொழியிலேயே எழுதினார்கள்.

தற்காலத்தில் பரிசுத்த வேதாகமம் ஆயிரக்கணக்கான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, அச்சடிக்கப்பட்டிருக்கிறது. உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் பரிசுத்த வேதாகமத்தைத் தங்கள் தாய்மொழிகளிலேயே வாசித்து தியானித்து தேவ ஆசீர்வாதம் பெற்று வருகிறார்கள்.

3. வேதாகமத்தின் உட்பிரிவுகள்

பரிசுத்த வேதாகமத்தில் மொத்தம் 66 புஸ்தகங்கள் உள்ளன. இவற்றைப் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள்.

பழைய ஏற்பாட்டில் மொத்தம் 39 நூல்களும், புதிய ஏற்பாட்டில் மொத்தம் 27 நூல்களும் உள்ளன.

பழைய ஏற்பாட்டு நூல்கள்

பழைய ஏற்பாட்டிலுள்ள 39 நூல்களையும் ஐந்து உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. ஐந்தாகமம்..............................5
2. வரலாற்று நூல்கள்.......... 12
3. பாடல் நூல்கள்...................5
4. பெரிய தீர்க்கதரிசிகள்.......5
5. சிறிய தீர்க்கதரிசிகள்...... 12

ஒவ்வொரு உட்பிரிவிலும் அடங்கியுள்ள நூல்களின் விவரம்:

1. ஐந்தாகமம்
   1. ஆதியாகமம்
   2. யாத்திராகமம்
   3. லேவியராகமம்
   4. எண்ணாகமம்
   5. உபாகமம்
2. வரலாற்று நூல்கள்
   1. யோசுவா
   2. நியாயாதிபதிகள்
   3. ரூத்
   4. I சாமுவேல்
   5. II சாமுவேல்
   6. I இராஜாக்கள்
   7. II இராஜாக்கள்
   8. I நாளாகமம்
   9. II நாளாகமம்
   10. எஸ்றா
   11. நெகேமியா
   12. எஸ்தர்
3. பாடல் நூல்கள்
   1. யோபு
   2. சங்கீதம்
   3. நீதிமொழிகள்
   4. பிரசங்கி
   5. உன்னதப்பாட்டு
4. பெரிய தீர்க்கதரிசிகள்
   1. ஏசாயா
   2. எரேமியா
   3. புலம்பல்
   4. எசேக்கியேல்
   5. தானியேல்

5. சிறிய தீர்க்கதரிசிகள்

1. ஓசியா
2. யோவேல்
3. ஆமோஸ்
4. ஒபதியா
5. யோனா
6. மீகா
7. நாகூம்
8. ஆபகூக்
9. செப்பனியா
10. ஆகாய்
11. சகரியா
12. மல்கியா

புதிய ஏற்பாட்டு நூல்கள்

புதிய ஏற்பாட்டிலுள்ள 27 நூல்களையும் ஐந்து உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. சுவிசேஷங்கள்.............................4
2. வரலாற்று நூல்..........................1
3. பவுலின் நிருபங்கள்..................14
4. பொதுவான நிருபங்கள்...........7
5. தீர்க்கதரிசன நூல்....................1

ஒவ்வொரு உட்பிரிவிலும் அடங்கியுள்ள நூல்களின் விவரம்:

1. சுவிசேஷங்கள்

1. மத்தேயு
2. மாற்கு
3. லூக்கா
4. யோவான்

2. வரலாற்று நூல்

1. அப்போஸ்தலருடைய நடபடிகள்

3. பவுலின் நிருபங்கள்

1. ரோமர்
2. I கொரிந்தியர்
3. II கொரிந்தியர்
4. கலாத்தியர்
5. எபேசியர்
6. பிலிப்பியர்
7. கொலோசெயர்
8. I தெசலோனிக்கேயர்
9. II தெசலோனிக்கேயர்
10. I தீமோத்தேயு
11. II தீமோத்தேயு
12. தீத்து
13. பிலேமோன்
14. எபிரெயர்

4. பொதுவான நிருபங்கள்

1. யாக்கோபு
2. I பேதுரு
3. II பேதுரு
4. I யோவான்
5. II யோவான்
6. III யோவான்
7. யூதா

5. தீர்க்கதரிசன நூல்

1. வெளிப்படுத்தின விசேஷம்

யூதர்கள் பழைய ஏற்பாட்டு நூல்களைப் பிரித்த விதம்

யூதர்கள் பழைய ஏற்பாட்டு நூல்களை மூன்று உட்பிரிவுகளாகப் பிரித்தார்கள். அவையாவன:

1. நியாயப்பிரமாணம் - தோரா
2. தீர்க்கதரிசிகளின் ஆகமம் - நெபீம்
3. சங்கீதங்கள் - கெதுபிம்

இந்த உட்பிரிவுகளில் அடங்கியுள்ள நூல்களின் விவரம்:

1. நியாயப்பிரமாணம் - தோரா
   1. ஆதியாகமம்
   2. யாத்திராகமம்
   3. லேவியராகமம்
   4. எண்ணாகமம்
   5. உபாகமம்
2. தீர்க்கதரிசிகளின் ஆகமம் - நெபீம்
   1. யோசுவா
   2. நியாயாதிபதிகள்
   3. சாமுவேல்
   4. இராஜாக்கள்
   5. ஏசாயா
   6. எரேமியா
   7. எசேக்கியேல்
   8. சிறிய தீர்க்கதரிசிகள்
3. சங்கீதங்கள் - கெதுபிம்
   1. சங்கீதம்
   2. நீதிமொழிகள்
   3. யோபு
   4. உன்னதப்பாட்டு
   5. ரூத்
   6. புலம்பல்
   7. பிரசங்கி
   8. எஸ்தர்
   9. தானியேல்
   10. எஸ்றா - நெகேமியா
   11. நாளாகமம்

யூதர்களுடைய பழைய ஏற்பாட்டில் மொத்தம் 24 நூல்களே உள்ளன. ஆனால் நமது பரிசுத்த வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் 39 நூல்கள் உள்ளன.

சாமுவேல், இராஜாக்கள், நாளாகமம், எஸ்றா - நெகேமியா ஆகியவை எபிரெய மொழி பழைய ஏற்பாட்டில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நூலாகவே பிரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் 12 சிறிய தீர்க்கதரிசிகளின் நூல்களும் ஒரே நூலாகவே எபிரெய பழைய ஏற்பாட்டில் பிரிக்கப்பட்டிருக்கிறது.

யூதர்கள் தங்கள் பாரம்பரியத்தின் பிரகாரமாக பழைய ஏற்பாட்டை இவ்வாறு மூன்று உட்பிரிவுகளாகப் பிரித்து பயன்படுத்தி வந்தார்கள். இயேசு கிறிஸ்து தமது ஊழிய காலத்தில் இந்த மூன்று உட்பிரிவுகளையே பழைய ஏற்பாட்டு நூல்களைக் குறிக்க பயன்படுத்தினார்.

"மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக் கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார்". *(லூக் 24:44)*

பழைய ஏற்பாட்டு நூல்களை எஸ்றாவும், பெரிய ஜெப ஆலயத்தில் இருந்த 120 மனுஷர்களாகிய தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபத்நெகோ, சகரியா ஆகியோரும் இவ்வாறு மூன்று பிரிவுகளாக பிரித்தார்கள் என்பது யூதர்களின் நம்பிக்கையாகும்.

எஸ்றா பழைய ஏற்பாட்டு நூல்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்திருக்கலாம். ஆனாலும் மல்கியா தீர்க்கதரிசியின் புஸ்தகமும் 1 நாளாகமம் 3-வது அதிகாரத்தின் ஒரு பகுதியும் எஸ்றாவின் காலத்திற்கு பிற்பட்ட வரலாற்றைக் கூறுவதினால் எஸ்றா இவற்றைத் தொகுத்திருப்பதற்கு வாய்ப்பில்லை.

செப்துவஜிந்த்

பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பு செப்துவஜிந்து என்று அழைக்கப்படுகிறது. இதை மூன்று உட்பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள்.

1. வரலாற்று நூல்கள் – ஆதியாகமம் முதல் எஸ்தர் வரையிலும்
2. பாடல் நூல்கள் – யோபு சரித்திரத்திலிருந்து சாலொமோனின் உன்னதப் பாட்டு வரையிலும்
3. தீர்க்கதரிசின நூல்கள் – ஏசாயா தீர்க்கதரிசியிலிருந்து மல்கியா வரையிலும்

4. வேதாகமத்தின் காலப்பிரிவுகள்

பரிசுத்த வேதாகமம் ஆதியிலே வானமும், பூமியும் சிருஷ்டிக்கப்பட்டதிலிருந்து புதிய வானமும், புதிய பூமியும் உருவாக்கப்படும் வரையிலுமுள்ள நீண்ட காலப்பிரிவுகளை விளக்குகிறது.

வேதாகமத்தின் காலங்களை 9 உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. தூதர்களின் காலம்
   (ஆதி 1:1-2)
2. அறியாமையின் காலம்
   (ஆதி 1:3-3:24)
3. மனச்சாட்சியின் காலம்
   (ஆதி 4:1-8:14)
4. மனுஷ ஆளுகையின் காலம்
   (ஆதி 8:15-11:9)
5. வாக்குத்தத்தத்தின் காலம்
   (ஆதி 11:10; யாத் 12:51)
6. பிரமாணத்தின் காலம்
   (யாத் 12:1- மத் 3:17) மத் 11:10-13; லூக் 16:16)
7. கிருபையின் காலம்
   (மத் 4:1- வெளி 19:11)
8. தெய்வீக ஆட்சியின் காலம் (ஆயிரம் வருஷம் அரசாட்சி)
   (வெளி 20:1-15)
9. மீட்கப்பட்டோர், உண்மையுள்ள தூதர்கள் ஆகியோரின் காலம்
   (வெளி 21:1-22:21)

5. பரிசுத்த வேதாகமப் புத்தகங்களின் தொகுப்பு

பரிசுத்த வேதாகமத்தில் மொத்தம் 66 புத்தகங்கள் உள்ளன. இவற்றில் ஒன்றையும் குறைக்கவும் கூடாது. எதையும் கூட்டவும் கூடாது. ஏனெனில் இந்த 66 புஸ்தகங்கள் மட்டுமே பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டவையாகும். இவற்றுக்கு மட்டுமே தெய்வீக அதிகாரம் உண்டு.

பரிசுத்த வேதாகமத்தின் 66 புஸ்தகங்களையும் 44 பரிசுத்தவான்கள் எழுதினார்கள். தேவன் இவர்களைப் பயன்படுத்தினார். இவர்கள் சுமார் 1600 வருஷங்களாக எழுதினார்கள்.

எழுதப்பட்ட காலங்களிலும், இடங்களிலும், பின்னணிகளிலும் வித்தியாசமுண்டு. ஆனால் வேதாகம சத்தியத்தில் வேறுபாடுகளோ குளறுபடிகளோ இல்லை. ஏனென்றால் வேதாகமத்தின் ஆசிரியர் தேவனே. அவர் மனுஷனுக்கு தாம் கூற விரும்பியதை எழுதுவதற்காகச் சில பரிசுத்தவான்களைத் தெரிந்தெடுத்து அவர்கள் மூலமாக எழுதினார்.

யாத்திராகமம் புஸ்தகத்தில் தேவன் தமது கைப்படவே எழுதினார் என்று நாம் இரண்டு வசனங்களில் வாசிக்கிறோம்.

யாத் 31:18: “சீனாய்மலையில் அவர் மோசேயோடே பேசி முடிந்தபின், தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளை அவனிடத்தில் கொடுத்தார்”.

பரிசுத்த வேதாகமம் - முன்னுரை

யாத் 32:16: "அந்தப் பலகைகள் தேவனால் செய்யப்பட்டதாயும், அவைகளிலே பதிந்த எழுத்து தேவனால் எழுதப்பட்ட எழுத்துமாயிருந்தது".

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் எழுதிய செய்திகளைப் புஸ்தக வடிவில் தொகுக்க வேண்டும். அதற்காகத் தேவன் மோசேயை முதன் முதலாகத் தெரிந்தெடுத்தார்.

உபா 31:24: "மோசே இந்த நியாயப் பிரமாணத்தின் வார்த்தைகள் முழுவதையும் ஒரு புஸ்தகத்தில் எழுதி முடிந்தபின்பு......."

பரிசுத்த வேதாகமத்தில் கர்த்தர் சொல்லுகிறார், தேவன் சொல்லுகிறார், யெகோவா சொல்லுகிறார் என்னும் சொற்கள் 2500 தடவைகளுக்குமேல் பயன்படுத்தப் பட்டுள்ளன. மனுஷன் சொல்லுகிறான், ராஜா சொல்லுகிறார், ராணி சொல்லுகிறாள், மந்திரி சொல்லுகிறார் என்று பரிசுத்த வேதாகமத்தில் எங்குமில்லை.

ஆதி காலம் முதல் தேவன் வெளிப்படுத்தினவைகளை, அவரோடு சஞ்சரித்த மனிதர்கள் எழுத்து வடிவில் எழுதி வைத்தனர். ஆதாம், ஏனோக்கு, நோவா முதலியோர் எழுதியவற்றை இன்று நாம் அப்படியே பெற்றுக் கொள்ள முடியவில்லை. ஆயினும், அவர்கள் எழுதி வைத்தவை காலா காலங்களில் நகல் எடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டது. இவற்றை மோசே உபயோகித்து இருக்க வேண்டும்.

பஞ்சாகமம் என்று கூறப்படும் முதல் ஐந்து ஆகமங்களாகிய ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகியவற்றை முதலில் ஒரு புத்தகமாக தொகுத்து மக்களுக்குக் கொடுத்தவர் மோசே. இதுதான் தோரா என்னும் நியாயப்பிரமாண புத்தகம். இது எகிப்தில் இருந்து கானானுக்கு வந்த இஸ்ரவேல் மக்களால் பயன்படுத்தப்பட்டது.

இதற்குப் பின் இன்னும் தேவனுடைய அநேக பிள்ளைகள் மூலம் கர்த்தர் பல காரியங்களை வெளிப்படுத்தி உள்ளார். அவைகளும் எழுதப்பட்டு பாதுகாக்கபட்டன. யோசுவா புத்தகத்தின் பல பகுதியை யோசுவாவே எழுதியுள்ளார்.

நியாயாதிபதிகளைக் குறித்து எழுதப் பட்டவைகளை சாமுவேல் ஒரு புத்தகமாக தொகுத்தார் என்று கருதப்படுகிறது. சாமுவேல், காத், நாத்தான் முதலியோர் விட்டுச் சென்ற குறிப்புகளை வைத்து இராஜாக்களின் காலத்தில் சாமுவேலின் புத்தகம் தொகுக்கப்பட்டது.

நாளாகம புத்தகத்தை எஸ்றா எழுதியதோடு மட்டுமல்லாது, சுமார் கி.மு. 400-ல் பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் யாவற்றையும் பிரமாணங்கள், தீர்க்கதரிசிகள், மற்றைய புத்தகங்கள் என்று வரிசைப்படுத்தி, ஒழுங்குபடுத்தி ஒரே புத்தகமாகத் தொகுத்தார்.

கிரேக்க மொழியில் "கேனான்" என்னும் சொல்லுக்கு "அளவுகோல்" என்று பொருள். பரிசுத்த வேதாகமத்திலுள்ள 66 நூல்களும் எந்த அடிப்படையில் வேதாகம நூல்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. மற்ற நூல்களை எந்த அடிப்படையில் வேதாகம நூல்கள் அல்ல என்று தள்ளி வைத்தார்கள் என்பதை இந்த அளவுகோல் விளக்கும்.

வேதாகம நூல்களை ஒரு முழு வேதாகமமாகக் கோர்ப்பதற்கு ஆதித்திருச் சபையின் தலைவர்கள் இந்தக் "கேனான்"-ஐ பயன்படுத்தினார்கள். இதன் பிரகாரம் ஒரு நூல் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, எழுதப்பட்டதா அல்லது அவ்வாறு எழுதப்படவில்லையா என்பதைக் "கேனான்"-இன் அடிப்படையிலேயே முடிவு செய்தார்கள்.

ஆரம்பத்தில் ஒவ்வொரு நூலாகப் பரிசுத்த வேதாகமத்தில் சேர்த்துக் கொண்டே வந்தார்கள். அதன்பின்பு, சபையின் சட்டத்தின் பிரகாரம் சபை மூப்பர்கள் ஒன்று சேர்ந்து பரிசுத்த வேதாகமத்தில் நாம் இப்பொழுது காணும் 66 நூல்களை மட்டுமே அங்கீகாரம் பண்ணினார்கள். மற்ற நூல்களைத் தள்ளுபடி ஆகமங்கள் என்று கூறி அவற்றைத் தள்ளி விட்டார்கள்.

கி.மு. 294-289-ஆவது ஆண்டு காலத்தில் பழைய ஏற்பாட்டின் செப்துவஜிந்து கிரேக்க மொழிபெயர்ப்பு நிறைவு பெற்றது. இந்த காலத்தில் பழைய ஏற்பாட்டில் 39 நூல்கள் மட்டுமே பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, எழுதப்பட்டது என்று ஆலோசனைச் சங்கத்தார் தீர்மானம் பண்ணி விட்டார்கள்.

சான்கெட்ரின் என்று அழைக்கப்பட்ட ஆலோசனைச் சங்கம் எருசலேம் நகரத்தில் செயல்பட்டு வந்தது. கி.பி. 70-ஆவது ஆண்டில் எருசலேம் நகரம் அழிந்தது. இங்கு செயல்பட்டு வந்த ஆலோசனைச் சங்கம் திபேரியு பட்டணத்திற்கும் அதன் பின்பு யாம்மியா பட்டணத்திற்கும் இடம் பெயர்ந்தது. யாம்மியா பட்டணம் யோப்பாவிற்கு தெற்கே 13 மைல் தொலைவிலிருந்த சிறிய நகரமாகும்.

கி.பி. 90-ஆவது ஆண்டில் ஆலோசனைச் சங்கம் மறுபடியும் கூடி, பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, எழுதப்பட்டவை 39 நூல்கள் மட்டுமே என்று தீர்மானம் பண்ணினார்கள். இதர நூல்களையெல்லாம் யூதர்களுடைய வேதாகமத்தில் சேர்க்காமல் தள்ளிவிட்டார்கள். இவ்வாறு தள்ளப்பட்ட புத்தகங்கள் தள்ளுபடி ஆகமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை கி.மு. 3-ஆவது நூற்றாண்டில் எழுதப்பட்டவையாகும்.

இவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட ஆகமங்கள் நீங்கலாக, மீதமுள்ள 39 புத்தகங்கள் அடங்கிய தொகுப்பிற்கு "பாலஸ்தீன கேனான்" என்று பெயர். இந்தக் கேனானில் இடம்பெற்றுள்ள 39 நூல்களை உலகெங்கிலுமுள்ள புராட்டெஸ்டென்ட் சபையார் பயன்படுத்தி வருகிறார்கள்.

இயேசு கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் பாலஸ்தீன கேனானிலுள்ள 39 நூல்கள் அடங்கியுள்ள பழைய ஏற்பாட்டை அங்கீகரித்திருக்கிறார்கள். (மத் 21:42; 22:29; 23:43; லூக் 11:51; 24:27-32, 44; யோவா 5:39; 10:35; 2 தீமோ 3:15-17)

பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் முரண்பாடு எதுவுமில்லை. பரிசுத்த வேதாகமத்தில் 66 புத்தகங்கள் சேர்க்கப்பட்டுள்ள காரியம் முடிவு பெற்ற விஷயம். ஆகையினால், இனிமேல் இதில் எதையும் கூட்டவோ, குறைக்கவோ சபை முயற்சி பண்ணக்கூடாது.

வேதாகமத்தில் கோர்க்கப்படுவதற்கு தகுதிகள்

வேதாகமத்தில் மொத்தம் 66 புஸ்தகங்கள் உள்ளன. இவற்றை வேதாகமமாகக் கோர்க்கும் போது, வேதாகம நூல்களுக்கு சில தகுதிகள் இருக்க வேண்டுமென்று யூதமார்க்கத்தின் மதத்தலைவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆகையினால், ஒரு சில வரையறைகளுக்கு உட்பட்டே புஸ்தகங்கள் பரிசுத்த வேதாகமத்தில் இடம்பெற்றன. சில தகுதிகள்:

1. வேதாகமத்தின் புஸ்தகத்தை ஏதாவது ஒரு தீர்க்கதரிசி எழுதியிருக்க வேண்டும் அல்லது ஏதாவது ஒரு தீர்க்கதரிசி அந்தப் புஸ்தகத்தை அங்கீகரித்திருக்க வேண்டும்.

2. ஒரு புஸ்தகம் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டது, எழுதப்பட்டது, பரிசுத்த வேதாகமத்தில் இடம்பெறுவதற்கு தகுதியுடையது என்று யூத மார்க்கத்தலைவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3. இயேசு கிறிஸ்துவும் புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்களும் அந்தப் புஸ்தகங்களை அங்கீகரித்திருக்க வேண்டும். அதிலுள்ள வசனங்களை மேற்கோளாகப் பயன்படுத்தி இருக்க வேண்டும்.

4. வேதாகம நூல்களின் ஆசிரியர்கள் தாங்கள் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினாலும், தெய்வீக அதிகாரத்தினாலும் இந்த நூல்களை எழுதியிருப்பதாக அங்கீகரிக்க வேண்டும்.

5. வேதாகமம் ஒரு வரலாற்று நூலல்ல. ஆயினும், இது இஸ்ரவேலருடைய வரலாற்றை மிகவும் தெளிவாகக் கூறுகிறது. வேதாகம நூல்கள் இஸ்ரவேலருடைய வரலாற்றை முரண்பட்டுக் கூறக்கூடாது.

6. வேதாகம நூல்களில் கூறப்பட்டுள்ள சத்தியங்கள். ஒன்றுக்கொன்று ஆதரவாக இருக்க வேண்டுமே தவிர, முரண்பட்டு இருக்க கூடாது.

இந்த அடிப்படையில்தான் பழைய ஏற்பாட்டிலுள்ள 39 புஸ்தகங்களும் தொகுக்கப்பட்டன.

புதிய ஏற்பாட்டு புஸ்தகங்களின் தொகுப்பு

புதிய ஏற்பாட்டில் மொத்தம் 27 புஸ்தகங்கள் உள்ளன. இவற்றை 8 ஆசிரியர்கள் எழுதினார்கள். இவர்களில் யாரும் தாங்கள் பரிசுத்த வேதாகமத்திற்குப் புதியதாக நூல்களை எழுதியதாக குறிப்பிடவில்லை. பழைய ஏற்பாட்டு செய்திகளைக் கூறுவதாகவும், அவற்றை விளக்குவதாகவுமே இவர்கள் கூறியிருக்கிறார்கள். (லூக் 1:1-3; யோவான் 20:30-31; 1 கொரி 15:1-9; 1 யோவான் 1:4; 2:1,7,12,25; 5:13; 2 பேது 3:13-16; யூதா 3; வெளி 1:11-19)

ஆயினும், திருச்சபைத் தலைவர்கள் அப்போஸ்தலர்கள் எழுதிய நூல்களையும் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, எழுதப்பட்ட பிற நூல்களையும் பரிசுத்த வேதாகமத்தில் சேர்த்துக் கொண்டார்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் காலத்திலும், அப்போஸ்தலரின் காலத்திலும் வேதப் புத்தகம் என்பது பழைய ஏற்பாட்டின் 39 ஆகமங்கள் கொண்ட புத்தகத்தையே குறித்தது. இதில் ஆதியாகமம் முதல் மல்கியா தீர்க்கதரிசியின் புத்தகம் வரை இருந்தது.

கிறிஸ்துவின் சரித்திரம் அப்போஸ்தலர் காலங்களில் பேச்சு வழக்கில்தான் இருந்தது. புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் முதலாவது எழுத்து வடிவம் பெற்றவை பவுல் அப்போஸ்தலனின் நிருபங்களே. பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள் விசுவாசிகளுக்கு தோல் சுருள்களில் எழுதிய நிருபங்கள் வாயிலாக கர்த்தருடைய வார்த்தைகளை அறிவித்தனர். இந்த நிருபங்கள் பிற்காலத்தில் பல திருச்சபைகளிலும் வாசிக்கப்பட்டு, தியானிக்கப்பட்டு பின்பற்றப் பட்டது.

இதன்பின்பே இயேசு கிறிஸ்துவின் வரலாறு நான்கு சுவிசேஷங்களாக எழுதப்பட்டது.

"மகா கனம் பொருந்திய தேயோப்பிலுவே, நாங்கள் முழு நிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்பமுதல் கண்ணாரக்கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால், ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறிய வேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று". (லூக்கா 1:1-4)

கி.பி. 130 வரை 4 சுவிசேஷங்களும், பவுல் அப்போஸ்தலனின் 13 நிருபங்களுமே திருச் சபைகளில் விசேஷ இடம் பெற்று வாசிக்கப்பட்டன. கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முடிவதற்குள் அப்போஸ்தலரின் நடபடிகளும் இவற்றோடு சேர்க்கப்பட்டன. இந்த காலங்களில் வெளிப்படுத்தின விசேஷமும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும் மூன்றாம் நூற்றாண்டிலே தான் திருச்சபைகளில் எங்கும் வாசிக்கப்பட்டது. கி.பி. 95-லேயே எபிரெயருக்கு எழுதிய நிருபம் இருந்தாலும் நான்காம் நூற்றாண்டில்தான் இது வெகுவாக உபயோகப்படுத்தப்படலாயிற்று.

கி.பி. 2-ம் நூற்றாண்டில் கிறிஸ்துவுக்கு முன் உள்ள புத்தகங்கள் எல்லாம் "பழைய ஏற்பாடு" என்று வழங்கப்படலாயிற்று. இவை யாவும் எபிரெய மொழியில் எழுதப்பட்டவை. கிறிஸ்துவுக்கு பின் உள்ள புத்தகங்களெல்லாம் "புதிய ஏற்பாடு" என்று வரையறுத்து கூறப்பட்டது. இவை யாவும் கிரேக்க மொழியிலும் அரெமாயிக் மொழியிலும் எழுதப்பட்டவை.

புதிய ஏற்பாட்டு நூல்களைத் தொகுத்தபோது, 27 புஸ்தகங்களில் 20 புஸ்தகங்களைச் சபைத்தலைவர்கள் உடனடியாக ஏற்றுக் கொண்டார்கள். 7 புஸ்தகங்களை முதலில் ஏற்றுக் கொள்ளவில்லை. அவையாவன:

1. எபிரெயர்
2. II யோவான்
3. III யோவான்
4. II பேதுரு
5. யூதா

6. யாக்கோபு
7. வெளிப்படுத்தின விசேஷம்

இந்த நூல்களைப் புதிய ஏற்பாட்டில் உடனடியாக ஏற்றுக் கொள்ளாததற்கு காரணங்கள்:

1. எபிரெயருக்கு எழுதின நிருபத்தில் அதன் ஆசிரியரின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

2. II பேதுருவின் மொழி நடையும் I பேதுருவின் மொழிநடையும் வேறுபட்டுள்ளது.

3. யாக்கோபு, யூதா ஆகிய நிருபங்களை எழுதியோர் தங்களை அப்போஸ்தலர்கள் என்று கூறாமல் தேவனுடைய ஊழியக்காரர்கள் என்றே அழைத்துக் கொண்டார்கள்.

4. II யோவான், III யோவான் ஆகிய நிருபங்களின் ஆசிரியரும் தன்னை அப்போஸ்தலர் என்று அழைக்காமல், மூப்பர் என்று அழைத்துக் கொண்டார்.

5. வெளிப்படுத்தின விசேஷத்தில் எழுதப்பட்டுள்ள சத்தியங்கள் புதுமையாக உள்ளன.

இருப்பினும், ஆதித்திருச்சபையின் தலைவர்கள் பலமுறை கூடி, ஜெபித்து, ஆலோசனை செய்து, இந்த 7 நூல்களையும் புதிய ஏற்பாட்டில் இணைத்துக் கொண்டார்கள்.

கி.பி. 250-ல் லவோதிக்கேயா என்ற பட்டணம் ஸ்தாபிக்கப்பட்டது. இரண்டாம் அன்டியோகஸ் என்னும் சீரியா தேசத்து மன்னன் சீரியரையும், யூதர்களையும் அங்கு குடியேற்றினார். இப்பட்டணம் வளம் நிறைந்து பெயர் பெற்று ஆதி கிறிஸ்தவ திருச்சபையில் முக்கிய இடம் வகிக்கலாயிற்று. கி.பி. 364-ம் ஆண்டு லவோதிக்கேயாவில் ஒரு கிறிஸ்தவ மகா சபை கூட்டப்பட்டது. சபையின் முன்பு தற்போது வேதாகமத்திலுள்ள 65 புத்தகங்கள் சர்வ வல்லமை நிறைந்த பரிசுத்த தேவனால், தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள் மூலம் மனிதர் யாவருக்கும் அருளப்பட்ட வார்த்தைகள் என ஒப்புக் கொள்ளப்பட்டு வேதாகமம் என ஒரு முகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வெளிப்படுத்தின விசேஷம் அதில் சேர்க்கப்படவில்லை. கி.பி. 397-ல் கார்தேஸ் என்னுமிடத்தில் திரும்பவும் ஒரு மகா சபை கூட்டப்பட்டு வெளிப்படுத்தின விசேஷம் நிகழப்போகும் காரியங்களை குறித்து பரிசுத்த யோவானுக்கு பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தின விசேஷமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு 66-வது புத்தகமாக வேதாகமத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

இவ்வாறாக, 4-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் திருச்சபைகள் புதிய ஏற்பாட்டின் 27 நூல்களையும் அங்கீகரித்து சபையில் வாசிக்க துவங்கினார்கள்.

இதுதவிர, 4-ம் நூற்றாண்டில் இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள நபர்களைப் பற்றியும் அநேக நாவல்களும், இலக்கியங்களும், கவிதைகளும் வெளிவந்தன. இயேசு கிறிஸ்துவின் தாய், தந்தையாரைப் பற்றிய புஸ்தகங்களையும் எழுதினார்கள்.

இந்த நாவல்களையும், கதைகளையும் என்ன செய்வது? பரிசுத்த வேதாகமத்தில் இவற்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமா? இவை பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, வேதாகமத்தில் ஒரு நூலாக எழுதப்பட்டதா? ஆதித்திருச்சபையில் இப்படிப்பட்ட கேள்விகளெல்லாம் எழும்பின.

இந்த பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்காக, யூதர்களின் ஆலோசனைச் சங்கம் பலமுறைக் கூடி விவாதித்தது. இவற்றில் மூன்று கூட்டங்கள் மிகவும் முக்கியமானவை. அவையாவன:

1. நைசின் ஆலோசனைச் சங்கம் (கி.பி. 325)

2. இப்போ ஆலோசனைச் சங்கம் (கி.பி. 394)

3. கார்த்தேஜ் ஆலோசனைச் சங்கம் (கி.பி. 397)

இம்மூன்று இடங்களிலும் கூடிய ஆலோசனைச் சங்கங்கள் மிகவும் முக்கியமானவை. புதிய ஏற்பாட்டில் நாம் இப்பொழுது பெற்றுள்ள 27 புஸ்தகங்கள் மட்டுமே பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, வேதாகம நூல்களாக எழுதப்பட்டது என்று இவர்கள் தீர்மானம் பண்ணினார்கள். அத்துடன் பழைய ஏற்பாட்டிலும் இப்பொழுது நாம் பெற்றுள்ள 39 புஸ்தகங்கள் மட்டுமே பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, வேதாகம நூல்களாக எழுதப்பட்டது என்றும் இவர்கள் தீர்மானம் பண்ணினார்கள். இவ்வாறாக, பரிசுத்த வேதாகமத்தில் 66 புஸ்தகங்கள் உள்ளதாக தீர்மானம் பண்ணி, அங்கீகாரம் பண்ணினார்கள். இதுவே, இன்று வரையிலும் நடைமுறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

6. மறைக்கப்பட்ட புத்தகங்கள்

ஒரு சில வேதாகமங்களில் 66 புஸ்தகங்கள் தவிர, மேலும் 13 புஸ்தகங்கள் சேர்க்கப்பட்டிருக்கும். இவற்றை மறைக்கப்பட்ட ஆகமங்கள் என்று அழைக்கிறோம். அவையாவன:

1. I, II எஸ்ரடாஸ்
2. தோபித்து
3. யூதித்து
4. எஸ்தர் புத்தகத்தின் மற்றுமொரு பகுதி
5. சாலொமோனின் ஞானம்
6. பிரசங்கி
7. பரூச்
8. எரேமியாவின் நிருபம்
9. மூன்று பரிசுத்த குழந்தைகளின் பாடல்
10. சூசன்னா
11. பெல்லும் மிருகமும்
12. மனாசேயின் ஜெபம்
13. I, II மக்கபியர்கள்

பழைய ஏற்பாட்டுக் காலத்திற்கும் புதிய ஏற்பாட்டுக் காலத்திற்கும் நடுவே சுமார் 400 ஆண்டுகள் உண்டு. இவைகளைக் கர்த்தரின் வெளிப்பாடு இல்லாத "அமைதியான ஆண்டுகள்" என்று கூறுகின்றனர். இந்தக் காலங்கள் யூதேயா தேசம் கைப்பற்றப்பட்டு சுமார் 200 ஆண்டுகள் பெர்சியரின் கீழ் இருந்தது. மகா அலெக்ஸாண்டார் அதை கிரேக்க ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார். அலெக்ஸாண்டருக்கும் பின் அது எகிப்தியருக்கு கீழும் பின் சீரியரின் கீழும் இருந்தது. சீரிய இராஜாவாகிய அன்டியோகஸ் எபிபேனஸ் யூதர்களைத் துன்பப்படுத்தி எருசலேம் தேவாலயத்தில் விக்கிரக வணக்கம் ஏற்படுத்த முயற்சித்தான். ஆசாரியனாகிய மத்தியாஸின் கீழ் யூதர்கள் போரிட்டு அவனை வென்றனர். கி.மு. 166 முதல் கி.பி. 63 வரை ஹாஸ்மோனிய தலைவர்கள் யூதேயா தேசத்தை ஆண்டனர். இக்காலத்தில்தான் மறைக்கப்பட்ட வேதாகமப் புத்தகங்கள் எழுதப்பட்டன.

மறைக்கப்பட்ட புஸ்தகங்களைப் பரிசுத்த வேதாகமத்தில் சேர்த்துக் கொள்ளாததற்கு பல காரணங்கள் உண்டு. அவையாவன:

1. வேதாகமத்தின் புஸ்தகத்தை ஒரு தீர்க்கதரிசி எழுதியிருக்க வேண்டும் அல்லது ஏதாவது ஒரு தீர்க்கதரிசி அந்த புஸ்தகத்தை அங்கீகரித்திருக்க வேண்டும். ஆனால் இந்த நூல்கள் எதையும் தீர்க்கதரிசி யாரும் எழுதவுமில்லை. அவர்கள் அங்கீகரிக்கவுமில்லை.

2. ஒரு புஸ்தகம் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டது, எழுதப்பட்டது, பரிசுத்த வேதாகமத்தில் இடம்பெறுவதற்கு தகுதியுடையது என்று யூத மார்க்கத்தலைவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் இந்த நூல்களை யூதமார்க்கத்தலைவர்கள் அங்கீகரிக்கவில்லை.

3. இயேசு கிறிஸ்துவும் புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்களும் அந்தப் புஸ்தகங்களை அங்கீகரித்திருக்க வேண்டும். அதிலுள்ள வசனங்களை மேற்கோளாகப் பயன்படுத்தி இருக்க வேண்டும். ஆனால் இவர்களும் இந்த நூல்களை அங்கீகரிக்கவில்லை.

4. வேதாகம நூல்களின் ஆசிரியர்கள் தாங்கள் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினாலும், தெய்வீக அதிகாரத்தினாலும் இந்த நூல்களை எழுதியிருப்பதாக அங்கீகரிக்க வேண்டும். இந்த நூலாசிரியர்கள் இவ்வாறு அங்கீகரிக்கவில்லை.

5. இந்த நூல்கள் இஸ்ரவேலின் வரலாற்றை முரண்பட்டுக் கூறுகிறது.

6. இந்த நூல்களில் கூறப்பட்டுள்ள சத்தியங்கள் ஒன்றொன்றுக்கு முரண்பட்டு இருக்கிறது.

7. அப்போஸ்தலர்களுடைய காலத்தில் யோசபஸ் என்னும் சபைத்தலைவர் வாழ்ந்து வந்தார். அவர் மறைக்கப்பட்ட புஸ்தகங்களை வேதாகமத்தின் புஸ்தகங்களாக ஏற்றுக்கொள்ளவில்லை.

8. இந்த நூல்களில் எதுவும் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எழுதப் பட்டவையல்ல. கி.பி. 300-க்கு பிறகே எழுதப்பட்டது.

9. கி.பி. 363-ல் லவோதிக்கேயாவில் கூடிய ஆலோசனைச் சங்கம் இவை வேதாகமத்தில் இடம்பெறுவதற்கு தகுதியற்றவை என்று கூறி, இவற்றைத் தள்ளுபடி செய்து விட்டனர்.

10. ஆதித்திருச்சபைத் தலைவராகிய பைலோவும், மற்ற தலைவர்களும் மறைக்கப்பட்ட நூல்களை வேதாகம நூல்களாக ஏற்றுக் கொள்ளவில்லை.

11. இந்த நூல்களில் தீர்க்கதரிசனங்கள் எதுவுமில்லை. அத்துடன் பழைய ஏற்பாட்டு நூல்களைப் பிரதியெடுத்ததுபோன்று திரும்பத்திரும்ப எழுதியிருக்கிறார்கள்.

12. மறைக்கப்பட்ட நூல்களில் கற்பனைகளும், கட்டுக்கதைகளும் அதிகம் இடம் பெற்றுள்ளன. பரிசுத்த ஆவியானவரின் வல்லமைக்கும் ஆளுகைக்கும் இந்நூல்களில் இடமில்லை.

இவர்கள் தள்ளுபடி செய்தபோதிலும், ஒரு சில இடங்களில் கூடிய ஆலோசனைச் சங்கத்தார் இவற்றை வேதாகம நூல்களாக ஏற்றுக்கொள்ளவும் செய்தனர். இதன் அடிப்படையிலே கி.பி. 4-ம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட வத்திகன் பதிப்பு வேதாகமத்தில் மறைக்கப்பட்ட புஸ்தகங்கள் அனைத்தும் இடம் பெற்றிருந்தன.

கி.பி. 1546-ல் டிரண்ட்டில் கூடிய ஆலோசனைச் சங்கத்தார் தங்களுடைய கத்தோலிக்க வேதாகம பதிப்பில் மறைக்கப்பட்ட நூல்களில் 6 நூல்களை மட்டும் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டவை என்றும், வேதாகம நூல்களாக எழுதப்பட்டவை என்றும் அங்கீகரித்தார்கள். அவையாவன:

1. சாலொமோனின் ஞானம்
2. பிரசங்கி
3. தோபித்து
4. யூதித்து
5. I மக்கபியர்
6. II மக்கபியர்

எகிப்திலிருந்த யூதர்கள் மறைக்கப்பட்ட ஆகமங்களை அதிகம் மதித்து பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் (செப்துவஜிந்த்) சேர்த்திருந்தனர். ஆனால் பாலஸ்தீன நாட்டு யூதர்கள் இதை நிராகரித்து விட்டனர்.

மறைக்கப்பட்ட புத்தகங்கள் இலக்கிய, சரித்திர முக்கியத்துவம் பெற்றவைகள். ஆனாலும் அவைகள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டவைகளாக கருதப் படாததால் பரிசுத்த வேதாகமத்தில் இவை சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

7. பரிசுத்த வேதாகமத்தின் நம்பகத் தன்மை

பரிசுத்த வேதாகமத்தை எழுதியவர் தேவனே. வேதாகமத்தின் ஆசிரியரும் தேவனே. மனுஷனுக்கு தாம் கூறவிரும்பியதை தமது தீர்க்கதரிசிகள் மூலமாக தேவன் வெளிப் படுத்தினார். அவர்கள் மூலமாக எழுதியதோடு, தேவனும் தமது விரல்களினால் எழுதினார். (யாத் 31:18; 32:16)

பரிசுத்த வேதாகமத்தில் 66 புஸ்தகங்கள் உள்ளன. இவையனைத்தையும் பரிசுத்த ஆவியானவரே ஏவி, எழுதினார் என்பதற்கு என்ன ஆதாரம்? இவற்றிலுள்ள செய்தி தேவனுடைய செய்தி என்பதை எவ்வாறு நம்புவது. வேதாகமம் நம்பத்தகுந்த புத்தகமா? இதற்கு தெய்வீக அதிகாரமும், அங்கீகாரமும் உள்ளதா? என்றெல்லாம் பலவிதமான கேள்விகளைப் பலரும் கேட்கிறார்கள்.

ஆம். வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தை. தேவன் பேசிய வார்த்தைகளும், அவருடைய சிந்தனைகளும் வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளன. தேவனுடைய மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு, பரிசுத்த வேதாகமத்தை எழுதினார்கள்.

இதற்குச் சான்றுகள்:

1. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் தாங்கள் தேவனால் அனுப்பப்பட்டவர்கள் என்று சாட்சி பகருகிறார்கள். அவர்கள் கூறிய செய்தி தேவனுடைய செய்தியென்று அங்கீகரித்து இருக்கிறார்கள். (லூக் 1:70; அப் 3:31; 2பேது 1:21)

2. பரிசுத்த வேதாகமத்தில் 2500 தடவைகளுக்கு மேல் "கர்த்தர் கூறுகிறார்" என்னும் வார்த்தையைத் தீர்க்கதரிசிகள் பயன்படுத்தி இருக்கிறார்கள். (ஏசா 8:5; எரே 2:2; எசே 2:4)

3. பரிசுத்த வேதாகமம் முழுவதும் இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய ஆள்தத்துவம், ஊழியங்கள், செய்திகள் ஆகியவற்றைப் பற்றியுமே முக்கியமாகக் கூறுகிறது. பழைய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையையும், ஊழியத்தையும் பற்றி நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்கள் உள்ளன. அவையனைத்தும் புதிய ஏற்பாட்டு நூல்களில் நிறைவேறியுள்ளன.

இயேசு கிறிஸ்து தாமே, தாம் பிதாவால் அனுப்பப்பட்டவரென்று சாட்சி பகர்ந்தார். (யோவா 8:42; 7:16; 17:8)

தமது ஊழியத்தை உறுதிசெய்யும் வண்ணமாக, இயேசு கிறிஸ்து ஏராளமான அற்புதங்களைச் செய்தார். (அப் 10:38)

இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசனமாகக் கூறியுள்ள பல காரியங்கள் ஏற்கனவே நிறைவேறியுள்ளன. மற்றவை விரைவில் நிறைவேறும்.

பழைய ஏற்பாடு தேவனுடைய வார்த்தை என்றும், அதற்கு தெய்வீக அங்கீகாரமும், அதிகாரமும் உள்ளது என்றும் இயேசுகிறிஸ்து அங்கீகரித்திருக்கிறார். (மத் 5:17-18; 8:17; 12:40-42; லூக் 24:44; யோவா 5:39)

4. பரிசுத்த வேதாகமம் அப்போஸ்தலர்களுடைய ஊழியத்தையும் அங்கீகரித்திருக்கிறது. அவர்கள் தெய்வீக வல்லமையினால் ஊழியம் செய்ததாக வேதாகமம் கூறுகிறது. அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் தேவன் அவர்களுடைய ஊழியங்களை அங்கீகரித்தார். (மாற் 16:15-20; அப் 2:41-46; 5:1-15; எபி 2:1-4)

அப்போஸ்தலர்கள் தாங்கள் எழுதிய நூல்கள் அனைத்திலும் இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களை உறுதி செய்திருக்கிறார்கள்.

5. பழைய ஏற்பாட்டு வசனங்கள் புதிய ஏற்பாட்டில் சுமார் 250 தடவைகள் நேரடியாக மேற்கோளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. 850 தடவைகளுக்கு மேல் பழைய ஏற்பாட்டின் வசனக் கருத்துக்கள் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளன.

எஸ்தர், எஸ்றா, நெகேமியா, பிரசங்கி, உன்னதப்பாட்டு ஆகிய பழைய ஏற்பாட்டு நூல்களைத் தவிர, மற்ற நூல்கள் அனைத்தையும் புதிய ஏற்பாடு மேற்கோளாகவும், கருத்துக்கோளாகவும் பயன்படுத்தியிருக்கிறது.

8. வேதாகமத்தின் ஆதி நகல்கள்

வேதாகமத்தின் ஆதி நகல்களைத் தோல் சுருள்களிலும், பாபிரஸ் சுருள்களிலும் எழுதினார்கள். ஆனால், அவற்றைப் பாதுகாப்பாகப் பத்திரப்படுத்த அக்காலத்தில் சரியான வழிமுறையில்லை.

மேலும் புதிய நகல் ஒன்றை எடுத்தபின்னர், பழைய நகலை அழித்துவிடும் பழக்கமும் அவர்களிடமிருந்தது. ஆகையினால், வேதாகமத்தின் பூர்வீக எழுத்துக்கள் எல்லாமே அழிந்துவிட்டன.

பூர்வீக எழுத்துக்கள் அழிந்துபோனாலும், அவற்றிலிருந்து நகல்களை எடுத்து ஒவ்வொரு காலங்களிலும் பத்திரப்படுத்தி வைத்து இருந்தார்கள்.

எபிரெய பழைய ஏற்பாட்டை சமாரியாவிலிருந்த இஸ்ரவேலர்கள் சமாரிய எழுத்துக்களில் எழுதினார்கள். இதற்கு "சமாரிய பஞ்சாகமம்" (தோரா) என்று பெயர்.

யூத மார்க்கத்து அறிஞர்கள் கி.பி. 500-முதல் 950-வரையிலும் பழைய ஏற்பாட்டை எபிரெய மொழியில் கையால் எழுதி வெளியிட்டார்கள். இந்தக் கையெழுத்துப் பிரதிக்கு "எபிரெய மஸோரேடிக் கையெழுத்துப் பிரதி" என்று பெயர். இந்த கையெழுத்துப் பிரதி எழுதுவதற்கு முன்பாக எபிரெய எழுத்து வடிவத்தில் உயிரெழுத்து சேர்க்கப்படவில்லை.

அனைத்தையும் மெய்யெழுத்துக்களாலேயே எழுதினார்கள். ஆனால், மஸோரெடிக் கையெழுத்துப் பிரதியில் மெய்யெழுத்துகளோடு உயிரெழுத்துக்களையும் சேர்த்து எழுதினார்கள்.

பொதுவாக, தோல் சுருளிலும், பாப்பிரஸ் புல்லிலும் எழுதப்பட்ட நூல்கள் விரைவில் அழிந்துவிடும். ஆனாலும், எகிப்து, பாலஸ்தீனா ஆகிய நாடுகளில் எப்போதும் வறட்சியான சூழ்நிலை காணப்பட்டது. இதனால் பல நகல்கள் அழியாமல் பாதுகாப்பாக உள்ளன.

நமக்கு தற்காலத்தில் ஆயிரக்கணக்கான நகல்கள் இவ்வாறு பாதுகாப்பாக கிடைத்துள்ளன. நமது தேவனே இவற்றை நமக்கு பாதுகாத்துத் தந்திருக்கிறார். பரிசுத்த வேதாகமம் காலத்தால் அழியாதது. இது எக்காலத்திற்குமுரியது.

இதுவரையிலும், நமக்கு கிடைத்துள்ள வேதாகமத்தின் ஆதி நகல்களை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. அன்சியல் கையெழுத்து நகல்கள்

2. கர்சிவ் கையெழுத்து நகல்கள்

அன்சியல் கையெழுத்து நகல்களிலுள்ள எழுத்துக்கள் அனைத்தும் சதுரமாக இருக்கும். கி.பி. 9-ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலங்களில், அன்சியல் எழுத்துக்களையே எழுதினார்கள். இவை மிகவும் பழமையானவை. அன்சியல் எழுத்து வடிவில் எழுதப்பட்ட கையெழுத்துப்பிரதிகள் இதுவரையிலும் நமக்கு 159 பிரிதிகள் கிடைத்துள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:

1. சுவிசேஷங்கள்..........................101 நகல்கள்
2. அப்போஸ்தலருடைய நடபடிகளும், பொதுவான நிருபங்களும்................................22 நகல்கள்
3. பவுலின் நிருபங்கள்..................27 நகல்கள்
4. வெளிப்படுத்தின விசேஷம்......9 நகல்கள்

கர்சிவ் கையெழுத்து நகல்களிலுள்ள எழுத்துக்கள் அனைத்தும் விரைவு எழுத்து வடிவாக இருக்கும். கி.பி. 9-ம் நூற்றாண்டில் கர்சிவ் எழுத்துக்களை எழுத ஆரம்பித்தார்கள்.

கி.பி. 1456-இல் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து, வேதாகமம் அச்சடிக்கப்பட்ட காலம்வரையிலும், கர்சிவ் எழுத்து வடிவிலேயே வேதாகமக் கையெழுத்துப் பிரதிகளை எழுதி வந்தார்கள்.

கர்சிவ் எழுத்து வடிவில் எழுதப்பட்ட கையெழுத்துப்பிரதிகள் 2585 இதுவரையிலும் நமக்கு கிடைத்துள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:

1. சுவிசேஷங்கள்........................1420 நகல்கள்
2. அப்போஸ்தலருடைய நடபடிகளும், பொதுவான நிருபங்களும்................................450 நகல்கள்
3. பவுலின் நிருபங்கள்..................520 நகல்கள்
4. வெளிப்படுத்தின விசேஷம்.....195 நகல்கள்

மேலே கொடுக்கப்பட்டுள்ள கையெழுத்துப் பிரதிகளின் அட்டவணை இறுதியானது என்று கூற இயலாது. ஏனெனில் தொல்பொருள் ஆய்வாளர்களும், வேதாகம அறிஞர்களும் பழைய கையெழுத்துப் பிரதிகளைத் தொடர்ந்து தேடி வருகிறார்கள். இவர்களுடைய பெரும் முயற்சியின் பயனாக சவக்கடல் சுருளின் ஏசாயா தீர்க்கதரிசன ஆகமத்தின் நகல் கிடைத்துள்ளது.

கிரேக்க கையெழுத்துப் பிரதிகளைத் தவிர, சீரியாக், காப்திக், லத்தீன் ஆகிய பிற மொழிகளிலும் கையெழுத்துப் பிரதிகள் கிடைத்துள்ளன. இவற்றில் சில கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டவையாகும்.

எகிப்து தேசத்தில் கெய்ரோ நகருக்கு தெற்கே 100 மைல்களுக்கு அப்பால் நைல் நதி பள்ளத்தாக்கில் கி.பி. 1897-ஆம் ஆண்டில் ஏராளமான பாப்பைரி கையெழுத்துப் பிரதிகளைத் தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இது தவிர, இன்னும் ஆயிரக்கணக்கான பாப்பைரி கையெழுத்துப் பிரதிகள் இன்னும் ஆய்வு செய்யப்படாமலேயே உள்ளன. கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இந்த ஆய்வு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதுவரையிலும் நமக்கு கிரேக்க மொழியில் ஐந்தாயிரம் கையெழுத்துப்பிரதிகளும், பிறமொழிகளில் சுமார் 25000 கையெழுத்துப் பிரதிகளும் கிடைத்துள்ளன. இது தவிர, ஆதிகால சபைத்தலைவர்கள் எழுதிய லட்சணக்கான மேற்கோள்களும், குறிப்புகளும் நமக்கு கிடைத்திருக்கின்றன.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டிற்கு முன்பாக பரிசுத்த வேதாகமத்தைத் தோல் சுருள்களிலும், பாப்பைரி சுருள்களிலும் எழுதினார்கள். இந்தச் சுருள்களெல்லாம் பக்கம் பக்கமாக புஸ்தகம் போல கோர்த்துக் கட்டப்பட்டன. இவற்றுக்கு "கோடக்ஸ்" என்று பெயர்.

அன்சியல் எழுத்து வடிவில் நமக்கு ஏராளமான கையெழுத்துப் பிரதிகள் கிடைத்துள்ளன. இவற்றை 6 பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். அவையாவன:

1. கோடக்ஸ் சீனாய்டிகஸ்
2. கோடக்ஸ் அலெக்ஸாண்டிரினஸ்
3. கோடக்ஸ் வாடிகானஸ்
4. கோடக்ஸ் எப்பிராயிம்
5. கோடக்ஸ் பீஜே
6. கோடக்ஸ் கிளாரோமோன்டோனஸ்

கோடக்ஸ் சீனாய்டிகஸ்

இவை கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை. 1859-ஆம் ஆண்டு சீனாய் மலையிலுள்ள கெத்தரீன் கன்னிமாடத்தில் டாக்டர் திஸ்கென் டோர்ப் என்பவர் இவற்றைக் கண்டுபிடித்தார். இதில் முழு வேதாகமமும் உள்ளது. தற்பொழுது இந்த கையெழுத்துப் பிரதி பிரிட்டிஷ் மியூசியத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது.

கோடக்ஸ் அலெக்ஸாண்டிரினஸ்

இவை கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்டவையாகும். இந்தப் பிரதியில் ஆதியாகமம், 1 இராஜாக்கள், சங்கீதம், மத்தேயு, யோவான், 2 கொரிந்தியர் ஆகிய புஸ்தகங்கள் முழுமையாக உள்ளன. இதுவும் தற்பொழுது பிரிட்டிஷ் மியூசியத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது.

கோடக்ஸ் வாடிகானஸ்

இது கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்டதாகும். இந்தக் கோடக்ஸில் முழுப் பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாட்டில் எபிரெயர் 9:4 வரையிலுமுள்ளது.

கோடக்ஸ் எப்பிராயிம்

இது கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்டதாகும். இந்த கோடக்ஸில் பழைய ஏற்பாட்டின் ஒரு பகுதியும், புதிய ஏற்பாட்டில் 2 தெசலோனிக்கேயர், 2 யோவான் தவிர மற்ற நூல்கள் அனைத்தும் உள்ளன.

கோடக்ஸ் பீஜே

இது கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்டதாகும். இந்தக் கையெழுத்துப் பிரதி கிரேக்க மொழியிலும், லத்தீன் மொழியிலும் இணையாக எழுதப்பட்டுள்ளது. இதில் சுவிசேஷ நூல்களில் பெரும்பகுதியும், அப்போஸ்தலருடைய நடபடிகளும், நிருபங்களும் உள்ளன.

கோடக்ஸ் கிளாரோமோன்டோனஸ்

இது கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகும். இந்தப் பிரதியும், கோடக்ஸ் பீஜே போலவே கிரேக்க மொழியிலும், லத்தீன் மொழியிலும் எழுதப்பட்டுள்ளது. இதில் அநேகமாக எல்லா நிருபங்களும் இடம் பெற்றுள்ளன.

இந்தக் கோடக்ஸ் தவிர, 6-ஆம் நூற்றாண்டிலிருந்து 10-ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள இடைப்பட்ட காலத்தில் ஏராளமான கோடக்ஸ்களை எழுதியிருக்கிறார்கள்.

லெக்ஸனரீஸ்

ஆதித்திருச்சபையில் ஆராதனையின்போது, பரிசுத்த வேதாகமத்தின் வேதப்பாடப் பகுதியை வாசித்து வந்தார்கள். இதற்காக சுவிசேஷங்கள், நிருபங்கள் ஆகியவற்றை பல திருச்சபைகளில் சேர்த்து வைத்திருந்தார்கள். இந்தத் தொகுப்பிற்கு "லெக்ஸனரீஸ்" என்று பெயர்.

இவை கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து 10-ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டவையாகும். தற்பொழுது கிடைக்கப்பட்டுள்ள லெக்ஸனரீகளில் சுமார் 1000 லெக்ஸனரீஸ் சுவிசேஷ நூல்களுக்காக எழுதப்பட்டவையாகும். மேலும் 300 லெக்ஸனரீஸ் அப்போஸ்தலருடைய நடபடிகள், நிருபங்கள் ஆகியவற்றிற்காக எழுதப்பட்டவை.

பேட்ரிஸ்டிக் கொட்டேஷன்ஸ்

ஆதித்திருச்சபையின் தலைவர்கள் வேதாகமத்திலிருந்து பல வசனங்களை மேற்கோளாக எழுதியிருக்கிறார்கள். இவை "பேட்ரிஸ்டிக் கொட்டேஷன்ஸ்" எனப்படும்.

9. வேதாகமத்தின் ஆதித் தொகுப்புக்கள்

கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வரையிலும் வேதாகம அறிஞர்கள் பலர் பரிசுத்த வேதாகமத்தைத் தங்கள் கைப்பட எழுதி நகல் எடுத்திருக்கிறார்கள். இவை "வேதாகமத்தின் ஆதித் தொகுப்புக்கள்" எனப்படும்.

இந்த தொகுப்புகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்பொழுது, நாம் தற்போது பயன்படுத்தி வரும் பரிசுத்த வேதாகமம் உண்மையானது. நம்புதற்குரியது. தேவனால் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது என்பது தெளிவாகும்.

இதுவரையிலும் நமக்குக் கிடைத்துள்ள பரிசுத்த வேதாகமத்தின் ஆதிக்கால தொகுப்புக்கள் கீழே வரிசையாக கொடுக்கப் பட்டுள்ளன.

1. கிரேக்க மொழியில் செப்துவஜிந்து - கி.மு. 3-ஆம் நூற்றாண்டு

2. கல்தேயரின் தர்கும் - பழைய ஏற்பாட்டின் ஒரு சில பகுதிகள் மட்டும் - கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதல் 11-ஆம் நூற்றாண்டு வரையிலும்

3. சமாரியரின் பஞ்சாகமம் - கி.பி. முதல் அல்லது 2-ஆம் நூற்றாண்டு

4. ஆக்குவில்லாவின் பதிப்பு - கிரேக்க மொழியில் பழைய ஏற்பாடு கி.பி. 160

5. தியோடோதியன் பதிப்பு - கிரேக்க மொழியில் பழைய ஏற்பாடு கி.பி. 2-ஆம் நூற்றாண்டு

6. சிமாகஸ் பதிப்பு - கிரேக்க மொழியில் பழைய ஏற்பாடு கி.பி. 2-ஆம் நூற்றாண்டு

7. பெஸ்கித்தா சீரியாக் பதிப்பு - கி.பி. 2-ஆம் நூற்றாண்டு

8. அராபிக் பதிப்பு - கி.பி. 8-12 ஆம் நூற்றாண்டு

9. அர்மீனியன் பதிப்பு - கி.பி. 5-ஆம் நூற்றாண்டு

10. எகிப்திய பதிப்பு - கி.பி. 4-ஆம் நூற்றாண்டு

11. எத்தியோப்பிய பதிப்பு - கி.பி. 4-ஆம் நூற்றாண்டு

12. கோத்திக் பதிப்பு - கி.பி. 4-ஆம் நூற்றாண்டு

13. ஜியார்ஜியன் பதிப்பு - கி.பி. 6-ஆம் நூற்றாண்டு

14. லத்தீன் பதிப்பு - கி.பி. 4-ஆம் நூற்றாண்டு

15. பெர்சியன் பதிப்பு - கி.பி. 2-ஆம் நூற்றாண்டு

நாம் தற்பொழுது பயன்படுத்தி வரும் பரிசுத்த வேதாகமத்திற்கும் மேலே கொடுக்கப்பட்டுள்ள வேதாகமத்தின் ஆதிக்கால பதிப்பிற்கும் வேறுபாடு எதுவுமில்லை. ஒன்றுபோல் உள்ளது. பரிசுத்த வேதாகமம் பல நூற்றாண்டுகளைக் கடந்துவந்த போதிலும் பரிசுத்த ஆவியானவர் தமது எழுதப்பட்ட வார்த்தையைப் பாதுகாத்து வந்திருக்கிறார்.

10. ஆதிகால வேதாகம மொழி பெயர்ப்புகள்

பரிசுத்த வேதாகமம் கர்த்தருடைய வார்த்தை. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, பரிசுத்த வேதாகம புஸ்தகங்களை எழுதினார்கள். அவர்கள் அவற்றை எபிரெய மொழியில் எழுதினார்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் காலம் வரைக்கும் வேதாகமம் தங்களுக்கு மட்டுமே உரியது என்று யூதர்கள் நினைத்தார்கள். ஆகையினால், இவர்கள் மற்ற இனத்தாரோடு வேதாகம சத்தியங்களைப் பகிர்ந்து கொள்ள வில்லை. பிற மொழிகளில் வேதாகம நூல்களை மொழிபெயர்ப்பதற்கும் எவ்வித முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை.

மகா அலெக்ஸாண்டரின் காலத்தில் யூதர்கள் உலகமெங்கும் சிதறியிருந்தார்கள். தங்கள் தாய் மொழியாகிய எபிரெய மொழியைக்கூட மறந்து விட்டார்கள். அக்காலத்தில் பொது மொழியாக வழக்கிலிருந்த கிரேக்க மொழியையே யூதர்கள் பேசினார்கள்.

அக்காலத்தில் பரிசுத்த வேதாகமம் எபிரெய மொழியில் எழுதப்பட்டிருந்ததினால் பிற தேசங்களில் குடியேறிய யூதர்களால் இதை வாசித்து புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகையினால், எபிரெய மொழியின் பரிசுத்த வேதாகமத்தை கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கும் வேலையைத் துவங்கினார்கள்.

அக்காலத்தில் பிற மொழிகளில் வேதாகமத்தை மொழிபெயர்த்து, நகல்கள் தயாரிப்பது எளிதான காரியமாக இல்லை. மேலும் அக்காலத்திலிருந்த திருச்சபைத் தலைவர்கள் சாதாரண மக்கள் வேதாகமத்தை வாசிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் கருதினார்கள்.

கி.பி. 1519-ல் மார்ட்டின் லூதர் மூலமாக திருச்சபையில் மறுமலர்ச்சி உண்டாயிற்று. பரிசுத்த வேதாகமம் எல்லா ஜனங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள தேவனுடைய சத்திய வசனம் என்னும் உணர்வு ஜனங்களுடைய உள்ளத்தில் உண்டாயிற்று.

இதன்பின்பு, கர்த்தருடைய பிள்ளைகள் தாங்கள் பேசும் சொந்த மொழிகளில் பரிசுத்த வேதாகமத்தை மூலபாஷையிலிருந்து மொழிபெயர்க்க ஆரம்பித்தார்கள். இவ்வாறாக, பரிசுத்த வேதாகமத்திற்கு பல மொழி பெயர்ப்புக்கள் உண்டாயிற்று. அவற்றுள் முக்கியமானவை:

1. செப்துவஜிந்த் கிரேக்க மொழி பெயர்ப்பு
2. அரமாயிக் மொழி பெயர்ப்பு
3. சீரியாக் மொழி பெயர்ப்பு
4. காப்டிக் மொழி பெயர்ப்பு
5. கோதிக் மொழி பெயர்ப்பு
6. லத்தீன் வல்கேட் மொழி பெயர்ப்பு

செப்துவஜிந்த் கிரேக்க மொழி பெயர்ப்பு (கி.மு. 250)

முதன் முதலாக வேதாகம மொழி பெயர்ப்பு எகிப்து தேசத்தில் உள்ள அலெக்ஸாண்ட்ரியா என்னும் இடத்தில் கிரேக்க மொழியில் செய்யப்பட்டது. கி.மு. 334 முதல் 324 வரை கிரேக்க மன்னன் மகா அலெக்ஸாண்டார் எகிப்து, சிறிய ஆசியா, பெர்சியா முதலிய தேசங்களைக் கைப்பற்றி இந்தியா மட்டும் வந்தார். இதனால் கிரேக்க மொழி இந்த தேசங்களிலெல்லாம் அரசியல் மொழியாகவும், பொதுவாக உபயோகிக்கப்பட்ட மொழியாகவும் மாறிற்று.

அந்நாடுகளில் பரவியிருந்த யூதர்களும் தங்கள் தாய் மொழியான எபிரெய மொழியை விடுத்து கிரேக்க மொழியை உபயோகிக்கலாயினர். கி.மு. 331-ல் அலெக்ஸாண்ட்ரியா பட்டணம் ஸ்தாபிக்கப்பட்டது. அது முதல் அங்கு அநேக யூத மக்கள் குடியேறினார்கள். கி.மு. 320-ஆம் ஆண்டு யூதேயா தேசம் எகிப்து தேசத்தோடு இணைக்கப்பட்டது. கி.மு. 285 முதல் 247 வரை எகிப்து தேசத்தை ஆண்ட பிலடெல்பஸ் (இரண்டாம் டாலமி) என்ற கிரேக்க மன்னன், கோத்திரத்திற்கு 6 பேராக இஸ்ரவேலின் 12 கோத்திரங்களிலிருந்து எடுக்கப்பட்ட 72 யூத அறிஞர்களை ஒன்று கூட்டி பழைய ஏற்பாட்டை கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கும்படி ஒழுங்கு செய்தான்.

கி.மு. 250-ல் அலெக்ஸாண்ட்ரா பட்டணத்தில் எபிரெய மொழியிலிருந்து கிரேக்க மொழியில் பழைய ஏற்பாடு மொழிபெயர்க்கப்பட்டது. இது "செப்துவஜிந்து கிரேக்க மொழிபெயர்ப்பு" என்று அழைக்கப்படுகிறது.

சிதறுண்டு இருந்த யூதர்களுக்கு கிரேக்க மொழிபெயர்ப்பே வேதாகமமாக இருந்தது. பவுல் அப்போஸ்தலன் பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் கூறுகையில் இந்த "செப்துவஜிந்த்" மொழிபெயர்ப்பிலிருந்தே கூறுகின்றார். ஆதி திருச்சபையில் இதுவே அதிகார பூர்வமாக உபயோகப்படுத்தப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் காலத்தில் பயன்படுத்தப்பட்ட சில பகுதிகள் இன்றும் உள்ளன. சவக்கடல் சுருள்களிலும் இவற்றில் உள்ள சில பகுதிகள் கிடைத்திருக்கின்றன.

அரமாயிக் மொழி பெயர்ப்பு

பாபிலோனில் யூதர்கள் நீண்ட காலமாக சிறையிருப்பில் இருந்தார்கள். இக்காலத்தில் தங்களுடைய சுத்தமான எபிரெய மொழியை மறந்துவிட்டு, பாபிலோனிய மொழிக்கலப்புடன் பேசினார்கள். இவர்கள் பேசிய இந்த கலப்பு மொழி "அரமாயிக் மொழி" என்று அழைக்கப்பட்டது. இவர்களால் எபிரெய மொழியிலிருந்த பழைய ஏற்பாட்டைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆகையினால், எபிரெயம் தெரிந்தவர்கள் எபிரெய பழைய ஏற்பாட்டை வாசித்தவுடன், எல்லா ஜனங்களுக்கும் புரியும் விதத்தில் அவர்கள் அதை அரமாயிக் மொழியிலும் மொழிபெயர்த்துக் கூறுவார்கள். இவ்வாறு மொழி பெயர்ப்பவர்களுக்கு "தூர்க்கமான்" என்று பெயர்.

பெர்சியருடைய ஆட்சிக் காலத்தில் எஸ்றா தூர்க்கமான்களின் உதவியுடன் எபிரெய பழைய ஏற்பாட்டை அரமாயிக் மொழியில் மொழி பெயர்க்கும் பணியைச் செய்தார். இந்தத் தூர்க்கமான்கள் எபிரெய மொழி பழைய ஏற்பாட்டை அரமாயிக் மொழியில் மொழி பெயர்த்து எழுதினார்கள். இந்த மொழிபெயர்ப்புக்கு "அரமாயிக் டார்கம்" என்று பெயர்.

யூத மார்க்கத்தலைவர்கள் தங்கள் எபிரெய வேதாகமம் அரமாயிக் மொழியில் மொழி பெயர்க்கப்படுவதை முதலில் விரும்பவில்லை. ஆனாலும், காலம் செல்லச் செல்ல அரமாயிக் மொழி பேசிய யூதர்கள் அரமாயிக் டார்கத்தை அதிகமாகப் பயன்படுத்தியதினால் ஜனங்கள் இதை ஏற்றுக் கொண்டார்கள்.

செப்துவஜிந்த் வார்த்தைக்கு வார்த்தை மிகவும் கவனமாக மொழிபெயர்க்கப்பட்ட மொழிபெயர்ப்பாகும். ஆனால் டார்கம் இவ்வாறு கவனமாக மொழிபெயர்க்கப்படவில்லை. ஜனங்களுக்கு புரியும் விதத்தில் மிகவும் எளிய பேச்சு வழக்கில் இவற்றை எழுதினார்கள்.

டார்கம்களில் இரண்டு நூல்கள் முக்கியமானவை. அவையாவன:

1. ஆன்கெலாஸ் டார்கம்

2. யோனத்தான் டார்கம்

ஆன்கெலாஸ் டார்கம் அரமாயிக் பஞ்சாகமம் ஆகும். யோனத்தான் டார்கம் தீர்க்கதரிசிகளின் புஸ்தகமாகும்.

சீரியாக் மொழி பெயர்ப்பு

(கி.பி. 1-ம், 2-ம் நூற்றாண்டு)

சீரியாக் என்பது மெசபடோமியா சமவெளியின் வடபகுதியில் பேசப்பட்ட கிழக்கு அரமெய்க் மொழி ஆகும். இங்கு அநேக யூத மக்களின் குடியிருப்புகள் இருந்தன. இவர்களின் உபயோகத்திற்காக எபிரெய மொழியில் இருந்து பழைய ஏற்பாடு சீரியாக் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. கி.பி. முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் சீரியா நாட்டின் பகுதிகளில் கிறிஸ்துவின் நற்செய்தி பரவ ஆரம்பித்தது. ஏற்கெனவே சீரியாக் மொழியில் இருந்த பழைய ஏற்பாடோடு புதிய ஏற்பாடும் சேர்க்கப்பட்டு அங்கு பேசப்பட்ட அன்றாடக மொழியில் முழு வேதாகமமும் எழுதப்பட்டது. இது "சீரியாக் மொழிபெயர்ப்பு" என்றழைக்கப்பட்டது.

இது சாதாரண மொழிபெயர்ப்பு என்று பொருள்படும் பெஷிட்டா என்று அழைக்கப்பட்டது. 2-ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சீரியாக் மொழிபெயர்ப்பின் நகல்கள் இன்றும் உள்ளன.

காப்டிக் மொழி பெயர்ப்பு

இயேசு கிறிஸ்துவின் சீஷர்களில் சிலர் எகிப்து தேசத்திற்குச் சென்று அங்கு சுவிசேஷ ஊழியம் செய்தார்கள். அங்கு திருச்சபையும் ஸ்தாபிக்கப்பட்டது. எகிப்தியர்களின் மொழி எகிப்து மொழியாகும். இதை இரண்டு விதமாக எழுதினார்கள். முதலாவது வகை எகிப்து மொழியின் வரிவடிவமாகும். இதற்கு பின்பு, காப்டிக் என்னும் எழுத்து வடிவத்தை எகிப்து மொழிக்குப் பயன்படுத்தினார்கள்.

எகிப்து தேசத்தில் விசுவாசிகளின் எண்ணிக்கை பெருகிற்று. காப்டிக் மொழியில் அவர்களுக்கு வேதாகமம் தேவைப்பட்டது. கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் வேதபண்டிதர்கள் செப்துவஜிந்த் கிரேக்க பழைய ஏற்பாட்டிலிருந்தும், கிரேக்க மொழி புதிய ஏற்பாட்டிலிருந்தும் காப்டிக் பரிசுத்த வேதாகமத்தை மொழியில் மொழி பெயர்த்தார்கள்.

எகிப்து நாட்டின் திருச்சபையில் இக்காலத்தில் கூட ஒரு சில சபைகளில் காப்டிக் மொழி வேதாகமம் பயன்படுத்தப்படுகிறது.

கோதிக் மொழி பெயர்ப்பு
(கி.பி. 360)

ரோம சாம்ராஜ்ஜியத்தில் கோத் என்னும் இனத்தவர் வாழ்ந்தார்கள். இவர்கள் ரைன், டான்யூப் ஆகிய நதிக்கரைகளில் குடியிருந்தார்கள். இவர்களுடைய மொழி "கோதிக்" என்று அழைக்கப்பட்டது.

கி.பி. 3-ஆம் நூற்றாண்டு இந்த இனத்தவர் மத்தியில் சுவிசேஷம் பரவிற்று. கி.பி. 360-ல் உல்பிலாஸ் என்பவர் வேதாகமத்தைக் கோதிக் மொழியில் மொழிபெயர்த்தார்.

லத்தீன் வல்கேட் மொழிபெயர்ப்பு
(கி.பி. 400)

இயேசு கிறிஸ்துவின் காலத்தில் ரோமர்கள் உலகத்தின் பெரும்பகுதியை ஆட்சி செய்தார்கள். ஆரம்பத்தில் கிரேக்க மொழியே இவர்களுடைய பொதுவான மொழியாக இருந்தது.

கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் ரோமப் பேரரசில் லத்தீன் மொழி வளர்ச்சி பெற ஆரம்பித்தது.

கி.பி. 250-ல் லத்தீன் மொழியில் பரிசுத்த வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்டது. கி.பி. 405-ல் ஜெரோம் என்னும் பாதிரியார் பரிசுத்த வேதாகமம் முழுவதையும் லத்தீன் மொழியில் மொழிபெயர்த்து முடித்தார். இதுவே "லத்தீன் வல்கேட்" என்று அழைக்கப்படுகிறது.

கத்தோலிக்க திருச்சபைகளில் லத்தீன் வல்கேட் மொழிபெயர்ப்பே அதிகார பூர்வமான வேதாகமமாகும்.

11. அச்சிடப்பட்ட வேதாகமங்கள்

கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. அதுவரையிலும், கைப்பிரதிகளாக இருந்த பரிசுத்த வேதாகமம் இக்காலத்தில் அச்சடிக்கப்பட்ட புத்தகங்களாக வெளி வரலாயிற்று.

அச்சடிக்கப்பட்ட வேதாகமங்களுள் கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளவை மிகவும் முக்கியமானவைகளாகும்.

1. லத்தீன் மொழியில் குட்டன்பர்க் வேதாகமம் (கி.பி. 1456)
2. கிரேக்க மொழியில் பழைய ஏற்பாடு (செப்துவஜிந்து) (கி.பி. 1516)
3. ஜெர்மன் மொழியில் வேதாகமம் (கி.பி. 1521)
4. டின்டேல் வேதாகமம் (கி.பி. 1525)
5. மைல்ஸ் கவர்டேல் வேதாகமம் (கி.பி. 1535)
6. கிரான்மர் வேதாகமம் அல்லது மாத்யூ வேதாகமம் (கி.பி. 1537)
7. மகா வேத புத்தகம் (கி.பி. 1539)
8. ஜெனீவா வேதாகமம் (கி.பி. 1560)
9. பிஷப்களின் வேதாகமம் (கி.பி. 1568)
10. கத்தோலிக்க திருச்சபைகளின் வெளியீடுகள் (கி.பி. 1609)
11. ஜேம்ஸ் இராஜாவின் அதிகார பூர்வமான பதிப்பு (கி.பி. 1611)

12. ஆங்கில மொழியில் பரிசுத்த வேதாகமம்

சுமார் 1200 வருஷங்களாக ஆங்கில மொழியில் மொழி பெயர்ப்பு பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. முதன் முதலாக எபிரெய மொழியில் எழுதப்பட்ட வேதாகமத்தைக் கிரேக்க மொழியிலும், லத்தீன் மொழியிலும் வேதாகம அறிஞர்கள் மொழிபெயர்த்தார்கள். இது ஏராளமான ஜனங்களுக்கு பிரயோஜனமாக இருந்தது.

லத்தீன் மொழிக்கு பின்பு ஆங்கில மொழி உலகமெங்கும் பிரபல்யமாயிற்று. தேவனுடைய பரிசுத்தவான்கள் வேதாகமத்தை ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கத் துவங்கினார்கள்.

ரோமர்கள் இங்கிலாந்து தேசத்தோடு படையெடுத்தார்கள். இதன் வாயிலாக கிறிஸ்தவ மார்க்கம் இங்கிலாந்து தேசத்திற்கு அறிமுகமாயிற்று. இவர்கள் பேசிய ஐரீஷ் மொழியில் புதிய ஏற்பாடு மொழிபெயர்க்கப் பட்டது.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பேசப்பட்ட ஆங்கில மொழிக்கு ஆங்கிலோ சாக்ஸன் என்று பெயர். பரிசுத்த வேதாகமத்தை ஆங்கிலோ சாக்ஸன் மொழியிலும் மொழி பெயர்த்தார்கள்.

வேதாகம மொழிபெயர்ப்பில் மிக முக்கிய பங்கு வகித்தவர் ஜான் விக்லிப் என்னும் பேராசிரியராவார். இவர் ஆக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராக பணிபுரிந்தவர். இவர் பரிசுத்த வேதாகமத்தை லத்தீன் வல்கேட்டிலிருந்து ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தார். மொழிபெயர்க்கப்பட்ட காலம் கி.பி. 1380-1384. இக்காலத்தில் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகையினால், இவருடைய மொழிபெயர்ப்புப் பிரதிகள் கையினாலேயே எழுதப்பட்டன.

ஆங்கில மொழி வேதாகமத்தில் பல்வேறு பதிப்புகள் வெளிவந்துள்ளன. அவற்றை இவ்வாறு வரிசைப்படுத்தலாம்.

1. திருத்தப்பட்ட ஆங்கில மொழி பெயர்ப்பு (கி.பி. 1885)
2. அமெரிக்க திருத்தப்பட்ட தரமான மொழி பெயர்ப்பு (கி.பி. 1901)
3. திருத்தப்பட்ட தரமான மொழிபெயர்ப்பு (கி.பி. 1952)
4. விஸ்தரிக்கப்பட்ட வேதாகமம் (கி.பி. 1954)
5. பெர்க்லி வேதாகமம் (கி.பி. 1959)
6. எருசலேம் வேதாகமம் (கி.பி. 1966)
7. புதிய அமெரிக்க வேதாகமம் (கி.பி. 1970)
8. புதிய ஆங்கில வேதாகமம் (கி.பி. 1970)
9. புதிய அமெரிக்க தரமான வேதாகமம் (கி.பி. 1971)
10. வாழும் வேதாகமம் (கி.பி. 1971)
11. இன்றைய ஆங்கிலப் பதிப்பு (கி.பி. 1976)
12. அகில உலக புதிய பதிப்பு (கி.பி. 1978)
13. புதிய ஜேம்ஸ் இராஜாவின் பதிப்பு (கி.பி. 1981)
14. திறந்த வேதாகமம் (கி.பி. 1983)

13. தமிழ் மொழியில் பரிசுத்த வேதாகமம்

இந்திய மொழிகளிலேயே முதன் முதலாக தமிழ் மொழியில்தான் பரிசுத்த வேதாகமம் அச்சிடப்பட்டது. போர்ச்சுகல், ஹாலந்து, டென்மார்க் ஆகிய தேசங்களிலிருந்து இந்தியாவிற்கு சுவிசேஷ ஊழியம் செய்ய வந்த மிஷினரிகள் பரிசுத்த வேதாகமத்தை தமிழ் மொழியில் அச்சிடுவதற்கு பெரிதும் உதவினார்கள்.

12. ஆங்கில மொழியில் பரிசுத்த வேதாகமம்

சுமார் 1200 வருஷங்களாக ஆங்கில மொழியில் மொழி பெயர்ப்பு பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. முதன் முதலாக எபிரெய மொழியில் எழுதப்பட்ட வேதாகமத்தைக் கிரேக்க மொழியிலும், லத்தீன் மொழியிலும் வேதாகம அறிஞர்கள் மொழிபெயர்த்தார்கள். இது ஏராளமான ஜனங்களுக்கு பிரயோஜனமாக இருந்தது.

லத்தீன் மொழிக்கு பின்பு ஆங்கில மொழி உலகமெங்கும் பிரபல்யமாயிற்று. தேவனுடைய பரிசுத்தவான்கள் வேதாகமத்தை ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கத் துவங்கினார்கள்.

ரோமர்கள் இங்கிலாந்து தேசத்தோடு படையெடுத்தார்கள். இதன் வாயிலாக கிறிஸ்தவ மார்க்கம் இங்கிலாந்து தேசத்திற்கு அறிமுகமாயிற்று. இவர்கள் பேசிய ஐரீஷ் மொழியில் புதிய ஏற்பாடு மொழிபெயர்க்கப் பட்டது.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பேசப்பட்ட ஆங்கில மொழிக்கு ஆங்கிலோ சாக்ஸன் என்று பெயர். பரிசுத்த வேதாகமத்தை ஆங்கிலோ சாக்ஸன் மொழியிலும் மொழி பெயர்த்தார்கள்.

வேதாகம மொழிபெயர்ப்பில் மிக முக்கிய பங்கு வகித்தவர் ஜான் விக்லிப் என்னும் பேராசிரியராவார். இவர் ஆக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராக பணிபுரிந்தவர். இவர் பரிசுத்த வேதாகமத்தை லத்தீன் வல்கேட்டிலிருந்து ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தார். மொழிபெயர்க்கப்பட்ட காலம் கி.பி. 1380-1384. இக்காலத்தில் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகையினால், இவருடைய மொழிபெயர்ப்புப் பிரதிகள் கையினாலேயே எழுதப்பட்டன.

ஆங்கில மொழி வேதாகமத்தில் பல்வேறு பதிப்புகள் வெளிவந்துள்ளன. அவற்றை இவ்வாறு வரிசைப்படுத்தலாம்.

1. திருத்தப்பட்ட ஆங்கில மொழி பெயர்ப்பு (கி.பி. 1885)
2. அமெரிக்க திருத்தப்பட்ட தரமான மொழி பெயர்ப்பு (கி.பி. 1901)
3. திருத்தப்பட்ட தரமான மொழிபெயர்ப்பு (கி.பி. 1952)
4. விஸ்தரிக்கப்பட்ட வேதாகமம் (கி.பி. 1954)
5. பெர்க்லி வேதாகமம் (கி.பி. 1959)
6. எருசலேம் வேதாகமம் (கி.பி. 1966)
7. புதிய அமெரிக்க வேதாகமம் (கி.பி. 1970)
8. புதிய ஆங்கில வேதாகமம் (கி.பி. 1970)
9. புதிய அமெரிக்க தரமான வேதாகமம் (கி.பி. 1971)
10. வாழும் வேதாகமம் (கி.பி. 1971)
11. இன்றைய ஆங்கிலப் பதிப்பு (கி.பி. 1976)
12. அகில உலக புதிய பதிப்பு (கி.பி. 1978)
13. புதிய ஜேம்ஸ் இராஜாவின் பதிப்பு (கி.பி. 1981)
14. திறந்த வேதாகமம் (கி.பி. 1983)

13. தமிழ் மொழியில் பரிசுத்த வேதாகமம்

இந்திய மொழிகளிலேயே முதன் முதலாக தமிழ் மொழியில்தான் பரிசுத்த வேதாகமம் அச்சிடப்பட்டது. போர்ச்சுகல், ஹாலந்து, டென்மார்க் ஆகிய தேசங்களிலிருந்து இந்தியாவிற்கு சுவிசேஷ ஊழியம் செய்ய வந்த மிஷினரிகள் பரிசுத்த வேதாகமத்தை தமிழ் மொழியில் அச்சிடுவதற்கு பெரிதும் உதவினார்கள்.

1498-ல் வாஸ்கோடகாமா என்னும் போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த மாலுமி இந்தியாவிற்கு செல்லும் கடல்வழியைக் கண்டுபிடித்தார். இதன் பின்னர், போர்ச்சுக்கல் தேசத்தார்கள் இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளுக்கு கடல் பயணமாக வந்தார்கள். துவக்கத்தில் இவர்கள் வியாபாரம் செய்வதற்காகவே இங்கு வந்தார்கள். தங்களுடைய வியாபார ஸ்தலங்களில் இவர்கள் கத்தோலிக்க திருச்சபையையும் நிறுவினார்கள். திருச்சபையில் ஊழியம் செய்வதற்காக பாதிரியார்களை போர்ச்சுக்கல் தேசத்திலிருந்து வரவழைத்தனர்.

இந்தியாவில் இவர்கள் ஸ்தாபித்த திருச்சபைகளில் பரிசுத்த வேதாகமத்தைத் தமிழ் மொழியில் பயன்படுத்த விரும்பினார்கள். ஆனால் நமது தேசத்தில் அப்போது அச்சு இயந்திர வசதியில்லை.

போர்ச்சுக்கல் நாட்டிலுள்ள லிஸ்பன் நகரில் 1554-ஆம் ஆண்டு தமிழ் மொழியில் கிறிஸ்தவ வினா விடை என்னும் நூல் அச்சடிக்கப்பட்டு அதை இந்திய திருச்சபைகளில் பயன்படுத்தினார்கள்.

இலங்கையில் தமிழ் வேதாகமம்

கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஹாலந்து தேசத்தார்களும், டென்மார்க் தேசத்தார்களும் இலங்கைக்கு வந்து வியாபாரம் செய்தார்கள். இவர்கள் மூலமாக இலங்கைத்தீவில் திருச்சபை ஊழியம் துவங்கிற்று.

இலங்கையில் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை ஹாலந்து தேசத்திலிருந்தும், டென்மார்க் தேசத்திலிருந்தும் வந்த கிறிஸ்தவ பாதிரியார்கள் செய்து வந்தார்கள்.

அவர்களுக்குத் தமிழ் மொழியில் பரிசுத்த வேதாகமம் தேவைப்படுவதை உணர்ந்து, வேதாகமத்தைத் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கும் ஊழியமும் செய்து வந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள்:

1. பிலிப்புஸ் பல்தேயுஸ் (1672)
2. அட்ரியானஸ் டி மே (1692)
3. அடால்ஃப் க்றாமர் (1741)
4. வெட்செலியஸ் (1742)

இவர்களைத் தொடர்ந்து பிலிப் டி மெல்லோ (1759) என்னும் இலங்கைத் தமிழரும் பரிசுத்த வேதாகமத்தைத் தமிழ் மொழியில் மொழி பெயர்ப்பதற்கு பெரும்பணியாற்றினார்.

இவ்வாறாக, இலங்கைத் தீவில் பரிசுத்த வேதாகமம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. இக்காலத்தில் தமிழ் நாட்டிலும் வேதாகமத்தை தமிழில் மொழிபெயர்க்கும் பணி நடைபெற்று வந்தது.

தமிழகத்தில் தமிழ் வேதாகமம் சீகன்பால்க்

17-ஆம் நூற்றாண்டில் டென்மார்க் தேசத்தை நான்காம் ப்ரெட்ரிக் என்னும் அரசர் ஆட்சி புரிந்து வந்தார். இந்தியாவில் திருச்சபைகளை ஸ்தாபிப்பதில் இவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. அக்காலத்தில் ஜெர்மனியில் சீகன்பால்க், ப்ளூட்ஸ்சோ என்ற பாதிரியார்கள் இந்தியாவிற்கு வந்து இயேசுவின் ஊழியத்தைச் செய்வதற்கு மிகுந்த ஆர்வமுடையவர்களாக இருந்தார்கள்.

நான்காம் ப்ரெட்ரிக் இவ்விரண்டு பாதிரியார்களையும் இந்தியாவிற்கு அனுப்புவதற்கு எல்லா உதவிகளையும் செய்தார்.

அக்காலத்தில் தமிழகத்திலுள்ள தரங்கம்பாடி என்னும் கடற்கரைப் பட்டணம் டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. சீகன்பால்க்கும், ப்ளூட்ஸ்சோவும் 1706-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 9-ஆம் தேதி தரங்கம்பாடிக்கு வந்து சேர்ந்தார்கள்.

அந்த ஊருக்கு அருகிலிருந்த தமிழாசிரியர்கள் துணையோடு சீகன்பால்க் தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டார். 1708-ஆம் ஆண்டு அக்டோபர் 17-ஆம் தேதி புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்க்க ஆரம்பித்தார்.

ஸ்கிமிட்டின் கிரேக்க மொழிப் புதிய ஏற்பாடு, லத்தீன் வல்கேட், மார்ட்டின் லூதரின் ஜெர்மன் மொழி பெயர்ப்பு முதலியவைகளை ஆதாரமாக கொண்டு, டேனிய, போர்ச்சுகீஸ் வேதாகமங்களின் உதவியுடன் புதிய ஏற்பாட்டை தமிழ் மொழியில் 1711-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் நாள் மொழிபெயர்த்து முடித்தார்.

புதிய ஏற்பாட்டை இவர் தமிழில் மொழிபெயர்த்தபோதும், இதை அச்சிடுவதற்கு தமிழகத்தில் அச்சு இயந்திரம் அக்காலத்தில் இல்லை. இங்கிலாந்திலுள்ள கிறிஸ்தவ கல்வி அபிவிருத்தி சங்கம் என்னும் ஊழிய ஸ்தாபனம் இவருக்கு ஒரு அச்சு இயந்திரத்தை நன்கொடையாகக் கொடுத்தார்கள். அத்துடன் ஜெர்மனியிலுள்ள சீகன்பால்க்கின் நண்பர்கள் தமிழ் அச்சு எழுத்துக்களை அவருக்கு வார்த்துத் தந்தார்கள்.

இதிலும் பல பிரச்சனைகள் ஏற்பட்டன. அச்சு இயந்திரத்தைக் கொண்டு வந்த கப்பலை பிரெஞ்சு படைகள் கைப்பற்றின. பின்னர் அவை சென்னை நகர கவர்னரால் மீட்கப்பட்டன. மேலும் அச்சு இயந்திர முதலாளி வரும் வழியில் கடலில் மரித்து விட்டார். இதன்பின்பு அச்சு வேலை தெரிந்த ஒரு டேனிய வீரன் ஒருவனை சீகன்பால்க் கண்டு பிடித்தார். அதன் பின்பு, 1913-ஆம் வருடம் அச்சு ஏற்றும் வேலையை ஆரம்பித்தார். ஜெர்மனியிலிருந்து வந்த எழுத்துக்கள் பெரிதாக இருந்தன. இதனால் இடையில் காகிதம் இல்லாமல் போயிற்று. ஆகையால் தரங்கம்பாடியிலேயே சிறிய எழுத்துக்களை திரும்பவும் வார்த்தார். இவ்வளவு கடின உழைப்பிற்கு பின்னர் 1715-ஆம் வருடம் ஜீலை 15ல் புதிய ஏற்பாடு தமிழில் அச்சிடப்பட்டு வெளிவந்தது.

புதிய ஏற்பாடு அச்சிடப்பட்ட பின்னர் அத்துடன் நின்று விடாது பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்பைத் துவங்கி ரூத்தின் சரித்திரம் வரைக்கும் முடித்தார். பின் தமது 37-ம் வயதில் தரங்கம்பாடியில் காலமானார்.

பெஞ்சமின் சூல்ட்ஸ்

சீகன்பால்க் விட்டுச் சென்ற வேலையைத் தரங்கம்பாடிக்கு வந்து சேர்ந்த பெஞ்சமின் சூல்ட்ஸ் ஏற்றுக் கொண்டு 1723-ம் ஆண்டு பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்பை ஆரம்பித்தார். 1725 நவம்பர் மாதம் மொழி பெயர்ப்பை முடித்தார்.

1723-ல் நியாயாதிபதிகள் வரை பழைய ஏற்பாடு அச்சிடப்பட்டது. 1724-ல் சங்கீதங்களும் 1726-ல் ரூத் உன்னதப்பாட்டு வரையும், 1727-ல் ஏனைய புத்தகங்களும் அச்சிடப்பட்டு வெளியாயிற்று.

பப்ரீஷியஸ்

பப்ரீஷியஸ் 1710-ல் ஜெர்மனி நாட்டில் பிறந்தார். ஜெர்மன் தேசத்து சர்வ கலாசாலைகளில் பட்டங்கள் பெற்றார். 1740-ஆம் ஆண்டு பரிசுத்த ஆவியானவரின் கட்டளைக்கு அடிபணிந்து கடலூர் வந்து சேர்ந்தார்.

1752-ஆம் வருடம் தமிழ் மொழி வேதாகமத்தை உயர் நடையில் மூல பாஷையோடு ஒப்பிட்டு மொழி பெயர்க்க ஆரம்பித்தார்.

சீகன்பால்க் தமிழ்நாடு வந்த காலம் வேறு. பப்ரீஷியஸ் வந்த காலம் வேறு. சீகன்பால்க் வந்த காலத்தில் தமிழில் வேதாகமமும் கிடையாது, விசுவாசிகளான கிறிஸ்தவர்களும் கிடையாது. தமிழ் மக்களுக்கு எப்படியாவது அவர்கள் தாய் மொழியில் வேதாகமம் கொடுக்கப்பட வேண்டும் என்ற வாஞ்சையோடு சீகன்பால்க் உழைத்தார். பப்ரீஷியஸ் வந்த காலத்திலோ, தமிழ் நாட்டில் கிறிஸ்தவம் வேரூன்றித் தழைக்க ஆரம்பித்து விட்டது.

வேதாகமமும் ஏற்கெனவே மொழி பெயர்க்கப்பட்டாயிற்று. ஆதலால் ஒரு தரமான புதிய திருப்புதல் கொண்டு வருவதும் அது மக்கள் கைகளில் கிடைக்க உதவுவதுமே தமது தலையாய கடமை என்பதை நன்கு அறிந்து பப்ரீஷியஸ் ஊழியம் செய்தார். புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்கு 20 வருஷங்களாயிற்று.

இவருடைய தமிழ் மொழி புதிய ஏற்பாடு 808 பக்கங்களைக் கொண்டிருந்தது. 1772-ஆம் ஆண்டு கிறிஸ்தவ கல்வி அபிவிருத்தி சங்கத்தினர் இந்தப் புதிய ஏற்பாட்டை அச்சிட்டு வெளியிட்டார்கள்.

புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்த்த பின்பு, பழைய ஏற்பாட்டையும் தமிழில் மொழிபெயர்க்க ஆரம்பித்தார். தமிழில் தான் மொழிபெயர்த்த பழைய ஏற்பாட்டை பகுதி பகுதியாகக் கீழ்க்கண்ட வருஷங்களில் அச்சிட்டு வெளியிட்டார்.

1777-ல் ஆதியாகமம் முதல் நியாயாதிபதிகள் வரையும்

1782-ல் ரூத் முதல் யோபு வரையும்

1791-ல் சங்கீதம் முதல் உன்னதப்பாட்டு வரையும்

1796-ல் தீர்க்கதரிசிகளின் புத்தகங்கள்

தமது ஊழியத்தை முடித்து விட்டு, பப்ரீஷியஸ் 1791-ஆம் ஆண்டு ஜனவரி 23-ம் நாள் காலமானார்.

வில்லியம் கேரி

வில்லியம் கேரி 1793-ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்தார். இவருடன் மார்ஷ்மான் என்னும் தேவ ஊழியரும் இந்தியாவிற்கு வந்தார். இவர்கள் இருவரும் இந்திய மொழிகளில் வேதாகமம் வெளியிடப்பட வேண்டுமென கடுமையாக உழைத்தார்கள்.

இவர்கள் வங்களாத்திலுள்ள செராம்பூர் என்னும் ஊரில் அச்சுக் கூடம் ஒன்று அமைத்தார்கள். இதன் மூலமாக 45 மொழிகளில் முழு வேதாகமத்தையோ அல்லது வேதாகமப் பகுதிகளையோ அச்சிட்டு வெளியிட்டார்கள்.

தமிழ் மொழியிலும் வேதாகமத்தை அச்சிட்டு வெளியிட வேண்டுமென்னும் ஆர்வம் அவர்களுக்கு உண்டாயிற்று.

தமிழ் மொழியில் ஏற்கெனவே ஒரு வேதாகமம் பப்ரீஷியஸ் என்பவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடுவதற்கு ஆயத்தமாக இருப்பதை அவர்கள் கண்டு, அதையே அச்சிட்டு வெளியிட முடிவு செய்தார்கள்.

பப்ரீஷியஸ் தமிழில் மொழிபெயர்த்த வேதாகமத்தை 1813-ஆம் ஆண்டு வில்லியம் கேரி அச்சிட்டு வெளியிட்டார்.

இவரது முயற்சியின் பலனாக இங்கிலாந்தில் 1804-ஆம் ஆண்டு மார்ச் 7-ஆம் நாள் சர்வதேச வேதாகம சங்கம் நிறுவப்பட்டது. வேதாகமத்தை உலகின் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கும் பொறுப்பை இச்சங்கம் ஏற்றுக் கொண்டது. இச்சங்கத்தின் கிளைகள் உலகின் வெவ்வேறு பகுதிகளிலும் நிறுவப் பட்டன. 1811-ஆம் ஆண்டு கல்கத்தாவிலும் 1820-ஆம் ஆண்டு சென்னையிலும் வேதாகம சங்கத்தின் கிளைகள் நிறுவப்பட்டன.

க்ளாடியஸ் பகனன்

க்ளாடியஸ் பகனன் என்னும் குருவானவர் கல்கத்தாவில் ஊழியம் செய்துவந்தார். 1806-ஆம் ஆண்டு தென்னிந்தியத் திருச் சபைகளைப் பார்ப்பதற்காக தமிழ்நாட்டிற்கு வந்தார். அக்காலத்தில் நூற்றுக்கு ஒருவரிடம் மட்டும்தான் புதிய ஏற்பாடு இருந்தது. முழு வேதாகமும் ஆயிரத்திற்கு ஒருவரிடம் கூட இல்லை. இதை உணர்ந்த கிளாடியஸ் பகனன் தமிழில் பரிசுத்த வேதாகமம் அச்சிட வேண்டுமென்னும் தேவையை சென்னை வேதாகம சங்கத்தாரிடம் பகிர்ந்து கூறினார்.

இதன் விளைவாக சென்னை வேதாகம சங்கத்தினர் பப்ரீஷியஸ் அவர்களின் மொழி பெயர்ப்பையே திருத்தி புதிதாகப் பிரசுரிக்கலாம் என்று தீர்மானித்தனர். இந்தப் பொறுப்பை ரேனியஸ் அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

ரேனியஸ்

ரேனியஸ் 1790-ஆம் ஆண்டு ஜெர்மனியில் பிறந்தவர். சர்ச் மிஷன் சங்கத்தின் மூலமாக இவர் 1814-ஆம் ஆண்டு சென்னைக்கு மிஷனெரியாக வந்தார்.

1820-ஆம் ஆண்டிலிருந்து திருநெல்வேலி பகுதியில் ஊழியம் செய்து வந்தார். பப்ரீஷியஸ் தமிழில் மொழிபெயர்த்த புதிய ஏற்பாட்டில் காணப்பட்ட இலக்கணப் பிழைகளை நீக்கி, நல்ல நடையில் கொண்டு வந்தார்.

1827-ல் ரேனியஸ் மொழிபெயர்த்த நான்கு சுவிசேஷங்களையும், அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தையும் சென்னை வேதாகம சங்கத்தார் அச்சிட்டு வெளியிட்டார்கள். இதைத் தொடர்ந்து 1833-ல் ரேனியஸ் மொழிபெயர்த்த புதிய ஏற்பாடு முழுவதையும் அச்சிட்டு வெளியிட்டார்கள்.

புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்த்த பின்பு, பழைய ஏற்பாட்டையும் தமிழில் மொழி பெயர்க்கும் பணியை ரேனியஸ் ஆரம்பித்தார். ஆதியாகமம் முதல் தானியேல் தீர்க்கதரிசி வரையிலும் ரேனியஸ் தமிழில் மொழி பெயர்த்தார். அதன் பின்பு, 1838-ஆம் ஆண்டு ரேனியஸ் மரணமடைந்தார்.

சென்னையில் அமெரிக்க மிஷனுக்கு ஒரு அச்சகம் இருந்தது. அவர்கள் 1840-ஆம் ஆண்டு தமிழில் ஒரு முழு வேதாகமத்தையும் அச்சிட்டு வெளியிட்டார்கள். இந்த வேதாகமத்தில் பழைய ஏற்பாடு பப்ரீஷியஸால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதாகும். புதிய ஏற்பாடு ரேனியஸால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதாகும்.

சென்னை வேதாகம சங்கத்தினர் இந்த வேதாகமத்தில் மேலும் சில திருத்தங்களைச் செய்து 1884-ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்டார்கள்.

பீட்டர் பெர்சிவால்

தமிழ்நாட்டில் 1835-ஆம் ஆண்டு காலத்தில் கிறிஸ்தவர்கள் இரண்டு விதமான மொழிபெயர்ப்புகளைப் பயன்படுத்தி வந்தார்கள். ஒரு சில இடங்களில் பப்ரீஷியஸ் அவர்களுடைய மொழிபெயர்ப்பையும், வேறு சில இடங்களில் ரேனியஸ் அவர்களுடைய மொழிபெயர்ப்பையும் பயன்படுத்தி வந்தார்கள்.

இந்தச் சூழ்நிலையில் இரண்டு மொழி பெயர்ப்புகளுக்குப் பதிலாக, ஒரே மொழி பெயர்ப்பு இருந்தால் நலமாக இருக்குமென்று வேதாகம சங்கம் தீர்மானம்பண்ணிற்று.

இதில் முக்கிய பங்கு வகித்தது யாழ்ப்பாணத்தில் 1835-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட வேதாகம சங்கமாகும். இவர்கள் 1839-ஆம் ஆண்டு புதிய மொழிபெயர்ப்பைச் செய்வதற்கு ஒரு குழுவை நியமித்தார்கள். இக்குழுவின் தலைவராக பீட்டர் பெர்சிவால் அவர்கள் பொறுப்பேற்று வேதாகமத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் பணியைத் துவக்கினார்.

1840-ஆம் ஆண்டு தமிழில் புதிய மொழி பெயர்ப்புப் பணி ஆரம்பாயிற்று. இதற்கு அடிப்படையாக இருந்தது ரேனியஸ் அவர்களுடைய மொழிபெயர்ப்பாகும்.

1848-ஆம் ஆண்டு முதல் 1850-ஆம் ஆண்டு வரையிலும் பெர்சிவால் அவர்களின் தலைமையின் கீழ் யாழ்ப்பாணத்திலிருந்த வேதாகம அறிஞர்களும், சென்னையிலிருந்த வேதாகம அறிஞர்களும் பலமுறை கூடி இந்த புதிய மொழிபெயர்ப்பை மிகவும் நல்ல முறையில் செய்து முடித்தார்கள்.

இந்தப் புதிய வேதாகமம் 1850-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம் நாளன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது. இந்த மொழிபெயர்ப்பிற்கு "பீட்சார்த்த மொழிபெயர்ப்பு" என்னும் பெயரும் வழங்கலாயிற்று.

ஹென்றி பவர்

தமிழ் மொழியில் இதுவரையிலும் நான்கு மொழிபெயர்ப்புகள் வந்துள்ளன. அவையாவன:

1. சீகன்பால்க்
2. பப்ரீஷியஸ்
3. ரேனியஸ்
4. பெர்சிவால்

இந்த நான்குபேருடைய மொழிபெயர்ப்புகளே தமிழ்நாட்டு திருச்சபைகளில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. தமிழ்நாடு முழுவதிலும் பொதுவானதாக ஒரு வேதாகமம் இருந்தால் குழப்பமில்லாமல் தெளிவாக இருக்குமென்று திருச்சபையார் நினைத்தார்கள்.

BELLWETHER INTERNATIONAL

பரிசுத்த வேதாகமம் - முன்னுரை

GOOD NEWS PUBLISHERS

சென்னை வேதாகம சங்கம் ஒரு பொதுவான மொழிபெயர்ப்பு செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் அதற்குரிய முயற்சிகளைச் செய்து வந்தது. இதற்காக ஒரு குழுவை நியமித்தார்கள். இக்குழுவிற்கு ஹென்றி பவர் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

இந்த மொழிபெயர்ப்பிற்கு இவர்கள் ஆதாரமாக எடுத்துக் கொண்ட நூல்கள் பின்வருமாறு:

1. கிரேக்க மூலச்சுவடிகள் - 1624-ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்ட டெக்ஸ்டஸ் ரிஸப்டஸ்
2. அதிகாரபூர்வமான ஆங்கில மொழி பெயர்ப்பு - 1611-ல் வெளியிடப்பட்டது.
3. பப்ரீஷியஸின் மொழிபெயர்ப்பு
4. ரேனியஸின் மொழிபெயர்ப்பு
5. பெர்சிவாலின் மொழிபெயர்ப்பு

இவர்கள் மொழிபெயர்ப்பு ஊழியத்தை 1858-ல் ஆரம்பித்தார்கள். 1871-ஆம் ஆண்டு இவர்களுடைய மொழிபெயர்ப்பு பணி நிறைவு பெற்றது. அந்த ஆண்டிலேயே யூனியன் பதிப்பு என்னும் பெயரில் சென்னை வேதாகம சங்கத்தார் இதை அச்சிட்டு வெளியிட்டார்கள்.

லார்சன்

1871-ல் பவர் அவர்களுடைய மொழிபெயர்ப்பான யூனியன் பதிப்பு வெளிவந்த பிறகு திருச்சபையார் இந்த வேதாகமத்தை அதிகமாகப் பயன்படுத்தி வந்தார்கள்.

இக்காலத்தில் எபிரெயம், கிரேக்கம் ஆகிய மூலபாஷைகளில் ஏராளமான மொழியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக 1904-ஆம் ஆண்டு நெஸ்லே என்பவர் கிரேக்க மொழியில் ஒரு புதிய வேதாகமத்தை அச்சிட்டு வெளியிட்டார். இது நெஸ்லே பதிப்பு என்று அழைக்கப்பட்டது.

வேதாகம மொழிபெயர்ப்பில் ஈடுபட்டுள்ள அனைவரும் நெஸ்லே பதிப்பைத் தங்கள் மொழிபெயர்ப்புக்கு ஆதாரமான நூலாகப் பயன்படுத்த துவங்கினார்கள். உலகின் பல பாகங்களிலும் நெஸ்லே பதிப்பின் அடிப்படையில் வேதாகமத்தை மறுபடியும் மொழிபெயர்க்க ஆரம்பித்தார்கள்.

தமிழ் மொழியிலும், நெஸ்லே பதிப்பின் ஆதாரத்தின் பிரகாரமாக வேதாகமம் மொழி பெயர்க்கப்படவேண்டுமென்று சென்னை வேதாகம சங்கத்தார் விரும்பினார்கள். இந்தப் பணியைச் செய்வதற்காக ஒரு குழுவை அமைத்தார்கள். இந்தக் குழுவிற்கு லார்சன் என்பவர் தலைமைப் பொறுப்பேற்றார்.

லார்சன் அவர்களின் தலைமையின் கீழ் பரிசுத்த வேதாகமம் மறுபடியும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆண்டுகளின் பிரகாரம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

1925 - மத்தேயு, மாற்கு, யோவான் அப்போஸ்தலருடைய நடபடிகள்

1928 - புதிய ஏற்பாடு முழுவதும்

1936 - முழு வேதாகமம்

லார்சன் 1940-ல் காலமானார்.

மோனஹன்

பவருடைய மொழிபெயர்ப்பிற்கும், லார்சனுடைய மொழிபெயர்ப்பிற்கும் வேறுபாடு உண்டு. ஆகையினால், ஒரு புதிய மொழிபெயர்ப்பை தமிழ் வேதாகமத்திற்கு கொண்டுவரவேண்டுமென்று வேதாகம சங்கத்தார் விரும்பினார்கள்.

லார்சனுடைய மொழிபெயர்ப்பைத் திருத்தி, அமைக்க வேண்டுமென்று வேதாகம சங்கத்தார் முடிவு செய்தார்கள். இதற்காக 1939-ஆம் ஆண்டு ஒரு குழுவை அமைத்தார்கள். இக்குழுவிற்கு மோனஹன் அவர்கள் தலைமைப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

இவர்கள் லார்சனுடைய மொழிபெயர்ப்பை மறு ஆய்வு செய்து, கீழ்க்கண்ட பிரகாரம் தமிழ் வேதாகமத்தை அச்சிட்டு வெளியிட்டார்கள்.

1940 - மத்தேயு, மாற்கு ஆகிய சுவிசேஷங்கள்

1942 - புதிய ஏற்பாடு முழுவதும்

1949 - முழு வேதாகமம்

டீல்

மோனஹன் தலைமையில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட புதிய ஏற்பாட்டை மறுபடியும் ஆராய்ந்து பார்த்து, அதில் சில மாற்றங்களைக் கொண்டு வரவேண்டுமென்று வேத அறிஞர்கள் விரும்பினார்கள்.

இதற்காக ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. இதற்கு தலைமை பொறுப்பு ஏற்றுக் கொண்டவர் டீல் என்பவர். இவர் லுத்திரன் சபையின் போதகர்.

இவர்கள் மோனஹன் மொழிபெயர்த்த புதிய ஏற்பாட்டை மறுபடியுமாகத் திருத்தி ஒரு புதிய மொழிபெயர்ப்பை (திருப்புதலை) செய்தார்கள். இவர்களுடைய மொழிபெயர்ப்பு "மோனஹன் திருப்புதல்" என்று அழைக்கப்படுகிறது. இந்த வேதாகமம் 1954-ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

14. வேதாகமத்தின் கால அட்டவணை

பரிசுத்த வேதாகமத்தில் சில நிகழ்ச்சிகளின் காலங்கள் தெளிவாக உள்ளன. வேறு சிலவற்றின் காலங்களைப் பற்றி வேத அறிஞர்கள் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள். அநேகமாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கால அட்டவணை இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆதாமின் சிருஷ்டிப்பிலிருந்து இன்று வரையிலும் இடைப்பட்ட காலம் சுமார் 6203 வருஷங்களாகும். இந்த வருஷங்களைக் கீழ்க்கண்டவாறு கால அட்டவணையாகக் கொடுக்கலாம்.

1. ஆதாம் முதல் நோவா வரையிலும் (ஆதி 5)....................1656 வருஷங்கள்
2. நோவா முதல் 75ஆவது வயதில் ஆபிரகாமை தேவன் அழைத்தது வரையிலும் (ஆதி 11:10-12:5) ....427 வருஷங்கள்
3. ஆபிரகாமிலிருந்து யாத்திராகமம் வரையிலும் (யாத் 12:40; கலா 3:17).....................430 வருஷங்கள்
4. யாத்திராகமத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் ஊழியம் வரையிலும் ....1718 வருஷங்கள்
5. இயேசு கிறிஸ்துவின் ஊழியத்திலிருந்து (சுமார் கி.பி. 30) 2002 வரையிலும்................................1972 வருஷங்கள்

மொத்தம்.................................6203 வருஷங்கள்

15. வேதாகமத்தை வாசிக்கும் விதம்

பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தையாக இருப்பதினால் இதை வாசிக்கும் போது ஒரு சில ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடித்து வாசிக்க வேண்டும்.

வேதத்தை வாசிக்க வேண்டிய முறையாவது:

1. தினமும் வாசிக்க வேண்டும். (யோசு 1:8)
2. ஆவிக்குரிய ஆகாரமாக வாசிக்க வேண்டும். (நீதி 3; 2தீமோ 3:16-17)
3. தியானத்தோடு வாசிக்க வேண்டும். (சங் 1:3)
4. அன்போடு வாசிக்க வேண்டும். (சங் 119:97-104)
5. தேவையை உணர்ந்து வாசிக்க வேண்டும். (மத் 5:6; யோவா 7:37-39; 2பேது 1:1-10; 3:18)
6. விசுவாசத்தோடு வாசிக்க வேண்டும். (ரோம 10:17; எபி 11:6)

7. சத்தியத்தைத் தேடி, ஆராய்ந்து வாசிக்க வேண்டும். (யோவா 5:39)

8. சத்திய வசனங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் வெளிப்படையாக வாசிக்க வேண்டும். (2தீமோ 3:16-17; எபி 4:12; யூதா 3)

9. வேத வாக்கியங்களை மற்ற வேத வாக்கியங்களோடு ஒப்பிட்டு வாசிக்க வேண்டும். (1கொரி 2:13)

10. ஆவியோடு வாசிக்க வேண்டும். (யோவா 14:16-17; 15:26; 16:7-15; கலா 5:16,26)

11. முழுவதுமாகவும் திரும்பத் திரும்பவும் வாசிக்க வேண்டும். (மத் 5:18)

12. கீழ்ப்படிதலோடு வாசிக்க வேண்டும். (ரோம 1:5; 16:26)

16. வேதாகம புள்ளி விவரங்கள்

பரிசுத்த வேதாகமத்தில் எத்தனை புத்தகங்கள், அதிகாரங்கள், வசனங்கள் உள்ளன என்னும் புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. புஸ்தகங்கள்..........................66
2. அதிகாரங்கள்......................1189
3. வசனங்கள்.........................31,101
4. வாக்குத்தத்தங்கள்.............1,260
5. கட்டளைகள்.......................6,468
6. கணிப்புக்கள்....................8000க்கும் மேல்
7. நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்.......3,268
8. நிறைவேற வேண்டிய தீர்க்க தரிசனங்கள்.........................3,140
9. கேள்விகள்...........................3294
10. நீளமான பெயர்...............ஏசாயா 8:1
11. நீளமான வசனம்..............எஸ்தர் 8:9
12. சிறிய வசனம்....................யோவான் 11:35
13. மத்திய புஸ்தகங்கள்..........மீகா, நாகூம்
14. மத்திய வசனம்....................சங்கீதம் 118:8
15. மத்திய அதிகாரமும், சிறிய அதிகாரமும்...........................சங்கீதம் 117
16. மிகப் பெரிய புஸ்தகம்........சங்கீதம்
17. மிகச் சிறிய புஸ்தகம்.........III யோவான்
18. மிக நீளமான அதிகாரம்......சங்கீதம் 119
19. தேவன்...............................3358 தடவைகள்
20. கர்த்தர்...............................7736 தடவைகள்
21. ஆசிரியர்கள்.......................40
22. மொழிபெயர்க்கப்பட்டுள்ள

மொழிகள்.......................1100க்கு மேல்

23. முதன் முதலாக அதிகாரங்கள் பிரிக்கப்பட்ட வருஷம் - கி.பி. 1227
24. ஆங்கில மொழியில் முதல் வேதாகமம் - கி.பி. 1380

பழைய ஏற்பாட்டு புள்ளி விவரங்கள்

1. புஸ்தகங்கள்..............................39
2. அதிகாரங்கள்.......................929
3. வசனங்கள்.........................23,144
4. நீளமான வசனம்.........எஸ்தர் 8:9
5. சிறிய வசனம்.................I நாளாகமம் 1:25
6. மத்திய புஸ்தகம்............நீதிமொழிகள்
7. மத்திய அதிகாரம்.....யோபு 20
8. மத்திய வசனம்..........
   II நாளாகமம் 20:17,18
9. மிகப் பெரிய புஸ்தகம்.........சங்கீதம்
10. மிகச் சிறிய புஸ்தகம்........ஒபதியா
11. மிக நீளமான அதிகாரம்.....சங்கீதம் 119
12. ஏறளவு ஒன்றுபோல் உள்ள வசனப்பகுதிகள்:

II இராஜா 19	- - ஏசா 37
எஸ்றா 2	- - நெகே 7
II நாளா 36:22, 23	- - எஸ்றா 1:1-3
சங் 14	- - சங் 53
சங் 60:6-12	-- சங் 108:7-13

புதிய ஏற்பாட்டு புள்ளி விவரங்கள்

1. புஸ்தகங்கள்.............................27
2. அதிகாரங்கள்.......................260
3. வசனங்கள்.........................7957
4. நீளமான வசனம்.............வெளி 20:4
5. சிறிய வசனம்....................யோவான் 11:35
6. மத்திய புஸ்தகம்........

   II தெசலோனிக்கேயர்
7. மத்திய அதிகாரம்..............ரோமர் 8:9
8. மத்திய வசனம்...................அப் 27:17
9. மிகப் பெரிய புஸ்தகம்.......லூக்கா
10. மிகச் சிறிய புஸ்தகம்.....III யோவான்
11. மிக நீளமான அதிகாரம்........லூக்கா 1

17. வேதாகமத்தைப் பற்றி சில குறிப்புகள்

1. பரிசுத்த வேதாகமம் தேவனால் வெளிப்படுத்தப்பட்டுள்ள தெய்வீக செய்தியாகும். எல்லாவற்றின் ஆரம்பமும் முடிவும் வேதாகமத்தில் எழுதப் பட்டிருக்கிறது. வானமும், பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு வேதாகமத்தில் உள்ளது.

2. பரிசுத்த வேதாகமத்தில் தெய்வீக வல்லமை வெளிப்படுகிறது. மனுக்குலம் இரட்சிப்பைப் பெறுவதற்குத் தேவையான செய்திகளை வேதாகமம் கூறுகிறது. சரீரம், ஆவி, ஆத்துமா ஆகியவற்றிற்குத் தேவைப்படும் ஆவிக்குரிய ஆகாரம் வேதாகமத்தில் தாராளமாக உள்ளது. (ரோமர் 1:16; யோவான் 15:7)

3. பரிசுத்த வேதாகமம் தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறது. எல்லாக் காலங்களிலும் தேவன் மனுஷரோடு ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் விளக்கங்களை நாம் வேதாகமத்தில் துவக்கம் முதல் முடிவு வரையிலும் காணலாம்.

4. மனுக்குலத்தைப் பற்றிய தேவனுடைய திட்டம் வேதாகமத்தில் சிறப்பாக விளக்கப் பட்டிருக்கிறது. மனுஷருடைய இம்மைக்கும், மறுமைக்குமுரிய தெய்வீக செய்திகள் வேதாகமத்தில் உண்டு.

5. வேதாகமம் ஒரு சரித்திரப் புத்தகம். சரித்திரம் எவ்வளவு உண்மையோ அவ்வளவு வேதாகமமும் உண்மை. ஆனால் இது உலகின் அரசியல் வரலாற்று புத்தகம் அல்ல. வேதாகமம் என்பது கர்த்தர் அந்தந்தக் காலங்களின் சம்பவங்களையும், தம்மை உண்மையாகப் பின்பற்ற விரும்பிய தனி மனிதர்களோடு தாம் கொண்டிருந்த தொடர்புகளையும், மனிதனின் இரட்சிப்பிற்கு தாம் வைத்திருந்த திட்டத்தை தாம் நிறைவேற்றி வருவதையும், மக்களுக்கு எடுத்துரைக்க எழுதிய சரித்திரப் புத்தகம் ஆகும்.

6. வேதாகமத்தில் எந்த வரியும் தேவனைச் சற்று புகழ்ந்து பாடுவதற்காக மனிதன் கூட்டி எழுதிய வரிகள் அல்ல. மனிதன் தேவனைப் புகழ்ந்து பாடுவதினால் தம்மை பெரியவராகக் காட்டும் அவசியமும் தேவனுக்கு இல்லை. வேதாகமம் என்பது கர்த்தாதி கர்த்தர், தேவாதி தேவன் மனிதனோடு பேசும் ஓர் உரையாடல். வேத வசனம் நம்மோடு கூடப் பேசும்போது தேவன் நம்மோடு பேசும் உணர்வை நம்முடைய இருதயத்திலே பெறுகிறோம்.

7. ஐந்து புத்தகங்களில் ஒரு அதிகாரம் மட்டுமே உள்ளது - ஒபதியா, பிலேமோன், 2 யோவான், III யோவான், யூதா.

8. எஸ்தர், சாலொமோனின் உன்னதப்பாட்டு ஆகிய இரண்டு புஸ்தகங்களிலும் தேவன், கர்த்தர் என்னும் சொல் பயன்படுத்தப்படவில்லை.

9. ஆகாய் புஸ்தகத்தில் மொத்தம் 2 அதிகாரங்கள் மட்டுமே உள்ளன.

10. ஏழு புஸ்தகங்களில் 3 அதிகாரங்கள் மட்டுமே உள்ளன. அவையாவன - யோவேல், நாகூம், ஆபகூக், செப்பனியா, II தெசலோனிக்கேயர், யூதா, II பேதுரு

11. ஆறு புஸ்தகங்களில் 4 அதிகாரங்கள் மட்டுமே உள்ளன. அவையாவன: ரூத், யோனா, மல்கியா, கொலோசெயர், பிலிப்பியர், II தீமோத்தேயு

12. ஐந்து புஸ்தகங்களில் 5 அதிகாரங்கள் மட்டுமே உள்ளன: அவையாவன: புலம்பல், I தெசலோனிக்கேயர், யாக்கோபு, II பேதுரு, I யோவான்

13. பத்து புஸ்தகங்களில் 1000 வசனங்களுக்கு மேல் உள்ளன. அவையாவன: ஆதியாகமம் (1,533) யாத்திராகமம் (1,213), எண்ணாகமம் (1,288), யோபு (1,070), சங்கீதம் (2,461), ஏசாயா (1,292), எரேமியா (1,273), மத்தேயு (1,071), லூக்கா (1,151), அப்போஸ்தலருடைய நடபடிகள் (1,007)

14. கோட்டின்கண் பல்கலைக்கழக நூலகத்தில் 2470 பனை ஓலைகளில் எழுதப்பட்ட வேதாகமம் உள்ளது.

15. பழைய ஏற்பாட்டில் கர்த்தர் என்னும் சொல் யெகோவாவைக் குறிக்கும்.

16. எண்ணாகமம் 7-வது அதிகாரத்தில் 4 வசனங்கள் 12 முறை அதே அதிகாரத்தில் திரும்பத் திரும்ப வந்ததுள்ளது.

17. எண்ணாகமம் 11:5 வேதாகமத்தின் தோட்ட வசனம் என்று அழைக்கப்படுகிறது.

18. எரேமியாவின் புலம்பலில் உள்ள 5 அதிகாரங்களில் 4 அதிகாரங்கள் ஒவ்வொன்றிலும் 22 வசனங்கள் உள்ளன.

19. எபிரெய பழைய ஏற்பாட்டில் 8674 எபிரெய சொற்கள் உள்ளன.

20. கிரேக்க புதிய ஏற்பாட்டில் 5624 கிரேக்க சொற்கள் உள்ளன.

முன்னுரை

இந்த உலகத்தில் ஏராளமான புஸ்தகங்கள் இருந்தாலும், பரிசுத்த வேதாகமமே, அந்தப் புஸ்தகங்கள் எல்லாவற்றிற்கும் பிரதான புஸ்தகமாக விளங்குகிறது. இதை புஸ்தங்களுக்கெல்லாம் சிறப்பான புஸ்தகம் என்று சொல்லலாம்.

வேதாகமம் "பரிசுத்த வேதாகமம்" என்று அழைக்கப்படுகிறது. ஏனென்றால் இந்தப் புஸ்தகத்தை பரிசுத்தவான்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, பரிசுத்த வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு வாக்கியத்தையும் எழுதியிருக்கிறார்கள்.

பரிசுத்தவேதாகமத்தில் தேவனுடைய பிரமாணமும், இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமும் நமக்காகவே எழுதப்பட்டிருக்கிறது. பரிசுத்த வேதாகமத்திலுள்ள புஸ்தகங்கள் பல்வேறு இடங்களிலும், பல்வேறு காலங்களிலும் எழுதப்பட்டிருக்கிறது.

"அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்" *(2 பேது 1:19).*

இந்தப் பூமியிலே எந்த தேசத்தில் பரிசுத்த வேதாகமம் இல்லையோ, அந்த தேசம் இருண்ட தேசமாகவே இருக்கும்.

பரிசுத்த வேதாகமம், பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஏற்பாடு என்னும் வார்த்தைக்கு உடன்படிக்கை என்று பொருள். பரிசுத்த வேதாகமத்தில் மனுஷனைக் குறித்த தேவனுடைய சித்தம் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

"உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்" *(வெளி 13:8).*

பரிசுத்த வேதாகமம் பழைய ஏற்பாடு என்றும், புதிய ஏற்பாடு என்றும் இரண்டாகப் பகுக்கப்பட்டபோதிலும், பழைய ஏற்பாட்டை பழைய புஸ்தகம் என்று ஒதுக்கி வைத்துவிடமுடியாது. புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டை பூரணப்படுத்துகிறது.

பழைய ஏற்பாட்டிலுள்ள முதல் ஐந்து ஆகமங்கள் "பஞ்சாகமம்" என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆகமங்களின் ஆசிரியர் மோசே. பஞ்சாகமத்தின் முதலாவது ஆகமம் "ஆதியாகமம்" ஆகும்.

மோசே ஆதியாகமத்தை எப்பொழுது எழுதினார் என்பது தெளிவாக தெரியவில்லை. அவர் மீதியான் தேசத்தில் இருந்தபோது இந்த ஆகமத்தை எழுதினார் என்று வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள். எகிப்து தேசத்திலே இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தின் பாடுகளை அனுபவித்துக்கொண்டிருந்த அவர்களுக்கு ஆறுதலையும், ஆலோசனையையும் கொடுக்கும் வண்ணமாக மோசே ஆதியாகமத்தை எழுதினார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணியபோது, மோசே ஆதியாகமத்தை எழுதினார் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள். மோசே சீனாய் மலையில் கர்த்தரோடு இருந்துவிட்டு, கர்த்தருடைய வார்த்தைகளை பூரணமாகப் பெற்றுக்கொண்ட பின்பு, அவர் ஆதியாமத்தை எழுதினார் என்பது இவர்களுடைய கருத்து.

ஆதியாகமம் என்னும் பெயருக்கு "ஆரம்பம்" என்று பொருள். எல்லா ஆரம்பங்களின் சரித்திரமும் இந்த ஆகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த உலகம் சிருஷ்டிக்கப்பட்டது. உலகத்திலே பாவமும் மரணமும் பிரவேசித்தது. தேசங்கள் எழும்பினது, கர்த்தருடைய சபை ஸ்தாபிக்கப்பட்டது ஆகியவற்றின் ஆரம்பமெல்லாம் ஆதியாகமம் புஸ்தகத்தில் சரித்திரமாக எழுதப்பட்டிருக்கிறது.

1 அதிகாரம்

ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் இந்த உலகம் சிருஷ்டிக்கப்பட்ட சம்பவம் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. மனுபுத்திரரில் அநேகர் "என்னை சிருஷ்டித்தவர் எங்கே இருக்கிறார்" என்னும் கேள்வியைக் கேட்கிறார்கள். இந்தக் கேள்விக்கு தத்துவ ஞானிகளால் சரியான பதிலை சொல்ல முடியாது.

இந்தப் பிரபஞ்சம் தானாக உண்டாயிற்று என்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள். ஒரு அணுவைப் பிளந்ததின் மூலமாக இந்த உலகம் உண்டாயிற்று என்றும் சிலர் சொல்லுகிறார்கள். உலகஞானத்தினால் தேவனை அறிய முடியாது.

பரிசுத்த வேதாகமத்தில், தேவனுடைய இரகசியங்களெல்லாம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. காலங்களின் ஆரம்பம், உலகத்தின் ஆரம்பம், ஜீவராசிகளின் ஆரம்பம் எல்லாமே ஆதியாகமம் புஸ்தகத்தில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

சர்வவல்லமையுள்ள தேவன் அநாதி காலமாக இருந்தவர், இருக்கிறவர், இருக்கப்போகிறவர். தேவனுடைய காலத்தையும், அவருடைய ஞானத்தையும், வல்லமையையும் நம்மால் ஆராய்ந்து பார்க்க முடியாது. அவர் சர்வஞானமும், சர்வவல்லமையுமுள்ளவர். காலங்கள் ஆரம்பமாவதற்கு முன்பாகவே தேவன் இருந்தார்.

வானமும் பூமியும் எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டது என்னும் விவரம் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (ஆதி 1:1,2). ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.

தேவன் ஒவ்வொரு நாளிலிலும் தம்முடைய சிருஷ்டிப்பின் கிரியைகளை செய்கிறார். அதன் விவரம் இந்த அதிகாரத்தில் வரிசையாகவும் தெளிவாகவும் சொல்லப்பட்டிருக்கிறது (ஆதி 1:3-30).

தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்க்கிறார். அது மிகவும் நன்றாயிருக்கிறது. சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று (ஆதி 1:31).

ஆதியிலே தேவன்
ஆதி 1:1,2

ஆதி 1:1. ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.

ஆதி 1:2. பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்.

பரிசுத்த வேதாகமத்தின் முதலாவது வசனத்தில் "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பூமியினாது ஒரு பெரிய வீட்டைப்போல இருக்கிறது. ஒரு வீட்டில் மேல்தளமும் கீழ்த்தளமும் இருப்பதுபோல, இந்தப் பிரபஞ்சத்திலும் மேல்தளமும் கீழ்த்தளமும் இருக்கிறது.

ஒரு வீட்டில் ஏராளமான அறைகள் இருக்கும். அதுபோலவே கர்த்தர் சிருஷ்டித்திருக்கிற இந்தப் பூமியில் பல பகுதிகள் உள்ளன. அவை எல்லாமே பிரமாண்டமாயிருக்கிறது. இந்தப் பூமியின் ஒவ்வொரு பகுதியிலும் என்னென்ன காரியங்கள் இருக்கவேண்டுமென்று, தேவன் சித்தங்கொண்டிருக்கிறாரோ, அவையெல்லாம் இந்தப் பூமியிலே பரிபூரணமாய் நிரம்பியிருக்கிறது.

நாம் வானத்தை அண்ணார்ந்து பார்க்கும்போது அது பிரமாண்டமாகவும் அழகாகவும் இருக்கிறது. வானத்திலே சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவையெல்லாம் பார்ப்பதற்கு அழகாயிருக்கிறது.

கர்த்தர் இந்தப் பிரபஞ்சத்தில் ஏராளமான காரியங்களை சிருஷ்டித்திருக்கிறார். அவையெல்லாம் விதவிதமாகயிருக்கிறது. தேவன் சிருஷ்டித்தது எல்லாமே ஒன்றுபோலில்லை. அவை ஒவ்வொன்றுக்கும் வித்தியாசமிருக்கிறது.

தேவனுடைய சிருஷ்டிப்பு மிகவும் அழகாயிருக்கிறது. வானமும் பூமியும் நம்முடைய கண்களுக்கு விருந்து கொடுக்கிறது. நாம் வானத்தை எவ்வளவு நேரம் பார்த்துக்கொண்டிருந்தாலும், நம்முடைய கண்களுக்கு சலிப்பு ஏற்படாது. வானத்தையும் பூமியையும் அழகாக சிருஷ்டிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய திட்டம்.

தேவனுடைய சிருஷ்டிப்பு எல்லாமே நேர்த்தியாயும் கிரமமாயும் இருக்கிறது. தேவனுடைய சிருஷ்டிப்பில் ஒரு குறைவுமில்லை. சகலமும் நேர்த்தியாயிருக்கிறது. தேவன் ஒவ்வொன்றையும் மிகவும் நுணுக்கமாக சிருஷ்டித்திருக்கிறார்.

தேவனுடைய சிருஷ்டிப்பில் மிகுந்த வல்லமையுள்ளது. தேவனுடைய சிருஷ்டிப்பு எல்லாமே ஜீவனில்லாத ஜடப்பொருள்கள் அல்ல. பூமி பிரமாண்டாகயிருந்தாலும், தேவன் அதை இயங்கக்கூடிய விதமாக சிருஷ்டித்திருக்கிறார்.

தேவனுடைய சிருஷ்டிப்பு எல்லாமே ஒழுங்கும் கிரமமுமாகயிருக்கிறது. அவை ஒன்றையொன்று சார்ந்திருக்கிறது. அவற்றின் இயக்கங்கள் எல்லாமே நேர்த்தியாயிருக்கிறது.

தேவனுடைய சிருஷ்டிப்பு எல்லாமே நம்மால் ஆராய்ந்து முடியாத அதிசயமாயிருக்கிறது. இயற்கையின் விதிகளில் இன்னும் ஏராளமானவற்றை மனுபுத்திரரால் ஆராய்ந்து பார்க்க முடியவில்லை. மனுஷனால் தீர்த்து வைக்க முடியாத இரகசியங்கள் இன்னும் ஏராளமாயிருக்கிறது.

நாம் வானத்தையும் பூமியையும் பார்க்கும்போது, தேவனுடைய நித்திய வல்லமையை புரிந்துகொள்ளலாம். இவை தானாக உண்டாகவில்லை என்றும், தேவனே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்றும் நாம் அறிந்துகொள்ளலாம்.

விசுவாசிகளாகிய நாம் நம்முடைய மனக்கண்களால் எப்போதும் வானத்தை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். இந்தப் பூமியானது நம்முடைய காலடியில் இருக்கவேண்டும்.

தேவனே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர். எபிரெய பாஷையில் தேவன் என்னும் பெயருக்கு "எலோகிம்" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "எல்" என்னும் வார்த்தைக்கு "வல்லமையுள்ள தேவன்" என்று பொருள். எலோகிம் என்னும் பெயர் சிருஷ்டிகராகிய தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்துகிறது. சர்வவல்லமையுள்ள தேவனால் மாத்திரமே வானத்தையும் பூமியையும் சிருஷ்டிக்க முடியும்.

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். இந்த வாக்கியத்தில் "சிருஷ்டித்தார்" என்பதற்கான எபிரெய வார்த்தை "பாரா" என்பதாகும். இந்த வார்த்தைக்கு "ஒன்றுமில்லாத வெறுமையிலிருந்து ஒன்றை உண்டாக்குவது" என்று பொருள். சர்வவல்லமையுள்ள தேவனால் மாத்திரமே, ஒன்றுமில்லாத வெறுமையிலிருந்து இந்த வானத்தையும் பூமியையும் சிருஷ்டிக்க முடியும். சர்வவல்லமையைவிட குறைவான வல்லமையினால், ஒன்றுமில்லாத வெறுமையிலிருந்து எதையும் உண்டாக்க முடியாது.

"எலோகிம்" என்னும் பெயர் பன்மைப்பொருளை கொடுக்கிறது. இந்த வார்த்தைக்கு "தேவர்கள்" என்று அர்த்தம் சொல்லலாம். ஆனால் தேவன் ஒருவரே. தேவத்துவத்தில், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவருடைய ஆள்தத்துவமும் சேர்ந்திருக்கிறது. ஆகையினால் எலோகிம் என்னும் பெயர் பன்மைப்பொருளைக் கொடுத்தாலும், தேவன் ஒருவரே என்பதும், அவர் திரித்துவராக இருக்கிறார் என்பதும் நமக்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

பழைய ஏற்பாட்டில் திரித்துவத்தைப்பற்றிய சத்தியம் விரிவாக விவரிக்கப்படவில்லை. புதிய ஏற்பாட்டிலோ திரித்துவத்தின் சத்தியம் விரிவாக தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஆதியாகமம் முதலாம் வசனத்தில், ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியத்திற்கு, தேவனால் அல்லாமல், ஒன்றும் சிருஷ்டிக்கப்படவில்லை என்று பொருள்.

"சகலமும்அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" (யோவா 1:3).

"அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை" (யோவா 1:10).

"இயேசுகிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (எபே 3:11).

"ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது" (கொலோ 1:16).

"இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" (எபி 1:2).

தேவன் ஒன்றுமில்லாத வெறுமையிலிருந்து வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். தேவன் இந்தப் பூமியை சிருஷ்டிப்பதற்கு முன்பாக, இந்தப் பூமியை உண்டாக்குவதற்கு தேவையான பொருட்கள் எதுவும் இல்லை. தேவன் அப்படிப்பட்ட எந்தப் பொருளையும் பயன்படுத்தி, இந்தப் பூமியை சிருஷ்டிக்கவில்லை. நாம் எதையாவது உண்டுபண்ண வேண்டுமென்றால், ஏதாவது ஒரு பொருள் இருந்தால்தான், அந்தப் பொருளிலிருந்து மற்றொரு பொருளை உண்டுபண்ண முடியும்.

தேவனோ சர்வவல்லமையுள்ளவராயிருக்கிறார். அவர் ஒன்றுமில்லாத வெறுமையிலிருந்து இந்தப் பூமியை சிருஷ்டித்தார். தேவன் இயற்கையின் பிரமாணத்திற்குட்பட்டவரல்ல. இயற்கையின் பிரமாணம் தேவனுடைய வார்த்தைக்குட்பட்டது. இந்தப் பூமி தானாய் உண்டாயிற்று என்று சொல்லுவது, தேவனுடைய மகிமையை அவமதிக்கும் வார்த்தையாகும். தேவன் சர்வஞானமுள்ளவர். வானமும் பூமியும் உண்டாக்கப்பட்ட விதத்தைப்பற்றிப் பேசும்போது, நாம் தேவனுடைய சர்வஞானத்தையும், சர்வவல்லமையையும் மகிமைப்படுத்தவேண்டும்.

தேவன் வானத்தையும் பூமியையும் எப்போது சிருஷ்டித்தார் என்றும் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் ஆதியிலே இவற்றை சிருஷ்டித்தார். ஆதியிலே என்பது, காலங்களின் ஆரம்பமாகும். தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டிப்பதற்கு முன்பாக காலங்கள் இல்லை. அவர் வானத்தையும் பூமியையும் சிருஷ்டிக்கும்போதுதான் காலங்கள் ஆரம்பமாயிற்று. அப்போதுதான் கடிகாரம் ஓட ஆரம்பிக்கிறது.

தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த பின்புதான், நாம் நேரங்களைக் கணக்கிடுகிறோம். காலங்கள் ஆரம்பமாவதற்கு முன்பாக, நித்திய தேவன் மாத்திரமே இருந்தார். அவர் அநாதி தேவன். அவர் அநாதி காலத்திலும் இருக்கிறவர். இந்த வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பாக, தேவனைத் தவிர வேறு ஒருவரும் அல்லது வேறு எதுவும் இல்லை.

தேவனுக்கு ஆரம்பமும் முடிவும் இல்லை. அவரே ஆரம்பமாயும் முடிவாயும் இருக்கிறார். நித்திய தேவனே ஆதியும் அந்தமாயும், அல்பாவும் ஓமெகாவாகவும் இருக்கிறார். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்று சொல்லும்போது, "ஆதியிலே வார்த்தை இருந்தது" (யோவா 1:1) என்பதையும் நாம் அறிந்திருக்கவேண்டும்.

தேவனை நம்பாத நாஸ்திகர்கள் இயற்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இந்த பூமி தானாய் உண்டாயிற்று என்பது நாஸ்திகரின் கொள்கை. தேவன் இந்தப் பூமியை சிருஷ்டித்தார் என்பதை நாஸ்திகர்கள் நம்புவதில்லை. பூமியானது தானாய் உண்டாயிற்று என்று சொல்லுவது மதியீனம்.

தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. தேவன் சர்வவல்லமையும், சர்வஅதிகாரமும், சர்வஆளுகையுமுள்ளவர். அவர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்திருக்கிறார். நம்முடைய தேவனால் எல்லாம் கூடும். அப்பேற்பட்ட சர்வவல்லமையுள்ள தேவன், நம்முடைய தேவனாயிருப்பது நம்முடைய பாக்கியம். அவருடைய உதவியும், கிருபையும், கருணையும் நமக்கு போதுமானது.

"எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்" *(சங் 121:1,2)*.

"நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது" *(சங் 124:8)*.

எல்லாம் தேவனால் உண்டாயிற்று. ஆகையினால் சகலமும் தேவனுக்கே உரியது. "பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின்மேல் இருள் இருந்தது" *(ஆதி 1:2)*.

பூமியானது ஒழுங்கின்மையாயிருக்கிறது. இது "ஆழம்" என்றும் அழைக்கப்படுகிறது. தேவன் சிருஷ்டித்த பூமி மிகவும் பிரமாண்டமானது. அந்த பூமி ஜலத்தோடு சேர்ந்திருந்தது. பின்பு தேவன் பூமியையும் ஜலத்தையும் வெவ்வேறாகப் பிரித்தார்.

தேவன் சிருஷ்டித்த பூமி ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருக்கிறது. இது குறித்து வேதபண்டிதர்கள் வெவ்வேறு விளக்கங்களை சொல்லுகிறார்கள். தேவன் ஆதியிலே பூமியை சிருஷ்டித்தபோதே, அதை அவரால் ஒழுங்காகவும், நிறைவாகவும் சிருஷ்டித்திருக்க முடியும்.

ஆனால் தேவனுடைய தெய்வீக பராமரிப்பின் பிரகாரம், அவருடைய கிரியைகள் ஒவ்வொன்றாய் நடைபெறுகிறது. இது தேவனுடைய கிருபை.

தேவன் சிருஷ்டித்த பூமியானது ஒழுங்கின்மையாயிருக்கிறது. இந்தப் பூமியிலே பார்த்து பரவசமடைவதற்கு ஒன்றுமே இல்லை. இந்தப் பூமி வெறுமையாயிருக்கிறது. ஒழுங்கின்மை, வெறுமை ஆகிய வார்த்தைகள், "தோகு", "பாகு" என்னும் எபிரெய வார்த்தைகளின் மொழிபெயர்ப்பாகும்.

"இரவும் பகலும் அது அவியாது; அதின் புகை என்றென்றைக்கும் எழும்பும்; தலைமுறை தலைமுறையாக அது பாழாயிருக்கும்; சதாகாலம் சதாகாலமாக அதை ஒருவரும் கடந்துபோவதில்லை" *(ஏசா 34:10)*.

நம்முடைய இருதயத்தில் பரலோகத்தைப்பற்றிய நினைவுகள் நிரம்பியிருக்கும்போது, இந்தப் பிரபஞ்சமானது, பரலோகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒழுங்கின்மையானதாகவும், வெறுமையானதாகவும் இருக்கும்.

ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்த பூமியிலே பார்த்து சந்தோஷப்படுவதற்கும் ஒன்றுமில்லை. ஏனெனில் பூமியைப் பார்ப்பதற்கு தேவன் இன்னும் வெளிச்சத்தை உண்டாக்கவில்லை. ஆழத்தின்மேல் இருள் இருக்கிறது.

ஒழுங்கின்மை என்பது குணப்படாத ஆத்துமாவுக்கு அடையாளம். இரட்சிக்கப்படாத ஆத்துமா ஒழுங்கின்மையாயிருக்கும். அந்த ஆத்துமா தேவனுடைய ஆவியானவரால் புதுப்பிக்கப்படாத ஆத்துமா. இரட்சிக்கப்படாத ஆத்துமா வெறுமையாயிருக்கும். துன்மார்க்கருடைய ஆத்துமாவில் நன்மையான காரியங்கள் எதுவும் இருக்காது. அது நன்மையில்லாமல் வெறுமையாயிருக்கும்.

பாவிகளுடைய ஆத்துமாவில் தேவனும் வாசம்பண்ணமாட்டார். ஆகையினால் அந்த ஆத்துமா தேவனில்லாமல் வெறுமையாயிருக்கும். தேவனுடைய கிருபை மனுஷருடைய ஆத்துமாவில் கிரியை செய்யவில்லையென்றால், அந்த ஆத்துமா இருள் நிரம்பியதாகவே இருக்கும். தேவனால் மாத்திரமே இருளை நீக்கி அங்கே வெளிச்சத்தை உண்டாக்க முடியும்.

ஆழத்தின்மேல் இருள் இருந்தபோது, தேவஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருக்கிறார். தேவனுடைய ஆவியானவர் கிரியை செய்ய ஆரம்பிக்கிறார். அவர் கிரியை செய்யும்போது, அவரை யாராலும் தடுக்கவும் முடியாது, தடைபண்ணவும் முடியாது.

"கர்த்தர் உயர்ந்தவர், அவர் உன்னதத்தில் வாசமாயிருக்கிறார்; அவர் சீயோனை நியாயத்தினாலும் நீதியினாலும் நிரப்புகிறார். பூரண ரட்சிப்பும் ஞானமும் அறிவும் உன் காலங்களுடைய உறுதியாயிருக்கும்; கர்த்தருக்குப் பயப்படுதலே அதின் பொக்கிஷம்" *(சங் 33:6)*

"தமது ஆவியினால் வானத்தை அலங்கரித்தார்; அவருடைய கரம் நெளிவான சர்ப்ப நட்சத்திரத்தை உருவாக்கிற்று" *(யோபு 26:13).*

தேவஆவியானவர் கிரியை செய்யும்போது, புதிய சிருஷ்டி உண்டாகிறது. தேவஆவியானவர் ஆழத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருக்கிறார். தேவனே எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருக்கிறவர். அவரே ஜீவஊற்றாகவும், ஊற்றின் கண்ணாகவும் இருக்கிறவர்.

தேவன் உயிர்ப்பிக்கவில்லையென்றால், மரித்துப்போனவை மரித்ததாகவே இருக்கும். அது ஒருபோதும் உயிர்ப்பிக்கப்படாது. தேவன் மரித்தோரையும் உயிரோடு எழுப்புகிறவர். மரித்துப்போன அனுபவங்களையும் புதுப்பிக்கிறவர்.

நம்முடைய காரியங்கள் மரித்துப் போனதாகயிருந்தாலும், சர்வவல்லமையுள்ள தேவனால் அதை உயிர்ப்பிக்க முடியும் என்னும் நம்பிக்கை நமக்கு உண்டு. தேவஆவியனாவர் அசைவாடும்போது, நம்முடைய ஆத்துமா புதுப்பிக்கப்படும். அது மறுபடியும் புத்துயிர் பெறும். நமக்குள் புதிய ஜீவன் உண்டாகும்.

முதலாம் நாள்
ஆதி 1:3-5

ஆதி 1:3. தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று.

ஆதி 1:4. வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார்; வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார்.

ஆதி 1:5. தேவன் வெளிச்சத்துக்குப் பகல் என்றுபேரிட்டார், இருளுக்கு இரவு என்று பேரிட்டார்; சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று.

தேவன் முதலாம் நாளில் செய்த கிரியைகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் ஏராளமான காரியங்களை சிருஷ்டித்தாலும், பிரத்தியட்சமாய்ப் பார்க்கக்கூடிய வண்ணமாக தேவன் முதலாவதாக சிருஷ்டித்த காரியம் வெளிச்சமாகும். வெளிச்சம் இருந்தால்தான் தேவனுடைய கிரியைகளையும், அந்தக் கிரியைகளில் தேவனுடைய மகிமை வெளிப்படுவதையும் நம்மால் பார்க்க முடியும். வெளிச்சம் இருந்தால்தான், அந்த வெளிச்சத்தில் நம்முடைய கிரியைகளையும் நம்மால் செய்ய முடியும்.

வெளிச்சம் மிகவும் அழகானது. அது இந்த லோகத்திற்கு ஆசீர்வாதமானது. புதிய சிருஷ்டிப்பில் கர்த்தர் நம்முடைய ஆத்துமாவுக்கு முதலாவதாக வெளிச்சத்தைக் கொடுக்கிறார். பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஆத்துமாவிலே வெளிச்சத்தையும், புரிந்துகொள்ளும் ஆற்றலையும் கொடுக்கிறார். இதன் மூலமாக நாம் தேவனுடைய சித்தத்தையும், அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பையும் அறிந்துகொள்கிறோம். பாவத்திலிருக்கிறவர்கள் இருளிலிருக்கிறார்கள். தேவனுடைய கிருபையினால் இந்தப் பூமியில் வெளிச்சம் உண்டாயிற்று.

தேவன் தம்முடைய வார்த்தையின் வல்லமையினால் வெளிச்சத்தை உண்டாக்கினார். "தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது" என்றார். வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சம் உண்டாகவேண்டும் என்று தேவன் சித்தங்கொண்டார். தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக வெளிச்சம் உண்டாகக்கடவது என்று தேவன் கட்டளையிட்டார். உடனே வெளிச்சமுண்டாயிற்று.

தேவனுடைய வார்த்தை வல்லமையுள்ளது. அது காலதாமதமில்லாமல் உடனே நிறைவேறுகிறது. கிறிஸ்துவே வார்த்தையாக இருக்கிறார். அவர் நித்திய வார்த்தையாகயிருக்கிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக வெளிச்சம் உண்டாகிறது.

"உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" *(யோவா 1:9).* "நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்" *(யோவா 9:5).*

தேவனுடைய வெளிச்சம் பரிசுத்தமாக்கப்பட்ட ஆத்துமாவிலே பிரகாசிக்கிறது. இந்த வெளிச்சம் தேவனுடைய வல்லமையினால் நம்முடைய ஆத்துமாவிலே பிரவேசிக்கிறது. இந்த வெளிச்சத்தின் மூலமாக தேவனுடைய மகிமையைப்பற்றிய அறிவையும் ஞானத்தையும் நாம் பெற்றுக்கொள்கிறோம். தேவனுடைய மகிமையைப்பற்றிய அறிவு இயேசுகிறிஸ்துவின் மகிமைப்பிரகாசத்தில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

"இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்" *(2கொரி 4:6).*

தேவன் முதலாவதாக வெளிச்சம் உண்டாகவேண்டும் என்று சித்தங்கொண்டார். அதன் பின்பு அவர் வெளிச்சம் உண்டாகக்கடவது என்று சொன்னார். வெளிச்சம் உண்டாயிற்று.

வெளிச்சம் நல்லது என்று தேவன் காண்கிறார். வெளிச்சம் நல்லதாக இருக்கும்போது, அந்த வெளிச்சத்திற்கு ஆதாரமாக இருக்கிற தேவன் மிகவும் நல்லவராகயிருப்பார். நாம் தேவனிடத்திலிருந்தே வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்கிறோம்.

தேவன் வெளிச்சத்தையும் இருளையும் வெவ்வேறாக பிரித்தார். அந்த வெளிச்சத்திற்கும் இருளுக்கும் காலஇடைவெளியையும் பிரித்தார். தேவன் வெளிச்சத்திற்கு பகல் என்று பேரிட்டார். இருளுக்கு இரவு என்று பேரிட்டார். ஒவ்வொரு நாளும் இரவும் பகலும் மாறி மாறி, தொடர்ச்சியாக வந்து கொண்டே இருக்கிறது.

தேவன் வெளிச்சத்தை உண்டாக்குவதற்கு முன்பாக ஆழத்தின்மேல் இருள் இருந்தது. தேவன் வெளிச்சத்தை உண்டாக்கினபோது, இருளானது கலைந்துபோயிற்று. ஆனாலும் அந்த இருள் காணாமல் போய்விடவில்லை. தேவன் வெளிச்சத்தையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்து, அந்த இருளை ஒன்றாய்ச் சேர்த்து, அந்த இருளுக்கு இரவு என்று பேரிட்டார்.

இருளுக்கும் ஒரு பிரயோஜனமுண்டு. பகல் வேளையில் வெளிச்சம் இருப்பதினால், நம்முடைய அன்றாட வேலைகளை செய்வதற்கு அந்த வெளிச்சம் பிரயோஜனமாயிருக்கிறது. இரவு வேளையிலே வெளிச்சமில்லாமல் இருளாயிருப்பதினால், நாம் நன்றாய் உறங்கி ஓய்வெடுப்பதற்கு அது பிரயோஜனமாயிருக்கிறது.

தேவன் வெளிச்சத்தையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்து, அவற்றிற்கு வெவ்வேறு பெயர்களை கொடுத்தார். தேவன் வெளிச்சத்திற்கு பகல் என்று பேரிட்டார். இரவுக்கு இருள் என்று பேரிட்டார். தேவனே பகலுக்கும் வெளிச்சத்திற்கும் ஆண்டவராயிருக்கிறார். ஒவ்வொரு நாளும் பகலும் இரவும் மாறி மாறி, தொடர்ச்சியாக வருவதைப் பார்க்கும்போது, அது தேவனுடைய கிரியை என்பதை நாம் நினைவுகூரவேண்டும். ஒவ்வொரு நாளும் பகல் பொழுது வரும்பொழுது நாம் வேலை செய்யவேண்டும். இரவுவேளையிலே நாம் ஓய்வெடுக்கவேண்டும்.

தேவன் முதலாம் நாளில் செய்த கிரியைகள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் வெளிச்சத்தை உண்டாக்கி, வெளிச்சம் நல்லது என்று கண்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று. இந்த முதலாம் நாளானது, இந்தப் பிரபஞ்சத்தின் முதலாம் நாள் மாத்திரமல்ல, இது வாரத்தின் முதலாம் நாள் ஆகும்.

தேவன் புதிய உலகத்தை முதலாம் நாளிலே சிருஷ்டித்தார். இந்த முதலாம் நாள் வாரத்தின் முதலாம் நாளாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து வாரத்தின் முதலாம் நாளில் உயிர்த்தெழுந்தார். முதலாம் நாள் காலையிலே, உலகத்திற்கு வெளிச்சத்தைக் கொடுப்பதற்காக, கிறிஸ்துவானவர் உயிரோடு எழும்பினார். இயேசுகிறிஸ்துவானவர் அருணோதயம்போல எழும்பி, இந்த உலகத்தில் தம்முடைய வெளிச்சத்தை பிரகாசிக்க செய்கிறார்.

இரண்டாம் நாள்
ஆதி 1:6-8

ஆதி 1:6. பின்பு தேவன்: ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவு உண்டாகக்கடவது என்றும், அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கக்கடவது என்றும் சொன்னார்.

ஆதி 1:7. தேவன் ஆகாயவிரிவை உண்டு பண்ணி, ஆகாயவிரிவுக்குக் கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாய விரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார்; அது அப்படியே ஆயிற்று.

ஆதி 1:8. தேவன் ஆகாயவிரிவுக்கு வானம் என்றுபேரிட்டார்; சாயங்காலமும் விடியற்காலமுமாகி இரண்டாம் நாள் ஆயிற்று.

தேவன் இரண்டாம் நாளிலே ஆகாயவிரிவை உண்டாக்கினார். இதுவும் தேவனுடைய கட்டளையினால் உண்டாயிற்று. தேவன் ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவு உண்டாகக்கடவது என்று சொன்னார்.

ஆகாயவிரிவு என்பது, விரிக்கப்பட்ட ஒரு படுக்கையைப்போல இருக்கிறது. ஒரு திரைச்சீலையை விரிக்கும்போது அது எவ்வாறு பரவி விரிந்திருக்குமோ, அதுபோல ஆகாயவிரிவும் பரவி விரிந்திருக்கிறது.

ஆகாயவிரிவு என்பது ஒரு தடுப்பு சுவர் போன்றதல்ல. அது ஒரு இடைவெளியாயிருக்கிறது.

"அவர் உத்தரமண்டலத்தை வெட்டவெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார்" *(யோபு 26:7)*.

"வார்க்கப்பட்ட கண்ணாடியைப் போல் கெட்டியான ஆகாயமண்டலங்களை நீர் அவரோடேகூட இருந்து விரித்தீரோ?" *(யோபு 37:18)*.

"ஒளியை வஸ்திரமாகத் தரித்து, வானங்களைத் திரையைப்போல் விரித்திருக்கிறீர். தமது மேல்வீடுகளைத் தண்ணீர்களால் மச்சுப்பாவி, மேகங்களைத் தமது இரதமாக்கி, காற்றினுடைய செட்டைகளின்மேல் செல்லுகிறார்" *(சங் 104:2,3)*.

"அவர் வானத்தில் தமது மேலறைகளைக் கட்டி, பூமியில் தமது கீழறைகளை அஸ்திபாரப்படுத்தி, சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து, அவைகளை பூமியினுடைய விசாலத்தின்மேல் ஊற்றுகிறவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம்" *(ஆமோ 9:6)*.

தேவன் ஜலத்தின் மத்தியிலே ஆகாயவிரிவு உண்டாகக்கடவது என்று சொன்னபோது, அவருடைய வார்த்தையை வேறு யாரோ நிறைவேற்றினார் என்று வியாக்கியானம் பண்ணமுடியாது. "தேவன் ஆகாயவிரிவை உண்டுபண்ணினார்" (ஆதி 1:7) என்று தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. தேவன் ஒருவராகவே தம்முடைய சிருஷ்டிப்பின் கிரியைகள் அனைத்தையும் நிறைவேற்றுகிறார்.

தேவன் நம்மிடத்தில் எதை எதிர்பார்க்கிறாரோ, அதை அவரே நமக்கு செய்கிறார். தேவன் ஒன்றை செய்யவில்லையென்றால், அது செய்யாததாக இருக்கும். நம்மிடத்தில் விசுவாசம், பரிசுத்தம், அன்பு ஆகியவை காணப்படவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நம்முடைய சுயவல்லமையினால், நம்மால் விசுவாசத்தையோ, பரிசுத்தத்தையோ, அன்பையோ வெளிப்படுத்த முடியாது. தேவன் தாமே தம்முடைய கிருபையின் வல்லமையினால், நமக்குள்ளே விசுவாசத்தையும், பரிசுத்தத்தையும், அன்பையும் வைக்கிறார். இவை தேவனுடைய வார்த்தையினால் நமக்குள்ளே உண்டாகிறது.

தேவன் ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவை உண்டாக்கி, அது ஜலத்தினின்று ஜலத்தை பிரிக்கக்கடவது என்று சொன்னார். தேவனுடைய வார்த்தையினால் ஜலமானது பிரிகிறது. பிரிக்கப்பட்ட ஜலத்தில் ஒரு பகுதி மேகங்கத்தினால் மூடப்பட்டிருக்கிறது. ஜலத்தின் மற்றொரு பகுதி சமுத்திரத்தினால் மூடப்பட்டிருக்கிறது.

தேவன் ஜலத்தின் மத்தியிலே ஆகாயவிரிவு உண்டுபண்ணினார். அதன் பின்பு ஜலத்தைப் பிரித்தார். ஜலமானது ஆகாயவிரிவுக்கு கீழேயும் இருக்கிறது. அது ஆகாயவிரிவுக்கு மேலேயும் இருக்கிறது. இந்தப் பூமிக்குத் தேவையான தண்ணீர் ஆகாயவிரிவுக்கு மேலே சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது.

தேவன் ஆகாயவிரிவை உண்டு பண்ணி, ஆகாயவிரிவுக்குக் கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாய விரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார் (ஆதி 1:7). தேவன் ஆகாயவிரிவுக்கு வானம் என்று பேரிட்டார். இந்த வானமே மனுஷர் பிரத்தியட்சமாய்ப் பார்க்கக்கூடிய வானம்.

இந்த வானத்திற்கு மேலே தேவனுடைய வாசஸ்தலமாகிய பரிசுத்த நகரம் இருக்கிறது. அது பரலோகம் என்று அழைக்கப்படுகிறது. அந்த வானத்தில் தேவனுடைய சிங்காசனம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

"அவைகளின் தலைகளுக்குமேலுள்ள மண்டலத்தின்மீதில் நீலரத்தினம்போல விளங்கும் ஒரு சிங்காசனத்தின் சாயலும், அந்தச் சிங்காசனத்தின் சாயலின்மேல் மனுஷசாயலுக்கு ஒத்த ஒரு சாயலும் இருந்தது" (எசே 1:26).

நம்முடைய தேவனாகிய கர்த்தரைப்பற்றித் தியானிக்கும்போது, அவர் நமக்கு பரலோக பிதாவாக இருக்கிறார் என்பதை நாம் நினைவுகூரவேண்டும். வானம் அதிகமான உயரத்திலிருக்கிறது. வானத்தின் உயரத்தை நம்மால் அளக்க முடியாது. பரலோக தேவன் வானத்திலிருக்கிறார். நமக்கும் தேவனுக்கும் நடுவே மிகப்பெரிய இடைவெளி இருக்கிறது. இதையெல்லாம் நினைவுகூரும்போது, இதை உண்டாக்கின தேவனுடைய மகிமையையும், மகத்துவத்தையும், வல்லமையையும் நினைவுகூர்ந்து, நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் நன்றியோடு துதிக்கவேண்டும்.

வானம் பிரகாசமாகயிருக்கிறது. அது சுத்தமாகவும் தூய்மையாகவும் இருக்கிறது. பரிசுத்தமான வானத்தைப் பார்க்கும்போது, நாம் தேவனுடைய மகிமையையும், மகத்துவத்தையும், பரிபூரணமான பரிசுத்தத்தையும் நினைவுகூரவேண்டும்.

வானம் பரவி விரிந்திருக்கிறது. பூமியைச் சுற்றிலும் வானம் இருக்கிறது. வானத்தின் தாக்கம் பூமியின்மீது எப்போதும் இருக்கும். தேவனுடைய தெய்வீக பராமரிப்பு இந்த முழுஉலகத்திற்கும் கிடைக்கும் என்பதற்கு இது அடையாளம்.

தேவன் ஆகாயவிரிவுக்கு வானம் என்றுபேரிட்டார்; சாயங்காலமும் விடியற்காலமுமாகி இரண்டாம் நாள் ஆயிற்று (ஆதி 1:8).

மூன்றாம் நாள்
ஆதி 1:9-13

ஆதி 1:9. பின்பு தேவன்: வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஒரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று.

ஆதி 1:10. தேவன் வெட்டாந்தரைக்குப் பூமி என்றும், சேர்ந்த ஜலத்திற்குச் சமுத்திரம் என்றும் பேரிட்டார்; தேவன் அது நல்லது என்று கண்டார்.

ஆதி 1:11. அப்பொழுது தேவன்: பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று.

ஆதி 1:12. பூமியானது புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது; தேவன் அது நல்லது என்று கண்டார்.

ஆதி 1:13. சாயங்காலமும் விடியற்காலமுமாகி மூன்றாம் நாள் ஆயிற்று.

தேவன் இதுவரையிலும் பூமிக்கு மேலே இருக்கிற ஆகாயவிரிவிலே, தம்முடைய சிருஷ்டிப்பின் கிரியைகளை நடத்தினார். தேவன் வெளிச்சத்தை உண்டாக்கினார். அவர் ஆகாயவிரிவை உண்டாக்கினார். தேவன் ஆகாயவிரிவுக்கு வானம் என்று பேரிட்டார்.

இதன் பின்பு தேவன் வானத்தின் கீழே இருக்கிற பூமியிலே தம்முடைய சிருஷ்டிப்பின் கிரியைகளை செய்கிறார். பூமியானது மனுபுத்திரரின் வாசஸ்தலம். மனுபுத்திரருக்கு தேவையான பராமரிப்பின் காரியங்கள் பூமியிலே இருக்கிறது. மனுபுத்திரர் பூமியிலே வாசம்பண்ணுவதற்கு வாசஸ்தலங்கள் வேண்டும். அவர்கள் புசிப்பதற்கு போஜனம் வேண்டும்.

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். அவர் இந்தப் பூமியை மனுஷர் வாழும் ஸ்தலமாக திட்டமிட்டு சிருஷ்டித்தார். தேவன் வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார். தேவன் வெட்டாந்தரைக்கு பூமி என்று பேரிட்டார்.

தேவன் வானத்தின் கீழே இருக்கிற ஜலத்தை ஓரிடத்தில் சேர்த்தபோது, வெட்டாந்தரை காணப்படுகிறது. தேவன் ஏற்கெனவே ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவை உண்டாக்கினார். அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரித்தது. ஜலமானது ஆகாயவிரிவுக்கு மேலேயும் கீழேயும் இரண்டாகப் பிரிந்திருக்கிறது.

ஆகாயவிரிவுக்கு கீழே இருக்கிற ஜலத்தை தேவன் ஓரிடத்தில் சேரப்பண்ணுகிறார். அப்போது அங்கே வெட்டாந்தரை காணப்படுகிறது. வானத்தின் கீழே இருக்கிற ஜலமெல்லாம் ஓரிடத்தில் சேருகிறது. அவ்வாறு சேர்ந்த ஜலத்திற்கு தேவன் சமுத்திரம் என்று பேரிட்டார்.

பரிசுத்த வேதாகமத்தில் தண்ணீரும் சமுத்திரமும் மனுஷருடைய துன்பங்களுக்கும், வேதனைகளுக்கும் அடையாளமாக சொல்லப்பட்டிருக்கிறது.

"உமது மதகுகளின் இரைச்சலால் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது; உமது அலைகளும் திரைகளும் எல்லாம் என்மேல் புரண்டுபோகிறது" *(சங் 42:7).*

"ஆழமான உளையில் அமிழ்ந்திருக்கிறேன், நிற்க நிலையில்லை, நிலையாத ஜலத்தில் ஆழ்ந்திருக்கிறேன்; வெள்ளங்கள் என்மேல் புரண்டுபோகிறது" *(சங் 69:2).*

"நான் அமிழ்ந்திப்போகாதபடிக்குச் சேற்றினின்று என்னை தூக்கிவிடும்; என்னைப் பகைக்கிறவர்களினின்றும் நிலையாத ஜலத்தினின்றும் நான் நீங்கும்படி செய்யும். ஜலப்பிரவாகங்கள் என்மேல் புரளாமலும், ஆழம் என்னை விழுங்காமலும், பாதாளம் என்மேல் தன் வாயை அடைத்துக்கொள்ளாமலும் இருப்பதாக" *(சங் 69:14,15).*

எல்லா மனுஷருக்கும் துன்பங்களும், வேதனைகளும் நெருக்கங்களும் வருவதுபோலவே, கர்த்தருடைய ஜனங்களுக்கும் வருகிறது. ஆனாலும் துன்பங்களுக்கு மத்தியிலும் நமக்கு கர்த்தர் மூலமாக ஆதரவு கிடைத்திருக்கிறது.

சேர்ந்த ஜலம் சமுத்திரம் என்று அழைக்கப்படுகிறது. சமுத்திரம் பெரிதாகயிருந்தாலும் அது வானத்தின் கீழே தான் இருக்கிறது. பரலோகத்திலே சமுத்திரம் இல்லை. தேவன் வானத்தின் கீழே இருக்கிற ஜலத்தை ஓரிடத்தில் சேர்த்திருக்கிறார். அந்த ஜலம் தேவன் நியமித்திருக்கிற இடத்தில் மாத்திரமே இருக்கும். தேவன் சமுத்திரத்திற்கு ஒரு எல்லையை நியமித்திருக்கிறார். சமுத்திரம் தன் எல்லையைத் தாண்டி வெளியே வராது.

வானத்தின் கீழே இருக்கிற ஜலத்தை தேவன் ஓரிடத்தில் சேர்த்தபோது, வெட்டாந்தரை காணப்படுகிறது. தேவன் வெட்டாந்தரைக்கு பூமி என்று பேரிடுகிறார். வெட்டாந்தரை ஜலத்திலிருந்து தோன்றியிருக்கிறது. பூமியானது மனுபுத்திரருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

வெட்டாந்தரை காணப்படுவதற்கு முன்பாகவே பூமி இருந்தது. ஆனால் அந்தப் பூமி பிரயோஜனமற்றதாயிருந்தது. வெட்டாந்தரை ஜலத்திற்குள்ளே மூழ்கியிருந்தது. மனுஷரில் அநேகர் தேவனுடைய வரங்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அந்த வரங்கள் ஜலத்திற்குள்ளே இருக்கும் வெட்டாந்தரைப்போல, யாருக்கும் பிரயோஜனமில்லாததாயிருக்கிறது. அவை பூமிக்குள் புதைக்கப்பட்ட வரங்களாயிருக்கிறது.

வெட்டாந்தரை வெளியே காணப்பட்ட போதுதான் அது மனுஷருக்கு பிரயோஜனமாயிருக்கும். அதுபோலவே நம்முடைய வரங்களும் வெளியே காணப்படவேண்டும். அதை நாம் தேவனுடைய நாமமகிமைக்காகவும் அவருடைய பரிசுத்தவான்களின் பிரயோஜனத்திற்காகவும் பயன்படுத்தவேண்டும்.

அப்பொழுது தேவன்: பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று (ஆதி 1:11).

மனுஷன் பூமியிலே ஜீவனோடிருக்கவேண்டுமென்றால் அவனுக்கு ஆகாரம் வேண்டும். கர்த்தர் மனுஷனை சிருஷ்டிப்பதற்கு முன்பாகவே, அவனுக்கு தேவையான ஆகாரத்தை சிருஷ்டிக்கிறார். மனுஷனுக்குத் தேவையான ஆகாரமெல்லாம் இந்தப் பூமியிலிருந்தே கிடைக்கிறது. தேவன் முளைப்பிக்கக்கடவது என்று சொன்னபோது, அது அப்படியே ஆயிற்று.

பூமியானது புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது (ஆதி 1:12).

மனுபுத்திரர் இந்தப் பூமியிலே ஜீவிக்கும்போது, அவர்களுக்குத் தேவையான ஆகாரம் இந்தப் பூமியிலிருந்தே கிடைக்கிறது. பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது. கர்த்தரே இந்தப் பூமிக்கு சொந்தக்காரர். அவர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம், தம்முடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, இந்தப் பூமியை பயன்படுத்துகிறார்.

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். அப்போது பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது. இப்போதோ கர்த்தர் ஒரு வார்த்தை சொன்னபோது, இந்தப் பூமியானது கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம் கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும், தானியங்களையும் முளைப்பிக்கிறது. வெறுமையாயிருந்த பூமி இப்போது கர்த்தருடைய ஆசீர்வாதத்தினால் நிரம்பியிருக்கிறது.

பூமியானது புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், விருட்சங்களையும் முளைப்பிக்கிறது. இவை தொடர்ந்து முளைத்துக்கொண்டே இருக்கும். இதன் மூலமாக மனுஷருக்குத் தேவையான போஜனங்கள் தொடர்ந்து கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

தேவன் தம்முடைய சிருஷ்டிப்பின் கிரியையை தொடர்ந்து நடத்திக்கொண்டு வருகிறார். இதன் மூலமாக இந்தப் பூமியிலுள்ள செடிகளும், தாவரங்களும், விருட்சங்களும் தொடர்ந்து முளைத்துக்கொண்டேயிருக்கிறது. அவை இன்னும் தானியங்களையும், பழங்களையும் முளைப்பித்துக் கொண்டேயிருக்கிறது. தேவன் தம்முடைய சிருஷ்டிப்பின் கிரியையில் ஒருபோதும் சோர்ந்துபோகிறவரல்ல. தேவன் நன்மை செய்ய சோர்ந்துபோகாதவர்.

மனுஷரை போஷிப்பதற்கு தேவன் புல்லையும் பூண்டுகளையும், செடிகளையும், விருட்சங்களையும் பயன்படுத்துகிறார். இவையெல்லாம் இருந்தால்தான், தேவனால் மனுஷனை போஷிக்க முடியும் என்னும் கட்டுப்பாடு எதுவும் தேவனுக்கு இல்லை. தேவன் இயற்கையின் பிரமாணத்திற்கு கட்டுப்பட்டவரல்ல. மனுஷனை போஷிப்பதற்கு, தேவன் இவற்றை உண்டாக்கியிருந்தாலும், இவை இல்லமாலேயே தேவனால் மனுஷனை போஷிக்க முடியும்.

மனுஷர் தங்களுடைய போஜனங்களை பயன்படுத்துவதற்கு முன்பாகவே, தேவன் அவர்களுக்கு போஜனங்களைப் படைத்திருக்கிறார். நமக்குத் தேவையானவற்றை நாம் பயன்படுத்துவதற்கு முன்பாகவே, தேவன் நம்முடைய தேவைகளை அறிந்திருக்கிறார். தேவன் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவும், தெய்வீக பராமரிப்பின் பிரகாரமாகவும், தம்முடைய சர்வஞானத்தினாலும், சிருஷ்டிப்பின் வல்லமையினாலும் அவற்றை ஏற்கெனவே சிருஷ்டித்திருக்கிறார்.

தேவன் மனுஷரையும் மிருகங்களையும் சிருஷ்டிப்பதற்கு முன்பாகவே, அவர்களுக்கு ஆகாரத்தைக் கொடுக்கும் புல்லையும், பூண்டுகளையும், கனிதரும் விருட்சங்களையும் சிருஷ்டித்திருக்கிறார். தேவன் மனுஷனை சிருஷ்டிப்பதற்கு முன்பாகவே, அவனுக்கு தேவைப்படுவதை ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார். நாம் இந்தப் பூமியின் ஆசீர்வாதங்களை அனுபவிக்கிறோம். இந்தப் பூமியின் நன்மைகளை பயன்படுத்துகிறோம். நாம் இதற்காக, நம்முடைய சிருஷ்டிகராகிய தேவனை நன்றியுள்ள இருதயத்தோடு துதிக்கவேண்டும். அவரை நாம் கனம்பண்ணவேண்டும்.

நாலாம் நாள்
ஆதி 1:14-19

ஆதி 1:14. பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார்.

ஆதி 1:15. அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கும்படிக்கு வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்களாயிருக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று.

ஆதி 1:16. தேவன், பகலை ஆளப் பெரிய சுடரும், இரவை ஆளச் சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும், நட்சத்திரங்களையும் உண்டாக்கினார்.

ஆதி 1:17. அவைகள் பூமியன்மேல் பிரகாசிக்கவும்,

ஆதி 1:18. பகலையும் இரவையும் ஆளவும், வெளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசம் உண்டாக்கவும், தேவன் அவைகளை வானம் என்கிற ஆகாயவிரிவிலே வைத்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார்.

ஆதி 1:19. சாயங்காலமும் விடியற்காலமுமாகி நாலாம் நாள் ஆயிற்று.

தேவன் நாலாம் நாளிலே சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றை சிருஷ்டிக்கிறார். இவையெல்லாம் வானத்திலே மிகவும் அழகாயிருக்கிறது. இவை அழகு மாத்திரமல்ல, பூமியிலிருக்கிறவர்களுக்கு இவை மிகவும் ஆசீர்வாதமாகவும் இருக்கிறது.

பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார்.

அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கும்படிக்கு வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்களாயிருக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று (ஆதி 1:14,15).

தேவன் முதலாம் நாளில் "வெளிச்சம் உண்டாகக்கடவது" (ஆதி 1:3) என்றார். அப்பொழுது வெளிச்சம் உண்டாயிற்று. இப்போது தேவன் "ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது" (ஆதி 1:14) என்று சொல்லுகிறார். அது அப்படியே ஆயிற்று.

தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்று சொன்னபோது வெளிச்சமுண்டாயிற்று. ஆனால் அந்த வெளிச்சத்தில் தெளிவு இல்லை. பூமியானது ஒழுங்கின்மையாயிருந்ததுபோல, அந்த வெளிச்சமும் ஒழுங்கின்மையாயிருந்தது. அது வானமெங்கும் சிதறிப்போயிருந்தது.

தேவன் ஏற்கெனவே வெளிச்சத்தை உண்டாக்கி, இப்போது அந்த வெளிச்சத்தை ஒன்றாய்க் கூட்டிச்சேர்க்கிறார். வெளிச்சத்திற்கு ஒரு வடிவத்தைக் கொடுக்கிறார். இந்த வெளிச்சம் மகிமையான வெளிச்சமாகவும், பிரயோஜனமான வெளிச்சமாகவும் இருக்கிறது. அவைகள் அடையாளங்களுக்காகவும், காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கும் வண்ணமாகவும் உண்டாக்கப்பட்டிருக்கிறது.

தேவனுடைய கிரியைகள் எல்லாமே ஒழுங்கும் கிரமமுமாகயிருக்கும். அவர் ஒழுங்கின் தேவன். அவர் கிரமத்தின் தேவன். தேவனிடத்தில் குழப்பமில்லை. அவர் குழப்பத்தை உண்டுபண்ணுகிறவருமல்ல. வெளிச்சத்தை உண்டாக்கின தேவன், அதை ஒழுங்கும் கிரமமுமாக உண்டாக்குகிறார். ஜோதிகளின் பிதாவாகயிருக்கிறவர், ஒழுங்கின் பிதாவாகவும், கிரமத்தின் பிதாவாகவும் இருக்கிறார்.

தேவன் வெளிச்சத்தையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்தார். அவர் வெளிச்சத்திற்கு பகல் என்றும் இருளுக்கு இரவு என்றும் பேரிட்டார். இரவுக்கும் பகலுக்கும் நேரத்தில் வித்தியாசம் இருக்கவேண்டும். காலங்களிலும் மாற்றம் இருக்கவேண்டும். இந்தப் பூமியிலே கோடைகாலம், குளிர்காலம், வசந்தகாலம், மழைகாலம் என்று காலங்கள் மாறி மாறி வரவேண்டும்.

"ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு" (பிர 3:1).

தேவன் பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக, வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்களை உண்டாக்கினார். தேவன் அவைகளை அடையாளங்களுக்காகவும், காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காக உண்டாக்கினார். விவசாயம் பண்ணுகிறவர்கள் மழைகாலத்தை எதிர்பார்த்து உழவு உழுகிறார்கள். பூமியில் வாசம்பண்ணுகிற மனுபுத்திரர் எல்லோரும், காலங்களை நிதானித்து அறிந்து, தங்களுடைய வேலைகளை செய்கிறார்கள்.

"அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: அஸ்தமனமாகிறபோது, செவ்வானமிட்டிருக்கிறது, அதினால் வெளிவாங்கும் என்று சொல்லுகிறீர்கள்" (மத் 16:2).

தேவன் ஆகாயவிரிவிலே உண்டாக்கியிருக்கிற சுடர்கள் பூமியின்மேல் பிரகாசிக்கிறது. அவை பூமிக்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறது. இந்த வெளிச்சத்திலே நாம் நடக்கலாம். நம்முடைய வேலைகளை செய்யலாம்.

"இயேசு பிரதியுத்தரமாக: பகலுக்குப் பன்னிரண்டு மணிநேரம் இல்லையா? ஒருவன் பகலிலே நடந்தால் அவன் இந்த உலகத்தின் வெளிச்சத்தைக் காண்கிறபடியினால் இடறமாட்டான்" (யோவா 11:9).

"பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது" (யோவா 9:4).

ஆகாயவிரிவிலே இருக்கிற சுடர்கள், பூமியில் வாசம்பண்ணுகிற நமக்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறது. இவை நம்முடைய பிரயோஜனத்திற்காகவும், நம்முடைய சந்தோஷத்திற்காகவும் வெளிச்சத்தைக் கொடுக்கிறது. ஆகாயவிரிவிலே இருக்கிற சுடர்கள் தங்களுடைய கடமையை மறப்பதுமில்லை. தவறுவதுமில்லை. அவை தங்களுக்கு நியமிக்கப்பட்ட காலங்களில், தங்களுடைய கடமைகளை தவறாமல் நிறைவேற்றும்.

விசுவாசிகளாகிய நாம் இந்தப் பூமியிலே தேவனுக்கு ஊழியம் செய்கிற சுடர்களாயிருக்கிறோம். நாம் தேவனுக்காக எழுந்து பிரகாசிக்கவேண்டும். பிரகாசமான வெளிச்சத்தைக் கொடுக்கவேண்டும். தேவனுடைய வெளிச்சத்தின் ஆசீர்வாதத்தை அனுபவிக்கிற நாம், நமது கடமைகளை மறந்துவிடக்கூடாது. வெளிச்சம் இருக்கும்போதே கர்த்தருடைய ஊழியத்தை செய்யவேண்டும்.

தேவன், பகலை ஆளப் பெரிய சுடரும், இரவை ஆளச் சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும், நட்சத்திரங்களையும் உண்டாக்கினார். அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கவும், பகலையும் இரவையும் ஆளவும், வெளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசம் உண்டாக்கவும், தேவன் அவைகளை வானம் என்கிற ஆகாயவிரிவிலே வைத்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார் (ஆதி 1:16-18).

ஆகாயவிரிவிலே சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகிய சுடர்கள் இருக்கிறது. இவையெல்லாவற்றையும் தேவனே உண்டாக்கினார். நம்முடைய பிரயோஜனத்திற்காக தேவன் இந்த சுடர்களை உண்டாக்கியிருப்பதினால், நாம் அவருடைய பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும்.

தேவன் பகலை ஆள பெரிய சுடரை உண்டாக்கினார். தேவன் இந்தச் சுடரை வானம் என்கிற ஆகாயவிரிவிலே வைத்தார். எல்லா சுடர்களிலும் சூரியனே பெரிய சுடராயிருக்கிறது.

"வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை" (சங் 19:1-3).

"ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார். அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனைப்போலிருந்து, பராக்கிரமசாலியைப்போல் தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது. அது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு, அவைகளின் மறுமுனைவரைக்கும் சுற்றியோடுகிறது; அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை" (சங் 19:4-6).

தேவன் இரவை ஆள சிறிய சுடரை உண்டாக்கினார். பெரிய சுடரும் சிறிய சுடரும் மகத்தான சுடர்கள். தேவன் இந்த சிறிய சுடரையும் வானம் என்கிற ஆகாய விரிவிலே வைத்தார். இவ்விரண்டு சுடர்களும் மகத்தான சுடர்களாகயிருந்தாலும், இவை தங்களுடைய கடமைகளை ஒழுங்காய் நிறைவேற்றுகிறது. இவை இரண்டுமே பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது.

இவ்விரண்டு சுடர்களைப்போலவே, விசுவாசிகளாகிய நாமும் கர்த்தருக்கு பிரியமுள்ளவர்களாகவும், பிரயோஜனமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். கர்த்தர் தம்முடைய கிருபையினால் நமக்கு கொடுத்திருக்கிற வரங்களை, அவருடைய நாமமகிமைக்காக பயன்படுத்தவேண்டும். நாம் மனுபுத்திரருக்கு பிரயோஜனமுள்ளவர்களாயிருக்கவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் ஊழியப்பொறுப்புக்களை, பெருமையில்லாமல், மனத்தாழ்மையோடும், உண்மையோடும் நிறைவேற்றவேண்டும்.

தேவன் சூரியனையும் சந்திரனையும் உண்டாக்கினார். அவர் ஏராளமான நட்சத்திரங்களையும் உண்டாக்கினார். அவையெல்லாம் வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்களாயிருக்கிறது. நாம் வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் பார்த்து ஆச்சரியப்படலாம். அவற்றின் அழகைப் பார்த்து ரசிக்கலாம். ஆனால் புறஜாதியாரைப்போல நட்சத்திரங்களை ஜோசியம் பார்ப்பதற்கும், குறிசொல்லுவதற்கும் பயன்படுத்தக்கூடாது.

ஆகாயவிரிவிலுள்ள சுடர்கள் நம்மை தேவனிடத்தில் வழிநடத்தவேண்டும். அவை நம்மை தேவனுக்கு பரிசுத்தவான்களாக்க வேண்டும். ஆகாயவிரிவிலுள்ள சுடர்கள் எல்லாமே தேவனுடைய கட்டளையின் பிரகாரமாக இயங்குகிறது.

"இரவில் ஆளச் சந்திரனையும் நட்சத்திரங்களையும் படைத்தவரைத்துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது" *(சங் 136:9)*.

விசுவாசிகளாகிய நாமும் இந்தப் பூமியில் ஆளுகை செய்யவேண்டுமென்றால், சந்திரனைப்போல நாமும் வெளிச்சத்தைக் கொடுக்கவேண்டும். வானத்திலுள்ள சுடர்களைப்போல நாமும் மனுஷருக்கு நன்மை செய்யவேண்டும். மற்றவர்கள் நம்மை மதிக்கவேண்டுமென்றால், நம்முடைய வெளிச்சத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தவேண்டும். நாம் மற்றவர்களுக்கு பிரயோஜனமுள்ள ஜீவியம் ஜீவிக்கவேண்டும்.

புறஜாதியார் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் தங்களுடைய தெய்வங்கள் என்று நம்பி, அவற்றை ஆராதிக்கிறார்கள். ஆனால் தேவனே இவையெல்லாவற்றையும் உண்டாக்கினார். இவை மனுஷருடைய பிரயோஜனத்திற்காக உண்டாக்கப்பட்டிருக்கிறது. வானத்திலுள்ள சுடர்களை ஆராதனை செய்வது, அவற்றை உண்டாக்கின தேவனுக்கு விரோதமாக செய்கிற பாவம். நாம் சிருஷ்டிகரை கனம்பண்ணவேண்டும். சிருஷ்டிகளை கனம்பண்ணக்கூடாது.

சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் உண்டாக்கினவரை நாம் துதிக்கவேண்டும். தேவன் உண்டாக்கின அந்த சுடர்களை துதிக்கக்கூடாது. நாம் ஒவ்வொரு நாள் காலையிலும், மாலையிலும் தேவனுக்கு ஸ்தோத்திரம் பண்ணி, அவருக்கு நன்றிபலிகளை ஏறெடுத்து, அவரை நன்றியுள்ள இருதயத்தோடு துதிக்கவேண்டும்.

ஐந்தாம் நாள்
ஆதி 1:20-23

ஆதி 1:20. பின்பு தேவன்: நீந்தும் ஜீவஜந்துக்களையும், பூமியின்மேல் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது என்றார்.

ஆதி 1:21. தேவன், மகா மச்சங்களையும், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜநிப்பிக்கப்பட்ட சகலவித நீர் வாழும் ஜந்துக்களையும், சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவிதப் பட்சிகளையும் சிருஷ்டித்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார்.

ஆதி 1:22. தேவன் அவைகளை ஆசீர்வதித்து, நீங்கள் பலுகிப் பெருகி, சமுத்திர ஜலத்தை நிரப்புங்கள் என்றும், பறவைகள் பூமியில் பெருகக்கடவது என்றும் சொன்னார்.

ஆதி 1:23. சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஐந்தாம் நாள் ஆயிற்று.

ஐந்தாம் நாள் வரையிலும் ஜீவஜந்துக்கள் எதுவும் சிருஷ்டிக்கப்படவில்லை. தேவன் ஐந்தாம் நாளிலே சகலவித நீர்வாழும் ஜந்துக்களையும், சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவித பட்சிகளையும் சிருஷ்டித்தார்.

தேவன், நீந்தும் ஜீவஜந்துக்களையும், பூமியின்மேல் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது என்றார் (ஆதி 1:20).

நீர்வாழும் ஜந்துக்களும், ஆகாயத்து பட்சிகளும் ஜலத்திலிருந்து உண்டாக்கப்படுகிறது. "ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கப்படவது" என்று சொன்னார். தேவனே தம்முடைய கட்டளையை நிறைவேற்றுகிறார். தேவன் சகலவித நீர்வாழும் ஜந்துக்களையும், சகலவித பட்சிகளையும் சிருஷ்டிக்கிறார்.

மிருகங்களைப்போலவே, பட்சிகளிலும் ஏராளமான வித்தியாசங்கள் இருக்கிறது. அவை எண்ணிலடங்காதது. அவற்றின் சுபாவங்களெல்லாம் விநோதமானவை. சிறகுள்ள பட்சிகள் என்று சொல்லும்போது, சிறிய பூச்சியிலிருந்து பெரிய பறவை வரையிலும் இந்த இனத்தில் அடங்கும். இவையெல்லாவற்றையும் தேவன் ஐந்தாம் நாளிலே சிருஷ்டித்தார்.

தேவனுடைய சிருஷ்டிப்பு அற்புதமானது. ஒவ்வொரு சிருஷ்டிப்பிலும் தேவனுடைய ஞானமும் வல்லமையும் வெளிப்படுகிறது. ஒரு சிறிய எறும்பாகயிருந்தாலும் அல்லது பெரிய யானையாகயிருந்தாலும், இவற்றில் தேவனுடைய ஞானத்தையும் வல்லமையையும் நாம் பார்க்கலாம்.

தேவன் தம்முடைய அனந்த ஞானத்தினால், ஒவ்வொரு ஜீவஜந்துக்களின் அவயவங்களையும் ஒன்றாய்க் கூட்டிச்சேர்த்திருக்கிறார். அவற்றை இசைவாக இணைத்திருக்கிறார். ஒவ்வொரு ஜீவஜந்தும் அளவிலும், உருவத்திலும், வடிவத்திலும், சுபாவத்திலும் வித்தியாசமானது. ஒவ்வொரு ஜீவஜந்திலும் ஜீவன் இருக்கிறது. இந்த ஜீவனை ஆராய்ந்து பார்ப்பதே நமக்கு ஆச்சரியமாயிருக்கும். ஜீவன் ஒவ்வொரு ஜந்துக்கும் உணர்வைக் கொடுக்கிறது. அதற்கு அசைவைக் கொடுக்கிறது. ஜீவஜந்துக்கள் ஜடமாயிராமல், இயங்குகிறது.

மிருகங்கள், பறவைகள், மீன்கள், மனுஷர்கள் ஆகியவையெல்லாம் தானாகவே உண்டாயிற்று என்று நாஸ்திகர்கள் சொல்லுகிறார்கள். தேவனே அவற்றை உண்டாக்கினவர். தேவன் அவற்றை உண்டாக்கவில்லையென்றால், இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு ஜீவஜந்துகூடயிருக்காது.

நம்மை உண்டாக்கின சிருஷ்டிகருடைய அனந்த ஞானத்தையும், சிருஷ்டிப்பின் வல்லமையையும் நினைவுகூர்ந்து, நாம் அவரை நன்றியோடு துதிக்கவேண்டும்.

"கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்; பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது. பெரிதும் விஸ்தாரமுமான இந்தச் சமுத்திரமும் அப்படியே நிறைந்திருக்கிறது; அதிலே சஞ்சரிக்கும் சிறியவைகளும் பெரியவைகளுமான எண்ணிறந்த ஜீவன்கள் உண்டு" (சங் 104:24,25).

தேவன், மகா மச்சங்களையும், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜநிப்பிக்கப்பட்ட சகலவித நீர் வாழும் ஜந்துக்களையும், சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவிதப் பட்சிகளையும் சிருஷ்டித்தார். தேவன் அவைகளை ஆசீர்வதித்து, நீங்கள் பலுகிப் பெருகி, சமுத்திர ஜலத்தை நிரப்புங்கள் என்றும், பறவைகள் பூமியில் பெருகக்கடவது என்றும் சொன்னார் (ஆதி 1:21,22).

தேவன் ஒவ்வொரு ஜீவஜந்தையும் சிருஷ்டித்து, அதை பலுகிப்பெருகுமாறு ஆசீர்வதிக்கிறார். கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம் ஒவ்வொரு ஜீவஜந்தும் பலுகிப்பெருகி, சமுத்திர ஜலத்தை நிரப்புகிறது. அவை பூமியில் பெருகுகிறது.

ஆறாம் நாள் - மிருகம்
ஆதி 1:24,25

ஆதி 1:24. பின்பு தேவன்: பூமியானது ஜாதி ஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டுமிருகங்களையும், ஜாதிஜாதியாகப் பிறப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று.

ஆதி 1:25. தேவன் பூமியிலுள்ள ஜாதிஜாதியான காட்டு மிருகங்களையும், ஜாதிஜாதியான நாட்டுமிருகங்களையும், பூமியில் ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார்; தேவன் அது நல்லது என்று கண்டார்.

தேவன் ஆறாம் நாளிலே நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டு மிருகங்களையும் சிருஷ்டிக்கிறார். தேவன் தம்முடைய வார்த்தையை சொல்லுகிறார். "பூமியானது மிருகங்களை பிறப்பிக்கக்கடவது" என்று தேவன் சொல்லுகிறார். தேவனே தாம் சொன்ன வார்த்தையை நிறைவேற்றுகிறார். தேவன் பூமியிலுள்ள மிருகங்களை உண்டாக்குகிறார்.

தேவன்: பூமியானது ஜாதி ஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டுமிருகங்களையும், ஜாதிஜாதியாகப் பிறப்பிக்கக்கடவது என்றார் (ஆதி 1:24).

தேவன் பூமியிலுள்ள ஜாதிஜாதியான காட்டுமிருகங்களையும், ஜாதிஜாதியான நாட்டுமிருகங்களையும், பூமியில் ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார் (ஆதி 1:25).

தேவன் சொல்லவும் செய்கிறார். அவர் உண்டாக்கவும் செய்கிறார். மிருகங்களின் சுபாவங்களெல்லாம் வித்தியாசமாயிருக்கிறது. அவற்றின் போஜனபழக்க வழக்கங்களும் வேறுபட்டிருக்கிறது. ஒரு சில மிருகங்கள் புல் பூண்டு, இலைகள், தழைகள் ஆகியவற்றை மேய்கிறது. வேறு சில மிருகங்களோ மாம்சத்தைப் புசிக்கிறது. சில மிருகங்கள் பலமுள்ளதாகவும், கொடூர குணமுள்ளதாகவும் இருக்கிறது. வேறு சில மிருகங்களோ அமைதியான சுபாவமுள்ளதாயிருக்கிறது.

நாம் சில மிருகங்களை பழக்கி, அவற்றை நமக்கு பிரயோஜனமான வழிகளில் பயன்படுத்துகிறோம். ஒரு சில மிருகங்களை பழக்க முடியாது. அவை மனுஷருக்கு எந்த வழியிலும் பிரயோஜனமாயிருக்காது. ஆனாலும் தேவன் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக ஜாதி ஜாதியான நாட்டுமிருகங்களையும், காட்டுமிருகங்களையும், ஊரும் பிராணிகளையும் உண்டாக்கினார்.

ஆறாம் நாள் - மனுஷன்
ஆதி 1:26-28

ஆதி 1:26. பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும், ஆளக்கடவர்கள் என்றார்.

ஆதி 1:27. தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்த்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.

ஆதி 1:28. பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி,அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.

தேவன் ஆறாம் நாளிலே இரண்டுவிதமான கிரியைகளை செய்கிறார். அவர் முதலாவதாக மிருகங்களை உண்டாக்குகிறார். அதன் பின்பு தேவன் மனுஷனை சிருஷ்டிக்கிறார். தேவன் எல்லா ஜீவஜந்துகளையும் உண்டாக்கி முடித்த பின்பு, மனுஷனை கடைசியாக உண்டாக்குகிறார். தேவன் மனுஷனை முதலாவது உண்டாக்கியிருந்தால், தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரியைகளில் மனுஷனும் உதவி செய்தான் என்று சிலர் தப்பிதமாக வியாக்கியானம் பண்ணுவார்கள்.

தேவன் மனுஷனை, எல்லா ஜீவஜந்துகளையும் உண்டாக்கின பின்பு, கடைசியாக சிருஷ்டித்தது மனுஷனுக்கு மேன்மை. தேவன் மனுஷனுக்கு விசேஷித்த கிருபையையும் சிலாக்கியத்தையும் காண்பித்து, அவனை கடைசியாக சிருஷ்டித்திருக்கிறார்.

தேவனுடைய சிருஷ்டிக்கும் கிரியையில் ஒழுங்கும் கிரமமும் இருக்கிறது. தேவன் முதலாவதாக சாதாரண காரியங்களை சிருஷ்டிக்கிறார். அதன் பின்பு அவர் கொஞ்சம் கொஞ்சமாக விசேஷித்த காரியங்களை சிருஷ்டிக்கிறார். தேவனுடைய சிருஷ்டிப்பில் ஒரு முன்னேற்றம் காணப்படுகிறது. தேவன் ஆரம்பத்தில் சிருஷ்டித்தது. ஒழுங்கின்மையாயும், வெறுமையாயும் இருந்தது. அவர் அதன் பின்பு சிருஷ்டித்தது ஒழுங்குள்ளதாயும், நிறைவானதாயும் இருக்கிறது. அது நல்லதாயும் இருக்கிறது.

தேவன் மனுஷனை சிருஷ்டிப்பதற்கு முன்பதாகவே, அவனுக்கு தேவையானது எல்லாவற்றையும் சிருஷ்டித்து முடிக்கிறார். மனுஷனுக்கு தங்கும் வாசஸ்தலத்தை உண்டாக்கியிருக்கிறார். மனுஷன் இந்தப் பூமியில் சிருஷ்டிக்கப்படும்போது, அவனுக்கு தேவையானவையெல்லாம் ஏற்கெனே சிருஷ்டித்து முடிக்கப்பட்டிருக்கிறது. தேவன் இந்தப் பூமியிலே மனுஷனை, தம்முடைய கிருபையினால் வரவேற்கிறார். மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டபோது, அவன் தேவனுடைய சிருஷ்டிப்புகளை பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறான். தேவனுடைய சிருஷ்டிப்பு மனுஷனுக்கு ஆச்சரியமாயும், ஆறுதலாயும் இருக்கிறது.

மனுஷனுடைய சிருஷ்டிப்பு மிகவும் விசேஷித்ததாயிருக்கிறது. இதில் தேவனுடைய தெய்வீக ஞானமும் அவருடைய வல்லமையும் அதிகமாய் வெளிப்படுகிறது. தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தாலும், மனுஷனை விசேஷித்த விதமாகவும், தம்முடைய விசேஷித்த ஞானத்தின் பிரகாரமாகவும் சிருஷ்டித்திருக்கிறார்.

தேவன் இதற்கு முன்பு வெளிச்சத்தை உண்டாக்கியபோது, "வெளிச்சம் உண்டாகக்கடவது" என்று மாத்திரமே சொன்னார். அவர் ஆகாயவிரிவை உண்டாக்கியபோது, "ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவு உண்டாகக்கடவது" என்று மாத்திரமே சொன்னார்.

ஆனால் இப்போது தேவன் மனுஷனை சிருஷ்டிக்கும்போது, "நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" (ஆதி 1:26) என்று சொல்லுகிறார். தேவன் வெளிச்சத்தையும், ஆகாயவிரிவையும் உண்டாக்கியபோது, தம்முடைய கட்டளையின் வார்த்தையை வெளிப்படுத்தினார். மனுஷனை உண்டாக்கும்போதோ, தேவன் கட்டளையின் வார்த்தைக்கு பதிலாக, ஆலோசனையின் வார்த்தையை சொல்லுகிறார். "மனுஷனை உண்டாக்குவோமாக" என்று தேவன் சொல்லுகிறார்.

தேவன் மனுஷனுக்காகவே மற்ற எல்லா சிருஷ்டிகளையும் சிருஷ்டித்திருக்கிறார். ஆகையினால் மனுஷனை உண்டாக்கும்போது, தேவன் விசேஷித்த கவனம் செலுத்தி, அவனை தம்முடைய சொந்த கரங்களினால் உண்டாக்குகிறார்.

தேவன் வெளிச்சத்தையும், ஆகாயவிரிவையும் உண்டாக்கியபோது, அவர் அதிகாரமுள்ளவராகப் பேசினார். ஆனால் இப்போதோ, அவர் மனுஷனை உண்டாக்குகிறபோது, அன்பும், கரிசனையுமுள்ளவராகப் பேசுகிறார். மனுஷனுக்குத் தேவையான எல்லாவற்றையும் தேவன் ஏற்கெனவே உண்டாக்கியிருக்கிறார். இப்போது மனுஷனை உண்டாக்குவதற்கான ஏற்ற வேளை வந்திருக்கிறது. ஆகையினால் தேவன், "மனுஷனை உண்டாக்குவோமாக" என்று சொல்லுகிறார்.

மனுஷனுக்கும், தேவனுடைய மற்ற சிருஷ்டிகளுக்கும் ஏராளமான வித்தியாசங்கள் உள்ளது. தேவன் இதுவரையிலும் சிருஷ்டித்த சர்வசிருஷ்டிகளிலிருந்தும், மனுஷன் வேறுபட்டவனாயிருக்கிறான். மனுஷனுக்குள்ளே மாம்சமும் ஆவியும் கலந்திருக்கிறது. தேவன் மனுஷனுக்குள்ளே வானத்தையும் பூமியையும் ஒன்றாய்ச் சேர்த்து வைக்கிறார். மனுஷன் பூமிக்குரியவன் வானத்திற்குமுரியவன்.

ஆகையினால் மனுஷனை விசேஷித்த விதமாக சிருஷ்டிக்கவேண்டும் என்பது தேவனுடைய தெய்வீக சித்தமாயிற்று. மனுஷனை சிருஷ்டிக்கும் வேலையை தேவன் தாமே பொறுப்பேற்றுக்கொள்கிறார். ஆனாலும் தேவன் மனுஷனை சிருஷ்டிக்கும்போது, திரித்துவத்தின் மற்ற நபர்களையும் கலந்து ஆலோசித்து, மனுஷனை சிருஷ்டிப்பதுபோல இருக்கிறது. ஆகையினால் தேவன், "மனுஷனை உண்டாக்குவோமாக" என்று பன்மைப் பொருளில் சொல்லுகிறார்.

மனுஷனை உண்டாக்கும்போது, திரித்துவத்தின் மூன்று நபர்களான, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூன்று பேருமே கலந்து ஆலோசித்துக்கொள்கிறார்கள். அவர்கள் மூன்று பேரும் தங்களுடைய ஒருமித்த கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்கள். அதன் பிரகாரமாக மனுஷன் உண்டாக்கப்படுகிறான்.

மனுஷன் தேவனுடைய சாயலாகவும், அவருடைய ரூபத்தின் படியேயும் உண்டாக்கப்படுகிறான். மனுஷனிடத்தில் தேவனுடைய சாயலும், அவருடைய ரூபமும் கலந்திருக்கிறது. ஆனாலும் தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையில் அனந்தமான இடைவெளி இருக்கிறது. கிறிஸ்துவானவர் தேவனுடைய சாயலை வெளிப்படுத்துகிறார். குமாரனாகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய பிதாவின் சாயலை பிரதிபலிக்கிறார்.

தேவனுடைய சாயலும் ரூபமும் மனுஷனிடத்தில் காணப்படுவது, மனுஷனுடைய மேன்மை. இது மனுஷனுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். இது மனுக்குலத்திற்கு ஒரு பாக்கியம். மனுஷன் தேவனுடைய சாயலாகவும், அவருடைய ரூபத்தின்படியும் உண்டாக்கப்பட்டாலும், தேவனுடைய பூரண சாயலும், அவருடைய பூரண ரூபமும் மனுஷனிடத்தில் வெளிப்படவில்லை. ஒரு கண்ணாடியில் நிழலைப் பார்ப்பதுபோல, மனுஷனிடத்தில் தேவனுடைய ரூபமும் சாயலும் காணப்படுகிறது.

பண்டை காலத்து நாணயங்களில், ராஜாவின் ரூபம் பொறிக்கப்பட்டிருக்கும். நாணயத்திலுள்ளது மெய்யான ராஜா அல்ல. அது ராஜாவின் ரூபம். அதுபோலவே மனுஷனிடத்தில் காணப்படுவது தேவனுடைய பூரணமான ரூபமோ, பூரணமான சாயலோ அல்ல.

மனுஷன் தேவனுடைய சாயலாகவும், அவருடைய ரூபமாகவும் உண்டாக்கப்பட்டான் என்று சொல்லும்போது, அதில் மூன்றுவிதமான காரியங்கள் இடம்பெற்றுள்ளன. அவையாவன :

1. மனுஷன் தன்னுடைய சரீர அமைப்பில், தேவனுடைய ரூபத்தைப்போலவோ அவருடைய சாயலைப்போலவே இல்லை. ஏனென்றால் தேவனுக்கு சரீரம் இல்லை. தேவன் அரூபமானவர்.

மனுஷனுடைய ஆத்துமா தேவனுடைய சாயலாகவும், அவருடைய ரூபத்தின்படியேயும் இருக்கிறது. தேவன் தாமே மனுஷனுடைய சரீரத்தில் இந்த மேன்மையை வைத்திருக்கிறார். வார்த்தை மாம்சமாயிற்று. தேவகுமாரன் மனுஷசாயலானார். விசுவாசிகளாகிய நாம் உயிர்த்தெழும்போது, கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பான மகிமையான சாயலைப் பெற்றுக்கொள்வோம்.

மனுஷனுடைய ஆத்துமாவே தேவனுடைய சாயலைப் பெற்றிருக்கிறது. ஆத்துமாவில் மூன்று பகுதிகள் உள்ளன. அவையாவன : 1. புரிந்து கொள்ளும் அறிவு. 2. சித்தம் 3. செயல்படும் வல்லமை. நாம் இம்மூன்றின் மூலமாக மாத்திரமே, தேவனை அறிந்துகொள்ள முடியும்.

2. தேவன் மனுஷனை தம்முடைய ஸ்தானத்திலும், தம்முடைய அதிகாரத்திலும் உண்டாக்கியிருக்கிறார். மனுஷன் சகல பிராணிகளையும் ஆளவேண்டும் என்பதற்காக, தேவன் மனுஷனை தம்முடைய சாயலாகவும், தம்முடைய ரூபத்தின்படியேயும் உண்டாக்கியிருக்கிறார்.

"பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப்பிராணிகளையும், ஆளக்கடவர்கள் என்றார்" (ஆதி 1:26).

தேவனே சர்வசிருஷ்டிகளையும் சிருஷ்டித்தவர். ஆகையினால் அவருக்கு எல்லா சிருஷ்டிகளையும் ஆளுகை செய்கிற அதிகாரமுள்ளது. தேவன் தம்முடைய சார்பாக சகல பிராணிகளையும் ஆளுகை செய்யும் அதிகாரத்தை மனுஷனுக்கு கொடுத்திருக்கிறார். மனுஷன் தேவனுடைய பிரதிநிதியாக சகல பிராணிகளையும் ஆளுகை செய்கிறான்.

3. மனுஷன் பரிசுத்தத்தில் தேவசாயலாகவும் அவருடைய ரூபத்தின்படியும் உண்டாக்கப்பட்டிருக்கிறான். மனுஷனுடைய அறிவு, நீதி, மெய்யான பரிசுத்தம் ஆகியவற்றில் தேவனுடைய சாயல் வெளிப்படுகிறது.

"உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்" (எபே 4:23,24).

"தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே" (கொலோ 3:10).

நம்முடைய முதல் பெற்றோர் தேவசாயலாகவும், தேவனுடைய ரூபத்தின் படியேயும் உண்டாக்கப்பட்டார்கள். ஆகையினால் அவர்கள் பரிசுத்தமாயும், சந்தோஷமாயும் இருந்தார்கள்.

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்த்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் (ஆதி 1:27).

பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி,அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார் (ஆதி 1:28).

தேவன், "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" என்று சொன்னார். தேவன் அவ்வாறு சொன்னவுடனே, "அவர் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார்". தாம் தீர்மானித்ததை தேவன் உடனே நிறைவேற்றினார்.

மனுஷனுக்கு சொல்லுவதும் செய்வதும் இரண்டு வெவ்வேறு காரியங்கள். ஆனால் தேவனுக்கோ சொல்லுவது செய்வதும் ஒரே காரியம். அவர் சொல்லுகிறதை செய்கிறவர். செய்கிறதை சொல்லுகிறவர்.

தேவன் மற்ற ஜீவஜந்துக்களை சிருஷ்டித்தபோது அவற்றை ஜோடி ஜோடிகளாக சிருஷ்டித்தார். தேவன் அவற்றை திரளான எண்ணிக்கையில் சிருஷ்டித்தார். ஆனால் தேவன் மனுஷனை சிருஷ்டிக்கும்போது, ஒருவனை மாத்திரமே சிருஷ்டிக்கிறார்.

இயேசுகிறிஸ்து திருமண விவாகரத்துக்கு விரோதமாக உபதேசம்பண்ணும்போது, இந்த சத்தியத்தை சொல்லுகிறார்.

"அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா?" (மத் 19:4,5).

நம்முடைய முதலாவது தகப்பனாகிய ஆதாமுக்கு, ஏவாள் என்பவள் மாத்திரம் ஒரே மனைவியாகயிருந்தாள். ஆதாம் தன்னுடைய மனைவியாகிய ஏவாளை தள்ளி வைத்துவிட்டால், ஆதாம் மறுபடியும் விவாகம்பண்ணுவதற்கு, இந்தப் பூமியிலே ஏவாளைத் தவிர வேறு ஸ்திரீ யாருமில்லை. ஆகையினால் புருஷனும் மனைவியும், தங்களுடைய சுயஇஷ்டம்போல, தாங்கள் விரும்பிய பிரகாரம், தங்களுடைய திருமண உறவை முறித்துக்கொள்ளக்கூடாது.

தேவன் ஒரு ஆணும், ஒரு பெண்ணுமாக சிருஷ்டித்தார். இந்த சத்தியத்தை இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எல்லா தேசத்தாரும் அறிந்திருக்கவேண்டும். திருமண உறவின் மூலமாக, புருஷனும் மனைவியும், ஒரே இரத்தமாக சேருகிறார்கள். அவர்கள் இருவரும் ஒரே சந்ததியை சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். கணவனும் மனைவியும் தங்களுடைய திருமண பந்தத்தின் பரிசுத்தத்தை நினைவுகூர்ந்து, ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கவேண்டும்.

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி, "நீங்கள் பலுகிப்பெருகி பூமியை நிரப்புங்கள்" என்று சொன்னார். தேவன் முதலாம் மனுஷனுக்கு சொன்ன கட்டளை, இந்தப் பூமியிலுள்ள மனுபுத்திரர் எல்லோருக்கும் சொல்லப்பட்டிருக்கிற பொதுவான கட்டளையாகும்.

"மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்" (அப் 17:26).

நாம் இந்தப் பூமியில் வாசம்பண்ணினாலும், இங்கே பரதேசிகளைப்போல சஞ்சரிக்கிறோம். நமக்கு நிலையான நகரம் இங்கு இல்லை. பரலோகமே நமக்கு நித்திய வாசஸ்தலம். நாம் இந்தப் பூமியில் இருக்கும் காலம் வரையிலும், இங்கே பலுகிப்பெருகி, பூமியை நிரப்பவேண்டும். இதுவே நம்மைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

தேவன் மனுஷருக்கு சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளும் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். சமுத்திரத்தின் மச்சங்கள், ஆகாயத்து பறவைகள், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்கள் ஆகியவையெல்லாமே மனுஷனுடைய ஆளுகைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. மனுஷன் இந்த ஜீவஜந்துக்களை பராமரிக்கவில்லை. ஆனாலும் அவற்றை ஆண்டுகொள்ளும் அதிகாரத்தை கர்த்தர் மனுஷனுக்கு கொடுத்திருக்கிறார்.

தேவன் தம்முடைய சாயலாகவும், தம்முடைய ரூபத்தின் படியேயும் மனுஷனை சிருஷ்டித்து, அவனுக்கு சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளும் அதிகாரத்தைக் கொடுத்து, அவனை மேன்மைப்படுத்தியிருக்கிறார். மனுஷன் தன்னுடைய பாதுகாப்புக்காகவும், தன்னுடைய ஜீவாதாரத்திற்காகவும் சகல ஜந்துக்களையும் ஆளுகை செய்யவேண்டும். அவற்றை தன்னுடைய பிரயோஜனத்திற்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஆறாம் நாள் - ஆகாரம் ஆதி 1:29,30

ஆதி 1:29. பின்னும் தேவன்: இதோ, பூமியின் மேல் எங்கும் விதைதரும் சகலவிதப்பூண்டுகளையும், விதைதரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்கு கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது;

ஆதி 1:30. பூமியிலுள்ள சகல மிருக ஜீவன்களுக்கும் , ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிற்கும், பசுமையான சகல பூண்டுகளையும் ஆகாரமாக கொடுத்தேன் என்றார்; அது அப்படியே ஆயிற்று.

தேவன் ஆறாம் நாளிலே மூன்று கிரியைகளை செய்கிறார். அவர் முதலாம் கிரியையாக மிருகங்களை சிருஷ்டிக்கிறார். இரண்டாம் கிரியையாக, தேவன் தம்முடைய சாயலாகவும், தம்முடைய ரூபத்தின்படியேயும் மனுஷனை சிருஷ்டிக்கிறார். மூன்றாம் கிரியையாக தாம் சிருஷ்டித்த மனுஷனுக்கும், மற்ற ஜீவஜந்துக்களுக்கும் ஆகாரத்தைக் கொடுக்கிறார்.

"மாம்சதேகமுள்ள யாவுக்கும் ஆகாரங் கொடுக்கிறவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது" *(சங் 136:25).*

தேவன் மனுஷனுக்கு ஆகாரம் கொடுக்கிறார். பூண்டுகளும், கனிகளும் மனுஷனுக்கு ஆகாரமாய்க் கொடுக்கப்படுகிறது. தேவன் மனுஷனுக்கு கொடுக்கும் ஆகாரத்தைத் தியானித்துப் பார்க்கும்போது, நம்முடைய மனதில் தாழ்மை ஏற்படவேண்டும். தேவன் நம்மை இந்த மண்ணிலிருந்து உண்டாக்கியிருக்கிறார். இந்த மண்ணிலிருந்து விளைகிற பூண்டுகளும், கனிகளும் நமக்கு ஆகாரமாயிற்று.

தேவனே நமக்கு ஆகாரத்தைக் கொடுக்கிறார். நாம் தேவனுடைய தெய்வீக பராமரிப்பை நினைவுகூர்ந்து, அவருக்கு நன்றியுள்ளவர்களாய் ஜீவிக்கவேண்டும். தேவன் நம்முடைய சரீரத்திற்கும் ஆண்டவராயிருக்கிறார். நாம் தேவனிடத்திலிருந்தே நம்முடைய ஜீவனுக்குத் தேவையான எல்லா ஆதரவுகளையும், ஆறுதல்களையும் பெற்றுக்கொள்கிறோம்.

தேவன் நம்முடைய தேவைகளை சந்திக்கிறார். தேவைகள் மாத்திரமல்ல, நமக்குத் தேவைப்படுவதைவிட அதிகமாகக் கொடுத்து, அவர் நம்மை ஆசீர்வதிக்கிறார். தேவன் நமக்கு திரளான போஜனத்தையும், சுவையான போஜனத்தையும், நேர்த்தியான போஜனத்தையும், விதவிதமான போஜனத்தையும் கொடுக்கிறார்.

தேவன் நமக்கு எதைக் கொடுக்கிறாரோ அதிலே நாம் திருப்தியுள்ளவர்களாயிருக்கவேண்டும். தேவன் நம்முடைய ஜீவாதாரத்திற்கு தேவையான போஜனத்தைக் கொடுக்கும்போது, அதிலே திருப்தியடையாமல், தேவனுக்கு விரோதமாக முறுமுறுக்கக்கூடாது.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, தங்கள் போஜனத்தினிமித்தமாக கர்த்தரிடத்தில் முறுமுறுத்தார்கள். அவர்கள் தங்களுடைய ஆசைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்று எதிர்பார்த்தார்கள்.

"தங்கள் இச்சைக்கேற்ற போஜனத்தைக் கேட்டு, தங்கள் இருதயத்தில் தேவனைப் பரீட்சைபார்த்தார்கள்" *(சங் 78:18).*

"பத்துநாள் சென்றபின்பு, ராஜபோஜனத்தைப் புசித்த எல்லா வாலிபரைப்பார்க்கிலும் அவர்கள் முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டது" *(தானி 1:15).*

தேவன்: "இதோ, பூமியின் மேல் எங்கும் விதைதரும் சகலவிதப்பூண்டுகளையும், விதைதரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்கு கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது" *(ஆதி 1:29)* என்று சொன்னார்.

தேவன் மனுஷனுக்கு ஆகாரம் கொடுப்பதுபோல மிருகஜீவன்களுக்கும் ஆகாரம் கொடுக்கிறார். தேவன் பூமியிலுள்ள சகல மிருக ஜீவன்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிற்கும், பசுமையான சகல பூண்டுகளையும் ஆகாரமாக கொடுத்தேன் என்றார் *(ஆதி 1:30).*

தேவன் மிருகஜீவன்களுக்கு மாத்திரமல்ல, ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும் ஆகாரம் கொடுக்கிறார். சாதுவான சாதாரண மிருகங்களுக்கும், கொடியகுணமுள்ள மிருகங்களுக்கும் தேவன் ஆகாரம் கொடுக்கிறார். தேவன் ஒவ்வொரு ஜீவஜந்துக்கும் தேவையான ஆகாரத்தைக் கொடுத்து, எல்லா ஜீவராசிகளையும் பராமரிக்கிறார். பறவைகளை போஷிக்கிற தேவன், அதன் குஞ்சுகளை போஷியாமல், அவற்றை பட்டினியாக தவிக்க விட்டுவிடமாட்டார்.

அது மிகவும் நன்றாய் இருந்தது ஆதி 1:31

ஆதி 1:31. அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாய் இருந்தது; சாயங்காலமும் விடியற் காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று.

தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரியை நிறைவுபெறுகிறது. தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்க்கிறார். தம்முடைய கிரியைகளை ஆராய்ந்து பார்ப்பது தேவனுடைய தெய்வீக சுபாவம். தேவனாகிய கர்த்தர், இன்றும் தம்முடைய கிரியைகளை பார்த்துக்கொண்டிருக்கிறார். தேவனுடைய கைகளின் கிரியைகள் எல்லாமே, அவருடைய கண்களுக்கு முன்பாக இருக்கிறது.

தேவன் சர்வஞானமும், சர்வவல்லமையுமுள்ளவர். இவ்விரண்டு சுபாவங்களை வெவ்வேறாக பிரிக்க முடியாது. தேவன் ஒவ்வொன்றையும் தம்முடைய ஞானத்தினாலும், வல்லமையினாலும் சிருஷ்டித்தார். தேவனுடைய ஒவ்வொரு சிருஷ்டியிலும், அவருடைய ஞானமும் வல்லமையும் வெளிப்படுகிறது.

தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தது, நமக்கு ஒரு முன்உதாரணமாக எழுதப்பட்டிருக்கிறது. நாமும் நம்முடைய கிரியைகளை ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஒவ்வொரு நாளும், நம்முடைய அன்றாட வேலைகளை முடித்த பின்பு, இரவிலே நித்திரை செய்யப்போவதற்கு முன்பாக, அந்த நாளில் நாம் செய்த வேலைகளை சிறிது நேரம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்த பின்பு, "அது மிகவும் நன்றாயிருந்தது" என்று சொல்லுகிறார். அவர் தாம் உண்டாக்கினவற்றை பார்க்காமலேயே, "அது நன்றாயிருந்தது" என்று சொல்லவில்லை. இதுவும் நமக்கு ஒரு நல்ல முன்உதாரணமாகும். ஒரு காரியத்தை நம்முடைய செவிகளால் கேட்பதற்கு முன்பாகவே, அவசரப்பட்டு பிரதியுத்தரம் சொல்லக்கூடாது.

தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்து, அது நன்றாயிருந்தது என்று சொல்லுகிறார். தேவனே எல்லாவற்றையும் உண்டாக்கினவர். அவரே சர்வசிருஷ்டிகர். தேவனுடைய சிருஷ்டிப்புக்களெல்லாம் அவருடைய மனதிற்கு உகந்ததாகயிருக்கிறது. தேவன் ஒவ்வொன்றையும் எப்படி உண்டாக்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்தாரோ, அப்படியே அவற்றை உண்டாக்கியிருக்கிறார்.

தேவன் தம்முடைய சிருஷ்டிப்பின் கிரியைகள் எல்லாவற்றையும் முடித்த பின்பு, "அது நன்றாயிருந்தது" என்று சொல்லுகிறார். தேவன் அவற்றை என்ன நோக்கத்திற்காக உண்டாக்கினாரோ, அந்த நோக்கத்திற்கு அவையெல்லாம் நன்றாயிருக்கிறது.

தேவனுடைய சிருஷ்டிகளெல்லாம் மனுஷனுக்கு பிரயோஜனமுள்ளதாயிருக்க வேண்டும். இதற்காகவே தேவன் அவற்றை உண்டாக்கியிருக்கிறார். தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும், தம்முடைய நாமமகிமைக்காகவும், மனுஷனுடைய பிரயோஜனத்திற்காகவும் உண்டாக்கியிருக்கிறார். தேவன் உண்டாக்கினவற்றின் மூலமாக அவருடைய நாமம் மகிமைப்படுகிறது. ஆகையினால் அது நன்றாயிருந்தது என்று தேவன் சொல்லுகிறார்.

தேவன் "அது நன்றாயிருந்தது" என்று சாதாரணமாகச் சொல்லாமல், "அது மிகவும் நன்றாயிருந்தது" என்று விசேஷமாகச் சொல்லுகிறார். தேவன் ஒவ்வொரு நாளும் தம்முடைய சிருஷ்டிப்பின் கிரியையை செய்து முடித்த பின்பு, தாம் உண்டாக்கினது நல்லது என்று தேவன் கண்டார். இரண்டாம் நாளில், சிருஷ்டிப்பின் கிரியையை முடித்த பின்பு, தேவன் இந்த வாக்கியத்தைப் பயன்படுத்தவில்லை.

ஆறாம் நாளிலோ, தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்து, "அது மிகவும் நன்றாயிருந்தது" என்று சொல்லுகிறார். தேவன் இப்போது மனுஷனை சிருஷ்டித்திருக்கிறார். தேவன் அவனை தம்முடைய சாயலாகவும், தம்முடைய ரூபத்தின்படியேயும் சிருஷ்டித்திருக்கிறார்.

தேவனுடைய சிருஷ்டிப்புகளில் மனுஷன் மிகவும் விசேஷமானவன். மனுஷன் மூலமாக தேவனுடைய மகிமை பிரத்தியட்சமாய் வெளிப்படுகிறது. மனுஷன் தன்னுடைய வாயினால் தன்னை உண்டாக்கின தேவனை துதிப்பான்.

தேவன் சிருஷ்டித்த ஒவ்வொன்றும் நன்றாயிருக்கிறது. அவையெல்லாவற்றையும் மொத்தமாகப் பார்க்கும்போது, அது மிகவும் நன்றாயிருக்கிறது. தேவனுடைய கிரியைகளில் அவருடைய மகிமையும், நன்மையும், அழகும், இசைவும், ஒற்றுமையும் வெளிப்படுகிறது. தேவன் தம்முடைய சிருஷ்டிப்பில், தம்முடைய தெய்வீக கிருபையையும், தெய்வீக பராமரிப்பையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

தேவன் ஆதியிலே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது. ஒழுங்கின்மையும் வெறுமையும் நன்றாயிராது. ஆரம்பத்தில் அது நன்றாயில்லாவிட்டாலும், தேவன் ஒழுங்கின்மையை ஒழுங்குபடுத்துகிறார். வெறுமையாயிருப்பதை தம்முடைய சிருஷ்டிப்புக்களினால் நிரப்புகிறார். அப்போது அது மிகவும் நன்றாயிருக்கிறது.

நாம் எதையும் அவசரப்பட்டு நியாயந்தீர்க்கக்கூடாது. ஏற்ற காலம் வரும் வரையிலும் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். காலம் நிறைவேறும்போது தேவனுடைய மகிமை நமக்கு வெளிப்படுத்தப்படும்.

ஆறாம் நாளில் தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரியை நிறைவுபெறுகிறது. சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று. இவ்வாறாக தேவன் ஆறு நாட்களில் இந்த உலகத்தை உண்டாக்கியிருக்கிறார். தேவன் இந்த உலகத்தை ஏன் ஒரே வார்த்தையில் திடீரென்று உண்டாக்கவில்லை என்று நாம் விவாதம்பண்ணக்கூடாது.

தேவன் முதலாம் நாளில் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். வெளிச்சமுண்டாயிற்று. அதுபோல தேவன் "உலகம் உண்டாகக்கடவது" என்று ஏன் சொல்லவில்லை என்று தேவையில்லாமல் விவாதம்பண்ணக்கூடாது. தேவன் அவ்வாறு சொல்லியிருந்தால், இந்த உலகம் அவருடைய வார்த்தையின் பிரகாரமாக, அதே வேளையில் உண்டாகியிருக்கும். கண்ணிமைப்பொழுதில் கர்த்தருடைய வார்த்தை நிறைவேறும்.

"இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்" (1கொரி 15:51).

தேவன் நம்முடைய விருப்பத்தின் பிரகாரம், நம்முடைய திட்டத்தின் பிரகாரம் இந்த உலகத்தை உண்டாக்கவில்லை. அவர் தம்முடைய திட்டத்தின் பிரகாரம், தம்முடைய வழியில், தம்முடைய காலத்தில் இந்த உலகத்தை உண்டாக்கினார்.

இவ்விதமாக வானமும் பூமியும் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டு தீர்ந்தன. தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார் (ஆதி 2:1,2).

2 அதிகாரம்

ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் சிருஷ்டிப்பின் சரித்திரத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் இரண்டாவது அதிகாரத்தில், சிருஷ்டிப்பின் சரித்திரம் மேலும் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதிலும் விசேஷமாய் மனுஷனோடு தொடர்புடைய சம்பவங்கள் இந்த அதிகாரத்தில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்து, ஏழாம் நாளை ஆசீர்வதித்து அதை பரிசுத்தமாக்குகிறார் (ஆதி 2:1-3). மனுஷனுடைய சிருஷ்டிப்பைப்பற்றிய அதிகமான விவரங்கள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது (ஆதி 2:4-7).

ஏதேன் தோட்டத்தைப்பற்றிய விளக்கம். தேவன் மனுஷனை ஏதேன் தோட்டத்திலே வைக்கிறார். தேவன் மனுஷனுக்கு நிபந்தனையையும், உடன்படிக்கையையும் கொடுக்கிறார் (ஆதி 2:8-17).

தேவன் ஸ்திரீயை சிருஷ்டிக்கிறார். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் விவாக சம்பந்தம் உண்டாகிறது (ஆதி 2:18-25).

ஏழாம்நாள்
ஆதி 2:1-3

ஆதி 2:1. இவ்விதமாக வானமும், பூமியும், அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன.

ஆதி 2:2. தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்.

ஆதி 2:3. தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

தேவன் வானத்தையும் பூமியையும், அவைகளின் சர்வசேனையையும் உண்டாக்கி முடித்திருக்கிறார். தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார் (ஆதி 2:1,2).

தேவன் வானத்திலும் பூமியிலும் சிருஷ்டித்த எல்லாமே ஒழுங்கும் கிரமமுமாகயிருக்கிறது. அவை தேவனுடைய கட்டளைக்கு உட்பட்டு இயங்குகிறது. தேவனுடைய சிருஷ்டிகளெல்லாம் அதற்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஸ்தானங்களில் நேர்த்தியாக வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சிருஷ்டியும் தன்னையும், தன்னுடைய கடமைகளையும் அறிந்திருக்கிறது. அவையெல்லாமே தங்களுடைய வேலைகளை ஒழுங்காய்ச் செய்கிறது.

வானமும் பூமியும், அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டு தீர்ந்திருக்கிறது. வானத்திலும் பூமியிலும் தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரியைகள் நிறைவுபெற்றிருக்கிறது. தேவன் இவையெல்லாவற்றையும் ஆறு நாட்களில் சிருஷ்டித்து முடித்திருக்கிறார்.

தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றுகிறார். தேவன் இயற்கையை ஆளுகை செய்து, தம்முடைய அற்புதத்தை வெளிப்படுத்துகிறார். அதே வேளையில் தேவன் இயற்கையின் பிரமாணத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்.

தேவன் தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். அவர் களைப்படைந்து, அசதியாயிருந்து, ஓய்வு எடுக்கவில்லை. தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்க்கிறார். அவையெல்லாமே மிகவும் நன்றாயிருக்கிறது. ஆகையினால் தேவன் ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். அவர் மிகவும் சந்தோஷமாயிருந்ததினால், ஓய்வாகயிருக்கிறார்.

தேவன் தமது கிரியைகளை ஆறாம் நாளிலேயே நிறைவேற்றி விட்டார். (ஆதி 1:31; யாத்20:11) ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். (ஆதி 2:2). செப்துவஜிந்த் பதிப்பிலும், மேலும் பல பழைய ஏற்பாட்டு மூல பாஷை பதிப்புகளிலும் "ஏழாம் நாளில் நிறைவேற்றினார்" என்னும் வாக்கியத்திற்குப் பதிலாக "ஆறாம் நாளிலே நிறைவேற்றினார்" என்றுள்ளது.

தேவன் சிருஷ்டித்துக் களைப்படைந்து ஓய்ந்திருக்க வில்லை. தேவனுக்குக் களைப்பு உண்டாகாது. தம்முடைய சிருஷ்டிக்கும் கிரியைகளை நிறைவேற்றியதினால் தேவன் ஓய்ந்திருக்கிறார். (ஆதி 2:2-3). தமது கிரியைகளை நிறைவேற்றி தேவன் ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார். (யாத் 31:17). ஜனங்களும், இதுபோன்று ஆறு நாட்கள் வேலைசெய்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்து பூரித்திருக்க வேண்டும். (யாத் 20:8-11; யாத் 23:12; யாத் 34:21) நித்திய ஓய்விற்கு அடையாளமாக ஏழாம் நாளில் ஓய்ந்திருப்பது குறிப்பிடுகிறது (கொலோ 2:14-17; எபி 4:1-11).

"தேவன் ஓய்ந்திருந்தார்" என்று ஆதி 2:3 ஆவது வசனம் கூறுகிறது. சிருஷ்டிப்பின் காலத்திலிருந்து இன்று வரையிலும் தேவன் ஒவ்வொரு ஏழாம் நாளிலும் ஓய்ந்திருக்கவில்லை. மனுஷன் பாவம் செய்யும்போது தேவன் மறுபடியும் கிரியை செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது. (ஆதி 3:8-24) வாரத்தின் ஆறு நாட்கள் மட்டுமல்லாமல், எல்லா நாட்களிலுமே தேவன் கிரியை செய்து கொண்டிருக்கிறார்.

தேவனுடைய மீட்பின் கிரியை வாரத்தின் ஏழு நாட்களிலும் கிரியை செய்து கொண்டிருக்கிறது. ஆகையினால் தேவன் ஒவ்வொரு ஏழாம் நாளையும் வேறுபிரித்து அதை பரிசுத்த நாளாக ஆசரித்தார் என்பது தவறான உபதேசம் என்று வேதபண்டிதர்களில் பலர் வியாக்கியானம் கூறுகிறார்கள். ஆதியிலிருந்து ஒவ்வொரு ஏழாம் நாளிலும் மனுஷர் ஓய்ந்திருக்க வேண்டுமென்று எந்த வேதவாக்கியமும் கட்டளையிடவில்லை.

தேவனுடைய ஓய்வுநாளும், மனுஷருடைய ஓய்வுநாளும் ஒன்றாய் இருக்க முடியாது. மனுஷன் ஆறாம் நாள் வரையிலும் சிருஷ்டிக்கப்படவில்லை. அவன் சிருஷ்டிக்கப்பட்ட பின்பு ஒரு நாள் மட்டுமே வேலை செய்திருக்கிறான். அந்த நாளில் மிருகங்களுக்கெல்லாம் அவன் பெயர் சூட்டியிருக்கிறான். ஆதி 1:24-31; ஆதி 2:7, 19-25).

மனுஷருடைய முதலாவது ஓய்வுநாளைப் பற்றி முதன்முறையாக யாத் 16:23-29 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. ஆதி 2:3 ஆவது வசனத்தில் தேவனுடைய ஓய்வுநாளைப் பற்றிக் கூறப்பட்டிருப்பதற்கு 2,513 வருஷங்களுக்குப் பின்பு மனுஷருடைய ஓய்வுநாளைப் பற்றி வேதாகமம் கூறுகிறது.

மேலும் மனுஷருடைய இந்த ஓய்வுநாள் இஸ்ரவேல் தேசத்தாருக்கு மட்டுமே உரியது. தேவன் அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக் கொண்டதற்கு அடையாளமாக ஓய்வுநாள் ஆசரிக்கப்படுகிறது (யாத் 31:12-18, உபா 5:15; எசே 20:12-24).

தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார் (ஆதி 2:3).

தேவன் ஒய்வுநாள் பிரமாணத்தை நியமிக்கிறார். வாரத்திலே ஒரு நாள் கர்த்தருக்கு பரிசுத்தமான ஒய்வுநாள். அந்த நாளை தேவனுடைய நாமமகிமைக்காக பயன்படுத்தவேண்டும். தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதை பரிசுத்தமாக்கினபடியினால், நாமும் ஒய்வுநாளை பரிசுத்தமாக்கவேண்டும்.

ஒய்வுநாள் பிரமாணம் மிகவும் பழமையானது. முற்பிதாக்களின் காலத்திலிருந்தே, கர்த்தருடைய ஜனம் ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரித்து வந்திருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே பாவங்களும், அக்கிரமங்களும் அதிகரிப்பதற்கு முன்பாகவே, அவர்கள் மத்தியில் ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பது மிகவும் பிரதானமாயிருந்தது.

கர்த்தருடைய ஒய்வுநாள் அதிக கனமுள்ளது. நாம் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஒய்வுநாளை பரிசுத்தம்பண்ணவேண்டும். ஒய்வுநாள் பிரமாணத்தைக் கனம்பண்ணவேண்டும். நாமும் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதை பரிசுத்தம்பண்ணவேண்டும். ஒய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும்.

ஒய்வுநாள் ஆசீர்வாதமான நாள். தேவன் அந்த நாளை ஆசீர்வதித்திருக்கிறார். கர்த்தர் எதை ஆசீர்வதிக்கிறாரோ, அது மெய்யாகவே ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். தேவன் ஒய்வுநாளிலே நம்மை சந்திப்பதாகவும், நம்மை ஆசீர்வதிப்பதாகவும் வாக்குப்பண்ணியிருக்கிறார்.

ஒய்வுநாள் பரிசுத்தமான நாள். தேவன் ஒய்வுநாளை பரிசுத்தமாக்கினபடியினால், அந்த நாள் பரிசுத்தமான நாளாயிருக்கிறது. கர்த்தருக்கு பரிசுத்தமானது. அவருடைய ஜனமாகிய நமக்கும் பரிசுத்தமானது.

தேவனாகிய கர்த்தர் ஆதி 2:4-6

ஆதி 2:4. தேவனாகிய கர்த்தர் பூமியையும் வானத்தையும் உண்டாக்கின நாளிலே, வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு இவைகளே.

ஆதி 2:5. நிலத்தினுடைய சகலவிதச் செடிகளும் பூமியின்மேல் இன்னும் உண்டாகவில்லை, நிலத்தினுடைய சகலவிதப் பூண்டுகளும் இன்னும் முளைக்கவில்லை; ஏனெனில் தேவனாகிய கர்த்தர் பூமியின்மேல் இன்னும் மழையைப் பெய்யப்பண்ணவில்லை; நிலத்தைப் பண்படுத்த மனுஷனும் இருந்ததில்லை.

ஆதி 2:6. அப்பொழுது மூடுபனி பூமியிலிருந்து எழும்பி, பூமியையெல்லாம் நனைத்தது.

சிருஷ்டிகராகிய தேவன் இந்த வசனத்தில் "தேவனாகிய கர்த்தர்" என்று அழைக்கப்படுகிறார். சிருஷ்டிகருக்கு புதிய நாமம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு தேவனுக்கு இந்தப் பெயர் வழங்கப்படவில்லை. தேவனாகிய கர்த்தர் என்னும் பெயருக்கு பயன்படுத்தப்படும் எபிரெய வார்த்தை "யெகோவா" என்பதாகும்.

இதுவரையிலும் தேவன் "எலோகிம்" என்று அழைக்கப்பட்டவர் இப்பொழுது தேவனாகிய கர்த்தர் "எலோகிம் - யெகோவா" என்று அழைக்கப்படுகிறார். தேவன் மனுஷரோடு ஏற்படுத்திக் கொள்ளும் உடன்படிக்கையின் உறவையும், தேவனுடைய சர்வ வல்லமையையும் தேவனாகிய கர்த்தர் என்னும் திருநாமம் வெளிப்படுத்திக் காண்பிக்கிறது.

பரிசுத்தவேதாகமத்தில் தேவனுக்கு வழங்கப்பட்டிருக்கும் நாமங்களின் விவரம் வருமாறு:

1. தேவனாகிய கர்த்தர் (ஆதி 2:4-25)
2. கர்த்தராகிய ஆண்டவர் (ஆதி 15:2,8)
3. யேகோவாயீரே (ஆதி 22:8-14)
4. யேகோவாநிசி (யாத் 17:15)
5. யேகோவா ரஃபா - பரிகாரியாகிய கர்த்தர் (யாத் 15:26)
6. யெகோவா ஷாலோம் (நியா 6:24)

7. நீதியாயிருக்கிற கர்த்தர் (எரே 23:6; எரே 33:16)

8. பரிசுத்தம் பண்ணுகிற கர்த்தர் (யாத் 31:13; லேவி 20:8; லேவி 21:8; லேவி 22:9, 16,32; எசே 20:12)

9. சேனைகளின் கர்த்தர் (1சாமு 1:3)

10. யேகோவா ஷம்மா (எசே 48:35)

11. உன்னதமான கர்த்தர் (சங் 7:17; சங் 47:2; சங் 97:9)

12. என் மேய்ப்பராகிய கர்த்தர் (சங் 23:1)

13. நம்மை உண்டாக்கின கர்த்தர் (சங் 95:6)

14. நம்முடைய தேவனாகிய கர்த்தர் (சங் 99:5,8,9)

15. உன் தேவனாகிய கர்த்தர் (யாத் 20:2,5,7)

16. என் தேவனாகிய கர்த்தர் (சக 14:5)

ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் சிருஷ்டிகராகிய தேவனுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கிற எபிரெய வார்த்தை "எலோகிம்" என்பதாகும். எலோகிம் என்னும் பெயருக்கு வல்லமையுள்ள தேவன் என்று பொருள். தேவன் இங்கே "தேவனாகிய கர்த்தர்" என்று அழைக்கப்படுகிறார். அவருக்கு "யெகோவா எலோகிம்" என்னும் எபிரெய பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தப் பெயருக்கு "வல்லமையும் பரிபூரணமுள்ள தேவன்" என்று பொருள். தேவன் நிறைவேற்றுகிறவராயிருக்கிறார்.

யெகோவா என்னும் பெயரை யாரும் உச்சரிக்கக்கூடாது. எபிரெய பாஷையில் யெகோவா என்னும் பெயரில் உயிர் எழுத்துக்கள் எதுவும் பயன்படுத்தப்படவில்லை. எல்லாமே மெய்எழுத்துக்கள். உயிர் எழுத்து இல்லாமல் எந்த மெய் எழுத்தையும் உச்சரிக்கமுடியாது.

யெகோவா தேவன் இருக்கிறவராகவே இருக்கிறார். அவர் தாமாகவே இருக்கிறார். அவர் எல்லா ஜீவன்களுக்கும் ஜீவாதாரமாக இருக்கிறார். தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர். பரிசுத்தமான கர்த்தருடைய நாமத்தை, சாதாரண மனுஷராகிய நாம் உச்சரிக்க முடியாதபடி, அவருக்கு "யெகோவா" என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நிலத்தினுடைய சகலவிதச் செடிகளும் பூமியின்மேல் இன்னும் உண்டாகவில்லை, நிலத்தினுடைய சகலவிதப் பூண்டுகளும் இன்னும் முளைக்கவில்லை; ஏனெனில் தேவனாகிய கர்த்தர் பூமியின்மேல் இன்னும் மழையைப் பெய்யப்பண்ணவில்லை; நிலத்தைப் பண்படுத்த மனுஷனும் இருந்ததில்லை. அப்பொழுது மூடுபனி பூமியிலிருந்து எழும்பி, பூமியையெல்லாம் நனைத்தது (ஆதி 2:5,6).

நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயத்திற்கு முன்பாக பூமியில் மழையே பெய்யவில்லையென்று இந்த வாக்கியத்திற்குப் பொருள்கூறக்கூடாது. தாவரங்களும், மனுஷரும் சிருஷ்டிக்கப்பட்ட அந்தச் சிருஷ்டிப்பின் காலத்தில் அதுவரையிலும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. அதன் பின்பு மழை பெய்திருக்கிறது.

லூசிபரின் காலத்தில் பூமியின்மேல் மழை பெய்ததாக யோபு 38:4-9, 25-30; சங் 135:7; சங் 147:8; நீதி 8:27-29; ஏசா 14:12-14; எரே 10:12-13 ஆகிய வசனங்களை மேற்கோளாகக் கூறி ஒருசிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள்.

சிருஷ்டிப்பின் இந்தக் காலத்திலிருந்து நோவாவின் காலம் வரைக்கும் இடையிலுள்ள 1,656 வருஷங்களில் பூமியின்மேல் மழை பெய்திருக்க வேண்டும்.

பூமியின்மேல் சகலவித செடிகளும், பூண்டுகளும் இன்னும் முளைக்கவில்லை. பூமி இன்னும் தன் கனிகளைக் கொடுக்கவில்லை. பூமி தானாக கனிகளைக் கொடுக்காது. தேவனுடைய சர்வவல்லமையே கனிகளைக் கொடுக்க வைக்கும்.

மனுஷருடைய ஆத்துமாவில் தேவனுடைய கிருபை தானாக வருவதில்லை. கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், நம்முடைய ஆத்துமாவிலே தமது கிருபையைக் கொடுக்கிறார்.

தேவன் சகலவித செடிகளையும், சகலவித பூண்டுகளையும் உண்டாக்கினார். ஆனால் அவை தானாக முளைக்காது. தேவனுடைய வல்லமை வெளிப்பட்டால் மாத்திரமே சகலவித செடிகளும், சகலவித பூண்டுகளும் முளைக்கும்.

கர்த்தர் பூமியின்மேல் இன்னும் மழையை பெய்யப்பண்ணவில்லை. மழை தேவனுடைய வரம். தேவனே மழையைப் பெய்யப்பண்ணுகிறவர். மழையானது கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் பெய்யும்.

மழை பெய்தால்தான் நிலத்தினுடைய செடிகளும் பூண்டுகளும் முளைக்கும் என்பது இயற்கையின் பிரமாணம். தேவனோ இயற்கையின் பிரமாணத்திற்கு கட்டுப்பட்டவரல்ல. ஆனாலும் தேவன் இயற்கையின் பிரமாணத்தையும் அங்கீகரித்து, பூமியின்மேல் மழையைப் பெய்யப்பண்ணி, நிலத்தினுடைய சகலவித செடிகளையும், பூண்டுகளையும் முளைக்கப்பண்ணுகிறார்.

தேவனே இந்தப் பூமியின்மீது சகலவித செடிகளையும், பூண்டுகளையும் உண்டாக்கினவர். இவை தேவனுடைய சிருஷ்டிப்பு. தேவனானவர் தம்முடைய சிருஷ்டிகளை பராமரிக்கிறவர். அவர் தம்முடைய கிருபையினால் செடிகளுக்கும் பூண்டுகளுக்கும் மழையைப் பெய்யப்பண்ணி, அவற்றை முளைக்கப்பண்ணுகிறவர்.

பூமியின்மேல் சகலவித செடிகளும், பூண்டுகளும் உண்டாக்கப்பட்டிருந்தாலும், தேவனாகிய கர்த்தர் பூமியின்மேல் இன்னும் மழையைப் பெய்யப்பண்ணவில்லை. ஆகையினால் தேவன் உண்டாக்கின செடிகளும் பூண்டுகளும் இன்னும் முளைக்கவில்லை.

பூமியின்மேல் இன்னும் மழை பெய்யாவிட்டாலும், தேவனாகிய கர்த்தர் மழைக்கு ஒப்பான மூடுபனியை அனுப்புகிறார். அப்பொழுது மூடுபனி பூமியிலிருந்து எழும்பி பூமியையெல்லாம் நனைக்கிறது. தேவனுடைய தெய்வீக கிருபை பனியைப்போல இறங்கி வரும். பனி ஆரவாரத்தோடு இறங்கி வராமல் அமைதியாக இறங்கி வரும். அதுபோலவே தேவனுடைய கிருபை மனுஷருடைய ஆத்துமாவின்மீது ஆரவாரமில்லாமல் அமைதியாய் இறங்கி வரும். தேவகிருபை சபையை பனியைப்போல சந்தடியில்லாமல் நனைக்கும்.

"மழையானது இளம்பயிரின்மேல் பொழிவதுபோல, என் உபதேசம் பொழியும்; பனித்துளிகள் புல்லின்மேல் இறங்குவதுபோல, என் வசனம் இறங்கும்" *(உபா 32:2)*.

"மூடுபனி" என்பதன் எபிரெய வார்த்தை "எத்" என்பதாகும். இதற்கு மூடுபனி, *(ஆதி 2:6)* நீர்த்துளி *(யோபு 36:27)* என்று பொருள். தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். ஜலத்தின் மத்தியில் தேவன் ஆகாய விரிவை உண்டாக்கினார். பூமியிலிருந்து தண்ணீர் ஆவியாகி, வானத்திற்கு உயரே சென்று, பின்பு அது மழையாகப் பூமிக்கு பொழிகிறது. *(சங் 135:7; சங் 148:8; எரே 10:12-13)*.

ஆனால் இந்த வசனம் மூடுபனி பூமியிலிருந்து எழும்பி பூமியை நனைத்தது என்று கூறுகிறது. ஆதாமிற்கும், நோவாவிற்கும் இடைப்பட்ட 1,656 வருஷக்காலத்தில் தேவன் இவ்வாறுதான் பூமியை நனைத்தாரா என்று தெரியவில்லை. நோவா பேழையை உண்டுபண்ணி முடிக்கும் வரையிலும் பூமியிலுள்ள மனுஷர் யாரும் மழையைக் காணவில்லை.

மனுஷன் ஜீவாத்துமாவானான் ஆதி 2:7

ஆதி 2:7. தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.

தேவன் மனுஷனை அற்புதமாக சிருஷ்டித்திருக்கிறார். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். மனுஷன் ஒரு சிறிய உலகத்தைப்போல இருக்கிறான். உலகத்தில் வானமும் பூமியும் இருப்பதுபோல, மனுஷனுக்குள்ளே ஆத்துமாவும் சரீரமும் இருக்கிறது. மனுஷனுடைய சரீரமும், அவனுடைய ஆத்துமாவும் எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டது என்னும் விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

மனுஷனுடைய சிருஷ்டிப்பு மிகவும் விநோதமானது. தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கினார். மனுஷன் உண்டாக்கப்பட்ட விதம் மிகவும் சாதாரணமானது. ஆனாலும் மனுஷன் மிகவும் அற்புதமானவன். மண்ணிலிருந்து ஜீவனுள்ள மனுஷனை உண்டாக்குவது மிகவும் கடினம். தேவனாகிய கர்த்தரோ சர்வவல்லமையுள்ளவர். அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

தேவன் ஒன்றுமில்லாத வெறுமையிலிருந்து வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். ஒன்றுமில்லாத வெறுமையிலிருந்து சிருஷ்டிக்கக்கூடிய தேவனால், மண்ணிலிருந்து மனுஷனை உருவாக்குவது இலேசான காரியம். மனுஷனை உருவாக்குவதற்கு மண் இருக்கவேண்டும் என்னும் அவசியம்கூட தேவனுக்கு இல்லை. அந்த மண்கூட இல்லாமல், தேவனால் மனுஷனை உருவாக்க முடியும்.

ஆனாலும் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்குவது தேவனாகிய கர்த்தருடைய சித்தமாயிற்று. தேவன் மனுஷனை விலையுயர்ந்த பொன்னிலிருந்தோ, முத்துக்களிலிருந்தோ, வைரத்திலிருந்தோ உருவாக்கவில்லை. அவர் மனுஷனை பூமியின் சாதாரண மண்ணினாலே உருவாக்குகிறார். நம்முடைய சரீரம் சாதாரணமான மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டது என்பதை நாம் நினைவுகூரவேண்டும். நம்முடைய சரீரத்தின் அமைப்பும் இசைவும் பூமியின் மண்ணினால் உண்டானது.

தேவன் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கியதினால், நம்முடைய சரீரம் மண்பாத்திரத்திற்கு ஒப்பானதாயிருக்கிறது. ஆகையினால் நம்முடைய சரீரத்தைக் குறித்து பெருமைப்பட நம்மிடத்தில் ஒன்றுமே இல்லை.

"களிமண்போல என்னை உருவாக்கினீர் என்பதையும், என்னைத் திரும்பத் தூளாகப்போகப்பண்ணுவீர் என்பதையும் நினைத்தருளும்" (யோபு 10:9).

மனுஷருடைய சரீரம் பூமியின் மண்ணினாலே உருவாக்கப்பட்டாலும், நம்மை உருவாக்கின தேவனாகிய கர்த்தர் மிகவும் பெரியவர். அவர் நம்மை மிகவும் நேர்த்தியாகவும், நுணுக்கமாகவும் உருவாக்கியிருக்கிறார். தேவன் மற்ற சிருஷ்டிகளையெல்லாம் சிருஷ்டித்தார். உண்டாக்கினார். ஆனால் அவர் மனுஷனை மாத்திரம் உருவாக்குகிறார்.

சிருஷ்டிப்பதும் உண்டாக்குவதும் ஒரு க்ஷணப்பொழுதில் நடைபெறும் காரியம். உருவாக்குதல் என்பது படிப்படியாக உருவாக்குவதைக் குறிக்கும். தேவனாகிய கர்த்தர் பூமியின் மண்ணிலிருந்து மனுஷனை உருவாக்கும்போது, மிகவும் கவனமாகவும், மிகவும் நுணுக்கமாகவும் உருவாக்குகிறார். மனுஷனுடைய சரீரம் மண்ணாயிருந்தாலும், இதை உருவாக்கின தேவனாகிய கர்த்தரின் கைத்திறமை மிகவும் அற்புதமானது. அது மனுஷனுடைய சரீரத்தில் காணப்படுகிறது.

ஆகையினால் நம்முடைய சரீரங்களை ஜீவனுள்ள பலிகளாக தேவனாகிய கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்.

"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப்பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோம 12:1).

மனுஷனுடைய ஆத்துமாவின் சிருஷ்டிப்பு மிகவும் அற்புதமானது. அது அதிக விசேஷமானது. தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான் (ஆதி 2:7).

தேவன் மனுஷனுடைய நாசியிலே ஜீவசுவாசத்தை ஊதுகிறார். இந்த ஜீவசுவாசம் பரலோகத்திலிருந்து வருகிறது. ஜீவசுவாசமானது பூமிக்குரியதுமல்ல. அது பூமியினால் உண்டாக்கப்பட்டதுமல்ல. மனுஷனுடைய சரீரம் பூமியின் மண்ணினாலே உருவாக்கப்பட்டது. ஆனால் மனுஷனுக்குள் ஊதப்படும் ஜீவசுவாசம், பூமியின் மண்ணினாலே உருவாக்கப்பட்டதல்ல. ஜீவசுவாசம் தேவனாகிய கர்த்தரிடத்திலிருந்து நேரடியாக வருகிறது.

தேவனாகிய கர்த்தரே ஜீவசுவாசத்தை மனுஷனுடைய நாசியிலே ஊதுகிறார். மனுஷன் ஜீவாத்துமாவாகிறான். நம்முடைய ஆத்துமாவிலிருப்பது ஜீவசுவாசம். ஜீவனோடிருக்கிற நாம், தேவனுக்கேற்ற விதமாக சுவாசம் பண்ண வேண்டும். நம்முடைய ஜீவியம் தேவனுக்கு பிரியமானதாயும், அவருக்கு பிரயோஜனமானதாயும் இருக்கவேண்டும். நாம் தேவனுடைய கரத்திலிருந்தே நம்முடைய ஆவியைப் பெற்றிருக்கிறோம். ஆகையினால் நம்முடைய ஆவியை நாம் தேவனுடைய கரத்தில் ஒப்புவிக்கவேண்டும்.

மனுஷன் ஜீவாத்துமாவாயிருக்கிறான். ஆத்துமாவே மனுஷன். நம்முடைய சரீரத்தில் ஜீவசுவாசம் இல்லையென்றால், அது ஜீவனில்லாமல் மரித்து கிடக்கிற பிரேதமாயிருக்கும். ஜீவனற்ற சரீரத்தினால் ஒரு பிரயோஜனமுமில்லை. ஆத்துமா சரீரத்தை உயிர்ப்பிக்கவேண்டும். மனுஷனுடைய சரீரத்திலே ஜீவசுவாசம் பிரவேசித்த விதம் மிகவும் அற்புதமானது. நாம் ஜீவாத்துமாவாயிருப்பதினால், நமக்கு ஞானம், அறிவு, சிந்தனை, உணர்வு ஆகிய பண்புகள் உள்ளன. இவையெல்லாமே தேவன் தமது கிருபையினால் மனுஷனுக்கு கொடுத்திருக்கிற ஈவு.

தேவன் நமக்கு ஈவாகக் கொடுத்திருக்கிற கிருபைகளையும் தாலந்துகளையும் மிகவும் ஞானமாய்ப் பயன்படுத்த வேண்டும். தேவனுடைய தாலந்துகளை அசட்டைபண்ணக்கூடாது. கர்த்தருடைய கிருபைகளை அசட்டைபண்ணுகிறவர்கள், தங்களுடைய ஆத்துமாக்களையும் அசட்டை பண்ணுகிறார்கள்.

மனுஷனுடைய சரீரத்தைவிட அவனுடைய ஆத்துமாவே மிகவும் முக்கியமானது. தேவனாகிய கர்த்தர் மனுஷனுடைய சரீரத்தை பூமியின் மண்ணினாலே உருவாக்கினார். அந்த மனுஷனுக்கு ஆத்துமாவைக் கொடுக்கும்போதோ, கர்த்தர் அவன் நாசியிலே ஜீவசுவாசத்தை ஊதினார்.

"புத்திமதியைத் தள்ளிவிடுகிறவன் தன் ஆத்துமாவை வெறுக்கிறான்; கடிந்துகொள்ளுதலைக் கேட்கிறவனோ ஞானமடைவான்" (நீதி 15:32).

மனுஷனுடைய சரீரத்தை ஜீவாத்துமாவாக்கின தேவனாகிய கர்த்தரால், மனுஷனுடைய ஆத்துமாவைப் புதுப்பிக்கவும் முடியும். கர்த்தரால் நமக்கு ஜீவனைக் கொடுக்கவும் முடியும். நம்முடைய ஜீவனை எடுக்கவும் முடியும். ஆகையினால் நம்மிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயம் இருக்கவேண்டும். கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம்.

ஆதாம் என்பதற்கு மண் என்று பொருள். (ஆதி 2:7) மனுஷன் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டவன். இதற்கான எபிரெய வார்த்தை "ஆதாம்" என்பதாகும். இந்த வார்த்தைக்கு முன்பாக சுட்டுச்சொல் வந்தால் இது "ஆதாம்" என்னும் பெயருள்ள ஒரு மனுஷனைக் குறிக்கும். (ஆதி 1:27; ஆதி 2:7,8,15, 16,19,22; ஆதி 3:12,22,24; ஆதி 5:1; ஆதி 6:1-4). ஆதி 6:5 ஆவது வசனத்திலிருந்து பழைய ஏற்பாடு முழுவதிலும் இந்த வார்த்தை சுட்டுச்சொல் இல்லாமல் பயன்படுத்தப் பட்டிருப்பதால் அது மனுஷ சந்ததியைப் பொதுவாகக் குறிக்கும்.

ஏதேன் தோட்டம்
ஆதி 2:8-15

ஆதி 2:8. தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்.

ஆதி 2:9. தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார்.

ஆதி 2:10. தோட்டத்துக்குத் தண்ணீர் பாயும்படி ஏதேனிலிருந்து ஒரு நதி ஓடி, அங்கேயிருந்து பிரிந்து நாலு பெரிய ஆறுகளாயிற்று.

ஆதி 2:11. முதலாம் ஆற்றுக்குப் பைசோன் என்று பேர், அது ஆவிலா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும்; அவ்விடத்திலே பொன் விளையும்.

ஆதி 2:12. அந்தத் தேசத்தின் பொன் நல்லது; அவ்விடத்திலே பிதோலாகும், கோமேதகக்கல்லும் உண்டு.

ஆதி 2:13. இரண்டாம் ஆற்றுக்குக் கீகோன் என்று பேர், அது எத்தியோப்பியா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும்.

ஆதி 2:14. மூன்றாம் ஆற்றுக்கு இதெக்கேல் என்று பேர், அது அசீரியாவுக்குக் கிழக்கே ஓடும்; நாலாம் ஆற்றுக்கு ஐபிராத்து என்று பேர்.

ஆதி 2:15. தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்.

மனுஷனிடத்தில் சரீரமும் ஆத்துமாவும் இருக்கிறது. தேவன் மனுஷனுடைய சரீரத்தை பூமியின் மண்ணினாலே உருவாக்கினார். அவர் அவனுடைய நாசியிலே பரலோகத்தின் ஜீவசுவாசத்தை ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். மனுஷனுடைய ஆத்துமா நித்தியமானது.

மனுஷனுடைய சரீரமும் ஆத்துமாவும் சந்தோஷமாயிருக்கவேண்டும் என்பது தேவனுடைய திட்டம். தாம் உருவாக்கின மனுஷனுக்கு என்ன செய்யவேண்டும் என்பதையும், அவனுக்கு எதைக் கொடுக்கவேண்டும் என்பதையும், அதை அவனுக்கு எப்பொழுது செய்யவேண்டும் என்பதையும் தேவன் அறிந்திருக்கிறார்.

தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்குகிறார். அதைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் தாம் உருவாக்கின மனுஷனை ஏதேன் தோட்டத்திலே வைக்கிறார். ஏதேன் தோட்டம் கர்த்தருக்கு விசேஷமானது. தாம் பூமியிலே வாசம்பண்ணுவதற்கு, தேவனாகிய கர்த்தர் ஏதேன் தோட்டத்தை தெரிந்தெடுத்து அதை உண்டாக்கியிருக்கிறார். ஏதேன் தோட்டம் ராஜாவின் அரமனை தோட்டத்தைப்போல இருக்கிறது.

ஏதேனுக்குக் கிழக்கே இந்தத் தோட்டம் இருந்தது. ஐபிராத்து, டைக்கிரீஸ் ஆகிய இரண்டு பிரசித்தி பெற்ற நதிகள் இந்தத் தோட்டத்தில் பாய்ந்தன. டைக்கிரீஸ் நதியின் மறுபெயர் இதெக்கேல் (ஆதி 2:14) என்பதாகும். இவ்விரண்டு நதிகள் தவிர, மேலும் இரண்டு நதிகளும் பாய்ந்தன. ஒன்று கீகோன். அது எத்தியோப்பியா தேசம் முழுவதையும் சுற்றி ஓடிற்று. இது நைல் நதியைக் குறிக்கலாம். மற்றொரு நதி பைசோன், அது ஆவிலா தேசம் முழுவதையும் சுற்றி ஓடிற்று. ஆவிலா தேசம் அரபியா தேசத்தைக் குறிக்கும். ஏதேன் தோட்டம் பூமியில் குறிப்பாக எங்கே இருந்தது என்பதை யாரும் இன்னும் கண்டறியவில்லை. அந்தத் தோட்டம் அழிக்கப்பட்டு, பூமியின் மேல்மட்டம் மாற்றப்பட்டிருக்கலாம்.

பேலேகுவின் காலம் வரையிலும் பூமி பகுக்கப்படாமல் ஒன்றாயிருந்தது. (ஆதி 10:25, 1நாளா 1:19) இவனுடைய காலத்தில்தான், பூமி கண்டங்களாகவும், தீவுகளாகவும் பகுக்கப்பட்டது. ஆகையினால் ஏதேன் தோட்டத்தின் இருப்பிடத்தையோ, அல்லது அங்கு பாய்ந்த நதிகளையோ குறிப்பாக எங்கே உள்ளது என்று கண்டறிய முடியவில்லை. பூமியின் மேற்பரப்பு மாறிவிட்டது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது பூமியில் மேலும் பல மாற்றங்கள் உண்டாகும். (ஏசா 11:15-16; ஏசா 34:1-35:10; சக 14:4-10; வெளி 16:10-21). புதிய பூமியில் இன்னும் அநேக மாற்றங்கள் ஏற்படும். (வெளி 21:1-2, 9-10).

ஏதேன் தோட்டத்தின் இருப்பிடத்தை வேதபண்டிதர்களில் பலரும் வரையறுத்துக் கூறுகிறார்கள். ஆனால் அவர்களுக்குள் ஒருமித்த கருத்து ஒன்றும் ஏற்படவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்தை ஏதேன் தோட்டமென்று கூறுகிறார்கள். உபா 29:29 ஆவது வசனத்தில் "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்" என்று கூறப்பட்டிருக்கிறது. ஏதேன் தோட்டம் எங்கிருந்தது என்பது கர்த்தருக்கே தெரிந்த உண்மையாகும்.

பரிசுத்த வேதாகமத்தில் மூன்றுவிதமான தோட்டங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. ஏதேன் தோட்டம் (ஆதி 2:8-3:24).

2. கெத்செமனே தோட்டம். (மத் 26:36; யோவான் 18:1).

3. கிறிஸ்து உயிர்த்தெழுந்த தோட்டம். (யோவான் 19:38-42; வெளி 1:18).

இந்த மூன்று தோட்டங்கள் தவிர லூசிபரின் காலத்திலும் ஒரு தோட்டம் இருந்ததாக வேதபண்டிதர்களில் சிலர் கூறுகிறார்கள் (எசே 28:11-17; எரே 4:23-26).

"ஏதேன்" என்னும் பெயருக்கு இனிமை, சொர்க்கம், சமமான பூமி என்று பொருள். செப்துவஜிந்த் பதிப்பில் ஏதேன் என்பது பரதீசு என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. வேத அறிஞர்கள் ஏதேன் தோட்டத்தை பரதீசு என்றே கூறுகிறார்கள். ஏனெனில் எபிரெய மொழியில் பேரடஸ் என்னும் வார்த்தை வனம், சிங்காரவனம், தோட்டம் என்று பொருள்படும்.

பரிசுத்த வேதாகமத்தில் நான்கு விதமான பரதீசுகளைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. லூசிபரின் ஏதேன். (எசே 28:11-17)

2. ஆதாமின் ஏதேன்.

3. மூன்றாம் வானத்திலுள்ள பரதீசு. (2கொரி 12:1-4; வெளி 2:7)

4. பூமியின் தாழ்விடங்களிலுள்ள பரதீசு. (லூக்கா 16:25, லூக்கா 23:43= மத் 12:40; எபே 4:8-10; எபி 2:14-15)

ஆதியாகமம் புஸ்தகத்தின் ஆசிரியர், தேவஆவியினால் ஏவப்பட்டு, இந்த ஆகமத்திலுள்ள வசனங்களையெல்லாம் எழுதியிருக்கிறார். பஞ்சாகமம் முதலாவது யூதருக்கே எழுதப்பட்டது. சபை ஸ்தாபிக்கப்பட்ட ஆரம்பகாலத்திலிருந்தே, சபையாருக்கு தேவனைப்பற்றியும், அவருடைய சிருஷ்டிப்பைப்பற்றியும், திட்டத்தைப்பற்றியும் அறிவிக்கவேண்டும் என்பது ஆசிரியரின் நோக்கம்.

தேவனுடைய இரகசியங்கள் எல்லாவற்றையும் மனுஷனால் புரிந்துகொள்ள முடியாது. தேவன் தம்மைப்பற்றிய இரகசியங்களை எந்த அளவுக்கு வெளிப்படுத்துகிறாரோ, அந்த அளவுக்கு மாத்திரமே மனுஷனால் தேவனுடைய காரியங்களை அறிந்துகொள்ள முடியும். தேவனுடைய காரியங்களில் இன்னும் ஏராளமானவை மனுஷருக்கு அறிந்துகொள்ள முடியாத இரகசியமாகவே இருக்கிறது.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கினார். அவன் நாசியிலே ஜீவசுவாசத்தை ஊதி, அவனை ஜீவாத்துமாவாக்கினார். மனுஷன் வாசம்பண்ணுவதற்கு ஒரு வாசஸ்தலம் வேண்டும். தேவன் மனுஷனுடைய வாசஸ்தலமாக ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்குகிறார். ஆதாம் ஏதேன் தோட்டத்தில் வாசம்பண்ணவேண்டும் என்பது தேவனுடைய சித்தம்.

தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு தங்கமாளிகையை கட்டவில்லை. தங்கத்தினால் அலங்கரிக்கப்பட்ட மிகப்பெரிய அரமனையை அவனுக்கு கட்டி கொடுக்கவில்லை. தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை வாசஸ்தலமாக கொடுக்கிறார். ஏதேன் தோட்டத்தில் செயற்கையான அலங்காரப் பொருட்கள் எதுவுமில்லை. அது ஒரு இயற்கையான தோட்டம். தோட்டத்திலே மரங்களும் செடிகளும், கொடிகளும் திரளாயிருக்கிறது.

ஏதேன் தோட்டமே ஆதாமின் வீடு. அந்த வீட்டிற்கு வானமே கூரைபோல மூடியிருக்கிறது. இந்தக் கூரைக்கு வர்ணம் பூசவேண்டிய அவசியமில்லை. இயற்கையின் அழகே ஏதேன் தோட்டத்தின் அழகு. பூமியே ஆதாமின் வீட்டிற்கு தரை விரிப்பாயிருக்கிறது. இந்த தரையிலே பளிங்கு கற்களோ, சலவைக்கற்களோ போடப்பவில்லை. ஏதேன் தோட்டத்திலுள்ள மரங்களின் நிழலே, ஆதாமுக்கு குளிர்ச்சியைத் தருகிறது.

ஆதாம் ஓய்வெடுக்க வேண்டுமென்றால், அவருக்கு குளிர்சாதனம் பொருத்தப்பட்ட தனிஅறைகள் எதுவுமில்லை. ஏதேன் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் நிழலே ஆதாமுக்கு ஓய்வெடுக்கும் ஸ்தலம். ஆதாம் அந்த மரத்தின் கீழே அமர்ந்து போஜனம்பண்ணவேண்டும். அங்கேயே தங்கவேண்டும்.

சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருந்தார். அவரிடத்தில் திரளான ஐசுவரியம் இருந்தது. ஆனாலும் சாலொமோனுக்குகூட, ஏதேன் தோட்டத்தைப்போல ஒரு அழகான தோட்டம் கிடைக்கவில்லை. ஏதேன் தோட்டம் கர்த்தருடைய தோட்டம். கர்த்தர் இந்த தோட்டத்தை ஆதாமுக்காக உண்டாக்கியிருக்கிறார். ஏதேன் தோட்டம் இயற்கையான அழகுள்ள தோட்டம்.

தேவனாகிய கர்த்தர் ஏதேன் தோட்டத்திலே ஏராளமான விருட்சங்களை முளைக்கப்பண்ணுகிறார். இவையெல்லாம் தேவனுடைய ஞானத்தினாலும், வல்லமையினாலும் முளைக்கிறது. இந்த தோட்டத்திலே ஆதாமைத் தவிர வேறு யாருமில்லை. தேவனே தோட்டத்திலுள்ள எல்லா விருட்சங்களையும் நட்டி, அவற்றை முளைக்கச் செய்கிறார். ஏதேன் தோட்டம் தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவும், திட்டத்தின் பிரகாரமாகவும் உண்டாக்கப்பட்டிருக்கிறது.

தேவன் உண்டாக்கினதெல்லாம் மனுஷனுடைய ஆத்துமாவுக்கு சந்தோஷத்தையும் திருப்தியையும் தரும். கர்த்தரால் நாட்டப்பட்ட தோட்டமே மனுஷருக்கு மெய்யான பரதீசாயிருக்கிறது. மனுஷனால் பரதீசை உண்டாக்க முடியாது.

ஏதேன் என்னும் பெயருக்கு சந்தோஷம், மகிழ்ச்சி, ஆனந்தம் என்று பொருள். ஏதேன் தோட்டம் பெயருக்கேற்ற பிரகாரமாக ஆனந்த தோட்டமாகவும், இனிமையான தோட்டமாகவும், நறுமணம் கொடுக்கும் தோட்டமாகவும் இருக்கிறது. ஏதேன் தோட்டத்தின் எல்லைகளும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

விசுவாசிகளாகிய நாம் பரலோகத்திலுள்ள பரதீசுக்குரியவர்கள். பரலோகமே நம்முடைய நித்திய வாசஸ்தலம். பரலோகத்திற்குரியவர்களாகிய நாம், இந்தப் பூமிக்குரிய காரியங்களில் அதிகமாய் கவனம் செலுத்தக்கூடாது. கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்களில் திருப்தியோடிருக்கவேண்டும். நாம் பூமிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக அதிகமாய் பிரயாசப்படக்கூடாது.

தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார் (ஆதி 2:9).

தேவன் ஏதேன் தோட்டத்திலே சகலவித விருட்சங்களையும் முளைக்கப்பண்ணுகிறார். இந்த விருட்சங்களெல்லாமே விசேஷித்த விருட்சங்கள். தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு தேவனாகவும் இருக்கிறார், அவருக்கு பரலோக பிதாவாகவும் இருக்கிறார். கர்த்தர் ஆதாமின்மீது அன்பும் கரிசனையும் வைத்திருக்கிறார். ஆதாமுக்கு எது பிரயோஜனமாயிருக்கும் என்பதும், அவருக்கு எது சந்தோஷத்தைக் கொடுக்கும் என்பதும் தேவனாகிய கர்த்தருக்கு தெரியும்.

பல போஜனங்கள் பார்வைக்கு அழகாகவும், புசிப்பதற்குச் சுவையாகவும் இருக்கும். அதினாலேயே நாம் அவற்றைப் புசிக்கிறோம். (ஆதி 3:6). சில போஜனங்கள் பார்வைக்கு அழகாக இருக்கலாம். அது உடல் நலத்திற்குக் கேடாகவும் அமையலாம்.

தோட்டத்தில் பல விருட்சங்கள் இருந்தன. அதில் நன்மை தீமை அறியத்தக்க விருட்சமும் ஒன்று. கனியின் தன்மை நன்மை தீமையை அறிய வைக்காது. மனுஷனுடைய கீழ்ப்படியாமையே அவனை நன்மை தீமை அறிய வைக்கும். (ரோமர் 5:12-21).

கர்த்தர் ஆதாமின் சந்தோஷத்தையும், பிரயோஜனத்தையும் தம்முடைய மனதில் நினைத்து, ஏதேன் தோட்டத்திலே சகலவித விருட்சங்களையும் உண்டாக்குகிறார். ஆதாம் ஏதேன் தோட்டத்திலிருந்தபோது, அவர் பாவம் செய்யவேண்டுமென்று ஆசைப்படவில்லை. ஆதாமினிடத்தில் அநீதியான சந்தோஷம் எதுவுமில்லை. ஆதாமின் மனது கள்ளம் கபடமில்லாமல் சுத்தமாயிருக்கிறது.

தேவன் ஏதேன் தோட்டத்திலே சகலவித விருட்சங்களையும் முளைக்கப்பண்ணுகிறார். இவையெல்லாம் பார்வைக்கு அழகும், புசிப்புக்கு நலமுமாயிருக்கிறது. கர்த்தர் ஏதேன் தோட்டத்திலே சகலவித விருட்சங்களை முளைக்கப்பண்ணினாலும், அங்கே இரண்டு விருட்சங்கள் மிகவும் விசேஷமானவை. தேவன் இந்த இரண்டு விருட்சங்களையும் ஏதேன் தோட்டத்தின் நடுவிலே, பூமியிலிருந்து முளைக்கப்பண்ணுகிறார். அவற்றில் ஒன்று ஜீவவிருட்சம். மற்றொன்று நன்மை தீமை அறியத்தக்க விருட்சம். இவ்விரண்டு விருட்சங்களுக்கு ஒப்பான விருட்சம் இந்தப் பூமியில் வேறெங்கும் இல்லை.

தேவன் ஏதேன் தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தை முளைக்கப்பண்ணியிருக்கிறார். இந்த விருட்சம் ஆதாமுக்கு அடையாளமாகவும் முத்திரையாகவும் இருக்கிறது. தேவனுடைய கிருபையினாலும், தெய்வீக பராமரிப்பினாலும் ஆதாமுக்கு நித்திய சந்தோஷமும், நித்திய ஜீவனும் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது என்பதை ஜீவவிருட்சம் அவருக்கு உறுதிபண்ணுகிறது. ஆனாலும் தேவன் ஆதாமுக்கு ஒரு நிபந்தனையையும் சொல்லுகிறார். ஆதாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும். அப்போதுதான் அவருக்கு நித்திய சந்தோஷமும், நித்திய ஜீவனும் கிடைக்கும்.

ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிப்பதற்கு தேவன் ஆதாமுக்கு அனுமதி கொடுக்கிறார். ஆதாம் ஜீவனோடிருக்கவேண்டும் என்பது தேவனுடைய விருப்பம். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே ஜீவவிருட்சமாயிருக்கிறார்.

"ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங் கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது" (வெளி 2:7).

"நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்" (வெளி 22:2).

தேவனாகிய கர்த்தர் ஏதேன் தோட்டத்திலே நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணுகிறார். இந்த விருட்சத்தின் கனியைப் புசிப்பதினால் ஆதாமுக்கு விசேஷித்த ஞானமோ, அறிவு விருத்தியோ ஏற்படாது. ஆனாலும் இந்த விருட்சத்திற்கு நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

இந்த விருட்சம் தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறது. இந்த விருட்சத்தின் மூலமாக தேவனுடைய சித்தம் ஆதாமுக்கு சொல்லப்படுகிறது. ஆதாம் இந்த விருட்சத்தின் உதவியினால் நன்மை தீமையை அறிந்துகொள்ளலாம். இந்த விருட்சத்தின் கனியை புசியாமலிருப்பதே ஆதாமுக்கு நன்மையானது. இந்த விருட்சத்தின் கனியைப் புசிப்பது ஆதாமுக்குத் தீமையானது.

இந்தப் பிரபஞ்சத்தில் ஏராளமான நன்மைகளும் தீமைகளும் இருக்கிறது. தேவன் நன்மைக்கும் தீமைக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை, ஆதாமின் இருதயத்தில், இயற்கையின் பிரமாணத்தின் மூலமாக, எழுதி வைத்திருக்கிறார். அதிலும் விசேஷமாக, தேவனாகிய கர்த்தர், நன்மை தீமையின் பிரமாணத்தை இந்த விருட்சத்தின்மீது எழுதி வைத்திருக்கிறார்.

ஆதாம் நன்மைக்கும் தீமைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை, இந்த விருட்சத்தின் மூலமாக, அனுபவ ரீதியாக புரிந்துகொள்ளலாம். இந்த விருட்சத்தின் கனியை புசியாதிருந்தால், ஆதாமுக்கு நன்மையைப்பற்றிய அறிவு வரும். இந்த விருட்சத்தின் கனியைப் புசித்தால் அவருக்கு தீமையைப்பற்றிய அறிவு வரும். ஆதாம் இந்த விருட்சத்தின் கனியைப் புசித்தால் தீமையை அனுபவிப்பார். இந்தக் கனியைப் புசியாதிருந்தால் அவர் நன்மையை அனுபவிப்பார்.

விசுவாசிகளாகிய நமக்கு தேவன் தம்முடைய கிருபையின் பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவோம் என்பது ஒரு பிரமாணம். விசுவாசிக்கவில்லையென்றால் அழிந்துபோவோம் என்பது மற்றொரு பிரமாணம்.

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற் 16:16).

ஆதாம் ஏதேன் தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியை புசிக்கவே புசிக்கலாம். ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்தால் ஆதாமுக்கு ஜீவன் உண்டாகும். இதை உறுதிபண்ணுவதற்காக கர்த்தர் ஏதேன் தோட்டத்திலே ஜீவவிருட்சத்தை முளைக்கப்பண்ணியிருக்கிறார்.

ஆதாம் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கக்கூடாது. அதைப் புசிக்கும் நாளிலே ஆதாம் சாகவே சாவார். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லையென்றால் சாவு வரும் என்பதற்கு, நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் அடையாளமாயிருக்கிறது.

தேவன் இவ்விரண்டு விருட்சங்களின் மூலமாக, ஆதாமுக்கு முன்பாக நன்மையையும் தீமையையும் வைத்திருக்கிறார். அவர் ஆதாமுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைத்திருக்கிறார். இவ்விரண்டு விருட்சங்களும், தேவனுடைய இரண்டு நியமங்களாகும்.

"நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சிவைக்கிறேன்; ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு" (உபா 30:19)

"கர்த்தர் உன் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்திலே குடியிருக்கும்படிக்கு, உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து, அவர் சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவரைப் பற்றிக்கொள்வாயாக; அவரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர் என்றான்" (உபா 30:20).

ஏதேன் தோட்டத்திலே, தோட்டத்துக்குத் தண்ணீர் பாயும்படி ஏதேனிலிருந்து ஒரு நதி ஓடி, அங்கேயிருந்து பிரிந்து நாலு பெரிய ஆறுகளாயிற்று (ஆதி 2:10).

இந்த வசனப்பகுதியில் ஏதேன் தோட்டத்தில் பாயும் நாலு ஆறுகளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இவை ஒரே ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும், நாலு பெரிய கிளை ஆறுகளாகும். இந்த நாலு ஆறுகளும் ஏதேன் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சுகிறது. இதன் தண்ணீரினால் தோட்டம் செழிப்பாயிருக்கிறது. விருட்சங்கள் ஏராளமான கனிகளைத் தருகிறது.

முதலாம் ஆற்றுக்குப் பைசோன் என்று பேர், அது ஆவிலா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும்; இரண்டாம் ஆற்றுக்குக் கீகோன் என்று பேர், அது எத்தியோப்பியா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும். மூன்றாம் ஆற்றுக்கு இதெக்கேல் என்று பேர், அது அசீரியாவுக்குக் கிழக்கே ஓடும்; நாலாம் ஆற்றுக்கு ஐபிராத்து என்று பேர் (ஆதி 2:11-14).

ஏதேன் தோட்டத்தில் பாய்கிற நாலு ஆறுகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. பரலோகத்திலும் ஜீவத்தண்ணீருள்ள நதி ஓடும். இது வற்றாத நதியாயிருக்கும். பரலோகத்தில் ஓடுகிற நதி ஏதேனிலிருந்து ஓடுகிற நதியல்ல. இந்த நதி தேவனுடைய சிங்காசனத்திலிருந்து ஓடுகிற நதியாகும். இந்த நதி நம்முடைய தேவனுடைய நகரத்தை சந்தோஷப்படுத்துகிறது.

"பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவதண்ணீருள்ள சுத்தமான நதிதேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான்" (வெளி 22:1).

"ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும்" (சங் 46:4).

பைசோன் ஆறு ஆவிலா தேசம் முழுவதையும் சுற்றி ஓடுகிறது. அவ்விடத்தில் பொன் விளைகிறது. அந்தத் தேசத்தின் பொன் நல்லது; அவ்விடத்திலே பிதோலாகும், கோமேதகக்கல்லும் உண்டு (ஆதி 2:11,12).

ஆவிலா தேசத்தில் பொன் விளைந்தாலும், ஏதேன் தோட்டமே மிகவும் விசேஷமானது. ஏனெனில் ஏதேன் தோட்டத்தின் நடுவில்தான் ஜீவவிருட்சம் இருக்கிறது. இந்தத் தோட்டத்தில்தான் ஆதாம் தன்னுடைய தேவனாகிய கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கிறார்.

விசுவாசிகளாகிய நாம், உலகப்பிரகாரமான ஜனங்களைப்போல, பொன்னுக்கும், விலையுயர்ந்த கற்களுக்கும், உலகப்பிரகாரமான மற்ற பொருட்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. கர்த்தரை நம்புகிற நாம், கர்த்தர் நமக்கு கொடுக்கும் நித்திய ஜீவன் மீது பிரியமாயிருக்கவேண்டும். உலகத்தாரிடம் தங்கம் இருக்கலாம். நம்மிடத்திலோ இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் இருக்கிறது.

ஆவிலா தேசத்தின் பொன் நல்லதாயிருக்கலாம். ஆனாலும் கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்களும், ஐசுவரியங்களும் நித்தியகாலத்திற்கும் நமக்கு பிரயோஜனமாயிருக்கும்.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் (ஆதி 2:15).

தோட்டத்தைப் பண்படுத்தி, பாதுகாப்பது மனுஷனுடைய கடமை. வெளியிலிருந்து யாரும் உள்ளே வந்து விடாதவாறு இவன் பாதுகாக்க வேண்டும். தோட்டத்தைப் பாதுகாக்கும் தன் கடமையிலிருந்து ஆதாம் தவறிவிடுகிறார். பாவம் மனுக்குலத்திற்குள் நுழைந்து விடுகிறது. சாத்தான் மனுஷனை ஆளுகை செய்கிறான். (மத் 4:1-11; மத் 12:24-25; ரோமர் 5:12-21; 2கொரி 4:4; எபே 6:10-18) சாத்தானுடைய இறுதியான தோல்வி வெளி 12:7-12; வெளி 20:1-10 ஆகிய வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கினார். இந்த மண் ஏதேன் தோட்டத்தின் மண் அல்ல. தேவன் மனுஷனை ஏதேன் தோட்டத்திற்கு வெளியே உண்டாக்கினார். அதன் பின்பு, தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்திற்கு அழைத்துக்கொண்டு வருகிறார். மனுஷன் சாதாரண மண்ணினால் உருவாக்கப்பட்டவன்.

தேவனாகிய கர்த்தர் மனுஷரை ஏதேன் தோட்டத்திலே கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும், காக்கவும் வைக்கிறார். ஆனாலும் ஆதாமுக்கு ஏதேன் தோட்டத்தின்மீது உரிமையோ, பாத்தியமோ இல்லை. ஆதாம் ஏதேன் தோட்டத்து மண்ணினால் உருவாக்கப்படவில்லை. தேவனாகிய கர்த்தரே மனுஷனை உண்டாக்கினார். அவனை ஜீவாத்துமாவாக்கினார். கர்த்தரே மனுஷனுக்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார்.

நம்மை உண்டாக்கின கர்த்தரால் மாத்திரமே, நமக்கு சந்தோஷத்தையும் ஆசீர்வாதத்தையும் கொடுக்க முடியும். தேவன் நம்மோடு கூடயிருப்பதுதான் நமக்கு ஆறுதல். நாம் தேவனோடு ஐக்கியமாயிருப்பதுதான் நமக்கு ஆசீர்வாதம். தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்திலே அழைத்துக்கொண்டு வருகிறார். அங்கே கர்த்தரும் உலாவுகிறார். ஆதாம் தேவனாகிய கர்த்தரை, ஏதேன் தோட்டத்திலே பிரத்தியட்சமாய் தரிசிக்கிறார்.

"தமக்குப் பிரியமான யாக்கோபின் சிறப்பான தேசத்தை நமக்குச் சுதந்தரமாகத் தெரிந்தளிப்பார்" (சங் 47:4). நாம் எங்கே வாசம்பண்ணவேண்டும் என்பதை கர்த்தர் அறிந்திருக்கிறார். கர்த்தர் நம்மை எந்த ஸ்தானத்தில் வைத்திருக்கிறாரோ, அந்த ஸ்தானத்திலே நாம் ஆத்தும திருப்தியோடிருக்கவேண்டும். கர்த்தர் நமக்கு என்ன வேலையைக் கொடுக்கிறாரோ, அந்த வேலையை நாம் சந்தோஷமாயும், உண்மையாயும் செய்யவேண்டும். தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்திலே அழைத்து வந்து, அதைப் பண்படுத்தவும், காக்கவும் வைக்கிறார்.

ஏதேன் தோட்டம் பரதீசுக்கு அடையாளமாயிருக்கிறது. இது பரதீசாகயிருந்தாலும் இதையும் பண்படுத்த வேண்டியதாயிருக்கிறது. இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற எல்லோருமே ஏதாவது ஒரு வேலையை செய்யவேண்டும். ஒருவரும் வேலை செய்யாமல் சோம்பேறியாயிருக்கக்கூடாது. யாரும் சும்மாயிருக்கக்கூடாது.

நமக்கு சரீரத்தையும் ஆத்துமாவையும் கொடுத்திருக்கிற தேவன், நமக்கு வேலைகளையும் கொடுத்திருக்கிறார். நம்முடைய சரீரம், கர்த்தர் கொடுக்கும் வேலையை ஒழுங்காய்ச் செய்யவேண்டும். நம்முடைய ஆத்துமா கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிவதுபோல, நம்முடைய சரீரமும் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியவேண்டும்.

நாம் கர்த்தருடைய ஊழியத்தை செய்தாலும் அல்லது வேறு ஏதாவது உத்தியோகமோ அல்லது தொழிலோ அல்லது வியாபாரமோ செய்தாலும், நம்முடைய வேலைகளில் நாம் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். நம்முடைய வேலைகள் மூலமாயும் நாம் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும்.

பூர்வகாலம் முதலே விவசாய வேலை நடைபெறுகிறது. விவசாயம் ஒரு கண்ணியமான தொழில். விவசாய வேலை ஒரு மேன்மையான வேலை. தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு ஏதேன் தோட்டத்திலே விவசாய வேலையைக் கொடுக்கிறார். ஆதாம் ஏதேன் தோட்டத்திலே தன்னுடைய கைகளால் நிலத்தைப் பண்படுத்தினாலும், அவருடைய இருதயம் தேவனோடு ஐக்கியமாயிருக்கவேண்டும்.

தேவன் நமக்கு எந்த வேலையைக் கொடுத்தாலும், அந்த வேலையை உண்மையாயும், நேர்மையாயும், மனப்பூர்வமாயும் செய்யவேண்டும். அப்போதுதான் நாம் செய்கிற வேலையில் நமக்கு திருப்தியும் சந்தோஷமும் உண்டாகும்.

தேவனாகிய கர்த்தர் இதுவரையிலும் சிருஷ்டிகராகவும், தம்முடைய சிருஷ்களை பராமரிக்கிறவராகவும் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். இப்பொழுது தேவனாகிய கர்த்தர் தம்மை ஆளுகை செய்கிறவராகவும், பிரமாணங்களைக் கொடுக்கிறவராகவும் வெளிப்படுத்துகிறார்.

சாகவே சாவாய்
ஆதி 2:16,17

ஆதி 2:16. தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்.

ஆதி 2:17. ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.

மனுஷன்மீது தேவனுக்கு அதிகாரமும் ஆளுகையுமுள்ளது. மனுஷன் சிந்திக்கக்கூடியவன். அவன் சுயாதீனமாக தீர்மானம்பண்ணக்கூடியவன். தேவனாகிய கர்த்தர் மனுஷனுக்கு கட்டளையிடுகிறார். மனுஷனோ மனுக்குலத்தார் எல்லோருக்கும் பிரதிநிதியாகவும், முதல் தகப்பனாகவும் இருக்கிறார்.

ஆதாம் கர்த்தரிடத்திலிருந்து கட்டளையைப் பெற்றுக்கொள்கிறார். மனுஷனுக்கும் மற்ற ஜீவஜந்துக்களுக்கும் வித்தியாசமுண்டு. மனுஷன் மற்ற எல்லா ஜீவராசிகளைவிட மிகவும் விசேஷமானவன். மனுஷனால் மாத்திரமே கர்த்தருக்கு புத்தியுள்ள ஆராதனை செய்ய முடியும். மனுஷனால் கர்த்தருடைய கட்டளைக்கு செவிகொடுத்து, அதற்கு கீழ்ப்படிய முடியும்.

தேவனாகிய கர்த்தர் மனுஷனுக்கு கட்டளையிடுகிறார். தேவனுடைய கட்டளை மனுஷனை சிருஷ்டித்த சிருஷ்டிகருடைய கட்டளையாகும். அது மாத்திரமல்ல, அந்தக் கட்டளை மனுஷனை ஆளுகை செய்கிற ராஜாவின் கட்டளையாகவும், மனுஷனுடைய எஜமானரின் கட்டளையாகவும் இருக்கிறது.

மனுஷன் என்ன செய்யவேண்டும் என்று தேவனாகிய கர்த்தர் கட்டளையிடுகிறார். தேவனுடைய கட்டளையில் அவருடைய அதிகாரமும், ஆளுகையும் வெளிப்படுகிறது. தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்திலே வைத்திருக்கிறார். ஏதேன் தோட்டத்திலே ஏராளமான கனிவிருட்சங்கள் இருக்கிறது.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: "நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்" (ஆதி 2:16) என்று சொல்லுகிறார். தேவனாகிய கர்த்தர் மனுஷனுக்கு விடுதலையைக் கொடுக்கிறார். மனுஷன் தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கலாம். அதைப் புசிப்பதினால் மனுஷனுக்கு ஜீவன் உண்டாகும்.

தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பார்த்து, "புசிக்கவே புசிக்கலாம்" என்று சொல்லும்போது, அந்தக் கட்டளைக்கு கீழ்ப்படிவது மனுஷனுக்கு இலேசான காரியம். புசிப்பது கஷ்டமானதல்ல. புசித்தால் மனுஷனுக்கு ஜீவன் உண்டாகும்.

தேவனாகிய கர்த்தர் ஏதேன் தோட்டத்திலே மனுஷனுக்கு புசிக்கலாம் என்னும் கட்டளையையும், புசிக்கவேண்டாம் என்னும் கட்டளையையும் கொடுக்கிறார். தேவனுடைய கட்டளை எதுவாகயிருந்தாலும், அந்தக் கட்டளைக்கு மனுஷன் கீழ்ப்படியவேண்டும்.

ஆதாம் கனியைப் புசிக்கிறாரா அல்லது புசிக்கவில்லையா என்பதைவிட, அவர் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறாரா அல்லது கீழ்ப்படியவில்லையா என்பதே தேவனுடைய பார்வையில் முக்கியமானதாயிருக்கிறது. ஆதாம் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்தால் அவருக்கு ஆசீர்வாதமும், கீழ்ப்படியவில்லையென்றால் அவருக்கு சாபமும் வரும்.

தேவனாகிய கர்த்தர் ஆதாமின் கீழ்ப்படிதலை சோதிக்கிறார். கர்த்தர் ஆதாமை சோதிப்பதற்காகவே, அவரை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார். ஏதேன் தோட்டத்தில்தான் ஜீவவிருட்சமும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சமும் இருக்கிறது. விருட்சம் இருக்கும் இடத்தில் ஆதாமுக்கு சோதனை வருகிறது.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி, "நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" (ஆதி 2:17) என்று கட்டளையிடுகிறார். ஆதாம் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லையென்றால் அவருக்கு மரணம் வரும்.

இப்பொழுது ஆதாமிடத்தில் ஒரு பாவமும் இல்லை. அவரிடத்தில் மீறுதலோ, அக்கிரமமோ எதுவுமில்லை. ஆனாலும் தேவனாகிய கர்த்தர் ஆதாமை எச்சரிக்கிறார். "நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்" என்று தேவன் ஆதாமுக்கு சொல்லுகிறார். ஆதாம் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லையென்றால், மரணம் அவருக்கு தண்டனையாய்க் கொடுக்கப்படும். பாவத்தின் சம்பளம் மரணம். பாவத்தின் விளைவாக, அதன் தண்டனையாகிய மரணம் உடனே வரும்.

நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியில் பாவமோ அல்லது விஷத்தன்மையோ இல்லை. ஆனாலும் ஆதாம் அந்த விருட்சத்தின் கனியை புசிக்கக்கூடாது என்று தேவன் தடைபண்ணியிருக்கிறார். தேவன் தடைபண்ணியிருப்பதை செய்வது பாவம்.

நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியில், நன்மையோ அல்லது தீமையோ இல்லை. தேவன் அதைப் புசிக்கக்கூடாது என்று தடைபண்ணியிருப்பதினால், அந்த விருட்சத்தின் கனியைப் புசிப்பது ஆதாமுக்கு தீமையாகவும், அதைப் புசியாமலிருப்பது ஆதாமுக்கு நன்மையாகவும் இருக்கும்.

மனுஷனுடைய சிந்தை மாம்ச சிந்தையாயிருக்கிறது. மாம்ச சிந்தை அசுத்தமானது. அது பாவமானது. மனுஷனுடைய மாம்சத்தின் இச்சைகளும், மனுஷனுடைய பாவமான சுபாவங்களும், மனுஷனுடைய பாவங்களுக்கு ஆதாரமாயிருக்கிறது.

நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம் என்று தேவனாகிய கர்த்தர் மனுஷனுக்கு கட்டளையிட்டதினால், அதைப் புசித்து பார்க்கவேண்டும் என்னும் ஆசை மனுஷனுக்கு உண்டாயிற்று. அதைப் புசித்துப் பார்த்தால், தனக்கு என்ன வரும் என்பதையும் அறிந்துகொள்ளும் ஆசையும் மனுஷனுக்கு வருகிறது. புதிய காரியங்களை சோதித்துப் பார்ப்பது மனுஷனுடைய மாம்ச சுபாவம்.

மனுஷனுடைய சரீரத்தை அவனுடைய ஆத்துமா ஆளுகை செய்யவேண்டும். அவனுடைய ஆத்துமாவை தேவன் ஆளுகை செய்யவேண்டும். அப்போது மனுஷனுடைய சிந்தை தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படியும். மனுஷனுடைய சரீரம் அவனுடைய ஆத்துமாவை ஆளுகை செய்யும்போது, அவன் தேவனுக்கு விரோதமான காரியங்களை செய்ய ஆரம்பித்துவிடுவான்.

மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல ஆதி 2:18

ஆதி 2:18. பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை உருவாக்கி, அவன் மீது கரிசனையோடிருக்கிறார். மனுஷனுக்கு ஆறுதலும், சந்தோஷமும் இருக்கவேண்டுமென்று தேவனாகிய கர்த்தர் விரும்புகிறார். தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையில் இப்போது பகை எதுவுமில்லை. நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம் என்று தேவனாகிய கர்த்தர் மனுஷனுக்கு கட்டளையிட்டிருக்கிறார்.

மனுஷன் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும். தேவன் மனுஷனுக்கு ஏதேன் தோட்டத்திலே ஒரு சிநேகிதரைப்போலவே இருக்கிறார். தம்முடைய கட்டளைக்கு மனுஷன் கீழ்ப்படியவேண்டுமென்று, தேவன் அவனை உற்சாகப்படுத்துகிறார்.

ஏதேன் தோட்டத்திலே மனுஷன் தனிமையாயிருக்கிறான். அவன் தனிமையாயிருப்பது அவனுக்கு நல்லநல்ல என்பதை தேவன் காண்கிறார். தான் தனிமையாயிருப்பது தனக்கு நல்லதல்ல என்பதை ஆதாம் இன்னும் அறிந்துகொள்ளவில்லை. ஆனாலும் ஆதாமைக்குறித்து தேவன் கரிசனையோடிருக்கிறார்.

மனுஷனுடைய சிருஷ்டிப்பில் தேவனுடைய கிரியை இன்னும் நிறைவு பெறவில்லை. அவனால் பலுகிப்பெருக முடியாது. அவன் பலுகிப்பெருகுவதற்காக அவனுக்கு ஏற்ற துணையை உண்டாக்க வேண்டுமென்று தேவன் சித்தம் கொள்கிறார். (ஆதி 1:28; 1தீமோ 2:11-15; 1கொரி 11:9). மனுஷனுடைய ஏற்ற துணை அவனுக்கு அறிவுப் பிரகாரமாகவும், நீதிநெறிப் பிரகாரமாகவும், சரீரப்பிரகாரமாகவும் அவனுக்குத் துணையாக இருக்கும்.

மனுஷன் தனிமையாயிருந்தால், ஏதேன் தோட்டம் அவனுக்கு ஆசீர்வாதமானதாயிராது. ஏதேன் தோட்டத்திலிருந்து நாலு ஆறுகள் ஓடினாலும், தனிமையாயிருக்கிற மனுஷனுக்கு ஏதேன் தோட்டம் பாலைவனத்தைப்போல வறட்சியாயிருக்கும். தனிமையாயிருக்கிற மனுஷனுக்கு அரமனைகூட பாதாள சிறைபோல இருக்கும்.

இந்தப் பூமியிலே மனுஷர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யவேண்டும் என்பதற்காக, தேவனாகிய கர்த்தர் "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல" என்று சொல்லவில்லை. தேவன் விரும்பியிருந்தால், அவர் இந்தப் பூமி முழுவதையும் மனுஷரால் நிரப்பியிருக்க முடியும். ஆனால் தேவனோ தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, ஒரே ஒரு மனுஷனை மாத்திரமே உருவாக்குகிறார். அவனை ஆணும் பெண்ணுமாக உருவாக்குகிறார்.

மனுஷன் தனிமையாயிருந்தால், அவன் நித்தியகாலத்திற்கும் தனிமையாகவே இருக்கவேண்டும். மனுஷன் தனிமையாயிருப்பது தேவனுடைய சித்தமுமல்ல. ஆகையினால் தேவனாகிய கர்த்தர், "ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்" என்று சொல்லுகிறார்.

இந்தப் பிரபஞ்சத்தில் வாசம்பண்ணுகிற எல்லோருமே ஒருவருக்கொருவர் உதவியாயும், ஒத்தாசையாயும் இருக்கவேண்டும். நம் எல்லோருக்குமே மற்றவர்களுடைய உதவிகள் தேவைப்படுகிறது. நம்முடைய உதவிகளும் அவர்களுக்கு தேவைப்படுகிறது.

"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாங் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலி 4:19).

தேவன் மாத்திரமே நம்முடைய தேவைகளையெல்லாம் அறிந்திருக்கிறார். மனுஷனுக்கு ஏற்ற துணை இருக்கவேண்டும். இது மனுஷனுடைய தேவையாயிருக்கிறது. தேவனால் மாத்திரமே மனுஷனுடைய தேவைகளை சந்திக்க முடியும்.

நமக்குத் தேவையான எல்லா உதவிகளும் நம்முடைய தேவனிடத்திலிருந்து மாத்திரமே நமக்கு வரும். ஒரு மனுஷனுக்கு அமையும் நல்ல மனைவி கர்த்தர் கொடுக்கும் கிருபையுள்ள ஈவு. நல்ல மனைவியே மனுஷனுக்கு ஏற்ற துணையாயிருப்பாள்.

விசுவாசிகளாகிய நாம் தனிமையாயிராமல், மற்ற விசுவாசிகளோடு ஐக்கியமாயிருக்கவேண்டும். தனிமையை விரும்புகிறவர்கள் யாரோடும் பேசாமல், யாரோடும் பழகாமல் தனிமையாயிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் யாருக்கும் உதவி செய்யமாட்டார்கள். மற்றவர்களும் இவர்களுக்கு உதவி செய்ய முன்வரமாட்டார்கள்.

ஜீவஜந்துக்களின் பெயர்கள் ஆதி 2:19,20

ஆதி 2:19. தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார்; அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று.

ஆதி 2:20. அப்படியே ஆதாம் சகலவித நாட்டுமிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்டுமிருகங்களுக்கும் பேரிட்டான்; ஆதாமுக்கோ ஏற்றதுணை இன்னும் காணப்படவில்லை.

தேவனாகிய கர்த்தர் வெளியின் சகல மிருகங்களையும், ஆகாயத்தின் சகல பறவைகளையும் மனுஷனுக்கு கீழ்ப்படுத்துகிறார். மனுஷன் அவற்றையெல்லாம் ஆளுகை செய்கிறான்.

தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவருகிறார் (ஆதி 2:19).

எல்லா மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் ஆதாம் பேரிட்டான். ஆகையினால் அவனுடைய அறிவு விருத்தியடைந்திருக்க வேண்டும். அவனுடைய பாஷை வளம் பெற்றிருக்க வேண்டும். ஆதாம் என்னென்ன பெயர் வைத்தானோ அதை தேவன் எந்த மாற்றமும் செய்யாமல் அங்கீகரிக்கிறார்.

ஆதாம் மண்ணினால் உருவாக்கப்பட்ட மிருகங்களையும் பறவைகளையும் பார்க்கிறார். சர்வசிருஷ்டிகளையும் மனுஷன் ஆளுகை செய்யவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். மனுஷன் சகல மிருகங்களையும், சகல பறவைகளையும் ஆளுகை செய்வதற்கு முன்பாக, அவற்றிற்கு பேரிடவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்.

அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டாரோ அதுவே அதற்குப் பேராயிற்று. அப்படியே ஆதாம் சகலவித நாட்டுமிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்டுமிருகங்களுக்கும் பேரிடுகிறார் (ஆதி 2:20).

ஆதாம் சகல மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் பேரிடுவது, அவருடைய ஞானத்திற்கும் அறிவுக்கும் அடையாளமாயிருக்கிறது. தேவனாகிய கர்த்தர் மனுஷனை தம்முடைய சாயலாகவும், தம்முடைய ரூபத்தின்படியும் உருவாக்கியிருக்கிறார். மனுஷனிடத்தில் சிந்திக்கும் ஆற்றலும், பேசும் ஆற்றலும் இருக்கிறது. கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற தாலந்துகளை பயன்படுத்தி, ஆதாம் சகல மிருகங்களுக்கும், சகல பறவைகளுக்கும் பேரிடுகிறார்.

மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் பேரிடும் அதிகாரம் ஆதாமுக்கு கொடுக்கப்படுகிறது. தேவன் முதலாம் நாளில் வெளிச்சத்தை உண்டாக்கினார். அவர் வெளிச்சத்தையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்தார். தேவன் வெளிச்சத்திற்கு பகல் என்று பேரிட்டார். இருளுக்கு இரவு என்று பேரிட்டார். அதுபோலவே தேவன் ஆகாயவிரிவுக்கும், பூமிக்கும், சமுத்திரத்திற்கும் பேரிட்டார். அவர் நட்சத்திரங்களை பெயர் சொல்லி அழைத்தார்.

ஆனாலும் சகல மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் பேரிடும் அதிகாரத்தை, தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு கொடுக்கிறார். இவையெல்லாம் ஆதாமுக்கு இனிமேல் கீழ்ப்படியும். தேவன் மனுஷனை தம்முடைய சாயலாக சிருஷ்டித்ததினால், தம்முடைய அதிகாரத்தின் ஒரு பகுதியை, தேவன் ஆதாமுக்கும் பகிர்ந்துகொடுக்கிறார்.

தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் பேரிடும் சிலாக்கியத்தைக் கொடுத்தாலும், ஆதாமினிடத்தில் இன்னும் பூரணமான சந்தோஷம் காணப்படவில்லை. இந்தப் பூமியில் ஏராளமான மிருகங்களும் பறவைகளும் இருந்தாலும், ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை (ஆதி 2:20).

மனுஷனுடைய சுபாவம் மிகவும் விசேஷமானது. மனுஷசிருஷ்டி மற்ற சிருஷ்டிகளைவிட மேன்மையானது. உலகத்தின் மாயையான காரியங்கள் மனுஷனுக்கு மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்காது. உலகத்திலுள்ள எல்லா சம்பத்துக்களையும் மனுஷன் பெற்றிருந்தாலும், அவை மனுஷனுக்கு ஏற்ற துணையாகயிருக்காது. அவை மனுஷனுடைய ஆத்துமாவை திருப்திபண்ணாது.

மனுஷனுடைய சரீரத்திலும் ஆத்துமாவிலும் ஒரு சில அடிப்படை தேவைகள் இருக்கிறது. இந்தத் தேவைகளையும், மனுஷனுடைய ஆசைகளையும் அவனுக்கு ஏற்ற துணையால் மாத்திரமே திருப்திபண்ண முடியும். ஆகையினால்தான் மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்றும் அவனுக்கு ஏற்ற துணையை உண்டாக்குவேன் என்றும் தேவனாகிய கர்த்தர் சொன்னார்.

மனுஷி

ஆதி 2:21-25

ஆதி 2:21. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார்.

ஆதி 2:22. தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார்.

ஆதி 2:23. அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்.

ஆதி 2:24. இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.

ஆதி 2:25. ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள்.

மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்வதற்கு முன்பாக மயக்க மருந்து கொடுப்பது போன்றிருக்கிறது. ஆதாம் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். (ஆதி 15:12; 1சாமு 26:12; தானி 8:18).

ஆதாமுக்கு ஏற்ற துணையாக தேவன் மனுஷியை உருவாக்குகிறார். தேவன் முதலில் ஆதாமையே உருவாக்கினார். அதன் பின்புதான் அவர் ஏவாளை உருவாக்குகிறார்.

"முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள்" (1தீமோ 2:13).

புருஷன் தன் குடும்பத்திற்கு தலையைப்போல இருக்கிறான். அவனுடைய மனைவியோ அந்தத் தலைக்கு கிரீடமாயிருக்கிறாள். அவள் தன் புருஷனுக்கும் கிரீடமாயிருக்கிறவள்.

தேவன் மனுஷனை இந்தப் பூமியின் மண்ணால் உருவாக்கினார். ஸ்திரீயானவளோ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட மனுஷனுடைய விலா எலும்புகளில் ஒன்றினால் உருவாக்கப்பட்டிருக்கிறாள். ஆகையினால் ஸ்திரீக்கும் மண்ணே ஆதாரமாயிருக்கிறது. தேவன் ஸ்திரீயையும் மண்ணினால் உருவாக்கியிருக்கிறார். புருஷன் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டவன். ஸ்திரீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட, புருஷனிலிருந்து உருவாக்கப்பட்டவள்.

தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணுகிறார், ஆதாம் நித்திரையடைந்தார்; தேவன் ஆதாமின் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைக்கிறார் (ஆதி 2:21).

தேவன் ஆதாமின் மனைவியை சிருஷ்டிக்கும்போது, ஆதாம் நித்திரையிலிருக்கிறார். ஆதாம் தன்னுடைய கவலைகளையும், வருத்தங்களையும், பாரங்களையும் தேவன்மீது வைத்துவிட்டு, அயர்ந்த நித்திரையிலிருக்கிறார். ஆதாம் தன்னை தேவனுடைய சித்தத்திற்கும், அவருடைய ஞானத்திற்கும் ஒப்புக்கொடுத்து நித்திரைபண்ணுகிறார்.

தன்னை உருவாக்கின கர்த்தர் யெகோவாயீரேயாக இருக்கிறார் என்பது ஆதாமுக்கு தெரியும். யெகோவாயீரே என்னும் பெயருக்கு "கர்த்தர் பார்த்துக்கொள்வார்" என்று பொருள். கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம், தமக்கு சித்தமான வேளையிலே, தன்னுடைய தேவைகளை சந்திப்பார் என்று ஆதாம் தேவனாகிய கர்த்தர்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்.

தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணுகிறார். ஆதாம் இன்னும் பாவம் செய்யவில்லை. ஆகையினால் தேவன் ஆதாமுக்கு வேதனையை அனுமதிக்கவில்லை. தேவன் ஆதாமின் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தை சதையினால் அடைக்கிறபோது, ஆதாமின் சரீரத்தில் எந்த வேதனையும் உண்டாகவில்லை. ஆதாம் அப்போது பாவத்தை அறியாத மனுஷனாக இருக்கிறதினால், அவர் சரீர வேதனையை அறியாத மனுஷனாகவும் இருக்கிறார்.

தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வருகிறார் (ஆதி 2:22).

தேவன் ஏவாளை ஆதாமின் தலையிலிருந்து உருவாக்கவில்லை. தேவன் அவ்வாறு செய்திருந்தால் ஏவாள் ஆதாமை ஆளுகை செய்வாள். தேவன் ஏவாளை ஆதாமின் பாதத்திலிருந்தும் உருவாக்கவில்லை. தேவன் அவ்வாறு செய்திருந்தால் ஆதாம் ஏவாளை தன்னுடைய காலில் வைத்து நசுக்கியிருப்பாள்.

தேவனாகிய கர்த்தரோ மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்குகிறார். விலா பகுதி ஆதாமுக்கும் ஏவாளுக்கும் சமமான பகுதியாகயிருக்கிறது. மனுஷனுடைய விலா எலும்பு அவனுடைய கைகளுக்கு கீழே இருக்கிறது. மனுஷன் தன்னுடைய மனைவிக்கு தன் கைகளினால் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். விலா எலும்பு மனுஷனுடைய இருதயத்திற்கு அருகாமையிலிருக்கிறது. மனுஷன் தன்னுடைய மனைவியை தன் இருதயத்தின் நினைவில் வைத்திருக்கவேண்டும்.

விவாகம் கனமுள்ளது. தேவன் மனுஷியை உருவாக்கி அவளை மனுஷனிடத்தில் கொண்டு வருகிறார். அவர்கள் இருவரும் விவாக சம்பந்தத்தில் இணைக்கப்படுகிறார்கள். இந்த விவாகம் மிகவும் கண்ணியமான விவாகம். இந்த விவாகத்தை தேவனாகிய கர்த்தர் தாமே நடத்தி வைக்கிறார். இது பரிசுத்தமான விவாகம்.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். இது ஒரு மெய்யான வாக்கியம். திருமணத்தில் இணைக்கப்படுகிற புருஷனும் மனைவியும் தேவனுடைய கரங்களின் கிரியைகளாயிருக்கிறார்கள். தேவன் தம்முடைய வல்லமையினால் புருஷனையும் ஸ்திரீயையும் உருவாக்குகிறார். இப்போது அவர்கள் இருவரும் தேவனுடைய பிரமாணத்தினால் ஒன்றாக இணைக்கப்படுகிறார்கள்.

ஸ்திரீயானவளுக்கு தேவனே பிதாவாயிருக்கிறார். பிதாவானவர் ஸ்திரீயை மனுஷனிடத்தில் கொண்டு வருகிறார். மனுஷி மனுஷனுக்கு ஏற்ற துணையாயிருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தம். தேவனாகிய கர்த்தர் மனுஷியை தம்முடைய விசேஷித்த கிருபையினால் உருவாக்கியிருக்கிறார். அவர் தம்முடைய விசேஷித்த பராமரிப்பினால், மனுஷியை மனுஷனிடத்தில் கொண்டு வருகிறார். மனுஷி மனுஷனுக்கு ஏற்ற துணையாயிருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தம்.

தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் பிதாவாயிருக்கிறார். ஆதாம் தேவனாகிய கர்த்தரிடத்திலிருந்து ஏவாளைப் பெற்றுக்கொள்கிறார். நாம் தேவனுடைய கிருபைகளையும், வரங்களையும் மனத்தாழ்மையோடும், நன்றியுள்ள இருதயத்தோடும் பெற்றுக்கொள்ளவேண்டும். தேவனுடைய கிருபைக்காகவும், அவருடைய ஞானத்திற்காகவும் நாம் அவருக்கு நன்றி சொல்லவேண்டும்.

ஆதாம் ஏவாளை நேசிக்கிறார். தேவன் மனுஷியை மனுஷனிடத்தில் கொண்டு வந்தபோது, ஆதாம், "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள்" (ஆதி 2:23) என்று சொல்லுகிறார்.

மனுஷி என்பதற்கான எபிரெய வார்த்தை "ஈஷா" என்பதாகும். இது மனுஷன் என்று பொருள்படும் "ஈஷ்" என்னும் வார்த்தையின் பெண்பால் பெயர்ச்சொல். மனுஷி மனுஷனிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறாள். ஆகையினால் ஈஷா என்னும் வார்த்தை "பெண் - ஆண்" என்று பொருள்படுகிறது.

மனுஷி மனுஷனுடைய தலையிலிருந்து எடுக்கப்படவில்லை. அவ்வாறு எடுக்கப்பட்டிருந்தால் மனுஷன் மனுஷியை சர்வாதிகாரியைப்போன்று ஆளுகை செய்வான். மனுஷனுடைய காலிலிருந்தும் மனுஷி எடுக்கப்படவில்லை. அவ்வாறு எடுக்கப் பட்டிருந்தால் மனுஷன் மனுஷியை மதிக்காமல் மிதித்து தள்ளி விடுவான்.

மனுஷனுடைய விலா எலும்பிலிருந்து மனுஷி எடுக்கப்பட்டிருக்கிறாள். ஆகையினால் மனுஷி மனுஷனுக்குச் சமமானவள். மனுஷனுடைய கையின்கீழ் எடுக்கப்பட்டிருக்கிறாள். ஆகையினால் மனுஷன் மனுஷியைப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டும். மனுஷனுடைய இருதயத்திற்கு அருகில் மனுஷி எடுக்கப்பட்டிருக்கிறாள். ஆகையினால் மனுஷன் மனுஷியை நேசிக்க வேண்டும்.

ஆதாம் ஏவாளை மனுஷி என்று அழைப்பது, அவர் ஏவாளை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளம். ஏவாள் மனுஷி என்று அழைக்கப்படுகிறாள். ஆதாம் ஆணாகயிருக்கிறார். ஏவாள் பெண்ணாகயிருக்கிறாள். இந்த வித்தியாசத்தை தவிர, ஆதாமுக்கும் ஏவாளுக்கும் வேறு வித்தியாசம் எதுவுமில்லை. ஆதாம் தேவசாயலாக உருவாக்கப்பட்டதுபோல, ஏவாளும் தேவசாயலாகவே உருவாக்கப்பட்டிருக்கிறாள்.

தேவனாகிய கர்த்தர் ஆதாமையும் ஏவாளையும் விவாக பந்தத்தில் இணைக்கிறார். "இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (ஆதி 2:24) என்று தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.

மனுஷன் பாவத்தை அறியாததற்கு முன்பாகவே, தேவனாகிய கர்த்தர் ஓய்வுநாள் நியமத்தையும், விவாக நியமத்தையும் ஏற்படுத்துகிறார். ஓய்வுநாள் பிரமாணம் சபையின் ஆசீர்வாதத்திற்காக நியமிக்கப்பட்டிருக்கிறது. விவாக பிரமாணம் மனுக்குலத்தின் ஆசீர்வாதத்திற்காக நியமிக்கப்பட்டிருக்கிறது.

"அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா?" (மத் 19:4,5).

விவாக மஞ்சம் கனமுள்ளது. விவாக உறவு மிகவும் வலுவானது. இயற்கையான உறவுகளைவிட, விவாக உறவே மிகவும் பெலமுள்ளது. பிள்ளைகள் விவாகம்பண்ணும்போது, தங்கள் பெற்றோரின் சம்மதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். விவாகம்பண்ணுவதற்கு முன்பாக கர்த்தருடைய சமுகத்தில் ஜெபம்பண்ணி, அவருடைய ஆலோசனைகளையும் வழிநடத்துதல்களையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

ஒருவனுக்கு ஒரு மனைவி என்பது தேவனுடைய பிரமாணம். ஒருவன் பல மனைவிகளை விவாகம்பண்ணி, திருமண உறவை முறித்துப்போடக்கூடாது. திருமணத்தை பலவீனப்படுத்தக்கூடாது. தள்ளுதற்சீட்டு கொடுப்பது கர்த்தருக்கு பிரியமானதல்ல.

"அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே, பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே. ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம்பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" (மல் 2:15).

"தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்; அப்படிப்பட்டவன் கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடுகிறான் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஆகையால் நீங்கள் துரோகம்பண்ணாமல் உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" (மல் 2:16).

புருஷனுக்கும் மனைவிக்கும் இடையேயுள்ள அன்பு வலுவாகயிருக்கவேண்டும்.

"அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான்" (எபே 5:28).

மனுக்குலத்தின் முதல் பெற்றோரான ஆதாமும் ஏவாளும் பரிசுத்தமானவர்களாகவும், பாவம் அறியாதவர்களாகவும் இருந்தபோது அவர்களுடைய விவாகம் நடைபெற்றது. ஆதாமும் அவர் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள் (ஆதி 2:25).

ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்திலிருக்கிறார்கள். அங்கே குளிரும் வெயிலின் உஷ்ணமும் அதிகமாயிருக்கிறது. அவர்களை இயற்கையின் தாக்கங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு, அவர்களுக்கு வஸ்திரம் தேவைப்படவில்லை. அவர்கள் இருவரும் ஏதேன் தோட்டத்திலே நிர்வாணிகளாயிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் வெட்கப்படாதிருக்கிறார்கள். அவர்கள் வெட்கப்படுவதற்கு காரணம் ஒன்றுமில்லை. அவர்களுக்கு வெட்கம் என்றால் என்ன என்று தெரியவில்லை.

மனச்சாட்சியில் பாவமில்லாதவர்களின் முகங்களில் வெட்கமோ, அவமானமோ இருக்காது.

3 அதிகாரம்

முதலாவது பெற்றோரின் பாவமும், பாவத்தினால் வரும் துன்பமும் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதாம் ஏவாளுடைய பாவத்தினால், தேவனுடைய கோபமும், சாபமும் அவர்களுக்கு விரோதமாக வருகிறது. சிருஷ்டிகளின் சமாதானம் சீர்குலைந்துபோகிறது.

தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்து, அது மிகவும் நன்றாயிருக்கிறது என்று சொன்னார். ஆனால் பாவத்தினால் சிருஷ்டிகளின் அழகு மங்கிப்போகிறது. சகலமும் மோசமாயிருக்கிறது. அவை மிகவும் மோசமாயிருக்கிறது.

ஒரு பாவமும் அறியாத, கள்ளம் கபடமில்லாத ஆதாமும் ஏவாளும் சோதிக்கப்படுகிறார்கள் (ஆதி 3:1-5). சோதிக்கப்படுகிறவர்கள் மீறுகிறார்கள் (ஆதி 3:6-8). மீறுகிறவர்களை தேவன் விசாரிக்கிறார் (ஆதி 3:9,10). மீறுகிறவர்கள்மீது குற்றம் சுமத்தப்படுகிறது (ஆதி 3:11-13). குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள் (ஆதி 3:14-19).

தேவன் ஆதாமையும் ஏவாளையும் தண்டித்தாலும், தமது கிருபையினால் அவர்களுக்கு இரக்கம் காண்பிக்கிறார் (ஆதி 3:20,21). தேவன் அவர்களுக்கு இரக்கம் காண்பித்தாலும், ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள் (ஆதி 3:22-24).

மனுக்குலத்திலுள்ள எல்லோரும் பாவம் செய்து தேவமகிமை அற்றவர்களாயிருக்கிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக மனுக்குலத்திற்கு ஆத்தும மீட்பு உண்டாயிருக்கிறது.

சாத்தானின் தந்திரம்
ஆதி 3:1-5

ஆதி 3:1. தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது.

ஆதி 3:2. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்;

ஆதி 3:3. ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்.

ஆதி 3:4. அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை;

ஆதி 3:5. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.

ஏதேன் தோட்டத்திற்கு ஒரு சர்ப்பம் வந்தது. சாத்தான் சர்ப்பத்தைத் தனக்கு ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டான். ஆகையினால் தேவன் அந்தச் சர்ப்பத்தைச் சபித்தார். மற்றப்படி தேவன் தாம் சிருஷ்டித்த எந்தச் சிருஷ்டியையும் சபிக்கமாட்டார். சர்ப்பம் என்பதற்கான எபிரெய வார்த்தை "நாகாஷ்" என்பதாகும்.

வேதாகமத்தில் பிரத்தியட்சமான சர்ப்பத்தைக் குறிப்பதற்கு இந்த எபிரெய வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஆதி 3:1-14; ஆதி 49:17; யாத் 7:15; எண் 21:9; 2இராஜா 18:4; நீதி 30:19; பிர 10:8,11; ஆமோ 5:19; ஆமோ 9:3) சில வசனங்களில் சாத்தான் சர்ப்பமாக வர்ணிக்கப் பட்டிருக்கிறான். சாத்தான் சர்ப்பத்தினுடைய ரூபத்தில் உருவம் மாறி வரமுடியாது. அவன் ஒரு தூதன். இப்பொழுது அவன் ஒரு விழுந்துபோன தூதன் (எசே 28:11-17).

சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. "தந்திரம்" என்பதற்கான எபிரெய வார்த்தை "அவ்ரோம்" என்பதாகும். சாத்தான் ஒருவனைச் சோதிக்கும்போது அவன் தந்திரமாகவே சோதிப்பான். மனுஷனைப் பாவத்தில் விழ வைப்பதற்குச் சாத்தானும், சர்ப்பமும் தந்திரமாக உபாயம் பண்ணினார்கள். சாத்தான் தன்னுடைய வார்த்தைச் சாதுரியத்தினால் மனுஷரைப் பாவத்தில் விழப்பண்ணுகிறான். அதற்குச் சர்ப்த்தைக் கருவியாகப் பயன்படுத்துகிறான் (ஆதி 3:1-6; யோவான் 8:44; 2கொரி 11:3; 1தீமோ 2:14).

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் கட்டுக்கதையோ, மாயமான வார்த்தைகளோ, புராணங்களோ, உருவகக்கதையோ அல்ல. இவையனைத்தும் உண்மைச் சம்பவம். ஒருசில இடங்களில் உவமஉருவக வாக்கியங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

சர்ப்பத்தின் வித்து என்பது இயற்கையான சர்ப்பங்களையே குறிக்கும். இவை இயல்பாகவே மனுஷருடைய விரோதியாகி விட்டன. ஸ்திரீயின் வித்து என்பது தேவனுடைய மனுஷ அவதாரத்தைக் குறிக்கும். (ஆதி 3:15; ஏசா 7:14; ஏசா 9:6-7; ஏசா 11:1; மத் 1; யோவான் 1:14; ரோமர் 1:1-2; கலா 4:4; 1தீமோ 3:16; எபி 2:14-18).

மனுஷன் பாவத்தில் விழுந்த சரித்திர நிகழ்ச்சியைக் கற்பனைக் கதையாக விளக்க வேண்டிய அவசியமில்லை. சர்ப்பம் சாத்தானுடைய கருவியாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. பூமியின் மேலுள்ள மிருகங்களில் சர்ப்பமும் ஒன்று. சகல மிருகங்களிலும் சர்ப்பம் சபிக்கப்பட்டதாக இருக்கிறது. (ஆதி 3:1,14).

தேவனுடைய கரம் நெளிவான சர்ப்ப நட்சத்திரத்தை உருவாக்கிற்று (யோபு 26:13) என்று வேதவசனம் கூறுகிறது. ஆயிரம் வருஷ அரசாட்சியில் சாத்தான் கட்டப்பட்டிருக்கும்போது சர்ப்பம் சபிக்கப்பட்டதாக இருக்கும் (ஏசா 65:25).

லிவியாதான் என்னும் நீண்ட பாம்பு, வலுசர்ப்பம், அந்தப் பழைய பாம்பு ஆகியவை சாத்தானுக்கு அடையாளமானவை (ஏசா 27:1; யோபு 41:34; வெளி 12:3-17; வெளி 20:2) ஏவாளை வஞ்சித்த ஏதேன் தோட்டத்து சர்ப்பமும் சாத்தானுக்கு அடையாளமாகும். (2கொரி 11:3; 1தீமோ 2:14).

இயேசு கிறிஸ்து பேதுருவை "எனக்கு பின்னாக போ சாத்தானே" என்று கூறுகிறார். பேதுருவிடம் சாத்தானுடைய குணம் வெளிப்பட்டதினால் அவ்வாறு கூறுகிறார். (மத் 16:22-23) பாபிலோன், தீரு ஆகிய தேசங்களின் ராஜாக்கள் சாத்தானுக்கு அடையாளமாகக் கூறப்பட்டிருக்கிறார்கள். (ஏசா 14:12-14, எசே 28:11-17). இவர்கள் சாத்தான் அல்ல. இவர்களெல்லாம் சாத்தானின் கருவிகளே.

ஏதேன் தோட்டத்து சர்ப்பம் மிகவும் விசேஷமானது. அதன் குணாதிசயங்களைப் பற்றிய விவரம் வருமாறு :

1. ஒரு காட்டு ஜீவன். (ஆதி 3:1).

2. மற்ற காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் தந்திரமுள்ளது. (ஆதி 3:1).

3. தேவனாகிய கர்த்தர் இதை உண்டாக்கினார். (ஆதி 3:1).

4. இது ஒரு சர்ப்பம். சாத்தான் அல்ல. (ஆதி 3:1).

5. சர்ப்பத்திற்குப் பேசும் ஆற்றல் இருந்தது. (ஆதி 3:1-6).

6. சர்ப்பத்திற்குச் சிந்திக்கும் ஆற்றல் இருந்தது. (ஆதி 3:1-6).

7. சர்ப்பத்திற்கு ஏமாற்றும் ஆற்றல் இருந்தது. (ஆதி 3:1-6).

8. தேவனுடைய திட்டத்தைப் பற்றி சர்ப்பம் தெரிந்து வைத்திருந்தது. (ஆதி 3:1-6).

9. மனுஷன் பாவத்தில் விழுவதற்கு முன்பாக சர்ப்பம் வயிற்றினால் நகராமல், நேராக நடந்திருக்கும் (ஆதி 3:14).

10. மற்ற காட்டு ஜீவன்களுக்கு இது தலையாக இருந்தது. (ஆதி 3:1,14).

11. சர்ப்பம் பகை உண்டாக்கும் தன்மையுடையது. (ஆதி 3:15).

12. ஏதேன் தோட்டத்தில் மனுஷனுக்கு அருகில் இருந்தது. (ஆதி 3:1-15).

13. சர்ப்பம் சம்பாஷணை பண்ணிற்று. (ஆதி 3:1-6).

14. சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டு மிருகங்களிலும் சர்ப்பம் சபிக்கப்பட்டிருக்கிறது. (ஆதி 3:14).

15. மனுஷனை வஞ்சிப்பதற்குச் சாத்தான் சர்ப்பத்தைப் பயன்படுத்தினான். (ஆதி 3:1-19).

தேவன் சர்ப்பத்தை சபிக்கிறார். தேவன் சொன்ன சாபவார்த்தைகளெல்லாம் தீர்க்கதரிசன வார்த்தைகளாகும். அதன் விவரம் வருமாறு:

1. சகல நாட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய். (ஆதி 3:14).

2. சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய் (ஆதி 3:14).

3. உயிரோடிருக்கும் நாளெல்லாம் உன் வயிற்றினால் நகருவாய். (ஆதி 3:14).

4. உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய். (ஆதி 3:14; ஏசா 65:25).

5. உனக்கும் ஸ்திரீக்கும் பகை உண்டாக்குவேன். (ஆதி 3:15).

6. உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன் (ஆதி 3:15)

7. ஸ்திரீயின் வித்து உன் தலையை நசுக்குவார் (ஆதி 3:15; ரோமர் 16:20; வெளி 20:1-10).

8. நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் (ஆதி 3:15; வெளி 1:18).

மேலே கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசன அம்சங்களில் 1 முதல் 6 வரையிலுமுள்ள காரியங்கள் தொடர்ந்து நித்திய காலம் வரையிலும் நிறைவேறிக் கொண்டிருக்கும். கல்வாரி சிலுவையில் சாத்தான் தோற்கடிக்கப் பட்ட போது ஏழாவது அம்சம் ஓரளவு நிறைவேறிற்று. (கொலோ 2:14-17). அர்மகெதோனிலும் (வெளி 19:11-20:3), ஆயிரம்வருஷ அரசாட்சியின் முடிவிலும் (வெளி 20:7-11) இது பூரணமாக நிறைவேறும்.

இந்தத் தீர்க்கதரிசனத்தின் எட்டாவது அம்சம் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப் படும்போது பூரணமாக நிறைவேறிற்று. சாத்தானால் இயேசு கிறிஸ்துவின் குதிங்காலை நசுக்கத்தான் முடிந்தது. சாத்தானால் இயேசுவைக் கொல்லமுடியாது. அவர் நித்தியமானவர். மனுக்குலத்தின் பாவத்திற்குப் பரிகாரமாக இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார். (யோவான் 10:18; அப் 2:23-36). ஆனால் இயேசு கிறிஸ்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும்போது அவன் பூரணமாக நசுங்கிப்போவான். (ஆதி 3:15; கொலோ 2:14-17; ரோமர் 16:20; வெளி 20:7-10).

பிசாசானவன் சோதனைக்காரனாயிருக்கிறான். அவன் ரூபத்திலும் சாயலிலும் ஒரு சர்ப்பத்தைப்போல இங்கு தன்னை வெளிப்படுத்துகிறான். பிசாசானவன் ஏவாளை வஞ்சிக்கிறான். பிசாசானவனும் சாத்தானும் பழைய பாம்பாகிய சர்ப்பம் என்று பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது. அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்" (வெளி 12:9).

சாத்தான் ஒளியின் தூதனாகயிருந்தவன். அவன் மோசம்போக்குகிறவன். அவனுடைய ஆவி மனுஷரை வஞ்சிக்கிற ஆவியாகயிருக்கிறது. சாத்தானுக்கு தேவனுடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கவேண்டும் என்னும் பேராசை உண்டாயிற்று. ஆனால் சாத்தானோ தன்னுடைய பாவத்தினால், தனக்கு கொடுக்கப்பட்டிருந்த ஆதி மேன்மையை இழந்துபோனான். அவன் தேவனுடைய சமுகத்தைவிட்டு விலகினான். சாத்தான் தேவனுக்கு விரோதமாகவும், அவருடைய சிங்காசனத்திற்கு விரோதமாகவும், அவருடைய மகிமைக்கு விரோதமாகவும், கலகம்பண்ணுகிறவனானான்.

தன்னால் மனுஷனை அழிக்க முடியாது என்பது சாத்தானுக்கு நன்றாய்த் தெரியும். ஆனாலும் சாத்தானால் மனுஷனை வஞ்சிக்க முடியும். நம்முடைய முதல் பெற்றோராகிய ஆதாமையும் ஏவாளையும் பாவத்தில் விழத்தள்ளவேண்டும் என்பது சாத்தானுடைய சதித்திட்டம். இதன் மூலமாக சாத்தான் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இடையே பிரிவினை ஏற்படுத்த முயற்சி பண்ணுகிறான். அதோடு அவர்களுக்கும் தேவனுக்கும் நடுவே பிரிவை ஏற்படுத்த திட்டமிடுகிறான்.

ஆதாமும் ஏவாளும் நம்முடைய முதல் பெற்றோராகயிருப்பதினால், அவர்களுடைய பாவமும், அதன் மூலமாக வரும் சாபமும், மனுக்குலத்தார் அனைவருக்கும் கடந்து வருகிறது. சாத்தான் தன்னுடைய தந்திரத்தினால் ஆதாமையும் ஏவாளையும் வஞ்சிக்கிறான். இதன் மூலமாக மனுக்குலமே வஞ்சிக்கப்படுகிறது.

சாத்தான் ஏதேன் தோட்டத்திலே சர்ப்பத்தின் ரூபமாகவும், அதன் சாயலாகவும் வருகிறான். சர்ப்பமானது பார்ப்பதற்கு பளபளப்பாகயிருக்கும். ஆனால் பாம்பின் வாயிலே விஷம் இருக்கும். மனுஷருக்கு வரும் சோதனைகள் எல்லாமே வெளிப்பார்வைக்கு அழகாகவும், அலங்காரமாகவும், பகட்டாகவும் இருக்கும். ஆனால் உள்ளேயோ விஷம் இருக்கும்.

சாத்தான் ஒளியின் தூதனாகயிருப்பதினால், அவனால் சர்ப்பத்தின் வேஷத்தைத் தரித்துக்கொள்ள முடிகிறது. தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருக்கிறது. பாம்பின் தந்திரத்திற்கு ஏராளமான எடுத்துக்காட்டுக்களைச் சொல்ல முடியும்.

சாத்தான் மனுஷரோடு நேரடியாக மோதமாட்டான். அவன் தன்னை வெளிப்படையாக யாருக்கும் காண்பிக்கமாட்டான். தந்திரம் பண்ணுவதும், பொய்சொல்லுவதும் சாத்தானுடைய தந்திரம். அது அவனுடைய சுபாவம்.

சாத்தான் முதலாவதாக ஸ்திரீயை சோதிக்கிறான். ஸ்திரீயானவள் ஏதேன் தோட்டத்திலே இருக்கிறாள். இப்போது ஆதாம் அவளுக்கு அருகாமையில் இல்லை. ஆனால் ஏவாளோ, தேவனாகிய கர்த்தர் தடைபண்ணியிருக்கிற, நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்திற்கு அருகாமையிலிருக்கிறாள்.

சாத்தான் மிகவும் தந்திரமாக ஏவாளை சோதிக்கிறான். ஏவாள் ஒரு ஸ்திரீயாகயிருப்பதினால் அவள் பலவீனமான பாத்திரமாயிருக்கிறாள். ஏவாள் சாத்தானால் எளிதாக வஞ்சிக்கப்படுகிறாள். அவள் தன்னை சாத்தானுடைய சோதனைக்கு ஒப்புக்கொடுக்கிறாள்.

ஏவாள் தனியாகயிருக்கும்போது சாத்தான் அவளோடு பேச்சு கொடுக்கிறான். பொதுவாக விசுவாசிகளுக்கு வரும் சோதனைகளில், ஏராளமான சோதனைகள், அவர்கள் தனிமையிலிருக்கும்போது அவர்களுக்கு வருகிறது. நாம் தனிமையிலிருப்பது சாத்தானுக்கு மிகவும் அநுகூலமாயிருக்கிறது. ஆகையினால் விசுவாசிகளாகிய நாம் பரிசுத்தவான்களின் ஐக்கியத்தில் தரித்திருக்கவேண்டும். அதுவே நமக்கு பெலமாயும் பாதுகாப்பாயும் இருக்கும்.

ஏவாள் ஏதேன் தோட்டத்திலே, நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்திற்கு அருகில் இருக்கிறாள். கர்த்தர் இந்த விருட்சத்தின் கனியைப் புசிக்கக்கூடாது என்று தடைபண்ணியிருக்கிறார். ஆனால் ஏவாளோ தடைபண்ணப்பட்ட விருட்சத்திற்கு அருகாமையிலிருக்கிறாள். ஒருவேளை, ஏவாள் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்திருக்கலாம். அவள் அந்த கனியை உற்றுப்பார்த்து, தன்னுடைய ஆர்வத்தையும், ஆச்சரியத்தையும் தணித்துக்கொண்டிருந்திருக்கலாம்.

கர்த்தர் தடைபண்ணியிருக்கும் விருட்சத்தின் கனியை புசிக்காதவர்கள், தடைபண்ணப்பட்ட விருட்சத்திற்கு அருகாமையில் வரக்கூடாது. சாத்தான் நம்மை சோதிக்கக்கூடாது என்று நினைத்தால், நாம் சோதனைக்களத்திற்கு அருகாமையில் வரக்கூடாது. சோதனையான காரியங்களை விட்டு விலகிப்போய்விடவேண்டும்.

சாத்தான் முதலாவதாக ஏவாளை சோதிக்கிறான். அதன்பின்பு அவள் மூலமாக ஆதாமை சோதிக்கவேண்டுமென்று திட்டமிடுகிறான். சாத்தான் மிகவும் தந்திரமாக யோசித்துப் பார்த்து, ஏவாளை வஞ்சிக்கிறான். ஏவாள் தடைபண்ணப்பட்ட கனியைப் புசிக்கவேண்டும். இதுவே சாத்தானின் நோக்கம். அந்தக் கனியை ஏவாளை எப்படி புசிக்க வைப்பது என்று சாத்தான் தந்திரமாக திட்டமிடுகிறான்.

சாத்தான் ஏவாளை வஞ்சிப்பதற்காக எப்படிப்பட்ட வழிமுறைகளை பயன்படுத்தினானோ, அதே வழிமுறைகளையே, இக்காலத்திலும் விசுவாசிகளை வஞ்சிப்பதற்கு பயன்படுத்துகிறான்.

சாத்தான் ஸ்திரீயை நோக்கி, "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ" (ஆதி 3:1) என்று கேட்கிறான். இதே கேள்வியையே சாத்தான் இன்றும் விசுவாசிகளிடத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறான். அவன் ஒரு காரியத்தை நம்மிடத்தில் சொல்லி, அது பாவமா, இல்லையா என்னும் கேள்வியைக் கேட்கிறான். அந்தக் காரியம் பாவம் என்று நாம் சொன்னாலும், அந்தப் பாவத்தினால் ஒரு ஆபத்தும் வராது என்று சாத்தான் நம்மிடத்தில் சாக்குபோக்குகளை சொல்லுவான்.

சாத்தான் ஸ்திரீயை நோக்கி, "நீங்கள் சாகவே சாவதில்லை" (ஆதி 3:4) என்று சொல்லுகிறான். தேவனோ இது சம்பந்தமான தம்முடைய கட்டளையை மிகவும் தெளிவாக சொல்லியிருக்கிறார்.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி, "நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" (ஆதி 2:17) என்று தெளிவாக கட்டளையிட்டிருக்கிறார். ஆனால் சாத்தானோ ஸ்திரீயை நோக்கி, "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று பொய் சொல்லுகிறான்.

சாத்தான் ஸ்திரீயை வஞ்சிப்பதற்கு மேலும் ஒரு தந்திரமான வார்த்தையைப் பேசுகிறான். அந்தக் கனியைப் புசிக்கும் நாளிலே அவர்களுக்கு நன்மை உண்டாகும் என்று பொய்சொல்லுகிறான்.

சாத்தான் ஸ்திரீயை நோக்கி, "நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்" (ஆதி 3:5) என்று பொய்சொல்லுகிறான்.

பாவத்தின் சம்பளம் மரணம். பாவத்தினால் நமக்கு சாபம் வரும். இதுவே சத்தியம். சாத்தானோ சத்தியத்தைப் புரட்டுகிறான். பாவத்தினால் மரணமும் சாபமும் வராது என்று சாத்தான் பொய்சொல்லுவது மாத்திரமல்ல, பாவம் செய்தால் நமக்கு ஆசீர்வாதம் வரும் என்றும் ஏமாற்று வார்த்தைகளை சொல்லுகிறான். இவை சாத்தானுடைய பொதுவான தந்திரங்களாகும்.

அன்று ஏதேன் தோட்டத்திலே ஏவாளை வஞ்சிப்பதற்காக சாத்தான் பயன்படுத்தின அதே தந்திரங்களை, இன்று நம்மை வஞ்சிப்பதற்காகவும் பயன்படுத்துகிறான். சாத்தானுடைய தந்திரங்களும், அவனுடைய மாய்மாலங்களும் நாம் அறியாததல்ல. நாம் சாத்தானுடைய வஞ்சக எண்ணத்தை அறிந்து, அவனுடைய சோதனைகளுக்கு விலகவேண்டும்.

சாத்தான் ஸ்திரீயைப் பார்த்து, அந்த விருட்சத்தின் கனியைப் புசிப்பது பாவமா அல்லது பாவமில்லையா என்று கேட்கிறான். அந்த விருட்சத்தின் கனி மெய்யாகவே தடைபண்ணப்பட்டிருக்கிறதா என்னும் சந்தேகமான கேள்வியையும் சாத்தான் ஸ்திரீயினிடத்தில் கேட்கிறான்.

சாத்தான் ஸ்திரீயை நோக்கி, "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ" என்று கேட்கிறான். சாத்தான் கேட்கும் இந்த கேள்வியிலிருந்து, அவனுக்கும் ஸ்திரீக்கும் ஏற்கெனவே ஒரு சம்பாஷணை நடைபெற்றிருக்கிறது என்பது தெரியவருகிறது. சாத்தான் அந்த சம்பாஷணையின் தொடர்ச்சியாக அவளிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்கிறான்.

சாத்தானுக்கு தேவனுடைய திட்டமும் தெரியாது. அவருடைய சித்தமும் தெரியாது. தேவனுடைய திட்டத்தை அறிந்துகொள்வதற்காக, சாத்தான் ஸ்திரீயினிடத்தில், "கனியைப் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ" என்று கேட்கிறான். தேவன் என்ன சொன்னார் என்பது சாத்தானுக்கு தெரியாது.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி, "நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம்" (ஆதி 2:16,17) என்று சொன்னார்.

ஆனால் சாத்தானோ தேவன் சொன்னதை குழப்புகிறான். தேவன் சொல்லாததையும், அவர் சொன்னதுபோல பாவித்து, சாத்தான் ஸ்திரீயினிடத்தில் "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ" என்று கேட்கிறான். தேவன் தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிப்பதற்கு தடைபண்ணவில்லை. அவர் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை மாத்திரம் புசிப்பதற்கு தடைபண்ணியிருக்கிறார்.

ஸ்திரீயோ நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்திற்கு அருகாமையிலிருக்கிறாள். ஆதாமும் இப்போது ஏவாளுக்கு அருகாமையில் இல்லை. ஸ்திரீயானவள் தனிமையிலிருக்கிறாள். அவள் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறாள். இந்த சூழ்நிலை சாத்தானுக்கு சாதகமாயிருக்கிறது. சாத்தான் ஸ்திரீயின் பலவீனத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்துகிறான்.

சாத்தான் தேவனுடைய தெய்வீக பிரமாணத்தை அவமதிக்கிறான். ஸ்திரீயின் மனதிலே அதுபற்றி சந்தேகத்தை ஏற்படுத்த முயற்சி பண்ணுகிறான். தேவனுடைய பிரமாணம் நியாயமற்றது என்பதுபோல சாத்தான் சொல்லுகிறான். தேவன் தம்முடைய வார்த்தைகளை உறுதியாக சொல்லுகிறார். ஆனால் சாத்தானோ தேவனுடைய வார்த்தையில் உறுதியுமில்லை, நிச்சயமுமில்லை என்பதுபோல பேசி, மனுஷரை சோதிக்கிறான்.

சாத்தான் ஸ்திரீயை சோதித்தாலும், அவளுக்கு கர்த்தருடைய கட்டளை தெளிவாக தெரிந்திருக்கிறது. ஸ்திரீயானவள் சாத்தானுக்கு தேவனுடைய தெய்வீக கட்டளையை அறிவிக்கிறாள்.

ஸ்திரீயானவள் தேவனுடைய தெய்வீக கட்டளைக்கு மதிப்பு கொடுக்கிறாள். ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து, "நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார்" (ஆதி 3:2,3) என்று சொல்லுகிறாள்.

ஸ்திரீயானவள் சாத்தானிடத்தில் பேசுவது அவளுடைய பலவீனம். நாம் சோதனையோடு சகவாசம் வைத்துக்கொள்ளக்கூடாது. சோதனையை விட்டு விலகிப்போய்விடவேண்டும். ஸ்திரீயானவளோ சாத்தானை விட்டு விலகிப்போவதற்கு பதிலாக, அவனோடு சம்பாஷணை பண்ணுகிறாள்.

அதிகமான பேச்சுக்கள் எப்போதுமே ஆபத்தானது. சாத்தான் ஸ்திரீயினிடத்தில் பேச ஆரம்பிக்கிறான். அவன் வஞ்சகமான குணமுள்ளவன். சாத்தான் ஆரம்பத்திலேயே பொய் சொல்லுகிறான். ஸ்திரீயானவளுக்கு சத்தியம் தெரியும். அவளுக்கு கர்த்தருடைய தெய்வீக கட்டளை தெரியும். ஏவாள் தனக்கு தெரிந்திருக்கும் சத்தியத்தில் நிலைத்திருக்கவேண்டும். ஆனால் ஸ்திரீயானவளோ சாத்தானோடு சம்பாஷணைபண்ண ஆரம்பித்துவிடுகிறாள். நாம் சாத்தானோடு சகவாசம் வைத்துக்கொள்வது நமக்கு எப்போதுமே ஆபத்தானது.

ஏதேன் தோட்டத்திலே ஆதாமும் ஏவாளும் பாவம் அறியாதவர்களாக, கள்ளம் கபடமில்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு பொய்சொல்லத் தெரியாது. ஆகையினால் ஸ்திரீயானவள் சாத்தானிடத்தில் உண்மையைப் பேசுகிறாள். தேவன் தங்களுக்கு சொன்ன கட்டளையை, ஸ்திரீயானவள் சாத்தானுக்கு அப்படியே சொல்லுகிறாள்.

சாத்தான் ஸ்திரீயைப் பார்த்து "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியைப் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ" என்று கேட்டபோது, ஸ்திரீயானவள் அவனுக்கு பிரதியுத்தரமாக, "நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளை புசிக்கலாம்" என்று சொல்லுகிறாள்.

தேவன் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கக்கூடாது என்று சொன்னார். ஸ்திரீயானவள் தேவன் சொன்ன இந்தக் கட்டளையையும் சாத்தானுக்கு சொல்லுகிறாள். அவள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறாள். தேவன் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கவேண்டாம் என்று சொன்னதினால், தான் அதை புசிப்பதில்லை என்றும், அதை தொடுவதில்லை என்றும் ஸ்திரீயானவள் தீர்மானமாய்ச் சொல்லுகிறாள்.

நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கக்கூடாது என்பது தேவனுடைய கட்டளை. "அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" என்றும் தேவன் ஆதாமுக்கு கட்டளையிட்டிருக்கிறார். தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாவிட்டால் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் மரணம் வரும். தேவன் தடைபண்ணியிருப்பதை புசியாமலிருப்பது தங்களுக்கு நன்மையானது என்று ஆதாமும் ஏவாளும் தீர்மானமாயிருக்கிறார்கள்.

சாத்தான் ஸ்திரீயின் வார்த்தைகளை பொறுமையோடு கேட்கிறான். அவள் தன் வார்த்தைகளை சொல்லி முடித்தவுடன், சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி, "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று சொல்லுகிறான். சாத்தான் ஸ்திரீயின் மனதிலுள்ள பயத்தை தன்னுடைய வஞ்சக வார்த்தையினால் அகற்றுவதற்கு முயற்சிபண்ணுகிறான்.

நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிப்பதினால், அவர்களுக்கு ஒரு ஆபத்தும் வராது என்று சாத்தான் விவாதம் பண்ணுகிறான். அந்த விருட்சத்தின் கனியைப் புசிப்பது தேவனுடைய கட்டளையை மீறுகிற செயல். அவர்கள் தேவனுடைய கட்டளையை மீறினாலும், தேவன் அவர்களுக்கு சொன்ன பிரகாரம், அவர்கள் செத்துப்போகமாட்டார்கள் என்று சாத்தான் சொல்லுகிறான். தேவன் அவர்களுக்கு இவ்வளவு கடினமான தண்டனையைக் கொடுக்கமாட்டார் என்பது சாத்தானுடைய விவாதம். தேவன் தண்டிப்பதாக சொன்னாலும், அவர் தம்முடைய வார்த்தையின் பிரகாரம் அவர்களை தண்டிக்கமாட்டார் என்று சாத்தான் சொல்லுகிறான்.

சாத்தான் ஸ்திரீயை நோக்கி, "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று சொன்ன வாக்கியத்திற்கு, "நீங்கள் செத்துப்போவீர்கள் என்னும் நிச்சயமில்லை" என்று வேதபண்டிதர்களில் சிலர் அர்த்தம் சொல்லுகிறார்கள். சாத்தான் மனுஷரை சோதிக்கும்போது, முதலாவதாக மனுஷருடைய மனதிலே சத்தியத்தை சந்தேகப்பட வைக்கிறான். அதன் பின்பு சாத்தான் மனுஷரை சத்தியத்தை மறுதலிக்க வைக்கிறான்.

சாத்தான் மனுஷரை சோதிக்கும்போது, மனுஷருடைய மனதிலே குழப்பம் ஏற்படும். அவர்கள் சத்தியத்தை நம்பாமல், அதைப்பற்றி விவாதம்பண்ண ஆரம்பிப்பார்கள். தங்கள் மனதிற்குள் தேவையில்லாத கேள்விகளையெல்லாம் கேட்டு, தங்களுக்குள் குழப்பமடைவார்கள். முடிவிலே அவர்கள் சத்தியத்தை சந்தேகப்பட்டு, அதை மறுதலித்துவிடுவார்கள். சத்தியத்தை மறுதலிக்கிறவர்கள் தேவனையும் மறுதலிப்பார்கள். சத்தியம் இல்லை என்று சொல்லுகிறவர்கள் தேவனும் இல்லை என்று சொல்லுவார்கள்.

சாத்தான் ஸ்திரீயை நோக்கி, "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று சொல்லுகிறான். அவன் தேவனுடைய வார்த்தைக்கு முரண்பட்டு பேசுகிறான். "அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்" என்று தேவன் உறுதியாய் சொல்லியிருக்கும்போது, சாத்தான் ஸ்திரீயை நோக்கி, "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று சொல்லுகிறான். சாத்தானுடைய வார்த்தைகள் எப்போதுமே சத்தியத்திற்கு முரணாக இருக்கும்.

ஏவாள் தடைபண்ணப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்தால், அவள்தான் செத்துப்போவாள். அவள் அந்தக் கனியைப் புசிப்பதினால் சாத்தானுக்கு ஒரு ஆபத்தும் வராது. இதுவே சாத்தானுடைய தந்திரம். சாத்தான் எப்போதுமே நமக்கு ஆபத்து வரும் வண்ணமாகவே நம்மை சோதிப்பான். நாம் பாவத்தில் விழுந்தால் நமக்குத்தான் மரணம் வரும். நம்முடைய பாவத்தினால் சாத்தானுக்கு ஒரு ஆபத்தும் வராது.

சாத்தான் எப்போதுமே நம்முடைய ஜீவனோடும், நம்முடைய பாதுகாப்போடும் விளையாடுகிறான். சாத்தானுடைய சோதனைக்கு கீழ்ப்படிந்து பாவம் செய்கிறவர்கள், தங்களுக்கு தாங்களே அழிவை வரவழைத்துக்கொள்கிறார்கள்.

சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி, "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று சொல்லுகிறான். ஒருவேளை அவர்கள் கர்த்தர் சொன்ன பிரகாரம் செத்துப்போனாலும், சாத்தான் சாகமாட்டான். தண்டனை அவர்களுக்குத்தான் வரும்.

சாத்தான் ஸ்திரீயை நோக்கி, மேலும் சில இச்சக வார்த்தைகளை சொல்லுகிறான். "நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்" (ஆதி 3:5) என்று சாத்தான் ஸ்திரீயினிடத்தில் சொல்லுகிறான்.

சாத்தான் ஸ்திரீயைப் பார்த்து "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று சொல்லுவதினால் மாத்திரம், அவள் தன்னுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியமாட்டாள் என்பது சாத்தானுக்கு நன்றாய்த் தெரியும். ஸ்திரீயானவள் இப்போது ஜீவனோடிருக்கிறாள். அந்தக் கனியைப் புசித்த பின்பும், அவள் ஜீவனோடிருப்பாள் என்று சாத்தான் சொல்லுகிறான். இதனால் ஸ்திரீக்கு எந்த ஆதாயமும் இல்லை என்பது சாத்தானுக்கு தெரியும். ஏற்கெனவே ஜீவனோடிருந்தவள், இப்போது தொடர்ந்து ஜீவனோடிருக்கிறாள். இதில் ஸ்திரீக்கு விசேஷித்த நன்மை எதுவும் ஏற்படவில்லை.

தேவன் தடைபண்ணின விருட்சத்தின் கனியைப் புசித்தால், அவள் சாகாமலிருப்பது மாத்திரமல்ல, அவளுக்கு அதிக நன்மைகளும் உண்டாகும் என்று சாத்தான் ஆசை வார்த்தைகளை சொல்லுகிறான். பாவம் செய்கிறவர்கள் தங்களுக்கு ஆதாயம் கிடைக்கும் என்று எதிர்பார்த்து பாவம் செய்கிறார்கள். தங்களுக்கு ஒரு ஆதாயமும் வரவில்லையென்றால், நம்மில் அநேகர் பாவம் செய்யமாட்டார்கள்.

தேவன் தடைபண்ணின விருட்சத்தின் கனியைப் புசித்தால், அவர்களுக்கு இரண்டு ஆதாயங்கள் உண்டாகும் என்று சாத்தான் ஸ்திரீயை நோக்கி ஆசை வார்த்தைகளை சொல்லுகிறான். அவையாவன:

1. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும்

2. நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள்.

ஆதாமும் ஏவாளும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்தால், அவர்கள் இப்போதிருக்கும் நிலமையிலிருந்து உயர்ந்த நிலமைக்குப் போவார்கள் என்று சாத்தான் ஆசை வார்த்தைகளை சொல்லுகிறான். அவர்கள் இருவரும் இப்போது பாவமில்லாமல் பரிசுத்தமாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்குள் சந்தோஷமாயும் திருப்தியாயும் இருக்கிறார்கள்.

சாத்தானோ ஸ்திரீயை நோக்கி, "நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும்" என்று சொல்லுகிறான். அவர்களுடைய கண்கள் இப்போது திறக்கப்பட்டுத்தான் இருக்கிறது. ஆனாலும் அந்தக் கனியைப் புசித்தால், அவர்களுடைய கண்களுக்கு விசேஷித்த மேன்மையும், அதிக வல்லமையும், ஏராளமான சந்தோஷமும் உண்டாகும் என்று சாத்தான் பொய் சொல்லுகிறான். அவர்கள் இருவரும் இப்போது பார்ப்பதைவிட, இன்னும் ஏராளமான காரியங்களையும், புதிய காரியங்களையும் பார்ப்பார்கள் என்று சாத்தான் அவர்களை ஏமாற்றுகிறான்.

அவர்களுடைய கண்கள் திறக்கப்படும் என்று சொன்னது மாத்திரமல்ல, "நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே, நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போலிருப்பீர்கள்" என்றும் சாத்தான் ஸ்திரீயினிடத்தில் பொய் சொல்லுகிறான். தேவர்கள் என்னும் பெயருக்கு எபிரெய பாஷையில் "எலோகிம்" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எலோகிம் என்னும் பெயருக்கு "வல்லமையுள்ள தேவன்" என்று பொருள்.

தேவன் மாத்திரமே சர்வஞானமும், சர்வவல்லமையுமுள்ளவர். அவர்கள் அதைப் புசிக்கும் நாளிலே, அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவர்களும் சர்வஞானமுள்ளவர்களாக இருப்பார்கள் என்றும், அவர்கள் தேவர்களைப்போலாகி, சர்வவல்லமையுள்ளவர்களாக இருப்பார்கள் என்றும் சாத்தான் ஸ்திரீக்கு ஆசை வார்த்தைகளை சொல்லுகிறான்.

அவர்கள் தடைபண்ணப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசிக்கும் நாளிலே, அவர்கள் நன்மை தீமை அறிந்துகொள்வார்கள் என்றும் சாத்தான் ஸ்திரீயினிடத்தில் சொல்லுகிறான். அவர்கள் எதையெல்லாம் அறிந்துகொள்ளவேண்டும் என்று ஆசைப்படுகிறார்களோ, அதையெல்லாம் அவர்கள் அறிந்துகொள்வார்கள். அவர்கள் அறியாத இரகசியம் எதுவுமே இருக்காது.

சாத்தான் ஸ்திரீயை சோதிக்கும்போது, தன்னுடைய வஞ்சக வார்த்தைகளை உறுதிபண்ணுவதற்கு, தேவனுடைய பெயரை பயன்படுத்துகிறான். சாத்தான் ஸ்திரீயினிடத்தில் ஆசை வார்த்தைகளை சொல்லிய பின்பு, "இதை தேவன் அறிவார்" என்று சொல்லுகிறான். சாத்தான் தேவனுடைய நாமத்தை வீணிலே பயன்படுத்துகிறான்.

தேவன் தடைபண்ணியிருக்கிற விருட்சத்திற்கு, "நன்மை தீமை அறியத்தக்க விருட்சம்" என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இந்தப் பெயருக்கும், அந்த விருட்சத்தின் சுபாவத்திற்கும் சம்பந்தமில்லை. ஆனால் சாத்தானோ மிகவும் தந்திரமாக, அந்த விருட்சத்தின் பெயரும், அதின் சுபாவமும் ஒத்திருப்பதாக பொய்சொல்லுகிறான். "நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே, நன்மை தீமை அறிந்துகொள்வீர்கள்" என்று சாத்தான் வஞ்சகமான வார்த்தைகளை சொல்லுகிறான்.

சாத்தான் ஸ்திரீக்கு ஆசை வார்த்தைகளை சொல்லிவிட்டு, அந்த வார்த்தைகள் தாமதமில்லாமல் உடனே நிறைவேறும் என்றும் பொய்சொல்லுகிறான். "நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே" தான் சொல்லுகிற காரியங்களெல்லாம் அவர்களுக்கு நடைபெறும் என்று சாத்தான் பொய்சொல்லுகிறான்.

அவர்கள் அந்தக் கனியைப் புசித்தவுடனேயே, அவர்களுடைய ஜீவியத்தில் உடனடி மாற்றமுண்டாகும் என்றும், அவர்கள் உடனே தேவர்களைப்போல இருப்பார்கள் என்றும் சாத்தான் ஆசையான வார்த்தைகளை பொய்யாய்ச் சொல்லுகிறான்.

சாத்தானுடைய வஞ்சக வார்த்தைகளில் அவனுடைய சதித்திட்டம் வெளிப்படுகிறது. ஆதாமும் ஏவாளும் இப்போது கர்த்தருக்குள் சந்தோஷமாகவும், திருப்தியாகவும் இருக்கிறார்கள். சாத்தானோ அவர்களிடத்தில் தன்னுடைய வஞ்சக வார்த்தைகளைப்பேசி, அவர்கள் தற்போதிருக்கும் நிலையில், அவர்களுடைய மனதிலே திருப்தி ஏற்படாத ஒரு சூழ்நிலையை உண்டுபண்ணுகிறான். இதனால் அவர்கள் தற்போதிருக்கும் நிலையைவிட, ஒரு உயர்ந்த நிலைக்கு வரவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்.

சாத்தான் அவர்களுடைய மனதிலே பேராசையை ஏற்படுத்துகிறான். தேவன் ஆதாமையும் ஏவாளையும் மனுஷனாகவும் மனுஷியாகவும் உருவாக்கியிருக்கிறார். அவர்களோ தாங்கள் மனுஷராயிருப்பதற்கு பதிலாக, தேவர்களாயிருக்கவேண்டும் என்று பேராசைப்படுகிறார்கள். தாங்கள் தேவர்களாயிருப்பதற்கு தங்களுக்கு தகுதியிருக்கிறது என்றும் அவர்கள் நினைக்கிறார்கள்.

தேவனே மனுஷனையும் மனுஷியையும் உருவாக்கினார். தேவன் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக அவர்களை மனுஷனாகவும், மனுஷியாவும் உருவாக்கியிருக்கிறார். தாம் உருவாக்கின மனுஷரைக்குறித்து தேவனுக்கு கரிசனையும், நல்ல நோக்கமுமுள்ளது.

ஆனால் தேவனுக்கு ஆதாமைக் குறித்தும் ஏவாளைக் குறித்தும் நல்ல நோக்கமோ, நல்ல திட்டமோ இல்லை என்று சொல்லி சாத்தான் ஸ்திரீயை வஞ்சிக்கிறான். நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்தால் அவர்களுக்கு நன்மை உண்டாகும் என்றும், ஆனால் தேவனோ அவர்களுக்கு நன்மை உண்டாகக்கூடாது என்றும் நினைத்து, அவர்கள் அதைப் புசிக்கக்கூடாது என்று தடைபண்ணியிருக்கிறார் என்று சாத்தான் அவர்களிடத்தில் பொய்சொல்லுகிறான்.

சாத்தான் ஸ்திரீயினிடத்தில் இச்சக வார்த்தைகளை பொய்யாய்ச் சொல்லுகிறான். அதைப் புசிக்கும் நாளிலே அவர்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், அவர்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல இருப்பார்கள் என்றும் பொய்சொல்லுகிறான். தான் சொன்ன பொய்யை உண்மையாக்குவதற்காக, "இதை தேவனும் அறிவார்" என்று மேலும் ஒரு பொய்யை சொல்லுகிறான். தேவனுக்கு இவையெல்லாம் தெரிந்தும், அந்தக் கனியைப் புசிக்கக்கூடாது என்று அவர் சொல்லுகிறார், ஆகையினால் தேவனுக்கு அவர்களைக்குறித்து நல்ல நோக்கமோ, நல்ல திட்டமோ இல்லை என்று சாத்தான் தன்னுடைய வஞ்சகமான வார்த்தைகளைப் பேசுகிறான்.

சாத்தான் சொல்லுகிற வார்த்தை தேவதூஷணமான வார்த்தை. தேவனுடைய வல்லமையை தூஷிக்கக்கூடாது. தேவனாகிய கர்த்தரை ஏளனம்பண்ணக்கூடாது. மனுஷன் தம்முடைய நிலமைக்கு உயர்ந்துவிடுவானோ என்று, தேவன் பயப்படுகிறவரல்ல. சர்வசிருஷ்டிகராகிய தேவன், தம்முடைய சிருஷ்டிகளைப் பார்த்து, பயந்து நடுங்குகிற தேவனல்ல.

சாத்தான் தேவனுடைய நன்மையான சுபாவத்திற்கு விரோதமாகப் பேசுகிறான். தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்து, அவை மிகவும் நல்லது என்று கண்டார். அவை நன்றாயிருக்கவேண்டும் என்பது தேவனுடைய விருப்பம். தேவன் தம்முடைய தெய்வீக கிருபையினாலும், தெய்வீக பராமரிப்பினாலும், தம்முடைய சிருஷ்டிகளின் தேவைகளையெல்லாம் சந்திக்கிறார். அவை ஆனந்தமாயிருப்பதைப் பார்த்து தேவனும் சந்தோஷப்படுகிறார். ஆனால் சாத்தானோ தேவனுடைய நன்மையான சுபாவத்தைக் குற்றப்படுத்துகிறான். மனுஷன் நன்றாயிருப்பது தேவனுக்கு பிடிக்கவில்லை என்று பொய் சொல்லுகிறான்.

ஆதாமும் ஏவாளும் சாத்தானுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால், அவர்கள் தேவனுடைய அன்பை விட்டு விலகிப்போகவேண்டியதுவரும். தேவனுடைய அன்பை விட்டு விலகுகிறவர்கள், தேவனை விட்டே பிரிந்துபோய்விடுவார்கள். சாத்தான் இதை எதிர்பார்த்துத்தான் ஸ்திரீயானவளை சோதிக்கிறான். ஆதாமும் ஏவாளும் தேவனுடைய அன்பில் நிலைத்திருக்கக்கூடாது. அவர்கள் தேவனுடைய அன்பையும், அவரையும் சந்தேகப்படவேண்டும். அவர்கள் தேவனைவிட்டுப் பிரிந்துவிடவேண்டும். இதுவே சாத்தானுடைய சதித்திட்டம். சாத்தான் நம்முடைய முதல் பிதாக்களுக்கு மிகவும் ஆபத்தான கண்ணியை விரிக்கிறான்.

சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி, "நீங்கள் தேவர்களைப்போல் இருப்பீர்கள்" என்று சொல்லுகிறது. மனுஷரை வஞ்சிப்பதற்குச் சாத்தான் பயன்படுத்தும் மிகப்பெரிய கருவி புகழ்ச்சியும், பேராசையுமாகும். மனுஷன் தன்னைத் தேவனாக்கிக் கொள்ள முடியும் என்று சாத்தான் வஞ்சிக்கிறான். இந்த வசனத்தில் "தேவர்கள்" என்று பன்மையில் கூறப்பட்டிருப்பது தேவனுடைய திரித்துவப் பண்பை விளக்குகிறது. "ஏலோ" என்பது தேவன் - ஒருமை. "ஏலோகிம்" என்பது தேவர்கள் - பன்மை.

தேவனுக்குத் தீமையைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவரால் பாவம் செய்ய முடியாது. அவர் மனுஷரிடத்தில்தான் தீமையையும், பாவத்தையும் கண்டு அதைப் பற்றித் தெரிந்து கொள்கிறார்.

ஏவாள், ஆதாமின் மீறுதல்
ஆதி 3:6

ஆதி 3:6. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.

சாத்தானுக்கு ஸ்திரீயை சோதிக்கும் முயற்சியில் வெற்றி உண்டாயிற்று. சாத்தானுடைய தந்திரம் நிறைவேறுகிறது. ஏவாள் சாத்தானுடைய வார்த்தையினால் வஞ்சிக்கப்படுகிறாள். அவள் தேவனுடைய கட்டளையை மீறுகிறாள்.

நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிப்பதினால் தனக்கு ஒரு தீங்கும் வராது என்று ஏவாள் நினைக்கிறாள். தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களைப்போல, நன்மை தீமை அறியத்தக்க விருட்சமும் ஒரு சாதாரண விருட்சம் என்று ஏவாள் நினைக்கிறாள். மற்ற விருட்சங்களின் கனியைப்போல, இந்த விருட்சத்தின் கனியும் சுவையாகயிருக்கும் என்று ஏவாள் நினைக்கிறாள்.

தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனிகளையும் புசிப்பதற்கு தடைபண்ணாத தேவன், இந்த விருட்சத்தின் கனியைப் புசிப்பதற்கு ஏன் தடைபண்ணினார் என்னும் சந்தேகம் ஏவாளின் மனதில் உண்டாயிற்று. ஏவாள் சோதிக்கப்படுகிறாள். அவள் தன்னுடைய மனதின் பொல்லாத சிந்தனையினால் வஞ்சிக்கப்படுகிறாள்.

ஏவாளைப்போலவே நாமும் பல சமயங்களில் வஞ்சிக்கப்படுகிறோம். நம்முடைய மனதின் தீயஎண்ணங்கள் நம்மை வஞ்சிக்கிறது. நம்முடைய வாஞ்சைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்னும் பேராசையினால் நாம் வஞ்சிக்கப்படுகிறோம்.

தேவன் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை தடைபண்ணியதினால், ஏவாளுக்கு அந்த விருட்சத்தின்மீது மிகுந்த ஆசை உண்டாயிற்று. இந்த சுபாவம் மனுஷருக்குள் காணப்படும் விநோதமான சுபாவமாகும். நம்முடைய மாம்சத்தில் இதுபோன்ற விநோத சுபாவம் காணப்படுகிறது. மாம்சத்தின் இந்த சுபாவம், ஆவியின் சுபாவத்திற்கு முரண்பாடாயிருக்கிறது.

நமக்கு எது தடைபண்ணப்பட்டிருக்கிறதோ அல்லது நமக்கு எது கிடைக்கவில்லையோ, அதன்மீது நாம் அதிகமாய் ஆசைப்படுகிறோம்.

ஏதேன் தோட்டத்திலே ஏராளமான விருட்சங்கள் இருக்கிறது. அந்த விருட்சங்களின் கனியைவிட, நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனி தனக்கு அதிகமான நன்மையையும், அதிகமான அறிவையும் கொடுக்கும் என்று ஏவாள் நினைக்கிறாள். இந்த விருட்சத்தின் கனியைப் புசித்தால், தனக்கு அதிகமான ஞானம் கிடைக்கும் என்று ஏவாள் ஆசைப்படுகிறாள்.

தேவனாகிய கர்த்தர் நமக்குத் தேவையான ஞானத்தையும் அறிவையும் கொடுத்திருக்கிறார். தேவையில்லாத அறிவு நமக்கு எப்போதுமே ஆபத்தானது. அதிகமான அறிவை சிலர் அதிக ஞானம் என்று வியாக்கியானம் பண்ணுகிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட அறிவு நமக்கு தேவையற்ற அறிவாகவே இருக்கும். அது நமக்கு நன்மை செய்வதற்கு பதிலாக தீமை செய்யும்.

மனுஷரில் அநேகர் தங்களுடைய மிகுந்த அறிவினால் அழிந்துபோயிருக்கிறார்கள். அவர்கள் தேவனுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அறிவுக்கும் மனுஷஞானத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து மெய்யான ஆசீர்வாதத்தை இழந்துவிடுகிறார்கள்.

கர்த்தர் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் நல்ல அறிவைக் கொடுத்திருக்கிறார். அவர்களுக்கு தேவனைப்பற்றியும், இந்த உலகத்தைப்பற்றியும் அதிகமாய்த் தெரிந்திருக்கிறது. இந்த அறிவே அவர்களுக்குப் போதுமானது. தேவன் தங்களுக்கு போதுமான அறிவை கொடுத்திருக்கிறார் என்பதை, ஆதாமும் ஏவாளும் அறிந்துகொள்ளவில்லை. இதனால் தங்களுக்கு கூடுதல் அறிவு வேண்டும் என்னும் ஆசை அவர்களுடைய மனதில் உண்டாயிற்று.

சாத்தான் ஏவாளை வஞ்சிக்கிறான். ஏவாள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் அதை மீறுகிறாள். பூமியில் வாசம்பண்ணுகிறவர்கள் பரலோகத்தை நோக்கி வரவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஆனால் பூமியிலிருக்கிற பாவிகளோ, பரலோகத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஏவாளும் கர்த்தருடைய கற்பனைக்கு கீழ்ப்படியாமல் மீறுகிறாள். அவள் தன்னுடைய ஸ்தானத்திலிருந்து சறுக்கி கீழே விழுகிறாள்.

ஏவாளின் பாவம் இந்த வசனத்தில் ஒவ்வொன்றாக சொல்லப்பட்டிருக்கிறது. "அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்" (ஆதி 3:6).

ஸ்திரீயானவள் கண்டாள். பறித்தாள். புசித்தாள். தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான். இதுவே ஆதாம் ஏவாளின் பாவம்.

ஏவாள் ஏதேன் தோட்டத்திலே, நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்திற்கு அருகாமையிலிருக்கிறாள். அந்த விருட்சத்தின் கனி மாயையானது. ஆனால் ஏவாளோ அந்தக் கனியைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். சாத்தான் ஏவாளைப் பார்க்கிறான். ஏவாள் கனியைப் பார்க்கிறாள்.

ஏவாள் விருட்சத்தின் கனியைப் பார்ப்பதற்கு பதிலாக, அவள் கர்த்தரை நோக்கிப் பார்த்திருக்கவேண்டும். அவள் மாயையான கனியை நோக்கிப் பார்க்காமல், தன் கண்களை மாயைக்கு விலக்கியிருக்கவேண்டும். ஆனால் அவளோ விருட்சத்தின் கனியைக் காண்கிறாள். சோதனையிலே பிரவேசிக்கிறாள். தடைபண்ணப்பட்ட விருட்சத்தின் கனி அவளுடைய பார்வைக்கு இன்பமாயிருக்கிறது. பொதுவாக நம்முடைய கண்கள் பார்ப்பதன் மூலமாகவே, நமக்கு அநேக பாவங்கள் வரும். ஏவாள் விருட்சத்தின் கனியை கண்டதே, அவளுடைய பாவத்தின் ஆரம்பம்.

ஸ்திரீயானவள் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் பார்க்கும்போது, அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படதக்கதுமாயிருக்கிறது என்பதை காண்கிறாள். ஏவாள் அந்த விருட்சத்தின் கனியைப் பறிக்கிறாள்.

சாத்தான் அந்த விருட்சத்தின் கனியைப் புசிக்குமாறு ஸ்திரீயானவளை தூண்டுகிறான். ஆனால் சாத்தான் அந்த விருட்சத்தின் கனியைப் பறித்து ஏவாளின் கையிலே கொடுக்கவில்லை. அந்த கனியைப் பறித்தது ஏவாளின் சொந்த செயல். அவளே அந்தக் கனியைப் பார்த்தாள். இப்போது அவளே அந்த விருட்சத்தின் கனியைப் பறிக்கிறாள்.

சாத்தான் அந்த விருட்சத்தின் கனியைப் பறித்து, அதை அவளுடைய வாயிலே திணிக்கவில்லை. ஏவாளின் விருப்பத்திற்கு விரோதமாக சாத்தான் ஒன்றும் செய்யவில்லை. சாத்தான் ஏவாளை வார்த்தையினால் வஞ்சிக்கிறான். ஏவாள் வஞ்சிக்கப்படுகிறாள். அதன் பின்பு அவளே தன்னுடைய கைகளால் அந்த விருட்சத்தின் கனியைப் பறிக்கிறாள்.

சாத்தானால் மனுஷரை சோதிக்க முடியும். ஆனால் அவனால் நம்மை பாவம் செய்யுமாறு கட்டாயப்படுத்த முடியாது. சாத்தான் நம்மை பாவத்தில் விழுமாறும், கீழே விழுமாறும் தூண்டுவான். ஆனால் அவனால் நம்மை கீழே விழத்தள்ள முடியாது.

"நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான்" (மத் 4:6).

ஏவாள் அந்த விருட்சத்தின் கனியை கண்டாள், பறித்தாள். அவள் இப்போது அதை புசிக்கிறாள். ஏவாள் அந்தக் கனியைக் கண்டபோது, அதைப் புசிக்கவேண்டும் என்னும் ஆசை அவள் மனதில் இல்லாதிருந்திருக்கலாம். அவள் அந்தக் கனியைப் பறித்தபோதுகூட, அதைப் புசிக்கவேண்டும் என்னும் ஆசை அவள் மனதிலே ஏற்படாமலிருந்திருக்கலாம். ஆனால் முடிவிலே ஏவாள் தான் கண்டதை, தான் பறித்ததை புசிக்கிறாள். இதுவே பாவத்தின் விளைவு. ஏவாளால் பாவம் செய்யாமலிருக்க முடியவில்லை.

பாவத்தின் பாதை சறுக்கலாயிருக்கும். மனுஷன் பாவம் செய்ய ஆரம்பிக்கும்போது, அவனால் அந்தப் பாவத்தை தன்னுடைய சுயமுயற்சியினால் நிறுத்த முடியாது. பாவம் செய்வது சறுக்கலான பாதையைப்போல இருக்கும். சறுக்கலான பாதையில் சீராக நடக்க முடியாது. சறுக்கலான பாதையில் நடக்கிறவர்கள் கால் சறுக்கி, வழுக்கி கீழே விழுந்துவிடுவார்கள். மறுபடியும் எழுந்திருக்க முடியாமல் திணறுவார்கள். அதுபோலவே பாவத்தில் விழுகிறவர்களுடைய நிலமையும் இருக்கும். பாவத்தில் விழுகிறவர்கள், அதிலிருந்து எழுந்திருக்க முடியாதபடிக்கு, பாவத்திலே மூழ்கிப்போவார்கள்.

நம்முடைய மனதிலே பாவம் செய்யவேண்டும் என்னும் ஆசை ஏற்படும்போது, ஆரம்பத்திலேயே அந்த ஆசையைவிட்டு வெளியேறி விடவேண்டும். பாவத்தில் விழுவதற்கு முன்பாக, அதிலிருந்து தப்பிப்பது எளிதான காரியம். பாவத்தில் விழுந்து விட்ட பின்போ, அதிலிருந்து தப்பிப்பது கடினம். பாவம் ஒரு கண்ணியைப்போல நம்மைப் பிடித்துக்கொள்ளும். பாவத்தில் விழுகிறவர்கள் வலையில் விழுகிறவர்கள்போல, அதிலே சிக்கிக்கொள்வார்கள்.

ஏவாள் அந்த விருட்சத்தின் கனியைக் கண்டு, பறித்து, புசித்ததோடு மாத்திரமல்ல, அவள் அந்தக் கனியை தன் புருஷனுக்கும் கொடுக்கிறாள். சாத்தான் ஸ்திரீயினிடத்தில் சொன்ன வஞ்சகமான வார்த்தைகளெல்லாம், அவளுடைய மனதிலே நிரம்பியிருக்கிறது. சாத்தான் ஏவாளை வஞ்சித்ததுபோல, இப்போது ஏவாள் தன் புருஷனாகிய ஆதாமை வஞ்சிக்கிறாள். ஏவாள் சாத்தானுடைய பிரதிநிதியாக செயல்படுகிறாள்.

தடைபண்ணப்பட்ட விருட்சத்தின் கனியை ஏவாள் புசித்திருக்கிறாள். ஆகையினால் சாத்தான் சொன்ன வஞ்சனையான வார்த்தைகளைவிட, இப்போது ஏவாளால் அதிகமாய் சொல்ல முடியும். ஏவாள் அந்தக் கனியைப் புசித்ததினால், சாத்தான் தனக்கு சொன்னதெல்லாம் மெய்யாயிற்று என்று அவளால் சொல்ல முடியும். ஆதாம் ஏவாளை நம்புவார்.

நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கும் நாளிலே சாகவே சாவாய் என்று தேவன் சொன்னார். சாத்தானோ "நீங்கள் சாவதில்லை" என்று சொன்னான். ஏவாள் அந்த விருட்சத்தின் கனியை புசித்திருக்கிறாள். ஆனால் அவள் சாகவில்லை. ஆகையினால் தேவன் சொன்ன வார்த்தையைவிட, சாத்தான் சொன்ன வார்த்தையே அவர்களுக்கு உண்மையான வார்த்தையாய்த் தெரிகிறது.

சாத்தான் ஏவாளை வஞ்சித்தான். ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள். இப்போதோ ஏவாள் ஆதாமை வஞ்சிக்கிறாள். பாவம் செய்கிறவர்கள் பாவத்திற்கும் சாத்தானுக்கும் துணைபோகிறார்கள். பாவம் செய்த ஏவாள் இப்போது ஆதாமை வஞ்சிக்கிறவளாயிருக்கிறாள். ஆதாம் ஏவாளுடைய வார்த்தைகளை நம்புகிறார். ஏவாள் தனக்கு கொடுத்த அந்தக் கனியை ஆதாமும் புசிக்கிறார்.

தேவன் ஜீவவிருட்சத்தின் கனியை புசிப்பதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுத்திருந்தார். ஆனால் அவர்களோ தேவன் புசிக்கச் சொன்னதை புசியாமல், புசிக்கக்கூடாது என்று சொன்னதை புசிக்கிறார்கள். ஆதாமும் ஏவாளும் கர்த்தருடைய கட்டளையை மீறியதினால், அவர்கள் இருவருமே தேவனுடைய கிருபையையும், அவருடைய இரக்கத்தையும் இழந்துவிடுகிறார்கள். தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கு, அவர்கள் இருவரும் தகுதியற்றவர்களாயிருக்கிறார்கள்.

தேவனாகிய கர்த்தர் இப்போது ஆதாமுக்கு எஜனமானாகயில்லை. தேவன் ஆதாமுக்கு ஆண்டவராகவும் இல்லை. ஆதாம் தனக்குத்தானே எஜமானனாகவும், ஆண்டவராகவும் இருக்கிறார். ஆதாம் தனக்குப் பிரியமானதை செய்கிறார். அவர் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல், தன்னுடைய மனதின் இச்சைகளுக்கு கீழ்ப்படிகிறார். ஆதாம் செய்த பாவத்தை ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமென்றால், அதை "கீழ்ப்படியாமை" என்று சொல்லலாம்.

"அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்" (ரோம 5:19).

மனுக்குலத்தின் முதல் பெற்றோராகிய ஆதாமும் ஏவாளும் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்தார்கள். அவர்களுடைய பாவம் மனுக்குலத்தார் அனைவருக்கும் கடந்து வருகிறது. அவர்களிடத்தில் பாவக்கறை காணப்படுகிறது. அந்தக் கறையானது மனுக்குலம் முழுவதையும் தீட்டுப்படுத்துகிறது.

ஏவாள் அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுக்கிறாள். ஆதாம் அவள் அருகில் அங்கேயே இருக்கிறார். ஆகையினால் அவருக்குச் சாக்குப்போக்கு சொல்ல இடம் இல்லை. ஆதாம் ஏதேன் தோட்டத்தையும், ஏவாளையும் பாதுகாக்க வேண்டியவர். ஆனால் தன் கடமையிலிருந்து தவறி சர்ப்பத்தை உள்ளே விட்டு விடுகிறார். தன் மனைவியை ஆளுகை செய்யும் பொறுப்பிலிருந்து விலகி, அவளால் ஆளுகை செய்யப்படுகிறார் (ஆதி 2:15).

பாவத்தின் விளைவுகள் ஆதி 3:7,8

ஆதி 3:7. அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள்.

ஆதி 3:8. பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள்.

நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கும் நாளிலே அவர்கள் கண்கள் திறக்கப்படும் என்று சாத்தான் சொன்னான். சாத்தான் சொன்னதுபோலவே அவர்கள் அந்த விருட்சத்தின் கனியைப் புசித்தபோது, அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்படுகிறது. சாத்தான் அவர்களிடத்தில், அந்தக் கனியைப் புசிக்கும் நாளிலே அவர்கள் இருவரும் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல இருப்பார்கள் என்று சொன்னான். ஆனால் அவன் சொன்ன இந்த வார்த்தை நிறைவேறவில்லை. சாத்தான் பொய்சொல்லுகிறவன். அவன் உண்மையை மொத்தமாக சொல்லமாட்டான். அவன் உண்மையும் பொய்யும் கலந்துபேசுவான்.

அவர்கள் கண்கள் திறந்தது. அவர்கள் எதையோ காண்போம் என்று எதிர்பார்த்தார்கள். எதிர்பார்த்தது ஒன்று, கண்டது ஒன்று. அவர்கள் ஏமாற்றம் அடைந்தார்கள். வஞ்சிக்கப்பட்டார்கள். தாங்கள் தேவர்களைப்போல இருப்பதைக் காண வேண்டுமென்று எதிர்பார்த்தார்கள். ஆனால் தாங்கள் நிர்வாணிகளாக இருப்பதையே கண்டார்கள் (ஆதி 3:5).

விருட்சத்தின் கனியைப் புசிப்பதற்கு முன்பாகவே அவர்களுடைய கண்கள் திறந்துதான் இருந்தது. அந்தக் கண்ணால்தான் ஏவாள் அந்த விருட்சத்தையும், அந்த விருட்சத்தின் கனியானது பார்வைக்கு இன்பமாயிருக்கிறது என்பதையும் கண்டாள். இப்போது, அந்த விருட்சத்தின் கனியைப் புசித்தபொழுது, அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்படுகிறது. இப்போது திறக்கப்பட்டது அவர்களுடைய மாம்சத்தின் கண்களல்ல. இப்போது அவர்களுடைய மனச்சாட்சியின் கண்கள் திறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் செய்த காரியத்தினிமித்தமாக அவர்களுடைய இருதயங்கள் அவர்களைக் குற்றப்படுத்துகிறது. அவர்களை வேதனைப்படுத்துகிறது. அவர்களுடைய மனதை காயப்படுத்துகிறது.

ஆதாமும் ஏவாளும் கர்த்தருடைய கட்டளைக்கு மீறி பாவம் செய்துவிட்டார்கள். அவர்கள் பாவத்தில் விழுந்துவிட்டார்கள். தேவனுடைய எச்சரிப்பின் வார்த்தைகளையும் மீறிவிட்டார்கள். பாவத்தில் விழுந்தவர்கள் அதில் சிக்குண்டு கிடக்கிறார்கள். தடைபண்ணப்பட்ட கனியைப் புசித்ததினால் தங்களுக்கு என்னென்ன தீமைகள் உண்டாயிற்று என்பதை அவர்கள் அறிந்துகொள்கிறார்கள். அவர்கள் புசித்தது நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனி. இப்போது ஆதாமும் ஏவாளும், அந்த விருட்சத்தின் கனியைப் புசித்து, தீமையை அறிந்துகொள்கிறார்கள். தடைபண்ணப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்த தங்களுடைய மதியீனத்தைப் புரிந்துகொள்கிறார்கள்.

இந்தக் கனியை புசிப்பதற்கு முன்பாக ஆதாமும் ஏவாளும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருந்தார்கள். இப்போதோ அவர்கள் இருவரும் தங்கள் சந்தோஷத்தை இழந்து துக்கத்திலும் வேதனையிலும் இருக்கிறார்கள். அவர்கள் இருவருடைய கண்களும் இப்பொழுது திறக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கண்கள் மூலமாக அவர்கள், தாங்கள் பாவம் செய்வதற்கு முன்பாக அனுபவித்த சந்தோஷத்தையும், பாவம் செய்த பின்பு அனுபவிக்கிற வேதனைகளையும் பார்க்கிறார்கள்.

ஆதாம் ஏவாளுடைய மனதிலே மிகப்பெரிய போராட்டமுண்டாயிற்று. அவர்களுடைய மாம்சமும் சிந்தையும் அவர்களுக்குள்ளே யுத்தம்பண்ணுகிறது. அவர்களுடைய சிந்தையின் பிரமாணம், அவர்களுடைய மாம்சத்தின் பிரமாணத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறது. ஆதாமும் ஏவாளும் தங்களுடைய திறக்கப்பட்ட கண்கள் மூலமாக இந்த யுத்தத்தைப் பார்க்கிறார்கள். இதற்கு முன்பு சமாதானத்தையும் சந்தோஷத்தையும் பார்த்தவர்கள், இப்போது யுத்தத்தையும் வேதனையையும் பார்க்கிறார்கள்.

தடைபண்ணப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்தபோது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்படுகிறது. அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து கொள்கிறார்கள். பாவம் செய்வதற்கு முன்பாக அவர்களிடத்தில் இருந்த சந்தோஷம், மகிமை, மேன்மை எல்லாமே அவர்களை விட்டு உரிந்துபோடப்பட்டிருக்கிறது. அவர்கள் வஸ்திரமில்லாத நிர்வாணிகளைப்போல இருக்கிறார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. அவர்களுடைய பாதுகாப்பும் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று. தங்களைக் காத்துக்கொள்ளக்கூடிய எந்த ஆயுதமும் அவர்களிடத்தில் இல்லை.

ஆதாமும் ஏவாளும் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து வெட்கப்படுகிறார்கள். அவர்கள் இப்போது பரலோகத்தின் நிந்தைக்கும், பூமியின் அவமானத்திற்கும் உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய நிந்தையையும் அவமானத்தையும் தங்கள் கண்களால் பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறார்கள். அவர்களுடைய நிர்வாணத்தையும், அதன் மூலமாக உண்டாயிருக்கிற அவமானத்தையும், அவர்களுடைய சொந்த மனச்சாட்சிகள் பார்க்கிறது. எதுவும் மறைவாயில்லை.

கனியைப் புசிப்பதற்கு முன்பாகவும், அவர்கள் நிர்வாணிகளாகத்தான் இருந்தார்கள். அவர்கள் பாவம் செய்வதற்கு முன்பாக தேவனுடைய மனச்சாட்சியைப் பெற்றிருந்தார்கள். இப்பொழுது அதை இழந்து, சுயமனச்சாட்சியை உடையவர்களாக இருக்கிறார்கள். நன்மை செய்யும் வல்லமையை இழந்து போனார்கள். தீமை செய்யும் வல்லமையைப் பெற்றுக் கொண்டார்கள். தேவனைப்போல இருப்பதற்குப் பதிலாக தேவனுக்கு விரோதமாக இருக்கிறார்கள். நன்மை செய்யும் தேவனுடைய வல்லமை அவர்களுக்குள் காணப்படவில்லை.

தேவனால் பாவம் செய்ய முடியாது. ஆதாமையும் தேவன் அப்படித்தான் சிருஷ்டித்தார். ஆனால் ஆதாமோ தன்னுடைய சுயாதீனச் சித்தத்தின் பிரகாரமாக தேவனுக்குக் கீழ்ப்படியாமல் தன்னுடைய சுய சித்தத்தை நிறைவேற்றி, தேவ மகிமையை இழந்துபோனார். பாவம் செய்யாதவனாக இருந்த ஆதாம் இப்பொழுது பாவம் செய்து பாவியாகிவிட்டார்.

பாவம் மனுஷனை அசுத்தப்படுத்துகிறது. அது அவனை வேதனைப்படுத்தி, அவமானப்படுத்துகிறது. எங்கெல்லாம் பாவம் பிரவேசிக்கிறதோ, அங்கெல்லாம் துன்பமும், துயரமும், அவமானமும் பிரவேசிக்கும்.

சத்துரு மனுஷரை வஞ்சிக்கிறவன். நம்முடைய முதல் பெற்றோரை சாத்தான் வஞ்சித்தபோது, விருட்சத்தின் கனியைப் புசிக்கும் நாளிலே, அவர்களுடைய கண்கள் திறக்கப்படும் என்று சொன்னான். சாத்தான் சொன்ன பிரகாரமாக அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. ஆனால் அவர்கள் எதிர்பார்த்த பிரகாரமாக அவர்களுடைய கண்கள் திறக்கப்படவில்லை. அவர்களுக்கு துக்கமும், அவமானமும் ஏற்படும் வண்ணமாக, அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. அவர்கள் நன்மையை காண்பதற்குப் பதிலாக, தீமையைக் காண்கிறார்கள்.

ஆதாமும் ஏவாளும் தங்களுடைய நிர்வாணத்தையும், அவமானத்தையும் மூடி மறைப்பதற்கு முயற்சி பண்ணுகிறார்கள். தாங்கள் நிர்வாணிகளாயிருப்பதை அவர்கள் அறிந்துகொள்கிறார்கள். அவர்களுடைய பாவமே அவர்களைக் குற்றப்படுத்துகிறது. அவர்கள் அத்திஇலைகளை தைத்து தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணுகிறார்கள். இதன் மூலமாக அவர்களுடைய அவமானத்தின் ஒரு பகுதியை மூடி மறைக்க திட்டமிடுகிறார்கள்.

அவர்களுடைய அரைக்கச்சைகளை அவர்களுக்கு வேறு யாரும் உண்டுபண்ணிக்கொடுக்கவில்லை. அதை அவர்களே உண்டுபண்ணுகிறார்கள். அவர்களை சோதித்து, பாவத்தில் விழத்தள்ளின சாத்தான் அவர்களுக்கு உதவி செய்ய முன்வரவில்லை. சாத்தான் வஞ்சிக்கிறவன். அவன் நம்முடைய முதற்பெற்றோரை வஞ்சித்துவிடுகிறான்.

ஆதாமும் ஏவாளும் தங்களுடைய நிர்வாணத்தை மூடி மறைக்க முயற்சி பண்ணுகிறார்கள். அவர்களுடைய அவமானம் அவர்களை விட்டு நீங்கவேண்டும் என்பதே இப்போது அவர்களுடைய நோக்கமாயிருக்கிறது. இதுவும் அவர்களுடைய மதியீனம். மனுஷர் பொதுவாக தேவனுடைய மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக, தங்களுடைய மதிப்பையும் மரியாதையையும், அந்தஸ்தையும் காத்துக்கொள்ள விரும்புகிறார்கள். நம்முடைய அந்தஸ்தைவிட, தேவனுடைய மன்னிப்பே நமக்கு அவசியமானது.

ஆதாமும் ஏவாளும் தங்களுடைய பாவங்களை அத்திஇலைகளினால் மூடி மறைக்க முயற்சி செய்கிறார்கள். இதன் மூலமாக தங்களுடைய பாவங்களை தாங்களே மன்னித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். தங்களுக்கு ஏற்பட்ட நிர்வாணத்தையும், அவமானத்தையும் தாங்களாகவே மூடி மறைத்துவிடலாம் என்று அவர்கள் முயற்சி செய்கிறார்கள்.

ஆதாமும் ஏவாளும் தங்களுக்கு அத்தியிலைகளைத் தைத்து அரைக்கச்சைகளை உண்டுபண்ணுகிறார்கள் (பிர 3:7; யோபு 16:15; எசே 13:18) மனுஷன் தன்னுடைய நிர்வாணத்தை மூடுவதற்காக தனக்குத் தானே கண்டுபிடித்துக் கொள்ளும் உபாயம். அத்தியிலைகளைத் தைத்து ஆதாமும், ஏவாளும் தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டு பண்ணினார்கள். இது குளிரிலிருந்து அவர்களைப் பாதுகாக்காது. இது நீண்ட நாள் உழைக்கவும் செய்யாது. தேவன் அவர்களுக்கு தோல் உடைகளை உண்டாக்கி, உடுத்தினார் (ஆதி 3:21).

அத்தி இலைகளினால் பாவத்தை மூடி மறைக்க முடியாது. அவர்கள் உண்டுபண்ணின அரைக்கச்சையினால் அவர்களுடைய அவமானத்தை நீக்க முடியாது. அத்தி இலைகள் அவர்களுடைய அவமானத்தை அதிகரிக்கச் செய்யும். அவர்களுடைய வெட்கமும் அவமானமும் அதிகமாய் வெளிப்படும். மனுஷன் தன்னுடைய சுயமுயற்சியினால் பாவத்தை மூடி மறைக்க நினைப்பது மதியீனம்.

தேவன் தடைபண்ணின விருட்சத்தின் கனியைப் புசித்த வேளையிலே ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பயமுண்டாயிற்று. பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்கிறார்கள் (ஆதி 3:8).

தேவனாகிய கர்த்தர் இதற்கு முன்பு பல சமயங்களில் அவர்களோடு கூடயிருந்திருக்கிறார். அவருடைய சத்தத்தை அவர்கள் பல சந்தர்ப்பங்களில் கேட்டிருக்கிறார்கள். அப்போதெல்லாம் அவர்களுக்கு பயமுண்டாகவில்லை. ஆனால் இப்போதோ தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டபோது, அவர்களுக்கு பயமுண்டாயிற்று.

ஆதாமும் ஏவாளும் இதுவரையிலும் தேவனாகிய கர்த்தரைப் பார்க்கும்போதும், அவருடைய சத்தத்தைக் கேட்கும்போதும், அவரை தங்களுடைய சிருஷ்டிகராகவே பார்த்தார்கள். இப்போதோ அவர்கள் கண்கள் திறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தேவனாகிய கர்த்தரை தங்களுடைய நியாயாதிபதியாக பார்க்கிறார்கள். தங்களுடைய பாவத்திற்காக தங்களை நியாயந்தீர்த்து தண்டிக்கப்போகிற நியாயாதிபதியாக அவர்கள் தேவனாகிய கர்த்தரைப் பார்க்கிறார்கள். இதனால் அவர்களுக்கு பயமுண்டாயிற்று.

மனுஷனுடைய மனச்சாட்சி குற்றமுள்ளதாயிருக்கும்போது, அவனுக்கு தேவனைக் குறித்து பயமுண்டாகும். அவனுடைய குற்றமனச்சாட்சியே அவனைக் குற்றப்படுத்தும். அது அவனுக்கு விரோதமாக சாட்சி சொல்லும்.

தேவனாகிய கர்த்தர் பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்திலே உலாவுகிறார். அவர் இரவிலே வரவில்லை. பகலிலே வருகிறார். தேவன் தம்முடைய உக்கிரகோபத்தோடு வரவில்லை. மதியவெயில் அதிகமாயிருக்கும்போது, பூமியின்மேல் உஷ்ணம் அதிகமாயிருக்கும். இதனால் மனுஷருக்கு எரிச்சலுண்டாகும். தேவனோ மத்தியான வெயில் நேரத்தில் வராமல், பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்திலே உலாவுகிறார். தேவனிடத்தில் கோபமில்லை. ஆனாலும் ஆதாமும் ஏவாளும் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டு பயப்படுகிறார்கள்.

தேவனாகிய கர்த்தர் மெல்லிய சத்தத்திலே பேசுகிறார். அவர் ஆதாமையும் ஏவாளையும் விசாரிப்பதற்காக வந்திருக்கிறார். கர்த்தர் எலியாவை மெல்லிய சத்தத்தினால் விசாரித்ததுபோல, இப்போது பகலில், குளிர்ச்சியான வேளையில், ஆதாமையும் ஏவாளையும் அன்போடு விசாரிக்க வருகிறார். ஆனால் அவர்களுக்கோ தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டபோது பயமுண்டாயிற்று.

அப்பொழுது ஆதாமும் ஏவாளும், தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொள்கிறார்கள். அவர்களுடைய மனதிலே மிகப்பெரிய மாற்றமுண்டாயிருக்கிறது. அவர்கள் இதற்கு முன்பு தேவனாகிய கர்த்தருடைய சந்நியில் இருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டவர்கள். ஆனால் இப்போதோ அவர்கள் கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி ஓடுகிறார்கள். இந்த மாற்றம் அவர்களுடைய பாவத்தினால் உண்டாயிற்று.

தேவன் அவர்களுக்கு பயங்கரமானவராயிருக்கிறார். அவர்கள் தங்களுக்குத் தாங்களே பயங்கரமானவர்களாயிருக்கிறார்கள். விருட்சத்தின் கனியைப் புசித்ததினால் அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கண்கள் மூலமாக அவர்கள் தேவனை பார்க்கிறார்கள். அவர்களால் தேவனுடைய கிருபையையும், இரக்கத்தையும், அன்பையும் பார்க்க முடியவில்லை. அந்தக் கண்கள் தேவனுடைய கோபத்தையும், நியாயத்தீர்ப்பையும் பார்க்கிறது.

அவர்களுடைய மனச்சாட்சிகளே அவர்களைக் குற்றப்படுத்துகிறது. அவர்கள் செய்த பாவம் அவர்களுடைய கண்களுக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருக்கிறது. அத்தி இலைகளினால் உண்டுபண்ணப்பட்ட அரைக்கச்சைகளால் அவர்களுடைய பாவங்களை மூடி மறைக்க முடியவில்லை. அவர்களுடைய பிரயாசம் வீணாய்ப்போயிற்று.

ஆதாமும் ஏவாளும் தங்களுடைய பாவத்தையும், குற்றத்தையும், மீறுதலையும் உணருகிறார்கள். அவர்களால் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு முன்பாக நிற்கமுடியவில்லை. நீதியுள்ள தேவன் தங்களைத் தண்டிப்பார் என்று அவர்களுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. ஆகையினால் அவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு பயந்து, கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி ஓடுகிறார்கள்.

சாத்தான் ஆதாமையும் ஏவாளையும் வஞ்சித்திருக்கிறான். விருட்சத்தின் கனியைப் புசித்தால் அவர்கள் சாகமாட்டார்கள் என்று சொன்னான். அவர்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், அவர்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பார்கள் என்றும் சொன்னான். அவர்களுக்கு ஒரு தீங்கும் வராது என்றும், அவர்கள் பாதுகாப்பாயிருப்பார்கள் என்றும் வாக்குப்பண்ணினான். சாத்தானுடைய வார்த்தைகள் பொய்யானது. ஆதாமும் ஏவாளும் மிகப்பெரிய ஆபத்திலிருக்கிறார்கள்.

சாத்தான் சொன்ன பிரகாரம் அவர்கள் நன்மை தீமையை அறியவில்லை. அவர்கள் இப்போது ஒன்றையும் அறியாமல், காணாமல் போனவர்கள்போல தேவனுடைய சந்நிதிக்கு விலகி ஓடுகிறார்கள். பயந்து நடுங்குகிறார்கள். அவர்கள் தேவர்களைப்போல இருப்பார்கள் என்று சாத்தான் சொன்னான். ஆனால் ஆதாமும் ஏவாளுமோ பயத்தினால் நடுங்கி, கோழைகளைப்போல ஓடி ஒளிகிறார்கள். அவர்கள் கண்டுபிடிக்கப்பட்ட குற்றவாளிகளாகயிருக்கிறார்கள்.

தேவனுடைய சந்நிதியைவிட்டு விலகி யாராலும் ஓடி ஒளித்துக்கொள்ள முடியாது. கர்த்தருடைய பிரசன்னத்திற்கு விலகி தங்களை மறைத்துக்கொள்ளலாம் என்று நினைப்பது மனுஷருடைய மதியீனம். தேவனுக்கு மறைவான இரகசியம் எதுவுமில்லை. நாம் எங்கே இருந்தாலும் கர்த்தர் நம்முடைய இருப்பிடத்தை அறிந்திருக்கிறார். அவர் நம்முடைய போக்கையும் வரத்தையும், நாம் உட்கார்ந்திருப்பதையும், நிற்பதையும், நடப்பதையும், நாம் நம்மை மறைத்துக்கொள்வதையும் அறிந்திருக்கிறார்.

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்ததினால், பயம் அவர்களை சூழ்ந்துகொள்கிறது. அவர்கள் தேவனுடைய பிரசன்னத்திற்கும், அவருடைய சத்தத்திற்கும், அவருடைய சந்நிதிக்கும் பயப்படுகிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சி அவர்களைக் குற்றப்படுத்துவதினால் அவர்களுக்கு பயமுண்டாயிற்று. தங்களுக்கு தீங்கு வரப்போகிறது என்பதை அவர்கள் அறிந்து பயப்படுகிறார்கள்.

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தததினால் அவர்கள் தேவமகிமையற்றவர்களாகயிருக்கிறார்கள். தேவன் அவர்களுக்கு கொடுத்த ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்கள் இனிமேல் அவர்களுக்கு சித்திக்காது. அவர்கள் சர்வசிருஷ்டிகளையும் கீழ்ப்படுத்தி ஆளுகை செய்வார்கள் என்று தேவன் அவர்களுக்கு சொல்லியிருந்தார். இனிமேல் நாட்டு மிருகங்களும், காட்டு மிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப்பறவைகளும் அவர்களுக்கு கீழ்ப்படியாது.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி "நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கலாம்" என்று சொன்னார். அவன் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கும் நாளில், அவன் சாகவே சாவான் என்றும் தேவனாகிய கர்த்தர் அவனுக்கு கட்டளையிட்டார். மனுஷன் ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்திருந்தால், அவன் என்றும் ஜீவனோடிருந்திருப்பான். அவனுக்கு மரணம் ஏற்பட்டிருக்காது. ஆனால் இப்போதோ, ஆதாமும் ஏவாளும் கர்த்தர் தடைபண்ணின விருட்சத்தின் கனியைப் புசித்து பாவம் செய்திருக்கிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணம்.

தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அவர்கள் எதிர்பார்த்தது போலவே தேவனுடைய சத்தத்தைக் கேட்டார்கள். தாங்கள் பாவம் செய்ததினால் தேவனுக்குப் பயந்து, தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள். ஒருவேளை தேவனுடைய சத்தம் கோபதொனியுடையதாக இருந்திருக்கலாம். (ஆதி 3:10; சங் 29; வெளி 10:4) அல்லது அவர்களுடைய குற்ற உணர்வு தேவ சந்நிதியை விட்டு அவர்களை ஓடி ஒழிய வைத்திருக்கலாம்.

தேவனிடமிருந்து யாரும் ஒழிந்து ஓட முடியாது. (சங் 139:7-12; எரே 23:24; ஆமோஸ் 9:2-3). தேவனுடைய சந்நிதியிலிருந்து ஓடி ஒழிவது அவர்களுடைய குற்ற உணர்வையே வெளிப்படுத்துகிறது.

நீ எங்கே இருக்கிறாய்
ஆதி 3:9,10

ஆதி 3:9. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார்.

ஆதி 3:10. அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான்.

தேவனாகிய கர்த்தர் பகலில் குளிர்ச்சியான வேளையில் ஏதேன் தோட்டத்திலே உலாவுவதற்காக வந்திருக்கிறார். ஆதாமும் ஏவாளுமோ தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே தங்களை ஒளித்துக்கொள்கிறார்கள். தேவன் அவர்களைத் தேடிப்பார்க்கிறார்.

அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: "நீ எங்கே இருக்கிறாய்" (ஆதி 3:9) என்று கேட்கிறார். "நீ எங்கே இருக்கிறாய்" என்னும் வாக்கியத்திற்கு "நீ எந்த இடத்தில் இருக்கிறாய்" என்பது பொருளல்ல. இந்த வாக்கியத்திற்கு, "நீ எந்த நிலமையிலிருக்கிறாய்" என்பது பொருளாகும். தேவன் தடைபண்ணின விருட்சத்தின் கனியைப் புசித்ததினால், ஆதாமும் ஏவாளும் பாவிகளாயிருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து அவமானத்திலிருக்கிறார்கள். அவர்கள் அத்தி இலைகளை தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணி, தங்களுடைய அவமானத்தை மூட முயற்சிபண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு, "நீ எங்கே இருக்கிறாய்" என்று கேட்பது, அவருடைய அன்பையும், கிருபையையும் வெளிப்படுத்துகிறது. பாவத்தின் விழுந்து கிடக்கிற ஆதாமை, தேவனாகிய கர்த்தர் விடுவிக்க விரும்புகிறார். கர்த்தர் ஆதாமை மீட்டுக்கொள்ள விரும்புகிறார்.

கர்த்தர் ஆதாமுக்கு உதவி செய்யவேண்டுமென்றால் ஆதாம் தான் இருக்கும் நிலைமையை அறிந்துகொள்ள வேண்டும். ஆதாமைப்போலவே பாவிகளாகிய எல்லோருமே, தங்களுடைய பாவமான நிலமையை அறிந்துகொள்ளவேண்டும். நாம் தேவனுடைய சந்நிதியை விட்டு விலகி ஓடினாலும், தேவனிடத்தில் திரும்பி வரும் வரையிலும், நமக்கு சந்தோஷமோ, சமாதானமோ, ஆறுதலோ இல்லை.

ஆதாம் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு பயந்து நடுங்குகிறார். அவர் பயத்தோடும், திகிலோடும் தேவனுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார். ஆதாம், " நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன்" (ஆதி 3:10) என்று தேவனிடத்தில் சொல்லுகிறார்.

ஆதாம் தன்னுடைய பாவத்தை இன்னும் அங்கீகரிக்கவில்லை. தேவனாகிய கர்த்தர் தடைபண்ணின விருட்சத்தின் கனியை, புசித்ததை ஆதாம் இன்னும் ஒத்துக்கொள்ளவில்லை. தன்னுடைய பாவத்தையும், மீறுதலையும் தேவனாகிய கர்த்தரிடத்தில் அங்கீகரியாமல், "நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து ஒளிந்துகொண்டேன்" என்று சொல்லுகிறார். ஆதாம் தேவனிடத்தில் தன்னுடைய பாவத்தை அறிக்கை செய்யாமல், தன்னுடைய பயத்தையும், நிர்வாணத்தையும், அவமானத்தையும் அறிக்கை செய்கிறார்.

கனியைப் புசித்தாயோ ஆதி 3:11-13

ஆதி 3:11. அப்பொழுது அவர்: நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார்.

ஆதி 3:12. அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான்.

ஆதி 3:13. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள்.

குற்றம் செய்தவர்கள் தங்களுடைய வாக்குமூலத்தை சொல்லுகிறார்கள். ஆனாலும் அவர்கள் தங்களுடைய தப்பிதத்திற்கு பொறுப்பேற்கவில்லை. அவர்கள் குற்றம் செய்தாலும் அதற்கான காரணத்தை மற்றவர்கள்மீது சுமத்துகிறார்கள்.

தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: "நீ எங்கே இருக்கிறாய்" என்று கேட்கிறார். அதற்கு ஆதாம் "நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன்" (ஆதி 3:9,10) என்று சொல்லுகிறார்.

அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமிடம் , "நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்" (ஆதி 3:11) என்று கேட்கிறார். தேவன் சர்வஞானமுள்ளவர். அவர் ஆதாமின் பாவத்தை அறிந்திருக்கிறார். ஆதாம் தன்னுடைய வாயினால் தான் செய்த பாவத்தை அறிக்கைபண்ணவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்.

ஆதாமும் ஏவாளும் இதுவரையிலும் நிர்வாணிகளாகத்தான் இருந்தார்கள். அப்போது அவர்கள் வெட்கப்படவில்லை. அவர்கள் தேவனுக்கு பயந்து தங்களை ஒளித்துக்கொள்ளவில்லை. இப்போதோ ஆதாமுக்கு வெட்கமும் பயமும் வந்திருக்கிறது. ஆகையினால் தேவனாகிய கர்த்தர் ஆதாமைப் பார்த்து, "நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்" என்று கேட்கிறார்.

ஆதாமின் வெட்கத்திற்கும் பயத்திற்கும் காரணம் என்ன என்பது தேவனாகிய கர்த்தருக்கு தெரியும். தேவன் ஆதாமை நோக்கி, "புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியை புசித்தாயோ" என்று கேட்கிறார். தாம் விலக்கின கனியை ஆதாமும் ஏவாளும் புசித்தார்கள் என்பது தேவனுக்கு தெரியும்.

தேவன் நம்முடைய செய்கைகளையும், மனதின் நினைவுகளையும் அறிந்திருக்கிறார். நம்முடைய பாவங்கள் எல்லாமே தேவனுக்கு மறைவாயிராமல், பிரத்தியட்சமாயிருக்கிறது. ஆனாலும் நம்முடைய பாவங்களை நாமே அறிக்கை செய்யவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். நம்முடைய பாவங்களைப்பற்றி தேவனுக்கு தெரிந்திருந்தாலும், அந்தப் பாவங்கள் நமக்கும் தெரிந்திருக்கவேண்டும்.

நம்முடைய பாவங்களை நாம் தேவனிடத்தில் அறிக்கைபண்ணும்போது, நாம் அவற்றை தேவனுக்கு தெரியப்படுத்துகிறோம் என்று நினைக்கக்கூடாது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கை செய்யாவிட்டால், தேவனுக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது என்று நினைத்து விடக்கூடாது.

நம்முடைய பாவங்களை தேவனிடத்தில் அறிக்கைபண்ணும்போது, நமக்குள்ளே பாவத்தைக்குறித்த குற்றவுணர்வு ஏற்படவேண்டும். தேவனுக்கு முன்பாக நாம் நம்மை தாழ்த்தவேண்டும்.

தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி, "நீ இப்படி செய்தது என்ன" (ஆதி 3:13) என்று கேட்கிறார். தேவன் தடைபண்ணின கனியை ஸ்திரீயானவளே முதலாவதாக புசித்தாள். அவள் தன் புருஷனையும் அந்தக் கனியைப் புசிக்குமாறு தூண்டினாள். தடைபண்ணின கனியைப் புசித்த ஆதாமும் பாவம் செய்திருக்கிறார். அந்தக் கனியைப் புசிக்குமாறு அவரைத் தூண்டின ஏவாளும் பாவம் செய்திருக்கிறாள்.

தடைபண்ணப்பட்ட கனியை புசிப்பதன் மூலமாக, நாம் கிருபையும் இரக்கமுமுள்ள தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்கிறோம். கிருபை நிரம்பிய தேவனுக்கு தீங்கு செய்கிறோம். தடைபண்ணப்பட்ட கனியை மற்றவர்களும் புசிக்கவேண்டுமென்று, அவர்களைத் தூண்டும்போது, நாம் சாத்தானின் செயல்களை செய்கிறோம். மற்றவர்களை பாவம் செய்ய தூண்டுகிறவர்கள் சாத்தானுடைய பிரதிநிதிகளாயிருக்கிறார்கள். நாம் மற்றவர்களைப் பாவம் செய்யத்தூண்டும்போது, அவர்களுடைய பாவங்களுக்கும் நாமே காரணமாயிருப்போம். அவர்களுடைய அழிவுக்கும் நாம் துணைபோவோம்.

ஆதாமும் ஏவாளும் தேவனாகிய கர்த்தரிடத்தில் தங்கள் பாவங்களை மறைக்கவில்லை. தேவனுக்கு முன்பாக அவர்களால் தங்கள் பாவங்களை மறைக்கவும் முடியாது. தாங்கள் குற்றமற்றவர்கள் என்று அவர்கள் தேவனிடத்தில் வழக்காடவுமில்லை. அவர்களுடைய பாவம் மறைவாயிராமல், பிரத்தியட்சமாயிருக்கிறது.

ஆனால் பாவம் செய்த ஆதாமும் ஏவாளும், தங்களுடைய பாவத்திற்கு தாங்களே காரணம் என்பதை அங்கீகரிக்கவில்லை. அவர்கள் பாவம் செய்தாலும் அந்தப் பாவத்திற்கான காரணத்திற்கு மற்றவர்களைக் குற்றப்படுத்துகிறார்கள். ஆதாமும் ஏவாளும் இப்போது நிர்வாணிகளாயும், வெட்கப்படுகிறவர்களாயும் இருந்தாலும், இந்த வெட்கத்திற்கான காரணத்தை மற்றவர்கள்மீது சொல்லுகிறார்கள்.

ஆதாம் தன்னுடைய பாவத்திற்கு ஏவாளைக் குற்றப்படுத்துகிறார். பாவம் செய்கிறவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிச்சயமாகவே வரும். நம்முடைய பாவங்களை தேவனிடத்தில் அறிக்கை செய்து விட்டுவிட்டால், அவருடைய இரக்கத்தையும், கிருபையையும் பெற்றுக்கொள்ளலாம். நம்முடைய மனச்சாட்சி நம்மைக் குற்றப்படுத்தும்போது, நாம் நம்முடைய மனச்சாட்சிக்கு விரோதமாக போராடக்கூடாது. நம்முடைய பாவமான காரியங்கள் மூலமாக தேவனைக் கோபப்படுத்தக்கூடாது. நம்முடைய சிநேகிதரையும், இந்த உலகத்தையும், இந்த உலகத்திலுள்ள காரியங்களையும் பிரியப்படுத்தவேண்டும் என்பதற்காக, தேவனுக்கு கோபத்தை உண்டுபண்ணக்கூடாது.

ஆதாம் ஸ்திரீயின்மீது குற்றம் சுமத்தி தன்னுடைய பாவத்தை மறைக்கப் பார்க்கிறார். (யோபு 31:33; நீதி 28:13, 1தீமோ 2:12-15). அந்த ஸ்திரீயைத் தந்தது தேவனே என்று கூறி தன்னுடைய பாவத்திற்கான காரணத்தைத் தேவனிடமே சுமத்துகிறார். தேவன் ஏவாளைத் தனக்கு தந்திராவிட்டால் தான் பாவம் செய்திருக்கமாட்டார் என்பது ஆதாமின் விவாதம்.

மற்றவர்கள்மீது குற்றம் சுமத்துவது மனுஷருடைய சுபாவம். "என்னுடனே இருக்கும் படி" என்று ஆதாம் கூறுகிறார். ஏவாள் சோதிக்கப்பட்ட போது ஆதாம் அங்கே இருக்கிறார். ஆதாம் ஏவாளைப் பாதுகாக்க வில்லை. அவரும் அந்தக் கனியைப் புசிக்க விரும்பினார். ஏவாளோடு ஆதாமும் பாவத்திற்குப் பங்காளியாகி விட்டார் (ஆதி 3:6).

"எனக்குக் கொடுத்தாள்" என்று கூறுவது "என்னைக் கட்டாயப்படுத்திச் சாப்பிட வேண்டுமென்று ஏவாள் கூறினாள்" என்று கூறுவதுபோன்று இருக்கிறது. தேவன் விலக்கினதைப் புசித்தது முதலாவது பாவத்திற்குக் காரணமாயிற்று (லூக்கா 21:34; பிலி 3:19).

தேவன் விலக்கின விருட்சத்தின் கனியை ஆதாம் புசித்து பாவம் செய்தார். ஆனால் ஆதாமோ தன்னுடைய பாவத்திற்கு தானே காரணம் என்பதை அங்கீகரியாமல் அந்தப் பழியை ஏவாள் மீது போடுகிறார். ஆதாம் தன்னுடைய பாவத்திற்கு, தன்னுடைய மனைவியைக் குற்றப்படுத்துவது மாத்திரமல்ல, தன்னை உருவாக்கின தேவனையே குற்றப்படுத்துகிறார். ஆதாம் தேவனை நோக்கி, "என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன்" (ஆதி 3:12) என்று சொல்லுகிறார்.

ஆதாம் தமக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும் என்றும், அவர் பரிசுத்தமாயிருக்கவேண்டும் என்றும் தேவன் விரும்புகிறார். ஆனால் ஆதாமோ தன்னுடைய பாவத்திற்கு தேவனே காரணம் என்று சொல்லுகிறார். ஆதாம் தேவனை தன்னுடைய பாவத்திற்கு பங்காளியாக்குகிறார். தேவனே தனக்கு ஸ்திரீயானவளை தந்தார் என்றும், அந்த ஸ்திரீயானவள் தனக்கு கனியைக் கொடுத்தாள் என்றும் ஆதாம் சொல்லுகிறார்.

ஆதாமைப்போலவே நாமும் பல சமயங்களில் நம்முடைய கஷ்டத்திற்கு தேவனே காரணம் என்று சொல்லுகிறோம். நாம் சோதிக்கப்படும்போது, தேவன் நம்மை சோதிக்கிறார் என்று உடனே சொல்லிவிடுகிறோம். நம்முடைய சோதனைகளுக்கு நாமே காரணமாயிருந்தாலும், அதை நாம் ஏற்றுக்கொள்வதில்லை. தேவன் நம்மை சோதிக்கிறார் என்று சொல்லி, தேவன் மீது பழியைப் போடுகிறோம். தேவனுடைய கிருபைகளை நாம் தப்பிதமாக பயன்படுத்தி, அவருடைய பிரமாணத்திற்கு தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறோம்.

கர்த்தர் நமக்கு அறிவையும் ஞானத்தையும் கொடுத்திருக்கிறார். இது கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற வரம். இந்த வரங்களை கர்த்தருடைய நாமமகிமைக்காகவும், பரிசுத்தவான்களின் பிரயோஜனத்திற்காகவும் பயன்படுத்தவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஞானத்தை பயன்படுத்தி , விநோதமாகவும், தவறான வழிகளிலும் சிந்தனை செய்து, தேவனுடைய நாமத்தைத் தூஷிக்கக்கூடாது.

ஆதாம் ஏவாளை குற்றப்படுத்தியதுபோல, ஏவாள் சர்ப்பத்தை குற்றப்படுத்துகிறாள். "சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன்" என்று ஸ்திரீயானவள் சொல்லுகிறாள். பாவம் கொடிய விஷம் போன்றது. அதை யாரும் அங்கீகரிக்கவோ அல்லது அதை சொந்தமாக்கிக்கொள்ளவோ விரும்புவதில்லை. பாவம் செய்தவர்கள் தங்களுடைய பாவத்தை அங்கீகரிப்பதில்லை. பாவத்தை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அதை அறிக்கை செய்து விட்டுவிடுகிறோனோ தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வான்.

சாத்தானுடைய சோதனைகள் எல்லாம் தந்திரமானது. அவனுடைய வார்த்தைகள் எல்லாம் மாய்மாலமானது. பாவம் நம்மை வஞ்சிப்பதினால் நம்முடைய இருதயம் கடினப்படுகிறது. இதனால் நாம் துணிகரமாகப் பொய்சொல்லுகிறோம்.

"பாவமானது கற்பனையினாலே சமயம்பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது" (ரோம 7:11).

"உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்" (எபி 3:13).

சாத்தான் நம்மை சோதித்தாலும், அவன் நம்மை வஞ்சித்தாலும், அவனே நம்மை மோசம்போக்கினாலும், நம்முடைய பாவத்திற்கு நாமே காரணம். சாத்தான்மீது பழியைத் தூக்கிப்போட்டு, தேவனுக்கு முன்பாக நம்மை நியாயப்படுத்த முடியாது. சாத்தான் சோதனைக்காரனாகயிருந்தாலும், நாமே பாவிகளாயிருக்கிறோம். நம்முடைய பாவத்தின் இச்சைகளே, நம்மைப் பாவம் செய்யுமாறு தூண்டுகிறது. பாவம் நம்மை வஞ்சிக்கிறது.

"அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" (யாக் 1:14,15).

சபிக்கப்பட்டிருப்பாய்
ஆதி 3:14,15

ஆதி 3:14. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்;

ஆதி 3:15. உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.

தேவனாகிய கர்த்தர் காலதாமதம்பண்ணாமல், உடனே தம்முடைய நீதியான தீர்ப்பை சொல்ல ஆரம்பிக்கிறார். சர்ப்பமே பாவத்திற்கு காரணம். சாத்தானிடமிருந்துதான் பாவம் ஆரம்பமாயிற்று. பிசாசானவன் ஏற்கெனவே தேவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணியவன். அவன் தேவனால் தண்டிக்கப்பட்டவன்.

தேவனாகிய கர்த்தர் சோதனைக்காரனை தண்டிக்கிறார். சர்ப்பத்தின்மீது மின்னலும் இடியும் தாக்கியதுபோல விழுகிறது. சர்ப்பமானது சாத்தானுடைய கருவியாக செயல்பட்டு, ஆதாமையும் ஏவாளையும் வஞ்சித்தது. பிசாசின் கருவியாக செயல்படுகிறவர்கள், அவனுடைய தண்டனையிலும் பங்குபெறுவார்கள். சர்ப்பத்தின்மீது தேவனுடைய சாபம் வருகிறது. "நீ சகல நாட்டு மிருகங்களிலும் காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய்" என்று தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தை பார்த்து சொல்லுகிறார். சர்ப்பம் தந்திரமானது. தந்திரமுள்ளது எல்லாமே மனுஷனுக்கு சாபமாயிருக்கும். தந்திரமான காரியங்களை செய்கிறவர்கள், மனுஷருக்கு அநேக தீங்குகளை செய்வார்கள்.

சர்ப்பம் ஆதாமையும் ஏவாளையும் வஞ்சித்தது. தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தை தண்டிக்கிறார். சர்ப்பத்திற்கும், மனுக்குலத்திற்கும் இடையே பகையை உண்டுபண்ணுகிறார். தேவன் தடைபண்ணின விருட்சத்தின் கனியைப் புசிக்குமாறு, சர்ப்பமானது ஏவாளை சோதித்தது. ஏவாள் அந்தக் கனியைப் புசித்திருக்கக்கூடாது. சர்ப்பம் ஏவாளை சோதித்தினால் அவள் அந்தக் கனியைப் புசித்தாள். இதனால் தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்திற்கு தண்டனை கொடுக்கிறார்.

சர்ப்பம் எதைப் புசிக்காதோ, அதைப் புசிக்குமாறு தேவன் அதற்கு தண்டனை கொடுக்கிறார். "நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்" என்று தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தை பார்த்து சொல்லுகிறார்.

இதற்கு முன்பு ஒருவேளை சர்ப்பம் வயிற்றினால் நகராமல் நேராக நடந்திருக்கலாம். மண்ணைத் தின்பதினால் சர்ப்பம் சிருஷ்டிகள் எல்லாவற்றிலும் தாழ்த்தப்பட்டிருப்பதைக் குறிக்கிறது. (சங் 72:9; மீகா 7:17). ஆயிரம் வருஷ அரசாட்சியிலும் சர்ப்பம் சபிக்கப்பட்டதாகவே இருக்கும். (ஏசா 65:25).

சர்ப்பம் தந்திரமுள்ளது மாத்திரமல்ல அது விஷமுள்ளது. ஆகையினால் அது மற்ற எல்லா ஜீவராசிகளின் பகைக்கு பாத்திரமுள்ளதாயிருக்கிறது. சர்ப்பம் விஷமுள்ளது. அது மனுஷருக்கு தீங்கு செய்கிறது. சர்ப்பம் பூமியிலே ஊர்ந்து செல்லும் பிராணியாகயிருப்பதினால், அது மனுஷருடைய காலை கொத்தும், கடிக்கும், நசுக்கும். சர்ப்பத்தால் காலை மாத்திரமே கொத்த முடியும். அது மனுஷருடைய தலை உயரத்திற்கு ஏறிச்சென்று, அவனுடைய தலையைக் கொத்தாது. தரையில் ஊறிப்போகிற சர்ப்பம், அதிலே நடந்துபோகிற மனுஷருடைய கால்களைக் கொத்தும். ஆகையினால் தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து, "நீ ஸ்திரீயின் வித்தின் குதிங்காலை நசுக்குவாய்" என்று சொல்லுகிறார்.

சர்ப்பம் குதிரையின் குதிங்காலையும் கடிக்கும். "தாண், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவன் மல்லாந்து விழும்படியாய் அதின் குதிகாலைக் கடிக்கிறதற்கு வழியில் கிடக்கிற சர்ப்பத்தைப்போலவும், பாதையில் இருக்கிற விரியனைப்போலவும் இருப்பான்" (ஆதி 49:17).

தேவனாகிய கர்த்தர் மனுஷனுக்கும் சர்ப்பத்திற்கும் பகை உண்டாக்குகிறார். அவர் சர்ப்பத்தைப் பார்த்து, "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" (ஆதி 3:15) என்று சொல்லுகிறார்.

இந்த வாக்கியம் இரண்டு நபர்களுக்குக் கூறப்படுகிறது. சர்ப்பத்தின் வித்தாகிய சர்ப்பத்திற்கும், சாத்தானுக்கும் "உன் வித்து" என்னும் வாக்கியம் பொருந்தும். ஆதி 3:14 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருப்பது சர்ப்பத்திற்கு மட்டும் பொருந்தும். சாத்தானுக்குப் பொருந்தாது.

"அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்னும் இந்த வாக்கியம் சாத்தானையும், கிறிஸ்துவையும் மட்டும் குறிக்கும். வேதாகமத்தில் இதுபோன்று ஒரே வாக்கியம் இரண்டு பேரைக் குறிக்குமாறு பல வசனங்களில் வந்திருக்கிறது. (ஏசா 14:12-14; எசே 28:11-17; மத் 16:22-23; மாற்கு 5:7-16; லூக்கா 4:33-35,41). "எனக்கு பின்னாக போ சாத்தானே" என்று இயேசு கூறுவது பேதுருவையும், சாத்தானையும் குறிக்கும். (மத் 16:22-23). தேவன் ஆதி 3:15 ஆவது வசனத்தில் சர்ப்பத்திடம் கூறினாலும் அது சாத்தானையும் குறிக்கிறது.

அதுபோல ஏசா 14:12-14, எசே 28:11-17 ஆகிய வசனங்களில் பாபிலோன், தீரு ஆகிய தேசங்களின் ராஜாக்களைப் பற்றிக் கூறப்பட்டிருந்தாலும், இந்த வசனங்கள் பிரதானமாகச் சாத்தானையே குறிக்கும். பாபிலோனுக்கும், தீருவிற்கும் சாத்தான் அதரிசனமான ராஜாவாக இருக்கிறான்.

சர்ப்பங்களுக்கும், மனுஷருக்கும் இயற்கையாகவே பகை உள்ளது. அதுபோலவே சாத்தானுடைய பிள்ளைகளுக்கும், தேவனுடைய பிள்ளைகளுக்கும் இயற்கையாகவே பகை இருக்கிறது. (மத் 10:34-38; யோவான் 15:18-19; யாக் 4:4; 1பேதுரு 4:12-19; 1யோவான் 2:15-17; 1யோவான் 3:8-12; 1யோவான் 4:1-6).

"அவள் வித்து" என்பது ஸ்திரீயின் வித்தைக் குறிக்கும். புருஷனுடைய வித்தைக் குறிக்காது. ஆகையினால் இந்த வாக்கியம் மரியாள் மூலமாக வரும் தேவனுடைய குமாரனையே குறிக்கிறது. (ஆதி 3:15; ஏசா 7:14; ஏசா 9:6-7; ஏசா 11:1; மத் 1; லூக்கா 1:31-35; யோவான் 1:14; ரோமர் 1:1-3; ரோமர் 8:3; கலா 3:16,19; கலா 4:4; பிலி 2:5-11; 1தீமோ 3:16; 2தீமோ 2:8; எபி 1:1-8; எபி 2:9-18; 1யோவான் 4:1-6; வெளி 5:5).

இயேசு கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பு தேவனுடைய திட்டத்தில் மிகவும் முக்கியமான அம்சமாகும். இயேசு கிறிஸ்து கன்னி மரியாளின் வயிற்றில் பிறந்தது, அவருடைய மரணம், அவர் அடக்கம் பண்ணப்படுதல், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுதல் ஆகிய சத்தியங்களை ஒருவர் விசுவாசிக்கவில்லையென்றால் அவருக்கு இரட்சிப்பு இல்லை. (1கொரி 15:1-8; 1யோவான் 4:1-6).

மேசியாவுக்கு பரிசுத்த வேதாகமத்தில் ஒரு சில உருவகப்பெயர்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதியாகமம் புஸ்தகத்தில் மேசியாவுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் உருவக பெயர்களின் விவரம் வருமாறு:

1. ஸ்திரீயின் வித்து (ஆதி 3:15)
2. ஆபிரகாமின் குமாரன். (ஆதி 22:18; மத் 1:1; லூக்கா 3:23-34; கலா 3:16)
3. ஈசாக்கின் குமாரன். (ஆதி 21:12; ஆதி 26:4; மத் 1:2; லூக்கா 3:23-34; ரோமர் 9:6-9)
4. யாக்கோபின் குமாரன் (ஆதி 28:13-14; மத் 1:2; லூக்கா 3:23-34)
5. சமாதான கர்த்தர் - சைலோ (ஆதி 49:10)
6. இஸ்ரவேலின் மேய்ப்பன் (ஆதி 49:24; சக 13:7; யோவான் 10:1-18)
7. இஸ்ரவேலின் கன்மலை (ஆதி 49:24)

தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தை நோக்கி, "அவர் உன் தலையை நசுக்குவார்" என்று சொல்லுகிறார். இயேசு கிறிஸ்து சாத்தானை நசுக்கி, அவனை நித்தியமாக தோற்கடிப்பார். (ரோமர் 16:20; கலா 3:13; சங் 72:9; எபே 2:14-18; கொலோ 2:15; எபி 2:14; 1யோவான் 3:8; வெளி 11:15; வெளி 12:7-12; வெளி 19:11-20:10).

தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தை நோக்கி, "நீ அவர்குதிங்காலை நசுக்குவாய்" என்று சொல்லுகிறார். சாத்தான் இயேசு கிறிஸ்துவிற்கு ஒருசில தற்காலிகப் பாடுகளைக் கொண்டுவந்தான். (ஆதி 3:15; ஏசா 53; அப் 2:25-26; எபி 2:14-15; வெளி 1:18).

மனுஷனுக்கும் சர்ப்பத்திற்கும் பகையிருந்தாலும், மனுஷன் சர்ப்பத்தை அழித்து வெற்றி பெறுவான். அவன் சர்ப்பத்தின் தலையை நசுக்குவான். தலை நசுக்கப்படும்போது சர்ப்பம் அழிந்துபோகும். மனுக்குலம் சர்ப்பத்தின் இனத்தையே அழிப்பதற்கு முயற்சிபண்ணும்.

தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்திற்கு தண்டனை கொடுக்கும்போது, மனுஷனுக்கும் தண்டனை கொடுக்கிறார். ஆனாலும் தேவனுடைய வாக்குத்தத்தம், அவருடைய பிள்ளைகளுக்கு பாதுகாப்பாயிருக்கிறது.

'சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய்" (சங் 91:13).

கிறிஸ்துவனாவர் தம்முடைய சீஷர்களை நோக்கி, "சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் (மாற் 16:18) என்று சொன்னார்.

சற்று நேரத்திற்கு முன்பு, ஏதேன் தோட்டத்திலே சர்ப்பமும் ஸ்திரீயானவளும் சிநேகிதர்களாயிருந்தார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் மனம்விட்டு சாம்பாஷணை பண்ணினார்கள். தேவன் தடைபண்ணின விருட்சத்தின் கனியைக் குறித்து அவர்கள் அதிகமாய்ப் பேசினார்கள். அவர்கள் மத்தியிலே அற்புதமான உடன்படிக்கையும் ஏற்பட்டது. ஆனால் இப்போதோ அவர்கள் இருவரும் சபிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே பிரிவினையும் பகையும் உண்டாயிற்று.

பாவமான சிநேகம் பகையில் முடியும். துன்மார்க்கத்தினால் இணைகிறவர்கள், நிலைத்திருக்கமாட்டார்கள். அவர்களுடைய இணைப்பு சீக்கிரத்தில் முடிந்துபோகும். சர்ப்பமும் ஸ்திரீயானவளும் சற்று நேரத்திற்கு முன்பு சிநேகமாயிருந்தார்கள். இப்போதோ அவர்கள் பகையாயிருக்கிறார்கள்.

தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்திற்கு தண்டனையைக் கொடுத்தாலும், அந்த தண்டனை சாத்தான்மீது கொடுக்கப்பட்ட தண்டனையாகவே இருக்கிறது. சாத்தான் சர்ப்பத்தை தன்னுடைய கருவியாகப் பயன்படுத்தினான். ஏதேன் தோட்டத்திலே சாத்தானே சர்ப்பத்தின் ரூபத்தில் வந்தான். ஆகையினால் ஏவாளை சர்ப்பம் வஞ்சித்தது என்று சொல்லும்போது, அவளை சாத்தான் வஞ்சித்தான் என்றும் சொல்லலாம்.

சாத்தான் தேவனுக்கும், மனுஷனுக்கும் விரோதமான சத்துருவாயிருக்கிறான். அவன் நித்திய சத்துரு. தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைத் தண்டிக்கும்போது, சாத்தானை தண்டிக்கிறார். சாத்தான் தேவனால் சபிக்கப்பட்டவன். "நீ சபிக்கப்பட்டிருப்பாய்" என்று தேவன் சர்ப்பத்தைப் பார்த்து சொல்லும்போது, "லூசிபராகிய நீ கீழே விழுந்தாய், நீ சபிக்கப்பட்டிருப்பாய்" என்று சொல்லுகிறார்.

லூசிபர் தன்னை தேவனுக்கு மேலாக உயர்த்தினான். அவன் தேவனுக்கு விரோதமாக தன் தலையை உயர்த்தி கலகம்பண்ணினான். ஆகையினால் தேவன் தம்முடைய நீதியினால் சாத்தானை தாழ்த்துகிறார். "அவர் உன் தலையை நசுக்குவார்" என்று தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார். சாத்தான் தன்னுடைய தலையை தேவனுக்கு மேலாக உயர்த்தினான். சாத்தானுடைய தலை நசுக்கப்படுகிறது.

தேவனாகிய கர்த்தர் சாத்தானை தண்டிப்பதுபோல, தங்களை உயர்த்துகிற எல்லோரையுமே தண்டிக்கிறார். அவர்களைத் தாழ்த்துகிறார். இருதயத்தில் பெருமையுள்ளவர்களை கர்த்தர் தாழ்த்துகிறார். இருதயத்தில் தாழ்மையுள்ளவர்களை கர்த்தர் உயர்த்துகிறார்.

சாத்தானுக்கும் மனுக்குலத்திற்கும் இடையே தேவனாகிய கர்த்தர் பிரிவினையையும், பகையையும் ஏற்படுத்துகிறார். சாத்தான் மனுக்குலத்திலிருந்து விலக்கப்படுகிறான். அவன் ஒதுக்கி வைக்கப்படுகிறான். சாத்தானுக்கும் மனுக்குலத்திற்கும் இடையே பகையும் யுத்தமும் உண்டாகிறது. இந்தப் பகை முடிவு பெறுகிற பகையல்ல. இது நித்திய பகை.

பிரதான மீட்பர் சாத்தானை அழித்துப்போடுவார். தேவனாகிய கர்த்தர் பிசாசாகிய சர்ப்பத்தைப் பார்த்து, "அவர் உன் தலையை நசுக்குவார்" என்று சொன்னார். இந்த வாக்கியத்திற்கு "பிரதான மீட்பர் சாத்தானின் தலையை நசுக்குவார்" என்று பொருள். மீட்பருக்கு முன்பாக சாத்தானுடைய தந்திரம் பலிக்காது. சாத்தானுடைய அதிகாரமும் வல்லமையும் மீட்பருக்கு முன்பாக ஒன்றுமில்லாமல் போகும். மீட்பர் சாத்தானின் தலையை நசுக்குவதினால் அவன் நசுக்கப்பட்டு அழிந்துபோவான்.

தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து, "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்திற்கும் அவள் வித்திற்கும் பகை உண்டாக்குவேன்" என்று சொல்லுகிறார். மனுஷர் மத்தியிலே தேவனுடைய ராஜ்யத்திற்கும், பிசாசின் ராஜ்யத்திற்கும் பகை உண்டாயிற்று. இந்தப் பகை முடிவு பெறுகிற பகையல்ல. இது தற்காலிகமான பகையுமல்ல. இது நிரந்தர பகையாகவும், நித்திய பகையாகவும் இருக்கிறது.

தேவன் மனுஷருக்கும் சாத்தானுக்கும் பகையை ஏற்படுத்தியிருக்கிறார். இந்தப் பகையின் விளைவாக தேவனுடைய ஜனத்தின் இருதயங்களிலே ஒரு நிரந்தர போராட்டம் உண்டாயிருக்கிறது. விசுவாசிகளின் இருதயத்தில் தேவனுடைய கிருபைக்கும், அவர்களுடைய பாவத்திற்கும் இடையே தொடர்ந்து போராட்டம் நடைபெறுகிறது. இந்தப் பிரபஞ்சத்தில், துன்மார்க்கருக்கும், கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கும் இடையே நித்தியமான போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஏதேன் தோட்டத்திலே தேவனாகிய கர்த்தர், மீட்பராகிய கிறிஸ்துவைக்குறித்து தம்முடைய கிருபையுள்ள வாக்குத்தத்தை வெளிப்படுத்துகிறார். விழுந்துபோன மனுக்குலத்திற்கு கிறிஸ்துவானவர் மீட்பராயிருப்பார். கிறிஸ்துவானவர் மனுக்குலத்தை சாத்தானுடைய பிடியிலிருந்தும் வல்லமையிலிருந்தும் விடுதலைபண்ணுவார்.

நம்முடைய முதல் பெற்றோராகிய ஆதாமுக்கும் ஏவாளுக்கும், நம்பிக்கையின் கதவு திறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இரட்சகர் மூலமாக வரும் மீட்பை தங்கள் விசுவாசக்கண்களால் நோக்கிப் பார்க்கிறார்கள். சுவிசேஷத்தின் காலம் ஏதேன் தோட்டத்திலேயே ஆரம்பமாயிற்று. தேவனாகிய கர்த்தர் காயம்கட்டுகிறவராகயிருக்கிறார். இது அவருடைய கிருபை. மனுக்குலத்திற்கு காயம் ஏற்பட்டபோதே, தேவனாகிய கர்த்தர், அந்தக் காயத்தை திறந்து, அந்தக் காயத்தைக் குணப்படுத்துவதற்கு காயம் கட்டுகிறார்.

ஏதேன் தோட்டத்திலே இரட்சராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய வாக்குத்தத்தை தேவனாகிய கர்த்தர் வெளிப்படுத்துகிறார். அவர் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லும்போது, "அவள் வித்து" என்று சொல்லுகிறார். கிறிஸ்துவானவர் அந்த ஸ்திரீயின் வித்தாகயிருப்பார். ஆகையினால்தான் லூக்கா எழுதின சுவிசேஷத்தில், இயேசுகிறிஸ்துவின் வம்சவரலாற்றைப்பற்றிச் சொல்லும்போது, அவருடைய வம்சவரலாறு "ஆதாமின் குமாரன்" என்று ஆரம்பமாகிறது.

பிசாசானவன் ஏதேன் தோட்டத்திலே ஸ்திரீயை வஞ்சித்தான். தேவனாகிய கர்த்தரோ, "அவள் வித்து" என்று சொல்லி, ஸ்திரீயைக் கனப்படுத்துகிறார். ஆதாமும் அந்த ஸ்திரீயை குற்றப்படுத்தினார். தன்னுடைய பாவத்திற்கு ஸ்திரீயானவளும் காரணம் என்று சொன்னார். ஆனாலும் தேவனாகிய கர்த்தர் தம்முடைய கிருபையை இங்கு வெளிப்படுத்துகிறார்.

ஏதேன் தோட்டத்திலே, ஸ்திரீயானவளே, முதலாவதாக அந்த விருட்சத்தின் கனியைப் புசித்து பாவம் செய்தாள். அவளே தேவனுடைய கற்பனைக்கு கீழ்ப்படியாமல் முதலாவதாக மீறினாள். ஆனாலும் பிள்ளை பேற்றின் மூலமாக, அவளுக்கு இரட்சிப்பு உண்டாகும்.

"அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால், பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்" (1தீமோ 2:15).

வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வித்து, ஸ்திரீயினிடத்திலிருந்து பிறக்கும். இரட்சகர் "ஸ்திரீயின் வித்து" என்று அழைக்கப்படுகிறார். "ஸ்திரீயின் வித்து" என்பது, ஸ்திரீயின் வித்தை மாத்திரமே குறிக்கும். ஆகையினால் ஸ்திரீயின் வித்தானது, கன்னிகையின் வித்தாகயிருக்கிறது.

தேவனாகிய கர்த்தர், மீட்பருடைய பாடுகளையும் மரணத்தையும் இங்கு முன்னறிவிக்கிறார். தேவன் சர்ப்பத்தை நோக்கி, "நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்று சொல்லுகிறார். சாத்தான் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவினுடைய குதிங்காலை நசுக்குவான். அவன் இயேசுகிறிஸ்துவினுடைய மாம்ச சரீரத்தை நசுக்குவான்.

இயேசுகிறிஸ்து வனாந்தரத்திலே உபவாசம்பண்ணியபோது சாத்தான் அவரை பாவம் செய்யுமாறு சோதித்தான். கிறிஸ்துவானவர் வியாகுலப்பட்டு ஜெபித்தபோது, சாத்தானே அவருக்கு வியாகுலத்தைக் கொடுத்தான் என்று வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். கிறிஸ்துவானவருக்கு வியாகுலம் வந்தால், அவர் சிலுவையில் மரிக்காமல் தப்பித்துக்கொள்வார் என்று சாத்தான் திட்டமிட்டான். கிறிஸ்துவானவர் இரத்தம் சிந்தவில்லையென்றால் மனுக்குலத்திற்கு பாவமன்னிப்பு இல்லை.

யூதாஸ்காரியோத்து இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்தான். பேதுரு கிறிஸ்துவானவரை மறுதலித்தார். பிரதான ஆசாரியர்கள் இயேசுகிறிஸ்துவைத் துன்பப்படுத்தினார்கள். கிறிஸ்துவுக்கு விரோதமாகக் குற்றம் சொல்ல கள்ள சாட்சிகளை ஏற்படுத்தினார்கள். பிலாத்துவும் இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறையுமாறு ஒப்புக்கொடுத்தான். இவையெல்லாம் சாத்தானுடைய தந்திரமான வேலைகள். இரட்சகருடைய இரட்சிப்பின் திட்டத்தை அழிக்கவேண்டும் என்பது சாத்தானுடைய நோக்கம்.

கிறிஸ்துவானவர் சிலுவையிலே தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்துவை அழிக்கவேண்டும் என்பது சாத்தானுடைய நோக்கம். ஆனால் சாத்தான் நினைத்தது நிறைவேறவில்லை. கிறிஸ்துவானவர் சிலுவையிலே மரித்ததன் மூலமாக, அவர் சாத்தானையும், மரணத்தின் வல்லமையையும் அழித்தார்.

"ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்" (எபி 2:14,15).

தேவனாகிய கர்த்தர் ஏதேன் தோட்டத்திலே, "நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்று சர்ப்பத்திடம் சொன்னார். இந்த வாக்கியத்திற்கு சாத்தான் இயேசுகிறிஸ்துவின் குதிங்காலை நசுக்குவான் என்று பொருள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, கல்வாரி சிலுவையில் அறையப்பட்டபோது, அவருடைய கால்களில் ஆணிகள் அறையப்பட்டது. கிறிஸ்துவானவர் சிலுவையில் அனுபவித்த பாடுகளை, அவருடைய பரிசுத்தவான்கள், அவருடைய நாமத்தினிமித்தமாக இன்றும் அனுபவித்து வருகிறார்கள். பிசாசானவன் பரிசுத்தவான்களை சோதிக்கிறான். அவர்களைத் துன்பப்படுத்துகிறான்.

சாத்தான் கர்த்தருடைய பிள்ளைகளை சிறைச்சாலைகளில் அடைக்கிறான். அவர்களில் சிலரை கொன்றும் போடுகிறான். கர்த்தருடைய பரிசுத்தவான்கள், கிறிஸ்துவின் நிமித்தமாக பாடுகளை அனுபவிக்கிறார்கள். ஏதேன் தோட்டத்திலே தேவனாகிய கர்த்தர் சொன்ன பிரகாரமாக, சாத்தான் அவர்களுடைய குதிங்காலை நசுக்குகிறான்.

சாத்தான் இரட்சகருடைய குதிங்காலை பூமியிலே நசுக்கினாலும், அவருடைய தலை பரலோகத்திலே பாதுகாப்பாயிருக்கிறது. கிறிஸ்துவானவருக்கு சாத்தான்மீது வெற்றி உண்டாயிற்று. சாத்தானுக்கும் ஸ்திரீக்கும் பகை உண்டாயிற்று. சாத்தானுடைய வித்திற்கும் ஸ்திரீயின் வித்திற்கும் பகை உண்டாயிற்று. ஆனாலும் ஸ்திரீயின் வித்தானவர் சாத்தானுடைய தலையை நசுக்கி வெற்றி சிறந்தார்.

"நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையில் வெற்றி சிறந்தார்" (கொலோ 2:14,15).

இரட்சகராகிய இயேசுகிறிஸ்து சாத்தானுடைய தலையை நசுக்கும்போது, அவனுடைய தந்திரங்களையும், அவனுடைய அதிகாரங்களையும் முற்றிலுமாய் நசுக்கிப்போடுகிறார். இதனால் சாத்தானுடைய ராஜ்யம் அழிக்கப்படுகிறது. அவனுடைய திட்டங்கள் எல்லாம் நிர்மூலமாக்கப்படுகிறது. கிறிஸ்துவானவர் சாத்தானுடைய சோதனைகளையும் ஜெயிக்கிறார். கிறிஸ்துவின் மரணத்தினால் சாத்தான் நிர்மூலமாகிறான். சாத்தானுடைய ராஜ்யம் மொத்தமாய் அழிந்துபோகிறது.

ஸ்திரீயின் வித்தானவர் சர்ப்பத்தின் தலையை நசுக்கும்போது, அந்த மிருகம் குணப்படுத்த முடியாதபடி அழிந்துபோகும். தலை நசுங்கிப்போனால் சர்ப்பத்திற்கு ஜீவன் இருக்காது. கிறிஸ்துவானவர் சாத்தானுடைய தலையை நசுக்கி, அவனை முற்றிலுமாய் அழித்துப்போடுகிறார்.

வேதனையோடே பிள்ளை பெறுவாய்
ஆதி 3:16

ஆதி 3:16. அவர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப் பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார்.

ஸ்திரீயானவள் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்தாள். தேவனாகிய கர்த்தர் அவளுக்கும் தம்முடைய நீதியான தண்டனையைக் கொடுக்கிறார். ஸ்திரீயானவளுக்கு மிகுந்த வேதனையும் வருத்தமும் உண்டாகும். அவளுடைய வருத்தத்தில் ஒன்றைப்பற்றி இங்கு விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவள் கர்ப்பவதியாயிருக்கும்போது தேவனாகிய கர்த்தர் அவளுடைய வேதனையைப் பெருகப்பண்ணுவார். அவள் வேதனையோடே பிள்ளை பெறுவாள். பிள்ளை பெறும்போது அவளுக்கு வேதனையும் பயமும் உண்டாகும். பாவத்தினால் இந்தப் பிரபஞ்சத்தில் வேதனையும், வருத்தமும், பயமும் பிரவேசித்திருக்கிறது.

நம்மிடத்தில் பாவமும், அக்கிரமமும், மீறுதலும் இல்லையென்றால் நமக்கு வேதனையிருக்காது. நாம் பாவத்தை அறியாதவர்களாயிருப்போமென்றால், வேதனையையும் அறியாதவர்களாயிருப்போம். ஸ்திரீயினுடைய வேதனையை தேவனாகிய கர்த்தர் பெருக்கப்பண்ணுவதாகச் சொல்லுகிறார். நம்முடைய பாவங்கள் பெருகும்போது நம்முடைய வேதனைகளும் பெருகும்.

ஸ்திரீயானவள் பிள்ளைபெறும்போது வேதனையோடே பிள்ளை பெறுகிறாள். அவளுடைய பாவங்கள் பெருகும்போது, அவளுடைய பிள்ளை பேற்றின்போது, அவளுக்கு வேதனையும் பெருகும். அவளுடைய பிள்ளைகள் துன்மார்க்கராயும், மதியீனராயும் இருக்கும்போது, ஸ்திரீயானவளுடைய வேதனைகள் மிகவும் அதிகரித்திருக்கும். அவளுடைய இருதயத்தில் சுமக்க முடியாத பாரம் இருக்கும்.

தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி, "உன் ஆசை உன் புருஷனை பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்வான்" என்று சொல்லுகிறார். ஸ்திரீகள் தங்கள் புருஷருக்கு கீழ்ப்படியவேண்டும். இது தேவனுடைய பிரமாணம். கீழ்ப்படிதல் ஸ்திரீகளின் கடமை. ஆனால் ஸ்திரீகளுக்குள்ளே பாவம் பிரவேசிக்கும்போது, புருஷனுக்கு கீழ்ப்படியவேண்டிய கடமை, அவளுக்கு தண்டனையாக இருக்கும். ஸ்திரீயினிடத்தில் பாவம் இல்லையென்றால், அவள் தன் புருஷனுக்கு சந்தோஷமாய்க் கீழ்ப்படிவாள்.

அநேக ஸ்திரீகள் தங்கள் புருஷரைக் குறித்தும், தாங்கள் அவர்களுக்கு கீழ்ப்படியவேண்டியதைக் குறித்தும் முறுமுறுக்கிறார்கள், முறையிடுகிறார்கள். தேவன் தடைபண்ணின விருட்சத்தின் கனியை ஏவாள் புசியாதிருந்தால், அவள் அந்தக் கனியை தன் புருஷனாகிய ஆதாமுக்கு புசிக்கக் கொடுக்காதிருந்தால், ஸ்திரீயானவளுக்கு இப்படிப்பட்ட முறுமுறுப்பும், முறையிடுதலும் இருக்காது.

ஸ்திரீயானவள் தன்னுடைய பாவத்தினால், தன் புருஷனுக்கு கீழ்ப்படியாமல் அவனை அசட்டைபண்ணுகிறாள். ஆனாலும் புருஷன் தன் மனைவியை ஆண்டுகொள்கிறான். இதனால் குடும்பத்திலே தேவனுடைய அன்பின் பிரமாணத்திற்கு இடமில்லாமல் போகிறது. புருஷனும் மனைவியும் ஒருவரையொருவர் அடக்க நினைத்து, தங்களுக்குள்ளே சண்டைபோட்டுக் கொள்கிறார்கள். குடும்பத்தில் சண்டை சச்சரவுகளும், பிரச்சனைகளும் ஏற்படுவது தேவனுடைய தெய்வீக நியாயத்தீர்ப்பாயிருக்கிறது. இந்த நியாயத்தீர்ப்புக்கு ஏவாளின் பாவமே காரணம்.

தேவன் ஸ்திரீயானவளை கோபத்தோடு தண்டித்தாலும், தேவனுடைய கோபத்திலே, அவருடைய இரக்கமும் கிருபையும் வெளிப்படுகிறது. ஸ்திரீயானவளுக்கு வேதனை உண்டாகும். ஆனாலும் அந்த வேதனையோடே அவள் பிள்ளை பெறுவாள். பிள்ளை பிறந்த பின்பு அவள் தன் வேதனையை மறந்துவிடுவாள்.

"ஸ்திரீயானவளுக்குப் பிரசவகாலம் வந்திருக்கும்போது அவள் துக்கமடைகிறாள்; பிள்ளைபெற்றவுடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தானென்கிற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினையாள்" (யோவா 16:21).

தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயானவளுக்கு சொல்லுகிற தண்டனை, அவளுக்கு சொல்லப்படும் சாபவார்த்தைகளல்ல. அவளை அழிக்கவேண்டும் என்பது தேவனுடைய நோக்கமுமல்ல. அவளை தண்டித்து திருத்தவேண்டும் என்றும், அவள் தன் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும் என்றும் தேவனாகிய கர்த்தர் விரும்புகிறார். இதற்காகவே அவள் கர்ப்பவதியாயிருக்கும்போது அவளுடைய வேதனையை மிகவும் பெருகப்பண்ணுகிறார். அவளும் வேதனையோடே பிள்ளை பெறுகிறாள்.

பிள்ளைபெறுவது சாபமல்ல. மனுஷன் பாவத்தில் விழுவதற்கு முன்பாக தேவன் அவர்களைப் பலுகிப்பெருகி பூமியை நிரப்புமாறு கட்டளையிட்டிருந்தார். (ஆதி 1:26-28) ஆனால் பிள்ளை பெறும்போது வேதனையும் பெருகுகிறது. (ஆதி 3:16). ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப் பின்பு நித்திய காலமாகப் பிள்ளைகள் பிறக்கும். (ஆதி 8:22; ஆதி 9:12; ஏசா 59:21; தானி 7:13-14; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 21:24). புதிய பூமியில் சாபங்களெல்லாம் அகற்றப்படும். அக்காலத்தில் பிள்ளை பெறும்போது வேதனையிராது (வெளி 21:3-7).

தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி, "உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும்" - ஏவாள் ஒரு நல்ல பாடத்தைப் படித்துக் கொண்டாள். அவள் செய்த தவற்றிற்கு அவளுக்கு ஏற்ற தண்டனை கிடைத்திருக்கிறது. ஆகையினால் இனிமேல் வரப்போகிற காலங்களில் தன்னுடைய புருஷனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று தீர்மானம்பண்ணி ஜீவிப்பாள்.

தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி, "அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான்" என்றும் சொல்லுகிறார். புருஷன் இப்பொழுது தன் மனைவிக்குத் தலையாக இருக்கிறான். (1கொரி 11:3-12; எபே 5:22)

மண்ணுக்குத் திரும்புவாய் ஆதி 3:17-19

ஆதி 3:17. பின்பு அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்.

ஆதி 3:18. அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய்.

ஆதி 3:19. நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்;நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்.

ஆதாமும் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை. ஆகையினால் தேவனாகிய கர்த்தர் ஆதாமையும் தண்டிக்கிறார். அவர் ஆதாமுக்கு தம்முடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை சொல்லுவதற்கு முன்பாக, ஆதாம் செய்த பாவங்களை அவருக்கு நினைவுபடுத்துகிறார். ஆதாம் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால், தேவனுடைய கோபம் ஆதாமின் மேலும் வெளிப்படுகிறது.

தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி, "அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான்" என்றும் சொல்லுகிறார். புருஷன் இப்பொழுது தன் மனைவிக்குத் தலையாக இருக்கிறான். (1கொரி 11:3-12 ; எபே 5:22)

மண்ணுக்குத் திரும்புவாய் ஆதி 3:17-19

ஆதி 3:17. பின்பு அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்.

ஆதி 3:18. அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய்.

ஆதி 3:19. நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்;நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்.

ஆதாமும் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை. ஆகையினால் தேவனாகிய கர்த்தர் ஆதாமையும் தண்டிக்கிறார். அவர் ஆதாமுக்கு தம்முடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை சொல்லுவதற்கு முன்பாக, ஆதாம் செய்த பாவங்களை அவருக்கு நினைவுபடுத்துகிறார். ஆதாம் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால், தேவனுடைய கோபம் ஆதாமின் மேலும் வெளிப்படுகிறது.

ஆதாமுக்கு மூன்றுவிதமான சாபங்கள் வருகிறது. அவர் வாசம்பண்ணுகிற இந்தப் பூமி சபிக்கப்பட்டிருக்கிறது. ஆதாமுக்கு கடினமான வேலை கொடுக்கப்படுகிறது. ஆதாமின் ஜீவியகாலம் குறைந்துபோகிறது.

ஆதாம் தன் மனைவியின் வார்த்தைக்கு செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று தேவனாகிய கர்த்தர் அவருக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தார். இதுவே ஆதாமின் பாவம். ஆகையினால் தேவனாகிய கர்த்தர் ஆதாமை நோக்கி, "பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்" என்றும், "அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்" என்றும் சொல்லுகிறார்.

மனுஷர்மீது மட்டுமல்லாமல், விலங்குகள்மீதும், பூமியின்மீதும், பூமியின்மீது முளைக்கும் தாவர வர்க்கங்கள்மீதும் தேவனுடைய சாபம் வந்தது. (ஆதி 3:17-19; ரோமர் 8:19-23; வெளி 21:4; வெளி 22:3).

முள் வறட்சிக்கு அடையாளம். (நீதி 24:31; ஏசா 5:6; ஏசா 7:24; ஏசா 34:13). இவை தாடையை உருவக் குத்துகிறதற்கும், (யோபு 41:2), எரிபொருளாகவும், (சங் 58:9; சங் 118:12; பிர 7:6), வேலிகளாகவும் (ஓசி 2:6; மீகா 7:4), கிறிஸ்துவிற்கு முள்முடி சூடுவதற்கும் (மத் 27:29; மாற்கு 15:17 ; யோவான் 19:2,5) பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய வார்த்தையை மனுஷருடைய இருதயத்திலிருந்து எடுத்துப்போடும் தீமையான காரியங்களுக்கு முள்ளுள்ள இடம் ஒரு அடையாளமாகும் (மத் 13:7,22) மனுஷருடைய பாடுகளை முள்ளானது குறிக்கிறது. (எண் 33:55; 2நாளா 12:7).

"குருக்கு" என்பது விஷமுள்ள செடிகள். (யோபு 31:40; ஓசி 10:8). குருக்குகளைப் பற்றி வேதாகமத்தில் உவமைகள் உள்ளன. (2இராஜா 14:9; 2நாளா 25:18; மத் 7:16)

சாபத்தின்கீழ் மனுஷன் மிகவும் கடினமாக உழைத்து புசிக்கவேண்டும். தன் முகத்தின் வேர்வையால் மனுஷன் ஆகாரம் புசிப்பான். மனுஷன் மண்ணாயிருக்கிறான். ஆகையினால் மண்ணுக்குத் திரும்புவான். தான் செய்த பாவத்திற்கு மனுஷன் தண்டனையை அனுபவிக்கிறான். கடினமான உழைப்பினால் அவனுடைய சரீரம் களைப்படைந்து நோய்வாய்ப் பட்டு, இறுதியில் அகால மரணமடைகிறான். (பிர 3:20; பிர 12:7; சங் 103:14; 1கொரி 15:21-28).

பாலைவனங்கள், நீர்வளமில்லாதநிலங்கள், களைகள், விஷங்கள் ஆகியவை எல்லாம் சாபத்தின் விளைவுகளே. மனுஷன் இவற்றுக்கு மத்தியில் ஜீவிக்க வேண்டும். பூமி சபிக்கப்பட்டிருக்கும்போது அது மனுஷனுக்கும் சாபமாக இருக்கும். வானமண்டலங்களிலுள்ள நட்சத்திரங்களும், இதனால் பாதிப்படைகின்றன. சீதோஷ்ண நிலைகள் மாற்றமடைந்து அது மனுஷருக்குப் பிரச்சனையாகிறது. (ஏசா 30:26; ஏசா 35:1-8; வெளி 7:16).

மனுக்குலம் இறுதியாக இரட்சிக்கப்படும் வரையிலும் மனுஷனுக்குத் தொடர்ந்து பிரச்சனைகளும், கஷ்டங்களும், பாடுகளும், வேதனைகளும் வந்து கொண்டே இருக்கும். (ஆதி 31:42; ஆதி 35:16; சங் 90:10; சங் 107:12; பிர 1:8; பிர 2:18; பிர 4:8; மத் 11:28; யாக் 5:4). புதிய பூமியில் ஒரு சாபமுமிராது. மனுஷனுடைய சாபமும் அகன்றுபோகும். மனுஷன் தேவனோடு முழு உலகத்தையும் ஆளுகை செய்வான் (1கொரி 15:24-28; எபே 1:10; வெளி 20-22).

இந்தப் பூமியிலிருந்து இது வரையிலும் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் நல்ல சுவையான கனிகள் கிடைத்தது. அவர்கள் இருவரும் ஏதேன் தோட்டத்தை பண்படுத்தி, சகல விருட்சங்களின் கனிகளையும் புசித்து திருப்தியடைந்தார்கள். ஆனால் இப்போதோ ஆதாமுடைய பாவத்தினிமித்தமாக, கர்த்தர் இந்தப் பூமியை சபிக்கிறார்.

கர்த்தர் ஆதாமை சபிக்கவில்லை. அவர் சர்ப்பத்தை சபித்தார். தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து, "நீ சகல நாட்டுமிருங்களிலும் சகல காட்டுமிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய்" (ஆதி 3:14) என்று சொன்னார். ஆனாலும் தேவனாகிய கர்த்தர், சர்ப்பத்தை சபித்ததுபோல, ஆதாமை சபிக்கவில்லை. அவர் ஆதாமுக்கு ஏராளமான ஆசீர்வாதங்களை வைத்திருக்கிறார்.

ஆதாமுடைய பாவத்தினிமித்தமாக, தேவனாகிய கர்த்தர் பூமியை சபிக்கிறார். ஆதாம் இந்தப் பூமியைவிட மேலானவராகவும், விசேஷமானவராகவும் இருக்கிறார். இந்தப் பூமி தன் வாயைத் திறந்து ஆதாமை விழுங்கிவிடவில்லை. பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது. இந்தப் பூமியில் சகலவிதமான விருட்சங்களும் இருக்கிறது. அவை பார்ப்பதற்கு அழகாயிருக்கிறது. ஆனால் ஆதாமுடைய பாவத்தினிமித்தமாக, பூமியின் அழகு குறைந்துபோயிற்று. விருட்சங்கள் கனிகளைத் தரவில்லை. தேவன் பூமியை சபிக்கிறார்.

தேவனாகிய கர்த்தர் ஆதாமை ஏதேன் தோட்டத்திலே, அழைத்துக்கொண்டு வந்தார். தோட்டத்தை பண்படுத்தும் வேலையை ஆதாமுக்கு கொடுத்தார். இப்போதோ ஆதாமின் வேலை கடினமாயிற்று. தேவனாகிய கர்த்தர் ஆதாமை நோக்கி, "நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்" (ஆதி 3:19) என்று சொல்லுகிறார்.

ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பாக, அவருடைய வேலை ஏதேன் தோட்டத்திலே இலகுவாயிருந்தது. அவர் வேலை செய்ததினால் களைப்படையவில்லை. ஆதாமின் முகத்தில் வேர்வை வடியவில்லை. ஆதாமின் வேலை அவருக்கு சந்தோஷமாயிருந்தது. ஏதேன் தோட்டத்தை பண்படுத்துகிற வேலை மிகவும் சாதாரணமான வேலை. அது ஏற்கெனவே தேவனுடைய ஆசீர்வாதத்தினால் பண்படுத்தப்பட்ட தோட்டமாயிருக்கிறது.

தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு இப்போது கடினமான வேலையைக் கொடுக்கிறார். அவர் தன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிக்கவேண்டும். ஆதாம் கடினமாய் உழைக்கவேண்டும். அவர் உழைக்கவில்லையென்றால், அவருக்கு புசிக்க போஜனம் இருக்காது. ஆதாம் பட்டினி கிடக்கவேண்டும்.

ஆதாம் பாவம் செய்யவில்லையென்றால், அவருடைய முகத்திலே வேர்வை வடிந்திருக்காது. அவர் எப்போதும் போல இலகுவான வேலையை செய்து, தன்னுடைய ஆகாரத்தை சந்தோஷமாய்ப் புசித்திருக்கலாம். வேலை செய்வது எல்லோருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிற கடமை. கர்த்தர் நமக்கு கொடுக்கிற வேலைகளை, நாம் உண்மையாய்ச் செய்யவேண்டும். ஆனாலும் நம்முடைய பாவத்தினிமித்தமாக, நம்முடைய வேலைகளின் பாரம் அதிகரிக்கிறது. நாம் அளவுக்கு அதிகமாக கடினமாக உழைக்கவேண்டியதாயிருக்கிறது.

ஏதேன் தோட்டத்திலே சகலவிதமான விருட்சத்தின் கனிகளும் இருக்கிறது. அந்தக் கனிகளையெல்லாம் புசிப்பதற்கு தேவன் ஆதாமுக்கு அனுமதி கொடுத்திருந்தார். ஆனால் இப்போதோ, தேவனாகிய கர்த்தர் ஆதாமை நோக்கி, "உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்" என்றும், "நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே பூமியின் பலனைப் புசிப்பாய்" என்றும் சொல்லுகிறார். ஆதாம் தன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிக்கவேண்டும்.

இந்த உலகத்தில் அநேகர் சந்தோஷமாயிருக்கிறார்கள். வெளிப்பிரகாரமாகப் பார்த்தால், அவர்களுக்கு ஒரு கவலையும், ஒரு வருத்தமும் இல்லாததுபோல தெரியும். ஆனால் அவர்களுக்கும் ஏதாவது ஒரு வருத்தம் இருக்கும். ஒருவேளை அவர்களுடைய சரீரத்தில் வியாதியோ, அவர்களுடைய குடும்பத்திலே மரணமோ ஏற்பட்டிருக்கலாம். மனுஷருடைய பாவத்தினால் இந்தப் பூமியிலே வருத்தமும் வேதனையும் பிரவேசித்திருக்கிறது.

பாவத்தின் சம்பளம் மரணம். பாவத்தினால் மனுக்குலத்திற்கு சாபம் வருகிறது. மனுஷருடைய பாவத்தின் நிமித்தம், தேவனாகிய கர்த்தர் மனுஷர்மீது கோபமாயிருக்கிறார். அவர் பாவிகள்மீது தம்முடைய கோபத்தை வெளிப்படுத்துகிறார். தேவனுடைய கோபத்திற்கு மத்தியிலும், அவருடைய கிருபையும் இரக்கமும் வெளிப்படுகிறது. தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பார்த்து "உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்" என்று சொல்லுகிறார்.

வருத்தத்தோடே கடினமாய் வேலை செய்தால் வேர்வை வரும். கடினமாய் வேலை செய்கிறவர்களுக்கு சரீரத்தின் களைப்பு அதிகமாயிருக்கும். அப்பேற்பட்டவர்களுக்கு அயர்ந்த நித்திரை வரும். கடினமாய் உழைக்கிறவர்கள் தங்கள் படுக்கையில் நன்றாய் இளைப்பாறுவார்கள். முகத்தில் அதிகமாய் வேர்வை வரும்போது, அவர்களுடைய சரீரத்தில் அதிகமாய்க் களைப்பு வரும். அவர்களுக்கு நித்திரையும் இன்பமாயிருக்கும்.

மனுஷன் தன் பாவத்தினால், தான் உயிரோடிருக்கும் நாளெல்லாம், பூமியின் பலனை வருத்தத்தோடு புசிப்பான். மனுஷன் வருத்தப்பட்டாலும் பட்டினியாயிருக்கமாட்டான். இதுவும் கர்த்தருடைய கிருபை. மனுஷன் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாதே போனாலும், தேவனாகிய கர்த்தர் மனுஷனை பட்டினிபோட்டு, அவனை வாதிக்கவில்லை. மனுஷனுக்கு கடின வேலையினால் வருத்தமுண்டாகிறது. ஆனாலும் அவனுக்கு பசியினாலும், பட்டினியினாலும் வருத்தமோ வாடலோ உண்டாகவில்லை.

மனுஷன் வருத்தத்தோடு வேலை செய்கிறான். அவனுடைய வருத்தம் அவனுக்கு ஆகாரத்தைத் தருகிறது. அவனுடைய கடினமான உழைப்பு அவனுடைய இருதயத்தைப் பலப்படுத்துகிறது. மனுஷனுக்கு வருத்தமும் வேதனையும் அதிகரித்தாலும், அவனுடைய சரீரத்தில் நல்ல ஆரோக்கியமும் கிடைக்கிறது.

மனுஷன் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்ததினால், அவனுடைய ஆயுசுகாலமும் குறைந்துபோகிறது. மனுஷனுடைய நாளெல்லாம் வருத்தமும், சஞ்சலமும் நிரம்பியதாகவே இருக்கிறது.

தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பார்த்து, "நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்" (ஆதி 3:19) என்று சொல்லுகிறார்.

தேவன் பூமியின் மண்ணினாலே மனுஷனை உருவாக்கினார். மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட மனுஷன், மறுபடியும் மண்ணுக்கே திரும்புகிறான். தேவன் மனுஷனுக்கு கொடுக்கும் தண்டனையினால், அவனுடைய சரீரமும் ஆத்துமாவும் பிரிகிறது. மனுஷனுடைய சரீரத்திலிருந்து, அவனுடைய ஆத்துமா வெளியேறிவிட்டால், மீதமுள்ளது சாதாரண மண்ணாகவே இருக்கும்.

உயிரில்லாத பிரேதத்தை கல்லறையிலே அடக்கம்பண்ணுகிறார்கள். அதுவே பிரேதங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஸ்தலம். மனுஷனுடைய பிரேதத்தை பூமியிலே புதைத்த பின்பு, அந்த பிரேதம் மண்ணோடு மண்ணாக கலந்துவிடும்.

"நீர் உமது முகத்தை மறைக்க, திகைக்கும்; நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள, அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும்" *(சங் 104:29).*

மனுஷன் மண்ணைப்போல இலகுவானவன். அவன் இந்தப் பூமியின் மண்ணைப்போல உறுதியில்லாதவன். தேவனாகிய கர்த்தர் மனுஷனுக்கு மரணத்தை நியமிக்கிறார். ஒரு மனுஷன் எவ்வளவு பெரியவனாகயிருந்தாலும், அவன் இந்தப் பூமியின் மண்ணாகவே இருக்கிறான். அவனும் மண்ணுக்குத் திரும்புவான்.

மனுஷனுடைய பாவத்தினால் இந்த உலகத்தில் மரணம் பிரவேசித்திருக்கிறது. ஆதாம் பாவம் செய்யவில்லையென்றால், அவர் மரித்திருக்கமாட்டார்.

"இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று" *(ரோம 5:12).*

முதல் மனுஷனாகிய ஆதாம் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்தார். ஆதாமின் பாவத்தினால் அவருடைய ஆத்துமாவுக்கு பாதிப்பு உண்டாயிற்று. ஆதாமின் பாவம் மனுக்குலத்தார் எல்லோருக்கும் கடந்து வருகிறது. ஆதாமின் பாவம் ஜென்மபாவமாயிற்று.

தேவனாகிய கர்த்தர் ஆதாமை நோக்கி, "நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்" என்று சொல்லுகிறார். ஆதாமுக்கு சரீர மரணமுண்டாகும். ஆதாமுக்கு மரணம் வரும்போது, அவருடைய ஆத்துமாவுக்கும் பாதிப்பு வருகிறது.

ஸ்திரீயானவள் வேதனையோடே பிள்ளை பெறுவாள். இந்த வேதனை அவளுடைய பாவத்தினால் உண்டாயிற்று. அவள் அதிகமான வேதனைகளை அனுபவிக்கும்போதெல்லாம், அவளுடைய குற்றமனச்சாட்சி அவளைக் குற்றப்படுத்தும். ஸ்திரீயின் மனத்திற்குள்ளே அவளுடைய பாவத்தைக் குறித்த உணர்வு ஏற்படும்.

புருஷன் ஸ்திரீயை ஆண்டுகொள்வான். வேதபண்டிதர்கள் இந்த வாக்கியத்திற்கு ஆவிக்குரிய வியாக்கியானம் சொல்லுகிறார்கள். ஏவாள் தன்னுடைய பாவத்தினால், ஆவிக்குரிய விடுதலையை இழந்துபோகிறாள். பாவத்தின் விளைவாக, ஏவாளின் சுயாதீன சித்தம் அடிமைப்படுத்தப்படுகிறது.

தேவனாகிய கர்த்தர் ஆதாமை நோக்கி, "பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்" என்றும், "அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்" என்றும் சொல்லுகிறார். பூமி செழிப்பில்லாமல் வறட்சியாய்ப் போகிறது. பாவமான ஆத்துமா செழிப்பாயிருக்காது. அதிலே சந்தோஷமோ, சமாதானமோ இருக்காது. பாவம் செய்கிற ஆத்துமா ஆவிக்குரிய ஆசீர்வாதமில்லாமல் வறட்சியாயிருக்கும்.

மனுஷன் பாவம் செய்ததினால், அவன் தன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிக்கவேண்டியதாயிற்று. இந்த வாக்கியத்திற்கு அதிக உழைப்பு, குறைந்த பலன் என்று பொருள். மனுஷனுடைய பாவத்தினால் அவனுடைய சரீரம் பலவீனமாகிறது. அந்த சரீரத்தினால் அதிகமாக வேலை செய்ய முடியவில்லை.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, மனுக்குலத்தின் பாவத்தையும் சாபத்தையும் பரிகரிப்பதற்காக இந்தப் பூமிக்கு வந்தார். அவர் தம்முடைய பாடுகளின் மூலமாகவும், சிலுவை மரணத்தின் மூலமாகவும் மனுக்குலத்திற்கு இரட்சிப்பை உண்டுபண்ணினார். நம்முடைய முதலாவது பெற்றோர் இழந்துபோன மேன்மையை, கிறிஸ்துவானவர் நமக்கு மறுபடியும் மீட்டுத் தந்திருக்கிறார்.

மனுஷருடைய பாவத்தினால் அவனுக்கு வேதனை உண்டாயிற்று. கிறிஸ்துவானவரின் ஆத்தும வேதனையைப்பற்றி ஏசாயா தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார்.

"அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப்பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்" *(ஏசா 53:11).*

மனுஷன் அனுபவிக்க வேண்டிய எல்லா பாடுகளையும் கிறிஸ்துவானவரும் அனுபவித்து, தம்முடைய ஆத்துமாவில் வருத்தப்பட்டார்.

மனுஷன் தன்னுடைய பாவத்தினால் அடிமைத்தனத்திற்குட்பட வேண்டியதாயிற்று. கிறிஸ்துவானவர் தம்மை நியாயப்பிரமாணத்திற்குட்படுத்தியிருக்கிறார்.

"அப்படியே நாமும் சிறுபிள்ளைகளாயிருந்த காலத்தில் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தோம். நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்" *(கலா 4:3-5).*

பாவத்தினாலே மனுக்குலத்திற்குள் சாபம் பிரவேசித்திருக்கிறது. கிறிஸ்துவானவர் நமக்காக சாபமானார். அவர் சாபமான மரணத்தை தம்மீது ஏற்றுக்கொண்டார்.

"மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" *(கலா 3:13).*

மனுஷனுடைய பாவத்தின் நிமித்தமாய் இந்தப் பூமியானது முள்ளையும் குருக்கையும் முளைப்பிக்கிறது. கிறிஸ்துவானவர் நமக்காக தம்முடைய சிரசின்மீது முள் முடியை ஏற்றுக்கொண்டார்.

மனுஷனுடைய பாவத்தினால் அவனுடைய முகத்தில் வேர்வை உண்டாயிற்று. கிறிஸ்துவானவர் நமக்காக இரத்தமும் வேர்வையும் சிந்தினார்.

பாவத்தினால் மனுஷருக்கு வேதனையும் வருத்தமும் உண்டாயிற்று. கிறிஸ்துவானவரும் நமக்காக வருத்தமும் வேதனையும் உள்ளவராயிருந்தார். அவருடைய ஆத்துமா வியாகுலப்பட்டது.

பாவத்தினால் மனுஷருக்கு மரணமுண்டாயிற்று. கிறிஸ்துவனாவர் மரணபரியந்தம் பிதாவுக்கு கீழ்ப்படிந்தார். ஆதாமின் பாவத்தினால் மனுக்குலத்திற்கு சாபமும், வேதனையும், மரணமும் இன்னும் அநேக தீங்குகளும் உண்டாயிற்று. பாவத்தினால் உண்டான காயம் அதிகமாயிருக்கிறது. தேவனாகிய கர்த்தரோ காயம் கட்டுகிறவராக இருக்கிறார். காயத்தின் அளவு எவ்வளவு அதிகமாயிருக்கிறதோ, அந்த அளவுக்கு அதிகமாக தேவன் காயம் கட்டுகிறார். கிறிஸ்துவானவரே நம்முடைய காயங்களைக்கட்டுகிற பரமவைத்தியராயிருக்கிறார்.

ஏவாள்
ஆதி 3:20

ஆதி 3:20. ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான்; ஏனெனில் அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்.

தேவனாகிய கர்த்தர் பூமியின் மண்ணினாலே மனுஷனை உருவாக்கி அவனுக்கு ஆதாம் என்று பேரிட்டார். ஆதாம் என்னும் பெயருக்கு "சிவப்பு நிற பூமி" அல்லது "சிவப்பு நிற மண்" என்பது பொருளாகும். ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிடுகிறார். ஏவாள் என்னும் பெயருக்கு "ஜீவன்" என்று பொருள். ஆதாம் மரித்துப்போகும் சரீரத்திற்கு ஒப்பான பெயரை பெற்றிருக்கிறார்.ஏவாளோ ஜீவஆத்துமாவுக்கு ஒப்பான பெயரை பெற்றிருக்கிறாள்.

ஏவாள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள். ஆகையினால் அவளுக்கு ஜீவன் என்று பொருள்படும் ஏவாள் என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏவாள் இதற்கு முன்பு "இஷா" என்னும் எபிரெய வார்த்தையால் அழைக்கப்பட்டாள். இந்த வார்த்தைக்கு "ஸ்திரீ" என்று பொருள். ஸ்திரீயானவள் ஆதாமுக்கு மனைவியாயிருக்கிறாள். இப்போது அவள் "ஜீவன்" என்று பொருள்படும் "ஏவாள்" என்னும் பெயரால் அழைக்கப்படுகிறாள். ஏவாள் தாயானவள்.

தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலின் பிரகாரமாகவே, ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிடுகிறார். தேவனாகிய கர்த்தர் தம்முடைய கிருபையையும், சிலாக்கியத்தையும் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் வெளிப்படுத்துகிறார். தேவன் அவர்களோடு உடன்படிக்கை பண்ணுகிறார். ருதவனுடைய உடன்படிக்கைக்கு முத்திரையாக, ஸ்திரீயானவள் ஏவாள் என்று அழைக்கப்படுகிறாள்.

தேவனுடைய உடன்படிக்கையின் பிரகாரம், ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கொடுக்கப்படும் ஆசீர்வாதத்தை, அவர்கள் இழந்துபோகமாட்டார்கள். தேவன் அவர்களை நோக்கி, "நீங்கள் பலுகிப் பெருகுங்கள்" என்று சொன்னார். இது தேவனுடைய வாக்குத்தத்தம். இந்த வாக்குத்தத்தம் நிறைவேறும் என்பதற்கு அடையாளமாக ஸ்திரீயானவளுக்கு ஏவாள் என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏவாள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயாகயிருக்கிறாள்.

ஸ்திரீயின் வித்து சாத்தானுடைய குதிங்காலை நசுக்குவார் என்பது தேவனுடைய வாக்குத்தத்தம் அந்த வாக்குத்தத்தம் நிறைவேறும். தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை உறுதிபடுத்துவதற்காக, ஸ்திரீயானவளை, ஏவாள் என்று அழைக்கிறார்.

ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிடுகிறார். ஆதாம் தானாகவே தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிடுகிறார். அவர் தேவனுடைய வார்த்தையில் விசுவாசம் வைத்து, தன்னுடைய மனைவியை ஏவாள் என்று அழைக்கிறார். தன் மனைவியாகிய ஏவாள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவளாயிருப்பாள் என்று ஆதாம் விசுவாசிக்கிறார். அவளுடைய வித்து சாத்தானுடைய தலையை நசுக்குவார் என்பதையும் ஆதாம் நம்புகிறார்.

ஆதாமும் ஏவாளும் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்திருக்கிறார்கள். மனுக்குலத்தின் முதலாவது பெற்றோரே பாவிகளாயிருக்கிறார்கள். ஆனாலும் பாவிகளாகயிருக்கிற ஆதாமும் ஏவாளும், ஜீவனுள்ளோருக்கெல்லாம் பெற்றோராயிருக்கிறார்கள்.

மீட்பர் மூலமாக மனுக்குலத்திற்கு இரட்சிப்பு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இரட்சகராகயிருக்கிறார். மீட்பர் மூலமாக மனுக்குலத்திற்கு ஜீவன் உண்டாயிருக்கும் என்பதை ஆதாம் நம்புகிறார். இந்த நம்பிக்கையினால்தான் ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிடுகிறார். ஏவாள் என்னும் பெயருக்கு ஜீவன் என்று அர்த்தம். ஏனென்றால் அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்.

ஏவாள் எல்லோருக்கும் தாய் என்பதினால் அவள் தன் மகனுக்கும், மருமகளுக்கும் தாயாகிறாள். ஆதாம், ஏவாளுக்குக் காயீன் பிறந்தான். தன்னுடைய நூறாவது வயதில் தனக்கு ஒரு மனைவியைத் தெரிந்து கொண்டு, நோத் என்னும் தேசத்தில் குடியிருந்தான். அங்கு ஒரு நகரத்தைக் கட்டும் அளவிற்கு ஜனங்கள் குடியிருந்தார்கள். (ஆதி 4:16-26). காயீன் தன்னுடைய சகோதரியையே திருமணம் செய்திருக்க வேண்டும். ஆகையினால் ஏவாள் காயீனுக்கும், அவன் மனைவிக்கும் தாயாக இருக்கிறாள் (ஆதி 3:20) இதன் பின்பு நெருங்கிய உறவினரிடையே திருமணம் செய்துகொள்வது தடைபண்ணப்படுகிறது (லேவி 18)

தோல் உடைகள்
ஆதி 3:21

ஆதி 3:21. தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்.

தேவனாகிய கர்த்தர் மனுக்குலத்தின் முதலாவது பெற்றோர்மீது கரிசனையோடிருக்கிறார். அவர்கள்மீது அக்கறை காண்பிக்கிறார். அவர்கள் பாவிகளாகயிருந்தாலும், தேவனாகிய கர்த்தர் அவர்கள்மீது அன்புகூருகிறார். அவர்களை ஆதரிக்கிறார்.

தேவனாகிய கர்த்தர், கீழ்ப்படியாத தம்முடைய பிள்ளைகளைக் கண்டித்து திருத்துகிறார். ஆனாலும் அவர் தம்முடைய பிள்ளைகளை ஒருபோதும் வெறுத்து ஒதுக்கிவிடமாட்டார். அவர் அன்பும், பாசமும், பிரியமுமுள்ள ஒரு தகப்பனைப்போல, தம்முடைய பிள்ளைகளை பராமரிக்கிறார். அவர்களை ஆதரிக்கிறார்.

தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பூமியில் விளையும் புல்லுகளையும், பூண்டுகளையும் ஆகாரமாகக் கொடுத்தார். இப்போதோ அவர்களுக்கு தோல் உடைகளை வஸ்திரமாக உடுத்துகிறார். கர்த்தர் நமக்கு கொடுக்கும் போஜனத்திற்காகவும், அவர் நமக்கு உடுத்துவிக்கும் வஸ்திரத்திற்காகவும், நாம் கர்த்தரை நன்றியோடு துதிக்கவேண்டும்.

"அப்பொழுது யாக்கோபு: தேவன் என்னோடே இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி, உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து, என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பி வரப்பண்ணுவாரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார்" (ஆதி 28:20,21).

"ஆதலால் நான் என் தானியத்தை அதின் காலத்திலும், என் திராட்சரசத்தை அதின் காலத்திலும் திரும்ப எடுத்துக்கொண்டு, அவளுடைய நிர்வாணத்தை மூடுகிறதற்கு நான் கொடுத்திருந்த ஆட்டுமயிரையும் சணலையும் திரும்பப் பிடுங்கிக்கொள்ளுவேன்" (ஓசி 2:9).

ஆதாமும் ஏவாளும் தங்களுடைய நிர்வாணத்தை மூடி மறைப்பதற்கு அத்திஇலைகளை தைத்து உடுத்திக்கொண்டார்கள். இது அவர்களுக்கு நேர்த்தியான வஸ்திரமல்ல. அத்திஇலைகள் அவர்களுடைய நிர்வாணத்தின் ஒரு பகுதியை மாத்திரம் மூடி மறைக்கும். அத்திஇலைகள் அவர்களுடைய நிர்வாணத்தை மூடி மறைக்க போதாது.

"கால் நீட்டப் படுக்கையின் நீளம் போதாது; மூடிக்கொள்ளப் போர்வையின் அகலமும் போதாது" (ஏசா 28:20).

மனுஷருடைய சுயநீதியும் அழுக்கான கந்தையைப்போலவே இருக்கிறது. தேவனாகிய கர்த்தரோ நம்முடைய நிர்வாணத்தை மூடி மறைப்பதற்கு, தோல் உடைகளை உண்டாக்கி நமக்கு உடுத்துகிறார். தோல் உடைகள் வலுவானது. அது நீடித்து உழைக்கக்கூடியது. தோல் உடைகளே ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஏற்றது.

கிறிஸ்துவின் நீதி தோல் உடைகளைப் போன்றது. நம்முடைய சுயநீதி அத்திஇலைகளைப் போன்றது. கிறிஸ்துவின் நீதியே வலுவானது. அதுவே நிலைத்திருக்கக்கூடியது. நம்முடைய சுயநீதிகளோ கந்தையானது. அது நிலைத்திருக்காது. ஆகையினால் விசுவாசிகளாகிய நாம், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக வரும் நீதியை தரித்துக்கொள்ளவேண்டும்.

தேவன் ஆதாமிற்குப் பலிகளைச் செலுத்துவதற்குக் கற்றுக் கொடுக்கிறார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கும் மீட்பரை நோக்கிப் பார்ப்பதற்காகப் பலி செலுத்தப்பட்டது. இந்தப் பலி மிருகங்களிலிருந்து தேவன் தோல் உடைகளை உண்டாக்கினார் (ஆதி 4:1-7; எபி 9:22).

ஜீவவிருட்சம்
ஆதி 3:22-24

ஆதி 3:22. பின்பு தேவனாகிய கர்த்தர்: இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் என்று,

ஆதி 3:23. அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்.

ஆதி 3:24. அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போம் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக் கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்.

ஆதாமும் ஏவாளும் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்திருக்கிறார்கள். பாவம் செய்த அவர்கள்மீது தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு காலதாமதமில்லாமல் உடனே வருகிறது.

ஆதாமும் ஏவாளும் தேவனுக்கு முன்பாகவும், அவருடைய பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும் மகிமை மங்கியவர்களாகவும், அவமானம் நிரம்பியவர்களாகவும் நிற்கிறார்கள்.

தேவன் அவர்களைப் பார்த்து, "இதோ மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்" (ஆதி 3:22) என்று சொல்லுகிறார். நல்ல தேவன் அவர்களை உருவாக்கியிருக்கிறார். அவர்கள் நன்றாயிருக்கவேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம்.

தேவனாகிய கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலமாக அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு உணர்த்துகிறார். அவர்களைத் தாழ்த்துகிறார். அவர்கள் தங்கள் பாவத்தையும் மதியீனத்தையும் உணர்ந்து, அதற்காக அவர்களை மனம் வருந்த வைக்கிறார். அவர்களுடைய முகம் அவமானத்தால் மூடப்பட்டிருக்கிறது.

"கர்த்தாவே, அவர்கள் உமது நாமத்தைத் தேடும்படிக்கு, அவர்கள் முகங்களை அவமானத்தாலே மூடும்" (சங் 83:16).

ஆதாமும் ஏவாளும் குழப்பத்திலிருக்கிறார்கள். தேவனே அவர்களுடைய பாவங்களினிமித்தமாக அவர்களுக்கு இந்தக் குழப்பத்தைக் கொடுத்திருக்கிறார். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம்.

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்திருந்தாலும், அவர்கள் இருவரும் இன்னும் ஏதேன் தோட்டத்திற்குள்ளேயே இருக்கிறார்கள். தேவனாகிய கர்த்தரோ அவர்களை ஏதேன் தோட்டத்திலிருந்து தம்முடைய நீதியினால் வெளியே அனுப்பிவிடுகிறார். ஏதேன் தோட்டத்தின் வழியையும் அடைத்துவிடுகிறார்.

தேவன் ஆதாமையும் ஏவாளையும் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே அனுப்பி, அதன் வழியை அடைப்பதற்கு ஒரு காரணமுள்ளது. அவர்கள் இருவரும் தேவனால் தடைபண்ணப்பட்ட நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்தார்கள். இது அவர்களுடைய பாவம். அவர்கள் இப்பொழுது தங்கள் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து புசித்து விடக்கூடாது என்று தேவன் சித்தங்கொண்டிருக்கிறார். அவர்கள் ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்தால் என்றைக்கும் உயிரோடிருப்பார்கள்.

ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்தால் என்றைக்கும் உயிரோடு இருக்கலாம். மனுஷன் பாவம் செய்யவில்லை என்றால், அவனுக்கு மரணம் வந்திருக்காது. அவன் என்றைக்கும் உயிரோடிருந்திருப்பான். இப்பொழுது மனுஷன் தன்னுடைய நித்திய ஜீவனை இழந்து விட்டான். இயேசு கிறிஸ்து மனுஷனுக்கு மறுபடியும் நித்திய ஜீவனைத் தருகிறார். (2தீமோ 1:10). ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கிறவன் நல்லவனாக இருந்தாலும், தீயவனாக இருந்தாலும் சரீரப்பிரகாரமாக மரிக்காமல் நித்திய காலமாக ஜீவிப்பான். (ஆதி 3:22-24, ஆதி 2:9, வெளி 22:1-3)

ஆதாமும் ஏவாளும் ஜீவவிருட்சத்தின் கனியை பறித்து புசிக்கக்கூடாது என்பதற்காக தேவனாகிய கர்த்தர் ஆதாமை ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே அனுப்பிவிடுகிறார். ஆதாம் ஏதேன் தோட்டத்திற்கு வெளியே அனுப்பப்பட்டதினால், அவரால் இனிமேல் முன்புபோல தேவனோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்க முடியாது. ஆதாம் தேவனுடைய சமுகத்திலிருந்து துரத்தப்பட்டிருக்கிறார்.

ஆதாம் மாத்திரமல்ல, ஆதாமின் சந்ததியில் வருகிற குற்றமுள்ள மனுக்குலத்தார் எல்லோரும் தேவனுடைய சந்நிதியில் வரமுடியாதவாறு விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களால் தேவனுடைய ஏதேன் தோட்டத்தின் ஆசீர்வாதத்தையும், அதன் மகிமையையும் அனுபவிக்க முடியாது.

ஆதாம் பாவம் செய்ததினால், அவருக்கு தேவனோடிருந்த ஐக்கியமும், நெருக்கமும் குறைந்துபோயிற்று. தேவன் ஆதாமோடு பேசுவதும், ஆதாம் தேவனோடு பேசுவதும் குறைந்துபோயிற்று. அவர்கள் இருவருக்கும் இடையே இருந்த நெருங்கிய ஐக்கியம் முறிந்துபோயிற்று.

தேவனாகிய கர்த்தர் ஆதாமை இந்த உலகத்திலிருந்தே துரத்திவிடவில்லை. அவர் ஆதாமை ஏதேன் தோட்டத்திலிருந்துதான் துரத்திவிடுகிறார்.

"அவன் வெளிச்சத்திலிருந்து இருளில் துரத்திவிடப்பட்டு, பூலோகத்திலிருந்து தள்ளுண்டுபோவான்" (யோபு 18:18).

தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு ஒரு வேலையைக் கொடுக்கிறார். ஆதாம் இந்த பூமியின் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டவர். தான் எடுக்கப்பட்ட மண்ணை பண்படுத்துவதற்காக, தேவனாகிய கர்த்தர் ஆதாமை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிடுகிறார்.

மனுஷன் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டவன். மனுஷனுடைய சரீரத்தில் இரும்பு, உப்பு, அயோடின், சுண்ணாம்பு, கால்சியம், சர்க்கரை போன்ற பல வேதியியல் பொருட்கள் உள்ளன.

தேவனாகிய கர்த்தர் ஆதாமை உபத்திரவப்படுத்தவில்லை. அவர் ஆதாமை வேதனையை அனுபவிக்கும் ஸ்தலத்திற்கு அனுப்பவில்லை. அவரை வேலை செய்யும் ஸ்தலத்திற்குத்தான் அனுப்பியிருக்கிறார். தேவனாகிய கர்த்தர் ஆதாமை மண்ணுக்குத்தான் அனுப்பியிருக்கிறார். அவர் ஆதாமை கல்லறைக்கு அனுப்பவில்லை. தேவனாகிய கர்த்தர் ஆதாமை ஒரு புதைகுழிக்கோ அல்லது சிறைச்சாலைக்கோ அனுப்பவில்லை. அவரை வேலை செய்யும் ஸ்தலத்திற்குத்தான் அனுப்பியிருக்கிறார்.

ஆதாம் நிலத்தை பண்படுத்தவேண்டும். அதை உழவேண்டும். ஆதாமை சங்கிலிகளால் கட்டி அவரை சித்திரவதை செய்யவேண்டும் என்பதற்காக தேவன் அவரை அனுப்பவில்லை. தான் எடுக்கப்பட்ட மண்ணை பண்படுத்துவதற்காகவே தேவன் அவரை அனுப்பியிருக்கிறார்.

ஆதாம் மண்ணை பண்படுத்தும்போது அவருக்கு சம்பளம் கொடுக்கப்படும். அந்த மண்ணில் முளைக்கும் விருட்சத்தின் கனிகளைப் புசிப்பதே, ஆதாமின் வேலைக்கு கொடுக்கப்படும் சம்பளம். ஆதாம் தான் எடுக்கப்பட்ட மண்ணை பண்படுத்தும்போது, அந்த மண் பண்படுத்தப்பட்ட நல்ல மண்ணாகயிருக்கும். அந்த மண் ஆதாமைத் தாழ்மைப்படுத்தும். ஆதாமும் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டவர் என்பதையும், அவர் மண்ணுக்குத் திரும்புவார் என்பதையும் அந்த மண் அவருக்கு நினைவுபடுத்தும்.

தேவனாகிய கர்த்தர் நம்முடைய முதல் பெற்றோரை ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றிவிடுகிறார். அவர்கள் இருவரும் பாவமில்லாத, கள்ளம் கபடமில்லாத நிலமையிலிருந்தவர்கள். ஆனால் அவர்களோ தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்து, தங்களுடைய மகிமையையும், மேன்மையையும் இழந்தவர்களாயிருக்கிறார்கள்.

தேவன் மனுக்குலத்தின் முதலாவது பெற்றோரை ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றினாலும், அவர் அவர்களை தம்முடைய நினைவுகளிலிருந்து வெளியேற்றவில்லை. அவர்கள் இருவரும் ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேற்றப்பட்டிருந்தாலும், தேவனாகிய கர்த்தர் அவர்கள்மீது இன்னும் அன்பாகவும், கரிசனையாகவும் இருக்கிறார். அவர்களைக் குறித்து நல்ல திட்டங்களை வைத்திருக்கிறார். தேவனாகிய கர்த்தர் அவர்களுக்கு மறுபடியும் புதிய உடன்படிக்கையைக் கொடுத்து அவர்களை மறுபடியும் தம்மோடு சேர்த்துக்கொள்ள சித்தமுள்ளவராயிருக்கிறார்.

ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஆதாம், மறுபடியும் அந்தத் தோட்டத்திற்குள் பிரவேசிப்பதற்கு வாய்ப்பில்லை. ஆதாம் ஏதேன் தோட்டத்திற்குள் மறுபடியும் பிரவேசிப்பதற்கான எல்லா நம்பிக்கைகளும் வாய்ப்புக்களும் அடைக்கப்பட்டிருக்கிறது.

தேவனாகிய கர்த்தர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போம் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைக்கிறார் (ஆதி 3:24).

கேருபீன்கள் தேவனுடைய சேனையிலுள்ளவர்கள். அவர்கள் கைகளில் சுடரொளி பட்டயம் இருக்கிறது. ஆதாமால் கேருபீன்களை எதிர்த்து நிற்கமுடியாது. அவர்களை மீறி ஆதாமால் ஏதேன் தோட்த்திற்குள் பிரவேசிக்க முடியாது. ஆதாம் மறுபடியும் ஏதேன் தோட்டத்திற்குள் பிரவேசித்து, ஜீவவிருட்சத்தின் கனியை திருடி புசித்துவிடக்கூடாது. இதற்காக தேவனாகிய கர்த்தர் ஜீவவிருட்சத்திற்குப் போகும் வழிக்கு காவல் வைக்கிறார்.

தேவனாகிய கர்த்தர் இப்போது ஆதாமின்மீது பிரியமாயில்லை. கேருபீன்கள் ஆதாமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆதாமுக்கு தேவனுடைய பரமசேனையோடு சமாதானமில்லை. ஆதாம் கர்த்தருக்கும், கர்த்தருடைய சேனைக்கும் விரோதமாக சத்துருவாயிருக்கிறார்.

ஆதாம் ஏதேன் தோட்டத்திலிருந்தபோது, தேவன் தடைபண்ணின விருட்சத்தின் கனியை அவர் புசிப்பதற்கு முன்பு, ஜீவவிருட்சத்திற்குப்போகும் வழி அடைக்கப்பட்டிருக்கவில்லை. அது அவருக்கு திறந்த வழியாகவே இருந்தது. தேவனாகிய கர்த்தர் ஆதாமை ஜீவவிருட்சத்திற்கு போகும் வழியின் மூலமாக அழைத்து வந்து, அவரை ஏதேன் தோட்டத்தில் வைத்தார். அப்போது ஆதாமிடத்தில் பாவமில்லை. கபடமில்லை.

ஆனால் இப்போதோ ஆதாம் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார். அவருக்கு ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிப்பதினால் கிடைக்கும் ஆசீர்வாதம் தடைபண்ணப்பட்டிருக்கிறது.

தேவன் ஆதாமோடு பண்ணியிருந்த முதலாவது உடன்படிக்கை முற்றிலுமாய் முறிந்துபோயிற்று. தேவன் தம்முடைய உடன்படிக்கையின் பிரகாரம் நம்மை நியாயந்தீர்த்தால், நாம் எல்லோருமே தேவனுடைய பார்வையில் குற்றவாளிகளாயிருப்போம். நம்மால் தேவனுடைய நீதியான தண்டனைக்கு தப்பிக்க முடியாது.

ஆதாம் தன்னுடைய சுயநீதியினால் தேவனோடு ஒப்புரவாக முடியாது. ஆதாம் தன்னுடைய சுயபரிசுத்தத்தினால் ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியாது. வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வித்தின் மூலமாகவே மனுக்குலத்திற்கு தேவனோடு ஒப்புவாதல் உண்டாகும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட அந்த வித்தாகயிருக்கிறார்.

ஸ்திரீயின் வித்தாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக சுடரொளி பட்டயம் அகற்றப்படும். மனுக்குலத்திற்கு தேவனோடும், அவருடைய தூதர்களோடும் ஒப்புரவாதல் உண்டாகும். தேவனுடைய மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு ஜீவனுள்ள புதிய பாதை திறக்கப்படும். ஜீவனுக்குப்போகிற இந்தப் பாதை இயேசுகிறிஸ்துவின் மூலமாக உண்டாகும். கிறிஸ்துவானவரே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்.

4 அதிகாரம்

ஒரு குடும்பத்தில் உலகத்திற்கு அடையாளமான காரியங்களும், சபைக்கு அடையாளமான காரியங்களும் நடைபெறுகிறது. ஆதாம் மனுக்குலத்தார் எல்லோருக்கும் பிரதிநிதியாகயிருக்கிறார். மனுஷர் மத்தியிலே பாவிகளும் இருக்கிறார்கள். பரிசுத்தவான்களும் இருக்கிறார்கள். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் காயீன், ஆபேல் ஆகிய இரண்டு குமாரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் இருவரும் கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கும், இந்த உலகத்தின் பாவிகளுக்கும் அடையாளமானவர்கள்.

தேவனாகிய கர்த்தர் ஏதேன் தோட்டத்தில், ஸ்திரீயின் வித்திற்கும், சர்ப்பத்தின் வித்திற்கும் பகை உண்டாக்குவேன் என்று சொன்னார். அந்தப் பகையானது காயீன் ஆபேல் ஆகியோருடைய காலத்திலேயே வெளிப்படுகிறது.

காயீன் ஆபேல் ஆகியோருடைய பிறப்பும், அவர்களுடைய பெயர்களும், அவர்களுடைய தொழில்களும் (ஆதி 4:1,2). அவர்களுடைய மார்க்க ஆராதனைகள். கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்களுக்கு ஒன்றுபோல் கிடைக்கவில்லை (ஆதி 4:3-5).

காயீனுக்கு கர்த்தர்மீது எரிச்சலுண்டாயிற்று. கர்த்தர் காயீனுடைய எரிச்சலினிமித்தம் அவனைக் கடிந்துகொள்கிறார் (ஆதி 4:5-7).

காயீன் தன் சகோதரன் ஆபேலைக் கொலைபண்ணுகிறான். காயீனுடைய பாவத்திற்கு கர்த்தர் அவனுக்கு தண்டனை கொடுக்கிறார் (ஆதி 4:8). கர்த்தர் காயீனுடைய பாவத்தை விசாரிக்கிறார் (ஆதி 4:9). கர்த்தர் காயீனைக் குற்றப்படுத்துகிறார் (ஆதி 4:10). கர்த்தர் காயீனுக்கு தண்டனை கொடுக்கிறார் (ஆதி 4:11,12).

கர்த்தர் தனக்கு கொடுத்த தண்டனைக்கு விரோதமாக காயீன் முறையிடுகிறான் (ஆதி 4:13,14). கர்த்தர் காயீனுக்கு கொடுத்த தண்டனையில் சிறிது மாற்றத்தை செய்கிறார் (ஆதி 4:15). காயீன் கர்த்தருடைய சந்நிதியை விட்டு புறப்பட்டுப்போகிறான் (ஆதி 4:15,16).

காயீனின் சந்ததியார் (ஆதி 4:17-24). ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பிறந்த மற்ற பிள்ளைகள் (ஆதி 4:25,26).

காயீன், ஆபேல்
ஆதி 4:1,2

ஆதி 4:1. ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான்; அவள் கர்ப்பவதியாகி, காயீனைப் பெற்று, கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள்.

ஆதி 4:2. பின்பு அவனுடைய சகோதரனாகிய ஆபேலைப் பெற்றாள்; ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான், காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான்.

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் அநேக குமாரரும், குமாரத்திகளும் பிறக்கிறார்கள். அவர்கள் காயீனும் ஆபேலும் மூத்த குமாரர்கள்.

காயீன் என்னும் பெயருக்கு "சொந்தம்" என்று பொருள். ஏவாள் கர்ப்பவதியாகி காயீனைப் பெற்றபோது, "கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன்" என்று சொன்னாள். அவள் மிகுந்த சந்தோஷத்தோடே கர்த்தருக்கு நன்றி செலுத்தினாள். ஏவாள் காயீன் மூலமாக பெரிய காரியங்களை எதிர்பார்த்து, "கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன்" என்று விசுவாச வார்த்தைகளை சொல்லுகிறாள்.

பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். நம்முடைய குடும்பத்தை கட்டியெழுப்பும்போது, நம்முடைய குடும்பத்திற்கு கர்த்தரே அஸ்திபாரமாயிருக்க வேண்டும். நம்முடைய குடும்பத்தில் நடைபெறும் ஒவ்வொரு சம்பவங்களிலும், கர்த்தருடைய கிருபைகளையும், அவருடைய நன்மைகளையும் நினைவுகூரவேண்டும்.

பெற்றோர் பிள்ளைகளைப் பெற்றாலும், அந்தப் பிள்ளைகளை அவர்கள் கர்த்தருடைய கரத்திலிருந்தே பெற்றுக்கொள்கிறார்கள். பெற்றோர் இந்த சத்தியத்தை தியானிக்கும்போது அவர்களுடைய சந்தோஷம் இரட்டிப்பாகும். அவர்களுடைய மனதிலே மிகுந்த ஆறுதல் உண்டாகும். கர்த்தருடைய கைகளின் கிரியைகள் ஆசீர்வாதமாயிருக்கும்.

ஆபேல் என்னும் பெயருக்கு "மாயை" என்று பொருள். ஏவாள் காயீனைப் பெற்றபோது, வாக்குத்தத்தமான வித்து காயீனில் இருக்கிறது என்று நம்பினாள். ஏவாள் காயீனைப் பெற்ற பின்பு, ஆபேலைப் பெற்றாள். காயீன் வாக்குத்தத்தின் பிள்ளை என்றும், ஆபேல் ஒன்றுமில்லாத மாயையானவன் என்றும் ஏவாள் நினைத்தாள்.

காயீனும் ஆபேலும் வெவ்வேறு தொழில்களை செய்கிறார்கள். ஆபேல் ஆடுகளை மேய்கிறான். காயீன் நிலத்தைப் பயிரிடுகிறான். அவர்கள் இருவரும் சும்மாயிருக்கவில்லை. சோம்பேறிகளாய் பொழுதைப் போக்கவில்லை. தேவனாகிய கர்த்தர், அவர்களுடைய தகப்பனாகிய ஆதாமுக்கும் ஒரு தொழிலைக் கொடுத்தார். ஆதாம் தான் எடுக்கப்பட்ட மண்ணை பண்படுத்தவேண்டும்.

நாம் எல்லோருமே இந்த உலகத்தில் ஏதாவது ஒரு வேலையை செய்யவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல தொழிலைக் கற்றுக்கொடுக்கவேண்டும். யூதமார்க்கத்தை சேர்ந்தவர்கள், தங்களுடைய பிள்ளைகளுக்கு தோரா என்று அழைக்கப்படும் பஞ்சாகம புஸ்தகத்தின் ஒரு பிரதியையும், ஒரு நல்ல தொழிலையும் கற்றுத்தருவார்கள்.

காயீன் ஆபேல் ஆகிய இருவருடைய தொழில்களும் வெவ்வேறாக இருந்தாலும், அவர்கள் இருவரும் தங்களுடைய தொழிலின் பலனை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்கிறார்கள். ஆபேல் காயீனுக்கு ஆடுகளைத் தருகிறான். காயீன் ஆபேலுக்கு தன் நிலத்தில் விளைந்த தானியத்தை தருகிறான்.

காயீன் ஆபேலைப்போலவே, இந்த உலகத்திலிருக்கிற ஒவ்வொருவரும், மற்றவர்களை சார்ந்து ஜீவிக்கிறார்கள். தாங்கள் உற்பத்திபண்ணும் பொருட்களை மற்றவர்களுக்கு கொடுத்து, அவர்களுடைய பொருட்களை தங்களுக்கு பெற்றுக்கொள்கிறார்கள்.

நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு தேவைப்படுவதுபோல, ஒவ்வொரு தேசமும் மற்ற தேசத்திற்கு தேவைப்படுகிறது. தேசங்களுக்கு மத்தியிலே வியாபாரங்களும், தொழில்களும் நடைபெறுகிறது. ஜனங்கள் வியாபார பொருட்களை பகிர்ந்துகொள்வதன் மூலமாக, தங்களுடைய அன்பையும் பகிர்ந்துகொள்கிறார்கள்.

ஆதாம் நிலத்தின் மண்ணை பண்படுத்துகிறார். காயீனும் ஆபேலும், விவசாய சம்பந்தமான வேலையை செய்கிறார்கள். ஆடுகளை மேய்ப்பதும், நிலத்தை பயிரிடுவதும் ஒன்றோடொன்று சம்பந்தமுள்ள வேலை.

ஆபேல் இளைவனாகயிருந்தாலும், "ஆபேல் ஆடுகளை மேய்கிறவனானான்" என்று அவனுடைய தொழிலைப்பற்றி முதலாவதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவேளை தன் சகோதரனாகிய ஆபேல் ஆடுகளை மேய்ப்பதைப் பார்த்து, காயீன் நிலத்தைப் பயிரிட்டிருக்கலாம். ஆபேலின் நல்ல முன்மாதிரி, காயீனை வேலை செய்ய தூண்டுகிறது.

ஆபேல் தனக்கு ஒரு நல்ல தொழிலைத் தெரிந்துகொள்கிறான். ஆடுகளுக்கு உயிர் இருக்கிறது. ஆபேல் தன் தொழிலில் பிரியமாயிருக்கிறான். தன் ஆடுகள்மீது அன்பாயிருக்கிறான். தன்னுடைய வேலையை மிகவும் கவனமாக செய்கிறான். கர்த்தருடைய ஊழியக்காரர்கள், மேய்ப்பருக்கு ஒப்பானவர்கள். மேய்ப்பர் தங்கள் ஆடுகளை மேய்ப்பதுபோல, ஊழியக்காரர்கள் விசுவாசிகளை ஆவிக்குரிய காரியங்களில் போஷித்து பராமரிக்கவேண்டும்.

காயீனின் எரிச்சல்
ஆதி 4:3-5

ஆதி 4:3. சிலநாள் சென்றபின்பு, காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான்.

ஆதி 4:4. ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார்.

ஆதி 4:5. காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கிகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது.

சிலநாள் சென்றபின்பு ஸ்திரீயின் வித்து சாத்தானின் தலையை நசுக்க வேண்டும். மனுஷருடைய ஆளுகையை மறுபடியும் உறுதி பண்ண வேண்டும். இதற்கு விசுவாசம் தேவை. இந்த விசுவாசம் வளர்ச்சி பெற்ற பின்பு என்று இந்த வாக்கியம் பொருள்படும் (ஆதி 3:15).

சபிக்கப்பட்ட பூமியின் கனி சாபத்தைப் போக்காது. நிலத்தின் கனிகள் தசமபாகங்களாகவும், ஊழியத்திற்கு ஆதரவான காணிக்கைகளாகவும் அங்கீகரிக்கப்படுகிறது. (எண் 18:12-14, லேவி 27). கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து செலுத்திய பாவநிவாரண பலிக்கு அடையாளமாக நிலத்தின் கனிகள் எங்கும் கூறப்படவில்லை (எபி 9:22).

கர்த்தர் ஆபேலையும் அவன் காணிக்கையையும் அங்கீகரிக்கிறார் ஆபேலின் காணிக்கை அக்கினியினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. (லேவி 9:24; நியா 6:21; 1இராஜா 18:38; 1நாளா 21:26; 2நாளா 7:1). ஆபேல் விசுவாசத்தோடே பலி செலுத்துகிறான். கர்த்தர் அதை அங்கீகரிக்கிறார். (எபி 11:4).

கர்த்தர் காயீனையும் அவன் காணிக்கையையும் அங்கீகரிக்கவில்லை. காயீன் தவறான காணிக்கையை அவிசுவாசத்தோடும், சுயநீதீர்மானத்தோடும் கொண்டு வருகிறான். தன்னுடைய குற்றத்தைக் குறித்து அவனிடம் குற்ற உணர்வு எதுவும் காணப்படவில்லை. பாவநிவாரண பலியின்மீது அவன் விசுவாசமும் காண்பிக்கவில்லை (எபி 9:22; எபி 11:4).

காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது. மனுஷனுடைய கோபம் முதன் முறையாகக் கூறப்பட்டிருக்கிறது. மார்க்க சம்பந்தமான காரியங்களில் மனுஷன் முதன் முறையாகக் கோபப்பட்டிருக்கிறான். காயீனுக்கு கோபம் வரவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் காயீன் சரியான பலியைச் சரியான நோக்கத்தோடு இனிமேல் செலுத்தினாலும், தேவன் அதை நிச்சயம் அங்கீகரிப்பார்.

காயீனும் ஆபேலும் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்களாயிருக்கிறார்கள். சில நாள் சென்றபின்பு அவர்கள் இருவரும் கர்த்தருக்கு காணிக்கை கொண்டு வருகிறார்கள். காயீனும் ஆபேலும் தங்களுடைய காணிக்கைகளை, குடும்பத்தின் தலைவராகிய ஆதாமினிடத்தில் கொண்டு வந்திருக்கவேண்டும்.

ஆதாம் தன் குடும்பத்திற்கு தலைவராகவும், ஆசாரியராகவும் இருக்கிறார். ஆதாம் தன் இரண்டு பிள்ளைகளுக்கும் கர்த்தரைப்பற்றி உபதேசம்பண்ணவேண்டும். அவர்கள் இருவரும் கர்த்தரை ஆராதிப்பதற்கு அவர்களை வழிநடத்தவேண்டும்.

தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு வாக்குத்தத்தத்தைக் கொடுத்திருக்கிறார். ஆதாம் கர்த்தருடைய பிரமாணத்திற்கு விசுவாசத்தோடு கீழ்ப்படியவேண்டும். அவர் ஏதேன் தோட்டத்திலிருந்தபோது தேவனோடு நெருங்கிய ஐக்கியத்திலிருந்தார். ஆதாம் தேவனோடு கொண்டிருந்த ஐக்கியத்தை மறுபடியும் புதுப்பித்துக்கொள்ளவேண்டும்.

ஆதாம் ஏதேன் தோட்டத்திலிருந்தபோது வானத்திற்கும் பூமிக்கும் நெருங்கிய ஐக்கியம் இருந்தது. அப்படிப்பட்ட ஐக்கியம் மறுபடியும் உண்டாகும் என்று ஆதாம் விசுவாசத்தோடு எதிர்பார்க்கவேண்டும்.

கர்த்தரை ஆராதிப்பது புதிய கண்டுபிடிப்பு அல்ல. பூர்வகாலம் முதலே கர்த்தரை ஆராதிப்பது இருந்திருக்கிறது.

"ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்" (1யோவா 1:1).

"வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்" (எரே 6:16).

பிள்ளைகள் சிறுவர்களாகயிருக்கும்போதே, அவர்களுக்கு கர்த்தரைப்பற்றிய சத்தியத்தையும், ஆவிக்குரிய உபதேசங்களையும் கற்றுக்கொடுக்கவேண்டும். கர்த்தருக்கு காணிக்கைகளை செலுத்தவும், கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவும் நம்முடைய பிள்ளைகளுக்கு பயிற்சிகளைக் கொடுக்கவேண்டும். அப்போது அவர்கள் ஆவிக்குரிய காரியங்களில் பயிற்சி பெற்று, தாங்கள் பெரியவர்களாகும்போது, தாங்களாகவே கர்த்தரைத் துதிப்பார்கள். தாங்களாகவே கர்த்தருக்கு காணிக்கைகளை செலுத்துவார்கள்.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் தம்மை போஷிக்கிறார். அவருடைய தெய்வீக பராமரிப்பினாலேயே நாம் செழித்திருக்கிறோம். நாம் ஒவ்வொருவரும், கர்த்தர் நமக்கு கிருபையாகக் கொடுத்திருக்கிற பொருட்களினால், கர்த்தருக்கு காணிக்கைகளை செலுத்தி, அவரைக் கனம்பண்ணவேண்டும்.

துன்மார்க்கரும் மாய்மாலக்காரரும், பாவிகளும் கர்த்தரை ஆராதிப்பதுபோல மாய்மாலம் பண்ணுகிறார்கள். அவர்களுடைய ஆராதனையில் உண்மையிருக்காது. மற்றவர்கள் தங்களை பார்க்கவேண்டும் என்பதற்காகவும், வெளிவேஷத்திற்காகவும் அவர்கள் கர்த்தரை ஆராதிக்கிறார்கள். துன்மார்க்கர் வேஷம் போட்டாலும், கர்த்தர் அவர்களுடைய இருதயத்தின் நினைவுகளை அறிந்திருக்கிறார்.

காயீன் நிலத்தின் கனிகளை கர்த்தருக்கு காணிக்கையாகக் கொண்டுவருகிறான். ஆபேல் கர்த்தருக்கு காணிக்கை கொண்டு வருவதற்கு முன்பாகவே, காயீன் கர்த்தருக்கு காணிக்கை கொண்டு வர முந்துகிறான். காயீன் கர்த்தருடைய சமுகத்தில் வருவது, பரிசேயரும் ஆயக்காரரும் ஜெபம்பண்ணுவதற்காக தேவாலயத்திற்கு வருவதுபோல் உள்ளது.

"இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன்" (லூக் 18:10).

காயீனும் ஆபேலும் கர்த்தருக்கு காணிக்கைகளைக் கொண்டு வருகிறார்கள். ஆனால் அவர்களுடைய பக்தியிலே வித்தியாசம் இருக்கிறது. அவர்கள் கொண்டு வரும் காணிக்கைகளிலும் வித்தியாசம் இருக்கிறது.

நாம் கர்த்தருக்கு எப்படிப்பட்ட காணிக்கைகளைக் கொண்டு வருகிறோம் என்பது முக்கியமல்ல. நம்முடைய காணிக்கைகளை கர்த்தர் அங்கீகரிக்கவேண்டும். அதுவே புத்தியுள்ள ஆராதனை. நம்முடைய ஆராதனையில் கர்த்தர் பிரியப்படவேண்டும். நம்முடைய ஸ்தோத்திர பலிகளையும், துதியின் காணிக்கைகளையும் கர்த்தர் அங்கீகரிக்கவேண்டும். இதுவே நமக்கு மெய்யான ஆசீர்வாதம்.

நம்முடைய மனதில் நல்ல நோக்கமும், இருதயத்தில் கர்த்தர்மீது பக்தியும் இருந்து, நாம் கர்த்தரை ஆராதிக்கும்போது, கர்த்தர் நம்முடைய ஆராதனையில் பிரியப்படுவார். கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கவேண்டும். நம்முடைய ஆராதனையில் ஆவியும், உண்மையும் இல்லையென்றால், நம்முடைய ஆராதனையினால் நமக்கு ஒரு பிரயோஜனமுமில்லை.

"அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்" (2கொரி 5:9).

காயீன் நிலத்தின் கனிகளை கர்த்தருக்கு காணிக்கையாகக் கொண்டு வந்தான். ஆபேல் தன் மந்தையின் தலையீற்றுகளிலும், அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றை கர்த்தருக்கு காணிக்கையாகக் கொண்டு வந்தான்.

கர்த்தர் ஆபேலையும் அவன் காணிக்கைகளையும் அங்கீகரிக்கிறார். அவர் காயீனையும், அவன் காணிக்கையையும் அங்கீகரிக்கவில்லை. கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. ஆனாலும் அவர் ஆபேலின் காணிக்கையை அங்கீகரித்து, காயீனின் காணிக்கையை அங்கீகரிக்காமல் விட்டுவிடுகிறார்.

ஆபேல் செலுத்தின பலியின்மீது, வானத்திலிருந்து அக்கினி புறப்பட்டு வந்து, அதைப் பட்சித்துப் போட்டிருக்கலாம். இதன் மூலமாக கர்த்தர் ஆபேலின் காணிக்கையை அங்கீகரித்திருக்கலாம். காயீன் செலுத்தின காணிக்கையை அக்கினி பட்சித்துப்போடாதிருந்திருக்கலாம்.

ஆபேலும், காயீனும் கர்த்தருக்கு காணிக்கைளைக் கொண்டுவந்தாலும், அவர்களுடைய சுபாவங்களில் வித்தியாசம் இருக்கிறது. காயீன் ஒரு துன்மார்க்கன். ஆகையினால் காயீன் செலுத்துகிற பலி வீணான காணிக்கையாயிருக்கிறது.

"இனி வீண் காணிக்கைகளைக் கொண்டுவரவேண்டாம்; தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது; நீங்கள் அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப்பிறப்பையும், ஓய்வுநாளையும், சபைக்கூட்டத்தையும் நான் இனிச் சகிக்கமாட்டேன்" (ஏசா 1:13).

கர்த்தர் காயீனையும் அங்கீகரிக்கவில்லை. ஆகையினால் அவர் காயீன் செலுத்தின காணிக்கையையும் அங்கீகரிக்கவில்லை. கர்த்தர் ஆபேலையும், அவன் காணிக்கையையும் அங்கீகரிக்கிறார். ஆபேல் ஒரு நீதிமான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஆபேலைப்பற்றிச் சொல்லும்போது, "நீதிமானாகிய ஆபேல்" என்று சொல்லுகிறார்.

"நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம் வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள்" (மத் 23:35).

ஆபேலின் இருதயம் தேவனுக்கு முன்பாக உத்தமமாயிருக்கிறது. அவனுடைய ஜீவியம் தேவனிடத்தில் பக்தியுள்ளதாயிருக்கிறது. கர்த்தர் ஆபேல் மீது பிரியமாயிருக்கிறார். அவனை பரிசுத்தவான் என்று அங்கீகரிக்கிறார். ஆகையினால் ஆபேலின் காணிக்கை பரிசுத்தமான காணிக்கையாயிருக்கிறது.

காயீனும் ஆபேலும் கொண்டுவந்த காணிக்கைகளிலும் வித்தியாசம் இருக்கிறது. ஆபேல் செலுத்தின பலி "மேன்மையான பலி'.

"விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான், அவனுடைய காணிக்கைகளைக்குறித்து தேவனே சாட்சிகொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" (எபி 11:4).

ஆபேலும் காயீனும் செலுத்திய காணிக்கைகளின் தன்மை, பண்பு ஆகியவற்றில் வித்தியாசமுள்ளது. காயீம் நிலத்தின் கனிகளை கர்த்தருக்கு காணிக்கையாகக் கொண்டு வந்தான். இந்தக் கனிகள் காயீனின் கைகளுக்கு அருகாமையிலிருந்தது. கனிகளை பறிப்பதற்கு காயீன் அதிகமாய் சிரமப்படவில்லை.

ஆபேலோ கர்த்தருக்கு காணிக்கையை கொண்டு வருவதற்கு முன்பாக, அதைப்பற்றி யோசிக்கிறான். தன் மந்தையின் தலையீற்றுகளில் கொழுமையான ஆடுகளை கர்த்தருக்கு காணிக்கையாகக் கொண்டு வருகிறான். ஆபேல் முடமான ஆட்டையோ, நசலான ஆட்டையோ காணிக்கையாகக் கொண்டு வரவில்லை. தன்னுடைய மந்தையில் எது நல்ல ஆடாகயிருக்கிறதோ, எது கொழுமையான ஆடாகயிருக்கிறதோ, அதைத் தேடி கண்டுபிடித்து, அவற்றில் சிலவற்றை கர்த்தருக்கு காணிக்கையாகக் கொண்டு வருகிறான். ஆபேலிடத்தில் இதைவிட கொழுமையான ஆடு எதுவுமில்லை.

ஆபேல் கர்த்தருக்கு விசுவாசத்தோடு பலிசெலுத்துகிறான். காயீனிடத்தில் விசுவாசமில்லை. அவர்கள் இருவரும் கர்த்தருக்கு காணிக்கையைக் கொண்டு வரும்போது, கர்த்தர் அவர்களுடைய இருதயத்தைப் பார்க்கிறார். அவர்கள் இருவரும் என்ன நோக்கத்திற்காக காணிக்கை செலுத்துகிறார்கள் என்பதை தேவன் அறிந்திருக்கிறார்.

ஆபேல் தேவனுடைய சித்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். தேவனுடைய சித்தம் தன்னை ஆளுகை செய்யவேண்டும் என்று ஆபேல் எதிர்பார்க்கிறான். தான் கொண்டு வரும் காணிக்கையின் மூலமாக கர்த்தருக்கு மகிமை உண்டாகவேண்டும் என்பதே ஆபேலின் நோக்கம்.

காயீனின் இருதயத்திலோ கர்த்தர்மீது பக்தியுமில்லை. ஆபேல் கர்த்தருக்கு காணிக்கை கொண்டுவருவதினால், காயீனும் அவருக்கு காணிக்கை கொண்டு வருகிறான். தன் சகோதரன் மத்தியில் தனக்கு மதிப்பு உண்டாகவேண்டும் என்பதற்காகவே காயீன் காணிக்கை செலுத்துகிறான். அவனிடத்தில் விசுவாசமில்லை. காயீன் தன் சுயபெருமைக்காகவும், சுயகவுரவத்திற்காகவும் கர்த்தருக்கு காணிக்கையைக் கொண்டு வருகிறான். ஆகையினால் காயீன் கொண்டு வருகிற காணிக்கை கர்த்தருடைய பார்வையில் பாவமாயிருக்கிறது.

ஆபேல் கர்த்தருக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்துகிறான். தன் பாவத்திற்காக மனம் வருந்துகிறான். காயீனோ தன்னைத் தாழ்த்தவில்லை. அவன் கர்த்தரை நம்பாமல், தன்னுடைய சுயபலத்தை நம்புகிறான்.

கர்த்தர் காயீனையும் அவன் காணிக்கையையும் அங்கீகரிக்கவில்லை. இதனால் காயீனுக்கு மிகவும் எரிச்சலுண்டாயிற்று. அவன் முகநாடி வேறுபடுகிறது. காயீனின் எரிச்சல், அவனுக்கு தேவன் மீதுள்ள பகையை வெளிப்படுத்துகிறது. காயீன் கோபப்படவேண்டுமென்றால், அவன் தனக்குத்தானே கோபப்பட்டுக்கொள்ள வேண்டும். அவன் தன்னுடைய மாய்மாலத்திற்காகவும், அவபக்திக்காகவும் தன்மீது எரிச்சல்படவேண்டும். காயீனிடத்தில் குற்றமும் குறையும் இருப்பதினால்தான், கர்த்தர் அவனையும் அவனுடைய காணிக்கையையும் அங்கீகரிக்கவில்லை.

இருதயத்தில் தாழ்மையில்லாதவர்கள், தங்களுடைய பாவங்களை அங்கீகரிக்கமாட்டார்கள். தங்களுடைய பாவங்களைப்பற்றி யாராவது எடுத்து சொன்னால் அவர்கள்மீதும் கோபப்படுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தப்பிதம் செய்தாலும், தங்களிடத்தில் தப்பிதம் உள்ளது என்பதை அங்கீகரிக்கமாட்டார்கள்.

கர்த்தர் காயீனையும் அவன் காணிக்கையையும் அங்கீகரியாததினால், அவனுக்கு எரிச்சலுண்டாயிற்று. காயீனுக்கு கர்த்தர்மீதும் எரிச்சலுண்டாயிற்று. ஆபேல் மீதும் எரிச்சலுண்டாயிற்று. ஆபேல் காயீனின் சகோதரனாகயிருந்தாலும், காயீன் தன் சகோதரனை சத்துருவாகப் பாவிக்கிறான்.

ஒரு சிலர் கர்த்தருடைய ஆசீர்வாதங்களையும், அவருடைய சிலாக்கியங்களையும் பெற்றுக்கொள்வதற்கு தகுதியில்லாதவர்களாயிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் மற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படுவார்கள். கர்த்தர் மற்றவர்களை ஆசீர்வதிக்கும்போது, இவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்மீது பொறாமைப்படவும் செய்வார்கள், கோபப்படவும் செய்வார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் பரிசேயர்கள் காயீனின் வழிகளில் நடந்தார்கள். "நியாயசாஸ்திரிகளே, உங்களுக்கு ஐயோ, அறிவாகிய திறவுகோலை எடுத்துக் கொண்டீர்கள், நீங்களும் உட்பிரவேசிக்கிறதில்லை, உட்பிரவேசிக்கிறவர்களையும் தடைபண்ணுகிறீர்கள்" (லூக் 11:52).

பொறாமைப்படுவதும் கர்த்தருடைய பார்வையில் பாவமாயிருக்கிறது. பொறாமை குணமுள்ளவர்கள்மீது கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பு வரும். பொறாமையானது எலும்புருக்கி. பொறாமைப்படுகிறவர்கள் தங்களுக்கு கேடுண்டாக மற்றவர்கள்மீது பொறாமைப்படுகிறார்கள். இவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்வார்கள்.

உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று ஆதி 4:6,7

ஆதி 4:6. அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது?

ஆதி 4:7. நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார்.

கர்த்தர் காயீனோடு வழக்காடுகிறார். காயீனின் பாவத்தை அவனுக்கு உணர்த்துகிறார். காயீன் தன் மதியீனத்தினால் கர்த்தர்மீதும் ஆபேல்மீதும் எரிச்சலாயிருக்கிறான். காயீன் தன் எரிச்சலை விட்டு விட்டு, மறுபடியும் சாதாரண நிலமைக்கு வரவேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். காயீன் இன்னும் அதிகமாய் எரிச்சலடைந்தால், அவன் இன்னும் அதிகமாய்த் தீங்கு செய்ய நினைப்பான்.

எரிச்சலடைகிறவர்களை சமாதானம் பண்ணவேண்டும். அவர்களுடைய எரிச்சலும் கோபமும் அதிகரிக்கும்போது, அவர்கள் பிறருக்கு தீங்கு செய்ய முயற்சி செய்வார்கள். மூத்த குமாரன் இளையகுமாரன்மீது கோபப்பட்டான். அவர்களுடைய தகப்பனோ மூத்த குமாரனுடைய கோபத்தைத் தணிப்பதற்கு முயற்சி பண்ணுகிறார்.

"அப்பொழுது அவன் கோபமடைந்து, உள்ளே போக மனதில்லாதிருந்தான். தகப்பனோ வெளியே வந்து, அவனை வருந்தியழைத்தான்......... அதற்குத் தகப்பன்: மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது. உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான்; ஆனாபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்கவேண்டுமே என்று சொன்னான் என்றார்" (லூக் 15:28,31,32).

காயீனுக்கு மிகவும் எரிச்சலுண்டாயிற்று. கர்த்தர் காயீனை நோக்கி, "உனக்கு ஏன் எரிச்சலுண்டாயிற்று" என்று கேட்கிறார். அவனுடைய எரிச்சலுக்கான காரணத்தை விசாரிக்கிறார். கர்த்தர் நம்முடைய இருதயத்தின் நினைவுகளை அறிந்திருக்கிறார். நமக்குள்ளே பாவமான காரியங்கள் தோன்றும்போது, கர்த்தர் அதையும் அறிந்து வைத்திருக்கிறார்.

நாம் கோபப்படும்போது, "நமக்கு ஏன் கோபம் வருகிறது" என்னும் கேள்வியை நமக்குள்ளே கேட்டுக்கொள்ளவேண்டும். நாம் கோபப்படுவதற்கு நீதியான காரணம் ஏதாவது உண்டா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். நமக்கு அடிக்கடி கோபம் வந்தால், கர்த்தருடைய சமுகத்திலே நம்மை ஒப்புக்கொடுத்து, நமக்குள்ளே சாந்தகுணம் உருவாக ஜெபம்பண்ணவேண்டும். கர்த்தர் காயீனை நோக்கி, "உன் முகநாடி ஏன் வேறுபட்டது" என்றும் கேட்கிறார்.

காயீன் தேவனுக்கு விரோதமாகக் கோபப்படுவதற்கு நியாயமான காரணம் ஏதுவுமில்லை. கர்த்தர் காயீனுக்கு முன்பாக ஜீவனையும் ஆசீர்வாதத்தையும் வைத்திருக்கிறார். காயீன் தன் சகோதரன் ஆபேலைப்போல நன்மை செய்தால், காயீனுக்கு ஆசீர்வாதம் வரும். கர்த்தர் காயீனை நோக்கி, "நீ நன்மை செய்தால் மேன்மையில்லையோ" என்று கேட்கிறார்.

காயீனுக்கு மிகவும் எரிச்சலுண்டாயிருக்கிறது. அவனுடைய முகநாடியும் வேறுபட்டிருக்கிறது. இந்த சூழ்நிலையில் அவன் தன்னுடைய பாவங்களுக்கு மனம் வருந்தவேண்டும். அவனுடைய இருதயம் பாவத்திற்கு விலகி புதுப்பிக்கப்படவேண்டும். அவன் மறுபடியும் சாந்தகுணத்திற்கு வரவேண்டும். கர்த்தருக்கு மேன்மையான பலியை செலுத்தவேண்டும். அப்போது கர்த்தர் காயீனின் பலியை அங்கீகரித்து, அவனுடைய பாவத்தை மன்னித்து, அவனுக்கு ஆறுதலையும் ஆசீர்வாதத்தையும் கொடுப்பார். காயீன் நன்மை செய்தால் அவனுக்கு மேன்மை உண்டாகும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்திலேயே சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. பாவிகள் மனந்திரும்பி நன்மை செய்யும்போது, அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, அவர்களுக்கு மேன்மை உண்டாகும். இதுவே சுவிசேஷத்தின் மையச்செய்தி.

கர்த்தர் காயீனுக்கு முன்பாக ஜீவனையும் ஆசீர்வாதத்தையும் வைத்திருப்பதுபோல, மரணத்தையும் சாபத்தையும் வைக்கிறார். கர்த்தர் காயீனை நோக்கி, "நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்" என்று சொல்லுகிறார்.

காயீனின் கோபம் அவனுடைய இருதயத்திலிருக்கிறது. கொலைபாதகம் அவனுடைய வாசல்படியில் படுத்திருக்கிறது. பாவம் அவனுடைய வாசல்படியில் படுத்திருக்கிறது. பாவமும் அதற்கான தண்டனையும் அருகாமையிலிருக்கிறது. எபிரெய பாஷையில் பாவம் என்பதைக் குறிக்கும் வார்த்தையே, தண்டனையையும் குறிக்கிறது.

ஒரு வீட்டில் பாவம் நிரம்பியிருக்கும்போது, அந்த வீட்டின் வாசல்படியில் சாபம் படுத்திருக்கும். பாவியானவன் வீட்டைவிட்டு வெளியேறும்போது அல்லது வீட்டிலிருந்து வாசல்படி வழியாக எட்டிப்பார்க்கும்போது, சாபம் அவனைப் பிடித்துக்கொள்ளும்.

கர்த்தர் காயீனை நோக்கி, "நீ நன்மை செய்யாதிருந்தால்" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு, "நீ பாவநிவாரண பலியை நேர்த்தியாய்ச் செலுத்தவில்லையென்றால்" என்று பொருள். பாவநிவாரண பலியை செலுத்தவில்லையென்றால், பாவம் அவன் வாசல்படியில் படுத்திருக்கும்.

பாவம் என்பதைக் குறிப்பதற்கான எபிரெய வார்த்தையே, பாவநிவாரண பலியையும் குறிக்கிறது. கிறிஸ்துவானவர் பாவநிவாரண பலியாக இருக்கிறார். அவர் வாசற்படியில் நிற்கிறார்.

"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" *(வெளி 3:20).*

காயீனுக்கு கர்த்தர்மீது மிகவும் எரிச்சலுண்டாயிற்று. காயீன் கோபப்படுவதற்கு ஒரு காரணமுமில்லை. அவன் கோபப்படவேண்டுமென்றால், தன்மீதுதான் கோபப்படவேண்டும். கர்த்தர்மீது கோபப்படக்கூடாது. கர்த்தர்மீது கோபப்படுமளவுக்கு காயீன் ஒரு நீதிமானல்ல.

காயீன் தன் சகோதரனாகிய ஆபேல்மீதும் கோபப்படக்கூடாது. காயீன் மூத்த சகோதரன். ஆபேல் அவனுக்கு இளைய சகோதரன். இளைய சகோதரனாகிய ஆபேல், தன் மூத்த சகோதரனாகிய காயீனுக்கு எப்போதும்போல மதிப்பும் மரியாதையும் காண்பிப்பான்.

கர்த்தர் காயீனை நோக்கி, "ஆபேலின் ஆசை உன்னைப்பற்றியிருக்கும், நீ ஆபேலை ஆண்டுகொள்வாய்" என்று சொல்லுகிறார். ஆபேல் இளையசகோதரனாகயிருப்பதினால், மூத்தசகோதரனாகிய காயீன் அவனை ஆண்டுகொள்வான்.

கர்த்தர் ஆபேலையும் அவன் காணிக்கையையும் அங்கீகரித்தாலும், காயீனே இன்னும் சேஷ்டபுத்திரனாகயிருக்கிறான். சேஷ்டபுத்திர பாகத்தின் சுதந்தரம் இன்னும் காயீனிடத்திலே இருக்கிறது. கர்த்தர் ஆபேலை அங்கீகரித்ததினால், காயீனுடைய சேஷ்டபுத்திர சுதந்தரபாகத்தை ஆபேலுக்கு கொடுத்துவிடவில்லை. அதை மாற்றவேண்டும் என்பது கர்த்தருடைய நோக்கமல்ல.

ஆபேலும் தனக்கு சேஷ்டபுத்திர பாகத்தின் சுதந்தரம் கிடைக்கவேண்டுமென்று கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணவுமில்லை. ஆபேல் காயீனுக்கு எந்தவிதத்திலும் சத்துருவாயில்லை. ஆனாலும் காயீனுக்கு ஆபேல் மீது மிகவும் எரிச்சலுண்டாயிற்று. காயீன் தேவையில்லாமல் எரிச்சல்படுகிறான். ஆகையினால் கர்த்தர் காயீனை நோக்கி, "உனக்கு ஏன் எரிச்சலுண்டாயிற்று, உன் முகநாடி ஏன் வேறுபட்டது" என்று கேட்கிறார்.

காயீன் ஆபேலைக் கொலைசெய்தான் ஆதி 4:8

ஆதி 4:8. காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான்; அவர்கள் வயல்வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான்.

கர்த்தர் காயீனையும் அவன் காணிக்கையையும் அங்கீகரிக்கவில்லை. இதனால் காயீனுக்கு மிகவும் எரிச்சலுண்டாயிற்று. அவன் முகநாடி வேறுபட்டது. காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலை செய்தான்.

ஏதேன் தோட்டத்திலே தேவன் தடைபண்ணின விருட்சத்தின் கனியை ஆதாம் புசித்தார். அது தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாத பாவம். காயீனோ இப்போது தன் சொந்த சகோதரனை கொலைசெய்து விடுகிறான். கொலைபாதகம் மகாபயங்கரமானது. காயீனுடைய பாவத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஆதாமின் பாவம் சிறிய பாவமாயிருக்கிறது.

தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயின் வித்திற்கும் சர்ப்பத்தின் வித்திற்கும் பகை உண்டாக்குவேன் என்று சொன்னார். கர்த்தர் சொன்ன பிரகாரமாக இப்போது இரண்டு வித்திற்கும் இடையே பகை ஆரம்பித்திருக்கிறது. ஆவிக்குரியவர்களை மாம்சத்திற்குரியவர்கள் உபத்திரவப்படுத்துவது பூர்வகாலம் முதலே இருந்துவருகிறது.

மனுஷனுடைய மாம்ச சுபாவத்தினால், அவனுக்குள்ளே பொறாமை, கோபம், துர்க்குணம் ஆகியவை உருவாகிறது. மாம்சத்தில் உருவாகியிருக்கிற இந்தத் துர்க்குணங்கள், மனுஷருடைய ஆத்துமாவில் பிரவேசிக்கும்போது, அவர்கள் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். காயீன் கோபப்பட்டு, தன் சொந்த சகோதரனையே கொலைசெய்கிறான். இக்காலத்திலும் அநேகர், காயீனைப்போலவே பாவம் செய்கிறார்கள்.

ஆபேல் காயீனுக்கு இளையசகோதரன். அவன் நற்குணமுள்ளவன். ஆபேல் தன் சகோதரனாகிய காயீனுக்கு விரோதமாக ஒரு குற்றமும் செய்யவில்லை. ஆனாலும் காயீனுக்கு ஆபேல் மீது கோபமும் எரிச்சலும் உண்டாயிற்று.

கர்த்தர் காயீனை நோக்கி, "உனக்கு ஏன் எரிச்சலுண்டாயிற்று" என்றும், "நீ நன்மை செய்தால் மேன்மையில்லையோ" என்றும் கேட்டார். ஆனால் காயீனோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. ஆபேலுக்கு விரோதமாக காயீனுடைய எரிச்சல் அதிகரித்தது. காயீன் ஆபேல் மீது எரிச்சலும் கோபமும், பொறாமையும் பட்டு, அவனை கொலைசெய்கிறான்.

காயீன் தன் சகோதரன் ஆபேலை வஞ்சிக்கிறான். அவன் ஆபேலோடு சிநேகமாகவும், அன்பாகவும் இருப்பதுபோல மாய்மாலம் பண்ணுகிறான். காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான்; அவர்கள் வயல்வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான்.

காயீனும் ஆபேலும் வயல்வெளியில் இருக்கிறார்கள். "நாம் வயல்வெளிக்குப்போவோம்" என்று காயீன் ஆபேலோடே சொன்னதாக செப்துவஜிந்த் பதிப்பில் எழுதப்பட்டிருக்கிறது. காயீன் ஆபேலைக் கொலைசெய்ததற்கு வேதபண்டிதர்கள் பலவிதமான காரணங்களை சொல்லுகிறார்கள்.

காயீன் ஆபேலைக் கொலைசெய்ததற்கு அடிப்படை காரணம், காயீனுடைய துன்மார்க்கமும் அவனுடைய கொலைவெறியுமாகும். காயீனுடைய கிரியைகளெல்லாம் துர்க்கிரியைகளாயிருக்கிறது. ஆபேலுடைய கிரியைகளோ நற்கிரியைகளாயிருக்கிறது. காயீன் ஒரு துன்மார்க்கன். ஆபேல் ஒரு நீதிமான்.

காயீன் ஆபேலைக் கொலைசெய்ததினால், அவன் தேவனுக்கு விரோதமாக நேரடியாகவே கலகம்பண்ணுகிறான். கர்த்தர் ஆபேலையும் அவன் காணிக்கையையும் அங்கீகரித்தார். இதனால் காயீனுக்கு ஆபேல்மீது எரிச்சலும் கோபமும் உண்டாயிற்று. எரிச்சல் கொலைவெறியாயிற்று.

ஏதேன் தோட்டத்திலே ஆதாம் பாவம் செய்த வேளையிலிருந்தே, மரணம் அவர்களை ஆளுகை செய்ய ஆரம்பித்துவிடுகிறது. ஆனாலும் ஆபேல் சாகும் வரையிலும், அவர்களில் யாருக்கும் மரணம் வரவில்லை. இப்போதுதான் மனுஷர் மத்தியிலே முதல் முறையாக மரணம் வந்திருக்கிறது.

இந்தப் பூமியிலே முதலாவதாக மரித்துப்போன ஆபேல் ஒரு நீதிமானாயிருக்கிறார். அவர் கர்த்தருக்கு பரிசுத்தவானாயிருக்கிறார். ஆபேல் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர், அங்கீகரிக்கப்பட்டவர், நேசிக்கப்பட்டவர். இந்தப் பூமியிலே முதலாவதாக மரித்து கல்லறைக்குப்போன ஆபேல், பரலோகத்தில் பிரவேசித்தார்.

இந்தப் பூமியிலே ஆபேலே முதலாவதாக மரித்தவர். அவர் கர்த்தருக்கு இரத்த சாட்சியாக மரித்தார். ஆபேல் கர்த்தருக்காகவும், சத்தியத்திற்காகவும், கர்த்தருடைய வார்த்தைக்காகவும், அவருடைய உபதேசத்திற்காகவும் மரித்தார். ஆகையினால் ஆபேலின் மரணத்தில் சாபமில்லை. ஆபேலின் மரணம் கிரீடம் சூட்டப்பட்ட, மகிமையான மரணமாயிருக்கிறது.

காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலை செய்தான். இன்றும் உலகில் மார்க்க பேதங்களின் அடிப்படையில் யுத்தங்களும், இரத்தம் சிந்துதல்களும் நடைபெறுகின்றன. இது வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் முதலாவது கொலை. இது வயல்வெளியில் நடைபெறுகிறது. தனிப்பட்ட கோபத்தினால் இது நிறைவேறிற்று. (மத் 23:35; யூதா 1:11; 1யோவான் 3:12; வெளி 17:6; வெளி 18:24).

ஆபேல் எங்கே
ஆதி 4:9-12

ஆதி 4:9. கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார்; அதற்கு அவன்: நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான்.

ஆதி 4:10. அதற்கு அவர்: என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது.

ஆதி 4:11. இப்பொழுது உன் சகோதரனுடைய இரத்தத்தை உன் கையிலே வாங்கிக் கொள்ள தன் வாயைத் திறந்த இந்தப் பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய்.

ஆதி 4:12. நீ நிலத்தைப் பயிரிடும்போது, அது தன் பலனை இனி உனக்குக் கொடாது; நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய் என்றார்.

இந்தப் பூமியிலே பிறந்த மனுஷரில், காயீனே முதலாவது கொலைகாரனாயிருக்கிறான். அவனுடைய கொலைபாதகத்தை கர்த்தர் விசாரிக்கிறார். அவனுக்கு தண்டனை கொடுக்கிறார். கர்த்தர் காயீனை நோக்கி, "உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே" என்று கேட்கிறார்.

காயீன் தன் சகோதரனாகிய ஆபேலை கொலை செய்துவிட்டான். காயீன் தன் பாவத்தை உணரவேண்டும். தன்னுடைய பாவத்தைக் குறித்தும், அக்கிரமத்தைக் குறித்தும் அவன் கர்த்தரிடத்தில் அறிக்கை பண்ணவேண்டும். காயீன் தன் பாவத்தை அறிக்கை பண்ணவேண்டும் என்பதற்காகவே, கர்த்தர் அவனை நோக்கி, "உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே" என்று கேட்கிறார்.

கர்த்தர் காயீனை நியாயந்தீர்ப்பதற்கு முன்பாக, அவனைக் குற்றப்படுத்துகிறார். காயீன் தன் குற்றத்தை உணரவேண்டும். பரிசுத்தவான்கள் பாவம் செய்துவிட்டால், அவர்கள் தங்களுடைய பாவங்களை உணர்ந்து, கர்த்தரிடத்தில் பாவஅறிக்கை செய்வார்கள். காயீனும் தன்னுடைய பாவத்தை உணரவேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

ஆனால் காயீனோ தன்னுடைய பாவத்தை உணரவுமில்லை. அதை அங்கீகரிக்கவுமில்லை. காயீன் கர்த்தரிடத்தில், "நான் அறியேன்" என்று சொல்லுகிறான். காயீன் தன் கொலைக்குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. அவன் தன்னை குற்றம் செய்யாதவன் போல பாவித்து பேசுகிறான்.

காயீன் தன் சகோதரன் ஆபேலைக் கொலைசெய்தான். அவன் கொலைசெய்த பாவத்தோடு, இப்போது பொய்சொல்லுகிற பாவத்தையும் செய்கிறான். "ஆபேலை நான் அறியேன்" என்று காயீன் சொல்லுவது பொய் வார்த்தை. காயீனுக்குள்ளே பிசாசு குடியிருக்கிறான். ஆரம்பத்திலிருந்தே பிசாசானவன், கொலைகாரனாகவும், பொய்யனாகவும் இருக்கிறான்.

தேவனுக்கு மறைவான இரகசியம் எதுவுமில்லை. அவர் சர்வஞானமுள்ளவர். அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறவர். காயீன் கர்த்தரிடத்தில் பொய்சொல்லி, தன்னுடைய கொலைபாதகத்தை மூடி மறைத்துவிடலாம் என்று நினைக்கிறான். பாவத்தை மறைக்கிறவர்கள் வாழ்வடைய மாட்டார்கள். அதை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவர்களோ கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

காயீன் தன்னுடைய பாவத்தை அங்கீகரித்து, தன் பாவத்திற்கு மனந்திரும்பி, தன்னுடைய பாவத்தை கர்த்தரிடத்தில் அறிக்கை செய்தால் மாத்திரமே, அவனுடைய பாவம் மன்னிக்கப்படுவதற்கு வாய்ப்பு இருக்கும். ஆனால் காயீனோ தன்னுடைய பாவத்தை அங்கீகரியாமல், அதை மறைக்க முயற்சி பண்ணுகிறான்.

கர்த்தர் நியாயாதிபதியாயிருக்கிறார். காயீனோ தன் சகோதரன் ஆபேலைக் கொலைசெய்து குற்றவாளியாயிருக்கிறான். காயீன் தன்னுடைய குற்றத்தை அங்கீகரியாதது மாத்திரமல்ல, தன்னை நியாயம் விசாரிக்க வந்திருக்கிற கர்த்தரையே குற்றப்படுத்துகிறான். நியாயாதிபதியாகிய கர்த்தர் தனக்கு அநீதி செய்வதுபோல காயீன் கர்த்தர்மீது குற்றம் சொல்லுகிறான்.

காயீன் கர்த்தரை நோக்கி, "என் சகோதரனுக்கு நான் காவலாளியோ" என்று கேட்கிறான். காயீன் கர்த்தரிடத்தில் துணிகரமாய்ப் பேசுவதற்கு பதிலாக, அவன் கர்த்தருடைய சமூகத்தில் தன்னை மிகவும் தாழ்த்தி, மிகுந்த பணிவோடு, "நான் என் சகோதரன் ஆபேலை கொலைசெய்து விட்டேனே" என்று வருத்தத்தோடும் வேதனையோடும் சொல்லவேண்டும். ஆனால் காயீன் அப்படி பேசுவதற்கு பதிலாக, "என் சகோதரனுக்கு நான் காவலாளியோ" என்று கேட்கிறான்.

காயீன் கர்த்தரிடத்தில் இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசும்போது, "நான் என் சகோதரனுக்கு காவலாளி அல்ல, கர்த்தராகிய நீரே அவனுக்கு காவலாளி" என்று பேசுவதுபோல உள்ளது. ஆபேலுக்கு கர்த்தர் காவலாளியாயிருப்பதினால், "ஆபேல் எங்கே" என்பதை கர்த்தர் அறிந்திருக்கவேண்டும் என்றும், கர்த்தர் ஆபேலைப்பற்றி தன்னிடத்தில் விசாரிக்கக்கூடாது என்றும் பொருள்படுமாறு காயீன் பேசுகிறான்.

ஆபேல் காணாமல் போய்விட்டால், கர்த்தரே அதற்கு காரணம் என்றும், அதற்காக தன்னைக் குற்றப்படுத்தக்கூடாது என்றும் காயீன் கர்த்தரிடத்தில் விவாதம்பண்ணுகிறான். தான் ஆபேலை பாதுகாப்பதாக ஒருபோதும் யாருக்கும் வாக்குப்பண்ணினதில்லை என்பதுபோல காயீன் பேசுகிறான்.

காயீனுக்கு தன் சகோதரனாகிய ஆபேல்மீது அக்கறையோ, கரிசனையோ இல்லை. ஆகையினால்தான் காயீன் பொறுப்பில்லாத வார்த்தைகளைப் பேசுகிறான். காயீனைப்போலவே இக்காலத்தில் அநேகர் தங்கள் சகோதரர்மீது அக்கறையும், கரிசனையும் அற்றவர்களாயிருக்கிறார்கள்.

தங்களுடைய சகோதரரின் சரீரத்திற்கு அல்லது அவர்களுடைய உடமைக்கு அல்லது அவர்களுடைய நற்பெயருக்கு அல்லது அவர்களுடைய ஆத்துமாவுக்கு தீங்கும் ஆபத்தும் வரும்போது, அவர்கள்மீது அன்பும் கரிசனையும் இல்லாதவர்கள், அவர்களைப்பற்றி கவலைப்படமாட்டார்கள். தங்களுடைய பொறுப்புக்களை தட்டி கழித்துவிடுவார்கள். "என் சகோதரனுக்கு நான் காவலாளியோ" என்று காயீன் சொன்னதுபோல, அவர்களும் காயீனுடைய பாஷையைப் பேசுவார்கள்.

"உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக; பிறன்மேல் பாவம் சுமராதபடிக்கு அவனை எப்படியும் கடிந்து கொள்ள வேண்டும்" (லேவி 19:17).

"அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" (பிலி 2:4).

கர்த்தர் காயீனுடைய தந்திரமான வார்த்தைகளைக் கேட்டு, சும்மா போய்விடவில்லை. கர்த்தர் காயீனுடைய பாவத்தை அவனுக்கு உணர்த்துகிறார். காயீன் தன் சகோதரன் ஆபேலைக் கொலைசெய்தான். அதற்கான சாட்சி ஆதாரம் வலுவாகயிருக்கிறது. உண்மையான சாட்சிக்கு விரோதமாக காயீனால் பொய்சொல்ல முடியாது.

கர்த்தர் காயீனை நோக்கி, "உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது" (ஆதி 4:10) என்று சொல்லுகிறார். ஆபேலுடைய இரத்தமே காயீனுடைய கொலைபாவத்திற்கு விரோதமாக சாட்சி சொல்லுகிறது. ஆபேலின் இரத்தம் காயீனுக்கு விரோதமாக தேவனை நோக்கிக் கூப்பிடுகிறது.

கொலைபண்ணுவது மிகவும் மோசமான பாவம். எந்தப் பாவமும் தேவனை நோக்கி கூப்பிடுகிற பாவமல்ல. ஆனால் கொலைபாவம் மாத்திரமே தேவனை நோக்கிக் கூப்பிடும். பாடுகளை சகித்துக்கொள்கிறவர்கள், தங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணுவார்கள். "பிதாவே அவர்களுக்கு மன்னியும்" என்று தங்களை கொலைசெய்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுவார்கள். அதே வேளையில் கொலைபண்ணப்பட்டவர்களின் இரத்தமோ, கொலையாளிகளை பழிவாங்குமாறு, கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்.

ஆபேலுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறது. இந்தப் பூமியானது ஆபேலின் இரத்தத்தை வாங்கிக்கொள்ள தன் வாயைத் திறந்தது (ஆதி 4:11).

மூலஎபிரெய பாஷையில் "உன் சகோதரனுடைய இரத்தம்" என்னும் வாக்கியம் "உன் சகோதரனுடைய இரத்தங்கள்" என்று பன்மையில், சொல்லப்பட்டிருக்கிறது. "இரத்தங்கள்" என்பது, ஆபேலின் சந்ததியைக் குறிக்கிற வார்த்தை. ஆபேல் கொலைசெய்யப்படாதிருந்தால், அவருக்கு ஒரு சந்ததி உண்டாயிருந்திருக்கும். "இரத்தங்கள்" என்னும் வார்த்தை, ஆபேலின் சந்ததியில் வந்திருக்கவேண்டியவர்களை குறிக்கிற வார்த்தை.

ஆபேலின் இரத்தத்தைவிட, இயேசுகிறிஸ்துவின் இரத்தம் அதிக நன்மையான காரியங்களை பேசுகிறது. ஆபேலின் இரத்தம் தன்னைக் கொன்றவனை பழிவாங்குமாறு கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டது. கிறிஸ்துவின் இரத்தமோ, நம்மை சிலுவையில் அறைந்தவர்களை மன்னிக்குமாறு, பிதாவை நோக்கிக் கூப்பிட்டது.

"புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்" (எபி 12:24).

கர்த்தர் காயீனுடைய கொலைப்பாதகத்திற்காக, அவனுக்கு தண்டனை கொடுக்கிறார். "இந்தப் பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய்" என்று கர்த்தர் காயீனுக்கு சொல்லுகிறார். காயீன் சபிக்கப்படுகிறான். ஆதாமின் கீழ்ப்படியாமையினால் பூமியின்மீது சாபம் வந்தது. "உன் நிமித்தமாக பூமி சபிக்கப்பட்டிருக்கும்" என்று தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு சொன்னார். இப்போது, "இந்தப் பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய்" என்று கர்த்தர் காயீனுக்கு சொல்லுகிறார்.

மனுக்குலத்தார் எல்லோருக்குமே இந்த சாபத்தில் பங்கு இருக்கிறது. விசுவாசிகளாகிய நமக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாக, இந்த சாபத்திலிருந்து விடுதலை வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. நாம் சாபத்திற்கு தப்பிப்பது மாத்திரமல்ல, இயேசுகிறிஸ்து மூலமாக ஆசீர்வாதத்தையும் சுதந்தரித்துக்கொள்கிறோம்.

"நியாயப்பிரமாணத்தின் கிரியைக் காரராகிய யாவரும் சாபத்திற்குட் பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே" (கலா 3:10).

"மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" (கலா 3:13).

காயீன் இந்தப் பூமியில் சபிக்கப்பட்டிருக்கிறான். அவன் நிலத்தைப் பயிரிடுகிறவன். அவனுடைய இருதயம் இந்தப் பூமியோடு ஒட்டியிருக்கிறது. இப்போது இந்தப் பூமியும் சபிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பூமியில் காயீனும் சபிக்கப்பட்டிருக்கிறான்.

கொலைசெய்வதற்குத் தண்டனை கொடுக்கும் வகையில் இன்னும் பிரமாணம் எதுவும் உண்டாகவில்லை. (ரோமர் 7:7-25; கலா 3:19-25) கொலை செய்கிறவனுக்கு கொடுக்கப்படும் தண்டனை முதலாவதாக ஆதி 9:6 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. இத்துடன் பூமியும் சபிக்கப்படுகிறது. (ஆதி 4:12) காயீனின் வேலை இனிமேல் மிகவும் கடினமாக இருக்கும். (ஆதி 4:2).

சபிக்கப்பட்ட இந்தப் பூமியிலிருந்து காயீனுக்கு ஆசீர்வாதம் வராது. அவனுக்கு சாபமே வரும். கர்த்தர் காயீனை நோக்கி, "நீ நிலத்தைப் பயிரிடும்போது, அது தன் பலனை இனி உனக்குக் கொடாது; நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய்" (ஆதி 4:12) என்று சொல்லுகிறார். கர்த்தர் காயீனுக்கு இரண்டுவிதமான தண்டனையைக் கொடுக்கிறார். அவையாவன:

1. இந்தப் பூமி இனிமேல் தன் பலனை காயீனுக்கு கொடுக்காது.

2. காயீன் இந்தப் பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பான்.

நிலத்தைப் பயிரிடுவது காயீனுடைய வேலை. காயீன் தன்னுடைய நிலத்திலே எவ்வளவுதான் கடினமாய் வேலை செய்தாலும், அவனுடைய கைகளின் பிரயாசத்திற்கு ஏற்ற பலன் கிடைக்காது.

காயீனுக்கு இந்தப் பூமியிலே ஒரு நல்ல குடியிருப்பும் மறுக்கப்படுகிறது. அவன் இந்தப் பூமியிலே நிலையற்று அலைவான். காயீன் மூலமாக மனுஷர் மத்தியிலே நிந்தையும், சாபமும் வந்திருக்கிறது. மனுஷருடைய மனதிலே பயமுண்டாயிற்று. இவை அனைத்திற்கும் காயீனுடைய பாவமே காரணம்.

காயீனுடைய மனச்சாட்சி குற்றமுள்ளதாயிருக்கிறது. அது அவனுடைய மனதை வருத்துகிறது. அவனுடைய வருத்தத்திற்கு, அவனுடைய பாவமே காரணம். காயீன் இந்தப் பூமியிலே எங்கு போனாலும் அவன் நிலையற்று அலைவான். அவனைச் சுற்றிலும் அவனுக்கு பயமுண்டாயிருக்கும். காயீனுக்கு சமாதானமில்லை.

மனுஷர் எங்கு சுற்றி அலைந்தாலும், அவர்களுடைய மனதில் கர்த்தர் கொடுக்கும் சமாதானம் இருக்கவேண்டும். அந்த சமாதானம் இல்லையென்றால், அவர்களுடைய மனதில் நிம்மதி இருக்காது. அவர்கள் எங்குபோனாலும் பாதுகாப்பு இல்லாமல், நிம்மதியில்லாமல், பரிதபித்துக்கொண்டிருப்பார்கள்.

கர்த்தர் காயீனுக்கு தண்டனை கொடுத்தாலும், அந்தத் தண்டனையில் தம்முடைய கிருபையையும் வெளிப்படுத்துகிறார். கர்த்தர் காயீனை தம்முடைய சமுகத்தைவிட்டு உடனே துரத்திவிடவில்லை. அவனை உடனே கொன்று நிர்மூலம்பண்ணிவிடவில்லை. காயீன் தன்னுடைய பாவத்தை உணர்ந்து, மனந்திரும்புவதற்கு, காலஅவகாசம் கொடுக்கிறார். கர்த்தர் கிருபையும் நீடியபொறுமையுமுள்ளவர்.

நாம் அழிந்துபோகவேண்டும் என்பது தேவனுடைய சித்தமல்ல. நம்முடைய பாவத்திற்கு மனந்திரும்பி, தேவனோடு ஒப்புரவாகவேண்டும் என்பதே அவருடைய சித்தம். நாம் கர்த்தருடைய கிருபையையும், நீடிய பொறுமையையும் அசட்டைபண்ணிவிடக்கூடாது. கிருபையின் காலம் இருக்கும்போதே, நாம் கர்த்தரோடு ஒப்புரவாகி, அவரோடு ஐக்கியமாயிருக்கவேண்டும்.

காயீனுக்கு தண்டனை
ஆதி 4:13-15

ஆதி 4:13. அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி: எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்கமுடியாது.

ஆதி 4:14. இன்று என்னை இந்தத் தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர்; நான் உமது சமுகத்துக்கு விலகி மறைந்து, பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பேன்; என்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்றுபோடுவானே என்றான்.

ஆதி 4:15. அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: காயீனைக் கொல்லுகிற எவன் மேலும் ஏழு பழி சுமரும் என்று சொல்லி; காயீனைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் அவனைக் கொன்றுபோடாதபடிக்குக் கர்த்தர் அவன்மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார்.

காயீன் தன் சகோதரனாகிய ஆபேலை கொலைசெய்து விடுகிறான். அவனுடைய கொலைபாதகத்தின் நிமித்தமாய், கர்த்தர் காயீனைத் தண்டிக்கிறார். காயீனோ, தனக்கு கொடுக்கப்பட்ட தண்டனை மிகவும் கடினமானது என்றும், அந்த தண்டனையை தன்னால் சகிக்க முடியாது என்றும் கர்த்தரிடத்தில் முறையிடுகிறான். காயீன் மனவேதனையோடும், மனவிரக்தியோடும் பேசுகிறான் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

நம்முடைய பாவங்கள் எவ்வளவு பெரியதாகயிருந்தாலும், நாம் எவ்வளவு பெரிய பாவிகளாகயிருந்தாலும், நமக்கு தேவனுடைய சமுகத்திலே மன்னிப்பு உண்டு. நம்முடைய பாவங்களுக்கு நாம் வருத்தப்படவேண்டும். கர்த்தருடைய சமுகத்திலே நம்முடைய பாவங்களை அறிக்கைசெய்யவேண்டும். அப்போது கர்த்தர் தம்முடைய கிருபையினால் நம்முடைய பாவங்களை மன்னிப்பார். நம்முடைய வேதனையை அகற்றுவார்.

காயீனோ தன்னுடைய பாவத்தை அங்கீகரிக்கவில்லை. அவன் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவுமில்லை. கர்த்தரோ தம்முடைய நீதியினால் காயீனைத் தண்டிக்கிறார். காயீன் கர்த்தரிடத்தில் பாவஅறிக்கை செய்வதற்கு பதிலாக, கர்த்தர் தனக்கு கொடுக்கும் தண்டனை கடினமானது என்று புலம்புகிறான்.

காயீனுடைய பாவம் அதிகரிக்கிறது. தன் சகோதரனை கொலைசெய்தது காயீன் செய்த முதலாவது பாவம். அவன் கர்த்தருடைய சமுகத்திலே தன் பாவத்தை அறிக்கை செய்யாமலிருப்பதும், கர்த்தருடைய நீதியான தீர்ப்புக்கு எதிராக பேசுவதும் காயீன் மேலும் மேலும் செய்கிற பெரிய பாவங்களாகும்.

சாத்தான் காயீனை ஆளுகை செய்கிறான். இதுவரையிலும் காயீனுக்கு எரிச்சல் மாத்திரமே இருந்தது. இப்போது அவனுக்கு எரிச்சலோடு விரக்தியும் சேர்ந்து வந்திருக்கிறது. சாத்தான் காயீனை மொத்தமாக வஞ்சித்து விடுகிறான்.

காயீன் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தாமல், தன்னை உயர்த்துகிறான். தன் சகோதரனைக் கொன்றுபோட்டது பெரிய பாவமல்ல என்றும், ஆனால் கர்த்தரோ தமக்கு கடினமான தண்டனையைக் கொடுத்து அநியாயம் செய்கிறார் என்றும், இவ்வளவு பெரிதான தண்டனைக்குத்தக்க பாவம் எதுவும் தான் செய்யவில்லை என்றும் காயீன் கர்த்தரோடு விவாதம்பண்ணுகிறான்.

காயீன் நரகத்திற்குப் போகவேண்டியவன். நரகத்திற்கு தப்பிக்கும் வழியை கர்த்தர் அவனுக்கு காண்பிக்கிறார். ஆனால் காயீனோ கர்த்தருடைய கிருபையின் வழியைப் பயன்படுத்தாமல், தன்னுடைய சொந்த வழியிலே நரகத்திற்குப்போகிறான். அவன் கர்த்தருக்கு விரோதமாகப் பேசுகிறான்.

காயீன் கர்த்தரை நோக்கி, "எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்க முடியாது" என்றும், "இன்று என்னை இந்தத் தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர்" என்றும் சொல்லுகிறான். காயீன் தனக்குத்தானே தீங்கு செய்து கொள்கிறான். கர்த்தருடைய சமுகத்தில் இராதபடிக்கு, காயீனே விலகிப்போகிறான். காயீன் இந்த தேசத்திலிருந்து விலகிப்போவதற்கு, அவனுடைய பாவமே காரணம்.

காயீன் கர்த்தரைவிட்டு விலகிக்போனால், அவனுக்கு கர்த்தருடைய கிருபையும், இரக்கமும், பாதுகாப்பும், பராமரிப்பும் கிடைக்காது. இந்த தேசத்திலிருந்து துரத்தப்பட்டால், தன்னுடைய நிலமை மிகவும் பரிதாபமாயிருக்கும் என்பதையும் காயீன் அறிந்திருக்கிறான். "நான் உமது சமுகத்திற்கு விலகி மறைந்து, பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பேன்" என்று காயீன் கர்த்தரிடத்தில் புலம்புகிறான்.

காயீன் கர்த்தருடைய சமுகத்திற்கு விலகிப்போனால், அவனுக்கு பாதுகாப்பு இருக்காது. மனுஷருடைய கோபமும், விரோதமும் அவனுக்கு விரோதமாக எழும்பும். "என்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்றுபோடுவானே" என்று காயீன் கர்த்தரிடத்தில் சொல்லுகிறான்.

காயீன் கர்த்தருடைய சமுகத்தைவிட்டு விலகி, எங்கே அலைந்து திரிந்தாலும், அவனுக்கு பாதுகாப்பு இல்லை. காயீனுடைய ஜீவனுக்கு எப்போதுமே ஆபத்து வரும். காயீன் தனக்கு வரும் ஆபத்தைப்பற்றி சொல்லும்போது, இந்தப் பூமியிலே காயீனைத்தவிர, அவனுடைய பெற்றோரை தவிர வேறு மனுஷர் யாருமே இல்லை என்று வேதபண்டிதர்கள் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். ஆனாலும் அவன் தன்னுடைய ஜீவனைக் குறித்து பயப்படுகிறான். தன்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் தன்னைக் கொன்றுபோடுவான் என்று புலம்புகிறான்.

இந்தப் பூமியிலே, காயீனின் காலத்திலே, இப்போது மனுஷர் இல்லாவிட்டாலும், தேவனுடைய சிருஷ்டிகள் ஏராளமாயிருக்கிறது. தேவனுடைய சர்வசிருஷ்டிகளும் தனக்கு விரோதமாக எழும்பியிருக்கிறது என்றும், அவை தனக்கு சத்துருவாயிருக்கிறது என்றும் நினைத்து காயீன் பயப்படுகிறான்.

கர்த்தரோ காயீனுக்கு சொன்ன தம்முடைய தண்டனையை மாற்றவில்லை. கர்த்தர் தாம் சொன்ன தண்டனையை உறுதிபண்ணுகிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியானது. காயீனை தண்டிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய நீதி. அவனை பாதுகாக்கவேண்டும் என்பது கர்த்தருடைய கிருபை.

கர்த்தர் காயீனை நோக்கி, "காயீனைக் கொல்லுகிற எவன்மேலும் ஏழு பழி சுமரும்" என்று சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தையினால் காயீன் மனுஷருடைய கோபத்திற்கு தப்பிக்கிறான். காயீன்மீது தேவனுடைய தண்டனை விதிக்கப்பட்டிருப்பதினால், அவனைக் கண்டுபிடிக்கிறவன் எவனும், அவனை எளிதாகக் கொன்றுபோடுவான். ஆகையினால் காயீன் எங்கே போனாலும் பயத்தோடும் நடுக்கத்தோடும் போகவேண்டியதாயிருக்கிறது.

காயீன் தன் சகோதரன் ஆபேலைக் கொன்றது மிகப்பெரிய பாவம். கர்த்தர் அதற்காக காயீனைத் தண்டிக்கிறார். பழிவாங்குதல் கர்த்தருக்குரியது. கர்த்தரே காயீனுக்கு தண்டனை கொடுப்பார். கர்த்தருடைய கரத்தில் பட்டயம் இருக்கிறது. கர்த்தருடைய பட்டயத்தை மனுஷர் தங்களுடைய கைகளில் பிடித்துக்கொண்டு, அதை தங்களுக்கு சித்தமானபடி பயன்படுத்தக்கூடாது.

காயீனைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் அவனைக் கொன்றுபோடக்கூடாது என்பது கர்த்தருடைய சித்தம். இதற்காக கர்த்தர் காயீன்மேல் ஒரு அடையாளத்தைப் போடுகிறார். இந்த அடையாளத்தின் மூலமாக, காயீனுக்கும், மனுக்குலத்திலுள்ள மற்றவர்களுக்கும் ஒரு வித்தியாசம் காண்பிக்கப்படுகிறது. காயீன் தன் சகோதரனைக் கொன்றவன் என்பதற்கு அவன்மீது போடப்பட்ட அடையாளம் சாட்சி சொல்லுகிறது.

ஆதாமிற்கு இப்பொழுது 130 வயதாகிறது. (ஆதி 4:25; ஆதி 5:3). இதுவரையிலுமுள்ள வேதவசனங்களில் ஆதாமிற்கும், ஏவாளுக்கும் காயீனும், ஆபேலும் பிள்ளைகளாக பிறந்தார்கள் என்று மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த வசனத்தில் "என்னைக் கண்டு பிடிக்கிறவன் எவனும்" என்னும் வாக்கியம் இருப்பதினால் காயீனைத் தவிர இக்காலத்தில் மேலும் பலரும் பிறந்திருக்க வேண்டும்.

வேதபண்டிதர்களில் சிலர் ஆதாமின் சந்ததியைக் கணக்கிட்டு இந்த வசனத்தின்போது சுமார் 5 இலட்சம் ஜனங்கள் இருந்திருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள்.

காயீன் தனக்கு ஒரு பட்டணத்தைக் கட்டினான். பட்டணத்தைக் கட்டுவதற்கு பல ஆட்கள் தேவைப்படும் (ஆதி 4:17). ஆகையினால் ஒவ்வொரு மனுஷனுக்கும் குமாரரும், குமாரத்திகளும் பிறந்து தங்களுடைய இனத்தைப் பெருக்கியிருப்பார்கள். (ஆதி 4:15-24; ஆதி 5:1-32; ஆதி 6:1-2).

கர்த்தர் அவன்மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார். இது சரீரத்தில் போடப்பட்ட அடையாளமல்ல. காயீனைக் கொன்று போடுகிறவனைக் கர்த்தர் பழிவாங்குவார் என்னும் உறுதிமொழியை இந்த வாக்கியம் விளக்குகிறது.

காயீன் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டான் ஆதி 4:16-18

ஆதி 4:16. அப்பாடியே காயீன் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டு, ஏதேனுக்குக் கிழக்கான நோத் என்னும் தேசத்தில் குடியிருந்தான்.

ஆதி 4:17. காயீன் தன் மனைவியை அறிந்தான்; அவள் கர்ப்பவதியாகி, ஏனோக்கைப் பெற்றாள்; அப்பொழுது அவன் ஒரு பட்டணத்தைக் கட்டி, அந்தப் பட்டணத்துக்குத் தன் குமாரனாகிய ஏனோக்குடைய பேரை இட்டான்.

ஆதி 4:18. ஏனோக்குக்கு ஈராத் பிறந்தான்; ஈராத் மெகுயவேலைப் பெற்றான்; மெகுயவேல் மெத்தூசவேலைப் பெற்றான்; மெத்தூசவேல் லாமேக்கைப் பெற்றான்.

காயீனுடைய சரித்திரத்தைப்பற்றிய மேலும் சில சம்பவங்கள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் காயீனை தம்முடைய சமுகத்திலிருந்து துரத்திவிடுகிறார். காயீன் கர்த்தருடைய முகத்திற்கு விலகி மறைந்துகொள்ள விரும்புகிறான்.

அப்படியே காயீன் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டு, ஏதேனுக்குக் கிழக்கான நோத் என்னும் தேசத்தில் குடியிருக்கிறான் (ஆதி 4:16). காயீன் தானாகவே கர்த்தருடைய சந்நதியைவிட்டு விலகிப்போகிறான். கர்த்தர் காயீனை விலக்கவில்லை. அவர் அவனை ஒதுக்கி தள்ளவில்லை. ஆனால் காயீனோ சுயமாக சிந்தித்து, கர்த்தருடைய சந்நிதியைவிட்டு விலகிப்போகவேண்டுமென்று தானே தீர்மானம்பண்ணுகிறான்.

தம்மை ஆராதிக்க வருகிறவர்களைச் சந்தித்து, அவர்களை ஆசீர்வதிப்பதற்கு தேவன் ஏற்கெனவே ஒரு இடத்தைத் தேர்வு செய்திருக்கிறார். அந்த இடமே கர்த்தருடைய சந்நிதி என்று இங்குக் கூறப்படுகிறது. (2இராஜா 13:23; 2இராஜா 24:20; யோபு 1:12; யோபு 2:7; சங் 51:11; சங் 96:6-8).

கர்த்தருடைய சந்நிதியைவிட்டு விலகிப்போகிற காயீன், கர்த்தருடைய வார்த்தையைவிட்டும், அவருடைய ஆராதனையைவிட்டும் விலகிப்போகிறான். இதனால் காயீனுக்கு கர்த்தருடைய கிருபையும், சிலாக்கியமும் கிடைக்கவில்லை. கர்த்தருடைய சந்நிதியைவிட்டு விலகிபோன காயீன், இதன் பின்பு மறுபடியும் கர்த்தருடைய சந்நிதிக்கு வந்ததாக தகவல் எதுவுமில்லை.

கர்த்தர் காயீனுக்கு சொன்ன பிரகாரமாக, அவன் பூமியில் நிலையற்று அலைகிறான். அவன் ஏதேனுக்கு கிழக்கான நோத் என்னும் தேசத்தில் குடியிருக்கிறான். நோத் என்னும் தேசம், ஆதாமும் ஏவாளும் வாசம்பண்ணுகிற தேசத்திலிருந்து வெகுதூரத்திலிருக்கிறது. ஆனாலும் காயீன் கர்த்தருடைய சந்நிதியைவிட்டும், தன்னுடைய பெற்றோரைவிட்டும் விலகிப்போகிறான்.

கர்த்தர் காயீனுக்கு சொன்ன பிரகாரமாக அவன் நிலையற்று அலைகிறவனாகவே இருக்கிறான். நோத் என்னும் தேசத்திற்கு "குலுங்குகிற தேசம் அல்லது நடுங்குகிற தேசம்" என்று பொருள். நோத் தேசம் எப்போதுமே அமைதியில்லாமலிருக்கிறது. அந்த தேசத்தில் காயீனுக்கு அமைதி கிடைக்கவில்லை. அவனுடைய இருதயம் அங்கே திகிலோடும் நடுக்கத்தோடும் இருக்கிறது.

கர்த்தருடைய சந்நிதியைவிட்டு விலகிப்போகிறவர்களுக்கு சமாதானமும் ஆறுதலும் இல்லை. அவர்கள் இந்தப் பூமியில் எங்கு சுற்றி அலைந்தாலும், அவர்களுக்கு ஒருபோதும் நிம்மதி கிடைக்காது. ஆறுதல் கிடைக்காது. அவர்கள் இந்தப் பூமியில் நிலையற்று அலைகிறவர்களாயிருப்பார்கள்.

காயீன் கர்த்தருடைய சந்நதியைவிட்டு புறப்பட்டு போனபின்பு, அவனால் எங்கும் இளைப்பாற முடியவில்லை. நமக்கு கர்த்தருடைய சந்நிதியில் இளைப்பாறுதல் உண்டு. நம்முடைய ஆத்துமா கர்த்தரிடத்தில் இளைப்பாறும். நமக்கு கர்த்தரைத் தவிர வேறு யாராலும் இளைப்பாறுதல் தரமுடியாது.

காயீன் தன் மனைவியை அறிகிறான்; அவள் கர்ப்பவதியாகி, ஏனோக்கைப் பெறுகிறாள்; அப்பொழுது அவன் ஒரு பட்டணத்தைக் கட்டி, அந்தப் பட்டணத்துக்குத் தன் குமாரனாகிய ஏனோக்குடைய பேரை இடுகிறான் (ஆதி 4:17).

"காயீன் தன் மனைவியை அறிந்தான்" என்பது எபிரெய வழக்குச்சொல். குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுதல் என்பது இதன் பொருள். (ஆதி 4:1; ஆதி 38:26; 1சாமு 1:19; 1இராஜா 1:4; மத் 1:25).

காயீன் ஒரு பட்டணத்தை கட்டிக்கொண்டிருக்கிறான். ஆனாலும் கர்த்தர் அவனுக்கு சொன்ன சாபம் இன்னும் அவனை விட்டு நீங்கவில்லை. கர்த்தர் காயீனையும் அவனுடைய கைகளினன் கிரியைகளையும் சபித்திருக்கிறார். ஆகையினால் காயீன் ஒரு பட்டணத்தைக் கட்டினாலும், அந்தப் பட்டணத்தை அவனால் கட்டி முடிக்க முடியவில்லை.

இது பூமியின்மீது கட்டப்பட்ட முதலாவது பட்டணம். ஜனங்கள் அரணிப்பான பட்டணங்களைக் கட்டினார்கள். (எரே 4:23-26) இசைக்கருவிகளைக் கண்டுபிடித்து பாடல்களை இயற்றினார்கள். வாணிபத்திற்குப் பயன்படும் எடைக்கற்களை உண்டு பண்ணினார்கள். நாகரிகம் வளர்ந்தது. ஆனால் அதோடு மனுஷருடைய துன்மார்க்கமும் பெருகிற்று. காயீன் இந்தப் பட்டணத்திற்குத் தலைவனாக இருந்தான். உலகின் முதலாவது பட்டணம் அக்காலத்து துன்மார்க்கத்திற்கு அடையாளமாயிற்று. (1யோவான் 3:12; யூதா 1:11).

“ஏனோக்கு” என்பவன் சேத்தின் சந்ததியில் வந்த ஏனோக்கு அல்ல. இவன் ஆபிரகாமின் சந்ததியில் ஏழாவதாக வந்தவன் (ஆதி 5:18-24; யூதா 1:14). இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஏனோக்கு காயீனின் வம்சத்தில் வருகிறான். இவன் ஆதாமிலிருந்து மூன்றாவது சந்ததி.

கர்த்தர் காயீனுக்கு தண்டனை கொடுக்கும் போது, “நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய்” என்று சொன்னார். காயீன் தன் பாவத்திற்கு மனந்திரும்பி, கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தி, தன்னை ஒப்புக்கொடுத்தால், கர்த்தர் அவனுக்கு சொன்ன சாபத்தை விலக்குவார். அவன் இந்தப் பூமியில் நிலையற்று அலைகிறவனாயிராமல், ஒரு ஸ்தலத்தில் தங்கி தாபரிக்கிறவனாயிருப்பான். கர்த்தர் காயீனுக்கு சொன்ன சாபத்தை விலக்குவார். அவனை ஆசீர்வதிப்பார்.

ஆனால் காயீனோ கர்த்தருடைய கிருபையைத் தேடவில்லை. அவன் கர்த்தருடைய சந்நிதியைவிட்டு புறப்பட்டுப்போய்விடுகிறான். காயீன் பூமியில் நிலையற்று அலையவேண்டியவன். ஆனால் அவனோ இந்தப் பூமியில் அலையாமல், ஒரு தேசத்தில் குடியிருக்கவேண்டுமென்று முயற்சிபண்ணுகிறான்.

காயீனின் மனதிலே மனுஷரைக் குறித்த பயம் இருக்கிறது. “என்னை கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்றுபோடுவானே” என்று காயீன் கர்த்தரிடத்தில் சொன்னான். அவன் கர்த்தருடைய பாதுகாப்பைத் தேடுவதற்கு பதிலாக, தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ள முயற்சி பண்ணுகிறான். அவன் ஒரு பட்டணத்தைக் கட்டுகிறான். அந்தப் பட்டணம் தனக்கு பாதுகாப்பாயிருக்கும் என்று காயீன் நினைக்கிறான்.

காயீன் இப்போது வியாகுலத்திலிருக்கிறான். தன்னுடைய துக்கத்தையும் வியாகுலத்தையும் மறப்பதற்காக, அவன் ஒரு பட்டணத்தைக்கட்டி, தன்னுடைய வியாகுலத்தை மறக்க முயற்சிபண்ணுகிறான். அவனுடைய குற்றமனச்சாட்சி, அவனை எப்போதும் குற்றப்படுத்துகிறது. பட்டணத்தைக் கட்டும்போது உளிகளின் சத்தமும், வாச்சிகளின் சத்தமும் அதிகமாய்க் கேட்கும். இந்த சத்தத்திலே, தன்னுடைய மனச்சாட்சியின் சத்தம் மறைந்துவிடும் என்று காயீன் மதியீனமாய் நினைக்கிறான்.

காயீனைப்போலவே இக்காலத்திலும் அநேகர், தங்களுடைய மனச்சாட்சியின் சத்தத்திற்கு செவிகொடுக்காமல், வேறு வேலைகளில் கவனம் செலுத்தி, தங்களுடைய மனதை திசை திருப்ப முயற்சிபண்ணுகிறார்கள். நம்முடைய பாவங்களை நாம் அங்கீகரித்து, நம்முடைய பாவத்திற்கு மனந்திரும்பி, அதை கர்த்தரிடத்தில் அறிக்கை செய்யவேண்டும். அதுவே நமக்கு நன்மையானது. நம்முடைய சுயமுயற்சிகளெல்லாமே வீணானவை.

இந்தப் பிரபஞ்சத்தில் துன்மார்க்கமான ஜனங்கள், கர்த்தருடைய ஜனங்களைவிட, உலகப்பிரகாரமான ஐசுவரியங்களை அதிகமாய்ப் பெற்றிருக்கிறார்கள். காயீன் ஒரு பட்டணத்தைக் கட்டி அதிலே வாசம்பண்ணுகிறான். காயீனும் அவனுடைய சந்ததியும் சபிக்கப்பட்டவர்களாக அந்தப் பட்டணத்தில் குடியிருக்கிறார்கள். ஆதாமும் அவருடைய ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியும் கூடாரங்களில் குடியிருக்கிறார்கள்.

காயீன் ஒரு பட்டணத்தைக் கட்டி, அந்தப் பட்டணத்துக்குத் தன் குமாரனாகிய ஏனோக்குடைய பேரை இடுகிறான். ஏனோக்குக்கு ஈராத் பிறக்கிறான்; ஈராத் மெகுயவேலைப் பெற்றான்; மெகுயவேல் மெத்தூசவேலைப் பெற்றான்; மெத்தூசவேல் லாமேக்கைப் பெற்றான் (ஆதி 4:17,18).

காயீனின் குடும்பம் கட்டியெழுப்பப்படுகிறது. காயீனுக்கு பின்வந்த ஏழுபின்சந்ததியாரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. காயீனின் சந்ததியார் திரளான எண்ணிக்கையிலிருந்தாலும், அவர்கள் எல்லோருமே கர்த்தரால் சபிக்கப்பட்டவர்கள். அவர்கள் காயீனின் பாவத்திற்கும், சாபத்திற்கும் பங்காளிகளாயிருக்கிறார்கள்.

லாமேக்கு
ஆதி 4:19-22

ஆதி 4:19. லாமேக்கு இரண்டு ஸ்திரீகளை விவாகம்பண்ணினான்; ஒருத்திக்கு ஆதாள் என்று பேர், மற்றொருத்திக்குச் சில்லாள் என்று பேர்.

ஆதி 4:20. ஆதாள் யாபாலைப் பெற்றாள்; அவன் கூடாரங்களில் வாசம்பண்ணுகிறவர்களுக்கும் மந்தை மேய்க்கிறவர்களுக்கும் தகப்பனானான்.

ஆதி 4:21. அவன் சகோதரனுடைய பேர் யூபால்; அவன் கின்னரக்காரர் நாகசுரக்காரர் யாவருக்கும் தகப்பனானான்.

ஆதி 4:22. சில்லாளும் தூபால் காயீனைப் பெற்றாள்; அவன் பித்தளை இரும்பு முதலியவற்றின் தொழிலாளர் யாவருக்கும் ஆசாரியனானான்; தூபால் காயீனுடைய சகோதரி நாமாள்.

ஆதாமிலிருந்து ஏழாவது சந்ததியில் வந்த லாமேக்கைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. லாமேக்கு காயீனின் வம்சத்தைச் சேர்ந்தவன். லாமேக்கு இரண்டு மனைவிகளை விவாகம்பண்ணி பாவம் செய்கிறான். அவனுக்கு இரண்டு மனைவிகள் மூலமாகவும் பிள்ளைகள் பிறக்கிறார்கள்.

லாமேக்கு அவனுடைய காலத்தில் பிரசித்திப்பெற்றவனாகயிருக்கிறான். அவன் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவனல்ல. ஆனாலும் அவனுடைய சந்ததியில் வருகிறவர்கள் முக்கியமான தொழில்களை செய்கிறார்கள்.

லாமேக்கு இரண்டு ஸ்திரீகளை விவாகம்பண்ணினான்; ஒருத்திக்கு ஆதாள் என்று பேர், மற்றொருத்திக்குச் சில்லாள் என்றுபேர். ஆதாள் யாபாலைப் பெற்றாள்; அவன் கூடாரங்களில் வாசம்பண்ணுகிறவர்களுக்கும் மந்தை மேய்க்கிறவர்களுக்கும் தகப்பனானான் (ஆதி 4:19,20).

லாமேக்கு காயீனின் வம்சத்தில் வந்தவன். ஆதாமிலிருந்து ஏழாவது சந்ததி. பல மனைவி விவாகத்தை இவனே முதலாவதாக ஆரம்பித்து வைக்கிறான். இவன் வேதத்தில் கூறப்பட்டிருக்கும் இரண்டாவது கொலையாளி (ஆதி 4:23).

கூடாரங்களுக்கு முன்பாகவே ஜனங்கள் வீடுகளைக் கட்டினார்கள். (ஆதி 4:17). மந்தை மேய்ப்பவர்கள் மேய்ச்சலுள்ள இடங்களைத் தேடி ஊர்ஊராகப் பிரயாணம் பண்ணுவார்கள். அங்கு அவர்கள் வாசம்பண்ணுவதற்கு ஏதுவாகக் கூடாரங்களைச் செய்தார்கள்.

யாபேலுடைய சகோதரனுடைய பேர் யூபால்; அவன் கின்னரக்காரர் நாகசுரக்காரர் யாவருக்கும் தகப்பனானான். சில்லாளும் தூபால் காயீனைப் பெற்றாள்; அவன் பித்தளை இரும்பு முதலியவற்றின் தொழிலாளர் யாவருக்கும் ஆசாரியனானான்; தூபால் காயீனுடைய சகோதரி நாமாள் (ஆதி 4:21,22).

"தூபால் காயீன்" என்னும் பெயருக்கு "காயீனிலிருந்து புறப்பட்டுப்போதல்" என்று பொருள். காயீன் ஜனங்கள் மத்தியில் இப்பொழுது நன்மதிப்பைப் பெற்றிருக்கிறான். அதனால் அவனுடைய சந்ததியில் வருகிறவர்கள் தங்களுடைய பெயர்களோடு காயீனின் பெயரையும் சேர்த்துக் கொள்கிறார்கள்.

பித்தளை இரும்பு ஆகியவற்றில் வேலை செய்கிறவர்கள் ஜனங்களுக்கு பிரயோஜனமான வேலைகளை செய்கிறார்கள். லாமேக்கின் சந்ததியில் வருகிறவர்கள், இந்த தொழில்களில் நிபுணர்களாயிருக்கிறார்கள். இதுபற்றி புதிய கண்டுபிடிப்புக்களை கண்டுபிடித்து, ஜனங்களுக்கு உதவி செய்கிறார்கள்.

ஏபால் மந்தை மேய்க்கிறவர்களுக்கு தகப்பனாயிருக்கிறான். அவனுடைய சகோதரன் யூபால் மிக பிரசித்திப்பெற்ற இசையமைப்பாளர். இவன் பலவிதமான இசைகளையும், வாத்தியக்கருவிகளையும் கண்டுபிடித்திருக்கிறான்.

யாபால் திரளான ஆடுமாடுகளை மேய்த்து, பெரிய மந்தைக்கு சொந்தக்காரனாயிருக்கிறான். அவனிடத்தில் மிகுதியான ஐசுவரியம் இருக்கிறது. யூபாலோ இசைக்கருவிகளை நேர்த்தியாக வாசித்து ஜனங்களை சந்தோஷப்படுத்துகிறான்.

தூபால் காயீன் என்பவன் பித்தளை இரும்பு முதலியவற்றின் தொழிலாளர் யாவருக்கும் ஆசாரியனாயிருக்கிறான். யுத்தம்பண்ணுவதற்கு தேவைப்படும் ஆயுதங்களை உற்பத்தி பண்ணுகிறான். மந்தைகளை மேய்ப்பதற்கு தேவையான கருவிகளையும் செய்கிறான்.

காயீனின் சந்ததியாரிடத்தில் கர்த்தரைப்பற்றிய அறிவு இல்லை. அவர்களிடத்தில் தேவனுடைய கிருபையும் தங்கியிருக்கவில்லை. ஆனாலும் அவர்கள் உலகப்பிரகாரமான வேலைகளை செய்வதில் வல்லவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் ஜனங்களுக்கு பிரயோஜனமான பெரிய வேலைகளை செய்கிறார்கள். இவர்கள் மூலமாய், இவர்கள் காலத்தில் ஜனங்கள் பிரயோஜனப்படுகிறார்கள்.

கர்த்தர் துன்மார்க்கருக்கும் பொதுவான வரங்களைக் கொடுத்து அவர்களை ஆசீர்வதிக்கிறார். ஆனாலும் அவர் தமக்காக தம்முடைய பிள்ளைகளை தெரிந்துகொள்ளும்போது, இந்த உலகத்தில் பலவீனமானவர்களையும், பயித்தியக்காரர்களையும் தெரிந்துகொண்டு, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார். கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு, அவருக்கு கீழ்ப்படிகிற பிள்ளைகளே தேவை.

லாமேக்கின் பாவம்
ஆதி 4:23,24

ஆதி 4:23. லாமேக்கு தன் மனைவிகளைப் பார்த்து: ஆதாளே, சில்லாளே, நான் சொல்வதைக் கேளுங்கள்; லாமேக்கின் மனைவிகளே, என் சத்தத்துக்கு செவி கொடுங்கள்; எனக்குக் காயமுண்டாக ஒரு மனுஷனைக் கொன்றேன்; எனக்குத் தழும்புண்டாக ஒரு வாலிபனைக் கொலை செய்தேன்;

ஆதி 4:24. காயீனுக்காக ஏழுபழி சுமருமானால், லமேக்குக்காக எழுபத்தேழு பழி சுமரும் என்றான்.

லாமேக்கு ஒரு துன்மார்க்கன். இவனுடைய வார்த்தைகளே, இவனுடைய தீயசுபாவத்தை வெளிப்படுத்துகிறது. இவனுடைய காலத்தில் இவனைப்பற்றி அதிகமாகப் பேசப்பட்டு வந்திருக்கிறது. காயீன் தன் சந்ததிக்கு சாபத்தைக் கொடுத்ததுபோல, லாமேக்கும் தன் சந்ததிக்கு சாபத்தைக் கொடுத்திருக்கிறான்.

லாமேக்கு தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "எனக்குக் காயமுண்டாக ஒரு மனுஷனைக் கொன்றேன்; எனக்குத் தழும்புண்டாக ஒரு வாலிபனைக் கொலை செய்தேன்" என்று சொல்லுகிறான். லாமேக்கு தனக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறவர்களை கொன்றுபோடும் தீயசுபாவமுள்ளவன். லாமேக்கின் மனைவிகளுக்கு அவனுடைய துன்மார்க்கத்தைப்பற்றி தெரிந்திருக்கிறது.

லாமேக்கு பிறருக்கு தீங்கு செய்தவன். மற்றவர்கள் தனக்கு தீங்கு செய்வார்கள் என்னும் பயம் அவனுடைய மனதிலிருக்கிறது. ஆகையினால் அவன் தன்னுடைய கொலைபாதகத்தைப்பற்றிச் சொல்லும்போது, "எனக்கு காயமுண்டாக" என்றும், "எனக்கு தழும்பு உண்டாக" என்றும் சொல்லுகிறான். பட்டயத்தை எடுக்கிறவனுக்கு பட்டயத்தினால் அழிவு வரும். தன்னை யாராவது கொன்றுபோடுவார்களோ என்னும் பயம் லாமேக்கின் மனதில் இருக்கிறது.

லாமேக்கு மற்றவர்களைக் கொலைசெய்தாலும், அவன் தன்னுடைய மனைவிகளுக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லுகிறான். "காயீனுக்காக ஏழுபழி சுமருமானால், லமேக்குக்காக எழுபத்தேழு பழி சுமரும்" என்று சொல்லி லாமேக்கு தன் மனைவிகளைத் தேற்றுகிறான்.

ஆதாமின் சந்ததி
ஆதி 4:25,26

ஆதி 4:25. பின்னும் ஆதாம் தன் மனைவியை அறிந்தான்; அவள் ஒரு குமாரனைப் பெற்று: காயீன் கொலைசெய்த ஆபேலுக்குப் பதிலாக, தேவன் எனக்கு வேறொரு புத்திரனைக் கொடுத்தார் என்று சொல்லி, அவனுக்குச் சேத் என்று பேரிட்டாள்.

ஆதி 4:26. சேத்துக்கும் ஒரு குமாரன் பிறந்தான்; அவனுக்கு ஏனோஸ் என்று பேரிட்டான்; அப்பொழுது மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்.

இந்த அதிகாரத்தில் இந்த வசனத்தில்தான் ஆதாமைப்பற்றி முதன்முறையாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆபேல் கொலைபண்ணப்பட்டது, காயீன் கர்த்தரைவிட்டு விலகிப்போனது ஆகிய சம்பவங்களெல்லாம் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் மிகுந்த துக்கத்தையும், மனவேதனையையும் கொடுத்திருக்கும்.

காயீன் கர்த்தரை விட்டு விலகிப்போனான். அவன் துன்மார்க்கமாய் ஜீவித்தான். அதற்கான தண்டனைகளை அவன் அனுபவிக்கிறான். நாம் கர்த்தரைவிட்டு விலகிப்போகும்போது, கர்த்தரும் நம்மைவிட்டு விலகிப்போய்விடுவார். காயீன் கர்த்தரை விட்டு விலகிப்போனது ஆதாமுக்கும் ஏவாளுக்கும் மிகுந்த வருத்தமாயும் வேதனையாயும் இருக்கிறது. இந்த சூழ்நிலையில் கர்த்தர் அவர்கள் இருவருக்கும், அவர்களுடைய மனவேதனையிலிருந்து விடுதலை கொடுக்கிறார்.

ஆதாமும் ஏவாளும், கர்த்தருடைய கிருபையினால், தங்கள் குடும்பத்தை மறுபடியும் கட்டியெழுப்புகிறார்கள். அவர்களுடைய குடும்பத்தில் நடைபெற்ற சோகசம்பவத்தினால், அவர்களுடைய முழுக்குடும்பமே முறிந்துபோயிற்று. அந்தக் குடும்பம் பலவீனமாயிற்று.

ஆதாமும் ஏவாளும் தங்களுடைய சந்ததியை பார்க்கிறார்கள். பின்னும் ஆதாம் தன் மனைவியை அறிகிறார்; அவள் ஒரு குமாரனைப் பெற்று: "காயீன் கொலைசெய்த ஆபேலுக்குப் பதிலாக, தேவன் எனக்கு வேறொரு புத்திரனைக் கொடுத்தார்" என்று சொல்லி, அவனுக்குச் சேத் என்று பேரிடுகிறாள்.

தேவனுடைய அன்பும் கிருபையும் அவருடைய பிள்ளைகளுக்கு கிடைக்கிறது. நாம் ஆறுதலை இழந்துபோகும்போது, தேவன் நமக்கு மற்றொரு ஆறுதலைக் கொடுக்கிறார். சில சமயங்களில் கர்த்தரே நம்முடைய ஆறுதல்களையும் ஆதரவுகளையும் ஒவ்வொன்றாக எடுத்துப்போடுகிறார். ஆனாலும் கர்த்தர் நம்மை ஒருபோதும் கைவிடுகிறவரல்ல. கர்த்தர் நமக்கு புதிய ஆறுதல்களையும், புதிய ஆதரவுகளையும் கொடுத்து நம்மை ஆசீர்வதிக்கிறார். பல சமயங்களில் பழைய ஆசீர்வாதங்களைவிட, புதிய ஆசீர்வாதங்கள் நமக்கு அதிக பிரயோஜனமாயிருக்கும்.

பாவிகள் கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாகத் தீங்கு செய்கிறார்கள். அவர்கள் உன்னதமானவரின் ஊழியக்காரர்களை மொத்தமாக அழித்துப்போடலாம் என்று கற்பனைபண்ணுகிறார்கள். துன்மார்க்கரின் யோசனை நிறைவேறாது. அவர்கள் ஏமாந்துபோவார்கள். கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாக தீங்கு செய்கிறவர்கள், கர்த்தருக்கு விரோதமாக தீங்கு செய்ய முயற்சி செய்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவது இயலாத காரியம்.

கிறிஸ்துவானவர் தம்முடைய பரிசுத்தமான வித்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். கர்த்தரால் இந்தக் கல்லுகளிலிருந்தும் தமக்கு பிள்ளைகளை உண்டுபண்ண முடியும். இரத்தசாட்சியாக மரித்துப்போனவர்களின் இரத்தம் சபையின் பரிசுத்தமான வித்தை உற்பத்திபண்ணும்.

காயீன் ஆபேலைக் கொலைசெய்தான். ஆபேல் இரத்த சாட்சியாக மரித்தான். தேவனோ ஆபேலைக்கு பதிலாக, ஆதாமுக்கும் ஏவாளுக்கும் வேறொரு புத்திரனைக் கொடுக்கிறார். ஏவாள் அந்தப் புத்திரனுக்கு சேத் என்று பேரிடுகிறாள். சேத் என்னும் பெயருக்கு "ஸ்தாபிக்கப்படுவது" என்றும், "நிலைத்திருப்பது" என்றும் பொருள். சேத்தின் சந்ததியிலிருந்து மனுக்குலம் முடிவு காலம் வரையிலும் தொடர்ந்து உற்பத்தியாகும். சேத்தின் சந்ததியில் மேசியா வருவார்.

காயீன் கர்த்தருடைய சந்நிதியை விட்டு விலகிப்போனான். அவன் கர்த்தரை விட்டு பின்வாங்கிப்போனவர்களுக்கு தலைவனாயிருக்கிறான். அவனும் அவனுடைய சந்ததியாரும் இந்தப் பூமியில் நிலையற்று அலைகிறவர்களாயிருப்பார்கள்.

சேத்தின் சந்ததியிலிருந்து கர்த்தருடைய சபை ஸ்தாபிக்கப்படும். கர்த்தருடைய சபை நிலைத்திருக்கும். இயேசுகிறிஸ்துவிலும் அவருடைய சபையிலும் விசுவாசிகளாகிய நமக்கு ஸ்திரமான ஆறுதல் கிடைக்கும். ஆதாமும் ஏவாளும் தங்களுடைய வித்தின் வித்தைப் பார்க்கிறார்கள். "சேத்திற்கும் ஒரு குமாரன் பிறந்தான்" அவனுக்கு ஏனோஸ் என்று சேத் பேரிட்டான்.

ஏனோசின் குடும்பத்தில் கர்த்தரைத் துதிக்கும் ஜனம் எழும்பி வருகிறார்கள். மனுஷர் கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ள ஆரம்பிக்கிறார்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் தங்களுடைய பிள்ளைகளையும், பிள்ளைகளின் பிள்ளைகளையும் காண்பார்கள். ஒருவேளை அவர்கள் தங்கள் சந்ததியைப் பார்க்காவிட்டாலும், அவர்கள் இஸ்ரவேலின் சமாதானத்தைக் காண்பார்கள். கர்த்தரிடத்தில் வந்து சத்தியத்தில் நடக்கிறவர்களே இஸ்ரவேல் புத்திரர்.

கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்கிறவர்கள், கர்த்தருக்கு ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் வீடுகளிலும், வெளியே பொது இடங்களிலும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்வார்கள். கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்கிறவர்களுக்கும், அவருடைய நாமத்தை தொழுது கொள்ளாதவர்களுக்கும் வித்தியாசமுண்டு. ஏனோஸ் பிறந்த காலத்தில், கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ள ஆரம்பித்த மனுஷரும் இருந்தார்கள். அக்காலத்தில் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளாத மனுஷரும் இருந்தார்கள்.

பூர்வகாலத்தில் இரண்டு வம்சங்கள் இருந்ததாக வேதபண்டிதர்கள் பொதுவாகக் கூறுகிறார்கள். ஒன்று சேத்தின் மூலமாக வரும் பக்தியுள்ள வம்சம். மற்றொன்று காயீன் மூலமாக வரும் பக்தியில்லாத வம்சம்.

ஜலப்பிரளயத்திற்கு முன்பிருந்த காலத்தில் ஆதாமின் குமாரர்களும், குமாரத்திகளும் தங்களுடைய இனத்தை விருத்தி செய்து வம்சத்தை உருவாக்கினார்கள். இராட்சதர்களும் இருந்தார்கள். இவர்கள் தேவகுமாரர்களுக்கும், மனுஷருடைய குமாரத்திகளுக்கும் பிறந்தவர்கள்.

ஜலப்பிரளயத்திற்கு முன்பாக இலட்சணக்கான குடும்பங்கள் இருந்திருக்க வேண்டும். இவர்கள் அனைவரையும் இரண்டு குடும்பங்களின் அட்டவணையில் கொண்டு வருவது இயலாத காரியம். காயீனின் வம்சம் ஏழாவது சந்ததியாகக் கூறப்பட்டிருக்கிறது. *(ஆதி 4:16-24).* சேத்தின் வம்சம் மட்டுமே முழுவதுமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆதாமிலிருந்து கிறிஸ்து வரையிலும் வரும் மேசியாவின் வம்சத்தை விளக்குவதே இதன் நோக்கம். *(ஆதி 4:25-5:32; லூக்கா 3:23-38).*

சேத்தின் வம்சத்தார் மற்ற வம்சங்களைப் போல துன்மார்க்கர்களாக இருந்தார்கள். இக்காலத்தில் இருந்தவர்களில் ஆபேல், ஏனோக்கு, நோவா ஆகியோர் மட்டுமே பக்தியுள்ளவர்கள். சேத்தின் வம்சத்தில் அவனுடைய முதற்பிறப்பு மூலமாக தேவதூஷணம் ஆரம்பமாகிறது. "அப்பொழுது மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ள ஆரம்பித்தார்கள்" (ஆதி 4:26). இந்த வசனத்திற்கு "மனுஷர் தங்களுடைய தெய்வங்களுக்கு யெகோவாவின் பெயரைக் கொடுக்கிறார்கள்" என்று வேதபண்டிதர்கள் பொருள் கூறுகிறார்கள்.

மெய் தேவனை ஆராதிக்கும் வழக்கம் ஏனோஸ் காலத்தில் ஆரம்பமாயிற்று என்றால், ஆதாம், ஆபேல், சேத் ஆகியோர் எந்தத் தெய்வத்தை ஆராதித்தார்கள் என்பதை விளக்குவது கடினம். (ஆதி 3:21; ஆதி 4:1-15; எபி 11:4). ஏனோக்கின் காலத்தில் சேத்தின் வம்சம், துன்மார்க்கமாகவே இருந்தது. ஆகையினால் அவர்களுடைய அழிவு முன்னறிவிக்கப்பட்டது (யூதா 1:14,15).

ஏனோக்கு ஜலப்பிரளயத்தை முன்னறிவிக்கிறான். தன்னுடைய மகனுக்கு மெத்தூசலா என்று பெயரிடுகிறான். இதற்கு "அவன் மரிக்கிற போது (ஜலப்பிரளயம்) வருவதாக" என்று பொருள். பூமியில் நோவாவை மட்டுமே கர்த்தர் தமக்கு முன்பாக நீதிமானாகக் காண்கிறார் (ஆதி 7:1).

5 அதிகாரம்

ஆதாமின் வம்சவரலாற்றைப்பற்றியும், அவருடைய சந்ததியாரின் வம்சவரலாற்றைப்பற்றியும் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதாம் (ஆதி 5:1-5). சேத் (ஆதி 5:6-8). ஏனோஸ் (ஆதி 5:9-11). கேனான் (ஆதி 5:12-14). மகலாலெயேல் (ஆதி 5:15-17). யாரேத் (ஆதி 5:18-20). ஏனோக்கு (ஆதி 5:21-24). மெத்தூசலா (ஆதி 5:25-27). லாமேக்கும் அவனுடைய குமாரன் நோவாவும் (ஆதி 5:28-32).

ஆதாமின் வம்சவரலாறு ஆதி 5:1-5

ஆதி 5:1. ஆதாமின் வம்சவரலாறு: தேவன் மனுஷனைச் சிருஷ்டித்த நாளிலே அவனைத் தேவசாயலாக உண்டாக்கினார்.

ஆதி 5:2. அவர்களை ஆணும் பெண்ணுமாகச் சிருஷ்டித்து, அவர்களை ஆசீர்வதித்து, அவர்களைச் சிருஷ்டித்த நாளிலே அவர்களுக்கு மனுஷர் என்று பேரிட்டார்.

ஆதி 5:3. ஆதாம் நூற்று முப்பது வயதானபோது, தன் சாயலாகத் தன் ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சேத் என்று பேரிட்டான்.

ஆதி 5:4. ஆதாம் சேத்தைப் பெற்றபின், எண்ணூறு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஆதி 5:5. ஆதாம் உயிரோடிருந்த நாளெல்லாம் தொளாயிரத்து முப்பது வருஷம்; அவன் மரித்தான்.

இந்த அதிகாரத்தின் முதலாம் வசனத்தில், "ஆதாமின் வம்சவரலாறு" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவே இந்த அதிகாரத்திற்கு தலைப்பு ஆகும். வம்சவரலாறு ஆதாமிலிருந்து ஆரம்பமாகிறது.

முதல் மனுஷனாகிய ஆதாமின் வம்ச வரலாறு இந்த அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவருடைய வம்சத்தின் மூலமாக இரண்டாம் ஆதாமாகிய ஸ்திரீயின் வித்தானவர் வரவேண்டும். ஆதி 2:4 ஆவது வசனம் வானமும், பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட வரலாற்றைக் கூறுகிறது. மத் 1:1-17, லூக்கா 3:23-38 ஆகிய வசனங்கள் இரண்டாம் ஆதாமாகிய இயேசுகிறிஸ்துவின் வம்சவரலாற்றைக் கூறுகிறது. ஆதாமின் வரலாற்றில் அவர் இளவயதிலேயே பிள்ளைகளுக்குத் தகப்பனாகிறார். (ஆதி 4:1-6:1) ஆதாமிற்கு அடுத்தபடியாக மகலாலெயேல் 65 ஆவது வயதில் தகப்பனாவதை இந்த அதிகாரம் குறிப்பிடுகிறது. (ஆதி 5:15,21, ஆதி 46:21)

ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட சம்பவத்தைப்பற்றி ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. தேவனாகிய கர்த்தர் தம்முடைய சாயலாகவும், தம்முடைய ரூபத்தின்படியேயும் மனுஷனை உருவாக்கினார். அந்த சம்பவம் இங்கு மறுபடியும் சுருக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது.

தேவன் மனுஷனை சிருஷ்டித்தார். மனுஷன் தானாக உண்டாகவில்லை. அவன் தன்னைத்தானே சிருஷ்டித்துக்கொள்ளவுமில்லை. தேவன் மனுஷனை சிருஷ்டித்ததினால், மனுஷன் தனக்கு அதிகாரியோ அல்லது ஆண்டவனோ அல்ல. தேவனே மனுஷனை சிருஷ்டித்தார். ஆகையினால் தேவனே மனுஷனுக்கு ஆண்டவராயிருக்கிறார்.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை சிருஷ்டித்து அவனை ஆளுகை செய்கிறார். அவனுடைய ஒவ்வொரு அசைவுகளையும் இயக்குகிறார். தேவன் மனுஷனை ஒரு குறிப்பிட்ட நாளிலே சிருஷ்டித்தார். மனுஷன் நித்தியகாலமாக இந்தப் பூமியிலே இருக்கவில்லை. தேவன் மனுஷனை சிருஷ்டித்த நாளிலிருந்துதான், மனுஷன் இந்தப் பூமியிலிருக்கிறான். அதற்கு முன்பு மனுஷன் இந்தப் பூமியில் இல்லை.

தேவன் மனுஷனை தம்முடைய சாயலாக உண்டாக்கினார். தேவன் நீதியும் பரிசுத்தமுள்ளவர். மனுஷனும் தேவனைப்போல நீதியும் பரிசுத்தமும் உள்ளவனாயிருக்கவேண்டும். தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்டிருப்பது மனுஷனுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய மேன்மை.

தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார். அவர்கள் ஒருவருக்கொருவர் ஆதாரவாயும், துணையாயும் இருக்கவேண்டும் என்பதற்காகவும், தங்களுடைய சந்ததியை பலுகிப்பெருகப்பண்ணவேண்டும் என்பதற்காகவும் தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார்.

தேவன் அவர்களை ஆசீர்வதித்து, அவர்களுக்கு மனுஷர் என்று பேரிட்டார். ஆதாம் நூற்று முப்பது வயதானபோது, தன் சாயலாகத் தன் ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சேத் என்று பேரிட்டார் (ஆதி 5:3). சேத் தேவசாயலாகவும், தேவனுடைய ரூபத்தின்படியேயும் உண்டாக்கப்படவில்லை. ஆதாம் சேத்தை தன் சாயலாகவும், தன் ரூபத்தின்படியேயும் பெற்றார்.

ஆதாம் தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்டவர். ஆனால் அவர் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்து, தன்னிடத்தில் இருந்த மகிமையை இழந்துவிட்டார். ஆதாமிடத்தில் காணப்பட்ட தேவசாயல் மங்கிப்போயிற்று. பாவம் செய்வதற்கு முன்பு பரிசுத்தமாயிருந்த ஆதாம் இப்போது பாவம் செய்து அசுத்தமாயிருக்கிறார். ஆதாம் சேத்தைப் பெற்றார். ஆனால் சேத் தேவசாயலாகயில்லை. சேத் ஆதாமின் சாயலாகவும், ஆதாமின் ரூபத்தின்படியேயும் இருக்கிறான்.

ஆதாம் தேவனுடைய சாயலாகவும், தேவனுடைய ரூபத்தின் பிரகாரமாகவும் சிருஷ்டிக்கப்பட்டார். தேவனுடைய சாயலும், ரூபமும் பூரணமானது. ஆதாமின் சாயல் குறைவுடையது. அது மங்கியிருக்கிறது. பாவமும், மரணமும் ஆதாமிற்குள் கிரியை செய்து அவருடைய சாயலை அழித்துப்போடுகிறது. (யோபு 14:4; யோபு 25:4; சங் 14:3; சங் 51:5; ரோமர் 5:12-21; 1கொரி 15:39; எபே 2:2-3).

ஆதாம் சேத்தைப் பெற்றபின், எண்ணூறு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றார். ஆதாம் உயிரோடிருந்த நாளெல்லாம் தொளாயிரத்து முப்பது வருஷம்; அவர் மரித்தார்.

சேத்திற்குப் பிறகு ஆதாமிற்கு குமாரர்களும், குமாரத்திகளும் பிறந்தார்கள். அதுபோல காயீன், ஆபேல் ஆகியோருக்கு முன்பாகவே குமாரர்களும், குமாரத்திகளும் பிறந்திருக்க வேண்டும். யூதருடைய பரம்பரை வரலாற்றின் பிரகாரம் ஆதாமிற்கு 30 குமாரர்களும், 30 குமாரத்திகளும் இருந்தார்கள். இதே பரம்பரை வரலாற்றில் வேறுசிலர் ஆதாமிற்கு 300 குமாரர்களும், 300 குமாரத்திகளும் இருந்ததாகக் கூறுகிறார்கள்.

ஆதி 4:16-24 ஆகிய வசனங்களில் காயீனுடைய சந்ததியாரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் எல்லா நிகழ்ச்சிகளிலும் ஆதாமும் ஜீவனோடிருக்கிறார். சேத்தின் காலத்திலும், ஏனோக்கின் 308 வருஷம் வரையிலும் மெத்தூசலாவின் 243 ஆவது வருஷம் வரையிலும் ஆதாம் உயிரோடு இருந்திருக்கிறார். ஆதாமும், மெத்தூசலாவும் ஜலப்பிரளயத்திற்கு முந்திய காலத்தில் ஒன்றாக உயிரோடிருந்தவர்கள் (ஆதி 5:5,27).

ஜலப்பிரளத்திற்கு முந்தின முற்பிதாக்கள் ஆதி 5:6-20

ஆதி 5:6. சேத் நூற்றைந்து வயதானபோது, ஏனோசைப் பெற்றான்.

ஆதி 5:7. சேத் ஏனோசைப் பெற்றபின், எண்ணூற்றேழு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஆதி 5:8. சேத்துடைய நாளெல்லாம் தொளாயிரத்துப் பன்னிரண்டு வருஷம்; அவன் மரித்தான்.

ஆதி 5:9. ஏனோஸ் தொண்ணூறு வயதானபோது, கேனானைப் பெற்றான்.

ஆதி 5:10. ஏனோஸ் கேனானைப் பெற்றபின், எண்ணூற்றுப் பதினைந்து வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான்.

ஆதி 5:11. ஏனோசுடைய நாளெல்லாரும் தொளாயிரத்து ஐந்து வருஷம் அவன் மரித்தான்.

ஆதி 5:12. கேனான் எழுபது வயதானபோது, மகலாலெயேலைப் பெற்றான்.

ஆதி 5:13. கேனான் மகலாலெயேலைப் பெற்றபின், எண்ணூற்று நாற்பது வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஆதி 5:14. கேனானுடைய நாளெல்லாம் தொளாயிரத்துப் பத்து வருஷம்; அவன் மரித்தான்.

ஆதி 5:15. மகலாலெயேல் அறுபத்தைந்து வயதானபோது, யாரேதைப் பெற்றான்.

ஆதி 5:16. மகலாலெயேல் யாரேதைப் பெற்றபின், எண்ணூற்று முப்பது வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஆதி 5:17. மகலாலெயேலுடைய நாளெல்லாம் எண்ணூற்றுத் தொண்ணூற்று ஐந்து வருஷம்; அவன் மரித்தான்.

ஆதி 5:18. யாரேத் நூற்று அறுபத்திரண்டு வயதானபோது, ஏனோக்கைப் பெற்றான்.

ஆதி 5:19. யாரேத் ஏனோக்கைப் பெற்றபின், எண்ணூறு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஆதி 5:20. யாரேதுடைய நாளெல்லாம் தொளாயிரத்து அறுபத்திரண்டு வருஷம்; அவன் மரித்தான்.

இந்தப் பூமியில் ஜலப்பிரளயம் உண்டாவதற்கு முன்பு ஐந்து முற்பிதாக்கள் இருந்தார்கள். அவர்களைப்பற்றிய விவரம் இந்தவசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களின் விவரம் வருமாறு : 1. சேத் 2. ஏனோஸ் 3. கேனான் 4. மகலாலெயேல் 5. யாரேத்.

இந்த முற்பிதாக்களைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. ஆனாலும் அவர்கள், அவர்களுடைய காலங்களில் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்கள் கர்த்தரைப்பற்றிய ஞானத்திலும் அறிவிலும் சிறந்து விளங்கினார்கள்.

முற்பிதாக்களைப்பற்றிச் சொல்லப்படும்போது, ஏனோக்கைத் தவிர, மற்ற எல்லோரும் மரித்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் எத்தனை வருஷம் உயிரோடிருந்தார்கள் என்னும் விவரமும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லோரும் உயிரோடிருந்து, தங்களுடைய ஜீவியகாலம் முடிந்தபின்பு மரித்தார்கள்.

ஆதாமுக்கும், அவருடைய சந்ததியில் வருகிற எல்லோருக்கும் மரணம் வருகிறது. அவர்கள் சரீரத்தில் எவ்வளவுதான் ஆரோக்கியமாகயிருந்தாலும், அவர்கள் இந்தப் பூமியில் எத்தனை வருஷம் உயிரோடிருந்தாலும், அவர்கள் மரிக்கவேண்டிய நாள் வரும்போது, அவர்கள் மரித்துப்போகிறார்கள். ஒரு தரம் பிறப்பதும், ஒரு தரம் மரிப்பதும் எல்லா மனுஷருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

மனுஷன் ஞானியாகயிருக்கலாம். அவன் அரசியல் தலைவனாகயிருக்கலாம். அவன் விவேகியாகவும் ஐசுவரியவானாகவும் இருக்கலாம். அவர்களும் மரணத்திற்கு தப்பிக்க முடியாது. ஒருவன் சமுதாயத்தில் மிகவும் முக்கியமானவனாகயிருக்கலாம். அவன் அதிககாலம் உயிரோடிருக்கவேண்டுமென்று ஜனங்கள் விரும்பலாம். மனுஷன் எவ்வளவுதான் பிரயோஜனமுள்ளவனாயிருந்தாலும், அவனுக்கும் மரணம்.

பூர்வகாலத்திலே முற்பிதாக்கள் அதிக வருஷங்களுக்கு உயிரோடிருந்தார்கள். ஆதாம் உயிரோடிருந்தது தொளாயிரத்தி முப்பது வருஷம். சேத் உயிரோடிருந்தது தொளாயிரத்து பன்னிரண்டு வருஷம். ஏனோஸ் உயிரோடிருந்தது தொளாயிரத்து ஐந்து வருஷம். கேனான் உயிரோடிருந்தது தொளாயிரத்து பத்து வருஷம். மகலாலெயேல் உயிரோடிருந்தது எண்ணூற்று தொண்ணூற்றைந்து வரும். யாரேத் உயிரோடிருந்தது தொளாயிரத்து அறுபத்திரண்டு வருஷம்.

பூர்வகாலத்து முற்பிதாக்கள் இதுபோல அதிக வருஷங்களுக்கு உயிரோடிருந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்களாயிருந்தார்கள். கர்த்தர் இவர்களுடைய ஆயுசுகாலத்தை கூட்டிக்கொடுத்து, இவர்களை அதிகமாய் ஆசீர்வதித்தார்.

சேத்தின் வம்ச வரலாற்றிலிருந்து, முதலாவது பிறந்த ஆண் மகனைப் பற்றியே வம்ச வரலாற்றில் முதலாவதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆண் பிள்ளைகளுக்கு முன்பாக பெண்பிள்ளைகள் பிறந்திருந்தாலும் ஆண் பிள்ளைகளின் பெயரே முதலாவதாகக் குறிப்பிடப்படுவது யூதவம்ச வரலாற்றின் வழக்கமாகும்.

ஆதாம், நோவா ஆகியோருக்கு இடையில் வரும் பெயர்களில் யாரேத்தின் பெயர் இரண்டாவது பாதியில் முதலாவதாக வருகிறது. யாரேத்தின் குமாரனாகிய ஏனோக்கின் நாளில் துன்மார்க்கர் மீதும், தேவபக்தியற்ற சந்ததியார் மீதும் ஜலப்பிரளயம் நியாயத்தீர்ப்பாக வரும் என்று கர்த்தர் முன்னறிவித்தார்.

யாரேத் என்னும் பெயர் தீர்க்கதரிசனப் பொருளுடையது. கீழே தள்ளுதல், தாழ்த்துதல் என்பது இதன் பொருள். ஜலப்பிரளயத்தினால் சந்ததியார் கீழே தள்ளப்படுவார்கள் அல்லது அழிக்கப்படுவார்கள் என்பது இதன் பொருளாகும்.

ஏனோக்கு
ஆதி 5:21-24

ஆதி 5:21. ஏனோக்கு அறுபத்தைந்து வயதானபோது, மெத்தூசலாவைப் பெற்றான்.

ஆதி 5:22. ஏனோக்கு மெத்தூசலாவைப் பெற்றபின், முந்நூறு வருஷம் தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஆதி 5:23. ஏனோக்குடைய நாளெல்லாம் முந்நூற்று அறுபத்தைந்து வருஷம்.

ஆதி 5:24. ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில், காணப்படாமற் போனான்; தேவன் அவனை எடுத்துக் கொண்டார்.

ஆதாமின் வம்சவரலாற்றில், ஐந்து முற்பிதாக்களைப்பற்றி இதுவரையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களைப்பற்றி சொல்லுவதற்கு விசேஷமாக ஒன்றுமில்லை. அவர்களுடைய பெயர்களும், அவர்கள் இந்தப் பூமியில் உயிரோடிருந்த வருஷங்களும் வேறுபட்டிருக்கிறது. ஆதாமின் சந்ததியில் வந்த ஏனோக்கு விசேஷமானவர். இவர் ஆதாமிலிருந்து ஏழாவது சந்ததியைச் சேர்ந்தவர்.

ஆதாமின் சந்ததியில் வந்த ஏனோக்கைப்பற்றி இந்த வசனப்பகுதியில் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு ஏற்கெனவே ஒரு ஏனோக்கைப்பற்றி ஆதி 4:17 -ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஏனோக்கின் பெயரால் ஒரு பட்டணம் கட்டப்பட்டது. இங்கு சொல்லப்பட்டிருக்கிற ஏனோக்கு அவரல்ல. இவர் யாரேத்தின் குமாரன்.

சேத்தின் வம்சவரலாற்றில் நோவாவைப்போல ஏனோக்கும் தேவபக்தியுள்ளவராக இருந்தார். (ஆதி 6:9; ஆதி 7:1). இவர் ஒரு தீர்க்கதரிசி. (யூதா 1:14) விசுவாசத்தினால் எடுத்துக் கொள்ளப்பட்டார். (ரோமர் 10:17; எபி 11:5). ஏனோக்கின் அனுபவம் எலியாவின் அனுபவம்போல் உள்ளது. (2இராஜா 2). இருவருமே மரணத்தைக் காணாமல், தங்கள் சரீரங்களில் வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்.

இவ்விருவரும் நியாயத்தீர்ப்புக்களைக் குறித்து தீர்க்கதரிசனம் கூறினார்கள். விக்கிரகாராதனைக்கும், தேவ தூஷணத்திற்கும் எதிர்த்து நின்றார்கள். தாங்கள் எடுத்துக் கொள்ளப்படும் காலமும், நோக்கமும் இவ்விருவருக்கும் தெரிந்திருந்தது (2இராஜா 2; எபி 11:5).

இவர்கள் இருவரும் சக 4:11-14; மல் 4:4-6; வெளி 11:3-11 ஆகிய வசனங்களை நிறைவேற்றுகிறார்கள். பரலோகம் ஒரு பிரத்தியட்சமான இடம். அதில் புசிப்பதற்குப் போஜனமும், வசிப்பதற்கு பட்டணங்களும் இருக்கும். (யாத் 24:11; சங் 78:25; லூக்கா 22:16,18,30; எபி 11:10,13-16; எபி 13:14; யோவான் 6:31; யோவான்14:1-3; வெளி 2:7,17; வெளி 4:4-6; வெளி 5:3-13; வெளி 7:17; வெளி 12:12; வெளி 13:6; வெளி 18:20; வெளி 19:1-10; வெளி 22:2).

பவுலும், யோவானும் வானத்திற்குப் போனார்கள் (2கொரி 12:1-7; வெளி 4:1). உயிர்த்தெழுந்த எல்லாப் பரிசுத்தவான்களும் பரலோகத்திற்குச் சென்று பின்பு இயேசு கிறிஸ்துவோடு பூமிக்கு வந்து அவருடைய ராஜ்ஜியத்தில் கிறிஸ்துவோடு ஆயிரம் வருஷம் அரசாட்சி செய்வார்கள். (1தெச 4:14-17; 1கொரி 15:51-58; வெளி 7:9-17; வெளி 19:1-21).

ஏனோக்கு மெத்தூசலாவைப் பெற்றபின், முன்னூறு வருஷம் தேவனோடே சஞ்சரித்தார் (ஆதி 5:22). ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்தார் (ஆதி 5:24) என்று இரண்டு தடவை ஏனோக்கின் பக்தியுள்ள ஜீவியத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் விசேஷமாக சொல்லப்பட்டிருக்கிறது.

மெத்தூசலாவைப் பெறுவதற்கு முன்பு ஏனோக்கு தேவனோடு சஞ்சரிக்கவில்லை. மெத்தூசலாவைப் பெற்றபின்பு, ஏனோக்கின் ஜீவியத்தில் ஏதோ ஒரு காரியம் சம்பவித்திருக்கிறது. ஏனோக்கு தேவனிடத்திலிருந்து ஒரு வெளிப்பாட்டைப் பெற்றிருக்கிறார். அதனால்தான் தன் மகனுக்கு மெத்தூசலா என்று பெயரிடுகிறார். இந்தப் பெயருக்கு "அவன் மரிக்கும்போது அது (ஜலப்பிரளயம்) வருவதாக" என்று பொருள். துன்மார்க்கரை அழிப்பதற்கு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்தும், ஏனோக்கு முன்னறிவித்தார் (யூதா 1:14).

பூமியில் ஏனோக்கு வாழ்ந்த காலம் 365 வருஷமாகும். பரலோகத்திலும் ஏனோக்கு ஜீவித்துக் கொண்டிருக்கிறார். வெளி 11 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் இரண்டு சாட்சிகளில் ஒருவராக ஏனோக்கு திரும்பி வந்து தன்னுடைய ஜீவிய காலம் முடிந்து மரித்துப் போவார் (வெளி 11:7).

எல்லோரும் மரிக்க வேண்டுமென்பது மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. (எபி 9:27). ஆதி 5 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் வம்ச வரலாற்றில் "அவன் மரித்தான்" என்று எல்லோருக்கும் கூறப்பட்டிருக்கிறது. (ஆதி 5:5,8,11,14,17,20,27,31) ஆனால் ஏனோக்கு மட்டும் "காணப்படாமற் போனார்; தேவன் அவரை எடுத்துக்கொண்டார்" என்று அவரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது (ஆதி 5:24).

ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்தார் என்னும் வாக்கியத்தில், அவர் தேவன்மீது வைத்திருந்த பக்தியும், அவருடைய ஜீவியத்தின் பரிசுத்தமும் வெளிப்படுகிறது. தேவனோடு சஞ்சரிப்பது பக்தியுள்ள ஜீவியம். தேவபக்தியில்லாதவர்களால் தேவனோடே சஞ்சரிக்க முடியாது. இந்த உலகத்தில் தேவன் இல்லை என்று நாஸ்திகர்கள் சொல்லுகிறார்கள். அப்பேற்பட்டவர்கள் தேவனோடு சஞ்சரிப்பதற்கு வாய்ப்பில்லை.

தேவனோடு சஞ்சரிக்கிறவர்கள் அவரிடத்தில் பக்தியுள்ளவர்களாயிருப்பார்கள். அவர்கள் பயபக்தியோடு கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவார்கள். அவர்கள் தேவனோடு ஒப்புரவாகியிருப்பார்கள். தேவனோடு ஐக்கியமில்லாமல், அவரோடு சஞ்சரிப்பது இயலாத காரியம்.

"இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்துபோவார்களோ?" (ஆமோ 3:3).

தேவனோடு சஞ்சரிப்பது என்னும் வாக்கியத்திற்கு, தேவனை நமக்கு முன்பாக எப்போதும் நிறுத்தி வைத்திருப்பது என்று பொருள். தேவன் நம்மை எப்போதும் கண்ணோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்னும் உணர்வோடு, தேவனோடு கூட நடந்துபோகிறவர்கள், தேவனோடு சஞ்சரிக்கிறவர்களாயிருப்பார்கள்.

தேவனோடு சஞ்சரிக்கிறவர்கள் அவரோடு ஐக்கியமாயிருப்பார்கள். அவர்கள் தேவனுடைய நியமங்களுக்கு கீழ்ப்படிவார்கள். அவர்கள் தேவனுடைய தெய்வீக பராமரிப்புக்களைப் பெற்றுக்கொண்டு, தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து ஜீவிப்பார்கள்.

நாம் தேவனோடு சஞ்சரிக்கும்போது, தேவனுடைய வார்த்தை நம்மை ஆதரவாயிருக்கும். நம்முடைய பேச்சுக்களிலும், கிரியைகளிலும் தேவனை மகிமைப்படுத்தவேண்டும் என்பதே நம்முடைய பிரதான நோக்கமாயிருக்கும். தேவனுடைய சித்தம் நம்முடைய சித்தமாயிருக்கும். தேவனுடைய திட்டம் நம்முடைய திட்டமாகும். நாம் தேவனோடு சேர்ந்து அவருடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பயபக்தியோடு ஊழியம் செய்வோம்.

தேவனோடு சஞ்சரிக்கிறவர்கள் இந்த உலகத்திற்கும், இந்த உலகத்தின் காரியங்களுக்கும் மரித்தவர்களாயிருப்பார்கள். தேவனோடு சஞ்சரிக்கிறவர்கள் தேவனுக்கு பின்னால் நடந்துபோகிறவர்கள் மாத்திரமல்ல, அவர்கள் தேவனோடு கூட நடந்துபோகிறவர்கள். நாம் பரலோகத்திலிருக்கும்போது தேவனோடு எப்படி சஞ்சரிப்போமோ அப்படியே பூமியிலேயேயும் சஞ்சரிப்பதுதான் தேவனோடு சஞ்சரிப்பது.

தேவனோடு சஞ்சரிக்கிறவர்கள் தேவனுடைய வார்த்தைகளையும், அவரைப்பற்றிய சத்தியங்களையும் மற்றவர்களுக்கு எடுத்து சொல்லுவார்கள். அவர்கள் ஆசாரிய ஊழியம் செய்வார்கள். ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள் தேவனுக்கு முன்பாக நடந்துபோகிறார்கள்.

"ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: உன் வீட்டாரும் உன் பிதாவின் வீட்டாரும் என்றைக்கும் என் சந்நிதியில் நடந்துகொள்வார்கள் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லியிருந்தும், இனி அது எனக்குத் தூரமாயிருப்பதாக; என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (1சாமு 2:30).

"நான் என் உள்ளத்துக்கும் என் சித்தத்துக்கும் ஏற்றபடி செய்யத்தக்க உண்மையான ஒரு ஆசாரியனை எழும்பப்பண்ணி, அவனுக்கு நிலையான வீட்டைக் கட்டுவேன்; அவன் என்னால் அபிஷேகம்பண்ணப்பட்டவனுக்கு முன்பாகச் சகல நாளும் நடந்துகொள்ளுவான்" (1சாமு 2:35).

"சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: நீ என் வழிகளில் நடந்து என் காவலைக் காத்தால், நீ என் ஆலயத்தில் நியாயம்விசாரிப்பாய்; என் பிராகாரங்களையும் காவல் காப்பாய்; இங்கே நிற்கிறவர்களுக்குள்ளே உலாவுகிறதற்கு இடம் நான் உனக்குக் கட்டளையிடுவேன்" (சக 3:7).

ஏனோக்கு உன்னதமான தேவனுக்கு ஆசாரியராயிருந்தார். அவர் தேவனோடு சஞ்சரித்தார். கர்த்தருக்கு பிரியமானவர்கள் அவரோடு கூட சஞ்சரிப்பார்கள். தேவனோடு சஞ்சரிக்கவேண்டும் என்பதே ஏனோக்கின் விருப்பம். அதுவே அவருடைய ஜீவியத்தின் இலக்கு. தேவனோடு சஞ்சரிப்பது ஏனோக்குக்கு சந்தோஷமாயிருக்கிறது. அது அவருடைய ஜீவனுக்கு ஆதரவாயிருக்கிறது.

ஏனோக்கு தன்னுடைய காலத்தில் ஜீவித்த மற்ற மனுஷர்களைப்போல சாதாரண மனுஷரல்ல. ஏனோக்கு மிகவும் விசேஷித்தவர். மற்ற முற்பிதாக்கள் எல்லோரும் தங்கள் ஜீவியகாலம் முடிந்தபோது மரித்தார்கள். ஏனோக்கோ அவர்களைப்போல மரிக்கவில்லை. தேவன் ஏனோக்கை எடுத்துக்கொண்டார். ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் காணப்படாமல் போனார்.

எலியாவைப் போல ஏனோக்கும் மரிக்கவில்லை. (2இராஜா 2; எபி 11:5). தேவன் அவரை எடுத்துக்கொண்டார். ஏனோக்கின் வம்ச வரலாறு சுருக்கமாகக் கூறப்பட்டிருந்தாலும் ஒரே வாக்கியத்தில் அவருடைய 365 வருஷ வரலாறு கூறப்பட்டிருக்கிறது. மெத்தூசலா பிறந்த பின்பு சுமார் 300 வருஷங்கள் அவர் தேவனை விசுவாசித்து, தேவனுக்குக் கீழ்ப்படிந்து, பரிசுத்தமாக ஜீவித்து, தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தார்.

"விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான்" (எபி 11:5).

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் மரிக்கும்போது, கர்த்தர் அவர்களை தம்மிடத்தில் எடுத்துக்கொள்கிறார். ஏனோக்கு தேவனிடத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பாகவே, அவர் தேவனுக்கு பிரியமானவர் என்று நற்சாட்சி பெற்றிருந்தார். விசுவாசிகளாகிய நாம், இந்தப் பூமியில் ஜீவிக்கிற காலமெல்லாம் தேவனோடு ஐக்கியமாயிருக்கவேண்டும். அவரோடு சஞ்சரிக்கவேண்டும். அதுவே நமக்கு மெய்யான சந்தோஷம்.

மெத்தூசலா
ஆதி 5:25-27

ஆதி 5:25. மெத்தூசலா நூற்றெண்பத்தேழு வயதானபோது, லாமேக்கைப் பெற்றான்.

ஆதி 5:26. மெத்தூசலா லாமேக்கைப் பெற்றபின், எழுநூற்று எண்பத்திரண்டு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஆதி 5:27. மெத்தூசலாவுடைய நாளெல்லாம் தொளாயிரத்து அறுபத்தொன்பது வருஷம்; அவன் மரித்தான்.

முற்பிதாக்களில் மெத்தூசலா மிகவும் முக்கியமானவர். இவரே மற்ற முற்பிதாக்களைவிட அதிகமான வருஷங்களுக்கு உயிரோடிருந்தவர். மெத்தூசலா தொளாயிரத்து அறுபத்தொன்பது வருஷம் உயிரோடிருந்தார். ஆனாலும் அவர் மற்ற முற்பிதாக்களைப்போல மரித்தார். மெத்தூசலா தன் தகப்பனார் ஏனோக்கைப்போல தேவனால் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

எல்லோருக்கும் மரணம் நியமிக்கப்பட்டிருக்கிறது. மரணம் சிலருக்கு சீக்கிரத்திலும், வேறு சிலருக்கு மெதுவாகவும் வருகிறது. மரணம் மனுஷருக்கு சீக்கிரத்தில் வந்தாலும் அல்லது மெதுவாக வந்தாலும், அது நிச்சயமாகவே வரும்.

மெத்தூசலாவுடைய நாளெல்லாம் தொளாயிரத்து அறுபத்தொன்பது வருஷம். அவர் பூமியில் நீண்ட காலம் உயிரோடு இருந்திருக்கிறார். இவருடைய தகப்பனாகிய ஏனோக்கு பரலோகத்தில் இன்னும் உயிரோடு இருக்கிறார். இரண்டு சாட்சிகளில் ஒருவராக இனிமேல் வரப்போகிற காலத்தில் இவருடைய தகப்பனாகிய ஏனோக்கு மரிப்பார். (வெளி 11:3-11) மனுஷர் பாவம் செய்யவில்லை என்றால், மனுஷருக்கு மரணம் இல்லை. அவர்கள் நித்திய காலமாக ஜீவிப்பார்கள். மனுக்குலத்திற்கு வந்த பாவத்தின் நிமித்தம் மனுஷர் அனைவரும் மரிக்க வேண்டுமென்று தேவன் நியமித்து விட்டார். புதிய பூமியில் தேவனுடைய பிள்ளைகள் எல்லோரும் நித்திய காலமாக ஜீவிப்பார்கள். (வெளி 21-22)

நோவா
ஆதி 5:28-32

ஆதி 5:28. லாமேக்கு நூற்றெண்பத்திரண்டு வயதானபோது, ஒரு குமாரனைப் பெற்று,

ஆதி 5:29. கர்த்தர் சபித்த பூமியிலே நமக்கு உண்டான வேலையிலும், நம்முடைய கைகளின் பிரயாசத்திலும், இவன் நம்மைத் தேற்றுவான் என்று சொல்லி, அவனுக்கு நோவா என்று பேரிட்டான்.

ஆதி 5:30. லாமேக்கு நோவாவைப் பெற்றபின், ஐந்நூற்றுத் தொண்ணூற்று ஐந்து வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஆதி 5:31. லாமேக்குடைய நாளெல்லாம் எழுநூற்று எழுபத்தேழு வருஷம் அவன் மரித்தான்.

ஆதி 5:32. நோவா ஐந்நூறு வயதானபோது, சேம் காம் யாப்பேத் என்பவர்களைப் பெற்றான்.

இந்த வசனப்பகுதியில் நோவாவைப்பற்றி முதன்முறையாக சொல்லப்பட்டிருக்கிறது. நோவா என்னும் பெயருக்கு ஆறுதல் அல்லது தேறுதல் அல்லது ஓய்வு என்று பொருள். நோவா லாமேக்கின் குமாரன். லாமேக்கு மெத்தூசலாவின் குமாரன்.

நோவா தங்களைத் தேற்றுவார் என்று நினைத்து லாமேக்கு தன் குமாரனுக்கு நோவா என்று பேரிட்டார். லாமேக்கின் காலத்தில் பூமி சபிக்கப்பட்டிருக்கிறது. மனுஷருடைய கைகளின் பிரயாசம் மிகவும் அதிகமாயிருக்கிறது. ஆனால் அதன் பலன் குறைவாய் கிடைக்கிறது. ஜனங்களுக்கு ஆறுதலோ, தேறுதலோ இல்லை. நோவாவின் மூலமாக தங்களுக்கு ஆறுதல் வரும் என்று லாமேக்கு எதிர்பார்க்கிறார்.

நோவா ஐநூறு வயதானபோது சேம், காம், யாப்பேத் என்பவர்களைப் பெறுகிறார். இவர்களில் யாபேத்தே மூத்த குமாரன் (ஆதி 10:21). ஆனால் நோவாவின் குமாரரைப்பற்றி சொல்லப்படும்போது, இங்கு சேமின் பெயர் முதலாவதாக சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் சேமோடு உடன்படிக்கை பண்ணுகிறார். கர்த்தரைப்பற்றிச் சொல்லப்படும்போது, அவர் "சேமுடைய தேவனாகிய கர்த்தர்" என்று சொல்லப்படுகிறார்.

"சேமுடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான்" (ஆதி 9:26).

நோவா ஐந்நூறு வயதான போது, சேம் காம் யாப்பேத் என்பவர்களைப் பெற்றார். நோவாவின் வயது மொத்தமாகக் கூட்டி கணக்கிடப்படுகிறது. நோவா ஐந்நூறு வயதானபோது, சேம் காம் யாப்பேத் என்பவர்களைப் பெற்றார். ஜலப்பிரளயம் பூமியின்மேல் உண்டானபோது நோவா அறுநூறு வயதாயிருந்தார். (ஆதி 7:6) ஜலப்பிரளயம் உண்டாகி இரண்டு வருஷத்திற்குப் பின்பு, சேம் நூறுவயதானபோது அர்பக்சாத்தைப் பெற்றார். (ஆதி 11:10). இவ்வாறாக மனுஷருடைய வயது ஐந்நூறு, அறுநூறு, நூறு என்று பொதுவாகக் கூறப்பட்டிருக்கிறது.

யாப்பேத் நோவாவின் மூத்த குமாரனாகயிருந்தாலும், புத்திர சுவீகார ஆசீர்வாதம் சேமுக்கு கொடுக்கப்படுகிறது. சேமின் சந்ததியில் கிறிஸ்துவானவர் வருகிறார். சேம் என்னும் பெயருக்கு "நாமம்" அல்லது "பெயர்" என்று பொருள். சேமின் சந்ததியாரிடத்தில் தேவனுடைய நாமம் தங்கியிருக்கும். அவர்கள் தேவனுடைய பெயர் பிரஸ்தாபத்திற்கு சாட்சியாயிருப்பார்கள்.

சேமின் சந்ததியில், எல்லா நாமங்களுக்கும் மேலான நாமத்தை உடைய, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பூமியிலே அவதரித்தார். ஆகையினால் இந்த வசனத்தில், நோவாவின் குமாரரைப்பற்றிச் சொல்லும்போது, "சேம், காம், யாப்பேத்" என்று சேமின் பெயர் முதலாவதாக சொல்லப்பட்டிருக்கிறது.

6 அதிகாரம்

மனுஷருடைய அக்கிரமம் பூமியில் பெருகுகிறது. கர்த்தர் தம்முடைய நீதியினால் முழுஉலகத்தையும் தண்டிக்கிறார். பூமியின்மீது ஜலப்பிரளயம் உண்டாயிற்று. மனுஷருடைய இருதயத்தின் நினைவுகளெல்லாம் பொல்லாததாயிருக்கிறது (ஆதி 6:1-5,11,12). மனுஷருடைய அக்கிரமம் கர்த்தருடைய இருதயத்திற்கு விசனமாயிருக்கிறது (ஆதி 6:6,7).

நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைக்கிறது (ஆதி 6:8-10). தேவன் தம்முடைய திட்டத்தை நோவாவுக்கு வெளிப்படுத்துகிறார் (ஆதி 6:13,17). கர்த்தர் நோவாவிடம் கொப்பேர் மரத்தால் ஒரு பேழையை உண்டாக்குமாறு சொல்லுகிறார் (ஆதி 6:14-16).

கர்த்தர் நோவாவோடு தம்முடைய உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார். கர்த்தருக்கு சித்தமானவர்கள் பேழைக்குள் பிரவேசிக்கிறார்கள் (ஆதி 6:18-21). தேவன் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் நோவா செய்து முடிக்கிறார் (ஆதி 6:22).

தேவகுமாரரும் மனுஷகுமாரத்திகளும் ஆதி 6:1,2

ஆதி 6:1. மனுஷர் பூமியின்மேல் பெருகத்துவக்கி, அவர்களுக்குக் குமாரத்திகள் பிறந்தபோது:

ஆதி 6:2. தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள்.

பூர்வகாலத்திலே மனுஷர் மத்தியில் பாவமும் துன்மார்க்கமும் அதிகரிக்கிறது. மனுஷர் பூமியின்மேல் பெருகுகிறார்கள். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். அவர்களை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார். தேவன் அவர்களை நோக்கி, "நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்புங்கள்" (ஆதி 1:28) என்று சொன்னார். தேவனுடைய வார்த்தையின் பிரகாரமாக மனுஷர் பூமியின்மேல் பெருகத்துவங்குகிறார்கள்.

மனுஷர் இந்தப் பூமியில் பலுகிப்பெருகுவது கர்த்தருடைய ஆசீர்வாதம். அவர்கள் தங்கள் சந்ததிகளால் பூமியை நிரப்புவது அவர்களுக்கு மேன்மையான காரியம். ஆனால் அவர்களோ கர்த்தர் தங்களுக்கு கொடுத்த ஆசீர்வாதத்தை, சாபமாக மாற்றுகிறார்கள். பூமியின்மேல் மனுஷர் பெருகும்போது, மனுஷர் மத்தியிலே பாவிகளும் பெருகுகிறார்கள். பாவிகள் பெருகும்போது, பாவமும் பெருகும்.

பாவம் வேகமாக பரவும் புற்றுநோயைப்போன்றது. ஒரு பட்டணத்தின் ஜனத்தொகை அதிகமாயிருக்கும்போது, ஜனங்கள் மத்தியில் நோய்கள் வேகமாக பரவும். அதுபோலவே பூமியின்மேல் மனுஷர் பெருகும்போது, அவர்களுடைய பாவங்களும் அக்கிரமங்களும் பெருகும்.

பூமியின்மேல் பெருகின மனுஷருக்கு குமாரத்திகள் பிறக்கிறார்கள். தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொள்கிறார்கள் (ஆதி 6:2).

"தேவகுமாரர்" என்னும் இந்த வாக்கியம் சேத்தின் குமாரரைக் குறிப்பதாக ஒருசிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள். ஆனால் இந்த வாக்கியம் தேவனுடைய குமாரரையே குறிக்கும் என்று சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். இவர்கள் 1பேதுரு 3:19; 2பேதுரு 2:4; யூதா 1:6-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் விழுந்துபோன தூதர்கள் ஆவார்கள்.

சிருஷ்டிப்பின் நாளிலிருந்து 235 வருஷங்கள் வரையிலும் சேத்திற்கு குமாரர்கள் யாரும் பிறக்கவில்லை. அவனுடைய குமாரனுக்கும் சிருஷ்டிப்பின் நாளிலிருந்து 325 வருஷங்கள் வரையில் குமாரர்கள் யாரும் பிறந்ததாக வேதவசனம் கூறவில்லை. (ஆதி 5:3,6,9) ஆகையினால் தேவகுமாரர் என்னும் வாக்கியம் சேத்தின் குமாரரைக் குறிக்காது என்பது இவர்களுடைய வியாக்கியானம்.

எபிரெய மொழியில் "மனுஷனுடைய குமாரத்திகள்" என்று ஒருமையில் கூறப்பட்டிருக்கிறது. மனுஷன் என்னும் வார்த்தை எபிரெய மொழியில் ஒருமையில் கூறப்பட்டிருந்தால் அது ஆதாமைக் குறிக்கும். ஆகையினால் இங்கு மனுஷருடைய குமாரத்திகள் என்னும் வாக்கியம் ஆதாமின் குமாரத்திகளைக் குறிக்கும் என்றும் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள்.

தேவகுமாரர் என்னும் வார்த்தைக்கு, "கர்த்தரை ஆராதிக்கிறவர்கள்" என்று பொருள். மனுஷகுமாரத்திகள் என்னும் வார்த்தைக்கு, தேவனை ஆராதியாத உலகப்பிரகாரமான ஜனங்களின் குமாரத்திகள் என்று பொருள். மனுஷகுமாரத்திகள் தேவனிடத்தில் பக்தியில்லாதவர்கள். இவர்கள் தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும் அந்நியர்கள் என்பது மற்றொரு வியாக்கியானம்.

சேத்தின் சந்ததியை சேர்ந்தவர்கள் கர்த்தரை ஆராதிக்கவேண்டும். அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தரை நம்பவுமில்லை, அவரை ஆராதிக்கவுமில்லை. காயீனும் அவனுடைய சந்தியும் சபிக்கப்பட்டவர்கள். மனுஷகுமாரத்திகள் என்னும் பெயர் காயீனின் சந்ததியாரை குறிக்கிற வார்த்தை. கர்த்தரை நம்புகிற தேவகுமாரர், கர்த்தரை நம்பாத, கர்த்தரால் சபிக்கப்பட்ட காயீனின் குமாரத்திகளை விவாகம்பண்ணுகிறார்கள்.

காயீனின் குமாரத்திகள் அதிக சவுந்தரியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். சேத்தின் குமாரர்களோ அவர்களுடைய அழகில் மயங்கி, அவர்களுக்குள்ளே தங்களுக்கு பெண்களைத் தெரிந்துகொள்கிறார்கள். சேத்தின் சந்ததியாருக்கும், காயீனின் சந்ததியாருக்கும் விவாக சம்பந்தமுண்டாயிற்று. விசுவாசியும் அவிசுவாசியும் விவாகம்பண்ணிக்கொள்கிறார்கள்.

கர்த்தரை ஆராதிக்கிற தேவகுமாரர் தங்கள் கண்களின் இச்சைகளுக்கு அடிமைகளாகிறார்கள். அவர்கள் தங்கள் கண்களின் பார்வையால் வழிநடத்தப்படுகிறார்கள். அவர்கள் மனுஷகுமாரத்திகளைப் பார்க்கும்போது, அவர்களை அதிக சௌந்தரியமுள்ளவர்களாக காண்கிறார்கள். அவர்களுடைய கண்களால் ஸ்திரீகளின் சௌந்தரியத்தை மாத்திரமே காணமுடிகிறது.

மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ மனுஷருடைய இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறார். தேவகுமாரரால் மனுஷகுமாரத்திகளின் இருதயங்களைப் பார்க்க முடியவில்லை. அவர்கள் மனுஷகுமாரத்திகளின் முகசௌந்தரியத்தை மாத்திரமே பார்க்கிறார்கள்.

தேவகுமாரருடைய கண்களின் பார்வை அவர்களை வஞ்சிக்கிறது. அவர்கள் மனுஷகுமாரத்திகளின் சௌந்தரியத்தைக் கண்டு, அதிலே மயங்கி, அவர்களுக்குள்ளே தங்களுக்கு பெண்களைத் தெரிந்துகொள்கிறார்கள். தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை விவாகம்பண்ணுகிறார்கள்.

தேவகுமாரர் அந்நிய ஸ்திரீகளை விவாகம்செய்து பாவம் செய்கிறார்கள். இதன் விளைவாக தேவகுமாரர் மத்தியிலே பாவம் பெருகிற்று.

"அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?" (2கொரி 6:14).

தேவகுமாரர் தங்கள் சுயபலத்தையும், சுயமுயற்சிகளையும் நம்புகிறார்கள். மனுஷகுமாரத்திகளை விவாகம்பண்ணினாலும், அவர்களை தேவகுமாரத்திகளாக மாற்றிவிடலாம் என்று தேவகுமாரர் நினைக்கிறார்கள். ஆனால் மனுஷகுமாரத்திகள், தேவகுமாரர்களை, மனுஷகுமாரர்களாக மாற்றிவிடுகிறார்கள்.

இந்த சம்பவத்தைப்போலவே, தற்காலத்திலும் விசுவாசிகள் மத்தியில் சில விவாக சம்பந்தம் நடைபெறுகிறது. ஒரு சில விசுவாசிகள் அவிசுவாசிகளை விவாகம்பண்ணுகிறார்கள். அவர்களை விசுவாசிகளாக மாற்றிவிடலாம் என்று நினைக்கிறார்கள். ஆனால் சில சமயங்களில் விசுவாசிகள் நினைப்பதுபோல நடைபெறுவதில்லை.

அவிசுவாசிகள் விசுவாசிகளாக மாறுவதற்கு பதிலாக, விசுவாசிகள் அவிசுவாசிகளாக மாறிவிடுகிறார்கள். ஆகையினால் விவாக சம்பந்த விஷயங்களில் விசுவாசிகள் மிகவும் கவனமாயிருக்கவேண்டும். துன்மார்க்கன் நீதிமானாக மாறுவதற்கு பதிலாக, நீதிமான் துன்மார்க்கனாக மாறுவதற்கும் வாய்ப்புள்ளது.

கர்த்தருடைய ஆவி
ஆதி 6:3

ஆதி 6:3. அப்பொழுது கர்த்தர்: என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப் போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார்.

பூமியின்மேல் மனுஷர் பெருகியிருக்கிறார்கள். தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை விவாகம் பண்ணுகிறார்கள். மனுஷருடைய அக்கிரமம் பூமியிலே பெருகுகிறது. அவர்களுடைய இருதயத்தின் நினைவுகள் பொல்லாததாயிருக்கிறது. இதனால் கர்த்தர் அவர்களை பார்த்து மனஸ்தாபப்படுகிறார். அவருடைய இருதயம் விசனமாயிருக்கிறது.

மனுபுத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். கர்த்தருடைய ஆவி மனுஷரோடே போராடுகிறது. ஆனால் மனுஷரோ தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், தொடர்ந்து துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். கர்த்தர் நீடியபொறுமையோடு காத்திருக்கிறார். மனுபுத்திரர் கர்த்தருடைய பொறுமையை அசட்டைபண்ணுகிறார்கள்.

மனுஷனூர் மனந்திரும்பாமல், தங்களுடைய அக்கிரமத்தை பெருக்கும்போது, கர்த்தருடைய ஆவி மனுஷரோடே போராடுவதில்லை. "என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மனுஷன் பாவம் செய்யும்போது கர்த்தருடைய ஆவியானவர் அவனுடைய பாவத்தை அவனுக்கு உணர்த்துகிறார். அவனுடைய மனச்சாட்சியின் மூலமாக அவனைக் கடிந்துகொள்கிறார். அவனுக்கு ஆவிக்குரிய புத்திமதிகளை சொல்லுகிறார். மனுஷன் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து, தன்னுடைய பாவத்தை விட்டு விலகி, கர்த்தரிடத்தில் வந்து சேரவேண்டும். இதற்காகவே கர்த்தருடைய ஆவியானவர் மனுஷனோடு போராடுகிறார்.

மனுஷன் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காமல், அவருக்கு விரோதமாக எதிர்த்து நிற்கக்கூடாது. ஆவியானவர் மனுஷனுடைய பாவத்தை அவனுக்குள் உணர்த்தும்போது மனுஷன் தன்னுடைய ஆவியை அவித்துப்போடக்கூடாது. அவன் கர்த்தருக்கு விரோதமாக எப்போதும் கலகம்பண்ணிக்கொண்டிருக்கக்கூடாது.

மனுஷன் தன் பாவத்திற்கு மனந்திரும்பவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பம். இதற்காகவே கர்த்தருடைய ஆவியானவர் மனுஷனோடு போராடுகிறார். கர்த்தர் மனுஷனோடு போராடினாலும், அவர் எப்போதும் போராடிக்கொண்டிருக்கமாட்டார்.

"எப்பிராயீம் விக்கிரகங்களோடு இணைந்திருக்கிறான், அவனைப் போகவிடு" (ஓசி 4:17).

கர்த்தருடைய ஆவியானவர் மனுஷனோடே என்றைக்கும் போராடாமல் இருப்பதற்கு ஒரு காரணமுள்ளது. மனுஷன் மாம்சமாயிருக்கிறான். இதுவே கர்த்தர் சொல்லும் காரணம். கர்த்தர் ஆவியாயிருக்கிறார். மனுஷன் மாம்சமாயிருக்கிறான். அவனிடத்தில் மாம்ச சுபாவம் இருக்கிறது.

மனுஷனுடைய மாம்ச சுபாவம், கர்த்தருடைய ஆவிக்குரிய சுபாவத்திற்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறது. மனுஷனுக்குள் ஆவிக்குரிய போராட்டம் நடைபெற்றாலும், மனுஷன் தன்னுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். கர்த்தர் கொடுக்கிற கிருபையின் காலத்தை மனுஷன் அசட்டைபண்ணுகிறான். அவன் நித்திய காலத்திற்கும் உயிரோடிருக்கப் போகிறவனல்ல. மனுஷனுக்கு மரணம் நியமிக்கப்பட்டிருக்கிறது. மனுஷன் மரித்த பின்பு, அவன் தன் பாவத்திற்கு மனந்திரும்புவது என்பது இயலாத காரியம்.

மனுஷன் உயிரோடிருக்கும் வரையிலும், கர்த்தருடைய ஆவியானவர் அவனோடு போராடுவார். மனுஷன் உயிரோடிருக்கும்போதே தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பவேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். மனுஷன் மரித்த பின்பு, அவன் மனந்திரும்புவதற்கு வாய்ப்பில்லை. மனுஷன் மரிக்கும்போது, அவனுக்குள் ஆவியானவரின் போராட்டமும் முடிவு பெறுகிறது.

மனுஷன் நித்தியமானவனல்ல. கர்த்தர் மனுஷனைப்பற்றிச் சொல்லும்போது, "அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப்போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம்" என்று சொல்லுகிறார். மனுஷன் உயிரோடிருக்கும் நாளெல்லாம், கர்த்தருடைய ஆவியானவர் அவனோடு போராடுகிறார். இது கர்த்தருடைய சுத்த கிருபை. அவர் நீடியபொறுமையுள்ளவர். ஆனாலும் கர்த்தருடைய பொறுமைக்கும் ஒரு முடிவு உண்டு. அதற்கும் ஒரு எல்லை உண்டு. கர்த்தர் பொறுமையாயிருக்கும் காலத்தை மனுஷன் அசட்டை பண்ணிவிடக்கூடாது.

மனுஷனுடைய பாவத்தை அவனுக்கு உணர்த்துவதற்காக, கர்த்தர் பல சமயங்களில் அவனைத் தண்டிக்கிறார். ஒரு சிலர் எவ்வளவுதான் தண்டிக்கப்பட்டாலும், தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாதிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்துகிறார்கள். தண்டனைகள் ஒருபோதும் பாவமன்னிப்பு ஆகாது.

"என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை" என்னும் இந்த வாக்கியத்தில் மனுஷன் என்பதற்கான எபிரெய வார்த்தை ஆதாம் என்பதாகும். இந்த வார்த்தை சுட்டுச்சொல்லோடு பயன்படுத்தப்பட்டிருப்பதினால் இது ஆதாம் என்ற மனுஷனைக் குறிக்கும். ஆதாம் மாம்சமாக இருக்கிறார். எல்லா மனுஷருமே மாம்சமாக இருக்கிறார்கள்.

ஆயினும் இந்த வாக்கியம் ஆதாம் இருக்கப்போகிற நாட்கள் 120 வருஷம் என்று பொருள்படுகிறது (ஆதி 6:3). ஆதாம் மனந்திரும்புவதற்கு தேவன் 120 வருஷத்தை அவருக்குக் கூட்டிக் கொடுத்திருக்கிறார். தன்னைச் சிருஷ்டித்த சிருஷ்டிகருடைய சித்தத்திற்கு அவர் இந்த 120 வருஷத்திற்குள் தன்னைக் கீழ்ப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் இந்தக் காலத்திற்குள் ஆதாம் மனந்திருந்தி தேவனோடு ஒப்புரவானாரா? என்பது தெரியவில்லை.

மனுஷனுடைய அக்கிரமம் ஆதி 6:4,5

ஆதி 6:4. அந்நாட்களில் இராட்சதர் பூமியிலே இருந்தார்கள்; பின்பு தேவகுமாரர் மனுஷ குமாரத்திகளோடே கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றபோது, இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்.

ஆதி 6:5. மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு,

பூர்வகாலத்தில் பூமியிலே அக்கிரமம் பெருகிற்று. ஜனங்கள் துன்மார்க்கராயிருக்கிறார்கள். பலமுள்ளவர்கள் பலவீனமானவர்களை ஒடுக்குகிறார்கள். மனுபுத்திரர் அன்புக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பலவந்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். பூர்வத்திலே இராட்சதரும், பேர் பெற்ற மனுஷராகிய பலவான்களும் பூமியிலே இருந்தார்கள்.

ஏனோக்கின் புத்திரர் இராட்சதர் என்று அழைக்கப்படுகிறார்கள். "அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும், அப்படியே இருந்தோம் என்று சொல்லி, இப்படி இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தாங்கள் சுற்றிப் பார்த்துவந்த தேசத்தைக்குறித்து துர்ச்செய்தி பரம்பச்செய்தார்கள்" (எண் 13:33).

அசீரியாவின் ராஜா பேர்பெற்றவனாயிருந்தான். அவனைப் போலவே பூர்வத்திலிருந்த மனுஷர் பேர் பெற்ற பலவான்களாயிருந்தார்கள்.

"இதோ, அசீரியா ராஜாக்கள் சகல தேசங்களையும் சங்கரித்த செய்தியை நீ கேள்விப்பட்டிருக்கிறாய்; நீ தப்புவாயோ?" (ஏசா 37:11).

ஜலப்பிரளயத்திற்கு முன்பு நோவாவின் நாட்களிலும், அதன் பின்பு அதாவது ஜலப்பிரளயத்திற்குப் பின்பும். இராட்சதர் பூமியிலே இருந்தார்கள். அந்நாட்களில் இராட்சதர் பூமியிலே இருந்தார்கள். தேவகுமாரர் மனுஷ குமாரத்திகளோடே கூடுகிறதினால் இராட்சதர் பிறந்தார்கள்.

இராட்சதர் சாதாரண மனுஷர் அல்ல. இவர்கள் நெடியவர்கள், பலவான்கள். வேதாகமத்தில் இராட்சதரைப் பற்றி பல குறிப்புக்கள் உள்ளன.

ஏனாக்கு ஒரு இராட்சத பிறவி (எண் 13:33). ஏனாக்கியர் பலவான்களும், நெடியவர்களுமாக இருந்தார்கள். (உபா 1:28; உபா 2:10-11,21; உபா 9:2; யோசு 11:21-22; யோசு 14:12, யோபு 14).

அம்மோனின் தேசம் இராட்சதருடைய தேசம் என்று அழைக்கப்பட்டது. முற்காலத்தில் இராட்சதர் அதிலே குடியிருந்தார்கள். (உபா 2:19-20). ஏமியர்கள் ஏனாக்கியரைப்போல திரளானவர்கள், நெடியவர்கள், பலத்த ஜனங்கள் (உபா 2:10-11)

சம்சூமியரும் முற்காலத்தில் அம்மோன் தேசத்தில் குடியிருந்தார்கள். (உபா 2:19-21). இவர்களும் இராட்சதர்கள். பாசானின் இராஜாவாகிய ஓக் ஒரு இராட்சத பிறவி. இராட்சதர் பதிமூன்றரை அடி உயரம் கூட இருப்பார்கள். (உபா 3:11; யோசு 12:4; யோசு 13:12). பாசான் இராட்சதருடைய தேசம் என்று அழைக்கப்படுகிறது. (உபா 3:13).

இராட்சதருடைய பள்ளத்தாக்கைப் பற்றி யோசு 15:8; யோசு 18:16 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. இது ரெப்பாயீமின் பள்ளத்தாக்காகும். இராட்சதரின் இந்தப் பிரிவினரைப் பற்றி ஆதி 14:5; ஆதி 15:20; 2சாமு 5:18,22; 2சாமு 23:13; 1நாளா 11:15; 1நாளா 14:9; ஏசா 17:5 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. ரெப்பாயீம் இராட்சதர்கள் மிகவும் முக்கியமானவர்கள். ஆனால் வேதத்தில் இவர்கள் "மடிந்தவர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறார்கள். (யோபு 26:5; சங் 88:10; நீதி 2:18; நீதி 9:18; நீதி 21:16; ஏசா 14:8; ஏசா 26:14,19).

"ரெப்பாயீம்" என்னும் பெயர் உபா 2:11,20; உபா 3:11,13; யோசு 12:4; யோசு 13:12; யோசு 15:8; யோசு 18:16; 2சாமு 21:16,18,20,22; 1நாளா 20:4,6,8 ஆகிய வசனங்களில் இராட்சதர் என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. "மீந்திருந்த இராட்சதர்" என்னும் வாக்கியம் மீந்திருந்த ரெப்பாயீம் என்று இருக்க வேண்டும். (உபா 3:11; யோசு 12:4; யோசு 13:12)

இராட்சதரின் பல பிரிவினரைப் பற்றி வேதவாக்கியங்களில் கூறப்பட்டிருக்கிறது. (ஆதி 6:4; ஆதி 14:5-6; ஆதி 15:19-21; யாத் 3:8,17; யாத் 23:23; உபா 2:10-12, 20-23; உபா 3:11-13; உபா 7:1; உபா 20:17; யோசு 12:4-8; யோசு 13:3; யோசு 15:8; யோசு 17:15; யோசு 18:16). ஓக், ரெப்பாயீமில் மீந்திருந்தவன். மற்ற இராட்சத தேசங்களிலிருந்து இவன் மீந்திருக்கவில்லை. (உபா 3:11; யோசு 12:4; யோசு 13:12).

இராட்சதர் எல்லோருமே தேவனுடைய குமாரருக்கும், மனுஷருடைய குமாரத்திகளுக்கும் பிறந்தவர்கள். தேவனுடைய குமாரர் என்பது விழுந்துபோன தூதர்களைக் குறிக்கும்.

சாதாரணமாக மனுஷர் உயிர்த்தெழுவார்கள். (யோவான் 5:28-29) ஆனால் ரெப்பாயீம் உயிர்த்தெழுவதில்லை. (ஏசா 26:14) ரெப்பாயீம் இப்பொழுது பாதாளத்தில் இருக்கிறார்கள். (ஏசா 14:9). சாலொமோனும், இதை உறுதிபண்ணியிருக்கிறார். (நீதி 2:18; நீதி 9:18; நீதி 21:16) மரித்தவர் என்பதற்கான எபிரெய வார்த்தை ரெப்பாயீம் என்பதாகும். (ஏசா 26:14,19)

"தேவகுமாரர் மனுஷ குமாரத்திகளோடே கூடுகிறதினால்" என்னும் இந்த வாக்கியத்திலிருந்து மூன்று காரியங்கள் தெரிய வருகிறது. அவையாவன:

1. விழுந்துபோன தூதர்கள் பூமியிலுள்ள ஸ்திரீகளை இரண்டு காலங்களில் அதாவது நோவாவின் காலத்து ஜலப்பிரளயத்திற்கு முன்பும், பின்பும். திருமணம் செய்து கொண்டார்கள்.
2. இவ்விரண்டு காலங்களிலும் தூதர்களுக்கு மனுஷ குமாரத்திகள் மூலமாகப் பிள்ளைகள் பிறந்தார்கள்.
3. இந்தப் பிள்ளைகள் எல்லாம் இராட்சதராக இருந்தார்கள்.

"மனுஷ குமாரத்திகள்" என்னும் இந்த வாக்கியத்திற்கு காயீனின் குமாரத்திகள் என்று ஒருசிலர் விளக்கம் கூறுகிறார்கள். ஆனால் ஜலப்பிரளயத்திற்குப் பின்பு காயீனின் குமாரத்திகள் யாரும் உயிரோடு இல்லை. எல்லோரும் ஜலப்பிரளயத்தில் தேவனால் நிக்கிரகம் பண்ணப்பட்டார்கள். எல்லோரும் மரித்துப் போனார்கள். (ஆதி 6:18; ஆதி 7:7; ஆதி 8:18; ஆதி 9:1; 1பேதுரு 3:20).

ஸ்திரீகளுக்கு விழுந்துபோன தூதர்கள் மூலமாகவும், உலகத்தின் மனுஷர் மூலமாகவும் பிள்ளைகள் பிறந்தார்கள். தூதர்களுக்கு பிறந்த பிள்ளைகள் இராட்சதராக இருந்தார்கள். (ஆதி 6:4; யூதா 1: 6-7). பூமியில் மனுஷருடைய அக்கிரமம் பெருகிற்று. இதனால் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார் (ஆதி 6:1-6).

ஒரு மனுஷனுக்கு மற்றவர்கள்மீது அதிகமான அதிகாரம் இருக்கும்போது அவன் மற்றவர்களை தன்னுடைய இஷ்டம்போல ஒடுக்குவான். அவனிடத்தில் அதிக பலம் இருந்தாலும், அந்த பலத்தினால் அவன் தன்னைத்தானே ஆளுகை செய்யமாட்டான். மற்றவர்களை ஒடுக்கக்கூடாது என்னும் நல்ல சிந்தனைகூட பலவானிடத்தில் இருக்காது.

மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் காண்கிறார் (ஆதி 6:5).

கர்த்தருக்கு மறைவான இரகசியம் ஒன்றுமில்லை. மனுஷனுடைய அக்கிரமம் இந்தப் பூமியிலே தண்ணீரைப்போல ஒடுவதை கர்த்தர் காண்கிறார். ஒரு நதி ஆழமாகவும், அகலமாகவும், வேகமாகவும் பாய்ந்து ஒடுவதைப்போல, மனுஷருடைய அக்கிரமமும் பூமியிலே பெருகி ஒடுகிறது.

மனுஷரை ஒடுக்குகிறவர்கள் பேர் பெற்ற மனுஷராகிய பலவான்களாயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை கண்ணோக்கிப் பார்க்கிறார். அவர்களுடைய அக்கிரமம் பூமியிலே பெரிதாயிருக்கிறது.

இந்தப் பூமியிலே துன்மார்க்கர் பேர் பெற்ற பலவான்களாயிருக்கும்போது, அவர்களுடைய அக்கிரமம் பெரிதாயிருக்கும். அவர்களுடைய துன்மார்க்கமான செயல்களை தடுத்து நிறுத்துவதற்கு ஒருவரும் துணிந்து முன்வரமாட்டார்கள்.

தங்களுடைய பாவம் யாருக்கும் தெரியாத இரகசியமாயிருக்கிறது என்று பாவிகள் நினைக்கிறார்கள். கர்த்தர் நியாயாதிபதியாயிருக்கிறார். அவர் மனுஷருடைய எல்லா பாவங்களையும் அறிந்திருக்கிறார்.

மனுஷனுடைய பாவங்கள் எல்லாமே அவனுடைய இருதயத்திலிருந்து புறப்பட்டு வருகிறது. இருதயமே பாவத்தின் ஊற்றாகயிருக்கிறது. அந்த இடமே ஊற்றின் கண்ணாகவும் இருக்கிறது. கர்த்தர் மனுஷனுடைய இருதயத்தை ஆராய்ந்து அறிகிறார்.

மனுஷனுடைய அக்கிரமம் பெருகும்போது, அவனுடைய பாவம் சோதோமின் பாவத்தைப்போல இருக்கிறது என்று சொல்லுவது வழக்கம். கர்த்தருடைய கண்களோ சோதோமையும் பார்க்கிறது. சோதோமுக்கு அப்பாலும் பார்க்கிறது. மனுஷனுடைய இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாமல் நித்தமும் பொல்லாதது என்று தேவன் காண்கிறார்.

கர்த்தர் மனுஷனுடைய இருதயத்தையும் அறிந்திருக்கிறார். அந்த இருதயத்தின் நினைவுகளையும் அறிந்திருக்கிறார். மனுஷன் பாவம் செய்வதற்கு முன்பாகவே அவனுடைய இருதயம் பாவம் செய்கிறது. அவனுடைய இருதயத்தில் துன்மார்க்கமான சிந்தனைகளும், பாவசிந்தனைகளும் நிரம்பியிருக்கிறது. மனுஷனுடைய இருதயம் பொல்லாப்பானதை சிந்தித்து, துன்மார்க்கமான காரியங்களை திட்டமிடுகிறது.

பாவிகள் துணிகரமாகப் பாவம் செய்கிறார்கள். பாவம் செய்யவேண்டுமென்று தீர்மானம்பண்ணி, திட்டமிட்டு பாவம் செய்கிறார்கள். துன்மார்க்கருடைய பாவங்கள் எதேச்சையாக செய்யப்படும் பாவங்களல்ல. அவை துணிகரமாய் செய்யப்படும் பாவங்கள். துன்மார்க்கரின் இருதயம் பாவசிந்தனையினால் கடினப்பட்டிருக்கிறது.

கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்
ஆதி 6:6,7

ஆதி 6:6. தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது.

ஆதி 6:7. அப்பொழுது கர்த்தர்: நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம்பண்ணுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார்.

கர்த்தர் மனுஷனுடைய அக்கிரமத்தைப் பார்த்து மனஸ்தாபப்படுகிறார். மனுஷன் துணிகரமாய்ப் பாவம் செய்யும்போதும், அவன் தொடர்ந்து பொல்லாத காரியங்களை செய்யும்போதும், கர்த்தர் அவனை சும்மா வேடிக்கைப் பார்த்துக்கொண்டு நிற்கமாட்டார். மனுஷனுடைய துன்மார்க்கத்தைப் பார்க்கும்போது கர்த்தருடைய இருதயம் வேதனைப்படுகிறது. அவர் பாவிகளின் நிமித்தமாக மனஸ்தாபப்படுகிறார்.

கிருபையும் அன்புமுள்ள தகப்பன், தன் பிள்ளைகள் பாவம் செய்வதைப் பார்த்து மனவேதனைப்படுவார். பிள்ளைகள் கீழ்ப்படியாமல் முரட்டுத்தனமாய் நடந்து கொள்ளும்போது, தகப்பனுடைய மனது வேதனைப்படும். தன்னுடைய பிள்ளைகள் தப்பு செய்யும்போது, அவர்களுடைய தகப்பன் அவர்கள்மீது கோபப்படுவார். அதோடு தகப்பன் மனவேதனையும் படுவார். அவர் தன் பிள்ளைகள் நிமித்தமாக மனஸ்தாபப்படவும் செய்வார்.

இந்த வசனத்தில் "கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய மனது நிம்மதியில்லாமல் கலங்கவில்லை. கர்த்தருடைய மனதை யாராலும் கலங்கப்பண்ண முடியாது. கர்த்தர் எப்போதுமே சீராகவும், உறுதியாகவும் சிந்திக்கிறவர். கர்த்தருடைய நீதி அவருடைய மனதை தாங்குகிறது. மனுஷருடைய துன்மார்க்கத்தைப் பார்த்து, கர்த்தருடைய மனது ஒருபோதும் குழம்பிப்போவதில்லை.

ஆனாலும் கர்த்தர் மனுஷனுடைய அக்கிரமத்தைப் பார்த்து மனஸ்தாபப்படுகிறார். கர்த்தருடைய மனஸ்தாபம் அவருடைய நீதியையும், பாவத்திற்கும் பாவிகளுக்கும் விரோதமான கர்த்தருடைய பரிசுத்தமான கோபத்தையும் வெளிப்படுத்துகிறது. கர்த்தர் பாவத்தை வெறுக்கிறார். கர்த்தர் வெறுக்கிற பாவத்தை நாமும் வெறுக்கவேண்டும். நம்முடைய பாவம் கர்த்தருடைய இருதயத்திற்கு விசனமாயிருக்கக்கூடாது. நம்முடைய பாவத்தை நாம் உணர்ந்து, நம்முடைய இருதயத்தில் நாம் விசனப்படவேண்டும். நாம் பாவத்தை விட்டு விலகி பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும்.

தேவனுடைய மனது ஒருபோதும் மாற்றமடைவதில்லை. ஆனாலும் "தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்" என்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் மனஸ்தாபப்பட்டாலும் அவர் மனம் மாறுகிற தேவனல்ல. மனம்மாற கர்த்தர் ஒரு மனுஷனல்ல. கர்த்தர் ஒருபோதும் தம்முடைய வழியை மாற்றுகிறவரல்ல.

மனுஷன் கர்த்தரை விட்டு விலகிப்போகிறான். அவன் கர்த்தருடைய சமுகத்திலிருந்து விலகி பின்வாங்கிப்போகிறான். அவன் போகவேண்டிய பாதையை விட்டு விலகி, வேறு பாதையில் போகிறான். மனுஷனே பாதை மாறுகிறவன். கர்த்தர் ஒருபோதும் தம்முடைய வழியை மாற்றமாட்டார். அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார்.

மனுஷனுடைய அக்கிரமம் பூமியில் பெருகினதை கர்த்தர் பார்க்கும்போது, அவருடைய இருதயத்தில் மனஸ்தாபமும், விசனமும், பரிசுத்தமான கோபமும் உண்டாயிற்று. கர்த்தர் மனுஷர்மீது பிரியமாயிருந்தாலும், அவர்கள் செய்கிற அக்கிரமத்தின் மீது பிரியப்படவில்லை. மனஸ்தாபப்படுவதும், விசனப்படுவதும் கர்த்தருடைய சுபாவமல்ல. மாற்றம் மனுஷனிடத்தில்தான் ஏற்பட்டிருக்கிறது. கர்த்தரிடத்தில் மாற்றம் ஏற்படவில்லை. கர்த்தர் என்றும் மாறாதவர்.

கர்த்தரே மனுஷனை சிருஷ்டித்தார். தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக கர்த்தர் இப்போது மனஸ்தாபப்படுகிறார். மனுஷனுடைய அக்கிரமத்தின் நிமித்தமாக, கர்த்தர் மனஸ்தாப்படுகிறார். அவர் மனுஷனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டாலும், அவனை இரட்சிப்பதற்காக ஒருபோதும் மனஸ்தாபப்படமாட்டார்.

மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகியிருப்பதினால் அவனை நிக்கிரகம்பண்ணுவது கர்த்தருடைய சித்தமாயிற்று. நாம் பல சமயங்களில், நாம் செய்த பாவங்களுக்காக கர்த்தரிடத்தில் நம்முடைய மனவருத்தத்தைத் தெரிவிக்கிறோம். அதே வேளையில் நாம் பாவத்தை விட்டு விலகாமல், நாம் செய்த பாவத்தை திரும்ப திரும்ப செய்கிறோம். நாம் கர்த்தரிடத்தில் பாவஅறிக்கை பண்ணுவது ஒரு சம்பிரதாயம்போல மாறிவிடுகிறது.

நாம் தொடர்ந்து பாவம் செய்வோமென்றால், கர்த்தருடைய கோபமும், சாபமும் நம்மீது தங்கியிருக்கும். நம்முடைய பாவத்தினால் நாம் தேவனை துக்கப்படுத்துவோம். அவரை மனஸ்தாபப்படுத்துவோம். நம்முடைய பாவங்கள் கர்த்தருடைய இருதயத்திற்கு விசனமாயிருக்கும்.

பாவிகள்மீது தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு வரும். தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டதோடு சும்மாயிருந்து விடவில்லை. அப்பொழுது கர்த்தர்: "நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிற வைகளை நிக்கிரகம்பண்ணுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது" (ஆதி 6:7) என்றும் சொல்லுகிறார்.

இந்த வசனத்தில், "நிக்கிரகம்பண்ணுவேன்" என்னும் வார்த்தைக்கு, "அழுக்கை முற்றிலுமாய் துடைத்துவிட்டு சுத்தம்பண்ணுவேன்" என்று பொருள். இந்தப் பூமியிலே பாவம் செய்கிற எல்லோரையும் கர்த்தர் அழித்துப்போடுவார். அவர் பூமியை சுத்தம்பண்ணுவார்.

மனுஷன் பாவம் செய்யும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாகப் போராடுகிறார். மனுஷன் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைக்கு செவிகொடுக்காமல், தொடர்ந்து பாவம் செய்யும்போது கர்த்தர் மனுஷனை நிக்கிரகம்பண்ணுகிறார். இது கர்த்தருடைய பரிசுத்தமான, நீதியான தீர்மானமாயிருக்கிறது.

கர்த்தருடைய நீதியினால் ஒருவரும் நிக்கிரகமாவதில்லை. கர்த்தர் தம்முடைய நீதியினால் யாரையும் அழிப்பதில்லை. தங்கள் பாவத்திற்கு மனந்திரும்பாத பாவிகள், தங்கள் பாவத்தினால் நிக்கிரகமாகிறார்கள். அவர்கள் தேவனுடைய கிருபையை அசட்டைபண்ணினவர்கள். அவர்கள் தங்கள் பாவத்திற்கு மனந்திரும்ப மறுத்தவர்கள். அவர்களுடைய அழிவுக்கும், நிக்கிரகத்திற்கும் அவர்களுடைய பாவமே காரணம்.

நோவாவுக்கு கிருபை
ஆதி 6:8-10

ஆதி 6:8. நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது.

ஆதி 6:9. நோவாவின் வம்சவரலாறு: நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்.

ஆதி 6:10. நோவா சேம் காம் யாப்பேத் என்னும் மூன்று குமாரரைப் பெற்றான்.

இந்தப் பூமியிலுள்ள மனுஷரில் நோவா மிகவும் விசேஷித்தவராயிருக்கிறார். கர்த்தருடைய பார்வையிலே நோவாவுக்கு விசேஷித்த கனமும் மேன்மையும் உண்டாயிருக்கிறது.

மனுஷருடைய அக்கிரமம் பூமியிலே பெருகிற்று. தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்படுகிறார். அது அவர் இருதயத்திற்கு விசனமாயிருக்கிறது. ஆனாலும் நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்திருக்கிறது. மனுபுத்திரர் எல்லோரும் பொல்லாதவர்களாயும், துன்மார்க்கராயும் இருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே நோவா மாத்திரம் நீதிமானாயிருக்கிறார்.

கர்த்தர் பூமியிலுள்ள மனுஷர் மத்தியிலே நோவாவை அடையாளம் காண்கிறார். அவர் நோவாவைப் பார்த்து சந்தோஷப்படுகிறார். தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் மனுஷருக்கு எடுத்து சொல்ல, தேவன் நோவாவை தம்முடைய கருவியாகப் பயன்படுத்துகிறார்.

நோவாவின் காலத்திலே ஏராளமான இரட்சதர் இருக்கிறார்கள். அக்காலத்தில் மனுஷர் மத்தியிலே பேர் பெற்ற பலவான்களும் ஏராளமானோர் இருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே நோவா ஒரு சாதாரண மனுஷன். நோவா ஒரு இராட்சத பிறவியோ அல்லது பேர் பெற்ற பலவானோ அல்ல. ஆனாலும் நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்திருக்கிறது.

நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும், உத்தமனுமாயிருக்கிறார். அவர் தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கிறார் (ஆதி 6:9). நோவா நீதிமானாயிருப்பதினால் அவருக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. தம்மை நேசிக்கிறவர்களை கர்த்தரும் நேசிக்கிறார்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினாலேயே நோவா நீதிமானாகவும், உத்தமனாகவும் இருக்கிறார். நோவாவுக்குள்ளே தேவஆவியானவர் கிரியை செய்கிறார். இதனாலேயே நோவா உத்தமனாகயிருக்கிறார். தேவனுடைய கிருபையில்லாமல் எந்த மனுஷனாலும் உத்தமனாயிருக்க முடியாது. மனுஷருடைய நற்குணங்களைவிட தேவனுடைய கிருபையே பெரிது. தேவனுடைய பெரிதான கிருபையே நோவாவை உத்தமனாக மாற்றியிருக்கிறது. நோவாவின் நீதியைவிட நோவாவை நீதிமானாக்கும். கர்த்தருடைய கிருபையே பெரிது.

"ஆகிலும் நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது" (1கொரி 15:10).

நோவா ஒரு நீதிமான். நோவா விசுவாசத்தினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருக்கிறார். நோவா வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வித்தை விசுவாசித்தார்.

"விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்து தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்" (எபி 11:7).

தேவனாகிய கர்த்தர் சில சமயங்களில் இந்தப் பூமியிலே பயித்தியமானதைத் தெரிந்துகொள்கிறார். ஆனாலும் தேவன் ஒருபோதும் அயோக்கியமானதை தெரிந்துகொள்ளமாட்டார்.

நோவா உத்தமனாயிருக்கிறார். நோவாவிடத்தில் பாவமே இல்லாத பரிபூரணமான உத்தம குணம் காணப்படவில்லை. ஆனாலும் அவர் கர்த்தரைத் தேடுவதிலும், கர்த்தருக்கு கீழ்ப்படிவதிலும் உத்தமனாயிருக்கிறார். நோவா தன் உண்மையில் உத்தமனானவர்.

தேவன் நம்மோடு கிருபையின் உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார். நாம் இயேசுகிறிஸ்துவின் நீதியை விசுவாசிக்கவேண்டும். நம்முடைய சுயநீதியை நாம் ஒருபோதும் சார்ந்து கொள்ளக்கூடாது. இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறோம். சுவிசேஷத்தின் மூலமாக நாம் உத்தமர் என்று அங்கீகரிக்கப்படுகிறோம்.

நோவா தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார். நோவாவுக்கும் தேவனுக்கும் இடையே நெருங்கிய ஐக்கியம் இருக்கிறது. நாம் கர்த்தரை விசுவாசத்தோடு நோக்கிப் பார்க்கும்போது, கர்த்தரும் தம்முடைய கிருபையின் கண்களால் நம்மை நோக்கிப் பார்க்கிறார்.

நம்மைச் சுற்றிலும் இருப்பவர்கள் எல்லோரும் விசுவாசிகளாகவும், கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்களாயும், நீதிமான்களாயும், உத்தமர்களாயும் இருக்கும்போது, நாமும் கர்த்தரை விசுவாசிப்பது இலகுவான காரியம். ஆனால் நோவாவின் காலத்திலோ மனுஷர் துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயத்தின் நினைவுகளெல்லாம் பொல்லாததாயிருக்கிறது. இப்படிப்பட்ட துன்மார்க்கமான ஜனத்தார் மத்தியிலே, நோவா நீதிமானாகவும், உத்தமனாகவும் இருக்கிறார்.

நோவா தன்னுடைய விசுவாசத்தினால், எதிர்நீச்சல் போட்டு, பரலோகத்தை நோக்கி முன்னேறிச் செல்கிறார். நோவாவின் காலத்தில் ஒருவரும் தேவனோடு சஞ்சரிக்கவில்லை. தனக்குத் துணையாக எந்த மனுஷனும் வராவிட்டாலும், நோவா கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைத்து, அவரோடுகூட சஞ்சரிக்கிறார். இக்காலத்தில் நோவா, சேம் காம் யாப்பேத் என்னும் மூன்று குமாரரைப் பெறுகிறார் (ஆதி 6:10).

சீர்கெட்ட பூமி
ஆதி 6:11,12

ஆதி 6:11. பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது.

ஆதி 6:12. தேவன் பூமியைப் பார்த்தார்; இதோ அது சீர்கெட்டதாயிருந்தது; மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள்.

நோவாவின் காலத்திலிருந்த மனுஷர் எல்லோரும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்களுடைய துன்மார்க்கத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. மனுஷர் மத்தியிலே எல்லாவிதமான பாவங்களும் காணப்படுகிறது. பூமியானது தேவனுக்கு முன்பாக சீர்கெட்டதாயிருக்கிறது. பூமி கொடுமையினால் நிறைந்திருக்கிறது. மனுஷர் மத்தியிலே நீதி காணப்படவில்லை. அவர்கள் மத்தியிலே அநீதி நிரம்பியிருக்கிறது.

துன்மார்க்கம் மனுக்குலத்திற்கு வெட்கத்தையும் அவமானத்தையும் கொடுக்கும். துன்மார்க்கத்தினால் மனுக்குலமே அழிந்துபோகும். மனுஷர் மத்தியில் கொடுமை அதிகரிக்கும்போது மனுஷருக்கு வேதனையும் அதிகரிக்கும்.

நோவாவின் காலத்தில் மனுஷர் துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சி சுத்தமாயில்லை. அவர்களிடத்தில் தேவனுக்கு பயப்படும் பயமுமில்லை. சுத்தமனச்சாட்சியும் தெய்வபயமுமில்லாத மனுஷர் பிசாசின் குணமுள்ளவர்களாகயிருப்பார்கள். அவர்களுக்கும் மிருகங்களுக்கும் வித்தியாசம் இருக்காது.

பூமியில் பாவம் அதிகரிக்கும்போது கொடுமையும் அதிகரிக்கிறது. கொடுமை அதிகரிக்கும்போது மனுஷர் சஞ்சரிக்கிற ஸ்தலம் வனாந்தர ஸ்தலம் போல மாறிவிடுகிறது. தேவன் பூமியைப் பார்க்கிறார். மனுஷருடைய துன்மார்க்கத்திற்கும், அவர்களுடைய கொடுமைக்கும் தேவனே சாட்சியாகயிருக்கிறார்.

பூமி சீர்கெட்டிருப்பதையும், அது கொடுமையினால் நிறைந்திருப்பதையும் தேவன் கண்ணோக்கிப் பார்க்கிறார். பூமியில் ஏதோ ஒரு இடத்தில் அங்கும் இங்குமாக கொடுமை காணப்பட்டது என்று இந்த வசனத்தில் சொல்லப்படவில்லை. பூமி முழுவதும் கொடுமையினால் நிறைந்திருக்கிறது. மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மனுஷர் மத்தியிலே துன்மார்க்கம் அதிகரிக்கும்போது, அவர்களுக்கு அழிவு சமீபத்திலிருக்கிறது. பூமி கொடுமையினால் நிரம்பியிருக்கும்போது, அதன் அழிவு வெகுதூரத்தில் இல்லை. அது மிகவும் சமீபத்திலிருக்கிறது.

பூமியிலே அநேகர் துன்மார்க்கராயிருக்கும்போது, அவர்கள் மத்தியிலே ஒரு சில நீதிமான்கள் கர்த்தரிடத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ணினால், கர்த்தருடைய கோபம் குறையும். அவருடைய நியாயத்தீர்ப்பு உடனே நிறைவேற்றப்படாமல் தாமதம்பண்ணப்படும். ஆனாலும் துன்மார்க்கர்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிச்சயமாகவே வரும். சீர்கெட்ட பூமி கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்காது.

பேழையை உண்டாக்கு
ஆதி 6:13-21

ஆதி 6:13. அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி: மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது; அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது; நான் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப் போடுவேன்.

ஆதி 6:14. நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு; அந்தப் பேழையிலே அறைகளை உண்டுபண்ணி, அதை உள்ளும் புறம்புமாகக் கீல்பூசு.

ஆதி 6:15. நீ அதைப் பண்ணவேண்டிய விதம் என்னவென்றால், பேழையின் நீளம் முந்நூறு முழமும், அதின் அகலம் ஐம்பது முழமும், அதின் உயரம் முப்பது முழமுமாய் இருக்க வேண்டும்.

ஆதி 6:16. நீ பேழைக்கு ஓர் ஜன்னலை உண்டு பண்ணி, மேல்தட்டுக்கு ஒரு முழத்தாழ்த்தியிலே அதைச் செய்துமுடித்து, பேழையின் கதவை அதின் பக்கத்தில் வைத்து, கீழ் அறைகளையும், இரண்டாம் தட்டின் அறைகளையும், மூன்றாம் தட்டின் அறைகளையும் பண்ணவேண்டும்.

ஆதி 6:17. வானத்தின்கீழே ஜீவசுவாசமுள்ள சகல மாம்சஜந்துக்களையும் அழிக்க நான் பூமியின்மேல் ஜலப்பிரளயத்தை வரப் பண்ணுவேன்; பூமியிலுள்ள யாவும் மாண்டுபோம்.

ஆதி 6:18. ஆனாலும் உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்; நீயும், உன்னோடே கூட உன் குமாரரும், உன் மனைவியும், உன் குமாரரின் மனைவிகளும், பேழைக்குள் பிரவேசியுங்கள்.

ஆதி 6:19. சகலவித மாம்சமான ஜீவன்களிலும் ஆணும் பெண்ணுமாக வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு உன்னுடன் உயிரோடே காக்கப்படுவதற்கு, பேழைக்குள்ளே சேர்த்துக்கொள்.

ஆதி 6:20. ஜாதிஜாதியான பறவைகளிலும், ஜாதிஜாதியான மிருகங்களிலும், பூமியிலுள்ள சகல ஜாதிஜாதியான ஊரும் பிராணிகளிலும், வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு உயிரோடே காக்கப்படுவதற்கு உன்னிடத்திலே வரக்கடவது.

ஆதி 6:21. உனக்கும் அவைகளுக்கும் ஆகாரமாகச் சகலவித போஜனபதார்த்தங்களையும் சேர்த்து, உன்னிடத்தில் வைத்துக் கொள் என்றார்.

நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் தயவு கிடைத்திருக்கிறது. கர்த்தர் நோவாவோடு ஆலோசனைபண்ணுவதுபோல பேசுகிறார்.

அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி: "மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது; அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது; நான் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப் போடுவேன்" (ஆதி 6:13) என்று சொல்லுகிறார்.

மனுஷருடைய துன்மார்க்கமும் கொடுமையும் அதிகரித்திருப்பதினால், தேவன் துன்மார்க்கர் எல்லோரையும் ஜலப்பிரளயத்தினால் அழித்துப்போட சித்தமுள்ளவராயிருக்கிறார். தேவன் நோவாவிடம் மனுஷரையும் பூமியையும் அழிக்கப்போவதாக சொல்லுகிறார்.

நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்திருப்பதினால், கர்த்தர் தம்முடைய சித்தத்தையும், திட்டத்தையும் நோவாவுக்கு அறிவிக்கிறார். நோவாவைப்போலவே ஆபிரகாமுக்கும் கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. கர்த்தர் சோதோமை அழிக்க சித்தமுள்ளவராயிருந்தார். அவர் தம்முடைய சித்தத்தை ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தினார்.

"நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?" (ஆதி 18:18). "கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்" (ஆமோ 3:7).

தேவனாகிய கர்த்தர் தம்முடைய நோக்கத்தை தீர்க்கதரிசன ஆவியின் மூலமாக தம்முடைய பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்துகிறார். எல்லா விசுவாசிகளும், விசுவாசத்தின் ஆவியினாலும், ஞானத்தின் ஆவியினாலும், தேவனுடைய இரகசியங்களை அறிந்துகொள்ளலாம்.

தேவன் இந்தப் பூமியை அழிக்கப்போவதாக நோவாவிடம் பொதுவாக சொன்னார். இக்காலத்தில் நோவா ஜனங்களுக்கு தேவனுடைய வார்த்தையை பிரசங்கம்பண்ணிக்கொண்டிருக்கிறார். நோவா கர்த்தருடைய நாமத்தினால் ஜனங்களை எச்சரிக்கிறார். இப்போது கர்த்தர் நோவாவின் மூலமாக பிரசங்கிக்கப்பட்ட செய்தியை உறுதிபண்ணுகிறார்.

தேவன் நோவாவை நோக்கி, "வானத்தின்கீழே ஜீவசுவாசமுள்ள சகல மாம்சஜந்துக்களையும் அழிக்க நான் பூமியின்மேல் ஜலப்பிரளயத்தை வரப் பண்ணுவேன்; பூமியிலுள்ள யாவும் மாண்டுபோம்" (ஆதி 6:17) என்று சொல்லுகிறார்.

தேவன் இந்தப் பூமியை ஜலப்பிரளயத்தினால் அழிக்கப்போகிறார். கர்த்தர் காரணமில்லாமல் எந்தக் காரியத்தையும் செய்யமாட்டார். கர்த்தருடைய கிரியைகளெல்லாமே நீதியும் நியாயமுமுள்ளது. ஒருவேளை கர்த்தருடைய சித்தமும், அவருடைய திட்டமும், நமக்கு அறியாத இரகசியமாயிருக்கலாம். ஆனாலும் கர்த்தர் நீதியுள்ளவர். அவருடைய கிரியைகளும் நீதியானவை.

தேவனுடைய அம்பறா துணியில் ஏராளமான அம்புகள் உள்ளன. தேவனோ தமக்குப் பிரியமான அம்பை எடுத்து, தமக்கு சித்தமான வேளையிலே, அழிவுக்கு நியமிக்கப்பட்டவர்கள்மீது எய்கிறார்.

தேவன் நோவாவிடம் "நான் அவர்களை பூமியோடுகூட அழித்துப்போடுவேன்" என்றும், "சகல மாம்ச ஜந்துக்களையும் அழிக்க நான் பூமியின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணுவேன்" என்றும் சொல்லும்போது தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிச்சயமாய் வரும் என்பதை இது உறுதிபண்ணுகிறது.

தேவன் நோவாவுடனே தம்முடைய உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார் (ஆதி 6:18). இந்த உடன்படிக்கை தேவனுடைய தெய்வீக பராமரிப்பின் உடன்படிக்கையாகும். கர்த்தர் இந்தப் பூமியை அழித்தாலும், இயற்கையின் பிரமாணம் அழியாது. ஜலப்பிரளயத்தினால் பூமியும் சகல ஜீவஜந்துக்களும் அழிந்துபோகும். ஆனாலும் முடிவு வரையிலும் இயற்கையின் பிரமாணம் இருக்கும்.

தேவன் இந்தப் பூமியிலுள்ள ஜீவஜந்துக்களையெல்லாம் ஜலப்பிரளயத்தினால் அழித்துப்போட்டாலும், பூமியிலுள்ள யாவும் மாண்டுபோனாலும், நோவாவும் அவருடைய குடும்பத்தாரும் அழிவுக்கு தப்பிக்கிறார்கள்.

"பின்னும் தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் நோக்கி: நான் உங்களோடும், உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததியோடும், உங்களோடே பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவஜந்துக்கள் முதல் இனிப் பூமியில் உண்டாகப்போகிற சகல ஜீவஜந்துக்கள் பரியந்தம், பறவைகளோடும், நாட்டு மிருகங்களோடும், உங்களிடத்தில் இருக்கிற பூமியிலுள்ள சகல காட்டு மிருகங்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்" (ஆதி 9:8-10).

இந்தப் பூமியும், பூமியிலுள்ள சிருஷ்டிகளும் ஜலப்பிரளயத்தினால் அழிந்துபோனாலும், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் ஒரு சில சிருஷ்டிகள் அழிந்துபோகாமல் இருக்கும். ஜீவனோடிருக்கிற சிருஷ்டிகளை நோவாவும் அவருடைய குடும்பத்தாரும் பராமரிக்கவேண்டும். தேவன் ஜலப்பிரளயத்தினால் சகலமாம்ச ஜந்துக்களையும் அழித்துப்போட்டாலும், அவர் அவற்றை மொத்தமாக அழித்துப்போடவில்லை. கொஞ்சம் ஜீவஜந்துக்களை உயிரோடு வைக்கிறார். இது தேவனுடைய கிருபை.

தேவன் தம்முடைய கிருபையின் உடன்படிக்கையை நோவாவோடு ஏற்படுத்துகிறார். நோவாவின் வித்திலிருந்து தேவன் தமக்கு ஒரு புதிய சந்ததியை உருவாக்குகிறார்.

கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர். கர்த்தருடைய இரக்கத்திற்கு நோவா அடையாளமாயும் சாட்சியாயும் இருக்கிறார். நோவாவின் காலத்தில் ஏராளமான ஜனங்கள் இருந்தாலும், நோவாவுக்கு மாத்திரமே கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்திருக்கிறது. நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கிறார். நோவாவின் ஜெபத்தையும் பக்தியையும் கர்த்தர் அங்கீகரிக்கிறார். நோவாவின் நிமித்தமாக கர்த்தர் அவருடைய குடும்பத்தாரை இரட்சிக்கிறார்.

கர்த்தர் நோவாவை நோக்கி, "நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு" என்று சொல்லுகிறார். பேழை என்பது வடிவத்திலே ஒரு கப்பலைப்போன்றது. இந்தக் கப்பலை பாய்மரம் கட்டியோ அல்லது துடுப்பைகளை பயன்படுத்தியோ இயக்க முடியாது. நோவா பேழையை உண்டுபண்ணி கடலிலே மிதக்கவிடவில்லை. அவர் தரையிலே பேழையை உண்டுபண்ணி வைக்கிறார். பூமியின்மீது தண்ணீர் நிரம்பும்போது இந்தப் பேழை மிதக்கும்.

கொப்பேர் மரத்தைப் பற்றி அதிகமான விவரம் எதுவும் தெரியவில்லை. கப்பல் கட்டுவதற்கு இந்த மரம் பயன்படுத்தப்படுகிறது. அழுகிப்போகாத தன்மையும், பூச்சியால் அரிக்கப்படாத தன்மையும் இந்த மரத்திற்கு உண்டு.

நோவாவின் பேழை 450 அடி நீளமும், 75 அடி அகலமும், 45 அடி உயரமும் உள்ளது. பேழை பெரியதாக இருப்பதினால் சகலவித மாம்சமான ஜீவன்களிலும் ஆணும், பெண்ணுமாக வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு பேழைக்குள்ளே எளிதாக உயிரோடே காக்கப்படுகிறது. சமுத்திரத்தின் மச்சங்கள் பேழைக்குள் இருந்திருக்காது. அவை பேழைக்கு வெளியே சமுத்திரத்திலேயே இருந்திருக்கும். பேழைக்குள் நோவாவும், அவனுடைய குடும்பத்தாரும் மாம்சமான ஜீவன்களும் ஒரு வருஷமும் 17 நாட்களும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் இத்தனை நாளுக்குமுரிய போஜனப்பொருட்களும் பேழைக்குள் இருக்கிறது.

நோவா பேழைக்கு ஓர் ஜன்னலை உண்டு பண்ணவேண்டும். ஜன்னல் என்பதற்கு இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் எபிரெய வார்த்தை "த்சோஹர்" என்பதாகும். வெளிச்சத்திற்காக உண்டாக்கப்படும் திறப்பு என்பது இதற்குப் பொருள். இது அளவில் மிகவும் பெரியதாக இருக்கும். இந்த பெரிய திறப்பிற்குள் சிறிய ஜன்னல்கள் இருக்கும். அந்த சிறிய ஜன்னலுக்கான எபிரெய வார்த்தை "கல்லோன்" என்பதாகும் (ஆதி 8:6).

நோவா பேழையை உண்டாக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். இந்தப் பேழையை உண்டாக்குவதற்கு கர்த்தர் நோவாவை தெரிந்தெடுக்கிறார். நோவாவையும் அவருடைய குடும்பத்தாரையும் ஜலப்பிரளயத்தினால் வரும் அழிவுக்கு தப்பிக்கப்பண்ணவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். கர்த்தர் நோவாவின் விசுவாசத்தையும், அவருடைய கீழ்ப்படிதலையும் சோதிக்க விரும்புகிறார்.

கர்த்தர் நோவாவுக்கு தம்முடைய சத்திய வார்த்தையைப் போதிக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே நமக்கு இரட்சிப்பு உண்டாகும். மனுஷருடைய சொந்த முயற்சியினால் அவனுடைய ஆத்துமாவுக்கு இரட்சிப்பு உண்டாகாது. ஆனாலும் நாம் இரட்சிக்கப்படுவதற்கு, நாமும் விசுவாசத்தினால் ஆயத்தமாகவேண்டும். தேவனில்லாமல் நமக்கு இரட்சிப்பு இல்லை. கர்த்தரும் நம்முடைய ஒத்துழைப்பு இல்லாமல் நம்மை இரட்சிக்கமாட்டார்.

கர்த்தர் நோவாவிடம் பேழையை உண்டாக்குமாறு சொல்லுகிறார். பேழையின் எல்லா அம்சங்களையும் கர்த்தர் அவருக்கு தெளிவுபடுத்துகிறார். நோவா இந்தப் பேழையை கெப்பேர் மரத்தால் உண்டாக்கவேண்டும். இந்தப் பேழையில் மூன்று தட்டுகள் இருக்கவேண்டும். ஒவ்வொரு தட்டிலும் அநேக அறைகள் தடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

பேழையிலுள்ள எல்லா இடமும் பயன்படுத்தப்படும். பேழையிலே ஏராளமான ஜீவஜந்துக்கள் கூட்டிச் சேர்க்கப்படுகிறது. அவற்றுக்கெல்லாம் தனித்தனியாக அறை வசதிகள் உண்டுபண்ணப்படவேண்டும். பேழையிலே பயன்படுத்தப்படாத இடம் என்று எதுவுமே இருக்காது.

கர்த்தர் நோவாவிடம் பேழையை உண்டுபண்ணவேண்டிய விதத்தையும் சொல்லுகிறார். பேழையின் நீளம் முந்நூறு முழமும், அதின் அகலம் ஐம்பது முழமும், அதின் உயரம் முப்பது முழமுமாய் இருக்க வேண்டும் (ஆதி 6:15).

கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்கள், தாங்கள் செய்யவேண்டிய ஊழியத்தின் அளவுகளையும், விவரங்களையும் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தர் சொன்ன பிரகாரம் கவனமாய் ஊழியம் செய்யவேண்டும்.

நோவா அந்தப் பேழையிலே அறைகளை உண்டுபண்ணி, உள்ளும் புறம்புமாக கீல் பூசவேண்டும். பேழையிலுள்ள அறைகளின் கதவுகள் உள்புறமாகவும் திறக்கும், வெளிப்புறமாகவும் திறக்கும். கதவுகளை உள்புறமாக அடைத்துவிட்டால், வெளியே பெய்கிற மழைத்தண்ணீர் பேழைக்குள்ளே வராது. கதவுகளை வெளிப்புறமாக திறந்துவிட்டால், பேழைக்குள்ளே தங்கியிருக்கிற ஜீவஜந்துக்களின் வாசனைகளெல்லாம் வெளியேறும். எல்லா ஜீவஜந்துக்களும் பேழைகளிலுள்ள அறைகளில் அடைக்கப்பட்டிருக்கிறது. விலங்குகளின் நாற்றம் வெளியேறவேண்டும். அப்போதுதான் நோவாவும் அவருடைய குடும்பத்தாரும் சுத்தமான காற்றை சுவாசம்பண்ண முடியும்.

நோவா பேழைக்கு ஓர் ஜன்னலை உண்டு பண்ணி, மேல்தட்டுக்கு ஒரு முழத்தாழ்த்தியிலே அதைச் செய்துமுடித்து, பேழையின் கதவை அதின் பக்கத்தில் வைக்கவேண்டும். அவர் கீழ் அறைகளையும், இரண்டாம் தட்டின் அறைகளையும், மூன்றாம் தட்டின் அறைகளையும் பண்ணவேண்டும் (ஆதி 6:16).

கர்த்தர் பூமியையும், பூமியிலுள்ள சகல ஜீவஜந்துக்களையும் அழிக்கவேண்டுமென்று சித்தங்கொண்டிருக்கிறார். கர்த்தர் நோவாவை நோக்கி, "வானத்தின்கீழே ஜீவசுவாசமுள்ள சகல மாம்சஜந்துக்களையும் அழிக்க நான் பூமியின்மேல் ஜலப்பிரளயத்தை வரப் பண்ணுவேன்; பூமியிலுள்ள யாவும் மாண்டுபோம்" (ஆதி 6:17) என்று சொல்லுகிறார்.

பூமியிலுள்ள யாவும் மாண்டுபோனாலும், கர்த்தர் நோவாவையும் அவருடைய குடும்பத்தாரையும் உயிரோடு பாதுகாப்பதாக வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் நோவாவோடு உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார். நோவாவும், அவருடைய மனைவியும், அவருடைய மூன்று குமாரரும். மூன்று குமாரரின் மனைவிகளும் பேழைக்குள் பிரவேசிக்கவேண்டும்.

தேவன் நோவாவைப் பேழையை உண்டு பண்ணச் சொல்லும்போது, நோவாவின் குமாரர்கள் பெரியவர்களாகவும், திருமணமானவர்களாகவும் இருக்கிறார்கள். ஜலப்பிரளயத்திற்கு இரண்டு வருஷத்திற்குப் பின்பு, நோவாவின் குமாரனான சேமிற்கு 100 வயதாகிறது. நோவா 120 வருஷங்களாக பேழையை உண்டு பண்ணினார் என்று ஒருசிலர் கூறுகிறார்கள். சேமின் வயதைக் கணக்கு பார்க்கும்போது இவ்வாறு கூறுவதற்கு வாய்ப்பில்லை (ஆதி 8:18).

பெற்றோர் நல்லவர்களாகயிருப்பார்களென்றால், அவர்கள் தங்களுடைய இரட்சிப்பில் கவனம் செலுத்துவதுபோல, தங்களுடைய குடும்பத்தாரின் இரட்சிப்பிலும் கவனம் செலுத்துவார்கள். முழுக்குடும்பமாய் கர்த்தரை ஆராதிக்கவேண்டுமென்று பிரியப்படுவார்கள்.

பெற்றோர் கர்த்தருக்கு பயந்து, கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்களாயிருக்கும்போது, அவர்கள் தங்கள் பிள்ளைகளையும் கர்த்தருக்கு பயந்து வளர்ப்பார்கள். பிள்ளைகளின் சந்தோஷமே பெற்றோரின் சந்தோஷமாயிருக்கும். கர்த்தர் பெற்றோரின் பக்தியையும் ஜெபத்தையும் அங்கீகரித்து, அவர்களுடைய பிள்ளைகளுக்கு தம்முடைய இரட்சிப்பின் கிருபையை வெளிப்படுத்துகிறார். பிள்ளைகள் கர்த்தருடைய விசேஷித்த கிருபைகளை பயன்படுத்தி, தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்திலே வளர்ச்சி பெறவேண்டும்.

கர்த்தர் நோவாவுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார். நோவாவின் மூலமாய் அவருடைய குடும்பத்தாருக்கும், அநேக ஜீவஜந்துக்களுக்கும் ஆசீர்வாதம் கடந்து வருகிறது. அவர்களெல்லோரும் அழிவுக்கு தப்பிக்கிறார்கள். நோவா இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார்.

நோவா தன்னுடைய காலத்தில் வாழ்ந்த ஜனங்களுக்கு கர்த்தருடைய வார்த்தையையும், அவருடைய நீதியான நியாயத்தீர்ப்பையும் பிரசங்கம்பண்ணுகிறார். கர்த்தரே நோவாவை போதகராக நியமித்திருக்கிறார்.

ஏராளமான ஜீவஜந்துக்கள் மரித்துப்போகாமல் இரட்சிக்கப்படுவதற்கு நோவா காரணமாயிருக்கிறார். கர்த்தர் நோவாவை நோக்கி, "சகலவித மாம்சமான ஜீவன்களிலும் ஆணும் பெண்ணுமாக வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு உன்னுடன் உயிரோடே காக்கப்படுவதற்கு, பேழைக்குள்ளே சேர்த்துக்கொள்" (ஆதி 6:19) என்றும்,

"ஜாதிஜாதியான பறவைகளிலும், ஜாதிஜாதியான மிருகங்களிலும், பூமியிலுள்ள சகல ஜாதிஜாதியான ஊரும் பிராணிகளிலும், வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு உயிரோடே காக்கப்படுவதற்கு உன்னிடத்திலே வரக்கடவது" (ஆதி 6:20) என்றும் சொல்லுகிறார்.

எல்லா உயிரினங்களையும் மறுபடியுமாக ஜெநிப்பிக்க வைப்பதற்கு இவை போதுமானது. (ஆதி 7:2). தேவனுடைய பலுகிப்பெருகும் பிரமாணம் இன்னும் அமுலில் இருக்கிறது. பேழைக்குள் சுத்தமான மிருகங்களும், சுத்தமில்லாத மிருகங்களும் இருக்கிறது (ஆதி 1:11).

நோவா அந்த ஜீவஜந்துக்களை பேழைக்குள்ளே சேர்த்துக்கொள்ளவில்லையென்றால், அவையெல்லாம் ஜலப்பிரளயத்தில் மூழ்கி அழிந்துபோகும். பேழைக்குள் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஜீவஜந்துக்களுக்கு போஜனம்வேண்டும். கர்த்தர் நோவாவை நோக்கி, "உனக்கும் அவைகளுக்கும் ஆகாரமாகச் சகலவித போஜனபதார்த்தங்களையும் சேர்த்து, உன்னிடத்தில் வைத்துக் கொள்" (ஆதி 6:21) என்று சொல்லுகிறார்.

நோவா ஜீவஜந்துக்களுக்கு போஜனம் கொடுக்கவில்லையென்றால், அவை பேழைக்குள்ளே இருந்தாலும், அங்கே பட்டினியால் செத்துப்போகும். நோவா கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். கிறிஸ்துவானவர் நம்முடைய தேவைகளையெல்லாம் சந்திக்கிறார். நம்மைப் போஷித்து பராமரிக்கிறார்.

மனுக்குலம் பாவத்தினால் முற்றிலும் அழிந்துபோகாதபடிக்கு, இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மனுஷருடைய ஆத்துமாக்களை இரட்சித்து மனுக்குலத்தை காப்பாற்றுகிறார். நோவா ஜீவஜந்துக்களுக்கு ஆகாரம் கொடுத்து, அவற்றை இரட்சித்து, அவற்றை ஆளுகை செய்யவேண்டும். கிறிஸ்துவானவர் நம்முடைய ஆத்துமாக்களை இரட்சித்து, நம்மை ஆளுகை செய்கிறார்.

"அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி, மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்" (எபி 5:8-10).

நோவா செய்து முடிக்கிறார் ஆதி 6:22

ஆதி 6:22. நோவா அப்படியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்.

கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே நோவா கொப்பேர் மரத்தால் பேழையை உண்டாக்குகிறார். பேழையின் அளவுகளெல்லாம் கர்த்தர் சொன்ன பிரகாரம் இருக்கிறது. தேவன் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் நோவா செய்து முடிக்கிறார்.

நோவா கர்த்தருடைய வார்த்தையை நம்புகிறார். அவர் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார். கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் நோவா செய்து முடித்தது, கர்த்தருடைய கட்டளைக்கு அவர் கீழ்ப்படிவதற்கு அடையாளம்.

நோவா பேழையை உண்டாக்கும்போது மழை பெய்யவில்லை. அவர் பேழையை உண்டாக்கும் வேலையை செய்யும்போது, அவருடைய உற்றார் உறவினர்கள் எல்லோரும் அவரை பரியாசம் செய்திருப்பார்கள். அவர் எல்லோருடைய ஏளனப்பேச்சுக்கும், பரியாச வார்த்தைக்கும் ஆளாகியிருப்பார். குடிகாரர்கள்கூட நோவாவை கேலி செய்திருப்பார்கள். நோவாவோ அவர்களுடைய கேலிப்பேச்சுக்கு செவிகொடுக்கவில்லை. அவர் கர்த்தருடைய கட்டளைக்கு செவிகொடுத்து, அதற்கு மாத்திரம் கீழ்ப்படிகிறார்.

நோவா விசுவாசத்தினால் பேழையை உண்டுபண்ணி முடிக்கிறார். கர்த்தர் சொன்ன பிரகாரம் அவர் பேழையை செய்திருக்கிறார். கர்த்தர் சொன்ன அளவுகளின் பிரகாரமும், மாதிரி வடிவத்தின் பிரகாரமும், நோவா பேழையை உண்டாக்கி முடித்திருக்கிறார்.

விசுவாசிகளாகிய நமக்கு நோவா முன்உதாரணமாயிருக்கிறார். கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் நோவா செய்து முடித்ததுபோல, நாமும் கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஊழியங்களை உண்மையாய் நிறைவேற்றவேண்டும். கிறிஸ்துவானவர் கல்வாரி சிலுவையிலே "எல்லாம் முடிந்தது" என்று சொன்னதுபோல, நாமும் நம்முடைய ஊழியப்பொறுப்புக்களை முடிக்கவேண்டும்.

நோவா விசுவாசத்தினால் பேழையை கட்ட ஆரம்பித்தார். அந்த வேலையை அவர் தொடர்ந்து செய்ய முடியாதபடிக்கு, அவருக்கு அநேக பிரச்சனைகள் உண்டாயிற்று. ஆனாலும் கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே, அவர் பேழையை உண்டாக்கி முடித்தார். அதுபோலவே நமக்கும் ஊழியத்திலே பிரச்சனைகளும், எதிர்ப்புக்களும் வந்தாலும், நாம் கர்த்தரையே நோக்கிப் பார்த்து, கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஊழியத்தை செய்து முடிக்கவேண்டும்.

நாம் கர்த்தரை சந்திப்பதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும். நாம் மரிக்கும்போது கர்த்தருடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கவேண்டும். நாம் மரிப்பதற்கும், மரித்த பின்பு தேவனால் நியாயந்தீர்க்கப்படுவதற்கும், நாம் நம்மை ஆயத்தம்பண்ணவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் கிறிஸ்துவின்மீது கட்டியெழுப்பப்படவேண்டும்.

"ஆகையால் நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்" (மத் 7:24).

நோவாவின் காலத்தில் பூமியின்மேல் ஜலப்பிரளயம் உண்டாயிற்று. இது தேவனுடைய நியாயத்தீர்ப்பு. பேழைக்குள் பிரவேசித்தவர்கள் எல்லோரும் பிழைத்துக்கொண்டார்கள்.

கிறிஸ்துவானவரே நமக்கு பேழையாக இருக்கிறார். நாம் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டால் நாமும் அழிவுக்கு தப்பித்துக்கொள்வோம்.

நோவா பேழையை செய்தபோது, அவர் உளிகளையும், சுத்திகளையும் பயன்படுத்தியிருப்பார். ஜனங்கள் எல்லோரும் அவர் பயன்படுத்தின கருவிகளின் சத்தத்தைக் கேட்டிருப்பார்கள். அது சாதாரண சத்தமல்ல. அந்த சத்தம் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட எச்சரிப்பின் சத்தம். இக்காலத்திலும் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தையும், தேவனுடைய நியாயத்தீர்ப்பையும் நமக்கு பிரசங்கம்பண்ணுகிறார்கள். நாம் கர்த்தருடைய எச்சரிப்பின் சத்தத்தை அசட்டை செய்துவிடக்கூடாது. நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும். நாம் நம்முடைய பேழையாகிய கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளவேண்டும்.

7 அதிகாரம்

கர்த்தர் இந்தப் பூமியையும், இந்தப் பூமியிலுள்ள ஜீவஜந்துக்களையும் அழிக்கப்போவதாக சொன்னார். அதன் பிரகாரம் கர்த்தர் ஜலப்பிரளயத்தினால் அவற்றை அழிக்கிறார். நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்ததினால், அவர் இரட்சிக்கப்படுகிறார்.

கர்த்தர் நோவாவையும் அவருடைய வீட்டாரையும் பேழைக்குள் பிரவேசிக்குமாறு சொல்லுகிறார் (ஆதி 7:1) நோவா தனக்கு கர்த்தர் கட்டளையிட்டபடியெல்லாம் செய்கிறார் (ஆதி 7:5). நோவாவும், அவருடைய குடும்பத்தாரும், ஜீவஜந்துக்களும் பேழைக்குள் பிரவேசிக்கிறார்கள் (ஆதி 7:13-16).

பூமியின்மேல் ஜலப்பிரளயம் உண்டாயிற்று (ஆதி 7:10). ஜலப்பிரளயம் உண்டான விதம் (ஆதி 7:11,12). ஜலப்பிரளயத்தினால் நரஜீவன்களும், பூமியின்மேல் சஞ்சரிக்கிறவைகள் யாவும் மாண்டன (ஆதி 7:17-20). ஜலம் பூமியின்மேல் நூற்றைம்பதுநாள் பிரவாகித்துக்கொண்டிருக்கிறது (ஆதி 7:24).

பேழைக்குள் பிரவேசியுங்கள் ஆதி 7:1-4

ஆதி 7:1. கர்த்தர் நோவாவை நோக்கி: நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்; இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன்.

ஆதி 7:2. பூமியின்மீதெங்கும் வித்தை உயிரோடே காக்கும்பொருட்டு, நீ சுத்தமான சகல மிருகங்களிலும், ஆணும் பெண்ணுமாக எவ்வேழு ஜோடும், சுத்தமல்லாத மிருகங்களில் ஆணும் பெண்ணுமாக ஒவ்வொரு ஜோடும்.

ஆதி 7:3. ஆகாயத்துப் பறவைகளிலும், சேவலும் பேடுமாக எவ்வேழு ஜோடும் உன்னிடத்தில் சேர்த்துக்கொள்.

ஆதி 7:4. இன்னும் ஏழுநாள் சென்றபின்பு, நாற்பதுநாள் இரவும் பகலும் பூமியின்மேல் மழையை வருஷிக்கப்பண்ணி, நான் உண்டாக்கின ஜீவஜந்துக்கள் அனைத்தையும் பூமியின்மேல் இராதபடிக்கு நிக்கிரகம் பண்ணுவேன் என்றார்.

கர்த்தர் நோவாவையும், அவருடைய வீட்டாரையும் பேழைக்குள் பிரவேசிக்குமாறு அன்போடு அழைக்கிறார். தகப்பன் தன்னுடைய பிள்ளைகளை வீட்டிற்குள் அன்போடு அழைப்பதுபோல, கர்த்தர் அவர்களை அன்போடு அழைக்கிறார்.

வீட்டிற்கு வெளியே இடியும், மின்னலும், புயல்காற்றும் இருக்கும்போது, தகப்பன் தன் பிள்ளைகளை வீட்டிற்குள்ளே வருமாறு அழைப்பார். வீட்டிற்கு வெளியே ஆபத்து இருக்கிறது. வீட்டிற்குள்ளே பாதுகாப்பு இருக்கிறது. பேழைக்கு வெளியே ஜலப்பிரளயம் இருக்கிறது. பேழைக்குள்ளே பாதுகாப்பு இருக்கிறது.

கர்த்தர் நோவாவையும் அவருடைய வீட்டாரையும் அழைக்கும் வார்த்தையிலேயே அவருடைய அன்பு வெளிப்படுகிறது. கர்த்தர் அவர்களைப் பார்த்து, "பேழைக்குள் போங்கள்" என்று சொல்லாமல், "பேழைக்குள் வாருங்கள்" என்று பொருள்படும் படியாக, "பேழைக்குள் பிரவேசியுங்கள்" என்று அழைக்கிறார்.

நோவாவும் அவருடைய வீட்டாரும் பேழைக்குள் பிரவேசிக்கும்போது கர்த்தரும் அவர்களுடனேகூட அங்கே பிரவேசிப்பார். கர்த்தர் அவர்களை பேழைக்குள் பிரவேசிப்பதற்கு வழிநடத்துகிறார். கர்த்தர் பேழைக்குள்ளே அவர்களோடு கூடப்போகிறார். ஜலப்பிரளயத்தின் ஆபத்து முடிந்த பின்பு, கர்த்தர் அவர்களை பேழைக்கு வெளியே பாதுகாப்பாக அழைத்து வருவார்.

நோவா கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் செய்திருக்கிறார். நோவாவின் பேழை பார்ப்பதற்கு ஒரு சிறைச்சாலையைப்போல இருக்கிறது. ஆனால் அது அவருக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும், அவர்களோடு கூடயிருக்கிற ஜீவஜந்துக்களுக்கும் சிறைச்சாலையல்ல. அது ஒரு அடைக்கலப்பட்டணம். அவர்களுக்கு நோவாவின் பேழை ஒரு மாளிகையைப்போல இருக்கிறது.

கர்த்தர் நோவாவை நோக்கி, "நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்" என்று அன்போடு அழைக்கிறார். இந்த அழைப்பு கிறிஸ்துவானவர் பாவிகளை அன்போடு அழைப்பதுபோல இருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பாவிகள் எல்லோரையும் பார்த்து, "வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று அன்போடு அழைக்கிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஏற்கெனவே ஆயத்தம்பண்ணப்பட்ட பேழையைப்போல் இருக்கிறார். நமக்கு மரணமும் நியாயத்தீர்ப்பும் வரும்போது, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவில் மாத்திரமே நமக்கு பாதுகாப்பு உள்ளது. அவரே நமக்கு அடைக்கலமானவர்.

கர்த்தர் நோவாவை பேழைக்குள் பிரவேசிக்குமாறு அழைப்பதற்கு ஒரு காரணமுள்ளது. கர்த்தர் நோவாவை இந்த சந்ததியில் தமக்கு முன்பாக நீதிமானாகக் காண்கிறார். மனுஷர் முன்பு நீதிமானாயிருக்கிறவர்கள் தேவனுடைய பார்வையிலும் நீதிமானாயிருப்பார்கள். மனுஷனால் தேவனை வஞ்சிக்க முடியாது. மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ மனுஷனுடைய இருயத்தை ஆராய்ந்து அறிகிறார். மனுஷனால் கர்த்தருக்கு முன்பாக மாய்மாலம்பண்ணி அவரை ஏமாற்ற முடியாது.

கர்த்தர் நோவாவின் நீதியையும் அவருடைய உத்தம குணத்தையும் காண்கிறார். நோவா தமக்கு முன்பாக நீதிமானாயிருப்பதைப் பார்த்து கர்த்தர் சந்தோஷப்படுகிறார். "இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன்" என்று கர்த்தர் நோவாவிடம் சந்தோஷமாய்ச் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடையவர்களை அறிந்திருக்கிறார்.

கர்த்தர் நோவாவின் நீதிக்கும் உத்தமகுணத்திற்கும் சாட்சியாயிருக்கிறார். நோவாவின் நீதிக்கு சாட்சியாயிருக்கிற கர்த்தர், தம்முடைய பிள்ளைகள் எல்லோருடைய நீதிக்கும் சாட்சியாயிருப்பார். நியாயத்தீர்ப்பு நாளிலே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நமக்காக பரிந்து பேசுவார். நம்முடைய நீதிக்கும் உத்தமகுணத்திற்கும் சாட்சி சொல்லுவார்.

ஜனங்கள் துன்மார்க்கராயிருக்கும்போது, காலங்கள் அக்கிரமம் நிரம்பியதாயிருக்கும்போது, இடங்களும் பாவம் நிரம்பியதாயிருக்கும்போது அவற்றிற்கு மத்தியில் நீதிமான்களாயிருக்கிறவர்களைப் பார்த்து கர்த்தர் சந்தோஷப்படுகிறார். கர்த்தர் நீதிமான்கள்மீது பிரியமாயிருக்கிறார்.

பூமி முழுவதிலும் அக்கிரமம் நிரம்பியிருக்கும்போது அவர்கள் மத்தியிலே ஒருவன் கர்த்தருக்கு பரிசுத்தமாய் ஜீவித்தால்கூட, கர்த்தர் அவன்மீதும் பிரிமாயிருப்பார். பொதுவான அழிவு வரும்போது கர்த்தர் தம்முடைய பரிசுத்தவானைப் பாதுகாப்பார்.

கர்த்தர் நோவாவையும், அவருடைய வீட்டாரையும் ஜலப்பிரளயத்திலிருந்து பாதுகாக்கவேண்டுமென்று சித்தமுள்ளவராயிருக்கிறார். அவர்களோடுகூட ஜீவஜந்துக்களையும் உயிரோடு பாதுகாக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

மனுஷருக்கு எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லுவதுபோல, மிருகங்களுக்கு எச்சரிப்பின் வார்த்தைகள் சொல்ல முடியாது. மிருகங்களை எச்சரித்தாலும் அவை செவிகொடுக்காது. ஆகையினால் ஜீவஜந்துக்களை பேழைக்குள் அழைத்து வரும் பொறுப்பை கர்த்தர் நோவாவிடம் ஒப்புக்கொடுக்கிறார். ஜீவஜந்துக்கள் நோவாவின் ஆளுகையிலிருக்கிறது. ஆகையினால் அவை நோவாவின் பாதுகாப்பிலிருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிற்று.

கர்த்தர் நோவாவை நோக்கி, "பூமியின்மீதெங்கும் வித்தை உயிரோடே காக்கும்பொருட்டு, நீ சுத்தமான சகல மிருகங்களிலும், ஆணும் பெண்ணுமாக எவ்வேழு ஜோடும், சுத்தமல்லாத மிருகங்களில் ஆணும் பெண்ணுமாக ஒவ்வொரு ஜோடும். ஆகாயத்துப் பறவைகளிலும், சேவலும் பேடுமாக எவ்வேழு ஜோடும் உன்னிடத்தில் சேர்த்துக்கொள்" *(ஆதி 7:2,3)* என்று சொல்லுகிறார்.

சுத்தமான மிருகங்கள் தேவனுக்குப் பலியிட பயன்படும். சுத்தமில்லாத மிருகங்கள் இனவிருத்திக்காகப் பயன்படும். *(ஆதி 6:19; ஆதி 7:2)*. லேவி 11, உபா 14 ஆகிய அதிகாரங்களில் பலி மிருகங்களைப் பற்றிய மோசேயின் பிரமாணத்தில் சுத்தமான மிருகங்களைப் பற்றியும், சுத்தமல்லாத மிருகங்களைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. பலியைப் பற்றிய கருத்து இந்தக் காலத்திலேயே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

பூமியின்மீது வெள்ளம் சீக்கிரத்தில் வரப்போகிறது. "இன்னும் ஏழுநாள் சென்றபின்பு, நாற்பதுநாள் இரவும் பகலும் பூமியின்மேல் மழையை வருஷிக்கப்பண்ணி, நான் உண்டாக்கின ஜீவஜந்துக்கள் அனைத்தையும் பூமியின்மேல் இராதபடிக்கு நிக்கிரகம் பண்ணுவேன்" *(ஆதி 7:4)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் நிக்கிரகம்பண்ணும் கிரியையை செய்வதற்கு இன்னும் ஏழுநாட்கள் இருக்கிறது. கர்த்தர் நோவாவின் காலத்திலுள்ள ஜனங்களுக்கு ஏழுநாள் அவகாசம் கொடுக்கிறார். இது கிருபையின் காலம். ஜனங்கள் இந்த நாட்களை பிரயோஜனப்படுத்தி, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். ஆனால் கர்த்தர் கிருபையாய்க் கொடுத்த ஏழுநாட்களினால், ஜனங்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை. ஜனங்கள் கர்த்தருடைய பொறுமையை அசட்டைபண்ணுகிறார்கள். அவருடைய பொறுமை வீணாய்ப்போயிற்று.

ஏழுநாள் சென்றது. அதன் பின்பு, கர்த்தர் ஏற்கெனவே சொன்ன பிரகாரம், இந்தப் பூமியின்மேல் நாற்பதுநாள் இரவும் பகலும் மழை பெய்கிறது. மழை பெய்யும் வரையிலும் ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தையை அசட்டைபண்ணுகிறார்கள். அவர்கள் தங்களுக்கு ஆபத்து வராது என்று அதுவரையிலும் இருமாப்பாய் நினைக்கிறார்கள். மழை வருவதற்கு வாய்ப்பே இல்லை என்று தீர்மானமாய்ச் சொல்லுகிறார்கள்.

ஆனால் கர்த்தர் சொன்ன பிரகாரம், ஏழுநாள் சென்றபின்பு, பூமியின்மேல் மழை பெய்கிறது. அந்த மழை நாற்பது நாள் இரவும் பகலும் பூமியின்மேல் பெய்கிறது.

நோவா கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளை ஜனங்களுக்கு சொன்னார். மழை பெய்வதற்கு இன்னும் ஏழுநாள் ஆகும் என்று சொன்னதினால், ஜனங்கள் தங்கள் பாவங்களுக்கு உடனே மனந்திரும்பாமல், மனந்திரும்புவதை தள்ளிப்போடுகிறார்கள். அப்போது மழை பெய்வதற்கான அறிகுறி எதுவுமில்லை. அதற்கான அடையாளம் வானத்தில் காணப்படவில்லை. ஆகையினால் ஜனங்கள் நிர்விசாரமாய் ஜீவிக்கிறார்கள்.

ஆபத்து அருகாமையிலிருக்கிறது என்று நோவா ஜனங்களை எச்சரிக்கிறார். ஆனால் ஜனங்களோ எச்சரிப்பின் வார்த்தைக்கு செவிகொடுக்கமறுக்கிறார்கள். அவர்கள் துணிகரமாக தொடர்ந்து பாவம் செய்கிறார்கள்.

நோவா கீழ்ப்படிகிறார்
ஆதி 7:5-10

ஆதி 7:5. நோவா தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியெல்லாம் செய்தான்.

ஆதி 7:6. ஜலப்பிரளயம் பூமியின்மேல் உண்டானபோது, நோவா அறுநூறு வயதாயிருந்தான்.

ஆதி 7:7. ஜலப்பிரளயத்துக்குத் தப்பும்படி நோவாவும் அவனுடனேகூட அவன் குமாரரும், அவன் மனைவியும், அவன் குமாரரின் மனைவிகளும் பேழைக்குள் பிரவேசித்தார்கள்.

ஆதி 7:8. தேவன் நோவாவுக்குக் கட்டளையிட்டபடியே, சுத்தமான மிருகங்களிலும், சுத்தமல்லாத மிருகங்களிலும், பூமியின் மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிலும்,

ஆதி 7:9. ஆணும் பெண்ணும் ஜோடுஜோடாக நோவாவிடத்தில் பேழைக்குட்பட்டன.

ஆதி 7:10. ஏழுநாள் சென்றபின்பு பூமியின்மேல் ஜலப்பிரளயம் உண்டாயிற்று.

நோவா தனக்கு கர்த்தர் கட்டளையிட்டபடியெல்லாம் செய்கிறார். இன்னும் ஏழுநாள் சென்றபின்பு, நாற்பதுநாள் இரவும் பகலும் பூமியின்மேல் மழை பெய்யும் என்று கர்த்தர் சொன்னார். மேலும் கர்த்தர் நோவாவை நோக்கி, "நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்" என்றும் சொன்னார். நோவா தனக்கு கர்த்தர் கட்டளையிட்டபடியெல்லாம் செய்கிறார்.

நோவா பேழைக்குள் பிரவேசிக்கும்போது மழை பெய்வதற்கான அறிகுறி எதுவும் வானத்தில் காணப்படவில்லை. மழை பெய்யும் என்பதற்கு பிரத்தியட்சமான அடையாளம் எதுவும் தெரியவில்லை. ஆனாலும் நோவா கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்து, பேழைக்குள் பிரவேசிக்கிறார்.

கர்த்தர் நோவாவுக்கு எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லியிருக்கிறார். கர்த்தர் சொன்ன எச்சரிப்பான காரியங்கள் உடனே நடைபெறாவிட்டாலும், அது கர்த்தருக்கு சித்தமான வேளையிலே நடைபெறும் என்று விசுவாசித்து, நோவாவும் அவருடைய வீட்டாரும் பேழைக்குள் பிரவேசிக்கிறார்கள். நோவா ஒவ்வொரு காரியத்தையும் தரிசித்து செய்யாமல், விசுவாசித்து செய்கிறார்.

ஜலப்பிரளயம் பூமியின்மேல் உண்டானபோது, நோவா அறுநூறு வயதாயிருக்கிறார். ஜலப்பிரளயத்துக்குத் தப்பும்படி நோவாவும் அவருடனேகூட அவர் குமாரரும், அவர் மனைவியும், அவர் குமாரரின் மனைவிகளும் பேழைக்குள் பிரவேசிக்கிறார்கள் (ஆதி 7:6,7). நோவோடுகூட பேழைக்குள் பிரவேசித்தவர்கள் அவருடைய சொந்த வீட்டார் மாத்திரமல்ல, அவர்கள் இனிமேல் வரப்போகிற மனுக்குலத்திற்கு பிரதிநிதிகளாயிருக்கிறார்கள். இனிமேல் வரப்போகிற காலத்தில், இவர்கள் மூலமாக, மனுஷர் பூமியிலே பலுகிப் பெருகுவார்கள்.

தேவன் நோவாவுக்குக் கட்டளையிட்டபடியே, சுத்தமான மிருகங்களிலும், சுத்தமல்லாத மிருகங்களிலும், பூமியின் மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிலும், ஆணும் பெண்ணும் ஜோடுஜோடாக நோவாவிடத்தில் பேழைக்குட்படுகிறது. ஏழுநாள் சென்றபின்பு பூமியின்மேல் ஜலப்பிரளயம் உண்டாயிற்று (ஆதி 7:8-10).

பெருமழை பெய்கிறது ஆதி 7:11,12

ஆதி 7:11. நோவாவுக்கு அறுநூறாம் வயதாகும் வருஷம் இரண்டாம் மாதம் பதினேழாம் தேதியாகிய அந்நாளிலே, மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளந்தன; வானத்தின் மதகுகளும் திறவுண்டன.

ஆதி 7:12. நாற்பதுநாள் இரவும் பகலும் பூமியின்மேல் பெருமழை பெய்தது.

இன்னும் ஏழுநாள் சென்றபின்பு பூமியின்மேல் மழை பெய்யும் என்று கர்த்தர் சொன்னார். கர்த்தர் சொன்ன பிரகாரமாக பூமியின்மேல் பெருமழை பெய்கிறது. மழை பெய்ய ஆரம்பித்த நாள் இந்த வசனத்தில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

நோவாவுக்கு அறுநூறாம் வயதாகும் வருஷம் இரண்டாம் மாதம் பதினேழாம் தேதியாகிய அந்நாளிலே, மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளக்கிறது; வானத்தின் மதகுகளும் திறவுண்கிறது (ஆதி 7:11).

பூர்வகாலத்தின் வருஷங்கள் இராட்சதரின் ஆளுகைகளை ஆதாரமாக வைத்து கணக்கிடப்படவில்லை. அவை முற்பிதாக்களின் காலங்களை வைத்து கணக்கிடப்படுகிறது. பூமியின் ராஜாக்களைவிட, பரிசுத்தவான்களே கர்த்தருக்கு விசேஷமானவர்கள். பூமியின்மேல் மழை பெய்யும்போது நோவாவுக்கு அறுநூறு வயதாயிற்று. சாதாரணமாக மனுஷர் வாழும் வயதைவிட, நோவாவின் வயது மிகவும் அதிகம்.

நாம் இந்தப் பூமியில் அதிகமான வருஷங்கள் ஜீவிக்கும்போது, இந்தப் பூமியின்மீது வரும் துன்பங்களையும், பாடுகளையும், வேதனைகளையும் நாம் அதிகமாய்ப் பார்ப்போம். கர்த்தர் சில சமயங்களில் தம்முடைய பரிசுத்தவான்களுக்கு அதிகமான சோதனைகளைக் கொடுக்கிறார். அவர்களுடைய பொறுமையை சோதிப்பதற்காக கர்த்தர் அவர்களை உபத்திரவத்தின் பாதையிலே நடத்துகிறார்.

ஆதித்திருச்சபையின் தலைவர்கள் சாகும் வரையிலும் பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்தார்கள். அவர்களுக்கு மரணம் வந்தபோதுதான், அவர்களுக்கு உபத்திரவங்களிலிருந்து விடுதலை உண்டாயிற்று. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் இந்தப் பூமியில் ஜீவிக்கும் காலமெல்லாம் உபத்திரவங்களை அனுபவித்தாலும், அவர்கள் பரலோகத்திலே கர்த்தரோடு கூடயிருந்து உன்னதமான ஆசீர்வாதங்களை அனுபவிப்பார்கள்.

நோவாவும் அவருடனேகூட அவருடைய வீட்டாரும் பேழைக்குள் பிரவேசிக்கிறார்கள். அந்த நாளில்தானே, நாற்பது நாள் இரவும் பகலும் பூமியின்மேல் பெருமழை பெய்கிறது. மனுஷர் துன்மார்க்கமாய் ஜீவிக்கிறார்கள். அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. கர்த்தர்மீது பக்தியில்லாதவர்களும், கர்த்தரை நம்பாதவர்களும் பெருவெள்ளத்திலே அழிந்துபோகிறார்கள்.

அந்நாளிலே மகாஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளக்கிறது. ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தபோது, வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்று சொன்னார். அது அப்படியே ஆயிற்று (ஆதி 1:9). இப்போது மறுபடியுமாக ஜலம் பூமியை நிரப்புகிறது.

வானத்தின் மதகுகளும் திறவுண்கிறது. ஆகாயவிரிவிலே இருக்கிற ஜலமெல்லாம் பூமியின்மீது இறங்கி வருகிறது. பொதுவாக மழை பெய்யும்போது, மழை துளிகளாக பெய்யும். ஆனால் நோவாவின் காலத்திலோ வானத்தின் மதகுகள் திறவுண்கிறது. வானத்திலிருந்து பெருவெள்ளம் பூமியின்மேல் பாய்ந்து வருகிறது. இந்தப் பூமியின் சரித்திரத்தில் இதுபோன்ற பெருமழை இதுவரையிலும் பெய்ததில்லை.

நாற்பது நாள் இரவும் பகலும் பூமியின்மேல் பெருமழை பெய்கிறது. இந்தப் பூமியானது தண்ணீரிலே மூழ்குகிறது. பூமியிலுள்ள ஜீவஜந்துக்களெல்லாம் உயிர்ப்பிழைப்பதற்கு வாய்ப்பில்லை. கர்த்தரோ துன்மார்க்கரை தண்டிக்கவேண்டும் என்பதற்காக, தாம் உண்டாக்கின ஜீவஜந்துக்கள் அனைத்தையும் பூமியின் மேலிராதபடிக்கு நிக்கிரகம்பண்ணுகிறார்.

கர்த்தர் சில சமயங்களில், நமக்கு ஆசீர்வாதமாயிருப்பதை, சாபமாக மாற்றுகிறார். "அவர்களுடைய பந்தி அவர்களுக்குக் கண்ணியும், அவர்களுடைய செல்வம் அவர்களுக்கு வலையுமாயிருக்கக்கடவது" (சங் 69:22).

தண்ணீர் எல்லோருக்கும் தேவை. தண்ணீரைப்போல பிரயோஜனமான பொருள் வேறொன்றுமில்லை. நமக்கு மகாஆழத்தின் ஊற்றுக்கண்கள் திறப்பதினாலும், வானத்தின் மதகுகள் திறப்பதினாலும் தண்ணீர் கிடைக்கிறது. ஆனாலும் அளவுக்கு அதிகமாக தண்ணீர் வரும்போது, அந்தத் தண்ணீர் நமக்கு ஆசீர்வாதமாயிராமல், ஆபத்தாயிருக்கும். திரளான தண்ணீர் மனுஷருக்கு ஜீவனைக் கொடுப்பதற்கு பதிலாக, மனுஷருடைய ஜீவனை அழித்துப்போடும்.

பாவிகள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. அவருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிப்பது பாவிகளுக்கு இயலாத காரியம். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது.

பூமியின்மீது மழையை வருவிப்பதற்காக தேவன் வானத்தில் மேகத்தைச் சிருஷ்டித்திருக்கிறார். (யோபு 38:9, 22-30). இதற்கு முன்பாகவும், பூமியில் மழை பெய்தது. ஆயினும் இந்த மழை பூமியின்மேல் பெய்த பெரு மழையாகும். லூசிபரின் காலத்திலும், மழை பெய்ததாக சிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள் (ஏசா 14:12-14).

நாற்பதுநாள் இரவும் பகலும் பூமியின்மேல் பெருமழை பெய்தது. பரிசுத்தவேதாகமத்தில் ஒரு சில முக்கியமான சம்பவங்கள் "நாற்பதுநாள்" நடைபெற்றிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. நோவாவின் ஜலப்பிரளயம் (ஆதி 7:4, 12,17; ஆதி 8:6)
2. யாக்கோபின் மரணம் (ஆதி 50:3)
3. பர்வதத்தில் மோசே (யாத் 24:18)
4. பர்வதத்தில் மறுபடியும் மோசே (யாத் 34:28; உபா 10:10)
5. கானானை வேவுபார்த்த வேவுகாரர்கள். (எண் 13:25; எண் 14:34)
6. மோசேயின் உபவாசம் (உபா 9:18; உபா 9: 9-11)
7. எலியா ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதத்தில் நடந்துபோன காலம். (1இராஜா 19:8)
8. எசேக்கியேல் வலதுபக்கமாய் ஒருக்களித்து படுத்த காலம். (எசே 4:6)
9. நினிவேயின் நியாயத்தீர்ப்பு (யோனா 3:4)
10. கிறிஸ்துவின் உபவாசம். (மத் 4:2)
11. உயிர்த்தெழுந்த பின்பு கிறிஸ்துவின் ஊழியக்காலம். (அப் 1:3)

கர்த்தர் கதவை அடைக்கிறார் ஆதி 7:13-16

ஆதி 7:13. அன்றையதினமே நோவாவும், நோவாவின் குமாரராகிய சேமும் காமும் யாப்பேத்தும், அவர்களுடனேகூட நோவாவின் மனைவியும், அவன் குமாரரின் மூன்று மனைவிகளும், பேழைக்குள் பிரவேசித்தார்கள்.

ஆதி 7:14. அவர்களோடு ஜாதிஜாதியான சகலவிதக் காட்டு மிருகங்களும், ஜாதிஜாதியான சகலவித நாட்டு மிருகங்களும், பூமியின்மேல் ஊருகிற ஜாதிஜாதியான சகலவித ஊரும் பிராணிகளும், ஜாதிஜாதியான சகலவிதப் பறவைகளும், பலவிதமான சிறகுகளுள்ள சகலவிதப் பட்சிகளும் பிரவேசித்தன.

ஆதி 7:15. இப்படியே ஜீவசுவாசமுள்ள மாம்சஜந்துக்களெல்லாம் ஜோடுஜோடாக நோவாவிடத்தில் பேழைக்குள் பிரவேசித்தன.

ஆதி 7:16. தேவன் அவனுக்குக் கட்டளையிட்டபடியே, ஆணும் பெண்ணுமாக சகலவித மாம்சஜந்துக்களும் உள்ளே பிரவேசித்தன; அப்பொழுது கர்த்தர் அவனை உள்ளே விட்டு கதவை அடைத்தார்.

நோவா பேழைக்குள் பிரவேசிக்கும்போது நடைபெற்ற சம்பவம் இந்த வசனப்பகுதியில் மறுபடியுமாக சொல்லப்பட்டிருக்கிறது. நோவாவோடுகூட அவருடைய வீட்டாரும், சகலவித ஜீவஜந்துக்களும் பேழைக்குள் பிரவேசிக்கிறார்கள். கர்த்தர் பேழைக்குள் பிரவேசித்த நோவாவின் வீட்டாரையும், ஜீவஜந்துக்களையும் மாத்திரமே பாதுகாக்கிறார். இவை அழிவுக்கு தப்பிக்கிறது.

நோவாவின் விசுவாசத்தையும், அவருடைய கீழ்ப்படிதலையும் கர்த்தர் கனம்பண்ணுகிறார். அதன் நிமித்தமாகவே, நோவா பேழைக்குள் பிரவேசித்தபோது நடைபெற்ற சம்பவம், இங்கு மறுபடியும் சொல்லப்பட்டிருக்கிறது.

அன்றையதினமே நோவாவும், நோவாவின் குமாரராகிய சேமும் காமும் யாப்பேத்தும், அவர்களுடனேகூட நோவாவின் மனைவியும், அவன் குமாரரின் மூன்று மனைவிகளும், பேழைக்குள் பிரவேசிக்கிறார்கள்.

அவர்களோடு ஜாதிஜாதியான சகலவிதக் காட்டு மிருகங்களும், ஜாதிஜாதியான சகலவித நாட்டு மிருகங்களும், பூமியின்மேல் ஊருகிற ஜாதிஜாதியான சகலவித ஊரும் பிராணிகளும், ஜாதிஜாதியான சகலவிதப் பறவைகளும், பலவிதமான சிறகுகளுள்ள சகலவிதப் பட்சிகளும் பிரவேசிக்கின்றன.

இப்படியே ஜீவசுவாசமுள்ள மாம்ச ஜந்துக்களெல்லாம் ஜோடுஜோடாக நோவாவிடத்தில் பேழைக்குள் பிரவேசிக்கின்றன.

தேவன் நோவாவுக்குக் கட்டளையிட்டபடியே, ஆணும் பெண்ணுமாக சகலவித மாம்சஜந்துக்களும் உள்ளே பிரவேசிக்கின்றன (ஆதி 7:13-16).

பேழைக்குள் பிரவேசித்த ஜீவராசிகள் மூலமாக தேவன் புதிய சிருஷ்டிப்பை உண்டுபண்ணுகிறார். அவற்றின் ஜீவன் பாதுகாக்கப்படுகிறது. இதன் மூலமாக புதிய ஜீவன் உண்டாகிறது. பேழைக்குள் நோவாவும், அவருடைய வீட்டாரும், சகல ஜீவஜந்துக்களும் பிரவேசிக்கிறார்கள். அப்பொழுது கர்த்தர் நோவாவை பேழைக்குள்ளே விட்டு, பேழையின் கதவை அடைக்கிறார் (ஆதி 7:16).

நோவா கர்த்தருக்கு தொடர்ந்து கீழ்ப்படிகிறார். ஆகையினால் கர்த்தரும் நோவாவை தொடர்ந்து பாதுகாத்து பராமரிக்கிறார். நோவா பேழைக்குள் பிரவேசித்த பின்பு, அந்தப் பேழையின் கதவை நோவா அடைக்கவில்லை. நோவாவுக்கு பதிலாக, கர்த்தரே நோவாவை பேழைக்குள்ளே விட்டு, கதவை அடைக்கிறார்.

நோவா பேழைக்குள் பாதுகாப்பாக பிரவேசிக்கவேண்டும். அவரை பேழையிலே பாதுகாக்கவேண்டும் என்பது கர்த்தருடைய திட்டம். பேழைக்குள் பிரவேசித்த நோவாவையும், அவருடைய வீட்டாரையும் தவிர வேறு யாரும் பேழைக்குள்ளே பிரவேசிக்கக்கூடாதபடிக்கு, கர்த்தர் பேழையின் கதவை அடைக்கிறார்.

இதுவரையிலும் பேழையின் கதவு திறந்தே இருந்தது. அது கடந்த ஏழுநாட்களாக திறந்திருந்தது. அந்த ஏழுநாட்களும் கர்த்தருடைய கிருபையின் நாட்களாகும். அந்த நாட்களில் மனுஷர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, பேழைக்குள் பிரவேசித்திருக்கலாம். கர்த்தர் ஏழுநாட்களாக அவர்கள் எல்லோரையும் பேழைக்குள் பிரவேசிக்குமாறு வரவேற்றார். ஆனால் இப்போதோ கர்த்தர் நியமித்த ஏழுநாள் அவகாசம் முடிவு பெறுகிறது. கர்த்தர் பேழையின் கதவை அடைத்துவிடுகிறார். இனிமேல் வேறு யாரும் பேழைக்குள் பிரவேசிக்க முடியாது.

நோவா பேழைக்குள் பாதுகாக்கப்படுகிறார். நோவா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்ததுபோல, விசுவாசிகளாகிய நாமும் சுவிசேஷத்தின் அழைப்புக்கு கீழ்ப்படியவேண்டும். நாம் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும். கர்த்தர் நமக்கு நியமித்து வைத்திருக்கிற இரட்சிப்பின் பாதையில் நடந்து வரவேண்டும்.

நோவா பேழைக்குள் பிரவேசித்தபோது, அவர் தன்னுடைய வீட்டையும், நிலத்தையும் விட்டு விட்டு, பேழைக்குள் பிரவேசித்தார். நோவாவைப்போலவே நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் வரும்போது, நம்முடைய சுயநீதியையும், உலகப்பிரகாரமான ஆசைகளையும் விட்டு விட்டு இயேசுகிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளவேண்டும். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. நாம் உலகத்தின்மீதும் ஆசைப்பட்டு, இயேசு கிறிஸ்துவின்மீதும் விசுவாசமாயிருப்பது என்பதும் இயலாத காரியம்.

நாம் இயேசுகிறிஸ்துவோடு கூடயிருக்கும்போது, நம்மிடத்தில் மாம்சப்பிரகாரமான காரியங்களும், உலகப்பிரகாரமான காரியங்களும் இருக்குமென்றால், நம்மால் இயேசுகிறிஸ்துவை முழுஇருதயத்தோடு நேசிக்க முடியாது. உலகப்பிரகாரமான காரியங்கள் இயேசுகிறிஸ்துவுக்கு போட்டியாக நமக்குள்ளே எழும்பும்.

வெளிஉலகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நோவா செய்த பேழை அளவில் சிறியதாகயிருக்கிறது. பேழைக்குள்ளே அடிப்படை வசதிகளை தவிர ஆடம்பர வசதி எதுவும் இருக்காது. ஆனாலும் பேழைக்குள்ளே இருக்கிற நோவா சிறிது காலத்திற்கு, பேழைக்குள்ளே காணப்படுகிற வசதி குறைவுகளை சகித்துக்கொள்ளவேண்டும்.

கர்த்தருக்கு சித்தமான நாளிலே நோவா பேழையிலிருந்து வெளியே அழைத்து வரப்படுவார். நோவாவுக்கு பழையவையெல்லாம் ஒழிந்துபோகும். அவருக்கு எல்லாம் புதிதாயிருக்கும். புதிய உலகத்திற்கு தேவையான ஜீவன்கள் எல்லாம் பேழைக்குள் பாதுகாப்பாகயிருக்கிறது. நோவா பேழைக்குள் இருக்கும் காலம் வரையிலும் தன்னைத்தான் வெறுத்து, வரப்போகிற விடுதலையின் நாளை ஆவலோடு எதிர்பார்த்து காத்திருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் தங்களைத் தாங்களே வெறுத்து, இயேசுகிறிஸ்துவின் சிலுவையை சுமக்கவேண்டும். அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றவேண்டும்.

நோவா பேழைக்குள் பிரவேசித்தபோது, அவரோடுகூட அவருடைய வீட்டாரும், ஜாதிஜாதியான ஜீவஜந்துக்களும் பேழைக்குள் பிரவேசித்தார்கள். நாமும், நம்முடைய பேழையாகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் வரும்போது, நம்மோடுகூட நமக்கு அறிமுகமானவர்கள் எல்லோரையும் கிறிஸ்துவினிடத்தில் அழைத்து வரவேண்டும்.

புறஜாதி ஜனங்கள் விசுவாசிகளாகிய நம்மை நோக்கிப் பார்ப்பார்கள். நம்முடைய ஜீவியம் கிறிஸ்துவுக்கு பிரியமானதாகவும், அவருக்கு மகிமையைக் கொடுக்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும். அப்போது திரளான ஜனங்கள் நம்மோடுகூட கிறிஸ்துவினிடத்தில் வருவார்கள். தம்மிடத்தில் வருகிற யாரையும் கிறிஸ்துவானவர் புறம்பே தள்ளமாட்டார். கிறிஸ்துவாகிய பேழையிலே எத்தனைபேர் பிரவேசித்தாலும், அத்தனைபேருக்கும் அங்கே இடமுண்டு.

நாம் விசுவாசத்தினால் கிறிஸ்து என்னும் பேழையில் பிரவேசிக்கும்போது, கர்த்தர் பேழையின் கதவை அடைத்ததுபோல, தேவனுடைய வல்லமை நம்மை கிறிஸ்துவுக்குள் தங்கியிருக்க வைக்கும்.

"கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது" (1பேது 1:5).

ஜலப்பிரளயம்
ஆதி 7:17-20

ஆதி 7:17. ஜலப்பிரளயம் நாற்பது நாள் பூமியின்மேல் உண்டானபோது, ஜலம் பெருகி, பேழையைக் கிளம்பப்பண்ணிற்று; அது பூமிக்குமேல் மிதந்தது.

ஆதி 7:18. ஜலம் பெருவெள்ளமாகி, பூமியின் மேல் மிகவும் பெருகிற்று; பேழையானது ஜலத்தின்மேல் மிதந்துகொண்டிருந்தது.

ஆதி 7:19. ஜலம் பூமியின்மேல் மிகவும் அதிகமாய்ப் பெருகினதினால், வானத்தின்கீழ் எங்குமுள்ள உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன.

ஆதி 7:20. மூடப்பட்ட மலைகளுக்கு மேலாய்ப் பதினைந்துமுழ உயரத்திற்கு ஜலம் பெருகிற்று.

ஜலப்பிரளயம் நாற்பதுநாள் பூமியின்மேல் உண்டாயிற்று. பூமியிலுள்ள ஜனங்கள் எல்லோரும் பாவிகளாயும், துன்மார்க்கராயும் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லையென்றால், பூமியின்மீது பெருமழை பெய்து ஜலப்பிரளயம் உண்டாகி, அவர்களை நிக்கிரகம்பண்ணும் என்று நோவா எச்சரித்தார். ஆனால் அவர்களோ ஜலப்பிரளயம் வரும் என்று நம்பவில்லை.

பாவிகள் தங்கள்மீது நியாயத்தீர்ப்பு வரும் என்று நம்பாவிட்டாலும், தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிச்சயமாகவே அவர்கள்மேல் வரும். அதுபோலவே ஜலப்பிரளயம் வருமென்று அவர்கள் நம்பாவிட்டாலும், அது நாற்பதுநாள் பூமியின்மேல் உண்டாயிற்று. பூமியிலே ஜலம் பெருகிற்று. அது பேழையைக் கிளம்பப்பண்ணிற்று. பேழை பூமிக்குமேல் மிதக்கிறது (ஆதி 7:17).

ஜனங்கள் மனந்திரும்புவதற்கு கர்த்தர் ஏழுநாள் அவகாசம் கொடுத்தார். ஆனால் அவர்களோ தேவனுடைய கிருபையை அசட்டைபண்ணினார்கள். இதனால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது. கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காத ஜனங்கள் இருதயத்தைக் கடினப்படுத்துகிறார்கள். தாங்கள் பாவம் செய்தாலும், தேவன் தங்களை தண்டிக்கமாட்டார் என்று பாவிகள் நினைக்கிறார்கள்.

ஜலப்பிரளயம் நாற்பதுநாள் பூமியின்மேல் உண்டானபோது, ஜலம் பெருகுகிறது. ஜலம் பெருவெள்ளமாகி பூமியின்மேல் மிகவும் பெருகிற்று. ஜலம் பூமியின்மேல் மிகவும் அதிகமாய் பெருகினதினால், வானத்தின் கீழ் எங்குமுள்ள உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்படுகிறது. பூமியிலே தண்ணீரின் அளவு அதிகரிக்கிறது. திரளான தண்ணீர் பூமியை மூடுவதினால், பூமியிலுள்ள ஜீவஜந்துக்கள் எல்லாம் செத்துப்போகிறது.

ஜலம் உயர்ந்த மலைகளையெல்லாம் மூடுகிறது. மூடப்பட்ட மலைகளுக்கு மேலாய்ப் பதினைந்துமுழ உயரத்திற்கு ஜலம் பெருகிற்று. அப்பொழுது மாம்ச ஜந்துக்களாகிய பறவைகளும், நாட்டு மிருகங்களும், காட்டு மிருகங்களும், பூமியின் மேல் ஊரும் பிராணிகள் யாவும், எல்லா நரஜீவன்களும், பூமியின்மேல் சஞ்சரிக்கிற வைகள் யாவும் மாண்டு போகிறது.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு மனுஷர்மீது வரும்போது, மனுஷரால் அவருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பித்து எங்கும் ஓடி ஒளிந்துகொள்ள முடியாது. மனுஷரால் பூமிக்கு ஆழத்திலும் மறைவிடத்தை தேடமுடியாது. பர்வதங்களுக்கு உயரத்திலும் மனுஷரால் கூடு கட்ட முடியாது. மனந்திரும்பாத பாவிகளை தேவன் தேடிக்கண்டுபிடித்து, அவர்களை தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்புக்குட்படுத்துவார்.

"கன்மலை வெடிப்புகளில் வாசம்பண்ணி, மேடுகளின் உச்சியைப் பிடித்திருக்கிறவனே உன்னால் உன் பயங்கரமும் உன் இருதயத்தின் அகந்தையும் உன்னை மோசம்போக்கிற்று; நீ கழுகைப்போல் உயரத்தில் உன் கூட்டைக் கட்டினாலும் அங்கேயிருந்து உன்னை விழப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 49:16).

"கன்மலை வெடிப்புகளாகிய உன் உயர்ந்த ஸ்தானத்திலே குடியிருந்து, என்னைத் தரையிலே விழத்தள்ளுகிறவன் யார் என்று உன் இருதயத்தில் சொல்லுகிறவனே, உன் இருதயத்தின் அகந்தை உன்னை மோசம்போக்குகிறது" (ஒப 3).

"நீ கழுகைப்போல உயரப்போனாலும், நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன்கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத்தள்ளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஒப 4).

நோவா உண்டாக்கின பேழை, அவருக்கும் அவருடைய வீட்டாருக்கும், அவர்களோடுகூட பேழைக்குள் பிரவேசித்த ஜீவஜந்துக்களுக்கும் அடைக்கல பட்டணத்தைப்போல இருக்கிறது. பூமியின்மேல் ஜலம் பெருகியபோது அது பேழையை கிளம்பப்பண்ணிற்று. பேழை பூமிக்கு மேல் மிதக்கிறது. பேழையானது ஜலத்தின்மேல் மிதந்துகொண்டிருக்கிறது.

பேழைக்கு கீழே தண்ணீர் இருக்கிறது. தண்ணீருக்கு மேலே பேழை மிதக்கிறது. ஜலப்பிரளயம் எவ்வளவு அதிகரித்தாலும், ஜலம் எவ்வளவு பெருவெள்ளமானாலும், பேழையானது ஜலத்திற்கு மேலே மிதக்கும். ஜலத்தின் உயரம் அதிகரிக்க அதிகரிக்க, பேழையும் அதன் உயரத்திலே மிதக்கிறது. பேழை பரலோகத்தை நோக்கி மேலே எழும்புகிறது. பரிசுத்தவான்களுக்கு இந்தப் பூமியிலே பாடுகளும் வேதனைகளும் வந்தாலும், அவர்கள் தங்களுடைய ஆவியிலே பரலோகத்தின் தேவனை நோக்கிப் பார்ப்பார்கள். இந்தப் பூமியிலே அவர்களுடைய சரீரத்திற்கு உபத்திரவம் ஏற்பட்டாலும், அவர்களுடைய ஆவி பரலோகத்தின் தேவனை நோக்கி உயரே போகும்.

மாம்சஜந்துக்கள் மாண்டன
ஆதி 7:21-24

ஆதி 7:21. அப்பொழுது மாம்சஜந்துக்களாகிய பறவைகளும், நாட்டு மிருகங்களும், காட்டு மிருகங்களும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் யாவும், எல்லா நரஜீவன்களும், பூமியின்மேல் சஞ்சரிக்கிறவைகள் யாவும் மாண்டன.

ஆதி 7:22. வெட்டாந்தரையில் உண்டான எல்லாவற்றிலும் நாசியிலே ஜீவசுவாசமுள்ளவைகள் எல்லாம் மாண்டுபோயின.

ஆதி 7:23. மனுஷர் முதல், மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும், பூமியின்மேல் இருந்த உயிருள்ள வஸ்துக்கள் யாவும் அழிந்து, அவைகள் பூமியில் இராதபடிக்கு நிக்கிரகமாயின; நோவாவும் அவனோடே பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்டன.

ஆதி 7:24. ஜலம் பூமியின்மேல் நூற்றைம்பது நாள் மிகவும் பிரவாகித்துக்கொண்டிருந்தது.

ஜலப்பிரளயத்தினால் பூமியில் பேரழிவு உண்டாயிற்று. மலைகளுக்கு மேலாய் பதினைந்து முழ உயரத்திற்கு ஜலம் பெருகிற்று. இதனால் வெட்டாந்தரையில் உண்டான எல்லாவற்றிலும் நாசியிலே ஜீவசுவாசமுள்ளவைகள் எல்லாம் மாண்டுபோயிற்று.

நோவா உண்டாக்கின பேழையிலே, அவரும், அவருடைய வீட்டாரும், அவர்களோடுகூட பேழைக்குள் பிரவேசித்த ஜோடு ஜோடான ஜீவஜந்துக்கள் மாத்திரமே இருக்கிறது. பேழை ஜலத்தில் மிதக்கும்போது, பேழைக்குள்ளே இருக்கிற எல்லாம் மிதக்கின்றன. அவற்றிற்கு ஜலத்தினால் அழிவு உண்டாகவில்லை. ஆனால் பூமியிலே இருக்கிற எல்லாம் மாண்டுபோகிறது.

பூமியின்மேல் ஜலம் பெருகினபோது, மாம்சஜந்துக்களாகிய பறவைகளும், நாட்டு மிருகங்களும், காட்டு மிருகங்களும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் யாவும், எல்லா நரஜீவன்களும், பூமியின்மேல் சஞ்சரிக்கிறவைகள் யாவும் மாண்டுபோயிற்று.

"அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது" (ரோம 8:21,22).

பூமியின்மேல் ஜலப்பிரளயம் உண்டானபோது, மனுஷர் முதல், மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும், பூமியின்மேல் இருந்த உயிருள்ள வஸ்துக்கள் யாவும் அழிந்து, அவைகள் பூமியில் இராதபடிக்கு நிக்கிரகமாயிற்று. பேழைக்குள்ளே பிரவேசித்த நோவாவும், அவருடைய வீட்டாரும் தவிர மற்ற மனுஷர் எல்லோரும் நிக்கிரகமாகிறார்கள்.

பேழைக்குள் பிரவேசியாமல், பூமியின்மேல் நிர்விசாரமாய் ஜீவித்த எல்லோர்மேலும் அழிவு வருகிறது. ஜலப்பிரளயம் அவர்களை சூழ்ந்துகொள்கிறது. அவர்கள் மனந்திரும்புவதற்கு நியமிக்கப்பட்ட கிருபையின் காலம் முடிந்துபோயிற்று. அவர்கள் தங்களை சூழ்ந்திருக்கும் ஜலப்பிரளயத்தை பரிதாபமாய்ப் பார்க்கிறார்கள்.

கிருபையின் காலம் முடிந்தபின்பு, பாவிகள் ஜலப்பிரளயத்திற்கு தப்பிக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறார்கள். மனுஷருடைய முயற்சிகளெல்லாம் வீணாய்ப்போயிற்று. நம்முடைய சுயநீதியினால் நாம் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பே இல்லை. இயேசுகிறிஸ்துவின் இரத்தமல்லாமல் மனுக்குலத்திற்கு வேறு எதன் மூலமாகவும் இரட்சிப்பு இல்லை.

நியாயத்தீர்ப்பு நாளின்போது, கிறிஸ்துவாகிய பேழையிலே அடைக்கலம் பெற்றிருப்பவர்கள் மாத்திரமே, நியாயத்தீர்ப்புக்கு தப்பிப்பார்கள். மற்றவர்கள் எல்லோரும் தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பினால் நிக்கிரகமாவார்கள்.

யோபுவின் சரித்திரத்திலே, எலிப்பாஸ் நிர்விசாரமாய் ஜீவிக்கிற ஜனங்களுக்கு, நோவாவின் சரித்திரத்தை நினைவுபடுத்தி சொல்லுகிறார்.

"அக்கிரம மாந்தர் பூர்வத்தில் நடந்த மார்க்கத்தைக் கவனித்துப் பார்த்தீரோ? காலம் வருமுன்னே அவர்கள் வாடிப்போனார்கள்; அவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் வெள்ளம் புரண்டது" (யோபு 22:15,16).

ஜலப்பிரளயத்திலே பூமியின் மேலிருந்த ஜீவஜந்துக்களெல்லாம் நிக்கிரகமானபோது, நோவாவும் அவரோடே பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்படுகிறது. நோவாவுக்கு வலதுபுறத்திலே ஆயிரம்பேரும் அவருக்கு இடதுபுறத்திலே பதினாயிரம்பேரும் நிக்கிரகமாகிறார்கள். ஆனால் நோவாவோ தேவனுடைய கிருபைக்கும் இரக்கத்திற்கும் எடுத்துக்காட்டாக ஜீவனோடிருக்கிறார்.

மனுஷரை நிக்கிரகம்பண்ணவேண்டும் என்பது தேவனுடைய விருப்பமல்ல. தேவன் பாவத்தை வெறுக்கிறார். அதே தேவன் பாவிகளை சிநேகிக்கிறார். பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். தேவன் பாவிகளை உடனே அழித்துப்போடாமல், அவர்கள் மனந்திரும்புவதற்காக அவர்களுக்கு கிருபையின் காலத்தை நியமித்து, பொறுமையோடு காத்திருக்கிறார். தேவனுடைய பொறுமை நீடியபொறுமையாயிருக்கிறது. கர்த்தருடைய பொறுமையை அசட்டைபண்ணுகிறவர்கள் நிக்கிரகமாவார்கள்.

நோவா கிருபையின் காலத்திலே ஜனங்களுக்கு கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளை பிரசங்கம்பண்ணினார். நோவா துன்மார்க்கமாய் ஜீவிக்கிற ஜனங்களுக்காக கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசி ஜெபம்பண்ணினார்.

பாவிகள் மனந்திரும்பியிருந்தால், அவர்கள் தேவனுடைய கோபத்திற்கு தப்பித்திருக்கலாம். ஆனால் அவர்களோ தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தினார்கள்.

நோவா ஜனங்களுக்காக ஜெபம்பண்ணினாலும், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாதே போனார்கள். நோவாவின் ஜெபம் அவருக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும், கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் கொடுத்திருக்கிறது. நோவா ஏறெடுத்த ஜெபத்தினால் அவர் தன் ஆத்துமாவை மாத்திரமே காத்துக்கொண்டார்.

"அப்பொழுது நோவா தானியேல் யோபு ஆகிய இம்மூன்று புருஷரும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களைமாத்திரம் தப்புவிப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசே 14:14).

ஜலம் பூமியின்மேல் நூற்றைம்பது நாள் மிகவும் பிரவாகித்துக் கொண்டிருக்கிறது. பூமியின்மேல் இருந்த வஸ்துக்கள் யாவும் மாண்டுபோயிற்று. நோவா உயிரோடிருக்கிறார். கர்த்தர் தனக்கு கொடுத்த ஊழியத்தை நோவா உண்மையாய்ச் செய்தார். நோவாவும், அவருடைய வீட்டாரும் தவிர, மற்ற மனுஷர் எல்லோரும் மடிந்துபோனாலும், நோவா தன்னுடைய ஊழியத்தை நிறைவேற்றியிருக்கிறார்.

இரட்சிப்பு கர்த்தருடையது. கர்த்தருடைய சித்தமில்லாமல் யாராலும் இரட்சிக்கப்பட முடியாது. அதே சமயத்தில் பாவிகளும் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினால் மாத்திரமே அவர்களுக்கு இரட்சிப்பு உண்டாகும். எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பம். அதே வேளையில் தாங்கள் இரட்சிக்கப்படவேண்டுமா என்பதை மனுஷரே தீர்மானம்பண்ணவேண்டும்.

8 அதிகாரம்

ஜலம் பூமியின்மேல் நூற்றைம்பதுநாள் மிகவும் பிரவாகித்துக்கொண்டிருக்கிறது. பூமியின் மேலுள்ள எல்லா நரஜீவன்களும், பூமியின்மேல் சஞ்சரிக்கிறவைகள் யாவும் மாண்டுபோயிற்று. நாசியிலே ஜீவசுவாசமுள்ளவைகள் எல்லாம் மாண்டுபோயின. பூமியின்மேல் இருந்த உயிருள்ள வஸ்துக்கள் யாவும் அழிந்துபோயிற்று. அவைகள் பூமியிலிராதபடிக்கு நிக்கிரகமாயிற்று.

நோவாவும், அவரோடே பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்படுகிறது. கர்த்தருடைய ஆவி மனுஷரோடு எப்போதும் போராடுவதில்லை. அதேவேளையில் கர்த்தர் மனுஷனுக்கு விரோதமாக எப்போதும் கோபமாயிருப்பதுமில்லை.

கர்த்தருடைய கோபம் குறைந்துபோயிற்று. அவர் பூமியை மறுபடியும் புதுப்பிக்கிறார். ஜலம் அமருகிறது. வானத்து மழை நின்றுபோயிற்று. ஜலம் வடிந்துபோகிறது. தண்ணீரில் மூழ்கியிருந்த பூமி வெளியே காணப்படுகிறது.

பூமியின்மேல் பிரவாகித்துக் கொண்டிருக்கிற ஜலம் அமருகிறது. மழை நின்றுபோகிறது (ஆதி 8:1,2). ஜலம் பூமியிலிருந்து நாளுக்கு நாள் வற்றிக்கொண்டு வருகிறது (ஆதி 8:3). பதினாறு நாட்களுக்கு பின்பு பேழை தங்கிற்று (ஆதி 8:4). அறுபது நாட்களுக்கு பின்பு மலைச்சிரகங்கள் காணப்படுகிறது (ஆதி 8:5).

நாற்பது நாட்களுக்கு பின்பு, மலைச்சிரகங்கள் காணப்படுவதற்கு இருபது நாட்களுக்கு முன்பு, நோவா ஒரு காகத்தையும், அதன்பின்பு ஒரு புறாவையும் பேழையிலிருந்து வெளியே விடுகிறார். தண்ணீர் வடிந்து போயிற்றா என்பதை அறிந்து கொள்ள முயற்சி செய்கிறார் (ஆதி 8:6-12).

மலைச்சிகரங்கள் காணப்பட்டு இரண்டு மாதங்களுக்கு பின்பு பூமியின் மேலிருந்த ஜலம் வற்றிப்போயிற்று (ஆதி 8:13). இரண்டு மாதங்களுக்கு பின்பு பூமி காய்ந்திருக்கிறது (ஆதி 8:14).

கர்த்தர் நோவாவையும், அவரோடு கூடயிருக்கிற அவருடைய வீட்டாரையும், அவரோடு பேழைக்குள் இருக்கிற ஜீவன்களையும் பேழையைவிட்டு புறப்படுமாறு சொல்லுகிறார் (ஆதி 8:15-19).

நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, பலிபீடத்தின்மேல், தகனபலிகளை பலியிடுகிறார் (ஆதி 8:20). நோவா செலுத்தின தகனபலிகளை கர்த்தர் அங்கீகரிக்கிறார். கர்த்தர் நோவாவுக்கு வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார் (ஆதி 8:21,22). இப்போது கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்குப் பதிலாக, அவருடைய கிருபையும் இரக்கமும் வெளிப்படுகிறது.

தேவன் நினைத்தருளுகிறார் ஆதி 8:1-3

ஆதி 8:1. தேவன் நோவாவையும், அவனுடனே பேழையிலிருந்த சகல காட்டு மிருகங்களையும், சகல நாட்டு மிருகங்களையும் நினைத்தருளினார்; தேவன் பூமியின்மேல் காற்றை வீசப்பண்ணினார், அப்பொழுது ஜலம் அமர்ந்தது.

ஆதி 8:2. ஆழத்தின் ஊற்றுக்கண்களும், வானத்தின் மதகுகளும் அடைபட்டன; வானத்து மழையும் நின்றுபோயிற்று.

ஆதி 8:3. ஜலம் பூமியிலிருந்து நாளுக்குநாள் வற்றிக்கொண்டே வந்தது; நூற்றைம்பது நாளுக்குப்பின்பு ஜலம் வடிந்தது.

தேவன் நோவாவையும், அவரோடுகூட பேழையிலிருக்கிற எல்லா ஜீவன்களையும் நினைத்தருளுகிறார். "தேவன் நோவாவையும், அவனுடனே பேழையிலிருந்த சகல காட்டு மிருகங்களையும், சகல நாட்டு மிருகங்களையும் நினைத்தருளினார்" (ஆதி 8:1) என்னும் இந்த வாக்கியம், மனுஷர் பேசுகிற பிரகாரம் எழுதப்பட்டிருக்கிறது.

தேவன் எல்லா ஜீவன்களையும் நினைத்தருளுகிறார். அவர் தாம் சிருஷ்டித்த எந்த சிருஷ்டியையும் மறக்கமாட்டார். "இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா? அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுகிறதில்லை" (லூக் 12:6).

"ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது" (ஏசா 49:15,16).

கர்த்தர் நோவாவை நினைத்தருளுவது, மனுக்குலத்தின்மீது கர்த்தருடைய கிருபை மறுபடியும் வெளிப்படுவதற்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தர் மனுபுத்திரரை முற்றிலுமாய் அழித்துப்போடவில்லை. நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் தயவு கிடைத்தது. கர்த்தர் இந்தப் பூமியை ஜலப்பிரளயத்தினால் அழித்துப்போட்டாலும், நோவாவையும் அவருடைய வீட்டாரையும் அழிவுக்கு தப்புவிக்கச் செய்கிறார்.

நோவாவும் அவருடைய வீட்டாரும் பேழையிலிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை மறந்துவிட்டதுபோல தெரிகிறது. அவர்கள் பேழைக்குள்ளே அநேக நாட்களாயிருக்கிறார்கள். கர்த்தர் நோவாவிடம், "பேழைக்குள் பிரவேசியுங்கள்" என்று மாத்திரமே சொன்னார். அவர்கள் பேழைக்குள்ளே எத்தனை நாட்களுக்கு இருக்கவேண்டும் என்று கர்த்தர் நோவாவுக்கு சொல்லவில்லை.

நோவா பேழையிலிருந்து எப்போது வெளியே அனுப்பப்படுவார் என்பதும் அவருக்கு தெரியாது. நோவாவும் அவருடைய வீட்டாரும் பேழைக்குள்ளே இருக்கிறார்கள். கர்த்தர் தங்களை மறந்துவிட்டாரோ என்னும் எண்ணம் அவர்களுடைய மனதில் வந்திருக்கும். நோவாவைப்போலவே விசுவாசிகளாகிய நாமும், கர்த்தர் நம்மை மறந்துவிட்டாரோ என்று நினைக்கிறோம்.

நமக்கு பாடுகளும் வேதனைகளும், உபத்திரவங்களும் வரும்போது, கர்த்தர் நம்மை அவற்றிலிருந்து உடனே விடுவிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். கர்த்தர் நமக்கு உடனே விடுதலையைக் கொடுக்கவில்லை யென்றால், நாம் நீண்ட நாட்களாக உபத்திரவத்தை அனுபவித்துக்கொண்டிருந்தால், கர்த்தர் நம்மை மறந்துவிட்டாரோ என்னும் எண்ணம் நமக்குள் வந்துவிடுகிறது.

நோவா ஒரு நீதிமான். அவர் கர்த்தரை நம்புகிறவர். ஆனாலும் அவர் பேழைக்குள் பொறுமையில்லாமலிருந்திருப்பார். கர்த்தர் நோவாவிடம் கொப்பேர் மரத்தால் பேழையை உண்டாக்கச் சொன்னார். கர்த்தர் நோவாவையும் அவருடைய வீட்டாரையும் பேழைக்குள் பிரவேசிக்குமாறு அழைத்தார். அவர்கள் பேழைக்குள் பிரவேசித்த பின்பு, கர்த்தர் அவர்களை உள்ளே விட்டு, பேழையின் கதவை அடைத்துவிடுகிறார்.

நோவாவால் பேழையின் கதவைத் திறக்க முடியாது. தன்னை பேழைக்குள் அடைத்துப்போட்ட கர்த்தர், தன்னை பேழைக்கு வெளியே எப்போது அழைத்து வருவார் என்பதும் அவருக்கு தெரியாது. பேழைக்கு வெளியே பெருமழை பெய்கிறது. ஜலம் பூமியின்மேல் நூற்றைம்பதுநாள் மிகவும் பிரவாகித்துக்கொண்டிருக்கிறது. பேழைக்கு வெளியே என்ன நடைபெறுகிறது என்பது நோவாவுக்கு தெரியாது.

பேழைக்குள்ளே அடைக்கப்பட்டிருக்கிற நோவா, தன்னுடைய எதிர்காலத்தைப்பற்றி, பலவிதமாக சிந்தித்துப் பார்த்திருப்பார். தன்னுடைய வாழ்க்கை இந்தப் பேழையிலேயே முடிந்துபோகுமோ என்னும் பயம் அவருக்கு வந்திருக்கும். தன்னை பேழைக்குள்ளே அனுப்பி பேழையின் கதவை அடைத்த கர்த்தர், அதை திறக்க மறந்துவிட்டாரோ என்னும் பயமும் அவருக்கு ஏற்பட்டிருக்கும். கர்த்தர் எதுவரைக்கும் தன்னை மறப்பார் என்றும், அவர் எப்போது தன்னை நினைப்பார் என்றும் நோவாவுக்கு தெரியாது.

ஆனால் தேவன் நோவாவை மறக்கவில்லை. தேவன் நோவாவையும், அவருடனே பேழையிலிருந்த சகல காட்டு மிருகங்களையும், சகல நாட்டு மிருகங்களையும் நினைத்தருளுகிறார். கர்த்தர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் நோவாவுக்கு மறுபடியும் வெளிப்படுத்துகிறார். கர்த்தர் நோவாவை நினைத்தருளுவது, அவர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துவதற்கு அடையாளம்.

கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். அவருக்கு காற்றின்மேலும் தண்ணீரின்மேலும் அதிகாரமுள்ளது. தேவன் பூமியின்மேல் காற்றை வீசப்பண்ணுகிறார். அப்போது நூற்றைம்பது நாட்களாக பூமியின்மேல் பிரவாகித்துக்கொண்டிருக்கிற ஜலம் அமருகிறது. காற்றும் மழையும் மனுஷருடைய ஆளுகைக்குட்பட்டதல்ல. அவை தேவனுடைய ஆளுகைக்கும், அதிகாரத்திற்கும் மாத்திரமே உட்பட்டது.

கர்த்தர் பொழுதுபோகாமல் நோவாவை நினைத்தருளவில்லை. அல்லது தமக்கு நித்திரை வராமல் கர்த்தர் நோவாவை நினைத்தருளவில்லை. பேழைக்குள்ளே அடைக்கப்பட்டிருக்கும் நோவாவை வெளியே கொண்டு வரவேண்டும் என்பதற்காகவே, கர்த்தர் அவரை நினைத்தருளுகிறார்.

நோவாவை பேழைக்குள்ளே அனுப்பி, பேழையின் கதவை அடைத்த கர்த்தரால், அவரை பேழைக்கு வெளியே அழைத்து வரவும் முடியும். கர்த்தரால் கதவை அடைக்கவும் முடியும், அந்தக் கதவை திறக்கவும் முடியும். கர்த்தரால் மழையை பெய்யப்பண்ணவும் முடியும். பெய்கிற மழையை நிறுத்தவும் முடியும். கர்த்தரால் பெருங்காற்றை வீசச்செய்யவும் முடியும். அந்தக் காற்றை அவரால் அமர்த்தவும் முடியும்.

"அக்கினியே, கல்மழையே, உறைந்தமழையே, மூடுபனியே, அவர் சொற்படி செய்யும் பெருங்காற்றே" *(சங் 148:8)*.

கர்த்தர் நோவாவை நினைத்தருளி, பூமியின்மேல் காற்றை வீசப்பண்ணுகிறார். இது மழைக்காற்று அல்ல. இது உலர்ந்த காற்று. இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, செங்கடலுக்கு முன்பாக நின்றபோது, கர்த்தர் உலர்ந்த காற்றை வீசப்பண்ணினார். அந்தக் காற்று செங்கடலை இரண்டாகப் பிளந்தது. கர்த்தர் அதே போன்ற காற்றை இப்போது பூமியின்மேல் வீசப்பண்ணுகிறார். அப்பொழுது ஜலம் அமருகிறது.

"மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான்; அப்பொழுது கர்த்தர் இராமுழுதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டுபோகப்பண்ணினார்; ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று" *(யாத் 14:21)*.

கர்த்தர் கட்டளையிட்டபோது பூமியின்மேல் நாற்பதுநாள் ஜலப்பிரளயம் உண்டாயிற்று. கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் மகாஆழத்தின் ஊற்றுக்கண்கள் எல்லாம் பிளந்தன. வானத்தின் மதகுகள் திறவுண்டன. பூமியின்மேல் பெருமழை பெய்தது (ஆதி 7:11,12). இப்போது கர்த்தர் வானத்தின் திறவுண்ட மதகுகளை அடைக்கிறார். அப்பொழுது ஜலம் அமருகிறது. கர்த்தரால் மாத்திரமே மதகுகளை திறக்கவும், அடைக்கவும் முடியும்.

பூமியிலுள்ள மனுஷர் எல்லோரும் பாவிகளாயும், துன்மார்க்கராயும் இருக்கிறார்கள். அவர்கள்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பை அனுப்புவதற்காகவே, கர்த்தர் இந்தப் பூமியின்மேல் ஜலப்பிரளயத்தை உண்டுபண்ணினார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவருடைய நீதியின் பிரகாரம் நடைபெறும். ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையின் பிரகாரம், தம்முடைய நியாயத்தீர்ப்பை நிறுத்தி வைக்கிறார்.

கர்த்தருடைய பலத்த கரமே பாவிகளை நிக்கிரகம்பண்ணுகிறது. அவருடைய கிருபையுள்ள கரமே ஜனங்களை அழிவுக்கு தப்பிக்கவைக்கிறது. கர்த்தரே காயப்படுத்துகிறவர். அவரே காயம் கட்டுகிறவர்.

"இதோ, அவர் இடித்தால் கட்ட முடியாது; அவர் மனுஷனை அடைத்தால் விடுவிக்கமுடியாது. இதோ, அவர் தண்ணீர்களை அடக்கினால் எல்லாம் உலர்ந்துபோம்; அவர் அவைகளை வரவிட்டால், பூமியைக் கீழதுமேலதாக்கும்" (யோபு 12:14,15).

கர்த்தர் ஆழத்தின் ஊற்றுக்கண்களையும், வானத்தின் மதகுகளையும் அடைக்கிறார். அப்போது வானத்தின் மழை நின்றுபோயிற்று. மழை நின்றாலும், ஜலப்பிரளயம் உடனே நின்றுபோகவில்லை. ஜலம் பூமியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வற்றுகிறது.

நோவாவும் அவருடைய வீட்டாரும் பேழைக்குள்ளே இருக்கிறார்கள். மழை நின்றுபோவது கர்த்தருடைய மீட்கும் கிரியை. கர்த்தர் இந்தப் பிரபஞ்சத்து ஜனங்களுக்கு, ஒரே வேளையில் மீட்பை கட்டளையிடாமல், கொஞ்சம் கொஞ்சமாக கட்டளையிடுகிறார்.

ஆரம்பத்தில் நமக்கு மீட்பு குறைவாக கிடைக்கலாம். அற்பமான காரியங்களை நாம் ஒருபோதும் அசட்டைபண்ணக்கூடாது. ஆரம்பம் சாதாரணமாக இருந்தாலும், அதன் முடிவு மகிமையுள்ளதாகயிருக்கும்.

ஜலம் பூமியிலிருந்து நாளுக்குநாள் வற்றிக்கொண்டே வருகிறது; நூற்றைம்பது நாளுக்குப்பின்பு ஜலம் வடிகிறது (ஆதி 8:3).

நமக்குள்ளே இரட்சிப்பின் கிரியையை ஆரம்பிக்கிற கர்த்தர், அதை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக நிறைவேற்றி முடிப்பார். இரட்சிப்பு கர்த்தருடையது.

"அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டைபண்ணலாம்? பூமியெங்கும் சுற்றிப்பார்க்கிறவைகளாகிய கர்த்தருடைய ஏழு கண்களும் செருபாபேலின் கையில் இருக்கிற தூக்குநூலைச் சந்தோஷமாய்ப் பார்க்கிறது" (சக 4:10).

"நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்" (நீதி 4:18).

அரராத் மலைகள்
ஆதி 8:4,5

ஆதி 8:4. ஏழாம்மாதம் பதினேழாம் தேதியிலே பேழை அரராத் என்னும் மலைகளின்மேல் தங்கிற்று.

ஆதி 8:5. பத்தாம்மாதம் மட்டும் ஜலம் வடிந்து கொண்டேவந்தது; பத்தாம் மாதம் முதல் தேதியிலே மலைச்சிகரங்கள் காணப்பட்டன.

ஜலம் நாளுக்குநாள் பூமியிலிருந்து வற்றிக்கொண்டே வருகிறது. பேழை அரராத் என்னும் மலைகளின்மேல் தங்கிற்று. பேழை மிதக்காமல், மலையின்மேல் தங்குவது நோவாவுக்கு ஆறுதலாயிருக்கிறது. நோவாவின் பேழை இப்போது எங்கும் பிரயாணம்பண்ணாமல், ஒரிடத்தில் நிலையாய்த் தங்கியிருக்கிறது. நோவாவின் வாசஸ்தலம் இப்போது உறுதியான தரையின்மேல் நிற்கிறது.

நோவா பேழையை செய்தாலும், அவர் அந்தப் பேழையை செலுத்தவில்லை. நோவாவின் கட்டளையின் பிரகாரம், அந்தப் பேழை எங்கும் போகவில்லை. தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலின் பிரகாரமாக, அந்தப் பேழை பூமிக்குமேல் மிதக்கிறது. இப்போது அந்தப் பேழை மிதக்காமல், அரராத் மலையின்மேல் நிற்கவேண்டும் என்பது தேவனுடைய சித்தம்.

கர்த்தருடைய பரிசுத்தவான்களும் இந்தப் பேழையைப்போல, இந்த உலகத்தில் அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிலையாக தங்கி தாபரிக்கும் ஸ்தலம் எதுவுமில்லை. தாங்கள் எங்கே போகிறோம் என்பதுகூட அவர்களுக்கு பல சமயங்களில் தெரியவில்லை. ஆனாலும் கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களுக்கு இளைப்பாறும் ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார்.

நோவா செய்த பேழை, ஒரு குறிப்பிட்ட நாளிலே அரராத் என்னும் மலைகளின்மேல் தங்கியதுபோல, கர்த்தர் நமக்கும் ஒரு ஆறுதலின் காலத்தை நியமித்து வைத்திருக்கிறார். அந்த நாளிலே நாம் எங்கும் அலையாமல், கர்த்தருக்கு சித்தமான இடத்திலே தங்கி தாபரிப்போம். அப்போது நம்முடைய மனதிற்கு ஆறுதலும், நம்முடைய சரீரத்திற்கு இளைப்பாறுதலும் உண்டாகும்.

அரராத் என்னும் மலைகள் ஒரு மலைக்கூட்டம். இந்த மலைகளின் சிகரங்கள் மாத்திரமே தண்ணீரின்மேல் தெரிகிறது. இந்த சிகரங்களைப் பார்ப்பதற்கு ஒரு தீவுக்கூட்டம் போல தெரியும். பேழைக்குள்ளே இருக்கிற நோவாவும், அவருடைய வீட்டாரும் அரராத் மலைகளின் சிகரங்களைப் பார்த்திருப்பார்கள். இவர்களைத் தவிர அந்த மலைச்சிகரங்களைப் பார்ப்பதற்கு, இந்தப் பூமியிலே வேறு யாரும் உயிரோடில்லை.

நோவாவும் அவருடைய வீட்டாரும் பேழையிலே மிதக்கும்போது, பேழையிலுள்ள ஜன்னலை திறந்து பார்த்திருப்பார்கள். ஒருவேளை அவர்கள் அந்த ஜன்னலை ஒவ்வொரு நாளும் திறந்து பார்த்திருக்கலாம். ஒரே நாளில் பல தடவைகள்கூட அந்த ஜன்னலைத் திறந்து பார்த்திருக்கலாம். நோவாவும் அவருடைய வீட்டாரும் பல நாட்களாக பேழையிலே மிதக்கிறார்கள். அவர்களுடைய சரீரங்களில் பிரயாணக்களைப்பு ஏற்பட்டிருக்கும். வெட்டாந்தரையைப் பார்க்கவேண்டும் என்னும் ஆவல் அவர்களுக்குள்ளே அதிகரித்திருக்கும்.

தேவன் பூமியின்மேல் காற்றை வீசப்பண்ணினபோது, தண்ணீர் அமர்ந்தது. அப்போது வானத்து மழையும் நின்றுபோயிற்று. பூமியின்மேல் ஜலம் வடிந்தது. நோவாவும் அவருடைய வீட்டாரும் அப்போதிருந்தே, ஏதாவது தரைப்பகுதி தென்படுகிறதா என்பதை தேடிப்பார்த்திருப்பார்கள். ஜலம் வடியும்போது, பூமியின் தரை காணப்படுவதற்கு வாய்ப்புள்ளது.

ஏழாம் மாதம் பதினேழாம் தேதியிலே, பேழை அரராத் என்னும் மலைகளின்மேல் தங்கினாலும், பத்தாம் மாதம் முதல் தேதியில்தான் நோவாவுக்கும் அவருடைய வீட்டாருக்கும் மலைச்சிகரங்கள் காணப்படுகிறது.

காகம், புறா
ஆதி 8:6-12

ஆதி 8:6. நாற்பது நாள் சென்றபின், நோவாதான் பேழையில் செய்திருந்த ஜன்னலைத் திறந்து,

ஆதி 8:7. ஒரு காகத்தை வெளியே விட்டான்; அது புறப்பட்டுப் பூமியின்மேல் இருந்த ஜலம் வற்றிப்போகும்வரைக்கும் போகிறதும் வருகிறதுமாய் இருந்தது.

ஆதி 8:8. பின்பு பூமியின்மேல் ஜலம் குறைந்து போயிற்றோ என்று அறியும்படி, ஒரு புறாவைத் தன்னிடத்திலிருந்து வெளியே விட்டான்.

ஆதி 8:9. பூமியின்மீதெங்கும் ஜலம் இருந்தபடியால், அந்தப் புறா தன் உள்ளங்கால் வைத்து இளைப்பாற இடம் காணாமல், திரும்பிப் பேழையிலே அவனிடத்தில் வந்தது; அவன் தன் கையை நீட்டி அதைப் பிடித்துத் தன்னிடமாகப் பேழைக்குள் சேர்த்துக்கொண்டான்.

ஆதி 8:10. பின்னும் ஏழுநாள் பொறுத்து, மறுபடியும் புறாவைப் பேழையிலிருந்து வெளியே விட்டான்.

ஆதி 8:11. அந்தப் புறா சாயங்காலத்தில் அவனிடத்தில் வந்து சேர்ந்தது; இதோ, அது கொத்திக்கொண்டுவந்த ஒரு ஒலிவமரத்தின் இலை அதின் வாயில் இருந்தது; அதினாலே நோவா பூமியின்மேல் ஜலம் குறைந்துபோயிற்று என்று அறிந்தான்.

ஆதி 8:12. பின்னும் ஏழுநாள் பொறுத்து, அவன் புறாவை வெளியே விட்டான்; அது அவனிடத்திற்குத் திரும்பி வரவில்லை.

நோவாவும் அவருடைய வீட்டாரும் பேழைக்குள்ளே இருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை உள்ளே விட்டு, பேழையின் கதவை அடைத்திருக்கிறார். அவர்களால் பேழையின் கதவை திறக்க முடியாது. அந்தக் கதவை கர்த்தரால் மாத்திரமே திறக்க முடியும். ஆனாலும் பேழைக்கு வெளியே பூமி எப்படியிருக்கிறது என்பதை பார்க்கவேண்டும் என்னும் ஆவல் நோவாவுக்கு உண்டாயிற்று.

பேழையிலே நோவா ஒரு ஜன்னலை செய்திருக்கிறார். நோவாவும் அவருடைய வீட்டாரும், அந்த ஜன்னல் வழியாக பேழைக்கு வெளியே எட்டிப்பார்க்கிறார்கள். அவர்களுக்கு அரராத் என்னும் மலைகளின் சிகரம் மாத்திரமே காணப்படுகிறது. வேறு ஒன்றும் காணப்படவில்லை. ஜலம் வடிந்திருக்கிறது என்பது அவர்களுக்கு தெரிகிறது. ஆனால் அது எவ்வளவு வடிந்திருக்கிறது என்பதோ, பூமியின் நிலைப்பகுதி வெளியே தெரிகிறதா என்பதோ அவர்களுக்கு தெரியவில்லை. நோவா பூமியின் நிலவரத்தைப்பற்றி அறிந்துகொள்ள, காகத்தையும் புறாவையும் தன்னுடைய வேவுகாரராக பயன்படுத்துகிறார்.

இந்தப் பூமியின்மேல் எப்பொழுது ஜலப்பிரளயம் வரும் என்று கர்த்தர் நோவாவுக்கு சொன்னார். ஆனால், அந்த ஜலப்பிரளயம் எப்போது வற்றும் என்றோ, ஜலம் எப்பொழுது மொத்தமாய் வடிந்து, பூமியின் நிலப்பகுதி வெளியே காணப்படும் என்றோ கர்த்தர் நோவாவுக்கு சொல்லவில்லை.

கர்த்தர் நோவாவை நோக்கி, கொப்பேர் மரத்தால் ஒரு பேழையை உண்டாக்கு என்று சொன்னார். பூமியின்மீது ஜலப்பிரளயம் வரும் என்று சொன்னார். நோவா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து பேழையை உண்டாக்கினார். கர்த்தர் சொன்ன பிரகாரம் பூமியின்மேல் ஜலப்பிரளயம் உண்டாயிற்று. இனிமேல் என்ன நடைபெறும் என்பது நோவாவுக்கு தெரியாது.

நோவா கர்த்தரை தொடர்ந்து விசுவாசிக்கவேண்டும். கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பை நம்பவேண்டும். மறைவான காரியங்கள் கர்த்தருக்கே உரியது. கர்த்தருடைய இரகசியங்கள் ஏற்றவேளையில் வெளிப்படுத்தப்படும் என்பதை நோவா நம்பி, அது நிறைவேறும் காலத்திற்காக பொறுமையோடு காத்திருக்கவேண்டும். விசுவாசமும் பொறுமையும் இல்லாமல் கர்த்தருக்கு கீழ்ப்படிவது இயலாத காரியம்.

நோவா பேழையை உண்டாக்கியபோது, ஜலப்பிரளயம் வரப்போகிறது என்பது மாத்திரமே அவருக்கு தெரிந்திருந்தது. ஆனால் அந்த ஜலப்பிரளயம் எப்படியிருக்கும் என்பதோ, அது ஜீவஜந்துக்களை எவ்வாறு நிக்கிரகம்பண்ணும் என்பதோ நோவாவுக்கு தெரியாது.

பூமியின் மேலுள்ள ஜலம் மொத்தமாய் வடிந்தால், இந்தப் பூமி எப்படியிருக்கும் என்பது நோவாவுக்கு தெரியும். அவர் ஜலப்பிரளயத்திற்கு முன்பு, அப்படிப்பட்ட பூமியில்தான் வாசம்பண்ணினார். அந்தக் காலம் மறுபடியும் திரும்ப வரும் என்று நோவா பேழைக்குள்ளே பொறுமையோடு காத்திருக்கிறார்.

நோவா பேழைக்குள்ளே பொறுமையோடிருந்தாலும், கர்த்தருடைய பராமரிப்பு எப்படியிருக்கும் என்பதை அறிந்துகொள்ளவேண்டும் என்னும் ஆவல் அவருக்குள் அதிகமாயிற்று. கர்த்தர் தமக்கு ஏற்ற வேளையில் பூமியின் மேலுள்ள ஜலத்தை வடியப்பண்ணுவார். அந்த வேளை எப்போது வரும் என்பது நோவாவுக்கு தெரியவில்லை. அதை அறிந்துகொள்ளவேண்டும் என்னும் ஆவல் அவருக்குள் அதிகமாயிற்று.

விசுவாசிக்கிறவன் பதறான். நோவாவோ கர்த்தரை விசுவாசிக்கவும் செய்கிறார். பதறவும் செய்கிறார். தான் விசுவாசிப்பது எப்போது நடைபெறும் என்று பதட்டப்படவும் செய்கிறார்.

கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள், நீடிய பொறுமையுள்ளவர்களாயிருப்பார்கள். அவர்கள் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, உறுதியான பாதையில் நடப்பார்கள். அவர்கள் ஒருபோதும் அவசரப்பட்டு, கர்த்தருக்கு முன்பாக ஓடமாட்டார்கள்.

"ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப் பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான்" (ஏசா 28:16).

நாற்பது நாள் சென்றபின், நோவா தான் பேழையில் செய்திருந்த ஜன்னலைத் திறந்து, ஒரு காகத்தை வெளியே விடுகிறார்; அது புறப்பட்டுப் பூமியின்மேல் இருந்த ஜலம் வற்றிப்போகும்வரைக்கும் போகிறதும் வருகிறதுமாய் இருக்கிறது (ஆதி 8:6,7).

காகம் போகிறதும் வருகிறதுமாயிருக்கிறது. ஜன்னல் வழியாக பேழைக்குள் வெளியே போன காகம், மறுபடியும் அதே ஜன்னல் வழியாக பேழைக்குள்ளே வந்ததா அல்லது அந்தக் காகம் பேழையின்மீது தங்கிற்றா என்பது நிச்சயமாய்த் தெரியவில்லை. ஒருவேளை அந்தக் காகம் மறுபடியும் பேழைக்குள்ளே வராமல், பேழைக்கு வெளியிலேயே தங்கியிருப்பதற்கு வாய்ப்புள்ளது.

பின்பு பூமியின்மேல் ஜலம் குறைந்து போயிற்றோ என்று அறியும்படி, நோவா ஒரு புறாவைத் தன்னிடத்திலிருந்து வெளியே விடுகிறார். பூமியின்மீதெங்கும் ஜலம் இருந்தபடியால், அந்தப் புறா தன் உள்ளங்கால் வைத்து இளைப்பாற இடம் காணாமல், திரும்பிப் பேழையிலே அவரிடத்தில் வருகிறது; நோவா தன் கையை நீட்டி அதைப் பிடித்துத் தன்னிடமாகப் பேழைக்குள் சேர்த்துக்கொள்கிறார் (ஆதி 8:8,9).

நோவா புறாவை முதல் தடவையாக பேழைக்கு வெளியே அனுப்பியபோது, அது அவருக்கு நல்ல செய்தி எதையும் கொண்டு வரவில்லை. அது ஒரு வேளை ஜலத்தில் நனைந்திருக்கலாம். வெண்புறா அழுக்கடைந்திருக்கலாம். நோவா பின்னும் ஏழுநாள் பொறுத்து, மறுபடியும் அந்தப் புறாவை பேழையிலிருந்து வெளியே விடுகிறார் (ஆதி 8:10).

அந்தப் புறா சாயங்காலத்தில் நோவாவிடத்தில் வந்து சேருகிறது; இதோ, அது கொத்திக்கொண்டுவந்த ஒரு ஒலிவமரத்தின் இலை அதின் வாயில் இருக்கிறது; அதினாலே நோவா பூமியின்மேல் ஜலம் குறைந்துபோயிற்று என்று அறிகிறார் (ஆதி 8:11).

நோவா பின்னும் ஏழுநாள் பொறுத்து, அந்தப் புறாவை வெளியே விடுகிறார். அது அவரிடத்தில் திரும்பி வரவில்லை. நோவா ஒவ்வொரு முறை புறாவை பேழைக்கு வெளியே விடும்போது, ஏழுநாள் இடைவெளி கொடுத்து அதை வெளியே விடுகிறார். நோவாவும் அவருடைய வீட்டாரும் பேழைக்குள்ளே இருந்த காலத்தில், அவர்கள் ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரித்தார்கள் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். ஆகையினால்தான் நோவா ஓய்வுநாளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஏழுநாளுக்கு ஒருதரம் காகத்தையோ அல்லது புறாவையோ பேழையிலிருந்து வெளியே விடுகிறார்.

புறா கிருபையுள்ள ஆத்துமாவுக்கு அடையாளம். நோவா புறாவை முதல் தடவையாக பேழையிலிருந்து வெளியே அனுப்பியபோது, அந்தப் புறாவுக்கு தன் உள்ளங்கால் வைத்து இளைப்பாற இடம் இல்லை. இந்தப் பிரபஞ்சத்தில் மனுஷருடைய ஆத்துமாவும், அந்தப் புறாவைப்போல கால்வைத்து இளைப்பாற இடமில்லாமல் அலைந்துகொண்டிருக்கிறது. விசுவாசிகளாகிய நமக்கு இந்தப் பிரபஞ்சத்தில் சமாதானமோ, சந்தோஷமோ, திருப்தியோ இல்லை.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, பேழைக்கு அடையாளமாயிருக்கிறார். பேழையிலிருந்து வெளியே அனுப்பப்பட்ட புறாவுக்கு, வெளியிலே கால்வைத்து இளைப்பாற இடமில்லை. அந்தப் புறா திரும்பி பேழையில் வந்தபோது, அதற்கு அங்கே இளைப்பாறும் இடம் கிடைக்கிறது.

விசுவாசிகளாகிய நமக்கு இந்தப் பிரபஞ்சத்தில் ஆறுதலும், இளைப்பாறுதலும் இல்லாவிட்டாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் திரும்பி வரும்போது, நமக்கு அவரிடத்தில் இளைப்பாறுதல் உண்டு. வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார். வாக்குப்பண்ணினவர் உண்மையுள்ளவர். வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள்ளே ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறது.

மனுஷருடைய மாம்சஇருதயம் காகத்தைப் போன்றது. பேழையை விட்டு வெளியே போன காகம், பேழைக்கு மறுபடியும் வருகிறதும் போகிறதுமாய் இருக்கிறது. அதுபோலவே நம்முடைய மாம்சஇருதயமும், உலகப்பிரகாரமான காரியங்களை செய்கிறது. மறுபடியும் கர்த்தரிடத்தில் திரும்பி வருகிறது. மறுபடியும் உலககாரியங்களுக்கு போய்விடுகிறது. நோவா தன் கையை நீட்டி காகத்தை பிடித்து தன்னிடமாக பேழைக்குள் சேர்த்துக்கொள்ளவில்லை. ஆனால் இளைப்பாற இடம் காணாமல் திரும்பி பேழையிலே வந்த புறாவை, நோவா கையை நீட்டி அதைப் பிடித்து, தன்னிடமாக பேழைக்குள் சேர்த்துக்கொள்கிறார்.

நாம் கிறிஸ்துவண்டையில் வரும்போது, கிறிஸ்துவானவர் தம்முடைய கிருபையினால் நம்மை தம்மிடமாக சேர்த்துக்கொள்கிறார். தம்மிடத்தில் வருவதற்கு கிறிஸ்துவானவர் நமக்கு உதவி செய்கிறார். நம்மை உற்சாகப்படுத்தி வரவேற்கிறார். நாம் கிறிஸ்துவினிடத்தில் வந்தால் நமக்கு ஆறுதலும் இளைப்பாறுதலும் உண்டு.

நோவா மறுபடியும் புறாவை பேழையிலிருந்து வெளியே விட்டபோது, அந்தப் புறா சாயங்காலத்தில், நோவாவிடத்தில் வந்து சேருகிறது. அது கொத்திக்கொண்டு வந்த ஒரு ஒலிவமரத்தின் இலை அதின் வாயிலிருக்கிறது. ஒலிவமரத்தின் இலை சமாதானத்திற்கு அடையாளம். காகம் ஒலிவமரத்தின் இலையை கொத்திக்கொண்டு வரவில்லை. காகம் தனக்கு இரை தேடுவதில் அதிக கவனம் செலுத்திற்று. தன்னுடைய சுயநலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்கள், மற்றவர்களுடைய சமாதானத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கமாட்டார்கள்.

புறா காகத்தைப்போல சத்தம்போடாது. அது மற்ற பறவைகளுக்கு தீங்கு செய்யாது. புறா அமைதியான பறவை. புறாவை தாழ்மைக்கும் சமாதானத்திற்கும் அடையாளமாக சொல்லலாம். நம்மிடத்திலும் புறாவைப்போன்ற மென்மையான குணம் இருக்கவேண்டும். அப்போதுதான் நம்முடைய ஆத்துமா சந்தோஷமாய் இளைப்பாறும்.

வேதபண்டிதர்கள் நோவா அனுப்பின காகத்திற்கும் புறாவுக்கும் வெவ்வேறு விளக்கங்களை சொல்லுகிறார்கள். நியாயப்பிரமாணமானது முதலாவதாக காகத்தைப்போல மனுஷர் மத்தியிலே வெளிப்படுத்தப்பட்டது. காகம் ஒரு நற்செய்தியையும் கொண்டு வரவில்லை. அதுபோலவே நியாயப்பிரமாணமும் மனுஷருக்கு நற்செய்தியை அறிவிக்காது.

காலம் நிறைவேறியபோது, தேவன் புறாவைப்போல இருக்கிற சுவிசேஷத்தை மனுஷருக்கு அறிவிக்கிறார். பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல இந்தப் பூமியின்மேல் இறங்கி வருகிறார். புறாவின் வாயில் ஒலிவமரத்தின் இலை இருந்ததுபோல, சுவிசேஷத்தின் மூலமாக நமக்கு நம்பிக்கையின் நற்செய்தியும், ஆறுதலின் நற்செய்தியும் அறிவிக்கப்படுகிறது.

ஜலம் வற்றிப்போயிற்று ஆதி 8:13,14

ஆதி 8:13. அவனுக்கு அறுநூற்றொரு வயதாகும் வருஷத்தில், முதல் மாதம் முதல் தேதியிலே பூமியின்மேல் இருந்த ஜலம் வற்றிப்போயிற்று; நோவா பேழையின் மேல்தட்டை எடுத்துப்பார்த்தான்; பூமியின்மேல் ஜலம் இல்லாதிருந்தது.

ஆதி 8:14. இரண்டாம் மாதம் இருபத்தேழாம் தேதியிலே பூமி காய்ந்திருந்தது.

பூமியின் மேல் இருந்த ஜலம் வற்றிப்போயிற்று. பூமியின்மேல் பிரவாகித்துக் கொண்டிருந்த ஜலமெல்லாம் வற்றிப்போயிற்று. இந்த ஜலம் வற்றிப்போன நாளும் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நோவாவுக்கு அறுநூற்றொரு வயதாகும் வருஷத்தில், முதல் மாதம் முதல் தேதியிலே பூமியின்மேல் இருந்த ஜலம் வற்றிப்போயிற்று.

முதல் மாதம், முதலாம் தேதி என்பது வருஷப்பிறப்பு ஆகும். அது நோவாவுக்கு சந்தோஷமான நாள். பூமியின்மேல் இருந்த ஜலம் வற்றிப்போனதை நோவா தன்னுடைய கண்களினால் பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறார். நோவா பேழையின் மேல்தட்டை எடுத்துப்பார்க்கிறார்; பூமியின்மேல் ஜலம் இல்லாதிருக்கிறது.

பேழையின் மேல் தட்டை எடுத்துப் பார்க்கும்போது, பூமியின்மேல் ஜலம் இல்லாதிருப்பதை நோவா பார்க்கிறார். அவருக்கு மிகவும் ஆறுதலாயிருக்கிறது. இதுவரையிலும் ஜலப்பிரயளத்தையும், ஜலப்பிரவாகத்தையும் பார்த்தவர், இப்போது ஜலமில்லாத பூமியைப் பார்க்கிறார்.

பூமியில் ஜலம் இல்லாதிருப்பது நோவாவுக்கு ஆச்சரியமாயும், அதிசயமாயும் இருக்கிறது. கர்த்தருடைய கிருபையினாலேயே பூமியில் ஜலம் இருக்கிறது. அவருடைய கிருபையினாலேயே பூமியில் ஜலம் இல்லாமலும் இருக்கிறது. நம்மைச் சுற்றிலும் இருக்கிற பூமியை நம்முடைய கண்களால் நாம் பார்ப்பது, கர்த்தருடைய சுத்தக்கிருபை.

கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் தனக்கு தொடர்ந்து கிடைத்து வருவதை நோவா உணருகிறார். தேவனுடைய தெய்வீக வல்லமை பூமியைப் புதுப்பிக்கிறது. இதுவரையிலும் ஜலத்தினால் மூழ்கியிருந்த பூமி இப்போது ஜலமில்லாமலிருக்கிறது.

இந்தப் பூமியைப்போலவே, நம்முடைய ஆத்துமாவும் பல சமயங்களில் துக்கத்திலும் வேதனையிலும் மூழ்கியிருக்கிறது. கர்த்தர் தம்முடைய தெய்வீக வல்லமையினால் நம்முடைய துக்கத்தையும் வேதனையையும் அகற்றுகிறார்.

நமக்கு வேதனைகள் வருவதுபோல, சில சமயங்களில் கர்த்தருடைய சபைகளும் துன்பப்படுத்தப்படுகிறது. அது வேதனைகளை அனுபவிக்கிறது. சபை உபத்திரவத்தில் மூழ்கியிருக்கிறது. கர்த்தர் தம்முடைய தெய்வீக வல்லமையினால் சபையின் உபத்திரவத்தை அகற்றுகிறார்.

இரண்டாம் மாதம் இருபத்தேழாம் தேதியிலே பூமி காய்ந்திருக்கிறது. இதனால் நோவா இந்தப் பூமியின்மேல் வாசம்பண்ணுவதற்கு அநுகூலமான சூழ்நிலைகள் உண்டாயிற்று. கர்த்தர் நம்முடைய ஆசைகளையும், மனதின் விருப்பங்களையும் நிறைவேற்றுவார் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனாலும் அவர் நம்முடைய தேவைகளையெல்லாம் சந்திப்பார். கர்த்தர் நம்முடைய நன்மைகளை விசாரிப்பார்.

இந்தப் பூமி காய்வதற்கு முன்பாகவே, நோவாவும் அவருடைய வீட்டாரும், பேழையைவிட்டு புறப்பட்டுப்போக ஆயத்தமாயிருக்கிறார்கள். இதற்காக நோவா பேழையின் மேல் தட்டை எடுத்துப் பார்த்தார். பேழையின் கதவோ அடைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தரே அந்தக் கதவை அடைத்தார். கர்த்தர் கதவை அடைத்தாலும் நோவா பேழையின் மேல்தட்டை எடுத்துப் பார்க்கிறார். பேழையின் கதவை அடைத்த கர்த்தர், அந்தக் கதவை தமக்கு சித்தமான வேளையிலே திறப்பார். கர்த்தர் கதவைத் திறக்கும் வேளைக்காக, நோவா பொறுமையோடு காத்திருக்கவேண்டும். ஆனால் நோவாவோ பொறுமையிழந்து, பேழையின் மேல் தட்டை எடுத்துப் பார்க்கிறார்.

பேழைக்குள் வெளிச்சம் வருவதற்காக பெரிய திறப்பு இருக்கிறது. அந்தத் திறப்பைக் கூரைபோன்ற ஒரு மேல்தட்டு மூடியிருக்க வேண்டும். இதனால் பேழைக்கு வெளியே ஜலத்தில் நிக்கிரகம் பண்ணப்பட்ட மனுஷர், விலங்குகள் ஆகியவற்றின் பிரேதங்கள் மிதந்து செல்வது, பேழைக்குள் இருப்பவர்களுக்கு மறைவாக இருக்கும்.

நோவாவைப்போலவே நாமும் பல வேளைகளில், கர்த்தருக்கு சித்தமான வேளை வரும் வரையிலும் காத்திருப்பதில்லை. அவசரப்படுகிறோம். கர்த்தர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கும் வேளையே நமக்கு நல்ல வேளை. ஆனால் நாமோ அவசரப்பட்டு கர்த்தருடைய கிருபையை பறித்துக்கொள்ள முயற்சி பண்ணுகிறோம்.

கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் நமக்கு கொடுக்கப்படும் வேளை வரும்போது, அதைப் பெற்றுக்கொள்ள நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும். கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்னும் தாகமும், ஆர்வமும் நம்முடைய மனதில் இருக்கவேண்டும். நோவாவின் இருதயத்தில் பேழையைவிட்டு வெளியேற வேண்டும் என்னும் ஆர்வம் அதிகமாயிருக்கிறது.

பேழையை விட்டுப் புறப்படுங்கள்
ஆதி 8:15-19

ஆதி 8:15. அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி:

ஆதி 8:16. நீயும், உன்னோடேகூட உன் மனைவியும், உன் குமாரரும், உன் குமாரரின் மனைவிகளும் பேழையை விட்டுப் புறப்படுங்கள்.

ஆதி 8:17. உன்னிடத்தில் இருக்கிற சகலவித மாம்சஜந்துக்களாகிய பறவைகளையும், மிருகங்களையும், பூமியின்மேல் ஊருகிற சகல பிராணிகளையும் உன்னோடே வெளியே வரவிடு; அவைகள் பூமியிலே திரளாய் வர்த்தித்து, பூமியின்மேல் பலுகிப் பெருகக்கடவது என்றார்.

ஆதி 8:18. அப்பொழுது நோவாவும், அவன் குமாரரும், அவன் மனைவியும், அவன் குமாரரின் மனைவிகளும் புறப்பட்டு வந்தார்கள்.

ஆதி 8:19. பூமியின்மேல் நடமாடுகிற சகல மிருகங்களும், ஊருகிற சகல பிராணிகளும், சகல பறவைகளும் ஜாதிஜாதியாய்ப் பேழையிலிருந்து புறப்பட்டு வந்தன.

கர்த்தர் பேழையின் கதவை திறப்பதற்கு முன்பாகவே, நோவா பேழையின் மேல் தட்டை எடுத்துப் பார்த்தார். பேழையைவிட்டு சீக்கிரத்தில் வெளியேற வேண்டும் என்னும் ஆர்வம் நோவாவின் மனதில் அதிகமாயிருக்கிறது. ஆனாலும் நோவா கர்த்தரிடத்தில் வழக்காடவில்லை. அவரோடு விவாதம்பண்ணவோ, வாக்குவாதம்பண்ணவோ இல்லை. பேழையின் மேல் தட்டை எடுத்துப் பார்த்த பின்பும், அவர் கர்த்தருடைய வார்த்தைக்காக பொறுமையோடு காத்திருக்கிறார்.

நோவாவும் அவருடைய வீட்டாரும் இதுவரையிலும் கர்த்தருடைய பாதுகாப்பிலிருந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய வழிநடத்துதலை பின்பற்றுவார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆளுகைக்கு கீழ்ப்படிவார்கள்.

கர்த்தர் நோவாவை பேழையிலே அதிக நாட்களுக்கு தங்கவைத்தார். ஆனாலும் ஏற்ற வேளை வந்தபோது கர்த்தர் நோவாவை பேழையைவிட்டு வெளியே வர அனுமதிக்கிறார்.

தேவன் நோவாவை நோக்கி, "நீயும், உன்னோடேகூட உன் மனைவியும், உன் குமாரரும், உன் குமாரரின் மனைவிகளும் பேழையை விட்டுப் புறப்படுங்கள்" (ஆதி 8:15,16) என்று சொல்லுகிறார்.

கர்த்தரே இதற்கு முன்பு, நோவாவை நோக்கி, "பேழைக்குள் பிரவேசியுங்கள்" என்று சொன்னார். கர்த்தர் இந்த வாக்கியத்தைச் சொல்லும்போது அவரும் நோவாவோடுகூட, பேழைக்குள் பிரவேசிக்கிறார்.

இப்போது கர்த்தர் நோவாவை நோக்கி, "பேழையை விட்டுப் புறப்படுங்கள்" என்று சொல்லுகிறார். அவர் நோவாவை நோக்கி "பேழையை விட்டுப் புறப்பட்டு வாருங்கள்" என்று சொல்லவில்லை. கர்த்தர் பேழைக்கு வெளியே இல்லை. அவர் பேழைக்குள்ளே இருக்கிறார். நோவாவோடு பேழைக்குள்ளே போன கர்த்தர், நோவாவையும் அவருடைய வீட்டாரையும் பேழையிலிருந்து பத்திரமாக வெளியேற்றும் வரையிலும், பேழைக்குள்ளேயே இருப்பார். கர்த்தருக்கு நோவாவின் பாதுகாப்பு முக்கியமானதாயிருக்கிறது.

கர்த்தர் நோவாவை நோக்கி, "உன்னிடத்தில் இருக்கிற சகலவித மாம்சஜந்துக்களாகிய பறவைகளையும், மிருகங்களையும், பூமியின்மேல் ஊருகிற சகல பிராணிகளையும் உன்னோடே வெளியே வரவிடு; அவைகள் பூமியிலே திரளாய் வர்த்தித்து, பூமியின்மேல் பலுகிப் பெருகக்கடவது" (ஆதி 8:17) என்று சொல்லுகிறார்.

அப்பொழுது நோவாவும், அவருடைய குமாரரும், அவர் மனைவியும், அவர் குமாரரின் மனைவிகளும் புறப்பட்டு வருகிறார்கள். பூமியின்மேல் நடமாடுகிற சகல மிருகங்களும், ஊருகிற சகல பிராணிகளும், சகல பறவைகளும் ஜாதிஜாதியாய்ப் பேழையிலிருந்து புறப்பட்டு வருகிறது (ஆதி 8:18,19).

நோவா பேழையைவிட்டு வெளியே புறப்பட்டு வரும்போது, இந்தப் பூமி அவரை வரவேற்பதற்கு ஆயத்தமாயிருக்கிறது. கர்த்தர் தன்னை பேழைக்குள்ளே பாதுகாத்ததை நோவா தன் இருதயத்தில் உணருகிறார். அவர் நோவாவுக்கு இப்போது புதிய ஜீவனையும், புதிய உலகத்தையும் காண்பிக்கிறார். நோவா கர்த்தருக்குள் சந்தோஷமாயும், திருப்தியாயும் இருக்கிறார். நோவாவுக்கு கர்த்தரைப்பற்றி குறை சொல்ல ஒன்றுமேயில்லை.

நோவாவும் அவருடைய வீட்டாரும் பேழையைவிட்டு உயிரோடு வெளியே வருகிறார்கள். நோவாவோடு பேழைக்குள் பிரவேசித்த எல்லா ஜீவன்களும், ஜாதி ஜாதியாய் பேழையிலிருந்து புறப்பட்டு வருகிறது. நோவாவோடு பேழைக்குள்ளே போன காகமும் புறாவும் மாத்திரம், இப்போது பேழையைவிட்டு புறப்பட்டு வரவில்லை. அவை இரண்டும் பேழையிலிருந்து ஏற்கெனவே வெளியேறிப்போயிற்று. பேழையிலிருந்து வெளியே புறப்பட்டு வரும் ஜீவன்களை வரவேற்பதற்காக, காகமும் புறாவும் பேழைக்கு வெளியே காத்திருக்கிறது.

கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் நோவா செய்கிறார். அவர் தன்னிடத்தில் ஒப்புக்கொடுத்த எல்லா ஜீவன்களையும் பேழைக்குள்ளே போஷித்து பாதுகாத்தார். தன்னிடத்தில் ஒப்புக்கொடுத்த எந்த ஜீவனையும் நோவா இழந்துபோகவில்லை. அவையெல்லாமே ஜாதி ஜாதியாய் பேழையிலிருந்து புறப்பட்டு வருகிறது.

கர்த்தருக்கு பலிபீடம்
ஆதி 8:20-22

ஆதி 8:20. அப்பொழுது நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்துகொண்டு, அவைகளைப் பலி பீடத்தின்மேல் தகனபலிகளாகப் பலியிட்டான்.

ஆதி 8:21. சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர்ந்தார். அப்பொழுது கர்த்தர்: இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கி பொல்லாததாயிருக்கிறது; நான் இப்பொழுது செய்ததுபோல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை.

ஆதி 8:22. பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார்.

நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்திருக்கிறது. நோவா கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் நன்றியுள்ள இருதயத்தோடு அங்கீகரிக்கிறார். கர்த்தர் நோவாவையும், அவருடைய வீட்டாரையும் ஜலப்பிரளயத்திலிருந்து பாதுகாத்தார். நோவா கர்த்தருக்கு துதிகளையும், ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கும் வண்ணமாக, நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டுகிறார்.

கர்த்தர் நமக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். அவர் நம்முடைய சுயாதீனமான காணிக்கைகளில் பிரியமாயிருக்கிறார். நாம் கர்த்தருடைய சமுகத்தில் துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கவேண்டும். கர்த்தரே நம்முடைய துதிகளுக்கு பாத்திரர். அவர் நம்முடைய துதிகளில் பிரியமாயிருக்கிறார்.

நோவா இதுவரையிலும் பேழைக்குள்ளே இருந்தார். இப்போது பேழைக்கு வெளியே புதிய பூமியிலே தங்கியிருக்கிறார். பூமி காய்ந்திருக்கிறது. பூமியின்மேல் ஜலம் இல்லாதிருக்கிறது. ஜலப்பிரளயத்திற்கு முன்பு நோவாவுக்கு வீடு வாசல்கள் எல்லாம் இருந்தது. ஜலப்பிரளயத்தினால் எல்லாம் அழிந்துபோனபோது, நோவாவின் வீடும் அழிந்துபோயிற்று.

நோவா பேழையிலிருந்து வெளியே புறப்பட்டு வந்தவுடன், அவர் தனக்கு ஒரு வீட்டைக் கட்டவேண்டும் என்று ஆசைப்படவில்லை. அவர் முதலாவதாக கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டுகிறார். நோவா கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். தன்னுடைய சொந்த வசதிகளை கவனிப்பதற்கு முன்பாக, கர்த்தரை ஆராதிக்கவேண்டும் என்பது அவருடைய தீர்மானம். நாம் எந்த வேலையை செய்ய ஆரம்பித்தாலும், அதை கர்த்தரோடு செய்ய ஆரம்பிக்கவேண்டும். அப்போதுதான் அதன் ஆரம்பமும் நன்றாயிருக்கும். அதன் முடிவும் நன்றாயிருக்கும்.

நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்துகொண்டு, அவைகளைப் பலிபீடத்தின்மேல் தகனபலிகளாகப் பலியிடுகிறார் (ஆதி 8:20).

நோவா பேழையைவிட்டுப் புறப்பட்டு வரும்போது, அவரோடுகூட பேழைக்குள் பிரவேசித்த ஜீவன்களெல்லாம் பேழையிலிருந்து வெளியே புறப்பட்டு வருகிறது. இந்தப் பூமியிலிருந்த ஏராளமான ஜீவன்கள் ஜலப்பிரளத்தில் மாண்டுபோயிற்று. இப்போது சொற்ப எண்ணிக்கையுள்ள ஜீவஜந்துக்களே உயிரோடு மீந்திருக்கிறது. கர்த்தர் "அவைகள் பூமியிலே திரளாய் வர்த்தித்து பூமியின்மேல் பலுகிப்பெருகக்கடவது" (ஆதி 8:17) என்று சொன்னார்.

ஆனால் நோவாவோ பேழையிலிருந்து வெளியே வந்த மிருகங்களில் சுத்தமான மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றை தெரிந்து கொண்டு, அவைகளை பலிபீடத்தின்மேல் கர்த்தருக்கு தகனபலியாக பலியிடுகிறார்.

இந்தப் பூமியிலே ஜலம் பிரவாகித்து வந்த நாளெல்லாம், நோவாவும் அவருடைய வீட்டாரும், பேழைக்குள்ளே இருந்த மிருகங்களையும் பறவைகளையும் கவனமாய்ப் போஷித்த பராமரித்தார்கள். ஆனாலும் அவற்றிலிருந்து சிலவற்றை எடுத்து கர்த்தருக்கு பலியிட நோவா முறுமுறுக்கவில்லை. நோவா கர்த்தருக்குரியதை கர்த்தருக்கு கொடுக்கிறார்.

நோவாவிடத்தில் அதிகமான மிருகங்களோ, அதிகமான பறவைகளோ இல்லை. அவரிடத்தில் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜீவன்களே இருக்கிறது. நோவாவிடத்தில் கொஞ்சமே இருந்தாலும், அவர் அந்த கொஞ்சத்திலும் உண்மையுள்ளவராயிருக்கிறார்.

நம்மிடத்தில் கொஞ்சம் தாலந்துகளும், கொஞ்சம் பொருளாதார வசதிகளும் இருந்தாலும், நம்மிடத்தில் இருக்கிற கொஞ்சத்தைக்கொண்டு கர்த்தரை சேவிக்கவேண்டும். கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். கர்த்தரைக் கனம்பண்ணவேண்டும். அப்போது நம்மிடத்திலுள்ளதை கர்த்தர் வர்த்திக்கப்பண்ணுவார்.

கர்த்தரைக் கனம்பண்ணுவதினால் நமக்கு இழப்பு ஏற்படாது. கர்த்தருக்கு காணிக்கை செலுத்துவதினால் நமக்கு குறைவு உண்டாகாது. நம்முடைய ஆஸ்தியினால் நாம் கர்த்தரைக் கனம்பண்ணும்போது, நம்முடைய ஆஸ்தி வீணாய்ப்போயிற்று என்றோ அல்லது நஷ்டமாயிற்று என்றோ நினைக்கக்கூடாது. நாம் கர்த்தருக்கு மனப்பூர்வமாகவும், சந்தோஷமாகவும் காணிக்கைகளை செலுத்தவேண்டும். உற்சாகமாய்க் கொடுக்கிறவர்களிடத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

நோவா பேழையிலிருந்து புதிய உலகத்திற்கு வருகிறார். அந்தப் புதிய பூமியிலே நோவா செய்கிற முதலாவது காரியம், கர்த்தரை ஆராதிப்பதுதான். கர்த்தரை ஆராதிப்பது பூர்வபாதை. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பூர்வபாதைகளை மறந்துவிடக்கூடாது.

"வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்" (எரே 6:16).

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் கர்த்தருக்கு பலிபீடம் கட்டுவதில்லை. அவருக்கு மிருகங்களையும் பறவைகளையும் தகனபலிகளாக செலுத்துவதுமில்லை. ஆனாலும் நாம் கர்த்தருக்கு துதியின் பலிகளையும், ஸ்தோத்திர பலிகளையும் ஏறெடுக்கவேண்டும். கர்த்தருக்கு நீதியின் பலிகளை செலுத்தவேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, பக்தியுள்ளவர்களாய் ஜீவிக்கவேண்டும்.

நோவா கர்த்தருக்கு தகனபலிகளை பலியிடுகிறார். கர்த்தர் நோவா செலுத்தும் பலிகளை தமது கிருபையினால் அங்கீகரிக்கிறார். கர்த்தர் தகனபலிகளின் சுகந்த வாசனையை முகருகிறார். நோவா தமக்கு தனபலிகளை செலுத்துவது கர்த்தருக்கு பிரியமாயிருக்கிறது. நோவா கர்த்தரிடத்தில் பக்திவைராக்கியமாயிருக்கிறார். நோவாவுக்கு முன்பாக புதிய பூமியும், புதிய உலகமும் இருக்கிறது. இந்தப் புதிய உலகத்தில் நோவா கர்த்தரோடு பிரவேசிக்க விரும்புகிறார்.

கர்த்தருக்கு பாவிகள்மீது இருந்த உக்கிர கோபம் குறைந்திருக்கிறது. கர்த்தர் தம்முடைய நீதியான கோபத்தினால், இந்தப் பூமியையும், பூமியிலுள்ள ஜீவஜந்துக்களையும் ஜலப்பிரளயத்தினால் அழித்துப்போட்டார். இப்போதோ கர்த்தர் சாந்தமாயிருக்கிறார். கர்த்தர் தம்முடைய கிருபையை வெளிப்படுத்த சித்தமுள்ளவராயிருக்கிறார்.

நோவா கர்த்தருக்கு தகனபலிகளை பலியிட்ட பின்பு, கர்த்தர் அதன் சுகந்த வாசனையை முகருகிறார். அப்பொழுது கர்த்தர், "இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயதுதொடங்கி பொல்லாததாயிருக்கிறது; நான் இப்பொழுது செய்ததுபோல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை" (ஆதி 8:21) என்று சொல்லுகிறார்.

நோவாவின் காலத்து ஜலப்பிரளயத்தினால் பேழைக்குள் பிரவேசித்தவர்களைத் தவிர மற்ற அனைவரும் சங்காரமானார்கள். மறுபடியும் தேவன் ஜலத்தினால் எல்லா ஜீவன்களையும் சங்காரம் பண்ணமாட்டார். (ஆதி 9:15) பூமி அக்கினியினாலும் அழியாது. (2 பேதுரு 3:10-13) பூமியின்மீது இயற்கையான ஜீவன்கள் நித்திய காலமாய் இருக்கும் (ஆதி 8:22; ஆதி 9:12,16).

கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ள வார்த்தைகளை சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தையில் கோபமில்லை. இந்தப் பூமியை சபிப்பதில்லை என்றும், சகல ஜீவன்களையும் இனிமேல் சங்கரிப்பதில்லை என்றும் கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். அவர் வாக்குமாறாத தேவன். கர்த்தர் இந்தப் பூமிக்கும், பூமியிலுள்ள சகல ஜீவன்களுக்கும் பாதுகாப்பை கட்டளையிடுகிறார். அவையெல்லாம் இனிமேல் தங்கள் பாதுகாப்புக்கு கர்த்தரையே சார்ந்திருக்கும்.

கர்த்தர் இப்பொழுது செய்கிறதுபோல, இனிமேல் செய்யமாட்டார். இப்போது மனுஷருடைய பொல்லாப்பினிமித்தமாய், அவர் சகல ஜீவன்களையும் சங்கரித்தார். தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பினால், இந்தப் பூமியையும், பூமியிலுள்ள ஜீவன்களையும் அழித்துப்போட்டார். இனிமேல் கர்த்தருடைய கோபமான நியாயத்தீர்ப்பு இதுபோல வெளிப்படாது.

நோவா பேழையைவிட்டு வெளியே வந்தபோது, இந்த உலகமும், உலகத்திலுள்ள ஜீவன்களும் அழிந்துபோனதைப் பார்க்கிறார். கர்த்தர் சகல ஜீவன்களையும் சங்கரித்ததற்கான காரணம் நோவாவுக்கு தெரியும். மனுஷருடைய பாவங்களும் அக்கிரமங்களுமே தேவனுடைய கோபத்திற்கு காரணம். ஒருவேளை தானும், தன்னுடைய வீட்டாரும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தால், கர்த்தர் தங்களையும் சங்காரம்பண்ணுவார் என்னும் பயம் நோவாவின் மனதில் ஏற்பட்டிருக்கலாம்.

கர்த்தரோ நோவாவின் இருதயத்தில் உண்டான பயத்தை அறிந்து, அவருக்கு சமாதான வார்த்தைகளையும், ஆறுதலான வார்த்தைகளையும் சொல்லுகிறார். "இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியை சபிப்பதில்லை" என்றும், "நான் இப்பொழுது செய்ததுபோல இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை" என்றும் கர்த்தர் நோவாவுக்கு வாக்குப்பண்ணுகிறார்.

பூமி சபிக்கப்பட்டதற்காக நோவா வருத்தப்படுகிறார். கர்த்தரும் வேதனைப்படுகிறார். பூமி அழிந்துபோனதற்கு கர்த்தர் காரணமல்ல. அதற்கு மனுஷருடைய பாவங்களும், அக்கிரமங்களுமே காரணம். மனுஷருடைய பொல்லாப்பினிமித்தமாய் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டது. மனுஷருடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கி பொல்லாததாயிருக்கிறது என்பதை கர்த்தர் காண்கிறார்.

மனுஷனுடைய சுபாவம் மிகவும் விநோதமாயிருக்கிறது. அவன் சிறுவயது முதலே பொல்லாப்பு செய்ய ஆரம்பிக்கிறான். அவனுடைய இருதயத்தின் நினைவுகளெல்லாம் பொல்லாததாயிருக்கிறது. மனுஷன் விநோதமாகயிருப்பதினால், அவன்மீது விநோதமான நியாயத்தீர்ப்பு வருகிறது. மனுஷருடைய பொல்லாப்பினிமித்தமாக பூமி சபிக்கப்படுகிறது. பூமியிலுள்ள சகல ஜீவன்களும் சங்கரிக்கப்படுகிறது.

"நீ கேள்விப்படவுமில்லை, அறியவுமில்லை; ஆதிமுதல் உன் செவி திறந்திருக்கவுமில்லை; நீ துரோகம்பண்ணுவாயென்பதையும், தாயின் கர்ப்பந்தொடங்கி நீ மீறுகிறவனென்று பெயர் பெற்றதையும் அறிந்திருக்கிறேன்" (ஏசா 48:8).

மனுஷன் மாம்சமானவன் என்பதை கர்த்தரும் அறிந்திருக்கிறார். மாம்சமான மனுஷனிடத்தில் ஆவியின் சுபாவத்திற்கு பதிலாக மாம்சசுபாவம் அதிகமாயிருக்கிறது. மாம்சம் அவனை ஆளுகை செய்கிறது. மனுஷனுடைய பாவத்திற்குத்தக்கதாக கர்த்தர் அவனை நியாயந்தீர்த்தால், இந்தப் பூமியின்மேல் ஜலப்பிரளயம் வந்துகொண்டேயிருக்கும். ஜலப்பிரளயத்தின் எண்ணிக்கைக்கு முடிவு இருக்காது. கர்த்தருடைய கோபத்தினால் ஒவ்வொரு ஜலப்பிரளயமாக இந்தப் பூமியின்மேல் வரும். இந்தப் பூமியானது மொத்தமாய் அழிந்துபோகும்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால் மனுஷருடைய இருதயங்களில் பயமுண்டாகலாம். ஆனாலும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்போ, அவர் கொடுக்கும் தண்டனைகளோ மனுஷனுடைய இருதயத்தைப் புதுப்பிக்கவும் செய்யாது, அந்த இருதயத்தை சுத்திகரிக்கவும் செய்யாது. தேவனுடைய நியாயத்தீர்ப்போடு, அவருடைய கிருபையும் சேர்ந்து கிரியை செய்யவேண்டும். அப்போதுதான் மனுஷனுடைய இருதயம் புதுப்பிக்கப்படும். அப்போதுதான் அது சுத்திகரிக்கப்படும்.

கர்த்தர் தம்முடைய கிருபையினாலேயே தம்முடைய இரக்கத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கு நம்மிடத்தில் ஒரு தகுதியுமில்லை. கர்த்தர் நம்முடைய தகுதிகளை எதிர்பார்த்தால், அவருடைய கிருபை நமக்கு ஒருபோதும் கிடைக்காது.

கர்த்தர் மனுஷன் நிமித்தமாக பூமியை சபித்தார். பூமியிலுள்ள ஜீவன்களையெல்லாம் சங்கரித்தார். ஆனாலும் கர்த்தர் தம்முடைய இயற்கையின் பிரமாணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். கர்த்தர் மாறாதவராயிருப்பதுபோல, அவருடைய இயற்கையின் பிரமாணமும் மாறாததாயிருக்கிறது.

"பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை" (ஆதி 8:22) என்று கர்த்தர் தம்முடைய உள்ளத்தில் சொல்லுகிறார்.

ஜலப்பிரளயம் முடிந்தபோது பூமியின்மேல் ஜலம் இல்லாதிருக்கிறது. ஜலப்பிரளயத்தின்போது பெருமழை பெய்தது. அதன் பின்பு மழை நின்றுபோயிற்று. கர்த்தர் இந்தப் பூமியின்மீது மழை பெய்வதை மொத்தமாய் நிறுத்திவிடவில்லை. மழை காலத்தில் மழை பெய்யும். இது கர்த்தருடைய இயற்கையின் பிரமாணம். பூமி உள்ள நாளளவும் கர்த்தருடைய இயற்கையின் பிரமாணம் கிரியை செய்யும்.

பூமியின் மேலுள்ள எல்லா ஜீவன்களுக்கும் கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பு தேவைப்படுகிறது. கர்த்தர் நம்மைப் பராமரிக்கவில்லையென்றால் நமக்கு ஒரு பராமரிப்பும் இல்லை. கர்த்தருடைய கிருபையினாலேயே பூமியிலே விதைப்பும் அறுப்பும் நடைபெறுகிறது. கர்த்தரே விதைப்புக்கு விதையையும், அறுவடைக்கு விளைச்சலையும் கொடுக்கிறார். எல்லாம் ஏற்ற காலத்தில் நடைபெறுகிறது. எல்லா காலமும் இரவாகவோ அல்லது எல்லா காலமும் பகலாகவோ இருக்கப்போவதில்லை. பகலும் இரவும் மாறி மாறி வரும்.

கர்த்தர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். ஆனாலும் பூமியிலே காலங்களும், பகலும் இரவும், மாறி மாறி வருகிறது. மாறாத கர்த்தரே இந்த மாற்றத்தை திட்டம்பண்ணியிருக்கிறார். பகலும் இரவும் மாறி மாறி வந்தாலும், அவை மாறுவது மாறாமலிருக்கிறது. தினமும் பகலும் இரவும் வருகிறது. இதில் ஒரு நாளும் மாற்றம் இருக்காது.

காலங்களும் ஒழிந்துபோவதில்லை. கோடைகாலமும், மாரிகாலமும் மாறி மாறி வரும்.

"குறித்த நேரங்களில் பகற்காலமும் இராக்காலமும் உண்டாகாதபடிக்கு, நீங்கள் பகற்காலத்தைக் குறித்து நான் பண்ணின உடன்படிக்கையையும், இராக்காலத்தைக் குறித்து நான் பண்ணின உடன்படிக்கையையும் அவமாக்கினால்,. அப்பொழுது என் தாசனாகிய தாவீதோடே நான் பண்ணின உடன்படிக்கையும், அவன் சிங்காசனத்தில் அரசாளும் குமாரன் அவனுக்கு இல்லாமற் போகும்படியாக அவமாகும்; என் ஊழியக்காரராகிய லேவியரோடும் ஆசாரியரோடும் நான் பண்ணின உடன்படிக்கையும் அப்பொழுது அவமாகும்" (எரே 33:20,21).

9 அதிகாரம்

ஜலப்பிரளயத்திற்கு முன்பு இந்தப் பூமியில் மனுபுத்திரர் பலுகிப்பெருகியிருந்தார்கள். ஜலப்பிரளயத்தினால் பூமியின் மேலுள்ள ஜீவன்களெல்லாம் அழிந்துபோயிற்று. இப்போது இந்த உலகத்தில் நோவாவும் அவருடைய வீட்டாரும் மாத்திரமே இருக்கிறார்கள். அவர்களோடுகூட பேழையிலிருந்து வெளியேறிய ஜீவன்களும் இருக்கிறது.

கர்த்தர் நோவாவுக்கும் அவருடைய வீட்டாருக்கும் தம்முடைய பராமரிப்பின் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார் (ஆதி 9:1-11). கர்த்தர் அவர்களுடைய ஜீவனைப் பாதுகாப்பதாக வாக்குப்பண்ணுகிறார். அவர்கள் பலுகிப்பெருகி பூமியை நிரப்பவேண்டும் (ஆதி 9:1,7). பூமியிலுள்ள மிருகங்களினால் மனுஷருக்கு ஆபத்து ஏற்படாது (ஆதி 9:2).

நோவாவும் அவருடைய வீட்டாரும் மாம்ச ஜந்துக்களைப் புசிக்கலாம். ஆனால் அந்த மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடு புசிக்கக்கூடாது (ஆதி 9:3,4).

கர்த்தர் இந்தப் பூமியை மறுபடியும் ஜலப்பிரளயத்தினால் அழிக்கமாட்டார் (ஆதி 9:8-11). பூமியிலுள்ள மனுஷர் எல்லோரும் மற்ற உயிர்களைப் பாதுகாக்கவேண்டும். மற்ற உயிர்களின் இரத்தத்தை சிந்தக்கூடாது (ஆதி 9:5,6).

கர்த்தருடைய உடன்படிக்கைக்கு அடையாளமாக மேகத்தில் வானவில் தோன்றுகிறது (ஆதி 9:12-17).

நோவாவும் அவருடைய குமாரரும். நோவாவின் பாவமும் அவருடைய அவமானமும் (ஆதி 9:20,21). காமின் பாவம் (ஆதி 9:22). சேம், யாப்பேத் ஆகியோரின் நற்குணம் (ஆதி 9:23). கானானுக்கு சாபமும், சேமுக்கும் யாப்பேத்திற்கும் ஆசீர்வாதமும் (ஆதி 9:24-27). நோவாவின் வயதும் மரணமும் (ஆதி 9:28,29).

தேவன் ஆசீர்வதிக்கிறார்
ஆதி 9:1-7

ஆதி 9:1. பின்பு தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் ஆசீர்வதித்து: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்.

ஆதி 9:2. உங்களைப்பற்றிய பயமும் அச்சமும் பூமியிலுள்ள சகல மிருகங்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும் உண்டாயிருக்கும்; பூமியிலே நடமாடுகிற யாவும், சமுத்திரத்தின் மச்சங்கள் யாவும், உங்களுக்குக் கையளிக்கப்பட்டன.

ஆதி 9:3. நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும், உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக; பசும் பூண்டுகளை உங்களுக்குத் தந்தது போல, அவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன்.

ஆதி 9:4. மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்கவேண்டாம்.

ஆதி 9:5. உங்களுக்கு உயிராயிருக்கிற உங்கள் இரத்தத்திற்காகப் பழிவாங்குவேன்; சகல ஜீவஜந்துக்களிடத்திலும் மனுஷனிடத்திலும் பழிவாங்குவேன்; மனுஷனுடைய உயிருக்காக அவனவன் சகோதரனிடத்தில் பழிவாங்குவேன்.

ஆதி 9:6. மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது.

ஆதி 9:7. நீங்கள் பலுகிப் பெருகி, பூமியிலே திரளாய் வர்த்தித்து விர்த்தியாகுங்கள் என்றார்.

தேவன் நோவாவையும் அவருடைய குமாரரையும் ஆசீர்வதிக்கிறார். கர்த்தர் தம்முடைய நன்மைகளை அவர்களுக்கு வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் அவர்கள்மீது கிருபையுள்ளவராகவும், கரிசனையுள்ளவராகவும் இருக்கிறார். நோவா கர்த்தருக்கு பலிபீடம் கட்டி, அந்தப் பலிபீடத்தின்மேல் தகனபலிகளை செலுத்தினார் (ஆதி 8:20). கர்த்தர் நோவாவையும் அவர் செலுத்தின பலிகளையும் அங்கீகரித்தார்.

கர்த்தர் இந்தப் பூமியை ஜலப்பிரளயத்தினால் அழித்தாலும், அவர் தமது கிருபையை மறுபடியுமாக வெளிப்படுத்துகிறார். இந்தப் பூமி மறுபடியும் புதுப்பிக்கப்படுகிறது. இதிலே ஜீவஜந்துக்கள் மறுபடியும் திரளாய் ஜெநிப்பிக்கப்படுகிறது. இந்தப் பூமியில் புதிய அத்தியாயம் உண்டாயிற்று.

ஜலப்பிரளயத்திற்கு முன்பு, கர்த்தர் இந்தப் பூமியின்மீது தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்தினார். இப்போதோ அவர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் மனுக்குலத்திற்கு காண்பிக்கிறார்.

தேவன் நோவாவையும், அவருடைய குமாரரையும் ஆசீர்வதித்து: "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்" (ஆதி 9:1) என்று சொல்லுகிறார். மனுபுத்திரர் பலுகிப்பெருகவேண்டும் என்பதும், அவர்கள் இந்தப் பூமியை நிரப்பவேண்டும் என்பதும் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய முதலாவது ஆசீர்வாதத்தை இங்கு மறுபடியும் புதுப்பிக்கிறார்.

தேவன் ஆதாமை நோக்கி "பலுகிப்பெருகி பூமியை நிரப்பு" என்று கட்டளையிட்டார். (ஆதி 1:28). இங்கு நோவாவையும், அவர் குமாரரையும் மறுபடியுமாக பலுகிப்பெருகி பூமியை நிரப்புமாறு கூறுகிறார்.

நோவாவுக்கும், அவருடைய வீட்டாருக்கும் முன்பாக முழுபூமியும் இருக்கிறது. இந்த பூமி அவர்களுக்குரியது. அவர்கள் இந்தப் பூமியை நிரப்பவேண்டும். அவர்கள் பலுகிப்பெருகவேண்டும். இந்தப் பூமி உள்ளவரையிலும், இது நோவாவுக்கும் அவருடைய சந்தியாருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பூமியானது பரதீசு அல்ல. இது வனாந்தரம் போல இருக்கிறது. ஆனாலும் நோவாவுக்கு இந்தப் பூமி கொடுக்கப்பட்டிருப்பது, கர்த்தருடைய கிருபை. இந்தப் பூமியை பெற்றுக்கொள்வதற்கு, நோவாவுக்கோ அவருடைய வீட்டாருக்கோ எந்தத் தகுதியுமில்லை. தகுதியில்லாத நோவாவை கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். இந்தப் பூமி நரகமுமல்ல. இதுவே நோவாவுக்கு பெரிய ஆசீர்வாதம்.

கர்த்தர் நோவாவுக்கும், அவருடைய குமாரருக்கும் ஆசீர்வாதத்தைக் கட்டளையிடுகிறார். கர்த்தருடைய ஆசீர்வாதமான வார்த்தையினால், அவர்கள் மிகவும் குறுகிய காலத்திலேயே, பலுகிப்பெருகி பூமியை நிரப்புவார்கள். மனுஷர்மீது மரணம் இன்னும் ஆளுகை செய்கிறது. ஆனாலும் கர்த்தர் இந்தப் பூமியை மறுபடியும் ஜலப்பிரளயத்தினால் அழிக்கமாட்டார். இந்தப் பூமியில் மரணமும் ஜீவனும் இருக்கும். மனுஷர் மத்தியிலே மரணத்தைவிட ஜீவன் அதிகமாயிருக்கும். இதனால் மனுபுத்திரர் பலுகிப்பெருகி, பூமியை சீக்கிரத்தில் நிரப்புவார்கள்.

"உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை.

எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை.

மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்" (அப் 17:24-26).

பேழையிலிருந்து சகல மிருகஜீவன்களும் வெளியேறிற்று. மனுஷர் பலுகிப்பெருகி பூமியை நிரப்புவதுபோல, மிருகங்களும், மற்ற ஜீவன்களும் பலுகிப்பெருகி இந்தப் பூமியை நிரப்புகிறது. அவற்றை ஆளுகை செய்யும் அதிகாரத்தை கர்த்தர் மனுஷருக்கு கொடுக்கிறார்.

கர்த்தர் நோவாவையும், அவருடைய குமாரரையும் நோக்கி, "உங்களைப்பற்றிய பயமும் அச்சமும் பூமியிலுள்ள சகல மிருகங்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும் உண்டாயிருக்கும்; பூமியிலே நடமாடுகிற யாவும், சமுத்திரத்தின் மச்சங்கள் யாவும், உங்களுக்குக் கையளிக்கப்பட்டன" (ஆதி 9:2) என்று சொல்லுகிறார்.

சகல மிருகங்களும், சகல பறவைகளும் மனுஷனைப் பற்றிய பயத்தினாலும், அச்சத்தினாலும் ஜீவிக்கின்றன. ஆகையினால் மனுஷனுக்கு அவற்றை ஆளுகை செய்வது எளிதாக இருக்கிறது. மிருகங்கள் மனுஷனுக்குப் பயப்படவில்லையென்றால், அவை மனுக்குலத்தையே அழித்துவிடும்.

மனுஷன் பாவமில்லாதிருக்கும்போது, அவன் அன்பினால் ஆளுகை செய்யப்படுகிறான். அவன் பாவம் செய்து விழுந்தபோதோ, அவன் பயத்தினால் ஆளுகை செய்யப்படுகிறான். ஆதாம் ஏதேன் தோட்டத்திலே கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால், மனுஷருடைய இருதயத்தில் பயமுண்டாயிற்று.

மனுஷர் பயப்படுவதுபோலவே மிருகங்களும் பயப்படுகிறது. மிருகங்களின் பயத்தை கர்த்தர் மனுஷருக்கு சாதமாக மாற்றுகிறார். மனுஷரைப்பற்றிய பயமும் அச்சமும் பூமியிலுள்ள சகல மிருகங்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும் உண்டாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் எல்லோருக்கும் நல்ல எஜமானாயிருக்கிறவர். அவரே சர்வ சிருஷ்டிகளையும் சிருஷ்டித்தவர். அவர் எல்லா ஜீவராசிகளையும் போஷித்து பராமரிக்கிறவர். பூமியிலுள்ள ஜீவன்களெல்லாம் போஷிக்கப்படவேண்டும் என்பதும், அவை ஆறுதலாகவும், ஆசீர்வாதமாகவும் ஜீவிக்கவேண்டும் என்பதும் கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

கர்த்தர் நம்முடைய அடிப்படைத் தேவைகளை சந்திக்கிறார். அவர் நம்முடைய தேவைகளை சந்திப்பது மாத்திரமல்ல, அதற்கு மேலாகவும் நம்மை ஆசீர்வதித்து, நம்மை சந்தோஷப்படுத்துகிறார். கர்த்தர் பூமியில் நடமாடுகிற யாவையும், சமுத்திரத்தின் மச்சங்கள் யாவையும் மனுஷருக்கு கையளிக்கிறார். மனுஷன் மிருகங்களுக்கு பயப்படவேண்டியதில்லை. மிருகங்கள் மனுஷனுக்கு பயப்படும்.

"தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல" (1தீமோ 4:4).

பூமியில் ஜீவிக்கிற மனுஷருக்கு ஆகாரம் வேண்டும். கர்த்தரே பூமியிலுள்ள எல்லா ஜீவஜந்துக்களுக்கும் ஆகாரம் கொடுக்கிறார். கர்த்தர் நோவாவையும், அவருடைய குமாரரையும் நோக்கி, "நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும், உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக; பசும் பூண்டுகளை உங்களுக்குத் தந்தது போல, அவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன்" (ஆதி 9:3) என்று சொல்லுகிறார்.

மனுஷருக்கு புதிய போஜனமாக விலங்குகளும் சேர்க்கப்படுகிறது. (1தீமோ 4:3-5; கொலோ 2:16; அப் 10:12-14; ரோமர் 14).

ஜலப்பிரளயத்திற்கு பின்பு, கர்த்தருடைய அன்பு மனுஷர்மீது குறைந்துபோகவில்லை. அவர் இன்னும் அன்பாகவே இருக்கிறார். அவர் நோவாவுக்கும், அவருடைய வீட்டாருக்கும் நல்லவராகவும், நன்மை செய்கிறவராகவும் இருக்கிறார்.

ஜலப்பிரளயத்திற்கு பின்பு இந்தப் பூமியில் நோவாவும், அவருடைய வீட்டாரும் மாத்திரமே இருக்கிறார்கள். இவர்களுக்கு மாத்திரம் போஜனம் கொடுக்கவேண்டுமென்றால் அது எளிதான காரியம். அவர்கள் பலுகிப்பெருகி பூமியை நிரப்பும்போது, அவர்கள் எல்லோருக்கும் போஜனம்கொடுக்கவேண்டும் என்பது மிகப்பெரிய காரியம். ஆனாலும் கர்த்தரால் கூடாத காரியம் என்று ஒன்றுமே இல்லை. கர்த்தர் தம்முடைய தெய்வீக பராமரிப்பினால் எல்லா ஜீவன்களுக்கும் ஆகாரம் கொடுக்கிறார்.

கர்த்தர் நோவாவுக்கும் அவருடைய வீட்டாருக்கும் ஆகாரம் கொடுத்தாலும், போஜனம் தொடர்பாக தம்முடைய பிரமாணத்தையும் சொல்லுகிறார். "மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்கவேண்டாம்" (ஆதி 9:4) என்பது கர்த்தருடைய பிரமாணம்.

தேவன் மனுஷனுக்குத் தாவர வர்க்கத்தைப் போஜனமாகப் புசிக்க கொடுத்தபோது, நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை அவனுக்குக் கொடுக்காமல் ஒதுக்கி வைத்தார். மனுஷன் தன்னுடைய சுய இஷ்டத்தின் பிரகாரமாக ஜீவிக்கக்கூடாது. தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக இந்த விருட்சத்தின் கனி மனுஷனுக்கு விலக்கி வைக்கப்பட்டது.

அதுபோல இப்பொழுது தேவன் மனுஷனுக்கு விலங்குகளைப் புசிக்கும் போஜனமாகக் கொடுக்கிறார். ஆனால் மாம்சத்தை அதன் உயிராகிய இரத்தத்தோடே புசிக்கக்கூடாது என்று தேவன் கட்டளையிட்டு, இரத்தம் புசிப்பதை மனுஷக்கு விலக்குகிறார்.

எல்லா ஜீவராசிகளுக்கும் ஜீவனைக் கொடுக்கிறவர் தேவனே என்பதை மனுஷன் புரிந்து கொள்ள வேண்டும். இதற்காக இரத்தம் புசிப்பது தடைபண்ணப்பட்டிருக்கிறது. (லேவி 3:17; லேவி 7:26; லேவி 17:10-14; லேவி 19:26; உபா12:16,23; 1சாமு 14:34).

மனுஷர் ஆரோக்கியமான போஜனத்தைப் புசிக்கவேண்டும். மனுஷர் புசிக்கும்போஜனம் அவர்களுடைய சரீர ஆரோக்கியத்திற்கு கேடாயிருக்கக்கூடாது. மனுஷர் பேராசைப்பட்டு பெருந்தீனி உண்ணக்கூடாது. போஜனம் பண்ணும்போது அவசரப்பட்டு, அவசரம் அவசரமாக புசிக்கக்கூடாது. நிதானமாக போஜனம்பண்ண வேண்டும்.

நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக்கட்டி, அதிலே சுத்தமான மிருகங்களை கர்த்தருக்கு தகனபலிகளாக செலுத்தினார். நோவாவும் அவருடைய சந்ததியாரும் பலிசெலுத்தும் பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும். சரீரத்தில், அதன் இரத்தமே அதற்கு உயிரைக் கொடுக்கிறது. பலியாக செலுத்தப்படும் இரத்தம் ஆத்துமாவின் பாவத்தை நிவாரணம் பண்ணுகிறது.

"மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே" (லேவி 17:11).

ஆத்துமாவுக்காக பாவநிவிர்த்தி செய்கிற இரத்தத்தை, மனுஷன் போஜனமாகப் புசிக்கக்கூடாது. இரத்தம் கர்த்தருக்கு முன்பாக சிந்தப்படவேண்டும்.

"அப்பொழுது இந்த மூன்று பராக்கிரமசாலிகளும் பெலிஸ்தரின் பாளயத்திலே துணிந்து புகுந்துபோய், பெத்லகேமின் ஒலிமுகவாசலில் இருக்கிற கிணற்றிலே தண்ணீர் மொண்டு, தாவீதினிடத்தில் கொண்டுவந்தார்கள்; ஆனாலும் அவன் அதைக் குடிக்க மனதில்லாமல் அதைக் கர்த்தருக்கென்று ஊற்றிப் போட்டு: கர்த்தாவே, தங்கள் பிராணனை எண்ணாமல் போய்வந்த அந்த மனுஷரின் இரத்தத்தைக் குடிக்கும் இந்தச்செயல் எனக்குத் தூரமாயிருப்பதாக என்று சொல்லி, அதைக் குடிக்க மனதில்லாதிருந்தான்; இப்படி இந்த மூன்று பராக்கிரமசாலிகளும் செய்தார்கள்" (2சாமு 23:16,17).

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிரதான பலியாக செலுத்தப்பட்டிருக்கிறார். கிறிஸ்துவானவர் கல்வாரி சிலுவையிலே தம்முடைய திருஇரத்தத்தை சிந்தி, மனுக்குலத்தின் பாவங்களுக்கு மீட்பை உண்டுபண்ணியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மனுஷருடைய ஆத்துமாவுக்கு இரட்சிப்பு உண்டாயிருக்கிறது. ஆகையினால் "மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்கவேண்டாம்" என்னும் பழைய பிரமாணம் முடிந்துபோயிற்று என்றும், அது இனிமேல் தேவையற்றது என்றும் வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள்.

மனுஷன் தன்னுடைய ஜீவனைக் கொன்றுபோடக்கூடாது. "உங்களுக்கு உயிராயிருக்கிற உங்கள் இரத்தத்திற்காக பழிவாங்குவேன்" (ஆதி 9:5) என்று கர்த்தர் சொல்லுகிறார். நம்முடைய ஜீவன் நமக்குரியதல்ல. அது கர்த்தருக்குரியது. நம்முடைய ஜீவனை நமக்கு இஷ்டமான பிரகாரம் கொன்றுபோட நமக்கு அனுமதியில்லை. நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, நமக்கு ஜீவனைக் கொடுக்கிறார். நம்முடைய ஜீவனை எடுக்கிறார்.

மிருகங்களும் மனுஷரைக் கொல்லக்கூடாது. மனுஷரைக் கொன்றுபோட மிருகங்களுக்கு அனுமதியில்லை. மிருகங்கள் மனுஷருக்கு கையளிக்கப்பட்டிருக்கிறது. மனுஷருடைய ஜீவனுக்கு எந்த மிருகமும் தீங்கு செய்யக்கூடாது. "சகல ஜீவஜந்துக்களிடத்திலும் பழிவாங்குவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இது மோசேயின் பிரமாணத்திலும் உறுதிபண்ணப்பட்டிருக்கிறது. "ஒரு மாடு ஒரு புருஷனையாவது ஒரு ஸ்திரீயையாவது முட்டினதினால் சாவுண்டானால், அந்த மாடு கல்லெறியப்படவேண்டும், அதின் மாம்சம் புசிக்கப்படலாகாது; அப்பொழுது மாட்டின் எஜமான் ஆக்கினைக்கு நீங்கலாயிருப்பான்" (யாத் 21:28).

கர்த்தர் கொலைபாதகர்மீது கோபப்படுகிறார். கர்த்தர் கோபப்படுவதுபோலவே, மனுஷரும் கொலைபாதகர்மீது கோபப்படவேண்டும். மனுஷர் மத்தியிலே கொலைப்பாதகத்தை அகற்றிப்போடவேண்டும்.

மனுஷன் மற்ற மனுஷனை கொன்றுபோடக்கூடாது. "மனுஷனிடத்திலும் பழிவாங்குவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். "மனுஷனுடைய உயிருக்காக அவனவன் சகோதரனிடத்தில் பழிவாங்குவேன். மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது" (ஆதி 9:5,6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கொலை செய்கிறவனுக்கு இங்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. காயீனைக் கொல்லுகிற எவன்மேலும் ஏழு பழி சுமரும் என்று கர்த்தர் கூறினார். (ஆதி 4:15) ஒருவேளை ஏழு பழி என்பது நித்திய நரகத்தில் துன்மார்க்கருடைய ஆத்துமா அழியும் என்பதைக் குறிக்கலாம். (மத் 23:14).

மனுஷரைக் கொலைபண்ணுதல் கர்த்தருடைய பார்வையில் மகாபெரிய பாவமாயிருக்கிறது. இதற்கான காரணம் வருமாறு:

1. தேவன் மனுஷனைத் தமது சாயலாகவும், தமது ரூபத்தின் பிரகாரமாகவும் சிருஷ்டித்திருக்கிறார். ஆகையினால் மனுஷனைக் கொலைபண்ணுவது தேவனுக்கு எதிரான குற்றமாகும். (ஆதி 1:26-28; ஆதி 9:6).

2. மனுஷனைக் கொலைபண்ணுவது தேவனுடைய சாயலின்மீது கோபத்தை வெளிப்படுத்துவதாகும்.

3. மனுஷனைக் கொலைபண்ணுவது சமுதாயத்திற்கு எதிரான குற்றம். ஏனெனில் ஒவ்வொரு மனுஷனுக்கும் சமுதாயத்தில் ஒரு முக்கியப்பங்கு உள்ளது.

4. மனுஷனைக் கொலைபண்ணுவது ஒரு குடும்பத்திற்கு எதிரான குற்றம்.

5. மனுஷனைக் கொலைபண்ணுவது கொலை பண்ணப்பட்ட மனுஷனுக்கு எதிரான குற்றம். கொலைபண்ணப் படுகிறவன் இரட்சிக்கப் படாதவனாக இருந்தால் அவன் நித்திய நரகத்திற்குப் போய் விடுவான். மரித்துப் போகிறவன் தேவனுக்கும், மனுஷருக்கும் ஆற்ற வேண்டிய கடமைகள் அவனுடைய மரணத்தோடு நின்றுவிடுகிறது. (ஆதி 9:5-6; யாத் 21:29-32; எண் 35:16-31; உபா 17:6; உபா 21:1-9; உபா 27:24-25; 1இராஜா 21:19; 2நாளா 24:22; மத் 5:21-22; மத் 15:19; கலா 5:19-21; 1தீமோ 1:9; யாக் 2:11; 1பேதுரு 4:15; 1யோவான் 3:15; வெளி 9:21; வெளி 21:8; வெளி 22:15).

பரிசுத்தவேதாகமத்தில் ஒரு சில பாவங்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட கொடிய பாவங்களின் விவரம் வருமாறு:

1. கொலைபண்ணுதல். (ஆதி 9:6; யாத் 21: 12-14,20,23; லேவி 24:17,21; எண் 35: 16-34; உபா 19)
2. விருத்தசேதனம் பண்ணாமல் இருத்தல். (ஆதி 17:14; யாத் 4:24-25)
3. புளிப்பில்லா அப்பப்பண்டிகையின்போது புளிப்புள்ள அப்பத்தைப் புசித்தல். (யாத் 12:15,19)
4. பெற்றோரை அடித்தல். (யாத் 21:15)
5. மனுஷரைத் திருடி விற்றுப்போடுதல். (யாத் 21:16; உபா 24:7)
6. பெற்றோரைச் சபித்தல். (யாத் 21:17; லேவி 20:9)
7. மனுஷரைக் கொல்லும் விலங்குகளை அழிக்காமல் இருத்தல். (யாத் 21:28-32)
8. சூனியம். (யாத் 22:18)
9. மிருகத்தோடே புணருதல். (யாத் 22:19; லேவி 18:23-29; லேவி 20:15-16)
10. விக்கிரகாராதனை. (யாத் 22:20)
11. வேறொரு பரிசுத்த தைலத்தைச் செய்தல். (யாத் 30:33)
12. பரிசுத்த தைலத்தை அந்நியன்மேல் வார்த்தல். (யாத் 30:33)
13. வேறொரு தூபவர்க்கத்தைச் செய்தல். (யாத் 30:38)
14. ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குதல். (யாத் 31:14)
15. ஓய்வுநாளில் வேலைசெய்தல். (யாத் 35:2)
16. ஒருவன் தீட்டுள்ளவனாக இருக்கையில் கர்த்தருடைய சமாதான பலியின் மாம்சத்தைப் புசித்தல். (லேவி 7:20-21)
17. கர்த்தருக்குத் தகனபலியாகச் செலுத்தப்படும் மிருகத்தின் கொழுப்பைப் புசித்தல். (லேவி 7:25)
18. ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக பலிசெலுத்தாமல் வேறிடத்தில் பலிசெலுத்துதல். (லேவி 17:1-9)
19. இரத்தத்தைப் புசித்தல். (லேவி 17:10-14)
20. தனக்கு நெருங்கின இனமாகிய ஒருத்தியோடு சேருதல். (லேவி 18:6-29; லேவி 20:11-22)
21. பலிகளைத் தவறான காலத்தில் புசித்தல். (லேவி 19:5-8)
22. சிறுபிள்ளைகளைவிக்கிரகங்களுக்குப் பலியிடுதல். (லேவி 20:1-5)
23. அஞ்சனம்பார்த்தல். (லேவி 20:6,27)
24. விபசாரம். (லேவி 20:10; உபா 22:22-30)
25. ஓரினச்சேர்க்கை. (லேவி 20:13)
26. சூதகஸ்திரீயோடே சயனித்தல். (லேவி 20:18)
27. வேசித்தனம் பண்ணுதல். (லேவி 21:9; உபா 22:21-22)
28. தான் தீட்டுப்பட்டிருக்கும்போது கர்த்தருக்கு நியமித்து செலுத்துகிற பரிசுத்தமானவைகளண்டையில் சேருதல். (லேவி 22:3)
29. பாவநிவாரண நாளில் உபவாசம் பண்ணாமல் இருத்தல். (லேவி 23:29)
30. பாவநிவாரண நாளில் வேலை செய்தல். (லேவி 23:30)
31. தேவனுடைய நாமத்தைத் தூஷித்தல். (லேவி 24:11-16)
32. பஸ்கா ஆசரியாமல் இருத்தல். (எண் 9:13)
33. துணிகரமான பாவம் செய்தல். (எண் 15:30-31)

34. ஓய்வுநாளில் விறகுபொறுக்குதல். (எண் 15:32-36)

35. ஆராதிக்கும் முன்பாக தன்னைச் சுத்திகரித்துக் கொள்ளாமல் இருத்தல். (எண் 19:13,20)

36. கள்ளத்தீர்க்கதரிசனம் உரைத்தல். (உபா13:1-18; உபா 18:20)

37. மனுஷரைக் கர்த்தரிடமிருந்து பிரித்து வேறே தேவர்களைச் சேவிப்பதற்கு வழிநடத்துதல். (உபா 13:6-18)

38. பின்மாறிப்போதல். (உபா 17:2-7)

39. யார் சொல்லையும் கேளாமல் அடங்காத துஷ்டனாயிருத்தல். (உபா 21:18-23)

40. பெருந்தீனிக்காரனாயிருத்தல். (உபா 21:20-23)

41. குடியனாயிருத்தல். (உபா 21:20-23)

42. கள்ளச்சொப்பனங்களும், கள்ளத் தரிசனங்களும் காணுதல். (உபா 13: 1-18)

புதிய ஏற்பாட்டிலும் ஒருசில குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 13:1-7; 1தீமோ 1:8-10; யாக் 2:10-13; யாக் 4:11-12; 1பேதுரு 2:13-15). ஆத்துமாவை அழிக்கும் பாவங்களைப் பற்றி இரண்டு ஏற்பாடுகளும் விளக்கிக் கூறுகின்றன.

ஆத்துமா அழிந்துபோனால் நித்திய நரக அக்கினியில் நித்திய காலமாக வேதனையை அனுபவிக்க வேண்டும். (எரே 23; எசே 3:18,33; மாற்கு 7:20-23; ரோமர் 1:18-32; 1கொரி 6:9-11; கலா 5:19-21; கொலோ 3:5-10; 2பேதுரு 2; யூதா 1:3-19).

மோசேயின் பிரமாணம் ஒழிக்கப்பட்டு விட்டாலும் அதில் சொல்லப்பட்ட பாவங்களில் பல புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் பாவமாகவே கருதப்படுகிறது.

கர்த்தர் கொலைபாதகரை தண்டிப்பார். ஒரு சிலர் மனுஷரைக் கொன்றுபோட்டு தங்கள் பாவங்களை மூடி மறைக்கிறார்கள். கர்த்தரோ மனுஷருடைய எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிறார். கர்த்தருக்கு மறைவான இரகசியம் ஒன்றுமில்லை. கொலைபாதகருக்குரிய தண்டனை இம்மையிலும் கொடுக்கப்படும், மறுமையிலும் கொடுக்கப்படும்.

வழக்குகளை விசாரிக்கிற அதிகாரிகள் கொலைபாதகருக்கு தண்டனை கொடுக்க வேண்டும். "மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது" (ஆதி 9:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் குற்றமில்லாத ஜனங்களை பாதுகாக்கவேண்டும். விதவைகளுக்கும், திக்கற்ற பிள்ளைகளுக்கும் ஆதரவாயிருக்க வேண்டும். துன்மார்க்கர் துணிகரமாய்ப் பாவம் செய்யும்போது, கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவர்களுக்கு பயப்படாமல், அவர்களுக்கு விரோதமாக நீதிமன்றங்களில் வழக்காடவேண்டும். அதிகாரிகள் தங்களுடைய கைகளில் சட்டங்களையும், பட்டயங்களையும் வீணாகப் பிடித்திருக்கவில்லை.

"உனக்கு நன்மை உண்டாகும்பொருட்டு, அவன் தேவஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமைசெய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை; தீமைசெய்கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவஊழியக்காரனாயிருக்கிறானே" (ரோம 13:4).

சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறவர்கள் தேவனுடைய ஊழியக்காரராயிருப்பதுபோல, மனுஷருடைய வழக்குகளை விசாரிக்கிற அதிகாரிகளும் தேவனுடைய ஊழியக்காரராயிருக்கிறார்கள். கர்த்தர் மன்னிக்காத பாவியை, ஒரு பிரபு மன்னிப்பான் என்றால், அது அவனுக்கு பாவமாயிருக்கும்.

"மனாசே தன் எல்லாச் செய்கைகளினாலும் செய்த பாவங்களினிமித்தம் யூதாவைத் தமது சமுகத்தை விட்டு அகற்றும்படி கர்த்தருடைய கட்டளையினால் அப்படி நடந்தது. அவன் சிந்தின குற்றமற்ற இரத்தத்திற்காகவும் எருசலேமைக் குற்றமற்ற இரத்தத்தால் நிரப்பினதற்காகவும் கர்த்தர் மன்னிக்கச் சித்தமில்லாதிருந்தார்" (2இராஜா 24:3,4).

கர்த்தர் மனுஷனுடைய ஜீவனை அதிகமாய் நேசிக்கிறார். மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டிருக்கிறான். ஆகையினால் தேவன் மனுஷனுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார். மனுஷனிடத்தில் தேவசாயல் இருக்கும்போது, அவன் தேவனுடைய சித்தத்திற்கும், திட்டத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பான். அவன் தேவனுடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவான். தேவசாயலாய் உண்டாக்கப்பட்ட மனுஷன் தேவனைக் கனம்பண்ணுவான்.

நம்முடைய ஆதி பிதாவாகிய ஆதாம், தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்ததினால், அவர் தேவசாயலை இழந்துவிட்டார். ஆதாம் தேவனுடைய சாயலை முற்றிலுமாய் இழந்துவிடவில்லை. ஆதாமிடத்தில் தேவசாயல் மங்கிப்போயிற்று. ஆதாமின் சந்தியில் வந்திருக்கிற நமக்குள்ளும், தேவசாயல் மங்கிப்போன நிலமையிலிருக்கிறது.

தேவனுடைய சாயல் மனுஷருக்குள்ளே மங்கிப்போயிருந்தாலும், மற்ற மனுஷரைக் கொலை செய்வது, தேவனுடைய பார்வையில் மிகப்பெரிய பாவமாயிருக்கிறது. ஒரு மனுஷன் மற்றொரு மனுஷனைக் கொலைசெய்யும்போது, அவனிடத்தில் காணப்படுகிற தேவசாயலை கொலைபண்ணுகிறான். அவன் தேவனை கனவீனம்பண்ணுகிறான்.

மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை சிந்தக்கூடாது என்று கர்த்தர் கட்டளையிடுகிறார். கர்த்தர் நோவாவையும், அவருடைய குமாரரையும் நோக்கி, "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியிலே திரளாய் வர்த்தித்து விர்த்தியாகுங்கள்" (ஆதி 9:7) என்றும் சொல்லுகிறார்.

தேவனுடைய உடன்படிக்கை ஆதி 9:8-11

ஆதி 9:8. பின்னும் தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் நோக்கி:

ஆதி 9:9. நான் உங்களோடும், உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததியோடும்,

ஆதி 9:10. உங்களோடே பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவஜந்துக்கள் முதல் இனிப் பூமியில் உண்டாகப்போகிற சகல ஜீவஜந்துக்கள் பரியந்தம், பறவைகளோடும், நாட்டு மிருகங்களோடும், உங்களிடத்தில் இருக்கிற பூமியிலுள்ள சகல காட்டு மிருகங்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்.

ஆதி 9:11. இனி மாம்சமானவைகளெல்லாம் ஜலப் பிரளயத்தினால் சங்கரிப்படுவதில்லையென்றும், பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும், உங்களோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்றார்.

தேவன் நோவாவோடும், அவருடைய குமாரரோடும் உடன்படிக்கை பண்ணுகிறார். இந்த உடன்படிக்கை ஜலப்பிரளயத்திற்கு பின்பு உண்டாகிறது. தேவனுடைய உடன்படிக்கையில், நோவாவும், அவருடைய குடும்பத்தாரும், அவர்களுடைய சந்ததியாரும் இடம் பெறுகிறார்கள். தேவன் மனுஷரோடு மாத்திரமல்ல, சகல ஜீவஜந்துக்களோடும் உடன்படிக்கை பண்ணுகிறார்.

தேவன் நோவாவையும், அவர் குமாரரையும் நோக்கி, "நான் உங்களோடும், உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததியோடும், உங்களோடே பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவஜந்துக்கள் முதல் இனிப் பூமியில் உண்டாகப்போகிற சகல ஜீவஜந்துக்கள் பரியந்தம், பறவைகளோடும், நாட்டு மிருகங்களோடும், உங்களிடத்தில் இருக்கிற பூமியிலுள்ள சகல காட்டு மிருகங்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்" (ஆதி 9:8-10) என்று சொல்லுகிறார்.

மனுஷனோடு உடன்படிக்கை பண்ணுவது தேவனுக்கு பிரியமாயிருக்கிறது. தேவனுடைய உடன்படிக்கையில் மனுஷனுக்கும் பங்கு இருக்கிறது. மனுஷன் தேவனுக்கு கீழ்ப்படிந்து தன்னுடைய கடமையை செய்யவேண்டும். தமக்கு கீழ்ப்படியுமாறு தேவன் மனுஷனை உற்சாகப்படுத்துகிறார்.

தேவன் மனுஷனோடு செய்யும் உடன்படிக்கைகள் எல்லாவற்றையும், தேவனே ஆரம்பிக்கிறார். உடன்படிக்கையின் ஷரத்துக்களை தேவனே ஏற்படுத்துகிறார், "நான்.... என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்" என்று தேவன் சொல்லுகிறார்.

தேவனுடைய உடன்படிக்கைகள் உறுதியாக ஸ்தாபிக்கப்படுகிறது. அவை பரலோகத்தின் தூண்களைப்போல வலுவாயிருக்கிறது. அவை பூமியின் அஸ்திபாரங்களைப்போல உறுதியாயிருக்கிறது. தேவனுடைய உடன்படிக்கையை யாராலும் அவமாக்க முடியாது.

தேவன் யாரோடு உடன்படிக்கை பண்ணுகிறாரோ அவர்களும், அவர்களுடைய சந்ததியாரும், அந்த உடன்படிக்கையில் பங்குபெறுகிறார்கள். வாக்குத்தத்தமானது அவர்களுக்கும், அவர்களுடைய பிள்ளைகளுக்குமுரியது.

இந்தப் பூமியானது ஏற்கெனவே ஜலப்பிரளயத்தினால் அழிந்துபோயிற்று. இந்தப் பூமியின்மீது மற்றொரு ஜலப்பிரளயம் வராது என்பதும், ஜலப்பிரளயத்தினால் பூமியிலுள்ள மாம்சமானவைகள் மறுபடியும் சங்கரிக்கப்படாது என்பதும், ஜலப்பிரளயத்தினால் இந்தப் பூமி மறுபடியும் அழிந்துபோகாது என்பதும் தேவனுடைய உடன்படிக்கையாகும்.

கர்த்தர் இந்தப் பூமியையும், இந்தப் பூமியிலுள்ள ஜீவன்களையும் ஜலப்பிரளயத்திலிருந்து பாதுகாக்கிறார். நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயம் உண்டாயிற்று. அதற்கு முன்பு இந்தப் பூமியில் ஜலப்பிரளயம் உண்டாகவில்லை. இப்போது உண்டான ஜலப்பிரளயத்திற்கு பின்பு, இனிமேல் ஜலப்பிரளயம் உண்டாகாது. கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகள், அவருடைய கிருபையையும் நன்மையையும், உண்மையையும் வெளிப்படுத்துகிறது.

தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பினால், நோவாவின் காலத்திலிருந்த பூமி ஜலப்பிரளயத்தினால் அழிந்துபோயிற்று. அந்த ஜலப்பிரளயம் தேவனுடைய நீதிக்கு அடையாளம். ஜலப்பிரளயத்திற்குப்பின்பு, நோவாவின் சந்தியார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி பரிசுத்தமாயிருப்பார்களா என்னும் நிச்சயமில்லை. அவர்களில் சிலர் பாவிகளாகவும், அநேகர் பரிசுத்தவான்களாகவும் இருக்கலாம். அவர்களுடைய நீதி எப்படியிருந்தாலும், தேவன் நோவாவோடும், அவருடைய சந்ததியாரோடும் உடன்படிக்கை பண்ணுகிறார்.

கர்த்தர் நோவாவையும், அவருடைய குமாரரையும் நோக்கி, "நான் உங்களோடும், உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததியோடும், உங்களோடே பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவஜந்துக்கள் முதல் இனிப் பூமியில் உண்டாகப்போகிற சகல ஜீவஜந்துக்கள் பரியந்தம், பறவைகளோடும், நாட்டு மிருகங்களோடும், உங்களிடத்தில் இருக்கிற பூமியிலுள்ள சகல காட்டு மிருகங்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்" என்று சொல்லுகிறார்.

பூமி இனிமேல் ஜலப்பிரளயத்தினால் அழிக்கப்படாமலிருக்கும். இந்தப் பூமி கர்த்தருடைய கிருபைக்கும், இரக்கத்திற்கும் அடையாளம். இந்தப் பூமி அழியாமலிருப்பதற்கும், மனுஷருடைய நீதிக்கும் சம்பந்தமில்லை. மனுஷர் மத்தியிலே அநீதி காணப்பட்டாலும், கர்த்தர் இந்தப் பூமியை ஜலப்பிரளயத்தினால் அழிக்கமாட்டார். நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயத்தினால் அழிந்துபோன பூமி தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு அடையாளமாயிருக்கிறது. நோவாவுக்கு பிந்திய காலத்தில், ஜலப்பிரளயத்தினால் அழிந்துபோகாத பூமி, தேவனுடைய கிருபைக்கும் இரக்கத்திற்கும் அடையாளமாயிருக்கிறது.

தேவன் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர். அவர் உடன்படிக்கை பண்ணினால், அதை நிச்சயமாகவே நிறைவேற்றுவார். தேவன் நோவாவையும், அவருடைய வீட்டாரையும் நோக்கி, "இனி மாம்சமானவைகளெல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிப்படுவதில்லையென்றும், பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும், உங்களோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்" (ஆதி 9:11) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய நாளில் பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோகும். புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகும். பூமி அழியாது, அது புதுப்பிக்கப்படும் என்று சிலர் கருத்துக் கூறுகிறார்கள் (2பேதுரு 3:10-13).

நோவாவின் காலத்தில் உண்டான ஜலப்பிரளயம் ஒருகுறிப்பிட்ட பகுதியில் மட்டும் உண்டானதல்ல. அது உலகம் முழுவதிலும் உண்டான ஜலப்பிரளயம். அப்படிப்பட்ட உலகளாவிய ஜலப்பிரளயம் இனிமேல் உண்டாவதில்லை. (ஆதி 8:21-22; ஆதி 9:11,15).

நோவாவின் காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளயம், மறுபடியும் இந்தப் பூமியை மூடிப்போடாது.

"இது எனக்கு நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம்போலிருக்கும்; நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம் இனி பூமியின்மேல் புரண்டு வருவதில்லை என்று நான் ஆணையிட்டதுபோல, உன்மேல் நான் கோபங்கொள்வதில்லையென்றும், உன்னை நான் கடிந்து கொள்வதில்லையென்றும் ஆணையிட்டேன்" (ஏசா 54:9).

சில சமயங்களில் கடல் கொந்தளிப்பாயிருக்கலாம். கடல் கொந்தளிப்பு ஒரு சில நாட்களுக்கு தொடரலாம். ஒவ்வொரு மாதமும் கடல் கொந்தளிப்பாயிருந்தாலும், இந்தப் பூமியானது ஜலப்பிரளயத்தினால் அழிந்துபோகாது. நோவாவின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளம், இந்தப் பூமியின்மீது மறுபடியும் புரண்டு வராது. இது கர்த்தருடைய கிருபையுள்ள வாக்குத்தத்தம்.

கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்த வார்த்தைகளை இந்நாள் வரையிலும் நிறைவேற்றி வந்திருக்கிறார். அவர் நேற்றும் இன்றும், என்றும் மாறாதவர். வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறது. கர்த்தருடைய கிருபையுள்ள வார்த்தைகளுக்காக நாம் அவரை நன்றியோடு துதிக்கவேண்டும்.

உடன்படிக்கையின் அடையாளம்
ஆதி 9:12-17

ஆதி 9:12. அன்றியும் தேவன்: எனக்கும் உங்களுக்கும், உங்களிடத்தில் இருக்கும் சகல ஜீவஜந்துக்களுக்கும், நித்திய தலைமுறைகளுக்கென்று நான் செய்கிற உடன்படிக்கையின் அடையாளமாக:

ஆதி 9:13. நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்.

ஆதி 9:14. நான் பூமிக்கு மேலாய் மேகத்தை வருவிக்கும்போது, அந்த வில் மேகத்தில் தோன்றும்.

ஆதி 9:15. அப்பொழுது எல்லா மாம்சஜீவன்களையும் அழிக்க இனி ஜலமானது பிரளயமாய்ப் பெருகாதபடிக்கு எனக்கும் உங்களுக்கும் மாம்சமான சகல ஜீவஜந்துக்களுக்கும் உண்டான என் உடன்படிக்கையை நினைவுகூருவேன்.

ஆதி 9:16. அந்த வில் மேகத்தில் தோன்றும் போது, தேவனுக்கும் பூமியின்மேலுள்ள சகலவித மாம்சஜீவன்களுக்கும் உண்டான நித்திய உடன்படிக்கையை நான் நினைவுகூரும்படிக்கு அதை நோக்கிப் பார்ப்பேன்.

ஆதி 9:17. இது எனக்கும், பூமியின்மேலுள்ள மாம்சமான யாவுக்கும், நான் ஏற்படுத்தின உடன்படிக்கையின் அடையாளம் என்று நோவாவோடே சொன்னார்.

மனுஷர் மத்தியில் ஏற்படுத்தப்படும் உடன்படிக்கைகள் பொதுவாக முத்திரை போடப்பட்டு உறுதிபண்ணப்படும். தேவனும் மனுஷரோடு ஏற்படுத்துகிற உடன்படிக்கையை முத்திரை போடுகிறார்.

"அந்தப்படி, தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார்" (எபி 6:17).

இந்தப் பூமியும், பூமியிலுள்ள ஜீவஜந்துக்களும் ஜலப்பிரளயத்தினால் அழிந்துபோகாது என்பது தேவன் ஏற்படுத்தின உடன்படிக்கை. இது இயற்கையோடு சம்பந்தப்பட்டது. கர்த்தர் தம்முடைய உடன்படிக்கைக்கு அடையாளமாக, இயற்கையோடு சம்பந்தப்பட்ட ஒரு காரியத்தை சொல்லுகிறார். மேகத்தில் தோன்றும் வானவில் தேவனுடைய உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்.

தேவன் மனுஷரோடு ஏற்படுத்திய உடன்படிக்கை நித்தியமானது. நித்திய தலைமுறை என்பது தேவனுடைய உடன்படிக்கை நித்திய காலமாக இருக்கும் என்பதைக் குறிப்பிடுகிறது (ஆதி 9:12-16).

தேவன் நோவாவிடம், "நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்" (ஆதி 9:13) என்று சொல்லுகிறார். தேவன் வானவில்லை மேகத்தில் வைத்திருக்கிறார். வானவில் மேகத்தில் எப்போதெல்லாம் தோன்றுகிறதோ, அப்போதெல்லாம் கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை நினைவுகூருகிறார். வானவில் தோன்றும்போதெல்லாம் கர்த்தர் ஏற்படுத்தின உடன்படிக்கை உறுதிபண்ணப்படுகிறது.

இதற்கு முன்பும் வானத்தில் வானவில் தோன்றியிருந்தது. ஆனால் இப்பொழுதுதான் வானவில் தேவனுடைய நித்திய உடன்படிக்கைக்கு ஓர் அடையாளமாகக் கூறப்பட்டிருக்கிறது. (எசே 1:28; வெளி 4:3; வெளி 10:1). வானவில் இயற்கையில் நடைபெறும் ஒரு காரியம். அது இனிமேலும் தொடரும். ஒவ்வொரு முறையும் வானத்தில் வானவில் தோன்றும்போது, அது தேவனுடைய உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்.

"நான் பூமிக்கு மேலாய் மேகத்தை வருவிக்கும்போது, அந்த வில் மேகத்தில் தோன்றும். அப்பொழுது எல்லா மாம்சஜீவன்களையும் அழிக்க இனி ஜலமானது பிரளயமாய்ப் பெருகாதபடிக்கு எனக்கும் உங்களுக்கும் மாம்சமான சகல ஜீவஜந்துக்களுக்கும் உண்டான என் உடன்படிக்கையை நினைவுகூருவேன்" (ஆதி 9:14,15) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மேகத்தில் வானவில் தோன்றுவதை, தேவன் பார்ப்பதுபோல நாமும் பார்க்கலாம். நாம் வானவில்லைப் பார்க்கும்போதெல்லாம், கர்த்தர் நம்மோடு ஏற்படுத்தின உடன்படிக்கையை நினைவுகூரவேண்டும். கர்த்தரும் மேகத்தில் தோன்றும் வானவில்லைப் பார்ப்பார். அப்போது அவர் தம்முடைய உடன்படிக்கையை உறுதிபண்ணுவார். நாம் வானவில்லை நம்முடைய கண்களால் பார்க்கும்போது, நம்முடைய இருதயம் உணர்வடையவேண்டும். கர்த்தர்மீது நாம் வைத்திருக்கும் விசுவாசம் ஸ்திரப்படவேண்டும்.

வானத்தில் மேகம் இருக்கும்போது, அந்த மேகத்தில் வானவில் தோன்றும். மேகம் அதிகமாயிருக்கும்போது, வானவில் தெளிவாயிருக்கும். பொதுவாக வானவில் மழை பெய்த பின்பு தெரியும். மழை அதிகமாய்ப் பெய்யும்போது, மனுஷருக்கு ஜலப்பிரளயத்தைக் குறித்து பயமுண்டாகும். அந்த மழைக்கு பின்பு மேகத்தில் வானவில் தோன்றும். நாம் அந்த வானவில்லைப் பார்த்து, கர்த்தர் இந்தப் பூமியையும், பூமியிலுள்ள ஜீவஜந்துக்களையும் ஜலப்பிரளயத்தினால் அழிக்கமாட்டார் என்பதை நினைவுகூரவேண்டும். கர்த்தருடைய வார்த்தையையும், அவருடைய வாக்குத்தத்தத்தையும் நினைவுகூர்ந்து, நம்முடைய மனதிலிருக்கும் பயத்தை நீக்கி, கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவேண்டும். கர்த்தரே நம்முடைய இருதயத்தின் பயங்களைப் போக்குகிறவர்.

வானத்தில் மேகம் அதிகமாயிருக்கும்போது வானவில் மிகவும் பிரகாசமாக தோன்றும். மேகம் அதிகரிக்கும்போது மழை அதிகரிப்பதற்கு வாய்ப்புள்ளது. மழை அதிகரிக்கும்போது துன்பமும், பாடுகளும், வேதனைகளும் அதிகரிப்பதற்கு வாய்ப்புள்ளது. இப்படிப்பட்ட வேதனையான சூழ்நிலைகளில், நாம் மேகத்தில் தோன்றும் வானவில்லைப் பார்த்து, கர்த்தருக்குள் தைரியமாயிருக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தையினாலும், அவருடைய வாக்குத்தத்தத்தினாலும், நம்மை நாமே உற்சாகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

"எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறது போல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது" (2 கொரி 1:5).

வானத்தில் வில் தோன்றும்போது, வானத்தின் ஒரு பகுதி மேகமாகவும், மற்றொரு பகுதி மேகமில்லாமலும் இருக்கும். மேகம் தேவனுடைய கோபத்திற்கு அடையாளம். மேகமில்லாமல் தெளிவாயிருக்கும் வானம் தேவனுடைய இரக்கத்திற்கும் கிருபைக்கும் அடையாளம். வானத்தின் ஒரு பகுதி மேகமாகவும், மற்றொரு பகுதி மேகமில்லாமலும் இருப்பதை நாம் பார்க்கும்போது, கர்த்தர் தம்முடைய கோபத்திற்கு நடுவிலும், தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறார் என்பதை நாம் உணரவேண்டும்.

வில் என்பது பொதுவாகவே பயங்கரத்திற்கு அடையாளம். வில் ஒரு ஆயுதம். ஆனால் வானவில்லோ நம்மை பயமுறுத்தும் ஆயுதமல்ல. அது நமக்கு ஆறுதலைக் கொடுக்கும் அடையாளம். வானவில்லில் நாண் கட்டப்படவில்லை. வானவில்லை பயன்படுத்தி அம்புகளை எய்ய முடியாது. மேகத்தில் தோன்றும் வானவில், பூமிக்கு நேராகயில்லை. அது வானத்திற்கு நேராகயிருக்கிறது.

நாம் வானவில்லை நோக்கிப் பார்ப்பதுபோல தேவனும் அந்த வில்லை நோக்கிப் பார்ப்பார். கர்த்தர் நோவாவை நோக்கி, "அந்த வில் மேகத்தில் தோன்றும் போது, தேவனுக்கும் பூமியின்மேலுள்ள சகலவித மாம்சஜீவன்களுக்கும் உண்டான நித்திய உடன்படிக்கையை நான் நினைவு கூரும்படிக்கு அதை நாக்கிப் பார்ப்பேன். இது எனக்கும், பூமியின்மேலுள்ள மாம்சமான யாவுக்கும், நான் ஏற்படுத்தின உடன்படிக்கையின் அடையாளம்" (ஆதி 9:16,17) என்று சொல்லுகிறார்.

தேவன் மனுஷரோடு ஏற்படுத்தும் உடன்படிக்கை தற்காலிகமானதல்ல. அது எப்போதுமே நித்திய உடன்படிக்கையாக இருக்கும்.

மேகத்தில் தோன்றும் வானவில் நம்மைப் பயமுறுத்தவில்லை. அது நமக்கு ஆறுதலையும், சமாதானத்தையும் கொடுக்கிறது. தேவன் மேகத்தில் தோன்றும் வானவில்லைப் பார்க்கும்போது, தம்முடைய நித்திய உடன்படிக்கையை நினைவுகூருவதுபோல, நாமும் வானவில்லைப் பார்க்கும்போதெல்லாம், தேவனுடைய வார்த்தையையும், அவருடைய கிருபையையும், இரக்கத்தையும் நினைவுகூரவேண்டும்.

நோவாவின் நிர்வாணம்
ஆதி 9:18-23

ஆதி 9:18. பேழையிலிருந்து புறப்பட்ட நோவாவின் குமாரர், சேம் காம் யாப்பேத் என்பவர்களே. காம் கானானுக்குத் தகப்பன்.

ஆதி 9:19. இம்மூவரும் நோவாவின் குமாரர்; இவர்களாலே பூமியெங்கும் ஜனங்கள் பரம்பினார்கள்.

ஆதி 9:20. நோவா பயிரிடுகிறவனாகி, திராட்சத்தோட்டத்தை நாட்டினான்.

ஆதி 9:21. அவன் திராட்சரசத்தைக் குடித்து, வெறிகொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப் படுத்திருந்தான்.

ஆதி 9:22. அப்பொழுது கானானுக்குத் தகப்பனாகிய காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டு, வெளியில் இருந்த தன் சகோதரர் இருவருக்கும் அறிவித்தான்.

ஆதி 9:23. அப்பொழுது சேமும் யாப்பேத்தும் ஒரு வஸ்திரத்தை எடுத்துத் தங்கள் இருவருடைய தோள்மேலும் போட்டுக் கொண்டு, பின்னிட்டு வந்து, தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மூடினார்கள்; அவர்கள் எதிர்முகமாய்ப் போகாதபடியினால், தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தைக் காணவில்லை.

நோவாவின் குடும்பத்தைப்பற்றியும் அவர்கள் செய்த தொழிலைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. நோவா நிலத்தைப் பயிரிடுகிறவரானார். "பயிரிடுகிறவர்" என்னும் வார்த்தைக்கு "பூமிக்குரிய மனுஷன்" என்று பொருள். நோவா பூமியிலுள்ள மண்ணிலே வேலை செய்கிறார். நோவாவின் கைகளில் பூமியின் மண் இருக்கிறது.

நோவா பயிரிடுகிறவராகி, திராட்சத்தோட்டத்தை நாட்டுகிறார். பூமியைப் பண்படுத்துகிற நோவா, இந்தப் பூமியில் பழவிருட்சங்களை நாட்டுகிறார். ஜலப்பிரளயத்திற்கு முன்பு நோவா பயிரிடுகிறவராக வேலை செய்திருக்கவேண்டும். அக்காலத்தில் பயிரிடுகிற வேலையை செய்த நோவா, கர்த்தருடைய கட்டளைப் பிரகாரம் பேழையை உண்டுபண்ணினார்.

நோவாவும் அவருடைய வீட்டாரும் பேழையிலிருந்து வெளியேறிய பின்பு, அவர் தனக்கு வீடுகளைக் கட்டியிருக்கவேண்டும். பூமியில் ஜலமில்லாமல் வற்றிப்போயிற்று. ஆகையினால் அந்தப் பூமியில் நோவா தனக்கும் தன் வீட்டாருக்கும் வீடுகளைக் கட்டினார். முதலில் பேழையைக் கட்டினவர் அதன் பின்பு வீடுகளைக் கட்டுகிறார்.

நோவா பேழையைக் கட்டியபோதும், தனக்கும் தன் வீட்டாருக்கும் வீடுகளைக் கட்டியபோதும், அவர் தச்சுவேலைகளை செய்தார். இப்போது நிலத்தைப்பயிரிடுகிறார். திராட்சத்தோட்டத்தை நாட்டுகிறார்.

திராட்சத்தோட்டத்தை நாட்டுவது நோவாவுக்கு பாவமாயிற்று. அதனால் அவருக்கு அவமானமுண்டாயிற்று. நோவா திராட்சத்தோட்டத்தை நாட்டி, அது கனி கொடுக்கும் காலத்தில், திராட்சப்பழங்களை பறிக்கிறார். ஆலையிலே திராட்சப்பழங்களை மிதித்து ரசமாக்குகிறார். நோவா திராட்சரசத்தை தன் குடும்பத்தாரோடு பானம்பண்ணுகிறார். நோவாவின் வீட்டிலே அவருடைய மூன்று குமாரரும் இருக்கிறார்கள். நோவாவின் திராட்சத்தோட்டம் ஏராளமாய்க் கனிகொடுக்கிறது. இதனால் நோவா தன் வீட்டாரோடு திராட்சரசம் பானம்பண்ணி மிகவும் சந்தோஷமாயிருக்கிறார்.

நோவாவின் குடும்பமும் பெரிதாயிருக்கிறது. பேழையிலிருந்து புறப்பட்ட நோவாவின் குமாரர், சேம் காம் யாப்பேத் என்பவர்களே. காம் கானானுக்குத் தகப்பன். இம்மூவரும் நோவாவின் குமாரர்; இவர்களாலே பூமியெங்கும் ஜனங்கள் பரம்புகிறார்கள் (ஆதி 9:18,19).

நோவாவின் குமாரனான சேம், காம், யாப்பேத் ஆகியோர் மூலமாக பூமியெங்கும் ஜனங்கள் பரம்பினார்கள். இதுவரையிலும் ஒரே வம்சத்தில் இருந்தவர்கள் இனிமேல் பல வம்சமாகப் பிரியப்போகிறார்கள். இயேசுகிறிஸ்து நோவாவின் வம்சத்தில் வருகிறார். நோவாவின் குமாரனாகிய சேமின் வம்சத்தில் மேசியா வருகிறார் (லூக்கா 3:36).

நோவா தன்னுடைய குமாரரையும், அவர்களுடைய சந்தியாரையும் ஆசீர்வதிக்கும் வண்ணமாக, திராட்சர விருந்திற்கு அழைக்கிறார். பூர்வகாலத்தில் திராட்சரசம் பிழியும் காலத்தில், இதற்காக ஒரு விசேஷித்த பண்டிகை நாளை நியமிப்பார்கள். அந்த நாளில் வீட்டார் அனைவரும் சந்தோஷமாக திராட்சரசம் பானம்பண்ணி, ஒருவரையொருவர் ஆசீர்வதித்துக்கொள்வார்கள்.

இப்படிப்பட்ட ஒரு பண்டிகை நாளில் நோவா திராட்சரசத்தை குடித்து வெறிகொண்டிருக்கிறார். இது நோவாவின் பாவம். கர்த்தர் நோவாவுக்கு மிகப்பெரிய விடுதலையை கொடுத்திருக்கிறார். நோவாவும் அவருடைய வீட்டாரும் கர்த்தருடைய கிருபையினால் ஜலப்பிரளயத்திற்கு தப்பினார்கள். ஆனால் இப்போதோ நோவா திராட்சரசத்திற்கு அடிமையாயிருக்கிறார். கர்த்தர் நோவாவை ஆபத்திற்கு விலக்கி மீட்டு இரட்சித்திருந்தாலும், நோவா இப்போது மதுபானத்திற்கு அடிமையாயிருக்கிறார்.

நோவா திராட்சரசத்தைக் குடித்து, வெறிகொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப்படுத்திருக்கிறார் (ஆதி 9:21). தான் வஸ்திரம் விலகி படுத்திருப்பது நோவாவுக்கு தெரியவில்லை. திராட்சரசத்தினால் வெறிகொண்டிருக்கிற நோவாவுக்கு சுயநினைவும் இல்லை, நிதானமுமில்லை. கர்த்தரும் நோவாவைக் கட்டுப்படுத்தவில்லை. கர்த்தருடைய ஆவி நோவாவோடு போராடவில்லை. கர்த்தர் நோவாவை அவருடைய சுயாதீன சித்தத்திற்கும், சுயவிருப்பத்திற்கும் ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

விசுவாசிகளாகிய நாமும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் மிகவும் எச்சரிப்பாயிருக்கவேண்டும். நாம் கர்த்தரை விட்டு விலகிப்போனால், கர்த்தரும் நம்மைவிட்டு விலகிப்போய்விடுவார். நாம் துணிகரமாய்ப் பாவம் செய்தால், கர்த்தர் நம்மை தடுத்து நிறுத்துவதற்கு முன்வரமாட்டார். நம்முடைய சுயஇஷ்டத்திற்கு நம்மை விட்டுவிடுவார். ஆனாலும் கர்த்தர் நீதியுள்ளவர். அவர் பாவம் செய்கிறவர்களைத் தண்டிக்கிறவர்.

நாம் துணிகரமாய்ப் பாவம் செய்யும்போது கர்த்தர் நம்மை நம்முடைய இஷ்டத்திற்கு விட்டுவிட்டாலும், நியாயத்தீர்ப்பு நாளிலே கர்த்தர் நம்மை சும்மாவிடமாட்டார். அன்று நம்முடைய இஷ்டமல்ல, கர்த்தருடைய நீதியே நிறைவேறும்.

மனுஷன் எவ்வளவு பெரிய பரிசுத்தவானாகயிருந்தாலும் அவனிடத்திலும் ஒரு சில பாவக்கறைகள் காணப்படும். இது பூர்வஜென்ம பாவம். ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்திலே பாவம் செய்ததினால், அவர்களுடைய சந்ததியில் வந்திருக்கிற நம்மிடத்திலும் பாவத்தின் கறைகள் காணப்படுகிறது. ஜென்ம பாவத்திற்கு யாரும் தப்பிப்பதில்லை.

மனுஷர் மத்தியிலே ஜென்ம பாவத்தைப்போல, சுபாவபாவமும் காணப்படுகிறது. மனுஷனுடைய சுபாவ பாவத்திற்கு, அவனுடைய பாவசுபாவமே காரணம். நோவாவின் பாவத்திற்கு, அவருடைய ஜென்மசுபாவமும், பாவசுபாவமும் காரணமாயிருக்கிறது.

ஒரு சிலர் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் மிகுந்த கவனமாயும், எச்சரிப்பாயும் ஜீவிப்பார்கள். அவர்கள் தேவனுடைய கிருபையினால் தங்களுடைய மனதின் உத்தமத்தைக் காத்துக் கொள்வார்கள். சோதனைகளுக்கு விலகி தப்பித்துக்கொள்வார்கள். சோதனைகளுக்கு மத்தியிலும் அவர்கள் பரிசுத்தமாய் ஜீவிப்பார்கள்.

வேறு சிலரோ தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பொறுப்பில்லாமலும், அக்கரையில்லாமலும் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய கிருபையை போக்கடித்து விடுவார்கள். இவர்கள் சோதனைகளிலே சிக்குண்டு பாவத்தில் விழுந்துவிடுவார்கள். சோதனைகள் எல்லோருக்கும் வரும். நாம் கர்த்தருடைய கிருபையினால் சோதனைகளை மேற்கொள்ளவேண்டும்.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் நம்மை ஆசீர்வதிக்கிறார். சில சமயங்களில் கர்த்தருடைய ஆசீர்வாதம் நமக்கு அதிகமாய்க் கொடுக்கப்படுகிறது. அதிகமான ஆசீர்வாதம்கூட சில சமயங்களில் நமக்கு ஆபத்தாகிவிடும். ஆகையினால் கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதங்களை மிகுந்த கவனத்தோடும், பயபக்தியோடும் பயன்படுத்தவேண்டும். போதும் என்கிற மனதிருப்தியே நமக்கு மிகுந்த ஆதாயம்.

நம்முடைய மனதில் பேராசை இருக்கக்கூடாது. அநேக பாவங்களுக்கு பேராசையே அடிப்படை காரணமாயிருக்கிறது. நோவா பயிரிடுகிறவராகி திராட்சத்தோட்டத்தை நாட்டினார். கர்த்தர் அவருடைய தோட்டத்தை அதிகமாய் ஆசீர்வதித்தார். அவருடைய தோட்டத்தில் திராட்சப்பழங்கள் அதிகமாய் விளைந்தது. அவருடைய வீட்டில் திராட்சரசம் பெருகிற்று. நோவா எந்தவித கட்டுப்பாடுமில்லாமல், திராட்சரசத்தை அதிகமாய்க் குடிக்கிறார். இதனால் வெறிகொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகி படுத்திருக்கிறார். நிர்வாணமாயிருக்கிறார்.

நிர்வாணம் ஒரு அவமானம். திராட்சத்தோட்டத்தின் அதிகமான விளைச்சல் நோவாவின் அவமானத்திற்கு காரணமாயிற்று. ஆதாம் ஏதேன் தோட்டத்தில் தடைபண்ணப்பட்ட விருட்சத்தின் கனியை புசித்து பாவம் செய்தார். நோவாவோ திராட்சரசத்தை அதிகமாய்க் குடித்து, வெறிகொண்டு பாவம் செய்கிறார்.

குடித்து வெறிப்பது பாவம். இதனால் பல தீயவிளைவுகள் ஏற்படும். குடிகாரருக்கு சுயநினைவு இருக்காது. அவர்களால் தெளிவாக சிந்திக்க முடியாது. குடிகாரர்கள் தங்களுடைய தப்பிதத்தை உணரவுமாட்டார்கள். அதை அங்கீகரிக்கவுமாட்டார்கள். தாங்கள் குடித்து வெறித்திருப்பதைக்கூட இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். குடிகாரர்கள் இரகசியத்தைப் பாதுகாக்கமாட்டார்கள்.

வாசல்காவலாளர்கள் குடிகாரராயிருக்கும்போது, அவர்கள் தங்களுடைய கடமைகளை மறந்துவிடுவார்கள். பூட்டி வைக்கவேண்டிய கதவுகளை திறந்து வைத்துவிடுவார்கள். அவர்களிடத்தில் நிதானம் இருக்காது. குடிகாரர்களால் தங்கள் கடமைகளை பொறுப்பாய் நிறைவேற்ற முடியாது.

ஒருவன் குடித்து வெறித்திருக்கும்போது அவனுக்கு அவமானமுண்டாகும். அவன் தனக்குத்தானே வெட்கத்தை ஏற்படுத்துகிறான். குடிகாரனுடைய பேச்சிலே உறுதியும் இருக்காது, நிச்சயமும் இருக்காது. அவர்களால் தெளிவாகப் பேசமுடியாது உளறுவார்கள். குடிகாரனுடைய பேச்சை நம்பவும் முடியாது.

"தன் தோழருக்குக் குடிக்கக் கொடுத்துத் தன் துருத்தியை அவர்களண்டையிலே வைத்து, அவர்களுடைய நிர்வாணங்களைப் பார்க்கும்படிக்கு, அவர்களை வெறிக்கப்பண்ணுகிறவனுக்கு ஐயோ!"

"நீ மகிமையினால் அல்ல, இலச்சையினால் நிரப்பப்படுவாய்; நீயும் குடித்து விருத்தசேதனமில்லாதவன் என்று விளங்கு; கர்த்தருடைய வலதுகையில் இருக்கிற பாத்திரம் உன்னிடத்திற்குத் திரும்பும்; உன் மகிமையின்மேல் இலச்சையான வாந்திபண்ணுவாய்" (ஆப 2:15,16).

நோவா திராட்சரசத்தைக் குடித்து, வெறிகொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப்படுத்திருக்கிறார். அப்பொழுது கானானுக்குத் தகப்பனாகிய காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டு, வெளியில் இருந்த தன் சகோதரர் இருவருக்கும் அறிவிக்கிறான்.

நோவா வஸ்திரங்கள் விலகி, நிர்வாணமாய்ப் படுத்திருப்பதைப் பார்க்கும்போது காமுக்கு சந்தோஷமாயிருக்கிறது. ஒருவேளை காமும் திராட்சரசத்தை குடித்து வெறிகொண்டிருக்கலாம். தப்பிதமான காரியங்களை செய்கிறவர்கள், மற்றவர்களுடைய தப்பிதங்களைப் பார்த்து சந்தோஷப்படுவார்கள். தங்களைப்போலவே மற்றவர்களும் வழிவிலகிப்போகும்போது அல்லது பாதையிலே இடறி கீழே விழும்போது இவர்களுக்கும் சந்தோஷமுண்டாகும். அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாது. குடிவெறியும், மதியீனமும் அநியாயத்தில் சந்தோஷப்படும்.

நோவாவின் நிர்வாணத்தை காம் காண்கிறான். அதை தன் சகோதரராகிய சேமுக்கும், யாப்பேத்திற்கும் அறிவிக்கிறான். காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தை தன் சகோதரரிடம் அக்கரையோடு சொல்லவில்லை. நோவாவை அவமானப்படுத்தும் வண்ணமாகவும், அவரை ஏளனம் பண்ணும் வண்ணமாகவும் தன் சகோதரரிடத்தில் சொல்லுகிறான்.

"மூடர் பாவத்தைக் குறித்துப் பரியாசம்பண்ணுகிறார்கள்; நீதிமான்களுக்குள்ளே தயை உண்டு" (நீதி 14:9). நோவாவின் நிர்வாணத்தை அவருக்கு உணர்த்தவேண்டும் என்பது காமின் நோக்கமல்ல. நோவாவை பரியாசம்பண்ணவேண்டும் என்பதே காமின் விருப்பம்.

பிள்ளைகள் தங்கள் பெற்றோரைக் கனம்பண்ணவேண்டும். ஆனால் காமோ தன் தகப்பனாகிய நோவாவை பரியாசம்பண்ணுகிறான். அவரை அவமானப்படுத்துகிறான்.

நோவாவின் நிர்வாணத்தை காம் தன் சகோதரர் இருவருக்கும் அறிவித்தபொழுது, சேமும் யாப்பேத்தும் ஒரு வஸ்திரத்தை எடுத்துத் தங்கள் இருவருடைய தோள்மேலும் போட்டுக் கொண்டு, பின்னிட்டு வந்து, தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மூடுகிறார்கள்; அவர்கள் எதிர்முகமாய்ப் போகாதபடியினால், தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தைக் காணவில்லை (ஆதி 9:23).

அன்பு திரளான பாவங்களை மூடும். "எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்" (1பேது 4:8). பெற்றோர் தவறு செய்தாலும், பிள்ளைகள் அவர்களுக்கு மரியாதை காண்பித்து, அவர்களுடைய தப்பிதங்களை அவர்களுக்கு உணர்த்தவேண்டும். பிள்ளைகள் பெற்றோரை ஒருபோதும் பரியாசம்பண்ணக்கூடாது.

"காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டான்" என்பது பெற்றோருடைய அதிகாரத்தின் பிரமாணத்தை மீறும் செயல். ஆதியாகமத்தில் இதைப்போன்று மேலும் பல பிரமாணங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவையாவன:

1. ஒரு மனைவி விவாகம். (ஆதி 16:1)
2. விபசாரம் (ஆதி 20:3-9)
3. ஆசாரியத்துவம் (ஆதி 14:20; ஆதி 28:22)
4. ஒப்பந்தங்கள் (ஆதி 21:27)
5. விருத்தசேதனம் (ஆதி 17:10)
6. விருந்து உபசரிப்பு (ஆதி 18:1-8)
7. வேசித்தனம் (ஆதி 34:7)
8. ஆணைகள் (ஆதி 21:23)
9. சேஷ்டபுத்திரபாகம் (ஆதி 25:33)
10. அபிஷேக தைலம் (ஆதி 28:18)
11. பொருத்தனைகள் (ஆதி 28:20)
12. விக்கிரகாராதனை (ஆதி 31:32-35)
13. சகோதரருடைய விதவை (ஆதி 38:8)
14. பரிசமும் வெகுமதியும் (ஆதி 34:12)
15. சந்ததிகள் (ஆதி 15:1-6)
16. மறுமனையாட்டிகள் (ஆதி 16:1-3)
17. திருடுதல் (ஆதி 31:32).

சாபமும் ஆசீர்வாதமும்
ஆதி 9:24-27

ஆதி 9:24. நோவா திராட்சரசத்தின் வெறி தெளிந்து விழித்தபோது, தன் இளையகுமாரன் தனக்குச் செய்ததை அறிந்து:

ஆதி 9:25. கானான் சபிக்கப்பட்டவன், தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான் என்றான்.

ஆதி 9:26. சேமுடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான்.

ஆதி 9:27. யாப்பேத்தை தேவன் விர்த்தியாக்குவார்; அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்; கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான் என்றான்.

நோவா திராட்சரசத்தின் வெறி தெளிந்து விழிக்கிறார். தன் இளையகுமாரன் காம் தனக்கு செய்த பரியாசத்தை நோவா அறிந்துகொள்கிறார். அப்போது தீர்க்கதரிசன ஆவியானவர் நோவாவின்மீது வந்து இறங்குகிறார். யாக்கோபு மரிக்கும்போது, அவர் தன்னுடைய குமாரரைக் குறித்து தீர்க்கதரிசனம் சொன்னதுபோல, நோவா இப்போது தன்னுடைய குமாரரைக் குறித்து தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்.

"யாக்கோபு தன் குமாரரை அழைத்து: நீங்கள் கூடிவாருங்கள், கடைசி நாட்களில் உங்களுக்கு நேரிடும் காரியங்களை அறிவிப்பேன்" (ஆதி 49:1).

கானான் காமின் குமாரன். நோவா கானானை சபிக்கிறார். கானான் சபிக்கப்படுவதன் மூலமாக, அவனுடைய தகப்பனாகிய காமும் சபிக்கப்படுகிறான். "கானான் சபிக்கப்பட்டவன், தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான்" (ஆதி 9:25) என்று நோவா சொல்லுகிறார்.

"அடிமைகளுக்கு அடிமை" என்பது மிகவும் ஈனமான வேலை. அடிமைத்தன வேலை மிகவும் மோசமானது. அடிமைக்கு அடிமையாயிருந்து வேலை செய்வது என்பது மிகவும் ஈனமான வேலை. கானான் தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான் என்று நோவா சொல்லுகிறார்.

தேவன் பிதாக்களின் அக்கிரமத்தை அவர்களுடைய பிள்ளைகளிடத்தில் விசாரிப்பார். பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் பாவமான காரியங்களை சுதந்தரிக்கும்போது, பெற்றோரின் பாவங்களும், சாபங்களும் பிள்ளைகளுக்கும் கடந்து வரும். பெற்றோர் துன்மார்க்கராயிருப்பதுபோல அவர்களுடைய பிள்ளைகளும் துன்மார்க்கராயிருப்பார்கள். தங்கள்மீது வந்த சாபத்தை பிள்ளைகளால் நீக்க முடியாது. அவர்களால் சாபத்திற்கு விடுதலை பெறமுடியாது.

பிள்ளைகள் பெற்றோரை துக்கப்படுத்தும்போது, அவர்களை அவமானப்படுத்தும்போது, பிள்ளைகள்மீது சாபம் வரும். தேவனுடைய நீதியினால் இப்படிப்பட்ட பிள்ளைகள்மீது அவமானமும், சாபமும் வரும்.

நோவா சேமுக்கும் யாப்பேத்திற்கும் ஆசீர்வாதமான வார்த்தைகளை சொல்லுகிறார். "சேமுடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான்" என்றும், "யாப்பேத்தை தேவன் விர்த்தியாக்குவார்; அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்; கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான்" (ஆதி 9:26,27) என்றும் நோவா சொல்லுகிறார்.

நோவா சேமை ஆசீர்வதிக்கும்போது, "சேமுடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக" என்று சொல்லுகிறார். அவர் சேமுக்காக கர்த்தரைத் துதிக்கிறார். இந்த வாக்கியத்தில் எல்லா ஆசீர்வாதங்களும் அடங்கியிருக்கிறது. சேம் தன்னுடைய தகப்பனாராகிய நோவாவை அவமானப்படுத்தாமல் கனம் பண்ணினார். சேமும் யாப்பேத்தும் தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மூடினார்கள். அவர்கள் தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தைக் காணாமல், அவரைக் கனம்பண்ணினார்கள். இதன் நிமித்தமாக நோவா சேமை ஆசீர்வதிக்கிறார்.

சேம் செய்த நற்கிரியைகளுக்காக, நோவா கர்த்தரைத் துதிக்கிறார். நாம் மனுஷருடைய நற்கிரியைகளை காணும்போது, அவர்களைக் கனம்பண்ணாமல், கர்த்தரைக் கனம்பண்ண வேண்டும்.

"இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத் 5:16).

நன்மையான எல்லா ஈவுகளும் கர்த்தரிடத்திலிருந்தே நமக்கு வருகிறது. கர்த்தருடைய கிருபையினாலேயே மனுஷர் நற்கிரியைகளை செய்கிறார்கள். ஆகையினால் நம்முடைய துதிகளுக்கும், ஸ்தோத்திரங்களுக்கும் கர்த்தரே பாத்திரராயிருக்கிறார்.

நோவா சேமின் சந்ததியை தீர்க்கதரிசனமாகப் பார்க்கிறார். அவருடைய சந்ததியார் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்களாயிருப்பார்கள். ஆகையினால் நோவா கர்த்தரை துதிக்கும்போது, "சேமுடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக" என்று சொல்லுகிறார்.

கர்த்தரிடத்தில் பக்தியுள்ள ஜனம் சேமின் சந்ததியாரிலிருந்து கட்டியெழுப்பப்படுவார்கள். கர்த்தர் சேமின் சந்ததியை ஆசீர்வதிப்பார். அவர்கள் கர்த்தருக்குள் செழித்திருப்பார்கள். யூதர்கள் சேமின் சந்ததியை சேர்ந்தவர்கள். இந்தப் பிரபஞ்சத்தில் அநேக வருஷங்களாக யூதர்கள் மாத்திரமே கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்கள் மாத்திரமே கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொண்டார்கள். மற்ற ஜாதியாரெல்லாம் கர்த்தருக்கு புறஜாதியாராயிருந்தார்கள். புறஜாதிகள் இஸ்ரவேலின் காணியாட்சிக்கு அந்நியர்களாயிருந்தார்கள்.

நோவா யாப்பேத்தை ஆசீர்வதிக்கும்போது, "யாப்பேத்தை தேவன் விர்த்தியாக்குவார்; அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்; கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான்" (ஆதி 9:27) என்று சொல்லுகிறார்.

புறஜாதியாரின் தீவுகள் யாப்பேத்திற்குள் ஆசீர்வதிக்கப்படும். யாப்பேத்தின் சந்ததியார் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பார்கள். சேமின் கூடாரங்கள் யாப்பேத்தின் சந்ததியாருக்கு சொந்தமாகும். யாப்பேத்தின் சந்ததியார் பலுகிப்பெருகுவார்கள். அவர்கள் சேமின் கூடாரங்களை சுதந்தரிப்பார்கள்.

யூதர்கள் சேமின் சந்ததியை சேர்ந்தவர்கள். கிரேக்கர்களும், ரோமாபுரியாரும் யாப்பேத்தின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். யூதர்கள் அநேக வருஷங்களாக கிரேக்கர்களுக்கும், ரோமாபுரியாருக்கும் அடிமைகளாயிருந்தார்கள். யூதர்கள் அவர்களுக்கு கப்பம் கட்டினார்கள்.

யாப்பேத்தின் சந்ததியை சேர்ந்தவர்கள் புறஜாதியார்கள். சேமின் சந்ததியை சேர்ந்தவர்கள் யூதர்கள். பிற்காலத்தில் புறஜாதியாரும் கர்த்தருடைய சபையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். தேவன் யாப்பேத்தின் சந்ததியாரான புறஜாதியாரை விர்த்தியாக்குவார். சபையில் புறஜாதியாரின் எண்ணிக்கை அதிகரிக்கும். அப்போது யாப்பேத் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான். யாப்பேத்தின் சந்ததியை சேர்ந்த புறஜாதியார்கள், சேமின் சந்ததியான யூதர்களுடைய ஆலயத்திற்கு வந்து கர்த்தரைத் தொழுதுகொள்வார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், இயேசுகிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் மூலமாய், யூதரும் புறஜாதியாரும் ஒன்றாய்க் கூட்டிச்சேர்க்கப்படுகிறார்கள். கிறிஸ்துவுக்குள் யூதர் என்றும், புறஜாதியார் என்றும் வித்தியாசமில்லை. இரண்டு ஜாதியாராக பிரிந்திருந்த சேமையும் யாப்பேத்தையும், கர்த்தர் ஒன்றாய்க் கூட்டிச்சேர்க்கிறார்.

கிறிஸ்துவின் சபையிலே ஆத்துமாக்கள் கூட்டிச்சேர்க்கப்படுகிறார்கள். அவர்களை யாரும் கட்டாயம்பண்ணவில்லை. பரிசுத்த ஆவியானவரே அவர்களை சபைக்கு அழைத்து வருகிறார்.

"உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமுமுள்ளவர்களாயிருப்பார்கள்; விடியற்காலத்துக் கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்குச் சமானமாய் உம்முடைய யௌவன ஜனம் உமக்குப் பிறக்கும்" (சங் 110:3).

நோவாவின் மூன்று குமாரர்கள் மூலமாக மூன்று சந்ததியார் வருகிறார்கள். இயேசு கிறிஸ்து சேமின் வம்சத்தில் வருகிறார். (லூக்கா 3:36). காமின் சந்ததியார் நித்திய காலமாகச் சபிக்கப்பட்டிருப்பார்கள் (ஆதி 10:6).

பரிசுத்தவேதாகமத்தில் கர்த்தர் ஆசீர்வாமான வார்த்தைகளையும் சொல்லியிருக்கிறார். சாபமான வார்த்தைகளையும் சொல்லியிருக்கிறார். கர்த்தரிடத்திலிருந்து சாபவார்த்தைகளைப் பெற்றுக்கொண்டவர்களின் விவரம் வருமாறு:

1. சர்ப்பம் (ஆதி 3:14-15)
2. ஸ்திரீ (ஆதி 3:15-16)
3. மனுஷன் (ஆதி 3:17-19)
4. பூமி (ஆதி 3:17-18; ஆதி 5:29; ஆதி 8:21)
5. விலங்குகள் (ஆதி 3:14; ரோமர் 8:19-23)
6. காயீன் (ஆதி 4:11)
7. கானான் (ஆதி 9:25)
8. சிமியோனும், லேவியும் (ஆதி 49:5-7)
9. இஸ்ரவேல். (யோசு 6:18)
10. எரிகோவைக் கட்டுகிறவர்கள். (யோசு 6:26)
11. கிபியோனியர். (யோசு 9:3,23)
12. சேகேமியர். (நியா 9:57)
13. மேரோஸ் (நியா 5:23)
14. சிறுபிள்ளைகள். (2இராஜா 2:24-25)
15. கேயாசி (2இராஜா 5:27)

16. ஆகாபும், யேசபேலும் (1இராஜா 21:17-24; 2இராஜா 9:24-26,30-37)

17. இஸ்ரவேலர். (ஏசா 43:28; தானி 9:11; மல் 3:9)

18. துன்மார்க்கர் அனைவரும் (மத் 25:41; கலா 3:10)

சேமின் சந்ததியார் தெரிந்தெடுக்கப்பட்ட சந்ததியாக இருக்கிறார்கள். சேமின் சந்ததியின் மூலமாகவே தெய்வீக வெளிப்பாடு வருகிறது. கிறிஸ்து தமது மனுஷ அவதாரத்தில் சேமின் சந்ததியில் பிறந்திருக்கிறார். (ஆதி 10:21; ஆதி 11:10; லூக்கா 3:23-38).

கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதமான வார்த்தைகளைப் பெற்றுக்கொண்டவர்களின் விவரம் வருமாறு:

1. ஆதாமும், ஏவாளும். (ஆதி 1:22,28; ஆதி 5:2)
2. நோவாவும் அவருடைய குமாரரும் (ஆதி 9:1)
3. ஆபிரகாம் (ஆதி 14:19; ஆதி 24:1,35)
4. இஸ்மவேல் (ஆதி 17:20)
5. ஈசாக்கு (ஆதி 25:11; ஆதி 26:12)
6. யாக்கோபு (ஆதி 30:27; ஆதி 35:9)
7. லாபான். (ஆதி 30:30)
8. போத்திபார். (ஆதி 39:5)
9. இஸ்ரவேல். (உபா 2:7; உபா 7:14; உபா 12:7; உபா 14:24; உபா 15:14; உபா 16:10; 2நாளா 31:10)
10. சிம்சோன் (நியா 13:24)
11. ஓபேத்-ஏதோம். (2சாமு 6:11; 1நாளா 13:14)
12. பெயுள்தாயி (1நாளா 26:5)
13. யோபு (யோபு 42:12)
14. சாலொமோன். (சங் 45:2)
15. சீமோன் பேதுரு (மத் 16:17)
16. பவுலும் மற்றவர்களும் (எபே 1:3)

வேதாகமத்தில் தேவன் இன்னும் ஏராளமானோரை ஆசீர்வதித்திருக்கிறார். ஆயினும், இவர்கள்மீது கூறப்பட்டிருக்கும் ஆசீர்வாதம் விசேஷமானது. தேவன் வானத்தையும், பூமியையும் ஆசீர்வதித்திருப்பதினால், இந்த ஆசீர்வாதத்தின் பலனைத் தேவனுடைய பிள்ளைகள் அனுபவிக்கும்போது துன்மார்க்கரும் அனுபவிக்கிறார்கள். தேவனுடைய நன்மை எல்லோருக்கும் கிடைக்கிறது. இதை உணர்ந்து துன்மார்க்கர் மனந்திரும்பி, கர்த்தரைத் தங்கள் தெய்வமாக அங்கீகரித்து, அவரிடத்தில் வரவேண்டும். (ரோமர் 2:4).

யாப்பேத்தை தேவன் விர்த்தியாக்குவார். யாப்பேத்தின் சந்ததி ஆசீர்வதிக்கப்படும். யாப்பேத்தின் மூலமாக பெரிய இனங்கள் உண்டாகும். அவை விர்த்தியடையும். யாப்பேத்தின் சந்ததியில் வருகிறவர்கள் உலக நாகரிகங்களுக்குக் காரணராக இருப்பார்கள்.

நோவாவின் வயதும் மரணமும் ஆதி 9:28,29

ஆதி 9:28. ஜலப்பிரளயத்துக்குப்பின்பு நோவா முந்நூற்று ஐம்பது வருஷம் உயிரோடிருந்தான்.

ஆதி 9:29. நோவாவின் நாட்களெல்லாம் தொளாயிரத்து ஐம்பது வருஷம்; அவன் மரித்தான்.

கர்த்தர் நோவாவின் ஆயுசுகாலத்தைக் கூட்டிக்கொடுத்திருக்கிறார். நோவா கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவராயிருந்தார். அவர் மூலமாக இந்த உலகத்திற்கு ஆசீர்வாதம் கடந்து வந்திருக்கிறது.

ஜலப்பிரளயத்துக்குப்பின்பு நோவா முந்நூற்று ஐம்பது வருஷம் உயிரோடிருந்தார். நோவா உயிரோடிருந்த காலமெல்லாம் ஜனங்களுக்கு கர்த்தருடைய சத்தியத்தைப் போதித்தார். நோவாவுக்கு ஜலப்பிரளயத்திற்கு முந்திய காலமும் தெரியும். அதற்கு பிந்திய காலமும் தெரியும். நோவா இவ்விரண்டு பூமியையும் பார்த்திருக்கிறார். அவர் இவ்விரண்டு காலங்களையும் கடந்து வந்திருக்கிறார்.

நோவாவின் நாட்களெல்லாம் தொளாயிரத்து ஐம்பது வருஷம். நோவா நீதியின் சந்ததியை சேர்ந்தவர். அவர் விசுவாசத்தினால் நீதிமானானவர். நோவா இந்தப் பிரபஞ்சத்தில் ஆசீர்வாதமாயிருந்தாலும், அவருக்கு நியமிக்கப்பட்ட காலம் வந்தபோது, அவர் மரித்தார். ஜலப்பிரளயத்திற்கு முந்திய பூமியையும், பிந்திய பூமியையும் பார்த்த நோவா, இப்போது புதிய பூமியாகிய பரலோகத்திற்குள்ளே பிரவேசிக்கிறார்.

10 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் தேசங்களின் ஸ்தாபிதத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. பூர்வகாலத்தின் சரித்திர ஆவணங்கள் போதுமான அளவு கிடைக்கவில்லை. ஆகையினால் தேசங்களின் ஸ்தாபிதத்தைப்பற்றி இந்த அதிகாரத்தில் சுருக்கமாகவே சொல்லப்பட்டிருக்கிறது.

யாப்பேத்தின் குமாரர் (ஆதி 10:2-5). காமுடைய குமாரர் (ஆதி 10:6-20). நிம்ரோத்தின் சரித்திரம் (ஆதி 10:8-10). சேமுக்கு பிறந்த பிள்ளைகள் (ஆதி 10:21-31).

யாப்பேத்தின் குமாரர்
ஆதி 10:1-5

ஆதி 10:1. நோவாவின் குமாரராகிய சேம் காம் யாப்பேத் என்பவர்களின் வம்சவரலாறு: ஜலப்பிரளயத்துக்குப்பின்பு அவர்களுக்குக் குமாரர் பிறந்தார்கள்.

ஆதி 10:2. யாப்பேத்தின் குமாரர், கோமர், மாகோகு, மாதாய், யாவான், தூபால், மேசேக்கு, தீராஸ் என்பவர்கள்.

ஆதி 10:3. கோமரின் குமாரர், அஸ்கினாஸ், ரீப்பாத்து, தொகர்மா என்பவர்கள்.

ஆதி 10:4. யாவானின் குமாரர், எலீசா, தர்ஷீஸ், கித்தீம், தொதானீம் என்பவர்கள்.

ஆதி 10:5. இவர்களால் ஜாதிகளுடைய தீவுகள், அவனவன் பாஷையின்படியேயும், அவரவர்கள் கோத்திரத்தின்படியேயும், ஜாதியின்படியேயும், வேறுவேறு தேசங்களாய்ப் பகுக்கப்பட்டன.

யாப்பேத்தின் குமாரரால் ஜாதிகளுடைய தீவுகள், அவனவன் பாஷையின்படியேயும், அவரவர்கள் கோத்திரத்தின்படியேயும், ஜாதியின்படியேயும், வேறுவேறு தேசங்களாய்ப் பகுக்கப்படுகிறது (ஆதி 10:5).

யூதேயாவிலிருந்து சமுத்திரத்திற்கு அப்பால் உள்ள எல்லா தேசங்களும் தீவுகள் என்றே அழைக்கப்படுகிறது. "தீருவினுடைய எல்லா ராஜாக்களுக்கும், சீதோனுடைய எல்லா ராஜாக்களுக்கும், சமுத்திரத்துக்கு அக்கரையான தீவுகளின் ராஜாக்களுக்கும்" (எரே 25:22).

தீவுகள் என்னும் வார்த்தை பொதுவாக புறஜாதியாரைக் குறிக்கிறது. "அவர் நியாயத்தைப் பூமியிலே நிலைப்படுத்துமட்டும் இளக்கரிப்பதுமில்லை, பதறுவதுமில்லை; அவருடைய வேதத்துக்குத் தீவுகள் காத்திருக்கும்" (ஏசா 42:4). புறஜாதியாரும் இயேசுகிறிஸ்துவை அறியும் அறிவைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அவர்களும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை தங்கள் இரட்சகராக விசுவாசிக்கவேண்டும்.

யாப்பேத்தின் குமாரரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

யாப்பேத்தின் குமாரர், கோமர், மாகோகு, மாதாய், யாவான், தூபால், மேசேக்கு, தீராஸ் என்பவர்கள். கோமரின் குமாரர், அஸ்கினாஸ், ரீப்பாத்து, தொகர்மா என்பவர்கள். யாவானின் குமாரர், எலீசா, தர்ஷீஸ், கித்தீம், தொதானீம் என்பவர்கள் (ஆதி 10:2-4).

இதுவே நோவாவின் குமாரராகிய சேம், காம், யாப்பேத் என்பவர்களின் வம்சவரலாறு ஆகும். ஜலப்பிரளயத்துக்குப்பின்பு அவர்களுக்குக் குமாரர் பிறக்கிறார்கள்.

தற்பொழுது மனுக்குலத்தில் காணப்படும் பல்வேறு இனப்பிரிவினரும் ஜலப்பிரளயத்திற்குப் பின்பு பிறந்தவர்களாவர் (ஆதி 10:1-32; ஆதி 17:20; ஆதி 19:34-38; ஆதி 25:1-34; ஆதி 36:1-43).

யாப்பேத்தின் ஏழு குமாரரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. யாப்பேத் என்பதற்கு விரிவு என்று பொருள். யாப்பேத்தின் சந்ததி உலகம் முழுவதும் பரவிற்று. வேதாகமத்தில் யாப்பேத்தின் 14 சந்ததியார்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் ஏழு பேர் குமாரர்கள், மீதி ஏழு பேர் குமாரத்திகள்.

1. கோமர் (ஆதி 10:2-3; 1நாளா 1:5-6). பழங்காலத்து கலாத்தியர் பிரிகியர், ஆகியோரின் முற்பிதா. வடக்கு ஐரோப்பாவிலுள்ள கால், செல்த் ஆகிய இனப்பிரிவினர் கோமரிலிருந்து வருகிறார்கள். பிற்காலத்தில் இவர்கள் ஜெர்மானியர், பிரன்ஸ் , வேல்ஸ், ஐரீஸ், பிரிட்டிஷ், மேலும் பல ஆங்கிலோ-சாக்சான் இனத்தவரும் இந்தப் பிரிவில் வருகிறார்கள். கோமரின் மூன்று குமாரர்களான அஸ்கினாஸ், ரீப்பாத்து, தொகர்மா ஆகியோர் மூலமாக இந்த இனம் பிரிந்து வருகிறது.

2. மாகோகு (ஆதி 10:2; 1நாளா 1:5) சின்தியர், தர்தார் ஆகியோரின் முற்பிதா. இவர்களுடைய வம்ச வழியினர் தற்காலத்து ரஷ்யாவில் அதிகமாக இருக்கிறார்கள். (எசே 38:2; எசே 39:6; வெளி 20:8) காக்கஸ் மலைக்கு வடக்கு பகுதியிலுள்ள தேசத்திற்கு மாகோகு என்னும் பொதுவான பெயர் உள்ளது. இது கருங்கடலுக்கும், காஸ்பியன் கடலுக்கும் இடையிலுள்ளது.

3. மாதாய் ஆதி 10:2; 1நாளா 1:5) மேதியர், பெர்சியர், ஆகியோரின் முற்பிதா. ஒருவேளை இந்தியர்கள் இந்த வம்சத்தில் வந்திருக்கலாம்.

4. யாவான் (ஆதி 10:2-4; 1நாளா 1:5-7). கிரேக்கர், இத்தாலியர், ஸ்பானியர்டு, போர்ச்சுக்கீசியர் ஆகியோரின் முற்பிதா. மேலும் எலிசா, தர்ஷீஸ், தோதானீம் ஆகிய தேசத்தாரின் முற்பிதாவும் இவரே. (ஆதி 10:4; ஏசா 66:19; எசே 27:13,19 கித்தீம் என்பது தற்காலத்து சைப்பிரஸ் கடற்பகுதியும், மத்திய தரைக்கடல் கடற்பகுதியும் ஆகும். (ஆதி 10:4; எண் 24:24; 1நாளா 1:7; ஏசா 23:1,12; எரே 2:10; எசே 27:6; தானி 11:30).

5. தூபால் (ஆதி 10:2; 1நாளா 1:5). ஐபீரியர், ஜார்ஜியர், காப்போதோக்கியர், மற்றும் பல ஆசிய , ஐரோப்பாவிலுள்ள இனத்தவரின் முற்பிதா.

6. மேசேக்கு (ஆதி 10:2; 1நாளா 1:5). தற்பொழுது ரஷ்யாவில் இருக்கும் மாஸ்கோவியர் இனத்தாரின் முற்பிதா.

7. தீராஸ் (ஆதி 10:2; 1நாளா 1:5). தீராசியர், இத்தாலியில் குடிபெயர்ந்துள்ள எத்துருக்கர்கள் ஆகியோரின் முற்பிதா.

காமுடைய குமாரர்
ஆதி 10:6,7

ஆதி 10:6. காமுடைய குமாரர், கூஷ், மிஸ்ராயீம், பூத், கானான் என்பவர்கள்.

ஆதி 10:7. கூஷுடைய குமாரர், சேபா, ஆவிலா, சப்தா, ராமா, சப்திகா என்பவர்கள். ராமாவின் குமாரர், சேபா, திதான் என்பவர்கள்.

நிம்ரோத் என்பவன் பூமியிலே பராக்கிரசாலியாயிருக்கிறான். இவன் காமுடைய சந்ததியை சேர்ந்தவன். காமுடைய குமாரரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

காமுடைய குமாரர், கூஷ், மிஸ்ராயீம், பூத், கானான் என்பவர்கள். கூஷுடைய குமாரர், சேபா, ஆவிலா, சப்தா, ராமா, சப்திகா என்பவர்கள். ராமாவின் குமாரர், சேபா, திதான் என்பவர்கள் (ஆதி 10:6,7).

காமுடைய நான்கு குமாரரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. கூஷ் (ஆதி 10:6-12; 1நாளா 1:8-10; ஏசா 11:11). எகிப்தின் தென்பகுதி, அரபியா, பாபிலோனியா, இந்தியா ஆகிய தேசங்களில் பரவியிருக்கும் எத்தியோப்பிய இனத்தவரின் முற்பிதா.

2. மிஸ்ராயீம் (ஆதி 10:6,13-14; 1நாளா 1:8-11). எகிப்தின் பல்வேறு இனங்களின் முற்பிதா. மிஸ்ராயீம் என்பதற்கு "இரட்டை" என்று பொருள். எகிப்தின் மேற்பகுதி, கீழ்பகுதி ஆகிய இரண்டு பகுதிகளிலும் குடியிருக்கும் இனத்தவர்கள். இது காமின் நிலம் என்று அழைக்கப்படுகிறது. (சங் 78:51; சங் 105:23-27; சங் 106:22) பெலிஸ்தியரும் மிஸ்ராயீமிலிருந்து வந்த சந்ததியார் ஆவார் (ஆதி 10:14).

3. பூத் (ஆதி 10:6; எசே 27:10). லீபியர், ஆப்பிரிக்காவில் வடக்கு தேசத்திலுள்ள இனத்தார் ஆகியோரின் முற்பிதா. (எசே 27:10; எசே 30:5; எசே 38:5; எரே 46:9; நாகூம் 3:9).

4. கானான் (ஆதி 10:6,15-19; ஆதி 9:18-27; 1நாளா 1:8-13). பாலஸ்தீனம், அரபியா, தீரு, சீதோன், ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் மற்ற பகுதிகள் ஆகிய இடங்களில் குடியிருக்கும் ஜனங்களின் முற்பிதா. இந்தத் தேசங்கள் பொதுவாக இஸ்ரவேலோடு தொடர்புபடுத்தியே குறிப்பிடப்படும் (ஆதி 10:15-19; ஆதி 15:18-21; உபா 7:1-3; யோசு 12).

நிம்ரோத்
ஆதி 10:8-14

ஆதி 10:8. கூஷ் நிம்ரோதைப் பெற்றான்; இவன் பூமியிலே பராக்கிரமசாலியானான்.

ஆதி 10:9. இவன் கர்த்தருக்கு முன்பாகப் பலத்த வேட்டைக்காரனாயிருந்தான்; ஆகையால், கர்த்தருக்கு முன்பாகப் பலத்த வேட்டைக்காரனான நிம்ரோதைப் போல என்னும் வழக்கச்சொல் உண்டாயிற்று.

ஆதி 10:10. சிநெயார் தேசத்திலுள்ள பாபேல், ஏரேக், அக்காத், கல்னே என்னும் இடங்கள் அவன் ஆண்ட ராஜ்யத்திற்கு ஆதிஸ்தானங்கள்.

ஆதி 10:11. அந்தத் தேசத்திலிருந்து அசூர் புறப்பட்டுப்போய், நினிவேயையும், ரெகொபோத் பட்டணத்தையும், காலாகையும்,

ஆதி 10:12. நினிவேக்கும் காலாகுக்கும் நடுவாக ரெசேனையும் கட்டினான்; இது பெரிய பட்டணம்.

ஆதி 10:13. மிஸ்ராயீம், லூதீமையும், அனாமீமையும், லெகாபீமையும், நப்தூகீமையும்,

ஆதி 10:14. பத்ருசீமையும், பெலிஸ்தரின் சந்ததிக்குத் தலைவனாகிய கஸ்லூகீமையும், கப்தொரீமையும் பெற்றான்.

நிம்ரோத் என்பதற்கான எபிரெய வார்த்தை "மாரத்" என்பதாகும். இதற்கு கலகம்பண்ணுதல் என்று பொருள். தேவனுக்கு எதிராக முரட்டாட்டம் பண்ணி இவன் கலகம்பண்ணுகிறான். இவனுடைய காலத்தில் பூமியிலே இவன் பராக்கிரமசாலியாக இருக்கிறான். பல பராக்கிரமமான காரியங்களைச் செய்கிறான்.

நிம்ரோத் பலத்த வேட்டைக்காரன். மிருகங்களை வேட்டையாடுவது போன்று தன்னுடைய பலத்தினாலும், அதிகாரத்தினாலும் இவன் ஜனங்களையும் வேட்டையாடுகிறான். தன்னை எதிர்த்தவர்களை அழித்து, ஜனங்கள்மீது தன்னுடைய ஆதிக்கத்தைத் திணிக்கிறான். நிம்ரோத் தேவனுக்குப் பிரியமாக நடக்காமல், தனக்குப் பிரியமாக நடக்கிறான்.

நிம்ரோத் தன்னுடைய காலத்திலே பராக்கிரமசாலியாயிருக்கிறான். இவன் கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரனாகவும் இருக்கிறான். மற்ற ஜாதியாரைவிட, தன்னுடைய ஜாதியார் மிகவும் உயர்ந்தவர்களாயிருக்கவேண்டும் என்பது நிம்ரோத்தின் விருப்பம்.

நிம்ரோத் மிருகங்களையும் வேட்டையாடுகிறான். மனுஷரையும் வேட்டையாடி, தனக்கு அடிமையாக்குகிறான். நிம்ரோத் ஒரு பராக்கிரமசாலி. இதற்கான எபிரெய வார்த்தை "கிப்போர்" என்பதாகும். இதற்கு வேட்டைக்காரன், வலிமையானவன், ராட்சதன், வீரன் என்று பொருள். "கிப்போர்" என்னும் வார்த்தை இராட்சதருக்கும், (ஆதி 6:4), துன்மார்க்கருக்கும் (சங் 52:1-3; சங் 120:4; ஏசா 5:22; எரே 9:23) பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதே வார்த்தையே நிம்ரோத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது.

நிம்ரோத் ஜலப்பிரளயத்திற்குப் பின்பு பூமியில் முதலாவது ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கிறான். தேவனை எதிர்க்கும் முதலாவது கள்ளமார்க்கத்தையும் இவன் ஆரம்பிக்கிறான். இந்த வசனத்தில் "கர்த்தருக்கு முன்பாக" என்னும் வாக்கியம் "கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக" என்று பொருள்படும். இவனுடைய துன்மார்க்கமான மார்க்கத்தினால் கர்த்தர் பரலோகத்திலிருந்து இறங்கி வந்து, இவர்கள் குடியிருந்த தேசத்திலிருந்து இவர்களை பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப் பண்ணுகிறார் (ஆதி 11:1-9).

ஜலப்பிரளயத்திற்கு முன்பு பூமியிலே இராட்சதர்கள் இருந்தார்கள். அவர்கள் துன்மார்க்கமான பாவங்களை செய்தார்கள். இராட்சதருடைய ஆவி நிம்ரோத்தில் மறுபடியும் புதுப்பிக்கப்படுகிறது. இராட்சதர்களிடம் காணப்பட்ட பெருமையும் பேராசையும், நிம்ரோத்திடமும் காணப்படுகிறது.

கர்த்தர் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். இருதயத்தில் பெருமையுள்ளவர்கள் தங்கள் பாவங்களை அங்கீகரிக்கவுமாட்டார்கள், அறிக்கை செய்யவுமாட்டார்கள். இவர்களுக்கு நரகம் நியமிக்கப்பட்டிருக்கிறது. நரகத்தில் பெருமைக்காரருடைய பெருமையும், ஆணவமும், அகந்தையும் முறிந்துபோகும். அகந்தைக்காரர்கள் நரகத்திலே தாழ்த்தப்படுவார்கள். அதுவரையிலும் அவர்கள் மனமேட்டிமையோடுதான் இருப்பார்கள்.

நிம்ரோத் கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரனாயிருக்கிறான். இதனால் பூர்வகாலத்தில், இவனுடைய பெயரை பயன்படுத்தி ஒரு வழக்கச்சொல் உண்டாயிற்று.

"நிம்ரோத் கர்த்தருக்கு முன்பாகப் பலத்த வேட்டைக்காரனாயிருந்தான்; ஆகையால், கர்த்தருக்கு முன்பாகப் பலத்த வேட்டைக்காரனான நிம்ரோதைப் போல என்னும் வழக்கச்சொல் உண்டாயிற்று" (ஆதி 10:9).

நிம்ரோத் வேட்டையாடுவதைப்பற்றி வேதபண்டிதர்கள் இரண்டுவிதமான கருத்துக்களை சொல்லுகிறார்கள். நிம்ரோத் வேட்டையாடுவதன் மூலமாய் ஜனங்களுக்கு நன்மை செய்தான் என்பது ஒரு கருத்து. நிம்ரோத் தன்னை பெருமைப்படுத்துவதற்காகவே வேட்டையாடினான் என்பது மற்றொரு கருத்து.

தேசத்தில் ஏராளமான காட்டு மிருகங்கள் இருக்கிறது. அவை மனுஷருக்கு தீங்கு விளைவிக்கிறது. காட்டு மிருகங்களால் மனுஷருக்கு வரும் ஆபத்துக்களை தடுப்பதற்காக, நிம்ரோத் அந்த மிருகங்களை வேட்டையாடுகிறான். ஜனங்கள் மிருகங்களைப்பற்றிய பயமில்லாமல், அமைதியாக ஜீவனம் பண்ணுகிறார்கள்.

நிம்ரோத் தனி மனிதனாக வேட்டையாடப்போகமாட்டான். அவன் வேட்டையாடுவதற்கு அநேகரை தன்னோடு கூட்டாளியாக சேர்த்துக்கொள்வான். அவர்களெல்லோரும் நிம்ரோத்தின் கட்டளைக்கு கீழ்ப்படிவார்கள். தன்னோடுகூட வேட்டையாடுகிறவர்களை சேர்த்துக்கொண்டு, நிம்ரோத் தேசத்திற்கு தலைவனாகிறான்.

யுத்தங்களில் பெரிய வெற்றிகளைக் பெறுகிறவர்கள் எல்லோரும் பொதுவாக நல்ல வேட்டைக்காரர்களாயிருப்பார்கள். அலெக்சாண்டர், சீஷர் ஆகியோர் பிரசித்திப்பெற்ற வேட்டைக்காரர்கள். இவர்கள் வேட்டையாடுவதைப்பற்றி வேதாகமத்தில் சொல்லப்படவில்லை. ஆனாலும் இவர்களுடைய சரித்திர புஸ்தகங்களில், இவர்கள் வேட்டையாடும் திறமைகளைப்பற்றி விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

"நிம்ரோத் கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரனாயிருந்தான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியத்திற்கு, நிம்ரோத் கர்த்தருக்கு விரோதமாக கிரியை செய்தான் என்று பொருள். நிம்ரோத் தன் ஜாதியார் மத்தியிலே விக்கிரகாராதனையை ஆரம்பிக்கிறான். விக்கிரகங்களை ஆராதிக்கும் புதிய மார்க்கத்தை ஏற்படுத்துகிறான். நிம்ரோத் புதிய ராஜ்யத்தை ஸ்தாபித்து அதற்கு ராஜாவாகிறான். பாபேல் அதன் தலைநகரம். பாபேல் வேசிகளுக்கெல்லாம் தாயானவள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நிம்ரோத் கர்த்தருக்கு விரோதமாக பலத்த வேட்டைக்காரனாகயிருப்பதினால், அவன் கர்த்தரைவிட்டும், அவருடைய வார்த்தைகளை விட்டும் தூரமாய் விலகியே இருக்கிறான். நிம்ரோத் ஜனங்களை ஒடுக்குகிறான். தன்னுடைய பலத்தினாலும், பராக்கிரமத்தினாலும் ஜனங்களுக்கு தீங்கு செய்கிறான். நிம்ரோத் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்க மறுக்கிறான்.

சிநெயார் தேசத்திலுள்ள பாபேல், ஏரேக், அக்காத், கல்னே என்னும் இடங்கள் நிம்ரோத் ஆண்ட ராஜ்யத்திற்கு ஆதிஸ்தானங்கள் (ஆதி 10:10).

சிநெயார் தேசத்திலுள்ள பாபேல், ஏரேக், அக்காத், கல்னே என்னும் இடங்கள் நிம்ரோத் ஆண்ட ராஜ்யத்திற்கு ஆதிஸ்தானங்கள். இவை மனுஷருடைய ராஜ்ஜியங்களுக்கு ஆதி ஸ்தானங்களாகும். தேவனுடைய தெய்வீக ராஜ்ஜியத்திற்கு இவை ஆதிஸ்தானமல்ல. இவர்கள் தேவனுக்கு எதிராக கலகம்பண்ணி ஜீவித்ததினால், தேவனுடைய பிரமாணத்திற்கும், அதிகாரத்திற்கும் இவர்கள் எதிர்த்து நிற்கிறார்கள்.

ஆதி 11 ஆவது அதிகாரத்தில் இந்த ராஜ்யங்களுடைய துன்மார்க்கமான கிரியைகள் விளக்கப் பட்டிருக்கிறது. ஆதி 10 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் எட்டு பட்டணங்கள் பாபிலோன், அசீரியா ஆகிய இரண்டு ராஜ்யங்களை உண்டுபண்ணுகிறது. (ஆதி 10:10-12).

நிம்ரோத் சிநெயார் தேசத்திற்கு ராஜாவாயிருக்கிறான். பாபேல் சிநெயார் ராஜ்யத்திற்கு ஆதி ஸ்தானமாகும். நிம்ரோத் சிநெயார் தேசத்திற்கு எப்படி ராஜாவானான் என்று இந்த வசனப்பகுதியில் விரிவாக சொல்லப்படவில்லை.

நிம்ரோத் தன்னுடைய ஆயுதபலத்தை பயன்படுத்தியோ அல்லது தந்திரம்பண்ணியோ சிநெயார் தேசத்திற்கு ராஜாவாயிருக்கிறான். அவனுடைய கையில் அதிகாரம் இருக்கிறது. தன்னுடைய தேசத்திற்கு பலமுள்ள அஸ்திபாரத்தைப் போடுகிறான்.

நிம்ரோத்தின் பலத்தையும், பராக்கிரமத்தையும் பார்த்து, மற்ற தேசத்தாரும் இவனோடு உடன்படிக்கை செய்து கொள்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பொதுவான பாதுகாப்புக்கு நிம்ரோத்தை நம்புகிறார்கள். பூர்வகாலத்தில் நிம்ரோத் பூமியிலே பராக்கிரமசாலியாயிருக்கிறான். நிம்ரோத்தின் காலத்தில் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜா யாருமில்லை.

நிம்ரோத் கட்டிட வேலைகளை அறிந்தவன். நிம்ரோத் பாபேல் கோபுரத்தை கட்டியிருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அவன் சிநெயார் தேசத்தை பாபேலில் ஸ்தாபித்தான்.

சிநெயார் தேசத்திலிருந்து அசூர் புறப்பட்டுப்போய், நினிவேயையும், ரெகொபோத் பட்டணத்தையும், காலாகையும், நினிவேக்கும் காலாகுக்கும் நடுவாக ரெசேனையும் கட்டினான்; இது பெரிய பட்டணம் (ஆதி 10:11,12).

நோவாவின் குமாரர் எல்லோரையும் ஆளுகை செய்யவேண்டும் என்பது நிம்ரோத்தின் விருப்பம். தன்னுடைய ராஜ்யத்தைப் பலப்படுத்துவதற்காக நிம்ரோத் பாபேல் கோபுரத்தைக் கட்டினான். கர்த்தரோ அந்தக் கோபுரத்தைக் கட்டியவர்களின் பாஷைகளை தாறுமாறாக்கினார். அவர்களால் பாபேல் கோபுரத்தைக் கட்ட முடியவில்லை. பாஷைகள் தாறுமாறானபோது, நோவாவின் குமாரர் எல்லோரையும் ஆளுகை செய்யவேண்டும் என்னும் நிம்ரோத்தின் ஆசையும் தாறுமாறாயிற்று. நிம்ரோத்தின் ஆசை நிறைவேறவில்லை.

காமுடைய குமாரரில் மேலும் சிலரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. மிஸ்ராயீம், லூதீமையும், அனாமீமையும், லெகாபீமையும், நப்தூகீமையும், பத்ருசீமையும், பெலிஸ்தரின் சந்ததிக்குத் தலைவனாகிய கஸ்லூகீமையும், கப்தொரீமையும் பெறுகிறான் (ஆதி 10:13,14).

கானானின் குமாரர் ஆதி 10:15-20

ஆதி 10:15. கானான் தன் மூத்தமகனாகிய சீதோனையும், கேத்தையும்,

ஆதி 10:16. எபூசியரையும், எமோரியரையும், கிர்காசியரையும்,

ஆதி 10:17. ஏவியரையும், அர்கீரியரையும், சீநியரையும்,

ஆதி 10:18. அர்வாதியரையும், செமாரியரையும், காமாத்தியரையும் பெற்றான்; பின்பு கானானியரின் வம்சத்தார் எங்கும் பரவினார்கள்.

ஆதி 10:19. கானானியரின் எல்லை, சீதோன்முதல் கேரார் வழியாய்க் காசாமட்டுக்கும், அது முதல் சோதோம், கொமோரா, அத்மா, செபோயீம் வழியாய் லாசாமட்டுக்கும் இருந்தது.

ஆதி 10:20. இவர்கள் தங்கள் தேசங்களிலும், தங்கள் ஜாதிகளிலுமுள்ள தங்கள் வம்சங்களின்படியேயும், தங்கள் பாஷைகளின் படியேயும் காமுடைய சந்ததியார்.

கானானின் குடும்பத்தாரும் கானான் தேசத்தாரும், கானானின் சந்தியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சுதந்தரித்துக்கொண்ட தேசம் மிகவும் செழிப்பாயிருக்கிறது.

கானானியரின் எல்லை, சீதோன்முதல் கேரார் வழியாய்க் காசாமட்டுக்கும், அது முதல் சோதோம், கொமோரா, அத்மா, செபோயீம் வழியாய் லாசாமட்டுக்கும் இருக்கிறது (ஆதி 10:19).

கானானின் சந்தியாரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. கானான் தன் மூத்தமகனாகிய சீதோனையும், கேத்தையும், எபூசியரையும், எமோரியரையும், கிர்காசியரையும், ஏவியரையும், அர்கீரியரையும், சீநியரையும், அர்வாதியரையும், செமாரியரையும், காமாத்தியரையும் பெறுகிறான்; பின்பு கானானியரின் வம்சத்தார் எங்கும் பரவுகிறார்கள் (ஆதி 10:15-18).

கானான் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்கிறான். ஆகையினால் சேம், யாப்பேத் ஆகியோரின் தேசங்களைவிட, கானான் தேசம் செழிப்பான தேசமாயிருக்கிறது. கானான் தேசத்தில் பரவியிருக்கிறவர்கள், தங்கள் தேசங்களிலும், தங்கள் ஜாதிகளிலுமுள்ள தங்கள் வம்சங்களின்படியேயும், தங்கள் பாஷைகளின்படியேயும் காமுடைய சந்ததியார் ஆவார் (ஆதி 10:20).

சேமின் பிள்ளைகள் ஆதி 10:21-32

ஆதி 10:21. சேமுக்கும் பிள்ளைகள் பிறந்தார்கள்; அவன் ஏபேருடைய சந்ததியார் எல்லாருக்கும் தகப்பனும், மூத்தவனாகிய யாப்பேத்துக்குத் தம்பியுமாய் இருந்தான்.

ஆதி 10:22. சேமுடைய குமாரர், ஏலாம், அசூர், அர்பக்சாத், லூத், ஆராம் என்பவர்கள்.

ஆதி 10:23. ஆராமுடைய குமாரர், ஊத்ஸ், கூல், கேத்தெர், மாஸ் என்பவர்கள்.

ஆதி 10:24. அர்பக்சாத் சாலாவைப் பெற்றான்; சாலா ஏபேரைப் பெற்றான்.

ஆதி 10:25. ஏபேருக்கு இரண்டு குமாரர் பிறந்தார்கள்; ஒருவனுக்குப் பேலேகு என்று பேர்; ஏனெனில் அவனுடைய நாட்களில் பூமி பகுக்கப்பட்டது; அவனுடைய சகோதரன் பேர் யொக்தான்.

ஆதி 10:26. யொக்தான் அல்மோதாதையும், சாலேப்பையும், அசர்மாவேத்தையும், யேராகையும்,

ஆதி 10:27. அதோராமையும், ஊசாலையும், திக்லாவையும்,

ஆதி 10:28. ஓபாலையும், அபிமாவேலையும், சேபாவையும்,

ஆதி 10:29. ஓப்பீரையும், ஆவிலாவையும், யோபாபையும் பெற்றான்; இவர்கள் அனைவரும் யொக்தானுடைய குமாரர்.

ஆதி 10:30. இவர்களுடைய குடியிருப்பு மேசா துவக்கி, கிழக்கேயுள்ள மலையாகிய செப்பாருக்குப் போகிற வழிமட்டும் இருந்தது.

ஆதி 10:31. இவர்களே தங்கள் தேசங்களிலும், தங்கள் ஜாதிகளிலுமுள்ள தங்கள் வம்சங்களின்படியேயும், தங்கள் பாஷைகளின்படியேயும் சேமுடைய சந்ததியார்.

ஆதி 10:32. தங்கள் ஜாதிகளிலுமுள்ள தங்களுடைய சந்ததிகளின்படியே நோவாவுடைய குமாரரின் வம்சங்கள் இவைகளே; ஜலப்பிரளத்துக்குப்பின்பு இவர்களால் பூமியிலே ஜாதிகள் பிரிந்தன.

சேம் என்னும் பெயருக்கு "நாமம்" அல்லது "பெயர்" என்று பொருள். சேமைப்பற்றி இரண்டு காரியங்கள் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன: 1. சேம் ஏபேருடைய சந்ததியார் எல்லாருக்கும் தகப்பன். 2. சேம் மூத்தவனாகிய யாப்பேத்திற்கு தம்பி.

ஏபேர் என்பவன் சேமின் பேரன். ஆனால் சேமைப்பற்றி இங்கு சொல்லும்போது, "சேம் ஏபேருடைய சந்ததியார் எல்லாருக்கும் தகப்பன்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. சேமை அர்பக்சாத்துடைய சந்ததியார் எல்லாருக்கும் தகப்பன் என்றோ அல்லது சாலாவுடைய சந்தியார் எல்லாருக்கும் தகப்பன் என்றோ சொல்லப்படவில்லை.

ஆபிரகாமும், அவருடைய சந்ததியாரும் தேவனுடைய உடன்படிக்கையின் ஜனமாயிருக்கிறார்கள். இவர்கள் ஏபேரின் சந்ததியை சேர்ந்தவர்கள். ஏபேரின் சந்ததியார் "எபிரெயர்" என்று அழைக்கப்படுகிறார்கள்.

"தப்பியோடின ஒருவன் எபிரெயனாகிய ஆபிராமிடத்தில் வந்து அதை அறிவித்தான்; ஆபிராம் தன்னோடே உடன்படிக்கை செய்திருந்த மனிதராகிய எஸ்கோலுக்கும் ஆநேருக்கும் சகோதரனாகிய மம்ரே என்னும் எமோரியனுடைய சமபூமியிலே அப்பொழுது குடியிருந்தான்" (ஆதி 14:13).

இந்த வசனத்தில் ஆபிரகாம் "எபிரெயனாகிய ஆபிராம்" என்று அழைக்கப்படுகிறார். ஆபிரகாமும் அவருடைய குடும்பத்தாரும் எபிரெய பாஷையைப் பேசினார்கள். நிம்ரோத் பாபேல் கோபுரத்தைக் கட்டினபோது, கர்த்தர் அவர்களுடைய பாஷையைத் தாறுமாறாக்கினார். ஆனாலும் ஆபிரகாமும், அவருடைய குடும்பத்தாரும் எபிரெய பாஷையை பேசுவதற்கு கிருபை அருளினார். இது ஆபிரகாமுக்கும், அவருடைய சந்ததியாருக்கும் கிடைத்த விசேஷித்த சிலாக்கியம்.

"சேம் ஏபேருடைய சந்ததியார் எல்லாருக்கும் தகப்பன்" என்று சொல்லுவது, அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் விசேஷித்த மேன்மை. அவர் எபிரெயர் எல்லோருக்கும் தகப்பனாயிருக்கிறார். இதனால் சேமின் பெயர் கனம் பெறுகிறது.

காமுக்கு அநேக குமாரர் பிறக்கிறார்கள். ஆனாலும் காமைப்பற்றிச் சொல்லும்போது அவர் கானானின் தகப்பன் என்று சொல்லப்படவில்லை. காமைப்போலவே சேமுக்கும் அநேக குமாரர் பிறக்கிறார்கள். சேமுக்கு விசேஷித்த மேன்மை கிடைக்கும் வண்ணமாக, அவர் "ஏபேருடைய சந்ததியார் எல்லாருக்கும் தகப்பன்" என்று அழைக்கப்படுகிறார்.

கர்த்தருடைய தெய்வீக ஆசீர்வாதம், ஏபேருடைய சந்ததியாராகிய, எபிரெயர் மூலமாக இந்த உலகத்திற்கு கடந்து வருகிறது. கர்த்தர் கொடுக்கும் நன்மையே, நமக்கு மெய்யான மேன்மை.

சேம் மூத்தவனாகிய யாப்பேத்திற்கு தம்பி. யாப்பேத் சேமின் சகோதரனாகயிருப்பதினால், தேவனுடைய தெய்வீக ஆசீர்வாதத்தில், யாப்பேத்தின் சந்ததியாரும் பங்குபெறுகிறார்கள். யாப்பேத் சேமின் கூடாரங்களில் தங்கியிருப்பான்.

சேமுக்கு பிறந்த பிள்ளைகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. சேமுக்கும் பிள்ளைகள் பிறக்கிறார்கள்; அவன் ஏபேருடைய சந்ததியார் எல்லாருக்கும் தகப்பனும், மூத்தவனாகிய யாப்பேத்துக்குத் தம்பியுமாய் இருக்கிறான். சேமுடைய குமாரர், ஏலாம், அசூர், அர்பக்சாத், லூத், ஆராம் என்பவர்கள். ஆராமுடைய குமாரர், ஊத்ஸ், கூல், கேத்தெர், மாஸ் என்பவர்கள். அர்பக்சாத் சாலாவைப் பெறுகிறான்; சாலா ஏபேரைப் பெறுகிறான் (ஆதி 10:21-24).

"சேம்" நோவாவின் இரண்டாம் குமாரன். நோவாவின் குடும்ப வம்ச வரலாற்றில் இவனுடைய பெயர் இறுதியாக வருகிறது. இவனுடைய சந்ததி மிகவும் முக்கியமானது. மேசியா சேமின் சந்ததியிலிருந்துதான் வருகிறார் (ஆதி 10:21-32; ஆதி 9:26; ஆதி 11:10-32; லூக்கா 3:23-38; ரோமர் 9:4-5).

ஆதியாகமம் 10 ஆம் அதிகாரம் முழுவதுமே ஒரு இணைப்புப்பகுதியாகும். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, அவர்களுடைய சந்ததி ஆகியோருக்கு இந்த அதிகாரம் ஓர் அறிமுகமாக இணைக்கப்பட்டிருக்கிறது.

வம்ச அட்டவணையின் பிரகாரம் ஆதி 10 ஆம் அதிகாரம் ஆதி 11:9 ஆவது வசனத்தைத் தொடர்ந்து வரவேண்டும். ஆயினும் இந்த நிகழ்ச்சிகள் ஆதி 10 ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டிருப்பதினால் ஆதி 9 ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் நோவாவின் மூன்று குமாரருடைய வரலாற்றை இது நிறைவு பெறச்செய்கிறது.

ஆதி 11:1-9 ஆவது வசனம் வரையிலும் ஜனங்கள் ஒரே பாஷையைப் பேசிக் கொண்டிருந்தார்கள். பேலேகுவின் நாட்களில் பூமி பகுக்கப்படுகிறது. (ஆதி 10:25).

சேமுடைய ஐந்து குமாரரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களின் விவரம் வருமாறு :

1. ஏலாம் (ஆதி 10:22; 1நாளா 1:17). பெர்சிய வளைகுடாவில் குடியிருந்த ஏலாமியரின் முற்பிதா. (ஆதி 14:1,9; ஏசா 11:11; ஏசா 21:2; ஏசா 22:6; எரே 25:25; எரே 49:34-39; எசே 32:24; தானி 8:2).

2. அசூர் (ஆதி 10:11,22; 1நாளா 1:17). அசீரியரின் முற்பிதா. (எண் 24:22-24; எசே 27:23; எசே 32:22; ஓசி 14:3).

3. அர்பக்சாத் (ஆதி 10:22). இஸ்ரவேலர், அராபியர், ஏதோமியர், மோவாபியர், அம்மோனியர், இஸ்மவேலர், மீதியானியர், ஆசியாவிலுள்ள மேலும் சில இனத்தார் ஆகியோரின் முற்பிதா. (ஆதி 11:10-32; ஆதி 17:20; ஆதி 25:1-18;36).

4. லூத் (ஆதி 10:22). ஆசியா மைனரிலுள்ள லீதியர், கல்தேயாவிலுள்ள லூதுமியர், பெர்சியர் ஆகியோரின் முற்பிதா.

5. ஆராம் (ஆதி 10:22). அராமியரின் முற்பிதா. இவர்கள் பிற்காலத்தில் சீரியர் என்று அழைக்கப்படுகிறார்கள்.

ஏபேருடைய குமாரரைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏபேருக்கு இரண்டு குமாரர் பிறக்கிறார்கள்; ஒருவனுக்குப் பேலேகு என்று பேர்; ஏனெனில் அவனுடைய நாட்களில் பூமி பகுக்கப்படுகிறது; அவனுடைய சகோதரன் பேர் யொக்தான். யொக்தான் அல்மோதாதையும், சாலேப்பையும், அசர்மாவேத்தையும், யேராகையும், அதோராமையும், ஊசாலையும், திக்லாவையும், ஓபாலையும், அபிமாவேலையும், சேபாவையும், ஓப்பீரையும், ஆவிலாவையும், யோபாபையும் பெறுகிறான்; இவர்கள் அனைவரும் யொக்தானுடைய குமாரர் (ஆதி 10:25-29).

"ஏபேர்" என்னும் பெயருக்கு அக்கரை, அப்புறம் என்று பொருள். ஐபிராத்தின் மறுபக்கம் என்று இது பொருள்படும். இந்த வார்த்தையிலிருந்து தான் "எபிரெயர்" என்னும் வார்த்தை வந்திருக்கிறது (ஆதி 14:13).

ஆதி 11:1-9 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் தெய்வீக நியாயத்தீர்ப்பிற்குப் பின்பு பூமி பல்வேறு தேசங்களாகவும், பல்வேறு தீவுகளாகவும், பல்வேறு கண்டங்களாகவும் பகுக்கப்படுகிறது.

ஜலப்பிரளயத்திற்கு பின்பு இவர்களால் பூமியிலே ஜாதிகள் பிரிகிறது (ஆதி 10:32). இவர்களுடைய குடியிருப்பு மேசா துவக்கி, கிழக்கேயுள்ள மலையாகிய செப்பாருக்குப் போகிற வழிமட்டும் இருக்கிறது. இவர்களே தங்கள் தேசங்களிலும், தங்கள் ஜாதிகளிலுமுள்ள தங்கள் வம்சங்களின்படியேயும், தங்கள் பாஷைகளின் படியேயும் சேமுடைய சந்ததியார். தங்கள் ஜாதிகளிலுமுள்ள தங்களுடைய சந்ததிகளின்படியே நோவாவுடைய குமாரரின் வம்சங்கள் இவைகளே (ஆதி 10:30-32).

"மேசா" என்பது மேதியாவின் பர்வதங்களைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்களில் சிலர் கூறுகிறார்கள். இது தெற்கு அரபியாவைக் குறிக்கும் என்று ஒருசிலரும், இதன் சரியான இருப்பிடம் தெரியவில்லை என்று வேறுசிலரும் மேசாவைப் பற்றிக் கூறுகிறார்கள்.

ஜலப்பிரளயத்துக்குப் பின்பு இவர்களால் பூமியிலே ஜாதிகள் பிரிகிறது. நோவாவுடைய குமாரரின் வம்சங்கள் மூலமாக பூமியிலே ஜாதிகள் பிரிகிறது. யாப்பேத் ஐரோப்பாவின் வடக்கு, மேற்கு, கிழக்கு பகுதிகளிலும், ஆசியாவிலும் குடியேறுகிறான். காம் ஆப்பிரிக்காவில் குடியேறுகிறான். சேம் பாலஸ்தீனத்தைச் சுற்றிலுமுள்ள தேசங்களில் குடியேறுகிறான்.

11 அதிகாரம்

மனுபுத்திரர் ஒரு நகரத்தையும், கோபுரத்தையும் கட்டுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய பாஷையை தாறுமாறாக்கி அவர்களை பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணுகிறார் (ஆதி 11:1-9). பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு ஒரு நகரத்தையும், ஒரு கோபுரத்தையும் கட்ட வேண்டும் என்பது மனுபுத்திரருடைய திட்டமாயிருக்கிறது (ஆதி 11:1-4).

தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது. கர்த்தர் அவர்களுடைய பாஷையை தாறுமாறாக்கி, அவர்களை பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணுகிறார் (ஆதி 11:5-9).

சேமுடைய வம்சவரலாற்றைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வம்சவரலாறு ஆபிரகாம் வரையிலும் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது (ஆதி 11:10-26).

தேராகு ஆபிரகாமின் தகப்பனார். இந்த வசனப்பகுதியில் தேராகுடைய வம்சவரலாற்றைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. தேராகும் அவருடைய குடும்பத்தாரும் ஊர் என்னும் கல்தேயருடைய பட்டணத்தைவிட்டு கானான் தேசத்திற்கு புறப்பட்டுப்போகிறார்கள். அவர்கள் ஆரான் மட்டும் வந்து, அங்கே தங்கிவிடுகிறார்கள் (ஆதி 11:27-32).

பாபேல் கோபுரம்

ஆதி 11:1-4

ஆதி 11:1. பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரேவிதமான பேச்சும் இருந்தது.

ஆதி 11:2. ஜனங்கள் கிழக்கேயிருந்து பிரயாணம்பண்ணுகையில், சிநெயார் தேசத்திலே சமபூமியைக்கண்டு, அங்கே குடியிருந்தார்கள்.

ஆதி 11:3. அப்பொழுது அவர்கள்: நாம் செங்கல் அறுத்து, அதை நன்றாய்ச் சுடுவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்; கல்லுக்குப் பதிலாக செங்கலும், சாந்துக்குப் பதிலாக நிலக்கீலும் அவர்களுக்கு இருந்தது.

ஆதி 11:4. பின்னும் அவர்கள்: நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள்.

ஜலப்பிரளயத்திற்கு பின்பு, நோவாவுடைய குமாரரின் வம்சங்களால், பூமியிலே ஜாதிகள் பிரிகிறார்கள். அவர்கள் வெவ்வேறு ஜாதிகளாகவும், வெவ்வேறு கோத்திரங்களாகவும், வெவ்வேறு குடும்பங்களாகவும் பிரிகிறார்கள். நோவா அவர்களை வெவ்வேறு ஜாதிகளாக பிரித்திருக்கலாம்.

இவர்கள் எல்லோரும் பூமியிலே, தங்கள் தங்கள் ஜாதிகளுக்கு நியமிக்கப்பட்ட இடங்களில் வாசம்பண்ணுகிறார்கள். இவர்கள் வாசம்பண்ணுவதற்கான ஸ்தலங்களை, இவர்களுக்கு பங்கிட்டு கொடுத்தது யார் என்பது தெரியவில்லை. ஒருவேளை இவர்கள் தங்கள் ஜாதிகளின் பிரகாரம் பூமியிலே குடியிருப்பதற்கு நோவா உதவிசெய்திருக்கலாம். நோவா அவர்களுக்கு ஆலோசனை சொல்லியிருக்கலாம். நோவாவுடைய குமாரரின் வம்சங்களும், நோவாவின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, தங்கள் ஜாதிகளின் பிரகாரம், இந்தப் பூமியில் குடியிருக்கிறார்கள்.

நோவாவுடைய குமாரரின் வம்சங்கள் பூமியிலே பிரிந்திருந்தாலும், மனுபுத்திரர் வெவ்வேறு இடங்களில் பிரிந்திராமல், ஒரே இடத்தில் ஒன்றாய்க்கூடி குடியிருப்பதையே விரும்புகிறார்கள். ஒரு ஜாதியும், மற்றொரு ஜாதியும் வெவ்வேறு இடங்களில் பிரிந்துபோய் குடியிருப்பது அவர்களுக்கு பிடிக்கவில்லை.

மனுபுத்திரர் எல்லோரும் ஒரே இடத்தில் மொத்தமாக குடியிருந்தால் அது தங்களுக்கு பாதுகாப்பாயிருக்கும் என்றும், அதுவே தங்களுக்கு சந்தோஷம் என்றும் ஜனங்கள் நினைக்கிறார்கள். மனுபுத்திரர் வசதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், சந்தோஷத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

நோவாவுடைய குமாரரின் வம்சங்கள், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவும், நோவாவுடைய ஆலோசனையின் பிரகாரமாகவும், இந்தப் பூமியிலே வெவ்வேறு ஜாதிகளாக பிரிந்திருந்தார்கள். இந்த ஜாதியார் தங்களை தேவனை விடவும், நோவாவைவிடவும் ஞானமுள்ளவர்களாகவும், புத்தியுள்ளவர்களாகவும் நினைத்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு பூமியின் மீதெங்கும் சிதறிப்போய், வெவ்வேறு இடங்களில் குடியிருக்க பிடிக்கவில்லை. ஒரே இடத்தில் எல்லா ஜாதியாரும் குடியிருக்கவேண்டும் என்று ஆலோசனைபண்ணுகிறார்கள்.

நோவாவுடைய குமாரரின் வம்சங்கள் இந்தப் பூமியிலே ஜாதிகளாக பிரிந்திருந்தாலும், பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரே விதமான பேச்சும் இருக்கிறது (ஆதி 11:1). இது அவர்கள் ஒன்றாய்க்கூடி வாசம்பண்ணுவதற்கு அநுகூலமாயிருக்கிறது. அவர்கள் பேசுவது ஒருவருக்கொருவர் புரிகிறது. அவர்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள். ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்கிறார்கள். இவை எல்லாவற்றிற்கும், ஒரே இடத்தில் கூடிவந்து வாசம்பண்ணுவதே, தங்களுக்கு உதவியாயிருக்கும் என்று மனுபுத்திரர் நினைக்கிறார்கள்.

பூமியில் முதலாவது பாஷை எது என்பது பற்றி மொழியியல் அறிஞர்களிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாஷையைப் பூமியில் பேசப்பட்ட முதலாவது மொழி என்று கூறுகிறார்கள். பழைய ஏற்பாட்டை தேவன் எபிரெய மொழியில் வெளிப்படுத்தியதினாலும், இயேசு கிறிஸ்து பவுலிடம் பேசியபோது, எபிரெய மொழியில் பேசியதினாலும் எபிரெய பாஷையே பூமியில் பேசப்பட்ட முதலாவது பாஷை என்று வேதபண்டிதர்களில் சிலர் கூறுகிறார்கள். பவுல் அப்போஸ்தலருக்குக் கிரேக்க பாஷையும் நன்றாகத் தெரியும் (அப் 21:40; அப் 22:2; அப் 26:14).

பூமியின் ஜாதிகள் ஒரே இடத்தில் குடியிருப்பதற்கு, வசதியான இடத்தை தேடிக்கண்டுபிடிக்கிறார்கள். ஜனங்கள் கிழக்கேயிருந்து பிரயாணம்பண்ணுகையில், சிநெயார் தேசத்திலே சமபூமியைக்கண்டு, அங்கே குடியிருக்கிறார்கள் (ஆதி 11:2). சிநெயார் தேசம் சமபூமியாயிருப்பதினால், அந்தப் பூமியே தங்களுடைய குடியிருப்புக்கு ஏற்ற பூமி என்று மனுபுத்திரர் நினைக்கிறார்கள்.

ஜலப்பிரளயத்திற்குப் பின்பு நூறு வருஷமாயிற்று. ஜனங்கள் அராராத் மலையிலிருந்து ஐபிராத்து நதியின் கிழக்கு திசையை நோக்கி பிரயாணம் பண்ணுகிறார்கள். "சிநெயார்" தேசம் என்பது பாபிலோனியா தேசத்தைக் குறிக்கும் (ஆதி 14:1; ஏசா 11:11; தானி 1:2; சக 5:11).

சிநெயார் தேசம் மகாவிஸ்தாரமான பூமி. இங்கே கனிவிருட்சங்கள் ஏராளமாய் முளைத்திருக்கிறது. நோவாவுடைய குமாரரின் வம்சங்களில் ஏராளமானோர் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் குடியிருப்பதற்கு போதுமான இடவசதி சிநெயார் தேசத்திலுள்ளது. இந்த தேசத்தின் விளைச்சல் அவர்களுக்கு போதுமான ஆகாரத்தைக் கொடுக்கிறது. இதிலுள்ள மேய்ச்சல் நிலம் அவர்களுடைய மந்தைக்கு தேவையான தீவனத்தை தாராளமாய்க் கொடுக்கிறது.

நோவாவுடைய குமாரரின் வம்சங்கள் இந்தப் பூமியிலே ஜாதிகளாக பிரிந்திருக்கிறார்கள். பிரிந்திருக்கிற அவர்கள் தங்களை ஒன்றாய்க் கூட்டிச் சேர்த்து, ஒரே ஜாதியாக கட்டுவதற்கு முயற்சி செய்கிறார்கள். ஒவ்வொரு ஜாதியாரும் தங்களுடைய தேசத்தின் எல்லையை விஸ்தாரம்பண்ணி, அங்கங்கே பரவி குடியிருந்தால், மனுபுத்திரர் மத்தியிலே சண்டை சச்சரவுகளும், தேவையில்லாத வாக்குவாதங்களும் ஏற்படாது.

ஒவ்வொரு ஜாதியாரும் தங்களுக்கு நியமிக்கப்பட்ட தேசத்தில் போய் குடியிருக்கவேண்டும். ஒன்றாய்க்கூடி ஒரே இடத்தில் குடியிருப்பது அவர்களுக்கு பாதுகாப்பைக் கொடுத்தாலும், அவர்கள் மனுஷருடைய பாதுகாப்பைவிட, கர்த்தருடைய பாதுகாப்பையே நாடவேண்டும்.

மனுபுத்திரரின் ஜாதிகள் ஒரே இடத்தில் குடியிருந்து, தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அரண்களைக் கட்டவேண்டும் என்று திட்டம்பண்ணுகிறார்கள். தங்களுடைய வீடுகளை ஒரே இடத்தில் கட்டி ஒரு பெரிய நகரத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது அவர்களுடைய திட்டம்.

சிநெயார் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்கள், "நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள்" (ஆதி 11:4) என்று தங்களுக்குள் சொல்லிக்கொள்கிறார்கள்.

ஒரு நகரத்தையும், ஒரு கோபுரத்தையும் கட்டவேண்டும் என்பது அவர்களுடைய திட்டம். தங்களுடைய திட்டத்தை நிறைவேற்ற எல்லா ஜாதியாரும் ஒன்றாய்க் கூடுகிறார்கள். அவர்கள், "நாம் செங்கல் அறுத்து, அதை நன்றாய்ச் சுடுவோம் வாருங்கள்" (ஆதி 11:3) என்று ஒருவரோடொருவர் பேசிக்கொள்கிறார்கள்.

செங்கல் அறுப்பதைப் பற்றி வேதாகமத்தில் இந்த வசனத்தில் முதன்முறையாகக் கூறப்பட்டிருக்கிறது. (யாத் 1:14; யாத் 5:7,8,18-19; 2சாமு 12:31)

பாலஸ்தீன தேசத்தில் செங்கல் அறுக்கும்போது அதைச் சூரிய வெயிலில் உலர வைப்பார்கள். ஆனால் இங்கு அவற்றை நன்றாய்ச் சுடுகிறார்கள். இதனால் செங்கல் அறுக்கும் வேலை துரிதமாக நடைபெறும். தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணும்போது ஜனங்கள் துரிதமாகவே செயல்படுவார்கள்.

பாபிலோனில் இன்னும் நிலக்கீல் கேணிகள் ஏராளமாக உள்ளன. அக்காலத்தில் நிலக்கீலினால் பூசப்பட்ட கட்டிடங்கள் இன்னும் வலுவாக உள்ளன. கட்டிடக்கலைஞர்களுக்கு இது மிகவும் ஆச்சரியமான விஷயம்.

தங்களுக்கு ஒரு நகரத்தையும், கோபுரத்தையும் கட்டவேண்டும் என்று மனுபுத்திரர் எல்லோருமே விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுடைய விருப்பத்தை மற்றவர்களோடு பகிர்ந்துகொண்டு, இந்த வேலையிலே எல்லோரும் தங்களை ஈடுபடுத்திக்கொள்கிறார்கள்.

சிநெயார் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களுக்கு கட்டிடத்தைக் கட்ட தெரியும். ஆனால் கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான பொருட்கள் சிநெயார் தேசத்தில் இல்லை. ஆனாலும் மனுபுத்திரர் அதைப் பார்த்து சோர்ந்துபோகவில்லை. அவர்களிடத்தில் கல்லுக்குப் பதிலாக செங்கலும், சாந்துக்குப் பதிலாக நிலக்கீலும் இருக்கிறது (ஆதி 11:3).

நகரத்திலுள்ள வீடுகளையும், கோபுரத்தையும் கல்லால் கட்டினால் அது வலுவாகயிருக்கும். ஆனால் சிநெயார் தேசத்தில் கல் இல்லை. கல்லை இணைப்பதற்கு சாந்தைப் பயன்படுத்தவேண்டும். ஆனால் அந்த தேசத்தில் சாந்தும் இல்லை. இதைப் பார்த்து அவர்கள் சோர்ந்துபோய்விடவில்லை. அவர்கள் கல்லுக்குப்பதிலாக செங்கலையும், சாந்துக்கு பதிலாக நிலக்கீலையும் பயன்படுத்தவேண்டும் என்று திட்டமிடுகிறார்கள்.

கல்லும் சாந்தும் இல்லை என்பதற்காக, அவர்கள் நகரத்தைக் கட்டுவதையும், கோபுரத்தைக்கட்டுவதையும் நிறுத்திவிடவில்லை. மனுபுத்திரர் தங்களுடைய தீர்மானத்தில் உறுதியாயிருக்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியத்தை செய்கிற நமக்கு சில சமயங்களில் வசதி குறைவுகளும், வாய்ப்பு குறைவுகளும் ஏற்படலாம். பொருளாதாரம் குறைவு படலாம். நமக்கு ஏற்பட்டிருக்கும் குறைவுகளை நோக்கிப் பார்த்து, நாம் செய்யவேண்டிய ஊழியத்தை நிறுத்திவிடக்கூடாது. நமக்கு குறைவு ஏற்பட்டாலும், அந்தக் குறைவை நிறைவாக்குகிற கர்த்தரை நோக்கிப் பார்க்கவேண்டும். கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற ஊழியத்தை நேர்த்தியாய் நிறைவேற்றவேண்டும்.

சிநெயார் தேசத்தில் குடியிருந்த ஜனங்கள், கல்லுக்குப் பதிலாக செங்கலையும், சாந்துக்கு பதிலாக நிலக்கீலையும் பயன்படுத்தியதுபோல, கர்த்தர் நமக்கு கொடுக்கும் வாய்ப்புக்களையும், வசதிகளையும் பயன்படுத்தி, கர்த்தருடைய ஊழியத்தை தொடர்ந்து செய்யவேண்டும்.

மனுபுத்திரர் ஒரு நகரத்தையும், ஒரு கோபுரத்தையும் கட்டினாலும், அவர்களுடைய மனதும் சிந்தையும் இருதயமும் கர்த்தருக்கு முன்பாக சுத்தமாகயில்லை. அவர்கள் இந்தப் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகக்கூடாது என்பதற்காக தங்களுக்கு ஒரு நகரத்தைக் கட்டுகிறார்கள். பரலோகத்திற்கு போய்விடவேண்டும் என்னும் ஆசையில், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தைக் கட்டுகிறார்கள். இவற்றை கட்டுவதன் மூலமாக தங்களுக்கு பேர் உண்டாகப்பண்ணவேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கமாயிருக்கிறது.

மனுபுத்திரர் வானத்தை அளாவும் சிகரமுள்ள கோபுரத்தைக் கட்டி, தங்களை தேவனுக்கு மேலாக உயர்த்துகிறார்கள். தேவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், தங்களுடைய சுயஆசைகளுக்கு இடங்கொடுத்து, அதை நிறைவேற்ற முயற்சி செய்கிறார்கள்.

தங்களுக்கு பேர் உண்டாகப் பண்ணவேண்டும் என்பது மனுபுத்திரருடைய விருப்பமாயிருக்கிறது. அவர்களுடைய பின்சந்ததியார், அவர்களைப்பற்றி நினைவுகூரவேண்டும். அவர்கள் தங்கள் முன்னோர்களை மறந்துவிடக்கூடாது. அதற்காக ஒரு நகரத்தையும், ஒரு கோபுரத்தையும் கட்டி தங்களுக்கு பேர் உண்டாகப்பண்ணவேண்டும் என்பது அவர்களுடைய திட்டமாயிருக்கிறது.

மனுபுத்திரருடைய யோசனையில் பெருமையும், பேராசையும், மதியீனமும் இருக்கிறது. அவர்கள் நகரத்தையும் கோபுரத்தையும் கட்டினாலும், தங்களுடைய பின்சந்ததியார் மத்தியிலே அவர்களால் தங்களுக்கு நல்ல பெயரை உண்டாக்க முடியாது. இந்தக் கோபுரத்தின் மூலமாக அவர்கள் தங்களுடைய பெருமையையும், பேராசையையும், மதியீனத்தையும், தங்களுடைய பின்சந்ததியாருக்கு வெளிப்படுத்தி காண்பிப்பார்கள்.

பாபேல் கோபுரத்தை கட்டியவர்களின் மதியீனத்தைப்பற்றி இந்தப் பூமியில் எல்லா இடங்களிலும் பேசப்படுகிறது. உலக சரித்திரத்திலே, பாபேல் கோபுரத்திற்கு முக்கியமான இடமுண்டு. இந்தக் கோபுரம் மனுபுத்திரரின் ஞானத்தையும், புத்தியையும் வெளிப்படுத்தாமல், அவர்களுடைய மதியீனத்தையே வெளிப்படுத்துகிறது. தங்களுக்கு பேர் உண்டாகப்பண்ணவேண்டும் என்பதற்காக மனுபுத்திரர் பாபேல் கோபுரத்தைக் கட்டினார்கள். ஆனால் அவர்களுக்கு இந்தக் கோபுரத்தின் மூலமாய் நல்ல பெயர் உண்டாகாமல், கெட்ட பெயரே உண்டாயிற்று.

தாங்கள் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகக்கூடாது என்பது மனுபுத்திரருடைய திட்டம். நோவாவுடைய குமாரரின் வம்சங்கள் இந்தப் பூமியிலே ஜாதிகளாகப் பிரிந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் நிம்ரோத்தின் காலத்தில் ஒன்றாய்க் கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள். நிம்ரோத் கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரனாயிருக்கிறான். அவன் கர்த்தருக்கு விரோதமான காரியங்களை செய்கிறான். காட்டு மிருகங்களை வேட்டையாடுவதுபோல, மனுஷரை வேட்டையாடி தன்னிடத்தில் சேர்த்துக்கொள்கிறான்.

தன்னோடு கூடயிருக்கிற ஜனங்கள் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகக்கூடாது என்பதும், அவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் குடியிருக்கவேண்டும் என்பதும் நிம்ரோத்தின் திட்டம். இதற்காக அவன் மனுபுத்திரருக்கு ஒரு நகரத்தைக் கட்டுகிறான். உலகம் முழுவதையும் ஆளுகை செய்யவேண்டும் என்பது நிம்ரோத்தின் விருப்பம். தனக்கும் தன்னோடு கூடயிருக்கிற ஜனங்களுக்கும் பாதுகாப்பு கிடைக்கவேண்டுமென்றால், அவர்கள் எல்லோரும் சிதறிப்போகாதபடிக்கு, ஒரு நகரத்தில் குடியிருக்கவேண்டும் என்று நிம்ரோத் திட்டம் பண்ணுகிறான்.

மனுபுத்திரர் எல்லோரும் ஒரே இடத்தில் குடியிருந்தால், அவர்களை ஆளுகை செய்வது நிம்ரோத்திற்கு எளிதாகயிருக்கும். நிம்ரோத்தால் அவர்கள் எல்லோரையும் கவனமாய்க் கண்காணிக்க முடியும். அவர்களுக்கு பொதுவான பாதுகாப்பு கிடைக்கும். நிம்ரோத் மனுபுத்திரர் எல்லோர்மீதும் அதிகாரம் செலுத்துகிறான். அவர்களை தன்னுடைய ஆளுகைக்குட்படுத்துகிறான்.

கர்த்தரே சர்வஆளுகையுள்ளவர். நிம்ரோத் தன்னுடைய தேசத்தை ஆளுகை செய்யலாம். அதுவும் அவன் கர்த்தருக்கு கீழ்ப்படிந்துதான் ஆளுகை செய்யவேண்டும். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக ராஜாக்களை சிங்காசனத்தில் அமரச் செய்கிறார். சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிற ராஜாக்களை கீழே தள்ளியும் விடுகிறார்.

நிம்ரோத்தின் மனதில் பெருமையும் மேட்டிமையும் இருக்கிறது. தானும் கர்த்தரைப்போல, சர்வஆளுகையோடிருக்கவேண்டும் என்று நிம்ரோத் பேராசைப்படுகிறான். கர்த்தர் மாத்திரமே கர்த்தாதி கர்த்தாவாகவும், ராஜாதி ராஜாவாகவும் இருக்கிறார். ஆனால் நிம்ரோத்தோ தன்னுடைய சிங்காசனத்தை, கர்த்தருடைய சிங்காசனத்திற்கு மேலாக உயர்த்த விரும்புகிறான். அதற்காக வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தைக் கட்டுகிறான்.

கர்த்தரே மகிமையுள்ளவர். அவர் தம்முடைய மகிமையை யாரோடும் பகிர்ந்துகொள்ளமாட்டார். நிம்ரோத்தோ கர்த்தரைப்போல தனக்கும் மகிமை வரவேண்டும் என்று ஆசைப்படுகிறான். தனக்கு பேர் உண்டாக வேண்டும் என்பதற்காக நகரத்தையும் கோபுரத்தையும் கட்டுகிறான். கர்த்தருடைய நாமம் மாத்திரமே மகிமையுள்ளது. அவருடைய நாமம் மாத்திரமே வல்லமையும், மாட்சிமையுமுள்ளது. நாம் கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தவேண்டும். நிம்ரோத்திடத்தில் பணிவும் மனத்தாழ்மையுமில்லை.

பாபேல் கோபுரத்தைக் கட்டும் வரையிலும் பூமியில் எல்லா ஜாதியாருக்கும் ஒரே பாஷையே இருந்தது. ஒரேவிதமான விக்கிரகாராதனையே இருந்தது. தேவன் அவர்களுடைய பாஷையைத் தாறுமாறாக்கினார். மார்க்கக் காரியங்களிலும், மேலும் அநேக சமுதாயக் காரியங்களிலும் அவர்கள் ஒத்துப்போகாமல் முரண்பட்டுப் பிரிந்து போனார்கள். இதன் வாயிலாகப் பூமியின்மீது பல்வேறு பாஷைக்காரரும், ஜாதிக்காரரும் உண்டானார்கள்.

எபிரெய மொழியில் "தொடுதல், அளாவுதல்" என்னும் பொருளைத் தரும் வார்த்தையில்லை. ஆகையினால் பாபேல் கோபுரம் வானத்தை எட்டுமளவிற்கு மிகவும் உயரமானது என்று பொருள்கூறக்கூடாது. பாபேல் கோபுத்தின் உச்சிப்பகுதி வானங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

1876 ஆம் ஆண்டில் பாபேல் கோபுரத்தைப் பற்றி பாபிலோனில் ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கோபுரம் கட்டுவதற்காக விரிவான மைதானம் இருந்தது. அதன் நீளம் 1156 அடி, அதன் அகலம் 900 அடி. இந்த வளாகத்தின் நடுவில் ஒரு மேடை அமைக்கப்பட்டிருந்தது. இந்த மேடை 450 அடி அகலமும், 1056 அடி நீளமும் உடையது. ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு வாயிலாக இந்த மேடைக்கு நான்கு வாயில்கள் உள்ளன.

இந்த மேடையின் மையப்பகுதியில் கோபுரத்தைக் கட்டியிருக்கிறார்கள். இந்த மேடையின் அடிவாரத்தில் ஏராளமான விக்கிரகங்கள் உள்ளன. இவை அவர்களுடைய பல்வேறு தெய்வங்களின் விக்கிரகங்களாகும்.

இதன்மீது எழுப்பப்பட்டிருக்கும் பாபேல் கோபுத்தின் மொத்த உயரம் 300 அடியாகும். இந்தப் பீடத்தின்மீது ஏழு தட்டுகளாகக் கோபுரம் கட்டப்பட்டிருக்கிறது.

1. முதலாவது தட்டு - பரப்பளவு 300 சதுர அடி, உயரம் 110 அடி

2. இரண்டாவது தட்டு - பரப்பளவு 260 சதுர அடி, உயரம் 60 அடி

3. மூன்றாவது தட்டு - பரப்பளவு 200 சதுர அடி, உயரம் 20 அடி

4. நான்காவது தட்டு - பரப்பளவு 170 சதுர அடி, உயரம் 20 அடி

5. ஐந்தாவது தட்டு - பரப்பளவு 140 சதுர அடி, உயரம் 20 அடி

6. ஆறாவது தட்டு - பரப்பளவு 110 சதுர அடி, உயரம் 20 அடி

7. ஏழாவது தட்டு - 80 அடி நீளமும், 60 அடி அகலமும் உள்ளது. உயரம் 50 அடி

ஏழாவது தட்டின்மீது ஒரு பீடம் கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பீடத்தின் நீளம் 80 அடி, அகலம் 60. இது பெல்-மேரோதாக் என்னும் தெய்வத்தின் கோயிலாகும்.

பாபேல் கோபுரத்தைக் கட்டியவர்கள் ஓரளவு கட்டி முடித்து விட்டார்கள். கோபுரத்தைக் கட்டிவிட்டு, நகரத்தைக் கட்டும்போது தேவன் அவர்களைப் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப் பண்ணினார். அப்பொழுது அவர்கள் நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள் (ஆதி 11:4,8).

பாபேல் கோபுரத்தைக் கட்டியவர்கள் இராட்சதர்களாக இருந்திருக்க வேண்டும். இவர்கள் அக்காலத்துத் தெய்வங்களோடு எப்போதும் யுத்தம் பண்ணிக் கொண்டிருப்பார்கள். நிம்ரோத் ஒரு பராக்கிரமசாலி என்று அழைக்கப்படுகிறான். ஆதி 6:4 ஆவது வசனத்திலும், இராட்சதர்கள் "பேர்பெற்ற மனுஷராகிய பலவான்கள்" ஆக இருந்தார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடு கூடுகிறதினால் இராட்சதர்கள் பிறந்தார்கள். (ஆதி 6:4)

பூமியின் மீதெங்கும் சிதறிப்போகக்கூடாது என்பதற்காக ஜனங்கள் கோபுரத்தையும், நகரத்தையும் கட்டினார்கள். ஆனால் தேவன் அவர்களைப் பூமியின் மீதெங்கும் சிதறப்போகப் பண்ணினார். (ஆதி 11:4,9; உபா. 32:8; அப் 17:26).

தாறுமாறான பாஷை
ஆதி 11:5-9

ஆதி 11:5. மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்குக் கர்த்தர் இறங்கினார்.

ஆதி 11:6. அப்பொழுது கர்த்தர்: இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்; அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது; அவர்கள் இதைச் செய்யத் தொடங்கினார்கள்; இப்பொழுதும் தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள்.

ஆதி 11:7. நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார்.

ஆதி 11:8. அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார்; அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள்.

ஆதி 11:9. பூமியெங்கும் வழங்கின பாஷையைக் கர்த்தர் அவ்விடத்தில் தாறுமாறாக்கினபடியால், அதின் பேர் பாபேல் என்னப்பட்டது; கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப் போகப்பண்ணினார்.

நகரத்தையும் கோபுரத்தையும் கட்டுகிறவர்கள் மனமேட்டிமையாயும், பெருமையாயும் இருக்கிறார்கள். தாங்கள் செய்ய நினைப்பது ஒன்றும் தடைபடமாட்டாது என்று தங்கள் மனதில் இருமாப்பான சிந்தனையோடிருக்கிறார்கள். கர்த்தரோ அவர்களுடைய பாஷையை தாறுமாறாக்குகிறார். அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணுகிறார்.

கர்த்தருடைய கிரியைகளெல்லாமே நீதியும் நியாயமுமானவை. அவர் மனுஷருடைய இருதயங்களின் நினைவுகளை அறிந்திருக்கிறார். தங்களுக்கு பேர் உண்டாகப் பண்ணவேண்டும் என்பதற்காக மனுபுத்திரர் நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள கோபுரத்தையும் கட்டுகிறார்கள். கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களை நியாயந்தீர்க்கிறார். கர்த்தருடைய கரம் பாவத்திற்கு விரோதமாகவும், பாவிகளுக்கு விரோதமாகவும் நீட்டப்பட்டிருக்கிறது. பாவிகள் தேவனுடைய நீதியினால் தண்டிக்கப்படுவார்கள்.

மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்குக் கர்த்தர் இறங்குகிறார் (ஆதி 11:5). மனுபுத்திரர் என்னும் வார்த்தை ஆதாமின் புத்திரரைக் குறிக்கிறது. இவர்கள் ஆதாமைப்போலவே கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்கிறார்கள். கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் காணப்படுகிற பாவமான சுபாவம், மனுபுத்திரரிடத்தில் காணப்படுகிறது.

மனுஷரைப் போலவே தேவனும் பிரயாணம் பண்ணியதற்குத் வேதாகமத்தில் பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. (ஆதி 3:8; ஆதி 11:5; ஆதி 18:1-22,33; ஆதி 32:24-32; ஆதி 35:13; யோவான் 4:24).

மனுபுத்திரர் நகரத்தையும் கோபுரத்தையும் கட்டுகிறபோது, ஏபேரின் சந்ததியார் அவர்களோடு சேர்ந்து, இந்தக் கட்டுமான வேலைகளை செய்யவில்லை. அவர்கள் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். அவர்கள் கர்த்தருடைய பிள்ளைகள். நகரத்தையும் கோபுரத்தையும் கட்டுகிறவர்களோ மனுபுத்திரர்கள். இவர்கள் பாவிகளாகவும், தேவபக்தியற்றவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் நித்தியமானவர். கர்த்தருடைய ஆலோசனைகள் எல்லாமே நீதியும் பரிசுத்தமுமானது. கர்த்தர் தம்முடைய தேவத்துவத்தில், மனுபுத்திரருடைய பாவத்திற்கு விரோதமாக ஆலோசனைபண்ணுகிறார். அவர்கள் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்கு, கர்த்தர் பரலோகத்திலிருந்து, இந்தப் பூமிக்கு இறங்கிவருகிறார்.

மனுபுத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம். அவர்களை உடனே அழித்துப்போடவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமல்ல. கர்த்தர் பாவிகளை தண்டிப்பதற்கு முன்பாக, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப அவர்களுக்கு வாய்ப்புக்களைக் கொடுக்கிறார். இது கர்த்தருடைய கிருபை. நாம் கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் அசட்டைபண்ணிவிடக்கூடாது.

கர்த்தர் தம்முடைய வார்த்தைகளினாலும், ஆலோசனைகளினாலும், கட்டளைகளினாலும் மனுபுத்திரருக்கு புத்தி சொல்லுகிறார். அவர்களுடைய சிந்தனைகளும், செயல்களும் வீணானவை. தங்களுக்கு பேர் உண்டாகப் பண்ணவேண்டும் என்பதற்காக, அவர்கள் நகரத்தையும் கோபுரத்தையும் கட்டுகிறார்கள். தாங்கள் செய்ய நினைப்பது ஒன்றும் தடைபடமாட்டாது என்றும் அவர்கள் இருமாப்பாய் சிந்திக்கிறார்கள்.

மனுபுத்திரரிடத்தில் தெய்வபயமில்லை. கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு பயப்படாமல், தங்களிடத்தில் ஞானம் இருப்பதாக நினைக்கிறார்கள். தங்களுக்கு அறிவும், புத்தியும் இருப்பதாக அவர்கள் சொல்லுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய பாவங்களை உணர்த்துகிறார். ஆனால் அவர்களோ தங்கள் பாவங்களை உணர மறுக்கிறார்கள். அவர்கள் நகரத்தையும் கோபுரத்தையும் கட்டுவதை அவர்கள் நிறுத்திப்போடவேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். ஆனால் அவர்களோ நகரத்தையும் கோபுரத்தையும் தொடர்ந்து கட்டுகிறார்கள்.

மனுபுத்திரர் கர்த்தருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படியவில்லை, அவருடைய கட்டளைக்கும் கீழ்ப்படியவில்லை. தம்முடைய வார்த்தைக்கு மனுஷர் கீழ்ப்படியவில்லையென்றால், கர்த்தர் அவர்களை தம்முடைய நீதியினால் தண்டிப்பார். கர்த்தர் பாவிகளை தண்டித்தாலும், அந்தத் தண்டனையில் அவருடைய கிருபையும் இரக்கமும் வெளிப்படும்.

கர்த்தர் நம்முடைய பாவத்திற்குதக்க பிரகாரம் நம்மைத் தண்டிப்பதில்லை. அப்படி தண்டித்தால், நம்மில் ஒருவரும் ஜீவனோடிருக்க முடியாது. நாம் இன்று ஜீவனோடிருப்பது கர்த்தருடைய சுத்த கிருபை.

மனுபுத்திரர் ஒரு நகரத்தையும், ஒரு கோபுரத்தையும் கட்டி கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களை தண்டிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். ஆனாலும் அவர் தம்முடைய கிருபையினால் அவர்களை மொத்தமாக சங்காரம்பண்ணிவிடவில்லை. கர்த்தர் வானத்திலிருந்து அக்கினியையும், கல்மழையையும் அனுப்பி அவர்களை மொத்தமாய் அழித்துப்போடவில்லை. மின்னலும் இடியும் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியும். தமக்கு விரோதமாகப் பாவம் செய்கிற மனுபுத்திரரை அழிப்பதற்கு, கர்த்தர் அவர்கள்மீது மின்னலையும் இடியையும் அனுப்பவில்லை.

கர்த்தர் மனுபுத்திரரை அழிப்பதற்கு முன்பாக, அவர்கள் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்ப்பதற்கு கீழே இறங்குகிறார். அவர்களுடைய பாஷையைத் தாறுமாறாக்கி, அவர்களை பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணவேண்டும் என்பதே கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு. அவர்கள் மரணத்திற்கு பாத்திரமானவர்கள். பாவத்தின் சம்பளம் மரணம். ஆனாலும் தேவனுடைய கிருபையோ, அவர்களுக்கு மரணத்தைக் கொடுக்கவில்லை.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் பாவம் செய்கிற மனுபுத்திரரை அழித்துப்போடாமல், அவர்களை சிதறிப்போகப்பண்ணுகிறார். மனுபுத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தாலும், கர்த்தர் அவர்கள்மீது நீடிய பொறுமையோடிருக்கிறார். அவர்கள் தங்கள் பாவத்தினால் கர்த்தருக்கு கோபத்தை உண்டுபண்ணுகிறார்கள். ஆனாலும் கர்த்தர் தம்முடைய கோபத்தினால் அவர்களை உடனே அழித்துப்போடாமல், தம்முடைய கிருபையினால் அவர்கள்மீது நீடியபொறுமையோடிருக்கிறார்.

மனுபுத்திரர் நகரத்தையும், கோபுரத்தையும் கட்டும்போது பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரேவிதமான பேச்சுமாயிருக்கிறது. அவர்கள் ஒரே கூட்டமாயிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையிருப்பதினால், அவர்கள் நகரத்தையும் கோபுரத்தையும் கட்டத் தொடங்கியிருக்கிறார்கள். தாங்கள் ஆரம்பித்தது ஒருபோதும் தடைபடாது என்று அவர்கள் நினைக்கிறார்கள். இது அவர்களுடைய மதியீனம். கர்த்தருடைய சித்தமில்லாமல், அவருடைய உதவியும் ஒத்தாசையுமில்லாமல், நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. ஆனால் அவர்களோ, தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று நினைக்கிறார்கள் (ஆதி 11:6).

கர்த்தர் பரலோகத்திலிருந்து பூமிக்கு இறங்கி வருகிறார். மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறார். கர்த்தர் தம்முடைய தெய்வீக ஆலோசனையில், "நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம்" (ஆதி 11:7) என்று சொல்லுகிறார்.

தேவனுக்கு இங்கு பன்மை சுட்டுப்பெயரான "நாம்" என்னும் சுட்டுப்பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தேவத்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் வெவ்வேறு ஆள்தத்துவப் பண்புடையவர்களாக இருக்கிறார்கள் என்பதை இது வலியுறுத்திக் கூறுகிறது.

உலகத்தில் 6,760 பாஷைகள் இருப்பதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள். பாஷைகள் பிரிந்தது தேவனுடைய நியாயத்தீர்ப்பாக இங்கு கூறப்பட்டிருக்கிறது. சபையில் அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாக இராமல் அவிசுவாசிகளுக்கு அடையாளமாக இருக்கிறது (ஏசா 28:11; 1கொரி. 14:21-22).

கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணுகிறார். தேவன் பூமியைப் பகுப்பதற்கு முன்பாக இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. (ஆதி 10:25). ஜனங்கள் பூமியின் மீதெங்கும் சிதறிப் போகிறார்கள். அதன் பின்பு பூமியானது பல்வேறு கண்டங்களாகவும், தேசங்களாகவும், தீவுகளாகவும், ஜாதிகளாகவும் பகுக்கப்படுகிறது.

கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் அவர்களுடைய பாஷை தாறுமாறாயிற்று. ஒருவர் பேசுவது மற்றவருக்கு புரியவில்லை. அவர்களுடைய பாஷை தாறுமாறானதினால், அவர்களுக்குள் குழப்பங்களும், சண்டை சச்சரவுகளும் உண்டாயிற்று. யாருடைய பேச்சும் யாருக்கும் புரியவில்லை. அவர்களால் இப்போது ஒரே கூட்டமாகயிருக்க முடியவில்லை. அவர்களால் ஒருவருக்கொருவர் உதவி செய்து, நகரத்தையும் கோபுரத்தையும் கட்ட முடியவில்லை. அவர்கள் எல்லோரும் யாருக்கும் புரியாத பாஷையைப் பேசுகிறார்கள். அவர்களுடைய பாஷை தாறுமாறாயிற்று.

கர்த்தர் அவர்களுடைய பாஷையைத் தாறுமாறாக்கி, அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணுகிறார். அப்பொழுது அவர்கள் நகரம் கட்டுகிறதை விட்டுவிடுகிறார்கள் (ஆதி 11:8). ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, கர்த்தர் அவர்கள் பாஷையை தாறுமாறாக்கினபடியினால், அவர்கள் நகரம் கட்டுகிறதை விட்டுவிடுகிறார்கள்.

இதுவரையிலும் தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று நினைத்தவர்கள், இப்போது நகரம் கட்டுகிறதை விட்டுவிடுகிறார்கள். அவர்கள் மத்தியில் ஒற்றுமையில்லை. குழப்பமுண்டாயிற்று. கர்த்தருடைய கரம் தங்களுக்கு விரோதமாக எழும்பியிருக்கிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்கிறார்கள். அவர்களால் கர்த்தருக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ண முடியவில்லை. அவர்கள் நகரம் கட்டுகிறதை விட்டுவிடுகிறார்கள்.

கர்த்தருடைய சித்தம் நம்முடைய சித்தத்திற்கு விரோதமாக இருக்கும்போது, நாம் நம்முடைய சித்தத்தை கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய சித்தத்தை, நம்முடைய சித்தத்திற்கு ஏற்ற பிரகாரம் மாற்றிக்கொள்ளவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. கர்த்தர் நம்முடைய யோசனைகளுக்கும், செயல்களுக்கும் விரோதமாக யுத்தம்பண்ணும்போது, நம்முடைய யோசனைகளையும், செயல்களையும் அப்படியே நிறுத்திவிடவேண்டும். இதுவே மெய்யான ஞானம். நாம் ஒருபோதும் கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறவர்களாயிருக்கக்கூடாது.

கர்த்தர் நகரத்தையும் கோபுரத்தையும் கட்டுகிறவர்களை பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணுகிறார் (ஆதி 11:8,9). அவர்கள் மறுபடியுமாக தங்கள் தங்கள் ஜாதியின் படியேயும், பாஷையின் படியேயும், கோத்திரத்தின் படியேயும், தங்களுக்கு நியமிக்கப்பட்ட தேசங்களில் குடியேறுகிறார்கள் (ஆதி 10:5,20,31).

தங்களுக்கு பேர் உண்டாகப் பண்ணவேண்டும் என்பதற்காக அவர்கள் ஒரு நகரத்தையும், ஒரு கோபுரத்தையும் கட்டினார்கள். ஆனால் இப்போதோ அவர்கள் நகரம் கட்டுகிறதை விட்டுவிடுகிறார்கள்.

பூமியெங்கும் வழங்கின பாஷையைக் கர்த்தர் அவ்விடத்தில் தாறுமாறாக்கினபடியால், அதின் பேர் பாபேல் என்னப்படுகிறது; கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப் போகப்பண்ணுகிறார் (ஆதி 11:9).

பாபேல் என்னும் பெயருக்கு குழப்பம் அல்லது தாறுமாறு என்று பொருள். அவர்கள் தங்களுக்கு நல்ல பெயர் உண்டாகப்பண்ணவேண்டும் என்று நினைத்தார்கள். ஆனால் அவர்களுக்கு கெட்ட பெயர் உண்டாயிற்று. மனுபுத்திரர் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகிறார்கள். சிதறிப்போனவர்கள் இதுவரையிலும் மறுபடியுமாக ஒரே கூட்டமாக ஒன்றுசேரவில்லை.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும்போது, எல்லா ஜாதிகளும், தேசத்தாரும் அவருக்கு முன்பாக கூட்டிச்சேர்க்கப்படுவார்கள். அதுவரையிலும் பூமியின் மீதெங்கும் சிதறிப்போனவர்கள், சிதறிப்போனவர்களாகவே இருப்பார்கள்.

"அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார்" (மத் 25:31-33).

சேமுடைய வம்சவரலாறு ஆதி 11:10-26

ஆதி 11:10. சேமுடைய வம்சவரலாறு: ஜலப்பிரளயம் உண்டாய் இரண்டு வருஷத்திற்குப் பின்பு, சேம் நூறுவயதானபோது, அர்பக்சாத்தைப் பெற்றான்.

ஆதி 11:11. சேம் அர்பக்சாத்தைப் பெற்றபின் ஐந்நூறு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஆதி 11:12. அர்பக்சாத் முப்பத்தைந்து வயதானபோது சாலாவைப் பெற்றான்.

ஆதி 11:13. சாலாவைப் பெற்றபின் அர்பக்சாத் நானூற்று மூன்று வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்,

ஆதி 11:14. சாலா முப்பது வயதானபோது, ஏபேரைப் பெற்றான்.

ஆதி 11:15. ஏபேரைப் பெற்றபின் சாலா நானூற்று மூன்று வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஆதி 11:16. ஏபேர் முப்பத்துநாலு வயதான போது, பேலேகைப் பெற்றான்.

ஆதி 11:17. பேலேகைப் பெற்றபின் ஏபேர் நானூற்று முப்பது வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான்.

ஆதி 11:18. பேலேகு முப்பது வயதானபோது, ரெகூவைப் பெற்றான்.

ஆதி 11:19. ரெகூவைப் பெற்றபின் பேலேகு இருநூற்றொன்பது வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஆதி 11:20. ரெகூ முப்பத்திரண்டு வயதானபோது, செரூகைப் பெற்றான்.

ஆதி 11:21. செரூகைப் பெற்றபின் ரெகூ இருநூற்றேழு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஆதி 11:22. செரூகு முப்பது வயதானபோது, நாகோரைப் பெற்றான்.

ஆதி 11:23. நாகோரைப் பெற்றபின் செரூகு இருநூறு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான்.

ஆதி 11:24. நாகோர் இருபத்தொன்பது வயதானபோது, தேராகைப் பெற்றான்.

ஆதி 11:25. தேராகைப் பெற்றபின் நாகோர் நூற்றுப்பத்தொன்பது வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஆதி 11:26. தேராகு எழுபது வயதானபோது, ஆபிராம், நாகோர், ஆரான் என்பவர்களைப் பெற்றான்.

சேமுடைய வம்சவரலாற்றைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இது முடிவு பெறாத நித்திய வம்சவரலாறு அல்ல. சேமின் வம்சவரலாறு இந்த வசனப்பகுதியில் ஆபிராமோடு முடிவு பெறுகிறது. ஆபிராம் தேவனுடைய சிநேகிதர். ஆபிராமின் சந்ததியில் இயேசுகிறிஸ்து வருகிறார். அவரே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்து.

"ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு: ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்; ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான்; யாக்கோபு யூதாவையும் அவன் சகோதரரையும் பெற்றான்..........; யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பைப் பெற்றான்; அவளிடத்தில் கிறிஸ்து என்னப்படுகிற இயேசு பிறந்தார்" (மத் 1:1-16).

சேமுடைய வம்சவரலாறு: "ஜலப்பிரளயம் உண்டாய் இரண்டு வருஷத்திற்குப் பின்பு, சேம் நூறுவயதானபோது, அர்பக்சாத்தைப் பெற்றான்" (ஆதி 11:10) என்று ஆரம்பமாகிறது. இந்த வம்சவரலாற்றில் இடம் பெற்றுள்ளவர்களின் பெயர்களும், அவர்களுடைய வயதும் மாத்திரமே சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களைப்பற்றிய அதிகமான விவரங்கள் எதுவும் இங்கு சொல்லப்படவில்லை.

சேம் பேழைக்குள் நுழைந்தபோது அவனுக்கு 97 வயது. (ஆதி 11:10; ஆதி 5:32; ஆதி 7:6; ஆதி 8:13) அவனுடைய தந்தையாகிய நோவாவைப் பார்த்து தேவன் பேழையைக் கட்டுமாறு கூறியபோது சேம் வளர்ந்து பெரியவனாகி திருமணமும் செய்திருந்தான். (ஆதி 6:9-10,18). ஆகையினால், நோவா பேழையைக் கட்டிய காலம் 120 வருஷமாக இருந்திருக்காது என்று வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

ஆதாமிலிருந்து ஆபிரகாம் வரையிலுமுள்ள காலத்தில் சேம் பதினொறாவது சந்ததி ஆவான். மெத்தூசலா ஆதாமின் காலத்தில் 243 வருஷங்கள் இருந்தார். (ஆதி 5:1-32) சேம் மெத்தூசலாவின் காலத்தில் 97 வருஷங்கள் இருந்தார். (ஆதி 5:32; ஆதி 11:10-11). ஆபிரகாம் சேமின் காலத்தில் 150 வருஷங்கள் இருந்தார். (ஆதி 11:10-32) யாக்கோபு ஆபிரகாம் காலத்தில் 15 வருஷங்கள் இருந்தார். ஆகையினால் ஆதாமின் காலத்து செய்தி ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்கு எளிதாகக் கடந்து வருவதற்கு வாய்ப்பு உண்டாயிருக்கிறது.

சேமுடைய வம்சவரலாற்றில் இடம் பெற்றிருக்கிறவர்கள் எல்லோரும், பூர்வகாலத்திலிருந்த முற்பிதாக்கள். கர்த்தர் தம்முடைய கிருபையினாலும், பூர்வகாலத்திலிருந்த முன்னோர்களைப்பற்றி தம்முடைய பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

"முன் நடந்ததே இப்பொழுதும் நடக்கிறது; இனி நடக்கப்போகிறதும் முன்னமே நடந்தது; நடந்ததையோ தேவன் விசாரிப்பார்" (பிர 3:15).

முற்பிதாக்களின் வயது கொஞ்சம் கொஞ்சமாக குறைந்துகொண்டே வருகிறது. "சேம் அர்பக்சாத்தைப் பெற்றபின் ஐந்நூறு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்" (ஆதி 11:11). சேம் அறுநூறு வருஷம் உயிரோடிருந்தார். ஜலப்பிரளயத்திற்கு முந்தியிருந்தவர்கள், இதைவிட அதிகமான வருஷங்களுக்கு உயிரோடிருந்திருக்கிறார்கள்.

சேமுக்கு பின்பு வருகிறவர்கள் அறுநூறு வருஷம்கூட உயிரோடிருக்கவில்லை. அவர்களுடைய ஆயுசுகாலம் இன்னும் குறைகிறது. ஒரு சிலர் முன்னூறு வருஷம் வரையிலும், வேறு சிலர் இருநூறு வருஷம் வரையிலும் மாத்திரமே உயிரோடிருந்திருக்கிறார்கள்.

"அர்பக்சாத் முப்பத்தைந்து வயதானபோது சாலாவைப் பெற்றான். சாலாவைப் பெற்றபின் அர்பக்சாத் நானூற்று மூன்று வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான், சாலா முப்பது வயதானபோது, ஏபேரைப் பெற்றான். ஏபேரைப் பெற்றபின் சாலா நானூற்று மூன்று வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்" (ஆதி 11:12-15).

லூக்கா 3:36 ஆவது வசனத்தில் "சாலா காயினானின் குமாரன்" என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தக் காயினானைப் பற்றி எந்த வசனத்திலும் கூறப்படவில்லை. (1நாளா. 1:18). ஒருவேளை செப்துவஜிந்த் பதிப்பிலிருந்து இந்தப் பெயர் கடந்து வந்திருக்கலாம்.

"ஏபேர் முப்பத்துநாலு வயதான போது, பேலேகைப் பெற்றான். பேலேகைப் பெற்றபின் ஏபேர் நானூற்று முப்பது வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான். பேலேகு முப்பது வயதானபோது, ரெகூவைப் பெற்றான். ரெகூவைப் பெற்றபின் பேலேகு இருநூற்றொன்பது வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்" (ஆதி 11:16-19).

"பேலேகு" என்பவன் ஆதி 11:9 ஆவது வசனத்தின் நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு 14 வருஷங்களுக்கு முன்பாக பிறந்தான். இவனுடைய காலத்தில் ஆதி 11:1-9 ஆகிய வசனத்தில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இவன் காலத்தில் பூமி தேசங்களாகவும், தீவுகளாகவும் பகுக்கப்பட்டது. (ஆதி 11:16; ஆதி 10:25; 1நாளா 1:19).

பேலேகு இருநூற்றொன்பது வருஷம் உயிரோடிருந்தான். மனுஷனுடைய ஆயுசு காலம் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வருகிறது. ஜலப்பிரளயத்திற்கு முன்பு மனுஷர் ஆயிரம் வருஷம் வரையிலும் உயிரோடு இருந்தார்கள். (ஆதி 5). ஜலப்பிரளயத்திற்குப் பின்பு வந்த முதலாவது சந்ததியார் சுமார் 400 வருஷம் உயிரோடு இருந்தார்கள். (ஆதி 11:10-17). அதற்குப் பிந்திய சந்ததியார் 200-250 வருஷங்கள் உயிரோடு இருந்தார்கள். (ஆதி 11:18-32) இதற்கும் பின்னால் வரும் சந்ததியார் 100-200 வருஷங்கள் உயிரோடிருந்தார்கள். (ஆதி 23:1; ஆதி 25:7,17; ஆதி 35:28; ஆதி 47:28; ஆதி 50:22; உபா 31:2; உபா 34:7).

"ரெகூ முப்பத்திரண்டு வயதானபோது, செரூகைப் பெற்றான். செரூகைப் பெற்றபின் ரெகூ இருநூற்றேழு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான். செரூகு முப்பது வயதானபோது, நாகோரைப் பெற்றான். நாகோரைப் பெற்றபின் செரூகு இருநூறு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான்" (ஆதி 11:20-23).

நாகோர் இருபத்தொன்பது வயதானபோது, தேராகைப் பெற்றான். தேராகைப் பெற்றபின் நாகோர் நூற்றுப்பத்தொன்பது வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான். தேராகு எழுபது வயதானபோது, ஆபிராம், நாகோர், ஆரான் என்பவர்களைப் பெற்றான் (ஆதி 11:24-26).

தேவன் மூத்தவன்மீது இளையவனைத் தெரிந்தெடுக்கிறார். ஆகையினால் ஆபிரகாமின் பெயர் இங்கு முதலாவதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆபிரகாம் பிறந்த போது, தேராகுவிற்கு 130 வயது. (ஆதி 11:26-12:5). ஆபிரகாம் எபிரெயரின் முற்பிதா.

ஏபேரின் வம்சத்தில் எபிரெயர்கள் வருகிறார்கள். ஜலப்பிரளயத்திற்கு பின்பு ஏபேர் அதிகமான வருஷங்களுக்கு உயிரோடிருக்கிறார். அவருடைய ஆயுசுகாலம் நானூற்று அறுபத்து நாலு ஆகும். அவர் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவராயிருந்து, கர்த்தருடைய வழியில் நடந்ததினால், கர்த்தர் அவருடைய ஆயுசுகாலத்தை கூட்டிக் கொடுத்திருக்கிறார்.

தேராகுடைய வம்சவரலாறு ஆதி 11:27-32

ஆதி 11:27. தேராகுடைய வம்சவரலாறு: தேராகு ஆபிராம், நாகோர், ஆரான் என்பவர்களைப் பெற்றான்; ஆரான் லோத்தைப் பெற்றான்.

ஆதி 11:28. ஆரான் தன் ஜந்மபூமியாகிய ஊர் என்கிற கல்தேயர் தேசத்துப் பட்டணத்திலே தன் தகப்பனாகிய தேராகு மரிக்கு முன்னே மரித்தான்.

ஆதி 11:29. ஆபிராமும் நாகோரும் தங்களுக்குப் பெண்கொண்டார்கள்; ஆபிராமுடைய மனைவிக்குச் சாராய் என்று பேர்; நாகோருடைய மனைவிக்கு மில்க்காள் என்று பேர்; இவள் ஆரானுடைய குமாரத்தி; அந்த ஆரான் மில்க்காளுக்கும் இஸ்காளுக்கும் தகப்பன்.

ஆதி 11:30. சாராய்க்குப் பிள்ளையில்லை; மலடியாயிருந்தாள்.

ஆதி 11:31. தேராகு தன் குமாரனாகிய ஆபிராமையும், ஆரானுடைய குமாரனும் தன் பேரனுமாயிருந்த லோத்தையும், தன் குமாரன் ஆபிராமுடைய மனைவியாகிய தன் மருமகள் சாராயையும் அழைத்துக் கொண்டு, அவர்களுடனே ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தை விட்டு, கானான் தேசத்துக்குப் போகப் புறப்பட்டான்; அவர்கள் ஆரான்மட்டும் வந்தபோது, அங்கே இருந்துவிட்டார்கள்.

ஆதி 11:32. தேராகுடைய ஆயுசுநாட்கள் இருநூற்றைந்து வருஷம்; தேராகு ஆரானிலே மரித்தான்.

தேராகுடைய வம்சவரலாற்றில் ஆபிரகாமின் சரித்திரம் ஆரம்பமாகிறது. ஆபிரகாம் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் மிகவும் முக்கியமானவர். இவர் ஊர் என்கிற கல்தேயர் தேசத்து பட்டணத்தைச் சேர்ந்தவர். இந்தப் பட்டணத்தில் விக்கிரகாராதனை அதிகமாயிருந்தது. தேராகுவின் வம்சத்தார் இந்தப் பட்டணத்தில் வாசம்பண்ணினார்கள். இவர்கள் எல்லோரும் ஏபேரின் சந்ததியை சேர்ந்தவர்கள்.

வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரித்துக்கொள்கிறவர்கள், கர்த்தருடைய கிருபையினாலேயே அந்த தேசத்தை சுதந்தரித்துக்கொள்கிறார்கள். அவர்கள் வாக்குத்தத்த தேசத்திலிருந்தாலும் தங்களுடைய சொந்த தேசத்தை மறந்துவிடக்கூடாது. ஆபிரகாமின் சந்ததியார் கர்த்தருடைய ஜனமாகயிருந்தாலும், ஆபிரகாமின் முன்னோர்கள் ஒரு காலத்தில் ஊர் என்கிற கல்தேயர் தேசத்து பட்டணத்திலே வாசம்பண்ணினவர்கள். ஆபிரகாம் கர்த்தரை ஆராதித்தாலும், அவர்களுடைய முன்னோர்கள் கல்தேயர் தேசத்திலே விக்கிரகங்களை ஆராதித்தவர்கள்.

ஆபிகாரமின் உற்றார் உறவினர்களைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆபிரகாமின் தகப்பனார் தேராகு. இந்த வசனப்பகுதியின் முன்னுரை, "தேராகுடைய வம்சவரலாறு: தேராகு ஆபிராம், நாகோர், ஆரான் என்பவர்களைப் பெற்றான்; ஆரான் லோத்தைப் பெற்றான்" (ஆதி 11:27) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தேராகு விக்கிரகங்களை ஆராதித்தவர். இவர் யோர்தான் நதிக்கு அப்புறத்திலே குடியிருந்தவர். பூர்வத்திலேயே, ஜனங்கள் விக்கிரகங்களை ஆராதித்தார்கள். கர்த்தரை ஆராதிக்கிறவர்கள், விக்கிரகாராதனைக்காரர்கள் மத்தியிலே ஜீவித்தாலும், அவர்கள் விக்கிரகங்களை சேவிக்காமல், கர்த்தரையே சேவித்தார்கள்.

"அப்பொழுது யோசுவா சகல ஜனங்களையும் நோக்கி: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: பூர்வத்திலே உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் நாகோருக்கும் தகப்பனான தேராகு என்பவன், நதிக்கு அப்புறத்திலே குடியிருந்தபோது அவர்கள் வேறே தேவர்களைச் சேவித்தார்கள்" (யோசு 24:2).

ஆபிரகாமின் சகோதரரைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. நாகோர், ஆரான் ஆகியோர் ஆபிரகாமின் சகோதரர்கள். ஈசாக்கும் யாக்கோபும் நாகோரின் குடும்பத்திலிருந்து தங்களுக்கு மனைவிகளை பெற்றுக்கொண்டார்கள்.

ஆரான் லோத்தின் தகப்பனார். ஆரான் தன் ஜந்மபூமியாகிய ஊர் என்கிற கல்தேயர் தேசத்துப் பட்டணத்திலே தன் தகப்பனாகிய தேராகு மரிக்கு முன்னே மரித்தார் (ஆதி 11:28).

ஊர் என்கிற கல்தேயர் தேசத்துப் பட்டணம் இப்பொழுது ஐபிராத்து நதியின் மேற்குக்கரையில் உள்ளது. இதன் தற்காலத்துப் பெயர் முகேயீர் என்பதாகும்.

பெற்றோர் மரித்த பின்புதான் பிள்ளைகள் மரிப்பார்கள் என்னும் நியதி எதுவுமில்லை. பெற்றோர் மரிப்பதற்கு முன்பாகவே, அவர்களுடைய பிள்ளைகள் மரித்துப்போவதற்கு வாய்ப்புள்ளது. எல்லோருக்கும் மரணம் வரும். அது வயதின் அடிப்படையில் வரும் என்று சொல்ல முடியாது. ஒவ்வொருவருக்கும் நியமிக்கப்பட்ட காலத்திலேயே அவர்களுக்கு மரணம் வரும்.

"காரிருளும் மரணாந்தகாரமுமான இருண்ட தேசமும், இருள்சூழ்ந்த ஒழுங்கில்லாத மரணாந்தகாரமுள்ள தேசமும், ஒளியும் இருளாகும் தேசமுமாகிய, போனால் திரும்பிவராததேசத்துக்கு, நான் போகுமுன்னே, நான் சற்று இளைப்பாறும்படி நீர் என்னைவிட்டு ஓய்ந்திரும் என்றான்" (யோபு 10:21,22).

ஆரான் தன் ஜந்மபூமியாகிய ஊர் என்கிற கல்தேயர் தேசத்து பட்டணத்திலே மரித்தார். தேராகும், அவருடைய குடும்பத்தாரும் விக்கிரகாராதனை நிரம்பிய ஊர் பட்டணத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்பாகவே, ஆரான் அந்தப் பட்டணத்தில் மரித்துப்போனார்.

ஆபிரகாமின் மனைவியாகிய சாராய், ஆரானுடைய குமாரத்தி. ஆபிராமும் நாகோரும் தங்களுக்குப் பெண்கொள்கிறார்கள்; ஆபிராமுடைய மனைவிக்குச் சாராய் என்று பேர்; நாகோருடைய மனைவிக்கு மில்க்காள் என்று பேர்; இவள் ஆரானுடைய குமாரத்தி; அந்த ஆரான் மில்க்காளுக்கும் இஸ்காளுக்கும் தகப்பன் (ஆதி 11:29).

"சாராய்" என்னும் பெயர் பரிசுத்த வேதாகமத்தில் 59 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சாராயின் பிறப்பைப் பற்றிய செய்தியை ஆதி 11:29-31; ஆதி 12:1-23:19 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. சாராயைப் பற்றிய மற்ற செய்திகள் ஆதி 24:36; ஆதி 25:10; ஆதி 49:31; ஏசா 51:2; ரோமர் 4:19; ரோமர் 9:9; எபி 11:11; 1பேதுரு 3:6 ஆகிய வசனங்களில் உள்ளன. வேதாகமத்தில் சாராய் என்னும் பெயரில் வேறொரு ஸ்திரீயும் இருக்கிறாள் (எண் 26:46).

"மில்க்காள்" (ஆதி 11:29; ஆதி 22:20-24:47). வேதாகமத்தில் மில்க்காள் என்னும் பெயரில் வேறொரு ஸ்திரீயும் இருக்கிறாள். (எண் 26:33; எண் 27:1; எண் 36:11; யோசு 17:3).

இஸ்காள் என்பது சாராயைக் குறிக்கும் என்று யோசபஸ் கூறுகிறார். ஆனால் ஆதி 11:27,29; ஆதி 14:12; ஆதி 20:12 ஆகிய வசனங்களிலிருந்து இந்தக் கருத்து தெளிவாக இல்லை. சாராய் ஆபிரகாமின் ஒன்றுவிட்ட சகோதரி.

ஆபிரகாம் சாராளைப்பற்றிச் சொல்லும்போது, அவள் தன்னுடைய தகப்பனாரின் குமாரத்தி என்று சொல்லுகிறாள். அவளை தன்னுடைய தாயாரின் குமாரத்தி என்று சொல்லவில்லை. சாராய் ஆபிராமைவிட பத்து வருஷம் வயதில் இளையவள். சாராயிக்கு பிள்ளையில்லை. அவள் மலடியாயிருக்கிறாள்.

"அவள் என் சகோதரி என்பதும் மெய்தான்; அவள் என் தகப்பனுக்குக் குமாரத்தி, என் தாய்க்குக் குமாரத்தியல்ல; அவள் எனக்கு மனைவியானாள்" (ஆதி 20:12).

ஆபிராம் தன்னுடைய தகப்பனாராகிய தேராகோடும், தன் உறவினரான லோத்தோடும், மற்றும் தன்னுடைய குடும்பத்தாரோடும், கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தைவிட்டு, கானான் தேசத்திற்கு புறப்பட்டுப்போகிறார்.

"தேராகு தன் குமாரனாகிய ஆபிராமையும், ஆரானுடைய குமாரனும் தன் பேரனுமாயிருந்த லோத்தையும், தன் குமாரன் ஆபிராமுடைய மனைவியாகிய தன் மருமகள் சாராயையும் அழைத்துக் கொண்டு, அவர்களுடனே ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தை விட்டு, கானான் தேசத்துக்குப் போகப் புறப்பட்டான்; அவர்கள் ஆரான்மட்டும் வந்தபோது, அங்கே இருந்துவிட்டார்கள்" (ஆதி 11:31).

ஆபிரகாமே தேவனுடைய அழைப்பைப் பெற்றவர். தேராகு தேவனுடைய அழைப்பைப் பெறவில்லை. (ஆதி 12:1; அப் 7:2).

ஆரான் மெசப்பதோமியாவில் வடகிழக்கில் உள்ள பகுதி. இது பேலியாஸ் நதிக்கரையில் அமைந்திருக்கிறது. இந்த நதியில் ஐபிராத்து நதி கலக்கிறது. இது நினிவேயிலிருந்து கர்கெமிஷிற்கு செல்லும் பாதையிலுள்ள வியாபார மையம். (எசே 27:23). இந்த இடத்திலுள்ள ஜனங்கள் சந்திரனைச் சீன் என்னும் தெய்வமாக வழிபடுகிறார்கள். ஈசாக்கும், யாக்கோபும் இந்தப் பகுதியிலிருந்து தங்களுக்கு மனைவிகளைத் திருமணம் செய்கிறார்கள். (ஆதி 24:1-35:29, 2இராஜா 19:12; ஏசா 37:12; அப் 7:2,4).

கர்த்தர் ஆபிராமை நோக்கி: "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி 12:1-3) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவர் புறப்பட்டுப்போகிறார்; லோத்தும் ஆபிராமோடேகூடப் போகிறார். ஆபிராம் ஆரானை விட்டுப் புறப்பட்டபோது, எழுபத்தைந்து வயதுள்ளவனாயிருக்கிறார் (ஆதி 12:4).

அவர்கள் ஆரான் மட்டும் வந்தபோது அங்கே இருந்துவிடுகிறார்கள். ஆரான் ஊருக்கும் கானானுக்கும் நடுவிலுள்ளது. தேராகு ஆரானிலே மரித்துப்போகிறார். தேராகுடைய ஆயுசுநாட்கள் இருநூற்று ஐந்து வருஷம். தேராகு மரிக்கும் வரையிலும் அவர்கள் ஆரானிலே இருக்கிறார்கள்.

தேராகு ஒருவேளை வயது முதிர்ந்தவராகயிருப்பதினால், அவரால் பிரயாணம் பண்ண முடியாமலிருந்திருக்கலாம். அல்லது அவர்கள் கானானுக்கு தொடர்ந்து பிரயாணம்பண்ண வேறு ஏதாவது தடைகள் ஏற்பட்டிருக்கலாம். கர்த்தர் அவர்களை கானான் தேசத்திற்கு போகச்சொன்னார். ஆனால் அவர்களோ கானானுக்கு வந்து சேராமல் ஆரானிலே தங்கியிருக்கிறார்கள்.

இவர்களைப்போலவே அநேகர் தங்கள் ஆவிக்குரிய பிரயாணத்தில் கானானுக்கு வந்து சேராமல், ஆரானிலே தங்கிவிடுகிறார்கள். அவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்கு தூரமாயில்லை. அதற்கு அருகாமையில்தான் இருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் தேவனுடைய ராஜ்யத்திலே பிரவேசிக்கவில்லை.

12 அதிகாரம்

கர்த்தர் ஆபிராமை கானான் தேசத்திற்குப் போகுமாறு அழைக்கிறார் (ஆதி 12:1-3). ஆபிராம் கர்த்தருடைய அழைப்புக்கு கீழ்ப்படிகிறார் (ஆதி 12:4,5). கானான் தேசத்திலே ஆபிராம் (ஆதி 12:6-9).

ஆபிராம் கானான் தேசத்திலிருந்து எகிப்து தேசத்திற்கு பிரயாணம்பண்ணுகிறார். எகிப்து தேசத்தில் நடைபெற்ற சம்பவங்கள் (ஆதி 12:10-13). எகிப்திலே சாராயிக்கு வந்த ஆபத்தும், அதிலிருந்து அவள் மீட்கப்படுவதும் (ஆதி 12:14-20).

நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ ஆதி 12:1-3

ஆதி 12:1. கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ.

ஆதி 12:2. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.

ஆதி 12:3. உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.

ஆபிராம் தன்னுடைய சொந்த தேசத்திலிருந்து வாக்குத்தத்த தேசத்திற்கு போகவேண்டும். கர்த்தர் ஆபிராமின் விசுவாசத்தை சோதிக்க விரும்புகிறார். ஆபிராம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும். ஆபிராம் கர்த்தருடைய விசேஷித்த ஊழியத்தை செய்வதற்காக, அவர் தன்னை கர்த்தருக்காக வேறு பிரித்துக்கொள்ளவேண்டும்.

ஸ்தேவான் பிரதான ஆசாரியனிடம் ஆபிரகாமைப்பற்றியும், கர்த்தர் கானான் தேசத்திற்கு அவரை அழைத்த சம்பவம் பற்றியும் சொல்லும்போது, "மகிமையின் தேவன் அவருக்கு தரிசனமானார்" என்று சொல்லுகிறார்.

"அதற்கு அவன்: சகோதரரே, பிதாக்களே, கேளுங்கள். நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் காரானூரிலே குடியிருக்கிறதற்கு முன்னமே மெசொப்பொத்தாமியா நாட்டிலே இருக்கும்போது மகிமையின் தேவன் அவனுக்குத் தரிசனமானார்" (அப் 7:2).

மகிமையின் தேவன் ஆபிரகாமுக்கு தரிசனமானதினால், அவர் தேவனுடைய வார்த்தையை சந்தேகப்படுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போயிற்று. தேவனுடைய தெய்வீக அதிகாரம், ஆபிரகாமை கானான் தேசத்திற்குப்போகுமாறு அழைக்கிறது. ஆரம்பத்தில் தேவன் ஆபிரகாமுக்கு தம்முடைய மகிமையில் தரிசனமானார். அதன்பின்பு அவர் பல்வேறு உபாயங்கள் மூலமாக ஆபிரகாமுக்கு தரிசனமானார்.

ஆனாலும் தேவனாகிய கர்த்தர் ஆபிரகாமுக்கு முதன் முதலாக தம்மை வெளிப்படுத்தியபோது, அவர் தம்முடைய மகிமையில் ஆபிரகாமுக்கு தம்மை வெளிப்படுத்தினார். தேவன் தம்முடைய மகிமையில் ஆபிரகாமோடு பேசினார்.

கர்த்தர் ஆபிரகாமோடு இந்த வாக்கியத்தை சொல்லும்போது அவர் மெசபொத்தோமியாவில் இருக்கிறார். அவர் இன்னும் ஆரானுக்கு வரவில்லை. ஆரான் என்பது கல்தேயருடைய தேசம் என்று வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள். ஆகையினால் ஆரானும் ஆபிரகாமுடைய தேசத்தின் ஒரு பகுதியாகவே இருக்கிறது.

ஆபிராம் ஆரானிலே ஐந்து வருஷங்கள் தங்கியிருந்தார். ஆகையினால் அவர் ஆரானை தன்னுடைய தேசம் என்றே சொல்ல ஆரம்பித்துவிடுகிறார். கர்த்தர் ஆபிரகாமுக்கு ஆரானை வாக்குப்பண்ணவில்லை. ஆனால் ஆபிராமோ ஆரானில் தங்கியிருக்கிறார். ஆபிராம் சுதந்தரிக்க வேண்டிய தேசம் ஆரான் அல்ல என்றும், கானான் தேசமே அவர் சுதந்தரிக்கவேண்டிய தேசம் என்றும் கர்த்தர் ஆபிராமுக்கு தெளிவுபடுத்துகிறார்.

கர்த்தர் நம்மை நேசிக்கிறார். தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் நமக்கு வெளிப்படுத்துகிறார். நாம் கானானில் தங்கி தாபரிக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தம். நாம் கானானை விட்டு வெளியே எங்கே தங்கியிருந்தாலும், கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் அன்பினாலும் நம்மை கானானுக்கு அழைத்து வருவார்.

கர்த்தர் நம்மை கானானுக்கு வருமாறு அழைக்கும்போது, நாம் கர்த்தருடைய அழைப்பை ஏற்று கானானுக்கு புறப்பட்டுப்போய்விடவேண்டும். நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லையென்றால், கர்த்தருடைய அழைப்பு நமக்கு மறுபடியும் கொடுக்கப்படும். இது கர்த்தருடைய கிருபை. நாம் அவருடைய கிருபையை ஒருபோதும் அசட்டைபண்ணிவிடக்கூடாது.

கர்த்தர் தாம் ஆரம்பித்த நற்கிரியையை நிறைவேற்றவேண்டும் என்று விரும்புகிறார். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. நம்முடைய ஆத்துமா கர்த்தருக்குள் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும். நம்முடைய ஆத்துமாவுக்கும் கர்த்தருக்கும் இடையே நெருங்கிய ஐக்கியம் இருக்கவேண்டும். அப்போதுதான் கர்த்தருடைய அழைப்புக்கு நம்மால் செவிகொடுக்க முடியும். கர்த்தர் நம்மை அழைக்கும்போது, தம்முடைய வாக்குத்தத்தங்களையும் நமக்கு உறுதிபண்ணுகிறார்.

கர்த்தர் ஆபிராமை நோக்கி: "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ" (ஆதி 12:1) என்று சொல்லுகிறார்.

ஆபிராம் ஆரானுக்குப் போவதற்கு முன்பாகத் தேவன் அவரை அழைத்தார் என்று அப் 7:2 ஆவது வசனம் வெளிப்படுத்துகிறது. இதற்கு முன்பாக தேராகுவும், அவருடைய குடும்பத்தாரும் விக்கிரகாராதனை செய்தார்கள் என்று யோசு 24:2 ஆவது வசனம் கூறுகிறது. தேராகு ஆபிராமையும், மற்றவர்களையும் கானானுக்குக் கூட்டிக் கொண்டு போகிறார்.

தேராகு தன்னுடைய விக்கிரகாராதனையை விட்டுவிட்டு, ஆபிராமின் தேவனை ஆராதிக்கிறார். விக்கிரகாராதனையிலிருந்தும், உபத்திரவங்களிலிருந்தும் விடுதலை பெறுவதற்காகத் தேராகு தன் தேசத்தை விட்டு கானான் தேசத்திற்குப் போகிறார்.

இதனால் ஆபிராம் தேவனுடைய சப்தத்திற்குக் கீழ்ப்படியவில்லை என்று பொருளல்ல. ஆபிராம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தார் (ஆதி 12:4; ஆதி 13:14; ஆதி 31:53). கல்தேயருடைய ஊர் பட்டணத்தில் தேவன் ஆபிராமுக்குக் கொடுத்த அழைப்பை இங்கு மறுபடியும் கூறுகிறார் (அப் 7:2).

கர்த்தர் ஆபிராமை சோதிக்கிறார். ஆபிராமுக்கு தம்மீது அதிகமான அன்பு இருக்கிறதா அல்லது தன்னுடைய சொந்த தேசத்தின்மீதும், தன்னுடைய இனத்தின்மீதும், தன்னுடைய தகப்பன் வீட்டின்மீதும் ஆபிராமுக்கு அதிகமான அன்பு இருக்கிறதா என்பதை கர்த்தர் சோதித்து பார்க்க விரும்புகிறார்.

இயேசுகிறிஸ்துவை பின்பற்ற விரும்புகிறவர்கள் தங்களை தாங்களே வெறுத்து, இயேசுகிறிஸ்துவின் சிலுவையை எடுத்துக்கொண்டு, அவரைப் பின்பற்றி செல்லவேண்டும். ஆபிரகாம் தன்னுடைய தேசத்தையும், தன்னுடைய ஜனங்களையும் விட்டு விட்டு, கர்த்தரைப் பின்பற்றவேண்டும். ஆபிரகாமின் தேசம் விக்கிரகாராதனை நிரம்பியிருக்கிற தேசம். ஆபிரகாமின் இனத்தாரும், அவருடைய தகப்பன் வீட்டாரும், அவருக்கு எப்போதுமே சோதனைகளையும் வேதனைகளையும் கொடுக்கிறார்கள்.

தேவன் ஆபிராமுக்கு ஏராளமான கட்டளைகளைக் கொடுத்திருக்கிறார். அவற்றின் விவரம் வருமாறு :

1. உன் தேசத்தை விட்டுப் புறப்பட்டுப்போ. (ஆதி 12:1; அப் 7:2).

2. உன் இனத்தை விட்டுப் புறப்பட்டுப்போ (ஆதி 12:1).

3. உன் தகப்பனுடைய வீட்டை விட்டுப் புறப்பட்டுப்போ (ஆதி 12:1).

4. நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்திற்குப் போ. (ஆதி 12:1).

5. நீ எழுந்து, தேசத்தின் நீளமும், அகலமும் எம்மட்டோ அம்மட்டும் நடந்து திரி. (ஆதி 13:17).

6. நீ எனக்கு பலி செலுத்து. (ஆதி 15:9-12).

7. நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு. (ஆதி 17:1).

8. என் உடன்படிக்கையைக் கைக்கொள். (ஆதி 17:9-14).

9. உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளையும், விருத்தசேதனம்பண்ணு. (ஆதி 17:10-14).

10. எட்டாம் நாளிலே விருத்தசேதனம் பண்ணு. (ஆதி 17:12).

11. உன் மகனுக்கு ஈசாக்கு என்று பேரிடு. (ஆதி 17:19).

12. சாராள் இந்த விஷயத்தில் உனக்குச் சொல்வதெல்லாவற்றையும் கேள். (ஆதி 21:12).

13. உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கைத் தகன பலியாகப் பலியிடு. (ஆதி 22:2).

14. பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே. (ஆதி 22:12).

தேவன் ஆபிராமுக்கு ஏராளமான வாக்குத்தத்தங்களையும் கொடுத்திருக்கிறார். அவற்றின் விவரம் வருமாறு:

1. நான் உனக்குத் தேசத்தைக் காண்பிப்பேன். (ஆதி 12:1).

2. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன். (ஆதி 12:2).

3. நான் உன்னை ஆசீர்வதிப்பேன். (ஆதி 12:2; ஆதி 22:17).

4. நான் உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். (ஆதி 12:2).

5. நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். (ஆதி 12:2).

6. உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன். (ஆதி 12:3).

7. உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். (ஆதி 12:3)

8. பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும். (ஆதி 12:3; ஆதி 22:18).

9. உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தை நித்தியமாகக் கொடுப்பேன். (ஆதி 12:7; ஆதி 13:14-17; ஆதி 15:18-21; ஆதி 17:8)

10. உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன். (ஆதி 13:16).

11. நான் உனக்குக் கேடகமாயிருக்கிறேன். (ஆதி 15:1).

12. நான் உனக்கு மகா பெரிய பலனாயிருக்கிறேன். (ஆதி 15:1).

13. உன் வீட்டிலே பிறந்த பிள்ளை உனக்குச் சுதந்தரவாளியாய் இருப்பான். (ஆதி 15:2-4).

14. உன் சந்ததி வானத்து நட்சத்திரங்களைப்போல எண்ண முடியாத அளவுக்குத் திரளாக இருக்கும். (ஆதி 15:5; ஆதி 22:17)

15. உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் (ஆதி 15:13).

16. இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன். (ஆதி 15:14).

17. அடிமைத்தனத்திலிருந்து உன் சந்ததியை விடுவித்து வெளியே கொண்டுவருவேன். (ஆதி 15:14-16, யாத் 12)

18. உன் சந்ததியை மிகுந்த பொருள்களுடனே ஆசீர்வதிப்பேன். (ஆதி 15:14).

19. நீ சமாதானத்தோடே உன் பிதாக்களிடத்தில் சேருவாய். (ஆதி 15:15).

20. நல்ல முதிர்வயதிலே அடக்கம் பண்ணப்படுவாய். (ஆதி 15:15).

21. என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன். (ஆதி 17:4,7).

22. உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன். (ஆதி 17:2; ஆதி 22:17).

23. நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத்துவேன். (ஆதி 17:5-6).

24. உன்னை மிகவும் அதிகமாய்ப் பலுகப்பண்ணுவேன். (ஆதி 17:6).

25. உன்னிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள். (ஆதி 17:6).

26. தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன். (ஆதி 17:7).

27. உனக்கும், உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருப்பேன். (ஆதி 17:7-8).

28. நான் உன் மனைவியை (சாராளை) ஆசீர்வதிப்பேன். (ஆதி 17:16).

29. அவளாலே (சாராளாலே) உனக்கு ஒரு குமாரனைத் தருவேன். (ஆதி 17:16-19).

30. அவள் (சாராள்) பல ஜாதிகளுக்குத் தாயாக அவளை ஆசீர்வதிப்பேன். (ஆதி 17:16).

31. அவளாலே (சாராளாலே) ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாக அவளை ஆசீர்வதிப்பேன். (ஆதி 17:16).

32. என் உடன்படிக்கையை ஈசாக்குக்கும், அவனுக்குப் பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன். (ஆதி 17:19-21).

33. நான் இஸ்மவேலை ஆசீர்வதிப்பேன். (ஆதி 17:20).

34. அவனை மிகவும் அதிகமாகப் பலுகப் பண்ணுவேன். (ஆதி 17:20).

35. அவனை மிகவும் அதிகமாகப் பெருகப் பண்ணுவேன் (ஆதி 17:20).

36. அவன் பன்னிரண்டு பிரபுக்களைப் பெறுவான். (ஆதி 17:20).

37. அவனைப் பெரிய ஜாதியாக்குவேன். (ஆதி 17:20).

38. வருகிற வருஷத்தில் குறித்த காலத்திலே சாராள் ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பாள். (ஆதி 17:21; ஆதி 18:10,14).

39. நான் சோதோமில் ஐம்பது நீதிமான்களைக் கண்டால், அவர்கள் நிமித்தம் அந்த ஸ்தலமுழுதையும் இரட்சிப்பேன். (ஆதி 18:26).

40. நான் நாற்பத்தைந்து நீதிமான்களை அங்கே கண்டால், சோதோமை அழிப்பதில்லை. (ஆதி 18:28).

41. நாற்பது நீதிமான்கள் நிமித்தம் சோதோமை அழிப்பதில்லை. (ஆதி 18:29).

42. நான் முப்பது நீதிமான்களை அங்கே கண்டால் சோதோமை அழிப்பதில்லை. (ஆதி 18:30).

43. இருபது நீதிமான்கள் நிமித்தம் சோதோமை அழிப்பதில்லை. (ஆதி 18:31).

44. பத்து நீதிமான்கள் நிமித்தம் சோதோமை அழிப்பதில்லை. (ஆதி 18:32).

45. ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும். (ஆதி 21:12).

46. உன் சந்ததியை கடற்கரை மணலைப்போல பெருகவே பெருகப் பண்ணுவேன். (ஆதி 22:17).

47. உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். (ஆதி 22:17).

48. உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும். (ஆதி 22:18).

ஆபிராமின் இனத்தார் அவரை விக்கிரகாராதனையில் ஈடுபடுத்த விரும்புகிறார்கள். ஆபிராமுக்கு தன் இனத்தார் மூலமாக தொடர்ந்து சோதனைகள் வந்துகொண்டிருக்கிறது. இதனால் ஆபிராமின் ஆத்துமாவுக்கு ஆபத்துக்கள் வருவதற்கும் வாய்ப்புள்ளது. ஆபிராம் தன்னுடைய ஆத்தும ஆபத்துக்கு தப்பிக்கவேண்டுமென்றால், அவர் தன்னுடைய தேசத்தையும், இனத்தையும் விட்டு வெளியேற வேண்டும். அவருடைய தேசத்தின் விக்கிரகாராதனை, அவரைப் பாதிக்கக்கூடாது.

கர்த்தர் ஆபிராமுக்கு கொடுக்கும் கட்டளை, சுவிசேஷத்தின் மூலமாக நமக்கு கொடுக்கப்படும் கட்டளைக்கு ஒப்பாயிருக்கிறது. நாம் விசுவாசத்தினால் ஆபிரகாமின் சந்ததியாராயிருக்கிறோம். கர்த்தர் நம்மோடுகூட உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லவேண்டும்.

உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. நாம் கர்த்தரிடத்தில் மாத்திரமே நம்முடைய முழுஇருதயத்தோடும், முழுமனதோடும், முழுஆத்துமாவோடும் அன்புகூரவேண்டும். கர்த்தரை நேசிக்க வேண்டிய ஸ்தானத்திலே, நம்முடைய தேசத்தையோ அல்லது நம்முடைய இனத்தையோ வைத்து, அதை நேசிக்கக்கூடாது. நாம் கர்த்தரை நேசியாமல், கர்த்தருக்கு பதிலாக மற்ற காரியங்களை நேசிக்கும்போது, நாம் தேவனுடைய கிருபையை இழந்துவிடுவோம்.

நாம் எல்லா சூழ்நிலைகளிலும் பாவத்தை விட்டு விலகி வரவேண்டும். தீயசகவாசங்கள், தீயசம்பாஷணைகள் நம்முடைய ஆத்துமாவுக்கு எப்போதுமே ஆபத்தானது. விசுவாசிகளாகிய நாம் விக்கிரகங்களை விட்டும், விக்கிரகாராதனையைவிட்டும் விலகி வரவேண்டும். நம்முடைய இருதயத்தில் விக்கிரகாராதனைக்கு இடம் இருக்கக்கூடாது. நாம் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருப்பதற்கு தடையாகயிருக்கக்கூடிய எல்லா காரியங்களையும் விட்டு விலகி வருவது நமக்கு நல்லது.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவேண்டும். உலகப்பிரகாரமான சந்தோஷம் மாயையானது. நாம் இந்த உலகத்தையும், உலகத்தின் காரியங்களையும் பரிசுத்தமான கண்களோடு பார்க்கும்போது, அசுத்தத்திற்கும் சுத்தத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு நமக்கு தெரியும். இந்தப் பிரபஞ்சம் நமக்கு நிலையான வாசஸ்தலமல்ல. பரலோகமே நம்முடைய நித்திய வாசஸ்தலம்.

நம்முடைய தேசத்தையும், நம்முடைய வீட்டையும் நாம் நோக்கிப் பார்க்கும்போது, இதுவே நமக்கு நிலையான ஸ்தலம் என்று நினைத்துவிடக்கூடாது. நாம் இந்தப் பிரபஞ்சத்தில் பரதேசிகளைப்போல இருக்கிறோம். நம்முடைய வீட்டில் ஒரு பரதேசியைப்போல தங்கியிருக்கிறோம். ஆகையினால் நாம் இந்தப் பூமியில் ஜீவித்தாலும், பூமிக்குரிய காரியங்களை நோக்கிப் பார்க்காமல், பரலோகத்தின் மேலான காரியங்களையே நோக்கிப் பார்க்கவேண்டும். இந்தப் பிரபஞ்ச காரியங்கள்மீது அன்பு வைக்காமல், பரலோக காரியங்கள்மீது அன்பு வைக்கவேண்டும்.

ஆபிரகாம் தம்மை அதிகமாக நேசிப்பாரா அல்லது அவர் தன்னுடைய தேசத்தையும், இனத்தையும், தன் தகப்பனுடைய வீட்டையும் அதிகமாய் நேசிப்பாரா என்பதை கர்த்தர் சோதித்து பார்க்க விரும்புகிறார். ஆபிராம் கர்த்தரை நம்பவேண்டும். கர்த்தர்மீது நம்பிக்கையில்லாமல், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவது இயலாத காரியம்.

கர்த்தர் ஆபிராமை நோக்கி, "நான் உனக்கு காண்பிக்கும் தேசத்திற்கு போ" என்று சொல்லுகிறார். கர்த்தர் அவரிடம், "நான் உனக்கு கொடுக்கும் தேசத்திற்கு போ" என்று சொல்லவில்லை. கர்த்தர் அப்படி சொல்லுவதற்கு பதிலாக, "நான் உனக்கு காண்பிக்கும் தேசத்திற்கு போ" என்று மாத்திரமே சொல்லுகிறார்.

ஆபிராம் கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம் புறப்பட்டுப்போகவேண்டுமென்றால், அவர் கர்த்தரை நம்பித்தான் புறப்பட்டுப்போகவேண்டும். விசுவாசமில்லாமல் கர்த்தரை பின்பற்றிப்போவது இயலாத காரியம். கர்த்தர் ஆபிராமுக்கு எந்தப் பாதுகாப்பையும் உறுதிபண்ணவில்லை.

ஆபிராம் தன்னுடைய தேசத்தையும், தன்னுடைய இனத்தையும், தன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு புறப்பட்டுப்போனால், அவருக்கு ஒரு இழப்பும் ஏற்படாது என்று கர்த்தர் வாக்குப்பண்ணவுமில்லை. தம்முடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால், தம்மைப் பின்பற்றிப்போனால், ஆபிராமுக்கு ஏராளமான ஆசீர்வாதங்கள் கிடைக்கும் என்றும் கர்த்தர் சொல்லவில்லை.

கர்த்தர் ஆபிராமை நோக்கி, "நான் உனக்கு காண்பிக்கும் தேசத்திற்கு போ" என்று மாத்திரமே சொல்லுகிறார். அந்த தேசம் எப்படியிருக்கும் என்பது ஆபிரகாமுக்கு இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. அந்த தேசத்தில் ஆபிரகாமுக்கு என்ன நடைபெறும் என்பதையும் கர்த்தர் அவருக்கு முன்னறிவிக்கவில்லை.

கர்த்தர் ஆபிரகாமுக்கு ஒரு வாக்குத்தத்தத்தை சொல்லுகிறார். கர்த்தர் ஆபிராமை நோக்கி, "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி 12:2,3) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் சொல்லுகிற வாக்குத்தத்தம் ஆபிராமுக்கு நிறைவேறவேண்டுமென்றால், ஆபிராம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தர் தனக்கு காண்பிக்கும் தேசத்திற்கு போகவேண்டும். கர்த்தருடைய வாக்குத்தத்தம் மிகவும் ஆசீர்வாதமானது. ஆனாலும் அந்த வாக்குத்தத்தத்தோடு ஒரு நிபந்தனையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால் மாத்திரமே, அவருடைய வாக்குத்தத்தம் நம்முடைய ஜீவியத்தில் நிறைவேறும்.

நாம் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியும்போது, கர்த்தர் நிச்சயமாகவே தம்முடைய வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும் நமக்கு நிறைவேற்றுவார். கர்த்தர் தம்முடைய வார்த்தையிலும், கிரியையிலும் உண்மையுள்ளவர்.

கர்த்தர் ஆபிராமுக்கு தம்முடைய வார்த்தைகளை சொல்லும்போது, ஆறுவிதமான வாக்குத்தத்தங்களை சொல்லுகிறார். அவையாவன :

1. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன்.

2. நான் உன்னை ஆசீர்வதிப்பேன்.

3. நான் உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்;

4. நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.

5. உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன். உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்.

6. பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்.

கர்த்தர் ஆபிராமை அவருடைய தேசத்தையும், இனத்தையும், தகப்பனுடைய வீட்டையும் விட்டு தனியாகப் பிரித்தெடுக்கிறார். கர்த்தர் ஆபிராமை வேறுபிரிக்கும்போது, அவரை பெரிய ஜாதியாக்குவதாக வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் ஆபிராமை காட்டு ஒலிவமரத்தின் கிளையிலிருந்து வெட்டி, நல்ல ஒலிவமரத்தின் வேரோடு சேர்க்கிறார். கர்த்தர் ஆபிராமை அவருடைய இனத்தாரிடத்திலிருந்து பிரித்து, வேறே பெரிய ஜாதிக்கு தலைவராக்குவதாக வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்கு அதிக ஆறுதலைத் தருகிறது. ஆபிராமுக்கு இப்பொழுது இன்னும் பிள்ளையில்லை. கர்த்தர் ஆபிராமின் தேவையை அறிந்திருக்கிறார். தனக்கும் சாராயிக்கும் பிள்ளை பிறக்கவேண்டும் என்பதே ஆபிராமின் வாஞ்சையாயும், ஏக்கமாயும் இருக்கிறது. கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்த வார்த்தையின் மூலமாக, ஆபிராமின் தேவையை சந்திக்கிறார்.

கர்த்தர் நமக்கு காயம்கட்டும்போது, எந்தக் காயம் நமக்கு அதிக வேதனையைத் தருகிறதோ, அந்தக் காயத்திற்கு அவர் முதலாவதாக காயம் கட்டுகிறார். ஆபிரகாமின் மனதில் பல வேதனைகள் இருந்தாலும், தனக்கு இன்னும் குழந்தை பிறக்கவில்லை என்னும் வேதனையே அவருக்கு மிகப்பெரிய வேதனையாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தின் ஆரம்பத்தில், ஆபிரகாமின் வேதனையைப் போக்கி, "நான் உன்னை பெரிய ஜாதியாக்குவேன்" என்று வாக்குப்பண்ணுகிறார்.

ஆபிராமின் விசுவாசம் சோதிக்கப்படுகிறது. ஆபிராமின் மனைவியாகிய சாராய், பல வருஷங்களாக பிள்ளை பெறாத மலடியாயிருக்கிறாள். கர்த்தரோ ஆபிராமை நோக்கி, "நான் உன்னை பெரிய ஜாதியாக்குவேன்" என்று வாக்குப்பண்ணுகிறார். இந்த வாக்குத்தத்தம் நிறைவேறவேண்டுமென்றால் ஆபிராம் கர்த்தரை விசுவாசிக்கவேண்டும். கர்த்தரால் எல்லாம் கூடும் என்று நம்பவேண்டும். விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்.

கர்த்தர் ஆபிராமை நோக்கி, "நான் உன்னை ஆசீர்வதிப்பேன்" என்று சொல்லுகிறார். ஆபிராம் தன் தகப்பனுடைய வீட்டை விட்டு புறப்படவேண்டும். உலகப்பிரகாரமான தகப்பனாருடைய வீட்டை விட்டுப்பிரிந்துபோனால், ஆபிராமுக்கு தன் தகப்பன் வீட்டு ஆசீர்வாதம் கிடைக்காது. ஆபிராம் அந்த ஆசீர்வாதத்தை இழந்தாலும், பரம தகப்பனாகிய கர்த்தருடைய ஆசீர்வாதத்தை அவர் பெற்றுக்கொள்வார். பூமிக்குரிய ஆசீர்வாதத்தைவிட, பரமதகப்பன் கொடுக்கும் பரலோக ஆசீர்வாதமே மெய்யான ஆசீர்வாதம்.

கர்த்தர் ஆபிராமை நோக்கி, "நான் உன் பேரை பெருமைப்படுத்துவேன்" என்று வாக்குப்பண்ணுகிறார். ஆபிராம் தன் தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போய்விட்டால், அந்த தேசத்தில் அவருடைய பெயரை எல்லாரும் மறந்துவிடுவார்கள். காலம் செல்ல செல்ல அந்த தேசத்தில் ஆபிராமின் பேர் காணாமல் போய்விடும். ஆனால் ஆபிரகாம் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, தன்னுடைய தேசத்தையும், தன்னுடைய இனத்தையும், தன்னுடைய வீட்டையும் விட்டுப்புறப்பட்டு, கர்த்தர் அவருக்கு காண்பிக்கும் தேசத்திற்கு போகும்போது, கர்த்தர் ஆபிராமை பெரிய ஜாதியாக்குவார். அவர் ஆபிராமின் பேரை பெருமைப்படுத்துவார்.

கர்த்தர் ஆபிராமை நோக்கி, "நீ ஆசீர்வாதமாயிருப்பாய்" என்று வாக்குப்பண்ணுகிறார். ஆபிரகாமின் சந்தோஷம், கர்த்தர் கொடுக்கும் மெய்யான சந்தோஷத்திற்கு அடையாளமாகவும், அச்சாரமாகவும் இருக்கிறது. நம்முடைய சிநேகிதரை நாம் ஆசீர்வதிக்கும்போது, கர்த்தர் ஆபிராமை ஆசீர்வதிப்பதுபோல, நாம் அவர்களை ஆசீர்வதிக்கவேண்டும்.

"அப்பொழுது ஒலிமுகவாசலில் இருக்கிற சகல ஜனங்களும் மூப்பரானவர்களும் அவனை நோக்கி: நாங்கள் சாட்சிதான்; உன் வீட்டிலே வருகிற மனைவியைக் கர்த்தர் இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த இரண்டுபேராகிய ராகேலைப்போலவும் லேயாளைப்போலவும் வாழ்ந்திருக்கச் செய்வாராக, நீ எப்பிராத்தாவிலே பாக்கியவானாயிருந்து, பெத்லெகேமிலே புகழ்பெற்றிருக்கக் கடவாய்" (ரூத் 4:11).

ஆபிரகாம் எந்த தேசத்தில் பிரயாணம்பண்ணினாலும், ஆபிராமின் ஜீவியம் அந்த தேசத்தாருக்கு ஆசீர்வாதமாயிருக்கும். கர்த்தர் ஆபிராமை நோக்கி, "நான் உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்" என்றும், "நான் உன்னை சபிக்கிறவனை சபிப்பேன்" என்றும் வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் ஆபிராமோடு உடன்படிக்கை பண்ணுகிறார். ஆபிராமுக்கு சிநேகிதர்களாயிருக்கிறவர்கள் கர்த்தருக்கும் சிநேகிதர்களாயிருப்பார்கள். ஆபிராமுக்கு சத்துருக்களாயிருக்கிறவர்கள் கர்த்தருக்கும் சத்துருக்களாயிருப்பார்கள்.

கர்த்தர் ஆபிராமை நோக்கி, "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்று வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் ஆபிராமுக்கு சொல்லும் எல்லா ஆசீர்வாதங்களிலும், இந்த ஆசீர்வாதமே மகிமையானது. இதுவே மிகவும் மேன்மையானது.

கர்த்தர் இங்கு சொல்லுகிற ஆசீர்வாதத்தில் மேசியாவைப்பற்றிய சத்தியம் வெளிப்படுத்தப்படுகிறது. வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்திற்கு ஆசீர்வாதமாயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாக வரும் ஆசீர்வாதமே மெய்யான ஆசீர்வாதம். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தை ஆசீர்வதிப்பதுபோல, வேறு யாராலும் இந்த உலகத்தை ஆசீர்வதிக்க முடியாது. இயேசுகிறிஸ்துவின் மூலமாக நமக்கு குடும்ப ஆசீர்வாதம் வருகிறது. நமக்கும் நம்முடைய வீட்டாருக்கும் கிறிஸ்துவின் மூலமாய் இரட்சிப்பின் ஆசீர்வாதம் கிடைக்கிறது.

"இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே" (லூக் 19:9) என்று சொன்னார்.

கானான் தேசத்தில் ஆபிராம்
ஆதி 12:4,5

ஆதி 12:4. கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான்; லோத்தும் அவனோடேகூடப் போனான். ஆபிராம் ஆரானைவிட்டுப் புறப்பட்டபோது, எழுபத்தைந்து வயதுள்ளவனாயிருந்தான்.

ஆதி 12:5. ஆபிராம் தன் மனைவியாகிய சாராயையும், தன் சகோதரனுடைய குமாரனாகிய லோத்தையும், தாங்கள் சம்பாதித்திருந்த தங்கள் சம்பத்தெல்லாவற்றையும், ஆரானிலே சவதரித்த ஜனங்களையும் கூட்டிக் கொண்டு, அவர்கள் கானான் தேசத்துக்குப் புறப்பட்டுப்போய், கானான் தேசத்தில் சேர்ந்தார்கள்.

ஆபிராம் தன் சொந்த தேசத்தை விட்டுப் புறப்பட்டு, கர்த்தர் தனக்கு காண்பிக்கும் தேசத்திற்குப் போகிறார். அவர் முதலில் ஊர் என்னும் தேசத்தைவிட்டும், அதன்பின்பு ஆரான் என்னும் தேசத்தைவிட்டும் புறப்பட்டுப்போகிறார். கர்த்தர் தன்னை அழைத்த அழைப்புக்கு ஆபிராம் உண்மையுள்ளவராயிருக்கிறார்.

"விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனார்" (எபி 11:8).

ஆபிராம் ஆரானைவிட்டுப் புறப்பட்டுப்போனபோது அவருடைய வயது எழுபத்தைந்து. பொதுவாக இப்படிப்பட்ட முதிர்வயதில் எல்லோரும் ஓரிடத்தில் தங்கியிருந்து ஓய்வெடுக்க விரும்புவார்கள். முதியவர்கள் பிரயாணம் பண்ணுவதை தவிர்த்துவிடுவார்கள். ஆனால் ஆபிராமோ கர்த்தர் தனக்கு சொன்னபடியே புறப்பட்டுப்போகிறார்.

ஆபிராம் இப்போது எழுபந்தைந்து வயதுள்ள முதியவராகயிருந்தாலும், கர்த்தர் அவரை நோக்கி, "நான் உனக்கு காண்பிக்கும் தேசத்திற்கு போ" என்று சொல்லுகிறார். ஆபிராமின் முதிர்வயதில்தான் அவருக்கு கர்த்தருடைய அழைப்பு கிடைத்திருக்கிறது. ஆபிராம் தன்னுடைய வயதைப்பற்றி யோசித்துப் பார்க்காமல், கர்த்தர் தனக்கு சொன்னபடியே புறப்பட்டுப்போகிறார் (ஆதி 12:4).

கர்த்தர் ஆபிராமை அப்போது அழைத்தது போலவே, இப்போதும் ஒரு சில முதியவர்களை தம்முடைய ஊழியத்திற்கு அழைக்கிறார். முதியவர்களும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தர் அவர்களுடைய சரீர பலவீனத்தை அறிந்திருக்கிறார். முதிர்வயதை காரணம் காட்டி, யாரும் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போய்விடக்கூடாது.

ஆபிராமோடுகூட லோத்தும் புறப்பட்டுப்போகிறார். ஆபிராம் தன் மனைவியாகிய சாராயையும், தன் சகோதரனுடைய குமாரனாகிய லோத்தையும், தாங்கள் சம்பாதித்திருந்த தங்கள் சம்பத்தெல்லாவற்றையும், ஆரானிலே சவதரித்த ஜனங்களையும் கூட்டிக் கொண்டு, போகிறார். அவர்கள் எல்லோரும் கானான் தேசத்துக்குப் புறப்பட்டுப்போய், கானான் தேசத்தில் சேருகிறார்கள் (ஆதி 12:5).

ஆபிராமின் சம்பத்து என்பது தேராகுவின் மரணத்தின்போது ஆபிராம் சுதந்தரமாகப் பெற்ற பங்குவீதம். இந்தச் சம்பத்து மிகவும் அதிகமாக இருக்கிறது. லோத்தும், ஆபிராமும் பிரிவதற்கு இதுவே காரணமாயிற்று. (ஆதி 13:7).

ஆரானில் உள்ள ஜனங்கள் விக்கிரகாராதனையில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களில் பலரை ஆபிராம் விக்கிரகாராதனையிலிருந்து விடுவித்து, மெய்யான தேவனை ஆராதிக்கும் மார்க்கத்திற்கு வழிநடத்தினார். இவர்களும் ஆபிராமோடு புறப்பட்டுச் செல்ல விரும்பினார்கள். தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கும் ஆசீர்வாதங்களில் இவர்களும் பங்குபெற விரும்பினார்கள். இவர்களில் பலர் அடிமைகள்.

ஆபிராமோடு கானான் தேசத்திற்குப் புறப்பட்டுப் போனவர்களில் கைபடிந்தவர்களாகிய 318 ஆட்களும் இருந்தார்கள். இதுதவிர, லோத்தின் மனுஷரும் ஆபிராமோடு கானான் தேசத்தில் சேர்ந்தார்கள் (ஆதி 14:14). ஆயிரக்கணக்கான பேர் ஆபிராமோடு கானான் தேசத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இவர்கள் சவதரிக்கப்பட்ட ஜனம் ஆவார்கள்.

தேவனுடைய அழைப்பை ஆபிராம் ஊரில் பெற்றபோது அவர் எங்கு போக வேண்டுமென்று அவருக்குத் தெரியாது. ஆனால் இப்பொழுது கானான் தேசத்திற்குப் போகவேண்டுமென்பதை ஆபிராம் தெரிந்து வைத்திருக்கிறார் (அப் 7:3; எபி 11:8).

"கானான்" என்னும் தேசம் காமின் குமாரனாகிய கானானின் பெயரால் அழைக்கப்படுகிறது. கானானின் சந்ததியார் இந்தத் தேசத்தில் குடியேறினார்கள். (ஆதி 15:18-21; யோசு 12). வேதாகமத்தில் "கானான் தேசம்" என்னும் வாக்கியம் 66 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதியாகமத்தில் மட்டும் 35 தடவைகள் இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் ஐந்தாகமம், யோசுவா ஆகிய புஸ்தகங்களைத் தவிர மற்ற புஸ்தகங்களில் ஐந்து தடவைகள் மட்டுமே இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் இந்த வாக்கியம் ஒரு தடவை கூட பயன்படுத்தப்படவில்லை.

கர்த்தருடைய ஊழியத்தை, கணவனும் மனைவியும் ஒருமனப்பட்டு சேர்ந்து செய்வது மிகப்பெரிய பாக்கியம். அது இருவருக்குமே ஆசீர்வாதமாகவும், ஆறுதலாகவும், சந்தோஷமாகவும் இருக்கும். புருஷன் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிப் போகும்போது, அவனுடைய மனைவியும் தன் புருஷனோடு கூடப்போகவேண்டும். பரலோகத்திலே கணவனும் மனைவியுமாக பிரவேசிப்பது மிகப்பெரிய பாக்கியம்.

லோத் என்பவர் ஆபிரகாமின் சகோதரனுடைய குமாரன். லோத் ஆபிரகாமின் முன்மாதிரியை கவனித்துப் பார்க்கிறார். ஆபிராம் தன் குடும்பத்தார் மத்தியிலே கர்த்தருக்கு பயந்து, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கிறார். ஆபிராமின் சாட்சியுள்ள ஜீவியம் லோத்தின் இருதயத்தில் பேசுகிறது. ஆபிராம் கர்த்தர் தனக்கு சொன்னபடி புறப்பட்டுப்போனபோது, லோத்தும் அவரோடு கூடப்போகிறார்.

லோத்தின் தகப்பனார் ஏற்கெனவே மரித்துப்போனார். லோத் ஆபிராமின் மேற்பார்வையிலும், ஆதரவிலும் இருக்கிறார். லோத் ஆபிராமின் வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவரோடுகூடவே இருக்கிறார். ஆபிராம் தங்கியிருக்கிற ஸ்தலத்திலே லோத்தும் தங்கியிருக்கிறார். ஆபிராம் பிரயாணம்பண்ணுகிற ஸ்தலத்திற்கு லோத்தும் அவரோடுகூட பிரயாணம்பண்ணுகிறார்.

ஆபிராமும் அவருடைய குடும்பத்தாரும் கானான் தேசத்திற்குப் புறப்பட்டுப்போகும்போது, தாங்கள் சம்பாதித்திருந்த தங்கள் சம்பத்து எல்லாவற்றையும் தங்களோடு கொண்டு போகிறார்கள். கர்த்தர் ஆபிராமை நோக்கி, "நான் உனக்கு காண்பிக்கும் தேசத்திற்கு போ" என்று சொன்னவுடன், ஆபிராம் தன்னிடத்திலுள்ள சம்பத்தையெல்லாம் தூரஎறிந்துவிடவில்லை. அவற்றை மற்றவர்களுக்கு தானமாக கொடுத்துவிடவில்லை. கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து புறப்பட்டுப்போகிறேன் என்று சொல்லி, ஆபிராம் வெறுங்கையோடு கானான் தேசத்திற்கு போகவில்லை.

கர்த்தர் ஆபிராமை நோக்கி, "உன்னை ஆசீர்வதிப்பேன்" என்றும், "நீ ஆசீர்வாதமாயிருப்பாய்" என்றும் சொன்னார். ஆபிராம் கர்த்தருடைய வார்த்தையைக்கேட்டு, தன்னிடத்திலுள்ள சம்பத்துக்களெல்லாம் இனிமேல் தனக்கு தேவையில்லை என்று நினைக்கவில்லை.

கர்த்தர் ஆபிரகாமின் விசுவாசத்தை சோதிக்கிறார். ஆனால் ஆபிராம் கர்த்தரை சோதிக்கவில்லை. அவர் கர்த்தரை நம்புகிறார். அதே வேளையில், கர்த்தர் தனக்கு இதுவரையிலும் கொடுத்திருக்கிற சம்பத்துக்களையெல்லாம் சேர்த்துக்கொண்டு, அவற்றையும் கானான் தேசத்திற்கு கொண்டுபோகிறார். அந்த சம்பத்துக்களோடு அவர் ஆரானிலே சவதரித்த ஜனங்களையும் கூட்டிக்கொண்டு போகிறார்.

நாம் கர்த்தரிடத்திலிருந்து புதிய ஆசீர்வாதங்களையும் எதிர்பார்க்கவேண்டும். அதே வேளையில் கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற பழைய ஆசீர்வாதங்களையும் ஞானத்தோடு பயன்படுத்தவேண்டும். கர்த்தருடைய கிருபையினாலேயே நமக்கு ஐசுவரியமும் சம்பத்தும் கிடைக்கிறது.

ஆபிராமும் அவரோடுகூட புறப்பட்டவர்கள் எல்லோரும் கானான் தேசத்திலே வந்து சேருகிறார்கள். அவர்களுடைய பிரயாணம் முடிவு பெறுகிறது. அவர்கள் ஏற்கெனவே கானான் தேசத்திற்கு புறப்பட்டு வந்தவர்கள். ஆனால் அவர்கள் கானான் தேசத்திற்கு வந்து சேராமல் ஆரானிலே தங்கிவிட்டார்கள்.

"தேராகு தன் குமாரனாகிய ஆபிராமையும், ஆரானுடைய குமாரனும் தன் பேரனுமாயிருந்த லோத்தையும், தன் குமாரன் ஆபிராமுடைய மனைவியாகிய தன் மருமகள் சாராயையும் அழைத்துக் கொண்டு, அவர்களுடனே ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தை விட்டு, கானான் தேசத்துக்குப் போகப் புறப்பட்டான்; அவர்கள் ஆரான்மட்டும் வந்தபோது, அங்கே இருந்துவிட்டார்கள்" (ஆதி 11:31).

கர்த்தருடைய நல்ல கரம் ஆபிராமோடு கூடயிருக்கிறது. அவர்கள் கானானுக்கு வந்து சேராமல், ஆரானிலே தங்கிவிட்டாலும், கர்த்தர் அவர்களை கானானுக்கு வழிநடத்தி கொண்டு வருகிறார். கானான் தேசம் வாக்குத்தத்த தேசம். கர்த்தர் ஆபிரகாமின் சந்ததியாருக்கு கானான் தேசத்தைக் கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆபிராமும் அவரோடுகூட கானான் தேசத்திற்குப் புறப்பட்டவர்கள் யாவரும், கானான் தேசத்தில் சேருகிறார்கள்.

உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன் ஆதி 12:6-9

ஆதி 12:6. ஆபிராம் அந்தத் தேசத்தில் சுற்றித் திரிந்து சீகேம் என்னும் இடத்துக்குச் சமீபமான மோரே என்னும் சமபூமிமட்டும் வந்தான்; அக்காலத்திலே கானானியர் அத்தேசத்தில் இருந்தார்கள்.

ஆதி 12:7. கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன் என்றார். அப்பொழுது அவன் தனக்குத் தரிசனமான கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினான்.

ஆதி 12:8. பின்பு அவன் அவ்விடம்விட்டுப் பெயர்ந்து, பெத்தேலுக்குக் கிழக்கே இருக்கும் மலைக்குப் போய், பெத்தேல் தனக்கு மேற்காகவும் ஆயீ கிழக்காகவும் இருக்கக் கூடாரம்போட்டு, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான்.

ஆதி 12:9. அதின்பின் ஆபிராம் புறப்பட்டு, தெற்கே பிரயாணம்பண்ணிக்கொண்டு போனான்.

கர்த்தர் ஆபிரகாமை கானான் தேசத்திற்கு அழைத்து கொண்டு வந்திருக்கிறார். ஆபிராம் கானான் தேசத்திற்கு வந்தபோது, அந்த தேசத்தில் விசேஷித்த சம்பவமோ, பெரிய அற்புதமோ எதுவும் நடைபெறவில்லை. அவர் சாதாரணமாக அந்த தேசத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறார்.

ஆபிராம் விசுவாசத்தினால் ஜீவிக்கிறார். அவர் தரிசனத்தினால் ஜீவிக்கவில்லை. பிரத்தியட்சமான அற்புதங்கள் எதுவும் நடைபெறாவிட்டாலும், ஆபிராம் கானான் தேசத்திலே வந்து சேர்ந்திருப்பதே மிகப்பெரிய அற்புதமாயிருக்கிறது.

ஆபிராம் கானான் தேசத்திற்கு வந்தபோது, அக்காலத்திலே கானானியர் அத்தேசத்திலிருக்கிறார்கள். ஆபிராம் அந்தத் தேசத்தில் சுற்றித் திரிந்து சீகேம் என்னும் இடத்துக்குச் சமீபமான மோரே என்னும் சமபூமிமட்டும் வருகிறார் (ஆதி 12:6).

ஆபிராம் தன் கண்களை ஏறிட்டு பார்க்கும்போது, கானான் தேசம் முழுவதிலும் கானானியர் இருப்பதைப் பார்க்கிறார். ஆபிராமும் அவரோடுகூட கானான் தேசத்திற்கு வந்திருக்கிறவர்களும் கானானியர் மத்தியிலே வாசம்பண்ணவேண்டும். கானானியர் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்களல்ல. அவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள்.

ஆபிரகாம் இதற்கு முன்பு ஊர் என்கிற கல்தேயருடைய தேசத்திலிருந்தார். அங்கே விக்கிரகாராதனை அதிகமாயிருந்தது. அந்த ஊர் ஜனங்கள் விக்கிரகங்களை ஆராதித்தார்கள். அவர்களைப்போலவே, கானான் தேசத்திலிருக்கிற கானானியரும் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். ஆபிராம் கானானியர் மத்தியிலே கர்த்தருக்கு உண்மையுள்ளவராயிருக்கவேண்டும். அவர் புறஜாதியார் மத்தியிலே கர்த்தருடைய நாமத்தைக் கனம்பண்ணி, அவரை மகிமைப்படுத்தவேண்டும்.

ஆபிராம் கானான் தேசத்திற்கு வந்த உடனேயே, தனக்கு வீடு வாசலைக் கட்டவில்லை. அந்த தேசத்தில் தங்கி தாபரிக்கவேண்டும் என்று ஆபிராம் உடனே முயற்சி பண்ணவில்லை. கானான் தேசத்தில் ஆபிராம் ஒரு பரதேசியைப்போல சஞ்சரிக்கிறார். விசுவாசிகளாகிய நாமும், இந்த உலகத்தில் ஒரு பரதேசியைப்போலவே இருக்கிறோம். பரலோகமே நம்முடைய நித்திய நகரம். இந்தப் பூமியில், நம்முடைய வீட்டிலே, நாம் பரதேசியாக சிறிதுகாலம் தங்கியிருக்கிறோம்.

நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கும் காலமெல்லாம், பரலோகத்தை நோக்கி பிரயாணம்பண்ணுகிறோம். பரலோகத்திலே பிரவேசிக்கும்போதுதான் நம்முடைய பிரயாணம் முடிவுபெறுகிறது. அதுவரையிலும், நமக்கு இருக்கிற பெலத்தோடே இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லவேண்டும். நாம் ஒவ்வொரு நாளும் கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லவேண்டும். நாம் ஒருபோதும் நம்முடைய இலக்கை அடைந்தாயிற்று என்று நினைக்கக்கூடாது. நாம் பரலோகத்தில் பிரவேசிக்கும் வரையிலும், நம்முடைய இலக்கை நாம் அடையவில்லை.

கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: "உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்" (ஆதி 12:7) என்று சொல்லுகிறார். ஆபிராம் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, அவர் தனக்கு காண்பிக்கும் தேசத்திற்கு போகிறார். ஆபிராம் கர்த்தரைப் பின்பற்றுகிறார். கர்த்தர் ஆபிராமோடு கூடயிருக்கிறார். ஆபிராம் கானான் தேசத்திற்கு வந்து சேரும்போது, கர்த்தர் அவரோடுகூட வந்து சேருகிறார்.

ஆபிராம் கானான் தேசத்தில் வந்து சேர்ந்தபோது, கர்த்தர் ஆபிராமுக்கு தரிசனமாகிறார். அவருக்கு நல்ல வார்த்தைகளையும், ஆறுதலான வார்த்தைகளையும் சொல்லுகிறார். ஆபிராம் கானான் தேசத்தில் சுற்றி திரிந்து, சீகேம் என்னும் இடத்திற்கு சமீபமான மோரே என்னும் சமபூமி மட்டும் வந்திருக்கிறார். அங்கே கர்த்தர் ஆபிராமை நோக்கி, "உன் சந்ததிக்கு இந்த தேசத்தைக் கொடுப்பேன்" என்று சொல்லுகிறார்.

நம்முடைய ஆவிக்குரிய பிரயாணங்களில், நம்மோடுகூட ஏராளமானோர் சேருவார்கள். நம்மோடு கூடயிருக்கிறவர்களில் அநேகர் நம்மைவிட்டுப் பிரிந்துபோய்விடுவார்கள். நம்முடைய குடும்பத்தார் நம்மைவிட்டுப் பிரிவார்கள். நம்முடைய சத்துருக்கள் நம்மை மற்றவர்களிடத்திலிருந்து பிரிப்பார்கள். நம்மைவிட்டு யார் பிரிந்துபோனாலும், நம்முடைய கர்த்தர் நம்மைவிட்டுப் பிரியாமல், நம்மோடுகூடவே இருக்கிறார்.

ஆபிராம் கானான் தேசத்திற்கு வந்தபோது, கர்த்தர் அவருக்கு தரிசனமாகி, "உன் சந்ததிக்கு இந்த தேசத்தைக் கொடுப்பேன்" என்று சொல்லுகிறார். கர்த்தருடைய ஆசீர்வாதமான வார்த்தைகள் ஆபிரகாமின் சந்ததியாருக்கு சொல்லப்படுகிறது. பிள்ளைகளுக்கு சொல்லப்படும் ஆசீர்வாதம், அவர்களுடைய பெற்றோருக்கு சொல்லப்படும் ஆசீர்வாதமாகவே இருக்கும்.

கர்த்தர் கானான் தேசத்தை ஆபிராமுக்கு கொடுப்பதாக வாக்குப்பண்ணாமல், அவருடைய சந்ததிக்கு கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். ஆபிராமுக்கு இன்னும் பிள்ளைகள் பிறக்கவில்லை. ஆபிராம் கர்த்தருடைய வார்த்தையைப் புரிந்துகொள்கிறார். கர்த்தர் "இந்த தேசம்" என்று சொல்லுவது பரமதேசத்தைக் குறிக்கிறது என்பதை ஆபிராம் அறிந்துகொள்கிறார்.

"அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே" (எபி 11:16).

அப்பொழுது ஆபிராம் தனக்குத் தரிசனமான கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார். பின்பு ஆபிராம் அவ்விடம்விட்டுப் பெயர்ந்து, பெத்தேலுக்குக் கிழக்கே இருக்கும் மலைக்குப் போய், பெத்தேல் தனக்கு மேற்காகவும் ஆயீ கிழக்காகவும் இருக்கக் கூடாரம்போட்டு, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்கிறார் (ஆதி 12:7,8).

மலைப்பிரதேசத்தில் சஞ்சரிப்பவர்களாக வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் நபர்களில் ஆபிராம் முதலாவதாக வருகிறார். (ஆதி 12:8). தேவனும் பர்வத நகரத்தில் வாசம்பண்ணுகிறார். (வெளி 14:1-5; வெளி 21:16; ஏசா 2:2-4).

"தேவனுடைய வீடு" என்பது "பெத்தேல்" என்னும் எபிரெய வார்த்தைக்குப் பொருள். சீகேமிலிருந்து தெற்காக 20 மைல் தூரத்திலும், எருசலேமிலிருந்து வடக்காக 12 மைல் தூரத்திலும் பெத்தேல் அமைந்திருக்கிறது. இது லூஸ் என்றும் அழைக்கப்படுகிறது (ஆதி 28:17-19; ஆதி 35:6; ஆதி 48:3; யோசு 16:2; யோசு 18:13; நியா 1:23).

ஆபிராமே கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டவர்களில் முதலாவது நபராகக் கூறப்பட்டிருக்கிறார். ஆபேல், ஏனோக்கு, மேலும் பலரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டிருந்திருக்கலாம். ஆனால் அது பற்றிய குறிப்பு வேதாகமத்தில் காணப்படவில்லை. ஆதி 4:26 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஜனங்கள் விக்கிரகாராதனைக்காரர்கள். இவர்கள் தேவனுடைய நாமத்தைத் தொழுது கொண்டவர்கள் அல்ல. (ஆதி 13:4; ஆதி 26:25; 1நாளா 4:10; சங் 99:6; சங் 116:4; யோவே 2:32; அப் 2:21).

ஆபிராம் தெற்கே பிரயாணம்பண்ணிக்கொண்டு போனார். தெற்கு என்பதற்கான எபிரெய வார்த்தை "நேகேப்" என்பதாகும். இது யூதாவிற்குத் தெற்கிலுள்ள மலைப்பிரதேசம். (ஆதி 13:1; ஆதி 20:1; ஆதி 24:62; யோசு 11:16; யோசு 15:19; லூக்கா 1:39). வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கும் பல நிகழ்ச்சிகள் இந்தப் பகுதியில் நடைபெற்றிருக்கிறது.

ஆபிராம் எங்கெல்லாம் கூடாரம் போடுகிறாரோ, அங்கெல்லாம் அவர் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தையும் கட்டுகிறார். பலிபீடம் ஜெபத்தினால் பரிசுத்தம் பண்ணப்படுகிறது. ஆபிராம் கானானுக்கு வந்து சேர்ந்தபோது, அவர் ஆரானிலே சவதரித்த ஜனங்களையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறார். அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை உபதேசம்பண்ணவேண்டும். அவர்களை ஆவிக்குரிய ஜீவியத்தில் வழிநடத்தவேண்டும்.

ஆபிராமும், அவரோடுகூட கானான் தேசத்திற்கு வந்திருக்கிற அவருடைய குடும்பத்தாரும், ஆரானிலே சவதரிக்கப்பட்ட ஜனங்களும் கர்த்தரை ஆராதிக்கவேண்டும். அதற்காக ஆபிராம் அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்கிறார். ஆபிராமோடு கூடயிருக்கிற ஜனங்களும், அங்கே கர்த்தரைத் தொழுதுகொள்கிறார்கள். இதுவே பரிசுத்தவான்களின் பூர்வகாலத்து பாதையாகும்.

கர்த்தருடைய ஜனம் எந்த தேசத்திற்கு பிரயாணம்பண்ணினாலும், அவர்களுடைய இருதயத்திலே கர்த்தருக்கு பயப்படும் பயமும், கர்த்தர் மீதுள்ள விசுவாசமும், கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனையும், அவர்களோடுகூட கடந்து வருகிறது. அதின்பின் ஆபிராம் புறப்பட்டு, தெற்கே பிரயாணம்பண்ணிக்கொண்டு போகிறார் (ஆதி 12:9).

அத்தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று
ஆதி 12:10-13

ஆதி 12:10. அத்தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று; தேசத்திலே பஞ்சம் கொடிதாயிருந்தபடியால், ஆபிராம் எகிப்து தேசத்திலே தங்கும்படி அவ்விடத்துக்குப் போனான்.

ஆதி 12:11. அவன் எகிப்துக்குச் சமீபமாய் வந்தபோது, தன் மனைவி சாராயைப் பார்த்து: நீ பார்வைக்கு அழகுள்ள ஸ்திரீ என்று அறிவேன்.

ஆதி 12:12. எகிப்தியர் உன்னைக் காணும்போது, இவள் அவனுடைய மனைவி என்று சொல்லி, என்னைக் கொன்றுபோட்டு, உன்னை உயிரோடே வைப்பார்கள்.

ஆதி 12:13. ஆகையால், உன்னிமித்தம் எனக்கு நன்மை உண்டாகும்படிக்கும், உன்னாலே என் உயிர் பிழைக்கும்படிக்கும், நீ உன்னை என் சகோதரி என்று சொல் என்றான்.

கானான் தேசத்தில் பஞ்சமுண்டாயிற்று. அந்தப் பஞ்சம் கொடிய பஞ்சமாயிருக்கிறது. கானான் தேசத்தில் குடியிருக்கிற ஆபிராமுக்கு இது மிகப்பெரிய சோதனைக்காலமாயிருக்கிறது. தேசத்தில் பஞ்சம் உண்டானாலும், நாம் கர்த்தர்மீது நம்பிக்கையாயிருக்கவேண்டும். கர்த்தருடைய வாக்குத்தத்த வார்த்தைகளை நாம் விசுவாசிக்கவேண்டும். விசுவாசிக்கிறவர்கள் பதறமாட்டார்கள்.

பஞ்சம் தேவனுடைய நியாயத்தீர்ப்பாகும். வேதாகமத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பாகவே பஞ்சங்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (2சாமு 24:13; சங் 105:16; ஏசா 51:19; எரே 14:15; எரே 15:2; எரே 24:10; எரே 27:8; எசே 5:12; எசே 12:16). இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அடையாளமாகவும் பஞ்சம் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. (மத் 24:7; லூக்கா 21:11). பஞ்சகாலத்தில் வாக்குத்தத்தங்கள். (2நாளா 32:11; சங் 33:19; சங் 37:19; ரோமர் 8:35).

பரிசுத்த வேதாகமத்தில் பல பஞ்சங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு :

1. ஆபிரகாமின் நாளில் கானானில் ஏற்பட்ட பஞ்சம் (ஆதி 12:10)
2. ஈசாக்கின் நாளில் கானானில் ஏற்பட்ட பஞ்சம் (ஆதி 26:1)
3. யாக்கோபின் நாளில் கானானில் ஏற்பட்ட பஞ்சம் (ஆதி 41:54-57)
4. நியாயாதிபதிகளின் நாளில் கானானில் ஏற்பட்ட பஞ்சம் (ரூத் 1:1)
5. தாவீதின் நாளில் கானானில் ஏற்பட்ட பஞ்சம் (2சாமு 21:1)
6. எலியாவின் நாளில் கானானில். ஏற்பட்ட பஞ்சம் (1இராஜா 17:1)
7. எலிசாவின் நாளில் கானானில் ஏற்பட்ட பஞ்சம் (2இராஜா 4:38)
8. எலிசாவின் நாளில் சமாரியாவில் ஏற்பட்ட பஞ்சம் (2இராஜா 6:25)
9. எலிசாவின் நாளில் கானானில் ஏற்பட்ட பஞ்சம் (2இராஜா 8:1)
10. சிதேக்கியாவின் நாளில் எருசலேமில் ஏற்பட்ட பஞ்சம் (2இராஜா 25:3; எரே 14)
11. நெகேமியாவின் நாளில் கானானில் ஏற்பட்ட பஞ்சம் (நெகே 5:3)
12. அறியப்படாத தேசத்தில் ஏற்பட்ட பஞ்சம் (லூக்கா 15:14)
13. பவுலின் நாளில் ரோமப்பேரரசில் ஏற்பட்ட பஞ்சம் (அப் 11:28)

கர்த்தரே ஆபிராமை கானான் தேசத்திற்கு அழைத்து வந்திருக்கிறார். அவரை அழைத்து வந்த கர்த்தர் உண்மையுள்ளவர். கர்த்தர் ஆபிராமையும், அவரோடுகூட கானான் தேசத்திற்கு வந்திருக்கிறவர்களையும் போஷிப்பார். அவர்களை ஆதரிப்பார். தேசத்தில் கொடிய பஞ்சம் உண்டானாலும், ஆபிராம் கர்த்தர்மீது நம்பிக்கையாயிருக்கவேண்டும்.

"அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும் கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும் தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்" (ஆப 3:17,18).

கானான் தேசத்தில் பஞ்சம் கொடிதாயிருந்தாலும், ஆபிராம் கர்த்தருக்குள் களிகூர கற்றுக்கொள்ளவேண்டும். நாம் கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்தாலும், நம்முடைய கடமைகளை நாம் நேர்த்தியாய் நிறைவேற்றினாலும், நம்முடைய ஜீவியத்திலும் பிரச்சனைகள் வருவதற்கு வாய்ப்புள்ளது. நாம் சந்தோஷத்தின் பாதையில் முன்னேறிச் சென்றாலும், நமக்கு துக்கமும், சோகமும் வருவதற்கு வாய்ப்புள்ளது. நாம் வெற்றிகளுக்கு மேல் வெற்றிகளை பெற்றுக்கொண்டாலும், நமக்கு தோல்விகளும், ஏமாற்றங்களும், தொல்லைகளும் வருவதற்கு வாய்ப்புள்ளது.

ஆபிராம் கானான் தேசத்தில் நிலைத்திருக்க வேண்டும். இந்தச் சோதனையில் ஆபிராம் தோல்வியுற்றார். யூதர்கள் தங்களுக்கு உதவி வருமென்று எகிப்தை நோக்கிப் பார்த்தார்கள். அதற்காக தீர்க்கதரிசிகள் அவர்களை பலதடவை கடிந்து கூறியிருக்கிறார்கள். (ஏசா 36:6; எரே 2:36; எசே 17:15).

ஆபிராம் கர்த்தரை நம்பி கானான் தேசத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறார். கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். ஆனால் கானான் தேசத்திலும் பஞ்சமுண்டாயிற்று. தேசத்திலே பஞ்சம் கொடிதாயிருக்கிறது.

கானான் தேசத்தில் பஞ்சமுண்டானபோது, அந்தப் பஞ்சத்திலிருந்து தப்பிப்பதற்காக, ஆபிராம் எகிப்து தேசத்திலே தங்கும்படி அவ்விடத்திற்கு போகிறார். கர்த்தருடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவே, இந்தப் பூமியிலுள்ள ஒரு தேசத்தில் பஞ்சமும், மற்றொரு தேசத்தில் செழிப்பும் ஏற்பட்டிருக்கிறது. ஒரு தேசத்திலே தானியமில்லாமல் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். மற்றொரு தேசத்திலே ஏராளமான தானியத்தினால் ஜனங்கள் திருப்தியடைந்திருக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறார். எல்லா வேளைகளிலும் கர்த்தர் நமக்கு அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்வார் என்று எதிர்பார்க்க முடியாது. கர்த்தர் தம்முடைய நாமமகிமைக்காகவே அற்புதங்களை செய்கிறார். கர்த்தர் ஒருபோதும் தேவையில்லாமல் அற்புதங்களை செய்கிறவரல்ல.

ஆபிராம் கானான் தேசத்திலிருக்கும்போது அந்த தேசத்தில் பஞ்சமுண்டாயிற்று. அந்தப் பஞ்சம் மிகவும் கொடிதாயிருப்பதினால், அந்தப் பஞ்சத்திலிருந்து தப்பிப்பதற்காக, எகிப்து தேசத்திற்கு போகவேண்டும் என்று ஆபிராம் தீர்மானம்பண்ணுகிறார். எகிப்து தேசம் கானான் தேசத்திற்கு தென்கிழக்கு திசையிலுள்ளது. ஆபிராம் தான் புறப்பட்டு வந்த ஆரானுக்கு திரும்பிப்போகாமல், எகிப்திற்கு புறப்பட்டுப்போகிறார்.

"தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே. அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே" (எபி 11:15,16).

ஆபிராம் எகிப்து தேசத்திற்கு போகும்போது, அவரோடுகூட, அவருடைய மனைவி சாராயும் கூடப்போகிறார். சாராய் பார்வைக்கு அழகுள்ள ஸ்திரீ. ஆபிராம் தன் மனைவி சாராயினிமித்தமாக எகிப்தியரிடம் பொய் சொல்லுகிறார்.

ஆபிராம் எகிப்துக்குச் சமீபமாய் வந்தபோது, தன் மனைவி சாராயைப் பார்த்து: "நீ பார்வைக்கு அழகுள்ள ஸ்திரீ என்று அறிவேன். எகிப்தியர் உன்னைக் காணும்போது, இவள் அவனுடைய மனைவி என்று சொல்லி, என்னைக் கொன்றுபோட்டு, உன்னை உயிரோடே வைப்பார்கள். ஆகையால், உன்னிமித்தம் எனக்கு நன்மை உண்டாகும்படிக்கும், உன்னாலே என் உயிர் பிழைக்கும்படிக்கும், நீ உன்னை என் சகோதரி என்று சொல்" (ஆதி 12:11-13) என்று சொல்லுகிறார்.

ஆபிராம் சாராயைப் பார்த்து "நீ பார்வைக்கு அழகுள்ள ஸ்திரீ" என்று கூறும்போது அவளுக்கு வயது 65. (ஆதி 12:4; ஆதி 17:1,17,24; ஆதி 21:5).

ஆபிராமின் விசுவாசம் பலவீனமாக இருக்கிறது. சாராய் மூலமாக ஆபிராமுக்கு ஒரு குமாரன் பிறப்பான் என்பது தேவனுடைய வாக்குத்தத்தம். அந்தக் குமாரன் பிறப்பதற்கு முன்பாக தான் மரிப்பதில்லை என்பதை ஆபிராம் விசுவாசிக்க வேண்டும். ஆனால் ஆபிராம் விசுவாசத்தில் பலவீனமாக இருந்தபடியினால், சாராயைப் பற்றிய உண்மையைத் திருத்திக் கூறுகிறார். அவர் பொய் கூறவில்லை. ஒரு வழியில் சாராய் ஆபிராமிற்கு ஒன்றுவிட்ட சகோதரி முறை வேண்டும் (ஆதி 20:12).

ஆபிராம் கர்த்தரை விசுவாசிக்கிறவர். ஆனாலும் அவர் உண்மையை மறைத்து பொய்சொல்லுகிறார். பரிசுத்தவேதாகமத்தில் மனுஷருடைய சுபாவங்களைப்பற்றி தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. பரிசுத்தவான்கள் பாவம் செய்தாலும், அவர்களுடைய பாவங்களும் பரிசுத்தவேதாகமத்தில் மறைக்காமல் எழுதப்பட்டிருக்கிறது.

பரிசுத்த வேதாகமத்திலே பாவிகள் மனந்திரும்பியதற்கான எடுத்துக்காட்டுக்களும், பரிசுத்தவான்கள் பாவத்தில் விழுந்து விட்ட சம்பவங்களும் எழுதப்பட்டிருக்கிறது. நாம் இந்த சம்பவங்களை வாசித்து, தியானித்து, எச்சரிப்படையவேண்டும். தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன், கீழே விழாதிருக்கும்படி எச்சரிப்போடிருக்க வேண்டும்.

எகிப்து தேசத்திலே ஆபிரகாம் பொய்சொல்லி பாவம் செய்வதுபோல, எகிப்தியர்களும் பிறர் மனைவியின்மீது இச்சைப்பட்டு பாவம் செய்கிறார்கள். ஆபிராம் எகிப்திலே வந்தபோது, எகிப்தியர் சாராயை மிகுந்த அழகுள்ளவளென்று காண்கிறார்கள் (ஆதி 12:14). பார்வோனுடைய பிரபுக்களும் அவளைக் கண்டு, பார்வோனுக்கு முன்பாக அவளைப் புகழுகிறார்கள் (ஆதி 12:15).

ராஜாவுக்காக ஆயத்தமாகும் ஸ்திரீ கன்னிமாடத்தில் நீண்ட நாள் தங்கியிருந்து, அங்கு பலவிதமான அலங்காரங்களைப் பெற்றுக் கொள்வாள். (எஸ் 2:12). அதுபோன்று செய்வதற்காக பார்வோனுடைய ஆட்கள் சாராயைப் பார்வோனுடைய அரமனைக் கன்னிமாடத்திற்குக் கொண்டுபோகிறார்கள். (ஆதி 12:14-20). இப்படிப்பட்ட சூழ்நிலையில் தேவன் இடைப்பட்டு, சாராயை மீட்டு இரட்சிக்கிறார்.

ஆபிராம் சாராயின் புருஷன் என்பது எகிப்தியருக்கு தெரியவந்தால், அவர்கள் ஆபிராமைக் கொன்றுபோட்டு, சாராயை உயிரோடே வைப்பார்கள். இது ஆபிராமின் பயம். ஆபிராம் கர்த்தரை நம்பாமல், எகிப்தியருக்கு பயப்படுகிறார். கர்த்தர் எல்லா சூழ்நிலைகளிலும் தன்னோடு கூடயிருப்பார் என்னும் விசுவாசம் ஆபிராமுக்கு இல்லை.

ஆனாலும் ஆபிராம் விசுவாச வீரர்களில் ஒருவராக சொல்லப்பட்டிருக்கிறார். ஆபிராமிடத்தில் அவிசுவாசம் காணப்பட்டாலும், நாம் ஆபிராமின் விசுவாசத்தைப் புகழ்ந்துபேசுகிறோம். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள். ஆபிராமோ கர்த்தருக்கும் பயப்படுகிறார். எகிப்தியருக்கும் பயப்படுகிறார். ஆபிராமுக்கு கர்த்தர்மீது போதுமான அளவு விசுவாசமில்லை.

கர்த்தர் ஏற்கெனவே இரண்டு தரம் ஆபிராமுக்கு தரிசனமாகியிருக்கிறார். கர்த்தர் தம்முடைய மகிமையை ஆபிராமுக்கு வெளிப்படுத்தினார். கர்த்தருடைய மகிமையை தரிசித்தவர்கள், தேவனுடைய தெய்வீக பராமரிப்பை முழுநிச்சயத்தோடு நம்பவேண்டும். ஆனால் ஆபிராமோ எகிப்து தேசத்திலே வந்தபோது, எகிப்தியருக்கு பயப்படுகிறார். பார்வோனின் பிரபுக்கள் சாராயை, பார்வோனுடைய அரமனைக்கு கொண்டு போகிறார்கள்.

சாராய் நிமித்தம் பார்வோன் ஆபிராமுக்குத் தயைபாராட்டுகிறான்; பார்வோன் ஆபிராமுக்கு ஆடுமாடுகளும், கழுதைகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும், கோளிகைக் கழுதைகளும், ஒட்டகங்களும் கொடுக்கிறான் (ஆதி 12:16).

ஆபிராம் சாராயின் நிமித்தமாக தனக்கு கொடுக்கப்படும் வெகுமதிகளையெல்லாம் பெற்றுக் கொள்கிறார். ஆனாலும் பார்வோனிடத்தில் சாராயைப்பற்றிய உண்மையை சொல்லாமல் மவுனமாயிருக்கிறார். பெரிய புயல்காற்றில் கேதுரு மரமே அசைந்து முறிந்துவிழும்போது, சாதாரண நாணல் புல் நிலைத்து நிற்காது. சோதனையில் ஆபிராமே நிலை நிற்காதபோது, சாதாரண ஜனங்களால் விசுவாசத்தைக் காத்துக்கொள்வது மிகவும் கடினம்.

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன்
ஆதி 12:14-20

ஆதி 12:14. ஆபிராம் எகிப்திலே வந்தபோது, எகிப்தியர் அந்த ஸ்திரீயை மிகுந்த அழகுள்ளவளென்று கண்டார்கள்.

ஆதி 12:15. பார்வோனுடைய பிரபுக்களும் அவளைக் கண்டு, பார்வோனுக்கு முன்பாக அவளைப் புகழ்ந்தார்கள். அப்பொழுது அந்த ஸ்திரீ பார்வோனுடைய அரமனைக்குக் கொண்டுபோகப்பட்டாள்.

ஆதி 12:16. அவள் நிமித்தம் அவன் ஆபிரகாமுக்குத் தயைபாராட்டினான்; அவனுக்கு ஆடுமாடுகளும், கழுதைகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும், கோளிகைக் கழுதைகளும், ஒட்டகங்களும் கிடைத்தது.

ஆதி 12:17. ஆபிராமுடைய மனைவியாகிய சாராயின் நிமித்தம் கர்த்தர் பார்வோனையும், அவன் வீட்டாரையும் மகா வாதைகளால் வாதித்தார்.

ஆதி 12:18. அப்பொழுது பார்வோன் ஆபிராமை அழைத்து: நீ எனக்கு ஏன் இப்படிச் செய்தாய்? இவள் உன் மனைவி என்று நீ எனக்கு அறிவியாமற்போனதென்ன?

ஆதி 12:19. இவளை உன் சகோதரி என்று நீ சொல்லவேண்டுவது என்ன? இவளை நான் எனக்கு மனைவியாகக்கொண்டிருப்பேனே; இதோ உன் மனைவி; இவளை அழைத்துக்கொண்டுபோ என்று சொன்னான்.

ஆதி 12:20. பார்வோன் அவனைக் குறித்துத் தன் மனுஷருக்குக் கட்டளை கொடுத்தான்; அவர்கள் அவனையும், அவன் மனைவியையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் அனுப்பிவிட்டார்கள்.

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் மூலமாக சாராயிக்கு ஆபத்து வருகிறது. பார்வோனுடைய பிரபுக்கள், சாராயை பார்வோனுக்கு முன்பாக அழைத்துக்கொண்டு போகிறார்கள். சாராயும் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, ஆபிரகாம் தனக்கு சொன்ன பிரகாரம், தன்னை ஆபிரகாமின் சகோதரி என்று சொல்லுகிறாள். ஆகையினால் சாராய் பார்வோனுடைய அரமனைக்கு கொண்டு போகப்படுகிறாள்.

எஸ்தர் அகாஸ்வேரு ராஜாவின் அரமனைக்கு கொண்டுபோகப்பட்டதுபோல, சாராய் பார்வோனுடைய அரமனைக்கு கொண்டுபோகப்படுகிறாள்.

"ராஜாவின் கட்டளையும் தீர்மானமும் பிரசித்தமாகி, அநேகம் பெண்கள் கூட்டப்பட்டு, சூசான் அரமனையிலுள்ள யேகாயின் வசத்தில் ஒப்புவிக்கப்படுகிறபோது, எஸ்தரும் ராஜாவின் அரமனைக்கு அழைத்துக்கொண்டுபோகப்பட்டு, ஸ்திரீகளைக் காவல்பண்ணுகிற யேகாயின் வசத்தில்ஒப்புவிக்கப்பட்டாள்" (எஸ் 2:8).

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சாராயை அதிகமாய் நேசிக்கிறான். சாராயின் நிமித்தமாக பார்வோன் ஆபிராமுக்கும் தயவு பாராட்டுகிறான். அவன் ஆபிராமுக்கு ஏராளமான வெகுமதிகளை கொடுக்கிறான். ஆபிராமோ இந்த சூழ்நிலையிலும், சாராயைப்பற்றிய உண்மையைச் சொல்லாமல் அமைதியாயிருக்கிறார். ஆபிராம் தன் மனைவியாகிய சாராயை பாதுகாக்காவிட்டாலும், கர்த்தர் அவளை பாதுகாக்கிறார்.

சாராய் நிமித்தமாக பார்வோன் ஆபிராமுக்கு ஆடுமாடுகளையும், கழுதைகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும், கோளிகைக் கழுதைகளையும், ஒட்டகங்களையும் கொடுக்கிறான். ஆபிராமின் மனச்சாட்சி அவரைக் குற்றப்படுத்தியிருக்கும். ஏனெனில் ஆபிராம் பார்வோனை வஞ்சித்து இந்தச் சலுகைகளையெல்லாம் பெற்றுக்கொள்கிறார்.

ஆபிராமுடைய மனைவியாகிய சாராயின் நிமித்தம் கர்த்தர் பார்வோனையும், அவன் வீட்டாரையும் மகா வாதைகளால் வாதிக்கிறார் (ஆதி 12:17). கர்த்தரே தம்முடைய பிள்ளைகளை பாதுகாக்கிறார். கர்த்தர் நம்மைப் பாதுகாக்காவிட்டால், நாம் அழிந்துபோவது நிச்சயம். நம்முடைய நற்கிரியைகளுக்குத்தக்கதாக கர்த்தர் நமக்கு நன்மை செய்யாமல், தம்முடைய கிருபையின் நிமித்தமாக நமக்கு நன்மை செய்கிறார்.

பார்வோனுக்கு வந்தது எந்தவிதமான வாதைகள் என்று கூறப்படவில்லை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அபிமெலேக்குடைய வீட்டாரின் கர்ப்பங்களெல்லாம் அடைக்கப்பட்டு, அங்கு தேவனுடைய வாதை உண்டாயிற்று (ஆதி 20).

கர்த்தர் பார்வோனையும் அவன் வீட்டாரையும் மகாவாதையினால் வாதிப்பதினால், பார்வோன் சாராயிக்கு விரோதமாக பாவம் செய்யவில்லை. பார்வோனுடைய பாவமான கிரியைகளை கர்த்தர் தடுத்து நிறுத்துகிறார். விசுவாசிகளாகிய நாமும் சில சமயங்களில் கர்த்தரை விட்டு விலகி, பாவமான பாதையிலே செல்லுகிறோம். அப்போது கர்த்தர் நம்மையும் வாதைகளினால் வாதிக்கிறார். நாம் பாவமான பாதையிலே தொடர்ந்து முன்னேறிப்போகாதவாறு கர்த்தர் நம்மை தடுத்து நிறுத்துகிறார். நாம் செல்லவேண்டிய நீதியின் பாதையிலே கர்த்தர் நம்மை மறுபடியும் வழிநடத்துகிறார். கர்த்தர் நம்மை சிட்சிக்கும்போது, நாம் கர்த்தருடைய சிட்சையை அற்பமாய் நினைக்கக்கூடாது.

அப்பொழுது பார்வோன் ஆபிராமை அழைத்து: "நீ எனக்கு ஏன் இப்படிச் செய்தாய்? இவள் உன் மனைவி என்று நீ எனக்கு அறிவியாமற்போனதென்ன? இவளை உன் சகோதரி என்று நீ சொல்லவேண்டுவது என்ன? இவளை நான் எனக்கு மனைவியாகக்கொண்டிருப்பேனே; இதோ உன் மனைவி; இவளை அழைத்துக்கொண்டுபோ" (ஆதி 12:18,19) என்று சொல்லுகிறான்.

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் ஆபிராமைக் கடிந்துகொண்ட பின்பு, ஆபிராமின் மனைவியாகிய சாராளை அழைத்துக்கொண்டு போகுமாறு சொல்லுகிறான். பார்வோன் ஆபிராமை மென்மையாகக் கடிந்துகொண்டாலும் அவனுடைய வார்த்தையில் நீதியுள்ளது. பார்வோன் ஆபிராமை அழைத்து, "நீ எனக்கு ஏன் இப்படி செய்தாய்" என்று கேட்கிறான்.

பார்வோன் ஆபிராமோடு வழக்காடுகிறான். அவன் ஆபிராமை நோக்கி, "இவள் உன் மனைவி என்று நீ எனக்கு அறிவியாமற்போனதென்ன" என்று கேட்கிறான். ஒருவேளை ஆபிராம் சாராயை தன்னுடைய மனைவி என்று அறிவித்திருந்தால், பார்வோன் சாராயை தன்னுடைய அரமனைக்கு அழைத்துக் கொண்டு போகாமலிருந்திருப்பான்.

ஆபிராம் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனை ஒரு துஷ்டனாகவும், துன்மார்க்கனாகவும் பாவித்தான். ஆனால் பார்வோனோ ஒரு நீதிமானைப்போல பேசுகிறான். நம்முடைய அன்றாட ஜீவியத்தில், நாமும் பார்வோனைப்போன்ற சுபாவமுள்ள ஒரு சிலரைப் பார்க்கிறோம். அவர்களை துன்மார்க்கர் என்று நாம் நினைப்போம். ஆனால் அவர்களுடைய மனச்சாட்சி சுத்தமாயிருக்கும். அவர்கள் நீதிக்கும், நியாயத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து கண்ணியமாக நடந்துகொள்வார்கள்.

ஆபிராம் எதிர்பார்த்த பிரகாரம் பார்வோன் பேசவில்லை. ஆபிராமுக்கு இதனால் ஏமாற்றம் ஏற்பட்டிருக்கும். இந்த ஏமாற்றத்தினால் ஆபிராமுக்கு நன்மை உண்டாயிற்று. நாம் மற்றவர்களைக் குறித்து அவசரப்பட்டு நியாயந்தீர்க்கக்கூடாது. அன்பு சகலத்தையும் சகிக்கும். நாமும் மற்றவர்களோடு சகிப்புத் தன்மையோடு பழகவேண்டும்.

பார்வோன் ஆபிராமைக் குறித்து தன் மனுஷருக்கு கட்டளை கொடுக்கிறான். அவர்கள் ஆபிராமையும், அவருடைய மனைவியையும், அவருக்குண்டான எல்லாவற்றையும் அனுப்பிவிடுகிறார்கள் (ஆதி 12:20).

பார்வோன் ஆபிராமை அன்பாகவும், மரியாதையாகவும், தாராள மனப்பான்மையோடும் தன் தேசத்திலிருந்து அனுப்பி வைக்கிறான். பார்வோன் ஆபிராமின் மனைவியாகிய சாராயிக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை.

கானான் தேசத்தில் பஞ்சகாலம் முடிந்த பின்பு, ஆபிராம் தன் சொந்த தேசத்திற்கு திரும்பிப்போகிறார். அதுவரையிலும் அவர் சாராயோடுகூட எகிப்து தேசத்தில் தங்கியிருக்கிறார். எகிப்தியர் மூலமாக ஆபிரகாமுக்கோ, சாராயிக்கு ஒரு பிரச்சனையும் உண்டாகவில்லை. பார்வோன் ஆபிராமைக் குறித்து தன் மனுஷருக்கு கட்டளை கொடுத்திருப்பதினால், அவர்கள் ஆபிராமை கண்ணியமாக நடத்துகிறார்கள்.

கானான் தேசத்தில் பஞ்சகாலம் முடிந்துபோன பின்பு, ஆபிராம் எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்திற்கு புறப்பட்டுப்போகிறார். எகிப்தியர்கள் ஆபிராமையும், சாராயையும், அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும் அனுப்பிவிடுகிறார்கள். ஆபிராம் கானான் தேசத்திற்கு பாதுகாப்பாய்ப் போய்ச்சேர பார்வோன் உதவி செய்கிறான்.

ஆபிராம் எகிப்து தேசத்திலிருந்து விடுதலை பெற்று கானான் தேசத்திற்கு திரும்பிப்போகிறார். இந்த சம்பவம், இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, அந்த தேசத்திலிருந்து வெளியேறிப்போனதற்கு முன்னடையாளமாயிருக்கிறது.

கானான் தேசத்தில் பஞ்சம் ஏற்பட்டு, ஆபிராம் எகிப்து தேசத்திற்குப்போன 430 வருஷங்களுக்கு பின்பு, கானான் தேசத்திலே மறுபடியும் பஞ்சமுண்டாயிற்று. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திற்கு போகிறார்கள். அங்கே பார்வோன் அவர்களை அடிமைப்படுத்துகிறான். கர்த்தர் பார்வோனுக்கு வாதைகளைக் கொடுக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கிறார்.

எகிப்தின் எல்லா ராஜாக்களும் பார்வோன் என்று அழைக்கப்பட்டார்கள். எகிப்திலிருந்து கிரேக்கு தேசம் தனியாகப் பிரிந்த பின்பு, எகிப்தின் ராஜாக்கள் தால்மிகள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

ஆபிராமும், அவருடைய வித்தும் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு பலமுறை துரத்தி அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவற்றில் இது முதலாம் முறையாகும். (ஆதி 12:20; ஆதி 26:16; யாத் 11:8; 2இராஜா 17:25; லூக்கா 21:24).

கர்த்தர் பார்வோனின் கரத்திலிருந்து ஆபிராமையும், சாராயையும் விடுவித்ததுபோல, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேல் புத்திரரையும் விடுவிக்கிறார். கர்த்தருடைய கிருபை அவருடைய ஜனத்திற்கு என்றுமுள்ளது. கர்த்தருடைய கிருபையும், இரக்கமும், பாதுகாப்பும், பராமரிப்பும் நேற்றும், இன்றும், என்றும் மாறாமலிருக்கிறது.

13 அதிகாரம்

ஆபிராமின் சரித்திரம் இந்த அதிகாரத்திலும் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருக்கிறது. வாக்குத்தத்த தேசத்திலே ஆபிராமின் நிலமையும், அவருடைய சுபாவமும் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆபிராம் எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்திற்கு வருகிறார் (ஆதி 13:1,3,4,18). ஆபிராமின் ஐசுவரியம் (ஆதி 13:2). ஆபிராமின் பக்தி (ஆதி 13:4,18). ஆபிராமுக்கும் லோத்திற்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம். அவர்களுடைய ஐசுவரியமே வாக்குவாதத்திற்கு காரணம் (ஆதி 13:5,6).

ஆபிராம் சாதுரிய யோசனையினாலும், தெளிந்த புத்தியினாலும் வாக்குவாதத்தை தவிர்க்கிறார் (ஆதி 13:8,9). லோத்து ஆபிராமை விட்டுப் பிரிந்து சோதோமின் சமவெளிக்குப்போகிறார் (ஆதி 13:10-13).

கர்த்தர் ஆபிராமுக்கு மறுபடியும் தரிசனமாகி, கானான் தேசத்தை அவருக்கு வாக்குப்பண்ணுகிறார் (ஆதி 13:14-18).

கானான் தேசத்தில் ஆபிராம் ஆதி 13:1-4

ஆதி 13:1. ஆபிரகாமும், அவன் மனைவியும், அவனுக்கு உண்டான யாவும், அவனுடனே லோத்தும், எகிப்தை விட்டு, தென்திசையில் வந்தார்கள்.

ஆதி 13:2. ஆபிராம் மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளை உடைய சீமானாயிருந்தான்.

ஆதி 13:3. அவன் தன் பிரயாணங்களிலே தெற்கேயிருந்து பெத்தேல் மட்டும், பெத்தேலுக்கும் ஆயீக்கும் நடுவாகத் தான் முன்பு கூடாரம்போட்டதும்,

ஆதி 13:4. தான் முதல்முதல் ஒரு பலிபீடத்தை உண்டாக்கினதுமான ஸ்தலமட்டும் போனான்; அங்கே ஆபிராம் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான்.

ஆபிராம் எகிப்து தேசத்தைவிட்டு கானான் தேசத்திற்கு வருகிறார். அவருடனேகூட, அவருடைய மனைவி சாராயும், அவருக்கு உண்டான யாவும், லோத்தும் எகிப்தை விட்டு கானானுக்கு வருகிறார்கள் (ஆதி 13:1).

ஆபிராம் மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளை உடைய சீமானாயிருக்கிறார் (ஆதி 13:2). "சீமான்" என்பதற்கான எபிரெய வார்த்தைக்கு "பாரம்" அல்லது "மிகுதி" என்று பொருள். ஆபிராம் ஐசுவரியம் மிகுந்தவராயிருக்கிறார். ஐசுவரியம் நமக்கு எப்போதுமே பாரமாயிருக்கும்.

ஐசுவரியத்தை சம்பாதிக்கவேண்டும் என்பது ஒரு பாரம். சம்பாதித்த ஐசுவரியத்தை பாதுகாக்கவேண்டும் என்பது மற்றொரு பாரம். நம்மிடத்திலுள்ள ஐசுவரியத்தை செலவு பண்ணும்போது நமக்கு சோதனைகள் வரும். அதை தவறான வழிகளில் செலவுபண்ணுவதற்கு வாய்ப்புள்ளது. நம்முடைய ஐசுவரியத்தை தவறான வழியில் செலவுபண்ணும்போது நம்முடைய மனச்சாட்சி நம்மைக் குற்றப்படுத்தும்.

நம்மிடத்திலுள்ள ஐசுவரியம் நம்மைவிட்டுப்போய்விடுமோ என்னும் பயம் நமக்குள் இருக்கும். ஐசுவரியம் காணாமல் போய்விட்டால் அது நமக்கு மிகுந்த வேதனையாகவும், துக்கமாகவும், பாரமாகவும் இருக்கும். நம்மிடத்திலுள்ள ஐசுவரியத்தைக் குறித்து நாம் கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். இதுவும் நமக்கு ஒரு பாரம்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக பராமரிப்பினால், நீதிமான்களை ஐசுவரியவான்களாக்குகிறார். அவர்களுக்கு திரளான ஐசுவரியத்தைக் கொடுக்கிறார். சில சமயங்களில் நீதிமான்களிடத்தில் ஐசுவரியம் இருக்காது. அவர்கள் தரித்திரராயிருப்பார்கள். கர்த்தருடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவே மனுஷருக்கு ஐசுவரியம் வருகிறது.

ஐசுவரியவான் பரலோகத்தில் பிரவேசிப்பது மிகவும் கடினமான காரியம். ஐசுவரியவானால் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது என்று கிறிஸ்துவானவர் சொல்லவில்லை. அவன் பரலோகத்தில் பிரவேசிப்பது அரிதான காரியம் என்று மாத்திரமே எச்சரிப்பாக சொல்லியிருக்கிறார்.

"அப்பொழுது இயேசு சுற்றிப்பார்த்து, தம்முடைய சீஷரை நோக்கி: ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது என்றார். சீஷர்கள் அவருடைய வார்த்தைகளைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்: இயேசு பின்னும் அவர்களை நோக்கி: பிள்ளைகளே, ஐசுவரியத்தின் மேல்நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது!"(மாற் 10:23,24).

நம்மிடத்திலுள்ள ஐசுவரியத்தை ஜெபத்தோடும் பயபக்தியோடும் பயன்படுத்தினால், நம்மால் அநேக நன்மைகளை செய்ய முடியும். அதனால் கர்த்தருடைய நாமமும் மகிமைப்படும். கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கும் பிரயோஜனமுண்டாகும்.

ஆபிராம் தன் பிரயாணங்களிலே தெற்கேயிருந்து பெத்தேல் மட்டும், பெத்தேலுக்கும் ஆயீக்கும் நடுவாகத் தான் முன்பு கூடாரம்போட்டதும், தான் முதல்முதல் ஒரு பலிபீடத்தை உண்டாக்கினதுமான ஸ்தலமட்டும் போகிறார்; அங்கே ஆபிராம் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்கிறார் (ஆதி 13:3,4).

ஆபிராம் ஆஸ்திகளை உடைய சீமானாயிருக்கிறார். ஆபிராமே வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் முதலாவது ஐசுவரியவான். ஐசுவரியவானைப் பற்றி வேதாகமத்தில் கடைசியாக லூக்கா 18:23 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஆபிராம் பெத்தேலிலிருந்து எகிப்து தேசத்திற்கு புறப்பட்டுப்போனார். அவர் எந்த இடத்திலிருந்து புறப்பட்டு வந்தாரோ அந்த இடத்திற்கே திரும்பப்போய்விடுகிறார். கானானை விட்டு வெளியேறி வந்ததினால் ஆபிராமிற்கு ஒரு பிரயோஜனமும் இல்லை. (ஆதி 12:7-8).

ஆபிராம் எகிப்தில் பலிபீடம் கட்டியதாகவோ அல்லது அங்கே கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொண்டதாகவோ குறிப்பு எதுவுமில்லை.

ஆபிராம் இந்த ஸ்தலத்திலே ஏற்கெனவே கூடாரம் போட்டிருக்கிறார். இதன் நிமித்தமாக ஆபிராம் அங்கே வருகிறார். அது மாத்திரமல்ல இந்த ஸ்தலத்தில்தான் ஆபிராம் முதன் முதலில் ஒரு பலிபீடத்தை உண்டாக்கினார். இதன் நிமித்தமாகவும் ஆபிராம் அங்கே வருகிறார்.

அநேக நாட்களுக்கு பின்பு கர்த்தர் யாக்கோபை இதே ஸ்தலத்திற்கு அனுப்புகிறார்.

"தேவன் யாக்கோபை நோக்கி: நீ எழுந்து பெத்தேலுக்குப் போய், அங்கே குடியிருந்து, நீ உன் சகோதரனாகிய ஏசாவின் முகத்திற்கு விலகி ஓடிப்போகிறபோது, உனக்குத் தரிசனமான தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்கு என்றார்" (ஆதி 35:1).

நாம் கர்த்தரோடு செய்துகொண்ட பொருத்தனைகளை நினைவுகூரவேண்டும். அவற்றை நினைவில் வைத்திருந்தால்தான், நம்மால் அவற்றை நிறைவேற்ற முடியும். நாம் கர்த்தரோடு எந்த ஸ்தலத்தில் பொருத்தனைபண்ணினோம் என்பதை நினைவில் வைத்திருந்தால், பொருத்தனையையும் மறவாமல் நினைவில் வைத்திருப்போம். நாம் கர்த்தரோடு பொருத்தனை பண்ணின ஸ்தலத்திற்கு திரும்பவும்போய், நம்முடைய பொருத்தனைகளைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும்.

ஆபிராம் முதன் முதல் ஒரு பலிபீடத்தை உண்டாக்கின ஸ்தலம் மட்டும் திரும்பவும்போய், அங்கே கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்கிறார். கர்த்தரை எல்லா இடத்திலும் தொழுதுகொள்ளலாம். நாம் அவரை ஏற்கெனவே தொழுதுகொண்ட இடத்தில், மறுபடியுமாய் அவரைத் தொழுதுகொள்வது, நமக்கு கிடைக்கும் மிகப்பெரிய சிலாக்கியம்.

ஆபிராம் முதன் முதலில் ஒரு பலிபீடத்தை உண்டாக்கின ஸ்தலத்திற்கு திரும்பவும் போகிறார். ஆனால் அங்கே அவர் உண்டாக்கின பலிபீடம் இல்லை. அந்தப் பலிபீடத்திற்கு என்ன ஆயிற்று என்பதும் தெரியவில்லை. ஆகையினால் ஆபிராமால் அங்கே கர்த்தருக்கு பலிசெலுத்த முடியவில்லை. ஆனாலும் அங்கே ஆபிராம் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்கிறார்.

ஆபிராம் கர்த்தரைத் தொழுதுகொள்ளும் பழக்கத்தை உடையவர். அவர் ஒருபோதும் கர்த்தரைத் தொழுதுகொள்வதை மறக்கவில்லை. "பின்பு அவன் அவ்விடம்விட்டுப் பெயர்ந்து, பெத்தேலுக்குக் கிழக்கே இருக்கும் மலைக்குப் போய், பெத்தேல் தனக்கு மேற்காகவும் ஆயீ கிழக்காகவும் இருக்கக் கூடாரம்போட்டு, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டார்" (ஆதி 12:8).

ஆபிராம் எகிப்து தேசத்திற்குப் போனதினால் கர்த்தரை மறந்துவிடவில்லை. அவர் கர்த்தரைப்பற்றிய நினைவுகளை எகிப்து தேசத்திலேயே விட்டுவிட்டு, கர்த்தரைப்பற்றிய நினைவு இல்லாமல் கானான் தேசத்திற்கு வரவில்லை. ஆபிராம் எங்கே பிரயாணம்பண்ணினாலும், அவர் கர்த்தரோடுகூடவே பிரயாணம்பண்ணுகிறார்.

வாக்குவாதம்
ஆதி 13:5-9

ஆதி 13:5. ஆபிராமுடனே வந்த லோத்துக்கும் ஆடுமாடுகளும் கூடாரங்களும் இருந்தன.

ஆதி 13:6. அவர்கள் ஒருமித்துக் குடியிருக்க அந்தப் பூமி அவர்களைத் தாங்கக்கூடாதிருந்தது; அவர்களுடைய ஆஸ்தி மிகுதியாயிருந்தபடியால், அவர்கள் ஒருமித்து வாசம்பண்ண ஏதுவில்லாமற்போயிற்று.

ஆதி 13:7. ஆபிராமுடைய மந்தைமேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தைமேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. அக்காலத்திலே கானானியரும் பெரிசியரும் அத்தேசத்தில் குடியிருந்தார்கள்.

ஆதி 13:8. ஆபிராம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர்.

ஆதி 13:9. இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன் என்றான்.

ஆபிராமும் லோத்தும் இதுவரையிலும் ஒற்றுமையாயிருந்தார்கள். ஆபிராம் எங்கே போனாலும், லோத்தும் அவரோடு கூடவே பிரயாணம்பண்ணினார். அவர்கள் இதுவரையிலும் பிரிக்க முடியாத உறவினர்களாயிருந்தார்கள். ஆனால் இப்போது ஆபிராமுடைய மந்தை மேய்ப்பருக்கும், லோத்துடைய மந்தை மேய்ப்பருக்கும் வாக்குவாதமுண்டாயிற்று. அவர்களுடைய ஐசுவரியமே வாக்குவாதத்திற்கு காரணம்.

ஆபிராமுடனே வந்த லோத்துக்கும் ஆடுமாடுகளும் கூடாரங்களும் இருக்கிறது. அவர்கள் ஒருமித்துக் குடியிருக்க அந்தப் பூமி அவர்களைத் தாங்கக்கூடாதிருக்கிறது; அவர்களுடைய ஆஸ்தி மிகுதியாயிருந்தபடியால், அவர்கள் ஒருமித்து வாசம்பண்ண ஏதுவில்லாமற்போயிற்று (ஆதி 13:5,6).

ஐசுவரியம் அதிகரிக்கும்போது வாக்குவாதங்களும், சண்டைகளும், பேதங்களும், போட்டிகளும், பொறாமைகளும் உண்டாகிறது. ஆபிராமும் லோத்தும் கானான் தேசத்திலே பஞ்சத்தை அனுபவித்தவர்கள். அவர்கள் போஜனத்திற்காக எகிப்து தேசத்திற்குப் போனார்கள். அவர்கள் பசியோடும், பட்டினியோடும் இருந்தபோது அவர்களுக்குள் வாக்குவாதம் உண்டாகவில்லை. அவர்கள் ஒவ்வொரு ஊராக பரதேசியைப்போல சுற்றி அலைந்தபோது அவர்களுக்குள்ளே சண்டைகளும், பிரிவினைகளும் ஏற்படவில்லை. தரித்திரம் அவர்களைப் பிரிக்கவில்லை. ஆனால் இப்போது ஐசுவரியம் அவர்களை பிரித்துவிடுகிறது.

உலகப்பிரகாரமான சிநேகிதர்கள் தங்களுக்குள்ளே சண்டைபோட்டு சீக்கிரத்தில் பிரிந்துவிடுகிறார்கள். கர்த்தர் நம்முடைய சிநேகிதராயிருக்கிறார். அவருடைய அன்பு ஒருபோதும் மாறுவதில்லை. அவருடைய சிநேகமும் நம்மைவிட்டு விலகுவதில்லை. நாம் ஐசுவரியவான்களாயிருந்தாலும், தரித்திரராயிருந்தாலும் கர்த்தர் நம்மீது வைத்திருக்கும் அன்பு மாறாத அன்பாயிருக்கிறது. கர்த்தருடைய அன்பின் நீளத்தையும், அகலத்தையும், ஆழத்தையும் நம்மால் அளக்க முடியாது. கிறிஸ்துவின் அன்பை விட்டு எதுவும் தன்னைப் பிரிக்காது என்று அப்போஸ்தலர் பவுல் சொல்லுகிறார்.

ஆபிராமுடைய மந்தைமேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தைமேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று (ஆதி 13:7). யாருடைய மந்தைக்கு நல்ல மேய்ச்சல் நிலம் கிடைக்கவேண்டும் என்பதிலும், யாருடைய மந்தைக்கு நல்ல தண்ணீர் கொடுக்கப்படவேண்டும் என்பதிலும் அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகளும், வாக்குவாதங்களும் உண்டாயிற்று.

கானானியரும் பெரிசியரும் அத்தேசத்தில் குடியிருக்கிறார்கள். கானான் தேசத்தில் இராட்சதர்கள் குடியிருக்கிறார்கள். கானான் தேசத்தைத் தேவன் தமது பிள்ளைகளுக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார். அத்தேசத்தில்தான் இராட்சதர்கள் இருக்கிறார்கள். (ஆதி 13:7; ஆதி 12:6).

ஆதி 11:27-19:36 ஆகிய வசனங்களுக்கு வெளியே லோத்தின் பெயர் ஏழு தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்குப் பாடமாக லோத்தின் பெயர் கூறப்படுகிறது. (லூக்கா 17:28-32; 2பேதுரு 2:7). லோத்து பலவேளைகளில் தன் ஜீவியத்தில் தோல்வியடைந்திருந்தாலும் அவர் காமவிகார நடக்கையில் கலந்து கொள்ளாமல் தன்னைக் காத்துக் கொள்கிறார். (ஆதி 19; ரோமர் 1:24-32) 2பேதுரு 2:7-8 ஆகிய வசனங்களில் லோத்து நீதியுள்ளவனென்றும், நீதிமானென்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஆபிராமின் மனப்பாங்கிற்கும், லோத்தின் மனப்பாங்கிற்கும் வேறுபாடு தெரிகிறது. ஆபிராம் சுயநலமில்லாமல் பேசுகிறார். (ஆதி 13:7-13; ஆதி 14:11-12,16-24; ஆதி 18:16-19:38).

"இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது" என்னும் இதே கருத்து புதிய ஏற்பாட்டிலும் ஆலோசனையாகக் கூறப்பட்டிருக்கிறது (எபே 4:1-3; பிலி 2:1-4).

அக்காலத்தில் கானான் தேசத்தில் கானானியரும் பெரிசியரும் குடியிருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே ஆபிரகாமுடைய மந்தை மேய்ப்பரும், லோத்துடைய மந்தை மேய்ப்பரும் வாக்குவாதம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் புறஜாதியார் மத்தியிலே வாக்குவாதம்பண்ணுவது மிகவும் ஆபத்தானது. இதனால் கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படும்.

கானானியரும் பெர்சியரும் கர்த்தருடைய சத்துருக்கள். ஆபிரகாமின் மேய்ப்பரும், லோத்தின் மேய்ப்பரும் புறஜாதியாருக்கு முன்பாக, கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்களாகவும் கர்த்தருக்கு சாட்சியாகவும் ஜீவிக்கவேண்டும். ஆனால் அவர்களோ தங்களுக்குள்ளே வாக்குவாதம்பண்ணி, சண்டை போட்டுக்கொள்கிறார்கள்.

கர்த்தருடைய ஜனம் வாக்குவாதம்பண்ணாமல், சண்டை போடாமல் சமாதானமாயிருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்க வேண்டும். விசுவாசிகள் தங்களுக்குள்ளே ஐக்கியத்தையும், சமாதானத்தையும் காத்துக்கொள்ளவேண்டும். விசுவாசிகள் சண்டை போட்டு பிரிந்துவிடக்கூடாது. ஒருவேளை விசுவாசிகளுக்குள்ளே வாக்குவாதம் ஏற்பட்டால், அவர்கள் தங்களுடைய கருத்து வேறுபாடுகளை பேசி தீர்த்துக்கொள்ளவேண்டும். விசுவாசிகள் சமாதானத்தை நாடவேண்டும். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்.

ஆபிரகாமுடைய மந்தை மேய்ப்பருக்கும், லோத்துடைய மந்தை மேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டானபோது, அவர்கள் மத்தியிலே சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஆபிராம் முன்வருகிறார்.

ஆபிராம் லோத்தை நோக்கி: "எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர். இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன்" (ஆதி 13:8,9) என்று சொல்லுகிறார்.

ஆபிராம் லோத்தோடு சொல்லுகிற முதல் வாக்கியமே, "வாக்குவாதம் வேண்டாம்" என்பதே ஆகும். மெதுவான பிரதியுத்தரம் கோபத்தைக் குறைக்கும். இந்த சத்தியம் ஆபிராமுக்கு தெரியும். ஆபிராம் லோத்தோடு ஒப்புரவாக விரும்புகிறார். கர்த்தருடைய ஜனம் சமாதானம்பண்ணுகிறவர்களாயிருக்கவேண்டும். நாம் ஒருபோதும் யாரோடும் சண்டை போடுகிறவர்களாயிருக்கக்கூடாது. மற்றவர்கள் நமக்கு விரோதமாக சண்டைபோட்டாலும், நாம் சமாதானத்தையே நாடவேண்டும்.

ஆபிராம் லோத்தோடு மிகவும் யதார்த்தமாகப் பேசுகிறார். "எனக்கும் உனக்கும் வாக்குவாதம் வேண்டாம்" என்று சொல்லுகிறார். ஆபிராமும் லோத்தும் வாக்குவாதம்பண்ணினால், கானான் தேசத்திலே குடியிருக்கிற கானானியரும் பெரிசியரும் அவர்களை ஏளனம்பண்ணுவார்கள். அவர்கள் கர்த்தருடைய நாமத்தை தூஷிப்பார்கள். கர்த்தருடைய நாமம் புறஜாதியார் மத்தியிலே தூஷிக்கப்படுவதற்கு ஆபிராமும் லோத்தும் காரணமாயிருப்பார்கள்.

இந்தப் பூமி தங்களுக்கு நித்திய நகரமல்ல என்பது ஆபிராமுக்கு தெரியும். அவர் இதைவிட மேலான தேசமாகிய பரமதேசத்தை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார். பரலோகத்திற்கு போகும் நாளுக்காக கர்த்தருடைய ஜனம் இந்தப் பூமியிலே காத்துக்கொண்டிருக்கிறார்கள். கர்த்தருக்காக காத்திருக்கிறவர்கள் சண்டைபோடுகிறவர்களாக இருக்கக்கூடாது. அவர்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாயிருக்கவேண்டும்.

மற்றவர்கள் நமக்கு விரோதமாக சண்டைபோட வந்தாலும், நாம் நம்முடைய பழைய சிநேகிதத்தை நினைவுகூரவேண்டும். பழைய சிநேகத்தைப்பற்றிய நினைவு புதிய வாக்குவாதங்களை முடிவுக்கு கொண்டு வரும்.

தனக்கும் லோத்திற்கும் இடையே உள்ள உறவையும் ஐக்கியத்தையும் ஆபிராம் நினைவுகூருகிறார். "எனக்கும் உனக்கும் வாக்குவாதம் வேண்டாம், நாம் சகோதரர்" என்று ஆபிராம் லோத்திடம் சொல்லுகிறார். சகோதரர்கள் சகோதர சிநேகத்தை நினைவுகூரவேண்டும். அவர்கள் சகோதர பாசத்தின் பிரமாணத்தினால் தங்களை ஆளுகை செய்துகொள்ளவேண்டும். நாம் மனுஷர்கள். நாம் பெரியவர்கள். குழந்தைகளல்ல. நாம் சகோதரர்கள்.

சண்டைபோடுகிற மனுஷர்கள் மனுஷசுபாவமுள்ளவர்கள். நாம் எல்லோருமே ஒரே இனத்தையும், ஒரே குடும்பத்தையும் சேர்ந்தவர்கள். நம் எல்லோருக்கும் கர்த்தர் ஒருவர் மாத்திரமே தேவனாயிருக்கிறார். நாம் எல்லோரும் கர்த்தருக்கு கீழ்ப்படியவேண்டியவர்கள். நாம் நீடிய பொறுமையினால் நம்முடைய சகோதர சிநேகத்தைக் காத்துக்கொள்ளவேண்டும். சண்டைகளையும் வாக்குவாதங்களையும் தவிர்க்கவேண்டும்.

ஆபிராம் லோத்தோடு மென்மையான பிரதியுத்தரம் சொல்லுகிறார். அவர்கள் சமாதானமாயிருப்பதற்கான வழிவகைகளையும் சொல்லுகிறார். அவர்கள் வாக்குவாதம்பண்ண வேண்டிய அவசியமே இல்லை. இந்த தேசமெல்லாம் அவர்களுக்கு முன்பாக இருக்கிறது. அவர்களுடைய மந்தைகளை கொழுமையாக மேய்ப்பதற்கு தேவையான இடம் இந்தப் பூமியிலே உள்ளது. இந்த தேசமெல்லாம் அவர்களுக்குப் போதுமானது. இந்த தேசத்தில் யார் எங்கே தங்களுடைய மந்தையை மேய்க்கவேண்டும் என்பதை அவர்கள் தீர்மானம்பண்ணிக்கொள்ள வேண்டும்.

ஆபிராம் லோத்தை நோக்கி, " இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன்" (ஆதி 13:9) என்று சொல்லுகிறார்.

ஆபிராம் லோத்திற்கு விட்டுக்கொடுக்கிறார். லோத்து ஆபிராமைவிட வயதில் இளையவராகயிருந்தாலும், அவரே முதலாவதாக தீர்மானம்பண்ணுவதற்கு ஆபிராம் விட்டுக்கொடுக்கிறார். "நீ என்னைவிட்டு பிரிந்துபோகலாம்" என்று சொல்லுகிறார்.

ஆபிராம் லோத்தை நோக்கி, "நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்" என்று சொல்லுகிறார். தான் எந்த திசையில் போகவேண்டும் என்பதை ஆபிராம் தீர்மானம்பண்ணவில்லை. தீர்மானம்பண்ணும் உரிமையை ஆபிராம் லோத்திற்கு விட்டுக்கொடுக்கிறார். தனக்கும் லோத்திற்கும் வாக்குவாதம் ஏற்படக்கூடாது. தங்களுக்குள் சமாதானம் இருக்கவேண்டும். இதுவே ஆபிராமின் விருப்பம். இதற்காக ஆபிராம் விட்டுக்கொடுத்து பேசுகிறார். ஆபிராமிடத்தில் பெருமையில்லை.

சோதோமிலே லோத்து
ஆதி 13:10-13

ஆதி 13:10. அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்குமுன்னே, சோவாருக்குப் போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் இருந்தது.

ஆதி 13:11. அப்பொழுது லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையும் தெரிந்துகொண்டு, கிழக்கே பிரயாணப்பட்டுப்போனான்; இப்படி அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தார்கள்.

ஆதி 13:12. ஆபிராம் கானான் தேசத்தில் குடியிருந்தான்; லோத்து அந்த யோர்தானுக்கு அருகான சமபூமியிலுள்ள பட்டணங்களில் வாசம்பண்ணி, சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான்.

ஆதி 13:13. சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகாபாவிகளுமாய் இருந்தார்கள்.

லோத்து ஆபிராமைவிட்டு பிரிகிறார். ஆபிராம் லோத்தை நோக்கி, "எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர். இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன்" (ஆதி 13:8,9) என்று சொன்னார்.

லோத்து எந்த திசையில் வேண்டுமானாலும் போகலாம். லோத்தின் தீர்மானத்தை ஆபிராம் ஏற்றுக்கொள்வார். ஆபிராமிடத்தில் சுயநலமில்லை. சுயநலமும் பொறாமையும் மனுஷரை துன்மார்க்கராக மாற்றுகிறது.

லோத்து தன்னுடைய கண்களின் இச்சைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்காண்கிறார். அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் இருக்கிறது (ஆதி 13:10).

லோத்து யோர்தானுடைய சமபூமியை நோக்கிப் பார்க்கிறார். சோதோம் அந்த சமபூமியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கிறது. இங்கே குடியேறினால் தனக்கு நல்ல நீராதாரமும், நல்ல விளைச்சலும் கிடைக்கும் என்று லோத்து எதிர்பார்க்கிறார். சமபூமியில் விளைந்திருக்கிற விருட்சங்கள் ஏராளமான கனிகளைக் கொடுக்கிறது. லோத்து இந்த சமபூமியில் குடியேறினால், மெய்யாகவே அவருக்கு செழிப்பு வரும். அவருடைய ஐசுவரியம் விருத்தியாகும்.

லோத்து ஐசுவரியத்தின் விருத்தியை மாத்திரமே பார்க்கிறார். மனுஷனுக்கு ஐசுவரியம் மாத்திரம் இருந்தால் போதாது. லோத்து யோர்தானுக்கு அருகாமையிலுள்ள சமபூமியின்மீது ஆசைப்பட்டு அங்கு வந்து குடியேறுகிறார். அவருக்கு ஐசுவரியம் கிடைக்கிறது. ஆனால் அந்த ஐசுவரியம் அவருக்கு நிலைத்திருக்கவில்லை.

சோதோம் ஊர் ஜனங்கள் துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்கள் லோத்திற்கு முட்களைப்போல துன்பம் கொடுக்கிறார்கள். சத்துருக்கள் சோதோம் தேசத்தின்மீது யுத்தம்பண்ண வருகிறார்கள். அவர்கள் லோத்தையும் அவருக்கு உண்டான எல்லாவற்றையும் சிறைப்பிடித்து கொண்டு போய்விடுகிறார்கள். லோத்து ஐசுவரியத்தின்மீது ஆசைப்பட்டார். ஆனால் அவருடைய ஐசுவரியமெல்லாம் கொள்ளையாய்ப்போயிற்று.

யோர்தான் நதிக்கு அருகான சமபூமி நீர்வளம் பொருந்தினதாயிருக்கிறது. லோத்து அந்த சமபூமியின்மீது ஆசைப்பட்டார். அங்குதான் சோதோம் பட்டணமும் கட்டப்பட்டிருக்கிறது. கர்த்தரோ அந்தப் பட்டணத்தின்மீது அக்கினியை வருஷிக்கப்பண்ணி அதை அழித்துப்போடுகிறார். நீர்வளம் மிகுந்த சமபூமி அக்கினியினால் அழிக்கப்படுகிறது. லோத்தோ தன்னுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ள, அருகாமையிலுள்ள மலைக்கு ஓடிப்போகிறார். ஐசுவரியத்திற்காகவும், சந்தோஷத்திற்காகவும் லோத்து சமபூமிக்கு வந்தார். ஆனால் முடிவிலே லோத்து தன் ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ள மலைக்கு ஓடிப்போகிறார்.

நாம் மாம்சப்பிரகாரமாக எடுக்கும் தீர்மானங்கள் பாவமான தீர்மானங்களாயிருக்கும். மாம்சப்பிரகாரமாய் சிந்திக்கிறவர்களும், உலகப்பிரகாரமாய் தீர்மானம்பண்ணுகிறவர்களும் அவசரப்பட்டு முடிவு பண்ணுவார்கள். சில சமயங்களில் அவர்களுடைய அவசரத்தினால் பாதிப்பு ஏற்படாது. ஆனாலும் அவசரப்பட்டு எடுக்கிற மாம்சப்பிரகாரமான முடிவுகள் எப்போதுமே நன்மையாயிருப்பதில்லை. அது தீமையில் முடியும்.

நம்முடைய ஆத்துமாவுக்கு எது நன்மையைத் தருகிறதோ, அதுவே நமக்கு நன்மையான தீர்மானம். நாம் எந்தக் காரியத்தில் தீர்மானம்பண்ணினாலும், நம்முடைய மாம்சத்தின் இச்சைகளுக்கும் ஆசைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், நம்முடைய ஆத்துமாவின் நன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கிறது. கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்குமுன்னே, சோவாருக்குப் போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் இருக்கிறது.

லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமியின்மீது ஆசைப்படுகிறார். லோத்து எந்தப் பக்கம் வேண்டுமானாலும் போகலாம் என்று ஆபிராம் சொன்னார்.

அப்பொழுது லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையும் தெரிந்து கொண்டு, கிழக்கே பிரயாணப்பட்டுப் போகிறார்; இப்படி அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிகிறார்கள். ஆபிராம் கானான் தேசத்தில் குடியிருக்கிறார்; லோத்து அந்த யோர்தானுக்கு அருகான சமபூமியிலுள்ள பட்டணங்களில் வாசம்பண்ணி, சோதோமுக்கு நேரே கூடாரம் போடுகிறார் (ஆதி 13:11,12).

சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகாபாவிகளுமாய் இருக்கிறார்கள் (ஆதி 13:13). யோர்தானுக்கு அருகான சமபூமி நீர்வளம் பொருந்தினதாயிருக்கிறது. ஆனால் அங்கே வாசம்பண்ணுகிற ஜனங்களோ பொல்லாத பாவிகளாயிருக்கிறார்கள். தேசம் நல்ல தேசமாயிருந்தாலும், அங்கே குடியிருக்கிற ஜனங்கள் துன்மார்க்கராயிருக்கிறார்கள்.

சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகாபாவிகளுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஜனங்களோடு இருக்கவேண்டுமென்று லோத்து தெரிந்தெடுக்கிறார். அதற்கான பலனையும் லோத்து அனுபவிக்கிறார். (ஆதி 19:1-38) ஓரினச்சேர்க்கையும், மற்ற காமவிகாரங்களும் மகா பெரிய பாவங்களாக வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

சோதோமின் பாவங்களைத் தேவனால் தாங்கிக் கொள்ள முடியாது. காமவிகாரத்தில் மூழ்கியிருந்த இந்தப் பட்டணங்களை அழித்து, மற்ற ஜனங்களுக்கு பாடம் கற்றுத்தர தேவன் சித்தம் கொண்டார். அவர்களுடைய ஜீவிய முறைமைகளைப் பின்பற்றுவோருக்கும் நித்திய நரகத்தை ஆக்கினைத்தீர்ப்பாகத் தந்தார் (ஆதி 18:20; ஆதி 19:5,13; ஏசா 3:9; ரோமர் 1:18-32; 2பேதுரு 2; யூதா 1:7-19).

சோதோம் பட்டணத்திலே ஏராளமான கனிவிருட்சங்கள் இருக்கிறது. இவற்றிற்கு மத்தியிலே வாசம்பண்ணுகிற சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களாகவும், கர்த்தருக்கு முன்பாக மகாபாவிகளாகவும் இருக்கிறார்கள். லோத்து சோதோமுக்கு நேரே கூடாரம் போடுகிறார். அவர் யோர்தானுக்கு அருகான சமபூமியிலுள்ள பட்டணங்களில் வாசம்பண்ணுகிறார்.

ஆபிராமோ கானான் தேசத்தில் குடியிருக்கிறார். கானான் தேசம் பர்வதங்கள் நிரம்பிய தேசம். அந்த தேசத்தில் யோர்தானுக்கு அருகான சமபூமியிலுள்ள பட்டணங்களைப்போல நீர்வளம் அதிகமாயில்லை. ஆனாலும் ஆபிராம் கானான் தேசத்தில் குடியிருக்கிறார்.

லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமியிலுள்ள பட்டணங்களில் வாசம்பண்ணுவது, அந்தப் பட்டணத்தாருக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய ஆசீர்வாதம். லோத்து ஒரு நீதிமான். அவர் கர்த்தருடைய சத்தியத்தை ஜனங்களுக்கு பிரசங்கம்பண்ணுவார். லோத்து தேவனுடைய நீதியையும் நியாயத்தையும் ஜனங்களுக்கு அறிவிப்பார். சோதோமின் ஜனங்கள் லோத்தின் பிரசங்கத்தைக் கேட்டு தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வாய்ப்பு கிடைக்கும்.

லோத்து சோதோமின் குடிகள் மத்தியிலே கர்த்தருடைய தீர்க்கதரிசியைப்போல வாசம்பண்ணுகிறார். சோதோமின் ஜனங்கள் லோத்தின் பிரசங்க வார்த்தைகளுக்கு செவிகொடுத்து, தங்களுடைய பாவத்தைவிட்டு விலகி, பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தையைக்கேட்டால் அவர்களுடைய இருதயம் புதுப்பிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. சோதோமின் ஜனங்கள் மனந்திரும்பினால் கர்த்தர் அந்தப் பட்டணத்தை அழிக்கமாட்டார்.

சோதோமின் ஜனங்களுக்கு நன்மை உண்டாகவே லோத்து சோதோமுக்கு நேரே கூடாரம்போடுகிறார். ஆனால் சோதோமின் ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பினால் சோதோம் கொமோரா ஆகிய பட்டணங்கள்மீது, வானத்திலிருந்து அக்கினியை வருஷிக்கப்பண்ணி, அந்தப் பட்டணங்களையும், அதிலுள்ள ஜனங்களையும் அழித்துப்போடுகிறார்.

ஆபிராமுக்கு கர்த்தருடைய வாக்குத்தத்தம் ஆதி 13:14-18

ஆதி 13:14. லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்த பின்பு, கர்த்தர் ஆபிராமை நோக்கி: உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார்.

ஆதி 13:15. நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து,

ஆதி 13:16. உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும்.

ஆதி 13:17. நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்துதிரி; உனக்கு அதைத் தருவேன் என்றார்.

ஆதி 13:18. அப்பொழுது ஆபிராம் கூடாரத்தைப் பெயர்த்துக்கொண்டுபோய், எபிரோனிலிருக்கும் மம்ரேயின் சமபூமியில் சேர்ந்து குடியிருந்து, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான்.

கர்த்தர் ஆபிராமுக்கு தம்முடைய வாக்குத்தத்தை ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். இப்போது கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்த வார்த்தைகளை ஆபிராமுக்கு மறுபடியுமாய் உறுதிபண்ணுகிறார். கர்த்தர் தம்முடைய கிருபையினால் ஆபிராமை சந்திக்கிறார்.

லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்துபோய்விட்டார். லோத்துக்கும் ஆபிராமுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் முடிந்து போயிற்று. ஆபிராமுக்கும் லோத்திற்கும் இடையே வாக்குவாதம் நீங்கி, சமாதானம் ஏற்படுவதற்கு, ஆபிராம் தன்னைத் தாழ்த்துகிறார். அவர் தன்னுடைய சுயத்தை வெறுக்கிறார். லோத்து எந்தப் பக்கம் வேண்டுமானாலும் போகலாம் என்று ஆபிராம் அவருக்கு சொல்லுகிறார். லோத்தும் ஆபிராமைவிட்டுப் பிரிந்து போகிறார்.

லோத்து தன்னை விட்டுப் பிரிந்துபோனது ஆபிராமுக்கு மனவேதனையாயிருக்கிறது. லோத்தின் குடும்பத்தாரும் ஆபிராமின் குடும்பத்தாரும் உறவினர்கள். லோத்து ஆபிராமின் சகோதரனுடைய குமாரன். தன்னுடைய உற்றார் உறவினர் தன்னைவிட்டுப் பிரிந்துபோனதினால் ஆபிராமின் இருதயத்தில் வருத்தமும், சோகமும் உண்டாயிற்று. இந்த சூழ்நிலையில் கர்த்தர் ஆபிராமை சந்தித்து அவருக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லுகிறார்.

லோத்து நீர்வளம் மிகுந்த சமபூமியை தெரிந்தெடுத்திருக்கிறார். ஆபிராமோ கானான் தேசத்தில் குடியிருக்கிறார். சோதோமைப்போல கானான் தேசம் நீர்வளம் மிகுந்ததல்ல. ஆனாலும், கர்த்தருடைய ஆசீர்வாதம் கானான் தேசத்தில் தங்கியிருக்கிறது.

லோத்து தெரிந்தெடுத்த சமபூமி கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் செழிப்பாயிருக்கிறது. ஆனாலும் ஆபிராம் தெரிந்தெடுத்த கானான் தேசமே வாக்குத்தத்த தேசமாயிருக்கிறது.

கர்த்தர் ஆபிராமுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். அவருக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களைச் சொல்லி அவரை உற்சாகப்படுத்துகிறார். கர்த்தர் ஆபிராமுக்கு இரண்டு ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார். அவையாவன : 1. நல்ல தேசம். 2. பூமியின் தூளைப்போல பெருகியிருக்கும் சந்ததி.

கானான் தேசம் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட தேசம். இது கர்த்தருடைய பரிசுத்த தேசம். எல்லா தேசங்களையும்விட, கானான் தேசமே கர்த்தருடைய பார்வையில் விசேஷமாயிருக்கிறது. கர்த்தர் ஆபிராமிடம் கானான் தேசத்தை நோக்கிப் பார்க்குமாறு சொல்லுகிறார்.

தேவன் ஆபிராமுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளைக் கூறுகிறார். லோத்து ஆபிராமை விட்டுப் பிரியும் வரையிலும் காத்திருந்து, அவர் பிரிந்துபோன பின்பு, வாக்குத்தத்த தேசத்தைப் பற்றி தேவன் வெளிப்படுத்துகிறார் (எண் 23:9).

கர்த்தர் ஆபிராமை நோக்கி: "உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார்" (ஆதி 13:14) என்று சொல்லுகிறார். ஆபிராம் பார்க்கிற இந்தப் பூமி முழுவதும், கர்த்தர் அவருக்கும் அவருடைய சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார் (ஆதி 13:15). கானான் தேசம் கர்த்தருடைய வாக்குத்தத்த தேசம். கர்த்தர் இந்த நல்ல தேசத்தை, ஆபிராமுக்கும் அவருடைய சந்ததிக்கும் சுதந்தரமாகக் கொடுக்கிறார்.

ஆபிராமுக்கு கானான் தேசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவருக்கு இன்னும் பிள்ளை பிறக்கவில்லை. சாராய் பல வருஷங்களாக பிள்ளை பெறாத மலடியாயிருக்கிறாள். ஆபிராமுக்கு பெரிய தேசம் கொடுக்கப்பட்டாலும், அந்த தேசத்தை அனுபவிப்பதற்கு, ஆபிராமுக்கு இன்னும் சந்ததி உண்டாகவில்லை. கர்த்தர் ஆபிராமுக்கு பெரிய சந்ததியைக் கொடுப்பதாகவும் வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தர் ஆபிராமை நோக்கி, "உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும்" (ஆதி 13:16) என்று சொல்லுகிறார்.

வாக்குத்தத்த தேசத்தைக் கொடுக்கிற கர்த்தரே, சந்ததியையும் கொடுக்கிறார். கர்த்தர் ஐசுவரிய சம்பன்னர். அவர் ஆபிராமை திரளாய் ஆசீர்வதிக்கிறார். கர்த்தர் ஆபிராமை நோக்கி, "நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்துதிரி; உனக்கு அதைத் தருவேன்" (ஆதி 13:17) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் வாக்குமாறாதவர். தாம் சொல்லுகிறதை அவர் செய்கிறவர். "உனக்கு அதைத் தருவேன்" என்று கர்த்தர் ஆபிராமுக்கு சொல்லும்போது, அவர் நிச்சயமாகவே கானான் தேசத்தை ஆபிராமுக்கும், அவருடைய சந்ததிக்கும் தருவார்.

அப்பொழுது ஆபிராம் கூடாரத்தைப் பெயர்த்துக்கொண்டுபோய், எபிரோனிலிருக்கும் மம்ரேயின் சமபூமியில் சேர்ந்து குடியிருந்து, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார் (ஆதி 13:18). கானான் தேசம் தனக்கு நிலையான தேசமல்ல என்பது ஆபிராமுக்குத் தெரியும். பரமதேசமே தனக்கு நித்திய தேசம் என்பதை ஆபிராம் அறிந்திருக்கிறார்.

ஆபிராம் இந்தப் பூமியில் சஞ்சரிக்கிற காலமெல்லாம், ஒரு பரதேசியைப்போல சஞ்சரிக்கிறார். இதற்கு அடையாளமாக, ஆபிராம் கர்த்தருடைய வாக்குத்தத்த வார்த்தைகளைக் கேட்ட பின்பு, தன் கூடாரத்தை பெயர்த்துக்கொண்டுபோய், எபிரோனிலிருக்கும், மம்ரேயின் சமபூமியில் சேர்ந்து குடியிருக்கிறார்.

ஆபிராம் எங்கு போனாலும் கர்த்தரை ஆராதிக்கிறார். தன்னுடைய பிரயாணத்தில் கர்த்தரும் தன்னோடு கூட வருகிறார் என்னும் முழுநிச்சயம் ஆபிராமுக்கு இருக்கிறது. ஆகையினால் ஆபிராம் தான் குடியிருக்கிற மம்ரேயின் சமபூமியிலே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார். கர்த்தர் தனக்கு சொன்ன ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களுக்காக, கர்த்தருக்கு நன்றி சொல்லும் வண்ணமாக, ஆபிராம் கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார்.

14 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் நான்கு சம்பவங்கள் எழுதப்பட்டிருக்கிறது. முதலாவது சம்பவம் சோதோமின் ராஜாவுக்கும், மற்ற ராஜாக்களுக்கும் இடையே நடைபெறும் யுத்தம் (ஆதி 14:1-11). இந்த யுத்தத்தில் லோத்து சிறைப்பிடிக்கப்படுவது இரண்டாவது சம்பவமாகும் (ஆதி 14:12).

சிறைப்பிடிக்கப்பட்ட லோத்தை ஆபிராம் மீட்டுக்கொள்வது மூன்றாவது சம்பவம் (ஆதி 14:13-16). ஆபிராம் யுத்தத்தில் ஜெயித்து திரும்பி வருவது நான்காவது சம்பவம் (ஆதி 14:17). கர்த்தர் ஆபிராமுக்கு வாக்குப்பண்ணின பிரகாரம், அவருடைய பெயரை பெருமைப்படுத்துகிறார்.

லோத்து சிறையாகக் கொண்டுபோகப்படுகிறார் ஆதி 14:1-12

ஆதி 14:1. சிநெயாரின் ராஜாவாகிய அம்ராப்பேலும், ஏலாசாரின் ராஜாவாகிய அரியோகும், ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேரும், ஜாதிகளின் ராஜாவாகிய திதியாலும் இருந்த நாட்களில்;

ஆதி 14:2. அவர்கள் சோதோமின் ராஜாவாகிய பேராவோடும், கொமோராவின் ராஜாவாகிய பிர்சாவோடும், அத்மாவின் ராஜாவாகிய சிநெயாவோடும், செபோயீமின் ராஜாவாகிய செமேபரோடும், சோவார் என்னும் பேலாவின் ராஜாவோடும் யுத்தம் பண்ணினார்கள்.

ஆதி 14:3. இவர்களெல்லாரும் உப்புக்கடலாகிய சித்தீம் பள்ளத்தாக்கிலே கூடினார்கள்.

ஆதி 14:4. இவர்கள் பன்னிரண்டு வருஷம் கெதர்லாகோமேரைச் சேவித்து, பதின்மூன்றாம் வருஷத்திலே கலகம் பண்ணினார்கள்.

ஆதி 14:5. பதினாலாம் வருஷத்திலே கெதர்லாகோமேரும், அவனோடே கூடியிருந்த ராஜாக்களும் வந்து, அஸ்தரோத்கர்னாயீமிலே இருந்த ரெப்பாயீமியரையும், காமிலே இருந்த சூசிமியரையும், சாவேகீரியத்தாயீமிலே இருந்த ஏமியரையும்,

ஆதி 14:6. சேயீர் மலைகளில் இருந்த ஓரியரையும், வனாந்தரத்துக்கு அருகான எல்பாரான்மட்டும் முறியடித்து,

ஆதி 14:7. திரும்பிக் காதேஸ் என்னும் என்மிஸ்பாத்துக்கு வந்து, அமலேக்கியருடைய நாடனைத்தையும், அத்சாத்சோன் தாமாரிலே குடியிருந்த எமோரியரையும்கூடச் சங்கரித்தார்கள்.

ஆதி 14:8. அப்பொழுது சோதோமின் ராஜாவும், கொமோராவின் ராஜாவும், அத்மாவின் ராஜாவும், செபோயீமின் ராஜாவும், சோவார் என்னும் பேலாவின் ராஜாவும் புறப்பட்டுச் சித்தீம் பள்ளத்தாக்கிலே,

ஆதி 14:9. ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேரோடும், ஜாதிகளின் ராஜாவாகிய திதியாலோடும், சிநெயாரின் ராஜாவாகிய அம்ராப்பேலோடும், ஏலாசாரின் ராஜாவாகிய அரியோகோடும் யுத்தம்பண்ணப் புறப்பட்டு, அந்த ஐந்து ராஜாக்களோடும் இந்த நாலு ராஜாக்களும் யுத்தம்பண்ணினார்கள்.

ஆதி 14:10. அந்தச் சித்தீம் பள்ளத்தாக்கு எங்கும் நிலக்கீல் உண்டாகும் கேணிகள் இருந்தது. சோதோம் கொமோராவின் ராஜாக்கள் முறிந்தோடி, அங்கே விழுந்தார்கள்; மீந்தவர்கள் மலைகளுக்கு ஓடிப்போனார்கள்.

ஆதி 14:11. அப்பொழுது அவர்கள் சோதோமிலும் கொமோராவிலுமுள்ள பொருள்கள் எல்லாவற்றையும், போஜன பதார்த்தங்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

ஆதி 14:12. ஆபிராமின் சகோதரனுடைய குமாரனாகிய லோத்து சோதோமிலே குடியிருந்தபடியால், அவனையும், அவன் பொருள்களையும் கொண்டுபோய்விட்டார்கள்.

பரிசுத்த வேதாகமத்தில் முதன் முறையாக இந்த வசனப்பகுதியில் யுத்தத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த யுத்தத்தில் நான்கு ராஜாக்கள் பங்குபெறுகிறார்கள்.

அவர்களின் விவரம் வருமாறு:
1. சிநெயாரின் ராஜாவாகிய அம்ராப்பேல்,
2. ஏலாசாரின் ராஜாவாகிய அரியோகு,
3. ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேர்,
4. ஜாதிகளின் ராஜாவாகிய திதியால். இந்த நான்கு ராஜாக்களும் ஒரே அணியில் இருந்து யுத்தம்பண்ணுகிறார்கள்.

இவர்கள் ஐந்து பட்டணங்களின் ராஜாக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். அவர்களின் விவரம் வருமாறு : 1. சோதோமின் ராஜாவாகிய பேரா,
2. கொமோராவின் ராஜாவாகிய பிர்சா,
3. அத்மாவின் ராஜாவாகிய சிநெயா,
4. செபோயீமின் ராஜாவாகிய செமேபர்,
5. சோவார் என்னும் பேலாவின் ராஜா.

"சிநெயாரின் ராஜாவாகிய அம்ராப்பேல்" என்பவன் பாபிலோனின் ராஜாவாகிய அமுராபியாக இருக்கலாம். இவன் ஒரு சிறந்த போர்வீரன், கட்டிடக்கலைஞன், பாபிலோனின் நீதிநெறிகளையும், சட்டதிட்டங்களையும் உருவாக்கியவன்.

"ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேர்" என்பவன், ஆதி 14:2 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் யுத்தத்தில் யுத்தம் பண்ணிய இராஜாக்களுக்குத் தலைவன். இந்த ராஜாக்கள் பன்னிரெண்டு வருஷங்களாக கெதர்லாகோமேருக்குச் சேவகம் பண்ணினார்கள். அதன் பின்பு, அவர்கள் அவனுக்கு எதிராகக் கலகம் பண்ணினார்கள். (ஆதி 14:4).

"ஏலாசாரின் ராஜாவாகிய அரியோகு" என்பவன் கெதர்லாகோமேருடைய சகோதரியின் குமாரன்.

"ஜாதிகளின் ராஜாவாகிய திதியால்" என்பவன் குர்திஷ் பர்வதங்களிலுள்ள மலைவாழ் இனத்தவரின் ராஜா.

வேதாகமத்தில் பல யுத்தங்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இது வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் முதலாவது யுத்தம். கிறிஸ்து மறுபடியும் பூமிக்கு வரும்வரையிலும் யுத்தங்களையும், யுத்தங்களைப் பற்றிய செய்திகளையும் மனுஷர் கேட்டுக் கொண்டிருப்பார்கள். (மத் 24:4-21; வெளி 6:1-8; வெளி 13:4-8; வெளி 19:11-21).

ஐந்து பட்டணங்களின் ராஜாக்களும் ஏலாவின் ராஜாவுக்கு கீழ்ப்படிந்து அவனுக்கு கப்பம் கட்டுகிறார்கள். பன்னிரண்டு வருஷமாக இந்த ராஜாக்கள் ஏலாமின் ராஜாவுக்கு கீழ்ப்படிந்து கப்பம் கட்டுகிறார்கள். ஐந்து பட்டணங்களும் நீர்வளம் மிகுந்த பட்டணங்கள். இந்தப் பட்டணங்களில் கனிதரும் விருட்சங்கள் ஏராளமாய் உள்ளது. இவர்களுக்கு சத்துருக்களிடமிருந்தும், அந்நிய தேசத்தாரிடமிருந்தும் பாதுகாப்பு தேவைப்படுகிறது. இதற்காக இவர்கள் ஏலாமின் ராஜாவுக்கு கப்பம் கட்டி, தங்களுடைய பாதுகாப்பை உறுதிபடுத்திக்கொள்கிறார்கள்.

ஐந்து பட்டணங்களின் ஐந்து ராஜாக்களும் பன்னிரண்டு வருஷம் கெதர்லாகோமேரைச் சேவித்து, பதின்மூன்றாம் வருஷத்திலே கலகம் பண்ணுகிறார்கள் (ஆதி 14:4). இவர்களால் பன்னிரண்டு வருஷங்களுக்கு மேல், ஏலாமின் ராஜாவுக்கு கீழ்ப்படிய முடியவில்லை. இவர்கள் அவனுக்கு கப்பம் கட்ட மறுக்கிறார்கள். தங்கள்மீது சுமத்தப்பட்டிருக்கிற நுகத்தை சுமக்க மறுக்கிறார்கள்.

ஐந்து பட்டணங்களின் ராஜாக்கள் எல்லோரும் உப்புக்கடலாகிய சித்தீம் பள்ளத்தாக்கிலே கூடுகிறார்கள் (ஆதி 14:3). இவர்கள் ஏலாமின் ராஜாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண தங்களை ஆயத்தம்பண்ணுகிறார்கள். யுத்த ஆயத்தம் ஒரு வருஷ காலமாக நடைபெறுகிறது.

ஏலாமின் ராஜாவும் இவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண தன்னை ஆயத்தம்பண்ணுகிறான். அவனோடுகூட மேலும் மூன்று ராஜாக்களும் சேர்ந்திருக்கிறார்கள்.

பதினாலாம் வருஷத்திலே கெதர்லாகோமேரும், அவனோடே கூடியிருந்த ராஜாக்களும் வந்து, அஸ்தரோத்கர்னாயீமிலே இருந்த ரெப்பாயீமியரையும், காமிலே இருந்த சூசிமியரையும், சாவேகீரியத்தாயீமிலே இருந்த ஏமியரையும், சேயீர் மலைகளில் இருந்த ஓரியரையும், வனாந்தரத்துக்கு அருகான எல்பாரான்மட்டும் முறியடிக்கிறார்கள் (ஆதி 14:5,6).

"கெதர்லாகோமேர்.....ரெப்பாயீமியர்..... சூசிமியர்....ஏமியர்....ஓரியர்...." ஆகிய இவர்களெல்லாம் இராட்சத பிறவிகள். (உபா 2:10-11,20-21; உபா 3:11-13; யோசு 12:4; யோசு 13:12; யோசு 15:8; யோசு 17:15; யோசு 18:16).

"அத்சாத்சோன் தாமார்" என்பது சீரியாவிலுள்ள என்கேதியின் பழைய பெயர். எபிரோன் கட்டப்படும்போது இந்தப் பட்டணமும் பெரியதாக இருந்தது (2நாளா 20:2).

கெதர்லாகோமேர் தனக்கு விரோதமாக கலகம்பண்ணுகிற ராஜாக்களை ஒடுக்குகிறான். ஐந்து பட்டணங்களின் ராஜாக்களும் ஒன்றுசேர்ந்து கெதர்லாகோமேருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். கெதர்லாகோமேர் அவர்களுடைய கலகத்தை அடக்குகிறான்.

கெதர்லாகோமேரும், அவனோடு கூடயிருக்கிற மற்ற மூன்று ராஜாக்களும் திரும்பி காதேஸ் என்னும் என்மிஸ்பாத்துக்கு வந்து, அமலேக்கியருடைய நாடனைத்தையும், அத்சாத்சோன் தாமாரிலே குடியிருந்த எமோரியரையும்கூடச் சங்கரிக்கிறார்கள் (ஆதி 14:7).

அப்பொழுது சோதோமின் ராஜாவும், கொமோராவின் ராஜாவும், அத்மாவின் ராஜாவும், செபோயீமின் ராஜாவும், சோவார் என்னும் பேலாவின் ராஜாவும் புறப்பட்டுச் சித்தீம் பள்ளத்தாக்கிலே, ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேரோடும், ஜாதிகளின் ராஜாவாகிய திதியாலோடும், சிநெயாரின் ராஜாவாகிய அம்ராப்பேலோடும், ஏலாசாரின் ராஜாவாகிய அரியோகோடும் யுத்தம்பண்ணப் புறப்படுகிறார்கள். அந்த ஐந்து ராஜாக்களோடும் இந்த நாலு ராஜாக்களும் யுத்தம்பண்ணுகிறார்கள் (ஆதி 14:8,9). இந்த யுத்தத்தில் ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேருக்கு ஜெயமுண்டாயிற்று.

சித்தீம் பள்ளத்தாக்கு எங்கும் நிலக்கீர் உண்டாகும் கேணிகள் இருக்கிறது. சோதோம் கொமோராவின் ராஜாக்கள் முறிந்தோடி அங்கே விழுகிறார்கள்; மீந்தவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகிறார்கள் (ஆதி 14:10). தேவன் சோதோமை அழித்தபோது, நிலக்கீல் கேணிகள் அனைத்தும் சவக்கடலுக்குள் மூழ்கிவிடுகிறது.

ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேரும், அவனோடு கூடயிருக்கிற மற்ற மூன்று ராஜாக்களும் சோதோமிலும் கொமோராவிலுமுள்ள பொருள்கள் எல்லாவற்றையும், போஜனபதார்த்தங்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள் (ஆதி 14:11).

ஆபிராமின் சகோதரனுடைய குமாரனாகிய லோத்து சோதோமிலே குடியிருக்கிறார். அவர்கள் லோத்தையும், அவருடைய பொருள்களையும் கொண்டுபோய்விடுகிறார்கள் (ஆதி 14:12). சோதோமிலிருந்த லோத்து, அந்நிய தேசத்திற்கு சிறைப்பட்டுப்போகிறார். லோத்தின் உடமைகள் எல்லாம் கொள்ளையடிக்கப்படுகிறது.

லோத்து ஒரு நீதிமான். சோதோமின் ஜனங்களோ பொல்லாதவர்களாயும் கர்த்தருக்கு முன்பாக மகாபாவிகளாயும் இருக்கிறார்கள். கர்த்தர் பாவிகளைத் தண்டிக்கிறார். அப்போது பாவிகளோடு கூடயிருக்கிற நீதிமான்களும், அந்தத் தண்டனையை அனுபவிக்கிறார்கள். நீதிமான்கள் துன்மார்க்கரோடு வாசம்பண்ணக்கூடாது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு துன்மார்க்கர்மீது வரும்போது, அதன் பாதிப்பு நீதிமானுக்கும் வரும்.

சோதோமின் ஜனங்கள் துன்மார்க்கராயிருக்கிறார்கள். கெதர்லாகோமேர் சோதோமின் ஜனங்களை சிறைப்பிடிக்கும்போது, அவர்களோடுகூட லோத்தையும் சிறைப்பிடித்து கொண்டுபோகிறான். கெதர்லாகோமேரோடு கூடயிருக்கிற ராஜாக்கள் சோதோம் பட்டணத்தைக் கொள்ளையிடும்போது, அவர்கள் லோத்தின் உடமைகளையும் கொள்ளையிடுகிறார்கள்.

கர்த்தருடைய ஜனமாகிய நாம் துன்மார்க்கரோடு சகவாசம் வைத்துக் கொள்ளக்கூடாது. நாம் அழிவுக்கு தப்பிக்கவேண்டுமென்றால், துன்மார்க்கரை விட்டு வேறு பிரிந்து ஜீவிக்கவேண்டும்.

"பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்" (வெளி 18:4).

நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவருடைய வழிகளில் நடக்கும் வரையிலும், நமக்கு தெய்வீக பாதுகாப்பு கிடைக்கும். நாம் கர்த்தருடைய வழிகளை விட்டு விலகிப்போகும்போது, கர்த்தருடைய பாதுகாப்பு நமக்கு கிடைக்காது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், நாம் கர்த்தருக்கு சித்தமான ஆவிக்குரிய தீர்மானங்களை எடுக்காமல், நம்முடைய சுயஇச்சைகளையும், மாம்சத்தின் இச்சைகளையும் நிறைவேற்றுவதற்காக, உலகப்பிரகாரமான தீர்மானம் எடுக்கும்போது, கர்த்தருடைய ஆதரவும் அநுக்கிரகமும் நமக்கு கிடைக்காது.

ஆபிராம் லோத்தை திருப்பிக்கொண்டு வருகிறார் ஆதி 14:13-16

ஆதி 14:13. தப்பியோடின ஒருவன் எபிரெயனாகிய ஆபிராமிடத்தில் வந்து அதை அறிவித்தான்; ஆபிராம் தன்னோடே உடன்படிக்கை செய்திருந்த மனிதராகிய எஸ்கோலுக்கும் ஆநேருக்கும் சகோதரனாகிய மம்ரே என்னும் எமோரியனுடைய சமபூமியிலே அப்பொழுது குடியிருந்தான்.

ஆதி 14:14. தன் சகோதரன் சிறையாகக்கொண்டு போகப்பட்டதை ஆபிராம் கேள்விப்பட்டபோது, அவன் தன் வீட்டிலே பிறந்த கைபடிந்தவர்களாகிய முந்நூற்றுப் பதினெட்டு ஆட்களுக்கும் ஆயுதந்தரிப்பித்து, தாண் என்னும் ஊர்மட்டும் அவர்களைத் தொடர்ந்து,

ஆதி 14:15. இராக்காலத்திலே அவனும் அவன் வேலைக்காரரும் பிரிந்து, பவிஞ்சுகளாய் அவர்கள்மேல் விழுந்து, அவர்களை முறியடித்து, தமஸ்குவுக்கு இடதுபுறமான ஓபாமட்டும் துரத்தி,

ஆதி 14:16. சகல பொருள்களையும் திருப்பிக் கொண்டுவந்தான்; தன் சகோதரனாகிய லோத்தையும், அவனுடைய பொருள்களையும், ஸ்திரீகளையும், ஜனங்களையும் திருப்பிக்கொண்டுவந்தான்.

ஆபிராம் ஒரே ஒரு யுத்தம் மாத்திரமே செய்திருக்கிறார். அந்த யுத்தத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆபிராம் இந்த யுத்தத்தை, தன்னுடைய சுயஇச்சைகளின் பிரகாரமோ அல்லது பேராசையினாலோ நடத்தவில்லை. லோத்துக்கு உதவிசெய்யவேண்டும் என்பதற்காகவே ஆபிராம் இந்த யுத்தத்தை நடத்துகிறார். யுத்தம்பண்ணி, திரளான பொருட்களை கொள்ளையிட்டு ஐசுவரியவானாகவேண்டும் என்பது ஆபிராமின் விருப்பமல்ல. லோத்துக்கு உதவிசெய்யவேண்டும் என்பதே ஆபிராமின் தீர்மானம்.

ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேரும், அவனோடு கூடயிருக்கிற மற்ற மூன்று ராஜாக்களும், லோத்தை சிறைப்பிடிக்கிறார்கள். லோத்தின் உடமைகளை கொள்ளையடிக்கிறார்கள். இந்தச் செய்தி ஆபிராமுக்கு அறிவிக்கப்படுகிறது.

தப்பியோடின ஒருவன் எபிரெயனாகிய ஆபிராமிடத்தில் வந்து அதை அறிவிக்கிறான்; ஆபிராம் தன்னோடே உடன்படிக்கை செய்திருந்த மனிதராகிய எஸ்கோலுக்கும் ஆநேருக்கும் சகோதரனாகிய மம்ரே என்னும் எமோரியனுடைய சமபூமியிலே அப்பொழுது குடியிருக்கிறார் (ஆதி 14:13).

இந்த வசனத்தில் ஆபிராமைப்பற்றிச் சொல்லப்படும்போது, "எபிரெயனாகிய ஆபிராம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆபிராம் ஏபேரின் சந்ததியை சேர்ந்தவர். ஏபேரின் புத்திரர் கர்த்தரை ஆராதிக்கிறவர்கள். இந்தப் பூமியிலுள்ள மற்ற ஜாதியார் கர்த்தரை விட்டு விலகி, விக்கிரகங்களைப் பற்றிக்கொள்ளும்போது, ஏபேரின் புத்திரர் மாத்திரம் கர்த்தரை ஆராதிக்கிறார்கள். ஏபேரின் புத்திரரே "எபிரெயர்" என்று அழைக்கப்படுகிறார்கள்.

ஆபிராமின் பெயர் ஆதி 17:5 ஆவது வசனத்தில் "ஆபிரகாம்" என்று மாற்றப்படுகிறது.

"எபிரெயர்" என்னும் பெயர் ஐபிராத்து நதியின் அக்கரையில் இருந்தவர்களைக் குறிக்கும். ஆபிரகாமின் சந்ததியாரைக் குறிப்பதற்கு எபிரெயர் என்னும் பெயர் பயன்படுத்தப்படுகிறது. (ஆதி 14:13; ஆதி 39:14,17; ஆதி 41:12; யாத் 1:15-19; யாத் 2:7-11; யாத் 21:2; உபா 15:12; எரே 34:9-14; யோனா 1:9; அப் 6:1; 2கொரி 11:22; பிலி 3:5).

"எமோரியர்" என்பவர்கள் கானானின் குமாரரில் ஒருவனுடைய சந்ததியார். (ஆதி 10:16). இவர்கள் கானானிய தேசங்களில் வலிமையானவர்கள். ஆபிரகாமின் சந்ததியார் எமோரியரைத் துரத்த வேண்டும். (ஆதி 15:16-21). இங்கு எமோரியர் ஆபிரகாமோடே உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். (ஆதி 14:13). இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியேறி வந்தவுடன் எமோரியரை முதலாவதாகத் துரத்துகிறார்கள். (எண் 21:21-35; உபா 3:1-17; யோசு 11).

ஆபிராமுக்கு லோத்தைப்பற்றி செய்தி சொன்னவன் சோதோமில் இருந்தவன். கெதர்லாகோமேரும், மற்ற ராஜாக்களும் சோதோமில் குடியிருக்கிற ஜனங்களை சிறைப்பிடித்தபோது, இவன் சிறைப்பட்டுப்போகாமல் தப்பி ஓடிப்போய்விடுகிறான். இவன் ஆபிராம் இருக்கும் மம்ரேயின் சமபூமிக்கு வந்து, சோதோமில் நடைபெற்ற சம்பவங்களை, ஆபிராமுக்கு அறிவிக்கிறான்.

இவன் ஆபிராமிடத்தில் இந்தச் செய்தியைச் சொல்லும்போது, ஆபிராம் தன்னோடே உடன்படிக்கை செய்திருந்த மனிதராகிய எஸ்கோலுக்கும் ஆநேருக்கும் சகோதரனாகிய மம்ரே என்னும் எமோரியனுடைய சமபூமியிலே குடியிருக்கிறார் (ஆதி 14:13).

தன் சகோதரனாகிய லோத்து சிறையாகக்கொண்டு போகப்பட்டதை ஆபிராம் கேள்விப்பட்டபோது, ஆபிராம் ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேருக்கு விரோதமாக யுத்தம்பண்ண தன்னை ஆயத்தப்படுத்துகிறார். ஆபிராம் தன் வீட்டிலே பிறந்த கைபடிந்தவர்களாகிய முந்நூற்றுப் பதினெட்டு ஆட்களுக்கும் ஆயுதம்தரிப்பிக்கிறார். ஆபிராம் அவர்களைக் கூட்டிக்கொண்டு தாண் என்னும் ஊர்மட்டும் அவர்களைத் தொடர்ந்து போகிறார் (ஆதி 14:14).

"கைபடிந்தவர்கள்" என்பது ஆயுதம் ஏந்துவதில் பயிற்சி பெற்றவர்களைக் குறிக்கும். அக்காலத்தில் துஷ்ட ஜனங்களும், விரோதிகளும் திடீரென்று தாக்கும் வாய்ப்புள்ளதால் கைபடிந்தவர்கள் ஆயுதம் தரிப்பித்து பாதுகாப்பாக இருந்தார்கள். (ஆதி 12:5).

"தாண்" இஸ்ரவேலின் வடக்கு எல்லை. (நியா 20:1; 2சாமு 3:10; 2சாமு 17:11; 2சாமு 24:2,15; 2நாளா 30:5). இதன் பழைய பெயர் லாயீஷ் (நியா 18:7,29). யெரொபெயாம் இங்கு ஒரு பொற்கன்றுக்குட்டியை நிறுவினான் (1இராஜா 12:28-29).

இராக்காலத்திலே ஆபிராமும் அவருடைய வேலைக்காரரும் பிரிந்து, பவிஞ்சுகளாய் அவர்கள்மேல் விழுந்து, அவர்களை முறியடித்து, தமஸ்குவுக்கு இடதுபுறமான ஓபாமட்டும் துரத்துகிறார்கள். ஆபிராம் சகல பொருள்களையும் திருப்பிக் கொண்டுவருகிறார்; தன் சகோதரனாகிய லோத்தையும், அவருடைய பொருள்களையும், ஸ்திரீகளையும், ஜனங்களையும் திருப்பிக்கொண்டுவருகிறார் (ஆதி 14:15,16). இந்த யுத்தத்தில் ஆபிராமுக்கு ஜெயமுண்டாயிற்று.

தன் சகோதரன் சிறையாகக் கொண்டுபோகப்பட்டதை ஆபிராம் கேள்விப்பட்டபோது, அவர் யுத்தம்பண்ணுவதற்கு ஆயத்தங்களை மேற்கொள்கிறார். ஆபிராமின் வீட்டிலே ஏராளமான வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். ஆபிராம் ஐசுவரியம் மிகுந்த சீமானாயிருக்கிறார். ஆபிராமின் வீட்டிலிருக்கிற ஆட்கள் கைபடிந்தவர்கள். அவர்கள் யுத்த ஆயுதங்களை பயன்படுத்தக்கூடியவர்கள். ஆபிராம் அவர்களுக்கு ஆயுதம் தரிப்பித்து, அவர்களை யுத்தம்பண்ண ஆயத்தம்பண்ணுகிறார்.

ஆபிராம் நற்குணமுள்ளவர். அவர் கர்த்தரை சேவிப்பதோடு, தன்னுடைய வீட்டிலிருக்கிற ஆட்களையும் கர்த்தரை சேவிப்பதற்கு வழிநடத்துகிறார்.

ஆபிராம் ஞானமுள்ளவர். அவர் சமாதானத்தை விரும்புகிறவர். ஆனாலும் அவருடைய வீட்டிலிருக்கிற ஆட்கள் யுத்தத்திற்கு கைபடிந்தவர்களாயிருக்கிறார்கள். சமாதானமே நமக்கு சொல்லப்பட்டிருக்கிற உபதேசம். ஆனாலும் நம்முடைய பாதுகாப்புக்காக, நாம் யுத்த ஆயத்தம்பண்ணுவதை பரிசுத்த வேதாகமம் தடைபண்ணவில்லை.

ஆபிராம் இப்போது தன்னோடே உடன்படிக்கை செய்திருந்த மனிதராகிய எஸ்கோலுக்கும் ஆநேருக்கும் சகோதரனாகிய மம்ரே என்னும் எமோரியனுடைய சமபூமியிலே குடியிருக்கிறார். இவர்கள் ஆபிராமோடு உடன்படிக்கை செய்திருப்பதினால், இவர்களும் ஆபிராமுக்கு துணையாக, அவரோடுகூட யுத்தத்திற்கு வருகிறார்கள்.

ஆபிராம் தன்னுடைய பாதுகாப்புக்கு கர்த்தரையே நம்புகிறார். அவர் கர்த்தருடைய உதவியை சார்ந்திருக்கிறார். ஆனாலும் இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலைகள் வரும்போது, ஆபிராம் மனுஷருடைய உதவியையும் பயன்படுத்திக்கொள்கிறார். மனுஷருடைய உதவியும், மனுஷர் கண்களிலே தயவும் தேவனுடைய கிருபையினாலேயே நமக்கு கிடைக்கிறது. மனுஷருடைய உதவிகளை வாய்ப்பு கிடைக்கும்போது பயன்படுத்த வேண்டும். மனுஷஉதவியைப் பயன்படுத்தாமலிருப்பது, நாம் கர்த்தரை சோதிப்பதுபோல இருக்கும்.

ஆபிராம் தைரியமுள்ளவர். அவர் ஒழுக்கமும் கட்டுப்பாடும் மிகுந்தவர். ஆபிராம் இப்போது விவசாய வேலைகளை செய்துகொண்டிருக்கிறார். ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேரும், அவரோடு கூடயிருக்கிற ராஜாக்களும் பெரிய சேனைக்கு அதிபதிகளாயிருக்கிறார்கள். ஆபிராமின் வீட்டிலுள்ளவர்களுக்கு இதற்கு முன்பு யுத்தம்பண்ணி பழக்கமில்லை. ஆபிராம் மேற்கொள்கிற முதலாவது யுத்தமே இந்த யுத்தம் தான். கெதர்லாகோமேரோ இதற்கு முன்பு அநேக யுத்தங்களை பார்த்தவன்.

ராஜாக்களின் சேனைக்கு முன்பாக, ஆபிராமின் வீட்டிலுள்ள ஜனங்களால் எதிர்த்து நிற்கமுடியாது. ஆனாலும் ஆபிராம் கர்த்தரை நம்புகிறார். அவர் கர்த்தருக்கு மாத்திரம் பயப்படுகிறார். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் கோழைகளாயிருக்கமாட்டார்கள். அவர்களே உண்மையான வீரர்களாகவும், உண்மையான பராக்கிரமசாலிகளாகவும் இருப்பார்கள்.

ஆபிராமுக்கு யுத்த தந்திரமும் தெரிந்திருக்கிறது. தன்னுடைய வீட்டிலே பிறந்த கைபடிந்தவர்களாகிய முன்னூற்று பதினெட்டு ஆட்களையும் யுத்தத்திலே எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதும் ஆபிராமுக்கு தெரிந்திருக்கிறது. சத்துருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, நமக்கு வீரமும் வேண்டும், விவேகமும் வேண்டும்.

"ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்" (மத் 10:16).

இராக்காலத்திலே ஆபிராமும் அவருடைய வேலைக்காரரும் பிரிந்து, பவிஞ்சுகளாய் அவர்கள்மேல் விழுந்து, அவர்களை முறியடித்து, தமஸ்குவுக்கு இடதுபுறமான ஓபாமட்டும் துரத்தி, சகல பொருள்களையும் திருப்பிக் கொண்டுவருகிறார்கள்.

ஆபிராம் தன் சகோதரனாகிய லோத்தையும், அவருடைய பொருள்களையும், ஸ்திரீகளையும், ஜனங்களையும் திருப்பிக்கொண்டுவருகிறார் (ஆதி 14:15,16). இந்த யுத்தத்தில் ஆபிராமின் ஆட்களுக்கு ஒரு சேதாரமும் ஏற்படவில்லை. ஆபிராம் லோத்தை திருப்பிக்கொண்டு வரும்போது, லோத்தோடுகூட, கெதர்லாகோமேர் பிடித்துக்கொண்டுபோன எல்லா ஜனங்களையும் திருப்பிக்கொண்டு வருகிறார்.

"ஓபா" என்பது தமஸ்குவிற்கு வடமேற்கே 60 மைல் தூரத்தில் உள்ள இடம். "தமஸ்கு" என்பது சீரியாவின் தலைநகரம். (2சாமு 8:5; 1இராஜா 11:24; 1இராஜா 15:18-20; 1இராஜா 20:1; 2இராஜா 8:28; 2இராஜா 10:33; 2இராஜா 12:17; 2இராஜா 13:3,24; 2இராஜா 14:28; 2இராஜா 16:5-9). உலகின் பழங்கால பட்டணங்களில் இதுவும் ஒன்று. இந்தப் பட்டணத்தை ஆபிரகாம் அல்லது அவருடைய சந்ததியார் கட்டினார்கள் என்று வரலாறு கூறுகிறது. (ஆதி 15:2).

ஆபிராம் சகல பொருள்களையும் திருப்பிக் கொண்டு வருகிறார். ஆபிரகாம் சுபாவத்தின் பிரகாரமாக ஒரு பெரிய போர்வீரன் அல்ல. தேவனுடைய உதவியினால் ஆபிரகாம் வெற்றி பெறுகிறார். இவருடைய வெற்றி கிதியோனின் வெற்றியைப் போன்றிருக்கிறது. (நியா 7). விசுவாசத்தினால் நடைபெறக் கூடிய காரியங்களில் இதுவும் ஒன்று (எபி 11:33-39).

ஆபிராம் ஸ்திரீகளையும் திருப்பிக்கொண்டு வருகிறார். ஆபிரகாமும், அவருடைய வேலைக்காரரும் பவிஞ்சுகளாய் அவர்கள்மேல் விழுந்து அவர்களை முறியடித்ததினால் ஸ்திரீகளை அவர்களால் பத்திரமாகத் திருப்பிக் கொண்டு வர முடிகிறது.

இந்த வசனப்பகுதியில் லோத்தைப்பற்றி சொல்லப்படும்போது, அவர் ஆபிராமின் சகோதரர் என்று சொல்லப்படுகிறார். ஆபிராமுக்கும் லோத்துக்கும் ஏற்கெனவே வாக்குவாதமுண்டாயிற்று. ஆனால் ஆபிராம் இப்போது அந்தப் பழைய வாக்குவாதத்தை நினைத்துப் பார்க்கவில்லை. ஆபிராம் பழைய பகையை மறந்துவிட்டு, லோத்தை தன் சகோதரனாகவே பாவிக்கிறார்.

ஆபிராம் கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்யும் சுபாவமுள்ளவர். ஆபிராமைப்போலவே நாமும் திக்கற்ற பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும், உதவிகள் தேவைப்படுகிறவர்களுக்கும் நம்மால் முடிந்த எல்லா உதவிகளையும் செய்யவேண்டும்.

மற்றவர்கள் நமக்கு உதவிசெய்யாவிட்டாலும், நாம் அவர்களுக்கு உதவிசெய்ய முன்வரவேண்டும். ஒரு சிலர் நமக்கு செய்யவேண்டிய நன்மைகளை செய்யமாட்டார்கள். நாம் அதற்காக அவர்கள்மீது கோபப்படக்கூடாது. வருத்தப்படக்கூடாது. நமக்கு நன்மை செய்யாதவர்களுக்கு நாம் தீங்கு செய்ய முயற்சி பண்ணக்கூடாது. மற்றவர்கள் நமக்கு தீங்கு செய்தாலும், நாம் அவர்களுக்கு நன்மை செய்ய முன்வரவேண்டும்.

மற்றவர்கள் நமக்கு விரோதமாக செய்த தப்பிதங்களை நாம் மன்னித்து மறந்துவிடவேண்டும். ஒரு சிலர், தங்கள் சத்துருக்கள் தங்களுக்கு விரோதமாக செய்த தப்பிதங்களை எளிதாக மறந்துவிடுவார்கள். ஆனால் அவர்கள் தங்கள் சிநேகிதர்கள் தங்களுக்கு விரோதமாக செய்த தப்பிதங்களை எளிதில் மறக்கமாட்டார்கள்.

நாமோ நமக்கு விரோதமாகத் தீங்குசெய்த எல்லோரையும் மன்னிக்க வேண்டும். நம்முடைய சத்துருக்களை மன்னிப்பதுபோல, நம்முடைய சிநேகிதரையும் மன்னிக்கவேண்டும்.

ஆபிராம் லோத்தையும், அவருடைய பொருட்களையும், ஸ்திரீகளையும், அவரோடுகூட சிறைப்பட்டுப்போன ஜனங்களையும் திருப்பிக்கொண்டு வருகிறார். அவர்கள் அந்நியராகயிருந்தாலும், லோத்தின் நிமித்தமாக ஆபிராம் அவர்களுக்கும் நன்மை செய்கிறார். எல்லோருக்கும் நன்மைசெய்யவேண்டும் என்பது ஆபிராமின் பொதுவான சுபாவம். நாமும், நமக்கு சமயம் வாய்க்கும் போதெல்லாம், எல்லோருக்கும் நன்மை செய்ய முன்வரவேண்டும்.

சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு ஆதி 14:17-20

ஆதி 14:17. அவன் கெதர்லாகோமேரையும், அவனோடிருந்த ராஜாக்களையும் முறியடித்துத் திரும்பிவருகிறபோது, சோதோமின் ராஜா புறப்பட்டு, ராஜாவின் பள்ளத்தாக்கு என்னும் சாவே பள்ளத்தாக்குமட்டும் அவனுக்கு எதிர்கொண்டுபோனான்.

ஆதி 14:18. அன்றியும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சைரசமும் கொண்டுவந்து,

ஆதி 14:19. அவனை ஆசீர்வதித்து: வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக.

ஆதி 14:20. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்.

சோதோமின் ராஜா ஆபிராமுக்கு மரியாதை செலுத்துவதற்காக எதிர்கொண்டு போகிறான். ஆபிராம் கெதர்லாகோமேரையும், அவனோடிருந்த ராஜாக்களையும் முறியடித்துத் திரும்பிவருகிறார். அப்போது, சோதோமின் ராஜா புறப்பட்டு, ராஜாவின் பள்ளத்தாக்கு என்னும் சாவே பள்ளத்தாக்குமட்டும் ஆபிராமுக்கு எதிர்கொண்டுபோகிறான் (ஆதி 14:17).

இந்த வசனப்பகுதியில் சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கைப்பற்றியும் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர் உன்னதமான தேவனுடைய ஆசாரியர். எபிரெயருக்கு எழுதின நிருபத்தில் மெல்கிசேதேக்கைப்பற்றிய மகிமையான காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

"இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான்; ராஜாக்களை முறியடித்துவந்த ஆபிரகாமுக்கு இவன் எதிர்கொண்டுபோய், அவனை ஆசீர்வதித்தான்.

இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்; இவனுடைய முதற்பேராகிய மெல்கிசேதேக்கு என்பதற்கு நீதியின் ராஜா என்றும், பின்பு சாலேமின் ராஜா என்பதற்குச் சமாதானத்தின் ராஜா என்றும் அருத்தமாம்.

இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்.

இவன் எவ்வளவு பெரியவனாயிருக்கிறான் பாருங்கள்; கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாம் முதலாய் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் இவனுக்குத் தசமபாகம் கொடுத்தான்" (எபி 7:1-4).

யூதமார்க்கத்து ரபிமார்கள் மெல்கிசேதேக்கைப்பற்றிச் சொல்லும்போது, அவரை நோவாவின் குமாரனாகிய சேம் என்று சொல்லுகிறார்கள். இங்கு சேமின் பெயர் மெல்கிசேதேக்கு என்று மாற்றப்பட்டிருக்கிறது என்பது அவர்களுடைய விளக்கம். இந்தப் பெயர் மாற்றத்திற்கான காரணம் சொல்லப்படவில்லை. அது மாத்திரமல்ல. மெல்கிசேதேக்கும் நோவாவின் குமாரனாகிய சேமும் ஒரே நபர் என்றால், அவர் எவ்வாறு கானான் தேசத்திற்கு வந்தார் என்றும், அவர் எவ்வாறு சாலேமின் ராஜாவானார் என்றும் தெரியவில்லை.

வேதபண்டிதர்களில் சிலர், மெல்கிசேதேக்கைப்பற்றிச் சொல்லும்போது, அவர் தேவனுடைய குமாரனின் வெளிப்பாடு என்று சொல்லுகிறார்கள். மெல்கிசேதேக்கு நீதியுள்ள ராஜாவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். அவர் சமாதானத்தைக் கொடுக்கிறவர். நீதிக்காக யுத்தம்பண்ணுகிறவர்.

எபிரெயருக்கு எழுதின நிருபத்தில், மெல்கிசேதேக்கைப்பற்றிச் சொல்லும்போது, அவர் தகப்பனும் தாயும் வம்சவரலாறு இல்லாதவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் மெல்கிசேதேக்கு நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவராயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவராய் என்றென்றைக்கும் ஆசாரியராக நிலைத்திருக்கிறார் (எபி 7:3) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மெல்கிசேதேக்கு என்பவர் கானானியரின் ராஜாக்களில் ஒருவர் என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் பொதுவான கருத்தாகும். இவர் சாலேமின் ராஜாவாக ஆட்சி செய்தார். அங்கே மெய்யான மார்க்கத்தை ஸ்தாபித்தார். மெல்கிசேதேக்கைப்பற்றி ஆபிராமோடு தொடர்புடைய இந்த வசனப்பகுதியில் மாத்திரமே சொல்லப்பட்டிருக்கிறது.

அரபியருடைய பூர்வகாலத்து ஆகமங்களில் மெல்கிசேதேக்கைப்பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இவர் பேலாகின் குமாரனாகிய ஏராக்கிலிம் என்பவரின் குமாரர். பேலாகு ஏபேரின் குமாரன். மெல்கிசேதேக்கினுடைய தாயாரின் பெயர் செலாத்தியேல் என்பதாகும். இவள் கோமேரின் குமாரத்தி. கோமேர் என்பவர் யாப்பேத்தின் குமாரன். யாப்பேத் நோவாவின் குமாரன்.

உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருக்கிற சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு ஆபிராமுக்கு அப்பமும் திராட்சைரசமும் கொண்டுவந்து கொடுக்கிறார் (ஆதி 14:18). ஆபிராமும் அவருடைய ஆட்களும் கெதர்லாகோமேரையும், அவனோடிருந்த ராஜாக்களையும் முறியடித்து திரும்பி வருகிறார்கள். இந்த யுத்தத்தில் ஆபிராமுக்கு ஜெயமுண்டாயிற்று. மெல்கிசேதேக்கு ஆபிராமை வாழ்த்துவதற்காக வருகிறார். அவர் ஒரு ராஜாவின் ஸ்தானத்திலிருந்து, ஆபிராமை வாழ்த்த வருகிறார்.

மெல்கிசேதேக்கு கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். அதன் விவரம் வருமாறு :

1. வம்சவரலாறு (எபி 7:3,6 = மீகா 5:2)
2. பலி (ஆதி 14:18= லூக்கா 22:14-30)
3. ஆசாரியத்துவம். (சங் 110=எபி 5:10; எபி 6:20; எபி 7:3,17,21,23-28)
4. ராஜா–ஆசாரியன் (எபி 7:1= சக 6:12-13)
5. ஆபிரகாமைவிட பெரியவர். (எபி 7:4-8= யோவான் 8:55-59)
6. நீதியின் ராஜா (எபி 7:2=1கொரி 1:30; எபி 1:8)
7. சமாதானத்தின் ராஜா (எபி 7:2= ஏசா 9:6)

மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜா. "சாலேம்" என்பது எருசலேமின் பழங்காலப் பெயர். (ஆதி 14:18; சங் 76:2; சங் 122:3; எபி 7:1-2). ரோமாபுரி ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பாக எபூசியர்கள் சாலேமைக் கைப்பற்றி அதை எபூஸ் என்று அழைத்தார்கள். இதன் பின்பு இவ்விரண்டு பெயர்களும் இணைக்கப்பட்டு இந்த நகரத்திற்கு எருசலேம் என்னும் பெயர் வழங்கப்படலாயிற்று.

எருசலேம் என்பதற்கு "சமாதானத்தின் வாசஸ்தலம்" என்று பொருள். யோசு 10:1 ஆவது வசனத்திலிருந்து கலா 4:25 ஆவது வசனம் வரையிலும் எருசலேம் என்னும் பெயர் வேதாகமத்தில் 809 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

வேதாகமத்தின் மற்ற இடங்களில் புதிய எருசலேம், பரலோக எருசலேம் என்னும் பொருள்பட இந்தப் பெயர் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (கலா 4:26; எபி 12:22; வெளி 3:12; வெளி 21:2,10).

வரலாற்றுக் காலங்களில் எருசலேமின்மீது அநேக முற்றுகைகள் போடப்பட்டிருக்கின்றன. இவற்றில் 12 முற்றுகைகளைப் பற்றி வேதாகமம் கூறுகிறது. தாவீதின் நாளிலிருந்து நேபுகாத்நேச்சார் நாள்வரையிலும் எருசலேம் இஸ்ரவேலின் தலைநகரமாக இருந்தது. (2சாமு 5-2நாளா 36) எஸ்றா, நெகேமியா ஆகியோரின் காலத்தில் புதுப்பிக்கப்பட்ட இஸ்ரவேலுக்கு இது தலைநகரமாக இருந்தது. (எஸ்றா 1:2-நெகே 13:20)

கி.பி. 70 ஆம் ஆண்டில் எருசலேம் முழுவதுமாக அழிக்கப்பட்டது. இஸ்ரவேல் ஜனங்கள் உலகம் முழுவதும் சிதறிப்போனார்கள். (லூக்கா 21:20-24).

அந்திக்கிறிஸ்துவின் காலத்திற்கு முன்பாக எருசலேம் தற்கால இஸ்ரவேலுக்குத் தலைநகரமாக இருக்கும். அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலை ஜெயித்து, மூன்றரை வருஷங்களுக்கு அதைத் தன்னுடைய தலைநகரமாக ஆக்கிக் கொள்ளுவான். (வெளி 11:1-2).

எருசலேம் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்தலம். பூமியில் தேவனுடைய நித்திய ராஜ்ஜியத்திற்கு எருசலேம் தலைநகரமாக இருக்கும். மேசியாவின்கீழ் தேவனுடைய ராஜ்யம் சிறப்பாக இருக்கும். (2நாளா 6:6; 2நாளா 33:4; ஏசா 2:1-4; ஏசா 9:6-7; ஏசா 44:26; ஏசா 62:7; எரே 17:25; எசே 43:7; எசே 48:35; யோவே 3:20; சக 14:1-21). அர்மகெதோன் யுத்தத்தின் மையப்பகுதி எருசலேமாக இருக்கும். (சக 14; வெளி 19).

எருசலேமின் மீது பல முற்றுகைகள் போடப்பட்டிருக்கிறது. இந்த முற்றுகைகளுக்கு வேதவசனங்களிலிருந்தும், சரித்திர ஆகமங்களிலிருந்தும் ஆதாரங்கள் உள்ளன.

எருசலேமின்மீது போடப்பட்ட முற்றுகைகளுக்கு பரிசுத்த வேதாகமத்திலிருந்து ஆதாரங்கள்.

1. யூதா (நியா 1:8)
2. தாவீதும், யூதாவும் (2சாமு 5:6-10)
3. எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் (1இராஜா 14:25)
4. இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாகாஸ் (2இராஜா 14:13)
5. அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப் (2இராஜா 18)
6. பெலிஸ்தரும், அரபியரும் (2நாளா 21:16-17)
7. இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் (2நாளா 25:23)
8. எகிப்தின் ராஜா (2நாளா 36:3)
9. பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார். (2நாளா 36:6-7)
10. நேபுகாத்நேச்சார். (2நாளா 36:10)
11. நேபுகாத்நேச்சார். (2நாளா 36:17-19)
12. ரோமர்கள் - கி.பி. 70 (மத் 24:1-2; லூக்கா 19:42-44; லூக்கா 21:20-24)

எருசலேமின்மீது போடப்பட்ட முற்றுகைகளுக்கு சரித்திர ஆகமங்களிலிருந்து ஆதாரங்கள்.

1. எகிப்து - கி.மு. 320

2. ஸ்கோபஸ் - கி.மு. 299

3. சீரியா - கி.மு. 203

4. சீரியா - கி.மு. 168

5. சீரியா - கி.மு. 162

6. சீரியா - கி.மு. 135

7. ஹைக்கிரானஸ் - கி.மு. 63

8. பாம்பி - கி.மு. 63

9. ஏரோது - கி.மு. 39

10. ரோமப்பேரரசு - கி.பி. 135

11. பெர்சியர் - கி.பி. 559

12. ஓமர் - கி.பி. 636

13. அப்தல் - கி.பி. 1098

14. குருசேடர்கள் அல்லது சிலுவைப் போர்வீரர்கள் - கி.பி. 1099

15. சலாடின் - கி.பி. 1187

16. டார்டார்ஸ் - கி.பி. 1244

17. பிரிட்டிஷ் - கி.பி. 1917

18. இஸ்ரவேல் - கி.பி. 1948

சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு ஆபிராமுக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டு வருகிறார். கர்த்தருடைய பந்திக்கு இவை அடையாளம். பாவநிவாரண உபதேசத்தை மெல்கிசேதேக்கும், முற்பிதாக்களும் முழுமையாக அறிந்திருக்கிறார்கள். (கலா 3:8; எபி 4:1-2; 1பேதுரு 1:10-12; லூக்கா 22:14-20; 1கொரி 11:23-34).

மெல்கிசேதேக்கு உன்னதமான தேவனுடைய ஆசாரியராயிருக்கிறார். வேதாகமத்தில் முதன் முறையாக ஆசாரியர் என்னும் வார்த்தை இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எல்லாக் காலங்களிலும் தேவன் தமக்குப் பிரதிநிதிகளை நியமித்து வைத்திருக்கிறார். மெல்கிசேதேக்கு ஒரு புறஜாதி தேசத்தான். அவருடைய ஆசாரியத்துவம் இயேசு கிறிஸ்துவில் நித்தியமாக இருக்கிறது. (சங் 110:4; எபி 5:10; எபி 6:20; எபி 7:1-28). ஆரோனின் ஆசாரியத்துவம் தற்காலிகமானது. (எபி 7:11-12).

மெல்கிசேதேக்கு உன்னதமான தேவனுடைய ஆசாரியர். அவர் ஆபிராமை ஆசீர்வதிக்க வருகிறார். மெல்கிசேதேக்கு ஆபிராமுக்கு கொடுத்த அப்பமும் திராட்சரசமும் தண்ணீரும் அவருடைய சரீரத்திற்கு ஆசீர்வாதமாயிருக்கிறது. மெல்கிசேதேக்கு சொல்லுகிற ஆசீர்வாதமோ ஆபிராமின் ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் ஆசீர்வாதமாயிருக்கிறது. அப்பத்தினாலும் திராட்சரசத்தினாலும் வரும் ஆசீர்வாதத்தைவிட, ஆசாரியரின் ஆசீர்வாத வார்த்தைகளே மெய்யான ஆசீர்வாதம்.

பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை, நம்மை ஆசீர்வதிப்பதற்காக, இந்த உலகத்திற்கு அனுப்பினார். கிறிஸ்துவானவர் தமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற தெய்வீக அதிகாரத்தினால் மனுக்குலத்தை ஆசீர்வதிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் ஆசீர்வாதமே மெய்யான ஆசீர்வாதம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒருவரை ஆசீர்வதிக்கும்போது, அவர் மெய்யாகவே ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்.

உன்னதமான தேவனுடைய ஆசாரியனாகிய மெல்கிசேதேக் ஆபிராமை நோக்கி, "வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம்" (ஆதி 14:19,20) என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார்.

இந்த வசனப்பகுதியில் தேவனாகிய கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது "உன்னதமான தேவன்" என்னும் பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. முதன் முறையாக இந்த வாக்கியம் ஆதி 14:18-22 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கான எபிரெய வார்த்தை "எல்-எல்லியோன்" என்பதாகும். "எல்" என்பதற்கு முதல் அல்லது வலிமை என்று பொருள்.

தேவன் வல்லமையுள்ளவர். எல்லாவற்றிற்கும் முதன்மையானவர். அவர் வானத்திற்கும், பூமிக்கும் அதிபதி. வேதாகமத்தில் உன்னதமான தேவன் என்னும் வார்த்தை 245 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய குணாதிசயங்களை அவருடைய திருநாமங்கள் விளக்கும். அவையாவன:

1. தேவனாகிய கர்த்தர் (ஆதி 17:1)
2. சதாகாலமுமுள்ள தேவன் (ஆதி 21:33)
3. எரிச்சலுள்ள தேவன்.(யாத் 20:5)
4. மகத்துவமான தேவன் (உபா10:17)
5. ஜீவனுள்ள தேவன் (யோசு 3:10)
6. இரக்கமுள்ள தேவன் (உபா 4:31)
7. உண்மையுள்ள தேவன் (உபா 7:9)
8. வல்லமையுள்ள தேவன் (உபா 7:21).

உபா 32:4 ஆவது வசனத்தில் தேவனுடைய நாமம் சத்தியம், நீதி, நியாயம், பரிபூரணம் ஆகிய சுபாவங்களோடு இணைத்துக் கூறப் பட்டிருக்கிறது. உன்னதமான தேவன் என்னும் வாக்கியம் வானங்களுக்கும், பூமிக்கும் அதிபதியாக இருக்கும் கர்த்தராகிய தேவனைக் குறிக்கும். (லூக்கா 1:76; அப் 17:24).

மெல்கிசேதேக்கு ஆபிராமுக்கு இரண்டு ஆசீர்வாதங்களை சொல்லுகிறார். அவையாவன : 1. உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக என்று சொல்லி ஆபிராமை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கிறார். 2. உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொல்லி, ஆபிராமுக்காக மெல்கிசேதேக்கு கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறார்.

"உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்பது தேவனைத் துதிக்கும் வாக்கியம். வேதாகமத்தில் தேவனைத் துதிப்பதற்கு கூறப்பட்டிருக்கும் முதலாவது எடுத்துக்காட்டு (ஆதி 14:19). கடைசி எடுத்துக்காட்டு (வெளி 19:1-10).

மெல்கிசேதேக்கு தேவனைப்பற்றி உன்னதமான வார்த்தைகளை சொல்லுகிறார். அவர் வானத்தையும் பூமியையும் உடையவர். அவர் உன்னதமானவர். அவரே சர்வசிருஷ்டிகளின்மீது, சர்வஆளுகையுள்ளவர்.

ஆபிராம் மெல்கிசேதேக்குக்கு எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுக்கிறார். "இவன் எவ்வளவு பெரியவனாயிருக்கிறான் பாருங்கள்; கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாம் முதலாய் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் இவனுக்குத் தசமபாகம் கொடுத்தான்" (எபி 7:4).

ஆபிராம் மெல்கிசேதேக்குக்கு தன்னுடைய மதிப்பையும் மரியாதையும் வெளிப்படுத்துகிறார். அதற்கு அடையாளமாக ஆபிராம் அவருக்கு தசமபாகம் கொடுக்கிறார்.

ஆபிராம் உன்னதமான தேவனுக்கு நேர்ந்து கொண்ட காணிக்கைகளை, ஆசாரியராகிய மெல்கிசேதேக்கின் கைகளிலே கொடுக்கிறார். கர்த்தருக்கு செலுத்தும் காணிக்கையை ஆசாரியருடைய கைகளில் கொடுப்பது வழக்கம். அதுபோலவே, ஆபிராம் மெல்கிசேதேக்கின் கையிலே தசமபாகம் கொடுக்கிறார்.

நாம் கர்த்தருடைய இரக்கத்தையும் கிருபையையும் பெற்றுக்கொள்ளும்போது, நாம் அவருக்கு விசேஷித்த வழிகளில் நன்றிசொல்லவேண்டும். நம்முடைய துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் விசேஷித்த விதமாய் கர்த்தருக்கு வெளிப்படுத்தவேண்டும்.

கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஆசீர்வாதத்தில், பத்தில் ஒரு பகுதியை தனியாகப் பிரித்தெடுத்து, அதை கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணி அவரை மகிமைப்படுத்தவேண்டும். தசமபாகம் கர்த்தருடைய ஆலயத்தின் ஊழியத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு மகாபிரதான மெல்கிசேதேக்காயிருக்கிறார். நாம் கிறிஸ்துவானவரைக் கனம்பண்ணவேண்டும். கிறிஸ்துவே நமக்கு ராஜாவாகவும், ஆசாரியராகவும் இருக்கிறார் என்பதை பணிவோடு அங்கீகரிக்கவேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு நம்முடைய தசமபாகங்களை மாத்திரமல்ல, நம்மிடத்திலுள்ள எல்லாவற்றையும் கொடுத்து அவரைக் கனம்பண்ணவேண்டும். நம்மையே கிறிஸ்துவின் பாதபடியில் ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும்.

ஆபிராமும் சோதோமின் ராஜாவும் ஆதி 14:21-24

ஆதி 14:21. சோதோமின் ராஜா ஆபிராமை நோக்கி: ஜனங்களை எனக்குத் தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்றான்.

ஆதி 14:22. அதற்கு, ஆபிராம் சோதோமின் ராஜாவைப் பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்வேன் என்று,

ஆதி 14:23. வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்.

ஆதி 14:24. வாலிபர் சாப்பிட்டதுபோக, என்னுடனே வந்த ஆநேர், எஸ்கோல், மம்ரே என்னும் புருஷருடைய பங்குமாத்திரமே வரவேண்டும்; இவர்கள் தங்கள் பங்கை எடுத்துக்கொள்ளட்டும் என்றான்.

ஆபிராமுக்கும் சோதோமின் ராஜாவுக்கும் இடையே நடைபெறுகிற சம்பாஷணை இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆபிராம் கெதர்லாகோமேரையும், அவனோடிருந்த ராஜாக்களையும் முறியடித்துத் திரும்பிவருகிறபோது, சோதோமின் ராஜா புறப்பட்டு, ராஜாவின் பள்ளத்தாக்கு என்னும் சாவே பள்ளத்தாக்குமட்டும் ஆபிராமுக்கு எதிர்கொண்டுபோகிறான் (ஆதி 14:17).

அப்பொழுது சோதோமின் ராஜா ஆபிராமை நோக்கி: "ஜனங்களை எனக்குத் தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும்" (ஆதி 14:21) என்று சொல்லுகிறான்.

ஆபிராம் கெதர்லாகோமேரையும், அவனோடிருந்த ராஜாக்களையும் முறிடித்து, லோத்துவையும் அவரோடு சிறைப்பிடித்துக்கொண்டுபோகப்பட்ட ஜனங்களையும் திருப்பிக்கொண்டு வருகிறார். அந்த ஜனங்களில் சோதோமின் ஜனங்களும் இருக்கிறார்கள். சோதோமின் ராஜா ஆபிராமிடமிருந்து தன்னுடைய ஜனங்களை தனக்கு தரவேண்டுமாறு கேட்கிறார்.

ஆபிராம் கெதர்லாகோமேரையும், அவனோடிருந்த ராஜாக்களையும் முறிடித்து, லோத்தையும் அவருடைய பொருட்களையும் திருப்பிக்கொண்டு வருகிறார். சோதோமின் ராஜா அந்தப் பொருட்களின்மீது பிரியப்படவில்லை. "பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும்" என்று ஆபிராமுக்கு சொல்லுகிறான்.

ஆனால் ஆபிராமோ சோதோமின் ராஜா சொல்லுவதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆபிராமிடத்தில் சோதோமின் ஜனங்களும், அவர்களுடைய பொருட்களும் இருக்கிறது. அந்தப் பொருட்களை ஆபிராமே வைத்துக்கொள்ளட்டும் என்று சோதோமின் ராஜா சொல்லுகிறான்.

ஆபிராம் சோதோமின் ராஜாவைப் பார்த்து: "ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன்" (ஆதி 14:22) என்று சொல்லுகிறார்.

ஆபிராம் வானத்தை நோக்கிப் பார்க்கிறார். அவர் கர்த்தரை நோக்கிப் பார்க்கிறார். ஆபிராமுக்கு இந்தப் பூமியோ, இந்தப் பூமியிலுள்ள சம்பத்துக்களோ முக்கியமானதாக தெரியவில்லை. அவர் பரலோகத்திலே பிரவேசிக்கும் நாள் வரும் வரையிலும், இந்தப் பூமியிலே ஒரு பரதேசியைப்போல சஞ்சரிக்கிறார். ஆபிராமுக்கு உலகப்பிரகாரமான பொருட்களின்மீதும், சம்பத்துக்களின்மீதும், ஐசுவரியத்தின்மீதும் விருப்பமில்லை. ஆகையினால் ஆபிராம் சோதோமின் ராஜாவைப் பார்த்து, "உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன்" என்று சொல்லிவிடுகிறார்.

ஆபிராம் தன்னுடைய வாயின் வார்த்தைகளை ஆணையிட்டு உறுதிபண்ணுகிறார். இதற்காக ஆபிராம் வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக தன் கையை உயர்த்துகிறார் (ஆதி 14:23). இது கர்த்தருக்கு முன்பாக ஆணையிட்டு சொல்லுவதற்கு அடையாளம்.

நாம் கர்த்தருடைய சமுகத்தில் பொருத்தனைபண்ணும்போதும், ஆணையிடும்போதும், நம்முடைய வார்த்தைகள் சுத்தமானதாகவும், உண்மையானதாகவும் இருக்கவேண்டும். நாம் பொய்யாணையிடுவோமென்றால் தேவனுடைய கோபம் நம்மீது வரும். நம்மிடத்தில் உண்மையிருக்கிறது என்பதையும், பொய்யோ, மாய்மாலமோ இல்லை என்பதையும் கர்த்தருடைய சமுகத்திலே அறிக்கை பண்ணும் வண்ணமாக, நம்முடைய கையை தேவனாகிய கர்த்தருக்கு நேராக உயர்த்தவேண்டும்.

சோதோமின் ராஜா ஆபிராமுக்கு பொருட்களை கொடுக்க முன்வரும்போது, ஆபிராம் அதைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறார். ஆபிராமை நான் ஐசுவரியவாக்கினேன் என்று சோதோமின் ராஜா சொல்லக்கூடாது என்பதில் ஆபிராம் கவனமாயிருக்கிறார்.

சோதோமின் ராஜா மூலமாக ஆபிராம் ஐசுவரியவானாக விரும்பவில்லை. ஆபிராம் கர்த்தருடைய ஆசீர்வாதத்தையும், அவர் மூலமாக வரும் ஐசுவரியத்தையும் எதிர்பார்க்கிறார். அவர் கர்த்தருடைய வார்த்தையையும், அவருடைய உடன்படிக்கையையும் நம்புகிறார். கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதமே மெய்யான ஆசீர்வாதம். கர்த்தரால் வரும் ஐசுவரியமே நமக்கு தங்கும்.

ஆபிராம் சோதோமின் ராஜாவுடைய பொருட்களை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. உலகப்பிரகாரமான ஐசுவரியங்கள் ஆபிரகாமுக்கு முக்கியமானதாக தெரியவில்லை. ஆபிராமிடத்தில் சுயநலமோ, பேராசையோ இல்லை. ஆபிராம் தன்னுடைய சுயநலத்தை பார்ப்பதைவிட, தன்னோடுகூட யுத்தம்பண்ண வந்த ஜனங்களுடைய நன்மையைப் பார்க்கிறார்.

ஆபிராம் சோதோமின் ராஜாவைப் பார்த்து, "வாலிபர் சாப்பிட்டதுபோக, என்னுடனே வந்த ஆநேர், எஸ்கோல், மம்ரே என்னும் புருஷருடைய பங்குமாத்திரமே வரவேண்டும்; இவர்கள் தங்கள் பங்கை எடுத்துக்கொள்ளட்டும்" (ஆதி 14:24) என்று சொல்லிவிடுகிறார்.

ஆபிராம் தன்னோடே உடன்படிக்கை செய்திருந்த மனிதராகிய எஸ்கோலுக்கும் ஆநேருக்கும் சகோதரனாகிய மம்ரே என்னும் எமோரியனுடைய சமபூமியிலே குடியிருக்கிறார் (ஆதி 14:13). ஆபிராம் இவர்களுடைய பங்கை சோதோமின் ராஜாவினிடத்திலிருந்து கேட்டு பெற்று தருகிறார்.

ஆபிராம் தனக்காக எதையும் பெற்றுக்கொள்ளவில்லை. "ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன்" என்று சோதோமின் ராஜா சொல்லாதபடிக்கு, ஆபிராம் ஒரு சரட்டையாகிலும், பாதரட்சையின் வாரையாகிலும், சோதோமின் ராஜாவுக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளவில்லை.

BELLWETHER INTERNATIONAL

ஆதியாகமம் - விரிவுரை
GENESIS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

ஆபிராம் மற்றவருக்கு உரியதை இச்சிக்கவில்லை. ஆபிராமோடு உடன்படிக்கை பண்ணியவர்கள் பாரம்பரியத்தின் பிரகாரம் எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் ஆபிராமோ பிறர் பொருளை வஞ்சியாதிருக்கிறார். தனக்கும், தன்னுடனே வந்தவர்களுக்கும் உணவுப் பொருட்களை மட்டுமே பெற்றுக் கொள்கிறார். (ஆதி 14:23-24).

ஆபிராம் "உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியம் தேவனிடத்தில் பணிவோடு பொருத்தனை பண்ணுவதைக் குறிக்கிறது. தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணும்போது கர்த்தருக்கு நேராக நமது கையை உயர்த்தி நம்மைத் தாழ்த்தி, நாம் ஒன்றுமில்லையென்று அறிக்கையிட வேண்டும். (ஏசா 62:8; தானி 12:7; வெளி 10:5-6)

15 அதிகாரம்

ஆபிராமுக்கும் கர்த்தருக்கும் இடையே உடன்படிக்கை உறுதிபண்ணப்படுகிறது. இதற்கு முந்தின அதிகாரத்தில், ஆபிராம் ராஜாக்களோடு யுத்தம்பண்ணினார். இந்த அதிகாரத்திலோ, அவர் கர்த்தரோடு கூடயிருக்கிறார். ராஜாக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி ஜெயிப்பதைவிட, கர்த்தருடைய சமுகத்திலே நம்மைத் தாழ்த்தி, அவருடைய கிருபைகளைப் பெற்றுக்கொள்வதே, நமக்கு மிகப்பெரிய ஆசீர்வாதம்.

தேவனுக்கும் ஆபிராமுக்கும் இடையே உடன்படிக்கை உறுதிபண்ணப்படுகிறது. இது வாக்குத்தத்தங்களின் உடன்படிக்கையாகும். கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்கு உண்டாயிற்று. கர்த்தர் ஆபிராமை ஆசீர்வதிக்கிறார். கர்த்தர் அவருக்கு ஆதரவாகயிருக்கிறார் (ஆதி 15:1).

கர்த்தர் ஆபிராமின் சந்ததியை அதிகரிக்கப்பண்ணுகிறார் (ஆதி 15:2-6). கர்த்தர் ஆபிராமுக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுக்கிறார் (ஆதி 15:7-21). வாக்குத்தத்தத்தின் சந்ததியும், வாக்குத்தத்தத்தின் தேசமும் ஆபிராமுக்கு ஆறுதலாயிருக்கிறது. விசுவாசிகளாகிய நமக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் பரலோகமும் மேன்மையான ஆசீர்வாதங்களாகும்.

ஆபிராமுக்கு கர்த்தருடைய வார்த்தை ஆதி 15:1

ஆதி 15:1. இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்.

ஆபிராம் கெதர்லாகோமேரையும், அவனோடிருந்த ராஜாக்களையும் முறியடித்தார். ஆபிராம் லோத்தையும், அவருடைய பொருள்களையும், ஸ்திரீகளையும், ஜனங்களையும் திருப்பிக்கொண்டு வந்தார். அதன் பின்பு ஆபிராமுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று.

ஆபிராம் சிறைப்பட்டுப்போனவர்களை விடுவித்திருக்கிறார். துன்பத்திலும், வேதனையிலும் இருந்தவர்களை விடுதலை செய்து, அவர்களுக்கு ஆறுதலைக் கொடுத்திருக்கிறார். இதற்காக ஆபிராமுக்கு யாரும் வெகுமதி கொடுக்கவில்லை. அவர் யாரிடத்திலும் கிரயத்தைப் பெற்றுக்கொண்டு கெதர்லாகோமேருக்கு விரோதமாகவோ அல்லது அவனோடு கூடயிருந்த ராஜாக்களுக்கு விரோதமாகவோ யுத்தம்பண்ணப்போகவில்லை.

ஆபிராம் தானாகவே முன்வந்து, சிறைப்பட்டவர்களை திருப்பிக்கொண்டு வருகிறார். அதன்பின்பு ஆபிராமுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. ஆபிராம் கெதர்லாகோமேரையும், அவனோடிருந்த ராஜாக்களையும் முறியடித்து திரும்பி வந்த பின்பு, அவருக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று.

இந்தக் காரியங்கள் நடந்த பின்பு ஆபிராமுக்கு கர்த்தருடைய வார்த்தை தரிசனத்திலே உண்டாயிற்று. ஆபிராம் நித்திரை செய்யவில்லை. அவர் விழித்திருக்கிறார். அப்போது ஆபிராம் தேவனுடைய ஷேக்கைனா மகிமையை பிரத்தியட்சமாய்த் தரிசிக்கிறார். அவர் தேவனுடைய தெய்வீக மகிமையை தன்னுடைய கண்களால் பார்க்கிறார்.

கர்த்தர் ஆபிராமின்மீது அன்பாயிருக்கிறார். அவர் தம்முடைய கிருபையையும், ஆசீர்வாதத்தையும், சிலாக்கியங்களையும் ஆபிராமுக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தர் ஆபிராமைக் கூப்பிடும்போது, அவருடைய பெயரைச் சொல்லி கூப்பிடுகிறார். "ஆபிராமே, நீ பயப்படாதே" என்று கர்த்தர் அன்போடும், ஆறுதலோடும் சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஆவியானவர் தம்முடைய நல்ல வார்த்தைகளை நமக்கு சொல்லும்போது, நமக்கு நன்மை உண்டாகும். கர்த்தர் ஆபிராமை நோக்கி, "ஆபிராமே, நீ பயப்படாதே, நான் உனக்கு கேடகமும், உனக்கு மகாபெரிய பலனுமாயிருக்கிறேன்" என்று சொல்லுகிறார்.

"ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்" (ஏசா 55:1).

ஆபிராம் ஏதோ ஒரு காரியத்தினிமித்தமாக பயப்படுகிறார். அவர் எதையோ நினைத்து தன்னுடைய மனதிலே கலங்கிக்கொண்டிருக்கிறார். கர்த்தர் ஆபிராமின் இருதயத்தை அறிந்திருக்கிறார். அவர் ஆபிராமை நோக்கி, "ஆபிராமே, நீ பயப்படாதே" என்று ஆறுதலாகச் சொல்லுகிறார். ஆபிராம் கர்த்தரை நம்புகிறார். அவர் ஒரு நீதிமான். அவர் பயப்பட வேண்டியதில்லை. சீயோனிலிருக்கிற பாவிகள்தான் பயப்படவேண்டும். ஆபிராம் பயப்பட வேண்டியதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் ஆபிராமுக்கு பாதுகாப்பையும் சந்தோஷத்தையும் வாக்குப்பண்ணுகிறார். கர்த்தருடைய ஆசீர்வாதம் ஆபிராமின்மீது நித்திய காலமாக தங்கியிருக்கும். கர்த்தர் தாமே ஆபிராமை பாதுகாப்பார். கர்த்தர் ஆபிராமுக்கு கேடகமாயிருப்பார். தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலின் தேவன் மாத்திரமல்ல, அவர் இஸ்ரவேலுக்கும் தேவனாயிருக்கிறார்.

கர்த்தர் ஆபிராமை ஆசீர்வதித்து, அவருடைய பயத்தைப் போக்குகிறார். கர்த்தரே ஆபிராமுக்கு மிகப்பெரிய வெகுமதியாயிருக்கிறார். ஆபிராமை ஆசீர்வதிக்கிறவர் கர்த்தர். அந்தக் கர்த்தரே ஆபிராமுக்கு ஆசீர்வாதமாகவும் இருக்கிறார்.

சோதோமின் ராஜா ஆபிராமுக்கு வெகுமதிகளைக் கொடுக்க முன்வந்தான். ஆனால் ஆபிராமோ அதைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். ஆபிராமுக்கு கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதம் வரும். ஆபிராம் மனுஷர் மூலமாக வரும் ஆசீர்வாதங்களைவிட, கர்த்தர் மூலமாக வரும் ஆசீர்வாதத்தையே அதிகமாய் விரும்புகிறார். கர்த்தர் ஆபிராமின் மனதை அறிந்து, "நான் உனக்கு கேடகமும், உனக்கு மகாபெரிய பெலனுமாயிருக்கிறேன்" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு, "நானே உனக்கு ஆசீர்வாதமாயிருக்கிறேன்" என்று பொருள்.

ஆபிராம் கர்த்தரிடத்திலிருந்து தரிசனத்தைப் பெற்றுக்கொண்டதுபோல, மேலும் அநேகர் அவரிடத்திலிருந்து தரிசனத்தைப் பெற்றுக்கொண்டார்கள் என்று பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களின் விவரம் வருமாறு :

1. ஆபிரகாம் (ஆதி 15:1)
2. யாக்கோபு (ஆதி 46:2)
3. பிலேயாம் (எண் 24:4,16)
4. சாமுவேல் (1சாமு 3:1,15)
5. நாத்தான் (2சாமு 7:17; 1நாளா 17:15)
6. ஏசாயா (ஏசா 1:1; 2நாளா 32:32)
7. மேசியா (சங் 89:19)
8. எசேக்கியேல் (எசே 7:13; எசே 8:1-4; எசே 11:24)
9. இத்தோ (2நாளா 9:29)
10. தானியேல் (தானி 2:19; தானி 8:1-27; தானி 9:21-24)
11. நேபுகாத்நேச்சார் (தானி 2)
12. ஒபதியா (ஒப 1)
13. நாகூம் (நாகூம் 1:1)
14. ஆபகூக் (ஆப 2:2-3)
15. பேதுரு (மத் 17:1; அப் 10:19; அப் 11:5)
16. யாக்கோபு (மத் 17:1)
17. யோவான் (மத் 17:1; வெளி 9:17)
18. சகரியா (லூக்கா 1:22)

19. அனனியா (அப் 9:10-12)

20. கொர்நேலியு (அப் 10:3,17)

21. பவுல் (அப் 16:9-10; அப் 18:9; 2கொரி 12)

ஆபிராமின் சந்ததி
ஆதி 15:2-6

ஆதி 15:2. அதற்கு ஆபிராம்: கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே; தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக்கர்த்தனாய் இருக்கிறானே என்றான்.

ஆதி 15:3. பின்னும் ஆபிராம்: தேவரீர் எனக்குப் புத்திரசந்தானம் அருளவில்லை; இதோ என் வீட்டிலே பிறந்த பிள்ளை எனக்குச் சுதந்தரவாளியாய் இருக்கிறான் என்றான்.

ஆதி 15:4. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி: இவன் உனக்குச் சுதந்தரவாளியல்ல, உன் கர்ப்பப்பிறப்பாயிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான் என்று சொல்லி,

ஆதி 15:5. அவர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்.

ஆதி 15:6. அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்.

ஆபிராமின் சந்ததி திரளாய்ப் பெருகும் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். ஆபிராம் கர்த்தரிடத்தில் தன் மனதிலுள்ள வேதனையை மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். இதன் தொடர்ச்சியாக கர்த்தர் ஆபிராமுக்கு இந்த வாக்குத்தத்தத்தை சொல்லுகிறார். ஆபிராம் இன்னும் பிள்ளையில்லாமலிருக்கிறார். இது அவருடைய மனதில் பாரமாகவும், அவருடைய இருதயத்தில் வேதனையாகவும் இருக்கிறது.

நாம் கர்த்தரைப்பற்றி ஒருபோதும் குறை சொல்லக்கூடாது. கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கக்கூடாது. ஆனாலும் நம்முடைய மனதிலுள்ள வேதனைகளையும், இருதயத்தின் பாரங்களையும் கர்த்தரிடத்தில் சொல்லுவதினால் தவறு ஒன்றுமில்லை. நம்முடைய மனதின் பாரங்களை கர்த்தருடைய சமுகத்தில் சொல்லும்போது, நம்முடைய வேதனை குறையும். வருத்தம் நம்மைவிட்டு நீங்கும். கர்த்தர் நம்முடைய விண்ணப்பங்களுக்கு செவிகொடுக்கிற தேவன். அவர் கிருபையும் இரக்கமுமுள்ளவர். அவர் நமக்கு உண்மையும் கரிசனையுமுள்ள சிநேகிதராயிருக்கிறார்.

ஆபிராம் கர்த்தரிடத்தில் நான்குவிதமான காரியங்களை சொல்லுகிறார். அவையாவன : 1. ஆபிராம் இன்னும் பிள்ளையில்லாமலிருக்கிறார். 2. ஆபிராமுக்கு வயதாயிற்று. ஆகையினால் அவருக்கு பிள்ளை பெறுவதற்கு இனிமேல் வாய்ப்பு இல்லை. 3. ஆபிராமுக்கு பிள்ளையில்லாமலிருப்பதினால், அவருடைய வீட்டின் வேலைக்காரர்களே அவருக்கு சுதந்தரவாளிகளாயிருப்பார்கள். 4. கர்த்தர் ஆபிராமை திரளான ஐசுவரியத்தினால் ஆசீர்வதித்திருக்கிறார். ஆனாலும் ஆபிராமுக்கு பிள்ளையில்லாமலிருப்பதினால் அவரால் அந்த ஐசுவரியங்களை சந்தோஷமாய் அனுபவிக்க முடியவில்லை.

கர்த்தர் ஆபிராமை நோக்கி, "ஆபிராமே, நீ பயப்படாதே, நான் உனக்கு கேடகமும் உனக்கு மகாபெரிய பலனுமாயிருக்கிறேன்" என்று சொல்லுகிறார். ஆனாலும் ஆபிராமின் மனதில் பயமும், வேதனையும் வருத்தமும், கவலையும் நிரம்பியிருக்கிறது.

ஆபிராம் தனக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லும் கர்த்தரை நோக்கி, "கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே; தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக்கர்த்தனாய் இருக்கிறானே" (ஆதி 15:2) என்று சொல்லுகிறார்.

ஆபிராமுக்கு வயதாயிற்று. ஆபிராமின் மனைவியாகிய சாராளுக்கும் வயதாயிற்று. சாராள் இனிமேல் பிள்ளை பெறுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆபிராம் தன்னுடைய வருஷங்களை பிள்ளையில்லாமலேயே கழித்துக்கொண்டு வருகிறார். காலம் வேகமாக கடந்து செல்கிறது. ஆனாலும் ஆபிராம் இன்னும் பிள்ளையில்லாமலிருக்கிறார்.

ஆபிராமின் வீட்டில் வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். தமஸ்கு ஊரானாகிய எலியேசர் ஆபிராமின் வீட்டு விசாரணைக்கர்த்தனாயிருக்கிறான். ஆபிராமுக்கு பிள்ளையில்லாமலிருப்பதினால், அவருடைய வேலைக்காரரின் பிள்ளைகளே, ஆபிராமின் வீட்டிற்கு சுதந்தரவாளிகளாயிருப்பார்கள். ஆபிராமுக்கு பிள்ளை பிறந்தால், அந்தப் பிள்ளை அவருக்கு சுதந்தரவாளியாயிருப்பான். தனக்கு சுதந்தரவாளியில்லை என்னும் வேதனை ஆபிராமின் மனதை வருத்தமடையச்செய்கிறது.

ஆபிராம் கர்த்தரை நோக்கி, "தேவரீர் எனக்குப் புத்திரசந்தானம் அருளவில்லை; இதோ என் வீட்டிலே பிறந்த பிள்ளை எனக்குச் சுதந்தரவாளியாய் இருக்கிறான்" (ஆதி 15:3) என்று சொல்லுகிறார். ஆபிராமுக்கு ஐசுவரியம் இருந்தாலும், அவருக்கு பிள்ளையில்லாமலிருப்பதினால், அவரால் தன்னுடைய ஐசுவரியங்களை சந்தோஷமாய் அனுபவிக்க முடியவில்லை. தனக்கு எல்லாம் இருந்தும், பிள்ளையில்லாமலிருப்பதினால், தனக்கு ஒன்றுமில்லை என்று ஆபிராம் கர்த்தரிடத்தில் வேதனையோடு சொல்லுகிறார்.

"தேவரீர் எனக்குப் புத்திரசந்தானம் அருளவில்லை" என்று ஆபிராம் கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். இஸ்மவேல் (ஆதி 16:15), ஈசாக்கு (ஆதி 21:1-8), கெத்தூராள் மூலமாக மற்ற குமாரர்கள் (ஆதி 25:1-6) ஆகியோர் பிறப்பதற்கு முன்பாக ஆபிராம் இந்த வார்த்தையைச் சொல்லுகிறார்.

"என் வீட்டிலே பிறந்த பிள்ளை எனக்குச் சுதந்தரவாளியாய் இருக்கிறான்" என்று ஆபிராம் சொல்லுவது, ஆதி 15:2 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் எலியேசரைக் குறிக்கும்.

ஆபிராம் விசுவாசத்தினால், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஸ்திரீயின் வித்தை நோக்கிப் பார்க்கிறார். ஆபிரகாமின் சந்ததியில், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வித்து உருவாகும். அந்த வித்தைப் பார்க்கவேண்டும் என்று ஆபிராம் விசுவாசத்தோடும், ஆர்வத்தோடும் காத்திருக்கிறார். கர்த்தர் ஆபிராமுக்கு ஏராளமான ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார். ஆனாலும் தன்னுடைய சந்ததியில் மேசியா பிறப்பார் என்பதே ஆபிராமுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதமாயிருக்கிறது.

கர்த்தரும் ஆபிராமை உற்சாகப்படுத்துகிறார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததிக்காக ஆபிராம் விசுவாசத்தோடு காத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் ஆபிராம் இப்போது பிள்ளையில்லாமலிருக்கிறார். அவருக்கு எவ்வளவுதான் ஐசுவரியம் இருந்தாலும், பிள்ளையில்லாவிட்டால், அவருக்கு ஒன்றுமே இல்லை.

கர்த்தர் விசுவாசிகளாகிய நம்மையும் அதிகமாய் ஆசீர்வதித்திருக்கிறார். நமக்கு எவ்வளவு திரளான ஆஸ்திகள் இருந்தாலும், நாம் எப்போதும் கர்த்தரையே நோக்கிப் பார்க்கவேண்டும். நம்முடைய இருதயத்தில் கிறிஸ்துவானவர் வாசம்பண்ணவேண்டும். நாம் இந்த உலகம் முழுவதையும் ஆதாயம்பண்ணிக்கொண்டாலும், கிறிஸ்துவானவர் நமக்குள்ளே உருவாகவில்லையென்றால், நமக்கு ஒன்றுமில்லை. நம்முடைய ஜீவியத்தில் கிறிஸ்து இல்லையென்றால் நாம் ஒன்றுமே இல்லை.

ஆபிராம் தன்னுடைய மனதின் வேதனையை கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். அவர் கர்த்தர்மீது குற்றம் சொல்லவில்லை. கர்த்தரைக்குறித்து குறையும் சொல்லவில்லை. ஆபிராம் தன் மனதிலுள்ள வேதனைகளையும், வருத்தங்களையும் கர்த்தருக்கு தெரியப்படுத்துகிறார். கர்த்தரும் ஆபிராமின் வார்த்தைகளை செவிகொடுத்து கேட்கிறார்.

அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்கு மறுபடியும் உண்டாயிற்று. கர்த்தர் ஆபிராமை நோக்கி, "இவன் உனக்குச் சுதந்தரவாளியல்ல, உன் கர்ப்பப்பிறப்பாயிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான்" (ஆதி 15:4) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதமாயிருக்கிறது. தன்னுடைய வீட்டில் பிறந்த வேலைக்காரரின் பிள்ளை தனக்கு சுதந்தரவாளியாயிருக்கிறான் என்று ஆபிராம் கர்த்தரிடத்தில் வேதனையோடு சொன்னார். கர்த்தரோ ஆபிராமை நோக்கி, "இவன் உனக்கு சுதந்தரவாளியல்ல" என்று சொல்லிவிடுகிறார்.

கர்த்தர் ஆபிராமுக்கு தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக ஒரு சுதந்தரவாளியை நியமித்திருக்கிறார். அந்த சுதந்தரவாளி ஆபிராமுடைய வேலைக்காரனோ, அந்த வேலைக்காரனுடைய பிள்ளையோ அல்ல. கர்த்தர் ஆபிராமை நோக்கி, "உன் கர்ப்பப்பிறப்பாயிருப்பவனே உனக்கு சுதந்தரவாளியாயிருப்பான்" என்று சொல்லுகிறார்.

ஆபிராம் கர்த்தரிடத்தில், "ஆண்டவரே அடியேனுக்கு என்ன தருவீர், நான் பிள்ளையில்லாமலிருக்கிறேனே. தேவரீர் எனக்கு புத்திரசந்தானம் அருளவில்லை" என்று வேதனையோடு சொன்னார். இப்போதோ கர்த்தர் ஆபிராமுக்கு சுதந்தரவாளியை வாக்குப்பண்ணுகிறார். ஆபிராமின் கர்ப்பப்பிறப்பாயிருப்பவனே அவருக்கு சுதந்தரவாளியாயிருப்பான்.

ஆபிராம் கர்த்தருடைய வார்த்தையை நம்பவேண்டும். ஆபிராமின் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுவதற்கு கர்த்தரும் அவருக்கு உதவிசெய்கிறார். கர்த்தர் ஆபிராமை வெளியே அழைத்து வந்து, அவரை நோக்கி, "நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும்" (ஆதி 15:5) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஆபிராமுக்கு வாக்குத்தத்த வார்த்தைகளை சொல்லுவதோடு, அவருக்கு வானத்தின் நட்சத்திரங்களையும் காண்பிக்கிறார். "உன் சந்ததி இவ்வண்ணமாயிருக்கும்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

வானத்திலுள்ள நட்சத்திரங்கள் திரளான எண்ணிக்கையிலிருக்கிறது. அவற்றை எண்ண முடியாது. ஆபிராமோ தனக்கு பிள்ளையில்லை என்று வேதனையோடு சொல்லுகிறார். கர்த்தரோ அவருக்கு வானத்தின் நட்சத்திரங்களைக் காண்பித்து, அவருடைய சந்ததி, எண்ணக்கூடாத அளவுக்கு திரளாயிருக்கும் என்று சொல்லுகிறார்.

வானத்திலுள்ள நட்சத்திரங்கள் பிரகாசமாய் மின்னுகிறது. ஆபிராமின் திரளான சந்ததியார் நட்சத்திரங்களைப்போல பிரகாசமாயிருப்பார்கள். அவர்கள் மங்கிப்போகமாட்டார்கள். ஆபிராமுக்கு மாம்சப்பிரகாரமான சந்ததியும் பிறக்கும். அவருக்கு ஆவிக்குரிய சந்ததியும் உண்டாகும்.

ஆபிராமின் மாம்சப்பிரகாரமான சந்ததி இந்தப் பூமியின் தூளைப்போல இருக்கும். "உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும்" (ஆதி 13:16).

ஆபிராமின் ஆவிக்குரிய சந்ததியோ வானத்து நட்சத்திரங்களைப்போல இருக்கும். அவை எண்ணக்கூடாத அளவுக்கு திரளாகவும் இருக்கும். அவை மகிமையுள்ளதாகவும் பிரகாசமானதாகவும் இருக்கும்.

ஆபிராம் கர்த்தருடைய வார்த்தைகளை விசுவாசிக்கவேண்டும். அவர் கர்த்தரை விசுவாசிக்கிறார். ஆபிராமின் விசுவாசத்தை கர்த்தர் அவருக்கு நீதியாக எண்ணுகிறார் (ஆதி 15:6). அப்போஸ்தலர் பவுல் ஆபிராமின் விசுவாசத்தை நமக்கு எடுத்துக்காட்டாக சொல்லுகிறார்.

ஏலாமின் ராஜாவும் இவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண தன்னை ஆயத்தம்பண்ணுகிறான். அவனோடுகூட மேலும் மூன்று ராஜாக்களும் சேர்ந்திருக்கிறார்கள்.

பதினாலாம் வருஷத்திலே கெதர்லாகோமேரும், அவனோடே கூடியிருந்த ராஜாக்களும் வந்து, அஸ்தரோத்கர்னாயீமிலே இருந்த ரெப்பாயீமியரையும், காமிலே இருந்த சூசிமியரையும், சாவேகீரியத்தாயீமிலே இருந்த ஏமியரையும், சேயீர் மலைகளில் இருந்த ஓரியரையும், வனாந்தரத்துக்கு அருகான எல்பாரான்மட்டும் முறியடிக்கிறார்கள் (ஆதி 14:5,6).

"கெதர்லாகோமேர் .....ரெப்பாயீமியர்..... சூசிமியர்....ஏமியர்....ஓரியர்...." ஆகிய இவர்களெல்லாம் இராட்சத பிறவிகள். (உபா 2:10-11,20-21; உபா 3:11-13; யோசு 12:4; யோசு 13:12; யோசு 15:8; யோசு 17:15; யோசு 18:16).

"அத்சாத்சோன் தாமார்" என்பது சீரியாவிலுள்ள என்கேதியின் பழைய பெயர். எபிரோன் கட்டப்படும்போது இந்தப் பட்டணமும் பெரியதாக இருந்தது (2நாளா 20:2).

கெதர்லாகோமேர் தனக்கு விரோதமாக கலகம்பண்ணுகிற ராஜாக்களை ஒடுக்குகிறான். ஐந்து பட்டணங்களின் ராஜாக்களும் ஒன்றுசேர்ந்து கெதர்லாகோமேருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். கெதர்லாகோமேர் அவர்களுடைய கலகத்தை அடக்குகிறான்.

கெதர்லாகோமேரும், அவனோடு கூடயிருக்கிற மற்ற மூன்று ராஜாக்களும் திரும்பி காதேஸ் என்னும் என்மிஸ்பாத்துக்கு வந்து, அமலேக்கியருடைய நாடனத்தையும், அத்சாத்சோன் தாமாரிலே குடியிருந்த எமோரியரையும்கூடச் சங்கரிக்கிறார்கள் (ஆதி 14:7).

அப்பொழுது சோதோமின் ராஜாவும், கொமோராவின் ராஜாவும், அத்மாவின் ராஜாவும், செபோயீமின் ராஜாவும், சோவார் என்னும் பேலாவின் ராஜாவும் புறப்பட்டுச் சித்தீம் பள்ளத்தாக்கிலே, ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேரோடும், ஜாதிகளின் ராஜாவாகிய திதியாலோடும், சிநெயாரின் ராஜாவாகிய அம்ராப்பேலோடும், ஏலாசாரின் ராஜாவாகிய அரியோகோடும் யுத்தம்பண்ணப் புறப்படுகிறார்கள். அந்த ஐந்து ராஜாக்களோடும் இந்த நாலு ராஜாக்களும் யுத்தம்பண்ணுகிறார்கள் (ஆதி 14:8,9). இந்த யுத்தத்தில் ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேருக்கு ஜெயமுண்டாயிற்று.

சித்தீம் பள்ளத்தாக்கு எங்கும் நிலக்கீர் உண்டாகும் கேணிகள் இருக்கிறது. சோதோம் கொமோராவின் ராஜாக்கள் முறிந்தோடி அங்கே விழுகிறார்கள்; மீந்தவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகிறார்கள் (ஆதி 14:10). தேவன் சோதோமை அழித்தபோது, நிலக்கீல் கேணிகள் அனைத்தும் சவக்கடலுக்குள் மூழ்கிவிடுகிறது.

ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேரும், அவனோடு கூடயிருக்கிற மற்ற மூன்று ராஜாக்களும் சோதோமிலும் கொமோராவிலுமுள்ள பொருள்கள் எல்லாவற்றையும், போஜனபதார்த்தங்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள் (ஆதி 14:11).

ஆபிராமின் சகோதரனுடைய குமாரனாகிய லோத்து சோதோமிலே குடியிருக்கிறார். அவர்கள் லோத்தையும், அவருடைய பொருள்களையும் கொண்டுபோய்விடுகிறார்கள் (ஆதி 14:12). சோதோமிலிருந்த லோத்து, அந்நிய தேசத்திற்கு சிறைப்பட்டுப்போகிறார். லோத்தின் உடமைகள் எல்லாம் கொள்ளையடிக்கப்படுகிறது.

லோத்து ஒரு நீதிமான். சோதோமின் ஜனங்களோ பொல்லாதவர்களாயும் கர்த்தருக்கு முன்பாக மகாபாவிகளாயும் இருக்கிறார்கள். கர்த்தர் பாவிகளைத் தண்டிக்கிறார். அப்போது பாவிகளோடு கூடயிருக்கிற நீதிமான்களும், அந்தத் தண்டனையை அனுபவிக்கிறார்கள். நீதிமான்கள் துன்மார்க்கரோடு வாசம்பண்ணக்கூடாது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு துன்மார்க்கர்மீது வரும்போது, அதன் பாதிப்பு நீதிமானுக்கும் வரும்.

"அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறு வயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான். தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான். ஆகையால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" (ரோம 4:19-22).

கர்த்தர் ஆபிராமையும் அவருடைய விசுவாசத்தையும் அங்கீகரிக்கிறார். கர்த்தர் ஆபிராமை அங்கீகரித்ததுபோலவே, இஸ்ரவேல் ஜனத்தாருடைய முற்பிதாக்களையும் அங்கீகரிக்கிறார்.

"விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான், அவனுடைய காணிக்கைகளைக்குறித்து தேவனே சாட்சிகொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" (எபி 11:4).

ஆபிராமின் விசுவாசம், விசுவாசிகளாகிய நமக்கு எடுத்துக்காட்டாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆபிராமைப்போலவே நாமும் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறோம். நாம் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் நீதிமான்களாக்கப்படவில்லை.

"வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது, ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது" (ரோம 4:3).

"அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. ஆகையால் விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக" (கலா 3:6,7).

ஆபிராம் நீதிமானாக்கப்பட்டதுபோல, விசுவாசிகளாகிய நாம் எல்லோருமே நீதிமான்களாக்கப்படுகிறோம். கர்த்தர் ஆபிராமின் விசுவாசத்தை அவருக்கு நீதியாக எண்ணினார். அதுபோலவே கர்த்தர் நம்முடைய விசுவாசத்தையும் நமக்கு நீதியாக எண்ணுவார். நாம் நீதிமானாக்கப்படுவதற்கு, கர்த்தரை விசுவாசிக்கவேண்டும்.

சுதந்தர தேசம்
ஆதி 15:7-11

ஆதி 15:7. பின்னும் அவர் அவனை நோக்கி: இந்தத் தேசத்தை உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும்பொருட்டு, உன்னை ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து அழைத்துவந்த கர்த்தர் நானே என்றார்.

ஆதி 15:8. அதற்கு அவன்: கர்த்தராகிய ஆண்டவரே, நான் அதைச் சுதந்தரித்துக்கொள்வேன் என்று எதினால் அறிவேன் என்றான்.

ஆதி 15:9. அதற்கு அவர்: மூன்று வயதுக் கிடாரியையும், மூன்று வயது வெள்ளாட்டையும், மூன்று வயது ஆட்டுக்கடாவையும், ஒரு காட்டுப்புறாவையும், ஒரு புறாக்குஞ்சையும், என்னிடத்தில் கொண்டுவா என்றார்.

ஆதி 15:10. அவன் அவைகள் எல்லாவற்றையும் அவரிடத்தில் கொண்டுவந்து, அவைகளை நடுவாகத் துண்டித்து, துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைத்தான்; பட்சிகளை அவன் துண்டிக்கவில்லை.

ஆதி 15:11. பறவைகள் அந்த உடல்களின்மேல் இறங்கின; அவைகளை ஆபிராம் துரத்தினான்.

கர்த்தர் ஆபிராமுக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுக்கிறார். கர்த்தர் ஆபிராமை நோக்கி, “ இந்தத் தேசத்தை உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும்பொருட்டு, உன்னை ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து அழைத்துவந்த கர்த்தர் நானே” (ஆதி 15:7) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஆபிராமுக்கு கானான் தேசத்தை வாக்குப்பண்ணும்போது, இந்த வாக்குத்தத்தத்தோடு தொடர்புடைய தம்முடைய சித்தத்தையும் வெளிப்படுத்துகிறார். ஆபிராம் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட சந்ததியையும் விசுவாசிக்கவேண்டும். அவர் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தையும் விசுவாசிக்கவேண்டும். கர்த்தர் ஆபிராமுக்கு சந்ததியைக் கொடுப்பாரென்றால், அவருக்கு கானான் தேசத்தையும் கொடுப்பார்.

கிறிஸ்துவானவர் நம்முடையவராகயிருப்பாரென்றால், பரலோகமும் நம்முடையதாகயிருக்கும். கர்த்தர் ஆபிராமுக்கு சொன்ன முதலாவது வாக்குத்தத்தத்தை அவர் விசுவாசித்தார். ஆபிராமின் விசுவாசம் அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது. இப்போது கர்த்தர் ஆபிராமுக்கு இரண்டாவது வாக்குத்தத்தத்தை சொல்லுகிறார்.

கர்த்தர் கானான் தேசத்தைப்பற்றிச் சொல்லும்போது, அவர் ஆபிராமுக்கு மூன்று காரியங்களை நினைவுபடுத்துகிறார். அவையாவன : 1. நான் கர்த்தராகிய ஆண்டவர் 2. கர்த்தரே ஆபிராமை ஊர் என்னும் பட்டணத்திலிருந்து அழைத்து வந்தவர். 3. கானான் தேசத்தை ஆபிராமுக்கு சுதந்தரமாக கொடுக்கும் பொருட்டு, கர்த்தர் அவரை ஊர் என்னும் பட்டணத்திலிருந்து கானான் தேசத்திற்கு அழைத்து வந்திருக்கிறார்.

கர்த்தர் ஆபிராமுக்கு தம்முடைய வாக்குத்தத்தத்தை சொல்லும்போது, தம்முடைய தெய்வீக சுபாவத்தையும் அவருக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தர் ஆபிராமிடம், “கர்த்தர் நானே” என்று சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர். அவரால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை. கர்த்தரால் எல்லாம் கூடும்.

ஆபிராமுக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். கர்த்தருடைய சித்தம் நிறைவேறுவதற்கு எத்தனை எதிர்ப்புக்கள் வந்தாலும், ஏனோக்கியரின் குமாரர்கள் மூலமாக அதற்கு எதிர்ப்புக்கள் வந்தாலும், கர்த்தர் எல்லா எதிர்ப்புக்களையும் முறியடித்து, தம்முடைய வார்த்தையின் பிரகாரம் கானான் தேசத்தை ஆபிராமுக்கு சுதந்தரமாகக் கொடுப்பார். தம்மால் செய்ய முடியாத எதையும் கர்த்தர் வாக்குப்பண்ணமாட்டார். கர்த்தரால் செய்ய முடியாத காரியம் ஒன்றுமே இல்லை.

மனுஷர் பல சமயங்களில் பெரிய வாக்குறுதிகளைக் கொடுப்பார்கள். தங்களால் செய்ய முடியாத காரியங்களையும், தாங்கள் செய்து கொடுப்பதாக சொல்லுவார்கள். ஆனால் அவர்கள் அதை செய்யமாட்டார்கள். அவர்களால் அதை செய்ய முடியாது. இது மனுஷருடைய பலவீனம். கர்த்தரோ சர்வவல்லவர். அவரால் எல்லாம் கூடும். கர்த்தருடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறது.

கர்த்தர் தாமே ஆபிராமை ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து கானான் தேசத்திற்கு அழைத்து வந்திருக்கிறார். யூதருடைய பாரம்பரிய சரித்திர ஆகமங்களில் ஆபிராமைப்பற்றி அதிகமாய் எழுதப்பட்டிருக்கிறது. ஆபிராம் விக்கிரகங்களை ஆராதிக்க மறுத்ததற்காக, அக்காலத்து ஜனங்கள் அவரை எரிகிற அக்கினி சூளையிலே போட்டுவிட்டார்கள் என்றும், கர்த்தருடைய அற்புதமான வல்லமையினால் அவர் அக்கினி சூளையிலிருந்து தப்புவிக்கப்பட்டார் என்றும் யூதருடைய பாரம்பரிய சரித்திரம் சொல்லுகிறது.

கர்த்தர் பூர்வகாலம் முதலே ஆபிராமுக்கு தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆபிராம் கர்த்தருடைய கிருபையின் அஸ்திபாரத்தில் வளர்ந்தவர். கர்த்தர் ஆபிராமுக்கு காண்பித்த கிருபையும் இரக்கமும் மிகவும் விசேஷமானது. அவையெல்லாம் இனிமேல் வரப்போகிற கிருபைகளுக்கும் இரக்கங்களுக்கும் அடையாளங்களாகவும், அச்சாரங்களாகவும் இருக்கிறது.

"பெறப்பண்ணுகிறவராகிய நான் பெறச்செய்யாமல் இருப்பேனோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; பிரசவிக்கப்பண்ணுகிறவராகிய நான் பிரசவத்தைத் தடுப்பேனோ என்று உன் தேவன் சொல்லுகிறார்" (ஏசா 66:9)

கர்த்தர் ஆபிராமுக்கு இன்னும் அநேக நன்மைகளை செய்ய சித்தமுள்ளவராகயிருக்கிறார். கர்த்தர் அவரை ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து கானான் தேசத்திற்கு அழைத்து வந்ததற்கு ஒரு தெய்வீக நோக்கமுண்டு. கானான் தேசத்தை ஆபிராமுக்கு சுதந்தரமாகக் கொடுக்கும் பொருட்டே கர்த்தர் அவரை இங்கே அழைத்து வந்திருக்கிறார்.

ஆபிராம் கானான் தேசத்தை சாதாரணமாக பெற்றுக்கொள்ளமாட்டார். அதை சுதந்தரமாகப் பெற்றுக்கொள்வார். பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் சொத்துக்களை சுதந்தரிப்பதுபோல, ஆபிராம் கானான் தேசத்தை சுதந்தரமாகப் பெற்றுக்கொள்வார். கானான் தேசம் கர்த்தருக்குரியது. கர்த்தர் தமக்குரிய தேசத்தை ஆபிராமுக்கு சுதந்தரமாகக் கொடுக்கிறார். கர்த்தர் கொடுக்கும் சுதந்தரம் உறுதியானதாகவும், நிச்சயமானதாகவும் இருக்கும்.

கர்த்தர் ஒவ்வொரு விசுவாசியின் இருதயத்திலும், தம்முடைய தெய்வீகதிட்டத்தின் பிரகாரமாகவே கிரியை செய்கிறார். கர்த்தர் ஆபிராமை ஊர் என்கிற கல்தேயருடைய தேசத்திலிருந்து அழைத்து வந்ததற்கு ஒரு நோக்கமுண்டு. அதுபோலவே கர்த்தர் விசுவாசிகளுடைய இருதயங்களில் தம்முடைய தெய்வீக கிரியைகளை நடப்பிப்பதற்கும் ஒரு நோக்கமுண்டு.

தம்முடைய ஜனங்கள் எல்லோரும் பரலோகத்திலே பாதுகாப்பாக பிரவேசிக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய திட்டம். இதற்காகவே கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாகவும், திட்டத்தின் பிரகாரமாகவும் நம்மை வழிநடத்துகிறார்.

ஆபிராம் கர்த்தருடைய வாக்குத்தத்த வார்த்தைகளை கவனமாகக் கேட்கிறார். ஆனாலும் கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை அடையாளத்தினால் உறுதிபண்ணவேண்டும் என்று ஆபிராம் எதிர்பார்க்கிறார்.

ஆபிராம் கர்த்தரை நோக்கி, "கர்த்தராகிய ஆண்டவரே, நான் அதைச் சுதந்தரித்துக்கொள்வேன் என்று எதினால் அறிவேன்" (ஆதி 15:8) என்று கேட்கிறார். ஆபிராம் கர்த்தருடைய வார்த்தைகளை சந்தேகப்படவில்லை. அவர் கர்த்தரை விசுவாசிக்கிறார் (ஆதி 15:6). ஆனாலும் ஆபிராம் தன்னுடைய விசுவாசத்தைப் பலப்படுத்திக்கொள்ளவும், உறுதிபண்ணிக்கொள்ளவும் விரும்புகிறார்.

ஆபிராம் கர்த்தரிடத்தில் அவிசுவாச வார்த்தைகளைப் பேசாமல், விசுவாச வார்த்தைகளை ஜெபத்தோடு பேசுகிறார். ஆபிராம் கர்த்தரை நோக்கி, "கர்த்தராகிய ஆண்டவரே, என் அவிசுவாசம் என்னை விட்டு நீங்க எனக்கு உதவி செய்யும்" என்று பொருள்படுமாறு ஜெபம்பண்ணுகிறார்.

ஆபிராம் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்தாலும், அது நிறைவேறும் என்பதற்கு ஒரு அடையாளத்தையும் எதிர்பார்க்கிறார். ஆபிராமுக்கும் சோதனைகள் வரும். கர்த்தர் தம்முடைய வார்த்தையை அடையாளத்தினால் உறுதிபண்ணும்போது, ஆபிராம் தனக்கு வரும் சோதனைகளை மேற்கொள்வதற்கு அது உதவியாயிருக்கும்.

கர்த்தர் கொடுக்கும் அடையாளம் ஆபிராமுக்கு மாத்திரமல்ல, அவருடைய பின்சந்ததியாரின் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுவதற்கும் உதவியாயிருக்கும். ஆபிராம் இதையெல்லாம் மனதில் நினைத்து, "கர்த்தராகிய ஆண்டவரே, நான் அதைச் சுதந்தரித்துக்கொள்வேன் என்று எதினால் அறிவேன்" என்று கர்த்தரிடத்தில் கேட்கிறார்.

கர்த்தர் ஆபிராமிடம் தமக்கு ஒரு பலியை ஆயத்தம்பண்ணுமாறு சொல்லுகிறார். இதன் மூலமாக கர்த்தர் அவருக்கு ஒரு அடையாளத்தைக் காண்பிப்பார்.

கர்த்தர் ஆபிராமை நோக்கி, "மூன்று வயதுக் கிடாரியையும், மூன்று வயது வெள்ளாட்டையும், மூன்று வயது ஆட்டுக்கடாவையும், ஒரு காட்டுப்புறாவையும், ஒரு புறாக்குஞ்சையும், என்னிடத்தில் கொண்டுவா" (ஆதி 15:9) என்று சொல்லுகிறார்.

ஆபிராமும் கர்த்தர் தனக்கு சொன்ன பிரகாரம் பலியை ஆயத்தம்பண்ணுகிறார். ஆபிராம் அவைகள் எல்லாவற்றையும் கர்த்தரிடத்தில் கொண்டுவந்து, அவைகளை நடுவாகத் துண்டித்து, துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைக்கிறார்; ஆபிராம் பட்சிகளை துண்டிக்கவில்லை. பறவைகள் அந்த உடல்களின்மேல் இறங்குகிறது; ஆபிராம் அவைகளை துரத்துகிறார் (ஆதி 15:10,11).

கர்த்தருடைய நிச்சயமான வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொண்டவர்கள், தங்கள் விசுவாசத்தில் பலப்படவேண்டும். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தர் ஏற்கெனவே ஏற்படுத்தியிருக்கிற நியமங்களின் பிரகாரம் அவரை சந்திப்பதற்கு தங்களை ஆயத்தம்பண்ணவேண்டும்.

தமக்கு பலியை ஆயத்தம்பண்ணுமாறு கர்த்தர் ஆபிராமுக்கு சொல்லுகிறார். கர்த்தர் சொன்ன எல்லாவற்றையும் ஆபிராம் அவரிடத்தில் கொண்டு வருகிறார். இந்தப் பலியின் மூலமாக கர்த்தர் தனக்கு எவ்வாறு அடையாளத்தை வெளிப்படுத்துவார் என்பது ஆபிராமுக்கு தெரியாது. ஆனாலும் அவர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார்.

என்ன நடக்கப்போகிறது என்பது தெரியாமலேயே கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவது ஆபிராமுக்கு புதியதல்ல. தான் போகும் தேசம் எது என்று தெரியாமலேயே, ஆபிராம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, ஊர் என்னும் கல்தேயருடைய பட்டணத்திலிருந்து புறப்பட்டுப்போனார். ஆபிராம் இதற்கு முன்பு கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்ததுபோல, இப்போதும் கீழ்ப்படிகிறார்.

ஆபிராம் மூன்று வயது கிடாரியையும் மூன்று வயது வெள்ளாட்டையும், மூன்று வயது ஆட்டுக்கடாவையும் நடுவாக துண்டித்து, துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைக்கிறார். உடன்படிக்கைகளை உறுதிபண்ணுவதற்கு இதுபோல செய்வது வழக்கம்.

"என் முகத்துக்குமுன் பண்ணின உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றாமல், என் உடன்படிக்கையை மீறின மனுஷரை நான் துண்டங்களின் நடுவாகக் கடந்துபோகும்படி அவர்களை இரண்டாகத் துண்டித்த கன்றுக்குட்டியைப்போல் ஆக்குவேன்.

கன்றுக்குட்டியின் துண்டுகளின் நடுவே கடந்துபோன யூதாவின் பிரபுக்களையும், எருசலேமின் பிரபுக்களையும், பிரதானிகளையும், ஆசாரியர்களையும், தேசத்தின் சகல ஜனங்களையும் அப்படிச் செய்து, நான் அவர்களை அவர்கள் சத்துருக்களின்கையிலும், அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன்; அவர்களுடைய பிரேதம் ஆகாயத்தின் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்" (எரே 34:18-20).

ஆபிராம் பூர்வகாலத்தில் செய்யப்பட்டதுபோல, துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைக்கிறார். ஆனாலும் கர்த்தருடைய வெளிப்பாடு எப்போதும் ஒன்றுபோலிருப்பதில்லை. அவர் தமக்கு சித்தமானவேளையிலே, தமக்கு சித்தமான பிரகாரம் தம்மை வெளிப்படுத்துகிறார்.

ஆபிராம் துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைத்தவுடனேயே கர்த்தருடைய பிரசன்னம் அங்கு வெளிப்படவில்லை. அவர் கர்த்தருடைய பிரசன்னத்திற்காக காத்திருக்கிறார். காத்திருக்கும் நேரம் அதிகரிக்கிறது. ஆகையினால் ஆபிராமின் எதிர்பார்ப்பும் அதிகரிக்கிறது. ஆபிராம் பட்சிகளை துண்டிக்கவில்லை. கிடாரியையும், வெள்ளாட்டையும், ஆட்டுக்கடாவையும் மாத்திரமே நடுவாக துண்டித்து, துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைத்திருக்கிறார்.

கர்த்தருடைய பிரசன்னம் வெளிப்படுவதற்கு தாமதமாயிற்று. அப்போது பறவைகள் அந்த உடல்களின்மேல் இறங்குகிறது. ஆபிராம் அவைகளைத் துரத்துகிறார். நாம் கர்த்தருக்கு பலிசெலுத்தும்போது, அந்தப் பலியின்மீது பறவைகள் பறந்து வருவதுபோல, வீணான சிந்தனைகள் நம்முடைய மனதிலே ஏற்படலாம்.

ஆபிராம் அந்தப் பறவைகளை துரத்தினதுபோல, நாமும் வீணான சிந்தனைகளை நம்மைவிட்டுத் துரத்தவேண்டும். நாம் கர்த்தருடைய வார்த்தைகளை தியானிக்கும்போதும், கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போதும் வீணான சிந்தனைகள் நமக்குள் வராதவாறு, அவற்றை அகற்றவேண்டும். கர்த்தருடைய சமுகத்திலே எந்தவிதமான இடையூறுமில்லாமல், அவரோடு ஐக்கியமாயிருக்கவேண்டும்.

அந்நிய தேசத்தில் ஆபிராமின் சந்ததியார்
ஆதி 15:12-16

ஆதி 15:12. சூரியன் அஸ்தமிக்கும்போது, ஆபிராமுக்கு அயர்ந்த நித்திரை வந்தது; திகிலும் காரிருளும் அவனை மூடிக்கொண்டது.

ஆதி 15:13. அப்பொழுது அவர் ஆபிராமை நோக்கி: உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய்.

ஆதி 15:14. இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன்; பின்பு மிகுந்த பொருள்களுடனே புறப்பட்டு வருவார்கள்.

ஆதி 15:15. நீ சமாதானத்தோடே உன் பிதாக்களிடத்தில் சேருவாய்; நல்ல முதிர்வயதிலே அடக்கம்பண்ணப்படுவாய்.

ஆதி 15:16. நாலாம் தலைமுறையிலே அவர்கள் இவ்விடத்துக்குத் திரும்ப வருவார்கள்; ஏனென்றால் எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை என்றார்.

ஆபிராமின் சந்ததியைப்பற்றி கர்த்தர் அவருக்கு வெளிப்படுத்துகிறார். அவர்கள் மூலமாக கர்த்தருடைய சித்தம் நிறைவேறும். வருங்காலத்தில் ஆபிராமின் சந்ததியாருக்கு என்ன நேரிடும் என்பதையும் கர்த்தர் இப்போதே அவருக்கு தெளிவுபடுத்துகிறார்.

ஆபிராம் மிருகங்களை நடுவாக துண்டித்து, துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைத்து, அந்த உடல்களின்மேல் இறங்கின பறவைகளை துரத்திக்கொண்டிருக்கிறார். கர்த்தருடைய பிரசன்னம் வெளிப்படுவதற்கு தாமதமாயிற்று. சூரியன் அஸ்தமிக்கும் நேரம் வந்துவிடுகிறது. அப்போது ஆபிராமுக்கு அயர்ந்த நித்திரை வருகிறது. திகிலும் காரிருளும் அவரை மூடிக்கொள்கிறது (ஆதி 15:12).

சூரியன் அஸ்தமிக்கும் நேரம் என்பது அந்திப்பலி செலுத்தப்படும் நேரமாகும். கர்த்தர் தம்முடைய ஆறுதலான திட்டங்களை, தம்முடைய ஜனத்திற்கு வெளிப்படுத்துவதற்கு முன்பாக, அவர்களை எதிர்பார்ப்போடு காத்திருக்கச் செய்கிறார். கர்த்தருடைய ஜனம் விசுவாசத்தில் பலப்படவேண்டும். அவர்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய்க் கட்டியெழுப்பப்படவேண்டும்.

நம்முடைய ஜெபத்திற்கு கர்த்தர் உடனே பதில் தராமல், தாமதம்பண்ணலாம். கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் நமக்கு உடனே நிறைவேறாமல், மெதுவாக நிறைவேறலாம். அவை தாமதமாக வந்தாலும், மெதுவாக வந்தாலும், அவை நிச்சயமாகவே வரும். கர்த்தருடைய வார்த்தை நிச்சயமாய் நிறைவேறும்.

சூரியன் அஸ்தமிக்கும்போது ஆபிராமுக்கு அயர்ந்த நித்திரை வருகிறது. இது சரீர களைப்பினால் வரும் சாதாரண நித்திரையல்ல. தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, ஆபிராமுக்கு அயர்ந்த நித்திரை வந்திருக்கிறது. ஆபிராமின் முழுசரீரமும் நித்திரையிலிருக்கிறது. அப்போது ஆபிராமின் ஆத்துமா விழிப்போடிருக்கிறது. அவருடைய ஆத்துமா கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கவும், அவரோடு சம்பாஷணை பண்ணவும் ஆயத்தமாயிருக்கிறது.

ஆபிராமுக்கு அயர்ந்த நித்திரை வந்தபோது, அவருடைய மனது தனியாக வேறுபிரிக்கப்பட்டிருக்கிறது. ஆபிராம் தேவனுக்குத் தன்னை முழுவதும் அர்ப்பணித்த நிலையில் இருக்கிறார். ஆபிராமால் இப்போது கர்த்தரை மட்டுமே காணமுடியும். அவருடைய சப்தத்தை மட்டுமே கேட்க முடியும். தேவன் ஆபிராமோடு ஏற்படுத்திய உடன்படிக்கை மெய்யாய் இருக்கிறது.

ஆபிராமுக்கு அயர்ந்த நித்திரை வந்தபோது, திகிலும் காரிருளும் அவரை மூடிக்கொள்கிறது. காரிருளோடு திகிலும் சேர்ந்து வருகிறது. இதனால் ஆபிராமின் ஆவியிலே பயமும், கலக்கமும், திகிலும் உண்டாயிற்று. ஆபிராம் கர்த்தருடைய சமுகத்திலே பயத்தோடும் பக்தியோடும் இருக்கிறார். இது பரிசுத்தமான பக்தி. கர்த்தருக்கு பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். நம்முடைய ஆவியிலே, கர்த்தர்மீது பரிசுத்தமான பயம் ஏற்படவேண்டும். அந்த பயம் பரிசுத்தமான சந்தோஷத்தை அனுபவிப்பதற்கு நம்முடைய ஆத்துமாவை ஆயத்தம்பண்ணும்.

அடிமைத்தனத்தின் ஆவி, புத்திர சுவீகாரத்தின் ஆவியையும், விடுதலையின் ஆவியையும் பெற்றுக்கொள்வதற்கு நம்மை ஆயத்தம்பண்ணும். அடிமைகளாயிருக்கிறவர்கள், தாங்கள் விடுதலையாகப்போகும் நாளை ஆவலோடும், வாஞ்சையோடும் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருப்பார்கள்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தோடு கிரியை நடப்பித்துக்கொண்டேயிருப்பார். ஆபிராமுக்கு அயர்ந்த நித்திரை வந்தபோது, திகிலும் காரிருளும் அவரை மூடிக்கொள்கிறது. இவை எகிப்தின் அடிமைத்தனத்திற்கு அடையாளம். இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்தில் பாடுகளை அனுபவித்த பின்பு, அவர்கள் விடுவிக்கப்பட்டு, வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரிப்பார்கள். அங்கே அவர்களுக்கு சந்தோஷமுண்டாயிருக்கும். திகிலும் காரிருளும் நீங்கும்போது, சந்தோஷமும் வெளிச்சமும் உண்டாகும்.

கர்த்தர் ஆபிராமை நோக்கி, "உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய்" (ஆதி 15:13) என்று சொல்லுகிறார்.

வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட சந்ததி, உபத்திரவப்படுகிற சந்ததியாயும் இருக்கும். இதை ஆபிராம் புரிந்துகொள்ளவேண்டும். கர்த்தர் வாக்குப்பண்ணுகிற சந்ததிக்கு வரும் பாடுகளைப்பற்றி, இந்த வசனப்பகுதியில் ஆபிராமுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆபிராமின் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருப்பார்கள். பரலோகத்திற்கு சுதந்தரவாளிகளாகயிருக்கிற நாம், முதலாவதாக இந்தப் பூமியிலே பரதேசிகளாயிருப்போம். இந்தப் பூமி நமக்கு சொந்தமான தேசமல்ல. இது நாம் பரதேசியாய் தங்கியிருக்கிற தேசம். பரமதேசமே நமக்கு நிலையான தேசம்.

ஆபிராமின் சந்ததியார் அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரை சேவிப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். கானானியர்கள் சாபத்தை அனுபவிப்பார்கள். எபிரெயர்களோ கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

ஆபிராமின் சந்ததியார் அந்நிய தேசத்தாரால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள். ஆபிராமின் சந்ததியார் யாரை சேவிக்கிறார்களோ, அவர்கள் ஆபிராமின் சந்ததியாரை உபத்திரவப்படுத்துவார்கள்.

"அப்படியே அவர்களைச் சுமைசுமக்கிற வேலையினால் ஒடுக்கும்படிக்கு, அவர்கள்மேல் விசாரணைக்காரரை வைத்தார்கள்; அப்பொழுதுஅவர்கள் பார்வோனுக்காகப் பித்தோம், ராமசேஸ் என்னும் பண்டசாலைப் பட்டணங்களைக் கட்டினார்கள்" (யாத் 1:11).

ஆபிராமின் சந்ததியார் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள். நானூறு வருஷம் என்பது நீண்டகாலம். ஆனாலும் ஆபிராமின் சந்ததியாருடைய உபத்திரவத்திற்கும், ஒரு முடிவு காலம் நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் நானூறு வருஷம் மாத்திரமே உபத்திரவப்படுவார்கள்.

ஆபிராமின் சந்ததியார் உபத்திரவப்பட்டாலும், அவர்களை உபத்திரவப்படுத்துகிறவர்கள்மீது, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும். "இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன்" (ஆதி 15:14) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் அனுமதிக்கும் காலம் வரையிலும், சத்துருக்கள், கர்த்தருடைய ஜனத்தை உபத்திரவப்படுத்துவார்கள். ஆனாலும் கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அவருடைய ஜனத்தார்மீது தங்கியிருக்கும். ஏற்ற வேளை வரும்போது, கர்த்தர் தம்முடைய ஜனத்தை உபத்திரவங்களுக்கும், பாடுகளுக்கும், வேதனைகளுக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்.

"துன்மார்க்கன் நீதிமானுக்கு விரோதமாய்த் தீங்கு நினைத்து, அவன் பேரில் பற்கடிக்கிறான். ஆண்டவர் அவனைப்பார்த்து நகைக்கிறார்; அவனுடைய நாள் வருகிறதென்று காண்கிறார்" (சங் 37:12,13).

ஆபிராமின் சந்ததியார் அந்நிய தேசத்திலே, நானூறு வருஷம் உபத்திரவப்பட்டாலும், பின்பு அவர்கள் மிகுந்த பொருள்களுடனே புறப்பட்டு வருவார்கள். இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று கர்த்தர் முன்னறிவிக்கிறார்.

ஆபிராமின் சந்ததியார் அந்நிய தேசத்திலே உபத்திரவப்படுத்தப்பட்டாலும், அந்த தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டு வெளியேறும் போது, அவர்கள் செழித்திருப்பார்கள். அவர்கள் மிகுந்த பொருள்களுடனே, அந்நிய தேசத்திலிருந்து புறப்பட்டு வருவார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஒடுக்குகிறவர்களை நியாயந்தீர்ப்பார். ஒடுக்குகிறவர்களுக்கு அழிவு வரும். ஒடுக்கப்படுகிறவர்கள் மீட்கப்படுவார்கள்.

ஆபிராமின் சந்ததியார் அந்நிய தேசத்தில் ஒடுக்கப்பட்டாலும், கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கிறார். அவர்களுக்கு திரளான ஐசுவரியத்தைக் கொடுக்கிறார். கர்த்தர் ஆபிராமின் சந்ததியாருக்கு நல்ல தேசத்தை வாக்குப்பண்ணுவது மாத்திரமல்ல, அவர்களுக்கு திரளான ஐசுவரியத்தையும் வாக்குப்பண்ணுகிறார். அவர்கள் மிகுந்த பொருள்களுடனே புறப்பட்டு வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆபிராமின் சந்ததியார் அந்நிய தேசத்திலே நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் அதன் பின்பு அவர்கள் நாலாம் தலைமுறையிலே கானான் தேசத்திற்கு திரும்ப வருவார்கள் (ஆதி 15:16). அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்படுவது மாத்திரமல்ல, அவர்கள் கானான் தேசத்திற்கும் திரும்ப வருவார்கள். கர்த்தர் இந்த வார்த்தைகளை ஆபிராமுக்கு சொல்லும்போது, அவர் இப்போது கானான் தேசத்திலிருக்கிறார். ஆபிராமின் சந்ததியார் அந்நிய தேசத்திற்கு சிறைப்பட்டுப் போனாலும், கானான் தேசத்திற்கு திரும்பவும் வருவார்கள்.

கர்த்தர் ஆபிராமையும், அவருடைய ஆயுசுகாலத்தையும் ஆசீர்வதிக்கிறார். கர்த்தர் ஆபிராமை நோக்கி, "நீ சமாதானத்தோடே உன் பிதாக்களிடத்தில் சேருவாய்; நல்ல முதிர்வயதிலே அடக்கம்பண்ணப்படுவாய்" (ஆதி 15:15) என்று சொல்லுகிறார்.

தன்னுடைய சந்ததியாருக்கு நடக்கப்போகிற சம்பவங்களை தன் கண்களால் பார்ப்பதற்கு முன்பாகவே, ஆபிராம் மரித்துப்போவார். அவர் சமாதானத்தோடே தன்னுடைய பிதாக்களிடத்தில் சேருவார். ஆபிராம் நல்ல முதிர்வயதிலே அடக்கம்பண்ணப்படுவார். தன்னுடைய சந்ததியார் அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரை சேவிப்பதையும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவதையும் ஆபிராம் பார்க்கமாட்டார். தன்னுடைய சந்ததியாருக்கு தீங்கு வருவதற்கு முன்பாகவே ஆபிராம் இந்தப் பூமியிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுவார்.

"நீதிமான் மடிந்துபோகிறான், ஒருவரும் அதை மனதில் வைக்கிறதில்லை; புத்திமான்கள் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள், ஆனாலும் தீங்குவராததற்குமுன்னே நீதிமான் எடுத்துக் கொள்ளப்படுகிறான் என்பதைச் சிந்திப்பார் இல்லை" *(ஏசா 57:1).*

ஆபிராம் சமாதானத்தோடே தன் பிதாக்களிடத்தில் சேருவார். எல்லோருக்கும் மரணம் நியமிக்கப்பட்டிருப்பதுபோல, ஆபிராமுக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. பரலோகத்திற்கு பாத்திரவான்களாயிருக்கிறவர்களுக்கும், பரலோகத்தின் சிநேகிதர்களுக்கும், நியமிக்கப்பட்ட காலத்தில் மரணம் வரும். மரணத்திற்கு யாரும் தப்பிக்க முடியாது.

நீதிமான்கள் தங்கள் சரீர மரணத்தைப் பார்த்து பயப்படமாட்டார்கள். அவர்கள் தாங்களாகவே முன்வந்து, தங்களுடைய ஜீவனை கர்த்தருடைய கரத்தில் ஒப்புக்கொடுப்பார்கள். அவர்கள் மரிப்பதற்கு எப்போதும் ஆயத்தமாயிருப்பார்கள். மரித்துப்போகவேண்டும் என்று நீதிமான்களை யாரும் கட்டாயம்பண்ண வேண்டிய அவசியமில்லை. யாருடைய நிர்ப்பந்தமுமில்லாமல், நீதிமான்கள் சமாதானத்தோடே தங்கள் பிதாக்களிடத்தில் சேருவார்கள்.

நம்முடைய முற்பிதாக்கள் கர்த்தருக்கு பயந்து ஜீவித்தவர்களாகயிருந்தால், நாம் மரித்த பின்பு சமாதானத்தோடே அவர்களிடத்தில் சேருவோம். அவர்கள் நமக்கு முன்னால் போயிருக்கிறார்கள். நாம் அவர்களுக்கு பின்னால் போய்ச்சேருவோம்.

"பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்" *(எபி 12:23,24).*

கர்த்தர் ஆபிராமுக்கு சமாதானத்தை கட்டளையிடுகிறார். ஆபிராம் தன்னுடைய ஜீவியகாலமெல்லாம் சமாதானத்தோடிருப்பார். ஆபிராம் எங்குபோனாலும் சத்தியமும் சமாதானமும் அவரை பின்தொடரும். அவர் தேவனோடு சமாதானமாயிருப்பார். தேவனோடு சமாதானமாயிருப்பதே நமக்கு நித்திய சமாதானம். அதுவே நிச்சயமான சமாதானம். கர்த்தர் நித்திய சமாதானத்தை ஆபிராமுக்கும், அவருடைய சந்ததியாருக்கும் வாக்குப்பண்ணுகிறார்.

"அப்பொழுது எசேக்கியா ஏசாயாவை நோக்கி: நீர் சொன்ன கர்த்தருடைய வார்த்தை நல்லதுதான் என்று சொல்லி, என் நாட்களிலாவது சமாதானமும் உண்மையும் இருக்குமே என்றான்" *(2இராஜா 20:19).*

ஆபிராம் நல்ல முதிர்வயதிலே அடக்கம்பண்ணப்படுவார். அவர் சமாதானத்தோடே மரிப்பது மாத்திரமல்ல, அவர் மதிப்போடும் மரியாதையோடும் மரித்துப்போவார். முதிர்வயது ஒரு ஆசீர்வாதமான வயது. முதிர்வயதில் மரிக்கிறவர்கள், தங்களுடைய ஆயுசுகாலத்தை பூரணமாய் அனுபவித்து, கர்த்தருக்கு முழுமையாய் ஊழியம் செய்கிறார்கள். இந்தப் பூமியில் நம்முடைய ஆயுசுகாலம் பூரணமாயிருக்கும்போது, கர்த்தரை நம்பி நன்மை செய்வதற்கு நமக்கு அநேக வாய்ப்புக்கள் கிடைக்கும். அந்த வாய்ப்புக்களையெல்லாம் கர்த்தருடைய நாமமகிமைக்காகவும், அவருடைய பரிசுத்தவான்களின் பிரயோஜனத்திற்காகவும் நாம் பயன்படுத்தவேண்டும்.

"உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப் படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக் கடவாய்......." (ஆதி 15:13-16) என்பது தீர்க்கதரிசன வாக்கியம்.

ஆபிரகாமின் சந்ததியார் அந்நிய தேசத்தில் இன்னும் நானூறு வருஷங்கள் தங்கியிருப்பார்கள். இஸ்ரவேலை ஒடுக்கியதற்காக எகிப்து தண்டிக்கப்படும். இஸ்ரவேலர் மிகுந்த ஐசுவரியங்களைப் பெற்றுக் கொள்வார்கள். ஆபிரகாம் நல்ல முதிர் வயதிலே அடக்கம் பண்ணப்படுவார். ஆபிரகாமின் சந்ததியார் நான்காம் தலைமுறையில் எகிப்தை விட்டு வெளியேறி எமோரியரை ஜெயிப்பார்கள்.

இந்தத் தீர்க்கதரிசனம் முழுவதும் மோசே, யோசுவா ஆகியோரின் தலைமையின் கீழ் இஸ்ரவேல் தேசத்தாருடைய வனாந்தர யாத்திரையின் போதும், கானான் தேசத்தில் குடியேறியபோதும் நிறைவேறிற்று. (யாத் 7:1-14:31; எண் 21:21-25; யோசு 12).

ஆபிரகாமின் சந்ததியார் எகிப்து தேசத்தில் 215 வருஷங்களுக்குப் பரதேசிகளாய்த் தங்கியிருப்பார்கள். (ஆதி 12:1-20; ஆதி 13:1-18; ஆதி 15:13-14; ஆதி 20:1-18; ஆதி 21:22-34; ஆதி 23:4; ஆதி 26:3-35; ஆதி 28:10; ஆதி 29:1; ஆதி 31:13-55; ஆதி 35:6; ஆதி 37:1; ஆதி 46:1-7; ஆதி 47:27; ஆதி 50:22-26 ; யாத் 1-12; எபி 11:8-10).

ஈசாக்கு பெரியவனாகி, ஆபிரகாமின் சுதந்தரவாளியாக உறுதிபண்ணப்படுகிறான். இஸ்மவேல் வெளியே அனுப்பப்படுகிறான். இக்காலத்தில் ஈசாக்கின் வயது ஐந்து. ஆதி 15:13, அப் 7:6 ஆகிய வசனங்களில் நானூறு வருஷம் என்று கூறப்பட்டிருப்பது ஈசாக்கு சுதந்தரவாளியாக உறுதிபண்ணப்பட்ட நாளிலிருந்து கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

வேறுசில வசனங்களில் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் 430 வருஷங்கள் பரதேசிகளாய்த் தங்கியிருப்பார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. (யாத் 12:40; கலா 3:14-17) ஈசாக்கின் ஐந்து வயதும், அவனுடைய பிறப்பிற்கு முன்பு 25 வருஷங்களும் இதில் கூட்டி கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அப்பொழுது ஆபிரகாம் கானானில் தங்குவதற்காகப் புறப்பட்டுப் போனார் (ஆதி 47:9).

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் 430 வருஷங்கள் பரதேசிகளாய் தங்கியிருப்பார்கள் என்றும் சில வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கான காலஅட்டவணையின் விவரம் வருமாறு:

1. ஆபிரகாமின் 75 ஆவது வயதிலிருந்து ஈசாக்கின் பிறப்பு வரையிலும் - 25 வருஷங்கள்

2. ஈசாக்கின் பிறப்பிலிருந்து யாக்கோபின் பிறப்பு வரையிலும் (ஆதி 25:26) - 60 வருஷங்கள்

3. யாக்கோபின் பிறப்பிலிருந்து அவருடைய மரணம் வரையிலும் (ஆதி 47:28) - 147 வருஷங்கள்

4. யாக்கோபின் மரணத்திலிருந்து யோசேப்பின் பிறப்பு வரையிலும் (ஆதி 37:2; ஆதி 41:46; ஆதி 47:28; ஆதி 50:22) - 54 வருஷங்கள்

5. யோசேப்பின் மரணத்திலிருந்து எகிப்திலிருந்து வெளியேறிய நாள் வரையிலும் (யாத் 12:40; கலா 3:14-17) - 144 வருஷங்கள்

மொத்தம் - 430 வருஷங்கள்

"நானூறு வருஷம்" என்பது ஆபிரகாமின் சுதந்தரவாளிகளாகவும், வித்தாகவும் ஈசாக்கு உறுதிபண்ணப்பட்ட நாளிலிருந்து நானூறு வருஷம். அது வரையிலும் ஆபிரகாமிற்கு அதிகாரப்பூர்வமாகிய வித்து இல்லை. (அப் 7:6).

"இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வாக்கியம் யாத் 7-14 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் வாதைகளைக் குறிக்கும்.

கர்த்தர் ஆபிராமை நோக்கி, "நாலாம் தலைமுறையிலே அவர்கள் இவ்விடத்துக்குத் திரும்ப வருவார்கள்; ஏனென்றால் எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை" (ஆதி 15:16) என்று சொல்லுகிறார்.

"எமோரியருடைய அக்கிரமம்" என்பது கானானியருடைய பாவங்களைக் குறிக்கும். எமோரியர் அழிக்கப்படவேண்டியவர்கள். கானனியருடைய பாவங்களின் விவரம் வருமாறு:

1. ஓரினச்சேர்க்கை (ஆதி 13:13; ஆதி 19:1-29; லேவி 18:22-30; லேவி 20:13)

2. தனக்கு நெருங்கின இனமாகிய ஒருத்தியோடு சேருதல் (லேவி 18:6-30; லேவி 20:12-23)

3. சூதகஸ்திரீயோடே சயனித்தல் (லேவி 18:19-30; லேவி 20:18-23)

4. விபசாரம் (லேவி 18:20-30; லேவி 20:10-23)

5. விக்கிரகாராதனை (லேவி 18:21-30; லேவி 20:2-5; உபா 12)

6. தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்குதல். (லேவி 18:21-30)

7. மிருகத்தோடே புணருதல் (லேவி 18:23-30; லேவி 20:15-23)

8. சூனியம் (லேவி 20:6,23; உபா 18:9-14)

9. வேசித்தனம் பண்ணுதல் (லேவி 20:1-23)

10. பெற்றோரை அவமதித்தல் (லேவி 20:9-23)

11. கொலைபண்ணுதல் (உபா 12:31; உபா 18:9-10)

12. திருடுதல் (லேவி 19:11-13 = லேவி 20:23)

13. பொய்கூறுதல் (லேவி 19:11-16 = லேவி 20:23).

கர்த்தர் ஆபிராமோடு பண்ணின உடன்படிக்கை ஆதி 15:17-21

ஆதி 15:17. சூரியன் அஸ்தமித்து காரிருள் உண்டானபின்பு, இதோ, புகைகிற சூளையும், அந்தத் துண்டங்களின் நடுவே கடந்துபோகிற அக்கினிஜுவாலையும் தோன்றின.

ஆதி 15:18. அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும்,

ஆதி 15:19. கேனியரும், கெனிசியரும், கத்மோனியரும்,

ஆதி 15:20. ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும்,

ஆதி 15:21. எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்.

கர்த்தர் ஆபிராமுக்கு தம்முடைய வாக்குத்தத்தத்தை சொன்னார். ஆபிராமோ அந்த வாக்குத்தத்தம் நிறைவேறும் என்பதை "எதினால் அறிவேன்" என்று கர்த்தரிடத்தில் கேட்டார். அவர் கர்த்தரிடத்திலிருந்து ஒரு அடையாளத்தை எதிர்பார்த்தார். ஆபிராம் எதிர்பார்த்த அடையாளத்தை கர்த்தர் இங்கு கொடுக்கிறார்.

சூரியன் அஸ்தமித்து காரிருள் உண்டானபின்பு, இதோ, புகைகிற சூளையும், அந்தத் துண்டங்களின் நடுவே கடந்துபோகிற அக்கினிஜுவாலையும் தோன்றிற்று (ஆதி 15:17). இதுவே கர்த்தர் ஆபிராமுக்கு கொடுக்கிற அடையாளம்.

புகைகிற சூளை எகிப்தின் அடிமைத்தனத்திற்கு அடையாளமாயிருக்கிறது. ஆபிராமின் சந்ததியார் எகிப்து தேசத்திலே பரதேசிகளாயிருந்து அத்தேசத்தாரை சேவிப்பார்கள்.

அக்கினி ஜுவாலையானது கர்த்தர் கொடுக்கும் ஆறுதலுக்கு அடையாளமாயிருக்கிறது. ஆபிராமின் சந்ததியார் அந்நிய தேசத்திலே உபத்திரவப்படுத்தப்பட்டாலும், கர்த்தர் அவர்களுக்கு ஆறுதலைக் கட்டளையிடுவார். அவர்களை உபத்திரவப்படுத்தினவர்களை கர்த்தர் நியாயந்தீர்ப்பார்.

"அக்கினிஜுவாலை" என்பது தேவனுடைய பிரசன்னத்திற்கு அடையாளம். கிழக்கு தேசத்தில் உடன்படிக்கை ஏற்படுத்தும் போதும், திருமணச் சடங்குகளின் போதும் ஒரு விளக்கை ஏற்றி எரிய வைப்பது வழக்கம். உடன்படிக்கை மீறப்பட்டால் அல்லது உடைக்கப்பட்டால் அக்கினியானது குற்றம் செய்தவர்களை அழித்து விடும் என்பதற்கு அடையாளமாக அவர்கள் இந்தப் பழக்கத்தை மேற்கொண்டு வருகிறார்கள் (மத் 25:1-13).

கர்த்தர் ஆபிராமுக்கு புகைகிற சூளையைக் காண்பிக்கும்போது, அதோடு சேர்ந்து அக்கினி ஜுவாலையையும் காண்பிக்கிறார். ஒரே வேளையில் இவ்விரண்டு தரிசனங்களும் ஆபிராமுக்கு கொடுக்கப்படுகிறது.

ஆபிராமின் சந்ததியார் புகைகிற சூளையிலே வேதனைகளை அனுபவித்தாலும், அக்கினி ஜுவாலையானது, அவர்களை புகைகிற சூளையிலிருந்து விடுதலைபண்ணும்.

ஆபிராமின் சந்ததியார் புகைகிற சூளையிலிருக்கும்போது, அவர்களுக்கு எங்கே போகவேண்டும் என்றும், எப்படி போகவேண்டும் என்றும் பாதை தெரியாது. புகை பாதையை மங்கச் செய்யும். அக்கினி ஜுவாலையோ மங்கியிருப்பதை தெளிவுபடுத்தும். ஆபிராமின் சந்ததியார் புகைகிற சூளையில் உபத்திரவப்படும்போது, அந்த உபத்திரவத்திலிருந்து விடுதலை பெற்று வெளியேறுவதற்கு, அக்கினி ஜுவாலை அவர்களுக்கு பாதை காண்பிக்கும். அது அவர்களை விடுதலையின் பாதையில் வழிநடத்தும்.

ஆபிராமின் சந்ததியாருக்கு கர்த்தருடைய வார்த்தையே அக்கினி ஜுவாலையாயிருக்கிறது. அக்கினி ஜுவாலை புகைகிற சூளையில் வெளிச்சத்தைக் கொடுக்கிறது. அது அவருக்கு காரிருளிலே வெளிச்சமாயிருக்கிறது.

ஆபிராமின் சந்ததியாரை சத்துருக்கள் புகைகிற சூளையிலே அநேக வருஷங்களாக உபத்திரவப்படுத்துவார்கள். அக்கினி ஜுவாலையானது ஆபிராமின் சந்ததியாரை உபத்திரவப்படுத்துகிற சத்துருக்களின் அழிவுக்கு அடையாளம்.

அக்கினி ஜுவாலை துண்டங்களின் நடுவே கடந்துபோகிறது. கர்த்தர் ஆபிராமோடு பண்ணின உடன்படிக்கையை இது உறுதிபண்ணுகிறது. துண்டங்களின் நடுவே புகைகிற சூளையும், அக்கினி ஜுவாலையும் கடந்துபோகிறது என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அக்கினி ஜுவாலை அந்த துண்டங்களை பட்சித்துப்போடுகிறது. கர்த்தர் ஆபிராம் செலுத்தின பலியை அங்கீகரிப்பதற்கு இது அடையாளம்.

கர்த்தர் கிதியோன் செலுத்தின பலியை அங்கீகரித்ததுபோல, இப்போது ஆபிராம் செலுத்தின பலியையும் அங்கீகரிக்கிறார்.

"அப்பொழுது கர்த்தருடைய தூதன் தமது கையிலிருந்த கோலின் நுனியை நீட்டி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் தொட்டார்; அப்பொழுது அக்கினி கற்பாறையிலிருந்து எழும்பி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் பட்சித்தது; கர்த்தரின் தூதனோவென்றால், அவன் கண்களுக்கு மறைந்து போனார்" (நியா 6:21).

கர்த்தர் மனுஷரோடு உடன்படிக்கை பண்ணும்போது பலிகள் செலுத்தப்பட வேண்டும். "பலியினாலே என்னோடேகூட உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்" (சங் 50:5).

கிறிஸ்துவானவரே மகாபிரதான பலியாகயிருக்கிறார். பாவநிவாரணமில்லாமல் உடன்படிக்கை ஏற்படாது. கர்த்தர் நம்முடைய ஆவிக்குரிய பலிகளை அங்கீகரிக்கும்போது, அவருடைய கிருபைகள் நமக்கு இன்னும் அதிகமாய்க் கொடுக்கப்படும் என்பதற்கு அது அடையாளமாயிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை ஆபிராமுக்கு மறுபடியுமாய் உறுதிபண்ணுகிறார். "இந்த தேசத்தை உன் சந்ததிக்கு கொடுத்தேன்" (ஆதி 15:21) என்று கர்த்தர் ஆபிராமுக்கு சொல்லுகிறார்.

கர்த்தருடைய வாக்குத்தத்தங்களெல்லாமே, அவருடைய ஈவுகளாக நமக்கு கொடுக்கப்படுகிறது. கர்த்தருடைய கிருபைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் எவ்வளவேனும் பாத்திரவான்களல்ல. கர்த்தருடைய கிருபை நமக்கு கொடுக்கப்படும் ஈவு. ஈவு இலவசமாகக் கொடுக்கப்படும். கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொள்ள நமக்கு எந்தத் தகுதியுமில்லை. நம்மால் கிரயம் செலுத்தி கர்த்தருடைய கிருபையை வாங்கமுடியாது.

கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் நமக்கு ஏற்ற காலத்தில் நிறைவேறும். அவருடைய வாக்குத்தத்தங்கள் நமக்கு சொல்லப்படும்போதே, அது நிச்சயமாய் நிறைவேறும் என்னும் நம்பிக்கையும் நமக்குள் ஏற்படவேண்டும். கர்த்தர் ஒன்றை சொன்னால், அதை நிச்சயமாய் நிறைவேற்றுவார். கர்த்தருடைய வார்த்தைகளெல்லாமே, ஏற்கெனவே நிறைவேறிய சம்பவங்கள்போல இருக்கிறது.

"குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை" (யோவா 3:36). கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்கள் பரலோகத்திலே பிரவேசிப்பார்கள். அவர்கள் பூமியிலிருக்கும்போதே, பரலோகத்தில் இருப்பதுபோல கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பார்கள்.

கர்த்தர் கானான் தேசத்தைப்பற்றி விரிவாகச் சொல்லுகிறார். கானான் தேசம் எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதுமான தேசம் . இந்த தேசத்தில் கேனியரும், கெனிசியரும், கத்மோனியரும், ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும், எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் இருக்கிறார்கள் (ஆதி 15:18-21).

கானான் தேசம் மகாவிஸ்தாரமான தேசமாயிருக்கிறது. ஆபிராமின் சந்ததியார் கானான் தேசத்தை சுதந்தரிப்பது, கர்த்தருடைய ஜனம் பரலோக ராஜ்யத்தை சுதந்தரிப்பதற்கு அடையாளமாயிருக்கிறது. கானான் தேசத்தைப்போலவே, பரலோக ராஜ்யமும் மகாவிஸ்தாரமான தேசமாயிருக்கும். அங்கே கர்த்தருடைய ஜனம் எல்லோருக்கும் வாசஸ்தலங்கள் உள்ளது. நம்முடைய பிதாவின் வீட்டிலே அநேக வாசஸ்தலங்கள் இருக்கிறது.

கர்த்தர் ஆபிராமிடம், "இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன்" என்று சொல்லுகிறார். கானான் தேசத்தை இஸ்ரவேல் ஜனங்கள் முழுவதுமாகச் சுதந்தரித்துக் கொள்ளவில்லை. தாவீது, சாலொமோன் ஆகியோருடைய ஆட்சியில்கூட அவர்கள் கானானை முழுவதுமாகச் சுதந்தரிக்கவில்லை. ஆயிரம் வருஷ அரசாட்சியில் இஸ்ரவேலர்கள் கானானை முழுவதுமாகச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (எசே 47:13-48:29).

16 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் எகிப்து தேசத்தாளாகிய ஆகாரைப்பற்றி அதிகமாக சொல்லப்பட்டிருக்கிறது. எகிப்தின் ராஜாவாகிய பார்வோன், சாராயினிமித்தமாக ஆபிராமுக்கு தயவு பாராட்டினார். ஆபிராமுக்கு ஆடுமாடுகளும், கழுதைகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும் கிடைக்கிறது (ஆதி 12:16). அந்த வேலைக்காரிகளில் ஆகாரும் ஒருத்தியாக இருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

ஆகாரைப்பற்றி இந்த அதிகாரத்தில் நான்கு காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது அவையாவன :

1. ஆகாருக்கும் அவளுடைய எஜமானாகிய ஆபிராமுக்கும் இடையே நடைபெறுகிற விவாகம் (ஆதி 16:1-3).

2. ஆகார் கர்ப்பந்தரிக்கிறாள். அவள் தான் கர்ப்பவதியானதைக் கண்டபோது, தன் நாச்சியாராகிய சாராயை அற்பமாக எண்ணுகிறாள் (ஆதி 16:4-6).

3. சாராய் ஆகாரை கடினமாய் நடத்தினபடியால், அவள் சாராயை விட்டு வனாந்தரத்திற்கு ஓடிப்போகிறாள். அங்கே அவளுக்கும் கர்த்தருடைய தூதனானவருக்கும் இடையே நடைபெறுகிற சம்பாஷணை (ஆதி 16:7-14).

4. ஆகார் ஆபிராமுக்கு ஒரு குமாரனைப் பெறுகிறாள். அவனுக்கு இஸ்மவேல் என்று பேர் (ஆதி 16:15,16).

ஆகார்
ஆதி 16:1-3

ஆதி 16:1. ஆபிராமுடைய மனைவியாகிய சாராய்க்குப் பிள்ளையில்லாதிருந்தது. எகிப்து தேசத்தாளாகிய ஆகார் என்னும் பேர்கொண்ட ஒரு அடிமைப்பெண் அவளுக்கு இருந்தாள்.

ஆதி 16:2. சாராய் ஆபிராமை நோக்கி: நான் பிள்ளைபெறாதபடிக்குக் கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார்; என் அடிமைப்பெண்ணோடே சேரும், ஒருவேளை அவளால் என் வீடு கட்டப்படும் என்றாள். சாராயின் வார்த்தைக்கு ஆபிராம் செவிகொடுத்தான்.

ஆதி 16:3. ஆபிராம் கானான்தேசத்தில் பத்து வருஷம் குடியிருந்தபின்பு, ஆபிராமின் மனைவியாகிய சாராய் எகிப்து தேசத்தாளான தன் அடிமைப்பெண்ணாகிய ஆகாரை அழைத்து, அவளைத் தன் புருஷனாகிய ஆபிராமுக்கு மறுமனையாட்டியாகக் கொடுத்தாள்.

ஆபிராமுக்கும் ஆகாருக்கும் விவாகம் நடைபெறுகிறது. ஆகார் ஆபிராமின் மனைவியல்ல. சாராயே அவருடைய மனைவி. ஆகார் ஆபிராமுக்கு மறுமனையாட்டியாக கொடுக்கப்பட்டிருக்கிறாள்.

கர்த்தர் ஆபிராமின் சந்ததியை ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் ஆபிராமின் மனைவியாகிய சாராயோ பிள்ளையில்லாமலிருக்கிறாள். தன்னுடைய குடும்பத்தை சீக்கிரத்தில் கட்டியெழுப்பவேண்டும் என்னும் ஆர்வமும் ஆசையும் சாராயின் மனதில் உண்டாயிற்று. இதற்காக சாராய் கர்த்தருக்கு சித்தமில்லாத வழியிலே, தன்னுடைய குடும்பத்தை கட்டியெழுப்ப திட்டமிடுகிறாள்.

உலகப்பிரகாரமான காரியங்கள் வேறு. ஆவிக்குரிய காரியங்கள் வேறு. ஆவிக்குரிய காரியங்களை கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவும், அவருடைய திட்டத்தின் பிரகாரமாகவும் செய்யவேண்டும். ஆவிக்குரிய காரியங்களில் கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய வாக்குத்தத்தங்களுக்கும் அதிகமான முக்கியத்துவமுள்ளது. கர்த்தருடைய வார்த்தை, அவருக்கு ஏற்ற காலத்திலே நிறைவேறும்.

சாராயோ கர்த்தருடைய காரியங்கள், தன்னுடைய விருப்பத்தின் பிரகாரம், சீக்கிரத்தில் நிறைவேறவேண்டும் என்று ஆசைப்படுகிறாள். அவள் கர்த்தருடைய சித்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தன்னுடைய சுயயோசனையின் பிரகாரமாக, தன்னுடைய குடும்பத்தை கட்டியெழுப்ப முயற்சிபண்ணுகிறாள்.

ஆதியிலிருந்தே கர்த்தர் ஒரு புருஷனுக்கு ஒரு மனைவியை மாத்திரமே நியமித்திருக்கிறார். இதுவே கர்த்தருடைய பரிசுத்தமான விவாக நியமம். ஆனால் ஆபிராமுடைய மனைவியோ, ஆகாரை ஆபிராமுக்கு மறுமனையாட்டியாக கொடுக்க திட்டமிடுகிறாள்.

ஆபிராமுக்கும் ஆகாருக்கும் சாராயே திருமணத்தை நடத்திவைக்கிறாள். இது சாத்தானுடைய சதித்திட்டம். சாத்தான் சாராயை சோதிக்கிறான். சாராயின் வீட்டிலே எகிப்து தேசத்தாளாகிய ஆகார் என்னும் பேர் கொண்ட ஒரு அடிமைப்பெண் இருக்கிறாள். தன்னுடைய சந்ததியைக் கட்டியெழுப்புவதற்கு, தன்னுடைய வீட்டிலுள்ள அடிமைப்பெண்ணையே சாராய் பயன்படுத்துகிறாள்.

சாத்தான் பல சமயங்களில் நம்முடைய நெருங்கிய சிநேகிதர்கள் மூலமாகவும், நெருங்கிய உறவினர்கள் மூலமாகவும், நமக்கு மிகவும் அருகாமையிலிருக்கிறவர்கள் மூலமாகவும் நம்மை சோதிப்பான். ஆகையினால் நாம் மனுஷரைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும். நம்முடைய ஜீவியத்தில் கர்த்தருடைய சித்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது, நாம் சோதனைக்கு தப்பிக்கலாம்.

சாராய் தேவனுடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும். ஆனால் அவளோ தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக சிந்தித்து செயல்படுகிறாள். சாராயுடைய திட்டம் மதியீனமானது. அது கர்த்தருடைய திட்டத்திற்கு விரோதமானது. ஆனாலும் சாராயின் மதியீனம் அவளை வழிநடத்துகிறது

சாராய் ஆபிராமை நோக்கி: "நான் பிள்ளைபெறாதபடிக்குக் கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார்; என் அடிமைப்பெண்ணோடே சேரும்; ஒருவேளை அவளால் என் வீடு கட்டப்படும்" *(ஆதி 16:2)* என்று சொல்லுகிறாள். சாராயின் வார்த்தைக்கு ஆபிராம் செவிகொடுக்கிறார்.

ஆகாரால் தன்னுடைய வீடு கட்டப்படும் என்று சாராள் நினைக்கிறாள். *(ஆதி 30:3,6; யாத் 21:4).* அப்போதிருந்த பிரமாணங்களின் பிரகாரம் அடிமைகளின் பிள்ளைகள் அவர்களுடைய எஜமானர்களுக்கே உரியவர்கள். அதன் பிரகாரம் சாராள் இவ்வாறு நினைக்கிறார்கள்.

சாராய் பிள்ளை பெறாத மலடியாயிருக்கிறாள். இதனால் ஆபிராமின் மனதிலே சாராய்மீது இரக்கமுண்டாயிற்று. அவர் சாராயின் வார்த்தைக்கு செவிகொடுக்கிறார். ஆகாரை விவாகம்பண்ணுவது கர்த்தருடைய பிரமாணத்திற்கு விரோதமாகயிருந்தாலும், சாராய் தனக்கு பிள்ளையில்லாதிருப்பதை காரணமாய்ச் சொல்லி, ஆபிராமை தன்னுடைய திட்டத்திற்கு சம்மதிக்க வைக்கிறாள்.

கர்த்தர் ஆபிராமை நோக்கி, "உன் கர்ப்பப்பிறப்பாயிருப்பவனே உனக்கு சுதந்தரவாளியாவான்" *(ஆதி 15:4)* என்று சொல்லியிருக்கிறார். ஆபிராமுக்கு இந்த வார்த்தை சொல்லப்படுவதற்கு முன்பாக, தன்னுடைய வேலைக்காரரின் பிள்ளைகள், தனக்கு சுதந்தரவாளிகளாகயிருப்பார்கள் என்று ஆபிராம் நினைத்தார். கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்கு உண்டானபோது, அவருடைய மனதிலே தெளிவு உண்டாயிற்று.

கர்த்தர் ஆபிராமுக்கு, அவருடைய சுதந்தரவாளியைப்பற்றிச் சொன்னபோது, "உன் கர்ப்பப்பிறப்பாயிருப்பவன்" என்று மாத்திரமே சொன்னார். இவன் ஆபிராமின் கர்ப்பப்பிறப்பாயிருப்பான். ஆனால் இவன் சாராயின் கர்ப்பப்பிறப்பாயிருப்பானா அல்லது வேறு ஸ்திரீயின் கர்ப்பப்பிறப்பாயிருப்பானா என்று கர்த்தர் ஆபிராமுக்கு அப்போது தெளிவுபடுத்தவில்லை.

ஆபிராம் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை நினைவில் வைத்திருக்கிறார். ஆபிராமின் சந்ததி திரளாய்ப் பெருகும். கர்த்தர் ஆபிராமின் சந்ததியோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். ஆனாலும் தன்னுடைய சந்ததி, தன் மூலமாகவும், சாராய் மூலமாகவும் பிறக்கும் என்னும் நிச்சயமான நம்பிக்கை ஆபிராமுக்கு இல்லை.

சாராய் ஆபிராமை நோக்கி, "நான் பிள்ளைபெறாதபடிக்கு கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார். என் அடிமைப்பெண்ணோடே சேரும். ஒருவேளை அவளால் என் வீடு கட்டப்படும்" என்று சொன்னபோது, ஆபிராம் அவளுடைய ஆலோசனைகளை மறுக்காமல் ஏற்றுக்கொள்கிறார். சாராய் சொல்லுவது கர்த்தருடைய சித்தமாகவும், அவருடைய திட்டமாகவும் இருக்கலாம் என்று ஆபிராமும் நினைக்கிறார்.

சாராயின் ஆலோசனைகளும், ஆபிராம் சாராயின் வார்த்தைக்கு செவிகொடுப்பதும் மாம்சப்பிரகாரமான காரியங்கள். அவர்கள் தேவனுடைய தெய்வீக ஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தங்களுடைய மாம்சப்பிரகாரமான ஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தை அவருக்கு சித்தமான வேளையிலே நிறைவேறும். ஆனால் சாராயும் ஆபிராமும் கர்த்தருடைய வேளைக்காக காத்திராமல், மாம்சப்பிரகாரமாக யோசித்து, தங்களுடைய சொந்த திட்டத்தை நிறைவேற்றுகிறார்கள்.

சாராயும் ஆபிராமும் கர்த்தருடைய வழியில் நடவாமல் தங்களுடைய சொந்த வழியிலே நடக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியாமல், தங்களுடைய சுயசித்தத்திற்கும், சுயவிருப்பத்திற்கும் கீழ்ப்படிகிறார்கள். அவர்கள் இருவரும் அப்போது கர்த்தருடைய ஆலோசனைக்கு கீழ்ப்படிந்திருந்தால், பிற்காலத்தில் பெரிய பிரச்சனைகள் வருவதை தவிர்த்திருக்கலாம்.

சாராயும் ஆபிராமும் ஜெபத்தினாலும், வார்த்தையினாலும் கர்த்தருடைய ஆலோசனைகளை அறிந்துகொள்வதற்கு பதிலாக, தங்களுடைய சுயயோசனையின் பிரகாரமாக, தாங்களே என்ன செய்யவேண்டுமென்று சுயமாய்த் தீர்மானம்பண்ணுகிறார்கள். நம்முடைய ஜீவியத்தில் நாம் முக்கியமான தீர்மானம்பண்ணும்போது, கர்த்தருடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய சமுகத்திலே அதற்காக கருத்தாய் ஜெபிக்கவேண்டும்.

நம்முடைய சந்தேகங்களையும் குழப்பங்களையும் கர்த்தரிடத்திலே எடுத்து சொல்லவேண்டும். பரிசுத்த ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார். அவர் குழப்பத்தின் ஆவியானவர் அல்ல. அவர் தெளிவின் ஆவியானவர். பரிசுத்த ஆவியானவர் நம்முடைய குழப்பத்தை நீக்கி, நமக்கு தெளிந்த புத்தியையும், தெளிந்த சிந்தனையையும் கொடுப்பார்.

ஆபிராம் சாராயின் வார்த்தைக்கு செவிகொடுக்கிறார். ஆபிராம் கானான்தேசத்தில் பத்து வருஷம் குடியிருந்தபின்பு, ஆபிராமின் மனைவியாகிய சாராய் எகிப்து தேசத்தாளான தன் அடிமைப்பெண்ணாகிய ஆகாரை அழைத்து, அவளைத் தன் புருஷனாகிய ஆபிராமுக்கு மறுமனையாட்டியாகக் கொடுக்கிறாள் (ஆதி 16:3).

இப்பொழுது ஆபிரகாமின் வயது 86. ஈசாக்கு பிறப்பதற்கு 14 வருஷங்களுக்கு முன்பு இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. (ஆதி 16:16; ரோமர் 4:17-22; எபி 11:11-12). ஆபிரகாமிற்கு பெயர் தெரிந்த எட்டு குமாரர்களும், (ஆதி 16:16; ஆதி 21:1-8; ஆதி 25:1-2) மறுமனையாட்டிகள் மூலமாகப் பிறந்த பெயர்தெரியாத குமாரர்கள் ஏராளமானோரும் இருக்கிறார்கள் (ஆதி 25:6).

சாராயும் ஆகாரும்
ஆதி 16:4-6

ஆதி 16:4. அவன் ஆகாரோடே சேர்ந்தபோது, அவள் கர்ப்பந்தரித்தாள்; அவள் தான் கர்ப்பவதியானதைக் கண்டபோது, தன் நாச்சியாரை அற்பமாக எண்ணினாள்.

ஆதி 16:5. அப்பொழுது சாராய் ஆபிராமை நோக்கி: எனக்கு நேரிட்ட அநியாயம் உமதுமேல் சுமரும்; என் அடிமைப்பெண்ணை உம்முடைய மடியிலே கொடுத்தேன்; அவள் தான் கர்ப்பவதியானதைக் கண்டு என்னை அற்பமாக எண்ணுகிறாள்; கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயந்தீர்ப்பாராக என்றாள்.

ஆதி 16:6. அதற்கு ஆபிராம் சாராயை நோக்கி: இதோ, உன் அடிமைப்பெண் உன் கைக்குள் இருக்கிறாள்; உன் பார்வைக்கு நலமானபடி அவளுக்குச் செய் என்றான். அப்பொழுது சாராய் அவளைக் கடினமாய் நடத்தினபடியால் அவள் அவளை விட்டு ஓடிப்போனாள்.

ஆகார் ஆபிராமுக்கு மறுமனையாட்டியாக கொடுக்கப்பட்டிருக்கிறாள். ஆபிராமின் மனைவியாகிய சாராயே, தன் அடிமைப்பெண்ணாகிய ஆகாரை, தன் புருஷனாகிய ஆபிராமுக்கு, மறுமனையாட்டியாகக் கொடுக்கிறாள். இது கர்த்தருக்கு சித்தமில்லாத விவாகம். இதனால் குடும்பத்தில் பிரச்சனைகளும் குழப்பங்களும் உண்டாயிற்று. ஆபிராமின் குடும்பத்தில் சந்தோஷம் விலகிப்போயிற்று. அங்கே துக்கமும் கோபமும் நிரம்பியிருக்கிறது.

ஆபிராமும் ஆகாரும் கர்த்தருக்கு பிரியமில்லாத காரியத்தை செய்திருக்கிறார்கள். தன்னுடைய வீடு சீக்கிரத்தில் கட்டியெழுப்பப்படவேண்டும் என்பது சாராயின் திட்டம். இதற்காகவே சாராய் ஆகாரை ஆபிராமுக்கு மறுமனையாட்டியாகக் கொடுத்தாள். இதனால் சாராயின் வீடு சீக்கிரத்தில் கட்டியெழுப்பப்படுவதற்கு பதிலாக, அவளுடைய வீட்டில் சீக்கிரத்தில் பிரச்சனைகள் ஏற்படுகிறது.

நாம் கர்த்தருக்கு சித்தமில்லாத காரியங்களை செய்தால், பாவமும் அதனால் வரும் பிரச்சனைகளும் நம்முடைய வாசல்படியில் படுத்திருக்கும். பாவத்தின் பிரச்சனைகள் நமக்கு மிகவும் அருகாமையிலேயே இருக்கும்.

ஆபிராம் ஆகாரோடே சேர்ந்தபோது, அவள் கர்ப்பந்தரிக்கிறாள்; ஆகார் தான் கர்ப்பவதியானதைக் கண்டபோது, தன் நாச்சியாகிய சாராயை அற்பமாக எண்ணுகிறாள் (ஆதி 16:4).

ஆகார் தன்னை சாராயைவிட மேன்மையானவளாக நினைக்கிறாள். சாராயின் கர்ப்பம் அடைக்கப்பட்டிருப்பதாலும், தான் கர்ப்பம் தரித்திருப்பதாலும், ஆபிராமின் குடும்பத்திலே தான் மிகவும் விசேஷித்தவள் என்று ஆகார் தன்னைப்பற்றி பெருமையாய் நினைக்கிறாள். சாராயைவிட தனக்கு பரலோகத்திலிருந்து அதிகமான சிலாக்கியங்கள் கிடைத்திருப்பதாக நினைத்து ஆகார் பெருமைப்படுகிறாள்.

சாராய் பல வருஷங்களாக பிள்ளையில்லாத மலடியாயிருக்கிறாள். ஆனால் ஆகாரோ, ஆபிராமோடே சேர்ந்த உடனே கர்ப்பந்தரித்துவிடுகிறாள். இதனால் ஆபிராமுக்கு ஆகார்மீது அதிகமான பிரியமுண்டாயிற்று.

ஆகார் அடிமைப்பெண்ணாகயிருந்தாலும், தான் கர்ப்பந்தரித்திருப்பதினாலும், ஆபிராம் தன்னை அதிகமாய் நேசிப்பதினாலும் தான் இனிமேல் தன் நாச்சியராகிய சாராயிக்கு கீழ்ப்படியவேண்டியதில்லை என்று நினைத்து, அவளை அற்பமாய் நினைக்கிறாள். ஆகார் சாராயின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய மறுக்கிறாள். இதுவரையிலும் சாராயிக்கு கீழ்ப்படிந்து வீட்டுவேலைகளை செய்த ஆகார், இப்போது அவளை அற்பமாக எண்ணுகிறாள். ஆகார் இதற்கு முன்பு சாராயைப் பார்த்தபோது, சாராய் அவளுடைய கண்களுக்கு நாச்சியராக தெரிந்தாள். இப்போதோ சாராய் ஆகாரின் கண்களுக்கு பிள்ளையில்லாத மலடியாக தெரிகிறாள்.

நாம் மற்றவர்களுக்கு பாவமான காரியங்களை செய்யும்போது, அவர்கள் மூலமாக நமக்கு பிரச்சனைகள் வருவதற்கு வாய்ப்புள்ளது. கர்த்தர் அவர்களை தம்முடைய நியாயத்தீர்ப்பின் கருவிகளாகப் பயன்படுத்துவார். நம்முடைய பாவத்திற்கு பங்காளிகளாகயிருந்தவர்கள், கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரம், அவர்கள் நம்மை நியாயந்தீர்க்கும் கருவிகளாக செயல்படுவார்கள்.

ஆபிராமின் மனைவியாகிய சாராயே, அடிமைப்பெண்ணாகிய ஆகாரை, தன் புருஷனுக்கு மறுமனையாட்டியாக கொடுத்தாள். இந்த விஷயத்தில் ஆகார் சாராளின் பாவத்திலே பங்காளியாயிருக்கிறாள். இப்போது ஆகார் சாராயை மனவேதனைப்படுத்துகிறாள்.

ஆபிராமின் குடும்பத்தில் பிரச்சனை வந்துவிடுகிறது. சாராயின் சந்தோஷம் அவளை விட்டு நீங்கிப்போயிற்று. ஆபிராமின் மனைவியாகிய சாராயிக்கு சந்தோஷமில்லை, சமாதானமில்லை. மனைவிக்கு சந்தோஷமில்லையென்றால், புருஷனுக்கு சமாதானம் இருக்காது. அந்தக் குடும்பத்தில் நிம்மதியிருக்காது. சாராய் தன்னுடைய மனதின் வேதனைகளையும், கோபங்களையும் ஆபிராமுக்கு வெளிப்படுத்துகிறாள்.

சாராய் ஆபிராமை நோக்கி: "எனக்கு நேரிட்ட அநியாயம் உமதுமேல் சுமரும்; என் அடிமைப்பெண்ணை உம்முடைய மடியிலே கொடுத்தேன்; அவள் தான் கர்ப்பவதியானதைக் கண்டு என்னை அற்பமாக எண்ணுகிறாள்; கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயந்தீர்ப்பாராக" (ஆதி 16:5) என்று சொல்லுகிறாள்.

ஆபிராமுக்கு சாராயே ஆகாரை மறுமனையாட்டியாகக் கொடுத்தாள். ஆனால் இப்பொழுது ஆபிராம்மீது குற்றம் வருகிறது. ஆகார் தன் நாச்சியாரை அற்பமாக எண்ணுகிறாள். இதற்காக அவளைத் தண்டிக்க வேண்டுமென்று சாராய் தீர்மானம்பண்ணுகிறாள் (ஆதி 16:8).

சாராய் தன்னுடைய வழக்கை தீர்த்து வைக்க, கர்த்தரை அழைக்கிறாள். "கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயந்தீர்ப்பாராக" என்று சொல்லுகிறாள்.

சாராயே தன் அடிமைப்பெண்ணை ஆபிராமுக்கு மறுமனையாட்டியாகக் கொடுத்தவள். அப்போது அவள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவில்லை. கர்த்தருடைய ஆலோசனையைக் கேட்கவில்லை. இப்போதோ சாராய் கர்த்தருடைய நாமத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்துகிறாள்.

சாராய் தன் அடிமைப்பெண்ணாகிய ஆகாரை ஆபிராமுக்கு மறுமனையாட்டியாகக் கொடுத்தபோது, அவர் தன்னுடைய வார்த்தைக்கு செவிகொடுத்திருக்கக்கூடாது என்றும், ஆகாரை தன் மறுமனையாட்டியாக ஏற்றுக்கொண்டிருக்கக்கூடாது என்றும் சாராய் இப்போது நினைக்கிறாள்.

சாராயினுடைய மனதின் சிங்காசனத்தில் கோபம் வீற்றிருக்கிறது. அவளுடைய கோபமும் வேகமும் அவளை ஆளுகை செய்கிறது. கோபம் ஆளுகை செய்யும் இடத்திலே நிதானமும் பொறுமையும் இருக்காது. அங்கு தெளிந்த சிந்தனையும் இருக்காது. கோபப்படுகிறவர்கள் தாங்கள் பேசும் வார்த்தைகளுக்குகூட செவிகொடுக்கமாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் நிச்சயமாகவே மற்றவர்களின் வார்த்தைகளுக்கும் செவிகொடுக்கமாட்டார்கள்.

ஒரு சிலர் தப்பான காரியங்களை பேசினாலும், அதை அதிக சத்தமாகப் பேசுவார்கள். வார்த்தைகளை வேகமாகவும் சொல்லுவார்கள். அதிக சத்தமாகவும், வேகமாகவும் பேசினால், தாங்கள் பேசுவது நியாயமானதாயிருக்கும் என்பது அவர்களுடைய எண்ணம். நாம் எப்படி பேசினாலும் சத்தியம் மாத்திரமே சத்தியமாயிருக்கும். நீதி மாத்திரமே நீதியாயிருக்கும். சத்தத்தை உயர்த்துவதினால் அநீதி நீதியாகிவிடாது. வேகமாக பேசுவதினால் பொய் சத்தியமாகிவிடாது.

சாராய் கர்த்தருடைய நாமத்தை தேவையில்லாமல் பயன்படுத்துகிறாள். சாராயைப்போல அநேகர், தங்களுடைய பாவங்களை மூடி மறைப்பதற்காக, கர்த்தருடைய நாமத்தை வீணிலே பயன்படுத்துகிறார்கள். கோபமாகவும், வேகமாகவும் பேசுகிறவர்கள் பொதுவாக குற்றமனச்சாட்சி உள்ளவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் தங்கள் குற்றங்களையும், தப்பிதங்களையும் மூடி மறைப்பதற்காக, தங்களுடைய சத்தத்தை உயர்த்தி பேசுவார்கள். அவர்கள் கர்த்தருடைய நாமத்தையும் தங்களுக்கு இஷ்டமானபடி பயன்படுத்துவார்கள்.

ஆபிராம் சாராயின் கோபமான வார்த்தைகளைக் கேட்டு பயப்படுகிறார். ஆபிராமின் மனது கலங்குகிறது. ஆபிராம் சாராயை நோக்கி: "இதோ, உன் அடிமைப்பெண் உன் கைக்குள் இருக்கிறாள்; உன் பார்வைக்கு நலமானபடி அவளுக்குச் செய்" (ஆதி 16:6) என்று சொல்லுகிறார்.

ஆகார் இப்பொழுது ஆபிராமின் மறுமனையாட்டியாக இருக்கிறாள். அவள் கர்ப்பவதி. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த அடிமைப் பெண்ணை மற்றவர்களுக்கு விற்க முடியாது. ஆகையினால் சாராய் அவளுக்கு அதிகமான வேலைகளைக் கொடுத்து அவளைக் கடினமாக நடத்துகிறாள். இந்தக் கடினத்தைத் தாங்க முடியாமல், ஆகார் வீட்டை விட்டு ஓடிப்போகிறாள்.

சாராயிக்கு தன் இஷ்டம்போல செய்வதற்கு ஆபிராமின் அனுமதி கிடைத்திருக்கிறது. அப்பொழுது சாராய் ஆகாரைக் கடினமாய் நடத்துகிறாள். ஆகையால் ஆகார் சாராயை விட்டு ஓடிப்போகிறாள்.

ஆகார் தன் நாச்சியாராகிய சாராயை அற்பமாக எண்ணினாள். சாராயோ ஆகாரை தன் வீட்டை விட்டே துரத்திவிடுகிறாள்.

கர்த்தருடைய தூதனானவர் ஆதி 16:7-9

ஆதி 16:7. கர்த்தருடைய தூதனானவர் அவளை வனாந்தரத்திலே சூருக்குப்போகிற வழியருகே இருக்கிற நீரூற்றண்டையில் கண்டு:

ஆதி 16:8. சாராயின் அடிமைப்பெண்ணாகிய ஆகாரே, எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்? என்று கேட்டார்; அவள்: நான் என் நாச்சியாராகிய சாராயைவிட்டு ஓடிப்போகிறேன் என்றாள்.

ஆதி 16:9. அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர்: நீ உன் நாச்சியாரண்டைக்குத் திரும்பிப்போய், அவள் கையின்கீழ் அடங்கியிரு என்றார்.

பரிசுத்தவேதாகமத்தில் கர்த்தருடைய தூதனானவரைப்பற்றி முதன் முறையாக இந்தவசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகார் தன் நாச்சியாராகிய சாராயை விட்டு ஓடிப்போகிறாள். அவள் வெகுதூரம் ஓடிப்போய்விடாதவாறு கர்த்தருடைய தூதனானவர் அவளை தடுத்து நிறுத்துகிறார்.

ஆகார் ஆபிராமின் வீட்டை விட்டு தன் சொந்த தேசமாகிய எகிப்து தேசத்திற்கு ஓடிப்போகிறாள். நமக்கு பாடுகளும் பிரச்சனைகளும் வரும்போது, நம்முடைய சொந்த வீட்டை நினைத்துப் பார்ப்போம். நம்முடைய சொந்த வீடும், சொந்த ஊரும், சொந்த ஜனங்களும் நமக்கு ஆதரவாயிருக்கும் என்று எதிர்பார்ப்போம்.

ஆகாரோ தன் நாச்சியாருக்கு கீழ்ப்படியவில்லை. ஆகார் சாராயை அற்பமாய் நினைக்கிறாள். ஆகார் ஆபிராமுக்கு மறுமனையாட்டியாகயிருப்பதினால், அவள் தன்னுடைய கடமையை மறந்து, தன்னுடைய நாச்சியாருக்கு கீழ்ப்படியாதிருக்கிறாள். சாராய் அவளை கடினமாய் நடத்தினபோதோ, ஆகார் சாராயை விட்டே ஓடிப்போகிறாள். ஆபிராமின் வீட்டைவிட்டு விலகிப்போகிறாள்.

கர்த்தர் நமக்கு கொடுக்கும் கடமைகளையும், ஊழியங்களையும் ஒழுங்காய்ச் செய்யாவிட்டால், அவர் நம்மையும் சிறிதுகாலத்திற்கு அங்கும் இங்குமாக அலைய விட்டுவிடுவார். நம்முடைய தப்பிதத்தையும், பாவத்தையும், மதியீனத்தையும் நாம் உணரும்போது, கர்த்தருடைய கிருபை நமக்கு மறுபடியும் காண்பிக்கப்படும்.

சாராய் ஆகாரை கடினமாய் நடத்தினபடியினால், அவள் சாராயின் வீட்டைவிட்டே ஓடிப்போகிறாள். அவள் வனாந்தரத்திலே சூருக்கு போகிற வழியிலே இருக்கிற நீரூற்றண்டைக்குப்போகிறாள். கர்த்தருடைய தூதனானவர் அதுவரையிலும் ஆகாரை தடுத்து நிறுத்தவில்லை. ஆகார் வனாந்தரத்திற்கு ஓடிப்போக கர்த்தர் அனுமதிக்கிறார்.

நாம் கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக விலகிப்போகும்போது, கர்த்தர் நம்மையும் வனாந்தரத்திற்கு அழைத்து வருகிறார். நம்முடைய புத்தி தெளிவதற்கு வனாந்தரமே நல்ல ஸ்தலம். நாம் வனாந்தர பாதையிலே பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கும்போது, கர்த்தர் நம்மை அங்கே சந்திக்கிறார்.

"ஆயினும், இதோ, நான் அவளுக்கு நயங்காட்டி, அவளை வனாந்தரத்தில் அழைத்துக்கொண்டுபோய், அவளோடே பட்சமாய்ப் பேசி, அவ்விடத்திலிருந்து அவளுக்கு அவளுடைய திராட்சத்தோட்டங்களையும், நம்பிக்கையின் வாசலாக ஆகோரின் பள்ளத்தாக்கையும் கொடுப்பேன்; அப்பொழுது அவள் அங்கே, தன் இளவயதின் நாட்களிலும் தான் எகிப்துதேசத்திலிருந்து வந்த நாளிலும் பாடினதுபோல் பாடுவாள்" (ஓசி 2:14,15).

கர்த்தருடைய தூதனானவர் ஆகாரை வனாந்தரத்திலே சூருக்குப்போகிற வழியருகே இருக்கிற நீரூற்றண்டையில் காண்கிறார். கர்த்தருடைய தூதனானவர் ஆகாரை நோக்கி, "சாராயின் அடிமைப்பெண்ணாகிய ஆகாரே, எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்?" என்று கேட்கிறார் (ஆதி 16:7,8).

ஆகார் இப்பொழுது ஆபிராமின் மறுமனையாட்டி. ஆனால் கர்த்தருடைய தூதனானவர் ஆகாரைக் கூப்பிடும்போது, "சாராயின் அடிமைப்பெண்ணாகிய ஆகாரே" என்று கூப்பிடுகிறார். கர்த்தருடைய தூதனானவர் ஆகாரை தாழ்த்துகிறார். ஆகார் தன் இருதயத்தில் பெருமையோடிருக்கிறாள். அவள் தன் நாச்சியாராகிய சாராயை அற்பமாக எண்ணுகிறாள்.

நாம் மற்றவர்களைப்பற்றிப் பேசும்போது உயர்வான வார்த்தைகளையும், மேன்மையான வார்த்தைகளையும் பேசுவதே நாகரீகம். மற்றவர்கள் நம்மை உயர்வாகப் பேசினாலும், நம்மிடத்தில் பெருமை வரக்கூடாது. நாம் நம்மைப்பற்றி நினைக்கும்போது, மிகுந்த மனத்தாழ்மையோடு நினைத்துக்கொள்ள வேண்டும்.

சாராயின் அடிமைப்பெண், சாராயின் கூடாரத்தில் தங்கியிருந்து, தன் நாச்சியாருக்கு கீழ்ப்படிந்து பணிவிடை செய்யவேண்டும். வனாந்தரம் ஆகாருக்கு நியமிக்கப்பட்ட ஸ்தலமல்ல. ஆகார் இருக்க வேண்டிய இடம் சாராயின் கூடாரம். ஆகார் சாராயின் கூடாரத்திலுள்ள தண்ணீரைக் குடித்து, அங்கே தன் நாச்சியராகிய சாராயிக்கு பணிவிடை செய்யவேண்டும். ஆனால் ஆகாரோ வனாந்தரத்திலே நீரூற்றண்டையில் இருக்கிறாள்.

கர்த்தருடைய தூதனானவர் ஆகாரைப் பார்த்து, "ஆகாரே, எங்கே இருந்து வருகிறாய், எங்கே போகிறாய்" என்று கேட்கிறார். ஆகார் தன்னுடைய கடமையை செய்யாமல், வீட்டைவிட்டே ஓடிப்போகிறாள். அவள் எங்குபோவது என்று தெரியாமல், அங்கும் இங்கும் அலைந்துகொண்டிருக்கிறாள். ஆகையினால் கர்த்தருடைய தூதனானவர் ஆகாரைப் பார்த்து, "எங்கே இருந்து வருகிறாய்" என்று முதலாவதாகக் கேட்கிறார்.

ஆகார் பாவத்தின் பாதைக்குப் போய்க்கொண்டிருக்கிறாள். அவள் எகிப்தை நோக்கிப் போகிறாள். எகிப்து பாவத்திற்கு அடையாளம். வனாந்தரம் ஆபத்திற்கு அடையாளம். பாவம் செய்கிறவர்கள் ஆபத்திலிருப்பார்கள். கர்த்தருடைய தூதனானவர் ஆகாரை நோக்கி, "எங்கே போகிறாய்" என்று கேட்கிறார்.

கர்த்தரை விட்டு விலகி பாவத்தில் விழுந்துவிடுகிறவர்கள், தங்களுடைய நிலமையை தியானித்துப் பார்க்கவேண்டும். பாவம் செய்வதற்கு முன்பாக, தாங்கள் எந்த நிலமையிலிருந்தோம் என்பதையும், பாவம் செய்த பின்பு தாங்கள் எந்த நிலமையில் விழுந்து கிடக்கிறோம் என்பதையும் பாவிகள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஆகார் கர்த்தருடைய தூதனானவரிடம் ஒளிவு மறைவு இல்லாமல் உண்மையைப் பேசுகிறாள். "நான் என் நாச்சியாராகிய சாராயைவிட்டு ஓடிப்போகிறேன்" என்று ஆகார் கர்த்தருடைய தூதனானவரிடம் சொல்லுகிறாள்.

கர்த்தருடைய தூதனானவர் ஆகாருக்கு பிரயோஜனமுள்ள ஆலோசனைகளை சொல்லுகிறார். கர்த்தருடைய தூதனானவர் ஆகாரை நோக்கி, "நீ உன் நாச்சியாரண்டைக்குத் திரும்பிப்போய், அவள் கையின்கீழ் அடங்கியிரு" (ஆதி 16:9) என்று சொல்லுகிறாள்.

தேவன் ஆகாரையும் பராமரிக்கிறார். ஆகார் செய்ய வேண்டிய காரியங்களை அவளுக்கு விளக்கிக் கூறுகிறார். இதற்குக் கீழ்ப்படிவது கடினமாக இருந்தாலும், இதுவே தேவனுடைய சித்தம். தேவசித்தத்திற்குக் கீழ்ப்படியும்போது, ஆசீர்வாதம் பெருகும். தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து ஆகார் ஆபிராமின் வீட்டிற்குத் திரும்ப வருகிறாள்.

ஆகாருக்கு இஸ்மவேல் பிறக்கிறான். இஸ்மவேலுக்கு 19 வயதாகும்போது சாராள் ஆகாரை மறுபடியுமாக வீட்டை விட்டு துரத்திவிடுகிறாள் (ஆதி 21:1-21). இந்த நிகழ்ச்சி கலா 4:21-31 ஆகிய வசனங்களில் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மோசேயின் பிரமாணம் அகற்றப்பட்டுவிட்டது. பழைய பிரமாணத்திற்குப் பதிலாக புதிய பிரமாணம் அமுலில் இருக்கிறது.

இஸ்மவேல்
ஆதி 16:10-12

ஆதி 16:10. பின்னும் கர்த்தருடைய தூதனானவர் அவளை நோக்கி: உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்; அது பெருகி, எண்ணிமுடியாததாயிருக்கும் என்றார்.

ஆதி 16:11. பின்னும் கர்த்தருடைய தூதனானவர் அவளை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கிறாய், ஒரு குமாரனைப் பெறுவாய்; கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியினால், அவனுக்கு இஸ்மவேல் என்று பேரிடுவாயாக

ஆதி 16:12. அவன் துஷ்டமனுஷனாயிருப்பான்; அவனுடைய கை எல்லாருக்கும் விரோதமாகவும், எல்லாருடைய கையும் அவனுக்கு விரோதமாகவும் இருக்கும்; தன் சகோதரர் எல்லாருக்கும் எதிராகக் குடியிருப்பான் என்றார்.

கர்த்தருடைய தூதன் ஆகாருக்கு நல்ல ஆலோசயைனைச் சொல்லுகிறார். "நீ உன் நாச்சியாரண்டைக்குத் திரும்பிப்போய், அவள் கையின்கீழ் அடங்கியிரு" (ஆதி 16:9) என்று கர்த்தருடைய தூதன் ஆகாரருக்கு சொல்லுகிறார். ஆகார் இப்பொழுது எகிப்து தேசத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறாள். அவள் எகிப்து தேசத்திற்குப்போகாமல், தன் நாச்சியாரண்டைக்கு திரும்பிப்போகவேண்டும்.

கர்த்தருடைய தூதனானவர் சொல்லுகிற ஆலோசனைக்கு ஆகார் உடனே கீழ்ப்படிகிறாள். அப்போது கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் கர்த்தருடைய தூதன் மூலமாக ஆகாருக்கு வாக்குப்பண்ணப்படுகிறது. கர்த்தர் ஆகாரையும் அவளுடைய சந்ததியையும் அதிகமாய் ஆசீர்வதிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார்.

கர்த்தருடைய தூதனானவர் ஆகாரை நோக்கி, " உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்; அது பெருகி, எண்ணிமுடியாததாயிருக்கும்" (ஆதி 16:10) என்று சொல்லுகிறார்.

நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற கடமைகளை உண்மையாய்ச் செய்யும்போது, கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் நமக்கு கிடைக்கும். நாம் கர்த்தரைவிட்டு வழி விலகிப்போயிருந்தால், கர்த்தருடைய வழிக்கு திரும்பி வரவேண்டும். நம்முடைய சித்தமும் திட்டமும் கர்த்தருடைய சித்தத்திற்கும் திட்டத்திற்கும் விரோதமாகயிருந்தால், நம்முடைய திட்டத்தையும் சித்தத்தையும் மாற்றிக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய திட்டத்தையும் சித்தத்தையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

"நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்" (சங் 32:5).

ஆகார் இப்போது மிகுந்த மனவேதனையிலும் துக்கத்திலும் இருக்கிறாள். சாராய் ஆகாரை கடினமாய் நடத்தினபடியினால், ஆகார் சாராயைவிட்டு வனாந்தரத்திற்கு ஓடி வந்திருக்கிறாள். அவள் எகிப்து தேசத்தை நோக்கிப் போகிறாள். அப்போது கர்த்தருடைய தூதனானவர் ஆகாருக்கு ஆறுதலான வார்த்தைகளையும், ஆசீர்வாதமான வார்த்தைகளையும் சொல்லுகிறார். கர்த்தர் ஆகாரின் சந்ததியைப் பெருகப்பண்ணுவார். அந்த சந்ததி பெருகி, எண்ணி முடியாததாயிருக்கும் (ஆதி 16:10).

ஆகார் இப்போது கர்ப்பவதியாயிருக்கிறாள். பெண்களுக்கு சுகப்பிரசவம் ஏற்படவேண்டும். அதுவே அவர்களுக்கு மிகுந்த ஆறுதலாயும் சந்தோஷமாயும் இருக்கும். ஸ்திரீகள் கர்ப்பவதியாகயிருக்கும்போது, தங்கள் கர்ப்பத்தில் வளருகிற குழந்தைக்காக கர்த்தரிடத்தில் ஜெபிக்கவேண்டும். சுகப்பிரசவம் ஏற்படுவதற்கு கர்த்தருடைய கிருபையும் அநுக்கிரகமும் அதிகமாய்த் தேவைப்படுகிறது.

கர்த்தருடைய தூதனானவர் ஆகாரை நோக்கி, "நீ கர்ப்பவதியாயிருக்கிறாய், ஒரு குமாரனைப் பெறுவாய்; கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியினால், அவனுக்கு இஸ்மவேல் என்று பேரிடுவாயாக" (ஆதி 16:11) என்று சொல்லுகிறார். ஆகாருக்கு சுகப்பிரசவம் ஏற்படும். அவள் ஒரு குமாரனைப்பெறுவாள். தனக்கு ஆண்பிள்ளை பிறக்கவேண்டுமென்று ஆபிராமும் விரும்புகிறார்.

குழந்தை பிறப்பதற்கு முன்பாகவே அந்தக் குழந்தைக்கு பெயரிடுவது பற்றி வேதாகமத்தில் எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. (மத் 1:21)

வேதாகமத்தில் 7 பேருக்கு அவர்கள் பிறப்பதற்கு முன்பாகவே பெயரிடப்பட்டது.

1. இஸ்மவேல் (ஆதி 16:11)
2. ஈசாக்கு (ஆதி 17:19)
3. சாலொமோன் (1நாளா 22:9)
4. யோசியா (பிறப்பதற்கு 325 வருஷங்களுக்கு முன்பாக) (1இராஜா 13:2; 2இராஜா 22:1)
5. கோரேஸ் (பிறப்பதற்கு 175 வருஷங்களுக்கு முன்பாக) (ஏசா 44:28-45:1)
6. யோவான் ஸ்நானன் (லூக் 1:13,60-63)
7. இயேசு (மத் 1:21)

"இஸ்மவேல்" என்னும் பெயருக்கு கர்த்தர் அங்கலாய்ப்பைக் கேட்கிறார் என்று பொருள் (ஆதி 16:11). இஸ்மவேலின் வரலாறு ஆதி 16:11-25:18; 1நாளா 1:29 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. இஸ்மவேலின் பெயரில் வேதாகமத்தில் வேறொரு நபரும் இருக்கிறார். (2இராஜா 25:25; எரே 40:14; எரே 41:1-18).

ஆகாருக்கு குமாரன் பிறக்கும்போது, ஆகாரின் உயிருக்கு சேதமுண்டாகாது. ஆகார் ஆரோக்கியத்தோடே தன் குமாரனைப்பெறுவாள். கர்த்தருடைய வாக்குத்தத்தமும், ஆசீர்வாதமும் ஆகாரின்மீது தங்கியிருக்கிறது.

கர்த்தருடைய தூதனானவர் ஆகாரை நோக்கி, நீ ஒரு குமாரனைப்பெறுவாய் என்று சொன்னதோடு, அவனுக்கு இஸ்மவேல் என்று பேரிடுவாயாக என்றும் சொன்னார். இஸ்மவேல் என்னும் பெயருக்கு, "தேவன் கேட்பார்" என்று பொருள். கர்த்தர் ஆகாரின் அங்கலாய்ப்பைக் கேட்டார். ஆகையினால் ஆகார் பெறுகிற குமாரனுக்கு இஸ்மவேல் என்று பேரிடப்படுகிறது.

நம்முடைய ஜீவியத்தில் நாமும் பல சமயங்களில் வேதனையோடும், அங்கலாய்ப்போடும் இருக்கிறோம். நாம் துக்கத்தோடிருக்கிற காலங்களில் நம்முடைய ஜெபநேரமும், ஜெபவார்த்தைகளும் குறைந்துபோகலாம். ஆனாலும் நாம் கர்த்தரிடத்தில் மெல்லிய சத்தத்தோடு பேசினாலும், நம்முடைய ஜெபத்தில் அதிகமான வார்த்தைகளைப் பயன்படுத்தாமல், குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்தினாலும், கர்த்தர் தம்முடைய கிருபையினால் நம்முடைய அங்கலாய்ப்பைக் கேட்கிறார். கர்த்தர் நம்முடைய ஜெபத்தின் வார்த்தைகளுக்கு செவிகொடுப்பதுபோல, நம்முடைய கண்ணீருக்கும் செவிகொடுக்கிறார்.

கர்த்தருடைய தூதனானவர் ஆகாரை நோக்கி, "உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்; அது பெருகி, எண்ணிமுடியாததாயிருக்கும்" (ஆதி 16:10) என்று சொல்லுகிறார். கர்த்தர் சொன்ன இந்த வாக்குத்தத்தம் நிறைவேறியிருக்கிறது. துருக்கியர்கள் இஸ்மவேலின் சந்ததியில் வந்தவர்கள். இந்தப் பூமியிலே துருக்கியர் திரளாய்ப்பெருகியிருக்கிறார்கள். கர்த்தர் தாம் சொன்ன பிரகாரம், இஸ்மவேலின் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணியிருக்கிறார்.

ஆகார் பெறப்போகிற குமாரன் எப்படியிருப்பான் என்பதையும், அவனுடைய சுபாவம் எப்படிப்பட்டதாயிருக்கும் என்பதையும் கர்த்தருடைய தூதனானவர் அவளுக்கு சொல்லுகிறார்.

கர்த்தருடைய தூதனானவர் ஆகாரை நோக்கி, "இஸ்மவேல் துஷ்டமனுஷனாயிருப்பான்; அவனுடைய கை எல்லாருக்கும் விரோதமாகவும், எல்லாருடைய கையும் அவனுக்கு விரோதமாகவும் இருக்கும்; தன் சகோதரர் எல்லாருக்கும் எதிராகக் குடியிருப்பான்" (ஆதி 16:12) என்று சொல்லுகிறார்.

இஸ்மவேலரின் ஒன்றுவிட்ட சகோதரராகிய மீதியானியர் மத்தியில் குடியிருப்பான். (ஆதி 25:1-4; ஆதி 37:28; நியா 8:22-24; ஆதி 25:18).

"இஸ்மவேல் துஷ்டனாயிருப்பான்" என்னும் வாக்கியத்திற்கு அவன் துஷ்டகுணமுள்ளவனாகவும், துணிகரமுள்ளவனாகவும், பராக்கிரமசாலியாகவும், யாருக்கும் பயப்படாதவனாகவும் இருப்பான் என்று பொருள். இஸ்மவேல் யாருக்கும் அடங்கமாட்டான். அவன்மீது நுகத்தை சுமத்தமுடியாது. இஸ்மவேலை நல்ல வேலைகளுக்கு பழக்க முடியாது. அவன் பொறுமையில்லாதவன்.

இஸ்மவேலின் கை எல்லோருக்கும் விரோதமாகயிருக்கும். இந்த வாக்கியம் அவனுடைய பாவத்தைக் குறிக்கிறது. எல்லாருடைய கையும் இஸ்மவேலுக்கு விரோதமாகயிருக்கும். இந்த வாக்கியம் இஸ்மவேலின் பாவத்தின் நிமித்தம், அவனுக்கு கிடைக்கும் தண்டனையைக் குறிக்கிறது.

துஷ்டகுணமுள்ளவர்களுடைய ஜீவியம் சமாதானமாகவும், ஆறுதலாகவும் இருக்காது. அவர்களுடைய ஆவி குழப்பத்திலிருக்கும். அவர்களுடைய ஆவியைப்போலவே, அவர்களுடைய ஜீவியமும் குழம்பிப்போயிருக்கும். மற்றவர்களுக்கு பிரச்சனைகளைக் கொடுக்கிறவர்கள், அவர்கள் மூலமாக பிரச்சனைகளைப் பெற்றுக்கொள்வார்கள். பிரச்சனை மிகுந்த ஜீவியம் ஒருபோதும் சமாதானம் நிரம்பிய ஜீவியமாயிருக்காது.

எல்லாருடைய கையும் இஸ்மவேலுக்கு விரோதமாகயிருந்தாலும், கர்த்தர் இஸ்மவேலைப் பாதுகாப்பார். இஸ்மவேலுடைய கை எல்லோருக்கும் விரோதமாகயிருந்தாலும், கர்த்தருடைய கை இஸ்மவேலுக்கு ஆதரவாகயிருக்கிறது. துஷ்டமனுஷர் தண்டிக்கப்படவேண்டும் என்பது தேவனுடைய பிரமாணம். இஸ்மவேல் ஒரு துஷ்டமனுஷன். இவன் தேவனுடைய நீதியினால் தண்டிக்கப்படவேண்டியவன். ஆனாலும் கர்த்தர், தம்முடைய மகாபெரிய நீதியினாலும், கிருபையினாலும், இஸ்மவேலைத் தண்டிக்காமல், அவனை பாதுகாக்கிறார். கர்த்தர் இஸ்மவேலை ஆதரிக்கிறார். இது தேவனுடைய தெய்வீக பராமரிப்பு. இஸ்மவேல் தன் சகோதரர் எல்லாருக்கும் எதிராக குடியிருப்பான் என்று கர்த்தருடைய தூதனானவர் சொல்லுகிறார்.

கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர். கர்த்தர் மனுஷருடைய பாவங்களுக்குத்தக்கதாக அவர்களை தண்டியாமல், தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார்.

லகாய்ரோயீ
ஆதி 16:13,14

ஆதி 16:13. அப்பொழுது அவள்: என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா என்று சொல்லி, தன்னோடே பேசின கர்த்தருக்கு நீர் என்னைக் காண்கிற தேவன் என்று பேரிட்டாள்.

ஆதி 16:14. ஆகையால், அந்த துரவு பெயர் லகாய்ரோயீ என்னப்பட்டது; அது காதேசுக்கும் பாரேத்துக்கும் நடுவே இருக்கிறது.

கர்த்தருடைய தூதனானவர் ஆகாரை சந்திக்கிறார். "கர்த்தருடைய தூதனானவர்" என்னும் வார்த்தை கர்த்தரைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய தூதனானவர் ஆகாருக்கு ஆறுதலான வார்த்தைகளையும், ஆசீர்வாதமான வார்த்தைகளையும் சொல்லியிருக்கிறார். ஆகார் அந்த வார்த்தைகளையெல்லாம் கேட்டு தனக்குள்ளே மிகவும் சந்தோஷமாயிருக்கிறாள். கர்த்தர் ஆகாருக்கு தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆகார் கர்த்தருடைய சமுகத்திலே தன்னுடைய பக்தியை வெளிப்படுத்துகிறாள். அப்பொழுது ஆகார் "என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா" என்று சொல்லி, தன்னோடே பேசின கர்த்தருக்கு "நீர் என்னைக் காண்கிற தேவன்" என்று பேரிடுகிறாள் (ஆதி 16:13).

ஆகாரைப் பொறுத்தளவில், கர்த்தருடைய நாமம், "நீர் என்னை காண்கிற தேவன்" என்பதாகவே இருக்கிறது. கர்த்தர் மெய்யாகவே நம்மைக் காண்கிற தேவனாகயிருக்கிறார்.

"கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர்" (சங் 139:1). நம்முடைய பாவங்களுக்கு நாம் உண்மையாய் மனந்திரும்பும்போது, கர்த்தர் நம்முடைய மனந்திரும்புதலை அறிந்திருக்கிறார். நாம் பாவத்தைவிட்டு, கர்த்தரிடத்தில் திரும்பி வருவதையும் அவர் பார்க்கிறார். அவர் நம்மை காண்கிற தேவன்.

கர்த்தருடைய கிருபை ஆகாருக்கு கிடைத்திருக்கிறது. கர்த்தருடைய பெரிதான கிருபைக்காக ஆகார் அவரை நன்றியோடு துதிக்கிறாள். "என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா" என்று சொல்லி, ஆகார் கர்த்தருக்கு தன்னுடைய நன்றியையும், துதியையும், ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கிறாள்.

கர்த்தருடைய தூதனானவர் ஆகாரோடு பேசிக்கொண்டிருக்கும் வரையிலும், தன்னோடு பேசுகிறவர் யார் என்பதை, ஆகார் ஒருவேளை அறியாதவளாயிருக்கலாம். கர்த்தருடைய தூதனானவர் ஆகாரிடம் பேசிவிட்டு, அங்கிருந்து போன பின்பு, அவள் கர்த்தருடைய தூதனானவரை நோக்கிப் பார்த்திருக்கலாம். அதன் பின்பே, தன்னோடு பேசினவர் கர்த்தருடைய தூதனானவர் என்பதை ஆகார் அறிந்திருக்கலாம்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு எம்மாவு ஊருக்குப்போனார். அவரோடுகூட இரண்டு சீஷரும்போனார்கள். கிறிஸ்துவானவர் அவர்களுக்கு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு அவர்களுக்கு கொடுத்தார்.

"அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள். உடனே அவர் அவர்களுக்கு மறைந்துபோனார். அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி: வழியிலே அவர் நம்முடனே பேசி, வேதவாக்கியங்களை நமக்கு விளங்கக்காட்டினபொழுது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா என்று சொல்லிக்கொண்டு அந்நேரமே எழுந்திருந்து எருசலேமுக்கு திரும்பிப்போனார்கள்" (லூக் 24:31,32).

இயேசுகிறிஸ்து இரண்டு சீஷர்களோடு பேசிக்கொண்டு போனபோது, தங்களோடு பேசுகிறவர் கிறிஸ்துவானவர் என்பதை அந்த சீஷர்கள் அறிந்துகொள்ளவில்லை. அதுபோலவே தன்னோடு பேசுகிறவர் கர்த்தருடைய தூதனானவர் என்பதை ஆகாரும்அறிந்துகொள்ளாமலிருந்திருக்கலாம்.

ஆகார் இப்போது ஆபிராமின் கூடாரத்தில் இல்லை. ஆகாருக்கு பக்கத்தில் பலிபீடம் ஏதுவுமில்லை. அவள் வனாந்தரத்திலே சூருக்கு போகிற வழியருகே, ஒரு நீரூற்றண்டையில் இருக்கிறாள். கர்த்தருடைய தூதனானவர் ஆகாரை அந்த நீரூற்றண்டையில் காண்கிறார். ஆகாரும் அவரை அந்த இடத்திலேயே காண்கிறாள்.

ஆகார் வனாந்தரத்திலே கர்த்தருடைய தூதனானவரை எதிர்பார்க்கவில்லை. அது மாத்திரமல்ல. ஆகார் இப்போது தன்னுடைய நாச்சியாருக்கு கீழ்ப்படிந்து, அவளுடைய வீட்டிலே, அவளுக்கு பணிவிடை செய்யவுமில்லை. ஆகார் இப்போது தன் நாச்சியாரை விட்டு எகிப்து தேசத்தை நோக்கி போய்க்கொண்டிருக்கிறாள். அவள் தன்னுடைய கடமையை நிறைவேற்றாமல் தவறு செய்கிறாள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆகார் கர்த்தரை அங்கு எதிர்பார்க்கவில்லை. ஆனால் கர்த்தருடைய தூதனானவரோ ஆகாரை அந்த நீரூற்றண்டையில் காண்கிறார். ஆகாரும் அவரை அந்த இடத்தில் காண்கிறாள்.

"ஸ்காரியோத்தல்லாத யூதா என்பவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரணமென்ன என்றான்" (யோவா 14:22).

ஆகார் கர்த்தருடைய தூதனானவரை நீரூற்றண்டையில் காண்கிறாள். ஆகையால், அந்த துரவுக்குப் பெயர் லகாய்ரோயீ என்னப்படுகிறது; அது காதேசுக்கும் பாரேத்துக்கும் நடுவே இருக்கிறது (ஆதி 16:14). ஆகார் இந்த துரவண்டையில் வியாகுலத்தோடும், மனவேதனையோடும், மனமடிவோடும் இருக்கிறாள். இந்த ஸ்தலத்திலே, கர்த்தருடைய மகிமை அவளுக்கு வெளிப்படுத்தப்படுகிறது.

"பெயர் லகாய்ரோயீ" என்னும் பெயருக்கு, "தேவனைக் கண்டபின்பு நான் ஜீவிக்கிறானா?" அல்லது "கண்டபின்பு ஜீவனுள்ள துரவு" என்பது பொருளாகும். (ஆதி 32:30). ஒவ்வொரு தெய்வத்திற்கும் பெயரிட்டு அழைப்பது எகிப்தியரின் வழக்கம். அந்தப் பெயரில் அந்தத் தெய்வத்தின் சுபாவங்களும் அடங்கியிருக்கும். இதன் அடிப்படையில் ஆகார் தேவனை "நீர் என்னைக் காண்கிற தேவன்" என்று பேரிட்டு அழைக்கிறார்.

ஆகார் இஸ்மவேலைப் பெறுகிறாள்
ஆதி 16:15,16

ஆதி 16:15. ஆகார் ஆபிராமுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்; ஆபிராம் ஆகார் பெற்ற தன் குமாரனுக்கு இஸ்மவேல் என்று பேரிட்டான்.

ஆதி 16:16. ஆகார் ஆபிராமுக்கு இஸ்மவேலைப் பெற்றபோது, ஆபிராம் எண்பத்தாறு வயதாயிருந்தான்.

கர்த்தருடைய தூதனானவர் ஆகாருக்கு சொன்ன பிரகாரம் அவள் தன் நாச்சியாரண்டைக்கு திரும்பிப்போய், அவளுடைய கையின் கீழ் அடங்கியிருக்கிறாள். காலம் நிறைவேறியபோது ஆகார் ஆபிராமுக்கு ஒரு குமாரனைப் பெறுகிறாள். கர்த்தருடைய தூதனானவர் சொன்ன பிரகாரம், ஆபிராம் ஆகார் பெற்ற குமாரனுக்கு இஸ்மவேல் என்று பேரிடுகிறார்.

ஆபிராம் ஆகாரிடமிருந்து இந்தப் பெயரைத் தெரிந்து கொண்டார். ஆகார் தேவனிடமிருந்து இந்தப் பெயரைப் பெற்றுக் கொண்டாள் (ஆதி 16:10-12).

ஆகார் ஆபிராமுக்கு இஸ்மவேலைப் பெற்றபோது, ஆபிராம் எண்பத்தாறு வயதாயிருக்கிறார் (ஆதி 16:16). கானான் தேசத்தில் ஆபிராம் பதினொறாவது வருஷமாக இருக்கிறார் (ஆதி 12:4).

17 அதிகாரம்

கர்த்தர் இரக்கங்களின் பிதாவாகயிருக்கிறார். ஆபிராம் விசுவாசமுள்ளவர்கள் எல்லோருக்கும் தகப்பனாகயிருக்கிறார். இவர்கள் இருவருக்கும் இடையே உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு அது உறுதிபண்ணப்படுகிறது.

ஆபிராம் "தேவனுடைய சிநேகிதர்" என்று அழைக்கப்படுகிறார். கர்த்தர் ஆபிராமோடு யோசனையும் பண்ணுகிறார். அவரோடு உடன்படிக்கையும் பண்ணுகிறார். கர்த்தர் ஆபிராமோடு தம்முடைய இரகசியத்தையும் பகிர்ந்துகொள்கிறார்.

கர்த்தர் ஆபிராமோடு பண்ணிய உடன்படிக்கையைப்பற்றி ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது.

"அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும், கேனியரும், கெனிசியரும், கத்மோனியரும், ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும், எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன்" (ஆதி 15:18-21).

கர்த்தர் ஆபிராமோடு இந்த உடன்படிக்கைபண்ணின சூழ்நிலைகளும், காலமும், மற்ற விவரமும் (ஆதி 17:1,2). ஆபிராம் கர்த்தரை முகங்குப்புற விழுந்து வணங்குகிறார் (ஆதி 17:3).

கர்த்தர் ஆபிராமோடு பண்ணின உடன்படிக்கையின் அம்சங்கள். ஆபிராம் திரளான ஜாதிகளுக்கு தகப்பனாவார் (ஆதி 17:4,6). ஆபிராமின் பெயர் இனிமேல் ஆபிரகாம் என்று அழைக்கப்படும் (ஆதி 17:5).

கர்த்தர் ஆபிராமுக்கும் அவருக்கு பின்வரும் அவருடைய சந்ததிக்கும் தேவனாயிருப்பார். கர்த்தர் அவர்களுக்கு கானான் தேசம் முழுவதையும் நித்திய சுதந்தரமாகக் கொடுப்பார் (ஆதி 17:7,8).

கர்த்தர் ஆபிராமோடு பண்ணின உடன்படிக்கையானது விருத்தசேதனத்தினால் உறுதிபண்ணப்படுகிறது (ஆதி 17:9-14).

சாராய் இனிமேல் சாராள் என்று அழைக்கப்படுவாள். சாராள் ஆபிராமுக்கு ஒரு குமாரனைப் பெறுவாள் (ஆதி 17:15,16). ஆபிராம் கர்த்தருடைய வாக்குத்தத்தைப் பெற்றுக்கொள்கிறார் (ஆதி 17:17).

ஆபிராம் இஸ்மவேலுக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார் (ஆதி 17:18). கர்த்தர் ஆபிராமின் விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கிறார் (ஆதி 17:19-22).

கர்த்தர் நியமித்த பிரகாரம், ஆபிரகாமும் அவருடைய குடும்பத்தாரும் விருத்தசேதனம்பண்ணுகிறார்கள் (ஆதி 17:23-27).

சர்வல்லமையுள்ள தேவன்
ஆதி 17:1-3

ஆதி 17:1. ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: நான் சர்வல்லமையுள்ள தேவன்: நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு.

ஆதி 17:2. நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப் பண்ணுவேன் என்றார்.

ஆதி 17:3. அப்பொழுது ஆபிராம் முகங்குப்புற விழுந்து வணங்கினான். தேவன் அவனோடே பேசி:

இஸ்மவேல் பிறந்து பதின்மூன்று வருஷமாயிற்று. ஆபிராம் இப்போது தொண்ணூற்று ஒன்பது வயதுள்ளவராயிருக்கிறார். ஆபிராமுக்கு அன்றாட அப்பம் போல, அனுதினமும் அற்புதமும் அதிசயமும் நடக்கவில்லை. கர்த்தருக்கு ஏற்ற வேளையிலே, ஆபிராமின் ஜீவியத்தில் அவ்வப்போது அற்புதம் நடைபெறுகிறது.

ஆபிராமைப்போலவே, கர்த்தருடைய பரிசுத்தவான்களில் அநேகர், அற்புதங்களையும் அடையாளங்களையும் அன்றாடம் பெற்றுக்கொள்வதில்லை. அவர்களுடைய ஜீவியத்தில் எப்போதாவது அற்புதம் நடைபெறுகிறது. அதற்காக அவர்கள் கர்த்தரைத் துதிக்கிறார்கள். கர்த்தர் நமக்கு அன்றாடம் விருந்து வைக்காவிட்டாலும், நமக்கு போஜனம் கொடுத்து, நம்முடைய பசியைப் போக்குவார்.

நாம் பரலோகத்திற்குப் போகும் காலம் வரையிலும், இந்தப் பூமியிலே நாம் பரதேசிகளாய் சஞ்சரிக்கிறோம். பரலோகத்திலே நமக்கு நித்திய விருந்து வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. இந்தப் பூமியில் நமக்கு நித்திய விருந்து கிடைக்காவிட்டாலும், கர்த்தர் தம்முடைய கிருபையினால், நமக்கு தேவையான போஜனம் கொடுப்பார்.

ஆபிராமுக்கும் சாராயிக்கும் இன்னும் பிள்ளை பிறக்கவில்லை. தன் சந்ததியைப் பார்க்கவேண்டுமென்று ஆபிராம் அவசரப்படுகிறார். அவரால் கர்த்தருடைய வேளை வரும் வரையிலும் பொறுமையோடு காத்திருக்க முடியவில்லை. சாராயும் ஆபிராமைப்போலவே அவசரப்படுகிறாள். அவர்கள் கர்த்தருடைய வேளைக்காக காத்திராமல், அவசரப்பட்டதினால், ஆபிராம் ஆகாரை மறுமனையாட்டியாக விவாகம்பண்ணுகிறார். ஆபிராமுக்கும் ஆகாருக்கும் இஸ்மவேல் பிறக்கிறான்.

இஸ்மவேல் பிறந்து பதின்மூன்று வருஷமாயிற்று. ஆபிராமுக்கு இப்போது தொண்ணூற்று ஒன்பது வயதாயிற்று. அப்பொழுது கர்த்தர் ஆபிராமுக்கு தரிசனமாகிறார். கர்த்தர் தம்முடைய ஷேக்கைனா மகிமையில், தம்மை ஆபிராமுக்கு வெளிப்படுத்துகிறார். ஆபிராம் கர்த்தருடைய மகிமையான பிரசன்னத்தை பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறார்.

கர்த்தர் ஆபிராமுக்கு தரிசனமானபோது, ஆபிராம் கர்த்தரை முகங்குப்புற விழுந்து வணங்குகிறார். கர்த்தர் ஆபிராமோடு பேசுகிறார். அங்கு தேவனுடைய ஷேக்கைனா மகிமை பிரகாசமாகயிருக்கிறது. அந்த மகிமைக்கு முன்பாக ஆபிராம் மங்கிப் போனவராகயிருக்கிறார். சர்வவல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக ஆபிராமால் நிற்க முடியவில்லை. ஆபிராம் தன்னை அபாத்திரவானாகப் பாவித்து, தரையிலே முகங்குப்புற விழுகிறார்.

கர்த்தர் ஆபிராமை நோக்கி, "நான் சர்வல்லமையுள்ள தேவன்: நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு. நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன்" (ஆதி 17:1,2) என்று சொல்லுகிறார்.

"சர்வல்லமையுள்ள தேவன்" என்னும் பெயருக்கான எபிரெய வார்த்தை "எல்-ஷடாய்" என்பதாகும். "எல்" என்னும் பெயருக்கு வல்லமையுள்ளவர் என்று பொருள். "ஷடாய்" என்னும் பெயருக்கு "மார்பகம் உடையவர்" என்று பொருள். தேவன் வல்லமையுள்ளவர், அதேவேளையில் பராமரிக்கிறவர், வலிமையைக் கொடுக்கிறவர், திருப்தியாக்குகிறவர், ஜனங்களுடைய தேவைகளைச் சந்திக்கிறவர்.

கர்த்தர் ஆபிரகாமைத் திரளாக வர்த்திக்கப் பண்ணுகிறவர். சர்வ வல்லமையுள்ள தேவனுடைய கிருபையினால் ஆபிரகாமின் சந்ததி எண்ணிக்கையில் தூளைப் போலவும் (ஆதி 13:16), நட்சத்திரங்களைப் போலவும் (ஆதி 15:5), மணலைப்போலவும் (ஆதி 22:17) இருக்கும்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்குத்தத்தம், ஆபிராமுக்கும் அவருடைய பின்சந்ததியாருக்கும் பொதுவாக சொல்லப்படுகிறது. இயேசுகிறிஸ்துவிற்குள் விசுவாசிகளாகயிருக்கிற நம் எல்லோருக்கும் இந்த வாக்குத்தத்தத்தில் பங்குள்ளது. விசுவாசிகளாகிய நாம் ஆபிராமுக்கு ஆவிக்குரிய சந்ததியாராயிருக்கிறோம்.

கர்த்தர் ஆபிராமுக்கு தன்னை வெளிப்படுத்துகிறார். "நான் சர்வவல்லமையுள்ள தேவன்" என்று கர்த்தர் ஆபிராமுக்கு சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய சுபாவத்தை ஆபிராமுக்கு வெளிப்படுத்துகிறார். நாம் கர்த்தரைப்பற்றித் தெரிந்துகொள்ளும்போது, அவருடைய சுபாவத்தைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும். கர்த்தர் நமக்கு சர்வவல்லமையுள்ளவராகயிருக்கிறார்.

சர்வவல்லமையுள்ள தேவன் என்பதற்கான எபிரெய வார்த்தை "எல்ஷடாய்" என்பதாகும். இதற்கு முன்பு கர்த்தர் தம்மை வெளிப்படுத்தியபோது, அவர் தம்மை "யேகோவா" என்று வெளிப்படுத்தினார்.

"மேலும், தேவன் மோசேயை நோக்கி: நான் யேகோவா, சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன்; ஆனாலும் யேகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை" (யாத் 6:2,3).

கர்த்தர் யாக்கோபுக்கு தம்மை சர்வவல்லமையுள்ள தேவனாக வெளிப்படுத்தியிருக்கிறார். "பின்னும் தேவன் அவனை நோக்கி: நான் சர்வவல்லமையுள்ள தேவன், நீ பலுகிப் பெருகுவாயாக; ஒரு ஜாதியும் பற்பல ஜாதிகளின் கூட்டங்களும் உன்னிலிருந்து உண்டாகும்; ராஜாக்களும் உன் சந்ததியில் பிறப்பார்கள்" (ஆதி 35:11).

கர்த்தர் இஸ்ரவேலின் முற்பிதாக்களுக்கு தம்மை சர்வவல்லமையுள்ள தேவனாக வெளிப்படுத்தினார். அவர்களும் கர்த்தரை சர்வவல்லமையுள்ளதேவன் என்றே அழைத்தார்கள்.

"சர்வவல்லமையுள்ள தேவன் உன்னை ஆசீர்வதித்து, நீ பல ஜனக்கூட்டமாகும்படி உன்னைப் பலுகவும் பெருகவும் பண்ணுவார்" (ஆதி 28:3).

"அந்த மனிதன் அங்கிருக்கிற உங்கள் மற்றச் சகோதரனையும் பென்யமீனையும் உங்களுடனே அனுப்பிவிடும்படிக்கு, சர்வவல்லமையுள்ள தேவன் அவன் சமுகத்தில் உங்களுக்கு இரக்கங்கிடைக்கப் பண்ணுவாராக; நானோ பிள்ளையற்றுப் போனவனைப் போல் இருப்பேன் என்றான்" (ஆதி 43:14).

"யாக்கோபு யோசேப்பை நோக்கி: சர்வவல்லமையுள்ள தேவன் கானான் தேசத்திலுள்ள லூஸ் என்னும் இடத்தில் எனக்குத் தரிசனமாகி, என்னை ஆசீர்வதித்து" (ஆதி 48:3).

மோசேயின் காலத்திற்கு பின்பு கர்த்தரை அழைப்பதற்கு, யேகோவா என்னும் பெயரே அதிகமாக பயன்படுத்தப்பட்டது. சர்வவல்லமையுள்ள தேவன் என்று பொருள்படும், "எல்ஷடாய்" என்னும் பெயர் அதிகமாக பயன்படுத்தப்படவில்லை.

கர்த்தர் சர்வவல்லமையுள்ள தேவனாகயிருக்கிறார். அவர் நமக்கு போதுமானவர். அவரால் எல்லாம் கூடும். சர்வவல்லமையுள்ள தேவனுக்கு வேறு யாருடைய உதவியும், ஒத்தாசையும் தேவைப்படாது. அவர் ஒருவராகவே பலத்த காரியங்களை செய்கிறவர்.

கர்த்தர் ஆபிராமிடம், "நான் சர்வவல்லமையுள்ள தேவன்" என்று சொல்லும்போது, "நான் உனக்கு போதுமானவராயிருக்கிற தேவன்" என்று பொருள்படுமாறு சொல்லுகிறார்.

கர்த்தர் நம்மோடு உடன்படிக்கை பண்ணும்போது, அவர் நம்மிடத்திலிருந்தும் சில காரியங்களை எதிர்பார்க்கிறார். உடன்படிக்கை கர்த்தருக்கும் நமக்கும் பொதுவானது. இந்த உடன்படிக்கையில் கர்த்தர் கடைப்பிடிக்க வேண்டிய பகுதியும் உள்ளது. நாம் கடைபிடிக்க வேண்டிய பகுதியும் உள்ளது.

கர்த்தர் ஆபிராமோடு உடன்படிக்கை பண்ணும்போது, "நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு" என்று சொல்லுகிறார். இந்த நிபந்தனையை ஆபிராம் நிறைவேற்றவேண்டும். நாம் கர்த்தருக்கு முன்பாக எப்போதும் உத்தமமாய் நடக்கவேண்டும். இதுவே நாம் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.

புதியஏற்பாட்டுக்கால உடன்படிக்கையில் பரிசுத்தமும், பரிபூரணமும் மனுஷரிடம் காணப்படவேண்டும். இதே எதிர்பார்ப்பு ஆபிரகாமின் உடன்படிக்கையிலும் காணப்படுகிறது. ஆபிரகாம் பரிசுத்தமாகவும், பரிபூரணமாகவும் இருப்பதற்குச் சர்வ வல்லமையுள்ள தேவன் உதவி புரிகிறார். பண்பில் மாறாத தேவன் நமக்கும் உதவி புரிவார். எல்லோரும் பாவம் செய்து ஏகமாய் கெட்டுப் போய் இருக்கிறார்கள்.

மனுஷர் இரட்சிக்கப்படுவதற்கு தேவகிருபை தேவை. (லூக்கா 1:74-75; ரோமர் 6:1-23; ரோமர் 8:1-13; ரோமர் 12:1-2; 1கொரி 1:18-30; 1கொரி 3:16-17; 1கொரி 6:9-20; 1கொரி 9:27; 2கொரி 5:17-21; 2கொரி 6:14-18; 2கொரி 7:1; கலா 5:16-26; எபே 4:22-24; கொலோ 3:5-10; 2தீமோ 2; தீத்து 2:11-14; எபி 12:14; 1யோவான் 1:7-9; 1யோவான் 2:29; 1யோவான் 3:5-10; 1யோவான் 5:1-4,18) ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட அதே சுவிசேஷமே நமக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. (கலா 3:8; ரோமர் 4).

நாம் கர்த்தரோடு எப்போதும் ஐக்கியமாயிருக்கவேண்டும். நம்முடைய இருதயத்தில் கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் தங்கியிருக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஆராதனைகளிலும், நாம் கர்த்தருக்காக செய்யும் ஊழியங்களிலும், நாம் கர்த்தருக்கு முன்பாக உத்தமமாய் நடக்கவேண்டும்.

"ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: உன் வீட்டாரும் உன் பிதாவின் வீட்டாரும் என்றைக்கும் என் சந்நிதியில் நடந்து கொள்வார்கள் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லியிருந்தும், இனி அது எனக்குத் தூரமாயிருப்பதாக; என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (1சாமு 2:30).

நாம் கர்த்தருக்கு முன்பாக உத்தமமாய் நடக்காமல், கர்த்தரைப் பின்பற்றுவது என்பதோ, கர்த்தருக்கு ஊழியம் செய்வது என்பதோ, கர்த்தரை ஆராதிப்பது என்பதோ இயலாத காரியம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் உண்மையும் உத்தமமுமே நமக்கு பிரதானம். கர்த்தர் நமக்கு போதுமானவர் என்பதை நாம் உறுதிசெய்துகொண்டு, அவருக்கு முன்பாக நாம் உத்தமமாய் நடக்கவேண்டும்.

ஆபிராம் கர்த்தருக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து வணங்குகிறார். அவர் சாஷ்டாங்கமாக தரையிலே விழுகிறார். சாஷ்டாங்கமாக விழும் முறைகளைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. தேவனுடைய பிரசன்னத்தினால் ஆளுகை செய்யப்பட்டு சாஷ்டாங்கமாய் விழுதல். (ஆதி 15:12-17; உபா 9:18,25; நியா 13:20; எசே 1:28; எசே 3:23; எசே 43:3; எசே 44:4; தானி 8:17; தானி 10:5-19; மத் 17:6; அப் 9:4; அப் 10:10; வெளி 1:17)
2. ஜெபத்தில் சாஷ்டாங்கமாய் விழுதல். (ஆதி 17:3,17; லேவி 9:24; எண் 14:5; எண் 16:4,22,45; எண் 20:6; எண் 22:31; உபா 9:18,25; யோசு 5:14; யோசு 7:6; 1இராஜா 18:39; லூக்கா 17:16; வெளி 5:8,14; வெளி 7:11; வெளி 11:16)
3. ஜெபத்தின் பாரங்களினால் சாஷ்டாங்கமாய் விழுதல். (யோசு 7:6; மத் 26:39; மாற்கு 3:11; மாற்கு 5:22; மாற்கு 7:25; மாற்கு 14:35; லூக்கா 5:12; யோவான் 11:32)

ஆபிராம் - ஆபிரகாம்
ஆதி 17:4-6

ஆதி 17:4. நான் உன்னோடே பண்ணுகிற என் உடன்படிக்கை என்னவென்றால், நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய்.

ஆதி 17:5. இனி உன் பேர் ஆபிராம் என்னப்படாமல், நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத்தினபடியால், உன் பேர் ஆபிரகாம் என்னப்படும்.

ஆதி 17:6. உன்னை மிகவும் அதிகமாய்ப் பலுகப்பண்ணி, உன்னிலே ஜாதிகளை உண்டாக்குவேன்; உன்னிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள்.

கர்த்தருடைய உடன்படிக்கை கிருபையின் உடன்படிக்கையாயிருக்கிறது. கர்த்தரே தம்முடைய உடன்படிக்கைக்கு ஸ்தாபகர். கர்த்தரே நம்மோடு உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார். கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, உடன்படிக்கையின் ஷரத்துக்களை எழுதுகிறார்.

கர்த்தர் ஆபிராமை நோக்கி, "நான் உன்னோடே பண்ணுகிற என் உடன்படிக்கை என்னவென்றால், நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய்" (ஆதி 17:4) என்று சொல்லுகிறார்.

ஆபிராமுக்கு மாம்சத்தின் பிரகாரமாக பிறக்கும் சந்ததி திரளாயிருக்கும். ஆபிராமுக்கு மாம்சப்பிரகாரமான சந்ததிகள் இருப்பதுபோல, ஆவிக்குரிய சந்ததியும் இருப்பார்கள். இயேசுகிறிஸ்துவை தங்கள் இரட்சகராக விசுவாசிக்கிற எல்லோருமே, ஆபிரகாமின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் எல்லா காலங்களிலும், எல்லா தேசங்களிலும் இருக்கிறார்கள். ஆபிராம் தேவனுடைய சிநேகிதராகவும் இருக்கிறார். அவர் விசுவாச சந்ததியார் எல்லோருக்கும் தகப்பனாகவும் இருக்கிறார்.

கர்த்தர் ஆபிராமோடு பண்ணுகிற உடன்படிக்கையை உறுதிபண்ணும் வண்ணமாக, ஆபிராம் என்னும் பெயரை, ஆபிரகாம் என்று மாற்றுகிறார். ஆபிராம் என்னும் பெயருக்கு "உயர்த்தப்பட்ட தகப்பன்" என்று பொருள். ஆபிரகாம் என்னும் பெயருக்கு, "திரளான ஜாதிகளுக்கு தகப்பன்" என்று பொருள்.

கர்த்தர் ஆபிராமைக் கனம்பண்ணுகிறார். கர்த்தர் ஆபிராமை நோக்கி, "இனி உன் பேர் ஆபிராம் என்னப்படாமல், நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத்தினபடியால், உன் பேர் ஆபிரகாம் என்னப்படும்" (ஆதி 17:5) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஆபிராமின் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுகிறார். ஆபிராமுக்கும் சாராயிக்கும் இன்னும் ஈசாக்கு பிறக்கவில்லை. ஆனாலும் கர்த்தர் ஆபிராமை நோக்கி, "நீ திரளான ஜாதிகளுக்கு தகப்பனாவாய்" என்று சொல்லுகிறார். ஆபிராம் கர்த்தருடைய வாக்குத்தத்த வார்த்தைகளை விசுவாசிக்கவேண்டும். அவர் தன்னுடைய விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருந்து, ஊன்றக்கட்டப்படவேண்டும். ஆபிராம் தன் விசுவாசத்தில் நிலைத்திருக்க, கர்த்தர் அவரை உற்சாகப்படுத்துகிறார்.

ஆபிரகாம் திரளான ஜாதிகளுக்கு தகப்பனாகயிருப்பார். இஸ்ரவேலர், இஸ்மவேலர், மீதியானியர், ஏதோமியர், அரபியர் ஆகியோருக்கு ஆபிரகாம் முற்பிதாவாக இருக்கிறார். (ஆதி 17:20; ஆதி 25:1-3,24-27; ஆதி 35:11).

கர்த்தர் ஆபிரகாமோடு தம்முடைய உடன்படிக்கையை, நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிக்கிறார். ஆபிரகாமின் சந்ததி நித்திய காலமாக இருந்தால்தான் தேவனால் தமது உடன்படிக்கையை நித்திய காலத்திற்கும் நிறைவேற்றமுடியும். ஆகையினால் ஆபிரகாமின் இயற்கையான சந்ததி பூமியில் நித்திய காலமாக இருக்கும்.

கானான் தேசம் ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகயிருக்கும். ஆபிரகாமின் சந்ததி நித்திய காலமாக இருக்கவில்லையென்றால், கானான் தேசம் அவர்களுக்கு நித்திய சுதந்தரமாக இருக்காது.

கர்த்தர் ஆபிராமை நோக்கி, "உன்னை மிகவும் அதிகமாய்ப் பலுகப்பண்ணி, உன்னிலே ஜாதிகளை உண்டாக்குவேன்; உன்னிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள்" (ஆதி 17:6) என்றும் சொல்லுகிறார். ஆபிராம் திரளான ஜாதிகளுக்கு தகப்பனாயிருப்பது மாத்திரமல்ல, அவர் ராஜாக்களுக்கும் தகப்பனாயிருப்பார்.

விருத்தசேதனம்
ஆதி 17:7-14

ஆதி 17:7. உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும், உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்.

ஆதி 17:8. நீ பரதேசியாய்த் தங்கிவருகிறகானான் தேசமுழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்றார்.

ஆதி 17:9. பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி: இப்பொழுது நீயும், உனக்குப் பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததியும், என் உடன்படிக்கையைக் கைக்கொள்ளுங்கள்.

ஆதி 17:10. எனக்கும் உங்களுக்கும், உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும், நீங்கள் கைக்கொள்ள வேண்டியதுமான என் உடன்படிக்கை என்னவென்றால், உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்.

ஆதி 17:11. உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள்; அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்.

ஆதி 17:12. உங்களில் தலைமுறை தலைமுறையாகப் பிறக்கும் ஆண்பிள்ளைகளெல்லாம் எட்டாம்நாளிலே விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்; வீட்டிலே பிறந்த பிள்ளையும் உன் வித்தல்லாத அந்நியனிடத்தில் பணத்திற்குக் கொள்ளப்பட்ட எந்தப் பிள்ளையும், அப்படியே விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்.

ஆதி 17:13. உன் வீட்டிலே பிறந்த பிள்ளையும், உன் பணத்திற்குக் கொள்ளப்பட்டவனும், விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டியது அவசியம்; இப்படி என் உடன்படிக்கை உங்கள் மாம்சத்திலே நித்திய உடன்படிக்கையாக இருக்கக் கடவது;

ஆதி 17:14. நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படாதிருக்கிற நுனித்தோலுள்ள ஆண்பிள்ளையாயிருந்தால், அந்த ஆத்துமா என் உடன்படிக்கையை மீறினபடியால், தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான் என்றார்.

கர்த்தர் ஆபிராமோடு பண்ணின உடன்படிக்கையை உறுதிபண்ணுகிறார். கர்த்தர் ஆபிராமுக்கும், அவருக்குப் பின் தலைமுறை தலைமுறையாக வரும் அவருடைய சந்ததிக்கும், தம்முடைய உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிக்கிறார். கர்த்தர் ஆபிராமுக்கும், அவருக்கு பின்வரும் அவருடைய சந்ததிக்கும் தேவனாயிருப்பார் (ஆதி 17:7).

கர்த்தருடைய உடன்படிக்கை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிக்கப்படுகிறது. இந்த உடன்படிக்கையை மாற்ற முடியாது. இதைத் திரும்பபெற்றுக்கொள்ளவும் முடியாது. இந்த உடன்படிக்கையை நிறைவேற்றாமல், இதை அவமாய்ப் போகப்பண்ணவும் முடியாது. ஏனெனில் கர்த்தருடைய உடன்படிக்கை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை ஆபிராமோடு மாத்திரமல்ல, அவருக்கு பின் தலைமுறை தலைமுறையாக வரும் அவருடைய சந்ததிக்கும், நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபித்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை ஆபிராமின் மாம்சப்பிரகாரமான சந்ததியோடு மாத்திரமல்ல, அவருடைய ஆவிக்குரிய சந்ததியோடும், நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபித்திருக்கிறார்.

கர்த்தருடைய உடன்படிக்கை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அவருடைய உடன்படிக்கை கிருபையின் உடன்படிக்கை. புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் கிருபையின் காலத்திலிருக்கிறோம். கர்த்தர் ஆபிராமோடு பண்ணின உடன்படிக்கை, புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய, நம்முடைய காலத்திலும் செயல்படும் வண்ணமாக, அது கிருபையின் உடன்படிக்கையாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தர் ஆபிராமோடு பண்ணின உடன்படிக்கை வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கையாகும். கர்த்தர் ஆபிராமுக்கும், அவருடைய சந்ததியாருக்கும் போதுமானவராகயிருக்கிறார். ஆகையினால் கர்த்தர் தம்மை, "நான் சர்வவல்லமையுள்ள தேவன்" என்று ஆபிராமுக்கு வெளிப்படுத்தினார்.

கர்த்தருடைய உடன்படிக்கையில் இரண்டு முக்கியமான ஷரத்துக்கள் உள்ளன. அவையாவன: 1. கர்த்தர் ஆபிராமுக்கும் அவருக்கு பின்வரும் அவருடைய சந்ததிக்கும் தேவனாயிருப்பார். 2. கர்த்தர் கானான் தேசம் முழுவதையும், ஆபிராமுக்கும், அவருக்கு பின்வரும் அவருடைய சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுப்பார்.

கர்த்தர் ஆபிராமுக்கும், அவருக்கு பின்வரும் அவருடைய சந்ததிக்கும் தேவனாயிருப்பார். இதனால் கர்த்தருடைய சுபாவங்களையெல்லாம், அவருடைய ஜனத்தார் தங்களுக்கு ஆசீர்வாதமுண்டாக பெற்றுக்கொள்வார்கள். கர்த்தருடைய கிருபை அவர்களுக்குரியது. அவர்களுடைய ஞானமும், பெலமும் அவர்களுக்குரியது.

கர்த்தர் சர்வவல்லமையுள்ள தேவன். கர்த்தருடைய வல்லமை அவருடைய ஜனத்திற்குரியது. கர்த்தர் தம்முடைய ஞானத்தினால், அவர்களை வழிநடத்துகிறார். அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய வல்லமையினால் அவர்களைப் பாதுகாக்கிறார். அவர்களுக்கு ஆதரவு கொடுக்கிறார். கர்த்தருடைய நன்மையும் அவருடைய ஜனத்திற்குரியது. கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்களுடைய தேவைகளை சந்தித்து அவர்களுக்கு ஆறுதலைக் கொடுக்கிறார்.

ஆபிராம் இப்போது கானான் தேசத்திலே பரதேசியாய்த் தங்கிவருகிறார். கர்த்தர் இந்தக் கானான் தேசம் முழுவதையும், ஆபிராமுக்கும், அவருக்கு பின்வரும் அவருடைய சந்ததிக்கும் நித்திய சுதந்தமாகக் கொடுப்பார். கர்த்தர் மறுபடியுமாக, "நான் அவர்களுக்கு தேவனாயிருப்பேன்" (ஆதி 17:8) என்று வாக்குப்பண்ணுகிறார்.

கானான் தேசம் என்பது பரமதேசத்திற்கு அடையாளமாக சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய ஜனத்திற்கு பரலோகமே நித்திய வாசஸ்தலம். அதுவே அவர்களுக்கு நித்திய சுதந்தரம். அங்கே அவர்களுக்கு நித்திய சந்தோஷமும், நித்திய ஒய்வும் உண்டு.

"ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனிவருகிறதாயிருக்கிறது" (எபி 4:9).

கர்த்தர் ஆபிராமுக்கும் அவருடைய சந்ததியாருக்கும் கானான் தேசம் முழுவதையும் நித்திய சுதந்தரமாகக் கொடுக்கிறார். ஆபிராம் இப்போது கானான் தேசத்திலிருக்கிறார். ஆனால் அவர் இந்த தேசத்தை இன்னும் சுதந்தரிக்கவில்லை. அவர் கானான் தேசத்திலே இப்போது பரதேசியாய் தங்கி வருகிறார்.

ஆபிராம் கானான் தேசத்திற்கு பரதேசியாயிருந்ததுபோல, நாமும் இப்போது பரமகானானாகிய பரமதேசத்திற்கு பரதேசிகளாயிருக்கிறோம். நாம் பரலோகத்திலே பிரவேசிக்கும்போது, பரமதேசத்தை நமக்கு நித்திய சுதந்தரமாகப் பெற்றுக்கொள்வோம். அதுவரையிலும் நாம் இந்தப் பூமியிலிருப்போம். இந்தப் பூமியிலும் நாம் பரதேசிகளாகவே இருப்போம்.

கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, "நீயும் உன் சந்ததியும் என் உடன்படிக்கையை கைக்கொள்ளுங்கள்" (ஆதி 17:9) என்று சொல்லுகிறார்.

ஆபிரகாமின் உடன்படிக்கை நிபந்தனையற்ற உடன்படிக்கை என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் இது தவறு. தேவன் கலகக்காரருக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களைக் கொடுக்கமாட்டார். தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆசீர்வாதம் உண்டு (ஆதி 17:9-10).

ஆபிரகாமின் உடன்படிக்கை நித்தியமானது என்று மூன்று முறை கூறப்பட்டிருக்கிறது. அதில் இது இரண்டாவது முறையாகும். (ஆதி 17:7,13,19).

கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, அதை உறுதிபடுத்துவதற்கு அடையாளத்தையும் ஏற்படுத்துகிறார். ஆபிராமின் சந்ததியில் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளுக்கும் விருத்தசேதனம்பண்ணப்படவேண்டும். இதுவே உடன்படிக்கையின் அடையாளம். இது விருத்தசேதன உடன்படிக்கை என்று அழைக்கப்படுகிறது.

"மேலும் விருத்தசேதன உடன்படிக்கையையும் அவனுக்கு ஏற்படுத்தினார். அந்தப்படியே அவன் ஈசாக்கைப் பெற்றபோது, எட்டாம்நாளிலே அவனை விருத்தசேதனம் பண்ணினான். ஈசாக்கு யாக்கோபையும், யாக்கோபு பன்னிரண்டு கோத்திரப்பிதாக்களையும் பெற்றார்கள்" (அப் 7:8).

விருத்தசேதனமானது அடையாளமாகவும், அச்சாரமாகவும் இருக்கிறது. "மேலும், விருத்தசேதனமில்லாத காலத்தில் அவன் விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதனமாகிய அடையாளத்தைப் பெற்றான். விருத்தசேதனமில்லாதவர்களாய் விசுவாசிக்கிற யாவருக்கும் நீதி எண்ணப்படும்பொருட்டாக அவர்களுக்கு அவன் தகப்பனாயிருக்கும்படிக்கும்" (ரோம 4:11).

விருத்தசேதனத்தின் மூலமாக கர்த்தர் ஆபிராமுக்கும் அவருடைய சந்ததிக்கும் தம்முடைய வாக்குத்தத்தங்களை உறுதிபண்ணுகிறார். வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவது கர்த்தருடைய பங்கு. விருத்தசேதனம்பண்ணுவது ஆபிரகாமின் பங்கு.

விருத்தசேதனமானது சரீரப்பிரகாரமான நியமனமாயிருக்கிறது. விருத்தசேதனம் பண்ணப்படும்போது இரத்தம் சிந்தப்படும். ஆகையினால் இது இரத்தநியமமாகவும் இருக்கிறது. இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை. பாவம் பரிகரிக்கப்படவேண்டுமென்றால், அது இரத்தத்தினால் மாத்திரமே பரிகரிக்கப்படும்.

"நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" (எபி 9:22).

"அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின்மேல் தெளித்து, இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான்" (யாத் 24:8).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையிலே மனுக்குலத்தாரின் பாவங்களைப் போக்குவதற்காக, தம்முடைய சொந்த இரத்தத்தையே மீட்பின் கிரயமாக செலுத்தினார். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டதினால், அந்த இரத்தத்தை தவிர மற்ற இரத்த உடன்படிக்கைகளும், இரத்த நியமங்களும் தேவையில்லாமல் போயிற்று. அவை இப்பொழுது ஒழிக்கப்பட்டுவிட்டது.

கர்த்தருடைய உடன்படிக்கையில் நாம் உண்மையுள்ளவர்களாகயிருக்கவேண்டும். நம்முடைய உண்மைக்கு அடையாளமாக பூர்வகாலத்தில் விருத்தசேதனம் நியமிக்கப்பட்டது. இப்போது விருத்தசேதனத்திற்குப் பதிலாக தண்ணீர் ஞானஸ்நானம் நியமிக்கப்பட்டிருக்கிறது.

ஆபிராமின் சந்ததியில் பிறக்கும் ஆண்பிள்ளைகளுக்கு மாத்திரம் விருத்தசேதனம்பண்ணப்படவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய உடன்படிக்கையில் ஸ்திரீகளும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் ஆண்பிள்ளைகள் மாத்திரம் விருத்தசேதனம்பண்ணினால் போதுமானது. புருஷன் தன் மனைவிக்கு தலையாயிருக்கிறான். ஆகையினால் புருஷனுக்கு மாத்திரம் விருத்தசேதனம்பண்ணப்படுகிறது.

ஆண்பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணப்படும்போது, அவர்களுடைய நுனித்தோல் நீக்கப்படும். பொதுவாக இந்த நுனித்தோலின் மூலமாகவே பாவமான ஒவ்வொரு சந்ததியும் நடந்து வருகிறது. கர்த்தர் ஆபிராமுக்கு விருத்தசேதன உடன்படிக்கையைப்பற்றிச் சொன்னபோது, கிறிஸ்துவானவர் இந்தப் பூமியில் இன்னும் மனுஷனாக அவதரிக்கவில்லை. அவர் நம்முடைய பாவங்களுக்காக இன்னும் கல்வாரி சிலுவையில் தம்முடைய இரத்தத்தை சிந்தவில்லை.

ஆகையினால் கர்த்தர் இப்போது, ஆபிராமின் சந்ததியில் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளுக்கும் விருத்தசேதனம்பண்ணப்படவேண்டும் என்று சொல்லுகிறார். கர்த்தர் ஆபிராமின் சந்ததியாரோடு உடன்படிக்கை பண்ணும்போது, அந்த சந்ததியிலுள்ள ஆண்பிள்ளைகள் அனைவரும், தங்களுடைய சரீரத்தின் ஒரு பகுதியை பலியாக செலுத்தி, கர்த்தருடைய உடன்படிக்கையில் பிரவேசிக்கவேண்டும். ஆண்பிள்ளைகளின் நுனித்தோல் வெட்டப்படும்போது, அவர்கள் அந்த நுனித்தோலை கர்த்தருக்கு பலியாக செலுத்துகிறார்கள்.

நுனித்தோலானது சரீரத்தின் இரகசியமான பகுதி. ஆனாலும் உண்மையான விருத்தசேதனம் என்பது, ஆண்பிள்ளைகளுடைய நுனித்தோலை வெட்டுவது அல்ல. மனுஷருடைய இருதயத்தில் பண்ணப்படும் விருத்தசேதனமே, மெய்யான விருத்தசேதனம்.

ஆதலால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது (ரோமர் 2:28,29).

கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, "உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள்; அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். உங்களில் தலைமுறை தலைமுறையாகப் பிறக்கும் ஆண்பிள்ளைகளெல்லாம் எட்டாம்நாளிலே விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்" (ஆதி 17:11,12) என்று சொல்லுகிறார்.

ஆபிரகாமின் வீட்டில் பிறந்த பிள்ளைகளுக்கும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும். ஆபிகாமின் வித்தல்லாத அந்நியனிடத்தில் பணத்திற்கு கொள்ளப்பட்ட, எந்தப் பிள்ளைக்கும் அப்படியே விருத்தசேதனம்பண்ணப்பட வேண்டும். எஜமான் தன் குடும்பத்திற்கு ஆண்டவனாயிருக்கிறான். அவன் தன்னுடைய ஆண்பிள்ளைகளுக்கு விருத்தசேதனம்பண்ணும்போது, தன்னிடத்தில் வேலை பார்க்கிற வேலைக்கார ஆண்பிள்ளைகளுக்கும் விருத்சேதனம்பண்ணவேண்டும்.

"உன் வித்தல்லாத அந்நியனிடத்தில் பணத்திற்கு கொள்ளப்பட்ட பிள்ளை" என்னும் வாக்கியம் புறஜாதியாரைக் குறிப்பிடுகிறது. புறஜாதியாரும் விசுவாசத்தினாலே ஆபிரகாமின் சந்ததியாராயிருக்கிறார்கள். இவர்கள் ஆபிரகாமுக்கு சரீரப்பிரகாரமான சந்ததியாரல்ல. இவர்கள் அவருக்கு ஆவிக்குரிய சந்ததியார்.

"ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கு வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கும் என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே" (கலா 3:16).

விருத்தசேதனத்தை மீறுவது, உடன்படிக்கையை மீறுவதற்கு சமம். பெற்றோர் தங்கள் ஆண்பிள்ளைகளுக்கு விருத்தசேதனம்பண்ணவில்லையென்றால், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்களுக்கு அழிவு வரும். மோசே இப்படிப்பட்ட அழிவுக்கு அருகாமையிலிருந்தார்.

"வழியிலே தங்கும் இடத்தில் கர்த்தர் அவனுக்கு எதிர்ப்பட்டு, அவனைக் கொல்லப்பார்த்தார். அப்பொழுது சிப்போராள் கருக்கான ஒரு கல்லை எடுத்து, தன் புத்திரனுடைய நுனித்தோலை அறுத்து, அதை அவன் கால்களுக்கு முன்பாக எறிந்து: நீர் எனக்கு இரத்தசம்பந்தமான புருஷன் என்றாள்" *(யாத் 4:24,25).*

விருத்தசேதனம்பண்ணாதவர்கள்மீது தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பு வரும். கர்த்தர் ஆபிரகாமிடம் இதுபற்றிச் சொல்லும்போது, "நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படாதிருக்கிற நுனித்தோலுள்ள ஆண்பிள்ளையாயிருந்தால், அந்த ஆத்துமா என் உடன்படிக்கையை மீறினபடியால், தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான்" *(ஆதி 17:14)* என்று சொல்லுகிறார்.

விருத்தசேதனம் பண்ணாதவர்களுக்கு மரணம் நேரிடும். *(ஆதி 9:11; யாத் 12:15,19; யாத் 31:14; லேவி 7:20,21, 25,27; சங் 101:5; ஏசா 53:8; தானி 9:26; சக 14:2; மல் 2:12)* அவர்கள் எவ்வாறு மரிப்பார்கள் என்று கூறப்படவில்லை. உடன்படிக்கைக்கு அடையாளமாக இருக்கும் விருத்தசேதனத்தை ஒருவர் வேண்டுமென்றே புறக்கணிக்கும்போது அவருக்கு மரணம் நேரிடும். ஆயினும் இந்தப் பிரமாணம் அதிகமாக வலியுறுத்தப்படவில்லை. ஏனெனில் இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணிய போது அவர்களுடைய பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணப்படவில்லை *(யோசு 5:2-10).*

சாராய் - சாராள்
ஆதி 17:15-17

ஆதி 17:15. பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி: உன் மனைவி சாராயை இனி சாராய் என்று அழையாதிருப்பாயாக; சாராள் என்பது அவளுக்குப் பேராயிருக்கும்.

ஆதி 17:16. நான் அவளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன்; அவள் ஜாதிகளுக்கு தாயாகவும், அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும், அவளை ஆசீர்வதிப்பேன் என்றார்.

ஆதி 17:17. அப்பொழுது ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைத்து: நூறுவயதானவனுக்குப் பிள்ளை பிறக்குமோ? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ? என்று தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டு,

கர்த்தர் சாராயின் பெயரை, சாராள் என்று மாற்றுகிறார். பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி: "உன் மனைவி சாராயை இனி சாராய் என்று அழையாதிருப்பாயாக; சாராள் என்பது அவளுக்குப் பேராயிருக்கும்" *(ஆதி 17:15)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் சாராளை ஆசீர்வதிப்பார். கர்த்தர் சாராள் மூலமாக ஆபிரகாமுக்கு ஒரு குமாரனைத் தருவார். சாராள் ஜாதிகளுக்கு தாயாகயிருப்பாள். அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகும்படியாக கர்த்தர் அவளை ஆசீர்வதிப்பார் *(ஆதி 17:16).*

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு, தம்முடைய நல்ல நோக்கத்தையும், திட்டத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்துகிறார். கர்த்தர் ஒரே சமயத்தில் எல்லா வெளிப்பாடுகளையும் கொடுக்காமல், கொஞ்சம் கொஞ்சமாக தம்முடைய இரகசியங்களை வெளிப்படுத்துகிறார்.

ஆபிராமின் சந்ததி திரளாயிருக்கும் என்றும், அது ஆசீர்வதிக்கப்படும் என்றும் கர்த்தர் சொன்னார். ஆனால் இதுவரையிலும் கர்த்தர் ஆபிராமிடத்தில், "சாராளாலே உனக்கு ஒரு குமாரனைத் தருவேன்" என்று சொல்லவே இல்லை. கர்த்தர் இப்போதுதான் தம்முடைய திட்டத்தை வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் சாராளை ஆசீர்வதிக்கும்போது, அவள் இனிமேல் மலடியாயிருக்கமாட்டாள். அவள் கர்ப்பவதியாகி தாயாகயிருப்பாள். அவள் ஜாதிகளுக்கு தாயாகயிருப்பாள் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய ஆசீர்வாதம் வரும்போது, விருத்தியும், பெருக்கமும் உண்டாகும். கர்த்தர் தம்முடைய ஆசீர்வாதத்தோடு வருத்தத்தைக் கூட்டமாட்டார். ஆகார் வருத்தப்பட்டதுபோல சாராள் வருத்தப்படவில்லை.

கர்த்தரே சர்வஆளுகையுள்ளவர். அவர் ஜனங்களை ஆளுகை செய்கிறார். ராஜாக்களை சிங்காசனத்தில் அமரச் செய்கிறார். ஒரு தேசத்தில் நல்லாட்சி நடைபெறும்போது, அதனால் கர்த்தருடைய சபைக்கு மிகப்பெரிய ஆசீர்வாதம் கிடைக்கிறது. தேசம் அமைதியாயிருக்கும்போது விசுவாசிகள் கர்த்தரை தடையில்லாமல் துதிக்கலாம்.

கர்த்தர் சாராளை ஆசீர்வதிக்கும்போது, "அவள் ஜாதிகளுக்கு தாயாகவும், அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும் அவளை ஆசீர்வதிப்பேன்" (ஆதி 17:16) என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார். கர்த்தர் ஆபிரகாமின் சந்ததியை ஆசீர்வதிக்கிறார். அவர்களை ஆளுகை செய்வதற்கு ராஜாக்களையும் கொடுக்கிறார்.

சாராயின் பெயரும் இப்போது சாராள் என்று மாற்றப்பட்டிருக்கிறது. சாராய் என்னும் பெயருக்கு "என்னுடைய ராஜாக்கள்" என்று பொருள். இதனால் சாராளின் மகிமை ஒரு குடும்பத்தோடு முடிவு பெறும். சாராள் என்னும் பெயருக்கு திரளான ராஜாக்கள் என்று பொருள். இதன் மூலமாக சாராளுடைய மகிமை அதிகரிக்கிறது. அவள் ஒரு ஜாதிக்கு மாத்திரமல்ல, அநேக ஜாதிகளுக்கு தாயாகயிருப்பாள்.

சாராய் என்பதற்கு இளவரசி என்று பொருள். சாராள் என்பதற்கு இளவரசிகளின் தலைவி அல்லது இளவரசிகளின் தாய் என்று பொருள். சாராள் என்னும் பெயர் "சார்" என்னும் எபிரெய வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது. இதற்கு இளவரசன் என்று பொருள். "சார்" என்னும் வார்த்தையின் பெண்பால் "சாராள்" ஆகும்.

ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு முகங்குப்புற விழுந்து நகைக்கிறார். "நூறுவயதானவனுக்குப் பிள்ளை பிறக்குமோ? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ?" (ஆதி 17:17) என்று தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டு, நகைக்கிறார்.

ஆபிராம் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறார். அவர் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக முகங்குப்புற விழுகிறார். ஆபிரகாமின் இருதயம் சந்தோஷத்தினால் நிரம்பியிருக்கிறது. அவர் நகைக்கிறார். ஆபிரகாமின் நகைப்பு அவிசுவாசத்திற்கு அடையாளமல்ல. அது சந்தோஷத்தினால் உண்டாகும் நகைப்பு. இது விசுவாசத்தினால் உண்டாகும் நகைப்பு. இது கர்த்தர் அவரை ஆசீர்வதிப்பதினால் உண்டாகும் நகைப்பு. ஆபிரகாம் களிகூர்ந்ததை இயேசுகிறிஸ்துவும் குறிப்பிட்டிருக்கிறார் (யோவா 8:56).

ஆபிரகாம் தன் இருதயத்திற்குள்ளே, "நூறுவயதானவனுக்கு பிள்ளை பிறக்குமோ" என்று சொல்லிக்கொள்கிறார். கர்த்தரால் எல்லாம் ஆகும் என்னும் விசுவாசம் ஆபிரகாமிடத்தில் இருக்கிறது. கர்த்தர் ஆபிரகாமுக்கு போதுமானவராகயிருக்கிறார். அவர் சர்வவல்லமையுள்ள தேவன். ஆபிரகாம் கர்த்தருடைய சர்வவல்லமையை தன் இருதயத்தில் நினைத்துப் பார்த்து, கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறார்.

ஆபிரகாமின் ஜெபம்
ஆதி 17:18-22

ஆதி 17:18. இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக! என்று ஆபிரகாம் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினான்.

ஆதி 17:19. அப்பொழுது தேவன்: உன்மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக; என் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்.

ஆதி 17:20. இஸ்மவேலுக்காகவும் நீ செய்த விண்ணப்பத்தைக் கேட்டேன்; நான் அவனை ஆசீர்வதித்து, அவனை மிகவும் அதிகமாகப் பலுகவும் பெருகவும் பண்ணுவேன்; அவன் பன்னிரண்டு பிரபுக்களைப் பெறுவான்; அவனைப் பெரிய ஜாதியாக்குவேன்.

ஆதி 17:21. வருகிற வருஷத்தில் குறித்தகாலத்திலே சாராள் உனக்குப் பெறப்போகிற ஈசாக்கோடே நான் என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் என்றார்.

ஆதி 17:22. தேவன் ஆபிரகாமோடே பேசி முடிந்தபின்பு, அவர் அவனைவிட்டு எழுந்தருளினார்.

ஆபிரகாம் இஸ்மவேலுக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். "இஸ்மவேல் உமக்கு முன்பாக பிழைப்பானாக" என்று ஆபிரகாம் கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். சாராளுக்கு குமாரன் பிறக்கப்போவதினால், ஆகார் பெற்ற இஸ்மவேலை கர்த்தர் மறந்துவிடுவாரோ என்றும், அவனை புறக்கணித்து தள்ளிவிடுவாரோ என்றும் ஆபிரகாம் யோசிக்கிறார். ஆபிரகாமுக்கு தன் குமாரனாகிய இஸ்மவேல் மீதும் பிரியம் இருக்கிறது.

தேவனுடைய திட்டத்தில் மேசியா ஆபிரகாமின் சந்ததியில் வருவார். ஆனால் இதில் இஸ்மவேலுக்குப் பங்கிராது என்பது ஆபிரகாமுக்குத் தெரியவருகிறது. ஆகையினால் இஸ்மவேலுக்காக ஆபிரகாம் விண்ணப்பம்பண்ணுகிறார். இஸ்மவேலைக் குறித்த தேவனுடைய திட்டம் ஆதி 17:20-21 ஆகிய வசனங்களில் உறுதிபண்ணப்படுகிறது.

ஆபிரகாம் கர்த்தரை நோக்கி, "இஸ்மவேல் உமக்கு முன்பாக பிழைப்பானாக" என்று கட்டளையிடவில்லை. ஆனாலும் ஆபிரகாம் தன்னுடைய மனதின் விருப்பத்தை கர்த்தரிடத்தில் பணிவான விண்ணப்பமாகச் சொல்லுகிறார்.

"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்" (பிலி 4:6).

பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளுக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டும். யோபு தன்னுடைய எல்லா பிள்ளைகளுக்காகவும் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணி பலிசெலுத்தியதுபோல, நாமும் நம்முடைய பிள்ளைகள் எல்லோருக்காகவும் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ண வேண்டும்.

"விருந்துசெய்கிற அவரவருடைய நாள்முறை முடிகிறபோது, யோபு: ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி, அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவான்; இந்தப்பிரகாரமாக யோபு அந்நாட்களிலெல்லாம் செய்துவருவான்" (யோபு 1:5).

நம்முடைய பிள்ளைகளைக் குறித்து நமக்கு பல்வேறுவிதமான திட்டங்கள் இருக்கலாம். அவர்களுடைய வருங்காலத்தைக் குறித்து நாம் இப்போதே திட்டம்பண்ணலாம். நம்முடைய பிள்ளைகள் கர்த்தருக்கு முன்பாக ஜீவிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய பாதையிலே நடக்கவேண்டும். நம்முடைய பிள்ளைகள் கர்த்தரோடு செய்துகொண்ட உடன்படிக்கையைக் காத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் நீதியின் பாதையிலே நடப்பதற்கு கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளவேண்டும். இதுவே நமக்கும் நம்முடைய குடும்பத்திற்கும் மெய்யான ஆசீர்வாதம். ஆபிரகாம் இந்த மெய்யான ஆசீர்வாதத்தை நினைவுகூர்ந்து, "இஸ்மவேல் உமக்கு முன்பாக பிழைப்பானாக" என்று கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தர் ஆபிரகாமின் விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கிறார். கர்த்தர் அவருடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார். கர்த்தர் கொடுக்கும் பதில் சமாதானத்தின் பதிலாக இருக்கிறது. கர்த்தர் இஸ்மவேலுக்கு பொதுவான ஆசீர்வாதத்தைக் கட்டளையிடுகிறார்.

கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, "இஸ்மவேலுக்காகவும் நீ செய்த விண்ணப்பத்தைக் கேட்டேன்; நான் அவனை ஆசீர்வதித்து, அவனை மிகவும் அதிகமாகப் பலுகவும் பெருகவும் பண்ணுவேன்; அவன் பன்னிரண்டு பிரபுக்களைப் பெறுவான்; அவனைப் பெரிய ஜாதியாக்குவேன்" (ஆதி 17:20) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்மவேலின் சந்ததியையும் ஆசீர்வதிப்பார். அவருடைய சந்ததி திரளாய்ப் பெருகியிருக்கும். அவர்கள் செழித்திருப்பார்கள். இஸ்மவேல் பன்னிரண்டு பிரபுக்களை பெறுவார். கர்த்தர் ஆபிரகாமின் விண்ணப்பத்தைக் கேட்டு, இஸ்மவேலை ஆசீர்வதிக்கிறார். ஆனாலும் இந்த ஆசீர்வாதம் உடன்படிக்கையின் ஆசீர்வாதமல்ல. உடன்படிக்கையின் ஆசீர்வாதம் ஈசாக்குக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, "உன்மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக; என் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்" (ஆதி 17:19) என்று சொல்லுகிறார்.

ஈசாக்கு என்னும் பெயருக்கு "நகைப்பு" என்று பொருள். ஈசாக்கின் பிறப்பைப் பற்றி அறிவிக்கப்பட்டபோது ஆபிரகாமும் (ஆதி 17:17), சாராளும் நகைத்தார்கள் (ஆதி 18:12-15).

கர்த்தர் ஆபிரகாமிடம் ஈசாக்கைப்பற்றி மேலும் சொல்லும்போது, "வருகிற வருஷத்தில் குறித்தகாலத்திலே சாராள் உனக்குப் பெறப்போகிற ஈசாக்கோடே நான் என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்" (ஆதி 17:21) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஆபிரகாமுக்கு தம்முடைய உடன்படிக்கையைப்பற்றிச் சொல்லும்போது, "சாராள் உனக்கு பெறப்போகிற ஈசாக்கு" என்று மறுபடியுமாகச் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை இஸ்மவேலோடு ஏற்படுத்தாமல், ஈசாக்கோடு ஏற்படுத்துகிறார்.

சாராள் பெறப்போகிற பிள்ளைக்கு கர்த்தரே ஈசாக்கு என்று பேரிடுகிறார். கர்த்தர் ஆபிரகாமிடத்தில் சாராளைப்பற்றிச் சொன்னபோது, " நான் அவளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன்; அவள் ஜாதிகளுக்கு தாயாகவும், அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும், அவளை ஆசீர்வதிப்பேன்" என்று சொல்லுகிறார். அப்பொழுது ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைக்கிறார் (ஆதி 17:16,17).

கர்த்தர் சாராளின் மூலமாக தனக்கு ஒரு குமாரனை வாக்குப்பண்ணினபோது, ஆபிரகாம் தன்னுடைய ஆவியிலே மகிழ்ந்து களிகூருகிறார். ஈசாக்கு பிறக்கப்போகும் காலத்தையும் கர்த்தர் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்துகிறார். "வருகிற வருஷத்தில், குறித்த காலத்தில் சாராள் உனக்கு பெறப்போகிற ஈசாக்கு" என்று கர்த்தர் ஆபிரகாமுக்கு சொல்லுகிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தம் சீக்கிரத்தில் நிறைவேறப் போகிறது. அப்போது ஆபிரகாமின் சந்தோஷம் இன்னும் அதிகரிக்கும்.

நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்காக காத்திருக்கும்போது, நம்முடைய இருதயத்தில் மகிழ்ச்சியும் சந்தோஷமும் உண்டாகும். ஆபிரகாம் ஈசாக்குக்காக காத்திருந்தபோது, அவருடைய இருதயத்தில் அப்படிப்பட்ட மகிழ்ச்சியும் சந்தோஷம் உண்டாயிற்று.

தேவன் ஆபிரகாமோடே பேசி முடிந்தபின்பு, அவர் ஆபிராமைவிட்டு எழுந்தருளுகிறார் (ஆதி 17:22).

இஸ்மவேலுக்கு விருத்தசேதனம் ஆதி 17:23-27

ஆதி 17:23. அப்பொழுது ஆபிரகாம் தன் குமாரனாகிய இஸ்மவேலையும், தன் வீட்டிலே பிறந்த யாவரையும், தான் பணத்திற்குக் கொண்ட அனைவருமாகிய தன் வீட்டிலுள்ள ஆண்பிள்ளைகள் எல்லாரையும் சேர்த்து, தேவன் தனக்குச் சொன்னபடி, அவர்கள் நுனித்தோலின் மாம்சத்தை அந்நாளிலேதான் விருத்தசேதனம் பண்ணினான்.

ஆதி 17:24. ஆபிரகாமுடைய நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படும்போது, அவன் தொண்ணூற்றொன்பது வயதாயிருந்தான்.

ஆதி 17:25. அவனுடைய குமாரன் இஸ்மவேலுடைய நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படும்போது, அவன் பதின்மூன்று வயதாயிருந்தான்.

ஆதி 17:26. ஒரே நாளில் ஆபிரகாமும் அவன் குமாரன் இஸ்மவேலும் விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள்.

ஆதி 17:27. வீட்டிலே பிறந்தவர்களும் அந்நியரிடத்திலே பணத்திற்குக் கொள்ளப்பட்டவர்களுமாகிய அவன் வீட்டு மனுஷர்கள் எல்லாரும் அவனோடே கூட விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள்.

ஆபிரகாம் விருத்தசேதன பிரமாணத்திற்கு கீழ்ப்படிகிறார். ஆபிரகாமும் அவருடைய குடும்பத்திலுள்ள ஆண்பிள்ளைகள் அனைவரும் விருத்தசேதனம்பண்ணிக்கொள்கிறார்கள். கர்த்தருடைய உடன்படிக்கையைப் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாக, ஆபிரகாமின் குடும்பத்தார் விருத்தசேதனம்பண்ணிக்கொள்கிறார்கள்.

இதன் மூலமாக ஆபிரகாமின் குடும்பத்தாருக்கும், மற்ற குடும்பத்தாருக்கும் வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது. மற்ற குடும்பத்தாருக்கு கர்த்தருடைய உடன்படிக்கையிலும், ஆசீர்வாதத்திலும் பங்குமில்லை பாத்தியமுமில்லை. அவர்கள் கர்த்தருடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். ஆபிரகாமும் அவருடைய சந்ததியாரும்,கர்த்தருடைய ஆசீர்வாதத்திற்கு பாத்திரமானவர்கள். அவருடைய உடன்படிக்கையில் பங்குள்ளவர்கள்.

அப்பொழுது ஆபிரகாம் தன் குமாரனாகிய இஸ்மவேலையும், தன் வீட்டிலே பிறந்த யாவரையும், தான் பணத்திற்குக் கொண்ட அனைவருமாகிய தன் வீட்டிலுள்ள ஆண்பிள்ளைகள் எல்லாரையும் சேர்த்து, தேவன் தனக்குச் சொன்னபடி, அவர்கள் நுனித்தோலின் மாம்சத்தை அந்நாளிலேதான் விருத்தசேதனம் பண்ணுகிறார் (ஆதி 17:23).

ஆபிரகாம் கர்த்தருடைய கட்டளைக்கு உடனே கீழ்ப்படிகிறார். கர்த்தருடைய வார்த்தைக்கு உண்மையாய்க் கீழ்ப்படிகிறவர்கள், தங்களுடைய கீழ்ப்படிதலை காலதாமதம்பண்ணமாட்டார்கள்.

"உமது கற்பனைகளைக் கைக்கொள்ளும்படி, நான் தாமதியாமல் தீவிரித்தேன்" (சங் 119:60).

ஒரே நாளில் ஆபிரகாமும் அவருடைய குமாரன் இஸ்மவேலும் விருத்தசேதனம் பண்ணப்படுகிறார்கள். ஆபிரகாமுடைய நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படும்போது, அவர் தொண்ணூற்றொன்பது வயதாயிருக்கிறார் (ஆதி 17:26,24).

ஆபிரகாமுடைய குமாரன் இஸ்மவேலுடைய நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படும்போது, அவன் பதின்மூன்று வயதாயிருக்கிறான் (ஆதி 17:25).

ஆபிரகாமுடைய வீட்டிலே பிறந்தவர்களும் அந்நியரிடத்திலே பணத்திற்குக் கொள்ளப்பட்டவர்களுமாகிய அவர் வீட்டு மனுஷர்கள் எல்லாரும் அவரோடே கூட விருத்தசேதனம் பண்ணப்படுகிறார்கள் (ஆதி 17:27). விருத்தசேதனம்பண்ணுவதில் ஆபிரகாம் தன்னுடைய குடும்பத்திலுள்ளவர்களுக்கும், அவருடைய வீட்டு மனுஷருக்கும் முன்மாதிரியாயிருக்கிறார். இஸ்மவேலும் விருத்தசேதனம்பண்ணப்பட்டதினால், அவரும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுகிறார்.

விருத்தசேதனம் பண்ணுதல் ஆபிரகாமின் உடன்படிக்கையின் ஒரு பகுதியாகும். ஆபிரகாமின் சந்ததியில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மீட்பர் வருவார் என்பதற்கு இது ஒர் அடையாளம். மாம்சத்தின் பாவங்களைக் களைந்துபோட்டு, புதிய சிருஷ்டிகளாகத் தேவனை ஆராதிப்போருக்கு மீட்பருடைய இரட்சிப்பின் கிரியை அநுக்கிரகம் பண்ணப்பட்டிருக்கிறது.

விருத்தசேதன மார்க்கத்தார் என்பது யூதரைக் குறிக்கும். (ரோமர் 3:30; ரோமர் 4:9; கலா 2:9). கிறிஸ்து வந்த பின்பு, விருத்தசேதனத்தினால் பிரயோஜனமில்லை. (கலா 5:6; கொலோ 3:11). ஆவிக்குரிய விருத்தசேதனம் என்பது இருதயத்தில் செய்யப்படுவதாகும். மாம்சத்தில் செய்யப்படுவது விருத்தசேதனம் அல்ல. (ரோமர் 2:28-29; 1கொரி 7:19; பிலி 3:3; கொலோ 2:11).

இப்பொழுதும் இஸ்மவேலரும், அரபியரும் தங்களுடைய பதின்மூன்றாம் வயதில் விருத்தசேதனம் பண்ணிக் கொள்கிறார்கள்.

18 அதிகாரம்

கர்த்தருக்கும் ஆபிரகாமுக்கும் இடையே மற்றொரு சம்பாஷணை நடைபெறுகிறது. அந்த சம்பவம் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆபிரகாமுக்கு எதிராக மூன்று புருஷர்கள் நிற்கிறார்கள். ஆபிரகாமுக்கும் அவர்களுக்கும் இடையே சம்பாஷணை நடைபெறுகிறது (ஆதி 18:1-8).

கர்த்தர் சாராளுக்கு தம்முடைய கிருபையை வெளிப்படுத்துகிறார். உற்பவ காலதிட்டத்தில் சாராள் ஒரு குமாரனைப்பெறுவாள் (ஆதி 18:9-15).

கர்த்தருடைய கோபம் சோதோமின்மீது வருகிறது. சோதோமை அழிக்கும் தம்முடைய திட்டத்தை கர்த்தர் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்துகிறார் (ஆதி 18:16-22). ஆபிரகாம் கர்த்தரிடத்தில் சோதோமுக்காக பரிந்து பேசுகிறார் (ஆதி 18:23-33).

ஆபிரகாமும் மூன்று புருஷரும் ஆதி 18:1-8

ஆதி 18:1. பின்பு கர்த்தர் மம்ரேயின் சமபூமியிலே அவனுக்குத் தரிசனமானார். அவன் பகலின் உஷ்ணவேளையில் கூடாரவாசலிலே உட்கார்ந்திருந்து,

ஆதி 18:2. தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, மூன்று புருஷர் அவனுக்கு எதிரே நின்றார்கள்; அவர்களைக் கண்டவுடனே, அவன் கூடாரவாசலிலிருந்து அவர்களுக்கு எதிர்கொண்டு ஓடித் தரைமட்டும் குனிந்து;

ஆதி 18:3. ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நீர் உமது அடியேனைவிட்டுக் கடந்துபோக வேண்டாம்.

ஆதி 18:4. கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரட்டும், உங்கள் கால்களைக் கழுவி, மரத்தடியில் சாய்ந்துகொண்டிருங்கள்.

ஆதி 18:5. நீங்கள் உங்கள் இருதயங்களைத் திடப்படுத்தக் கொஞ்சம் அப்பம் கொண்டுவருகிறேன்; அப்புறம் நீங்கள் உங்கள் வழியே போகலாம்; இதற்காகவே அடியேன் இடம்வரைக்கும் வந்தீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: நீ சொன்னபடி செய் என்றார்கள்.

ஆதி 18:6. அப்பொழுது ஆபிரகாம் தீவிரமாய்க் கூடாரத்தில் சாராவிடத்திற்குப் போய்: நீ சீக்கிரமாய் மூன்றுபடி மெல்லியமாவு எடுத்துப் பிசைந்து, அப்பம் சுடு என்றான்.

ஆதி 18:7. ஆபிரகாம் மாட்டுமந்தைக்கு ஓடி, ஒரு நல்ல இளங்கன்றைப் பிடித்து, வேலைக்காரன் கையிலே கொடுத்தான்; அவன் அதைச் சீக்கிரத்தில் சமைத்தான்.

ஆதி 18:8. ஆபிரகாம் வெண்ணெயையும் பாலையும் சமைப்பித்த கன்றையும் எடுத்து வந்து, அவர்கள் முன்பாக வைத்து, அவர்கள் அருகே மரத்தடியில் நின்றுகொண்டிருந்தான்; அவர்கள் புசித்தார்கள்.

கர்த்தர் ஆபிரகாமுக்கு தம்மை வெளிப்படுத்துகிறார். கர்த்தருக்கும் ஆபிரகாமுக்கும் இடையே நெருங்கிய ஐக்கியம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் இருவரும் பல காரியங்களை அந்நியோன்யமாக பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் வார்த்தையாகயிருக்கிற தேவன், தம்மை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த வார்த்தை மாம்சமானார். கர்த்தர் ஆபிரகாமுக்கு தம்மை தாராளமாக வெளிப்படுத்தியதுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, கிறிஸ்துவானவர் தம்மை, வார்த்தையின் மூலமாக தாராளமாய் வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் ஆபிரகாமுக்கு மம்ரேயின் சமபூமியிலே தரிசனமாகிறார். ஆபிரகாம் பகலின் உஷ்ணவேளையில் கூடாரவாசலிலே உட்கார்ந்திருந்திருக்கிறார் (ஆதி 18:1). ஆபிரகாம் கர்த்தருக்காக எதிர்பார்ப்போடு காத்திருக்கிறார். ஆபிரகாம் அந்நியரை உபசரிக்கிறவர். அவர்களை வரவேற்கும் வண்ணமாக ஆபிரகாம் கூடார வாசலில் உட்கார்ந்திருக்கிறார்.

ஆபிரகாம் ஆதி 13:18 ஆவது வசனத்தின் காலத்திலிருந்து மம்ரேயில் தங்கியிருக்கிறார். ஆதி 20:1 ஆவது வசனத்தில் "அவ்விடம் விட்டு பிரயாணம் பண்ணும் வரையிலும்" அவர் மம்ரேயிலேயே தொடர்ந்து தங்கியிருப்பார். பகலின் உஷ்ணவேளையின் போது கூடார வாசலில் உட்கார்ந்திருந்து ஒய்வெடுப்பதும், போஜனம்பண்ணுவதும் அக்காலத்து வழக்கம்.

கர்த்தர் தம்மை ஒருவருக்கு வெளிப்படுத்துவதற்கு முன்பாக, தம்மை பற்றிய எதிர்பார்ப்பையும், ஆர்வத்தையும் அவருடைய மனதிலே அதிகரிக்கச் செய்கிறார். ஆபிரகாமின் மனதிலே கர்த்தரைக் குறித்த எதிர்பார்ப்பும் ஆர்வமும் அதிகமாயிருக்கிறது. ஆகையினால் ஆபிரகாம் கர்த்தரை வரவேற்க ஆயத்தமாயிருக்கிறார்.

நாம் அந்நியரை உபசரிக்கவேண்டும். அவர்களை உபசரிக்கும்போது, சில சமயங்களில் நமக்கு தெரியாமலேயே, தேவதூதர்களையும் உபசரிக்கும் வாய்ப்பு நமக்கு கிடைக்கும். இதனால் நமக்கு அதிகமான மேன்மையும் ஆசீர்வாதமும் உண்டாகும்.

நம்மிடத்தில் வருகிற அந்நியர்கள் எல்லோரையும் சந்தேகப்படக்கூடாது. அன்பு சகலத்தையும் நம்பும். நாம் அந்நியர்மீது அன்புகூர்ந்தால், அவர்கள்மீது சந்தேகப்படாமல், அவர்களை ஏற்றுக்கொண்டு உபசரிப்போம். நம் வீட்டிலுள்ளவர்களுக்கு திரும்ப திரும்ப போஜனம் கொடுப்பதுபோல, பசியிலிருக்கிற அந்நியருக்கும் போஜனம்கொடுக்கவேண்டும்.

ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, மூன்று புருஷர் அவருக்கு எதிரே நிற்கிறார்கள்; ஆபிரகாம் அவர்களைக் கண்டவுடனே, அவர் கூடாரவாசலிலிருந்து அவர்களுக்கு எதிர்கொண்டு ஓடித் தரைமட்டும் குனிந்து, அவர்களை வரவேற்கிறார் (ஆதி 18:2).

ஆபிரகாம் அந்த மூன்று புருஷரையும் நோக்கி, "ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நீர் உமது அடியேனைவிட்டுக் கடந்துபோக வேண்டாம். கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரட்டும், உங்கள் கால்களைக் கழுவி, மரத்தடியில் சாய்ந்துகொண்டிருங்கள்" (ஆதி 18:3,4) என்று சொல்லுகிறார்.

அக்காலத்தில் பாதரட்சைகளை அணிந்து நடந்து வருவது வழக்கம். (ஆதி 18:4; ஆதி 43:24; லூக்கா 7:44). தேவனும் இரண்டு தூதர்களும் எந்த மாதிரியான பாதரட்சைகளை அணிந்து வந்தார்கள் என்று இங்கு அறிவிக்கப்படவில்லை. பூமியிலுள்ள மனுஷரைப் போலவே அவர்களுடைய கால்களும் கழுவப்பட வேண்டியதாயிருக்கிறது.

போஜனம் ஆயத்தமாகும் வரையிலும் மூவரும் காத்திருந்து பின்பு அவர்கள் புசிக்கிறார்கள் (ஆதி 18:8; யாத் 24:9-11; சங் 78:25).

ஆபிரகாம் இப்போது வயது முதிர்ந்தவராகயிருக்கிறார். அவர் தன்னுடைய வயதின் முதுமைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், மூன்று புருஷரையும் ஏறெடுத்து பார்த்து, அவர்களுக்கு எதிர்கொண்டு ஓடுகிறார். ஆபிரகாமுக்கு இது ஓடுகிற வயதல்ல. ஆனாலும் அந்நியரை உபசரிக்கவேண்டும் என்னும் ஆர்வம் அவரிடத்தில் அதிகமாயிருக்கிறது. தன்னுடைய கூடாரத்திற்கு வரும் அந்நியர்களை, எப்படி உபசரிக்கவேண்டுமோ, அப்படி உபசரிப்பதற்கு ஆபிரகாம் ஆயத்தமாயிருக்கிறார்.

நாம் கர்த்தரை விசுவாசிக்கிறோம் என்பதற்காக, மனுஷரை மறந்துவிடக்கூடாது. மனுஷர்மீது அன்பு கூரக்கூடாது என்று பரிசுத்தவேதாகமத்தில் எங்கும் தடைபண்ணப்படவில்லை. நம்மிடத்தில் நல்ல சுபாவங்களும், நல்ல பழக்க வழக்கங்களும் காணப்படவேண்டும் என்றே பரிசுத்தவேதாகமம் நமக்கு போதிக்கிறது. நாம் எல்லா மனுஷரும் மதிப்பும் மரியாதையும் கொடுக்கவேண்டும்.

கர்த்தர் நம்மைத் திரளாய் ஆசீர்வதித்திருக்கும்போது, நாம் மற்றவர்களுக்கு தாராளமாய் உதவிசெய்யவேண்டும். ஆபிரகாம் தன்னுடைய கூடார வாசலிலே, தனக்கு முன்பாக நின்கிற மூன்று புருஷரையும் அன்போடு வரவேற்கிறார். ஆபிரகாமின் வரவேற்பில் மாய்மாலம் இல்லை. அவர் சுத்த இருதயத்தோடும், தெளிந்த சிந்தனையோடும், மூன்று புருஷரையும் வரவேற்கிறார்.

ஆபிரகாம் அவர்களை மரத்தடியில் சாய்ந்துகொண்டிருக்குமாறு சொல்லுகிறார். மேலும் ஆபிரகாம் அந்த மூன்று புருஷரையும் நோக்கி, " நீங்கள் உங்கள் இருதயங்களைத் திடப்படுத்தக் கொஞ்சம் அப்பம் கொண்டுவருகிறேன்; அப்புறம் நீங்கள் உங்கள் வழியே போகலாம்; இதற்காகவே அடியேன் இடம்வரைக்கும் வந்தீர்கள்" (ஆதி 18:5) என்று சொல்லுகிறார்.

ஆபிரகாம் அந்த மூன்று புருஷருக்கும் விருந்து ஆயத்தம்பண்ணுகிறார். அப்பமும், வெண்ணெயையும், பாலும், சமைப்பித்த கன்றும் அவர்களுக்கு விருந்து போஜனமாக பரிமாறப்படுகிறது. அவர்கள் மரத்தடியிலே போஜனம்பண்ணுகிறார்கள். போஜனம் சாதாரணமானதாகயிருந்தாலும், போஜனம்பண்ணுகிற ஸ்தலம் மரத்தடியாகயிருந்தாலும், ஆபிரகாமின் விருந்து உபசரிப்பு மிகவும் நேர்த்தியாகயிருக்கிறது.

ஆபிரகாம் ஒரு ஐசுவரியவான். அவர் தன்னுடைய விருந்தினரைக் கனம்பண்ணி, அவர்களுக்கு தாராளமாக போஜனம்கொடுக்கிறார். போஜனத்தில் குறைவு இல்லை. ஒருவேளை ஆபிரகாம் கொடுக்கும் விருந்திலே, விதவிதமான போஜனங்கள் பரிமாறப்படாமலிருக்கலாம். ஆனாலும் அப்பமும் இறைச்சியும் தாராளமாக பரிமாறப்படுகிறது.

ஆபிரகாமின் மனைவி கூடாரத்திலிருக்கிறாள். ஆபிரகாம் தீவிரமாய்க் கூடாரத்தில் சாராளிடத்திற்குப் போய்: "நீ சீக்கிரமாய் மூன்றுபடி மெல்லியமாவு எடுத்துப் பிசைந்து, அப்பம் சுடு" (ஆதி 18:6) என்று சொல்லுகிறார். ஆபிரகாமும் சாராளும் தங்கள் விருந்தினர்களை உபசரிப்பதில் அதிககவனம் செலுத்துகிறார்கள். போஜனம் ஆயத்தம்பண்ணுவதற்காக அதிக நேரம் செலவுபண்ணுகிறார்கள்.

படி என்பது அக்காலத்து அளவு. ஆபிரகாமிற்கு பல வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். மூன்றுபடி மாவினால் அப்பம் சுட்டால் அது அவர்களுக்கு ஒரு வேளை போஜனத்திற்கு மட்டுமே சரியாக இருக்கும். தேவனும் தூதரும் பூமிக்கு வந்திருப்பதை ஆபிரகாம் தன்னுடைய சொந்தக் கண்களால் காண்கிறார். மனுஷனால் தேவனைக் காணமுடியும்.

சாராள் அப்பம் சுட்டுக்கொண்டிருக்கும்போது, ஆபிரகாம் மாட்டுமந்தைக்கு ஓடி, ஒரு நல்ல இளங்கன்றைப் பிடித்து, வேலைக்காரன் கையிலே கொடுக்கிறார் அந்த வேலைக்காரன் அதைச் சீக்கிரத்தில் சமைக்கிறான் (ஆதி 18:7).

ஆபிரகாம் மாட்டுமந்தைக்கு ஓடுகிறார். கிழக்கு தேசத்தில் விருந்து உபசரிப்பதில் தீவிரம் காட்டுவார்கள். (ஆதி 18:2,6). ஆபிரகாமைப் போல பணிந்து, குனிந்து விருந்தினரை உபசரிப்பது கிழக்கு தேசத்து வழக்கமாகும். (ஆதி 18:2-3).

தன்னுடைய கூடாரத்திற்கு வந்திருக்கிற மூன்று மனுஷருக்கும் ஆபிரகாம் விருந்து பரிமாறுகிறார். ஆபிரகாம் ஐசுவரியவானாகயிருந்தாலும், அவர் வயது முதிர்ந்தவராகயிருந்தாலும், அந்நியருக்கு விருந்து பரிமாறுவது தனக்கு கவுரவகுறைச்சல் என்று நினைக்கவில்லை.

ஆபிரகாம் வெண்ணெயையும், பாலையும், சமைப்பித்த கன்றையும் எடுத்து வந்து, அவர்கள் முன்பாக வைக்கிறார். அந்த மூன்று புருஷரும் அந்த போஜனத்தை புசிக்கிறார்கள். ஆபிரகாமோ அவர்கள் அருகே மரத்தடியில் நின்றுகொண்டிருக்கிறார் (ஆதி 18:8).

ஆபிரகாம் விருந்தினரோடு அமர்ந்து போஜனம் பண்ணவில்லை. அரபியர்கள் தங்கள் விருந்தினரோடு ஒருபோதும் அமர்ந்து போஜனம் பண்ணமாட்டார்கள். விருந்தினர் போஜனம் பண்ணும்போது அவர்களுக்கு அருகில் நின்று, அவர்களுக்குத் தேவையானவற்றைக் கவனித்து, விருந்து உபசரிப்பார்கள்.

தேவனும் தூதர்களும் வானத்திலும் புசிக்கிறார்கள். பூமியிலும் புசிக்கிறார்கள். (யாத் 24:11; சங் 78:25; லூக்கா 22:16,18,30; லூக்கா 24:30,43; அப் 10:41; எபி 13:2). இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு வாக்குத்தத்தமாகக் கூறும்போது "நீங்கள் என் ராஜ்யத்திலே என்பந்தியில் போஜனபானம் பண்ணுவீர்கள்" என்று கூறியிருக்கிறார் (லூக்கா 22:30).

ஆபிரகாம் பாவத்திற்கு துணைபோகவில்லை. அவர் சிநேகத்திற்கு துணைபோகிறார். உண்மையான சிநேகிதர்கள் ஒருவருக்கொருவர் தீங்கு செய்யமாட்டார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் நன்மை செய்து, ஆதரவாயிருப்பார்கள். கிறிஸ்துவானவர் தம்முடைய சீஷர்களின் கால்களை கழுவி, தம்முடைய தாழ்மையை வெளிப்படுத்தினார். இது நமக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

கிறிஸ்துவானவரைப்போல நம்மிடத்திலும் மாய்மாலம் இல்லாத அன்பு இருக்கவேண்டும். நம்முடைய இருதயத்தில் பெருமை இருக்கக்கூடாது. நம்முடைய சிநேகிதரிடத்தில், அன்பையும், மனத்தாழ்மையையும் அதிகமாய் வெளிப்படுத்தவேண்டும்.

சாராளின் நகைப்பு
ஆதி 18:9-15

ஆதி 18:9. அவர்கள் அவனை நோக்கி:உன் மனைவி சாராள் எங்கே என்றார்கள்? அதோ கூடாரத்தில் இருக்கிறாள் என்றான்.

ஆதி 18:10. அப்பொழுது அவர்: ஒரு உற்பவ காலத்திட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார். சாராள் அவருக்குப் பின்புறமாய்க் கூடாரவாசலில் இதைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

ஆதி 18:11. ஆபிரகாமும் சாராளும் வயதுசென்று முதிர்ந்தவர்களாயிருந்தார்கள்; ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்றுபோயிற்று.

ஆதி 18:12. ஆகையால், சாராள் தன் உள்ளத்திலே நகைத்து: நான் கிழவியும், என் ஆண்டவன் முதிர்ந்த வயதுள்ளவருமான பின்பு, எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ என்றாள்.

ஆதி 18:13. அப்பொழுது கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: சாராள் நகைத்து, நான் கிழவியாயிருக்கப் பிள்ளைபெறுவது மெய்யோ என்று சொல்வானேன்?

ஆதி 18:14. கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? உற்பவகாலதிட்டத்தில் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார்.

ஆதி 18:15. சாராள் பயந்து, நான் நகைக்கவில்லை என்று மறுத்தாள். அதற்கு அவர்: இல்லை, நீ நகைத்தாய் என்றார்.

ஆபிரகாம் மூன்று மனுஷரையும் தன் கூடாரத்தில் வரவேற்று, அவர்களுக்கு போஜனம் கொடுக்கிறார். அவர்களும் ஆபிரகாமை ஆசீர்வதிக்கிறார்கள். தான் வரவேற்றது கர்த்தருடைய தூதர்கள் என்பதை அறியாமலேயே, ஆபிரகாம் அவர்களுக்கு போஜனம் கொடுத்து உபசரித்திருக்கிறார். அவர்கள் மூன்றுபேரும் பரலோகத்திலிருந்து வந்தவர்கள். அவர்கள் பரலோகத்தின் கிருபையுள்ள வார்த்தைகளை ஆபிரகாமுக்கு சொல்லுகிறார்கள்.

"தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்; நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான்" (மத் 10:41).

ஆபிரகாம் மூன்று புருஷருக்கும் போஜனம் கொடுக்கிறார். அவர்கள் புசிக்கிறார்கள். அப்போது ஆபிரகாம் அவர்கள் அருகே மரத்தடியில் நின்றுகொண்டிருக்கிறார். அப்பொழுது சாராள் கூடாரத்திலிருக்கிறாள். ஆபிரகாமும் மூன்று மனுஷரும் மரத்தடியில் பேசிக்கொண்டிருக்கும்போது, சாராள் அவர்கள் பேசுவதை பின்புறமாய் கூடாரவாசலில் கேட்டுக்கொண்டிருக்கிறாள்.

ஆபிரகாமின் காலத்தில் ஸ்திரீகள் புருஷருக்கு சமமாக அவர்கள் மத்தியிலே அமரமாட்டார்கள். புருஷருடைய சம்பாஷணைகளில் பங்குபெறமாட்டார்கள். அக்காலத்து ஸ்திரீகள் புருஷரோடு சரிசமமாக அமர்ந்து போஜனம்பண்ணவுமாட்டார்கள். ஸ்திரீகள் ஒருவேளை தங்கள் வீட்டு புருஷரோடு போஜனம்பண்ணினாலும், அந்நிய புருஷரோடு, சரிசமமாக அமர்ந்து போஜனம் பண்ணுவதை தவிர்த்துவிடுவார்கள்.

தங்கள் வீட்டிலோ, கூடாரத்திலோ அந்நிய புருஷர்கள் விருந்தினராக வந்திருக்கும்போது, அந்த வீட்டு ஸ்திரீகள் தங்களுக்குரிய மாடங்களிலோ, கூடாரத்தின் பின்புறத்திலோ தங்களை வெளிப்படுத்தாமல் மறைவாகயிருப்பார்கள். இப்போது ஆபிரகாமும், மூன்று புருஷரும் மரத்தடியிலிருக்கிறார்கள். சாராள் கூடாரவாசலின் பின்புறமாகயிருக்கிறாள். அந்தப் புருஷர்களால் சாராளைப் பார்க்க முடியாது. ஆனாலும் அவர்கள் பேசுவதை சாராளால் கேட்கமுடிகிறது.

மூன்று புருஷரும் ஆபிரகாமை நோக்கி, "உன் மனைவி சாராள் எங்கே" என்று கேட்கிறார்கள். ஆபிரகாம் அவர்களிடத்தில், "அதோ கூடாரத்தில் இருக்கிறாள்" (ஆதி 18:9) என்று சொல்லுகிறார்.

சாராளால் கூடாரத்தில்தான் இருக்கமுடியும். அதுவே அவளுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஸ்தலம். சாராளைப்போலவே, கர்த்தர் நமக்கு நியமித்த ஸ்தலங்களில் நாம் இருக்கவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஊழியத்தை செய்யவேண்டும். அப்போதுதான் நமக்கு ஆறுதலும் ஆசீர்வாதமும் கிடைக்கும்.

"அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள்" (லூக் 2:8).

ஆபிரகாமுக்கு முன்பாக நிற்கிற மூன்று புருஷரில் ஒருவர் கர்த்தர் என்றும், மற்ற இருவரும் கர்த்தருடைய தூதர்கள் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். சாராள் கூடாரத்திலிருக்கிறாள் என்று ஆபிரகாம் சொன்ன பின்பு, அந்த மூன்று புருஷரில் ஒருவர் ஆபிரகாமோடு பேசுகிறார். அவர் கர்த்தர் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, "ஒரு உற்பவ காலத்திட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்" (ஆதி 18:10) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஏற்கெனவே ஆபிரகாமின் சந்ததியை ஆசீர்வதித்திருக்கிறார். கர்த்தருடைய ஆசீர்வாதம் நமக்கு திரும்ப திரும்ப சொல்லப்படும்போது, அது நமக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும். கர்த்தர் சொன்ன ஆசீர்வாதம் இதனால் மறுபடியும் உறுதிபண்ணப்படுகிறது.

கர்த்தருடைய ஆசீர்வாதம், ஆபிரகாமின் மாம்சப்பிரகாரமான சந்ததிக்கும், அவருடைய ஆவிக்குரிய சந்ததிக்கும் சொல்லப்படுகிறது. விசுவாசிகளாகிய நமக்கும், ஆபிரகாமுக்கு சொல்லப்பட்ட ஆசீர்வாதத்தில் பங்குள்ளது.

ஆபிரகாமின் மாம்சபிரகாரமான சந்ததியார், ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கின் சந்ததியில் பிறந்தவர்கள். ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாராகிய விசுவாசிகளோ, தேவனுடைய வார்த்தையினால் பிறந்தவர்கள்.

"அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" (1பேது 1:23).

கர்த்தர் ஆபிரகாமுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளை சொல்லும்போது, சாராள் அவருக்கு பின்புறமாய் கூடார வாசலில் நின்று, அந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறாள். கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகள் மிகவும் நல்ல வார்த்தைகள். அவை ஆசீர்வாதமான வார்த்தைகள். ஆனால் சாராளால் கர்த்தர் சொல்லுகிற நல்ல வார்த்தைகளை நம்பமுடியவில்லை. ஆகையினால் சாராள் தன் உள்ளத்திலே நகைக்கிறாள் (ஆதி 18:12).

அக்காலத்தில் ஆண் விருந்தினர்கள் போஜனம்பண்ணும்போது வீட்டிலுள்ள ஸ்திரீகள் அவர்களோடு அமர்ந்து போஜனம் பண்ணும் வழக்கம் இல்லை. தன்னுடைய பெயரை விருந்தினர்கள் கூறியபோது, சாராள் எழுந்து, கூடாரவாசலின் வாசல் அருகே நின்று, அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கிறாள். ஆபிரகாமிடம் பேசும் கர்த்தரையும், தூதரையும் சாராள் கவனித்துப் பார்க்கிறாள்.

சாராளின் நகைப்பு அவளுடைய அவிசுவாசத்திற்கு அடையாளம். அவள் கர்த்தருடைய வார்த்தையை நம்பவில்லை. சந்தேகப்படுகிறாள். சாராள் சரீரப்பிரகாரமாகவும் உலகப்பிரகாரமாகவும் சிந்திக்கிறாள். கர்த்தர் ஆபிரகாமுக்கு தம்முடைய ஆசீர்வாதமான வார்த்தைகளை சொல்லும்போது, ஆபிரகாமும் சாராளும் வயதுசென்று முதிர்ந்தவர்களாயிருக்கிறார்கள்; ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்றுபோயிற்று (ஆதி 18:11).

இப்போது ஆபிரகாமிற்கு 99 வயது, சாராளுக்கு 89 வயது. வருகிற வருஷத்தில் ஈசாக்கு பிறக்கும்போது ஆபிரகாமிற்கு 100 வயதும், சாராளுக்கு 90 வயதும் ஆகும். (ஆதி 17:17; ஆதி 21:5).

ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்றுபோயிற்று. சாராள் இதுவரையிலும் பிள்ளை பெற்றெடுக்கவில்லை. (ஆதி 11:30) அவளுடைய சரீரத்தில் பிள்ளை பெறும் பருவத்தையும் கடந்து சென்றுவிட்டாள். ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்று போனாலும், வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் என்றெண்ணி, கர்ப்பந்தரிக்க பெலனடைந்து, வயது சென்றவளாயிருந்தும் பிள்ளை பெறுகிறாள் (எபி 11:11).

ஆகையால், சாராள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு தன் உள்ளத்திலே நகைக்கிறாள். "நான் கிழவியும், என் ஆண்டவன் முதிர்ந்த வயதுள்ளவருமான பின்பு, எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ" (ஆதி 18:12) என்று சாராள் தன் மனதிற்குள்ளே சொல்லிக்கொள்கிறாள்.

சாராள் மாம்சப்பிரகாரமாக யோசிக்கிறாள். கர்த்தருடைய ஆசீர்வாதமான வார்த்தைகளை நம்புவதற்கு, சாராளின் மாம்ச சிந்தை தடையாகயிருக்கிறது. சாராள் முதிர்ந்த வயதுள்ளவள் என்பது மெய்தான். அவள் கிழவியாயிருப்பதும் மெய்தான். ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்றுபோயிற்று என்பதும் மெய்தான். ஆனாலும் கர்த்தருடைய வார்த்தையும் மெய்யானது என்பதை சாராள் நம்பவேண்டும்.

கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர். கர்த்தரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை. அவர் சர்வவல்லமையுள்ள தேவன். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. சாராள் மாம்சப்பிரகாரமாக யோசிக்கக்கூடாது. கர்த்தருடைய வார்த்தையை சந்தேகப்படக்கூடாது. கர்த்தரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை என்று சாராள் நம்பவேண்டும்.

சாராளைப்போலவே விசுவாசிகளாகிய நமக்கும் பல சமயங்களில் சந்தேகம் வருகிறது. நாம் ஆவிக்குரிய காரியங்களை மாம்சப்பிரகாரமாக யோசிக்கிறோம். இதனால் கர்த்தருடைய தெய்வீக வாக்குத்தத்தங்கள் மீது நமக்கு சந்தேகம் ஏற்படுகிறது. நம்முடைய மாம்சசிந்தை, கர்த்தருடைய ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமாக கிரியை நடப்பிக்கும். மாம்சத்தைப் பற்றிக்கொள்கிறவர்களால் கர்த்தரைப்பற்றிக்கொள்வது இயலாத காரியம்.

சாராள் தன் மனதிற்குள்ளே நகைத்து, பேசிக்கொண்டிருந்தாலும், கர்த்தர் அவளுடைய மனதின் சிந்தனைகளை அறிந்திருக்கிறார். கர்த்தருக்கு மறைவான இரகசியம் ஒன்றுமில்லை.

கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: "சாராள் நகைத்து, நான் கிழவியாயிருக்கப் பிள்ளைபெறுவது மெய்யோ என்று சொல்வானேன்? கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? உற்பவகாலதிட்டத்தில் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்" (ஆதி 18:13,14) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் சாராளை, அவளுடைய கணவர் ஆபிரகாமின் மூலமாக கடிந்துகொள்கிறார். "சாராள் ஏன் நகைக்கிறாள்" என்று கர்த்தர் ஆபிரகாமிடம் கேட்கிறார். நம்முடைய அவிசுவாசம் தேவனுக்கு முன்பாக அருவருப்பாகயிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும் நாம் நம்ப மறுப்பது, கர்த்தருடைய தெய்வீகத்தை நம்ப மறுப்பதற்கு அடையாளம்.

"அப்பொழுது சகரியா தேவதூதனை நோக்கி: இதை நான் எதினால் அறிவேன்; நான் கிழவனாயிருக்கிறேன், என் மனைவியும் வயதுசென்றவளாயிருக்கிறாளே என்றான்" (லூக் 1:18).

கர்த்தர் சொல்லுகிற இந்த வார்த்தைகளையும் சாராள் கூடாரவாசலில் கேட்டுக்கொண்டிருக்கிறாள். சாராள் தன்னுடைய தப்பிதத்தை மூடி மறைக்க முயற்சிபண்ணுகிறாள். சாராள் பயந்து, "நான் நகைக்கவில்லை" என்று சொல்லுகிறாள். சாராள் பொய் சொல்லுகிறாள். சாராளுக்கு பயமுண்டாயிற்று. பயத்தினால் அவள் உண்மை பேசாமல், பொய்பேசுகிறாள். கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகளை சாராளால் நம்பவும் முடியவில்லை, நம்பாமலும் இருக்க முடியவில்லை.

கர்த்தருடைய வாக்குத்தத்தம் உறுதியாயிருக்கிறது. சாராளுடைய சரீரமோ, கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கு தடையாயிருக்கிறது. சாராள் தன்னுடைய மாம்சப்பிரகாரமான சூழ்நிலைகளை நோக்கிப் பார்த்தால், அவள் அவிசுவாசத்தினால் சோர்ந்துபோவாள். கர்த்தருடைய வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும், விசுவாசிக்க வேண்டும். சூழ்நிலைகளை நோக்கிப் பார்க்காமல், வாக்குத்தத்தம்பண்ணின கர்த்தரை நோக்கிப் பார்க்கவேண்டும்.

சாராளுக்கு ஒரு குமாரன் பிறப்பான் என்று கர்த்தர் சொன்னபோது, சாராள் தன் உள்ளத்திலே நகைத்தாள். ஆனால் இப்போதோ அவள், "நான் நகைக்கவில்லை" என்று சொல்லி தன்னுடைய பாவத்தை மறைக்கிறாள். பாவத்தை மறைக்கிறவர்கள் வாழ்வடையமாட்டார்கள். அதை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவர்களோ தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வார்கள். சாராள் தன்னுடைய பாவத்தை மறைப்பதும், பாவமான முயற்சியாகவே இருக்கிறது. பாவம் செய்கிறவர்களுக்கு வெட்கமும் அவமானமும் வரும். பாவத்தை மறைக்கிறவர்களுக்கோ, அதைவிட கூடுதலான வெட்கமும் அவமானமும் வரும்.

சாராள் பயந்து, "நான் நகைக்கவில்லை" என்று மறுத்தாலும், கர்த்தர் அவளை நோக்கி, "இல்லை, நீ நகைத்தாய்" (ஆதி 18:15) என்று சொல்லுகிறார். சாராளால் தன்னுடைய தப்பிதத்தை மறைக்க முடியவில்லை. கர்த்தர் அவளுடைய இருதயத்தின் அந்தரங்க இரகசியங்களை வெளிப்படுத்துகிறார்.

சாராள் தேவனுக்குப் பயப்படுகிறாள். தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை மாற்றி விடுவாரோ என்றும், தனக்கு பிள்ளை பிறக்காமல் போய்விடுமோ என்றும் எண்ணி, "நான் நகைக்கவில்லை" என்று பொய் கூறுகிறாள். தேவன் அவளைக் கடிந்து கொள்ளாமல், "இல்லை, நீ நகைத்தாய்" என்று கூறி திருத்துகிறார்.

சோதோம் கொமோராவின் கூக்குரல்
ஆதி 18:16-22

ஆதி 18:16. பின்பு அந்தப் புருஷர் எழுந்து அவ்விடம் விட்டு, சோதோமை நோக்கிப் போனார்கள்; ஆபிரகாமும் அவர்களோடே கூடப்போய் வழிவிட்டனுப்பினான்.

ஆதி 18:17. அப்பொழுது கர்த்தர்: ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதியாவதினாலும், அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவதினாலும்,

ஆதி 18:18. நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?

ஆதி 18:19. கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்.

ஆதி 18:20. பின்பு கர்த்தர் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும்,

ஆதி 18:21. நான் இறங்கிப்போய், என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன் என்றார்.

ஆதி 18:22. அப்பொழுது அந்தப் புருஷர் அவ்விடம் விட்டுச் சோதோமை நோக்கிப் போனார்கள்; ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தான்.

பரலோகத்திலிருந்து வந்த தூதர்கள் பூமியிலே தங்களுடைய ஊழியத்தை செய்கிறார்கள். ஆபிரகாமைப் பார்ப்பதற்கு மூன்று பேர் வந்தார்கள். அவர்களில் ஒருவர் கர்த்தர் என்றும், மற்ற இருவரும் கர்த்தருடைய தூதர்கள் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் தம்முடைய வாக்குத்தத்த வார்த்தைகளை சொல்லுகிறார். கர்த்தருடைய தூதர்கள் இரண்டுபேரும் சோதோமை நோக்கிப் போகிறார்கள். அந்த இரண்டு தூதரும் சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்து சேருகிறார்கள் (ஆதி 19:1).

சோதோமைப் பற்றி தேவனுடைய சமுகத்தில் ஏற்கெனவே செய்தி வந்திருக்கிறது. அவர்கள் எந்த அளவிற்கு துன்மார்க்கமானவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய சோதோமிற்கு வந்திருக்கிறார்கள். (ஆதி 18:20-21). போகும் வழியில் தங்களுடைய நண்பனான ஆபிரகாமைச் சந்திக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் ஆபிரகாமைச் சந்தித்து விட்டு சோதோமை நோக்கி போனார்கள்.

ஆபிரகாம் அந்த மூன்று மனுஷரோடும் கூடவே நடந்து போகிறார். தேவன் ஆள்தத்துவப் பண்புடையவராக மனுஷ சரீரத்தில் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். சோதோம் எங்கே இருக்கிறது என்று ஆபிரகாம் அவர்களுக்கு என்று வழிகாட்டத் தேவையில்லை. அவர்களுக்கு எல்லாம் தெரியும். விருந்தினரை உபசரிக்கும் ஒரு பண்பாக ஆபிரகாம் அவர்களோடே கூடப்போய் அவர்களை வழிவிட்டனுப்புகிறார். ஆபிரகாமை பார்க்க வந்த மூன்று புருஷரில் இரண்டு பேர் மாத்திரமே சோதோமுக்கு போகிறார்கள். மற்றொரு புருஷர் கர்த்தர்.

கர்த்தர் ஆபிரகாமோடு கூடவே இருக்கிறார். "சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும், நான் இறங்கிப்போய், என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன்" (ஆதி 18:20,21) என்று கர்த்தர் சொல்லுகிறார். சோதோம் அழிக்கப்படவேண்டிய பட்டணமாயிருக்கிறது.

கர்த்தருடைய தூதர்கள் இரண்டுபேரும், ஆபிரகாமை விட்டு சோதோமை நோக்கிப் போகும்போது, ஆபிரகாம் அவர்களோடே கூடப்போய், அவர்களை வழிவிட்டனுப்புகிறார். அவர்களை விட்டுப்பிரிய ஆபிரகாமுக்கு மனதில்லை. அவர்கள் ஆபிரகாமைப் பார்க்க வந்த அந்நியர்கள். ஆனாலும் ஆபிரகாம் அவர்கள்மீது பிரியமாயும், நேசமாயும் இருக்கிறார். ஆபிரகாம் அவர்களுக்கு தன்னுடைய மதிப்பையும், மரியாதையையும் காண்பிக்கிறார்.

ஆபிரகாமைப் பார்க்க வந்த மூன்று மனுஷரும், அவரைக் கனம்பண்ணுகிறார்கள். தம்மைக் கனம்பண்ணுகிறவர்களை கர்த்தரும் கனம்பண்ணுவார். கர்த்தருடைய தூதர்கள் இரண்டுபேரும், ஆபிரகாமைவிட்டு சோதோமுக்கு புறப்பட்டுப்போன பின்பு, கர்த்தர் ஆபிரகாமிடம் தொடர்ந்து பேசுகிறார். கர்த்தர் சோதோமை அழிக்கப்போகிறார். அதற்கான காரணத்தை கர்த்தர் ஆபிரகாமுக்கு தெரியப்படுத்துகிறார்.

ஆபிரகாமின் யோசனையை கேட்கவேண்டும் என்னும் அவசியமோ அல்லது நிர்ப்பந்தமோ கர்த்தருக்கு இல்லை. ஆனாலும் கர்த்தர் தம்முடைய தெய்வீக ஆலோசனைகளை ஆபிரகாமோடு பகிர்ந்துகொள்கிறார். "நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ" (ஆதி 18:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேவனுடைய இரகசியங்கள் அவருடைய நண்பர்களுக்கு வெளிப்படுத்தப்படும். (சங் 84:11; யோவான் 15:15; யாக் 2:23).

கர்த்தர் ஆபிரகாமை அறிந்திருக்கிறார். ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்கள் நிபந்தனையுள்ளவை. ஆபிரகாம் கீழ்ப்படிந்தால் அவருக்கு ஆசீர்வாதம் உண்டு.

கர்த்தர் பாவத்தை நியாயந்தீர்க்கிறார். பாவத்திற்கு உரிய தண்டனையைக் கர்த்தர் நிச்சயமாகவே கொடுப்பார். தம்முடைய ஜனமாக இருந்தாலும், தூதர்களாக இருந்தாலும், தேவன் பட்சபாதம் காண்பிப்பதில்லை. (மத் 25:41; 2பேதுரு 2:4; யூதா 1:6-7; வெளி 20:10) மனுஷர்மீதும் கர்த்தர் நியாயம் விசாரிக்கிறார். (ஆதி 2:17; யாத் 32:32-33; எசே 18:20-26; ரோமர் 6:14-23; ரோமர் 8:12-13; 1கொரி 3:16-17; 1கொரி 6:9-11; கலா 5:19-21; கொலோ 3:6-10).

கர்த்தர் ஒருவனை நியாயந்தீர்ப்பதற்கு முன்பாக, எல்லாக் காரியங்களையும் தெளிவாக ஆராய்ந்து பார்த்து நீதியாய் நியாயம் விசாரிக்கிறார்.

கர்த்தரும், ஆபிரகாமும் அந்த இடத்திலேயே நின்று விடுகிறார்கள். இரண்டு தூதர்கள் மட்டும் சோதோமை நோக்கி போகிறார்கள். (ஆதி 19:1). தேவன் சர்வவியாபகர். ஆயினும் தமது சரீரத்தில் அவர் நம்மைப்போலவே ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பிரயாணம் பண்ணுகிறார். (ஆதி 18:21; ஆதி 11:5-9; ஆதி 17:22; ஆதி 18:33; ஆதி 35:13)

கர்த்தர் ஆபிரகாமுக்கு தம்முடைய இரகசியங்களை வெளிப்படுத்துகிறார். தேவனுடைய தெய்வீக இரகசியம், விசுவாசிகளாகிய நமக்கும், ஏற்ற காலங்களிலே வெளிப்படுத்தப்படும். தாம் செய்யப்போகிறதை கர்த்தர் ஆபிரகாமுக்கு மறைக்காமல் சொல்லுவதற்கு ஒரு காரணமுள்ளது.

ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதியாவதினாலும், அவருக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவதினாலும். கர்த்தர் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைக்கமாட்டார் (ஆதி 18:17,18).

கர்த்தர் சோதோமை அழிக்கப்போகிறார். கர்த்தர் இதை ஆபிரகாமுக்கு மறைக்காமல் வெளிப்படுத்துகிறார். யூதமார்க்கத்து ரபிமார்கள், "நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ" என்று கர்த்தர் சொல்லுவதற்கு விளக்கம் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் கானான் தேசத்தை ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். சோதோம் கொமோரா ஆகிய பட்டணங்கள் கானான் தேசத்திலிருக்கிறது. கர்த்தர் இவ்விரண்டு பட்டணங்களையும் அழிக்கப்போகிறார். கானான் தேசம் ஆபிரகாமுக்கு சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டிருப்பதினால், ஆபிரகாமுக்கு தெரியாமல் அல்லது ஆபிரகாமின் ஒப்புதல் இல்லாமல், கர்த்தர் கானான் தேசத்திலுள்ள அந்த இரண்டு பட்டணங்களையும் அழிக்க விரும்பவில்லை.

தாம் செய்யப்போகிறதை கர்த்தர் ஆபிரகாமுக்கு மறைக்காமல் வெளிப்படுத்துவதற்கு, இந்த வசனப்பகுதியில் இரண்டு காரணங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன : 1. ஆபிரகாம் கர்த்தருடைய சிநேகிதர். அவர் கர்த்தருக்கு பிரியமானவர். 2. ஆபிரகாம் தனக்கு பின் வரும் தன் வீட்டாருக்கு கர்த்தருடைய நீதியையும் நியாயத்தையும் போதிப்பார்.

ஆபிரகாம் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார். அவர் கர்த்தரோடு ஐக்கியமாகயிருக்கிறார். நாம் கர்த்தரிடத்தில் நெருங்கிய ஐக்கியத்திலிருக்கும்போது, கர்த்தருடைய சிந்தையே நம்முடைய மனதிலிருக்கும். நம்முடைய சித்தமும் கர்த்தருடைய சித்தமும் வித்தியாசமாயிராது. நாம் கர்த்தரை நம்பி, அவரை அதிகமாய் நேசிக்கும்போது, நம்முடைய சித்தத்தையும் திட்டத்தையும், கர்த்தருடைய சித்தத்திற்கும் திட்டத்திற்கும் ஒப்புக்கொடுப்போம்.

கர்த்தருடைய சித்தம், உலகப்பிரகாரமான ஜனங்களைவிட, விசுவாசிகளாகிய நமக்கே, அதிகமாய் வெளிப்படுத்தப்படும். தம்முடைய திட்டங்களையும் நோக்கங்களையும் அறிந்துகொள்ளும் ஞானத்தையும் கர்த்தர் நமக்கு கொடுப்பார். விசுவாசிகளாகிய நாம், இனிமேல் வரப்போகிற காரியங்களை, கர்த்தருடைய கிருபையினால் புரிந்துகொள்வோம்.

"இவைகளை உணரத்தக்க ஞானமுள்ளவன் யார்? இவைகளைக் கிரகிக்கத்தக்க புத்தியுள்ளவன் யார்? கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள், நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள்; பாதகரோவென்றால் அவைகளில் இடறிவிழுவார்கள்" *(ஓசி 14:9).*

"எவன் ஞானமுள்ளவனோ அவன் இவைகளைக் கவனிக்கக்கடவன்; ஞானவான்கள் கர்த்தருடைய கிருபைகளை உணர்ந்துகொள்வார்கள்" *(சங் 107:43).*

ஆபிரகாமுக்கு கர்த்தருடைய திட்டம் தெரிந்திருக்கவேண்டும். ஏனெனில் அவர் தன்னுடைய வீட்டாருக்கு, கர்த்தருடைய நீதியையும் நியாயத்தையும் கட்டளையிடுவார். கர்த்தரோடு ஐக்கியமாகயிருக்கிறவர்கள், கர்த்தருடைய சித்தத்தைப் புரிந்துகொண்டு, அதை மற்றவர்களுக்கும் பகிர்ந்து சொல்லுவார்கள்.

கர்த்தர் ஆபிரகாமை ஆசீர்வதித்திருக்கிறார். கர்த்தருடைய ஆசீர்வாதம் தனக்கு கிடைத்திருப்பதுபோல, தன்னுடைய வீட்டாருக்கும் கிடைக்கவேண்டும் என்று ஆபிரகாம் விரும்புகிறார். தங்களுடைய குடும்பம் ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்று விரும்புகிறவர்கள், தங்களுடைய குடும்பத்தாருக்கு கர்த்தருடைய நீதியையும் நியாயத்தையும் கற்றுக்கொடுப்பார்கள். அவர்கள் கர்த்தருடைய வழியைக் காத்து நடக்கவேண்டுமென்று அவர்களுக்கு புத்திமதிகளை சொல்லுவார்கள்.

நம்முடைய பிள்ளைகளை நாம் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கும்போது, அவர்களை கர்த்தருக்கு பிரியமான வழிகளில் வளர்க்கவேண்டும். அவர்களுக்கு கர்த்தருடைய நீதியையும் நியாயத்தையும் போதிக்கவேண்டும். கர்த்தருடைய வழியை காத்து நடப்பதற்கு அவர்களுக்கு பயிற்சி கொடுக்கவேண்டும்.

தானும் தன்னுடைய குடும்பத்தாரும் கர்த்தருடைய வழியை காத்து நடக்கவேண்டும் என்று ஆபிரகாம் கவனமாயிருக்கிறார். தன்னுடைய குடும்பத்தார் எல்லோரும் கர்த்தருக்கு பிரியமானவர்களாகவும், அவருக்கு பிரயோஜனமானவர்களாகவும் இருக்கவேண்டும் என்பது ஆபிரகாமின் விருப்பம். இதற்காகவே ஆபிரகாம், தன்னுடைய வீட்டாருக்கு, நீதியையும் நியாயத்தையும் கற்றுக்கொடுக்கிறார்.

கர்த்தர் ஆபிரகாமைப்பற்றிச் சொல்லும்போது, "நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன்" (ஆதி 18:18,19) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஆபிரகாமை அறிந்திருக்கிறார். ஆபிரகாம் இப்போது செய்கிறதையும், அவர் இனிமேல் செய்யப்போகிறதையும் கர்த்தர் அறிந்திருக்கிறார். ஆபிரகாம் தன்னுடைய வீட்டாரின் மனதிலே சந்தேகத்தையோ, அவிசுவாசத்தையோ ஏற்படுத்த விரும்பவில்லை. தன்னுடைய வீட்டார் கர்த்தரைக் குறித்து தேவையில்லாத விவாதங்களையும், தர்க்கங்களையும் பண்ணிக்கொண்டிருக்கக்கூடாது என்று ஆபிரகாம் எதிர்பார்க்கிறார்.

தன்னுடைய வீட்டார் கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும் என்பதும், கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கவேண்டும் என்பதும் ஆபிரகாமின் விருப்பம். ஆபிரகாம் கர்த்தருடைய வழியை காத்து நடக்கிறார். தன்னைப்போலவே தன்னுடைய வீட்டாரும் கர்த்தருடைய வழியை காத்து நடக்கவேண்டுமென்று ஆபிரகாம் அவர்களுக்கு கட்டளையிடவேண்டும். இது ஆபிரகாமின் குடும்ப பொறுப்பு. ஆபிரகாமின் குடும்பத்தில் கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனையும், கர்த்தருடைய உபதேசமும் நிரம்பியிருக்கவேண்டும்.

"கர்த்தருடைய வழியை காத்து நடப்பது" என்னும் வாக்கியத்திற்கு, "கர்த்தருடைய ஆராதனையில் அதிகமாய்ப் பங்கு பெறுதல்" என்றும், "எல்லா மனுஷரோடும் உண்மையாயும் கண்ணியமாயும் இருப்பது" என்றும் பொருள்.

ஆபிரகாமின் வீட்டார் கர்த்தருடைய வழியை காத்து நடக்கும்போது, ஆபிரகாம் மரித்த பின்பும் அவர்கள், கர்த்தருடைய வழியை காத்து நடப்பார்கள். அவர்கள் தங்கள் காலத்திலும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவார்கள்.

கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கப்போகிறார். கர்த்தர் அந்தப் பட்டணங்களை அழிப்பதற்கான காரணத்தையும், ஆபிரகாமோடு பகிர்ந்துகொள்கிறார்.

கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, "சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும், நான் இறங்கிப்போய், என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன்" (ஆதி 18:20,21) என்று சொல்லுகிறார்.

பாவத்தின் கூக்குரலும், பாவிகளின் கூக்குரலும் பரலோகத்திலே கேட்கிறது. கர்த்தர் பாவிகளை பழிவாங்குவார். அவர்களுடைய அக்கிரமங்களை விசாரிப்பார். கர்த்தர் பாவிகளை தண்டிக்கமாட்டார் என்றும், அவர்களுடைய பாவங்களை கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவார் என்றும் ஒரு சிலர் சொல்லுகிறார்கள். இவர்கள் கர்த்தருடைய அன்பையும், இரக்கத்தையும், கிருபையையும் பெரிதுபடுத்தி பேசுகிறவர்கள்.

கர்த்தர் அன்பும், கிருபையும், இரக்கமுமுள்ளவர் என்பது மெய்யான சத்தியம். அதே வேளையில் அவர், நீதியும், நியாயமும், சத்தியமுமுள்ள தேவனாயிருக்கிறார். கர்த்தர் பாவிகளை நேசிக்கிறார். ஆனால் அவர்களுடைய பாவங்களை வெறுக்கிறார். பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

சோதோம் கொமோராவின் பாவம் மிகவும் கொடிதாயிருக்கிறது. அதன் கூக்குரல் பரலோகத்தில் பெரிதாய்க் கேட்கிறது. இந்தப் பட்டணத்து ஜனங்கள் அதிகமாய்ப் பாவம் செய்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய பாவங்களை விசாரித்து, தம்முடைய நீதியின் பிரகாரம் அவர்களை நியாயந்தீர்க்க ஆயத்தமாயிருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பை யார்மீதும் திடீரென்று கொடுத்துவிடமாட்டார். கர்த்தர் ஒருவரை நியாயந்தீர்ப்பதற்கு முன்பாக, அதுபற்றி தம்முடைய தெய்வீக ஆலோசனைகளில் ஆலோசனைபண்ணிய பிறகே, அவர் நியாயந்தீர்ப்பார்.

சோதோம் கொமோராவின் பாவம் மிகவும் கொடியதாகயிருந்தாலும், கர்த்தர் அவர்களை அழித்துப்போடவேண்டுமென்று உடனே தீர்மானம்பண்ணவில்லை. அவர்களுடைய பாவங்களை பார்த்து அறியப்போவதாக கர்த்தர் சொல்லுகிறார். சோதோம் கொமோராவின் ஜனங்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப, காலஅவகாசம் கொடுக்கப்படுகிறது. இந்தக் காலத்தில் ஆபிரகாமும் அவர்களுக்காக பரிந்து பேசி ஜெபிக்கலாம். திறப்பின் வாசலில் நிற்கிறவர்களை கர்த்தர் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

"ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார்; ஆதலால் அவருடைய புயமே அவருக்கு இரட்சிப்பாகி, அவருடைய நீதியே அவரைத் தாங்குகிறது" (ஏசா 59:16).

அப்பொழுது அந்தப் புருஷர் அவ்விடம் விட்டுச் சோதோமை நோக்கிப் போகிறார்கள்; ஆபிரகாமைப் பார்க்க வந்த மூன்று புருஷரில் இரண்டுபேர் சோதோமை நோக்கிப் போகிறார்கள் (ஆதி 18:22). ஆபிரகாமை பார்க்க வந்த மூன்றாவது புருஷர் கர்த்தர். அவர் இப்போது சோதோமுக்குப் போகவில்லை. கர்த்தர் இன்னும் ஆபிரகாமோடு பேசிக்கொண்டிருக்கிறார். ஆபிரகாமோ இன்னும் கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருக்கிறார்.

ஆபிரகாமின் பரிந்து பேசும் ஜெபம் ஆதி 18:23-33

ஆதி 18:23. அப்பொழுது ஆபிரகாம் சமீபமாய்ச் சேர்ந்து: துன்மார்க்கனோடே நீதிமானையும் அழிப்பீரோ?

ஆதி 18:24. பட்டணத்துக்குள்ளே ஒருவேளை ஐம்பது நீதிமான்கள் இருப்பார்கள், அதற்குள் இருக்கும் அந்த ஐம்பது நீதிமான்கள்நிமித்தம் இரட்சியாமல் அந்த ஸ்தலத்தை அழிப்பீரோ?

ஆதி 18:25. துன்மார்க்கனோடே நீதிமானையும் சங்கரிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக; நீதிமானையும் துன்மார்க்கனையும் சமமாய் நடப்பிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக; சர்வலோக நியாயாதிபதி நீதிசெய்யாதிருப்பாரோ என்றான்.

ஆதி 18:26. அதற்கு கர்த்தர்: நான் சோதோமில் ஐம்பது நீதிமான்களைக் கண்டால், அவர்கள் நிமித்தம் அந்த ஸ்தலமுழுவதையும் இரட்சிப்பேன் என்றார்.

ஆதி 18:27. அப்பொழுது ஆபிரகாம் பிரதியுத்தரமாக: இதோ, தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன் ஆண்டவரோடே பேசத்துணிந்தேன்.

ஆதி 18:28. ஒருவேளை ஐம்பது நீதிமான்களுக்கு ஐந்துபேர் குறைந்திருப்பார்கள்; அந்த ஐந்துபேர்நிமித்தம் பட்டணமுழுவதையும் அழிப்பீரோ என்றான். அதற்கு அவர்:நான் நாற்பத்தைந்து நீதிமான்களை அங்கே கண்டால், அதை அழிப்பதில்லை என்றார்.

ஆதி 18:29. அவன் பின்னும் அவரோடே பேசி: நாற்பது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர்: நாற்பது நீதிமான்கள்நிமித்தம் அதை அழிப்பதில்லை என்றார்.

ஆதி 18:30. அப்பொழுது அவன்: நான் இன்னும் பேசுகிறேன், ஆண்டவருக்குக் கோபம் வராமலிருப்பதாக; முப்பது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர்: நான் முப்பது நீதிமான்களை அங்கே கண்டால், அதை அழிப்பதில்லை என்றார்.

ஆதி 18:31. அப்பொழுது அவன்: இதோ, ஆண்டவரோடே பேசத்துணிந்தேன்; இருபது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர்: இருபது நீதிமான்கள்நிமித்தம் அதை அழிப்பதில்லை என்றார்.

ஆதி 18:32. அப்பொழுது அவன்: ஆண்டவருக்குக் கோபம் வராதிருப்பதாக; நான் இன்னும் இந்த ஒருவிசைமாத்திரம் பேசுகிறேன்; பத்து நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றார். அதற்கு அவர்: பத்து நீதிமான்கள் நிமித்தம் அதை அழிப்பதில்லை என்றார்.

ஆதி 18:33. கர்த்தர் ஆபிரகாமோடே பேசி முடிந்தபின்பு போய்விட்டார்; ஆபிரகாமும் தன்னுடைய இடத்துக்குத் திரும்பினான்.

நாம் வார்த்தையினாலும், ஜெபத்தினாலும் கர்த்தரோடு சம்பாஷணை பண்ணுகிறோம். கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலமாக நம்மோடு பேசுகிறார். நாம் ஜெபத்தின் மூலமாக கர்த்தரோடு பேசுகிறோம்.

கர்த்தர் ஆபிரகாமிடம் சோதோமைக் குறித்த தம்முடைய நோக்கங்களை வெளிப்படுத்துகிறார். கர்த்தருடைய வெளிப்பாட்டை பெற்றுக்கொண்ட உடன், ஆபிரகாம் கர்த்தரிடத்தில் சோதோமுக்காக பரிந்து பேச ஆரம்பிக்கிறார். கர்த்தருடைய வார்த்தை நமக்கு அறிவிக்கப்படும்போது, நாம் அதற்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண ஆரம்பிக்கவேண்டும். நம்முடைய ஜெபத்திற்கு ஆதரவாகவே கர்த்தருடைய வார்த்தை நமக்கு வெளிப்படுத்தப்படுகிறது.

ஆபிரகாம் கர்த்தருக்கு சமீபமாய் சேருகிறார் (ஆதி 18:23). ஆபிரகாமின் இருதயம் கர்த்தருக்கு சமீபமாயிருக்கிறது.

"அவர்களுடைய பிரபு அவர்களில் ஒருவனாயிருக்க, அவர்களுடைய அதிபதி அவர்கள் நடுவிலிருந்து தோன்றுவார்; அவரைச் சமீபித்து வரப்பண்ணுவேன், அவர் சமீபித்து வருவார், என்னிடத்தில் சேரும்படி, தன் இருதயத்தைப் பிணைப்படுத்துகிற இவர் யார்? என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 30:21).

ஆபிரகாம் கர்த்தருடைய சமுகத்திலே தைரியமாய்க் கிட்டிச்சேர்ந்திருக்கிறார். அவருடைய விசுவாசம் கர்த்தருக்குள் உறுதியாயிருக்கிறது. அவர் கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும், நன்மையையும் நம்பி, அவருக்கு சமீபமாய் சேர்ந்திருக்கிறார்.

ஆபிரகாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். பரிசுத்தவேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற இந்த ஜெபமே முதலாவது ஜெபமாகும். கர்த்தர் சோதோமை அழித்துப்போடாமல், அதை அழிவுக்கு தப்புவிக்கப்பண்ணவேண்டும் என்பதே ஆபிரகாமின் ஜெபம். ஆபிரகாம் கர்த்தரிடத்தில் சோதோமுக்காக பரிந்து பேசுகிறார்.

இந்த ஜெபம் பரிந்து பேசும் ஜெபத்திற்கு முதலாவது எடுத்துக்காட்டு. மற்றவர்கள்மீது இரக்கம் காண்பிக்க வேண்டுமென்று ஆபிரகாம் தேவனிடத்தில் மன்றாடுகிறார். ஆபிரகாம் தன்னுடைய விண்ணப்பத்திற்கான காரணங்களையும் தேவனிடத்தில் கூறுகிறார்.

கர்த்தர் நீதியுள்ளவர். அதே வேளையில் அவர் இரக்கமுமுள்ளவர். சோதோம் தண்டிக்கப்பட வேண்டும். சோதோமுக்கு வரும் தண்டனை ஆபிரகாமிற்கும், அவருடைய சந்ததிக்கும் ஒரு நிரந்தரமான பாடமாக அமைய வேண்டும். ஆபிரகாம் மம்ரேயில் இருக்கிறார். சிலகாலம் அவர் எபிரோனிலும் இருந்தார். இவ்விரண்டுமே யூதாவின் மலைப்பகுதியில் தெற்கு பள்ளத்தாக்கில் அமைந்துள்ள பகுதிகள். சவக்கடலிலிருந்து எபிரோன் மலை 4200 அடி உயரத்தில் இருக்கிறது. சோதோம் சவக்கடலுக்கு அருகில் உள்ளது.

மம்ரேயிலிருந்து சோதோம் தென்கிழக்காக 26 மைல் தூரத்தில் உள்ளது. மலைப்பகுதியில் இருக்கும் ஆபிரகாம் சமபூமியை எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருப்பார். ஆபிரகாம் தேவனோடு பரிந்து பேசிக் கொண்டிருக்கும்போது இரண்டு தூதர்களும் சோதோமிற்குச் சென்று விட்டார்கள். கர்த்தரும் ஆபிரகாமோடே பேசி முடித்த பின்பு, போய்விட்டார். ஆபிரகாமும் தன்னுடைய இடமான மம்ரேயிக்குத் திரும்பிப் போய்விட்டார்.

மறுநாள் மம்ரேயிலிருந்து சோதோமின் அழிவை ஆபிரகாம் தெளிவாகப் பார்க்கிறார். (ஆதி 18:33, ஆதி 19:27) துன்மார்க்கருக்குத் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் என்பதற்குச் சோதோமின் அழிவு ஓர் அடையாளமாக இருக்கிறது.

கர்த்தர் பாவங்களை வெறுக்கிறார். ஆனாலும் அவர் பாவிகள்மீது இரக்கம் காண்பிக்கிறார். நாமும் பாவங்களை வெறுக்கவேண்டும். பாவிகளுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும். பாவிகள் அழிந்துபோவது கர்த்தருக்கு பிரியமல்ல. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, அழிவுக்கு தப்பித்துக்கொள்ளவேண்டும் என்பதே கர்த்தருக்கு பிரியம்.

ஆபிரகாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "துன்மார்க்கனோடே நீதிமானையும் அழிப்பீரோ" என்று கேட்கிறார். கர்த்தர் நீதியுள்ளவர். அவர் நீதிமானை அழிக்கமாட்டார். சோதோம் பட்டணத்தில் துன்மார்க்கரும் இருக்கிறார்கள். நீதிமான்களும் இருக்கிறார்கள். லோத்து ஒரு நீதிமான். கர்த்தர் சோதோமை அழிக்கும்போது, அந்தப் பட்டணத்திலுள்ள துன்மார்க்கரோடே நீதிமான்களும் அழிந்துபோவார்களே என்னும் வேதனை ஆபிரகாமின் மனதில் உண்டாயிற்று.

சோதோம் பட்டணத்திலுள்ள எல்லோரும் அழிவுக்கு தப்பிக்கவேண்டுமென்று ஆபிரகாம் கர்த்தரிடத்தில் பரிந்துபேசவில்லை. தேவனுடைய நீதி அவர்கள் மத்தியில் நிறைவேறும் என்பது ஆபிரகாமுக்கு தெரியும். கர்த்தர் நீதியுள்ளவர். அவர் நீதியாய் நியாயம் விசாரிக்கிறவர். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியும் நியாயமுமுள்ளதாக இருக்கும். ஆபிரகாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யாதிருப்பாரோ" (ஆதி 18:25) என்று கேட்கிறார்.

ஆபிரகாம் கர்த்தரிடத்தில் விசுவாசத்தோடு ஜெபம்பண்ணுகிறார். ஆபிரகாமின் ஜெபம் பரிந்து பேசும் ஜெபமாகவும், விசுவாச ஜெபமாகவும் இருக்கிறது. சோதோம் பட்டணத்தில், துன்மார்க்கரும் நீதிமான்களும் கலந்திருப்பதுபோல, இந்த உலகத்திலும் கலந்திருக்கிறார்கள். இந்த உலகத்து ஜனங்களில் சிலர் நல்லவர்களாகவும், சிலர் தீயவர்களாகவும் இருக்கிறார்கள்.

நீதிமான்கள் துன்மார்க்கரோடே கலந்திருந்தாலும், கர்த்தர் நீதியுள்ளவராக இருக்கிறார். அவர் துன்மார்க்கரோடே நீதிமானை அழிக்கமாட்டார். ஆபிரகாம் கர்த்தரை நோக்கி, "துன்மார்க்கனோடே நீதிமானையும் சங்கரிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக; நீதிமானையும் துன்மார்க்கனையும் சமமாய் நடப்பிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக; சர்வலோக நியாயாதிபதி நீதிசெய்யாதிருப்பாரோ" (ஆதி 18:25) என்று சொல்லுகிறார்.

நீதிமான்களும் துன்மார்க்கரோடே பாடுகளை அனுபவிப்பார்கள். ஆனாலும் நீதிமான்கள் துன்மார்க்கரைப்போல பாடுகளை அனுபவிக்கமாட்டார்கள். பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிப்பது துன்மார்க்கருக்கு தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறது.

ஆபிரகாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது தன்னை வெகுவாகத் தாழ்த்துகிறார். "இதோ, தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன் ஆண்டவரோடே பேசத்துணிந்தேன்" (ஆதி 18:27) என்று ஆபிரகாம் கர்த்தரிடத்தில் மிகுந்த பணிவோடு சொல்லுகிறார். ஆபிரகாம் தன்னுடைய பணிவான வார்த்தையை மறுபடியும் சொல்லும்போது, "இதோ, ஆண்டவரோடே பேசத்துணிந்தேன்" (ஆதி 18:31) என்று சொல்லுகிறார்.

ஆபிரகாம் கர்த்தருக்கு சமீபமாய்ச் சேர்ந்து, அவரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். தன்னுடைய தைரியத்தைப் பார்த்து ஆபிரகாமுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. நாமும் கர்த்தருடைய கிருபையினால், அவருடைய கிருபாசனத்தண்டையில் கிட்டிச்சேருகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். தம்மிடத்தில் பேசுவதற்கு கர்த்தர் நமக்கு அனுமதி கொடுத்திருக்கிறார். நாம் கர்த்தருக்கு சமீபமாய்ச் சேருவதும், அவருடைய சமுகத்திலே ஜெபம்பண்ணுவதும் நமக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம்.

"அப்பொழுது தாவீதுராஜா உட்பிரவேசித்து, கர்த்தருடைய சமுகத்திலிருந்து கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்? (2சாமு 7:18).

ஆபிரகாம் கர்த்தரிடத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ணினாலும், அவர் கர்த்தரோடு போராடி ஜெபம்பண்ணுகிறார். ஆபிரகாம் கர்த்தரை நோக்கி, ". பட்டணத்துக்குள்ளே ஒருவேளை ஐம்பது நீதிமான்கள் இருப்பார்கள், அதற்குள் இருக்கும் அந்த ஐம்பது நீதிமான்கள்நிமித்தம் இரட்சியாமல் அந்த ஸ்தலத்தை அழிப்பீரோ?" (ஆதி 18:24) என்று கேட்கிறார்.

அதற்கு கர்த்தர்: "நான் சோதோமில் ஐம்பது நீதிமான்களைக் கண்டால், அவர்கள் நிமித்தம் அந்த ஸ்தலமுழுதையும் இரட்சிப்பேன்" (ஆதி 18:26) என்று ஆபிரகாமுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார். ஆபிரகாமின் பரிந்து பேசுகிற ஜெபவார்த்தைகளைக் கேட்டு கர்த்தர் கோபப்படவில்லை. ஆபிரகாமின் விண்ணப்பத்திற்கு கர்த்தர் செவிகொடுக்கிறார்.

கர்த்தர் நீதிமான்களின் ஜெபத்தைக் கேட்டு, அவர்கள்மீது கோபப்படமாட்டார். செம்மையானவர்களின் ஜெபம் கர்த்தருக்கு பிரியமானது.

"சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உமது ஜனத்தின் விண்ணப்பத்துக்கு விரோதமாய் நீர் எதுவரைக்கும் கோபங்கொள்வீர்" (சங் 80:4).

"துன்மார்க்கருடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது; செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்" (நீதி 15:8).

ஆபிரகாம் கர்த்தரோடு போராடி ஜெபம்பண்ணுகிறார். ஆபிரகாமின் பரிந்து பேசும் ஜெபத்தையும், போராடி ஜெபிக்கும் ஜெபத்தையும் பார்த்து, கர்த்தர் அவர்மீது பிரியப்படுகிறார்.

சோதோமின் பாவம் மிகவும் கொடியதாயிருக்கிறது. அது ஆபிரகாமுக்கும் தெரியும். ஆனாலும் அந்தப் பட்டணத்திற்குள்ளே ஒரு சில நீதிமான்களும் இருப்பார்கள் என்று ஆபிரகாம் நம்புகிறார். கர்த்தர் அந்த நீதிமான்கள் நிமித்தம், அந்தப் பட்டணத்தை அழிக்கமாட்டார் என்று ஆபிரகாம் நம்புகிறார் (ஆதி 18:24).

சோதோமும் கொமோராவும் பாவமான ஸ்தலங்களாகயிருந்தாலும், அதிலும் ஒரு சில நீதிமான்கள் இருந்தால், கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அந்தப் பட்டணங்களுக்கு கிடைக்கும் என்பது ஆபிரகாமின் நம்பிக்கை. கர்த்தர் தம்முடைய கிருபையினால் சோதோமின் ஜனங்களுக்கு இரக்கம் காண்பிக்கவேண்டும் என்பது ஆபிரகாமின் விருப்பம்.

சோதோம் பட்டணத்தில் எத்தனை நீதிமான்கள் இருப்பார்கள் என்பது ஆபிரகாமுக்கு தெரியாது. "பட்டணத்திற்குள்ளே ஒருவேளை ஐம்பது நீதிமான்கள் இருப்பார்கள்" என்று ஆபிரகாம் கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். அந்தப் பட்டணத்திலே எத்தனை நீதிமான்கள் இருக்கிறார்கள் என்பது கர்த்தருக்கு தெரியும்.

சோதோம் பட்டணத்தில் ஐம்பது நீதிமான்கள் இருப்பார்களா என்னும் சந்தேகம் ஆபிரகாமுக்கு வந்துவிடுகிறது. ஒருவேளை சோதோம் பட்டணத்திற்குள்ளே, ஐம்பது நீதிமான்களுக்கு ஐந்துபேர் குறைந்திருப்பார்கள் என்று ஆபிரகாம் நினைக்கிறார். நீதிமான்களின் எண்ணிக்கை குறைவாகயிருந்தாலும், கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் சோதோம் பட்டணத்திற்கு கிடைக்கவேண்டும் என்பது ஆபிரகாமின் பரிந்து பேசும் ஜெபமாகும்.

ஆபிரகாம் கர்த்தரை நோக்கி, "ஒருவேளை ஐம்பது நீதிமான்களுக்கு ஐந்துபேர் குறைந்திருப்பார்கள்; அந்த ஐந்துபேர்நிமித்தம் பட்டணமுழுவதையும் அழிப்பீரோ" என்று கேட்கிறார். அதற்கு கர்த்தர்: "நான் நாற்பத்தைந்து நீதிமான்களை அங்கே கண்டால், அதை அழிப்பதில்லை" என்று சொல்லுகிறார்.

சோதோம் பட்டணத்தில் நாற்பத்தைந்து நீதிமான்கள் இருப்பார்களா என்னும் சந்தேகமும் ஆபிரகாமுக்கு வந்துவிடுகிறது. ஆகையினால் ஆபிரகாம் இன்னும் கர்த்தரோடே பேசி, "நாற்பது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ" என்று கேட்கிறார். அதற்கு கர்த்தர்: "நாற்பது நீதிமான்கள் நிமித்தம் அதை அழிப்பதில்லை" (ஆதி 18:29) என்று சொல்லுகிறார்.

தான் கர்த்தரிடத்தில் அதிகமாக பேசினால், கர்த்தருடைய கோபம் தன்மீது வருமோ என்னும் சந்தேகம் ஆபிரகாமுக்கு வருகிறது. ஆகையினால் அவர் கர்த்தரிடத்தில், "நான் இன்னும் பேசுகிறேன், ஆண்டவருக்கு கோபம் வராமலிருப்பதாக" (ஆதி 18:30) என்று சொல்லுகிறார்.

கர்த்தருக்கு தன்மீது கோபம் வந்தாலும், ஆபிரகாம் தன்னுடைய பரிந்து பேசும் ஜெபத்தை நிறுத்திவிடவில்லை. அவர் கர்த்தரை நோக்கி, "முப்பது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ" என்று கேட்கிறார். அதற்கு கர்த்தர், "முப்பது நீதிமான்களை அங்கே கண்டால், அதை அழிப்பதில்லை" (ஆதி 18:30) என்று சொல்லுகிறார்.

சோதோம் பட்டணத்தில், எத்தனை நீதிமான்கள் இருப்பார்கள் என்னும் எண்ணிக்கை ஆபிரகாமுக்கு தெரியவில்லை. ஆபிரகாம் ஆரம்பத்தில், அந்தப் பட்டணத்தில் ஐம்பது நீதிமான்கள் இருப்பார்கள் என்று சொன்னார். அதன் பின்பு நாற்பத்தைந்து என்றும், இப்போது முப்பது நீதிமான்கள் என்றும் சொல்லுகிறார்.

சோதோம் பட்டணத்தில் முப்பது நீதிமான்கள் இருப்பார்களா என்னும் சந்தேகமும் ஆபிரகாமுக்கு வந்துவிடுகிறது. ஆகையினால் அவர் கர்த்தரிடத்தில், "இருபது நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ" என்று சொல்லுகிறார். அதற்கு கர்த்தர்: "இருபது நீதிமான்கள்நிமித்தம் அதை அழிப்பதில்லை" (ஆதி 18:31) என்று சொல்லுகிறார்.

ஆபிரகாம் இந்த விண்ணப்பத்தை கர்த்தரிடத்தில் ஏறெடுக்கும்போது, மிகவும் பணிவாக, "இதோ, ஆண்டவரோடே பேசத்துணிந்தேன்" என்று சொல்லி தன்னுடைய விண்ணப்பத்தை சொல்லுகிறார்.

சோதோம் பட்டணத்தாருக்காக தான் கர்த்தரிடத்தில் தொடர்ந்து பரிந்துபேசினால், கர்த்தருடைய கோபம் தன்மீது வருமோ என்னும் சந்தேகம் ஆபிரகாமின் மனதில் உண்டாயிற்று. ஆகையினால் ஆபிரகாம் கர்த்தரை நோக்கி, "ஆண்டவருக்குக் கோபம் வராதிருப்பதாக; நான் இன்னும் இந்த ஒருவிசைமாத்திரம் பேசுகிறேன்" (ஆதி 18:32) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தன்மீது கோபப்பட்டாலும், ஆபிரகாம் சோதோம் பட்டணத்தாருக்காக பரிந்து பேசுவதை நிறுத்திவிடவில்லை. அவர் மேலும் கர்த்தரை நோக்கி, "பத்து நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ" என்று கேட்கிறார். அதற்கு கர்த்தர்: "பத்து நீதிமான்கள் நிமித்தம் அதை அழிப்பதில்லை" (ஆதி 18:32) என்று சொல்லுகிறார்.

ஆபிரகாம் ஐம்பது நீதிமான்களில் ஆரம்பித்தார். இப்போது பத்து நீதிமான்கள் வரையிலும் இறங்கி வந்திருக்கிறார். சோதோம் பட்டணத்தாருக்கு கர்த்தர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கவேண்டும் என்பது ஆபிரகாமின் விருப்பம். இதற்காகவே அவர் கர்த்தரிடத்தில் இதுவரையிலும் பரிந்துபேசி ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கிறார்.

ஆபிரகாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தருடைய பொதுவான நல்ல சுபாவம் இங்கு வெளிப்படுகிறது. கர்த்தர் துன்மார்க்கனோடே நீதிமானையும் அழிக்கமாட்டார். அவர் துன்மார்க்கரை சங்கரிப்பதுபோல, நீதிமானை சங்கரிக்கமாட்டார். நீதிமானையும் துன்மார்க்கனையும் சமமாய் நடப்பிப்பது கர்த்தருக்கு தூரமாயிருக்கும். கர்த்தர் சர்வலோக நியாயாதிபதியாயிருக்கிறார். அவர் நீதி செய்வார்.

ஆபிரகாம் கர்த்தரிடத்தில் சோதோம் பட்டணத்தாருக்காக தொடர்ந்து பரிந்துபேசி ஜெபித்துக்கொண்டே இருக்கிறார். ஆபிரகாம் ஜெபம்பண்ணி முடிக்கும் வரையிலும், கர்த்தர் ஆபிரகாமுக்கு அருகாமையில் நிற்கிறார். ஆபிரகாம் தொடர்ந்து ஜெபிக்கும்போது, கர்த்தர் தம்முடைய பொறுமையை இழந்து, அந்த இடத்தை விட்டு விலகிப்போய்விடவில்லை. ஆபிரகாம் ஜெபம்பண்ணி முடித்த பின்பே, கர்த்தர் அவ்விடத்தை விட்டுப்போகிறார்.

ஆபிரகாம் தான் பரிந்து பேசி ஜெபிப்பதை எப்பொழுது நிறுத்துகிறாரோ, அப்பொழுதுதான் கர்த்தரும் அவருக்கு பிரதியுத்தரம் சொல்லுவதை நிறுத்துவார். ஆபிரகாம் கர்த்தரிடத்தில் இன்னும் அதிகமாய் ஜெபம்பண்ணினால், கர்த்தரும் இன்னும் அதிகமாய் அவருக்கு பிரதியுத்தரம் சொல்லுவார். இதுவே ஜெபத்தின் வல்லமை.

நாம் கர்த்தருடைய சமுகத்திலே ஜெபிக்க ஜெபிக்க, கர்த்தருடைய பதில்களை பெற்றுக்கொள்ளலாம். நம்முடைய ஜெபங்கள் ஒருபோதும் வீணாய்ப்போவதில்லை. கேளுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும் என்று கர்த்தர் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார். நாம் கேட்கும் வரையிலும் கர்த்தர் நமக்கு கொடுத்துக் கொண்டேயிருப்பார். அவர் நம்முடைய வேண்டுதல்களுக்கும் விண்ணப்பங்களுக்கும் செவிகொடுத்துக் கொண்டேயிருப்பார்.

கர்த்தர் ஆபிரகாமோடே பேசி முடிந்தபின்பு போய்விடுகிறார்; ஆபிரகாமும் தன்னுடைய இடத்துக்குத் திரும்புகிறார் (ஆதி 18:33).

இரண்டு நண்பர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டே நடந்து செல்கிறார்கள். அதன் பின்பு அவர்கள் இருவரும் பிரிந்து போய்விடுகிறார்கள். யாத் 33:11 ஆவது வசனத்தில் கர்த்தர் மோசேயிடம் "ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதைப் போல முகமுகமாகப் பேசினார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் ஆபிரகாமிடத்தில் இதுபோலவே பேசுகிறார்.

19 அதிகாரம்

சோதோம் அழிந்துபோகிறது. லோத்து சோதோமின் அழிவிலிருந்து தப்பிக்கிறார். சோதோம் கொமோரோவின் கூக்குரல் கர்த்தருடைய சமுகத்திலே பெரிதாயிருக்கிறது. அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருக்கிறது. அதைப் பார்த்து அறிவதற்காக கர்த்தர் பரலோகத்திலிருந்து பூமிக்கு இறங்கி வந்திருக்கிறார்.

கர்த்தருடைய தூதர் இரண்டுபேரும் சோதோமுக்கு வருகிறார்கள். லோத்து நீதிமானாகயிருக்கிறார் (ஆதி 19:1-3). சோதோம் பட்டணத்திலே லோத்தைப்போன்ற நீதிமான் வேறு ஒருவருமில்லை.

சோதோமின் மனுஷர் துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்களுடைய பாவத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது (ஆதி 19:4-11).

கர்த்தருடைய தூதர்கள் சோதோமை அழிக்கப்போகிறார்கள். லோத்தும், அவருடைய குடும்பத்தாரும் சோதோமின் அழிவுக்கு தப்பிக்க வேண்டும் என்று அந்தப் புருஷர் விரும்புகிறார்கள். அவர்கள் லோத்தையும், அவருடைய குடும்பத்தாரையும் கையைப்பிடித்து சோதோம் பட்டணத்திற்கு வெளியே கொண்டு போய்விடுகிறார்கள் (ஆதி 19:12-23).

கர்த்தருடைய நீதியினால் சோதோம் அழிந்துபோகிறது. லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆகிறாள் (ஆதி 19:24-26). சோதோம் கொமோரோ அழிந்துபோனதை ஆபிரகாம் பார்க்கிறார் (ஆதி 19:27-29).

லோத்தும், அவருடைய இரண்டு குமாரத்திகளும் பாவம் செய்கிறார்கள் (ஆதி 19:30-38).

லோத்தும் இரண்டு தூதரும்
ஆதி 19:1-3

ஆதி 19:1. அந்த இரண்டு தூதரும் சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள்; லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான். அவர்களை கண்டு, லோத்து எழுந்து எதிர்கொண்டு தரை மட்டும் குனிந்து:

ஆதி 19:2. ஆண்டவன்மார்களே அடியேனுடைய வீட்டுமுகமாய் நீங்கள் திரும்பி, உங்கள் கால்களை கழுவி, இராத்தங்கி காலையில் எழுந்து பிரயாணப்பட்டு போகலாம் என்றான். அதற்கு அவர்கள்: அப்படியல்ல, வீதியிலே இராத்தங்குவோம் என்றார்கள்.

ஆதி 19:3. அவன் அவர்களை மிகவும் வருத்தி கேட்டுக்கொண்டான்; அப்பொழுது அவனிடத்திற்கு திரும்பி, அவன் வீட்டிலே பிரவேசித்தார்கள். அவன் புளிப்பில்லா அப்பங்களை சுட்டு, அவர்களுக்கு விருந்துபண்ணினான், அவர்கள் புசித்தார்கள்.

சோதோம் பட்டணத்திலே லோத்து மாத்திரமே நீதிமானாயிருக்கிறார். பரலோகத்திலிருந்து சோதோமுக்கு வந்திருக்கிற இரண்டு தூதரும், நீதிமானாகிய லோத்தை அடையாளம் காண்கிறார்கள். லோத்து சோதோமின் வாசலில் உட்கார்ந்திருக்கிறார்.

சோதோம் பட்டணத்தில் ஏராளமான மனுஷர் இருந்தாலும் லோத்துக்கும் அவர்களுக்கும் ஏராளமான வித்தியாசமுள்ளது. சோதோமின் ஜனங்கள் எல்லோரும் மகாபாவிகளாயிருக்கிறார்கள். லோத்தோ கர்த்தருக்கு பயந்த நீதிமானாயிருக்கிறார். லோத்து சோதோமின் மனுஷரைப்போல துன்மார்க்கம் பண்ணவில்லை.

சாயங்கால வேளையிலே லோத்து சோதோமின் வாசலில் உட்கார்ந்திருக்கிறார். அவர் விருந்தினரை உபசரிக்கிற நல்ல சுபாவமுள்ளவர். கர்த்தருடைய தூதர்கள் இரண்டுபேரும் சாயங்காலத்திலே சோதோமுக்கு வருகிறார்கள்; லோத்து அவர்களை கண்டு, எழுந்து எதிர்கொண்டு தரை மட்டும் குனிந்து: "ஆண்டவன்மார்களே அடியேனுடைய வீட்டுமுகமாய் நீங்கள் திரும்பி, உங்கள் கால்களை கழுவி, இராத்தங்கி காலையில் எழுந்து பிரயாணப்பட்டு போகலாம்" என்று சொல்லுகிறார் (ஆதி 19:1,2).

லோத்து சமபூமியை தெரிந்தெடுத்தார். (ஆதி 13:10-13) அதன் பின்பு லோத்தைப் பற்றி இந்த வசனத்தில்தான் கூறப்பட்டிருக்கிறது. சோதோமின் வாசல் என்பது கலை நிகழ்ச்சிகள் நடக்கும் பொதுவான இடம். பிரதானிகள் இந்த இடத்தில்தான் நியாயம் விசாரிப்பார்கள். சோதோம் பட்டணத்திற்கு இரண்டு தூதரும் வருவதை லோத்து பார்க்கிறார். விருந்தினரை உபசரிக்கும் பண்பின் பிரகாரம் லோத்து அவர்களுடைய தேவையைச் சந்திக்க விரும்புகிறார்.

லோத்து அந்நியரை உபசரிக்கும் சுபாவமுள்ளவர். அவர் இரண்டு தூதரையும் தன்னுடைய வீட்டிற்கு அழைக்கிறார். லோத்து தன்னுடைய வீட்டிலே அவர்களுக்கு தங்குவதற்கு இடங்கொடுப்பார். அவர்களுக்கு புசிக்க போஜனம் கொடுப்பார். லோத்து அந்நியரை உண்மையாய் உபசரிக்கிறார் என்பதற்கு, அவருடைய வார்த்தைகளே அடையாளமாயிருக்கிறது.

ஆனால் இரண்டு தூதர்களும் லோத்தை நோக்கி, "அப்படியல்ல, வீதியிலே இராத்தங்குவோம்" என்று சொல்லி, லோத்தின் அழைப்பை ஏற்க மறுக்கிறார்கள். லோத்தோ அவர்களை மிகவும் வருத்தி கேட்டுக்கொள்கிறார்; அப்பொழுது அவர்கள் அவரிடத்திற்கு திரும்பி, அவர் வீட்டிலே பிரவேசிக்கிறார்கள். லோத்து புளிப்பில்லா அப்பங்களை சுட்டு. அவர்களுக்கு விருந்துபண்ணுகிறார். அவர்கள் புசிக்கிறார்கள் (ஆதி 19:3).

அந்தப் புருஷர்கள், "வீதியிலே இராத்தங்குவோம்" என்று சொல்லுகிறார்கள். கிழக்கு தேசங்களில் கோடைகாலத்தில் வெயில் அதிகமாக இருக்கும். இரவு வேளையில் வீட்டிற்குள் தங்குவதும் கடினமாக இருக்கும். இதனால் இரவின் குளிர்ச்சியில் ஜனங்கள் வீட்டிற்கு வெளியே வீதியில் தங்க விரும்புவார்கள்.

லோத்து அவர்களுக்கு விருந்துபண்ணுகிறார். ஏற்கெனவே அவர்கள் ஆபிரகாம் கொடுத்த போஜனத்தைப் புசித்தார்கள். இப்போது அவர்கள் இரண்டாம் முறையாகப் புசிக்கிறார்கள் (ஆதி 18:8).

லோத்து இரண்டு தூதரையும் அன்பாய் உபசரிக்கிறார். நற்குணமுள்ளவர்கள் உதாரத்துவ குணமுள்ளவர்களாயிருப்பார்கள். லோத்து இரண்டு தூதருக்கும் புளிப்பில்லாத அப்பங்களை சுட்டு விருந்துபண்ணியதுபோல, நாமும் நம்முடைய விருந்தினர்களை கனம்பண்ணி உபசரிக்கவேண்டும். விருந்தினர்களுக்கு ஒரு குறையும் இல்லாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும்.

சோதோம் பட்டணத்து மனுஷர் ஆதி 19:4-11

ஆதி 19:4. அவர்கள் படுக்கும்முன்னே சோதோம் பட்டணத்து மனிதராகிய வாலிபர்முதல் கிழவர்மட்டுமுள்ள ஜனங்கள் அனைவரும் நானாதிசைகளிலுமிருந்து வந்து, வீட்டைச் சூழ்ந்துகொண்டு,

ஆதி 19:5. லோத்தைக் கூப்பிட்டு: இந்த இராத்திரி உன்னிடத்தில் வந்த மனுஷர் எங்கே? நாங்கள் அவர்களை அறியும்படிக்கு அவர்களை எங்களிடத்தில் வெளியே கொண்டு வா என்றார்கள்.

ஆதி 19:6. அப்பொழுது லோத்து வாசலுக்கு வெளியே வந்து, தனக்குப் பின்னாலே கதவைப் பூட்டி, அவர்களிடத்தில் போய்:

ஆதி 19:7. சகோதரரே, இந்த அக்கிரமம் செய்யவேண்டாம்.

ஆதி 19:8. இதோ, புருஷரை அறியாத இரண்டு குமாரத்திகள் எனக்கு உண்டு; அவர்களை உங்களிடத்திற்கு வெளியே கொண்டுவருகிறேன், அவர்களுக்கு உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்; இந்தப் புருஷர் என் கூரையின் நிழலிலே வந்தபடியால், இவர்களுக்கு மாத்திரம் ஒன்றும் செய்யவேண்டாம் என்றான்.

ஆதி 19:9. அதற்கு அவர்கள்: அப்பாலே போ; பரதேசியாய் வந்த இவனா நியாயம் பேசுகிறது? இப்பொழுது அவர்களுக்குச் செய்வதைப்பார்க்கிலும் உனக்கு அதிக பொல்லாப்புச் செய்வோம் என்று சொல்லி லோத்து என்பவனை மிகவும் நெருக்கிக் கதவை உடைக்கக் கிட்டினார்கள்.

ஆதி 19:10. அப்பொழுது அந்தப் புருஷர்கள் தங்கள் கைகளை வெளியே நீட்டி, லோத்தைத் தங்கள் அண்டைக்கு வீட்டுக்குள் இழுத்துக்கொண்டு, கதவைப் பூட்டி,

ஆதி 19:11. தெருவாசலிலிருந்த சிறியோரும் பெரியோருமாகிய மனிதருக்குக் குருட்டாட்டம்பிடிக்கப்பண்ணினார்கள்; அப்பொழுது அவர்கள் வாசலைத் தேடித்தேடி அலுத்துப்போனார்கள்.

கர்த்தருடைய சமுகத்திலே சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருக்கிறது. தம்மிடத்தில் வந்து எட்டின அந்தக் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ, இல்லையோ என்று பார்த்து அறிவதற்காக, கர்த்தர் பூமிக்கு இறங்கி வந்திருக்கிறார். மெய்யாகவே சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருக்கிறது அவைகளின் பாவம் மிகவும் கொடியதாயிருக்கிறது.

சோதோம் பட்டணத்திலிருக்கிற மனுஷர் எல்லோருமே துன்மார்க்கராயிருக்கிறார்கள். அந்தப் பட்டணத்து மனுஷராகிய வாலிபர் முதல் கிழவர் மட்டுமுள்ள ஜனங்கள் அனைவரும் பாவிகளாயிருக்கிறார்கள்.

"சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகாபாவிகளுமாய் இருந்தார்கள்" (ஆதி 13:13).

சோதோமின் மனுஷர் ஆண்புணர்ச்சிக்காரராயிருக்கிறார்கள். இதுவே அவர்களுடைய பிரதான பாவம். இது இயற்கையான சுபாவத்திற்கு விரோதமான காமவிகாரப்பாவம். சோதோமியரின் ஆண்புணர்ச்சியைக் குறிப்பதற்கு, ஆங்கிலத்தில் "சோடோமி" என்னும் வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பட்டணத்து மனுஷரின் பெயரே, ஆண்புணர்ச்சி என்றும் பாவத்திற்கு பெயராயிற்று.

சோதோமின் மனுஷர் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் பாவத்தை விரும்பி அதை ஆசையாய்ச் செய்கிறார்கள். தங்கள் பாவத்திற்கு மனந்திரும்பவேண்டும் என்னும் விருப்பம் அவர்களுடைய மனதில் இல்லை. பாவத்தை ஆசையாய்ச் செய்கிறவர்கள், தங்கள் பாவத்திற்கு ஒரு போதும் மனந்திரும்பமாட்டார்கள். அவர்களுடைய பாவமே அவர்களுடைய அழிவுக்கு காரணமாயிருக்கும்.

துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்களின் இருதயம் கடினமாயிருக்கும். அவர்களுடைய கைகளும் பாவம் செய்ய தீவிரிக்கும்.

"அவர்கள் அவருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படுகிறார்களோ? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும் அறியார்கள்; ஆதலால் விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள்; நான் அவர்களை விசாரிக்குங் காலத்தில் இடறுண்டுபோவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 6:15).

சோதோம் பட்டணத்திற்கு வந்த இரண்டு புருஷருக்கும் லோத்து தன்னுடைய வீட்டிலே விருந்து பண்ணுகிறார். அவர்கள் அங்கே புசிக்கிறார்கள். தன்னுடைய விருந்தினர்கள் இருவரும், தன்னுடைய வீட்டிலேயே படுத்து இளைப்பாறுவதற்கு லோத்து ஆயத்தம்பண்ணுகிறார்.

அவர்கள் படுக்கும்முன்னே சோதோம் பட்டணத்து மனிதராகிய வாலிபர்முதல் கிழவர்மட்டுமுள்ள ஜனங்கள் அனைவரும் நானாதிசைகளிலுமிருந்து வந்து, லோத்தின் வீட்டைச் சூழ்ந்துகொள்கிறார்கள் (ஆதி 19:4).

கிழக்கு தேசத்து பட்டணங்களில் ஒவ்வொரு இனத்தாரும் வசிப்பதற்கு தனித்தனியான வீதிகள் இருக்கும். அவர்கள் ஜாதிகள் அடிப்படையிலோ அல்லது தொழில் அடிப்படையிலோ பிரிந்து ஜீவிப்பார்கள். நான்கு திசைகள் என்பது நான்கு குடியிருப்பு பகுதிகள் என்று பொருள்படும். (ஏசா 47:15; ஏசா 56:11; எரே 37:21).

சோதோமின் பட்டணத்து மனுஷர் லோத்தைக் கூப்பிட்டு: "இந்த இராத்திரி உன்னிடத்தில் வந்த மனுஷர் எங்கே? நாங்கள் அவர்களை அறியும்படிக்கு அவர்களை எங்களிடத்தில் வெளியே கொண்டு வா" (ஆதி 19:5) என்று சொல்லுகிறார்கள்.

பரிசுத்த வேதாகமத்தில் ஆண்புணர்ச்சி தடைபண்ணப்பட்டிருக்கிறது. (யாத் 22:19; லேவி 18:22; லேவி 20:13; உபா 23:17; 1கொரி 6:9-10; 1தீமோ 1:10; ஏசா 1:9; ஏசா 3:9; நியா 19:22; நியா 20:13; ரோமர் 1:18-32).

தன்னுடைய வீட்டை சூழ்ந்துகொண்ட மனுஷருக்கு, லோத்து மென்மையான பிரதியுத்தரம் சொல்லுகிறார். தன் வீட்டில் வந்து விருந்தினராக தங்கியிருக்கிற இரண்டு புருஷருக்காகவும் லோத்து பரிந்து பேசுகிறார். ஆனால் லோத்தின் வீட்டை சூழ்ந்துகொண்ட சோதோம் பட்டணத்து மனிதராகிய வாலிபர் முதல் கிழவர் மட்டுமுள்ள ஜனங்கள் எல்லோரும், ஆண்புணர்ச்சிக்காரராயும், துன்மார்க்கராயும், துணிகரமாய்ப் பாவம் செய்ய ஆர்வமுள்ளவர்களாயும் இருக்கிறார்கள்.

சோதோம் பட்டணத்து மனுஷர் லோத்தின் வீட்டை சூழ்ந்துகொண்டபோது, லோத்து வாசலுக்கு வெளியே வந்து, தனக்குப் பின்னாலே கதவைப் பூட்டி, அவர்களிடத்தில் போய் பேசுகிறார் (ஆதி 19:6).

லோத்து, சோதோம் பட்டணத்து மனுஷரை நோக்கி, "சகோதரரே, இந்த அக்கிரமம் செய்யவேண்டாம். இதோ, புருஷரை அறியாத இரண்டு குமாரத்திகள் எனக்கு உண்டு; அவர்களை உங்களிடத்திற்கு வெளியே கொண்டுவருகிறேன், அவர்களுக்கு உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்; இந்தப் புருஷர் என் கூரையின் நிழலிலே வந்தபடியால், இவர்களுக்கு மாத்திரம் ஒன்றும் செய்யவேண்டாம்" (ஆதி 19:7,8) என்று சொல்லுகிறார்.

சோதோம் பட்டணத்து மனுஷரின் காமவெறியை தணிப்பதற்கு லோத்து அவர்களோடு பேசிப் பார்க்கிறார். சமாதான வார்த்தைகளை சொல்லிப் பார்க்கிறார். ஆனால் அவர்கள் எல்லோரும் ஆண்புணர்ச்சிக்காரராயிருக்கிறார்கள். லோத்தின் வீட்டில் வந்திருக்கிற இரண்டு மனுஷரையும் அறியும்படிக்கு, அவர்களை தங்களிடத்தில் கொண்டுவரவேண்டுமென்று சோதோம் பட்டணத்து மனுஷர் பிடிவாதமாக சொல்லுகிறார்கள்.

சோதோம் பட்டணத்து மனுஷரை அமைதிப்படுத்துவதற்காக, லோத்து ஒரு பாவமான யோசனையையும் சொல்லுகிறார். புருஷரை அறியாத இரண்டு குமாரத்திகள் லோத்துக்கு இருக்கிறார்கள். லோத்து அவர்கள் இருவரையும் சோதோம் பட்டணத்து மனுஷரிடம் ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். லோத்து இவ்வாறு பேசுவதே மிகப்பெரிய பாவம். ஆனாலும் தன்னுடைய கூரையின் நிழலில் வந்த இரண்டு புருஷருக்கும் ஒரு தீங்கும் நேரிடக்கூடாது என்று லோத்து விரும்புகிறார்.

விருந்தினரைப் பாதுகாக்க வேண்டியது விருந்து உபசரிப்பவர்களுடைய கடமை. ஆனால் லோத்து இவ்வாறு கூறுவது சோதோம் ஜனத்தார் செய்யும் பாவத்தைவிட பெரிய பாவமாகும்.

சோதோம் பட்டணத்து மனுஷர் லோத்தின் வீட்டில் விருந்தினராக தங்கியிருக்கிற இரண்டு மனுஷருக்கு தீங்கு செய்ய கூடிவந்திருக்கிறார்கள். அவர்கள் தன்னுடைய விருந்தினருக்கு தீங்கு செய்வதைவிட, தன்னுடைய இரண்டு குமாரத்திகளுக்கும் தீங்கு செய்யட்டும் என்று லோத்து நினைக்கிறார்.

சோதோம் பட்டணத்து மனுஷர் செய்யப்போகிற இரண்டு தீங்குகளில், அவர்கள் தன்னுடைய குமாரத்திகளுக்கு செய்யப்போகிற தீங்கு லோத்துக்கு சிறிய தீங்காக தெரிகிறது. லோத்து தீங்கை சிறிய தீங்கு, பெரிய தீங்கு என்று வேறுபிரித்தாலும், பாவத்தை சிறிய பாவம், பெரிய பாவம் என்று வேறுபிரிக்க முடியாது. பாவம் பாவமாகவே இருக்கும். பாவத்தின் சம்பளம் மரணம். மரணத்திலே பெரிய மரணம், சிறிய மரணம் என்று வித்தியாசமில்லை.

லோத்து தன்னுடைய வீட்டில் தங்கியிருக்கிற இரண்டு புருஷருக்கும் தீங்கு வரக்கூடாது என்று நினைத்து, தன்னுடைய குமாரத்திகளுக்கு தீங்கு வர அவர்களை ஒப்புக்கொடுக்கிறார். நன்மை வரும் என்று நினைத்து நாம் பாவம் செய்யக்கூடாது.

லோத்து தன்னுடைய இரண்டு குமாரத்திகளையும், சோதோம் பட்டணத்து மனுஷரிடத்தில் ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். ஆனால் அந்த மனுஷரோ லோத்தின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை.

சோதோம் பட்டணத்து மனுஷர் லோத்தைப் பார்த்து, "அப்பாலே போ; பரதேசியாய் வந்த இவனா நியாயம் பேசுகிறது? இப்பொழுது அவர்களுக்குச் செய்வதைப்பார்க்கிலும் உனக்கு அதிக பொல்லாப்புச் செய்வோம்" (ஆதி 19:9) என்று சொல்லுகிறார்கள். அவர்கள் லோத்தை மிகவும் நெருக்கிக் கதவை உடைக்கக் கிட்டுகிறார்கள்.

இரண்டு தூதர்களை வெளியே அனுப்பாவிட்டால், அவர்கள் லோத்திடம் ஆண்புணர்ச்சியில் ஈடுபடுவதாக எச்சரிக்கிறார்கள்.

சோதோம் பட்டணத்து மனுஷர் திரளான எண்ணிக்கையில் லோத்தின் வீட்டை சூழ்ந்துகொள்கிறார்கள். லோத்தோ தனிமனிதனாக, தன்னுடைய வீட்டின் கதவைப் பூட்டி அவர்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கிறார். ஆனால் அவர்கள் லோத்தின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்க மறுக்கிறார்கள். லோத்தால் தனக்கு முன்னால் நிற்கிற திரளான துன்மார்க்கருக்கு விரோதமாக எதிர்த்து நிற்கவும் முடியவில்லை.

லோத்து தன் வீட்டில் தங்கியிருக்கிற தேவதூதருக்காக சோதோம் பட்டணத்து மனுஷரிடம் பரிந்துபேசுகிறார். ஆனாலும் லோத்தால் அந்த இரண்டு புருஷரையும் சோதோமின் மனுஷருடைய கைகளுக்கு தப்புவிக்கமுடியவில்லை. லோத்தால் தன்னைக்கூட அவர்களுடைய கைகளுக்கு தப்புவிக்க முடியவில்லை. அவர்கள் லோத்தை மிகவும் நெருக்குகிறார்கள். அவருடைய வீட்டின் கதவை உடைக்க கிட்டி நெருங்கி வருகிறார்கள். இப்போது லோத்துக்கு தெய்வீக உதவி தேவைப்படுகிறது.

லோத்தின் வீட்டிற்குள்ளே இருக்கிற தேவதூதர்கள் இருவரும், வீட்டிற்கு வெளியே நடைபெறுகிற சம்பவங்களை கவனித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேசுகிற துன்மார்க்கமான வார்த்தைகளையும் தூதர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அப்பொழுது லோத்தின் வீட்டிற்குள்ளே இருக்கிற அந்தப் புருஷர்கள் தங்கள் கைகளை வெளியே நீட்டி, லோத்தைத் தங்கள் அண்டைக்கு வீட்டுக்குள் இழுத்துக்கொண்டு, கதவைப் பூட்டுகிறார்கள் (ஆதி 19:10).

தூதர்கள் ஆவியாக இருக்கிறார்கள். (சங் 104:4, எபி 1:13-14) அவர்களுக்கு ஆவிக்குரிய சரீரம் உண்டு. ஆகையினால் அவர்கள் தங்கள் கைகளை வெளியே நீட்டி லோத்தை வீட்டுக்குள் இழுத்துக் கொள்கிறார்கள். தேவனும் ஆவியாக இருக்கிறார். அவருக்கும் ஆவிக்குரிய சரீரம் உண்டு. (யோவான் 4:24).

தேவதூதர்கள் இருவரும் தெருவாசலிலிருந்த சிறியோரும் பெரியோருமாகிய மனிதருக்குக் குருட்டாட்டம் பிடிக்கப்பண்ணுகிறார்கள்; அப்பொழுது அவர்கள் வாசலைத் தேடித்தேடி அலுத்துப்போகிறார்கள் (ஆதி 19:11).

லோத்து தன்னுடைய வீட்டிலே தேவதூதருக்கு விருந்துபண்ணுகிறார். அவர்கள் தங்குவதற்கு இடங்கொடுக்கிறார். இப்போது லோத்து ஆபத்திலிருக்கிறார். லோத்தின் வீட்டில் தங்கியிருக்கிற தேவதூதர்கள் இரண்டுபேரும், லோத்தை சோதோம் பட்டணத்து மனுஷருடைய கைகளுக்கு தப்புவிக்கிறார்கள். அவர்கள் லோத்தை வீட்டிற்குள்ளே இழுத்து கதவைப் பூட்டி விடுகிறார்கள்.

லோத்து இப்போது தன்னுடைய வீட்டிற்குள்ளே இருக்கிறார். அவருடைய வீட்டின் கதவு தேவதூதரால் பூட்டப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு லோத்து, தன்னுடைய வீட்டிலிருக்கிற விருந்தினரை உள்ளே வைத்து, தன்னுடைய வீட்டின் கதவைப் பூட்டி வெளியே போனார். ஆனால் லோத்தால் தன்னையோ, தன்னுடைய வீட்டிலுள்ளவர்களையோ பாதுகாக்க முடியவில்லை. இப்போது தேவதூதர்கள் லோத்துடைய வீட்டின் கதவைப் பூட்டுகிறார்கள். அவருடைய வீட்டிற்குள்ளே வெளியே கூட்டமாய் நிற்கிற சோதோம் பட்டணத்து மனுஷர் யாரும் பிரவேசிக்க முடியவில்லை.

கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களை மரணத்தினால் பாதுகாக்கிறார். பரிசுத்தவான்கள் இந்த உலகத்தில் வேதனைகளையும், பாடுகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கும்போது, கர்த்தர் தம்முடைய தெய்வீக கரத்தை நீட்டி, தம்முடைய பரிசுத்தவான்களை மரணத்திற்குள்ளாக அழைத்து வந்து, மரணவாசலின் கதவைப் பூட்டி விடுகிறார். பரிசுத்தவான்கள் மரித்த பின்பு, அவர்களை எந்த சத்துருவாலும் சரீரப்பிரகாரமாக துன்பப்படுத்தவோ, உபத்திரவப்படுத்தவோ முடியாது. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் மரித்த பின்பு, தீங்குகளுக்கு விலகி பாதுகாப்பாயிருப்பார்கள்.

லோத்தின் வீட்டை சூழ்ந்துகொண்டு வெளியே நிற்கிற சோதோம் பட்டணத்து மனுஷர் எல்லோரும் ஆண்புணர்ச்சிக்காரராயிருக்கிறார்கள். அவர்களில் வாலிபர்களும் இருக்கிறார்கள். கிழவர்களும் இருக்கிறார்கள். அவர்களுடைய காமவிகார பாவத்திற்காக, கர்த்தருடைய தூதர்கள் அவர்களைத் தண்டிக்கிறார்கள். அவர்களுக்கு குருட்டாட்டம் பிடிக்கப்பண்ணுகிறார்கள். அப்போது தெருவாசலிலிருக்கிற சிறியோரும் பெரியோருமாகிய மனுஷருக்கு குருட்டாட்டம் பிடிக்கிறது. அவர்களால் லோத்துடைய வீட்டின் வாசலை தேடிக்கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் அதைத் தேடி தேடி அலுத்துப்போகிறார்கள்.

சோதோம் பட்டணத்து மனுஷருக்கு குருட்டாட்டம் பிடித்தாலும், அவர்கள் பாவம் செய்வதை நிறுத்தவில்லை. லோத்துடைய வீட்டின் கதவை தேடிக் கண்டுபிடித்து, அதை உடைத்துப்போட்டு, அவருடைய வீட்டிற்குள்ளே பிரவேசித்து, அவருடைய வீட்டில் தங்கியிருக்கிற இரண்டு புருஷரையும் அறியவேண்டுமென்று பாவவைராக்கியத்தோடிருக்கிறார்கள்.

சோதோம் பட்டணத்து மனுஷர் அலுத்துப்போகும் வரையிலும், லோத்துடைய வீட்டின் வாசலைத் தேடுகிறார்கள். அவர்களுடைய கண்களுக்கு குருட்டாட்டம் பிடித்திருந்தாலும், அவர்கள் தேடுவதை விட்டுவிடவில்லை.

சோதோம் பட்டணத்து மனுஷர் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். இக்காலத்திலும் பாவிகளில் அநேகர் துணிகரமாய்ப் பாவம் செய்து, தங்கள் பாவத்திற்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள். இவர்கள்மீது எப்படிப்பட்ட நியாயத்தீர்ப்பு வந்தாலும், இவர்கள் தங்கள் பாவங்களை விட்டு விலகி வரமாட்டார்கள். இவர்கள் தொடர்ந்து துணிகரமாகப் பாவம் செய்துகொண்டேயிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தண்டனையும் அனுபவிப்பார்கள். பாவமும் செய்வார்கள். தாங்கள் அலுத்துப்போகும் மட்டும் பாவம் செய்வார்கள்.

சோதோம் மனுஷருடைய சரீரப்பிரகாரமான கண்களில் மாத்திரமே குருட்டாட்டம் பிடித்திருக்கிறது. ஆனால் அவர்களுடைய சிந்தையிலோ குருட்டாட்டம் பிடிக்கவில்லை. அவர்கள் காமவிகார வெறியோடிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய சரீரங்களை தண்டிப்பதுபோல, சிந்தையையும் தண்டித்தால், அவர்கள் தங்களுடைய தப்பிதங்களை உணருவார்கள்.

எகிப்து தேசத்தின் மந்திரவாதிகள், கர்த்தருடைய வல்லமையான கிரியைகளைப் பார்த்து, "இது தேவனுடைய விரல்" என்று சொன்னார்கள். கர்த்தருடைய வல்லமைக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தினார்கள். பாவிகளும் கர்த்தருடைய வல்லமையை உணரும்போது, அவர்கள் கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தி, கர்த்தரை உயர்த்துவார்கள்.

லோத்தின் வீட்டார்
ஆதி 19:12-14

ஆதி 19:12. பின்பு அந்தப் புருஷர் லோத்தை நோக்கி: இவ்விடத்தில் இன்னும் உனக்கு யார் இருக்கிறார்கள்? மருமகனாவது, உன் குமாரராவது, உன் குமாரத்திகளாவது, பட்டணத்தில் உனக்குரிய எவர்களாவது இருந்தால், அவர்களை இந்த ஸ்தலத்திலிருந்து வெளியே அழைத்துக்கொண்டுபோ.

ஆதி 19:13. நாங்கள் இந்த ஸ்தலத்தை அழிக்கப்போகிறோம்; இவர்கள் கூக்குரல் கர்த்தருடைய சமுகத்தில் பெரிதாயிருக்கிறது; இதை அழிக்கக் கர்த்தர் எங்களை அனுப்பினார் என்றார்கள.

ஆதி 19:14. அப்பொழுது லோத்து புறப்பட்டு, தன் குமாரத்திகளை விவாகம்பண்ணப்போகிற தன் மருமக்கள்மாரோடே பேசி; நீங்கள் எழுந்து இந்த ஸ்தலத்தை விட்டுப் புறப்படுங்கள்; கர்த்தர் இந்தப் பட்டணத்தை அழிக்கப்போகிறார் என்றான்; அவனுடைய மருமக்கள்மாரின் பார்வைக்கு அவன் பரியாசம்பண்ணுகிறதாகக் கண்டது.

லோத்தின் வீட்டில் தங்கியிருக்கிற இரண்டு புருஷரும், லோத்தையும் அவருடைய வீட்டாரையும் தப்புவிப்பதற்கு ஆயத்தம்பண்ணுகிறார்கள். அவர்கள் லோத்தைப் பார்த்து, "நாங்கள் இந்த ஸ்தலத்தை அழிக்கப்போகிறோம்" (ஆதி 19:13) என்று சொல்லுகிறார்கள்.

"இவ்விடத்தில் இன்னும் உனக்கு யார் இருக்கிறார்கள்?" என்று தூதர்கள் லோத்திடம் கேட்கிறார்கள். தூதர்களின் ஞானம் வரையறைக்குட்பட்டது. தூதர்களுக்கு அனந்த ஞானம் இருந்திருந்தால், லோத்துக்கு குமாரர்கள் இல்லை என்பது அவர்களுக்கு தெரிந்திருக்கும்.

தேவதூதர்கள் கேட்டதுபோன்று, லோத்திற்கு குமாரர்கள் இருப்பதாக வேதவசனத்தில் குறிப்பு எதுவும் இல்லை. ஒருவேளை குமாரர்கள் இருந்திருந்தால், அவர்கள் சோதோமிலேயே தங்கியிருக்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணியிருப்பார்கள். சோதோம் பட்டணத்தின் மற்ற புருஷரைப்போலவே அவர்களும் ஆண்புணர்ச்சிக்காரர்களாக இருந்திருப்பார்கள். லோத்தின் மருமக்கள் சோதோமிலேயே தங்கியிருக்க வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள். (ஆதி 19:14).

லோத்துடைய மகள்களுக்கும் இவர்களுக்கும் இன்னும் திருமணமாகவில்லை. திருமண நிச்சயம் மட்டுமே நடைபெற்றிருக்கிறது. தன்னுடைய குமாரத்திகள் புருஷரை அறியாத ஸ்திரீகள் என்று லோத்து அவர்களைப் பற்றிக் கூறுகிறார். (ஆதி 19:8)

ஆண்புணர்ச்சிக்காரர்கள் ஸ்திரீகளைத் திருமணம் செய்து கொண்டாலும் அவர்கள் ஸ்திரீகளோடு குடும்ப வாழ்க்கையில் ஈடுபடமாட்டார்கள். ரோமர் 1:27 ஆவது வசனத்தில் கூறியிருக்கிற பிரகாரம் "அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைவார்கள்".

லோத்திற்குக் குமாரர்கள் இல்லை. இரண்டு குமாரத்திகள் மட்டுமே இருக்கிறார்கள் (ஆதி 19:30-31,36, 29:26).

சோதோமை அழிப்பதற்காகவே கர்த்தர் இவ்விரண்டு புருஷரையும் அனுப்பியிருக்கிறார். சோதோம் பட்டணத்தாருடைய கூக்குரல் கர்த்தருடைய சமுகத்தில் பெரிதாயிருக்கிறது. கர்த்தர் லோத்தின் மேல் இரக்கம் வைத்திருக்கிறார் (ஆதி 19:16). ஆபிரகாம் சோதோம் பட்டணத்தாருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ணினார். கர்த்தர் ஆபிரகாமின் ஜெபத்தைக் கேட்டு, லோத்தின்மேல் இரக்கம் வைத்திருக்கிறார்.

லோத்தின் வீட்டில் தங்கியிருக்கிற இரண்டு புருஷரும், லோத்தை நோக்கி, "இவ்விடத்தில் இன்னும் உனக்கு யார் இருக்கிறார்கள்? மருமகனாவது, உன் குமாரராவது, உன் குமாரத்திகளாவது, பட்டணத்தில் உனக்குரிய எவர்களாவது இருந்தால், அவர்களை இந்த ஸ்தலத்திலிருந்து வெளியே அழைத்துக்கொண்டுபோ" (ஆதி 19:12) என்று சொல்லுகிறார்கள்.

லோத்து தன்னுடைய வீட்டாரை இந்த ஸ்தலத்திலிருந்து வெளியே அழைத்துக்கொண்டு போனால், அவர்களும் அழிவுக்கு தப்பிப்பார்கள். இந்த புருஷர் இருவரும் சோதோம் பட்டணத்தை அழிக்கப்போகிறார்கள்.

கர்த்தருடைய கிருபையினால் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். கிருபையினால் இரட்சிக்கப்பட்டவர்கள், மற்றவர்களுடைய இரட்சிப்புக்கு உதவி செய்யவேண்டும். அதிலும் விசேஷமாக, இரட்சிக்கப்பட்டவர்கள், தங்களுடைய சொந்த குடும்பத்தாரை இரட்சிப்பின் பாதையிலே வழிநடத்தவேண்டும். சோதோம் பட்டணம் அழியும் போது, லோத்து மாத்திரம் அழிவுக்கு தப்பித்தால் போதாது. அவரோடுகூட அவருடைய குடும்பத்தாரும் அழிவுக்கு தப்பிக்கவேண்டும்.

லோத்தின் வீட்டில் தங்கியிருக்கிற இரண்டு புருஷரும், லோத்துக்கு அதிகமான சலுகைகளையும், சிலாக்கியங்களையும் காண்பிக்கிறார்கள், "இவ்விடத்தில் இன்னும் உனக்கு யார் இருக்கிறார்கள், இருந்தால் அவர்களை இந்த ஸ்தலத்திலிருந்து வெளியே அழைத்துக்கொண்டுபோ" என்று இரண்டு புருஷரும் லோத்திடம் சொல்லுகிறார்கள்.

லோத்தின் உற்றார் உறவினர் ஒருவேளை நீதிமான்களாகயிருக்கலாம். அல்லது நீதியில்லாதவர்களாகயிருக்கலாம். அவர்களுடைய சுபாவம் எப்படிப்பட்டதாகயிருந்தாலும் அவர்களும் இந்த அழிவுக்கு தப்பிக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பமாயிருக்கிறது.

ஒரு சில துன்மார்க்கர் இந்த உலகத்தில் நீதிமான்களுக்கு சொந்தக்காரராயிருப்பார்கள். கர்த்தர் அந்த நீதிமான்களை ஆசீர்வதிக்கும்போது, அவர்களுடைய ஆசீர்வாதம், அவர்களுக்கு சொந்தக்காரராயிருக்கிற துன்மார்க்கருக்கும் கடந்து வரும். நாம் பரிசுத்தவான்களோடும், பக்தியுள்ளவர்களோடும் ஐக்கியமாயிருக்கும் போது, நமக்கும் நன்மை உண்டாகும்.

லோத்து தன் வீட்டில் தங்கியிருக்கிற புருஷரின் வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிகிறார். லோத்தின் வீட்டிலே அவருடைய மனைவியும், குமாரத்திகளும், தன்னுடைய குமாரத்திகளை விவாகம்பண்ணப்போகிற மருமக்கள்மாரும் இருக்கிறார்கள்.

லோத்து புறப்பட்டு, தன் குமாரத்திகளை விவாகம்பண்ணப்போகிற தன் மருமக்கள்மாரோடே பேசுகிறார். லோத்து அவர்களை நோக்கி, "நீங்கள் எழுந்து இந்த ஸ்தலத்தை விட்டுப் புறப்படுங்கள்; கர்த்தர் இந்தப் பட்டணத்தை அழிக்கப்போகிறார்" (ஆதி 19:14) என்று சொல்லுகிறார். ஆனால் லோத்துடைய மருமக்கள்மாரின் பார்வைக்கு, லோத்து பேசுவது பரியாசம்பண்ணுகிறதாகக் காணப்படுகிறது.

லோத்தின் எச்சரிப்பிற்கு அவருடைய மருமக்கள்மார்கள் செவிகொடுக்கவில்லை. லோத்தைப் பரியாசம் பண்ணுகிறார்கள். கடைசி நாளில், இயேசுகிறிஸ்து வருவார் என்னும் உபதேசத்தையும் இப்படித்தான் பரியாசக்காரர்கள் பரியாசம் பண்ணுவார்கள். (2பேதுரு 3:3-4) வருவேன் என்று சொன்னவர் நிச்சயமாக வருவார்.

லோத்து தன்னுடைய மருமக்கள்மாரை எச்சரிக்கிறார். லோத்து அவர்களை நோக்கி, "நீங்கள் எழுந்து இந்த ஸ்தலத்தை விட்டுப் புறப்படுங்கள்" என்று சொல்லுகிறார். ஆனால் அவர்களோ லோத்துடைய எச்சரிப்பின் வார்த்தைகளை அசட்டைபண்ணுகிறார்கள்.

லோத்து இரவு முழுவதும், தன்னுடைய வீட்டிற்கு வெளியிலே கூடியிருந்து சோதோம் பட்டணத்து மனுஷரோடு பேசிக்கொண்டிருந்தார். லோத்து அவர்களோடு பேசினதை, அவருடைய மருமக்கள்மாரும் கேட்டிருப்பார்கள். லோத்துக்கு தெளிந்த புத்தியில்லை என்று அவருடைய மருமக்கள்மார் நினைத்திருக்கலாம். ஆகையினால் லோத்துடைய பேச்சுக்கள், அவருடைய மருமக்கள்மாரின் பார்வைக்கு, பரியாச வார்த்தைகளாக தெரிகிறது.

லோத்தின் மருமக்கள்மார் சோதோம் பட்டணத்து மனுஷரைப்போலவே இருக்கிறார்கள். அவர்கள் சோதோமியரின் பாவத்திற்கு பங்காளிகளாகயிருக்கிறார்கள். பாவத்திலே மூழ்கிப்போனவர்களுக்கு, பாவத்தைவிட்டு விடுதலைபெறவேண்டும் என்னும் ஆர்வம் இருக்காது. அவர்கள் எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கமாட்டார்கள். தங்களை எச்சரிக்கிறவர்களை பரியாசம் பண்ணுவார்கள். எச்சரிப்பின் வார்த்தைகளை அசட்டைபண்ணுவார்கள்.

பாவிகள் மனந்திரும்பினாலும், மனந்திரும்பாவிட்டாலும், பாவம் தன்னுடைய வேலையை செய்யும். பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் பெருகும்போது, பாவிகள் தங்கள் பாவத்திலே மூழ்கி அழிந்துபோவார்கள்.

உன் ஜீவன் தப்ப ஓடிப்போ
ஆதி 19:15-23

ஆதி 19:15. கிழக்கு வெளுக்கும்போது அந்தத் தூதர் லோத்தை நோக்கி: பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ அழியாதபடிக்கு எழுந்து, உன் மனைவியையும், இங்கே இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக்கொண்டுபோ என்று சொல்லி, அவனைத் துரிதப்படுத்தினார்கள்.

ஆதி 19:16. அவன் தாமதித்துக்கொண்டிருக்கும்போது, கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே, அந்தப் புருஷர் அவன் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள்.

ஆதி 19:17. அவர்களை வெளியே கொண்டுபோய் விட்டபின்பு, அவர்: உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்.

ஆதி 19:18. அதற்கு லோத்து: அப்படியல்ல ஆண்டவரே,

ஆதி 19:19. உமது கண்களில் உமது அடியேனுக்குக் கிருபை கிடைத்ததே; என் பிராணனைக் காக்கத் தேவரீர் எனக்குச் செய்த கிருபையைப் பெரியதாக விளங்கப்பண்ணினீர்; மலைக்கு ஓடிப்போக என்னால் முடியாது, தீங்கு என்னைத் தொடரும், நான் மரித்துப்போவேன்.

ஆதி 19:20. அதோ, அந்த ஊர் இருக்கிறதே, நான் அதற்கு ஓடிப்போகத்தக்கதாய் அது கிட்ட இருக்கிறது, சின்னதுமாய் இருக்கிறது; என் பிராணன் பிழைக்க நான் அங்கே ஓடிப்போகட்டும், அது சின்ன ஊர்தானே என்றான்.

ஆதி 19:21. அதற்கு அவர்: நீ கேட்டுக்கொண்ட ஊரை நான் கவிழ்த்துப்போடாதபடிக்கு, இந்த விஷயத்திலும் உனக்கு அநுக்கிரகம் பண்ணினேன்.

ஆதி 19:22. தீவிரமாய் அங்கே ஓடித் தப்பித்துக்கொள்: நீ அங்கே போய்ச் சேருமட்டும் நான் ஒன்றும் செய்யக்கூடாது என்றார்; ஆகையால் அந்த ஊர் சோவார் என்னப்பட்டது.

ஆதி 19:23. லோத்து சோவாருக்குள் வரும்போது பூமியின்மேல் சூரியன் உதித்து.

கர்த்தர் லோத்தை சோதோமின் அழிவுக்கு தப்புவிக்கப்பண்ணுகிறார்.

"அப்பொழுது நோவா தானியேல் யோபு ஆகிய இம்மூன்று புருஷரும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களைமாத்திரம் தப்புவிப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசே 14:14).

கிழக்கு வெளுக்கும்போது அந்தத் தூதர் லோத்தை நோக்கி: "பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ அழியாதபடிக்கு எழுந்து, உன் மனைவியையும், இங்கே இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக்கொண்டுபோ" என்று சொல்லி, அவர்கள் லோத்தைத் துரிதப்படுத்துகிறார்கள் (ஆதி 19:15).

லோத்தின் குமாரத்திகளில் திருமணமானவர்கள், விசுவாசமில்லாத தங்கள் கணவன்மாரோடு மரித்துப்போகிறார்கள். லோத்தோடு கூடயிருக்கிற இரண்டு குமாரத்திகளோ, சோதோம் பட்டணத்தின் அழிவுக்கு, லோத்தோடுகூட தப்பிக்கிறார்கள்.

கர்த்தருடைய தூதர்கள் லோத்தை வீட்டைவிட்டு வெளியேறுமாறு துரிதப்படுத்துகிறார்கள். ஆனால் லோத்தோ உடனே புறப்பட்டுப்போகாமல் தாமதப்படுத்துகிறார். சோதோம் பட்டணத்தின்மீது அழிவு நெருங்கி வந்திருக்கிறது. இது காலதாமதம்பண்ணுகிற நேரமல்ல. சம்பாஷணை பண்ணுவதற்கும் போதிய அவகாசமில்லை.

லோத்து தன் வீட்டைவிட்டு உடனே புறப்பட்டுப்போகவேண்டும். சோதோம் பட்டணம் அழியும்போது, லோத்து அந்தப் பட்டணத்தோடுகூட அழிந்துபோவது கர்த்தருக்கு சித்தமில்லை.

லோத்து தன் வீட்டைவிட்டு உடனே வெளியேறிப்போகாமல், தாமதித்துக் கொண்டிருக்கும்போது, கர்த்தர் லோத்தின்மேல் வைத்த இரக்கத்தினாலே, அந்தப் புருஷர் லோத்தின் கையையும், அவருடைய மனைவியின் கையையும், அவருடைய இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவர்களைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விடுகிறார்கள் (ஆதி 19:16).

லோத்து தாமதித்துக்கொண்டிருக்கிறார். விசுவாசத்திற்கும், கண்களின் இச்சைக்கும் போராட்டம் வருகிறது. தூதருடைய கட்டளைக்கு லோத்து கீழ்ப்படிய விரும்புகிறார். ஆனாலும் தாமதம் பண்ணுகிறார். தூதர்கள் லோத்தின் கையையும், அவருடைய வீட்டாரின் கையையும் பிடித்து, அவர்களைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விடுகிறார்கள்.

பட்டணத்திற்கு வெளியே உள்ள அந்த ஊருக்கு சோவார் (ஆதி 19:22) என்று பெயர். இதன் பழைய பெயர் பேலா (ஆதி 14:2,8) என்பதாகும். லோத்து திரளான ஆஸ்தியோடு ஆபிரகாமை விட்டுப் பிரிந்து சோதோமுக்குப் போனார். இப்பொழுது ஒன்றுமில்லாமல் வெறுங்கையோடு சோதோமை விட்டு திரும்பி வருகிறார்.

லோத்தை சோதோமின் அழிவுக்கு தப்புவிக்கப் பண்ணவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் தடைபடாது. கர்த்தருடைய தூதர்கள் லோத்தையும், அவருடைய வீட்டாரையும், கையைப் பிடித்து, பலவந்தமாய் வீட்டைவிட்டு வெளியே கொண்டு வருகிறார்கள். தேவதூதர்கள் லோத்தையும், அவருடைய வீட்டாரையும் பயத்தோடே இரட்சிக்கிறார்கள்.

லோத்து இன்னும் கொஞ்சநேரம் தாமதித்துக்கொண்டிருந்தால், சோதோம் பட்டணம் அழியும்போது, லோத்தும் அதோடு சேர்ந்து அழிந்துபோவாரோ என்னும் பயம் கர்த்தருடைய தூதருக்கு உண்டாயிற்று. ஆகையினால் அவர்கள் லோத்தின் கையையும், அவருடைய குடும்பத்தாரின் கையையும் பிடித்து, சோதோம் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய்விடுகிறார்கள்.

"அல்லாமலும், நீங்கள் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து, சிலருக்கு இரக்கம் பாராட்டி, சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு, பயத்தோடே இரட்சித்து, மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத் தள்ளுங்கள்" (யூதா 22, 23).

லோத்து நீதிமானாகயிருந்தாலும், அவர் கர்த்தருடைய கிருபையினாலும் இரக்கத்தினாலுமே இரட்சிக்கப்படுகிறார். நீதிமான்கள் தங்களுடைய சொந்த நீதியினால் இரட்சிக்கப்படுவதில்லை. நாம் எல்லோருமே கர்த்தருடைய கிருபையினாலேயே இரட்சிக்கப்படுகிறோம்.

கர்த்தருடைய தூதர்கள் லோத்தையும், அவருடைய வீட்டாரையும் சோதோம் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய்விடுகிறார்கள். அதன் பின்பு கர்த்தர் லோத்தை நோக்கி, "உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ" (ஆதி 19:17) என்று சொல்லுகிறார்.

லோத்து சோதோம் பட்டணத்தை பின்னிட்டுப் பார்க்கக்கூடாது. அவர் இந்த சமபூமியில் எங்கும் நிற்கவும் கூடாது. லோத்து அழிந்துபோகக்கூடாது என்றால் அவர் மலைக்கு ஓடிப்போகவேண்டும். அந்த மலையே லோத்துக்கு அடைக்கலஸ்தலம். கர்த்தர் நியமித்த அந்த ஸ்தலத்தை விட்டுவிட்டு, லோத்து வேறு எந்த ஸ்தலத்திற்கும் போய்விடக்கூடாது.

நாம் பாவத்தில் விழுந்துகிடக்கும்போது, கர்த்தர் தம்முடைய கிருபையினால் நம்மை இரட்சிக்கிறார். நாம் செய்யவேண்டிய காரியங்களை கர்த்தர் நமக்கு கட்டளையாக சொல்லுகிறார். நாம் பாவத்திற்கு தப்பிக்கவேண்டுமென்றால் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும்.

பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுகிறவர்கள் மறுபடியும் தங்கள் பாவத்திற்கு திரும்பிப்போய்விடக்கூடாது. சாத்தானின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறவர்கள், மறுபடியும் சாத்தானுக்கு அடிமைகளாகிவிடக்கூடாது. லோத்து சோதோமிலிருந்து தப்பி வந்திருக்கிறார். அவர் மறுபடியும் சோதோமுக்கு போய்விடக்கூடாது.

கர்த்தர் லோத்தைப் பார்த்து, "இந்த சமபூமியில் எங்கும் நில்லாதே" என்று சொல்லுகிறார். சமபூமி என்பது இந்தப் பிரபஞ்சத்தையும், இந்தப் பிரபஞ்சத்தின் ஆசாபாசங்களையும் குறிக்கும். இரட்சிக்கப்பட்டவர்கள் இந்த உலகத்திற்கு ஒத்தவேஷம் தரிக்கக்கூடாது. உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பாவம்.

கர்த்தர் லோத்தைப் பார்த்து, "நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ" என்று சொல்லுகிறார். மலை என்பது கிறிஸ்துவையும், பரலோகத்தையும் குறிக்கிறது. நாம் கிறிஸ்துவை நோக்கி முன்னேறிப்போக வேண்டும். பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதே நம்முடைய இலக்கு. இந்த உலகம் நாம் சிறிதுகாலம் பரதேசியாய் தங்கியிருக்கிற ஸ்தலம்.

கர்த்தர் லோத்தைப் பாதுகாப்பதற்கு, மலையை நியமித்திருக்கிறார். லோத்து அந்த மலைக்கு ஓடிப்போகவேண்டும். அப்போதுதான் லோத்தால் அழிவுக்கு தப்பிக்க முடியும். ஆனால் லோத்தோ அந்த மலைக்கு போக விரும்பவில்லை. அவர் கர்த்தரிடத்தில், "அப்படியல்ல ஆண்டவரே, மலைக்கு ஓடிப்போக என்னால் முடியாது" (ஆதி 19:18,19) என்று சொல்லுகிறார்.

லோத்து கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய மறுக்கிறார். லோத்து கர்த்தரை நோக்கி, "அப்படியல்ல ஆண்டவரே, உமது கண்களில் உமது அடியேனுக்குக் கிருபை கிடைத்ததே; என் பிராணனைக் காக்கத் தேவரீர் எனக்குச் செய்த கிருபையைப் பெரியதாக விளங்கப்பண்ணினீர்; மலைக்கு ஓடிப்போக என்னால் முடியாது, தீங்கு என்னைத் தொடரும், நான் மரித்துப்போவேன்" (ஆதி 19:18,19) என்று சொல்லுகிறார்.

லோத்து கிட்ட இருக்கிற சோவார் என்னும் சின்ன ஊரில் தங்குகிறார். அவரால் மலைக்கு ஓடிப்போக முடியவில்லை. ஆனாலும் சோவாருக்கும், சோதோமைப் போன்று அழிவு வந்துவிடுமோ என்று பயந்து, லோத்து இறுதியில் சோவாரை விட்டு மலை பிரதேசத்திற்குத் தப்பித்துப் போய்விடுகிறார். (ஆதி 19:30).

லோத்து சமபூமியிலிருக்கிற ஒரு ஊரில் தங்க விரும்புகிறார். அவருக்கு மலைக்குப்போக விருப்பமில்லை. அந்த ஊருக்கு பேலா (ஆதி 14:2) என்று பேர். அந்த ஊருக்கு சோவார் என்னும் மறுபெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. பேலா பெரிய ஊர் அல்ல. அது ஒரு சின்ன ஊர். ஆனாலும் கர்த்தர் சொன்ன மலையைவிட, இந்த ஊர் லோத்துக்கு அருகாமையிலிருக்கிறது. கர்த்தர் தனக்கு நியமித்த இலக்கை நோக்கிப் போகாமல், லோத்து தனக்கு அருகாமையிலிருக்கிற ஸ்தலத்திற்கு போகவிரும்புகிறார்.

லோத்து கர்த்தரை நோக்கி, "அதோ, அந்த ஊர் இருக்கிறதே, நான் அதற்கு ஓடிப்போகத்தக்கதாய் அது கிட்ட இருக்கிறது, சின்னதுமாய் இருக்கிறது; என் பிராணன் பிழைக்க நான் அங்கே ஓடிப்போகட்டும், அது சின்ன ஊர்தானே" (ஆதி 19:20) என்று சொல்லுகிறார்.

நாம் கர்த்தருடைய சித்தத்திற்கும், திட்டத்திற்கும் கீழ்ப்படியவேண்டும். லோத்து கர்த்தர் நியமித்த மலைக்குப்போகாமல், தான் தெரிந்துகொண்ட ஊருக்குப்போக விரும்புகிறார். கர்த்தர் தெரிந்துகொண்ட மலையைவிட, தான் தெரிந்துகொண்ட ஊரே, தனக்கு பாதுகாப்பாயிருக்கும் என்று லோத்து நினைக்கிறார்.

தான் கர்த்தர் சொன்ன மலைக்கு ஓடிப்போனால், தீங்கு தன்னைத் தொடரும் என்றும், தான் அங்கே மரித்துப்போகப்போவதாகவும் லோத்து பயப்படுகிறார். கர்த்தர் சொன்ன மலையில்தான் லோத்துக்கு பாதுகாப்பு கிடைக்கும். ஒருவேளை கர்த்தர் சொன்ன மலைக்கு போவதற்கு பதிலாக, லோத்து தெரிந்தெடுத்த ஊருக்குப்போவது, இப்போது எளிதாகயிருக்கலாம். மலைக்குப்போவது லோத்துக்கு கடினமானதாகயிருக்கலாம்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற பாதை கடினமானதாகயிருந்தாலும், அந்தப் பாதையே நமக்கு பாதுகாப்பானது. அதுவே நமக்கு ஆசீர்வாதமானது.

கர்த்தர் சொன்ன மலை தூரத்திலிருக்கிறது. லோத்து தெரிந்துகொண்ட ஊர் அவருக்கு கிட்ட இருக்கிறது. அது சின்னதாயும் இருக்கிறது. ஆகையினால் அந்த ஊருக்கு சோவார் என்னும் பெயர் வழங்கப்படலாயிற்று. இந்தப் பெயருக்கு "சின்னஊர்" என்று பொருள்.

கர்த்தர் லோத்தோடு வழக்காடவில்லை. லோத்து எங்கே ஓடினாலும் அவர் சோதோமைவிட்டு சீக்கிரமாகவும், தீவிரமாகவும் ஓடவேண்டும். சோதோம் சீக்கிரத்தில் அழியப்போகிறது. லோத்து அதிகமாகப் பேசுவதற்கோ, அதிகமாக யோசிப்பதற்கோ இப்போது காலஅவகாசமில்லை. சகலமும் துரிதமாயும் தீவிரமாயும் நடைபெறவேண்டும்.

லோத்து தனக்கு அருகாமையிலிருக்கிற சின்ன ஊருக்கு ஓடிப்போகவேண்டுமென்று கர்த்தரிடத்தில் கேட்கிறார். அப்போது கர்த்தர் லோத்தை நோக்கி, "நீ கேட்டுக்கொண்ட ஊரை நான் கவிழ்த்துப்போடாதபடிக்கு, இந்த விஷயத்திலும் உனக்கு அநுக்கிரகம் பண்ணினேன். தீவிரமாய் அங்கே ஓடித் தப்பித்துக்கொள்; நீ அங்கே போய்ச் சேருமட்டும் நான் ஒன்றும் செய்யக்கூடாது" (ஆதி 19:21,22) என்று சொல்லுகிறார்.

"நீ அங்கே போய்ச் சேருமட்டும் நான் ஒன்றும் செய்யக்கூடாது" என்று கர்த்தர் சொல்லுகிறார். தேவனுடைய கிரியையை மனுஷன் தாமதப்படுத்துவதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. மனுஷனால் தேவனுடைய கிரியையைத் தடைபண்ண முடியாது. என்றாலும் தேவன் இரக்கமுள்ளவராக இருக்கின்றபடியினால், அவர் தமது நியாயத்தீர்ப்பை அனுப்புவதற்கு முன்பாக தமது இரக்கத்தை வெளிப்படுத்துகிறார். கர்த்தர் தமது நியாயத்தீர்ப்பை தாமதப்படுத்துகிறார்.

லோத்து தம்முடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாவிட்டாலும், கர்த்தர் அவருடைய மனதின் விருப்பத்தை அங்கீகரிக்கிறார். லோத்து கேட்டுக்கொண்ட பிரகாரம், கர்த்தர் அந்த ஊரை கவிழ்த்துப்போடவில்லை. கர்த்தர் இந்த விஷயத்திலும் லோத்துக்கு அநுக்கிரகம் பண்ணுகிறார். அந்த ஊருக்கு போகவேண்டுமென்று லோத்து தீர்மானம்பண்ணுகிறார். கர்த்தர் லோத்தின் தீர்மானத்தை அங்கீகரித்து, "தீவிரமாய் அங்கே ஓடி தப்பித்துக்கொள்" என்று கட்டளையிடுகிறார்.

லோத்து தப்பிக்கவேண்டுமென்றால் சோதோமைவிட்டு தீவிரமாய் ஓடிப்போகவேண்டும். சோதோமிலிருந்து கொண்டு, அழிவுக்கு தப்பிப்பது என்பது இயலாத காரியம். நாம் பாவத்திலிருந்து விடுதலை பெறவேண்டுமென்றால், பாவத்தைவிட்டு வெளியேறி வரவேண்டும். பாவத்திலிருந்துகொண்டே, பாவத்திலிருந்து விடுதலை பெறுவது என்பது இயலாத காரியம்.

கர்த்தருடைய தூதர் லோத்தையும் அவருடைய மனைவியையும், அவருடைய இரண்டு குமாரத்திகளையும், வீட்டைவிட்டு வெளியேறுமாறு துரிதப்படுத்தியபோது, கிழக்கு வெளுக்கும் வேளையாயிருந்தது. லோத்து சோவாருக்குள் வரும்போது பூமியின்மேல் சூரியன் உதிக்கிறது (ஆதி 19:23).

நீதிமான்கள் ஒரு ஸ்தலத்திற்கு வரும்போது, அவர்கள் தங்களோடுகூட அங்கே வெளிச்சத்தையும் கொண்டுவருவார்கள். நீதிமான்கள் இருக்கும் ஊரிலே, நீதியின் சூரியனாகிய இயேசுகிறிஸ்து பிரகாசமாக உதிப்பார். அந்த ஊரிலே கிறிஸ்துவானவரின் பரிசுத்தமான பிரசன்னம் பிரசாகமாகயிருக்கும். கிறிஸ்துவே அவர்களுக்கு வெளிச்சமாயிருப்பார்.

சோதோமும் கொமோராவும் அழிந்தது ஆதி 19:24,25

ஆதி 19:24. அப்பொழுது கர்த்தர் சோதோமின் மேலும் கொமோராவின்மேலும், கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி,

ஆதி 19:25. அந்தப் பட்டணங்களையும், அந்தச் சமபூமியனைத்தையும், அந்தப் பட்டணங்களின் எல்லாக் குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்துப்போட்டார்.

லோத்து சோவாருக்குள் போனபொழுது, கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழித்துப்போடுகிறார். ஒரு பட்டணத்திற்கு தீங்கு வருவதற்கு முன்பாகவே, அந்தப் பட்டணத்திலுள்ள நல்லவர்களெல்லாம் வெளியேற்றப்படுகிறார்கள். அவர்கள் அழிவுக்கு தப்பிக்கிறார்கள்.

லோத்து சோவாருக்குள் வரும்போது, பூமியின்மேல் சூரியன் உதிக்கிறது. வானம் தெளிவாகவும், வெளிச்சம் பிரகாசமாகவும் இருக்கிறது. சூரியன் உதிப்பது நன்மைக்கு அடையாளம். கர்த்தர் சோதோமின் மேலும் கொமோராவின்மேலும் வானத்திலிருந்து கந்தகத்தையும், அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி, அந்தப் பட்டணங்களை அழித்துப்போடுகிறார். அந்தப் பட்டணங்களோடே, அந்த சமபூமி அனைத்தையும், அந்தப் பட்டணங்களில் எல்லா குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்துப்போடுகிறார்.

கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பு சோதோம் கொமோரா ஆகிய பட்டணங்களின்மீது விநோதமாக வந்திருக்கிறது. இதற்கு முன்பு எந்தப் பட்டணத்தின் மீதும் இப்படிப்பட்ட அழிவு வந்ததில்லை.

"மாறுபாடானவனுக்கு ஆபத்தும், அக்கிரமச் செய்கைக்காரருக்கு ஆக்கினையுமல்லவோ கிடைக்கும்" (யோபு 31:3).

சோதோமும் கொமோராவும் இயற்கையாகவே நீர் வளம் மிகுந்த பட்டணங்கள். அந்த சமபூமியில் ஏராளமான கனிவிருட்சங்கள் முளைத்திருந்தது. ஆனால் இப்போதோ அந்த சமபூமி அனைத்தும், அந்தப் பூமியின் மேலுள்ள பயிர்களும், கனிவிருட்சங்களும் மொத்தமாக அழிந்துபோகிறது.

சோதோம் கொமோராவிலுள்ள செழிப்பான சமபூமி, இப்போது சவக்கடல் அல்லது உப்புக்கடல் என்று அழைக்கப்படுகிறது.

"அங்கேயிருந்து யோர்தான்பரியந்தமும் போய், உப்புக்கடலில் முடியும்; இந்தச் சுற்றெல்லைகளையுடைய தேசமே உங்களுக்குரிய தேசம் என்று சொல் என்றார்" (எண் 34:12).

உப்புக்கடல் முப்பது மைல் நீளமும், பத்து மைல் அகலமுமுள்ளது. இந்தக் கடலிலே ஜீவராசிகள் எதுவும் உயிரோடில்லை. உப்புக்கடலின் தண்ணீர் கனமாகவும், கடினமாகவும் இருக்கும். புயல்காற்றும் உப்புக்கடலை சேதப்படுத்துவதில்லை. உப்புக்கடலின் தண்ணீர் அடர்த்தியாக யிருப்பதினால், இதில் பொருட்கள் எளிதாக மூழ்குவதுமில்லை. இந்தக் கடலின் நெடியும் துர்நாற்றமாயிருக்கும். யோர்தான் நதி உப்புக்கடலில் கலக்கிறது.

சோதோம் கொமோரா ஆகிய பட்டணங்களின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். அவர்களுடைய பாவங்களுக்கு தண்டனையாகவே, அந்தப் பட்டணங்களின் சமபூமி உப்புக்கடலாயிற்று. அந்நிய மாம்சத்தை பின்பற்றிப்போகிறவர்கள், அந்நிய அக்கினியினால் அழிக்கப்படுவார்கள்.

"அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும், அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும், அவர்களைப்போல் விபசாரம்பண்ணி, அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்" (யூதா 7).

பரிசுத்த வேதாகமத்தில் ஒரு தேசத்தின் அழிவைப்பற்றிச் சொல்லும்போது, அதை சோதோம் கொமோராவின் அழிவோடு ஒப்பிட்டுச் சொல்லப்படுவது வழக்கமாயிருக்கிறது.

"கர்த்தர் தமது கோபத்திலும் தமது உக்கிரத்திலும் சோதோமையும் கொமோராவையும் அத்மாவையும் செபோயீமையும் கவிழ்த்துப்போட்டதுபோல, இந்த தேசத்தின் நிலங்களெல்லாம் விதைப்பும் விளைவும் யாதொரு பூண்டின் முளைப்பும் இல்லாதபடிக்கு, கந்தகத்தாலும் உப்பாலும் எரிக்கப்பட்டதைக் காணும்போதும், அந்த ஜாதிகளெல்லாம் கர்த்தர் இந்த தேசத்திற்கு ஏன் இப்படிச் செய்தார்; இந்த மகா கோபம் பற்றியெரிந்ததற்குக் காரணம் என்ன என்று சொல்லுவார்கள்" (உபா 29:23,24).

"ராஜ்யங்களுக்குள் அலங்காரமும், கல்தேயருடைய பிரதான மகிமையுமாகிய பாபிலோனானது தேவனால் சோதோமும் கொமோராவும் கவிழ்க்கப்பட்டதுபோல கவிழ்க்கப்படும்" (ஏசா 13:19).

"சோதோமும் கொமோராவும் அவைகளின் சுற்றுப்புறங்களும் கவிழ்க்கப்பட்டதுபோல இதுவும் கவிழ்க்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அங்கே ஒருவனும் குடியிருப்பதில்லை, அதில் ஒரு மனுபுத்திரனும் தங்குவதில்லை" (எரே 49:18).

"ஆகையால் மோவாப் சோதோமைப்போலும், அம்மோன் புத்திரரின் தேசம் கொமோராவைப்போலுமாகி, காஞ்செறி படரும் இடமும், உப்புப் பள்ளமும், நித்திய பாழுமாயிருக்கும்; என் ஜனத்தில் மீந்தவர்கள் அவர்களைக் கொள்ளையிட்டு, என் ஜாதியில் மீதியானவர்கள் அவர்களைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்" (செப் 2:9).

லோத்து சோவாருக்குள் வரும்போது கர்த்தர் சமபூமியிலுள்ள பட்டணங்களை அழித்துப் போடுகிறார். லோத்தின் பரிந்துபேசும் ஜெபத்தின் மூலமாக சோவார் தப்புகிறது. (ஆதி 19:18-22). ஆபிரகாமும் சோதோமிற்காகத் தேவனிடத்தில் பரிந்து பேசியிருக்கிறார். (ஆதி 18:23-33) கர்த்தர் சோவாரை அழிக்காமல் விட்டு விட்டதற்கு இவர்களுடைய பரிந்து பேசும் ஜெபம் முக்கியமான காரணமாக இருக்கலாம்.

சோவார் பல வருஷங்கள் அழிக்கப்படாமல் இருந்தது. இதற்கு ஜெபம் மட்டும் காரணமல்ல. மற்ற பட்டணங்களைப் போல சோவார் நியாயத் தீர்ப்பிற்கு ஆயத்தமாக இல்லை. (உபா 34:3; ஏசா 15:5; எரே 48:34).

"கர்த்தராலே வானத்திலிருந்து" என்று இந்த வசனத்தில் (ஆதி 19:24) இரண்டு கர்த்தர்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு கர்த்தர் பூமியிலிருக்கிறார். வானத்திலிருந்து கந்தகத்தையும், அக்கினியையும் வருஷிக்கப் பண்ணுகிறார். மற்றொரு கர்த்தர் வானத்தில் இருக்கிறார். அவராலே கந்தகமும், அக்கினியும் வருகிறது (ஆதி 19:24).

வேதத்தில் பல இடங்களில் கர்த்தருடைய தூதன் என்னும் வாக்கியம் கர்த்தரையும், தேவனையும் குறிக்கிறது. (ஆதி 16:7-11; ஆதி 22:1-16; யாத் 14:19-31; எண் 22:22-35; நியா 2:1-4; நியா 6:11-24; நியா 13:2-25; சக 1:9-19; சக 3:1-6; சக 12:8; அப் 7:30-38). ஒரு யெகோவா இன்னொரு யெகோவாவைத் தமது தூதராக அனுப்புகிறார். (யாத் 6:3) இந்தச் சத்தியம் திரித்துவத்தை விளக்குகிறது.

லோத்தின் மனைவி
ஆதி 19:26

ஆதி 19:26. அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து, உப்புத்தூண் ஆனாள்.

நம்முடைய அறிவுரைக்காகவும், புத்திமதிக்காகவும் லோத்தின் மனைவியைப்பற்றி இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் லோத்தின் மனைவியைப்பற்றி சொல்லியிருக்கிறார்.

"லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்" (லூக் 17:32).

துன்மார்க்கர் தங்களுடைய துன்மார்க்கமான கிரியைகளுக்கு விலகவேண்டும் என்பதற்கு சோதோம் அடையாளமாக சொல்லப்பட்டிருக்கிறது. நீதிமான்கள் தங்களுடைய நீதியின் பாதையிலிருந்து விலகிப்போய்விடக்கூடாது என்பதற்கு எச்சரிப்பாக, லோத்தின் மனைவி அடையாளமாக சொல்லப்பட்டிருக்கிறாள்.

"சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்த துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; அவன் இரத்தப் பழியையோ உன் கையிலே கேட்பேன்" (எசே 3:18).

"நீ துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும்விட்டுத் திரும்பாமற்போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; நீயோவென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய்" (எசே 3:19).

"அப்படியே, நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, நீதிகேடு செய்யும்போதும், நான் அவன்முன் இடறலை வைக்கும்போதும், அவன் சாவான்; நீ அவனை எச்சரிக்காதபடியினாலே அவன் தன் பாவத்திலே சாவான்; அவன் செய்த நீதிகள் நினைக்கப்படுவதில்லை; அவனுடைய இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன்" (எசே 3:20).

லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்த்தாள். இதுவே அவள் செய்த பாவம். கர்த்தருடைய தூதர்கள் லோத்தையும், அவருடைய மனைவியையும், அவருடைய குமாரத்திகளையும் சோதோம் பட்டணத்திற்கு வெளியே கொண்டு போய்விட்ட பின்பு, "உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே" என்று சொன்னார் (ஆதி 19:17). லோத்தின் மனைவியோ இந்தக் கட்டளைக்கு கீழ்ப்படியாமல் பின்னிட்டுப் பார்த்தாள்.

லோத்தின் மனைவி ஒருவேளை சோதோமிலுள்ள தன்னுடைய வீட்டையும், வீட்டிலுள்ள பொருட்களையும் அதிகமாய் நேசித்திருக்கலாம். அவற்றிற்கு என்ன ஆயிற்றோ என்பதை பார்க்கும் ஆவலில், அவள் பின்னிட்டு திரும்பிப் பார்த்திருக்கலாம். லோத்தின் மனைவிக்கு ஜீவன் தப்பிக்க ஆசையாயிருக்கிறது. அதே வேளையில், தன் ஜீவனோடு, சோதோமிலுள்ள தன் வீடும், வீட்டிலுள்ள உடமைகளும் தப்பிக்கவேண்டுமென்றும் ஆசைப்படுகிறாள்.

இக்காலத்திலும் சிலர் இயேசுகிறிஸ்துவையும், இந்த உலகத்தையும் நேசிக்கிறார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவுக்கும் இந்த உலகத்திற்கும் ஊழியம் செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். இது இயலாத காரியம். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள், தங்களை வெறுத்து, தங்கள் சிலுவையை சுமக்கவேண்டும்.

லோத்தின் மனைவி பின்னிட்டுத் திரும்பிப் பார்த்து உப்புத்தூண் ஆனதை, இயேசுகிறிஸ்துவும் தம்முடைய உபதேசத்தில் எடுத்துக்காட்டாக சொல்லுகிறார்.

"மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும். அந்த நாளிலே வீட்டின்மேலிருப்பவன் வீட்டிலுள்ள தன் பண்டங்களை எடுத்துக்கொண்டுபோக இறங்காமல் இருக்கக்கடவன்; அப்படியே வயலிலிருக்கிறவன் பின்னிட்டுத் திரும்பாமலும் இருக்கக்கடவன். லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்" (லூக் 17:30-32).

லோத்தின் மனைவி வேடிக்கை பார்ப்பதற்காக சோதோமை பின்னிட்டுப் பார்க்கவில்லை. அவள் சோதோமுக்கு திரும்பிப்போக ஆசைப்படுகிறாள். அவளுடைய சரீரம் சோதோமைவிட்டு வெளியே இருந்தாலும், அவளுடைய மனது சோதோமுக்குள்ளேயே இருக்கிறது.

இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள், தங்கள் முழுஇருதயத்தோடும், முழுமனதோடும் அவரைப் பின்பற்றவேண்டும். கர்த்தரை பின்பற்றுகிறவர்கள், அவரையும், அவருடைய வார்த்தைகளையும் விட்டு விலகிப்போய்விடக்கூடாது.

இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள், இந்த உலகத்தையும், தங்கள் மாம்சத்தையும் விட்டு விலகி வந்திருக்கிறார்கள். விசுவாசிகள் இந்தப் பூமியை நோக்கிப் பார்க்காமல், பரலோகத்தை நோக்கிப் பார்க்கிறார்கள். நாம் இந்தப் பூமியில் சிறிதுகாலம், பரதேசிகளாக தங்கியிருக்கிறோம். நாம் உலகப்பிரகாரமான காரியங்களை வெறுத்து, கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறோம். நாம் ஏற்கெனவே வெறுத்தவைகளை மறுபடியும் விரும்புவது நமக்கு ஆபத்தாயிருக்கும்.

லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்த்து பாவம் செய்கிறாள். அவளுடைய பாவத்திற்கு தண்டனை கொடுக்கப்படுகிறது. அவள் சோதோமின் அழிவுக்கு தப்பித்தாள். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அவள்மீது இருந்ததினால்தான், தேவதூதர்கள் அவளுடைய கையையும் பிடித்து, அவளை சோதோம் பட்டணத்திற்கு வெளியே கொண்டு வந்து விட்டார்கள். கர்த்தருடைய இரக்கத்தினாலேயே லோத்தின் மனைவி சோதோமின் அழிவுக்கு தப்பினாள். ஆனாலும் அவள் கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் அசட்டைபண்ணி, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், சோதோமை பின்னிட்டுப் பார்த்தாள்.

பாவத்தைவிட்டு விலகி வந்தவர்கள், மறுபடியுமாக அந்தப் பாவத்திற்கு திரும்பிப் போகக்கூடாது. அது அவர்களுடைய ஜீவனுக்கு மிகவும் ஆபத்தாயிருக்கும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், நாம் எப்போதுமே கர்த்தரை நோக்கிப் பார்க்கவேண்டும். கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும். கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லவேண்டும். இதுவே விசுவாசிகளின் ஆவிக்குரிய பிரயாணம்.

"சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" (பிலி 3:13,14).

லோத்தின் மனைவி தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவில்லை. அவள் உலகத்தின்மீது ஆசை வைத்திருந்தாள். அதனால் அழிந்துபோனாள். (ஆதி 19:17; லூக்கா 17:32; நீதி 14:14; எபி 10:38).

ஆபிரகாம்
ஆதி 19:27-29

ஆதி 19:27. விடியற்காலத்தில் ஆபிரகாம் எழுந்து, தான் கர்த்தருக்கு முன்பாக நின்ற இடத்திற்குப் போய்,

ஆதி 19:28. சோதோம் கொமோரா பட்டணங்களின் திசையையும், சமபூமியாகிய தேசம் முழுவதையும் நோக்கிப் பார்த்தான்; அந்தப் பூமியின் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று.

ஆதி 19:29. தேவன் அந்தச் சமபூமியின் பட்டணங்களை அழிக்கும்போது, தேவன் ஆபிரகாமை நினைத்து, லோத்து குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப்போடுகையில், லோத்தை அந்த அழிவின் நடுவிலிருந்து தப்பிப்போகும்படி அனுப்பிவிட்டார்.

கர்த்தர் சோதோம் கொமோரா ஆகிய பட்டணங்களை அக்கினியினால் அழித்துப்போடுகிறார். இந்தப் பட்டணங்கள் அழிக்கப்படும் சம்பவத்தைப்பற்றிச் சொல்லும்போது, ஆபிரகாமின் பக்தியைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

விடியற்காலத்தில் ஆபிரகாம் எழுந்து, தான் கர்த்தருக்கு முன்பாக நின்ற இடத்திற்குப் போய், சோதோம் கொமோரா பட்டணங்களின் திசையையும், சமபூமியாகிய தேசம் முழுவதையும் நோக்கிப் பார்க்கிறார் (ஆதி 19:27,28).

ஆபிரகாம் இதற்கு முன்பு கர்த்தரிடத்திலே அந்தப் பட்டணங்களுக்காக பரிந்துபேசி ஜெபம்பண்ணினார். கர்த்தர் தன்னுடைய ஜெபத்திற்கு என்ன பதில் கொடுத்திருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளும் ஆவல் ஆபிரகாமின் மனதில் உண்டாயிற்று.

கர்த்தர் நம்முடைய ஜெபத்திற்கும் விண்ணப்பத்திற்கும் செவிகொடுக்கிறவர். அவர் செவிகொடுப்பது மாத்திரமல்ல, நம்முடைய ஜெபத்திற்கு பதிலும் கொடுக்கிறார். நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, நம்முடைய ஜெபத்திற்கு கர்த்தரிடத்திலிருந்து பதிலைப் பெற்றுக்கொள்வோம் என்னும் நம்பிக்கையோடும், தீர்மானத்தோடும் ஜெபம்பண்ணவேண்டும்.

"கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்; காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன்" (சங் 5:3).

ஆபிரகாம் சோதோம் கொமோரா பட்டணங்களின் திசையையும், சமபூமியாகிய தேசம் முழுவதையும் நோக்கிப் பார்க்கிறார்; அந்தப் பூமியின் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று (ஆதி 19:28).

கர்த்தர் ஆபிரகாமின்மீது அன்பாயிருக்கிறார். அவரை நினைவுகூருகிறார். ஆபிரகாம் இதற்கு முன்பு தன்னுடைய குமாரன் இஸ்மவேலுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினார். கர்த்தர் ஆபிரகாமின் ஜெபத்தை கேட்டருளி, இஸ்மவேலை ஈசாக்கின் நிமித்தமாக ஆசீர்வதித்தார்.

ஆபிரகாம் இப்போது சோதோமுக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ணினார். கர்த்தர் லோத்துக்காக, ஆபிரகாமின் ஜெபத்தைக் கேட்டருளுகிறார். கர்த்தர் ஆபிரகாமை நினைத்து, லோத்தை அந்த அழிவின் நடுவிலிருந்து தப்பிப்போகும்படி அனுப்பிவிடுகிறார். கர்த்தர் தம்முடைய நீதியினால் லோத்து குடியிருந்த பட்டணங்களை கவிழ்த்துப்போட்டாலும், அவர் ஆபிரகாமை நினைத்து, லோத்தை அழிவின் நடுவிலிருந்து தப்பிப்போகும்படி அனுப்பிவிடுகிறார்.

நாம் கர்த்தரிடத்தில் விசுவாசத்தோடு ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் மெய்யாகவே நமக்கு சமாதானமான பிரதியுத்தரம் கொடுப்பார். நம்முடைய ஜெபத்திற்கு கர்த்தர் தமக்கு சித்தமான வேளையிலே, தமக்கு சித்தமான வழியிலே பதில் கொடுப்பார். ஒருவேளை கர்த்தருடைய பதிலைப் பெற்றுக்கொள்வதில் காலதாமதம் ஏற்படலாம். கர்த்தர் சிறிதுகாலம் நம்மை மறந்துவிட்டாரோ என்னும் எண்ணங்கூட நமக்குள்ளே ஏற்படலாம். ஆனாலும் கர்த்தர் நம்மை ஒருபோதும் மறக்கமாட்டார். தமக்கு ஏற்ற வேளையிலே, கர்த்தர் நம்முடைய ஜெபத்திற்கு பதில் கொடுப்பார்.

கர்த்தர் சோதோம் கொமோராவினுடைய சமபூமியின் பட்டணங்களை அழிக்கும்போது, அவர் ஆபிரகாமை நினைவுகூருகிறார். நாம் கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருக்கும்போது, கர்த்தருடைய நீதியான பாதைகளை நாம் காத்துக்கொள்ளும்போது, கர்த்தர் துன்மார்க்கரை அழித்தாலும், அந்த வேளையிலும் அவர் தமது கிருபையினால் நம்மை நினைவுகூருவார்.

லோத்தின் இரண்டு குமாரத்திகள் ஆதி 19:30-38

ஆதி 19:30. பின்பு லோத்து சோவாரிலே குடியிருக்கப் பயந்து, சோவாரை விட்டுப்போய், அவனும் அவனோடேகூட அவனுடைய இரண்டு குமாரத்திகளும் மலையிலே வாசம்பண்ணினார்கள்; அங்கே அவனும் அவனுடைய இரண்டு குமாரத்திகளும் ஒரு கெபியிலே குடியிருந்தார்கள்.

ஆதி 19:31. அப்பொழுது மூத்தவள் இளையவளைப் பார்த்து: நம்முடைய தகப்பன் முதிர்வயதானார், பூமியெங்கும் நடக்கிற முறைமையின்படியே நம்மோடே சேரப் பூமியிலே ஒரு புருஷனும் இல்லை.

ஆதி 19:32. நம்முடைய தகப்பனால் சந்ததி உண்டாகும்படிக்கு, அவருக்கு மதுவைக் குடிக்கக்கொடுத்து, அவரோடே சயனிப்போம் வா என்றாள்.

ஆதி 19:33. அப்படியே அன்று இரவிலே, தங்கள் தகப்பனுக்கு மதுவைக் குடிக்கக் கொடுத்தார்கள். மூத்தவள் போய், தன் தகப்பனோடே சயனித்தாள்; அவள் சயனித்ததையும் எழுந்திருந்ததையும் அவன் உணராதிருந்தான்.

ஆதி 19:34. மறுநாளிலே மூத்தவள் இளையவளைப்பார்த்து: நேற்று ராத்திரி நான் தகப்பனோடே சயனித்தேன்; இன்று ராத்திரியும் மதுவைக் குடிக்கக் கொடுப்போம், நம்முடைய தகப்பனால் சந்ததி உண்டாகும்படி நீ போய் அவரோடே சயனி என்றாள்.

ஆதி 19:35. அப்படியே அன்று ராத்திரியிலும் தங்கள் தகப்பனுக்கு மதுவைக் குடிக்கக் கொடுத்தார்கள். அப்பொழுது இளையவள் எழுந்துபோய், அவனோடே சயனித்தாள்; அவள் சயனித்ததையும் எழுந்திருந்ததையும் அவன் உணராதிருந்தான்.

ஆதி 19:36. இவ்விதமாய் லோத்தின் குமாரத்திகள் இருவரும் தங்கள் தகப்பனாலே கர்ப்பவதியானார்கள்.

ஆதி 19:37. மூத்தவள் ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்கு மோவாப் என்று பேரிட்டாள்; அவன் இந்நாள்வரைக்கும் இருக்கிற மோவாபியருக்குத் தகப்பன்.

ஆதி 19:38. இளையவளும் ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குப் பென்னம்மி என்று பேரிட்டாள்; அவன் இந்நாள்வரைக்கும் இருக்கிற அம்மோன் புத்திரருக்குத் தகப்பன்.

லோத்தும், அவருடைய இரண்டு குமாரத்திகளும் அழிவுக்கு தப்பிக்கிறார்கள். லோத்தின் மனைவியோ திரும்பிப் பார்த்து உப்புத்தூணானாள். கர்த்தர் லோத்தை மலைக்கு ஓடிப்போகச் சொன்னார். ஆனால் லோத்தோ சோவார் என்னப்பட்ட ஊருக்குப்போகிறார். கர்த்தரும் அதற்கு அனுமதி கொடுக்கிறார்.

லோத்து சோவாரிலே குடியிருக்கிறார். அங்கே எவ்வளவு காலம் குடியிருந்தார் என்பது தெரியவில்லை. ஆனால் அவர் சோவாரிலே குடியிருக்க பயப்படுகிறார். ஒருவேளை சோவாரின் ஜனங்களும் சோதோமின் ஜனங்களைப்போல துன்மார்க்கராக இருந்திருக்கலாம். சோவாரில் குடியிருப்பது தனக்கு ஆபத்தானது என்று லோத்து நினைத்திருக்கலாம்.

கர்த்தர் லோத்தை சோவாருக்கு போகச்சொல்லவில்லை. அவர் லோத்தை மலைக்குப்போகச் சொன்னார். சோவாருக்கு போகவேண்டும் என்பது லோத்தின் சொந்த தீர்மானம். லோத்து கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. அவர் சோவாருக்கு போகவேண்டுமென்று விரும்பியதினால், கர்த்தர் இந்தக் காரியத்தில் அவருக்கு அநுக்கிரகம்பண்ணினார்.

கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியாமல், நம்முடைய சொந்த சித்தத்திற்கும், விருப்பத்திற்கும் கீழ்ப்படியும்போது, நமக்கும் இதுபோல பிரச்சனைகள் வரும். நம்முடைய தீர்மானமும் கர்த்தருடைய தீர்மானமும் வித்தியாசமாயிருக்கும்போது, நம்முடைய தீர்மானத்தில் ஆசீர்வாதம் இருக்காது.

லோத்து சோவாரிலே குடியிருக்கப் பயந்து, சோவாரை விட்டுப்போய், அவரும் அவரோடேகூட அவருடைய இரண்டு குமாரத்திகளும் மலையிலே வாசம்பண்ணுகிறார்கள்; அங்கே லோத்தும் அவருடைய இரண்டு குமாரத்திகளும் ஒரு கெபியிலே குடியிருக்கிறார்கள் (ஆதி 19:30).

லோத்து கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் சோவாருக்கு போனாலும், அங்கே அவரால் குடியிருக்க முடியவில்லை. அவர் பயந்துபோய் கர்த்தர் சொன்ன மலைக்கு வந்து வாசம்பண்ணுகிறார். இப்போது லோத்தின் மனதிலே நிம்மதியும் ஆறுதலும் இருக்கிறது. கர்த்தர் சொன்ன மலையிலே தான் வாசம்பண்ணுவதை நினைத்து லோத்து சந்தோஷப்படுகிறார்.

லோத்து ஆபிரகாமோடு இருந்தபோது, மேய்ச்சல் நிலம் போதவில்லை என்று சொல்லி அவரோடு வாக்குவாதம்பண்ணினார். தேசம் விஸ்தாரமாயிருந்தது. ஆனால் அந்த தேசத்தில் தனக்கும், தன்னுடைய ஆடுமாடுகளுக்கும் போதுமான இடம் இல்லை என்று லோத்து ஆபிரகாமோடு விவாதம்பண்ணினார்.

இப்போதோ லோத்தும் அவருடைய இரண்டு குமாரத்திகளும், அந்த மலையிலுள்ள ஒரு கெபியிலே குடியிருக்கிறார்கள். இந்தக் கெபியில் லோத்துக்கு திரும்பி படுப்பதற்குகூட போதுமான இடவசதி இருக்காது. இந்தக் கெபியில் லோத்தும் அவருடைய இரண்டு குமாரத்திகளும் தனியாகயிருக்கிறார்கள். அவர்கள் ஒருவேளை காட்டு மிருகங்களுக்கு பயந்து நடுங்கிக்கொண்டிருக்கலாம்.

லோத்தும் அவருடைய இரண்டு குமாரத்திகளும், மலையிலுள்ள ஒரு கெபியில் குடியிருக்கும்போது, அவர்கள் மிகப்பெரிய பாவம் செய்கிறார்கள். இது லோத்தின் ஜீவியத்தில் நடைபெற்ற சோகசம்பவம்.

லோத்தின் குமாரத்திகள், தங்கள் தகப்பனாரோடு பாவம் செய்கிறார்கள். மூத்தவள் இளையவளைப் பார்த்து: "நம்முடைய தகப்பன் முதிர்வயதானார், பூமியெங்கும் நடக்கிற முறைமையின்படியே நம்மோடே சேரப் பூமியிலே ஒரு புருஷனும் இல்லை. நம்முடைய தகப்பனால் சந்ததி உண்டாகும்படிக்கு, அவருக்கு மதுவைக் குடிக்கக்கொடுத்து, அவரோடே சயனிப்போம் வா" (ஆதி 19:31,32) என்று சொல்லுகிறாள்.

லோத்தின் குமாரத்திகள் தனியாகயிருக்கிறார்கள். லோத்துக்கு ஆண்பிள்ளைகள் பிறக்கவில்லை. லோத்தின் குமாரத்திகளுக்கு புருஷன்மார் இல்லை. ஆகையினால் அவர்களுக்கு புத்திர சந்தானம் உண்டாவதற்கும் வாய்ப்பு இல்லை. லோத்தின் குமாரத்திகளுக்கு, வேறு புருஷர்கள் மூலமாக புத்திர சந்தானம் ஏற்பட்டால், அவர்களுக்கு தங்கள் தகப்பனால் சந்ததி உண்டாகாது. அந்த சந்ததி மற்ற மனுஷருடைய சந்ததியாயிருக்கும்.

இந்தப் பிரதேசத்தில் லோத்தின் இனத்தார் யாருமில்லை. லோத்தின் குமாரத்திகள் சோவாரின் புருஷரைத் திருமணம் செய்துகொள்ள பயப்படுகிறார்கள். சோதோமைப் போல சோவாரும் அழிக்கப்படுமோ என்று நினைக்கிறார்கள்.

லோத்தின் குமாரத்திகள் லோத்திற்கு மதுவைக் குடிக்கக் கொடுக்கிறார்கள். சோதோமில் மது அருந்தி வெறித்திருந்தவர்கள் ஏராளமான பேரை இவர்கள் பார்த்திருப்பார்கள்.

லோத்தின் குமாரத்திகளோ தங்களுடைய தகப்பனால் தங்களுக்கு சந்ததி உண்டாக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். இதற்காக லோத்தின் இரண்டு குமாரத்திகளும் துன்மார்க்கமான திட்டம் போடுகிறார்கள். அவர்களுடைய திட்டம் கர்த்தருடைய பிரமாணத்திற்கும், இயற்கையின் பிரமாணத்திற்கும் முரணாக இருக்கிறது.

லோத்து மதுவைக் குடிக்கிற குடிகாரனாயிருக்கிறார். குடித்து வெறித்திருக்கிறவர்களுக்கு சுயநினைவும், சுயபுத்தியும் இருக்காது. தாங்கள் என்ன செய்கிறோம் என்பதும், தங்களுக்கு என்ன செய்யப்படுகிறது என்பதும் அவர்களுக்கு தெரியாது. லோத்தின் குமாரத்திகள் தங்களுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, லோத்தின் குடிவெறியை தங்களுக்கு சாதமாக பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

லோத்தின் குமாரத்திகள் இரண்டுபேரும் அன்று இரவிலே, தங்கள் தகப்பனுக்கு மதுவைக் குடிக்கக் கொடுக்கிறார்கள். மூத்தவள் போய், தன் தகப்பனோடே சயனிக்கிறாள்; அவள் சயனித்ததையும் எழுந்திருந்ததையும் லோத்து உணராதிருக்கிறார் (ஆதி 19:33).

லோத்தின் குமாரத்திகள் சோதோமின் பாவத்திற்கு நடுவில் வளர்ந்தவர்கள். இதனால் அவர்கள் தங்கள் சொந்த தகப்பனையே வஞ்சிக்கிறார்கள்.

நெருங்கின உறவினர் மத்தியிலே சரீர உறவு ஏற்படுத்திக்கொண்டவர்களைப்பற்றி பரிசுத்தவேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களின் விவரம் வருமாறு :

1. லோத்தும், அவனுடைய இரண்டு குமாரத்திகளும் (ஆதி 19:31-36)
2. ஆபிரகாமும், சாராளும் (ஆதி 20:12-13)
3. நாகோரும், மில்காளும் (ஆதி 11:29)
4. ரூபனும், பில்க்காளும் (1கொரி 5)
5. யூதாவும், தாமாரும் (ஆதி 38:16-18; 1நாளா 2:4)
6. அம்ராமும், யோகெபேத்தும் (யாத் 6:20)
7. அம்னோனும், தாமாரும் (2சாமு 13:14)
8. அப்சலோமும், தாவீதின் மனைவிமார்களும் (2சாமு 16:21)
9. ஏரோது (மத் 14:3-4; மாற்கு 6:17-18; லூக்கா 3:19)
10. கொரிந்தியரில் ஒருவன். (1கொரி 5)

மோசேயின் பிரமாணத்தில் நெருங்கிய உறவினரிடையே திருமணம் செய்து கொள்வது தடைபண்ணப்படுகிறது. (லேவி 18:6-18; லேவி 20:11-21; உபா 22:30; உபா 27:20-23) ஆயினும் ஆபிரகாம் - ஏவாள், நாகோர் - மில்காள் ஆகியோரின் திருமணம் இக்காலத்தில் மன்னிக்கப்பட்டு அங்கிகரிக்கப்படுகிறது. (அப் 17:30).

லோத்து ஒரு நீதிமான். கர்த்தர் அவரை சோதோமின் அழிவுக்கு தப்பிக்க வைத்தார். ஆனால் அவரோ இப்போது கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறார். லோத்து கர்த்தருடைய சிநேகத்தையும், அவருடைய ஐக்கியத்தையும் விரும்பாமல், மதுவை சிநேகிக்கிறார். அவர் மதுபானத்தோடு ஐக்கியமாயிருக்கிறார்.

நாம் எவ்வளவு பெரிய நீதிமான்களாகயிருந்தாலும், நாம் கர்த்தரோடு கூடயிருப்பதுதான் நமக்கு பாதுகாப்பு. நாம் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விட்டால் நமக்கு பாதுகாப்பு இல்லை. ஆகையினால் தங்களை நிற்கிறவர்களாக எண்ணுகிறவர்கள், விழாதிருக்கும்படி எச்சரிப்பாயிருக்க வேண்டும். லோத்து இப்போது தன்னுடைய மூத்த குமாரத்தியோடு பாவம் செய்கிறார். ஆனால் தான் பாவம் செய்ததை லோத்து உணராதிருக்கிறார்.

லோத்து சோதோமிலிருந்த வரையிலும் கர்த்தரோடு ஐக்கியமாயிருந்தார். அவர் நீதிமானாயிருந்தார். அவர் கர்த்தருக்கு முன்பாக தன்னுடைய உத்தமத்தையும், உண்மையையும் காத்துக்கொண்டார். லோத்து இப்போது மலையிலே குடியிருக்கிறார். இங்கு ஏராளமான ஜனங்கள் இல்லை. லோத்து தனிமையிலிருக்கிறார். அவரோடுகூட அவருடைய இரண்டு குமாரத்திகள் மாத்திரமே இருக்கிறார்கள்.

இந்த மலையில் சோதோமின் குடிகளைப்போல துன்மார்க்கர் யாரும் இல்லாததினால், தனக்கு சோதனை வராது என்று நினைத்து லோத்து இறுமாப்பாயிருக்கிறார். ஆனால் அவர் குடித்து வெறித்து சோதனையில் விழுந்துவிடுகிறார். சாத்தான் யாரை விழுங்கலாம் என்று கெர்ச்சிக்கிற சிங்கம்போல சுற்றி அலைந்துகொண்டிருக்கிறான். நாம் சாதாரணமான மலையிலிருந்தாலும், பரிசுத்த பர்வதத்திலிருந்தாலும், சாத்தான் நம்மை சோதிப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் நாம் விழிப்போடும், எச்சரிப்போடும் இருக்கவேண்டும்.

லோத்து ஒருவேளை மதுவைக் குடிக்காமல், தெளிந்த புத்தியோடு இருந்திருந்தால், தன்னுடைய குமாரத்திகளோடு பாவம் செய்திருக்கமாட்டார். ஆனால் அவரோ மதுவைக் குடித்து, தன் புத்தியை இழந்துவிட்டார். மதுபானம் அருந்துவது, குடித்து வெறித்திருப்பது கர்த்தருக்கு விரோதமான பாவம். இந்தப் பாவம் இன்னும் அநேக பாவங்களுக்கு வாசல்களை விரிவாய்த் திறந்துகொடுக்கும். லோத்து மதுவைக் குடித்து, அதைத் தொடர்ந்து, மிகவும் மோசமான பாவங்களை செய்கிறார்.

மறுநாளிலே மூத்தவள் இளையவளைப்பார்த்து, "நேற்று ராத்திரி நான் தகப்பனோடே சயனித்தேன்; இன்று ராத்திரியும் மதுவைக் குடிக்கக் கொடுப்போம், நம்முடைய தகப்பனால் சந்ததி உண்டாகும்படி நீ போய் அவரோடே சயனி" (ஆதி 19:34) என்று சொல்லுகிறாள்.

அப்படியே அன்று ராத்திரியிலும் தங்கள் தகப்பனுக்கு அவர்கள் மதுவைக் குடிக்கக் கொடுக்கிறார்கள். அப்பொழுது இளையவள் எழுந்துபோய், தன்னுடைய தகப்பனோடே சயனிக்கிறாள்; அவள் சயனித்ததையும் எழுந்திருந்ததையும் லோத்து உணராதிருக்கிறார் (ஆதி 19:35).

இவ்விதமாய் லோத்தின் குமாரத்திகள் இருவரும் தங்கள் தகப்பனாலே கர்ப்பவதியாகிறார்கள் (ஆதி 19:36).

மூத்தவள் ஒரு குமாரனைப் பெற்று,அவனுக்கு மோவாப் என்று பேரிடுகிறாள்; அவன் இந்நாள்வரைக்கும் இருக்கிற மோவாபியருக்குத் தகப்பன். இளையவளும் ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குப் பென்னம்மி என்று பேரிடுகிறாள்; அவன் இந்நாள்வரைக்கும் இருக்கிற அம்மோன் புத்திரருக்குத் தகப்பன் (ஆதி 19:37,38).

மோவாபும் பென்னம்மியும் இரண்டு தேசத்தாருக்கு தகப்பன்மாராயிருக்கிறார்கள். இவர்கள் இஸ்ரவேல் தேசத்தின் எல்லையிலே வாசம்பண்ணுகிறார்கள். இவ்விரண்டு ஜாதியாரும் லோத்தின் புத்திரர் என்று அழைக்கப்படுகிறார்கள்.

"அசீரியரும் அவர்களோடேகூடக் கலந்து, லோத்தின் புத்திரருக்குப் புயபலமாக்கினார்கள்" (சங் 83:8).

இந்த சம்பவத்திற்கு பின்பு பரிசுத்த வேதாகமத்தில் லோத்தைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. லோத்து குடித்து வெறித்து பாவம் செய்தார். தான் செய்த பாவத்தையும் அவர் உணராதிருந்தார். குடிக்கிறவர்கள் எல்லாவற்றையும் மறந்துவிடுவார்கள். அவர்களும் மற்றவர்களால் மறக்கப்படுவார்கள்.

20 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் ஆபிரகாமைப்பற்றி மறுபடியுமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் அவருக்கு மேன்மையும் கனமும் உண்டாகும் வண்ணமாக ஒரு சம்பவமும் நடைபெறவில்லை. கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. பரிசுத்த வேதாகமமும், எந்தவித பட்சபாதமுமில்லாமல் மனுஷருடைய சுபாவங்களைப்பற்றி தெளிவாக எடுத்துச் சொல்லுகிறது. ஆபிரகாம் நீதிமானாகயிருந்தாலும், அவருடைய ஜீவியத்திலும் ஒரு சில தப்பிதங்கள் காணப்படுகிறது. அதுபற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆபிரகாம் தன்னுடைய மனைவி சாராளை, தனக்கு சகோதரி என்று சொல்லுகிறார். கேராரின் ராஜாவாகிய அபிமெலேக்கு சாராளை தன்னிடத்தில் அழைப்பிக்கிறான் (ஆதி 20:1,2).

தேவன் இரவிலே அபிமெலேக்குக்கு, சாராளைக் குறித்து எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லுகிறார். கர்த்தர் அவனுடைய தப்பிதத்தை அவனுக்கு எடுத்து சொல்லுகிறார் (ஆதி 20:3). அபிமெலேக்கு கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறான் (ஆதி 20:4-7).

அபிமெலேக்கு சாராளைக் குறித்து ஆபிரகாமோடு பேசுகிறான் (ஆதி 20:8-10). ஆபிரகாம் தான் செய்த தப்பிதத்தை மூடி மறைப்பதற்கு சாக்குபோக்கான காரணங்களை சொல்லுகிறார் (ஆதி 20:11-13). அபிமெலேக்கு சாராளை ஆபிரகாமினிடத்தில் திரும்ப ஒப்புவிக்கிறான் (ஆதி 20:14-16).

ஆபிரகாம் அபிமெலேக்குக்காக தேவனை நோக்கி வேண்டிக்கொள்கிறார். கர்த்தர் அபிமெலேக்கின் குடும்பத்தில் பிள்ளைபெறும்படி அநுக்கிரகம்பண்ணுகிறார்.

அபிமெலேக்கு
ஆதி 20:1,2

ஆதி 20:1. ஆபிரகாம் அவ்விடம் விட்டு, தென் தேசத்திற்கு பிரயாணம்பண்ணி, காதேசுக்கும் சூருக்கும் நடுவாகக் குடியேறி, கேராரிலே தங்கினான்.

ஆதி 20:2. அங்கே ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளைத் தன் சகோதரி என்று சொன்னதினாலே, கேராரின் ராஜாவாகிய அபிமெலேக்கு ஆள் அனுப்பிச் சாராளை அழைப்பித்தான்.

ஆபிரகாம் இதுவரையிலும் மம்ரேயில் குடியிருக்கிறார். இப்பொழுது அவர் அவ்விடம் விட்டு தென்தேசத்திற்கு பிரயாணம்பண்ணுகிறார். ஆபிரகாம் மம்ரேயைவிட்டு ஏன் புறப்பட்டுப்போகிறார் என்பதற்கான காரணம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்படவில்லை. ஆபிரகாம் காதேசுக்கும் சூருக்கும் நடுவாகக் குடியேறி, கேராரிலே தங்குகிறார் (ஆதி 20:1).

ஆபிரகாம் இரண்டாம் முறையாக வடக்கிலிருந்து தென் தேசத்திற்குப் பிரயாணம் பண்ணுகிறார். (ஆதி 20:1; ஆதி 12:9). அவர் இரண்டுமுறை தென்தேசத்திலிருந்து வடக்கு நோக்கி பிரயாணம் பண்ணினார் (ஆதி 13:1,3).

கேராரிலே அபிமெலேக்கு என்பவன் ராஜாவாயிருக்கிறான். ஆபிரகாம் கேராரிலே தன் மனைவியாகிய சாராளை, தன் சகோதரி என்று சொல்லுகிறார். ஆபிரகாம் பொய்சொல்லுவது கர்த்தருடைய பார்வையில் பாவமாயிருக்கிறது. ஆபிரகாம் இதுபோன்ற பாவத்தை, எகிப்து தேசத்திலிருந்தபோது, பார்வோனுக்கு முன்பாக ஏற்கெனவே செய்திருக்கிறார்.

ஆபிரகாம் எகிப்து தேசத்தில் ஏற்கெனவே செய்த பாவத்தை, இப்போது கேராரிலும் செய்கிறார். ஆபிரகாமைப் போன்ற நீதிமான்களும், ஒரு தரம் பாவத்தில் விழுந்த பின்பு, மறுபடியும் அதே பாவத்தை செய்வதற்கு வாய்ப்புள்ளது.

சோதனை நாம் எதிர்பாராத வேளையில், எதிர்பாராத விதமாக வரும். மாம்சம் பலவீனமானது. சோதனை பலமுள்ளது. ஆபிரகாம் கேராரிலிருக்கும்போது மறுபடியுமாய் சோதிக்கப்படுகிறார். அவர் தன் மனைவி சாராளை, தன் சகோதரி என்று சொல்லி மறுபடியும் பாவம் செய்கிறார்.

கேராரில் ஆபிரகாம் தன் மனைவியாகியசாராளைத் தன் சகோதரி என்று சொன்னதினாலே, கேராரின் ராஜாவாகிய அபிமெலேக்கு ஆள் அனுப்பிச் சாராளை அழைப்பிக்கிறான் (ஆதி 20:2).

எகிப்தின் ராஜாவுக்கு பார்வோன் என்று பெயர். அதுபோல கேராரின் ராஜாக்களுக்கு அபிமெலேக்கு என்று பெயர். இவன் நீதியுள்ளவன், மெய்யான தேவனை ஆராதிக்கிறவன். (ஆதி 21:22-32; ஆதி 26:1-31). கிதியோனுடைய ஒரு குமாரனின் பெயர் அபிமெலேக்கு. (நியா 8:31; 2சாமு 11:21).

அபிமெலேக்கின் பாவம்
ஆதி 20:3-7

ஆதி 20:3. தேவன் இரவிலே அபிமெலேக்குச் சொப்பனத்திலே தோன்றி: நீ அழைப்பித்த ஸ்திரீயின்நிமித்தம் நீ செத்தாய்; அவள் ஒருவனுடைய மனைவியாயிருக்கிறாளே என்றார்.

ஆதி 204. அபிமெலேக்கு அவளைச் சேராதிருந்தான். ஆகையால் அவன்: ஆண்டவரே, நீதியுள்ள ஜனங்களை அழிப்பீரோ?

ஆதி 20:5. இவன் தன் சகோதரி என்று அவள் என்னோடே சொல்லவில்லையா? அவள் தன் சகோதரன் என்று இவளும் சொன்னாளே; உத்தம இருதயத்தோடும் சுத்தமான கைகளோடும் இதைச் செய்தேன் என்று சொன்னான்.

ஆதி 20:6. அப்பொழுது தேவன்: உத்தம இருதயத்தோடே நீ இதைச் செய்தாய் என்று நான் அறிந்திருக்கிறேன்; நீ எனக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு உன்னைத் தடுத்தேன்; ஆகையால், நீ அவளைத் தொட நான் உனக்கு இடங்கொடுக்கவில்லை.

ஆதி 20:7. அந்த மனுஷனுடைய மனைவியை அவனிடத்திற்கு அனுப்பிவிடு; அவன் ஒரு தீர்க்கதரிசி; நீ பிழைக்கும்படிக்கு அவன் உனக்காகவேண்டுதல் செய்வான்; நீ அவளை அனுப்பிவிடாதிருந்தால், நீயும் உன்னைச் சேர்ந்த யாவரும் சாகவே சாவீர்கள் என்று அறிவாயாக என்று சொப்பனத்திலே அவனுக்குச் சொன்னார்.

அபிமெலேக்கு கர்த்தருடைய உடன்படிக்கைக்கு அந்நியன். அவன் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவன். ஆனாலும் கர்த்தர் அவனுக்கு தம்மை சொப்பனத்திலே வெளிப்படுத்துகிறார். அவனுக்கு வரப்போகிற ஆபத்தைக் குறித்து அவனை எச்சரிக்கிறார்.

சாராள் ஆபிரகாமினுடைய மனைவி. ஆனால் ஆபிரகாமோ சாராளை தன்னுடைய சகோதரி என்று சொல்லியிருக்கிறார். சாராளும் ஆபிரகாமை தன்னுடைய சகோதரன் என்று சொல்லியிருக்கிறாள். ஆகையினால் கேராரின் ராஜாவாகிய அபிமெலேக்கு ஆள் அனுப்பி, சாராளை தன்னிடத்திலே சேர்த்து வைத்திருக்கிறான்.

சாராள் மற்றொருவருடைய மனைவி. அவளை அபிமெலேக்கு சேர்த்து வைத்துக்கொள்ளக்கூடாது. அது மிகப்பெரிய பாவம். அபிமெலேக்கு சாராளை சேர்த்துக்கொண்டதினால், சாராளின் புருஷனாகிய ஆபிரகாமுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறான். பாவத்தின் சம்பளம் மரணம்.

தேவன் இரவிலே அபிமெலேக்குக்கு சொப்பனத்திலே தோன்றி, "நீ அழைப்பித்த ஸ்திரீயின்நிமித்தம் நீ செத்தாய்; அவள் ஒருவனுடைய மனைவியாயிருக்கிறாளே" (ஆதி 20:3) என்று சொல்லுகிறார். அபிமெலேக்கு சாராளை தன்னிடத்தில் அழைப்பித்திருந்தாலும், அவன் இன்னும் அவளை சேராதிருக்கிறான்.

சொப்பனத்திற்கு பலவிதமான காரணங்கள் உண்டு. சரீரத்தின் பலவீனங்கள்கூட சொப்பனத்திற்குக் காரணமாக இருக்கலாம். (யோபு 20:8; பிர 5:3; சங் 126:1; உபா 13:1-5; யூதா 1:8). தேவன் சொப்பனத்தின் மூலமாக பலதடவை தமது காரியங்களை வெளிப்படுத்தியிருக்கிறார். (தானி 4:5)

கர்த்தர் அபிமெலேக்குக்கு சொப்பனத்திலே தோன்றினார். பரிசுத்தவேதாகமத்தில் சொப்பனங்கண்ட அநேகரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களின் விவரம் வருமாறு:

1. அபிமெலேக்கு (ஆதி 20:3,6)
2. யாக்கோபு (ஆதி 28:12;ஆதி 31:10-11)
3. லாபான் (ஆதி 31:24)
4. யோசேப்பு (ஆதி 37:5-10)
5. பானபாத்திரக்காரரின் தலைவன் (ஆதி 40:9-15)
6. சுயம்பாகிகளின் தலைவன் (ஆதி 40:16-23)
7. பார்வோன் (ஆதி 41:1-32)
8. மீதியானியரில் ஒருவன் (நியா 7:13-15)
9. சாலொமோன் (1இராஜா 3:5-15)
10. நேபுகாத்நேச்சார் (தானி 2,4)
11. தானியேல் (தானி 2, தானி 7)
12. யோசேப்பு (மத் 1:20; மத் 2:13-22)
13. சாஸ்திரிகள் (மத் 2:12)
14. பிலாத்துவின் மனைவி (மத் 27:19)

அபிமெலேக்கு மோசமான மனுஷனாகயிருந்தால், அவனுக்கு நிச்சயமாய் மரணம் வரும். அவன் பாவியாயிருந்தால் செத்தவனாயிருப்பான். ஆனால் அபிமெலேக்குக்கு சாராளுக்கும் ஆபிரகாமுக்கும் இடையே உள்ள உறவைப்பற்றின உண்மை தெரியாது. சாராள் ஆபிரகாமின் மனைவி என்பதை அபிமெலேக்குக்கு யாரும் சொல்லவில்லை.

அபிமெலேக்கும் இன்னும் சாராளை சேரவில்லை. ஆகையினால் அவன் கர்த்தரிடத்தில், "ஆண்டவரே, நீதியுள்ள ஜனங்களை அழிப்பீரோ?" (ஆதி 20:4) என்று கேட்கிறான். தன்னிடத்தில் குற்றம் எதுவும் இல்லை என்று அபிமெலேக்கு சொல்லுகிறான். அபிமெலேக்கு வேண்டுமென்றே சாராளை துணிகரமாக அழைப்பிக்கவில்லை.

சாராள் தன்னுடைய சகோதரி என்று ஆபிரகாம் சொன்னார். ஆபிரகாம் தன்னுடைய சகோதரன் என்று சாராளும் சொன்னாள். சாராள் ஆபிரகாமின் மனைவி என்பது அபிமெலேக்குத் தெரியாது. ஆகையினால் அபிமெலேக்கு உத்தம இருதயத்தோடும், சுத்தமான கைகளோடும் சாராளைத் தன்னிடத்தில் அழைப்பித்திருக்கிறான்.

அபிமெலேக்கின் இருதயமும், மனச்சாட்சியும் அவனைக் குற்றப்படுத்தவில்லை.

"பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து, அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்குமுன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்" (1யோவா 3:21,22).

நம்முடைய இருதயம் சுத்தமாயிருக்கவேண்டும். நம்முடைய மனச்சாட்சி நம்முடைய பரிசுத்தத்திற்கு சாட்சி சொல்லவேண்டும். நாம் பாவிகள் என்று நம்முடைய மனச்சாட்சியே நம்மை குற்றப்படுத்தக்கூடாது. நம்முடைய இருதயம் சுத்தமானதாயிருக்கும்போது, நாம் ஏமாற்றப்பட்டு கண்ணியிலே அகப்பட்டுக்கொண்டாலும், நம்மால் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்க முடியும்.

நாம் கர்த்தருக்கு விரோதமாக ஒரு பாவமும் செய்யக்கூடாது. துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்களுக்கு சந்தோஷமில்லை. அவர்கள் சாதாரண நாட்களிலும் வேதனைப்படுவார்கள். தீங்கு நாளிலும் வேதனைப்படுவார்கள். நீதிமான்களோ, தீங்கு நாளிலும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பார்கள்.

கர்த்தர் அபிமெலேக்கின் விண்ணப்பத்தை செவிகொடுத்து கேட்கிறார். அபிமெலேக்கு கர்த்தரிடத்தில், தன்னுடைய இருதயம் உத்தமமாயிருக்கிறது என்றும், தம்முடைய கைகள் சுத்தமானதாகயிருக்கிறது என்றும் சாட்சியாய்ச் சொல்லுகிறான். கர்த்தரும் அபிமெலேக்கின் வார்த்தைகளை அங்கீகரிக்கிறார், "உத்தம இருதயத்தோடே நீ இதை செய்தாய் என்று நான் அறிந்திருக்கிறேன்" (ஆதி 20:6) என்று கர்த்தர் அபிமெலேக்கினிடத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் நம்மைக் குறித்து நற்சாட்சி கொடுப்பதே நமக்கு மெய்யான ஆறுதல். கர்த்தர் நம்முடைய உத்தமத்தைக் குறித்தும், பரிசுத்தத்தைக் குறித்தும், உண்மையைக் குறித்தும் சாட்சியாய்ச் சொல்லும்போது, நம்முடைய மனதிலே மிகுந்த ஆறுதல் உண்டாகும். கர்த்தர் நம்முடைய இருதயங்களை அறிந்து வைத்திருக்கிறார்.

மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். அவனுக்கு நம்மைப்பற்றிய உண்மை தெரியவில்லையென்றால், அவன் சுயமாய்க் கற்பனை செய்து உண்மைக்குப் புறம்பாக ஏதாவது சொல்லுவான். மனுஷர் நமக்கு விரோதமாக தூஷண வார்த்தைகளையும், பொய்யான குற்றச்சாட்டுக்களையும் சொல்லுவதற்கு வாய்ப்புள்ளது. கர்த்தரோ நம்முடைய இருதயத்தை அறிந்திருக்கிறார். நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கும் போது, அவர் நம்மைக் குறித்து நற்சாட்சி கொடுப்பார்.

கர்த்தர் அபிமெலேக்கை நோக்கி, "நீ எனக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு உன்னைத் தடுத்தேன்; ஆகையால், நீ அவளைத் தொட நான் உனக்கு இடங்கொடுக்கவில்லை" (ஆதி 20:6) என்று சொல்லுகிறார். அபிமெலேக்கு தமக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு, கர்த்தர் அவனைத் தடுக்கிறார். அபிமெலேக்கு பாவம் செய்யாமல் தப்பிப்பதற்கு, அவன் என்ன செய்யவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

அபிமெலேக்கு ஆபிரகாமின் மனைவியாகிய சாராளை தன்னிடத்தில் அழைத்துக்கொண்டான். இதை தான் உத்தம இருதயத்தோடு செய்ததாக, அவன் கர்த்தரிடத்தில் சொல்லுகிறான். கர்த்தரும் அவன் செய்ததை அறிந்திருக்கிறார்.

துன்மார்க்கருடைய சிந்தனையும், பக்திமான்களுடைய சிந்தனையும் வித்தியாசமாக இருக்கும். தேவன் இருதயத்தை ஆராய்ந்து பார்க்கிறார். அவர் இருதயத்தின் நினைவுகளையெல்லாம் அறிந்திருக்கிறார். (1சாமு 16:7; 1நாளா 28:9; எரே 17:9-10; எசே 11:5; லூக்கா 16:15; ரோமர் 8:27; எபி 4:12).

பரிசுத்தவேதாகமத்தில் பலவிதமான இருதயங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. நொருங்குண்டது (சங் 34:18; சங் 51:17; சங் 69:20)
2. நருங்குண்டது (சங் 51:17)
3. மனம் கசந்தது (ஆதி 6:6; சங் 73:21)
4. மனப்பூர்வமானது (யாத் 25:2; யாத் 35:5,29)
5. திடனற்றுப்போனது. (எண் 32:7-9; உபா 1:28)
6. கடினமானது (உபா 2:30)
7. பெருமையானது (உபா 8:14; சங் 101:5; எசே 28:5,17)
8. பொல்லாதது (உபா 15:9; நீதி 6:14,18; எரே 4:14-18)

9. தத்தளிக்கிறது (உபா 28:65; ஏசா 66:2)

10. உத்தமமானது (1இராஜா 8:61; 1நாளா 29:9)

11. வஞ்சனையானது (1நாளா 12:33; யாக் 4:8)

12. இளகியது. (2இராஜா 22:19; 2நாளா 34:27; எபே 4:32)

13. மென்மையானது (1சாமு 24:5; யோபு 23:16)

14. சுத்தமானது (சங் 24:4; மத் 5:8; 1பேதுரு 1:22)

15. நேர்மையானது (சங் 32:11; சங் 36:10; சங் 64:10; சங் 97:11)

16. சுத்தமானது (சங் 51:10; சங் 73:1; நீதி 20:9)

17. ஆயத்தமானது (சங் 57:7; சங் 112:7)

18. தந்திரமானது (நீதி 7:10)

19. மாறுபாடுள்ளது (நீதி 11:20; நீதி 12:8)

20. ஞானமுள்ளது (யாத் 28:3; யாத் 35:25; நீதி 10:8; நீதி 11:29)

21. மனமகிழ்ச்சியானது (2நாளா 7:10; நீதி 15:13-15; நீதி 17:22)

22. துக்கமானது நீதி 14:13; நீதி 15:13)

23. இறுமாப்புள்ளது (நீதி 18:12; எரே 48:29)

24. தாங்கலானது(நீதி 19:3; நீதி 24:19; சங் 37:1-8)

25. மனதுக்கமுள்ளது (நீதி 25:20; நீதி 31:6)

26. ஆராயமுடியாதது (நீதி 25:3; சங் 64:6)

27. கேடுள்ளது (எசே 25:15; ரோமர் 1:30)

28. மனக்கசப்பானது (எசே 27:31; எபி 12:15; யாக் 3:14)

29. புதியது (எசே 18:31; எசே 36:26; 2கொரி 5:17-18)

30. கல்லானது (எசே 11:19; எசே 36:26)

31. மாம்சமானது (எசே 11:19; எசே 36:26)

32. விருத்தசேதனமில்லாதது (எசே 44:7; எரே 9:26; அப் 7:51)

33. சாந்தமும், மனத்தாழ்மையுமானது. (மத் 11:29)

34. உண்மையும், நன்மையுமானது. (லூக்கா 8:15)

35. பாரமடைந்தது (லூக்கா 21:34)

36. கலங்கினது (யோவான் 14:1-3,27)

37. ஒருமனப்பட்டது (அப் 2:46; எபே 6:5)

38. மதியீனமானது, இருளானது (ரோமர் 1:21)

39. குணப்படாதது (ரோமர் 1:21; ரோமர் 2:5)

40. விருத்தசேதனமானது (ரோமர் 2:29; பிலி 3:3)

41. பொல்லாதது (எரே 3:17; எரே7:24; எரே 11:8; எரே 16:12; எபி 3:12)

42. உண்மையுள்ளது (எபி 10:22; மத் 22:16)

43. கரையக்கூடியது. (யோசு 2:11; யோசு 5:1; யோசு 7:5; யோசு 14:8)

44. கபடமுள்ளது (எரே 14:14; எரே 17:9; மாற்கு 7:21-23)

45. கடினமானது (உபா 15:7; சங் 95:8; எபி 3:8)

46. சோரமானது (எசே 6:9; ஓசி 4:12; ஓசி 9:1)

47. தீங்கானது (நீதி 28:14; நீதி 22:15; ரோமர் 1:21)

48. வஞ்சிக்கக்கூடியது (யோவான் 13:2; அப் 5:3)

49. பேராசையுடையது (எரே 22:17; 2பேதுரு 2:14)

50. வியாகுலமானது (சங் 55:4; எரே 4:19)

கர்த்தர் அபிமெலேக்கை நோக்கி, "நீ அந்த மனுஷனுடைய மனைவியை அவனிடத்திற்கு அனுப்பிவிடு; அவன் ஒரு தீர்க்கதரிசி; நீ பிழைக்கும்படிக்கு அவன் உனக்காகவேண்டுதல் செய்வான்" (ஆதி 20:7) என்று சொல்லுகிறார்.

அபிமெலேக்கு மரணத்திற்கு தப்பிக்கவேண்டுமென்றால், அவன் ஆபிரகாமின் மனைவியாகிய சாராளை தன்னிடத்தில் வைத்திருக்கக்கூடாது. அவளை, அவளுடைய புருஷனாகிய ஆபிரகாமினிடத்திற்கு அனுப்பிவிடவேண்டும். அபிமெலேக்கு சாராளை சேராவிட்டாலும், அவளை தன்னோடு சேர்த்து வைத்திருப்பது பாவம்.

அபிமெலேக்கு சாராளை ஆபிரகாமினிடத்தில் அனுப்பவில்லையென்றால், அவனுக்கு என்ன சம்பவிக்கும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் அவனை நோக்கி, "நீ அவளை அனுப்பிவிடாதிருந்தால், நீயும் உன்னைச் சேர்ந்தயாவரும் சாகவே சாவீர்கள் என்று அறிவாயாக" (ஆதி 20:7) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் அபிமெலேக்குக்கு தம்முடைய வார்த்தைகளை அவனுக்கு சொப்பனத்திலே சொல்லுகிறார். அபிமெலேக்கு அறியாமல் பாவம் செய்திருக்கிறான். ஆனாலும் அவன் தன்னுடைய பாவத்தில் தொடர்ந்து இருக்கக்கூடாது. அறியாமல் பாவம் செய்தாலும், அந்தப் பாவத்தை தொடர்ந்து செய்வது, துணிகரமாய்ப் பாவம் செய்வதற்கு சமமாயிருக்கும்.

"எந்த அசுத்தத்தினாலாகிலும் தீட்டுப்பட்ட ஒரு மனிதனை ஒருவன் அறியாமல் தொட்டு, பின்பு அதை அறிந்துகொண்டால், அவன் குற்றமுள்ளவனாவான். மனிதர் பதறி ஆணையிடும் எந்தக் காரியத்திலானாலும், ஒருவன் தீமை செய்கிறதற்காவது நன்மை செய்கிறதற்காவது, தன் மனம் அறியாமல், தன் உதடுகளினால் பதறி ஆணையிட்டு, பின்பு அவன் அதை அறிந்துகொண்டால், அதைக் குறித்துக் குற்றமுள்ளவனாவான்" (லேவி 5:3,4).

இப்படிப்பட்டவைகள் ஒன்றில், ஒருவன் குற்றமுள்ளவனாகும்போது, அவன் தான் செய்தது பாவம் என்று அறிக்கையிட்டு, தான் செய்த பாவத்துக்குப் பாவநிவாரணபலியாக, ஆடுகளிலாவது வெள்ளாடுகளிலாவது, ஒரு பெண்குட்டியைக் குற்றநிவாரண பலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவரவேண்டும்; அதினாலே ஆசாரியன் அவன் செய்த பாவத்தைக்குறித்து அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்" (லேவி 5:5,6).

அபிமெலேக்கின் குற்றவுணர்வு ஆதி 20:8-10

ஆதி 20:8. அபிமெலேக்கு அதிகாலையில் எழுந்து, தன் ஊழியக்காரரையெல்லாம் அழைப்பித்து, இந்தச் சங்கதிகளையெல்லாம் அவர்கள்கேட்கும்படி சொன்னான்; அந்த மனுஷர் மிகவும் பயந்தார்கள்.

ஆதி 20:9. அப்பொழுது அபிமெலேக்கு ஆபிரகாமை அழைப்பித்து: நீ எங்களுக்கு என்ன காரியஞ்செய்தாய், நீ என்மேலும், என் ராஜ்யத்தின்மேலும் கொடிய பாவம் சுமரப்பண்ணுகிறதற்கு உனக்கு நான் என்ன குற்றம் செய்தேன்? செய்யத்தகாத காரியங்களை என்னிடத்தில் செய்தாயே என்றான்.

ஆதி 20:10. பின்னும் அபிமெலேக்கு ஆபிரகாமை நோக்கி: என்னத்தைக் கண்டு நீ இந்தக் காரியத்தைச் செய்தாய் என்றான்.

அபிமெலேக்கு ஆபிரகாமை அழைக்கிறான். ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளை, தன் சகோதரி என்று அபிமெலேக்கினிடத்தில் சொன்னான். இப்போது அபிமெலேக்கு ஆபிரகாமை அழைப்பித்து, அவனை நோக்கி, "நீ எங்களுக்கு என்ன காரியஞ்செய்தாய், நீ என்மேலும், என் ராஜ்யத்தின்மேலும் கொடிய பாவம் சுமரப்பண்ணுகிறதற்கு உனக்கு நான் என்ன குற்றம் செய்தேன்? செய்யத்தகாத காரியங்களை என்னிடத்தில் செய்தாயே" (ஆதி 20:9) என்று சொல்லுகிறான்.

அபிமெலேக்கின் வார்த்தைகள் உறுதியாகவும், அதே வேளையில் மென்மையாகவும் இருக்கிறது. அபிமெலேக்கு ஆபிரகாமுக்கு புரியும் வண்ணமாகப் பேசுகிறான். அவனைக் கடிந்துகொள்கிறான். இதைவிட தெளிவாக யாராலும் பேசமுடியாது. அபிமெலேக்கு ஆபிரகாமின்மீது மொத்த குற்றத்தையும் சுமத்தவில்லை.

அபிமெலேக்கு ஆபிரகாமை நோக்கி, "நீ எங்களுக்கு என்ன காரியம் செய்தாய்" என்று மாத்திரமே கேட்கிறான். அவன் ஆபிரகாமை நோக்கி, "இதுதான் உன் தொழிலா" என்றோ, அல்லது "நீ ஆணையிட்டுக்கொடுத்தாலும், பொய்சொல்லுகிறாயே" என்றோ குற்றப்படுத்தவில்லை.

கர்த்தர் அபிமெலேக்கினிடத்தில் ஆபிரகாமைப்பற்றிச் சொன்னபோது, "அவன் ஒரு தீர்க்கதரிசி, நீ பிழைக்கும்படிக்கு அவன் உனக்காக வேண்டுதல் செய்வான்" என்று சொல்லியிருக்கிறார். அபிமெலேக்கு கர்த்தருடைய வார்த்தையை நம்புகிறான். அவனுக்கு ஆபிரகாமின் ஜெபம் தேவைப்படுகிறது.

ஆனாலும் ஆபிரகாம் அபிமெலேக்கினிடத்தில் பொய்சொல்லியிருக்கிறார். அபிமெலேக்கு தன்னைப்பற்றி ஆபிரகாமிடத்தில் சொல்லும்போது, "நீ என்மேலும், என் ராஜ்யத்தின்மேலும் கொடிய பாவம் சுமரப்பண்ணுகிறதற்கு நான் உனக்கு என்ன குற்றம் செய்தேன்" என்று கேட்கிறான்.

அபிமெலேக்கு ஆபிரகாமுக்கு ஒரு குற்றம் செய்யவில்லை. ஆனால் ஆபிரகாம் அபிமெலேக்கினிடத்தில் தகாத காரியங்களை செய்திருக்கிறார். ஆகையினால் அபிமெலேக்கு ஆபிரகாமை நோக்கி, "என்னத்தைக்கண்டு நீ இந்தக் காரியத்தை செய்தாய்" (ஆதி 20:10) என்று கேட்கிறார்.

அபிமெலேக்கின் வார்த்தைகளில் உண்மையிருக்கிறது. அவன் சொல்லுகிற எல்லா வார்த்தைகளையும் ஆபிரகாம் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆபிரகாம் சொன்ன பொய்யின் நிமித்தமாக அபிமெலேக்கின்மீது பாவம் சுமத்தப்பட்டிருக்கிறது. இது கொடிய பாவமாயிருக்கிறது.

அபிமெலேக்குதான் ஆபிரகாமின் மனைவி சாராளை தன்னிடத்தில் சேர்த்துக்கொண்டான். இது அபிமெலேக்கின் பாவம். ஆனால் அபிமெலேக்கு இந்தப் பாவத்தை தன்னுடைய பாவமாகவும், தன்னுடைய ராஜ்யத்தின் பாவமாகவும் பாவிக்கிறான். இது கொடிய பாவம். இந்தப் பாவத்திற்கு விரோதமாக கர்த்தருடைய தண்டனை வரும்போது, அது அபிமெலேக்கின்மேலும் வரும், அவனுடைய ராஜ்யத்தின்மேலும் வரும். அபிமெலேக்கு இந்தப் பாவத்தை அறியாமல் செய்திருந்தாலும், அவனால் தண்டனைக்கு தப்பிக்க முடியாது. அவனுடைய மனச்சாட்சி அவனைக் குற்றப்படுத்தும்.

ஒரு மனுஷனுடைய பாவம் அவனையும் அவனுடைய குடும்பத்தையும் பாதிக்கும். ஒரு ராஜாவின் பாவமோ, அவனையும் அவனுடைய ராஜ்யத்தையும் பாதிக்கும். ஆகையினால் ராஜாக்கள் தங்கள் தேசத்தின் நிமித்தமாகவும், தேசத்து ஜனங்கள் நிமித்தமாகவும், பாவத்தை விட்டு விலகி பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும்.

ஆபிரகாம் தன்னுடைய மனைவி சாராளை, தன்னுடைய சகோதரி என்று அபிமெலேக்கினிடத்தில் சொல்லியிருக்கிறார். ஆபிரகாம் செய்யத்தகாத காரியத்தை அபிமெலேக்கினிடத்தில் செய்திருக்கிறார். அபிமெலேக்கு ஆபிரகாமின் சத்துரு அல்ல. ஒருவர் தன்னுடைய சத்துருவைப் பழிவாங்குவதற்காக, அவர்களுக்கு விரோதமாய் செய்யத்தாகாத காரியங்களை செய்வார்கள். அவர்கள்மீது பாவமும் பழியும் சுமத்துவார்கள். அதற்காக, அவர்களை வஞ்சிப்பார்கள்.

அபிமெலேக்கு ஆபிரகாமின் சத்துரு அல்ல. அவர் இதுவரையிலும் ஆபிரகாமுக்கு விரோதமாக ஒரு குற்றமும் செய்யவில்லை. அபிமெலேக்கு ஆபிரகாமை நோக்கி, "நீ என்மேலும், என் ராஜ்யத்தின்மேலும் கொடிய பாவம் சுமரப்பண்ணுகிறதற்கு உனக்கு நான் என்ன குற்றம் செய்தேன்?" என்று கேட்கிறார். "நீ எங்களுக்கு என்ன காரியம் செய்தாய்" என்றும் அபிமெலேக்கு ஆபிரகாமிடத்தில் கேட்கிறார். ஆபிரகாம் தன்னுடைய பொய்யான வார்த்தைகளினால், தங்களை பழிவாங்குவதாகவும், தங்களை வஞ்சகம் தீர்ப்பதாகவும் அபிமெலேக்கு நினைக்கிறான்.

அபிமெலேக்கு ஆபிரகாமை நோக்கி, "என்னத்தைக் கண்டு நீ இந்தக் காரியத்தை செய்தாய்" என்று கேட்கிறான். தானும், தன்னுடைய ராஜ்யத்து ஜனங்களும் ஆபிரகாமுக்கு ஒரு தீங்கும் செய்யாதிருக்கும் போது, அவர் ஏன் தங்களைப் பழிவாங்குவதற்காக, இப்படிப்பட்ட பொய்யை சொல்லவேண்டுமென்று அபிமெலேக்கு விவாதம்பண்ணுகிறான்.

ஆபிரகாம் அபிமெலேக்கினிடத்தில் சாராளை தன்னுடைய மனைவி என்று ஏற்கெனவே சொல்லியிருந்தால், அவன் இந்த கொடிய பாவத்தை செய்திருக்கமாட்டான். அபிமெலேக்கு பாவம் செய்ய பயப்படுகிறவன். அவன் தீங்குகளுக்கு விலகி ஜீவிக்க விரும்புகிறவன்.

நாம் எவ்வளவுதான் நல்லவர்களாகயிருந்தாலும், நாம் நீதிமான்களாகயிருந்தாலும், நம்முடைய நற்குணத்தைக் குறித்து சந்தேகம் ஏற்படும்போது, அந்த சந்தேகத்தை நீக்குவதற்கு உடனே முயற்சி பண்ணவேண்டும். நம்முடைய சுத்தமனச்சாட்சியைக் காத்துக்கொள்ள வேண்டும். அபிமெலேக்கு ஆபிரகாமினிடத்தில் பேசும்போது, தன்னிடத்தில் ஒரு குற்றமுமில்லை என்பதை தெளிவுபடுத்துகிறான். "உனக்கு நான் என்ன குற்றம் செய்தேன்" என்று அபிமெலேக்கு ஆபிரகாமிடத்தில் தெளிவாக கேட்கிறான்.

ஆபிரகாமின் சாக்குபோக்கு ஆதி 20:11-13

ஆதி 20:11. அதற்கு ஆபிரகாம்: இப்பிடத்தில் தெய்வபயம் இல்லையென்றும், என் மனைவியினிமித்தம் என்னைக் கொன்றுபோடுவார்கள் என்றும் நான் நினைத்தேன்.

ஆதி 20:12. அவள் என் சகோதரி என்பதும் மெய்தான்; அவள் என் தகப்பனுக்குக் குமாரத்தி, என் தாய்க்குக் குமாரத்தியல்ல; அவள் எனக்கு மனைவியானாள்.

ஆதி 20:13. என் தகப்பன் வீட்டைவிட்டு தேவன் என்னைத் தேசாந்தரியாய்த் திரியும்படி செய்தபோது, நான் அவளை நோக்கி: நாம் போகும் இடமெங்கும், நீ என்னைச் சகோதரன் என்று சொல்வது நீ எனக்குச்செய்யவேண்டிய தயை என்று அவளிடத்தில் சொல்லியிருந்தேன் என்றான்.

ஆபிரகாமும் தன்னிடத்தில் குற்றமில்லை என்பதை வெளிப்படுத்துவதற்கு ஒரு சில சாக்குபோக்கான காரணங்களை சொல்லுகிறார். அபிமெலேக்கு ஆபிரகாமினிடத்தில், "என்னத்தைக் கண்டு நீ இந்தக் காரியத்தை செய்தாய்" என்று கேட்கிறான். அதற்கு ஆபிரகாம், அபிமெலேக்கை நோக்கி, "இவ்விடத்தில் தெய்வபயம் இல்லையென்றும், என் மனைவியினிமித்தம் என்னைக் கொன்றுபோடுவார்கள் என்றும் நான் நினைத்தேன்" (ஆதி 20:11) என்று சொல்லுகிறார்.

ஆனால் மெய்யாகவே இவ்விடத்தில் தெய்வபயம் இருக்கிறது. ஆபிரகாமிடத்தில்தான் தெய்வபயம் இல்லை. ஆகையினால்தான் அவர் தன் மனைவி சாராளை, தன்னுடைய சகோதரி என்று பொய் சொன்னார். ஆனாலும் ஆபிரகாம் தன்னுடைய மனதில் கேராரைப்பற்றி நினைக்கும்போது, இவ்விடத்தில் தெய்வபயம் இல்லை என்று நினைக்கிறார்.

தேவனுடைய பாதுகாப்பையும், ஆசீர்வாதத்தையும் ஆபிரகாம் வாக்குத்தத்தமாகப் பெற்றிருக்கிறார். ஆனாலும் அவருடைய விசுவாசம் வலுவாக இல்லை. உடன்படிக்கையில் கூறப்பட்டிருக்கும் எல்லா ஆசீர்வாதங்களையும், ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது குறைவில்லாமல் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆபிரகாமைப்போலவே நாமும் பல சமயங்களில், ஒரு சில தனிநபர்களைப் பற்றியும், ஒரு சில ஊழியங்களைப்பற்றியும், ஒரு சில இடங்களைப்பற்றியும் தவறாக நினைத்துவிடுகிறோம். அவர்களை மோசமானவர்கள் என்று நினைப்போம். ஆனால் அவர்களோ நாம் நினைப்பதைவிட அதிக நல்லவர்களாயிருப்பார்கள்.

நாம் ஒரு சிலரை ஏளனமாக நினைப்போம். அவர்களிடத்தில் தெய்வபயம் இல்லை என்று சொல்லி அவர்களைத் தூஷிப்போம். ஆனால் அவர்களிடத்தில் தெய்வபயம் அதிகமாயிருக்கும். ஒருவேளை அவர்கள் தங்களை கர்த்தருடைய ஜனம் என்று சொல்லிக்கொள்ளமாட்டார்கள். நாம் ஒவ்வொரு வாக்கியத்தையும் கர்த்தருடைய நாமத்தினால் பேசுவதுபோல, அவர்கள் கர்த்தருடைய நாமத்தை அதிகமாய்ப் பயன்படுத்தமாட்டார்கள். ஆனாலும் அவர்களுடைய வார்த்தைகளில் உண்மையிருக்கும்.

தெய்வபயம் மனுஷருடைய இருதயங்களில் ஏற்படுகிறது. மனுஷனால் மற்ற மனுஷருடைய முகத்தை மாத்திரமே பார்க்க முடியும். அவர்களுடைய இருதயங்களை பார்க்க முடியாது. நாம் முகபாவனைகளையும், வெளித்தோற்றங்களையும் வைத்து மனுஷரை நிதானிக்கிறோம். நம்முடைய நிதானிப்பில் தப்பிதங்கள் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

கர்த்தரோ நம்முடைய இருதயங்களையும் எண்ணங்களையும் ஆராய்ந்து அறிந்திருக்கிறார்.

"நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" (மத் 7:1).

நாம் மற்றவர்கள்மீது அன்புகூர்ந்தால், அவர்களை குற்றவாளிகள் என்று தீர்க்கமாட்டோம். மற்றவர்களை குற்றவாளிகள் என்று தீர்ப்பதுகூட நமக்கு பாவமாகவே இருக்கும். நம்முடைய தப்பிதமான தீர்மானங்கள், நம்மை மேலும் பல பாவங்களை செய்வதற்கு வழிநடத்தும் . ஒரு மனுஷன் தப்பு செய்வதற்கு முன்பாக, அவனுடைய மனதிலே தப்பிதமான யோசனைகள் வரும். முதலில் சிந்தனையும் அதை தொடர்ந்து செயலும் ஏற்படும். ஆகையினால் நாம் மற்றவர்களைப்பற்றி நினைக்கும்போது, முதலாவதாக அவர்களைப்பற்றி நல்ல காரியங்களை நினைக்கவேண்டும்.

ஆபிரகாம் கேராரூர் ஜனங்களைப்பற்றி நினைக்கும்போது, இரண்டு காரியங்களை தப்பிதமாக நினைக்கிறார். அவையாவன : 1. கேராரூர் ஜனங்களுக்கு தெய்வபயமில்லை. 2. அவர்கள் தன் மனைவியின் நிமித்தம் தன்னைக் கொன்றுபோடுவார்கள்.

ஆபிரகாம் தன் மனைவி சாராளை, அபிமெலேக்கினிடத்தில் தன்னுடைய சகோதரி என்று சொன்னார். ஆபிரகாம் தான் சொன்ன வாக்கியம் பொய்யல்ல என்று சொல்லுகிறார். அவர் பொய் சொன்னாலும், தான் சொன்னது பொய்யல்ல என்றும், அது வேறொரு விதத்தில் உண்மையாகவே இருக்கிறது என்றும் சாக்குபோக்கு சொல்லி விவாதம்பண்ணுகிறார்.

ஆபிரகாம் அபிமெலேக்கை நோக்கி, "சாராள் என் சகோதரி என்பதும் மெய்தான்; அவள் என் தகப்பனுக்குக் குமாரத்தி, என் தாய்க்குக் குமாரத்தியல்ல; அவள் எனக்கு மனைவியானாள்" (ஆதி 20:12) என்று சொல்லுகிறார். ஆனால் ஆபிரகாம் சொல்லுகிற அர்த்தத்தில், யாரும் அவருடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்ளமாட்டார்கள்.

ஆபிரகாம் சாராளை தன்னுடைய சகோதரி என்று சொல்லும்போது, அவள் ஆபிகாமுக்கு மனைவியாகயிருப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று தான் எல்லோரும் நினைப்பார்கள். ஆபிரகாமின் வார்த்தை வஞ்சக வார்த்தையாகயிருக்கிறது. அவர் சாதுரிய வார்த்தைகளைப் பேசி அபிமெலேக்கையும், கேராரூர் ஜனங்களையும் வஞ்சித்திருக்கிறார்.

ஆபிரகாம் இந்த தப்பிதத்தை ஏற்கெனவே செய்திருக்கிறார். ஆபிரகாம் அபிமெலேக்கை இந்த விஷயத்தில் வஞ்சித்ததுபோல, அவர் ஏற்கெனவே எகிப்து தேசத்தின் அதிபதியாகிய பார்வோனையும் வஞ்சித்திருக்கிறார். ஆபிரகாம் சாராளை தன்னுடைய சகோதரி என்று சொல்லவேண்டும் என்றும், அவள் ஆபிரகாமை தன்னுடைய சகோதரன் என்று சொல்லவேண்டும் என்றும், அவர்கள் இருவரும் ஏற்கெனவே உடன்படிக்கை செய்திருக்கிறார்கள்.

ஆபிரகாம் அபிமெலேக்கினிடத்தில், தான் சாராளை தன்னுடைய சகோதரி என்று சொன்னதற்கான காரணத்தையும் சொல்லுகிறார். "என் தகப்பன் வீட்டைவிட்டு தேவன் என்னைத் தேசாந்தரியாய்த் திரியும்படி செய்தபோது, நான் அவளை நோக்கி: நாம் போகும் இடமெங்கும், நீ என்னைச் சகோதரன் என்று சொல்வது நீ எனக்குச்செய்யவேண்டிய தயை என்று அவளிடத்தில் சொல்லியிருந்தேன்" (ஆதி 20:13) என்று ஆபிரகாம் அபிமெலேக்குக்கு சொல்லுகிறார்.

அபிமெலேக்கினிடத்தில் ஆபிரகாமும் பொய்சொல்லுகிறார். சாராளும் பொய்சொல்லுகிறாள். அவர்கள் இருவரும் இந்தப் பொய்யை, ஏற்கெனவே கூடிப்பேசி, தீர்மானம்பண்ணியிருக்கிறார்கள். தாங்கள் ஏற்கெனவே பேசி முடிவு பண்ணின பிரகாரம் இப்போது பொய்சொல்லுகிறார்கள். இந்தப் பொய்யின் மூலமாக, சாராள் தனக்கு தயை செய்கிறாள் என்று ஆபிரகாம் சொல்லுகிறார்.

ஆபிரகாமும் சாராளும் தேசாந்திரியாய் திரியும் இடங்களிலெல்லாம், இந்தப் பொய்யை சொல்லவேண்டும் என்பது அவர்களுடைய தீர்மானம். இந்தப் பொய்யை அவர்கள் எகிப்திலே ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். இப்போது இதே பொய்யை கேராரூரிலே சொல்லுகிறார்கள்.

ஒருவேளை கர்த்தர் அவர்களை வேறு தேசத்திற்கு தேசாந்திரியாய் திரியும்படி செய்தாலும், அவர்கள் அந்த தேசத்திலும் இந்தப் பொய்யை சொல்லுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆபிரகாமைப் பொருத்தவரையிலும், சாராள் தன்னை சகோதரன் என்று அழைப்பது அவருக்கு பொய்யாக தெரியவில்லை. ஆபிரகாம் அதை சாராள் தனக்கு செய்யும் தயவாக காண்கிறார்.

அபிமெலேக்கின் உபகாரம்
ஆதி 20:14-16

ஆதி 20:14. அப்பொழுது அபிமெலேக்கு ஆடுமாடுகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் ஆபிரகாமுக்குக் கொடுத்து, அவன் மனைவியாகிய சாராளையும் அவனிடத்தில் திரும்ப ஒப்புவித்தான்.

ஆதி 20:15. பின்னும் அபிமெலேக்கு: இதோ, என் தேசம் உனக்கு முன்பாக இருக்கிறது; உன் பார்வைக்குச் சம்மதியான இடத்திலே குடியிரு என்று சொன்னான்.

ஆதி 20:16. பின்பு சாராளை நோக்கி: உன் சகோதரனுக்கு ஆயிரம் வெள்ளிக்காசு கொடுத்தேன்; இதோ, உன்னோடிருக்கிற எல்லார் முன்பாகவும், மற்ற யாவர் முன்பாகவும், இது உன் முகத்து முக்காட்டுக்காவதாக என்றான்; இப்படி அவள் கடிந்துகொள்ளப்பட்டாள்.

அபிமெலேக்கு ஆபிரகாமுக்கு உபகாரம்பண்ணுகிறான். ஆபிரகாமோ தன்னுடைய மனைவி சாராளைக் குறித்து அபிமெலேக்கினிடத்தில் பொய்சொன்னார். ஆனாலும் அபிமெலேக்கு ஆபிரகாமுக்கு உபகாரம்பண்ணுகிறார்.

அபிமெலேக்கு ஆடுமாடுகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் ஆபிரகாமுக்குக் கொடுக்கிறான். மேலும் ஆபிரகாமின் மனைவியாகிய சாராளையும் அவரிடத்தில் அபிமெலேக்கு திரும்ப ஒப்புவிக்கிறான் (ஆதி 20:14).

ஆடுமாடுகளும் வேலைக்காரர்களும், வேலைக்காரிகளும் அபிமெலேக்கு ஆபிரகாமுக்கு கொடுக்கும் ராஜரீக வெகுமதிகளாகும். அபிமெலேக்கு ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் விரோதமாக தீங்கு செய்திருக்கிறார். தன்னுடைய தப்பிதத்தை நிவிர்த்தி பண்ணுவதற்காக, அபிமெலேக்கு ஆபிரகாமுக்கு இந்த வெகுமதிகளைக் கொடுக்கிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், ஒருவர் பிறருக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி தீங்கு செய்தால், தன்னுடைய தப்பித்தை நிவிர்த்தி பண்ணுவதற்கு, அவர் தான் ஏற்படுத்தின நஷ்டத்தைவிட அதிகமான கிரயத்தை செலுத்தவேண்டும்.

"பொய்யாணையிட்டுச் சம்பாதித்த பொருளையும் திரும்பக் கொடுக்கக்கடவன்; அந்த முதலைக் கொடுக்கிறதும் அல்லாமல், அதினோடு ஐந்தில் ஒரு பங்கு அதிகமாகவுங் கூட்டி, அதைத் தான் குற்றநிவாரணபலியை இடும் நாளில், அதற்குரியவனுக்குக் கொடுத்துவிட்டு, தன் குற்றநிவாரணபலியாக, உன் மதிப்புக்குச் சரியான பழுதற்ற ஆட்டுக்கடாவைக் கர்த்தருக்குச் செலுத்தும்படி, அதை ஆசாரியனிடத்தில் குற்றநிவாரண பலியாகக் கொண்டுவருவானாக" *(லேவி 6:5,6)*.

ஆபிரகாம் கேராரிலே பரதேசியாய்த் தங்குவதற்கு வந்தார். கேராரின் ராஜாவாகிய அபிமெலேக்கோ, தன்னுடைய தேசத்தில் ஆபிரகாமுக்கு குடியிருக்கும் ஸ்தலத்தை கொடுக்கிறார். அபிமெலேக்கு ஆபிரகாமை நோக்கி, "இதோ, என் தேசம் உனக்கு முன்பாக இருக்கிறது; உன் பார்வைக்குச் சம்மதியான இடத்திலே குடியிரு" *(ஆதி 20:15)* என்று சொல்லுகிறார்.

ஆபிரகாமுக்கு ராஜரீக வெகுமதிகளும், கேராரிலே தங்கியிருப்பதற்கு ராஜரீக அனுமதியும் கிடைத்திருக்கிறது. அபிமெலேக்கு சாராளைக் கடிந்துகொள்கிறான்.

அபிமெலேக்கு சாராளை நோக்கி, "உன் சகோதரனுக்கு ஆயிரம் வெள்ளிக்காசு கொடுத்தேன்; இதோ, உன்னோடிருக்கிற எல்லார் முன்பாகவும், மற்ற யாவர் முன்பாகவும், இது உன் முகத்து முக்காட்டுக்காவதாக" *(ஆதி 20:16)* என்று சொல்லுகிறான். இந்த வாக்கியம் சாராளை கடிந்துகொள்ளும் வாக்கியமாகும்.

ஆபிரகாம் தேவனை விசுவாசிக்காவிட்டாலும், தேவன் ஆபிரகாமிற்கு உதவி புரிகிறார். கேராரியரைப் பற்றி ஆபிரகாம் தவறாக நினைத்தாலும், அவர்களை நம்பாமல் போனாலும், அவர்கள் ஆபிரகாமிற்கு ஆயிரம் வெள்ளிக்காசு கொடுத்து, உதவி செய்திருக்கிறார்கள். *(ஆதி 20:13)*

சாராளின் அழகை மற்றவர்கள் பார்த்து அவளை இச்சிக்காதபடி அவளுடைய முகம் முக்காட்டினால் மூடப்பட வேண்டும். இதற்காக அபிமெலேக்கு ஆயிரம் வெள்ளிக்காசு கொடுத்தான். சாராள் பிறனுடைய மனைவி. இனிமேல் அவள் மெய்யைப் பூரணமாக பேச வேண்டும். உண்மையைத் திரித்துக் கூறக்கூடாது. ஆகையினால் அபிமெலேக்கு சாராளிடம் இதுபற்றிச் சொல்லும்போது, "இது உன் முகத்து முக்காட்டுக்காவதாக" என்று சொல்லுகிறான். சாராள் இனிமேல் பொய் பேசக்கூடாது. அவள் தன்னுடைய முகத்தை முக்காட்டினால் மூடிக்கொள்ளவேண்டும்.

ஆபிரகாமின் ஜெபம்
ஆதி 20:17,18

ஆதி 20:17. ஆபிரகாமுடைய மனைவியாகிய சாராளின் நிமித்தம் கர்த்தர் அபிமெலேக்குடைய வீட்டாரின் கர்ப்பங்களையெல்லாம் அடைத்திருந்தபடியால்,

ஆதி 20:18. ஆபிரகாம் தேவனை நோக்கி வேண்டிக்கொண்டான்; அப்பொழுது தேவன் அபிமெலேக்கையும், அவன் மனைவியையும், அவன் வேலைக்காரிகளையும் குணமாக்கி, பிள்ளைபெறும்படி அனுக்கிரகம் பண்ணினார்.

ஆபிரகாம் ஒரு தீர்க்கதரிசி. "நீ பிழைக்கும்படி அவன் உனக்காக வேண்டுதல் செய்வான்" (ஆதி 20:7) என்று கர்த்தர் ஆபிரகாமைக் குறித்து அபிமெலேக்குக்கு சொன்னார்.

அபிமெலேக்கின் வீட்டாருக்கு கர்த்தருடைய கிருபை தேவைப்படுகிறது. ஆபிகாமுடைய மனைவியாகிய சாராளின் நிமித்தம் கர்த்தர் அபிமெலேக்குடைய வீட்டாரின் கர்ப்பங்களையெல்லாம் அடைந்திருக்கிறார் (ஆதி 20:17).

ஆபிரகாம் அபிமெலேக்கின் வீட்டாருக்காக, தேவனை நோக்கி விண்ணப்பம்பண்ணினால் கர்த்தர் அவர்களுக்கு அநுக்கிரகம் செய்வார். அபிமெலேக்குடைய வீட்டாரின் அடைக்கப்பட்ட கர்ப்பங்களை, கர்த்தர் தமது கிருபையினால் திறப்பார்.

அபிமெலேக்கின் மனைவியும், அவனுடைய வேலைக்காரிகளும் பிள்ளை பெற முடியாதவாறு அவர்களுடைய கர்ப்பங்கள் அடைக்கப்பட்டிருக்கிறது. தேவன் ஆபிரகாமின் ஜெபத்தைக் கேட்டு அவர்களைக் குணமாக்கி, பிள்ளைபெறும்படி அநுக்கிரகம்பண்ணுகிறார்.

மோசே தன் சகோதரி மிரியாமுக்காக ஜெபம்பண்ணினார். கர்த்தர் அவளுடைய குஷ்டரோகத்தை நீக்கி அவளை சொஸ்தமாக்கினார். "அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: என் தேவனே, அவளைக் குணமாக்கும் என்று கெஞ்சினான்" (எண் 12:13).

யோபு தன்னுடைய சிநேகிதருக்காக ஜெபம்பண்ணினார். அப்பொழுது கர்த்தர் யோபுவை ஆசீர்வதித்தார். பரிசுத்தவான்கள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, அவர்கள் யாருக்காக ஜெபம்பண்ணுகிறார்களோ அவர்களுக்கும் ஆசீர்வாதம் வருகிறது. ஜெபம்பண்ணுகிற பரிசுத்தவான்களுக்கும் ஆசீர்வாதம் வருகிறது.

"யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப்பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்" (யோபு 42:10).

ஆபிரகாம் தேவனை நோக்கி வேண்டிக்கொள்கிறார்; அப்பொழுது தேவன் அபிமெலேக்கையும், அவன் மனைவியையும், அவன் வேலைக்காரிகளையும் குணமாக்கி, பிள்ளைபெறும்படி அநுக்கிரகம் பண்ணுகிறார் (ஆதி 20:18). பரிசுத்தவான்களின் ஜெபம் கர்த்தருடைய பார்வையில் பிரியமானதாயிருக்கிறது.

21 அதிகாரம்

கர்த்தர் வாக்குப்பண்ணின பிரகாரமாக, ஆபிரகாமின் குடும்பத்திலே ஈசாக்கு பிறக்கிறார் (ஆதி 21:1-8). அடிமைப்பெண்ணாகிய ஆகாரின் குமாரனான இஸ்மவேல், ஆபிரகாமின் வீட்டைவிட்டு வெளியேற்றப்படுகிறார் (ஆதி 21:9-21).

ஆபிரகாம் அபிமெலேக்கோடு உடன்படிக்கை செய்துகொள்கிறார் (ஆதி 21:22-32). ஆபிரகாம் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்கிறார் (ஆதி 21:33,34).

ஈசாக்கு
ஆதி 21:1-8

ஆதி 21:1. கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடி சாராள்பேரில் கடாட்சமானார்; கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்குச் செய்தருளினார்.

ஆதி 21:2. ஆபிரகாம் முதிர்வயதாயிருக்கையில், சாராள் கர்ப்பவதியாகி, தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்.

ஆதி 21:3. அப்பொழுது ஆபிரகாம் தனக்குச் சாராள் பெற்ற குமாரனுக்கு ஈசாக்கு என்று பேரிட்டான்.

ஆதி 21:4. தன் குமாரனாகிய ஈசாக்கு பிறந்த எட்டாம் நாளிலே, ஆபிரகாம் தனக்குத் தேவன் கட்டளையிட்டிருந்தபடி அவனுக்கு விருத்தசேதனம்பண்ணினான்.

ஆதி 21:5. தன் குமாரனாகிய ஈசாக்கு பிறந்த போது ஆபிரகாம் நூறுவயதாயிருந்தான்.

ஆதி 21:6. அப்பொழுது சாராள்: தேவன் என்னை நகைக்கப்பண்ணினார்; இதைக்கேட்கிற யாவரும் என்னோடேகூட நகைப்பார்கள்.

ஆதி 21:7. சாராள் பிள்ளைகளுக்குப் பால்கொடுப்பாள் என்று ஆபிரகாமுக்கு எவன் சொல்லுவான்? அவருடைய முதிர்வயதிலே அவருக்கு ஒரு குமாரனைப் பெற்றேனே என்றாள்.

ஆதி 21:8. பிள்ளை வளர்ந்து, பால் மறந்தது; ஈசாக்கு பால் மறந்தநாளிலே ஆபிரகாம் பெரிய விருந்துபண்ணினான்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், ஒரு சிலர் இந்த உலகத்தில் பிறக்கும்போதே மிகுந்த எதிர்பார்ப்போடும், அதிகமான வாக்குத்தத்தங்களோடும் பிறக்கிறார்கள். அவர்களில் ஈசாக்கும் ஒருவர். தங்களுக்கு பேரும் புகழும் உண்டாகவேண்டும் என்பதற்காக கர்த்தர் இவர்களுக்கு வாக்குத்தத்தங்களைக் கொடுக்கவில்லை. தம்முடைய சித்தம் இவர்கள் மூலமாக நிறைவேறவேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

ஈசாக்கு இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். மேசியாவைப்பற்றிய வாக்குத்தத்தம் பூர்வகாலம் முதலே சொல்லப்பட்டு வருகிறது. அக்காலத்திலிருந்தே கர்த்தருடைய ஜனத்தார் தங்களுடைய மேசியா வருவார் என்று எதிர்பார்ப்போடு காத்துக்கொண்டிருந்தார்கள். கிறிஸ்துவானவர் ஈசாக்கின் சந்ததியில் வருகிறார்.

ஈசாக்கின் பிறப்பைக் குறித்து கர்த்தர் ஏற்கெனவே வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடி சாராள்பேரில் கடாட்சமாகிறார்; கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்குச் செய்தருளுகிறார் (ஆதி 21:1).

கர்த்தர் சாராளுடைய இளமையைப் புதுப்பிக்கிறார். ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்து, அதை வளர்ப்பதற்கு ஏற்ற சரீரத்தை கர்த்தர் சாராளுக்குப் புதுப்பித்துக் கொடுக்கிறார் (ஆதி 21:1-2).

ஆபிரகாம் முதிர்வயதாயிருக்கையில், சாராள் கர்ப்பவதியாகி, தேவன் குறித்திருந்த காலத்திலே ஆபிரகாமுக்கு ஒரு குமாரனைப் பெறுகிறாள். ஆபிரகாம் தனக்குச் சாராள் பெற்ற குமாரனுக்கு ஈசாக்கு என்றுபேரிடுகிறார் (ஆதி 21:2,3).

ஈசாக்கு என்னும் பெயருக்கு நகைப்பு என்று பொருள். (ஆதி 17:19,21; ஆதி 21:6-7). ஈசாக்கின் வம்சவரலாறு ஆதி 21:1-28:13; ஆதி 35:12-20 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. ஈசாக்கு கிறிஸ்துவுக்கும், (ஆதி 22) விசுவாசிகளுக்கும் (கலா 4:28-29) அடையாளமாக இருக்கிறார். (ரோமர் 9:7,10; எபி 11:9-20; யாக் 2:21)

ஈசாக்கு கர்த்தருடைய வாக்குத்தத்தின் பிரகாரமாக பிறக்கிறார். தேவன் குறித்திருந்த காலத்திலே ஈசாக்கு பிறக்கிறார். கர்த்தர் காலம் தவறாதவர். கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் நாம் குறித்திருக்கும் காலத்தில் நிறைவேறுவதில்லை. அவை கர்த்தர் குறித்திருக்கும் காலத்தில் நிச்சயமாய் நிறைவேறும். கர்த்தருடைய காலமே ஏற்றகாலம்.

கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் பொதுவான பராமரிப்பின் வல்லமையினால் நிறைவேறுவதில்லை. அவை தேவனுடைய விசேஷித்த வாக்குத்தத்தங்களின் வல்லமையினால் நிறைவேறுகிறது. அதன் பிரகாரமாகவே தேவன் குறித்திருந்த காலத்திலே ஈசாக்கு பிறக்கிறார்.

கர்த்தருடைய வாக்குத்தத்தங்களின் வல்லமையினால், விசுவாசிகளும் இயற்கைக்கு அப்பாற்பட்ட பெரிய காரியங்களை செய்வார்கள். அவர்கள் இந்தக் காரியங்களை மனுஷருடைய வல்லமையினால் செய்யாமல், தேவனுடைய தெய்வீக வல்லமையினால் செய்வார்கள்.

"இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2பேது 1:4).

கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தைக் கொடுக்கிறார். ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார். சாராள் ஆபிரகாமுக்கு ஒரு குமாரனைப் பெற்றுக்கொடுகிறாள். அப்போது ஆபிரகாம் அந்தக் குமாரனுக்கு ஈசாக்கு என்று பேரிடுகிறார். ஈசாக்கு என்னும் பெயருக்கு "நகைப்பு" என்று பொருள் (ஆதி 21:3).

ஆபிரகாம் தன்னுடைய குமாரனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவதற்கு ஒரு சில காரணங்கள் உள்ளன. ஆபிரகாம் கர்த்தரிடத்திலிருந்து ஈசாக்கின் பிறப்பைப்பற்றிய வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொண்டபோது, அவர் சந்தோஷத்தினால் களிகூர்ந்தார்.

"அப்பொழுது ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைத்து: நூறுவயதானவனுக்குப் பிள்ளை பிறக்குமோ? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ? என்று தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டார்" (ஆதி 17:17).

சாராள் ஈசாக்கின் பிறப்பைக் குறித்த வாக்குத்தத்தத்தைக் கேட்டபோது, அவள் அவிசுவாசத்தினால் நகைத்தாள். தன்னுடைய முதிர்வயதிலே தனக்கு பிள்ளை பிறக்குமோ என்று சாராள் சந்தேகப்பட்டாள்.

பிற்காலத்தில் இஸ்மவேல் ஈசாக்கைப் பார்த்து நகைத்தார். ஒருவேளை ஈசாக்குக்கு "நகைப்பு" என்னும் பொருளில் பேரிடப்பட்டிருப்பதினால், இஸ்மவேல் அதை நினைத்து நகைத்திருக்கலாம். இஸ்மவேல் ஈசாக்கை பரியாசம்பண்ணினார் (ஆதி 21:9).

ஈசாக்கின் சந்ததியில் கர்த்தருடைய பரிசுத்தவான்கள் பிறப்பார்கள். இது கர்த்தருடைய வாக்குத்தத்தம். எல்லா காலங்களிலும் இருக்கிற பரிசுத்தவான்கள், இந்த வாக்குத்தத்தத்தை நினைத்து கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறார்கள். ஆகையினால் ஈசாக்குக்கு "நகைப்பு" என்று பொருள்படும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஈசாக்கு பிறந்தபோது, சாராள் தனக்குள்ளே மிகவும் சந்தோஷப்படுகிறாள். கர்த்தரே அவளுக்கு இந்த சந்தோஷத்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் சாராளுக்கு சந்தோஷப்படுவதற்கான காரணத்தையும் கொடுக்கிறார், அதோடு அவளுக்கு சந்தோஷப்படுவதற்கான இருதயத்தையும் கொடுக்கிறார்.

"தேவன் என்னை நகைக்கப்பண்ணினார்; இதைக்கேட்கிற யாவரும் என்னோடேகூட நகைப்பார்கள்" (ஆதி 21:6) என்று சாராள் சொல்லுகிறாள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தாயாராகிய மரியாளின் இருதயமும் தேவனுக்குள் களிகூர்ந்தது. "அப்பொழுது மரியாள்: என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது" (லூக் 1:46,47) என்று சொன்னாள்.

நம்முடைய சந்தோஷம் எப்படிப்பட்டதாகயிருந்தாலும், நம்முடைய சந்தோஷத்திற்கு கர்த்தரே காரணம் என்று நாம் அங்கீகரிக்கவேண்டும். கர்த்தர் நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்கவில்லையென்றால், நம்முடைய நகைப்பு மதியீனருடைய நகைப்பாகவே இருக்கும்.

நாம் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கும்போது, கர்த்தருடைய கிருபையினால், நம்மோடு கூடயிருக்கிறவர்களும் சந்தோஷமாயிருப்பார்கள். நம்முடைய சந்தோஷம் மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்படும்.

சாராள் தன்னுடைய சந்தோஷத்தைப்பற்றிச் சொல்லும்போது, "இதைக் கேட்கிற யாவரும் என்னோடேகூட நகைப்பார்கள்" என்று சொல்லுகிறாள். ஈசாக்கு பிறந்த நற்செய்தியைக் கேள்விப்படுகிற அனைவரும், சாராளின் சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்வார்கள். அவர்களும் சாராளோடுகூட மகிழ்ந்து களிகூருவார்கள்.

"கர்த்தர் அவளிடத்தில் தம்முடைய இரக்கத்தை விளங்கப்பண்ணினாரென்று அவளுடைய அயலகத்தாரும் பந்துஜனங்களும் கேள்விப்பட்டு, அவளுடனேகூடச் சந்தோஷப்பட்டார்கள்" (லூக் 1:58).

ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தைகள் அனைத்திற்கும் கீழ்ப்படிகிறார். தன் குமாரனாகிய ஈசாக்கு பிறந்த எட்டாம் நாளிலே, ஆபிரகாம் தனக்குத் தேவன் கட்டளையிட்டிருந்தபடி ஈசாக்குக்கு விருத்தசேதனம்பண்ணுகிறார். தன் குமாரனாகிய ஈசாக்கு பிறந்த போது ஆபிரகாம் நூறுவயதாயிருக்கிறார் (ஆதி 21:4,5).

தனக்கு ஒரு குமாரன் பிறந்தது சாராளுக்கு மிகுந்த ஆச்சரியமாயிருக்கிறது. தன்னுடைய சரீரத்தில் நடைபெறுவதற்கு வாய்ப்பே இல்லாத ஒரு காரியம் சாராளுக்கு நடைபெற்றிருக்கிறது. சாராள் ஒரு குமாரனைப் பெறுவாள் என்று கர்த்தர் சொன்னபோது, சாராளால் கர்த்தருடைய வார்த்தையை நம்பமுடியவில்லை.

"சாராள் பிள்ளைகளுக்குப் பால்கொடுப்பாள் என்று ஆபிரகாமுக்கு எவன் சொல்லுவான்? அவருடைய முதிர்வயதிலே அவருக்கு ஒரு குமாரனைப் பெற்றறேனே" (ஆதி 21:7) என்று சாராள் அவிசுவாசத்தோடும், அதே வேளையில் ஆச்சரியத்தோடும் சொல்லுகிறாள். கர்த்தருடைய வார்த்தை சாராளுக்கு நிறைவேறியிருக்கிறது. ஆகையினால் அவளால் அதை நம்பாமல் இருக்க முடியாது. அவளுடைய மாம்ச சிந்தையினால் அதை நம்பவும் முடியவில்லை. சாராளின் மனதில் ஆச்சரியமுண்டாயிற்று.

அதுபோலவே கர்த்தர் நமக்கும் சில வாக்குத்தத்தங்களை சொல்லும்போது, அது நிறைவேறுமா என்று நாம் சந்தேகப்படுகிறோம். ஆனாலும் கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்பதையும், வாக்குத்தத்தங்களெல்லாம் கர்த்தருக்குள் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறது என்பதை நாம் அங்கீகரிக்கவேண்டும்.

நாம் கர்த்தருடைய உடன்படிக்கையின் ஜனங்களாயிருக்கிறோம். கர்த்தருடைய உடன்படிக்கை நிறைவேறுவதற்கும், நம்முடைய சுயபலத்திற்கும், சுயபராக்கிரமத்திற்கும் சம்பந்தமே இல்லை. நாம் நினைப்பதற்கும், திட்டமிடுவதற்கும், எதிர்பார்ப்பதற்கும் மேலாக கர்த்தர் நமக்கு பெரிய காரியங்களை செய்கிறார்.

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை இந்தப் பூமிக்கு அனுப்பினார். நம்முடைய பாவங்களுக்காக தேவன் தம்முடைய குமாரனை கல்வாரி சிலுவையிலே பலியாக ஒப்புக்கொடுத்தார். கர்த்தருடைய பரிசுத்தஆவியானவர் நம்மைச் சுத்திகரிக்கிறார். கர்த்தருடைய தூதர்கள் நமக்கு பணிவிடை செய்கிறார்கள். இரட்சகராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார். இவையெல்லாம் கர்த்தருடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக நடைபெறுகிற காரியங்கள். இவை நமக்கு நடைபெறவேண்டும் என்று நம்மால் கர்த்தருக்கு கட்டளை கொடுக்க முடியாது. கர்த்தர் தம்முடைய கிருபையினால் தம்முடைய வாக்குத்தத்தங்களையும், திட்டங்களையும் தம்முடைய சித்தத்தின் பிரகாரம் நிறைவேற்றுகிறார்.

ஈசாக்கு என்னும் பிள்ளை வளருகிறது. ஈசாக்கின் குழந்தைப்பருவத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பிள்ளை பால் மறக்கிறது. வளர்ந்த பிள்ளைக்கு பால் தேவைப்படாது. அதற்கு திடமான போஜனம் கொடுக்கவேண்டும். பிள்ளையை பால் மறக்கப்பண்ணவேண்டும்.

"பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்" (எபி 5:13,14).

ஈசாக்கு பால் மறந்த நாளிலே, ஆபிரகாம் பெரிய விருந்து பண்ணுகிறார் (ஆதி 21:8). கர்த்தருடைய ஆசீர்வாதம் ஈசாக்கின்மீது தங்கியிருக்கிறது. கர்த்தர் ஈசாக்கை பாதுகாப்பாக வளர்க்கிறார். ஈசாக்கு பிள்ளையாகயிருந்து, தாய்பால் பருகிய காலத்தில், கர்த்தர் ஈசாக்கை வியாதிகளுக்கும், தொற்றுநோய்களுக்கும் விலக்கி பாதுகாக்கிறார். இவையெல்லாம் கர்த்தருடைய தெய்வீக பராமரிப்புக்கள். ஆபிரகாம் தேவனுடைய நன்மையை நினைவுகூர்ந்து, கர்த்தரைத் துதித்து, ஒரு பெரிய விருந்துபண்ணுகிறார்.

"நீரே என்னைக் கர்ப்பத்திலிருந்து எடுத்தவர்; என் தாயின் முலைப்பாலை நான் உண்கையில் என்னை உம்முடைய பேரில் நம்பிக்கையாயிருக்கப்பண்ணினீர். கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந்தேன் நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்" (சங் 22:9,10).

"இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன்; எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்" (ஓசி 11:1).

இஸ்மவேல்
ஆதி 21:9-13

ஆதி 21:9. பின்பு எகிப்துதேசத்தாளாகிய ஆகார் ஆபிரகாமுக்குப் பெற்ற குமாரன் பரியாசம்பண்ணுகிறதைச் சாராள் கண்டு,

ஆதி 21:10. ஆபிரகாமை நோக்கி: இந்த அடிமைப்பெண்ணையும் அவள் மகனையும் புறம்பே தள்ளும்; இந்த அடிமைப்பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை என்றாள்.

ஆதி 21:11. தன் மகனைக்குறித்துச் சொல்லப்பட்ட இந்தக் காரியம் ஆபிரகாமுக்கு மிகவும் துக்கமாயிருந்தது,

ஆதி 21:12. அப்பொழுது தேவன் ஆபிரகாமை நோக்கி: அந்தப் பிள்ளையையும், உன் அடிமைப்பெண்ணையும் குறித்துச் சொல்லப்பட்டது உனக்குத் துக்கமாயிருக்க வேண்டாம்; ஈசாக்கிடத்தில் உன் சந்ததி விளங்கும். ஆதலால் சாராள் உனக்குச் சொல்வதெல்லாவற்றையும் கேள்.

ஆதி 21:13. அடிமைப்பெண்ணின் மகனும் உன்வித்தாயிருக்கிறபடியால், அவனையும் ஒரு ஜாதியாக்குவேன் என்றார்.

இஸ்மவேல் ஈசாக்கின் மூத்த சகோதரன். அடிமைப்பெண்ணாகிய ஆகார் இஸ்மவேலை ஆபிரகாமுக்கு பெற்றாள். இஸ்மவேல் பிறந்தபோதே, சாராள் ஆகாரை கடினமாய் நடத்தினாள். இந்த வசனத்தில் ஆகாரைப்பற்றிச் சொல்லும்போது, "எகிப்து தேசத்தாளாகிய ஆகார்" *(ஆதி 21:9)* என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆபிரகாமின் சந்ததியார் எகிப்து தேசத்திலே நானூறு வருஷங்கள் உபத்திரவங்களை அனுபவிப்பார்கள் என்றும், அந்த உபத்திரவக்காலம் இப்போது ஆரம்பமாயிற்று என்றும், வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

"அப்பொழுது அவர் ஆபிராமை நோக்கி: உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய்" *(ஆதி 15:13)*.

இஸ்மவேல் ஈசாக்கைவிட பதினான்கு வருஷம் வயதில் மூத்தவர். ஆனாலும் இஸ்மவேல் தன் சகோதரன் ஈசாக்கை பரியாசம்பண்ணுகிறார். இரண்டுபேருக்கும் ஒரே வயதல்ல. எகிப்துதேசத்தாளாகிய ஆகார் ஆபிரகாமுக்குப் பெற்ற குமாரன் பரியாசம்பண்ணுகிறதைச் சாராள் காண்கிறாள் *(ஆதி 21:9)*.

தன்னுடைய குமாரன் ஈசாக்கை, இஸ்மவேல் பரியாசம்பண்ணுவதைப் பார்த்து, சாராள் கோபப்படுகிறாள். சாராள் ஆபிரகாமை நோக்கி: "இந்த அடிமைப்பெண்ணையும் அவள் மகனையும் புறம்பேதள்ளும்; இந்த அடிமைப்பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை" *(ஆதி 21:10)* என்று சொல்லுகிறாள்.

சாராள் கோபத்தில் பேசுகிறாள். ஆனாலும் சாராள் சொன்ன வார்த்தைகள் புதிய ஏற்பாட்டில் மேற்கோளாக சொல்லப்பட்டிருக்கிறது. சாராள் தீர்க்கதரிசன ஆவியினால் பேசியதுபோல, அவளுடைய வார்த்தைகள் புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கிறது.

"அதைக்குறித்து வேதம் என்ன சொல்லுகிறது: அடிமையானவளின் மகன் சுயாதீனமுள்ளவளுடைய குமாரனோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை; ஆகையால் அடிமையானவளையும், அவளுடைய மகனையும் புறம்பே தள்ளு என்று சொல்லுகிறது" *(கலா 4:30)*.

இஸ்மவேல் ஆபிரகாமின் வீட்டில் தங்கியிருந்தாலும், அவர் சுதந்தரவாளியாயிருக்கமாட்டார். இஸ்மவேலைப்பற்றிய வாக்கியம் அவிசுவாசிகளுக்கு எச்சரிப்பாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவிசுவாசிகளும், மாய்மாலக்காரரும், துன்மார்க்கரும் சபையிலே இருந்தாலும், அவர்கள் கர்த்தருடைய ஆசீர்வாதங்களுக்கு சுதந்தரவாளிகளாயிருக்கமாட்டார்கள்.

தன் மகன் இஸ்மவேலைக் குறித்துச் சொல்லப்பட்ட இந்தக் காரியம் ஆபிரகாமுக்கு மிகவும் துக்கமாயிருக்கிறது *(ஆதி 21:11)*. இஸ்மவேல் ஈசாக்கை அதிகமாய்ப் பரியாசம்பண்ணியிருக்கிறார். தன் மகன் ஈசாக்கைக் குறித்து, இஸ்மவேல் சொன்ன காரியம் ஆபிரகாமுக்கு மிகவும் துக்கமாயிருக்கிறது என்று வேதபண்டிதர்கள் இந்த வாக்கியத்திற்கு விளக்கம் சொல்லுகிறார்கள்.

சாராள் இஸ்மவேலைக் குறித்து சொன்ன காரியம் ஆபிரகாமுக்கு துக்கமாயிருக்கிறது என்றும் வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். இஸ்மவேல் தண்டிக்கப்படவேண்டும் என்று சாராள் உறுதியாகச் சொல்லுகிறாள். இஸ்மவேலை வீட்டில் வைத்து தண்டிக்கக்கூடாது என்றும், இஸ்மவேலையும், அவருடைய தாயாராகிய ஆகாரையும் வீட்டைவிட்டு புறம்பே தள்ளவேண்டும் என்றும் சாராள் சொல்லுகிறாள்.

ஆபிரகாமின் வீட்டில் குடும்ப பிரச்சனை உண்டாயிற்று. ஆபிரகாம் துக்கமாயிருக்கிறார். கர்த்தர் ஆபிரகாமின் துக்கத்தை அறிந்திருக்கிறார்.

அப்பொழுது தேவன் ஆபிரகாமை நோக்கி: "அந்தப் பிள்ளையையும், உன் அடிமைப்பெண்ணையும் குறித்துச் சொல்லப்பட்டது உனக்குத் துக்கமாயிருக்க வேண்டாம்; ஈசாக்கிடத்தில் உன் சந்ததி விளங்கும். ஆதலால் சாராள் உனக்குச் சொல்வதெல்லாவற்றையும் கேள். அடிமைப்பெண்ணின் மகனும் உன் வித்தாயிருக்கிறபடியால், அவனையும் ஒரு ஜாதியாகுக்குவேன்" (ஆதி 21:12,13) என்று சொல்லுகிறார்.

ஆபிரகாமுடைய உடன்படிக்கையின் ஜனத்தார் விசேஷித்த ஜனமாயிருப்பார்கள். அவர்கள் மற்ற ஜாதியாரோடு கலக்காமல், பரிசுத்த வித்தாகயிருப்பார்கள். உடன்படிக்கையின் ஜனங்களுக்கும், உடன்படிக்கைக்குட்படாத ஜனங்களுக்கும் சம்பந்தமில்லை. ஆகையினால்தான் இஸ்மவேலையும், அவளுடைய தாயாராகிய ஆகாரையும் புறம்பே தள்ளவேண்டுமென்று சாராள் சொல்லுகிறாள். ஆகார் எகிப்து தேசத்தாள். அவள் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவள்.

இஸ்மவேல் ஆபிரகாமின் வீட்டைவிட்டு வெளியேற்றப்படும்போது, அவரும் அவருடைய சந்ததியும் அழிந்துபோகக்கூடாது. இஸ்மவேல் அடிமைப்பெண்ணின் குமாரனாகயிருந்தாலும், அவர் ஆபிரகாமின் வித்தாகவும் இருக்கிறார். ஆகையினால் கர்த்தர் இஸ்மவேலையும் ஒரு ஜாதியாக்குவதாக வாக்குப்பண்ணுகிறார் (ஆதி 21:13).

கர்த்தரே ஜாதியையும் தேசத்தையும் உருவாக்குகிறார். அவரே அவற்றை ஸ்தாபிக்கிறார். இந்தப் பிரபஞ்சத்தில் அநேகர் தேவனுடைய தெய்வீக பராமரிப்புக்களை அதிகமாய் அனுபவிக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களுக்கு அந்நியராயிருக்கிறார்கள்.

ஆவிக்குரிய ஆசீர்வாதம் வேறு. உலகப்பிரகாரமான ஆசீர்வாதம் வேறு. கர்த்தருடைய பிள்ளைகளுக்கு மாத்திரமே ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் எல்லா ஜனங்களுக்கும் பொதுவானது.

ஆகார்
ஆதி 21:14-21

ஆதி 21:14. ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, அப்பத்தையும் ஒரு துருத்தி தண்ணீரையும் எடுத்து, ஆகாருடைய தோளின்மேல் வைத்துப் பிள்ளையையும் ஒப்புக்கொடுத்து, அவளை அனுப்பிவிட்டான்; அவள் புறப்பட்டுபோய், பெயர்செபாவின் வனாந்தரத்திலே அலைந்து திரிந்தாள்.

ஆதி 21:15. துருத்தியிலிருந்த தண்ணீர் செலவழிந்தபின்பு, அவள் பிள்ளையை ஒரு செடியின்கீழே விட்டு,

ஆதி 21:16. பிள்ளை சாகிறதை நான் பார்க்கமாட்டேன் என்று, எதிராக அம்பு பாயும் தூரத்திலே போய் உட்கார்ந்து சத்தமிட்டு அழுதாள்.

ஆதி 21:17. தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார்; தேவதூதன் வானத்திலிருந்து ஆகாரைக் கூப்பிட்டு: ஆகாரே, உனக்கு என்ன சம்பவித்தது, பயப்படாதே, பிள்ளையிருக்கும் இடத்திலே தேவன் அவன் சத்தத்தைக் கேட்டார்.

ஆதி 21:18. நீ எழுந்து பிள்ளையை எடுத்து அவனை உன் கையினால் பிடித்துக்கொண்டுபோ, அவனைப் பெரிய ஜாதியாக்குவேன் என்றார்.

ஆதி 21:19. தேவன் அவளுடைய கண்களைத் திறந்தார்; அப்பொழுது அவள் ஒரு தண்ணீர்த் துரவைக் கண்டு, போய், துருத்தியிலே தண்ணீர் நிரப்பி, பிள்ளைக்குக் குடிக்கக் கொடுத்தாள்.

ஆதி 21:20. தேவன் பிள்ளையுடனே இருந்தார். அவன் வளர்ந்து வனாந்தரத்திலே குடியிருந்து, வில்வித்தையிலே வல்லவனானான்.

ஆதி 21:21. அவன் பாரான் வனாந்தரத்திலே குடியிருக்கையில், அவனுடைய தாய் எகிப்து தேசத்தாளாகிய ஒரு பெண்ணை அவனுக்கு விவாகம்பண்ணுவித்தாள்.

அடிமைப்பெண்ணாகிய ஆகாரும், அவளுடைய குமாரன் இஸ்மவேலும் ஆபிரகாமின் வீட்டிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். சாராள் "இந்த அடிமைப்பெண்ணையும், அவள் மகனையும் புறம்பே தள்ளும்" என்று சொன்ன காரியம் ஆபிரகாமுக்கு மிகவும் துக்கமாயிருக்கிறது. கர்த்தரும் ஆபிரகாமிடம், "சாராள் உனக்கு சொல்லுவது எல்லாவற்றையும் கேள்" என்று சொல்லியிருக்கிறார்.

"ஈசாக்கிடத்தில் உன் சந்ததி விளங்கும்" என்று கர்த்தர் ஆபிரகாமுக்கு சொல்லுகிறார் (ஆதி 21:12) - (ரோமர் 9:7; கலா 3:16; எபி 11:18) ஆதி 21:2 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சி நடைபெற்று ஐந்து வருஷங்கள் ஆயிற்று. ஆதி 12:4 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சி நடைபெற்று முப்பது வருஷங்களாயிற்று.

"துருத்தி" விலங்குகளின் தோலினால் செய்யப்படுகிறது. (மத் 9:17). எகிப்து தேசத்தில் ஸ்திரீகள் சுமைகளைத் தங்கள் தோள்களின்மீதும், புருஷர்கள் சுமைகளைத் தங்கள் தலைகளின்மீதும் சுமப்பார்கள். (ஆதி 24:15).

ஆபிரகாம் தேவனுடைய தெய்வீக கட்டளைக்கு காலதாமதம்பண்ணாமல் உடனே கீழ்ப்படிகிறார். ஆபிரகாம் காலையில் எழுந்து அப்பத்தையும் ஒரு துருத்தி தண்ணீரையும் எடுத்து, ஆகாருடைய தோளின்மேல் வைத்துப் பிள்ளையையும் ஒப்புக்கொடுத்து, அவளை அனுப்பிவிடுகிறார்.

பெயர்செபாவின் தென் பகுதியில் நீரூற்றுகள் இருந்ததாகத் தெரியவில்லை. அங்கு துரவுகளும் அதிகமில்லை. அந்தத் தேசத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர்களால் மட்டுமே துரவுகளின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முடியும். அந்நியர்கள் துரவிலுள்ள தண்ணீரைத் திருடிவிடாதபடி, துரவுகளை மூடி மறைப்பது அக்காலத்து வழக்கம். ஆகாரின் சொந்த ஜனங்கள் வனாந்தர தேசத்தில் இருக்கிறார்கள். ஆகையினால் அவளை ஆதரிப்பதற்கு அங்கே ஜனங்கள் இருப்பதாக ஆபிரகாம் நினைத்திருக்கலாம்.

ஆகாருக்கும், வனாந்தரத்தைப்பற்றி நன்றாகத் தெரியும். ஆயினும், தன்னுடைய வருத்தத்தினால் வனாந்தரத்தில் பாதை மாறி, அலைந்து திரிகிறாள். (ஆதி 21:16).

மேசியாவின் வம்சவழியை வேறுபிரிக்க வேண்டுமென்பதற்காக தேவன் ஆகாரையும், இஸ்மவேலையும் தனியாகப் பிரித்துவிடுகிறார். மோசேயின் பிரமாணம் எவ்வாறு அகற்றப்படுகிறது என்பதை இது சித்தரிக்கிறது (2கொரி 3:5-18; கலா 4:21-31).

இஸ்மவேல் இங்கு பிள்ளை என்று அழைக்கப்பட்டாலும், அவனுக்கு இப்பொழுது குறைந்தது 19 வயதாயிருக்க வேண்டும். (ஆதி 17:1,25; ஆதி 21:5,8).

ஆபிரகாம் காலையில் எழுந்தவுடன் தன்னுடைய சொந்த வேலைகள் எதையும் பார்க்காமல், கர்த்தர் தனக்கு சொன்ன கட்டளைக்கு உடனே கீழ்ப்படிகிறார். ஆபிரகாம் கர்த்தரோடு விவாதம்பண்ணவில்லை. அவர் கர்த்தருடைய கட்டளைக்கு அமைதியாக கீழ்ப்படிகிறார்.

அடிமைப்பெண்ணாகிய ஆகாரும், அவளுடைய குமாரனாகிய இஸ்மவேலும் ஆபிரகாமின் வீட்டைவிட்டு வெளியேற்றப்படுகிறார்கள். ஆகார் தன் குமாரன் இஸ்மவேலைத் தூக்கிக்கொண்டு, ஆபிரகாமின் வீட்டைவிட்டு புறப்பட்டுபோய், பெயர்செபாவின் வனாந்தரத்திலே அலைந்து திரிகிறாள் (ஆதி 21:14).

ஆகாருக்கு வனாந்தரத்தில் பாதை தெரியவில்லை. அவள் போகவேண்டிய பாதையும் அவளுக்கு தெரியவில்லை. ஆகார் தன் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு எங்கே போகவேண்டுமென்று, ஆபிரகாம் அவளுக்கு சொல்லியிருப்பார். ஆனால் ஆகாரோ வனாந்தரத்தில் பாதை தெரியாமல் அலைந்து திரிகிறாள். ஆகாரால் தனக்கு நியமிக்கப்பட்ட ஸ்தலத்தில் போய்ச் சேரமுடியவில்லை.

ஆகார் ஆபிரகாம் வீட்டைவிட்டு புறப்பட்டபோது, அவளுக்கு அப்பமும் ஒரு துருத்தி தண்ணீரும் மாத்திரமே கொடுக்கப்பட்டது. இஸ்மவேலும் ஆகாரோடு கூடயிருக்கிறான். ஆகார் இஸ்மவேலைத் தூக்கிக்கொண்டு பெயர்செபாவின் வனாந்தரத்திலே அலைந்து திரிகிறாள். அப்போது துருத்தியிலிருந்த தண்ணீர் செலவழிந்து போயிற்று. இஸ்மவேலும் சரீரத்திலே பலவீனமாயிருக்கிறான். ஒருவேளை அவன் வியாதியாயிருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

இஸ்மவேல் தன் வியாதியில் செத்துப்போவானோ என்னும் பயம் ஆகாருக்கு உண்டாயிற்று. இஸ்மவேலுக்கு கொடுக்க ஆகாரிடம் மருந்து எதுவுமில்லை. துருத்தியில் கொஞ்சம் தண்ணீர் மாத்திரமே இருக்கிறது. அந்தத் தண்ணீரும் செலவழிந்துபோயிற்று.

துருத்தியிலிருந்த தண்ணீர் செலவழிந்தபின்பு, ஆகார் பிள்ளையை ஒரு செடியின்கீழே விடுகிறாள். அப்பொழுது அவள், "பிள்ளை சாகிறதை நான் பார்க்கமாட்டேன்" என்று சொல்லி, எதிராக அம்பு பாயும் தூரத்திலே போய் உட்கார்ந்து சத்தமிட்டு அழுகிறாள் (ஆதி 21:15,16).

ஆகார் சத்தமிட்டு அழும்போது, தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்கிறார் (ஆதி 21:17). ஆகார் அழும்போது, அவள் பிள்ளையாகிய இஸ்மவேலும் சேர்ந்து அழுகிறான். ஆகாருக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லுவதற்காக கர்த்தர் ஒரு தேவதூதனை அனுப்புகிறார். தேவதூதன் மூலமாக ஆகார் வனாந்தரத்திலே ஆறுதலான வார்த்தைகளைப் பெற்றுக்கொள்வது இது முதலாவது சம்பவமல்ல. தேவதூதன் அவளை வனாந்தரத்திலே ஏற்கெனவே ஆறுதல் செய்திருக்கிறார்.

"அப்பொழுது அவள்: என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா என்று சொல்லி, தன்னோடே பேசின கர்த்தருக்கு நீர் என்னைக் காண்கிற தேவன் என்று பேரிட்டாள்" (ஆதி 16:13).

தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்கிறார். தேவதூதன் வானத்திலிருந்து ஆகாரைக் கூப்பிட்டு, "ஆகாரே, உனக்கு என்ன சம்பவித்தது, பயப்படாதே, பிள்ளையிருக்கும் இடத்திலே தேவன் அவன் சத்தத்தைக் கேட்டார்" (ஆதி 21:17) என்று சொல்லுகிறார்.

பிள்ளை எங்கே இருந்து கூப்பிடுகிறதோ, அங்கே கர்த்தர் அந்தப் பிள்ளையின் சத்தத்தைக் கேட்கிறார். அந்தப் பிள்ளை இப்போது வனாந்தரத்திலிருக்கிறது. நாம் எங்கே இருந்து கர்த்தரைக் கூப்பிடுகிறோம் என்பது முக்கியமல்ல. நாம் எங்கே இருந்தாலும் பரலோகத்திலுள்ள தேவனை நோக்கி கூப்பிடவேண்டும். அப்போது கர்த்தர் நம்முடைய சத்தத்தையும் கேட்பார்.

கர்த்தர் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டு, ஆகாரை நோக்கி, "நீ எழுந்து பிள்ளையை எடுத்து அவனை உன் கையினால் பிடித்துக்கொண்டுபோ, அவனைப் பெரிய ஜாதியாக்குவேன்" (ஆதி 21:18) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்மவேலைக் குறித்து ஏற்கெனவே வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, "அடிமைப்பெண்ணின் மகனும் உன் வித்தாயிருக்கிறபடியால், அவனையும் ஒரு ஜாதியாக்குவேன்" (ஆதி 21:13) என்று சொன்னார். தாம் ஏற்கெனவே சொன்ன வாக்குத்தத்தத்தை கர்த்தர் இங்கு மறுபடியுமாய்ச் சொல்லி, அதை உறுதிபண்ணுகிறார். "அவனை பெரிய ஜாதியாக்குவேன்" என்று கர்த்தர் இஸ்மவேலைக்குறித்து வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தருடைய வாக்குத்தத்தம் இஸ்மவேலுக்கு கொடுக்கப்படுகிறது. ஆகையினால் இஸ்மவேல் செத்துப்போகாதபடிக்கு ஆகார் அவனைப் பராமரிக்கவேண்டும். அவள் அவனுக்கு ஆதரவான உதவிகளை செய்யவேண்டும். தேவன் ஆகாரின் கண்களைத் திறக்கிறார். அப்பொழுது அவள் ஒரு தண்ணீர்த் துரவைக் காண்கிறாள். ஆகார் போய், துருத்தியிலே தண்ணீர் நிரப்பி, பிள்ளைக்குக் குடிக்கக் கொடுக்கிறாள் (ஆதி 21:19).

சற்று நேரத்திற்கு முன்பு ஆகார் வனாந்தரத்திலே போய் உட்கார்ந்து சத்தமிட்டு அழுதாள். அவளுடைய அழுகைக்கு நியாயமான காரணமுண்டு. ஆகாரைப் போலவே கர்த்தருடைய பிள்ளைகளில் அநேகர், அநுதினமும் சத்தமிட்டு அழுதுகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய அழுகைக்கும் காரணமுண்டு. ஆனாலும் கர்த்தர் தம்முடைய ஜனத்தின் அழுகையை, தமது கிருபையினால் நிறுத்துகிறார்.

கர்த்தர் தம்முடைய கிருபையின் உடன்படிக்கையினால், ஆகாருடைய கண்களைத் திறக்கிறார். அப்போது அவள் ஒரு துரவைக் காண்கிறாள். அதுபோலவே விசுவாசிகளாகிய நாம் துக்கத்திலும் வேதனையிலும் அழுதுகொண்டிருந்தாலும், கர்த்தர் நம்முடைய கண்களையும் திறப்பார். அப்போது நம்முடைய காயங்கள் திறக்கப்படுவதையும், கர்த்தர் அந்தக் காயங்களுக்கு மருந்துபோடுவதையும், நம்முடைய காயங்கள் கர்த்தருடைய கிருபையினால் குணப்படுத்தப்படுவதையும் நாம் பார்ப்போம். நமக்கு வரும் ஆறுதலை நம்முடைய கண்கள் காணும்.

"ஆனாலும் நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினால் உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது. நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்"(யோவா 16:6,7).

"ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது; ஒருவன் அடிமையானவளிடத்தில் பிறந்தவன், ஒருவன் சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன். அடிமையானவளிடத்தில் பிறந்தவன் மாம்சத்தின்படி பிறந்தான், சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன் வாக்குத்தத்தத்தின்படி பிறந்தான். இவைகள் ஞான அர்த்தமுள்ளவைகள்; அந்த ஸ்திரீகள் இரண்டு ஏற்பாடுகளாம்; ஒன்று சீனாய்மலையிலுண்டான ஏற்பாடு, அது அடிமைத்தனத்திற்குள்ளாகப் பிள்ளைபெறுகிறது, அது ஆகார் என்பவள் தானே" (கலா 4:22-24).

அப்போஸ்தலர் பவுல் இந்த சம்பவத்தை ஞானஅர்த்தமுள்ளதாக எழுதியிருக்கிறார். யூதர்கள் இயேசுகிறிஸ்துவை கர்த்தராகவும், தங்களுடைய இரட்சகராகவும் விசுவாசிப்பதில்லை. அவர்கள் நியாயப்பிரமாணத்தினால் வரும் நீதியைத் தேடுகிறார்கள். யூதர்கள் இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தை நம்பாமல், நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கும் கட்டளைகளை நம்புகிறார்கள்.

நியாயப்பிரமாணத்தினால் வரும் நீதியை நம்புகிறவர்கள், உலகத்தையும், உலகசந்தோஷத்தையும் விரும்புகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கையின் மூலமாக வரும் ஆறுதலையும், தேவனோடு ஐக்கியமாகயிருப்பதினால் வரும் ஆசீர்வாதங்களையும் புறக்கணித்துவிடுகிறார்கள்.

ஆகார் வனாந்தரத்திலே அலைந்து திரிந்ததுபோல, இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்காத யூதர்களும், தாகத்தோடும், விரக்தியோடும், வேதனையோடும், இந்த உலகத்திலே முடிவில்லாமல் அலைந்து திரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆகார் வனாந்தரத்திலே உட்கார்ந்து சத்தமிட்டு அழுததுபோல, இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்காத யூதர்களும், தங்களுடைய ஜீவியத்தின் பாதையிலே இலக்கு தெரியாமல், காணாமல் போய், உட்கார்ந்து சத்தமிட்டு அழுகிறார்கள்.

ஆகார் இப்போது பெயர்செபாவின் வனாந்தரத்திலே இருக்கிறாள். தேவன் இஸ்மவேலின் சத்தத்தைக் கேட்கிறார். அவர் இஸ்மவேலுடனே இருக்கிறார். இஸ்மவேல் வளர்ந்து வனாந்தரத்திலே குடியிருந்து, வில்வித்தையிலே வல்லவனாகிறான் (ஆதி 21:20).

தேவன் பிள்ளையுடனே இருக்கிறார். தேவன் ஒருவரோடு இருக்கும்போது அவருக்குத் தேவனுடைய ஒத்தாசையும், ஆசீர்வாதமும், பாதுகாப்பும், பராமரிப்பும் உண்டு. (ஆதி 39:2,21; நியா 6:12; யோவான் 3:2; அப் 10:38).

இஸ்மவேல் சரீரப் பிரகாரமாக வளருகிறான் (ஆதி 1:8; லூக்கா 1:80; லூக்கா 2:40,52).

பரிசுத்த வேதாகமத்தில், தேவன் மனுஷரோடிருந்ததற்கு பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :

1. இஸ்மவேல் (ஆதி 21:20)
2. ஆபிரகாம் (ஆதி 21:22)
3. யாக்கோபு (ஆதி 28:15,20)
4. யோசேப்பு (ஆதி 39:2,21; அப் 7:9)

5. மோசஸ் (யோசு 1:5)

6. யோசுவா (யோசு 1:5,9)

7. சாமுவேல் (1சாமு 3:19)

8. தாவீது (2சாமு 5:10; 1நாளா 17:2)

9. சாலொமோன் (1நாளா 28:20; 2நாளா 1:1)

10. எரேமியா (எரே 20:11)

11. இயேசு (யோவான் 3:2; அப் 10:38)

12. பவுல் (2தீமோ 4:17)

பரிசுத்த வேதாகமத்தில் வனாந்தரம் என்னும் வார்த்தை 305 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது பாலைவனமல்ல. இது பயிர் செய்யப்படாத பூமி. இங்கு இயற்கையாக வளரும் பசுமையான செடி வகைகளும், புல்பூண்டுகளும் இருக்கும். இவை கால்நடைக்குத் தீவனமாக இருக்கும். இங்கு ஜனங்கள் குடியிருப்பார்கள். வனாந்தரத்தில் குடியிருப்பும், பட்டணங்களும் கட்டப்பட்டிருக்கும். (ஏசா 14:17; ஏசா 40:3; ஏசா 42:11; மத் 3:1; மத் 15:33; அப் 7:30; வெளி 12:6).

இஸ்மவேல் பாரான் வனாந்தரத்திலே குடியிருக்கையில், அவனுடைய தாய் எகிப்து தேசத்தாளாகிய ஒரு பெண்ணை அவனுக்கு விவாகம்பண்ணுவிக்கிறாள் (ஆதி 21:21). பாரான் வனாந்தரம் காட்டு மிருகங்கள் நிறைந்த பூமி. மிருகங்களை வேட்டையாடுகிறவர்களும் முரட்டுகுணமுள்ளவர்களும் இப்படிப்பட்ட வனாந்தரத்தில் தங்கியிருப்பார்கள்.

"இஸ்மவேல் துஷ்டமனுஷனாயிருப்பான்; அவனுடைய கை எல்லாருக்கும் விரோதமாகவும், எல்லாருடைய கையும் அவனுக்கு விரோதமாகவும் இருக்கும்; தன் சகோதரர் எல்லாருக்கும் எதிராகக் குடியிருப்பான்" (ஆதி 16:12) என்று கர்த்தர் சொன்னார்.

இஸ்மவேல் துஷ்டனாகயிருந்தாலும், அவன் வனாந்தரத்திலே சஞ்சரித்தாலும், கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் அவனோடு கூடயிருக்கிறது. "தேவன் பிள்ளையுடனே இருந்தார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் இஸ்மவேலுக்கு சொல்லப்பட்ட உடன்படிக்கையை காத்துக்கொள்கிறார். அவர் இஸ்மவேலை ஒரு பெரிய ஜாதியாக்க சித்தமுள்ளவராயிருக்கிறார்.

இஸ்மவேல் வில்வித்தையிலே வல்லவனாயிருக்கிறான். காட்டு மிருகங்களை வேட்டையாடுவது அவனுடைய தொழில். அவன் ஒரு துஷ்டமனிதன். இஸ்மவேல் முரட்டு சுபாவமுள்ளவன். இஸ்மவேலுக்கு திருமணம் பண்ணுகிற வயது வருகிறது.

எகிப்து தேசத்தாளாகிய ஆகார் இஸ்மவேலோடு கூடயிருக்கிறாள். அவள் தன்னுடைய தாயாரின் துரவிலே இஸ்மவேலுக்கு பெண் பார்க்கிறாள். ஆகார் எகிப்து தேசத்தாளாகிய ஒரு பெண்ணை, இஸ்மவேலுக்கு விவாகம்பண்ணி வைக்கிறாள்.

இஸ்மவேல் வில்வித்தையிலே வல்லவனாயிருக்கிறான். அவன் மிருகங்களை குறிபார்த்து வேட்டையாடக்கூடியவன். ஆனாலும் தன்னுடைய வாழ்க்கைத் துணையை, தன்னால் குறிபார்த்து தெரிந்தெடுக்க முடியாது என்று நினைத்து, அவன் தன்னுடைய தாயாரை தனக்காக பெண் பார்க்குமாறு சொல்லியிருந்திருக்கலாம். ஆகார் இஸ்மவேலுக்கு எகிப்து தேசத்திலே பெண் பார்க்கிறாள். இஸ்மவேலும் தன் தாயார் சொன்ன எகிப்து தேசத்து பெண்ணை விவாகம்பண்ணுகிறான்.

பரிசுத்தவேதாகமத்தில் வில்வித்தையில் வல்லவர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. இஸ்மவேல் (ஆதி 21:20)

2. ஏசா (ஆதி 27:3)

3. யோனத்தான் (1சாமு 20:20,36-37; 2சாமு 1:185-22)

4. தாவீது (2சாமு 22:35; சங் 18:34)

5. சீரியர்கள் (1இராஜா 22:34)

6. யெகூ (2இராஜா 9:24)

7. யோவாஸ் (2இராஜா 13:15-17)

8. பெலிஸ்தர்கள் (1சாமு 31:3; 1நாளா 10:3)

9. இஸ்ரவேலர்கள் (2சாமு 1:18; 1நாளா 5:18; 1நாளா 12:2; 2நாளா 14:8; 2நாளா 17:17; 2நாளா 26:14; நெகே. 4:13)

10. ஊலாமின் குமாரன் (1நாளா 8:40)

11. யோபு (யோபு 29:20)

12. மேதியரும், பெர்சியரும் (ஏசா 13:17-18)

13. கேதேரின் ஜனங்கள் (ஏசா 21:17)

14. லீதியரும், மற்றவர்களும் (ஏசா 66:19; எரே 6:23; எரே 46:9; எரே 49:35)

பாரான் சீனாய் மலைக்கு வடக்கில் உள்ளது. இது மலையையும், வனாந்தரத்தையும் குறிக்கும் பெயர். (ஆதி 21:21; எண் 10:12; எண் 12:16; எண் 13:3,26; உபா 1:1; உபா 33:2; 1சாமு 25:1; 1இராஜா 11:18; ஆப 3:3).

ஆகார் எகிப்து தேசத்தைச் சேர்ந்தவள். பார்வோன் அவளைச் சாராளுக்குக் கொடுத்தான். (ஆதி 12:16-20; ஆதி 16:3). இவ்வாறாக இஸ்மவேல் எகிப்தின் சந்ததியில் வருகிறான்.

அபிமெலேக்கும் ஆபிரகாமும் ஆதி 21:22-32

ஆதி 21:22. அக்காலத்தில் அபிமெலேக்கும் அவன் சேனாபதியாகிய பிகோலும் ஆபிரகாமை நோக்கி: நீ செய்கிற காரியங்கள் எல்லாவற்றிலும் தேவன் உன்னுடனே இருக்கிறார்.

ஆதி 21:23. ஆகையால், நீ எனக்காவது, என் குமாரனுக்காவது, என் பேரனுக்காவது வஞ்சனை செய்யாமல், நான் உனக்குச் செய்த தயவின்படியே, நீ எனக்கும், நீ தங்கியிருக்கிற இந்தக் தேசத்திற்கும், தயவுசெய்வேன் என்று இங்கே தேவன் பேரில் எனக்கு ஆணையிட்டுக்கொடு என்றான்.

ஆதி 21:24. அதற்கு ஆபிரகாம்: நான் ஆணையிட்டுக்கொடுக்கிறேன் என்றான்.

ஆதி 21:25. ஆனாலும், அபிமெலேக்குடைய வேலைக்காரர் கைவசப்படுத்திக்கொண்ட துரவின் நிமித்தம் ஆபிரகாம் அபிமெலேக்கைக் கடிந்துகொண்டான்.

ஆதி 21:26. அதற்கு அபிமெலேக்கு: இந்த காரியத்தைச் செய்தவன் இன்னான் என்று எனக்குத் தெரியாது, நீயும் எனக்கு அறிவிக்கவில்லை; இன்று நான் அதைக் கேட்டதேயன்றி, இதற்குமுன் அதை நான் கேள்விப்பட்டதே இல்லை என்றான்.

ஆதி 21:27. அப்பொழுது ஆபிரகாம் ஆடுமாடுகளைக் கொண்டுவந்து அபிமெலேக்குக்குக் கொடுத்தான்; அவர்கள் இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள்.

ஆதி 21:28. ஆபிரகாம் ஏழு பெண்ணாட்டுக்குட்டிகளைத் தனியே நிறுத்தினான்.

ஆதி 21:29. அப்பொழுது அபிமெலேக்கு ஆபிரகாமை நோக்கி: நீ தனியே நிறுத்தின இந்த ஏழு பெண்ணாட்டுக்குட்டிகள் என்னத்திற்கு என்று கேட்டான்.

ஆதி 21:30. அதற்கு அவன்: நான் இந்தத் துரவு தோண்டினதைக்குறித்து, நீர் சாட்சியாக இந்த ஏழு பெண்ணாட்டுக்குட்டிகளை என் கையில் வாங்கிக்கொள்ளவேண்டும் என்றான்.

ஆதி 21:31. அவர்கள் இருவரும் அவ்விடத்தில் ஆணையிட்டுக் கொண்டபடியால், அந்த இடம் பெயெர்செபா என்னப்பட்டது.

ஆதி 21:32. அவர்கள் பெயர்செபாவிலே உடன்படிக்கை பண்ணிக்கொண்டபின் அபிமெலேக்கும், அவன் சேனாபதியாகிய பிகோலும் எழுந்து பெலிஸ்தருடைய தேசத்திற்குத் திரும்பிப்போனார்கள்.

அபிமெலேக்குக்கும் ஆபிரகாமுக்கும் இடையே ஏற்படுகிற உடன்படிக்கையைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அபிமெலேக்கு இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவன். ஆனாலும் ஆபிரகாம் அவனோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்.

தங்களோடு உடன்படிக்கை பண்ணுமாறு, அபிமெலேக்கும் அவனுடைய சேனாபதியும் ஆபிரகாமிடத்தில் கேட்கிறார்கள்.

அக்காலத்தில் அபிமெலேக்கும் அவன் சேனாபதியாகிய பிகோலும் ஆபிரகாமை நோக்கி: "நீ செய்கிற காரியங்கள் எல்லாவற்றிலும் தேவன் உன்னுடனே இருக்கிறார். ஆகையால், நீ எனக்காவது, என் குமாரனுக்காவது, என் பேரனுக்காவது வஞ்சனை செய்யாமல், நான் உனக்குச் செய்த தயவின்படியே, நீ எனக்கும், நீ தங்கியிருக்கிற இந்தக் தேசத்திற்கும், தயவுசெய்வேன் என்று இங்கே தேவன் பேரில் எனக்கு ஆணையிட்டுக்கொடு" (ஆதி 21:21,22) என்று சொல்லுகிறார்கள்.

தேவன் மெய்யாகவே ஆபிரகாமோடு கூடயிருக்கிறார். அதை புறஜாதியாரும் அறிந்திருக்கிறார்கள். கர்த்தர் யாரோடு கூடயிருக்கிறாரோ, அவர்களோடு நாமும் ஐக்கியமாயிருக்கவேண்டும். கர்த்தருடைய பரிசுத்தவான்களோடு ஐக்கியமாயிருப்பது நமக்கு ஆசீர்வாதமாயிருக்கும்.

ஆபிரகாமுடைய ஐசுவரியம் அபிமெலேக்கைக் கவரவில்லை. ஆதி 20:17-18 ஆகிய வசனங்களில் ஆபிரகாமின் ஜெபத்திற்குப் பதில் கிடைத்த அற்புத நிகழ்ச்சி கூறப்பட்டிருக்கிறது. இதனால் அபிமெலேக்கு ஆபிரகாமைப் புகழ்ந்து கூறுகிறான். இந்த அற்புதத்தினால் அபிமெலேக்கும் ஆசீர்வதிக்கப்படுகிறான். (ஆதி 28:3-4,13-15; ஆதி 30:27-34; ஆதி 39:2-6,21-23).

கர்த்தர் ஆபிரகாமோடு கூடயிருப்பதினால், அபிமெலேக்கு அவரோடுகூட உடன்படிக்கை செய்து கொள்ள விரும்புகிறான். தேவனோடு ஐக்கியமாயிருக்கிறவர்களோடு, நாமும் ஐக்கியமாயிருக்கவேண்டும்.

"நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" (1யோவா 1:3).

ஆபிரகாம் தன்னோடு செய்து கொள்ளும் உடன்படிக்கை, தன்னுடைய சந்ததி பரம்பரையாக தொடரவேண்டும் என்று அபிமெலேக்கு விரும்புகிறான். "நீ எனக்காவது, என் குமாரனுக்காவது, என் பேரனுக்காவது வஞ்சனை செய்யக்கூடாது" என்று அபிமெலேக்கு ஆபிரகாமிடம் கேட்டுக்கொள்கிறான்.

ஆபிரகாமும் அபிமெலேக்கோடு உடன்படிக்கை பண்ண ஆயத்தமாயிருக்கிறார். "நான் ஆணையிட்டுக்கொடுக்கிறேன்" (ஆதி 21:24) என்று ஆபிரகாம் அபிமெலேக்கோடு சொல்லுகிறார். அபிமெலேக்கு கர்த்தருக்கு பயந்தவன். அவன் தன்னுடைய மனச்சாட்சியின் சத்தத்திற்கு கீழ்ப்படிகிறவன். அபிமெலேக்கு ஜாதிகள் மத்தியிலே மதிப்பும், மரியாதையும், கனமும் கண்ணியமும் மிகுந்தவன்.

ஆபிரகாம் அபிமெலேக்கோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விரும்பினாலும், அவர்கள் இருவருக்கும் ஏற்கெனவே ஒரு துரவு விஷயத்தில் பிரச்சனை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சனை ஆபிரகாமின் மனதை வேதனைப்படுத்துகிறது. ஆபிரகாம் தன்னுடைய வேதனையை தனக்குள்ளே அடக்கிக்கொள்ளாமல், அதை அபிமெலேக்கிடம் வெளிப்படையாகச் சொல்லுகிறார். அபிமெலேக்குடைய வேலைக்காரர் கைவசப்படுத்திக்கொண்ட துரவின்நிமித்தம் ஆபிரகாம் அபிமெலேக்கைக் கடிந்துகொள்கிறார் (ஆதி 21:25).

ஆபிரகாமும் கண்ணியமுள்ளவர். அவருடைய வார்த்தையிலும் உண்மையிருக்கிறது. ஆபிரகாம் அபிமெலேக்கோடு உடன்படிக்கை பண்ணும்போது, தங்களுக்குள்ளே கருத்து வேறுபாடு எதுவும் இருக்கக்கூடாது என்று எதிர்பார்க்கிறார். இதற்காக ஆபிரகாம் அபிமெலேக்குடைய வேலைக்காரர் செய்த தப்பிதத்தை, அவனுக்கு எடுத்து சொல்லி அவனைக் கடிந்துகொள்கிறார்.

ஆபிரகாம் சொல்லுகிற குற்றச்சாட்டை அபிமெலேக்கு இதுவரையிலும் கேள்விப்படவே இல்லை. அவனுக்கு இதுபற்றி ஒன்றும் தெரியாது. அபிமெலேக்குக்குத் தெரியாமலேயே அவனுடைய வேலைக்காரர், அந்தத் துரவை கைவசப்படுத்திக்கொண்டார்கள். அபிமெலேக்கு தன்னிடத்தில் குற்றம் இல்லை என்பதை ஆபிரகாமுக்குத் தெளிவுபடுத்துகிறான்.

அபிமெலேக்கு ஆபிரகாமை நோக்கி, "இந்த காரியத்தைச் செய்தவன் இன்னான் என்று எனக்குத் தெரியாது, நீயும் எனக்கு அறிவிக்கவில்லை; இன்று நான் அதைக் கேட்டதேயன்றி, இதற்குமுன் அதை நான் கேள்விப்பட்டதே இல்லை" (ஆதி 21:25). என்று சொல்லுகிறான்.

ஆபிரகாமும் அபிமெலேக்கும் தங்களுக்கு இடையே உள்ள கருத்து வேறுபாடுகளையும், சந்தேகங்களையும் பேசித்தீர்த்துக்கொள்கிறார்கள். அதன் பின்பு அவர்கள் இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள்.

அப்பொழுது ஆபிரகாம் ஆடுமாடுகளைக் கொண்டுவந்து அபிமெலேக்குக்குக் கொடுக்கிறார். ஆபிரகாம் ஏழு பெண்ணாட்டுக்குட்டிகளைத் தனியே நிறுத்துகிறார் (ஆதி 21:27,28).

ஆபிரகாம் இந்தப் பெண்ணாட்டுக்குட்டிகளை ஏன் தனியே நிறுத்துகிறார் என்று அபிமெலேக்குக்குத் தெரியவில்லை. அவர்கள் இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளும்போது, ஆடுமாடுகள், பெண்ணாட்டுக்குட்டிகள் ஆகியவற்றை அன்பளிப்பாக கொடுக்கும்போது, அவர்கள் பண்ணுகிற உடன்படிக்கை இன்னும் அதிகமாக உறுதிப்படும். அவர்களுடைய சிநேகமும் அன்பும் அதிகரிக்கும்.

அப்பொழுது அபிமெலேக்கு ஆபிரகாமை நோக்கி: "நீ தனியே நிறுத்தின இந்த ஏழு பெண்ணாட்டுக்குட்டிகள் என்னத்திற்கு" என்று கேட்கிறான். அதற்கு ஆபிரகாம் "நான் இந்தத் துரவு தோண்டினதைக்குறித்து, நீர் சாட்சியாக இந்த ஏழு பெண்ணாட்டுக்குட்டிகளை என் கையில் வாங்கிக்கொள்ளவேண்டும்" (ஆதி 21:29,30) என்று அபிமெலேக்குக்கு சொல்லுகிறார்.

ஆபிரகாமும் அபிமெலேக்கும் உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள். அவர்கள் அந்த ஸ்தலத்திற்கு புதிய பெயரைக் கொடுத்து, தங்களுடைய உடன்டிபடிக்கையை உறுதிபண்ணிக் கொள்கிறார்கள். அவர்கள் இருவரும் அவ்விடத்தில் ஆணையிட்டுக் கொண்டபடியால், அந்த இடம் பெயெர்செபா என்னப்படுகிறது (ஆதி 21:31).

அவர்கள் பெயர்செபாவிலே உடன்படிக்கை பண்ணிக்கொண்டபின் அபிமெலேக்கும், அவன் சேனாபதியாகிய பிகோலும் எழுந்து பெலிஸ்தருடைய தேசத்திற்குத் திரும்பிப்போகிறார்கள் (ஆதி 21:32).

பரிசுத்த வேதாகமத்தில் மனுஷர்கள் உடன்படிக்கை பண்ணிக்கொண்ட பல சம்பவங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு :

1. அபிமெலேக்கோடு ஆபிரகாம் (ஆதி 21:27-34)
2. அபிமெலேக்கோடு ஈசாக்கு (ஆதி 26:26-31)
3. தேவனோடு யாக்கோபு. (ஆதி 28:20)
4. லாபானோடு யாக்கோபு (ஆதி 31:44-45)
5. கிபியோனியரோடு யோசுவா (யோசு 9:15)
6. இஸ்ரவேலோடு யோசுவா (யோசு 24:25-28)
7. தாவீதோடு யோனத்தான். (1சாமு 18:3; 1சாமு 20:8,16,42; 1சாமு 23:18; 2சாமு 21:7)
8. அப்னேரோடு தாவீது. (2சாமு 3:12-21)
9. இஸ்ரவேலோடு தாவீது. (2சாமு 5:3; 1நாளா 11:3)
10. ஈராமோடு சாலொமோன். (1இராஜா 5:12)
11. பெனாதாத்தோடு ஆசா. (1இராஜா 15:19-20)

12. யூதாவோடு ஆசா. (1நாளா 15:12)

13. பெனாதாத்தோடு ஆகாப். (1இராஜா 20:34)

14. யூதாவோடு யோய்தா (2இராஜா 11:4,17)

15. யூதாவோடு யோசியா (2இராஜா 23:3)

16. தேவனோடு ஆசா (2நாளா 15:8-15)

17. தேவனோடு எசேக்கியா (2நாளா 29:10)

18. இஸ்ரவேலோடு எஸ்றா (எஸ்றா 10:3; நெகே 10:29)

19. யூதாவோடு சிதேக்கியா (எரே 34:8)

20. யூதாவோடு நேபுகாத்நேச்சார் (எசே 17:13)

21. அசீரியரோடு இஸ்ரவேல். (ஓசி 12:1)

22. பரிசேயரோடு யூதாஸ். (மத் 26:15)

பெயெர்செபா
ஆதி 21:33,34

ஆதி 21:33. ஆபிரகாம் பெயெர்செபாவிலே ஒரு தோப்பை உண்டாக்கி, சதாகால்முமுள்ள தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை அவ்விடத்தில் தொழுது கொண்டான்.

ஆதி 21:34. ஆபிரகாம் பெலிஸ்தருடைய தேசத்தில் அநேகநாள் தங்கியிருந்தான்.

ஆபிரகாம் என்னும் எபிரெய பெயருக்கு "சஞ்சாரி" என்றும் ஒரு பொருள் உள்ளது. ஆபிரகாம் தன்னுடைய பெயருக்கேற்ற பிரகாரம், அவர் பல நாட்களாக, ஒவ்வொரு இடமாக பிரயாணம்பண்ணிக் கொண்டிருக்கிறார். அவர் தேசாந்திரியாக சுற்றி அலைகிறார்.

பெயர்செபா என்னும் பெயருக்கு "ஏழு மடங்கு ஆணையின் துரவு" என்று பொருள். ஆபிரகாம் ஆணையிட்ட போது, ஏழு பெண்ணாடுகள் அவருடைய ஆணைக்குச் சாட்சியாக இருந்தது. (ஆதி 21:28-30). பெயர்செபா கானானுடைய தென் எல்லையின் அருகில் உள்ளது. (ஆதி 26: 31-33; யோசு 15:28; நியா 20:1; 2சாமு 17:11; 1இராஜா 4:25).

ஆபிரகாம் பெயெர்செபாவிலே ஒரு தோப்பை உண்டாக்கி, சதாகாலமுமுள்ள தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை அவ்விடத்தில் தொழுது கொள்கிறார் (ஆதி 21:33).

இயேசுகிறிஸ்துவும் கெத்சமனே தோட்டத்தில் ஜெபம்பண்ணினார். இந்தத் தோட்டம் ஒரு பர்வதத்தின் மேல் அமைந்திருக்கிறது. நாம் கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்போது, அவர் சதாகாலமுமுள்ள தேவனாகிய கர்த்தர் என்பதை நினைவுகூரவேண்டும். கர்த்தர் இந்த உலகம் தோன்றுவதற்கு முன்னமே இருந்தவர். இப்போதும் இருக்கிறவர். இனிமேலும் என்றென்றைக்கும் இருக்கப்போகிறவர்.

"பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ அறியாயோ? இதை நீகேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்துமுடியாதது" (ஏசா 40:28).

"சதாகாலமுமுள்ள தேவனாகிய கர்த்தர்" என்பதற்கான எபிரெய வார்த்தை "எல்-ஒலாம்" என்பதாகும். ஒலாம் என்பதற்கு முடிவற்றவர், நித்தியமானவர் என்று பொருள். கர்த்தர் கிருபையில் முடிவற்றவர்.

இதன் பின்பு ஆபிரகாம் பெலிஸ்தருடைய தேசத்தில் அநேகநாள் தங்கியிருக்கிறார் (ஆதி 21:34). பெலிஸ்தர் மிஸ்ராயீம் சந்ததியிலிருந்து வந்தவர்கள். இவன் காமின் குமாரன். (ஆதி 10:6,13-14). பெலிஸ்தலர் இஸ்ரவேலின் விரோதிகள். பெலிஸ்தலர் கானானை ஜெயித்ததிலிருந்து பாபிலோனின் சிறையிருப்பு வரையிலும் அவர்கள் இஸ்ரவேலுக்கு விரோதமாகவே இருக்கிறார்கள்.

22 அதிகாரம்

ஆபிரகாம் தன்னுடைய குமாரன் ஈசாக்கை தகனபலியாக பலியிடப்போகும் சம்பவம் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் ஆபிரகாமிடம், ஈசாக்கை தகனபலியாக பலியிடுமாறு சொல்லுகிறார் (ஆதி 22:1,2). ஆபிரகாம் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார் (ஆதி 22:3-10).

கர்த்தருடைய கட்டளையும் விநோதமாயிருக்கிறது. ஆபிரகாமின் கீழ்ப்படிதலும் விநோதமாயிருக்கிறது. ஆபிரகாம் ஈசாக்கை தகனபலியாக பலியிடப்போகும்போது, கர்த்தருடைய தூதன் ஆபிரகாமைத் தடைபண்ணுகிறார் (ஆதி 22:11,12). தகனபலியாக பலியிடுவதற்கு ஒரு ஆட்டுக்கடா கொடுக்கப்படுகிறது (ஆதி 22:13,14).

கர்த்தருடைய தூதனானவர் ஆபிரகாமோடு உடன்படிக்கையை மறுபடியுமாய்ப் புதுப்பிக்கிறார் (ஆதி 22:15-19). ஆபிரகாமுடைய உறவினர்களில் சிலரைப்பற்றிய விவரம் (ஆதி 22:20-24).

ஆபிரகாமுக்கு சோதனை ஆதி 22:1,2

ஆதி 22:1. இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்; எப்படியெனில், அவர் அவனை நோக்கி: ஆபிரகாமே என்றார்; அவன்: இதோ அடியேன் என்றான்.

ஆதி 22:2. அப்பொழுது அவர்: உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்.

தேவன் ஆபிரகாமுடைய விசுவாசத்தை சோதிக்கிறார். ஆபிரகாம் தன் சொந்த தகப்பனைவிட, தேவனை அதிகமாய் நேசித்தார். அவர் தன் சொந்த குமாரனைவிட, தம்மை அதிகமாய் நேசிக்கிறாரா என்று தேவன் சோதித்தறிய விரும்புகிறார்.

ஆபிரகாமின் குடும்பத்தில் இப்போதுதான் பிரச்சனைகள் ஓரளவு குறைந்திருக்கிறது. சாராளுக்கும் ஆகாருக்கும் பிரச்சனை உண்டாயிற்று. ஆபிரகாம் ஆகாரையும், இஸ்மவேலையும் தன் வீட்டைவிட்டு வெளியே அனுப்பினார். தன்னுடைய வீட்டு பிரச்சனை இத்தோடு முடிந்தது என்று ஆபிரகாம் நினைத்தார்.

ஆனால் ஆபிரகாமுக்கு வேறொரு பிரச்சனை வருகிறது. இந்தப் பிரச்சனை இதற்கு முந்திய எல்லா பிரச்சனைகளையும்விட மிகவும் பெரியதாயிருக்கிறது.

தேவனே ஆபிரகாமை சோதிக்கிறார். அவர் ஆபிரகாமை பாவம் செய்யுமாறு வழிநடத்தவில்லை. ஆபிரகாம் தேவனுடைய கிருபைகளை புரிந்துகொள்ளவேண்டும். அவருடைய கிருபை எப்போதுமே பெரிதாயிருக்கிறது. தேவனுடைய கிருபையை உணருகிறவர்கள், அவரை நன்றியோடு துதிப்பார்கள்.

"அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். (1பேது 1:7).

கர்த்தர் யோபுவை சோதித்தார். இந்த சோதனையின் மூலமாக அவர் யோபுவை உத்தமன் என்று விளங்கப்பண்ணினார். யோபு சோதிக்கப்பட்டதினால், அவர் நல்லவர் என்பது மாத்திரமல்ல, அவர் உத்தமமானவர் என்பதும் நிரூபிக்கப்பட்டது.

தேவன் இப்போது ஆபிரகாமை சோதிக்கிறார். "தேவன் ஆபிரகாமை சோதித்தார்" என்னும் வாக்கியத்திற்கு, "தேவன் ஆபிரகாமை உயர்த்தினார்" என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். கல்விமான்கள் அதிகமாய் கற்கும்போது, அவர்களுடைய கல்வியறிவு அதிகரிக்கும். வைரத்தை அதிகமாய்த் தீட்டும்போது, அதன் பிரகாசம் அதிகரிக்கும். அதுபோலவே தேவன் நீதிமான்களை அதிகமாய் சோதிக்கும்போது, அவர்களுடைய நீதி அதிகரிக்கும்.

கர்த்தர் ஆபிரகாமையும் அவருடைய சந்ததியையும் ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். இந்த வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்கு இரண்டு சந்தர்ப்பங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

"இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்" *(ஆதி 15:1)*.

"அவர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்" *(ஆதி 15:5)*.

"ஆபிராம் தொண்ணூற்றென்பது வயதானபோது கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: நான் சர்வல்லமையுள்ள தேவன்: நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு. நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப் பண்ணுவேன் என்றார்" *(ஆதி 17:1,2)*.

தேவன் ஆபிரகாமை நோக்கி, "ஆபிரகாமே" என்று கூப்பிடுகிறார். தேவன் தனக்கு ஏற்கெனவே கொடுத்த வாக்குத்தத்தங்களைப்போல, இப்போது மேலும் ஒரு வாக்குத்தத்தத்தை கொடுக்கப்போகிறார் என்று ஆபிரகாம் எதிர்பார்க்கிறார். தேவன் தம்முடைய வாக்குத்தத்த வார்த்தைகளை மறுபடியும் உறுதிபண்ணுவார் என்று நம்பி ஆபிரகாம், தேவனை நோக்கி, "இதோ அடியேன்" என்று சொல்லுகிறார்.

அப்போது ஆபிரகாம் எதிர்பாராத காரியத்தை, தேவன் அவருக்கு கட்டளையிடுகிறார். தேவன் ஆபிரகாமை நோக்கி, "உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு" ஆதி *22:2)* என்று சொல்லுகிறார்.

தேவன் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தையும் ஆபிரகாமின் எலும்புகளை ஈட்டியால் குத்துவதுபோல குத்துகிறது. தேவன் ஆபிரகாமை சோதிக்கிறார். ஆனால் இந்த சோதனை மிகவும் கடினமான சோதனையாயிருக்கிறது.

ஆபிரகாம் தேவனுக்கு தகனபலியாக பலியிடவேண்டும். ஆனால் அவர் ஆடுமாடுகளை தகனபலியாக பலியிடக்கூடாது. ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கை தகனபலியாக பலியிடவேண்டும்.

தேவன் ஆபிரகாமின் வீட்டிலுள்ள காளைகளையோ அல்லது ஆட்டுக்கடாக்களையோ வாங்கிக்கொள்ள பிரியமாயில்லை. அவர் ஆபிரகாமின் புத்திரனும், அவருடைய ஏகசுதனும், நேசகுமாரனுமாகிய ஈசாக்கை வாங்கிக்கொள்ள விரும்புகிறார்.

"உன் வீட்டிலிருந்து காளைகளையும், உன் தொழுவங்களிலிருந்து ஆட்டுக்கடாக்களையும் நான் வாங்கிக்கொள்தில்லை" *(சங் 50:9)*.

ஈசாக்கு என்னும் பெயருக்கு மகிழ்ச்சி, சந்தோஷம் என்று பொருள். ஈசாக்கு ஆபிரகாமுக்கு மனமகிழ்ச்சியாயும், இருதயத்தின் சந்தோஷமாயும் இருக்கிறார். ஆனால் தேவனோ ஆபிரகாமின் நேசகுமாரனாகிய ஈசாக்கை தகனபலியாக பலியிடுமாறு சொல்லுகிறார். தேவன் ஆபிரகாமின் சந்தோஷத்தையும், மனமகிழ்ச்சியையும் பலியாக செலுத்துமாறு சொல்லுகிறார்.

"அப்பொழுது தேவன்: உன்மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக; என் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்" (ஆதி 17:19).

ஆபிரகாம் ஈசாக்கை எந்த இடத்திலே தகனபலியாக பலியிடவேண்டும் என்பதையும் தேவனே வெளிப்படுத்துகிறார். தேவன் ஆபிரகாமை நோக்கி, "நீ ஈசாக்கை அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு" (ஆதி 22:2) என்று சொல்லுகிறார்.

"ஏகசுதன்" என்னும் வாக்கியத்திற்கு "ஒரே குமாரன்" என்று பொருள். ஈசாக்கு மட்டுமே வாக்குத்தத்தத்தின் ஒரே குமாரன். அவர் சாராளின் ஒரே குமாரன். இப்பொழுது ஆபிரகாமோடு ஈசாக்கு மட்டுமே இருக்கிறார். இஸ்மவேல் சில வருஷங்களுக்கு முன்பே ஆபிரகாமை விட்டு போய்விட்டான் (ஆதி 21:9-10). ஆபிரகாமின் மற்ற குமாரர்கள் இன்னும் பிறக்கவில்லை (ஆதி 25:1-6).

எருசலேமின் மலைப்பிரதேசங்கள் எல்லாம் மோரியா தேசத்தில் அடங்கும். கல்வாரி, சீயோன், ஒலிவமலை, மோரியா மற்றும் பல மலைகள் மோரிய தேசத்தில் உள்ளன. இவற்றில் கல்வாரி மலையே மிகவும் உயரமானது. கிறிஸ்துவுக்கு அடையாளமாக, ஆபிரகாம் ஈசாக்கை இந்த மலைச்சிகரத்தில் பலியிடுவதற்கு அழைத்துச் செல்லுகிறார். (எபி 11:19; லூக்கா 23:33). ஆயினும் இந்த வசனத்தில் பொதுவாக "மலைகள் ஒன்றின்மேல்" என்னும் வாக்கியம் மட்டுமே இருக்கிறது.

ஆபிரகாம் இப்போது பெயர்செபாவிலே இருக்கிறார். பெயர்செபாவிலிருந்து மோரியா தேசம் மூன்றுநாள் பிரயாண தூரத்திலிருக்கிறது. ஆபிரகாம் மூன்றுநாள் பிரயாணம் பண்ணும்போது, தேவன் தனக்கு சொன்ன கட்டளையை தியானித்துப் பார்ப்பார். தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டுமா அல்லது அதற்கு கீழ்ப்படியாமல் அதை விட்டுவிடலாமா என்று தீர்மானம்பண்ணுவார். ஆபிரகாம் எப்படி தீர்மானம்பண்ணினாலும், மூன்று நாட்களாக அதைத் தியானித்துப் பார்ப்பதினால், அவருடைய தீர்மானம் உறுதியாயிருக்கும்.

ஆபிரகாம் தன் நேசகுமாரன் ஈசாக்கை எவ்வாறு பலியிடவேண்டும் என்றும் தேவன் சொல்லுகிறார். "ஈசாக்கை தகனபலியாக பலியிடு" என்று தேவன் சொல்லுகிறார். ஆபிரகாம் தன் நேசகுமாரனாகிய ஈசாக்கை கொன்றால் மாத்திரம் போதாது, அவனை தகனபலியாக பலியிடும் வண்ணமாக கொல்ல வேண்டும். ஆபிரகாம் ஈசாக்கைக் கொன்று, அவனுடைய சரீரத்தை அக்கினியிலே தகனிக்கவேண்டும்.

ஆபிரகாமின் கீழ்ப்படிதல் ஆதி 22:3-10

ஆதி 22:3. ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன் கழுதையின்மேல் சேணங்கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டுபேரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு, தகனபலிக்குக் கட்டைகளையும் பிளந்து கொண்டு, தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப்போனான்.

ஆதி 22:4. மூன்றாம் நாளில் ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, தூரத்திலே அந்த இடத்தைக் கண்டான்.

ஆதி 22:5. அப்பொழுது ஆபிரகாம் தன் வேலைக்காரரை நோக்கி: நீங்கள் கழுதையை நிறுத்தி இங்கே காத்திருங்கள், நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும்போய், தொழுது கொண்டு, உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம் என்றான்.

ஆதி 22:6. ஆபிரகாம் தகனபலிக்குக் கட்டைகளை எடுத்து, தன் குமாரனாகிய ஈசாக்கின் மேல் வைத்து, தன் கையிலே நெருப்பையும் கத்தியையும் எடுத்துக்கொண்டான்; இருவரும் கூடிப்போனார்கள்.

ஆதி 22:7. அப்பொழுது ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி: என் தகப்பனே என்றான்; அதற்கு அவன்: என் மகனே, இதோ, இருக்கிறேன் என்றான்; அப்பொழுது அவன்: இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான்.

ஆதி 22:8. அதற்கு ஆபிரகாம்: என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்றான்; அப்புறம் இருவரும் கூடிப்போய்,

ஆதி 22:9. தேவன் அவனுக்குச் சொல்லியிருந்த இடத்துக்கு வந்தார்கள்; அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டி, அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின்மேல் அவனை கிடத்தினான்.

ஆதி 22:10. பின்பு ஆபிரகாம் தன் குமாரனை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான்.

ஆபிரகாம் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார். "மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்" (எபி 11:17).

தேவனுடைய கட்டளை கடினமானதாகயிருந்தாலும், ஆபிரகாம் எவ்வித தயக்கமுமில்லாமல், தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார். தேவன் சொல்லுவது அவருடைய பிரமாணத்திற்கு விரோதமாயிருக்கிறது. தேவன் மனுஷனைக் கொல்லுவதை அங்கீகரிக்கவில்லை. மனுஷருடைய இரத்தத்தை சிந்துகிறவர்களை தேவன் தண்டிப்பார்.

"உங்களுக்கு உயிராயிருக்கிற உங்கள் இரத்தத்திற்காகப் பழிவாங்குவேன்; சகல ஜீவஜந்துக்களிடத்திலும் மனுஷனிடத்திலும் பழிவாங்குவேன்; மனுஷனுடைய உயிருக்காக அவனவன் சகோதரனிடத்தில் பழிவாங்குவேன். மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது" (ஆதி 9:5,6).

ஆனால் இங்கு தேவனே ஈசாக்கை கொல்லச் சொல்லுகிறார். ஆபிரகாமுக்கு ஈசாக்கைக் கொல்லுவது லேசான காரியமல்ல. ஈசாக்கு ஆபிரகாமுடைய புத்திரன். அவருடைய ஏகசுதன். ஈசாக்கு ஆபிரகாமின் நேசகுமாரன். ஒரு தகப்பன் தன்னுடைய சொந்த குமாரனை கொல்லுவது என்பது சாதாரண காரியமல்ல.

ஈசாக்கு ஏன் கொல்லப்பட வேண்டுமென்று தேவன் ஆபிரகாமுக்கு காரணமும் சொல்லவில்லை. ஆபிரகாம் ஆகாரையும் இஸ்மவேலையும் தன் வீட்டைவிட்டு வெளியே அனுப்பினார். தேவன் அதற்கான காரணத்தை அப்போது ஆபிரகாமுக்கு சொன்னார்.

இப்போது தேவன் ஈசாக்கை தகனபலியாக பலியிடுமாறு ஆபிரகாமுக்கு சொல்லுகிறார். ஆனால் தேவன் அதற்கான காரணத்தை ஆபிரகாமுக்கு சொல்லவில்லை. ஈசாக்கை ஆபிரகாமே கொல்லவேண்டும் என்றும் தேவன் கட்டளையிடுகிறார். ஈசாக்கு ஏன் கொல்லப்படவேண்டும் என்று ஈசாக்குக்கோ ஆபிரகாமுக்கோ காரணம் சொல்லப்படவில்லை.

ஈசாக்கு சத்தியத்திற்காக இப்போது இரத்த சாட்சியாக மரிக்கவில்லை. அல்லது மற்றவர்களுடைய பாவத்தைப் போக்குவதற்காக, ஈசாக்கு தன்னுடைய ஜீவனை பாவநிவாரண பலியாகவும் செலுத்தவில்லை. ஈசாக்கு ஏன் கொல்லப்படவேண்டும் என்பதற்கு தேவன் இப்படிப்பட்ட காரணம் எதையும் சொல்லப்படவில்லை.

தேவன் ஆபிரகாமை நோக்கி, "ஈசாக்கை தகனபலியாக பலியிடு" என்று சொன்னபோது, ஆபிரகாம் தேவனிடத்தில் இதுபற்றி விவாதம்பண்ணவுமில்லை. ஈசாக்கை கொன்றுபோடுவதினால் தனக்கு என்ன லாபம் என்று ஆபிரகாம் கேட்கவில்லை. ஆபிரகாமோ கர்த்தருக்கு பூரணமாய்க் கீழ்ப்படிகிறார்.

தேவன் ஈசாக்கை ஆபிரகாமுக்கு பரிசுத்த வித்தாக கொடுத்திருக்கிறார். ஈசாக்கின் மூலமாக ஆபிரகாமின் சந்ததி பெருகும் என்றும் தேவன் வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் இப்போதோ, தேவன் ஈசாக்கை தகனபலியாக பலியிடுமாறு சொல்லுகிறார்.

ஈசாக்கைக் கொன்றுபோட்ட பின்பு, ஆபிரகாமால் சாராளுடைய முகத்தை சந்தோஷமாகவோ, அமைதியாகவோ பார்க்கமுடியாது. ஈசாக்கு செத்துப்போனால் தன்னுடைய வீட்டில் எப்படிப்பட்ட பிரச்சனைகளும், எப்படிப்பட்ட குழப்பங்களும் வரும் என்பதும் ஆபிரகாமுக்கு தெரியாது.

ஆபிரகாம் இப்போது பெயர்செபாவிலே குடியிருக்கிறார். இந்த பகுதியைச் சுற்றிலும் எகிப்தியர்களும், கானானியரும் பெர்சியரும் வாசம்பண்ணுகிறார்கள். ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கை தகனபலியாக பலியிட்டால், புறஜாதியார் தன்னைப்பற்றியும், தேவனைப்பற்றியும் என்ன சொல்லுவார்கள் என்பதும் ஆபிரகாமுக்கு தெரியவில்லை. அவர்கள் ஆபிரகாமையும், அவர் ஆராதிக்கிற தேவனையும் தூஷிப்பார்கள்.

தன் ஏகசுதனை, தன் நேசகுமாரனை பலியாக செலுத்துவது ஆபிரகாமுக்கு கடினமானதாகயிருந்தாலும், அவர் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார். ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன்னுடைய குமாரன் ஈசாக்கை தகனபலியாக பலியிட புறப்பட்டுப்போகிறார். ஆபிரகாம் கர்த்தரோடு விவாதம்பண்ணவில்லை. அவர் கர்த்தர் சொன்ன வார்த்தைகளை பொறுமையாய்த் தியானிக்கவுமில்லை. கர்த்தருடைய கட்டளைக்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிகிறவர்கள், அதற்கு உடனே கீழ்ப்படிவார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு காலதாமதம்பண்ணாமல், விரைவாக கீழ்ப்படிவார்கள்.

ஈசாக்கை தகனபலியாக பலியிடுவதற்கு தேவையான பொருட்களை, ஆபிரகாம் உடனே சேகரிக்கிறார். ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன் கழுதையின்மேல் சேணங்கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டுபேரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு, தகனபலிக்குக் கட்டைகளையும் பிளந்து கொண்டு, தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப்போகிறார் (ஆதி 22:3).

ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன் கழுதையின்மேல் சேணங்கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டு பேரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக் கொண்டு, தகனபலிக்குக் கட்டைகளையும் பிளந்து கொண்டு, புறப்பட்டுப் போகிறார். இவையெல்லாமே தேவனுடைய கட்டளைக்கு மனப்பூர்வமாகவும், பூரணமாகவும் கீழ்ப்படிவதைக் குறிக்கிறது. கிழக்கு தேசத்தில் வெயிலின் உஷ்ணம் அதிகமாக இருக்கும். ஆகையினால் ஜனங்கள் பொதுவாக அதிகாலையில் பிரயாணம் பண்ணுவார்கள்.

தான் ஈசாக்கை தகனபலியாக பலியிடப்போவதைப்பற்றி, ஆபிரகாம் சாராளிடம் ஒரு வார்த்தைகூட சொல்லியிருக்கமாட்டார். அவர் சாராளிடம் இதுபற்றி பேசியிருந்தால், அவள் ஈசாக்கை ஆபிரகாமோடு அனுப்பியிருக்கமாட்டாள். தேவன் ஆபிரகாமை மோரியா தேசத்திற்கு போகச்சொன்னார். அந்த தேசத்தில் தேவன் ஆபிரகாமுக்கு ஒரு மலையைக் குறிப்பார். அந்த மலைகள் ஒன்றின்மேல் அவர் ஈசாக்கை தகனபலியாக பலியிடவேண்டும்.

ஆபிரகாம், தேவன் தனக்கு குறித்த இடத்திற்கு புறப்பட்டுப்போகிறார். மூன்றாம் நாளில் ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, தூரத்திலே அந்த இடத்தைக் காண்கிறார் (ஆதி 22:4).

அப்பொழுது ஆபிரகாம் தன் வேலைக்காரரை நோக்கி: "நீங்கள் கழுதையை நிறுத்தி இங்கே காத்திருங்கள், நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும்போய், தொழுதுகொண்டு, உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம்" (ஆதி 22:5) என்று சொல்லுகிறார். ஆபிரகாமோடுகூட அவருடைய வேலைக்காரரில் இரண்டுபேரும் வந்திருக்கிறார்கள். ஆனால் ஆபிரகாம் அவர்கள் இருவரையும், தன்னோடுகூட மலைக்கு அழைத்து செல்லவில்லை.

ஆபிரகாம் அந்த மலையிலே ஈசாக்கை தகனபலியாக பலியிடப்போகிறார். இது ஒரு விநோதமான பலி. இந்தப் பலியைக் குறித்து தன்னுடைய வேலைக்காரர் தன்னோடு விவாதம்பண்ணக்கூடாது என்று நினைத்து, ஆபிரகாம் அவர்கள் இருவரையும் அங்கே காத்திருக்குமாறு சொல்லுகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கெத்சமனே தோட்டத்திற்கு ஜெபம்பண்ணப்போனார். அங்கே அவர் வியாகுலத்தோடு ஜெபம்பண்ணினார். இயேசுகிறிஸ்துவுக்கு பன்னிரண்டு சீஷர்கள் இருந்தாலும், அவர்களில் மூன்று பேரை மாத்திரமே, அவர் தம்மோடுகூட, தாம் ஜெபம்பண்ணுகிற இடத்திற்கு அழைத்துக்கொண்டு போனார். கிறிஸ்துவானவர் தம்முடைய மற்ற சீஷர்களை தோட்டத்தின் வாசலிலேயே விட்டு விட்டுப்போனார்.

ஆபிரகாம் தகனபலிக்குக் கட்டைகளை எடுத்து, தன் குமாரனாகிய ஈசாக்கின் மேல் வைத்து, தன் கையிலே நெருப்பையும் கத்தியும் எடுத்துக்கொள்கிறார்; அவர்கள் இருவரும் கூடிப்போகிறார்கள் (ஆதி 22:6).

ஆபிரகாமின் மனதிலே குழப்பமில்லை. அவருடைய மனதில் மிகுந்த வேதனையிருக்கலாம். ஆனாலும் கர்த்தருக்கு கீழ்ப்படியவேண்டும் என்னும் தெளிந்த சிந்தனை அவருடைய மனதில் காணப்படுகிறது. ஆபிரகாம் எப்போதும்போல பலிசெலுத்தப்போகிறார் என்று ஈசாக்கு நினைக்கிறார். ஆனால் அவர்கள் தகனபலி செலுத்துவதற்காக தங்களோடு ஆட்டுக்குட்டியை கொண்டுபோகவில்லை. இதுபற்றி ஆபிரகாமிடம் கேட்கவேண்டும் என்னும் எண்ணம் ஈசாக்கின் மனதில் உண்டாயிற்று.

அப்பொழுது ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி: "என் தகப்பனே" என்று கூப்பிடுகிறான்; அதற்கு ஆபிரகாம்: "என் மகனே,இதோ, இருக்கிறேன்" என்று சொல்லுகிறார்; அப்பொழுது ஈசாக்கு ஆபிரகாமை நோக்கி, "இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே" என்று கேட்கிறான். அதற்கு ஆபிரகாம்: "என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார்" என்று சொல்லுகிறார் (ஆதி 22:7,8).

ஈசாக்கின் கேள்வி ஆபிரகாமின் மனதை வெகுவாக பாதித்திருக்கும். அது அவருடைய இருதயத்தை உடைத்துப்போட்டிருக்கும். ஈசாக்கு மிகுந்த அன்பாகவும், பிரியமாகவும், ஆபிரகாமை நோக்கி, "என் தகப்பனே" என்று கூப்பிடுகிறான். இந்த வார்த்தைகள் ஆபிரகாமின் இருதயத்தை உருக்கியிருக்கும். ஆபிரகாம் ஈசாக்கை கொல்லுவதற்காக தன்னுடைய கையில் கத்தி வைத்திருக்கிறார். ஆனால் ஈசாக்கின் வார்த்தைகளோ, கத்தியைவிட கூர்மையாயிருக்கிறது. அது ஆபிரகாமின் இருதயத்தைக் குத்துகிறது.

இந்த சூழ்நிலையிலும் ஆபிரகாம் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும் என்பதில் உறுதியாயிருக்கிறார். ஈசாக்கின் பாசமான வார்த்தைகளைக் கேட்டு ஆபிரகாம் மனங்கசந்து அழவில்லை. தன்னுடைய பாசத்தையும் உணர்ச்சியையும் அவர் வெளிப்படுத்தி காண்பிக்கவில்லை. தன்னுடைய உணர்வுகள் எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு, மிகவும் அமைதியாக, "என் மகனே, இதோ இருக்கிறேன்" என்று சொல்லுகிறார்.

ஈசாக்கு தன்னிடத்தில் என்ன கேட்கப்போகிறான் என்பது ஆபிரகாமுக்கு தெரியாது. ஈசாக்கும் அமைதியாகயிருக்கவில்லை. ஈசாக்கு ஆபிரகாமை நோக்கி, "இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே" என்று கேட்கிறான்.

ஈசாக்கின் கேள்வியும் ஆபிரகாமை சோதிக்கிறது. ஈசாக்குதான் அந்த ஆட்டுக்குட்டி என்று சொல்லக்கூடிய மனதைரியம் ஆபிரகாமுக்கு இல்லை. ஆபிரகாம் ஈசாக்கிடத்தில் பொய்சொல்லவுமில்லை. ஆபிரகாமின் இருதயத்தில் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும் என்னும் சிந்தனையே நிரம்பியிருக்கிறது.

நாம் கர்த்தரை ஆராதிக்கும்போது நம்முடைய இருதயத்தில், பலவிதமான சிந்தனைகளை நினைத்துக்கொண்டு, நம்முடைய இருதயத்தை அலைபாயவிடக்கூடாது. நம்முடைய இருதயத்தில் கர்த்தரைப்பற்றிய சிந்தனையே நிரம்பியிருக்கவேண்டும். நாம் கர்த்தருடைய சமுகத்தில் எதை அற்பணிக்கிறோமோ, அதை தகனபலியாக பலியிடுவதற்கு, ஒப்புக்கொடுக்கவேண்டும்.

ஈசாக்கின் கேள்விக்கு என்ன பதில் சொல்லவேண்டும் என்று ஆபிரகாமுக்கும் தெரியவில்லை. ஆனாலும் அவர் கர்த்தருடைய கிருபையினால், "தேவன் தமக்கு தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார்" என்று சொல்லுகிறார். ஈசாக்கு ஆபிரகாமிடத்தில் "தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே" என்று கேட்கிறான். ஆபிரகாமோ, "தகனபலிக்கான ஆட்டுக்குட்டியை தேவன் பார்த்துக்கொள்வார்" என்று சொல்லுகிறார். ஆபிரகாம் சொல்லுகிற வார்த்தையில் அவருடைய கீழ்ப்படிதலும் வெளிப்படுகிறது. அவருடைய விசுவாசமும் வெளிப்படுகிறது.

ஈசாக்குக்கு பதிலாக, கர்த்தர் தமக்கு தகனபலிக்கான ஒரு ஆட்டுக்குட்டியைக் கொடுப்பார் என்று ஆபிரகாம் விசுவாசிக்கிறார். பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையே, பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தார்.

"தேவன் தமக்கு தகனபலிக்கான ஆட்டுக்குட்டியை பார்த்துக்கொள்வார்" என்னும் வாக்கியத்திற்கு, நாம் கர்த்தருக்கு எதை பலியாக செலுத்தினாலும், கர்த்தரே அதை நமக்கு கொடுத்திருக்கிறார் என்று அங்கீகரிக்கவேண்டும் என்பது பொருளாகும். கர்த்தருக்கு பலிசெலுத்த அவரே நமது இருதயங்களை ஆயத்தம்பண்ணுகிறார். கர்த்தரே நம்முடைய இருதயங்களை ஸ்திரப்படுத்துகிறார்.

"கர்த்தாவே, சிறுமைப்பட்டவர்களுடைய வேண்டுதலைக் கேட்டிருக்கிறீர்; அவர்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவீர்" (சங் 10:17).

கர்த்தரே நம்முடைய ஆவியை நொறுக்குகிறார். அவரே நம்முடைய இருதயத்தை நொறுங்குண்டதாகவும் நறுங்குண்டதாகவும் மாற்றுகிறார். கர்த்தர் நமக்குள் கிரியை செய்யவில்லையென்றால், நம்முடைய இருதயம் கடினஇருதயமாயிருக்கும். அது கர்த்தருக்கு சுகந்த பலியாகயிருக்காது.

"தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்" (சங் 51:17).

ஆபிரகாமும் ஈசாக்கும் இதற்குமேல் ஏதாவது பேசினார்களா என்பது தெரியவில்லை. அவர்கள் இருவரும் தேவன் சொல்லியிருந்த இடத்திற்கு வருகிறார்கள். அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டி, அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின்மேல் அவனை கிடத்துகிறார் (ஆதி 22:9).

ஆபிரகாம் இதற்கு முன்பு ஒரு சில பலிபீடங்களை கட்டியிருக்கிறார். ஆனால் இப்போது அவர் உண்டாக்குகிற பலிபீடம், அவருடைய ஜீவியத்தில் மிகவும் முக்கியமானது. ஆபிரகாம் மிகுந்த மனவேதனையோடும், கண்ணீரோடும், தன் குமாரன் ஈசாக்கை தகனபலியாக பலியிட, இந்தப் பலிபீடத்தைக் கட்டுகிறார்.

ஆபிரகாம் ஈசாக்கை அந்தப் பலிபீடத்தின்மேல் தகனலியாக பலியிடப்போகிறார். ஈசாக்கு இதற்கு முன்பு ஆபிரகாமை நோக்கி, "தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே" என்று கேட்டான். அப்போது ஆபிரகாம் ஈசாக்கைப் பார்த்து, "நீ தான் அந்த ஆட்டுக்குட்டி" என்று சொல்லவில்லை. அதற்கு பதிலாக, "ஆட்டுக்குட்டியை தேவன் பார்த்துக்கொள்வார்" என்று சொன்னார்.

ஆபிரகாம் பலிபீடத்தை உண்டாக்கி, அதன்மேல் தகனபலி செலுத்துவதற்கான கட்டைகளை அடுக்குகிறார். ஈசாக்குதான் அந்த ஆட்டுக்குட்டி என்பதை இனிமேலும் ஆபிரகாமால் மறைக்க முடியாது. ஆபிரகாம் ஈசாக்கை தகனபலியாக பலியிடப்போகிறார். ஆபிரகாம் இந்த செய்தியை தன்னுடைய நேசகுமாரனாகிய ஈசாக்குக்கு சொல்லியிருக்கவேண்டும் என்றும், ஆபிரகாம் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்ததுபோலவே, ஈசாக்கும் தேவனுடைய கட்டளைக்கு சந்தோஷமாய் கீழ்ப்படிகிறார் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

ஆபிரகாம் ஈசாக்கை கட்டுகிறார். ஈசாக்கு தப்பி ஓடிப்போய்விடவில்லை. தான் கட்டப்படுவதற்கு ஈசாக்கு மறுப்பு எதுவும் சொல்லவில்லை. அவன் ஆபிரகாமோடு முரண்டுபிடிக்கவில்லை. ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டி, தான் கட்டின பலிபீடத்தில், தான் அடுக்கி வைத்த கட்டைகளின்மேல், அவனைக் கிடத்துகிறார்.

ஈசாக்கு தப்பி ஓட முயற்சிபண்ணாவிட்டாலும், அவன் ஆபிரகாமோடு சண்டைபோடாவிட்டாலும், பலியாக செலுத்தப்படும் ஈசாக்கை கட்டுவது அவசியமாயிருக்கிறது. ஆபிரகாம் ஈசாக்கின் கைகளைக் கட்டுகிறார். ஈசாக்கின் கைகளைக் கட்டும்போது ஆபிரகாமின் இருதயம் மிகவும் வேதனைப்பட்டிருக்கும். ஈசாக்கின் கைகள் ஒரு குற்றமும் செய்யாத கைகள். ஈசாக்கு பல சமயங்களில் தன்னுடைய கைகளை உயர்த்தி கர்த்தரிடத்தில் ஜெபம் செய்திருப்பார். அந்தக் கைகளை ஆபிரகாம் இப்போது கட்டுகிறார்.

ஈசாக்கு தன்னுடைய கைகளினால் ஆபிரகாமை அன்போடு கட்டி தழுவியிருப்பார். ஆனால் இப்போதோ ஆபிரகாம் ஈசாக்கின் கைகளை கயிறுகளினால் கட்டுகிறார். ஆபிரகாமின் கையிலிருக்கிற கயிறு, அன்பின் கயிறாகவும், கடமையின் கயிறாகவும், கீழ்ப்படிதலின் கயிறாகவும் இருக்கிறது. ஆபிரகாமுக்கு தன் நேசகுமாரன் ஈசாக்கின்மீது பிரியமும் பாசமும் இருக்கிறது. ஆனாலும் அவர் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டியதும் அவசியமாயிருக்கிறது.

ஆபிரகாம் ஈசாக்கை கட்டி, அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின்மேல், அவனைக் கிடத்துகிறார். ஆபிரகாமின் கை ஈசாக்கின் தலையின்மீது வைக்கப் பட்டிருக்கிறது. அப்போது ஆபிரகாமின் கண்களில் கண்ணீர் தாராளமாய்ப் புறப்பட்டு வந்திருக்கும். ஆபிரகாம் தன்னுடைய குமாரன் ஈசாக்கு உயிரோடிருப்பதை ஒருமுறை கடைசியாக பார்த்திருப்பார். அதன்பின்பு அவர் தன்னுடைய கண்களை வானத்திற்கு நேராக ஏறெடுத்து தேவனை நோக்கிப் பார்க்கிறார். ஆபிரகாமின் இருதயம் இதுவரையிலும் தன் குமாரன் ஈசாக்கின் மீதுள்ள பாசத்தினால் வேதனைப் பட்டிருக்கும். இப்போதோ ஆபிரகாமின் கண்கள் வானத்தை நோக்கிப் பார்க்கும்போது, அவருடைய இருதயமும் கர்த்தரைப்பற்றிய சிந்தனையினால் நிரம்பியிருக்கிறது. அப்போது ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கை வெட்டும்படிக்கு, தன் கையை நீட்டி கத்தியை எடுக்கிறார் (ஆதி 22:10).

ஆபிரகாம் விசுவாசத்தோடே, தன் நேசகுமாரன் ஈசாக்கை தகனபலியாக கொல்லப்போகிறார். இந்த சம்பவத்தைப் பார்த்து வானமும் பூமியும் ஆச்சரியப்பட்டிருக்கும். இந்த சம்பவம் ஆபிரகாமின் விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் உறுதிபண்ணுகிறது. பரலோகத்திலிருந்து கர்த்தரும் ஆபிரகாமைப் பார்க்கிறார். தேவதூதர்களும் ஆபிரகாமைப் பார்க்கிறார்கள்.

ஆபிரகாம் தன் நேசகுமாரனாகிய ஈசாக்கை தகனபலியாக செலுத்த முன்வருகிறார். அவர் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார். இந்த சம்பவத்தின் மூலமாக தேவன் நம்மீது வைத்திருக்கிற அன்பு வெளிப்படுகிறது. பிதாவாகிய தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை, நமக்காக பாடுகளை அனுபவிக்கவும், மரிக்கவும், ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார்.

"கர்த்தரோ அவரை நொறுக்கச்சித்தமாகி: அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார், கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்" (ஏசா 53:10).

"பட்டயமே, என் மேய்ப்பன் மேலும் என் தோழனாகிய புருஷன் மேலும் எழும்பு என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; மேய்ப்பனை வெட்டு, அப்பொழுது ஆடுகள் சிதறிப்போகும்; ஆனாலும் என் கரத்தைச் சிறுவர்மேல் திரும்ப வைப்பேன்" (சக 13:7).

ஆபிரகாம் தன்னுடைய நேசகுமாரனாகிய ஈசாக்கை தகனபலியாக பலியிட ஒப்புக்கொடுத்ததன் மூலமாக, தேவன் நம்மீது வைத்திருக்கும் அன்பு வெளிப்படுவதுபோல, அந்த அன்புக்காக, நாம் தேவனுக்கு செலுத்தவேண்டிய கடமைகளும் வெளிப்படுகிறது. நாமும் ஆபிரகாமுடைய விசுவாசத்தின் அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும். நாம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டுமென்று, கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலமாக நமக்கு கட்டளையிடுகிறார். நாம் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, நம்முடைய ஜீவியகாலமெல்லாம், கர்த்தர் நமக்கு நியமித்து வைத்திருக்கும் இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லவேண்டும்.

யேகோவாயீரே
ஆதி 22:11-14

ஆதி 22:11. அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து, ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டார்; அவன்: இதோ, அடியேன் என்றான்.

ஆதி 22:12. அப்பொழுது அவர்: பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்த படியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார்.

ஆதி 22:13. ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, பின்னாகப் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான், அப்பொழுது ஆபிரகாம் போய், கடாவைப் பிடித்து, அதை தன் குமாரனுக்கு பதிலாகத் தகனபலி யிட்டான்.

ஆதி 22:14. ஆபிரகாம் அந்த இடத்துக்கு யேகோவாயீரே என்று பேரிட்டான்; அதினாலே கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும் என்று இந்நாள் வரைக்கும் சொல்லப்பட்டு வருகிறது.

இதுவரையிலும் ஆபிரகாமுக்கு துக்கமான சம்பவமும், சோகமான சம்பவமும் நடைபெற்றிருக்கிறது. ஆபிரகாம் ஈசாக்கை பலியிடுவதற்காக மோரியா மலைக்குப் போகிறார். அங்கே தன் குமாரனாகிய ஈசாக்கை கட்டி, தான் உண்டாக்கின பலிபீடத்தில், தான் அடுக்கின கட்டைகளின்மேல் கிடத்துகிறார். ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கை வெட்டும்படிக்கு தன் கையை நீட்டி கத்தியை எடுக்கிறார். அவருடைய மனதில் வேதனைகள் இருந்திருக்கலாம். அவருடைய இருதயத்தில் தன் குமாரனைக் குறித்த துக்கம் இருந்திருக்கலாம். ஆனாலும் ஆபிரகாம் கர்த்தருடைய கட்டளைக்கு அப்படியே கீழ்ப்படிகிறார்.

அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து, "ஆபிரகாமே, ஆபிரகாமே" என்று கூப்பிடுகிறார். ஆபிரகாமுக்கு கர்த்தருடைய தூதன் தன்னைக் கூப்பிடுகிறார் என்பது தெரிந்திருக்கிறது. அப்பொழுது ஆபிரகாம், "இதோ அடியேன்" என்று சொல்லுகிறார்.

அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் ஆபிரகாமை நோக்கி, "பிள்ளையாண்டான் மேல் உன் கையை போடாதே" என்று சொல்லுகிறார். ஆபிரகாம் இப்போது தன் குமாரனை வெட்டும்படிக்கு, தன் கையை நீட்டி, கத்தியை எடுத்திருக்கிறார். ஆனால் கர்த்தருடைய தூதனானவரோ ஆபிரகாமை நோக்கி, "அவனுக்கு ஒன்றும் செய்யாதே" என்று சொல்லுகிறார். ஆபத்து நெருங்கி வரும் வேளையிலே கர்த்தருடைய விடுதலை அற்புதமாய்க் கிடைக்கிறது.

கர்த்தர் ஆபிரகாமின் கீழ்ப்படிதலை அங்கீகரிப்பதோடு, அவரை பாராட்டி கனம்பண்ணவும் செய்கிறார். "நீ தேவனுக்கு பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்" (ஆதி 22:12) என்று கர்த்தருடைய தூதனானவர் ஆபிரகாமுக்கு சொல்லுகிறார். நாம் கர்த்தருக்கு பயப்படுகிறோம் என்பதை ஆதாரத்தோடு நிரூபிக்கவேண்டும். நமக்கு பிரியமானதை கர்த்தருக்கு அற்பணித்து, அவரை கனம்பண்ணி ஆராதிக்க முன்வரவேண்டும். இதுவே நமது கீழ்ப்படிதலுக்கு அடையாளம்.

ஆபிரகாமைப் பற்றி தாம் நினைத்ததை தேவன் இப்பொழுது அறிந்து கொள்கிறார். (ஆதி 18:19). கர்த்தர் ஆபிரகாமைச் சோதித்து பார்த்து, அவரைப் பற்றி நன்றாக அறிந்து கொள்கிறார். மனுஷன் சுயாதீனச் சித்தமுடையவன். ஆகையினால் தேவன் தம்முடைய சித்தத்தை மனுஷர்மீது திணிப்பதில்லை. மனுஷரை சுயாதீனமாகத் தீர்மானம்பண்ணுமாறு அவர்களை அனுமதிக்கிறார். மனுஷருடைய கிரியைகளுக்கு மனுஷரே பொறுப்பேற்க வேண்டும். தேவன் சர்வ ஞானமுடையவர். மனுஷனுடைய சிந்தனைகளையும், செயல்களையும் தேவன் முன்னறிந்திருக்கிறார்.

கர்த்தருடைய தூதனானவர் ஆபிரகாமின் கீழ்ப்படிதலை புகழ்ந்து சொல்லுகிறார். அவர் ஆபிரகாமை நோக்கி, "நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்" (ஆதி 22:12) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஆபிரகாமுக்காக வேறொரு பலியை கொடுக்கிறார். ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, பின்னாகப் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் காண்கிறார். கர்த்தர் ஈசாக்கை தமது கிருபையினால் விடுவித்திருக்கிறார். ஈசாக்கு தகனபலியாக பலியிடப்படவில்லை. ஈசாக்குக்கு பதிலாக கர்த்தர் வேறொரு பலியைக் கொடுக்கிறார். ஈசாக்கை விடுவித்ததற்காக ஆபிரகாம் கர்த்தருக்கு நன்றி சொல்லவேண்டும்.

ஆபிரகாமும் ஈசாக்கும் மோரியா மலைக்குப்போனபோது, ஈசாக்கு ஆபிரகாமை நோக்கி, "தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே" என்று கேட்டான். அதற்கு ஆபிரகாம், "தேவன் தமது தகனபலிக்கான ஆட்டுக்குட்டியை பார்த்துக்கொள்வார்" (ஆதி 22:7,8) என்று சொன்னார்.

ஆபிரகாம் விசுவாசத்தோடு சொன்ன வார்த்தைகளை கர்த்தர் கனம்பண்ணுகிறார். கர்த்தர் ஈசாக்குக்கு பதிலாக ஒரு ஆட்டுக்குட்டியைக் கொடுக்கிறார். இந்த ஆட்டுக்குட்டியானது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவுக்கு அடையாளமாயிருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நமக்கு பதிலாக தம்மையே சிலுவையிலே பலியாக ஒப்புக்கொடுத்தார். கர்த்தர் ஈசாக்குக்குப் பதிலாக ஒரு ஆட்டுக்கடாவைக் கொடுத்ததுபோல, மனுக்குலத்திற்கு பதிலாக இயேசுகிறிஸ்துவை பலியாக ஒப்புக்கொடுத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவினுடைய மரணத்தின் மூலமாக நாம் விடுவிக்கப்பட்டிருக்கிறோம்.

இயேசுகிறிஸ்துவே வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தமான வித்து. இயேசுகிறிஸ்துவைப்பற்றிய வாக்குத்தத்தம் பிற்காலத்தில் கொடுக்கப்பட்டாலும், ஈசாக்கின் சரித்திரம் அந்த வாக்குத்தத்தத்திற்கு அடையாளமாயிருக்கிறது. ஈசாக்கு பலியாக செலுத்தப்படாமல் தப்புவிக்கப்படுகிறார். ஈசாக்குக்கு பதிலாக ஒரு ஆட்டுக்கடா கொடுக்கப்படுகிறது. கர்த்தர் அந்த ஆட்டுக்கடாவை ஈசாக்குக்கு பதிலாக அங்கீகரிக்கிறார்.

பிற்காலத்தில் மகாபிரதான பலியாகிய இயேசுகிறிஸ்து, கல்வாரி சிலுவையிலே பலியாக செலுத்தப்படுவார் என்பதற்கு அச்சாரமாக, இப்போது ஈசாக்குக்கு பதிலாக ஆட்டுக்கடா கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆபிரகாம் ஈசாக்கை மோரியா மலையிலே தகனபலியாக செலுத்த ஆயத்தம்பண்ணினார். தேவாலயத்திலே பலிபீடம் இருக்கிறது. ஆபிரகாமோ மோரியா மலையிலே பலிபீடத்தைக் கட்டினார். பிற்காலத்தில் மோரியா மலையிலே கர்த்தருடைய ஆலயம் கட்டப்பட்டது.

"பின்பு சாலொமோன் எருசலேமிலே தன் தகப்பனாகிய தாவீதுக்குக் காண்பிக்கப்பட்ட மோரியா என்னும் மலையில் எபூசியனாகிய ஒர்னானின் களம் என்னும் தாவீது குறித்துவைத்த ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத்துவக்கினான்" (2நாளா 3:1).

மோரியா மலைக்கு அருகாமையிலே கல்வாரி மலை இருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கல்வாரி மலையிலே சிலுவையில் அறையப்பட்டார்.

ஆபிரகாமுக்கு பின்னாக, புதரிலே, ஒரு ஆட்டுக்கடாவின் கொம்புகள் சிக்கிக்கொண்டிருக்கிறது. அப்பொழுது ஆபிரகாம் போய், கடாவைப் பிடித்து, அதை தன் குமாரனுக்கு பதிலாகத் தகனபலியிடுகிறார்.

ஆபிரகாம் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் காண்கிறார். அந்தக் கடாவைத் தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிடுகிறார். பதிலீட்டின் உபதேசத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. ஆட்டுக்கடா ஈசாக்கிற்குப் பதிலீடாக இருந்தது. இயேசு கிறிஸ்து எல்லா மனுஷருக்கும் பதிலீடானார். தங்கள் பாவத்தின் நிமித்தம் மனுஷர் நரகத்தில் நித்திய ஆக்கினையை அடைவதிலிருந்து மனுஷரை மீட்பதற்காக இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் பலியானார். தங்களுக்காக இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் பாவநிவாரண பலியாக மரித்தார் என்பதை விசுவாசிக்கும் அனைவருக்கும் ஆத்தும இரட்சிப்பு உண்டு.

பழைய ஏற்பாட்டில் மிருகங்கள் பலியாகச் செலுத்தப்பட்டன. புதிய ஏற்பாட்டில் நமது பாவங்களுக்குப் பரிகாரமாக இயேசு கிறிஸ்து பலியானார். ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிடச் சென்றதும், ஈசாக்கிற்குப் பதிலாக ஆட்டுக்கடாவைப் பலியிட்டதும், இயேசு கிறிஸ்துவின் கல்வாரி சிலுவை மரணத்தை முன்கூட்டியே சித்தரிக்கிறது. (எபி 11:17-19)

ஆபிரகாம் தகனபலியிட்ட இடத்திற்கு, யேகோவாயீரே என்று பேரிடுகிறார். அதினாலே அந்த ஸ்தலம், "கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும்" என்று இந்நாள் வரைக்கும் சொல்லப்பட்டு வருகிறது (ஆதி 22:14).

எல்லா விசுவாசிகளையும் உற்சாகப்படுத்தும் வண்ணமாக, அந்த ஸ்தலத்திற்கு யேகோவாயீரே என்னும் புதிய பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் எல்லா சூழ்நிலைகளிலும், "கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும்" என்றும், "கர்த்தர் நம்முடைய தேவைகளை சந்திப்பார்" என்றும் விசுவாசிக்கவேண்டும்.

ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கிடம், "தேவன் தமக்கு தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார்" என்று சொன்னார். ஆபிரகாம் இந்த வார்த்தைகளை விசுவாசத்தோடு சொன்னார். கர்த்தர் ஆபிரகாமின் விசுவாசத்தைக் கனம்பண்ணுகிறார். ஆபிரகாம் விசுவாசித்த பிரகாரமாக, கர்த்தர் ஒரு ஆட்டுக்கடாவைக் கொடுக்கிறார். ஆபிரகாம் அந்தக் கடாவைப் பிடித்து ஈசாக்குக்கு பதிலாக தகனபலியிடுகிறார்.

ஆபிரகாமுக்கு ஆசீர்வாதம்
ஆதி 22:15-19

ஆதி 22:15. கர்த்தருடைய தூதுனானவர் இரண்டாந்தரம் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு;

ஆதி 22:16. நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்;

ஆதி 22:17. நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரைமணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும்,

ஆதி 22:18. நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

ஆதி 22:19. ஆபிரகாம் தன் வேலைக்காரரிடத்துக்குத் திரும்பிவந்தான்; அவர்கள் எழுந்து புறப்பட்டு, ஏகமாய்ப் பெயெர்செபாவுக்குப் போனார்கள்; ஆபிரகாம் பெயர்செபாவிலே குடியிருந்தான்.

கர்த்தர் ஆபிரகாமின் கீழ்ப்படிதலை தம்முடைய கிருபையினால் அங்கீகரிக்கிறார். கர்த்தர் ஆபிரகாமை ஆசீர்வதிக்கவும் செய்கிறார். கர்த்தர் ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். ஈசாக்கின் மூலமாக ஆபிரகாமின் சந்ததி திரளாய்ப் பெருகும் என்பது கர்த்தருடைய வாக்குத்தத்தம். ஆனாலும் ஆபிரகாம் ஈசாக்கை தன்னுடைய புத்திரன் என்றும், தன்னுடைய ஏகசுதன் என்றும் பாராமல், அவனை சர்வாங்க தகனபலியாக பலியிட ஒப்புக்கொடுக்கிறார்.

கர்த்தர் ஆபிரகாமோடு பண்ணின உடன்படிக்கையே இப்போது மறுபடியுமாய் ஆணையிட்டு உறுதிபண்ணுகிறார். கர்த்தர் சொன்ன உடன்படிக்கை இதற்கு முன்பு முத்திரையிடப்பட்டு உறுதிபண்ணப்பட்டது. இப்போதோ அது ஆணையிடப்பட்டு உறுதிபண்ணப்படுகிறது.

கர்த்தர் ஆபிரகாமுக்கு ஆணையிடும்போது, "என் பேரில் ஆணையிட்டேன்" (ஆதி 22:18) என்று சொல்லுகிறார்.

"ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணின போது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாதபடியினாலே தமது பேரிலே தானே ஆணையிட்டு: நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றார்" (எபி 6:13,14).

கர்த்தர் ஆபிரகாமையும் அவருடைய சந்ததியையும் ஆசீர்வதிக்கிறார். கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, "நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரைமணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்" (ஆதி 22:17) என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார்.

கர்த்தர் சொன்ன பிரகாரமாக ஆபிரகாமின் சந்ததியார் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகியிருக்கிறார்கள். கர்த்தர் ஆபிரகாமை ஆசீர்வதிப்பதற்கான காரணத்தையும் சொல்லுகிறார்.

கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, "நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால், நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பேன்" (ஆதி 22:16) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய வாக்குத்தத்தத்தில் மேசியாவைப்பற்றிய வெளிப்பாடும், சுவிசேஷத்தின் கிருபையும் வெளிப்படுத்தப்படுகிறது. கர்த்தர் ஆபிரகாமுக்கு தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதாக வாக்குப்பண்ணுகிறார். புதிய ஏற்பாட்டுக்காலத்தில், கர்த்தர் சொன்ன வார்த்தைகளை சகரியா மேற்கோளாக சொல்லுகிறார்.

"அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்; ஆதிமுதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால் தாம் சொன்னபடியே, தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும் படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்படுத்தினார்" (லூக் 1:72-75).

கர்த்தர் ஆபிரகாமின் சந்ததிக்கு பரிசுத்த ஆவியினால் வரும் ஆசீர்வாதத்தை வாக்குப்பண்ணுகிறார். "நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பேன்" என்னும் வாக்கியத்திற்கு, "நான் உனக்கு பரிசுத்த ஆவியானவரின் வரத்தைக் கொடுப்பேன்" என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். எல்லா ஆசீர்வாதங்களிலும், பரிசுத்த ஆவியானவரின் வரமே மிகவும் உன்னதமானது.

கர்த்தர் ஆபிரகாமை நோக்கி உன் சந்ததியை பெருகப்பண்ணுவேன் என்று சொல்லுகிறார். ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தாகிய விசுவாசிகளின் எண்ணிக்கை சபையிலே பெருகும். அவர்களின் எண்ணிக்கை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகியிருக்கும்.

கர்த்தர் ஆபிரகாமின் சந்ததியாருக்கு ஆவிக்குரிய ஜெயத்தைக் கட்டளையிடுவார். புதிய ஏற்பாட்டுக்காலத்தில், சகரியா, "தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும் படிக்கு" (லூக் 1:74) என்று சொல்லுவது, ஆவிக்குரிய ஜெயத்தைக் குறிக்கும். கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, "உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்" (ஆதி 22:17) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஆபிரகாமுக்கு சொல்லுகிற வாக்குத்தத்தங்களில், மிகவும் மேன்மையான வாக்குத்தத்தம், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய வாக்குத்தத்தமாகும். கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி 22:18) என்று சொல்லுகிறார்.

ஆபிரகாமின் சந்ததிக்குள், ஒரு குறிப்பிட்ட நபர், மிகவும் விசேஷமானவராயிருப்பார். இந்த வார்த்தை வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியாவைக் குறிக்கிறது. மேசியாவுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்பது கர்த்தருடைய வாக்குத்தத்தம்.

"ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கு வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கும் என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே" (கலா 3:16).

ஆபிரகாம் மோரியா மலையிலே கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு, தன்னுடைய குமாரன் ஈசாக்கோடு, தன்னுடைய வேலைக்காரர்கள் இருக்கிற இடத்திற்கு திரும்பி வருகிறார். அவர்கள் எல்லோரும் எழுந்து புறப்பட்டு, ஏகமாய்ப் பெயெர்செபாவுக்குப் போகிறார்கள்; ஆபிரகாம் பெயர்செபாவிலே குடியிருக்கிறார் (ஆதி 22:19).

தேவன் கர்த்தருடைய தூதனாகத் தோன்றுகிறார். இவர் கர்த்தர் என்று அழைக்கப்படுகிறார். (ஆதி 22:16) கர்த்தருடைய தூதனானவர் ஒரு நபர். இவரை அனுப்புகிற கர்த்தர் மற்றொரு நபர். திரித்துவத்தின் சத்தியம் இதன் மூலமாகத் தெளிவாகிறது (ஆதி 19:24).

ஆபிரகாமின் சகோதரன்
ஆதி 22:20-24

ஆதி 22:20. இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, ஒருவன் ஆபிரகாமிடத்தில் வந்து: மில்க்காளும் உன் சகோரனாகிய நாகோருக்குப் பிள்ளைகளைப் பெற்றாள்;

ஆதி 22:21. அவர்கள் யாரென்றால், முதற்பேறான ஊத்ஸ், அவன் தம்பியாகிய பூஸ், ஆராமுக்குத் தகப்பனாகிய கேமுவேல்,

ஆதி 22:22. கேசேத், ஆசோ, பில்தாஸ், இத்லாப், பெத்துவேல் என்பவர்கள்; பெத்துவேல் ரெபேக்காளைப் பெற்றான் என்று அறிவித்தான்.

ஆதி 22:23. அந்த எட்டுப்பேரை மில்க்காள் ஆபிரகாமுடைய சகோதரனாகிய நாகோருக்குப் பெற்றாள்.

ஆதி 22:24. ரேயுமாள் என்று பேர்கொண்ட அவனுடைய மறுமனையாட்டியும், தேபா, காகாம், தாகாஸ், மாகா என்பவர்களைப் பெற்றாள்.

கர்த்தர் ஆபிரகாமின் சந்ததியை அதிகமாய் ஆசீர்வதிக்கிறார். அவர்களுக்கு தம்முடைய விசேஷித்த கிருபைகளையும், சிலாக்கியங்களையும் கொடுக்கிறார். ஆபிரகாமின் சந்ததி ஆசீர்வதிக்கப்படுவதுபோல, அவருடைய உற்றார் உறவினர்களின் சந்ததியும் ஆசீர்வதிக்கப்படுகிறது. தன்னுடைய சகோதரரின் குடும்பத்தார் பலுகிப்பெருகிற நற்செய்தியை ஆபிரகாம் கேள்விப்படுகிறார்.

BELLWETHER INTERNATIONAL

ஆதியாகமம் - விரிவுரை
GENESIS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, ஒருவன் ஆபிரகாமிடத்தில் வந்து: "மில்க்காளும் உன் சகோரனாகிய நாகோருக்குப் பிள்ளைகளைப் பெற்றாள்" (ஆதி 22:20) என்று சொல்லுகிறான். நாகோருக்கு பிறந்த பிள்ளைகளின் பெயர்களையும் அவன் சொல்லுகிறான்.

அவர்கள் யாரென்றால், முதற்பேறான ஊத்ஸ், அவன் தம்பியாகிய பூஸ், ஆராமுக்குத் தகப்பனாகிய கேமுவேல்,கேசேத், ஆசோ, பில்தாஸ், இத்லாப், பெத்துவேல் என்பவர்கள் (ஆதி 22:21,22).

பெத்துவேல் ரெபேக்காளைப் பெற்றான் என்றும் அவன் ஆபிரகாமுக்கு அறிவிக்கிறான். அந்த எட்டுப்பேரை மில்க்காள் ஆபிரகாமுடைய சகோதரனாகிய நாகோருக்குப் பெறுகிறாள் (ஆதி 22:23).

ஆபிரகாமின் சகோதரனாகிய நாகோருக்கு, மில்க்காள் என்னும் மனைவியை தவிர ரேயுமாள் என்று பேர் கொண்ட ஒரு மறுமனையாட்டியும் இருக்கிறாள். அவள் நாகோருக்கு தேபா, காகாம், தாகாஸ், மாகா என்பவர்களைப் பெறுகிறாள் (ஆதி 22:24).

ஆபிரகாம், தேராகு ஆகியோருடன் நாகோர் கானானுக்கு வரவில்லை. ஆரானிலேயே தங்கி விட்டான். (ஆதி 11:31). ரெபெக்காளுடைய வரலாற்றை அறிமுகப்படுத்துவதற்காக நாகோரின் குடும்பத்தைப்பற்றி கூறப்பட்டிருக்கிறது. (ஆதி 24). இஸ்மவேல், யாக்கோபு ஆகியோரைப் போல நாகோருக்கு 12 குமாரர்கள் இருந்தார்கள். (ஆதி 22: 21-24; ஆதி 46:8-30).

BELLWETHER INTERNATIONAL

ஆதியாகமம் - விரிவுரை
GENESIS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, ஒருவன் ஆபிரகாமிடத்தில் வந்து: "மில்க்காளும் உன் சகோரனாகிய நாகோருக்குப் பிள்ளைகளைப் பெற்றாள்" (ஆதி 22:20) என்று சொல்லுகிறான். நாகோருக்கு பிறந்த பிள்ளைகளின் பெயர்களையும் அவன் சொல்லுகிறான்.

அவர்கள் யாரென்றால், முதற்பேறான ஊத்ஸ், அவன் தம்பியாகிய பூஸ், ஆராமுக்குத் தகப்பனாகிய கேமுவேல்,கேசேத், ஆசோ, பில்தாஸ், இத்லாப், பெத்துவேல் என்பவர்கள் (ஆதி 22:21,22).

பெத்துவேல் ரெபேக்காளைப் பெற்றான் என்றும் அவன் ஆபிரகாமுக்கு அறிவிக்கிறான். அந்த எட்டுப்பேரை மில்க்காள் ஆபிரகாமுடைய சகோதரனாகிய நாகோருக்குப் பெறுகிறாள் (ஆதி 22:23).

ஆபிரகாமின் சகோதரனாகிய நாகோருக்கு, மில்க்காள் என்னும் மனைவியை தவிர ரேயுமாள் என்று பேர் கொண்ட ஒரு மறுமனையாட்டியும் இருக்கிறாள். அவள் நாகோருக்கு தேபா, காகாம், தாகாஸ், மாகா என்பவர்களைப் பெறுகிறாள் (ஆதி 22:24).

ஆபிரகாம், தேராகு ஆகியோருடன் நாகோர் கானானுக்கு வரவில்லை. ஆரானிலேயே தங்கி விட்டான். (ஆதி 11:31). ரெபெக்காளுடைய வரலாற்றை அறிமுகப்படுத்துவதற்காக நாகோரின் குடும்பத்தைப்பற்றி கூறப்பட்டிருக்கிறது. (ஆதி 24). இஸ்மவேல், யாக்கோபு ஆகியோரைப் போல நாகோருக்கு 12 குமாரர்கள் இருந்தார்கள். (ஆதி 22: 21-24; ஆதி 46:8-30).

23 அதிகாரம்

சாராளின் மரணத்திற்காக ஆபிரகாம் புலம்பி அழுகிறார் (ஆதி 23:1,2). ஆபிரகாம் சாராளின் பிரேதத்தை அடக்கம்பண்ண ஒரு கல்லறையை கிரயத்திற்கு வாங்குகிறார். அதற்காக ஆபிரகாம் ஏத்தின் புத்திரரோடே பணிவோடு பேசுகிறார் (ஆதி 23:3,4). ஏத்தின் புத்திரர் ஆபிரகாமுக்கு மதிப்பு கொடுத்து, தங்கள் தேசத்திலுள்ள கல்லறையை அவருக்கு கொடுக்க சம்மதம் தெரிவிக்கிறார்கள் (ஆதி 23:5-16).

ஆபிரகாம் எப்பெரோன் என்பவனுக்கு வெள்ளியை நிறுத்துக்கொடுத்து, கல்லறைப் பூமியை கிரயத்திற்கு வாங்குகிறார் (ஆதி 23:16). ஆபிரகாம் கிரயத்திற்கு வாங்கின கல்லறை பூமி அவருக்கு உறுதிப்படுத்தப்படுகிறது (ஆதி 23:17,18,20). சாராளின் அடக்க ஆராதனை (ஆதி 23:19).

சாராளின் மரணம்
ஆதி 23:1,2

ஆதி 23:1. சாராள் நூற்று இருபத்தேழு வருஷம் உயிரோடிருந்தாள்; இவ்வளவே சாராளுடைய வயது.

ஆதி 23:2. கானான் தேசத்திலுள்ள எபிரோன் என்னும் கீரியாத் அர்பாவிலே சாராள் மரித்தாள்; அப்பொழுது ஆபிரகாம் வந்து, சாராளுக்காகப் புலம்பி அழுதான்.

இந்த வசனப்பகுதியில், சாராளின் வயதைப்பற்றியும், அவளுடைய மரணத்தைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. "சாராள் நூற்று இருபத்தேழு வருஷம் உயிரோடிருந்தாள்; இவ்வளவே சாராளுடைய வயது. கானான் தேசத்திலுள்ள எபிரோன் என்னும் கீரியாத் அர்பாவிலே சாராள் மரித்தாள்" (ஆதி 23:1,2).

சாராள் கானான் தேசத்திலே மரித்துப்போகிறாள். அவள் அந்த தேசத்தில் அறுபது வருஷங்கள் பரதேசியாய்த் தங்கியிருந்தாள். சாராள் மரித்துப்போனதற்காக ஆபிரகாம் புலம்பி அழுகிறார். இந்த வசனப்பகுதியில் ஆபிரகாமின் துக்கத்தை விவரிப்பதற்கு இரண்டு வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "ஆபிரகாம் சாராளுக்காக புலம்பி அழுகிறார்".

ஆபிரகாம் புலம்புகிறார், அழுகிறார். நம்முடைய சிநேகிதர்கள் மரித்துப்போகும்போது, நாம் அவர்களுக்காக கண்ணீர் சிந்தி அழுகிறோம். நாம் சிந்தும் கண்ணீர் துளிகள், மரித்துப்போனவர்களுக்கு நாம் செலுத்தும் மரியாதை.

மரித்துப்போனவர்களின் பிரேதம் கல்லறை பூமியில் புதைக்கப்படுகிறது. அவர்களுடைய சரீரம் இந்தப் பூமியிலே விதைக்கப்படுகிறது என்றும் இந்த வாக்கியத்திற்கு நாம் பொருள் சொல்லலாம். விதைக்கப்படும் விதைக்கு தண்ணீர் பாய்ச்சவேண்டும். புதைக்கப்படும் சரீரத்திற்கு நம்முடைய கண்ணீர்களே தண்ணீராக பாய்ச்சப்படுகிறது.

புறஜாதியாருக்கு தாங்கள் மரித்த பின்பு தங்களுக்கு என்ன சம்பவிக்கும் என்று தெரியாது. அவர்களுக்கு பரலோகத்தைக் குறித்த நம்பிக்கையில்லை. ஆகையினால் அவர்கள் வேதனையோடும் துக்கத்தோடும் மரிப்பார்கள். அவர்களுடைய சிநேகிதர்களும், உற்றார் உறவினர்களும் அவர்களுக்காக அழுது புலம்புவார்கள்.

விசுவாசிகளாகிய நமக்கோ மரித்த பின்பும் ஒரு நம்பிக்கை உண்டு. அது நம்முடைய ஆனந்த பாக்கிய நம்பிக்கை. ஆகையினால் நாம் மரிக்கும்போது துக்கமாய் மரிக்காமல், சந்தோஷமாய் மரிக்கவேண்டும். விசுவாசிகள் மரிக்கும்போது, அவர்களுடைய சிநேகிதர்களும், உற்றார் உறவினர்களும், அவிசுவாசிகளைப்போல அழுது புலம்ப வேண்டிய அவசியமில்லை.

பரிசுத்தவான்களின் மரணம் கர்த்தருடைய பார்வைக்கு பிரியமாயிருக்கிறது. பரிசுத்தவான்கள் மரித்துப்போனாலும், அவர்கள் பரலோகத்திற்கு போகிறார்கள். அங்கே நாம் அவர்களை மறுபடியும் பார்ப்போம் என்பதே நம்முடைய ஆனந்த பாக்கிய நம்பிக்கை. ஆகையினால் விசுவாசிகளுக்கு மரணம் என்பது நித்திய பிரிவாகயிராமல், அது தற்காலிக பிரிவாகவே இருக்கிறது.

வேதாகமத்தில் ஸ்திரீகளில் சாராளின் மரண வயது மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. "கீரியாத் அர்பா" என்பது எபிரோனின் ஆதிகாலத்து பெயர். இதற்கு அர்பாவின் கோட்டை என்று பொருள். இதை ஏனோக்கும், அர்பாவின் குமாரர்களும் கட்டினார்கள். (யோசு 14:15; யோசு 15:13; எண் 13:22) இவர்களெல்லாம் இராட்சத பிறவிகள். இந்த இடம் காலேபுக்குக் கொடுக்கப்பட்டது (நியா 1:10,20).

தாவீது இங்கு தான் முதலாவதாக ஆட்சி புரிந்தார். (2சாமு 2:1). அப்சலோம் தன்னுடைய கலகத்தை இங்குதான் ஆரம்பித்தான். (2சாமு 15). ஆபிரகாமையும், யாக்கோபையும் இங்குதான் அடக்கம் பண்ணினார்கள். (ஆதி 23:1-20; ஆதி 33:18-20; ஆதி 50:5-14; யோசு 24:32).

சாராள் மரித்த போது, ஆபிரகாம் பெயர்செபாவில் இருந்திருக்கலாம். எபிரோனிலிருந்து அது 24 மைல் தூரத்தில் உள்ளது. தன்னுடைய மந்தைகளை மேய்ப்பதற்காக ஆபிரகாம் ஒருவேளை அங்கு தங்கியிருந்திருக்கலாம். ஆபிரகாம் ஏதோ ஒரிடத்திலிருந்து "வந்து" சாராளுக்காகப் புலம்பி அழுகிறார்.

கல்லறைப்பூமி
ஆதி 23:3-15

ஆதி 23:3. பின்பு ஆபிரகாம் பிரேதம் இருந்த இடத்திலிருந்து எழுந்துபோய், ஏத்தின் புத்திரரோடே பேசி;

ஆதி 23:4. நான் உங்களிடத்தில் அந்நியனும் பரதேசியுமாய் இருக்கிறேன்; என்னிடத்திலிருக்கிற இந்தப் பிரேதம் என் கண்முன் இராதபடிக்கு நான் அதை அடக்கம் பண்ணுவதற்கு, உங்களிடத்தில் எனக்குச் சொந்தமாக ஒரு கல்லறைப் பூமியைத் தரவேண்டும் என்றான்.

ஆதி 23:5. அதற்கு ஏத்தின் புத்திரர் ஆபிரகாமுக்குப் பிரதியுத்திரமாக:

ஆதி 23:6. எங்கள் ஆண்டவனே, நாங்கள் சொல்லுகிறதைக் கேளும்; எங்களுக்குள்ளே நீர் மகா பிரபு; எங்கள் கல்லறைகளில் முக்கியமானதிலே பிரேதத்தை அடக்கம்பண்ணும்; நீர் பிரேதத்தை அடக்கம்பண்ண எங்களில் ஒருவனும் தன் கல்லறையை உமக்குத் தடைசெய்வதில்லை என்றார்கள்.

ஆதி 23:7. அப்பொழுது ஆபிரகாம் எழுந்திருந்து, ஏத்தின் புத்திரராகிய அத்தேசத்தாருக்கு வந்தனம் செய்து,

ஆதி 23:8. அவர்களோடே பேசி: என்னிடத்திலிருக்கிற பிரேதம் என் கண்முன் இராதபடிக்கு, நான் அதை அடக்கம்பண்ண உங்களுக்குச் சம்மதியானால், நீங்கள் என் வார்த்தையைக் கேட்டு, சோகாருடைய குமாரனாகிய எப்பெரோன்,

ஆதி 23:9. தன் நிலத்தின் கடைசியிலே இருக்கிற மக்பேலா என்னப்பட்ட குகையை எனக்குச் சொந்தமான கல்லறைப் பூமியாயிருக்கும்படி தரவேண்டும் என்று, அவரிடத்தில் எனக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; அது பெறுமான விலைக்கு அவர் அதைத் தருவாராக என்றான்.

ஆதி 23:10. எப்பெரோன் ஏத்தின் புத்திரர் நடுவிலே உட்கார்ந்திருந்தான்; அப்பொழுது ஏத்தியனாகிய எப்பெரோன் தன் ஊர் வாசலுக்குள் பிரவேசிக்கிற ஏத்தின் புத்திரர் அனைவரும் கேட்க ஆபிரகாமுக்குப் பிரதியுத்தரமாக:

ஆதி 23:11. அப்படியல்ல, என் ஆண்டவனே, என் வார்த்தையைக் கேளும்; அந்த நிலத்தை உமக்குத் தருகிறேன், அதிலிருக்கும் குகையையும் உமக்குத் தருகிறேன். என் ஜனப்புத்திரருடைய கண்களுக்கு முன்பாக அதை உமக்குத் தருகிறேன், உம்மிடத்திலிருக்கிற பிரேதத்தை அடக்கம்பண்ணும் என்றான்.

ஆதி 23:12. அப்பொழுது ஆபிரகாம் அத்தேசத்தாருக்கு வந்தனம் செய்து,

ஆதி 23:13. தேசத்து ஜனங்கள் கேட்க, எப்பெரோனை நோக்கி: கொடுக்க உமக்கு மனதானால் என் வார்த்தையைக் கேளும்; நிலத்தின் விலையைத் தருகிறேன்; என் கையில் அதை வாங்கிக்கொள்ளும்; அப்பொழுது என்னிடத்திலிருக்கிற பிரேதத்தை அவ்விடத்தில் அடக்கம்பண்ணுவேன் என்றான்.

ஆதி 23:14. அதற்கு எப்பெரோன் ஆபிரகாமுக்குப் பிரதியுத்தரமாக:

ஆதி 23:15. என் ஆண்டவனே, நான் சொல்லுகிறதைக்கேளும்; அந்த நிலம் நானூறு சேக்கல் நிறை வெள்ளி பெறும்; எனக்கும் உமக்கும் அது எவ்வளவு காரியம்; நீர் உம்மிடத்திலிருக்கிற பிரேதத்தை அடக்கம்பண்ணும் என்றான்.

சாராள் கானான் தேசத்திலுள்ள எபிரோன் என்னும் கீரியாத் அர்பாவிலே மரித்துப்போகிறாள். இந்த ஸ்தலத்திலே ஏத்தின் புத்திரர் வாசம்பண்ணுகிறார்கள். ஆபிரகாம் அவர்கள் மத்தியிலே அந்நியனும், பரதேசியுமாயிருக்கிறார். சாராளின் பிரேதம் அவருடைய கண்களுக்கு முன்பாக இருக்கிறது.

சாராளின் பிரேதத்தை அடக்கம்பண்ணவேண்டும். ஆனால் அவளை அடக்கம்பண்ணுவதற்கு, ஆபிரகாமிடத்தில் கல்லறைப்பூமி எதுவுமில்லை. ஆபிரகாம் தங்கியிருக்கிற இடத்திலே ஏத்தின் புத்திரர் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் கல்லறைப்பூமி இருக்கிறது. ஆபிரகாம் சாராளின் பிரேதம் இருந்த இடத்திலிருந்து எழுந்துபோய், ஒரு கல்லறைப்பூமியை வாங்குவதற்காக ஏத்தின் புத்திரரோடே பணிவோடு பேசுகிறார் (ஆதி 23:3).

ஆபிரகாம் ஏத்தின் புத்திரரை நோக்கி, "நான் உங்களிடத்தில் அந்நியனும் பரதேசியுமாய் இருக்கிறேன்; என்னிடத்திலிருக்கிற இந்தப் பிரேதம் என் கண்முன் இராதபடிக்கு நான் அதை அடக்கம் பண்ணுவதற்கு, உங்களிடத்தில் எனக்குச் சொந்தமாக ஒரு கல்லறைப் பூமியைத் தரவேண்டும்" (ஆதி 23:4) என்று கேட்கிறார்.

சாராளின் பிரேதம் இப்போது ஆபிரகாமின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது. அந்தப் பிரேதத்தைப் பார்க்கும்போதெல்லாம் ஆபிரகாமின் துக்கம் அதிகரிக்கும். அவர் சாராளுக்காக புலம்பி அழுவார். ஆபிரகாமின் துக்கம் குறைய வேண்டுமென்றால், சாராளின் பிரேதத்தை அவருடைய கண்முன் இராதபடிக்கு, அதை அடக்கம்பண்ணவேண்டும். அதை அடக்கம்பண்ணுவதற்கு தனக்கு சொந்தமாக ஒரு கல்லறைப்பூமி வேண்டுமென்று ஆபிரகாம் எதிர்பார்க்கிறார்.

சாராள் மரித்துப்போனதினால் ஆபிரகாம் மிகுந்த துக்கத்தோடிருக்கிறார். அவர் சாராளுக்காக புலம்பி அழுகிறார். சாராளின் பிரேதம் ஆபிரகாமின் கண்முன் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு. பிரேதத்திற்கு முன்பாக நின்று புலம்பி அழுவதற்கு ஒரு காலமுண்டு. புலம்பி அழுவதை நிறுத்திவிட்டு, அந்தப் பிரேதத்தை கல்லறையிலே புதைப்பதற்கும் ஒரு காலமுண்டு.

நாம் மரித்துப்போனவர்களுக்காக எப்போதும் புலம்பி அழுதுகொண்டிருக்க முடியாது. புலம்பி அழுவதிலேயே நம்முடைய முழுக்கவனத்தையும் செலுத்தினால், மரித்துப்போன பிரரேதத்தை நம்மால் அடக்கம்பண்ண முடியாது. பிரேதத்தை கல்லறையில் அடக்கம்பண்ணுவது, விதையை பூமியில் விதைப்பதற்கு சமம். நம்முடைய அழுகை, விதைப்பதற்கு தடையாகயிருக்கக் கூடாது. ஆபிரகாம் சாராளுக்காக எவ்வளவுதான் புலம்பி அழுதாலும், அவளுடைய சரீரத்தை கல்லறைப்பூமியிலே அடக்கம்பண்ணுவதற்கு ஆயத்த வேலைகளை செய்தே ஆகவேண்டும்.

நம்முடைய உற்றார் உறவினர்கள், சிநேகிதர்கள் ஆகியோரில் அநேகர் மரித்துப்போயிருக்கிறார்கள். மரித்துப்போன அவர்களுடைய பிரேதத்தைப் பார்க்கும்போது, நாம் நம்மைப்பற்றி நினைத்துப் பார்க்கவேண்டும். அவர்கள் இப்போது மரித்துப்போனபோல, நாமும் ஒரு நாள் மரித்துப்போவோம். எல்லோருக்கும் மரணம் நியமிக்கப்பட்டிருக்கிறது. மரித்துப்போனவர்கள், "நாங்கள் போகிறோம்" என்று சொல்லுகிறார்கள். நாமோ அவர்களைப் பார்த்து, "நாங்களும் வருகிறோம்" என்று சொல்லவேண்டும்.

ஆபிரகாம் சாராளின் பிரேதத்தை அடக்கம்பண்ணுவதற்கு, ஏத்தின் புத்திரரிடத்தில் ஒரு கல்லறைப்பூமியை கிரயத்திற்கு வாங்கவேண்டுமென்று, அவர்களோடு பேசுகிறார். ஏத்தின் புத்திரரும் ஆபிரகாமுக்கு ஒரு கல்லறைப்பூமியை கொடுப்பதற்கு சம்மதிக்கிறார்கள்.

ஏத்தின் புத்திரர் ஆபிரகாமுக்குப் பிரதியுத்திரமாக, "எங்கள் ஆண்டவனே, நாங்கள் சொல்லுகிறதைக் கேளும்; எங்களுக்குள்ளே நீர் மகா பிரபு; எங்கள் கல்லறைகளில் முக்கியமானதிலே பிரேதத்தை அடக்கம்பண்ணும்; நீர் பிரேதத்தை அடக்கம்பண்ண எங்களில் ஒருவனும் தன் கல்லறையை உமக்குத் தடைசெய்வதில்லை" (ஆதி 23:5,6) என்று சொல்லுகிறார்கள்.

ஏத்தின் புத்திரர் ஆபிரகாமுக்கு மிகுந்த மதிப்பையும் மரியாதையையும் காண்பிக்கிறார். அவர்கள் ஆபிரகாமை, "எங்களுக்குள்ளே நீர் மகா பிரபு" என்று சொல்லுகிறார்கள். அவர்கள் சாராளின் பிரேதத்தை அடக்கம்பண்ண, ஒரு கல்லறைப்பூமியை ஆபிரகாமுக்கு கொடுக்க சம்மதிக்கிறார்கள். ஏத்தின் புத்திரரைப்போல நாமும் எல்லோரோடும் சமாதானமாயிருக்கவேண்டும். நாம் அந்நியர்களுக்கும், நம் மத்தியிலே பரதேசியாய்த் தங்கியிருக்கிறவர்களுக்கும் உதவி செய்ய முன்வரவேண்டும்.

சாராளின் பிரேதத்தை எந்த இடத்தில் அடக்கம்பண்ணவேண்டுமென்று ஆபிரகாம் ஏற்கெனவே ஒரு இடத்தை தெரிந்தெடுத்திருக்கிறார். அந்த இடம் எப்பெரோன் என்பவனுக்கு சொந்தமான இடம். ஆபிரகாம் ஏத்தின் புத்திரரிடத்தில், தான் மனதில் நியமித்திருக்கிற அந்தக் குறிப்பிட்ட இடத்தைப்பற்றி பேசுகிறார்.

அப்பொழுது ஆபிரகாம் எழுந்திருந்து, ஏத்தின் புத்திரராகிய அத்தேசத்தாருக்கு வந்தனம் செய்கிறார் (ஆதி 23:7).

ஆபிரகாம் ஏத்தின் புத்திரரை நோக்கி, "என்னிடத்திலிருக்கிற பிரேதம் என் கண்முன் இராதபடிக்கு, நான் அதை அடக்கம்பண்ண உங்களுக்குச் சம்மதியானால், நீங்கள் என் வார்த்தையைக் கேட்டு, சோகாருடைய குமாரனாகிய எப்பெரோன், தன் நிலத்தின் கடைசியிலே இருக்கிற மக்பேலா என்னப்பட்ட குகையை எனக்குச் சொந்தமான கல்லறைப் பூமியாயிருக்கும்படி தரவேண்டும் என்று, அவரிடத்தில் எனக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; அது பெறுமான விலைக்கு அவர் அதைத் தருவாராக" (ஆதி 23:8,9) என்று சொல்லுகிறார்.

ஆதி 23:9-ஆவது வசனத்தில் கல்லறைப்பூமியைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனம் ஆதி 33:19 ஆவது வசனத்தோடு முரண்படவில்லை. யாக்கோபு பலிபீடம் கட்டுவதற்காக ஒரிடத்தை வாங்கினார். அதை மரித்தோரை அடக்கம் பண்ணும் இடமாக வாங்கவில்லை. ஆபிரகாம் இந்த இடத்தை வாங்கியதற்கும், யாக்கோபு வாங்கியதற்கும் இடையில் 80 வருஷங்கள் இடைவெளி உள்ளது. யாக்கோபு கானானுக்குத் திரும்பி வந்தபோது, பிரச்சனை வராமல் தவிர்ப்பதற்காக ஒருவேளை ஏற்கெனவே வாங்கப்பட்டிருந்த இடத்தை யாக்கோபு திரும்பவும் வாங்கியிருந்திருக்கலாம் (ஆதி 50:13; யோசு 24:32).

ஆபிரகாம் ஏத்தின் புத்திரரோடே பேசும்போது, "அவரிடத்தில் எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள்" என்று சொல்லுகிறார். அக்காலத்தில் வியாபாரக் காரியங்களில் இடைத்தரகர்களைப் பயன்படுத்தினார்கள். தனக்காக எப்பெரோனிடத்தில் வேண்டிக் கொள்ளுமாறு ஆபிரகாம் ஏத்தின் புத்திரரிடம் கேட்டுக் கொள்கிறார் (ஆதி 23:8).

ஆபிரகாம் ஏத்தின் புத்திரருக்குள்ளே மகாபிரபுவாகயிருக்கிறார். அவர் வயது முதிர்ந்தவர். அவர் இப்போது சாராள் மரித்துப்போனதினிமித்தமாக மிகுந்த துக்கத்திலும், மனவேதனையிலும் இருக்கிறார். ஆனாலும் ஆபிரகாம் ஏத்தின் புத்திரருக்கு மரியாதை செலுத்த தவறவில்லை. ஆபிரகாம் எழுந்திருந்து ஏத்தின் புத்திரராகிய அத்தேசத்தாருக்கு வந்தனம் செய்கிறார். ஆபிரகாம் அவர்களுக்கு முன்பாக தன்னை மிகவும் தாழ்த்துகிறார்.

கர்த்தரை நம்புகிறவர்கள் தாங்கள் வாசம்பண்ணுகிற சமுதாயத்திலே, நல்ல சுபாவமுள்ளவர்களாகயிருக்கவேண்டும். அவர்கள் மற்றவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் காண்பிக்கவேண்டும். நம்மிடத்தில் பொறாமையோ, விரோதமோ இருக்கக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகள் புறஜாதியார் மத்தியிலே, துன்மார்க்கராயிருக்கும்போது, தேவனுடைய நாமம் தூஷிக்கப்படும்.

ஏத்தின் புத்திரர் தனக்காக எப்பெரோனிடம் பரிந்துபேசவேண்டுமென்று ஆபிரகாம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறார். அப்பொழுது எப்பெரோனும் ஏத்தின் புத்திரர் நடுவிலே உட்கார்ந்திருக்கிறான்.

ஏத்தியனாகிய எப்பெரோன் தன் ஊர் வாசலுக்குள் பிரவேசிக்கிற ஏத்தின் புத்திரர் அனைவரும் கேட்க ஆபிரகாமுக்குப் பிரதியுத்தரமாக, "அப்படியல்ல, என் ஆண்டவனே, என் வார்த்தையைக் கேளும்; அந்த நிலத்தை உமக்குத் தருகிறேன், அதிலிருக்கும் குகையையும் உமக்குத் தருகிறேன். என் ஜனப்புத்திரருடைய கண்களுக்கு முன்பாக அதை உமக்குத் தருகிறேன், உம்மிடத்திலிருக்கிற பிரேதத்தை அடக்கம்பண்ணும்" (ஆதி 23:10,11) என்று சொல்லுகிறான்.

விருந்தினர் விரும்பும் காரியங்களை அவர்களுக்குத் தரும் பழக்கம் கிழக்கு தேசங்களில் இன்றும் உள்ளது. ஆபிரகாமிற்கு அந்த இடத்தைத் தருவதற்கு அவர்கள் சம்பந்தம் தெரிவிக்கிறார்கள். ஆபிரகாம் அந்தப் பூமியைச் சாராளை அடக்கம் பண்ணும் கல்லறைப் பூமியாகக் கிரயத்திற்குப் பெறுகிறார். ஒரு பொருளைக் கிரயத்திற்கு வாங்கும் பொழுது சாட்சிகளும் கையொப்பமிட வேண்டும்.

ஆபிரகாம் எப்பெரோனுக்கு சொந்தமான மக்பேலா என்னப்பட்ட குகையை விலைக்கு வாங்கவேண்டுமென்று விரும்புகிறார். ஆனால் எப்பெரோனோ அந்தக் குகையை ஆபிரகாமுக்கு இலவசமாய்க் கொடுக்க முன்வருகிறான். அவன் அந்தக் குகையை தனக்கு இலவசமாய்க் கொடுக்க முன்வருவான் என்று ஆபிரகாம் எதிர்பார்க்கவில்லை.

நம்மைச் சுற்றியுள்ளவர்களில் அநேகர் எப்பெரோனைப்போல நற்குணமுள்ளவர்களாயிருக்கிறார்கள். நாம் அவர்களைப்பற்றி நினைப்பதற்கும், அவர்களிடத்திலிருந்து எதிர்பார்ப்பதற்கும் அதிகமாக, அவர்கள் நல்லவர்களாயிருப்பார்கள். அவர்கள் நமக்கு அதிகமான உதவிகளை செய்ய முன்வருவார்கள்.

எப்பெரோன் மக்பேலா குகையை ஆபிரகாமுக்கு இலவசமாய்க் கொடுக்க முன்வந்தாலும், அதை அவர் இலவசமாய்ப் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை. எப்பெரோனின் இலவச அன்பளிப்பை ஆபிரகாம் ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறார்.

ஆபிரகாம் அத்தேசத்தாருக்கு வந்தனம் செய்கிறார். அவர் எப்பெரோனுக்கும் வந்தனம் செய்கிறார். எப்பெரோன் தனக்கு சொந்தமான மக்பேலா குகையை இலவசமாகக் கொடுக்க முன்வந்ததற்காக, ஆபிரகாம் அவனுக்கு அநேக நன்றிகளையும், வந்தனங்களையும் சொல்லுகிறார் (ஆதி 23:12).

அதன்பின்பு ஆபிரகாம் ஏத்தின் புத்திரருடைய தேசத்து ஜனங்கள் கேட்க, எப்பெரோனை நோக்கி, "கொடுக்க உமக்கு மனதானால் என் வார்த்தையைக் கேளும்; நிலத்தின் விலையைத் தருகிறேன்; என் கையில் அதை வாங்கிக்கொள்ளும்; அப்பொழுது என்னிடத்திலிருக்கிற பிரேதத்தை அவ்விடத்தில் அடக்கம்பண்ணுவேன்" (ஆதி 23:13) என்று சொல்லுகிறார்.

ஆபிரகாம் மக்பேலா குகையின் மொத்த கிரயத்தையும் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். ஆபிரகாம் ஒரு ஐசுவரியவான். அவரிடத்தில் பொன்னும் வெள்ளியும் திரளாயிருக்கிறது. எப்ரெரோன் ஆபிரகாமுக்கு மக்பேலா குகையை இலவச அன்பளிப்பாக கொடுக்க முன்வந்தாலும், அவர் எப்பெரோன் காண்பிக்கும் கரிசனையை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. ஆபிரகாமால் அந்தக் கல்லறைப்பூமிக்கு முழுக்கிரயத்தையும் செலுத்த முடியும்.

"ஆபிராம் மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளை உடைய சீமானாயிருந்தான்" (ஆதி 13:2).

ஆபிரகாமைப்போலவே, நம்முடைய உற்றார் உறவினரோடும், அயலகத்தாரோடும் நாம் மிகுந்த கண்ணியத்தோடு நடந்துகொள்ளவேண்டும். நாம் கண்ணியமாக நடந்தால்தான், அவர்களுக்கு நம்மீது மதிப்பும், மரியாதையும் ஏற்படும். விசுவாசிகளாகிய நாம் உண்மையுள்ளவர்களாயும் இருக்கவேண்டும், கண்ணியமுள்ளவர்களாயும் இருக்க வேண்டும்.

எப்பெரோன் தனக்கு சொந்தமான மக்பேலா குகைக்கு கிரயத்தை நிர்ணயம்பண்ணுகிறான். ஆனாலும் அதன் முழுக்கிரயத்தையும் ஆபிரகாம் தனக்கு கொடுக்கவேண்டுமென்று, எப்பெரோன் அவரைக் கட்டாயம்பண்ணவில்லை.

எப்பெரோன் ஆபிரகாமுக்குப் பிரதியுத்தரமாக, "என் ஆண்டவனே, நான் சொல்லுகிறதைக்கேளும்; அந்த நிலம் நானூறு சேக்கல் நிறை வெள்ளி பெறும்; எனக்கும் உமக்கும் அது எவ்வளவு காரியம்; நீர் உம்மிடத்திலிருக்கிற பிரேதத்தை அடக்கம்பண்ணும்" (ஆதி 23:14,15) என்று சொல்லுகிறான்.

மக்பேலா குகையின் கிரயம் நானூறு சேக்கல் நிறை வெள்ளி. ஆபிரகாம் இந்த முழுக்கிரயத்தையும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. எப்பெரோன் ஆபிரகாமை நோக்கி, "எனக்கும் உமக்கும் அது எவ்வளவு காரியம்" என்று சொல்லுகிறான். இந்த வாக்கியத்திற்கு, "உம்மால் கொடுக்க முடிந்ததை கொடுக்கலாம்" என்பது பொருளாகும்.

எப்பெரோனுக்கு நானூறு சேக்கல் நிறை வெள்ளியைவிட, ஆபிரகாமின் அன்பும் ஆதரவும் உயர்வானதாய்த் தெரிகிறது. நாம் மற்றவர்களிடமிருந்து அதிகமாகப் பணம் பெறவேண்டும் என்று ஆசைப்பட்டால், நாம் அவர்கள்மீது வைத்திருக்கிற அன்பு குறைந்துபோகும். பணஆசை அதிகரிக்கும்போது, மனுஷர் மத்தியிலே அன்பு குறைந்துபோகிறது. நாம் அதிகமாக பேரம் பேச ஆரம்பிக்கும்போது, நாம் அன்புக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்துவிடுகிறோம்.

விசுவாசிகளாகிய நாம், ஒரு பொருளை வாங்கும்போது, அதற்கு நியமிக்கப்பட்டிருக்கிற நியாயமான கிரயத்தை செலுத்துவதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும். அதை இலவசமாகப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக, நாம் ஏமாற்று வார்த்தைகளையும், வஞ்சிக்கிற வார்த்தைகளையும் பேசக்கூடாது.

ஆபிரகாம் எப்பெரோனுக்கு மக்பேலா குகையின் முழுக்கிரயத்தையும் கொடுக்க ஆயத்தமாயிருந்தபோது, "எனக்கும் உமக்கும் அது எவ்வளவு காரியம்" என்று எப்பெரோன் சொன்னதுபோல, நாமும் நம்முடைய சிநேகிதரோடு ஒரு பொருளுக்கு விலை பேசும்போது, "எனக்கும் என் சிநேகிதருக்கும் அது எவ்வளவு காரியம்" என்று சொல்ல முன்வரவேண்டும். சிநேகமும் அன்புமே பிரதானம்.

மக்பேலா குகை
ஆதி 23:16-20

ஆதி 23:16. அப்பொழுது ஆபிரகாம் எப்பெரோனின் சொல்லைக்கேட்டு, ஏத்தின் புத்திரருக்கு முன்பாக எப்பெரோன் சொன்னபடியே, வர்த்தகரிடத்தில் செல்லும்படியான நானூறு சேக்கல் நிறை வெள்ளியை அவனுக்கு நிறுத்துக் கொடுத்தான்.

ஆதி 23:17. இந்தப்பிரகாரம் மம்ரேக்கு எதிரே மக்பேலாவிலுள்ள எப்பெரோனுடைய நிலமாகிய அந்தப் பூமியும், அதிலுள்ள குகையும், நிலத்தின் எல்லையெங்கும் சூழ்ந்திருக்கிற மரங்கள் அடங்கலும்,

ஆதி 23:18. அவனுடைய ஊர்வாசலுக்குள் பிரவேசிக்கும் ஏத்தின் புத்திரர் எல்லாரும் அறிய ஆபிரகாமுக்குச் சொந்தமாக உறுதிப்படுத்தப்பட்டது.

ஆதி 23:19. அதற்குப்பின் ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளைக் கானான் தேசத்தில் எப்பெரோன் ஊர் பூமியான மம்ரேக்கு எதிரே இருக்கிற மக்பேலா என்னும் நிலத்தின் குகையிலே அடக்கம் பண்ணினான்.

ஆதி 23:20. இப்படி ஏத்தின் புத்திரர் கையில் கொள்ளப்பட்ட அந்த நிலமும், அதிலுள்ள குகையும், ஆபிரகாமுக்குச் சொந்த கல்லறைப் பூமியாக உறுதிப்படுத்தப்பட்டது.

ஆபிரகாம் எப்பெரோனிடத்திலிருந்து கல்லறைப்பூமியை கிரயத்திற்கு வாங்குகிறார். ஆபிரகாம் அதற்குரிய முழுக்கிரயத்தையும் செலுத்துகிறார்.

ஆபிரகாம் எப்பெரோனின் சொல்லைக்கேட்டு, ஏத்தின் புத்திரருக்கு முன்பாக எப்பெரோன் சொன்னபடியே, வர்த்தகரிடத்தில் செல்லும்படியான நானூறு சேக்கல் நிறை வெள்ளியை அவனுக்கு நிறுத்துக் கொடுக்கிறார் (ஆதி 23:16).

ஆபிரகாம் ஏத்தின் புத்திரரோடே கல்லறைப்பூமியைப் பற்றி பேசுகிறபோது, எப்பெரோன் ஏத்தின் புத்திரர் நடுவிலே உட்கார்ந்திருக்கிறான். ஆபிரகாமும் எப்பெரோனின் தேசத்து ஜனங்கள் எல்லோரும் கேட்க பேசுகிறார்.

இந்த பிரகாரம் மம்ரேக்கு எதிரே மக்பேலாவிலுள்ள எப்பெரோனுடைய நிலமாகிய அந்தப் பூமியும், அதிலுள்ள குகையும், நிலத்தின் எல்லையெங்கும் சூழ்ந்திருக்கிற மரங்கள் அடங்கலும், அவனுடைய ஊர்வாசலுக்குள் பிரவேசிக்கும் ஏத்தின் புத்திரர் எல்லாரும் அறிய ஆபிரகாமுக்குச் சொந்தமாக உறுதிப்படுத்தப்படுகிறது (ஆதி 23:17,18).

ஆபிரகாம் கானான் தேசத்தில் முதன் முதலாக வாங்கின ஸ்தலம், ஒரு கல்லறைப்பூமியாகும். கல்லறைப்பூமியிலே யாரும் குடியிருக்கப்போவதில்லை. இந்தப் பூமியை விட்டு வெளியேறிப்போவதற்காக, கல்லறைப்பூமியிலே புதைக்கப்படுகிறார்கள்.

நாம் இந்தப் பூமியில் பிரவேசிக்கும்போது, இந்தப் பூமியிலிருந்து வெளியேறிப்போகும் சம்பவத்தை தியானித்துப் பார்க்கவேண்டும். நாம் எப்போது பிறக்கிறோமோ, அப்போதே நம்முடைய மரணம் ஆரம்பமாகிறது.

கர்த்தர் ஆபிரகாமுக்கும், அவருடைய சந்ததிக்கும் கானான் தேசம் முழுவதையும் சுதந்தர தேசமாக வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் ஆபிரகாமுக்கு மக்பேலா குகை என்னும் கல்லறைப்பூமி மாத்திரமே சொந்த பூமியாக உறுதிபண்ணப்படுகிறது.

ஆபிரகாம் இந்தப் பூமியை நோக்கிப் பார்க்காமல், இந்தப் பூமியைவிட மேலான பரமதேசத்தை நோக்கிப் பார்க்கிறார். அவர் இந்தப் பூமியிலிருக்கும் காலம் வரையிலும், எங்கே வாசம்பண்ணினாலும், அங்கே அவர் கர்த்தருக்குள் திருப்தியாயிருக்கிறார். அவர் பூமியில் வாசம்பண்ணும் நாளிலேயே, தன்னை அடக்கம்பண்ணுவதற்கு, ஒரு கல்லறைப்பூமியை ஆயத்தம்பண்ணுகிறார்.

ஆபிரகாம் மக்பேலா குகையை சொந்தமாக வாங்கின பின்பு, தன் மனைவியாகிய சாராளைக் கானான் தேசத்தில் எப்பெரோன் ஊர் பூமியான மம்ரேக்கு எதிரே இருக்கிற மக்பேலா என்னும் நிலத்தின் குகையிலே அடக்கம் பண்ணுகிறார்.

இப்படி ஏத்தின் புத்திரர் கையில் கொள்ளப்பட்ட அந்த நிலமும், அதிலுள்ள குகையும், ஆபிரகாமுக்குச் சொந்த கல்லறைப் பூமியாக உறுதிப்படுத்தப்படுகிறது (ஆதி 23:19,20).

24 அதிகாரம்

திருமண வைபவங்களும், அடக்க ஆராதனைகளும் குடும்பங்களில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும். இதற்கு முந்தின அதிகாரத்தில், ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளின் சரீரத்தை அடக்கம்பண்ணின சம்பவம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்திலோ ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்குக்கு திருமணம் செய்து வைக்கும் சம்பவம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆபிரகாமின் குடும்பத்தில் நடைபெறுகிற ஒவ்வொரு சம்பவமும், பரிசுத்த வேதாகமத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உலகப்பிரகாரமான தேசங்களின் சரித்திரங்கள் சரியாக எழுதப்படாவிட்டாலும், இஸ்ரவேலுடைய முற்பிதாக்களின் சரித்திரம் மிகவும் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது.

ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்குக்கு திருமணம் செய்து வைப்பதில் மிகவும் கவனமாயிருக்கிறார் (ஆதி 24:1-9). ஈசாக்குக்கு பெண் பார்க்க, ஆபிரகாம் தன்னுடைய வேலைக்காரனை, தன்னுடைய சொந்த ஜனங்கள் வசிக்கும் தேசத்திற்கு அனுப்புகிறார் (ஆதி 24:10-14).

கர்த்தருடைய கிருபையினாலும், தெய்வீக வழிநடத்துதலினாலும், ஆபிரகாமின் வேலைக்காரன் ரெபெக்காளை சந்திக்கிறான். ரெபெக்காளின் குடும்பத்தாரும், ஈசாக்கின் குடும்பத்தாரும் ஏற்கெனவே இரத்த சம்பந்தமுள்ள உறவினர்களாயிருக்கிறார்கள் (ஆதி 24:15-28).

ஆபிரகாமின் வேலைக்காரன், ரெபெக்காளின் குடும்பத்தாரோடு, ஈசாக்கின் திருமண வைபவம் சம்பந்தமாக பேசுகிறான் (ஆதி 24:29-49). அவர்களுக்குள்ளே திருமண பேச்சு வார்த்தையில் உடன்படிக்கை ஏற்படுகிறது (ஆதி 24:50-60).

ஈசாக்கும் ரெபெக்காளும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்கிறார்கள். அவர்கள் இருவருக்கும் திருமணம் நடைபெறுகிறது (ஆதி 24:61-67).

ஈசாக்குக்கு பெண் பார்க்கிறார்கள்
ஆதி 24:1-9

ஆதி 24:1. ஆபிரகாம் வயதுசென்று முதிர்ந்தவனானான். கர்த்தர் ஆபிரகாமைச் சகல காரியங்களிலும் ஆசீர்வதித்து வந்தார்.

ஆதி 24:2. அப்பொழுது ஆபிரகாம் தன் வீட்டிலுள்ளவர்களில் வயதில் மூத்தவனும், தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் அதிகாரியுமாகிய தன் ஊழியக்காரனை நோக்கி:

ஆதி 24:3. நான் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்கொள்ளாமல்;

ஆதி 24:4. நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்துக்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண்கொள்வேன் என்று, வானத்துக்குத் தேவனும் பூமிக்குத் தேவனுமாகிய கர்த்தர்பேரில் எனக்கு ஆணையிட்டுக்கொடுக்கும்படிக்கு, நீ உன் கையை என் தொடையின்கீழ் வை என்றான்.

ஆதி 24:5. அதற்கு அந்த ஊழியக்காரன்: அவ்விடத்துப் பெண் என் பின்னே இந்தத் தேசத்துக்கு வர மனதில்லாதிருந்தால், நீர் விட்டுவந்த தேசத்திற்குத்தானே உம்முடைய குமாரனை மறுபடியும் அழைத்துப்போகவேண்டுமோ என்று கேட்டான்.

ஆதி 24:6. அதற்கு ஆபிரகாம்: நீ என் குமாரனை மறுபடியும் அங்கே அழைத்துக்கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

ஆதி 24:7. என்னை தன் தகப்பனுடைய வீட்டிலும் என் இனத்தார் இக்கிற தேசத்திலுமிருந்து அழைத்துவந்தவரும், உன் சந்ததிக்கு இந்த தேசத்தைத் தருவேன் என்று எனக்குச் சொல்லி ஆணையிட்டவருமான வானத்துக்குத் தேவனாகிய கர்த்தர், நீ அங்கேயிருந்து என் குமாரனுக்கு ஒரு பெண்ணைக் கொண்டுவரும்படிக்கு, தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார்.

ஆதி 24:8. பெண் உன் பின்னே வர மனதில்லாதிருந்தாளேயாகில், அப்பொழுது நீ இந்த என் ஆணைக்கு நீங்கலாயிருப்பாய்; அங்கேமாத்திரம் என் குமாரனை மறுபடியும் அழைத்துக்கொண்டு போக வேண்டாம் என்றான்.

ஆதி 24:9. அப்பொழுது அந்த ஊழியக்காரன் தன் கையை தன் எஜமானாகிய ஆபிரகாமுடைய தொடையின்கீழ் வைத்து, இந்தக் காரியத்தைக்குறித்து அவனுக்கு ஆணையிட்டுக்கொடுத்தான்.

ஆபிரகாம் வயதுசென்று முதிர்ந்தவராயிருக்கிறார். இப்போது ஆபிரகாமின் வயது 140 ஆகும் (ஆதி 25:20 = ஆதி 21:5). ஈசாக்கு ஆபிரகாமுடைய குமாரன். ஆபிரகாம் தன் குமாரன்மீது அன்பாயும், கரிசனையாயும் இருக்கிறார். கர்த்தர் ஆபிரகாமை சகல காரியங்களிலும் ஆசீர்வதித்திருக்கிறார். ஈசாக்குக்கு நல்ல பெண்ணை பார்த்து, திருமணம் செய்து வைக்கவேண்டும் என்னும் விருப்பம் ஆபிரகாமின் மனதில் உண்டாயிற்று.

ஆபிரகாம் ஈசாக்கின் திருமணத்தைக் குறித்து ஒரு சில காரியங்களை திட்டமிடுகிறார். அவையாவன:
1. கானானியருடைய குமாரத்திகளில் ஈசாக்குக்கு பெண்கொள்ளக்கூடாது.
2. தான் விட்டு வந்த தேசத்திற்கு ஈசாக்கு மறுபடியும் போகக்கூடாது.

ஆபிரகாமின் தேசம் மெசொபொத்தாமியாவிலிருக்கிறது. ஆபிரகாமின் சகோதரராகிய நாகாரும், அவருடைய உறவினரும் அந்த ஊரிலே வாசம்பண்ணுகிறார்கள். ஆபிரகாம் ஈசாக்குக்கு தன் தேசத்திலுள்ள, தன் இனத்தாரிடத்தில் பெண்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். கானான் தேசத்து குமாரத்திகளை, ஈசாக்குக்கு பெண்கொள்ள ஆபிரகாமுக்கு விருப்பமில்லை.

ஆபிரகாமின் பார்வையில் கானானியர் மிகப்பெரிய துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தர்மீது பக்தியில்லாதவர்களாயும், பாவிகளாயும், விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்களாயும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட கானானியரிடத்திலிருந்து, தன்னுடைய குமாரன் ஈசாக்குக்கு பெண்கொண்டால், அது ஈசாக்கின் ஆவிக்குரிய ஜீவியத்தைப் பாதிக்கும் என்று ஆபிரகாம் நினைக்கிறார்.

ஆபிரகாம் இப்போது தன் குமாரன் ஈசாக்கோடு கானான் தேசத்திலே குடியிருக்கிறார். கானான் தேசத்தார் துன்மார்க்கராயிருக்கிறார்கள் என்பதற்காக, ஈசாக்கு கானான் தேசத்தைவிட்டு, ஆபிரகாமின் இனத்தார் குடியிருக்கும் தேசத்திற்கு திரும்பிப்போய்விடக்கூடாது. தன்னுடைய இனத்தார் மத்தியில் ஈசாக்கு ஒரு பெண்ணைக்கொண்டு, அவர் அந்த தேசத்திலேயே தங்கிவிடக்கூடாது. ஈசாக்குக்கு தன்னுடைய இனத்தார் மத்தியில் பெண்கொண்டால், ஈசாக்கு அந்த தேசத்திலேயே தங்கிவிடுவாரோ என்னும் சந்தேகம் ஆபிரகாமின் மனதில் உண்டாயிற்று.

ஆபிரகாமின் வீட்டிலே ஒரு ஊழியக்காரன் இருக்கிறான். இவனுடைய பெயர் இந்த வசனப்பகுதியில் சொல்லப்படவில்லை. இவன் தமஸ்கு ஊரானாகிய எலியேசர் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இவன் ஆபிரகாமின் வீட்டிலுள்ளவர்களில் வயதில் மூத்தவன். ஆபிரகாமுக்கு உண்டான எல்லாவற்றிற்கும் எலியேசர் அதிகாரியாயிருக்கிறான். இவன் உண்மையும் உத்தமுமான ஊழியக்காரன். இவன் ஆபிரகாமின் வீட்டில் அநேக வருஷங்கள் தங்கியிருந்ததினால், ஆபிரகாமின் குடும்பத்தைப்பற்றி எலியேசருக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது.

தமஸ்கு ஊரானாகிய எலியேசர் (ஆதி 15:2). ஆபிரகாமின் வீட்டிலுள்ள வேலைக்காரர்களுக்கு மூத்தவன். வயதில் இளையவன்கூட சில சமயங்களில் அந்தஸ்தில் மூத்தவனாக அங்கிகரிக்கப்பட்டிருக்கிறான். (ஆதி 39:4,22; ஆதி 41:46).

எலியேசர் ஆபிரகாமின் நம்பிக்கைக்கு பாத்திரமானவன். அவன் ஆபிரகாமின் நன்மையை நாடுகிறவன். ஈசாக்குக்கு திருமணம் செய்து வைக்கவேண்டும் என்பது ஆபிரகாமின் விருப்பம். ஆனாலும் ஈசாக்குக்கு பெண்பார்க்க, ஆபிரகாம் ஈசாக்கை தனியாக அனுப்பவில்லை. ஆபிரகாம் தன் தேசத்திலே, தன் இனத்தாரிடத்திற்கு ஈசாக்கை அனுப்பாமல், தன் வேலைக்காரனாகிய எலியேசரை அனுப்புகிறார்.

ஆபிரகாம் தன் வேலைக்காரன் எலியேசரை தன் இனத்தாரிடத்திற்கு அனுப்புவதற்கு முன்பாக, தன்னுடைய மனதின் விருப்பங்களை அவனிடத்தில் சொல்லுகிறார். தன்னுடைய மனதின் விருப்பத்தின் பிரகாரம் ஈசாக்குக்கு பெண்கொள்ளவேண்டும் என்று, ஆபிரகாம் தன் வேலைக்காரனிடத்தில் ஆணையிட்டுக்கொள்கிறார்.

ஆபிரகாம் தன் ஊழியக்காரனை நோக்கி, "நான் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்கொள்ளாமல்; நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்துக்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண்கொள்வேன் என்று, வானத்துக்குத் தேவனும் பூமிக்குத் தேவனுமாகிய கர்த்தர்பேரில் எனக்கு ஆணையிட்டுக்கொடுக்கும்படிக்கு, நீ உன் கையை என் தொடையின்கீழ் வை" (ஆதி 24:3,4) என்று சொல்லுகிறார்.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர் கானானியரோடு பெண்கொள்வதைத் தவிர்த்திருக்கிறார்கள். (ஆதி 24:3; ஆதி 27:46; ஆதி 28:1-9; ஆதி 34:1-31). கானானியர் இராட்சத சந்ததியார். ஆதாமின் சுத்தமான சந்ததி வருவதைத் தடைபண்ணுவதற்கு பிசாசு இவர்களைப் பயன்படுத்துகிறான். ஸ்திரீயின் வித்து இந்த உலகத்தில் வரக்கூடாது என்பது சாத்தானுடைய நோக்கம். ஆபிரகாமும், ஈசாக்கும், யாக்கோபும் சாத்தானுடைய திட்டமறிந்து அதில் பங்குபெறுவதைத் தவிர்க்கிறார்கள்.

ரெபெக்காள் கிறிஸ்துவிற்கோ அல்லது சபைக்கோ அடையாளமல்ல. ஏனெனில் ரெபெக்காள் ஒரே சந்ததியிலிருந்து வந்திருக்கிறவள். சபையில் எல்லா இனத்தாரும் இருப்பார்கள் (ஆதி 24:3,4,7,37,38; ஆதி 26:35; ஆதி 27:46; ஆதி 28:1-8). கிறிஸ்து தமது சபையைத் தம்முடைய ஜனத்தாலும், புறஜாதி ஜனத்தாலும் கட்டி எழுப்புகிறார். (அப் 15:13-18; 1கொரி 12:13; கலா 3:26-29; எபே 2:14-20; கொலோ 3:11). புதிய ஏற்பாட்டுச் சபையில் பிரதானமாக புறஜாதியாரே இருக்கிறார்கள் (அப் 15:13-18).

ஆபிரகாம் எலியேசரிடம் "நீ உன் கையை என் தொடையின்கீழ் வை" என்று சொல்லுகிறார். யூதருடைய பாரம்பரிய பழக்கத்தின் பிரகாரம், தொடையின்கீழ் கைவைப்பது ஒரு புனிதமான நிகழ்ச்சி. (ஆதி 47:29-31). யாக்கோபின் பெயரை தேவன் ஆசீர்வாதத்தின் அடையாளமாக மாற்றியபோது, அவனுடைய தொடைச் சந்தைத் தொட்டார் (ஆதி 32:24-32; ஆதி 14:22; ஆதி 47:29-31).

ஆபிரகாமின் ஊழியக்காரன், அவருடைய தேசத்திற்கும், அவருடைய இனத்தாரிடத்திற்கும்போய், பெண்ணைப் பார்த்த பின்பு, அந்தப்பெண் அந்த ஊழியக்காரனின் பின்னே கானான் தேசத்திற்கு வர மனதில்லாமலிருந்தால், அந்த ஊழியக்காரன் ஆணைக்கு நீங்கலாகயிருப்பான்.

ஆபிரகாம் தன்னுடைய மகன் ஈசாக்கின் திருமண விஷயத்தில் கர்த்தரை நம்புகிறார். ஆபிரகாம் தன் ஊழியக்காரனிடம், "கர்த்தர் ஒரு தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார்" என்று சொல்லுகிறார்.

ஆபிரகாமுடைய ஊழியக்காரன் தன் எஜமானுடைய வார்த்தையை கவனமாய்க் கேட்கிறான். ஊழியக்காரனின் மனதில் ஒரு சில சந்தேகங்கள் உண்டாயிற்று. அவன் ஈசாக்குக்கு பெண் பார்க்க போவதற்கு முன்பாகவே தன்னுடைய சந்தேகங்களை ஆபிரகாமிடத்தில் சொல்லுகிறான். அவன் ஆபிரகாமிடத்தில் ஆணையிட்டுக் கொடுத்ததினால், அவனுடைய மனதில் பயமும், சந்தேகமும் உண்டாயிற்று.

ஆபிரகாமின் ஊழியக்காரன் ஆபிரகாமை நோக்கி, "அவ்விடத்துப் பெண் என் பின்னே இந்தத் தேசத்துக்கு வர மனதில்லாதிருந்தால், நீர் விட்டுவந்த தேசத்திற்குத்தானே உம்முடைய குமாரனை மறுபடியும் அழைத்துப்போகவேண்டுமோ" (ஆதி 24:5) என்று கேட்கிறான்.

ஆபிரகாம் ஏற்கெனவே தன் சொந்த தேசத்திலிருந்து, தன் இனத்தார் மத்தியிலிருந்து கானான் தேசத்திற்கு வந்திருக்கிறார். ஈசாக்கு மறுபடியும் அங்கே போவதில் ஆபிரகாமுக்கு இஷ்டமில்லை. ஆபிரகாம் தன் ஊழியக்காரனை நோக்கி, "நீ என் குமாரனை மறுபடியும் அங்கே அழைத்துக்கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" (ஆதி 24:6) என்று சொல்லுகிறார்.

தன்னுடைய மனதின் விருப்பத்தை கர்த்தர் நிறைவேற்றி தருவார் என்னும் நம்பிக்கை ஆபிரகாமின் மனதில் உறுதியாயிருக்கிறது. கர்த்தரே தன்னுடைய மனதில் இந்த விருப்பத்தைக் கொடுத்திருக்கிறார் என்றும், அவர் இதை நிறைவேற்றித் தருவார் என்றும் ஆபிரகாம் நம்புகிறார்.

ஆபிரகாம் தன் ஊழியக்காரனை நோக்கி, "என்னை தன் தகப்பனுடைய வீட்டிலும் என் இனத்தார் இருக்கிற தேசத்திலுமிருந்து அழைத்துவந்தவரும், உன் சந்ததிக்கு இந்த தேசத்தைத் தருவேன் என்று எனக்குச் சொல் ஆணையிட்டவருமான வானத்துக்குத் தேவனாகிய கர்த்தர், நீ அங்கேயிருந்து என் குமாரனுக்கு ஒரு பெண்ணைக் கொண்டுவரும்படிக்கு, தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார்" (ஆதி 24:7) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஈசாக்கின் சந்ததிக்கு கானான் தேசத்தை சுதந்தர தேசமாக கொடுக்கப்போவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். கானான் தேசத்தை சுதந்தரித்துக்கொள்ள வேண்டுமென்றால், ஈசாக்கின் சந்ததியார் கானான் தேசத்திலேயே தங்கியிருக்க வேண்டும். அவர்கள் கானான் தேசத்தைவிட்டு ஆபிரகாமின் சொந்த தேசத்திற்கு திரும்பிப்போய்விடக்கூடாது.

கர்த்தர் ஈசாக்கின் வித்தைக் குறித்து வாக்குத்தத்தம் பண்ணியிருப்பதினால், அந்த வித்திற்கு தாயாராக இருக்கப்போகிற ஈசாக்கின் மனைவி, கானான் தேசத்து ஸ்திரீகளைப்போல விக்கிரகாராதனைக்காரியாக இருக்கக் கூடாது. அவள் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவளாயிருக்கவேண்டும். ஆகையினால்தான் ஆபிரகாம், தன் குமாரன் ஈசாக்குக்கு, தன்னுடைய தேசத்திலே, தன் இனத்தார் மத்தியிலே பெண்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்.

நம்முடைய ஜீவியத்தின் எல்லா சூழ்நிலைகளிலும் நாம் கர்த்தரையே நம்பவேண்டும். நம்முடைய ஜீவியத்தில் நாம் பல அனுபவங்களைக் கடந்து வந்திருப்போம். கர்த்தருடைய வாக்குத்தத்தங்களும், நம்முடைய சொந்த அனுபவங்களும், கர்த்தரை இன்னும் தொடர்ந்து நம்பவேண்டும் என்று நம்மை உற்சாகப்படுத்தவேண்டும். கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று நாம் கர்த்தரை நம்பவேண்டும். நம்முடைய உதவிகளுக்காகவும், ஒத்தாசைகளுக்காகவும் நாம் கர்த்தரையே நோக்கிப் பார்க்கவேண்டும். கர்த்தருக்கு சித்தமான காரியம் நம்முடைய ஜீவியத்தில் நிறைவேறும்.

ஈசாக்கு கானான் தேசத்திலேயே குடியிருக்கவேண்டும் என்பதில் ஆபிரகாம் உறுதியாயிருக்கிறார். ஆபிரகாமின் சொந்த தேசத்தில், சொந்த இனத்திலுள்ள பெண், ஈசாக்கோடு குடியிருக்க கானான் தேசத்திற்கு வர மறுத்துவிட்டால், ஆபிரகாமின் ஊழியக்காரன் நூதனமாக யோசனைபண்ணி, ஈசாக்கை கானான் தேசத்தைவிட்டு அழைத்துக்கொண்டுபோய், ஆபிரகாமின் சொந்த தேசத்திற்கு, அவருடைய இனத்தார் மத்தியிலே கொண்டுபோய் விட்டுவிடக்கூடாது.

ஆபிரகாம் தன் ஊழியக்காரனை நோக்கி, "பெண் உன் பின்னே வர மனதில்லாதிருந்தாளேயாகில், அப்பொழுது நீ இந்த என் ஆணைக்கு நீங்கலாயிருப்பாய்; அங்கேமாத்திரம் என் குமாரனை மறுபடியும் அழைத்துக்கொண்டு போக வேண்டாம்" (ஆதி 24:8) என்று சொல்லுகிறார்.

அப்பொழுது அந்த ஊழியக்காரன் தன் கையை தன் எஜமானாகிய ஆபிரகாமுடைய தொடையின்கீழ் வைத்து, இந்தக் காரியத்தைக்குறித்து அவனுக்கு ஆணையிட்டுக்கொடுக்கிறான் (ஆதி 24:9).

ரெபெக்காள்
ஆதி 24:10-28

ஆதி 24:10. பின்பு அந்த ஊழியக்காரன் தன் எஜமானுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்களைத் தன்னுடனே கொண்டுபோனான்; தன் எஜமானுடைய சகலவித உச்சிதமான பொருள்களும் அவன் கையில் இருந்தன; அவன் எழுந்து புறப்பட்டுப் போய், மெசொப்பொத்தாமியாவிலே நாகோருடைய ஊரில் சேர்ந்து,

ஆதி 24:11. ஊருக்குப் புறம்பே ஒரு தண்ணீர்த் துரவண்டையிலே, தண்ணீர் மொள்ள ஸ்திரீகள் புறப்படுகிற சாயங்கால வேளையிலே, ஒட்டகங்களை மடக்கி, தனக்குள்ளே சொல்லிக்கொண்டது என்னவென்றால்:

ஆதி 24:12. என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்குக் காரியம் சித்திக்கப்பண்ணி, என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தயவு செய்தருளும்.

ஆதி 24:13. இதோ, நான் இந்தத் தண்ணீர்த் துரவண்டையிலே நிற்கிறேன், இந்த ஊராருடைய பெண்கள் தண்ணீர் மொள்ளப் புறப்பட்டு வருவார்களே.

ஆதி 24:14. நான் குடிக்க உன் குடத்தைச் சாய்க்கவேண்டும் என்று நான் சொல்லும்போது: குடி என்றும், உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண் எவளோ, அவளே நீர் உம்முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்குக்கு நியமித்தவளாயிருக்கவும், என் எஜமானுக்கு அநுக்கிரகம் செய்தீர் என்று நான் அதினாலே அறியவும் செய்தருளும் என்றான்.

ஆதி 24:15. அவன் இப்படிச் சொல்லி முடிக்கும் முன்னே, இதோ, ஆபிரகாமுடைய சகோதரனாகிய நாகோரின் மனைவி மில்க்காளுடைய குமாரனாயிருக்கிற பெத்துவேலுக்குப் பிறந்த ரெபெக்காள் குடத்தைத் தோள்மேல் வைத்துக்கொண்டு புறப்பட்டு வந்தாள்.

ஆதி 24:16. அந்தப் பெண் மகா ரூபவதியும், புருஷனை அறியாத கன்னிகையுமாய் இருந்தாள்; அவள் துரவில் இறங்கி, தன் குடத்தை நிரப்பிக்கொண்டு ஏறிவந்தாள்.

ஆதி 24:17. அப்பொழுது அந்த ஊழியக்காரன், அவளுக்கு எதிர்கொண்டோடி: உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத் தரவேண்டும் என்றான்.

ஆதி 24:18. அதற்கு அவள்: குடியும் என் ஆண்டவனே என்று சீக்கிரமாய்க் குடத்தைத் தன் கையில் இறக்கிக்கொண்டு, அவனுக்குக் குடிக்கக் கொடுத்தாள்.

ஆதி 24:19. கொடுத்தபின், உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்ப்பேன் என்று சொல்லி;

ஆதி 24:20. சீக்கிரமாய்த் தன் குடத்துத் தண்ணீரைத் தொட்டியிலே ஊற்றிவிட்டு, இன்னும் மொண்டுவரத் துரவண்டையில் ஓடி, அவனுடைய ஒட்டகங்களுக்கெல்லாம் மொண்டு வார்த்தாள்.

ஆதி 24:21. அந்த மனிதன் அவளைக்குறித்து ஆச்சரியப்பட்டு, கர்த்தர் தன் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணினாரோ இல்லையோ என்று அறியும்பொருட்டு மவுனமாயிருந்தான்.

ஆதி 24:22. ஒட்டகங்கள் குடித்துத் தீர்ந்தபின், அந்த மனிதன் அரைச்சேக்கல் எடையுள்ள பொற்காதணியையும், அவள் கைகளுக்குப் பத்துச் சேக்கல் எடைப் பொன்னுள்ள இரண்டு கடகங்களையும் எடுத்துக்கொடுத்து,

ஆதி 24:23. நீ யாருடைய மகள், எனக்குச் சொல்லவேண்டும்; நாங்கள் உன் தகப்பன் வீட்டில் இராத்தங்க இடம் உண்டா என்றான்.

ஆதி 24:24. அதற்கு அவள்: நான் நாகோருக்கு மில்க்காள் பெற்ற குமாரனாகிய பெத்துவேலின் மகள் என்று சொன்னதுமன்றி,

ஆதி 24:25. எங்களிடத்தில் வைக்கோலும் தீவனமும் வேண்டியமட்டும் இருக்கிறது; இராத்தங்க இடமும்உண்டு என்றாள்.

ஆதி 24:26. அப்பொழுது அந்த மனிதன் தலைகுனிந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டு,

ஆதி 24:27. என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவர் தம்முடைய கிருபையையும், தம்முடைய உண்மையையும், என் எஜமானை விட்டு நீக்கவில்லை; நான் பிரயாணம் பண்ணிவருகையில், கர்த்தர் என் எஜமானுடைய சகோதரர் வீட்டுக்கு என்னைஅழைத்துக்கொண்டு வந்தார் என்றான்.

ஆதி 24:28. அந்தப் பெண் ஓடி, இந்தக் காரியங்களைத் தன் தாயின் வீட்டிலுள்ளவர்களுக்கு அறிவித்தாள்.

இந்த அதிகாரத்தில் ஆபிரகாமுடைய ஊழியக்காரரின் பெயர் சொல்லப்படாவிட்டாலும், அவனுடைய குணாதிசயங்களைப்பற்றி மிகவும் சிறப்பாக சொல்லப்பட்டிருக்கிறது அவன் ஆபிரகாமுக்கு உண்மையுள்ள ஊழியக்காரன். அவன் ஆபிரகாமால் அங்கீகரிக்கப்பட்டவன். ஆபிரகாமின் கட்டளையைப் பெற்றுக்கொண்ட உடனே, அவருடைய ஊழியக்காரன் உடனே பிரயாணம் பண்ண ஆயத்தமாகிறான்.

அந்த ஊழியக்காரன் தன் எஜமானுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்களைத் தன்னுடனே கொண்டு போகிறான்; தன் எஜமானுடைய சகலவித உச்சிதமான பொருள்களும் அவன் கையில் இருக்கிறது; அவன் எழுந்து புறப்பட்டுப்போய், மெசொப்பொத்தாமியாவிலே நாகோருடைய ஊரில் சேருகிறான் (ஆதி 24:10).

"மெசொப்பொத்தாமியா" என்பதன் எபிரெய பெயர் "ஆராம்நகராயீம்" என்பதாகும். ஐபிராத்து, டைகிரீஸ் ஆகிய இரண்டு நதிகள் இங்கு பாய்கின்றன. இதை மனுஷ இனத்து நாகரிகத்தின் தொட்டில் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இந்தப் பகுதியில் பழங்கால பெருநகரங்கள் ஏராளமாய் உள்ளன.

"நாகோருடைய ஊர்" என்பது ஆரானைக் குறிக்கும். நாகோர் இங்கு குடியேறியதினால் இதற்கு நாகோருடைய ஊர் என்று பெயர். (ஆதி 11:31-32; ஆதி 12:4).

ஆபிரகாமின் ஊழியக்காரன், தன் எஜமானுக்கு உண்மையுள்ளவனாயிருப்பது மாத்திரமல்ல, அவன் தேவனாகிய கர்த்தரிடத்திலும் பக்தியுள்ளவனாயிருக்கிறான். ஆபிரகாமின் ஊழியக்காரன், நாகோருடைய ஊரில் சேர்ந்து, அந்த ஊருக்குப் புறம்பே ஒரு தண்ணீர்த் துரவண்டையிலே, தண்ணீர் மொள்ள ஸ்திரீகள் புறப்படுகிற சாயங்கால வேளையிலே, ஒட்டகங்களை மடக்குகிறான் (ஆதி 24:11).

ஆபிரகாமின் ஊழியக்காரன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறான். அவன் அங்கே கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளை செலுத்தவில்லை. தன் கைகளை உயர்த்தி ஆசாரியர்களைப்போல கர்த்தரிடத்தில் உரத்தசத்தமாக விண்ணப்பம்பண்ணவில்லை. ஆபிரகாமின் ஊழியக்காரன் தனக்குள்ளே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணும் ஜெபவார்த்தைகளை சொல்லிக்கொள்கிறான்.

ஆபிரகாமின் ஊழியக்காரன் கர்த்தரை நோக்கி, "என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் என்குக் காரியம் சித்திக்கப்பண்ணி, என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தயவு செய்தருளும்" என்றும்,

"இதோ, நான் இந்தத் தண்ணீர்த் துரவண்டையிலே நிற்கிறேன், இந்த ஊராருடைய பெண்கள் தண்ணீர் மொள்ளப் புறப்பட்டு வருவார்களே" என்றும்,

"நான் குடிக்க உன் குடத்தைச் சாய்க்கவேண்டும் என்று நான் சொல்லும்போது: குடிஎன்றும், உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண் எவளோ, அவளே நீர் உம்முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்குக்கு நியமித்தவளாயிருக்கவும், என் எஜமானுக்கு அநுக்கிரகம் செய்தீர் என்று நான் அதினாலே அறியவும் செய்தருளும்" என்றும் (ஆதி 24:12-14) ஜெபம்பண்ணுகிறான்.

எலியேசர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது "ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே" என்று சொல்லி ஜெபிக்கிறான். ஆபிரகாமின் தேவனை ஆராதிப்பதற்கு எலியேசருக்குப் பழக்கம் இருக்கிறது. ஆகையினால் தன்னுடைய எஜமானாகிய ஆபிரகாமைப் போலவே இவனும் கர்த்தரிடத்தில் நம்பிக்கையாக இருந்து ஜெபம் பண்ணுகிறான். தன்னுடைய ஜெபத்திற்கு பதில் கிடைத்ததற்கு ஓர் அடையாளத்தையும் எதிர்பார்க்கிறான் (ஆதி 24:14). அவனுடைய ஜெபத்திற்கு உடனடியாகப் பதில் கிடைக்கிறது. (ஆதி 24:15; நியா 6:36-40; சங் 145:18; தானி 9:21-23; ஏசா 65:24).

ஆபிரகாமின் ஊழியக்காரன் ஈசாக்குக்கு பெண்பார்க்க வந்திருக்கிறான். தன்னுடைய முயற்சியில் வெற்றி கிடைக்கவேண்டும் என்பதும், அதுவும் சீக்கிரத்தில் கிடைக்கவேண்டும் என்பதும் ஊழியக்காரனுடைய விண்ணப்பமாயிருக்கிறது. ஆபிரகாமுடைய ஊழியக்காரன் கர்த்தரை நோக்கி, "இன்றைக்கு நீர் எனக்கு காரியம் சித்திக்கப்பண்ணும்" என்று விண்ணப்பம்பண்ணுகிறான்.

காரியம் சீக்கிரத்தில் சித்தியாகவேண்டுமென்றால், நாம் கர்த்தரிடத்தில் அதற்காக ஜெபம்பண்ணவேண்டும். எந்தக் காரியமாகயிருந்தாலும், கர்த்தருக்கு சித்தமான வேளையில்தான் அது நிறைவேறும். ஆனாலும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, அவர் தம்முடைய கிருபையினால், காரியத்தை சீக்கிரமாய் சித்திக்கப்பண்ணுவார்.

ஆபிரகாமுடைய ஊழியக்காரன், கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் ஆபிரகாமோடு செய்துகொண்ட உடன்படிக்கையையும் நினைவுபடுத்துகிறான். "என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தயவு செய்தருளும்" என்று ஆபிரகாமுடைய ஊழியக்காரன் கர்த்தரிடத்தில் சொல்லுகிறான். கர்த்தர் தம்முடைய தயவினாலேயே, நம்முடைய விண்ணப்பங்களுக்கு பதில் கொடுக்கிறார்.

ஈசாக்கின் மனைவி மிகுந்த மனத்தாழ்மையுள்ளவளாயிருக்கவேண்டும். அவள் சோம்பேறியாயிராமல் சுறுசுறுப்பாய் வேலை செய்யவேண்டும். குடும்பத்தை சரியாக நிர்வாகம்பண்ணவேண்டும். ஒவ்வொரு வேலையையும் எப்படி செய்யவேண்டுமோ, அப்படி செய்து, அந்த வேலையை நேர்த்தியாய்ச் செய்து முடிக்கவேண்டும். ஈசாக்குக்கு மனைவியாக வரப்போகிறவள் ஏழைகளை ஆதரிக்கிறவளாகவும், அந்நியரை உபசரிக்கிறவளாகவும் இருக்கவேண்டும்.

ஈசாக்குக்கு பெண்பார்க்க ஆபிரகாமுடைய ஊழியக்காரன், நாகோருடைய ஊரிலே வந்து சேர்ந்தபோது, அவன் களியாட்டு நடைபெறுகிற இடத்திற்கோ அல்லது விளையாட்டு மைதானத்திற்கோ அல்லது ஜனங்கள் ஒரு வேலையும் செய்யாமல் சும்மா உட்கார்ந்து வீண்பேச்சு பேசிக்கொண்டிருக்கும் இடத்திற்கோ போகவில்லை. அவன் ஒரு தண்ணீர் துரவண்டையிலே வந்து நிற்கிறான். தண்ணீர் மொள்ள வருகிற ஸ்திரீகள் மாத்திரமே அங்கே வருவார்கள். அவர்கள் சோம்பேறிகளாயிராமல் கடினமாய் உழைக்கிற ஸ்திரீகளாயிருப்பார்கள்.

ஆபிரகாமுடைய ஊழியக்காரன், கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "இதோ, நான் இந்தத் தண்ணீர்த் துரவண்டையிலே நிற்கிறேன், இந்த ஊராருடைய பெண்கள் தண்ணீர் மொள்ளப் புறப்பட்டு வருவார்களே" (ஆதி 24:13) என்று சொல்லுகிறான்.

ஆபிரகாமுடைய ஊழியக்காரன் கர்த்தருடைய வழிநடத்துதலையும், உதவியையும், ஒத்தாசையையும் நாடுகிறான். துரவண்டையிலே ஏராளமான ஸ்திரீகள் வருவார்கள். அவர்களில் எந்த ஸ்திரீ ஈசாக்குக்கு நியமிக்கப்பட்ட ஸ்திரீ என்பது ஆபிரகாமுடைய ஊழியக்காரனுக்கு தெரியாது. கர்த்தர் தாமே அந்தக் குறிப்பிட்ட ஸ்திரீயை அந்த ஊழியக்காரனுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கவேண்டும்.

ஆபிரகாமுடைய ஊழியக்காரன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "நான் குடிக்க உன் குடத்தைச் சாய்க்கவேண்டும் என்று நான் சொல்லும்போது: குடிஎன்றும், உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண் எவளோ, அவளே நீர் உம்முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்குக்கு நியமித்தவளாயிருக்கவும், என் எஜமானுக்கு அநுக்கிரகம் செய்தீர் என்று நான் அதினாலே அறியவும் செய்தருளும்" (ஆதி 24:14) என்று சொல்லுகிறான்.

கர்த்தர் ஆபிரகாமுடைய ஊழியக்காரனின் ஜெபத்திற்கு செவிகொடுக்கிறார். கர்த்தருடைய கிருபை அவன்மீது தங்கியிருக்கிறது. அவன் கர்த்தரிடத்தில் இப்படி சொல்லி முடிக்கும் முன்பே (ஆதி 24:15) கர்த்தர் அவனுடைய விண்ணப்பத்திற்கு பதில் கொடுக்க ஆரம்பித்துவிடுகிறார். கர்த்தருடைய பிரதியுத்தரம் காலதாமதமில்லாமல் உடனே வருகிறது.

ஆபிரகாமுடைய ஊழியக்காரன் இப்படிச் சொல்லி முடிக்கும் முன்னே, இதோ, ஆபிரகாமுடைய சகோதரனாகிய நாகோரின் மனைவி மில்க்காளுடைய குமாரனாயிருக்கிற பெத்துவேலுக்குப் பிறந்த ரெபெக்காள் குடத்தைத் தோள்மேல் வைத்துக்கொண்டு புறப்பட்டு வருகிறாள் (ஆதி 24:15).

கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக, ரெபெக்காள் அந்தத் தண்ணீர் துரவண்டையிலே, தண்ணீர் மொள்ள முதலாவதாக வருகிறாள். அந்தப் பெண் மகா ரூபவதியும், புருஷனை அறியாத கன்னிகையுமாய் இருக்கிறாள்; அவள் துரவில் இறங்கி, தன் குடத்தை நிரப்பிக்கொண்டு ஏறிவருகிறாள் (ஆதி 24:16).

ஆபிரகாமுடைய ஊழியக்காரன் எதிர்பார்த்த பிரகாரமாக ரெபெக்காள் இருக்கிறாள். கர்த்தர் தன்னுடைய ஜெபத்திற்கு பதில் கொடுத்திருக்கிறார் என்னும் நிச்சயம் அந்த ஊழியக்காரனுடைய மனதில் உண்டாயிற்று.

அந்த ஊழியக்காரன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "நான் குடிக்க உன் குடத்தை சாய்க்கவேண்டும் என்று நான் சொல்லும்போது: குடிஎன்றும், உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண் எவளோ, அவளே ஈசாக்குக்கு நியமித்தவள்" (ஆதி 24:14) என்று ஏற்கெனவே சொல்லியிருந்தான். அதன் பிரகாரமாக அந்த ஊழியக்காரன், அவளுக்கு எதிர்கொண்டோடி: "உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத் தரவேண்டும்" (ஆதி 24:17) என்று கேட்கிறான்.

ரெபெக்காள் துரவுக்கு தண்ணீர் மொள்ள வந்தபோது, அவள் துரவில் இறங்கி தன் குடத்தை நிரப்பிக்கொண்டு, ஏறி வருகிறாள். அவள் தன் வீட்டிற்கு திரும்பிப்போக ஆயத்தமாயிருக்கிறாள். அந்தத் துரவின் அருகே ஆபிரகாமுடைய ஊழியக்காரன் தன் ஒட்டகங்களை மடக்கி கட்டி வைத்திருக்கிறான். ரெபெக்காள் அந்நியனையோ, அவனுடைய ஒட்டகங்களையோ வேடிக்கை பார்த்து கொண்டு சும்மா நிற்கவில்லை. அவனைப்பற்றி விசாரித்து அவனோடு தேவையில்லாமல் பேசிக்கொண்டிருக்கவில்லை. ரெபெக்காள் தண்ணீர் மொண்டு முடித்தவுடன், தன்னுடைய வேலையைப் பார்த்துக்கொண்டு, தன்னுடைய வீட்டிற்குப் புறப்பட்டுப்போகிறாள். அவள் தன்னுடைய வேலையில் கருத்தாயிருக்கிறாள்.

தன் வீட்டிற்கு புறப்பட்டுப்போகிற ரெபெக்காளை சந்திப்பதற்காக, ஆபிரகாமின் ஊழியக்காரன் அவளுக்கு எதிர்கொண்டு ஓடுகிறான். "உன் குடத்திலிருக்கிற தண்ணீரில், கொஞ்சம் குடிக்க தரவேண்டும்" என்று கேட்கிறான். கர்த்தருடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவும், அவருடைய வழிநடத்துதலின் பிரகாரமாகவும், அவன் எதிர்பார்த்த பிரகாரமாகவே ரெபெக்காள் பேசுகிறாள்.

ரெபெக்காள் ஆபிரகாமுடைய ஊழியக்காரனை நோக்கி, "குடியும் என் ஆண்டவனே" என்று சீக்கிரமாய்க் குடத்தைத் தன் கையில் இறக்கிக்கொண்டு, அவனுக்குக் குடிக்கக் கொடுக்கிறாள். கொடுத்தபின், "உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்ப்பேன்" என்றும் சொல்லுகிறாள்.

ரெபெக்காள் சீக்கிரமாய்த் தன் குடத்துத் தண்ணீரைத் தொட்டியிலே ஊற்றிவிட்டு, இன்னும் மொண்டுவரத் துரவண்டையில் ஓடி, அவனுடைய ஒட்டகங்களுக்கெல்லாம் மொண்டு வார்க்கிறாள் (ஆதி 24:20).

தண்ணீர் மொள்ள வருகிற ஸ்திரீ தனக்கும், தன் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்க்கவேண்டும் என்று அந்த ஊழியக்காரன் எதிர்பார்த்தான். அவளே ஈசாக்குக்கு நியமித்தவளாயிருக்கிறவள் என்று தீர்மானம்பண்ணினான். அந்த ஊழியக்காரன் எதிர்பார்த்த பிரகாரமாக, ரெபெக்காள் அவனுக்கும் அவனுடைய ஒட்டகங்களுக்கும் தண்ணீர் மொண்டு வந்து கொடுக்கிறாள். ஆபிரகாமுடைய ஊழியக்காரன் எதிர்பார்த்ததைவிட, ரெபெக்காள் அதிக நற்குணமுள்ளவளாகவும், அந்நியரை அதிகமாய் உபசரிக்கிறவளாகவும், அதிகமான தயாள குணமுள்ளவளாகவும் இருக்கிறாள்.

ரெபெக்காளை போல நாமும் மற்றவர்களுக்கு உதவி செய்ய முன்வரவேண்டும். நாம் பிறருக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்க கொடுத்தால்கூட, கர்த்தர் நமக்கு அதற்குரிய பிரதிபலனைத் தருவார்.

"சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத் 10:42).

ஆபிரகாமுடைய ஊழியக்காரனுக்கு ரெபெக்காளைக் குறித்து நினைத்துப் பார்க்கும்போது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. அந்த மனிதன் அவளைக்குறித்து ஆச்சரியப்பட்டு, கர்த்தர் தன் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணினாரோ இல்லையோ என்று அறியும்பொருட்டு மவுனமாயிருக்கிறான் (ஆதி 24:21).

கிழக்குத் தேசத்தில் காலையிலும், மாலையிலும் ஊரில் உள்ள பெண்கள் தண்ணீர் மொள்ளத் தண்ணீர் துரவண்டைக்கு வருவது வழக்கம். (ஆதி 24:15; ஆதி 29:10; யாத் 2:16; 1சாமு 9:11).

"ரெபெக்காள்" என்னும் பெயருக்கு "வயப்படுத்துகிறவள்" என்று பொருள். ஆதி 26:7-11 ஆகிய வசனங்களில் ரெபெக்காளின் சுபாவம் விளக்கப்பட்டிருக்கிறது.

"பெத்துவேல்" என்னும் பெயருக்கு "தேவனுக்காக வேறுபிரிக்கப்பட்டவன்" என்று பொருள். ஆபிரகாமின் தேவனை நாகோர் அறிந்திருக்க வேண்டும்.

பாலஸ்தீன தேசத்தில் தண்ணீர் மொண்டு வருவதற்கு இன்றும் குடங்களைப் பயன்படுத்துகிறார்கள் (யோவான் 4:28).

எலியேசர் ரெபெக்காளுக்கு எதிர்கொண்டு ஓடுகிறான். எலியேசர் விசுவாசத்தோடு கிரியை செய்ய வேண்டும். தன்னுடைய பங்கிற்கு தான் செய்ய வேண்டிய காரியங்களை எலியேசர் செய்கிறான். தன்னுடைய ஜெபத்திற்குப் பதில் கிடைத்து விட்டதா என்று காண்பதற்காக எலியேசர் அவளுக்கு எதிர்கொண்டோடுகிறான் (யாக் 2:14-26).

ரெபெக்காள் எலியேசரிடம் "குடியும் என் ஆண்டவரே" என்று சொல்லுகிறாள். எலியேசர் ஆதி 24:14 ஆவது வசனத்தில் ஜெபம் பண்ணியது போன்றே ரெபெக்காள் செயல்படுகிறாள்.

ரெபெக்காள் இன்னும் மொண்டுவரத் துரவண்டையில் ஓடுகிறாள். எலியேசர் ஓடுவதுபோல ரெபெக்காளும் ஓடுகிறாள். அவள் சுறுசுறுப்பானவள். ரெபெக்காள் செய்யும் வேலைகளை மனமகிழ்ச்சியோடு செய்யக்கூடியவள்.

கர்த்தர் தன் பிரயாணத்தை வாய்க்கப் பண்ணினாரோ இல்லையோ என்று அறியும் பொருட்டு எலியேசர் மவுனமாயிருக்கிறான். தன்னுடைய எஜமான் தன்னை என்ன காரியமாக அனுப்பினாரோ அதில் எலியேசர் மிகவும் கவனமாக இருக்கிறான். கர்த்தர் தன்னுடைய ஜெபத்திற்குப் பதில் கொடுத்து விட்டாரா என்பதை அறிந்து கொள்வதில் அவன் ஆவலோடு இருக்கிறான் (ஆதி 24:33,54,56).

அந்த ஊழியக்காரன் ரெபெக்காளுக்கு பரிசு பொருட்களைக் கொடுத்து, அவளைப்பற்றி விசாரிக்கிறான். ஒட்டகங்கள் குடித்துத் தீர்ந்தபின், அந்த மனிதன் அரைச்சேக்கல் எடையுள்ள பொற்காதணியையும், அவள் கைகளுக்குப் பத்துச் சேக்கல் எடைப் பொன்னுள்ள இரண்டு கடகங்களையும் எடுத்துக்கொடுக்கிறான்.

அதன்பின்பு அவன் ரெபெக்காளை நோக்கி, "நீ யாருடைய மகள், எனக்குச் சொல்லவேண்டும்; நாங்கள் உன் தகப்பன் வீட்டில் இராத்தங்க இடம் உண்டா" (ஆதி 24:22,23) என்று கேட்கிறான்.

ரெபெக்காள் அந்த ஊழியக்காரனை நோக்கி, "நான் நாகோருக்கு மில்க்காள் பெற்ற குமாரனாகிய பெத்துவேலின் மகள்" என்று சொல்லுகிறாள் . மேலும் அவள் அந்த மனுஷனை நோக்கி, "எங்களிடத்தில் வைக்கோலும் தீவனமும் வேண்டியமட்டும் இருக்கிறது; இராத்தங்க இடமும் உண்டு" (ஆதி 24:24,25) என்றும் சொல்லுகிறாள்.

ரெபெக்காள் சொல்லுகிற பிரதியுத்தரம் ஆபிரகாமுடைய ஊழியக்காரனுக்கு மிகுந்த ஆறுதலாகவும், மிகுந்த சந்தோஷமாகவும் இருக்கிறது. ரெபெக்காள் தன் எஜமான் ஆபிரகாமுடைய நெருங்கிய உறவிலிருக்கிறாள் என்பதை அறிந்து அந்த ஊழியக்காரன் மிகவும் சந்தோஷப்படுகிறான். ரெபெக்காளின் குடும்பத்தார் அந்நியரை உபசரிக்கிற நற்குணமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

தான் வந்த வேலை கர்த்தருடைய கிருபையினால் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது என்பதை அந்த ஊழியக்காரன் புரிந்துகொள்கிறான். அதற்காக அவன் கர்த்தரைப் பணிந்துகொள்கிறான். அந்த ஊழியக்காரன் ஏற்கெனவே ரெபெக்காளுக்கு வெகுமதிகளைக் கொடுத்தான். ரெபெக்காள் தனக்கும், தன்னுடைய ஒட்டகங்களுக்கும் தண்ணீர் மொண்டு வந்து கொடுத்ததற்காக, அவன் அவளுக்கு நன்றி சொல்லும் வண்ணமாக வெகுமதிகளைக் கொடுத்தான் (ஆதி 24:22).

இப்போதோ அந்த ஊழியக்காரன், தலைகுனிந்து கர்த்தரைப் பணிந்துகொள்கிறான். அவன் கர்த்தரை நோக்கி, "என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவர் தம்முடைய கிருபையையும், தம்முடைய உண்மையையும், என் எஜமானை விட்டு நீக்கவில்லை; நான் பிரயாணம் பண்ணிவருகையில், கர்த்தர் என் எஜமானுடைய சகோதரர் வீட்டுக்கு என்னை அழைத்துக்கொண்டு வந்தார்" (ஆதி 24:27) என்று சொல்லுகிறான்.

ஆபிரகாமுடைய ஊழியக்காரன், ஆரம்பத்திலேயே கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணினான் (ஆதி 24:12). கர்த்தர் அவனுடைய ஜெபத்திற்கு இப்போது பதில் கொடுத்திருக்கிறார். ஆகையினால் அவன் இப்போது, காலதாமதம்பண்ணாமல், கர்த்தருக்கு ஸ்தோத்திரம் பண்ணுகிறான் (ஆதி 24:26,27).

நமக்கு ஜெபத்தினால் ஜெயமுண்டாகிறது. நாம் பெற்றுக்கொண்ட ஜெயத்திற்காக கர்த்தருக்கு துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் செலுத்தி, அவருடைய கிருபையை அங்கீகரிக்கவேண்டும்.

ஆபிரகாமுடைய வேலைக்காரன் மிகவும் சந்தோஷமாயிருக்கிறான். அவன் இப்போது தன் எஜமானுடைய சகோதரனின் வீட்டிற்கே வந்திருக்கிறான். இவர்கள் எல்லோரும் கல்தேயருடைய தேசத்திலுள்ள ஊர் என்னும் நகரத்திலிருந்து வந்தவர்கள். இவர்கள் விக்கிரகாராதனைக்காரர்களல்ல. இவர்கள் கர்த்தரை ஆராதிக்கிறவர்கள். இவர்கள் எல்லோரும் ஆபிரகாமின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆபிரகாமுடைய ஊழியக்காரன் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்திக் கொண்டிருக்கும்போது ரெபெக்காள் ஓடி, இந்தக் காரியங்களை, தன் தாயின் வீட்டிலுள்ளவர்களுக்கு அறிவிக்கிறாள் (ஆதி 24:28).

ரெபெக்காளின் வீட்டார் ஆதி 24:29-53

ஆதி 24:29. ரெபெக்காளுக்கு ஒரு சகோதரன் இருந்தான்; அவனுக்கு லாபான் என்று பேர்; அந்த லாபான் வெளியே துரவண்டையில் இருந்த அந்த மனிதனிடத்துக்கு ஓடினான்.

ஆதி 24:30. அவன் தன் சகோதரி தரித்திருந்த அந்தக் காதணியையும், அவள் கைகளில் போட்டிருந்த கடகங்களையும் பார்த்து, இன்ன இன்னபடி அந்த மனிதன் என்னோடே பேசினானென்று தன் சகோதரி ரெபெக்காள் சொன்ன வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில், அந்த மனிதனிடத்தில் வந்தான்; அவன் துரவு அருகே ஒட்டகங்கள் அண்டையில் நின்றுகொண்டிருந்தான்.

ஆதி 24:31. அப்பொழுது அவன்: கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே, உள்ளே வாரும்; நீர் வெளியே நிற்பானேன்? உமக்கு வீடும், ஒட்டகங்களுக்கு இடமும் ஆயத்தம் பண்ணியிருக்கிறேன் என்றான்.

ஆதி 24:32. அப்பொழுது அந்த மனிதன் வீட்டுக்குப் போனான். லாபான் ஒட்டகங்களின் கட்டவிழ்த்து, ஒட்டகங்களுக்கு வைக்கோலும் தீவனமும் போட்டு, அவனும், அவனோடே வந்தவர்களும் தங்கள் கால்களைக் கழுவிக்கொள்ளத் தண்ணீர் கொடுத்தான்.

ஆதி 24:33. பின்பு, அவனுக்கு முன்பாக போஜனம் வைக்கப்பட்டது. அப்பொழுது அவன்: நான் வந்த காரியத்தைச் சொல்லு முன்னே புசிக்கமாட்டேன் என்றான். அதற்கு அவன், சொல்லும் என்றான்.

ஆதி 24:34. அப்பொழுது அவன்: நான் ஆபிரகாமுடைய ஊழியக்காரன்.

ஆதி 24:35. கர்த்தர் என் எஜமானை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார், அவர் சீமானாயிருக்கிறார்; கர்த்தர் அவருக்கு ஆடுமாடுகளையும், வெள்ளியையும், பொன்னையும் வேலைக் காரரையும் வேலைக்காரிகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும், கொடுத்திருக்கிறார்.

ஆதி 24:36. என் எஜமானுடைய மனைவியாகிய சாராள் முதிர்வயதானபோது, என் எஜமானுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்; அவர் தமக்கு உண்டானயாவையும் அவனுக்குக் கொடுத்திருக்கிறார்.

ஆதி 24:37. என் எஜமான் என்னை நோக்கி: நான் குடியிருக்கிற கானான் தேசத்தாருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்கொள்ளாமல்,

ஆதி 24:38. நீ என் தகப்பன் வீட்டுக்கும், என் இனத்தாரிடத்துக்கும் போய், என் குமாரனுக்குப் பெண்கொள்ளவேண்டும் என்று ஆணையிட்டுக் கொடுக்கும்படி சொன்னார்.

ஆதி 24:39. அப்பொழுது நான் என் எஜமானை நோக்கி: ஒருவேளை அந்தப் பெண் என் பின்னே வராதேபோனாலோ என்று கேட்டதற்கு,

ஆதி 24:40. அவர்: நான் வழிபடும் கர்த்தர் உன்னோடே தம்முடைய தூதனை அனுப்பி, உன் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணுவார்; என் இனத்தாரிடத்திலும், என் தகப்பன் வீட்டிலும் நீ என் குமாரனுக்குப் பெண்கொள்வாய்.

ஆதி 24:41. நீ என் இனத்தாரிடத்துக்குப் போனால்,என் ஆணைக்கு நீங்கலாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பெண்கொடாமற்போனாலும், நீ என் ஆணைக்கு நீங்கலாயிருப்பாய் என்றார்.

ஆதி 24:42. அப்படியே நான் இன்று துரவண்டையிலே வந்து: என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாகிய கர்த்தரே, என் பிரயாணத்தை நீர் இப்பொழுது வாய்க்கப்பண்ணுவீரானால்,

ஆதி 24:43. இதோ, நான் தண்ணீர்த் துரவண்டையிலேநிற்கிறேன், தண்ணீர் மொள்ள வரப்போகிற கன்னிகையை நான் நோக்கி: உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் எனக்குக் குடிக்கத் தரவேண்டும் என்று கேட்கும்போது:

ஆதி 24:44. நீ குடி என்றும், உன் ஒட்டகங்களுக்கும் மொண்டு வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண்ணே கர்த்தர் என் எஜமானுடைய குமாரனுக்கு நியமித்த ஸ்திரீயாகவேண்டும் என்றேன்.

ஆதி 24:45. நான் இதை என் இருதயத்தில் சொல்லி முடிக்குமுன்னே, இதோ, ரெபெக்காள் தன் குடத்தைத் தோள்மேல் வைத்துக்கொண்டு புறப்பட்டுவந்து, துரவில் இறங்கிப்போய்த் தண்ணீர் மொண்டாள். அப்பொழுது நான்: எனக்குக் குடிக்கத்தரவேண்டும் என்றேன்.

ஆதி 24:46. அவள் சீக்கிரமாய்த் தன் தோள்மேலிருந்த குடத்தை இறக்கி, குடியும், உம்முடைய ஒட்டகங்களுக்கும் வார்ப்பேன் என்றாள். நான் குடித்தேன்; ஒட்டகங்களுக்கும் வார்த்தாள்.

ஆதி 24:47. அப்பொழுது: நீ யாருடைய மகள் என்றுஅவளைக் கேட்டேன்; அதற்கு அவள்: நான் மில்க்காள் நாகோருக்குப் பெற்ற குமாரனாகிய பெத்துவேலின் மகள் என்றாள்; அப்பொழுது அவளுக்குக் காதணியையும், அவள் கைகளிலே கடகங்களையும் போட்டு;

ஆதி 24:48. தலைகுனிந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டு, நான் என் எஜமானுடைய சகோதரன் குமாரத்தியை அவர் குமாரனுக்குக் கொள்ள என்னை நேர்வழியாய் நடத்திவந்த என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தரை ஸ்தோத்திரித்தேன்.

ஆதி 24:49. இப்பொழுதும் நீங்களும் என் எஜமானுக்குக் தயையும் உண்மையும் உடையவர்களாய் நடக்க மனதுள்ளவர்களானால், எனக்குச் சொல்லுங்கள்; இல்லையென்றால் அதையும் எனக்குச் சொல்லுங்கள், அப்பொழுது நான் வலதுபுறத்தையாகிலும் இடதுபுறத்தையாகிலும் நோக்கிப் போவேன் என்றான்.

ஆதி 24:50. அப்பொழுது லாபானும் பெத்துவேலும் பிரதியுத்தரமாக: இந்தக் காரியம் கர்த்தரால்வந்தது, உமக்கு நாங்கள் நலம்பொலம் ஒன்றும் சொல்லக்கூடாது.

ஆதி 24:51. இதோ, ரெபெக்காள் உமக்கு முன்பாகஇருக்கிறாள்; கர்த்தர் சொன்னபடியே அவள் உமது எஜமானுடைய குமாரனுக்கு மனைவியாகும்படிக்கு, அவளை அழைத்துக்கொண்டுபோம் என்றார்கள்.

ஆதி 24:52. ஆபிரகாமின் ஊழியக்காரன் அவர்கள் வார்த்தைகளைக் கேட்டபோது, தரைமட்டும் குனிந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டான்.

ஆதி 24:53. பின்பு அந்த ஊழியக்காரன் வெள்ளியுடைமைகளையும், பொன்னுடைமைகளையும், வஸ்திரங்களையும் எடுத்து, ரெபெக்காளுக்குக் கொடுத்ததுமன்றி, அவளுடைய சகோதரனுக்கும், தாய்க்கும் சில உச்சிதங்களையும் கொடுத்தான்.

ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் விவாகம்பண்ணுவதற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெறுகிறது. ரெபெக்காளின் வீட்டார் ஆபிரகாமுடைய ஊழியக்காரனை தங்கள் வீட்டிற்கு அன்போடு வரவேற்கிறார்கள்.

அந்த மனுஷன் வந்ததையும், அவன் தன்னோடு சொன்ன காரியங்களையும் ரெபெக்காள் தன் வீட்டிலுள்ளவர்களுக்கு அறிவிக்கிறாள். ரெபெக்காள் இப்போது பார்ப்பதற்கு வித்தியாசமாயிருக்கிறாள். தன்னுடைய காதுகளில் அவள் காதணியைத் தரித்திருக்கிறாள். அவள் தன் கைகளில் கடகங்களைப் போட்டிருக்கிறாள். ரெபெக்காளுக்கு ஒரு சகோதரன் இருக்கிறான். அவனுக்கு லாபான் என்று பெயர் (ஆதி 24:28,29).

லாபான் தன் சகோதரி தரித்திருந்த அந்தக் காதணியையும், அவள் கைகளில் போட்டிருந்த கடகங்களையும் பார்க்கிறான். அந்த மனிதன் இன்ன இன்னபடி தன்னோடே பேசினானென்று ரெபெக்காள் தன் சகோதரன் லாபானிடத்தில் சொல்லுகிறாள். லாபான் அந்த வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில், வெளியே தூரவண்டையிலிருந்த அந்த மனிதனிடத்திற்கு ஒடுகிறான். ஆபிரகாமுடைய ஊழியக்காரன் தூரவு அருகே ஒட்டகங்கள் அண்டையில் நின்றுகொண்டிருக்கிறான் (ஆதி 24:30).

ரெபெக்காளுக்கும், அவளுடைய சகோதரனாகிய லாபானுக்கும் வித்தியாசம் உண்டு. ரெபெக்காள் பொன்னாபரணங்களைக் காணாமலேயே எலியேசருக்கு மரியாதை கொடுக்கிறாள். லாபான் பொன்னாபரணங்களைக் கண்ட பின்பு எலியேசருக்கு மரியாதை கொடுக்கிறான் (ஆதி 29:13-31:55).

லாபான் ஆபிரகாமுடைய ஊழியக்காரனை அன்போடு வரவேற்கிறான். அவன் அந்த மனிதனைப் பார்த்து, "கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே, உள்ளே வாரும்; நீர் வெளியே நிற்பானேன்? உமக்கு வீடும், ஒட்டகங்களுக்கு இடமும் ஆயத்தம் பண்ணியிருக்கிறேன்" (ஆதி 24:31) என்று சொல்லுகிறான்.

ஆபிரகாமுடைய ஊழியக்காரன் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர் என்பதை லாபான் அறிந்திருக்கிறான். ஒரு வேளை லாபான் தன் சகோதரி ரெபெக்காள் மூலமாக, அந்த மனிதனைப்பற்றி அதிகமாக விசாரித்து தெரிந்திருக்க வாய்ப்புள்ளது. அந்த மனிதனுடைய வாயிலிருந்து கிருபை நிரம்பிய வார்த்தைகள் வெளிப்படுகிறது. கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களை, நாமும் நம்முடைய வீடுகளுக்கும் அன்போடு வரவேற்று, அவர்களை கர்த்தருடைய நாமத்தினால் உபசரிக்கவேண்டும். கர்த்தருக்கு சொந்தமானவர்களை நமக்கும் சொந்தமாக்கிக்கொள்வது நமக்கு நல்லது.

ஆபிரகாமுடைய ஊழியக்காரன் லாபானுடைய அழைப்பை ஏற்று அவனுடைய வீட்டிற்குப்போகிறான். லாபான் ஒட்டகங்களின் கட்டவிழ்த்து, ஒட்டகங்களுக்கு வைக்கோலும் தீவனமும் போட்டு, அவனும், அவனோடே வந்தவர்களும் தங்கள் கால்களைக் கழுவிக்கொள்ளத் தண்ணீர் கொடுக்கிறான்.

விருந்தினர்களுடைய கால்களைக் கழுவ தண்ணீர் கொடுப்பது அக்காலத்து வழக்கம். (ஆதி 24:32; ஆதி 18:4; ஆதி 19:2; 1சாமு 25:41; 2சாமு 11:8; லூக்கா 7:44-45).

பின்பு, ஆபிரகாமுடைய ஊழியக்காரனுக்கு முன்பாக போஜனம் வைக்கப்படுகிறது. அப்பொழுது அந்த மனிதன், "நான் வந்த காரியத்தைச் சொல்லு முன்னே புசிக்கமாட்டேன்" என்று சொல்லுகிறான். அப்பொழுது லாபான், "சொல்லும்" என்று சொல்லுகிறான் (ஆதி 24:33).

ரெபெக்காளின் வீட்டார் ஆபிரகாமுடைய ஊழியக்காரனை உபசரித்து பராமரிப்பது போலவே, அவனுடைய ஒட்டகங்களையும் பராமரிக்கிறார்கள். லாபான் அந்த ஒட்டங்களின் கட்டவிழ்த்து, அவைகளுக்கு வைக்கோலும் தீவனமும் போடுகிறான்."நீதிமான் தன் மிருகஜீவனைக் காப்பாற்றுகிறான்" (நீதி 12:10).

ஆபிரகாமுடைய ஊழியக்காரன் தன்னுடைய எஜமானின் வீட்டைப்பற்றி, ரெபெக்காளின் வீட்டாரிடத்தில் சுருக்கமாகச் சொல்லுகிறான். அந்த மனிதன் நீண்டதூரம் பிரயாணம் பண்ணி வந்திருக்கிறான். அவனுக்கு ஒய்வு தேவைப்படுகிறது. அவன் இப்போது ரெபெக்காளுடைய வீட்டிற்கு வந்திருக்கிறான். ஆனாலும் அந்த மனிதன், "நான் வந்த காரியத்தை சொல்லும் முன்னே புசிக்கமாட்டேன்" என்று சொல்லிவிடுகிறான். ஆபிரகாமின் ஊழியக்காரனுக்கு போஜனத்தைவிட, தான் வந்த வேலையே மிகவும் முக்கியமானதாயிருக்கிறது.

ஆபிரகாமின் ஊழியக்காரன் தன் எஜமானுடைய குடும்பத்தைப்பற்றி, ரெபெக்காளின் வீட்டாரிடத்தில் சுருக்கமாகச் சொல்லுகிறான். அவன் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "நான் ஆபிரகாமுடைய ஊழியக்காரன்" (ஆதி 24:34) என்று சொல்லுகிறான். இந்த மனிதன் தன்னை வெகுவாகத் தாழ்த்துகிறான். அவன் ஈசாக்குக்கு பெண் பார்க்க வந்திருந்தாலும், அவன் ஆபிரகாமுக்கு உறவுக்காரனல்ல. அவன் ஆபிரகாமுடைய ஊழியக்காரரில் ஒருவன். அந்த மனிதன் பெண் பார்க்க வந்த இடத்தில், தன்னைப்பற்றிய உண்மையை சொல்லுகிறான்.

ஆபிரகாம் எலியேசரிடம் ஆரானிலுள்ள தன்னுடைய உறவினரைப்பற்றி முழுவதுமாகக் கூறியிருக்கிறான். அவர்களுடைய பெயர்களைக் கேட்டவுடன் தான் சரியான இடத்திற்கு வந்திருப்பதை எலியேசர் முடிவு பண்ணுகிறான் (ஆதி 24:23-27) ஆபிரகாமிற்கு ரெபெக்காளையும், அவனுடைய சகோதரன் லாபானையும் தெரியும் (ஆதி 22:20-24).

அக்காலத்தில் பெண்வீட்டாருக்கும், மாப்பிள்ளை வீட்டாருக்கும் இடையே பேசவேண்டிய காரியங்களையெல்லாம் பேசி, திருமணம் நிச்சயம் பண்ணுவது வழக்கம். பெரியவர்களே திருமணத்தை நிச்சயம் பண்ணுவார்கள் (ஆதி 24:3; ஆதி 21:21; ஆதி 28:1; ஆதி 38:6).

சிலவேளைகளில், பெற்றோருடைய ஈடுபாடு இல்லாமல் திருமணம் நடைபெறுவதும் உண்டு (ஆதி 26:34-35); திருமணம் செய்து கொள்ளப்போகிறவர்கள் தங்களுடைய விருப்பத்தையும் பகிர்ந்து கொள்ளலாம் (ஆதி 34:4; நியா 14:2).

அந்த ஊழியக்காரன் ஆபிரகாமைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தர் என் எஜமானை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார், அவர் சீமானாயிருக்கிறார்; கர்த்தர் அவருக்கு ஆடுமாடுகளையும், வெள்ளியையும், பொன்னையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும், கொடுத்திருக்கிறார். என் எஜமானுடைய மனைவியாகிய சாராள்முதிர்வயதானபோது, என் எஜமானுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்; அவர் தமக்கு உண்டானயாவையும் அவனுக்குக் கொடுத்திருக்கிறார்" (ஆதி 24:35,36) என்று சொல்லுகிறான்.

லாபான் ஆபிரகாமுடைய ஊழியக்காரனைப் பார்த்து, "கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே" (ஆதி 24:31) என்று சொன்னான். ஆனால் இந்த ஊழியக்காரனோ, "கர்த்தர் என் எஜமானை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார்" என்று சொல்லுகிறான். கர்த்தருடைய ஆசீர்வாதத்தினால் ஆபிரகாம் சீமானாயிருக்கிறார் என்றும், கர்த்தரே அவருக்கு திரளான ஆஸ்திகளையும், ஐசுவரியங்களையும் கொடுத்திருக்கிறார் என்றும் சொல்லி, கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறான்.

ஆபிரகாமுடைய ஐசுவரியமெல்லாம் ஈசாக்குக்கே சொந்தம் என்பதையும் அந்த ஊழியக்காரன் ரெபெக்காளின் வீட்டாரிடத்தில் உறுதிபடுத்துகிறான். அவன் ஈசாக்குக்கு பெண் பார்க்க வந்திருக்கிறான். பெண் வீட்டாருக்கு ஆபிரகாமின் ஐசுவரியத்தைவிட, ஈசாக்கின் ஐசுவரியமே முக்கியமானதாயிருக்கும். ஆகையினால் அந்த ஊழியக்காரன் ஈசாக்கின் ஐசுவரியத்தைப்பற்றிச் சொல்லும்போது, "ஆபிரகாம் தனக்கு உண்டான யாவையும் ஈசாக்குக்கு கொடுத்திருக்கிறார்" (ஆதி 24:36) என்று சொல்லுகிறான்.

ஆபிரகாமுடைய ஊழியக்காரன் தான் இந்த தேசத்திற்கு வந்ததற்கான காரணத்தையும் சொல்லுகிறான். அவன் தன்னுடைய சுயயோசனையின் பிரகாரமாகவோ, சுயவிருப்பத்தின் பிரகாரமாகவோ இந்த தேசத்திற்கு வரவில்லை. அவன் எந்தவிதமான காரணமுமில்லாமல், ஊர் சுற்றிப் பார்ப்பதற்காகவோ அல்லது வீணாகப் பொழுதைப் போக்குவதற்காகவோ இந்த தேசத்திற்கு வரவில்லை. அவன் தன் எஜமான் ஆபிரகாமுடைய கட்டளையின் பிரகாரம் இந்த தேசத்திற்கு வந்திருக்கிறான். ஆபிரகாம் தனக்கு கொடுத்த வேலையை செய்து முடிப்பதற்காக அந்த ஊழியக்காரன் இங்கே வந்திருக்கிறான்.

ஆபிரகாமுடைய ஊழியக்காரன், தான் இந்த தேசத்திற்கு வந்ததற்கான காரணத்தை ரெபெக்காளின் வீட்டாரிடத்தில் சொல்லுகிறான். அந்த மனிதன் அவர்களை நோக்கி, "என் எஜமானாகிய ஆபிரகாம் என்னை நோக்கி, "நான் குடியிருக்கிற கானான் தேசத்தாருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்கொள்ளாமல், நீ என் தகப்பன் வீட்டுக்கும், என் இனத்தாரிடத்துக்கும் போய், என் குமாரனுக்குப் பெண்கொள்ளவேண்டும் என்று ஆணையிட்டுக்கொடுக்கும்படி சொன்னார்" (ஆதி 24:37,38) என்று சொல்லுகிறான்.

ஆபிரகாம் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர். அதே வேளையில் அவர் தன் உற்றார் உறவினரிடத்திலும் பிரியமும் பாசமுமுள்ளவராயிருக்கிறார். கர்த்தரிடத்தில் பிரியமாயிருக்கிறவர்கள், தங்கள் குடும்பத்தாரிடத்தில் பிரியமாயிருப்பார்கள். கர்த்தரை நேசிக்கிறவர்கள், தங்கள் உற்றார் உறவினரையும் நேசிப்பார்கள்.

ஆபிரகாமுடைய ஊழியக்காரன், ரெபெக்காளின் வீட்டாரிடத்தில், தனக்கும் தன் எஜமானாகிய ஆபிரகாமுக்கும் இடையே நடைபெற்ற சம்பாஷணையை இங்கு விவரமாகச் சொல்லுகிறான். ஆபிரகாம் தன் ஊழியக்காரனிடத்தில், ஆணையிட்டுக்கொடுக்கும்படி சொல்லுகிறார்.

அப்பொழுது அந்த ஊழியக்காரன், தன் எஜமானாகிய ஆபிரகாமை நோக்கி, "ஒருவேளை அந்தப் பெண் என் பின்னே வராதேபோனாலோ" என்று கேட்கிறான் (ஆதி 24:39).

அதற்கு ஆபிரகாம் தன் ஊழியக்காரனை நோக்கி, "நான் வழிபடும் கர்த்தர் உன்னோடே தம்முடைய தூதனை அனுப்பி, உன் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணுவார்; என் இனத்தாரிடத்திலும், என் தகப்பன் வீட்டிலும் நீ என் குமாரனுக்குப் பெண்கொள்வாய். நீ என் இனத்தாரிடத்துக்குப் போனால், என் ஆணைக்கு நீங்கலாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பெண்கொடாமற்போனாலும், நீ என் ஆணைக்கு நீங்கலாயிருப்பாய்" (ஆதி 24:40,41) என்று சொல்லுகிறார்.

ஆபிரகாமுடைய ஊழியக்காரன், ரெபெக்காளுடைய வீட்டாரிடத்தில் பேசும்போது, தான் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணியதைப்பற்றியும், கர்த்தர் தம்முடைய கிருபையினால், தன்னை வழிநடத்தியதுபற்றியும் தெளிவாகச் சொல்லுகிறான். தன்னுடைய சுயசித்தத்தின் பிரகாரமாக, தான் ரெபெக்காளை சந்திக்கவில்லை என்றும், கர்த்தருடைய தெய்வீக வழிநடத்துதலினாலேயே, தான் ரெபெக்காளை சந்தித்ததாகவும் அந்த ஊழியக்காரன் தெளிவுபடுத்துகிறான். இந்தக் காரியங்கள் எல்லாவற்றிலும் தேவனுடைய விரல் இருப்பதை ஆபிரகாமுடைய ஊழியக்காரன், ரெபெக்காளின் வீட்டாரிடத்தில் தெளிவாகச் சொல்லுகிறான்.

அந்த மனிதன் ரெபெக்காளின் வீட்டாரிடத்தில், "அப்படியே நான் இன்று துரவண்டையிலே வந்து: என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாகிய கர்த்தரே, என் பிரயாணத்தை நீர் இப்பொழுது வாய்க்கப்பண்ணுவீரானால், இதோ, நான் தண்ணீர்த் துரவண்டையிலேநிற்கிறேன், தண்ணீர் மொள்ள வரப்போகிற கன்னிகையை நான் நோக்கி: உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் எனக்குக் குடிக்கத் தரவேண்டும் என்று கேட்கும்போது: நீ குடி என்றும், உன் ஒட்டகங்களுக்கும் மொண்டு வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண்ணே கர்த்தர் என் எஜமானுடைய குமாரனுக்கு நியமித்த ஸ்திரீயாகவேண்டும் என்றேன்" (ஆதி 24:42-44) என்று சொல்லுகிறான்.

கர்த்தர் தன்னுடைய ஜெபத்திற்கு அற்புதமாக பதில் கொடுத்ததையும் அந்த ஊழியக்காரன் அவர்களுக்கு தெளிவுபடுத்துகிறான். அந்த மனிதன் அவர்களை நோக்கி, "நான் இதை என் இருதயத்தில் சொல்லி முடிக்குமுன்னே, இதோ, ரெபெக்காள் தன் குடத்தைத் தோள்மேல் வைத்துக்கொண்டு புறப்பட்டுவந்து, துரவில் இறங்கிப்போய்த் தண்ணீர் மொண்டாள். அப்பொழுது நான்: எனக்குக் குடிக்கத்தரவேண்டும் என்றேன். அவள் சீக்கிரமாய்த் தன் தோள்மேலிருந்த குடத்தை இறக்கி, குடியும், உம்முடைய ஒட்டகங்களுக்கும் வார்ப்பேன் என்றாள். நான் குடித்தேன்; ஒட்டகங்களுக்கும் வார்த்தாள்" (ஆதி 24:45,46) என்று சொல்லுகிறான்.

ஆபிரகாமுடைய ஊழியக்காரன் ரெபெக்காளோடு பேசின வார்த்தைகளையும், அவளுடைய வீட்டாரிடத்தில் அப்படியே சொல்லுகிறான். அந்த ஊழியக்காரன், அவளுடைய வீட்டாரிடத்தில் அதுபற்றிச் சொல்லும்போது, "நீ யாருடைய மகள் என்றுஅவளைக் கேட்டேன்; அதற்கு அவள்: நான் மில்க்காள் நாகோருக்குப் பெற்ற குமாரனாகிய பெத்துவேலின் மகள் என்றாள்; அப்பொழுது அவளுக்குக் காதணியையும், அவள் கைகளிலே கடகங்களையும் போட்டு; தலைகுனிந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டு, நான் என் எஜமானுடைய சகோதரன் குமாரத்தியை அவர் குமாரனுக்குக் கொள்ள என்னை நேர்வழியாய் நடத்திவந்த என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தரை ஸ்தோத்திரித்தேன்" (ஆதி 24:47,48) என்று சொல்லுகிறான்.

ஆபிரகாமுடைய ஊழியக்காரன் தன் எஜமானைப்பற்றியும், அவர் தன்னிடத்தில் சொன்ன காரியத்தைப்பற்றியும், தான் இந்த தேசத்திற்கு வந்தது பற்றியும், துரவண்டையில் தான் ரெபெக்காளை சந்தித்து, அவளோடு பேசியதுபற்றியும் தெளிவாகச் சொல்லுகிறான். இவையெல்லாவற்றையும் சொல்லிய பின்பு, ஆபிரகாமுடைய ஊழியக்காரன், ரெபெக்காளின் வீட்டாரைப் பார்த்து, "இப்பொழுதும் நீங்களும் என் எஜமானுக்குக் தயையும் உண்மையும் உடையவர்களாய் நடக்க மனதுள்ளவர்களானால், எனக்குச் சொல்லுங்கள்; இல்லையென்றால் அதையும் எனக்குச் சொல்லுங்கள், அப்பொழுது நான் வலதுபுறத்தையாகிலும் இடதுபுறத்தையாகிலும் நோக்கிப் போவேன்" (ஆதி 24:49) என்று சொல்லுகிறான்.

அந்த மனிதன் ரெபெக்காளின் வீட்டாரை, ஈசாக்குக்கு பெண்கொடுக்குமாறு கட்டாயப்படுத்தவில்லை. பெண்கொடுக்க மனதிருந்தாலும், மனதில்லாவிட்டாலும் அதை தனக்கு சொல்லுமாறு கேட்கிறான். ரெபெக்காளின் வீட்டார் அந்த மனிதன் சொன்ன வார்த்தைகளை கவனமாய்க் கேட்கிறார்கள். அவர்களுக்கு ஈசாக்குக்கு பெண் கொடுக்க விருப்பம் இருக்கிறது.

அப்பொழுது லாபானும் பெத்துவேலும் பிரதியுத்தரமாக: "இந்தக் காரியம் கர்த்தரால்வந்தது, உமக்கு நாங்கள் நலம்போலம் ஒன்றும் சொல்லக்கூடாது. இதோ, ரெபெக்காள் உமக்கு முன்பாக இருக்கிறாள்; கர்த்தர் சொன்னபடியே அவள் உமது எஜமானுடைய குமாரனுக்கு மனைவியாகும்படிக்கு, அவளை அழைத்துக்கொண்டுபோம்" (ஆதி 24:50,51) என்று சொல்லுகிறார்கள். இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது என்பதை அவர்கள் அறிந்துகொள்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக எதையும் பேச விரும்பவில்லை.

நாகோருடைய ஊருக்கும், பெயர்செபாவிற்கும் இடையிலுள்ள தூரம் 450 மைல். பாதை மிகவும் கடினமானது. வழிப்பயணம் ஆபத்தானது. ஒட்டகத்தில் ஏறி பிரயாணம் செய்தால், 25 அல்லது 30 நாள் பிரயாணம் பண்ண வேண்டும். ரெபெக்காளைப்போல இளவயதுள்ள கன்னிப்பெண் இவ்வளவு தூரம் பிரயாணம் பண்ணுவதற்கு யோசித்திருப்பாள். அதுவும் முன்பின் தெரியாத எலியேசர்கூட பிரயாணம் பண்ண வேண்டும். ஈசாக்கைப் பார்ப்பதற்காகப் போனாலும், அவள் இதுவரையிலும் ஈசாக்கையும் கண்டதில்லை. ஈசாக்கின் சுபாவம் பற்றியும் ரெபெக்காளுக்கு ஒன்றும் தெரியாது.

ஆனாலும் ரெபெக்காள் எலியேசருடைய வார்த்தையை நம்புகிறாள். எலியேசரிடம் கர்த்தர் பேசியதற்கு மதிப்பு கொடுக்கிறாள். கர்த்தருடைய கரம் இதில் இருப்பதைப் பூரணமாகப் புரிந்து கொள்கிறாள். ரெபெக்காள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, எலியேசரோடு பெயர்செபாவிற்குப் போக சம்மதிக்கிறாள்.

ஆபிரகாமின் ஊழியக்காரன் அவர்கள் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, கர்த்தரைத் துதிக்கிறான். அவன் தரைமட்டும் குனிந்து கர்த்தரைப் பணிந்துகொள்கிறான் (ஆதி 24:52). ஆபிரகாம் தன்னுடைய ஊழியக்காரனை நோக்கி, "தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார்" (ஆதி 24:7,40) என்று சொன்னார். ஆபிரகாம் சொன்ன பிரகாரமாகவே, கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பி, இந்த ஊழியக்காரனுடைய பிரயாணத்தை வாய்க்கப்பண்ணியிருக்கிறார்.

ரெபெக்காளின் வீட்டார் ஆபிரகாமின் ஊழியக்காரனுக்கு நல்ல பதிலை சொல்லுகிறார்கள். ரெபெக்காளை ஈசாக்குக்கு பெண் கொடுக்க சம்மதம் தெரிவிக்கிறார்கள். ஆபிரகாம் சொன்ன பிரகாரம், கர்த்தருடைய தூதனானவர், இந்த ஊழியக்காரனுடைய பிரயாணத்தை வாய்க்கப்பண்ணியிருக்கிறார். ஆனாலும் அந்த மனிதன், ரெபெக்காளுடைய வீட்டார் சொன்ன நல்ல வார்த்தைகளை கேட்டபோது, அவன் கர்த்தருடைய தூதனைப் பணிந்துகொள்ளாமல் கர்த்தரைப் பணிந்துகொள்கிறான்.

பின்பு அந்த ஊழியக்காரன் வெள்ளியுடைமைகளையும், பொன்னுடைமைகளையும், வஸ்திரங்களையும் எடுத்து, ரெபெக்காளுக்குக் கொடுத்ததுமன்றி, அவளுடைய சகோதரனுக்கும், தாய்க்கும் சில உச்சிதங்களையும் கொடுக்கிறான் (ஆதி 24:53).

ரெபெக்காளின் சம்மதம்
ஆதி 24:54-61

ஆதி 24:54. பின்பு அவனும் அவனோடிருந்த மனிதரும் புசித்து குடித்து, இராத்தங்கினார்கள்; காலையிலே எழுந்திருந்து, அவன்: என் எஜமானிடத்துக்கு என்னை அனுப்பிவிடுங்கள் என்றான்.

ஆதி 24:55. அப்பொழுது அவன் சகோதரனும் அவன் தாயும், பத்து நாளாகிலும் பெண் எங்களோடிருக்கட்டும், பிற்பாடு போகலாம் என்றார்கள்.

ஆதி 24:56. அதற்கு அவன்: கர்த்தர் என் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணியிருக்க, நீங்கள் எனக்குத் தடைசெய்யாதிருங்கள்; நான் என் எஜமானிடத்துக்குப்போக என்னை அனுப்பிவிடவேண்டும் என்றான்.

ஆதி 24:57. அப்பொழுது அவர்கள்: பெண்ணை அழைத்து, அவள் வாய்ப்பிறப்பைக் கேட்போம் என்று சொல்லி,

ஆதி 24:58. ரெபெக்காளை அழைத்து: நீ இந்த மனிதனோடேகூடப் போகிறாயா என்று கேட்டார்கள். அவள்: போகிறேன் என்றாள்.

ஆதி 24:59. அப்படியே அவர்கள் தங்கள் சகோதரியாகிய ரெபெக்காளையும், அவள் தாதியையும், ஆபிரகாமின் ஊழியக்காரனையும், அவன் மனிதரையும் அனுப்புவித்து,

ஆதி 24:60. ரெபெக்காளை வாழ்த்தி: எங்கள் சகோதரியே, நீ கோடாகோடியாய்ப் பெருகுவாயாக; உன் சந்ததியார் தங்கள் பகைஞருடைய வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்வார்களாகஎன்று ஆசீர்வதித்தார்கள்.

ஆதி 24:61. அப்பொழுது ரெபெக்காளும் அவள் வேலைக்காரிகளும் எழுந்து ஒட்டகங்கள் மேல் ஏறி,அந்த மனிதனோடேகூடப் போனார்கள். ஊழியக்காரன் ரெபெக்காளை அழைத்துக்கொண்டுபோனான்.

லாபானும் பெத்துவேலும், ஆபிரகாமுடைய ஊழியக்காரனை நோக்கி, "கர்த்தர் சொன்னபடியே அவள் உமது எஜமானுடைய குமாரனுக்கு மனைவியாகும்படிக்கு, அவளை அழைத்துக்கொண்டுபோம்" (ஆதி 24:51) என்று சொல்லுகிறார்கள். அந்த ஊழியக்காரன் கர்த்தரைத் துதித்து, ரெபெக்காளுக்கும், அவளுடைய சகோதரனுக்கும், தாய்க்கும், சில உச்சிதங்களையும், சில வெகுமதிகளையும் கொடுக்கிறான்.

அதன் பின்பு அந்த ஊழியக்காரனும், அவனோடிருந்த மனிதரும், புசித்து குடித்து இராத்தங்குகிறார்கள். ரெபெக்காளின் வீட்டார், அந்த ஊழியக்காரனுக்கு, இந்தக் காரியங்கள் எல்லாம் பேசப்படுவதற்கு முன்பாகவே போஜனம் வைத்தார்கள். அப்பொழுது அவன், "நான் வந்த காரியத்தை சொல்லும் முன்னே புசிக்கமாட்டேன்" (ஆதி 24:33) என்று சொல்லிவிட்டான். அந்த ஊழியக்காரன் இப்போது தான் வந்த காரியத்தை அவர்களுக்கு சொல்லிவிட்டான். அவர்களும் அந்த மனிதனுக்கு சாதகமான பதிலை சொல்லியிருக்கிறார்கள். ஆகையினால் அவனும், அவனோடிருந்த மனிதரும் புசிக்கிறார்கள்.

ஆபிரகாமின் ஊழியக்காரர் மறுநாள் காலையிலே எழுந்திருந்து, "என் எஜமானிடத்திற்கு என்னை அனுப்பிவிடுங்கள்" (ஆதி 24:54) என்று கேட்கிறான். அவன் ரெபெக்காளை, தன்னோடுகூட அழைத்துக்கொண்டுபோக ஆயத்தமாயிருக்கிறான். ஆபிரகாமின் ஊழியக்காரன், ரெபெக்காளின் வீட்டில் அதிக நாட்களுக்கு தங்கியிருக்காமல், ரெபெக்காளை ஈசாக்குக்கு மனைவியாகும்படி, உடனே அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்று விரும்புகிறான். ரெபெக்காளின் வீட்டாரும், "அவளை அழைத்துக்கொண்டுபோம்" (ஆதி 24:51) என்று முந்தின நாளிலே சொன்னார்கள். ஆனால் இங்கு, ரெபெக்காளின் சகோதரனும் அவள் தாயும், "பத்து நாளாகிலும் பெண் எங்களோடிருக்கட்டும், பிற்பாடு போகலாம்" (ஆதி 24:55) என்று சொல்லுகிறார்கள்.

ரெபெக்காளின் வீட்டாருக்கு, அவளை ஈசாக்குக்கு மனைவியாகக் கொடுக்க இஷ்டம் இருக்கிறது. ஆனால் ரெபெக்காளை விட்டுப்பிரிவது அவர்களுக்கு கஷ்டமாயிருக்கிறது. ஆபிரகாமின் ஊழியக்காரன், ரெபெக்காளை தன்னோடு உடனே அனுப்பிவிடுமாறு கேட்கிறான். அந்த மனிதன் அவர்களை நோக்கி, "கர்த்தர் என் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணியிருக்க, நீங்கள் எனக்குத் தடைசெய்யாதிருங்கள்; நான் என் எஜமானிடத்துக்குப்போக என்னை அனுப்பிவிடவேண்டும்" (ஆதி 24:56) என்று சொல்லுகிறான்.

ஆபிரகாமின் ஊழியக்காரனுக்கும், ரெபெக்காளின் வீட்டாருக்கும், ரெபெக்காளை அவனோடுகூட உடனே அனுப்பிவிடுவது சம்பந்தமாக, கருத்து வேறுபாடு ஏற்படுகிறது. அவர்கள் இந்தப் பிரச்சனையை ரெபெக்காளுடைய விருப்பத்தின் பிரகாரம் தீர்த்து வைக்கலாம் என்று தீர்மானிக்கிறார்கள். அப்பொழுது அவர்கள், "பெண்ணை அழைத்து, அவள் வாய்ப்பிறப்பைக் கேட்போம்" (ஆதி 24:57) என்று சொல்லுகிறார்கள்.

அவர்கள் ரெபெக்காளை அழைத்து: "நீ இந்த மனிதனோடேகூடப் போகிறாயா" என்று கேட்கிறார்கள். அதற்கு ரெபெக்காள், "போகிறேன்" (ஆதி 24:58) என்று சொல்லுகிறாள். அவள் ஆபிரகாமின் ஊழியக்காரனோடு உடனே போவதற்கு சம்மதம் சொல்லுகிறாள். ரெபெக்காளின் வீட்டாரும், அவளுடைய விருப்பத்தின் பிரகாரம், அவளை ஆபிரகாமின் ஊழியக்காரனோடு அனுப்புவதற்கு ஆயத்தம்பண்ணுகிறார்கள்.

"நீ இந்த மனிதனோடேகூடப் போகிறாயா" என்று ரெபெக்காளின் வீட்டார் அவளிடத்தில் கேட்கிறார்கள். கடைசியாகத் தீர்மானம் பண்ண வேண்டியவள் ரெபெக்காள். உனக்குப்போக சம்மதமா என்று அவளுடைய குடும்பத்தார் கேட்கிறார்கள். ஒருவேளை இப்பொழுது போகிறாயா அல்லது சிறிது நாட்கள் சென்ற பின்பு போகிறாயா என்ற பொருளிலும் அவர்கள் கேட்டிருக்கலாம்.

ரெபெக்காளின் வீட்டார் அவளை, ஆபிரகாமின் ஊழியக்காரனோடு அனுப்புவதற்கு முன்பாக, அவளை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறார்கள். அவர்கள் ரெபெக்காளை ஆசீர்திக்கும்போது, அவளை வாழ்த்தி, "எங்கள் சகோதரியே, நீ கோடாகோடியாய்ப் பெருகுவாயாக; உன் சந்ததியார் தங்கள் பகைஞருடைய வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்வார்களாக" (ஆதி 24:60) என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார்கள்.

ரெபெக்காளுக்கு ஒரு சகோதரன் மட்டுமே இருக்கிறான். ஆயினும் கிழக்கு தேசத்தில் ஸ்திரீகளை "சகோதரி" என்று அழைக்கும் வழக்கம் இருக்கிறது. மேலும் கிழக்கு தேசத்தில் தாதியும் குடும்பத்தில் முக்கியமான பொறுப்பு வகிக்கிறாள். தாதி பெற்ற தாயைப்போல இருப்பாள். ரெபெக்காளோடு போகும் தாதி அவளுக்குத் துணையாகவும், ஆலோசனைக்காரியாகவும் இருப்பாள். ரெபெக்காளின் பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பும் இந்த தாதியிடம் கொடுக்கப்படும். (ஆதி 16: 1-8; ஆதி 24:59; ஆதி 29:24,29; ஆதி 30:3,9).

ரெபெக்காளின் குடும்பத்தார் அவளை வாழ்த்தும்போது, "எங்கள் சகோதரியே, நீ கோடாகோடியாய்ப் பெருகுவாயாக" என்று சொல்லி வாழ்த்துகிறார்கள். கிழக்கு தேசங்களில் பெரிய குடும்பம் பெரிய ஆசீர்வாதமாகக் கருதப்படுகிறது (ஆதி 14:19; ஆதி 22:17; ரூத் 4:11-12).

ரெபெக்காளின் வேலைக்காரிகள் எத்தனை பேர் என்று கூறப்படவில்லை. அவர்களில் ஒருத்தி அவளுடைய தாதி (ஆதி 24:59). அவளுடைய பெயர் தெபோராள்(ஆதி 35:8).

அப்படியே அவர்கள் தங்கள் சகோதரியாகிய ரெபெக்காளையும், அவள் தாதியையும், ஆபிரகாமின் ஊழியக்காரனையும், அவன் மனிதரையும் அனுப்புவிக்கிறார்கள். அப்பொழுது ரெபெக்காளும் அவள் வேலைக்காரிகளும் எழுந்து ஒட்டகங்கள் மேல் ஏறி,அந்த மனிதனோடேகூடப் போகிறார்கள். ஆபிரகாமின் ஊழியக்காரன் ரெபெக்காளை அழைத்துக்கொண்டு போகிறான் (ஆதி 24:59,61).

கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததிக்கு ரெபெக்காள் தாயாகப்போகிறாள். அவள் ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கை திருமணம் செய்துகொள்ளப்போகிறாள். கர்த்தர் ஈசாக்கின் சந்ததியை ஆசீர்வதிக்கப் போவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் ஈசாக்கும் ரெபெக்காளும் விவாகம் செய்துகொள்ளப்போகிறார்கள். லாபானும் பெத்துவேலும், கர்த்தருடைய ஆவியானவரால் ஏவப்பட்டு, இந்த விவாக சம்மந்தத்தைப்பற்றி சொன்னபோது, "இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது" (ஆதி 24:50) என்று சொன்னார்கள்.

ஈசாக்கும் ரெபெக்காளும் ஆதி 24:62-67

ஆதி 24:62. ஈசாக்கு தென்தேசத்தில் குடியிருந்தான். அப்பொழுது அவன்: லகாய்ரோயீ என்னப்பட்ட துரவின் வழியாய்ப் புறப்பட்டுவந்தான்.

ஆதி 24:63. ஈசாக்கு சாயங்காலவேளையிலே தியானம்பண்ண வெளியிலே போயிருந்து, தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, ஒட்டகங்கள் வரக்கண்டான்.

ஆதி 24:64. ரெபெக்காளும் தன் கண்களை ஏறெடுத்து ஈசாக்கைக் கண்டபோது,

ஆதி 24:65. ஊழியக்காரனை நோக்கி: அங்கே வெளியிலே நமக்கு எதிராக நடந்து வருகிற அந்த மனிதன் யார் என்று கேட்டாள். அவர்தான் என் எஜமான் என்று ஊழியக்காரன் சொன்னான். அப்பொழுது அவள் ஒட்டகத்தை விட்டிறங்கி முக்காடிட்டுக்கொண்டாள்.

ஆதி 24:66. ஊழியக்காரன் தான் செய்த சகல காரியங்களையும் ஈசாக்குக்கு விவரித்துச் சொன்னான்.

ஆதி 24:67. அப்பொழுது ஈசாக்கு ரெபெக்காளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அவளைத் தனக்கு மனைவியாக்கிக் கொண்டு, அவளை நேசித்தான். ஈசாக்கு தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான்.

ஈசாக்கு சாயங்கால வேளையிலே தியானம்பண்ணுவதற்காக வெளியிலே போகிறார். சாயங்காலை வேளை அமைதியான வேளை. அந்த வேளையிலே கர்த்தருடைய சமுகத்திலே தனிமையாயிருந்து, கர்த்தரைப்பற்றித் தியானிக்கவும், அவரிடத்தில் ஜெபம்பண்ணவும் ஈசாக்கு தன்னுடைய நேரத்தை ஆயத்தம்பண்ணுகிறார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் எப்போதும் தேவனோடு ஐக்கியமாயிருக்கவேண்டும் நம்முடைய இருதயங்களில் கர்த்தரைப்பற்றிய சிந்தனை நிரம்பியிருக்கவேண்டும்.

பரிசுத்தமான ஆத்துமாக்கள் கர்த்தரைக் குறித்து தியானம்பண்ணும். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் உலகப்பிரகாரமான வேலைகளைவிட்டு ஓய்ந்து, கர்த்தரைப்பற்றி தியானம்பண்ண விரும்புவார்கள். அவர்கள் கர்த்தரோடு தனிமையான ஐக்கியத்திலிருக்க ஆவலாயிருப்பார்கள். நாம் தனிமையாயிருந்தாலும், கர்த்தர் நம்மோடு கூடயிருக்கிறார்.

ஒவ்வொரு விசுவாசியின் ஜீவியத்திலும் தியானமும் ஜெபமும் இடம்பெற்றிருக்க வேண்டும். நாம் தனிமையாயிருக்கும்போது, ஜெபமும் தியானமும் நம்முடைய மனதிற்கு சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கும். நம்முடைய அன்றாட வேலைகளை பகல் வேளையில் செய்து முடித்துவிட்டு, சாயங்கால வேளையிலே கர்த்தரோடு தனிமையாக அமர்ந்திருப்பது நமக்கு மிகவும் ஆசீர்வாதமாயிருக்கும்.

சாயங்கால வேளையிலே நம்முடைய சரீரப்பிரகாரமான களைப்புக்களையெல்லாம் நீக்கிவிட்டு, நம்முடைய ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் கர்த்தருடைய சமுகத்திலிருந்து உற்சாகத்தையும் பெலத்தையும் பெற்றுக்கொள்ளலாம். நாம் இரவிலே நித்திரை செய்யப்போவதற்கு முன்பாக, கர்த்தரைப்பற்றித் தியானித்து, அந்த நாளை நிறைவுசெய்வதற்கு நம்மை ஆயத்தம்பண்ணிக்கொள்ளவேண்டும்.

ஈசாக்கு தென்தேசத்தில் குடியிருக்கிறார். அப்பொழுது அவர், லகாய்ரோயீ என்னப்பட்ட துரவின் வழியாய்ப் புறப்பட்டுவருகிறார். ஈசாக்கு சாயங்காலவேளையிலே தியானம்பண்ண வெளியிலே போயிருக்கிறார்.

"நான் என் காவலிலே தரித்து, அரணிலே நிலைகொண்டிருந்து, அவர் எனக்கு என்ன சொல்லுவாரென்றும், அவர் என்னைக் கண்டிக்கும்போது நான் என்ன உத்தரவு சொல்லுவேனென்றும் கவனித்துப் பார்ப்பேன் என்றேன்" (ஆப 2:1).

ஈசாக்கு சாயங்கால வேளையிலே, தியானம்பண்ணப்போகும்போது தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கிறார். அங்கே ஒட்டகங்கள் வருவதைக் காண்கிறார். அப்பொழுது ரெபெக்காளும் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கிறாள். அவள் அங்கே ஈசாக்கைக் காண்கிறாள் (ஆதி 24:64).

"கண்களை ஏறெடுத்து" என்னும் வாக்கியத்திற்கு விரைவாக நோக்கிப் பார்ப்பது என்று பொருள். இது மரியாதை கொடுப்பதற்கு அடையாளம். ரெபெக்காள் ஈசாக்கைப் பற்றி எலியேசர் மூலமாக ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறாள். ஆனாலும் இப்பொழுதுதான் அவள் முதன் முறையாக அவனைத் தன் கண்களால் காண்கிறாள்.

எலியேசர் ஈசாக்கை "அவர்தான் எஜமான்" என்று சொல்லுகிறான். எலியேசருக்கு ஆபிரகாம்தான் எஜமான். இப்பொழுது அவன் ஈசாக்கையும் தன் எஜமானாக அங்கீகரிக்கிறான். (ஆதி 15:2; ஆதி 24:10, 12,27,34-37).

ரெபெக்காள் இதற்கு முன்பு ஈசாக்கைப் பார்க்கவில்லை. ஈசாக்கும் ரெபெக்காளை இதற்கு முன்பு பார்த்ததில்லை. ஆபிரகாமின் ஊழியக்காரன் ரெபெக்காளை அழைத்து வருகிறான். ரெபெக்காள் அந்த ஊழியக்காரனை நோக்கி, "அங்கே வெளியிலே நமக்கு எதிராக நடந்து வருகிற அந்த மனிதன் யார்" என்று கேட்கிறாள். "அவர்தான் என் எஜமான்" என்று ஊழியக்காரன் சொல்லுகிறான். அப்பொழுது ரெபெக்காள் ஒட்டகத்தை விட்டிறங்கி முக்காடிட்டுக்கொள்கிறாள் (ஆதி 24:65).

கிழக்கு தேசத்திலே ஸ்திரீகள் முக்காடிட்டுக்கொள்வது, அவர்களுடைய மனத்தாழ்மைக்கும், கண்ணியத்திற்கும், கீழ்ப்படிதலுக்கும் அடையாளம் (1கொரி 11:5-6; 1தீமோ 2:9) புதிய மனுஷரைப் பார்க்கும்போது கிழக்கு தேசத்து ஸ்திரீகள் தங்களுடைய முகத்தை துணியால் மூடிக்கொள்வது வழக்கம்.

ஆபிரகாமின் ஊழியக்காரன் ஈசாக்குக்கு ஏற்கெனவே அறிமுகமானவன். அந்த ஊழியக்காரன் தான் செய்த சகல காரியங்களையும் ஈசாக்குக்கு விவரித்துச் சொல்லுகிறான் (ஆதி 24:66).

ஈசாக்கும் ரெபெக்காளும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்கிறார்கள். ஈசாக்கு ரெபெக்காளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அவளைத் தனக்கு மனைவியாக்கிக்கொண்டு, அவளை நேசிக்கிறார் (ஆதி 24:67).

ஈசாக்கு ரெபெக்காளை தன் தாய் சாராளுடைய கூடாரத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறார். புருஷருடைய கூடாரமும், மனைவியுடைய கூடாரமும் தனித்தனியாக இருக்கும். அதுபோலவே பெற்றோரின் கூடாரமும், பிள்ளைகளின் கூடாரமும் தனித்தனியாக இருக்கும். அவரவர்கள் தங்கள் தங்கள் கூடாரங்களில் வசிப்பார்கள்.

ஈசாக்கு ரெபெக்காளை தனக்கு மனைவியாக்கிக்கொள்கிறார். திருமணச் சடங்குகள் நடைபெற்றதாக வேதாகமத்தில் சான்றுகள் இல்லை. ஒருசிலர் திருமணத்தைப் பண்டிகையாகக் கொண்டாடுவார்கள். மணப்பெண் தன்னுடைய பெற்றோரின் வீட்டிலிருந்து கணவன் வீட்டிற்குப் புறப்பட்டு வருவது திருமணம் நடந்து முடிந்து விட்டதற்கு அடையாளமாகக் கருதப்படுகிறது.

ஈசாக்கின் தாயாராகிய சாராள் மரித்து மூன்று வருஷமாயிற்று. ஆனாலும் ஈசாக்கு தன் தாய்க்காக இன்னும் துக்கம் கொண்டாடுகிறார். அவருக்கு தன் தாயார்மீது மிகவும் பிரியம் இருக்கிறது. இப்போது ஈசாக்குக்கு ஆறுதலாக ரெபெக்காள் வந்திருக்கிறாள். இதனால் ஈசாக்கு தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைகிறார்.

25 அதிகாரம்

ஆபிரகாமின் மற்றொரு மனைவியாகிய கேத்தூராளும், அவர்களுக்கு பிறந்த குமாரரும் (ஆதி 25:1-4). ஆபிரகாம் தனக்கு உண்டான யாவையும் ஈசாக்குக்கு கொடுக்கிறார் (ஆதி 25:5,6). ஆபிரகாமின் ஆயுசுநாட்களும், மரணமும், அடக்க ஆராதனையும் (ஆதி 25:7-10).

இஸ்மவேலின் குமாரர்கள் (ஆதி 25:12-16). இஸ்மவேலின் வயதும் மரணமும் (ஆதி 25:17,18).

ஈசாக்குடைய வம்சவரலாறு (ஆதி 25:11). ரெபெக்காள் ஈசாக்குக்கு பெற்ற இரண்டு குமாரர்களும், அவர்களைப்பற்றிய விவரமும் (ஆதி 25:19-26). யாக்கோபு, ஏசா ஆகியோரின் சுபாவங்கள் (ஆதி 25:27,28). ஏசா தன் சேஷ்ட புத்திரபாகத்தை யாக்கோபுக்கு விற்றுப்போடுகிறான் (ஆதி 25:29-34).

ஆபிரகாமின் வம்சவரலாறு ஆதி 25:1-10

ஆதி 25:1. ஆபிரகாம் கேத்தூராள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீயையும் விவாகம் பண்ணியிருந்தான்.

ஆதி 25:2. அவள் அவனுக்குச் சிம்ரானையும், யக்ஷானையும், மேதானையும், மீதியானையும், இஸ்பாக்கையும், சூவாகையும், பெற்றாள்.

ஆதி 25:3. யக்ஷான் சேபாவையும், தேதானையும் பெற்றான்; தேதானுடைய குமாரர் அசூரீம், லெத்தூசீம், லெயூமீம் என்பவர்கள்.

ஆதி 25:4. மீதியானுடைய குமாரர் ஏப்பா, ஏப்பேர், ஆனோக்கு, அபீதா, எல்தாகா என்பவர்கள்; இவர்கள் எல்லாரும் கேத்தூராளின் பிள்ளைகள்.

ஆதி 25:5. ஆபிரகாம் தனக்கு உண்டான யாவையும் ஈசாக்குக்குக் கொடுத்தான்.

ஆதி 25:6. ஆபிரகாமுக்கு இருந்த மறுமனையாட்டிகளின் பிள்ளைகளுக்கோ ஆபிரகாம் நன்கொடைகளைக் கொடுத்து, தான் உயிரோடிருக்கும்போதே அவர்களைத் தன் குமாரனாகிய ஈசாக்கைவிட்டுக் கிழக்கேபோகக் கீழ்தேசத்துக்கு அனுப்பிவிட்டான்.

ஆதி 25:7. ஆபிரகாம் உயிரோடிருந்த ஆயுசு நாட்கள்நூற்று எழுபத்தைந்து வருஷம்.

ஆதி 25:8. பின்பு ஆபிரகாம் நல்ல நரைவயதிலும் , முதிர்ந்த பூரண ஆயுசிலும் பிராணன் போய் மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்.

ஆதி 25:9. அவன் குமாரராகிய ஈசாக்கும் இஸ்மவேலும் மம்ரேக்கு எதிரே ஏத்தியனான சோகாரின்குமாரனாகிய எப்பெரோனின் நிலத்திலுள்ள மக்பேலா என்னப்பட்ட குகையிலே அவனை அடக்கம் பண்ணினார்கள்.

ஆதி 25:10. அந்த நிலத்தை ஏத்தின் புத்திரர் கையிலே ஆபிரகாம் வாங்கியிருந்தான்; அங்கே ஆபிரகாமும் அவன் மனைவியாகிய சாராளும் அடக்கம்பண்ணப்பட்டார்கள்.

ஈசாக்கு ரெபெக்காளை தனக்கு மனைவியாக்கிக்கொள்கிறார். அதன்பின்பு ஆபிரகாம் முப்பத்தைந்து வருஷம் உயிரோடிருக்கிறார். ஆபிரகாமின் இந்த முப்பத்தைந்து வருஷ ஜீவியகாலம் முழுவதும் ஒரு சில வசனங்களில் சொல்லி முடிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் காலத்தில் ஆபிரகாமின் ஜீவியத்தில் விசேஷமான சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. கர்த்தர் அவருக்கு விசேஷமான தரிசனங்களையோ, வெளிப்பாடுகளையோ கொடுக்கவில்லை. இக்காலத்தில், ஆபிரகாமுக்கு பெரிய சோதனைகளும் வரவில்லை. அவருடைய ஆயுசுகாலம் சாதாரணமாகவும், மிகவும் அமைதியாகவும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

கர்த்தருடைய பரிசுத்தவான்களில் அநேகர், தங்கள் ஆயுசுகாலத்தை, ஆபிரகாமைப்போல, எந்தவித ஆரவாரமும், பரபரப்புமில்லாமல், அமைதியாக களித்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய ஜீவியத்தில் அற்புதங்கள் நடைபெறாவிட்டால், விருவிருப்பான சம்பவங்கள் நடைபெறாவிட்டால், கர்த்தர் நம்மை கைவிட்டுவிட்டார் என்றோ, கர்த்தருடைய விசேஷித்த கிருபைகள் நமக்கு கிடைக்கவில்லை என்றோ பொருளல்ல. கர்த்தர் நம்மீது கண்ணோக்கமாகவே இருக்கிறார்.

ஆபிரகாமின் கடைசி ஆயுசுகாலம் அமைதியாக நடைபெறுவது கர்த்தருடைய விசேஷித்த கிருபை. ஆபிரகாம் இந்தக் காலத்தில் கேத்தூராள் என்னும் பெயர் கொண்ட ஒரு ஸ்திரீயையும் விவாகம்பண்ணியிருக்கிறார் (ஆதி 25:1). சாராள் மரித்த பின்பு, ஆபிரகாம் கேத்தூராளை விவாகம்பண்ணினார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

இது ஆபிரகாமின் இரண்டாம் திருமணம். கேத்தூராள் ஏற்கெனவே ஆபிரகாமின் மறுமனையாட்டியாக இருந்தாள். (1நாளா 1:32) இப்பொழுது அவள் ஆபிரகாமின் இரண்டாம் மனைவியாயிருக்கிறாள்.

கேத்தூராள் ஆபிரகாமுக்குச் சிம்ரானையும், யக்ஷானையும், மேதானையும், மீதியானையும், இஸ்பாக்கையும், சூவாகையும், பெறுகிறாள். இது ஆபிரகாமின் இரண்டாவது குடும்பத்தைப் பற்றிய வம்சவரலாறு. இந்தக் குடும்பத்தில் ஆபிரகாமிற்கும், கேத்தூராளுக்கும் ஆறு குமாரர்களும், ஏழு பேரப்பிள்ளைகளும், மூன்று பேரப்பிள்ளைகளின் பிள்ளைகளும் வருகிறார்கள். (ஆதி 25:1-4).

கேத்தூராளுக்கு பிள்ளைகள் பிறக்கிறார்கள். கேத்தூராள் ஆபிரகாமுக்கு சிம்ரானையும், யக்ஷானையும், மேதானையும், மீதியானையும், இஸ்பாக்கையும், சூவாகையும், பெறுகிறாள். யக்ஷான் சேபாவையும், தேதானையும் பெறுகிறான்; தேதானுடைய குமாரர் அசூரீம், லெத்தூசீம், லெயூமீம் என்பவர்கள். மீதியானுடைய குமாரர் ஏப்பா, ஏப்பேர், ஆனோக்கு, அபீதா, எல்தாகா என்பவர்கள்; இவர்கள் எல்லாரும் கேத்தூராளின் பிள்ளைகள் (ஆதி 25:2-4).

ஆபிரகாமின் இரண்டாம் குடும்பத்தில் மீதியான் முக்கியமானவன். மீதியானும் அவனுடைய குடும்பத்தாரும் வேதாகமத்தில் 67 இடங்களில் கூறப்பட்டிருக்கிறார்கள். ஏசா மீதியானை வென்றான். (ஆதி 36:35). மோசே மீதியானுடைய தேசத்திற்குத் தப்பி ஓடிப்போய், அங்கு மீதியானிய ஸ்திரீ ஒருத்தியை திருமணம் செய்து கொண்டார். (யாத் 2:15-16; யாத் 3:1; யாத் 4:19; யாத் 18:1).

மீதியானியர் இஸ்ரவேலுக்கு ஒரு கண்ணியாக இருந்தார்கள். (எண் 25:1-15) அவர்களோடு யுத்தம் பண்ணுமாறு தேவன் இஸ்ரவேலுக்குக் கட்டளையிட்டார் (எண் 25:16-18; எண் 31: 1-20). பல நூற்றாண்டுகளாக, இஸ்ரவேலர்கள் மீதியானியரோடு அடிக்கடி யுத்தம் பண்ணினார்கள். (யோசு 13:21; நியா 6:1-2; நியா 7:8-25; நியா 8:3-28; நியா 9:17).

கிதியோன் மீதியானியரை முறியடித்தார். மீதியானியருடைய வீழ்ச்சி, "மீதியானியரின் நாள்" என்று அழைக்கப்படுகிறது. (ஏசா 9:4; ஏசா 10:26; சங் 83:9).

ஆபிரகாம் தனக்கு உண்டான யாவையும் ஈசாக்குக்கு கொடுக்கிறார். கர்த்தர் ஆபிரகாமை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார், அவர் சீமானாயிருக்கிறார்; கர்த்தர் அவருக்கு ஆடுமாடுகளையும், வெள்ளியையும், பொன்னையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும், கொடுத்திருக்கிறார் (ஆதி 24:35).

ஆபிரகாம் இந்த சொத்துக்கள் எல்லாவற்றையும் ஈசாக்குக்கு கொடுக்கிறார். ஆபிரகாமுக்கு மறுமனையாட்டிகள் மூலமாகவும் பிள்ளைகள் பிறக்கிறார்கள். ஆனால் அவர் அந்தப் பிள்ளைகளுக்கு தன்னுடைய சொத்துக்களைக் கொடுக்கவில்லை. ஆபிரகாம் அவர்களுக்கு நன்கொடைகளை மாத்திரமே கொடுக்கிறார். ஆபிரகாம் உயிரோடிருக்கும்போதே அவர்களைத் தன் குமாரனாகிய ஈசாக்கைவிட்டுக் கிழக்கேபோகக் கீழ்தேசத்துக்கு அனுப்பிவிடுகிறார் (ஆதி 25:6).

தன்னுடைய குமாரருக்குள் போட்டி பொறாமைகள், சண்டை சச்சரவுகள் எதுவும் வந்துவிடக்கூடாது என்று ஆபிரகாம் மிகுந்த எச்சரிப்போடு இருக்கிறார். ஆகையினால் தனக்கு உண்டான யாவையும் மிகவும் ஞானமாக ஈசாக்கிற்குக் கொடுத்து விடுகிறார். இதன் மூலம் ஆபிரகாமின் மற்ற குமாரர்கள் மற்ற தேசங்களில் குடியேறி விடுகிறார்கள்.

கானான் தேசத்தை தேவன் ஆபிரகாமிற்கும், அவருடைய சந்ததிக்கும் வாக்கு பண்ணியிருக்கிறார். இந்த வாக்குத்தத்தம் ஈசாக்கின் வம்சவழியில் வரவேண்டும். ஆபிரகாமின் மற்ற குமாரர்கள் கானான் தேசத்தைக் குறித்து ஈசாக்கிடம் போட்டிக்கு வரக்கூடாது என்பதற்காக ஆபிரகாம் தனக்கு உண்டான யாவையும் ஈசாக்குக்குக் கொடுக்கிறார். (ஆதி 13:14-17; ஆதி 15:18-21; ஆதி 17:8).

எபிரெயருடைய வழக்கத்தின் பிரகாரம் குடும்பத்தின் பூர்வீக சொத்து, முதலாவது மனைவியின் மூலமாகப் பிறந்த மூத்த மகனுக்குக் கொடுக்கப்படும். மறுமனையாட்டிகள் மூலமாகப் பிறந்த குமாரருக்கு ஒன்றும் கொடுக்கப்படமாட்டாது. மூத்த மனைவிக்குப் பிள்ளை பிறக்காத பட்சத்தில் அவளுடைய அனுமதியோடு குடும்பச் சொத்து பிறருக்குப் பகிர்ந்து கொடுக்கப்படும்.

மேலும் மறுமனையாட்டிகளுக்கும், அவளுடைய பிள்ளைகளுக்கும் வெகுமதிகள் கொடுக்கப் படுவது வழக்கம். இதன் அடிப்படையில் ஆபிரகாம் தனக்கு உண்டான யாவையும் ஈசாக்கிற்குக் கொடுக்கிறார். தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி மற்றவர்களோடு சேராமல், வேறுபிரிக்கப்பட்டிருக்கும். இவ்வாறு வேறுபிரிக்கப்பட்ட சந்ததியிலிருந்து மேசியா பிறப்பார். (ஆதி 12:1-3; ஆதி 13:14; ஆதி 24:3; ஆதி 28:1; யாத் 34:12-16; எண் 23:9; உபா 7:3-4; யோசு 23:12; எஸ்றா 9:1-10:44; நெகே 13).

ஆபிரகாம் தன்னுடைய மறுமனையாட்டியின் பிள்ளைகளை தன் குமாரனாகிய ஈசாக்கை விட்டுக் கிழக்கேபோகக் கீழ்தேசத்துக்கு அனுப்பிவிடுகிறார். கீழ்தேசம் என்பது கானானின் கிழக்குப் பகுதியைக் குறிக்கும். ஆபிரகாம் இங்கு குடியேறினார். மீதியானியர், இஸ்மவேலர், மோவாபியர், ஏதோமியர், ஆகியோர் கானானின் கீழ்த்திசையில் குடியேறினார்கள்.

ஜனங்கள், பிள்ளைகள், கீழ்த்திசையார் ஆகிய பெயர்கள் மொசொப்பொத்தொமியாவிலுள்ள ஆபிரகாமின் சொந்த ஜனங்களைக் குறிக்கும். (ஆதி 29:1).

பரிசுத்த வேதாகமத்தில் "கீழ்த்திசையார்" என்னும் பெயர் ஒரு சில ஜனங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேலுக்கு எதிராக மீதியானியர் யுத்தம் பண்ணினார்கள். இந்த யுத்தத்தில் மீதியானியருக்கு ஒத்துழைப்புக் கொடுத்த பிற தேசத்தார் (நியா 6:3,33; நியா 7:12; நியா 8:10)

2. அரபியாவிற்கு கிழக்குப் பகுதியிலிருந்து யோபுவும் அவனுடைய இனத்தாரும். (யோபு 1:3)

3. பாபிலோனிலும், மற்ற கிழக்குத் தேசங்களிலும் இருந்தவர்கள். (2இராஜா 17:24; ஏசா 2:6; எசே 25:4,10; மத் 2:1)

4. பெர்சியர்கள். (ஏசா 41:2; ஏசா 46:11)

5. அந்திக்கிறிஸ்துவோடு யுத்தம் பண்ணும் சீரியாவிற்குக் கிழக்கிலுள்ள தேசங்களும், பாபிலோனியாவும், பெர்சியாவும். (தானி 11:44)

6. அர்மகெதோன் யுத்தத்தில் அந்திக் கிறிஸ்துவோடு இணைந்து யுத்தம் பண்ணும் சூரியன் உதிக்கும் திசையில் உள்ள ஜனங்கள். (வெளி 16:12).

ஆபிரகாம் இவ்வாறு செய்வது அவருடைய நீதிக்கும், ஞானத்திற்கும் அடையாளமாயிருக்கிறது. அவர் தன்னுடைய வீட்டுக்காரியங்களை ஒழுங்குபடுத்துகிறார். ஆபிரகாமுக்கு ஈசாக்கு சுதந்தரவாளியாயிருக்கிறார். சாராளே ஆபிரகாமின் முதலாவது மனைவி. ஆபிரகாம் விவாகம்பண்ணின மற்ற ஸ்திரீகளெல்லாம், அவருக்கு மறுமனையாட்டிகளாயிருக்கிறார்கள். அந்தப் பிள்ளைகளுக்கு ஆபிரகாமின் சம்பத்தில் பங்கு பாகம் எதுவுமில்லை. ஈசாக்கு மாத்திரமே ஆபிரகாமுக்கு சேஷ்டபுத்திரனாயிருக்கிறார்.

ரெபெக்காள் ஈசாக்கை விவாகம்பண்ணும்போது, ஆபிரகாமின் சம்பத்துக்களெல்லாம் ஈசாக்குக்கு கொடுக்கப்படும் என்று, ஆபிரகாமின் ஊழியக்காரன் சொன்னான். இதின் பிரகாரம் ஆபிரகாமுக்கு உண்டானவையெல்லாம் ஈசாக்குக்கு கொடுக்கப்படவேண்டும்.

"என் எஜமானுடைய மனைவியாகிய சாராள்முதிர்வயதானபோது, என் எஜமானுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்; அவர் தமக்கு உண்டானயாவையும் அவனுக்குக் கொடுத்திருக்கிறார்" (ஆதி 24:36).

கர்த்தர் ஈசாக்கை தம்முடைய வார்த்தையினாலும், வாக்குத்தத்தினாலும் ஆசீர்வதித்திருக்கிறார். ஈசாக்கே ஆபிரகாமின் சுதந்தரவாளி. கர்த்தர் ஈசாக்கின் சந்ததியை ஆசீர்வதிப்பார். ஆகையினால் ஆபிரகாம் தனக்கு உண்டான யாவையும் ஈசாக்குக்கு கொடுக்கிறார்.

ஆபிரகாம் ஈசாக்குக்கு தன்னுடைய சம்பத்துக்களைக் கொடுத்தாலும், தன்னுடைய மற்ற பிள்ளைகளுக்கு அவர் ஒன்றும் கொடுக்காமல் வெறுமையாக விட்டுவிடவில்லை. அடிமைப்பெண்ணாகிய ஆகாருக்கும் ஆபிரகாமுக்கும் பிறந்த இஸ்மவேலுக்கு அவர் ஒன்றும் கொடுக்கவில்லை. ஆபிரகாம் ஆகாருக்கு ஒரு துருத்தியில் தண்ணீர் மாத்திரமே கொடுத்தார். கேத்தூராள் பெற்ற பிள்ளைகளுக்கு ஆபிரகாம் நன்கொடைகளைக் கொடுக்கிறார்.

மறுமனையாட்டியின் பிள்ளைகளுக்கும் பொருளாதார உதவிகளை செய்வது சமூகநீதியாயிருக்கிறது. பெற்றோர் தங்கள் பிள்ளைகளை சரியாகப் பராமரிக்கவில்லையென்றால், அந்தப் பிள்ளைகள் பிற்காலத்தில் துன்மார்க்கராய் வளருவார்கள்.

ஆபிரகாம் தன்னுடைய மறுமனையாட்டிகளின் பிள்ளைகளை, ஈசாக்கைவிட்டு தூரதேசத்திற்கு அனுப்பி வைத்துவிடுகிறார். அந்தப் பிள்ளைகள் எல்லோரும் ஒருவருக்கொருவர் அருகாமையிலிருந்தால், அவர்கள் மத்தியிலே குழப்பங்கள் ஏற்படும். அவர்களுக்குள்ளே வாக்குவாதங்களும், சண்டை சச்சரவுகளும் உண்டாகும்.

ஆபிரகாமுடைய மறுமனையாட்டியின் பிள்ளைகள், ஈசாக்கோடுகூட தங்கியிருந்தால், அவர்கள் பிற்காலத்தில் ஆபிரகாமுடைய சொத்திலே பங்கு கேட்பார்கள். சுதந்தரத்தைப் பிரித்துக் கொடுக்க சொல்லுவார்கள். இதனால் ஆபிரகாமின் குடும்பத்தில் பிரச்சனைகள் வரும். ஆபிரகாம் இதையெல்லாம் ஞானமாக யோசித்துப் பார்த்து, தான் உயிரோடிருக்கும்போதே, அவர்களை தன் குமாரனாகிய ஈசாக்கை விட்டு கிழக்கே போக கீழ்தேசத்திற்கு அனுப்பிவிடுகிறார். ஆபிரகாம் இந்தக் காரியத்தை இப்போது செய்யவில்லையென்றால், இதை அவர் மரித்த பின்பு செய்வதற்கு வாய்ப்பில்லை.

ஆபிரகாம் உயிரோடிருந்த ஆயுசு நாட்கள்நூற்று எழுபத்தைந்து வருஷம். பிற்பாடு ஆபிரகாம் நல்ல நரைவயதிலும், முதிர்ந்த பூரண ஆயுசிலும் பிராணன் போய் மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுகிறார் (ஆதி 25:7,8).

ஆபிரகாம் கானான் தேசத்திற்கு வந்தபோது அவருக்கு 75 வயது. அவர் நூறு வருஷமாக கானான் தேசத்திலே பரதேசியாக சஞ்சரித்துக்கொண்டிருக்கிறார். 175 வருஷம் என்பது ஆபிரகாமுக்கு பூரண ஆயுசாகயிருக்கிறது. அந்த வயதில் அவர் தன் பிராணன் போய் மரிக்கிறார்.

ஆபிரகாம் மரிக்கும்போது யாக்கோபிற்கு பதினைந்து வயது. (ஆதி 25:7) ஆபிரகாம் சேமின் காலத்தில் 75 வருஷங்கள் வாழ்ந்தார். (ஆதி 11:11) ஆபிரகாமின் வம்சவரலாறும் அவருடைய மரணமும் வேதாகமத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகையினால் வேதாகமத்தில் கூறப்பட்டிருப்பதைத் தவிர வேறு எதையும் கூட்டவோ, குறைக்கவோ கூடாது.

ஆபிரகாம் பிராணன் போய் மரித்தார். பழைய ஏற்பாட்டில் இப்படிப்பட்ட வாக்கியம் 11 இடங்களிலும் (ஆதி 25:8,17; ஆதி 35:29; ஆதி 49:33;யோபு 3:11; யோபு 10:18; யோபு 11:20; யோபு 13:19; யோபு 14:10; எரே 15:9; புல 1:19), புதிய ஏற்பாட்டில் 8 இடங்களிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (மத் 27:50; மாற்கு 15:37-39; லூக்கா 23:46; யோவான் 19:30; அப் 5:5,10; அப் 12:23).

சரீர மரணத்தின்போது, உள்ளான மனுஷன் புறம்பான மனுஷனைக் கடந்து போகிறான். சரீரம் ஜீவனற்றதாகிறது. ஆவியும், ஆத்துமாவும் மரிப்பதில்லை. ஆவியும், ஆத்துமாவும் சரீரத்தை விட்டு பிரிந்து போய்விடுவது மரணமாகும். (யாக் 2:26).

ஆபிரகாம் தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டார் என்பது ஒரு எபிரெய வழக்குச் சொல். ஆபிரகாம் மரித்துப் போன தன்னுடைய மூதாதையரோடு சேர்க்கப்பட்டார். மோசேயின் ஆகமங்களில் இந்த வாக்கியம் 11 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஆதி 15:8,17; ஆதி 35:29; ஆதி 49:29,33; எண் 20:24-26; எண் 27:13; எண் 31:2; உபா 32:50) நியாயாதிபதிகள் புஸ்தகத்தில் கூட இந்த வார்த்தை ஒரு தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (நியா 2:10).

ஆபிரகாம் "தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டார்" என்பதற்கு இவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் அடக்கம் பண்ணப்பட்டார்கள் என்பது பொருளல்ல.

ஆபிரகாம் மரிப்பதற்கு பயப்படவில்லை. தான் மரித்துப்போவதைக் குறித்து அவர் வேதனைப்படவோ அல்லது வருத்தப்படவோ இல்லை. அவர் சந்தோஷமாக மரித்துப்போக ஆயத்தமாயிருக்கிறார். ஆவிகளின் பிதாவாகிய தேவனிடத்தில், ஆபிரகாம் தன்னுடைய ஆவியை ஒப்புக்கொடுக்கிறார்.

ஆபிரகாம் நல்ல நரைவயதிலும், முதிர்ந்த பூரண ஆயுசிலும் பிராணன் போய் மரித்துப்போகிறார். கர்த்தர் அவருக்கு பூரண ஆயுசைக்கொடுப்பதாக வாக்குப்பண்ணினார். கர்த்தருடைய கிருபையினால் ஆபிரகாம் 175 வருஷம் உயிரோடிருந்தார். ஆபிரகாம் முதிர்வயதாயிருக்கும்போது, அவருடைய சரீரத்தில் பலவீனங்களும், பிரச்சனைகளும் ஏற்பட்டிருக்கும். ஆபிரகாமின் மரணம், அவருடைய சரீர பலவீனத்திலிருந்து அவருக்கு விடுதலையைக் கொடுக்கிறது. முதிர்வயதிலிருக்கிறவர்களுக்கு அவர்களுடைய மரணமே அவர்களுக்கு மேன்மை.

ஆபிரகாம் மரிக்கும்போது அவர் முதிர்ந்த பூரண ஆயுசிலிருக்கிறார். அவர் ஜீவனோடிருப்பதினால், இந்த உலகம் அவரைப் பார்த்து களைப்படையவில்லை. ஆபிரகாமே இந்த உலகத்தில் ஜீவித்து களைப்படைந்திருக்கிறார். அவர் இப்போது மரிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் நல்ல நரைவயதில் மரிக்காவிட்டாலும், அவர்கள் எப்போது மரிக்கிறார்களோ அதுவே அவர்களுடைய முதிர்ந்த பூரண ஆயுசாகும். அவர்கள் ஜீவனோடிருந்த காலமெல்லாம் கர்த்தருக்குள் சந்தோஷமாயும், பரிபூரணமான திருப்தியாயும் ஜீவித்திருப்பார்கள். இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிப்பதைவிட, பரலோகத்தில் ஜீவிக்கவேண்டும் என்னும் வாஞ்சையோடு, அவர்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் மரணத்திற்காக காத்துக்கொண்டிருப்பார்கள். பரமதேசமே பரிசுத்தவான்களின் வாஞ்சை.

ஆபிரகாம் மரித்து தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுகிறார். மரித்தோரின் கூட்டத்தாரோடு, ஆபிரகாமின் சரீரம் சேர்க்கப்படுகிறது. அவருடைய ஆத்துமா ஆசீர்வதிக்கப்பட்டோரின் கூட்டத்தாரோடு சேர்க்கப்படுகிறது. நம்முடைய மரணம் நம்மை, நம்முடைய ஜனத்தாரோடே சேர்க்கும். நாம் ஜீவனோடிருக்கும்போது, நம்மோடு கூடயிருக்கிற ஜனங்கள் கர்த்தருடைய ஜனமாகவும் இருக்கலாம். அவர்கள் இந்த உலகத்தின் ஜனமாகவும் இருக்கலாம். அவர்கள் எப்படிப்பட்ட ஜனமாகயிருந்தாலும் நாம் மரிக்கும்போது நம்முடைய ஜனத்தாரோடே சேர்க்கப்படுவோம்.

ஆபிரகாமின் குமாரராகிய ஈசாக்கும் இஸ்மவேலும் மம்ரேக்கு எதிரே ஏத்தியனான சோகாரின்குமாரனாகிய எப்பெரோனின் நிலத்திலுள்ள மக்பேலா என்னப்பட்ட குகையிலே அவரை அடக்கம் பண்ணுகிறார்கள் (ஆதி 25:9).

ஈசாக்கும் இஸ்மவேலும் தங்கள் தகப்பனாரை அடக்கம்பண்ணி, அவருக்கு இறுதி மரியாதை செலுத்துகிறார்கள். இதற்கு முன்பு ஈசாக்கும் இஸ்மவேலும் வெவ்வேறு தேசத்திலிருந்தார்கள். ஆனாலும் ஆபிரகாம் மரித்துப்போன செய்தியைக் கேள்விப்பட்டு, அவர்கள் இருவரும் ஒன்றாய்க் கூடிவந்து, மக்பேலா என்னப்பட்ட குகையிலே அவரை அடக்கம்பண்ணுகிறார்கள்.

ஈசாக்கும், இஸ்மவேலும் சிநேகிதர்களாக இருந்திருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் அருகாமையிலே குடியிருந்திருக்கிறார்கள். சுபாவம், மார்க்கம் ஆகியவற்றைக் குறித்து ஆபிரகாமும், ஈசாக்கும் அவனிடத்தில் ஏற்கெனவே பகிர்ந்து பேசியிருக்க வேண்டும். அவர்களுக்குள் பல காரியங்கள் ஒற்றுமையாக இருந்திருக்க வேண்டும்.

ஆபிரகாம் உயிரோடிருந்தபோது ஈசாக்கும் இஸ்மவேலும் பிரிந்திருந்தார்கள். ஆபிரகாம் மரித்துப்போனபோதோ அவர்கள் இருவரும் ஒன்றுசேருகிறார்கள். ஆபிரகாமின் மரணத்தினால், அவருடைய குமாரராகிய ஈசாக்கும் இஸ்மவேலும் ஒப்புரவாகுகிறார்கள்.

ஈசாக்கும் இஸ்மவேலும் ஆபிரகாமின் சரீரத்தை மம்ரேக்கு எதிரே ஏத்தியனான சோகாரின்குமாரனாகிய எப்பெரோனின் நிலத்திலுள்ள மக்பேலா என்னப்பட்ட குகையிலே அடக்கம்பண்ணுகிறார்கள்.

அந்த நிலத்தை ஏத்தின் புத்திரர் கையிலே ஆபிரகாம் வாங்கியிருந்தார்; அங்கே ஆபிரகாமின் மனைவியாகிய சாராளும் ஏற்கெனவே அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறாள் (ஆதி 25:10).

இஸ்மவேலின் வம்சவரலாறு ஆதி 25:11-18

ஆதி 25:11. ஆபிரகாம் மரித்தபின் தேவன் அவன் குமாரனாகிய ஈசாக்கை ஆசீர்வதித்தார். லகாய்ரோயீ என்னும் துரவுக்குச் சமீபமாய் ஈசாக்கு குடியிருந்தான்.

ஆதி 25:12. சாராளுடைய அடிமைப்பெண்ணாகிய எகிப்து தேசத்தாளான ஆகார் ஆபிரகாமுக்குப் பெற்ற குமாரனாகிய இஸ்மவேலின் வம்சவரலாறு:

ஆதி 25:13. பற்பல சந்ததிகளாய்ப் பிரிந்த இஸ்மவேலின் புத்திரருடைய நாமங்களாவன; இஸ்மவேலுடைய மூத்த மகன் நெபாயோத்; பின்பு கேதார், அத்பியேல், மிப்சாம்,

ஆதி 25:14. மிஷ்மா, தூமா, மாசா,

ஆதி 25:15. ஆதார், தேமா, யெத்தூர், நாபீஸ், கேத்மா என்பவைகளே.

ஆதி 25:16. தங்கள் கிராமங்களிலும் அரண்களிலும் குடியிருந்த தங்கள் ஜனத்தாருக்குப் பன்னிரண்டு பிரபுக்களாகிய இஸ்மவேலின் குமாரர்கள் இவர்களே, இவர்களுடைய நாமங்களும் இவைகளே.

ஆதி 25:17. இஸ்மவேலின் வயது நூற்றுமுப்பத்தேழு. பின்பு அவன் பிராணன் போய் மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்.

ஆதி 25:18. அவர்கள் ஆவிலா துவக்கி எகிப்துக்கு எதிராக அசீரியாவுக்கு போகிற வழியிலிருக்கும் சூர்மட்டும் வாசம் பண்ணினார்கள். இது அவன் சகோதரர் எல்லாருக்கும் முன்பாக அவன் குடியேறின பூமி.

மோசே ஆதியாகமம் புஸ்தகத்தை எழுதினார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அவர் ஆபிரகாமின் மரணத்தை எழுதி முடித்தபின்பு ஈசாக்கின் சரித்திரத்தை எழுத ஆரம்பிக்கிறார். "ஆபிரகாம் மரித்தபின் தேவன் அவன் குமாரனாகிய ஈசாக்கை ஆசீர்வதித்தார். லகாய்ரோயீ என்னும் துரவுக்குச் சமீபமாய் ஈசாக்கு குடியிருந்தான்" (ஆதி 25:11) என்று மோசே ஈசாக்கைப்பற்றிச் சொல்லுகிறார்.

ஆனாலும் மோசே ஈசாக்கின் சரித்திரத்தை தொடர்ச்சியாக எழுதாமல், அதற்கு இடையில், இஸ்மவேலின் சரித்திரத்தை எழுத ஆரம்பிக்கிறார். கர்த்தர் ஈசாக்கை ஆசீர்வதித்திருக்கிறார். அவர் இஸ்மவேலையும் ஆசீர்வதித்திருக்கிறார். இஸ்மவேலின் சரித்திரத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்மவேலும் ஆபிரகாமின் குமாரன். கர்த்தர் ஈசாக்குக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களை சொன்னதுபோல, அவர் இஸ்மவேலைக் குறித்தும் சில வாக்குத்தத்தங்களை சொல்லியிருக்கிறார்.

"சாராளுடைய அடிமைப்பெண்ணாகிய எகிப்து தேசத்தாளான ஆகார் ஆபிரகாமுக்குப் பெற்ற குமாரனாகிய இஸ்மவேலின் வம்சவரலாறு" (ஆதி 25:12) என்று இஸ்மவேலின் சரித்திரம் ஆரம்பிக்கப்படுகிறது.

இஸ்மவேலுக்கு பன்னிரண்டு குமாரர்கள் பிறக்கிறார்கள். இவர்கள் பன்னிரண்டு பிரபுக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் எல்லோரும் குடும்பத்தலைவர்கள். காலப்போக்கிலே இந்தப் பிரபுக்கள் பன்னிரண்டுபேரும் தேசங்களாகவும், கோத்திரங்களாகவும், திரளான எண்ணிக்கையுள்ள ஜனங்களாகவும் பலுகிப் பெருகுகிறார்கள். இவர்கள் அரபு தேசத்திலே வாசம்பண்ணுகிறார்கள்.

இஸ்மவேலுடைய பன்னிரண்டு புத்திரரின் பெயர்கள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. "பற்பல சந்ததிகளாய்ப் பிரிந்த இஸ்மவேலின் புத்திரருடைய நாமங்களாவன; இஸ்மவேலுடைய மூத்த மகன் நெபாயோத்;

பின்பு கேதார், அத்பியேல், மிப்சாம், மிஷ்மா, தூமா, மாசா, ஆதார், தேமா, யெத்தூர், நாபீஸ், கேத்மா என்பவைகளே. தங்கள் கிராமங்களிலும் அரண்களிலும் குடியிருந்த தங்கள் ஜனத்தாருக்குப் பன்னிரண்டு பிரபுக்களாகிய இஸ்மவேலின் குமாரர்கள் இவர்களே, இவர்களுடைய நாமங்களும் இவைகளே" (ஆதி 25:13-16).

பரிசுத்தவேதாகமத்தில் மீதியானியரைப்பற்றியும், கேதாரியரைப் பற்றியும் பல சம்பவங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்மவேலின் குமாரரில், "மிஷ்மா, தூமா, மாசா" (ஆதி 25:14) ஆகிய மூன்று பேரின் பெயர்களும் ஒரே வசனத்தில் சேர்த்து சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மூன்று பெயர்களும் நமக்கு ஆவிக்குரிய நல்ல ஆலோசனையைக் கொடுக்கிறது.

மிஷ்மா, தூமா, மாசா என்னும் பெயர்களுக்கு, "கேள், அமைதியாயிரு, தாங்கிக்கொள்" என்று பொருள். யாக்கோபு இந்த சத்தியத்தை தன்னுடைய நிருபத்தில் எழுதியிருக்கிறார்.

"ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்" (யாக் 1:19).

இஸ்மவேலின் புத்திரர் வயல்வெளிகளில் போடப்பட்ட கூடாரங்களில் தங்கியிருக்கிறார்கள். அவர்கள் யுத்தமில்லாமல் சமாதான காலங்களில் செழிப்போடிருக்கிறார்கள். அப்போது அவர்கள் கிராமங்களிலும் அரண்களிலும் குடியிருக்கிறார்கள். இஸ்மவேலின் பிரபுக்கள் சமாதான காலங்களில் வெளிநிலங்களில் போடப்பட்ட கூடாரங்களில் தங்கியிருந்தாலும், யுத்தகாலங்களிலோ அரணான பட்டணங்களில் தங்கியிருக்கிறார்கள்.

இஸ்மவேலின் வயதைப்பற்றியும் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "இஸ்மவேலின் வயது நூற்றுமுப்பத்தேழு. பின்பு அவன் பிராணன் போய் மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்" (ஆதி 25:17).

இந்த வசனத்தில் "மரித்தல்" என்பதற்கான எபிரெய வார்த்தை "நாபால்"என்பதாகும். சாதாரணமாக மரிப்பதற்கு ஆதி 25:8 ஆவது வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தை இங்கு பயன்படுத்தப்படவில்லை. நாபால் என்னும் எபிரெய வார்த்தைக்குச் சீட்டுப்போட்டு பிரிதல் என்று பொருள். ஆதி 16:12 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் இஸ்மவேல் தன் சகோதரன் எல்லோருக்கும் எதிராகக் குடியிருந்தான். சகோதரரை விட்டு பிரிந்து ஜீவித்தான்.

கர்த்தர் இஸ்மவேலையும் ஆசீர்வதித்திருக்கிறார். ஆபிரகாம் இஸ்மவேலுக்காக தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணியபோது, "இஸ்மவேல் உமக்கு முன்பாக பிழைப்பானாக" (ஆதி 17:18) என்று ஜெபம்பண்ணினார். கர்த்தர் ஆபிரகாமின் ஜெபத்தைக்கேட்டு இஸ்மவேலுக்கு நீடித்த ஆயுசைக் கொடுத்திருக்கிறார்.

இஸ்மவேலின் மரணத்தைப்பற்றிச் சொல்லும்போது, "அவன் தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் ஆபிரகாமின் மரணத்தைப்பற்றிச் சொல்லும்போது "ஆபிரகாம் நல்ல நரைவயதிலும், முதிர்ந்த பூரண ஆயுசிலும் பிராணன் போய் மரித்தார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுபோன்ற வார்த்தைகள் இஸ்மவேலின் மரணத்துக்கு சொல்லப்படவில்லை. இஸ்மவேலும் தன்னுடைய சிநேகிதரோடு சேர்க்கப்பட்டான். இதுவே அவனுக்கு ஆறுதல்.

இஸ்மவேலின் பிரபுக்கள் ஆவிலா துவக்கி எகிப்துக்கு எதிராக அசீரியாவுக்கு போகிற வழியிலிருக்கும் சூர்மட்டும் வாசம் பண்ணுகிறார்கள். இதுவே இஸ்மவேல் தன் சகோதரர் எல்லாருக்கும் முன்பாக குடியேறின பூமி (ஆதி 25:18).

ஈசாக்குடைய வம்சவரலாறு ஆதி 25:19-28

ஆதி 25:19. ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்குடைய வரலாறு; ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்.

ஆதி 25:20. ஈசாக்கு ரெபெக்காளை விவாகம் பண்ணுகிறபோது நாற்பது வயதாயிருந்தான்; இவள் பதான்அராம் என்னும் சீரியா தேசத்தானாகிய பெத்துவேலுக்குக் குமாரத்தியும், சீரியா தேசத்தானாகிய லாபானுக்குச் சகோதரியுமானவள்.

ஆதி 25:21. மலடியாயிருந்த தன் மனைவிக்காக ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான்; கர்த்தர் அவன் வேண்டுதலைக் கேட்டருளினார்; அவன் மனைவி ரெபெக்காள் கர்ப்பந்தரித்தாள்.

ஆதி 25:22. அவள் கர்ப்பத்திலே பிள்ளைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருந்தன; அப்பொழுது அவள்: இப்படியானால் எனக்கு எப்படியோ என்று சொல்லி, கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி போனாள்.

ஆதி 25:23. அதற்குக் கர்த்தர்: இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது; இரண்டுவித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும், அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப் பார்க்கிலும் பலத்திருப்பார்கள், மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்றார்.

ஆதி 25:24. பிரசவகாலம் பூரணமானபோது, அவள் கர்ப்பத்தில் இரட்டைப் பிள்ளைகள் இருந்தது.

ஆதி 25:25. மூத்தவன் சிவந்த நிறமுள்ளவனாயும் சர்வாங்கமும் ரோம அங்கி போர்த்தவன் போலவும் வெளிப்பட்டான்; அவனுக்கு ஏசா என்று பேரிட்டார்கள்.

ஆதி 25:26. பின்பு, அவன் சகோதரன் தன் கையினாலே ஏசாவின் குதிங்காலைப் பிடித்துக்கொண்டு வெளிப்பட்டான்; அவனுக்கு யாக்கோபு என்று பேரிட்டார்கள்; இவர்களை அவள் பெற்றபோது ஈசாக்கு அறுபது வயதாயிருந்தான்.

ஆதி 25:27. இந்தப் பிள்ளைகள் பெரியவர்களானபோது, ஏசா வேட்டையில் வல்லவனும் வனசஞ்சாரியுமாய் இருந்தான்; யாக்கோபு குணசாலியும் கூடாரவாசியுமாய் இருந்தான்.

ஆதி 25:28. ஏசா வேட்டையாடிக் கொண்டுவருகிறது ஈசாக்கினுடைய வாய்க்கு ருசிகரமாயிருந்ததினாலே ஏசாவின்மேல் பட்சமாயிருந்தான்; ரெபெக்காளோ யாக்கோபின்மேல் பட்சமாயிருந்தாள்.

ஈசாக்குடைய வம்சவரலாற்றைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் யாக்கோபு, ஏசா ஆகிய இரண்டு குமாரர் பிறக்கிறார்கள். இந்தக் குமாரர்கள் இருவரும் இந்த உலகத்தில் பிரவேசிப்பதைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஈசாக்கு அமைதியான சுபாவமுள்ளவர். அவர் புதிய காரியங்கள் எதையும் முயற்சிபண்ணி செய்து முடித்ததாக பரிசுத்தவேதாகமத்தில் சொல்லப்படவில்லை. அவர் தன்னுடைய ஜீவியகாலம் முழுவதையும் அமைதியாக செலவு பண்ணுகிறார்.

ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்குடைய வம்சவரலாற்றைப்பற்றி சொல்லும்போது, "ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்" என்று அந்த வரலாறு ஆரம்பமாகிறது (ஆதி 25:19).

ஈசாக்கு ரெபெக்காளை விவாகம் பண்ணுகிறபோது நாற்பது வயதாயிருக்கிறார்; இவள் பதான்அராம் என்னும் சீரியா தேசத்தானாகிய பெத்துவேலுக்குக் குமாரத்தியும், சீரியா தேசத்தானாகிய லாபானுக்குச் சகோதரியுமானவள் (ஆதி 25:20).

ஈசாக்கின் மனைவியாகிய ரெபெக்காள் பல வருஷம் பிள்ளையில்லாமல் மலடியாயிருக்கிறாள். மலடியாயிருந்த தன் மனைவிக்காக ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்கிறார்;கர்த்தர் ஈசாக்கின் வேண்டுதலைக் கேட்டருளுகிறார்; ஈசாக்கின் மனைவி ரெபெக்காள் கர்ப்பந்தரிக்கிறாள் (ஆதி 25:21).

ஈசாக்கு ரெபெக்காளை திருமணம் செய்துகொண்டபோது அவருக்கு நாற்பது வயதாயிற்று. ரெபெக்காள் யாக்கோபையும் ஏசாவையும் பெற்றபோது ஈசாக்கு அறுபது வயதாயிருக்கிறார் (ஆதி 25:26). ஈசாக்கு ரெபெக்காளை திருமணம் செய்தபின்பு, இருபது வருஷகாலமாக பிள்ளையில்லாதிருக்கிறார்.

ஈசாக்கு மலடியாயிருக்கிற தன் மனைவி ரெபெக்காளுக்காக கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்கிறார். அவர் தன் மனைவியோடுகூட கர்த்தரிடத்தில் வேண்டுதல் செய்கிறார் என்றும் வேதபண்டிதர்கள் இந்த வாக்கியத்திற்கு விளக்கம் சொல்லுகிறார்கள். கணவனும் மனைவியும் கர்த்தரிடத்தில் கூடி ஜெபிக்கவேண்டும்.

யூதருடைய பாரம்பரிய சரித்திரத்தில் ஈசாக்கின் ஜெபத்தைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அவர் தன் மனைவி ரெபெக்காளோடு மோரியா மலைக்கு போனார் என்றும், அங்கே அவர்கள் இருவரும் கர்த்தரிடத்தில் வேண்டுதல் பண்ணினார்கள் என்றும் யூதமார்க்கத்து ரபீமார்கள் சொல்லுகிறார்கள். ஆபிரகாமின் சந்ததி திரளாய்ப் பெருகும் என்று கர்த்தர் மோரியா மலையிலே வாக்குத்தத்தம்பண்ணினார்.

"நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்" (ஆதி 22:17).

கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணின மோரியா மலைக்கு, ஈசாக்கு தன் மனைவி ரெபெக்காளை அழைத்துக்கொண்டு போனார் என்றும், அங்கே அவர்கள் இருவரும் அந்த வாக்குத்தத்தம் நிறைவேண்டும் என்று ஜெபம்பண்ணினார்கள் என்றும் யூதருடைய பாரம்பரிய சரித்திரம் சொல்லுகிறது.

கர்த்தர் ஈசாக்கின் வேண்டுதலைக் கேட்டருளுகிறார். அவருடைய மனைவி ரெபெக்காள் கர்ப்பந்தரிக்கிறாள். ஈசாக்கின் கர்ப்பத்திலே இரண்டு பிள்ளைகள் உண்டாயிருக்கிறது. அந்தப் பிள்ளைகள் பிறப்பதற்கு முன்பாகவே, அந்தப் பிள்ளைகளைப்பற்றிய தீர்க்கதரிசனம் சொல்லப்படுகிறது. ரெபெக்காளின் கர்ப்பத்திலே பிள்ளைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருகிறது (ஆதி 25:22).

தன்னுடைய கர்ப்பத்தில் இரண்டு பிள்ளைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருப்பதை அறிந்து, ரெபெக்காள் கலக்கமடைகிறாள். ரெபெக்காளின் கர்ப்பத்திலிருக்கிற யாக்கோபும் ஏசாவும், தங்கள் தாயின் கர்ப்பத்திலிருக்கும்போதே, ஒருவரோடொருவர் மோதிக்கொள்கிறார்கள்.

இரண்டு பிள்ளைகளும் ஒன்றோடொன்று மோதிக்கொள்வது, இரண்டு ராஜ்யங்கள் ஒன்றோடொன்று மோதிக்கொள்வதற்கு அடையாளமாயிருக்கிறது. இரண்டு ராஜ்யங்களில் ஒன்று தேவனுடைய ராஜ்யம். மற்றொன்று சாத்தானுடைய ராஜ்யம். சாத்தானுடைய அரண்மனையில் இருக்கும் சமாதானத்தைவிட, பரிசுத்தமான யுத்தமே மேன்மையானது.

தன்னுடைய கர்ப்பத்தில் இரண்டு பிள்ளைகளும் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருப்பதன் அர்த்தம் என்ன என்று ரெபெக்காளுக்கு தெரியவில்லை. ஆகையினால் அவள் இதுபற்றி விசாரிப்பதற்காக கர்த்தரிடத்தில் போகிறாள்.

தன்னுடைய கர்ப்பத்திலே பிள்ளைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருப்பதினால், "எனக்கு எப்படியோ" என்று சொல்லி, ரெபெக்காள் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படிபோகிறாள்.

ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்ததினால் ரெபெக்காள் கர்ப்பமடைந்தாள். ஆனால் அவள் கர்ப்பத்திலே பிள்ளைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருக்கிறது. இதனால் தனக்கு என்ன ஆகுமோ என்று நினைத்து கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி போகிறாள். கர்த்தர் அவளுக்குக் கொடுத்த பதில் ஆதி 25:23 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

நம்முடைய மனதில் குழப்பம் இருக்கும்போது, அந்தக் குழப்பத்தை நீக்குவதற்கும், தெளிவு பெறுவதற்கும், நாம் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக போகவேண்டும். கர்த்தருடைய ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளவேண்டும். "நான் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்தேன்" (சங் 73:17).

ரெபெக்காள் தன்னுடைய மனதில் ஏற்பட்ட குழப்பத்தை விசாரிக்கும்படி கர்த்தரிடத்தில் போகிறாள். கர்த்தர் அவளுடைய குழப்பத்தை நீக்குகிறார். கர்த்தர் ரெபெக்காளை நோக்கி, "இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது; இரண்டுவித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும், அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும் பலத்திருப்பார்கள், மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்" (ஆதி 25:23) என்று சொல்லுகிறார்.

இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. யாக்கோபிற்கும், ஏசாவிற்கும் இடையே நடைபெறும் சண்டைகளைக் குறித்து இந்தத் தீர்க்கதரிசனம் கூறுகிறது. அவர்களுடைய சந்ததிகளில் இந்தத் தீர்க்கதரிசனம் பலசந்தர்ப்பங்களில் ஓரளவு நிறைவேறிற்று.

ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் இந்தத் தீர்க்கதரிசனம் பூரணமாக நிறைவேறும். அப்போது மேசியாவின் தலைமையின்கீழ் இஸ்ரவேல் எல்லா தேசங்களுக்கும் தலையாக இருக்கும். (ஏசா 2:2-4; ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-18; சக 14; செப் 3:14-17; வெளி 11:13).

ரெபெக்காளின் கர்ப்பத்தில் இரண்டு ஜாதிகள் உண்டாயிருக்கிறது. ஆதி 9:24-27; ஆதி 17:20; ஆதி 19:33-38; ஆதி 25:1-6; அப் 17:26 ஆகிய வசனங்களும், வேதாகமத்தில் மேலும் பல வசனங்களும் ஜலப்பிரளயத்திற்குப் பின்பு பூமியில் வெவ்வேறு ஜாதிகள் எவ்வாறு தோன்றிற்று என்பதை விளக்குகிறது.

மார்க்கம், பழக்கவழக்கம், சுபாவம் ஆகிய எல்லாவற்றிலும் ஏதோமியரும், இஸ்ரவேலரும் பூர்வ காலத்திலிருந்தே பிரிந்திருக்கிறார்கள். ஏதோமியர் விக்கிரகாராதனைக்காரர்கள். (2நாளா 25:20). அவர்களுடைய வரலாற்றில் பல காலங்களில் அவர்கள் யூதரோடு யுத்தம் பண்ணியிருக்கிறார்கள். (யாத் 15:15; எண் 20:14-21; 1சாமு 14:47; 2சாமு 8:14; 1இராஜா 11:15; 2இராஜா 8:20-22; 2இராஜா 14:7,10; எசே 25:12-14).

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் பலவற்றில் ஏதோமைக் குறித்து தீர்க்கதரிசனம் கூறப்பட்டிருக்கிறது. (யாத் 15:15; எண் 24:18; சங் 60:8-10; ஏசா 11:14; ஏசா 63:1; எரே 9:26; எரே 25:21; எரே 27:3; எரே 49:7-22; எசே 25:12-14; எசே 32:29; தானி 11:41; யோவே 3:19; ஆமோ 1:6-11; ஆமோ 2:1; ஆமோ 9:12; ஒப 1:1-10; மல் 1:4).

"அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும் பலத்திருப்பார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசாவின் குடும்பத்தார் (ஏதோமியர்) ஆரம்பத்தில் யாக்கோபின் குடும்பத்தாரைவிட (இஸ்ரவேலர்) பலத்திருக்கிறார்கள். இஸ்ரவேலுக்குப் பிரபுக்களும், ராஜாக்களும் வருவதற்கு முன்பாகவே ஏதோமியருக்கு பிரபுக்களும், ராஜாக்களும் இருந்தார்கள். (ஆதி 36).

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலர்கள் விடுவிக்கப்பட்டு, ஏதோமியரின் தேசத்தின் வழியாக இஸ்ரவேல் பிரயாணமான போது, அவர்களை எதிர்க்கும் அளவிற்கு ஏதோமியர் வலிமை பெற்றிருந்தார்கள் (எண் 20).

இதன் பின்பு, தாவீது ஏதோமியரை முழுவதுமாக முறியடித்தார். இஸ்ரவேலின் ஆட்சிக்குக்கீழ் அவர்கள் 150 வருஷங்கள் கட்டுப்பட்டிருந்தார்கள் (2சாமு 8:14). பாபிலோனிய சிறையிருப்பிற்குப் பின்பு, மக்கபேயர்கள் ஏதோமியரை யூதமார்க்கத்தை ஏற்றுக் கொள்ளுமாறும், இல்லையென்றால் அவர்களுடைய ஊரை விட்டு அவர்கள் வெளியேற வேண்டுமென்றும் வலியுறுத்தினார்கள்.

இதன் பின்பு, ஏதோமியர்கள் இஸ்ரவேலின் ஆளுகைக்குக் கீழ் வந்தார்கள். ஆயிரம்வருஷ அரசாட்சியில் ஏதோமியர் மறுபடியும் இஸ்ரவேலின் ஆளுகைக்குக்கீழ் இருப்பார்கள். (சங் 60:8-10; ஏசா 11:14; ஏசா 63:1; ஆமோ 9:12).

யாக்கோபும் ஏசாவும் இரட்டைப் பிள்ளைகள் பரிசுத்த வேதாகமத்தில் ஒரு சில இரட்டைப்பிள்ளைகளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. யாக்கோபும், ஏசாவும் (ஆதி 25:24-28)
2. பாரேசும், சேராவும் (ஆதி 38:25-30)
3. திதிமு என்னப்பட்ட தோமோவும், அவனுடைய சகோதரன் அல்லது சகோதரியும் (யோவான் 11:16; யோவான் 20:24; யோவான் 21:2)

ரெபெக்காளுடைய கர்ப்பத்திலே இரண்டு பிள்ளைகள் இருக்கிறது. அவை இரண்டும் இரண்டு ஜனத்தாராயிருக்கிறது. ரெபெக்காள் இரண்டு பிள்ளைகளுக்கு தாயாகயிருக்கிறாள். இதன் மூலமாக அவள் இரண்டு தேசங்களுக்கு தாயாகயிருக்கிறாள். அந்த தேசங்களின் ஜனத்தார் ஒத்த குணமுள்ளவர்களாகயிருக்கமாட்டார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் மோதிக்கொள்வார்கள். ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும் பலத்திருப்பார்கள்.

ரெபெக்காளின் வயிற்றில் வளருகிற இரண்டு பிள்ளைகளின் சுபாவங்களும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயிருக்கும். ரெபெக்காளின் இரண்டு பிள்ளைகளில், மூத்தவன் இளையவனை சேவிப்பான் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் சொல்லுகிற இந்த வார்த்தை, தாவீது ராஜாவின் காலத்தில் நிறைவேறிற்று. ஏசா ஏதோமியருக்கு முற்பிதாவாகயிருக்கிறான். தாவீதின் வீட்டார், ஏதோமியரை அநேக வருஷங்களாக ஆளுகை செய்தார்கள். ஏதோமியர்கள் தாவீதின் வீட்டாருக்கு விரோதமாகக் கலகம்பண்ணும் வரையிலும், அவர்கள் தாவீதின் வீட்டாரை சேவித்தார்கள்.

"அவன் நாட்களில் யூதாவுடைய கையின்கீழிருந்த ஏதோமியர் கலகம் பண்ணி, தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்திக்கொண்டார்கள்" (2நாளா 21:8).

ரெபெக்காளின் வயிற்றிலிருக்கிற இரண்டு பிள்ளைகளைப்பற்றி வேதபண்டிதர்கள் பல்வேறு விளக்கங்களை சொல்லுகிறார்கள். அவர்கள் இருவரும் தேவனுடைய கிருபைக்கும், மனுஷருடைய அக்கிரமத்திற்கும் அடையாளமாயிருக்கிறார்கள் என்பது ஒரு வியாக்கியானம்.

ரெபெக்காளின் கர்ப்பத்திலிருக்கிற இரண்டு பிள்ளைகளும் ஒன்றோடொன்று மோதிக்கொள்வதுபோல, மனுஷருடைய அக்கிரமத்திற்கு விரோதமாக தேவனுடைய கிருபை எப்போதும் போராடுகிறது. இந்தப் போராட்டத்தின் முடிவில் தேவனுடைய கிருபையே ஜெயம் பெறுகிறது.

ரெபெக்காளின் கர்ப்பத்திலிருக்கிற இரண்டு பிள்ளைகளின் சுபாவங்களும் வித்தியாசமாயிருப்பதுபோல, அவர்களுடைய சரீரங்களின் தோற்றமும் வித்தியாசமாயிருக்கிறது. ஒருவன் சிவந்த நிறமுள்ளவனாகவும், அவனுடைய சரீரம் முழுவதும் ரோமம் அடர்ந்தவனாகவும் இருக்கிறான். மற்றவன் இவனைப்போல சிவப்பாகவும் இல்லை. ஏசாவுக்கு அடர்ந்த ரோமம் இருப்பதுபோல யாக்கோபுக்கு அடர்ந்த ரோமம் இல்லை.

பிரசவகாலம் பூரணமானபோது, அவள் கர்ப்பத்தில் இரட்டைப் பிள்ளைகள் இருக்கிறது. மூத்தவன் சிவந்த நிறமுள்ளவனாயும் சர்வாங்கமும் ரோம அங்கி போர்த்தவன் போலவும் வெளிப்படுகிறான்; அவனுக்கு ஏசா என்று பேரிடுகிறார்கள். பின்பு, அவன் சகோதரன் தன் கையினாலே ஏசாவின் குதிங்காலைப் பிடித்துக்கொண்டு வெளிப்படுகிறான்; அவனுக்கு யாக்கோபு என்று பேரிடுகிறார்கள் (ஆதி 25:24-26).

ரெபெக்காளின் கர்ப்பத்திலிருக்கிற இரண்டு பிள்ளைகளில் மூத்தவனாகிய ஏசா முதலாவதாக வெளிப்படுகிறான். இவன் பலமுள்ளவன். சுறுசுறுப்பான சுபாவமுள்ளவன். இரண்டாவதாக வெளிப்படுகிற யாக்கோபோ மிகவும் அமைதியானவன். இவன் சரீரத்தில் பலவீனமானவன்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக திட்டத்தின் பிரகாரமாக, இந்த உலகத்தில் பலமுள்ளவர்களை தமக்காக தெரிந்துகொள்ளாமல், பலவீனமானவர்களையே தமக்காக தெரிந்துகொள்கிறார். இதுவே தேவனுடைய தெய்வீக திட்டமாயிருக்கிறது.

"எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்" (1கொரி 1:26,27).

ஏசாவும் யாக்கோபும் ரெபெக்காளின் கர்ப்பத்திலிருந்தபோதே, அவர்கள் இருவரும் ஒருவரோடொருவர் மோதிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் மற்றவனைப் பார்க்கிலும் பலத்தவனாயிருக்கிறான். அவர்கள் இருவருடைய சுபாவங்களும், உருவமும் வித்தியாசமாயிருப்பதுபோல, அவர்கள் செய்கிற தொழிலும், வாழ்க்கை முறையும் வித்தியாசமாயிருக்கிறது.

ரெபெக்காள் ஏசாவையும் யாக்கோபையும் பெற்றபோது, ஈசாக்கு அறுபது வயதாயிருக்கிறார். ஒரு குமாரனைப் பெற்றெடுப்பதற்கு ஆபிரகாம் 25 வருஷங்கள் காத்திருந்தார். (ஆதி 12:4; ஆதி 21:5) ஈசாக்கு 20 வருஷங்கள் காத்திருந்தார். (ஆதி 25:20,26) ஈசாக்கு பிறந்தபோது ஆபிரகாமின் வயது 100. (ஆதி 7:17; ஆதி 21:5). யாக்கோபும், அவனுடைய சகோதரனாகிய ஏசாவும் பிறந்தபோது ஈசாக்கிற்கு வயது 60. (ஆதி 25:26).

இந்தப் பிள்ளைகள் பெரியவர்களானபோது, ஏசா வேட்டையில் வல்லவனும் வனசஞ்சாரியுமாய் இருக்கிறான்; யாக்கோபு குணசாலியும் கூடாரவாசியுமாய் இருக்கிறான் (ஆதி 25:27).

ஏசா இந்தப் பிரபஞ்சத்து மனுஷன். அவன் வேட்டையில் பிரியமுள்ளவன். ஏசா நிம்ரோத்தைப்போலவும், இஸ்மவேலைப் போலவும் வனசஞ்சாரியாயிருக்கிறான். ஏசா மிருகங்களை வேட்டையாடுவதில் வல்லவனாயிருக்கிறான்.

யாக்கோபோ இப்பிரபஞ்சத்து மனுஷனாயிராமல், பரமராஜ்யத்தின் மனுஷனாயிருக்கிறான். அவனுக்கு இந்தப் பிரபஞ்சத்தில் பெரியவனாயிருக்கவேண்டும் என்றோ அல்லது வல்லவனாயிருக்கவேண்டும் என்றோ வாஞ்சையில்லை. யாக்கோபு கூடாரவாசியாயிருக்கிறான். மிருகங்களை வேட்டையாடுகிற ஏசா தந்திரகுணமுள்ளவன். கூடாரத்தில் வாசம்பண்ணுகிற யாக்கோபோ குணசாலியாயிருக்கிறான்.

யாக்கோபு தனிமையான இடங்களைத் தேடிச்சென்று, அங்கே கர்த்தரைப்பற்றித் தியானிப்பான். அவனுக்கு உலகப்பிரகாரமான காரியங்களில் ஆர்வம் இருக்காது. வனாந்தரத்தில் சுற்றி அலையவேண்டும் என்னும் விருப்பமும் அவனுக்கு இருக்காது. யாக்கோபு உலகப்பிரகாரமான சந்தடிகளையும், ஆரவாரங்களையும் விட்டுவிலகி, கூடாரங்களில் வாசம்பண்ண விரும்புகிறான்.

யாக்கோபு ஆடுகளை மேய்க்கிறவன். ஆடுகளை மேய்ப்பது அமைதியான தொழில். அவன் ஆடுகளைப் பராமரிப்பதுபோல தன்னுடைய பிள்ளைகளையும் பராமரிக்கிறான்.

"நீங்கள், கோசேன் நாட்டிலே குடியிருக்கும்படி, அவனை நோக்கி: எங்கள் பிதாக்களைப்போல, உமது அடியாராகிய நாங்களும் எங்கள் சிறுவயதுமுதல் இதுவரைக்கும் மேய்ப்பர்களாயிருக்கிறோம் என்று சொல்லுங்கள்; மேய்ப்பர்கள் எல்லாரும் எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கிறார்கள் என்றான்" (ஆதி 46:34).

யாக்கோபு ஒரு மாணவனைப்போல கூடாரவாசியாயிருக்கிறான். அவன் மெல்கிசேதேக்கின் கூடாரங்களுக்கு அடிக்கடி போவான் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் யாக்கோபுக்கு ஆவிக்குரிய சத்தியங்களை போதிக்கிறார்கள். இதனால் யாக்கோபு குணசாலியாயிருக்கிறான்.

ஈசாக்குக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தாலும், கர்த்தருடைய வாக்குத்தத்தம் யாக்கோபுக்கு மாத்திரமே கொடுக்கப்படுகிறது. கர்த்தர் ஈசாக்கின் சந்ததியை ஆசீர்வதிக்கிறார். அவர் யாக்கோபின் மூலமாய் வரும் ஈசாக்கின் சந்ததியை ஆசீர்வதிக்கிறார்.

ரெபெக்காளின் கர்ப்பத்தில் பிறக்கிற இரண்டு பிள்கைளும் சுபாவங்களிலும், ரூபங்களிலும் வித்தியாசமாயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பெற்றோர்மீது வைத்திருக்கிற அன்பும் வித்தியாசமாயிருக்கிறது.

ஏசா வேட்டையாடிக் கொண்டுவருகிறது ஈசாக்கினுடைய வாய்க்கு ருசிகரமாயிருந்ததினாலே, அவர் ஏசாவின்மேல் பட்சமாயிருக்கிறார்; ரெபெக்காளோ யாக்கோபின்மேல் பட்சமாயிருக்கிறாள் (ஆதி 25:28). ஏசா ஈசாக்குக்குப் பிரியமானவன். யாக்கோபு ரெபெக்காளுக்கு பிரியமானவன்.

ஏசா வனசஞ்சாரியாயிருந்து, வேட்டையில் வல்லவனாயிருப்பது ஈசாக்குக்கு பிடித்திருக்கிறது. ஏசா சுறுசுறுப்பாயிருப்பதை ஈசாக்கு விரும்புகிறார். ஏசாவுக்கும் தன் தகப்பன் ஈசாக்கை எவ்வாறு பிரியப்படுத்துவது என்று தெரிந்திருக்கிறது. ஏசா வேட்டையாடிக்கொண்டு வருகிற மிருகங்கள் எல்லாம் ஈசாக்கின் வாய்க்கு ருசியாயிருக்கிறது. இதனால் ஈசாக்கு ஏசாவின் மீது பிரியமாயிருக்கிறார்.

ரெபெக்காளோ தன் கூடாரத்திலிருக்கிறவள். யாக்கோபும் கூடாரவாசியாயிருக்கிறான். அவன் தன் தாயாருக்கு வீட்டு வேலைகளில் உதவிசெய்கிறான். இதனால் ரெபெக்காள் யாக்கோபின்மீது பிரியமாயிருக்கிறாள்.

ரெபெக்காள் கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை தியானித்துக்கொண்டிருக்கிறாள். மூத்தவன் இளையவனை சேவிப்பான் என்று கர்த்தர் சொன்னார். இந்த வாக்கியத்திற்கு, ஏசா யாக்கோபை சேவிப்பான் என்று பொருள். கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும் என்று ரெபெக்காள் நம்புகிறாள். ஆகையினால் அவள் யாக்கோபின்மேல் பட்சமாயும் பிரியமாயும் இருக்கிறாள்.

ஏசாவின் சேஷ்ட புத்திரபாகம் ஆதி 25:29-34

ஆதி 25:29. ஒருநாள் ஏசா வெளியிலிருந்து களைத்து வந்தபோது, யாக்கோபு கூழ் சமைத்துக்கொண்டிருந்தான்.

ஆதி 25:30. அப்பொழுது ஏசா யாக்கோபை நோக்கி: அந்தச் சிவப்பான கூழிலே நான் சாப்பிடக் கொஞ்சம் தா, இளைத்திருக்கிறேன் என்றான்; இதனாலே அவனுக்கு ஏதோம் என்கிற பேர் உண்டாயிற்று.

ஆதி 25:31. அப்பொழுது யாக்கோபு: உன் சேஷ்ட புத்திரபாகத்தை இன்று எனக்கு விற்றுப்போடு என்றான்.

ஆதி 25:32. அதற்கு ஏசா: இதோ, நான் சாகப்போகிறேனே, இந்தச் சேஷ்ட புத்திரபாகம் எனக்கு என்னத்திற்கு என்றான்.

ஆதி 25:33. அப்பொழுது யாக்கோபு: இன்று எனக்கு ஆணையிட்டுக்கொடு என்றான்; அவன் யாக்கோபுக்கு ஆணையிட்டு, தன் சேஷ்ட புத்திரபாகத்தை அவனுக்கு விற்றுப்போட்டான்.

ஆதி 25:34. அப்பொழுது யாக்கோபு ஏசாவுக்கு அப்பத்தையும் பயற்றங்கூழையும் கொடுத்தான்; அவன் புசித்துக் குடித்து எழுந்திருந்து போய்விட்டான். இப்படி ஏசா தன் சேஷ்ட புத்திரபாகத்தை அலட்சியம் பண்ணினான்.

ஏசா ஈசாக்கின் மூத்த குமாரன். இயற்கையான பிறப்பின் பிரகாரம் ஏசாவுக்கே சேஷ்டபுத்திர பாகம் சொந்தமானது. ஆனாலும் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின் பிரகாரமாக சேஷ்டபுத்திர பாகம் யாக்கோபுக்கு சொந்தமாயிருக்கிறது. இது யாக்கோபுக்கு கிடைத்திருக்கிற ஆவிக்குரிய சிலாக்கியம்.

பூர்வகாலத்தில் சேஷ்டபுத்திர பாகத்தோடு, விசேஷித்த ஆசீர்வாதங்கள் சேர்ந்து வருகிறது. ஆகையினால் சேஷ்ட புத்திரபாகத்திற்கு முக்கியத்துவம் உண்டு.

சேஷ்டபுத்திரபாகம் தனக்கு கிடைக்கவேண்டுமென்று யாக்கோபு விரும்புகிறான். ஆனால் அவன் அதை நேர்மையான வழியில் பெற்றுக்கொள்ளாமல், மறைமுகமான வழியில் பெற்றுக்கொள்கிறான். சேஷ்டபுத்திரபாகம் என்பது ஒரு விசேஷித்த ஆசீர்வாதம். இது ஒரு நல்ல ஈவு. யாக்கோபு நல்ல ஈவுகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று வாஞ்சிக்கிறான். யாக்கோபின் வாஞ்சையில் தப்பிதம் எதுவுமில்லை. ஆனால் அவன் சேஷ்டபுத்திர பாகத்தை பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளும் முறை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. அதை நியாயப்படுத்தவும் முடியாது.

யாக்கோபு தன்னுடைய சகோதரன் ஏசாவின் தேவையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி, அவனோடு பேரம்பேசி, சேஷ்டபுத்திர பாகத்தைப் பெற்றுக்கொள்கிறான்.

ஒருநாள் ஏசா வெளியிலிருந்து களைத்து வந்தபோது, யாக்கோபு கூழ் சமைத்துக்கொண்டிருக்கிறான். அப்பொழுது ஏசா யாக்கோபை நோக்கி: "அந்தச் சிவப்பான கூழிலே நான் சாப்பிடக் கொஞ்சம் தா, இளைத்திருக்கிறேன்" என்று சொல்லுகிறான். அப்பொழுது யாக்கோபு: "உன் சேஷ்ட புத்திரபாகத்தை இன்று எனக்கு விற்றுப்போடு" (ஆதி 25:29-31) என்று கேட்கிறான்.

சேஷ்டபுத்திரபாகம் மிகவும் ஆசீர்வாதமானது. பரிசுத்த வேதாகமத்தில் சேஷ்டபுத்திரபாகத்தின் ஆசீர்வாதங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. குடும்ப சுதந்தரவீதம். (ஆதி 25:5)

2. குடும்ப தலைமைஸ்தானம். (ஆதி 24:65; ஆதி 25:5; ஆதி 27:29,37)

3. தகப்பனின் ஆசீர்வாதம் (ஆதி 27:4, 27-38)

4. குடும்பத்தலைவரும், ஆசாரியரும் (ஆதி 26:25; ஆதி 35:3-7)

5. குடும்ப நிலங்கள் எல்லாவற்றிலும் விசேஷித்த சுதந்தரம் (ஆதி 25:5-6; ஆதி 27:28,37; ஆதி 28:4; ஆதி 35:12)

6. சந்ததி பலுகிப்பெருகுதல். (ஆதி 13:16; ஆதி 15:5; ஆதி 17:2,5; ஆதி 22:17; ஆதி 26:4,24; ஆதி 28:3,14; ஆதி 32:12; ஆதி 35:11)

7. விசேஷித்த பராமரிப்பு (ஆதி 12:2-3; ஆதி 26:3-4,24; ஆதி 27:28; ஆதி 28:15)

8. தனிப்பட்ட ஆசீர்வாதங்கள் (ஆதி 12:2; ஆதி 22:17; ஆதி 26:3)

9. பெரிய பெயர் (ஆதி 12:2; ஆதி 27:28-29,37)

10. எல்லா தேசங்களுக்கும் ஆசீர்வாதம். (ஆதி 12:2-3; ஆதி 18:18; ஆதி 22:18; ஆதி 26:4; ஆதி 28:14)

11. நித்திய சுதந்தரம் (ஆதி 13:15; ஆதி 17:7-8; ஆதி 28:13; ஆதி 35:12)

12. ஆபிரகாமின் உடன்படிக்கையில் விசேஷித்த நபர். (ஆதி 17:7,19; ஆதி 26:3-4; ஆதி 28:4,13-15)

13. மேசியாவின் "தகப்பன்" (ஆதி 12:3; ஆதி 21:12; ஆதி 22:17; ஆதி 26:5; ஆதி 28:14; ரோமர் 9:7; கலா 3:16)

14. பல தேசங்களுக்குத் தகப்பன். (ஆதி 17:5; ஆதி 18:18; ஆதி 35:11)

15. ராஜாக்களுக்கு தகப்பன் (ஆதி 17:6; ஆதி 35:11)

16. நித்திய இயற்கையான சந்ததி (ஆதி 17:7-8,19; 2சாமு 7; ஏசா 9:6-7; ஏசா 59:21; லூக்கா 1:31-32)

17. விசேஷித்த தேவனாக யெகோவாவைப் பெற்றிருப்பது. (ஆதி 17:7-8; ஆதி 28:15; ஆதி 32:9,12)

18. விரோதிகள்மீது அதிகாரம். (ஆதி 22:17; ஆதி 27:29)

19. தேசங்களின்மீது தலைமை (ஆதி 27:29)

20. பொருளாதார ஆசீர்வாதங்கள் (ஆதி 12:7; ஆதி 13:15; ஆதி 15:18; ஆதி 26:3-4; ஆதி 27:28-29,37; ஆதி 28:13; ஆதி 35:12)

21. ஆபிரகாமின் ஆவிக்குரிய ஆசீர்வாதம் - விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல். (ஆதி 28:4; ரோமர் 4; கலா 3:14)

22. விரோதிகள்மீது சாபம். (ஆதி 12:3; ஆதி 27:29)

மூத்தவனுக்குச் சேஷ்டபுத்திரபாகத்து ஆசீர்வாதங்கள் கொடுக்கப்படுவதினால் அவனுடைய மற்ற சகோதரர்கள் அவன்மீது பொறாமைபடுவதற்கு வாய்ப்புள்ளது. மூத்தவனுக்கு இரட்டிப்பான சுதந்தரவீதம் கிடைக்கும். (உபா 21:15-17) சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போடலாம். (ஆதி 25:29-34; ஆதி 27:36; எபி 12:16; ரோமர் 9:12-13) மூத்தவனுடைய பாவத்தின் நிமித்தமாக சேஷ்டபுத்திரபாகம் மாற்றப்படும். (1நாளா 5:1-2) அல்லது தேவன் அதை நிறுத்தி வைப்பார். (ஆதி 25:23; ஆதி 48:15-20; 1இராஜா 2:15; 1நாளா 26:10).

ஆனால் ஏசாவோ, "இந்தச் சேஷ்ட புத்திரபாகம் எனக்கு என்னத்திற்கு" (ஆதி 25:32) என்று சொல்லிவிடுகிறான். ஆவிக்குரிய காரியங்களில் ஏசா நம்பிக்கையில்லாதவன். இக்காலத்தில் மிகப்பெரிய பஞ்சம் இருந்ததாகவும், உணவு வகைகள் சரிவர கிடைக்காது எனவும் தெரியவருகிறது. ஆகையினால் ஒருவேளைப் போஜனம்கூட மனுஷருக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது.

யாக்கோபு குணசாலியானவன். அவன் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நாடுகிறவன். யாக்கோபுக்கு உலகப்பிரகாரமான ஞானமில்லை. அவன் கூடாரவாசியாயிருக்கிறான். யாக்கோபிடத்தில் உலகசிநேகமில்லை. அவன் பரமதேசத்தை வாஞ்சிக்கிறான். ஆனாலும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வதற்காக, யாக்கோபு மிகவும் தந்திரமாக செயல்படுகிறான்.

உலகப்பிரகாரமான ஜனங்களைவிட, கர்த்தருடைய ஜனம், தங்கள் ஆத்துமாக்களைக் குறித்த காரியங்களில் அதிகஞானமுள்ளவர்களாயிருக்கிறார்கள். யாக்கோபு ஏசாவை நோக்கி, "உன் சேஷ்டபுத்திர பாகத்தை இன்று எனக்கு விற்றுப்போடு" என்று சொல்லுகிறான். யாக்கோபு இந்த வார்த்தைகளை மிகவும் கவனமாகச் சொல்லுகிறான்.

சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போடுமாறு, யாக்கோபு ஏசாவினிடத்தில் கேட்பதற்கு, ஏற்ற வேளையைத் தெரிந்தெடுத்திருக்கிறான். ஏசா இப்போதுதான் வெளியிலிருந்து வந்திருக்கிறான். அவன் பசியாயிருக்கிறான். இளைத்திருக்கிறான். யாக்கோபோ கூழ் சமைத்துக்கொண்டிருக்கிறான். ஏசாவுக்கு அந்தக் கூழ் தேவைப்படுகிறது. யாக்கோபுக்கு ஏசாவின் சேஷ்டபுத்திர பாகம் தேவைப்படுகிறது. ஏசாவிடத்திலிருந்து அவனுடைய சேஷ்டபுத்திர பாகத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, இதுவே ஏற்ற வேளை என்று யாக்கோபு தீர்மானம்பண்ணுகிறான்.

யாக்கோபு ஏசாவிடம் பேரம் பேசுகிறான். யாக்கோபு முதலில், "உன் சேஷ்டபுத்திர பாகத்தை இன்று எனக்கு விற்றுப்போடு" என்று மாத்திரமே கேட்டான். ஏசாவின் நிலமை மிகவும் பரிதாபமாயிருக்கிறது. ஏசா கூழுக்காக எதையும் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறான். ஏசா யாக்கோபை நோக்கி, "இதோ, நான் சாகப்போகிறேனே, இந்தச் சேஷ்ட புத்திரபாகம் எனக்கு என்னத்திற்கு" (ஆதி 25:32) என்று சொல்லுகிறான்.

ஏசாவின் வார்த்தைகள் யாக்கோபுக்கு சாதகமாயிருக்கிறது. ஆரம்பத்தில் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்டால் போதும் என்று கேட்ட யாக்கோபு, இப்போது ஏசாவிடத்தில், "இன்று எனக்கு ஆணையிட்டுக்கொடு" (ஆதி 25:33) என்றும் சொல்லுகிறான். ஏசா தன் சேஷ்டபுத்திரபாகத்தை யாக்கோபுக்கு விற்றுப்போடவும் வேண்டும். தான் விற்றுப்போட்டதை அவனுக்கு ஆணையிட்டுக்கொடுக்கவும் வேண்டும். அப்போதுதான் இந்த விற்பனை உறுதிபண்ணப்படும்.

ஏசாவும் யாக்கோபுக்கு ஆணையிட்டு, தன் சேஷ்டபுத்திரபாகத்தை அவனுக்கு விற்றுப்போடுகிறான். அப்பொழுது யாக்கோபு ஏசாவுக்கு அப்பத்தையும் பயற்றங்கூழையும் கொடுக்கிறான்; ஏசா புசித்துக் குடித்து எழுந்திருந்து போய்விடுகிறான். இப்படி ஏசா தன் சேஷ்ட புத்திரபாகத்தை அலட்சியம் பண்ணுகிறான் (ஆதி 25:34).

"ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்" (எபி 12:16).

ஏதேன் தோட்டத்திலே, ஆதாமும் ஏவாளும் தடைபண்ணப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்து, தாங்கள் அதுவரையிலும் அனுபவித்த தெய்வீக ஆசீர்வாதங்களை இழந்துபோனார்கள். அதன்பின்பு இப்போது ஏசா அப்பத்தையும் பயற்றங்கூழையும் புசித்துக் குடித்து, தன் சேஷ்டபுத்திரபாகத்தை இழந்துபோகிறான்.

சேஷ்டபுத்திரபாகத்தை இழந்துபோனதற்காக ஏசா வருத்தப்படவில்லை. தன்னுடைய தப்பிதத்திற்காக அவன் மனம் வருந்தவில்லை. ஏசா அந்தக்கூழை குடித்து சாதாரணமாக எழுந்து போய்விடுகிறான். அவன் சாத்தானுடைய கண்ணியில் விழுகிறான். ஏசா வேட்டையில் வல்லவன். அவன் பெரிய மிருகங்களைக்கூட தந்திரமாக வேட்டையாடுவான். ஆனால் இப்போது சாதாரண பயற்றங்கூழுக்காக, ஏசா தன் சேஷ்டபுத்திரபாகத்தையே இழந்துபோகிறான்.

ஏசாவைப்போலவே, இக்காலத்தில் அநேகர் சிறிய காரியங்களில் ஞானமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பெரிய காரியங்களில் மதியீனமாயிருக்கிறார்கள். அவர்கள் சாத்தானுடைய கண்ணிகளில் சிக்குண்டு, அழிந்துபோகிறார்கள்.

ஏசா மிகவும் இளைத்திருக்கிறான். அவனுக்கு அதிகமாய்ப் பசி உண்டாயிற்று. பசியினால் தான் சாகப்போகிற நிலமையிலிருப்பதாக ஏசா சொல்லுகிறான். அவன் இப்போதுதான் வெளியிலே வேட்டையாடிவிட்டு, யாக்கோபின் கூடாரத்திற்கு வந்திருக்கிறான். யாக்கோபு சமைத்துக்கொண்டிருக்கிற கூழ், ஏசாவின் பார்வைக்கு அருமையாயிருக்கிறது. ஏசா அந்தக் கூழைப்பற்றிச் சொல்லும்போது, "அந்த சிவப்பான கூழிலே நான் சாப்பிட கொஞ்சம் தா" என்று கேட்கிறான். ஏசாவுக்கு கூழின் நிறம் தெரிந்திருக்கிறது. ஆனால் அவனுக்கு தன் சேஷ்டபுத்திர பாகத்தின் அருமையும் மேன்மையும் தெரியவில்லை.

ஏசாவுக்கு மாம்சத்தின் தேவை பெரிதாய்த் தெரிகிறது. ஆனால் அவனுடைய ஆவிக்குரிய தேவைகள் அவனுக்கு பெரியதாய்த் தெரியவில்லை. ஏசா தன்னுடைய சேஷ்டபுத்திரபாகத்தையும், அதனால் வரும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் அசட்டைபண்ணுகிறான். ஏசாவைப்போலவே ஏராளனமான ஜனங்கள், உலகப்பிரகாரமான காரியங்களுக்கு ஆசைப்பட்டு, பரலோகத்தின் ஆசீர்வாதங்களை இழந்துபோகிறார்கள். அவர்கள் தங்கள் மாம்சத்தின் இச்சைகளுக்கு இடங்கொடுத்து, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள முடியாமல் போகிறார்கள்.

ஏசா பசியாயும் களைப்பாயும் இருந்தாலும், ஒருவேளை போஜனத்திற்காக, தன்னுடைய சேஷ்டபுத்திரபாகத்தையே விற்றுப்போடவேண்டும் என்னும் அவசியம் எதுவுமில்லை. அவன் இதைவிட குறைவான கிரயம் செலுத்தி, போஜனம் செய்திருக்கலாம். சேஷ்டபுத்திர பாகம் என்பது மிகப்பெரிய கிரயம்.

ஏசா ஒருவேளை போஜனத்திற்காக, தன்னுடைய சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட ஆயத்தமாயிருக்கிறான். இதற்காக ஏசா சொல்லுகிற காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. "இதோ, நான் சாகப்போகிறேனே, இந்தச் சேஷ்ட புத்திரபாகம் எனக்கு என்னத்திற்கு" (ஆதி 25:32) என்று ஏசா சொல்லுகிறான்.

ஏசா தன்னுடைய பெற்றோரிடத்தில் போஜனம் கேட்டிருந்தால், அவர்கள் அவனுக்கு போஜனத்தை தாராளமாய்க் கொடுத்திருப்பார்கள். ஏசா முயற்சி செய்திருந்தால், அவன் வேறு வழியில் தனக்கு போஜனம் பெற்றிருக்கலாம். ஆனால் ஏசாவோ மிகவும் எளிதான வழியைத் தேடுகிறான். ஆனால் அதற்காக பெரிய கிரயத்தை செலுத்துகிறான்.

ஏசா தன் சேஷ்டபுத்திர பாகத்தை அலட்சியம் பண்ணுகிறான். தன்னுடைய சரீர தேவைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். ஏசாவைப்போலவே இக்காலத்திலும் அநேகர், உலகப்பிரகாரமான காரியங்களுக்கும், மாம்சப்பிரகாரமான காரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, ஆவிக்குரிய காரியங்களை அலட்சியம் பண்ணுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு பரலோகத்தின் காரியங்களைவிட, இந்தப் பூமிக்குரிய காரியங்களே பெரியதாய்த் தெரிகிறது.

ஏசா தன்னுடைய சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட்டாலும், அதற்காக அவன் மனம் வருந்தவில்லை. ஏசா புசித்து குடித்து எழுந்து போய்விடுகிறான். தன்னுடைய தப்பிதத்திற்கு மனந்திருந்த வேண்டும் என்னும் எண்ணம் ஏசாவினிடத்தில் சிறிதுமில்லை. இவ்வாறாக ஏசா தன் சேஷ்டபுத்திர பாகத்தை அலட்சியம் பண்ணுகிறான்.

26 அதிகாரம்

ஈசாக்கின் நாட்களில் தேசத்தில் பஞ்சமுண்டாகிறது. ஈசாக்கு கேராருக்குப் போகிறார் (ஆதி 26:1). கர்த்தர் ஈசாக்குக்கு தரிசனமாகி, அவருக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லுகிறார் (ஆதி 26:2-5).

ஈசாக்கு கேராரிலே குடியிருக்கும்போது, தன் மனைவி ரெபெக்காளை, தன் சகோதரி என்று சொல்லுகிறார் (ஆதி 26:6-11). கர்த்தர் ஈசாக்கை ஆசீர்வதிக்கிறார் (ஆதி 26:12-14).

பெலிஸ்தியர் ஈசாக்கின்மீது பொறாமைப்படுகிறார்கள் (ஆதி 26:14-17). ஈசாக்கு தன்னுடைய வேலைகளை தொடர்ந்து செய்கிறார் (ஆதி 26:18-23). கர்த்தர் ஈசாக்கை உற்சாகப்படுத்துகிறார் (ஆதி 26:24,25).

பெலிஸ்தர்கள் ஈசாக்கோடு உடன்படிக்கை பண்ணுகிறார்கள் (ஆதி 26:26-33). ஏசா ஏத்தியருடைய குடும்பத்தில் விவாகம்பண்ணுகிறான் (ஆதி 26:34,35).

கானானில் பஞ்சம்
ஆதி 26:1-5

ஆதி 26:1. ஆபிரகாமின் நாட்களில் உண்டான பஞ்சத்தை அல்லாமல், பின்னும் ஒரு பஞ்சம் தேசத்தில் உண்டாயிற்று; அப்பொழுது ஈசாக்கு பெலிஸ்தருக்கு ராஜாவாகிய அபிமெலேக்கினிடத்தில் கேராருக்குப் போனான்.

ஆதி 26:2. கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி: நீ எகிப்துக்குப் போகாமல், நான் உனக்குச் சொல்லும் தேசத்திலே குடியிரு.

ஆதி 26:3. இந்தத் தேசத்திலே வாசம்பண்ணு; நான் உன்னோடே கூட இருந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்; நான் உனக்கும் உன் சந்ததிக்கும் இந்தத் தேசங்கள் யாவையும் தந்து, உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு நான் இட்ட ஆணையை நிறைவேற்றுவேன்.

ஆதி 26:4. ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, என் விதிகளையும், என் கற்பனைகளையும், என் நியமங்களையும், என் பிரமாணங்களையும் கைக்கொண்டபடியினால்,

ஆதி 26:5. நான் உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப் போலப் பெருகப் பண்ணி, உன் சந்ததிக்கு இந்தத் தேசங்கள் யாவையும் தருவேன்; உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.

கானான் தேசத்திலே ஆபிரகாமின் நாட்களில் ஒரு பஞ்சமுண்டாயிற்று. இப்போது அந்த தேசத்தில், ஈசாக்கின் நாட்களிலும் ஒரு பஞ்சம் உண்டாயிற்று. கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். கர்த்தர் அந்த தேசத்தை ஆபிரகாமின் சந்ததிக்கு சுதந்தரதேசமாக வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட கானான் தேசத்தில் அப்பம் இல்லை. பஞ்சம் இருக்கிறது.

இந்த சூழ்நிலையில் கர்த்தர் ஈசாக்கை சோதிக்கிறார். ஈசாக்கு வாக்குத்தத்தத்தை பற்றிக்கொள்வாரா என்று கர்த்தர் அவரை சோதித்தறிய விரும்புகிறார். கர்த்தர் வாக்குமாறாதவர். அவர் தம்முடைய உடன்படிக்கையில் உண்மையுள்ளவர். நமக்கு உலகப்பிரகாரமான நன்மைகள் குறைவாக கிடைத்தாலும், நம்முடைய ஜீவியத்தில் பிரச்சனைகளும் போராட்டங்களும் அதிகமாயிருந்தாலும், கர்த்தருடைய வாக்குத்தத்த வார்த்தைகள் மாறாமல் அப்படியே இருக்கும். நமக்குஉலகப் பிரகாரமான நன்மைகள் குறைந்துபோனாலும், கர்த்தருடைய ஆசீர்வாதம் ஒருபோதும் குறைந்து போவதில்லை.

அப்பொழுது ஈசாக்கு பெலிஸ்தருக்கு ராஜாவாகிய அபிமெலேக்கினிடத்தில் கேராருக்குப் போகிறார் (ஆதி 26:1). ஈசாக்கு எகிப்து தேசத்திற்குப்போக ஆயத்தமாயிருக்கிறார். கானான் தேசத்தில் பஞ்சம் வந்தபோது, ஆபிரகாம் எகிப்து தேசத்திற்குப்போனார். அதுபோலவே ஈசாக்கும் எகிப்து தேசத்திற்குப்போக தன்னை ஆயத்தம்பண்ணுகிறார். எகிப்திற்கு போகும் வழியிலே, ஈசாக்கு கேராரிலே தங்குகிறார்.

அப்பொழுது கர்த்தர் ஈசாக்குக்குத் தரிசனமாகி, "நீ எகிப்துக்குப் போகாமல், நான் உனக்குச் சொல்லும் தேசத்திலே குடியிரு. இந்தத் தேசத்திலே வாசம்பண்ணு; நான் உன்னோடே கூட இருந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்; நான் உனக்கும் உன் சந்ததிக்கும் இந்தத் தேசங்கள் யாவையும் தந்து, உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு நான் இட்ட ஆணையை நிறைவேற்றுவேன்" (ஆதி 26:2,3) என்று சொல்லுகிறார்.

ஆபிரகாம் எகிப்துக்குப்போகும் வழியில் (ஆதி 12:10; சங் 37:3) கேரார் இருக்கிறது. ஈசாக்கு எகிப்துக்குப் பிரயாணம் பண்ணுகிறார். ஆனால் தேவன் அவரைத் தடுத்து நிறுத்தி விடுகிறார்.

"நான் உன்னோடே கூட இருந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்" என்று கர்த்தர் ஈசாக்குக்கு சொல்லுகிறார். ஈசாக்கு தன் ஜீவியகாலத்தில் ஒரு அடி நிலம்கூட சுதந்தரிக்கவில்லை. ஆகையினால் இந்த ஆசீர்வாதம் ஈசாக்கின் உயிர்த்தெழுதலைக் குறிக்கலாம் என்று வேதபண்டிதர்களில் சிலர் கருத்து கூறுகிறார்கள். (ஆதி 13:15; ஆதி 28:13; ஆதி 50:24; அப் 7:5).

ஈசாக்கு எகிப்து தேசத்திற்குப் போகாமல், கேராரிலே தங்கியிருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய கட்டளை. ஈசாக்கின் நாட்களில் பஞ்சம் உண்டானதுபோல, யாக்கோபின் நாட்களிலும் பஞ்சமுண்டாயிற்று. அப்போது கர்த்தர் யாக்கோபை எகிப்து தேசத்திற்குப்போகுமாறு சொன்னார்.

"அப்பொழுது அவர்: நான் தேவன், நான் உன் தகப்பனுடைய தேவன், நீ எகிப்துதேசத்துக்குப்போகப் பயப்படவேண்டாம்; அங்கே உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன். நான் உன்னுடனே எகிப்துக்கு வருவேன்; நான் உன்னைத் திரும்பவும் வரப்பண்ணுவேன்; யோசேப்பு தன் கையால் உன் கண்களை மூடுவான் என்று சொன்னார்" (ஆதி 46:3,6).

இப்போது ஈசாக்கின் நாட்களில், கானான் தேசத்திலே பஞ்சமுண்டாயிற்று. கர்த்தரோ ஈசாக்கிடம், எகிப்து தேசத்திற்குப் போகக்கூடாது என்று கட்டளையிடுகிறார். ஆபிரகாமின் நாட்களிலும், கானான் தேசத்தில் பஞ்சமுண்டாயிற்று. அப்போது கர்த்தர், ஆபிரகாமின் விருப்பத்தின் பிரகாரம் செய்வதற்கு, அவருக்கு அனுமதி கொடுத்தார்.

கர்த்தருடைய சித்தமும் வழிநடத்துதலும் எல்லோருடைய ஜீவியத்திலும் ஒன்றுபோல் இருப்பதில்லை. கானான் தேசத்தில் பஞ்சம் உண்டானபோது, கர்த்தருடைய சித்தம் மூன்று முற்பிதாக்கள்மீதும் வெவ்வேறு விதமாக இருந்தது. கர்த்தர் அவர்களை வித்தியாசமான வழிகளில் வழிநடத்தினார்.

ஆபிரகாம் கர்த்தருக்கு மிகவும் நெருக்கமானவர். அவர் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருந்தவர். ஆபிரகாமுக்கு எல்லா சூழ்நிலைகளும், இடங்களும் ஒன்றுபோலவே இருந்தது. ஆபிரகாம் கர்த்தரோடு எல்லா இடங்களிலும், எல்லா வேளைகளிலும், எல்லா சூழ்நிலைகளிலும் கூடவே இருந்தார்.

ஈசாக்கு நற்குணமுள்ளவர். ஆனால் அவர் ஆபிரகாமைப்போல கடினமான சூழ்நிலைகளில் வாழ கற்றுக்கொள்ளவில்லை. ஈசாக்கு கஷ்டங்களை அனுபவிக்காதவர். அவர் தன் ஜீவியத்தில் அதிகமான பிரச்சனைகளை சந்திக்கவில்லை. ஆகையினால் கர்த்தர் ஈசாக்கை எகிப்து தேசத்திற்குப்போக அனுமதிக்கவில்லை.

யாக்கோபு குணசாலியாயும், கூடாரவாசியாயும் இருக்கிறார். அவர் பொறுமையும் பெலமுமுள்ளவர். யாக்கோபு கஷ்டங்களை தாங்கிக்கொள்ளக்கூடியவர். அவர் ஒரு பராக்கிரமசாலி. ஆகையினால் கர்த்தர் அவரை எகிப்து தேசத்திற்குப்போகுமாறு சொன்னார்.

கர்த்தர் நம்மைச் சோதிக்கும்போது, அந்த சோதனையை நம்மால் தாங்கிக்கொள்ள முடியுமா என்று முதலாவதாக ஆராய்ந்து பார்க்கிறார். நம்முடைய சோதனையில் நாம் மூழ்கி அழிந்துபோகவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமல்ல. நாம் சோதனையை மேற்கொள்ளவேண்டும் என்பதும், அதனால் நம்முடைய விசுவாசத்திலும் ஆவிக்குரிய ஜீவியத்திலும் நாம் பெலப்படவேண்டும் என்பதுமே கர்த்தருடைய சித்தம்.

கர்த்தர் ஈசாக்கிடம் ஆபிரகாமைப்பற்றிச் சொல்லும்போது, "ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, என் விதிகளையும், என் கற்பனைகளையும், என் நியமங்களையும், என் பிரமாணங்களையும் கைக்கொண்டார்" (ஆதி 26:4) என்று சொல்லுகிறார்.

ஆபிரகாம் தேவனுக்கு எல்லா வழிகளிலும் கீழ்ப்படிந்தபடியால், அவருடைய சந்ததியைத் தேவன் ஆசீர்வதித்தார். ஆபிரகாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டார் என்று கூறப்பட்டிருக்கிறபடியினால், ஆபிரகாமிற்கும், ஆதாமிற்கும் பத்து கற்பனைகளைப் பற்றி தெரியும் என்பது பொருளல்ல. தேவன் ஆபிரகாமிற்கு பதினான்கு கற்பனைகளைக் கொடுத்தார். (ஆதி 12:1) தேவனுடைய பத்து கற்பனைகளை மோசே சீனாய் மலையில் பெற்றுக்கொண்டார்.

ஆபிரகாம் கர்த்தருடைய சொல்லுக்கு கீழ்ப்படிந்ததுபோல, ஈசாக்கும் கீழ்ப்படியவேண்டும். அப்போது கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்ன வாக்குத்தத்தம், ஈசாக்குக்கும் சித்திக்கும்.

கர்த்தர் ஈசாக்கை நோக்கி, "நான் உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப் போலப் பெருகப் பண்ணி, உன் சந்ததிக்கு இந்தத் தேசங்கள் யாவையும் தருவேன்; உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி 26:5) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஆபிரகாமின் கீழ்ப்படிதலை புகழ்ந்துபேசுகிறார். ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தார். அது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது. அதனால் ஆபிரகாமுக்கு மேன்மை உண்டாயிற்று. ஆபிரகாமைப்போல, விசுவாசிகளாகிய நாமும் கர்த்தருடைய சொல்லுக்கு கீழ்ப்படியவேண்டும். ஆபிரகாம் கர்த்தரிடத்தில் நற்சாட்சி பெற்றதுபோல, நாமும் கர்த்தரிடத்தில் நற்சாட்சி பெறவேண்டும். அப்போது கர்த்தருடைய கண்களிலும், மனுஷருடைய கண்களிலும் நமக்கு தயவு கிடைக்கும்.

கேராரிலே ஈசாக்கு
ஆதி 26:6-11

ஆதி 26:6. ஈசாக்கு கேராரிலே குடியிருந்தான்.

ஆதி 26:7. அவ்விடத்து மனிதர்கள் அவன் மனைவியைக் குறித்து விசாரித்தபோது: இவள் என் சகோதரி என்றான். ரெபெக்காள் பார்வைக்கு அழகுள்ளவளானபடியால், அவ்விடத்து மனிதர்கள் அவள்நிமித்தம் தன்னைக் கொல்லுவார்கள் என்று எண்ணி, அவளைத் தன் மனைவி என்று சொல்லப் பயந்தான்.

ஆதி 26:8. அவன் அங்கே நெடுநாள் தங்கியிருக்கையில், பெலிஸ்தருக்கு ராஜாவாகிய அபிமெலேக்கு ஜன்னல் வழியாய்ப் பார்க்கும்போது, ஈசாக்கு தன் மனைவியாகிய ரெபெக்காளோடே விளையாடிக்கொண்டிருக்கிறதைக் கண்டான்.

ஆதி 26:9. அபிமெலேக்கு ஈசாக்கை அழைத்து: அவள் உன் மனைவியாயிருக்கிறாளே! பின்னை ஏன் அவளை உன் சகோதரி என்று சொன்னாய் என்றான். அதற்கு ஈசாக்கு: அவள் நிமித்தம் நான் சாகாதபடிக்கு, இப்படிச் சொன்னேன் என்றான்.

ஆதி 26:10. அதற்கு அபிமெலேக்கு: எங்களிடத்தில் ஏன் இப்படிச் செய்தாய்? ஜனங்களுக்குள் யாராகிலும் உன் மனைவியோடே சயனிக்கவும், எங்கள்மேல் பழி சுமரவும் நீ இடமுண்டாக்கினாயே என்றான்.

ஆதி 26:11. பின்பு, அபிமெலேக்கு: இந்தப் புருஷனையாகிலும் இவன் மனைவியையாகிலும் தொடுகிறவன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படுவான் என்று எல்லா ஜனங்களும் அறியச் சொன்னான்.

கேரார் பெலிஸ்தருடைய தேசம். அபிமெலேக்கு என்பவன் பெலிஸ்தருக்கு ராஜாவாயிருக்கிறான். ஈசாக்கு கேராரிலே குடியிருக்கிறார். இந்த தேசத்தில் ஈசாக்குக்கு ஒரு சோதனை உண்டாயிற்று. கேராரின் மனிதர்கள், ஈசாக்கின் மனைவியாகிய ரெபெக்காளைக் குறித்து விசாரிக்கிறார்கள். அப்பொழுது ஈசாக்கு, தன் மனைவியாகிய ரெபெக்காளை, "தன் சகோதரி" என்று அவர்களிடத்தில் சொல்லுகிறார்.

ரெபெக்காள் பார்வைக்கு அழகுள்ளவளாயிருக்கிறாள். இதன் நிமித்தம் கேராரிலுள்ள மனிதர்கள், ரெபெக்காளின் நிமித்தம், தன்னைக் கொன்றுபோடுவார்கள் என்று ஈசாக்கு நினைக்கிறார். ஆகையினால் ஈசாக்கு ரெபெக்காளை தன் மனைவி என்று அவர்களிடத்தில் சொல்ல பயப்படுகிறார் (ஆதி 26:6,7).

ஆபிரகாமைப் போல ஈசாக்கும் தன்னுடைய மனைவியைத் தன் சகோதரி என்று கூறுகிறார். (ஆதி 12:10-20; ஆதி 20:1-17). இருவரும் தேவனை விசுவாசிக்கவில்லை. இவர்கள் மரித்துப் போனால், இவர்கள் மூலமாக இவர்களுடைய சந்ததி பெருகும் என்னும் வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கு வாய்ப்பில்லை. ஆகையினால் தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும் வரையில் இவர்கள் மரித்துப்போக அனுமதிக்கவே மாட்டார்.

ஆபிரகாம் தனக்கு வந்த சோதனையை ஈசாக்கிடம் சொன்னாரா என்று தெரியவில்லை. ஒருவேளை சொல்லியிருந்தால், இப்படிப்பட்ட சோதனையான வேளையில் ஈசாக்கு தேவன் மீது விசுவாசம் வைத்திருப்பார்.

பொய்சொல்லுவது பாவம். ஈசாக்கின் மனைவியாகிய ரெபெக்காள் பார்வைக்கு அழகுள்ளவளாயிருக்கிறாள். பெலிஸ்தர்கள் ரெபெக்காளை நேசிக்கிறார்கள். அவர்கள் ரெபெக்காளை தங்களுடைய மனைவியாக்கிக் கொள்ள முயற்சி செய்கிறார்கள். இதற்காக அவர்கள் தன்னைக் கொன்றுபோடுவார்களோ என்று ஈசாக்கு பயப்படுகிறார். ஆகையினால், ஈசாக்கு தன்னுடைய ஜீவனை தப்புவிப்பதற்காக, தன்னுடைய மனைவியை, தன்னுடைய சகோதரி என்று சொல்லுகிறார்.

ஈசாக்கு சொன்ன பொய்யை கேராரின் ஜனங்களும் நம்புகிறார்கள். ஈசாக்கு கேராரிலே நெடுநாள் தங்கியிருக்கிறார். ஒருநாள் ஈசாக்கு தன் மனைவியாகிய ரெபெக்காளோடு விளையாடிக் கொண்டிருக்கிறார். அதை பெலிஸ்தருக்கு ராஜாவாகிய அபிமெலேக்கு ஜன்னல் வழியாய்ப் பார்த்துவிடுகிறான் (ஆதி 26:8).

ஆபிரகாமின் காலத்திலும் ஒரு அபிமெலேக்கு இருந்தான் (ஆதி 20-ஆவது அதிகாரம்). அந்த அபிமெலேக்கும் இவனும் ஒரே நபரல்ல. ஆபிரகாமின் காலத்திற்கு நூறு வருஷங்களுக்கு பின்பு, ஈசாக்கின் காலத்தில் இந்த அபிமெலேக்கு வருகிறான். அபிமெலேக்கு என்பது பெலிஸ்தருடைய ராஜாக்களின் பொதுவான பெயராகும்.

ஈசாக்கு ரெபெக்காளோடே விளையாடிக்கொண்டிருக்கிறார். அந்த விளையாட்டு ஒரு சகோதரனும், அவனுடைய சகோதரியும் விளையாடுகிற விளையாட்டைப்போல் இல்லை. அவர்கள் இருவரும் புருஷன் மனைவிபோல மிகவும் நெருக்கமாக விளையாடுகிறார்கள்.

ஈசாக்கும் ரெபெக்காளும் விளையாடுவது ஒரு சகோதரன் தன் சகோதரியிடம் விளையாடும் விளையாட்டல்ல. இது கணவனும், மனைவியும் விளையாடும் விளையாட்டு. இதற்கான எபிரெய வார்த்தை "ட்ஸாகாக்" என்பதாகும். ஈசாக்கு ரெபெக்காளோடு சரசம் பண்ணிக் கொண்டிருக்கிறார். இதைப் பெலிஸ்தருக்கு ராஜாவாகிய அபிமெலேக்கு ஜன்னல் வழியாகப் பார்த்து விடுகிறான். ஆபிரகாமும், ஈசாக்கும் தங்களுடைய மனைவிகளைச் சகோதரிகள் என்று பொய்சொல்லுகிறார்கள். (சங் 31:5; எண் 32:23)

ஈசாக்கு ரெபெக்காளோடே விளையாடுவதற்கு, "சந்தோஷமாயிருப்பது" என்று பொருள்படும்படியான வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஈசாக்கு என்னும் பெயருக்கு "நகைப்பு, சந்தோஷம், மகிழ்ந்து களிகூருவது" என்று பொருள். ஈசாக்கு தன் பெயருக்கேற்ற பிரகாரமாக, தன் மனைவி ரெபெக்காளோடே சந்தோஷமாய் விளையாடிக்கொண்டிருக்கிறார்.

பெலிஸ்தரின் ராஜாவாகிய அபிமெலேக்கு, ஈசாக்கு ரெபெக்காளோடே விளையாடிக்கொண்டிருப்பதை பார்த்தவுடனே, அவர்கள் இருவரும் சகோதர சகோதரிகள் அல்ல என்பதையும், அவர்கள் புருஷனும் மனைவியுமாயிருக்கிறார்கள் என்பதையும் கண்டுகொள்கிறான். ஈசாக்கு அபிமெலேக்கினிடத்தில் பொய் சொல்லியிருக்கிறார். இதற்காக அபிமெலேக்கு ஈசாக்கைக் கடிந்துகொள்கிறான்.

அபிமெலேக்கு ஈசாக்கை தன்னிடத்தில் அழைக்கிறான். அவன் ஈசாக்கை நோக்கி, "அவள் உன் மனைவியாயிருக்கிறாளே! பின்னை ஏன் அவளை உன் சகோதரி என்று சொன்னாய்" என்று கேட்கிறான். அதற்கு ஈசாக்கு: "அவள் நிமித்தம் நான் சாகாதபடிக்கு, இப்படிச் சொன்னேன்" (ஆதி 26:9) என்று சொல்லுகிறார்.

அதற்கு அபிமெலேக்கு, ஈசாக்கை நோக்கி, "எங்களிடத்தில் ஏன் இப்படிச் செய்தாய்? ஜனங்களுக்குள் யாராகிலும் உன் மனைவியோடே சயனிக்கவும், எங்கள்மேல் பழி சுமரவும் நீ இடமுண்டாக்கினாயே" (ஆதி 26:10) என்று சொல்லுகிறான்.

அபிமெலேக்கும், அவனுடைய மனுஷரும் தெய்வ பயமுள்ளவர்கள். மோசேயின் காலத்திற்கு முன்பாகவே இஸ்ரவேலிலும், அதன் அருகிலுள்ள சில தேசங்களிலும் வேசித்தனத்தையும், விபச்சாரத்தையும் மிகப்பெரிய பாவமாகக் கருதினார்கள். இதில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை கொடுத்தார்கள் (ஆதி 38:24).

ரெபெக்காள் ஈசாக்கின் சகோதரி என்று நினைத்து, பெலிஸ்தரில் யாராவது ஒருவர், அவளை தனக்கு மனைவியாக்கி, அவளோடே சயனித்திருந்தால், பெலிஸ்தர்மீது பழிசுமரும். அது பெலிஸ்தர் செய்கிற மிகப்பெரிய பாவமாயும், அநியாயமாயும் இருக்கும். பாவத்தின் சம்பளம் மரணம். ஈசாக்கு பொய்சொன்னதினால், பெலிஸ்தரை பாவம் செய்யத் தூண்டிவிடுகிறார்.

அபிமெலேக்குக்கு ஈசாக்கும் ரெபெக்காளும் புருஷன் மனைவி என்பது தெரியவருகிறது. அப்போது அவன் பெலிஸ்தரை நோக்கி, "இந்தப் புருஷனையாகிலும் இவன் மனைவியையாகிலும் தொடுகிறவன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படுவான்" (ஆதி 26:11) என்று எல்லா ஜனங்களும் அறியச் சொல்லுகிறான்.

பெலிஸ்தரின் ராஜாவாகிய அபிமெலேக்கு, ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் பாதுகாப்பு கொடுக்கிறான். அவர்களுக்கு விரோதமாக யாரும் தீங்கு செய்யாதவாறு, அவர்களை பாதுகாக்கிறான். அவர்களைத் தொடுகிறவர்களுக்கு மரணதண்டனை கொடுக்கப்படும் என்று எச்சரிக்கிறான்.

ஈசாக்கின் ஐசுவரியம்

ஆதி 26:12-25

ஆதி 26:12. ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்;

ஆதி 26:13. அவன் ஐசுவரியனாகி, வரவர விருத்தியடைந்து, மகா பெரியவனானான்.

ஆதி 26:14. அவனுக்கு ஆட்டுமந்தையும், மாட்டுமந்தையும், அநேக பணிவிடைக்காரரும் இருந்தபடியினாலே பெலிஸ்தர் அவன் பேரில் பொறாமைகொண்டு,

ஆதி 26:15. அவன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் அவனுடைய வேலைக்காரர் வெட்டின துரவுகளையெல்லாம் தூர்த்து மண்ணினால் திரப்பிப்போட்டார்கள்.

ஆதி 26:16. அபிமெலேக்கு ஈசாக்கை நோக்கி: நீ எங்களை விட்டுப் போய்விடு; எங்களைப் பார்க்கிலும் மிகவும் பலத்தவனானாய் என்றான்.

ஆதி 26:17. அப்பொழுது ஈசாக்கு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கேராரின் பள்ளத்தாக்கிலே கூடாரம் போட்டு, அங்கே குடியிருந்து,

ஆதி 26:18. தன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் வெட்டினவைகளும், ஆபிரகாம் மரித்தபின் பெலிஸ்தர் தூர்த்துப் போட்டவைகளுமான துரவுகளை மறுபடியும் தோண்டி, தன் தகப்பன் அவைகளுக்கு இட்டிருந்த பேர்களின்படியே அவைகளுக்குப் பேரிட்டான்.

ஆதி 26:19. ஈசாக்குடைய வேலைக்காரர் பள்ளத்தாக்கிலே வெட்டி, அங்கே சுரக்கும் நீரூற்றைக் கண்டார்கள்.

ஆதி 26:20. கேராரூர் மேய்ப்பர் இந்தத் தண்ணீர் தங்களுடையது என்று சொல்லி, ஈசாக்குடைய மேய்ப்பருடனே வாக்குவாதம் பண்ணினார்கள்; அவர்கள் தன்னோடே வாக்குவாதம் பண்ணினபடியால், அந்தத் துரவுக்கு ஏசேக்கு என்று பேரிட்டான்.

ஆதி 26:21. வேறொரு துரவை வெட்டினார்கள்; அதைக்குறித்தும் வாக்குவாதம் பண்ணினார்கள்; ஆகையால் அதற்கு சித்னா என்று பேரிட்டான்.

ஆதி 26:22. பின்பு அவ்விடம்விட்டுப் பெயர்ந்துபோய், வேறொரு துரவை வெட்டினான்; அதைக்குறித்து அவர்கள் வாக்குவாதம் பண்ணவில்லை; அப்பொழுது அவன்: நாம் தேசத்தில் பலுகும்படிக்கு, இப்பொழுது கர்த்தர் நமக்கு இடம் உண்டாக்கினார் என்று சொல்லி, அதற்கு ரெகொபோத் என்று பேரிட்டான்.

ஆதி 26:23. அங்கேயிருந்து பெயெர்செபாவுக்குப் போனான்.

ஆதி 26:24. அன்று ராத்திரியிலே கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி: நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமுடைய தேவன், பயப்படாதே, நான் உன்னோடே கூட இருந்து, என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியைப் பெருகப்பண்ணுவேன் என்றார்.

ஆதி 26:25. அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, அங்கே தன் கூடாரத்தைப் போட்டான். அவ்விடத்தில் ஈசாக்கின் வேலைக்காரர் ஒரு துரவை வெட்டினார்கள்.

கர்த்தர் ஈசாக்கை ஆசீர்வதிக்கிறார். ஈசாக்கு கேராரிலே தங்கியிருக்கிறார். அது அவருக்கு அந்நிய தேசம். ஈசாக்கு அந்த தேசத்தில் விதை விதைக்கிறார். கர்த்தர் ஈசாக்கை ஆசீர்வதித்ததினால், அந்த வருஷத்தில் ஈசாக்கு நூறுமடங்கு பலன் அடைகிறார்.

ஈசாக்குக்கு கேராரிலே சொந்தமான நிலம் இல்லை. அவர் பெலிஸ்தரின் நிலத்தை குத்தகைக்கு எடுத்து, அவர்களுடைய நிலத்தில் விதை விதைக்கிறார். நமக்கு சொந்த நிலம் இல்லாவிட்டால், நாம் விதை விதைக்காமல் சும்மாயிருக்கக்கூடாது. ஈசாக்கைப்போல, நாமும் பிறருடைய நிலத்தை குத்தகைக்கு எடுத்து, அதிலே விதை விதைக்கவேண்டும். நாம் செய்கிற வேலையில் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். அப்போது கர்த்தர் ஈசாக்கை ஆசீர்வதித்ததுபோல, நம்மையும் ஆசீர்வதிப்பார்.

ஈசாக்கின் நாட்களில், தேசத்திலே பஞ்சம் உண்டாயிருக்கிறது. ஈசாக்கு இந்தப் பஞ்சகாலத்தில்தான் விதை விதைக்கிறார். அந்த பஞ்சவருஷத்தில், ஈசாக்கு நூறுமடங்கு பலன் அடைகிறார். இந்த ஆசீர்வாதம் ஈசாக்கின் சொந்த முயற்சியினால் கிடைத்த ஆசீர்வாதமல்ல. இது கர்த்தர் ஈசாக்கை ஆசீர்வதித்தினால் கிடைத்த ஆசீர்வாதம்.

ஈசாக்கு கேராரிலே ஐசுவரியவானாகிறார். அவர் வர வர விருத்தியடைந்து மகாபெரியவனாகிறார். ஈசாக்குக்கு ஆட்டுமந்தையும், மாட்டுமந்தையும், அநேக பணிவிடைக்காரரும் இருக்கிறார்கள். ஈசாக்கு அநேகருக்கு வேலை கொடுக்கிறார். ஈசாக்கின் தொழில் விருத்தியடைந்திருக்கிறது (ஆதி 26:13,14).

ஈசாக்கு விருத்தியடைந்ததைப் பார்த்து, கேராரிலுள்ள பெலிஸ்தர்கள் அவர் பேரில் பொறாமைகொள்கிறார்கள். மற்றவர்கள் செழிப்படைவதைப் பார்த்து நாம் பொறாமைப்படக்கூடாது. பொறாமை எலும்புருக்கி. நம்முடைய உற்றார் உறவினர்கள் எல்லோரும் விருத்தியடைவதைப் பார்த்து, அவர்கள்மீது நாம் பொறாமைப்பட்டால், நம்முடைய மனதின் அமைதி கெட்டுப்போகும். நம்முடைய சரீரத்தின் ஆரோக்கியமும் சீர்குலைந்துபோகும்.

ஈசாக்கு கேராரிலே தங்கியிருக்கிறார். பெலிஸ்தர்கள் கேராரை சேர்ந்தவர்கள். ஈசாக்கு பெலிஸ்தரின் நிலத்தில்தான் விதை விதைத்திருக்கிறார். ஈசாக்குக்கு ஆட்டு மந்தையும் மாட்டு மந்தையும் இருக்கிறது. பெலிஸ்தருக்கு ஆட்டுமந்தையும் மாட்டுமந்தையும் இல்லை. அவர்களுக்கு சொந்தமாக துரவுகள் இல்லை.

ஈசாக்கின் ஆட்டுமந்தையும் மாட்டுமந்தைகளும் விருத்தியடைந்து பெருகுவதற்கு, அவருடைய தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில், அவருடைய வேலைக்காரர் வெட்டின துரவுகள் மிகவும் பிரயோஜனமாயிருக்கிறது.

கேராரிலுள்ள பெலிஸ்தருக்கு ஆடுமாடுகள் இல்லை. அவர்களுக்கு துரவுகளும் இல்லை. ஈசாக்குக்கு துரவுகள் இருக்கிறது. பெலிஸ்தர்கள் ஈசாக்கின் துரவுகளை பொறாமை கண்களோடு பார்க்கிறார்கள். அவர்கள் அந்த துரவுகளையெல்லாம் தூர்த்து மண்ணினால் நிரப்பிப்போடுகிறார்கள் (ஆதி 26:15).

ஈசாக்கின் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் இவை வெட்டப்பட்டிருக்கிறது. கிழக்கு தேசத்தில் துரவுகளை வெட்டுவதன் மூலம் அந்த இடம் வெட்டியவருக்குச் சொந்தமாகும். ஆபிரகாம் துரவு வெட்டிய இடங்களை ஈசாக்கு சுதந்தரித்துக் கொள்கிறார். துரவுகளைத் தூர்த்து மண்ணினால் நிரப்பிப்போடுவது ஒரு அநியாயமான செயல். இது யுத்தம் பண்ண அழைப்பு விடுவதற்கு அடையாளம். (2இராஜா 3:19,25). ஈசாக்கு யுத்தம் பண்ண விரும்பாமல், துரவுகளை விட்டுக் கொடுக்கிறார்.

பெலிஸ்தரின் ராஜாவாகிய அபிமெலேக்கும் ஈசாக்கின் மீது பொறாமைப்படுகிறான். அபிமெலேக்கு சிறிதுகாலத்திற்கு முன்பு, "இந்த புருஷனையாகிலும், இவன் மனைவியையாகிலும் தொடுகிறவன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படுவான்" (ஆதி 26:11) என்று ஈசாக்கைக் குறித்தும், ரெபெக்காளைக் குறித்தும் ஆறுதலாகச் சொன்னான்.

ஆனால் இப்போதோ அபிமெலேக்கு ஈசாக்கை நோக்கி, "நீ எங்களை விட்டுப் போய்விடு; எங்களைப் பார்க்கிலும் மிகவும் பலத்தவனானாய்" (ஆதி 26:16) என்று பொறாமையோடும், கோபத்தோடும் சொல்லுகிறான்.

ஈசாக்கு அபிமெலேக்கோடு வாக்குவாதம்பண்ணவுமில்லை, சண்டைபோடவுமில்லை. ஈசாக்கு பொறாமைக்காரர்களோடு கேராரிலே தங்கியிருப்பதற்கு பதிலாக, வேறு இடத்தில் போய் தங்கலாம் என்று நினைக்கிறார். அப்பொழுது ஈசாக்கு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கேராரின் பள்ளத்தாக்கிலே கூடாரம் போட்டு, அங்கே குடியிருக்கிறார் (ஆதி 26:17).

ஈசாக்கு தன் தகப்பன் ஆபிரகாமைப் போலவே யுத்தத்தை விரும்பாமல் சமாதானத்தை விரும்புகிறார். தன்னை விரும்பாத இடத்தில் குடியிராமல், அவ்விடம்விட்டு வேறு இடத்திற்குப் போய்விடுகிறார் (ஆதி 13:5-13).

உயரமான ஸ்தலத்திலே சண்டைபோட்டுக்கொண்டிருப்பதைவிட, பள்ளத்தாக்கிலே சமாதானமாய்க் குடியிருப்பது மிகுந்த ஆசீர்வாதமாயிருக்கும். பொறாமைக்காரரோடு பட்டணங்களிலே குடியிருப்பதைவிட, சமாதானமாயிருக்கிறவர்களோடு, சாதாரண ஊர்களில் குடியிருப்பது நமக்கு நல்லது.

ஈசாக்கு பள்ளத்தாக்கிலே கூடாரம்போட்டு, அங்கே தங்கியிருந்தாலும் அவர் தன்னுடைய வேலைகளை தொடர்ந்து செய்கிறார். ஈசாக்கு அங்கே தன்னுடைய ஆடுகளையும் மாடுகளையும் மேய்க்கிறார். அதற்கு தேவையான தண்ணீரைப் பெறுவதற்கு ஈசாக்கு அங்கே துரவுகளைத் தோண்டுகிறார்.

ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் வெட்டினவைகளும், ஆபிரகாம் மரித்தபின் பெலிஸ்தர் தூர்த்துப் போட்டவைகளுமான துரவுகளை மறுபடியும் தோண்டுகிறார். தன் தகப்பன் அவைகளுக்கு இட்டிருந்த பேர்களின்படியே ஈசாக்கு அவைகளுக்குப் பேரிடுகிறார் (ஆதி 26:18).

ஈசாக்கு இப்போது பள்ளத்தாக்குக்கு வந்திருந்தாலும், அந்த இடத்தில் என்னென்ன வசதிகள் இருக்கிறதோ, அந்த வசதிகளை அவர் தன்னுடைய தொழிலுக்கு பயன்படுத்துகிறார். ஞானமுள்ள மனுஷன், தான் இருக்கும் இடத்தில், தனக்கு கிடைக்கும் வசதிகளை, தனக்கு சாதகமாகப் பயன்படுத்துவான். அதனால் தனக்கு நன்மை உண்டுபண்ணுவான்.

ஈசாக்கு பள்ளத்தாக்கிலே தோண்டுகிற துரவுகள், அவருடைய தகப்பன் ஆபிரகாம் அங்கே ஏற்கெனவே வெட்டின துரவுகளாகும். இந்த துரவுகளை அதை பெலிஸ்தர்கள் தூர்த்துப்போட்டார்கள். அவர்கள் மண்ணினால் நிரப்பிப்போட்டார்கள். ஈசாக்கோ அந்தத் துரவுகளைத் தேடிப்பார்த்து, அவற்றை மறுபடியுமாய்த் தோண்டுகிறார்.

விசுவாசிகளாகிய நாம் சத்தியத்தைத் தேடுவது, ஜீவத்தண்ணீரின் ஊற்றுக்கண்களைத் தேடுவதற்கு அடையாளம். பூர்வகாலத்தில் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அந்த சத்தியங்கள் ஒருவேளை காலத்தால் மூடிமறைக்கப்பட்டிருக்கலாம். அல்லது பிற்காலத்தில் ஏற்பட்ட நூதன உபதேசங்களால் அந்த சத்தியம் மங்கிப்போயிருக்கலாம். ஆனாலும், நாம் சத்தியத்தைத் தேடும்போது, பூர்வகாலங்களில் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களை தேடிப்பார்ப்பது நல்லது.

நம்முடைய ஆவிக்குரிய பிரயாணத்தில், நாம் பூர்வபாதைகளை விசாரித்து, அவற்றைக் கண்டுபிடித்து, அந்தப் பாதைகளில் பிரயாணம்பண்ணவேண்டும். நம்முடைய முன்னோர்கள் தோண்டின துரவுகள், இப்போது மூடப்பட்டதாகயிருந்தாலும், நாம் அவற்றை மறுபடியுமாய்த் தோண்டி, அந்தத் துரவுகளிலிருந்து தண்ணீரைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

ஈசாக்குடைய வேலைக்காரர் பள்ளத்தாக்கிலே வெட்டி, அங்கே சுரக்கும் நீரூற்றைக் காண்கிறார்கள் (ஆதி 26:19). ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் வெட்டின துரவுகளை, மறுபடியும் தோண்டி தண்ணீர் பெற்றுக்கொள்கிறார். அதே வேளையில் ஈசாக்கும் அவருடைய வேலைக்காரரும் பள்ளத்தாக்கிலே புதிய துரவுகளையும் வெட்டுகிறார்கள்.

நமக்கு பூர்வகாலங்களில் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்கள் கிடைத்திருந்தாலும், நாம் அந்த சத்தியமே போதுமென்று நினைத்து சும்மா இருந்துவிடக்கூடாது. நாம் ஆவிக்குரிய காரியங்களில் தொடர்ந்து முன்னேற வேண்டும். சத்தியத்தை தொடர்ந்து தேடவேண்டும். அப்போதுதான் கர்த்தர் நமக்கு புதிய வெளிப்பாடுகளைக் கொடுப்பார். பூர்வகாலங்களில் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களை நாம் அஸ்திபாரமாக பயன்படுத்தி, அதன்மீது நம்முடைய காலத்தில் நமக்கு வெளிப்படுத்தப்படும் சத்தியங்களை கட்டியெழுப்பவேண்டும்.

ஈசாக்கு துரவுகளைத் தோண்டும்போது, அவருக்கு எதிர்ப்பு வருகிறது. கேராரூர் மேய்ப்பர் இந்தத் தண்ணீர் தங்களுடையது என்று சொல்லி, ஈசாக்குடைய மேய்ப்பருடனே வாக்குவாதம் பண்ணுகிறார்கள் (ஆதி 26:20).

அவர்கள் தன்னோடே வாக்குவாதம் பண்ணினபடியால், ஈசாக்கு அந்தத் துரவுக்கு ஏசேக்கு என்று பேரிடுகிறார். ஈசாக்கின் வேலைக்காரர் வேறொரு துரவை வெட்டுகிறார்கள்; கேராரூர் மேய்ப்பர் அதைக்குறித்தும் வாக்குவாதம் பண்ணுகிறார்கள்; ஆகையால் ஈசாக்கு அதற்கு சித்னா என்று பேரிடுகிறார் (ஆதி 26:20,21).

நாம் சத்தியத்தின் ஊற்றுக்கண்களைத் திறக்கும்போது, அதற்கு எதிர்ப்பு வருவதற்கு வாய்ப்புள்ளது. கர்த்தர் நமக்கு புதிய சத்தியத்தை வெளிப்படுத்தும்போது, அந்த சத்தியத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. சத்தியத்திற்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறவர்கள் எல்லா காலத்திலும் இருப்பார்கள்.

ஆபிரகாமின் வேலைக்காரர் வெட்டின முதல் இரண்டு துரவுகளுக்கும், ஈசாக்கு ஏசேக்கு, சித்னா என்று பேரிடுகிறார். இந்தப் பெயர்களுக்கு வாக்குவாதம், வெறுப்பு என்று பொருள்.

ஈசாக்கு கேராரூர் மேய்ப்பரோடே வாக்குவாதம்பண்ணவில்லை. அவர்களோடு சண்டை போடவுமில்லை. அமைதியாகயிருப்பதே வெற்றிபெறுவதற்கு சிறந்த வழி என்று ஈசாக்கு நினைக்கிறார். சமாதானத்தைப் பின்பற்றுகிறவர்கள் சீக்கிரத்தில் சமாதானம் பெறுவார்கள். சமாதானத்தைத் தேடுகிறவர்கள் சீக்கிரத்தில் சமாதானத்தைக் கண்டுபிடிப்பார்கள். தேடுகிறவர்கள் கண்டடைவார்கள்.

ஈசாக்கு அவ்விடம்விட்டுப் பெயர்ந்துபோய், வேறொரு துரவை வெட்டுகிறார்; கேராரூர் மேய்ப்பர் அந்தத் துரவைக் குறித்து வாக்குவாதம் பண்ணவில்லை; அப்பொழுது ஈசாக்கு "நாம் தேசத்தில் பலுகும்படிக்கு, இப்பொழுது கர்த்தர் நமக்கு இடம் உண்டாக்கினார்" என்று சொல்லி, அதற்கு ரெகொபோத் என்று பேரிடுகிறார் (ஆதி 26:22).

ரெகொபோத் என்னும் பெயருக்கு விஸ்தாரம் என்று பொருள். இந்தத் துரவில் போதுமான இடவசதியுள்ளது. ஈசாக்கு முதலில் வெட்டின இரண்டு துரவுகளும் நெருக்கமாகவும், போராட்டமாகவும் இருந்தது. ஆனால் இந்தத் துரவோ அவருக்கு விஸ்தாரமாயிருக்கிறது.

ரெகொபோத் என்னும் துரவு பரலோகத்திற்கு அடையாளமாயிருக்கிறது. பரலோகத்தில் சமாதானமுள்ளது. அங்கே நெருக்கமோ, போராட்டமோ, சண்டை சச்சரவுகளோ இல்லை. அங்கே நம் எல்லோருக்கும் போதுமான இடவசதியுள்ளது.

ஈசாக்கு அங்கேயிருந்து பெயெர்செபாவுக்குப் போகிறார் (ஆதி 26:23). ஈசாக்கு எங்கே போனாலும், அவர் அங்கே கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்கிறார். அவர் செல்லும் இடங்களிலெல்லாம் கர்த்தருடைய வார்த்தைகளை தியானிக்கிறார். ஈசாக்கு கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கிறார். ஈசாக்கு களைப்படைந்தவராக, மிகவும் சோர்ந்துபோய் பெயர்செபாவுக்கு வந்து சேருகிறார்.

அன்று ராத்திரியிலே கர்த்தர் ஈசாக்குத் தரிசனமாகி, "நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமுடைய தேவன், பயப்படாதே, நான் உன்னோடே கூட இருந்து, என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியைப் பெருகப்பண்ணுவேன்" (ஆதி 26:24) என்று சொல்லுகிறார்.

ஈசாக்கு கேராரிலிருந்து பெயர்செபாவுக்கு வந்திருக்கிறார். அவர் போகும் இடங்களிலெல்லாம் கர்த்தருடைய பிரசன்னம் அவரோடு கூடயிருக்கிறது. ஈசாக்கு ஆறுதலைத் தேடிப்போகிறார். கர்த்தர் அவருக்கு ஆறுதலின் தேவனாயிருக்கிறார். அவர் ஈசாக்கைப் பார்த்து "பயப்படாதே" என்று ஆறுதலாகச் சொல்லுகிறார்.

ஈசாக்கு சோர்ந்து போயிருக்கிறார். ஆபிரகாம் வெட்டின துரவுகளைப் பெலிஸ்தர்கள் தூர்த்துப் போட்டு, அதை மண்ணினால் நிரப்பிப் போட்டார்கள். இதனால் ஈசாக்கு, அந்த ஊரை விட்டு போய்விடுகிறார். (ஆதி 26:15,16). இதன் பின்பு ஈசாக்கு வெட்டிய துரவுகளைக் கேராரூர் மேய்ப்பர்கள் தங்களுடையது என்று வாக்குவாதம் பண்ணினார்கள். (ஆதி 26:17-22). ஈசாக்கு இப்படிப்பட்ட பிரச்சனையான வேளையில் அவர்களோடு யுத்தம்பண்ணாமல் சமாதானத்தை நாடுகிறார்.

ஈசாக்கு பெயர்செபாவிலே ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, அங்கே தன் கூடாரத்தைப் போடுகிறார். அவ்விடத்தில் ஈசாக்கின் வேலைக்காரர் ஒரு துரவை வெட்டுகிறார்கள் (ஆதி 26:25).

ஈசாக்கும் அபிமெலேக்கும் ஆதி 26:26-33

ஆதி 26:26. அபிமெலேக்கும் அவன் சிநேகிதனாகிய அகுசாத்தும் அவன் சேனாபதியாகிய பிகோலும், கேராரிலிருந்து அவனிடத்துக்கு வந்தார்கள்.

ஆதி 26:27. அப்பொழுது ஈசாக்கு அவர்களை நோக்கி: ஏன் என்னிடத்தில் வந்தீர்கள்? நீங்கள் என்னைப் பகைத்து, என்னை உங்களிடத்தில் இராதபடிக்குத் துரத்திவிட்டீர்களே என்றான்.

ஆதி 26:28. அதற்கு அவர்கள்: நிச்சயமாய் கர்த்தர் உம்மோடே கூட இருக்கிறார் என்று கண்டோம்; ஆகையால் எங்களுக்கும் உமக்கும் ஒரு ஆணை ஏற்பாடு உண்டாகவேண்டும் என்று நாங்கள் நிர்ணயம் பண்ணினோம்.

ஆதி 26:29. நாங்கள் உம்மைத் தொடாமல், நன்மையையே உமக்குச் செய்து, உம்மைச் சமாதானத்தோடே அனுப்பிவிட்டதுபோல், நீரும் எங்களுக்குத் தீங்கு செய்யாதபடிக்கு உம்மோடே உடன்படிக்கை பண்ணிக்கொள்ள வந்தோம்; நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவராமே என்றார்கள்.

ஆதி 26:30. அவன் அவர்களுக்கு விருந்துபண்ணினான், அவர்கள் புசித்துக் குடித்தார்கள்.

ஆதி 26:31. அதிகாலையில் எழுந்து ஒருவருக்கொருவர் ஆணையிட்டுக் கொண்டார்கள். பின்பு ஈசாக்கு அவர்களை அனுப்பிவிட்டான்; அவர்கள் அவனிடத்திலிருந்து சமாதானத்தோடே போய்விட்டார்கள்.

ஆதி 26:32. அந்நாளில்தானே ஈசாக்கின் வேலைக்காரர் வந்து, தாங்கள் துரவு வெட்டின செய்தியை அவனுக்கு அறிவித்து, தண்ணீர் கண்டோம் என்றார்கள்.

ஆதி 26:33. அதற்கு சேபா என்று பேரிட்டான்; ஆகையால் அந்த ஊரின் பேர் இந்நாள் வரைக்கும் பெயர்செபா என்னப்படுகிறது.

கர்த்தர் ஈசாக்கை ஆசீர்வதித்தார். அவர் ஐசுவரியனாகி வர வர விருத்தியடைந்து, மகாபெரியவனாகிறார். இதனால் அபிமெலேக்கு ஈசாக்கின்மீது பொறாமைப்பட்டு, ஈசாக்கை நோக்கி, "நீ எங்களைவிட்டு போய்விடு" (ஆதி 26:16) என்று சொன்னான். ஈசாக்கு தன்னைவிட்டுப்போய்விட்டால், அவர் விருத்தியடையமாட்டார் என்றும், அவர் தரித்திரனாவார் என்றும், சிறுமைப்படுவார் என்றும் அபிமெலேக்கு நினைத்தான்.

ஈசாக்கு விருத்தியடைவதற்கு, அபிமலேக்கு அவரோடுகூட இருப்பது காரணமல்ல. கர்த்தர் ஈசாக்கை ஆசீர்வதித்தினால் மாத்திரமே, அவர் வர வர விருத்தியடைந்தார். அவர் ஐசுவரியவானானார். கர்த்தர் நம்மோடு கூடயிருக்கும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதமும் நம்மிடத்தில் தங்கியிருக்கும். கர்த்தர் ஈசாக்கோடு கூடயிருப்பதை பெலிஸ்தரின் ராஜாவாகிய அபிமெலேக்கு, புரிந்துகொள்கிறான்.

அபிமெலேக்கு ஈசாக்கோடு ஒப்புரவாகி, அவரோடு சமாதானம் பண்ண விரும்புகிறான். அபிமெலேக்கும் அவன் சிநேகிதனாகிய அகுசாத்தும், அவன் சேனாபதியாகிய பிகோலும், கேராரிலிருந்து ஈசாக்கினிடத்துக்கு வருகிறார்கள் (ஆதி 26:26). ஈசாக்கு இப்போது பெயர்செபாவிலே தங்கியிருக்கிறார்.

சில மூலபாஷை சுவடிகளில் அபிமெலேக்கும், பிகோலும் வந்தார்கள் என்றிருக்கிறது. அகுசாத்தின்பெயர் காணப்பட வில்லை. அகுசாத் ஒரு நபரின் பெயரல்ல. பிகோல் என்னும் பெயரும் பெலிஸ்தருடைய சேனைத்தலைவனைக் குறிக்கும் பொதுவான பட்டப்பெயராகும் என்று வேதபண்டிதர்களில் சிலர் கருத்து கூறுகிறார்கள். அபிமெலேக்கு என்பது பெலிஸ்தரின் ராஜாவைக் குறிக்கும் பொதுவான பட்டப்பெயர்.

ஈசாக்கு அபிமெலேக்கை உடனே வரவேற்கவில்லை. அவர் பெலிஸ்தரைக் குறித்து மிகவும் எச்சரிப்பாயிருக்கிறார். பெலிஸ்தர் தன்மீது பொறாமைப்பட்டதையும், அவர்கள் தனக்கு விரோதமாக ஏற்கெனவே தீங்கு செய்ததையும், அவர்கள் தன்னுடைய துரவுகளை மூடிப்போட்டதையும் ஈசாக்கு இன்னும் மறக்கவில்லை.

ஈசாக்கு அவர்களை நோக்கி: "ஏன் என்னிடத்தில் வந்தீர்கள்? நீங்கள் என்னைப் பகைத்து, என்னை உங்களிடத்தில் இராதபடிக்குத் துரத்திவிட்டீர்களே" (ஆதி 26:27) என்று சொல்லுகிறார்.

அபிமெலேக்கும், அவனோடு கூட வந்திருக்கிற அகுசாத்தும், சேனாபதியாகிய பிகோலும் ஈசாக்கோடு சமாதான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். அவர்கள் ஈசாக்கை நோக்கி, "நிச்சயமாய் கர்த்தர் உம்மோடே கூட இருக்கிறார் என்று கண்டோம்; ஆகையால் எங்களுக்கும் உமக்கும் ஒரு ஆணை ஏற்பாடு உண்டாகவேண்டும் என்று நாங்கள் நிர்ணயம் பண்ணினோம். நாங்கள் உம்மைத் தொடாமல், நன்மையையே உமக்குச் செய்து, உம்மைச் சமாதானத்தோடே அனுப்பிவிட்டதுபோல, நீரும் எங்களுக்குத் தீங்கு செய்யாதபடிக்கு உம்மோடே உடன்படிக்கை பண்ணிக்கொள்ள வந்தோம்; நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவராமே" (ஆதி 26:28,29) என்று சொல்லுகிறார்கள்.

அபிமெலேக்கு ஈசாக்கை தன்னிடத்தில் இராதபடிக்கு துரத்திவிட்டது மெய்தான். ஆனாலும் பெலிஸ்தர்கள் ஈசாக்குக்கு தீங்கு செய்யாமல், அவரை தொடாமல், அவருக்கு நன்மை செய்து, அவரை சமாதானத்தோடே அனுப்பிவிட்டதாக அபிமெலேக்கு சொல்லுகிறான். ஈசாக்கோடு கர்த்தர் இருக்கிறார் என்பதையும் அபிமெலேக்கு அங்கீகரிக்கிறான். ஈசாக்கு கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர் என்பதையும் அபிமெலேக்கு புரிந்துகொள்கிறான். அப்படிப்பட்ட ஈசாக்கோடு உடன்படிக்கை செய்துகொள்ளவேண்டுமென்று அபிமெலேக்கும் பெலிஸ்தரும் விரும்புகிறார்கள்.

ஈசாக்கு அபிமெலேக்கின் வார்த்தைகளை நம்புகிறார். அபிமெலேக்கு தான் செய்த தப்பிதங்களை மறந்துவிட்டு, இப்போது ஈசாக்கிடத்தில் சிநேகத்தைக் காண்பிக்கிறான். அவனுடைய வார்த்தையில் உண்மையிருப்பதை ஈசாக்கு புரிந்துகொள்கிறார். பெலிஸ்தர்கள் தன்னோடு மெய்யாகவே சமாதான உடன்படிக்கை பண்ண விரும்புகிறார்கள் என்பதையும் ஈசாக்கு அங்கீகரிக்கிறார். அதன்பின்பு ஈசாக்கு அவர்களுக்கு விருந்துபண்ணுகிறார். அவர்கள் புசித்து குடிக்கிறார்கள் (ஆதி 26:30).

நாம் எல்லோரோடும் முடிந்த வரையிலும் சமாதானமாயிருக்கவேண்டும். நம்முடைய குடும்பத்தார், உற்றார் உறவினர்கள், அயலகத்தார், நம்முடைய ஊரார் ஆகிய எல்லோரோடும் நாம் சமாதானமாயிருக்க வேண்டும். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். பெலிஸ்தர்கள் தனக்கு காண்பித்த பழைய பொறாமையை ஈசாக்கு மறந்துவிட்டு, அவர்களோடு சமாதானமாயும் சிநேகமாயும் இருக்கிறார்.

ஈசாக்கும் அபிமெலேக்கும் காலதாமதம்பண்ணாமல் உடன்படிக்கை பண்ணுகிறார்கள். அவர்கள் அதிகாலையில் எழுந்து ஒருவருக்கொருவர் ஆணையிட்டுக் கொள்கிறார்கள். பின்பு ஈசாக்கு அவர்களை அனுப்பிவிடுகிறார்; அபிமெலேக்கும், அவனோடு கூட வந்த பெலிஸ்தரும் ஈசாக்கினிடத்திலிருந்து சமாதானத்தோடே போய்விடுகிறார்கள் (ஆதி 26:31).

ஈசாக்கு சமாதான உடன்படிக்கை பண்ணினதை கர்த்தர் அங்கீகரிக்கிறார். ஈசாக்கு அபிமெலேக்கோடு எந்த நாளிலே சமாதான உடன்படிக்கை பண்ணினாரோ, அந்நாளிலே தானே ஈசாக்கின் வேலைக்காரர் வந்து, தாங்கள் துரவு வெட்டின செய்தியை அவருக்கு அறிவித்து, "தண்ணீர் கண்டோம்" என்று சொல்லுறார்கள் (ஆதி 26:32). சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்களாயிருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய கிருபையையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்கிறார்கள். ஈசாக்கு அபிமெலேக்கோடு சமாதான உடன்படிக்கை பண்ணியதினால் அவருக்கு ஒரு குறைவும் உண்டாகவில்லை. கர்த்தர் ஈசாக்குக்கு நிறைவான ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார்.

ஈசாக்கு அந்தத் துரவுக்கு சேபா என்று பேரிடுகிறார்; ஆகையால் அந்த ஊரின் பேர் இந்நாள் வரைக்கும் பெயர்செபா என்னப்படுகிறது (ஆதி 26:33).

ஏசாவின் விவாகம்
ஆதி 26:34,35

ஆதி 26:34. ஏசா நாற்பது வயதானபோது, ஏத்தியனான பெயேரியினுடைய குமாரத்தியாகிய யூதீத்தையும், ஏத்தியனான ஏலோனுடைய குமாரத்தியாகிய பஸ்மாத்தையும் விவாகம் பண்ணினான்.

ஆதி 26:35. அவர்கள் ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் மனநோவாயிருந்தார்கள்.

கானானியர்கள் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். அவர்கள் ஆபிரகாமின் ஆசீர்வாதங்களுக்கு அந்நியர்கள். ஏசா கானானிய ஸ்திரீகளை விவாகம்பண்ணுகிறான். ஏசா தேவனுடைய ஆசீர்வாதத்தை விரும்பவுமில்லை. அவன் தேவனுடைய கோபத்திற்கும் சாபத்திற்கும் பயப்படவுமில்லை.

ஏசா நாற்பது வயதானபோது, ஏத்தியனான பெயேரியினுடைய குமாரத்தியாகிய யூதீத்தையும், ஏத்தியனான ஏலோனுடைய குமாரத்தியாகிய பஸ்மாத்தையும் விவாகம் பண்ணுகிறான் (ஆதி 26:34).

ஈசாக்கும் ரெபெக்காளும் யாக்கோபின்மீது அன்பாயிருப்பதுபோல ஏசாவின்மீதும் அன்பாயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளை நேசிக்கிறார்கள். பெற்றோர் இரக்க சுபாவமுள்ளவர்கள். ஆனால் ஏசாவின் மனைவிகளோ பெரியவர்களை மதிக்கவில்லை. ஏசா ஏத்தியருடைய குமாரத்திகளை விவாகம்பண்ணியதினால், ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் மிகுந்த வருத்தமுண்டாகிறது.

அவர்களுடைய மருமக்கள் கர்த்தரை ஆராதிக்காதவர்கள். அவர்கள் விக்கிரகாராதனைக்காரர்கள். ஏசாவின் மனைவிமார்கள் இருவரும் ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் மனநோவாயிருக்கிறார்கள் (ஆதி 26:35).

"மனநோவு" என்பதற்கு தங்களுடைய ஆவியில் விசனமடைந்திருந்தார்கள் என்று பொருள். (ஆதி 27:46; ஆதி 28:2-9). எபிரெயரின் மூலபாஷை சுவடிகள் இதைப் பற்றிக் கூறும்போது யூதீத்தும், பஸ்மாத்தும் ஈசாக்கோடும், ரெபெக்காளோடும் எப்போதும் வாக்குவாதம் பண்ணிக் கொண்டேயிருப்பார்கள் என்றும், ஈசாக்கு, ரெபெக்காள் ஆகியோரின் மார்க்கக் காரியங்களை மருமக்கள்மார் பின்பற்றவில்லையென்றும் கூறுகிறது.

27 அதிகாரம்

ஏசா தன் சேஷ்டபுத்திரபாகத்தை அலட்சியம் பண்ணினான். ஏசாவுக்கும் யாக்கோபுக்கும் இடையே பிரச்சனைகளும் போராட்டங்களும் ஏற்படுகிறது.

"ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால், பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான்" (எபி 12:16,17).

ஈசாக்கு, தன் மூத்த குமாரனாகிய ஏசாவை ஆசீர்வதிக்க மனதாயிருக்கிறார் (ஆதி 27:1-5). ரெபெக்காளோ அந்த ஆசீர்வாதத்தை யாக்கோபுக்கு பெற்றுத்தர திட்டமிடுகிறாள் (ஆதி 27:6-17). யாக்கோபு தன்னுடைய தாயாரின் சதித்திட்டத்தை சரியாக நிறைவேற்றி, ஈசாக்கிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கிறான் (ஆதி 27:18-29).

ஏசாவுக்கு ஏமாற்றமுண்டாகிறது. தன்னை ஆசீர்வதிக்குமாறு ஏசா ஈசாக்கினிடத்தில் கேட்கிறான் (ஆதி 27:30-40). தனக்கு வரவேண்டிய ஆசீர்வாதத்தை யாக்கோபு வஞ்சித்து பெற்றுக்கொண்டான் என்று நினைத்து, ஏசா யாக்கோபின்மீது கோபமாயிருக்கிறான் (ஆதி 27:41-46).

ஈசாக்கின் ஆசீர்வாதம் ஆதி 27:1-5

ஆதி 27:1. ஈசாக்கு முதிர்வயதானதினால் அவன் கண்கள் இருளடைந்து பார்வையற்றுப் போனபோது, அவன் தன் மூத்த குமாரனாகிய ஏசாவை அழைத்து, என் மகனே என்றான்; அவன், இதோ, இருக்கிறேன் என்றான்.

ஆதி 27:2. அப்பொழுது அவன்: நான் முதிர்வயதானேன், என் மரணம் இன்ன நாளில் என்று அறியேன்.

ஆதி 27:3. ஆகையால், நீ உன் ஆயுதங்களாகிய உன் அம்பறாத் தூணியையும் உன் வில்லையும் எடுத்துக்கொண்டு வனத்துக்குப் போய், எனக்காக வேட்டையாடி,

ஆதி 27:4. அதை எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்து, நான் புசிக்கவும், நான் மரணமடையுமுன்னே என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கவும், என்னிடத்தில் கொண்டுவா என்றான்.

ஆதி 27:5. ஈசாக்கு தன் குமாரனாகிய ஏசாவோடே பேசுகையில், ரெபெக்காள் கேட்டுக் கொண்டிருந்தாள். ஏசா வேட்டையாடிக் கொண்டுவரும்படி வனத்துக்குப் போனான்.

ஏசா ஈசாக்கின் மூத்த குமாரன். ஈசாக்குக்கு முதிர்வயதாயிற்று. அவருடைய கண்கள் இருளடைந்துபோயிற்று. அவருடைய பார்வையும் அற்றுப்போயிற்று. ஈசாக்கு மரிக்கும் தருவாயிலிருக்கிறார். தான் மரிப்பதற்கு முன்பாக தன் மூத்த குமாரனாகிய ஏசாவை ஆசீர்வதிக்க வேண்டுமென்று ஈசாக்கு விரும்புகிறார்.

ஏசா ஈசாக்கின் சேஷ்டபுத்திரன். யூதருடைய பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரமாக, சேஷ்டபுத்திரனுக்கு, சேஷ்டபுத்திரபாகம் ஆசீர்வாதமாகக் கொடுக்கப்படும். ஈசாக்கு தன் குடும்பத்தார் எல்லோருக்கும் முன்பாக, ஏசாவை தன்னுடைய சேஷ்டபுத்திரனாக அறிவிக்க விரும்புகிறார்.

ஈசாக்கு தன்னுடைய விருப்பத்தை ஏசாவிடம் சொல்லுகிறார். ஈசாக்குக்கு முதிர்வயதானதினால் அவர் கண்கள் இருளடைந்து பார்வையற்றுப் போயிற்று. அப்போது, ஈசாக்கு தன் மூத்த குமாரனாகிய ஏசாவை அழைத்து, "என் மகனே" என்று கூப்பிடுகிறார். ஏசா "இதோ, இருக்கிறேன்" என்று சொல்லுகிறான். அப்பொழுது ஈசாக்கு, "நான் முதிர்வயதானேன், என் மரணம் இன்ன நாளில் என்று அறியேன்" (ஆதி 27:1,2) என்று ஏசாவினிடத்தில் சொல்லுகிறார்.

இக்காலத்தில் ஈசாக்கின் வயது 138. தான் மரித்துப்போவோம் என்று ஈசாக்கு நினைத்த பின்பு, அவர் மேலும் 42 வருஷங்கள் உயிரோடிருக்கிறார். தேவன் அவரைக் குணப்படுத்துகிறார். (ஆதி 35:27-28). ஈசாக்கு 180 ஆவது வயதில் மரிக்கிறார். (ஆதி 35:28) தன் குமாரன் யாக்கோபு எகிப்திற்குப் போவதற்கு 10 வருஷங்களுக்கு முன்பாக ஈசாக்கு மரிக்கிறார் (ஆதி 47:9).

மனுஷனுடைய மரிக்கும் காலம் யாருக்கும் தெரியாது. தேவன் வெளிப்படுத்தினால் மட்டுமே அது மனுஷனுக்குத் தெரியும். ஆனாலும் எல்லோரும் மரித்துப் போகவேண்டுமென்று மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. (எபி 9:27) சவுலின் மரணத்தைக் குறித்து ஒரு அசுத்தஆவி அவனுக்கு வெளிப்படுத்திற்று. (1சாமு 28:19= 1நாளா 10:13-14).

மனுஷனுடைய மரிக்கும் காலம் மனுஷனுக்கு தெரியாது. ஆனால் அது கர்த்தருக்கு தெரியும். கர்த்தருக்கு தெரியாத இரகசியம் ஒன்றுமே இல்லை. தேவன் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம், ஒரு சில மனுஷருக்கு அவர்களுடைய மரிக்கும் காலத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். அதன் விவரம் வருமாறு:

1. யாக்கோபு (மரிப்பதற்கு ஒருநாளுக்கு முன்பு) (ஆதி 48:1; ஆதி 49:29-33)

2. ஆரோன் (மரிப்பதற்கு ஒருநாளுக்கு முன்பு) (எண் 20:23-29)

3. மோசே (மரிப்பதற்கு ஒருநாளுக்கு முன்பு) (உபா 31:2; உபா 32:48-52; உபா 34:1-8)

4. யோசுவா (மரிப்பதற்கு ஒருநாளுக்கு முன்பு) (யோசு 23:14)

5. எசேக்கியா (மரிப்பதற்கு ஒருநாளுக்கு முன்பு - ஆனால் கர்த்தர் இதை 15 வருஷமாக மாற்றினார்) (2இராஜா 20:1-8; ஏசா 38)

6. எசேக்கியேலின் மனைவி (மரிப்பதற்கு ஒருநாளுக்கு முன்பு) (எசே 24:15-20)

7. ஐசுவரியமுள்ள மதியீனன். (மரிப்பதற்கு சிலமணி நேரங்களுக்கு முன்பு) (லூக்கா 12:16)

பரிசுத்த வேதாகமத்தில் மனுஷருடைய ஆயுசுநாளைப்பற்றி பல சம்பவங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. நீ அழைப்பித்த ஸ்திரீயின் நிமித்தம் செத்தாய் என்று அபிமெலேக்கிற்குக் கூறப்பட்டிருக்கிறது. (ஆதி 20:3-7).

2. உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக. (யாத் 20:12; எபே 6:2).

3. உன் பாவங்களின் நிமித்தம் நீ விரைவில் அழிந்துபோவாய். (லேவி 26; உபா 28).

4. கர்த்தர் சிறுமைப்பட்டவனை பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார் (சங் 41:1-2).

5. இரத்தப்பிரியரும், சூதுள்ள மனுஷரும் தங்கள் ஆயுளின் நாட்களில் பாதி வரையிலாகிலும் பிழைத்திருக்க மாட்டார்கள் (சங் 55:23).

6. நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன் (சங் 91).

7. தேவனுடைய வார்த்தைகள் உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும், சமாதானத்தையும் பெருகப்பண்ணும். (நீதி 3:1-2).

8. துன்மார்க்கருடைய வருஷங்களோ குறுகிப்போம். (நீதி 10:25,27).

9. அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடிதியில் நாசமடைவான். (நீதி 29:1).

10. உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன். (ஏசா 38:5).

11. என் நாட்கள் அறுப்புண்கிறபோது சொன்னேன். (ஏசா 38:10).

12. உங்களில் அநேகர் பலவீனரும், வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். (1கொரி 11:29-30).

13. ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவை விலக்கிக் காத்துக் கொள்வான். (1பேதுரு 3:10-11).

14. பாவத்தின் நிமித்தமாக பலர் மரித்துப் போயிருக்கிறார்கள். அவர்கள் பாவம் செய்யாதவர்களாக இருந்திருப்பார்களென்றால், அவர்களுடைய ஆயுசுநாள் நீடித்திருந்திருக்கும். அவர்களுக்கும் நியாயத்தீர்ப்பு வந்திருக்காது. (யாத் 9:15; யாத் 12:15,19; யாத் 30:33; யாத் 31:14; லேவி 7:20-27; லேவி 17: 4-14; லேவி 18:29; லேவி 19:8; லேவி 20:3-18; எண் 9:13; எண் 15:30-31;எண் 19:13,20)

ஏசா ஏத்தியருடைய குடும்பத்தில் விவாகம்பண்ணினான். ஏசாவின் மனைவிமார்கள் ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் மனநோவாயிருக்கிறார்கள் (ஆதி 26:34,35). ஆனாலும் ஈசாக்கும் ரெபெக்காளும், ஏசாவையும், அவனுடைய மனைவிகளையும் தங்கள் வீட்டை விட்டு வெளியேற்றிவிடவில்லை. அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட மனநோவை பொறுமையோடு சகித்துக்கொள்கிறார்கள்.

ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் மனநோவு ஏற்பட்டதுபோல, ஏராளமான பெற்றோருக்கு தங்கள் பிள்ளைகள் மூலமாக மனநோவு ஏற்படலாம். பெற்றோர் தங்கள் மனநோவை சகித்துக்கொள்ளவேண்டும். தங்கள் பிள்ளைகள்மீது அதிகமான கோபத்தையும், எரிச்சலையும் காண்பிக்கக்கூடாது.

ஈசாக்கு மரிக்கும் தருவாயிலிருக்கிறார். தனக்கு சீக்கிரத்தில் மரணம் வரப்போகிறது என்பது ஈசாக்குக்கு தெரிந்திருக்கிறது. ஆனால் தன்னுடைய மரணம் இன்னநாளில் வரும் என்பதை ஈசாக்கு அறியாதிருக்கிறார். தான் உயிரோடிருக்கும்போதே, தன்னுடைய மூத்த குமாரன் ஏசாவை ஆசீர்வதிக்கவேண்டும் என்று ஈசாக்கு விரும்புகிறார். தான் மரணமடையும் முன்னே தன்னுடைய ஆத்துமா ஏசாவை ஆசீர்வதிக்கவேண்டும் என்பது ஈசாக்கின் விருப்பம்.

ஈசாக்கு ஏசாவை ஆசீர்வதிக்கும்போது, ஈசாக்கின் குடும்பத்தில் ஏசாவுக்கு சேஷ்டபுத்திரபாகம் ஆசீர்வாதமாக கொடுக்கப்படும். இது ஈசாக்கின் கடைசி விருப்பம். ஈசாக்கு ஏசாவை தன்னுடைய குடும்ப வாரிசாக எல்லோருக்கும் முன்பு அறிவிக்க விரும்புகிறார்.

ஈசாக்கு ஏசாவை ஆசீர்வதிப்பதற்கு முன்பாக, அவன் தனக்கு சில காரியங்களை செய்யவேண்டுமென்று ஈசாக்கு எதிர்பார்க்கிறார். ஈசாக்கு ஏசாவை நோக்கி, "நீ உன் ஆயுதங்களாகிய உன் அம்பறாத்தூணியையும் உன் வில்லையும் எடுத்துக்கொண்டு வனத்துக்குப் போய், எனக்காக வேட்டையாடு" என்றும்,

"அதை எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்து, நான் புசிக்கவும், நான் மரணமடையுமுன்னே என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கவும், என்னிடத்தில் கொண்டுவா" (ஆதி 27:3,4) என்றும் சொல்லுகிறார்.

தன் குமாரன் வேட்டையாடி கொண்டுவந்ததை, புசித்த பின்பு, ஈசாக்கு அவனை ஆசீர்வதிக்க விரும்புகிறார். ஈசாக்கு தன்னுடைய ஆசீர்வாதத்தைப்பற்றிச் சொல்லும்போது "நான் மரணமடையுமுன்னே என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கவேண்டும்" என்று சொல்லுகிறார்.

ஜெபவார்த்தைகள் நம்முடைய உதட்டிலிருந்து வந்தால் மாத்திரம் போதாது. அது நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்தும், நம்முடைய ஆத்துமாவிலிருந்தும் வரவேண்டும். நாம் மற்றவர்களை ஆசீர்வதிக்கும்போதும், மற்றவர்கள் நம்மை ஆசீர்வதிக்கும்போதும், அந்த ஆசீர்வாதம் ஆத்துமாவிலிருந்து புறப்பட்டு வரவேண்டும்.

சங்கீதக்காரர் இந்த சத்தியத்தை விளக்கும் வண்ணமாக, "என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி" (சங் 103:1) என்று சொல்லுகிறார். நம்முடைய இருதயத்திலிருந்து வராத ஆசீர்வாதம், மெய்யான ஆசீர்வாதமாயிராது.

ஈசாக்கு தன் குமாரனாகிய ஏசாவோடே இந்த வார்த்தைகளை தனியாகப் பேசுகிறார். அவர் பேசுகையில், ரெபெக்காள் அந்த வார்த்தைகளை கேட்டுக் கொண்டிருக்கிறாள். ஈசாக்கு ஏசாவின்மீது பட்சமாயிருக்கிறார். ரெபெக்காளோ யாக்கோபின்மீது பட்சமாயிருக்கிறாள்.

ஏசா ஈசாக்கின் வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிகிறான். ஏசா வேட்டையாடிக் கொண்டுவரும்படி வனத்துக்குப் போகிறான் (ஆதி 27:5). ஏசா இதற்கு முன்பு வேட்டையாடி ஒன்றும் கிடைக்காமல், தன்னுடைய சேஷ்டபுத்திரபாகத்தை இழந்து போனான். (ஆதி 25:27-34). ஏசா இப்பொழுது தாமதமாக வேட்டையாடி வருவதினால் தன்னுடைய ஆசீர்வாதத்தை இழந்துபோகிறான்.

ரெபெக்காளின் விருப்பம் ஆதி 27:6-17

ஆதி 27:6. அப்பொழுது ரெபெக்காள் தன் குமாரனாகிய யாக்கோபை நோக்கி: உன் தகப்பன் உன் சகோதரனாகிய ஏசாவை அழைத்து:

ஆதி 27:7. நான் புசித்து, எனக்கு மரணம் வருமுன்னே, கர்த்தரை முன்னிட்டு உன்னை ஆசீர்வதிக்கும்படி, நீ எனக்காக வேட்டையாடி, அதை எனக்கு ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்துக் கொண்டுவா என்று சொல்லக் கேட்டேன்.

ஆதி 27:8. ஆகையால், என் மகனே, என் சொல்லைக் கேட்டு, நான் உனக்குக் கற்பிக்கிறபடி செய்.

ஆதி 27:9. நீ ஆட்டுமந்தைக்குப் போய், இரண்டு நல்ல வெள்ளாட்டுக்குட்டிகளைக் கொண்டு வா; நான் அவைகளை உன் தகப்பனுக்குப் பிரியமானபடி ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைப்பேன்.

ஆதி 27:10. உன் தகப்பன் தாம் மரணமடையுமுன்னே உன்னை ஆசீர்வதிக்கும்படி அவர் புசிப்பதற்கு நீ அதை அவரிடத்தில் கொண்டுபோக வேண்டும் என்றாள்.

ஆதி 27:11. அதற்கு யாக்கோபு தன் தாயாகிய ரெபெக்காளை நோக்கி: என் சகோதரனாகிய ஏசா ரோமம் மிகுந்தவன், நான் ரோமமில்லாதவன்.

ஆதி 27:12. ஒருவேளை என் தகப்பன் என்னைத் தடவிப்பார்ப்பார்; அப்பொழுது நான் அவருக்கு எத்தனாய்க் காணப்பட்டு, என் மேல் ஆசீர்வாதத்தை அல்ல, சாபத்தை வரப்பண்ணிக் கொள்வேனே என்றான்.

ஆதி 27:13. அதற்கு அவன் தாய்: என் மகனே, உன்மேல் வரும் சாபம் என்மேல் வரட்டும்; என் சொல்லை மாத்திரம் கேட்டு, நீ போய், அவைகளை என்னிடத்தில் கொண்டுவா என்றாள்.

ஆதி 27:14. அவன் போய் அவைகளைப் பிடித்து, தன் தாயினிடத்தில் கொண்டுவந்தான்; அவனுடைய தாய் அவன் தகப்பனுக்குப் பிரியமானபடி ருசியுள்ள பதார்த்தங்களைச் சமைத்தாள்.

ஆதி 27:15. பின்பு, ரெபெக்காள் வீட்டிலே தன்னிடத்தில் இருந்த தன் மூத்த மகனாகிய ஏசாவின் நல்ல வஸ்திரங்களை எடுத்து, தன் இளைய மகனாகிய யாக்கோபுக்கு உடுத்தி,

ஆதி 27:16. வெள்ளாட்டுக்குட்டிகளின் தோலை அவன் கைகளிலேயும் ரோமமில்லாத அவன் கழுத்திலேயும் போட்டு;

ஆதி 27:17. தான் சமைத்த ருசியுள்ள பதார்த்தங்களையும் அப்பங்களையும் தன் குமாரனாகிய யாக்கோபின் கையிலே கொடுத்தாள்.

ஈசாக்கின் ஆத்துமா ஏசாவை ஆசீர்வதிக்க ஆயத்தமாயிருக்கிறது. ஆனால் அந்த ஆசீர்வாதம் யாக்கோபுக்கு கிடைக்கவேண்டுமென்று ரெபெக்காள் விரும்புகிறாள். ஈசாக்கு ஏசாவைத்தான் ஆசீர்வதிப்பார் என்பது ரெபெக்காளுக்கு தெரியும். ஆனாலும் அந்த ஆசீர்வாதத்தை யாக்கோபுக்கு பெற்றுத்தரவேண்டுமென்று ரெபெக்காள் தீர்மானம்பண்ணுகிறாள்.

மூத்தவன் இளையவனை சேவிப்பான் என்று கர்த்தர் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். இதன் பிரகாரம் ஏசா யாக்கோபை சேவிப்பான். இது கர்த்தருடைய பார்வையில் நீதியாயிருக்கிறது. இது ரெபெக்காளுக்கும் பிரியமாயிருக்கிறது. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம், யாக்கோபு ஈசாக்கின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று ரெபெக்காள் விரும்புகிறாள்.

ரெபெக்காளின் விருப்பம் நன்றாயிருக்கிறது. தனக்கு மிகவும் பிரியமான யாக்கோபுக்கு, ஈசாக்கின் ஆசீர்வாதம் கிடைக்கவேண்டும் என்று விரும்புவது தவறல்ல. ஆனால் இந்த ஆசீர்வாதத்தை யாக்கோபுக்குப் பெற்றுத்தர, ரெபெக்காள் மேற்கொள்கிற முறை தப்பிதமானது. ரெபெக்காளின் வழிமுறைகளை நியாயப்படுத்த முடியாது.

ஏசா தன்னுடைய சேஷ்டபுத்திர பாகத்தை ஏற்கெனவே யாக்கோபுக்கு விற்றுப்போட்டான். ஆகையினால் சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதம் யாக்கோபுக்கே உரியது. யாக்கோபுக்கு விற்றுப்போட்டதை, ஏசா தனக்குரியது என்று நினைக்கக்கூடாது. ஆனாலும் சேஷ்டபுத்திரபாகத்தை ஏதாவது ஒரு வழியில் மறுபடியும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று ஏசா நினைப்பது தவறல்ல.

யாக்கோபோ ஏசாவின் பலவீனத்தையும், பசியையும் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி, ஏசாவினிடத்திலிருந்து சேஷ்டபுத்திரபாகத்தைப் பெற்றுக்கொண்டான். ஏசா கொடுத்தது சேஷ்டபுத்திரபாகம். அதற்கு கிரயமாக யாக்கோபு கொடுத்ததோ அப்பமும் சிவப்பு நிற கூழும். யாக்கோபு மிகவும் சொற்ப கிரயத்திற்கு சேஷ்டபுத்திரபாகத்தை ஏசாவிடமிருந்து வாங்கியிருக்கிறான். யாக்கோபு ஒரு வழியில் ஏசாவை வஞ்சித்திருக்கிறான். யாக்கோபு செய்தது தப்பிதமானது.

வஞ்சனையால் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதம் பிரச்சனை உள்ளதாகயிருக்கும். இப்படிப்பட்ட ஆசீர்வாதத்தை பரிபூரணமாக அனுபவிக்க முடியாது. யாக்கோபு ஏசாவை வஞ்சித்து இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றிருக்கிறான். ஏசா தன்னுடைய சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்டதும், ஏதோமியருடைய குமாரத்திகளை விவாகம்பண்ணியதும் தப்பிதமான காரியங்கள். யாக்கோபு அப்படிப்பட்ட தப்பிதத்தை செய்யாவிட்டாலும், அவன் தன் சகோதரன் ஏசாவை வஞ்சித்து தப்பிதம் செய்கிறான்.

யாக்கோபு தன் தாயாராகிய ரெபெக்காளுக்கு பட்சமானவன். ஈசாக்கின் ஆத்துமா யாக்கோபை ஆசீர்வதிக்கவேண்டுமென்று ரெபெக்காள் விரும்புகிறாள். ஈசாக்கு ஏசாவினிடத்தில் சொன்னதையெல்லாம் ரெபெக்காளும் கேட்டுக்கொண்டிருந்தாள். ஈசாக்கு ஏசாவுக்கு சொன்ன வார்த்தைகளை, ரெபெக்காள் யாக்கோபுக்கு சொல்லுகிறாள்.

அப்பொழுது ரெபெக்காள் தன் குமாரனாகிய யாக்கோபை நோக்கி, "உன் தகப்பன் உன் சகோதரனாகிய ஏசாவை அழைத்து: நான் புசித்து, எனக்கு மரணம் வருமுன்னே, கர்த்தரை முன்னிட்டு உன்னை ஆசீர்வதிக்கும்படி, நீ எனக்காக வேட்டையாடி, அதை எனக்கு ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்துக் கொண்டுவா என்று சொல்லக் கேட்டேன்" (ஆதி 27:6,7) என்று சொல்லுகிறாள்.

ஈசாக்கு சாப்பாட்டுப் பிரியனாக இருக்கிறார். இதனால் அவர் தேவனுடைய வார்த்தையையும், ஏசா ஆணையிட்டதையும் மறந்துபோகிறார். (ஆதி 25:23,31-34). இந்தச் சூழ்நிலையில் ஈசாக்கு சரியான காரியத்தைச் செய்வதற்கு ரெபெக்காளும், யாக்கோபும் தந்திரம் பண்ணுகிறார்கள்.

ஈசாக்கின் ஆசீர்வாதம் சாதாரண ஆசீர்வாதம் அல்ல. இது ஒரு விசேஷித்த ஆசீர்வாதம். (ஆதி 27:28-29) ஏசாவிற்குப் பதிலாக ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். இது ரெபெக்காளுக்கும் தெரியும். (ஆதி 25:23). ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கிறார். (எபி 11:20; ரோமர் 10:17).

ஏசா வேட்டையாடிக் கொண்டுவருகிறது ஈசாக்கினுடைய வாய்க்கு ருசிகரமாயிருக்கிறது. அதினாலே ஈசாக்கு ஏசாவின்மேல் பட்சமாயிருக்கிறார். ரெபெக்காளோ யாக்கோபின் மேல் பட்சமாயிருக்கிறாள் (ஆதி 25:28). ஏசா தனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், ஈசாக்கு அவனை ஆசீர்வதிக்க விரும்புகிறார். குடும்பத்தில் முதலாவது பிறந்த ஆண்மகனை ஆசாரியனாகவும், தீர்க்கதரிசியாகவும் ஆசீர்வதித்து, அங்கிகரிக்க வேண்டும். அவனுக்குச் சேஷ்டபுத்திரபாகத்தைக் கொடுக்க வேண்டும்.

ஆனால் தேவன் இவர்களுடைய குடும்பத்தில் வேறுவிதமான ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார். தாம் தெரிந்துகொண்ட மகனைத் தேவன் ஆசீர்வதிக்க விரும்புகிறார். (ஆதி 25:23; மல் 1:2-3; ரோமர் 9:11-13; ஆதி 9:24). எப்பிராயீமிற்கு இப்படியொரு ஆசீர்வாதம் கிடைத்தது. (ஆதி 48:8-22)

ஈசாக்கின் ஆத்துமா யாக்கோபை ஆசீர்வதிக்கவேண்டும் என்பது ரெபெக்காளின் விருப்பம். அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு யாக்கோபு என்ன செய்யவேண்டும் என்று ரெபெக்காள் அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறாள். இந்த திட்டத்தில் தான் யாக்கோபுக்கு உதவி செய்வதாகவும் ரெபெக்காள் வாக்குப்பண்ணுகிறாள்.

ரெபெக்காள் யாக்கோபை நோக்கி, "ஆகையால், என் மகனே, என் சொல்லைக் கேட்டு, நான் உனக்குக் கற்பிக்கிறபடி செய். நீ ஆட்டுமந்தைக்குப் போய், இரண்டு நல்ல வெள்ளாட்டுக்குட்டிகளைக் கொண்டு வா; நான் அவைகளை உன் தகப்பனுக்குப் பிரியமானபடி ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைப்பேன். உன் தகப்பன் தாம் மரணமடையுமுன்னே உன்னை ஆசீர்வதிக்கும்படி அவர் புசிப்பதற்கு நீ அதை அவரிடத்தில் கொண்டுபோக வேண்டும்" (ஆதி 27:8-10) என்று சொல்லுகிறாள்.

யாக்கோபு பயந்த சுபாவமுள்ளவன். அவன் தன் தாயாராகிய ரெபெக்காளின் வார்த்தைகளைக் கேட்டு பயப்படுகிறான். அவன் ஏசாவைப்போல வேட்டைக்காரனல்ல. ஏசா வேட்டையாடுவதில் வல்லவன். அவன் ஒரு வனசஞ்சாரி. யாக்கோபோ ஒரு கூடாரவாசி. சாதுவான சுபாவமுள்ளவன். யாக்கோபு தன் சகோதரனுக்கும் பயப்படுகிறான், தன் தகப்பனாருக்கும் பயப்படுகிறான்.

ரெபெக்காளின் ஆலோசனை வஞ்சகமானது என்பதையும், அது ஏமாற்றுத்தனமானது என்பதையும் யாக்கோபு அறிந்திருக்கிறான். தன்னுடைய ஏமாற்று வேலை ஈசாக்குக்கு தெரிந்துவிட்டால், அவர் தன்னை ஆசீர்வதிப்பதற்கு பதிலாக, சபித்துவிடுவாரோ என்றும் யாக்கோபு பயப்படுகிறான்.

யாக்கோபு தன் தாயாகிய ரெபெக்காளை நோக்கி, "என் சகோதரனாகிய ஏசா ரோமம் மிகுந்தவன், நான் ரோமமில்லாதவன். ஒருவேளை என் தகப்பன் என்னைத் தடவிப்பார்ப்பார்; அப்பொழுது நான் அவருக்கு எத்தனாய்க் காணப்பட்டு, என் மேல் ஆசீர்வாதத்தை அல்ல, சாபத்தை வரப்பண்ணிக் கொள்வேனே" (ஆதி 27:11,12) என்று சொல்லுகிறான்.

ரெபெக்காளோ யாக்கோபுக்கு சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதம் வரவேண்டும் என்பதில் உறுதியாயிருக்கிறாள். அவள் யாக்கோபை திடப்படுத்துகிறாள். அவனுடைய பயத்தைப் போக்குவதற்கு ஆலோசனை சொல்லுகிறாள்.

ரெபெக்காள் யாக்கோபை நோக்கி, "என் மகனே, உன்மேல் வரும் சாபம் என்மேல் வரட்டும்; என் சொல்லை மாத்திரம் கேட்டு, நீ போய், அவைகளை என்னிடத்தில் கொண்டுவா" (ஆதி 27:13) என்று சொல்லுகிறாள்.

யாக்கோபு தன் சகோதரனுக்கும், தன் தகப்பனாருக்கும் பயப்படுவதுபோல, தன் தாயாருக்கும் பயப்படுகிறான். யாக்கோபு தன் தாயாராகிய ரெபெக்காளின் வார்த்தைக்கு கீழ்ப்படிகிறான். ரெபெக்காள் சொன்ன பிரகாரம் யாக்கோபு ஆட்டுமந்தைக்குப்போய், இரண்டு நல்ல வெள்ளாட்டுக்குட்டிகளைப் பிடித்து, அவற்றை தன் தாயினிடத்தில் கொண்டு வருகிறான். அவனுடைய தாயாகிய ரெபெக்காளோ, ஈசாக்குக்கு பிரியமானபடி, அந்த இரண்டு வெள்ளாட்டுக்குட்டிகளையும், ருசியுள்ள பதார்த்தங்களாக சமையல் பண்ணுகிறாள் (ஆதி 27:14).

ஈசாக்கு ஏசாவை நோக்கி, "எனக்கு பிரியமாயிருக்கிற ருசியுள்ள பதார்த்தங்களை சமைத்து நான் புசிக்க அதை என்னிடத்தில் கொண்டு வா" (ஆதி 27:4) என்று சொன்னார். ஈசாக்கு இவ்வாறு சொன்னதை ரெபெக்காளும் கேட்டுக்கொண்டிருந்தாள். ஆகையினால் ரெபெக்காள் தான் சமைத்த ருசியுள்ள பதார்த்தங்களை, ஈசாக்குக்கு தானே கொண்டு போய் கொடுக்காமல், யாக்கோபின் கையிலே கொடுத்தனுப்ப வேண்டும் என்று திட்டமிடுகிறாள்.

யாக்கோபுக்கும் ஏசாவும் சுபாவத்தில் வித்தியாசமிருப்பதுபோல உருவத்திலும் வித்தியாசம் இருக்கிறது. ஏசா ரோமம் மிகுந்தவன். யாக்கோபோ ரோமம் இல்லாதவன். ரெபெக்காள் யாக்கோபை ஈசாக்கினிடத்தில் அனுப்பும் முன்பாக, அவள் யாக்கோபை ஏசாவைப்போல வேஷம் மாற்றுகிறாள்.

ரெபெக்காள் வீட்டிலே தன்னிடத்தில் இருந்த தன் மூத்த மகனாகிய ஏசாவின் நல்ல வஸ்திரங்களை எடுத்து, தன் இளைய மகனாகிய யாக்கோபுக்கு உடுத்துகிறாள். வெள்ளாட்டுக்குட்டிகளின் தோலை யாக்கோபின் கைகளிலேயும் ரோமமில்லாத அவன் கழுத்திலேயும் போடுகிறாள் (ஆதி 27:15,16).

ஈசாக்கின் கண்கள் இருளடைந்திருக்கிறது. அவர் பார்வையற்றவராயிருக்கிறார். ஈசாக்கு தன்னிடத்தில் வருகிறவனை தடவிப்பார்ப்பார். யாக்கோபு இப்போது ஏசாவைப்போல இருக்கிறான். ஈசாக்கு யாக்கோபைத் தடவிப்பார்த்தால், அவனை ஏசா என்று சொல்லுவார். அந்த அளவுக்கு ரெபெக்காள் யாக்கோபை மாற்றியிருக்கிறாள்.

ரெபெக்காள் யாக்கோபுக்கு வெள்ளாட்டுக்குட்டிகளின் தோலை அவனுடைய கைகளிலும், கழுத்திலும் போட்டபின்பு, தான் சமைத்த ருசியுள்ள பதார்த்தங்களையும் அப்பங்களையும் தன் குமாரனாகிய யாக்கோபின் கையிலே கொடுத்தனுப்புகிறாள் (ஆதி 27:17).

கிழக்கு தேசத்தில் பதார்த்தங்கள் செய்யும்போது அதிக மணமுள்ளதாகவும், ருசியுள்ளதாகவும் இருக்கும். இதற்காக பல்வேறு வாசனைப் பொருட்களைச் சேர்ப்பது வழக்கம். (யாத் 12:8; எண் 11:5; லூக்கா 11:42).

யாக்கோபுக்கு ஆசீர்வாதம் ஆதி 27:18-29

ஆதி 27:18. அவன் தன் தகப்பனிடத்தில் வந்து என் தகப்பனே என்றான்; அதற்கு அவன் இதோ, இருக்கிறேன்; நீ யார், என் மகனே என்றான்.

ஆதி 27:19. அப்பொழுது யாக்கோபு தன் தகப்பனை நோக்கி: நான் உமது மூத்த மகனாகிய ஏசா; நீர் எனக்குச் சொன்னபடியே செய்தேன்; உம்முடைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்படி, நீர் எழுந்து உட்கார்ந்து, நான் வேட்டையாடிக் கொண்டு வந்ததைப் புசியும் என்றான்.

ஆதி 27:20. அப்பொழுது ஈசாக்குத் தன் குமாரனை நோக்கி: என் மகனே, இது உனக்கு இத்தனை சீக்கிரமாய் எப்படி அகப்பட்டது என்றான். அவன்: உம்முடைய தேவனாகிய கர்த்தர் எனக்கு நேரிடப் பண்ணினார் என்றான்.

ஆதி 27:21. அப்பொழுது ஈசாக்கு யாக்கோபை நோக்கி: என் மகனே, நீ என் குமாரனாகிய ஏசாதானோ அல்லவோ என்று நான் உன்னைத் தடவிப்பார்க்கும்படி கிட்ட வா என்றான்.

ஆதி 27:22. யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கண்டையில் கிட்டப் போனான்; அவன் இவனைத் தடவிப்பார்த்து: சத்தம் யாக்கோபின் சத்தம், கைகளோ ஏசாவின் கைகள் என்று சொல்லி,

ஆதி 27:23. அவனுடைய கைகள் அவன் சகோதரனாகிய ஏசாவின் கைகளைப் போல ரோமமுள்ளவைகளாயிருந்தபடியினாலே இன்னான் என்று அறியாமல், அவனை ஆசீர்வதித்து,

ஆதி 27:24. நீ என் குமாரனாகிய ஏசாதானோஎன்றான்; அவன்: நான்தான் என்றான்.

ஆதி 27:25. அப்பொழுது அவன்: என் குமாரனே, நீ வேட்டையாடிக் கொடுவந்ததை நான் புசித்து,என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கும்படி அதை என்கிட்டக் கொண்டுவா என்றான்; அவன் அதைக் கிட்ட கொண்டுபோனான்; அப்பொழுது அவன் புசித்தான்; பிற்பாடு, திராட்சரசம் அவனுக்குக் கொண்டுவந்து கொடுத்தான், அவன் குடித்தான்.

ஆதி 27:26. அப்பொழுது அவன் தகப்பனாகிய ஈசாக்கு அவனை நோக்கி: என் மகனே, நீ கிட்ட வந்து என்னை முத்தஞ்செய் என்றான்.

ஆதி 27:27. அவன் கிட்டப்போய், அவனை முத்தஞ்செய்தான்: அப்பொழுது அவனுடைய வஸ்திரங்களின் வாசனையை மோந்து: இதோ, என் குமாரனுடைய வாசனை கர்த்தர் ஆசீர்வதித்த வயல்வெளியின் வாசனையைப்போல் இருக்கிறது.

ஆதி 27:28. தேவன் உனக்கு வானத்துப் பனியையும் பூமியின் கொழுமையையும் கொடுத்து, மிகுந்த தானியத்தையும் திராட்சரசத்தையும் தந்தருளுவாராக.

ஆதி 27:29. ஜனங்கள் உன்னைச் சேவிக்கவும் ஜாதிகள் உன்னை வணங்கவும் கடவர்கள்; உன்சகோதரருக்கு எஜமானாயிருப்பாய்; உன்தாயின் பிள்ளைகள் உன்னை வணங்குவார்கள்; உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களும், உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுமாய் இருப்பார்கள் என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தான்.

யாக்கோபு வேஷம் மாறினவனாக, தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்தில் வருகிறான். அவன் அவருக்கு அருகாமையில் வந்து, "என் தகப்பனே" என்று கூப்பிடுகிறான். அதற்கு ஈசாக்கு, "இதோ இருக்கிறேன், நீ யார், என் மகனே" என்று கேட்கிறார். அப்பொழுது யாக்கோபு தன் தகப்பனை நோக்கி, "நான் உமது மூத்தமகனாகிய ஏசா" (ஆதி 27:18,19) என்று சொல்லுகிறான்.

யாக்கோபு குணசாலி. ஆனால் அவன் இப்போது பொய்சொல்லுகிறான். தான் சொல்லுகிற பொய் சீக்கிரத்தில் கண்டுபிடிக்கப்படும் என்பது யாக்கோபுக்கு தெரியும். அது தெரிந்தும், யாக்கோபு தன்னை ஏசா என்று துணிகரமாய்ப் பொய்சொல்லுகிறான்.

யாக்கோபின் பொய்வார்த்தைகள் இத்தோடு நின்றுவிடவில்லை. யாக்கோபு ஈசாக்கை நோக்கி, "நீர் எனக்குச் சொன்னபடியே செய்தேன்; உம்முடைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்படி, நீர் எழுந்து உட்கார்ந்து, நான் வேட்டையாடிக் கொண்டு வந்ததைப் புசியும்" (ஆதி 27:19) என்று சொல்லுகிறான்.

ஈசாக்கு யாக்கோபுக்கு ஒரு கட்டளையும் கொடுக்கவில்லை. அவர் ஏசாவுக்கு கட்டளை கொடுத்தார். ஆனால் யாக்கோபோ தன்னுடைய தாயாராகிய ரெபெக்காளின் வார்த்தைகளைக் கேட்டு, ஈசாக்கினிடத்தில் பொய்சொல்லுகிறான். "நான் வேட்டையாடிக் கொண்டுவந்ததை புசியும்" என்று யாக்கோபு துணிகரமாய்ப் பொய்சொல்லுகிறான்.

யாக்கோபு வேட்டையாட வனத்திற்குப்போகவில்லை. அவனுக்கு வேட்டையாடவும் தெரியாது. அவன் தன்னுடைய தாயாரின் பேச்சைக்கேட்டு ஆட்டுமந்தைக்குப்போய், இரண்டு வெள்ளாட்டுக்குட்டிகளைப் பிடித்துக்கொண்டு வந்தான். ஆனால் இதைப்பற்றி யாக்கோபு ஈசாக்கிடம் சொல்லும்போது, "நான் வேட்டையாடிக்கொண்டு வந்தது" என்று பொய்சொல்லுகிறான்.

ஈசாக்குக்கு யாக்கோபின் வார்த்தையில் சந்தேகம் உண்டாயிற்று. ஈசாக்கு சற்று நேரத்திற்கு முன்புதான், ஏசாவிடம் வனத்திற்குப்போய் தனக்காக வேட்டையாடிக்கொண்டுவருமாறு சொன்னார். இவ்வளவு சீக்கிரத்தில் யாராலும் வேட்டையாடிக் கொண்டு வரமுடியாது. ஈசாக்கு தன்னுடைய சந்தேகத்தை வெளிப்படுத்துகிறார்.

ஈசாக்குத் தன் குமாரன் யாக்கோபை நோக்கி: "என் மகனே, இது உனக்கு இத்தனை சீக்கிரமாய் எப்படி அகப்பட்டது" என்று கேட்கிறார். அதற்கு யாக்கோபு, "உம்முடைய தேவனாகிய கர்த்தர் எனக்கு நேரிடப் பண்ணினார்" (ஆதி 27:20) என்று பதில் சொல்லுகிறான்.

யாக்கோபு தன்னுடைய பொய்வார்த்தைகளை உறுதிபண்ணுவதற்காக, கர்த்தருடைய நாமத்தைப் பயன்படுத்துகிறான். "உம்முடைய தேவனாகிய கர்த்தர் எனக்கு நேரிடப்பண்ணினார்" என்று துணிகரமாகப் பொய்சொல்லுகிறான். யாக்கோபு தான் சொல்லுகிற பொய்யிலே, கர்த்தருடைய நாமத்தை, வீணாகப் பயன்படுத்துகிறான்.

யாக்கோபு தன் பெயருக்கேற்ற பிரகாரமாக எத்தனாகவும், ஏமாற்றுக்காரனாகவும் இருக்கிறான். அவனுடைய வாயிலிருந்து உண்மையான வார்த்தைகள் வர மறுக்கிறது. பொய் வார்த்தைகள் தாராளமாய்ப் புறப்பட்டு வருகிறது.

தன்னோடு பேசுவது ஏசாதானா என்பதில் ஈசாக்குக்கு இன்னும் சந்தேகம் இருக்கிறது. தன் மகனை தனக்கு அருகில் வர வைத்து, அவனைத் தடவிப்பார்த்து, அவன் ஏசாதானா என்பதை ஈசாக்கு உறுதிபண்ண விரும்புகிறார்.

ஈசாக்கு யாக்கோபை நோக்கி, "என் மகனே, நீ என் குமாரனாகிய ஏசாதானோ அல்லவோ என்று நான் உன்னைத் தடவிப்பார்க்கும்படி கிட்ட வா" (ஆதி 27:21) என்று சொல்லுகிறார்.

யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கண்டையில் கிட்டப்போகிறான். யாக்கோபின் தாயாகிய ரெபெக்காள், யாக்கோபுக்கு ஏசாவின் நல்ல வஸ்திரங்களை உடுத்தியிருக்கிறாள். மேலும் வெள்ளாட்டுக்குட்டிகளின் தோலை அவன் கைகளிலேயும், ரோமமில்லாத அவன் கழுத்திலேயும் போட்டிருக்கிறாள். யாக்கோபு அந்த உடுப்புக்களோடு தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்தில் கிட்டப்போகிறான்.

ஈசாக்கு யாக்கோபை தடவிப்பார்த்து, "சத்தம் யாக்கோபின் சத்தம், கைகளோ ஏசாவின் கைகள்" (ஆதி 27:22) என்று சொல்லுகிறார்.

ஈசாக்கிற்கு ஒரு வியாதி வந்து அவருடைய கண்பார்வை மங்கிவிடுகிறது. ஆகையினால் ஈசாக்கு தான் மரிக்கப்போகும் காலம் வந்துவிட்டது என்று நினைக்கிறார். இதன் பின்பு ஈசாக்கு குணமடைகிறார். 20 வருஷங்களுக்குப் பின்பு பாதான்-அராமிலிருந்து யாக்கோபு வருவதை ஈசாக்கு காண்கிறார் (ஆதி 25:26; ஆதி 35:28; ஆதி 47:9).

யாக்கோபுடைய கைகள் அவன் சகோதரனாகிய ஏசாவின் கைகளைப் போல ரோமமுள்ளவைகளாயிருக்கிறது. ஆகையினால் ஈசாக்கு தன்னண்டையில் இருக்கிறவனை இன்னான் என்று அறியாமல், அவனை ஏசா என்று நினைத்து, அவனை ஆசீர்வதிக்கிறார் (ஆதி 27:23).

ஈசாக்குக்கு கண்கள் இருளடைந்திருக்கிறது. அவர் பார்வையற்றுப்போயிருக்கிறார். ஆனாலும் அவருடைய செவிகள் ஆரோக்கியமாயிருக்கிறது. ஆகையினால் ஈசாக்கு யாக்கோபின் சத்தத்தைக் கேட்டு, "சத்தம் யாக்கோபின் சத்தம்" என்று தெளிவாகச் சொல்லுகிறார்.

யாக்கோபைப்போலவே இக்காலத்தில் அநேகர், பரிசுத்தவான்களின் பாஷைகளைப் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் பாவிகளுடைய கிரியைகளை செய்கிறார்கள். நாம் கர்த்தருக்கு முன்பாக எப்படித்தான் மாய்மாலம் பண்ணினாலும், நம்மால் கர்த்தரை வஞ்சிக்க முடியாது. கர்த்தர் நம்முடைய இருதயத்தின் நினைவுகளையெல்லாம் அறிந்து வைத்திருக்கிறார்.

யாக்கோபுடைய கைகள் ஏசாவின் கைகளைப்போல ரோமமுள்ளவைகளாயிருக்கிறது. அவனுடைய கைகளின்மேல் வெள்ளாட்டுக்குட்டிகளின் தோல் போடப்பட்டிருக்கிறது. யாக்கோபு பார்வையற்ற தன் தகப்பன் ஈசாக்கை எளிதாக ஏமாற்றிவிடுகிறான். யாக்கோபின் பாவத்தில், அவனுடைய தாயாகிய ரெபெக்காளும் பங்காளியாயிருக்கிறாள்.

கர்த்தர் யாக்கோபையும், அவனுடைய சந்ததியையும் ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தையை நிறைவேற்றுவார். ஆனால் ரெபெக்காளும் யாக்கோபும் கர்த்தருடைய வல்லமையையும், வார்த்தையையும் சந்தேகப்படுகிறார்கள். கர்த்தர் யாக்கோபை ஆசீர்வதியாமல், ஏசாவை ஆசீர்வதித்துவிடுவாரோ என்று நினைக்கிறார்கள். ஈசாக்கின் ஆத்துமா ஏசாவை ஆசீர்வதிப்பதை அவர்கள் தங்கள் சொந்த முயற்சியினால் தடைபண்ணிப்போடுகிறார்கள். மேலும் அவர்கள் தங்களுடைய சொந்த சதிவேலைகளினால், ஈசாக்கின் ஆத்துமா யாக்கோபை ஆசீர்வதிக்கப்பண்ணுகிறார்கள். ஈசாக்கும், தான் ஏசாவை ஆசீர்வதிப்பதாக நினைத்து, யாக்கோபை ஆசீர்வதிக்கிறார்.

ஈசாக்கு தன்னுடைய ஆசீர்வாதமான வார்த்தைகளை சொல்லுவதற்கு முன்பாக, அவர் யாக்கோபை நோக்கி, "நீ என் குமாரனாகிய ஏசா தானோ" என்று சந்தேகத்தோடு கேட்கிறார். அதற்கு யாக்கோபு, "நான்தான்" என்று துணிகரமாய் மறுபடியும் பொய் சொல்லுகிறான் (ஆதி 27:24).

ஈசாக்கு யாக்கோபை நோக்கி, "என் குமாரனே, நீ வேட்டையாடிக் கொடுவந்ததை நான் புசித்து, என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கும்படி அதை என்கிட்டக் கொண்டுவா" என்று சொல்லுகிறார். யாக்கோபு அதைக் கிட்ட கொண்டுபோகிறான்; அப்பொழுது ஈசாக்கு அதைப் புசிக்கிறார்; பிற்பாடு, யாக்கோபு ஈசாக்குக்கு திராட்சரசம் கொண்டுவந்து கொடுக்கிறான், ஈசாக்கு அதையும் குடிக்கிறார்" (ஆதி 27:25).

ஈசாக்கு யாக்கோபை நோக்கி, "என் மகனே, நீ கிட்ட வந்து என்னை முத்தஞ்செய்" என்று சொல்லுகிறார். யாக்கோபு ஈசாக்கின் கிட்டப்போய், அவரை முத்தஞ்செய்கிறான்: அப்பொழுது யாக்கோபுடைய வஸ்திரங்களின் வாசனையை ஈசாக்கு மோந்து, "இதோ, என் குமாரனுடைய வாசனை கர்த்தர் ஆசீர்வதித்த வயல்வெளியின் வாசனையைப்போல் இருக்கிறது" (ஆதி 27:26,27) என்று சொல்லுகிறார்.

கிழக்கு தேசத்தில் வஸ்திரம் சமுதாய அந்தஸ்தையையும், ஸ்தானத்தையும் குறிக்கும். மூத்த குமாரனுக்கு விசேஷித்த வஸ்திரம் கொடுக்கப்படும். அவன் குடும்பத் தலைவனாகவும், ஆசாரியனாகவும் இருக்கிறான் என்பதை அந்த வஸ்திரம் வெளிப்படுத்தும்.

யாக்கோபு அணிந்த வஸ்திரம் வயல்வெளியின் வாசனையைப்போல் இருக்கிறது. அது கர்த்தர் ஆசீர்வதித்த வயல்வெளி. யாக்கோபு தன் தகப்பனை வஞ்சிக்கிறான். சீக்கிரமாக தனக்கு உணவு கிடைத்தது பற்றிக் கூறும்போது, யாக்கோபு "தேவனாகிய கர்த்தர் எனக்கு நேரிடப் பண்ணினார்" என்று கூறுகிறான்.

ஈசாக்கு யாக்கோபின் வஸ்திரத்தைப் பற்றிக் கூறும்போது, "என் குமாரனுடைய வாசனை கர்த்தர் ஆசீர்வதித்த வயல்வெளியின் வாசனையைப் போல் இருக்கிறது" என்று கூறுகிறார். இவ்வாறு கூறப்பட்டிருப்பதினால் இந்த சதியில் தேவனுக்கும் பங்கிருக்கிறது என்பது பொருளல்ல. தேவனுடைய சித்தம் எப்படியும் நிறைவேறும்.

தன்னை முத்தம் செய்வது ஏசாதான் என்று ஈசாக்கு நினைத்துக்கொண்டிருக்கிறார். தன்னோடு பேசுவதும் ஏசாதான் என்று நினைத்து, ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கிறார். அவர் யாக்கோபுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளை தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறார்.

ஈசாக்கு யாக்கோபை நோக்கி, "தேவன் உனக்கு வானத்துப் பனியையும் பூமியின் கொழுமையையும் கொடுத்து, மிகுந்த தானியத்தையும் திராட்சரசத்தையும் தந்தருளுவாராக. ஜனங்கள் உன்னைச் சேவிக்கவும் ஜாதிகள் உன்னை வணங்கவும் கடவர்கள்; உன் சகோதரருக்கு எஜமானாயிருப்பாய்; உன்தாயின் பிள்ளைகள் உன்னை வணங்குவார்கள்; உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களும், உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுமாய் இருப்பார்கள்" (ஆதி 27:28,29) என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார்.

யாக்கோபுக்கு மூன்றுவிதமான ஆசீர்வாதங்கள் கொடுக்கப்படுகிறது. அவையாவன : 1. செழிப்பு 2. வல்லமை 3. தேவனோடு ஐக்கியம்.

ஏசாவுக்கு ஏமாற்றம் ஆதி 27:30-40

ஆதி 27:30. ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்துமுடிந்தபோது, யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கின் சமுகத்தைவிட்டுப் புறப்பட்டவுடனே, அவன் சகோதரனாகிய ஏசாவேட்டையாடி வந்து சேர்ந்தான்.

ஆதி 27:31. அவனும் ருசியுள்ள பதார்த்தங்களைச்சமைத்து, தன் தகப்பனண்டைக்குக் கொண்டுவந்து, தகப்பனை நோக்கி: உம்முடைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்படி, என் தகப்பனார் எழுந்திருந்து, உம்முடைய குமாரனாகிய நான் வேட்டையாடிக் கொண்டுவந்ததைப் புசிப்பாராக என்றான்.

ஆதி 27:32. அப்பொழுது அவன் தகப்பனாகிய ஈசாக்கு: நீ யார் என்றான்; அதற்கு அவன்: நான் உமது மூத்த மகனாகிய ஏசா என்றான்.

ஆதி 27:33. அப்பொழுது ஈசாக்கு மிகவும் பிரமித்து நடுங்கி: வேட்டையாடி எனக்குக் கொண்டுவந்தானே, அவன் யார்? நீ வருமுன்னே அவையெல்லாவற்றிலும் நான் புசித்து அவனை ஆசீர்வதித்தேனே, அவன் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவும் இருப்பான் என்றான்.

ஆதி 27:34. ஏசா தன் தகப்பனுடைய வார்த்தைகளைக் கேட்டவுடனே, மிகவும் மனங்கசந்து உரத்த சத்தமிட்டு அலறி, தன் தகப்பனை நோக்கி: என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதியும் என்றான்.

ஆதி 27:35. அதற்கு அவன்: உன் சகோதரன் தந்திரமாய் வந்து, உன்னுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான் என்றான்.

ஆதி 27:36. அப்பொழுது அவன்: அவன் பெயர் யாக்கோபு என்னப்படுவது சரியல்லவா? இதோடே இரண்டுதரம் என்னை மோசம் போக்கினான்; என் சேஷ்ட புத்திரபாகத்தை எடுத்துக்கொண்டான்; இதோ, இப்பொழுது என் ஆசீர்வாதத்தையும் வாங்கிக்கொண்டான் என்று சொல்லி; நீர் எனக்கு ஒரு ஆசீர்வாதத்தையாகிலும் வைத்துவைக்கவில்லையா என்றான்.

ஆதி 27:37. ஈசாக்கு ஏசாவுக்குப் பிரதியுத்தரமாக: இதோ, நான் அவனை உனக்கு எஜமானாக வைத்தேன்; அவன் சகோதரர் எல்லாரையும் அவனுக்கு ஊழியக்காரராகக்கொடுத்து, அவனைத் தானியத்தினாலும் திராட்சரசத்தினாலும் ஆதரித்தேன்; இப்பொழுதும் என் மகனே, நான் உனக்கு என்னசெய்வேன் என்றான்.

ஆதி 27:38. ஏசா தன் தகப்பனை நோக்கி: என் தகப்பனே, இந்த ஒரே ஆசீர்வாதம் மாத்திரமா உம்மிடத்தில் உண்டு? என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதியும் என்று சொல்லி, ஏசா சத்தமிட்டு அழுதான்.

ஆதி 27:39. அப்பொழுது அவன் தகப்பனாகிய ஈசாக்கு அவனுக்குப் பிரதியுத்தரமாக: உன் வாசஸ்தலம் பூமியின் சாரத்தோடும் உயர வானத்திலிருந்து இறங்கும் பனியோடும் இருக்கும்.

ஆதி 27:40. உன் பட்டயத்தினாலே நீ பிழைத்து,உன் சகோதரனைச் சேவிப்பாய்; நீ மேற்கொள்ளும் காலம் வரும்போதோ, உன் கழுத்தில் இருக்கிற அவனுடைய நுகத்தடியைமுறித்துப்போடுவாய் என்றான்.

ஏசாவுக்கு உடன்படிக்கையின் ஆசீர்வாதம் மறுக்கப்படுகிறது. ஏசா சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதத்தை அலட்சியம்பண்ணினான். ஆனால் இப்போது ஏசா ஈசாக்கிடத்தில், "என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதியும்" (ஆதி 27:34) என்று கேட்கிறான். தனக்கு சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதம் கிடைக்காவிட்டாலும், சாதாரண ஆசீர்வாதமாவது கிடைக்கவேண்டுமென்று ஏசா எதிர்பார்க்கிறான்.

ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து முடிந்தபோது, யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கின் சமுகத்தைவிட்டுப் புறப்பட்டவுடனே, அவன் சகோதரனாகிய ஏசாவேட்டையாடி வந்து சேருகிறான் (ஆதி 27:30). ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்தது ஏசாவுக்கு தெரியாது. தான் சொன்ன பிரகாரம், தன் தகப்பனாகிய ஈசாக்கு, தன்னை ஆசீர்வதிக்கப்போகிறார் என்று எதிர்பார்த்து, ஏசா ஈசாக்கினிடத்தில் வருகிறான்.

ஈசாக்கு ஏசாவினிடத்தில் சொன்ன பிரகாரம், அவன் வேட்டையாடி, ருசியுள்ள பதார்த்தங்களை சமைத்து, அதை தன் தகப்பனாகிய ஈசாக்கண்டைக்கு கொண்டு வருகிறான். ஏசா ஈசாக்கை நோக்கி, "உம்முடைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்படி, என் தகப்பனார் எழுந்திருந்து, உம்முடைய குமாரனாகிய நான் வேட்டையாடிக் கொண்டுவந்ததைப் புசிப்பாராக" (ஆதி 27:31) என்று சொல்லுகிறான்.

ஈசாக்கோ யாக்கோபு கொண்டுவந்த பதார்த்தங்களை ஏற்கெனவே புசித்து, அவனை ஆசீர்வதித்து முடித்துவிட்டார். தான் ஆசீர்வதித்தது யாக்கோபை என்பது ஈசாக்குக்கு தெரியாது. இப்போது ஏசா ஈசாக்கிடத்தில் வருகிறான். தற்போது தன்னிடத்தில் வந்திருப்பது யார் என்பதுகூட ஈசாக்குக்கு தெரியவில்லை.

அப்பொழுது ஈசாக்கு, "நீ யார்" என்று கேட்கிறார்; அதற்கு ஏசா, "நான் உமது மூத்த மகனாகிய ஏசா" என்று சொல்லுகிறான். அப்பொழுது ஈசாக்கு மிகவும் பிரமித்து நடுங்குகிறார். ஈசாக்கு ஏசாவை நோக்கி, "வேட்டையாடி எனக்குக் கொண்டுவந்தானே, அவன் யார்? நீ வருமுன்னே அவையெல்லாவற்றிலும் நான் புசித்து அவனை ஆசீர்வதித்தேனே, அவன் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவும் இருப்பான்" (ஆதி 27:32,33) என்று சொல்லுகிறார்.

ஏசாவின் வார்த்தையைக் கேட்டபோது ஈசாக்கு மிகவும் பிரமித்து நடுங்குகிறார். ஈசாக்கின் வார்த்தையைக் கேட்டபோது ஏசா மிகவும் மனங்கசந்து உரத்த சத்தமிட்டு அலறுகிறான். ஏசா சேஷ்டபுத்திரபாகத்தை ஏற்கெனவே அலட்சியம் பண்ணியவன். அவன் உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தை நாடவில்லை.

ஈசாக்கு மிகவும் பிரமித்து நடுங்கிறார். தேவனுடைய சித்தம் அவருக்கு நினைவுக்கு வருகிறது. (ஆதி 27:33) இயேசுவின் வார்த்தைகளை பேதுருவும் மறந்து போனார். இயேசு அவரை நோக்கிப் பார்த்த போது இயேசு கூறிய வார்த்தைகள் பேதுருவுக்கு நினைவுக்கு வருகிறது. (லூக்கா 22:61)

ஏசாவைப் போலவே இக்காலத்தில் அநேகர் கர்த்தரை தேடாமலும், அவரிடத்தில் கேட்காமலும் இருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் கர்த்தரிடத்திலிருந்து எதையும் பெற்றுக்கொள்ளாமலும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் சீக்கிரத்தில் கர்த்தருடைய சமுகத்திலே வந்து, தட்டுவார்கள். அலறுவார்கள். அவர்கள் கர்த்தரை நோக்கி, "கர்த்தாவே, கர்த்தாவே" என்று சொல்லி உரத்த சத்தமிட்டு அலறுவார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை இப்போது அசட்டைபண்ணுகிறவர்கள், பிற்காலத்தில் அவர்கள் தங்களை கிறிஸ்துவுக்கு முன்பாக மிகவும் தாழ்த்துவார்கள்.

ஏசா சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதத்தை அலட்சியம் பண்ணினான். அவன் இப்போது ஈசாக்கை நோக்கி, "என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதியும்" என்று மனங்கசந்து உரத்த சத்தமிட்டு அலறுகிறான்.

ஈசாக்கோ ஏசாவை ஆசீர்வதிக்க மறுத்துவிடுகிறார். ஈசாக்கு ஆரம்பத்தில் ஏசாவின் வார்த்தைகளைக் கேட்டு, பிரமித்து நடுங்கினார். இப்போது அவர் தன்னுடைய பிரமிப்பிலிருந்தும், நடுக்கத்திலிருந்தும் விடுதலைபெற்று, ஏசாவிடத்தில் நிதானமாகப் பேசுகிறார். ஈசாக்கு ஏசாவை நோக்கி, "உன் சகோதரன் தந்திரமாய் வந்து, உன்னுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான்" (ஆதி 27:35) என்று சொல்லுகிறார்.

ஈசாக்கு யாக்கோபை ஏற்கெனவே ஆசீர்வதித்து விட்டார். ஈசாக்கு தன்னுடைய ஆசீர்வாதத்தைப்பற்றிச் சொல்லும்போது, "நான் ஆசீர்வதித்தேனே, அவன் ஆசீர்வதிக்கப்பட்டவனாக இருப்பான்" (ஆதி 27:33) என்று சொல்லுகிறார். ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கிறார். யாக்கோபு ஆசீர்வதிக்கப்பட்டவனாகயிருக்கிறான்.

ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கும்போது, தான் பரிசுத்த ஆவியினால் விசேஷமாய் நிரப்பட்டதை அவர் உணருகிறார். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே தான் யாக்கோபை ஆசீர்வதிப்பதாக ஈசாக்கு அங்கீகரிக்கிறார். ஈசாக்கின் ஆசீர்வாதமான வார்த்தைகள் பூரணமாக வெளிப்பட்டிருக்கிறது.

யாக்கோபு ஈசாக்கின் ஆசீர்வாதத்திற்கு பாத்திரவானாயிருக்கிறான். ஈசாக்கின் ஆசீர்வாதம் யாக்கோபுக்கு உறுதிபண்ணப்படுகிறது. "யாக்கோபு ஆசீர்வதிக்கப்பட்டவனாயிருப்பான்" என்று ஈசாக்கு சொல்லுகிறார். ஈசாக்கின் வார்த்தையில் நிச்சயமும் உறுதியும் இருக்கிறது.

ஈசாக்கு தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே யாக்கோபை ஆசீர்வதித்திருக்கிறார். ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்தது, அவருடைய எதிர்பார்ப்புக்கு முரணாகயிருக்கிறது. ஆனாலும் அவருடைய ஆசீர்வாதம் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக சொல்லப்பட்டிருக்கிறது. ஈசாக்கு ஏசாவின்மீது பட்சமாயிருக்கிறார். அவர் ஏசாவை ஆசீர்வதிக்க விரும்பினார். ஆனால் ஈசாக்கோ யாக்கோபை ஆசீர்வதிக்கிறார்.

ஈசாக்கு ஏசாவுக்கு உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தை சொல்லவில்லை. ஆகையினால் ஏசாவுக்கு சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதத்தில் பங்கு இல்லை. ஏசா தன்னுடைய சேஷ்டபுத்திரபாகத்தை ஏற்கெனவே யாக்கோபுக்கு விற்றுப்போட்டான். ஏசா சேஷ்டபுத்திரபாகத்தை அலட்சியம் பண்ணினான். தான் விற்றுப்போட்ட ஆசீர்வாதத்தை, மறுபடியும் பெற்றுக்கொள்ள ஏசாவுக்கு வாய்ப்பு இல்லாமல் போயிற்று.

ஏசா ஈசாக்கை நோக்கி, "உம்முடைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்படி, என் தகப்பனார் எழுந்திருந்து, உம்முடைய குமாரனாகிய நான் வேட்டையாடிக் கொண்டுவந்ததைப் புசிப்பாராக" (ஆதி 27:31) என்று சொன்னான்.

யூதர்கள் ஏசாவைப்போலவே நீதியின் பிரமாணத்தை வேட்டையாடிக்கொண்டு வந்து, கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். யூதர்கள் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதினால், அவர்கள் நீதியின் ஆசீர்வாதங்களை இழந்துபோகிறார்கள்.

புறஜாதியாரோ யாக்கோபைப்போல, கர்த்தருடைய வார்த்தையில் விசுவாசம் வைத்து, அவருடைய ஆசீர்வாதத்தை நாடுகிறார்கள். பரலோக ராஜ்யத்திற்குள் எப்படியாவது பிரவேசிக்கவேண்டும் என்று முயற்சி பண்ணுகிறார்கள். பரலோகத்தின் காரியங்களை பலவந்தம் பண்ணுகிறவர்கள், அதைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

"யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம்பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்" (மத் 11:12).

ஆவிக்குரிய சேஷ்டபுத்திரபாகத்தை அலட்சியம் பண்ணுகிறவர்களும், அதை கூழுக்காக விற்றுப்போட ஆயத்தமாயிருக்கிறவர்களும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை இழந்துபோவார்கள். இவர்கள் கர்த்தருடைய கிருபையையும், தெய்வீக ஞானத்தையும் அசட்டைபண்ணுகிறவர்கள். இவர்கள் உலகத்தின் சந்தோஷத்திற்கும், மாம்சத்தின் இச்சைகளுக்கும், உலகப்பிரகாரமான ஐசுவரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, தங்களுடைய மனச்சாட்சியின் சத்தத்திற்கு செவிகொடுக்க மறுக்கிறவர்கள்.

கர்த்தர்மீது விசுவாசம் வைக்காமல், அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவதற்கு வாய்ப்பு இல்லை. கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்னும் ஆர்வம் தங்களுக்கு இருப்பதுபோல, அவிசுவாசிகள் மாய்மாலம்பண்ணுவார்கள். ஆனால் அவர்களோ கர்த்தர்மீது விசுவாசம் வைப்பதில்லை. ஆகையினால் அவர்கள் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அபாத்திரராயிருக்கிறார்கள்.

ஏசாவுக்கு சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதம் கிடைக்கவில்லை. அது உடன்படிக்கையின் ஆசீர்வாதம். தனக்கு உடன்படிக்கையின் ஆசீர்வாதம் கிடைக்காவிட்டாலும், அதைவிட குறைவான சாதாரண ஆசீர்வாதமாவது கிடைக்கவேண்டுமென்று ஏசா எதிர்பார்க்கிறான். ஏசா ஈசாக்கை நோக்கி, "என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதியும்" என்று மனங்கசந்து உரத்த சத்தமிட்டு அலறுகிறான் (ஆதி 27:34). ஏசா ஈசாக்கை நோக்கி, "நீர் எனக்கு ஒரு ஆசீர்வாதத்தையாகிலும் வைத்து வைக்கவில்லையோ" (ஆதி 27:36) என்று கேட்கிறான்.

ஏசா ஈசாக்கை நோக்கி, "என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதியும்" என்று கேட்டபோது, ஈசாக்கு ஏசாவுக்கு பிரதியுத்தரமாக, "உன் சகோதரன் தந்திரமாய் வந்து, உன்னுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டான்" என்று சொல்லுகிறார்.

அதற்கு ஏசா ஈசாக்கை நோக்கி, "அவன் பெயர் யாக்கோபு என்னப்படுவது சரியல்லவா? இதோடே இரண்டுதரம் என்னை மோசம் போக்கினான்; என் சேஷ்ட புத்திரபாகத்தை எடுத்துக்கொண்டான்; இதோ, இப்பொழுது என் ஆசீர்வாதத்தையும் வாங்கிக்கொண்டான் என்று சொல்லி; நீர் எனக்கு ஒரு ஆசீர்வாதத்தையாகிலும் வைத்துவைக்கவில்லையா" (ஆதி 27:37) என்று கேட்கிறான்.

தனக்கு சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதம் கிடைக்காவிட்டாலும், சாதாரண ஆசீர்வாதம் போதும் என்று ஏசா சொல்லுகிறான். ஏசாவைப்போலவே இக்காலத்தில் அநேகர், தங்களுக்கு உடன்படிக்கையின் மேன்மையான ஆவிக்குரிய ஆசீர்வாதம் கிடைக்காவிட்டாலும், சரீரப்பிரகாரமான, உலகப்பிரகாரமான சாதாரண ஆசீர்வாதம் கிடைத்தால் போதுமென்று சொல்லுகிறார்கள். இது இவர்களுடைய மதியீனம்.

"எங்களுக்கு நன்மை காண்பிப்பவன் யார் என்று சொல்லுகிறவர்கள் அநேகர்; கர்த்தாவே, உம்முடைய முகத்தின் ஒளியை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும். அவர்களுக்குத் தானியமும் திராட்சரசமும் பெருகியிருக்கிற காலத்தின் சந்தோஷத்தைப் பார்க்கிலும், அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர்" (சங் 4:6,7).

ஏசா இரண்டாம் தரமான ஆசீர்வாதத்தை ஈசாக்கிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று நினைக்கிறான். ஏசாவுக்கு சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதம் கிடைக்காது. அந்த ஆசீர்வாதம் ஏற்கெனவே யாக்கோபுக்கு கொடுக்கப்பட்டுவிட்டது. அது உடன்படிக்கையின் ஆசீர்வாதம். ஏசா இப்போது எதிர்பார்ப்பது, சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதமல்லாத, சாதாரண ஆசீர்வாதம். தனக்கு ஏதாவது ஒரு ஆசீர்வாதம் கிடைத்தால் போதுமென்று ஏசா நினைக்கிறான். ஒன்றுமில்லாமல் வெறுமையாயிருப்பதற்கு பதிலாக, தனக்கு ஏதாவது கொடுக்கப்படவேண்டும் என்பது ஏசாவின் விருப்பம்.

இக்காலத்தில் அநேகர் ஏசாவைப்போலவே தங்களுக்கு சாதாரண ஆசீர்வாதம் கிடைத்தால் போதும் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் சபையின் ஆசீர்வாதத்தை விரும்புவதில்லை. அதற்கு பதிலாக அவர்கள் மாம்சப்பிரகாரமான, உலகப்பிரகாரமான ஆசீர்வாதம் தங்களுக்கு கிடைத்தால் போதுமென்று சொல்லுகிறார்கள். ஆவிக்குரிய காரியங்களைவிட, உலகப்பிரகாரமான காரியங்களே இவர்களுக்கு பெரிதாய்த் தெரிகிறது. இவர்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அலட்சியம் பண்ணுகிறார்கள்.

ஏசா ஈசாக்கை நோக்கி, "நீர் எனக்கு ஒரு ஆசீர்வாதத்தையாகிலும் வைத்து வைக்கவில்லையா" என்று கேட்கிறான். அதற்கு ஈசாக்கு ஏசாவுக்கு பிரதியுத்தரமாக, "இதோ, நான் அவனை உனக்கு எஜமானாக வைத்தேன்; அவன் சகோதரர் எல்லாரையும் அவனுக்கு ஊழியக்காரராகக்கொடுத்து, அவனைத் தானியத்தினாலும் திராட்சரசத்தினாலும் ஆதரித்தேன்; இப்பொழுதும் என் மகனே, நான் உனக்கு என்னசெய்வேன்" (ஆதி 27:37) என்று சொல்லுகிறார்.

தனக்கு சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதம் கிடைக்காவிட்டாலும் சாதாரண ஆசீர்வாதமாவது கிடைக்கவேண்டுமென்று ஏசா எதிர்பார்க்கிறான். ஏசா தன் தகப்பனாகிய ஈசாக்கை நோக்கி, "என் தகப்பனே, இந்த ஒரே ஆசீர்வாதம் மாத்திரமா உம்மிடத்தில் உண்டு? என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதியும்" என்று சொல்லி, சத்தமிட்டு அழுகிறான் (ஆதி 27:38).

ஈசாக்கு சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதத்தை ஏற்கெனவே யாக்கோபுக்கு கொடுத்துவிட்டார். ஒருவன் மாத்திரமே சேஷ்டபுத்திரனாகயிருக்க முடியும். சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதம் என்பது உடன்படிக்கையின் ஆசீர்வாதம். ஈசாக்கு இப்போது ஏசாவுக்கு, உடன்படிக்கையின் ஆசீர்வாதத்திற்கு பதிலாக, சாதாரணமான ஆசீர்வாதத்தை சொல்லுகிறார்.

ஈசாக்கு ஏசாவை நோக்கி, "உன் வாசஸ்தலம் பூமியின் சாரத்தோடும் உயர வானத்திலிருந்து இறங்கும் பனியோடும் இருக்கும். உன் பட்டயத்தினாலே நீ பிழைத்து, உன் சகோதரனைச் சேவிப்பாய்; நீ மேற்கொள்ளும் காலம் வரும்போதோ, உன் கழுத்தில் இருக்கிற அவனுடைய நுகத்தடியை முறித்துப்போடுவாய்" (ஆதி 27:39,40) என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார்.

ஏசாவுக்கு இந்தப் பூமியிலே திருப்தியான பலன் உண்டாயிருக்கும். ஏசாவின் வாசஸ்தலம் பூமியின் சாரத்தோடு, உயர வானத்திலிருந்து இறங்கும் பனியோடும் இருக்கும். ஏசா உடன்படிக்கையின் ஆசீர்வாததைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அவன் உலகப்பிரகாரமான ஆசீர்வாத்தைப் பெற்றுக்கொள்கிறான். ஏசாவைப்போலவே இக்காலத்தில் அநேகர், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களில் குறைவுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களில் பெருகியிருக்கிறார்கள்.

ஏசா சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதத்தை இழந்துபோனவன். ஆகையினால் அவன் தன் சகோதரனை சேவிப்பான். ஏசாவின் சந்ததியார், யாக்கோபின் சந்ததியாரை சேவிப்பார்கள். ஆனாலும் இந்த நுகம் ஏசாவின் சந்ததியார்மீது நிரந்தரமாக சுமத்தப்படுவதில்லை. காலம் நிறைவேறும்போது, ஏசாவின் சந்ததியார், தங்கள்மீது சுமத்தப்பட்ட நுகத்தை முறித்துப்போடுவார்கள்.

ஈசாக்கு ஏசாவை ஆசீர்வதிக்கும்போது, "உன் பட்டயத்தினாலே நீ பிழைப்பாய்" என்று சொல்லுகிறார். ஏசா தன் சகோதரன் யாக்கோபை சேவித்தாலும், அவன் யாக்கோபை மேற்கொள்ளும் காலம் வரும். அந்தக்காலத்தில் ஏசா தன் கழுத்திலிருக்கிற, யாக்கோபின் நுகத்தை முறித்துப்போடுவான்.

ஈசாக்கு இங்கு சொல்லுகிற தீர்க்கதரிசன வாக்கியம் ஏற்ற காலம் வந்தபோது நிறைவேறிற்று. ஏதோமியர் ஏசாவின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். ஏதோமியர் தாவீதின் வம்சத்தாருக்கு கீழ்ப்படிந்து அடங்கியிருந்தார்கள். அதன்பின்பு அவர்கள் தாவீதின் குடும்பத்தாருக்கு விரோதமாக கலகம்பண்ணி பிரிந்துபோனார்கள்.

"அவன் நாட்களில் யூதாவுடைய கையின்கீழிருந்த ஏதோமியர் கலகம்பண்ணி, தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்திக்கொண்டார்கள். அப்படியே யூதாவுடைய கையின் கீழிருந்த ஏதோமியர், இந்நாள்வரைக்கும் இருக்கிறதுபோல, கலகம்பண்ணினார்கள்; அக்காலத்தில்தானே லிப்னா பட்டணத்தாரும் கலகம்பண்ணினார்கள்" *(2இராஜா 8:20,22)*.

ஈசாக்கு ஏசாவை ஆசீர்வதித்தாலும், ஏசாவின் ஆசீர்வாதம் யாக்கோபின் ஆசீர்வாதத்தைவிட குறைவானதாகவே இருக்கிறது. கர்த்தர் யாக்கோபுக்கு மேன்மையான ஆசீர்வாதங்களை ஏற்கெனவே திட்டமிட்டு வைத்திருக்கிறார்.

ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கும்போது, "தேவன் உனக்கு வானத்து பனியையும், பூமியின் கொழுமையையும் கொடுப்பார்" *(ஆதி 27:28)* என்று சொல்லுகிறார். யாக்கோபுக்கு சொல்லப்பட்ட இந்த ஆசீர்வாதத்தில், வானத்து பனி முதலாவதாக சொல்லப்படுகிறது.

ஈசாக்கு ஏசாவை ஆசீர்வதிக்கும்போது, "உன் வாசஸ்தலம் பூமியின் சாரத்தோடும், உயர வானத்திலிருந்து இறங்கும் பனியோடும் இருக்கும்" *(ஆதி 27:39)* என்று சொல்லுகிறார். ஏசாவுக்கு சொல்லப்பட்ட இந்த ஆசீர்வாதத்தில் பூமியின் சாரம் முதலாவதாக சொல்லப்படுகிறது.

பூமியின் சாரத்தைவிட வானத்திலிருந்து இறங்கும் பனியே மேன்மையானது. ஜனங்கள் யாக்கோபை சேவிப்பார்கள். ஜாதிகள் அவரை வணங்குவார்கள். யாக்கோபு தன் சகோதரருக்கு எஜமானாயிருப்பார். கர்த்தருடைய தெய்வீக திட்டத்தின் பிரகாரம், இஸ்ரவேல் புத்திரர், பல வருஷங்களாக ஏதோமியரை ஆளுகை செய்தார்கள்.

ஏசாவுக்கு சொல்லப்பட்ட ஆசீர்வாதத்தில், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய செய்தி எதுவும் சொல்லப்படவில்லை. இயேசுகிறிஸ்துவின் மூலமாக வரும் ஆசீர்வாதமே மெய்யான ஆசீர்வாதம். தேவனுடைய உடன்படிக்கையே நமக்கு மிகவும் முக்கியமானது. நமக்கு இந்தப் பூமியின் சாரம் இருந்தாலும், தேவன் நம்மோடு உடன்படிக்கை பண்ணவில்லையென்றால், நமக்கு மெய்யான ஆசீர்வாதம் இல்லை. ஆவிக்குரிய ஆசீர்வாதம் இல்லாமல் பூமியின் சாரம் நமக்கு பிரயோஜனமாயிராது.

ஏசாவின் கோபம்
ஆதி 27:41-46

ஆதி 27:41. யாக்கோபைத் தன் தகப்பன் ஆசீர்வதித்ததினிமித்தம் ஏசா யாக்கோபைப் பகைத்து: என் தகப்பனுக்காகத் துக்கிக்கும் நாட்கள் சீக்கிரமாய் வரும், அப்பொழுது என் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்றுபோடுவேன் என்று ஏசா தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டான்.

ஆதி 27:42. மூத்த மகனாகிய ஏசாவின் வார்த்தைகள் ரெபெக்காளுக்கு அறிவிக்கப்பட்டது; அப்பொழுது அவள் தன் இளைய மகனாகிய யாக்கோபை அழைத்து: உன் சகோதரனாகிய ஏசா உன்னைக் கொன்றுபோட நினைத்து, தன்னைத் தேற்றிக்கொள்ளுகிறான்.

ஆதி 27:43. ஆகையால், என் மகனே, நான் சொல்வதைக் கேட்டு, எழுந்து புறப்பட்டு, ஆரானில் இருக்கிற என் சகோதரனாகிய லாபானிடத்துக்கு ஓடிப்போய்,

ஆதி 27:44. உன் சகோதரனுடைய கோபம் தணியுமட்டும் சிலநாள் அவனிடத்திலே இரு.

ஆதி 27:45. உன் சகோதரன் உன்மேல் வைத்த கோபம் தணிந்து, நீ அவனுக்குச் செய்ததை அவன் மறந்தபின், நான் ஆள் அனுப்பி, அவ்விடத்திலிருந்து உன்னை அழைப்பிப்பேன்; நான் ஒரே நாளில் உங்கள் இருவரையும் ஏன் இழந்துபோக வேண்டும் என்றாள்.

ஆதி 27:46. பின்பு, ரெபெக்காள் ஈசாக்கை நோக்கி: ஏத்தின் குமாரத்திகளினிமித்தம் என் உயிர் எனக்கு வெறுப்பாயிருக்கிறது; இந்தத் தேசத்துப் பெண்களாகிய ஏத்தின் குமாரத்திகளில் யாக்கோபு ஒரு பெண்ணைக் கொள்வானானால் என் உயிர் இருந்து ஆவதென்ன என்றாள்.

ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்ததினிமித்தமாக, ஏசா யாக்கோபை பகைக்கிறான். அவன் யாக்கோபின்மீது கோபமாயிருக்கிறான். ஏசா தன் இருதயத்தில் தன் சகோதரனாகிய யாக்கோபை கொன்றுபோடவும் தீர்மானம்பண்ணுகிறான்.

ஏசாவின் கோபத்தில் நியாயமான காரணம் எதுவுமில்லை. தேவன் யாக்கோபை நேசிக்கிறார். ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்தார். ஏசா தன் சேஷ்டபுத்திரபாகத்தை யாக்கோபுக்கு விற்றுப்போட்டான். ஏசா கோபமாயிருக்க வேண்டுமென்றால், அவன் தன்மீதுதான் கோபமாயிருக்கவேண்டும்.

ஏசாவின் கோபம் சாதாரணமான கோபமாயிராமல் கொடூரமான கோபமாயிருக்கிறது. அவன் தன்னுடைய சகோதரனையே கொன்றுபோடும் அளவுக்கு கோபப்படுகிறான்.

யாக்கோபுக்கு சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதம் கிடைத்தாலும், அவர்களுடைய தகப்பனாகிய ஈசாக்கு மரித்த பின்புதான், யாக்கோபுக்கு சேஷ்டபுத்திரபாக சுதந்தரம் கிடைக்கும். தன் தகப்பன் ஈசாக்கு சீக்கிரத்தில் மரித்துப்போகவேண்டுமென்று ஏசா விரும்புகிறான். அந்த நாளில், யாக்கோபைக் கொன்றுபோட்டால், சேஷ்டபுத்திரபாகம் தனக்கு வரும் என்று ஏசா திட்டமிடுகிறான்.

யாக்கோபைத் தன் தகப்பன் ஆசீர்வதித்ததினிமித்தம் ஏசா யாக்கோபைப் பகைக்கிறான். "என் தகப்பனுக்காகத் துக்கிக்கும் நாட்கள் சீக்கிரமாய் வரும், அப்பொழுது என் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்றுபோடுவேன்" (ஆதி 27:41) என்று ஏசா தன் இருதயத்திலே சொல்லிக்கொள்கிறான்.

மூத்த மகனாகிய ஏசாவின் வார்த்தைகள் ரெபெக்காளுக்கு அறிவிக்கப்படுகிறது. ஏசா தன் இருதயத்தில் சொல்லிக்கொண்ட வார்த்தைகளை ரெபெக்காள் அறிந்துகொள்கிறாள். யாக்கோபு ரெபெக்காளுக்கு பட்சமானவன். அவள் யாக்கோபை, ஏசாவின் கோபத்திற்கும், கொன்றுபோடும் சதித்திட்டத்திற்கும் தப்புவிக்கப்பண்ணவேண்டும் என்று விரும்புகிறாள்.

ரெபெக்காள் ஏசாவின் சதித்திட்டத்தை யாக்கோபுக்கு தெரியப்படுத்துகிறாள். ரெபெக்காள் தன் இளைய மகனாகிய யாக்கோபை அழைத்து, "உன் சகோதரனாகிய ஏசா உன்னைக் கொன்றுபோட நினைத்து, தன்னைத் தேற்றிக்கொள்ளுகிறான்" (ஆதி 27:42) என்று சொல்லுகிறாள்.

யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவின் கோபத்திற்கும், கொலைவெறிக்கும் தப்பிக்கவேண்டுமென்றால் அவன் என்ன செய்யவேண்டும் என்றும் ரெபெக்காள் அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறாள்.

ரெபெக்காள் யாக்கோபை நோக்கி, "என் மகனே, நான் சொல்வதைக் கேட்டு, எழுந்து புறப்பட்டு, ஆரானில் இருக்கிற என் சகோதரனாகிய லாபனிடத்துக்கு ஓடிப்போய், உன் சகோதரனுடைய கோபம் தணியுமட்டும் சிலநாள் அவனிடத்திலே இரு. உன் சகோதரன் உன்மேல் வைத்த கோபம் தணிந்து, நீ அவனுக்குச் செய்ததை அவன் மறந்தபின், நான் ஆள் அனுப்பி, அவ்விடத்திலிருந்து உன்னை அழைப்பிப்பேன்; நான் ஒரே நாளில் உங்கள் இருவரையும் ஏன் இழந்துபோக வேண்டும்" (ஆதி 27:43-45) என்று சொல்லுகிறாள்.

ரெபெக்காள் "சிலநாள்" என்று கூறியது 20 வருஷமாயிற்று. (ஆதி 31:41) இதன் பின்பு அவள் யாக்கோபைப் பார்க்கவேயில்லை. அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு தகுந்த தண்டனையைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

"நான் ஆள் அனுப்பி, அவ்விடத்திலிருந்து உன்னை அழைப்பிப்பேன்" என்று ரெபெக்காள் யாக்கோபுக்கு சொல்லுகிறாள். ஆனால் ரெபெக்காளால் தன்னுடைய வார்த்தையைக் காத்துக் கொள்ள முடியவில்லை. யாக்கோபை அவளால் திரும்ப அழைத்துக்கொள்ள இயலவில்லை. ஏசா யாக்கோபின்மீது இன்னும் கோபமாகவே இருக்கிறான். யாக்கோபு ஜெபம் பண்ணியபோது தேவன் சூழ்நிலைகளை மாற்றுகிறார். அது வரையிலும், ஏசா யாக்கோபின்மீது கோபமாகவே இருக்கிறான். (ஆதி 32:6-33:17).

"நான் ஒரே நாளில் உங்கள் இருவரையும் ஏன் இழந்துபோக வேண்டும்" என்று ரெபெக்காள் சொல்லுகிறாள். ஆனால் ரெபெக்காள் இருவரையும் இழந்துபோகிறாள். அதன் பின்பு அவள் யாக்கோபைப் பார்க்கவேயில்லை. தனக்கு எதிராக சதி பண்ணியதற்காக ஏசாவும், ரெபெக்காளை மதிக்கவில்லை.

யாக்கோபு, ஏசா ஆகிய இருவரைப் பற்றியும் ரெபெக்காள் அக்கரையோடு இருந்திருந்தால், அவள் ஏசாவுக்கு விரோதமாக சதி பண்ணியிருக்கமாட்டாள். அவள் ஆதி 25:23 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனத்தை நினைத்துப் பார்த்திருப்பாள். இந்தத் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுமாறு தேவனுடைய உதவியை நாடியிருப்பாள். ஆதி 9:6 ஆவது வசனம் ரெபெக்காளின் மனதில் இருந்திருக்கும். ஏசா யாக்கோபைக் கொன்றுபோட்டால், ஏசாவிற்கு மரண தண்டனை கொடுக்கப்படும். இவ்வாறாக இருவரையும் அவள் இழந்துபோவாள்.

யாக்கோபு தன் சகோதரன் ஏசாவைவிட்டு சிறிதுகாலம் விலகியிருந்தால், ஏசா யாக்கோபின்மீது வைத்த கோபம் தணியும் என்று ரெபெக்காள் நம்புகிறாள். ஏசாவின் கோபம் குறையும்போது, யாக்கோபு அவனுக்கு விரோதமாக செய்த காரியத்தை அவன் மறந்துபோவான் என்றும் ரெபெக்காள் நினைக்கிறாள். ரெபெக்காள் ஒரே நாளில் ஏசாவையும் யாக்கோபையும் இழந்துபோக விரும்பவில்லை. ஏசா யாக்கோபைக் கொன்றுபோட்டால், ஏசாவின்மீது கொலைப்பழி சுமத்தப்படும்.

யாக்கோபு ஏசாவை விட்டு சிறிதுகாலம் விலகிப்போகவேண்டும் என்று ரெபெக்காள் விரும்புகிறாள். யாக்கோபு வேறு எந்த தேசத்திற்குப்போகாமல், தன் சகோதரனுடைய சொந்த தேசத்திற்கு போகவேண்டும் என்று ரெபெக்காள் விரும்புகிறாள். அவள் தன்னுடைய திட்டத்தை ஈசாக்கிடம் சொல்லுகிறாள்.

ரெபெக்காள் ஈசாக்கை நோக்கி, "ஏத்தின் குமாரத்திகளினிமித்தம் என் உயிர் எனக்கு வெறுப்பாயிருக்கிறது; இந்தத் தேசத்துப் பெண்களாகிய ஏத்தின் குமாரத்திகளில் யாக்கோபு ஒரு பெண்ணைக் கொள்வானானால் என் உயிர் இருந்து ஆவதென்ன" (ஆதி 27:46) என்றாள்.

யாக்கோபை லாபானிடத்தில் அனுப்புவது ரெபெக்காளின் திட்டம். ஏற்கெனவே தனக்குள்ள மருமக்கள்மார்மீது தன்னுடைய வெறுப்பை ரெபெக்காள் ஈசாக்கிடம் வெளிப்படுத்துகிறாள். யாக்கோபிற்கு தன்னுடைய உறவின் முறையில் பெண்கொள்ள வேண்டும் என்ற தன்னுடைய விருப்பத்தை வெளிப்படுத்துகிறாள்.

ரெபெக்காள் ஈசாக்கிடம் யாக்கோபின் திருமணத்தைப் பற்றி பேசும்போது யாக்கோபிற்கு 77 வயது இருக்கும் என்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள். அதுவரையிலும் அவன் திருமணம் செய்து கொள்ளாதவனாகவே இருக்கிறான்.

யாக்கோபு 77 வயது வரையிலும் திருமணம் செய்து கொள்ளவில்லை. யாக்கோபின் வயதிற்கு பல ஆதாரங்கள் உள்ளன. யாக்கோபு தன் குடும்பத்தாரோடு எகிப்திற்குப் போனது, அங்கிருந்து திரும்பி வந்தது, யோசேப்பின் வயது ஆகியவைகளை ஆதாரமாக வைத்து யாக்கோபின் வயதைக் கணக்கிடுகிறார்கள்.

யோசேப்பு பார்வோனுக்கு முன்பாக நிற்கும்போது யோசேப்பின் வயது 30. (ஆதி 41:46-54, ஆதி 45:5-9) ஏழு வருஷ செழிப்பின் காலத்து ஆரம்பத்தில் யோசேப்பு பார்வோனுக்கு முன்பாக நிற்கிறான். இதன் பின்பு, ஏழு வருஷம் பூமி செழிக்கிறது. அதன் பின்பு பஞ்சம் உண்டாகிறது. இரண்டாம் வருஷ பஞ்சகாலத்தில் யோசேப்பின் வயது 39.

இக்காலத்தில் யோசேப்பின் சகோதரர், அவனுடைய குடும்பத்தார், அவனுடைய தகப்பனாகிய யாக்கோபு ஆகியோர் யோசேப்போடு எகிப்தில் இருப்பதற்காக வருகிறார்கள். அப்பொழுது யாக்கோபின் வயது 130. (ஆதி 47:9) இதன் பொருள் என்னவென்றால், யோசேப்பு ஆரானில் பிறந்த போது யாக்கோபின் வயது 91. இக்காலத்தில்தான் யாக்கோபு ஆரானிலிருந்து திரும்பி கானானிலுள்ள தன்னுடைய ஜனத்திற்கு வரவேண்டுமென்று விரும்பினான். அப்பொழுது லாபான் அவனை மேலும் ஆறு வருஷங்கள் தன்னோடு இருக்குமாறு வலியுறுத்தினான். (ஆதி 30:25-28; ஆதி 31:38-41).

இதன் வாயிலாக யாக்கோபு ஆரானில் இருந்த வருஷம் 20 வருஷங்கள் என்று தெரிய வருகிறது. யோசேப்பு பிறந்த பின்பு யாக்கோபு ஆரானில் இருந்த ஆறு வருஷமும் இதில் அடங்கும். யாக்கோபு ஆரானில் இருந்த பதினான்காம் வருஷத்தில் யோசேப்பு பிறந்தான்.

யோசேப்பு பிறந்தபோது யாக்கோபின் வயது 91. இதிலிருந்து யாக்கோபு ஆரானிலிருந்த 14 வருஷத்தை கழித்துப்பார்க்கும்போது யாக்கோபிற்கு 77 வயதாகிறது. இதனால் யாக்கோபு ஆரானுக்குப் போய் தனக்கு ஒரு மனைவியைத் தேடியபோது அவனுடைய வயது 77 ஆக இருக்கும் என்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள்.

யாக்கோபிற்கு முதல் குமாரன் பிறந்தபோது, 78 வயதாயிருக்கலாம். லாபானோடு இருபது வருஷங்கள் இருந்த பின்பு, ஈசாக்கிடமும், ஏசாவிடமும் திரும்பி வந்தபோது யாக்கோபின் வயது 97.

28 அதிகாரம்

யாக்கோபு தன் பெற்றோரை விட்டு புறப்பட்டு பதான் அராமுக்கு போகிறார். ஈசாக்கு யாக்கோபுக்கு சொன்ன கட்டளையும், ஆசீர்வாதமான வார்த்தைகளும் (ஆதி 28:1-4). யாக்கோபு தனக்கு கொடுக்கப்பட்ட கட்டளைக்கு கீழ்ப்படிகிறார் (ஆதி 28:5-10).

ஏசா ஆபிரகாமுடைய குமாரனாகிய இஸ்மவேலின் குடும்பத்திலே பெண்கொள்கிறார் (ஆதி 28:6-9).

யாக்கோபின் நித்திரை (ஆதி 28:10,11). யாக்கோபு தன் சொப்பனத்தில் கண்ட ஏணி (ஆதி 28:11,12). கர்த்தர் யாக்கோபுக்கு சொன்ன கிருபையுள்ள வாக்குத்தத்தங்கள் (ஆதி 28:13-15). யாக்கோபு தான் கர்த்தரை தரிசித்த ஸ்தலத்திற்கு பெத்தேல் என்று பேரிடுகிறார் (ஆதி 28:16-19). யாக்கோபு தேவனுக்கு செலுத்துவதாக சொன்ன பொருத்தனை (ஆதி 28:20-22).

யாக்கோபின் பிரயாணம் ஆதி 28:1-5

ஆதி 28:1. ஈசாக்கு யாக்கோபை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண்கொள்ளாமல்,

ஆதி 28:2. எழுந்து புறப்பட்டுப், பதான் அராமிலிருக்கிற உன் தாயினுடைய தகப்பனாகிய பெத்துவேலுடைய வீட்டுக்குப் போய், அவ்வீடத்தில் உன் தாயின் சகோதரனாகிய லாபானின் குமாரத்திகளுக்குள் பெண்கொள் என்று அவனுக்குக் கட்டளையிட்டான்.

ஆதி 28:3. சர்வவல்லமையுள்ள தேவன் உன்னை ஆசீர்வதித்து, நீ பல ஜனக்கூட்டமாகும்படி உன்னைப் பலுகவும் பெருகவும் பண்ணி;

ஆதி 28:4. தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்ததும் நீ பரதேசியாய்த் தங்குகிறதுமான தேசத்தை நீ சுதந்தரித்துக் கொள்ளும்படி ஆபிரகாமுக்கு அருளிய ஆசீர்வாதத்தை உனக்கும் உன் சந்ததிக்கும் அருளுவாராக என்று சொல்லி;

ஆதி 28:5. ஈசாக்கு யாக்கோபை அனுப்பிவிட்டான். அப்பொழுது அவன் பதான் அராமிலிருக்கும் சீரியா தேசத்தனாகிய பெத்துவேலுடைய குமாரனும், தனக்கும் ஏசாவுக்கும் தாயாகிய ரெபெக்காளின் சகோதரனுமான லாபானிடத்துக்குப் போகப் புறப்பட்டான்.

ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கிறார். உடன்படிக்கையின் ஆசீர்வாதம் யாக்கோபுக்கு கொடுக்கப்படுகிறது. யாக்கோபு சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டவுடன், தன்னுடைய தேசத்தில் தங்க முடியாமல் பதான் அராமுக்கு ஓடிப்போகிறார்.

யாக்கோபு சீரியா தேசத்திற்கு ஓடிப்போகிறார். "யாக்கோபு சீரியாதேசத்துக்கு ஓடிப்போய், இஸ்ரவேல் ஒரு பெண்ணுக்காக ஊழியஞ்செய்து, ஒரு பெண்ணுக்காக ஆடு மேய்த்தான்" (ஓசி 12:12).

ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கும்போது, "தேவன் உனக்கு மிகுந்த தானியத்தையும் திராட்சரசத்தையும் தந்தருளுவாராக" (ஆதி 27:28) என்று சொன்னார். ஆனால் யாக்கோபோ தன் தேசத்தைவிட்டு ஒன்றுமில்லாமல் வெறுமையாகப் போகிறார்.

ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கும்போது, ஜனங்கள் உன்னை சேவிக்கவும், ஜாதிகள் உன்னை வணங்கவும் கடவார்கள். உன் சகோதரருக்கு எஜமானாயிருப்பாய்" (ஆதி 27:29) என்று சொன்னார். ஆனால் யாக்கோபு இப்போது தன்னுடைய மாமன் வீட்டிலே வேலை செய்யப்போகிறார். யாக்கோபு அங்கே மிகவும் கடினமாய் வேலை செய்யவேண்டும்.

யாக்கோபுக்கு சொல்லப்பட்ட ஆசீர்வாதம் வேறு. ஆனால் அவருடைய வாழ்க்கையில் நடைபெறுகிற சம்பவம் வேறு. யாக்கோபு ஏசாவின் சேஷ்டபுத்திரபாகத்தை வஞ்சனையினால் கிரயத்திற்கு வாங்கினார். அவர் தன் தகப்பன் ஈசாக்கை வஞ்சித்து, உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார்.

யாக்கோபுக்கு சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதம் உறுதிபண்ணப்படுகிறது. ஆனால் அந்த ஆசீர்வாதத்தை யாக்கோபால் அனுபவிக்க முடியவில்லை. யாக்கோபு உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தை வஞ்சனையினால் பெற்றுக்கொண்டாலும், அதை அனுபவிக்கும் அளவுக்கு, அவரிடத்தில் ஞானமோ, புத்தியோ, பெலமோ இல்லை.

யாக்கோபு சேஷ்டபுத்திரபாகத்திற்கு சொந்தக்காரர். ஆனால் அவர் இப்போது பாடுகளையும் வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கிறார். யாக்கோபுடைய ஜீவியத்தின் மூலமாக விசுவாசிகளாகிய நாம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும். ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொள்கிறவர்கள், பாடுகளை அனுபவிக்கவும் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

கிறிஸ்துவுக்குள் சமாதானமாயிருக்கிறவர்களுக்கு, இந்த உலகத்தில் உபத்திரவங்கள் இருக்கும். "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" (யோவா 16:33).

ஈசாக்கு தன் குமாரன் யாக்கோபை ஆசீர்வதித்தார். அதே வேளையில், அவர் இப்போது யாக்கோபை அந்தத் தேசத்தைவிட்டே அனுப்பிவிடுகிறார்.

ஈசாக்கு யாக்கோபை அழைத்து, அவரை ஆசீர்வதித்து, "நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண்கொள்ளாமல், எழுந்து புறப்பட்டுப், பதான் அராமிலிருக்கிற உன் தாயினுடைய தகப்பனாகிய பெத்துவேலுடைய வீட்டுக்குப் போய், அவ்விடத்தில் உன் தாயின் சகோதரனாகிய லாபானின் குமாரத்திகளுக்குள் பெண்கொள்" (ஆதி 28:1,2) என்று அவருக்குக் கட்டளையிடுகிறார்.

யாக்கோபு ஏசாவை ஏமாற்றி சேஷ்ட புத்திரபாகத்தை அவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார். அதன்பின்பு ஈசாக்கு யாக்கோபைத் தாராளமாக ஆசீர்வதிக்கிறார். (ஆதி 27:1-46). சேஷ்டபுத்திரபாகத்து ஆசீர்வாதம் இப்பொழுது யாக்கோபிற்கே உரியது.

இஸ்ரவேல் ஜனத்தார் மற்ற ஜனத்தாரோடு கலக்கக்கூடாது என்று தேவன் பூர்வத்திலே தடைபண்ணியிருக்கிறார். (ஆதி 24:3; யாத் 34:12-16; எண் 23:9; உபா 7:3-4; யோசு 23:12; எஸ்றா 9:1-10:44; நெகே 13:1-30). ஏசா இந்தத் தடையை மீறி அவனுடைய பெற்றோருக்கு மனவருத்தத்தை உண்டுபண்ணினான். (ஆதி 26:34-35) இஸ்ரவேலில் இப்படிப்பட்ட கவனக்குறைவையும், பிற இனக்கலப்பையும் தேவன் சபிக்கிறார் (எண் 25:1-8; நியா 3:5-8).

பெத்துவேல் என்பவன் நாகோர், மில்க்காள் ஆகியோரின் குமாரன். இவன் லாபான், ரெபெக்காள் ஆகியோரின் தகப்பன். (ஆதி 28:2-5; ஆதி 11:29; ஆதி 22:23; ஆதி 24:15,24,47,50; ஆதி 25:20) பெத்துவேலின் மறுபெயர் "சீரியன்" என்பதாகும். (ஆதி 28:5) இக்காலத்தில் பெத்துவேல் மரித்துப் போயிருக்கவேண்டும். ஏனெனில், ஆதி 24 ஆம் அதிகாரத்தில் ரெபெக்காளின் திருமணக் காரியத்தைக் குறித்து எலியேசரிடம் லாபானே பேசுகிறான்.

ஈசாக்கு தன் குமாரன் யாக்கோபை ஆசீர்வதிக்கவும் செய்கிறார். அவருக்கு கட்டளையிடவும் செய்கிறார். ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கிறவர்கள், அந்த ஆசீர்வாதத்தோடு தொடர்புடைய கட்டளைகளுக்கும் கீழ்ப்படியவேண்டும். எல்லா ஆசீர்வாதங்களும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. ஆசீர்வாதம் வேறு, நிபந்தனை வேறு என்று இரண்டையும் வெவ்வேறாகப் பிரிக்கக்கூடாது. அதை தேவன் இணைத்திருக்கிறார். தேவன் இணைத்ததை மனுஷர் பிரிக்காதிருப்பார்களாக.

யாக்கோபு உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்திற்கு சொந்தக்காரர். சேஷ்டபுத்திர ஆசீர்வாதம் யாக்கோபுக்கு உறுதிபண்ணப்பட்டிருக்கிறது. ஆகையினால் யாக்கோபு கானானியருடைய குமாரத்திகளில் பெண்கொள்ளக்கூடாது. கானானியர் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் விக்கிரகாராதனைபண்ணுகிற ஸ்திரீகளை விவாகம்பண்ணக்கூடாது. கானானியர் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள்.

ஈசாக்கு யாக்கோபை சீரியா தேசத்திற்கு அனுப்பிவிடும்போது அவரை சர்வவல்லமையுள்ள தேவனுடைய நாமத்தினாலே ஆசீர்வதிக்கிறார். ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கும்போது, "சர்வவல்லமையுள்ள தேவன் உன்னை ஆசீர்வதித்து, நீ பல ஜனக்கூட்டமாகும்படி உன்னைப் பலுகவும் பெருகவும் பண்ணி; தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்ததும் நீ பரதேசியாய்த்தங்குகிறதுமான தேசத்தை நீ சுதந்தரித்துக் கொள்ளும்படி ஆபிரகாமுக்கு அருளிய ஆசீர்வாதத்தை உனக்கும் உன் சந்ததிக்கும் அருளுவாராக" *(ஆதி 28:3,4)* என்று சொல்லுகிறார்.

ஈசாக்கு யாக்கோபை ஏற்கெனவே ஆசீர்வதித்தார். அப்போது அவர் ஏசாவை ஆசீர்வதிப்பதாக நினைத்து, யாக்கோபை ஆசீர்வதித்தார். யாக்கோபும் ஈசாக்கின் ஆசீர்வாதத்தை வஞ்சனையினால் பெற்றுக்கொண்டார். யாக்கோபு தன்னை ஏசாபோல காண்பித்து, உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டார். இப்போதோ ஈசாக்கின் ஆத்துமா மெய்யாகவே யாக்கோபை ஆசீர்வதிக்கிறது.

ஈசாக்கின் ஆசீர்வாதமான வார்த்தைகள் யாக்கோபுக்கு ஆறுதலாயும், உற்சாகமாயும் இருக்கிறது. யாக்கோபு இப்போது துக்கமாயும் சோகமாயும் இருக்கிறார். அவர் தன் பெற்றோரை விட்டு பிரிந்துபோகப்போகிறார். ரெபெக்காள் யாக்கோபின்மீது பட்சமாயிருக்கிறாள். யாக்கோபோ தன் தாயாரையும்விட்டுப் பிரிந்து, லாபானிடத்திற்கு போகப்போகிறார்.

இப்படிப்பட்ட துக்கமான சூழ்நிலையில், ஈசாக்கின் ஆசீர்வாதமான வார்த்தைகள், யாக்கோபின் மனதிற்கு தெம்பையும் உற்சாகத்தையும் தருகிறது. ஈசாக்கு யாக்கோபை இதற்கு முன்பு ஆசீர்வாதத்தைவிட, இப்போது தெளிவாகவும், பரிபூரணமாகவும் ஆசீர்வதிக்கிறார்.

ஈசாக்கு யாக்கோபுக்கு சொல்லும் ஆசீர்வாதம், கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்ன ஆசீர்வாதத்திற்கு இணையாகயிருக்கிறது. தேவன் "ஆபிரகாமுக்கு அருளிய ஆசீர்வாதத்தை உனக்கும் உன் சந்ததிக்கும் அருளுவாராக" என்று ஈசாக்கு யாக்கோபுக்கு சொல்லுகிறார்.

யாக்கோபு பெற்றுக்கொள்கிற ஆசீர்வாதம் சுவிசேஷ ஆசீர்வாதமாகும். இந்த ஆசீர்வாதம் சர்வவல்லமையுள்ள தேவனிடத்திலிருந்து வருகிறது.

"ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று" *(கலா 3:14)*.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேலின் முற்பிதாக்களுக்கு தம்மை வெளிப்படுத்தியபோது, சர்வவல்லமையுள்ள தேவனாக தம்மை வெளிப்படுத்தினார்.

"சர்வவவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன்; ஆனாலும் யேகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை" *(யாத் 6:3)*.

ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கும்போது, "சர்வவல்லமையுள்ள தேவன் உன்னை ஆசீர்வதித்து, நீ பல ஜனக்கூட்டமாகும்படி உன்னைப் பலுகவும் பெருகவும் பண்ணுவாராக" *(ஆதி 28:3)* என்று சொல்லுகிறார்.

சர்வவல்லமையுள்ள தேவன் மெய்யாகவே யாக்கோபின் சந்ததியை பலுகிப்பெருகப்பண்ணியிருக்கிறார். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரர் விடுவிக்கப்பட்டு, எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப்போனபோது அவர்கள் திரளான ஜனக்கூட்டமாயிருந்தார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பாளயமிறங்கியிருந்தபோதும், அங்கே பிரயாணம்பண்ணியபோதும், அதன்பின்பும் அவர்கள் பலுகிப்பெருகி திரளான ஜனக்கூட்டத்தாராயிருந்தார்கள்.

கர்த்தர் ஆபிரகாமின் சந்ததியை யாக்கோபின் மூலமாக ஆசீர்வதிக்கிறார். யாக்கோபின் மூலமாக பூமியிலுள்ள குடும்பங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். வானத்திலும் பூமியிலுமுள்ள எல்லா ஜனங்களும் இயேசுகிறிஸ்துவுக்குள்ளே ஒன்றாய்க் கூட்டிச்சேர்க்கப்படுகிறார்கள்.

"காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று, தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்" (எபே 1:10).

யாக்கோபு இப்போது கானான் தேசத்திலே பரதேசியாய்த் தங்கியிருக்கிறார். யாக்கோபும், யாக்கோபின் சந்ததியாரும் கானான் தேசத்தை சுதந்தரித்துக்கொள்வார்கள் என்று ஈசாக்கு சொல்லுகிறார். ஏசாவின் சந்ததியாருக்கு கானான் தேசத்தில் சுதந்தரம் இல்லை.

ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கும்போது, "தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்ததும் நீ பரதேசியாய்த் தங்குகிறதுமான தேசத்தை நீ சுதந்தரித்துக் கொள்ளும்படி ஆபிரகாமுக்கு அருளிய ஆசீர்வாதத்தை உனக்கும் உன் சந்ததிக்கும் அருளுவாராக" (ஆதி 28:4) என்று சொல்லுகிறார்.

யாக்கோபு எந்த தேசத்தில் பரதேசியாய்த் தங்கியிருக்கிறாரோ, அந்த தேசத்தை அவர் சுதந்தரித்துக்கொள்வார். இஸ்ரவேலின் முற்பிதாக்கள் எல்லோருமே கானான் தேசத்தை சுதந்தரிக்கவேண்டும் என்று பிரியமாயிருந்தார்கள். ஆனால் கானான் தேசம் அவர்களுக்கு நிரந்தரமான நித்திய தேசமல்ல. அவர்கள் எல்லோரும் கானான் தேசத்திலே பரதேசியாய்த் தங்கியிருந்தார்கள். பரமதேசமே கர்த்தருடைய ஜனத்திற்கு நித்திய சுதந்தரம்.

நம்மிடத்தில் இப்பிரபஞ்சத்திற்குரிய காரியங்கள் எவ்வளவு திரளாகயிருந்தாலும், அந்தக் காரியங்கள் நமக்கு நிலையானது என்று நினைக்கக்கூடாது. அவை நமக்கு தற்காலிகமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. யாக்கோபைப்போல நாமும் இந்தப் பூமியில், நம்முடைய ஜீவியகாலம் வரையிலும், பரதேசியாய்த் தங்கியிருக்கிறோம்.

"இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்" (எபி 11:13).

ஈசாக்கு யாக்கோபை அனுப்பிவிடுகிறார். அப்பொழுது யாக்கோபு பதான் அராமிலிருக்கும் சீரியா தேசத்தனாகிய பெத்துவேலுடைய குமாரனும், தனக்கும் ஏசாவுக்கும் தாயாகிய ரெபெக்காளின் சகோதரனுமான லாபானிடத்துக்குப் போகப் புறப்படுகிறார் (ஆதி 28:5).

பெத்துவேல் இரண்டு முறை சீரியா தேசத்தான் என்று அழைக்கப்பட்டிருக்கிறான். (ஆதி 28:5; ஆதி 25:20) பெத்துவேலின் குமாரனாகிய லாபான் மூன்று முறை இப்பெயரால் அழைக்கப் பட்டிருக்கிறான். (ஆதி 25:20; ஆதி 31:20,24). யாக்கோபிற்கு உபா 26:5 ஆவது வசனத்தில் இப்பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. குஷ்டரோகியான நாகமானுக்கும் சீரியா தேசத்தான் என்னும் பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. (2இராஜா 5:20; லூக்கா 4:27).

இஸ்ரவேலுடைய ராஜாக்களின் காலத்தில் சீரிய பாஷை பிரபலமாக இருந்தது. (2இராஜா 18:26; எஸ்றா 4:7; ஏசா 36:11). சீரியா தேசம் பாலஸ்தீனாவிற்கு வடபகுதியில் இருக்கிறது. இவர்கள் இஸ்ரவேலரோடு பலமுறை யுத்தம் பண்ணினார்கள். ராஜாக்கள் புஸ்தகத்திலும், நாளாகமம் புஸ்தகத்திலும் சீரியா தேசத்தார் யூதருடைய விரோதிகளாகவே அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஏசாவின் விவாகம்
ஆதி 28:6-9

ஆதி 28:6. ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து ஒரு பெண்ணைக் கொள்ளும்படி அவனைப் பதான் அராமுக்கு அனுப்பினதையும், அவனை ஆசீர்வதிக்கையில்: நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண்கொள்ள வேண்டாம் என்று அவனுக்குக் கட்டளையிட்டதையும்,

ஆதி 28:7. யாக்கோபு தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும் கீழ்ப்படிந்து, பதான் அராமுக்குப் புறப்பட்டுப்போனதையும் ஏசா கண்டதினாலும்,

ஆதி 28:8. கானானியருடைய குமாரத்திகள் தன் தகப்பனாகிய ஈசாக்கின் பார்வைக்கு ஆகாதவர்கள் என்பதை ஏசா அறிந்ததினாலும்,

ஆதி 28:9. ஏசா இஸ்மவேலிடத்துக்குப் போய் தனக்கு முன்னிருந்த மனைவிகளுமன்றி ஆபிரகாமுடைய குமாரனாகிய இஸ்மவேலின் குமாரத்தியும் நெபாயோத்தின் சகோதரியுமாகிய மகலாத்தையும் விவாகம் பண்ணினான்.

இந்த வசனப்பகுதியில் யாக்கோபின் சரித்திரத்தைப்பற்றிச் சொல்லும்போது, ஏசாவின் சரித்திரமும் சுருக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது. ஏசா யாக்கோபின்மீது கோபமாயிருந்தான். ஆனாலும் யாக்கோபின் நல்ல சுபாவமும், பெற்றோருக்கு கீழ்ப்படியும் பண்பும் ஏசாவின் இருதயத்தைத் தொடுகிறது.

ஏசா வேட்டையாடுவதில் வல்லவன். அவன் திருமணம் செய்து குடும்பஸ்தனாயிருக்கிறான். ஏசா பெரியவன். ஆனாலும் அவன் யாக்கோபைப்பற்றி நினைக்கும்போது, யாக்கோபு தன்னைவிட பெரியவன் என்று ஏசா நினைக்கிறான்.

ஏசாவுக்கு ஏற்கெனவே திருமணமாயிற்று. அவன் ஏத்தியருடைய குமாரத்திகளை விவாகம்பண்ணினான். அவர்கள் ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் மனநோவாயிருந்தார்கள் (ஆதி 26:34,35). ஏசா இப்போது தன்னுடைய பெற்றோரை பிரியப்படுத்த விரும்புகிறான்.

ஏசா தன் தகப்பனாகிய ஈசாக்கின் வீட்டிலே நடைபெறுகிற ஒவ்வொரு சம்பவத்தையும் கவனித்துக்கொண்டிருக்கிறான்.

ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து ஒரு பெண்ணைக் கொள்ளும்படி அவரைப் பதான் அராமுக்கு அனுப்பினது ஏசாவுக்கு தெரிந்திருக்கிறது. மேலும் ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கையில்: "நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண்கொள்ள வேண்டாம்" என்று யாக்கோபுக்கு கட்டளையிட்டதும் ஏசாவுக்கு தெரிந்திருக்கிறது (ஆதி 28:6).

யாக்கோபு தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும் கீழ்ப்படிந்து, பதான் அராமுக்குப் புறப்பட்டுப்போனதையும் ஏசா காண்கிறான். கானானியருடைய குமாரத்திகள் தன் தகப்பனாகிய ஈசாக்கின் பார்வைக்கு ஆகாதவர்கள் என்பதையும் ஏசா அறிந்து கொள்கிறான் (ஆதி 28:7,8).

ஏசா தன்னுடைய தப்பிதத்தை உணருகிறான். ஆனால் அவன் காலம் கடந்து மனந்திரும்புகிறான். ஏசாவுக்கு தெளிந்த புத்தி இருக்கவேண்டிய நேரத்தில், அவனுக்கு குழப்பமான புத்தியிருந்தது. அப்போது அவன் கானானியருடைய குமாரத்திகளை விவாகம்பண்ணி, தன்னுடைய பெற்றோரின் மனதை துக்கப்படுத்தினான். கானானிய ஸ்திரீகள் மூலமாக, தன்னுடைய பெற்றோரின் மனது வேதனைப்பட்டது ஏசாவுக்கு அப்போது தெரியவில்லை. ஆனால் இப்போது கானானியருடைய குமாரத்திகள் தன் தகப்பனாகிய ஈசாக்கின் பார்வைக்கு ஆகாதவர்கள் என்பதை ஏசா அறிந்துகொள்கிறான்.

ஏசா தன்னுடைய தப்பிதத்தை திருத்திக்கொள்வதற்கு, மேலும் ஒரு தப்பிதத்தை செய்கிறான். ஏசாவின் மனதில் தெளிந்த சிந்தனையில்லை. அவனுடைய இருதயத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயமுமில்லை. ஏசா கர்த்தரைப்பற்றித் தியானிப்பதுமில்லை. அவன் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுப்பதுமில்லை. ஏசா எப்போதுமே தன்னுடைய மனதிற்கு பிரியமானதை செய்கிறான்.

ஏசா இஸ்மவேலிடத்துக்குப் போய் தனக்கு முன்னிருந்த மனைவிகளுமன்றி ஆபிரகாமுடைய குமாரனாகிய இஸ்மவேலின் குமாரத்தியும் நெபாயோத்தின் சகோதரியுமாகிய மகலாத்தையும் விவாகம் பண்ணுகிறான் (ஆதி 28:9).

யாக்கோபு தன் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்தார். இது அவருக்குச் சுலபமானது, லாபகரமானது. தனக்கு ஆதாயம் வரும்போது கீழ்ப்படிவது யாக்கோபின் வழக்கம். (ஆதி 25:30-31; ஆதி 27:8,13; ஆதி 31:1-13).

இஸ்மவேல் மரித்து 15 வருஷமாயிற்று. தனக்கு பெண்கொள்வதற்காக ஏசா அவனுடைய வீட்டாரிடத்திற்குப் போகிறான். ஈசாக்கு பிறந்த போது, இஸ்மவேலுக்கு 14 வயது. (ஆதி 17:17,24-25) ஈசாக்கிற்கு இப்பொழுது 138 வயதாகிறது (ஆதி 27:1).

ஏசாவின் முதல் மனைவிகள் அவனுடைய பெற்றோருக்கு மனமடிவாக இருந்தார்கள். (ஆதி 26:34-35; ஆதி 27:46) ஆகையினால் ஏசா இப்பொழுது ஆபிரகாமின் குமாரனாகிய இஸ்மவேலின் குடும்பத்திலிருந்து பெண்கொண்டு தன் பெற்றோரை மகிழ்விக்க விரும்புகிறான். மகலாத்தை விவாகம்பண்ணுகிறான். இவள் இஸ்மவேலின் குமாரத்தி. யாக்கோபு தன் தாயின் உறவுக்காரியை திருமணம் செய்கிறார். ஏசா தன் தகப்பனின் உறவுக்காரியைத் திருமணம் செய்கிறான்.

இஸ்மவேல் அடிமைப்பெண்ணாகிய ஆகாரின் குமாரன். ஆபிரகாம் ஆகாரையும் இஸ்மவேலையும் தன் கூடாரத்தைவிட்டு துரத்திவிட்டார். இப்போது ஏசா இஸ்மவேலின் குடும்பத்தில் விவாகம்பண்ணி, ஆபிரகாமால் துரத்தப்பட்ட அவர்களை, தன்னுடைய கூடாரத்திற்கு கொண்டுவருகிறான். ஏசா தன் தகப்பன் ஈசாக்கை பிரியப்படுத்த முயற்சிபண்ணுகிறான். ஆனால் ஏசாவின் கிரியைகள் கர்த்தருக்கு பிரியமாயில்லை. ஏசாவின் மனமாற்றம் பூரணமாயில்லை. ஏசா தன்னுடைய தப்பிதங்களுக்கு அறையும் குறையுமாக மனந்திரும்பி, மேலும் அதிக பாவங்களை செய்கிறான்.

யாக்கோபு கண்ட தரிசனம்
ஆதி 28:10-15

ஆதி 28:10. யாக்கோபு பெயெர்செபாவை விட்டுப் புறப்பட்டு ஆரானுக்குப் போகபிரயாணம் பண்ணி,

ஆதி 28:11. ஒரு இடத்திலே வந்து, சூரியன் அஸ்தமித்தபடியினால், அங்கே ராத்தங்கி அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்துத் தன் தலையின் கீழ் வைத்து, அங்கே நித்திரை செய்யும்படி படுத்துக் கொண்டான்.

ஆதி 28:12. அங்கே அவன் ஒரு சொப்பனம் கண்டான்; இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்.

ஆதி 28:13. அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்.

ஆதி 28:14. உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும், பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.

ஆதி 28:15. நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்.

யாக்கோபு சீரியா தேசத்திற்கு பிரயாணம்பண்ணுகிறார். அவர் இப்போது பெயர்செபாவிலிருக்கிறார். யாக்கோபு பெயர்செபாவை விட்டு ஆரானுக்குப் போக பிரயாணம்பண்ணுகிறார். யாக்கோபின் பிரயாணம் மிகுந்த துக்கமாயும், மனவேதனையாயும் இருக்கிறது. அவர் தன்னுடைய பெற்றோரை விட்டுப் பிரிந்து, தனியாகப் புறப்பட்டுப்போகிறார்.

யாக்கோபு பகல் வேளையிலே நீண்ட தூரம் பிரயாணம் செய்து பெத்தேல் என்னும் இடத்திற்கு வந்திருக்கிறார். இரவு வேளையாயிற்று. அவருடைய சரீரத்தில் களைப்பு உண்டாயிற்று.

யாக்கோபு பெத்தேல் என்னும் இடத்திலே வந்து, சூரியன் அஸ்தமித்தபடியினால், அங்கே ராத்தங்கி அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்துத் தன் தலையின் கீழ் வைத்து, அங்கே நித்திரை செய்யும்படி படுத்துக்கொள்கிறார் (ஆதி 28:11).

ஆபிரகாம் கல்தேயருடைய பட்டணமாகிய ஊரை விட்டுப் புறப்பட்டு தேராகு மரிக்கும் வரையிலும் ஆரானில் தங்கியிருந்தார். (ஆதி 11:26-30). நாகோர் ஆரானில் இருந்து விட்டார். இதன் காரணமாகத்தான் ஆதி 24, ஆதி 28 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் பிரயாணங்கள் நடைபெறுகிறது.

யாக்கோபு ஒரு இடத்திலே வந்து சேருகிறார். "ஒரு இடம்" என்பது ஆபிரகாம் இரண்டாம் பலிபீடம் கட்டிய இடமாகும். பெத்தேல் என்பது இதன் பெயர். இது பெயர்செபாவிலிருந்து 48 மைல் தூரத்தில் உள்ளது. (ஆதி 12:8, ஆதி 28:19).

யாக்கோபு கற்களில் ஒன்றை எடுத்து, தன் தலையின்கீழ் வைத்து நித்திரை செய்கிறார். ஒரே ஒரு கல்லை மட்டுமே யாக்கோபு எடுத்து பயன்படுத்துகிறார். தலையின்கீழ் இந்தக் கல்லை வைத்து நித்திரை செய்ய வேண்டுமானால் அந்தக் கல்லை ஒரு தலையணைபோல துணிகளால் சுற்றியிருக்க வேண்டும். ஆதி 28:18 ஆவது வசனத்தில் கல் என்பது பன்மையில் கூறப்பட்டிருக்கிறது. இதுபோன்ற வெளியிடங்களில் படுத்து நித்திரை செய்வது மந்தைமேய்ப்பர்களுக்கு புதிய அனுபவமோ, கடினமான அனுபவமோ அல்ல. (லூக்கா 2:8).

யாக்கோபுக்கு அங்கே படுப்பதற்கு வசதியான படுக்கை எதுவும் கிடைக்கவில்லை. அவருக்கு மென்மையான தலையணையும் இல்லை. அவ்விடத்திலுள்ள கற்களில் ஒன்றே அவருக்கு தலையணையாயிருக்கிறது. அவர் வானத்தைப் பார்த்தபடி படுத்துக்கொண்டிருக்கிறார். வானமே அவருக்கு கூரையாயிருக்கிறது.

யாக்கோபுக்கு பிரயாணக்களைப்பினால் உடனே நித்திரை வந்துவிடுகிறது. யாக்கோபு நித்திரையாயிருக்கும்போது ஒரு சொப்பனம் காண்கிறார்; இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருக்கிறது. அதின் நுனி வானத்தை எட்டியிருக்கிறது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருக்கிறார்கள். அதற்கு மேலாக கர்த்தர் நிற்கிறார் (ஆதி 28:12).

யாக்கோபுக்கு வசதியான படுக்கை இல்லாவிட்டாலும், சந்தோஷமான சொப்பனம் உண்டாயிற்று. யாக்கோபு தரிசனம் கண்டதுபோல, நாமும் தரிசனம் கண்டால், நம்முடைய நித்திரையும் இன்பமாயிருக்கும். நம்முடைய படுக்கை மென்மையாயிராமல், கடினமாயிருந்தாலும், நம்முடைய நித்திரை இன்பமாயிருக்கும்.

யாக்கோபு நித்திரையாயிருக்கும்போது, அவர் கண்ட சொப்பனத்திலே, கர்த்தர் யாக்கோபோடு கூட பேசுகிறார். யாக்கோபு சொப்பனத்திலே ஒரு ஏணியைக் காண்கிறார். கர்த்தர் அந்த ஏணியின் மேலாக நின்று யாக்கோபோடுகூட பேசுகிறார்.

கர்த்தர் யாக்கோபை நோக்கி, "நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்" என்றும்,

"உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும், பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்" என்றும்,

"நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப் பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை" (ஆதி 28:13-15) என்றும் சொல்லுகிறார்.

யாக்கோபு தன்னுடைய சொப்பனத்திலே சர்வவல்லமையுள்ள தேவனை தரிசிக்கிறார். அவருடைய வார்த்தைகளைக் கேட்கிறார். யாக்கோபு இதுவரையிலும் இதுபோல நிம்மதியாக நித்திரை செய்திருக்கமாட்டார். அவருக்கு இதுபோன்ற இன்பமான தூக்கம் இதுவரையிலும் வந்திருக்காது. நம்முடைய நித்திரையில், கர்த்தர் நம்மோடு பேசுவது, நமக்கு மிகுந்த ஆசீர்வாதம்.

யாக்கோபு கண்ட சொப்பனம் அவருக்கு உற்சாகமாயிருக்கிறது. அவர் தன் சொப்பனத்திலே ஒரு ஏணியைக் காண்கிறார். அந்த ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருக்கிறது. அதன் நுனியோ வானத்தை எட்டியிருக்கிறது. அந்த ஏணியில் தேவதூதர்கள் ஏறுகிறவர்களும், இறங்குகிறவர்களுமாயிருக்கிறார்கள். அந்த ஏணிக்கு மேலாக கர்த்தர் நின்றுகொண்டிருக்கிறார்.

வேதபண்டிதர்கள், யாக்கோபு கண்ட சொப்பனத்திற்கு பல்வேறுவிதமாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள். யாக்கோபு கண்ட சொப்பனம், தேவனுடைய தெய்வீக பராமரிப்புக்கு அடையாளம். வானத்திற்கும் பூமிக்கும் தொடர்ந்து சம்பாஷணை நடைபெற்றுக்கொண்டிருக்கும். தேவனுடைய கிரியைகள் ஒரே வேளையில் மொத்தமாய் நடைபெறுவதில்லை. அவை ஒவ்வொன்றாக, படிப்படியாக நடைபெறும். தேவதூதர்கள் ஏணிப்படியில், ஒவ்வொரு படியாக, ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாயிருக்கிறார்கள்.

ஏணிக்கு மேலாக கர்த்தர் நின்றுகொண்டிருக்கிறார். தேவனுடைய தெய்வீக ஞானமே எல்லாவற்றிக்கும் மேலாக உயரத்திலிருக்கிறது. கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, எல்லா காரியங்களையும் இயக்குகிறார். அவர் எல்லாவற்றையும் கண்ணோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

யாக்கோபு கண்ட தரிசனம் அவருக்கு மிகுந்த ஆறுதலைக் கொடுக்கிறது. அவருடைய மனது இப்போது வேதனையிலும் வியாகுலத்திலும் இருக்கிறது. அவர் பெற்றோரை விட்டுப் பிரிந்து வந்திருக்கிறார். யாக்கோபின் சகோதரன் ஏசா, அவரைப் பகைத்து, அவரைக் கொன்றுபோட திட்டமிடுகிறான். யாக்கோபு இப்போது சீரியா தேசத்திற்கு தனியாகப் போகிறார். அவருக்கு அங்கே போக வழியும் தெரியாது. அவருக்கு பாதுகாப்புமில்லை.

யாக்கோபை வழிநடத்துவதற்கு ஒரு நல்ல வழிகாட்டி தேவைப்படுகிறார். யாக்கோபுக்கு பாதுகாப்பு தேவைப்படுகிறது. யாக்கோபு போகும்போதும் வரும்போதும் அவரோடுகூட யாராவது ஒருவர் உடனிருந்து, அவரைக் காத்துக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் யாக்கோபை நோக்கி, "நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்த தேசத்திற்கு உன்னை திரும்பி வரப்பண்ணுவேன்" என்றும், "நான் உனக்கு சொன்னதை செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை" என்றும் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தை யாக்கோபுக்கு ஆறுதலாயிருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, பிதாவாகிய தேவனிடத்தில் நமக்காக பரிந்து பேசுகிறார். கிறிஸ்துவானவர் நமக்கும் தேவனுக்கும் நடுவிலிருந்து, மத்தியஸ்த ஊழியம் பண்ணுகிறார். யாக்கோபு சொப்பனத்தில் கண்ட ஏணியானது, இயேசுகிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியத்திற்கு அடையாளமாயிருக்கிறது என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கிறிஸ்துவானவரே ஏணியாகயிருக்கிறார். அந்த ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய மனுஷசுபாவத்தில், இந்தப் பூமியிலே வாசம்பண்ணுகிறார். அந்த ஏணியின் நுனி வானத்தை எட்டியிருக்கிறது. கிறிஸ்துவானவருடைய தெய்வீக சுபாவம் பரலோகத்திலிருக்கிறது.

ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருப்பது இயேசுகிறிஸ்துவின் தாழ்மைக்கும், அந்த ஏணியின் நுனி வானத்தை எட்டியிருப்பது, கிறிஸ்துவானவர் உயர்த்தப்படுவதற்கும் அடையாளமாயிருக்கிறது. தேவன் நம்மோடு வாசம்பண்ணுகிறார் என்றால், நாம் தேவனோடு ஐக்கியமாயிருக்கிறோம் என்றால், இது இயேசுகிறிஸ்துவின் மூலமாக மாத்திரமே நமக்கு சாத்தியமாகிறது. பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுகிறிஸ்துவைத் தவிர வேறு வழி எதுவும் நமக்கு நியமிக்கப்படவில்லை.

யாக்கோபு கண்ட சொப்பனத்திலே, அந்த ஏணியானது பூமியிலே வைக்கப்பட்டிருக்கிறது. அதன் நுனி வானத்தை எட்டியிருக்கிறது. அந்த ஏணிக்கு மேலாக கர்த்தர் நின்றுகொண்டிருக்கிறார். தேவதூதர் அந்த ஏணியிலே ஏறுகிறவர்களும், இறங்குகிறவர்களுமாயிருக்கிறார்கள். நாம் பரலோகத்திலே பிரவேசிக்கவேண்டுமென்றால், கிறிஸ்துவாகிய ஏணியின் மூலமாக ஏறிப்போகவேண்டும். மற்ற வழியாக ஏறுகிறவர்கள் கள்ளரும், கொள்ளைக்காரருமாயிருப்பார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் யாக்கோபு கண்ட தரிசனத்தைப்பற்றி சொல்லியிருக்கிறார்.

"பின்னும், அவர் அவனை நோக்கி: வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (யோவா 1:51).

யாக்கோபு தன்னுடைய நித்திரையில், சொப்பனம் கண்டது மாத்திரமல்ல, அவர் கர்த்தருடைய ஆறுதலான வார்த்தைகளையும் கேட்கிறார். கர்த்தர் யாக்கோபின் தகப்பனாகிய ஈசாக்குக்கு சொன்ன வாக்குத்தத்த வார்த்தைகளை, அவர் இங்கு யாக்கோபுக்கும் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தை யாக்கோபுக்கு உறுதிபண்ணுகிறார்.

கர்த்தர் யாக்கோபை நோக்கி, "நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும், பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி 27:13,14) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் எப்படியிருந்தாரோ, அப்படியே அவர் யாக்கோபுக்கும் இருப்பார். இதுவே கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின் பொதுவான கருத்து. யாக்கோபு கானான் தேசத்தில் குடியிருப்பார். யாக்கோபின் சந்ததி திரளாய்ப் பெருகும். யாக்கோபின் சந்ததியில் மேசியா வருவார். மேசியாவின் மூலமாக பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.

யாக்கோபுக்கு அவருடைய சகோதரர் ஏசா மூலமாக ஆபத்து இருக்கிறது. கர்த்தரோ யாக்கோபை பாதுகாப்பதாக வாக்குப்பண்ணுகிறார். யாக்கோபு சீரியா தேசத்திற்கு தனியாகப் போகிறார். அந்தப் பாதையில் அவர் இதுவரையிலும் போனதில்லை. யாக்கோபுக்கு சீரியா தேசத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. கர்த்தர் யாக்கோபோடு கூடயிருப்பதாக வாக்குப்பண்ணுகிறார்.

யாக்கோபு பிரயாணம்பண்ணும்போது அவருக்கு என்னென்ன ஆபத்துக்கள் வரும் என்பதும் அவருக்கு தெரியாது. கர்த்தரோ யாக்கோபோடு கூடயிருந்து, அவர் போகிற இடத்திலெல்லாம் அவரைக் காத்துக்கொள்வதாக வாக்குப்பண்ணுகிறார்.

யாக்கோபு பெயர்செபாவைவிட்டு ஆரானுக்குப்போகிறார். அவர் நாடு கடத்தப்பட்டவர்போல புறப்பட்டுப்போகிறார். யாக்கோபின் தகப்பனாராகிய ஈசாக்கு, அவருக்கு கட்டளை கொடுத்து அனுப்பியிருக்கிறார். யாக்கோபு மறுபடியும் பெயர்செபாவுக்கு திரும்பி வருவாரா என்பது அவருக்கே தெரியாது. கர்த்தரோ யாக்கோபை இந்த தேசத்திற்கு திரும்பி வரப்பண்ணுவதாக வாக்குப்பண்ணுகிறார்.

யாக்கோபு இப்போது எல்லாராலும் கைவிடப்பட்டவர் போல இருக்கிறார். அவருடைய உற்றார் உறவினரும், அவருடைய சிநேகிதரும் அவரைக் கைவிட்டுவிட்டார்கள். ஆனால் கர்த்தரோ யாக்கோபுக்கு சொன்னதை செய்யுமளவும் அவரை கைவிடுவதில்லை என்று வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் யாரை நேசிக்கிறாரோ, அவரை ஒருபோதும் கைவிடமாட்டார்.

பெத்தேல்
ஆதி 28:16-19

ஆதி 28:16. யாக்கோபு நித்திரை தெளிந்து விழித்தபோது: மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்; இதை நான் அறியாதிருந்தேன் என்றான்.

ஆதி 28:17. அவன் பயந்து, இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது! இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல, இது வானத்தின் வாசல் என்றான்.

ஆதி 28:18. அதிகாலையிலே யாக்கோபு எழுந்து, தன் தலையின் கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து அதைத் தூணாக நிறுத்தி, அதின் மேல் எண்ணெய் வார்த்து,

ஆதி 28:19. அந்த ஸ்தலத்திற்குப் பெத்தேல் என்று பேரிட்டான்; அதற்கு முன்னே அவ்வூருக்கு லூஸ் என்னும் பேர்இருந்தது.

யாக்கோபு சந்தோஷமாக நித்திரை பண்ணுகிறார். கர்த்தருடைய தரிசனமும், வார்த்தையும் அவருக்கு உற்சாகத்தையும் தெம்மையும் தருகிறது. யாக்கோபு கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அதை இன்னும் அதிகமாய்த் தியானம்பண்ணுகிறார்.

சொப்பனத்திலே தனக்கு கிடைத்த தரிசனத்தை நினைத்து யாக்கோபு மிகவும் ஆச்சரியப்படுகிறார். அவர் நித்திரை தெளிந்து விழித்தபோது, "மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்திலிருக்கிறார், இதை நான் அறியாதிருந்தேன்" (ஆதி 28:16) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னத்தையும், அவருடைய தெய்வீக வெளிப்பாட்டையும் யாக்கோபால் மற்றவர்களுக்கு சொல்ல முடியவில்லை. ஆனாலும் கர்த்தருடைய வெளிப்பாட்டை யாக்கோபால் மறுக்க முடியவில்லை.

கர்த்தர் தமக்கு சித்தமான இடத்திலே, தமக்கு சித்தமான ஜனங்களுக்கு தம்முடைய தெய்வீக தரிசனத்தை வெளிப்படுத்துகிறார். நாம் எங்கே இருக்கிறோம் என்பது முக்கியமல்ல. ஒரு வேளை நாம் நகரத்திலோ அல்லது வனாந்தரத்திலோ அல்லது வீட்டிலோ அல்லது வயல்வெளியிலோ இருக்கலாம். ஒருவேளை நாம் கடையிலிருக்கலாம் அல்லது தெருவில் இருக்கலாம். நாம் எங்கே இருந்தாலும் கர்த்தருடைய வெளிப்பாடு எந்த இடத்திலும் கிடைப்பதற்கு தடை எதுவுமில்லை.

ஆகார் கர்த்தருடைய தூதனானவரை வனாந்தரத்திலே கண்டாள். "அப்பொழுது அவள்: என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா என்று சொல்லி, தன்னோடே பேசின கர்த்தருக்கு நீர் என்னைக் காண்கிற தேவன் என்று பேரிட்டாள்" (ஆதி 16:13).

யாக்கோபு நித்திரை தெளிந்த எழுந்தபோது அவருக்கு பயமுண்டாயிற்று. "இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது! இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல, இது வானத்தின் வாசல்" (ஆதி 28:17) என்று யாக்கோபு சொல்லுகிறார். யாக்கோபு இப்போது பார்த்தது தேவனுடைய வீடாகவும், வானத்தின் வாசலாகவும் இருக்கிறது.

யாக்கோபுக்கு இந்த ஸ்தலம் மிகவும் முக்கியமான ஸ்தலமாகயிருக்கிறது. மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்திலிருக்கிறார் என்பதை யாக்கோபு அங்கீகரிக்கிறார். அவர் இந்த ஸ்தலத்தை தேவனுடைய வீடு என்றும், வானத்தின் வாசல் என்றும் சொல்லுகிறார். இந்த ஸ்தலத்தை மறவாமல் நினைவில் வைத்திருக்கவேண்டும் என்றும், அதற்காக இங்கே ஒரு ஞாபகசின்னத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் யாக்கோபு விரும்புகிறார்.

யாக்கோபுக்கு இந்த ஸ்தலம் மிகவும் விசேஷமாகயிருக்கிறது. அவர் இந்த ஸ்தலத்தை மறவாமல் எப்போதும் நினைவில் வைத்திருப்பதற்காக இரண்டு காரியங்களை செய்கிறார். அவையாவன: 1. யாக்கோபு ஒரு தூணை நிறுத்துகிறார். 2. அவர் அந்த ஸ்தலத்திற்கு பெத்தேல் என்று பேரிடுகிறார்.

யாக்கோபு பெயர்செபாவிலிருந்து சீரியா தேசத்திற்கு போய்க்கொண்டிருக்கிறார். அவர் ஆரானுக்குப்போக புறப்பட்டபோது, இந்த ஸ்தலத்திலே, அவருக்கு தரிசனம் கிடைத்தது. கர்த்தர் இந்த ஸ்தலத்தில் மெய்யாகவே இருக்கிறார் என்பதை யாக்கோபு அறிந்திருக்கிறார். யாக்கோபு அதிகாலையில் எழுந்து, தன் தலையின் கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து அதைத் தூணாக நிறுத்தி, அதின் மேல் எண்ணெய் வார்க்கிறார் (ஆதி 28:18).

யாக்கோபுக்கு அங்கே பலிபீடம் கட்ட நேரமில்லை. அவர் தன்னுடைய பிரயாணத்தின் நடுவிலே இருக்கிறார். கர்த்தர் ஆபிரகாமுக்கு தரிசனமானபோது, ஆபிரகாம் அந்த ஸ்தலத்திலே ஒரு பலிபீடத்தை கட்டினார்.

"கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன் என்றார். அப்பொழுது அவன் தனக்குத் தரிசனமான கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினான்" (ஆதி 12:7).

யாக்கோபு ஆபிரகாமைப்போல பலிபீடம் கட்டாவிட்டாலும், அவர் ஒரு கல்லைத் தூணாக நிறுத்தி, அதற்கு எண்ணெய் வார்க்கிறார். தனக்கு ஏற்ற சூழ்நிலை உண்டாகும்போது, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டவேண்டும் என்னும் வாஞ்சை யாக்கோபுக்கு இருக்கிறது.

யாக்கோபு இந்த ஸ்தலத்தை மறக்கவில்லை. அவர் பிற்காலத்தில் இந்த ஸ்தலத்திலே ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார்.

"அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, தன் சகோதரனுடைய முகத்துக்குத் தப்பி ஓடினபோது, அங்கே தனக்கு தேவன் தரிசனமானபடியால், அந்த ஸ்தலத்திற்கு ஏல்பெத்தேல் என்று பேரிட்டான்" (ஆதி 35:7).

யாக்கோபு அந்த ஸ்தலத்திற்குப் பெத்தேல் என்று பேரிடுகிறார்; அதற்கு முன்னே அவ்வூருக்கு லூஸ் என்னும் பேர்இருந்தது (ஆதி 28:19). லூஸ் என்னும் பெயருக்கு வாதுமை மரம் என்று பொருள். பெத்தேல் என்னும் பெயருக்கு தேவனுடைய வீடு என்று பொருள். யாக்கோபு அந்த இடத்திற்கு தேவனுடைய வீடு என்று பொருள்படும் , பெத்தேல் என்னும் பெயரை இடுகிறார்.

லூஸ் என்னும் பெயருக்கு வாதுமை மரம் என்று பொருள். இந்த ஸ்தலம் இனிமேல் வாதுமைமரம் என்று அழைக்கப்படுவதில்லை. கர்த்தர் இந்த ஸ்தலத்திலிருக்கிறார். இந்த ஸ்தலம் தேவனுடைய வீடாகவும், வானத்தின் வாசலாகவும் இருக்கிறது. ஆகையினால் யாக்கோபு இந்த ஸ்தலத்திற்கு பெத்தேல் என்று பேரிடுகிறார். அவர் இந்த ஸ்தலத்தை மறவாமல் நினைவில் வைத்திருக்கவேண்டும் என்பதற்காக, இதற்கு புதிய பெயரைக் கொடுக்கிறார்.

யாக்கோபு தேவனை இங்கு காண்கிறார். அந்த ஸ்தலத்திற்கு பெத்தேல் என்று பெயரிடுகிறார். (ஆதி 28:19) இது வானத்தின் வாசல். பரலோகத்திற்குச் செல்லும் ஏணி இங்கிருந்துதான் போகிறது. இதன் வழியாகப் பரலோகத்திற்குச் செல்ல முடியும்.

யாக்கோபு தன் தலைக்கு வைத்திருந்த கல்லை எடுத்து, அதை ஒரு தூணாக நிறுத்தினார். அதன்மேல் எண்ணெய் வார்த்து, தேவனுக்கு ஒரு பலிபீடமாக அதைப் பிரதிஷ்டை பண்ணினார் (ஆதி 28:18). முப்பது வருஷங்களுக்குப் பின்பு, யாக்கோபு இதே இடத்தில் தன்னுடைய பொருத்தனையைத் திரும்பவும் பண்ணுகிறார் (ஆதி 35:14).

பெரிய காரியங்களைக் கொண்டாடும்போது இவ்வாறு நினைவுத்தூண் எழுப்புவது வழக்கம். சீனாய் மலையில் மோசே இதுபோன்று செய்திருக்கிறார். (யாத் 24:4). யோசுவா யோர்தான் நதியிலும் (யோசு 4), சீகேமிலும் (யோசு 24:26). இரண்டு நினைவுத்தூண்களை எழுப்பினார். கற்களை நினைவுத்தூண்களாகப் பயன்படுத்தலாம். ஆனால் அவற்றை விக்கிரகங்களாக வழிபடக்கூடாது (லேவி 26:1; உபா 16:22).

யாக்கோபின் பொருத்தனை ஆதி 28:20-22

ஆதி 28:20. அப்பொழுது யாக்கோபு: தேவன் என்னோடே இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி, உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து,

ஆதி 28:21. என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பிவரப்பண்ணுவாரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார்;

ஆதி 28:22. நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத்தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனை பண்ணிக்கொண்டான்.

யாக்கோபு இந்த ஸ்தலத்திலே கர்த்தரோடு பொருத்தனை பண்ணிக்கொள்கிறார். கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தங்களை நமக்கு உறுதிபண்ணும்போது, நாமும் நம்முடைய மனதிலே கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை மறுபடியுமாய் நினைவுகூரவேண்டும்.

கர்த்தர் யாக்கோபை நோக்கி, "நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்த தேசத்திற்கு உன்னை திரும்பி வரப்பண்ணுவேன்" (ஆதி 28:15) என்று வாக்குப்பண்ணினார். யாக்கோபு கர்த்தருடைய வாக்குத்தத்த வார்த்தைகளை விசுவாசிக்கிறார்.

கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை யாக்கோபு தன்னுடைய இருதயத்திலே பற்றிக்கொண்டு, "தேவன் என்னோடே இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றுவாரானால்" (ஆதி 28:20) என்று விசுவாசத்தோடே சொல்லுகிறார். யாக்கோபு கர்த்தருடைய வார்த்தையை நம்பி, அதை இறுகப்பற்றிக்கொள்கிறார்.

யாக்கோபு கர்த்தரிடத்தில் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை அதிகமாய் எதிர்பார்க்கவில்லை. தனக்கு உண்ண ஆகாரமும் உடுக்க வஸ்திரமும் கர்த்தர் கொடுத்தால், அதுவே போதுமானது என்று யாக்கோபு நினைக்கிறார். யாக்கோபினிடத்தில் பேராசையில்லை. அவரிடத்தில் போதுமென்கிற மனமும், திருப்தியும் இருக்கிறது.

யாக்கோபு கர்த்தரிடத்தில் பக்தியாயிருக்கிறார். கர்த்தர் தன்னை காப்பற்றவேண்டும் என்றும், அவர் தன்னை தன் தகப்பன் வீட்டிற்கு சமாதானத்தோடே திரும்பி வரப்பண்ணவேண்டும் என்றும் யாக்கோபு விரும்புகிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளில் உண்மையுள்ளவர் என்றும், அவர் வாக்குமாறாதவர் என்றும் யாக்கோபு விசுவாசிக்கிறார்.

கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தின் பிரகாரம், தன்னுடைய விண்ணப்பங்களுக்கு செவிகொடுத்து அதை நிறைவேற்றுவார் என்னும் நம்பிக்கை யாக்கோபின் இருதயத்தில் காணப்படுகிறது. யாக்கோபு கர்த்தரிடத்தில் பொருத்தனை பண்ணுகிறார். கர்த்தர் தன்னுடைய விண்ணப்பங்களை நிறைவேற்றுவாரானால், "கர்த்தர் எனக்கு தேவனாயிருப்பார்" (ஆதி 28:27) என்று யாக்கோபு விசுவாசத்தோடு சொல்லுகிறார்.

யாக்கோபு கர்த்தர்மீது பயபக்தியாயிருக்கிறார். தன்னுடைய பக்தியை வெளிப்படுத்தும் வண்ணமாக, "நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுடைய வீடாகும்" (ஆதி 28:22) என்று யாக்கோபு விசுவாசத்தோடு சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய கிருபையினால் யாக்கோபை இந்த ஸ்தலத்திற்கு சமாதானத்தோடே திரும்பி வரப்பண்ணும்போது, யாக்கோபு இந்த ஸ்தலத்திலே கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டுவார். இப்போது யாக்கோபு இந்த ஸ்தலத்தில், தன் தலையின்கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தியிருக்கிறார்.

பலிபீடத்தில் பலிகள் செலுத்தப்படவேண்டும். பலிசெலுத்தாத பலிபீடம் தேவனுடைய வீடாகயிருக்காது. யாக்கோபு இந்தப் பலிபீடத்தில் கர்த்தருக்கு பலிசெலுத்துவதாகவும் வாக்குப்பண்ணுகிறார். தேவன் தனக்கு தரும் எல்லாவற்றிலும் அவருக்கு தசமபாகம் செலுத்துவதாக, யாக்கோபு பொருத்தனை பண்ணிக்கொள்கிறார் (ஆதி 28:22).

யாக்கோபு கர்த்தரோடு பொருத்தனை பண்ணும்போது, "தேவன் என்னோடே இருந்தால்" என்று சொல்லுகிறார். யாக்கோபிற்குச் சந்தேகம் இருக்கிறது. ஆனாலும் தேவன் ஆதி 28:13-15 ஆகிய வசனங்களில் வாக்குத்தத்தம் பண்ணியபடி யாக்கோபோடேகூட இருக்கிறார்.

மோசேயின் பிரமாணத்திற்கு முன்பாகவே, யாக்கோபு பொருத்தனை பண்ணுகிறார். தேவனும் பொருத்தனையை நினைவுகூருகிறார். (ஆதி 31:13). நாம் பொருத்தனைகளைச் செய்ய வேண்டும். (லேவி 23:37-38; எண் 29:39) அவற்றை மனப்பூர்வமாகச் செய்ய வேண்டும் (எண் 30:2; பிர 5:4-6) பொருத்தனையை மீறக்கூடாது. (லேவி 5:4-13; லேவி 22: 18-25; எண் 15:2-16; எண் 30:2-16; உபா 23:18-22). நாம் பொருத்தனையின் கிரயத்தைக் கணக்குப் பார்க்கவேண்டும் (லேவி 27:1-25).

காணிக்கையாகச் செலுத்துவதற்குச் சில காரியங்கள் தடைபண்ணப்பட்டிருக்கிறது. (லேவி 7:16-18; உபா12:6-26; நியா 18:14). (உபா 23:18-23, யோபு 22:27; சங் 22:25; சங் 50:14; சங் 56:12; சங் 61:5; சங் 65:1; சங் 66:13; சங் 76:11; சங் 116:14-19; நீதி 20:25; நாகூம் 1:15).

நாம் அவசரப்பட்டு பொருத்தனை பண்ணக்கூடாது. பரிசுத்த வேதாகமத்தில் அவசரப்பட்டு பொருத்தனை பண்ணின சில சம்பவங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. யெப்தாவின் பொருத்தனை (நியா 11:29-40)
2. இஸ்ரவேலுடைய பொருத்தனை (நியா 21:5-6)
3. நாற்பது மனுஷருடைய பொருத்தனை (அப் 23:12)

பரிசுத்த வேதாகமத்தில் பொதுவான பொருத்தனைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு:

1. யாக்கோபின் பொருத்தனை - தசமபாகம் செலுத்துதல் (ஆதி 28:20-22)
2. அன்னாளின் பொருத்தனை (1சாமு 1:11,27-28)
3. எல்க்கானாவின் வருஷாந்தரப் பொருத்தனை (1சாமு 1:21)
4. யோபு தன் கண்களோடே பண்ணிய பொருத்தனை (யோபு 31:1)
5. தாவீதின் பொருத்தனை (சங் 132:2)
6. யோனாவின் பொருத்தனை (யோனா 2:9)
7. பவுலின் பொருத்தனை (அப் 18:18)

29 அதிகாரம்

கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பு யாக்கோபுக்கு கிடைக்கிறது. யாக்கோபு பிரயாணம்பண்ணி, லாபானுடைய ஊருக்கு வந்து சேருகிறார் (ஆதி 29:1-14). யாக்கோபுக்கும் லாபானுடைய குமாரத்திகளுக்கும் திருமணம் நடைபெறுகிறது (ஆதி 29:15-30). யாக்கோபுக்கு நான்கு குமாரர்கள் பிறக்கிறார்கள் (ஆதி 29:31-35).

ஆரானில் யாக்கோபு ஆதி 29:1-8

ஆதி 29:1. யாக்கோபு பிரயாணம் பண்ணி, கீழ்த்திசையாரின் தேசத்தில் போய்ச் சேர்ந்தான்.

ஆதி 29:2. அங்கே வயல்வெளியிலே ஒரு கிணற்றையும், அதின் அருகே மடக்கியிருக்கிற மூன்று ஆட்டுமந்தைகளையும் கண்டான்; அந்தக் கிணற்றிலே மந்தைகளுக்குத் தண்ணீர் காட்டுவார்கள்; அந்தக் கிணற்றின் வாய் ஒரு பெரிய கல்லினால் அடைக்கப்பட்டிருந்தது.

ஆதி 29:3. அவ்விடத்தில் மந்தைகள் எல்லாம் சேர்ந்தபின் கிணற்றின் வாயிலிருக்கும் கல்லை மேய்ப்பர் புரட்டி, ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி, மறுபடியும் கல்லை முன்னிருந்தபடி கிணற்றின் வாயில் வைப்பார்கள்.

ஆதி 29:4. யாக்கோபு அவர்களைப் பார்த்து: சகோதரரே, நீங்கள் எவ்விடத்தார் என்றான்; அவர்கள், நாங்கள் ஆரான் ஊரார் என்றார்கள்.

ஆதி 29:5. அப்பொழுது அவன்: நாகோரின் குமாரனாகிய லாபானை அறிவீர்களா என்று கேட்டான்; அறிவோம் என்றார்கள்.

ஆதி 29:6. அவன் சுகமாயிருக்கிறானா என்று விசாரித்தான்; அதற்கு அவர்கள்: சுகமாயிருக்கிறான்; அவன் குமாரத்தியாகிய ராகேல், அதோ, ஆடுகளை ஓட்டிக் கொண்டு வருகிறாள் என்று சொன்னார்கள்.

ஆதி 29:7. அப்பொழுது அவன்: இன்னும் வெகுபொழுதிருக்கிறதே; இது மந்தைகளைச் சேர்க்கிற வேளை அல்லவே, ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி, இன்னும் மேயவிடலாம் என்றான்.

ஆதி 29:8. அதற்கு அவர்கள்: எல்லா மந்தைகளும் சேருமுன்னே அப்படிச் செய்யக் கூடாது; சேர்ந்தபின் கிணற்றின் வாயிலுள்ள கல்லைப் புரட்டுவார்கள்; அப்பொழுது ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுவோம் என்றார்கள்.

யாக்கோபு பெத்தேலிலே கர்த்தரை தரிசிக்கிறார். கர்த்தர் யாக்கோபுக்கு ஆறுதலான வார்த்தைகளையும், ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களையும் சொல்லுகிறார். யாக்கோபு கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு, சந்தோஷமாய்ப் பிரயாணம்பண்ணுகிறார். அவர் கீழ்த்திசையாரின் தேசத்தில் போய் சேருகிறார்.

லாபான் ஆரானிலிருக்கிறார். லாபானுடைய ஊரார் கீழ்த்திசையார் என்று அழைக்கப்படுகிறார். இந்த அதிகாரத்தின் முதலாவது வசனத்தில், "யாக்கோபு பிரயாணம்பண்ணி" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியத்திற்கு "யாக்கோபு தன்னுடைய கால்களை எடுத்து வைத்து" என்று பொருள்.

யாக்கோபின் பிரயாணம் சந்தோஷமாக முடிவுபெறுகிறது. யாக்கோபு எங்கே வரவேண்டுமோ, அங்கே கர்த்தர் அவரை வழிநடத்திக் கொண்டு வருகிறார். யாக்கோபுக்கு பிரயாணத்தில் ஒரு ஆபத்தும் ஏற்படவில்லை. யாக்கோபு போகிற இடத்திலெல்லாம் கர்த்தர் அவரைக் காத்து வழிநடத்துகிறார். கர்த்தர் யாக்கோபை கைவிடவில்லை.

யாக்கோபு ஆரானிலே வந்து சேருகிறார். அங்கே யாக்கோபு வயல்வெளியிலே ஒரு கிணற்றையும், அதின் அருகே மடக்கியிருக்கிற மூன்று ஆட்டுமந்தைகளையும் காண்கிறார்; அந்தக் கிணற்றிலே மந்தைகளுக்குத் தண்ணீர் காட்டுவார்கள்; அந்தக் கிணற்றின் வாய் ஒரு பெரிய கல்லினால் அடைக்கப்பட்டிருக்கிறது (ஆதி 29:2).

பூமியின் மேலுள்ள தூசிகள், காற்றினால் அடித்து வரப்படும் மணல்கள் ஆகியவை கிணற்றினுள் போகாதவாறு அதை ஒரு கல்லினால் அடைப்பது வழக்கம். சில கற்கள் மிகவும் பெரியதாகவும், கனமுள்ளதாகவும் இருக்கும். அதைப் புரட்டுவதற்குப் பலர் தேவைப்படலாம்.

மேய்ப்பர்கள் எல்லா மந்தைகளும் வரும்வரைக்கும், கல்லைப் புரட்டாமல் காத்திருப்பார்கள். பொதுவாக கிணற்றின் கல்லை காலையிலும், மாலையிலும் புரட்டித் திறப்பது வழக்கம். இவ்வேளையில் ஊரிலுள்ள ஸ்திரீகளும் தண்ணீர் எடுத்துச் செல்வதற்கு வருவார்கள். கிணறுகளைச் சுற்றியே கிராமங்களின் குடியிருப்பு இருக்கும். பூர்வகாலத்தில் தண்ணீர் பஞ்சம் இருந்த படியினால் தண்ணீருக்காக வாக்குவாதங்களும், சண்டைகளும் நடைபெறுவதுண்டு. ஈசாக்கும், பெலிஸ்தரின் ராஜாவும், ஆபிரகாம் தோண்டிய துரவுக்காக பல மாதங்களாகச் சண்டை போட்டுக் கொண்டார்கள் (ஆதி 26:15-33).

அவ்விடத்தில் மந்தைகள் எல்லாம் சேர்ந்தபின் கிணற்றின் வாயிலிருக்கும் கல்லை மேய்ப்பர் புரட்டி, ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி, மறுபடியும் கல்லை முன்னிருந்தபடி கிணற்றின் வாயில் வைப்பார்கள் (ஆதி 29:3).

யாக்கோபு இப்போது ஆரானுக்கு வந்திருக்கிறார். ஆனால் தான் எங்கே வந்திருக்கிறோம் என்பது யாக்கோபுக்கு தெரியவில்லை. யாக்கோபு மூன்று ஆட்டுமந்தைகளையும், அவற்றை மேய்க்கிற மேய்ப்பர்களையும் அந்த ஊரிலே பார்க்கிறார். யாக்கோபு அவர்களைப் பார்த்து: "சகோதரரே, நீங்கள் எவ்விடத்தார்" என்று கேட்கிறார்; அவர்கள், "நாங்கள் ஆரான் ஊரார்" (ஆதி 29:4) என்று யாக்கோபுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள்.

லாபான் ஆரான் ஊரைச் சேர்ந்தவர் என்பது யாக்கோபுக்கு தெரியும். மந்தைகளை மேய்க்கிறவர்கள் லாபானை அறிந்திருக்கிறார்களா என்பதை தெரிந்துகொள்ள யாக்கோபு ஆவலாயிருக்கிறார். யாக்கோபு அந்த மேய்ப்பர்களை நோக்கி, "நாகோரின் குமாரனாகிய லாபானை அறிவீர்களா" என்று கேட்கிறார்; அவர்களும், "அறிவோம்" (ஆதி 29:5) என்று சொல்லுகிறார்கள்.

லாபான் நகோரின் குமாரனல்ல. இவன் நாகோரின் பேரன். லாபான் பெத்துவேலின் குமாரன். பெத்துவேல் நாகோரின் குமாரன். (ஆதி 22:20-24; ஆதி 24:15,24,29,47,50; ஆதி 28:2).

யாக்கோபு அவர்களிடத்தில் லாபானின் சுகசெய்தியை விசாரிக்கிறார். "அவன் சுகமாயிருக்கிறானா" என்று யாக்கோபு மேய்ப்பர்களிடத்தில் கேட்டபோது, அதற்கு அவர்கள், "சுகமாயிருக்கிறான்" என்று சொல்லுகிறார்கள். அப்போது அங்கே லாபானின் குமாரத்தியாகிய ராகேல் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வருகிறாள். மந்தைகளின் மேய்ப்பர்கள், ராகேலைப்பற்றி யாக்கோபுக்கு சொல்லுகிறார்கள் (ஆதி 29:6).

ராகேல் யாக்கோபுக்கு மனைவியாகப்போகிறவள். கர்த்தருடைய தெய்வீக வழிநடத்துதலினால், யாக்கோபு அந்தக் கிணற்றண்டையில் வந்திருக்கிறார். அதே கிணற்றண்டையிலே ராகேலும் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வருகிறாள்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், சிறிய காரியமாகயிருந்தாலும், பெரிய காரியமாகயிருந்தாலும், எதுவும் எதேச்சையாக நடைபெறுவதில்லை. எல்லாமே கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமும், அவருடைய தீர்மானத்தின் பிரகாரமும் நடைபெறுகிறது.

நம்முடைய ஆவிக்குரிய பிரயாணத்தில் கர்த்தரும் நம்மோடு கூடவருகிறார். அவர் நம்மை கரம்பிடித்து வழிநடத்துகிறார். நாம் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லவேண்டும். அப்போது நம்முடைய பிரயாணத்தில் பாதுகாப்பும், ஜெயமும் கிடைக்கும்.

நம்முடைய வாழ்க்கையில் நாம் சிலரை சந்திப்போம். அவர்கள் நமக்கு பிரயோஜனமான ஆலோசனைகளை சொல்லுவார்கள். இந்த சம்பவங்கள் எதேச்சையாக நடைபெறுகிறது என்று நாம் நினைக்கக்கூடாது. கர்த்தருடைய தெய்வீக வழிநடத்துதலின் பிரகாரமாகவே நாம் அவர்களை சந்திக்கிறோம். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே அவர்கள் நமக்கு பிரயோஜனமான ஆலோசனைகளை சொல்லுகிறார்கள். கர்த்தரை நம்புகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடைபெறும்.

இந்த வசனப்பகுதியில் மேய்ப்பர்களைப்பற்றியும், அவர்களுடைய மந்தைகளைப்பற்றியும் அதிகமாக சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு நல்ல மேய்ப்பராயிருக்கிறார். அவரே பிரதான மேய்ப்பர். இயேசுகிறிஸ்துவின் சபையே அவருடைய தொழுவம். விசுவாசிகளெல்லோரும் இயேசுகிறிஸ்துவின் தொழுவத்திலுள்ள ஆடுகளாயிருக்கிறார்கள். நல்ல மேய்ப்பர் தன் ஆடுகளை அறிந்திருக்கிறார். ஆடுகள் மேய்ப்பரின் சத்தத்திற்கு செவிகொடுக்கும்.

"நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறது போலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்" *(யோவா 10:14,15)*.

யாக்கோபு ஆரானிலுள்ள மேய்ப்பரோடு பேசிக்கொண்டிருக்கிறார். யாக்கோபும் ஆடுகளை மேய்க்கிறவர். அவருக்கு மந்தைகளை எப்படி மேய்க்கவேண்டும் என்றும், ஆடுகளுக்கு எப்போது தண்ணீர் காட்டவேண்டும் என்பதும் தெரியும்.

யாக்கோபு ஆரானிலுள்ள மந்தைகளின் மேய்ப்பர்களை நோக்கி, "இன்னும் வெகுபொழுதிருக்கிறதே; இது மந்தைகளைச் சேர்க்கிற வேளை அல்லவே, ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி, இன்னும் மேயவிடலாம்" *(ஆதி 29:7)* என்று சொல்லுகிறார்.

எல்லா ஆடுகளுக்கும் ஒரே வேளையில் தண்ணீர் காட்டவேண்டுமென்று மேய்ப்பர்கள் சொல்லுகிறார்கள். ஆடுகளுக்கு தண்ணீர் காட்டுவதற்கு என்று அவர்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த வேளையில் எல்லா மேய்ப்பர்களும் கிணற்றண்டையிலே ஆடுகளை ஒட்டிக்கொண்டு வருவார்கள்.

மந்தைகளின் மேய்ப்பர்கள் யாக்கோபை நோக்கி, "எல்லா மந்தைகளும் சேருமுன்னே அப்படிச் செய்யக் கூடாது; சேர்ந்தபின் கிணற்றின் வாயிலுள்ள கல்லைப் புரட்டுவார்கள்; அப்பொழுது ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுவோம்" *(ஆதி 29:8)* என்று சொல்லுகிறார்கள்.

ஆடுகளுக்கு தண்ணீர் காட்ட ஆரானிலுள்ள மேய்ப்பர்களும் வருவார்கள். மற்ற ஊர்களிலுள்ள மேய்ப்பர்களும் வருவார்கள். ஆரானிலுள்ள மேய்ப்பர்கள் அந்நியர்களை உபசரிக்கிறார்கள். அவர்களுடைய ஆடுகளுக்கும் தண்ணீர் கொடுத்து அவர்களை ஆதரிக்கிறார்கள். அன்பின் பிரமாணம் மிகுந்த பலமுள்ளது.

"குணசாலியான ஸ்திரீ தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள்; தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது" *(நீதி 31:26)*.

ராகேல்
ஆதி 29:9-14

ஆதி 29:9. அவர்களோடே அவன் பேசிக்கொண்டிருக்கும்போதே, தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த ராகேல் அந்த ஆடுகளை ஒட்டிக் கொண்டு வந்தாள்.

ஆதி 29:10. யாக்கோபு தன் தாயின் சகோதரனான லாபானுடைய குமாரத்தியாகிய ராகேலையும், தன் தாயின் சகோதரனாகிய லாபானின் ஆடுகளையும் கண்டபோது, யாக்கோபு போய், கிணற்றின் வாயிலிருந்த கல்லைப்புரட்டி, தன் தாயின் சகோதரனாகிய லாபானின் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான்.

ஆதி 29:11. பின்பு யாக்கோபு ராகேலை முத்தஞ்செய்து, சத்தமிட்டு அழுது,

ஆதி 29:12. தான் அவள் தகப்பனுடைய மருமகனென்றும், ரெபெக்காளின் குமாரனென்றும் ராகேலுக்கு அறிவித்தான். அவள் ஓடிப்போய்த் தன் தகப்பனுக்கு அறிவித்தாள்.

ஆதி 29:13. லாபான் தன் சகோதரியின் குமாரனாகிய யாக்கோபுடைய செய்தியைக் கேட்டபோது, அவனுக்கு எதிர்கொண்டோடி, அவனைக் கட்டிக்கொண்டு, முத்தஞ்செய்து, தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோனான்; அவன் தன் காரியங்களையெல்லாம் விவரமாய் லாபானுக்குச் சொன்னான்.

ஆதி 29:14. அப்பொழுது லாபான்: நீ என் எலும்பும் என் மாம்சமுமானவன் என்றான். ஒரு மாதம்வரைக்கும் யாக்கோபு அவனிடத்தில் தங்கினான்.

ராகேல் ரூபவதியாகவும், பார்வைக்கு அழகானவளுமாயிருக்கிறாள். யாக்கோபு கிணற்றண்டையில் ஆடுகளுக்கு தண்ணீர் காட்டுகிற மேய்ப்பர்களோடு பேசிக்கொண்டிருக்கிறார். அப்போது தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த ராகேல் அந்த ஆடுகளை ஓட்டிக் கொண்டு வருகிறாள் (ஆதி 29:9).

யாக்கோபு தன் தாயின் சகோதரனான லாபானுடைய குமாரத்தியாகிய ராகேலையும், லாபானின் ஆடுகளையும் காண்கிறார். அப்போது, யாக்கோபு போய், கிணற்றின் வாயிலிருந்த கல்லைப்புரட்டி, லாபானின் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுகிறார் (ஆதி 29:10).

ராகேல் சுறுசுறுப்பாக வேலை செய்கிறவள். அவள் மிகுந்த மனத்தாழ்மையுள்ளவள். யாக்கோபு இப்போதுதான் ராகேலை முதன் முறையாக பார்க்கிறார். யாக்கோபுக்கு ராகேல் மீது பிரியம் இருக்கிறது. அவர் ஒரு குணசாலி. இரக்ககுணமுள்ளவர். யாக்கோபு லாபானின் ஆடுகளுக்கு தண்ணீர் காட்டுகிறார். அவர் ராகேலுக்கு உதவிசெய்ய விரும்புகிறார். பின்பு யாக்கோபு ராகேலை முத்தஞ்செய்து, சத்தமிட்டு அழுகிறார் (ஆதி 29:11).

யாக்கோபு சத்தமிட்டு அழுவதற்கு வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். அவர் ராகேலை எதிர்பாராத விதமாக சந்திக்கிறார். அந்த ஆச்சரியத்தினாலும், சந்தோஷத்தினாலும் யாக்கோபின் கண்களில் கண்ணீர் வருகிறது. யாக்கோபு ராகேல் பேரில் பிரியமாயிருக்கிறார்.

ராகேலுக்கு யாக்கோபைப்பற்றித் தெரியாது. யாக்கோபு அவளிடத்தில் தன்னைப்பற்றிச் சொல்லுகிறார். தான் அவள் தகப்பனுடைய மருமகனென்றும், ரெபெக்காளின் குமாரனென்றும் யாக்கோபு ராகேலுக்கு அறிவிக்கிறார். ராகேல் ஓடிப்போய் இந்தச் செய்தியை தன் தகப்பனுக்கு அறிவிக்கிறாள் (ஆதி 29:12).

யாக்கோபு லாபானுடைய சகோதரியின் குமாரன். லாபான் இந்தச் செய்தியை கேட்டபோது, அவர் யாக்கோபுக்கு எதிர்கொண்டு ஓடி, அவரைக் கட்டிக்கொண்டு முத்தம் செய்கிறார். லாபான் யாக்கோபை தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோகிறார். யாக்கோபு லாபானுடைய வீட்டிலே தன் காரியங்களையெல்லாம் அவருக்கு விவரமாகச் சொல்லுகிறார்.

கிழக்கு தேசங்களில் முத்தம் செய்து வரவேற்கும் வழக்கம் இருந்தது. புருஷர், மற்ற புருஷரை முத்தஞ்செய்தார்கள். (ஆதி 29:13; ஆதி 27:27; ஆதி 33:4; ஆதி 45:15; ஆதி 48:10; யாத் 4:27; யாத் 18:7; 1சாமு 20:41; லூக்கா 15:20; அப் 20:37).

தன்னுடைய பிரயாணத்தின் நோக்கம், பெத்தேலில் நடைபெற்ற நிகழ்ச்சி, கிணற்றண்டையில் தான் வந்தபொழுது அங்கு நடைபெற்ற காரியங்கள் ஆகிய அனைத்தையும், யாக்கோபு லாபானிடம் விவரமாகச் சொல்லுகிறார்.

லாபான் யாக்கோபை அதிகமாய் நேசிக்கிறார். லாபான் யாக்கோபை நோக்கி, "நீ என் எலும்பும், என் மாம்சமுமானவன்" என்று அன்பான வார்த்தைகளை சொல்லுகிறார். யாக்கோபு ஒரு மாதம் வரைக்கும் லாபானிடத்தில் தங்குகிறார் (ஆதி 29:14).

லாபானும் யாக்கோபும்
ஆதி 29:15-30

ஆதி 29:15. பின்பு லாபான் யாக்கோபை நோக்கி: நீ என் மருமகனாயிருப்பதினால், சும்மா எனக்கு வேலை செய்யலாமா? சம்பளம் எவ்வளவு கேட்கிறாய், சொல் என்றான்.

ஆதி 29:16. லாபானுக்கு இரண்டு குமாரத்திகள் இருந்தார்கள்; மூத்தவள் பேர் லேயாள், இளையவள் பேர் ராகேல்.

ஆதி 29:17. லேயாளுடைய கண்கள் கூச்சப்பார்வையாயிருந்தது; ராகேலோ ரூபவதியும் பார்வைக்கு அழகானவளுமாயிருந்தாள்.

ஆதி 29:18. யாக்கோபு ராகேல்பேரில் பிரியப்பட்டு: உம்முடைய இளைய குமாரத்தியாகிய ராகேலுக்காக உம்மிடத்தில் ஏழு வருஷம் வேலைசெய்கிறேன் என்றான்.

ஆதி 29:19. அதற்கு லாபான்: நான் அவளை அந்நிய புருஷனுக்குக் கொடுக்கிறதைப்பார்க்கிலும், அவளை உனக்குக் கொடுக்கிறது உத்தமம், என்னிடத்தில் தரித்திரு என்றான்.

ஆதி 29:20. அந்தப்படியே யாக்கோபு ராகேலுக்காக ஏழு வருஷம் வேலை செய்தான்; அவள் பேரில் இருந்த பிரியத்தினாலே அந்த வருஷங்கள் அவனுக்குக் கொஞ்சநாளாகத் தோன்றினது.

ஆதி 29:21. பின்பு யாக்கோபு லாபானை நோக்கி: என் நாட்கள் நிறைவேறினபடியால், என் மனைவியிடத்தில் நான் சேரும்படி அவளை எனக்குத் தரவேண்டும் என்றான்.

ஆதி 29:22. அப்பொழுது லாபான் அவ்விடத்து மனிதர் எல்லாரையும் கூடிவரச் செய்து விருந்து பண்ணினான்.

ஆதி 29:23. அன்று இரவிலே அவன் தன் குமாரத்தியாகிய லேயாளை அழைத்துக் கொண்டுபோய், அவனிடத்தில் விட்டான்; அவளை அவன் சேர்ந்தான்.

ஆதி 29:24. லாபான் தன் வேலைக்காரியாகிய சில்பாளை தன் குமாரத்தியாகிய லேயாளுக்கு வேலைக்காரியாகக் கொடுத்தான்.

ஆதி 29:25. காலையிலே, இதோ, அவள் லேயாள் என்று யாக்கோபு கண்டு, லாபானை நோக்கி: ஏன் எனக்கு இப்படிச் செய்தீர்? ராகேலுக்காக அல்லவா உம்மிடத்தில் வேலை செய்தேன்; பின்னை ஏன் எனக்கு வஞ்சகம் பண்ணினீர் என்றான்.

ஆதி 29:26. அதற்கு லாபான்: மூத்தவள் இருக்க இளையவளைக் கொடுப்பது இவ்விடத்து வழக்கம் அல்ல.

ஆதி 29:27. இவளுடைய ஏழுநாளை நிறைவேற்று; அவளையும் உனக்குத் தருவேன்; அவளுக்காகவும் நீ இன்னும் ஏழு வருஷம் என்னிடத்தில் வேலைசெய் என்றான்.

ஆதி 29:28. அந்தப்படியே யாக்கோபு, இவளுடைய ஏழுநாளை நிறைவேற்றினான். அப்பொழுது தன் குமாரத்தியாகிய ராகேலையும் அவனுக்கு மனைவியாகக் கொடுத்தான்.

ஆதி 29:29. மேலும் லாபான் தன் வேலைக்காரியாகிய பில்காளைத் தன் குமாரத்தியாகிய ராகேலுக்கு வேலைக்காரியாகக் கொடுத்தான்.

ஆதி 29:30. யாக்கோபு ராகேலையும் சேர்ந்தான்; லேயாளைப் பார்க்கிலும் ராகேலை அவன் அதிகமாய் நேசித்து, பின்னும் ஏழு வருஷம் அவனிடத்தில் சேவித்தான்.

யாக்கோபு லாபானுடைய வீட்டிலே ஒரு மாதம் வரைக்கும் விருந்தாளியாக தங்கியிருக்கிறார். யாக்கோபு தன் மாமன் வீட்டில் சும்மாயிருக்காமல், அவருடைய வீட்டில் வேலை செய்துகொண்டிருக்கிறார். யாக்கோபு தனக்கு சும்மா வேலை செய்வது லாபானுக்கு பிடிக்கவில்லை.

லாபான் யாக்கோபை நோக்கி: "நீ என் மருமகனாயிருப்பதினால், சும்மா எனக்கு வேலை செய்யலாமா? சம்பளம் எவ்வளவு கேட்கிறாய், சொல்" (ஆதி 29:15) என்று கேட்கிறார். யாக்கோபு ராகேல் பேரில் பிரியப்படுகிறார். அவள்மீது தான் வைத்திருக்கும் பிரியத்தை வெளிப்படுத்துவதற்கு இதுவே நல்ல தருணம் என்று யாக்கோபு நினைக்கிறார். யாக்கோபு லாபானை நோக்கி, "உம்முடைய இளைய குமாரத்தியாகிய ராகேலுக்காக உம்மிடத்தில் ஏழுவருஷம் வேலை செய்கிறேன்" (ஆதி 29:18) என்று சொல்லுகிறார்.

ஐரோப்பிய தேசங்களில் பெண்ணின் தந்தை மணமகனுக்கு வரதட்சணை கொடுப்பார். ஆனால் கிழக்கு தேசங்களில் பெண்ணின் தந்தை மணமகனிடம் வரதட்சணை பெற்றுக் கொள்வார். பல மனைவிகளைத் திருமணம் செய்யும் வழக்கம் இருந்ததினால் பெண்களுக்கு வரதட்சணை கொடுத்து அவர்களைத் திருமணம் செய்து வந்தார்கள். பேராசையுள்ள பெண்ணின் தகப்பனார்கள் தங்கள் மகள்களை வைத்து அதிக பணம் சம்பாதிப்பதும் உண்டு.

லாபானுக்கு இரண்டு குமாரத்திகள் இருக்கிறார்கள்; மூத்தவள் பேர் லேயாள், இளையவள் பேர் ராகேல். லேயாளுடைய கண்கள் கூச்சப்பார்வையாயிருக்கிறது; ராகேலோ ரூபவதியும் பார்வைக்கு அழகானவளுமாயிருக்கிறாள் (ஆதி 29:16,17). யாக்கோபு ராகேல் பேரில் பிரியப்படுகிறார்.

யாக்கோபிடத்தில் இப்போது உலகப்பிரகாரமான ஐசுவரியம் எதுவுமில்லை. ராகேலை திருமணம் செய்து கொள்வதற்கு, பரிசம் கொடுப்பதற்குகூட யாக்கோபின் கையிலே பணம் இல்லை. ஆனாலும் யாக்கோபு ராகேலுக்காக லாபானிடத்தில் ஏழுவருஷம் வேலை செய்ய சம்மதிக்கிறார். ஏழுவருஷம் முடிந்த பின்பு, லாபான் தன் இளைய குமாரத்தியாகிய ராகேலை யாக்கோபுக்கு திருமணம் செய்து கொடுக்கவேண்டும்.

யாக்கோபு சொல்லுகிற வார்த்தைகளை லாபானும் ஏற்றுக்கொள்கிறார். லாபான் யாக்கோபை நோக்கி, "நான் அவளை அந்நிய புருஷனுக்குக் கொடுக்கிறதைப்பார்க்கிலும், அவளை உனக்குக் கொடுக்கிறது உத்தமம், என்னிடத்தில் தரித்திரு" (ஆதி 29:19) என்று சொல்லுகிறார்.

லாபான் தன் மகளை அந்நிய இனத்தாருக்குக் கொடுக்க விரும்பவில்லை. தன்னுடைய இனத்தாருக்குள், உறவினருக்குள் திருமணம் செய்து வைப்பது அக்காலத்து வழக்கம்.

அந்தப்படியே யாக்கோபு ராகேலுக்காக ஏழு வருஷம் வேலை செய்கிறார்; அவள் பேரில் இருந்த பிரியத்தினாலே அந்த வருஷங்கள் யாக்கோபுக்குக் கொஞ்சநாளாகத் தோன்றுகிறது. பின்பு யாக்கோபு லாபானை நோக்கி: "என் நாட்கள் நிறைவேறினபடியால், என் மனைவியிடத்தில் நான் சேரும்படி அவளை எனக்குத் தரவேண்டும்" (ஆதி 29:20,21) என்று கேட்கிறார்.

யாக்கோபு ராகேலுக்காக ஏழு வருஷம் வேலை செய்தார். ஆதி 29:18-30 ஆகிய வசனங்களைப் பார்க்கும்போது லேயாள், ராகேல் ஆகியோரை யாக்கோபு திருமணம் செய்து கொள்வதற்கு முன்பாகவே அவர் லாபானுக்கு ஏழு வருஷம் வேலை செய்தார் என்று கூறப்பட்டிருப்பது போன்று தெரிகிறது. வேதபண்டிதர்களில் சிலர் யாக்கோபு இவ்விருவரையும் திருமணம் செய்து கொண்ட பின்பே, லாபானிடம் பதினான்கு வருஷங்களாக வேலை செய்தார் என்று சொல்லுகிறார்கள்.

யாக்கோபு லாபானுக்கு உண்மையாய் வேலை செய்கிறார். யாக்கோபிடத்தில் மாய்மாலமோ, ஏமாற்று வேலையோ இல்லை. யாக்கோபின் மனதிலே அதிகமாய் பணம் சம்பாதிக்கவேண்டும் என்னும் ஆசையில்லை. ராகேலைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்னும் விருப்பம் மாத்திரமே யாக்கோபுக்கு இருக்கிறது. அவருக்கு ராகேலின்மீது அதிகமான பிரியம் இருக்கிறது. இதனால் யாக்கோபு லாபானுக்கு ஏழுவருஷம் வேலை செய்தாலும், அந்த வருஷங்கள் யாக்கோபுக்கு கொஞ்சநாளைப்போல தோன்றுகிறது. யாக்கோபு களைப்பும் சலிப்பும் இல்லாமல் லாபானுக்கு ஏழுவருஷம் வேலை செய்கிறார்.

அப்பொழுது லாபான் அவ்விடத்து மனிதர் எல்லாரையும் கூடிவரச் செய்து விருந்து பண்ணுகிறார். அன்று இரவிலே லாபான் தன் மூத்தகுமாரத்தியாகிய லேயாளை அழைத்துக் கொண்டுபோய், யாக்கோபிடத்தில் விடுகிறார்; யாக்கோபு லேயாளை சேருகிறார். லாபான் தன் வேலைக்காரியாகிய சில்பாளை தன் குமாரத்தியாகிய லேயாளுக்கு வேலைக்காரியாகக் கொடுக்கிறார் (ஆதி 29:22-24).

அக்காலத்தில், திருமண விருந்தை ஒருவார காலத்துக்கு அனுசரிப்பது வழக்கம் (ஆதி 29:27-28; நியா 14:12).

சில்பாள் என்பவள் காத், ஆசேர் ஆகியோருக்குத் தாய். (ஆதி 30:10-13) திருமணத்தின்போது மகளுக்குக் கொடுக்கப்படும் அடிமைகள் மகளுடைய சொந்தச் சொத்தாகும். புருஷனுக்கு அடிமைகள்மீது எவ்வித உரிமையும் இல்லை.

யாக்கோபு லாபானுக்கு உண்மையாயும் கண்ணியமாயும் வேலை செய்கிறார். ஆனால் லாபானோ யாக்கோபை வஞ்சித்துவிடுகிறார். யாக்கோபு லாபானுக்கு ஏழுவருஷம் வேலை செய்திருக்கிறார். அவர்கள் ஏற்கெனவே பேசி சம்மதித்துக்கொண்ட பிரகாரம் ஏழுவருஷம் முடியும்போது, ராகேலை யாக்கோபுக்கு கொடுக்க வேண்டும். ஆனால் லாபானோ யாக்கோபுக்கு ராகேலைக் கொடுப்பதற்குப் பதிலாக லேயாளைக் கொடுக்கிறார். இரவின் இருட்டிலே லாபான் யாக்கோபை ஏமாற்றிவிடுகிறார்.

லாபான் யாக்கோபை வஞ்சித்தது, அவருடைய பாவம். லாபான் யாக்கோபுக்கு விரோதமாகவும், ராகேலுக்கு விரோதமாகவும் பாவம் செய்திருக்கிறார். யாக்கோபு ஒரு ஏமாற்றுக்காரர். ஏமாற்றுக்காரராகிய யாக்கோபு, இப்போது லாபானால் ஏமாற்றப்படுகிறார். யாக்கோபு தன் தகப்பனாரை வஞ்சித்து, ஏசாவுக்கு கிடைக்கவேண்டிய ஆசீர்வாதத்தை ஏமாற்றிப்பெற்றுக்கொண்டார். இப்போது லாபான் யாக்கோபை ஏமாற்றுகிறார். யாக்கோபு தன் தகப்பனாரை ஏமாற்றினார். இப்போது மாமனார் மருமகனாகிய யாக்கோபை ஏமாற்றுகிறார்.

இரவு வேளையிலே தான் ஏமாற்றப்பட்டது யாக்கோபுக்கு தெரியவில்லை. அவர் லேயாளோடே சேருகிறார். லேயாளை ராகேல் என்று நினைத்து யாக்கோபு அவளோடு சேருகிறார். காலைப்பொழுதில்தான் தான் ஏமாற்றப்பட்டது யாக்கோபுக்கு தெரிகிறது. காலையில் தன்னோடு கூடயிருப்பது லேயாள் என்பதை யாக்கோபு காண்கிறார்.

அக்காலத்தில் மணப்பெண்ணை முகத்தை மூடி அழைத்து வருவது வழக்கம். அத்துடன் திருமண அறையும் இருட்டாக இருக்கும். லேயாளை மாலை வேளையில் யாக்கோபுவிடம் அழைத்து வருகிறார்கள். அவள் யாரென்று தெரியாமலேயே யாக்கோபு ஏமாந்து போகிறார்.

யாக்கோபு லாபானை நோக்கி, "ஏன் எனக்கு இப்படிச் செய்தீர்? ராகேலுக்காக அல்லவா உம்மிடத்தில் வேலை செய்தேன்; பின்னை ஏன் எனக்கு வஞ்சகம் பண்ணினீர்" (ஆதி 29:25) என்று கேட்கிறார்.

யாக்கோபு இதுவரையிலும் மற்றவர்களை வஞ்சித்தார். (ஆதி 27) இப்பொழுது மற்றவர்களின் வஞ்சனைக்கு யாக்கோபு ஆளாகிறார். (ஆதி 31: 7-10,31; ஆதி 34:30; ஆதி 37: 28-36; ஆதி 35:22; ஆதி 43:1-28).

லாபானோ தன்னுடைய தப்பிதத்தை ஒப்புக்கொள்ளவில்லை. அவர் யாக்கோபுக்கு சாக்குப்போக்கு சொல்லுகிறார். லாபான் யாக்கோபை நோக்கி, "மூத்தவள் இருக்க இளையவளைக் கொடுப்பது இவ்விடத்து வழக்கம் அல்ல. இவளுடைய ஏழுநாளை நிறைவேற்று; அவளையும் உனக்குத் தருவேன்; அவளுக்காகவும் நீ இன்னும் ஏழு வருஷம் என்னிடத்தில் வேலைசெய்" (ஆதி 29:26,27) என்று சொல்லுகிறார்.

கிழக்கு தேசத்தில் மூத்தவளுக்கு திருமணமான பின்பே இளையவளுக்குத் திருமணம் செய்ய வேண்டும். மூத்தவள் உடல் ஊனமானவளாகவோ, குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு தகுதியற்றவளாகவோ இருந்தால் அவளை ஒதுக்கி வைத்து விட்டு, இளையவளுக்குத் திருமணம் செய்து வைக்கலாம். தனக்கு லேயாள் என்று ஒரு மகள் இருப்பதை லாபான் யாக்கோபுக்கு மறைத்து விட்டார். லேயாளுக்கு திருமணமாகும் வரையில் லாபான் யாக்கோபிடம் அவளைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை.

யாக்கோபு ராகேலுக்காக எதையும் செய்வார் என்பது லாபானுக்குத் தெரியும். லாபான் யாக்கோபை ஏமாற்றினார். லாபான் தன் இரண்டு மகள்களுக்கும் யாக்கோபிடமிருந்து நல்ல வரதட்சணையைப் பெற்றுக் கொண்டார். (நியா 15:2; 1சாமு 14:49; 1சாமு 18:17-20,28).

லாபான் சொல்லுகிற பிரகாரமாக மெய்யாகவே ஆரானிலே மூத்தவள் இருக்க இளையவளைக் கொடுக்கக்கூடாது என்னும் வழக்கம் இருந்ததா என்பது தெரியவில்லை. இது லாபானுடைய சுயகற்பனை. யாக்கோபை வஞ்சிக்கவேண்டும் என்பதற்காக லாபான் சாதுரியமாகப் பேசுகிறார். யாக்கோபை வஞ்சித்ததினால் லாபானின் மனதில் சந்தோஷமுண்டாயிற்று. லாபான் தன்னுடைய தப்பிதத்தை திருத்துவதற்காக, "ராகேலையும் உனக்குத்தருவேன்" என்று சொல்லுகிறார். ஒரு சிறிய தப்பிதத்தை மூடி மறைப்பதற்கு, லாபான் பெரிய தப்பிதத்தை செய்ய ஆயத்தமாயிருக்கிறார்.

லாபான் இப்போது யாக்கோபையும் பாவம் செய்யுமாறு வழிநடத்துகிறார். யாக்கோபுக்கு மறைவாக கண்ணியை விரிக்கிறார். யாக்கோபுக்கு லேயாள் ஏற்கெனவே மனைவியாயிருக்கிறாள். அவருக்கு இப்போது ராகேலையும் மனைவியாகக் கொடுக்க லாபான் சம்மதிக்கிறார்.

யாக்கோபு குணசாலி. அவர் கண்ணியமானவர். யாக்கோபு ராகேலை மாத்திரமே திருமணம் செய்யவேண்டும் என்று விரும்பினார். தனக்கு ஒரு மனைவி மாத்திரம் போதும் என்று நினைத்தார். பல மனைவிகளை விவாகம்பண்ணவேண்டும் என்பது யாக்கோபின் விருப்பமோ திட்டமோ அல்ல. ஆனால் லாபான் யாக்கோபை ஏமாற்றி, அவருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகளை விவாகம் செய்து கொடுக்க திட்டமிடுகிறார்.

யாக்கோபு ராகேல் மீது பிரியமாயிருக்கிறார். ராகேலை விட்டுக்கொடுக்க யாக்கோபுக்கு மனமில்லை. தனக்கு ராகேல் மனைவியாக வேண்டுமென்று யாக்கோபு விரும்புகிறார். ஆகையினால் லாபானுடைய வார்த்தையின் பிரகாரம், யாக்கோபு ராகேலுக்காக இன்னும் ஏழுவருஷம் அவரிடத்தில் வேலை செய்ய சம்மதிக்கிறார். ராகேல் தனக்கு வேண்டுமென்றால், யாக்கோபுக்கு இதைத் தவிர வேறு வழியில்லை.

லாபான் யாக்கோபை நோக்கி, "இவளுடைய ஏழுநாளை நிறைவேற்று" என்று சொல்லுகிறார். லாபான் ஏழு நாள் விருந்து ஏற்பாடு பண்ணியிருக்கிறார். விருந்தினர்கள் அநேகரை அழைத்திருக்கிறார். இந்த ஏழு நாளிலும் விருந்திற்கு எவ்வித இடையூறும் பண்ண வேண்டாமென்று லாபான் யாக்கோபிடம் கேட்டுக் கொள்கிறார். (ஆதி 29:22).

ராகேலையும், யாக்கோபுக்கு மணம் முடித்துத் தருவதாக லாபான் வாக்குப்பண்ணுகிறார். யாக்கோபு லாபானின் நிபந்தனைகளுக்கெல்லாம் ஒப்புக்கொண்டு, லேயாளையும் திருமணம் செய்து கொள்கிறார். ராகேலையும் திருமணம் செய்து கொள்கிறார். (ஆதி 29:27-28).

அந்தப்படியே யாக்கோபு, லேயாளுடைய ஏழுநாளை நிறைவேற்றுகிறார். அப்பொழுது லாபான் தன் இளைய குமாரத்தியாகிய ராகேலையும் யாக்கோபுக்கு மனைவியாகக் கொடுக்கிறார் (ஆதி 29:28). இஸ்ரவேலரின் முற்பிதாக்களுடைய ஜீவியத்திலே பல மனைவி விவாகம் சர்வசாதாரணமாக நடைபெறுகிறது.

முற்பிதாக்களின் காலத்தில் பல மனைவி விவாகம் தடைபண்ணப்படவில்லை. பல மனைவி விவாகத்திற்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தைகள் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் பல மனைவி விவாகத்திற்கு எதிராக, அக்காலத்தில் திட்டமான பிரமாணம் எதுவும் சொல்லப்படவில்லை.

"அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே, பின்னைஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே. ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம்பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" (மல் 2:15).

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்பது மாத்திரமே கர்த்தருடைய பிரமாணம். "ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்த புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும்" (1கொரி 7:2).

லாபான் யாக்கோபுக்கு லேயாளைக் கொடுத்தபோது, தன் வேலைக்காரியாகிய சில்பாளை தன் குமாரத்தியாகிய லேயாளுக்கு வேலைக்காரியாகக் கொடுத்தார் (ஆதி 28:24). இப்போது லாபான் யாக்கோபுக்கு ராகேலை மனைவியாகக் கொடுக்கிறபோது, தன் வேலைக்காரியாகிய பில்காளைத் தன் குமாரத்தியாகிய ராகேலுக்கு வேலைக்காரியாகக் கொடுக்கிறார் (ஆதி 29:29).

யாக்கோபு ராகேலையும் சேருகிறார்; யாக்கோபு லேயாளைப் பார்க்கிலும் ராகேலை அதிகமாய் நேசித்து, பின்னும் ஏழு வருஷம் லாபானிடத்தில் சேவிக்கிறார் (ஆதி 29:30).

மூன்றாவதாக சந்ததியாக குடும்பப் பிரச்சனை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. ஈசாக்கு, இஸ்மவேல் ஆகியோரைக் குறித்து சாராள், ஆகார், ஆபிரகாம் ஆகியோரிடையே பிரச்சனை இருந்தது. (ஆதி 16:1-16; ஆதி 17:18; ஆதி 21:9-16; கலா 4: 21-31). யாக்கோபு, ஏசா ஆகியோரைக் குறித்து ஈசாக்கு, ரெபெக்காள் ஆகியோரிடையே பிரச்சனை இருந்தது. (ஆதி 25:28;27). இங்கு யாக்கோபின் மனைவிகளுக்குள் பிரச்சனை வருகிறது (ஆதி 29:31-30:43).

வேதபண்டிதர்கள் லேயாளுக்கும் ராகேலுக்கும் ஆவிக்குரிய வியாக்கியானம் சொல்லுகிறார்கள். இவர்கள் இருவரும் இரண்டு சபைகளுக்கு அடையாளமாயிருக்கிறார்கள். லேயாள் நியாயப்பிரமாணத்திற்கு கீழிருக்கிற யூதர்களுக்கு அடையாளம். ராகேலோ சுவிசேஷத்திற்கு கீழிருக்கிற புறஜாதியாருக்கு அடையாளம்.

ராகேல் மூத்தவளைவிட ரூபவதியாயிருக்கிறாள். கிறிஸ்துவைப்பற்றிய சிந்தனையினால், புதிய ஏற்பாட்டுக்காலத்து சபையானது அதிக அழகுள்ளதாயிருக்கிறது. கிறிஸ்துவானவர் மனுஷரூபமெடுத்து, ஒரு வேலையாளைப்போல இந்த உலகத்திற்கு வந்தார். யாக்கோபு லேயாளோடு முதலாவதாக சேர்ந்தார். யூதர்களே நியாயப்பிரமாணத்தை முதலாவதாக பற்றிக்கொண்டார்கள்.

யாக்கோபின் நான்கு குமாரர்
ஆதி 29:31-35

ஆதி 29:31. லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று கர்த்தர் கண்டு, அவள் கர்ப்பம் தரிக்கும் செய்தார்; ராகேலோ மலடியாயிருந்தாள்.

ஆதி 29:32. லேயாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: கர்த்தர் என் சிறுமையைப் பார்த்தருளினார்; இப்பொழுது என் புருஷன் என்னை நேசிப்பார் என்று சொல்லி, அவனுக்கு ரூபன் என்று பேரிட்டாள்.

ஆதி 29:33. மறுபடியும் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: நான் அற்பமாய் எண்ணப்பட்டதைக் கர்த்தர் கேட்டருளி, இவனையும் எனக்குத் தந்தார் என்று சொல்லி, அவனுக்குச் சிமியோன் என்று பேரிட்டாள்.

ஆதி 29:34. பின்னும் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: என் புருஷனுக்கு மூன்று குமாரரைப் பெற்றபடியால் அவர் இப்பொழுது என்னோடே சேர்ந்திருப்பார் என்று சொல்லி, அவனுக்கு லேவி என்று பேரிட்டாள்.

ஆதி 29:35. மறுபடியும் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: இப்பொழுது கர்த்தரைத் துதிப்பேன் என்று சொல்லி, அவனுக்கு யூதா என்று பேரிட்டாள்; பிற்பாடு அவளுக்குப் பிள்ளைப் பேறு நின்று போயிற்று.

யாக்கோபுக்கு லேயாள் மூலமாக நான்கு குமாரர் பிறக்கிறார்கள். ஆனால் யாக்கோபோ லேயாளைப் பார்க்கிலும் ராகேலை அதிகமாய் நேசிக்கிறார். லேயாள் அற்பமாய் எண்ணப்படுகிறாள். கர்த்தர் இதைக்கண்டு, லேயாளை கர்ப்பம் தரிக்கும்படி செய்கிறார். ராகேலோ மலடியாயிருக்கிறாள் (ஆதி 29:31).

லேயாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுகிறாள். அவனுக்கு ரூபன் என்று பேரிடுகிறாள். லேயாள் தன்னுடைய பிள்ளைகளுக்கு பேரிடும்போது தேவன்மீதும், தன் புருஷனாகிய யாக்கோபின்மீதும் தன்னுடைய மதிப்பையும் மரியாதையையும் வெளிப்படுத்துகிறாள்.

லேயாள் தன் முதலாவது குமாரனுக்கு ரூபன் என்று பேரிடுகிறாள். "கர்த்தர் என் சிறுமையைப் பார்த்தருளினார்; இப்பொழுது என் புருஷன் என்னை நேசிப்பார்" என்று சொல்லி, லேயாள் அவனுக்கு ரூபன் என்று பேரிடுகிறாள் (ஆதி 29:32).

லேயாள் தன்னுடைய இரண்டாவது குமாரனுக்கு சிமியோன் என்றும், மூன்றாவது குமாரனுக்கு லேவி என்றும், நான்காவது குமாரனுக்கு யூதா என்றும் பேரிடுகிறாள்.

லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள். அதை கர்த்தர் கேட்டருளி, தனக்கு ஒரு குமாரனைத் தந்தார் என்று சொல்லி, லேயாள் தன்னுடய இரண்டாவது குமாரனுக்கு சிமியோன் என்று பேரிடுகிறாள்.

லேயாளுக்கு மூன்றாவதாக ஒரு குமாரன் பிறக்கிறான். ஆனாலும் யாக்கோபு லேயாளைப் பார்க்கிலும் ராகேலை அதிகமாய் நேசிக்கிறார். லேயாள் தன் புருஷனுக்கு மூன்று குமாரரைப் பெற்றபடியால், அவர் இப்பொழுது தன்னோடே சேர்ந்திருப்பார் என்று சொல்லி, தன்னுடைய மூன்றாவது குமாரனுக்கு லேவி என்று பேரிடுகிறாள்.

லேயாள் தன்னுடைய குமாரருக்கு பேரிடும்போது, "நான் அற்பமாய் எண்ணப்பட்டதை கர்த்தர் கேட்டருளினார்" என்றும், "கர்த்தர் என் சிறுமையை பார்த்தருளினார்" என்றும், "கர்த்தரைத் துதிப்பேன்" என்றும் பொருள்படும் வண்ணமாக, தன் குமாரருக்கு பேரிடுகிறாள்.

லேயாளின் நான்காவது குமாரனுக்கு யூதா என்று பேர். லேயாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்றபோது, "இப்பொழுது கர்த்தரைத் துதிப்பேன்" என்று சொல்லி, அவனுக்கு யூதா என்று பேரிடுகிறாள். பிற்பாடு அவளுக்கு பிள்ளைபேறு நின்றுபோயிற்று.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, இந்தப் பூமியிலே மனுஷராக அவதரித்தபோது, அவர் யூதாகோத்திரத்தில் அவதரிக்கிறார். கிறிஸ்துவானவரே நம்முடைய துதிகளுக்கு பாத்திரராயிருக்கிறார். நம்முடைய இருதயத்தில் கிறிஸ்து உருவாகும்போது, நாம் கர்த்தரைத் துதிக்கவேண்டும்.

ரூபன் என்னும் பெயருக்கு "ஒரு குமாரன்" என்று பொருள். யாக்கோபு லேயாளைக் குறைவாகவே நேசிக்கிறார். ராகேலுக்கு குழந்தை பிறப்பதற்கு முன்பாக லேயாளுக்குக் குழந்தை பிறக்கிறது (ஆதி 29:30-32).

சிமியோன் என்னும் பெயருக்கு "கேட்டருளுதல்" என்று பொருள். லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டதைக் கர்த்தர் கேட்டருளி, மேலும் ஒரு குமாரனை லேயாளுக்குக் கொடுத்திருக்கிறார். யாக்கோபு இதன் மூலமாக தன்னை அதிகமாக நேசிப்பார் என்று லேயாள் நினைக்கிறாள். (ஆதி 29:33).

லேவி என்னும் பெயருக்குச் "சேர்ந்திருப்பது" என்று பொருள். தனக்கு மூன்று குழந்தைகள் பிறந்திருப்பதினால், யாக்கோபு தன்னை நேசித்து இனிமேல் தன்னுடனே சேர்ந்திருப்பார் என்று லேயாள் நினைக்கிறாள்.

யூதா என்னும் பெயருக்கு "துதித்தல்" என்று பொருள். லேயாளுக்கு நான்கு குமாரர்கள் பிறந்திருக்கிறார்கள். இதற்காக லேயாள் கர்த்தரைத் துதிக்கிறாள். யூதா கோத்திரத்திலிருந்து மேசியா பிறப்பார் (ஆதி 49:10; ஏசா 9:6-7).

30 அதிகாரம்

யாக்கோபின் குடும்பம் விருத்தியடைகிறது. அவருக்கு மேலும் எட்டு பிள்ளைகள் பிறக்கிறார்கள் (ஆதி 30:1-24). யாக்கோபுடைய ஆடுகளின் எண்ணிக்கையும் விருத்தியடைகிறது. அவர் லாபானோடு பேரம் பேசுகிறார் (ஆதி 30:25-34). யாக்கோபு லாபானுக்கு மேலும் ஆறு வருஷங்கள் வேலை செய்கிறார். கர்த்தர் யாக்கோபை அற்புதமாக ஆசீர்வதிக்கிறார். யாக்கோபு விருத்தியடைகிறார் (ஆதி 30:35-43).

யாக்கோபும் ராகேலும்
ஆதி 30:1-13

ஆதி 30:1. ராகேல் தான் யாக்கோபுக்குப் பிள்ளைகளைப் பெறாததைக் கண்டு, தன் சகோதரியின் மேல் பொறாமை கொண்டு, யாக்கோபை நோக்கி: எனக்குப் பிள்ளை கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன் என்றாள்.

ஆதி 30:2. அப்பொழுது யாக்கோபு ராகேலின் மேல் கோபங்கொண்டு: தேவனல்லவோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார், நான் தேவனா? என்றான்.

ஆதி 30:3. அப்பொழுது அவள்: இதோ, என் வேலைக்காரியாகிய பில்காள் இருக்கிறாளே; அவள் என் மடிக்குப் பிள்ளைகளைப் பெறவும், அவளாலாகிலும் என் வீடு கட்டப்படவும் அவளிடத்தில் சேரும் என்று சொல்லி,

ஆதி 30:4. அவனுக்குத் தன் வேலைக்காரியாகிய பில்காளை மனைவியாகக் கொடுத்தாள்; அப்படியே யாக்கோபு அவளைச் சேர்ந்தான்.

ஆதி 30:5. பில்காள் கர்ப்பவதியாகி, யாக்கோபுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்.

ஆதி 30:6. அப்பொழுது ராகேல்: தேவன் என் வழக்கைத் தீர்த்து, என் சத்தத்தையும் கேட்டு, எனக்கு ஒரு குமாரனைக் கொடுத்தார் என்று சொல்லி, அவனுக்குத் தாண் என்று பேரிட்டாள்.

ஆதி 30:7. மறுபடியும் ராகேலின் வேலைக்காரியாகிய பில்காள் கர்ப்பவதியாகி, யாக்கோபுக்கு இரண்டாம் குமாரனைப் பெற்றாள்.

ஆதி 30:8. அப்பொழுது ராகேல்: நான் மகா போராட்டமாய் என் சகோதரியோடே போராடி மேற்கொண்டேன் என்று சொல்லி, அவனுக்கு நப்தலி என்று பேரிட்டாள்.

ஆதி 30:9. லேயாள் தான் பிள்ளைபெறுகிறது நின்றுபோனதைக் கண்டு, தன் வேலைக்காரியாகிய சில்பாளை அழைத்து, அவளை யாக்கோபுக்கு மனைவியாகக் கொடுத்தாள்.

ஆதி 30:10. லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாள் யாக்கோபுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்.

ஆதி 30:11. அப்பொழுது லேயாள்; ஏராளமாகிறதென்று சொல்லி, அவனுக்குக் காத் என்று பேரிட்டாள்.

ஆதி 30:12. பின்பு லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாள் யாக்கோபுக்கு இரண்டாம் குமாரனைப் பெற்றாள்.

ஆதி 30:13. அப்பொழுது லேயாள்; நான் பாக்கியவதி, ஸ்திரீகள் என்னைப் பாக்கியவதி என்பார்கள் என்று சொல்லி, அவனுக்கு ஆசேர் என்று பேரிட்டாள்.

யாக்கோபு லாபானின் இரண்டு சகோதரிகளையும் திருமணம் செய்கிறார். இதனால் அவருடைய குடும்பத்தில் பெரிய பிரச்சனைகளும், குழப்பங்களும் உண்டாயிற்று. யாக்கோபுக்கும், ராகேலுக்கும் கருத்து வேறுபாடு ஏற்படுகிறது. ஆரம்பத்தில் யாக்கோபு ராகேல்மீது பிரியமாயிருந்தார். ஆனால் இப்போதோ அவர் ராகேல்மீது கோபப்படுகிறார்.

ராகேல் தான் யாக்கோபுக்குப் பிள்ளைகளைப் பெறாததைக் கண்டு, தன் சகோதரி லேயாள்மேல் பொறாமை கொள்கிறாள். ராகேல் யாக்கோபை நோக்கி, "எனக்குப் பிள்ளை கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன்" (ஆதி 30:1) என்று சொல்லுகிறாள்.

பொறாமை ஒரு எலும்புருக்கி. பிறர்மீது பொறாமைப்படுவது கர்த்தருக்கு விரோதமான பாவம். நாம் மற்றவர்மீது பொறாமைப்படும்போது, அதன் மூலமாக, நமக்கும் மற்றவர்களுக்கும் தீங்கு செய்கிறோம். நாம் பொறாமைப்படுவதன் மூலமாக, நம்மை நாமே அழித்துப்போடுகிறோம். மற்றவர்களுடைய அழிவுக்கும் நாம் காரணமாயிருக்கிறோம்.

பரிசுத்த வேதாகமத்தில் பொறாமைப்படுவதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. பொறாமைக்கு எதிரான கட்டளைகள் (சங் 37:1-7; நீதி 3:31; நீதி 24:1; 1பேதுரு 2:1)

2. மாம்சத்தின் கிரியை (ரோமர் 1:29-31; ரோமர் 13:13; கலா 5: 19-21; 1தீமோ 6:4; தீத்து 3:3)

3. பொறாமையின் விளைவுகள் (யோபு 5:2; நீதி 14:30; நீதி 27:4; உன் 8:6; 1கொரி 3:3; யாக் 3:14; யாக் 5:9)

4. அன்புக்குப் பொறாமையில்லை. (1கொரி 13:4)

5. பொறாமைக்கு எடுத்துக்காட்டுக்கள். (ஆதி 4:4-8; ஆதி 16:5-6; ஆதி 21:9-10; ஆதி 26:14; ஆதி 30:1,15; ஆதி 31:1; ஆதி 37:4-11,19-20; நியா 11:28-30; நியா 12:1-10; நியா 16:3; 1சாமு 18:8-9,29; 1சாமு 20:31; எஸ் 5:13; தானி 6:4; மத் 27:18; யோவான் 11:47; அப் 13:45; அப் 17:5).

யாக்கோபு ராகேலின் மேல் கோபங்கொண்டார். புருஷன் தன் மனைவியிடத்தில் கோபம் கொள்வதைப்பற்றி வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் முதலாவது வாக்கியம். (1சாமு 1:2-23; 2சாமு 6:20-23; எஸ் 1; யோபு 2:10).

யாக்கோபு ஒரு குணசாலி. அவர் ராகேலைப்போல பொறாமைப்படவில்லை. அவர் ஒரு நீதிமான். யாக்கோபு ராகேல் பேரில் இன்னும் பிரியமாயிருக்கிறார். ஆகையினால் ராகேல் தன் சகோதரியாகிய லேயாள்மேல் பொறாமைப்பட்டபோது, யாக்கோபு ராகேலை அன்போடு கடிந்துகொள்கிறார்.

யாக்கோபு ராகேலைக் கடிந்து கொள்கிறார். யாக்கோபு ராகேலை நோக்கி, "தேவனல்லவோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார், நான் தேவனா?" (ஆதி 30:2) என்று சொல்லுகிறார்.

நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளை மாய்மாலமாய்ச் சொல்லுவதைவிட, அவர்களை உண்மையான அன்போடு கடிந்துகொள்வதே மேன்மையானது.

"நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப்போலிருக்கும்; என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை; அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம்பண்ணுவேன்" (சங் 141:5).

"மறைவான சிநேகத்தைப்பார்க்கிலும் வெளிப்படையான கடிந்துகொள்ளுதல் நல்லது. சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்; சத்துரு இடும் முத்தங்களோ வஞ்சனையுள்ளவைகள்" (நீதி 27:5,6).

யாக்கோபு ராகேலின்மேல் கோபங்கொள்ளவில்லை. அவர் ராகேலுடைய பொறாமைக்குணத்தின்மீது கோபப்படுகிறார். யாக்கோபு தன்னுடைய வார்த்தையின் மூலமாய் ராகேலுடைய பொறாமைக்குணத்தின்மீது தான் அதிருப்தியாயிருப்பதை வெளிப்படுத்துகிறார். அவர் ராகேல் பேரில் பிரியமாயிருக்கிறார். ஆனாலும் அவர் ராகேலுடைய பொறாமை என்னும் பாவத்தின்மீது கோபப்படுகிறார்.

ராகேல் யாக்கோபை நோக்கி, "எனக்கு பிள்ளை கொடும்" என்று கேட்கிறாள். யாக்கோபோ, "நான் தேவனா" என்று அவளுக்கு பதில் சொல்லுகிறார். யாக்கோபு சொல்லுகிற வாக்கியத்திற்கு, "நான் தேவனைவிட மேலானவனா" என்று பொருள். கர்த்தர் ஒரு காரியத்தை தடைபண்ணியிருக்கும்போது, அதை நம்மால் நிச்சயமாய்ச் செய்ய முடியாது. அதே வேளையில், கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது.

தேவன் ராகேலின் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார் என்று யாக்கோபு சொல்லுகிறார். ஆனால் ராகேலோ தனக்கு எப்படியாவது பிள்ளை வேண்டும் என்று பிடிவாதம் பண்ணுகிறாள். ராகேலின் மனது குறுக்கு வழியில் யோசிக்கிறது. அவள் தன்னுடைய யோசனையை யாக்கோபுக்கு சொல்லுகிறாள்.

ராகேல் யாக்கோபை நோக்கி, "இதோ, என் வேலைக்காரியாகிய பில்காள் இருக்கிறாளே; அவள் என் மடிக்குப் பிள்ளைகளைப் பெறவும், அவளாலாகிலும் என் வீடு கட்டப்படவும் அவளிடத்தில் சேரும்" என்று சொல்லுகிறாள். ராகேல் தான் சொன்ன பிரகாரமாக, யாக்கோபுக்கு தன் வேலைக்காரியாகிய பில்காளை மனைவியாகக் கொடுக்கிறாள்; அப்படியே யாக்கோபு அவளைச் சேருகிறார். ராகேலின் வேலைக்காரியாகிய பில்காள் கர்ப்பவதியாகி, யாக்கோபுக்கு ஒரு குமாரனைப் பெறுகிறாள் (ஆதி 30:3-5).

ராகேல் தன் வேலைக்காரியாகிய பில்காளை யாக்கோபுக்கு கொடுக்கிறாள். ஆதி 16:2 ஆவது வசனத்தில் சாராள் செய்ததைப் போன்று இங்கு ராகேலும் செய்கிறாள். பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். குடும்பத்தைக் கட்டி எழுப்புவதில் புருஷருக்கு முக்கியப்பங்கு இருக்கிறது. அடிமைகளும், அடிமைகள் மூலமாகப் பிறக்கும் குழந்தைகளும் மனைவிமார்களுடைய தனிப்பட்ட சொத்து.

ஒரு குடும்பத்தின் தலைவிக்கு குழந்தை பிறக்கவில்லையென்றால், அவள் தன்னுடைய புருஷனுக்கு தன் வேலைக்காரியைக் கொடுத்து, அவள் மூலமாக குழந்தையைப் பெற்று, அந்தக் குழந்தையை தன்னுடைய குழந்தையாக தத்தெடுப்பது அக்காலத்து வழக்கம். ராகேலுக்கு பிள்ளையில்லை. தான் பிள்ளையில்லாமல் இருப்பதைவிட, தன்னுடைய வேலைக்காரி மூலமாக தனக்கு பிள்ளையிருப்பது நலம் என்று ராகேல் நினைக்கிறாள். ராகேல் தன்னுடைய வேலைக்காரியின் பிள்ளையை, தன்னுடைய சொந்தப் பிள்ளையாகப் பாவித்து வளர்க்க விரும்புகிறாள்.

ராகேலின் சகோதரியாகிய லேயாளுக்கு பிள்ளைகள் பிறந்திருக்கிறது. அவளுக்கு முன்பாக ராகேல் பிள்ளையற்றவளாக இருக்க விரும்பவில்லை. பிள்ளையில்லாதிருப்பது ராகேலுக்கு ஒரு குறையாயிருக்கிறது. இந்தக் குறையை நிவிர்த்தி பண்ணுவதற்கு ராகேல் தன் வேலைக்காரியாகிய பில்காளை யாக்கோபுக்கு கொடுக்கிறாள். பில்காளும் கர்ப்பவதியாகி யாக்கோபுக்கு ஒரு குமாரனைப் பெறுகிறாள்.

அப்பொழுது ராகேல்: "தேவன் என் வழக்கைத் தீர்த்து, என் சத்தத்தையும் கேட்டு, எனக்கு ஒரு குமாரனைக் கொடுத்தார்" என்று சொல்லி, அவனுக்குத் தாண் என்று பேரிடுகிறாள் (ஆதி 30:6). தாண் என்னும் பெயருக்கு நியாயத்தீர்ப்பு என்று பொருள். கர்த்தர் ராகேலின் வழக்கை தீர்த்து வைத்து, அவளுக்கு சாதகமாக தீர்ப்பு கொடுத்திருக்கிறார்.

ராகேலின் வேலைக்காரியாகிய பில்காள் மறுபடியும் கர்ப்பவதியாகி, யாக்கோபுக்கு இரண்டாம் குமாரனைப் பெறுகிறாள். அப்பொழுது ராகேல்: "நான் மகா போராட்டமாய் என் சகோதரியோடே போராடி மேற்கொண்டேன்" என்று சொல்லி, அவனுக்கு நப்தலி என்று பேரிடுகிறாள் (ஆதி 30:7,8). யாக்கோபின் குமாரர்கள் எல்லோரும் போட்டியினாலும், பொறாமையினாலும் பிறந்தவர்கள்போல இருக்கிறார்கள்.

ராகேல் யாக்கோபை நோக்கி, "எனக்கு பிள்ளை கொடும்" என்று கேட்கிறாள். யாக்கோபோ, "நான் தேவனா" என்று அவளுக்கு பதில் சொல்லுகிறார். யாக்கோபு சொல்லுகிற வாக்கியத்திற்கு, "நான் தேவனைவிட மேலானவனா" என்று பொருள். கர்த்தர் ஒரு காரியத்தை தடைபண்ணியிருக்கும்போது, அதை நம்மால் நிச்சயமாய்ச் செய்ய முடியாது. அதே வேளையில், கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது.

தேவன் ராகேலின் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார் என்று யாக்கோபு சொல்லுகிறார். ஆனால் ராகேலோ தனக்கு எப்படியாவது பிள்ளை வேண்டும் என்று பிடிவாதம் பண்ணுகிறாள். ராகேலின் மனது குறுக்கு வழியில் யோசிக்கிறது. அவள் தன்னுடைய யோசனையை யாக்கோபுக்கு சொல்லுகிறாள்.

ராகேல் யாக்கோபை நோக்கி, "இதோ, என் வேலைக்காரியாகிய பில்காள் இருக்கிறாளே; அவள் என் மடிக்குப் பிள்ளைகளைப் பெறவும், அவளாலாகிலும் என் வீடு கட்டப்படவும் அவளிடத்தில் சேரும்" என்று சொல்லுகிறாள். ராகேல் தான் சொன்ன பிரகாரமாக, யாக்கோபுக்கு தன் வேலைக்காரியாகிய பில்காளை மனைவியாகக் கொடுக்கிறாள்; அப்படியே யாக்கோபு அவளைச் சேருகிறார். ராகேலின் வேலைக்காரியாகிய பில்காள் கர்ப்பவதியாகி, யாக்கோபுக்கு ஒரு குமாரனைப் பெறுகிறாள் (ஆதி 30:3-5).

ராகேல் தன் வேலைக்காரியாகிய பில்காளை யாக்கோபுக்கு கொடுக்கிறாள். ஆதி 16:2 ஆவது வசனத்தில் சாராள் செய்ததைப் போன்று இங்கு ராகேலும் செய்கிறாள். பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். குடும்பத்தைக் கட்டி எழுப்புவதில் புருஷருக்கு முக்கியப்பங்கு இருக்கிறது. அடிமைகளும், அடிமைகள் மூலமாகப் பிறக்கும் குழந்தைகளும் மனைவிமார்களுடைய தனிப்பட்ட சொத்து.

ஒரு குடும்பத்தின் தலைவிக்கு குழந்தை பிறக்கவில்லையென்றால், அவள் தன்னுடைய புருஷனுக்கு தன் வேலைக்காரியைக் கொடுத்து, அவள் மூலமாக குழந்தையைப் பெற்று, அந்தக் குழந்தையை தன்னுடைய குழந்தையாக தத்தெடுப்பது அக்காலத்து வழக்கம். ராகேலுக்கு பிள்ளையில்லை. தான் பிள்ளையில்லாமல் இருப்பதைவிட, தன்னுடைய வேலைக்காரி மூலமாக தனக்கு பிள்ளையிருப்பது நலம் என்று ராகேல் நினைக்கிறாள். ராகேல் தன்னுடைய வேலைக்காரியின் பிள்ளையை, தன்னுடைய சொந்தப் பிள்ளையாகப் பாவித்து வளர்க்க விரும்புகிறாள்.

ராகேலின் சகோதரியாகிய லேயாளுக்கு பிள்ளைகள் பிறந்திருக்கிறது. அவளுக்கு முன்பாக ராகேல் பிள்ளையற்றவளாக இருக்க விரும்பவில்லை. பிள்ளையில்லாதிருப்பது ராகேலுக்கு ஒரு குறையாயிருக்கிறது. இந்தக் குறையை நிவிர்த்தி பண்ணுவதற்கு ராகேல் தன் வேலைக்காரியாகிய பில்காளை யாக்கோபுக்கு கொடுக்கிறாள். பில்காளும் கர்ப்பவதியாகி யாக்கோபுக்கு ஒரு குமாரனைப் பெறுகிறாள்.

அப்பொழுது ராகேல்: "தேவன் என் வழக்கைத் தீர்த்து, என் சத்தத்தையும் கேட்டு, எனக்கு ஒரு குமாரனைக் கொடுத்தார்" என்று சொல்லி, அவனுக்குத் தாண் என்று பேரிடுகிறாள் (ஆதி 30:6). தாண் என்னும் பெயருக்கு நியாயத்தீர்ப்பு என்று பொருள். கர்த்தர் ராகேலின் வழக்கை தீர்த்து வைத்து, அவளுக்கு சாதகமாக தீர்ப்பு கொடுத்திருக்கிறார்.

ராகேலின் வேலைக்காரியாகிய பில்காள் மறுபடியும் கர்ப்பவதியாகி, யாக்கோபுக்கு இரண்டாம் குமாரனைப் பெறுகிறாள். அப்பொழுது ராகேல்: "நான் மகா போராட்டமாய் என் சகோதரியோடே போராடி மேற்கொண்டேன்" என்று சொல்லி, அவனுக்கு நப்தலி என்று பேரிடுகிறாள் (ஆதி 30:7,8). யாக்கோபின் குமாரர்கள் எல்லோரும் போட்டியினாலும், பொறாமையினாலும் பிறந்தவர்கள்போல இருக்கிறார்கள்.

யாக்கோபுக்கும் லேயாளின் வேலைக்காரியாகிய பில்காளுக்கும் இரண்டு குமாரர்கள் பிறப்பதை, லேயாள் பார்க்கிறாள். லேயாளுக்கு பிள்ளை பெறுகிறது நின்றுபோகிறது. அவள் தன் சகோதரியைப்போல யோசித்து, தன் வேலைக்காரியாகிய சில்பாளை அழைத்து, அவளை யாக்கோபுக்கு கொடுக்கிறாள். லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாள் யாக்கோபுக்கு ஒரு குமாரனைப் பெறுகிறாள் (ஆதி 30:9,10).

அப்பொழுது லேயாள்; "ஏராளமாகிறது" என்று சொல்லி, அவனுக்குக் காத் என்று பேடுகிறாள். பின்பு லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாள் யாக்கோபுக்கு இரண்டாம் குமாரனைப் பெறுகிறாள். அப்பொழுது லேயாள்; "நான் பாக்கியவதி, ஸ்திரீகள் என்னைப் பாக்கியவதி என்பார்கள்" என்று சொல்லி, அவனுக்கு ஆசேர் என்று பேரிடுகிறாள் (ஆதி 30:11-13).

ராகேலின் வேலைக்காரிக்கு இரண்டு குமாரர்கள் பிறப்பதுபோலவே, லேயாளின் வேலைக்காரிக்கும் இரண்டு குமாரர்கள் பிறக்கிறார்கள். இரண்டு சகோதரிகளுக்கும் இடையே ஏற்பட்ட போட்டியினாலும், பொறாமையினாலும், யாக்கோபுக்கு இந்த நான்கு குமாரரும் பிறக்கிறார்கள். கர்த்தரோ யாக்கோபின் குடும்பத்தில் ஏற்பட்ட இந்த தீமையிலிருந்து நன்மையை உண்டுபண்ணுகிறார்.

யாக்கோபுக்கு இதுவரையிலும் எட்டு குமாரர்கள் பிறந்திருக்கிறார்கள். லேயாளுக்கு நாலு குமாரர்கள், பில்காளுக்கு இரண்டு குமாரர்கள், சில்பாளுக்கு இரண்டு குமாரர்கள் ஆக மொத்தம், யாக்கோபுக்கு எட்டு குமாரர்கள் இருக்கிறார்கள். ராகேலுக்கு இன்னும் பிள்ளை பிறக்கவில்லை.

தூதாயீம் கனிகள்
ஆதி 30:14-24

ஆதி 30:14. கோதுமை அறுப்பு நாட்களிலே ரூபன் வயல்வெளியிலே போய், தூதாயீம் கனிகளைக் கண்டெடுத்து, அவைகளைக் கொண்டு வந்து தன் தாயாகிய லேயாளிடத்தில் கொடுத்தான். அப்பொழுது ராகேல் லேயாளை நோக்கி: உன் குமாரனுடைய தூதாயீம் கனியில் எனக்குக் கொஞ்சம் தா என்றாள்.

ஆதி 30:15. அதற்கு அவள்: நீ என் புருஷனை எடுத்துக்கொண்டது அற்பகாரியமா? என் குமாரனுடைய தூதாயீம் கனிகளையும் எடுத்துக்கொள்ளவேண்டுமோ என்றாள்; அதற்கு ராகேல்: உன் குமாரனுடைய தூதாயீம் கனிகளுக்கு ஈடாக இன்று இரவு அவர் உன்னோடே சயனிக்கட்டும் என்றாள்.

ஆதி 30:16. சாயங்காலத்தில் யாக்கோபு வெளியிலிருந்து வருகையில் லேயாள் புறப்பட்டு அவனுக்கு எதிர்கொண்டுபோய்: என் குமாரனுடைய தூதாயீம் கனிகளால் உம்மைக் கொண்டேன்; ஆகையால், நீர் என்னிடத்தில் வரவேண்டும் என்றாள்; அவன் அன்று இரவு அவளோடே சயனித்தான்.

ஆதி 30:17. தேவன் லேயாளுக்குச் செவிகொடுத்தார். அவள் கர்ப்பவதியாகி யாக்கோபுக்கு ஐந்தாம் குமாரனைப் பெற்றாள்.

ஆதி 30:18. அப்பொழுது லேயாள்; நான் என் வேலைக்காரியை என் புருஷனுக்குக் கொடுத்த பலனைத் தேவன் எனக்குத் தந்தார் என்று சொல்லி, அவனுக்கு இசக்கார் என்று பேரிட்டாள்.

ஆதி 30:19. அப்புறம் லேயாள் கர்ப்பவதியாகி யாக்கோபுக்கு ஆறாம் குமாரனைப் பெற்றாள்.

ஆதி 30:20. அப்பொழுது லேயாள்: தேவன் எனக்கு நல்ல ஈவைத்தந்தார்; என் புருஷனுக்கு நான் ஆறு குமாரரைப் பெற்றபடியால், இப்பொழுது அவர் என்னுடனே வாசம்பண்ணுவார் என்று சொல்லி, அவனுக்குச் செபுலோன் என்று பேரிட்டாள்.

ஆதி 30:21. பின்பு அவள் ஒரு குமாரத்தியையும் பெற்று, அவளுக்குத் தீனாள் என்று பேரிட்டாள்.

ஆதி 30:22. தேவன் ராகேலை நினைத்தருளினார்; அவளுக்குத் தேவன் செவி கொடுத்து அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார்.

ஆதி 30:23. அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: தேவன் என் நிந்தையை நீக்கிவிட்டார் என்றும்,

ஆதி 30:24. இன்னும் ஒரு குமாரனைக் கர்த்தர் எனக்குத் தருவார் என்றும் சொல்லி, அவனுக்கு யோசேப்பு என்று பேரிட்டாள்.

கோதுமை அறுப்பு நாட்களிலே ரூபன் வயல்வெளியிலே போய், தூதாயீம் கனிகளைக் கண்டெடுத்து, அவைகளைக் கொண்டுவந்து தன் தாயாகிய லேயாளிடத்தில் கொடுக்கிறான். இப்போது ரூபனுக்கு ஐந்து அல்லது ஆறு வயது ஆகிறது. இவன் வயல்வெளியில் விளையாடிக்கொண்டிருக்கும்போது, அங்கே தூதாயீம் கனிகளைக் கண்டெடுக்கிறான்.

தூதாயீம் கனிகளைப்பற்றிய முழுமையான விவரம் தெரியவில்லை. இது கனியாக இருக்கலாம் என்றும், ஒருவேளை இது பூவாகயிருக்கலாம் என்றும் சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். இது நறுமணமுள்ள பூ என்பது பொதுவான கருத்து. தூதாயீம் கனிகள் வயல்வெளியிலே முளைத்திருக்கிறது. ஒருவேளை இவை கோதுமை செடி வளருகிற தோட்டத்தில் விளைந்திருக்கலாம். தூதாயீம் கனிகள் அதிக மதிப்புள்ளவை. அவை மிகவும் பிரயோஜனமானவை.

ரூபன் தூதாயீம் கனிகளைக் கண்டெடுத்து, அவைகளை தன் தாயாகிய லேயாளிடத்தில் கொடுக்கிறான். அந்தக் கனிகள் லேயாளின் கைகளிலிருப்பதைப் பார்க்கும்போது, ராகேலின் மனதிற்கு கஷ்டமாகவும், பொறாமையாகவும் இருக்கிறது. அந்தக் கனிகள் தனக்கு வேண்டும் என்று ராகேல் ஆசைப்படுகிறாள்.

யாக்கோபுக்கு ராகேலும், லேயாளும் மனைவிகளாயிருக்கிறார்கள். யாக்கோபு எப்போதும் தன்னோடு மாத்திரமே இருக்கவேண்டும் என்றும், அவர் தன்மீது மாத்திரமே பிரியமாயிருக்க வேண்டும் என்றும் இரண்டு சகோதரிகளும் ஆசைப்படுகிறார்கள்.

கர்த்தர் ஆபிரகாமின் சந்தியை வானத்து நட்சத்திரங்களைப்போல திரளாக ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். அந்த வாக்குத்தத்தம் நிறைவேறவேண்டுமென்றால், தாங்களும் முயற்சி பண்ணவேண்டும் என்று ராகேலும் லேயாளும் நினைக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை, தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக நிறைவேற்றுவார். கர்த்தருடைய சித்தம்நிறைவேறுவதற்கு மனுஷருடைய உதவியோ ஒத்தாசையோ தேவையில்லை. அவர் ஒருவராகவே பெரிய காரியங்களை செய்கிறவர். ஆனால் ராகேலும், லேயாளும் தங்களுக்குள்ளே போட்டி போட்டுக்கொண்டு, தங்களுக்கு இஷ்டமான காரியங்களை செய்கிறார்கள்.

லேயாளின் கையிலே தூதாயீம் கனிகள் இருப்பதை ராகேல் பார்த்து பொறாமைப்படுகிறாள். ராகேல் லேயாளை நோக்கி, "உன் குமாரனுடைய தூதாயீம் கனியில் எனக்குக் கொஞ்சம் தா" என்று கேட்கிறாள். அதற்கு லேயாள்: "நீ என் புருஷனை எடுத்துக்கொண்டது அற்பகாரியமா? என் குமாரனுடைய தூதாயீம் கனிகளையும் எடுத்துக்கொள்ளவேண்டுமோ" என்று சொல்லுகிறாள்; அதற்கு ராகேல்: "உன் குமாரனுடைய தூதாயீம் கனிகளுக்கு ஈடாக இன்று இரவு அவர் உன்னோடே சயனிக்கட்டும்" (ஆதி 30:15) என்று சொல்லி தன் புருஷன் யாக்கோபை, தன் சகோதரியாகிய லேயாளுக்கு விட்டுக்கொடுக்கிறாள்.

தூதாயீம் கனிகளைச் சாப்பிட்டால் மலட்டுத்தன்மை நீங்கி, பிள்ளை பிறக்குமென்று பூர்வகாலத்தில் நம்பினார்கள். (ஆதி 30:14-16; உன் 7:13). பிற்காலத்தில் அரபியர்கள் தூதாயீம் கனியை "சாத்தானின் கனி" என்று அழைத்தார்கள். இதற்கான காரணம் தெரியவில்லை. தனக்கு தூதாயீம் கனி அவசியம் தேவை என்று ராகேல் உணருகிறாள். (ஆதி 30:16-21) இந்தக் கனியைப் புசித்த பின்பும்கூட ராகேலுக்கு உடனடியாகக் குழந்தை பிறக்கவில்லை.

சாயங்காலத்தில் யாக்கோபு வெளியிலிருந்து வருகிறார். அப்போது லேயாள் புறப்பட்டு யாக்கோபுக்கு எதிர்கொண்டுபோய், அவரை நோக்கி, "என் குமாரனுடைய தூதாயீம் கனிகளால் உம்மைக் கொண்டேன்; ஆகையால், நீர் என்னிடத்தில் வரவேண்டும்" என்று கூப்பிடுகிறாள்; யாக்கோபு அன்று இரவு லேயாளோடே சயனிக்கிறார் (ஆதி 30:16).

தேவன் லேயாளுக்குச் செவிகொடுக்கிறார். அவள் கர்ப்பவதியாகி யாக்கோபுக்கு ஐந்தாம் குமாரனைப் பெறுகிறாள். அப்பொழுது லேயாள்; "நான் என் வேலைக்காரியை என் புருஷனுக்குக் கொடுத்த பலனைத் தேவன் எனக்குத் தந்தார்" என்று சொல்லி, அவனுக்கு இசக்கார் என்று பேரிடுகிறாள் (ஆதி 30:17,18).

அப்புறம் லேயாள் மறுபடியும் கர்ப்பவதியாகி யாக்கோபுக்கு ஆறாம் குமாரனைப் பெறுகிறாள். அப்பொழுது லேயாள்: "தேவன் எனக்கு நல்ல ஈவைத்தந்தார்; என் புருஷனுக்கு நான் ஆறு குமாரரைப் பெற்றபடியால், இப்பொழுது அவர் என்னுடனே வாசம்பண்ணுவார்" என்று சொல்லி, அவனுக்குச் செபுலோன் என்று பேரிடுகிறாள் (ஆதி 30:19,20).

"மலடியைச் சந்தோஷமான பிள்ளைத்தாய்ச்சியாக்கி, வீட்டிலே குடியிருக்கப்பண்ணுகிறார். அல்லேலூயா" (சங் 113:9).

லேயாளுக்கு இதுவரையிலும் ஆறு குமாரர்கள் பிறந்திருக்கிறார்கள். பின்பு லேயாள் ஒரு குமாரத்தியையும் பெற்று, அவளுக்குத் தீனாள் என்று பேரிடுகிறாள் (ஆதி 30:21). தீனாளைப்பற்றி சரித்திரம் ஆதி 34-ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ராகேலுக்கு இதுவரையிலும் ஒரு பிள்ளையும் பிறக்கவில்லை. லேயாள் ஆறு பிள்ளைகளைப் பெற்றதை ராகேல் மனவேதனையோடு பார்த்துக்கொண்டிருக்கிறாள். அவளுடைய இருதயத்தில் பொறாமையும் உண்டாயிற்று. மனதில் ஏக்கமும் இருக்கிறது.

தனக்கு பிள்ளை பிறக்கவேண்டுமென்று ராகேல் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறாள். அவள் ஆரம்பத்தில் யாக்கோபிடம், "எனக்கு பிள்ளை கொடும்" (ஆதி 30:1) என்று கேட்டாள். யாக்கோபோ, "நான் தேவனா" என்று சொல்லிவிட்டார். இப்போது ராகேல் தேவனிடத்தில் ஜெபம்பண்ணுகிறாள்.

தேவன் ராகேலை நினைத்தருளுகிறார்; தேவன் ராகேலின் விண்ணப்பத்திற்கு செவி கொடுத்து அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்கிறார். ராகேல் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுகிறாள். ராகேல் "தேவன் என் நிந்தையை நீக்கிவிட்டார்" என்றும், "இன்னும் ஒரு குமாரனைக் கர்த்தர் எனக்குத் தருவார்" என்றும் சொல்லி, அவனுக்கு யோசேப்பு என்று பேரிடுகிறாள் (ஆதி 30:22-24).

எபிரெய பாஷையில், "யோசேப்பு" என்னும் பேரில் இரண்டு எபிரெய வார்த்தைகள் சேர்ந்திருக்கிறது. அவை "ஆசாப்", "ஜாசாப்" என்பனவாகும். ஆசாப் என்னும் வார்த்தைக்கு "அவர் என் நிந்தையை நீக்கிவிட்டார்" என்று பொருள். ஜாசாப் என்னும் வார்த்தைக்கு, "கர்த்தர் எனக்கு இன்னும் ஒரு குமாரனைத் தருவார்" என்று பொருள்.

யாக்கோபும் லாபானும்
ஆதி 30:25-36

ஆதி 30:25. ராகேல் யோசேப்பைப் பெற்றபின், யாக்கோபு லாபனை நோக்கி: நான் என் ஸ்தானத்திற்கும் என் தேசத்திற்கும் போக என்னை அனுப்பிவிடும்.

ஆதி 30:26. நான் உமக்கு ஊழியஞ்செய்து சம்பாதித்த என் மனைவிகளையும் என் பிள்ளைகளையும் எனக்குத் தாரும்; நான் போவேன், நான் உம்மிடத்தில் சேவித்த சேவகத்தை நீர் அறிந்திருக்கிறீர் என்றான்.

ஆதி 30:27. அப்பொழுது லாபான்: உன் கண்களில் எனக்குத் தயவு கிடைத்ததேயானால் நீ இரு; உன் நிமித்தம் கர்த்தர் என்னை ஆசீர்வதித்தார் என்று குறிப்பினால் அறிந்தேன்.

ஆதி 30:28. உன் சம்பளம் இன்னதென்று எனக்குச் சொல், நான் அதைத் தருவேன் என்றான்.

ஆதி 30:29. அதற்கு அவன்: நான் உம்மைச் சேவித்த விதமும், உம்முடைய மந்தை என்னிடத்தில் இருந்த விதமும் அறிந்திருக்கிறீர்.

ஆதி 30:30. நான் வருமுன்னே உமக்கு இருந்தது கொஞ்சம்; நான் வந்தபின் கர்த்தர் உம்மை ஆசீர்வதித்ததினால் அது மிகவும் பெருகியிருக்கிறது; இனி நான் என் குடும்பத்துக்குச் சம்பாத்தியம் பண்ணுவது எப்பொழுது என்றான்.

ஆதி 30:31. அதற்கு அவன்: நான் உனக்கு என்ன தரவேண்டும் என்றான்; யாக்கோபு: நீர் எனக்கு ஒன்றும் தரவேண்டியதில்லை; நான் சொல்லுகிறபடி நீர் எனக்குச் செய்தால், உம்முடைய மந்தையைத் திரும்ப மேய்த்துக் காப்பேன்.

ஆதி 30:32. நான் இன்றைக்குப்போய், உம்முடைய மந்தைகளையெல்லாம் பார்வையிட்டு, அவைகளில் புள்ளியும் வரியும் கறுப்புமுள்ள செம்மறியாடுகளையும், வரியும் புள்ளியுமுள்ள வெள்ளாடுகளையும் பிரித்துவிடுகிறேன்; அப்படிப்பட்டவை இனி எனக்குச் சம்பளமாயிருக்கட்டும்.

ஆதி 30:33. அப்படியே இனிமேல் என் சம்பளமாகிய இவற்றை நீர் பார்வையிடும்போது, என் நீதி விளங்கும்; புள்ளியும் வரியுமில்லாத வெள்ளாடுகளும், கறுப்பான செம்மறியாடுகளும் என் வசத்தில் இருந்தால், அவையெல்லாம் என்னால் திருடிக்கொள்ளப்பட்டவைகளாய் எண்ணப்படட்டும் என்றான்.

ஆதி 30:34. அதற்கு லாபான்: நீ சொன்னபடியே ஆகட்டும் என்று சொல்லி,

ஆதி 30:35. அந்நாளிலே கலப்பு நிறமும் வரியுமுள்ள வெள்ளாட்டுக் கடாக்களையும், புள்ளியும் வரியுமுள்ள வெள்ளாடுகள் யாவையும், சற்று வெண்மையும் கருமையுமுள்ள செம்மறியாடுகள் யாவையும் பிரித்து, தன் குமாரரிடத்தில் ஒப்புவித்து,

ஆதி 30:36. தனக்கும் யாக்கோபுக்கும் இடையிலே மூன்று நாள் பிரயாணதூரத்தில் இருக்கும்படி வைத்தான். லாபானுடைய மற்ற ஆடுகளை யாக்கோபு மேய்த்தான்.

யாக்கோபு தன்னுடைய குடும்பத்தைப்பற்றி நினைத்துப் பார்க்கிறார். லாபான் சொன்ன பிரகாரம் யாக்கோபு அவருக்கு இதுவரையிலும் உண்மையாய் வேலை செய்தார். யாக்கோபு இதுவரையிலும் லாபானுக்கு பதினாலு வருஷங்கள் வேலை செய்திருக்கிறார். இப்போது யாக்கோபின் மனதிலே கானான் தேசத்தின்மீது பிரியமுண்டாயிற்று.

கானான் தேசம் யாக்கோபின் சொந்ததேசம். யாக்கோபின் தகப்பனாரும் தாயும் அங்கே இருக்கிறார்கள். யாக்கோபு தன் பெற்றோரைப் பார்க்க விரும்புகிறார். யாக்கோபு கானான் தேசத்தின்மீது பிரிமாயிருப்பதற்கு இவை மாத்திரம் காரணமல்ல. கானான் தேசம் வாக்குத்தத்த தேசம். கர்த்தர் கானான் தேசத்தை ஆபிரகாமின் சந்ததிக்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். ஆகையினால் யாக்கோபுக்கு கானான் தேசத்தின்மீது பிரியமுண்டாயிற்று.

யாக்கோபு கானான் தேசத்திற்கு போகவேண்டும் என்னும் விருப்பத்தை லாபானுக்கு சொல்லுகிறார். அவர் லாபானிடத்தில் சொல்லிக்கொள்ளாமல், தன்னுடைய தேசத்திற்கு திருட்டளவாய்ப்போக பிரியப்படவில்லை.

ராகேல் யோசேப்பைப் பெற்றபின், யாக்கோபு லாபனை நோக்கி, "நான் என் ஸ்தானத்திற்கும் என் தேசத்திற்கும் போக என்னை அனுப்பிவிடும். நான் உமக்கு ஊழியஞ்செய்து சம்பாதித்த என் மனைவிகளையும் என் பிள்ளைகளையும் எனக்குத்தாரும்; நான் போவேன், நான் உம்மிடத்தில் சேவித்த சேவகத்தை நீர் அறிந்திருக்கிறீர்" *(ஆதி 30:25,26)* என்று சொல்லுகிறார்.

யாக்கோபு தன் மனைவிகளோடு இருந்த பதினான்கு வருஷ காலத்தில் அவருக்கு பதினொரு குமாரர்களும், ஒரு குமாரத்தியும் பிறந்தார்கள். இதன் பின்பு, தன் தேசத்திற்குப் போகவேண்டுமென்று யாக்கோபு விரும்புகிறார். ஆனால் லாபான் அவரை ஆரானில் மேலும் ஆறு வருஷங்கள் இருக்க வைக்கிறார். *(ஆதி 30:25-43= ஆதி 29:20-30; ஆதி 31:38-42).*

புதிய ஏற்பாட்டில் பல மனைவி விவாகம் தடைபண்ணப்பட்டிருக்கிறது. (மத் 19:4-5; மாற்கு 10:2-8; 1தீமோ 3:2,12; தீத்து 1:6; அப் 17:30). பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பல மனைவி விவாகத்தை ஏற்றுக் கொண்டார்கள். (யாத் 21:10; 1சாமு 1; 2சாமு 12:8; 2நாளா 24:3) பலர் பல மனைவிகளை விவாகம் பண்ணியிருக்கிறார்கள். (ஆதி 4:19; ஆதி 16:1-4; ஆதி 25:1-6; ஆதி 26:34; ஆதி 28:9; ஆதி 29:16-28; நியா 8:30; 1சாமு 1:2; 1சாமு 25:39-44; 2சாமு 3:2-5; 2சாமு 5:13; 2சாமு 12:8; 1இராஜா 11; 1நாளா 4:5; 1நாளா 14:3; யோபு 27:15).

அர்மகெதோன் யுத்தத்தின்போது பல மனைவி விவாகத்தை ஸ்திரீகள் விரும்புவார்கள். (ஏசா 4:1). பல மனைவி விவாகத்தினால் ஏற்படும் தீய விளைவுகள் ஆதி 16:1-4; ஆதி 29:20-30:26; உபா 17:17; 1சாமு 1:1-10; 1இராஜா 11:1-11; 2நாளா 11:21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

பரிசுத்தவேதாகமத்தில் பல மனைவிகளை விவாகம்பண்ணின ஒரு சிலரைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களின் விவரம் வருமாறு :

1. லாமேக்கு (ஆதி 4:19-23)
2. ஆபிரகாம் (ஆதி 16, ஆதி 25)
3. ஏசா (ஆதி 26:34; ஆதி 28:9)
4. யாக்கோபு (ஆதி 29:16-30:24)
5. கிதியோன் (நியா 8:30)
6. எல்க்கானா (1சாமு 1:2)
7. தாவீது (1சாமு 25:39-44; 2சாமு 3:2-5; 2சாமு 5:13; 1நாளா 14:3)
8. சாலொமோன் (1இராஜா 11:1-8)
9. ரெகொபெயாம் (2நாளா 11:18-23)
10. அசூர் (1நாளா 4:5)
11. அபியா (2நாளா 13:21)
12. யோராம் (2நாளா 21:14)
13. யோசியா (2நாளா 21:14)
14. ஆகாப் (2இராஜா 10:1)
15. யோயாக்கீம் (2இராஜா 24:15)
16. பெல்ஷாத்சார் (தானி 5:2)

லாபானுக்கு யாக்கோபை அவருடைய சொந்த தேசமாகிய கானான் தேசத்திற்கு அனுப்ப இஷ்டமில்லை. யாக்கோபு தன்னோடுகூடவே இருந்து தனக்கு வேலை செய்யவேண்டுமென்று லாபான் விரும்புகிறார். லாபானுக்கு யாக்கோபின்மீதோ அல்லது அவருடைய மனைவிகள்மீதோ அல்லது அவருடைய பிள்ளைகள்மீதோ அதிகமான பிரியமில்லை. லாபான் தன்னுடைய சுயநலத்தைப் பார்க்கிறார். யாக்கோபு தன்னோடு கூடயிருந்து, தனக்கு வேலை செய்தால், தனக்கு ஆதாயம் உண்டாகும் என்று லாபான் எதிர்பார்க்கிறார்.

லாபான் யாக்கோபை நோக்கி, "உன் கண்களில் எனக்குத்தயவு கிடைத்ததேயானால் நீ இரு; உன் நிமித்தம் கர்த்தர் என்னை ஆசீர்வதித்தார் என்று குறிப்பினால் அறிந்தேன். உன் சம்பளம் இன்னதென்று எனக்குச் சொல், நான் அதைத் தருவேன்" (ஆதி 30:27,28) என்று சொல்லுகிறார்.

லாபான் யாக்கோபை அவருடைய சொந்த தேசத்திற்கு அனுப்பிவிடாமல், அவரை தன்னோடுகூட வைத்திருப்பதற்கு, ஆசை வார்த்தைகளைப் பேசி, பேரம் பேசுகிறார். லாபானிடத்தில் ஏராளமான ஆடுகள் இருக்கிறது. இந்த ஆடுகளையெல்லாம் மேய்க்கும் வேலையை யாக்கோபு பார்க்கவேண்டுமென்று லாபான் விரும்புகிறார். அதற்காக லாபான் யாக்கோபுக்கு நல்ல சம்பளம் கொடுக்கவும் முன்வருகிறார்.

லாபான் ஒரு தந்திரவாதி. அவர் ஒரு சுயநலக்காரர். லாபானைப்போன்றவர்களுக்கு தந்திரமான வார்த்தைகளை எப்படி பேசவேண்டும் என்பதும் தெரிந்திருக்கும். அவர்கள் தங்கள் சுயநலத்திற்காக ஆசை வார்த்தைகளைப் பேசுவார்கள். யாக்கோபு கடினமாய் உழைக்கக்கூடியவர். அவர் உண்மையானவர். யாக்கோபு தன்னுடைய ஆடுகளை மேய்த்தபோது, தனக்கு அதிகலாபம் உண்டாயிற்று என்பதை லாபானால் மறுக்க முடியவில்லை. "உன் நிமித்தம் கர்த்தர் என்னை ஆசீர்வதித்தார்" என்று லாபான் யாக்கோபுக்கு சொல்லுகிறார்.

யாக்கோபு மூலமாக தனக்கு வந்த ஆசீர்வாதத்தை லாபான் குறிப்பினால் அறிந்திருக்கிறார். "குறிப்பினால் அறிதல்" என்னும் வாக்கியத்திற்கு, "அனுபவத்தின் மூலமாக அறிந்துகொள்ளுதல்" என்று பொருள். யாக்கோபு தன்னுடைய ஆடுகளை நன்றாக மேய்த்து நிர்வாகம்பண்ணியிருக்கிறார் என்பது லாபானுக்கு தெரிந்திருக்கிறது. லாபான் யாக்கோபைப்பற்றி புகழ்ந்துசொல்லும்போது, அவர் கர்த்தரையும் புகழ்ந்து பேசுகிறார்.

யாக்கோபு லாபானிடத்தில், தான் லாபானுக்கு வேலை செய்த விதத்தை தெளிவாக எடுத்து சொல்லுகிறார். யாக்கோபு லாபானை நோக்கி, "நான் உம்மைச் சேவித்த விதமும், உம்முடைய மந்தை என்னிடத்தில் இருந்த விதமும் அறிந்திருக்கிறீர். நான் வருமுன்னே உமக்கு இருந்தது கொஞ்சம்; நான் வந்தபின் கர்த்தர் உம்மை ஆசீர்வதித்ததினால் அது மிகவும் பெருகியிருக்கிறது; இனி நான் என் குடும்பத்துக்குச் சம்பாத்தியம் பண்ணுவது எப்பொழுது" (ஆதி 30:29,30) என்று சொல்லுகிறார்.

யாக்கோபு லாபானுக்கு உண்மையாய் வேலை செய்திருக்கிறார். ஆனாலும் லாபானுக்கு வந்த ஆசீர்வாதம் தன்னால் வந்ததல்ல என்றும், அது கர்த்தரால் வந்தது என்றும் யாக்கோபு சொல்லுகிறார். யாக்கோபு கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர். அவர் கர்த்தருடைய சமுகத்தில் தன்னைத் தாழ்த்தி, கர்த்தரை உயர்த்துகிறார். யாக்கோபு லாபானின் ஆசீர்வாதத்தைப் பற்றிச் சொல்லும்போது, "கர்த்தர் உம்மை ஆசீர்வதித்ததினால் அது மிகவும் பெருகியிருக்கிறது" என்று சொல்லுகிறார்.

கர்த்தர் நம்மை ஆசீர்வதித்தால் மாத்திரமே, நமக்கு ஆசீர்வாதம் வரும். கர்த்தருடைய ஆசீர்வாதமே நமக்கு தங்கும். யாக்கோபு ஒளிவு மறைவு இல்லாமல், மாய்மாலம்பண்ணாமல் தெளிவாகப் பேசுகிறார். அவருடைய வார்த்தையில் உண்மையிருக்கிறது. அவருடைய சுபாவத்தில் கண்ணியம் இருக்கிறது. லாபானோ யாக்கோபின் நல்ல சுபாவத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறார்.

யாக்கோபு தன்னோடு கூடயிருக்கவேண்டும் என்று லாபான் விரும்பினாலும், யாக்கோபு தன் ஸ்தானத்திற்கும், தன் தேசத்திற்கும் போகவேண்டும் என்று விரும்புகிறார். லாபான் தனக்கு எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும், யாக்கோபு இனிமேல் தன் குடும்பத்திற்கு சம்பாத்தியம் பண்ணவேண்டும் என்றே பிரியப்படுகிறார். யாக்கோபுக்கு இப்போது மனைவிகளும் பிள்ளைகளும் இருக்கிறார்கள். அவர்களுக்கு சம்பாத்தியம் பண்ணவேண்டும் என்பது யாக்கோபின் மனவிருப்பமாயிருக்கிறது.

லாபானோ யாக்கோபுக்கு எவ்வளவு சம்பளம் வேண்டுமானாலும் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். லாபான் ஏற்கெனவே யாக்கோபிடம், "உன் சம்பளம் இன்னதென்று எனக்கு சொல், நான் அதைத்தருவேன்" (ஆதி 30:28) என்று ஏற்கெனவே சொன்னார். இப்போது மறுபடியுமாய், "நான் உனக்கு என்ன தரவேண்டும்" என்று லாபான் யாக்கோபினிடத்தில் கேட்கிறார் (ஆதி 30:31).

யாக்கோபு லாபானிடத்தில் பணத்தை சம்பளமாக பெற்றுக்கொள்ள விரும்பவில்லை. அவர் லாபானை நோக்கி, "நீர் எனக்கு ஒன்றும் தரவேண்டியதில்லை" என்று சொல்லிவிடுகிறார். ஆனாலும் தன் குடும்பத்திற்கு சம்பாத்தியம் பண்ணவேண்டும் என்னும் விருப்பம் யாக்கோபின் மனதிலிருக்கிறது.

யாக்கோபு லாபானை நோக்கி, "நான் சொல்லுகிறபடி நீர் எனக்குச் செய்தால், உம்முடைய மந்தையைத் திரும்ப மேய்த்துக் காப்பேன்" (ஆதி 30:31) என்று சொல்லுகிறார். யாக்கோபு இனிமேல் லாபானிடத்தில் சம்பளம் இல்லாமல் வேலைபார்க்க விரும்பவில்லை.

யாக்கோபின் மூலமாக லாபானுக்கு ஏற்கெனவே அதிக வருமானம் கிடைத்திருக்கிறது. யாக்கோபின் நிமித்தம் கர்த்தர் லாபானை அதிகமாய் ஆசீர்வதித்திருக்கிறார். யாக்கோபு லாபானிடத்தில் வருவதற்கு முன்பாக, அவரிடத்தில் சம்பாத்தியம் கொஞ்சமாயிருந்தது. யாக்கோபு வந்தபின்போ, லாபானின் சம்பாத்தியம் பெருகியிருக்கிறது. இது லாபானுக்கும் தெரியும். ஆகையினால் லாபான் யாக்கோபுக்கு அதிகமான சம்பளத்தைக் கொடுத்து, அவரை தன்னோடு வைத்துக்கொள்ள விரும்புகிறார்.

லாபான் யாக்கோபுக்கு அதிகமான சம்பளம் கொடுக்க முன்வந்தாலும், யாக்கோபு பேராசைப்படவில்லை. யாக்கோபின் வார்த்தையில் உண்மையும் கண்ணியமும் இருக்கிறது. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் மனத்தாழ்மையுள்ளவர்களாயிருப்பார்கள். அவர்கள் பிறருக்கு நன்மை செய்யவேண்டும் என்றே விரும்புவார்கள். பரிசுத்தவான்கள் பிறருடைய சொத்துக்கள்மீது ஆசைப்படவும் மாட்டார்கள். அதை அபகரிக்கவேண்டுமென்று வஞ்சகமாய் திட்டமிடவும் மாட்டார்கள். மற்றவர்களுக்கு நன்மை செய்வதே பரிசுத்தவான்களுக்கு மெய்யான சந்தோஷம்.

யாக்கோபுக்கும் இப்போது குடும்பம் இருக்கிறது. அவருக்கு மனைவிகளும் பிள்ளைகளும் இருக்கிறார்கள். யாக்கோபு தன் குடும்பத்திற்கும் சம்பாத்தியம் பண்ணவேண்டும். இது யாக்கோபின் குடும்ப கடமை. யாக்கோபு தன்னுடைய குடும்ப பொறுப்புக்களை உணர்ந்து, லாபானுடைய மந்தையை திரும்ப மேய்த்து காப்பதற்கு சம்மதிக்கிறார். ஆனாலும் யாக்கோபு சம்பளமில்லாமல் வேலை பார்க்க விரும்பவில்லை. தான் சொல்லுகிறபடி லாபான் தனக்கு செய்யவேண்டுமென்று யாக்கோபு ஒரு நிபந்தனையை சொல்லுகிறார்.

யாக்கோபு லாபானை நோக்கி, "நான் இன்றைக்குப்போய், உம்முடைய மந்தைகளையெல்லாம் பார்வையிட்டு, அவைகளில் புள்ளியும் வரியும் கறுப்புமுள்ள செம்மறியாடுகளையும், வரியும் புள்ளியுமுள்ள வெள்ளாடுகளையும் பிரித்துவிடுகிறேன்; அப்படிப்பட்டவை இனி எனக்குச் சம்பளமாயிருக்கட்டும்" (ஆதி 30:32) என்று சொல்லுகிறார்.

யாக்கோபு லாபானிடத்திலிருந்து சம்பளம் பெற்றுக் கொள்ளவில்லை. தேவனுடைய பராமரிப்பு தனக்கு போதுமென்று யாக்கோபு நினைக்கிறார் (சங் 118:8; எபி 13:5).

வெண்மை நிற பெண்ணாடுகள் புள்ளியும் வரியுமுள்ள ஆடுகளை ஈனும். (ஆதி 30:35; ஆதி 31:8). கிழக்கு தேசத்தில் செம்மறியாடுகள் பொதுவாக வெண்மை நிறத்திலும், வெள்ளாடுகள் பொதுவாக கருப்பு நிறத்திலும் இருக்கும். புள்ளியும் வரியுமுள்ள வெள்ளாடுகளோ, செம்மறியாடுகளோ அதிகமாக இருக்காது. யாக்கோபு தனக்கு புள்ளியும் வரியுமுள்ள ஆடுகள் போதும் என்று நினைக்கிறார்.

யாக்கோபு தன்னை கர்த்தருடைய தெய்வீக பராமரிப்புக்கும், அவருடைய வழிநடத்துதலுக்கும் ஒப்புக்கொடுக்கிறார். யாக்கோபுக்கு ஆடுகளைப்பற்றி நன்றாய்த் தெரிந்திருக்கிறது. புள்ளியும், வரியும், கலப்பு நிறமும் உள்ள ஆடுகள் தனக்கு சம்பளமாக தரப்படவேண்டும் என்று யாக்கோபு எதிர்பார்க்கிறார். புள்ளியும் வரியுமில்லாத, ஒரே நிறத்திலுள்ள ஆடுகளெல்லாம் லாபானுக்கு சொந்தமாக இருக்கும்.

கர்த்தர் லாபானுடைய மந்தையிலே, புள்ளியும் வரியும், கலப்பு நிறமுமான ஆடுகளை பெருகப்பண்ணினால், யாக்கோபுக்கு சம்பளம் அதிகமாய்க் கிடைக்கும். கர்த்தரே பெருக்கத்தைக் கொடுக்கிறவர். யாக்கோபு தன்னுடைய சம்பளத்திற்கு கர்த்தரையே சார்ந்திருக்கிறார்.

புள்ளியும் வரியுமில்லாத, கலப்பு நிறமில்லாத ஆடுகளெல்லாம் லாபானுக்கே சொந்தம் என்று யாக்கோபு சொல்லுகிறார். லாபானுக்கு சொந்தமானதை யாக்கோபு தனக்கு சொந்தமாக்கிக்கொள்ளமாட்டார். யாக்கோபு லாபானிடத்தில் இதையும் தெளிவுபடுத்துகிறார்.

யாக்கோபு லாபானை நோக்கி, "இனிமேல் என் சம்பளமாகிய இவற்றை நீர் பார்வையிடும்போது, என் நீதி விளங்கும்; புள்ளியும் வரியுமில்லாத வெள்ளாடுகளும், கறுப்பான செம்மறியாடுகளும் என் வசத்தில் இருந்தால், அவையெல்லாம் என்னால் திருடிக்கொள்ளப்பட்டவைகளாய் எண்ணப்படட்டும்" (ஆதி 30:33) என்று சொல்லுகிறார்.

யாக்கோபை தன்னிடத்தில் எப்படியாவது வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டும் என்று லாபான் விரும்புகிறார். லாபான் யாக்கோபை நோக்கி, "உன் சம்பளம் இன்னதென்று எனக்குச் சொல், நான் அதைத் தருவேன்" என்று ஏற்கெனவே சொன்னார். அவர் யாக்கோபுக்கு எவ்வளவு சம்பளம் வேண்டுமானாலும் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். இப்போது யாக்கோபு தன்னுடைய சம்பளத்தைப்பற்றிச் சொல்லும்போது, லாபான் யாக்கோபை நோக்கி, "நீ சொன்னபடியே ஆகட்டும்" (ஆதி 30:34) என்று சொல்லி சம்மதம் தெரிவிக்கிறார்.

லாபான் யாக்கோபுக்கு உண்மையிலேயே அதிகமான சம்பளத்தை கொடுக்க விரும்பவில்லை. லாபானுக்கு தன்னுடைய மந்தையிலுள்ள ஆடுகளைப்பற்றி நன்றாய்த் தெரியும். லாபானுடைய மந்தையில் புள்ளியும், வரியும், கலப்பு நிறமுமான ஆடுகள் மிகவும் குறைவாகவே இருக்கிறது. ஆகையினால் யாக்கோபுக்கு குறைவான சம்பளமே கிடைக்கும் என்று லாபான் நினைக்கிறார்.

அந்தக் குறைவான சம்பளத்தையும் யாக்கோபுக்கு கொடுக்க, லாபானுக்கு இஷ்டமில்லை. ஆகையினால் தன் மந்தையிலுள்ள வரியும், புள்ளியும், கலப்பு நிறமுமான ஆடுகளை லாபான் தனியாகப் பிரித்துவிடுகிறார். ஆகையினால், இயற்கையின் பிரமாணத்தின் பிரகாரம், இனிமேல் மந்தையிலுள்ள ஆடுகள், புள்ளியும் வரியும், கலப்பு நிறமுமான குட்டிகளை போடுவதற்கு வாய்ப்பு இல்லை.

லாபான் தன் மந்தையிலுள்ள ஆடுகளை யாக்கோபினிடத்தில் ஒப்புவிப்பதற்கு முன்பாக, தன்னிடத்திலுள்ள கலப்பு நிற ஆடுகளை தன் குமாரரிடத்தில் ஒப்புவிக்கிறார். அவற்றை தனியாக வேறுபிரித்து விடுகிறார்.

அந்நாளிலே லாபான் கலப்பு நிறமும் வரியுமுள்ள வெள்ளாட்டுக் கடாக்களையும், புள்ளியும் வரியுமுள்ள வெள்ளாடுகள் யாவையும், சற்று வெண்மையும் கருமையுமுள்ள செம்மறியாடுகள் யாவையும் பிரித்து, தன் குமாரரிடத்தில் ஒப்புவிக்கிறார். லாபான் தனக்கும் யாக்கோபுக்கும் இடையிலே மூன்று நாள் பிரயாண தூரத்தில் இருக்கும்படி அந்த ஆடுகளை வைக்கிறார். லாபானுடைய மற்ற ஆடுகளை யாக்கோபு மேய்க்கிறார் (ஆதி 30:35,36).

யாக்கோபின் நிபந்தனைகளை லாபான் அங்கிகரிக்கிறார். ஆரம்பத்திலேயே லாபான் கருப்பு நிறமும் புள்ளியும் வரியுமுள்ள ஆடுகளையெல்லாம் தனியாகப் பிரித்து விடுகிறார். இனிமேல் இப்படிப்பட்ட ஆட்டுக்குட்டிகள் பிறக்காது என்பது லாபானின் எண்ணம். மேலும் பல வருஷங்களுக்கு யாக்கோபை தன்னிடத்தில் வேலைக்கு வைத்துக் கொள்ளலாம் என்று லாபான் நினைக்கிறார்.

லாபான் கறுப்பு நிற ஆடுகளையும், புள்ளியும் வரியுமான ஆடுகளையும் தனியாகப் பிரித்து விட்டார். யாக்கோபு மீதமுள்ள ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறார். மூன்றுநாள் பிரயாண தூரம் என்பது 50 மைல்களைக் குறிக்கும். லாபான் தான் பிரித்துக் கொண்ட ஆடுகளை 50 மைலுக்கு அப்பால் தள்ளி வைக்கிறார் (ஆதி 30:31-35).

யாக்கோபு மறுபடியும் தன்னுடைய வேலையை ஆரம்பிக்கும்போது அவரிடத்தில் கறுப்பு நிற ஆடுகளோ, புள்ளியும் வரியுமுள்ள ஆடுகளோ ஒன்றும் இல்லை. லாபானின் குமாரர் என்று இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் லாபானுக்கு எத்தனை குமாரர் இருந்தார்கள் என்று தெரியவில்லை. இந்த காலத்தில் யாக்கோபுக்கு பதினொரு குமாரர்கள் இருக்கிறார்கள் (ஆதி 30:22-28).

இப்போது யாக்கோபு மேய்க்கிற ஆடுகள் எல்லாமே ஒரே நிறமுள்ளதாயிருக்கிறது. எல்லா ஆடுகளும் வெள்ளை நிறத்திலோ, அல்லது கறுப்பு நிறத்திலோ இருக்கிறது. யாக்கோபு மேய்க்கிற ஆடுகளில் புள்ளியோ, வரியோ, கலப்புநிறமோ இல்லை. இவை குட்டி போடும்போது, தங்களுடைய நிறத்தைப்போலவே குட்டி போடும். ஒரே நிறமுள்ள ஆடுகள், கலப்பு நிற குட்டிகளைப் போடுவதற்கு வாய்ப்பில்லை.

வரியும் புள்ளியுமுள்ள ஆட்டுக்குட்டிகளும், கலப்புநிறமுள்ள ஆட்டுக்குட்டிகளும் யாக்கோபுக்கு சம்பளமாக கொடுக்கப்படும். லாபான் தன்னுடைய கலப்புநிற ஆடுகளை வேறுபிரித்து, தனியே வைத்துவிட்டதினால், யாக்கோபின் மந்தையிலுள்ள ஆடுகளெல்லாம் ஒரே நிறமுள்ளதாயிருக்கிறது. ஒரே நிறமுள்ள குட்டிகளெல்லாம் லாபானைச்சேரும். கலப்புநிறமுள்ள குட்டிகள் மாத்திரமே யாக்கோபுக்கு சம்பளமாக கிடைக்கும்.

ஆகையினால், இயற்கையின் பிரகாரமாக, யாக்கோபுக்கு அதிகமான சம்பளம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. ஒரு வேளை அவருக்கு சம்பளமே கிடைக்காமல் போனாலும் போகலாம். மந்தையிலுள்ள ஆடுகள் கலப்பு நிறமுள்ள குட்டிகளைப் போடவில்லையென்றால், யாக்கோபு லாபானுக்கு சம்பளமில்லாமல் இலவசமாக வேலை பார்க்கவேண்டும்.

யாக்கோபு விருத்தியடைகிறார் ஆதி 30:37-43

ஆதி 30:37. பின்பு யாக்கோபு பச்சையாயிருக்கிற புன்னை, வாதுமை, அர்மோன் என்னும் மரங்களின் கொப்புகளை வெட்டி, இடையிடையே வெண்மை தோன்றும்படி, பட்டையை உரித்து,

ஆதி 30:38. தான் உரித்த கொப்புகளை ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும் கால்வாய்களிலும் தொட்டிகளிலும் ஆடுகளுக்கு எதிராகப் போட்டுவைப்பான்; ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும்போது பொலிவதுண்டு.

ஆதி 30:39. ஆடுகள் அந்தக் கொப்புகளுக்கு முன்பாகப் பொலிந்தபடியால், அவைகள் கலப்பு நிறமுள்ளதும் புள்ளியுள்ளதும் வரியுள்ளதுமான குட்டிகளைப் போட்டது.

ஆதி 30:40. அந்த ஆட்டுக்குட்டிகளை யாக்கோபு பிரித்துக்கொண்டு, ஆடுகளை லாபானுடைய மந்தையிலிருக்கும் கலப்புநிறமானவைகளுக்கும் கறுப்பானவைகளெல்லாவற்றிற்கும் எதிராக நிறுத்தி, தன் ஆடுகளை லாபானுடைய மந்தையோடே சேர்க்காமல், தனிப்புறமாக வைத்துக்கொள்வான்.

ஆதி 30:41. பலத்த ஆடுகள் பொலியும்போது, அந்தக் கொப்புகளுக்கு எதிரே பொலியும்படி யாக்கோபு அவைகளை அந்த ஆடுகளின் கண்களுக்கு முன்பாகக் கால்வாய்களிலே போட்டுவைப்பான்.

ஆதி 30:42. பலவீனமான ஆடுகள் பொலியும் போது, அவைகளை போடாமலிருப்பான்; இதனால் பலவீனமானவைகள் லாபானையும், பலமுள்ளவைகள் யாக்கோபையும் சேர்ந்தன.

ஆதி 30:43. இவ்விதமாய் அந்தப் புருஷன் மிகவும் விருத்தியடைந்து, திரளான ஆடுகளும், வேலைக்காரிகளும், வேலைக்காரரும், ஒட்டகங்களும், கழுதைகளும் உடையவனானான்.

இயற்கையின் பிரமாணம் யாக்கோபுக்கு பாதகமாகயிருக்கிறது. ஆனாலும் யாக்கோபு கர்த்தருடைய வார்த்தையையும், அவருடைய தெய்வீக பிரமாணத்தையும் நம்புகிறார். கர்த்தர் யாக்கோபை ஆசீர்வதிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். யாக்கோபுக்கு ஆடுகளை நன்றாய் மேய்க்கத் தெரியும். கர்த்தர் அவருக்கு விசேஷித்த ஞானத்தைக் கொடுக்கிறார். யாக்கோபு கர்த்தருடைய ஆலோசனையின் பிரகாரமாக லாபானுடைய ஆடுகளை மேய்க்கிறார்.

யாக்கோபு பச்சையாயிருக்கிற புன்னை, வாதுமை, அர்மோன் என்னும் மரங்களின் கொப்புகளை வெட்டி, இடையிடையே வெண்மை தோன்றும்படி, பட்டையை உரித்து, தான் உரித்த கொப்புகளை ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும் கால்வாய்களிலும் தொட்டிகளிலும் ஆடுகளுக்கு எதிராகப் போட்டுவைக்கிறார். ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும்போது பொலிவதுண்டு. ஆடுகள் அந்தக் கொப்புகளுக்கு முன்பாகப் பொலிந்தபடியால், அவைகள் கலப்பு நிறமுள்ளதும் புள்ளியுள்ளதும் வரியுள்ளதுமான குட்டிகளைப் போடுகிறது (ஆதி 30:37-39).

தனக்கு கறுப்பு நிற ஆடுகளும், புள்ளியும் வரியுமுள்ள ஆடுகளும் உற்பத்தியாக வேண்டுமென்பதற்காக யாக்கோபு இயற்கையில் பலவிதமான தந்திரங்களையெல்லாம் செய்கிறார். இதனால் யாக்கோபிற்கு ஏதாவது பயன் கிடைத்ததா என்று தெரியவில்லை. தேவனே யாக்கோபை ஆசீர்வதிக்கிறார். தேவன் லாபானின் ஆடுகளை எடுத்து யாக்கோபுக்குக் கொடுக்கிறார் (ஆதி 31:4-13). லாபான் யாக்கோபின் சம்பளத்தைப் பத்து முறை மாற்றி அவரை வஞ்சித்தார். வஞ்சிக்கப்பட்ட யாக்கோபிற்கு தேவன் நியாயம் செய்கிறார். (ஆதி 30:37, 31:5,7,9,11-12).

கானான் தேசத்திலுள்ள மேய்ப்பர்கள் இந்த வழக்கத்தை இன்றும் பின்பற்றுகிறார்கள். ஆட்டுக்குட்டிகள் தங்களுக்கு இஷ்டமான நிறத்திலே பிறக்கவேண்டுமென்றால், மேய்ப்பர்கள் இதுபோல செய்வது வழக்கம். யாக்கோபு கர்த்தருடைய கிருபையினால், மேய்ப்பரின் வழக்கத்தைப் பின்பற்றி, பட்டைகளை உரித்துப்போடுகிறார். ஆடுகளோ கலப்பு நிறமான குட்டிகளைப்போடுகிறது. புள்ளியும், வரியும் கலப்பு நிறமுமான குட்டிகளெல்லாம் யாக்கோபுக்கு சொந்தம்.

யாக்கோபு அந்த ஆட்டுக்குட்டிகளை பிரித்துக்கொண்டு, மற்ற ஆடுகளை லாபானுடைய மந்தையிலிருக்கும் கலப்புநிறமானவைகளுக்கும் கறுப்பானவைகளெல்லாவற்றிற்கும் எதிராக நிறுத்திக்கொள்வார். யாக்கோபு தன் ஆடுகளை லாபானுடைய மந்தையோடே சேர்க்காமல், தனிப்புறமாக வைத்துக்கொள்வார் (ஆதி 30:40).

பலத்த ஆடுகள் பொலியும்போது, அந்தக் கொப்புகளுக்கு எதிரேபொலியும்படி யாக்கோபு அவைகளை அந்த ஆடுகளின் கண்களுக்கு முன்பாகக் கால்வாய்களிலே போட்டுவைப்பார். பலவீனமான ஆடுகள் பொலியும்போது, அவைகளை போடாமலிருப்பார்; இதனால் பலவீனமானவைகள் லாபானையும், பலமுள்ளவைகள் யாக்கோபையும் சேருகிறது (ஆதி 30:41,42).

யாக்கோபின் ஆரம்பம் மிகவும் சாதாரணமாகயிருக்கிறது. ஆனால் முடிவோ சம்பூரணமானதாயும் திரளானதாயும் இருக்கிறது. யாக்கோபு மிகவும் விருத்தியடைகிறார். அவர் திரளான ஆடுகளும், வேலைக்காரிகளும், வேலைக்காரரும், ஒட்டகங்களும், கழுதைகளும் உடையவராகிறார் (ஆதி 30:43).

நாம் அற்பமான ஆரம்பத்தை அசட்டைபண்ணக்கூடாது. கர்த்தர் கொஞ்சத்தில் உண்மையுள்ளவர்களை அநேகத்தின்மேல் அதிகாரியாக்குவார். யாக்கோபு கொஞ்சத்திலே உண்மையுள்ளவராயிருந்தார். கர்த்தர் அவருக்கு திரளான ஆசீர்வாதத்தைக் கொடுத்தார். யாக்கோபு ஆரம்பத்தில் உண்மையுள்ள வேலைக்காரராகயிருந்தார். இப்போதோ அவர் கர்த்தருடைய கிருபையினாலும், உதவியினாலும், ஒத்தாசையினாலும், அநுக்கிரகத்தினாலும் திரளான ஆடுமாடுகளுக்கும், ஐசுவரியத்திற்கும் எஜமானராயிருக்கிறார்.

31 அதிகாரம்

யாக்கோபு அதிகமான துன்பங்களையும், வேதனைகளையும் அனுபவிக்கிறார். இஸ்ரவேலின் முற்பிதாக்களில் யாக்கோபைப்போல வேறு யாரும் இவ்வளவு அதிகமான வேதனைகளை அனுபவித்ததில்லை.

யாக்கோபு இப்போது லாபானின் ஊராகிய பதான் அராமிலே இருக்கிறார். லாபான் யாக்கோபை வஞ்சிக்கிறார். ஆகையினால் யாக்கோபு தன் பெற்றோர் இருக்கிற கானான் தேசத்திற்கு திரும்பிப்போகவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார் (ஆதி 31:1-16).

யாக்கோபு தனக்கு உண்டானவைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு, தன் குடும்பத்தாரோடு, லாபானுக்கு அறிவியாமல் திருட்டளவாய்ப் புறப்பட்டுப்போகிறார் (ஆதி 31:17-21). லாபான் தன் சகோதரரைக் கூட்டிக்கொண்டு கீலேயாத் மலையிலே யாக்கோபைக் கண்டுபிடிக்கிறார் (ஆதி 31:22-25).

யாக்கோபுக்கும் லாபானுக்கும் இடையே நடைபெறுகிற கோபமான வாக்குவாதம் (ஆதி 31:26-42). லாபானும் யாக்கோபும் சமாதான உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள் (ஆதி 31:43-55).

யாக்கோபுக்கு கர்த்தருடைய வார்த்தை ஆதி 31:1-16

ஆதி 31:1. பின்பு லாபானுடைய குமாரர்: எங்கள் தகப்பனுக்கு உண்டானவைகள் யாவையும் யாக்கோபு எடுத்துக்கொண்டான் என்றும், எங்கள் தகப்பனுடைய பொருளினாலே இந்தச் செல்வத்தையெல்லாம் அடைந்தான் என்றும் சொன்ன வார்த்தைகளை யாக்கோபு கேட்டான்.

ஆதி 31:2. லாபானின் முகத்தை யாக்கோபு பார்த்தபோது, அது நேற்று முந்தைநாள் இருந்ததுபோல் இராமல் வேறுபட்டிருக்கக் கண்டான்.

ஆதி 31:3. கர்த்தர் யாக்கோபை நோக்கி: உன் பிதாக்களுடைய தேசத்திற்கும் உன் இனத்தாரிடத்திற்கும் நீ திரும்பிப்போ; நான் உன்னோடேகூட இருப்பேன் என்றார்.

ஆதி 31:4. அப்பொழுது யாக்கோபு, ராகேலையும் லேயாளையும் வெளியிலே தன் மந்தையிடத்தில் அழைப்பித்து,

ஆதி 31:5. அவர்களை நோக்கி: உங்கள் தகப்பனுடைய முகம் நேற்று முந்தைநாள் இருந்ததுபோல இருக்கவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது; ஆனாலும் என் தகப்பனுடைய தேவன் என்னோடேகூட இருக்கிறார்.

ஆதி 31:6. என்னால் இயன்றமட்டும் நான் உங்கள் தகப்பனுக்கு ஊழியஞ்செய்தேன் என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

ஆதி 31:7. உங்கள் தகப்பனோ, என்னை வஞ்சித்து, என் சம்பளத்தைப் பத்துமுறை மாற்றினான்; ஆனாலும் அவன் எனக்குத் தீங்குசெய்ய தேவன் அவனுக்கு இடங்கொடுக்கவில்லை.

ஆதி 31:8. புள்ளியுள்ளவைகள் உன் சம்பளமாயிருக்கும் என்று அவன் சொன்னபோது, ஆடுகளெல்லாம் புள்ளியுள்ள குட்டிகளைப் போட்டது; கலப்புநிறமானவைகள் உன் சம்பளமாயிருக்கும் என்று அவன் சொன்னபோது, ஆடுகளெல்லாம் கலப்பு நிறக் குட்டிகளைப் போட்டது.

ஆதி 31:9. இவ்விதமாய் தேவன் உங்கள் தகப்பனுடைய ஆடுகளை எடுத்து, எனக்குத் தந்தார்.

ஆதி 31:10. ஆடுகள் பொலியும் காலத்திலே நான் கண்ட சொப்பனத்தில் என் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, ஆடுகளோடே பொலியும் கடாக்கள் கலப்புநிறமும் புள்ளியும் வரியும் உள்ளவைகளாயிருக்கக் கண்டேன்.

ஆதி 31:11. அன்றியும் தேவதூதன் ஒருவர் சொப்பனத்தில்: யாக்கோபே என்றார்; இதோ, இருக்கிறேன் என்றேன்.

ஆதி 31:12. அப்பொழுது அவர்: உன் கண்களை ஏறெடுத்துப்பார்; ஆடுகளோடே பொலியும் கடாக்களெல்லாம் கலப்புநிறமும் புள்ளியும் வரியுமுள்ளவைகளாய் இருக்கிறது; லாபான் உனக்குச் செய்கிற யாவையும் கண்டேன்.

ஆதி 31:13. நீ தூணுக்கு அபிஷேகஞ்செய்து, எனக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணின பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே; இப்பொழுது நீ எழுந்து, இந்தத் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, உன் இனத்தாரிருக்கிற தேசத்திற்குத் திரும்பிப்போ என்று சொன்னார் என்றான்.

ஆதி 31:14. அதற்கு ராகேலும் லேயாளும்: எங்கள் தகப்பன் வீட்டிலே இனி எங்களுக்குப் பங்கும் சுதந்தரமும் உண்டோ?

ஆதி 31:15. அவரால் நாங்கள் அந்நியராய் எண்ணப்படவில்லையா? அவர் எங்களை விற்று, எங்கள் பணத்தையும் வாயிலே போட்டுக் கொண்டார்.

ஆதி 31:16. ஆகையால் தேவன் எங்கள் தகப்பனிடத்திலிருந்து எடுத்த ஐசுவரியம் எல்லாம் நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் உரியது; இப்படியிருக்க, தேவன் உமக்குச் சொன்னபடியெல்லாம் செய்யும் என்றார்கள்.

யாக்கோபு இதுவரையிலும் லாபானுக்கு உண்மையாய் வேலை செய்கிறார். கர்த்தர் யாக்கோபை ஆசீர்வதிக்கிறார். யாக்கோபு விருத்தியடைகிறார். யாக்கோபு தன்னுடைய குடும்பத்தாரையும், தனக்கு உண்டான யாவற்றையும் எடுத்துக்கொண்டு, கானான் தேசத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்று தீர்மானம்பண்ணுகிறார்.

கர்த்தர் யாக்கோபை ஆசீர்வதித்ததினால், அவர் மிகவும் விருத்தியடைகிறார். ஆனால் யாக்கோபு லாபானுக்கு உண்டானவைகள் எல்லாவற்றையும் வஞ்சகமாக எடுத்துக்கொண்டார் என்று, லாபானுடைய குமாரர் சொல்லுகிறார்கள்.

லாபானுடைய குமாரர், "எங்கள் தகப்பனுக்கு உண்டானவைகள் யாவையும் யாக்கோபு எடுத்துக்கொண்டான் என்றும், எங்கள் தகப்பனுடைய பொருளினாலே இந்தச் செல்வத்தையெல்லாம் அடைந்தான்" என்று சொன்ன வார்த்தைகளை யாக்கோபு கேட்கிறார் (ஆதி 31:1).

லாபான் அநீதியானவர். அவர் ஒரு பேராசைக்காரர். ஆரம்பத்திலிருந்தே லாபான் யாக்கோபை அவமானப்படுத்தினார், வஞ்சித்தார். இப்பொழுது தன்னுடைய குமாரருடைய உள்ளத்தில் யாக்கோபைக் குறித்து, ஒரு பொறாமைத் தீயை விதைத்திருக்கிறார். யாக்கோபுமீது பொறாமை கொள்வதற்கு லாபானுக்கு காரணமே இல்லை. ஏனெனில் லாபான் யாக்கோபின் கடின உழைப்பினால் விருத்தியானவர்.

லாபானின் குமாரருக்கு யாக்கோபின்மீது பொறாமையும் கோபமும் உண்டாயிற்று. அவர்கள் கோபத்தோடு பேசுகிற வார்த்தைகளை யாக்கோபும் கேட்கிறார். லாபானும் அவர்களோடு சேர்ந்து யாக்கோபின்மீது கோபமாயிருக்கிறார். யாக்கோபு லாபானின் முகத்தைப் பார்க்கிறார். அது நேற்று முந்தைநாள் இருந்ததுபோல் இராமல், வேறுபட்டிருக்கிறது. லாபானின் முகத்தைப் பார்க்கும்போதே, யாக்கோபுக்கு அவருடைய மனதிலுள்ள கோபமும் பொறாமையும் தெரிகிறது.

லாபானுடைய முகம் வேறுபட்டிருக்கிறது. பரிசுத்தவேதாகமத்தில் ஒருசிலருடைய முகங்கள் வேறுபட்டிருந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. காயீன் (ஆதி 4:5-6)
2. லாபான் (ஆதி 31:2-5)
3. ஆசகேல் (2இராஜா 8:11)
4. நெகேமியா (நெகே 2:2-3)
5. பெல்ஷாத்சார் (தானி 5:6,9-10)
6. தானியேல் (தானி 7:28)
7. கிறிஸ்து (லூக்கா 9:29)
8. மோசே (2கொரி 3:7)

லாபானின் குமாரர் யாக்கோபுக்கு விரோதமாக அதிகமாய்ப் பேசுகிறார்கள். லாபான் தன் குமாரரைப்போல, யாக்கோபுக்கு விரோதமாக அதிகமாய்ப் பேசவில்லை. ஆனாலும் லாபானின் முகத்தில் கோபமும் பொறாமையும் வெளிப்படுகிறது.

லாபான் யாக்கோபுமீது ஏற்கெனவே பொறாமையோடிருந்தார். இப்போது லாபானின் பொறாமை அதிகரித்திருக்கிறது. யாக்கோபுக்கு லாபானுடைய வீட்டில் அமைதியும் சமாதானமும் இல்லை. லாபான் யாக்கோபுக்கு மாமனாராகயிருந்தாலும், இப்போது அவர் யாக்கோபுக்கு சத்துருவாயிருக்கிறார்.

இந்த சூழ்நிலையில், கர்த்தர் யாக்கோபை நோக்கி: "உன் பிதாக்களுடைய தேசத்திற்கும் உன் இனத்தாரிடத்திற்கும் நீ திரும்பிப்போ; நான் உன்னோடேகூட இருப்பேன்" (ஆதி31:3) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் யாக்கோபோடு நேரடியாகப் பேசுகிறார். தேவன் தீர்க்கதரிசிகளை எழுப்புவதற்கு முன்பாக அவர் மனுஷரோடு நேரிடியாகப் பேசினார். சில சமயங்களில் தரிசனங்கள் மூலமாகவும் (ஆதி 15:1; ஆதி 46:2) சொப்பனங்கள் மூலமாகவும் (ஆதி 20:3,6; ஆதி 28:12; ஆதி 31:1-11,24; ஆதி 37:5-10; ஆதி 40:5-19; ஆதி 41:1-32; ஆதி 42:9), கேட்கக்கூடிய சத்தத்தின் மூலமாகவும் (உபா 5:4,22-28) தேவன் மனுஷரோடு பேசினார்.

தேவன் பல சமயங்களில் தேவச் செய்தியாளர்களைப் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணி, மனுஷருடைய சொந்த பாஷையில் அவர்கள் மூலமாகப் பேசினார். (அப் 3:21; எபி 1:1-3; 2பேதுரு 1:21). தேவன் எப்படிப் பேசினாலும், அது தேவனுடைய வெளிப்பாடாக இருக்கும்போது, அது ஜனங்களுக்குத் தெளிவாக தெரிந்தது. யாக்கோபின் காலத்திற்கு முன்பாக தேவன் மனுஷருக்குப் பல காரியங்களை முன்னறிவித்திருக்கிறார்.

கர்த்தர் யாக்கோபை நோக்கி, "உன் பிதாக்களுடைய தேசத்திற்கு திரும்பிப்போ" என்று சொல்லுகிறார். பிதாக்களுடைய தேசம் என்பது, ஆபிரகாமின் உடன்படிக்கையில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற தேசமாகும். (ஆதி 12:1-3; ஆதி 13:14-17; ஆதி 15:18-21; ஆதி 17:8; ஆதி 26:3-4; ஆதி 28:13-15). தேவன் இந்த வாக்குத்தத்தத்தை யாக்கோபில் நிறைவேற்றுகிறார். தேவன் யாக்கோபோடு எல்லா ஆபத்துக்களிலும் கூடஇருந்து, இந்தத் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுகிறார் (ஆதி 31:11-49:33).

யாக்கோபுக்கு பரலோகத்திலிருந்து உத்தரவு வருகிறது. யாக்கோபு இதுவரையிலும் லாபானுடைய குமாரர் பேசின கோபமான வார்த்தைகளையும், பொறாமையான வார்த்தைகளையும் கேட்டார். இப்போது அவர் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கிறார். கர்த்தருடைய வார்த்தை ஆறுதலாயும், ஆசீர்வாதமாயும் இருக்கிறது.

யாக்கோபு இப்போது லாபானோடுகூட பதான் அராமிலே இருக்கிறார். கர்த்தரே யாக்கோபை இந்த ஸ்தலத்திற்கு அழைத்து வந்தவர். யாக்கோபு எதுவரையிலும் இங்கு தங்கியிருக்கவேண்டும் என்பது கர்த்தருக்கு தெரியும். கர்த்தர் அனுமதிக்கிற காலம் வரையிலும் யாக்கோபு பதான் அராமிலே தங்கியிருப்பார். இப்போது யாக்கோபு தன்னுடைய பிதாக்களின் தேசமாகிய கானான் தேசத்திற்கு திரும்பிப்போகவேண்டிய வேளை வந்திருக்கிறது.

யாக்கோபைப்போல தேவனுடைய வழிநடத்துதலுக்கு நாமும் கீழ்ப்படிய வேண்டும். அவர் நம்முடைய போக்கையும் வரத்தையும் அறிந்திருக்கிறார். நம்முடைய போக்கும் வரத்தும் கர்த்தருக்கு சித்தமான பிரகாரமாகவும், அவருடைய வழிநடத்துதலின் பிரகாரமாகவும் இருக்கவேண்டும்.

கர்த்தர் யாக்கோபோடுகூட பேசும்போது, "பெத்தேலிலே உனக்கு தரிசனமான தேவன் நானே" (ஆதி 31:13) என்று சொல்லுகிறார். கர்த்தர் பெத்தேலிலே யாக்கோபோடுகூட உடன்படிக்கைபண்ணினார். இப்போது கர்த்தர் மறுபடியுமாய் யாக்கோபோடுகூட தம்முடைய உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்கிறார். கர்த்தர் இப்போது யாக்கோபை நோக்கி, "நீ எழுந்து இந்த தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, உன் இனத்தார் இருக்கிற தேசத்திற்கு திரும்பிப்போ" (ஆதி 31:3,13) என்று சொல்லுகிறார்.

யாக்கோபு கானான் தேசத்திலே கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கவேண்டும். அங்கே அவர் கர்த்தருடைய சத்தத்தைத் தவிர, வேறு எந்த சத்தத்தையும் கேட்கக்கூடாது. யாக்கோபு லாபானோடு கூடயிருந்தபோது, அவரால் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்தில் இருக்க முடியவில்லை. யாக்கோபுக்கு பதான் அராமிலே கர்த்தரோடு நெருக்கமாயிருப்பதற்கு பல இடையூறுகள் உண்டாயிற்று.

கர்த்தர் யாக்கோபை கானான் தேசத்திற்கு திரும்பிப்போகுமாறு சொல்லுகிறார். அங்கே அவருக்கு ஆறுதல் உண்டாகும். கானான் தேசம் யாக்கோபின் பிதாக்களுடைய தேசம். அங்கே யாக்கோபின் ஜனத்தார் இருக்கிறார்கள்.

யாக்கோபுக்கு மனைவிகளும் பிள்ளைகளும் இருக்கிறார்கள். அவருக்கு திரளான ஆடுகளும், ஒட்டகங்களும், கழுதைகளும், வேலைக்காரிகளும், வேலைக்காரர்களும் இருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் கர்த்தர் யாக்கோபை கானான் தேசத்திற்கு திரும்பிப்போகுமாறு சொல்லுகிறார்.

கர்த்தர் தனக்கு கட்டளை கொடுத்தவுடன், யாக்கோபு தன்னுடைய வீட்டாரிடம் இதுபற்றி ஒன்றும் சொல்லாமல், கானான் தேசத்திற்கு தனியாகப் புறப்பட்டுப்போய்விடவில்லை. கர்த்தர் தனக்கு சொன்னதை யாக்கோபு தன்னுடைய மனைவிகளிடத்தில் பகிர்ந்து சொல்லுகிறார்.

அப்பொழுது யாக்கோபு, ராகேலையும் லேயாளையும் வெளியிலே தன் மந்தையிடத்தில் அழைப்பித்து, அவர்களிடத்தில் கர்த்தர் தனக்கு கட்டளையிட்டது பற்றியும், லாபானும் அவருடைய குமாரரும் தன்மீது கோபமாயிருப்பதுபற்றியும் சொல்லுகிறார் (ஆதி 31:4).

யாக்கோபு தன் மனைவிமார்களை தன் மந்தையினிடத்தில் அழைப்பிக்கிறார். அங்கே யாக்கோபால் தன் மனைவிகளிடத்தில் தனிமையாகப் பேசமுடியும். அவர்கள் இங்கே பேசினால், அவர்களால் லாபானுக்கு தெரியாமல் பேசமுடியும். யாக்கோபு தன் மனைவிகளிடத்தில், கானான் தேசத்திற்கு திரும்பிப்போகும் தன்னுடைய விருப்பத்தை பகிர்ந்துசொல்லுகிறார்.

யாக்கோபு குடும்பத்தின் தலைவர். ஆகையினால் யாக்கோபு சுயாதீனமாக எப்படி வேண்டுமானாலும் தீர்மானம் பண்ணலாம். ஆனால் அவர் மிகவும் ஞானமாக தன் மனைவிமார்களை வெளியே அழைத்து அவர்களிடத்தில் தன்னுடைய திட்டத்தைக் கூறி அவர்களுடைய ஆதரவையும் பெற்றுக் கொள்கிறார். (ஆதி 31:5-21).

யாக்கோபைப்போலவே, புருஷர்கள் தங்கள் மனைவிமார்களிடத்தில், தங்களுடைய மனதின் விருப்பத்தையும், திட்டங்களையும், செயல்பாடுகளையும் பகிர்ந்துசொல்லவேண்டும். புருஷனும் மனைவியும் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கும்போது, அவர்கள் தங்கள் மனதின் எண்ணங்களை பகிர்ந்துகொள்வார்கள். அவர்கள் ஒருவரையொருவர் நம்புவார்கள். புருஷனும் மனைவியும் ஒருவரையொருவர் நம்பவில்லையென்றால், குடும்பத்தில் பிரச்சனை வந்துவிடும். புருஷனும் மனைவியும் ஒருவரையொருவர் நேசித்தால் மாத்திரமே, அவர்கள் ஒருவரையொருவர் நம்புவார்கள்.

யாக்கோபு தன் மனைவிமார்களை அழைத்து, கர்த்தர் தனக்கு சொன்ன கட்டளையை அவர்களிடத்தில் சொல்லுகிறார். யாக்கோபு தன் மனைவிமார்களை நோக்கி, "நீ தூணுக்கு அபிஷேகஞ்செய்து, எனக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணின பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே; இப்பொழுது நீ எழுந்து, இந்தத் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, உன் இனத்தாரிருக்கிற தேசத்திற்குத் திரும்பிப்போ என்று சொன்னார்" (ஆதி 31:13) என்று சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு சொன்ன கட்டளையை, யாக்கோபு தன் மனைவிமார்களிடத்தில் மறைக்காமல் அப்படியே சொல்லிவிடுகிறார்.

யாக்கோபின் மனைவிமார்களுக்கு அவர்மீது சந்தேகம் வந்துவிடக்கூடாது. அவர்களும் யாக்கோபின் திட்டத்திற்கு ஒத்துழைக்கவேண்டும். யாக்கோபு தன் சொந்த தேசத்திற்கு திரும்பிப்போகப் போகிறார். அவர் தன்னுடைய இனத்தாரிடத்திற்கு திரும்பிப்போகப்போகிறார். அங்கே போவதற்கு யாக்கோபின் மனைவிமார்களுக்கும் விருப்பம் இருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக யாக்கோபு கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிவதுபோல, யாக்கோபின் மனைவிமார்களும் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும்.

யாக்கோபு தன் மனைவிமார்களிடத்தில், தனக்கும் லாபானுக்கும் ஏற்பட்டிருக்கிற பிரச்சனைகளைப்பற்றி விரிவாகச் சொல்லுகிறார். யாக்கோபு தன் மனைவிமார்களை நோக்கி, "உங்கள் தகப்பனுடைய முகம் நேற்று முந்தைநாள் இருந்ததுபோல இருக்கவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது; ஆனாலும் என் தகப்பனுடைய தேவன் என்னோடேகூட இருக்கிறார். என்னால் இயன்றமட்டும் நான் உங்கள் தகப்பனுக்கு ஊழியஞ்செய்தேன் என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்" (ஆதி 31:5,6) என்று சொல்லுகிறார்.

யாக்கோபு சொல்லுகிற காரியங்களை அவருடைய மனைவிமார்களும் அறிந்திருக்கிறார்கள். இது அவர்களுக்கு தெரியாத இரகசியமல்ல. ஆனாலும் கர்த்தர் தன்னோடுகூட இருப்பதை, யாக்கோபு தன் மனைவிமார்களுக்கு இப்போது எடுத்து சொல்லுகிறார்.

யாக்கோபு தன் மனைவிமார்களை நோக்கி, "உங்கள் தகப்பனோ, என்னை வஞ்சித்து, என் சம்பளத்தைப் பத்துமுறை மாற்றினான்; ஆனாலும் அவன் எனக்குத் தீங்குசெய்ய தேவன் அவனுக்கு இடங்கொடுக்கவில்லை. புள்ளியுள்ளவைகள் உன் சம்பளமாயிருக்கும் என்று அவன் சொன்னபோது, ஆடுகளெல்லாம் புள்ளியுள்ள குட்டிகளைப் போட்டது; கலப்புநிறமானவைகள் உன் சம்பளமாயிருக்கும் என்று அவன் சொன்னபோது, ஆடுகளெல்லாம் கலப்பு நிறக் குட்டிகளைப் போட்டது. இவ்விதமாய் தேவன் உங்கள் தகப்பனுடைய ஆடுகளை எடுத்து, எனக்குத் தந்தார்" (ஆதி 31:7-9) என்று சொல்லுகிறார்.

லாபான் யாக்கோபை வஞ்சிக்கிறார். பரிசுத்தவேதாகமத்தில் வஞ்சிப்பது பற்றி தெளிவான உபதேசம் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு : வஞ்சனை தவறு. (சங் 119:118). வஞ்சனை இருதயத்திலிருந்து வருகிறது. (எரே 17:9; மாற்கு 7:22; ரோமர் 3:13). தேவன் வஞ்சனையை வெறுக்கிறார். (சங் 5:6) தேவன் வஞ்சனையைத் தடைபண்ணுகிறார். (யோபு 27:4; யோபு 31:5; நீதி 24:28; 1பேதுரு 3:10). பரிசுத்தவான்கள் வஞ்சனை செய்யமாட்டார்கள். (சங் 24:4; ஏசா 53:9; செப் 3:13; 1பேதுரு 2:22; வெளி 14:5).

தேவன் தமது பிள்ளைகளை வஞ்சனையிலிருந்து தப்புவிப்பார். (சங் 43:1; சங் 72:14; சங் 101:7; சங் 120:2; எபே 5:6; கொலோ 2:8) தேவனுடைய பிள்ளைகள் வஞ்சனையான காரியங்களை அகற்றிப் போட வேண்டும். (2கொரி 4:2; 1தெச 2:3; 1பேதுரு 2:1).

துன்மார்க்கர் வஞ்சனையுள்ளவர்கள். (சங் 10:7; சங் 35:20; சங் 36:3; சங் 38:12; நீதி 11:18; நீதி 12:5; நீதி 20:17; எரே 9:5; எரே 37:9; 2தீமோ 3:13); கள்ளப்போதகர்கள் வஞ்சித்து விடுவார்கள். (யோபு 15:35; நீதி 12:17; எரே 14:14; எரே 23:26; ரோமர் 16:18; 2கொரி11:13; எபே 4:14; 2தெச 2; 2பேதுரு 2:13; 2யோவான் 1:7);

வஞ்சனையின் தீமைகள் (சங் 10:7; சங் 24:4-5; சங் 32:2; சங் 55:23; நீதி 14:8,25; நீதி 26:24; நீதி 27:6; எரே 8:5; எரே 9:6).

மனுஷர் ஒருவருக்கொருவர் நேர்மையாகவும், நியாயமாகவும் நடந்து கொள்ள வேண்டும். மனுஷருடைய பேச்சிலும், செயலிலும் நீதியும், கண்ணியமும் காணப்பட வேண்டும். உள்ளான மனுஷன் நீதிமானாக இருக்க வேண்டும். (சங் 51:6). சுவிசேஷம் உள்ளான மனுஷனை நாளுக்குநாள் புதுப்பிக்கிறது. (2கொரி 4:16). 15 ஆவது சங்கீதத்தில் உத்தமனைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

பரிசுத்தவேதாகமத்தில் வஞ்சகத்தைப்பற்றி சொல்லப்பட்டிருக்கும் செய்திகளின் விவரம் வருமாறு:

1. வஞ்சகம் ஒரு பொய். (சங் 119:118).
2. வஞ்சகம் மனுஷருடைய இருதயத்திலிருந்து வருகிறது. (மாற்கு 7:22).
3. வஞ்சிப்பது இருதயத்தின் சுபாவம். (எரே 17:9).
4. தேவன் வஞ்சனையை அருவருக்கிறார். (சங் 5:6).
5. வஞ்சிப்பது தடைபண்ணப்பட்டிருக்கிறது. (நீதி 24:28; 1பேதுரு 3:10).
6. கிறிஸ்துவினிடத்தில் வஞ்சனை காணப்படவில்லை. (1பேதுரு 2:22).
7. வஞ்சனையை உபதேசிக்கிறவர்களையும், அதைச் செயல்படுத்துகிறவர்களையும் குறித்து நாம் மிகுந்த எச்சரிப்போடு இருக்க வேண்டும். (எபே 5:6; கொலோ 2:8).
8. வஞ்சனையை அகற்றி வைக்க வேண்டும். (2கொரி 4:2; 1பேதுரு 2:1).
9. கள்ளப்போதகர்கள் வஞ்சிக்கிறவர்கள். (2கொரி 11:13; எரே 14:14; எரே 23:26).
10. கள்ளச்சாட்சிகள் வஞ்சனையைப் பயன்படுத்துகிறார்கள். (நீதி 12:17).

பரிசுத்தவேதாகமத்தில் துன்மார்க்கரின் வஞ்சகத்தைப்பற்றி விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. துன்மார்க்கரிடத்தில் வஞ்சனை நிறைந்திருக்கிறது. (ரோமர் 1:29).
2. துன்மார்க்கர் வஞ்சனையை யோசிக்கிறார்கள். (யோபு 15:35; சங் 35:20; சங் 38:12).
3. துன்மார்க்கர் வஞ்சனையான காரியங்களைக் கூறுகிறார்கள். (சங் 10:7 ; சங் 36:3).
4. துன்மார்க்கர் வஞ்சனையில் கிரியை செய்கிறார்கள். (நீதி 11:18).
5. துன்மார்க்கர் வஞ்சனையில் பெருகுகிறார்கள். (2தீமோ 3:13).
6. துன்மார்க்கர் வஞ்சனையை மற்றவர்மீது பயன்படுத்துகிறார்கள். (எரே 9:5).
7. துன்மார்க்கர் வஞ்சனையைத் தங்கள்மீதே பயன்படுத்துகிறார்கள். (எரே 37:9).
8. துன்மார்க்கர் வஞ்சனையில் பிரியப்படுகிறார்கள். (நீதி 20:17).
9. துன்மார்க்கர் மற்றவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறார்கள். (ரோமர் 16:18).
10. துன்மார்க்கர் வஞ்சனைகளில் உல்லாசமாய் வாழ்கிறார்கள். (2பேதுரு 2:13).

பரிசுத்தவேதாகமத்தில் வஞ்சனையினால் வரும் தீமைகளைப்பற்றி விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. வஞ்சனை தேவனுடைய அறிவை தடை பண்ணுகிறது. (எரே 9:6).
2. வஞ்சனை மனுஷரைத் தேவனிடமிருந்து விலக்கி துரத்துகிறது. (எரே 8:5).
3. வஞ்சனை பெருமைக்கும், பாவத்திற்கும் வழிநடத்தும். (எரே 5:27-28).
4. வஞ்சனை பொய் சொல்லத் தூண்டும் (நீதி 14:25).
5. வஞ்சனையினால் கபடமும், அநீதியும் உண்டாகும். (சங் 10:7; சங் 43:1).

6. வஞ்சனை விரோதத்தை மூடி மறைக்கிறது. (நீதி 26:24-26).

7. வஞ்சனை தீமையான திட்டங்களை உற்பத்தி பண்ணுகிறது. (சங் 50:19).

8. வஞ்சனை பாவம் செய்யத் தூண்டுகிறது. (நீதி 20:17).

9. வஞ்சனை ஆத்துமாவை அழித்துப் போடுகிறது. (மாற்கு 7:22).

10. பாவத்தின் வஞ்சனையினால் மனுஷன் கடினப்பட்டுப் போகிறான். (எபி 3:13).

பரிசுத்தவேதாகமத்தில் வஞ்சித்தவர்களுக்கு எடுத்துக்காட்டாக ஒரு சிலர் சொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. சாத்தான் (ஆதி 3:4; 2கொரி 11:3; 1தீமோ 2:14)

2. ஆபிரகாம் (ஆதி 12:13; ஆதி 20:2)

3. ஈசாக்கு (ஆதி 26:7)

4. யாக்கோபும், ரெபெக்காளும் (ஆதி 27:6-23)

5. கிபியோனியர் (யோசு 9:3-15)

6. தெலீலாள் (நியா 16:4-20)

7. அப்சலோம் (2சாமு 13:24-28; 2சாமு 15:7)

8. கேயாசி (2இராஜா 5:20)

9. ஏரோது (மத் 2:8)

10. அனனியாவும், சப்பீராளும் (அப் 5:1-13)

ஆடுகள் பொலியும் காலத்திலே யாக்கோபு சொப்பனங்காண்கிறார். அவர் தன் சொப்பனத்திலே கண்களை ஏறெடுத்துப் பார்க்கிறார். அப்போது ஆடுகளோடே பொலியும் கடாக்கள் கலப்பு நிறமும், புள்ளியும், வரியும் உள்ளவைகளாய் இருப்பதைக் காண்கிறார் (ஆதி 31:10).

யாக்கோபு சொப்பனம் காணும்போது தேவதூதன் ஒருவர், யாக்கோபை நோக்கி, "யாக்கோபே" என்று சொல்லுகிறார். அப்போது யாக்கோபு, "இதோ இருக்கிறேன்" என்று அந்தத் தூதனுக்கு பதில் சொல்லுகிறார்.

அப்பொழுது அந்தத்தூதன், யாக்கோபை நோக்கி, "உன் கண்களை ஏறெடுத்துப்பார்; ஆடுகளோடே பொலியும் கடாக்களெல்லாம் கலப்புநிறமும் புள்ளியும் வரியுமுள்ளவைகளாய் இருக்கிறது; லாபான் உனக்குச் செய்கிற யாவையும் கண்டேன். நீ தூணுக்கு அபிஷேகஞ்செய்து, எனக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணின பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே; இப்பொழுது நீ எழுந்து, இந்தத் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, உன் இனத்தாரிருக்கிற தேசத்திற்குத் திரும்பிப்போ" (ஆதி 31:12,13) என்று சொல்லுகிறார்.

யாக்கோபு தன்னுடைய மனைவிமார்களிடத்தில், தான் கண்ட சொப்பனத்தைப்பற்றியும், சொப்பனத்திலே கர்த்தருடைய தூதனானவர் தன்னோடு பேசினது பற்றியும் விரிவாகச் சொல்லுகிறார்.

அதற்கு ராகேலும் லேயாளும்: "எங்கள் தகப்பன் வீட்டிலே இனி எங்களுக்குப் பங்கும் சுதந்தரமும் உண்டோ? அவரால் நாங்கள் அந்நியராய் எண்ணப்படவில்லையா? அவர் எங்களை விற்று, எங்கள் பணத்தையும் வாயிலே போட்டுக் கொண்டார். ஆகையால் தேவன் எங்கள் தகப்பனிடத்திலிருந்து எடுத்த ஐசுவரியம் எல்லாம் நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் உரியது; இப்படியிருக்க, தேவன் உமக்குச் சொன்னபடியெல்லாம் செய்யும்" (ஆதி 31:14-16) என்று சொல்லுகிறார்கள்.

யாக்கோபின் மனைவிமார்கள் இருவரும் அவர் சொல்லுகிற வார்த்தைக்கு கவனமாய்ச் செவிகொடுக்கிறார்கள். தங்கள் புருஷனாகிய யாக்கோபு எங்கே போகிறாரோ, அங்கே அவர்களும் அவரோடு கூடப்போவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். யாக்கோபு தேவனுடைய வழிநடத்துதலுக்கு கீழ்ப்படிவதுபோல, அவருடைய மனைவிமார்களும் கீழ்ப்படிகிறார்கள். அவர்கள் யாக்கோபை நோக்கி, "தேவன் உமக்கு சொன்னபடியெல்லாம் செய்யும்" என்று சொல்லுகிறார்கள்.

யாக்கோபின் பிரயாணம்
ஆதி 31:17-24

ஆதி 31:17. அப்பொழுது யாக்கோபு எழுந்து, தன் பிள்ளைகளையும் தன் மனைவிகளையும் ஒட்டகங்கள்மேல் ஏற்றி,

ஆதி 31:18. தான் பதான் அராமிலே சம்பாதித்த மிருகஜீவன்களாகிய மந்தைகள் அனைத்தையும் தன் பொருள்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, கானான்தேசத்தில் இருக்கிற தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்துக்குப் போகப் புறப்பட்டான்.

ஆதி 31:19. லாபான், தன் ஆடுகளை மயிர்கத்தரிக்கப் போயிருந்தான்; அந்தச் சமயத்திலே ராகேல் தன் தகப்பனுடைய சுரூபங்களைத் திருடிக்கொண்டாள்.

ஆதி 31:20. யாக்கோபு தான் ஓடிப்போகிறதைச் சீரியனாகிய லாபானுக்கு அறிவியாமல், திருட்டளவாய்ப் போய்விட்டான்.

ஆதி 31:21. இப்படியே அவன் தனக்கு உண்டானவைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு, ஆற்றைக் கடந்து, கீலேயாத் மலையை நோக்கி ஓடிப்போனான்.

ஆதி 31:22. யாக்கோபு ஓடிப்போனது மூன்றாம்நாளிலே லாபானுக்கு அறிவிக்கப்பட்டது.

ஆதி 31:23. அப்பொழுது அவன், தன் சகோதரரைக் கூட்டிக்கொண்டு, ஏழுநாள் பிரயாணபரியந்தம் அவனைத் தொடர்ந்து போய், கீலேயாத் மலையிலே அவனைக் கண்டுபிடித்தான்.

ஆதி 31:24. அன்று ராத்திரி தேவன் சீரியா தேசத்தானாகிய லாபானுக்குச் சொப்பனத்தில் தோன்றி: நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்றார்.

யாக்கோபு கானான் தேசத்திலிருக்கிற தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்திற்கு புறப்பட்டுப்போக ஆயத்தமாயிருக்கிறார். யாக்கோபு தன்னுடைய விருப்பத்தை தன் மனைவிமார்களிடத்தில் சொல்லுகிறார். அவர்களும் யாக்கோபோடேகூட கானான் தேசத்திற்குப்போக சம்மதிக்கிறார்கள்.

யாக்கோபு எழுந்து, தன் பிள்ளைகளையும் தன் மனைவிகளையும் ஒட்டகங்கள்மேல் ஏற்றுகிறார். தான் பதான் அராமிலே சம்பாதித்த மிருகஜீவன்களாகிய மந்தைகள் அனைத்தையும் தன் பொருள்கள் எல்லாவற்றையும் யாக்கோபு தன்னோடுகூட எடுத்துக்கொள்கிறார். யாக்கோபு தன் குடும்பத்தாரோடும், தன் சம்பத்தோடும் கானான்தேசத்தில் இருக்கிற தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்துக்குப் போகப் புறப்படுகிறார் (ஆதி 31:17,18).

யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்திற்கு போகிறார் என்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. யாக்கோபின் தாயாராகிய ரெபெக்காளைப் பற்றி இங்கு ஒன்றும் கூறப்படவில்லை. ஒருவேளை ரெபெக்காள் இப்போது மரித்துப் போயிருக்கலாம். அவளுடைய மரணம் ஒருவேளை யாக்கோபிற்குத் தெரிந்திருக்கலாம்.

யாக்கோபு லாபானுடைய மிருகஜீவன்கள் எதையும் தன்னோடு எடுத்துக்கொள்ளவில்லை. அவர் பதான் அராமிலே தனக்கு சம்பாதித்த மிருகஜீவன்களை மாத்திரம் தன்னோடு எடுத்துக்கொள்கிறார். யாக்கோபுக்கு போதுமென்கிற மனம் இருக்கிறது. அவர் பிறர் பொருட்களை இச்சிக்கவில்லை.

யாக்கோபின் மனைவியாகிய ராகேலோ, தன் தகப்பனுடைய சுரூபங்களை திருடிக்கொள்கிறாள். யாக்கோபு பதான் அராமை விட்டு கானான் தேசத்திற்குப் புறப்பட்டுப்போகும்போது, லாபான் அந்த ஊரில் இல்லை. அவர் தன் ஆடுகளை மயிர்க்கத்தரிக்க வெளியூருக்குப் போயிருக்கிறார். அந்த வேளையில் ராகேல் தன் தகப்பனுடைய சுரூபங்களை திருடிக்கொள்கிறாள். யாக்கோபும் தன் பதான் அராமிலிருந்து ஒடிப்போகிறதை, சீரியனாகிய லாபானுக்கு அறிவியாமல் திருட்டளவாய்ப் போய்விடுகிறார் (ஆதி 31:19,20).

ராகேல் திருடிக்கொண்ட சுரூபங்கள் தெராபீமாக இருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஒருவேளை அந்த சுரூபங்கள், லாபானுடைய முன்னோர்களின் சுரூபங்களாகயிருக்கலாம் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள். ராகேலுக்கு இந்த சுரூபங்கள்மீது பிரியம் இருக்கிறது. அவள் யாக்கோபோடு கானான் தேசத்திற்கு திரும்பிப்போகும்போது, தன்னோடுகூட இந்த சுரூபங்களையும் எடுத்துக்கொண்டு போகவேண்டும் என்று ஆசைப்படுகிறாள்.

ராகேல் திருடிக்கொண்ட சுரூபங்கள் ஒருவேளை குடும்ப தெய்வங்களாகவோ அல்லது குறிகேட்கும் சுரூபங்களாகவோ இருக்கலாம் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். அந்த சுரூபங்களுக்கு ஜீவனுமில்லை வல்லமையுமில்லை. அந்த தெய்வங்களால் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை. ராகேல் அந்த சுரூபங்களை திருடிக்கொள்கிறாள். ஆனால் அந்த சுரூபங்களால் தங்களைத் தாங்களை விடுவித்துக்கொள்ள முடியவில்லை.

"பேல் பணியும், நேபோ குனியும், அவைகளின் விக்கிரகங்கள் காட்டுமிருகங்களுக்கும் நாட்டுமிருகங்களுக்கும் சுமையாகும்; நீங்கள் சுமந்த சுமைகள் இளைத்துப்போன மிருகங்களுக்குப் பாரமாயிருக்கும். அவைகள் ஏகமாய்க் குனிந்து பணியும்; சுமைகளை அவைகள் தப்புவிக்கமாட்டாது; அவைகள் தாமே சிறைப்பட்டுப்போகும்" *(ஏசா 46:1,2)*.

யாக்கோபு ஓடிப்போனது மூன்றாம்நாளிலே லாபானுக்கு அறிவிக்கப்படுகிறது. அப்பொழுது லாபான், தன் சகோதரரைக் கூட்டிக்கொண்டு, ஏழுநாள் பிரயாணபரியந்தம் யாக்கோபைத் தொடர்ந்து போய், கீலேயாத் மலையிலே யாக்கோபைக் கண்டுபிடிக்கிறார் *(ஆதி 31:22,23)*.

கீலேயாத் மலை ஆரானுக்கு தெற்கே 300 மைல் தூரத்திலுள்ளது. இது யோர்தானுக்கு கிழக்கிலுள்ளது.

லாபான் ஒரு துன்மார்க்கன். லாபான் யாக்கோபைப் பிடிக்க தீவிரம் காட்டுகிறார். ஆனால் அவர் யாக்கோபின்மீது அன்புசெலுத்த இவ்வளவு தீவிரம் காண்பிக்கவில்லை. லாபானைப் போன்ற துன்மார்க்கர், பிறர்மீது அன்பு செலுத்துவதில் தீவிரமாயிருக்கமாட்டார்கள். அவர்கள் பிறருக்கு தீங்குசெய்வதில் தீவிரமாயிருப்பார்கள். லாபான் யாக்கோபைப் பிடிக்க ஏழுநாள் தொடர்ந்து பிரயாணம் பண்ணுகிறார். லாபான் தனியாகப் போகாமல் தன் சகோதரரை தன்னோடு கூட்டிக்கொண்டு போகிறார்.

லாபான் யாக்கோபைப் பிடித்து தண்டிப்பது கர்த்தருக்கு சித்தமில்லை. கர்த்தரே யாக்கோபை நோக்கி, "நீ எழுந்து, இந்த தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, உன் இனத்தார் இருக்கிற தேசத்திற்கு திரும்பிப்போ" *(ஆதி 31:13)* என்று சொன்னார். ஆனால் லாபானோ கர்த்தருடைய வழிநடத்துதலை தடைபண்ணுவதற்காக வந்திருக்கிறார். லாபான் யாக்கோபுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தாலும், அவர் கர்த்தருக்கு விரோதமாகவே யுத்தம்பண்ணவேண்டும். கர்த்தர் லாபானை எச்சரிக்கிறார்.

அன்று ராத்திரி தேவன் சீரியா தேசத்தானாகிய லாபானுக்குச் சொப்பனத்தில் தோன்றுகிறார். தேவன் லாபானை நோக்கி, "நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" *(ஆதி 31:24)* என்று சொல்லுகிறார்.

லாபான் ஏற்கெனவே கர்த்தருடைய வார்த்தையை அங்கீகரித்திருக்கிறார். ஆபிரகாமுடைய ஊழியக்காரன், ஈசாக்குக்கு பெண்பார்க்க வந்தபோது, லாபானும் பெத்துவேலும், அந்த ஊழியக்காரனிடத்தில், "இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது, உமக்கு நாங்கள் நலம் பொலம் ஒன்றும் சொல்லக்கூடாது" *(ஆதி 24:50)* என்று சொன்னார்கள்.

கர்த்தர் இப்போது லாபானோடு ஒரு வார்த்தை பேசுகிறார். கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு லாபான் மனந்திரும்பினானா என்பது தெரியவில்லை. ஆனால் கர்த்தர் லாபானுடைய கைகளை தம்முடைய வார்த்தையினால் கட்டிப்போடுகிறார். இதனால் யாக்கோபு தீங்குக்கு தப்பிக்கிறார். கர்த்தர் துன்மார்க்கருடைய மனச்சாட்சிகளை ஆளுகை செய்யும்போது, கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு பாதுகாப்பு உண்டாகிறது. கர்த்தர் தீயவர்களின் கைகளைக் கட்டிப்போடும்போது, அவர்களால் நீதிமான்களுக்கு விரோதமாகத் தீங்கு செய்ய முடியாமல் போகிறது.

லாபானின் தெய்வங்கள் ஆதி 31:25-35

ஆதி 31:25. லாபான் யாக்கோபினிடத்தில் வந்தான்; யாக்கோபு மலையிலே தன் கூடாரத்தைப் போட்டிருந்தான்; லாபானும் தன் சகோதரரோடேகூடக் கீலேயாத் மலையிலே கூடாரம் போட்டான்.

ஆதி 31:26. அப்பொழுது லாபான் யாக்கோபை நோக்கி: நீ திருட்டளவாய்ப் புறப்பட்டு, என் குமாரத்திகளை யுத்தத்தில் பிடித்த சிறைகளைப்போலக் கொண்டுவந்தது என்ன செய்கை?

ஆதி 31:27. நீ ஓடிப்போவதை மறைத்து, எனக்கு அறிவியாமல், திருட்டளவாய் என்னிடத்திலிருந்து வந்துவிட்டது என்ன? நான் உன்னைச் சந்தோஷமாய், சங்கீதம் மேளதாளம் கின்னரமுழக்கத்துடனே அனுப்புவேனே.

ஆதி 31:28. என் பிள்ளைகளையும் என் குமாரத்திகளையும் நான் முத்தஞ்செய்ய விடாமல் போனதென்ன? இந்தச் செய்கையை நீ மதியில்லாமல் செய்தாய்.

ஆதி 31:29. உங்களுக்குப் பொல்லாப்புச்செய்ய எனக்கு வல்லமை உண்டு; ஆகிலும், உங்கள் தகப்பனுடைய தேவன்: நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்று நேற்று ராத்திரி என்னோடே சொன்னார்.

ஆதி 31:30. இப்பொழுதும் உன் தகப்பனுடைய வீட்டின்மேலுள்ள வாஞ்சையினால் நீ புறப்பட்டுப்போகிறதானால் போகலாம், என் தெய்வங்களை ஏன் திருடிக்கொண்டு போகிறாய் என்று கேட்டான்.

ஆதி 31:31. யாக்கோபு லாபானுக்குப் பிரதியுத்தரமாக: உம்முடைய குமாரத்திகளைப் பலாத்காரமாய்ப் பிடித்து வைத்துக் கொள்வீர் என்று நான் அஞ்சினதினாலே இப்படி வந்துவிட்டேன்.

ஆதி 31:32. ஆனாலும் யாரிடத்தில் உம்முடைய தெய்வங்களைக் கண்டுபிடிக்கிறீரோ, அவனை உயிரோடே விடவேண்டாம்; உம்முடைய பொருள்கள் ஏதாவது என் வசத்தில் உண்டானால் நீர் அதை நம்முடைய சகோதரருக்கு முன்பாகப் பரிசோதித்தறிந்து, அதை எடுத்துக்கொள்ளும் என்றான். ராகேல் அவைகளைத் திருடிக் கொண்டுவந்ததை யாக்கோபு அறியாதிருந்தான்.

ஆதி 31:33. அப்பொழுது லாபான் யாக்கோபின் கூடாரத்திலும், லேயாளின் கூடாரத்திலும், இரண்டு வேலைக்காரிகளின் கூடாரத்திலும் பிரவேசித்துப்பார்த்தும் ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை; பின்பு, லேயாளின் கூடாரத்தைவிட்டு ராகேலின் கூடாரத்துக்குப் போனான்.

ஆதி 31:34. ராகேல் அந்தச் சுரூபங்களை எடுத்து, ஒட்டகச் சேணத்தின்கீழ் வைத்து, அதின் மேல் உட்கார்ந்திருந்தான். லாபான் கூடாரம் எங்கும் தடவிப்பார்த்தும், அவைகளைக் கண்டுபிடிக்கவில்லை.

ஆதி 31:35. அவள் தன் தகப்பனை நோக்கி: என் ஆண்டவனாகிய உமக்கு முன்பாக நான் எழுந்திராததைக்குறித்துக் கோபங் கொள்ளவேண்டாம்; ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு எனக்கு உண்டாயிருக்கிறது என்றாள்; அப்படியே அவன் அந்தச் சுரூபங்களைத் தேடியும் கண்டுபிடிக்கவில்லை.

லாபான் தன் சகோதரரைக் கூட்டிக்கொண்டு, யாக்கோபைத் தேடிப்போகிறார். அவர்கள் ஏழுநாள் பிரயாணம்பண்ணி, முடிவிலே கீலேயாத் மலையிலே யாக்கோபைக் கண்டுபிடிக்கிறார்கள். போகும் வழியிலே, இராத்திரியிலே, தேவன் லாபானுக்கு சொப்பனத்திலே தோன்றினார். லாபான் யாக்கோபோடே நன்மையே அன்றி, தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்று சொன்னார்.

இதனால் லாபான் கீலேயாத் மலையிலே, யாக்கோபைக் கண்டுபிடித்த பின்பும், அவரோடுகூட வாக்குவாதம் ஒன்றும் பண்ணவில்லை. யாக்கோபு கீலேயாத் மலையிலே தன் கூடாரத்தைப் போட்டிருக்கிறார். லாபானும் தன் சகோதரரோடுகூட கீலேயாத் மலையிலே கூடாரம் போடுகிறார். அப்போது லாபான் யாக்கோபினிடத்தில் வருகிறார் (ஆதி 31:25).

யாக்கோபு லாபானிடத்தில் சொல்லிக்கொள்ளாமல் திருட்டளவாய்ப் புறப்பட்டு வந்தது, லாபானுக்கு பிடிக்கவில்லை. அவர் யாக்கோபை ஒரு குற்றவாளியாகப் பாவித்து, அவரோடு கூடப்பேசுகிறார்.

லாபான் யாக்கோபை நோக்கி, "நீ திருட்டளவாய்ப் புறப்பட்டு, என் குமாரத்திகளை யுத்தத்தில் பிடித்த சிறைகளைப்போலக் கொண்டுவந்தது என்ன செய்கை?" (ஆதி 31:26) என்று கேட்கிறார்.

தனக்கு யாக்கோபின்மீது அன்பும் பாசமும் இருப்பதுபோல லாபான் சொல்லுகிறார். தனக்கு தன் குமாரத்திகள்மீது அதிக அன்பு இருப்பதாக லாபான் சொல்லுகிறார். ஆனால் உண்மையில் அவருக்கு தன் பிள்ளைகள்மீது அன்பு இருக்கிறதா அல்லது யாக்கோபின்மீது பொறாமை இருக்கிறதா என்பது தெரியவில்லை. லாபானுக்கு யாக்கோபின்மீது கோபம் இருக்கிறது. ஆனாலும் கர்த்தர் லாபானை எச்சரித்ததினிமித்தமாக, அவர் யாக்கோபுக்கு விரோதமாக தீமையான வார்த்தைகள் ஒன்றையும் பேசவில்லை.

லாபான் யாக்கோபை நோக்கி, "நீ ஓடிப்போவதை மறைத்து, எனக்கு அறிவியாமல், திருட்டளவாய் என்னிடத்திலிருந்து வந்துவிட்டது என்ன? நான் உன்னைச் சந்தோஷமாய், சங்கீதம் மேளதாளம் கின்னரமுழக்கத்துடனே அனுப்புவேனே. என் பிள்ளைகளையும் என் குமாரத்திகளையும் நான் முத்தஞ்செய்ய விடாமல் போனதென்ன? இந்தச் செய்கையை நீ மதியில்லாமல் செய்தாய்" (ஆதி 31:27,28) என்று சொல்லுகிறார்.

லாபான் யாக்கோபுக்கு நன்மை செய்ய விரும்புவதாக சொல்லுகிறார். இது துன்மார்க்கர் ஏமாற்றமடையும்போது பேசும் பொதுவான பேச்சு ஆகும். லாபானுக்கு ஏமாற்றமுண்டாயிருக்கிறது. அவர் தன்னுடைய ஏமாற்றத்தை மறைத்து, யாக்கோபுக்கு நன்மை செய்வதுபோல பேசுகிறார். அவர் யாக்கோபின்மீது பிரியமாயிருப்பதுபோல சொல்லுகிறார். யாக்கோபு மதியில்லாமல் இந்தக் காரியத்தை செய்திருப்பதாகவும், தானோ மதியுள்ளவராக, யாக்கோபையும், அவருடைய மனைவிகளையும், பிள்ளைகளையும் சந்தோஷமாய் வழியனுப்பியிருக்க வாய்ப்பு இருந்ததாகவும் சொல்லுகிறார்.

லாபான் தன்னுடைய கோபத்தை எப்படித்தான் மறைத்தாலும், அந்தக் கோபத்தை அவரால் வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை. லாபான் யாக்கோபை நோக்கி, "உங்களுக்கு பொல்லாப்பு செய்ய எனக்கு வல்லமை உண்டு" (ஆதி 31:29) என்று சொல்லுகிறார்.

உண்மையில் யாக்கோபுக்குப் பொல்லாப்பு செய்ய லாபானுக்கு வல்லமை இல்லை. ஏனெனில் தேவன் யாக்கோபைப் பாதுகாத்து வருகிறார் (ஆதி 28:15; ஆதி 31:3). லாபானிடத்தில் வல்லமையிருந்தாலும், தேவனிடத்தில் சர்வவல்லமை இருக்கிறது.

தேவனாகிய கர்த்தர் லாபானை எச்சரித்திருக்கிறார். லாபான் இந்த சம்பவத்தையும் யாக்கோபுக்கு சொல்லுகிறார். லாபான் யாக்கோபை நோக்கி, "உங்கள் தகப்பனுடைய தேவன்: நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்று நேற்று ராத்திரி என்னோடே சொன்னார்" (ஆதி 31:29) என்று சொல்லுகிறார். கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைக்கு கீழ்ப்படிவதைத் தவிர லாபானுக்கு வேறு வழியில்லை.

லாபான் யாக்கோபுக்கு தீங்கு செய்ய விரும்பவில்லை. ஆனாலும் லாபானுடைய மனதிலே ஒரு வேதனையிருக்கிறது. அவருடைய கூடாரத்திலே அவருக்கு சொந்தமான தெய்வங்கள் இருந்தது. அந்த தெய்வங்களை இப்போது காணவில்லை. யாக்கோபுதான் தன்னுடைய தெய்வங்களை திருடிக்கொண்டு போய்விட்டாரோ என்று லாபான் சந்தேகப்படுகிறார்.

லாபான் யாக்கோபை நோக்கி, "இப்பொழுதும் உன் தகப்பனுடைய வீட்டின்மேலுள்ள வாஞ்சையினால் நீ புறப்பட்டுப்போகிறதானால் போகலாம், என் தெய்வங்களை ஏன் திருடிக்கொண்டு போகிறாய்" (ஆதி 31:30) என்று கேட்கிறார்.

லாபான் தன் வீட்டிற்குப் போய் தன்னுடைய குடும்ப தெய்வங்களைப் பார்க்கிறார். ஆனால் அங்கு அவை இல்லை. யாக்கோபை எப்படியாவது தன்னுடைய இடத்திற்கு மறுபடியும் தந்திரமாக அழைத்து வர வேண்டுமென்று லாபான் சதி பண்ணுகிறார். தன்னுடைய வஞ்சனைக்கும், ஏமாற்றுக்கும் லாபான் இந்தத் தெய்வங்களை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்.

லாபான் தெய்வங்கள் என்று சொல்லுவது மெய்யாகவே தெய்வங்களல்ல. அவற்றிற்கு ஜீவனுமில்லை. வல்லமையுமில்லை. அந்த தெய்வங்களை ஒருவர் திருடிக்கொண்டு போகும்போது, அந்த தெய்வங்களால் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை. தங்களையே பாதுகாத்துக்கொள்ள முடியாத சொரூபங்கள், தன்னைப் பாதுகாக்கும் என்று லாபான் நம்புகிறான். இது லாபானின் மதியீனம்.

கர்த்தரை ஆராதிக்கிற நாம் பாக்கியவான்கள். சத்துருக்களால் நம்முடைய பொருட்களை மாத்திரமே திருடிக்கொண்டு போகமுடியும். நாம் ஆராதிக்கிற தேவனாகிய கர்த்தரை யாராலும் திருட முடியாது.

யாக்கோபுக்கு லாபானுடைய தெய்வங்களைப்பற்றி ஒன்றும் தெரியாது. லாபான் தன்மீது சொல்லும் குற்றச்சாட்டிலிருந்து, யாக்கோபு தன்னை நிரபராதி என்று நிரூபிக்க விரும்புகிறார். யாக்கோபு லாபானுக்கு தெரியாமல், அவருடைய குமாரத்திகளை தன்னோடு அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார். லாபான் தன்னுடைய குமாரத்திகளை பலாத்காரமாக பிடித்து வைத்துக்கொள்வார் என்று அஞ்சினதால், யாக்கோபு தாங்கள் பதான் அராமைவிட்டு புறப்பட்டுப் போவதைப்பற்றி லாபானுக்கு சொல்லவில்லை. ஆனால் லாபானுடைய தெய்வங்களைப்பற்றி யாக்கோபுக்கு ஒன்றும் தெரியாது.

யாக்கோபு தன் மனைவிகள்மீதும், தன் பிள்ளைகள்மீதும் பிரியமாயிருக்கிறார். அவர்களைப் பாதுகாக்கவேண்டியது யாக்கோபின் கடமை. ஆனால் லாபானோ, யாக்கோபு தனக்கு இன்னும் தொடர்ந்து வேலை செய்யவேண்டுமென்று விரும்புகிறார். யாக்கோபை பணிய வைப்பதற்காக, லாபான் ஒருவேளை தன்னுடைய குமாரத்திகளை பலாத்காரமாய் தன்னிடத்தில் பிடித்து வைத்துக்கொள்வதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் யாக்கோபு லாபானிடத்தில் சொல்லாமலேயே, தன்னுடைய மனைவிகளையும், தன்னுடைய பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு, லாபானை விட்டு திருட்டளவாய்ப் புறப்பட்டுப்போய்விடுகிறார்.

லாபான் யாக்கோபை நோக்கி, "என் தெய்வங்களை ஏன் திருடிக்கொண்டு போகிறாய்" என்று கேட்கிறார். இந்த விஷயத்தில் யாக்கோபு குற்றமில்லாதவர். யாக்கோபு லாபானை நோக்கி, "யாரிடத்தில் உம்முடைய தெய்வங்களைக் கண்டுபிடிக்கிறீரோ, அவனை உயிரோடே விடவேண்டாம்; உம்முடைய பொருள்கள் ஏதாவது என் வசத்தில் உண்டானால் நீர் அதை நம்முடைய சகோதரருக்கு முன்பாகப் பரிசோதித்தறிந்து, அதை எடுத்துக்கொள்ளும்" (ஆதி 31:32) என்று சொல்லுகிறார்.

யாக்கோபுக்கு லாபானுடைய தெய்வங்கள்மீது பிரியமில்லை. அந்த தெய்வங்களை ஆராதிக்கவேண்டும் என்னும் விருப்பமும் யாக்கோபின் மனதிலில்லை. ராகேல் அவைகளைத் திருடிக்கொண்டு வந்திருக்கிறாள். ஆனால் யாக்கோபோ அதையும் அறியாதிருக்கிறார்.

லாபான் யாக்கோபின் கூடாரத்திலும், லேயாளின் கூடாரத்திலும், இரண்டு வேலைக்காரிகளின் கூடாரத்திலும் பிரவேசித்துப்பார்த்தும் ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை; பின்பு, லேயாளின் கூடாரத்தைவிட்டு ராகேலின் கூடாரத்துக்குப் போகிறார் (ஆதி 31:33).

ராகேல் அந்தச் சுரூபங்களை எடுத்து, ஒட்டகச் சேணத்தின்கீழ் வைத்து, அதின் மேல் உட்கார்ந்திருந்திருக்கிறாள். லாபான் கூடாரம் எங்கும் தடவிப்பார்த்தும், அவைகளைக் கண்டுபிடிக்கவில்லை. ராகேல் தன் தகப்பனை நோக்கி, "என் ஆண்டவனாகிய உமக்கு முன்பாக நான் எழுந்திராததைக்குறித்துக் கோபங் கொள்ளவேண்டாம்; ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு எனக்கு உண்டாயிருக்கிறது" என்று சொல்லுகிறாள்; அப்படியே லாபான் அந்தச் சுரூபங்களைத்தேடியும் கண்டுபிடிக்கவில்லை" (ஆதி 31:34,35).

ஒட்டகச் சேணம் என்பது ஒட்டகத்தின்மீது விரிக்கப்பட்டிருக்கும் ஒரு மெத்தையாகும். இரவு வேளையில் ஒட்டகத்தில் பயணம் பண்ணுபவர் இதைத் தனக்கு படுக்கையாகப் பயன்படுத்திக் கொள்வார். பாலைவனங்களில் ஒட்டகங்கள் கூட்டமாகச் செல்லும்போது ஒவ்வொரு ஒட்டகத்தையும் மற்ற ஒட்டகத்தோடு கட்டி வைத்திருப்பார்கள். இதனால் எந்த ஒட்டகமும் கூட்டத்தை விட்டுத் தனியாகப் பிரிந்து செல்லாது.

லாபான் யாக்கோபின் கூடாரத்திலே தன்னுடைய தெய்வங்களைத் தேடுகிறார். அவர் யாக்கோபின் மந்தையிலே தன்னுடைய ஆடுகள் இருக்கிறதா என்று தேடிப்பார்க்கவில்லை. லாபானுக்கு தன்னுடைய ஆடுகளைவிட, தன்னுடைய தெய்வங்களே பெரிதாகயிருக்கிறது. தன்னுடைய தெய்வங்களைத் தேடியும், லாபானால் அவற்றை கண்டுபிடிக்க முடியவில்லை. லாபான் யாக்கோபுடைய தட்டுமுட்களையெல்லாம் தடவிப்பார்க்கிறார். ஆனால் அவர் யாக்கோபுடைய மந்தையில் தன்னுடைய ஆடுகள் ஏதாவது இருக்கிறதா என்பதை தேடிப்பார்க்கவில்லை.

கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரைக் கண்டுபிடிப்பார்கள். கர்த்தர்மீது நம்பிக்கை வைத்திருக்கிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள். "தேடுகிறவர்கள் கண்டடைவார்கள்" என்பது கர்த்தருடைய வார்த்தை. கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர்.

யாக்கோபின் கோபம் ஆதி 31:36-42

ஆதி 31:36. அப்பொழுது யாக்கோபுக்குக் கோபம் எழும்பி, லாபானோடே வாக்குவாதம்பண்ணி: நீர் என்னை இவ்வளவு உக்கிரமாயத் தொடர்ந்துவரும்படிக்கு நான் செய்த தப்பிதம் என்ன? நான் செய்த துரோகம் என்ன?

ஆதி 31:37. என் தட்டுமுட்டுகளையெல்லாம் தடவிப்பார்த்தீரே; உம்முடைய வீட்டுத் தட்டுமுட்டுகளில் என்னத்தைக் கண்டுபிடித்தீர்? அதை என்னுடைய சகோதரருக்கும் உம்முடைய சகோதரருக்கும் முன்பாக இங்கே வையும்; அவர்கள் எனக்கும் உமக்கும் நடுத்தீர்க்கட்டும்.

ஆதி 31:38. இந்த இருபது வருஷகாலமாய் நான் உம்மிடத்திலே இருந்தேன்; உம்முடைய செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் சினையழியவில்லை; உம்முடைய மந்தையின் கடாக்களை நான் தின்னவில்லை.

ஆதி 31:39. பீறுண்டதை நான் உம்மிடத்துக்குக் கொண்டுவராமல், அதற்காக நான் உத்தரவாதம்பண்ணினேன்; பகலில் களவுபோனதையும், இரவில் களவுபோனதையும் என் கையில் கேட்டு வாங்கினீர்.

ஆதி 31:40. பகலிலே வெயிலும் இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது; நித்திரை என் கண்களுக்குத் தூரமாயிருந்தது; இவ்விதமாய்ப் பாடுபட்டேன்.

ஆதி 31:41. இந்த இருபது வருஷகாலம் உம்முடைய வீட்டிலே இருந்தேன்; பதினாலு வருஷம் உம்முடைய இரண்டு குமாரத்திகளுக்காகவும், ஆறு வருஷம் உம்முடைய மந்தைக்காகவும் உம்மிடத்தில் சேவித்தேன்; பத்துமுறை என் சம்பளத்தை மாற்றினீர்.

ஆதி 31:42. என் பிதாவின் தேவனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் பயபக்திக்குரிய வரும் என்னோடிராமற்போனால், நீர் இப்பொழுது என்னை வெறுமையாய் அனுப்பிவிட்டிருப்பீர்; தேவன் என் சிறுமையையும் என் கைப்பிரயாசத்தையும் பார்த்து, நேற்று ராத்திரி உம்மைக் கடிந்துகொண்டார் என்று சொன்னான்.

யாக்கோபு இயல்பாகவே அமைதியான குணமும், சாந்த சுபாவமுள்ளவர். ஆனாலும் லாபானுடைய வார்த்தைகளும், அவர் யாக்கோபுடைய தட்டுமுட்டுகளையெல்லாம் தடவிப்பார்ப்பதும், யாக்கோபுக்கு கோபத்தை உண்டுபண்ணுகிறது. யாக்கோபு குணசாலியாகயிருந்தாலும் இப்போது அவருக்கு கோபம் எழும்புகிறது. அவர் லாபானோடு வாக்குவாதம்பண்ணுகிறார்.

யாக்கோபு லாபானை நோக்கி, "நீர் என்னை இவ்வளவு உக்கிரமாயத் தொடர்ந்துவரும்படிக்கு நான் செய்த தப்பிதம் என்ன? நான் செய்த துரோகம் என்ன?" (ஆதி 31:36) என்று கோபத்தோடு கேட்கிறார்.

இதுவரையிலும் அமைதியாக இருந்த யாக்கோபு இப்பொழுது கோபப்படுகிறார். தன்னுடைய உடமைகளையெல்லாம் சோதனை பண்ணிய போது யாக்கோபு அமைதியாக இருந்தார். "தேவன் தன்னோடு கூட இருக்கிறார். அதனால் தான் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை" என்னும் எண்ணம் யாக்கோபிற்கு வருகிறது. லாபானின் கூட்டத்தார் அதிக எண்ணிக்கையில் இருந்தாலும், யாக்கோபு அவரோடு பயமில்லாமல் பேசுகிறார்.

யாக்கோபுடைய கோபமான வார்த்தைகளுக்கு லாபானால் பதில் சொல்ல முடியவில்லை. யாக்கோபுடைய கோபமும் குறையவில்லை. அவர் லாபானை நோக்கி, "என் தட்டுமுட்டுகளையெல்லாம் தடவிப்பார்த்தீரே; உம்முடைய வீட்டுத் தட்டுமுட்டுகளில் என்னத்தைக் கண்டுபிடித்தீர்? அதை என்னுடைய சகோதரருக்கும் உம்முடைய சகோதரருக்கும் முன்பாக இங்கே வையும்; அவர்கள் எனக்கும் உமக்கும் நடுத்தீர்க்கட்டும்" (ஆதி 31:37) என்றும் கோபத்தோடு சொல்லுகிறார்.

பிரச்சனைகள் வரும் பொழுது, பொதுவான நபர்கள் பிரச்சனைகளை விசாரித்துத் தீர்ப்பு கூறுவது கிழக்கு தேசத்து வழக்கம். கடந்த 20 வருஷ காலத்தில் ஆரானில் லாபான் தனக்குச் செய்த அநீதிகளையெல்லாம் யாக்கோபு விவரித்துக் கூறுகிறார். (ஆதி 31:38-42) யாக்கோபின் பக்கத்தில் நியாயம் இருக்கிறது. ஆகையினால் இந்தப் பிரச்சனை சுமூகமாகத் தீருகிறது. யாக்கோபு தன்னுடைய மனைவிகளோடும், உடமைகளோடும் தன் வழியே போகிறார்.

யாக்கோபுடைய மனச்சாட்சி சுத்தமாயிருக்கிறது. அவர் இதுவரையிலும் லாபானுக்கு உண்மையாய் வேலை செய்திருக்கிறார். அவர் லாபானை வஞ்சிக்கவில்லை. யாக்கோபு லாபானுக்குரியதை இதுவரையிலும் திருடவுமில்லை. யாக்கோபு இருபது வருஷகாலமாய் லாபானிடத்திலிருக்கிறார்.

யாக்கோபு லாபானோடு கூடயிருந்த இந்த இருபது வருஷகாலத்தில், லாபானுடைய செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் சினையழியவில்லை; யாக்கோபு லாபானுடைய மந்தையின் கடாக்களை தின்னவில்லை (ஆதி 31:38).

யாக்கோபு ஆரானில் இரண்டு தடவை 20 வருஷ காலம் இருந்தார் என்று வேதபண்டிதர்களில் சிலர் கூறுகிறார்கள். ஆனால் அதற்கு ஆதாரம் எதுவுமில்லை. (ஆதி 31:38,41). ஆதி 27:2; ஆதி 29:28)

யாக்கோபு பீறுண்டதை லாபானிடத்திற்குக் கொண்டுவரவில்லை. யாக்கோபு அதற்காக உத்தரவாதம்பண்ணினார்; பகலில் களவுபோனதையும், இரவில் களவுபோனதையும் லாபான் யாக்கோபின் கையில் கேட்டு வாங்கினார். பகலிலே வெயிலும் இரவிலே குளிரும் யாக்கோபைப் பட்சித்தது; நித்திரை யாக்கோபின் கண்களுக்குத் தூரமாயிருந்தது; இவ்விதமாய் யாக்கோபு லாபானுக்கு பாடுபட்டார் (ஆதி 31:39,40).

யாக்கோபு இருபது வருஷகாலமாக லாபானிடத்தில் இருந்திருக்கிறார். அவர் லாபானுக்கு உண்மையுள்ளவராயிருந்தார். ஆனால் லாபானோ யாக்கோபுக்கு உண்மையுள்ளவராயிருக்கவில்லை. லாபானுடைய துஷ்டகுணத்தை நினைத்துப் பார்க்கும்போது யாக்கோபுக்கு கோபம் வருகிறது.

கிழக்கு தேசங்களில் மேய்ப்பர்கள் வாரக்கணக்கில் வீட்டை விட்டு வெளியேறி வனாந்தரமான இடங்களில் தங்களுடைய மந்தைகளை மேய்ப்பார்கள். பகலிலே வெயிலும் இரவிலே குளிரும் அவர்களைப் பட்சிக்கும். நித்திரை அவர்கள் கண்களுக்குத் தூரமாயிருக்கும்.

யாக்கோபு லாபானை நோக்கி, "இந்த இருபது வருஷகாலம் உம்முடைய வீட்டிலே இருந்தேன்; பதினாலு வருஷம் உம்முடைய இரண்டு குமாரத்திகளுக்காகவும், ஆறு வருஷம் உம்முடைய மந்தைக்காகவும் உம்மிடத்தில் சேவித்தேன்; பத்துமுறை என் சம்பளத்தை மாற்றினீர்" (ஆதி 31:41) என்று கோபத்தோடு சொல்லுகிறார்.

யாக்கோபு தனக்கு கொடுக்கப்பட்ட வேலைகளை இதுவரையிலும் கவனமாக செய்திருக்கிறார். அவர் தன்னுடைய வேலையில் ஒருபோதும் கவனக்குறைவாகயிருந்ததில்லை. யாக்கோபு தன்னுடைய வேலையில் உண்மையுள்ளவர். அவர் கண்ணியமான சுபாவமுள்ளவர். யாக்கோபு லாபானை வஞ்சித்து, அவருடைய கடாக்களில் ஒன்றையும் புசிக்கவில்லை.

யாக்கோபு கடினமாக உழைக்கக்கூடியவர். வெயிலும் குளிரும் அவரை பட்சித்தது. அவர் நித்திரைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், லாபானுடைய மந்தையை மேய்ப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தார். ஆனால் லாபானோ யாக்கோபின் சம்பளத்தை பத்துமுறை மாற்றினார்.

லாபான் மோசமான எஜமானுக்கு எடுத்துக்காட்டாகயிருக்கிறார். துன்மார்க்கமான எஜமான்களிடத்தில் நீதியிருக்காது. அவர்கள் தங்களுடைய வேலைக்காரரை அநியாயமாய் நடத்துவார்கள். இப்படிப்பட்ட எஜமான்கள் தங்களுக்கு கீழே வேலை செய்கிற வேலையாட்களுக்கு சரியான சம்பளம் கொடுக்கமாட்டார்கள். ஆனால் அவர்களிடத்திலிருந்து அதிகமாக வேலை வாங்குவார்கள். யாக்கோபு ஆடுகளை மேய்க்கும்போது, லாபான் களவுபோன ஆடுகளை, அவரிடத்திலிருந்து கேட்டு வாங்கினார்.

லாபான் யாக்கோபுக்கு கடினமான எஜமானாகயிருந்தாலும், கர்த்தர் யாக்கோபுக்கு நல்ல ஆண்டவராகயிருக்கிறார். லாபான் யாக்கோபை துன்புறுத்த நினைத்தாலும், கர்த்தர் யாக்கோபை பாதுகாக்கிறார். லாபான் யாக்கோபை வெறுமையாக அனுப்பிவிடவேண்டுமென்று திட்டமிட்டிருந்தார். கர்த்தரோ யாக்கோபை அதிகமாய் ஆசீர்வதித்து, திரளான ஐசுவரியத்தோடு அனுப்புகிறார்.

யாக்கோபு லாபானோடு வாக்குவாதம்பண்ணும்போது, கர்த்தர் தன்னோடு கூடயிருப்பதையும், அவர் லாபானை கடிந்துகொண்டு எச்சரித்ததையும் தெளிவுபடுத்துகிறார். யாக்கோபு லாபானை நோக்கி, "என் பிதாவின் தேவனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் பயபக்திக்குரிய வரும் என்னோடிராமற்போனால், நீர் இப்பொழுது என்னை வெறுமையாய் அனுப்பிவிட்டிருப்பீர்; தேவன் என் சிறுமையையும் என் கைப்பிரயாசத்தையும் பார்த்து, நேற்று ராத்திரி உம்மைக் கடிந்துகொண்டார்" (ஆதி 31:42) என்று சொல்லுகிறார்.

யாக்கோபு தேவனைப்பற்றிச் சொல்லும்போது, "ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் பயபக்திக்குரியவரும்" என்று சொல்லுகிறார். ஆபிரகாம் இப்போது மரித்துப்போனார். அவர் இப்போது பரமதேசத்திலே இருக்கிறார். ஈசாக்கோ இன்னும் ஜீவனோடிருக்கிறார். அவர் இந்தப் பூமியிலே பரதேசியாய் சஞ்சரிக்கிறார். ஈசாக்கு கர்த்தர்மீது பயபக்தியாயிருந்து, தன்னுடைய இருதயத்திலே கர்த்தரை பரிசுத்தம்பண்ணுகிறார்.

நாம் கர்த்தர்மீது பயபக்தியாயிருக்கும்போது, கர்த்தர் நம்முடைய இருதயத்தை சுத்திகரிக்கிறார். கர்த்தருக்கு பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். லாபானுக்கு கர்த்தர்மீது பயம் இருக்கிறது. ஆனால் அவருக்கு கர்த்தர்மீது பக்தியிருக்கிறதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்.

நாம் கர்த்தர்மீது பயபக்தியாயிருக்கும்போது, அவர் நம்மை கண்ணோக்கிப் பார்க்கிறார். கர்த்தர் நம்முடைய சிறுமையையும், கைப்பிரயாசத்தையும் நோக்கிப் பார்க்கிறார். கர்த்தர் நமக்காக யுத்தம்பண்ணுகிறார். நம்மைத்தொடுகிறவர்கள் கர்த்தரைத் தொடுகிறார்கள். நமக்கு விரோதமாகத் தீங்குசெய்ய நினைக்கிறவர்கள் கர்த்தருக்கு விரோதமாக தீங்குசெய்ய நினைக்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவது என்பது இயலாத காரியம்.

உடன்படிக்கை
ஆதி 31:43-55

ஆதி 31:43. அப்பொழுது லாபான் யாக்கோபுக்குப் பிரதியுத்தரமாக: இந்தக் குமாரத்திகள் என் குமாரத்திகள், இந்தப் பிள்ளைகள் என் பிள்ளைகள், இந்த மந்தை என் மந்தை; நீ காண்கிற யாவும் என்னுடையவைகள்; என் குமாரத்திகளாகிய இவர்களையும், இவர்கள் பெற்ற பிள்ளைகளையும் இன்று நான் என்ன செய்யக்கூடும்?

ஆதி 31:44. இப்பொழுதும் எனக்கும் உனக்கும் சாட்சியாயிருக்கும்பொருட்டு, நீயும் நானும் உடன்படிக்கைபண்ணிக் கொள்ளக்கடவோம் என்றான்.

ஆதி 31:45. அப்பொழுது யாக்கோபு ஒரு கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தினான்.

ஆதி 31:46. பின்னும் யாக்கோபு தன் சகோதரரைப் பார்த்து, கற்களைக் குவியலாகச் சேருங்கள் என்றான்; அவர்கள் கற்களை எடுத்துக்கொண்டுவந்து, ஒரு குவியலாக்கி, அந்தக் குவியலின்மேல் போஜனம்பண்ணினார்கள்.

ஆதி 31:47. லாபான் அதற்கு ஜெகர்சகதூதா என்று பேரிட்டான்; யாக்கோபு அதற்குக் கலெயெத் என்று பேரிட்டான்.

ஆதி 31:48. இந்தக் குவியல் இன்று எனக்கும் உனக்கும் சாட்சி என்று லாபான் சொன்னபடியினாலே, அதின் பேர் கலெயெத் என்னப்பட்டது.

ஆதி 31:49. அல்லாமலும் அவன்: நான் ஒருவரை ஒருவர் விட்டு மறைந்தபின், நீ என் குமாரத்திகளைத் துயரப்படுத்தி, அவர்களையல்லாமல் வேறே ஸ்திரீகளை விவாகம் பண்ணினாயானால், கர்த்தர் எனக்கும் உனக்கும் நடுநின்று கண்காணிக்கக்கடவர்;

ஆதி 31:50. நம்முடனே ஒருவரும் இல்லை; பார், தேவனே எனக்கும் உனக்கும் சாட்சி என்று சொன்னபடியால், அது மிஸ்பா என்னும் பேர்பெற்றது.

ஆதி 31:51. பின்னும் லாபான் யாக்கோபை நோக்கி: இதோ, இந்தக் குவியலையும் எனக்கும் உனக்கும் நடுவாக நான் நிறுத்தின தூணையும் பார்.

ஆதி 31:52. தீங்குசெய்ய நான் இந்தக் குவியலைக் கடந்து உன்னிடத்துக்கு வராதபடிக்கும், நீ இந்தக் குவியலையும் இந்தத் தூணையும் கடந்து என்னிடத்துக்கு வராதபடிக்கும் இந்தக் குவியலும் சாட்சி, இந்தத் தூணும் சாட்சி.

ஆதி 31:53. ஆபிரகாமின் தேவனும் நாகோரின் தேவனும் அவர்கள் பிதாக்களின் தேவனுமாயிருக்கிறவர் நமக்குள்ளே நடுநின்று நியாயந்தீர்ப்பாராக என்றான். அப்பொழுது யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கின் பயபக்திக்குரியவர்மேல் ஆணையிட்டான்.

ஆதி 31:54. பின்பு, யாக்கோபு மலையின்மேல் பலியிட்டு, போஜனம்பண்ணும்படி தன் சகோதரரை அழைத்தான்; அப்படியே அவர்கள் போஜனம்பண்ணி மலையிலே இராத் தங்கினார்கள்.

ஆதி 31:55. லாபான் அதிகாலமே எழுந்திருந்து, தன் குமாரரையும் தன் குமாரத்திகளையும் முத்தஞ்செய்து, அவர்களை ஆசீர்வதித்தான். பின்பு லாபான் புறப்பட்டு, தன் இடத்துக்குத் திரும்பிப்போனான்.

யாக்கோபு லாபானோடு கோபமாக வாக்குவாதம்பண்ணுகிறார். அதன் பின்பு இருவரும் ஒப்புரவாகிறார்கள். அவர்கள் தங்களுக்குள்ளே உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள். யாக்கோபு தன்னோடு கோபத்தோடே வாக்குவாதம்பண்ணினாலும், லாபான் அவருக்கு கோபமான பிரதியுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. லாபானால் யாக்கோபை குற்றப்படுத்தவும் முடியவில்லை, தன்னுடைய செய்கைகளை நியாயப்படுத்தவும் முடியவில்லை.

லாபான் யாக்கோபுக்கு விரோதமாகத் தீங்கு செய்திருக்கிறார். யாக்கோபு லாபானிடத்தில் கோபமாக சொல்லுகிற வார்த்தைகள் எல்லாமே உண்மையானவை. லாபானுடைய மனச்சாட்சியும், யாக்கோபுடைய வார்த்தைகள் உண்மையானது என்று சாட்சி சொல்லுகிறது. லாபானின் மனச்சாட்சி அவரைக் குற்றப்படுத்துகிறது.

லாபான் இப்போது யாக்கோபிடத்தில் அன்பாகப் பேச ஆரம்பிக்கிறார். அவருக்கு தன் குமாரத்திகள்மீதும், அவர்களுடைய பிள்ளைகள்மீதும் பிரியம் இருக்கிறது. லாபான் யாக்கோபுக்கு பிரதியுத்தரமாக, "இந்தக் குமாரத்திகள் என் குமாரத்திகள், இந்தப் பிள்ளைகள், என் பிள்ளைகள்" (ஆதி 31:43) என்று சொல்லுகிறார்.

லாபான் யாக்கோபுக்கு விரோதமாகத் தீங்கு செய்திருக்கிறார். தான் செய்த குற்றங்களை லாபானால் மன்னிக்க முடியவில்லை. யாக்கோபுடைய மனைவிகள் லாபானுடைய குமாரத்திகளாயிருக்கிறார்கள். இதற்கு முன்பு கோபமும், பொறாமையும் லாபானுடைய கண்களை மூடி மறைத்தது. இப்போது லாபானுடைய கோபம் தணிந்திருக்கிறது. அவருக்கு தெளிந்த பார்வை வருகிறது. லாபான் இப்போது யாக்கோபின் மனைவிகளை, தன்னுடைய குமாரத்திகளாகப் பார்க்கிறார்.

லாபான் இதற்கு முன்பு தன்னுடைய குமாரத்திகளை அந்நியராகப் பார்த்தார். லாபானுடைய குமாரத்திகளாகிய ராகேலும் லேயாளும், தங்கள் தகப்பனாகிய லாபானைப்பற்றிச் சொன்னபோது, "எங்கள் தகப்பன் வீட்டிலே இனி எங்களுக்குப் பங்கும் சுதந்தரமும் உண்டோ? அவரால் நாங்கள் அந்நியராய் எண்ணப்படவில்லையா? அவர் எங்களை விற்று, எங்கள் பணத்தையும் வாயிலே போட்டுக் கொண்டார்" (ஆதி 31:14,15) என்று சொன்னார்கள்.

இப்போதோ லாபான் தன்னுடைய குமாரத்திகளை அந்நியராகப் பார்க்காமல், தன்னுடைய சொந்த குமாரத்திகளாகப் பார்க்கிறார். லாபான் யாக்கோபுக்கு விரோதமாகத் தீங்கு செய்தால், அவர் தான் பெற்ற குமாரத்திகளுக்கு விரோதமாக தீங்கு செய்ய வேண்டியது வரும். லாபான் யாக்கோபை நோக்கி, "என் குமாரத்திகளாகிய இவர்களையும், இவர்கள் பெற்ற பிள்ளைகளையும் இன்று நான் என்ன செய்யக்கூடும்" என்று கேட்கிறார். இவர்களுக்கு தீங்கு செய்யாமல், லாபானால் யாக்கோபுக்கு தீங்கு செய்ய முடியாது. லாபான் யாக்கோபுக்கு செய்யும் தீங்கு, அவருடைய குமாரத்திகளுக்கும், அவர்கள் பெற்ற பிள்ளைகளுக்கும் செய்கிற தீங்காக இருக்கும்.

லாபான் யாக்கோபோடு சமாதான உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விரும்புகிறார். யாக்கோபும் லாபானோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்ள சந்தோஷமாய் சம்மதிக்கிறார். யாக்கோபு லாபானிடத்திலிருந்து வேறு எதையும் எதிர்பார்க்கவில்லை. அவர் லாபானுடைய வார்த்தைகளை நம்புகிறார். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். உண்மையான அன்பு இருக்குமிடத்தில் சமாதானம் இருக்கும். தொடர்ந்து சண்டை போட்டுக்கொண்டிருப்பதைவிட, தோற்றுப்போனவர்களாக அமைதியாக அமர்ந்திருப்பதே மிகவும் நல்லது.

உடன்படிக்கை மிகவும் விசேஷமானது. பரிசுத்த வேதாகமத்தில் உடன்படிக்கையின் அம்சங்களைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. புனிதமானது (யோசு 9:18; கலா 3:15-17)

2. கட்டுப்படுத்தக்கூடியது (யோசு 9:18; கலா 3:15-17)

3. உடன்படிக்கையை மீறினால் தண்டனை உண்டு (லேவி 26; உபா 28; 2சாமு 21:1-6; எரே 34:8-22; எசே 17:13-19)

உடன்படிக்கை உறுதிபண்ணப்படவேண்டும். பரிசுத்த வேதாகமத்தில் உடன்படிக்கையை உறுதிபண்ணும் விதங்கள் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. ஆணைகள் (ஆதி 22:16)

2. மிருகங்களின் இரத்தம் (ஆதி 15:9-17;ஆதி 31:43-53; யாத் 24:8; எபி 9:19-22)

3. விருந்துகள் (ஆதி 21:26-31; ஆதி 26:30-31; ஆதி 31:46,54)

4. நினைவுச்சின்னங்கள் (ஆதி 28:16-22; ஆதி 31:43-53)

5. கைகளை உயர்த்துதல் (எஸ்றா 10:19; ஆதி 14:22)

6. பாதரட்சைகளை அகற்றுதல் (ரூத் 4:7-8)

7. கிறிஸ்துவின் இரத்தம் (மத் 26:28; எபி 9:11-22; எபி 13:11-12,20)

பத்துக் கற்பனைகள் பழைய ஏற்பாட்டின் பிரதான உடன்படிக்கையாகும். இவை கற்பலகைகளில் எழுதப்பட்டது. உடன்படிக்கைப் பேழையில் இந்தப் பலகைகள் வைக்கப் பட்டிருக்கும். உடன்படிக்கை பேழையில் கிருபாசனம் இருக்கும். தேவனுடைய பிரசன்னத்திற்கு இது அடையாளம். மனுஷன் தேவனுடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிய வேண்டுமென்பதை இது மனுஷருக்குத் தொடர்ந்து உணர்த்திக் கொண்டேயிருக்கும். (எண் 10:33; எண் 14:44; உபா 10:8; யோசு 3:3-17) புதிய உடன்படிக்கை நித்திய பேழையில் இருக்கிறது. (எபி 8:1-6; எபி 9:1-22; வெளி 11:19).

இந்த வசனப்பகுதியில் லாபானுக்கும் யாக்கோபுக்கும் சாட்சியாயிருக்கும் பொருட்டு பண்ணிக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் ஷரத்துக்களைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. லாபானே உடன்படிக்கையின் ஷரத்துக்களை சொல்லுகிறார்.

யாக்கோபு தன்னுடைய மனைவிகளுக்கு நல்ல புருஷனாயிருக்க வேண்டும். யாக்கோபு லாபானின் குமாரத்திகளை துயரப்படுத்தி, அவர்களையல்லாமல் வேறு ஸ்திரீகளை விவாகம்பண்ணக்கூடாது (ஆதி 31:49).

லாபான் யாக்கோபுக்கு விரோதமாக இனிமேல் தீங்கு செய்ய வரமாட்டார். அதுபோலவே யாக்கோபும் இனிமேல் யாக்கோபுக்கு தீங்கு செய்ய வரக்கூடாது (ஆதி 31:52). லாபான் யாக்கோபுக்கு இதுவரையிலும் செய்த தீமைகளையெல்லாம், யாக்கோபு மன்னித்து மறந்துவிடவேண்டும்.

லாபான் யாக்கோபை நோக்கி, "இப்பொழுதும் எனக்கும் உனக்கும் சாட்சியாயிருக்கும்பொருட்டு, நீயும் நானும் உடன்படிக்கைபண்ணிக்கொள்ளக்கடவோம்" (ஆதி 31:44) என்று சொல்லுகிறார். அப்பொழுது யாக்கோபு ஒரு கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்துகிறார். பின்னும் யாக்கோபு தன் சகோதரரைப் பார்த்து, "கற்களைக் குவியலாகச் சேருங்கள்" என்று சொல்லுகிறார்; அவர்கள் கற்களை எடுத்துக்கொண்டுவந்து, ஒரு குவியலாக்குகிறார்கள்" (ஆதி 31:45,46).

யாக்கோபு ஒரு கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்துகிறார். அங்கிருந்தவர்கள் அனைவரும் ஆளுக்கொரு கல்லாக எடுத்து அவற்றைக் குவியலாகச் சேர்க்கிறார்கள். (ஆதி 31:46-52). யாக்கோபின் ஜீவியத்தில் இரண்டு முக்கியமான கற்கள் இடம் பெறுகின்றன. அவையாவன:

1. தேவன் யாக்கோபோடு செய்து கொண்ட உடன்படிக்கைக்கு நினைவுச்சின்னம். (ஆதி 28:18)

2. லாபான் யாக்கோபோடு செய்து கொண்ட உடன்படிக்கைக்கு நினைவுச்சின்னம் (ஆதி 31:45)

அவர்கள் அந்தக் குவியலின்மேல் போஜனம் பண்ணுகிறார்கள். உடன்படிக்கையில் பங்கு பெறுகிறவர்கள் சேர்ந்து போஜனம் பண்ணுவது வழக்கம். போஜனத்தில் உள்ள உப்பு அவர்களை இந்த உடன்படிக்கையில் கட்டுப்படுத்தும். போஜனம் பண்ணாமல் இருப்பது விரோதத்தைக் குறிக்கும்.

பின்பு யாக்கோபு மலையின்மேல் பலியிட்டு, போஜனம்பண்ணும்படி தன் சகோதரரை அழைக்கிறார் (ஆதி 31:54). அப்படியே அவர்கள் அந்தக் குவியலின்மேல் போஜனம்பண்ணுகிறார்கள். அவர்கள் போஜனம்பண்ணிய பிற்பாடு, மலையிலே இராத்தங்குகிறார்கள். யாக்கோபு மலையின்மேல் சமாதான பலிகளை செலுத்தினார்.

நாம் தேவனோடு சமாதானமாயிருக்க வேண்டும். அதுவே நமக்கு ஆறுதலைக் கொடுக்கும். நாம் மற்றவர்களோடு சமாதானமாகயிருக்க வேண்டுமென்றால், நாம் முதலாவதாக தேவனோடு ஒப்புரவாகி, அவரோடு சமாதானமாகயிருக்கவேண்டும்.

பூர்வகாலங்களில் சமாதான உடன்படிக்கைபண்ணும்போது, அவர்கள் அன்பின் விருந்தில் பங்குபெறுவது வழக்கம். அவர்கள் ஒன்றாய்ப் போஜனம்பண்ணி, பானம்பண்ணுவார்கள்.

லாபானும் யாக்கோபும் சமாதான உடன்படிக்கை பண்ணுகிறார்கள். அதற்கு சாட்சியாக யாக்கோபு ஒரு கல்லை எடுத்து அதைத் தூணாக நிறுத்துகிறார். லாபான் அதற்கு ஜெகர்சகதூதா என்று பேரிடுகிறார்; யாக்கோபு அதற்குக் கலயெத் என்று பேரிடுகிறார். "இந்தக் குவியல் இன்று எனக்கும் உனக்கும் சாட்சி" என்று லாபான் சொன்னார். ஆனபடியினாலே, அதின் பேர் கலயெத் என்னப்படுகிறது (ஆதி 31:47,48).

லாபானும் யாக்கோபும் உடன்படிக்கை பண்ணும்போது அங்கே அவர்களுடனே கூட வேறு ஒருவருமில்லை. தேவனே லாபானுக்கும் யாக்கோபுக்கும் சாட்சியாயிருக்கிறார். ஆகையினால் அந்தக் கல் மிஸ்பா என்னும் பேர் பெறுகிறது (ஆதி 31:50).

பின்னும் லாபான் யாக்கோபை நோக்கி: "இதோ, இந்தக் குவியலையும் எனக்கும் உனக்கும் நடுவாக நான் நிறுத்தின தூணையும் பார். தீங்குசெய்ய நான் இந்தக் குவியலைக் கடந்து உன்னிடத்துக்கு வராதபடிக்கும், நீ இந்தக் குவியலையும் இந்தத் தூணையும் கடந்து என்னிடத்துக்கு வராதபடிக்கும் இந்தக் குவியலும் சாட்சி, இந்தத் தூணும் சாட்சி" (ஆதி 31:51,52) என்று சொல்லுகிறார்.

லாபானும் யாக்கோபும் உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்கள். இரண்டுபேரும் இந்த உடன்படிக்கையின் ஷரத்துக்களை மீறக்கூடாது. அவர்கள் உடன்படிக்கை பண்ணியதற்கு இந்தக் கல் குவியல் சாட்சியாகயிருக்கிறது. இவர்கள் இருவரில் உடன்படிக்கையின் ஷரத்துக்களை யார் மீறினாலும், தேவனாகிய கர்த்தர் நியாயாதிபதியாகயிருந்து அவரை நியாயந்தீர்ப்பார்.

கர்த்தரே தங்களுக்கு நியாயாதிபதியாயிருப்பார் என்பதை லாபானும் யாக்கோபும் அங்கீகரிக்கிறார்கள். லாபான் தன்னுடைய உடன்படிக்கையின் ஷரத்துக்களை உறுதிபண்ணி ஆணையிடும்போது, "ஆபிரகாமின் தேவனும் நாகோரின் தேவனும் அவர்கள் பிதாக்களின் தேவனுமாயிருக்கிறவர் நமக்குள்ளே நடுநின்று நியாயந்தீர்ப்பாராக" என்று சொல்லி ஆணையிடுகிறார். அப்பொழுது யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கின் பயபக்திக்குரியவர்மேல் ஆணையிடுகிறார் (ஆதி 31:53).

லாபான் தேவனாகிய கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, அவரை ஆபிரகாமின் தேவனும், நாகோரின் தேவனும் என்று சொல்லுகிறார். யாக்கோபு ஆபிரகாமின் சந்ததியைச் சேர்ந்தவர். லாபான் நாகோரின் சந்ததியைச் சேர்ந்தவர். "அவர்கள் பிதாக்களின் தேவன்" என்பது, லாபானுக்கும் யாக்கோபுக்கும் பொதுவானது. லாபானுடைய பிதாக்களே, யாக்கோபுக்கும் பிதாக்களாயிருக்கிறார்கள்.

ஆபிரகாம், நாகோர் ஆகியோர் தேராகுவின் குமாரர்கள். (ஆதி 11:27). தேராகு ஆபிரகாமோடு வாக்குத்தத்தத்தின் தேசத்திற்குப் போனார். (ஆதி 11:31). ஆபிரகாமின் தேவனை தேராகுவும் ஆராதனை செய்தார். லாபானின் தெய்வங்களை ராகேல் திருடிக் கொண்டு வந்து விட்டாள். லாபானுக்கு வழிபட விக்கிரகங்களே இல்லை. (ஆதி 31:30-35).

"ஈசாக்கின் பயபக்திக்குரியவர்" என்று யாக்கோபு இரண்டாம் முறையாக இந்த வாக்கியத்தைப் பயன்படுத்துகிறார் (ஆதி 31:42,53). ஈசாக்கு பயபக்தியோடு ஆராதனை செய்த தேவனையோ அல்லது ஈசாக்கின் வல்லமையையோ இந்த வாக்கியம் குறிக்கலாம். ஈசாக்கிடம் ஆயிரக்கணக்கான போர்வீரர்கள் இருக்கிறார்கள். ஆபிரகாமிடமிருந்து ஈசாக்கு இவர்களைச் சுதந்தரமாகப் பெற்றுக் கொண்டார். (ஆதி 25:5; ஆதி 12:5).

ஈசாக்கு இன்னும் ஜீவனோடு இருக்கிறார். லாபான் தனக்கு ஏதாவது கேடு செய்தால், ஈசாக்கு தன்னுடைய பரிவாரங்களோடு தன்னைப் பாதுகாக்க வருவார் என்னும் பொருளில் யாக்கோபு இந்த வாக்கியத்தை சொல்லுகிறார்.

லாபானும் யாக்கோபும் ஒரே தேவனையே ஆராதிக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே பகையிருக்கக்கூடாது. நாம் கர்த்தரோடு சமாதானமாயிருப்பதுபோல, சகவிசுவாசிகளோடும் சமாதானமாயிருக்க வேண்டும்.

லாபானும் யாக்கோபும் உடன்படிக்கைபண்ணின ஸ்தலத்திற்கு புதிய பெயரைக் கொடுக்கிறார்கள். லாபான் அதற்கு ஜெகர்சகதூதா என்று சீரிய பாஷையிலே பேரிடுகிறார்; யாக்கோபு அதற்குக் கலயெத் என்று எபிரெய பாஷையிலே பேரிடுகிறார். இந்தப் பெயருக்கு "உடன்படிக்கையின் கற்குவியல்" என்று பொருள்.

"தேவனே எனக்கும் உனக்கும் சாட்சி" என்று லாபான் சொன்னபடியினால் அது மிஸ்பா என்னும் பேர் பெறுகிறது. இந்தப் பெயருக்கு "காவல் கோபுரம்" என்று பொருள். இந்தப் பெயர்கள் சுவிசேஷ உடன்படிக்கைக்கு முத்திரைகளாயிருக்கிறது. நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கும்போது, மிஸ்பா நமக்கு ஆதரவாக சாட்சி கொடுக்கும். நாம் கர்த்தரை விட்டு விலகி, கர்த்தருக்கு விரோதமான காரியங்களை செய்யும்போது, மிஸ்பா நமக்கு விரோதமாக சாட்சி கொடுக்கும்.

லாபானும் யாக்கோபும் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளும்போது, லாபானே அதிகமான வார்த்தைகளைப் பேசுகிறார். யாக்கோபு அமைதியாகயிருக்கிறார். அவர் குறைவான வார்த்தைகளையே பேசுகிறார். லாபானும் யாக்கோபும் சமாதான உடன்படிக்கை பண்ணிய பிற்பாடு, அவர்கள் கீலேயாத் மலையிலே இராத்தங்குகிறார்கள்.

லாபான் அதிகாலமே எழுந்திருந்து, தன் குமாரரையும் தன் குமாரத்திகளையும் முத்தஞ்செய்து, அவர்களை ஆசீர்வதிக்கிறார். பின்பு லாபான் புறப்பட்டு, தன் இடத்துக்குத் திரும்பிப்போகிறார் (ஆதி 31:55).

32 அதிகாரம்

யாக்கோபு கானான் தேசத்தை நோக்கி பிரயாணம்பண்ணுகிறார். யாக்கோபின் பிரயாணத்தில் அற்புதமான சம்பவங்கள் ஏராளமாய் நடைபெறுகிறது. யாக்கோபு பிரயாணம்பண்ணுகையில், தேவதூதர்கள் அவரை சந்திக்கிறார்கள் (ஆதி 32:1,2).

ஏசா நானூறு ஆட்களோடு யாக்கோபை எதிர்கொள்ள வருகிறார். இந்த செய்தியைக் கேட்டு, யாக்கோபு மிகவும் பயப்படுகிறார் (ஆதி 32:3-6). யாக்கோபு ஏசாவின் நிமித்தமாக மிகவும் பயந்து, தன்னிடத்திலிருக்கிற ஜனங்களையும், ஆடுமாடுகளையும், ஒட்டகங்களையும் இரண்டு பகுதியாகப் பிரிக்கிறார் (ஆதி 32:7,8).

யாக்கோபு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார் (ஆதி 32:9-12). யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவுக்கு வெகுமதிகளை அனுப்புகிறார் (ஆதி 32:13-23). யாக்கோபு கர்த்தருடைய தூதனானவரோடு போராடி மேற்கொள்கிறார் (ஆதி 32:24-32).

தேவனுடைய சேனை ஆதி 32:1,2

ஆதி 32:1. யாக்கோபு பிரயாணம் பண்ணுகையில், தேவதூதர்கள் அவனைச் சந்தித்தார்கள்.

ஆதி 32:2. யாக்கோபு அவர்களைக் கண்டபோது: இது தேவனுடைய சேனை என்று சொல்லி, அந்த ஸ்தலத்திற்கு மக்னாயீம் என்று பேரிட்டான்.

யாக்கோபு கானான் தேசத்தை நோக்கி பிரயாணம்பண்ணுகிறார். யாக்கோபோடுகூட, அவருடைய இரண்டு மனைவிகளும், வேலைக்காரிகளும் பிள்ளைகளும் பிரயாணமாய்ப் போகிறார்கள். அப்போது தேவதூதர்கள் யாக்கோபை சந்திக்கிறார்கள். யாக்கோபு தேவதூதர்களை பகல்வேளையிலே பிரத்தியட்சமாய்ப் பார்த்தாரா அல்லது இரவிலே நித்திரையாயிருக்கும்போது அவர்களை சொப்பனத்திலே தரிசித்தாரா என்பது தெரியவில்லை. யாக்கோபு ஏற்கெனவே தேவதூதர்களை, தன் சொப்பனத்தில் பார்த்திருக்கிறார். அவர்கள் ஏணியிலே ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாயிருந்தார்கள்.

"அங்கே யாக்கோபு ஒரு சொப்பனம் கண்டார்; இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்" (ஆதி 28:12).

தேவதூதர்கள் யாக்கோபுக்கு உதவிசெய்வதற்காகவும், அவரைப் பாதுகாப்பதற்காகவும், அவருக்கு பணிவிடை செய்வதற்காகவும் அவரோடுகூட போகிறார்கள். தேவதூதர்கள் அதரிசனமானவர்கள். ஆனால் யாக்கோபு இப்போது அந்தத் தூதர்களை தரிசிக்கிறார்.

யாக்கோபுக்கு பயமும் வியாகுலமும் அதிகமாயிருக்கிறது. அவருக்கு அவருடைய சகோதரன் ஏசா மூலமாக பெரிய ஆபத்து காத்துக்கொண்டிருக்கிறது. இப்போது யாக்கோபுக்கு தெய்வீக உதவி தேவைப்படுகிறது. கர்த்தர் யாக்கோபை பாதுகாப்பார். தம்முடைய பாதுகாப்பையும், பராமரிப்பையும் யாக்கோபுக்கு உறுதிபண்ணும் வண்ணமாக, தேவதூதர்கள் இப்போது யாக்கோபை சந்திக்கிறார்கள்.

நாம் சமாதானமாயிருக்கும்போது கர்த்தர் நம்மோடுகூடயிருப்பார். நாம் பிரச்சனையிலிருக்கும்போது கர்த்தர் நம்மைவிட்டு விலகிப்போய்விடமாட்டார். நமக்கு பிரச்சனைகளும், போராட்டங்களும், உபத்திரவங்களும் வந்தாலும், கர்த்தர் நமக்கு ஏற்கெனவே செய்த உதவிகளை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். கர்த்தர் நம்மை ஆபத்துக்களிலிருந்து தப்புவித்த சம்பவங்களையெல்லாம் நினைவுகூரவேண்டும்.

நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். கர்த்தரோடு நமக்கு ஏற்பட்ட பழைய அனுபவங்கள், நமக்கு புதிய உற்சாகத்தையும், புதிய ஆறுதலையும் கொடுக்கும்.

யாக்கோபு தேவதூதர்களை கண்டபோது, "இது தேவனுடைய சேனை" (ஆதி 32:2) என்று சொல்லுகிறார். தேவசேனையைப் பார்க்கும்போது யாக்கோபுக்கு ஆறுதலாயிருக்கிறது. யாக்கோபு கர்த்தருடைய கிருபையையும், வார்த்தையையும் நினைவுகூருகிறார்.

யாக்கோபு அந்த ஸ்தலத்திற்கு மக்னாயீம் என்று பேரிடுகிறார். இந்தப் பெயருக்கு இரண்டு சேனைகள் என்று பொருள். ஒரு சேனை அவருக்கு முன்னாகவும், மற்றொரு சேனை அவருக்கு பின்னாகவும் வந்து அவரைப் பாதுகாக்கிறது. லாபான் யாக்கோபுக்கு பின்னால் வருகிறார். ஏசா யாக்கோபுக்கு முன்னால் வருகிறார்.

மக்னாயீம் என்பது எபிரெய வார்த்தை. இரண்டு பாளயங்கள் என்பது இதன் பொருள். வானத்தின் சேனை யாக்கோபைச் சந்திக்கிறது. யாக்கோபு கானானுக்குள் போகும் போது அவருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பாதுகாப்பு கிடைக்கும் (ஆதி 28:15). இவை இரண்டு சேனைகளாகப் பிரிந்து இருக்கிறது. யாக்கோபின் ஒவ்வொரு பகுதியிலும் இந்தச் சேனைகள் பாதுகாப்பாக வருகிறது (ஆதி 31:7-8).

யாக்கோபுக்கு இரண்டு பக்கத்திலும் பாதுகாப்பு தேவைப்படுகிறது. யாக்கோபைப் பாதுகாக்கும் வண்ணமாக தேவனுடைய சேனை அவருக்கு முன்னாகவும் பின்னாகவும் இருக்கிறார்கள். யாக்கோபுக்கு தேவதூதர்கள் மூலமாக முழுமையான பாதுகாப்பு கிடைக்கிறது. யாக்கோபு தேவதூதர்களைக் கண்டு, கர்த்தருடைய பாதுகாப்பு தனக்கு உண்டு என்பதை உறுதி செய்துகொள்கிறார்.

மக்னாயீம் என்னும் பெயருக்கு வேதபண்டிதர்கள் வேறொரு விளக்கமும் சொல்லுகிறார்கள். மக்னாயீம் என்னும் பெயருக்கு இரண்டு சேனைகள் என்று பொருள். யாக்கோபின் குடும்பத்தார் ஒரு சேனையாகவும், தேவதூதர்கள் மற்றொரு சேனையாகவும் இருக்கிறார்கள். யாக்கோபின் குடும்பம் கர்த்தருடைய சபையைக் குறிக்கிறது. விசுவாசிகள் இந்தப் பூமியிலே கர்த்தருடைய சேனையாகயிருக்கிறார்கள். தேவதூதர்கள் பரலோகத்திலே கர்த்தருடைய சேனையாயிருக்கிறார்கள்.

ஏசா
ஆதி 32:3-8

ஆதி 32:3. பின்பு, யாக்கோபு ஏதோம் சீமையாகிய சேயீர் தேசத்திலிருக்கிற தன் சகோதரனாகிய ஏசாவினிடத்துக்குப் போகும்படி ஆட்களை அழைப்பித்து:

ஆதி 32:4. நீங்கள் என் ஆண்டவனாகிய ஏசாவினிடத்தில் போய், நான் இதுவரைக்கும் லாபானிடத்தில் தங்கியிருந்தேன் என்றும்,

ஆதி 32:5. எனக்கு எருதுகளும், கழுதைகளும், ஆடுகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும் உண்டென்றும், உம்முடைய கண்களில் எனக்குத் தயவுகிடைக்கத்தக்கதாக ஆண்டவனாகிய உமக்கு இதை அறிவிக்கும்படி ஆட்களை அனுப்பினேன் என்றும் உம்முடைய தாசனாகிய யாக்கோபு சொல்லச்சொன்னான் என்று சொல்லும்படி, கட்டளைகொடுத்துத் தனக்கு முன்னாக அவர்களை அனுப்பினான்.

ஆதி 32:6. அந்த ஆட்கள் யாக்கோபினிடத்துக்குத் திரும்பிவந்து: நாங்கள் உம்முடைய சகோதரனாகிய ஏசாவினிடத்துக்குப் போய்வந்தோம்; அவரும் நானூறு பேரோடே உம்மை எதிர்கொள்ள வருகிறார் என்றார்கள்.

ஆதி 32:7. அப்பொழுது யாக்கோபு மிகவும் பயந்து, வியாகுலப்பட்டு, தன்னிடத்திலிருந்த ஜனங்களையும் ஆடுமாடுகளையும் ஒட்டகங்களையும் இரண்டு பகுதியாகப் பிரித்து:

ஆதி 32:8. ஏசா ஒரு பகுதியின்மேல் விழுந்து அதை முறிய அடித்தாலும், மற்றப் பகுதி தப்பித்துக்கொள்ள இடம் உண்டு என்றான்.

யாக்கோபு கானானுக்குப் போகும் வழியிலே தேவதூதர்களை பார்த்தாலும், அவர் ஏசா மூலமாக தனக்கு வரப்போகும் ஆபத்தையும் யோசித்துப் பார்க்கிறார். ஏசா இப்போது ஏதோம் சீமையாகிய சேயீர் தேசத்திலிருக்கிறார். ஏசாவைப்பற்றிய செய்தி, ஒரு வேளை ரெபெக்காள் மூலமாக யாக்கோபுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஏசா யாக்கோபின்மீது இன்னும் கோபமாகவே இருக்கிறார்.

யாக்கோபோ தன்னுடைய தகப்பனாராகிய ஈசாக்கைப் பார்க்க விரும்புகிறார். பதான் அராமிலிருந்து கானான் தேசத்திற்குப் போகும்போது ஏதோம் சீமை வழியாகவே போகவேண்டும். அங்கே யாக்கோபின் சகோதரனாகிய ஏசா கோபத்தோடிருக்கிறார். யாக்கோபு ஈசாக்கைப் பார்க்க விரும்பினாலும், ஏசாவை சந்திக்க பயப்படுகிறார்.

யாக்கோபு ஏசாவை சந்திப்பதற்கு தன்னுடைய ஆட்களை அனுப்புகிறார். யாக்கோபு அவர்கள் மூலமாக ஏசாவுக்கு பணிவான வார்த்தைகளை சொல்லியனுப்புகிறார். யாக்கோபு ஏசாவைப்பற்றிச் சொல்லும்போது, "என் ஆண்டவன்" என்று சொல்லுகிறார். யாக்கோபுக்கு சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதம் கிடைத்திருக்கிறது. ஈசாக்கின் விசேஷித்த ஆசீர்வாதமும் யாக்கோபுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் யாக்கோபு இப்போது ஏசாவுக்கு முன்பாக, தன்னுடைய சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதத்தை பெருமைப்படுத்தி பேசவில்லை. அவர் ஏசாவை தன்னுடைய ஆண்டவன் என்று அழைக்கிறார்.

யாக்கோபு ஏசாவுக்கு தன்னைப்பற்றி சுருக்கமான செய்தியை சொல்லியனுப்புகிறார். யாக்கோபு இப்போது தேசாந்திரியாய் அலைகிற பிச்சைக்காரனல்ல. அவர் ஒரு நாடோடியுமல்ல. கெட்ட குமாரன் தன் வீட்டிற்கு திரும்பி வந்ததுபோல, யாக்கோபு இப்போது கானான் தேசத்திற்கு திரும்பிப்போகவில்லை. யாக்கோபு தன் தகப்பனாராகிய ஈசாக்கைப் பார்க்கப் போகிறார். தன் பிதாக்களின் சொந்த தேசமாகிய கானான் தேசத்திற்கு திரும்பிப்போகிறார். யாக்கோபிடத்தில் இப்போது ஓரளவு சம்பாத்தியம் இருக்கிறது.

யாக்கோபுக்கு இப்போது ஏசாவுடைய கண்களில் தயவு கிடைக்கவேண்டும். அதுவே யாக்கோபின் பிரதான விருப்பம். யாக்கோபு இதுவரைக்கும் லாபானிடத்தில் தங்கியிருந்ததையும், இப்போது தனக்கு எருதுகளும், கழுதைகளும், ஆடுகளும், வேலைக்காரிகளும் வேலைக்காரரும் உண்டு என்பதையும், யாக்கோபு தன்னுடைய ஆட்கள் மூலமாக ஏசாவுக்கு சொல்லியனுப்புகிறார்.

யாக்கோபு ஏசாவைப்பற்றிச் சொல்லும்போது, அவரை தன் ஆண்டவன் என்று சொல்லுகிறார். அவர் ஏசாவிடத்தில் தன்னைப்பற்றிச் சொல்லும்போதோ, "உம்முடைய தாசனாகிய யாக்கோபு" என்று சொல்லச் சொல்லுகிறார். யாக்கோபு ஏசாவுக்கு முன்பாக தன்னை வெகுவாகத் தாழ்த்துகிறார் *(ஆதி 32:3-5)*.

யாக்கோபு அனுப்பின ஆட்கள் இப்போது அவரிடத்திற்கு திரும்பி வருகிறார்கள். அவர்கள் யாக்கோபை நோக்கி, "நாங்கள் உம்முடைய சகோதரனாகிய ஏசாவினிடத்துக்குப் போய்வந்தோம்; அவரும் நானூறு பேரோடே உம்மை எதிர்கொள்ள வருகிறார்" *(ஆதி 32:6)* என்று சொல்லுகிறார்கள். ஏசாவைப்பற்றிய செய்தி யாக்கோபுக்கு பயமாகவும் வியாகுலமாகவும் இருக்கிறது.

யாக்கோபு ஏசாவைப்பற்றி நினைக்கும்போதெல்லாம், அவர் தங்களுக்குள்ளே இருந்த பழைய பகையை நினைத்துப் பார்க்கிறார். யாக்கோபு ஏசாவின் சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதத்தை வஞ்சித்து பெற்றுக்கொண்டார். அவர் தன் தகப்பனாராகிய ஈசாக்கையும் ஏமாற்றி ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார். இதனால் ஏசா யாக்கோபின்மீது அப்போதே கோபமாயிருந்தார். அவர் அப்போதே யாக்கோபை கொன்றுபோடவேண்டும் என்று சொன்னார்.

ஏசா தன்மீதுள்ள பழைய பகையை மறந்திருக்கமாட்டார் என்று யாக்கோபு நினைக்கிறார். கோபப்படுகிறவர்களுக்கு நல்ல ஞாபகசக்தியிருக்கும். அப்படிப்பட்டவர்கள் பழைய பகையை மறக்காமல் நினைவில் வைத்திருப்பார்கள்.

ஏசா யாக்கோபைவிட ஐசுவரியவானாயிருக்கிறார். அவரிடத்தில் திரளான சம்பத்து இருக்கிறது. யாக்கோபு ஏசாவைப்போல ஐசுவரியவானல்ல. ஆனாலும் ஏசா தன்னுடைய ஐசுவரியத்தில் திருப்தியாயிருக்கமாட்டார் என்றும், யாக்கோபைப் பழிவாங்கவேண்டும் என்னும் கோபமான குணம் ஏசாவின் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கும் என்றும் நினைத்து, யாக்கோபு ஏசாவுக்காக மிகவும் பயப்படுகிறார்.

ஏசாவுக்கு திரளான ஆஸ்தியிருந்தாலும், அவர் தன்னுடைய சொற்பஆஸ்திகள்மேல் விழுந்து, இதைக் கொள்ளையிட்டு, தன்னுடைய தேசத்தை நிரப்பிக்கொள்வார் என்று யாக்கோபு ஏசாவைக் குறித்து பயத்தோடும் நடுக்கத்தோடும் நினைத்துப் பார்க்கிறார். ஏசா நானூறு பேரோடே யாக்கோபை எதிர்கொள்ள வருகிறார் என்னும் செய்தி, யாக்கோபுக்கு பயமாகவும் கலக்கமாகவும் இருக்கிறது.

யாக்கோபு லாபானுடைய ஊராகிய பாதான் அராமிலிருந்து பிரயாணப்பட்டு இந்த ஸ்தலத்திற்கு வந்திருக்கிறார். அவரும், அவருடைய குடும்பத்தாரும், வேலையாட்களும், மிருகஜீவன்களும் அதிகமாய்ப் பிரயாணம் செய்து களைப்படைந்திருக்கிறார்கள். யாக்கோபுக்கு தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் தைரியமில்லை. அவர் இப்போது நிலையில்லாமல் அலைந்து திரிகிற தேசாந்திரியைப்போல பிரயாணம் செய்துகொண்டிருக்கிறார். இந்த சூழ்நிலையில் ஏசா நானூறு பேரோடே வந்து, தன்மீது விழுந்தால், அவர் தங்கள் எல்லோரையும் முற்றிலுமாக அழித்து, நாசம்பண்ணிப்போடுவார் என்று நினைத்து யாக்கோபு பயப்படுகிறார்.

ஏசா தன்னைத் தாக்குவதற்கு முன்பாக அவரோடுகூட சமாதானம்பண்ணிக்கொள்ளவேண்டும் என்று யாக்கோபு விரும்புகிறார். யாக்கோபு ஈசாக்கைப் பார்க்கப் போகிறார். அதற்கு முன்பு அவர் ஏசாவைப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறார். யாக்கோபு ஈசாவினிடத்தில் தனக்காகப் பரிந்துபேசி, அவரோடுகூட சமாதானம் செய்துகொள்வதே தனக்கு பாதுகாப்பானது என்று யாக்கோபு நினைக்கிறார்.

ஏசாவோடுகூட நானூறு மனுஷர் வருகிறார்கள். அவர்களெல்லோரும் ஆயுதம் ஏந்தியவர்கள். ஏசாவினிடத்தில் காணப்படும் வீரம், அவருடைய மனுஷரிடத்திலும் நிச்சயமாயிருக்கும். அவர்களெல்லோரும் கோபத்தோடு தன்மீதும், தன்னுடைய குடும்பத்தின்மீதும் விழுந்தால், தாங்கள் எல்லோருமே அழிந்துபோவோம் என்று யாக்கோபு நினைக்கிறார். யாக்கோபை அழிப்பதற்கு ஏசாவோடுகூட வருகிற நானூறு பேர் தேவையில்லை. யாக்கோபிடத்தில் ஆயுதம் எதுவுமில்லை. ஏசாவின் மனுஷரில் பத்தில் ஒரு பங்கு பேர் யாக்கோபுக்கு விரோதமாக வந்தாலும், அவர்கள் யாக்கோபையும் அவருடைய குடும்பத்தையும் அழித்துப்போடுவார்கள்.

யாக்கோபின் குடும்பத்தாரும் உதவியில்லாதவர்களாயிருக்கிறார்கள். அவர்களிடத்திலும் ஆயுதம் எதுவுமில்லை. யாக்கோபின் குமாரர்கள் சிறுபிள்ளைகளாயிருக்கிறார்கள். ஏசாவும் அவருடைய மனுஷரும் யாக்கோபின்மீது விழுந்தால், யாக்கோபின் வேரையும், கிளைகளையும் மொத்தமாய் அழித்துப்போடுவார்கள்.

யாக்கோபு ஒரு விசுவாசவீரர். அவர் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர். ஆனாலும் அவர் இப்போது ஏசாவை நினைத்து வெகுவாகப் பயப்படுகிறார். நாம் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்களாகயிருந்தாலும், நமக்கு திடீரென்று ஆபத்துக்கள் வரும்போது, நாமும் சில சமயங்களில் கலக்கமடைகிறோம்.

நாம் கர்த்தருடைய வல்லமையையும், அவருடைய வாக்குத்தத்தங்களையும் முழுமையாய் நம்பினாலும், சில சமயங்களில் சத்துருக்கள் மூலமாக வரும் ஆபத்துக்கள் நம்மையும் பயமுறுத்துகிறது. சத்துரு பல சமயங்களில் நம்முடைய விசுவாசத்தை அசைத்துப்போடுகிறான்.

ஏசா நானூறு பேரோடுகூட யாக்கோபை எதிர்கொள்ள வருகிறார். ஏசாவுக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ண யாக்கோபுக்கு பெலமில்லை. ஆனாலும் ஏசா தன்னைத் தாக்கும்போது, தானும் தன்னுடைய குடும்பமும் மொத்தமாய் அழிந்துபோகக்கூடாது என்றும், அதில் ஒரு பகுதியாவது அழிவுக்கு தப்பிக்கவேண்டும் என்றும் யாக்கோபு திட்டமிடுகிறார்.

யாக்கோபு மிகவும் பயந்து, வியாகுலப்பட்டு, தன்னிடத்திலிருந்த ஜனங்களையும் ஆடுமாடுகளையும் ஒட்டகங்களையும் இரண்டு பகுதியாகப் பிரிகிறார். "ஏசா ஒரு பகுதியின்மேல் விழுந்து அதை முறிய அடித்தாலும், மற்றப் பகுதி தப்பித்துக்கொள்ள இடம் உண்டு" என்று யாக்கோபு சொல்லுகிறார் (ஆதி 32:7,8).

யாக்கோபு மிகவும் பயந்து, வியாகுலப்படுகிறார். ஏசா நானூறு பேரோடே வருகிறார் (ஆதி 32:6) யாக்கோபு தன்னுடைய பயத்தை வெளிப்படுத்துகிறார். தன்னுடைய குடும்பத்தாரை இரண்டு பகுதியாகப் பிரிக்கிறார். தேவனோடு இரவு முழுவதும் போராடுகிறார். தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்று ஜெபிக்கிறார். ஏசாவிடமிருந்து எப்படியாவது தப்பித்து விடவேண்டுமென்பது யாக்கோபின் விருப்பம்.

யாக்கோபு தன்னிடத்தில் உள்ளவைகளை இரண்டு பிரிவாகப் பிரித்ததுபோல, ஆபிரகாமும் தன்னுடைய ஆட்களை பிரித்தார். யாக்கோபோ தப்பி ஓடுவதற்காக தன்னிடத்திலுள்ளவைகளை பிரிக்கிறார். ஆபிரகாமோ சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதற்காக, தன்னுடைய ஆட்களை பிரித்தார்.

"இராக்காலத்திலே ஆபிரகாமும், அவர் வேலைக்காரரும் பிரிந்து, பவிஞ்சுகளாய் அவர்கள்மேல் விழுந்து, அவர்களை முறியடித்து, தமஸ்குவுக்கு இடதுபுறமான ஓபாமட்டும் துரத்தி, சகல பொருள்களையும் திருப்பிக் கொண்டுவந்தார்" (ஆதி 14:15).

ஏசாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வேண்டும் என்னும் எண்ணம் யாக்கோபின் மனதில் இல்லை. தானும் தன்னுடைய குடும்பத்தாரும் தன்னுடைய உடைமைகளும் ஏசாவுக்கும் அவருடைய மனுஷருக்கும், எப்படியாவது தப்பிக்கவேண்டும் என்று யாக்கோபு விரும்புகிறார். தங்களால் மொத்தமாக தப்பிக்க முடியாவிட்டாலும், ஒரு பகுதியாவது தப்பிக்கவேண்டும் என்று யாக்கோபு நினைக்கிறார்.

யாக்கோபின் ஜெபம்
ஆதி 32:9-12

ஆதி 32:9. பின்பு யாக்கோபு: என் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், என் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுமாய் இருக்கிறவரே: உன் தேசத்துக்கும் உன் இனத்தாரிடத்துக்கும் திரும்பிப்போ, உனக்கு நன்மை செய்வேன் என்று என்னுடனே சொல்லியிருக்கிற கர்த்தாவே,

ஆதி 32:10. அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல, நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன்; இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன்.

ஆதி 32:11. என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும், அவன் வந்து என்னையும் பிள்ளைகளையும் தாய்மார்களையும் முறிய அடிப்பான் என்று அவனுக்கு நான் பயந்திருக்கிறேன்.

ஆதி 32:12. தேவரீரோ: நான் உனக்கு மெய்யாகவே நன்மைசெய்து, உன் சந்ததியை எண்ணிமுடியாத கடற்கரை மணலைப் போல மிகவும் பெருகப்பண்ணுவேன் என்று சொன்னீரே என்றான்.

யாக்கோபைப்போலவே நம்முடைய ஜீவியத்திலும், நமக்கு பிரச்சனைகளும், ஆபத்துக்களும் வரலாம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நாம் கர்த்தரை நோக்கிக் கூப்பிடவேண்டும். யாக்கோபு தன்னுடைய ஆபத்து வேளையிலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டது, நமக்கு ஒரு முன்மாதிரியாக இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. யாக்கோபைப்போல நாமும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் யாக்கோபுக்கு கிடைத்ததுபோல, நமக்கும் கிடைக்கும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஜெயமுண்டாகும்.

யாக்கோபு தன்னுடைய வேதனையிலும், துக்கத்திலும், பயத்திலும், வியாகுலத்திலும் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார். கர்த்தர் யாக்கோபின் விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கிறார். நாம் பயப்படுகிற வேளைகள், நமக்கு ஜெபவேளைகளாயிருக்கவேண்டும். நமக்கு எப்படிப்பட்ட பயம் வந்தாலும், நம்முடைய கர்த்தருக்கு முன்பாக நாம் முழங்காலில் நின்று, நம்முடைய பயத்தை நம்மைவிட்டு நீக்கிப்போடவேண்டும்.

யாக்கோபின் ஜெபம் மிகவும் விசேஷமானது. யாக்கோபு தன்னுடைய ஜெபத்தில் கர்த்தரைத் துதிக்கிறார். தன்னுடைய ஜீவியத்தில் கர்த்தருடைய நாமம் மகிமைப்படவேண்டுமென்று யாக்கோபு வாஞ்சிக்கிறார். யாக்கோபின் விண்ணப்பம் ஒன்றுதான். "என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும்" (ஆதி 32:11) என்பது மாத்திரமே யாக்கோபின் விண்ணப்பமாயிருக்கிறது.

தேவனுடைய ஆசீர்வாதத்திற்குத் தான் பாத்திரன் அல்ல என்பதை யாக்கோபு அறிக்கையிடுகிறார். தேவனிடத்தில் தன்னை முழுவதுமாக ஒப்புக் கொடுக்கிறார். தேவனுடைய கிருபையில்லை என்றால் தன்னால் ஒன்றும் செய்ய இயலாது என்று யாக்கோபு அறிக்கையிடுகிறார். தேவனை முகமுகமாகத் தரிசிக்கும் சிலாக்கியம் யாக்கோபிற்குக் கிடைக்கிறது (ஆதி 32:24-32).

யாக்கோபு கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனார். யாக்கோபு ஆரானுக்கு தனியாகப் போனார். இப்பொழுது ஆசீர்வாதத்தோடு திரும்பவும் அந்த இடத்திற்கு வந்திருக்கிறார்.

யாக்கோபு இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனாயிருக்கிறார். யோர்தானைக் கடந்து போகும்போது கோலும், கையுமாகப் போன யாக்கோபு இப்பொழுது இரண்டு பரிவாரங்களோடு திரும்பி வருகிறார்.

"என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும்" என்று யாக்கோபு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். யாக்கோபு முதல் முறையாக தன்னுடைய மீட்பிற்காக ஜெபம் பண்ணுகிறார். ஏற்கெனவே யாக்கோபு ஏசாவின் கையிலிருந்து தப்பித்து ஓடியவர். (ஆதி 27:41-46; ஆதி 28:1-6; ஆதி 35:7) அதன் பின்பு அவர் லாபானிடமிருந்தும் தப்பித்து ஓடினார். (ஆதி 31:17-23) இப்பொழுது யாக்கோபு ஏசாவைச் சந்திக்க வேண்டும். தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்று நம்பி, யாக்கோபு முன்செல்கிறார் (ஆதி 28:13-15; ஆதி 31:3; ஆதி 32:9,12).

யாக்கோபு ஏசாவுக்கு பயந்திருக்கிறார். ஆதி 28:12; ஆதி 31:3; ஆதி 32:1 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தரிசனங்கள் யாக்கோபின் பயத்தை முழுவதுமாகப் போக்கவில்லை. யாக்கோபு தன்னுடைய மனச்சாட்சியில் கோழையாக இருக்கிறார். கடந்த காலத்தில் தான் ஏசாவை வஞ்சித்ததை நினைவுகூர்ந்து யாக்கோபு ஏசாவுக்கு பயந்திருக்கிறார்.

"என் நியாயத்தை அவருக்கு முன்பாக வரிசையாய்வைத்து, காரியத்தை ரூபிக்கும் வார்த்தைகளால் என் வாயை நிரப்புவேன்" (யோபு 23:4).

நாம் கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ணும்போது, நம்முடைய விண்ணப்பங்களையெல்லாம் கர்த்தருக்கு முன்பாக வரிசையாய் வைக்கவேண்டும். நம்முடைய விண்ணப்பங்கள் அநேகமாயிருக்கலாம். அவை எல்லாமே நமக்கு அத்தியாவசிய தேவைகளாயிருக்கலாம். நாம் கர்த்தரிடத்தில் ஜெபிக்கும்போது, நம்மிடத்தில் விசுவாசமும், பயபக்தியும், மனத்தாழ்மையும் இருக்கவேண்டும்.

யாக்கோபு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, அவர் கர்த்தரை நோக்கி, "என் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், என் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுமாய் இருக்கிறவரே" (ஆதி 32:9) என்று சொல்லுகிறார். யாக்கோபு கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போதே, அவர் தன்னை வெகுவாகத் தாழ்த்துகிறார். அவர் கர்த்தரை நோக்கி, "என் தேவனாயிருக்கிறவரே" என்றுகூட சொல்லவில்லை. கர்த்தரை தன்னுடைய தேவன் என்று சொல்லுவதற்கு கூட தான் அபாத்திரன் என்று யாக்கோபு நினைக்கிறார்.

கர்த்தர் ஆபிரகாமோடும், ஈசாக்கோடும் உடன்படிக்கை செய்திருக்கிறார். யாக்கோபு கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, அவரை தன்னுடைய முற்பிதாக்களின் தேவனாகச் சொல்லுகிறார். கர்த்தர் தன்னுடைய முற்பிதாக்களோடு உடன்படிக்கைசெய்திருப்பது யாக்கோபுக்கு ஆறுதலாயிருக்கிறது.

கர்த்தர் யாக்கோபின் முற்பிதாக்களோடு உடன்படிக்கை செய்தது போல, நம்முடைய முற்பிதாக்களோடும் உடன்படிக்கை செய்திருந்தால், நம்முடைய துக்கத்திலும் வேதனையிலும், நமக்கு கர்த்தர் மூலமாக ஆறுதல் உண்டாகும்.

யாக்கோபு கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது, கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை, தன்னுடைய ஜெபத்திலே சொல்லுகிறார். யாக்கோபு கர்த்தரிடத்தில், "உன் தேசத்துக்கும் உன் இனத்தாரிடத்துக்கும் திரும்பிப்போ, உனக்கு நன்மை செய்வேன் என்று என்னுடனே சொல்லியிருக்கிற கர்த்தாவே" (ஆதி 32:9) என்று சொல்லுகிறார்.

யாக்கோபைப்போல நாமும் கர்த்தர் நம்மை அனுப்பும் தேசத்திற்கு போய்க்கொண்டிருப்போம். யாக்கோபுக்கு அவர் போகும்பாதை முட்களும், வேதனைகளும், ஆபத்துக்களும் நிரம்பியதாயிருக்கிறது. அதுபோல நம்முடைய பாதையிலும் முட்களும் ஆபத்துக்களும் இருக்கலாம். நாம் கர்த்தர் சொன்ன பாதையில் போனாலும், அந்தப் பாதையிலும் நமக்கு ஆபத்துக்கள் வருவதற்கு வாய்ப்புள்ளது. கர்த்தர் நம்முடைய வழிகாட்டியாயிருக்கும்போது, அவர் மெய்யாகவே நம்மை பாதுகாப்பவராகயிருப்பார்.

யாக்கோபு கர்த்தருக்கு முன்பாக ஜெபம்பண்ணும்போது, அவர் தன்னை வெகுவாகத் தாழ்த்துகிறார். கர்த்தருடைய கிருபைகளையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வதற்கு தான் எவ்வளவேனும் பாத்திரவானல்ல என்று யாக்கோபு கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். யாக்கோபின் வார்த்தைகள் மிகவும் விசேஷமானவை. "அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல" (ஆதி 32:10) என்று யாக்கோபு கர்த்தரிடத்தில் சொல்லுவது, அவருடைய மனத்தாழ்மைக்கு அடையாளம்.

யாக்கோபைப்போலவே நாமும் கர்த்தருடைய சமுகத்தில் மிகுந்த மனத்தாழ்மையோடு ஜெபம்ப ண்ணவேண்டும். நூற்றுக்கு அதிபதி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக தன்னை வெகுவாகத் தாழ்த்தினான்.

"நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" என்று சொன்னான் (மத் 8:8).

நாம் கர்த்தருடைய சமுகத்தில் மனத்தாழ்மையோடும் ஜெபம்பண்ணவேண்டும். அவரிடத்தில் கேட்டதைப் பெற்றுக்கொள்வோம் என்னும் விசுவாசத்தோடும் ஜெபம்பண்ணவேண்டும். நாம் கர்த்தரிடத்தில் கேட்பதைப் பெற்றுக்கொள்ளும் வரையிலும் தொடர்ந்து ஜெபம்பண்ணவேண்டும்.

"அதற்கு அவள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள்" (மத் 15:27).

கர்த்தர் யாக்கோபுக்கு அதிகமாய் தயவு காண்பித்திருக்கிறார். கர்த்தர் தனக்கு காண்பித்த தயவுகளுக்காக யாக்கோபு கர்த்தருக்கு அதிகமாய் நன்றி சொல்லுகிறார். அவர் கர்த்தரைக் கனம்பண்ணுகிறார். யாக்கோபு கர்த்தருக்கு முன்பாக தன்னை வெகுவாகத் தாழ்த்துகிறார். "அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரனல்ல" என்று சொல்லி யாக்கோபு தன்னை வெகுவாய்த் தாழ்த்துகிறார்.

கர்த்தருடைய தயவு பெரிதாயிருக்கிறது. யாக்கோபோ மிகவும் சாதாரணமானவராகயிருக்கிறார். கர்த்தர் நமக்கு காண்பிக்கும் எல்லா தயவுகளுக்கும், நாம் பாத்திரவான்களல்ல. கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், நமக்கு தயவு காண்பிக்கிறார்.

யாக்கோபு இந்த யோர்தானைக் கடந்துபோகும்போது, கோலும் கையுமாய்க் கடந்துபோனார். அப்போது அவரோடுகூட வேறு எந்த மனுஷரும் துணைக்குப் போகவில்லை. அப்போது அவருக்கு ஆடுமாடுகளோ, வேறு மிருகஜீவன்களோ இல்லை. யாக்கோபு இப்போது இரண்டு பரிவாரங்களை உடையவராயிருக்கிறார். யாக்கோபோடுகூட, அவருடைய மனைவிகளும், பிள்ளைகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும், எருதுகளும், கழுதைகளும், ஒட்டகங்களும், ஆடுகளும் இருக்கிறது.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் தனக்கு காண்பித்த தயவுகளை, யாக்கோபு நன்றியுள்ள இருதயத்தோடு சாட்சியாய்ச் சொல்லுகிறார். "நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன்; இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன்" (ஆதி 32:10) என்று யாக்கோபு கர்த்தரிடத்தில் தன்னைப்பற்றி மிகுந்த மனத்தாழ்மையோடு அறிக்கை செய்கிறார்.

கர்த்தர் தனக்கு காண்பித்த தயவுகளை யாக்கோபு, தன்னுடைய ஜெபத்தில் சொன்னாலும், அவர் தனக்கு வந்திருக்கிற ஆபத்துக்களையும் மறைக்காமல் சொல்லுகிறார். ஏசாவின் மூலமாக யாக்கோபுக்கு ஆபத்து வந்திருக்கிறது. ஏசா நானூறுபேரோடே யாக்கோபை எதிர்கொள்ள வருகிறார். அந்தச் செய்தியைக் கேட்கும்போதே யாக்கோபு மிகவும் பயந்து வியாகுலப்படுகிறார்.

யாக்கோபு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும், அவனுக்கு நான் பயந்திருக்கிறேன்" (ஆதி 32:11) என்று மிகுந்த பணிவோடும், பக்தியோடும் ஜெபம்பண்ணுகிறார். நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, நம்முடைய கவலைகளையும், வருத்தங்களையும், பயங்களையும், வியாகுலங்களையும், கர்த்தரிடத்தில் சொல்லுவதற்கு வெட்கப்படக்கூடாது. நம்மிடத்தில் பயம் அதிகரிக்கும்போது, நம்முடைய ஜெபமும் அதிகரிக்கும். நமக்கு பிரச்சனைகள் அதிகமாகும்போது, நம்முடைய ஜெபவார்த்தைகளும், கர்த்தருக்கு முன்பாக நாம் சிந்துகிற கண்ணீரும் அதிகமாகும்.

ஏசா வந்து தன்னையும், தன் பிள்ளைகளையும், தாய்மார்களையும் முறியடிப்பார் என்று யாக்கோபு அவருக்கு பயப்படுகிறார். யாக்கோபால் ஏசாவுக்கு எதிர்த்து நிற்கமுடியாது. யாக்கோபு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, அவர் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தையும் நினைவுகூருகிறார். யாக்கோபு தன்னுடைய ஜெபத்தின் ஆரம்பத்திலேயே, "உன் தேசத்துக்கும் உன் இனத்தாரிடத்துக்கும் திரும்பிப்போ, உனக்கு நன்மை செய்வேன் என்று என்னுடனே சொல்லியிருக்கிற கர்த்தாவே" (ஆதி 32:9) என்று சொல்லி ஜெபித்தார்.

யாக்கோபு இப்போது, "தேவரீரோ: நான் உனக்கு மெய்யாகவே நன்மைசெய்து, உன் சந்ததியை எண்ணிமுடியாத கடற்கரை மணலைப் போல மிகவும் பெருகப்பண்ணுவேன் என்று சொன்னீரே" (ஆதி 32:12) என்று, கர்த்தருடைய வாக்குத்தத்த வார்த்தைகளை சொல்லி ஜெபம்பண்ணுகிறார்.

யாக்கோபின் ஜெபம் விசுவாசிகளாகிய நமக்கு ஒரு நல்ல முன்மாதிரியாக இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. நாமும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் நமக்கு சொல்லியிருக்கிற வார்த்தைகளை சொல்லி ஜெபம்பண்ணவேண்டும். இதனால் நமக்கு ஆறுதல் உண்டாகும். கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர். அவர் வாக்குமாறாத தேவன். நாம் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை நினைவுகூர்ந்து ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் நம்முடைய ஜெபத்திற்கு பதில் கொடுப்பார் என்னும் நிச்சயம் நமக்குள் உண்டாகும்.

ஏசாவை சந்திக்க ஆயத்தம்
ஆதி 32:13-23

ஆதி 32:13. அன்று ராத்திரி அவன் அங்கே தங்கி, தன் கைக்கு உதவினவைகளிலே தன் சகோதரனாகிய ஏசாவுக்கு வெகுமானமாக,

ஆதி 32:14. இருநூறு வெள்ளாடுகளையும், இருபது வெள்ளாட்டுக் கடாக்களையும், இருநூறு செம்மறியாடுகளையும், இருபது ஆட்டுக்கடாக்களையும்,

ஆதி 32:15. பால் கொடுக்கிற முப்பது ஒட்டகங்களையும், அவைகளின் குட்டிகளையும், நாற்பது கடாரிகளையும், பத்துக் காளைகளையும், இருபது கோளிகைக் கழுதைகளையும், பத்துக் கழுதைக்குட்டிகளையும் பிரித்தெடுத்து,

ஆதி 32:16. வேலைக்காரர் கையில் ஒவ்வொரு மந்தையை தனித்தனியாக ஒப்புவித்து, நீங்கள் மந்தை மந்தைக்கு முன்னும் பின்னுமாக இடம் விட்டு எனக்கு முன்னாக ஓட்டிக்கொண்டுபோங்கள் என்று தன் வேலைக்காரருக்குச் சொல்லி,

ஆதி 32:17. முன்னே போகிறவனை நோக்கி: என் சகோதரனாகிய ஏசா உனக்கு எதிர்ப்பட்டு: நீ யாருடையவன்? எங்கே போகிறாய்? உனக்குமுன் போகிற மந்தை யாருடையது? என்று உன்னைக் கேட்டால்,

ஆதி 32:18. நீ: இது உமது அடியானாகிய யாக்கோபுடையது; இது என் ஆண்டவனாகிய ஏசாவுக்கு அனுப்பப்படுகிற வெகுமதி; இதோ, அவனும் எங்கள் பின்னே வருகிறான் என்று சொல் என்றான்.

ஆதி 32:19. இரண்டாம் மூன்றாம் வேலைக்காரனையும், மந்தைகளின் பின்னாலே போகிற அனைவரையும் நோக்கி: நீங்களும் ஏசாவைக் காணும்போது, இந்தப்பிரகாரமாக அவனோடே சொல்லி,

ஆதி 32:20. இதோ, உமது அடியானாகிய யாக்கோபு எங்கள் பின்னாலே வருகிறான் என்றும் சொல்லுங்கள் என்று கட்டளையிட்டான்; முன்னே வெகுமதியை அனுப்பி, அவனைச் சாந்தப்படுத்திக் கொண்டு, பின்பு அவன் முகத்தைப் பார்ப்பேன், அப்பொழுது ஒருவேளை என்பேரில் தயவாயிருப்பான் என்றான்.

ஆதி 32:21. அந்தப்படியே வெகுமதி அவனுக்கு முன் போயிற்று; அவனோ அன்று ராத்திரி பாளயத்திலே தங்கி,

ஆதி 32:22. இராத்திரியில் எழுந்திருந்து, தன் இரண்டு மனைவிகளையும், தன் இரண்டு பணிவிடைக்காரிகளையும், தன்னுடைய பதினொரு குமாரரையும் கூட்டிக் கொண்டு, யாப்போக்கு என்கிற ஆற்றின் துறையைக் கடந்தான்.

ஆதி 32:23. அவர்களையும் சேர்த்து, ஆற்றைக் கடக்கப்பண்ணி, தனக்கு உண்டான யாவையும் அக்கரைப்படுத்தினான்.

யாக்கோபு தன்னுடைய பயத்தையும், பிரச்சனைகளையும் கர்த்தருடைய சமுகத்திலே சொல்லுகிறார். கர்த்தர் யாக்கோபுக்கு சிநேகிதராயிருக்கிறார். ஏசாவும் தனக்கு சிநேகிதராயிருக்க வேண்டுமென்று யாக்கோபு விரும்புகிறார். இதன் நிமித்தமாக யாக்கோபு ஏசாவுக்கு நல்ல வெகுமானங்களை கொடுக்க ஆயத்தம்பண்ணுகிறார்.

யாக்கோபு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணியபோது, "என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும்" என்று சொல்லி ஜெபம்பண்ணினார். அவர் கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும் எதிர்பார்த்து ஜெபம்பண்ணினார். தனக்கு கர்த்தருடைய கிருபை கிடைத்தாலும், தன்னுடைய நன்மைக்கும் பாதுகாப்புக்கும், தானும் ஏதாவது செய்யவேண்டுமென்று யாக்கோபு நினைக்கிறார்.

நம்முடைய பிரச்சனைகளை கர்த்தருடைய சமுகத்திலே சொல்லி விசுவாசத்தோடு ஜெபம்பண்ணவேண்டும். கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கும். ஆகையினால் நாமும் ஒரு சில காரியங்களை விசுவாசத்தோடு செய்வதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும். அப்போது நம்முடைய ஜெபமும், பிரயாசமும் ஒன்றுக்கொன்று ஆதரவாயிருக்கும்.

யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவுக்கு நல்ல வெகுமானங்களைக் கொடுக்க ஆயத்தம்பண்ணுகிறார். ஏசா ஒரு வேட்டைக்காரன். அவர் காட்டுமிருகங்களை வேட்டையாடக் கூடியவர். ஏசாவின் வீட்டிலே நாட்டு மிருகங்கள் அதிகமாயிருக்காது. யாக்கோபுக்கோ எருதுகளும், கழுதைகளும், ஆடுகளும், ஒட்டகங்களுமாகிய நாட்டுமிருகங்கள் ஏராளமாயிருக்கிறது. இவையெல்லாம் யாக்கோபுக்கு உதவியாயிருக்கக்கூடியவை.

யாக்கோபு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணின அன்று இராத்திரியிலே, அங்கே தங்கியிருக்கிறார். தன்னுடைய கைக்கு உதவியானவைகளில், தன் சகோதரனாகிய ஏசாவுக்கு வெகுமானங்களை ஆயத்தம்பண்ணுகிறார்.

யாக்கோபு தன்னுடைய மந்தையிலே, இருநூறு வெள்ளாடுகளையும், இருபது வெள்ளாட்டுக் கடாக்களையும், இருநூறு செம்மறியாடுகளையும், இருபது ஆட்டுக்கடாக்களையும், பால் கொடுக்கிற முப்பது ஒட்டகங்களையும், அவைகளின் குட்டிகளையும், நாற்பது கடாரிகளையும், பத்துக் காளைகளையும், இருபது கோளிகைக் கழுதைகளையும், பத்துக் கழுதைக்குட்டிகளையும் பிரித்தெடுக்கிறார் (ஆதி 32:14,15).

பிரித்தெடுக்கப்பட்ட நாட்டுமிருகங்களெல்லாம் ஏசாவுக்கு வெகுமதிகளாகக் கொடுக்கப்படும். ஏசா இந்த மிருகங்களை பிரியமாய் ஏற்றுக்கொள்வார். காட்டுமிருகங்களை வேட்டையாடி பழக்கப்பட்ட ஏசாவுக்கு, இந்த நாட்டுமிருகங்கள் மிகவும் உதவியாயிருக்கும் என்று யாக்கோபு நினைக்கிறார்.

சமாதானத்தையும் அன்பையும் எவ்வளவு கிரயம் வேண்டுமானாலும் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். சமாதானம் அடைகிறவர்களுக்கு மிகுந்த நன்மை உண்டாகும். சமாதானமுள்ளவர்களுக்கு தீங்குகளோ, ஆபத்துக்களோ, நாசமோசங்களோ வராது. நாம் எல்லோரோடும் சமாதானமாயிருக்க நாடவேண்டும். அப்போதுதான் நமக்கு சத்துருக்களின் எண்ணிக்கை குறையும்.

யாக்கோபு ஏசாவின் கோபத்தையும் பொறாமையும் மன்னித்து மறந்துவிடுகிறார். மனதில் கோபத்தை வைத்துக்கொண்டு சமாதானயிருப்பது இயலாத காரியம்.

யாக்கோபு தன்னுடைய வேலைக்காரர் கையில் ஒவ்வொரு மந்தையை தனித்தனியாக ஒப்புவித்து, "நீங்கள் மந்தை மந்தைக்கு முன்னும் பின்னுமாக இடம் விட்டு எனக்கு முன்னாக ஓட்டிக்கொண்டுபோங்கள்" (ஆதி 32:16) என்று அவர்களுக்குச் சொல்லுகிறார்.

யாக்கோபு தன்னுடைய வேலைக்காரர் மூலமாக ஏசாவுக்கு சமாதானமான வார்த்தைகளை பணிவோடு சொல்லியனுப்புகிறார். யாக்கோபின் வார்த்தைகளை அவருடைய வேலைக்காரர்கள் ஏசாவிடத்தில் மிகவும் பணிவோடு சொல்லவேண்டும். அவர்கள் ஏசாவிடத்தில் எப்படி பேசவேண்டும் என்றும் யாக்கோபு அவர்களுக்கு பயிற்சி கொடுக்கிறார்.

யாக்கோபு முன்னே போகிற தன்னுடைய வேலைக்காரனை நோக்கி, "என் சகோதரனாகிய ஏசா உனக்கு எதிர்ப்பட்டு: நீ யாருடையவன்? எங்கே போகிறாய்? உனக்குமுன் போகிற மந்தை யாருடையது? என்று உன்னைக் கேட்டால், நீ: இது உமது அடியானாகிய யாக்கோபுடையது; இது என் ஆண்டவனாகிய ஏசாவுக்கு அனுப்பப்படுகிற வெகுமதி; இதோ, அவனும் எங்கள் பின்னே வருகிறான் என்று சொல்" (ஆதி 32:17,18) என்று சொல்லுகிறார்.

யாக்கோபின் வேலைக்காரர் ஏசாவை தங்கள் ஆண்டவன் என்றும், யாக்கோபை ஏசாவின் அடியான் என்றும் சொல்லவேண்டும். ஏசா மந்தைகளைப்பற்றிக் கேட்கும்போது, இவை ஏசாவுக்கு அனுப்பப்படுகிற வெகுமதி என்று சொல்லவேண்டும்.

யாக்கோபின் வேலைக்காரர் ஏசாவிடத்தில் யாக்கோபைப்பற்றியும் சொல்லவேண்டும். "உமது அடியானாகிய யாக்கோபு எங்கள் பின்னால் வருகிறார்" என்று யாக்கோபின் வேலைக்காரர் ஏசாவுக்கு சொல்லவேண்டும். யாக்கோபு தன்னுடைய மந்தைகளை தனித்தனியாகப் பிரித்து, அதை வேலைக்காரர் கையிலே ஒவ்வொரு மந்தையாக தனித்தனியாக ஒப்புவித்திருக்கிறார்.

யாக்கோபு முன்னே போகிற முதலாவது வேலைக்காரனுக்கு சொன்னதுபோல, இரண்டாம் மூன்றாம் வேலைக்காரருக்கும் சொல்லுகிறார். முதலாம் வேலைக்காரன் மந்தைக்கு முன்னால் போகிறான். மற்ற வேலைக்காரர்கள் மந்தைக்குப் பின்னால் போகிறார்கள்.

யாக்கோபு மந்தைகளின் பின்னாலே போகிற தன்னுடைய வேலைக்காரர் அனைவரையும் நோக்கி, "நீங்களும் ஏசாவைக் காணும்போது, இந்தப்பிரகாரமாக அவனோடே சொல்லி, இதோ, உமது அடியானாகிய யாக்கோபு எங்கள் பின்னாலே வருகிறான் என்றும் சொல்லுங்கள்" (ஆதி 32:19,20) என்று கட்டளையிடுகிறார்; யாக்கோபு ஏசாவை சந்திப்பதற்கு முன்பாக, அவருக்கு வெகுமதியை அனுப்பி, ஏசாவைச் சாந்தப்படுத்திக் கொண்டு, பின்பு ஏசாவின் முகத்தைப் பார்க்கவேண்டும் என்று திட்டமிடுகிறார். அப்பொழுது ஒருவேளை ஏசா தன்பேரில் தயவாயிருப்பார் என்று யாக்கோபு நம்புகிறார்.

யாக்கோபு ஏசாவுக்கு பயந்து தப்பித்து ஓடிப்போய்விடவில்லை. ஏசாவும் யாக்கோபைக் குறித்து சந்தேகப்படக்கூடாது. ஆகையினால் யாக்கோபு தன்னைப்பற்றிய செய்தியை, மிகவும் ஞானமாகவும், பணிவாகவும், தன்னுடைய வேலைக்காரர் மூலமாக சொல்லியனுப்புகிறார்.

யாக்கோபு திட்டமிட்ட பிரகாரம், வெகுமதி அவருக்கு முன் போயிற்று; யாக்கோபோ அன்று ராத்திரி பாளயத்திலே தங்குகிறார். யாக்கோபு இராத்திரியில் எழுந்திருந்து, தன் இரண்டு மனைவிகளையும், தன் இரண்டு பணிவிடைக்காரிகளையும், தன்னுடைய பதினொரு குமாரரையும் கூட்டிக் கொண்டு, யாப்போக்கு என்கிற ஆற்றின் துறையைக் கடக்கிறார். யாக்கோபு அவர்களையும் சேர்த்து, ஆற்றைக் கடக்கப்பண்ணி, தனக்கு உண்டான யாவையும் அக்கரைப்படுத்துகிறார் (ஆதி 32:21-23).

யாப்போக்கு 65 மைல் நீளமுள்ள ஆறு. இது ஹவுரன் மலையில் ஆரம்பமாகி, யோர்தான் நதியில் கலக்கிறது. இது சீகோன், ஓக் ஆகிய ராஜ்ஜியங்களுக்கு இடையிலுள்ள எல்லைப் பகுதி (யோசு 12:2; நியா 11:13-32). அதன் பின்பு ரூபன், மனாசே ஆகியோருக்கு இது எல்லை பகுதியாயிற்று. (உபா 3:16; யோசு 12:2).

பெனியேல்
ஆதி 32:24-32

ஆதி 32:24. யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான்; அப்பொழுது ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி,

ஆதி 32:25. அவனை மேற்கொள்ளாததைக் கண்டு, அவனுடைய தொடைச்சந்தைத் தொட்டார்; அதினால் அவருடனே போராடுகையில் யாக்கோபின் தொடைச்சந்து சுளுக்கிற்று.

ஆதி 32:26. அவர்: நான் போகட்டும், பொழுது விடிகிறது என்றார். அதற்கு அவன்: நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்றான்.

ஆதி 32:27. அவர்: உன் பேர் என்ன என்று கேட்டார்; யாக்கோபு என்றான்.

ஆதி 32:28. அப்பொழுது அவர்: உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார்.

ஆதி 32:29. அப்பொழுது யாக்கோபு: உம்முடைய நாமத்தை எனக்கு அறிவிக்க வேண்டும் என்று கேட்டான்; அதற்கு அவர்: நீ என் நாமத்தைக் கேட்பானேன் என்று சொல்லி, அங்கே அவனை ஆசீர்வதித்தார்.

ஆதி 32:30. அப்பொழுது யாக்கோபு: நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன், உயிர் தப்பிப் பிழைத்தேன் என்று சொல்லி, அந்த ஸ்தலத்துக்கு பெனியேல் என்று பேரிட்டான்.

ஆதி 32:31. அவன் பெனியேலைக் கடந்துபோகையில், சூரியன் உதயமாயிற்று; அவன் தொடைச்சுளுக்கினாலே நொண்டி நொண்டி நடந்தான்.

ஆதி 32:32. அவர் யாக்கோபுடைய தொடைச்சந்து நரம்பைத் தொட்டபடியால், இஸ்ரவேல் புத்திரர் இந்நாள்வரைக்கும் தொடைச்சந்து நரம்பைப் புசிக்கிறதில்லை.

யாக்கோபு பிந்தி தனித்திருக்கிறார். பரிசுத்தவேதாகமத்தில் தேவனோடு தனித்திருந்த ஒரு சிலரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. யாக்கோபு (ஆதி 32:24)
2. மோசே (யாத் 24:2)
3. எரேமியா (எரே 15:17)
4. தானியேல் (தானி 10:7-8)
5. இயேசு (லூக்கா 9:18)
6. பவுல் (1தெச 3:1)

ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் யாக்கோபோடே போராடுகிறார். இது சாதாரணமாக நடைபெறுகிற ஆவிக்குரிய போராட்டமல்ல. இது ஒரு மனுஷனோடு உண்மையிலேயே போராடுவதைக் குறிக்கும். இந்த வாக்கியத்தில் மனுஷன் என்பதற்கான எபிரெய வார்த்தை "ஈஷ்" என்பதாகும் யாத் 15:3; யோசு 5:13; தானி 10:5; தானி 12:6-7; சக 1:8 ஆகிய வசனங்களில் இது தேவனைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தப் போராட்டம் எவ்வளவு நேரம் நீடித்தது என்று தெரியவில்லை. இந்தப் போராட்டம் இரவு முழுவதும் நடந்திருக்கலாம். யாக்கோபின் விசுவாசம் வெற்றி பெறுகிறது. யாக்கோபு ஆசீர்வதிக்கப்படுகிறார். பொழுது விடிகிறதினால், அந்த மனுஷன் நான் போகட்டும் என்று சொல்லுகிறார்.

யாக்கோபு கர்த்தருடைய தூதனானவரோடு போராடி, அவரை மேற்கொள்கிறார். இந்த சம்பவம் ஓசியா 12:4 ஆவது வசனத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. "அவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான், அழுது அவரை நோக்கிக் கெஞ்சினான்; பெத்தேலிலே அவர் அவனைக் கண்டு சந்தித்து, அவ்விடத்திலும் நம்மோடே பேசினார்" (ஓசி 12:4).

யாக்கோபு இரவு முழுவதும், தன்னுடைய மனைவிகளையும், தன்னுடைய பணிவிடைக்காரிகளையும், தன்னுடைய குமாரரையும் யாப்போக்கு என்கிற ஆற்றின் துறையைக் கடக்க உதவி செய்திருக்கிறார். இப்போது பொழுது விடிகிறது. யாக்கோபு அதிகாலை வேளையிலே தனித்திருக்கிறார். கர்த்தருடைய சமுகத்திலே தன்னுடைய கவலைகளையும், பயங்களையும், பிரச்சனைகளையும், வேண்டுதல்களையும், விண்ணப்பங்களையும் சொல்லவேண்டும் என்று யாக்கோபு விரும்புகிறார். யாக்கோபு கர்த்தரிடத்திலே ஜெபம்பண்ணுவதற்காக தனித்திருக்கிறார். அப்பொழுது ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் யாக்கோபோடே போராடுகிறார். அந்த மனுஷனால் யாக்கோபை மேற்கொள்ள முடியவில்லை.

யாக்கோபோடு போராடுகிற மனுஷன், கர்த்தருடைய சமுகத்தின் தூதனானவர் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

"அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்; அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார்; அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டு, பூர்வநாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச் சுமந்துவந்தார்" (ஏசா 63:9).

இவர் தேவனுடைய ஷேக்கைனா மகிமைக்கு முன்பாக ஊழியம் செய்கிற தூதர்களில் ஒருவர். இந்தத் தூதன் தேவனுடைய தெய்வீக மகிமைக்கும், மாட்சிமைக்கும் முன்பாக ஊழியம் செய்கிறவர். இந்தத் தூதன் மிகாவேலாக இருக்கலாம் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

யாக்கோபு இப்போது மிகுந்த பயத்திலும் வியாகுலத்திலும் இருக்கிறார். அவர் தனித்திருந்து கர்த்தரோடு ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கிறார். ஏசா தனக்கும் தன் குடும்பத்திற்கும் என்ன செய்யப்போகிறார் என்பது யாக்கோபுக்கு இன்னும் தெரியவில்லை. கர்த்தரே யாக்கோபை கானான் தேசத்திற்கு போகுமாறு சொல்லியிருக்கிறார். ஆனால் கானான் தேசத்திற்கு போக யாக்கோபுக்கு தடை உண்டாயிருக்கிறது.

தான் கானான் தேசத்திற்குப் போகாதவாறு கர்த்தரே தன்னைத் தடைபண்ணுகிறாரோ என்னும் சந்தேகம் யாக்கோபின் மனதில் உண்டாயிற்று. ஆகையினால் யாக்கோபு தூதனானவரோடே போராடுகிறார். யாக்கோபு அந்தத் தூதரை நோக்கி அழுது கெஞ்சுகிறார். யாக்கோபின் மனதில் பயம் நிரம்பியிருக்கிறது. அது அழுகையாக வெளிப்படுகிறது. யாக்கோபு அந்தத் தூதனானவரோடே போராடி மேற்கொள்கிறார். யாக்கோபிடத்தில் போராடும் ஆயுதம் எதுவுமில்லை. அவருடைய கண்ணீரே அவருக்கு ஆயுதமாயிருக்கிறது.

தூதனானவரால் யாக்கோபை மேற்கொள்ள முடியவில்லை. யாக்கோபும் அந்தத் தூதனானவரோடே போராடிக்கொண்டிருக்கிறார். யாக்கோபு பொழுது விடியுமளவும் அந்தத் தூதனானவரோடே போராடுகிறார். ஆனாலும் அந்தத் தூதனானவரால் யாக்கோபை மேற்கொள்ள முடியவில்லை.

யாக்கோபு தன்னுடைய ஆவியிலே சோர்ந்துபோயிருக்கிறார். ஆனாலும் அந்த சோர்வினால் யாக்கோபின் விசுவாசம் அசைக்கப்படவில்லை. யாக்கோபுக்கு பயமும் வியாகுலமும் உண்டாயிருக்கிறது. ஆனாலும் அவை யாக்கோபின் ஜெபத்தை நிறுத்தவில்லை. யாக்கோபு தன்னுடைய சொந்த பலத்தினால் தூதனானவரோடு போராடவில்லை. அவர் பரலோகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பலத்தினால் தூதனானவரோடு போராடுகிறார்.

நம்முடைய சுயபலத்தினால், நாம் கர்த்தரோடு போராடி ஜெயிக்கமுடியாது. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய பலவீனங்களிலே நமக்கு உதவிசெய்கிறார்.

"அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்" (ரோம 8:26).

யாக்கோபு தூதனானவருடனே பொழுது விடியுமளவும் போராடுகிறார். அவர் தன்னுடைய போராட்டத்தை நிறுத்தவில்லை. தூதனானவராலும் யாக்கோபை மேற்கொள்ள முடியவில்லை. யாக்கோபு தூதனானவரோடே போராடினாலும், அவருக்கு வேதனையோ, சரீர களைப்போ ஏற்படவில்லை. யாக்கோபு தனக்கு வெற்றி கிடைக்கும் வரையிலும் தூதனானவரோடு போராட வேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறார்.

அப்பொழுது தூதனானவர் யாக்கோபுடைய தொடைச்சந்தைத் தொடுகிறார். அதினால் யாக்கோபு அவரோடே போராடுகையில், யாக்கோபின் தொடைச்சந்து சுளுக்கிற்று. யாக்கோபின் தொடைச்சந்து சுளுக்கினாலும், அவர் தன்னுடைய போராட்டத்தை நிறுத்திவிடவில்லை. தூதனானவர் யாக்கோபின் தொடைச்சந்தை தொட்டதினால், யாக்கோபுக்கு வலியோ, வேதனையோ ஏற்படவில்லை.

கர்த்தரே தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக நமக்கு காயத்தை ஏற்படுத்துகிறார். அவரே தம்முடைய கிருபையினாலே நம்முடைய காயங்களுக்கு எண்ணெய் வார்த்து காயம் கட்டவும் செய்கிறார். காயப்படுத்துவதும், காயம் கட்டுவதும் ஒரே சமயத்தில் நடைபெறுவதினால், நமக்கு வேதனை தெரிவதில்லை.

தூதனானவரால் தம்மோடு போராடுகிற யாக்கோபை மேற்கொள்ள முடியவில்லை. யாக்கோபின் தொடைச்சந்து சுளுக்கின பிற்பாடும், அவர் போராடுவதை நிறுத்தவில்லை. அப்போது தூதனானவர் யாக்கோபை நோக்கி, "நான் போகட்டும், பொழுது விடிகிறது" என்று சொல்லுகிறார். அதற்கு யாக்கோபு, "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்" (ஆதி 32:26) என்று சொல்லிவிடுகிறார்.

தூதனானவர் யாக்கோபோடே சொன்னது, கர்த்தர் மோசேயோடு சொன்னதுபோல இருக்கிறது. கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ என்னை விட்டுவிடு" என்று சொன்னார். தூதனானவர் யாக்கோபை நோக்கி, "நான் போகட்டும்" என்று சொல்லுகிறார்.

"ஆகையால், என் கோபம் இவர்கள் மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப் போடவும் நீ என்னை விட்டுவிடு; உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்றார்" (யாத் 32:10).

தூதனானவர் யாக்கோபின் விசுவாசத்தை அங்கீகரித்து அவரைக் கனம்பண்ணுகிறார். யாக்கோபின் ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார். யாக்கோபு பயபக்தியோடும், பரிசுத்தத்தோடும், தூதனானவருடே போராடி, அவரை மேற்கொண்டார். யாக்கோபு தன்னுடைய விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்கிறார். "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மை போகவிடேன்" என்று யாக்கோபு தூதனானவரிடத்தில் தீர்மானமாகச் சொல்லுகிறார்.

யாக்கோபு தூதனானவரோடு போராடுகிறார். யாக்கோபு அவரை போராடி மேற்கொள்கிறார். யாக்கோபுக்கு ஆசீர்வாதம் கிடைக்கவில்லையென்றால், அவருக்கு இந்தப் போராட்டத்தினால் ஒரு பிரயோஜனமுமில்லை. யாக்கோபு தேவதூதனானவரோடு போராடி, அவரை மேற்கொண்டாலும், அவரிடத்தில் ஆசீர்வாதத்தைக் கேட்கும்போது, யாக்கோபு தன்னை வெகுவாகத் தாழ்த்துகிறார்.

நாம் கர்த்தருடைய சமுகத்திலே எவ்வளவு நேரம் ஜெபம்பண்ணினாலும், நம்முடைய இருதயத்தில் தாழ்மையிருக்க வேண்டும். அப்போதுதான் நமக்கு கர்த்தருடைய ஆசீர்வாதம் கிடைக்கும். கர்த்தர் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கிறார். அவர் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். நாம் கர்த்தருடைய சமுகத்தில் போராடி ஜெபிக்கும்போது, நம்முடைய ஜெபத்தைக் குறித்த பெருமையோ, நம்முடைய விசுவாசத்தைக் குறித்த பெருமையோ நம்மிடத்தில் இருக்கக்கூடாது.

தூதனானவர் யாக்கோபை ஆசீர்வதிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். அவர் யாக்கோபை நோக்கி, "உன் பேர் என்ன" என்று கேட்கிறார். யாக்கோபு தூதனானவருக்கு பிரதியுத்தரமாக, தன்னுடைய பெயரை, "யாக்கோபு" என்று சொல்லுகிறார்.

அப்பொழுது தூதனானவர், யாக்கோபை நோக்கி, "உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே" (ஆதி 32:28) என்று சொல்லுகிறார்.

யாக்கோபு என்னும் பெயருக்கு ஏமாற்றுக்காரன் அல்லது எத்தன் என்று பொருள். இஸ்ரவேல் என்னும் பெயருக்கு, தேவனோடு ஆளுகை செய்கிறவர் என்று பொருள். யாக்கோபு தூதனானவரோடு போராடி அவரை மேற்கொண்டார். தூதனானவர் இதுபற்றிச் சொல்லும்போது, "தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே" என்று யாக்கோபுக்கு சொல்லுகிறார். இதனால் யாக்கோபுக்கு தேவனோடும் வல்லமை இருக்கும். மனுஷரோடும் வல்லமை இருக்கும்.

இஸ்ரவேல் என்னும் எபிரெய வார்த்தையில் இரண்டு சொற்கள் உள்ளன. ஒன்று "சர்" என்பதாகும்.. இதற்கு அதிபதி என்று பொருள். ஆளுகை செய்கிறவர், ஜெயம் பெறுகிறவர் என்றும் இதற்கு பொருள் கூறலாம். இஸ்ரவேலில் உள்ள மற்றொரு வார்த்தை "ஏல்" என்பதாகும். இதற்கு தேவன், பெலன், சர்வ வல்லமை என்று பொருள். இஸ்ரவேல் தேவனோடும் மனிதரோடும் போராடி வெற்றி பெற்றவர் (ஆதி 32:28).

யாக்கோபு மனுஷனோடு போராடி வெற்றி பெற்றார். (ஆதி 25:29-34; ஆதி 27:1-31:55) இப்பொழுது தேவனோடு போராடி வெற்றி பெற்றிருக்கிறார் (ஆதி 32:29-32). இந்தப் பெயர் யாக்கோபிற்கும், (ஆதி 32:28; 2இராஜா 17:34; ஓசி 12:3-4), அவருடைய சந்ததிக்கும் (யாத் 9:7), கிறிஸ்துவிற்கும் (ஏசா 49:3) கொடுக்கப்பட்டிருக்கிறது.

பழைய ஏற்பாடு இஸ்ரவேலின் வரலாற்றையும், தேவன் அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தின விதத்தையும் பிரதானமாகக் கூறுகிறது. இஸ்ரவேல் ஒரு தேசமாக ஆரம்பமானது, பழைய ஏற்பட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. (ஆதி 29:21-30:43) அவர்களுடைய 430 வருஷ வனாந்தர பிரயாணம் (ஆதி 12:1- யாத் 12:40) 41 வருஷ பிரயாணங்களும், அலைந்து திரிதலும் (யாத் 12 - உபா 34); கானானை மேற் கொள்ளுதல் (யோசு 1-24); 16 நியாயாதிபதிகளின்கீழ் அவர்களுடைய அனுபவங்கள் (நியா 1:1-1சாமு 7) 42 ராஜாக்களின் கீழ் அவர்களுடைய அனுபவங்கள் (1சாமு 8-2இராஜா 25; 2நாளா 36); இஸ்ரவேலரின் அடிமைத்தனம் (2இராஜா 25; எஸ்றா 1) ஆகியவையும் பழைய ஏற்பாட்டில் பிரதானமாகக் சொல்லப்பட்டிருக்கிறது. எஸ்றா, நெகேமியா ஆகியோரின் நாட்களில் இஸ்ரவேல் மறுபடியும் ஒரு தேசமாக ஸ்தாபிக்கப்பட்டது.

தூதனானவர் யாக்கோபை ஆசீர்வதித்து அனுப்பிவிடுகிறார். யாக்கோபு தூதனானவரை நோக்கி, "உம்முடைய நாமத்தை எனக்கு அறிவிக்கவேண்டும்" என்று கேட்கிறார். ஆனால் தூதனானவர் தம்முடைய பெயரை யாக்கோபுக்கு அறிவிக்கவில்லை. அவர் யாக்கோபை நோக்கி, "நீ என் நாமத்தை கேட்பானேன்" என்று சொல்லிவிடுகிறார். தூதனானவர் யாக்கோபுக்கு தம்முடைய நாமத்தைச் சொல்லுவதற்கு பதிலாக, யாக்கோபை ஆசீர்வதித்து அனுப்புகிறார். யாக்கோபு இந்த ஆசீர்வாதத்திற்காகத்தான் தூதனானவரோடு போராடினார். "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்" என்று யாக்கோபு சொன்னார்.

யாக்கோபுக்கு இஸ்ரவேல் என்னும் புதிய பெயர் கிடைத்திருக்கிறது. யாக்கோபுக்கு தன்னுடைய புதிய பெயரைவிட, தூதனானவருடைய ஆசீர்வாதமே மேன்மையானதாயிருக்கிறது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலே நமக்கு பெரிய பெயர் கிடைப்பதைவிட, கர்த்தருடைய ஆசீர்வாதமும், அவருடைய கிருபையுமே நமக்கு பேருதவியாயிருக்கும். நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தைவிட, ஜீவவிருட்சமே மேன்மையானது.

தூதனானவர் யாக்கோபுக்கு புதிய பெயரை கொடுக்கிறார். யாக்கோபோ அந்த ஸ்தலத்திற்கு "பெனியேல்" என்னும் புதிய பெயரை கொடுக்கிறார் (ஆதி 32:30) பெனியேல் என்னும் பெயருக்கு தேவனுடைய முகம் என்று பொருள். யாக்கோபு இந்த ஸ்தலத்திலே தேவனை முகமுகமாய்க் கண்டு, உயிர்த்தப்பி பிழைத்திருக்கிறார். தான் தூதனானவரோடு போராடி மேற்கொண்டதை யாக்கோபு பெரிதாக நினைக்கவில்லை. தேவனுடைய கிருபையையும், ஆசீர்வாதத்தையும் யாக்கோபு பெரிதாய் நினைக்கிறார்.

யாக்கோபு இந்த ஸ்தலத்தைப்பற்றிச் சொல்லும்போது, "நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன், உயிர் தப்பிப்பிழைத்தேன்" என்று சொல்லி கர்த்தருடைய கிருபையை மகிமைப்படுத்துகிறார். கர்த்தருடைய கிருபையினால், யாக்கோபு அவரை முகமுகமாய்த் தரிசித்தாலும், உயிர் தப்பிப் பிழைத்திருக்கிறார்.

யாக்கோபு தன்னுடைய பலத்தையும் பராக்கிரமத்தையும், தூதனானவரோடு தான் போராடி மேற்கொண்டதையும் பெருமையாய்ச் சொல்லவில்லை. "நான் இந்த ஸ்தலத்திலே தூதனானவரோடு போராடி மேற்கொண்டேன்" என்று சொல்லாமல், யாக்கோபு கர்த்தருடைய கிருபைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். கர்த்தரை இந்த ஸ்தலத்திலே முகமுகமாக தரிசித்தாலும், அவருடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், தான் இன்னும் உயிர் தப்பிப் பிழைத்திருப்பதாக யாக்கோபு நன்றியுள்ள இருதயத்தோடு சொல்லுகிறார்.

யாக்கோபு பெனியேலைக் கடந்துபோகையில், சூரியன் உதயமாயிற்று; யாக்கோபு தொடைச்சுளுக்கினாலே நொண்டி நொண்டி நடக்கிறார். தூதனானவர் யாக்கோபுடைய தொடைச்சந்து நரம்பைத் தொட்டபடியால், இஸ்ரவேல் புத்திரர் இந்நாள்வரைக்கும் தொடைச்சந்து நரம்பைப் புசிக்கிறதில்லை (ஆதி 32:31,32).

யாக்கோபு தொடைச்சுளுக்கினால் நொண்டி நொண்டி நடக்கிறார். அவரால் சரியாக நடக்க முடியவில்லை. அவருடைய காலிலே சேதாரமுண்டாயிற்று. தன்னுடைய காலிலே தனக்கு சேதாரமுண்டானாலும், தனக்கு கர்த்தருடைய ஆசீர்வாதம் கிடைத்திருப்பதற்காக யாக்கோபு மிகவும் சந்தோஷப்படுகிறார்.

யாக்கோபு நொண்டி நொண்டி நடந்தாலும், அவர் கர்த்தருடைய ஆசீர்வாத்தை சுமந்துகொண்டு சந்தோஷமாய் நடக்கிறார். யாக்கோபு தன் ஜீவியகாலம் முழுவதும் நொண்டி நொண்டி நடந்து, தன்னுடைய கல்லறைக்கு நொண்டியாகவே போனாலும், அவரோடுகூட கர்த்தருடைய ஆசீர்வாதமும், முடிவு பரியந்தமும் கூடவேபோகிறது. இதுவே யாக்கோபுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதம்.

யாக்கோபு பெனியேலைக் கடந்துபோகையில் சூரியன் உதயமாயிற்று. யாக்கோபு கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கிறபோது, அவருடைய ஆத்துமாவிலே சூரியன் உதயமாகிறது. அவருடைய ஆத்துமாவின் இருள் நீங்கி, அங்கே வெளிச்சமுண்டாயிற்று.

33 அதிகாரம்

இஸ்ரவேல் என்னும் பெயருக்கு தேவனோடு ஆளுகை செய்கிறவர் என்று பொருள். யாக்கோபு தேவனுடைய வல்லமையைப் பெற்றுக்கொண்டு, தூதனானவரை மேற்கொள்கிறார். யாக்கோபு தேவனுடைய வல்லமையினால் மனுஷரையும் மேற்கொள்கிறார்.

ஏசாவும் யாக்கோபும் ஒப்புரவாகிறார்கள். அவர்கள் அன்போடும் பாசத்தோடும் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்கிறார்கள் (ஆதி 33:1-4). ஏசாவுக்கும் யாக்கோபுக்கும் இடையே நடைபெற்ற சம்பாஷணையின் விவரம் (ஆதி 33:5-7).

யாக்கோபு ஏசாவுக்கு வெகுமதி கொடுக்கிறார் (ஆதி 33:8-11). அவர்கள் தங்கள் பிரயாணத்தை தொடர்ந்து மேற்கொள்கிறார்கள் (ஆதி 33:12-15). யாக்கோபு கானானிலே வாசம்பண்ணுகிறார். அவர் தனக்கு ஒரு வீடுகட்டி, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடமும் கட்டுகிறார் (ஆதி 33:16-20).

யாக்கோபும் ஏசாவும் ஆதி 33:1-4

ஆதி 33:1. யாக்கோபு தன் கண்களை ஏறெடுத்து, இதோ, ஏசாவும் அவனோடேகூட நானூறு மனிதரும் வருகிறதைக் கண்டு, பிள்ளைகளை லேயாவிடத்திலும் ராகேலிடத்திலும் இரண்டு பணிவிடைக்காரிகளிடத்திலும் வெவ்வேறாகப் பிரித்துவைத்து,

ஆதி 33:2. பணிவிடைக்காரிகளையும் அவர்கள் பிள்ளைகளையும் முதலிலும், லேயாளையும் அவள் பிள்ளைகளையும் இடையிலும் ராகேலையும் யோசேப்பையும் கடையிலும் நிறுத்தி:

ஆதி 33:3. தான் அவர்களுக்கு முன்னாக நடந்து போய், ஏழுவிசை தரைமட்டும் குனிந்து வணங்கி, தன் சகோதரன் கிட்டச் சேர்ந்தான்.

ஆதி 33:4. அப்பொழுது ஏசா எதிர்கொண்டு ஓடிவந்து, அவனைத் தழுவி, அவன் கழுத்தைக்கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்; இருவரும் அழுதார்கள்.

ஏசாவும் அவரோடேகூட நானூறு மனிதரும் யாக்கோபை எதிர்கொள்ள வருகிறார்கள். யாக்கோபு தன் கண்களை ஏறெடுத்து அவர்கள் வருவதைக் காண்கிறார். "கண்களை ஏறெடுப்பது" என்னும் வாக்கியத்திற்கு, அவிசுவாசத்தினாலும், பயத்தினாலும் பார்ப்பதல்ல என்றும், சந்தோஷத்தோடும், நம்பிக்கையோடும் பார்ப்பதும் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

ஏசா நானூறு மனிதரோடு வருகிறார். ஒருவேளை யாக்கோபை பழிதீர்ப்பதற்காகவோ (ஆதி 27:41) அல்லது யாக்கோபை கனப்படுத்துவதற்காகவோ அல்லது தன்னுடைய வல்லமையை வெளிப் படுத்துவதற்காகவோ ஏசா இத்தனை பேரை தன்னோடு அழைத்துக் கொண்டு வரலாம். பழிவாங்குதல் அவருடைய நோக்கமாக இருந்தால் தேவன் அவர் மனதை இப்போது மாற்றி விடுவார்.

யாக்கோபைக் கனப் படுத்துவதற்காகவோ அல்லது தன்னுடைய வல்லமையை வெளிப்படுத்திக் காண்பிப்பதற்காகவோ வந்திருந்தால் ஏசா பூரண திருப்தியடைந்திருப்பார். ஏனெனில் யாக்கோபு ஏசாவுக்கு முன்பாகத் தன்னை அதிகமாகத் தாழ்த்துகிறார். (ஆதி 33:3).

ஆபிரகாம் கிழக்கு தேசத்து ராஜாக்களோடு யுத்தம் பண்ணும்போது அவரோடு 318 கைபடிந்த ஆட்கள் இருந்தார்கள். (ஆதி 14:14). ஆபிரகாமிடம் இருந்த ஆட்களைவிட ஏசாவிடம் 82 பேர் அதிகமாக இருக்கிறார்கள்.

யாக்கோபு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணி, தன்னுடைய பிரச்சனைகளையெல்லாம் அவருடைய சமுகத்திலே ஒப்புக்கொடுத்துவிட்டார். ஆகையினால் இப்போது யாக்கோபின் உள்ளத்திலே ஏசாவைக் குறித்து பயமோ வியாகுலமோ இல்லை. யாக்கோபு கர்த்தரை நம்பி, தன்னுடைய வேலையைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். யாக்கோபின் முகம் இப்போது துக்கமாயில்லை.

யாக்கோபைப்போலவே நம்முடைய கவலைகளையும் பாரங்களையும், கர்த்தர்மீது வைத்துவிட்டால், நமக்கும் துக்கம் இருக்காது. "அப்பொழுது அவள்: உம்முடைய அடியாளுக்கு உம்முடைய கண்களிலே தயைகிடைக்கக்கடவது என்றாள்; பின்பு அந்த ஸ்திரீ புறப்பட்டுப்போய், போஜனஞ்செய்தாள்; அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை" (1சாமு 1:18).

யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவை சந்திக்கவும், வரவேற்கவும் தன்னை ஆயத்தம்பண்ணுகிறார். தன்னுடைய சகோதரனை, தன்னுடைய மனைவிகளும், வேலைக்காரிகளும் ,பிள்ளைகளும் வரவேற்கும் வண்ணமாக அவர்களையும், வெவ்வேறாகப் பிரித்து வைக்கிறார். இரண்டு சகோதரர்களும் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்ளப் போகிறார்கள். இந்த விஷயத்தில் அவர்கள் இருவருக்குள்ளும் வேறுபாடு இருக்கிறது.

ஏசா நானூறு மனுஷரோடே யாக்கோபை சந்திக்க வருகிறார். ஏசாவோடு கூட வருகிறவர்களைப் பார்க்கும்போது, அவர் பலத்த சேனையோடு வருவதுபோல இருக்கிறது. ஏசா யுத்தத்திற்குப்போவதுபோல புறப்பட்டு வருகிறார். யாக்கோபோ ஏசாவை சந்திக்க, தன் குடும்பத்தாரை மாத்திரம் கூட்டிக்கொண்டு போகிறார். யாக்கோபோடுகூட, அவருடைய மனைவிகளும், வேலைக்காரிகளும், பிள்ளைகளும் மாத்திரமே இருக்கிறார்கள்.

யாக்கோபோடு இருக்கிறவர்கள் சாதாரணமானவர்கள். அவர்கள் சொற்ப எண்ணிக்கையுள்ளவர்கள். ஏசாவோடுகூட நானூறு மனிதர்கள் இருப்பதுபோல, யாக்கோபோடுகூட திரளான மனிதர் இல்லை. யாக்கோபோடு கூடயிருக்கிறவர்கள் ஸ்திரீகளாகவும், சிறுபிள்ளைகளாகவும் இருக்கிறார்கள். இவர்களுக்கு தங்களைக் காத்துக்கொள்ளும் பெலமில்லை. இவர்கள் பலவீனராயிருக்கிறார்கள்.

யாக்கோபிடத்தில் சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதம் இருக்கிறது. மூத்தவன் இளையவனை சேவிப்பான் என்னும் வாக்குத்தத்தம் யாக்கோபுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தையின் பிரகாரம், ஏசா யாக்கோபை சேவிக்கவேண்டும். யாக்கோபு ஏசாவை ஆளுகை செய்யவேண்டும். யாக்கோபு நற்குணசாலி. அவர் தன்னை உண்மையுள்ளவராகவும், உத்தம குணமுள்ளவராகவும் பல சந்தர்ப்பங்களில் நிரூபித்திருக்கிறார்.

யாக்கோபு ஒரு குடும்பத்தலைவராக தன்னைக் காண்பிக்கிறார். ஏசாவோ ஒரு சேனைத்தலைவனாக தன்னைக் காண்பித்து, நானூறு பேரோடு கெம்பீரமாய் வருகிறார். யாக்கோபு தன்னுடைய குடும்பத்தாரை மூன்று பிரிவாகப் பிரிக்கிறார். தன்னுடைய பிள்ளைகளை லேயாளிடத்திலும் ராகேலிடத்திலும் இரண்டு பணிவிடைக்காரிகளிடத்திலும் வெவ்வேறாகப் பிரித்துவைக்கிறார் (ஆதி 33:1).

ஏசா யாக்கோபை சந்திக்க வரும்போது நானூறு மனிதரோடுகூட மொத்தமாக வருகிறார். ஆனால் யாக்கோபோ தன்னுடைய குடும்பத்தாரை மூன்று பிரிவாகப் பிரித்து, அவர்களோடுகூட ஏசாவை சந்திக்கிறார்.

யாக்கோபு பணிவிடைக்காரிகளையும் அவர்கள் பிள்ளைகளையும் முதலிலும், லேயாளையும் அவள் பிள்ளைகளையும் இடையிலும் ராகேலையும் யோசேப்பையும் கடையிலும் நிறுத்துகிறார். யாக்கோபு அவர்களுக்கு முன்னாக நடந்து போய், ஏழுவிசை தரைமட்டும் குனிந்து வணங்கி, தன் சகோதரன் கிட்டச் சேருகிறார் (ஆதி 33:2,3).

யாக்கோபு ராகேலையும் யோசேப்பையும் கடையிலே நிறுத்துகிறார். ஆபத்து வந்தால் இவ்விரண்டு பேரும் எப்படியும் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பது யாக்கோபின் எண்ணமாக இருக்கலாம். அல்லது ஏசாவின் அன்பைப் பெறுவதற்கு தன்னுடைய அழகான மனைவி ராகேலும் அவளுடைய குமாரன் யோசேப்பும் உதவி புரிவார்கள் என்று யாக்கோபு நினைத்திருக்கலாம்.

யாக்கோபும் ஏசாவும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்கிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் தங்கள் அன்பை பரஸ்பரம் பரிமாறிக்கொள்கிறார்கள். யாக்கோபு ஏழுவிசை தரைமட்டும் குனிந்து வணங்கி, ஏசாவுக்கு மரியாதை செலுத்துகிறார். யாக்கோபு ஏசாவுக்கு பயந்தாலும், அவர் தன்னுடைய மூத்த சகோதரனாகயிருப்பதினால், அவருக்குரிய மரியாதையைக் காண்பிக்கிறார்.

ஏசா இதுவரையிலும் யாக்கோபுக்கு சத்துருவாகயிருந்தவர். இப்போது அவர் தனக்கு சத்துருவாயிருக்கிறாரா அல்லது சிநேகமுள்ள சகோதரராயிருக்கிறாரா என்பது யாக்கோபுக்கு தெரியாது. ஆனாலும் யாக்கோபு ஏசாவுக்கு முன்பாக ஏழுவிசை தரைமட்டும் குனிந்து வணங்குகிறார். மற்றவர்களுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தவேண்டும். தாழ்மையின் மூலமாக பகை நீங்கும். நாம் பிறருக்கு முன்பாக பணிந்துபோகும்போது, அவர்களுடைய கோபம் குறையும்.

யாக்கோபு ஏசாவுக்கு முன்பாக ஏழுவிசை தரைமட்டும் குனிந்து வணங்கும்போது, ஏசா எதிர்கொண்டு ஓடிவந்து, யாக்கோபைத் தழுவி, அவருடைய கழுத்தைக்கட்டிக்கொண்டு, முத்தஞ்செய்கிறார்; யாக்கோபும் ஏசாவும் அழுகிறார்கள் (ஆதி 33:4).

ஏசா யாக்கோபை தாக்குவதற்காக ஓடி வரவில்லை. அவர் கோபத்தோடு வராமல், யாக்கோபை நோக்கி அன்போடு வருகிறார். ஏசாவின் மனதில் இப்போது யாக்கோபின்மீது கோபமில்லை. ஏசா பழைய பகையை மன்னித்து மறந்துவிடுகிறார். அவர் யாக்கோபோடு மெய்யாகவே ஒப்புரவாகியிருக்கிறார்.

ஏசாவின் இருதயத்தில் உண்மையான மனந்திரும்புதல் ஏற்பட்டிருக்கவில்லையென்றால், அவரால் யாக்கோபை கட்டித்தழுவி, அவருடைய கழுத்தைக் கட்டிகொண்டு, முத்தம் செய்திருக்க முடியாது. ஏசாவின் கண்களில் யாக்கோபைப் பார்க்கும்போது கண்ணீரும் வந்திருக்காது. ஏசா யாக்கோபோடு சண்டை போடவரவில்லை. அவரோடுகூட சமாதானமாயிருக்கவே வந்திருக்கிறார்.

யாக்கோபு தூதனானவரோடே போராடி அவரை மேற்கொண்டவர். யாக்கோபால் மனுஷரையும் மேற்கொள்ள முடியும். யாக்கோபு இப்போது இஸ்ரவேலாயிருக்கிறார். அவர் தேவனோடுகூட ஆளுகை செய்கிறவர். யாக்கோபு தேவனையும், மனுஷரையும் மேற்கொண்டவர் என்று அவரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் யாக்கோபு இப்போது, ஏசாவோடுகூட போராடாமல், கண்ணீர் விட்டு அழுகிறார்.

மனுஷனுடைய இருதயங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. கர்த்தர் தமக்கு சித்தமான பிரகாரம் மனுஷருடைய இருதயங்களை மாற்றுகிறார். கர்த்தருடைய கிரியைகள் அற்புதமானது. மனுஷனுடைய இருதயங்களில் மாற்றம் ஏற்படும்போது ஆரவாரமில்லாமல் அமைதியாக மாற்றம் ஏற்படும். ஆனாலும் அந்த மாற்றம் ஆழமான மாற்றமாயிருக்கும். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக சத்துருக்களை சிநேகிதர்களாக மாற்றுகிறார்.

பரிசுத்த வேதாகமத்தில் இரண்டு சவுல்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டுக்காலத்து சவுல், தேவனுடைய இரட்சிக்கும் கிருபையினால் மாற்றப்பட்டார்.

"அப்பொழுது சவுல்: நான் பாவஞ்செய்தேன்; என் குமாரனாகிய தாவீதே, திரும்பிவா; என் ஜீவன் இன்றையதினம் உன் பார்வைக்கு அருமையாயிருந்தபடியால், இனி உனக்கு ஒரு பொல்லாப்புஞ்செய்யேன்; இதோ, நான் மதியற்றவனாய் மகா பெரிய தப்பிதஞ்செய்தேன் என்றான்" (1சாமு 26:21).

"அப்பொழுது சவுல் தாவீதை நோக்கி: என் குமாரனாகிய தாவீதே, நீ ஆசீர்வதிக்கப்பட்டவன்; நீ பெரிய காரியங்களைச் செய்வாய், மேன்மேலும் பலப்படுவாய் என்றான்; அப்படியே தாவீது தன் வழியே போனான்; சவுலும் தன் ஸ்தானத்திற்குத் திரும்பினான்" (1சாமு 26:25).

புதிய ஏற்பாட்டுக்காலத்து சவுல், தேவனுடைய புதிதாக்கும் கிருபையினால் மாற்றப்பட்டார்.

"கேட்டவர்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு: எருசலேமில் இந்த நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்களை நாசமாக்கி, இங்கேயும் அப்படிப்பட்டவர்களைக் கட்டிப் பிரதான ஆசாரியர்களிடத்திற்குக் கொண்டுபோகும்படி வந்தவன் இவனல்லவா என்றான். சவுல் அதிகமாகத் திடன்கொண்டு, இவரே கிறிஸ்துவென்று திருஷ்டாந்தப்படுத்தி, தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைப் கலங்கப்பண்ணினான்" (அப் 9:21,22).

ஏசாவும் யாக்கோபும் அழுகிறார்கள். யாக்கோபு சந்தோஷத்தினால் அழுகிறார். தன்னுடைய சகோதரன் ஏசா, தன்மீது கோபப்படாமல், தன்னைக் கட்டிக்கொண்டு முத்தம் செய்வதைப் பார்த்து, யாக்கோபு அழுகிறார். ஏசா ஒருவேளை துக்கத்தினாலும், அவமானத்தினாலும் அழுதிருக்கலாம். தான் இதுவரையிலும் யாக்கோபின்மீது கோபப்பட்டதற்காகவும், பொறாமைப்பட்டதற்காகவும் ஏசா மனது வேதனைப்பட்டு, துக்கப்பட்டு, அவமானப்பட்டு அழுதிருக்கலாம்.

ஏசாவுக்கு வெகுமதிகள் ஆதி 33:5-15

ஆதி 33:5. அவன் தன் கண்களை ஏறெடுத்து, ஸ்திரீகளையும், பிள்ளைகளையும் கண்டு: உன்னோடிருக்கிற இவர்கள் யார்? என்றான். அதற்கு அவன்: தேவன் உமது அடியானுக்கு அருளின பிள்ளைகள் என்றான்.

ஆதி 33:6. அப்பொழுது பணிவிடைக்காரிகளும் அவர்கள் பிள்ளைகளும் சேர்ந்துவந்து வணங்கினார்கள்.

ஆதி 33:7. லேயாளும் அவள் பிள்ளைகளும் சேர்ந்துவந்து வணங்கினார்கள்; பின்பு யோசேப்பும் ராகேலும் சேர்ந்துவந்து வணங்கினார்கள்.

ஆதி 33:8. அப்பொழுது அவன்: எனக்கு எதிர்கொண்டுவந்த அந்த மந்தையெல்லாம் என்னத்துக்கு என்றான். அதற்கு அவன்: என் ஆண்டவனுடைய கண்களில் எனக்குத் தயவு கிடைக்கிறதற்கு என்றான்.

ஆதி 33:9. அதற்கு ஏசா: என் சகோதரனே, எனக்குப் போதுமானது உண்டு: உன்னுடையது உனக்கு இருக்கட்டும் என்றான்.

ஆதி 33:10. அதற்கு யாக்கோபு: அப்படி அல்ல, உம்முடைய கண்களில் எனக்குத் தயவு கிடைத்ததேயானால், என் வெகுமதியை என் கையிலிருந்து ஏற்றுக்கொள்ளும்; நீர் என்மேல் பிரியமானீர், நான் உம்முடைய முகத்தைக் கண்டது தேவனுடைய முகத்தைக் கண்டதுபோல இருக்கிறது.

ஆதி 33:11. தேவன் எனக்கு அநுக்கிரகம் செய்திருக்கிறார்; வேண்டியதெல்லாம் எனக்கு உண்டு; ஆகையால் உமக்குக் கொண்டு வரப்பட்ட என் காணிக்கையை ஏற்றுக் கொள்ளும் என்று சொல்லி, அவனை வருந்திக் கேட்டுக்கொண்டான்; அப்பொழுது அவன் அதை ஏற்றுக்கொண்டான்.

ஆதி 33:12. பின்பு அவன்: நாம் புறப்பட்டுப் போவோம் வா, நான் உனக்கு முன் நடப்பேன் என்றான்.

ஆதி 33:13. அதற்கு அவன்: பிள்ளைகள் இளம் பிள்ளைகள் என்றும், கறவையான ஆடுமாடுகள் என்னிடத்தில் இருக்கிறது என்றும் என் ஆண்டவனுக்குத் தெரியும்; அவைகளை ஒரு நாளாவது துரிதமாய் ஓட்டினால், மந்தையெல்லாம் மாண்டுபோம்.

ஆதி 33:14. என் ஆண்டவனாகிய நீர் உமது அடியானுக்கு முன்னே போம்; நான் சேயீருக்கு என் ஆண்டவனிடத்தில் வருமளவும், எனக்குமுன் நடக்கிற மந்தைகளின் கால்நடைக்கும் பிள்ளைகளின் கால்நடைக்கும் தக்கதாக, மெதுவாய் அவைகளை நடத்திக்கொண்டு வருகிறேன் என்றான்.

ஆதி 33:15. அப்பொழுது ஏசா: என்னிடத்திலிருக்கிற ஜனங்களில் சிலரை நான் உன்னிடத்தில் நிறுத்திவிட்டுப் போகட்டுமா என்றான் அதற்கு அவன்: அது என்னத்திற்கு, என் ஆண்டவனுடைய கண்களில் எனக்குத் தயவுகிடைத்தால் மாத்திரம் போதும் என்றான்.

ஏசா தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கிறார். யாக்கோபோடுகூட ஸ்திரீகளும் பிள்ளைகளும் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் யார் என்பது ஏசாவுக்கு தெரியாது. யாக்கோபின் மூத்த குமாரனுக்கு ஒருவேளை பதினொரு வயது ஆயிருக்கலாம். யாக்கோபின் பிள்ளைகள் எல்லோரும் சிறுபிள்ளைகளாகயிருக்கிறார்கள்.

ஏசா யாக்கோபை நோக்கி, "இவர்கள் யார்" என்று கேட்கிறார். அதற்கு யாக்கோபு, "இவர்கள் தேவன் உமது அடியானுக்கு அருளின பிள்ளைகள்" என்று சொல்லுகிறார் (ஆதி 33:5). பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். கர்த்தர் நம்முடைய பிள்ளைகளை நமக்கு ஈவாகக் கொடுக்கிறார்.

"உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப்போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள்" (சங் 128:3).

"எளியவனையோ சிறுமையினின்று எடுத்து, உயர்ந்த அடைக்கலத்திலே வைத்து, அவன் வம்சங்களை மந்தையைப்போலாக்குகிறார்" (சங் 107:41).

யாக்கோபு தன்னுடைய மனைவிகளையும், வேலைக்காரிகளையும், அவர்களுடைய பிள்ளைகளையும் ஏற்கெனவே வெவ்வேறாகப் பிரித்து வைத்திருக்கிறார். இப்போது அவர்கள் எல்லோரும் வரிசையாக வந்து ஏசாவை வணங்குகிறார்கள்.

முதலாவதாக பணிவிடைக்காரிகளும் அவர்கள் பிள்ளைகளும் சேர்ந்துவந்து வணங்குகிறார்கள். பின்பு லேயாளும் அவள் பிள்ளைகளும் சேர்ந்து வந்து வணங்குகிறார்கள்; பின்பு யோசேப்பும் ராகேலும் சேர்ந்துவந்து வணங்குகிறார்கள் (ஆதி 33:6,7).

யாக்கோபு தன் சகோதரன் ஈசாவுக்கு வெகுமதி கொடுப்பதற்காக, தன்னுடைய மந்தையிலுள்ளவற்றை ஏற்கெனவே பிரித்து எடுத்து வைத்திருக்கிறார். அவர் தன் கைக்கு உதவினவைகளிலே தன் சகோதரனாகிய ஏசாவுக்கு வெகுமானமாக, இருநூறு வெள்ளாடுகளையும், இருபது வெள்ளாட்டுக் கடாக்களையும், இருநூறு செம்மறியாடுகளையும், இருபது ஆட்டுக்கடாக்களையும், பால் கொடுக்கிற முப்பது ஒட்டகங்களையும், அவைகளின் குட்டிகளையும், நாற்பது கடாரிகளையும், பத்துக் காளைகளையும், இருபது கோளிகைக் கழுதைகளையும், பத்துக் கழுதைக்குட்டிகளையும் பிரித்தெடுத்து வைத்திருக்கிறார் (ஆதி 32:13-15). யாக்கோபு அவற்றை வேலைக்காரர் கையில் ஒவ்வொரு மந்தையை தனித்தனியாக ஒப்புவித்திருக்கிறார்.

யாக்கோபு சாக்குபோக்கு சொல்லி சேயீருக்குப் போவதைத் தவிர்க்கிறார். யாக்கோபு சேயீருக்குப் போகவிரும்பவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் கானான் ஆபிரகாமிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தேசம். யாக்கோபு அதன்பின்பு சேயீருக்குப் போகவேயில்லை.

"என் ஆண்டவனுடைய கண்களில் எனக்குத் தயவு கிடைத்தால் மாத்திரம் போதும்" என்று யாக்கோபு ஏசாவிடம் சொல்லுகிறார். யாக்கோபு இன்னும் ஏசாவைப் பூரணமாக நம்பவில்லை. யாக்கோபு ஒரு ஏமாற்றுக்காரர். தந்திரசாலி. இப்பொழுது யாக்கோபு அதிகமாகப் பயந்து கொண்டிருக்கிறார். ஏசாவை பின்பு சந்திக்க வேண்டுமென்று யாக்கோபு திட்டமிட்டார். ஆனால் சூழ்நிலைகளின் நிமித்தமாக யாக்கோபால் ஏசாவைச் சந்திக்க முடியவில்லை. ஏசா திரும்பி தான் வந்த வழியே சேயீருக்குப் போனார். யாக்கோபு சுக்கோத்திற்குப் பிரயாணம்பண்ணி, தனக்கு ஒரு வீடு கட்டினார். சுக்கோத்து யோர்தானின் கிழக்குப் பகுதியில் உள்ளது. கானானுக்குள் நுழைவதற்கு முன்பாக யாப்போக்கிற்கு அருகிலுள்ளது.

இந்த மந்தைகளெல்லாம் யாக்கோபோடு கூடயிருக்கிறது. ஏசா தன்னுடைய கண்களை ஏறெடுத்து அந்த மந்தைகளையும் பார்க்கிறார். அப்பொழுது ஏசா யாக்கோபை நோக்கி, "எனக்கு எதிர்கொண்டுவந்த அந்த மந்தையெல்லாம் என்னத்துக்கு" என்று கேட்கிறார். அதற்கு யாக்கோபு, "என் ஆண்டவனுடைய கண்களில் எனக்குத் தயவு கிடைக்கிறதற்கு" (ஆதி 33:8) என்று சொல்லுகிறார்.

ஏசா மிகவும் கண்ணியமாக அந்த வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ள மறுக்கிறார். தனக்கு போதுமானது உண்டு என்றும், யாக்கோபுடையது அவருக்கு இருக்கட்டும் என்று சொல்லிவிடுகிறார் (ஆதி 33:9). நம்மிடத்தில் மற்றவர்களுக்கு இருப்பதுபோல திரளான சம்பத்து இல்லையென்றாலும், நம்மிடத்தில் போதுமானது உண்டு என்று நினைக்கும் பக்குவம் நமக்குள் இருக்கவேண்டும். போதும் என்கிற பக்தியே மிகுந்த ஆதாயம். ஏசாவிடத்தில் பேராசையில்லை. தனக்கு போதுமானது உண்டு என்று ஏசா சொல்லிவிடுகிறார்.

ஆனால் யாக்கோபோ தான் கொண்டு வந்த வெகுமானங்களை ஏசா பெற்றுக்கொள்ளவேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார். யாக்கோபு ஏசாவுக்கு பயந்ததினால், ஆரம்பத்தில் இந்த வெகுமானங்களை ஆயத்தம்பண்ணினார்.

"இதோ, உமது அடியானாகிய யாக்கோபு எங்கள் பின்னாலே வருகிறான் என்றும் சொல்லுங்கள் என்று கட்டளையிட்டான்; முன்னே வெகுமதியை அனுப்பி, அவனைச் சாந்தப்படுத்திக் கொண்டு, பின்பு அவன் முகத்தைப் பார்ப்பேன், அப்பொழுது ஒருவேளை என்பேரில் தயவாயிருப்பான் என்றான்" (ஆதி 32:20).

ஆனால் இப்போது யாக்கோபுக்கு ஏசாவின்மேல் பயமில்லை. அவர் மீது அன்பு மாத்திரமே இருக்கிறது. தான் கொண்டு வரும் வெகுமானங்களை, ஏசா பெற்றுக்கொள்ளவேண்டுமென்று அன்போடு வேண்டிக்கொள்கிறார். இப்போது யாக்கோபின் மனதிலே பயத்திற்கு பதிலாக, சகோதர சிநேகம் நிரம்பியிருக்கிறது.

யாக்கோபு ஏசாவைப்பற்றிச் சொல்லும்போது, "நீர் என்மேல் பிரியமானீர், நான் உம்முடைய முகத்தைக் கண்டது தேவனுடைய முகத்தைக் கண்டதுபோல இருக்கிறது" (ஆதி 33:10) என்று சொல்லுகிறார். யாக்கோபு ஏசாவின் முகத்தைப் பார்க்கும்போது, அந்த முகத்திலே தேவனுடைய கிருபையும், அவருடைய அநுக்கிரகமும் யாக்கோபுக்கு தெரிகிறது. தேவன் யாக்கோபின் ஜெபத்திற்கு பதில் கொடுத்திருக்கிறார். அவர் யாக்கோபின்மீது பிரியமாயிருக்கிறார்.

ஏசா தன்னுடைய சம்பத்துக்களைப்பற்றிச் சொல்லும்போது, "எனக்குப் போதுமானது உண்டு" என்று சொன்னார். யாக்கோபு தன்னுடைய சம்பத்துக்களைப்பற்றிச் சொல்லும்போது, "வேண்டியதெல்லாம் எனக்கு உண்டு" (ஆதி 33:11) என்று சொல்லுகிறார். யாக்கோபு தன்னுடைய சம்பத்துக்களைப்பற்றிச் சொல்லும்போது, "தேவன் எனக்கு அநுக்கிரகம் செய்திருக்கிறார்" என்று சொல்லி தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார்.

யாக்கோபு தனக்கு கொடுக்கும் வெகுமானங்களை ஏசா பெற்றுக்கொள்ள மறுக்கிறார். ஆனால் யாக்கோபோ அதைப் பெற்றுக்கொள்ளுமாறு அவரைக் கட்டாயப்படுத்துகிறார். யாக்கோபு ஏசாவை நோக்கி, "அப்படி அல்ல, உம்முடைய கண்களில் எனக்குத் தயவு கிடைத்ததேயானால், என் வெகுமதியை என் கையிலிருந்து ஏற்றுக்கொள்ளும்" (ஆதி 33:10) என்றும், "ஆகையால் உமக்குக் கொண்டு வரப்பட்ட என் காணிக்கையை ஏற்றுக் கொள்ளும்" (ஆதி 33:11) என்றும் சொல்லி, அவரை வருந்திக்கேட்டுக்கொள்கிறார். அப்போது யாக்கோபு கொண்டு வந்திருக்கிற வெகுமதியை ஏசா ஏற்றுக்கொள்கிறார்.

யாக்கோபு பாதான் அராமிலிருந்து கானான் தேசத்திற்கு புறப்பட்டுப்போகிறார். யாக்கோபின் பிரயாணத்திலே ஏசா உதவி செய்ய விரும்புகிறார். யாக்கோபுக்கு வனாந்தர பாதையைப்பற்றித் தெரியாது. ஏசா வனாந்தரத்தின் பாதையை நன்றாய் அறிந்தவர். ஆகையினால் ஏசா யாக்கோபை நோக்கி, "நாம் புறப்பட்டுப் போவோம் வா, நான் உனக்கு முன் நடப்பேன்" (ஆதி 33:12) என்று சொல்லுகிறார். ஏசாவின் வார்த்தைகள், அவர் உண்மையிலேயே யாக்கோபோடு ஒப்புரவாகியிருக்கிறார் என்பதற்கு அடையாளமாயிருக்கிறது.

ஏசா யாக்கோபோடுகூட இருக்கவேண்டுமென்று விரும்புகிறார். அவருடைய சகோதர சிநேகத்தை நேசிக்கிறார். ஏசா யாக்கோபுக்கு உதவிசெய்ய முன்வந்தாலும், யாக்கோபோ ஏசாவின் உதவியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறார். யாக்கோபு கர்த்தரை நம்பி புறப்பட்டு வந்திருக்கிறார். கர்த்தரே யாக்கோபை வழிநடத்துகிறார். யாக்கோபின் காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. கர்த்தர் யாக்கோபை கானான் தேசத்திலே மறுபடியும் கொண்டு வந்த சேர்ப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். யாக்கோபு கர்த்தருடைய வார்த்தையை நம்புகிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர்.

ஏசா யாக்கோபை பார்க்க நானூறு மனுஷரோடு வந்திருக்கிறார். அவர்கள் வேகமாக பிரயாணம்பண்ணக்கூடியவர்கள். யாக்கோபோ, தன் குடும்பத்தாரோடும், கறவையான ஆடு மாடுகளோடும் வந்திருக்கிறார். இவர்களால் ஏசாவைப்போல துரிதமாய்ப் பிரயாணம்பண்ண முடியாது.

யாக்கோபு ஏசாவை நோக்கி, "பிள்ளைகள் இளம் பிள்ளைகள் என்றும், கறவையான ஆடுமாடுகள் என்னிடத்தில் இருக்கிறது என்றும் என் ஆண்டவனுக்குத் தெரியும்; அவைகளை ஒரு நாளாவது துரிதமாய் ஓட்டினால், மந்தையெல்லாம் மாண்டுபோம்" (ஆதி 33:13) என்று சொல்லி, ஏசாவின் உதவியை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்.

யாக்கோபால் தன் பிள்ளைகளையும், கறவை மாடுகளையும் மெதுவாகத்தான் நடத்திக்கொண்டு போகமுடியும். யாக்கோபு தன்னுடைய நிலமையை ஏசாவுக்கு எடுத்துச் சொல்லுகிறார். அவர் ஏசாவை நோக்கி, "என் ஆண்டவனாகிய நீர் உமது அடியானுக்கு முன்னே போம்; நான் சேயீருக்கு என் ஆண்டவனிடத்தில் வருமளவும், எனக்குமுன் நடக்கிற மந்தைகளின் கால்நடைக்கும் பிள்ளைகளின் கால்நடைக்கும் தக்கதாக, மெதுவாய் அவைகளை நடத்திக்கொண்டு வருகிறேன்" (ஆதி 33:14) என்று சொல்லுகிறார்.

யாக்கோபு தன் குடும்பத்தார்மீது கரிசனையுள்ளவர். அவர் தன்னுடைய பிள்ளைகளுக்கு நல்ல தகப்பனாராயிருக்கிறார். அது மாத்திரமல்ல, யாக்கோபு தன்னுடைய மந்தைகளுக்கு நல்ல மேய்ப்பராகவும் இருக்கிறார். தன்னுடைய பிள்ளைகளால் எவ்வளவு வேகமாக நடக்க முடியும் என்பது யாக்கோபுக்கு தெரியும். தன்னுடைய மந்தைகளை வேகமாக ஓட்ட முடியாது என்பதும் யாக்கோபுக்கு நன்றாய்த் தெரியும்.

யாக்கோபின் நல்ல சுபாவம் ஊழியக்காரர்களாகிய நமக்கு ஒரு எடுத்துக்காட்டாக சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய ஊழியத்திலே புதிய விசுவாசிகள் நம்மோடுகூட சேர்ந்திருப்பார்கள். நாம் அவர்கள்மீது கடினமான ஊழியப்பொறுப்புக்களை சுமத்தக்கூடாது. அவர்களால் எவ்வளவு ஊழியபாரத்தைத் தாங்க முடியுமோ, அவ்வளவு பாரத்தை மாத்திரமே, அவர்கள்மீது சுமத்தவேண்டும். கிறிஸ்து நல்ல மேய்ப்பராயிருக்கிறார். நாம் கிறிஸ்துவின் முன்மாதிரியை பின்பற்றவேண்டும்.

"மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்" (ஏசா 40:11).

யாக்கோபை பாதுகாப்பதற்கு ஏசா தன்னுடைய மனுஷரில் சிலரை அவருக்கு கொடுக்க விரும்புகிறார். ஆனால் யாக்கோபோ அந்த உதவியையும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறார். ஏசா யாக்கோபை நோக்கி, "என்னிடத்திலிருக்கிற ஜனங்களில் சிலரை நான் உன்னிடத்தில் நிறுத்திவிட்டுப் போகட்டுமா" என்று கேட்கிறார். அதற்கு யாக்கோபு, "அது என்னத்திற்கு, என் ஆண்டவனுடைய கண்களில் எனக்குத் தயவுகிடைத்தால் மாத்திரம் போதும்" (ஆதி 3:15) என்று பிரதியுத்தரம் சொல்லுகிறார்.

யாக்கோபு தேவனுடைய தெய்வீக பாதுகாப்பை நம்புகிறார். கர்த்தருடைய பாதுகாப்பே யாக்கோபுக்கு போதுமானது. தனக்கு மனுஷருடைய பாதுகாப்பு தேவையில்லை என்று யாக்கோபு நினைக்கிறார். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள்.

ஏல்எல்லோகே இஸ்ரவேல் ஆதி 33:16-20

ஆதி 33:16. அன்றையத்தினம் ஏசா திரும்பித் தான் வந்த வழியே சேயீருக்குப் போனான்.

ஆதி 33:17. யாக்கோபு சுக்கோத்திற்குப் பிரயாணம்பண்ணி, தனக்கு ஒரு வீடு கட்டி, தன் மிருகஜீவன்களுக்குக் கொட்டாரங்களைப் போட்டான்; அதினாலே அந்த ஸ்தலத்துக்குச் சுக்கோத் என்று பேரிட்டான்.

ஆதி 33:18. யாக்கோபு பதான் அராமிலிருந்து வந்தபின் கானான்தேசத்திலிருக்கிற சாலேம் என்னும் சீகேமுடைய பட்டணத்திற்கு அருகே சென்று பட்டணத்திற்கு எதிரே கூடாரம்போட்டான்.

ஆதி 33:19. தான் கூடாரம்போட்ட வெளியின் நிலத்தைச் சீகேமின் தகப்பனாகிய ஏமோரின் புத்திரர் கையிலே நூறு வெள்ளிக்காசுக்குக் கொண்டு,

ஆதி 33:20. அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு ஏல்எல்லோகே இஸ்ரவேல் என்று பேரிட்டான்.

ஏசாவும் யாக்கோபும் சகோதர சிநேகத்தோடு ஒருவரையொருவர் சந்தித்துவிட்டு, இப்போது சமாதானத்தோடே பிரிகிறார்கள். அன்றையத்தினம் ஏசா திரும்பித் தான் வந்த வழியே சேயீருக்குப் போகிறார் (ஆதி 33:16).

யாக்கோபு யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள சுக்கோத்திற்கு பிரயாணம்பண்ணுகிறார். அவர் அங்கே தனக்கு ஒரு வீடு கட்டி, தன் மிருக ஜீவன்களுக்கு கொட்டாரங்களைப் போடுகிறார் (ஆதி 33:17). யாக்கோபு அந்த ஸ்தலத்திற்கு சுக்கோத் என்று பேரிடுகிறார். சுக்கோத் என்னும் பெயருக்கு கூடாரங்கள் அல்லது, கொட்டாரங்கள் என்று பொருள்.

யாக்கோபு யோர்தான் நதியின் கிழக்கில் சுக்கோத்தைக் கட்டுகிறார். இது யாப்போக்கு ஆற்றின் அருகில் உள்ளது. கிழக்கிலிருந்து இந்த ஆறு யோர்தான் நதிக்குப் பாய்ந்து வருகிறது.

யாக்கோபின் சந்ததியார் பிற்காலத்தில் மச்சுப்பாவப்பட்ட வீடுகளில் குடியிருக்கிறார்கள். ஆனாலும் தங்கள் முற்பிதாக்கள் கூடாரங்களிலும், கொட்டாரங்களிலும் குடியிருந்ததை அவர்கள் மறந்துவிடாமல் நினைவுகூரவேண்டும்.

"அப்பொழுது நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் நின்று வசனித்துச் சொல்லவேண்டியது என்னவென்றால்: என் தகப்பன் அழிவுக்கு நேரான சீரியா தேசத்தானாயிருந்தான்; அவன் கொஞ்சம் ஜனங்களோடே எகிப்துக்குப் போய், அவ்விடத்தில் பரதேசியாய்ச் சஞ்சரித்து, அங்கே பெரிய பலத்த திரட்சியான ஜாதியானான்" (உபா 26:5).

யாக்கோபு சீகேமுக்கு வருகிறார். சாலேம் சீகேமுடைய பட்டணம் என்று அழைக்கப்படுகிறது. இது கானான் தேசத்திலிருக்கிறது. யாக்கோபு பதான் அராமிலிருந்த சாலேமுக்கு வந்திருக்கிறார். யாக்கோபு நீண்ட பிரயாணம் செய்து, பல துன்பங்களை அனுபவித்து, முடிவிலே கானான் தேசத்திற்கு வந்திருக்கிறார்.

யாக்கோபு சாலேம் என்னும் பட்டணத்திற்கு எதிராக வந்து கூடாரம் போடுகிறார். இங்கு யாக்கோபு தன்னுடைய முதலாவது சொத்தை வாங்குகிறார். யாக்கோபு இங்கே கர்த்தருக்கு முதலாவது பலிபீடத்தைக் கட்டுகிறார் (ஆதி 33:17-20).

யாக்கோபு சாலேம் என்னும் சீகேமுடைய பட்டணத்திற்கு அருகே சென்று, அதற்கு எதிரே கூடாரம் போடுகிறார். தான் கூடாரம்போட்ட வெளியின் நிலத்தை கிரயத்திற்கு வாங்குகிறார். யாக்கோபு இந்த நிலத்தை சீகேமின் தகப்பனாகிய ஏமோரின் புத்திரர் கையிலே நூறு வெள்ளிக்காசுக்கு வாங்குகிறார்.

கானான் தேசம் யாக்கோபுக்கு சுதந்தர தேசமாக வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. ஆனாலும் யாக்கோபு இன்னும் கானான் தேசத்தை சுதந்தரிக்கவில்லை. கானான் தேசம் யாக்கோபுக்கு சொந்த தேசமாகயிருந்தாலும், அவர் இப்போது அந்த தேசத்திலுள்ள ஒரு நிலத்தை நூறு வெள்ளிக்காசுக்கு கிரயத்திற்கு வாங்குகிறார்.

யாக்கோபு தான் கிரயத்திற்கு வாங்கின நிலத்திலே, கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டுகிறார். யாக்கோபும் அவருடைய குடும்பத்தாரும் அங்கே கர்த்தரை ஆராதிக்கிறார்கள். யாக்கோபு தன்னுடைய வீட்டாருக்கு கூடாரம்போட்ட நிலத்திலே, கர்த்தருக்கு பலிபீடம் கட்டுகிறார். நாம் எந்த ஊரிலே நமக்கு வீடு கட்டுகிறோமோ, அந்த ஊரிலே கர்த்தருக்கு ஒரு ஆலயத்தையும் கட்டவேண்டும். நம்முடைய ஊரிலே கர்த்தருடைய ஆலயம் கட்டுவதற்கு நாம் உதவி செய்யவேண்டும்.

யாக்கோபு கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு ஏல்எல்லோகே இஸ்ரவேல் என்று பேரிடுகிறார் (ஆதி 33:20). "ஏல்எல்லோகே இஸ்ரவேல்" என்னும் எபிரெய வார்த்தைக்கு "தேவன்" அல்லது "இஸ்ரவேலின் தேவன்" என்று பொருள்.

கர்த்தர் யாக்கோபுக்கு இஸ்ரவேல் என்று புதிய பெயரைக் கொடுத்தார். யாக்கோபு இப்போது கர்த்தரை, "இஸ்ரவேலின் தேவன்" என்று அழைக்கிறார். யாக்கோபு கர்த்தரோடுகூட ஆளுகை செய்கிறவர். ஆனாலும் தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலுக்கு தேவனாகவும், கர்த்தராகவும் இருக்கிறார்.

34 அதிகாரம்

யாக்கோபுக்கு இதுவரையிலும், அவருடைய மாமனாகிய லாபான் மூலமாகவும், சகோதரனாகிய ஏசா மூலமாகவும் பிரச்சனைகள் வந்தது. இப்போது அவருக்கு, அவருடைய சொந்தப் பிள்ளைகள் மூலமாக பிரச்சனைகள் வருகிறது.

இந்த உலகமும், இந்த உலகத்திலுள்ள உறவு முறைகளும் மாயையாயிருக்கிறது. நமக்கு மிகவும் நெருக்கமான உறவினர்கள்கூட, சில வேளைகளில் நமக்கு அதிகமான துக்கத்தையும், வேதனையையும் கொடுத்துவிடுவார்கள். எல்லோருக்கும் துக்கம் வருவதுபோல, நல்லவர்களுக்கும் துக்கம் வருகிறது. யாக்கோபின் குமாரர்கள் அவருக்கு துக்கத்தைக் கொடுக்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்களோடும் உடன்படிக்கை செய்திருக்கிறார்.

சீகேம் என்பவன் யாக்கோபின் குமாரத்தியாகிய தீனாளை தீட்டுப்படுத்துகிறான் (ஆதி 34:1-5). சீகேமுக்கும் தீனாளுக்கும் திருமணம் செய்ய ஒப்பந்தமாகிறது (ஆதி 34:6-19). திருமண ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏமோரின் பட்டணத்தார் விருத்தசேதனம் பண்ணிக்கொள்கிறார்கள் (ஆதி 34:20-24). யாக்கோபின் குமாரராகிய சிமியோனும் லேவியும், ஏமோரின் பட்டணத்தாரை பட்டயத்தால் வெட்டி சங்காரம்பண்ணுகிறார்கள் (ஆதி 34:25-31).

தீனாள்
ஆதி 34:1-5

ஆதி 34:1. லேயாள் யாக்கோபுக்குப் பெற்ற குமாரத்தியாகிய தீனாள் தேசத்துப் பெண்களைப் பார்க்கப் புறப்பட்டாள்.

ஆதி 34:2. அவளை ஏவியனான ஏமோரின் குமாரனும் அத்தேசத்தின் பிரபுவுமாகிய சீகேம் என்பவன் கண்டு, அவளைக் கொண்டு போய், அவளோடே சயனித்து, அவளைத் தீட்டுப்படுத்தினான்.

ஆதி 34:3. அவனுடைய மனம் யாக்கோபின் குமாரத்தியாகிய தீனாள்மேல் பற்றுதலாயிருந்தது; அவன் அந்தப் பெண்ணை நேசித்து, அந்தப் பெண்ணின் மனதுக்கு இன்பமாய்ப் பேசினான்.

ஆதி 34:4. சீகேம் தன் தகப்பனாகிய ஏமோரை நோக்கி: இந்தப் பெண்ணை எனக்குக் கொள்ளவேண்டும் என்று சொன்னான்.

ஆதி 34:5. தன் குமாரத்தியாகிய தீனாளை அவன் தீட்டுப்படுத்தினதை யாக்கோபு கேள்விப்பட்டபோது, அவன் குமாரர் அவனுடைய மந்தையினிடத்தில் வெளியிலே இருந்தார்கள்; அவர்கள் வருமளவும் யாக்கோபு பேசாமலிருந்தான்.

யாக்கோபுக்கு ஒரே ஒரு குமாரத்தி மாத்திரமே இருக்கிறாள். இவள் லேயாளுக்கும் யாக்கோபுக்கும் பிறந்தவள். இவளுடைய பெயர் தீனாள் என்பதாகும். தீனாளுக்கு இப்போது பதினைந்து அல்லது பதினாறு வயது இருக்கலாம். சீகேமில் நடைபெற்ற ஒரு பண்டிகையில் கலந்து கொள்வதற்குத் தீனாள் அங்கே போயிருப்பாள் என்று யோசபஸ் என்ற திருச்சபை வரலாற்று ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

தீனாள் தேசத்துப் பெண்களைப் பார்க்க புறப்பட்டுப்போகிறாள். அவர்களைப் பார்க்கவேண்டும் என்னும் ஆவல் தீனாளின் மனதில் உண்டாயிற்று. தீனாள் தேசத்துப் பெண்களை பார்க்கப்போகும்போது, அந்த தேசத்துப் பெண்கள் தன்னையும் பார்க்கவேண்டுமென்று அவள் விரும்புகிறாள். அந்த தேசத்து பெண்கள் மாத்திரமல்ல, அந்த தேசத்து ஆண்களும் தன்னைப் பார்க்கவேண்டுமென்று தீனாள் ஆசைப்படுகிறாள்.

அந்த தேசத்தில் கானானியர் குடியிருக்கிறார்கள். தீனாள் கானானியரின் பழக்க வழக்கங்களை கற்றுக்கொள்ளப் போகிறாள். தீனாள் கானான் தேசத்திற்குப்போகும்போது, அவளை ஏவியனான ஏமோரின் குமாரனும் அத்தேசத்தின் பிரபுவுமாகிய சீகேம் என்பவன் காண்கிறான். சீகேம் தீனாளைக் கொண்டு போய், அவளோடே சயனித்து, அவளைத் தீட்டுப்படுத்துகிறான் (ஆதி 34:2).

தீனாள் தேசத்துப் பெண்களை பார்க்கப் புறப்பட்டுப்போகும்போது, அவள் தன்னையும் பார்த்துக்கொள்ளவேண்டும். தீனாள் தன்னைப் பார்த்துக்கொள்வதில் கவனக்குறைவாகயிருந்ததினால், சீகேம் என்பவன் அவளைக் கெடுத்துப்போடுகிறான். தீனாள் தன்னைப் பற்றி அக்கரையில்லாமலிருந்ததினால், அவள் கண்ணியிலே விழுந்துவிடுகிறாள்.

சீகேம் தீனாளை தீட்டுப்படுத்தினாலும், அவனுடைய மனம் யாக்கோபின் குமாரத்தியாகிய தீனாள்மேல் பற்றுதலாயிருக்கிறது; சீகேம் அந்தப் பெண்ணை நேசித்து, அந்தப் பெண்ணின் மனதுக்கு இன்பமாய்ப் பேசுகிறான் (ஆதி 34:3).

சீகேம் தீனாளை திருமணம் செய்துகொள்ளவேண்டுமென்று விரும்புகிறான். அவன் தன்னுடைய விருப்பத்தை, தன் தகப்பனிடத்தில் சொல்லுகிறான். சீகேம் தன் தகப்பனாகிய ஏமோரை நோக்கி, "இந்தப் பெண்ணை எனக்குக் கொள்ளவேண்டும்" என்று சொல்லுகிறான் (ஆதி 34:4).

சீகேம் தீனாளை தீட்டுப்படுத்தின செய்தி யாக்கோபுக்கு சொல்லப்படுகிறது. யாக்கோபோ கோபப்படவில்லை. அவர் உடனே சீகேமோடு சண்டைபோடவில்லை. அவர் பேசாமல் மவுனமாயிருக்கிறார். யாக்கோபுக்கு இந்த சூழ்நிலையில் என்ன பேசுவது என்று தெரியவில்லை. அவருடைய மனது அதிர்ச்சியடைந்திருக்கிறது.

தன் குமாரத்தியாகிய தீனாளை சீகேம் தீட்டுப்படுத்தின செய்தியை, யாக்கோபு தன்னுடைய வீட்டில் இருக்கும்போது கேள்விப்படுகிறார். அப்போது யாக்கோபின் குமாரர் வீட்டில் இல்லை. அவர்கள் வெளியிலே மந்தையினிடத்தில் இருக்கிறார்கள். தன்னுடைய குமாரர் வீட்டிற்கு வருமளவும் யாக்கோபு பேசாமலிருக்கிறார் (ஆதி 34:5).

யாக்கோபு ஒருவேளை தன்னுடைய வீட்டு நிர்வாக பொறுப்புக்களை தன்னுடைய குமாரரிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கலாம். பெரும்பகுதியான நிர்வாகம் யாக்கோபின் குமாரரிடத்தில் இருப்பதினால், யாக்கோபால் தன் குமாரரை கலந்து ஆலோசனைபண்ணாமல் ஒன்றும் பேசவும் முடியாது, செய்யவும் முடியாது. குடும்பத்தில் பெற்றோரின் அதிகாரம் குறையும்போது, அவர்களுடைய வார்த்தைகளும் குறைந்துபோகும். பெற்றோரின் வார்த்தைகளுக்கு மதிப்பும் மரியாதையும் குறைந்துபோகும்.

யாக்கோபின் குமாரர்
ஆதி 34:6-17

ஆதி 34:6. அத்தருணத்தில் சீகேமின் தகப்பனாகிய ஏமோர் புறப்பட்டு, யாக்கோபோடே பேசும்படி அவனிடத்தில் வந்தான்.

ஆதி 34:7. யாக்கோபின் குமாரர் இந்தச் செய்தியைக் கேட்டவுடனே, வெளியிலிருந்து வந்தார்கள். அவன் யாக்கோபின் குமாரத்தியோடே சயனித்து, செய்யத்தகாத மதிகெட்ட காரியத்தை இஸ்ரவேலில் செய்ததினாலே, அந்த மனிதர் மனங்கொதித்து மிகவும் கோபங்கொண்டார்கள்.

ஆதி 34:8. ஏமோர் அவர்களோடே பேசி: என் குமாரனாகிய சீகேமின் மனது உங்கள் குமாரத்தியின்மேல் பற்றுதலாயிருக்கிறது; அவளை அவனுக்கு மனைவியாகக் கொடுங்கள்.

ஆதி 34:9. நீங்கள் எங்களோடே சம்பந்தங்கலந்து, உங்கள் குமாரத்திகளை எங்களுக்குக் கொடுத்து, எங்கள் குமாரத்திகளை உங்களுக்குக் கொண்டு,

ஆதி 34:10. எங்களோடே வாசம்பண்ணுங்கள்; தேசம் உங்கள் முன்பாக இருக்கிறது; இதிலே குடியிருந்து, வியாபாரம்பண்ணி, பொருள் சம்பாதித்து, அதைக் கையாண்டுகொண்டிருங்கள் என்றான்.

ஆதி 34:11. சீகேமும் அவள் தகப்பனையும் அவள் சகோதரரையும் நோக்கி: உங்கள் கண்களில் எனக்குத் தயவுகிடைக்க வேண்டும்; நீங்கள் என்னிடத்தில் எதைக் கேட்டாலும் தருகிறேன்;

ஆதி 34:12. பரிசமும் வெகுமதியும் நீங்கள் எவ்வளவு கேட்டாலும், உங்கள் சொற்படி தருகிறேன்; அந்தப் பெண்ணைமாத்திரம் எனக்கு மனைவியாகக் கொடுக்கவேண்டும் என்றான்.

ஆதி 34:13. அப்பொழுது யாக்கோபின் குமாரர் தங்கள் சகோதரியாகிய தீனாளைச் சீகேம் என்பவன் தீட்டுப்படுத்தினபடியால், அவனுக்கும் அவன் தகப்பனாகிய ஏமோருக்கும் வஞ்சகமான மறுமொழியாக:

ஆதி 34:14. விருத்தசேதனமில்லாத புருஷனுக்கு நாங்கள் எங்கள் சகோதரியைக் கொடுக்கலாகாது; அது எங்களுக்கு நிந்தையாயிருக்கும்.

ஆதி 34:15. நீங்களும், உங்களுக்குள்ளிருக்கும் ஆண்மக்கள் யாவரும் விருத்தசேதனம் பண்ணப்பட்டு எங்களைப்போலானீர்களானால், நாங்கள் சம்மதித்து,

ஆதி 34:16. உங்களுக்கு எங்கள் குமாரத்திகளைக் கொடுத்து, உங்கள் குமாரத்திகளை எங்களுக்குக் கொண்டு, உங்களோடே குடியிருந்து, ஏகஜனமாயிருப்போம்.

ஆதி 34:17. விருத்தசேதனம் பண்ணிக்கொள்வதற்கு எங்கள் சொல் கேளாமற்போவீர்களானால், நாங்கள் எங்கள் குமாரத்தியை அழைத்துக்கொண்டு போய்விடுவோம் என்று சொன்னார்கள்.

சீகேம் தன் தகப்பனாராகிய ஏமோரிடத்தில் தீனாளைப்பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறான். அவளைத் தனக்கு திருமணம் செய்துகொடுக்க வேண்டும் என்றும் சீகேம் தன் தகப்பனிடத்தில் கேட்டுக்கொண்டான். இதன் நிமித்தமாக சீகேமின் தகப்பனாகிய ஏமோர், யாக்கோபோடே இந்த திருமணம் சம்பந்தமாக பேசுவதற்கு அவரிடத்தில் வருகிறார் (ஆதி 34:6).

யாக்கோபின் குமாரர் வெளியிலே மந்தையைக் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏமோர் தங்கள் வீட்டிற்கு வந்த செய்தியையும், ஏமோரின் குமாரனாகிய சீகேம் தங்கள் சகோதரியாகிய தீனாளை தீட்டுப்படுத்தின செய்தியையும் அவர்கள் கேள்விப்படுகிறார்கள். உடனே அவர்களும் தங்கள் வீட்டிற்கு வருகிறார்கள்.

யாக்கோபின் குமாரர் சீகேமின்மீது மிகுந்த கோபத்தோடிருக்கிறார்கள். சீகேம் யாக்கோபின் குமாரத்தியாகிய தீனாளோடே சயனித்து, இஸ்ரவேலிலே மதிகெட்ட காரியத்தை செய்திருக்கிறான். இதனால் யாக்கோபின் குமாரர் மனம் கொதித்து, சீகேமின்மீது மிகவும் கோபங்கொண்டிருக்கிறார்கள் (ஆதி 34:7).

சீகேம் தங்கள் குடும்பத்திற்கு செய்திருக்கிற அவமானத்தை யாக்கோபின் குமாரரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர்கள் தங்கள் குடும்பத்தின் மதிப்புக்கும், மரியாதையும், கவுரவத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

இக்காலத்தில் அநேகர், யாக்கோபின் குமாரரைப்போலவே பாவத்தின் அசுத்தத்தைப்பற்றி யோசிக்காமல், அதனால் ஏற்படும் வெட்கத்தைப்பற்றியும், அவமானத்தைப்பற்றியும் யோசிக்கிறார்கள். இவர்கள் பாவத்தினால் வரும் சாபத்திற்கு கலங்கமாட்டார்கள். ஆனால் அவர்கள் அந்த பாவத்தினால் வரும் அவமானத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். சீகேம் தீனாளை தீட்டுப்படுத்தின சம்பவத்தை, இஸ்ரவேலில் செய்யத்தகாத மதிகெட்ட காரியம் என்று யாக்கோபின் குமாரர் சொல்லுகிறார்கள்.

வேசித்தனமும் விபசாரமும் மதியீனமானது. இதனால் ஏற்படும் அசுத்தமும் மதியீனமானது. வேசித்தனம்பண்ணுகிறவர்கள் தேவனுடைய கிருபையை இழந்துபோவார்கள். அவர்களுடைய மனச்சாட்சியில் சமாதானம் இருக்காது. வேசிக்கள்ளரின் ஆத்துமா தீட்டுப்பட்டு அசுத்தமாயிருக்கும். வேசித்தனம் பண்ணுகிறவர்கள் தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஆவிக்குரிய காரியங்களை அசட்டைபண்ணிவிடுவார்கள்.

சீகேம் தீனாளை தீட்டுப்படுத்தின சம்பவம் இஸ்ரவேலிலே செய்யத்தகாத மதிகெட்ட காரியமாயிருக்கிறது. இஸ்ரவேல் என்பது யாக்கோபுக்கு கொடுக்கப்பட்ட புதிய பெயர். இஸ்ரவேலின் குடும்பத்தார் கர்த்தரை ஆராதிக்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், யாக்கோபின் தேவன் என்று அறியப்பட்டிருக்கிறார். அப்படிப்பட்ட குடும்பத்தில், இப்படிப்பட்ட மதிகெட்ட காரியம் நடைபெற்றிருக்கிறது.

பூர்வகாலத்திலேயே இஸ்ரவேல் ஜனத்தார் ஆவிக்குரிய ஜீவியத்திற்கும், பரிசுத்த ஜீவியத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். (ஆதி 34:7). கானானின் குமாரத்திகளைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று அவர்களுக்குக் கண்டிப்பான கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது (ஆதி 28:1,6).

சீகேமின் தகப்பனாகிய ஏமோர், யாக்கோபினிடத்தில் மாத்திரமே பேசும்படிக்கு அவருடைய வீட்டிற்கு வந்தார். ஆனால் அவர் வந்த செய்தியையும், தங்கள் சகோதரியாகிய தீனாள் தீட்டுப்படுத்தப்பட்ட செய்தியையும் கேள்விப்பட்டவுடனே யாக்கோபின் குமாரர் எல்லோரும் தங்கள் வீட்டிற்கு வந்துவிடுகிறார்கள். ஏமோர் இதுவரையிலும் யாக்கோபோடு மாத்திரமே பேசினார். இப்போது அவர் யாக்கோபின் குமாரரோடும் பேசவேண்டியதாயிற்று.

ஏமோர் யாக்கோபையும், அவருடைய குமாரரையும் நோக்கி, "ஏமோர் அவர்களோடே பேசி: என் குமாரனாகிய சீகேமின் மனது உங்கள் குமாரத்தியின்மேல் பற்றுதலாயிருக்கிறது; அவளை அவனுக்கு மனைவியாகக் கொடுங்கள். நீங்கள் எங்களோடே சம்பந்தங்கலந்து, உங்கள் குமாரத்திகளை எங்களுக்குக் கொடுத்து, எங்கள் குமாரத்திகளை உங்களுக்குக் கொண்டு, எங்களோடே வாசம்பண்ணுங்கள்; தேசம் உங்கள் முன்பாக இருக்கிறது; இதிலே குடியிருந்து, வியாபாரம்பண்ணி, பொருள் சம்பாதித்து, அதைக் கையாண்டுகொண்டிருங்கள்" (ஆதி 34:8-10) என்று சொல்லுகிறார்.

ஏமோர் ஒரு கானானியர். அவர் ஏவியரின் குடும்பத்தை சேர்ந்தவர். இஸ்ரவேல் புத்திரர் கானானியரோடே உடன்படிக்கை செய்துகொள்ளலாம் என்று ஏமோர் சொல்லுகிறார். இந்த விஷயத்தில் இஸ்ரவேல் புத்திரரைவிட, கானானியர்கள் உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஏமோர் யாக்கோபின் குமாரரிடத்தில், தன்னுடைய குமாரனுக்கும், தீனாளுக்கும் திருமணம் செய்து வைக்குமாறு கேட்டுக்கொள்கிறார். தீனாளை சீகேமுக்கு மனைவியாகக் கொடுக்குமாறு ஏமோர் கேட்கிறார்.

யாக்கோபும் அவருடைய குடும்பத்தாரும் இப்போது கானான் தேசத்திலே குடியிருக்கிறார்கள். இதுவரையிலும் இஸ்ரவேல் புத்திரருக்கும், கானானியருக்கும் திருமண சம்பந்தம் நடக்கவில்லை. ஆனால் இனிமேல் கானானியரும் இஸ்ரவேலரும் திருமண சம்பந்தம் செய்துகொள்ளலாம் என்று ஏமோர் சொல்லுகிறார்.

கானான் தேசம் யாக்கோபுக்கு சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற தேசம். ஆனால் யாக்கோபு இந்த தேசத்தை இன்னும் சுதந்தரிக்கவில்லை. அவரும் அவருடைய குடும்பத்தாரும், கானான் தேசத்திலே பரதேசிகளைப்போல சஞ்சரிக்கிறார்கள். ஏமோர் அவர்களை தங்களோடே வாசம்பண்ணுமாறு சொல்லுகிறார். தங்கள் மத்தியிலே குடியிருந்து, வியாபாரம்பண்ணி, பொருள் சம்பாதித்து ஜீவனம் பண்ணுமாறு ஏமோர் யாக்கோபின் குமாரருக்கு ஆலோசனை சொல்லுகிறார்.

சீகேம் தீனாளின்மீது மிகவும் பற்றுதலாயிருக்கிறான். சீகேமின் தகப்பனார் யாக்கோபின் குடும்பத்தாரிடம் இந்தத் திருமணத்தைப்பற்றி பேசும்போது, சீகேமும் அவர்களிடத்தில் இதுபற்றி பேசுகிறான்.

சீகேமும் தீனாளின் தகப்பனையும் அவள் சகோதரரையும் நோக்கி, "உங்கள் கண்களில் எனக்குத் தயவுகிடைக்க வேண்டும்; நீங்கள் என்னிடத்தில் எதைக் கேட்டாலும் தருகிறேன்;. பரிசமும் வெகுமதியும் நீங்கள் எவ்வளவு கேட்டாலும், உங்கள் சொற்படி தருகிறேன்; அந்தப் பெண்ணை மாத்திரம் எனக்கு மனைவியாகக் கொடுக்கவேண்டும்" (ஆதி 34:11,12) என்று சொல்லுகிறான்.

தற்காலத்தில் பரிசம் பெண் வீட்டாரிடமிருந்து ஆண் வீட்டாருக்கு வருகிறது. ஆனால் பூர்வகாலத்தில் பரிசம் ஆண்வீட்டாரிடமிருந்து பெண் வீட்டாருக்குச் சென்றது. பெண் குழந்தையை வளர்ப்பதற்கான செலவு, அவளைத் திருமணம் செய்து கொடுப்பதினால் அவளுடைய தகப்பனுக்கு உண்டாகும் தொழில் நஷ்டம் ஆகிய அனைத்தையும் கணக்குப் பார்த்து பிள்ளையின் பெற்றோருக்குப் பரிசம் கொடுத்தார்கள்.

பரிசத்தை வெகுமதிகளாகவோ, சேவைகளாகவோ அல்லது அங்கிகரிக்கப்பட்ட வேறு எந்த வழியிலோ செலுத்தலாம். மணப்பெண்ணின் அந்தஸ்துக்கு தகுந்தபடி பரிசம் கொடுக்க வேண்டும். (1சாமு 18:23).

எபிரெயருடைய திருமணங்களில் பரிசம் மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. பரிசம் கொடுப்பது உறுதியானவுடன், திருமண நிச்சயதார்த்தம் உறுதிபண்ணப்படுகிறது. பரிசம் கொடுப்பதற்கு முன்பாக பெண் வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாரும் திருமணம் சம்பந்தமாக பேச வேண்டிய எல்லாக் காரியங்களையும் சுமூகமாகப் பேசி முடித்துக் கொள்வார்கள்.

மணமகனின் குடும்பத்தில் மணமகனுடைய நண்பன் ஒருவன் பரிசம் சம்பந்தமாகப் பேசப்படும் காரியங்களில் கூட இருந்து பேசுவான். இவன் "மணவாளனுடைய தோழன்" (யோவான் 3:29) என்று அழைக்கப்படுகிறான். யூதருடைய தற்கால வரலாற்றில் பரிசத் தொகையை ஆவணங்களாக எழுதி உறுதி செய்து கொள்கிறார்கள்.

யாக்கோபு தன்னுடைய இரண்டு மனைவிகளுக்காகத் தன் மாமனிடம் 14 வருஷங்கள் வேலை பார்த்தார். (ஆதி 29:20-30). மணப்பெண்ணிற்கு பரிசம் கொடுத்தது பற்றி ஆதி 34:12; யாத் 22:16-17; 1சாமு 18:25; ரூத் 4:3-9 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. லேயாளுக்கு ஆறு குமாரர்கள் பிறந்தார்கள். ஆகையினால் அவள் "தேவன் எனக்கு நல்ல ஈவைத் தந்தார்" என்று கூறினாள் (ஆதி 30:20).

பரிசுத்த வேதாகமத்தில் பரிசங்களின் வகைகளைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மணவாளனிடமிருந்து மணவாட்டிக்குக் கொடுக்கப்படும் வெகுமதிகள் (ஆதி 24:22,30,53; ரூத் 4:10; ஓசி 3:2).

2. மணவாளனிடமிருந்து மணவாட்டியின் பெற்றோருக்கும், அவளுடைய குடும்பத்தின் மற்ற அங்கத்தினருக்கும் கொடுக்கப்படும் வெகுமதிகள். (ஆதி 24:53; ஆதி 34:12).

3. மணவாட்டியின் பெற்றோருக்கும், சகோதரருக்கும் கொடுக்கப்படும் கிரயம். (ஆதி 34:12; யாத் 22:17; 1சாமு 18:25).

4. மணவாட்டியின் பெற்றோருக்குச் சேவை செய்வது. (ஆதி 29:18).

5. மணவாட்டியின் பெற்றோர் மணவாளனுடைய பராக்கிரமத்தை நிரூபித்துக் காண்பிக்க வேண்டும் என்று கேட்கும்போது மணவாளன் அதை நிரூபித்துக் காண்பிப்பது. (யோசு 15:16; நியா 1:12; 1சாமு 18:25).

6. தந்தை ஒரு மகளுக்குக் கொடுக்கும் வெகுமதிகளும் பரிசங்கள் என்று அழைக்கப்படுகிறது. (நியா 1:15; 1இராஜா 9:16).

ஏமோரும் தன் குமாரன் சீகேமுக்காக, யாக்கோபின் குடும்பத்தாரிடம் பரிந்து பேசுகிறார். தன்னுடைய குமாரனுக்கு தீனாளை மனைவியாகக் கொடுத்தால், யாக்கோபின் குடும்பத்தாருக்கு என்னென்ன நன்மைகள் உண்டாகும் என்று ஒவ்வொன்றாக சொல்லுகிறார்.

யாக்கோபின் குமாரர் தங்களை கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்கள் போலவும், தாங்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிகிறவர்கள் போலவும் காண்பித்துக் கொள்கிறார்கள். அவர்களுடைய மனம் கொதித்துக்கொண்டிருக்கிறது. அவர்கள் சீகேமின்மீது கோபமாயிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் கோபத்தை வெளிப்படுத்திக்காண்பிக்காமல், மாய்மாலமாய்ப் பேசுகிறார்கள்.

தங்கள் சகோதரியாகிய தீனாளை சீகேம் என்பவன் தீட்டுப்படுத்தினபடியால், யாக்கோபின் குமாரர் சீகேமுக்கும், அவனுடைய தகப்பனாகிய ஏமோருக்கும் வஞ்சகமான மறுமொழி சொல்லுகிறார்கள்.

யாக்கோபின் குமாரருக்கு தங்கள் சகோதரியை சீகேமிற்குக் கொடுக்க மனமில்லை. இஸ்ரவேலிலுள்ள கன்னிகையைத் தீட்டுப்படுத்துவதற்கு சாத்தான் எடுத்துக்கொள்ளும் முதலாவது முயற்சி இதுவாகும். இது தேவனுடைய திட்டத்திற்கு முரணானது. தேவனுடைய குமாரன் இஸ்ரவேலிலுள்ள கன்னிகையின் மூலமாகப் பிறப்பார் (ஏசா 7:14; மத் 1:18-25).

கானானியர் விருத்தசேதனமில்லாதவர்கள். யாக்கோபின் குமாரர், சீகேமையும் அவனுடைய தகப்பனையும் பார்த்து, "விருத்தசேதனமில்லாத புருஷனுக்கு நாங்கள் எங்கள் சகோதரியைக் கொடுக்கலாகாது; அது எங்களுக்கு நிந்தையாயிருக்கும்" (ஆதி 34:14) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் புறஜாதி ஜனங்களோடு சேர்ந்து வாழாமல் வேறுபிரிந்து வாழவேண்டும். (ஆதி 12:1-3; ஆதி 21:12; ஆதி 24:3; ஆதி 28:1,6; யாத் 34:12-16; எண் 23:9; உபா 7:3-4; யோசு 23:12; எஸ்றா 9-10).

விருத்தசேதனம் பண்ணுதல் ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு ஓர் அடையாளம். இந்த அடையாளத்தை அங்கிகரியாத எந்த இஸ்ரவேலனும் அழிக்கப்பட வேண்டும் (ஆதி 17:9-14).

கானானியர் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளவேண்டும் என்பது யாக்கோபின் புத்திரருடைய விருப்பமல்ல. கானானியரை பழிவாங்கவேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம். சீகேமியர்கள் விருத்தசேதனம்பண்ணிக்கொண்டால் அவர்களும் தங்களைப்போல ஆவார்கள் என்று யாக்கோபின் குமாரர் சொல்லுகிறார்கள்.

யாக்கோபின் குமாரர் சீகேமையும், அவனுடைய தகப்பனையும் நோக்கி, "நீங்களும், உங்களுக்குள்ளிருக்கும் ஆண்மக்கள் யாவரும் விருத்தசேதனம் பண்ணப்பட்டு எங்களைப் போலாவீர்களானால், நாங்கள் சம்மதித்து, உங்களுக்கு எங்கள் குமாரத்திகளைக் கொடுத்து, உங்கள் குமாரத்திகளை எங்களுக்குக் கொண்டு, உங்களோடே குடியிருந்து, ஏகஜனமாயிருப்போம்" (ஆதி 34:15,16) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனம் வேறுபிரிந்து தனி ஜாதியாக இருக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். (ஆதி 34:14) அவர்கள் புறஜாதியோடு கலந்து ஏகஜனமாக இருக்கக்கூடாது. யாக்கோபின் புத்திரர் வஞ்சகமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். ஏமோரும், வஞ்சகமான திட்டத்தைத் தன்மனதில் வைத்திருக்கிறான். யாக்கோபின் ஆடுமாடுகள், ஆஸ்திகள், மிருகஜீவன்கள் எல்லாம் நம்மைச் சேருமல்லவா என்று ஏமோர் வஞ்சகமாக திட்டம் பண்ணுகிறான் (ஆதி 34:23).

இஸ்ரவேலின் நிபந்தனைகளைத் தன்னுடைய ஜனங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திய போது ஏமோர் இந்த வஞ்சக ஆலோசனையைக் கூறுகிறான். ஏமோரின் ஜனங்களும் அவனுடைய ஆலோசனையை ஏற்றுக் கொண்டு விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள சம்மதம் தெரிவிக்கிறார்கள். அவர்கள் தற்காலிக சரீர வேதனையைத் தாங்கிக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறார்கள்.

ஏமோரின் குடும்பத்தாரைப் பழிதீர்ப்பதற்கு யாக்கோபின் குமாரர்கள் மார்க்கக் காரியங்களைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்துகிறார்கள். தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும் என்று நம்பி சீகேமியர்கள் இந்த மார்க்கக் காரியங்களைப் பின்பற்றுகிறார்கள்.

சீகேமியர்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டு, தங்களுடைய சரீரத்தை சுத்திகரிப்பு செய்யவேண்டும் என்பது யாக்கோபின் புத்திரருடைய விருப்பமல்ல. சீகேமியர்கள் விருத்தசேதனம்பண்ணிக்கொள்வதினால் அவர்களுக்கு சரீர வேதனை உண்டாகவேண்டும் என்பதும், அவர்கள் வேதனைப்படும்போது அவர்களை பட்டயத்தால் வெட்டிக்கொன்றுபோட வேண்டும் என்பதும் யாக்கோபின் புத்திரருடைய வஞ்சகமான திட்டமாயிருக்கிறது.

யாக்கோபின் புத்திரர் சீகேமிடமும், அவனுடைய தகப்பனிடமும் சொல்லும்போது, "விருத்தசேதனம் பண்ணிக்கொள்வதற்கு எங்கள் சொல் கேளாமற்போவீர்களானால், நாங்கள் எங்கள் குமாரத்தியை அழைத்துக்கொண்டு போய்விடுவோம்" (ஆதி 34:17) என்றும் சொல்லுகிறார்கள்.

சீகேம் தங்கள் சகோதரியாகிய தீனாளுக்காக எதையும் செய்ய ஆயத்தமாயிருக்கிறான் என்பது யாக்கோபின் புத்திரருக்கு தெரிந்திருக்கிறது. சீகேம் ஏற்கெனவே, யாக்கோபையும், அவருடைய புத்திரரையும் நோக்கி, "உங்கள் கண்களில் எனக்குத் தயவுகிடைக்கவேண்டும்; நீங்கள் என்னிடத்தில் எதைக் கேட்டாலும் தருகிறேன்; பரிசமும் வெகுமதியும் நீங்கள் எவ்வளவு கேட்டாலும், உங்கள் சொற்படி தருகிறேன்; அந்தப் பெண்ணைமாத்திரம் எனக்கு மனைவியாகக் கொடுக்கவேண்டும்" (ஆதி 34:11,12) என்று சொல்லியிருக்கிறான்.

சீகேம் தீனாளின்மீது வைத்திருக்கிற பிரியத்தை, யாக்கோபின் புத்திரர் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறார்கள். யாக்கோபின் புத்திரர் சொல்லுவது கர்த்தருக்கு விரோதமான பாவம். கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்கக்கூடாது. அதுபோலவே அவருடைய பிரமாணங்களையும், நியமங்களையும் வீணிலே பயன்படுத்தவும்கூடாது.

ஆண்மக்கள் விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளவேண்டும் என்பது கர்த்தருடைய நியமம். ஆனால் யாக்கோபின் புத்திரரோ தவறான நோக்கத்தோடு, சீகேமியரை விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளுமாறு சொல்லுகிறார்கள். அவர்களுக்கு தெய்வபக்தி ஆதாயமான தொழிலாகத் தெரிகிறது. கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து விருத்தசேதனம் பண்ணிக்கொள்வது என்பது வேறு, உலகப்பிரகாரமான ஆதாயத்திற்காக விருத்தசேதனம்பண்ணிக்கொள்வது என்பது வேறு.

இக்காலத்தில் அநேகர் தெய்வபக்தியை ஆதாயமான தொழில் என்று நினைக்கிறார்கள். ஒருவேளை இவர்களுக்கு, தாங்கள் எதிர்பார்க்கிற உலகப்பிரகார ஆதாயம் கிடைக்கலாம். ஆனாலும் இப்படிப்பட்டவர்களுக்கு தெய்வீக ஆசீர்வாதம் எதுவும் கிடைக்காது.

விருத்த சேதனம்
ஆதி 34:18-24

ஆதி 34:18. அவர்களுடைய வார்த்தைகள் ஏமோருக்கும் ஏமோரின் குமாரனாகிய சீகேமுக்கும் நலமாய்த் தோன்றினது.

ஆதி 34:19. அந்த வாலிபன் யாக்கோபுடைய குமாரத்தியின்மேல் பிரியம் வைத்திருந்தபடியால், அந்தக் காரியத்தைச் செய்ய அவன் தாமதம்பண்ணவில்லை. அவன் தன் தகப்பன் வீட்டார் அனைவருக்குள்ளும் மேன்மையுள்ளவனாயிருந்தான்.

ஆதி 34:20. ஏமோரும் அவன் குமாரன் சீகேமும் தங்கள் பட்டணத்து வாசலில் வந்து, தங்கள் பட்டணத்து மனிதரோடே பேசி:

ஆதி 34:21. இந்த மனிதர் நம்மோடே சமாதானமாயிருக்கிறார்கள்; ஆகையால், அவர்கள் இந்தத் தேசத்தில் வாசம்பண்ணி, இதிலே வியாபாரம்பண்ணட்டும்; அவர்களும் வாசம்பண்ணுகிறதற்கு தேசம் விஸ்தாரமாயிருக்கிறது; அவர்களுடைய குமாரத்திகளை நமக்கு மனைவிகளாகக்கொண்டு, நம்முடைய குமாரத்திகளை அவர்களுக்குக் கொடுப்போம்.

ஆதி 34:22. அந்த மனிதர் விருத்தசேதனம்பண்ணப்பட்டவர்களாயிருக்கிறது போல, நம்மிலுள்ள ஆண்மக்கள் யாவரும் விருத்தசேதனம்பண்ணப்பட்டால், அவர்கள் ஏகஜனமாக நம்மோடே வாசம்பண்ணச் சம்மதிப்பார்கள்.

ஆதி 34:23. அவர்களுடைய ஆடுமாடுகள் ஆஸ்திகள் மிருகஜீவன்கள் எல்லாம் நம்மைச் சேருமல்லவா? அவர்களுக்குச் சம்மதிப்போமானால், அவர்கள் நம்முடனே வாசம்பண்ணுவார்கள் என்று சொன்னார்கள்.

ஆதி 34:24. அப்பொழுது ஏமோரின் பட்டணத்து வாசலில் புறப்பட்டுவரும் அனைவரும் அவன் சொல்லையும் அவன் குமாரனாகிய சீகேமின் சொல்லையும் கேட்டு, அவனுடைய பட்டணத்து வாசலில் புறப்பட்டுவரும் ஆண்மக்கள் யாவரும் விருத்த சேதனம்பண்ணப்பட்டார்கள்.

யாக்கோபின் புத்திரருடைய வார்த்தைகள் ஏமோருக்கும் ஏமோரின் குமாரனாகிய சீகேமுக்கும் நலமாய்த் தோன்றுகிறது (ஆதி 34:18). சீகேமும், ஏமோரும் விருத்தசேதனம்பண்ணிக்கொள்ள சம்மதம் தெரிவிக்கிறார்கள். சீகேம் வாலிபனாயிருக்கிறான். அந்த வாலிபன் யாக்கோபுடைய குமாரத்தியின்மேல் பிரியம் வைத்திருந்தபடியால், அந்தக் காரியத்தைச் செய்ய அவன் தாமதம்பண்ணவில்லை (ஆதி 34:19).

சீகேம் தன் தகப்பன் வீட்டார் அனைவருக்குள்ளும் மேன்மையுள்ளவனாயிருக்கிறான். ஏமோரின் பட்டணத்திலே, சீகேமுக்கும், அவனுடைய தகப்பனாகிய ஏமோருக்கும் மிகுந்த செல்வாக்கு இருக்கிறது. ஏமோரும் அவன் குமாரன் சீகேமும் தங்கள் பட்டணத்து வாசலில் வந்து, தங்கள் பட்டணத்து மனிதரோடே, விருத்தசேதனம் பண்ணிக்கொள்வது பற்றி பேசிக்கொள்கிறார்கள் (ஆதி 34:20).

ஏமோரின் பட்டணத்தார் ஏற்கெனவே விருத்தசேதனம்பண்ணிக்கொள்வது பற்றி கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஆபிரகாமின் குடும்பத்தார் விருத்தசேதனம்பண்ணிக்கொண்டவர்கள் என்பது ஏமோரின் பட்டணத்தாருக்கு தெரிந்திருக்கிறது. விருத்தசேதனம் பரிசுத்தமானது என்றும், அது கனமுள்ளது என்றும் அவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆனாலும் ஏமோரின் பட்டணத்தாருக்கு விருத்தசேதனத்தைப்பற்றி தெளிவான உபதேசமில்லை. அவர்கள் அதுபற்றி அரையும் குறையுமாக அறிந்திருக்கிறார்கள்.

சத்தியத்தை அரையும் குறையுமாக அறிந்திருப்பது ஆபத்தானது. ஒரு சத்தியத்தைக் குறித்து நமக்கு தெளிவு இல்லையென்றால், நம்முடைய குறைவை கர்த்தரிடத்தில் சொல்லவேண்டும். பரிசுத்த ஆவியானவர் நமக்கு போதிப்பார். அப்போது நமக்கு சத்தியத்தைக் குறித்து தெளிந்த அறிவு உண்டாகும். உள்ளதை உள்ளது என்றும், இல்லாததை இல்லாது என்றும் சொல்லுவதே நமக்கு ஆசீர்வாதம். நமக்கு தெரியாததை தெரிந்ததுபோல காண்பித்துக்கொள்ளக்கூடாது.

இக்காலத்தில் அநேகர் சத்தியத்தை குறைவாக அறிந்திருந்தாலும், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்பதுபோல காண்பித்துக்கொள்கிறார்கள். இவர்கள் மாய்மாலம்பண்ணுகிறார்கள். மாய்மாலம்பண்ணுகிறவர்கள் ஒருபோதும் சத்தியத்தைக் கற்றுக்கொள்ளமாட்டார்கள்.

ஏமோருக்கும், சீகேமுக்கும் விருத்தசேதனம்பண்ணிக்கொள்வதைப்பற்றி ஓரளவு மாத்திரமே தெரிந்திருக்கிறது. அதன் தாற்பரியத்தை அவர்கள் அறியவில்லை. யாக்கோபின் குமாரத்தியை திருமணம் செய்து கொள்வதற்காக, சீகேம் விருத்தசேதனம்பண்ணிக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறான். தான் விருத்தசேதனம் பண்ணிக்கொள்வது மாத்திரமல்ல, ஏமோரின் பட்டணத்தாரும் விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறான்.

விருத்தசேதனம்பண்ணிக்கொள்வதினால் ஆவிக்குரிய நன்மைகள் என்னென்ன உண்டாகும் என்பது அவனுக்கு தெரியவில்லை. சீகேம் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களைப்பற்றி யோசிக்கிறான். விருத்தசேதனம்பண்ணிக்கொண்டால், "யாக்கோபின் குடும்பத்தாருடைய ஆடுமாடுகள், ஆஸ்திகள், மிருகஜீவன்கள் எல்லாம் நம்மைச் சேருமல்லவா" (ஆதி 34:23) என்று சீகேமும் ஏமோரும் ஏமோரின் பட்டணத்தாருக்கு சொல்லுகிறார்கள்.

ஏமோரும், அவன் குமாரன் சீகேமும், தங்கள் பட்டணத்து வாசலில் வந்து, தங்கள் பட்டணத்து மனிதரோடே விருத்தசேதனம்பண்ணிக்கொள்வது பற்றி பேசிக்கொள்கிறார்கள். அவர்கள் ஏமோரின் பட்டணத்தாரை நோக்கி, "இந்த மனிதர் நம்மோடே சமாதானமாயிருக்கிறார்கள்; ஆகையால், அவர்கள் இந்தத் தேசத்தில் வாசம்பண்ணி, இதிலே வியாபாரம்பண்ணட்டும்; அவர்களும் வாசம்பண்ணுகிறதற்கு தேசம் விஸ்தாரமாயிருக்கிறது; அவர்களுடைய குமாரத்திகளை நமக்கு மனைவிகளாகக் கொண்டு, நம்முடைய குமாரத்திகளை அவர்களுக்குக் கொடுப்போம்" (ஆதி 34:21) என்று சொல்லுகிறார்கள்.

தாங்கள் விருத்தசேதனம்பண்ணிக் கொள்வதினால் தங்களுக்கு என்னென்ன நன்மைகள் உண்டாகும் என்றும் அவர்கள் ஏமோரின் பட்டணத்தாருக்கு சொல்லுகிறார்கள். அவர்களுக்கு ஆவிக்குரிய நன்மையைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. அவர்கள் சரீரப்பிரகாரமான நன்மைகளை மாத்திரமே பேசுகிறார்கள். அவர்கள் ஆவிக்குரிய காரியங்களைவிட, உலகப்பிரகாரமான காரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

சீகேமும் ஏமோரும், ஏமோரின் பட்டணத்து ஜனங்களை நோக்கி, "அந்த மனிதர் விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்களாயிருக்கிறது போல, நம்மிலுள்ள ஆண்மக்கள் யாவரும் விருத்தசேதனம்பண்ணப்பட்டால், அவர்கள் ஏகஜனமாக நம்மோடே வாசம்பண்ணச் சம்மதிப்பார்கள். அவர்களுடைய ஆடுமாடுகள் ஆஸ்திகள் மிருகஜீவன்கள் எல்லாம் நம்மைச் சேருமல்லவா? அவர்களுக்குச் சம்மதிப்போமானால், அவர்கள் நம்முடனே வாசம்பண்ணுவார்கள்" (ஆதி 34:22,23) என்று சொல்லுகிறார்கள்.

அப்பொழுது ஏமோரின் பட்டணத்து வாசலில் புறப்பட்டுவரும் அனைவரும் அவன் சொல்லையும் அவன் குமாரனாகிய சீகேமின் சொல்லையும் கேட்டு, அவனுடைய பட்டணத்து வாசலில் புறப்பட்டுவரும் ஆண்மக்கள் யாவரும் விருத்த சேதனம்பண்ணப்படுகிறார்கள் (ஆதி 34:24).

யாக்கோபின் குமாரர்கள், சீகேமோடும் ஏமோரோடும் சாதுரியமாய்ப் பேசியிருக்கிறார்கள். ஏமோரின் பட்டணத்தார் விருத்தசேதனம்பண்ணிக்கொண்டால், அவர்கள் தங்களைப்போல் ஆவார்கள் என்று சொன்னது மாத்திரமல்ல, அவர்கள் ஏமோரின் பட்டணத்தாரோடு விவாக சம்பந்தம்பண்ணி, அவர்களோடே குடியிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். இதன் மூலமாக ஏமோரின் பட்டணத்தாருக்கு தொழிலும், வியாபாரமும் விருத்தியாகும் என்றும், அவர்களுடைய ஐசுவரியம் பெருகும் என்றும் ஆசை வார்த்தைகளை சொல்லியிருக்கிறார்கள்.

யாக்கோபின் புத்திரர் தங்களோடு சொன்ன ஆசை வார்த்தைகளோடு, சீகேமும் ஏமோரும், இன்னும் கொஞ்சம் கூடுதலான வார்த்தைகளை சேர்த்து, ஏமோரின் பட்டணத்தாருக்கு, அதிகமான ஆசை வார்த்தைகளை சொல்லுகிறார்கள். திருமண விவாகம் பரிசுத்தமானது. தொழில் பெருகவேண்டும் என்றோ அல்லது வியாபாரம் விருத்தியடையவேண்டும் என்றோ அல்லது ஐசுவரியம் அதிகரிக்கவேண்டும் என்றோ திருமணம் பண்ணுவது சரியானதல்ல.

உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும், திருமணம் பண்ணிக்கொள்வதற்காகவும் விருத்தசேதனம்பண்ணிக்கொள்வதும் சரியானதல்ல. கர்த்தர் இந்தக் காரணங்களுக்காக விருத்தசேதன பிரமாணத்தைக் கொடுக்கவில்லை.

இக்காலத்தில் சிலர் தெய்வபக்தியை ஆதாயமான தொழிலாக நினைக்கிறார்கள். இவர்களிடத்தில் தெய்வபக்தியைவிட, மாம்ச பக்தியும், உலகபக்தியுமே அதிகமாயிருக்கிறது. இவர்கள் உலகப்பிரகாரமான நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காக, தெய்வபக்தியுள்ளவர்கள்போல மாய்மாலம்பண்ணுகிறார்கள்.

சிமியோனும் லேவியும்
ஆதி 34:25-29

ஆதி 34:25. மூன்றாம் நாளில் அவர்களுக்கு நோவெடுத்துக்கொண்டபோது, யாக்கோபின் குமாரரும் தீனாளின் சகோதரருமான சிமியோன் லேவி என்னும் இவ்விரண்டுபேரும் தன்தன் பட்டயத்தை எடுத்துக்கொண்டு, துணிகரமாய்ப் பட்டணத்தின் மேல் பாய்ந்து, ஆண்மக்கள் யாவரையும் கொன்றுபோட்டார்கள்.

ஆதி 34:26. ஏமோரையும் அவன் குமாரன் சீகேமையும் பட்டயக்கருக்காலே கொன்று, சீகேமின் வீட்டிலிருந்த தீனாளை அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

ஆதி 34:27. மேலும், யாக்கோபின் குமாரர் வெட்டுண்டவர்களிடத்தில் வந்து, தங்கள் சகோதரியை அவர்கள் தீட்டுப்படுத்தினதற்காகப் பட்டணத்தைக் கொள்ளையிட்டு,

ஆதி 34:28. அவர்களுடைய ஆடுமாடுகளையும் கழுதைகளையும், பட்டணத்திலும் வயல்வெளியிலும் இருந்தவைகள் யாவையும்,

ஆதி 34:29. அவர்களுடைய எல்லாத் தட்டுமுட்டுகளையும் எடுத்துக்கொண்டு, அவர்களுடைய எல்லாக் குழந்தைகளையும் ஸ்திரீகளையும் சிறைபிடித்து, வீட்டிலிருந்த எல்லாவற்றையும் கொள்ளையிட்டார்கள்.

ஏமோரின் பட்டணத்து வாசலில் புறப்பட்டு வரும் ஆண்மக்கள் யாவரும் விருத்தசேதனம்பண்ணப்படுகிறார்கள். மூன்றாம் நாளிலே அவர்களுக்கு நோவு உண்டாகிறது. விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்களில் ஏமோரும், அவன் குமாரன் சீகேமும் அடங்குவார்கள்.

யாக்கோபின் குமாரர் சீகேமோடும் ஏமோரோடும் ஏற்கெனவே வஞ்சகமான வார்த்தைகளை மறுமொழியாக சொன்னார்கள். ஏமோரின் பட்டணத்தார் விருத்தசேதனம்பண்ணிக்கொண்டு கர்த்தரை ஆராதிக்கவேண்டும் என்பது யாக்கோபின் புத்திரருடைய நோக்கமல்ல. அவர்கள் எல்லோரும் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டால், அவர்களுக்கு நோவு உண்டாகும் என்றும், அந்த சமயத்திலே அவர்களை பட்டயத்தினால் சங்காரம்பண்ணலாம் என்றும் யாக்கோபின் புத்திரர் திட்டமிட்டார்கள்.

யாக்கோபின் புத்திரரில், சிமியோன், லேவி ஆகிய இரண்டு பேரும் இந்த வஞ்சகமான திட்டத்தை நிறைவேற்ற முன்வருகிறார்கள். இவர்கள் இருவரும் வாலிபர்கள். இவர்களுக்கு இப்போது இருபது வயதாகயிருக்கலாம். தங்கள் வஞ்சக திட்டத்தை இவர்கள் இருவரும், தங்கள் தகப்பனாகிய யாக்கோபுக்கு சொல்லவில்லை.

ஏமோரின் பட்டணத்தாருக்கு, மூன்றாம் நாளிலே நோவு எடுத்துக்கொள்கிறது. அப்போது, யாக்கோபின் குமாரரும் தீனாளின் சகோதரருமான சிமியோன் லேவி என்னும் இவ்விரண்டுபேரும் தன்தன் பட்டயத்தை எடுத்துக்கொண்டு, துணிகரமாய்ப் பட்டணத்தின் மேல் பாய்ந்து, ஆண்மக்கள் யாவரையும் கொன்றுபோடுகிறார்கள் (ஆதி 34:25).

எத்தனை பேர் மடிந்தார்கள் என்று தெரியவில்லை. சிமியோனும், லேவியும் இந்தத் தாக்குதலைத் தலைமையேற்று நடத்தினார்கள். அவர்களுடைய ஊழியக்காரர்களும், மற்றவர்களும் சிமியோனுக்கும், லேவிக்கும் உதவி புரிந்தார்கள். விருத்தசேதனம் பண்ணிய மூன்றாம் நாளில் விருத்தசேதனம் செய்து கொண்டவர்களுக்குச் சரீரத்தில் நோவெடுத்துக் கொள்ளும். வேதனை அதிகமாக இருக்கும். அந்த மூன்றாம் நாளில் அவர்களால் எழுந்து நின்று யுத்தம் பண்ண முடியாது. அவர்களால் தங்களைக் காத்துக் கொள்ளவும் முடியாது.

அப்படிப்பட்ட நாளில் சிமியோனும், லேவியும் இவர்கள்மீது யுத்தம் பண்ணுகிறார்கள். அங்குள்ள ஆண்மக்கள் யாவரையும் கொன்றுபோடுகிறார்கள். தன்னுடைய சகோதரர்கள் தன்னை மீட்கும் வரையிலும் தீனாள் அங்கு வீட்டுக்காவலில் இருந்திருக்கிறாள். (ஆதி 34:5,17,26).

அவர்கள் ஏமோரையும் அவன் குமாரன் சீகேமையும் பட்டயக்கருக்காலே கொன்று, சீகேமின் வீட்டிலிருந்த தீனாளை அழைத்துக்கொண்டு போய்விடுகிறார்கள் (ஆதி 34:26). யாக்கோபின் புத்திரர் மூன்று நாட்களுக்கு முன்பு, ஏமோரோடும், சீகேமோடும் சமாதான வார்த்தைகளைப் பேசினார்கள். நட்பின் உடன்படிக்கையைப்பற்றிச் சொன்னார்கள். சீகேமுக்கு தங்கள் சகோதரி தீனாளை திருமணம் செய்து வைப்பதாக வாக்குப்பண்ணினார்கள்.

அவர்களுடைய வார்த்தையை நம்பி, சீகேமும், ஏமோரும், ஏமோரின் பட்டணத்திலுள்ள ஆண்மக்களும் விருத்தசேதனம்பண்ணியிருக்கிறார்கள். கானானியர் உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ உடன்படிக்கையை மீறி, கானானியருக்கு துரோகம்பண்ணுகிறார்கள். அவர்களை பட்டயத்தினால் வெட்டி சங்காரம்பண்ணுகிறார்கள்.

கர்த்தரே நமக்கு பாதுகாப்பாயிருக்கிறவர். கர்த்தருடைய வார்த்தையும், அவருடைய உபதேசமும் நமக்கு ஆறுதலையும் சமாதானத்தையும் கொடுக்கும். அதே வேளையில் கர்த்தருடைய வார்த்தைகளை மாய்மாலமாய் உபதேசம்பண்ணுகிறவர்கள் மூலமாக நமக்கு ஆபத்தும், தீங்கும் வரும்.

யாக்கோபின் குமாரரான சிமியோனும் லேவியும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்கள் அநீதியான காரியங்களை செய்கிறார்கள். சீகேம் தீனாளை தீட்டுப்படுத்தி, இஸ்ரவேலிலே மதிகெட்ட காரியத்தை செய்தது மெய்தான். இந்தப் பாவத்தில் தீனாளுக்கும் பங்கு இருக்கிறது. தீனாளும் சீகேமோடு சேர்ந்து தன்னை தீட்டுப்படுத்தியிருக்கிறாள். ஆனால் யாக்கோபின் புத்திரரோ, சீகேமின்மீது மாத்திரமே குற்றம் சொல்லுகிறார்கள். அவன்மீது மாத்திரமே கோபமாயிருக்கிறார்கள். அவர்கள் சீகேமோடுகூட பாவத்திற்கு பங்காளியாயிருந்த தீனாள்மீது அன்பாயிருக்கிறார்கள்.

சீகேம் தீனாளைத் தீட்டுப்படுத்தி பாவம் செய்திருக்கிறான். ஆனாலும் அவன் தன்னுடைய பாவத்திற்கு பிரயாச்சித்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறான். சீகேம் யாக்கோபையும், அவருடைய குமாரரையும் நோக்கி, "உங்கள் கண்களில் எனக்கு தயவு கிடைக்கவேண்டும், அந்தப் பெண்ணை மாத்திரம் எனக்கு மனைவியாகக் கொடுக்கவேண்டும்" (ஆதி 34:11,12) என்று கேட்டான். சீகேம் தீனாளுக்காக எதையும் செய்ய ஆயத்தமாயிருந்தான். சீகேமின் வார்த்தையில் உண்மையும் கண்ணியமும் இருக்கிறது. ஆனால் யாக்கோபின் புத்திரரோ மாய்மாலக்காரராயும், வஞ்சனைக்காரராயும் இருக்கிறார்கள்.

சீகேம் தீனாளைத் தீட்டுப்படுத்தி பாவம் செய்திருக்கிறான். சீகேமின் பாவத்தில், அவனுடைய தகப்பனாராகிய ஏமோருக்கோ, ஏமோரின் பட்டணத்தாருக்கோ பங்கு இல்லை. அவர்கள் எல்லோரும் நிரபராதிகள். ஆனால் சிமியோனும் லேவியும் சீகேமை பட்டயக்கருக்காலே கொன்றதுபோல, அவனுடைய தகப்பனாகிய ஏமோரையும் கொன்றுபோடுகிறார்கள். சிமியோனும் லேவியும், இவர்கள் இருவரையும் கொன்றது மாத்திரமல்ல, அவர்கள் இரண்டுபேரும் தன் தன் பட்டயத்தை எடுத்துக்கொண்டு, துணிகரமாய் ஏமோரின் பட்டணத்தின்மேல் பாய்ந்து, அங்கே உள்ள ஆண்மக்கள் யாவரையும் கொன்றுபோடுகிறார்கள். ஏமோரின் பட்டணத்தாருக்கு சீகேமின் பாவத்தில் பங்கில்லை. ஆனாலும் அவர்கள் எல்லோரும் கொல்லப்படுகிறார்கள்.

சிமியோனும் லேவியும், ஏமோரின் பட்டணத்திலுள்ள ஆண்களைக் கொன்றுபோட்டதுமாத்திரமல்ல அவர்கள் அந்தப் பட்டணத்தையும் கொள்ளையிடுகிறார்கள். யாக்கோபின் குமாரர் வெட்டுண்டவர்களிடத்தில் வந்து, தங்கள் சகோதரியை அவர்கள் தீட்டுப்படுத்தினதற்காகப் பட்டணத்தைக் கொள்ளையிடுகிறார்கள் (ஆதி 34:27).

சிமியோனும் லேவியும் ஏமோரின் பட்டணத்தாருடைய ஆடுமாடுகளையும் கழுதைகளையும், பட்டணத்திலும் வயல்வெளியிலும் இருந்தவைகள் யாவையும், அவர்களுடைய எல்லாத் தட்டுமுட்டுகளையும் எடுத்துக்கொண்டு, போய்விடுகிறார்கள். மேலும் அவர்கள் இருவரும், ஏமோரின் பட்டணத்தாருடைய எல்லாக் குழந்தைகளையும் ஸ்திரீகளையும் சிறைபிடித்து, வீட்டிலிருந்த எல்லாவற்றையும் கொள்ளையிடுகிறார்கள் (ஆதி 34:28,29).

விருத்தசேதனம்பண்ணிக்கொண்டால், யாக்கோபின் குடும்பத்தாருடைய ஆடுமாடுகள், ஆஸ்திகள் மிருகஜீவன்கள் எல்லாம் தங்களை சேரும் என்று ஏமோரின் பட்டணத்தார் எதிர்பார்த்தார்கள் (ஆதி 34:23). அவர்கள் அந்த சொத்துக்கு ஆசைப்பட்டு விருத்தசேதனம் பண்ணிக்கொண்டார்கள். ஆனால் அவர்களுக்கு சம்பவித்ததோ வேறு விதமாயிருக்கிறது.

யாக்கோபின் குடும்பத்தாருடைய சம்பத்து ஏமோரின் பட்டணத்தாரை சேரவில்லை. அதற்கு பதிலாக சிமியோனும் லேவியும் ஏமோரின் பட்டணத்தை கொள்ளையிட்டு எல்லாவற்றையும் எடுத்துக்கொள்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளையும் ஸ்திரீகளையும் சிறைப்பிடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். யாக்கோபின் குடும்பத்தார் இப்போது ஏமோரின் பட்டணத்தாருடைய சம்பத்துக்களுக்கு எஜமான்களாயிருக்கிறார்கள்.

பரிசுத்த வேதாகமத்தில் முற்பிதாக்களின் ஐசுவரியத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது அதன் விவரம் வருமாறு:

தேவன் தம்முடைய ஜனங்களை வறுமை, பலவீனம், வியாதி ஆகியவற்றிலிருந்து எப்போதுமே விலக்கி பாதுகாக்கிறார். தேவன் தம்முடைய நன்மையின் ஐசுவரியங்களினால் தம்முடைய பிள்ளைகளை நிரப்புகிறார். முற்பிதாக்கள் எல்லோருமே ஐசுவரியவான்களாகவும், ஆரோக்கியமானவர்களாகவும், ஞானவான்களாகவும் இருந்திருக்கிறார்கள்.

உலகிலுள்ள ஐசுவரியவான்களில் பெரிய ஐசுவரியவானாக ஆதாமைக் கூறலாம். இந்தப் பூமியிலுள்ள எல்லாமே அவருக்கு உரியதாக இருந்தது. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றை ஆளுகை செய்வதற்காக அவர் சிருஷ்டிக்கப்பட்டார். (ஆதி 1:26-31; சங் 8)

ஆபிரகாமும் ஐசுவரியவானாக இருந்தார். அவருக்கு திரளான ஆடுமாடுகளும், மந்தைகளும், வெள்ளியும், பொன்னும், நூற்றுக்கணக்கான வேலைக்காரர்களும் இருந்தார்கள். (ஆதி 13:2; ஆதி 14:14). ஆபிரகாமிடம் 318 கைபடிந்த வேலையாட்கள் இருந்தார்கள். அவர்களையும், அவர்களுடைய மனைவிமார்களையும், பிள்ளைகளையும் பராமரிப்பதற்கு அதிகமாகச் செலவாகும். ஆபிரகாம் நம்முடைய முற்பிதா. தேவன் ஆபிரகாமை ஐசுவரியவானாக்கியிருக்கிறார்.

நம்மிடத்தில் ஐசுவரியம் இருந்தால் அது தேவன் விரும்பாத காரியமென்று எண்ணக்கூடாது. நாம் கிறிஸ்துவிற்குள் இருக்கும் பொழுது, நம்முடைய சரீரம், ஆவி, ஆத்துமா ஆகிய அனைத்துமே பரிபூரண ஜீவனைப் பெற்றிருக்கும். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 10:10; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26) தம்முடைய பிள்ளைகளின் ஆத்துமா வாழ்வது போல தேவன் அவர்களை செழிக்க வைக்க விரும்புகிறார் (3யோவான் 1:2; சங் 1:3; சங் 23:1; சங் 34:9-10; சங் 84:11).

ஈசாக்கு ஆபிரகாமிடமிருந்து அவருடைய சம்பத்தைச் சுதந்தரித்துக் கொண்டார். ஆபிரகாமின் மற்ற குமாரர்களுக்கு ஓரளவு பகிர்ந்து கொடுக்கப்பட்டதுபோக மீதமுள்ள அனைத்தும் ஈசாக்கிற்கு வந்து சேர்ந்தது. (ஆதி 25:5-6) ஒவ்வொரு நாளும் ஈசாக்கின் ஐசுவரியம் விருத்தியானது. பெலிஸ்தரின் ராஜாவைவிட ஈசாக்கு ஐசுவரியவானாகவும், பெலமுள்ளவனாகவும் இருந்தார். (ஆதி 26:14-16). அவர் திரளான மந்தைகளையும், ஆடுமாடுகளையும், வேலைக்காரரையும் பெற்றிருந்து பெரிய ஐசுவரியவானாக இருந்தார். (ஆதி 26:12-14).

யாக்கோபு ஆபிரகாம், ஈசாக்கு ஆகியோரின் ஐசுவரியங்களையும், வேலைக்காரரையும் சுதந்தரமாகப் பெற்றுக் கொண்டார். ஈசாக்கின் ஐசுவரியத்தில் ஒருபகுதி ஏசாவிற்குக் கொடுக்கப்பட்டது. மற்றது யாக்கோபிற்கே கிடைத்தது. ஆரானில் யாக்கோபு மிகுந்த ஐசுவரியவானார். நட்பின் அடையாளமாக யாக்கோபு ஏசாவிற்கு பெரிய வெகுமதியைக் கொடுக்கிறார். இது ஒன்றுமில்லையென்றும், தன்னிடத்தில் திரளான சம்பத்து உள்ளதென்றும் யாக்கோபு தன்னுடைய திரளான சம்பத்தைப்பற்றிச் சொல்லுகிறார் (ஆதி 33:11)

யாக்கோபின் கலக்கம் ஆதி 34:30,31

ஆதி 34:30. அப்பொழுது யாக்கோபு சிமியோனையும் லேவியையும் பார்த்து: இந்தத் தேசத்தில் குடியிருக்கிற கானானியரிடத்திலும் பெரிசியரிடத்திலும் என் வாசனையை நீங்கள் கெடுத்ததினாலே என்னைக் கலங்கப்பண்ணினீர்கள்; நான் கொஞ்ச ஜனமுள்ளவன்; அவர்கள் எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடி, நானும் என் குடும்பமும் அழியும்படி, என்னை வெட்டிப்போடுவார்களே என்றான்.

ஆதி 34:31. அதற்கு அவர்கள்: எங்கள் சகோதரியை அவர்கள் ஒரு வேசியைப்போல நடத்தலாமோ என்றார்கள்.

சிமியோனும் லேவியும் ஏமோரின் பட்டணத்தின்மேல் பாய்ந்து, ஆண்மக்கள் யாவரையும் கொன்றுபோட்டார்கள். கானான் தேசத்திலுள்ள மற்ற பட்டணங்களிலும் ஏமோரியர் இருக்கிறார்கள். சிமியோனும் லேவியும் ஏமோரின் பட்டணத்திலுள்ளவர்களை கொன்றுபோட்ட செய்தியை மற்ற பட்டணங்களில் உள்ள கானானியர் கேள்விப்பட்டு, அவர்கள் யாக்கோபின் குடும்பத்தாருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருவார்கள். யாக்கோபு கானானியரை நினைத்து கலங்குகிறார்.

யாக்கோபு சிமியோனையும் லேவியையும் பார்த்து: "இந்தத் தேசத்தில் குடியிருக்கிற கானானியரிடத்திலும் பெரிசியரிடத்திலும் என் வாசனையை நீங்கள் கெடுத்ததினாலே என்னைக் கலங்கப்பண்ணினீர்கள்; நான் கொஞ்ச ஜனமுள்ளவன்; அவர்கள் எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடி, நானும் என் குடும்பமும் அழியும்படி என்னை வெட்டிப்போடுவார்களே" (ஆதி 34:30) என்று சொல்லுகிறார்.

ஆபிரகாமைப் போல (ஆதி 12:10-20; ஆதி 20:1-17), ஈசாக்கைப் போல (ஆதி 26:6-35), யாக்கோபும் சோதனை வரும்போது தேவனிடத்தில் வைக்க வேண்டிய விசுவாசத்தை சிறிது நேரம் காண்பிக்காமல் போய்விடுகிறார். தேவனுடைய வாக்குத்தத்தம் யாக்கோபுக்கு இருப்பதினால் யாக்கோபை யாரும் வெட்டிப்போட முடியாது. (ஆதி 12:1-3; ஆதி 15:1-21; ஆதி 26:1-25; ஆதி 28:3-19; ஆதி 31:11-13). தேவன் தம்முடைய வாக்குத்தத்த வசனத்தைக் காத்துக் கொள்வார். (ஆதி 35:5).

கானானியரும் பெர்சியரும் புறஜாதியார். யாக்கோபின் குடும்பத்தாரோ கர்த்தரை ஆராதிக்கிறவர்கள். சிமியோனும் லேவியும் ஏமோரின் பட்டணத்திலுள்ள ஆண்மக்கள் யாவரையும் கொன்றுபோட்டு, அவர்களுக்கு விரோதமாய்த் தீங்கு செய்திருக்கிறார்கள். இதனால் யாக்கோபின் பெயரும், யாக்கோபு ஆராதிக்கிற கர்த்தருடைய பெயரும் கானானியர் மத்தியிலே தூஷிக்கப்படுகிறது.

கானானியர் ஜனம் பெருத்தவர்கள். யாக்கோபோ கொஞ்ச ஜனமுள்ளவர். கானானியர் தனக்கு விரோதமாக கூட்டங்கூடி, தன்னுடைய குடும்பத்தையும் வெட்டிக்கொன்றுபோடுவார்கள் என்று நினைத்து யாக்கோபு கலங்குகிறார். யாக்கோபால் கானானியருக்கு விரோதமாக எதிர்த்து நிற்க முடியாது. அவர்கள் ஒன்றாய்க் கூட்டங்கூடினால், அவர்கள் மொத்தமாக யாக்கோபுக்கு விரோதமாக வந்து, யாக்கோபையும் அவருடைய குடும்பத்தாரையும் எளிதாக அழித்துப்போடுவார்கள். பாவம் வீட்டிலிருக்கும்போது, அழிவு வாசல்படியில் படுத்திருக்கும்.

சிமியோனும் லேவியும் தன்னுடைய குமாரராகயிருந்தாலும், அவர்கள் பாவம் செய்திருக்கிறார்கள் என்பதை யாக்கோபு அறிந்துகொள்கிறார். பாவத்தின் சம்பளம் மரணம். தன்னுடைய குமாரரில் இரண்டுபேர் செய்த பாவத்திற்காக, தன்னுடைய முழுக்குடும்பமே அழிந்துபோகும் என்று நினைத்து யாக்கோபு மனங்கலங்குகிறார்.

சிமியோனும் லேவியும் தங்கள் பாவத்திற்கு மனந்திரும்பவில்லை. ஏமோரின் பட்டணத்திலுள்ள ஆண்மக்கள் அனைவரையும் தாங்கள் கொன்றுபோட்டதை சிமியோனும் லேவியும் நியாயப்படுத்துகிறார்கள். "எங்கள் சகோதரியை அவர்கள் ஒரு வேசியைப்போல நடத்தலாமோ" என்று சிமியோனும் லேவியும் யாக்கோபிடத்தில் கேட்கிறார்கள் (ஆதி 34:31).

35 அதிகாரம்

தேவனுக்கும் யாக்கோபுக்கும் இடையே நடைபெறும் மூன்று சம்பாஷணைகளைப்பற்றியும், மூன்றுபேருடைய அடக்க ஆராதனைகளைப் பற்றியும் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

தேவன் யாக்கோபை பெத்தேலுக்கு போகுமாறு சொல்லுகிறார் (ஆதி 35:1-5). யாக்கோபு பெத்தேலிலே தேவனுக்கு ஒரு பலிபீடம் கட்டுகிறார் (ஆதி 35:6,7). தேவன் யாக்கோபுக்கு மறுபடியும் தரிசனமாகி, யாக்கோபின் புதிய பெயரையும், தாம் யாக்கோபோடு செய்து கொண்ட உடன்படிக்கையையும் உறுதிபண்ணுகிறார் (ஆதி 35:9-13).

தேவன் தன்னோடு பேசின ஸ்தலத்திலே யாக்கோபு ஒரு கற்றூணை நிறுத்தி அந்த ஸ்தலத்திற்கு பெத்தேல் என்று பேரிடுகிறார் (ஆதி 35:14,15).

ரெபெக்காளின் தாதியாகிய தெபொராளின் மரணம் (ஆதி 35:8). ராகேலின் மரணம் (ஆதி 35:16-20). ஈசாக்கின் மரணம் (ஆதி 35:27-29).

ரூபன் தன் தகப்பனுடைய மறுமனையாட்டியாகிய பில்காளோடே சயனிக்கிறான் (ஆதி 35:22). யாக்கோபின் பன்னிரண்டு குமாரருடைய பெயர்கள் (ஆதி 35:23-26).

யாக்கோபின் பிரயாணம்
ஆதி 35:1-5

ஆதி 35:1. தேவன் யாக்கோபை நோக்கி: நீ எழுந்து பெத்தேலுக்குப் போய், அங்கே குடியிருந்து, நீ உன் சகோதரனாகிய ஏசாவின் முகத்திற்கு விலகி ஓடிப்போகிறபோது, உனக்குத் தரிசனமான தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்கு என்றார்.

ஆதி 35:2. அப்பொழுது யாக்கோபு தன் வீட்டாரையும் தன்னோடேகூட இருந்த மற்ற அனைவரையும் நோக்கி: உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப்போட்டு, உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு, உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள்.

ஆதி 35:3. நாம் எழுந்து பெத்தேலுக்குப்போவோம் வாருங்கள்; எனக்கு ஆபத்து நேரிட்ட நாளில் என் விண்ணப்பத்துக்கு உத்தரவு அருளிச்செய்து, நான் நடந்த வழியிலே என்னோடேகூட இருந்த தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்குவேன் என்றான்.

ஆதி 35:4. அப்பொழுது அவர்கள் தங்கள் கையில் இருந்த எல்லா அந்நிய தெய்வங்களையும், தங்கள் காதணிகளையும் யாக்கோபினிடத்தில் கொடுத்தார்கள்; யாக்கோபு அவைகளைச் சீகேம் ஊர் அருகே இருந்த ஒரு கர்வாலி மரத்தின்கீழே புதைத்துப்போட்டான்.

ஆதி 35:5. பின்பு பிரயாணம் புறப்பட்டார்கள்; அவர்களைச் சுற்றிலும் இருந்த பட்டணத்தாருக்குத் தேவனாலே பயங்கரம் உண்டானதினால், அவர்கள் யாக்கோபின் குமாரரைப் பின்தொடராதிருந்தார்கள்.

யாக்கோபு பெத்தேலிலே தேவனுக்கு ஒரு பொருத்தனைபண்ணினார். அந்தப் பொருத்தனையை நிறைவேற்றுமாறு, தேவன் யாக்கோபுக்கு நினைவுபடுத்துகிறார்.

யாக்கோபு மிகுந்த வேதனையிலும், துக்கத்திலும் இருந்தபோது, அவர் தேவனுக்கு ஒரு பொருத்தனைபண்ணினார். "நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத்தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனை பண்ணிக்கொண்டான்" (ஆதி 28:22). யாக்கோபு இந்தப் பொருத்தனையை நிறைவேற்ற வேண்டுமென்று, தேவன் அவருக்கு ஞாபகப்படுத்துகிறார்.

தேவன் யாக்கோபை நோக்கி, "நீ எழுந்து பெத்தேலுக்குப் போய், அங்கே குடியிருந்து, நீ உன் சகோதரனாகிய ஏசாவின் முகத்திற்கு விலகி ஓடிப்போகிறபோது, உனக்குத் தரிசனமான தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்கு" (ஆதி 35:1) என்று சொல்லுகிறார்.

யாக்கோபு கானான் தேசத்திற்கு வந்து ஏழு அல்லது எட்டு வருஷங்களாயிற்று. அவர் கானான் தேசத்திலே ஒரு நிலத்தை கிரயத்திற்கு வாங்கினார். கர்த்தர் தனக்கு கடைசியாக தரிசனம் கொடுத்த இடத்திலே, யாக்கோபு தேவனுக்கு ஒரு பலிபீடம் கட்டினார். தேவன் இந்த ஸ்தலத்திலே யாக்கோபை, இஸ்ரவேல் என்று அழைத்தார்.

"தான் கூடாரம்போட்ட வெளியின் நிலத்தைச் சீகேமின் தகப்பனாகிய ஏமோரின் புத்திரர் கையிலே நூறு வெள்ளிக்காசுக்குக் கொண்டு, அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு ஏல்எல்லோகே இஸ்ரவேல் என்று பேரிட்டான்" (ஆதி 33:19,20).

யாக்கோபு தேவனுக்கு கானான் தேசத்திலே பலிபீடத்தைக் கட்டினாலும், அவர் பெத்தேலிலே தேவனுக்கு பலிபீடம் கட்ட மறந்துவிட்டார். தேவன் யாக்கோபை நேசிக்கிறார். ஆகையினால் யாக்கோபு தன்னுடைய கடமையை மறந்துவிட்டாலும், கர்த்தர் அவருக்கு அதை ஞாபகப்படுத்துகிறார்.

கர்த்தர் நம்மை நேசிக்கும்போது, அவர் நம்முடைய கடமைகளை நமக்கு ஞாபகப்படுத்துவார். ஒருவேளை நம்முடைய மனச்சாட்சியின் மூலமாகவோ அல்லது தெய்வீக பராமரிப்புக்களின் மூலமாகவோ அல்லது ஒரு சில சம்பவங்கள் மூலமாகவோ, நாம் மறந்துபோனதை, கர்த்தர் நமக்கு நினைவுபடுத்துவார்.

நாம் தேவனுக்கு பொருத்தனைபண்ணும்போது, அதை கவனமாய் நிறைவேற்ற வேண்டும். நாம் பொருத்தனையில் ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்கவேண்டும். பொருத்தனைபண்ணிவிட்டு அதை நிறைவேற்றாமலிருப்பதைவிட, பொருத்தனை பண்ணாமலிருப்பது நமக்கு நலமாயிருக்கும்

"நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால், அதைச் செலுத்தத் தாமதியாதே; அவர் மூடரில் பிரியப்படுகிறதில்லை; நீ நேர்ந்துகொண்டதைச் செய். நீ நேர்ந்துகொண்டதைச் செய்யாமற்போவதைப் பார்க்கிலும், நேர்ந்துகொள்ளாதிருப்பதே நலம்" (பிர 5:4,5).

யாக்கோபு பெத்தேலிலே தேவனுக்கு பலிபீடம் கட்டவேண்டுமென்று பொருத்தனைபண்ணினார். பெத்தேல் என்னும் பெயருக்கு தேவனுடைய வீடு என்று பொருள். தேவன் வாசம்பண்ணுகிற அவருடைய பரிசுத்த ஸ்தலத்திலே, நாமும் வாசம்பண்ண பிரியப்படவேண்டும்.

"கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்" (சங் 27:4).

பெத்தேல் கர்த்தருடைய வீடு. அவர் அங்கே தங்கியிருக்கிறார். சங்கீதக்காரரைப்போல, நாமும் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதை நாடவேண்டும். கர்த்தருடைய ஆலயம் நாம் வந்துபோகிற ஸ்தலமாகயிருக்கக்கூடாது. அது நாம் எப்போதும் தங்கியிருக்கிற ஸ்தலமாயிருக்கவேண்டும்.

பெத்தேலிலே பலிபீடத்தை உண்டாக்கவேண்டுமென்று தேவன் யாக்கோபுக்கு ஞாபகப்படுத்துகிறார். யாக்கோபு தன்னுடைய பொருத்தனையை மறந்துவிடுவார் என்று நினைத்து, தேவன் அவருக்கு அதை மிகவும் தெளிவாக ஞாபகப்படுத்துகிறார். தேவன் யாக்கோபுக்கு சொல்லும்போது, "நீ உன் சகோதரனாகிய ஏசாவின் முகத்திற்கு விலகி ஓடிப்போகிறபோது, உனக்குத் தரிசனமான தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்கு" என்று சொல்லி, அந்த சம்பவத்தையும் அவருக்கு ஞாபகப்படுத்துகிறார்.

யாக்கோபு கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார். அவர் தன் வீட்டாரையும் தன்னோடே கூடயிருக்கிற மற்ற அனைவரையும் நோக்கி, "நாம் எழுந்து பெத்தேலுக்குப்போவோம் வாருங்கள்" (ஆதி 35:3) என்று சொல்லுகிறார். யாக்கோபின் வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் பிரயாணத்திற்கு தங்களை ஆயத்தம்பண்ணவேண்டும். இது உலகப்பிரகாரமான பிரயாணமல்ல. யாக்கோபின் பிரயாணம் ஆவிக்குரிய ஊழியப்பிரயாணம்.

யாக்கோபு கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, பெத்தேலிலே ஒரு பலிபீடத்தைக் கட்டி, தன்னுடைய பொருத்தனையை நிறைவேற்றப்போகிறார். யாக்கோபின் வீட்டாருக்கு, அவர் கர்த்தருக்கு பண்ணின பொருத்தனை தெரியுமா அல்லது தெரியாதா என்பது இங்கு சொல்லப்படவில்லை.

யாக்கோபு தன்னுடைய வீட்டாரை நோக்கி, நாம் எழுந்து பெத்தேலுக்குப் போவோம் வாருங்கள், என்று சொல்லும்போது, அங்கே போவதற்கான காரணத்தையும் சொல்லுகிறார். யாக்கோபு தன் வீட்டாரை நோக்கி, "எனக்கு ஆபத்து நேரிட்ட நாளில் என் விண்ணப்பத்துக்கு உத்தரவு அருளிச்செய்து, நான் நடந்த வழியிலே என்னோடேகூட இருந்த தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்குவேன்" (ஆதி 35:3) என்று சொல்லுகிறார்.

யாக்கோபும் அவருடைய வீட்டாரும் கர்த்தருடைய ஊழியத்தை செய்யப்போகிறார்கள். அவர்கள் பெத்தேலிலே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, அங்கே அவரை ஆராதிக்கப்போகிறார்கள். பரிசுத்தமில்லாமல் கர்த்தரை ஆராதிப்பது இயலாத காரியம். தானும் தன்னுடைய வீட்டாரும் பெத்தேலுக்குப்போகும்போது, பரிசுத்தமாய்ப்போகவேண்டும் என்று யாக்கோபு தீர்மானம்பண்ணுகிறார்.

யாக்கோபு தன் வீட்டாரையும் தன்னோடேகூட இருந்த மற்ற அனைவரையும் நோக்கி, "உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப்போட்டு, உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு, உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள்" (ஆதி 35:2) என்று சொல்லுகிறார்.

யாக்கோபு ஆபிரகாமைப்போலவே, தன்னுடைய வீட்டாருக்கு கட்டளை கொடுக்கிறார். "கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்" (ஆதி 18:19).

யாக்கோபின் வீட்டார் தங்களிடத்திலிருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப்போடவேண்டும். அந்நிய தெய்வங்கள் கர்த்தருக்கு பிரியமில்லாதவை. அவை கர்த்தருடைய பிரமாணத்திற்கு புறம்பானவை. யாக்கோபின் வீட்டிலே அந்நிய தெய்வங்கள் இருப்பது ஆச்சரியமான காரியம். யாக்கோபுக்கும் அவருடைய வீட்டாருக்கும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றி நன்றாய்த் தெரியும். ஆனாலும் அவர்களுடைய வீட்டிலே அந்நிய தெய்வங்கள் இருக்கிறது.

யாக்கோபின் வீட்டாரைப்போல, இக்காலத்திலும் ஒரு சில விசுவாசிகளின் வீட்டார் தங்களிடத்தில் அந்நிய தெய்வங்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரையும் ஆராதிக்கிறார்கள். அந்நிய தெய்வங்களுக்கும் தூபங்காட்டுகிறார்கள். அவர்களுக்கு ஆவிக்குரிய காரியங்களிலே தெளிந்த சிந்தனையில்லை. அவர்களிடத்தில் ஆவிக்குரிய குழப்பம் காணப்படுகிறது. இவர்கள் தங்களிடத்திலுள்ள அந்நிய தெய்வங்களை விலக்கிப்போட்டு, தங்களை சுத்தம்பண்ணிக்கொள்ளவேண்டும்.

யாக்கோபின் வீட்டார் தங்கள் வஸ்திரங்களையும் மாற்றிக்கொள்ளவேண்டும். சிமியோன், லேவி ஆகியோரின் கரங்களில் இரத்தக்கறை பிடித்திருக்கிறது. இவர்கள் இருவரும் குற்றமில்லாத இரத்தத்தை ஏராளமாய் சிந்தியிருக்கிறார்கள். இவர்கள் தங்களைக் கழுவி சுத்தம்பண்ணிக்கொள்ளவேண்டும். இவர்கள் தங்களுடைய இரத்தக்கறை படிந்த வஸ்திரங்களை மாற்றி, தங்களை சுத்தம்பண்ணிக்கொள்ளவேண்டும்.

வஸ்திரங்களை மாற்றுவது என்பதற்கு இருதயத்தை மாற்றி சுத்திகரிப்பது என்று பொருள். இவர்கள் யூதருடைய மார்க்க சடங்காச்சாரத்தின் பிரகாரம் தங்களை சுத்திகரித்துக்கொள்ளவேண்டும். இருதயத்தை சுத்தம்பண்ணாமல், வஸ்திரங்களை சுத்தம்பண்ணுவதினால் ஒரு பிரயோஜனமுமில்லை. இருதயம் சுத்திகரிக்கப்பட்டு புதுப்பிக்கப்படும்போது, அவர்கள் மெய்யாகவே சுத்திகரிக்கப்பட்டவர்களாயிருப்பார்கள்.

யாக்கோபின் வீட்டாரும், அவரோடேகூட இருக்கிற மற்ற அனைவரும், யாக்கோபோடுகூட பெத்தேலுக்குப் போகவேண்டும். பெத்தேலுக்குப்போகும் முன்பாக அவர்கள் தங்களை சுத்திகரிக்கவேண்டும். யாக்கோபின் வீட்டாரும், அவரோடேகூட இருக்கிற அனைவரும், யாக்கோபின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கிறார்கள்.

அவர்கள் தங்கள் கையில் இருந்த எல்லா அந்நிய தெய்வங்களையும், தங்கள் காதணிகளையும் யாக்கோபிடத்தில் கொடுக்கிறார்கள்; யாக்கோபு அவைகளைச் சீகேம் ஊர் அருகே இருந்த ஒரு கர்வாலி மரத்தின்கீழே புதைத்துப்போடுகிறார் (ஆதி 35:4).

இஸ்ரவேலில் விக்கிரகாராதனை ஒழிக்கப்பட்டிருக்கிறது. (ஆதி 31:19) தேவனுடைய வீடாகிய பெத்தேலுக்குப் போகும்போது சுத்திகரிப்பு மிகவும் அவசியம்.

விக்கிரகாராதனையில் பயன்படுத்தப்படாத காதணிகளை ஸ்திரீகள் அணிந்திருந்தார்கள். (ஆதி 24:22,30,47; யாத் 32:2-3; யாத் 35:22; எண் 31:50; நியா 8:24-26; யோபு 42:11; நீதி 25:12; எசே 16:12; ஓசி 2:13; 1பேதுரு 3:5-6).

காதணிகள் பொன்னால் செய்யப்பட்டவை. வெள்ளி, செம்பு, தந்தம், மரம் ஆகியவற்றில் கற்களைப் பதித்து செய்யப்பட்ட காதணிகளும் அக்காலத்தில் இருந்தன. இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் காதணிகள் விக்கிரகாராதனைக்குரியவை. ஆகையினால் அவற்றைத் தன்னிடத்தில் கொடுத்து விடுமாறு யாக்கோபு கூறுகிறார்.

விக்கிரகாராதனையில் இவை பயன்படுத்தப்பட்டதின் நிமித்தமாக ஏசா 3:20, ஓசி 2:13 ஆகிய வசனங்களில் இவை கடிந்து கூறப்பட்டிருக்கிறது. விக்கிரகாராதனையில் இதை தாயத்துக்களாகக் கட்டினார்கள். இவை அசுத்த ஆவிகளிடமிருந்து தங்களைப் பாதுகாக்கும் என்று நம்பி ஜனங்கள் இதை தங்கள் காதுகளிலும், கழுத்துக்களிலும், கைகளிலும், இடுப்புகளிலும் அணிந்து கொண்டார்கள்.

யாக்கோபு தன்னுடைய வீட்டிலிருக்கிற அந்நிய தெய்வங்களையெல்லாம் கவனமாய்ப் புதைத்துப்போடுகிறார். அவற்றை புதைத்துப்போடவில்லையென்றால், யாக்கோபின் வீட்டார் பெத்தேலிலிருந்து திரும்பி வந்த பின்பு, அந்த அந்நிய தெய்வங்களை மறுபடியும் ஆராதிப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் யாக்கோபு அந்த அந்நிய தெய்வங்களை கவனமாய்ப் புதைத்துப்போடுகிறார்.

யாக்கோபும், அவருடைய வீட்டாரும், அவரோடு கூடயிருக்கிற அனைவரும் பெத்தேலுக்கு பிரயாணம் புறப்படுகிறார்கள். அவர்களுக்கு கானானியர் மூலமாக எந்தவிதமான ஆபத்தும் வரவில்லை. அவர்களைச் சுற்றிலும் இருந்த பட்டணத்தாருக்குத் தேவனாலே பயங்கரம் உண்டானதினால், அவர்கள் யாக்கோபின் குமாரரைப் பின்தொடராதிருக்கிறார்கள் (ஆதி 35:5).

யாக்கோபின் வீட்டாரைச் சுற்றிலும் இருந்த பட்டணத்தாருக்குத் தேவனாலே பயங்கரம் உண்டாயிற்று. அதனால் அவர்கள் யாக்கோபின் குமாரரைப் பின்தொடராதிருக்கிறார்கள். யாக்கோபு பயப்பட வேண்டிய அவசியமில்லை. தேவன் யாக்கோபைப் பாதுகாப்பதாக பல வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார்.

தேவன் தம்முடைய உடன்படிக்கையை ஆபிரகாமோடு நிறைவேற்றியிருக்கிறார். (ஆதி 12:17; ஆதி 20:7,17), அவர் ஈசாக்கோடு நிறைவேற்றியிருக்கிறார். (ஆதி 26:6-31) தேவன் யாக்கோபோடு இதுவரையிலும் நிறைவேற்றி வருகிறார். (ஆதி 27:41-42; ஆதி 31; ஆதி 32:10-32; ஆதி 33:1-17) தேவன் இனிமேலும் தன்னைப் பாதுகாப்பார் என்று யாக்கோபு தாராளமாக நம்பலாம். இஸ்ரவேலைக் குறித்த தேவனுடைய திட்டம் நிச்சயமாகவே நிறைவேறும்.

நாம் கர்த்தருடைய ஊழியத்தை செய்யும்போது கர்த்தர் நம்மைப் பாதுகாத்துக்கொள்வார். நம்முடைய கடமைகளை நாம் சரியாக செய்யும்போது, நமக்கு தெய்வீக பாதுகாப்பு கிடைக்கும். யாக்கோபின் வீட்டிலே பாவம் இருந்தபோது அவர் தன்னைச் சுற்றிலும் இருந்த கானானியரை பார்த்து மிகவும் பயந்தார். தன் வீட்டிலுள்ள அந்நிய தெய்வங்களை அகற்றிப்போட்ட பின்பு, யாக்கோபுக்கு இப்போது கானானியரைக் குறித்த பயமில்லை. அவர்களெல்லோரும் பெத்தேலுக்குப் போகிறார்கள். யாக்கோபு கானான் தேசத்தாரைப் பார்த்து பயப்படவில்லை. கானான் தேசத்தார் யாக்கோபைப் பார்த்து பயப்படுகிறார்கள்.

ஏல் பெத்தேல்
ஆதி 35:6-15

ஆதி 35:6. யாக்கோபும் அவனோடேகூட இருந்த எல்லா ஜனங்களும் கானான் தேசத்திலுள்ள பெத்தேல் என்னும் லூசுக்கு வந்தார்கள்.

ஆதி 35:7. அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, தன் சகோதரனுடைய முகத்துக்குத் தப்பி ஓடினபோது, அங்கே தனக்கு தேவன் தரிசனமானபடியால், அந்த ஸ்தலத்திற்கு ஏல்பெத்தேல் என்று பேரிட்டான்.

ஆதி 35:8. ரெபெக்காளின் தாதியாகிய தெபொராள் மரித்து, பெத்தேலுக்குச் சமீபமாயிருந்த ஒரு கர்வாலி மரத்தின்கீழ் அடக்கம்பண்ணப்பட்டாள்; அதற்கு அல்லோன்பாகூத் என்னும் பேர் உண்டாயிற்று.

ஆதி 35:9. யாக்கோபு பதான் அராமிலிருந்து வந்தபின்பு தேவன் அவனுக்கு மறுபடியும் தரிசனமாகி, அவனை ஆசீர்வதித்து:

ஆதி 35:10. இப்பொழுது உன் பேர் யாக்கோபு, இனி உன் பேர் யாக்கோபு என்னப்படாமல், இஸ்ரவேல் என்று உனக்குப் பேர் வழங்கும் என்று சொல்லி, அவனுக்கு இஸ்ரவேல் என்று பேரிட்டார்.

ஆதி 35:11. பின்னும் தேவன் அவனை நோக்கி: நான் சர்வவல்லமையுள்ள தேவன், நீ பலுகிப் பெருகுவாயாக; ஒரு ஜாதியும் பற்பல ஜாதிகளின் கூட்டங்களும் உன்னிலிருந்து உண்டாகும்; ராஜாக்களும் உன் சந்ததியில் பிறப்பார்கள்.

ஆதி 35:12. நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் கொடுத்த தேசத்தை உனக்குக் கொடுப்பேன்; உனக்குப்பின் உன் சந்ததிக்கும் இந்த தேசத்தைக் கொடுப்பேன் என்று சொல்லி,

ஆதி 35:13. தேவன் அவனோடே பேசின ஸ்தலத்திலிருந்து அவனைவிட்டு எழுந்தருளிப்போனார்.

ஆதி 35:14. அப்பொழுது யாக்கோபு தன்னோடே அவர் பேசின ஸ்தலத்திலே ஒரு கற்றூணை நிறுத்தி, அதின்மேல் பானபலியை ஊற்றி, எண்ணெயையும் வார்த்தான்.

ஆதி 35:15. தேவன் தன்னோடே பேசின அந்த ஸ்தலத்திற்கு யாக்கோபு பெத்தேல் என்று பேரிட்டான்.

யாக்கோபும் அவரோடேகூட இருந்த எல்லா ஜனங்களும் கானான் தேசத்திலுள்ள பெத்தேல் என்னும் லூசுக்கு வருகிறார்கள் (ஆதி 35:6). அவர்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் வரவில்லை. அவர்கள் பெத்தேலுக்கு பாதுகாப்பாய் வந்து சேருகிறார்கள்.

யாக்கோபு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார். யாக்கோபு தன் சகோதரனுடைய முகத்திற்கு தப்பி ஓடினபோது, தேவன் அவருக்கு அங்கே தரிசனமானார். ஆகையினால் யாக்கோபு அந்த ஸ்தலத்திற்கு ஏல் பெத்தேல் என்று பேரிடுகிறார் (ஆதி 35:7).

"ஏல்பெத்தேல்" என்னும் எபிரெய வார்த்தைக்கு "தேவனுடைய வீடாகிய தேவன்" என்று பொருள். தேவன் முதன் முறையாக யாக்கோபுக்குத் தரிசனமான அந்தஇடத்தில் இப்பொழுது ஒரு பலிபீடத்தைக் கட்டி அந்த இடத்திற்கு ஏல்பெத்தேல் என்று பெயரிடுகிறார் (ஆதி 28:13-15).

யாக்கோபு தான் கட்டின பலிபீடத்திலே கர்த்தருக்கு பலிசெலுத்துகிறார். கர்த்தர் தனக்கு ஏற்கெனவே காண்பித்த பழைய இரக்கங்களையும், கிருபைகளையும் யாக்கோபு நன்றியோடு நினைத்துப் பார்க்கிறார்.

ஏல்பெத்தேல் என்னும் பெயருக்கு பெத்தேலின் தேவன் என்று பொருள். பெத்தேல் என்னும் பெயருக்கு தேவனுடைய வீடு என்று பொருள். கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு, அவருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதே ஆறுதலான காரியம். பெத்தேலின் தேவன், நம்முடைய வீட்டின் தேவனாகவும் இருக்கிறார். கர்த்தருடைய வீட்டிலே, அவருடைய பரிசுத்த பிரமாணங்கள் ஆளுகை செய்யும்.

கர்த்தருடைய ஆலயத்தில் அவருடைய வார்த்தைகளும், பிரமாணங்களும் நிரம்பியிருக்கவேண்டும். நாம் கர்த்தருடைய ஆலயத்திற்கு வரும்போது, கர்த்தரை சந்தித்து அவரோடு ஐக்கியமாயிருக்கவேண்டும். நமக்கு கர்த்தருடைய பிரமாணம் தெரிந்திருந்தும், நாம் கர்த்தரோடு ஐக்கியமாயில்லையென்றால், நமக்கு ஒரு பிரயோஜனமுமில்லை.

ரெபெக்காளின் தாதியாகிய தெபொராளைப்பற்றி ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. "அப்படியே அவர்கள் தங்கள் சகோதரியாகிய ரெபெக்காளையும், அவள் தாதியையும், ஆபிரகாமின் ஊழியக்காரனையும், அவன் மனிதரையும் அனுப்புவித்தார்கள்" (ஆதி 24:59).

ரெபெக்காள் இதற்கு முன்பே மரித்துப்போனாள் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இப்போது ரெபெக்காளின் தாதியாகிய தெபொராளும் மரித்துப்போகிறாள். அவளை பெத்தேலுக்குச் சமீபமாயிருந்த ஒரு கர்வாலி மரத்தின்கீழ் அடக்கம்பண்ணுகிறார்கள்; அதற்கு அல்லோன்பாகூத் என்னும் பேர் உண்டாயிற்று (ஆதி 35:8).

"அல்லோன்பாகூத்" என்னும் எபிரெய வார்த்தைக்கு "அழுகையின் கர்வாலி மரம்" என்று பொருள்.

ஆதி 27:46 ஆவது வசனத்தில் யாக்கோபு வீட்டை விட்டு புறப்பட்டதிலிருந்து ரெபெக்காளைப் பற்றி ஒன்றுமே கூறப்பட வில்லை. அவளுடைய மரணம் குறிப்பிடப்படவில்லை. யாக்கோபு கானானுக்கு வந்தபோது, தெபொராள் யாக்கோபோடு சேர்ந்து கொண்டாளா அல்லது யாக்கோபு அவளுடைய அடக்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டாரா என்பது தெரியவில்லை. யாக்கோபும், ஏசாவும் சிறு பிள்ளைகளாக இருந்தபோது தெபொராள் அவர்களுடைய தாதியாக சேவை செய்திருக்கிறாள்.

யாக்கோபின் குடும்பத்தார் தெபொராளை மரியாதையோடு அடக்கம்பண்ணுகிறார்கள். தெபொராள் யாக்கோபின் குடும்பத்தாருக்கு சொந்தக்காரியல்ல. அவள் வயது முதிர்ந்தவள். தெபொராள் யாக்கோபின் குடும்பத்தாருக்கு மிகவும் அன்பானவள். யாக்கோபு இப்போது ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சி பெற்று முன்னேறி வருகிறார். ஆனாலும் அவருடைய குடும்பத்தில், தெபொராளின் மரணத்தைப் போல, சோகசம்பவங்கள் நடைபெறுகிறது.

யாக்கோபு பெத்தேலிலே தேவனுக்கு ஒரு பலிபீடம் கட்டுகிறார். அந்த ஸ்தலத்திற்கு ஏல் பெத்தேல் என்று பேரிடுகிறார். இந்தப் பெயருக்கு பெத்தேலின் தேவன் என்று பொருள். இந்த ஸ்தலத்திலே தேவன் யாக்கோபுக்கு மறுபடியும் தரிசனமாகி, அவரை ஆசீர்வதிக்கிறார் (ஆதி 35:9). தெபொராள் மரித்துப்போனதினால் யாக்கோபு மிகுந்த மனவேதனையிலும் சோகத்திலும் இருக்கிறார். அவருக்கு ஆறுதல் சொல்லும் வண்ணமாக தேவன் இப்போது அவருக்கு மறுபடியும் தரிசனமாகிறார்.

தேவன் யாக்கோபுக்கு ஏழு முறை தரிசனமானார். அவற்றில் இது ஆறாவது தரிசனமாகும் (ஆதி 28:13-15; ஆதி 31:11-13; ஆதி 32:1-2, 24-32; ஆதி 35:1-5,9-13; ஆதி 46:2-4).

தேவன் யாக்கோபோடு ஏற்கெனவே உடன்படிக்கை செய்திருக்கிறார். இப்போது அவர் தம்முடைய உடன்படிக்கையை மறுபடியும் புதுப்பித்து, அதை யாக்கோபுக்கு உறுதிபண்ணுகிறார். தேவன் யாக்கோபுக்கு தம்மைப்பற்றி வெளிப்படுத்தும்போது, தம்மை சர்வவல்லமையுள்ள தேவனாக வெளிப்படுத்துகிறார் (ஆதி 35:11).

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தம்மைப்பற்றிச் சொல்லும்போது, "சர்வவல்லமையுள்ள தேவன்" என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் கோத்திரத்தார்கள் ஒரு ஜாதியும் பற்பல ஜாதிகளின் கூட்டங்களாகவும் இருப்பார்கள். இஸ்ரவேல் ஐக்கிய தேசமாக இருக்கும். சர்வ வல்லமையுள்ள தேவன் என்பதைக் குறிப்பதற்கு இரண்டு எபிரெய வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒன்று "ஏல்" என்பதாகும். மற்றொன்று "ஷாடாய்" என்பதாகும்.

தேவன் யாக்கோபை நோக்கி "ஒரு ஜாதியும் பற்பல ஜாதிகளின் கூட்டங்களும் உன்னிலிருந்து உண்டாகும்" என்று கூறினார். இந்தத் தீர்க்கதரிசனம் யாக்கோபின் சந்ததியின் வழியாக நிறைவேறும். யாக்கோபு எல்லா தேசங்களுக்கும் முற்பிதா அல்ல. பற்பல ஜாதிகளின் கூட்டங்கள் என்பது இஸ்ரவேலின் 13 கோத்திரங்களைக் குறிக்கும் (ஆதி 17:4-6).

சர்வவல்லமையுள்ள தேவன் யாக்கோபுக்கு இரண்டு ஆசீர்வாதங்களை வாக்குப்பண்ணுகிறார். அவையாவன :

1. "நான் சர்வவல்லமையுள்ள தேவன், நீ பலுகிப் பெருகுவாயாக; ஒரு ஜாதியும் பற்பல ஜாதிகளின் கூட்டங்களும் உன்னிலிருந்து உண்டாகும்; ராஜாக்களும் உன் சந்ததியில் பிறப்பார்கள்" (ஆதி 35:11).

2. "நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் கொடுத்த தேசத்தை உனக்குக் கொடுப்பேன்; உனக்குப்பின் உன் சந்ததிக்கும் இந்த தேசத்தைக் கொடுப்பேன்" (ஆதி 35:12).

யாக்கோபு திரளான ஜாதிகளுக்கு தகப்பனாயிருப்பார். அவர் நல்ல தேசத்திற்கு சொந்தக்காரராகவும் இருப்பார். யாக்கோபுக்கு இந்த இரண்டு ஆசீர்வாதங்களும் தேவைப்படுகிறது. அவருக்கு சொந்தமாய் தேசமில்லாமல், அவருடைய ஜனத்தார் திரளாய்ப் பெருகினால், அவர்களுக்கு தங்குவதற்குகூட இடம் இருக்காது. அவர்கள் குடியிருக்கும் தேசமில்லாமல், தேசாந்தரிகளாயிருப்பார்கள்.

யாக்கோபுக்கு நல்ல தேசம் இருந்து, அந்த தேசத்தை சுதந்தரிக்க ஜனத்திரள் இல்லையென்றால், தேசம் வெறுமையாயிருக்கும். ஒரு சில தரித்திரருக்கு ஏராளமான பிள்ளைகள் இருக்கும். ஆனால் அவர்களுடைய வீட்டில் பிள்ளைகளுக்கு போஜனம் இருக்காது. ஒரு சில ஐசுவரியவான்களுக்கு திரளான செல்வம் இருக்கும். ஆனால் அந்த செல்வத்தை அனுபவிக்க அந்த வீட்டிலே பிள்ளைகள் இருக்காது. கர்த்தர் யாக்கோபுக்கு இப்படிப்பட்ட பிரச்சனையை அனுமதிக்கவில்லை. அவர் யாக்கோபுக்கு ஜனத்தையும் கொடுக்கிறார். தேசத்தையும் கொடுக்கிறார்.

தேவன் யாக்கோபுக்கு சொல்லுகிற ஆசீர்வாதத்திற்கு வேதபண்டிதர்கள் ஆவிக்குரிய வியாக்கியானம் சொல்லுகிறார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வித்தாகயிருக்கிறார். பரலோகம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசமாயிருக்கிறது. கர்த்தருடைய ஜனம் எல்லோருக்கும் பரலோகத்திலே இடமிருக்கிறது.

தேவன் யாக்கோபுக்கு இரண்டு ஆசீர்வாதங்களையும் சொல்லிவிட்டு, அந்த ஸ்தலத்திலிருந்து அவர் யாக்கோபை விட்டு எழுந்தருளிப்போகிறார். தேவன் யாக்கோபுக்கு மேலாக போகிறார். தேவனுடைய மகிமை அங்கு பிரத்தியட்சமாய் வெளிப்படுகிறது. யாக்கோபு தேவனோடு பேசிக்கொண்டிருக்கும்போது, தேவனுடைய மகிமை அவரை மூடுகிறது (ஆதி 35:13).

அப்பொழுது யாக்கோபு தேவன் தன்னோடே பேசின ஸ்தலத்திலே ஒரு கற்றூணை நிறுத்துகிறார். அவர் அதின்மேல் பானபலியை ஊற்றி, எண்ணெயையும் வார்க்கிறார். தேவன் தன்னோடே பேசின அந்த ஸ்தலத்திற்கு யாக்கோபு பெத்தேல் என்று பேரிடுகிறார் (ஆதி 35:14,15).

பானபலி என்னும் வார்த்தை, இந்த வசனப்பகுதியில் முதன்முதலாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பின்பு இது பிரமாணத்தின் ஒரு பகுதியாயிற்று (லேவி 23-ஆவது அதிகாரம்).

"பெத்தேல்" என்னும் எபிரெய வார்த்தைக்கு "தேவனுடைய வீடு" என்று பொருள். இதன் மறுபெயர் லூஸ் (ஆதி 28:19; யோசு 18:13) இது எருசலேமிலிருந்து வடக்கு திசையில் 12 மைல் தூரத்திலுள்ள பட்டணம். இது யூதமார்க்கத்தின் மைய ஸ்தலமாயிற்று. (1சாமு 7:16; 1சாமு 10:3; 1இராஜா 12:29-33; 1இராஜா 13:1-32; 2இராஜா 2:2-23; 2இராஜா 10:29; 2இராஜா 17:28; ஆமோ 3:14).

தேவன் யாக்கோபோடு பேசினது, யாக்கோபின் ஜீவியத்தில் நடைபெற்ற மிகவும் முக்கியமான சம்பவமாகும். ஆகையினால் அவருக்கு அந்த ஸ்தலம் மிகவும் முக்கியமானதாயிருக்கிறது. அங்கே யாக்கோபு ஒரு கற்றூணை ஞாபகசின்னமாக நிறுத்துகிறார். அதன்மீது எண்ணெயை பானபலியாக வார்க்கிறார். யாக்கோபு அந்த ஸ்தலத்திற்கு தேவனுடைய வீடு என்று பேரிடுகிறார். அவர் தேவனுடைய நாமமகிமைக்காக அங்கே கற்றூணை நிறுத்தியிருக்கிறார்.

ராகேலின் மரணம்
ஆதி 35:16-20

ஆதி 35:16. பின்பு, பெத்தேலை விட்டுப் பிரயாணம் புறப்பட்டார்கள். எப்பிராத்தாவுக்கு வர இன்னும் கொஞ்சம் தூரமிருக்கும்போது, ராகேல் பிள்ளைபெற்றாள்; பிரசவத்தில் அவளுக்குக் கடும்வேதனை உண்டாயிற்று.

ஆதி 35:17. பிரசவிக்கும்போது, அவளுக்குக் கடும்வேதனையாயிருக்கையில், மருத்துவச்சி அவளைப் பார்த்து: பயப்படாதே, இந்த முறையும் புத்திரனைப் பெறுவாய் என்றாள்.

ஆதி 35:18. மரணகாலத்தில் அவள் ஆத்துமா பிரியும்போது, அவள் அவனுக்கு பெனோனி என்று பேரிட்டாள்; அவன் தகப்பனோ, அவனுக்கு பென்யமீன் என்று பேரிட்டான்.

ஆதி 35:19. ராகேல் மரித்து, பெத்லகேம் என்னும் எப்பிராத்தா ஊருக்குப் போகிற வழியிலே அடக்கப்பண்ணப்பட்டாள்.

ஆதி 35:20. அவள் கல்லறையின்மேல் யாக்கோபு ஒரு தூணை நிறுத்தினான்; அதுவே இந்தநாள்வரைக்கும் இருக்கிற ராகேலுடைய கல்லறையின் தூண்.

ராகேல் யாக்கோபுக்கு மிகவும் பிரியமான மனைவி. ராகேலின் மரணத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. யாக்கோபும் அவருடைய வீட்டாரும் பெத்தேலைவிட்டு பிரயாணம் புறப்படுகிறார்கள். அவர்கள் இன்னும் பெத்லகேமுக்கு வந்து சேரவில்லை. பெத்லகேமுக்கு அக்காலத்தில் எப்பிராத்தா என்னும் வேறொரு பெயரும் இருந்தது.

யாக்கோபும் அவருடைய வீட்டாரும் பெத்லகேமுக்கு அருகாமையில் வருகிறார்கள். அப்போது ராகேல் பிள்ளை பெறுகிறாள். பிரசவத்தில் ராகேலுக்கு கடும் வேதனை உண்டாயிற்று. ராகேல் ஒரு ஆண்பிள்ளையை பெற்றெடுக்கிறாள். அந்தப் பிள்ளை உயிரோடிருக்கிறது. ஆனால் ராகேல் மரித்துப்போகிறாள்.

ராகேல் பிரசவிக்கும்போது, அவளுக்கு கடும் வேதனையாயிருக்கிறது. மருத்துவச்சி ராகேலைப் பார்த்து, "பயப்படாதே, இந்த முறையும் புத்திரனைப் பெறுவாய்" (ஆதி 35:17) என்று ஆறுதலான வார்த்தைகளை சொல்லுகிறாள்.

மரணத்தின்போது ஆத்துமா சரீரத்தை விட்டு பிரிகிறது. (யாக் 2:26). நீதிமான்களின் ஆத்துமா பரலோகத்திற்குச் செல்லும். (2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:23; வெளி 6:9) துன்மார்க்கரின் ஆத்துமா நரகத்திற்குப் போகும். (லூக்கா 16:19-31; ஏசா 14:9; வெளி 20:11-15). உயிர்த்தெழுதல் வரையிலும், சரீரம் மண்ணுக்குத் திரும்பும். (ஆதி 3:19, தானி 12:2; யோவான் 5:28-29).

ராகேலோ, பிரசவிக்கும் போது கடும் வேதனையிலிருக்கிறாள். அவள் மரித்துப்போகும் நிலமையிலிருக்கிறாள். மரணகாலத்தில் ராகேலின் ஆத்துமா பிரியும்போது, அவள் தன் மகனுக்கு, பெனோனி என்று பேரிடுகிறாள். பெனோனி என்னும் பெயருக்கு வருத்தத்தின் குமாரன் என்று பொருள்.

யாக்கோபோ அந்தக் குழந்தைக்கு பென்யமீன் என்று பேரிடுகிறார். இந்தப் பெயருக்கு என் வலதுகரத்தின் குமாரன் என்று பொருள். யாக்கோபு தன்னுடைய குமாரனை பெனோனி என்று அழைக்க விரும்பவில்லை. யாக்கோபு அவனை அந்தப் பெயரால் ஒவ்வொரு முறை அழைக்கும்போதும், அவருடைய மனதிலே ராகேலின் கடும் வேதனையும், மரணமும் நினைவுக்கு வரும்.

யாக்கோபு அந்த சோகத்தை எப்போதும் நினைத்துக்கொண்டிருக்க விரும்பவில்லை. ஆகையினால் ராகேல் பெற்ற தன் மகனுக்கு "பென்யமீன்" என்னும் புதிய பெயரைக் கொடுக்கிறார். பென்யமீன் யாக்கோபுக்கு வலதுகரத்தைப்போல அருகாமையிலிருப்பான். வலதுகரம் ஆசீர்வாதத்திற்கு அடையாளம். அந்தக்கரம் வயதான காலத்தில் ஆதரவாயிருப்பதற்கு அடையாளம். யாக்கோபு தன்னுடைய வலதுகையில் கோலைப்பிடித்திருப்பதுபோல, பென்யமீனை தனக்கு ஆதரவாகப் பிடித்திருக்க விரும்புகிறார்.

ராகேல் எந்த ஸ்தலத்தில் மரித்தாளோ, அதற்கு அருகாமையிலேயே யாக்கோபு அவளை அடக்கம்பண்ணுகிறார். ராகேல் மரித்து, பெத்லகேம் என்னும் எப்பிராத்தா ஊருக்குப் போகிற வழியிலே அடக்கப்பண்ணப்படுகிறாள். யாக்கோபு அவள் கல்லறையின்மேல் ஒரு தூணை நிறுத்துகிறார்; அதுவே இந்நாள்வரைக்கும் இருக்கிற ராகேலுடைய கல்லறையின் தூண் (ஆதி 35:19,20).

கல்லறையின்மேல் தூணை நிறுத்தும் பழக்கம் முதலாவதாக இங்கு ஆரம்பமாகிறது. யூதரும், அரபியரும் இன்றும் ராகேலின் கல்லறைக்கு மரியாதை செலுத்துகிறார்கள். இப்பொழுது ராகேலின் கல்லறையில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கல்லறை பெத்லகேமிலிருந்து ஒரு மைல் தூரத்திலும், எருசலேமிலிருந்து 3 மைல் தூரத்திலும் உள்ளது.

"நீ இன்றைக்கு என்னைவிட்டுப் போகிறபோது, பென்யமீன் எல்லையாகிய செல்சாகில் ராகேலின் கல்லறையண்டையில் இரண்டு மனுஷரைக் காண்பாய்; அவர்கள் உன்னைப் பார்த்து: நீ தேடப்போன கழுதைகள் அகப்பட்டது; இதோ, உன் தகப்பன் கழுதைகளின்மேலிருந்த கவலையை விட்டு, உங்களுக்காக விசாரப்பட்டு, என் மகனுக்காக என்னசெய்வேன்? என்கிறான் என்று சொல்லுவார்கள்" (1சாமு 10:2).

கர்த்தருடைய தெய்வீக வழிநடத்துதலினால் பிற்காலத்தில் பெத்லகேம் என்னும் எப்பிராத்தா ஊர் பென்யமீனின் சுதந்தர எல்லைக்குள் வருகிறது.

ஈசாக்கின் மரணம்
ஆதி 35:21-29

ஆதி 35:21. இஸ்ரவேல் பிரயாணம்பண்ணி, ஏதேர் என்கிற கோபுரத்திற்கு அப்புறத்தில் கூடாரம் போட்டான்.

ஆதி 35:22. இஸ்ரவேல் அந்தத் தேசத்தில் தங்கிக் குடியிருக்கும்போது, ரூபன் போய், தன் தகப்பனுடைய மறுமனையாட்டியாகிய பில்காளோடே சயனித்தான்; அதை இஸ்ரவேல் கேள்விப்பட்டான்.

ஆதி 35:23. யாக்கோபின் குமாரர் பன்னிரண்டு பேர். யாக்கோபின் மூத்தமகனாகிய ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன் என்பவர்கள் லேயாள் பெற்ற குமாரர்.

ஆதி 35:24. யோசேப்பு, பென்யமீன் என்பவர்கள் ராகேல் பெற்ற குமாரர்.

ஆதி 35:25. தாண், நப்தலி என்பவர்கள் ராகேலுடைய பணிவிடைக்காரியாகிய பில்காள் பெற்ற குமாரர்.

ஆதி 35:26. காத், ஆசேர் என்பவர்கள் லேயாளின் பணிவிடைக்காரியாகிய சில்பாள் பெற்ற குமாரர்; இவர்களே யாக்கோபுக்குப் பதான் அராமிலே பிறந்த குமாரர்.

ஆதி 35:27. பின்பு, யாக்கோபு அர்பாவின் ஊராகிய மம்ரேக்கு தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்தில் வந்தான்; அது ஆபிரகாமும் ஈசாக்கும் தங்கியிருந்த எபிரோன் என்னும் ஊர்.

ஆதி 35:28. ஈசாக்கு விருத்தாப்பிரியமும் பூரண ஆயுசுமுள்ளவனாகி, நூற்றெண்பது வருஷம் ஜீவித்திருந்து,

ஆதி 35:29. பிராணன்போய் மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான். அவன் குமாரராகிய ஏசாவும் யாக்கோபும் அவனை அடக்கம்பண்ணினார்கள்.

ராகேலின் மரணத்திற்கு பின்பு, யாக்கோபு இஸ்ரவேல் என்று அழைக்கப்படுகிறார். இஸ்ரவேல் பிரயாணம்பண்ணி, ஏதேர் என்கிற கோபுரத்திற்கு அப்புறத்தில் கூடாரம் போடுகிறார் (ஆதி 35:21). யாக்கோபு தனக்கு வந்த எல்லா வேதனைகளையும் தாங்கிக்கொண்டு, அவர் கர்த்தருக்கு உண்மையுள்ளவராய் கீழ்ப்படிந்தார். ஆகையினால் அவர் இங்கு இஸ்ரவேல் என்று அழைக்கப்படுகிறார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

இந்த வசனப்பகுதியில் ரூபனுடைய பாவத்தைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் அந்தத் தேசத்தில் தங்கிக் குடியிருக்கிறார். அப்போது, ரூபன் போய், தன் தகப்பனுடைய மறுமனையாட்டியாகிய பில்காளோடே சயனிக்கிறான்; அதை இஸ்ரவேல் கேள்விப்படுகிறார் (ஆதி 35:22)

ரூபனுடைய பாவத்தில் பில்காளும் பங்காளியாயிருக்கிறாள். ரூபனுடைய பாவம் மிகவும் பெரிதாயிருப்பதினால், அவன் தன்னுடைய சுதந்தரபாக ஆசீர்வாதத்தை இழந்துபோகிறான். ரூபன் பில்காளோடே சயனித்தது அவனுடைய மகாபெரிய பாவம். இந்தப் பாவம் யாக்கோபுக்கு மிகுந்த மனவேதனையாயிருக்கிறது.

"ரூபனே, நீ என் சேஷ்டபுத்திரன்; நீ என் சத்துவமும், என் முதற்பெலனுமானவன்; நீ மேன்மையில் பிரதானமும் வல்லமையில் விசேஷமுமானவன். தண்ணீரைப்போல தளம்பினவனே, நீ மேன்மை அடையமாட்டாய்; உன் தகப்பனுடைய மஞ்சத்தின்மேல் ஏறினாய்; நீ அதைத் தீட்டுப்படுத்தினாய்; என் படுக்கையின்மேல் ஏறினானே" (ஆதி 49:3,4).

யாக்கோபுக்கு பன்னிரண்டாவது குமாரனாக பென்யமீன் பிறந்திருக்கிறான். இவன் யாக்கோபின் குமாரர் எல்லோருக்கும் இளையவன். இந்த வசனப்பகுதியில் யாக்கோபின் பன்னிரண்டு குமாரர்களின் பெயர்களும் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் எல்லோரும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கு பிதாக்களாகயிருக்கிறார்கள்.

யாக்கோபின் குமாரன் பன்னிரண்டு பேர். யாக்கோபின் மூத்தமகனாகிய ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன் என்பவர்கள் லேயாள் பெற்ற குமாரர். யோசேப்பு, பென்யமீன் என்பவர்கள் ராகேல் பெற்ற குமாரர். தாண், நப்தலி என்பவர்கள் ராகேலுடைய பணிவிடைக்காரியாகிய பில்காள் பெற்ற குமாரர். காத், ஆசேர் என்பவர்கள் லேயாளின் பணிவிடைக்காரியாகிய சில்பாள் பெற்ற குமாரர்; இவர்களே யாக்கோபுக்குப் பதான் அராமிலே பிறந்த குமாரர் (ஆதி 35:23-26).

யாக்கோபின் தகப்பனாராகிய ஈசாக்கு எபிரோனில் தங்கியிருக்கிறார். யாக்கோபு எபிரோனுக்கு வருகிறார். யாக்கோபு அர்பாவின் ஊராகிய மம்ரேக்கு தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்தில் வருகிறார்; அது ஆபிரகாமும் ஈசாக்கும் தங்கியிருந்த எபிரோன் என்னும் ஊர் (ஆதி 35:27).

யாக்கோபு ஆரானிலிருந்து திரும்பி வந்த பிறகு ஈசாக்கை பலமுறை பார்த்திருக்க வேண்டும். இப்பொழுது ஈசாக்கின் மரணத்தின்போது யாக்கோபு அங்கே திரும்பி வருகிறார் (ஆதி 35:27-29).

ஈசாக்கின் வயதைப்பற்றியும் மரணத்தைப்பற்றியும் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் மற்ற முற்பிதாக்களைவிட, ஈசாக்கே அதிக வருஷங்களுக்கு உயிரோடிருந்தவர். ஈசாக்கு விருத்தாப்பிரியமும் பூரண ஆயுசுமுள்ளவராகி, நூற்றெண்பது வருஷம் ஜீவித்திருந்து, பிராணன்போய் மரித்தார் (ஆதி 35:28). ஈசாக்கு 42 வருஷங்களுக்கு முன்பாகவே முதிர்வயதாகிவிட்டார் (ஆதி 27:2).

ஈசாக்கு ஆபிரகாமைவிட ஐந்து வருஷம் அதிகமாக ஜீவித்தார். (ஆதி 35:28; ஆதி 25:7) இஸ்மவேலைவிட 43 வருஷம் அதிகமாக ஜீவித்தார். (ஆதி 35:28; ஆதி 25:17) யாக்கோபைவிட 33 வருஷம் அதிகமாக ஜீவித்தார். ஏசா எத்தனை வயதில் மரித்தார் என்று தெரியவில்லை.

ஈசாக்கின் குமாரராகிய ஏசாவும் யாக்கோபும் அவரை அடக்கம்பண்ணுகிறார்கள். ஈசாக்கு தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுகிறார். கர்த்தர் ஏசாவின் மனதை மாற்றியிருக்கிறார். தன் தகப்பனார் மரிக்கும்போது, தன் சகோதரன் யாக்கோபை கொன்றுபோடவேண்டுமென்று, ஏசா கோபத்தோடு சொன்னான்.

"யாக்கோபைத் தன் தகப்பன் ஆசீர்வதித்ததினிமித்தம் ஏசா யாக்கோபைப் பகைத்து: என் தகப்பனுக்காகத் துக்கிக்கும் நாட்கள் சீக்கிரமாய் வரும், அப்பொழுது என் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்றுபோடுவேன் என்று ஏசா தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டான்" (ஆதி 27:41).

ஏசா சொன்ன பிரகாரம், ஈசாக்குக்காக துக்கிக்கும் நாட்கள் வந்திருக்கிறது. ஆனால் ஏசா தன் சகோதரன் யாக்கோபை, தன் இருதயத்தில் சொல்லிக்கொண்ட பிரகாரம் கொன்றுபோடவில்லை. கர்த்தர் ஏசாவின் இருதயத்தை மாற்றியிருக்கிறார். ஏசாவும் யாக்கோபும் இப்போது சகோதர சிநேகத்தோடிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் சேர்ந்து, தங்கள் தகப்பனாராகிய ஈசாக்கை அடக்கம்பண்ணுகிறார்கள்.

யாக்கோபும், ஏசாவும் ஈசாக்கை அடக்கம் பண்ணும்போது அவர்களுக்கு 120 வயது (ஆதி 25:26; ஆதி 35:28). இது யாக்கோபு ஆரானிலிருந்து திரும்பி வந்து 23 வருஷங்களுக்குப் பின்பு நடைபெறுகிறது. எகிப்திற்குப் போவதற்கு 10 வருஷங்களுக்கு முன்பு நடைபெறுகிறது. (ஆதி 47:9). இந்த வசனத்திலும், 1நாளா 1:34 ஆவது வசனத்திலும் யாக்கோபின் பெயருக்கு முன்பாக ஏசாவின் பெயர் கூறப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களில் யாக்கோபின் பெயரே முதலாவதாக வருகிறது. (யோசு 24:4; எபி 11:20).

இக்காலத்தில் மரித்தவர்களைக் குகைகளில் அடக்கம் பண்ணுவது வழக்கம். ஈசாக்கை மக்பேலாவிலுள்ள குகையில் அடக்கம் பண்ணினார்கள். ஆபிரகாம், சாராள், ஈசாக்கு, ரெபெக்காள், யாக்கோபு, லேயாள் ஆகியோரையும் இந்தக் குகையிலேயே அடக்கம் பண்ணினார்கள். (ஆதி 49:29-33).

36 அதிகாரம்

ஏசாவின் வம்ச வரலாற்றைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏசாவின் சந்ததியார் ஏதோமியர் என்று அழைக்கப்படுகிறார்கள். ஏசா ஈசாக்கின் குமாரன். அதனால் பரிசுத்த வேதாகமத்தில் ஏசாவுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏதோமியர் இஸ்ரவேல் தேசத்தாருக்கு அண்டை தேசத்தாராயிருக்கிறார்கள். ஆகையினால் இவர்களும் இஸ்ரவேலின் சரித்திரத்திலே இடம் பெற்றிருக்கிறார்கள்.

கர்த்தர் ஆபிரகாமுக்கு தம்முடைய வாக்குத்தத்தத்தைக் கொடுத்திருக்கிறார். ஆபிரகாம் ஜாதிகளுக்கும், தேசங்களுக்கும் தகப்பனாயிருப்பார்.

ஏசா ரெபெக்காளின் கர்ப்பத்திலிருந்தபோதே, கர்த்தர் ஏசாவைப்பற்றிய செய்தியைச் சொன்னார்.

"இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது; இரண்டுவித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும், அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும் பலத்திருப்பார்கள், மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்" (ஆதி 25:23).

ஏசாவின் மனைவிகள் (ஆதி 36:1-5). ஏசா சேயீர் மலையில் குடியேறுகிறார் (ஆதி 36:6-8). ஏசாவின் குமாரர்கள் (ஆதி 36:9-14).

ஏசாவின் குமாரரில் தோன்றிய பிரபுக்கள் (ஆதி 36:15-19). ஓரியருடைய சந்ததியாயிருந்த பிரபுக்கள் (ஆதி 36:20-30). ஏதோம் தேசத்திலே ஆண்ட ராஜாக்கள் (ஆதி 36:31-43).

இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற செய்திகள் 1நாளா 1:35-54 ஆகிய வசனங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஏசாவின் வம்சவரலாறு
ஆதி 36:1-8

ஆதி 36:1. ஏதோமியரின் தகப்பனாகிய ஏசாவின் வம்சவரலாறு:

ஆதி 36:2. ஏசா கானான் தேசத்துப் பெண்களில் ஏத்தியனான ஏலோனின் குமாரத்தியாகிய ஆதாளையும், ஏவியனாகிய சிபியோனின் குமாரத்தியும் ஆனாகின் குமாரத்தியுமாகிய அகோலிபாமாளையும்,

ஆதி 36:3. இஸ்மவேலின் குமாரத்தியும் நெபாயோத்தின் சகோதரியுமாகிய பஸ்மாத்தையும் விவாகம்பண்ணியிருந்தான்.

ஆதி 36:4. ஆதாள் ஏசாவுக்கு எலீப்பாசைப் பெற்றாள்; பஸ்மாத்து ரெகுவேலைப் பெற்றாள்.

ஆதி 36:5. அகோலிபாமாள் எயூஷையும், யாலாமையும், கோராகையும் பெற்றாள்; இவர்களே ஏசாவுக்குக் கானான் தேசத்திலே பிறந்த குமாரர்.

ஆதி 36:6. ஏசா தன் மனைவிகளையும், தன் குமாரரையும், தன் குமாரத்திகளையும், தன் வீட்டிலுள்ள யாவரையும், தன் ஆடுமாடுகளையும், மற்ற ஜீவஜந்துக்கள் யாவையும், தான் கானான் தேசத்திலே சம்பாதித்த ஆஸ்தி முழுவதையும் சேர்த்துக்கொண்டு, தன் சகோதரனாகிய யாக்கோபை விட்டுப் பிரிந்து வேறே தேசத்துக்குப் போனான்.

ஆதி 36:7. அவர்களுடைய சம்பத்து மிகுதியாயிருந்தபடியினால் அவர்கள் ஒருமித்துக் குடியிருக்கக் கூடாமற்போயிற்று; அவர்களுடைய மந்தைகளினிமித்தமாய் அவர்கள் தங்கியிருந்த பூமி அவர்களைத் தாங்கக்கூடாததாயிருந்தது.

ஆதி 36:8. ஆதலால் ஏசா சேயீர்மலையில் குடியேறினான்; ஏசாவுக்கு ஏதோம் என்றும் பேர்.

ஏசாவுக்கு ஏதோம் என்னும் மறுபெயருமுள்ளது. ஏசா ஏதோமியரின் தகப்பனாயிருக்கிறார். ஏசா தன்னுடைய சேஷ்டபுத்திரபாகத்தை அலட்சியம் செய்து, அதை தன்னுடைய சகோதரனாகிய யாக்கோபிடத்தில், சிவப்பு நிற கூழுக்காக விற்றுப்போட்டார். ஏசாவின் மதியீனத்தை நினைவுகூரும் வண்ணமாக, அவருக்கு ஏதோம் என்னும் பெயரும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வசனப்பகுதியில் ஏதோமியரின் தகப்பனாகிய ஏசாவின் வம்சவரலாற்றை பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது (ஆதி 36:1).

ஏசாவுக்கு அநேக மனைவிகளும் பிள்ளைகளும் இருக்கிறார்கள். அவர்களைப்பற்றிய விவரமும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏசாவின் மனைவிகள் அவருக்கு கானான் தேசத்திலே பிள்ளைகளைப் பெற்றார்கள்.

ஏசா கானான் தேசத்துப் பெண்களில் ஏத்தியனான ஏலோனின் குமாரத்தியாகிய ஆதாளையும், ஏவியனாகிய சிபியோனின் குமாரத்தியும் ஆனாகின் குமாரத்தியுமாகிய அகோலிபாமாளையும், இஸ்மவேலின் குமாரத்தியும் நெபாயோத்தின் சகோதரியுமாகிய பஸ்மாத்தையும் விவாகம்பண்ணியிருந்தார் (ஆதி 36:2,3).

ஆதாள் ஏசாவுக்கு எலீப்பாசைப் பெற்றாள்; பஸ்மாத்து ரெகுவேலைப் பெற்றாள். அகோலிபாமாள் எயூஷையும், யாலாமையும், கோராகையும் பெற்றாள்; இவர்களே ஏசாவுக்குக் கானான் தேசத்திலே பிறந்த குமாரர் (ஆதி 36:4,5).

ஏசாவின் குமாரர்கள் கானான் தேசத்தில் பிறந்தார்கள். அவர்கள் கானான் தேசத்தை விட்டு வெளியேறிவிட்டார்கள். (ஆதி 36:6). யாக்கோபின் குமாரர்கள் கானான் தேசத்திற்கு வெளியே பிறந்தார்கள். அவர்கள் கானான் தேசத்திற்குள் வந்து குடியேறினார்கள்.

ஏசா சேயீர் மலையில் குடியேறுகிறார். கர்த்தர் ஏசாவுக்கு சேயீர் மலை தேசத்தை சுதந்தரமாக கொடுத்திருக்கிறார். கானான் தேசம் யாக்கோபின் சந்ததியாருக்கு சுதந்தர தேசமாக வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. ஆகையினால் ஏசாவுக்கு கானான் தேசத்தில் பங்கும் சுதந்தரமுமில்லை. கர்த்தர் ஏசாவுக்கு சேயீர் மலைத்தேசத்தை கொடுத்து அவரை ஆசீர்வதிக்கிறார்.

"அவர்களோடே போர்செய்யவேண்டாம்; அவர்கள் தேசத்திலே ஒரு அடி நிலமும் உங்களுக்குக் கொடேன்; சேயீர் மலைநாட்டை ஏசாவுக்குச் சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறேன்" (உபா 2:5).

"ஈசாக்குக்கு யாக்கோபையும், ஏசாவையும் கட்டளையிட்டு, ஏசாவுக்குச் சேயீர் மலைத்தேசத்தைச் சுதந்தரிக்கும்படி கொடுத்தேன்; யாக்கோபும் அவன் பிள்ளைகளுமோ எகிப்துக்குப் போனார்கள்" (யோசு 24:4).

கர்த்தர் ஏசாவுக்கு சேயீர் மலைத்தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்திருப்பதினால், ஏதோமியர் அத்தேசத்தில் தங்கியிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் ஏதோமியருக்கு விரோதமாகப் போர் செய்யக்கூடாது.

ஏசா தன் சகோதரனாகிய யாக்கோபை விட்டுப் பிரிந்து, கானான் தேசத்தை விட்டு வேறே தேசத்திற்குப்போகிறார். ஏசாவுக்கு சொந்தமானது எதுவும் கானான் தேசத்தில் இல்லை. ஏசா தன் மனைவிகளையும், தன் குமாரரையும், தன் குமாரத்திகளையும், தன் வீட்டிலுள்ள யாவரையும், தன் ஆடுமாடுகளையும், மற்ற ஜீவஜந்துக்கள் யாவையும், தான் கானான் தேசத்திலே சம்பாதித்த ஆஸ்தி முழுவதையும் சேர்த்துக்கொண்டு கானான் தேசத்தைவிட்டுப் புறப்பட்டுப்போகிறார் (ஆதி 36:6).

ஏசா சேயீருக்குப் போகிறார் (ஆதி 36:8). கானான் தேசத்தை விட்டு புறப்பட்ட ஏசாவின் இந்தப் பிரயாணம் இறுதி பிரயாணமாக இருக்கலாம். ஏசா ஏற்கெனவே ஓரியரை வென்று, சேயீரைக் கைப்பற்றியிருக்கிறார். கானானிலுள்ள தன் மந்தைகளை ஏசா இன்னும் மேய்த்துக் கொண்டிருக்கிறார். அவர்களுடைய சம்பத்து மிகுதியாயிருந்தபடியினால் அவர்கள் ஒருமித்துக் குடியிருக்கக் கூடாமற்போயிற்று; அவர்களுடைய மந்தைகளினிமித்தமாய் அவர்கள் தங்கியிருந்த பூமி அவர்களைத் தாங்கக் கூடாததாயிருக்கிறது. ஈசாக்கின் மரணத்திற்குப் பின்பு ஏசா இறுதியாக கானான் தேசத்தை விட்டு புறப்பட்டு போய் விடுகிறார். யாக்கோபின் சம்பத்து அதிகமாயிருப்பதுபோல, ஏசாவின் சம்பத்தும் அதிகமாயிருக்கிறது.

யாக்கோபும் ஏசாவும் ஒரே தேசத்திலிருந்தால், அந்த தேசம் அவர்களை தாங்காது. அவர்களால் வளர்ச்சி பெறவும் முடியாது. கர்த்தர் யாக்கோபுக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். ஏசா தன்னுடைய சம்பத்துக்களெல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு கானான் தேசத்தைவிட்டு புறப்பட்டு சேயீர் மலைக்குப்போகிறார். ஏசா தன் குடும்பத்தார் எல்லேரோடும் சேயீர் மலையிலே குடியேறுகிறார் (ஆதி 36:8).

ஏசாவின் குமாரர்
ஆதி 36:9-19

ஆதி 36:9. சேயீர்மலையில் இருக்கிற ஏதோமியருடைய தகப்பனாகிய ஏசாவின் சந்ததிகளும்,

ஆதி 36:10. ஏசாவின் குமாரருடைய நாமங்களுமாவன: ஏசாவின் மனைவியாகிய ஆதாளுடைய குமாரனுக்கு எலீப்பாஸ் என்று பேர்; ஏசாவின் மனைவியாகிய பஸ்மாத்துடைய குமாரனுக்கு ரெகுவேல் என்று பேர்.

ஆதி 36:11. எலீப்பாசின் குமாரர், தேமான், ஓமார், செப்போ, கத்தாம், கேனாஸ் என்பவர்கள்.

ஆதி 36:12. திம்னாள் ஏசாவின் குமாரனாகிய எலீப்பாசுக்கு மறுமனையாட்டியாயிருந்து, எலீப்பாசுக்கு அமலேக்கைப் பெற்றாள்; இவர்களே ஏசாவின் மனைவியாகிய ஆதாளுடைய புத்திரர்.

ஆதி 36:13. ரெகுவேலுடைய குமாரர், நகாத், செராகு, சம்மா, மீசா என்பவர்கள்; இவர்களே ஏசாவின் மனைவியாகிய பஸ்மாத்தின் புத்திரர்.

ஆதி 36:14. சிபியோனின் குமாரத்தியும் ஆனாகின் குமாரத்தியுமான அகோலிபாமாள் என்கிற ஏசாவின் மனைவி எயூஷ், யாலாம், கோராகு என்னும் புத்திரரை ஏசாவுக்குப் பெற்றாள்.

ஆதி 36:15. ஏசாவின் குமாரரில் தோன்றிய பிரபுக்களாவன: ஏசாவுக்கு மூத்த மகனாகிய எலீப்பாசுடைய குமாரரில் தேமான் பிரபு, ஓமார் பிரபு, செப்போ பிரபு, கேனாஸ் பிரபு.

ஆதி 36:16. கோராகு பிரபு, கத்தாம் பிரபு,அமலேக்கு பிரபு என்பவர்கள்; இவர்கள் ஏதோம் தேசத்தில் எலீப்பாசின் சந்ததியும் ஆதாளின் குமாரருமாயிருந்த பிரபுக்கள்.

ஆதி 36:17. ஏசாவின் குமாரனாகிய ரெகுவேலின் புத்திரரில் நகாத் பிரபு, செராகு பிரபு, சம்மா பிரபு, மீசா பிரபு என்பவர்கள்; இவர்கள் ஏதோம் தேசத்தில் ரெகுவேலின் சந்ததியும் ஏசாவின் மனைவியாகிய பஸ்மாத்தின் குமாரருமாயிருந்த பிரபுக்கள்.

ஆதி 36:18. ஏசாவின் மனைவியாகிய அகோலிபாமாளின், குமாரர், எயூஷ் பிரபு, யாலாம் பிரபு, கோராகு பிரபு என்பவர்கள்; இவர்கள் ஆனாகின் குமாரத்தியும் ஏசாவுடைய மனைவியுமாகிய அகோலிபாமாளின் சந்ததியாயிருந்த பிரபுக்கள்.

ஆதி 36:19. இவர்களே ஏதோம் என்னும் ஏசாவின் சந்ததி; இவர்களே அவர்களிலிருந்த பிரபுக்கள்.

ஏசாவின் குமாரரைப்பற்றியும், அவருடைய குமாரரின் குமாரரைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பெயர்கள் மாத்திரமே இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய சரித்திரத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் ஒன்றும் சொல்லப்படவில்லை.

ஏசாவுக்கு அநேக குமாரர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வம்சவரலாற்றைப்பற்றிச் சொல்லும்போது, மூன்று அல்லது நான்கு சந்ததிகளைப்பற்றி மாத்திரமே இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய வம்சவரலாற்றைப்பற்றி அதற்குமேல் ஒன்றும் சொல்லப்படவில்லை.

யாக்கோபின் சந்ததியார் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்தாகயிருக்கிறார்கள். கானான் தேசம் அவர்களுக்கு சுதந்தரதேசமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. பரிசுத்த வேதாகமத்தில், யாக்கோபின் வம்சவரலாற்றைப்பற்றி தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இதில் யாக்கோபின் சந்ததியில் வந்திருக்கிற எல்லா கோத்திரத்தாரைப்பற்றியும் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

ஏசாவின் வம்சவரலாற்றில் ஒரு சில சந்ததிகளைப்பற்றி மாத்திரமே சொல்லப்பட்டிருக்கிறது. யாக்கோபின் வம்சவரலாற்றிலோ, இயேசுகிறிஸ்துவின் பிறப்பு வரையிலும் வரிசையாக சொல்லப்பட்டிருக்கிறது.

ஏசாவின் குமாரரும், அவருடைய குமாரரின் குமாரரும் பிரபுக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு கீழே யுத்தவீரர்கள் இருந்தார்கள். ஏசா வேட்டையாடுவதில் வல்லவர். அவர் ஒரு வனசஞ்சாரி. ஏசாவும் அவருடைய குடும்பத்தாரும் பட்டயங்களை பயன்படுத்துகிறவர்கள்.

"உன் பட்டயத்தினாலே நீ பிழைத்துஉன் சகோதரனைச் சேவிப்பாய்; நீ மேற்கொள்ளும் காலம் வரும்போதோ, உன் கழுத்தில் இருக்கிற அவனுடைய நுகத்தடியைமுறித்துப்போடுவாய் என்றான்" (ஆதி 27:40).

ஏசாவின் புத்திரர் பிரபுக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் யுத்தவீரர்களாகவும் பராக்கிரமசாலிகளாகவும், படைத்தளபதிகளாகவும் இருக்கிறார்கள். யாக்கோபின் புத்திரரோ ஆடுகளை மேய்க்கிற மேய்ப்பராயிருக்கிறார்கள். யாக்கோபின் புத்திரர் மிகவும் சாதாரணமான உத்தியோகம் பார்க்கிறார்கள்.

"பார்வோன் அவனுடைய சகோதரரை நோக்கி: உங்கள் தொழில் என்ன என்று கேட்டான்; அதற்கு அவர்கள்: உமது அடியாராகிய நாங்களும் எங்கள் பிதாக்களும் மந்தை மேய்க்கிறவர்கள் என்று பார்வோனிடத்தில் சொன்னான்" (ஆதி 47:3).

யாக்கோபின் புத்திரர் மந்தை மேய்க்கிறவர்களாயிருந்தாலும், அவர்களே கர்த்தருடைய வாக்குத்தத்தின் ஜனமாயிருக்கிறார்கள். இந்த உலகத்தில் நமக்கு எவ்வளவு பெரிய பெயர்களும், பட்டங்களும், பதவிகளும் இருந்தாலும், நமக்கு கர்த்தருடைய கிருபையும், ஆசீர்வாதமும், அநுக்கிரகமும் இல்லையென்றால், நமக்கு ஒரு நன்மையுமில்லை.

ஆகையினால் கர்த்தருடைய ஜனமாகிய நாம் பதவிகளையும் பட்டங்களையும் தேடி அலையக்கூடாது. கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கவேண்டும். அவரே நம்மைப் புகழவேண்டும். நாம் புகழ்ச்சியை எதிர்பார்க்கக்கூடாது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, இந்த உலகத்திற்கு ஊழியம் கொள்ளவராமல், ஊழியம் செய்வதற்காகவே வந்தார்.

ஏசாவின் ஐசுவரியம் பலுகிப்பெருகுகிறது. யாக்கோபு விருத்தியடைவதற்கு முன்பாகவே ஏசா விருத்தியடைகிறார். கர்த்தர் யாக்கோபுக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களை சொல்லியிருக்கிறார். ஆனால் அவை அவருக்கு தாமதமாகவே நிறைவேறுகிறது. கர்த்தருடைய ஆசீர்வாதம் யாக்கோபுக்கு தாமதமாக கிடைத்தாலும், அது அவருக்கு நிலைத்திருக்கிறது.

நாம் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அவசரப்படக்கூடாது. கர்த்தர் தமக்கு சித்தமான வேளையில் நம்மை ஆசீர்வதிக்கவேண்டுமென்று, நாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். கர்த்தர் வாக்குமாறாதவர். அவர் தம்முடைய வாக்குத்தத்த வார்த்தைகளை மறந்துவிடுகிறவரல்ல.

ஏசாவின் புத்திரரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. சேயீர்மலையில் இருக்கிற ஏதோமியருடைய தகப்பனாகிய ஏசாவின் சந்ததிகளும், ஏசாவின் குமாரருடைய நாமங்களுமாவன: ஏசாவின் மனைவியாகிய ஆதாளுடைய குமாரனுக்கு எலீப்பாஸ் என்று பேர்; ஏசாவின் மனைவியாகிய பஸ்மாத்துடைய குமாரனுக்கு ரெகுவேல் என்று பேர் (ஆதி 36:9,10).

சேயீர் பர்வதங்கள் சவக்கடலின் தென்கிழக்கு பகுதியிலிருந்து அரபிய வளைகுடா வரையிலும் பரவியிருக்கிறது. ஈசாக்கு ஏசாவைப் பார்த்து "உன் பட்டயத்தினால் நீ பிழைப்பாய்" என்று முன்னறிவித்தார். அது நிறைவேறிற்று. (ஆதி 27:39-40).

எலீப்பாசின் குமாரர், தேமான், ஓமார், செப்போ, கத்தாம், கேனாஸ் என்பவர்கள். திம்னாள் ஏசாவின் குமாரனாகிய எலீப்பாசுக்கு மறுமனையாட்டியாயிருந்து, எலீப்பாசுக்கு அமலேக்கைப் பெற்றாள்; இவர்களே ஏசாவின் மனைவியாகிய ஆதாளுடைய புத்திரர் (ஆதி 36:11,12).

ஏதோமிலுள்ள ஒரு பட்டணத்திற்கும், ஒரு மாகாணத்திற்கும் தேமான் என்னும் பெயர் வழங்கப்படலாயிற்று. (ஆதி 36:15; ஒப 1:9; ஆமோ 1:12; எசே 25:13). எலிப்பாஸ் தேமானின் தந்தை. இவன் யோபுவைக் காண்பதற்காக தேமானிலிருந்து புறப்பட்டுச் சென்றான் (யோபு 2:11).

திம்னாள் ஏசாவின் குமாரனாகிய எலிப்பாசுக்கு அமலேக்கைப் பெறுகிறாள். ஆதி 14:7 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் அமலேக்கியரின் முற்பிதா இவனல்ல. அவர்கள் இராட்சத சந்ததியார். (எண் 13:29; எண் 14:39-45) (எண் 24:20). ஏதோமியரின் அமலேக்கியர் இராட்சதரிலிருந்து வேறுபட்டவர்கள். ஆனாலும் இவர்களும் இஸ்ரவேலரின் விரோதிகள். எனவே இவர்களும் கானான் தேசத்திலிருந்து துரத்தப்பட வேண்டியவர்களாக இருந்தார்கள்.

ரெகுவேலுடைய குமாரர், நகாத், செராகு, சம்மா, மீசா என்பவர்கள்; இவர்களே ஏசாவின் மனைவியாகிய பஸ்மாத்தின் புத்திரர். சிபியோனின் குமாரத்தியும் ஆனாகின் குமாரத்தியுமான அகோலிபாமாள் என்கிற ஏசாவின் மனைவி எயூஷ், யாலாம், கோராகு என்னும் புத்திரரை ஏசாவுக்குப் பெற்றாள் (ஆதி 36:13,14).

ஏசாவின் குமாரரில் தோன்றிய பிரபுக்களாவன: ஏசாவுக்கு மூத்த மகனாகிய எலீப்பாசுடைய குமாரரில் தேமான் பிரபு, ஓமார் பிரபு, செப்போ பிரபு, கேனாஸ் பிரபு. கோராகு பிரபு, கத்தாம் பிரபு,அமலேக்கு பிரபு என்பவர்கள்; இவர்கள் ஏதோம் தேசத்தில் எலீப்பாசின் சந்ததியும் ஆதாளின் குமாரருமாயிருந்த பிரபுக்கள் (ஆதி 36:15,16).

ஏசா அல்லது ஏதோமின் மூன்று மனைவிகள் மூலமாக 14 பிரபுக்கள் பிறக்கிறார்கள். ஆயிரம் பேருக்கு தலைவனாக இருக்கிறவனை பிரபு என்று அழைப்பது வழக்கம்.

ஏசாவின் குமாரனாகிய ரெகுவேலின் புத்திரரில் நகாத் பிரபு, செராகு பிரபு, சம்மா பிரபு, மீசா பிரபு என்பவர்கள்; இவர்கள் ஏதோம் தேசத்தில் ரெகுவேலின் சந்ததியும் ஏசாவின் மனைவியாகிய பஸ்மாத்தின் குமாரருமாயிருந்த பிரபுக்கள் (ஆதி 36:17).

ஏசாவின் மனைவியாகிய அகோலிபாமாளின், குமாரர், எயூஷ் பிரபு, யாலாம் பிரபு, கோராகு பிரபு என்பவர்கள்; இவர்கள் ஆனாகின் குமாரத்தியும் ஏசாவுடைய மனைவியுமாகிய அகோலிபாமாளின் சந்ததியாயிருந்த பிரபுக்கள். இவர்களே ஏதோம் என்னும் ஏசாவின் சந்ததி; இவர்களே அவர்களிலிருந்த பிரபுக்கள் (ஆதி 36:18,19).

ஓரியர்
ஆதி 36:20-30

ஆதி 36:20. அந்தத் தேசத்தின் குடிகளாகிய ஓரியனான சேயீரின் குமாரர், லோத்தான், சோபால், சிபியோன், ஆனாகு,

ஆதி 36:21. திஷோன், ஏத்சேர், திஷான் என்பவர்கள்; இவர்களே ஏதோம் தேசத்தில் சேயீரின் புத்திராகிய ஓரியருடைய சந்ததியாயிருந்த பிரபுக்கள்.

ஆதி 36:22. லோத்தானுடைய குமாரர், ஓரி, ஏமாம் என்பவர்கள்; லோத்தானின் சகோதரி திம்னாள் என்பவள்.

ஆதி 36:23. சோபாலின் குமாரர், அல்வான், மானகாத், ஏபால், செப்போ,ஓனாம் என்பவர்கள்.

ஆதி 36:24. சிபியோனின் குமாரர், அயா, ஆனாகு என்பவர்கள்; வனாந்தரத்திலே தன் தகப்பனாகிய சிபெயோனின் கழுதைகளை மேய்க்கையில், கோவேறு கழுதைகளைக் கண்டுபிடித்த ஆனாகு இவன் தான்.

ஆதி 36:25. ஆனாகின் பிள்ளைகள், திஷோன், அகோலிபாமாள் என்பவர்கள்; இந்த அகோலிபாமாள் ஆனாகின் குமாரத்தி.

ஆதி 36:26. திஷோனுடைய குமாரர், எம்தான், எஸ்பான், இத்தரான், கெரான் என்பவர்கள்.

ஆதி 36:27. ஏத்சேருடைய குமாரர், பில்கான்,சகவான், அக்கான் என்பவர்கள்.

ஆதி 36:28. திஷானுடைய குமாரர், ஊத்ஸ், அரான் என்பவர்கள்.

ஆதி 36:29. ஓரியரின் சந்ததியிலே தோன்றிய பிரபுக்கள், லோத்தான் பிரபு, சோபால் பிரபு, சிபியோன் பிரபு, ஆனாகு பிரபு,

ஆதி 36:30. திஷோன் பிரபு, ஏத்சேர் பிரபு, திஷான் பிரபு என்பவர்கள்; இவர்களே சேயீர் தேசத்திலே தங்கள் தங்கள் இடங்களில் இருந்த ஓரியர் சந்ததியான பிரபுக்கள்.

இந்த வசனப்பகுதியில் ஏதோமியரின் வம்சவரலாற்றைப்பற்றிச் சொல்லும்போது, இடையிலே ஓரியரின் வம்சவரலாற்றைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. ஓரியரும் கானானியர்கள். இவர்கள் சேயீர் மலையிலே வாசம்பண்ணுகிறவர்கள். ஓரியர் ஏத்தியர் எனவும் அழைக்கப்படுகிறார்கள்.

ஜலப்பிரளயத்திற்குப் பின்பு மனுஷ குமாரத்திகளுக்கும், தேவபுத்திரருக்கும் இராட்சதர்கள் பிறந்தார்கள். இவர்களில் ஒரு பிரிவினர் ஓரியர் எனப்பட்டார்கள் (ஆதி 14:6) இவனுடைய தந்தை சேயீர். (ஆதி 36:20). இவர்களுடைய நிலம் சேயீர் மலை என்று அழைக்கப்பட்டது. (ஆதி 14:6) இதன்பின்பு அது ஏதோமின் தேசமாயிற்று. (ஆதி 32:3).

சேயீருக்கு ஏழு குமாரர்கள் இருந்தார்கள் (ஆதி 36:20-21). அவர்கள் ஓரியருடைய சந்ததியாயிருந்த பிரபுக்கள் என்று அழைக்கப்பட்டார்கள் (ஆதி 36:21,29-30). இந்த ஏழு பிரபுக்களுக்கு 19 குமாரர்களும், ஒரு குமாரத்தியும் இருந்தார்கள். இவர்களுடைய அட்டவணை ஆதி 36:22-28 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. சேயீரின் குமாரத்தியும் பிரபலமானவள். ஆகையினால் இவளுடைய பெயரும் அட்டவணையில் காணப்படுகிறது. (ஆதி 36:22).

ஆதி 36:20-21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பிரதானிகள் ஏசா அந்த தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு முன்பாக ஆட்சி புரிந்தவர்களாக இருக்கலாம். இஸ்ரவேல் தேசத்தார் எகிப்து தேசத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்பாக ஏசா சேயீர் மலையைக் கைப்பற்றிவிட்டார். இதனால் ஆதி 27:39-40 ஆகிய வசனத்தில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது.

ஏதோமின் பர்வதங்களில் ஏராளமான குகைகள் இருந்தன. ஓரியர்கள் இவற்றில் வசித்து வந்தார்கள். பெத்ரா, சேலா ஆகியவை பாறைகளுக்குள் செதுக்கிக் கட்டப்பட்ட பட்டணமாகும். இது பின்பு ஏதோமின் தலைநகரமாயிற்று. இது அவர்களுடைய வலுவான கோட்டை. மலைகளுக்கு நடுவில் செதுக்கப்பட்ட கோவில்களும், வீடுகளும் இன்றும் உள்ளன. பெத்ராவில் சுற்றிலுமுள்ள குகைக்கோயில்கள் இன்னும் அழியாமல் புதியவை போன்றுள்ளன. பழங்காலத்தில் பெயர் பெற்று விளங்கின இந்த இடம் கடைசி நாட்களில் மறுபடியும் முக்கியத்துவம் பெறும்.

"ஏசா நாற்பது வயதானபோது, ஏத்தியனான பெயேரியினுடைய குமாரத்தியாகிய யூதீத்தையும், ஏத்தியனான ஏலோனுடைய குமாரத்தியாகிய பஸ்மாத்தையும் விவாகம்பண்ணினான்" (ஆதி 26:34).

ஏதோமியரும் ஓரியரும் பெண் கொடுத்து, பெண் எடுத்து, தங்களுக்குள்ளே திருமணம் செய்துகொள்கிறார்கள். இதன் மூலமாக ஏதோமியரின் சந்ததியில், ஓரியரும் கலந்திருக்கிறார்கள்.

ஏசா தன்னுடைய சேஷ்டபுத்திரபாகத்தை யாக்கோபுக்கு விற்றுப்போட்டார். ஏசா ஈசாக்கின் விசேஷித்த ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ளவில்லை. ஏசா ஏத்தியரோடும், அவருடைய பின்சந்ததியாரோடும் உடன்படிக்கை செய்துகொள்கிறார். ஏசாவும் அவருடைய குடும்பத்தாரும் சேயீர் மலையில் குடியேறியபோது, அங்கே குடியிருக்கிற ஓரியரோடு சம்பந்தம் கலக்கிறார்கள். இதனால் ஓரியரும் ஏத்தியரும் கலப்பு இனமாக மாறுகிறார்கள்.

இந்த வசனப்பகுதியில் சேயீர் மலைத்தேசத்தில் குடியிருக்கிற ஓரியரின் வம்சவரலாற்றைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏதோமியரின் புத்திரர் பிரபுக்கள் என்று அழைக்கப்பட்டதுபோல, ஓரியரின் புத்திரரும் பிரபுக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

சேயீர் மலைத்தேசத்தின் குடிகளாகிய ஓரியனான சேயீரின் குமாரர், லோத்தான், சோபால், சிபியோன், ஆனாகு, திஷோன், ஏத்சேர், திஷான் என்பவர்கள்; இவர்களே ஏதோம் தேசத்தில் சேயீரின் புத்திராகிய ஓரியருடைய சந்ததியாயிருந்த பிரபுக்கள் (ஆதி 36:20,21).

லோத்தானுடைய குமாரர், ஓரி, ஏமாம் என்பவர்கள்; லோத்தானின் சகோதரி திம்னாள் என்பவள். சோபாலின் குமாரர், அல்வான், மானகாத், ஏபால், செப்போ,ஓனாம் என்பவர்கள் (ஆதி 36:22,23).

சிபியோனின் குமாரர், அயா, ஆனாகு என்பவர்கள்; வனாந்தரத்திலே தன் தகப்பனாகிய சிபெயோனின் கழுதைகளை மேய்க்கையில், கோவேறு கழுதைகளைக் கண்டுபிடித்த ஆனாகு இவன் தான். ஆனாகின் பிள்ளைகள், திஷோன், அகோலிபாமாள் என்பவர்கள்; இந்த அகோலிபாமாள் ஆனாகின் குமாரத்தி (ஆதி 36:24,25).

கோவேறு கழுதைகள் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் மூலபாஷை வார்த்தை "எம்மிம்" என்பதாகும். இதற்கு சில மொழிபெயர்ப்புக்களில் "வெந்நீர் நீரூற்றுகள்" என்றும், வேறுசில மொழிபெயர்ப்புக்களில் "எமீம்" அல்லது "இராட்சதர்" என்றும் மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

கோவேறு கழுதை என்று பொருள்படும் எபிரெய வார்த்தை "பேரத்" என்பதாகும். ஆனாகு கோவேறு கழுதைகளைக் கண்டுபிடித்தானா அல்லது வெந்நீர் நீரூற்றுக்களைக் கண்டுபிடித்தானா அல்லது இராட்சதரைக் கண்டுபிடித்தானா என்று தெளிவாகத் தெரியவில்லை. இந்த மூன்றில் ஏதோ ஒன்றைக் கண்டுபிடித்து ஆனாகு பிரபலமானான்.

திஷோனுடைய குமாரர், எம்தான், எஸ்பான், இத்ரான், கெரான் என்பவர்கள். ஏத்சேருடைய குமாரர், பில்கான்,சகவான், அக்கான் என்பவர்கள். திஷானுடைய குமாரர், ஊத்ஸ், அரான் என்பவர்கள் (ஆதி 36:26-28).

ஓரியரின் சந்ததியிலே தோன்றிய பிரபுக்கள், லோத்தான் பிரபு, சோபால் பிரபு, சிபியோன் பிரபு, ஆனாகு பிரபு, திஷோன் பிரபு, ஏத்சேர் பிரபு, திஷான் பிரபு என்பவர்கள்; இவர்களே சேயீர் தேசத்திலே தங்கள் தங்கள் இடங்களில் இருந்த ஓரியர் சந்ததியான பிரபுக்கள் (ஆதி 36:29,30).

ஏதோம் தேசத்து ராஜாக்கள் ஆதி 36:31-39

ஆதி 36:31. இஸ்ரவேல் புத்திரர்மேல் ராஜாக்கள் அரசாளுகிறதற்கு முன்னே, ஏதோம் தேசத்திலே ஆண்ட ராஜாக்களாவன:

ஆதி 36:32. பெயோருடைய குமாரனாகிய பேலா ஏதோமிலே அரசாண்டான்; அவனுடைய பட்டணத்துக்குத் தின்காபா என்று பேர்.

ஆதி 36:33. பேலா மரித்தபின், போஸ்றா பட்டணத்தானாகிய சேராகுடைய குமாரனாகிய யோபாப் அவன் பட்டத்திற்கு வந்தான்.

ஆதி 36:34. யோபாப் மரித்தபின், தேமானிய தேசத்தானாகிய உஷாம் அவன் பட்டத்திற்கு வந்தான்.

ஆதி 36:35. உஷாம் மரித்தபின், மோவாபின் நாட்டிலே மீதியானியரை முறிய அடித்த பேதாதின் குமாரனாகிய ஆதாத் அவன் பட்டத்திற்கு வந்தான்; அவனுடைய பட்டணத்துக்கு ஆவீத் என்று பேர்.

ஆதி 36:36. ஆதாத் மரித்தபின், மஸ்ரேக்கா ஊரானாகிய சம்லா அவனுடைய பட்டத்திற்கு வந்தான்.

ஆதி 36:37. சம்லா மரித்தபின் அங்கே இருக்கிற நதிக்குச் சமீபமான ரெகொபோத் என்னும் ஊரானாகிய சவுல் அவனுடைய பட்டத்திற்கு வந்தான்.

ஆதி 36:38. சவுல் மரித்தபின், அக்போருடைய குமாரனாகிய பாகால்கானான் அவனுடைய பட்டத்திற்கு வந்தான்.

ஆதி 36:39. அக்போருடைய குமாரனாகிய பாகால்கானான் மரித்தபின், ஆதார் அவனுடைய பட்டத்திற்கு வந்தான்; அவனுடைய பட்டணத்துக்குப் பாகு என்றுபேர்; அவன் மனைவியின் பேர் மெகேதபேல்; அவள் மத்ரேத்துடைய குமாரத்தியும் மேசகாவின் குமாரத்தியுமாய் இருந்தாள்.

சேயீர் மலைத்தேசத்தில் ஏதோமியரும் ஓரியரும் கலந்து குடியிருக்கிறார்கள். ஆனாலும் ஏதோமியர் ஓரியரை மேற்கொண்டு, சேயீர் மலைத்தேசம் முழுவதையும் தங்களுடைய ஆளுகைக்கு கீழ்ப்படுத்துகிறார்கள். ஏதோம் தேசத்திலே ராஜாக்கள் இருக்கிறார்கள். ஏதோமியரின் ராஜாக்கள் சந்ததி பரம்பரையாக வருவதில்லை என்றும், அவர்கள் பிரபுக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றும் சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர்மேல் ராஜாக்கள் அரசாளுகிறதற்கு முன்னே, ஏதோம் தேசத்திலே ராஜாக்கள் அரசாண்டார்கள் (ஆதி 36:31). யாக்கோபின் சந்ததியிலே ராஜாக்கள் தோன்றுவதற்கு முன்பே, ஏசாவின் சந்ததியிலே ராஜாக்கள் தோன்றுகிறார்கள்.

மோசே ஆதியாகமத்தை எழுதியபோது இஸ்ரவேல்மீது எந்த ராஜாவும் ஆளுகை செய்யவில்லை. எகிப்து தேசத்தில்தான் இஸ்ரவேல் ஜனங்கள் பெரிய ஜாதி கூட்டமாக வளர்ச்சி பெற்று ராஜாவின் கண்களில் பட்டார்கள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருடைய சந்ததியில் ராஜாக்கள் தோன்றுவார்கள் என்று தேவன் அவர்களுக்குக் கூறியிருந்தார்.

இஸ்ரவேலில் ராஜாக்கள் இருப்பார்கள் என்பது தேவனுடைய மனதில் பூர்வகாலத்திலேயே இருக்கிறது (ஆதி 17:6,16; ஆதி 35:11). மோசே நியாயப் பிரமாணத்தை எழுதிய போது இஸ்ரவேல் தேசத்தில் ராஜாக்கள் இருப்பது போலப் பாவித்து, ராஜ்ஜியம் எவ்வாறு நடத்த வேண்டும் என்பது பற்றி எழுதியிருக்கிறார். (உபா 17:14-20; உபா 28:36)

கானான் தேசத்தில் குடியிருக்கிற யாக்கோபின் சந்ததியார் ஏதோமியரைப்பற்றி கேள்விப்படுகிறார்கள். அவர்களுடைய செல்வத்திரட்சிகளைப் பற்றியும் அதிகாரங்களைப்பற்றியும், வல்லமைகளைப்பற்றியும், ராஜாக்களைப் பற்றியும் கேள்விப்படுகிறார்கள். ஏதோமியரைப்போல, யாக்கோபின் சந்ததியாராகிய இஸ்ரவேலருக்கு செல்வசெழிப்புமில்லை, பலமும் பராக்கிரமமுமில்லை, ராஜாக்களும் இல்லை. இஸ்ரவேல் ஜனத்தார் ஏதோமின் ராஜாக்களைப்பார்த்து சோர்ந்துபோகிறார்கள்.

ஏதோமியரின் ராஜாக்கள் சேயீர் மலைத்தேசத்தை ஆளுகை செய்யும்போது, இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருக்கிறார்கள். கர்த்தருடைய வாக்குத்தத்தம் யாக்கோபின் சந்ததிக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஏசாவின் சந்ததியார் ராஜாக்களாகவும், யாக்கோபின் சந்ததியார் அந்நிய தேசத்திலே அடிமைகளாகவும் இருக்கிறார்கள்.

கர்த்தருடைய வாக்குத்தத்தம் அவருக்கு சித்தமான வேளையிலே நிறைவேறும். அந்தக்காலம் வரும் வரையிலும் கர்த்தருடைய ஜனம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். கர்த்தருக்காக காத்திருக்கிறவர்கள் புதுப்பெலன் அடைவார்கள். கர்த்தருடைய வேளையே அவருடைய ஜனத்திற்கு ஏற்ற வேளை.

இந்த வசனப்பகுதியில் ஏதோமியரின் ராஜாக்களைப்பற்றியும் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களைப்பற்றிய விவரம் வருமாறு:

பெயோருடைய குமாரனாகிய பேலா ஏதோமிலே அரசாண்டான்; அவனுடைய பட்டணத்துக்குத் தின்காபா என்று பேர். பேலா மரித்தபின், போஸ்றா பட்டணத்தானாகிய சேராகுடைய குமாரனாகிய யோபாப் அவன் பட்டத்திற்கு வந்தான். யோபாப் மரித்தபின், தேமானிய தேசத்தானாகிய உஷாம் அவன் பட்டத்திற்கு வந்தான் (ஆதி 6:32-34).

"போஸ்றா" என்னும் பட்டணம் ஏதோமின் பூர்வகாலத்து தலைநகரம். இது மலையின்மீது அமைந்துள்ள பட்டணம். போஸ்றா பட்டணம் சவக்கடலுக்கு தென் கிழக்காக 25 மைல் தூரத்தில் உள்ளது. மோவாபின் போஸ்றாவும் இந்தப் போஸ்றாவும் ஒன்றல்ல. வெவ்வேறானவை.

உஷாம் மரித்தபின், மோவாபின் நாட்டிலே மீதியானியரை முறிய அடித்த பேதாதின் குமாரனாகிய ஆதாத் அவன் பட்டத்திற்கு வந்தான்; அவனுடைய பட்டணத்துக்கு ஆவீத் என்று பேர் (ஆதி 36:35).

ஆதாத் மரித்தபின், மஸ்ரேக்கா ஊரானாகிய சம்லா அவனுடைய பட்டத்திற்கு வந்தான். சம்லா மரித்தபின் அங்கே இருக்கிற நதிக்குச் சமீபமான ரெகொபோத் என்னும் ஊரானாகிய சவுல் அவனுடைய பட்டத்திற்கு வந்தான். சவுல் மரித்தபின், அக்போருடைய குமாரனாகிய பாகால்கானான் அவனுடைய பட்டத்திற்கு வந்தான் (ஆதி 36:36-38).

அக்போருடைய குமாரனாகிய பாகால்கானான் மரித்தபின், ஆதார் அவனுடைய பட்டத்திற்கு வந்தான்; அவனுடைய பட்டணத்துக்குப் பாகு என்றுபேர்; அவன் மனைவியின் பேர் மெகேதபேல்; அவள் மத்ரேத்துடைய குமாரத்தியும் மேசகாவின் குமாரத்தியுமாய் இருந்தாள் (ஆதி 36:39).

ஆதாரின் மறுபெயர் ஆதாத் என்பதாகும் (1நாளா 1:50-51). ஆதாத் மரித்து விட்டான் என்று மோசே கூறவில்லை. ஏதோம் வழியாக இஸ்ரவேல் பிரயாணம் பண்ணுவதற்கு ஏதோமியர் மறுத்தபோது ஆதாத் ஏதோமின் ராஜாவாக இருந்திருக்கலாம். நாளாகம ஆசிரியர் ஆதாத் மரித்து விட்டான் என்று எழுதியிருக்கிறார். மோசே பஞ்சாகமம் எழுதிய போது ஆதாத் உயிரோடு இருக்கிறார். நாளாகமம் எழுதப்பட்டபோது ஆதாத் மரித்து விட்டார்.

ஏதோமியரை ராஜாக்கள் சிறிதுகாலம் ஆட்சிசெய்கிறார்கள். அதன்பின்பு ஏதோமியரின் பிரபுக்கள் அவர்களை ஆளுகை செய்கிறார்கள்.

ஏசாவின் சந்ததியில் தோன்றிய பிரபுக்கள்
ஆதி 36:40-43

ஆதி 36:40. தங்கள் பற்பல வம்சங்களின் படியேயும் வாசஸ்தலங்களின்படியேயும் நாமதேயங்களின்படியேயும் ஏசாவின் சந்ததியில் தோன்றிய பிரபுக்களுடைய நாமங்களாவன: திம்னா பிரபு, அல்வா பிரபு, ஏதேத் பிரபு,

ஆதி 36:41. அகோலிபாமா பிரபு, ஏலா பிரபு, பினோன் பிரபு,

ஆதி 36:42. கேனாஸ் பிரபு, தேமான் பிரபு, மிம்சார் பிரபு,

ஆதி 36:43. மக்தியேல் பிரபு, ஈராம் பிரபு; இவர்களே தங்கள் சொந்தமான தேசத்திலே பற்பல இடங்களில் குடியிருந்த ஏதோம் சந்ததிப் பிரபுக்கள்; இந்த ஏதோமியருக்குத் தகப்பன் ஏசா.

ஏதோம் தேசத்திலே ராஜாக்கள் ஆட்சிசெய்யும்போது, அந்த தேசத்தின் ஒரு பகுதியை பிரபுக்களும் ஆட்சி செய்கிறார்கள். ஏதோமின் பிரபுக்களைப்பற்றி யாத்திராகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"ஏதோமின் பிரபுக்கள் கலங்குவார்கள்; மோவாபின் பராக்கிரமசாலிகளை நடுக்கம் பிடிக்கும்; கானானின் குடிகள் யாவரும் கரைந்துபோவார்கள். பயமும் திகிலும் அவர்கள்மேல் விழும். கர்த்தாவே, உமது ஜனங்கள் கடந்துபோகும்வரையும், நீர் மீட்ட ஜனங்களே கடந்துபோகும்வரையும், அவர்கள் உம்முடைய புயத்தின் மகத்துவத்தினால் கல்லைப்போல அசைவற்றிருப்பார்கள்" (யாத் 15:15,16).

சேயீர் மலைத்தேசம் ஏசாவின் சந்ததியாருக்கு சொந்தமான தேசம். ஏதோமியர் சேயீர் மலைத்தேசத்திலே குடியிருக்கிறார்கள். கர்த்தர் யாக்கோபின் புத்திரருக்கு கானான் தேசத்தை வாக்குத்தத்த தேசமாக கொடுத்திருக்கிறார். இக்காலத்தில் கானான் தேசம் இஸ்ரவேல் புத்திரருக்கு வாக்குத்தத்த தேசமாக மாத்திரமே இருக்கிறது. இப்போது கானான் தேசம் அவர்களுக்கு குடியிருப்பு தேசமாகயில்லை. இக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைகளாய் குடியிருக்கிறார்கள். ஏதோமின் புத்திரரோ தங்களுக்கு சொந்த தேசமான சேயீர் மலைத்தேசத்தில் குடியிருக்கிறார்கள்.

இக்காலத்தில்கூட, உலகப்பிரகாரமான ஜனங்கள், ஏதோமியரைப்போல இந்த உலகத்தில் வசதியாய் ஜீவிக்கிறார்கள். அவர்களுக்கு எல்லா வசதிகளும் இருக்கிறது. விசுவாசிகளாகிய நாமோ, யாக்கோபின் சந்ததியாரைப்போல ஏழைகளாக ஜீவிக்கிறோம். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே, ஒரு வசதியுமில்லாமல் அடிமைகளாயிருந்ததுபோல, நாமும் இந்த உலகத்திலே எந்த வசதிகளும் இல்லாமல் கஷ்டப்படுகிறோம்.

விசுவாசிகளாகிய நமக்கு உலகப்பிரகாரமான வசதிகள் குறைவாகயிருந்தாலும், ஆவிக்குரிய நன்மைகளும், வாக்குத்தத்தங்களும், நம்பிக்கையும் அதிமாகயிருக்கிறது. உலகப்பிரகாரமான ஜனங்களுக்கோ ஆவிக்குரிய நன்மைகளும் இல்லை, வாக்குத்தத்தங்களும் இல்லை, நம்பிக்கையும் இல்லை.

"அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய்" (லூக் 16:25).

சேயீர் மலையை சொந்தமாகப் பெற்றிருப்பதைவிட கானான் தேசத்தை ஆசீர்வாதமாகப் பெற்றிருப்பதே மெய்யான ஆசீர்வாதம். இந்த வசனப்பகுதியில் ஏசாவின் சந்தியில் தோன்றிய பிரபுக்களுடைய நாமங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் தங்கள் பற்பல வம்சங்களின்படியேயும் வாசஸ்தலங்களின்படியேயும் நாமதேயங்களின் படியேயும் ஏசாவின் சந்ததியில் தோன்றிய பிரபுக்கள் (ஆதி 36:40).

ஏசாவின் சந்திதியில்தோன்றிய பிரபுக்களுடைய நாமங்களாவன: திம்னா பிரபு, அல்வா பிரபு, ஏதேத் பிரபு, அகோலிபாமா பிரபு, ஏலா பிரபு, பினோன் பிரபு, கேனாஸ் பிரபு, தேமான் பிரபு, மிப்சார் பிரபு, மக்தியேல் பிரபு, ஈராம் பிரபு (ஆதி 36:40-43).

இவர்களே தங்கள் சொந்தமான தேசத்திலே பற்பல இடங்களில் குடியிருந்த ஏதோம் சந்ததிப் பிரபுக்கள்; இந்த ஏதோமியருக்குத் தகப்பன் ஏசா.

எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் ஜனத்தார் வெளியேறி வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணிய போது இந்தப் பிரபுக்கள் ஆட்சி புரிந்திருக்கலாம். பிரபுக்கள் ராஜாக்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள். இவர்கள் குறுநிலமன்னர்கள் போல சிறிய பிரதேசத்திற்கு அதிபதிகளாக இருந்தார்கள். இத்துடன் ஏசாவின் வரலாறு நிறைவு பெறுகிறது.

37 அதிகாரம்

யாக்கோபின் சந்ததியைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்திலிருந்து, ஆதியாகமம் புஸ்தகம் கடைசி அதிகாரம் வரையிலும் யோசேப்பைப்பற்றிய சரித்திரம் சொல்லப்பட்டிருக்கிறது.

யோசேப்பின் சரித்திரத்தை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். முதலாவது பிரிவில் யோசேப்பு தாழ்ந்திருப்பது பற்றியும், இரண்டாவது பிரிவில் அவர் உயர்த்தப்படுவது பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. யோசேப்பு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். கிறிஸ்துவானவர் முதலாவதாக தம்மைத் தாழ்த்தினார். அதன்பின்பு அவர் உயர்த்தப்பட்டார்.

யோசேப்பின் சரித்திரம் விசுவாசிகளாகிய நமக்கு ஒரு எடுத்துக்காட்டாக சொல்லப்பட்டிருக்கிறது. நாம் பல உபத்திரவங்களின் வழியாக கடந்துவந்து தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கவேண்டும். யோசேப்பின் சகோதரர் அவருக்கு விரோதமாக எழும்புகிறார்கள்.

யோசேப்பு தன் சகோதரருடைய துன்மார்க்கத்தை யாக்கோபுக்கு சொல்லுகிறார் (ஆதி 37:1,2). யாக்கோபு தன் குமாரர் எல்லோரையும்விட யோசேப்பை அதிகமாய் நேசிக்கிறார் (ஆதி 37:3,4). யோசேப்பு தன் சகோதரர் எல்லோரையும்விட தான் உயர்ந்திருப்பதாக சொப்பனம் காண்கிறார் (ஆதி 37:5-11).

யோசேப்பின் சகோதரர் அவருக்கு விரோதமாக சதிஆலோசனை பண்ணி அவருக்கு தீங்கு செய்கிறார்கள். யோசேப்பு ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிற தன் சகோதரரைப் பார்க்க வருகிறார் (ஆதி 37:12-17).

யோசேப்பின் சகோதரர் அவரை கொலைசெய்யும்படி சதிஆலோசனை பண்ணுகிறார்கள். ஆனால் அவர்கள் அவரைக் கொலைசெய்யாமல் வனாந்தரத்திலே உள்ள ஒரு குழியிலே போட்டு விடுகிறார்கள் (ஆதி 37:18-24). அவர்கள் யோசேப்பை எகிப்து தேசத்திற்குப்போகிற இஸ்மவேலரிடத்திலே அடிமையாக விற்றுப்போடுகிறார்கள் (ஆதி 37:25-28).

யோசேப்பை ஒரு துஷ்டமிருகம் பட்சித்துப்போட்டது என்று, யாக்கோபு சொல்லுகிறார் (ஆதி 37:29-35). யாக்கோபு யோசேப்புக்காக அழுதுகொண்டிருக்கிறார். மீதியானியர் யோசேப்பை போத்திபார் என்பவனிடத்தில் விற்றுப்போடுகிறார்கள் (ஆதி 37:36).

யாக்கோபுடைய சந்ததி ஆதி 37:1-4

ஆதி 37:1. யாக்கோபு தன் தகப்பன் தங்கியிருந்த கானான் தேசத்திலே குடியிருந்தான்.

ஆதி 37:2. யாக்கோபுடைய சந்ததியின் வரலாறு: யோசேப்பு பதினேழு வயதிலே தன் சகோதரருடனே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான்; அந்த இளைஞன் பில்காள் சில்பாள் என்னும் தன் தகப்பனுடைய மறுமனையாட்டிகளின் குமாரரோடே இருந்து, அவர்களுடைய துன்மார்க்கத்தைத் தன் தகப்பனுக்குச் சொல்லிவருவான்.

ஆதி 37:3. இஸ்ரவேலின் முதிர்வயதிலே யோசேப்புத் தனக்குப் பிறந்ததினால், இஸ்ரவேல் தன் குமாரர் எல்லாரிலும் அவனை அதிகமாய் நேசித்து, அவனுக்குப் பலவருணமான அங்கியைச் செய்வித்தான்.

ஆதி 37:4. அவனுடைய சகோதரர் எல்லாரிலும் அவனைத் தங்கள் தகப்பன் அதிகமாய் நேசிக்கிறதை அவன் சகோதரர் கண்டபோது, அவனோடே பட்சமாய்ப் பேசாமல் அவனைப் பகைத்தார்கள்.

யாக்கோபுடைய சந்ததியின் வரலாற்றைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கு தங்கியிருந்த கானான் தேசத்திலே குடியிருக்கிறார் (ஆதி 37:1).

மோசே ஆதி 35:27-36:43 ஆகிய வசனங்களில் ஈசாக்கு, ஏசா ஆகியோரின் வரலாற்றை எழுதி முடிக்கிறார் ஆதி 35:27-29 ஆகிய வசனங்களில் யாக்கோபு அவருடைய குடும்பத்தார் ஆகியோரின் வரலாற்றை நிறுத்தி வைத்திருந்த மோசே இப்பொழுது அதை மறுபடியும் தொடர்ந்து எழுதுகிறார்.

பரிசுத்தவேதாகமத்தில், ஏசாவின் சந்ததியைவிட, யாக்கோபின் சந்ததிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. யாக்கோபின் சந்ததியைச் சேர்ந்தவர்கள் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின் ஜனத்தார். ஏசாவின் சந்ததியைப்பற்றிச் சொல்லும்போது, "ஏதோமியரின் தகப்பனாகிய ஏசாவின் வம்சவரலாறு" (ஆதி 36:1) என்று சொல்லி, அவருடைய குமாரரின் பெயர்கள் மாத்திரமே சொல்லப்பட்டிருக்கிறது.

யாக்கோபின் சந்ததியைப்பற்றிச் சொல்லும்போதோ, அவரைப்பற்றியும், அவருடைய குமாரர்களைப்பற்றியும், அவர்களுடைய சந்ததிகளைப்பற்றியும் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. யாக்கோபு கானான் தேசத்திலே பரதேசியாய்த் தங்கியிருக்கிறார்.

யாக்கோபின் குமாரனாகிய யோசேப்பு பதினேழு வயதிலே தன் சகோதரருடனே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறார்; அந்த இளைஞன் பில்காள் சில்பாள் என்னும் தன் தகப்பனுடைய மறுமனையாட்டிகளின் குமாரரோடே இருந்து, அவர்களுடைய துன்மார்க்கத்தைத் தன் தகப்பனுக்குச் சொல்லிவருவார் (ஆதி 37:2).

யோசேப்பின் வரலாறு ஆரம்பமாகிறது. அதன் பின்பு யாக்கோபின் வரலாறு இடையில் வருகிறது. மறுபடியும் ஆதி 46 ஆவது அதிகாரத்தில் யோசேப்பின் வரலாறு வருகிறது. யோசேப்பிற்கு இப்பொழுது வயது பதினேழு. யாக்கோபிற்கு 107 வயதாகிறது. யாக்கோபு 10 வருஷங்களாக கானானில் தங்கியிருக்கிறார். மூத்தகுமாரன் ரூபனுக்கு 29 வயது இருக்கலாம். இளைய குமாரன் பென்யமீனுக்கு 7 அல்லது 8 வயது இருக்கலாம். யோசேப்பை விற்று போட்ட அவருடைய சகோதரருக்கு 18 முதல் 29 வயதாகிறது.

யோசேப்பு தன் தகப்பனாராகிய யாக்கோபுக்கு மிகவும் பிரியமானவர். ஆனாலும் யோசேப்பு ஒரு வேலையும் செய்யாமல், தன்னுடைய தகப்பனின் கூடாரத்திலே, சோம்பேறியாக சும்மாயிருக்கவில்லை. யாக்கோபின் மற்ற குமாரரைப்போல, யோசேப்பும் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறார்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு ஒரு தொழிலைக் கற்றுக்கொடுக்கவேண்டும். அவர்கள் அந்தத் தொழிலை நேர்த்தியாய்ச் செய்வதற்கு பயிற்சி கொடுக்கவேண்டும். ஒரு வேலையிலும் பயிற்சி பெறாத பிள்ளைகள், ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதவர்களாயிருப்பார்கள். அவர்கள் சோம்பேறிகளாயிருந்து தங்கள் பொழுதை வீணாய்க் களிப்பார்கள்.

யோசேப்பு இஸ்ரவேலின் முதிர்வயதிலே அவருக்கு பிறந்திருக்கிறார். ஆகையினால் இஸ்ரவேல் தன் குமாரர் எல்லாரிலும் யோசேப்பை அதிகமாய் நேசித்து, அவருக்குப் பலவருணமான அங்கியைச் செய்விக்கிறார் (ஆதி 37:3).

யோசேப்பு பிறந்த போது யாக்கோபிற்கு 91 வயது ஆனது. யோசேப்பு யாக்கோபின் கடைசி குமாரன் அல்ல. இவருக்குப் பிறகு 9 வருஷம் கழித்து பென்யமீன் பிறக்கிறான். ராகேல் மரித்த பின்பு, யோசேப்பு தன் தகப்பனுக்கு விசேஷித்த வழிகளில் உதவி செய்து கொண்டிருக்கிறார் (ஆதி 37:2, 13-14).

பலவருணமான அங்கி என்பது மரியாதையையும், அந்தஸ்தையும் குறிக்கிறது. குடும்பத்தலைவர்களும், குடும்ப வாரிசுகளும் மட்டுமே பலவருண அங்கியை அணிவார்கள். யோசேப்பு தன்னுடைய சுதந்தரவீதத்தைச் சுதந்தரித்துக் கொண்டார் (1நாளா 5:1-2). அங்கி பலவருணமுடையது. இது பல துணிகளைச் சேர்த்துத் தைக்கப்பட்டதல்ல. ஆசாரியருடைய அங்கி போன்றது. இதைப் பல்வேறு வருண துணிகளில் அகலமான கோடுகள் போட்ட அங்கி என்று ஒருசிலர் கருதுகிறார்கள். ஒருவேளை இது சித்திரத்தையல் நிறைந்ததாகவும் இருக்கலாம்.

யாக்கோபு இப்போது முதிர்வயதிலிருக்கிறார். யோசேப்பு அவருக்கு மிகவும் ஆறுதலாயிருக்கிறார். யாக்கோபு யோசேப்பை அதிகமாய் நேசிப்பது, அவருடைய மற்ற குமாரருக்கு பிடிக்கவில்லை.

யாக்கோபு, தன்னுடைய குமாரர் எல்லோரையும் விட, யோசேப்பை அதிகமாய் நேசிக்கிறதை, யோசேப்பின் சகோதரர் காண்கிறார்கள். அவர்கள் யோசேப்போடே பட்சமாய்ப் பேசாமல், அவரைப் பகைக்கிறார்கள் (ஆதி 37:4).

தங்கள் தகப்பன் யோசேப்பை அதிகமாய் நேசிக்கிறதை அவர் சகோதரர் காண்கிறார்கள். இதனால் யோசேப்பின்மீது அவர்களுக்குப் பொறாமை உண்டாயிற்று. யாக்கோபு தன் பிள்ளைகளிடத்தில் பட்சபாதமாய் நடந்துகொள்கிறார். இது ஞானமுள்ள செயலல்ல. இதனால் பிள்ளைகளுக்கும் தங்கள் தந்தையின்மீது மரியாதை குறைவாகவே இருக்கிறது (ஆதி 37:31-34).

குடும்பத்தில் பிள்ளைகள்மீது பெற்றோர் பட்சபாதம் காண்பிக்கும்போது குழப்பம் உண்டாகும். (ஆதி 37:4-11,18-34) ஈசாக்கு, ரெபெக்காள் ஆகியோருடைய குடும்பத்தில் இதனால் குழப்பம் உண்டாயிற்று. (ஆதி 25:28; ஆதி 27:1-13, 35-38,41-46, யாக் 2:1-10)

யாக்கோபு யோசேப்பை அதிகமாய் நேசித்து அவருக்கு பல வருணமான அங்கியை செய்வித்துக்கொடுக்கிறார். ஆனாலும் அவர் இதுபோன்ற அங்கியை தன்னுடைய மற்ற குமாரருக்கு கொடுக்கவில்லை. இதனால் யாக்கோபின் குமாரருக்கு, யோசேப்பின்மீது கோபமும் பொறாமையும் உண்டாயிற்று.

யாக்கோபுக்கு பன்னிரண்டு குமாரர்கள் இருக்கிறார்கள். அவர் யோசேப்பை தங்களைவிட அதிகமாய் நேசிப்பதை அந்த சகோதரர்கள் காண்கிறார்கள். இதனால் யாக்கோபின் குடும்பத்திலே குழப்பங்களும், பிரச்சனைகளும், சண்டை சச்சரவுகளும் உண்டாயிற்று.

யாக்கோபு யோசேப்பை அதிகமாய் நேசிப்பதுபோல, யோசேப்பும் தன் தகப்பனாகிய யாக்கோபை அதிகமாய் நேசிக்கிறார். பில்காள், சில்பாள் ஆகியோர் யாக்கோபின் மறுமனையாட்டிகள். அவர்களுடைய குமாரர்கள் துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்கள் யாக்கோபுக்கு தெரியாமல் துன்மார்க்கம் பண்ணினாலும், யோசேப்பு அவர்களுடைய துன்மார்க்கத்தை யாக்கோபுக்கு சொல்லி வருகிறார். இதனால் அவர்களுக்கு யோசேப்பை பிடிக்கவில்லை. அவர்கள் யோசேப்பின்மேல் கோபமாயிருக்கிறார்கள்.

யோசேப்பின் சகோதரருக்கு அவர்மீது கோபம் இருந்தாலும், அவர்களால் யோசேப்புக்கு விரோதமாக ஒன்றும் செய்யமுடியவில்லை. யோசேப்பு தன் தகப்பனாகிய யாக்கோபின் கூடாரத்திலே, அவரோடு கூடயிருக்கிறார். யோசேப்பு யாக்கோபோடு கூடயிருக்கும் வரையிலும் அவருடைய சகோதரர்களால் அவருக்கு விரோதமாக ஒன்றும் செய்யமுடியாது.

யோசேப்பு கண்ட சொப்பனங்கள்

ஆதி 37:5-11

ஆதி 37:5. யோசேப்பு ஒரு சொப்பனம் கண்டு, அதைத் தன் சகோதரருக்கு அறிவித்தான்; அதினிமித்தம் அவனை இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள்.

ஆதி 37:6. அவன் அவர்களை நோக்கி: நான் கண்ட சொப்பனத்தைக் கேளுங்கள்.

ஆதி 37:7. நாம் வயலில் அறுத்த அரிகளைக் கட்டிக்கொண்டிருந்தோம்; அப்பொழுது என்னுடைய அரிக்கட்டு நிமிர்ந்திருந்தது; உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றது என்றான்.

ஆதி 37:8. அப்பொழுது அவன் சகோதரர் அவனைப் பார்த்து: நீ எங்கள்மேல் துரைத்தனம்பண்ணுவாயோ? நீ எங்களை ஆளப்போகிறாயோ? என்று சொல்லி, அவனை அவன் சொப்பனங்களின் நிமித்தமும், அவன் வார்த்தைகளின் நிமித்தமும் இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள்.

ஆதி 37:9. அவன் வேறொரு சொப்பனம் கண்டு தன் சகோதரரை நோக்கி: நான் இன்னும் ஒரு சொப்பனத்தைக் கண்டேன்; சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் என்னை வணங்கினது என்றான்.

ஆதி 37:10. இதை அவன் தன் தகப்பனுக்கும் தன் சகோதருக்கும் சொன்னபோது, அவன் தகப்பன் அவனைப் பார்த்து; நீ கண்ட இந்தச் சொப்பனம் என்ன? நானும் உன் தாயாரும் உன் சகோதரரும் தரைமட்டும் குனிந்து உன்னை வணங்க வருவோமோ? என்று அவனைக் கடிந்துகொண்டான்.

ஆதி 37:11. அவன் சகோதரர் அவன்மேல் பொறாமைகொண்டார்கள்; அவன் தகப்பனோ அவன் சொன்னதை மனதிலே வைத்துக்கொண்டான்.

யோசேப்பு சொப்பனம் காண்கிறார். இவை தீர்க்கதரிசனமான சொப்பனங்கள். யோசேப்பு கண்ட சொப்பனங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. யோசேப்பு தான் கண்ட சொப்பனங்களை, தன்னுடைய சகோதரரிடத்தில் சொல்லுகிறார்.

யோசேப்பு தன் சகோதரரை நோக்கி, "நான் கண்ட சொப்பனத்தைக் கேளுங்கள். நாம் வயலில் அறுத்த அரிகளைக் கட்டிக்கொண்டிருந்தோம்; அப்பொழுது என்னுடைய அரிக்கட்டு நிமிர்ந்திருந்தது; உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றது" (ஆதி 37:6,7) என்று சொல்லுகிறார்.

யோசேப்பின் சகோதரர் அவரை வணங்குவார்கள் என்பதே இந்த சொப்பனத்திற்கு அர்த்தம். யோசேப்பு சொப்பனம் கண்டதுபோலவே, அவருடைய சகோதரர்கள் அவரை வணங்கினார்கள். யோசேப்பு எகிப்து தேசத்திலிருந்தபோது, அவருடைய சகோதரர்கள் அங்கே தானியம் வாங்குவதற்காக வந்தார்கள். அப்போது அவர்கள் யோசேப்பை வணங்கினார்கள்.

யோசேப்பு மற்றொரு சொப்பனம் காண்கிறார். அவர் அந்த சொப்பனத்தை தன் சகோதரருக்கும், அதன் பின்பு அதை தன் தகப்பனுக்கும் சொல்லுகிறார். யோசேப்பு தன் சகோதரரை நோக்கி, "நான் இன்னும் ஒரு சொப்பனத்தைக் கண்டேன்; சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் என்னை வணங்கினது" (ஆதி 37:9) என்று சொல்லுகிறார்.

யோசேப்பு ஒரு தீர்க்கதரிசி. அவர் ஒரு ராஜதந்திரியல்ல. எதை சொல்லவேண்டும், எதை சொல்லாமல் மறைக்கவேண்டும் என்பது யோசேப்புக்கு தெரியவில்லை. கர்த்தர் தனக்கு காண்பித்த சொப்பனங்களை, யோசேப்பு தன் சகோதரரிடத்தில் மறைக்காமல் சொல்லிவிடுகிறார்.

யோசேப்புக்கு ராஜதந்திரம் தெரிந்திருந்தால், தான் கண்ட சொப்பனங்களை, அவர் தன் சகோதரருக்கு இப்போது சொல்லியிருக்கமாட்டார். ஏற்ற காலம் வரும் வரையிலும் இந்த சொப்பனங்களை தன்னுடைய மனதிற்குள்ளே மறைத்து வைத்திருப்பார். யோசேப்பின் சகோதரர் ஏற்கெனவே அவரோடே பட்சமாய்ப் பேசாமல், அவரைப் பகைக்கிறார்கள்.

யோசேப்பு தான் கண்ட முதலாவது சொப்பனத்தை, தன் சகோதரருக்கு சொன்னபோது, அவர்கள் யோசேப்பைப் பார்த்து, "நீ எங்கள்மேல் துரைத்தனம்பண்ணுவாயோ? நீ எங்களை ஆளப்போகிறாயோ?" (ஆதி 37:8) என்று சொல்லுகிறார்கள். அவர்கள் யோசேப்பை அவருடைய சொப்பனங்களின் நிமித்தமும், அவருடைய வார்த்தைகளின் நிமித்தமும் இன்னும் அதிகமாய்ப் பகைக்கிறார்கள்.

யோசேப்பு தன்னுடைய இரண்டாவது சொப்பனத்தை தன் தகப்பனுக்கும் தன் சகோதரருக்கும் சொன்னபோது, யோசேப்பின் தகப்பன் அவரைப் பார்த்து, "நீ கண்ட இந்தச் சொப்பனம் என்ன? நானும் உன் தாயாரும் உன் சகோதரரும் தரைமட்டும் குனிந்து உன்னை வணங்க வருவோமோ?" (ஆதி 37:10) என்று சொல்லி யோசேப்பை கடிந்துகொள்கிறார்.

யோசேப்புக்கு இப்போது பதினேழு வயதுதான் ஆகிறது. அவருடைய சகோதரர்களோ யோசேப்பை விட வயதில் மூத்தவர்கள். ஆகையினால் அவர்கள் யோசேப்பின் சொப்பனத்தைக் கேட்டு, "நீ எங்கள் மேல் துரைத்தனம்பண்ணுவாயோ, நீ எங்களை ஆளப்போகிறாயோ" என்று கோபத்தோடு கேட்கிறார்கள். யோசேப்பு தனி மனிதனாயிருக்கிறார். அவருடைய சகோதரர்களோ அநேகராயிருக்கிறார்கள்.

யோசேப்பின் சகோதரர், அவர் கண்ட சொப்பனத்தினிமித்தம், அவரைக் கடிந்துகொண்டதுபோல, அவருடைய தகப்பனாகிய யாக்கோபும் அவரைக் கடிந்துகொள்கிறார். யோசேப்பின் சொப்பனம் நிறைவேறுமா அல்லது நிறைவேறாதா என்பது யாக்கோபுக்கு தெரியவில்லை. ஆனாலும் அவர் யோசேப்பு சொன்ன சொப்பனத்தை, தன் மனதிலே வைத்துக்கொள்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் தாயார், அவர் சொன்ன வார்த்தைகளை தன்னுடைய மனதிலே வைத்துக்கொண்டதுபோல, யாக்கோபும் யோசேப்பு சொன்ன வார்த்தைகளை தன் மனதிலே வைத்துக்கொள்கிறார். "அவருடைய தாயார் இந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்துக்கொண்டாள்" (லூக் 2:51).

யாக்கோபு யோசேப்பின் வார்த்தைகளை மறக்கவில்லை. சமயம் வாய்க்கும்போதெல்லாம் யாக்கோபு அந்த வார்த்தைகளை நினைத்துப் பார்க்கிறார். யோசேப்பு சொன்னது தீர்க்கதரிசன வார்த்தைகள். ஏற்ற வேளை வரும்போது அவர் சொன்ன வார்த்தைகள் நிறைவேறுகிறது. யோசேப்பின் சகோதரரோ, அவர் சொன்ன வார்த்தைகளின் நிமித்தம் அவர்மேல் பொறாமைப்படுகிறார்கள்.

"சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும்" என்பது இங்கு அடையாளமாக சொல்லப்பட்டிருக்கிறது. சூரியன் யாக்கோபையும், சந்திரன் அவருடைய மனைவிகளையும், பதினொரு நட்சத்திரங்கள் அவருடைய பதினொரு குமாரர்களையும் குறிக்கும். (வெளி 12:1).

யாக்கோபு யோசேப்பைக் கடிந்துகொள்கிறார். யாக்கோபு ஞானமாகவோ அல்லது அறியாமையினாலோ கடிந்து கொள்கிறார். தன்னுடைய குமாரர் யோசேப்பின்மீது கொண்டிருக்கும் கோபம் தணிய வேண்டுமென்பதற்காக யாக்கோபு கோபப்பட்டிருக்கலாம்.

ராகேல் மரித்து விட்டாள். மனைவி மரித்த பின்பு அந்த மனைவியின் ஸ்தானம் யூதருடைய வழக்கத்தின் பிரகாரம் புருஷனுடைய மனைவிகளில் ஒருத்திக்கு வந்து சேரும். இங்கு தாயார் ஸ்தானம் லேயாளுக்கு வருகிறது.

யோசேப்பின் சகோதரர் அவர்மேல் பொறாமை கொள்கிறார்கள். பொறாமை கோபத்தை வளர்க்கும். விரோதம், கோபம், பகை, பொறாமை, பாவம் ஆகியவை சேர்ந்தே வரும். யோசேப்பின் சொப்பனத்தினால் அவருடைய சகோதரர் அவர்மீது பொறாமை கொண்டாலும் அவர் தெய்வீக வெளிப்பாட்டை உள்ளபடியே கூறிவிட்டார். எகிப்தில் வரப்போகிற பாடுகளைச் சந்திப்பதற்கு ஒவ்வொருவரும் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

யாக்கோபும் அவருடைய சகோதரரும் ஆதி 37:12-22

ஆதி 37:12. பின்பு, அவன் சகோதரர் சீகேமிலே தங்கள் தகப்பனுடைய ஆடுகளை மேய்க்கப்போனார்கள்.

ஆதி 37:13. அப்பொழுது இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி: உன் சகோதரர் சீகேமிலே ஆடுகளை மேய்க்கிறார்கள் அல்லவா? உன்னை அவர்களிடத்துக்கு அனுப்பப்போகிறேன், வா என்றான். அவன்: இதோ, போகிறேன் என்றான்.

ஆதி 37:14. அப்பொழுது அவன்: நீ போய், உன் சகோதரருடைய ஷேமம் எப்படி என்றும், ஆடுகள் எப்படி இருக்கிறது என்றும் பார்த்து, எனக்கு மறுசெய்தி கொண்டுவா என்று அவனுக்குச் சொல்லி, எபிரோன் பள்ளத்தாக்கிலே இருந்து அவனை அனுப்பினான்; அந்தப்படியே அவன் சீகேமுக்குப் போனான்.

ஆதி 37:15. அப்பொழுது ஒரு மனிதன் அவன் வெளியிலே வழிதப்பித் திரிகிறதைக் கண்டு, என்ன தேடுகிறாய்? என்று அவனைக் கேட்டான்.

ஆதி 37:16. அதற்கு அவன்: என் சகோதரரைத் தேடுகிறேன், அவர்கள் எங்கே ஆடு மேய்க்கிறார்கள், சொல்லும் என்றான்.

ஆதி 37:17. அந்த மனிதன்: அவர்கள் இவ்விடத்திலிருந்து போய்விட்டார்கள், தோத்தானுக்குப் போவோம் என்று அவர்கள் சொல்லக்கேட்டேன் என்றான்; அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரைத் தொடர்ந்துபோய், அவர்களைத் தோத்தானிலே கண்டுபிடித்தான்.

ஆதி 37:18. அவர்கள் அவனைத் தூரத்தில் வரக்கண்டு, அவன் தங்களுக்குச் சமீபமாய் வருமுன்னே, அவனைக் கொலைசெய்யும்படி சதியோசனைபண்ணி,

ஆதி 37:19. ஒருவரை ஒருவர் நோக்கி: இதோ, சொப்பனக்காரன் வருகிறான்.

ஆதி 37:20. நாம் அவனைக் கொன்று, இந்தக் குழிகள் ஒன்றிலே அவனைப் போட்டு, ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்தது என்று சொல்லுவோம் வாருங்கள்; அவனுடைய சொப்பனங்கள் எப்படி முடியும் பார்ப்போம் என்றார்கள்.

ஆதி 37:21. ரூபன் அதைக் கேட்டு, அவனை அவர்கள் கைக்குத் தப்புவித்து, அவனை அவன் தகப்பனிடத்துக்குத் திரும்பவும் கொண்டுபோக மனதுள்ளவனாய்,

ஆதி 37:22. அவர்களை நோக்கி: அவனைக் கொல்ல வேண்டாம், நீங்கள் இரத்தம் சிந்தலாகாது; நீங்கள் அவன்மேல் கை வையாமல், அவனை வனாந்தரத்திலுள்ள இந்தக் குழியிலே போட்டுவிடுங்கள் என்று சொல்லி, இவ்விதமாய் ரூபன் அவனை அவர்கள் கைக்குத் தப்புவித்தான்.

யோசேப்பின் சகோதரர் சீகேமிலே தங்கள் தகப்பனுடைய ஆடுகளை மேய்க்கப்போகிறார்கள் (ஆதி 37:12). யாக்கோபின் குடும்பத்தாருக்கு சீகேமியரின் தேசம் மிகவும் ஆபத்தான தேசம். சீகேம் தீனாளை தீட்டுப்படுத்தினதின் நிமித்தமாக சிமியோனும் லேவியும், ஏமோரின் பட்டணத்தின்மேல் பாய்ந்து, அங்கே இருந்த ஆண்மக்கள் யாவரையும் கொன்றுபோட்டார்கள். அவர்களுடைய ஆடுமாடுகளையும் கொள்ளையிட்டார்கள். அவர்களுடைய ஸ்திரீகளையும், குழந்தைகளையும் சிறைப்பிடித்தார்கள் (ஆதி 34-ஆவது அதிகாரம்).

யாக்கோபின் குடும்பத்திற்கும், சீகேமியருக்கும் பழைய பகை இருக்கிறது. யாக்கோபு சீகேமியரோடு தங்கியிருக்க மனதில்லாமல், அந்த தேசத்திலிருந்து பெத்தேலுக்கு வந்திருக்கிறார். தேவனால் பயங்கரமுண்டானதினால், சீகேமியர் யாக்கோபின் குமாரரை பின்தொடரவில்லை (ஆதி 35:5).

இப்போது யாக்கோபின் குமாரர் சீகேமிலே தங்கள் தகப்பனுடைய ஆடுகளை மேய்க்கப்போயிருக்கிறார்கள். யாக்கோபு தன் குமாரரைக் குறித்து கரிசனையோடிருக்கிறார். அவர்கள் போயிருக்கிற ஊர் தங்களுக்கு பகைவராய் இருக்கிறவர்களுடைய ஊர். அவர்களுக்கு என்ன ஆயிற்று என்பதை யாக்கோபு அறிந்துகொள்ள விரும்புகிறார்.

அப்பொழுது இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி, "உன் சகோதரர் சீகேமிலே ஆடுகளை மேய்க்கிறார்கள் அல்லவா? உன்னை அவர்களிடத்துக்கு அனுப்பப்போகிறேன், வா" (ஆதி 37:13) என்று சொல்லுகிறார். யோசேப்பு "இதோ, போகிறேன்" என்று சொல்லுகிறார்.

யாக்கோபு இப்போதிருக்கிற எபிரோன் பள்ளத்தாக்கிலிருந்து சீகேம் வெகுதூரத்திலிருக்கிறது. யோசேப்பு பல மைல்கள் பிரயாணம்பண்ணி, தன்னுடைய சகோதரரைப் பார்க்கப்போகவேண்டும். யோசேப்பு தன் தகப்பனாருடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார். அவர் யாக்கோபுக்கு மிகவும் பிரியமானவராகயிருந்தாலும், தனக்கு கொடுக்கப்படும் வேலையை செய்வதற்கு உடனே கீழ்ப்படிகிறார். யாக்கோபு யோசேப்புபை அதிகமாய் நேசித்தாலும், யோசேப்பு யாக்கோபுக்கு உண்மையுள்ள வேலைக்காரராயிருக்கிறார். தன்னுடைய தகப்பனாருடைய கட்டளைக்கு யோசேப்பு உடனே கீழ்ப்படிகிறார்.

யோசேப்பின் சகோதரர் அவரோடே பட்சமாய்ப் பேசாமல் அவரைப் பகைக்கிறார்கள். அவர்கள் யோசேப்பின்மேல் பொறாமை கொள்கிறார்கள். ஆனாலும் யோசேப்பு அவர்கள்மீது அன்பாகயிருக்கிறார்.

யாக்கோபு யோசேப்பை நோக்கி, "நீ போய், உன் சகோதரருடைய க்ஷேமம் எப்படி என்றும், ஆடுகள் எப்படி இருக்கிறது என்றும் பார்த்து, எனக்கு மறுசெய்தி கொண்டுவா" என்று அவருக்குச் சொல்லி, எபிரோன் பள்ளத்தாக்கிலே இருந்து யோசேப்பை அனுப்புகிறார்; யோசேப்பு அந்தப்படியே சீகேமுக்குப் போகிறார் (ஆதி 37:14).

யாக்கோபு தன் குமாரருடைய க்ஷேமத்தில் அக்கரையுள்ளவராயிருக்கிறார். அந்த அக்கரை யோசேப்புக்கும் இருக்கிறது. தன் சகோதரர் தன்னைப் பகைக்கிறார்கள் என்பதற்காக, யோசேப்பு அவர்களைப் பகைக்கவில்லை. தன்னுடைய சகோதரருடைய க்ஷேமம் எப்படி என்பதை அறியும்படி, யோசேப்பு எபிரோன் பள்ளத்தாக்கிலிருந்து சீகேமுக்கு புறப்பட்டுப்போகிறார்.

சீகேமியர்கள் தன்னுடைய குடும்பத்தாரை பழிவாங்கும் வண்ணமாக, தன்னுடைய புத்திரரை அழித்துப் போட்டார்களா அல்லது அவர்கள் க்ஷேமமாக இருக்கிறார்களா என்பதை அறியும் ஆவல் யாக்கோபின் மனதிலிருக்கிறது. யாக்கோபின் புத்திரர் சீகேமியருக்கு தீங்கு செய்திருக்கிறார்கள். அவர்கள் பழைய பகையை மறந்துவிட்டார்களா அல்லது அதை இன்னும் நினைவில் வைத்திருந்து, தன்னுடைய குடும்பத்திற்கு விரோதமாக பகையோடிருக்கிறார்களா என்பது யாக்கோபுக்கு தெரியவில்லை.

யோசேப்பு தன்னுடைய தகப்பனாரின் கட்டளை பிரகாரம் எபிரோன் பள்ளத்தாக்கிலிருந்து சீகேமுக்குப்போகிறார். தன்னுடைய சகோதரர் சீகேமிலே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது மாத்திரமே யோசேப்புக்கு தெரியும். ஆனால் அவர்கள் சீகேமிலே எந்த ஊரிலிருக்கிறார்கள் என்பது யோசேப்புக்கு தெரியாது. யோசேப்பு அவர்களைத் தேடிப்போகிறார். யோசேப்புக்கு பாதை தெரியவில்லை. அவர் வழிதப்பி திரிகிறார்.

அப்பொழுது ஒரு மனிதன், யோசேப்பு வெளியிலே வழிதப்பித் திரிகிறதைக் கண்டு, "என்ன தேடுகிறாய்?" என்று யோசேப்பைக் கேட்கிறான். அதற்கு யோசேப்பு, "என் சகோதரரைத் தேடுகிறேன், அவர்கள் எங்கே ஆடு மேய்க்கிறார்கள், சொல்லும்" (ஆதி 37:15,16) என்று சொல்லுகிறார்.

அந்த மனுஷனுக்கு யோசேப்பின் சகோதரரைப்பற்றித் தெரிந்திருக்கிறது. கர்த்தருடைய தெய்வீக வழிநடத்துதலின் பிரகாரம், அந்த மனிதன் யோசேப்பை சந்திக்கிறான். யோசேப்போ பாதை தெரியாமல் வெளியிலே வழிதப்பி திரிகிறார். யோசேப்பை சரியான பாதையில் வழிநடத்துவதற்காக, கர்த்தர் அந்த மனிதனை யோசேப்பினிடத்திற்கு அனுப்புகிறார்.

நம்முடைய வாழ்க்கையில் நாம் சில சமயங்களிலே வழிதப்பி திரிகிறவர்கள் போல இருப்போம். நம்முடைய வாழ்க்கை பிரயாணத்தில் எங்கே போகவேண்டும் என்பதும், எப்படி போகவேண்டும் என்பதும் நமக்கு தெரியாது. அப்போது கர்த்தர் தம்முடைய தெய்வீக ஆலோசனைகளை நமக்கு சொல்லுவார். அவர் நம்மை கரம்பிடித்து வழிநடத்துவார்.

அந்த மனிதன் யோசேப்பை நோக்கி, "அவர்கள் இவ்விடத்திலிருந்து போய்விட்டார்கள், தோத்தானுக்குப் போவோம் என்று அவர்கள் சொல்லக்கேட்டேன்" (ஆதி 37:17) என்று சொல்லுகிறான்; அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரைத் தொடர்ந்துபோய், அவர்களைத் தோத்தானிலே கண்டுபிடிக்கிறார்.

தோத்தான் எகிப்துக்குப் போகும் பெருவழிப் பாதையிலுள்ளது. கிழக்கிலிருந்து பயணம் செய்கிறவர்கள் இந்த ஊரின் வழியாகச் செல்வார்கள் (ஆதி 37:17,28).

யோசேப்பு தன் சகோதரரை தேடிக்கண்டுபிடித்து, அவருடைய க்ஷேமம் எப்படி என்றும், ஆடுகள் எப்படியிருக்கிறது என்றும் பார்ப்பதற்கு வந்திருக்கிறார். ஆனால் யோசேப்பின் சகோதரர்களோ அவர்மீது இன்னும் கோபமாயும், பொறாமையாயும் இருக்கிறார்கள்.

யோசேப்பு தூரத்தில் வரும்போதே, அவருடைய சகோதரர்கள் அவரைக் காண்கிறார்கள். யோசேப்பு தங்களுக்கு சமீபமாய் வரும் முன்னே, அவரைக் கொலைசெய்யும்படி அவர்கள் சதியோசனைபண்ணுகிறார்கள். யோசேப்பின் சகோதரர் நன்மைக்கு தீமை செய்கிறார்கள். யோசேப்புக்கு தன் சகோதரர்மேல் கோபமோ பொறாமையோ இல்லை. ஆனால் அவர்கள் யோசேப்பை கொலைசெய்யும்படி சதிஆலோசனைபண்ணுகிறார்கள்.

யோசேப்பின் சகோதரர் ஒருவரை ஒருவர் நோக்கி, "இதோ, சொப்பனக்காரன் வருகிறான். நாம் அவனைக் கொன்று, இந்தக் குழிகள் ஒன்றிலே அவனைப் போட்டு, ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்தது என்று சொல்லுவோம் வாருங்கள் அவனுடைய சொப்பனங்கள் எப்படி முடியும் பார்ப்போம்" (ஆதி 37:19,20) என்று சொல்லுகிறார்கள்.

யோசேப்பின் பலவருண அங்கியை வைத்து, யோசேப்பின் சகோதரர் அவரை அடையாளம் கண்டு கொள்கிறார்கள்.

"சொப்பனக்காரன்" என்னும் வார்த்தையில் இரண்டு எபிரெய வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒன்று பாகால் மற்றொன்று கலோமே என்பதாகும். இதற்கு "சொப்பனங்களுக்குச் சொந்தக்காரன்" என்று பொருள். யோசேப்பிடம் சொப்பனங்களும், சொப்பனங்களுக்கு அர்த்தம் கூறும் தெய்வீக வரமும் இருக்கிறது. (ஆதி 37; ஆதி 40-41) யோசேப்பைப் போன்று தானியேலும் சொப்பனங்களுக்கு அர்த்தம் சொன்னார். (தானி 1:17).

யோசேப்பிற்கு எதிராக அவருடைய சகோதரர்கள் தீமையான காரியங்களைச் செய்வதற்குச் சதி பண்ணுகிறார்கள் (ஆதி 37:20-21) அவர்கள் யோசேப்பின்மீது மிகுந்த பொறாமையும், கோபமும் கொண்டிருக்கிறார்கள்.

யோசேப்பு சொப்பனங்களைப் பற்றி கூறியது அவர்களுடைய உள்ளத்தின் ஆழத்தில் பதிந்திருக்கிறது. பொறாமை, சுயஇச்சை, பெருமை ஆகியவை துன்மார்க்கத்திற்கு வேராக இருக்கிறது.

யோசேப்பின் சகோதரருக்கு, தங்களைப் பார்க்க வந்திருக்கும் தங்கள் சகோதரன் யோசேப்பை வரவேற்க வேண்டும் என்னும் எண்ணமில்லை. தங்களுடைய அன்பையும், பாசத்தையும் அவரோடு பரிமாறிக்கொள்ளவேண்டும் என்னும் ஆர்வமுமில்லை. அவர்கள் யோசேப்பைக் கொன்றுபோடவேண்டும் என்றும், தங்களுடைய கொலைப்பழியை மறைக்கவேண்டும் என்றும் யோசனை பண்ணுகிறார்கள். துன்மார்க்கருடைய யோசனை எப்போதும் மோசமானதாகவே இருக்கும்.

யோசேப்பின் சகோதரரில் ரூபன் எல்லோருக்கும் மூத்தவனாயிருக்கிறான். யோசேப்பின்மீதுகோபம் வரவேண்டுமென்றால், அந்தக்கோபம் ரூபனுக்குத்தான் அதிகமாய் வரவேண்டும். யாக்கோபின் புத்திரரில் ரூபனே சேஷ்டபுத்திரன்.

ரூபன் தன் தந்தையின் மறுமனையாட்டியுடன் சயனித்து விபசாரம் பண்ணினான். (ஆதி 35:22). தான் செய்த தவறுக்கு பிராயசித்தம் தேடுவதற்காகவும், தன் தந்தையிடம் ஏற்கெனவே கெட்டுப்போன தன்னுடைய பெயரை மறுபடியும் நல்ல பெயராக மாற்றுவதற்காகவும் ரூபன் யோசேப்பை இந்தப் பிரச்சனையிலிருந்து விடுவிக்க முயற்சி செய்கிறான். ரூபன் தன்னால் முடிந்ததை செய்கிறான்.

ரூபன் யோசேப்பை தகப்பனிடத்திற்கு திரும்பவும் கொண்டுபோக மனதுள்ளவனாக இருக்கிறான். (ஆதி 37:22) ஆனால் அவன் சகோதரர்களோ ரூபனைப் பற்றி தெரிந்து கொண்டு, ரூபனையும் ஏமாற்றி விடுகிறார்கள். (ஆதி 42:22) ரூபன் யாக்கோபின் மூத்த குமாரன். குடும்பத்தில் இவனுக்கு முக்கிய பொறுப்பு இருக்கிறது. தன் சகோதரர் தவறு செய்யும்போது மூத்த சகோதரன் அவர்களைக் கண்டித்து திருத்தவேண்டும்.

ரூபன் யோசேப்பைத் தன் சகோதரர் கையிலிருந்து உறுதியுடன் போராடி மீட்டிருக்க வேண்டும். ஆனால் ரூபன் இதில் எதையும் சரியாகச் செய்யவில்லை. யாக்கோபு தன் இறுதி காலத்தில் ரூபன்மீது பழி சுமத்துகிறார் (ஆதி 49:4).

யாக்கோபின் புத்திரர் யோசேப்பை கொலைசெய்யும்படி சதிஆலோசனை பண்ணும்போது, ரூபன் அந்த யோசனைக்கு எதிர்த்து நிற்கிறான். யோசேப்பை தன் சகோதரனுடைய கைக்கு தப்புவித்து, அவரைத் திரும்பவும் யாக்கோபிடத்திற்கு கொண்டுபோகவேண்டும் என்பது ரூபனுடைய விருப்பமாயிருக்கிறது.

ரூபன் தன் சகோதரரை நோக்கி, "அவனைக் கொல்ல வேண்டாம், நீங்கள் இரத்தம் சிந்தலாகாது; நீங்கள் அவன்மேல் கை வையாமல், அவனை வனாந்தரத்திலுள்ள இந்தக் குழியிலே போட்டுவிடுங்கள்" (ஆதி 37:22) என்று சொல்லுகிறான். ரூபன் இவ்விதமாய் யோசேப்பை தன் சகோதரர்கள் கைக்குத் தப்புவிக்கிறான்.

யோசேப்பின் சகோதரர்கள், யோசேப்பை கொலைசெய்யும்படி சதியோசனைபண்ணினாலும், அவர்களால் யோசேப்பை கொலைசெய்ய முடியவில்லை. யோசேப்பு இப்போது உயிரோடிருக்க வேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக யாராலும் கிரியை செய்ய முடியாது. யோசேப்பின் சகோதரர் அவரைக் கொலைசெய்யும்படி சதியோசனை பண்ணுகிறார்கள். கர்த்தரோ யோசேப்பின் மூலமாக, ஏராளமான ஜனங்கள் பஞ்சகாலத்திலே உயிர்பிழைக்க வேண்டுமென்று சித்தமுள்ளவராயிருக்கிறார்.

யோசேப்புக்கு ஆபத்து ஆதி 37:23-30

ஆதி 37:23. யோசேப்பு தன் சகோதரரிடத்தில் சேர்ந்தபோது, யோசேப்பு உடுத்திக்கொண்டிருந்த பலவருண அங்கியை அவர்கள் கழற்றி,

ஆதி 37:24. அவனை எடுத்து, அந்தக் குழியிலே போட்டார்கள்; அது தண்ணீரில்லாத வெறுங்குழியாயிருந்தது.

ஆதி 37:25. பின்பு, அவர்கள் போஜனஞ்செய்யும்படி உட்கார்ந்தார்கள்; அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுக்கும்போது, இதோ, கீலேயாத்திலிருந்து வருகிற இஸ்மவேலருடைய கூட்டத்தைக் கண்டார்கள்; அவர்கள் எகிப்துக்குக் கொண்டுபோகும்படி கந்தவர்க்கங்களையும் பிசின் தைலத்தையும் வெள்ளைப் போளத்தையும் ஒட்டகங்கள்மேல் ஏற்றிக்கொண்டு வந்தார்கள்.

ஆதி 37:26. அப்பொழுது யூதா தன் சகோதரரை நோக்கி: நாம் நம்முடைய சகோதரனைக் கொன்று, அவன் இரத்தத்தை மறைப்பதினால் லாபம் என்ன?

ஆதி 37:27. அவனை இந்த இஸ்மவேலருக்கு விற்றுப்போடுவோம் வாருங்கள்; நமது கை அவன்மேல் படாதிருப்பதாக; அவன் நம்முடைய சகோதரனும் நம்முடைய மாம்சமுமாய் இருக்கிறானே என்றான். அவன் சகோதரர் அவன் சொல்லுக்கு இணங்கினார்கள்.

ஆதி 37:28. அந்த வர்த்தகரான மீதியானியர் கடந்துபோகிறபோது, அவர்கள் யோசேப்பை அந்தக் குழியிலிருந்து தூக்கியெடுத்து, அவனை இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். அவர்கள் யோசேப்பை எகிப்திற்குக் கொண்டுபோனார்கள்.

ஆதி 37:29. பின்பு, ரூபன் அந்தக் குழியினிடத்துக்குத் திரும்பிப்போனபோது, யோசேப்பு குழியில் இல்லையென்று கண்டு, தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு,

ஆதி 37:30. தன் சகோதரரிடத்துக்குத் திரும்பி வந்து; இளைஞன் இல்லையே, ஐயோ! நான் எங்கே போவேன் என்றான்.

யோசேப்பை வனாந்தரத்திலுள்ள ஒரு குழியிலே போட்டுவிடவேண்டுமென்று, அவருடைய சகோதரர்கள் சதியோசனை பண்ணுகிறார்கள். யோசேப்புக்கு அவர்களுடைய சதியோசனையைப்பற்றி ஒன்றும் தெரியாது. யோசேப்பு தன் சகோதரருடைய க்ஷேமத்தை விசாரிப்பதற்காக அவர்களிடத்தில் வருகிறார்.

அப்பொழுது யோசேப்பின் சகோதரர்கள், அவர் உடுத்திக்கொண்டிருந்த பலவருண அங்கியை கழற்றி, யோசேப்பை எடுத்து, அந்தக் குழியிலே போடுகிறார்கள்; அது தண்ணீரில்லாத வெறுங்குழியாயிருக்கிறது. பின்பு, அவர்கள் போஜனஞ்செய்யும்படி உட்காருகிறார்கள் (ஆதி 37:23-24).

யாக்கோபு தன் குமாரர் எல்லாரிலும் யோசேப்பை அதிகமாய் நேசித்து, அவருக்கு பல வருணமான அங்கியை செய்வித்திருக்கிறார். இதனால் யோசேப்பின் சகோதரர் அவரோடே பட்சமாய்ப் பேசாமல், அவரைப் பகைக்கிறார்கள். யாக்கோபு யோசேப்புக்கு கொடுத்த பல வருண அங்கியை, அவருடைய சகோதரர்கள், கழற்றிப்போடுகிறார்கள்.

யாக்கோபின் குமாரரில் யோசேப்பும் ஒருவர். ஆனால் யோசேப்பின் சகோதரரோ அவருடைய பல வருண அங்கியை கழற்றி, அவரை யாக்கோபின் குடும்பத்திலிருந்து கழற்றிப்போடுவதுபோல, அவரை அவமானப்படுத்துகிறார்கள். யோசேப்பின் பல வருண அங்கி அவருடைய புத்திரபாகத்திற்கும், யாக்கோபு அவர்மீது வைத்திருக்கிற அதிகமான அன்புக்கு அடையாளமாயிருக்கிறது. யோசேப்பின் சகோதரரோ, அந்தப் பல வருண அங்கியை கழற்றிப்போட்டு, யோசேப்பை அவமானப்படுத்துகிறார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை கல்வாரி சிலுவையிலே அறையும்போது, அவருடைய அங்கியையும் கழற்றினார்கள். ஒருவருடைய அங்கியை கழற்றுவது, அவருடைய கனத்தையும், சிலாக்கியங்களையும், மதிப்பையும், மரியாதையையும் அவரை விட்டு கழற்றிப்போடுவதற்கு அடையாளம்.

யோசேப்பின் சகோதரர், அவர் உடுத்திக்கொண்டிருந்த பல வருண அங்கியை கழற்றி, அவரை வனாந்தரத்திலுள்ள ஒரு குழியிலே போடுகிறார்கள். அவருக்கு அங்கே போஜனம் கிடையாது. யோசேப்பு அந்தக் குழியிலே கிடந்தால், பசியினாலும் பட்டினியாலும் மரித்துப்போவார். யோசேப்பின் சகோதரரை பொறாமை ஆளுகை செய்கிறது. அன்பும் கரிசனையும் அவர்களை விட்டு நீங்கிப்போகிறது. யோசேப்பின் சகோதரர் மனிதாபிமானமில்லாமல், அவரை குழியிலே தூக்கிப்போடுகிறார்கள்.

இந்தக்குழி தண்ணீரில்லாத வெறுங்குழி. பாலஸ்தீன தேசத்தில் இதுபோன்ற குழிகள் ஏராளமாக உள்ளன. இந்தக் குழிக்குள் விழுந்தவர்களால் தாங்களாக எழும்பி மேலே வரமுடியாது. பிறர் உதவி செய்து தூக்கிவிட்டால் மட்டுமே இவர்களால் வெளியே வரமுடியும். கைதிகளை அடைத்து வைப்பதற்கு அக்காலத்தில் இக்குழிகளைப் பயன்படுத்தினார்கள். (எரே 38:6, எரே 2:13; எரே 14:3; சக 9:11;சங் 28:1)

"உக்கிரம் கொடுமையுள்ளது, கோபம் நிஷ்டூரமுள்ளது; பொறாமையோவென்றால், அதற்கு முன்னிற்கத்தக்கவன் யார்?" (நீதி 27:4).

யோசேப்பின் சகோதரர் அவருக்கு தீங்குசெய்தாலும், யோசேப்போ அவர்களுடைய க்ஷேமத்தை விசாரிப்பதற்காக வந்திருக்கிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், இந்த உலகத்திற்கு நன்மை செய்கிறவராகவே வந்தார். ஆனால் யூதர்களோ கிறிஸ்துவானவரை ஏற்றுக்கொள்ளாமல், அவரை கல்வாரி சிலுவையிலே அறைந்தார்கள்.

யோசேப்பு தன் சகோதரரைப் பார்ப்பதற்கு வந்த நோக்கம் வேறு. யோசேப்பின் சகோதரர் அவருக்கு செய்கிற காரியம் வேறு. இதுபோலவே நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும், நமக்கு நடைபெறும் காரியங்களும், தேவனுடைய நோக்கமும் ஒன்றுகொன்று வேறுபட்டு இருப்பதுபோல தெரியலாம். நாம் கர்த்தருக்காக ஊழியம் செய்தாலும், கர்த்தருடைய சித்தம் நம்முடைய ஜீவியத்தில் நிறைவேறாததுபோல தோன்றலாம். ஆனாலும் கர்த்தருடைய சித்தமே முடிவில் நிறைவேறும்.

யோசேப்பின் சகோதரர் அவரைக் குழியில்போட்டு, அவருக்காக வருத்தப்படவில்லை. தங்கள் சொந்த சகோதரனை குழியில் தூக்கிப்போட்டதற்காக அவர்கள் துக்கப்படவில்லை. அந்த சகோதரர்கள் எல்லோரும் யோசேப்பை தண்ணீரில்லாத வெறும் குழியிலே தூக்கிப்போட்டு, சிறிதும் வருத்தமில்லாமல், போஜனம் செய்யும்படி உட்காருகிறார்கள் (ஆதி 37:25).

யோசேப்பின் சகோதரருடைய மனதிலே பாவத்தைக் குறித்த குற்றவுணர்வு காணப்படவில்லை. அவர்களுடைய மனச்சாட்சி அவர்களைக் குற்றப்படுத்தவில்லை. அவர்கள் தங்கள் சகோதரனுக்காக வருத்தப்படாமல், தங்கள் போஜனத்தை ருசித்து புசிக்கிறார்கள். யோசேப்பு குழியிலே விழுந்து கிடப்பது, அவர்களுக்கு சந்தோஷமாயிருக்கிறது. அவர்கள் தங்கள் போஜனத்தை சந்தோஷமாய்ப் புசிக்கிறார்கள். பெரிய பாவம் செய்து விட்டு இறுமாப்பாய் இருக்கிறார்கள். அவர்கள் இருதயம் பாவம் செய்யுமாறு கடினப்பட்டிருக்கிறது.

யோசேப்பின் சகோதரர் தன்னை வணங்குவார்கள் என்று யோசேப்பு சொப்பனம் கண்டார். யோசேப்பு தங்களை ஆளுகை செய்வார் என்று அவருடைய சகோதரர்கள் நினைத்தார்கள். இப்போதோ அவர்கள் யோசேப்பை குழியிலே தூக்கிப்போட்டிருக்கிறார்கள். ஆகையினால் தாங்கள் எல்லோரும் யோசேப்பின் ஆளுகையிலிருந்து விடுதலை பெற்றிருப்பதாக நினைத்து, சந்தோஷமாய் போஜனம்பண்ணுகிறார்கள்.

யோசேப்பின் சகோதரர் போஜனஞ்செய்யும்படி உட்காருகிறார்கள்; அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுக்கும்போது, இதோ,கீலேயாத்திலிருந்து வருகிற இஸ்மவேலருடைய கூட்டத்தைக் காண்கிறார்கள்; அவர்கள் எகிப்துக்குக் கொண்டுபோகும்படி கந்தவர்க்கங்களையும் பிசின் தைலத்தையும் வெள்ளைப் போளத்தையும் ஒட்டகங்கள்மேல் ஏற்றிக்கொண்டு வருகிறார்கள் (ஆதி 37:25).

யோசேப்பின் சகோதரருக்கு, யோசேப்பை குழியிலே தூக்கிப்போட்டதினால் ஒரு லாபமும் கிடைக்கப்போவதில்லை. தங்களுடைய சகோதரனின் மரணத்தின் மூலமாக தங்களுக்கு ஏதாவது லாபம் கிடைக்கவேண்டுமென்று, அவர்களில் ஒருவனாகிய யூதா நினைக்கிறான்.

அப்பொழுது யூதா தன் சகோதரரை நோக்கி, "நாம் நம்முடைய சகோதரனைக் கொன்று, அவன் இரத்தத்தை மறைப்பதினால் லாபம் என்ன? அவனை இந்த இஸ்மவேலருக்கு விற்றுப்போடுவோம் வாருங்கள்; நமது கை அவன்மேல் படாதிருப்பதாக; அவன் நம்முடைய சகோதரனும் நம்முடைய மாம்சமுமாய் இருக்கிறானே" (ஆதி 37:26,27) என்று சொல்லுகிறான். யோசேப்பின் சகோதரர் யூதாவின் சொல்லுக்கு இணங்குகிறார்கள்.

யூதா சொல்லுகிற பிரகாரமாக, யோசேப்பு மெய்யாகவே, அவர்களுடைய சகோதரனாகவும், அவர்களுடைய மாம்சமாகவும் இருக்கிறார். யோசேப்பை கொன்று, அவருடைய மாம்சத்தை மறைப்பதினால், அவர்களுக்கு ஒரு லாபமும் இல்லை. யோசேப்பை இஸ்ரவேலருக்கு அடிமையாக விற்றுப்போட்டால், அவர்களுக்கு பணம் கிடைக்கும். இஸ்மவேலரும் யோசேப்பை அந்நிய தேசத்திற்கு அடிமையாக கூட்டிக்கொண்டு போய்விடுவார்கள்.

இஸ்மவேலரும், மீதியானியரும் (ஆதி 37:25-28) ஆபிரகாமிற்கு ஆகார், கெத்தூராள் ஆகியோர் மூலமாக வந்த சந்ததியார் ஆவார்கள். (ஆதி 16:11-12; ஆதி 25:2). சில பதிப்புக்களில் இஸ்மவேலர்கள் அரபியர்கள் என்று அழைக்கப் படுகிறார்கள். இதற்கான எபிரெய வார்த்தை "அராப்" என்பதாகும். இதற்கு பிணைப்படுதல் என்று பொருள். பல பிரிவினர்கள் சேர்ந்து பிணைக்கப் பட்டிருப்பதினால் இவர்களுக்கு இப்பெயர் வழங்கப்படலாயிற்று. மேலும் பாலைவனங்களில் பிரயாணம் பண்ணும்போது பாதுகாப்பின் நிமித்தமாக அவர்கள் சேர்ந்தே பிரயாணம் பண்ணுவது வழக்கம்.

பூர்வகாலத்தில் எகிப்து தேசத்திற்கும், பிற தேசங்களுக்கும் அதிகளவில் வியாபாரங்கள் நடைபெற்றன. எகிப்தியருக்குத் தேவைப்படும் பொருட்களை அரபியர்களே பல தேசங்களிலிருந்து கொண்டு வந்து விநியோகம் பண்ணுவது வழக்கம்.

எகிப்தில் அடிமைகள் வியாபாரம் நல்லமுறையில் நடைபெற்று வந்தது. அடிமைகளை நல்ல விலைக்கு எளிதில் விற்கமுடிந்தது. யோசேப்பின் சகோதரர்கள் தங்களுடைய மனச்சாட்சியைக் களங்கப்படுத்த விரும்பவில்லை. ஆகையினால் யோசேப்பை கொன்றுபோடாமல் விற்றுபோடலாம் என்று தீர்மானம் பண்ணுகிறார்கள். தேவன் இவர்கள் செய்த பாவங்களை நினைவுகூர்ந்து இவர்களுடைய பாவங்களுக்கு தக்க தண்டனையைத் தருகிறார். தாங்கள் விதைத்ததை இவர்கள் அறுக்கிறார்கள் (ஆதி 42:1-45:15; ஆதி 50:15-21).

யோசேப்பை அடிமையாக விற்றுப்போடப்பட்டால், இனிமேல் அவரால் தன்னுடைய சகோதரரை ஆளுகை செய்ய முடியாது. தங்கள் எல்லோருக்கும் லாபம் கிடைக்கும் வண்ணமாக, யோசேப்பை இஸ்மவேலருக்கு விற்றுப்போடலாம் என்று யூதா சொல்லுகிறான். அவனுடைய ஆலோசனை மற்ற சகோதரருக்கு இணக்கமாகயிருக்கிறது. யோசேப்பின் சகோதரர் இவ்வாறு ஆலோசனை பண்ணும்போது ரூபன் அவ்விடத்தில் இல்லை.

அந்த வர்த்தகரான மீதியானியர் யோசேப்பின் சகோதரரை கடந்துபோகிறார்கள். அப்போது, அவர்கள் யோசேப்பை அந்தக் குழியிலிருந்து தூக்கியெடுத்து, அவரை இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போடுகிறார்கள். அவர்கள் யோசேப்பை எகிப்திற்குக் கொண்டு போகிறார்கள் (ஆதி 37:28). யூதாவின் ஆலோசனை, அவருடைய சகோதரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுகிறது.

யோசேப்பு சுயநலமில்லாதவர். அவருடைய சகோதரர்களோ பேராசை பிடித்தவர்கள் (ஆதி 42:25-35). அவர்கள் காசுக்கு ஆசைப்பட்டு யோசேப்பை இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப் போடுகிறார்கள். இவர்களைப் போலவே யூதாஸ்காரியோத்து இயேசுகிறிஸ்துவை முப்பது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போடுகிறான்.

யோசேப்பின் சகோதரரில் ரூபன் வயதில் மூத்தவனாயிருக்கிறான். யாக்கோபு தன்னுடைய குமாரரைக்குறித்து ரூபனிடத்தில்தான் விசாரிப்பார். ரூபன் யாக்கோபின் சேஷ்டபுத்திரன்.

பின்பு, ரூபன் அந்தக் குழியினிடத்துக்குத் திரும்பிப்போனபோது, யோசேப்பு குழியில் இல்லையென்று காண்கிறான். ரூபன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, தன் சகோதரரிடத்துக்குத் திரும்பி வருகிறான்; "இளைஞன் இல்லையே, ஐயோ! நான் எங்கே போவேன்" (ஆதி 37:29,30) என்று ரூபன் தன் சகோதரரிடத்தில் கேட்கிறான்.

யோசேப்பை அவன் சகோதரர்கள் விற்று போட்டபோது, ரூபன் அங்கு இல்லை. ஆகையினால் இந்தப் பழியில் அவனுக்குப் பங்கில்லை. குழியில் யோசேப்பைத் தேடிபார்க்கிறான். அவனை அங்கு காணவில்லை. தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்கிறான். யோசேப்பை எப்படியாவது காப்பாற்றி விடவேண்டுமென்று ரூபன் முயற்சிபண்ணுகிறான் (ஆதி 37:34).

யாக்கோபு யோசேப்பைக் குறித்து ரூபனிடத்திலும் கேட்பார். யோசேப்பின் மற்ற சகோதரரிடத்திலும் கேட்பார். தங்கள் தகப்பனாருக்கு யோசேப்பைக் குறித்து என்ன சொல்லுவது என்று அவர்கள் எல்லோரும் ஒருமித்து யோசனைபண்ணி, முடிவுபண்ணுகிறார்கள்.

யாக்கோபின் துக்கம்
ஆதி 37:31-36

ஆதி 37:31. அவர்கள் யோசேப்பின் அங்கியை எடுத்து, ஒரு வெள்ளாட்டுக்கடாவை அடித்து, அந்த அங்கியை இரத்தத்திலே தோய்த்து,

ஆதி 37:32. பல வருணமான அந்த அங்கியை தங்கள் தகப்பனிடத்துக்கு அனுப்பி: இதை நாங்கள் கண்டெடுத்தோம், இது உம்முடைய குமாரன் அங்கியோ, அல்லவோ, பாரும் என்று சொல்லச்சொன்னார்கள்.

ஆதி 37:33. யாக்கோபு அதைக் கண்டு, இது என் குமாரனுடைய அங்கிதான், ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்துப் போட்டது, யோசேப்பு பீறுண்டு போனான் என்று புலம்பி,

ஆதி 37:34. தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் அரையில் இரட்டுக் கட்டிக்கொண்டு, அநேகநாள் தன் குமாரனுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான்.

ஆதி 37:35. அவனுடைய குமாரர் குமாரத்திகள் எல்லாரும் அவனுக்கு ஆறுதல் சொல்ல வந்து நின்றார்கள்; ஆனாலும் அவன் ஆறுதலுக்கு இடங்கொடாமல், நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில் பாதாளத்தில் இறங்குவேன் என்றான். இவ்விதமாய் அவனுடைய தகப்பன் அவனுக்காக அழுதுகொண்டிருந்தான்.

ஆதி 37:36. அந்த மீதியானியர் யோசேப்பை எகிப்திலே பார்வோனின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்பவனிடத்தில் விற்றார்கள்.

அவர்கள் யோசேப்பின் அங்கியை எடுத்து, ஒரு வெள்ளாட்டுக்கடாவை அடித்து, அந்த அங்கியை இரத்தத்திலே தோய்க்கிறார்கள். அவர்கள் பல வருணமான அந்த அங்கியை தங்கள் தகப்பனிடத்துக்கு அனுப்புகிறார்கள். "இதை நாங்கள் கண்டெடுத்தோம், இது உம்முடைய குமாரன் அங்கியோ, அல்லவோ, பாரும்" என்று அவர்கள் யாக்கோபுக்கு சொல்லச்சொல்லுகிறார்கள் (ஆதி 37:31,32).

யோசேப்பின் சகோதரர் அவரை கொலைசெய்யும்படி சதிஆலோசனை பண்ணினார்கள். ஆனால் யோசேப்பு தங்களுடைய சகோதரனாகவும் தங்களுடைய மாம்சமாகவும் இருப்பதினாலும், யோசேப்பை கொலைசெய்வதினால் தங்களுக்கு லாபம் ஒன்றும் கிடைக்காது என்பதினாலும், அவர்கள் யோசேப்பை கொலைசெய்யவில்லை. யோசேப்பின் சகோதரர் அவரை இஸ்மவேலர் கையிலே இருபது வெள்ளிக்காசுக்கு அடிமையாக விற்றுப்போடுகிறார்கள்.

அவர்கள் யோசேப்பின் அங்கியை எடுத்து, ஒரு வெள்ளாட்டுக்கடாவை அடித்து, அந்த அங்கியை இரத்தத்திலே தோய்க்கிறார்கள். இந்த பாவகாரியத்தில் ரூபனுக்கு எந்த அளவுக்குப் பங்குள்ளது என்று தெரியவில்லை. குற்றத்தை மறைப்பதற்கு யோசேப்பின் சகோதரர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளில் ரூபன் எப்படி பங்குபெற்றான் என்பதும் விளக்கப்படவில்லை.

யோசேப்பின் சகோதரர் பல வருணமான அந்த அங்கியை தங்கள் தகப்பனிடத்துக்கு அனுப்புகிறார்கள். யோசேப்பின் சகோதரர்கள் அங்கியை நேரடியாகக் கொண்டு வராமல் வேலைக்காரர்கள் மூலமாக அனுப்புகிறார்கள். அதன் பின்பு யோசேப்பின் சகோதரர்கள் வந்து தங்கள் தகப்பனுக்கு ஆறுதல் கூறுகிறார்கள் (ஆதி 37:35).

யோசேப்பின் சகோதரர் வேலைக்காரரிடம் "தங்கள் சகோதரரின் அங்கியா" என்று சொல்லி அனுப்புவதற்குப் பதிலாக "இது உம்முடைய குமாரன் அங்கியோ" என்று சொல்லச் சொன்னார்கள். பாவம் செய்கிறவன் தன் மனச்சாட்சியை மூடி மறைக்கிறான்.

"ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்துப் போட்டது" என்று யாக்கோபு சொல்லுகிறார். யோசேப்பின் சகோதரர்கள் துஷ்டமிருகத்தைப் பற்றிப் பேசவில்லை. யாக்கோபே இப்படியொரு முடிவுக்கு வந்து விடுகிறார். யாக்கோபு துக்கத்தோடு ஜீவிப்பதை அவருடைய பிள்ளைகளும் பார்த்துக் கொண்டு சும்மா இருந்து விடுகிறார்கள்.

யோசேப்பின் சகோதரர் இந்தப் பாவத்தை மறைப்பதற்காக, தங்கள் தகப்பனாராகிய யாக்கோபிடத்தில் பொய்சொல்லுகிறார்கள். யோசேப்பை ஒரு துஷ்டமிருகம் பட்சித்துப்போட்டது என்றும், அதனால் அவர் பீறுண்டுபோனார் என்றும் அவர்கள் யாக்கோபை நம்ப வைக்கிறார்கள். ஒரு பாவத்தை மறைப்பதற்கு அவர்கள் மற்றொரு பாவத்தை செய்கிறார்கள். யாக்கோபு தங்களை சந்தேகப்படக்கூடாது என்பதில், யோசேப்பின் சகோதரர் மிகவும் கவனமாய் செயல்படுகிறார்கள்.

நாம் பாவம் செய்யும்போது, கர்த்தருடைய சமுகத்திலே நம்முடைய பாவத்தை அறிக்கை செய்தால், நமக்கு கர்த்தருடைய இரக்கம் கிடைக்கும். சாத்தானோ நம்முடைய பாவத்தை அறிக்கை செய்வதற்கு தடையாயிருப்பான். நம்முடைய பாவத்தை மறைப்பதற்கு சாத்தான் நம்மைத் தூண்டுவான். பாவத்தை மறைக்கிறவர்கள் வாழ்வடையமாட்டார்கள்.

யோசேப்பின் சகோதரர் அவருடைய அங்கியை, யாக்கோபிடத்தில் கொடுக்கிறார்கள். யாக்கோபு அதைக் கண்டு, இது என் குமாரனுடைய அங்கிதான், ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்துப் போட்டது, யோசேப்பு பீறுண்டு போனான் என்று புலம்பி, தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் அரையில் இரட்டுக் கட்டிக்கொண்டு, அநேகநாள் தன் குமாரனுக்காகத் துக்கித்துக்கொண்டிருக்கிறார் (ஆதி 36:33,34).

யாக்கோபு தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் அரையில் இரட்டுக் கட்டிக்கொண்டிருக்கிறார். கிழக்குத் தேசத்தில் வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்வது துக்கத்திற்கு அடையாளம். பொன்னாபரணங்களையும், உயர்ந்த வஸ்திரங்களையும் களைந்து விடுவதும் இரட்டு உடுத்திக்கொள்வதும் துக்கத்திற்கு அடையாளமாகும்.

வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்வதற்கு கத்திகளைப் பயன்படுத்தினார்கள். வஸ்திரத்தின் வலது பக்கத்தில் கிழித்தால் அது சகோதரர், சகோதரி, மகன், மகள், மனைவி ஆகியோருக்காக ஏறெடுக்கும் துக்கமாகும். வஸ்திரத்தின் இடது பக்கமாக கிழித்தால் அது தந்தை, தாய், ஆகியோருக்காக ஏறெடுக்கும் துக்கமாகும்.

துக்க காலத்தில் அரையில் இரட்டு கட்டிக் கொள்ளும் வழக்கமும் இருந்தது. ஆடு அல்லது ஒட்டகத்தின் முடியினால் இரட்டு செய்தார்கள். தங்கள் வஸ்திரத்திற்கு மேலோ அல்லது உள்ளேயோ அல்லது வஸ்திரங்களுக்குப் பதிலாகவோ இரட்டு உடுத்திக் கொள்வது வழக்கம்.

பரிசுத்தவேதாகமத்தில், தங்கள் வஸ்திரங்களை கிழித்துக்கொண்ட ஒரு சிலரைப்பற்றியும், அதற்கான காரணம் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. ரூபன் - யோசேப்பு காணாமல் போனதற்காக (ஆதி 37)

2. யாக்கோபு - யோசேப்பிற்காக (ஆதி 37:34)

3. யோசுவா - வேவுகாரரின் அறிக்கைக்காக (எண் 14:6)

4. யோசுவா - பாவத்திற்காக (யோசு 7:6)

5. யெப்தா - ஆணைக்காக (நியா 11:35)

6. போர்வீரன் - தோல்விக்காக (1சாமு 4:12)

7. சாமுவேல் - சவுலுக்காக (1சாமு 15:27)

8. போர்வீரன் - தோல்விக்காக (2சாமு 1:2)

9. தாவீதும், அவன் மனுஷரும் - தோல்வியைக் கேள்விப்பட்டபோது (2சாமு 1:11-12)

10. தாமார் - தான் கெடுக்கப்பட்டதற்காக (2சாமு 13:19)

11. தாவீது - அம்னோனின் மரணத்திற்காக (2சாமு 13:31)

12. ஊசாய் - அப்சலோமுக்காக (2சாமு 15:32)

13. ஆகாப் - தன் அழிவிற்காக (1இராஜா 21:17-27)

14. எலிசா - எலியா எடுத்துக்கொள்ளப் பட்டதற்காக (2இராஜா 2:12)

15. யோராம் - துர்ச்செய்திகளுக்காக (2இராஜா 5:7-8)

16. யோராம் - தாயார் தன் பிள்ளையைத் தின்றதற்காக (2இராஜா 6:28-30)

17. அத்தாலியாள் - அவள் அழிவிற்காக (2இராஜா 11:14)

18. எலியாக்கீம், சேப்னா - எசேக்கியாவிற்கு துர்ச்செய்தியைக் கொண்டு வந்ததற்காக (2இராஜா 18:37)

19. எசேக்கியா - துர்ச்செய்தியைக் கேட்டதற்காக (2இராஜா 19:1)

20. யோசியா - நியாயப்பிரமாணத்தை கேட்டதற்காக (2இராஜா 22:11,19)

21. எஸ்றா - இஸ்ரேல் பாழாய்போனதற்காக (எஸ்றா 9:3-5)

22. மொர்தெகாய் - யூதருடைய அழிவிற்காக (எஸ் 4:1)

23. யோபு - தன் பிள்ளைகளின் மரணத்திற்காகவும், தன் ஆஸ்திகளின் அழிவிற்காகவும் (மத் 26:65; மாற்கு 14:63)

24. யோபுவின் மூன்று நண்பர்கள் - பரிதாபத்தின் நிமித்தமாக (யோபு 2:12)

25. இஸ்ரவேலர்கள் - நியாயத்தீர்ப்பிற்காக (எரே 41:5)

26. பிரதான ஆசாரியர்கள் - இயேசு கிறிஸ்து தேவதூஷணம் சொன்னார் என்று நினைத்ததற்காக (மத் 26:65; மாற்கு 14:63)

27. அப்போஸ்தலர் - தங்களுக்கு பலிகளைச் செலுத்தியதற்காக (அப் 14:14)

28. அதிகாரிகள் - பிலிப்பியில் கிறிஸ்தவ மார்க்கத்தைப் பிரசங்கம் பண்ணியதற்காக (அப் 16:22)

யாக்கோபு துக்கித்துக் கொண்டிருக்கும்போது அவருடைய குமாரர் குமாரத்திகள் எல்லோரும், அவருக்கு ஆறுதல் சொல்ல வந்து நிற்கிறார்கள். யாக்கோபின் துக்கத்திற்கு அவர்களுடைய குமாரர்களே காரணம். ஆனால் அவர்களோ உண்மையை மறைத்து யாக்கோபுக்கு முன்பாக மாய்மாலம் பண்ணுகிறார்கள்.

அவர்கள் மெய்யாகவே யாக்கோபுக்கு ஆறுதல் சொல்ல விரும்பினால், அவர்கள் யோசேப்பைபற்றிய உண்மையைச் சொல்லவேண்டும். அப்போது யாக்கோபு அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பை, கிரயம் செலுத்தி மறுபடியும் மீட்டுக்கொள்வார். ஆனால் யாக்கோபின் குமாரரோ உண்மையைச் சொல்லாமல், அவருக்கு ஆறுதல் சொல்ல வந்து நிற்கிறார்கள்.

யாக்கோபு தன் குமாரனுக்காக அநேகநாள் துக்கித்துக் கொண்டிருக்கிறார். (ஆதி 37:34) அவருடைய குமாரர்கள் யாக்கோபோடு சேர்ந்து மாய்மாலமாக அநேகநாள் துக்கித்துக் கொண்டிருக்கிறார்கள். யாக்கோபிற்கு ஒரு குமாரத்தி மட்டுமே உண்டு. இந்த வசனத்தில் குமாரத்திகள் என்று கூறப்பட்டிருப்பது தன் குமாரரின் மனைவிகளைக் குறிக்கும். யாக்கோபு தன் தந்தையை ஆட்டுத்தோலைப் பயன்படுத்தி வஞ்சித்தார் (ஆதி 27:16) இப்பொழுது யாக்கோபு ஆட்டு ரத்தத்தினால் வஞ்சிக்கப்படுகிறார்.

ஆனாலும் யாக்கோபு ஆறுதலடையவில்லை. அவர் ஆறுதலுக்கு இடங்கொடாமல், துக்கத்தோடே இருக்கிறார். யாக்கோபு தன்னுடைய குமாரரையும் குமாரத்திகளையும் நோக்கி, "நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில் பாதாளத்தில் இறங்குவேன்" (ஆதி 37:35) என்று சொல்லுகிறார். இவ்விதமாய் யோசேப்பினுடைய தகப்பன் யோசேப்புக்காக அழுதுகொண்டிருக்கிறார்.

இஸ்மவேலரும் மீதியானியரும் யோசேப்பை இருபது வெள்ளிக்காசுக்கு கிரயத்திற்கு வாங்கியிருக்கிறார்கள். அந்த மீதியானியர் யோசேப்பை எகிப்திலே பார்வோனின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்பவனிடத்தில் விற்றுப்போடுகிறார்கள் (ஆதி 37:36). யாக்கோபின் வீட்டிற்கு எகிப்து தேசம் அடிமைத்தன வீடாயிற்று.

இந்த வசனப்பகுதிகளில் மீதியானியர், இஸ்ரவேலர் ஆகிய இரண்டு வார்த்தைகளும் ஒரே பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவர்கள் ஒரே இனத்தவர்கள். அல்லது ஒரே தேசத்தில் குடியிருக்கிறவர்கள். இணைந்து வியாபாரம் செய்கிறவர்கள். (ஆதி 37:25,27,28,36; ஆதி 39:1).

மீதியானியர் யோசேப்பை எகிப்திலே பார்வோனின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்பவனிடத்தில் விற்றுப்போடுகிறார்கள். பிரதானி என்பதற்கான எபிரெய வார்த்தை "சாரேக்" என்பதாகும். இதற்கு அலி அல்லது காயடிக்கப்பட்டவன் என்று பொருள். இவன் அரண்மனையிலுள்ள பெண்கள் தங்கியிருக்கும் அந்தப்புரத்தைப் பாதுகாக்கிறவன்.

போத்திபார் ஒரு அலியாக அல்லது காயடிக்கப்பட்டவனாக இருந்த படியினால் அவனுடைய மனைவி அவனுக்கு விசுவாசமாக இல்லை. (ஆதி 39:10-13). கிழக்கு தேசத்தில் அலிகள்கூட பல மனைவிகளை விவாகம் செய்திருப்பார்கள். ஆனால் அவர்களுக்குப் புத்திரபாக்கியம் எதுவும் இருக்காது.

போத்திபார் தலையாரிகளுக்கு அதிபதியாக இருந்தார். இவன் மரண தண்டனை கொடுக்கிறவர்களுக்குத் தலைவன். சண்டாளர்களின் தலைவன். போத்திபார் ராஜாவின் பிரியத்தை நிறைவேற்றுகிறவன். ராஜாவுக்கு விரோதமாக யாராவது செயல்பட்டால், அந்த ஆளைக் கொன்றுபோடும் பொறுப்பு போத்திபாருக்கு உள்ளது.

38 அதிகாரம்

யூதாவையும் அவருடைய குடும்பத்தைப்பற்றியும் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. யாக்கோபு தன் குமாரர் எல்லோரையும் ஆசீர்வதிக்கிறார். அவர் யூதாவை ஆசீர்வதிக்கும்போது, "யூதாவே, சகோதரரால் புகழப்படுபவன் நீயே" (ஆதி 49:8) என்று சொல்லுகிறார். ஆனால் இந்த அதிகாரத்தை வாசிக்கும்போது யூதா இப்படிப்பட்ட மேன்மையான ஆசீர்வாதத்திற்கு பாத்திரவானல்ல என்பது தெரியவரும்.

யூதாவின் விவாகமும், அவருடைய குமாரரும். யூதாவின் குமாரரில் இரண்டுபேர் சீக்கிரத்தில் மரித்துப்போகிறார்கள் (ஆதி 38:1-11). யூதா தன் மருமகள் தாமாரோடு வேசித்தனம் பண்ணுகிறார் (ஆதி 38:12-23).

யூதா தன் மருமகளோடு வேசித்தனம்பண்ணியது அவருக்கே தெரியவில்லை. யூதாவின் வேசித்தனம் கண்டுபிடிக்கப்பட்டபோது அவருக்கு குழப்பமுண்டாயிற்று (ஆதி 38:24-26). யூதாவுக்கும் தாமாருக்கும் இரண்டு குமாரர் பிறக்கிறார்கள். யூதாவின் குடும்பம் இவர்கள் மூலமாக கட்டியெழுப்பப்படுகிறது (ஆதி 38:27-30).

யூதாவின் குமாரர்
ஆதி 38:1-11

ஆதி 38:1. அக்காலத்திலே யூதா தன் சகோதரரை விட்டு, அதுல்லாம் ஊரானாகிய ஈரா என்னும் ஒரு மனிதனிடத்தில் போய்ச் சேர்ந்தான்.

ஆதி 38:2. அங்கே யூதா, சூவா என்னும் பேருள்ள ஒரு கானானியனுடைய குமாரத்தியைக் கண்டு, அவளை விவாகம் பண்ணி, அவளோடே சேர்ந்தான்.

ஆதி 38:3. அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனுக்கு ஏர் என்று பேரிட்டான்.

ஆதி 38:4. அவள் மறுபடியும் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்கு ஓனான் என்று பேரிட்டாள்.

ஆதி 38:5. அவள் மறுபடியும் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சேலா என்று பேரிட்டாள்; அவள் இவனைப் பெறுகிறபோது, அவன் கெசீபிலே இருந்தான்.

ஆதி 38:6. யூதா தன் மூத்த மகனாகிய ஏர் என்பவனுக்குத் தாமார் என்னும் பேருள்ள ஒரு பெண்ணைக் கொண்டான்.

ஆதி 38:7. யூதாவின் மூத்த மகனாகிய ஏர் என்பவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாதவனாயிருந்ததினால், கர்த்தர் அவனை அழித்துப்போட்டார்.

ஆதி 38:8. அப்பொழுது யூதா ஓனானை நோக்கி: நீ உன் தமையன் மனைவியைச் சேர்ந்து, அவளை மைத்துனச் சுதந்தரமாய்ப் படைத்து, உன் தமையனுக்குச் சந்ததியை உண்டாக்கு என்றான்.

ஆதி 38:9. அந்தச் சந்ததி தன் சந்ததியாயிராதென்று ஓனான் அறிந்தபடியினாலே, அவன் தன் தமையனுடைய மனைவியைச் சேரும்போது, தன் தமையனுக்குச் சந்ததி உண்டாகாதபடிக்குத் தன் வித்தைத் தரையிலே விழவிட்டுக் கெடுத்தான்.

ஆதி 38:10. அவன் செய்தது கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருந்ததினால், அவனையும் அவர் அழித்துப்போட்டார்.

ஆதி 38:11. அப்பொழுது யூதா, தன் குமாரனாகிய சேலாவும் அவன் சகோதரர் செத்தது போலச் சாவான் என்று அஞ்சி, தன் மருமகளாகிய தாமாரை நோக்கி: என் குமாரனாகிய சேலா பெரியவனாகுமட்டும், நீ உன் தகப்பன் வீட்டிலே கைம்பெண்ணாய்த் தங்கியிரு என்று சொன்னான்; அந்தப்படியே தாமார் போய்த் தன் தகப்பன் வீட்டிலே தங்கியிருந்தாள்.

இந்த அதிகாரத்தின் முதலாவது வசனம், "அக்காலத்திலே" என்று ஆரம்பமாகிறது. காலவரிசையின் பிரகாரமாக ஆதி 33 ஆவது அதிகாரத்திற்குப் பின்பு ஆதி 38 ஆவது அதிகாரம் வரவேண்டும். யாக்கோபு ஆரானைவிட்டு புறப்பட்டு 33 வருஷங்களுக்குப் பின்பு அவர் எகிப்து தேசத்திற்குப் போனார்.

இக்காலத்தில் யூதாவின் குமாரனுடைய மனைவி மரித்துப்போகிறாள். அந்த விதவை இரட்டைப் பிள்ளைகளைப் பெறுகிறாள். யூதாவின் குமாரர்கள் பெரியவர்களாகி, திருமணமாகும் வயதிற்கு வந்திருக்கிறார்கள்.

யூதா கானானியரோடு சிநேகம் வைத்திருக்கிறார். அவர் தன்னுடைய மதியீனத்தினால் கானானிய ஸ்திரீயை விவாகம்பண்ணுகிறார்.

யூதா தன் சகோதரரை விட்டு, அதுல்லாம் ஊரானாகிய ஈரா என்னும் ஒரு மனிதனிடத்தில் போய்ச் சேருகிறார். அங்கே யூதா, சூவா என்னும் பேருள்ள ஒரு கானானியனுடைய குமாரத்தியைக் கண்டு, அவளை விவாகம் பண்ணி, அவளோடே சேருகிறார் (ஆதி 38:1,2).

யூதாவின் வரலாறு இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாற்றை விளக்குவதற்கு முக்கியமானது. ஆகையினால் தான், யூதாவின் வரலாறு இங்கு இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தைத் தொடர்ந்து, யோசேப்பின் வரலாறு வருகிறது.

அதுல்லாம் கானானியருடைய பூர்வகாலத்து தலைநகரமாகும். கானானின் தென்பகுதியில் குடியேறியிருந்த இராட்சதர்களையும் அதுல்லாம் என்னும் வார்த்தை குறிக்கும். யூதா திருமணம் செய்யும்போது அவருடைய வயது சுமார் 15 ஆகும்.

யாக்கோபு யூதாவுக்கு பெண்பார்க்கவில்லை. யூதா கானானிய ஸ்திரீயை விவாகம்பண்ணும்போது, அவர் அதுபற்றி யாக்கோபிடம் கலந்து பேசவுமில்லை. யூதா யாக்கோபின் அனுமதியில்லாமல், அவருடைய விருப்பமில்லாமல் கானானிய ஸ்திரீயை விவாகம்பண்ணுகிறார். யூதாவுக்கு தன் தகப்பனாகிய யாக்கோபைவிட, அதுல்லாம் ஊரானாகிய ஈராவே மிகவும் முக்கியமானவனாயிருக்கிறான். ஈரா ஒரு கானானியன்.

யூதாவுக்கும் சூவாவின் குமாரத்தியாகிய கானானிய ஸ்திரீக்கும் மூன்று குமாரர்கள் பிறக்கிறார்கள். அவர்களுடைய பெயர் ஏர், ஓனான், சேலா என்பதாகும்.

"அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனுக்கு ஏர் என்று பேரிட்டான். அவள் மறுபடியும் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்கு ஓனான் என்று பேரிட்டாள். அவள் மறுபடியும் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சேலா என்று பேரிட்டாள்" (ஆதி 38:3-5).

ஏர் யூதாவின் முதல் குமாரன். யூதாவின் குடும்பத்தில் விசேஷமானவன். ஏர் மரித்த பின்பு, அவனுடைய மனைவியாகிய தாமார் யூதாவோடு சேர்ந்து ஒரு குமாரனைப் பெற்றெடுக்கிறாள். அவனுக்கு பாரேஸ் என்று பெயர். தாமாரின் வழியில் இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாறு வருகிறது (மத் 1:3). ஏர் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாதவனாக இருந்தாலும், அவனைப் பற்றிய குறிப்பும், வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது. (ஆதி 49:10; ஆதி 38:9).

எருசலேமிற்கு வடமேற்கில் கெசீப், திம்னாத், அதுல்லாம் ஆகிய பட்டணங்கள் இருக்கிறது (ஆதி 38:1,5,12). யூதா இந்தப் பகுதிக்கு வந்து தங்குவது வழக்கம். ஈரா அவருடைய நண்பன். யூதா தங்குவதற்காக ஈரா அவருக்கு இடம் கொடுத்திருக்கலாம். (ஆதி 38:1-2).

யூதா அவசரப்பட்டு, தன்னுடைய இளவயதிலேயே கானானிய ஸ்திரீயை விவாகம்பண்ணிக்கொள்கிறார். விவாக விஷயத்தில் யூதா அவசரப்பட்டதுபோல, அவர் தன்னுடைய குமாரருக்கும் அவசரப்பட்டு விவாகம் செய்து வைக்கிறார். யூதாவின் குமாரர் இளவயதினராயிருக்கிறார்கள். அவர்களுக்கு தங்களையோ அல்லது தங்களுடைய குடும்பத்தையோ நிர்வாகம் பண்ணும் திறமையில்லை. இதனால் அந்தக் குடும்பத்தில் மிகப்பெரிய பாதிப்புக்கள் உண்டாயிற்று.

யூதா தன் மூத்த மகனாகிய ஏர் என்பவனுக்குத் தாமார் என்னும் பேருள்ள ஒர பெண்ணைக் கொள்கிறார். யூதாவின் மூத்த மகனாகிய ஏர் என்பவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாதவனாயிருந்ததினால், கர்த்தர் அவனை அழித்துப்போடுகிறார் (ஆதி 38:6,7). ஏர் கர்த்தருக்கும் கர்த்தருடைய பிரமாணத்திற்கும் விரோதமாகப் பாவம்செய்கிறான் பாவத்தின் சம்பளம் மரணம். ஏருக்கு மரணம் சீக்கிரத்தில் வருகிறது.

யூதாவிற்கு இப்பொழுது 30 அல்லது 31 வயது இருக்கும். ஏருக்கு 15 வயதிருக்கும். யூதா தன் மகனுக்கு தாமார் என்னும் பேருள்ள ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வைக்கிறார்.

தாமாரைப்பற்றி அதிகமாகத் தெரியவில்லை. இவள் கானானிய ஸ்திரீயாக இருக்கலாம். இவளைப் பற்றிய வரலாறு ஆதி 38:6-30; ரூத் 4:12; 1நாளா 2:4 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் இவளுடைய பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கிறது (மத் 1:3).

யூதாவின் குடும்பத்தில் ஏருக்கு அடுத்தபடியாக ஒனான் என்பவன் பிறந்திருக்கிறான். அக்காலத்து வழக்கத்தின் பிரகாரம் தமையன் இறந்துபோனால், அவனுடைய விதவை மனைவியை, அவளுடைய மைத்துனன் விவாகம்பண்ணிக் கொள்ளவேண்டும். இதற்கு மைத்துன சுதந்தரம் என்று பேர்.

அப்பொழுது, பூர்வகாலத்து வழக்கத்தின் பிரகாரம், யூதா ஒனானை நோக்கி, "நீ உன் தமையன் மனைவியைச் சேர்ந்து, அவளை மைத்துனச் சுதந்தரமாய்ப் படைத்து, உன் தமையனுக்குச் சந்ததியை உண்டாக்கு" (ஆதி 38:8) என்று சொல்லுகிறார்.

மோசேயின் பிரமாணத்தின் பிரகாரம் திருமணமாகி ஒருவன் மரித்துப்போனால், அவனுக்குப் பிள்ளையில்லையென்றால், அவனுடைய சகோதரன் அவனுடைய விதவை மனைவியை மைத்துனச் சுதந்தரமாய் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த விதவைக்கு புத்திரபாக்கியத்தைக் கொடுக்க வேண்டும். (உபா 25:5-9)

இந்தப் பழக்கத்தின் பிரகாரமாக, குடும்பத்தில் ஒருவன் பிள்ளையில்லாமல் இறந்துபோனாலும், அவனுக்கு அவனுடைய சகோதரரின் மூலமாக சந்ததிகள் உண்டாகும். இளையவன் மூத்தவனுக்கு சந்ததியை உண்டுபண்ணவேண்டும்.

மோசேயின் காலத்தில், சகோதரனுடைய விதவை மனைவியை விவாகம்பண்ணுவது பிரமாணமாயிற்று.

"சகோதரர் ஒன்றாய்க் குடியிருக்கும் போது, அவர்களில் ஒருவன் புத்திரசந்தானமில்லாமல் மரித்தால், மரித்தவனுடைய மனைவி புறத்திலிருக்கிற அந்நியனுக்கு மனைவியாகக்கூடாது; அவளுடைய புருஷனின் சகோதரன் அவளைத் தனக்கு மனைவியாகக் கொண்டு, அவளிடத்தில் சேர்ந்து, புருஷனுடைய சகோதரன் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன்" (உபா 25:5).

ஒனான் தன் தகப்பனுடைய ஆலோசனையின் பிரகாரம் தன் தமையன் மனைவியை விவாகம்பண்ணுகிறான். ஆனாலும் ஒனானுக்கும், தன் தமையன் மனைவிக்கும் பிறக்கும் குழந்தை, தன்னுடைய சந்ததியாயிராது என்பது ஒனானுக்கு தெரிந்திருக்கிறது. ஒனான் அதை விரும்பவில்லை.

தனக்கும், தன்னுடைய தமையன் மனைவிக்கும் பிறக்கும் அந்தச் சந்ததி தன் சந்ததியாயிராதென்று ஒனான் அறிந்தபடியினாலே, அவன் தன் தமையனுடைய மனைவியைச் சேரும்போது, தன் தமையனுக்குச் சந்ததி உண்டாகாதபடிக்குத் தன் வித்தைத் தரையிலே விழவிட்டுக் கெடுத்துப்போடுகிறான் (ஆதி 38:9).

ஒனான் தன் சகோதரன் மனைவியை விவாகம்பண்ண சம்மதிக்கிறான். ஆனால் அவன் தன் தமையன் மனைவியைச் சேர்ந்து, அவளை மைத்துன சுதந்தரமாய்ப் படைத்து, தன் தமையனுக்கு சந்ததியை உண்டாக்க மறுத்துவிடுகிறான். இதற்காக அவன் செய்கிற காரியம் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாததாயிருக்கிறது. ஆகையினால் கர்த்தர் ஒனானையும் அழித்துப்போடுகிறார். ஒனான் தன்னுடைய பொல்லாத செய்கையினால், தன் சரீரத்தை தீட்டுப்படுத்துகிறான்.

தனக்குப் பிறக்கும் குழந்தைக்கு ஏரின் பெயரை வைப்பது ஒனானுக்குப் பிடிக்கவில்லை. ஒனானும், ஏரும் விரோதிகளாகவே வளர்ந்தார்கள். ஏரின் பெயரை ஒனான் ஒழிக்க வேண்டுமென்று விரும்பினான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் முதலாவது பிறக்கும் குமாரனுக்கு இறந்த கணவனுடைய பெயரை வைப்பது வழக்கம் (உபா 25:6-10).

இதில் பிசாசும் தந்திரமாகக் கிரியை செய்கிறான். பிசாசின் மனதில் எப்போதும் ஸ்திரீயின் வித்தைப் பற்றிய நினைவு இருந்து கொண்டேயிருக்கிறது. அவன் ஏருக்கு சந்ததி உண்டாகாதவாறு பார்த்துக் கொள்கிறான். ஒனான் மூலமாகவும் தாமாருக்குக் குழந்தை பெறாமல் இருப்பதற்காக அவன் ஒனானின் உள்ளத்தில் வஞ்சகமாகக் கிரியை செய்கிறான். ஒனானும் தன் தமையனுடைய மனைவியைச் சேரும்போது, தன் தமையனுக்குச் சந்ததி உண்டாகாதபடிக்குத் தன் வித்தைத் தரையிலே விழவிட்டுக் கெடுக்கிறான் (ஆதி 38:3).

யூதாவுக்கு மூன்றாவது குமாரனும் இருக்கிறான். அவன் பெயர் சேலா. ஒனான் செத்துப்போனதினால், இனிமேல் சேலா தன் தமையனுடைய மனைவியைச் சேர்ந்து, அவளை மைத்துன சுதந்தரமாய்ப் படைத்து, தன் தமையனுக்கு சந்ததியை உண்டாக்கவேண்டும்.

சேலாவின் சகோதரர் இரண்டுபேரும் இளவயதிலேயே இறந்துபோனார்கள். அவர்கள் இருவரும் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாதவர்களாயிருந்தபடியினால், கர்த்தர் அவர்கள் இருவரையுமே அழித்துப்போட்டார்.

சேலாவும் தன் சகோதரரைப்போல பொல்லாதவனாயிருக்கிறான். ஆகையினால் சேலாவின் சகோதரர் செத்ததுபோல இவனும் செத்துப்போவான் என்று யூதா அஞ்சுகிறார். அவர் சேலாவை அவனுடைய இளவயதிலேயே தாமாரோடு சேர்க்க பயப்படுகிறார்.

யூதா தன் மருமகளாகிய தாமாரை நோக்கி, "என் குமாரனாகிய சேலா பெரியவனாகுமட்டும், நீ உன் தகப்பன் வீட்டிலே கைம்பெண்ணாய்த் தங்கியிரு" (ஆதி 38:11) என்று சொல்லுகிறார். அந்தப்படியே தாமார் போய்த் தன் தகப்பன் வீட்டிலே தங்கியிருக்கிறாள்.

யூதாவின் இரண்டு குமாரர்கள் மரித்துப்போனார்கள். இரண்டாம் குமாரன் மூலமாக தாமாருக்கு புத்திரபாக்கியம் கிடைக்கவில்லை. யூதா தன் மூன்றாம் குமாரனைத் தாமாருக்கு கொடுக்க வேண்டும். ஆனால் அவனும் மரித்துப்போவானோ என்று யூதா பயப்படுகிறார். சேலாவுக்கு இன்னும் திருமண வயது வரவில்லை. அவன் பெரியவனான பின்பு, அவனைத் தாமாருக்குத் தருவதாக வாக்குப் பண்ணுகிறார். அதுவரையிலும் யூதா தாமாரை அவளுடைய தகப்பன் வீட்டிலே கைம்பெண்ணாய்த் தங்கியிருக்குமாறு கூறுகிறார் (ஆதி 38:3-5).

சேலாவிற்கு திருமண வயது வந்தாலும், அவன் மரித்துப் போவான் என்று யூதா பயப்படுகிறார். யூதாவின் மனைவியும், மரித்துப் போகிறாள். (ஆதி 38:12). யூதா மூலமாக தனக்கு குழந்தை பிறப்பதற்கு தாமார் வஞ்சகமாக சதியோசனை பண்ணுகிறாள்.

யூதாவின் மூன்றாவது குமாரனாகிய சேலா, விதவையாயிருக்கிற தாமாருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறாள். சேலா பெரியவனாகும்போது, யூதா அவனை தாமாருக்கு விவாகம் செய்து வைப்பார். தாமாரும் தன் மாமனாருடைய வார்த்தையைக்கேட்டு, தன்னுடைய தகப்பன் வீட்டிலே தங்கி, சேலா பெரியவனாகும் மட்டும் காத்திருக்கிறாள்.

யூதாவும் தாமாரும்
ஆதி 38:12-23

ஆதி 38:12. அநேகநாள் சென்றபின், சூவாவின் குமாரத்தியாகிய யூதாவின் மனைவி மரித்தாள். யூதாவினுடைய துக்கம் ஆறினபின், அவன் அதுல்லாம் ஊரானாகிய தன் சிநேகிதன் ஈராவுடனே திம்னாவிலே தன் ஆடுகளை மயிர்கத்தரிக்கிறவர்களிடத்திற்குப்போனான்.

ஆதி 38:13. அப்பொழுது: உன் மாமனார் தம்முடைய ஆடுகளை மயிர்கத்தரிக்கத் திம்னாவுக்குப் போகிறார் என்று தாமாருக்கு அறிவிக்கப்பட்டது.

ஆதி 38:14. சேலா பெரியவனாகியும் தான் அவனுக்கு மனைவியாகக் கொடுக்கப்படவில்லை என்று அவள் கண்டபடியால், தன் கைம்பெண்மைக்குரிய வஸ்திரங்களைக் களைந்து போட்டு, முக்காடிட்டுத் தன்னை மூடிக்கொண்டு, திம்னாவுக்குப் போகிற வழியிலிருக்கிற நீரூற்றுகளுக்கு முன்பாக உட்கார்ந்தாள்.

ஆதி 38:15. யூதா அவளைக் கண்டு, அவள் தன் முகத்தை மூடியிருந்தபடியால், அவள் ஒரு வேசி என்று நினைத்து,

ஆதி 38:16. அந்த வழியாய் அவளிடத்தில் போய், அவள் தன் மருமகள் என்று அறியாமல்: நான் உன்னிடத்தில் சேரும்படி வருவாயா என்றான்; அதற்கு அவள்: நீர் என்னிடத்தில் சேரும்படி, எனக்கு என்ன தருவீர் என்றாள்.

ஆதி 38:17. அதற்கு அவன்: நான் மந்தையிலிருந்து ஒரு வெள்ளாட்டுக்குட்டியை அனுப்புகிறேன் என்றான். அதற்கு அவள்: நீர் அதைஅனுப்புமளவும் ஒரு அடைமானம் கொடுப்பீரா என்றாள்.

ஆதி 38:18. அப்பொழுது அவன்: நான் உனக்கு அடைமானமாக என்ன கொடுக்க வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவள்: உம்முடைய முத்திரை மோதிரமும் உம்முடைய ஆரமும் உம்முடைய கைக்கோலும் கொடுக்கவேண்டும் என்றாள். அவன் அவைகளை அவளுக்குக் கொடுத்து, அவளிடத்தில் சேர்ந்தான்; அவள் அவனாலே கர்ப்பவதியாகி,

ஆதி 38:19. எழுந்துபோய், தன் முக்காட்டைக் களைந்து, தன் கைம்பெண்மைக்குரிய வஸ்திரங்களை உடுத்திக்கொண்டாள்.

ஆதி 38:20. யூதா அந்த ஸ்திரீயினிடத்தில் இருந்த அடைமானத்தை வாங்கிக் கொண்டு வரும்படி, அதுல்லாம் ஊரானாகிய தன் சிநேகிதன் கையிலே ஒரு வெள்ளாட்டுக் குட்டியைக் கொடுத்தனுப்பினான்; அவன் அவளைக் காணாமல்,

ஆதி 38:21. அவ்விடத்து மனிதரை நோக்கி: வழியண்டை நீரூற்றுகள் அருகே இருந்த தாசி எங்கே என்று கேட்டான்; அதற்கு அவர்கள்: இங்கே தாசி இல்லை என்றார்கள்.

ஆதி 38:22. அவன் யூதாவினிடத்தில் திரும்பி வந்து: அவளைக் காணோம், அங்கே தாசி இல்லையென்று அவ்விடத்து மனிதரும் சொல்லுகிறார்கள் என்றான்.

ஆதி 38:23. அப்பொழுது யூதா: இதோ, இந்த ஆட்டுக்குட்டியை அனுப்பினேன், நீ அவளைக் காணவில்லை; நமக்கு அவகீர்த்திவராதபடிக்கு, அவள் அதைக் கொண்டு போனால் போகட்டும் என்றான்.

யூதா செய்த பாவமான காரியம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இது அவருடைய ஜீவியத்தில் நடைபெற்ற சோகமான சம்பவம். யூதா தன்னுடைய மருமகளாகிய தாமாருக்கு அநீதி செய்கிறார். யூதா திட்டமிட்டோ அல்லது தன் குடும்பத்தின்மீது அக்கரையில்லாமலோ, அவர் தன்னுடைய குமாரன் சேலாவை தாமாருக்கு விவாகம் செய்து வைக்காதிருக்கிறார். ஆனால் யூதா தாமாரோடு சேர்ந்து வேசித்தனம் பண்ணிவிடுகிறார்.

அநேகநாள் சென்றபின், சூவாவின் குமாரத்தியாகிய யூதாவின் மனைவி மரித்துப்போகிறாள். யூதாவினுடைய துக்கம் ஆறினபின், அவர் அதுல்லாம் ஊரானாகிய தன் சிநேகிதன் ஈராவுடனே திம்னாவிலே தன் ஆடுகளை மயிர்கத்தரிக்கிறவர்களிடத்திற்குப் போகிறார் (ஆதி 38:12). இந்த ஊர் தாமாரின் தகப்பனாகிய சூவா என்பவனுடைய ஊருக்கு அருகாமையிலிருக்கிறது. தாமாரும் தன் தகப்பன் வீட்டிலே இப்போது கைம்பெண்ணாகத் தங்கியிருக்கிறாள்.

யூதா திம்னாவுக்கு வந்திருக்கிற செய்தி தாமாருக்கு அறிவிக்கப்படுகிறது. யாரோ ஒருவர் தாமாரை நோக்கி, "உன் மாமனார் தம்முடைய ஆடுகளை மயிர்கத்தரிக்கத் திம்னாவுக்குப் போகிறார்" (ஆதி 38:13) என்று அறிவிக்கிறார்.

தாமார் தன்னுடைய தகப்பன் வீட்டிலே ஏமாற்றத்தோடு தங்கியிருக்கிறாள். சேலா பெரியவனான பின்பு, யூதா அவனை தாமாருக்கு விவாகம் செய்து வைப்பதாக ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். அதுவரையிலும் தாமார் தன் தகப்பன் வீட்டிலே கைம்பெண்ணாய் தங்கியிருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். தாமாரும், தன் மாமனாராகிய யூதாவின் வார்த்தையின் பிரகாரம், தன் தகப்பன் வீட்டிலே கைம்பெண்ணாய் தங்கியிருக்கிறாள்.

இப்போது சேலா பெரியவனாயிருக்கிறான். ஆனாலும் யூதா தாமாரை அவனுக்கு மனைவியாகக் கொடுக்கவில்லை. யூதா தன்னை ஏமாற்றுகிறாரோ என்னும் சந்தேகம் தாமாரின் மனதில் உண்டாயிற்று. தாமார் மறுபடியும் யூதாவின் வீட்டிலே மருமகளாய்ப் போகவேண்டுமென்று விரும்புகிறாள். அதற்காக அவள் திட்டமிட்டு செயல்படுகிறாள்.

தாமார் தன் கைம்பெண்மைக்குரிய வஸ்திரங்களைக் களைந்து போட்டு, முக்காடிட்டுத் தன்னை மூடிக் கொண்டு, திம்னாவுக்குப் போகிற வழியிலிருக்கிற நீரூற்றுகளுக்கு முன்பாக உட்காருகிறாள் (ஆதி 38:14). அக்காலத்தில் வேசிகள் இதுபோல தங்கள் முகத்தை மூடியிருப்பார்கள். தாமார் தன்னை ஒரு வேசியாகக் காண்பிக்கிறாள்.

பூர்வகாலத்தில் ஆஸ்தரோத் என்னும் தெய்வத்தை வழிபடுவதற்கு ஸ்திரீகளை தேவதாசிகளாக நியமித்து விடுவார்கள். அவர்கள் எப்போதும் முக்காடிட்டுக் கொண்டிருப்பார்கள். தாமார் ஒரு வேசியைப்போல தன்னை மூடிக் கொண்டிருக்கிறாள்.

யூதா திம்னாவிலே தன் ஆடுகளை மயிர்க்கத்தரிக்கிறவர்களிடத்திற்குப் போகும்போது, அவரோடுகூட, அவருடைய மூன்றாவது குமாரன் சேலாவும் போவார் என்று தாமார் எதிர்பார்க்கிறாள். அவள் முக்காடிட்டு, தன்னை மூடிக்கொண்டு திம்னாவுக்குப் போகிற வழியிலிருக்கிற நீரூற்றுகளுக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிறாள். அங்கே யூதாவின் மகன் சேலா வருவான் என்றும், அவன் அங்கே தன்னைப் பார்த்து, தன்னோடு சேருவான் என்றும் திட்டமிட்டு, தாமார் அங்கே உட்கார்ந்திருக்கிறாள்.

ஆனால் தாமார் எதிர்பார்த்த பிரகாரம் சேலா அங்கே வரவில்லை. சேலாவுக்கு பதிலாக யூதா அந்த வழியிலே வருகிறார். அவர் அங்கே தாமாரை காண்கிறார். தாமார் தன் முகத்தை மூடியிருந்தபடியால் அவள் ஒரு வேசி என்று யூதா நினைக்கிறார்.

யூதாவுக்கும் இப்போது மனைவியில்லை சூவாவின் குமாரத்தியாகிய யூதாவின் மனைவி ஏற்கெனவே மரித்துவிட்டாள். மனைவியில்லாத யூதா, தாமார் உட்கார்ந்திருக்கிற இடத்திற்கு அருகாமையில் போகிறார். அங்கே உட்கார்ந்திருப்பது தன் மருமகள் தாமார் என்பதை யூதா அறியவில்லை. அவள் ஒரு வேசி என்று யூதா நினைக்கிறார்.

அங்கே உட்கார்ந்திருப்பது யாராக இருந்தாலும், அவள் யூதாவின் மனைவியல்ல. ஆகையினால் அவர் மற்ற ஸ்திரீகளை இச்சையான பார்வையோடு பார்க்கக்கூடாது. பிறருடைய மனைவியை தொடவும் கூடாது. யூதாவின் பாவம் அவருடைய கண்களில் ஆரம்பமாயிற்று. யூதாவின் கண்கள் நீரூற்றுகளுக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிற தாமாரைப் பார்க்கிறது. பாவம் கண்களில் ஆரம்பமாயிற்று.

விசுவாசிகளாகிய நாம் நம்முடைய கண்களோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்ளவேண்டும். மாயையான காரியங்களை பார்க்காமல் விலகிப்போய்விடவேண்டும். நாம் கண்களின் இச்சைக்கு இடம் கொடுத்தால், அது நம்முடைய இருதயத்தையே பாதித்துவிடும்.

யூதா நீரூற்றுகளுக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிற தாமாருக்கு அருகாமையில் போய், அவளை நோக்கி, "நான் உன்னிடத்தில் சேரும்படி வருவாயா" என்று கேட்கிறார் (ஆதி 38:16). அதற்கு தாமார், தன் மாமனாரிடத்தில், "நீர் என்னிடத்தில் சேரும்படி, எனக்கு என்ன தருவீர்" என்று கேட்கிறாள்.

நீரூற்றுகளுக்கு முன்பாக உட்கார்ந்திருப்பது தன் மருமகள் என்பதை யூதா அறியவில்லை. ஆனால் தன்னோடு பேசுவது, தன்னுடைய மாமனார் என்பதை தாமார் அறிந்திருக்கிறாள். தாமார் தன் மாமனாரோடு சேரும்படிக்கு சம்மதிக்கிறாள். "நீர் என்னிடத்தில் சேரும்படி எனக்கு என்ன தருவீர்" என்று சொல்லி, தாமார் தன்னுடைய கற்பை, தன் மாமனாரிடத்தில் விலை பேசுகிறாள்.

அதற்கு யூதா தாமாரை நோக்கி, "நான் மந்தையிலிருந்து ஒரு வெள்ளாட்டுக்குட்டியை அனுப்புகிறேன்" என்று சொல்லுகிறார். அதற்கு தாமார், "நீர் அதைஅனுப்புமளவும் ஒரு அடைமானம் கொடுப்பீரா" என்று யூதாவிடம் கேட்கிறாள். அப்பொழுது யூதா, "நான் உனக்கு அடைமானமாக என்ன கொடுக்க வேண்டும்" என்று கேட்கிறார். அதற்கு தாமார், "உம்முடைய முத்திரை மோதிரமும் உம்முடைய ஆரமும் உம்முடைய கைக்கோலும் கொடுக்கவேண்டும்" என்று யூதாவிடத்தில் சொல்லுகிறாள் (ஆதி 38:17,18).

யூதா இஸ்ரவேலிலே செய்யத்தகாத பாவத்தை செய்கிறார். வேசித்தனத்திற்கு கிரயம் பேசுகிறார். தாமாரோடு வேசித்தனம் பண்ணுவதற்கு ஒரு வெள்ளாட்டுக்குட்டியை கொடுப்பதாக யூதா சொல்லுகிறார். அவர் வேசித்தனத்திற்கு கிரயம் பேசவில்லை. யூதா தன்னுடைய மருமகளின் கற்புக்கு கிரயம் பேசுகிறார்.

யூதா ஒரு ஸ்திரீயின் கற்புக்கு, ஒரு வெள்ளாட்டுக்குட்டியை மிகவும் குறைந்த கிரயமாக நிர்ணயம்பண்ணுகிறார். ஸ்திரீயின் கற்பு ஆயிரக்கணக்கான வெள்ளாட்டுக்குட்டிகளைவிட மேலானது. கற்புக்கு கிரயம் நிர்ணயிக்க முடியாது.

வேசிக்கள்ளரிடத்தில் தேவனுடைய கிருபையிருக்காது. வேசித்தனம் பண்ணுகிறவர்களின் ஆத்துமா சுத்தமாயிருக்காது. அவர்களுடைய மனச்சாட்சியிலும் அமைதியிருக்காது. வேசிக்கள்ளர்கள் பரலோக ராஜ்யத்திற்கு அந்நியராயிருப்பார்கள்.

யூதா தாமாரோடு வேசித்தனம்பண்ணுவதற்கு, ஒரு வெள்ளாட்டுக்குட்டியை கிரயமாகப் பேசினாலும், அதைக் கொடுப்பதற்கு இப்போது அவரிடத்தில் வெள்ளாடு எதுவுமில்லை. அவருடைய ஆடுகள் மந்தையிலிருக்கிறது. யூதாவிடத்தில் இப்போது ஒரு முத்திரை மோதிரமும், ஒரு ஆரமும், ஒரு கைக்கோலும் இருக்கிறது. யூதா தன்னிடத்திலுள்ள இந்தப் பொருட்களை, தாமாருக்கு அடைமானமாகக் கொடுக்க சம்மதிக்கிறார்.

முத்திரை மோதிரத்தில் அதற்கு உரியவருடைய பெயர் பதிக்கப்பட்டிருக்கும். ஒரு மனுஷனுடைய உடமைகளுக்கு இது ஆதாரம். கையொப்பம் இடும்போது இந்த முத்திரையையும் பதிக்க வேண்டும். முத்திரை மோதிரத்தைக் காணாமல் போய்விடாதவாறு பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும். முத்திரை மோதிரம் வேறொருவருடைய கையில் கிடைத்தால் அவர் அதைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் தன்னுடைய முத்திரை மோதிரத்தை உடனே வாங்கி வருவதற்கு யூதா ஏற்பாடு பண்ணுகிறார் (ஆதி 38:20-23).

கைகளில் ஆரம் அணிவது அவர்களுடைய ஐசுவரியத்தையும், அந்தஸ்தையும் காண்பிக்கும். சில சமயங்களில் முத்திரை மோதிரம் ஆரத்தோடு சேர்ந்திருக்கும்.

கிழக்கு தேசங்களில் முக்கியமான புருஷர்கள் தங்கள் பெயர் பதித்த கைக்கோல்களைப் பயன்படுத்துவார்கள். தன் மருமகள் தாமார் தன்னை வஞ்சித்தது தெரியாமல், தன்னைப் பற்றிய அடையாளங்கள் எல்லாவற்றையும் யூதா அவளிடம் அடகு வைத்து விட்டு வந்துவிடுகிறார் (ஆதி 38:11-14).

யூதா, வெள்ளாட்டுக்குட்டிக்குப் பதிலாக, இந்தப் பொருட்களை தாமாருக்கு அடைமானமாகக் கொடுத்து, அவளிடத்தில் சேருகிறார். தாமார் யூதாவாலே கர்ப்பவதியாகிறாள். தான் சேர்ந்தது, தன்னுடைய மருமகளாகிய தாமாரோடே என்பதை யூதா அறியாதிருக்கிறார். தாமார் தன் கைம்பெண்மைக்குரிய வஸ்திரங்களை களைந்துபோட்டு, தன்னை முக்காடிட்டு மூடிக்கொண்டபடியினால், அவள் தன் மருமகள் என்பதை யூதா ஒருவேளை அறியாமலிருந்திருக்கலாம்.

இந்த சம்பவம் நடைபெற்ற பின்பு, தாமார் எழுந்துபோய், தன் முக்காட்டைக் களைந்து, தன் கைம்பெண்மைக்குரிய வஸ்திரங்களை உடுத்திக்கொள்கிறாள் (ஆதி 38:19).

யூதா வேசித்தனம்பண்ணி பாவம் செய்தாலும், அவர் தாமாருக்கு சொன்ன வார்த்தையில் உண்மையுள்ளவராயிருக்கிறார். தன்னுடைய முத்திரை மோதிரத்தையும், ஆரத்தையும், கைக்கோலையும் தாமாருக்கு அடைமானமாகக் கொடுத்திருக்கிறார். தான் அடைமானமாகக் கொடுத்ததை திருப்பிக்கொள்ளவேண்டுமென்று யூதா விரும்புகிறார்.

யூதா அந்த ஸ்திரீயினிடத்தில் இருந்த அடைமானத்தை வாங்கிக் கொண்டு வரும்படி, அதுல்லாம் ஊரானாகிய தன் சிநேகிதன் கையிலே ஒரு வெள்ளாட்டுக் குட்டியைக் கொடுத்தனுப்புகிறார்; அவன் திம்னாவுக்கு போகிற வழியிலிருக்கிற நீரூற்றுகளுக்கு முன்பாக அவளைத் தேடிப்பார்க்கிறான். ஆனால் அவனால் அவளை அங்கு காண முடியவில்லை (ஆதி 38:20).

அந்த மனுஷன் அவ்விடத்து மனிதரை நோக்கி, "வழியண்டை நீரூற்றுகள் அருகே இருந்த தாசி எங்கே" என்று கேட்கிறான்; அதற்கு அவர்கள், "இங்கே தாசி இல்லை" என்று சொல்லுகிறார்கள். அவன் யூதாவினிடத்தில் திரும்பி வந்து, "அவளைக் காணோம், அங்கே தாசி இல்லையென்று அவ்விடத்து மனிதரும் சொல்லுகிறார்கள்" (ஆதி 38:21,22) என்று சொல்லுகிறான்.

யூதா தாமாரிடத்தில் தன்னுடைய முத்திரை மோதிரத்தையும், தன்னுடைய ஆரத்தையும், தன்னுடைய கைக்கோலையும் அடைமானமாகக் கொடுத்திருக்கிறார். இவையெல்லாம் இப்போது தாமாரிடத்தில் இருக்கிறது. ஆனால் யூதாவால் தாமாரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அப்போது யூதா, "இதோ, இந்த ஆட்டுக்குட்டியை அனுப்பினேன், நீ அவளைக் காணவில்லை; நமக்கு அவகீர்த்திவராதபடிக்கு, அவள் அதைக் கொண்டு போனால் போகட்டும்" (ஆதி 38:23) என்று சொல்லிவிடுகிறார்.

யூதா தனக்கு அவகீர்த்தி வரக்கூடாது என்று எதிர்பார்க்கிறார். யூதா தன்னுடைய அந்தஸ்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். அவருடைய ஆத்துமா பாவத்தினால் கறைபட்டிருக்கிறது. அவர் கர்த்தருக்கு முன்பாக அவமானப்படவேண்டும். யூதாவுக்கோ தன்னுடைய பாவத்தைக்குறித்து குற்றவுணர்வு ஏற்படவில்லை. கர்த்தருடைய சமுகத்திலே தன்னுடைய பாவத்திற்கு மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு பதிலாக, யூதா தனக்கு அவகீர்த்தி வரக்கூடாது என்பதில் அக்கறை காண்பிக்கிறார்.

பாரேஸ், சேரா
ஆதி 38:24-30

ஆதி 38:24. ஏறக்குறைய மூன்றுமாதம் சென்றபின்பு உன் மருமகளாகிய தாமார் வேசித்தனம் பண்ணினாள், அந்த வேசித்தனத்தினால் கர்ப்பவதியுமானாள் என்று யூதாவுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது யூதா: அவளை வெளியே கொண்டுவாருங்கள், அவள் சுட்டெரிக்கப்படவேண்டும் என்றான்.

ஆதி 38:25. அவள் வெளியே கொண்டுவரப்பட்டபோது, அவள் தன் மாமனிடத்துக்கு அந்த அடைமானத்தை அனுப்பி: இந்தப் பொருள்களை உடையவன் எவனோ அவனாலே நான் கர்ப்பவதியானேன்; இந்த முத்திரை மோதிரமும் இந்த ஆரமும் இந்தக் கோலும் யாருடையவைகள் பாரும் என்று சொல்லி அனுப்பினாள்.

ஆதி 38:26. யூதா அவைகளைப் பார்த்தறிந்து: என்னிலும் அவள் நீதியுள்ளவள்; அவளை என் குமாரனாகிய சேலாவுக்குக் கொடாமற்போனேனே என்றான். அப்புறம் அவன் அவளைச் சேரவில்லை.

ஆதி 38:27. அவளுக்குப் பிரசவகாலம் வந்தபோது, அவள் கர்ப்பத்தில் இரட்டைப் பிள்ளைகள் இருந்தன.

ஆதி 38:28. அவள் பெறுகிறபோது, ஒரு பிள்ளை கையை நீட்டினது; அப்பொழுது மருத்துவச்சி அதின்கையைப் பிடித்து, அதில் சிவப்புநூலைக் கட்டி, இது முதலாவது வெளிப்பட்டது என்றாள்.

ஆதி 38:29. அது தன் கையைத் திரும்ப உள்ளே வாங்கிக் கொண்டபோது, அதின் சகோதரன் வெளிப்பட்டான். அப்பொழுது அவள்: நீ மீறிவந்ததென்ன, இந்த மீறுதல் உன்மேல் நிற்கும் என்றாள்; அதினாலே அவனுக்குப் பாரேஸ் என்று பேரிடப்பட்டது.

ஆதி 38:30. பிற்பாடு கையில் சிவப்புநூல் கட்டியிருந்த அவனுடைய தம்பி வெளிப்பட்டான்; அவனுக்கு சேரா என்று பேரிடப்பட்டது.

யூதா தாமாரிடத்தில் சேர்ந்தார். அவள் அவராலே கர்ப்பவதியானாள். தாமார் தன்னால் கர்ப்பவதியானாள் என்பது யூதாவுக்கு இன்னும் தெரியவில்லை. அவள் தன்னுடைய தகப்பன் வீட்டிலே கைம்பெண்ணாய் தங்கியிருக்கிறாள் என்று யூதா நினைத்துக்கொண்டிருக்கிறார். யூதாவின் குமாரனாகிய சேலாவும் பெரியவனாகயிருக்கிறான். யூதா தாமாரை சேலாவுக்கு மனைவியாய்க் கொடுக்க இன்னும் முயற்சி மேற்கொள்ளவில்லை.

யூதா தாமாரோடு சேர்ந்து மூன்று மாதமாயிற்று. அப்போது அவருடைய மருமகளாகிய தாமார் வேசித்தனம்பண்ணினாள் என்றும், அந்த வேசித்தனத்தினால் அவள் கர்ப்பவதியுமானாள் என்றும் யூதாவுக்கு அறிவிக்கப்படுகிறது (ஆதி 38:24).

யூதா தன் மருமகள் தாமாரைப்பற்றிய செய்தியைக்கேட்டு மிகவும் கோபப்படுகிறார். "அவளை வெளியே கொண்டு வாருங்கள், அவள் சுட்டெரிக்கப்படவேண்டும்" (ஆதி 38:24) என்று யூதா சொல்லுகிறார். யூதருடைய பிரமாணத்தின்படி தாமார் இப்போது சேலாவின் மனைவியாயிருக்கிறாள். சேலாவுக்கும் தாமாருக்கும் பிள்ளை பிறக்கவேண்டும். அது யூதாவின் மூத்தமகனாகிய ஏரின் சந்ததியாயிருக்கும்.

ஆனால் தாமாரோ இப்போது வேசித்தனத்தினால் கர்ப்பவதியாயிருக்கிறாள் என்னும் செய்தி யூதாவுக்கு அறிவிக்கப்படுகிறது. யூதா தன் குடும்பத்திற்கு தலைவராயிருக்கிறார். அவரே தன்னுடைய குடும்பத்திற்கு நியாயாதிபதி. அவர் தாமாருக்கு தண்டனை கொடுக்கிறார். தாமார் சுட்டெரிக்கப்படவேண்டுமென்று யூதா சொல்லுகிறார்.

"சுட்டெரிக்கப்படவேண்டும்" என்னும் வார்த்தைக்கு தாமாரை எரிகிற அக்கினியிலே தூக்கிப்போட்டு, அவளை உயிரோடு கொன்றுபோடவேண்டும் என்பது பொருளல்ல. அவளுடைய நெற்றியிலோ அல்லது கன்னத்திலோ தீயினால் சுட்டு ஒரு அடையாளத்தைப்போடவேண்டும். இந்த அடையாளம் அவளுடைய வேசித்தனத்திற்கு அவமான சின்னமாயிருக்கும்.

தாமார் யூதாவோடு வேசித்தனம் பண்ணினாள். ஆனால் வேசித்தனத்திற்கான தண்டனை ஸ்திரீகளுக்கு மாத்திரமே கொடுக்கப்படுகிறது. ஸ்திரீகளோடு வேசித்தனம் பண்ணுகிற புருஷர்கள் தண்டனைக்கு தப்பிக்கிறார்கள்.

யூதா தாமாரோடு வேசித்தனம்பண்ணினாலும், யூதாவே தாமாருக்கு தண்டனை கொடுக்கிறார். அந்தத் தண்டனையை தாமார் அனுபவிக்கவேண்டுமென்று அக்காலத்து சமுதயத்தார் எதிர்பார்க்கிறார்கள்.

நாம் மற்றவர்களை குற்றவாளிகளாக நியாயந்தீர்ப்பதற்கு முன்பாக, நம்மை நாமே சோதித்தறியவேண்டும்.

"ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படியே இருக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோம 2:1,2).

"உனக்கு விசுவாசமிருந்தால் அது தேவனுக்கு முன்பாக உன்மட்டும் இருக்கட்டும். நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னைக் குற்றவாளியாக்காதவன் பாக்கியவான்" (ரோம 14:22).

யூதாவின் கட்டளைப் பிரகாரம் தாமார் வெளியே கொண்டு வரப்படுகிறாள். அப்போது தாமார், தன் மாமனிடத்துக்கு அந்த அடைமானத்தை அனுப்பி, "இந்தப் பொருள்களை உடையவன் எவனோ அவனாலே நான் கர்ப்பவதியானேன்; இந்த முத்திரை மோதிரமும் இந்த ஆரமும் இந்தக் கோலும் யாருடையவைகள் பாரும்" (ஆதி 38:25) என்று சொல்லி அனுப்புகிறாள்.

யூதா தன்னுடைய தப்பிதத்தை புரிந்துகொள்கிறார். அவருக்கு வெட்கமும் அவமானமும் உண்டாயிற்று. யூதாவே தாமாரோடு வேசித்தனம்பண்ணியவர். தாமாரின் பாவத்தில் யூதாவும் பங்காளியாயிருக்கிறார். இதற்கு யூதாவின் மோதிரமும், ஆரமும், கைக்கோலும் அடையாளமாயிருக்கிறது. தாமாரின் வயிற்றில் வளருகிற குழந்தைக்கு யூதாவே தகப்பனாயிருக்கிறார்.

தாமார் தனக்கு கொடுத்தனுப்பின முத்திரை மோதிரத்தையும், ஆரத்தையும், கோலையும் யூதா பார்த்தறிகிறார். யூதா தாமாரைப்பற்றிச் சொல்லும்போது, "என்னிலும் அவள் நீதியுள்ளவள், அவளை என் குமாரனாகிய சேலாவுக்கு கொடாமற்போனேனே" (ஆதி 38:26) என்று வேதனையோடு சொல்லுகிறார். இந்த சம்பவத்திற்கு பின்பு யூதா தாமாரை சேரவில்லை.

தாமாரின் பாவத்தில் யூதாவும் பங்காளியாக இருக்கிறார். ஆகையினால் அவளுக்குக் கொடுக்க வேண்டிய தண்டனையைத் தள்ளிவிடுகிறார். அவளுக்குத் தண்டனை கொடுத்தால் அந்தத் தண்டனையில் யூதாவிற்கும் பங்குண்டு.

தாமாருக்கு பிரசவ காலம் வருகிறது. அவளுடைய கர்ப்பத்தில் இரட்டை பிள்ளைகள் இருக்கிறது. தாமார் பிள்ளை பெறுகிறபோது, ஒரு பிள்ளை கையை நீட்டுகிறது; அப்பொழுது மருத்துவச்சி அதின் கையைப் பிடித்து, அதில் சிவப்புநூலைக் கட்டி, இது முதலாவது வெளிப்பட்டது சொல்லுகிறாள்.

அந்தப் பிள்ளை தன் கையைத் திரும்ப உள்ளே வாங்கிக் கொண்டபோது, அதின் சகோதரன் வெளிப்படுகிறான். அப்பொழுது அவள்: "நீ மீறிவந்ததென்ன, இந்த மீறுதல் உன்மேல் நிற்கும்" என்று சொல்லுகிறாள்; (ஆதி 38:29). அதினாலே அவனுக்குப் பாரேஸ் என்று பேரிடப்படுகிறது. பிற்பாடு கையில் சிவப்புநூல் கட்டியிருந்த அவனுடைய தம்பி வெளிப்படுகிறான்; அவனுக்கு சேரா என்று பேரிடப்படுகிறது (ஆதி 38:30).

"பாரேஸ்" என்னும் பெயருக்கு "மீறுதல்" என்று பொருள். தன் சகோதரனுக்கு முன்பாக இவன் பிறந்தவன். ஆதாமிலிருந்து கிறிஸ்து வரையிலுமுள்ள வம்ச வரலாற்றில் பாரேஸ் வருகிறான் (மத் 1:3). ஆதி 38 ஆவது அதிகாரம் ஒரு இணைப்புப் பகுதியாகும். மேசியா, யூதா, பாரேஸ் ஆகியோரின் வம்சத்தில் வருவதை விளக்குவதற்காக இந்தப் பகுதி இங்கு இணைப்பட்டிருக்கிறது.

"சேரா" என்னும் பெயருக்கு "வெளிச்சத்தின் உதயம்" அல்லது "விடியற் காலம்" என்று பொருள்.

யூதாவின் குடும்பம் பாரேஸ், சேரா ஆகிய பிள்ளைகள் மூலமாக கட்டியெழுப்பப்படுகிறது. யூதா தன்னுடைய பாவத்தை அங்கீகரிக்கிறார். இஸ்ரவேல் கோத்திரத்தாரில் யூதா கோத்திரத்தார் மிகவும் முக்கியமான கோத்திரத்தாராயிருக்கிறார்கள். ஆனாலும் இந்தக் கோத்திரத்தின் பூர்வீகம் பாவம் நிரம்பியதாகயிருக்கிறது.

யாக்கோபின் முதல் நான்கு குமாரர்களும் பாவம் செய்கிறார்கள். ரூபனும் யூதாவும் வேசித்தனம்பண்ணினவர்கள். சிமியோனும் லேவியும் குற்றமில்லாத இரத்தத்தை சிந்தினவர்கள். ஆனாலும் இவர்களும் இஸ்ரவேல் புத்திரருக்கு முற்பிதாக்களாயிருக்கிறார்கள். லேவி கோத்திரத்திலிருந்து ஆசாரியர்கள் வருகிறார்கள். யூதாகோத்திரத்திலிருந்து ராஜாக்கள் வருகிறார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து யூதா கோத்திரத்திலிருந்து வந்தவர்.

இஸ்ரவேல் புத்திரருடைய முற்பிதாக்களின் பாவங்கள் நமக்கு எச்சரிப்பாக சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினார்கள். கர்த்தர் தம்முடைய மன்னிக்கும் கிருபையினால் அவர்களுடைய பாவங்களை மன்னித்தார்.

39 அதிகாரம்

யோசேப்பின் சரித்திரத்தைப்பற்றி இந்த அதிகாரத்தில் மறுபடியுமாய்ச் சொல்லப்படுகிறது. யோசேப்பு போத்திபாரின் வீட்டிலே அடிமையாக வேலை செய்கிறார் (ஆதி 39:1). ஆனாலும் யோசேப்பு தன் எஜமானுடைய வீட்டிலே கனம்பண்ணப்படுகிறார். யோசேப்பு போத்திபாருக்கு உண்டான எல்லாவற்றிற்கும் விசாரணை கர்த்தனாகயிருக்கிறார் (ஆதி 39:2-6).

போத்திபாரின் மனைவி யோசேப்பின்மேல் கண்போட்டு, அவரை தன்னோடே சயனிக்குமாறு சொல்லுகிறாள். கர்த்தருடைய பெரிதான கிருபையினால் யோசேப்பு இந்த சோதனைக்கும், அசுத்தத்திற்கும் தப்புவிக்கப்படுகிறார் (ஆதி 39:7-12).

யோசேப்பின்மீது பொய்யான குற்றம் சுமத்தப்படுகிறது (ஆதி 39:13-18). யோசேப்பு சிறையிலடைக்கப்படுகிறார் (ஆதி 39:19,20). யோசேப்பு சிறையிலிருந்தாலும் தேவனுடைய விசேஷித்த பிரசன்னம் அவரோடேகூட அங்கே இருக்கிறது (ஆதி 39:21-23).

போத்திபார்
ஆதி 39:1-6

ஆதி 39:1. யோசேப்பு எகிப்துக்குக் கொண்டு போகப்பட்டான். பார்வோனுடைய பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்னும் எகிப்து தேசத்தான் அவனை அவ்விடத்திற்குக் கொண்டுவந்த இஸ்மவேலரிடத்தில் விலைக்கு வாங்கினான்.

ஆதி 39:2. கர்த்தர் யோசேப்போடே இருந்தார்; அவன் காரியசித்தியுள்ளவனானான்; அவன் எகிப்தியனாகிய தன் எஜமானுடைய வீட்டிலே இருந்தான்.

ஆதி 39:3. கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும், அவன் எஜமான் கண்டு,

ஆதி 39:4. யோசேப்பினிடத்தில் தயவுவைத்து, அவனைத் தனக்கு ஊழியக்காரனும் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான்.

ஆதி 39:5. அவனைத் தன் வீட்டுக்கும் தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் விசாரணைக்காரனாக்கினது முதற்கொண்டு, கர்த்தர் யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்; வீட்டிலும் வெளியிலும் அவனுக்கு உண்டானவைகள் எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது.

ஆதி 39:6. ஆகையால், அவன் தனக்கு உண்டானதையெல்லாம் யோசேப்பின் கையிலே ஒப்புக் கொடுத்துவிட்டு, தான் புசிக்கிற போஜனம் தவிர தன்னிடத்திலிருந்த மற்றொன்றைக் குறித்தும் விசாரியாதிருந்தான். யோசேப்பு அழகான ரூபமும் சௌந்தரிய முகமும் உள்ளவனாயிருந்தான்.

இஸ்மவேலர் யோசேப்பை எகிப்து தேசத்திற்கு கொண்டு வருகிறார்கள். போத்திபார் என்னும் எகிப்து தேசத்தான் யோசேப்பை இஸ்மவேலரிடத்தில் விலைக்கு வாங்குகிறான். போத்திபார் என்பவன் பார்வோனுடைய பிரதானியும், தலையாரிகளுக்கு அதிபதியுமாயிருக்கிறான். கர்த்தருடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, யோசேப்பு போத்திபாரின் வீட்டிலே வந்து சேர்ந்திருக்கிறார்.

யோசேப்பை அவருடைய சகோதரர்கள் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றார்கள். போத்திபார் இஸ்மவேலரிடம் அதைவிட அதிகமான கிரயம் கொடுத்து யோசேப்பை விலைக்கு வாங்கியிருப்பான் (ஆதி 37:28).

கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. கர்த்தர் மனுஷர் மூலமாக எதை செய்யவேண்டுமென்று திட்டமிடுகிறாரோ, அதை நிச்சயமாகவே செய்து முடிப்பார். கர்த்தர் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக, மனுஷரை தகுதிப்படுத்தவும் செய்கிறார். யோசேப்பு போத்திபாரின் வீட்டில் வேலை பார்ப்பதினால், அவருக்கு எகிப்தியரோடு பழக்கமுண்டாயிற்று.

கர்த்தர் யோசேப்போடே இருக்கிறார்; யோசேப்பு காரியசித்தியுள்ளவராயிருக்கிறார்; அவர் எகிப்தியனாகிய தன் எஜமானுடைய வீட்டிலே இருக்கிறார். கர்த்தர் யோசேப்போடே இருக்கிறார் என்றும், அவர் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும், அவருடைய எஜமான் போத்திபார் காண்கிறார் (ஆதி 39:2,3).

கர்த்தர் யோசேப்பை ஆசீர்வதிக்கிறார். அவர் ஒரு வீட்டிலே வேலைக்காரராயிருந்தாலும், கர்த்தருடைய ஆசீர்வாதம் யோசேப்புக்கு தாராளமாயும், அற்புதமாயும் கிடைத்திருக்கிறது. கர்த்தர் யோசேப்பை செழிக்கப்பண்ணுகிறார். யோசேப்பு இப்போது போத்திபாரின் வீட்டிலே வேலைக்காரராகவே இருக்கிறார். அவர் சாதாரணமான வீட்டு வேலைகளை செய்கிற வேலைக்காரர். அந்த வேலையிலும் யோசேப்பு உண்மையுள்ளவராயிருக்கிறார்.

கர்த்தர் யோசேப்போடே இருக்கிறார். கர்த்தர் ஒருவரோடு இருக்கும்போது அவர் காரியசித்தியுள்ளவராக இருப்பார். அவர் செய்வதெல்லாம் வாய்க்கும். அவருடைய கைகளின் பிரயாசங்களையெல்லாம் கர்த்தர் ஆசீர்வதிப்பார் (ஆதி 28:15).

பரலோகத்திலிருந்து தேவனுடைய விசேஷித்த ஆசீர்வாதம் யோசேப்புக்கு கிடைக்கிறது. ஆகையினால் யோசேப்பு காரியசித்தியுள்ளவராயிருக்கிறார். அவர் எந்த வேலையை செய்தாலும், அந்த வேலையை பொறுப்பாயும், நேர்த்தியாயும் செய்கிறார்.

கர்த்தர் யோசேப்போடே இருந்து, அவரை ஆசீர்வதிக்கிறார். இதனால் யோசேப்பு காரியசித்தியுள்ளவராகிறார். பரிசுத்த வேதாகமத்தில் தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்ட ஒரு சிலரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. யோசேப்பு (ஆதி 39:2-3,23; ஆதி 41:40-44)
2. யோசுவா (யோசு 1:7; யோசு 12:1-24; யோசு 24:15)
3. தாவீது (2சாமு 5:10; சங் 30:6)
4. சாலொமோன் (1இராஜா 3:13; 1இராஜா 4:1-34; 1இராஜா 10:7)
5. உசியா (2நாளா 26:5)
6. எசேக்கியா (2நாளா 31:21; 2நாளா 32:30)
7. தானியேல் (தானி 6:28)
8. மேசியா (ஏசா 53:10; எரே 23:4)

பரிசுத்த வேதாகமத்தில் தேவஆசீர்வாதம் பெறுவதற்கு ஒரு சில நிபந்தனைகளும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. தேவன் அந்த மனுஷனோடு இருக்க வேண்டும். (ஆதி 39:1-3,23; எரே 20:11)
2. மனுஷன் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். (உபா 28:1-14; உபா 29:9; 1இராஜா 2:3; 1நாளா 22:13)
3. தேவனையும், அவருடைய வார்த்தையையும் தியானிக்க வேண்டும். (யோசு 1:8; சங் 1:2-3)
4. தேவனிடத்தில் விசுவாசம் வைத்திருக்க வேண்டும். (2நாளா 20:20; நெகே 2:20)
5. தேவனைத் தேடவேண்டும் (2நாளா 26:5; எரே 10:21)

6. இஸ்ரவேலுக்கு நன்மை செய்ய வேண்டும். (ஆதி 12:1-3; சங் 122:6)

7. அந்நியரை உபசரிக்க வேண்டும். (லூக்கா 6:38; 2கொரி 8:15)

தேவஆசீர்வாதத்தின் வாக்குத்தத்தங்கள் ஆதி 24:40; உபா 29:9; சங் 1:3; சங் 122:6; ஏசா 55:11; 3யோவான் 1:2 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

பரிசுத்த வேதாகமத்தில் தேவஆசீர்வாதம் பெறமுடியாமல் போவதற்கு காரணங்களும்சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணுதல். (உபா 28:29)

2. பாவங்களை மூடி மறைத்தல் (நீதி 28:13)

3. தேவனோடு யுத்தம் பண்ணுதல். (ஏசா 54:17)

யோசேப்பின் சகோதரர் அவருக்கு ஏராளமான தீங்குகளை செய்தார்கள். அவர்கள் யோசேப்பு உடுத்தியிருந்த பல வருண அங்கியை, அவருடைய சரீரத்திலிருந்து கழற்றிப்போட்டார்கள். கர்த்தரோ யோசேப்புக்கு ஞானத்தையும், கிருபையையும் உடுத்துவிக்கிறார். யோசேப்பின் சகோதரரால் கர்த்தர் கொடுக்கிற இந்த விசேஷித்த கிருபைகளை, யோசேப்பை விட்டு கழற்றிப்போட முடியவில்லை.

யோசேப்பின் சகோதரர், தங்கள் தகப்பனாராகிய ஈசாக்கோடுகூட கானான் தேசத்திலிருக்கிறார்கள். யோசேப்போ எகிப்து தேசத்தில் தனியாயிருக்கிறார். யோசேப்பு தன் சகோதரரைவிட்டுப் பிரிந்து, தனியாயிருந்தாலும், அவர் கர்த்தரைவிட்டுப் பிரிந்திருக்கவில்லை. கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் யோசேப்போடு கூட தங்கியிருக்கிறது.

யோசேப்புக்கு தன் தகப்பனாராகிய யாக்கோபின் வீட்டில் தங்கியிருக்கும் கிருபை கிடைக்கவில்லை. அவருக்கு யாக்கோபின் அன்பும் ஆறுதலும் கிடைக்கவில்லை. ஆனாலும் கர்த்தர் யோசேப்போடு கூடயிருப்பதினால், அவருக்கு கர்த்தருடைய ஆறுதலும் ஆசீர்வாதமும் குறைவில்லாமல் தாராளமாய்க் கிடைக்கிறது.

யோசேப்பு நம்பிக்கைக்குரியவர் என்பதையும், யோசேப்பின் தேவனே மெய்யான தேவன் என்பதையும் போத்திபார் கண்டு கொள்கிறான்.

போத்திபார் யோசேப்பின் எஜமான். போத்திபாரும் யோசேப்பினிடத்தில் தயவு வைக்கிறான். அவர்மீது அன்பாயிருக்கிறான். போத்திபார் யோசேப்பை தனக்கு ஊழியக்காரனாகவும், தன் வீட்டிற்கு விசாரணைக்கர்த்தனாகவும் ஆக்குகிறான். போத்திபார் தனக்கு உண்டான யாவற்றையும் யோசேப்பின் கையிலே ஒப்புவிக்கிறான் (ஆதி 39:4).

எஜமான்கள் ஞானமுள்ளவர்களாயிருக்கும்போது, தங்களுக்கு உண்மையாய் வேலை செய்கிறவர்களை கனப்படுத்துவார்கள். தங்களுக்கு உத்தமமாய் வேலை செய்கிறவர்கள்மீது தயவு காண்பிப்பார்கள்.

கர்த்தருடைய பிரசன்னம் யாரோடு கூடயிருக்கிறதோ அவர்களுக்கு வேலை கொடுத்து, அவர்களை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கும் ஞானம் நமக்கும் பிரயோஜனமாயிருக்கும்.

"தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என் கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்; உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்" (சங் 101:6).

போத்திபார் தனக்கு உண்டான யாவற்றையும் யோசேப்பின் கையிலே ஒப்புவிக்கிறான். அவன் யோசேப்பை தன் வீட்டிற்கும் தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் விசாரணை கர்த்தனாக ஆக்குகிறான். போத்திபார் தான் செய்கிறதை அறிந்திருக்கிறான். அவன் யோசேப்பையும் அறிந்திருக்கிறான். கர்த்தர் யோசேப்போடு கூடயிருக்கிறார் என்பதையும், யோசேப்பு செய்கிற எல்லாவற்றையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்பதையும் போத்திபார் அறிந்திருக்கிறான். ஆகையினால் அவன் தனக்கு உண்டான எல்லாவற்றையும் யோசேப்பின் கையில் ஒப்புவிக்கிறான்.

போத்திபார் யோசேப்பை தன் வீட்டுக்கும் தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் விசாரணைக்காரனாக்கினது முதற்கொண்டு, கர்த்தர் யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதிக்கிறார்; வீட்டிலும் வெளியிலும் அவனுக்கு உண்டானவைகள் எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருக்கிறது *(ஆதி 39:5).*

போத்திபார் எகிப்து தேசத்தைச் சேர்ந்தவன். அவன் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவன். ஆனாலும் கர்த்தர் போத்திபாராகிய அந்த எகிப்தியனின் வீட்டை ஆசீர்வதிக்கிறார். இந்த ஆசீர்வாதம் போத்திபாரின் நிமித்தமாக அவனுடைய வீட்டிற்கு வரவில்லை. கர்த்தர் யோசேப்பின் நிமித்தம் போத்திபாரின் வீட்டை ஆசீர்வதிக்கிறார். நல்லவர்கள் எங்கே இருந்தாலும், அவர்கள் மூலமாக, அவர்கள் இருக்கிற இடங்கள் ஆசீர்வதிக்கப்படும்.

போத்திபார் தனக்கு உண்டானதையெல்லாம் யோசேப்பின் கையிலே ஒப்புக் கொடுத்துவிடுகிறான். அவன் தான் புசிக்கிற போஜனம் தவிர தன்னிடத்திலிருந்த மற்றொன்றைக் குறித்தும் யோசேப்பினிடத்தில் விசாரியாதிருக்கிறான். யோசேப்பு அழகான ரூபமும் சௌந்தரிய முகமும் உள்ளவராயிருக்கிறார் *(ஆதி 39:6).*

யோசேப்பைப்பற்றி வர்ணிப்பதற்குக் கூறப்பட்டிருக்கும் எபிரெய வார்த்தைகள் ராகேலை வர்ணிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது *(ஆதி 29:17).*

யோசேப்பின் குணநலன்கள் வரலாற்றில் கறைபடியாத பரிசுத்தமுள்ளதாக இருக்கிறது. தன்னுடைய கண்ணியத்தைப் பாதிப்பதற்கு யோசேப்பு எந்தச் சோதனையையும் அனுமதிக்க வில்லை. எந்தத் துன்பம் வந்தாலும் அவர் தேவனிடத்தில் வைத்திருந்த விசுவாசம் அசையவில்லை. துன்பம் அவரைப் பாதிக்கவில்லை. வாழ்வில் பெரிய அந்தஸ்தும், அதிகாரங்களும் வந்தபோது யோசேப்பு பெருமைப்படவில்லை.

பரிசுத்த வேதாகமத்தில் யோசேப்பைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் செய்திகளை இவ்வாறு சுருக்கமாக சொல்லலாம்:

1. யாக்கோபின் பன்னிரெண்டு குமாரர்களில் யோசேப்பு பதினொராவது குமாரர். யாக்கோபுக்கு நேசமான மனைவியின் மூலமாகப் பிறந்த முதலாவது குமாரன் *(ஆதி 30:22-26)*
2. யோசேப்பு தன் தந்தைக்குப் பிரியமானவர். *(ஆதி 37:2-3)*
3. யோசேப்பு நல்ல சுபாவம் உள்ளவர். *(ஆதி 37:2,14; ஆதி 39:7-20; ஆதி 50:15-21)*
4. சொப்பனங்களுக்கு அர்த்தம் கூறும் தெய்வீக வரமுள்ளவர். *(ஆதி 37:5-10; ஆதி 40:7-23; ஆதி 41:1-44)*
5. தேவனை விசுவாசிப்பதிலும் நம்பிக்கைக்குரியவராக இருப்பதிலும் எவ்வித குறைவும் அவரிடம் காணப்படவில்லை. *(ஆதி 37:2,13; ஆதி 39:1-23; ஆதி 40:1-23; ஆதி 41:14-50:21)*
6. யோசேப்பின் சகோதரர்கள் அவரை வெறுத்து ஒதுக்கினார்கள். *(ஆதி 37:4-33)*
7. யோசேப்பை அந்நியரிடத்தில் அடிமையாக விற்றுப் போட்டார்கள். *(ஆதி 37:28-36; ஆதி 39:1)*

8. அடிமைத்தனத்திலும், சுயாதீனத்திலும் ஆதரவான சூழ்நிலையிலும், எதிரான சூழ்நிலையிலும், அடிமையாக இருந்த போதும், எஜமானாக இருந்தபோதும் எல்லாச் சூழ்நிலைகளிலும் யோசேப்பு தன்னுடைய வாழ்க்கை முறையை அதற்கு ஏற்றவாறு சீர்படுத்திக் கொண்டார். (ஆதி 37:2-41:57)

9. தேவன் யோசேப்பை எல்லாக் காரியங்களிலும் ஆசீர்வதித்தார். (ஆதி 39:2-3,23; ஆதி 40:1-23; ஆதி 41:14-57)

10. வெற்றியிலும், தோல்வியிலும் யோசேப்பு சந்தோஷமாகவும், போதுமென்ற மனதுடனும் இருந்தார். (ஆதி 39:3-23; ஆதி 40:1-23)

11. தேவனுக்கு சிறப்பாக சாட்சி பகர்ந்தார். (ஆதி 39:3-6; ஆதி 40:8; ஆதி 41:8-36)

12. தன்னுடைய சகோதரரைத் தவிர மற்ற எல்லாருடைய கண்களிலும் யோசேப்புக்குத் தயவு கிடைத்தது. (ஆதி 39:3-13,21-23; ஆதி 41:14-44)

13. தனக்குக் கொடுக்கப்பட்ட எல்லா பொறுப்புக்களையும் யோசேப்பு சீராகவும், சிறப்பாகவும் செய்து முடித்தார் (ஆதி 37:2; ஆதி 39:3-41:57)

14. தனிப்பட்ட காரியங்களிலும், அரச காரியங்களிலும் உயர்ந்த ஸ்தானங்களில் நம்பிக்கைக்குரியவராக அமர்த்தப்பட்டார். (ஆதி 39:3-41:57)

15. தேவன் யோசேப்பின் மூலமாக இஸ்ரவேல் தேசம் முழுவதையும் ஆசீர்வதித்தார். (ஆதி 39:4-41:57)

16. யோசேப்பு அழகான ரூபமும், சௌந்தரிய முகமும் உள்ளவர் (ஆதி 39:6)

17. சோதனையை அன்றாடம் சந்தித்த போதும் அவர் தன்னுடைய நீதிநெறி பண்பைக் காத்துக் கொண்டார். (ஆதி 39:7-13)

18. நீதிக்காக துன்பம் அனுபவித்தார். (ஆதி 39:14-23)

19. அதிகமாகத் தாழ்த்தப்பட்டார். அதிகமாக உயர்த்தப்பட்டார். (ஆதி 39:14-41:57)

20. இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்தாருக்குத் தகப்பனானார். (ஆதி 41:50-52; ஆதி 48:15-22)

21. தன்னுடைய விரோதிகளை மன்னித்தார். (ஆதி 42:1-45:20; ஆதி 50:15-21)

22. யோசேப்பு இஸ்ரவேலை மரணத்திலிருந்து இரட்சித்தார். இதன் மூலமாக மேசியா வரவேண்டிய சந்ததியைப் பாதுகாத்தார் (ஆதி 45:21-47:31; ஆதி 50:20; மத் 1).

போத்திபாரின் மனைவி
ஆதி 39:7-12

ஆதி 39:7. சிலநாள் சென்றபின், அவனுடைய எஜமானின் மனைவி யோசேப்பின்மேல் கண்போட்டு, என்னோடே சயனி என்றாள்.

ஆதி 39:8. அவனோ தன் எஜமானுடைய மனைவியின் சொல்லுக்கு இணங்காமல், அவளை நோக்கி: இதோ, வீட்டிலே என்னிடத்தில் இருக்கிறவைகளில் யாதொன்றைக் குறித்தும் என் ஆண்டவன் விசாரியாமல், தமக்கு உண்டான எல்லாவற்றையும் என் கையில் ஒப்பித்திருக்கிறார்.

ஆதி 39:9. இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; நீ அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத்தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை; இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான்.

ஆதி 39:10. அவள் நித்தம் நித்தம் யோசேப்போடே இப்படிப் பேசிக்கொண்டு வந்தும், அவன் அவளுடனே சயனிக்கவும் அவளுடனே இருக்கவும் சம்மதிக்கவில்லை.

ஆதி 39:11. இப்படியிருக்கும்போது, ஒருநாள் அவன் தன் வேலையைச் செய்கிறதற்கு வீட்டுக்குள் போனான்; வீட்டு மனிதரில் ஒருவரும் வீட்டில் இல்லை.

ஆதி 39:12. அப்பொழுது அவள் அவனுடைய வஸ்திரத்தைப் பற்றிப் பிடித்து, என்னோடே சயனி என்றாள். அவனோ தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளியே ஓடிப்போனான்.

போத்திபாரின் மனைவி யோசேப்புக்கு எஜமானியாயிருக்கிறாள். அவள் துர்க்குணமுள்ள ஸ்திரீ. போத்திபாரின் மனைவி யோசேப்பின்மேல் கண்போடுகிறாள். அவள் யோசேப்பை நோக்கி, "என்னோடே சயனி" என்று சொல்லுகிறாள் (ஆதி 39:7). போத்திபாரின் மனைவி அக்கிரமக்காரியாயிருக்கிறாள். அவளுடைய மனதில் பாவத்தைக்குறித்து குற்றவுணர்வு இல்லை. அவளுடைய மனச்சாட்சி அசுத்தமாயிருக்கிறது.

போத்திபாரின் மனைவி தன் புருஷனுக்கு விரோதமாக பாவம் செய்கிறாள். அவள் யோசேப்பின்மேல் கண்போடுகிறாள். அவளுடைய பாவம் முதலாவதாக கண்ணில் ஆரம்பமாகிறது. யோசேப்பு அழகான ரூபமும், சௌந்தரிய முகமும் உள்ளவராயிருக்கிறார். போத்திபாரின் மனைவி தன்னுடைய பாவத்தை கண்கள் மூலமாக ஆரம்பிக்கிறாள். முடிவில் அது மிகப்பெரிய பாவமாக மாறுகிறது.

விசுவாசிகளாகிய நாம் நம்முடைய கண்களோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்ளவேண்டும். இல்லையென்றால் கண்களில் ஆரம்பிக்கும் பாவம், நம்முடைய இருதயத்தையும் கெடுத்துப்போடும்.

"என் கண்களோடே உடன்படிக்கைபண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்பதெப்படி?" (யோபு 31:1).

போத்திபாரின் மனைவி யோசேப்பை நோக்கி, "என்னோடே சயனி" என்று சொல்லுகிறாள். யோசேப்போ, தன் எஜமானுடைய மனைவியின் சொல்லுக்கு இணங்கவில்லை. யோசேப்பு அவளை நோக்கி: "இதோ, வீட்டிலே என்னிடத்தில் இருக்கிறவைகளில் யாதொன்றைக் குறித்தும் என் ஆண்டவன் விசாரியாமல், தமக்கு உண்டான எல்லாவற்றையும் என் கையில் ஒப்பித்திருக்கிறார். இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை" (ஆதி 39:8) என்று சொல்லுகிறார்.

யோசேப்பு, போத்தபாரின் மனைவியின் சொல்லுக்கு இணங்காமல், அவளை நோக்கி, "நீ அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத்தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை; இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி" (ஆதி 39:9) என்று சொல்லுகிறார்.

போத்திபாரின் மனைவியோ யோசேப்பு தன்னோடே சயனிக்கவேண்டுமென்று வெகுவாய் ஆசைப்படுகிறாள். அவள் நித்தம் நித்தம் யோசேப்போடே இப்படிப் பேசிக்கொண்டு வருகிறாள். யோசேப்போ அவளுடனே சயனிக்கவும் அவளுடனே இருக்கவும் சம்மதிக்கவில்லை (ஆதி 39:10).

யோசேப்புக்கு சோதனை அன்றாடம் வருகிறது. ஆயினும் அது அவரைப் பலவீனப்படுத்தவில்லை. எல்லா சூழ்நிலையிலும் யோசேப்பு போத்திபாரின் மனைவியைத் தடுக்கிறார். யோசேப்பால் அவளைச் சமாளிக்க முடியாதபோது அவர் அவளை விட்டு ஓடிப்போய் விடுகிறார் (ஆதி 39:13).

போத்திபாரின் மனைவி துன்மார்க்க குணமுள்ளவள். அவள் தன்னுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு தன்னை விற்றுப்போட்டவள். யோசேப்புக்கு அவள் மூலமாக மிகப்பெரிய சோதனை வந்திருக்கிறது.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால், யோசேப்பு போத்திபாரின் மனைவி மூலமாக தனக்கு வந்திருக்கிற சோதனைக்கு எதிர்த்து நிற்கிறார். கர்த்தர் யோசேப்புக்கு கிருபையாக கொடுத்திருக்கும் பலத்தினால், அவர் அந்த சோதனையை மேற்கொள்கிறார். யோசேப்பு போத்திபாரின் வீட்டில் நடைபெறுகிற சம்பவங்களையெல்லாம் யோசித்துப் பார்க்கிறார். தேவனுடைய வல்லமையினால் அந்த வீட்டை விட்டு ஓடிப்போவதே உத்தமமான காரியம் என்று யோசேப்பு தீர்மானிக்கிறார்.

யோசேப்பு போத்திபாரின் மனைவியோடு சயனியாமல் தப்பிப்பது, மூன்று எபிரெய வாலிபர்கள் எரிகிற அக்கினி சூளைக்கு தப்பிப்பதுபோல இருக்கிறது. யோசேப்புக்கு வந்திருக்கிற சோதனை, அவரை பலமாய்த் தாக்குகிறது. யோசேப்பின் எஜமானனுடைய மனைவியே அவரை சோதிக்கிறாள். அவள் அந்த வீட்டிற்கு எஜமானி. போத்திபாரின் வீட்டிலே அவனுடைய மனைவிக்கு மதிப்பும் மரியாதையும், அந்தஸ்தும், அதிகாரமும் இருக்கிறது.

யோசேப்பு போத்திபாரின் வீட்டிலே வேலை செய்கிறவர். அவர் தன்னுடைய எஜமானின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து எல்லா வேலைகளையும் நேர்த்தியாய்ச் செய்யவேண்டும். யோசேப்பு தன் எஜமானுக்கு கீழ்ப்படிவதுபோல, தன் எஜமானுடைய மனைவிக்கும் கீழ்ப்படியவேண்டும். ஆனால் போத்திபாரின் மனைவியோ, யோசேப்பை, தன்னோடு சயனிக்குமாறு சொல்லுகிறாள். யோசேப்பு இந்த விஷயத்தில், போத்திபாருடைய மனைவியின் வார்த்தைக்கு கீழ்ப்படிய மறுத்துவிடுகிறார்.

யோசேப்பு போத்திபாரின் ஆசை வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்தால், அவர் கர்த்தருக்கு சத்துருவாயிருப்பார். கர்த்தருடைய சமுகத்திலே யோசேப்புக்கு ஆறுதலும் ஆசீர்வாதமும் கிடைக்காது. ஒருவேளை போத்திபாரின் மனைவி யோசேப்பின்மீது பிரியமாயிருக்கலாம். கர்த்தர் நம்மீது பிரியமாயிருப்பதே நமக்கு மெய்யான ஆசீர்வாதம். கர்த்தர் நம்மீது அன்புகூருவதற்கு தடையாகயிருக்கும் எல்லா காரியங்களையும் விட்டு நாம் விலகவேண்டும்.

போத்திபாரின் வீட்டிலே எல்லா சூழ்நிலைகளும் சோதனைக்கு சாதகமாயிருக்கிறது. யோசேப்பை சோதிக்கிறவள், அவளோடுகூட அந்த வீட்டிலே இருக்கிறாள். யோசேப்பு போத்திபாரின் வீட்டிலே வேலை செய்கிறவர். அவர் தன் எஜமானுக்கு உண்மையுள்ளவராயிருக்கவேண்டும். இந்த சூழ்நிலையில் யோசேப்பு சோதனைக்கு எதிர்த்து நிற்கிறார். கர்த்தர் யோசேப்புக்கு ஜெயத்தைக் கொடுத்து, அவரைக் கனப்படுத்துகிறார்.

யோசேப்பு தன் எஜமானுக்கு துரோகம்பண்ண விரும்பவில்லை. அவர் தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்யவும் விரும்பவில்லை. யோசேப்பு பாவத்தை வெறுக்கிறார். யோசேப்பை சோதனை நெருக்கும்போது, "தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி" என்று சொல்லுகிறார்.

யோசேப்பைப்போலவே நாமும் சோதனைகளை எதிர்க்கவேண்டும். நாம் கர்த்தருக்குள் தைரியமாயும் திடமாயும் இருக்கவேண்டும். யோசேப்பு சொன்னதுபோல, நாமும், "தேவனுக்கு விரோதமாய் நான் பாவம் செய்வது எப்படி" என்று சொல்லவேண்டும். "மற்றவர்கள் பாவம் செய்தாலும், நான் பாவம் செய்வது எப்படி" என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ளவேண்டும். "மற்றவர்கள் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தாலும், நான் பாவம் செய்யமாட்டேன்" என்று விசுவாசத்தோடு சொல்லவேண்டும்.

யோசேப்பு இந்தப் பாவத்தைப்பற்றிச் சொல்லும்போது, இதை "பெரிய பொல்லாங்கு" என்று சொல்லுகிறார். மற்றவர்கள் இந்தப் பாவத்தை சாதாரண விஷயமாக நினைக்கலாம். ஆனால் நாமோ யோசேப்பைப்போல, இந்தப் பாவத்தை "பெரிய பொல்லாங்கு" என்று சொல்லவேண்டும்.

உலகப்பிரகாரமான ஜனங்கள் வேசித்தனம்பண்ணுவதற்கும், விபசாரம் பண்ணுவதற்கும் ஒரு சில காரணங்களை சொல்லுகிறார்கள். அவர்கள் சில சாக்குபோக்குகளை சொல்லி பாவத்தின் அளவையும், அதன் வேகத்தையும், அதன் தன்மையையும் குறைத்து மதிப்பிடுகிறார்கள். விசுவாசிகளாகிய நாமோ பாவத்தை, பாவம் என்றே சொல்லவேண்டும். பாவத்திற்கு வேறு பெயரைக் கொடுத்து, அதற்கு நாம் பங்காளிகளாகிவிடக்கூடாது.

"இப்படியிருக்க, நன்மையானது எனக்கு மரணமாயிற்றோ? அப்படியல்ல; பாவமே எனக்கு மரணமாயிற்று; பாவம் கற்பனையினாலே மிகுந்த பாவமுள்ளதாகும்படிக்கும், அது நன்மையானதைக் கொண்டு எனக்கு மரணத்தை உண்டாக்கினதினாலே, பாவமாகவே விளங்கும்படிக்கும் அப்படியாயிற்று" (ரோம 7:13).

போத்திபாரின் மனைவி யோசேப்பை நோக்கி, "என்னோடே சயனி" என்று சொல்லுகிறாள். யோசேப்போ இதை பெரிய பொல்லாங்கு என்று சொல்லுகிறார். இந்தப் பாவத்தை செய்வது, தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வதற்கு ஒப்பாயிருக்கும் என்று யாக்கோபு சொல்லுகிறார்.

யோசேப்பு போத்திபாரின் மனைவியோடு சயனிக்கும்போது, அவர் போத்திபாருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார். ஆனால் யோசேப்பு இந்தப் பாவத்தை செய்தால் அவர் தேவனுக்கு விரோதமாகவும், அவருடைய சுபாவத்திற்கு விரோதமாகவும், அவருடைய ஆளுகைக்கு விரோதமாகவும், அவருடைய அன்புக்கு விரோதமாகவும், அவருடைய திட்டத்திற்கு விரோதமாகவும் பாவம் செய்கிறவராயிருப்பார். கர்த்தரை நேசிக்கிறவர்கள் பாவத்தை வெறுப்பார்கள்.

யோசேப்பு போத்திபாரின் மனைவியோடே சயனியாமல், பாவத்திற்கு விலகி தன்னைக் காத்துக்கொள்கிறார். போத்திபாரின் மனைவியோ நித்தம் நித்தம் யோசேப்போடே இப்படிப் பேசிக்கொண்டு வந்தும், யோசேப்பு அவளுடனே சயனிக்கவும் அவளுடனே இருக்கவும் சம்மதிக்கவில்லை.

இப்படியிருக்கும்போது, ஒருநாள் யோசேப்பு தன் வேலையைச் செய்கிறதற்கு வீட்டுக்குள் போகிறார்; வீட்டு மனிதரில் ஒருவரும் வீட்டில் இல்லை. அப்பொழுது போத்திபாரின் மனைவி, யோசேப்பின் வஸ்திரத்தைப் பற்றிப் பிடித்து, "என்னோடே சயனி" என்று சொல்லுகிறாள். யோசேப்பு தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளியே ஓடிப்போகிறார் (ஆதி 39:11,12).

யோசேப்பு இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்படக்கூடாது என்றும், தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்யக்கூடாது என்றும் தீர்மானமாயிருக்கிறார். அவர் தன்னுடைய தீர்மானத்தில் உறுதியாயிருக்கிறார். தேவனுடைய கிருபை யோசேப்புக்கு சோதனையை மேற்கொள்ள உதவி செய்கிறது. யோசேப்பு தன்னைச் சோதிக்கிற, தன் எஜமானுடைய மனைவியைவிட்டு வெளியே ஓடிப்போகிறார்.

நாம் சோதனையை மேற்கொள்ள வேண்டுமென்றால், சோதனையோடு சகவாசம் வைத்துக்கொள்ளக்கூடாது. சோதிக்கப்படும் இடத்தில் தங்கியிருக்கவும் கூடாது. நாம் எந்த இடத்தில் சோதிக்கப்படுகிறோமோ, அந்த இடத்தைவிட்டு எவ்வளவு சீக்கிரமாய் ஓடிப்போகமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாய் ஓடிப்போய்விடவேண்டும்.

போத்திபாரின் மனைவி யோசேப்புடைய வஸ்திரத்தைப்பற்றி பிடித்து, "என்னோடே சயனி" என்று சொல்லுகிறாள். யோசேப்போ தன் ஜீவன் தப்பிக்க ஓடிப்போவதுபோல அந்த இடத்திலிருந்து ஓடிப்போகிறார். அவர் தன்னுடைய வஸ்திரத்தை தன் எஜமானுடைய மனைவியின் கையிலே விட்டுவிட்டு, அந்த இடத்தை விட்டு வெளியே ஓடிப்போகிறார். நம்முடைய வஸ்திரங்களை நாம் இழந்துபோகலாம். ஆனால் நம்முடைய நல்ல மனச்சாட்சியை நாம் இழந்துபோகக்கூடாது. நம்முடைய ஐசுவரியத்தை நாம் இழந்துபோகலாம். ஆனாலும் நம்முடைய பரிசுத்தத்தை நாம் இழந்துபோகக்கூடாது.

இரண்டாம் முறையாக யோசேப்பிற்கு அவருடைய வஸ்திரத்தினால் பிரச்சனை வருகிறது. (ஆதி 37:3-4,23, 31-32). யோசேப்பின் சகோதரர் தங்களுடைய பாவங்களை மூடுவதற்காக அவருடைய வஸ்திரத்தைப் பயன்படுத்தினார்கள். இங்கு போத்திபாரின் மனைவி யோசேப்பைக் குற்றப்படுத்துவதற்காக அவருடைய வஸ்திரத்தைப் பயன்படுத்துகிறாள்.

யோசேப்பு தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளியே ஓடிப்போகிறார். போத்திபாருடைய மனைவியின் ஆசை கோபமாக மாறிற்று. தன்னுடைய அன்பை ஏற்றுக் கொள்ளாத யோசேப்பைப் பழிவாங்க வேண்டுமென்று அவள் தீர்மானம் பண்ணுகிறாள் (உன் 8:6).

யோசேப்பின்மீது குற்றச்சாட்டு ஆதி 39:13-18

ஆதி 39:13. அவன் தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளியே ஓடிப்போனதை அவள் கண்டபோது,

ஆதி 39:14. அவள் தன் வீட்டு மனிதரைக் கூப்பிட்டு: பாருங்கள், எபிரெய மனுஷன் நம்மிடத்தில் சரசம் பண்ணும்படிக்கு அவனை நமக்குள் கொண்டுவந்தார், அவன் என்னோடே சயனிக்கும்படிக்கு என்னிடத்தில் வந்தான்; நான் மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டேன்.

ஆதி 39:15. நான் சத்தமிட்டுக் கூப்பிடுகிறதை அவன் கேட்டு, தன் வஸ்திரத்தை என்னிடத்தில் விட்டு, வெளியே ஓடிப்போய்விட்டான் என்று சொன்னாள்.

ஆதி 39:16. அவனுடைய எஜமான் வீட்டுக்கு வருமளவும் அவனுடைய வஸ்திரத்தை தன்னிடத்தில் வைத்திருந்து,

ஆதி 39:17. அவனை நோக்கி: நீர் நம்மிடத்தில் கொண்டுவந்த அந்த எபிரெய வேலைக்காரன் சரசம் பண்ணும்படிக்கு என்னிடத்தில் வந்தான்.

ஆதி 39:18. அப்பொழுது நான் சத்தமிட்டுக் கூப்பிட்டேன், அவன் தன் வஸ்திரத்தை என்னிடத்தில் விட்டு வெளியே ஓடிப் போனான் என்றாள்.

யோசேப்பு தன்னோடே சயனிக்கவேண்டுமென்று போத்திபாரின் மனைவி மேற்கொண்ட முயற்சிகளெல்லாம் வீணாய்ப்போயிற்று. அவள் யோசேப்பின் வஸ்திரத்தை பற்றி பிடித்தபோது, யோசேப்பு தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளியே ஓடிப்போகிறார். இதைப் பார்த்து போத்திபாரின் மனைவி ஏமாற்றமடைகிறாள். அவளுக்கு யோசேப்பின்மீது கோபமுண்டாயிற்று. அவள் யோசேப்பை பழிவாங்கவேண்டுமென்று திட்டமிடுகிறாள்.

போத்திபாரின் மனைவிக்கு யோசேப்பின்மீது உண்மையான அன்பு இல்லை. அவளிடத்தில் காமவிகாரம் இருக்கிறது. உண்மையான அன்பு சகலத்தையும் சகிக்கும். போத்திபாரின் மனைவியோ யோசேப்பின்மீது மோகஇச்சையோடிருக்கிறாள். அவளுடைய மோகம் இப்போது கோபமாக மாறுகிறது.

அம்னோன் தாமாரின்மீது ஆசைப்பட்டான். அவனுடைய ஆசை நிறைவேறியபோது, அவன் தாமாரை அதிகமாய் வெறுத்தான். அதுபோலவே போத்திபாரின் மனைவி யோசேப்பின்மீது ஆசைப்பட்டாள். தன்னுடைய ஆசை நிறைவேறாததை கண்டு, அவள் யோசேப்பின்மீது கோபப்படுகிறாள்.

போத்திபாரின் வீட்டில் இன்னும் அநேக வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். போத்திபாரின் மனைவி தன் வீட்டு மனிதரைக் கூப்பிட்டு, அவர்களிடத்தில் யோசேப்பின்மீது குற்றம் சொல்லுகிறாள்.

போத்திபாரின் மனைவி, தன் வீட்டு மனிதரைக் கூப்பிட்டு, "பாருங்கள், எபிரெய மனுஷன் நம்மிடத்தில் சரசம் பண்ணும்படிக்கு அவனை நமக்குள் கொண்டுவந்தார், அவன் என்னோடே சயனிக்கும்படிக்கு என்னிடத்தில் வந்தான்; நான் மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டேன். நான் சத்தமிட்டுக் கூப்பிடுகிறதை அவன் கேட்டு, தன் வஸ்திரத்தை என்னிடத்தில் விட்டு, வெளியே ஓடிப்போய்விட்டான்" (ஆதி 39:14,15) என்று சொல்லுகிறாள்.

போத்திபாரின் வீட்டில் வேலைபார்க்கிற மனுஷர் மத்தியிலே யோசேப்புக்கு கெட்ட பெயர் உண்டாயிற்று. அவள் யோசேப்பை, தன் வீட்டு மனுஷர் மத்தியிலே குற்றப்படுத்தியதுபோல, போத்திபாரிடத்திலும் குற்றம் சொல்லுகிறாள். தன்னுடைய குற்றச்சாட்டை நிரூபிக்கும் வண்ணமாக, போத்திபார் வீட்டிற்கு வருமளவும், அவனுடைய மனைவி யோசேப்பின் வஸ்திரத்தை தன்னிடத்தில் வைத்திருக்கிறாள். குற்றச்சாட்டு ஆதாரத்தோடு நிரூபிக்கப்படவேண்டும். அப்போதுதான் யோசேப்புக்கு கடுமையான தண்டனை கொடுக்கப்படும்.

தன் மனைவி கூறிய பொய்யை போத்திபார் நம்புகிறான். யோசேப்பு கர்த்தரை நம்புகிறார். (ஆதி 39:19-23). யோசேப்பு தனக்கு வரும் பாடுகளை அமைதியாகச் சகித்துக் கொள்கிறார். போத்திபாரின் மனைவி வஞ்சகி. இவளைப் போன்ற ஸ்திரீகள் நீதிமொழிகள் புஸ்தகத்தில் இவ்வாறு விவரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

1. அந்நியப்பெண்ணாகிய பரஸ்திரீ (நீதி 2:17; நீதி 6:24; நீதி 7:5; நீதி 20:16; நீதி 23:27; நீதி 27:13).

2. துன்மார்க்கஸ்திரீ (நீதி 6:24)

3. வேசி (நீதி 6:26)

4. மதியற்ற ஸ்திரீ (நீதி 9:13)

5. மதிகேடாய் நடக்கிற அழகுள்ள ஸ்திரீ. (நீதி 11:22)

6. விபசார ஸ்திரீ (நீதி 30:20)

7. பகைக்கப்படத்தக்க ஸ்திரீ (நீதி 30:23)

"சரசம் பண்ணும்படிக்கு என்னிடத்தில் வந்தான்" என்னும் வாக்கியத்திற்கு, "கெடுக்கும்படி என்னிடத்தில் வந்தான்" என்று பொருள் (ஆதி 39:14).

போத்திபார் பார்வோனுடைய பிரதானியும், தலையாரிகளுக்கு அதிபதியுமாயிருக்கிறான். பார்வோனுக்கு முன்பாக போத்திபாருக்கு அதிகமான அதிகாரமுள்ளது. யோசேப்பைப்பற்றி போத்திபாரிடத்தில் ஆதாரத்தோடு குற்றம் சொன்னால், போத்திபார் யோசேப்பை கடினமாய்த் தண்டிப்பார் என்று, அவனுடைய மனைவி திட்டமிடுகிறாள்.

போத்திபாரின் மனைவி, தன் புருஷனை நோக்கி, "நீர் நம்மிடத்தில் கொண்டுவந்த அந்த எபிரெய வேலைக்காரன் சரசம் பண்ணும்படிக்கு என்னிடத்தில் வந்தான். அப்பொழுது நான் சத்தமிட்டுக் கூப்பிட்டேன், அவன் தன் வஸ்திரத்தை என்னிடத்தில் விட்டு வெளியே ஓடிப் போனான்" (ஆதி 39:17,18) என்று சொல்லுகிறாள்.

போத்திபாரிடத்தில் யோசேப்பை தண்டிக்கும் அதிகாரமுள்ளது. அவளும் போத்திபார் நம்பும் வண்ணமாக, துணிகரமாய்ப் பொய்சொல்லுகிறாள். தன்னுடைய பொய்வார்த்தைகளை நிரூபிப்பதற்கு, யோசேப்பின் வஸ்திரத்தையும் அவனுக்கு காண்பிக்கிறாள். யோசேப்பை போத்திபார்தான் வீட்டு வேலைக்கு அழைத்துக்கொண்டு வந்திருக்கிறான்.

போத்திபாரின் மனைவி, தன் புருஷனிடத்தில் யோசேப்பைப்பற்றிச் சொல்லும்போது, "நீர் நம்மிடத்தில் கொண்டு வந்த அந்த எபிரெய வேலைக்காரன்" என்று சொல்லுகிறாள். அவளுடைய சதித்திட்டம் நிறைவேறுகிறது. தன் மனைவி தன்னோடே சொன்ன வார்த்தைகளை போத்திபார் கேட்டபோது, அவனுக்கு மிகுந்த கோபமுண்டாயிற்று.

சிறைச்சாலையில் யோசேப்பு ஆதி 39:19-23

ஆதி 39:19. உம்முடைய வேலைக்காரன் எனக்கு இப்படிச் செய்தான் என்று தன் மனைவி தன்னோடே சொன்ன வார்த்தைகளை அவனுடைய எஜமான் கேட்டபோது, அவனுக்குக் கோபம் மூண்டது.

ஆதி 39:20. யோசேப்பின் எஜமான் அவனைப் பிடித்து, ராஜாவின் கட்டளையால் காவலில் வைக்கப்பட்டவர்கள் இருக்கும் சிறைச்சாலையில் அவனை ஒப்புவித்தான். அந்தச் சிறைச்சாலையில் அவன் இருந்தான்.

ஆதி 39:21. கர்த்தரோ யோசேப்போடே இருந்து, அவன்மேல் கிருபைவைத்து, சிறைச்சாலைத் தலைவனுடைய தயவு அவனுக்குக் கிடைக்கும்படி செய்தார்.

ஆதி 39:22. சிறைச்சாலைத் தலைவன் சிறைச்சாலையில் வைக்கப்பட்ட யாவரையும் யோசேப்பின் கையிலே ஒப்புவித்தான்; அங்கே அவர்கள் செய்வதெல்லாவற்றையும் யோசேப்பு செய்வித்தான்.

ஆதி 39:23. கர்த்தர் அவனோடே இருந்தபடியினாலும், அவன் எதைச் செய்தானோ அதைக் கர்த்தர் வாய்க்கப்பண்ணினபடியினாலும், அவன் வசமாயிருந்த யாதொன்றையும் குறித்துச் சிறைச்சாலைத் தலைவன் விசாரிக்கவில்லை.

போத்திபார் யோசேப்புக்கு தீங்கு செய்கிறான். தன் மனைவி யோசேப்புக்கு விரோதமாக தன்னோடு சொன்ன எல்லா வார்த்தைகளையும் போத்திபார் நம்புகிறான். யோசேப்பின் வஸ்திரமும், போத்திபாருடைய மனைவியின் கையிலிருக்கிறது. சூழ்நிலை அவளுக்கு சாதகமாகயிருக்கிறது. யோசேப்பு குற்றமற்றவர் என்பதை அங்கே நிரூபிக்க முடியவில்லை. யோசேப்பும் தன்னுடைய வஸ்திரத்தை அவர் கையிலே விட்டு வெளியே ஓடிப்போய்விடுகிறார்.

போத்திபாரின் மனைவி தன் புருஷனிடத்தில், "உம்முடைய வேலைக்காரன் எனக்கு இப்படி செய்தான்" என்று தெளிவாக குற்றம் சொல்லுகிறாள். போத்திபாரும் தன் மனைவியின் வார்த்தைகளை நம்புகிறான். யோசேப்பு போத்திபாரின் வீட்டை விட்டு வெளியே ஓடினாலும், அவரால் எகிப்து தேசத்தைவிட்டு ஓடிப்போக முடியாது.

போத்திபார் பார்வோனுடைய பிரதானியாகவும், தலையாரிகளுக்கு அதிபதியாகவும் இருக்கிறான். போத்திபார் எகிப்து தேசத்திலே உயர்ந்த பதவியிலிருப்பதினால், அவன் யோசேப்பை எளிதாக தேடிக்கண்டுபிடித்து விடுகிறான். போத்திபார் யோசேப்பை ராஜாவின் கட்டளையால் காவலில் வைக்கப்பட்டவர்கள் இருக்கும் சிறைச்சாலையில் ஒப்புவிக்கிறான். யோசேப்பு அந்தச் சிறைச்சாலையில் இருக்கிறார் (ஆதி 39:20).

குற்றம் சாட்டுகிறவர்களுடைய பொறாமையினாலும், அநீதியினாலும், அநியாயத்தினாலும் நீதி அமைதியாகி விடுகிறது.

இந்தச் சூழ்நிலையிலும் போத்திபார் யோசேப்பிடம் நீதியாகவே நடந்து கொள்கிறான். எல்லா நிகழ்ச்சிகளிலும் தேவனுடைய கரம் இருக்கிறது. போத்திபாரின் வீட்டின் ஒரு பகுதியில் சிறைச்சாலை இருக்கிறது (ஆதி 40:3=ஆதி 37:36). போத்திபார் பார்வோனுடைய தலையாரிகளின் தலைவன். போத்திபார் நினைத்திருந்தால் யோசேப்பின் தலையை எடுத்திருக்கலாம். விசாரணை எதுவும் தேவையில்லை. ஆயினும் அக்காலத்தில் அரசாங்கத்தை சில நீதிநெறிகளுக்கு உட்பட்டும், சட்டதிட்டங்களுக்கு உட்பட்டும் நடத்தி வந்திருக்கிறார்கள்.

யோசேப்பு இப்போது அடைக்கப்பட்டிருக்கும் சிறைச்சாலை எகிப்து தேசத்தில் மிகவும் முக்கியமான சிறைச்சாலை. இந்த சிறைச்சாலையில் ராஜாவின் கட்டளையால் காவலில் வைக்கப்பட்டவர்கள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த சிறைச்சாலையில் காவல் அதிகமாயிருக்கும். சிறையில் அடைக்கப்பட்டவர்களுக்கு தண்டனையும் அதிகமாய்க் கொடுக்கப்படும்.

எகிப்து தேசத்தில் பல சிறைச்சாலைகள் இருக்கிறது. அவற்றில் இந்த சிறைச்சாலையே மிகவும் மோசமான சிறைச்சாலை. போத்திபார் இந்த சிறைச்சாலையை விசேஷமாய்த் தெரிந்தெடுத்து, அதிலே யோசேப்பை ஒப்படைக்கிறான்.

யோசேப்போடுகூட அந்த சிறைச்சாலையில் அவருடைய சிநேகிதர் யாருமில்லை. ஆனாலும் கர்த்தர் யோசேப்போடு கூடயிருக்கிறார். யோசேப்புக்கு ஆறுதல் சொல்லவோ, ஆதரவாயிருக்கவோ அங்கே யாருமில்லை. ஆனாலும் கர்த்தர் யோசேப்பின்மேல் கிருபை வைக்கிறார். சிறைச்சாலை தலைவனுடைய தயவு யோசேப்புக்கு கிடைக்கும்படி கர்த்தர் கிருபை செய்கிறார் (ஆதி 39:21).

கர்த்தருடைய ஜனம் எங்கே இருந்தாலும், அங்கே கர்த்தருடைய கிருபையுள்ள பிரசன்னமும் இருக்கும். சிறைச்சாலை கதவுகளால் கர்த்தருடைய பரிசுத்தமான பிரசன்னத்தைத் தடுத்து நிறுத்த முடியாது. கர்த்தர் யோசேப்பை விட்டு ஒருபோதும் விலகிப்போவதில்லை என்று வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆகையினால் யோசேப்பு இப்போது சிறைச்சாலையில் இருந்தாலும், கர்த்தரும் அவரோடேகூட அந்தச் சிறைச்சாலையிலிருக்கிறார்.

நம்முடைய மனச்சாட்சி சுத்தமாயிருக்கவேண்டும். நாம் கர்த்தரோடு சமாதானமாயிருக்கவேண்டும். அப்போது, நாம் சிறைச்சாலையிலிருந்தாலும், நம்முடைய நல்ல தேவன், நம்மோடுகூட அந்த சிறைச்சாலையிலும் இருப்பார்.

யோசேப்பு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டாலும், அவர் அங்கே அநேக நாட்களுக்கு கைதியாகயிருக்கவில்லை. யோசேப்புக்கு சிறைச்சாலை தலைவனுடைய தயவு கிடைக்கிறது. சிறைச்சாலைத் தலைவன் சிறைச்சாலையில் வைக்கப்பட்ட யாவரையும் யோசேப்பின் கையிலே ஒப்புவிக்கிறான்; அங்கே அவர்கள் செய்வதெல்லாவற்றையும் யோசேப்பு செய்விக்கிறார்.

யோசேப்பு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டாலும், அங்கே அடைக்கப்பட்டிருக்கிற மற்ற குற்றவாளிகளை ஆளுகை செய்யும் பொறுப்பு யோசேப்புக்கு கொடுக்கப்படுகிறது. அவர் அந்த சிறைச்சாலையில் கைதியாகயிருந்தாலும், அங்கே ஒரு பிரபுவைப்போல இருக்கிறார். யோசேப்புக்கு எதிர்பாராத இடத்திலிருந்து உதவி கிடைக்கிறது. இது கர்த்தருடைய கிருபை. கர்த்தரே யோசேப்புக்கு சிறைச்சாலைத் தலைவனுடைய தயவு கிடைக்கும்படி செய்கிறார்.

நமக்கு கர்த்தருடைய கண்களில் தயவு கிடைக்கும்போது, மனுஷருடைய கண்களிலும் தயவு கிடைக்கும். கர்த்தருடைய கிருபை நமக்கு கிடைக்கும்போது, மனுஷருடைய உதவிகளும் ஒத்தாசைகளும் நமக்கு கிடைக்கும். நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கும்போது, நாம் எதிர்பாராத ஜனங்கள் நமக்கு சிநேகிதராயிருப்பார்கள். அவர்கள் நாம் எதிர்பாராத விதத்திலே, நமக்கு உதவிசெய்ய முன்வருவார்கள்.

கர்த்தர் யோசேப்போடு கூடயிருக்கிறார் என்பதை சிறைச்சாலைத் தலைவனும் அறிந்துகொள்கிறான். யோசேப்பு எதை செய்கிறாரா அதை கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்பதையும் சிறைச்சாலைத்தலைவன் புரிந்து கொள்கிறான். இதனால் யோசேப்பின் வசமாயிருந்த யாதொன்றைக் குறித்தும், சிறைச்சாலைத்தலைவன் விசாரிக்கவில்லை (ஆதி 39:23).

யோசேப்பு தன்னுடைய வீட்டிலே வேலை செய்தபோது, போத்திபார் யோசேப்பை நம்பவில்லை. யோசேப்பு சிறைச்சாலையிலிருக்கும்போது, சிறைச்சாலைத்தலைவன் அவரை முற்றிலுமாய் நம்புகிறான்.

சிறைச்சாலையில் அவர்கள் செய்வது எல்லாவற்றையும் யோசேப்பு செய்விக்கிறார். சிறைச்சாலையில் நடைபெறுகிற ஒவ்வொரு காரியமும், யோசேப்பின் கட்டளையின் பிரகாரம் நடைபெறுகிறது. இது எகிப்தில் யோசேப்பிற்கு கிடைத்த இரண்டாவது வெற்றி.

உலகப்பிரகாரமாக இதைச் சொல்லும்போது "அதிஷ்டம்" என்று சொல்லுகிறார்கள். ஆனால் வேதவாக்கியம் இஸ்ரவேலின் தேவனுக்கே எல்லா மகிமையையும் செலுத்தி இதை "தேவனுடைய கிருபை" என்று சொல்லுகிறது (ஆதி 39:21). சிறைச்சாலையில் வைக்கப்பட்ட யாவர்மீதும் யோசேப்பிற்கு அதிகாரம் இருக்கிறது. சிறைச்சாலையில் நடக்கும் எல்லாக் காரியங்களுக்கும் யோசேப்பு பொறுப்பானவராக இருக்கிறார்.

40 அதிகாரம்

யோசேப்புக்கு ஆசீர்வாதமாக ஒரு சில சம்பவங்கள் நடைபெறுகிறது. பார்வோனுடைய இரண்டு பிரதானிகள் சிறைச்சாலையிலே அடைக்கப்படுகிறார்கள். அவர்கள் யோசேப்பின் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறார்கள் (ஆதி 40:1-4).

பார்வோனின் பிரதானிகள் இரண்டுபேரும், ஒரே ராத்திரியிலே வெவ்வேறு பொருள்கொண்ட சொப்பனம் காண்கிறார்கள். யோசேப்பு அவர்களுடைய சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லுகிறார் (ஆதி 40:5-19).

யோசேப்பு சொப்பனத்திற்கு அர்த்தம் சொன்னது நிறைவேறுகிறது (ஆதி 40:20-22). யோசேப்பு பார்வோனுடைய பிரதானிகள் ஒருவனிடத்தில், தன்னுடைய காரியத்தை பார்வோனுக்கு அறிவித்து, தன்னை விடுதலையாக்க உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார். அவனோ யோசேப்பை நினையாமல், அவரை மறந்துவிடுகிறான் (ஆதி 40:23).

பார்வோனுடைய பிரதானிகள் ஆதி 40:1-4

ஆதி 40:1. இந்த நடபடிகளுக்குப் பின்பு, எகிப்துராஜாவுக்குப் பானபாத்திரக்காரனும் சுயம்பாகியும் எகிப்து ராஜாவாகிய தங்கள் ஆண்டவனுக்குக் குற்றம் செய்தார்கள்.

ஆதி 40:2. பார்வோன் தன் பானபாத்திரக்காரரின் தலைவனும் சுயம்பாகிகளின் தலைவனும் ஆகிய இவ்விரண்டு பிரதானிகள் மேலும் கடுங்கோபங்கொண்டு,

ஆதி 40:3. அவர்களை யோசேப்பு வைக்கப்பட்டிருந்த இடமும் தலையாரிகளின் அதிபதியின் வீடுமாகிய சிறைச்சாலையிலே காவல் பண்ணுவித்தான்.

ஆதி 40:4. தலையாரிகளின் அதிபதி அவர்களை விசாரிக்கும்படி யோசேப்பின் வசத்தில் ஒப்புவித்தான்; அவன் அவர்களை விசாரித்து வந்தான்; அவர்கள் அநேகநாள் காவலில் இருந்தார்கள்.

பரிசுத்தவேதாகமத்தில் பார்வோனுடைய பானபாத்திரக்காரனின் தலைவனைப்பற்றியும், சுயம்பாகிகளின் தலைவனைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களில் ஒருவன், யோசேப்புக்கு உதவியாயிருக்கிறான். ஆகையினால் இவர்கள் இருவரைப்பற்றிய சம்பவம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

பானபாத்திரக்காரனும் சுயம்பாகியும் எகிப்து ராஜாவாகிய தங்கள் ஆண்டவனுக்குக் குற்றம் செய்கிறார்கள் (ஆதி 40:1). இவர்கள் இருவரும் பார்வோனுடைய அரண்மனையிலே பிரதானிகள். இவர்கள் பார்வோனுக்கு மிகவும் முக்கியமானவர்கள். இவர்கள் எகிப்து ராஜாவுக்கு விரோதமாக என்ன தப்பிதம் செய்தார்கள் என்பது தெரியவில்லை.

பானபாத்திரக்காரரின் தலைவன் பார்வோனுக்கு திராட்சரசம் கொடுக்கிறவன். சுயம்பாகிகளின் தலைவனோ பார்வோனுக்கு அப்பத்தையும் பலகாரங்களையும் கொடுக்கிறவன். ஒருவேளை இவர்கள் பார்வோனை கொலைசெய்வதற்கு சதிசெய்திருக்கலாம். திராட்சரசத்திலோ, பலகாரத்திலோ விஷத்தைக் கலந்து பார்வோனுக்கு கொடுக்க முயற்சி செய்திருக்கலாம்.

எகிப்து தேசத்தின் அரண்மனையில் பார்வோனுக்கு முன்பாக வேலை செய்கிறவர்கள் மிகவும் கவனமாயிருக்க வேண்டும். அவர்கள் சிறிய குற்றம் செய்தால்கூட, அவர்களுக்கு மிகவும் கடுமையான தண்டனை கொடுக்கப்படும்.

ஒருவேளை ராஜாவுக்கு கொடுக்கப்பட்ட திராட்சரசத்திலே செத்த ஈ மிதந்திருக்கலாம். அல்லது ராஜாவுக்கு கொடுக்கப்பட்ட பலகாரத்தில் ஒரு சிறிய கல் இருந்திருக்கலாம். ஏதோ ஒரு காரணத்திற்காக எகிப்து தேசத்தின் ராஜாவாகிய பார்வோன் இவர்கள்மீது கடுங்கோபங்கொண்டிருக்கிறான்.

பார்வோன் தன் பானபாத்திரக்காரரின் தலைவனும் சுயம்பாகிகளின் தலைவனும் ஆகிய இவ்விரண்டு பிரதானிகள் மேலும் கடுங்கோபங்கொண்டு, அவர்களை யோசேப்பு வைக்கப்பட்டிருந்த இடமும் தலையாரிகளின் அதிபதியின் வீடுமாகிய சிறைச்சாலையிலே காவல் பண்ணுவிக்கிறான் (ஆதி 40:2,3).

சிறைச்சாலையில் வேலைசெய்யும்போது இவர்களுடைய கைகள் கட்டப்பட்டிருக்காது. (ஆதி 39:22,23) இரவு வேளைகளிலும், அவர்களுக்கு வேலை கொடுக்கப்படாத சமயங்களிலும் அவர்களுடைய கைகளைக் கட்டி வைத்திருப்பார்கள் (சங் 105:17-20).

போத்திபார் பார்வோனுடைய பிரதானியாகவும், தலையாரிகளுக்கு அதிபதியாகவும் இருக்கிறான். பார்வோனுடைய வீட்டின் ஒரு பகுதி, சிறைச்சாலையாக இருக்கிறது. இந்த சிறைச்சாலைக்கு போத்திபாரே அதிபதியாயிருக்கிறான்.

போத்திபார் யோசேப்பின்மீது கோபங்கொண்டு, அவரை சிறைச்சாலையில் ஒப்புவித்தான். ஒருவேளை யோசேப்பின்மீது ஒரு குற்றமுமில்லை என்பதை போத்திபார் அறிந்திருக்கலாம். ஆனாலும் போத்திபார் யோசேப்பை சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கவில்லை. யோசேப்பை விடுவித்தால், தன்னுடைய மனைவி தன்மீது கோபப்படுவாளோ என்று நினைத்து, போத்திபார் யோசேப்பை விடுவியாமல், அவரை இன்னும் சிறைச்சாலையில் வைத்திருக்கலாம்.

தலையாரிகளின் அதிபதியாகிய போத்திபார், பானபாத்திரக்காரரின் தலைவனையும், பிரதானிகளின் தலைவனையும் விசாரிக்கும்படி யோசேப்பின் வசத்திலே ஒப்புவிக்கிறான். யோசேப்பு அவர்களை விசாரித்து வருகிறார். பார்வோனின் பிரதானிகள் இருவரும் அநேகநாள் காவலிலிருக்கிறார்கள்.

சொப்பனங்கள்
ஆதி 40:5-19

ஆதி 40:5. எகிப்து ராஜாவுக்குப் பானபாத்திரக்காரனும் சுயம்பாகியுமாகிய அவ்விரண்டுபேரும் சிறைச்சாலையில் இருக்கும்போது, ஒரே ராத்திரியில் வெவ்வெறு பொருள் கொண்ட சொப்பனம் கண்டார்கள்.

ஆதி 40:6. காலமே யோசேப்பு அவர்களிடத்தில் போய், அவர்களைப் பார்க்கும்போது, அவர்கள் கலங்கியிருந்தார்கள்.

ஆதி 40:7. அப்பொழுது அவன் தன் எஜமானுடைய வீட்டில் தன்னோடே காவல்பண்ணப்பட்டிருந்த பார்வோனுடைய பிரதானிகளை நோக்கி: உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருக்கிறது என்ன என்று கேட்டான்.

ஆதி 40:8. அதற்கு அவர்கள்: சொப்பனம் கண்டோம், அதற்கு அர்த்தம் சொல்லுகிறவன் ஒருவனும் இல்லை என்றார்கள். அதற்கு யோசேப்பு: சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியதல்லவா? அவைகளை என்னிடத்தில் சொல்லுங்கள் என்றான்.

ஆதி 40:9. அப்பொழுது பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நோக்கி: என் சொப்பனத்திலே ஒரு திராட்சச் செடி எனக்கு முன்பாக இருக்கக் கண்டேன்.

ஆதி 40:10. அந்தத் திராட்சச் செடியிலே மூன்று கொடிகள் இருந்தது; அது துளிர்க்கிறதாயிருந்தது; அதில் பூக்கள் மலர்ந்திருந்தது; அதின் குலைகள் பழுத்த பழங்களாயிருந்தது.

ஆதி 40:11. பார்வோனுடைய பாத்திரம் என் கையிலே இருந்தது; நான் அந்தப் பழங்களைப் பறித்து, அவைகளைப் பார்வோனுடைய பாத்திரத்தில் பிழிந்து, அந்த பாத்திரத்தைப் பார்வோனுடைய கையிலே கொடுத்தேன் என்று, தன் சொப்பனத்தைச் சொன்னான்.

ஆதி 40:12. அதற்கு யோசேப்பு: அந்த மூன்று கொடிகளும் மூன்று நாளாம்.

ஆதி 40:13. மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, உன்னை மறுபடியும் உன் நிலையிலே நிறுத்துவார்; முன்னே அவருக்குப் பானம் கொடுத்துவந்த வழக்கத்தின்படி பார்வோனின் பாத்திரத்தை அவர் கையிலே கொடுப்பாய்;

ஆதி 40:14. இதுதான் அதின் அர்த்தம் என்று சொன்னதும் அன்றி, நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்க வேண்டும்.

ஆதி 40:15. நான் எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்; என்னை இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கும் நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை என்றும் சொன்னான்.

ஆதி 40:16. அர்த்தம் நன்றாயிருக்கிறது என்று சுயம்பாகிகளின் தலைவன் கண்டு, யோசேப்பை நோக்கி: நானும் என் சொப்பனத்தில் மூன்று வெள்ளைக் கூடைகள் என் தலையின் மேல் இருக்கக் கண்டேன்;

ஆதி 40:17. மேற்கூடையிலே பார்வோனுக்காக சமைக்கப்பட்ட சகலவித பலகாரங்களிலும் கொஞ்சம் கொஞ்சம் இருந்தது; என் தலையின் மேல் கூடையில் இருந்தவைகளைப் பறவைகள் வந்து பட்சித்தது என்றான்.

ஆதி 40:18. அதற்கு யோசேப்பு: அந்த மூன்று கூடைகளும் மூன்று நாளாம்.

ஆதி 40:19. இன்னும் மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, உன்னை மரத்திலே தூக்கிப்போடுவார்; அப்பொழுது பறவைகள் உன் மாம்சத்தைத் தின்னும், இதுதான் அதின் அர்த்தம் என்று சொன்னான்.

யோசேப்பு சிறைச்சாலையிலிருந்தாலும், கர்த்தர் அவரோடுகூட அங்கே இருக்கிறார். கர்த்தருடைய தெய்வீக கிருபைகளும், பராமரிப்புக்களும் அவருக்கு கிடைக்கிறது. பானபாத்திரக்காரன், சுயம்பாகி ஆகிய இரண்டு பேருடைய மனதிலும் கர்த்தர் கிரியை செய்கிறார். அவர்கள் இருவரும் ஒரே ராத்திரியிலே வெவ்வேறு பொருள் கொண்ட சொப்பனங்காண்கிறார்கள் (ஆதி 40:5).

அவர்கள் கண்ட சொப்பனம் எதேச்சையாய் நடைபெற்ற சம்பவமல்ல. தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலின் பிரகாரம் அவர்கள் இருவரும் ஒரே ராத்திரியிலே, வெவ்வேறு பொருள் கொண்ட சொப்பனம் காண்கிறார்கள். சொப்பனம் கண்ட பின்பு அவர்கள் இருவருடைய முகங்களும் துக்கமாயிருக்கிறது. அவர்களுக்கு சொப்பனத்தின் அர்த்தம் தெரியவில்லை. தாங்கள் கண்ட சொப்பனங்களுக்கு யார் அர்த்தம் சொல்லுவார் என்பதும் அவர்களுக்கு புரியவில்லை.

பானபாத்திரக்காரனையும் சுயம்பாகியையும், சிறைச்சாலையிலே யோசேப்பு விசாரித்து வருகிறார். அவர்களை எப்போதும் போல விசாரிப்பதற்காக, யோசேப்பு காலமே அவர்களிடத்திற்குப் போகிறார். யோசேப்பு அவர்களைப் பார்க்கும்போது, அவர்கள் இருவரும் கலக்கத்தோடிருக்கிறார்கள் (ஆதி 40:6).

போத்திபாருடைய வீட்டின் ஒரு பகுதி சிறைச்சாலையாயிருக்கிறது. போத்திபார் யோசேப்பின் எஜமான். யோசேப்பும் அந்த சிறைச்சாலையில் காவல்பண்ணப்பட்டிருக்கிறார். பார்வோனுடைய பிரதானிகளும் அங்கே காவல்பண்ணப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் அந்தப் பிரதானிகள் இருவரும் யோசேப்பின் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

யோசேப்பு பார்வோனுடைய பிரதானிகள் இரண்டு பேரையும் நோக்கி, "உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருக்கிறது என்ன" என்று கேட்கிறார். அதற்கு அவர்கள் இருவரும் யோசேப்பை நோக்கி, "சொப்பனம் கண்டோம், அதற்கு அர்த்தம் சொல்லுகிறவன் ஒருவனும் இல்லை" என்று சொல்லுகிறார்கள். அதற்கு யோசேப்பு: "சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியதல்லவா? அவைகளை என்னிடத்தில் சொல்லுங்கள்" (ஆதி 40:7,8) என்று சொல்லுகிறார்.

யோசேப்பு இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி அவர்களிடத்தில் தேவனைப் பற்றிப் பேசுகிறார். யோசேப்பு தேவனோடு எப்பொழுதும் நெருங்கிய ஐக்கியத்தில் இருக்கிறார்.

பார்வோனின் பிரதானிகளைப்போல, யோசேப்பும் சொப்பனம் காண்கிறவர். யோசேப்பு சொப்பனம் கண்டதினால்தான், அவருடைய சகோதரர் அவர்மீது கோபப்பட்டார்கள்.

பார்வோனின் பிரதானிகளைப்போல யோசேப்பும் சிறைச்சாலையிலே காவல்பண்ணப்பட்டவர். ஆனாலும் கர்த்தருடைய கிருபையினாலே யோசேப்பு அந்த இரண்டு பிரதானிகளையும் விசாரிக்கிறவராகவும் இருக்கிறார். யோசேப்பு அவர்களை அன்போடும் பாசத்தோடும் விசாரிக்கிறார். பார்வோனின் இரண்டு பிரதானிகளும் கலங்கியிருக்கிறார்கள். யோசேப்பு அவர்களை நோக்கி, "உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருக்கிறது என்ன" என்று கேட்கிறார்.

நாம் மற்றவர்களுடைய துக்கங்களை பகிர்ந்துகொள்ளவேண்டும். அவர்களுக்கு மனதிலே பிரச்சனைகளும், வேதனைகளும் இருக்கும்போது, அவர்களுக்கு ஆதரவான வார்த்தைகளை சொல்லவேண்டும். நம்முடைய ஆறுதலான வார்த்தைகள் துக்கப்படுகிறவர்களின் மனவேதனையைக் குறைக்கும்.

ஆரோனுடைய பிரதானிகள் சொப்பனம் கண்டிருக்கிறார்கள். அந்த சொப்பனம் அவர்களுக்கு கலக்கத்தைக் கொடுத்திருக்கிறது. தாங்கள் கண்ட சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லுகிறவன், இந்தச் சிறைச்சாலையில் ஒருவனுமில்லை என்பதை நினைக்கும்போது, அவர்களுடைய கலக்கம் அதிகமாயிருக்கிறது.

யோசேப்பு பார்வோனுடைய பிரதானிகளிடம், "உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருக்கிறது என்ன" என்று கேட்கிறார். அதற்கு அவர்கள், "சொப்பனம் கண்டோம், அதற்கு அர்த்தம் சொல்லுகிறவன் ஒருவனும் இல்லை" (ஆதி 40:8) என்று சொல்லுகிறார்கள். அதற்கு யோசேப்பு, "சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியதல்லவா? அவைகளை என்னிடத்தில் சொல்லுங்கள்" என்று சொல்லுகிறார்.

பார்வோனின் பிரதானிகள் தங்கள் சொப்பனத்திற்கு மனுஷர் அர்த்தம் சொல்லுவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். யோசேப்பு அவர்களிடத்தில், சொப்பத்திற்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியது என்று சொல்லுகிறார். தேவன் தமக்கு சித்தமான யாருக்கு வேண்டுமானாலும், தம்முடைய விசேஷித்த கிருபையைக் கொடுப்பார். அவர்கள் கர்த்தருடைய ஏவுதலினாலும், வழிநடத்துதலினாலும் சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லுவார்கள்.

யோசேப்பு பார்வோனுடைய பிரதானிகளிடம், அந்த சொப்பனங்களை தன்னிடத்தில் சொல்லுமாறு கேட்கிறார். அவர்கள் இருவருமே ஒரே ராத்திரியிலே, வெவ்வேறு பொருள் கொண்ட சொப்பனம் கண்டார்கள். பானபாத்திரக்காரரின் சொப்பனம் அவனுக்கு ஆசீர்வாதமாயிருக்கிறது. சுயம்பாகியின் சொப்பனமோ அவனுக்கு ஆபத்தாயிருக்கிறது.

அப்பொழுது பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நோக்கி, "என் சொப்பனத்திலே ஒரு திராட்சச் செடி எனக்கு முன்பாக இருக்கக் கண்டேன். அந்தத் திராட்சச் செடியிலே மூன்று கொடிகள் இருந்தது; அது துளிர்க்கிறதாயிருந்தது; அதில் பூக்கள் மலர்ந்திருந்தது; அதின் குலைகள் பழுத்த பழங்களாயிருந்தது. பார்வோனுடைய பாத்திரம் என் கையிலே இருந்தது; நான் அந்தப் பழங்களைப் பறித்து, அவைகளைப் பார்வோனுடைய பாத்திரத்தில் பிழிந்து, அந்த பாத்திரத்தைப் பார்வோனுடைய கையிலே கொடுத்தேன்" (ஆதி 40:9-11) என்று, தன் சொப்பனத்தைச் சொல்லுகிறான்.

ஆதி 40:9-11 ஆகிய வசனங்களில் திராட்சக் கொடியில் பூ பூக்கும் காலத்திலிருந்து அது கனி தரும் காலம் வரையிலும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. எகிப்தில் திராட்சக்கொடி வளராது என்று சிலர் கூறுகிறார்கள். இது பற்றி தெளிவாகத் தெரியவில்லை.

"அவைகளைப் பார்வோனுடைய பாத்திரத்தில் பிழிந்து, அந்த பாத்திரத்தைப் பார்வோனுடைய கையிலே கொடுத்தேன்" என்று பானபாத்திரக்காரரின் தலைவன் சொல்லுகிறான். இது ஒரு மார்க்கச் சடங்கைக் குறிக்கிறது. இது ஓரஸ் என்னும் தெய்வத்தை ஆராதிக்கும்போது செய்யக்கூடிய சடங்கு. எகிப்தின் பழங்கால வண்ண ஓவியங்களில் இதற்கான சான்றுகள் உள்ளன.

யோசேப்பு பானபாத்திரக்காரன் கண்ட சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லுகிறார். யோசேப்பு அவனை நோக்கி, "அந்த மூன்று கொடிகளும் மூன்று நாளாம். மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, உன்னை மறுபடியும் உன் நிலையிலே நிறுத்துவார்; முன்னே அவருக்குப் பானம் கொடுத்துவந்த வழக்கத்தின்படி பார்வோனின் பாத்திரத்தை அவர் கையிலே கொடுப்பாய்; இதுதான் அதின் அர்த்தம்" (ஆதி 40:12-14) என்று சொல்லுகிறார்.

பானபாத்திரக்காரன் தான் கண்ட சொப்பனத்தை யோசேப்புக்கு சொன்னதையும், யோசேப்பு அவனுடைய சொப்பனத்திற்கு அர்த்தம் சொன்னதையும் சுயம்பாகிகளின் தலைவன் கவனமாக கேட்டுக்கொண்டிருக்கிறான். யோசேப்பு பானபாத்திரக்காரனுக்கு சொன்ன அர்த்தம், சுயம்பாகிகளின் தலைவனுக்கு மிகவும் நன்றாயிருக்கிறது. ஆகையினால் சுயம்பாகியும் யோசேப்பிடம் தான் கண்ட சொப்பனத்தை சொல்லுகிறான்.

சுயம்பாகிகளின் தலைவன் யோசேப்பை நோக்கி, "நானும் என் சொப்பனத்தில் மூன்று வெள்ளைக் கூடைகள் என் தலையின் மேல் இருக்கக் கண்டேன்; மேற்கூடையிலே பார்வோனுக்காக சமைக்கப்பட்ட சகலவித பலகாரங்களிலும் கொஞ்சம் கொஞ்சம் இருந்தது; என் தலையின் மேல் கூடையில் இருந்தவைகளைப் பறவைகள் வந்து பட்சித்தது" (ஆதி 40:16,17) என்று சொல்லுகிறான்.

யோசேப்பு சுயம்பாகிகளின் தலைவன் கண்ட சொப்பனத்திற்கும் அர்த்தம் சொல்லுகிறார். யோசேப்பு அவனை நோக்கி, "அந்த மூன்று கூடைகளும் மூன்று நாளாம். இன்னும் மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, உன்னை மரத்திலே தூக்கிப்போடுவார்; அப்பொழுது பறவைகள் உன் மாம்சத்தைத் தின்னும், இதுதான் அதின் அர்த்தம்" (ஆதி 40:18,19) என்று சொல்லுகிறார்.

யோசேப்பு பானபாத்திரக்காரனுக்கு ஆசீர்வாதமான அர்த்தத்தை சொல்லுகிறார். சுயம்பாகிகளின் தலைவனுக்கோ அவர் துக்கமான அர்த்தத்தை சொல்லுகிறார். யோசேப்பு இந்த சொப்பனங்களைக் காணவில்லை. பானபாத்திரக்காரனும், சுயம்பாகியும் ஒரே ராத்திரியிலே வெவ்வேறு பொருள் கொண்ட இந்த சொப்பனங்களை கண்டார்கள். சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியது. யோசேப்பு கர்த்தருடைய வழிநடத்துலினால் அவர்களுடைய சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லுகிறார்.

பானபாத்திரக்காரரின் தலைவனுக்கு ஆசீர்வாதம் வருவதற்கும், சுயம்பாகிகளின் தலைவனுக்கு ஆபத்து வருவதற்கும் யோசேப்பு காரணமல்ல. தீர்க்கதரிசிகள் கர்த்தர் தங்களுக்கு வெளிப்படுத்தும் செய்தியை அப்படியே சொல்லிவிடுவார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சத்தியங்களை வியாக்கியானம் பண்ணுகிறவர்கள். ஆசீர்வாதம் கர்த்தருக்குரியது. கர்த்தரே தமக்கு சித்தமான பிரகாரம் மனுஷரை ஆசீர்வதிக்கிறார். கர்த்தர் ஒருவரை சிங்காசனத்தில் அமரச்செய்கிறார். அதே கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரம் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறவரை கீழே விழச்செய்கிறார்.

யோசேப்பு பானபாத்திரக்காரனுடைய தலைவன் கண்ட சொப்பனத்திற்கு அர்த்தம் சொன்ன பின்பு, அவனிடத்தில் தனக்கு ஒரு உதவி கேட்கிறார். யோசேப்பு பானபாத்திரக்காரனை நோக்கி, "நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்க வேண்டும். நான் எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்; என்னை இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கும் நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை" (ஆதி 40:14,15) என்று சொல்லுகிறார்.

ஆபிரகாம் ஏற்கெனவே எகிப்திற்குப் போயிருக்கிறார். எகிப்தியரில் பலருக்கு ஆபிரகாமின் வரலாறு தெரிந்திருக்கும். கானானின் தெற்குபகுதியில் இக்காலத்தில் எபிரெயர்கள் செல்வாக்கோடு இருக்கிறார்கள். ஆகையினால் எபிரெயருடைய தேசம் என்னும் வாக்கியத்தை எகிப்தியர்கள் நன்றாகப் புரிந்து கொள்வார்கள்.

தானியேல் ஜெபம் பண்ணிவிட்டு சொப்பனத்திற்கு அர்த்தம் கூறுவார் (தானி 2:16-18). யோசேப்பு இங்கு உடனடியாகக் கூறுகிறார். தானியேலிடமும், சொப்பனத்திற்கு அர்த்தம் கூறும் விசேஷித்த வரம் இருந்தது. (தானி 1:17).

பார்வோன் பானபாத்திரக்காரனின் தலைவனுடைய தலையை உயர்த்தப்போகிறார். கர்த்தர் அவனை மறுபடியும் அவன் நிலையில் நிறுத்தப்போகிறார். பானபாத்திரக்காரரின் தலைவன் முன்னே பார்வோனுக்கு பானம் கொடுத்து வந்த வழக்கத்தின்படி, பார்வோனின் பாத்திரத்தை அவர் கையிலே கொடுப்பான். இவையெல்லாம் மூன்று நாட்களுக்குள் நிறைவேறும் என்னும் ஆசீர்வாதமான செய்தியை யோசேப்பு அவனுக்கு சொல்லியிருக்கிறார்.

யோசேப்பு சொப்பனத்திற்கு அர்த்தம் சொன்னாலும், கர்த்தரே அதற்கு அர்த்தம் சொல்லுகிறார் என்பதை யோசேப்பு நம்புகிறார். ஆகையினால் பானபாத்திரக்காரனுக்கு தன் மூலமாக சொல்லப்பட்ட ஆசீர்வாதமான வார்த்தைகள் நிறைவேறும் என்று யோசேப்பு நம்புகிறார்.

அந்த நல்ல வார்த்தைகள் பானபாத்திரக்காரனுக்கு நிறைவேறும்போது, அவன் தனக்கு உதவிசெய்யவேண்டுமென்று யோசேப்பு அவனிடத்தில் கேட்டுக்கொள்கிறார்.

யோசேப்பு தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "நான் எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்; என்னை இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கும் நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை" (ஆதி 40:15) என்று மாத்திரமே சொல்லுகிறார். தன் சகோதரர் தன்னை இஸ்மவேலருக்கு அடிமையாக விற்றுப்போட்டார்கள் என்று சொல்லி, யோசேப்பு அவர்கள்மீது குற்றம் சொல்லவில்லை.

யோசேப்பு இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கு, மெய்யாகவே அவர் ஒரு தப்பிதமும் செய்யவில்லை. அவர்மீது தப்பிதமாக குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. யோசேப்பு தான் சிறையில் அடைக்கப்பட்டதற்காக, அவர் யார்மீதும் குற்றம் சொல்லவில்லை. யோசேப்பு போத்திபாரின் மனைவி செய்த தப்பிதத்தைக் குறித்து ஒரு வார்த்தைகூட பேசவில்லை. போத்திபார் தன் மனைவியின் வார்த்தைகளை நம்பி, யோசேப்பை சிறைச்சாலையில் அடைத்துவிட்டார். யோசேப்போ போத்திபார்மீதும் குற்றம் சொல்லவில்லை. "நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை" என்று மாத்திரமே யோசேப்பு தன்னைப்பற்றிச் சொல்லுகிறார்.

விசுவாசிகளாகிய நாமும் யோசேப்பைப்போல கண்ணியமாக பேசக்கற்றுக்கொள்ளவேண்டும். மற்றவர்கள்மீது குற்றம் சொல்லி, அவர்களை தூஷிக்காமல், நம்மிடத்திலுள்ள நியாயத்தை மாத்திரம் எடுத்து சொல்லவேண்டும். நம்மிடத்திலுள்ள நியாயத்தை மற்றவர்கள் விசாரிக்கும்போதுகூட, நாம் மற்றவர்கள்மீது குற்றம் சொல்லுவதை தவிர்த்துவிடவேண்டும்.

நம்மிடத்தில் குற்றம் இல்லை என்பதை நிரூபித்தாலே நமக்கு போதும் என்னும் மனத்திருப்தியோடு நாம் இருக்கவேண்டும். மற்றவர்களை குற்றப்படுத்துவதைவிட, நம்முடைய நியாயத்தை எடுத்து சொல்லுவதே நமக்கு ஆசீர்வாதம்.

சொப்பனங்கள் நிறைவேறிற்று ஆதி 40:20-23

ஆதி 40:20. மூன்றாம்நாள் பார்வோனுடையஜன்ம நாளாயிருந்தது; அவன் தன் ஊழியக்காரர் எல்லாருக்கும் விருந்து பண்ணி, பானபாத்திரக்காரருடைய தலைவன் தலையையும் சுயம்பாகிகளுடைய தலைவன் தலையையும் தன் உத்தியோகஸ்தரின் நடுவே உயர்த்தி,

ஆதி 40:21. பானபாத்திரக்காரரின் தலைவனைப் பானங்கொடுக்கிற தன் உத்தியாகத்திலே மறுபடியும் வைத்தான்; அந்தப்படியே அவன் பார்வோனுடைய கையிலே பாத்திரத்தைக் கொடுத்தான்.

ஆதி 40:22. சுயம்பாகிகளின் தலைவனையோ தூக்கிப்போட்டான். யோசேப்பு அவர்களுக்குச் சொன்ன அர்த்தத்தின்படியே சம்பவித்தது.

ஆதி 40:23. ஆனாலும் பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்துவிட்டான்.

பார்வோனின் பிரதானிகள் இரண்டுபேரும் ஒரே ராத்திரியிலே வெவ்வேறு பொருள் கொண்ட சொப்பனம் கண்டார்கள். யோசேப்பு அவர்கள் கண்ட சொப்பனங்களுக்கு அர்த்தம் சொன்னார். யோசேப்பு பானபாத்திரக்காரனை நோக்கி, "மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, உன்னை மறுபடியும் உன் நிலையிலே நிறுத்துவார்" என்று சொன்னார். யோசேப்பு சுயம்பாகியை நோக்கி, "இன்னும் மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, உன்னை மரத்திலே தூக்கிப்போடுவார்" என்று சொன்னார்.

யோசேப்பு சொப்பனத்திற்கு அர்த்தம் சொன்ன பிரகாரம் காரியங்கள் சம்பவிக்கிறது. மூன்றாம்நாள் பார்வோனுடைய ஜன்ம நாளாயிருக்கிறது; பார்வோன் தன் ஊழியக்காரர் எல்லாருக்கும் விருந்து பண்ணுகிறான். அந்த நாளிலே பார்வோன் பானபாத்திரக்காரருடைய தலைவன் தலையையும் சுயம்பாகிகளுடைய தலைவன் தலையையும் தன் உத்தியோகஸ்தரின் நடுவே உயர்த்துகிறான் (ஆதி 40:20).

பார்வோன் தன் பிரதானிகள் இரண்டு பேருடைய தலைகளையும் உயர்த்தினாலும், அவர்களுக்கு வெவ்வேறு முடிவு சம்பவிக்கிறது. பார்வோன் பானபாத்திரக்காரரின் தலைவனைப் பானங்கொடுக்கிற தன் உத்தியாகத்திலே மறுபடியும் வைக்கிறான்; அந்தப்படியே அவன் பார்வோனுடைய கையிலே பாத்திரத்தைக் கொடுக்கிறான் (ஆதி 40:21).

பார்வோன் சுயம்பாகிகளின் தலைவனுடைய தலையை தன் உத்தியோகஸ்தரின் நடுவே உயர்த்தி, அவனை தூக்கிப்போடுகிறான் (ஆதி 40:22). யோசேப்பு அவர்களுக்குச் சொன்ன அர்த்தத்தின்படியே சம்பவிக்கிறது.

யோசேப்பு பானபாத்திரக்காரரின் தலைவன் கண்ட சொப்பனத்திற்கு அர்த்தம் சொன்னபோது, "நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என்மேல் தயவு வைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்க வேண்டும்" (ஆதி 40:14) என்று கேட்டுக்கொண்டார்.

பார்வோன் இப்போது பானபாத்திரக்காரரின் தலைவனுடைய தலையை உயர்த்தியிருக்கிறார். அவன் இப்போது வாழ்வடைந்திருக்கிறான். யோசேப்பு சொப்பனத்திற்கு அர்த்தம் சொன்ன பிரகாரமாக, பானபாத்திரக்காரன் பார்வோனுடைய கையிலே பாத்திரத்தைக் கொடுக்கிறான். ஆனாலும் பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவரை மறந்துவிடுகிறான் (ஆதி 40:23).

யோசேப்புக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் இடையே காணப்படுகிற ஒற்றுமைகளை வேதபண்டிதர்கள் விளக்கி சொல்லுகிறார்கள். இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது, அவரோடுகூட இரண்டு கள்ளர்களும் சிலுவையில் அறையப்பட்டார்கள். அவர்களில் ஒருவன் இரட்சிக்கப்பட்டான். மற்ற கள்ளனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டான்.

இதுபோலவே, யோசேப்போடுகூட, பார்வோனின் இரண்டு பிரதானிகள், சிறைச்சாலையில் வேதனைகளை அனுபவிக்கிறார்கள். இரண்டு பிரதானிகளில் ஒருவன் மரணத்திற்கு தப்புவிக்கப்பட்டு உயர்த்தப்படுகிறான். மற்றொரு பிரதானியோ மரத்திலே தூக்கிப்போடப்பட்டு மரித்துப்போகிறான்.

யோசேப்பு பானபாத்திரக்காரனிடம், "நீ வாழ்வடைந்திருக்கும்போது என்னை நினைத்துக்கொள்" என்று சொன்னார். ஆனால் அவனோ யோசேப்பை நினையாமல் அவரை மறந்துவிடுகிறான்.

கல்வாரியில் இயேசுகிறிஸ்து தொங்கிக்கொண்டிருக்கும்போது, அவரோடுகூட சிலுவையில் அறையப்பட்ட இரண்டு கள்ளர்களில் ஒருவன், இயேசுவை நோக்கி, "ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" (லூக் 23:42) என்று சொல்லுகிறான்.

பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினையாமல், அவரை மறந்துவிட்டான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ, தன்னிடத்தில் உதவி கேட்ட அந்தக் கள்ளனை மறக்கவில்லை. கிறிஸ்துவானவர் அந்தக் கள்ளனை நோக்கி, "இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (லூக் 23:43) என்று சொன்னார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மை ஒருபோதும் மறக்கமாட்டார்.

41 அதிகாரம்

கர்த்தருடைய தெய்வீக திட்டத்தின் பிரகாரமாக யோசேப்பு எகிப்து தேசத்திலே உயர்த்தப்படுகிறார். கானான் தேசத்தில் பஞ்சமுண்டாயிற்று. யாக்கோபுக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் ஆகாரம் கிடைக்கிறது.

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் கண்ட சொப்பனங்கள் (ஆதி 41:1-8). பார்வோனின் சொப்பத்திற்கு அர்த்தம் கூற யோசேப்பு அழைக்கப்படுகிறார் (ஆதி 41:9-13). யோசேப்பு பார்வோனுடைய சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லுகிறார். எகிப்து தேசத்தில் ஏழு வருஷம் பரிபூரணமும், ஏழுவருஷமும் பஞ்சமும் உண்டாகும் என்பது அந்த சொப்பனத்தின் அர்த்தமாகும். இந்தப் பஞ்சத்திலிருந்து தப்பிக்க என்ன செய்யவேண்டும் என்றும் யோசேப்பு புத்தியுள்ள ஆலோசனை சொல்லுகிறார் (ஆதி 41:14-36).

பார்வோன் யோசேப்பை எகிப்து தேசத்திலே உயர்ந்த அதிகாரியாக நியமிக்கிறான் (ஆதி 41:37-45). யோசேப்பு சொப்பனத்திற்கு அர்த்தம் சொன்ன பிரகாரமாக எகிப்து தேசத்திலே காரியங்கள் சம்பவிக்கிறது (ஆதி 41:46-57).

பார்வோன் கண்ட சொப்பனங்கள் ஆதி 41:1-8

ஆதி 41:1. இரண்டு வருஷம் சென்றபின்பு, பார்வோன் ஒரு சொப்பனம் கண்டான்; அது என்னவென்றால், அவன் நதியண்டையிலே நின்று கொண்டிருந்தான்.

ஆதி 41:2. அப்பொழுது அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து புல் மேய்ந்தது.

ஆதி 41:3. அவைகளின்பின் அவலட்சணமும் கேவலுமான வேறே ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து, நதி ஓரத்தில் மற்றப் பசுக்களண்டையில் நின்றது.

ஆதி 41:4. அவலட்சணமும் கேவலுமான பசுக்கள் அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்களையும் பட்சித்துப் போட்டது; இப்படிப் பார்வோன் கண்டு விழித்துக்கொண்டான்.

ஆதி 41:5. மறுபடியும் அவன் நித்திரை செய்து, இரண்டாம்விசை ஒரு சொப்பனம் கண்டான்; நல்ல செழுமையான ஏழு கதிர்கள் ஒரே தாளிலிருந்த ஓங்கி வளர்ந்தது.

ஆதி 41:6. பின்பு, சாவியானதும் கீழ்காற்றினால் தீய்ந்ததுமான ஏழு கதிர்கள் முளைத்தது.

ஆதி 41:7. சாவியான கதிர்கள் செழுமையும் நிறைமேனியுமான அந்த ஏழு கதிர்களையும் விழுங்கிப்போட்டது; அப்பொழுது பார்வோன் விழித்துக் கொண்டு, அது சொப்பனம் என்று அறிந்தான்.

ஆதி 41:8. காலமே பார்வோனுடைய மனம் கலக்கங்கொண்டிருந்தது; அப்பொழுது அவன் எகிப்திலுள்ள சகல மந்திரவாதிகளையும், சகல சாஸ்திரிகளையும் அழைப்பித்து, அவர்களுக்குத் தன் சொப்பனத்தைச் சொன்னான்; ஒருவராலும் அதின் அர்த்தத்தைப் பார்வோனுக்குச் சொல்லக்கூடாமற்போயிற்று.

கர்த்தர் எகிப்து தேசத்திலே யோசேப்பை உயர்த்துகிறார். ஆனாலும் யோசேப்பு கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, இரண்டு வருஷங்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று. இரண்டு வருஷம் சென்ற பின்பு, பார்வோன் ஒரு சொப்பனம் காண்கிறான் (ஆதி 41:1).

கர்த்தர் தம்முடைய ஜனங்களை இரட்சிக்க ஒரு வேளையை நியமித்திருக்கிறார். அந்த வேளை வரும்போதுதான் கர்த்தருடைய ஜனத்திற்கு விடுதலையும் ஆசீர்வாதமும் கிடைக்கும். கர்த்தர் நியமித்த காலம் வரும் வரையிலும் நாம் காத்திருக்கவேண்டும். காத்திருப்பது நமக்கு கஷ்டமாகயிருந்தாலும், நமக்கு வேறு வழி இல்லை. கர்த்தருடைய வேளையே, அவருக்கும் ஏற்ற வேளை, அதுவே நமக்கும் ஏற்ற வேளை.

யோசேப்பு அடிமையாக விற்கப்பட்ட நாளிலிருந்து பானபாத்திரக்காரனுடைய சொப்பனத்திற்கு அர்த்தம் சொன்ன நாள்வரையிலும் பதினொறு வருஷமாயிற்று. யோசேப்பு சிறைச்சாலையில் மேலும் இரண்டு வருஷம் இருக்கிறார். அவருடைய விசுவாசம் சோதிக்கப்படுகிறது. (சங் 105:17-20). ஒரு மனுஷன் பதிமூன்று வருஷங்களாகச் சோதிக்கப்பட்டால், அவன் சோர்ந்து போய்விடுவான். (ஆதி 37:2; ஆதி 41:1,46).

பார்வோன் நைல் நதியண்டையில் நின்று கொண்டிருக்கிறான். நைல் நதி எகிப்து தேசத்தை விளைச்சல் நிலமாக்கிக் கொண்டிருக்கிறது. எகிப்தில் சிறிதளவே மழை பெய்தாலும் மத்திய ஆப்பிரிக்காவில் பெய்யும் மழையினால் நைல் நதி நிரம்பி ஓடும்.

கர்த்தர் யோசேப்பை உயர்த்துவதற்கு, பார்வோன் கண்ட சொப்பனங்களை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார். அந்த சொப்பனங்கள் மிகவும் சாதாரணமானவை. இதை மேலோட்டமாகப் பார்த்தால், இது மதியீனமான சொப்பனம் போல தெரியும். அவலட்சணமும் கேவலமுமான பசுக்களை சொப்பனத்தில் பார்க்க யாரும் விரும்பமாட்டார்கள். அது பற்றி பேசவும் மாட்டார்கள்.

பார்வோன் சாவியான கதிர்களை சொப்பனத்தில் காண்கிறான். இதைப்பற்றியும் யாரும் யோசித்துப் பார்க்கமாட்டார்கள். இந்த சொப்பனத்திற்கு என்ன அர்த்தம் என்று ஒருவரும் ஆராய்ச்சி செய்யமாட்டார்கள். இவையெல்லாம் மனுஷர் விரும்பாத சாதாரணமான சொப்பனங்கள். இந்த சொப்பனங்களை பார்ப்பவருக்கு மனதில் சந்தோஷமோ இன்பமோ உண்டாகாது.

பார்வோன் தன் சொப்பனத்தில் அவலட்சணமான ஏழு பசுக்களை பார்த்தது, அவருக்கு ஒரு இன்பக்கனவு அல்ல. அது அவருடைய மனதை வேதனைப்படுத்துகிற சோகக்கனவு. யாராவது ஒருவர் இப்படிப்பட்ட சொப்பனத்தைக் கண்டு, அதற்கு அர்த்தம் கேட்டால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு அர்த்தம் சொல்லுவார்கள். அதற்கு முடிவே இருக்காது. அவையெல்லாம் மதியீனமான சம்பாஷணைகளாயிருக்கும்.

இரண்டு வருஷம் சென்றபின்பு, பார்வோன் ஒரு சொப்பனம் காண்கிறான்; அது என்னவென்றால், அவன் நதியண்டையிலே நின்று கொண்டிருக்கிறான். அப்பொழுது அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து புல் மேய்கிறது. அவைகளின்பின் அவலட்சணமும் கேவலமுமான வேறே ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து, நதி ஓரத்தில் மற்றப் பசுக்களண்டையில் நிற்கிறது. அவலட்சணமும் கேவலமுமான பசுக்கள் அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்களையும் பட்சித்துப் போடுகிறது (ஆதி 41:1-4).

பார்வோன் இரண்டு சொப்பனங்களைக் காண்கிறான். அதில் இது அவன் கண்ட முதலாவது சொப்பனம். பார்வோன் இந்த சொப்பனத்தைக் கண்டு விழித்துக்கொள்கிறான். அதன் பின்பு அவன் மறுபடியும் நித்திரை செய்கிறான். அப்போது பார்வோன் இரண்டாம் விசை ஒரு சொப்பனம் காண்கிறான்.

"நல்ல செழுமையான ஏழு கதிர்கள் ஒரே தாளிலிருந்த ஓங்கி வளருகிறது. பின்பு, சாவியானதும் கீழ்காற்றினால் தீய்ந்ததுமான ஏழு கதிர்கள் முளைக்கிறது. சாவியான கதிர்கள் செழுமையும் நிறைமேனியுமான அந்த ஏழு கதிர்களையும் விழுங்கிப்போடுகிறது" (ஆதி 41:5-7).

பார்வோன் முதலாவது சொப்பனத்தைக் கண்டபோது விழித்துக்கொள்வதுபோல இரண்டாவது சொப்பனத்தையும் கண்டு விழித்துக்கொள்கிறான். அப்பொழுது தான் கண்டது சொப்பனம் என்பதை பார்வோன் அறிந்துகொள்கிறான்.

சொப்பனத்தைக் கண்ட பார்வோனால், அதற்குமேல் அமைதியாக தூங்கமுடியவில்லை. காலமே பார்வோனுடைய மனம் கலக்கங்கொண்டிருக்கிறது; அப்பொழுது அவன் எகிப்திலுள்ள சகல மந்திரவாதிகளையும், சகல சாஸ்திரிகளையும் அழைப்பித்து, அவர்களுக்குத் தன் சொப்பனத்தைச் சொல்லுகிறான்; ஒருவராலும் அதின் அர்த்தத்தைப் பார்வோனுக்குச் சொல்லக்கூடாமற்போயிற்று (ஆதி 41:8).

பார்வோனுடைய மனம் கலங்கியதற்குத் தேவனே காரணம். யோசேப்பிற்கு தேவன் இது குறித்து வெளிப்படுத்துகிறார். நேபுகாத்நேச்சாரைக் குறித்து தேவன் தானியேலுக்கு வெளிப்படுத்தினார் (தானி 2).

எகிப்து தேசத்திலும் மந்திரவாதிகள் இருந்தார்கள். அவர்களுக்கு சில மாயதந்திரங்கள் தெரியும். சாத்தானின் தந்திரங்களைக் குறித்து பில்லிசூனியங்கள், அஞ்சனம்பார்ப்பது, குறிசொல்லுவது ஆகிய காரியங்களை இவர்கள் செய்து வந்தார்கள். (யாத் 7:11,22; யாத் 8:7,18).

பார்வோன் கண்ட சொப்பனங்கள் மிகவும் விசேஷமானது. கர்த்தரே இந்த சொப்பனங்களை தம்முடைய தெய்வீக திட்டத்தின் பிரகாரமாக, பார்வோனை காணச் செய்திருக்கிறார். ஆகையினால் பார்வோன் நித்திரை தெளிந்து எழுந்தபோது, அவனுடைய மனம் கலங்கிக்கொண்டிருக்கிறது.

பார்வோன் தான் கண்ட சொப்பனங்களை, எகிப்து தேசத்திலுள்ள மந்திரவாதிகளிடத்திலும், சாஸ்திரிகளிடத்திலும் சொல்லுகிறான். அவர்கள் சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லுகிறவர்கள். ஆனால் அவர்களால் பார்வோன் கண்ட சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்ல முடியவில்லை. பார்வோன் கண்ட இரண்டு சொப்பனங்களுக்கும் அர்த்தம் சொல்லுவதற்கு கர்த்தர் யோசேப்பை நியமித்திருக்கிறார்.

யோசேப்பு ஒரு சொப்பனக்காரர். அவர் ஏற்கெனவே சொப்பனம் கண்டதினால் அநேக வேதனைகளை அனுபவித்திருக்கிறார். அதனால் அவர் பல துன்பங்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். யோசேப்பு தான் கண்ட சொப்பனத்தை தன்னுடைய சகோதரருக்கு சொன்னதினால், அவர்கள் அவரை பகைத்து, அடிமையாக விற்றுப்போட்டார்கள். யோசேப்பின் சொப்பனம் அவருடைய கஷ்டத்திற்கும், வேதனைக்கும் காரணமாயிற்று. பார்வோனுடைய சொப்பனங்களோ யோசேப்பின் ஆசீர்வாதத்திற்காக, கர்த்தரால் நியமிக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய ஆவியானவர் பார்வோனின் மனதிலே கிரியை செய்கிறார். பார்வோன் சொப்பனம் காண்கிறான். அதே ஆவியானவர் யோசேப்பின் மனதிலும் கிரியை செய்கிறார். யோசேப்பு பார்வோன் கண்ட சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லுகிறார்.

எகிப்து தேசத்திலுள்ள சகல மந்திரவாதிகளாலும், சகல சாஸ்திரிகளாலும் பார்வோன் கண்ட சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்ல முடியவில்லை. சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லுவது கர்த்தருக்குரியது. ஆகையினால் மந்திரவாதிகளாலும், சாஸ்திரிகளாலும் சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்ல முடியவில்லை. தானியேல் தீர்க்கதரிசியின் காலத்திலும், நேபுகாத்நேச்சார் கண்ட சொப்பனங்களுக்கு, கல்தேயருடைய மந்திரவாதிகளாலும், சாஸ்திரிகளாலும் அர்த்தம் சொல்ல முடியவில்லை.

"தானியேல் ராஜசமுகத்தில் பிரதியுத்தரமாக: ராஜா கேட்கிற மறைபொருளை ராஜாவுக்குத் தெரிவிக்க ஞானிகளாலும், ஜோசியராலும், சாஸ்திரிகளாலும், குறிசொல்லுகிறவர்களாலும் கூடாது" (தானி 2:27) என்று சொன்னார்.

"அப்பொழுது சாஸ்திரிகளும், ஜோசியரும், கல்தேயரும், குறிசொல்லுகிறவர்களும் என்னிடத்திலே வந்தார்கள்; சொப்பனத்தை நான் அவர்களுக்குச் சொன்னேன்; ஆனாலும் அதின் அர்த்தத்தை எனக்குத் தெரிவிக்கமாட்டாமற்போனார்கள்" (தானி 4:7).

"அப்பொழுது ராஜாவின் ஞானிகளெல்லாரும் வந்து சேர்ந்தார்கள்; ஆனாலும் அவர்கள் அந்த எழுத்தை வாசிக்கவும், அதின் அர்த்தத்தை ராஜாவுக்குத் தெரிவிக்கவும் கூடாதிருந்தது" (தானி 5:8).

யோசேப்பு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கிறார். அவர் யோசேப்பை ஆளுகை செய்கிறார். யோசேப்பு பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால், பார்வோன் கண்ட சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லுகிறார்.

பார்வோனுக்கு முன்பாக யோசேப்பு ஆதி 41:9-16

ஆதி 41:9. அப்பொழுது பானபாத்திரக்காரரின் தலைவன் பார்வோனை நோக்கி; நான் செய்த குற்றம் இன்றுதான் என் நினைவில் வந்தது.

ஆதி 41:10. பார்வோன் தம்முடைய ஊழியக்காரர்மேல் கடுங்கோபங் கொண்டு, என்னையும் சுயம்பாகிகளின் தலைவனையும் தலையாரிகளின் அதிபதி வீடாகிய சிறைச்சாலையிலே வைத்திருந்த காலத்தில்,

ஆதி 41:11. நானும் அவனும் ஒரே ராத்திரியிலே வெவ்வேறு பொருள் கொண்ட சொப்பனம் கண்டோம்.

ஆதி 41:12. அப்பொழுது தலையாரிகளின் அதிபதிக்கு வேலைக்காரனாகிய எபிரெய பிள்ளையாண்டான் ஒருவன் அங்கே எங்களோட இருந்தான்; அவனிடத்தில் அவைகளைச் சொன்னோம், அவன் நாங்கள் கண்ட சொப்பனங்களுக்குரிய வெவ்வேறு அர்த்தத்தின்படியே எங்கள் சொப்பனத்தின் பயனைச் சொன்னான்.

ஆதி 41:13. அவன் எங்களுக்குச் சொல்லிய அர்த்தத்தின்படியே நடந்தது; என்னைத்திரும்ப என் நிலையிலே நிறுத்தி, அவனைத் தூக்கிப்போடுவித்தார் என்றான்.

ஆதி 41:14. அப்பொழுது பார்வோன் யோசேப்பை அழைப்பித்தான்; அவனைத் தீவிரமாய்க் காவல்கிடங்கிலிருந்து கொண்டுவந்தார்கள். அவன் சவரம் பண்ணிக் கொண்டு, வேறு வஸ்திரம் தரித்து, பார்வோனிடத்தில் வந்தான்.

ஆதி 41:15. பார்வோன் யோசேப்பை நோக்கி: ஒரு சொப்பனம் கண்டேன், அதின் அர்த்தத்தைச் சொல்ல ஒருவரும் இல்லை; நீ ஒரு சொப்பனத்தைக் கேட்டால், அதின் அர்த்தத்தைச் சொல்லுவாய் என்று உன்னைக் குறித்து நான் கேள்விப்பட்டேன் என்றான்.

ஆதி 41:16. அப்பொழுது யோசேப்பு பார்வோனுக்குப் பிரதியுத்தரமாக: நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச் செய்வார் என்றான்.

சிறைச்சாலையில் இருக்கும் யோசேப்பு சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லுவார் என்று பார்வோனுக்கு அறிவிக்கப்படுகிறது. யோசேப்பை பற்றிய செய்தியை பானபாத்திரக்காரரின் தலைவன் பார்வோனுக்கு சொல்லுகிறான். யோசேப்பு பானபாத்திரக்காரனிடம் ஏற்கெனவே, "என் காரியத்தை பார்வோனுக்கு அறிவி" (ஆதி 40:14) என்று சொல்லியிருந்தார். ஆனால் பானபாத்திரக்காராரின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவரை மறந்துவிட்டான்.

இப்போது பானபாத்திரக்காரனுக்கு யோசேப்பை பற்றி நினைவு வருகிறது. இந்த நினைவு யோசேப்புக்கு உதவி செய்யவேண்டும் என்பதினாலோ அல்லது யோசேப்பின் மீதுள்ள பிரியத்தினாலோ ஏற்படவில்லை. பானபாத்திரக்காரன் பார்வோனின் கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும். அவன் பார்வோனுக்கு நன்மை செய்து, பார்வோனிடத்திலிருந்து நல்ல பெயரை பெற்றுக்கொள்ளவேண்டும். இதற்காகவே பானபாத்திரக்காரன் பார்வோனிடத்தில் யோசேப்பை பற்றி சொல்லுகிறான்.

யோசேப்பைப்பற்றி பார்வோனிடத்தில் இதுவரையிலும் சொல்லாதது தான் செய்த குற்றம் என்பதையும் பானபாத்திரக்காரன் அங்கீகரிக்கிறான். "நான் செய்த குற்றம் இன்று தான் என் நினைவில் வந்தது" என்று பானபாத்திரக்காரன் பார்வோனுக்கு சொல்லுகிறான். பார்வோன் பானபாத்திரக்காரரின் தலைவன்மேலும், சுயம்பாகிகளின் தலைவன் மேலும் கடுங்கோபங்கொண்டு, அவர்கள் இருவரையும் தலையாரிகளின் அதிபதிகளின் வீடாகிய சிறைச்சாலையில் வைத்திருந்தான் (ஆதி 41:9,10).

யோசேப்பை மறந்தது பானபாத்திரக்காரரின் தலைவனுடைய குற்றம். (ஆதி 40:14-15,23). தேவனுடைய வேளையில் அவன் அதை நினைவுகூருகிறான். அவன் மறந்ததும், அவன் நினைவுகூருவதும் தேவனுடைய தெய்வீக பராமரிப்பாயிருக்கிறது. (ஆதி 40:23).

அப்போது அதே சிறைச்சாலையில் யோசேப்பும் வைக்கப்பட்டிருந்தார். அவர்கள் சிறைச்சாலையிலிருந்த காலத்தில், பார்வோனின் பிரதானிகள் இருவரும் ஒரே ராத்திரியிலே வெவ்வேறு பொருள் கொண்ட சொப்பனம் கண்டார்கள். சிறைச்சாலையிலே தாங்கள் கண்ட சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லுவதற்கு ஒருவருமில்லை என்று நினைத்து அவர்கள் இருவரும் கலக்கத்தோடிருந்தார்கள். அப்போது யோசேப்பு அவர்களை விசாரித்து, அவர்கள் கண்ட சொப்பனங்களுக்கு அர்த்தத்தைச் சொன்னார்.

பானபாத்திரக்காரரின் தலைவன் பார்வோனுக்கு சிறைச்சாலையில் நடைபெற்ற சம்பவங்களை நினைவுகூர்ந்து சொல்லுகிறான். அவன் பார்வோனை நோக்கி, "அப்பொழுது தலையாரிகளின் அதிபதிக்கு வேலைக்காரனாகிய எபிரெய பிள்ளையாண்டான் ஒருவன் அங்கே எங்களோட இருந்தான்; அவனிடத்தில் அவைகளைச் சொன்னோம், அவன் நாங்கள் கண்ட சொப்பனங்களுக்குரிய வெவ்வேறு அர்த்தத்தின்படியே எங்கள் சொப்பனத்தின் பயனைச் சொன்னான். அவன் எங்களுக்குச் சொல்லிய அர்த்தத்தின்படியே நடந்தது; என்னைத் திரும்ப என் நிலையிலே நிறுத்தி, அவனைத் தூக்கிப்போடுவித்தார்" (ஆதி 41:12,13) என்று சொல்லுகிறான்.

அப்பொழுது பார்வோன் யோசேப்பை அழைப்பிக்கிறார் (ஆதி 41:14). இந்த வேளையே பார்வோனும் யோசேப்பும் சந்திப்பதற்கு கர்த்தருக்கு ஏற்ற வேளையாயிருக்கிறது. கர்த்தருடைய வேளை எப்போதுமே அவருடைய ஜனத்திற்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்கும் வேளையாயிருக்கும். அதுவே அவர்களுக்கு நன்மை உண்டாகும் வேளையாயிருக்கும்.

பாலஸ்தீன தேசத்திலும், மேலும் சில கிழக்கு தேசங்களிலும் சவரம் பண்ணிக் கொள்ளுதல் தவறான பழக்கமாகும். ஆனால் எகிப்தியர் நீளமான தாடி வளர்ப்பதில்லை. யோசேப்பு எந்தச் சூழ்நிலையில் இருக்கிறாரோ அதற்குத் தகுந்தபடி அவர் தன்னை மாற்றிக் கொள்கிறார். பார்வோன் தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்காக என்னென்ன செய்ய வேண்டுமோ அவை எல்லாவற்றையும் யோசேப்பு செய்கிறார். எபிரெயர்கள் துக்கம் அனுசரிக்கும்போது சவரம் பண்ணிக் கொள்வார்கள். ஆனால் எகிப்தியரோ துக்க காலத்தில் சவரம் பண்ணாமல் தாடி வளர்ப்பார்கள்.

பானபாத்திரக்காரரின் தலைவன் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட அன்றே, யோசேப்பை பற்றி பார்வோனிடத்தில் சொல்லவில்லை. அவன் யோசேப்பை மறந்துவிட்டான். ஒருவேளை பானபாத்திரக்காரன் யோசேப்பை மறக்காமல், அப்போதே அவரைப்பற்றி பார்வோனிடத்தில் சொல்லியிருந்தால், பார்வோன் பானபாத்திரக் காரரின் வார்த்தைகளைக் கேட்டு, யோசேப்பை விடுதலை செய்திருப்பான்.

யோசேப்பு அப்போது சிறைச்சாலை யிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமல்ல. யோசேப்பு அப்போது தன்னைப்பற்றிச் சொன்னபோது "நான் எபிரெய தேசத்திலிருந்து களவாய் கொண்டு வரப்பட்டேன்" (ஆதி 40:15) என்று வேதனையோடு சொன்னார். அப்போது தன் சொந்த தேசத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்னும் விருப்பம் யோசேப்புக்கு இருந்தது. பார்வோன் யோசேப்பை அப்போது விடுதலை செய்திருந்தால், யோசேப்பு தன்னுடைய சொந்த தேசத்திற்கு திரும்பிப் போயிருந்திருப்பார். ஆனால் யோசேப்பு சிறைச்சாலையில் மேலும் இரண்டு வருஷம் இருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிற்று.

யோசேப்பைப்பற்றிய செய்தியை பானபாத்திரக்காரரின் தலைவன், கர்த்தருடைய தெய்வீக திட்டத்தின் பிரகாரம், இப்போது பார்வோனுக்கு அறிவிக்கிறான். பார்வோனும் யோசேப்பை தன்னிடத்தில் அழைத்து வருமாறு உடனே கட்டளையிடுகிறான். யோசேப்பு இப்போது சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்படுவதினால், அவருக்கும், யாக்கோபின் குடும்பத்தாருக்கும் ஏராளமான நன்மைகள் உண்டாயிற்று. அவர் இரண்டு வருஷங்களுக்கு முன்பு சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தால், யோசேப்பு இந்த அளவுக்கு அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கமாட்டார்.

யோசேப்பு சிறைச்சாலையில் மேலும் இரண்டு வருஷங்கள் அடைக்கப்பட்டிருந்தது. அவருக்கு வேதனையான காலமாக இருந்திருக்கலாம். ஆனாலும் கர்த்தருக்கு சித்தமான வேளை வரும் வரையிலும், விசுவாசிகளாகிய நாம் காத்திருப்பது, நமக்கு மிகவும் அவசியமாயிருக்கிறது. கர்த்தருக்காகவும், அவருக்கு சித்தமான வேளைக்காகவும், காத்திருக்கிறவர்கள் புதுபெலனடைவார்கள்.

பார்வோனுடைய கட்டளைப் பிரகாரம், அவனுடைய வேலைக்காரர்கள் யோசேப்பை தீவிரமாய்க் காவல்கிடங்கிலிருந்து கொண்டுவருகிறார்கள். யோசேப்பு சவரம் பண்ணிக் கொண்டு, வேறு வஸ்திரம் தரித்து, பார்வோனிடத்தில் வருகிறார் (ஆதி 41:14).

யோசேப்பு பார்வோனுக்கு முன்பாக நிற்பது, அவருக்கு மிகவும் ஆச்சரியமாகயிருந்திருக்கும். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு அதிசயமான காரியங்களையும், ஆச்சரியமான காரியங்களையும் நடப்பிக்கிறவர். புதிய ஏற்பாட்டுக்காலத்தில், கர்த்தர் பேதுருவையும் இதுபோல ஆச்சரியமாய் வழிநடத்தினார்.

"அந்தப்படியே அவன் புறப்பட்டு அவனுக்குப் பின்சென்று, தூதனால் செய்யப்பட்டது மெய்யென்று அறியாமல், தான் ஒரு தரிசனங்காண்கிறதாக நினைத்தார்" (அப் 12:9).

யோசேப்பு சிறைச்சாலையில் இரண்டு வருஷம் இருந்தபோது, அவருக்கு சகலமும் காலதாமதமாவதுபோல இருந்தது. ஆனால் இப்போதோ சகலமும் தீவிரமாய் நடைபெறுகிறது. காவல் கிடங்கிலிருந்த யோசேப்பை பார்வோனுடைய காவலாளர்கள் தீவிரமாய் அழைத்துக்கொண்டு வருகிறார்கள். பார்வோனும் காலதாமதம் பண்ணாமல், தேவையில்லாத காரியங்களை பேசாமல், யோசேப்பை பார்த்தவுடனே, தான் கண்ட சொப்பனங்களைப்பற்றி பேச ஆரம்பித்துவிடுகிறான்.

பார்வோன் யோசேப்பை நோக்கி, "ஒரு சொப்பனம் கண்டேன், அதின் அர்த்தத்தைச் சொல்ல ஒருவரும் இல்லை; நீ ஒரு சொப்பனத்தைக் கேட்டால், அதின் அர்த்தத்தைச் சொல்லுவாய் என்று உன்னைக் குறித்து நான் கேள்விப்பட்டேன்" (ஆதி 41:15) என்று சொல்லுகிறான்.

பார்வோன் யோசேப்பை தன்னுடைய அரண்மனைக்கு அழைப்பது யோசேப்புக்கு பெருமையான விஷயம். காவல் கிடங்கிலிருந்த யோசேப்பு இப்போது, எகிப்து தேசத்தின் ராஜாவாகிய பார்வோனுடைய அரண்மனையில், அவனுக்கு முன்பாக நிற்கிறார். ஆனாலும் யோசேப்பு தன்னைக் கனம்பண்ணாமல், பெருமைப்படுத்தாமல் தேவனைக் கனம்பண்ணுகிறார்.

யோசேப்பு பார்வோனுக்குப் பிரதியுத்தரமாக, "நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச் செய்வார்" (ஆதி 41:16) என்று சொல்லுகிறார்.

யோசேப்பு துதி கன மகிமை அனைத்தையும் கர்த்தருக்கே செலுத்துகிறார். தேவனே பார்வோனுக்கு உத்தரவு அருளிச்செய்வார் என்று சொல்லி யோசேப்பு தேவனைக் கனம்பண்ணுகிறார். அது மாத்திரமல்ல, தேவன் பார்வோனுக்கு அருளிச்செய்யும் உத்தரவைப்பற்றிச் சொல்லும்போது, அதை "மங்களமான உத்தரவு" என்றும் சொல்லுகிறார். பார்வோனுக்கு கர்த்தருடைய சமுகத்திலிருந்து சமாதானமான உத்தரவு வரும் என்று யோசேப்பு ஆசீர்வாதமான வார்த்தைகளை சொல்லுகிறார்.

சொப்பனத்திற்கு அர்த்தம்
ஆதி 41:17-32

ஆதி 41:17. பார்வோன் யோசேப்பை நோக்கி: என் சொப்பனத்திலே, நான் நதி ஓரத்தில் நின்று கொண்டிருந்தேன்.

ஆதி 41:18. அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து புல் மேய்ந்தது.

ஆதி 41:19. அவைகளின் பின் இளைத்ததும் மகாஅவலட்சணமும் கேவலுமான வேறே ஏழு பசுக்கள் ஏறிவந்தது; இவைகளைப் போல அவலட்சணமான பசுக்களை எகிப்துதேசமெங்கும் நான் கண்டதில்லை.

ஆதி 41:20. கேவலும் அவலட்சணமுமான பசுக்கள் கொழுமையான முந்தின ஏழு பசுக்களையும் பட்சித்துப் போட்டது.

ஆதி 41:21. அவைகள் இவைகளின் வயிற்றுக்குள் போயும், வயிற்றுக்குள் போயிற்றென்று தோன்றாமல், முன் இருந்தது போலவே அவலட்சணமாயிருந்தது; இப்படிக் கண்டு விழித்துக் கொண்டேன்.

ஆதி 41:22. பின்னும் நான் என் சொப்பனத்திலே, நிறைமேனியுள்ள ஏழு நல்ல கதிர்கள் ஒரே தாளிலிருந்து ஓங்கி வளரக்கண்டேன்.

ஆதி 41:23. பின்பு சாவியானவைகளும் கீழ்காற்றினால் தீய்ந்து பதரானவைகளுமான ஏழு கதிர்கள் முளைத்தது.

ஆதி 41:24. சாவியான கதிர்கள் அந்த ஏழு நல்ல கதிர்களையும் விழுங்கிப் போட்டது. இதை மந்திரவாதிகளிடத்தில் சொன்னேன்; இதின் பொருளை எனக்கு விடுவிக்கிறவன் ஒருவனும் இல்லை என்றான்.

ஆதி 41:25. அப்பொழுது யோசேப்பு பார்வோனை நோக்கி: பார்வோனின் சொப்பனம் ஒன்றுதான்; தேவன் தாம் செய்யப்போகிறது இன்னதென்று பார்வோனுக்கு அறிவித்திருக்கிறார்.

ஆதி 41:26. அந்த ஏழு நல்ல பசுக்களும் ஏழு வருஷமாம்; அந்த ஏழு நல்ல கதிர்களும் ஏழு வருஷமாம்; சொப்பனம் ஒன்றே.

ஆதி 41:27. அவைகளின் பின் ஏறிவந்த கேவலும் அவலட்சணமுமான ஏழு பசுக்களும் ஏழு வருஷமாம்; கீழ்க்காற்றினால் தீய்ந்து சாவியான ஏழு கதிர்களும் ஏழு வருஷமாம்; இவைகள் பஞ்சமுள்ள ஏழு வருஷமாம்.

ஆதி 41:28. பார்வோனுக்கு நான் சொல்லவேண்டிய காரியம் இதுவே; தேவன் தாம் செய்யப்போகிறதைப் பார்வோனுக்குக் காண்பித்திருக்கிறார்.

ஆதி 41:29. எகிப்து தேசமெங்கும் பரிபூரணமான விளைவு உண்டாயிருக்கும் ஏழு வருஷம் வரும்.

ஆதி 41:30. அதன்பின் பஞ்சமுண்டாயிருக்கும் ஏழு வருஷம் வரும்; அப்பொழுது எகிப்துதேசத்தில் அந்தப் பரிபூரணமெல்லாம் மறக்கப்பட்டுப்போம்; அந்தப் பஞ்சம் தேசத்தைப் பாழாக்கும்.

ஆதி 41:31. வரப்போகிற மகா கொடுமையான பஞ்சத்தால் தேசத்தில் முன்னிருந்த பரிபூரணமெல்லாம் ஒழிந்துபோம்.

ஆதி 41:32. இந்தக் காரியம் தேவனால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், தேவன் இதைச் சீக்கிரத்தில் செய்வார் என்பதையும் குறிக்கும்பொருட்டு, இந்தச் சொப்பனம் பார்வோனுக்கு இரட்டித்தது.

பார்வோன் ஒரே நாள் ராத்திரியிலே இரண்டு சொப்பனங்களைக் கண்டிருக்கிறான். அவன் தான் கண்ட சொப்பனங்களை ஒவ்வொன்றாக யோசேப்புக்கு சொல்லுகிறான்.

பார்வோன் யோசேப்பை நோக்கி, "என் சொப்பனத்திலே, நான் நதி ஓரத்தில் நின்று கொண்டிருந்தேன். அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து புல் மேய்ந்தது. அவைகளின் பின் இளைத்ததும் மகா அவலட்சணமும் கேவலமுமான வேறே ஏழு பசுக்கள் ஏறிவந்தது; இவைகளைப் போல அவலட்சணமான பசுக்களை எகிப்துதேசமெங்கும் நான் கண்டதில்லை" என்றும்,

"கேவலமும் அவலட்சணமுமான பசுக்கள் கொழுமையான முந்தின ஏழு பசுக்களையும் பட்சித்துப் போட்டது. அவைகள் இவைகளின் வயிற்றுக்குள் போயும், வயிற்றுக்குள் போயிற்றென்று தோன்றாமல், முன் இருந்தது போலவே அவலட்சணமாயிருந்தது; இப்படிக் கண்டு விழித்துக் கொண்டேன்" (ஆதி 41:17-21) என்றும் சொல்லுகிறான். இது பார்வோன் கண்ட முதலாவது சொப்பனத்தின் விவரமாகும்.

பார்வோன் தன்னுடைய முதலாவது சொப்பனத்தை யோசேப்பினிடத்தில் சொன்ன பின்பு, தன்னுடைய இரண்டாவது சொப்பனத்தையும் அவரிடத்தில் சொல்லுகிறான்.

பார்வோன் யோசேப்பை நோக்கி, "பின்னும் நான் என் சொப்பனத்திலே, நிறைமேனியுள்ள ஏழு நல்ல கதிர்கள் ஒரே தாளிலிருந்து ஓங்கி வளரக்கண்டேன். பின்பு சாவியானவைகளும் கீழ்காற்றினால் தீய்ந்து பதரானவைகளுமான ஏழு கதிர்கள் முளைத்தது. சாவியான கதிர்கள் அந்த ஏழு நல்ல கதிர்களையும் விழுங்கிப் போட்டது" (ஆதி 41:22-24) என்று சொல்லுகிறான்.

பார்வோன் தான் கண்ட இரண்டு சொப்பனங்களையும், எகிப்து தேசத்திலுள்ள சாஸ்திரிகளிடத்திலும், மந்திரவாதிகளிடத்திலும் சொன்னான். ஆனாலும், "இதின் பொருளை எனக்கு விடுவிக்கிறவன் ஒருவனும் இல்லை" என்று பார்வோன் யோசேப்பினிடத்தில் இப்போது கலக்கத்தோடு சொல்லுகிறான்.

யோசேப்பு பார்வோன் கண்ட இரண்டு சொப்பனங்களுக்கும் அர்த்தம் சொல்லுகிறார். யோசேப்பு பார்வோனை நோக்கி, "பார்வோனின் சொப்பனம் ஒன்றுதான்; தேவன் தாம் செய்யப்போகிறது இன்னதென்று பார்வோனுக்கு அறிவித்திருக்கிறார். அந்த ஏழு நல்ல பசுக்களும் ஏழு வருஷமாம்; அந்த ஏழு நல்ல கதிர்களும் ஏழு வருஷமாம்; சொப்பனம் ஒன்றே. அவைகளின் பின் ஏறிவந்த கேவலமும் அவலட்சணமுமான ஏழு பசுக்களும் ஏழு வருஷமாம்; கீழ்க்காற்றினால் தீய்ந்து சாவியான ஏழு கதிர்களும் ஏழு வருஷமாம்; இவைகள் பஞ்சமுள்ள ஏழு வருஷமாம்" (ஆதி 41:25-27) என்று சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லுகிறார்.

பார்வோன் இரண்டு சொப்பனங்களைக் கண்டாலும், அந்த சொப்பனங்கள் இரண்டும் ஒன்றுதான் என்றும், அவற்றிற்கு ஒரே அர்த்தமே உள்ளது என்றும் யோசேப்பு பார்வோனுக்கு சொல்லுகிறார். பார்வோன் இரண்டு சொப்பனங்களைக் கண்டதற்கு ஒரு தெய்வீக நோக்கமுண்டு. யோசேப்பு நோக்கத்தையும் பார்வோனுக்கு தெளிவுபடுத்துகிறார்.

யோசேப்பு பார்வோனை நோக்கி, "இந்தக் காரியம் தேவனால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், தேவன் இதைச் சீக்கிரத்தில் செய்வார் என்பதையும் குறிக்கும்பொருட்டு, இந்தச் சொப்பனம் பார்வோனுக்கு இரட்டித்தது" (ஆதி 41:32) என்று சொல்லுகிறார்.

பார்வோன் முதலாவது சொப்பனத்தில் அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்களையும், இளைத்ததும் மகா அவலட்சணமும் கேவலமுமான வேறே ஏழு பசுக்களையும் கண்டான். அவன் இரண்டாவது சொப்பனத்தில் நிறைமேனியுள்ள ஏழு நல்ல கதிர்களையும், சாவியானவைகளும் கீழ்க்காற்றினால் தீய்ந்து பதரானவைகளுமான ஏழு கதிர்களையும் கண்டான்.

முதலாவது சொப்பனத்தில் கேவலமும் அவலட்சணமுமான பசுக்கள் கொழுமையான முந்தின ஏழு பசுக்களையும் பட்சித்துப்போட்டது. இரண்டாவது சொப்பனத்தில் சாவியான கதிர்கள் அந்த ஏழு நல்ல கதிர்களையும் விழுங்கிப்போட்டது.

அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்களும், நிறைமேனியுள்ள ஏழு நல்ல கதிர்களும் எகிப்து தேசமெங்கும் ஏழு வருஷங்களுக்கு பரிபூரணமான விளைவு உண்டாயிருக்கும் என்பதற்கு அடையாளம்.

இளைத்ததும் மகாஅவலட்சணமும் கேவலமுமான ஏழுபசுக்களும், சாவியானவைகளும் கீழ்க்காற்றினால் தீய்ந்து பதரானவைகளுமான ஏழுகதிர்களும் ஏழு வருஷ மகாபஞ்சத்திற்கு அடையாளம்.

பார்வோன் தான் கண்ட சொப்பனங்களை யோசேப்புக்கு சொல்லுகிறான். யோசேப்பு அந்த சொப்பனங்களுக்கு அர்த்தத்தை சொல்லும்போது, "பார்வோனுக்கு நான் சொல்லவேண்டிய காரியம் இதுவே; தேவன் தாம் செய்யப்போகிறதைப் பார்வோனுக்குக் காண்பித்திருக்கிறார்" (ஆதி 41:28) என்று சொல்லுகிறார்.

இரண்டு சொப்பனங்களுக்கும் அர்த்தம் ஒன்று தான். தேவன் தாம் செய்யப்போகிறதை சீக்கிரத்தில் செய்வார் என்பதை குறிக்கும் பொருட்டு, இந்தச் சொப்பனம் பார்வோனுக்கு இரட்டித்தது. (2கொரி 13:1).

யோசேப்பு பார்வோனை தேவனிடம் வழிநடத்துகிறார். எல்லாக் காரியங்களுக்கும் கர்த்தரே காரணகர்த்தா. வரப்போகிற இந்தப் பஞ்சம் இயற்கையினால் வருவதல்ல. இது தேவனுடைய தெய்வீகக் கிரியை. தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே நைல் நதியில் தண்ணீர் பாய்ந்து ஓடுகிறது. தம்முடைய சித்தத்தைத் தேவன் பூமியில் நிறைவேற்றுவதற்கு சில நிபந்தனைகளை மனுஷருக்குத் தருகிறார்.

தேவனால் தெரிந்தெடுக்கப்படும் ஜனம் தேவசித்தத்திற்கு எப்போதும் கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்துக்குப் போவதற்கு முன்பாகவே தேவன் ஆபிரகாமிடம் இஸ்ரவேலர் எகிப்துக்குப் போவது பற்றியும், அங்கிருந்து திரளான செல்வத்தோடு திரும்பி வருவது பற்றியும் கூறியிருக்கிறார். (ஆதி 15:12-16) தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காகப் புறஜாதி ராஜாக்கள் தம்முடைய ஜனங்களை ஆளுகை செய்வதற்கு அனுமதித்திருக்கிறார்.

எகிப்து தேசத்திலே ஏழு வருஷ பரிபூரணமும், ஏழு வருஷ பஞ்சமும் உண்டாகும். இவ்விரண்டையும் தேவன் தாமே செய்யப்போகிறார். தேவன் தாம் செய்யப்போகிற காரியத்தை, சொப்பனங்கள் மூலமாக பார்வோனுக்கு அறிவித்திருக்கிறார். பார்வோனுக்கு சொப்பனங்களை பார்க்க மாத்திரமே முடிகிறது. அவற்றின் அர்த்தம் பார்வோனுக்கு தெரியவில்லை. எகிப்து தேசத்திலுள்ள மந்திரவாதிகளாலும், சாஸ்திரிகளாலும் பார்வோன் கண்ட சொப்பனங்களுக்கு, அர்த்தம் சொல்ல முடியவில்லை. சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லுவது தேவனுக்குரியது. யோசேப்பு இது சம்பந்தமாக பார்வோனிடத்தில் சொன்னபோது, "நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச்செய்வார்" என்று சொன்னார்.

யோசேப்பு இப்போது பார்வோனுக்கு சொப்பனத்தின் அர்த்தத்தை சொல்லுகிறார். யோசேப்பு பார்வோனை நோக்கி, "எகிப்து தேசமெங்கும் பரிபூரணமான விளைவு உண்டாயிருக்கும் ஏழு வருஷம் வரும். அதன்பின் பஞ்சமுண்டாயிருக்கும் ஏழு வருஷம் வரும்; அப்பொழுது எகிப்துதேசத்தில் அந்தப் பரிபூரணமெல்லாம் மறக்கப்பட்டுப்போம்; அந்தப் பஞ்சம் தேசத்தைப் பாழாக்கும். வரப்போகிற மகா கொடுமையான பஞ்சத்தால் தேசத்தில் முன்னிருந்த பரிபூரணமெல்லாம் ஒழிந்துபோம்" (ஆதி 41:29-31) என்று சொல்லுகிறார்.

பார்வோன் கண்ட இரண்டு சொப்பனங்களும் ஒன்றாயிருந்தாலும், அவற்றின் அர்த்தம் வெவ்வேறாயிருக்கிறது. பார்வோன் எகிப்து தேசத்திலே சம்பவிக்கப்போகிற இரண்டு வெவ்வேறு காரியங்களை, ஒரே அர்த்தமுள்ள, இரண்டு சொப்பனங்களில் பார்த்திருக்கிறான். எகிப்து தேசத்தாருக்கு இரண்டு வெவ்வேறு அனுபவங்கள் வரும். ஒன்று எகிப்து தேசம் எங்கும் பரிபூரணமான விளைவு உண்டாயிருக்கும். இந்த விளைவு ஏழு வருஷங்களுக்கு உண்டாகும். அதன் பின்பு எகிப்து தேசமெங்கும் கொடிய பஞ்சமுண்டாகும். இந்த பஞ்சமும் ஏழு வருஷங்களுக்கு இருக்கும். வரப்போகிற பஞ்சம் மகாகொடுமையான பஞ்சமாயிருக்கும். இதனால் எகிப்து தேசத்தில் முன்னிருந்த பரிபூரணமெல்லாம் ஒழிந்துபோகும்.

எகிப்து தேசத்தில் நடைபெறுகிற சம்பவம் போலவே மனுஷருடைய ஜீவியத்திலும் நடைபெறுகிறது. நமக்கும் சந்தோஷமும் துக்கமும் மாறி மாறி வருகிறது. சில சமயங்களில் நமக்கு ஆறுதல் பெருகியிருக்கிறது. வேறு சில சமயங்களில் நமக்கு வேதனைகள் பெருகியிருக்கிறது.

தேவனாகிய கர்த்தர் சர்வசிருஷ்டிகராயிருக்கிறார். அவர் தம்முடைய சிருஷ்டிகள் எல்லாவற்றையும் போஷித்து பராமரிக்கிறார். தேவன் எகிப்து தேசத்திலே கொடுமையான பஞ்சத்தை அனுப்புவதற்கு முன்பாக, பரிபூரணமான விளைச்சலை அனுப்புகிறார். இதன் மூலமாக எகிப்து தேசத்தார், பரிபூரணமான விளைச்சலை பஞ்சகாலத்தில் பயன்படுத்திக்கொள்ளலாம். பரிபூரண காலத்தில் நாம் விளைச்சலை மீதியாக வைத்திருந்தால் தான், அதை பஞ்சகாலத்தில் பயன்படுத்திக்கொள்ள முடியும். அதற்கு ஞானமும் புத்தியும் வேண்டும்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக ஞானத்தினாலும், தம்முடைய சிருஷ்டிகளுக்கு, தம்முடைய பராமரிப்புக்களை பகிர்ந்து கொடுக்கிறார். குடும்பத்தின் தலைவர்கள் தங்கள் வீட்டுக்காரியங்களை நிர்வாகம்பண்ண வேண்டும். ஒவ்வொரு காரியத்தையும் ஞானத்தோடும் புத்தியோடும் செய்தால், நமக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது. கர்த்தருக்கு பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம்.

கர்த்தர் வானத்தையும் பூமியையும் சிருஷ்டிக்கும்போது, இந்தப் பூமிக்கு ஆசீர்வாதமாக வெவ்வேறு காலங்களையும் சிருஷ்டித்திருக்கிறார். மழை காலமும், வெயில் காலமும், பனிகாலமும், வசந்தகாலமும் மாறி மாறி வருகிறது. இந்தக் காலங்கள் எல்லாமே நமக்கு தேவையானவை. நாம் அந்தந்த காலங்களில், என்னென்ன வேலைகளை செய்யவேண்டுமோ, அந்த வேலைகளை நேர்த்தியாய்ச் செய்து முடிக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, கர்த்தர் அவர்களுக்கு மன்னாவை போஜனமாகக் கொடுத்தார். அவர்கள் அன்றன்று தங்களுக்கு தேவையான மன்னாவை சேகரித்துக்கொள்ளவேண்டும். மன்னாவை சேகரியாமல் சோம்பேறியாக சும்மாயிருந்தால், அவர்கள் பட்டினியாயிருக்கவேண்டும். பேராசைப்பட்டு அதிகமாய்ச் சேர்த்தால், மன்னா பாழாய்ப்போகும்.

"இஸ்ரவேல் புத்திரர் அப்படியே செய்து, சிலர் மிகுதியாயும் சிலர் கொஞ்சமாயும் சேர்த்தார்கள். பின்பு, அதை ஓமரால் அளந்தார்கள்: மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு மீதியானதும் இல்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதும் இல்லை; அவரவர் தாங்கள் புசிக்கும் அளவுக்குத்தக்கதாகச் சேர்த்தார்கள்" (யாத் 16:17,18).

நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஏராளமான நன்மைகளையும் தீமைகளையும் அனுபவிக்கிறோம். பஞ்சம் பரிபூரணத்தை விழுங்குவதுபோல, பல சமயங்களில் நம்முடைய துக்கம் சந்தோஷத்தை விழுங்கிவிடுகிறது. நாம் அனுபவிக்கிற தீமைகள், நம்முடைய நன்மைகளை விழுங்கிவிடுகிறது. ஆனாலும் கர்த்தருடைய பிள்ளைகள் விசுவாசத்தில் திடன்கொள்ளவேண்டும். நம்முடைய நன்மைகள் தீமையினால் வெல்லப்படுவதற்கு இடங்கொடுக்கக்கூடாது நாம் தீமையை நன்மையினால் வெல்லவேண்டும்.

பார்வோன் இஸ்ரவேல் தேசத்திற்கு அதிபதியாயிருக்கிறான். அவன் அந்த தேசத்தார் எல்லோருக்கும் குடும்பத்தலைவனைப் போன்றவன். பார்வோன் எகிப்து தேசத்தார் எல்லோரையும் போஷிக்கவேண்டியவன். ஆகையினால் தேவன் தாம் செய்யப்போகிறதை பார்வோனுக்கு சொப்பனங்கள் மூலமாக காண்பித்திருக்கிறார். பார்வோன் தான் கண்ட சொப்பனங்களின் அர்த்தங்களைப் புரிந்துகொண்டு, தன்னுடைய தேசத்து ஜனங்களுக்கு, கொடுமையான பஞ்சகாலத்திலும், போஜனம் கிடைக்குமாறு நிர்வாகம்பண்ணவேண்டும்.

யோசேப்பு எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரி ஆதி 41:33-45

ஆதி 41:33. ஆகையால், விவேகமும் ஞானமுமுள்ள ஒரு மனுஷனைத் தேடி, அவனை எகிப்துதேசத்துக்கு அதிகாரியாகப் பார்வோன் ஏற்படுத்துவாராக.

ஆதி 41:34. இப்படிப் பார்வோன் செய்து, தேசத்தின்மேல் விசாரணைக்காரரை வைத்து, பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களில் எகிப்துதேசத்திலே விளையும் விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கை வாங்கும்படி செய்வாராக.

ஆதி 41:35. அவர்கள் வரப்போகிற நல்ல வருஷங்களில் விளையும் தானியங்களையெல்லாம் சேர்த்து, பட்டணங்களில் ஆகாரம் உண்டாயிருக்கும்படிக்கு, பார்வோனுடைய அதிகாரத்துக்குள்ளாகத் தானியங்களைப் பத்திரப்படுத்தி வைத்துவைப்பார்களாக.

ஆதி 41:36. தேசம் பஞ்சத்தினால் அழிந்துபோகாதபடிக்கு, அந்தத் தானியம் இனி எகிப்துதேசத்தில் உண்டாகும் பஞ்சமுள்ள ஏழு வருஷங்களுக்காக தேசத்திற்கு ஒரு வைப்பாயிருப்பதாக என்றான்.

ஆதி 41:37. இந்த வார்த்தை பார்வோனுடைய பார்வைக்கும் அவன் ஊழியக்காரர் எல்லாருடைய பார்வைக்கும் நன்றாய்க் கண்டது.

ஆதி 41:38. அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி: தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போல வேறொருவன் உண்டோ என்றான்.

ஆதி 41:39. பின்பு, பார்வோன் யோசேப்பை நோக்கி: தேவன் இவையெல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால், உன்னைப்போல விவேகமும் ஞானமுமுள்ளவன் வேறொருவனும் இல்லை.

ஆதி 41:40. நீ என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய்; உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள்; சிங்காசனத்தில் மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன் என்றான்.

ஆதி 41:41. பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: பார், எகிப்துதேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன் என்று சொல்லி,

ஆதி 41:42. பார்வோன் தன் கையில் போட்டிருந்த தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி, அதை யோசேப்பின் கையிலே போட்டு, மெல்லிய வஸ்திரங்களை அவனுக்கு உடுத்தி, பொன் சரப்பணியை அவன் கழுத்திலே தரித்து,

ஆதி 41:43. தன்னுடைய இரண்டாம் இரதத்தின்மேல் அவனை ஏற்றி, தெண்டனிட்டுப் பணியுங்கள் என்று அவனுக்கு முன்பாகக் கூறுவித்து, எகிப்துதேசம் முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கினான்;

ஆதி 41:44. பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: நான் பார்வோன்; ஆனாலும் எகிப்துதேசத்திலுள்ளவர்களில் ஒருவனும் உன் உத்தரவில்லாமல் தன் கையையாவது தன் காலையாவது அசைக்கக்கூடாது என்றான்.

ஆதி 41:45. மேலும், பார்வோன் யோசேப்புக்கு சாப்நாத்பன்னேயா என்கிற பெயரையிட்டு; ஓன்பட்டணத்து ஆசாரியனாகிய போத்திபிராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத்தை அவனுக்கு மனைவியாகக் கொடுத்தான். யோசேப்பு எகிப்துதேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி புறப்பட்டான்.

யோசேப்பு பார்வோன் கண்ட சொப்பனங்களுக்கு அர்த்தம் சொன்னதோடு, வரப்போகிற ஏழு வருஷ கொடுமையான பஞ்சகாலத்திற்கு எப்படி தப்பித்துக்கொள்வது என்பதற்கு ஆலோசனையும் சொல்லுகிறார். எகிப்து தேசம் பஞ்சத்தினால் அழிந்துபோகக்கூடாது. மகாபரிபூரணமான ஏழுவருஷத்தில் கிடைக்கும் தானியம், இனிமேல் உண்டாகப்போகும் பஞ்சமுள்ள ஏழு வருஷங்களுக்கு, எகிப்து தேசத்தாருக்கு ஒரு வைப்பாயிருக்கவேண்டும் என்று யோசேப்பு ஆலோசனை சொல்லுகிறார் (ஆதி 41:36).

எகிப்து தேசத்திலே வரப்போகிற பஞ்சத்திற்கு தப்பிப்பதற்கு, என்ன செய்யவேண்டும் என்று யோசேப்பு இரண்டு ஆலோசனைகளை சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு:

1. பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களில் எகிப்துதேசத்திலே விளையும் விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கை வாங்கும்படி செய்யவேண்டும். அவர்கள் வரப்போகிற நல்ல வருஷங்களில் விளையும் தானியங்களையெல்லாம் சேர்த்து, பட்டணங்களில் ஆகாரம் உண்டாயிருக்கும்படிக்கு, பார்வோனுடைய அதிகாரத்துக்குள்ளாகத் தானியங்களைப் பத்திரப்படுத்தி வைத்துவைக்கவேண்டும் (ஆதி 41:34,35).

2. விவேகமும் ஞானமுமுள்ள ஒரு மனுஷனைத் தேடி, அவனை எகிப்துதேசத்துக்கு அதிகாரியாகப் பார்வோன் ஏற்படுத்தவேண்டும். இப்படிப் பார்வோன் செய்து, தேசத்தின்மேல் விசாரணைக்காரரை வைக்கவேண்டும் (ஆதி 41:33,34).

விளைச்சல் அதிகமாயிருக்கும் பரிபூரண காலத்திலே, தானியத்தின் விலை குறைவாகயிருக்கும். தானியமும் தாராளமாய் கிடைக்கும். பரிபூரணமுள்ள விளைச்சல் ஏழு வருஷங்களுக்கு இருக்கும். பார்வோன் இந்த ஏழு வருஷங்களில் எகிப்து தேசத்திலே விளையும் விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கை வாங்கவேண்டும் என்பது யோசேப்பின் ஆலோசனை. இக்காலத்தில் தானியத்தை குறைந்த விலைக்கு வாங்கலாம். அதன் பின்பு பஞ்சகாலத்திலே இவற்றை விற்பனை செய்யலாம். இதனால் பார்வோனுக்கு வருமானம் கிடைக்கும். ஜனங்களுக்கு தானியம் கிடைக்கும்.

யோசேப்பு சொல்லுகிற ஆலோசனை பார்வோனுடைய பார்வைக்கும், அவன் ஊழியக்காரர் எல்லாருடைய பார்வைக்கும் நன்றாய்க் காணப்படுகிறது. யோசேப்பு சொன்ன பிரகாரமாக, விவேகமும் ஞானமுமுள்ள ஒரு மனுஷனை தேடுகிறார்கள். அவர்களுடைய பார்வையிலே யோசேப்பை விட அதிக விவேகமும் ஞானமுமுள்ள மனுஷன் ஒருவரும் கிடைக்கவில்லை.

யோசேப்பு தெய்வீக ஏவுதலினாலும், தேவனிடத்தில் தான் வைத்திருக்கும் விசுவாசத்தினாலும் பேசுகிறார். தன்னுடைய சகோதரரிடத்தில் தான் கூறிய சொப்பனங்களை நினைவுகூருகிறார். தேவன் தனக்கு நியமித்து வைத்திருக்கும் வருங்காலத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். தேசத்தை இரட்சிப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று யோசேப்பு பார்வோனிடம் பயமில்லாமலும், அதிகாரத்துடனும் பேசுகிறார்.

தேவனுடைய வெளிப்பாட்டைக் கேட்பதற்கு பார்வோனுடைய இருதயம் பக்குவமடைந்திருக்கிறது. பார்வோன் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்கிறான்.

யோசேப்பிடத்தில் தேவஆவி இருப்பதை பார்வோனும், அவனுடைய ஊழியக்காரரும் அறிந்து கொள்கிறார்கள் (ஆதி 41:37-39). அவர்கள் தங்களுடைய விக்கிரகாராதனையை ஒழித்து விடவில்லை. ஆனாலும் அவர்கள் இஸ்ரவேலின் தேவனை அங்கீகரிக்கிறார்கள்.

அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி, "தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போல வேறொருவன் உண்டோ" (ஆதி 41:38) என்று சொல்லுகிறான்.

பின்பு, பார்வோன் யோசேப்பை நோக்கி: "தேவன் இவையெல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால், உன்னைப்போல விவேகமும் ஞானமுமுள்ளவன் வேறொருவனும் இல்லை. நீ என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய்; உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள்; சிங்காசனத்தில் மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன்" (ஆதி 41:39,40) என்று சொல்லுகிறான்.

எகிப்து தேசத்தின் அதிபதியாகிய பார்வோன் யோசேப்பைக் குறித்து நற்சாட்சி கொடுக்கிறான். யோசேப்பைப்போல தேவஆவியைப்பெற்ற மனுஷன் வேறு ஒருவனுமில்லை என்று பார்வோன் சாட்சியாக சொல்லுகிறான். யோசேப்பைப்போல விவேகமும் ஞானமுமுள்ளவன் வேறொருவனுமில்லை என்றும் பார்வோன் சாட்சியாகச் சொல்லுகிறான். தேவன் தாமே தம்முடைய இரகசியங்கள் எல்லாவற்றையும் யோசேப்புக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதை பார்வோன் அறிந்திருக்கிறான்.

யோசேப்பினிடத்தில் காணப்படுகிற விவேகத்தையும், ஞானத்தையும் போத்திபார் பார்க்கவில்லை. யோசேப்பின் நல்ல சுபாவங்களை அவருடைய சகோதரர்கள் பார்க்கவில்லை. யோசேப்பு தன் சகோதரர் மூலமாகவும், போத்திபார் மூலமாகவும் பல கஷ்டங்களை அனுபவித்தவர். பொய்யான காரணங்களுக்காக யோசேப்பு சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். கர்த்தரோ இப்போது யோசேப்பை உயர்த்துகிறார். எகிப்து தேசத்தின் அதிபதியாகிய பார்வோனே யோசேப்பைக் குறித்து நற்சாட்சி கொடுக்கிறான்.

போத்திபார் யோசேப்பை காவல் கிடங்கிலே போட்டான். பார்வோனோ யோசேப்பை தன் அரண்மனைக்கு அதிகாரியாக்குகிறான். யோசேப்புடைய வாக்கின்படியே எகிப்து தேசத்து ஜனங்கள் யாவரும் அடங்கி நடக்கவேண்டுமென்று பார்வோன் சொல்லுகிறான்.

பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி, "பார், எகிப்துதேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன்" (ஆதி 41:41) என்று சொல்லுகிறான்.

பார்வோன் தன் கையில் போட்டிருந்த தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி, அதை யோசேப்பின் கையிலே போடுகிறான். பார்வோன் மெல்லிய வஸ்திரங்களை யோசேப்புக்கு உடுத்தி, பொன் சரப்பணியை யோசேப்பின் கழுத்திலே தரிக்கிறான் (ஆதி 41:42).

வரலாற்றின் பிரகாரம் இக்காலத்தில் அபேபி என்பவன் எகிப்தின் ராஜாவாக இருக்கிறான். இவன் தன்னுடைய தந்தையோடும், தாத்தாவோடும் ராஜ்யபாரத்தை சிறிது காலம் ஏற்றுக் கொண்டிருந்தான்.

ராஜாவின் முத்திரை மோதிரம் அந்தத் தேசத்தில் சர்வ வல்லமையுள்ளது. பார்வோனின் பிரதிநிதியாகச் செயல்படும் எல்லா அதிகாரத்தையும் இந்த முத்திரை மோதிரம் தரும். (ஆதி 41:42).

எகிப்தியரின் ஆசாரியர்கள் மெல்லிய வஸ்திரங்களைத் தரித்துக் கொள்வார்கள். எகிப்தின் பார்வோன் ஆசாரிய வம்சத்தைச் சேர்ந்தவன். கழுத்தில் பொன்சரப்பணியை அணிந்து கொள்வது ஜனங்கள் மத்தியில் உயர்ந்த அந்தஸ்தைத் தரும். ராஜாவுக்கு முன்பாக சாஷ்டாங்கமாக விழுந்து ஜனங்கள் தங்கள் ராஜமரியாதையை வெளிப்படுத்துவது வழக்கம். எகிப்து தேசம் முழுவதிலும் யோசேப்பிற்கு எல்லாக் காரியங்களிலும் அதிகாரம் கொடுக்கப்படுகிறது.

பார்வோன் தன்னுடைய இரண்டாம் இரதத்தின்மேல் யோசேப்பை ஏற்றி, "தெண்டனிட்டுப் பணியுங்கள்" என்று யோசேப்புக்கு முன்பாகக் கூறுவித்து, எகிப்துதேசம் முழுமைக்கும் அவரை அதிகாரியாக்குகிறான் (ஆதி 41:43).

யோசேப்பு எகிப்து தேசத்திலே அதிகமாய் உயர்த்தப்படுகிறார். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக பார்வோன் யோசேப்பை உயர்த்துகிறான். பார்வோன் யோசேப்பை நோக்கி, "நான் பார்வோன்; ஆனாலும் எகிப்துதேசத்திலுள்ளவர்களில் ஒருவனும் உன் உத்தரவில்லாமல் தன் கையையாவது தன் காலையாவது அசைக்கக்கூடாது" (ஆதி 41:42) என்று சொல்லுகிறான்.

யோசேப்புக்கு எகிப்து தேசத்திலே புதிய பெயர் கொடுக்கப்படுகிறது. பார்வோன் யோசேப்புக்கு சாப்நாத்பன்னேயா என்கிற பெயரையிடுகிறான். பார்வோன் எகிப்து தேசத்திலே ஒரு ஸ்திரீயைக் கண்டுபிடித்து, அவளை யோசேப்புக்கு மனைவியாகக் கொடுக்கிறான். பார்வோன் ஓன்பட்டணத்து ஆசாரியனாகிய போத்திபிராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத்தை அவனுக்கு மனைவியாகக் கொடுக்கிறான்.

யோசேப்பு எகிப்துதேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி புறப்பட்டு போகிறார் (ஆதி 41:45). யோசேப்பு எகிப்து தேசத்திலே அதிகமாக உயர்த்தப்பட்டாலும், அவர் தன்னுடைய கடமையை செய்வதற்காக எகிப்து தேசமெங்கும் சுற்றிப் பார்ப்பதற்கு புறப்பட்டுப்போகிறார்.

"சாப்நாத்பன்னேயா" என்பது எகிப்திய வார்த்தை. பரிபூரண ஜீவன் என்பது இதன் பொருள். யோரோம் இதை மொழிபெயர்க்கும் பொழுது இதற்கு "உலக இரட்சகர்" என்று பொருள்கூறுகிறார்.

"ஆஸ்நாத்" என்பதும் எகிப்திய வார்த்தை. இதற்கு "நேயீத்திற்கு உரியவள்" என்று பொருள். நேயீத் எகிப்து தேசத்தில் கைவினைகளின் தேவதையாகவும், மினர்வாவாகவும் போற்றப்படுகிறவள்.

"போத்திபிரா" என்பதும் எகிப்திய வார்த்தை. இதற்கு "சூரியனுக்கு உரியவன்" என்று பொருள். சீரியருக்கு பாகாலைப் போன்று எகிப்தியருக்கு சூரிய தெய்வம் முக்கியமான வழிபாட்டுத் தெய்வமாகும்.

யோசேப்பு எகிப்திலுள்ள செல்வந்த குடும்பத்தில் பெண் கொள்கிறார். ஓன் பட்டணம் சூரிய தெய்வத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது. போத்திபிரா இந்தத் தெய்வத்தின் வம்சத்தில் வரும் பிரதான ஆசாரியன். யோசேப்பு இவனுடைய மருமகனாகிறார். மிகுந்த செல்வாக்கோடு இருக்கிறார்.

மனாசே, எப்பிராயீம்
ஆதி 41:46-52

ஆதி 41:46. யோசேப்பு எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கு முன்பாக நிற்கும்போது முப்பது வயதாயிருந்தான்; யோசேப்பு பார்வோனுடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, எகிப்துதேசம் எங்கும் போய்ச் சுற்றிப்பார்த்தான்.

ஆதி 41:47. பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களிலும் பூமி மிகுதியான பலனைக் கொடுத்தது.

ஆதி 41:48. அவ்வேழு வருஷங்களில் எகிப்து தேசத்தில் விளைந்த தானியங்களையெல்லாம் அவன் சேர்த்து, அந்தத் தானியங்களைப் பட்டணங்களில் கட்டிவைத்தான்; அந்தந்தப் பட்டணத்தில் அதினதின் சுற்றுப்புறத்துத் தானியங்களைக் கட்டிவைத்தான்.

ஆதி 41:49. இப்படி யோசேப்பு அளவிறந்த தாய்க் கடற்கரை மணலைப்போல மிகுதியாக தானியத்தைச் சேர்த்துவைத்தான்; அது அளவுக்கு அடங்காததாயிருந்தது.

ஆதி 41:50. பஞ்சமுள்ள வருஷங்கள் வருவதற்கு முன்னே யோசேப்புக்கு இரண்டு குமாரர் பிறந்தார்கள்; அவர்களை ஓன் பட்டணத்து ஆசாரியனாகிய போத்திபிராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத்து அவனுக்குப் பெற்றாள்.

ஆதி 41:51. யோசேப்பு: என் வருத்தம் யாவையும் என் தகப்பனுடைய குடும்பம் அனைத்தையும் நான் மறக்கும்படி தேவன் பண்ணினார் என்று சொல்லி, மூத்தவனுக்கு மனாசே என்று பேரிட்டான்.

ஆதி 41:52. நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்தில் தேவன் என்னைப் பலுகப்பண்ணினார் என்று சொல்லி, இளையவனுக்கு எப்பிராயீம் என்று பேரிட்டான்.

யோசேப்பு எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கு முன்பாக நிற்கும்போது முப்பது வயதாயிருக்கிறார்; யோசேப்பு எகிப்து தேசத்திற்கு வந்து பதிமூன்று வருஷமாயிற்று (ஆதி 37:2). யோசேப்பு பார்வோனுடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, எகிப்துதேசம் எங்கும் போய்ச் சுற்றிப்பார்க்கிறார். பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களிலும் பூமி மிகுதியான பலனைக் கொடுக்கிறது. யோசேப்பு அவ்வேழு வருஷங்களில் எகிப்து தேசத்தில் விளைந்த தானியங்களையெல்லாம் சேர்த்து, அந்தத் தானியங்களைப் பட்டணங்களில் கட்டிவைக்கிறார்; அந்தந்தப் பட்டணத்தில் அதினதின் சுற்றுப்புறத்துத் தானியங்களைக் கட்டிவைக்கிறார் (ஆதி 41:46-48).

இப்படி யோசேப்பு அளவிறந்ததாய்க் கடற்கரை மணலைப்போல மிகுதியாக தானியத்தைச் சேர்த்துவைக்கிறார்; அது அளவுக்கு அடங்காததாயிருக்கிறது (ஆதி 41:49).

யோசேப்பின் குடும்பம் எகிப்து தேசத்திலே கட்டியெழுப்பப்படுகிறது. யோசேப்பு போத்திபாரின் குமாரத்தியாகிய அஸ்நாத்தை விவாகம் செய்துகொள்கிறார். யோசேப்புக்கும் அஸ்நாத்திற்கும் இரண்டு குமாரர்கள் பிறக்கிறார்கள். யோசேப்பு தன்னுடைய மூத்த குமாரனுக்கு மனாசே என்றும், இளையகுமாரனுக்கு எப்பிராயீம் என்றும் பேரிடுகிறார்.

பஞ்சமுள்ள வருஷங்கள் வருவதற்கு முன்னே யோசேப்புக்கு இரண்டு குமாரர் பிறக்கிறார்கள்; அவர்களை ஓன் பட்டணத்து ஆசாரியனாகிய போத்திபிராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத்து யோசேப்புக்குப் பெறுகிறாள் (ஆதி 41:50).

யோசேப்பு தன் தகப்பன் யாக்கோபை விட்டுப் பிரிந்திருக்கிறார். அந்த வருத்தம் அவருடைய மனதில் இன்னும் இருக்கிறது. யோசேப்புக்கு மூத்த குமாரர் பிறந்தபோது தேவன் அவருடைய வருத்தம் யாவையும், யோசேப்பின் தகப்பனுடைய குடும்பம் அனைத்தையும் மறக்கும்படி பண்ணினார். அதனால் யோசேப்பு தன் மூத்த குமாரனுக்கு மனாசே என்று பேரிடுகிறார். இந்தப் பெயருக்கு மறப்பது என்று பொருள்.

யோசேப்பு ஆரம்பத்தில், எகிப்து தேசத்தில் சிறுமைப்பட்டிருந்தார். தேவன் அந்த தேசத்திலே யோசேப்பை பலுகப்பண்ணியிருக்கிறார். ஆகையினால் யோசேப்பு தன் இளையகுமாரனுக்கு எப்பிராயீம் என்று பேரிடுகிறார். எப்பிராயீம் என்னும் பெயருக்கு "பலுகிப்பெருகுதல்" என்று பொருள். பரிசுத்த வேதாகமத்தில் மனாசே, எப்பிராயீம் ஆகிய இரண்டு பேர்களும் சேர்ந்தே சொல்லப்படுகிறார்கள்.

பரிபூரணமும் பஞ்சமும்
ஆதி 41:53-57

ஆதி 41:53. எகிப்துதேசத்தில் வந்த பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களும் முடிந்தபின்,

ஆதி 41:54. யோசேப்பு சொல்லியபடி ஏழு வருஷ பஞ்சம் தொடங்கினது; சகல தேசங்களிலும் பஞ்சம் உண்டாயிற்று; ஆனாலும் எகிப்துதேசமெங்கும் ஆகாரம் இருந்தது.

ஆதி 41:55. எகிப்துதேசமெங்கும் பஞ்சம் உண்டானபோது, ஜனங்கள் உணவுக்காகப் பார்வோனை நோக்கி ஓலமிட்டார்கள்; அதற்குப் பார்வோன்: நீங்கள் யோசேப்பினிடத்துக்குப் போய், அவன் உங்களுக்குச் சொல்லுகிறபடி செய்யுங்கள் என்று எகிப்தியர் எல்லாருக்கும் சொன்னான்.

ஆதி 41:56. தேசமெங்கும் பஞ்சம் உண்டானபடியால், யோசேப்பு களஞ்சியங்களையெல்லாம் திறந்து, எகிப்தியருக்கு விற்றான்; பஞ்சம் எகிப்துதேசத்தில் வரவரக் கொடியதாயிற்று.

ஆதி 41:57. சகல தேசங்களிலும் பஞ்சம் கொடிதாயிருந்தபடியால், சகல தேசத்தார்களும் யோசேப்பினிடத்தில் தானியம் கொள்ளும்படி எகிப்துக்கு வந்தார்கள்.

பார்வோன் கண்ட சொப்பனத்திற்கு யோசேப்பு அர்த்தம் சொன்னார். யோசேப்பு சொன்ன பிரகாரமாக எகிப்து தேசத்தில் ஒவ்வொரு காரியமும் சம்பவிக்கிறது.

எகிப்துதேசத்தில் வந்த பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களும் முடிவு பெறுகிறது. அதன்பின்பு யோசேப்பு சொல்லியபடி ஏழு வருஷ பஞ்சம் தொடங்குகிறது; சகல தேசங்களிலும் பஞ்சம் உண்டாயிற்று; ஆனாலும் எகிப்துதேசமெங்கும் ஆகாரம் இருக்கிறது (ஆதி 41:53,54).

யோசேப்பு பரிபூரணமான அவ்வேழு வருஷங்களில் எகிப்து தேசத்தில் விளைந்த தானியங்களையெல்லாம் சேர்த்து, அந்தத் தானியங்களைப் பட்டணங்களில் கட்டிவைத்தார்; அந்தந்தப் பட்டணத்தில் அதினதின் சுற்றுப்புறத்துத் தானியங்களைக் கட்டிவைத்தார். இப்படி யோசேப்பு அளவிறந்த தாய்க் கடற்கரை மணலைப்போல மிகுதியாக தானியத்தைச் சேர்த்துவைத்தார்; அது அளவுக்கு அடங்காததாயிருக்கிறது (ஆதி 41:48,49).

யோசேப்பு சொன்ன பிரகாரம் ஏழுவருஷ பரிபூரணம் முடிவுபெறுகிறது. அதன்பின்பு ஏழுவருஷம் கொடிய பஞ்சம் தொடங்குகிறது. இந்த பஞ்சம் எகிப்து தேசத்தில் மாத்திரமல்லாமல், மற்ற தேசங்களிலும் உண்டாயிருக்கிறது. சகல தேசங்களிலும் பஞ்சம் கொடிதாயிருந்தபடியால், சகல தேசத்தார்களும் யோசேப்பினிடத்தில் தானியம் கொள்ளும்படி எகிப்துக்கு வருகிறார்கள் (ஆதி 41:57).

யோசேப்பு பார்வோனுக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் பரிபூரணமான வருஷங்களில், எகிப்து தேசத்தில் விளைந்த தானியங்களையெல்லாம், கடற்கரை மணலைப்போல மிகுதியாய்ச் சேர்த்து வைத்திருக்கிறார். பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களில் எகிப்து தேசத்திலே விளையும் விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கை வாங்கி, யோசேப்பு பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்.

எகிப்துதேசமெங்கும் பஞ்சம் உண்டானபோது, ஜனங்கள் உணவுக்காகப் பார்வோனை நோக்கி ஓலமிடுகிறார்கள்; அதற்குப் பார்வோன்: அவர்களை நோக்கி, "நீங்கள் யோசேப்பினிடத்துக்குப் போய், அவன் உங்களுக்குச் சொல்லுகிறபடி செய்யுங்கள்" (ஆதி 41:55) என்று எகிப்தியர் எல்லாருக்கும் சொல்லுகிறான்.

தேசமெங்கும் பஞ்சம் உண்டானபடியால், யோசேப்பு களஞ்சியங்களையெல்லாம் திறந்து, எகிப்தியருக்கு தானியத்தை விற்கிறார்; பஞ்சம் எகிப்துதேசத்தில் வரவரக் கொடியதாயிற்று (ஆதி 41:56).

யோசேப்பு விவேகமும் ஞானமுமுள்ளவர். எகிப்து தேசத்திலுள்ள தானியங்களுக்கு யோசேப்பு கிரயம் நிர்ணயம் பண்ணுகிறார். பஞ்சம் வர வர கொடியதாயிருப்பதினால், அவர் தானியங்களுக்கு அதிகமான விலை நிர்ணயம்பண்ணி கொள்ளை லாபம் அடிக்கவில்லை. அவர் ஜனங்களை அதிகமாய் வேதனைப்படுத்தவுமில்லை.

அதே வேளையில் எகிப்திலுள்ள ஜனங்கள் தங்களுக்கு தேவையான தானியத்திற்கு நியாயமான விலை கொடுக்கவேண்டுமென்று யோசேப்பு எதிர்பார்க்கிறார். யோசேப்பு சேர்த்து வைத்திருக்கிற தானியத்தை ஜனங்களுக்கு இலவசமாகவும் கொடுக்கவில்லை. யோசேப்பு பஞ்சகாலத்திலே களஞ்சியங்களையெல்லாம் திறந்து, எகிப்தியருக்கு தானியத்தை நியாயமான விலையிலே விற்கிறார்.

42 அதிகாரம்

யோசேப்பு கண்ட சொப்பனங்கள் நிறைவேறுகிறது. அவருடைய குடும்பத்தார் அவரை வணங்குகிறார்கள். இந்த சம்பவம், இந்த அதிகாரத்திலும், இதற்கு அடுத்த அதிகாரத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. யோசேப்புக்கும், அவருடைய சகோதரருக்கும் இடையே நடைபெறுகிற சம்பாஷணைகள் இந்த அதிகாரத்தில் விவரமாக சொல்லப்பட்டிருக்கிறது.

யாக்கோபின் குடும்பத்தார் எகிப்து தேசத்திற்கு வருகிறார்கள். அதற்கு ஆயத்தமாக யாக்கோபின் குடும்பத்தில் நடைபெறுகிற முக்கியமான சம்பவங்கள் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

யாக்கோபின் சகோதரர் எகிப்து தேசத்திற்கு தானியம் வாங்க வருகிறார்கள். யோசேப்பிடத்தில் தானியத்திற்காக பணிவோடு விண்ணப்பம் பண்ணுகிறார்கள் (ஆதி 42:1-6). யோசேப்பு அவர்களை வேவுகாரர் என்று சொல்லி, அவர்கள் எல்லோரையும் மூன்று நாள் காவலில் வைக்கிறார் (ஆதி 42:7-20).

யோசேப்பின் சகோதரர், யோசேப்புக்கு விரோதமாக தாங்கள் செய்த துரோகத்தை நினைவுகூர்ந்து, மனம் வேதனைப்படுகிறார்கள். தாங்கள் செய்த தப்பிதத்தை உணருகிறார்கள் (ஆதி 42:21-24).

யோசேப்பு சிமியோனைப் பிடித்து காவலில் போடுகிறார். யோசேப்பின் மற்ற சகோதரர்கள் தானியத்தோடே கானான் தேசத்திற்கு திரும்பிப்போகிறார்கள். யாக்கோபுக்கும் அவருடைய குமாரருக்கும் இடையே நடைபெறுகிற சம்பாஷணைகள் இந்த அதிகாரத்தின் கடைசிப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

பஞ்சம்
ஆதி 42:1-6

ஆதி 42:1. எகிப்திலே தானியம் உண்டென்று யாக்கோபு அறிந்து, தன் குமாரரை நோக்கி: நீங்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டிருக்கிறது என்ன?

ஆதி 42:2. எகிப்திலே தானியம் உண்டென்று கேள்விப்படுகிறேன்; நாம் சாகாமல் உயிரோடிருக்கும்படி நீங்கள் அவ்விடத்துக்குப் போய், நமக்காகத் தானியம் கொள்ளுங்கள் என்றான்.

ஆதி 42:3. யோசேப்பின் சகோதரர் பத்துப் பேர் தானியங்கொள்ள எகிப்துக்குப் போனார்கள்.

ஆதி 42:4. யோசேப்பின் தம்பியாகிய பென்யமீனுக்கு ஏதோ மோசம் வரும் என்று சொல்லி, யாக்கோபு அவனை அவன் சகோதரரோடே அனுப்பவில்லை.

ஆதி 42:5. கானான்தேசத்திலே பஞ்சம் உண்டாயிருந்தபடியால், தானியம் கொள்ளப்போகிறவர்களுடனேகூட இஸ்ரவேலின் குமாரரும் போனார்கள்.

ஆதி 42:6. யோசேப்பு அத்தேசத்துக்கு அதிபதியாயிருந்து, தேசத்தின் ஜனங்கள் யாவருக்கும் விற்றான். யோசேப்பின் சகோதரர் வந்து, முகங்குப்புறத் தரையிலே விழுந்து அவனை வணங்கினார்கள்.

யாக்கோபும் அவருடைய பதினோரு குமாரரும் கானான் தேசத்திலே இருக்கிறார்கள். யாக்கோபின் மற்றொரு குமாரனாகிய யோசேப்பு எகிப்து தேசத்திலே இருக்கிறார். யாக்கோபின் குமாரர்கள் அனைவரும் வளர்ந்து பெரியவர்களாயிருக்கிறார்கள். அவர்களுக்கு திருமணமாயிற்று. ஆனாலும் அவர்கள் அனைவரும் கூட்டுக்குடும்பமாக, தங்கள் தகப்பனார் யாக்கோபோடு கூடயிருக்கிறார்கள். யாக்கோபு அந்த குடும்பத்திற்கு தலைவராயிருக்கிறார்.

கானான் தேசத்திலே பஞ்சமுண்டாயிற்று. கானான் தேசம் இஸ்ரவேலின் முற்பிதாக்களுக்கு கர்த்தர் வாக்குத்தத்தமாக கொடுத்திருக்கிற தேசம். அது பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். அந்த தேசத்திலும் கொடிய பஞ்சமுண்டாயிருக்கிறது. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகிய மூன்று முற்பிதாக்களுமே, கானான் தேசத்திலே பஞ்சங்களை அனுபவித்திருக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் விசுவாசத்தை சோதிக்கும் வண்ணமாக, கானான் தேசத்திலே பஞ்சத்தை அனுமதிக்கிறார். அவர்கள் பசியிலும், பட்டினியிலும் இருக்கும்போது தம்மை மறவாமல், தம்மீது விசுவாசமாயிருப்பார்களா என்று கர்த்தர் அவர்களை சோதித்தறிய விரும்புகிறார்.

கானான் தேசம் செழிப்பான தேசமாகயிருந்தாலும், கர்த்தருடைய ஜனத்திற்கு அது நிரந்தரமான தேசமல்ல. அவர்கள் பரதேசிகளாய் தங்கியிருப்பதற்கு கர்த்தர் கானான் தேசத்தைக் கொடுத்திருக்கிறார். பரமகானானே அவர்களுக்கு நித்திய தேசம். அவர்கள் பரமதேசத்தை எதிர்நோக்கி காத்திருக்கவேண்டும். பரமகானானின் ஆசீர்வாதங்களை தம்முடைய ஜனத்திற்கு தெளிவுபடுத்துவதற்காகவும், இந்த பூமிக்குரிய கானான் குறைவுள்ளது என்பதை அவர்களுக்கு எடுத்து சொல்லுவதற்காகவும், கர்த்தர் கானான் தேசத்திலே பஞ்சத்தை அனுமதித்திருக்கிறார்.

"இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே. அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே" (எபி 11:14-16).

கானான் தேசத்திலே மிக கடுமையான பஞ்சம் உண்டாயிருக்கிறது. ஆனாலும் எகிப்து தேசத்திலே தானியம் இருக்கிறது. இந்தப் பூமியின் ஒரு பகுதியில் தானியம் இல்லாமல் பஞ்சம் இருந்தாலும், மற்றொரு பகுதியில் தானியம் செழிப்பாய்க் கிடைக்கிறது. பூமியில் ஜீவிக்கிற எல்லா மனுஷரும் கர்த்தருடைய சிருஷ்டிகளாயிருக்கிறார்கள். நாம் எல்லோருமே சகோதரர்களாயிருக்கிறோம். நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளவேண்டும். இதுவே தேவனுடைய தெய்வீக சித்தம். கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பின் பிரகாரமாக, ஒரு தேசத்தில் பஞ்சம் ஏற்படும்போது, மற்றொரு தேசத்தில் செழிப்பு ஏற்படுகிறது. அவர்கள் தங்கள் செழிப்பை பஞ்சதேசத்தில் உள்ளவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கவேண்டும்.

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற தேசம். அங்கே பாலும் தேனும் அதிகமாயிருக்கிறது. ஆனால் தானியம் இல்லை. எகிப்து தேசத்தில் பாலும் தேனும் இல்லை. ஆனால் அங்கே தானியம் இருக்கிறது. இதுவும் கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பாயிருக்கிறது. எல்லோரிடத்திலும் எல்லா காரியங்களும் பரிபூரணமாயிருப்பதில்லை. ஒரு சிலரிடத்தில் ஒன்று இருக்கும். மற்றது இருக்காது. இருக்கிறவர்கள் இல்லாதவர்களுக்கு பகிர்ந்துகொடுத்து உதவி செய்யவேண்டும்.

எகிப்திலே தானியம் உண்டு என்பதை யாக்கோபு கேள்விப்படுகிறார். கானான் தேசத்திலே பஞ்சமுண்டாயிருக்கிறது. அவர்களுக்கு கோதுமையில்லை. அப்பம் சுட்டு புசிப்பதற்கு அவர்களுக்கு கோதுமையில்லை. யாக்கோபு தன் குடும்பத்திற்கு தலைவராயிருக்கிறார். குடும்பத்திலுள்ள தானியமெல்லாம் காலியாய்ப் போயிற்று. இனிமேல் அவர்களுக்கு புசிப்பதற்கு போஜனமில்லை. யாக்கோபின் குமாரர், பஞ்சகாலத்தில் என்ன செய்வது என்று தெரியாமல், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட பஞ்சகாலத்தில், தானியம் எங்கே கிடைக்கும் என்று யாக்கோபு விசாரித்து பார்க்கிறார். எகிப்திலே தானியம் உண்டு என்று யாக்கோபு அறிந்துகொள்கிறார்.

யாக்கோபு தன் குமாரரை நோக்கி, "நீங்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டிருக்கிறது என்ன? எகிப்திலே தானியம் உண்டென்று கேள்விப்படுகிறேன்; நாம் சாகாமல் உயிரோடிருக்கும்படி நீங்கள் அவ்விடத்துக்குப் போய், நமக்காகத் தானியம் கொள்ளுங்கள்" (ஆதி 42:1,2) என்று சொல்லுகிறார்.

யாக்கோபின் குமாரர் எகிப்திற்குப்போக காலதாமதம்பண்ணக்கூடாது. அவர்கள் காலதாமதம்பண்ணுகிற ஒவ்வொரு வேளையும், அவர்களுக்கு மரண ஆபத்து உண்டாகும். கானான் தேசத்திலே பஞ்சம் அதிகமாயிருப்பதினால், அவர்கள் பட்டினியிலே செத்துப்போவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் யாக்கோபு தன்னுடைய குமாரரை காலதாமதம் பண்ணாமல் எகிப்திற்குப்போக வேண்டுமென்று அவசரப்படுத்துகிறார்.

யாக்கோபின் புத்திரர் தங்கள் தகப்பனாருடைய கட்டளைக்கு உடனே கீழ்ப்படிகிறார்கள். யோசேப்பின் சகோதரர் பத்துப்பேர் தானியம் கொள்ள எகிப்திற்குப்போகிறார்கள் (ஆதி 42:3). எகிப்து தேசத்திலே தானியம் கொள்ளுவதற்கு, அவர்கள் தங்கள் வேலையாட்கள் யாரையும் அனுப்பாமல் தாங்களே நேரடியாகப் போகிறார்கள்.

யாக்கோபின் குடும்பம் கானான் தேசத்தில் பெரிய குடும்பமாயிருக்கிறது. அவர்களுக்கு திரளான ஆடுமாடுகளும், வேலைக்காரர்களும் இருக்கிறார்கள். ஆனாலும் தங்களுடைய குடும்பத்தின் தேவையை சந்திப்பதற்கு, யாக்கோபின் புத்திரர் எல்லோருமே வேலை செய்வதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். விசுவாசிகளாகிய நாமும், யாக்கோபின் குடும்பத்தாரைப்போல, வேலை செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும். ஒருவரும் சோம்பேறியாகயிருந்து, தங்கள் பொழுதை சும்மா போக்கக்கூடாது.

யாக்கோபு தன் குமாரரை நோக்கி, "நீங்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டிருக்கிறது என்ன? எகிப்திலே தானியம் உண்டென்று கேள்விப்படுகிறேன்; நாம் சாகாமல் உயிரோடிருக்கும்படி நீங்கள் அவ்விடத்துக்குப் போய், நமக்காகத் தானியம் கொள்ளுங்கள்" (ஆதி 42:1,2) என்று சொல்லுகிறார்.

யாக்கோபின் குமாரர் பத்துபேர் எகிப்து தேசத்திற்குப் போகிறார்கள். ஆனால் பென்யமீன் அவர்களோடு கூட அங்கே போகவில்லை. பென்யமீன் யாக்கோபுக்கு மிகவும் பிரியமானவன். யோசேப்பின் தம்பியாகிய பென்யமீனுக்கு ஏதோ மோசம் வரும் என்று சொல்லி, யாக்கோபு பென்யமீனை அவன் சகோதரரோடே எகிப்துக்கு அனுப்பவில்லை (ஆதி 42:4).

யோசேப்பு தன்னை விட்டுப் போனபின்பு, யாக்கோபு தனது அன்பையெல்லாம் பென்யமீன்மீது வைத்திருக்கிறார். பென்யமீனுக்கு ஏதோ மோசம் வருமென்று யாக்கோபு பயப்படுகிறார். (ஆதி 42:35-38; ஆதி 43:1-9; ஆதி 44:12-34). யோசேப்பு தன்னை விட்டுப் பிரிந்து போனதற்கு அவருடைய சகோதரர்களே காரணம் என்பது யாக்கோபிற்குத் தெரியும். ஆகையினால் யாக்கோபு அவர்களை நம்பி பென்யமீனை அவர்களோடு அனுப்ப பயப்படுகிறார்.

கானான்தேசத்திலே பஞ்சம் உண்டாயிருந்தபடியால், தானியம் கொள்ளப்போகிறவர்களுடனேகூட இஸ்ரவேலின் குமாரரும் போகிறார்கள். யோசேப்பு அத்தேசத்துக்கு அதிபதியாயிருந்து, தேசத்தின் ஜனங்கள் யாவருக்கும் தானியம் விற்கிறார். யோசேப்பின் சகோதரர் வந்து, முகங்குப்புறத் தரையிலே விழுந்து அவரை வணங்குகிறார்கள் (ஆதி 42:5,6).

யோசேப்பு பக்திமான். அதேசமயத்தில் தலைசிறந்த ராஜதந்திரியாகவும் இருக்கிறார். எகிப்திலுள்ள ஒவ்வொரு களஞ்சியங்களிலும் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் தானியங்களைத் தானே நேரடியாக ஜனங்களுக்கு விற்பனை செய்கிறார்.

யோசேப்பின் சகோதரர் வந்து, முகங்குப்புறத் தரையிலே விழுந்து அவரை வணங்குகிறார்கள். யோசேப்பு இதற்காகத்தான் இத்தனை வருஷம் காத்துக் கொண்டிருந்தார். யோசேப்பு கண்ட சொப்பனத்தின் ஒரு பகுதி இப்பொழுது நிறைவேறுகிறது. (ஆதி 37:5-11).

யோசேப்பின் சகோதரர், முகங்குப்புற விழுந்து யோசேப்பை வணங்கும்போது, யோசேப்பு கண்ட சொப்பனத்தின் பிரகாரம், யோசேப்பின் அரிக்கட்டு நிமிர்ந்திருக்கிறது. அவருடைய சகோதரரின் அரிக்கட்டுகள் யோசேப்பின் அரிக்கட்டை சுற்றி வணங்கி நிற்கிறது (ஆதி 37:7).

யோசேப்பும் அவருடைய சகோதரரும் ஆதி 42:7-20

ஆதி 42:7. யோசேப்பு அவர்களைப் பார்த்து, தன் சகோதரர் என்று அறிந்துகொண்டான்; அறிந்தும் அறியாதவன்போலக் கடினமாய் அவர்களோடே பேசி: நீங்கள் எங்கேயிருந்து வந்தீர்கள் என்று கேட்டான்; அதற்கு அவர்கள்: கானான் தேசத்திலிருந்து தானியம் கொள்ள வந்தோம் என்றார்கள்.

ஆதி 42:8. யோசேப்பு அவர்களைத் தன் சகோதரர் என்று அறிந்தும், அவர்கள் அவனை அறியவில்லை.

ஆதி 42:9. யோசேப்பு அவர்களைக்குறித்துத் தான் கண்ட சொப்பனங்களை நினைத்து, அவர்களை நோக்கி: நீங்கள் வேவுகாரர், தேசம் எங்கே திறந்துகிடக்கிறது என்று பார்க்க வந்தீர்கள் என்றான்.

ஆதி 42:10. அதற்கு அவர்கள்: அப்படியல்ல, ஆண்டவனே, உமது அடியாராகிய நாங்கள் தானியம் கொள்ள வந்தோம்.

ஆதி 42:11. நாங்கள் எல்லாரும் ஒரு தகப்பனுடைய பிள்ளைகள்; நாங்கள் நிஜஸ்தர்; உமது அடியார் வேவுகாரர் அல்ல என்றார்கள்.

ஆதி 42:12. அதற்கு அவன்: அப்படியல்ல, தேசம் எங்கே திறந்துகிடக்கிறது என்று பார்க்கவே வந்தீர்கள் என்றான்.

ஆதி 42:13. அப்பொழுது அவர்கள்: உமது அடியாராகிய நாங்கள் பன்னிரண்டு சகோதரர்; கானான்தேசத்தில் இருக்கிற ஒரு தகப்பன் புத்திரர்; இளையவன் இப்பொழுது எங்கள் தகப்பனிடத்தில் இருக்கிறான்; ஒருவன் காணாமற்போனான் என்றார்கள்.

ஆதி 42:14. யோசேப்பு அவர்களை நோக்கி: உங்களை வேவுகாரர் என்று நான் சொன்னது சரி.

ஆதி 42:15. உங்கள் இளைய சகோதரன் இங்கே வந்தாலொழிய நீங்கள் இங்கேயிருந்து புறப்படுவது இல்லை என்று பார்வோனின் ஜீவனைக்கொண்டு ஆணையிட்டுச் சொல்லுகிறேன்.

ஆதி 42:16. இதினாலே நீங்கள் சோதிக்கப்படுவீர்கள்; உங்கள் சகோதரனை அழைத்து வரும்படி உங்களில் ஒருவனை அனுப்புங்கள்; உங்களிடத்தில் உண்மை உண்டோ இல்லையோ என்று உங்கள் வார்த்தைகள் சோதிக்கப்படுமளவும், நீங்கள் காவலில் இருக்கவேண்டும்; இல்லாவிட்டால், நீங்கள் வேவுக்காரர்தான் என்று பார்வோனின் ஜீவனைக்கொண்டு ஆணையிட்டுச் சொல்லுகிறேன் என்று சொல்லி,

ஆதி 42:17. அவர்கள் எல்லாரையும் மூன்றுநாள் காவலிலே வைத்தான்.

ஆதி 42:18. மூன்றாம் நாளிலே யோசேப்பு அவர்களை நோக்கி: நான் தேவனுக்குப் பயப்படுகிறவன்; நீங்கள் உயிரோடே இருக்கும்படிக்கு ஒன்று செய்யுங்கள்.

ஆதி 42:19. நீங்கள் நிஜஸ்தரானால், சகோதரராகிய உங்களில் ஒருவன் காவற்கூடத்தில் கட்டுண்டிருக்கட்டும்; மற்றவர்கள் புறப்பட்டு, பஞ்சத்தினால் வருந்துகிற உங்கள் குடும்பத்துக்குத் தானியம் கொண்டு போய்க் கொடுத்து,

ஆதி 42:20. உங்கள் இளைய சகோதரனை என்னிடத்துக்கு அழைத்துக் கொண்டுவாருங்கள்; அப்பொழுது உங்கள் வார்த்தைகள் மெய்யென்று விளங்கும்; நீங்கள் சாவதில்லை என்றான். அவர்கள் அப்படிச் செய்கிறதற்கு இசைந்து:

யோசேப்பு எகிப்து தேசத்திலே இருபது வருஷமாகயிருக்கிறார். கானான் தேசம் எகிப்து தேசத்தின் எல்லையிலுள்ளது. இரண்டு தேசங்களுமே ஒன்றுக்கொன்று அருகாமையிலிருக்கிறது. ஆனாலும் யோசேப்பு இந்த இருபது வருஷ காலத்தில் ஒரு தடவை கூட கானான் தேசத்திற்குப்போகவில்லை. கானான் தேசத்திலே யோசேப்பின் தகப்பனாராகிய யாக்கோபு வயது முதிர்ந்தவராயிருக்கிறார். யோசேப்பு தன் தகப்பனாரைப் பார்ப்பதற்குகூட, இந்த இருபது வருஷகாலமாக கானான் தேசத்திற்குப் போகவில்லை.

யோசேப்பின் ஜீவியத்தில் நடைபெறுகிற ஒவ்வொரு சம்பவமும் கர்த்தருடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக நடைபெறுகிறது. கர்த்தருடைய ஆவியானவர் யோசேப்பை ஆளுகை செய்கிறார். யோசேப்பும் அவருடைய குடும்பத்தாரும் தமக்கு சித்தமான வேளையிலே சந்தித்துக்கொள்ளவேண்டும் என்பது கர்த்தருடைய தீர்மானமாயிருக்கிறது. இப்போது கர்த்தருக்கு சித்தமான வேளை வந்திருக்கிறது. கர்த்தருக்கு சித்தமான வேளையே அவருடைய சித்தம் நிறைவேறுகிற வேளையாயிருக்கும்.

யோசேப்பின் சகோதரர், அவருக்கு முன்பாக வந்து, முகங்குப்புற தரையிலே விழுந்து, அவரை வணங்குகிறார்கள். யோசேப்பு அவர்களை பார்த்து, அவர்கள் தன் சகோதரர் என்று அறிந்துகொள்கிறார். யோசேப்பு அவர்களை தன் சகோதரர் என்று அறிந்தும், அவர்கள் யோசேப்பை தங்கள் சகோதரன் என்று அறியவில்லை. இதுவும் கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

யோசேப்பின் சகோதரர், யோசேப்பை எகிப்து தேசத்தில் எதிர்பார்க்கவில்லை. தங்கள் சகோதரன் எகிப்து தேசத்து அரண்மனையில் இவ்வளவு பெரிய அதிகாரியாகயிருப்பார் என்று அவர்கள் சிறிதும் யோசிக்கவில்லை. ஆகையினால் தங்கள் சகோதரன் யோசேப்போடு பேசுகிறோம் என்பது அவர்களுக்கு தெரியவில்லை. யோசேப்பு தன் சகோதரர்களை அறிந்து கொண்டபோதிலும், அவர்களை அறியாதவர்போல, அவர்களோடே கடினமாய்ப் பேசுகிறார்.

யோசேப்பு தன் சகோதரரை நோக்கி, "நீங்கள் எங்கே இருந்து வந்தீர்கள்" என்று கேட்கிறார். அதற்கு அவர்கள், "கானான் தேசத்திலிருந்து தானியம் கொள்ள வந்தோம்" (ஆதி 42:7) என்று சொல்லுகிறார்கள். யோசேப்பு அவர்களோடு பேசும்போது, பல வருஷங்களுக்கு முன்பு தான் கண்ட சொப்பனத்தை நினைவுகூருகிறார். தன்னுடைய சகோதரர் தனக்கு செய்த தீங்குகளையும் யோசேப்பு இன்னும் மறக்கவில்லை. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். தங்கள் பாவத்தைக் குறித்து அவர்களுடைய இருதயங்களில் குற்றவுணர்வு ஏற்படவேண்டும். இதுவே யோசேப்பின் விருப்பம்.

யோசேப்பு தன்னுடைய சகோதரரை நடப்பித்த ஒவ்வொரு விதத்திலும் அவர்கள் செய்த பாவத்தை அவர்களுக்கு உணர்த்துகிறார். ஆதி 42:21 ஆவது வசனத்தில் யோசேப்பின் சகோதரர்கள் தாங்கள் செய்த பாவங்களை உணருகிறார்கள். தங்களுடைய சகோதரனுக்குத் தாங்கள் செய்த துரோகம் தங்கள்மேல் சுமந்ததாக வருந்துகிறார்கள். யூதா யோசேப்பிடம் இரக்கத்திற்காகக் கெஞ்சுகிறான் (ஆதி 44:18-34).

யோசேப்பிற்கு இப்பொழுது வயது 39. (ஆதி 37:2; ஆதி 41:46-54; ஆதி 45:11). யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பைப் பார்த்து 22 வருஷங்கள் கடந்து போயிற்று. அவருடைய உருவத்தில் வேறுபாடு உண்டானபடியால், தங்களுடைய சகோதரரையே அவர்களால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

இதற்காகவே யோசேப்பு அவர்களை அறிந்தும், அவர்களை அறியாதவர்போல, அவர்களோடு கடினமாய்ப்பேசுகிறார். யோசேப்பு எதிர்பார்க்கிறதுபோலவே, அவருடைய சகோதரரால் அவரை அறிந்துகொள்ள முடியவில்லை.

யோசேப்பு ஆரம்பத்திலேயே தன் சகோதரர்மீது குற்றம் சொல்லுகிறார். யோசேப்பு அவர்களை நோக்கி, "நீங்கள் வேவுகாரர், தேசம் எங்கே திறந்துகிடக்கிறது என்று பார்க்க வந்தீர்கள்" என்று சொல்லுகிறார். அதற்கு அவர்கள், "அப்படியல்ல, ஆண்டவனே, உமது அடியாராகிய நாங்கள் தானியம் கொள்ள வந்தோம். நாங்கள் எல்லாரும் ஒரு தகப்பனுடைய பிள்ளைகள்; நாங்கள் நிஜஸ்தர்; உமது அடியார் வேவுகாரர் அல்ல" (ஆதி 42:9-11) என்று பணிவோடும் பயத்தோடும் பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள்.

எகிப்தியருக்கு அவர்களுடைய தேசத்தின் வடகிழக்குப் பகுதியிலிருந்து பல பிரச்சனைகள் வந்தன. அந்த தேசத்தார் எகிப்தியரோடு பகை உணர்வோடு இருந்தார்கள். ஆகையினால் யோசேப்பு இவர்களை வேவுகாரர் என்று கூறுகிறார். மற்றவர்களும் இதை எளிதாக நம்பி விடுகிறார்கள்.

யோசேப்பு தன் சகோதரரை வேவுகாரர் என்று சொல்லி, அவர்களைக் குற்றப்படுத்துகிறார். யோசேப்பின் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்கப்படும். வேவுகாரர்கள் ஒரு தேசத்திற்கு துரோகிகளாகவும், பயங்கரவாதிகளாகவும் இருப்பார்கள். அவர்களைப் பழிவாங்கவேண்டும் என்பது யோசேப்பின் நோக்கமல்ல. அவர்கள் தங்கள் பாவங்களை உணர்ந்து, மனந்திரும்பவேண்டும் என்பதே யோசேப்பின் விருப்பம்.

வேவுபார்ப்பதற்கு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பத்து புருஷரை யாரும் அனுப்பமாட்டார்கள். இவர்களெல்லோரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களா என்பதைச் சோதிப்பதற்காக யோசேப்பு அவர்கள்மீது இவ்வாறு பழிசுமத்துகிறார். (ஆதி 42:9-16).

யோசேப்பு தன் குடும்பத்தைவிட்டு இருபது வருஷங்களுக்கு மேலாக பிரிந்திருக்கிறார். அவருக்கு தன் குடும்பத்தை பற்றி அறிந்துகொள்ள வேண்டும், தன் குடும்பத்தாரைப்பற்றி விசாரிக்கவேண்டும் என்னும் விருப்பம் இருக்கிறது. ஆனாலும் யோசேப்பு தன்னை, தன் சகோதரருக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கவில்லை.

யோசேப்பின் சகோதரரோடுகூட பென்யமீன் வரவில்லை. பென்யமீனும் யோசேப்பும் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள். யோசேப்பு தன் சகோதரர் எல்லோர்மீதும் பாசத்தோடு இருந்தாலும், பென்யமீன் மீது மிகுந்த பாசத்தோடிருக்கிறார். ஆனால் அந்தப் பென்யமீன் மற்ற சகோதரரோடு எகிப்து தேசத்திற்கு வரவில்லை. இதனால் யோசேப்புக்கு தன் சகோதரர்மீது சந்தேகம் உண்டாயிற்று.

யோசேப்பின் சகோதரர் ஏற்கெனவே அவரை இஸ்மவேலரிடத்தில் இருபது காசுகளுக்கு அடிமையாக விற்றுப்போட்டவர்கள். அவர்கள் தன்னை அடிமையாக விற்றுப்போட்டதுபோல, தன்னுடைய சகோதரன் பென்யமீனையும் அடிமையாக விற்றுப்போட்டிருப்பார்களோ என்னும் சந்தேகம் யோசேப்பின் மனதில் உண்டாயிற்று. இதனால் யோசேப்பு அவர்களோடே கடினமாய்ப் பேசுகிறார்.

தங்களுடைய தகப்பனாராகிய யாக்கோபைக் குறித்தும், சகோதரனாகிய பென்யமீனைக் குறித்தும் அவர்களோடு பேசுவதற்கு, யோசேப்பு வாய்ப்பு ஏற்படுத்திக்கொள்கிறார். யோசேப்பு தன் சகோதரரோடே கடினமாய்ப் பேசுவதை நிறுத்திக்கொள்ளவில்லை. அவர் மறுபடியும் அவர்களை நோக்கி, "அப்படியல்ல, தேசம் எங்கே திறந்துகிடக்கிறது என்று பார்க்கவே வந்தீர்கள்" என்று சொல்லுகிறார். அப்பொழுது அவர்கள், "உமது அடியாராகிய நாங்கள் பன்னிரண்டு சகோதரர்; கானான்தேசத்தில் இருக்கிற ஒரு தகப்பன் புத்திரர்; இளையவன் இப்பொழுது எங்கள் தகப்பனிடத்தில் இருக்கிறான்; ஒருவன் காணாமற்போனான்" (ஆதி 42:12,13) என்று சொல்லுகிறார்கள்.

யோசேப்பு தன் சகோதரரிடத்தில் ஒவ்வொரு முறை பேசும்போதும் தன் குடும்பத்தைப் பற்றிய செய்தியைத் தெரிந்து கொள்கிறார். இதற்காகவே அவர்களிடத்தில் பல கேள்விகளைக் கேட்கிறார். யாக்கோபும், பென்யமீனும் உயிரோடு இருப்பது யோசேப்பிற்குத் தெரிய வருகிறது.

யோசேப்பின் சகோதரர் மிகுந்த பணிவோடு அவருக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள். அவர்கள் யோசேப்போடு பேசும்போது, "அப்படியல்ல ஆண்டவனே" என்று மரியாதையுள்ள வார்த்தைகளை சொல்லுகிறார்கள். அவர்கள் இருபது வருஷத்திற்கு முன்பு யோசேப்பை பார்த்து, "இதோ சொப்பனக்காரன் வருகிறான்" என்று ஏளனமாகச் சொன்னார்கள். ஆனால் இப்போதோ அவர்கள், யோசேப்பை பார்த்து "ஆண்டவனே" என்று சொல்லுகிறார்கள். அவர்கள் யோசேப்பிடத்தில் தங்களைப்பற்றிச் சொல்லும்போது, "உமது அடியாராகிய நாங்கள்" என்று சொல்லி, தங்களை யோசேப்புக்கு முன்பாக வெகுவாகத் தாழ்த்துகிறார்கள்.

யோசேப்பு தன் சகோதரரை நோக்கி, "நீங்கள் வேவுகாரர்" என்று குற்றம் சொல்லும்போது, அவர்கள் மிகவும் பணிவாக, "உமது அடியார் வேவுகாரரல்ல" என்று பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள். தாங்கள் எகிப்து தேசத்திற்கு வந்த நோக்கத்தையும் அவர்கள் பணிவோடு தெரியப்படுத்துகிறார்கள். "உமது அடியாராகிய நாங்கள் தானியம் கொள்ள வந்தோம்" என்று சொல்லுகிறார்கள். யோசேப்பின் சகோதரர் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையிலும் பணிவும் தாழ்மையும் வெளிப்படுகிறது. அவர்களிடத்தில் இப்போது பெருமையில்லை.

யோசேப்பு தன் சகோதரன் பென்யமீனைக் குறித்து அறிந்துகொள்வதில் மிகுந்த ஆர்வத்தோடிருக்கிறார். ஆகையினால் யோசேப்பு தன்னுடைய கோபத்தை சிறிதும் குறைக்காமல் அவர்களை நோக்கி, "உங்களை வேவுகாரர் என்று நான் சொன்னது சரி. உங்கள் இளைய சகோதரன் இங்கே வந்தாலொழிய நீங்கள் இங்கேயிருந்து புறப்படுவது இல்லை என்று பார்வோனின் ஜீவனைக்கொண்டு ஆணையிட்டுச் சொல்லுகிறேன்" (ஆதி 42:14,15) என்று சொல்லுகிறார்.

எகிப்து தேசத்திலுள்ளவர்கள் ஆணையிடும்போது எகிப்தின் ராஜாவின்பேரில் ஆணையிடுவது அக்காலத்து வழக்கம்.

யோசேப்பு தன்னுடைய சகோதரர் எல்லோரையும் மூன்றுநாள் காவலில் வைக்கவும் உத்தரவிடுகிறார். யோசேப்பு தன் சகோதரருக்கு பார்வோனின் ஜீவனைக்கொண்டு ஆணையிட்டுச் சொல்லுகிறார். "இதினாலே நீங்கள் சோதிக்கப்படுவீர்கள்" என்று சொல்லிவிட்டு, யோசேப்பு அவர்களை நோக்கி, "உங்கள் சகோதரனை அழைத்து வரும்படி உங்களில் ஒருவனை அனுப்புங்கள்; உங்களிடத்தில் உண்மை உண்டோ இல்லையோ என்று உங்கள் வார்த்தைகள் சோதிக்கப்படுமளவும், நீங்கள் காவலில் இருக்கவேண்டும்; இல்லாவிட்டால், நீங்கள் வேவுக்காரர்தான் என்று பார்வோனின் ஜீவனைக்கொண்டு ஆணையிட்டுச் சொல்லுகிறேன்" (ஆதி 42:16) என்றும் சொல்லுகிறார். யோசேப்பின் சகோதரர் பத்துப்பேரும் மூன்றுநாள் காவலில் வைக்கப்படுகிறார்கள்.

பென்யமீன் இன்னும் உயிரோடு இருக்கிறான் என்பதை யோசேப்பு உறுதிபண்ணிக் கொள்ள விரும்புகிறார். அவர்கள் யாரும் இங்கேயிருந்து புறப்படுவதில்லை என்று கூறிவிட்டு, அவர்களில் ஒருவன் காவற்கூடத்தில் கட்டுண்டு இருக்கட்டும். மற்றவர்கள் தங்கள் தேசத்திற்குப் போகலாம் என்று கூறிவிடுகிறார் (ஆதி 42:15,19).

யோசேப்பு தன் சகோதரரை மிகவும் கடுமையாக விசாரிக்கிறார். அவர்களைக் கொடுமைப்படுத்தவில்லை. அவர்கள் தனக்கு செய்த கொடுமையை யோசேப்பு மறந்துவிடவில்லை. தன்னைப் பற்றி எந்தச் சந்தேகமும் அவர்களுக்கு வந்துவிடாதவாறு யோசேப்பு மிகுந்த எச்சரிப்போடு இருந்து, அவர்களை விசாரிக்கிறார். தனக்குச் செய்ததுபோலவே அவர்கள் பென்யமீனுக்கும் செய்துவிடுவார்கள் என்று தன் சகோதரரைக் குறித்து யோசேப்பு சந்தேகப்படுகிறார்.

யோசேப்பின் சகோதரர் எகிப்து தேசத்திலே தானியம் கொள்ள வந்திருக்கிறார்கள். ஆனால் யோசேப்போ அவர்கள்மீது வேவுகாரர் என்று குற்றம் சுமத்தி, அவர்களை மூன்றுநாள் காவலில் வைத்துவிடுகிறார். யோசேப்பின் சகோதரர் சிறைச்சாலையில் குழப்பத்தோடிருக்கிறார்கள். யோசேப்பு தங்கள்மீது ஏன் இவ்வளவு கோபமாயிருக்கிறார் என்பது அவருடைய சகோதரருக்கு தெரியவில்லை. யோசேப்பு தங்கள் சகோதரன் என்பதையும் அவர்கள் இன்னும் அறியவில்லை.

யோசேப்பு பல வருஷங்கள் காவலில் இருந்திருக்கிறார். இதற்கு அவருடைய சகோதரர்களே காரணம். அதை ஒப்பிட்டு பார்க்கும்பொழுது மூன்றுநாள் காவல் என்பது அவர்களுக்கு பெரிய தண்டனை அல்ல.

மூன்றாம் நாளிலே யோசேப்பு அவர்களை நோக்கி, "நான் தேவனுக்குப் பயப்படுகிறவன்" (ஆதி 42:18) என்று தன்னைப்பற்றிச் சொல்லுகிறார். தான் எதையும் அநியாயமாக செய்கிறவரல்ல என்பதை யோசேப்பு தன்னுடைய வார்த்தையினாலே, தன் சகோதரருக்கு தெளிவுபடுத்துகிறார். தான் எகிப்து தேசத்திலே உயர்ந்த அதிகாரியாகயிருந்தாலும், தனக்கு மேலே தேவனாகிய கர்த்தர் பெரிய அதிகாரியாகயிருக்கிறார் என்றும், தான் அநியாயமாக எதையாவது செய்தால், தேவன் தன்னை நியாயந்தீர்ப்பார் என்றும் பொருள்படுமாறு, யோசேப்பு தன் சகோதரரிடத்தில் பேசுகிறார்.

"நான் தேவனுக்குப் பயப்படுகிறவன்" என்னும் இந்த வாக்கியத்தில் "தேவன்" என்பதற்கான "எலோகிம்" என்னும் எபிரெய வார்த்தையோடு "ஹா" என்னும் வார்த்தையும் சேர்ந்து வருகிறது. இது வலியுறுத்தும் சொல்லாகும்.

இஸ்ரவேலின் தேவனை எகிப்தின் விக்கிரகங்களோடு வேறுபிரித்து, தான் இஸ்ரவேலின் தேவனுக்கு பயப்படுகிறவன் என்று யோசேப்பு வலியுறுத்திக் கூறுகிறார். தான் மெய்யான தேவனை ஆராதிப்பதாகவும், தன்னுடைய சகோதரர்கள் உண்மையைப் பேசினால் அவர்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை என்பதையும் யோசேப்பு அறிவுறுத்துகிறார்.

யோசேப்பின் பராமரிக்கும் குணம் அவருடைய சகோதரர் உள்ளத்தில் புதிய மாற்றத்தை உண்டாக்கிற்று. 22 வருஷங்களாக யோசேப்பைப் பற்றிய மனச்சாட்சி அவர்களுடைய உள்ளத்தில் தூங்கிக் கொண்டிருந்தது. இப்பொழுது அது மறுபடியும் விழித்துக் கொண்டு அவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறது (ஆதி 42:21)

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள். ஆனால் அவர்கள் பாவத்திற்கும், அநியாயத்திற்கும், அக்கிரமத்திற்கும் பயப்படுவார்கள். கர்த்தருக்கு பயந்து நடக்கிறவர்களிடத்தில் நீதியும் நியாயமும், உண்மையும் இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் உயர்ந்த அந்தஸ்திலே, உயர்ந்த பதவியிலே, உயர்ந்த அதிகாரத்திலே இருந்தாலும், அவர்கள் தங்களுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம்பண்ணமாட்டார்கள். அவர்கள் அநியாயமாக யாரையும் ஒதுக்கமாட்டார்கள்.

கர்த்தர் தமக்கு பயப்படுகிறவர்களின் மனச்சாட்சியை ஆளுகை செய்கிறார். அவர்கள் மனுஷருக்கு விரோதமாகக் குற்றம் செய்யும்போது, தாங்கள் தேவனுக்கு விரோதமாகவும் குற்றம் செய்கிறோம் என்னும் குற்றவுணர்வு அவர்களுடைய மனச்சாட்சியில் உண்டாகும்.

"எனக்கு முன்னிருந்த அதிபதிகள் ஜனங்களுக்குப் பாரமாயிருந்து, அவர்கள் கையிலே அப்பமும் திராட்சரசமும் வாங்கினதும் அல்லாமல், நாற்பது சேக்கல் வெள்ளியும் வாங்கிவந்தார்கள்; அவர்கள் வேலைக்காரர் முதலாய் ஜனங்கள்மேல் அதிகாரம் செலுத்தினார்கள்; நானோ தேவனுக்குப் பயந்ததினால் இப்படிச் செய்யவில்லை" (நெகே 5:15).

யாக்கோபு தன் சகோதரரை மூன்றுநாள் காவலில் வைத்து, மூன்றாம் நாளிலே யோசேப்பு அவர்களை நோக்கி: நான் தேவனுக்குப் பயப்படுகிறவன்; நீங்கள் உயிரோடே இருக்கும்படிக்கு ஒன்று செய்யுங்கள். நீங்கள் நிஜஸ்தரானால், சகோதரராகிய உங்களில் ஒருவன் காவற்கூடத்தில் கட்டுண்டிருக்கட்டும்; மற்றவர்கள் புறப்பட்டு, பஞ்சத்தினால் வருந்துகிற உங்கள் குடும்பத்துக்குத் தானியம் கொண்டு போய்க் கொடுத்து, உங்கள் இளைய சகோதரனை என்னிடத்துக்கு அழைத்துக் கொண்டுவாருங்கள்; அப்பொழுது உங்கள் வார்த்தைகள் மெய்யென்று விளங்கும்; நீங்கள் சாவதில்லை" (ஆதி 42:18-20) என்று சொல்லுகிறார்.

யோசேப்பு முதலில் எகிப்து தேசத்திற்கு வந்திருக்கிற தன் சகோதரர் பத்துபேரில் ஒன்பது பேரை காவலில் வைத்து, ஒருவரை மாத்திரம் கானான் தேசத்திற்கு அனுப்பி, பென்யமீனை அழைத்து வருமாறு சொன்னார். ஆனால் அவர் தேவனுக்கு பயந்ததினால், தான் ஏற்கெனவே சொன்ன வார்த்தையில் நியாயமில்லை என்பதை உணர்ந்து, யோசேப்பு இப்போது வேறொரு புதிய கட்டளை கொடுக்கிறார். அவர் தன்னுடைய சகோதரரில் ஒன்பது பேரை காவலில் வைக்காமல், ஒருவரை மாத்திரம் காவலில் வைத்து, மீதமுள்ள ஒன்பது சகோதரரையும், பென்யமீனை அழைத்து வருவதற்காக கானான் தேசத்திற்கு அனுப்புகிறார்.

கானான் தேசத்திலே யோசேப்பின் தகப்பனாராகிய யாக்கோபு இருக்கிறார். கானான் தேசத்தில் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. யாக்கோபின் குடும்பத்தாருக்கு தானியம் தேவைப்படுகிறது. யோசேப்புக்கு பென்யமீன் மீது பாசம் இருக்கிறது. ஆனாலும் அவர் தன் பாசத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, யாக்கோபின் குடும்பத்தாரை பட்டினி போட விரும்பவில்லை. ஆகையினால் யோசேப்பு தன் சகோதரரில் ஒருவனை மாத்திரம் காவலில் வைத்து, மற்ற ஒன்பது பேரையும் தானியத்தோடு கானான் தேசத்திற்கு அனுப்புகிறார். தேவனுக்கு பயப்படுகிறவர்கள் இதுபோல நீதியான காரியங்களை செய்வார்கள்.

யோசேப்பின் சகோதரர்
ஆதி 42:21-28

ஆதி 42:21. நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது; அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக் கொண்டபோது, அவனுடைய மன வியாகுலத்தை நாம் கண்டும், அவனுக்குச் செவிகொடாமற்போனோமே; ஆகையால், இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது என்று ஒருவரை ஒருவர் பார்த்துச் சொல்லிக் கொண்டார்கள்.

ஆதி 42:22. அப்பொழுது ரூபன் அவர்களைப் பார்த்து: இளைஞனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதிருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா? நீங்கள் கேளாமற்போனீர்கள்; இப்பொழுது, இதோ, அவன் இரத்தப்பழி நம்மிடத்தில் வாங்கப்படுகிறது என்றான்.

ஆதி 42:23. யோசேப்பு துபாசியைக்கொண்டு அவர்களிடத்தில் பேசினபடியால், தாங்கள் சொன்னது அவனுக்குத் தெரியும் என்று அறியாதிருந்தார்கள்.

ஆதி 42:24. அவன் அவர்களை விட்டு அப்புறம் போய் அழுது, திரும்ப அவர்களிடத்தில் வந்து, அவர்களோடே பேசி, அவர்களில் சிமியோனைப் பிடித்து, அவர்கள் கண்களுக்கு முன்பாகக் கட்டுவித்தான்.

ஆதி 42:25. பின்பு, அவர்கள் சாக்குகளைத் தானியத்தால் நிரப்பவும், அவர்கள் பணத்தைத் திரும்ப அவனவன் சாக்கிலே போடவும், வழிக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுக்கவும் யோசேப்பு கட்டளையிட்டான்; அப்படியே அவர்களுக்குச் செய்யப்பட்டது.

ஆதி 42:26. அவர்கள் அந்தத் தானியத்தைத் தங்கள் கழுதைகள்மேல் ஏற்றிக்கொண்டு, அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போனார்கள்.

ஆதி 42:27. தங்குகிற இடத்திலே அவர்களில் ஒருவன் தன் கழுதைக்குத் தீவனம் போடத் தன் சாக்கைத் திறந்தபோது, சாக்கின் வாயிலே தன் பணம் இருக்கிறதைக் கண்டு,

ஆதி 42:28. தன் சகோதரரைப் பார்த்து, என் பணம் திரும்ப வந்திருக்கிறது; இதோ, அது என் சாக்கிலே இருக்கிறது என்றான். அப்பொழுது அவர்களுடைய இருதயம் சோர்ந்துபோய், அவர்கள் பயந்து, ஒருவரை ஒருவர் பார்த்து, தேவன் நமக்கு இப்படிச் செய்தது என்ன என்றார்கள்.

யோசேப்பின் சகோதரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள். அவர்கள் ஏற்கெனவே யோசேப்புக்கு துரோகம் செய்திருக்கிறார்கள். அவர்கள் யோசேப்பை ஒரு குழியிலே தூக்கிப்போட்டார்கள். அதன் பின்பு அவர்கள் யோசேப்பை இஸ்மவேலரிடத்தில் இருபது காசுகளுக்கு அடிமையாக விற்றுப்போட்டார்கள். யோசேப்போ தன் சகோதரரிடத்தில் கெஞ்சி வேண்டிக் கொண்டார். ஆனால் அவர்கள் யோசேப்புக்கு செவிகொடுக்கவில்லை. யோசேப்புடைய மனது மிகவும் வியாகுலப்பட்டது. அப்போது அவருடைய சகோதரர்கள், யோசேப்பின் மனவியாகுலத்தைப் பார்த்தும், அவருக்கு உதவி செய்ய முன்வரவில்லை.

யோசேப்பின் சகோதரர்கள் இப்போது அவருக்கு செய்த துரோகத்தை நினைவுகூருகிறார்கள். அந்த துரோகம் தங்கள்மேல் சுமந்திருக்கிறது என்பதை அவர்கள் உணருகிறார்கள். தாங்கள் யோசேப்புக்கு துரோகம் செய்ததாலும், அவர் கஷ்டப்பட்டபோது, அவருக்கு செவிகொடாமல் போனதாலும், இந்த ஆபத்து தங்களுக்கு நேரிட்டிருக்கிறது என்று அவர்கள் தங்களுக்குள்ளே ஒருவரையொருவர் பார்த்து சொல்லிக்கொள்கிறார்கள் (ஆதி 42:21).

யோசேப்பின் சகோதரர் தங்களுக்குள்ளே எபிரெய பாஷையிலே பேசிக்கொள்கிறார்கள். யோசேப்பு தங்களுடைய சகோதரர் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. யோசேப்பு அவர்களிடத்தில் துபாசியைக்கொண்டு பேசுகிறார். யோசேப்புக்கு எபிரெய பாஷை தெரியும். துபாசி என்பவர் மொழிபெயர்க்கிறவர். யோசேப்பு எகிப்து தேசத்தாரின் பாஷையில் பேசும்போது, துபாசி யோசேப்பின் சகோதரருக்கு, எபிரெய பாஷையிலே மொழிபெயர்த்து சொல்லுகிறார். இதனால் தாங்கள் எபிரெய பாஷையில் பேசுவது யோசேப்புக்கு தெரியும் என்பதை, அவருடைய சகோதரர்கள் அறியாதிருக்கிறார்கள் (ஆதி 42:23).

யோசேப்பின் உள்ளத்திலிருந்த பல கேள்விகளுக்கு இப்பொழுது அவருக்கு விடை தெரிந்து விட்டது. தன்னைக் கொடுமைப்படுத்தியதற்கு யார் மூலகாரணம் என்பதையும் யோசேப்பு தெரிந்து கொள்கிறார்.

யோசேப்பு உணர்ச்சிவசப்பட்டு அழும்போது தன்னுடைய உணர்ச்சியைத் தன் சகோதரருக்கு வெளிப்படுத்தாமல், தனி இடத்தில்போய் அழுகிறார். யோசேப்பு திரும்ப அவர்களிடத்தில் வந்து, அவர்களோடே பேசுகிறார். தனக்கு திருப்தி ஏற்படும் வரையிலும் யோசேப்பு அவர்களோடு கேள்விகேட்டுக் கொண்டிருக்கிறார். (ஆதி 43:6-7).

யோசேப்புக்கு அவருடைய சகோதரர்கள் அதிகமாகத் தீங்கு செய்திருக்கிறார்கள். அவர்கள் யோசேப்பை துன்பப்படுத்தி, வேதனைக்குட்படுத்தியிருக்கிறார்கள். இப்போது அவர்களுடைய மனச்சாட்சி அவர்களைக் குற்றப்படுத்துகிறது.

நம்முடைய மனச்சாட்சி நம்மைக் குற்றப்படுத்தும்போது, நம்முடைய பாவங்களை நாம் உணரவேண்டும். நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்ப முன்வரவேண்டும். நம்முடைய மனச்சாட்சி நம்மைக் குற்றப்படுத்தும்போது, நம்முடைய பாவங்களை மறைப்பதற்கு நாம் முயற்சி செய்வோமானால், நாம் வாழ்வடையமாட்டோம். நம்முடைய பாவங்களை கர்த்தருடைய சமுகத்திலே அறிக்கை செய்வோமென்றால், நாம் தேவனுடைய இரக்கங்களைப் பெற்றுக்கொள்வோம்.

யோசேப்பின் சகோதரர் தாங்கள் யோசேப்புக்கு செய்த துரோகத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, அவர்களில் ஒருவனாகிய ரூபன், நடந்த சம்பவத்தை அவர்களுக்கு நினைவுபடுத்துகிறான்.

அப்பொழுது ரூபன் அவர்களைப் பார்த்து, "இளைஞனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதிருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா? நீங்கள் கேளாமற்போனீர்கள்; இப்பொழுது, இதோ, அவன் இரத்தப்பழி நம்மிடத்தில் வாங்கப்படுகிறது" (ஆதி 42:22) என்று சொல்லுகிறான்.

தன் சகோதரருடைய வார்த்தைகள் யோசேப்பின் இருதயத்தைத்தொடுகிறது. அவர்கள் யோசேப்புக்கு செய்த துரோகத்திற்காக இப்போது மனம் வருந்துகிறார்கள். அவர்கள் தங்கள் பாவத்திற்கு மெய்யாகவே மனந்திரும்பி இருக்கிறார்கள். யோசேப்பு தன் சகோதரருடைய வார்த்தைகளைக் கேட்கும்போது, அவருடைய மனது உருகுகிறது. அவருடைய கண்களில் கண்ணீர் வருகிறது.

ஆனால் யோசேப்பு தன் சகோதரருக்கு முன்பாக அழவிரும்பவில்லை. யோசேப்பு தன்னை அவர்களுடைய சகோதரன் என்று இன்னும் காண்பித்துக்கொள்ளவில்லை. ஆகையினால் யோசேப்பு தன் சகோதரருக்கு முன்பாக அழாமல் அவர்களைவிட்டு அப்புறம்போய் அழுகிறார் (ஆதி 42:24). யோசேப்பு தன் சகோதரர்மீது மனவுருக்கத்தோடிருக்கிறார்.

நாமும் நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பும்போது கர்த்தர் நமக்கும் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும், மனவுருக்கத்தையும் காண்பிப்பார்.

"எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் அல்லவோ? அவன் எனக்குப் பிரியமான பிள்ளையல்லவோ? அவனுக்கு விரோதமாய்ப் பேசினது முதல் அவனை நினைத்துக்கொண்டே இருக்கிறேன்; ஆகையால் என் உள்ளம் அவனுக்காகக் கொதிக்கிறது; அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 31:20).

"அந்நிய தேவர்களைத் தங்கள் நடுவிலிருந்து விலக்கிவிட்டு, கர்த்தருக்கு ஆராதனை செய்தார்கள்; அப்பொழுது அவர் இஸ்ரவேலின் வருத்தத்தைப் பார்த்து மனதுருகினார்" (நியா 10:16).

யோசேப்பைக் கொடுமைப்படுத்தியதில் சிமியோன் முக்கிய பங்கு வகித்தவன். (ஆதி 34:25; ஆதி 49:5) ஒருவேளை சிமியோன் யோசேப்பைக் கட்டி குழியில் தூக்கிப் போட்டிருக்கலாம். ஆகையினால் யோசேப்பு இப்பொழுது சிமியோனைப் பிடித்து அவர்கள் கண்களுக்கு முன்பாகக் கட்டுவிக்கிறார். மற்றவர்கள் கானான் தேசத்திற்குத் திரும்பிப் போகிறார்கள். சிமியோன் கட்டுண்டவனாக எகிப்தில் இருக்கிறான்.

யோசேப்பு அவர்கள் கண்களுக்கு முன்பாக சிமியோனைக் கட்டுவிக்கிறார். மற்றவர்களுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டுமென்பதற்காக சிமியோனை மறைவாகக் கட்டாமல், அவனுடைய சகோதரருக்கு முன்பாகவே கட்டுகிறார். அவர்கள் திரும்பி வரும்வரையிலும் சிமியோன் கட்டப்பட்டவனாக இருந்தானா என்பது தெரியவில்லை.

யோசேப்புக்கு முன்பாக அவருடைய சகோதரரில் பத்துபேர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவனை மாத்திரம் காவலில் வைத்துவிட்டு, மற்ற ஒன்பது பேரையும் கானான் தேசத்திற்கு தானியத்தோடு அனுப்பிவிடவேண்டும் என்பது யோசேப்பின் திட்டம். அவர்கள் பென்யமீனை தன்னிடத்தில் அழைத்துக்கொண்டு வந்தால், காவலில் வைக்கப்பட்டிருக்கிற சிமியோனை, யோசேப்பு விடுதலை செய்து, அவர்களோடே அனுப்புவார். யோசேப்பு காவலில் அடைப்பதற்கு சிமியோனைத் தெரிந்தெடுக்கிறார். யோசேப்பு தன் சகோதரரோடே பேசி, அவர்களில் சிமியோனைப் பிடித்து, அவர்கள் கண்களுக்கு முன்பாக கட்டுவிக்கிறார் (ஆதி 42:24).

யோசேப்பின் சகோதரரில் சிமியோன் மிகவும் மோசமானவன். அவன் யோசேப்புக்கு விரோதமாக அநேக தீங்குகளை செய்தவன். அவன் யோசேப்புக்கு உக்கிர சத்துருவாகயிருக்கிறவன். ஆகையினால் யோசேப்பு தன்னுடைய சகோதரரில் மற்ற ஒன்பது பேரை விட்டு விட்டு சிமியோனைப் பிடித்து கட்டச்சொல்லுகிறார். சிமியோனைத் தாழ்த்தவேண்டும் என்பதும், அவனும் தன்னுடைய தப்பிதத்தை உணரவேண்டும் என்பதும் யோசேப்பின் விருப்பம்.

பின்பு, அவர்கள் சாக்குகளைத் தானியத்தால் நிரப்பவும், அவர்கள் பணத்தைத் திரும்ப அவனவன் சாக்கிலே போடவும், வழிக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுக்கவும் யோசேப்பு கட்டளையிடுகிறார்; அப்படியே அவர்களுக்குச் செய்யப்படுகிறது. அவர்கள் அந்தத் தானியத்தைத் தங்கள் கழுதைகள்மேல் ஏற்றிக்கொண்டு, எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்தை நோக்கி புறப்பட்டுப்போகிறார்கள் (ஆதி 42:25,26).

யோசேப்பின் சகோதரரிடத்தில் தானியம் இருக்கிறது. தானியத்தோடுகூட, அவர்கள் கொண்டுபோன பணமும் இருக்கிறது. அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்திற்குப்போகும் வழியிலே ஓரிடத்தில் தங்குகிறார்கள். அப்போது அவர்களில் ஒருவன் தன் கழுதைக்குத் தீவனம் போடத் தன் சாக்கைத் திறந்து பார்க்கிறான். அந்த சாக்கின் வாயிலே தன் பணம் இருக்கிறதைக் காண்கிறான். அவன் தன் சகோதரரைப் பார்த்து, "என் பணம் திரும்ப வந்திருக்கிறது; இதோ, அது என் சாக்கிலே இருக்கிறது" என்று சொல்லுகிறான்.

இரண்டுவிதமான எபிரெய சொற்கள் சாக்குகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ஒன்று மிருகங்களுக்குத் தேவையான தீவனம் வைக்கப்பட்டிருக்கும் சாக்குகள். இதில்தான் பணம் போடப் பட்டிருக்கிறது. (ஆதி 42:25,27) மற்றொரு சாக்கில் அவர்களுக்குத் தேவையான தானியம் நிரப்பப்பட்டிருக்கிறது (ஆதி 45:11)

தங்குகிற இடம் என்பது பிரயாணம் பண்ணுகிறவர்கள் இரவு வேளையில் தங்குவதற்கு ஆயத்தமான இடம். பொதுவாக இது துரவுகள் அண்டையில் இருக்கும்.

"தேவன் நமக்கு இப்படிச் செய்தது என்ன" என்று யோசேப்பின் சகோதரர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் இரண்டாம் முறையாக தங்கள் மனச்சாட்சியில் குத்தப்படுகிறார்கள். நடைபெறும் எல்லாக் காரியங்களும் தேவனால் நடைபெறுகிறது என்று நினைக்கிறார்கள் (ஆதி 42:21,28).

அப்பொழுது அவர்களுடைய இருதயம் சோர்ந்துபோய், அவர்கள் பயந்து, ஒருவரை ஒருவர் பார்த்து, "தேவன் நமக்கு இப்படிச் செய்தது என்ன" என்று சொல்லுகிறார்கள் (ஆதி 42:28). யாக்கோபின் சகோதரருக்கு நன்மையான காரியமே நடந்திருக்கிறது. அவர்களுக்கு தானியமும் கிடைத்திருக்கிறது. தானியத்தோடுகூட பணமும் கிடைத்திருக்கிறது.

யோசேப்பின் சகோதரர் இந்தப் பணத்தை திருடவில்லை. அவர்கள் யோசேப்பை வஞ்சித்து, தானியத்திற்கு பணம் கொடுக்காமல், எகிப்து தேசத்தாரை ஏமாற்றவுமில்லை. ஆனாலும் அவர்கள் தங்கள் சாக்கிலே பணம் இருப்பதைப் பார்த்து பயப்படுகிறார்கள். அவர்களுடைய மனது குற்றமுள்ளதாயிருப்பதினால், அவர்களுக்கு பயமுண்டாயிற்று.

யோசேப்பின் சகோதரரைப்போலவே, மனுஷரில் அநேகர் குற்ற மனச்சாட்சியோடிருக்கிறார்கள். அவர்களுடைய ஜீவியத்தில் நன்மையான சம்பவங்கள் நடைபெற்றாலும், அவர்கள் அதை தீமையான சம்பவமாகவே பார்ப்பார்கள். அவர்களுடைய குற்றமுள்ள மனச்சாட்சி, அவர்களுக்கு நன்மையை தீமை என்று வியாக்கியானம்பண்ணும்.

யோசேப்பின் சகோதரருடைய பணத்தை யாராவது திருடியிருந்தால்கூட, அவர்கள் இந்த அளவுக்கு பயந்திருக்கமாட்டார்கள். இப்போது அவர்களுடைய சாக்கிலே பணம் இருக்கிறது. அவர்கள் திருடவுமில்லை. ஆனாலும் அவர்களுக்கு பயமுண்டாயிற்று.

எபிரெயர் எகிப்தியருக்கு அருவருப்பானவர்கள் என்பது யோசேப்பின் சகோதரருக்கு தெரிந்திருக்கிறது (ஆதி 43:32). ஆகையினால் யோசேப்பின் சகோதரரால், எகிப்தியரிடமிருந்து அன்பையோ, ஆதரவையோ, கரிசனையையோ எதிர்பார்க்க முடியாது. எகிப்தியர்கள் தங்களோடு சண்டை போடவேண்டும் என்பதற்காகவும், தங்களுக்கு தீங்கு செய்யவேண்டும் என்பதற்காகவும், அவர்கள் திட்டமிட்டு தங்கள் சாக்கிலே பணத்தைப் போட்டிருக்கிறார்கள் என்று யோசேப்பின் சகோதரர்கள் சந்தேகப்படுகிறார்கள்.

யோசேப்பு ஏற்கெனவே தன்னுடைய சகோதரரை வேவுகாரர் என்று குற்றம் சொல்லியிருக்கிறார். யோசேப்பு சொன்ன குற்றச்சாட்டை நிரூபிக்கும் வண்ணமாகவும், தங்கள்மீது பழிசுமத்தி தங்களை தண்டிக்கவேண்டும் என்பதற்காகவும், எகிப்தியரில் யாரோ ஒருவர், தங்கள் சாக்கிலே பணத்தைப் போட்டிருக்கிறார்கள் என்றும் யோசேப்பின் சகோதரர் நினைத்து பயப்படுகிறார்கள்.

யோசேப்பின் சகோதரர் யோசேப்புக்கு விரோதமாக ஏற்கெனவே தீங்கு செய்திருக்கிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சி இப்போது விழித்துக்கொண்டு, அவர்களைக் குற்றப்படுத்துகிறது. பாவம் அவர்களுடைய வாசற்படியில் படுத்திருக்கிறது. அவர்களுடைய பாவத்தின் நிமித்தமாய், அவர்கள் மிகுந்த பயத்தினாலும், குழப்பத்தினாலும் நிரம்பியிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பயத்தில் ஒருவரையொருவர் பார்த்து, "தேவன் நமக்கு இப்படி செய்தது என்ன" (ஆதி 42:28) என்று சொல்லுகிறார்கள்.

மனுஷருடைய ஆவி முறிந்துபோகும்போது, அவர்களுடைய ஜீவியத்தில் நடைபெறுகிற எல்லா காரியங்களும், அவர்கள் மொத்தமாய் முறிந்துபோவதற்கு உதவி செய்யும்.

யாக்கோபும் அவருடைய புத்திரரும்
ஆதி 42:29-38

ஆதி 42:29. அவர்கள் கானான் தேசத்திலுள்ள தங்கள் தகப்பனாகிய யாக்கோபினிடத்தில் வந்து, தங்களுக்குச் சம்பவித்தவைகளையெல்லாம் அவனுக்கு அறிவித்து:

ஆதி 42:30. தேசத்துக்கு அதிபதியாயிருக்கிறவன் எங்களை தேசத்தை வேவுபார்க்கவந்தவர்கள் என்று எண்ணி எங்களோடே கடினமாய்ப் பேசினான்.

ஆதி 42:31. நாங்களோ அவனை நோக்கி: நாங்கள் நிஜஸ்தர், வேவுக்காரர் அல்ல.

ஆதி 42:32. நாங்கள் பன்னிரண்டு சகோதரர், ஒரு தகப்பன் புத்திரர், ஒருவன் காணாமற்போனான், இளையவன் இப்பொழுது கானான் தேசத்தில் எங்கள் தகப்பனிடத்தில் இருக்கிறான் என்றோம்.

ஆதி 42:33. அப்பொழுது தேசத்தின் அதிபதியானவன்: நீங்கள் நிஜஸ்தர் என்பதை நான் அறியும்படி உங்கள் சகோதரரில் ஒருவனை நீங்கள் என்னிடத்தில் விட்டு, பஞ்சத்தினால் வருந்துகிற உங்கள் குடும்பத்துக்குத் தானியம் வாங்கிக் கொண்டுபோய்க் கொடுத்து,

ஆதி 42:34. உங்கள் இளைய சகோதரனை என்னிடத்தில் அழைத்துக் கொண்டு வாருங்கள்; அதினாலே நீங்கள் வேவுகாரர் அல்ல, நிஜஸ்தர் என்பதை நான் அறிந்து கொண்டு, உங்கள் சகோதரனை விடுதலை செய்வேன்; நீங்கள் இந்தத் தேசத்திலே வியாபாரமும் பண்ணலாம் என்றான் என்று சொன்னார்கள்.

ஆதி 42:35. அவர்கள் தங்கள் சாக்குகளிலுள்ள தானியத்தைக் கொட்டுகையில், இதோ, அவனவன் சாக்கிலே அவனவன் பணமுடிப்பு இருந்தது; அந்தப் பணமுடிப்புகளை அவர்களும் அவர்கள் தகப்பனும் கண்டு பயந்தார்கள்.

ஆதி 42:36. அவர்கள் தகப்பனாகிய யாக்கோபு அவர்களை நோக்கி: என்னைப் பிள்ளையற்றவனாக்குகிறீர்கள்; யோசேப்பும் இல்லை, சிமியோனும் இல்லை; பென்யமீனையும் கொண்டுபோகப் பார்க்கிறீர்கள்; இதெல்லாம் எனக்கு விரோதமாய் நேரிடுகிறது என்றான்.

ஆதி 42:37. அப்பொழுது ரூபன் தன் தகப்பனைப் பார்த்து, அவனை என் கையில் ஒப்புவியும், நான் அவனைத் திரும்ப உம்மிடத்தில் கொண்டுவருவேன்; அவனைக் கொண்டுவராவிட்டால், என் இரண்டு குமாரரையும் கொன்றுபோடும் என்று சொன்னான்.

ஆதி 42:38. அதற்கு அவன்: என் மகன் உங்களோடேகூடப் போவதில்லை; அவன் தமையன் இறந்துபோனான், இவன் ஒருவன் மீதியாயிருக்கிறான்; நீங்கள் போகும் வழியில் இவனுக்கு மோசம் நேரிட்டால், நீங்கள் என் நரைமயிரைச் சஞ்சலத்தோடே பாதாளத்தில் இறங்கப் பண்ணுவீர்கள் என்றான்.

யோசேப்பின் சகோதரர் கானான் தேசத்திலுள்ள தங்கள் தகப்பனாகிய யாக்கோபினிடத்தில் வந்து, தங்களுக்குச் சம்பவித்தவைகளையெல்லாம் அவருக்கு அறிவிக்கிறார்கள். எகிப்து தேசத்திலே அவர்கள் மிகுந்த துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவித்தார்கள்.

தங்கள் சகோதரனாகிய யோசேப்பு, எகிப்து தேசத்திற்கு அதிபதியாயிருக்கிறார் என்பது யாக்கோபின் புத்திரருக்கு தெரியாது. அவர்கள் யோசேப்பைப்பற்றிச் சொல்லும்போது, "தேசத்துக்கு அதிபதியாயிருக்கிறவன் எங்களை தேசத்தை வேவுபார்க்கவந்தவர்கள் என்று எண்ணி எங்களோடே கடினமாய்ப் பேசினான்" (ஆதி 42:30) என்று சொல்லுகிறார்கள்.

யோசேப்பு தங்களை வேவுகாரர் என்று சொன்னபோது, அவருடைய சகோதரர்கள் அவரை நோக்கி, "நாங்களோ அவனை நோக்கி: நாங்கள் நிஜஸ்தர், வேவுக்காரர் அல்ல. நாங்கள் பன்னிரண்டு சகோதரர், ஒரு தகப்பன் புத்திரர், ஒருவன் காணாமற்போனான், இளையவன் இப்பொழுது கானான் தேசத்தில் எங்கள் தகப்பனிடத்தில் இருக்கிறான்" (ஆதி 42:31,32) என்று சொன்னதையும், அவர்கள் தங்கள் தகப்பனாகிய யாக்கோபுக்கு சொல்லுகிறார்கள்.

யோசேப்பு பென்யமீனைப்பற்றியும் சொன்னார். யோசேப்பு தங்களிடத்தில் இன்னும் கோபத்தோடு சொன்ன வார்த்தைகளையும், அவருடைய சகோதரர்கள் யாக்கோபுக்கு சொல்லுகிறார்கள்.

யாக்கோபின் புத்திரர் அவரை நோக்கி, "அப்பொழுது தேசத்தின் அதிபதியானவன்: நீங்கள் நிஜஸ்தர் என்பதை நான் அறியும்படி உங்கள் சகோதரரில் ஒருவனை நீங்கள் என்னிடத்தில் விட்டு, பஞ்சத்தினால் வருந்துகிற உங்கள் குடும்பத்துக்குத் தானியம் வாங்கிக் கொண்டுபோய்க் கொடுத்து, உங்கள் இளைய சகோதரனை என்னிடத்தில் அழைத்துக் கொண்டு வாருங்கள்; அதினாலே நீங்கள் வேவுகாரர் அல்ல, நிஜஸ்தர் என்பதை நான் அறிந்து கொண்டு, உங்கள் சகோதரனை விடுதலை செய்வேன்; நீங்கள் இந்தத் தேசத்திலே வியாபாரமும் பண்ணலாம் என்றான்" (ஆதி 42:33,34) என்றும் சொல்லுகிறார்கள்.

தன்னுடைய சகோதரர்கள் தானியம் வாங்குவதற்காக கொடுத்த பணத்தை, யோசேப்பு அவர்களுடைய சாக்குகளில் போட்டு அனுப்பிவிடுகிறார். யோசேப்பு தன் குடும்பத்தார்மீது அன்பாயும் கரிசனையாயும் இருக்கிறார். இந்தப் பணம் தன்னுடைய தகப்பனாருக்கு உதவியாயிருக்க வேண்டுமென்று யோசேப்பு விரும்புகிறார். யோசேப்பின் சகோதரர் தங்கள் சாக்குகளிலுள்ள தானியத்தை கொட்டுகிறார்கள். அவனவன் சாக்கிலே அவனவன் பணமுடிப்பு இருக்கிறது.

யோசேப்பு வெளிப்படையாகத் தன் சகோதரருக்கு பணம் கொடுக்கவில்லை. அவ்வாறு கொடுத்திருந்தால், தான் யாரென்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கும். இந்தப் பஞ்சகாலத்தில் யோசேப்பு அவருடைய தகப்பனுக்கும், அவருடைய வீட்டாருக்கும் உதவி புரிய விரும்புகிறார். அவர்கள் கண்ணியமுள்ளவர்களாக இருக்கிறார்களா என்பதை யோசேப்பு சோதித்தறிய விரும்புகிறார். (ஆதி 43:12).

யாக்கோபும், அவர் குமாரரும் தங்களைச் சிக்க வைப்பதற்காகப் பின்னப் பட்டிருக்கிற சதிமோசமே இந்தக் காரியம் என்று நினைக்கிறார்கள். சாக்குகளின் அடிப்பகுதியில் பணம் இருக்கிறது. சாக்குகளிலுள்ள தானியத்தைக் கொட்டிய பின்பு தான், அதிலுள்ள பணத்தைப் பற்றி அவர்களுக்குத் தெரிய வருகிறது (ஆதி 42:27,35).

மேலும் தானியம் வாங்குவதற்காக யோசேப்பின் சகோதரர் எகிப்திற்கு வருகிறார்கள். பணத்தையும், வெகுமதியையும் கொண்டு வருகிறார்கள். யோசேப்பின் வீட்டு விசாரணைக்காரனிடம் சாக்கிலுள்ள பணத்தைத் திரும்ப கொடுக்க முயற்சி பண்ணுகிறார்கள். ஆனால் அவன் அதை வாங்க மறுத்துவிடுகிறான் (ஆதி 43:12-25).

இந்தப் பணமெல்லாம் யோசேப்பு தன்னுடைய குடும்பத்தாருக்கு கிருபையாய்க் கொடுத்த அன்பளிப்பு. ஆனால் யாக்கோபும் அவருடைய புத்திரரும் அந்தப் பணமுடிப்புகளைப் பார்த்து பயப்படுகிறார்கள். யாக்கோபு இப்போது மிகுந்த வேதனையிலிருக்கிறார். அவர் ஏற்கெனவே யோசேப்பை இழந்துபோல காணப்படுகிறார். எகிப்து தேசத்திலே சிமியோனையும் பிடித்து வைத்துக்கொண்டார்கள். அவர்கள் பென்யமீனையும் எகிப்து தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வரவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இப்போது எகிப்துக்கு தானியம் வாங்கப்போன யாக்கோபினுடைய குமாரரின் சாக்குகளிலே பணமுடிப்பும் இருக்கிறது.

யாக்கோபு இந்த சம்பவங்களையெல்லாம் பார்த்து, மிகவும் பயந்து, அவர்களை நோக்கி, "என்னைப் பிள்ளையற்றவனாக்குகிறீர்கள்; யோசேப்பும் இல்லை, சிமியோனும் இல்லை; பென்யமீனையும் கொண்டுபோகப் பார்க்கிறீர்கள்; இதெல்லாம் எனக்கு விரோதமாய் நேரிடுகிறது" (ஆதி 42:36) என்று சொல்லுகிறார்.

ஆனால் யாக்கோபுக்கு நடைபெறுகிற இந்தக் காரியங்களெல்லாம் அவருக்கு விரோதமாக நடைபெறவில்லை. கர்த்தருடைய கிருபையினாலும், அவருடைய தெய்வீக வழிநடத்துதலினாலும் இவையெல்லாம் யாக்கோபுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் சாதகமாகவும், ஆசீர்வாதமாகவும் நேரிடுகிறது.

யாக்கோபைப்போலவே நாமும் பல சமயங்களில், நம்முடைய ஜீவியத்தில் நடைபெறுகிற காரியங்களை, தப்பிதமாக பகுத்தறிகிறோம். சில காரியங்கள் நமக்கு மெய்யாகவே நன்மைக்கு ஏதுவாக நடைபெறும். ஆனால் நாமோ நம்முடைய அவிசுவாசத்தினாலும், அறியாமையினாலும், நம்முடைய நன்மைக்கு ஏதுவாக நடைபெறுகிற காரியங்களை, நம்முடைய தீமைக்கு ஏதுவாக நடைபெறுகிறது என்று தப்பிதமாக வியாக்கியானம் பண்ணிவிடுகிறோம்.

பென்யமீனை தன்னிடத்தில் அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்று யோசேப்பு தன் சகோதரரிடத்தில் சொல்லியிருக்கிறார். பென்யமீனை அழைத்துக்கொண்டு வந்தால்தான், யோசேப்பு சிமியோனை விடுதலை செய்வார். இல்லையென்றால் சிமியோனுக்கு விடுதலை இல்லை. யாக்கோபுடைய புத்திரரின் சார்பாக, ரூபன் தன் தகப்பனிடத்தில் பேசுகிறான். பென்யமீனை தன் கையில் ஒப்புவிக்குமாறு ரூபன் கேட்டுக்கொள்கிறான். அவன் பென்யமீனை திரும்ப யாக்கோபினிடத்தில் கொண்டு வருவதாகவும் உறுதிபண்ணுகிறான். ரூபன் தன்னுடைய வார்த்தையை உறுதிபண்ணும் வண்ணமாக, "பென்யமீனை கொண்டு வராவிட்டால், என் இரண்டு குமாரரையும் கொன்றுபோடும்" (ஆதி 42:37) என்று சொல்லுகிறான்.

ஆனால் யாக்கோபுக்கு பென்யமீனை அவர்களோடு எகிப்து தேசத்திற்கு அனுப்ப சம்மதமில்லை. அவர் ஏற்கெனவே யோசேப்பை அவர்களோடு அனுப்பி, அவரை இழந்துவிட்டார். இப்போது பென்யமீனையும் அவர்களோடு அனுப்பி, அவனையும் இழந்துபோக யாக்கோபு ஆயத்தமாயில்லை.

யாக்கோபு தன் குமாரரை நோக்கி, "என் மகன் பென்யமீன் உங்களோடேகூடப் போவதில்லை; அவன் தமையன் யோசேப்பு இறந்துபோனான், பென்யமீன் ஒருவன் மீதியாயிருக்கிறான்; நீங்கள் போகும் வழியில் இவனுக்கு மோசம் நேரிட்டால், நீங்கள் என் நரைமயிரைச் சஞ்சலத்தோடே பாதாளத்தில் இறங்கப் பண்ணுவீர்கள்" (ஆதி 42:38) என்று சொல்லுகிறார்.

யோசேப்பு உயிரோடிருப்பது யாக்கோபுக்கு தெரியாது. யோசேப்பு மரித்துப்போனார் என்றே யாக்கோபு இதுவரையிலும் நினைத்துக்கொண்டிருக்கிறார். அவர் யோசேப்பை இதுவரையிலும் பார்த்ததில்லை. யாக்கோபுக்கு தன் குமாரர்கள்மீது நம்பிக்கையுமில்லை. ஆகையினால் யாக்கோபு தன் இளையகுமாரனாகிய பென்யமீனை அவர்களோடு அனுப்ப மறுத்துவிடுகிறார்.

43 அதிகாரம்

யோசேப்பின் சகோதரரைப்பற்றிய சம்பவங்கள் இந்த அதிகாரத்திலும் தொடர்ந்து சொல்லப்படுகிறது. கானான் தேசத்தில் யாக்கோபு இருக்கிறார். யாக்கோபின் புத்திரர் மிகுந்த மனவேதனையோடும் வருத்தத்தோடும், கானான் தேசத்தை விட்டுப் புறப்பட்டு எகிப்து தேசத்திற்கு வருகிறார்கள் (ஆதி 43:1-14). அவர்கள் எகிப்து தேசத்திலே யோசேப்போடுகூட சந்தோஷமாயிருக்கிறார்கள் (ஆதி 43:15-34).

கானான் தேசத்தில் கொடிய பஞ்சம்
ஆதி 43:1-10

ஆதி 43:1. தேசத்திலே பஞ்சம் கொடிதாயிருந்தது.

ஆதி 43:2. எகிப்திலிருந்து அவர்கள் கொண்டு வந்த தானியம் செலவழிந்தபோது, அவர்கள் தகப்பன் அவர்களை நோக்கி: நீங்கள் திரும்பப் போய், நமக்குக் கொஞ்சம் தானியம் வாங்கிக் கொண்டு வாருங்கள் என்றான்.

ஆதி 43:3. அதற்கு யூதா: உங்கள் சகோதரன் உங்களோடே கூட வராவிட்டால், நீங்கள் என் முகத்தைக் காண்பதில்லை என்று அந்த மனிதன் எங்களுக்குச் சத்தியமாய்ச் சொன்னான்.

ஆதி 43:4. எங்கள் சகோதரனை நீர் எங்களோடே கூட அனுப்பினால், நாங்கள் போய், உமக்குத் தானியம் வாங்கிக்கொண்டு வருவோம்.

ஆதி 43:5. அனுப்பாவிட்டால், நாங்கள் போகமாட்டோம்; உங்கள் சகோதரன் உங்களோடே கூட வராவிட்டால், நீங்கள் என் முகத்தைக் காண்பதில்லை என்று அந்த மனிதன் எங்களோடே சொல்லியிருக்கிறான் என்றான்.

ஆதி 43:6. அதற்கு இஸ்ரவேல்: உங்களுக்கு இன்னும் ஒரு சகோதரன் உண்டென்று நீங்கள் அந்த மனிதனுக்குச் சொல்லி, ஏன் எனக்கு இந்தத் துன்பத்தை வருவித்தீர்கள் என்றான்.

ஆதி 43:7. அதற்கு அவர்கள்: அந்த மனிதன், உங்கள் தகப்பன் இன்னும் உயிரோடிருக்கிறாரா? உங்களுக்கு இன்னும் ஒரு சகோதரன் உண்டா? என்று எங்களையும் எங்கள் வம்சத்தையும் குறித்து விபரமாய் விசாரித்தான்; அந்தக் கேள்விகளுக்குத் தக்கதாக உள்ளபடி அவனுக்குச் சொன்னோம்; உங்கள் சகோதரனை உங்களோடே கூட இங்கே கொண்டுவாருங்கள் என்று அவன் சொல்லுவான் என்பதை நாங்கள் அறிந்திருந்தோமா என்றார்கள்.

ஆதி 43:8. பின்னும், யூதா தன் தகப்பனாகிய இஸ்ரவேலை நோக்கி: நீரும் நாங்களும் எங்கள் குழந்தைகளும் சாகாமல் உயிரோடிருக்கும்படி, நாங்கள் புறப்பட்டுப் போகிறோம், பிள்ளையாண்டானை என்னோடே அனுப்பும்.

ஆதி 43:9. அவனுக்காக நான் உத்தரவாதம் பண்ணுவேன்; அவனை என்னிடத்திலே கேளும், நான் அவனை உம்மிடத்தில் கொண்டு வந்து, உமக்கு முன்பாக நிறுத்தாமற்போனால், எந்நாளும் அந்தக்குற்றம் என்மேல் இருப்பதாக.

ஆதி 43:10. நாங்கள் தாமதியாதிருந்தோமானால், இதற்குள்ளே இரண்டாந்தரம் போய்த் திரும்பிவந்திருப்போமே என்றான்.

கானான் தேசத்தில் பஞ்சமுண்டாயிற்று. யாக்கோபின் புத்திரர் எகிப்து தேசத்திற்குப்போய் தானியம் பெற்றுக்கொண்டு, கானான் தேசத்திற்கு திரும்பி வருகிறார்கள். சிமியோன் எகிப்து தேசத்தில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். யோசேப்பின் சகோதரர் கானான் தேசத்திற்கு கொண்டு வந்த தானியமெல்லாம் செலவழிந்துபோயிற்று. ஆனால் கானான் தேசத்திலே பஞ்சம் குறையவில்லை. தேசத்திலே பஞ்சம் கொடிதாயிருக்கிறது (ஆதி 43:1).

யாக்கோபின் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வந்த தானியம் செலவழிந்துபோயிற்று. அப்போது யாக்கோபு அவர்களை நோக்கி, "நீங்கள் திரும்பப் போய், நமக்குக் கொஞ்சம் தானியம் வாங்கிக் கொண்டு வாருங்கள்" (ஆதி 43:2) என்று சொல்லுகிறார்.

ஆனால் யாக்கோபின் புத்திரரோ, பென்யமீனை தங்களோடு அழைத்துக்கொண்டு போகாமல், எகிப்து தேசத்திற்கு போவதில்லை என்று தீர்மானமாய்ச் சொல்லுகிறார்கள்.

யாக்கோபின் புத்திரர் சார்பாக, யூதா தன் தகப்பனோடு பேசுகிறான். அவன் யாக்கோபை நோக்கி, "உங்கள் சகோதரன் உங்களோடே கூட வராவிட்டால், நீங்கள் என் முகத்தைக் காண்பதில்லை என்று அந்த மனிதன் எங்களுக்குச் சத்தியமாய்ச் சொன்னான். எங்கள் சகோதரனை நீர் எங்களோடே கூட அனுப்பினால், நாங்கள் போய், உமக்குத் தானியம் வாங்கிக்கொண்டு வருவோம். அனுப்பாவிட்டால், நாங்கள் போகமாட்டோம்; உங்கள் சகோதரன் உங்களோடே கூட வராவிட்டால், நீங்கள் என் முகத்தைக் காண்பதில்லை என்று அந்த மனிதன் எங்களோடே சொல்லி யிருக்கிறான்" (ஆதி 43:3-5) என்று சொல்லுகிறான்.

யாக்கோபின் குமாரர் சார்பாக யூதா பேசுகிறான். எகிப்திற்குப் போகவேண்டுமென்றால், யோசேப்பு விதித்த நிபந்தனைகளைக் கைக்கொண்டால் மட்டுமே போகமுடியும் என்று எடுத்துக் கூறுகிறான். ஒரு வருஷத்திற்கு முன்பு ரூபன் பென்யமீனுக்காக உத்தரவாதம் பண்ணினான். அதுபோல இப்பொழுது யூதா உத்தரவாதம் பண்ணுகிறான். (ஆதி 43:9; ஆதி 42:37) யோசேப்பு கூறிய காரியங்களை நிறைவேற்றா விட்டால் தங்களால் எகிப்திற்குப் போகமுடியாது என்று மறுத்து விடுகிறான். (ஆதி 43:5).

யூதா ஏற்கெனவே யோசேப்புக்கு விரோதமாகத் தீங்கு செய்திருக்கிறான். யூதாவைப்போலவே யோசேப்பின் சகோதரர் எல்லோருமே அவருக்கு விரோதமாக தீங்கு செய்திருக்கிறார்கள். இப்போது யோசேப்பின் சகோதரர்கள் அவருக்கு செய்த துரோகத்தை நினைத்து மனம் வேதனைப்படுகிறார்கள். அவர்கள் தாங்கள் செய்த பாவத்திற்கு மனந்திரும்பியிருக்கிறார்கள்.

"நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது; அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக் கொண்டபோது, அவனுடைய மன வியாகுலத்தை நாம் கண்டும், அவனுக்குச் செவிகொடாமற் போனோமே; ஆகையால், இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது என்று ஒருவரை ஒருவர் பார்த்துச் சொல்லிக் கொண்டார்கள்" (ஆதி 42:21).

யாக்கோபு பென்யமீன் மீது மிகவும் பிரியமாயிருக்கிறார். பென்யமீனை தன் புத்திரரோடு எகிப்து தேசத்திற்கு அனுப்ப யாக்கோபுக்கு இஷ்டமில்லை. அவர் ஏற்கெனவே தன் குமாரன் யோசேப்பை அவர்களோடு அனுப்பி, அவரை இழந்துவிட்டார். யோசேப்புக்கு என்ன ஆயிற்று என்பது யாக்கோபுக்கு இதுவரையிலும் தெரியாது. இப்போது பென்யமீனையும் அவர்களோடு அனுப்பி, அவனையும் இழந்துபோக, யாக்கோபு ஆயத்தமாயில்லை.

யாக்கோபு இந்த வசனத்தில் இஸ்ரவேல் என்று அழைக்கப்படுகிறார். இஸ்ரவேல் தன் குமாரரை நோக்கி, "உங்களுக்கு இன்னும் ஒரு சகோதரன் உண்டென்று நீங்கள் அந்த மனிதனுக்குச் சொல்லி, ஏன் எனக்கு இந்தத் துன்பத்தை வருவித்தீர்கள்" (ஆதி 43:6) என்று சொல்லுகிறார்.

யாக்கோபின் புத்திரரோ, தாங்கள் கேட்டுக்கொண்ட பிரகாரம், பென்யமீனை தங்களோடு எகிப்து தேசத்திற்கு அனுப்பவேண்டும் என்பதில் பிடிவாதமாயிருக்கிறார்கள். யாக்கோபோ தன் குமாரன் பென்யமீனை அவர்களோடு எகிப்து தேசத்திற்கு அனுப்பக்கூடாது என்பதில் பிடிவாதமாயிருக்கிறார்.

யாக்கோபின் புத்திரர் அவரை நோக்கி, "அந்த மனிதன், உங்கள் தகப்பன் இன்னும் உயிரோடிருக்கிறாரா? உங்களுக்கு இன்னும் ஒரு சகோதரன் உண்டா? என்று எங்களையும் எங்கள் வம்சத்தையும் குறித்து விபரமாய் விசாரித்தான்; அந்தக் கேள்விகளுக்குத் தக்கதாக உள்ளபடி அவனுக்குச் சொன்னோம்; உங்கள் சகோதரனை உங்களோடே கூட இங்கே கொண்டுவாருங்கள் என்று அவன் சொல்லுவான் என்பதை நாங்கள் அறிந்திருந்தோமா" (ஆதி 43:7) என்று சொல்லுகிறார்கள்.

யூதா தன் தகப்பன் யாக்கோபிடத்தில், தன் சகோதரன் பென்யமீனை தங்களோடு அனுப்பவேண்டும் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறான். இப்போது யூதா தன் சகோதரன் பென்யமீனுக்காக, தன் தகப்பனாரிடத்தில் உத்திரவாதம்பண்ணுகிறான்.

கானான் தேசத்தில் பஞ்சம் கொடிதாயிருக்கிறது. அவர்களுக்கு ஆகாரமில்லை. அவர்கள் எகிப்து தேசத்திற்குப்போனால்தான், அவர்களால் தானியம் கொண்டு வரமுடியும். எகிப்துக்கு போகவில்லையென்றால் அவர்களுக்கு தானியமில்லை. அவர்கள் எல்லோரும் பசியினாலும் பட்டினியினாலும் இருக்க வேண்டும். யாக்கோபும், யாக்கோபின் புத்திரரும், அவர்களுடைய குழந்தைகளும் பசியினால் செத்துப்போவார்கள்.

யூதா தன் தகப்பனாகிய இஸ்ரவேலை நோக்கி, "நீரும் நாங்களும் எங்கள் குழந்தைகளும் சாகாமல் உயிரோடிருக்கும்படி, நாங்கள் புறப்பட்டுப் போகிறோம், பிள்ளையாண்டானை என்னோடே அனுப்பும். அவனுக்காக நான் உத்தரவாதம் பண்ணுவேன்; அவனை என்னிடத்திலே கேளும், நான் அவனை உம்மிடத்தில் கொண்டு வந்து, உமக்கு முன்பாக நிறுத்தாமற்போனால், எந்நாளும் அந்தக்குற்றம் என்மேல் இருப்பதாக. நாங்கள் தாமதியாதிருந்தோமானால், இதற்குள்ளே இரண்டாந்தரம் போய்த் திரும்பி வந்திருப்போமே" (ஆதி 43:8-10) என்று சொல்லுகிறான்.

பென்யமீனுக்கு இப்பொழுது வயது சுமார் 30 ஆக இருக்க வேண்டும் (ஆதி 37:2-3). அவனுக்குப் பத்து குமாரர்கள் பிறந்தார்கள். (ஆதி 46:21) யாக்கோபின் குமாரர்கள் பதினைந்திலிருந்து இருபது வயதிற்குள் திருமணம் செய்திருக்க வேண்டும்.

கானான் தேசத்தில் கொடிய பஞ்சம் உண்டாயிருக்கிறது. தானியம் இல்லையென்றால் மரணம் நிச்சயம். ஆகையினால் யாக்கோபு பென்யமீனை அவன் சகோதரரோடு அனுப்ப சம்மதிக்கிறார்.

யூதா பென்யமீனை பாதுகாப்பதாக தன் தகப்பனாரிடத்தில் வாக்குப்பண்ணுகிறான். யூதாவின் வார்த்தையிலே யாக்கோபுக்கு இப்போது ஓரளவு நம்பிக்கை உண்டாயிற்று. யாக்கோபு தன் இளையகுமாரன் பென்யமீனை, தன்னுடைய மற்ற குமாரரோடு எகிப்து தேசத்திற்கு கூட்டிக்கொண்டு போக சம்மதிக்கிறார். யாக்கோபு தன் குமாரருக்கு ஒரு சில ஆலோசனைகளையும் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் ஆலோசனை ஆதி 43:11-14

ஆதி 43:11. அதற்கு அவர்கள் தகப்பனாகிய இஸ்ரவேல்: அப்படியானால், ஒன்று செய்யுங்கள்; இந்தத் தேசத்தின் உச்சிதமான வஸ்துக்களில் கொஞ்சம் பிசின் தைலமும் கொஞ்சம் தேனும், கந்தவர்க்கங்களும், வெள்ளைப் போளமும், தெரபிந்து கொட்டைகளும், வாதுமைக்கொட்டைகளும் உங்கள் சாக்குகளில் போட்டு, அந்த மனிதனுக்குக் காணிக்கையாகக் கொண்டுபோய்க் கொடுங்கள்.

ஆதி 43:12. பணத்தை இரட்டிப்பாய் உங்கள் கைகளில் கொண்டுபோங்கள், சாக்குகளின் வாயிலே திரும்பக் கொண்டுவந்த பணத்தையும் கொண்டுபோங்கள்; அது கைப்பிசகாய் வந்திருக்கும்.

ஆதி 43:13. உங்கள் சகோதரனையும் கூட்டிக்கொண்டு, அந்த மனிதனிடத்துக்கு மறுபடியும் போங்கள்.

ஆதி 43:14. அந்த மனிதன் அங்கிருக்கிற உங்கள் மற்றச் சகோதரனையும் பென்யமீனையும் உங்களுடனே அனுப்பிவிடும்படிக்கு, சர்வவல்லமையுள்ள தேவன் அவன் சமுகத்தில் உங்களுக்கு இரக்கங்கிடைக்கப் பண்ணுவாராக; நானோ பிள்ளையற்றுப் போனவனைப் போல் இருப்பேன் என்றான்.

இஸ்ரவேல் தன் குமாரரிடத்தில், "உங்கள் சகோதரனையும் கூட்டிக்கொண்டு அந்த மனிதனிடத்திற்கு மறுபடியும் போங்கள்" (ஆதி 43:13) என்று சொல்லுகிறார். பென்யமீனும் எகிப்து தேசத்திற்குப்போகவேண்டுமென்றால், போய்த்தான் ஆகவேண்டும். இஸ்ரவேல் தன்னுடைய பிடிவாத குணத்தை தளர்த்துகிறார். பென்யமீனை அவர்களோடுகூட எகிப்து தேசத்திற்கு அனுப்ப சம்மதிக்கிறார்.

இஸ்ரவேலின் குடும்பத்திலே தானியம் இல்லையென்றால், அவரும், அவருடைய குமாரரும், அவர்களுடைய குழந்தைகளும் செத்துப்போவார்கள். எல்லோரும் செத்துப்போகும்போது அவர்களோடுகூட பென்யமீனும் செத்துப்போவான். பென்யமீன் பசியினாலும் பட்டியினாலும் கானான் தேசத்திலே செத்துப்போகாமல் இருக்கவேண்டுமென்றால், அவனை அவன் சகோதரரோடே எகிப்து தேசத்திற்கு அனுப்பவேண்டும்.

இஸ்ரவேல் தன்னுடைய குடும்பத்து நிலமையை யோசித்துப் பார்த்து, பென்யமீனை அவனுடைய சகோதரரோடே எகிப்து தேசத்திற்கு அனுப்ப தீர்மானம்பண்ணுகிறார். பிடிவாதமான குணத்தைவிட, ஞானமுள்ள தீர்மானமே மேன்மையானது.

யாக்கோபு ஞானமும் புத்தியும் நீதியுமுள்ளவர். அவர் முதிர்ந்த வயதுள்ளவர். அவருக்கு வாழ்க்கைப்பாதையில் நல்ல அனுபவமுள்ளது. அவர் தன்னுடைய குமாரருக்கு மூன்று ஆலோசனைகளைச் சொல்லுகிறார். அவையாவன :

1. சாக்குப்பைகளின் வாயிலே திரும்பக் கொண்டு வந்த பணத்தை அவர்கள் எகிப்து தேசத்திற்கு கொண்டு போகவேண்டும். அது ஒருவேளை கைப்பிசகாய் வந்திருக்கும். பணம் அவர்களுக்கு கைப்பிசகாய் வந்திருந்தாலும், அதைக் கண்டுபிடிக்கும்போது, அது அவர்களுக்கு களவாக எண்ணப்படும். ஆகையினால் களவு குற்றச்சாட்டிலிருந்து தப்பிப்பதற்காக, கைப்பிசகாய் வந்திருக்கிற பணத்தை, எகிப்து தேசத்திற்கு திரும்ப கொண்டு போகவேண்டும் என்று இஸ்ரவேல் சொல்லுகிறார்.

2. அவர்கள் தங்களோடுகூட பணத்தை இரட்டிப்பாய்க் கொண்டு போகவேண்டும். அவர்கள் முதன்முறையாக எகிப்து தேசத்திற்குப்போனபோது, தங்களோடு கொண்டு போன பணத்தைப்போல இரட்டிப்பாய் கொண்டு போகவேண்டும். தேசத்தில் பஞ்சம் கொடியதாயிருப்பதினால், இப்போது தானியத்தின் விலை அதிகரித்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. தன்னுடைய குமாரரிடத்தில் இரட்டிப்பான பணம் இருக்கும்போது, எகிப்து தேசத்தார் அவர்களை பட்சமாய் நடத்துவார்கள் என்றும், அவர்களுக்கு எகிப்தியருடைய கண்களிலே தயவு கிடைக்கும் என்றும் இஸ்ரவேல் நம்புகிறார்.

3. கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். கானான் தேசத்திலே விளைகிற சில பொருட்கள் எகிப்து தேசத்திலே விளையாது. அப்படிப்பட்ட விசேஷமான பொருட்களை, எகிப்து தேசத்தின் அதிகாரிக்கு காணிக்கையாகக் கொண்டு போகவேண்டும் என்று இஸ்ரவேல் தன் குமாரருக்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தன் குமாரரை நோக்கி, "அப்படியானால், ஒன்று செய்யுங்கள்; இந்தத் தேசத்தின் உச்சிதமான வஸ்துக்களில் கொஞ்சம் பிசின் தைலமும் கொஞ்சம் தேனும், கந்தவர்க்கங்களும், வெள்ளைப் போளமும், தெரபிந்து கொட்டைகளும், வாதுமைக்கொட்டைகளும் உங்கள் சாக்குகளில் போட்டு, அந்த மனிதனுக்குக் காணிக்கையாகக் கொண்டுபோய்க் கொடுங்கள்" (ஆதி 43:11) என்று சொல்லுகிறார்.

யாக்கோபு தன் குமாரரின் வேண்டுகோளுக்குச் செவிகொடுக்கிறார். பல வருஷங்களுக்கு முன்பாக யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவிற்கு இவ்வாறு வெகுமதிகளைக் கொடுத்து அவனுடைய அன்பைப் பெற்றுக் கொண்டார். அதுபோல யோசேப்பின் அன்பையும் காணிக்கைகளைக் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கிறார் (ஆதி 33:8-11; ஆதி 43:11).

யாக்கோபு கண்ணியம் மிகுந்தவர். ஆகையினால் சாக்குகளின் வாயில் கொண்டு வந்த பணத்தையும் திரும்பக் கொண்டு போகுமாறு கூறுகிறார் (ஆதி 42:35).

"பின்பு, அவர்கள் போஜனஞ்செய்யும்படி உட்கார்ந்தார்கள்; அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுக்கும்போது, இதோ, கீலேயாத்திலிருந்து வருகிற இஸ்மவேலருடைய கூட்டத்தைக் கண்டார்கள்; அவர்கள் எகிப்துக்குக் கொண்டுபோகும்படி கந்தவர்க்கங்களையும் பிசின் தைலத்தையும் வெள்ளைப்போளத்தையும் ஒட்டகங்கள்மேல் ஏற்றிக்கொண்டு வந்தார்கள்" (ஆதி 37:25).

கானான் தேசத்தில் பாலும் தேனும் அதிகமாயிருக்கிறது. ஆனால் பாலையும் தேனையும் மாத்திரம் புசித்து ஜீவனோடிருக்க முடியாது. பாலும் தேனும் சுவையானது. ஆனாலும் போஜனத்திற்கு கோதுமையும் வேண்டும். கானான் தேசத்தில் பாலும் தேனும் செழிப்பாயிருக்கிறது. அங்கே கோதுமைக்கு பஞ்சமுண்டாயிற்று. கோதுமை அடிப்படை போஜனம். நமக்கு ருசியான போஜனம் கிடைக்கவில்லையென்றாலும், சாதாரண சத்தான போஜனம் கிடைக்கவேண்டும்.

நம்முடைய தேவன் நமக்கு அன்றன்றுள்ள அப்பத்தைக் கொடுத்து போஷிக்கிறார். நம்முடைய ஜீவியத்திற்கு ஆதாரமாயிருக்கும் சாதாரண ஆகாரம் குறைந்த விலையில் கிடைப்பதற்காக நாம் கர்த்தரைத் துதிக்கவேண்டும். அதிக ருசியுள்ள பதார்த்தங்களின் விலை அதிகமாயிருந்தாலும், நம்முடைய பசியைப்போக்கும் சாதாரண போஜனம் நமக்கு குறைந்த விலையில் கிடைக்கிறது. இது கர்த்தருடைய கிருபை.

இஸ்ரவேல் தன் குமாரருக்கு தன்னுடைய ஆலோசனையை சொன்ன பின்பு, "உங்கள் சகோதரனையும் கூட்டிக்கொண்டு, அந்த மனிதனிடத்திற்கு மறுபடியும் போங்கள்" (ஆதி 43:13) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தன்னுடைய குமாரர்களை எகிப்து தேசத்திற்கு அனுப்புவதற்கு முன்பாக, அவர் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். இஸ்ரவேல் கர்த்தரை நோக்கி, "அந்த மனிதன் அங்கிருக்கிற உங்கள் மற்றச் சகோதரனையும் பென்யமீனையும் உங்களுடனே அனுப்பிவிடும்படிக்கு, சர்வவல்லமையுள்ள தேவன் அவன் சமுகத்தில் உங்களுக்கு இரக்கங்கிடைக்கப் பண்ணுவாராக" (ஆதி 43:14) என்று ஜெபம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "நானோ பிள்ளையற்றுப் போனவனைப்போல் இருப்பேன்" என்று சொல்லுகிறார். ஏசா யாக்கோபின் சகோதரன். அவன் யாக்கோபின்மீது கோபமாகயிருந்தான். யாக்கோபு அவனுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினார். கர்த்தர் ஏசாவின் கோபத்தை மாற்றினார். ஜெபத்திற்கு வல்லமை உண்டு என்பதை இஸ்ரவேல் அறிந்திருக்கிறார். ஆகையினால் இஸ்ரவேல் இப்போதும் இந்த இக்கட்டான சூழ்நிலையில், கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார். கர்த்தர் தனக்கும் தன் குடும்பத்திற்கும் நன்மை செய்வார் என்றும், தன்னுடைய புத்திரரைப் பாதுகாப்பார் என்றும் இஸ்ரவேல் நம்பிக்கையோடு ஜெபம்பண்ணுகிறார்.

யோசேப்பும் அவருடைய சகோதரரும் ஆதி 43:15-25

ஆதி 43:15. அப்பொழுது அவர்கள் காணிக்கையையும் தங்கள் கைகளில் இரட்டிப்பான பணத்தையும் எடுத்துக்கொண்டு, பென்யமீனையும் கூட்டிக்கொண்டு, பிரயாணப்பட்டு, எகிப்துக்குப்போய், யோசேப்பின் சமுகத்தில் வந்து நின்றார்கள்.

ஆதி 43:16. பென்யமீன் அவர்களோடே கூட வந்திருக்கிறதை யோசேப்பு கண்டு, தன் வீட்டு விசாரணைக்காரனை நோக்கி: நீ இந்த மனிதரை வீட்டுக்கு அழைத்துப் போய், சாப்பாட்டுக்கு வேண்டியவைகளை அடித்து, ஆயத்தம்பண்ணு, மத்தியானத்திலே இந்த மனிதர் என்னோடே சாப்பிடுவார்கள் என்றான்.

ஆதி 43:17. அவன் தனக்கு யோசேப்பு சொன்னபடியே செய்து, அந்த மனிதரை யோசேப்பின் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனான்.

ஆதி 43:18. தாங்கள் யோசேப்பின் வீட்டுக்குக் கொண்டுபோகப்படுகிறதை அவர்கள் கண்டு பயந்து, முன்னே நம்முடைய சாக்குகளில் இருந்த பணத்தினிமித்தம் நம்மேல் குற்றம் சுமத்தி, நம்மைப் பிடித்துச் சிறைகளாக்கி, நம்முடைய கழுதைகளை எடுத்துக்கொள்ளும்படி நம்மைக் கொண்டுபோகிறார்கள் என்று சொல்லி,

ஆதி 43:19. யோசேப்பின் வீட்டு விசாரணைக்காரனண்டையில் சேர்ந்து, வீட்டு வாசற்படியிலே அவனோடே பேசி:

ஆதி 43:20. ஆண்டவனே, நாங்கள் தானியம் கொள்ளும்படி முன்னே வந்துபோனோமே;

ஆதி 43:21. நாங்கள் தங்கும் இடத்தில் போய் எங்கள் சாக்குகளைத் திறந்தபோது, நாங்கள் நிறுத்துக்கொடுத்த நிறையின்படியே அவனவன் பணம் அவனவன் சாக்கின் வாயிலே இருக்கக் கண்டோம்; அதை நாங்கள் திரும்பவும் எங்கள் கையிலே கொண்டுவந்திருக்கிறோம்.

ஆதி 43:22. மேலும், தானியம் கொள்ளும்படி வேறே பணமும் எங்கள் கையில் கொண்டுவந்திருக்கிறோம்; நாங்கள் முன் கொடுத்த பணத்தை எங்கள் சாக்குகளில் போட்டது இன்னார் என்று அறியோம் என்றார்கள்.

ஆதி 43:23. அதற்கு அவன்: உங்களுக்குச் சமாதானம்; பயப்படவேண்டாம்; உங்கள் தேவனும் உங்கள் தகப்பனுடைய தேவனுமாயிருக்கிறவர் உங்கள் சாக்குகளில் அதை உங்களுக்குப் புதையலாகக் கட்டளையிட்டார்; நீங்கள் கொடுத்த பணம் என்னிடத்தில் வந்து சேர்ந்தது என்று சொல்லி, சிமியோனை வெளியே அழைத்து வந்து, அவர்களிடத்தில் விட்டான்.

ஆதி 43:24. மேலும், அந்த மனிதன் அவர்களை யோசேப்பின் வீட்டுக்குள்ளே கூட்டிக் கொண்டுபோய், அவர்கள் தங்கள் கால்களைக் கழுவும்படி தண்ணீர் கொடுத்து, அவர்களுடைய கழுதைகளுக்குத் தீவனம் போட்டான்.

ஆதி 43:25. தாங்கள் அங்கே போஜனம் செய்யப்போகிறதை அவர்கள் கேள்விப்பட்டபடியால், மத்தியானத்தில் யோசேப்பு வருமளவும் காணிக்கையை ஆயத்தமாய் வைத்துக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

யாக்கோபின் புத்திரர், காணிக்கையையும் தங்கள் கைகளில் இரட்டிப்பான பணத்தையும் எடுத்துக்கொண்டு, பென்யமீனையும் கூட்டிக்கொண்டு, பிரயாணப்பட்டு, எகிப்துக்குப்போய், யோசேப்பின் சமுகத்தில் வந்து நிற்கிறார்கள் (ஆதி 43:15). அவர்கள் இரண்டாம் முறையாக தானியம் வாங்குவதற்கு எகிப்து தேசத்திற்கு வந்திருக்கிறார்கள். கானான் தேசத்தில் பஞ்சம் கொடிதாயிருப்பதினால், அவர்கள் தானியத்திற்காக நீண்ட தூரம் பிரயாணம் செய்து வந்திருக்கிறார்கள்.

பஞ்சத்தின் கொடுமையில் வேதனைப்படுகிறவர்களுக்குத்தான், பசியின் வேதனையும், பட்டினியின் வேதனையும் தெரியும். பஞ்சத்தில் கஷ்டப்படுகிறவர்கள், தங்கள் போஜனத்திற்காக, எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் பிரயாணம்பண்ணுவார்கள்.

விசுவாசிகளாகிய நமக்கு கர்த்தருடைய வார்த்தையே போஜனமாயிருக்கிறது. ஆவிக்குரிய ஆகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, நாம் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும், பிரயாணம் செய்யலாம். சத்தியம் எங்கே அறிவிக்கப்படுகிறதோ, அங்கே போய், நமக்கு தேவையான ஆவிக்குரிய போஜனத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

யோசேப்பின் சகோதரர் இப்போது எகிப்து தேசத்திலே அவருக்கு முன்பாக நிற்கிறார்கள். அவர்களோடுகூட பென்யமீனும் நிற்கிறான். பென்யமீன் அவர்களோடே கூட வந்திருக்கிறதை யோசேப்பு காண்கிறார்.

யோசேப்பு தன் வீட்டு விசாரணைக்காரனை நோக்கி: "நீ இந்த மனிதரை வீட்டுக்கு அழைத்துப் போய், சாப்பாட்டுக்கு வேண்டியவைகளை அடித்து, ஆயத்தம்பண்ணு, மத்தியானத்திலே இந்த மனிதர் என்னோடே சாப்பிடுவார்கள்" (ஆதி 43:16) என்று சொல்லுகிறார்.

யோசேப்பு தன்னுடைய வேலையில் மும்முரமாக இருக்கிறார். தன்னுடைய சகோதரரைக் கவனித்து உபசரிக்க அவருக்கு நேரமில்லை. பென்யமீனைப் பார்த்தும், அவர் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்கிறார். ஏற்றவேளை வருவதற்கு முன்பாக எதையும் வெளிப்படுத்த யோசேப்பு விரும்பவில்லை.

அவருடைய வீட்டு விசாரணைக்காரன் தனக்கு யோசேப்பு சொன்னபடியே செய்து, அந்த மனிதரை யோசேப்பின் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகிறான் (ஆதி 43:17).

யோசேப்பின் சகோதரருக்கு மறுபடியும் பயமுண்டாயிற்று. தாங்கள் யோசேப்பின் வீட்டுக்குக் கொண்டுபோகப்படுகிறதை அவர்கள் கண்டு பயப்படுகிறார்கள். "முன்னே நம்முடைய சாக்குகளில் இருந்த பணத்தினிமித்தம் நம்மேல் குற்றம் சுமத்தி, நம்மைப் பிடித்துச் சிறைகளாக்கி, நம்முடைய கழுதைகளை எடுத்துக்கொள்ளும்படி நம்மைக் கொண்டுபோகிறார்கள்" (ஆதி 43:18) என்று யோசேப்பின் சகோதரர் தங்களுக்குள்ளே சொல்லிக்கொள்கிறார்கள்.

அவர்களுடைய சாக்குகளுக்குள் இருந்த பணம் இன்னும் அவர்களுக்கு பிரச்சனையாயிருக்கிறது. அது கைப்பிசகாய் வந்திருக்கும் என்று இஸ்ரவேல் சொன்னார். ஆனால் இஸ்ரவேலின் புத்திரரோ அந்தப் பணத்தை நினைத்து பயப்படுகிறார்கள். அவர்களுக்கு யோசேப்பிடத்தில் இது பற்றிப் பேச தைரியமில்லை. அவர்களால் இதைப்பற்றி பேசாமலும் இருக்க முடியவில்லை. யோசேப்பின் சகோதரர் சாக்குகளில் இருந்த பணத்தைக் குறித்து யோசேப்பினிடத்தில் பேசாமல், அவருடைய வீட்டு விசாரணைக்காரனிடத்தில் பேசுகிறார்கள்.

அவர்கள் யோசேப்பின் வீட்டு விசாரணைக்காரனண்டையில் சேர்ந்து, வீட்டு வாசற்படியிலே அவனோடே பேசுகிறார்கள். அவர்கள் அவனை நோக்கி, "ஆண்டவனே, நாங்கள் தானியம் கொள்ளும்படி முன்னே வந்துபோனோமே; நாங்கள் தங்கும் இடத்தில் போய் எங்கள் சாக்குகளைத் திறந்தபோது, நாங்கள் நிறுத்துக்கொடுத்த நிறையின்படியே அவனவன் பணம் அவனவன் சாக்கின் வாயிலே இருக்கக் கண்டோம்; அதை நாங்கள் திரும்பவும் எங்கள் கையிலே கொண்டுவந்திருக்கிறோம். மேலும், தானியம் கொள்ளும்படி வேறே பணமும் எங்கள் கையில் கொண்டுவந்திருக்கிறோம்; நாங்கள் முன் கொடுத்த பணத்தை எங்கள் சாக்குகளில் போட்டது இன்னார் என்று அறியோம்" (ஆதி 43:19-22) என்று சொல்லுகிறார்கள்.

தாங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படுவதற்கு முன்பாக, தங்களிடத்தில் குற்றம் இல்லை என்பதை ரூபிக்கவேண்டும் என்று யோசேப்பின் சகோதரர்கள் விரும்புகிறார்கள். யோசேப்பின் வீட்டு விசாரணைக்கர்த்தனோ அவர்களோடு அன்பாயும், ஆதரவாயும், சமாதானமாயும் பேசுகிறான். அவன் அவர்களைப் பார்த்து, "சமாதானம், பயப்படவேண்டாம்" என்று சொல்லுகிறான்.

யாக்கோபு தன்னுடைய குமாரரை எகிப்து தேசத்திற்கு அனுப்புவதற்கு முன்பாக, "சர்வவல்லமையுள்ள தேவன் உங்களுக்கு இரக்கம் கிடைக்கப்பண்ணுவாராக" என்று ஜெபம்பண்ணினார். கர்த்தர் யாக்கோபின் ஜெபத்தைக் கேட்டு, அவருடைய குமாரருக்கு இரக்கம் காண்பிக்கிறார். யோசேப்புடைய வீட்டு விசாரணைக்கர்த்தனும், கர்த்தருடைய கிருபை அவர்களுக்கு கிடைத்திருப்பதை உறுதிபண்ணுகிறான்.

அவன் யோசேப்பின் சகோதரரை நோக்கி, "உங்கள் தேவனும் உங்கள் தகப்பனுடைய தேவனுமாயிருக்கிறவர் உங்கள் சாக்குகளில் அதை உங்களுக்குப் புதையலாகக் கட்டளையிட்டார்; நீங்கள் கொடுத்த பணம் என்னிடத்தில் வந்து சேர்ந்தது" (ஆதி 43:23) என்று சொல்லுகிறான்.

யோசேப்பின் சகோதரர் கொடுத்த பணம் அரசாங்கத்தின் கஜானாவில் போய் சேர்ந்துவிட்டது. அவர்களுடைய சாக்குகளில் காணப்பட்ட பணம் யோசேப்பின் சொந்தப் பணமாக இருக்கலாம்.

யோசேப்பின் வீட்டு விசாரணைக்காரன் சிமியோனை வெளியே அழைத்து வந்து, அவர்களிடத்தில் விடுகிறான். என்ன செய்யவேண்டும் என்பது பற்றி யோசேப்பு தன் வீட்டு விசாரணைக்காரனிடம் தெளிவாக உத்தரவு கொடுத்திருக்கிறார். சிமியோன் வெளியே வந்தவுடன், அவர்களுடைய பயம் தணிந்திருக்க வேண்டும்.

யோசேப்பின் வீட்டு விசாரணைக்காரனுடைய வார்த்தைகளைக் கேட்ட பின்பு, யோசேப்பின் சகோதரரால் ஒன்றும் பேசமுடியவில்லை. அவர்கள் அமைதியாயிருக்கிறார்கள். அப்போது யோசேப்பின் வீட்டு விசாரணைக்காரன், சிமியோனை வெளியே அழைத்து வந்து, அவர்களிடத்தில் விடுகிறான். யோசேப்பின் சகோதரருக்கு பயமாகவும் இருக்கிறது. ஆச்சரியமாகவும் இருக்கிறது.

மேலும், அந்த மனிதன் அவர்களை யோசேப்பின் வீட்டுக்குள்ளே கூட்டிக் கொண்டுபோய், அவர்கள் தங்கள் கால்களைக் கழுவும்படி தண்ணீர் கொடுத்து, அவர்களுடைய கழுதைகளுக்குத் தீவனம் போடுகிறான். தாங்கள் அங்கே போஜனம் செய்யப்போகிறதை யோசேப்பின் சகோதரர் கேள்விப்பட்டபடியால், மத்தியானத்தில் யோசேப்பு வருமளவும் காணிக்கையை ஆயத்தமாய் வைத்துக் காத்துக்கொண்டிருக்கிறார்கள் (ஆதி 43:24,25). சகலமும் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவும், அவருடைய வழிநடத்துதலின் பிரகாரமாகவும் நடைபெறுகிறது.

யோசேப்பின் வீட்டிலே போஜனம் ஆதி 43:26-34

ஆதி 43:26. யோசேப்பு வீட்டுக்கு வந்தபோது, அவர்கள் தங்கள் கையில் இருந்த காணிக்கையை வீட்டுக்குள் அவனிடத்தில் கொண்டுபோய் வைத்து, தரைமட்டும் குனிந்து, அவனை வணங்கினார்கள்.

ஆதி 43:27. அப்பொழுது அவன்: அவர்கள் சுகசெய்தியை விசாரித்து, நீங்கள் சொன்ன முதிர்வயதான உங்கள் தகப்பன் சுகமாயிருக்கிறாரா? அவர் இன்னும் உயிரோடிருக்கிறாரா? என்று அவர்களிடத்தில் விசாரித்தான்.

ஆதி 43:28. அதற்கு அவர்கள்: எங்கள் தகப்பனராகிய உமது அடியான் சுகமாயிருக்கிறார், இன்னும் உயிரோடிருக்கிறார் என்று சொல்லி, குனிந்து வணங்கினார்கள்.

ஆதி 43:29. அவன் தன் கண்களை ஏறெடுத்து, தன் தாய் பெற்ற குமாரனாகிய தன் சகோதரன் பென்யமீனைக் கண்டு, நீங்கள் எனக்குச் சொன்ன உங்கள் இளைய சகோதரன் இவன்தானா என்று கேட்டு, மகனே, தேவன் உனக்குக் கிருபை செய்யக்கடவர் என்றான்.

ஆதி 43:30. யோசேப்பின் உள்ளம் தன் சகோதரனுக்காகப் பொங்கினபடியால், அவன் அழுகிறதற்கு இடம் தேடி, துரிதமாய் அறைக்குள்ளே போய், அங்கே அழுதான்.

ஆதி 43:31. பின்பு, அவன் தன் முகத்தைக் கழுவி வெளியே வந்து, தன்னை அடக்கிக் கொண்டு, போஜனம் வையுங்கள் என்றான்.

ஆதி 43:32. எகிப்தியர் எபிரெயரோடே சாப்பிடமாட்டார்கள்; அப்படிச் செய்வது எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கும்; ஆகையால், அவனுக்குத் தனிப்படவும், அவர்களுக்குத் தனிப்படவும், அவனோடே சாப்பிடுகிற எகிப்தியருக்குத் அவர்களுக்குத் தனிப்படவும் வைத்தார்கள்.

ஆதி 43:33. அவனுக்கு முன்பாக, மூத்தவன் முதல் இளையவன் வரைக்கும் அவனவன் வயதின்படியே அவர்களை உட்காரவைத்தார்கள்; அதற்காக அவர்கள், ஒருவரை ஒருவர் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள்.

ஆதி 43:34. அவன் தனக்குமுன் வைக்கப்பட்டிருந்த போஜனத்தில் அவர்களுக்குப் பங்கிட்டு அனுப்பினான்; அவர்கள் எல்லாருடைய பங்குகளைப் பார்க்கிலும் பென்யமீனுடைய பங்கு ஐந்துமடங்கு அதிகமாயிருந்தது; அவர்கள் பானம்பண்ணி, அவனுடனே சந்தோஷமாயிருந்தார்கள்.

யோசேப்பு தன்னுடைய வீட்டு விசாரணைக்காரனை நோக்கி, "நீ இந்த மனிதரை வீட்டுக்கு அழைத்துப் போய், சாப்பாட்டுக்கு வேண்டியவைகளை அடித்து, ஆயத்தம்பண்ணு, மத்தியானத்திலே இந்த மனிதர் என்னோடே சாப்பிடுவார்கள்" (ஆதி 43:16) என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

யோசேப்பின் வீட்டு விசாரணைக்காரனும், அவர்களை யோசேப்பின் வீட்டிற்குள்ளே கூட்டிக்கொண்டுபோய் அவர்கள் தங்கள் கால்களைக் கழுவும்படி தண்ணீர் கொடுக்கிறான். . தாங்கள் அங்கே போஜனம் செய்யப்போகிறதை அவர்கள் கேள்விப்பட்டபடியால், மத்தியானத்தில் யோசேப்பு வருமளவும் காணிக்கையை ஆயத்தமாய் வைத்துக் காத்துக்கொண்டிருக்கிறார்கள் (ஆதி 43:25).

யோசேப்பின் சகோதரருடைய மனதில் இன்னும் பயமும் பதட்டமும் இருக்கிறது. யோசேப்பு என்ன சொல்லுவாரோ என்று நினைத்து அவர்கள் பயத்தோடிருக்கிறார்கள். மத்தியான வேளையிலே யோசேப்பு வீட்டுக்கு வருகிறார். அப்போது அவருடைய சகோதரர்கள். தங்கள் கையில் இருந்த காணிக்கையை வீட்டுக்குள் யோசேப்பினிடத்தில் கொண்டுபோய் வைத்து, தரைமட்டும் குனிந்து, அவரை வணங்குகிறார்கள் (ஆதி 43:26).

யோசேப்பு இதற்கு முன்பு தன் சகோதரரிடத்தில் கோபமாகப் பேசியதுபோல, இப்போது கோபமாக பேசவில்லை. யோசேப்பு அவர்களுடைய சுகசெய்தியை விசாரிக்கிறார். அவர்களுடைய தகப்பனாராகிய யாக்கோபைக் குறித்து விசாரிக்கிறார். யோசேப்பு தன் சகோதரரை நோக்கி, "நீங்கள் சொன்ன முதிர்வயதான உங்கள் தகப்பன் சுகமாயிருக்கிறாரா? அவர் இன்னும் உயிரோடிருக்கிறாரா?" (ஆதி 43:27) என்று விசாரிக்கிறார்.

யோசேப்பின் அன்பான விசாரிப்புக்கு, அவருடைய சகோதரர்கள் பணிவான பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள். அவர்கள் தங்கள் தகப்பனாராகிய யாக்கோபைப்பற்றி, யோசேப்பினிடத்தில் சொல்லும்போது, "உமது அடியான்" என்று சொல்லுகிறார்கள். யோசேப்பு இருபது வருஷங்களுக்கு முன்பு கண்ட சொப்பனங்கள் ஒவ்வொன்றாய் நிறைவேறுகிறது.

யோசேப்பின் சகோதரர், யோசேப்பை நோக்கி, "எங்கள் தகப்பனராகிய உமது அடியான் சுகமாயிருக்கிறார், இன்னும் உயிரோடிருக்கிறார்" (ஆதி 43:28) என்று சொல்லுகிறார்கள். அவர்கள் யோசேப்பை மறுபடியுமாய் குனிந்து வணங்குகிறார்கள். யோசேப்பின் அரிக்கட்டு நிமிர்ந்து நிற்கிறது. அவருடைய சகோதரரின் அரிக்கட்டுக்களோ, யோசேப்பின் அரிக்கட்டுக்களை குனிந்து வணங்குகிறது. யோசேப்பு கண்ட சொப்பனம் நிறைவேறுகிறது.

யோசேப்பின் சகோதரர் அவருக்கு விரோதமாக ஏராளமான தீங்குகளை செய்திருக்கிறார்கள். அவரை சொப்பனக்காரன் என்று சொல்லி ஏளனமாய்ப் பேசியிருக்கிறார்கள். ஆனால் யோசேப்போ அவர்கள்மீது கோபப்படாமல், அவர்களிடத்தில் தன்னுடைய சகோதர அன்பை வெளிப்படுத்துகிறார். அவர்களுடைய சுகசெய்தியை விசாரிக்கிறார்.

யோசேப்பு தன் சகோதரரிடத்தில் அன்பாயிருப்பதுபோல, தன்னுடைய தகப்பனாராகிய யாக்கோபினிடத்திலும் அன்பாயிருக்கிறார். யோசேப்பு யாக்கோபைப்பற்றி விசாரிக்கும்போது, "நீங்கள் சொன்ன முதிர்வயதான உங்கள் தகப்பன் சுகமாயிருக்கிறாரா? அவர் இன்னும் உயிரோடிருக்கிறாரா?" (ஆதி 43:27) என்று கேட்கிறார். யோசேப்பின் சகோதரரும் அவருக்கு ஆறுதலான பதிலை சொல்லுகிறார்கள். அவர்கள் யோசேப்பை நோக்கி, "எங்கள் தகப்பனராகிய உமது அடியான் சுகமாயிருக்கிறார், இன்னும் உயிரோடிருக்கிறார்" (ஆதி 43:28) என்று சொல்லுகிறார்கள்.

யோசேப்பின் சகோதரரோடுகூட இப்போது பென்யமீன் வந்திருக்கிறான். பென்யமீனும் யோசேப்பும் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள். யோசேப்பு தன் கண்களை ஏறெடுத்து, தன் தாய் பெற்ற குமாரனாகிய தன் சகோதரன் பென்யமீனைக் காண்கிறார். யோசேப்பு தன் சகோதரரை நோக்கி, "நீங்கள் எனக்குச் சொன்ன உங்கள் இளைய சகோதரன் இவன்தானா" என்று கேட்கிறார்.

யோசேப்பு தன் சகோதரன் பென்யமீனுக்காக சர்வவல்லமையுள்ள தேவனிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். "மகனே, தேவன் உனக்குக் கிருபைசெய்யக்கடவர்" (ஆதி 43:29) என்று யோசேப்பு பென்யமீனுக்கு தேவனுடைய நாமத்தினாலே ஆசீர்வாதமான வார்த்தைகளை சொல்லுகிறார்.

யோசேப்பு தன்னுடைய சகோதரன் பென்யமீனை வாழ்த்தும்போது, அவரால் தன்னுடைய உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியவில்லை. யோசேப்பின் உள்ளம், அவருடைய சகோதரன் பென்யமீனுக்காக பொங்குகிறது. யோசேப்பின் கண்களில் கண்ணீர் வருகிறது. யோசேப்பு தன்னுடைய சகோதரருக்கு முன்பாக அழவிரும்பவில்லை. அவர் அழுகிறதற்கு இடம் தேடி, துரிதமாய் அறைக்குள்ளே போய், அங்கே அழுகிறார் (ஆதி 43:30).

யோசேப்பின் கண்ணீரும் பாசமும், பழைய பகைகளை மறக்கச் செய்கிறது. யோசேப்பு தன் சகோதரரோடு மறுபடியும் சமாதானமாயிருக்கிறார். யோசேப்பு தன் முகத்தைக் கழுவி வெளியே வந்து, தன்னை அடக்கிக் கொண்டு, "போஜனம் வையுங்கள்" (ஆதி 43:31) என்று சொல்லுகிறார். யோசேப்பு தன்னுடைய வீட்டிலே, தன்னுடைய சகோதரரை மிகவும் மரியாதையாகவும், கண்ணியமாகவும் உபசரிக்கிறார். யோசேப்பு செய்கிற ஒவ்வொரு காரியமும், அவருடைய சகோதரர்களுக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. எகிப்து தேசத்தின் அதிகாரியாகிய யோசேப்பு தங்களுடைய சகோதரர் என்பது அவர்களுக்கு இன்னும் தெரியவில்லை. யோசேப்பும் தன்னைப்பற்றி அவர்களுக்கு இதுவரையிலும் ஒன்றும் சொல்லவில்லை.

மென்மையான மனம் கொண்ட யோசேப்பிற்கு தன்னை அடக்கிக் கொள்வது மிகவும் கடினம். தன்னுடைய சொப்பனத்தின் பிரகாரம் யோசேப்பின் சகோதரர் நடந்து கொள்கிறார்கள். யாக்கோபை "யோசேப்பின் அடியான்" என்று கூறுகிறார்கள் (ஆதி 43:28). அரிக்கட்டுக்களைப் பற்றிய யோசேப்பின் சொப்பனம் தீர்க்கதரிசனப் பண்புடையது. யோசேப்பு அவர்களுக்குத் தானியம் கொடுத்து, அவர்களுடைய ஜீவனை இரட்சிக்கிறார் (ஆதி 37:5-11).

யோசேப்பின் கட்டளைப் பிரகாரம், அவருடைய வீட்டிலே போஜனம் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறது. யோசேப்பு மூன்று மேஜைகளை ஆயத்தம்பண்ண சொல்லுகிறார். ஒரு மேஜை யோசேப்புக்கு மற்றொரு மேஜை அவரோடே போஜனம் பண்ணுகிற எகிப்தியருக்கு. மூன்றாவது மேஜை யோசேப்பின் சகோதரருக்கு.

எகிப்தியர் எபிரெயரோடே சாப்பிட மாட்டார்கள்; அப்படிச் செய்வது எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கும்; ஆகையால், யோசேப்புக்கு தனிப்படவும், அவர்களுக்குத் தனிப்படவும், அவரோடே சாப்பிடுகிற எகிப்தியருக்குத் அவர்களுக்குத் தனிப்படவும் வைக்கிறார்கள் (ஆதி 43:32).

எகிப்து தேசம் முழுவதிலும் ஜனங்கள் மத்தியில் வகுப்புப் பிரிவினைகள் இருக்கிறது. எகிப்தியரின் பல்வேறு பிரிவினர்கள் ஒரே இடத்தில் சேர்ந்து குடியிருப்பதில்லை. சேர்ந்து புசிப்பதுமில்லை. யோசேப்பு உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர். அவர் எகிப்தின் ஆசாரியருடைய மருமகன். ஆகையினால் யோசேப்பிற்கு விசேஷித்த உணவு, விசேஷித்த மேஜையில் பரிமாறப்படுகிறது.

எகிப்தியர்கள் மற்ற இனத்தாரோடு சேர்ந்து சாப்பிடுவதில்லை. எகிப்தியரிடம் மாட்டுக்கறியைப் புசிக்கும் பழக்கமில்லை. எகிப்து தேசத்தில் பசுக்களைக் கொல்வது சட்டப்படி குற்றம். எகிப்தியரின் ஈசிஸ் என்னும் தெய்வத்திற்குப் பசுக்கள் புனிதமானவை. எகிப்தியர் மேய்ப்பர்களையும் அருவருக்கிறார்கள் (ஆதி 46:34).

யோசேப்புக்கு அவருடைய சகோதரர் எல்லோரைப்பற்றியும் நன்றாய்த் தெரியும். அவர்களில் மூத்தவன் யார் என்பதும், இளையவன் யார் என்பதும் யோசேப்புக்கு தெரியும். யோசேப்பின் கட்டளைப் பிரகாரமாக, அவருடைய வீட்டிலே விசாரணைக்கர்த்தராயிருக்கிறவர்கள், யோசேப்புக்கு முன்பாக, அவர்களை மூத்தவன் முதல் இளையவன் வரைக்கும் அவனவன் வயதின்படியே உட்காரவைக்கிறார்கள்; அதற்காக யோசேப்பின் சகோதரர் ஒருவரை ஒருவர் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள் (ஆதி 43:33).

எகிப்தியர் அமர்ந்து போஜனம் பண்ணுகிறவர்கள். சில தேசங்களில் சாய்வாக அமர்ந்து போஜனம் பண்ணுவார்கள். தன் சகோதரர்களை அவனவன் வயதின்படியே உட்கார வைத்ததினால் யோசேப்பின் சகோதரர்களுக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாயிற்று.

யோசேப்பு தனக்குமுன் வைக்கப்பட்டிருந்த போஜனத்தில் அவர்களுக்குப் பங்கிட்டு அனுப்புகிறார். யோசேப்பு எகிப்து தேசத்திலே உயர்ந்த அதிகாரியாயிருக்கிறார். ஆகையினால் அவருக்கு விசேஷித்த போஜனம் பரிமாறப்பட்டிருக்கிறது. யோசேப்பு தன்னுடைய போஜனத்தில் ஒரு பங்கை தன் சகோதரருக்கு அனுப்புகிறார். அவர்கள் எல்லாருடைய பங்குகளைப் பார்க்கிலும் பென்யமீனுடைய பங்கு ஐந்துமடங்கு அதிகமாயிருக்கிறது.

தன் இளைய சகோதரனைக் குறித்து மற்ற சகோதரர்கள் இன்னும் பொறாமைப்படுகிறார்களா என்பதை யோசேப்பு காணவிரும்புகிறார். அவர்களுடைய துர்க்குணமும், பொறாமைக்குணமும் மாறிவிட்டதா என்பதைத் தெரிந்து கொள்ள யோசேப்பு இவ்வாறு செய்கிறார்.

யோசேப்பின் சகோதரர் எல்லோரும் பானம்பண்ணி, யோசேப்புடனே சந்தோஷமாயிருக்கிறார்கள் (ஆதி 43:34). அவர்கள் எல்லோரும் சந்தோஷமாய் போஜனம்பண்ணுகிறார்கள்.

44 அதிகாரம்

யோசேப்பு தன்னுடைய சகோதரருக்கு விருந்து போஜனம் கொடுத்து, அவர்களை தன் வீட்டிலிருந்து அனுப்பிவிடுகிறார். அவர்கள் எகிப்து தேசத்தைவிட்டு கானான் தேசத்திற்கு புறப்பட்டுப்போகிறார்கள். ஆனாலும் அவர்கள் மறுபடியுமாய் எகிப்து தேசத்திற்கு பயத்தோடும் நடுக்கத்தோடும் திரும்பி வருகிறார்கள்.

யோசேப்பு தன்னுடைய சகோதரரை மறுபடியுமாய் சோதிக்கிறார். அவர்கள் பென்யமீன் மீது மெய்யாகவே அன்பு வைத்திருக்கிறார்களா என்பதை யோசேப்பு சோதித்தறிய விரும்புகிறார். யோசேப்பின் சகோதரர் அவருக்கு முன்பாக தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியதுபோல பேசுகிறார்கள். அவர்களுடைய மனமாற்றம் உண்மையானதா அல்லது போலியானதா என்பதையும் யோசேப்பு சோதித்தறிய விரும்புகிறார்.

எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்பட்டுப்போன யோசேப்பின் சகோதரர், இப்போது மறுபடியுமாய் பயத்தோடும் நடுக்கத்தோடும் யோசேப்பினிடத்தில் திரும்பி வருகிறார்கள் (ஆதி 44:1-17). யூதா தன் சகோதரன் பென்யமீனுக்காக யோசேப்பினிடத்தில் பரிந்து பேசுகிறான் (ஆதி 44:18-34).

பென்யமீனுக்கு பிரச்சனை ஆதி 44:1-17

ஆதி 44:1. பின்பு, அவன் தன் வீட்டு விசாரணைக்காரனை நோக்கி; நீ இந்த மனிதருடைய சாக்குகளை அவர்கள் ஏற்றிக்கொண்டுபோகத்தக்க பாரமாய்த் தானியத்தினாலே நிரப்பி,அவனவன் பணத்தை அவனவன் சாக்கின்வாயிலே போட்டு,

ஆதி 44:2. இளையவனுடைய சாக்கின்வாயிலே வெள்ளிப்பாத்திரமாகிய என் பானபாத்திரத்தையும் தானியத்துக்கு அவன்கொடுத்த பணத்தையும் போடு என்று கட்டளையிட்டான்; யோசேப்பு சொன்னபடியே அவன் செய்தான்.

ஆதி 44:3. அதிகாலையிலே அந்த மனிதர்கள் தங்கள் கழுதைகளை ஓட்டிக்கொண்டு போகும்படி அனுப்பிவிடப்பட்டார்கள்.

ஆதி 44:4. அவர்கள் பட்டணத்தை விட்டுப் புறப்பட்டு, வெகுதூரம் போவதற்கு முன்னே, யோசேப்பு தன் வீட்டு விசாரணைக்காரனைநோக்கி: நீ புறப்பட்டுப்போய், அந்த மனிதரைப் பின்தொடர்ந்து, அவர்களைப் பிடித்து: நீங்கள் நன்மைக்குத் தீமை செய்தது என்ன?

ஆதி 44:5. அது என் எஜமான் பானம்பண்ணுகிற பாத்திரம் அல்லவா? அது போனவகை ஞானதிருஷ்டியால் அவருக்குத் தெரியாதா? நீங்கள் செய்தது தகாதகாரியம் என்று அவர்களோடே சொல் என்றான்.

ஆதி 44:6. அவன் அவர்களைத் தொடர்ந்து பிடித்து, தன்னிடத்தில் சொல்லியிருந்த வார்த்தைகளை அவர்களுக்குச் சொன்னான்.

ஆதி 44:7. அதற்கு அவர்கள்: எங்கள் ஆண்டவன் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுகிறதுஎன்ன? இப்படிப்பட்ட காரியத்துக்கும் உம்முடைய அடியாராகிய எங்களுக்கும் வெகுதூரம்.

ஆதி 44:8. எங்கள் சாக்குகளின் வாயிலே நாங்கள் கண்ட பணத்தைக் கானான் தேசத்திலிருந்து திரும்ப உம்மிடத்துக்குக் கொண்டுவந்தோமே; நாங்கள் உம்முடைய எஜமானின் வீட்டிலிருந்து வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் திருடிக்கொண்டு போவோமா?

ஆதி 44:9. உம்முடைய அடியாருக்குள்ளே அது எவனிடத்தில் காணப்படுமோ அவன் கொலையுண்ணக்கடவன்; நாங்களும் எங்கள் ஆண்டவனுக்கு அடிமைகளாவோம் என்றார்கள்.

ஆதி 44:10. அதற்கு அவன்: நீங்கள் சொன்னபடியே ஆகட்டும்; எவனிடத்தில் அது காணப்படுமோ, அவன் எனக்கு அடிமையாவான்; நீங்கள் குற்றமற்றிருப்பீர்கள் என்றான்.

ஆதி 44:11. அப்பொழுது அவர்கள் துரிதமாய் அவனவன் தன்தன் சாக்கைத் தரையிலே இறக்கி, தங்கள் சாக்குகளைத் திறந்து வைத்தார்கள்.

ஆதி 44:12. மூத்தவன் சாக்குமுதல் இளையவன் சாக்குமட்டும் அவன் சோதிக்கும்போது, அந்தப் பாத்திரம் பென்யமீனுடைய சாக்கிலே கண்டுபிடிக்கப்பட்டது.

ஆதி 44:13. அப்பொழுது அவர்கள் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, அவனவன் கழுதையின்மேல் பொதியை ஏற்றிக்கொண்டு, பட்டணத்திற்குத் திரும்பினார்கள்.

ஆதி 44:14. யூதாவும் அவன் சகோதரரும் யோசேப்பின் வீட்டுக்குப் போனார்கள். யோசேப்பு அதுவரையும் அங்கே இருந்தான்; அவனுக்கு முன்பாகத் தரையிலே விழுந்தார்கள்.

ஆதி 44:15. யோசேப்பு அவர்களை நோக்கி: நீங்கள் என்ன காரியம் செய்தீர்கள்? என்னைப்போலொத்த மனிதனுக்கு ஞானதிருஷ்டியினால் காரியம் தெரியவரும் என்று அறியாமற்போனீர்களா என்றான்.

ஆதி 44:16. அதற்கு யூதா: என் ஆண்டவனாகிய உம்மிடத்தில் நாங்கள் என்ன சொல்லுவோம்? என்னத்தைப் பேசுவோம்? எதினாலே எங்கள் நீதியை விளங்கப்பண்ணுவோம்? உம்முடைய அடியாரின் அக்கிரமத்தை தேவன் விளங்கப்பண்ணினார்; பாத்திரத்தை வைத்திருக்கிறவனும் நாங்களும் என் ஆண்டவனுக்கு அடிமைகள் என்றான்.

ஆதி 44:17. அதற்கு அவன்: அப்படிப்பட்ட செய்கை எனக்குத் தூரமாயிருப்பதாக; எவன் வசத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோ, அவனே எனக்கு அடிமையாயிருப்பான்; நீங்களோ சமாதானத்தோடே உங்கள் தகப்பனிடத்துக்குப் போங்கள் என்றான்.

யோசேப்பு தன் சகோதரர்மீது அன்பாகயிருக்கிறார். அவர்களுடைய சாக்கிலே தானியத்தைப் போட்டு, அவர்களை கானான் தேசத்திற்கு சந்தோஷமாய் அனுப்ப ஏற்பாடு பண்ணுகிறார். அதேவேளையில், தன்னுடைய சகோதரர், தனக்கு செய்த துரோகத்திற்கு மெய்யாகவே மனந்திரும்பியிருக்கிறார்களா என்பதை யோசேப்பு சோதித்தறிய விரும்புகிறார்.

யோசேப்பின் சகோதரர் பென்யமீன் மீது அன்பாயிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய அன்பு மெய்யானதா அல்லது போலியானதா என்பதையும் யோசேப்பு சோதித்தறிய விரும்புகிறார்.

யோசேப்பு தன் வீட்டு விசாரணைக்காரனை நோக்கி, "நீ இந்த மனிதருடைய சாக்குகளை அவர்கள் ஏற்றிக்கொண்டுபோகத்தக்க பாரமாய்த் தானியத்தினாலே நிரப்பி, அவனவன் பணத்தை அவனவன் சாக்கின்வாயிலே போட்டு, இளையவனுடைய சாக்கின்வாயிலே வெள்ளிப்பாத்திரமாகிய என் பானபாத்திரத்தையும் தானியத்துக்கு அவன்கொடுத்த பணத்தையும் போடு" (ஆதி 44:1,2) என்று கட்டளையிடுகிறார்; யோசேப்பு சொன்னபடியே அவருடைய வீட்டு விசாரணைக்காரன் செய்கிறான்.

தன்னை வெளிப்படுத்திக் காண்பிப்பதற்கு முன்பாக யோசேப்பு மறுபடியும் தன் சகோதரரைத் தாழ்த்த விரும்புகிறார். அவர்கள் தனக்கு தீமை செய்ததுபோல பென்யமீனுக்குத் தீமை செய்து விடுவார்களா அல்லது அவர்கள் மனம் மாறிவிட்டார்களா என்று யோசேப்பு அவர்களைச் சோதித்தறிய விரும்புகிறார்.

யோசேப்பும் அவருடைய சகோதரரும் சற்று நேரத்திற்கு முன்பு, அவருடைய வீட்டிலே போஜனபானம் பண்ணி சந்தோஷமாயிருந்தார்கள். அவர்கள் பானம்பண்ணுவதற்கு யோசேப்பின் பானபாத்திரம் பயன்படுத்தப்பட்டது. அது ஒரு வெள்ளிப்பாத்திரம். அந்தப் பாத்திரம் இப்போது பென்யமீனுடைய சாக்கின் வாயிலே போடப்பட்டிருக்கிறது. இப்போது மற்றவர்களுடைய பார்வைக்கு, பென்யமீன், அந்தப் பானபாத்திரத்தை திருடியவன் போல காணப்படுகிறான்.

அதிகாலையிலே அந்த மனிதர்கள் தங்கள் கழுதைகளை ஓட்டிக்கொண்டு போகும்படி அனுப்பிவிடப்படுகிறார்கள். அவர்கள் பட்டணத்தை விட்டுப் புறப்பட்டு, வெகுதூரம் போவதற்கு முன்னே, யோசேப்பு தன் வீட்டு விசாரணைக்காரனை நோக்கி, "நீ புறப்பட்டுப்போய், அந்த மனிதரைப் பின்தொடர்ந்து, அவர்களைப் பிடித்து; நீங்கள் நன்மைக்குத் தீமை செய்தது என்ன? அது என் எஜமான் பானம்பண்ணுகிற பாத்திரம் அல்லவா? அது போனவகை ஞானதிருஷ்டியால் அவருக்குத் தெரியாதா? நீங்கள் செய்தது தகாதகாரியம் என்று அவர்களோடே சொல்" (ஆதி 44:3-5) என்று சொல்லுகிறார்.

யோசேப்பின் வீட்டுவிசாரணைக்காரன், தன் எஜமானுடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறான். அவன் யோசேப்பின் சகோதரர்களை தொடர்ந்துபோய் பிடிக்கிறான். யோசேப்பு தன்னிடத்தில் சொல்லியிருந்த வார்த்தைகள் எல்லாவற்றையும், அவன் யோசேப்பின் சகோதரரிடத்தில் சொல்லுகிறான் (ஆதி 44:6). யோசேப்பின் சகோதரர் பட்டணத்தைவிட்டு சமீபத்தில்தான் இருக்கிறார்கள். இன்னும் அவர்கள் வெகுதூரம் போகவில்லை. அதற்குள் யோசேப்பின் வீட்டு விசாரணைக்காரன் அவர்களைப் பிடித்துக்கொள்கிறான்.

யோசேப்பு ஒரு எகிப்தியன் என்பதை அவருடைய சகோதரருக்குக் காண்பிப்பதற்காக யோசேப்பிற்கு ஞானதிருஷ்டி உள்ளதாக சொல்லுகிறார்கள். எகிப்தியர் மத்தியிலும், மற்றும் பல தேசங்களிலும் ஞானதிருஷ்டி பாத்திரங்கள் அல்லது மந்திர பாத்திரங்களை ஞானதிருஷ்டிக்காரர்கள் பயன்படுத்தினார்கள். அந்தப் பாத்திரங்களில் மந்திர வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கும். அதில் தண்ணீர் ஊற்றி, சிறிது மெழுகையும் போடுவார்கள். மெழுகின் அமைப்பை வைத்து, எகிப்தியரின் தெய்வங்கள் எதை விரும்புகிறது என்று ஞானதிருஷ்டியினால் கூறுவார்கள்.

யோசேப்பின் சகோதரர், அவருடைய வீட்டு விசாரணைக்காரரிடத்தில் தாங்கள் நிரபராதி என்று சொல்லுகிறார்கள். அவர்கள் தங்களை குற்றமற்றவர்கள் என்று சொல்லுகிறார்கள்.

யோசேப்பின் சகோதரர், அவருடைய வீட்டு விசாரணைக்காரனை நோக்கி, "எங்கள் ஆண்டவன் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுகிறதுஎன்ன? இப்படிப்பட்ட காரியத்துக்கும் உம்முடைய அடியாராகிய எங்களுக்கும் வெகுதூரம். எங்கள் சாக்குகளின் வாயிலே நாங்கள் கண்ட பணத்தைக் கானான்தேசத்திலிருந்து திரும்ப உம்மிடத்துக்குக் கொண்டுவந்தோமே; நாங்கள் உம்முடைய எஜமானின் வீட்டிலிருந்து வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் திருடிக்கொண்டு போவோமா? உம்முடைய அடியாருக்குள்ளே அது எவனிடத்தில் காணப்படுமோ அவன் கொலையுண்ணக்கடவன்; நாங்களும் எங்கள் ஆண்டவனுக்கு அடிமைகளாவோம்" (ஆதி 44:7-9) என்று சொல்லுகிறார்கள்.

யோசேப்பின் வீட்டுவிசாரணைக்காரனோ, அவர்களுடைய சாக்குகளை சோதித்துப்பார்க்க விரும்புகிறான். யோசேப்பின் சகோதரர் அவனிடத்தில், "உம்முடைய அடியாருக்குள்ளே வெள்ளிப்பாத்திரம் எவனிடத்தில் காணப்படுமோ, அவன் கொலையுண்ணக்கடவன்" என்று சொல்லுகிறார்கள்.

யோசேப்பின் சகோதரர்கள் ஆரம்பத்திலேயே இப்படிக் கூறிவிடுகிறார்கள். இவர்கள் ஹமுராபியின் சட்டத்தைப் பின்பற்றி ஜீவிக்கிறவர்கள். கானானிலும், எகிப்திலும் ஹமுராபியின் சட்டங்கள் பிரபல்யமானவை. ஹமுராபியின் சட்டத்தின்படி பல குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

சரித்திர ஆசிரியர்கள் ஹமுராபியின் சட்டத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்து எழுதியிருக்கிறார்கள். அந்த சட்டத்தின்படி ஒரு சில குற்றங்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படும். அதன் விவரம் வருமாறு :

1. அரண்மனையில் திருடியவன். அரண்மனையிலுள்ள பொருட்கள் புனிதமானவை.

2. திருட்டுப் பொருட்களை விலைக்கு வாங்குகிறவன். திருடனைப்போலவே இவனுக்குத் தண்டனை கொடுக்கப்படும்.

3. விபசாரத்தில் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டவள். இவள் நைல்நதியில் விழுந்து தன் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும்.

4. தன்னுடைய வீட்டையும், தன்னுடைய புருஷனையும் கவனிக்காமல், புறக்கணிக்கும் ஸ்திரீயை நதியில் தூக்கியெறிந்து விட வேண்டும்.

5. வீட்டை சரியாகக் கட்டாதவன். வீடு இடிந்து அது வீட்டு எஜமான்மேல் விழுந்து, அவன் மரித்துப்போனால், வீட்டைக் கட்டியவனுக்கு மரண தண்டனை கொடுக்கப்படும்.

6. தரித்திரனான திருடன். தன் திருட்டுக்கு நஷ்டஈடாகக் கொடுக்க அவனிடத்தில் ஒன்றுமில்லாமல் இருக்கும்போது அவன் மரணத்திற்குப் பாத்திரவான்.

7. எரியும் வீட்டில் திருடுகிறவனை அந்த வீட்டின் எரியும் நெருப்பிலேயே தூக்கியெறிந்து கொன்றுபோட வேண்டும்.

8. ஒரு பொருளை விற்கும்பொழுது பிறரை வஞ்சித்து, அந்தப் பொருளை ஏமாற்றி விற்று விட்டால், அவனைத் தண்ணீரில் அமுக்கிக் கொல்ல வேண்டும்.

9. வேறொரு புருஷன் நிமித்தம் தன்னுடைய புருஷனுடைய மரணத்திற்கு காரணமாக இருக்கும் ஸ்திரீக்கு மரண தண்டனை கொடுக்கப்படும்.

10. ஒரு ஐசுவரியவானுடைய குமாரத்தியைக் கொன்றுபோடுகிற மனுஷனுக்கு மரண தண்டனை கொடுக்கப்படும். ஒரு ஏழையின் குமாரத்தியைக் கொன்று போடுகிறவன் ஒரு மினா (mina) என்னும் ஒரு வெள்ளிக்காசை அபராதமாகச் செலுத்த வேண்டும்.

ஹமுராபியின் சட்டத்தின்பிரகாரம், ஒரு நபரை தீயில் எரித்தோ, தண்ணீரில் அமுக்கியோ, அல்லது பட்டயத்தால் அறுத்தோ மரண தண்டனை தரவேண்டும். பொய்சொல்லுகிறவன் பெற்றோரை மறுதலிக்கிறவன் ஆகியோருடைய நாக்கை அறுக்க வேண்டும். தன்னை வளர்த்த பெற்றோரை வெறுக்கிறவனுடைய கண்கள் பிடுங்கப்படும். பெற்றோரை அடிக்கிற பிள்ளைகளின் விரல்கள் வெட்டப்படும். எஜமானின் பிள்ளைகளை அடிக்கும் அடிமைகளின் காதுகள் அறுக்கப்படும். மருத்துவர் சரியாக சிகிச்சை கொடுக்காததினால், நோயாளி இறந்து விட்டால், மருத்துவரின் விரல்கள் துண்டிக்கப்படும். மேலதிகாரியை அடிக்கிறவனுக்கு 60 சவுக்கடிகள் கொடுக்கப்படும்.

ஹமுராபியின் சட்டங்கள் சமுதாயத்திற்குரியது. மார்க்கச் சடங்குகளுக்குரியதல்ல. தேவனை எப்படி ஆராதிக்க வேண்டும் என்னும் ஆலோசனைகள் ஹமுராபியின் சட்டத்தில் கூறப்படவில்லை. பலிபீடங்கள், காணிக்கைகள், பலிகள், மார்க்க உபதேசங்கள் ஆகியவை பற்றி ஹமுராபியின் சட்டம் எதுவும் கூறவில்லை. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் காலத்தில் ஹமுராபியின் சட்டம் பாபிலோன், அசீரியா, கானான், எகிப்து ஆகிய தேசங்களில் பிரபல்யமாய் இருந்தது. மோசே நியாயப் பிரமாணத்தை எழுதுவதற்கு முன்பாக அக்காலத்தில் ஹமுராபியின் சட்டமே சமுதாயத்தில் அமுலில் இருந்தது.

யோசேப்பின் வீட்டு விசாரணைக்காரன் அவர்களுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்கிறான். அவன் அவர்களை நோக்கி, "நீங்கள் சொன்னபடியே ஆகட்டும்; எவனிடத்தில் அது காணப்படுமோ, அவன் எனக்கு அடிமையாவான்; நீங்கள் குற்றமற்றிருப்பீர்கள்" (ஆதி 44:10) என்று சொல்லுகிறான்.

யோசேப்பின் சகோதரர் தங்களை குற்றமற்றவர்கள் என்று நிரூபிப்பதில் தீவிரமாயிருக்கிறார்கள். அவர்கள் துரிதமாய் அவனவன் தன்தன் சாக்கைத் தரையிலே இறக்கி, தங்கள் சாக்குகளைத் திறந்து வைக்கிறார்கள். மூத்தவன் சாக்குமுதல் இளையவன் சாக்குமட்டும் அவன் சோதிக்கும்போது, அந்தப் பாத்திரம் பென்யமீனுடைய சாக்கிலே கண்டுபிடிக்கப்படுகிறது (ஆதி 44:11,12). பென்யமீன் இப்போது குற்றவாளியாயிருக்கிறான்.

யோசேப்பின் சகோதரருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. தாங்கள் வெள்ளிப்பாத்திரத்தை திருடவில்லை என்பது அவர்களுடைய நன்றாய்த் தெரியும். ஆனால் அந்தப்பாத்திரம் பென்யமீனுடைய சாக்கிலே கண்டுபிடிக்கப்படுகிறது. அவர்களிடத்தில் யோசேப்புக்கு விரோதமாக எதிர்த்துப் பேசும் தெம்போ தைரியமோ இல்லை. அவர்களால் யோசேப்பின் நியாயத்தீர்ப்பை குறை சொல்லவும் முடியவில்லை. தங்களுடைய சாக்குகளிலே யோசேப்பே பணத்தைப்போட்டு, பென்யமீனுடைய சாக்கிலே வெள்ளிப்பாத்திரத்தையும் போட்டிருக்கிறார் என்று அவர்களால் துணிந்து சொல்ல முடியவில்லை.

அவர்கள் எல்லோரும் யோசேப்பின் இரக்கத்திற்கும் தயவுக்கும் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். அவர்கள் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, அவனவன் கழுதையின்மேல் பொதியை ஏற்றிக்கொண்டு, பட்டணத்திற்குத் திரும்புகிறார்கள். யூதாவும் அவன் சகோதரரும் யோசேப்பின் வீட்டுக்குப் போகிறார்கள். யோசேப்பு அதுவரையும் அங்கே இருக்கிறார்; யோசேப்பின் சகோதரர், யோசேப்புக்கு முன்பாகத் தரையிலே விழுகிறார்கள் (ஆதி 44:13,14).

வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்வது எபிரெயருடைய பழக்கம். கண்ணியம், நேர்மை, துக்கம் அனுசரித்தல், ஆகியவற்றிற்கு வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்வது ஒரு அடையாளமாகும். தன் சகோதரரிடத்தில் நல்ல ஆவி காணப்படுவதையும், பென்யமீன்மீதும், யாக்கோபின்மீதும் அவர்கள் உண்மையிலேயே அக்கறையோடு இருக்கிறார்கள் என்பதையும் யோசேப்பு புரிந்து கொள்கிறார்.

தாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை என்பது யோசேப்பின் சகோதரருக்கு நன்றாகத் தெரியும். தங்களுடைய நல்ல நடத்தையை நிரூபிக்க வேண்டுமென்று விரும்பி, அவர்கள் மனப்பூர்வமாக யோசேப்பு இருந்த பட்டணத்திற்குத் திரும்பி வருகிறார்கள்.

யோசேப்பு கண்ட சொப்பனம் மறுபடியும் நிறைவேறுகிறது. யோசேப்பின் அரிக்கட்டு நிமிர்ந்து நிற்கிறது. அவருடைய சகோதரரின் அரிக்கட்டுக்கள் சுற்றி நின்று அவரை வணங்குகிறது. யோசேப்பு அவர்களை நோக்கி, "நீங்கள் என்ன காரியம் செய்தீர்கள்? என்னைப்போலொத்த மனிதனுக்கு ஞானதிருஷ்டியினால் காரியம் தெரியவரும் என்று அறியாமற்போனீர்களா" (ஆதி 44:15) என்று சொல்லுகிறார்.

யோசேப்பின் சகோதரரோ அவருக்கு முன்பாக தங்களை வெகுவாகத் தாழ்த்துகிறார்கள். அவர்கள் தேவனுடைய நீதியை உயர்த்துகிறார்கள். "உம்முடைய அடியாரின் அக்கிரமத்தை தேவன் விளங்கப்பண்ணினார்" என்று யோசேப்பின் சகோதரர் அவரிடத்தில் சொல்லுகிறார்கள். அவர்கள் ஏற்கெனவே யோசேப்புக்கு அக்கிரமம் செய்திருக்கிறார்கள். இப்போது தேவன் தங்கள் அக்கிரமத்தை நியாயம் விசாரிக்கிறார் என்று அவர்கள் அங்கீகரிக்கிறார்கள்.

யோசேப்பின் சகோதரர்கள், தங்களைப்பற்றி யோசேப்பினிடத்தில் சொல்லும்போது, "உம்முடைய அடியார்" என்றும், "நாங்கள் எங்கள் ஆண்டவனுக்கு அடிமைகள்" என்றும் சொல்லுகிறார்கள். தங்கள்மீது குற்றம் சுமத்தப்படுவதற்கு முன்பாகவே, தங்களுக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கப்படுவதற்கு முன்பாகவே, யோசேப்பின் சகோதரர்கள் தங்களுக்கு கொடுக்கப்படும் தண்டனைகளை ஏற்றுக்கொண்டு, தங்களை "அடிமைகள்" என்று அங்கீகரிக்கிறார்கள்.

யோசேப்பின் சகோதரருக்கு, யோசேப்புக்கு முன்பாக என்ன பேசுவது என்று தெரியவில்லை. யூதா தன் சகோதரன் பென்யமீன் சார்பாக யோசேப்பினிடத்தில் பேசுகிறான். யூதா யோசேப்பை நோக்கி, "என் ஆண்டவனாகிய உம்மிடத்தில் நாங்கள் என்ன சொல்லுவோம்? என்னத்தைப் பேசுவோம்? எதினாலே எங்கள் நீதியை விளங்கப்பண்ணுவோம்? உம்முடைய அடியாரின் அக்கிரமத்தை தேவன் விளங்கப்பண்ணினார்; பாத்திரத்தை வைத்திருக்கிறவனும் நாங்களும் என் ஆண்டவனுக்கு அடிமைகள்" (ஆதி 44:16) என்று சொல்லுகிறான்.

யூதா இந்தச் சூழ்நிலையில் விவாதம் பண்ண விரும்பவில்லை. எல்லா சகோதரர்களும் யோசேப்பிற்கு அடிமை என்று கூறுகிறான். ஆனால் யோசேப்பு பென்யமீனை மட்டும் பிடித்துக் கொள்ள விரும்புகிறார். தன்னுடைய குடும்ப சூழ்நிலைகளையெல்லாம் யூதா யோசேப்பிடம் விவரித்துக் கூறுகிறான். பென்யமீனுக்குப் பதிலாகத் தன்னை அடிமையாக வைத்துக் கொள்ளுமாறு யூதா ஒப்புக்கொடுக்கிறான். (ஆதி 44:18-34) தன் தகப்பன்மீதும், தன் சகோதரர்மீதும் தான் வைத்திருக்கும் அன்பை யூதா வெளிப்படுத்திக் காண்பிக்கிறான். தன் சகோதரர் படும் வேதனைகளை யோசேப்பால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தன்னுடைய உணர்ச்சிகளையும் யோசேப்பால் அடக்கிக் கொள்ள முடியவில்லை (ஆதி 45:1).

யோசேப்போ தன்னுடைய நீதியை பேசுகிறார். அவர் பென்யமீனை மாத்திரம் தன்னிடத்தில் அடிமையாக வைத்துக்கொள்ள விரும்புகிறார். யோசேப்பின் சகோதரரோ, "பாத்திரத்தை வைத்திருக்கிறவனும் நாங்களும் என் ஆண்டவனுக்கு அடிமைகள்" என்று சொன்னார்கள். ஆனால் யோசேப்பு அவர்களுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளவில்லை.

யோசேப்பு தன் சகோதரரை நோக்கி, "அப்படிப்பட்ட செய்கை எனக்குத் தூரமாயிருப்பதாக; எவன் வசத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோ, அவனே எனக்கு அடிமையாயிருப்பான்; நீங்களோ சமாதானத்தோடே உங்கள் தகப்பனிடத்துக்குப் போங்கள்" (ஆதி 44:17) என்று சொல்லுகிறார்.

தன்னுடைய சகோதரர் பென்யமீன்மீது மெய்யாகவே அன்பாயிருக்கிறார்களா என்பதை யோசேப்பு சோதித்தறிய விரும்புகிறார். பென்யமீன்மீது மாத்திரமல்ல, அவர்கள் தங்கள் தகப்பனாராகிய யாக்கோபின்மீதும் அன்பாயிருக்கிறார்களா என்பதையும் யோசேப்பு சோத்தறிய விரும்புகிறார்.

பென்யமீனின் சகோதரர் அவனை யோசேப்பினிடத்தில் அடிமையாக விட்டுவிட்டு, தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போய்விட்டால், யோசேப்பு அவர்களுடைய சுயநலத்தையும், மாய்மாலமான அன்பையும் அறிந்துகொள்வார். யோசேப்பு தன்னிடத்தில் விடப்பட்டிருக்கிற தன் சகோதரன் பென்யமீனை எகிப்து தேசத்திலே உயர்த்துவார். அதன் பின்பு தன் தகப்பனாராகிய யாக்கோபுக்கு தன் ஆட்களை அனுப்பி, அவரையும் எகிப்து தேசத்திற்கு அழைத்து வருவார். யோசேப்பின் சகோதரரோ, கானான் தேசத்திலேயே இருக்கவேண்டும். அவர்களால் மறுபடியும் யோசேப்புக்கு முன்பாக நிற்கமுடியாது. கானான் தேசத்தில் ஏற்பட்டிருக்கிற கொடிய பஞ்சத்தில், அவர்களும் அவர்களுடைய பிள்ளைகளும் அழிந்துபோவார்கள்.

ஆனால் பென்யமீனின் சகோதரரோ இப்போது மெய்யாகவே, தங்களுடைய பழைய பாவங்களுக்கு மனந்திரும்பியிருக்கிறார்கள். அவர்கள் பென்யமீன் மீதும், தங்கள் தகப்பனாராகிய யாக்கோபின்மீதும் மெய்யாகவே அன்பாயிருக்கிறார்கள். யோசேப்பு எதிர்பார்த்ததை விட, அவருடைய சகோதரர்கள் இப்போது நற்குணமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயங்கள் கடினமாயிராமல் மென்மையானதாயிருக்கிறது. அவர்களுடைய மனதிலே ஆணவத்திற்கும், பெருமைக்கும் பதிலாக, அன்பும் பாசமும் இருக்கிறது.

யோசேப்பை இஸ்மவேலரிடத்திலே இருபது காசுகளுக்கு விற்றுப்போட்ட அவருடைய சகோதரர்கள், இப்போது தங்கள் சகோதரன் பென்யமீனை யோசேப்பினிடத்தில் அடிமையாக விட்டுப்போக மனதில்லாதவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் மெய்யாகவே தங்கள் பழைய பாவங்களுக்கு மனந்திரும்பியிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

யூதாவின் பரிந்து பேசும் வார்த்தைகள் ஆதி 44:18-34

ஆதி 44:18. அப்பொழுது யூதா அவனண்டையிலே சேர்ந்து: ஆ, என் ஆண்டவனே, உமது அடியேன் உம்முடைய செவிகள் கேட்க ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேட்பீராக; அடியேன்மேல் உமது கோபம் மூளாதிருப்பதாக; நீர் பார்வோனுக்கு ஒப்பாயிருக்கிறீர்.

ஆதி 44:19. உங்களுக்குத் தகப்பனாவது சகோதரனாவது உண்டா என்று என் ஆண்டவன் உம்முடைய அடியாரிடத்தில் கேட்டீர்.

ஆதி 44:20. அதற்கு நாங்கள்: எங்களுக்கு முதிர்வயதுள்ள தகப்பனாரும், அவனுக்கு முதிர்வயதிலே பிறந்த ஒரு இளைஞனும் உண்டு என்றும், அவனுடைய தமையன் இறந்துபோனான் என்றும், அவன் ஒருவன்மாத்திரமே அவனைப் பெற்ற தாயாருக்கு இருப்பதினால் தகப்பனார் அவன்மேல் பட்சமாயிருக்கிறார் என்றும் என் ஆண்டவனுக்குச் சொன்னோம்.

ஆதி 44:21. அப்பொழுது நீர்: அவனை என்னிடத்துக்குக் கொண்டுவாருங்கள்; என் கண்களினால் அவனைப் பார்க்கவேண்டும் என்று உமது அடியாருக்குச் சொன்னீர்.

ஆதி 44:22. நாங்கள் ஆண்டவனை நோக்கி: அந்த இளைஞன் தன் தகப்பனைவிட்டுப் பிரியக்கூடாது, பிரிந்தால் அவர் இறந்துபோவார் என்று சொன்னோம்.

ஆதி 44:23. அதற்கு நீர்: உங்கள் இளைய சகோதரனைக் கொண்டுவராவிட்டால், நீங்கள் இனி என் முகத்தைக் காண்பதில்லை என்று உமது அடியாருக்குச் சொன்னீர்.

ஆதி 44:24. நாங்கள் உமது அடியானாகிய என் தகப்பனாரிடத்துக்குப் போனபோது, என் ஆண்டவனுடைய வார்த்தைகளை அவருக்கு அறிவித்தோம்.

ஆதி 44:25. எங்கள் தகப்பனார் எங்களை நோக்கி: நீங்கள் திரும்பப்போய், நமக்குக் கொஞ்சம் தானியம் கொள்ளுங்கள் என்று சொன்னார்.

ஆதி 44:26. அதற்கு: நாங்கள் போகக்கூடாது; எங்கள் இளைய சகோதரன் எங்களோடேவந்தால் போவோம்; எங்கள் இளையசகோதரன் எங்களோடே வராவிட்டால், நாங்கள் அந்தப் புருஷனுடைய முகத்தைக் காணக்கூடாது என்றோம்.

ஆதி 44:27. அப்பொழுது உம்முடைய அடியானாகிய என் தகப்பனார்: என் மனைவி எனக்கு இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள்;

ஆதி 44:28. அவர்களில் ஒருவன் என்னிடத்திலிருந்துபோய்விட்டான், அவன் பீறுண்டுபோயிருப்பான் என்றிருந்தேன், இதுவரைக்கும் அவனைக் காணாதிருக்கிறேன், இதெல்லாம் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

ஆதி 44:29. நீங்கள் இவனையும் என்னை விட்டுப்பிரித்து அழைத்துப்போகுமிடத்தில் இவனுக்கு மோசம் நேரிட்டால், என் நரைமயிரை வியாகுலத்தோடே பாதாளத்தில் இறங்கப்பண்ணுவீர்கள் என்றார்.

ஆதி 44:30. ஆகையால் இளையவனை விட்டு, நான் என் தகப்பனாகிய உமது அடியானிடத்துக்குப் போனால், அவருடைய ஜீவன் இவனுடைய ஜீவனோடே ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறபடியினால்,

ஆதி 44:31. அவர் இளையவன் வரவில்லை என்று அறிந்தமாத்திரத்தில் இறந்துபோவார்; இப்படி உமது அடியாராகிய நாங்கள் உமது அடியானாகிய எங்கள் தகப்பனுடைய நரைமயிரை வியாகுலத்துடனே பாதாளத்தில் இறங்கப்பண்ணுவோம்.

ஆதி 44:32. இந்த இளையவனுக்காக உமது அடியானாகிய நான் என் தகப்பனுக்கு உத்தரவாதி; அன்றியும், நான் இவனை உம்மிடத்துக்குக் கொண்டுவராவிட்டால், நான் எந்நாளும் உமக்கு முன்பாகக் குற்றவாளியாயிருப்பேன் என்று அவருக்குச் சொல்லியிருக்கிறேன்.

ஆதி 44:33. இப்படியிருக்க, இளையவன் தன் சகோதரரோடேகூடப் போகவிடும்படி மன்றாடுகிறேன்; உம்முடைய அடியானாகிய நான் இளையவனுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாயிருக்கிறேன்.

ஆதி 44:34. இளையவனை விட்டு, எப்படி என் தகப்பனிடத்துக்குப் போவேன்? போனால் என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை நான் எப்படி காண்பேன் என்றான்.

யூதா தன் சகோதரன் பென்யமீனுக்காக, யோசேப்பினிடத்தில் பரிந்து பேசுகிறான். பென்யமீனின் மற்ற சகோதரரைவிட, யூதா அவனுக்கு மிகவும் நெருக்கமான சிநேகிதனாகவும் சகோதரனாகவும் இருக்கவேண்டும். அல்லது பென்மீனின் சகோதரரிலே, யூதாவே சாதுரியமான வார்த்தைகளை பேசுகிறவனாகவும், வாக்குவல்லவனாகவும் இருக்கவேண்டும். மற்ற சகோதரர்களைவிட யூதா ஞானமாகவும், பொறுமையாகவும், தெளிவாகவும், பணிவாகவும் பேசுகிறவன். ஆகையினால் யூதா தன் சகோதரன் பென்யமீனுக்காக யோசேப்புக்கு முன்பாக பரிந்து பேசுகிறான்.

யூதாவின் வார்த்தையில் பணிவும் சாதுரியமும் வெளிப்படுகிறது. அவன் மிகவும் நயமான வார்த்தைகளை தெளிவாக பயன்படுத்துகிறான். யூதா யோசேப்பண்டையிலே சேர்ந்து, அவரை நோக்கி, "ஆ, என் ஆண்டவனே, உமது அடியேன் உம்முடைய செவிகள் கேட்க ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேட்பீராக; அடியேன்மேல் உமது கோபம் மூளாதிருப்பதாக; நீர் பார்வோனுக்கு ஒப்பாயிருக்கிறீர்" (ஆதி 44:18) என்று சொல்லி தன்னுடைய வார்த்தைகளை ஆரம்பிக்கிறான். யூதா யோசேப்பை வெகுவாகப் புகழ்ந்துபேசுகிறான். அவருக்கு அதிகமான மதிப்பையும் மரியாதையும் காண்பிக்கிறான்.

யூதா தன்னுடைய சகோதரன் பென்யமீனுக்காக யோசேப்பினிடத்தில் பரிந்து பேசுகிறான். அவன் பென்யமீனுக்காக பரிந்து பேசுவதற்கான காரணத்தையும் யோசேப்புக்கு தெளிவுபடுத்துகிறான். யோசேப்பு ஏற்கெனவே, தன் சகோதரரை நோக்கி, "உங்களுக்கு தகப்பனாவது, சகோதரனாவது உண்டா" என்று கேட்டார். யோசேப்பு கேட்ட அந்தக் கேள்வியை, யூதா இப்போது யோசேப்புக்கு நினைவுபடுத்துகிறான். "உங்களுக்குத் தகப்பனாவது சகோதரனாவது உண்டா என்று என் ஆண்டவன் உம்முடைய அடியாரிடத்தில் கேட்டீர்" (ஆதி 44:19) என்று யூதா யோசேப்புக்கு சொல்லுகிறான்.

யோசேப்பு தங்களிடத்தில், தங்கள் தகப்பனாரைப்பற்றியும், சகோதரனைப்பற்றியும் கேட்டபோது, அவருடைய சகோதரர்கள் யோசேப்பை நோக்கி, "எங்களுக்கு முதிர்வயதுள்ள தகப்பனாரும், அவனுக்கு முதிர்வயதிலே பிறந்த ஒரு இளைஞனும் உண்டு என்றும், அவனுடைய தமையன் இறந்துபோனான் என்றும், அவன் ஒருவன்மாத்திரமே அவனைப் பெற்ற தாயாருக்கு இருப்பதினால் தகப்பனார் அவன்மேல் பட்சமாயிருக்கிறார்" (ஆதி 44:20) என்று தங்கள் ஆண்டவனாகிய யோசேப்புக்கு சொன்னார்கள்.

யோசேப்பின் சகோதரரில் பென்யமீன் இளையவனாயிருக்கிறான். ஆகையினால் யாக்கோபு அவன்மேல் பட்சமாயிருக்கிறார். பென்யமீனுடைய தமையனும் இறந்துபோனான் என்று, அவர்கள் யோசேப்பினிடத்தில் சொல்லுகிறார்கள். யோசேப்பே அவர்கள் சொல்லுகிற தமையன். பென்யமீன் பிறக்கும்போதே, அவனுடைய தாயார் ராகேல் மரித்துப்போனாள். ஆகையினால் யாக்கோபு பென்யமீன்மீது மிகவும் பட்சமாயிருக்கிறார் என்று யூதா பென்யமீனுக்காக யோசேப்பினிடத்தில் பரிந்துபேசுகிறான்.

யோசேப்பு தன் சகோதரரிடத்தில் இதற்கு முன்பு பேசின வார்த்தைகளை, யூதா அவருக்கு தொடர்ந்து நினைவுபடுத்துகிறான். யோசேப்பு அப்போது அவர்களை நோக்கி, "அவனை என்னிடத்துக்குக் கொண்டுவாருங்கள்; என் கண்களினால் அவனைப் பார்க்கவேண்டும்" என்று சொன்னார். அதற்கு அவருடைய அடியாராகிய, அவருடைய சகோதரர்கள், தங்கள் ஆண்டவனாகிய யோசேப்பை நோக்கி, "அந்த இளைஞன் தன் தகப்பனைவிட்டுப் பிரியக்கூடாது, பிரிந்தால் அவர் இறந்துபோவார்" (ஆதி 44:21,22) என்று சொன்னார்கள். யாக்கோபின் ஜீவன் பென்யமீனுடைய ஜீவனோடே ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறது.

யோசேப்பு தங்களோடு பேசிய வார்த்தைகளை, யூதா அவருக்கு இன்னும் நினைவுபடுத்துகிறான். யூதா யோசேப்பை நோக்கி, "அதற்கு நீர்: உங்கள் இளைய சகோதரனைக் கொண்டுவராவிட்டால், நீங்கள் இனி என் முகத்தைக் காண்பதில்லை என்று உமது அடியாருக்குச் சொன்னீர். நாங்கள் உமது அடியானாகிய என் தகப்பனாரிடத்துக்குப் போனபோது, என் ஆண்டவனுடைய வார்த்தைகளை அவருக்கு அறிவித்தோம்" (ஆதி 44:23,24) என்று சொல்லுகிறான்.

தங்கள் தகப்பனார் தங்களோடு பேசின வார்த்தைகளையும், தாங்கள் தங்களுடைய தகப்பனாருக்கு சொன்ன பிரதியுத்தர வார்த்தைகளையும், யூதா யோசேப்புக் எடுத்து சொல்லுகிறான். யூதா யோசேப்பை நோக்கி, "எங்கள் தகப்பனார் எங்களை நோக்கி: நீங்கள் திரும்பப்போய், நமக்குக் கொஞ்சம் தானியம் கொள்ளுங்கள் என்று சொன்னார். அதற்கு: நாங்கள் போகக்கூடாது; எங்கள் இளைய சகோதரன் எங்களோடேவந்தால் போவோம்; எங்கள் இளைய சகோதரன் எங்களோடே வராவிட்டால், நாங்கள் அந்தப் புருஷனுடைய முகத்தைக் காணக்கூடாது என்றோம்" (ஆதி 44:25,26) என்று சொல்லுகிறான்.

பென்யமீனை தன்னுடைய குமாரரோடு எகிப்து தேசத்திற்கு அனுப்ப யாக்கோபுக்கு இஷ்டமில்லை. தங்கள் இளைய சகோதரனை தங்களோடு அனுப்பவேண்டும் என்று மற்ற சகோதரர்கள் யாக்கோபினிடத்தில் கேட்டபோது, அவர் பென்யமீனை அவர்களோடு அனுப்ப மறுத்துவிட்டார். யூதா யோசேப்பினிடத்தில் யாக்கோபைப்பற்றிச் சொல்லும்போது, "உம்முடைய அடியானாகிய என் தகப்பனார்" என்று சொல்லுகிறான்.

கானான் தேசத்திலே பென்யமீனைக் குறித்து, யாக்கோபும், அவருடைய குமாரரும் பேசின சம்பாஷணைகளை, யூதா யோசேப்புக்கு தெளிவாக எடுத்து சொல்லுகிறான்.

யாக்கோபு தன் குமாரரை நோக்கி, "என் மனைவி எனக்கு இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள்; அவர்களில் ஒருவன் என்னிடத்திலிருந்து போய்விட்டான், அவன் பீறுண்டுபோயிருப்பான் என்றிருந்தேன், இதுவரைக்கும் அவனைக் காணாதிருக்கிறேன், இதெல்லாம் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் இவனையும் என்னை விட்டுப்பிரித்து அழைத்துப்போகுமிடத்தில் இவனுக்கு மோசம் நேரிட்டால், என் நரைமயிரை வியாகுலத்தோடே பாதாளத்தில் இறங்கப்பண்ணுவீர்கள்" (ஆதி 44:27-29) என்று சொன்னார்.

பென்யமீனை எகிப்து தேசத்தில் விட்டுவிட்டு, அவனுடைய சகோதரராகிய தாங்கள் மாத்திரம், கானான் தேசத்திற்கு திரும்பிப்போகக்கூடாது என்று யூதா மிகுந்த வேதனையோடு சொல்லுகிறான். யூதா யோசேப்பை நோக்கி, "ஆகையால் இளையவனை விட்டு, நான் என் தகப்பனாகிய உமது அடியானிடத்துக்குப் போனால், அவருடைய ஜீவன் இவனுடைய ஜீவனோடே ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறபடியினால், அவர் இளையவன் வரவில்லை என்று அறிந்தமாத்திரத்தில் இறந்துபோவார்; இப்படி உமது அடியாராகிய நாங்கள் உமது அடியானாகிய எங்கள் தகப்பனுடைய நரைமயிரை வியாகுலத்துடனே பாதாளத்தில் இறங்கப்பண்ணுவோம்" (ஆதி 44:30,31) என்று சொல்லுகிறான்.

யூதா யோசேப்பு கொடுத்த தண்டனையைக் கனம்பண்ணுகிறான். ஆனாலும் அந்த தண்டனையை தன் சகோதரன் பென்யமீன் அனுபவிப்பதற்கு பதிலாக, அதை தானே அனுபவிப்பதற்கு யூதா ஆயத்தமாயிருக்கிறான். யூதா யோசேப்பை நோக்கி, "இப்படியிருக்க, இளையவன் தன் சகோதரரோடேகூடப் போகவிடும்படி மன்றாடுகிறேன்; உம்முடைய அடியானாகிய நான் இளையவனுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாயிருக்கிறேன்" (ஆதி 44:33) என்று சொல்லுகிறான்.

யோசேப்புக்கு முன்பாக யாக்கோபோ அல்லது பென்யமீனோ பரிந்துபேசவேண்டிய அவசியமில்லை. யோசேப்பு தன் சகோதரர் எல்லோர்மீதும் அன்பாகவே இருக்கிறார். ஆனாலும் யூதா தன் சகோதரன் பென்யமீனுக்காக யோசேப்பினிடத்தில் அதிகமாய்ப் பரிந்து பேசுகிறான். யூதா தன் தகப்பனாராகிய யாக்கோபினிடத்தில், பென்யமீனுக்காக உத்திரவாதம் பண்ணியிருக்கிறான்.

எகிப்து தேசத்திலே பென்யமீனுக்கு பதிலாக, யூதா அடிமையாக இருக்க சம்மதிக்கிறான். அதற்காக காரணத்தையும் யூதா யோசேப்புக்கு சொல்லுகிறான். யூதா யோசேப்பை நோக்கி, "இந்த இளையவனுக்காக உமது அடியானாகிய நான் என் தகப்பனுக்கு உத்தரவாதி; அன்றியும், நான் இவனை உம்மிடத்துக்குக் கொண்டுவராவிட்டால், நான் எந்நாளும் உமக்கு முன்பாகக் குற்றவாளியாயிருப்பேன் என்று அவருக்குச் சொல்லியிருக்கிறேன்" (ஆதி 44:32) என்று சொல்லுகிறான்.

யோசேப்பின் பிரிவினால் யாக்கோபு எந்தளவிற்கு வேதனை அனுபவித்தார் என்பதை யூதா பொறுமையோடு விவரித்துக் கூறுகிறான். (ஆதி 44:27-33). பென்யமீனைப் பிரிந்தால் யாக்கோபின் உயிர் பிரிந்துவிடும். ஆகையினால் பென்யமீனுக்காக தன்னை உத்திரவாதியாக அர்ப்பணம் செய்கிறான். யோசேப்பைக் கொல்லாமல், அவனை விற்றுவிடுமாறு தன் சகோதரருக்கு அக்காலத்தில் யூதா ஆலோசனை கூறினான். (ஆதி 37:26-27) இப்பொழுது தான் அடிமைப்பட்டாலும் பரவாயில்லை, தன் சகோதரன் பென்யமீன் விடுவிக்கப்பட வேண்டுமென்று கெஞ்சி மன்றாடுகிறான்.

ஏற்கெனவே யூதா பென்யமீனுக்கு உத்தரவாதியாக இருக்கிறான் (ஆதி 43:8-9; ஆதி 44:32). இதற்குமேலும் யோசேப்பால் தன்னை அடக்கிக் கொள்ள முடியவில்லை. யோசேப்பு எல்லோரையும் வெளியே போகுமாறு அனுப்பிவிட்டு, தன் சகோதரரிடத்தில் தன்னை யாரென்று வெளிப்படுத்திக் காண்பிக்கிறார் (ஆதி 45:1).

யூதா தன் சகோதரன் பென்யமீனுக்காக யோசேப்பினிடத்தில் பரிந்து பேசும்போது, முடிவாக, "இளையவனை விட்டு, எப்படி என் தகப்பனிடத்துக்குப் போவேன்? போனால் என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை நான் எப்படி காண்பேன்" (ஆதி 44:34) என்று மிகுந்த பணிவோடும், மனவேதனையோடும் சொல்லுகிறான்.

யூதா பென்யமீன் மீது சுமத்தப்பட்ட குற்றத்தை நீக்குவதற்காக மிகுந்த ஞானத்தோடு பேசுகிறான். யாக்கோபு யூதாவை ஆசீர்வதிக்கும்போது "யூதாவே, சகோதரரால் புகழப்படுபவன் நீயே; உன் கரம் உன் சத்துருக்களுடைய பிடரியின்மேல் இருக்கும்; உன் தகப்பனுடைய புத்திரர் உன்முன் பணிவார்கள்" (ஆதி 49:8) என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார்.

யூதா தன் சகோதரர் எல்லாரிலும் அதிக ஞானமுள்ளவன். வாக்குவல்லவன். பெலமும் தைரியமுமுள்ளவன். அதே வேளையில் யூதா தன் தகப்பன்மீதும், தன் தகப்பனாருடைய குடும்பத்தார்மீதும் மிகுந்த அன்போடும், கரிசனையோடும் இருக்கிறவன்.

பென்யமீன் மிகுந்த துக்கத்திலிருக்கும் போது, யூதா அவனுக்காக பரிந்து பேசுகிறான். பிற்காலத்தில் பென்யமீன் கோத்திரத்தார், யூதா கோத்திரத்தாரோடு ஒற்றுமையாயிருக்கிறார்கள். இஸ்ரவேலின் மற்ற பத்துக்கோத்திரத்தாரும், யூதா கோத்திரத்தாரைவிட்டுப் பிரிந்துபோனபோது, பென்யமீன் கோத்திரத்தார் மாத்திரம், யூதா கோத்திரத்தாரோடு கூடயிருந்து, அவர்களுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

யூதா தன் சகோதரன் பென்யமீனுக்காக பரிந்து பேசுகிறான். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ, நமக்காக பிதாவாகிய தேவனிடத்தில் பரிந்து பேசுகிறார். கிறிஸ்துவானவர் யூதாகோத்திரத்தில் தோன்றினார் என்று, எபிரெயருக்கு நிருபம் எழுதின ஆசிரியர் சொல்லுகிறார்.

"நம்முடைய கர்த்தர் யூதாகோத்திரத்தில் தோன்றினாரென்பது பிரசித்தமாயிருக்கிறது; அந்தக் கோத்திரத்தாரைக்குறித்து மோசே ஆசாரியத்துவத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே" (எபி 7:14).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் நமக்காக பரிந்து பேசுவதோடு, அவர் நமக்காக பதிலீடாகவும் மரித்தார்.

45 அதிகாரம்

யூதா பென்யமீனுக்காக யோசேப்பினிடத்தில் பரிந்து பேசினான். யோசேப்பு யூதாவை தடைபண்ணாமல், அவன் சொல்லுவது எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார். யூதா பேசி முடித்த பின்பு, யோசேப்பு ஒரே வார்த்தையில், "நான் யோசேப்பு" என்று அவர்கள் எல்லோருக்கும் பிரதியுத்தரம் சொல்லுகிறார்.

யோசேப்பின் சகோதரர் தங்களுடைய பாவங்களினிமித்தமாக, மனது வேதனைப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சி அவர்களைக் குற்றப்படுத்துகிறது. அவர்கள் யோசேப்புக்கு முன்பாக தங்களை வெகுவாய்த் தாழ்த்துகிறார்கள். யூதா யோசேப்பினிடத்தில் பேசும்போது, தன்னுடைய தகப்பனார் யாக்கோபைக் குறித்து உயர்வாகவும், தன் சகோதரன் பென்யமீனைக் குறித்து அன்பாகவும் பேசினார்.

யோசேப்பு தன்னுடைய சகோதரருக்கு முன்பாக தன்னை வெளிப்படுத்திக் காண்பிக்கிறார் (ஆதி 45:1-15). எகிப்து தேசத்தின் அதிபதியாகிய பார்வோன், யோசேப்பின் தகப்பனாரையும், அவருடைய குடும்பத்தாரையும், எகிப்து தேசத்திற்கு வந்து தங்குமாறு அழைக்கிறான். யோசேப்பு தன்னுடைய சகோதரரை கானான் தேசத்திற்கு அனுப்பி, யாக்கோபை எகிப்து தேசத்திற்கு அழைத்து வரச்சொல்லுகிறார் (ஆதி 45:16-24). யோசேப்பு உயிரோடிருக்கிறார் என்னும் நல்ல செய்தி யாக்கோபுக்கு அறிவிக்கப்படுகிறது (ஆதி 45:25-28).

நான் யோசேப்பு
ஆதி 45:1-15

ஆதி 45:1. அப்பொழுது யோசேப்பு தன் அருகே நின்ற எல்லாருக்கும் முன்பாகத் தன்னை அடக்கிக் கொண்டிருக்கக்கூடாமல்: யாவரையும் என்னைவிட்டு வெளியே போகப்பண்ணுங்கள் என்று கட்டளையிட்டான். யோசேப்பு தன் சகோதரருக்குத் தன்னை வெளிப்படுத்துகையில், ஒருவரும் அவன் அருகில் நிற்கவில்லை.

ஆதி 45:2. அவன் சத்தமிட்டு அழுதான்; அதை எகிப்தியர் கேட்டார்கள், பார்வோனின் வீட்டாரும் கேட்டார்கள்.

ஆதி 45:3. யோசேப்பு தன் சகோதரரைப் பார்த்து: நான் யோசேப்பு; என் தகப்பனார் இன்னும் உயிரோடே இருக்கிறாரா என்றான். அவனுடைய சகோதரர் அவனுக்கு முன்பாகக் கலக்கமுற்றிருந்ததினாலே, அவனுக்கு உத்தரம் சொல்லக்கூடாமல் இருந்தார்கள்.

ஆதி 45:4. அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரை நோக்கி: என் கிட்ட வாருங்கள் என்றான். அவர்கள் கிட்டப்போனார்கள்; அப்பொழுது அவன்: நீங்கள் எகிப்துக்குப் போகிறவர்களிடத்தில் விற்றுப் போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான்.

ஆதி 45:5. என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும்வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத்தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்.

ஆதி 45:6. தேசத்தில் இப்பொழுது இரண்டு வருஷமாகப் பஞ்சம் உண்டாயிருக்கிறது; இன்னும் ஐந்து வருஷம் உழவும் அறுப்பும் இல்லாமல் பஞ்சம் இருக்கும்.

ஆதி 45:7. பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய ரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார்.

ஆதி 45:8. ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்துதேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார்.

ஆதி 45:9. நீங்கள் சீக்கிரமாய் என் தகப்பனிடத்தில் போய்: தேவன் என்னை எகிப்து தேசம் முழுதுக்கும் அதிபதியாக வைத்தார்; என்னிடத்தில் வாரும், தாமதிக்கவேண்டாம்.

ஆதி 45:10. நீரும், உம்முடைய பிள்ளைகளும், அவர்களுடைய பிள்ளைகளும், உம்முடைய ஆடுமாடுகளோடும் உமக்கு உண்டாயிருக்கிற யாவற்றோடும் கோசேன் நாட்டில் வாசம்பண்ணி என் சமீபத்தில் இருக்கலாம்.

ஆதி 45:11. உமக்கும் உம்முடைய குடும்பத்தாருக்கும் உமக்கு இருக்கிற யாவற்றிற்கும் வறுமைவராதபடிக்கு, அங்கே உம்மைப் பராமரிப்பேன்; இன்னும் ஐந்து வருஷம் பஞ்சம் இருக்கும் என்று, உம்முடைய குமாரனாகிய யோசேப்பு சொல்லச்சொன்னான் என்று சொல்லுங்கள்.

ஆதி 45:12. இதோ, உங்களோடே பேசுகிறவாய் என் வாய்தான் என்பதை உங்கள் கண்களும் என் தம்பியாகிய பென்யமீனின் கண்களும் காண்கிறதே.

ஆதி 45:13. எகிப்திலே எனக்கு உண்டாயிருக்கிற சகல மகிமையையும், நீங்கள் கண்ட யாவையும் என் தகப்பனுக்கு அறிவித்து, அவர் சீக்கிரமாய் இவ்விடத்துக்கு வரும்படி செய்யுங்கள் என்று சொல்லி;

ஆதி 45:14. தன் தம்பியாகிய பென்யமீனின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதான்; பென்யமீனும் அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதான்.

ஆதி 45:15. பின்பு தன் சகோதரர் யாவரையும் முத்தஞ்செய்து, அவர்களையும் கட்டிக்கொண்டு அழுதான். அதற்குப்பின் அவன் சகோதரர் அவனோடே சம்பாஷித்தார்கள்.

யூதா தன் சகோதரன் பென்யமீனுக்காக யோசேப்பினிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறான். யூதா பேசுவதை யோசேப்பு தடைபண்ணாமல், அவனுடைய வார்த்தைகளெல்லாவற்றையும் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருக்கிறார். அங்கே யோசேப்போடுகூட, அவருடைய வீட்டு விசாரணைக்காரர்களும், வேலையாட்களும் இருக்கிறார்கள்.

யூதாவின் பரிந்து பேசும் வார்த்தைகளைக் கேட்டு யோசேப்பின் மனம் பொங்குகிறது. அவரால் தன்னுடைய அழுகையை அடக்கிக்கொள்ள முடியவில்லை. யோசேப்பு தன்னுடைய வீட்டு விசாரணைக்காரருக்கு முன்பாக அழவிரும்பவில்லை. அவர்கள் எல்லோரையும் தன்னைவிட்டு வெளியே போகப்பண்ணுமாறு கட்டளை கொடுக்கிறார்.

தன்னுடைய உணர்வுகளை எகிப்தியர்கள் காணவேண்டாம் என்றும், தன் சகோதரர்கள் தன்னை எகிப்தில் அடிமையாக விற்றுப்போட்டதை எகிப்தியர்கள் அறிய வேண்டாம் என்றும் யோசேப்பு நினைக்கிறார்.

யோசேப்பு தன் சகோதரருக்கு தன்னை வெளிப்படுத்துகிறார். அப்போது அங்கே, யோசேப்பையும், அவருடைய சகோதரரையும் தவிர, வேறு ஒருவரும் அவருக்கு அருகில் நிற்கவில்லை. யோசேப்பு தன் சகோதரரோடு தனிமையாகவும், அந்நியோன்னியமாகவும் பேச விரும்புகிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கு, தம்மைப்பற்றியும், தம்முடைய அன்பைப்பற்றியும் மிகவும் விசேஷித்த வழிகளில் வெளிப்படுத்துகிறார். அவர்கள் உலகப்பிரகாரமான சந்தடிகளுக்கு விலகியிருந்து, இயேசுகிறிஸ்துவோடு தனிமையாகயிருந்த வேளைகளிலே, அவர்கள் இயேசுகிறிஸ்துவோடு மிகவும் நெருக்கமாயும், அந்நியோன்னியமாயும் இருந்தார்கள்.

யோசேப்பு தன்னுடைய வீட்டுவிசாரணைக்காரரையெல்லாம் தன்னைவிட்டு வெளியே அனுப்பிய பின்பு, அவர் சத்தமிட்டு அழுகிறார். யோசேப்பு அழுவதை எகிப்தியர் கேட்கிறார்கள். பார்வோனின் வீட்டாரும் கேட்கிறார்கள் (ஆதி 45:2). யோசேப்பின் அழுகையும் கண்ணீரும், அவர் தன்னுடைய சகோதரர்மீது வைத்திருக்கிற அன்புக்கும் பாசத்திற்கும் அடையாளமாயிருக்கிறது.

அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரைப்பார்த்து, "நான் யோசேப்பு" என்று சொல்லுகிறார். தங்களோடு இதுவரையிலும் பேசிக்கொண்டிருப்பது, தங்களுடைய சகோதரனாகிய யோசேப்பு என்பது அவர்களுக்கு தெரியாது. யோசேப்புக்கு சாப்நாத்பன்னேயா என்னும் எகிப்திய பெயருமுள்ளது. யோசேப்பு தன்னை எகிப்து தேசத்திலுள்ளவர்களுக்கும், தன்னுடைய சகோதரருக்கும், தன்னுடைய எகிப்திய பெயரையே அறிவித்திருக்கிறார்.

யோசேப்பு என்பது அவருடைய எபிரெய பெயர். எகிப்து தேசத்திலே, யோசேப்பு என்னும் அவருடைய எபிரெய பெயரை எல்லோரும் மறந்துவிட்டார்கள். ஆனால் இப்போதோ யோசேப்பு, தன்னுடைய எபிரெய பெயரை, தன் சகோதரருக்கு வெளிப்படுத்துகிறார். அவர்கள் இனிமேல், யோசேப்பை அழைக்கும்போது, சாப்நாத்பன்னேயா என்னும் எகிப்திய பெயரால் அழைக்காமல், யோசேப்பு என்னும் எபிரெய பெயரால் அழைக்கவேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, பவுலை சந்தித்தபோது, "நான் இயேசு" என்று தம்முடைய பெயரை அவருக்கு வெளிப்படுத்தினார். கிறிஸ்துவானவர் தம்முடைய சீஷர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளை சொன்னபோது "நான்தான், பயப்படாதிருங்கள்" என்று சொன்னார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஜனத்திற்கு, தம்மைப்பற்றி வெளிப்படுத்தும்போது, அவர்கள் உண்மையான இருதயத்தோடு தமக்கு அருகாமையில் வரவேண்டுமென்று அவர்களை உற்சாகப்படுத்துகிறார்.

யோசேப்பு தன் சகோதரரைப்பார்த்து, "நான் யோசேப்பு" என்று சொன்ன பின்பு, "என் தகப்பனார் இன்னும் உயிரோடே இருக்கிறாரா" என்றும் அவர்களிடத்தில் கேட்கிறார். யோசேப்பினுடைய சகோதரர் அவருக்கு முன்பாகக் கலக்கமுற்றிருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் யோசேப்புக்கு உத்தரம் சொல்லக்கூடாமல் இருக்கிறார்கள் (ஆதி 45:3).

அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரை நோக்கி, "என் கிட்ட வாருங்கள்" என்று கூப்பிடுகிறார். அவர்களும் யோசேப்புக்கு கிட்டப்போகிறார்கள்; அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரைப் பார்த்து, "நீங்கள் எகிப்துக்குப் போகிறவர்களிடத்தில் விற்றுப் போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான்" (ஆதி 45:4). என்று தன்னைப்பற்றிச் சொல்லுகிறார்.

எகிப்தில் பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்தில் சர்வ அதிகாரத்தையும் உடைய யோசேப்பு சத்தமிட்டு அழுகிறார். என் கிட்ட வாருங்கள் என்று யோசேப்பு கூறிய போது, அவர்கள் பயத்தோடே அவர் கிட்டப் போகிறார்கள். யோசேப்பு இதுவரையிலும் அவர்களோடு துபாசியைக் கொண்டு பேசினார். இப்பொழுது முகமுகமாக அவர்களுடைய எபிரெய பாஷையிலேயே பேசுகிறார். இதுவரையிலும் யோசேப்பு துபாசி மூலமாகப் பேசியதினால் யோசேப்பை அவருடைய சகோதரர் அடையாளம் கண்டுகொள்ளவில்லை.

தன்னை அவர்கள் எகிப்துக்குப் போகிறவர்களிடத்தில் விற்று போட்ட வரலாற்றைக் கூறியபோது, யோசேப்பின் சகோதரர்களால் அவரை நம்பாமல் இருக்க முடியாது (ஆதி 45:4; ஆதி 37:2-27).

தாங்கள் யோசேப்புக்கு தீங்கு செய்துவிட்டோமோ என்று நினைத்து, அவருடைய சகோதரர்கள் பயப்படுகிறார்கள். அவர்களுடைய மனது சஞ்சலப்படுகிறது. யோசேப்பு அவர்களைப் பார்த்து, "என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும்வேண்டாம்" (ஆதி 45:5) என்று சொல்லுகிறார்.

யோசேப்பு தன் சகோதரரைப் பரிபூரணமாக மன்னித்து விடுகிறார். அவருடைய சகோதரருக்கு அது மிகுந்த ஆறுதலாக இருக்கிறது. யோசேப்பு 22 வருஷமாக தன்னுடைய குடும்பத்தாரைப் பார்க்க முடியாமல் பாடுகளை அனுபவித்து வந்திருக்கிறார். அவர் தேவனையே நம்பி இத்தனை வருஷ காலமாக ஜீவித்தார். இஸ்ரவேலின் தேவன் யோசேப்பைக் கைவிடவில்லை.

"உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாய் இருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள். பின்பு மிகுந்த பொருள்களுடனே புறப்பட்டு வருவார்கள்" என்று தேவன் ஆபிரகாமிடம் கூறியிருக்கிறார் (ஆதி 15:13-14). இந்த வாக்குத்தத்தம் நிறைவேறும் காலம் வந்திருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் 430 வருஷம் உபத்திரவப்படுவார்கள். அதின் முதலாவது 215 வருஷம் இப்பொழுது நிறைவு பெறுகிறது. இரண்டாவது 215 வருஷம் ஆரம்பமாகிறது.

ஆபிரகாமின் சந்ததி மரித்துப் போகாமல், உயிரோடு காக்கப்படவேண்டும் என்பதற்காக தேவன் இந்தக் காரியங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றுகிறார். யோசேப்பு தேவனுடைய கருவியாகச் செயல்படுகிறார்.

யோசேப்பு பார்வோனுக்கு முன்பாக முதன் முறையாக நின்றபோது (ஆதி 41:46), யோசேப்பின் வயது 30. ஏழு வருஷ செழிப்பின் காலம், இரண்டு வருஷ பஞ்சகாலம், ஆகியவையெல்லாம் சேர்ந்து, இப்பொழுது யோசேப்பின் வயது 39.

யோசேப்பை அவருடைய சகோதரர்கள் அடிமையாக விற்றுப்போட்டதில் தேவனுக்கு எந்தப் பங்கும் இல்லை. மனுஷருடைய பாவங்களில் தேவன் ஒருபோதும் பங்காளியாக இருப்பதில்லை. ஆனாலும் யோசேப்பின் சகோதரர் செய்த தீமையைத் தேவன் நன்மைக்கேதுவாக மாற்றுகிறார். தேவன் யோசேப்போடு கூட இருந்து, அவருடைய கைகளின் பிரயாசங்களை ஆசீர்வதிக்கிறார். தேவனுடைய திட்டத்தில் யோசேப்பு இஸ்ரவேலுக்கு ஆசீர்வாதமாக இருக்கிறார்.

பாவிகள் தங்கள் பாவங்களுக்காக வருத்தப்படவேண்டும். அவர்களுடைய மனம் சஞ்சலப்படவேண்டும். தாங்கள் செய்த பாவங்களை நினைத்து அவர்களுடைய இருதயங்கள் விசனப்படவேண்டும். யோசேப்போ அவர்களுக்கு ஆறுதலாக, "நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்" என்று சொல்லுகிறார்.

நம்முடைய பாவங்களுக்கு நாம் உண்மையாய் மனந்திரும்பும்போது, கர்த்தர் நமக்கு நன்மையான காரியங்களை செய்வார். நம்முடைய ஜீவியத்தில் நடைபெறும் தீமையான காரியங்களையும், அவர் நன்மையான காரியங்களாக மாற்றுவார். கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். யோசேப்பின் சகோதரர் அவரை எகிப்திற்குப் போகிறவர்களிடத்தில் விற்றுப்போட்டார்கள். யோசேப்பு அந்த சம்பவத்தைப்பற்றிச் சொல்லும்போது, "ஜீவரட்சணை செய்யும்படிக்குத்தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்" (ஆதி 45:5) என்று சொல்லுகிறார்.

யோசேப்பு தேசங்களில் உண்டாயிருக்கிற பஞ்சங்களைப்பற்றி தன் சகோதரருக்கு சொல்லுகிறார். ஏற்கெனவே இரண்டு வருஷம் பஞ்சமுண்டாயிருக்கிறது. இன்னும் ஐந்து வருஷங்களுக்கு பஞ்சம் இருக்கும். இந்த பஞ்சகாலத்தில், யாக்கோபின் தேவனாகிய கர்த்தர், யாக்கோபையும் அவருடைய குடும்பத்தாரையும், உயிரோடே காப்பதற்காக, தேவன் யோசேப்பை அவர்களுக்கு முன்னமே எகிப்து தேசத்திற்கு அனுப்பினார் என்று யோசேப்பு சொல்லுகிறார்.

யோசேப்பு தன் சகோதரரை நோக்கி, "தேசத்தில் இப்பொழுது இரண்டு வருஷமாகப் பஞ்சம் உண்டாயிருக்கிறது; இன்னும் ஐந்து வருஷம் உழவும் அறுப்பும் இல்லாமல்பஞ்சம் இருக்கும். பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய ரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்துதேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார்" (ஆதி 45:6-8) என்று சொல்லுகிறார்.

தேவனுடைய இஸ்ரவேலருக்கு, இஸ்ரவேலின் தேவனிடத்திலிருந்து விசேஷித்த பராமரிப்பு கிடைக்கிறது. கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மீது கண்ணோக்கமாயிருக்கிறார். இஸ்ரவேலை ஆசீர்வதிக்கவேண்டும் என்பதும், அவர்களைப் பாதுகாத்து பராமரிக்கவேண்டும் என்பதும் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

யோசேப்பு கர்த்தருடைய சித்தத்தை தன் சகோதரருக்கு தெளிவுபடுத்துகிறார். "ஜீவரட்சணை செய்யும்படிக்குத்தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்" என்றும், "பெரிய ரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார்" (ஆதி 45:5,7) என்றும் யோசேப்பு சொல்லுகிறார்.

தேவன் இனிமேல் செய்யப்போகிற காரியம் என்ன என்பது நமக்கு தெரியாமலிருக்கலாம். அநேக வருஷங்களுக்கு பின்பு கர்த்தர் செய்யப்போகிற காரியத்தை, சில சமயங்களில் இப்போதே ஆரம்பித்துவிடுகிறார். நாமோ தேவனுடைய தெய்வீக சித்தமும், அவருடைய பராமரிப்பும் தெரியாமல், மனதிலே குழப்பத்தோடிருக்கிறோம்.

"அவர் தேசத்திலே பஞ்சத்தை வருவித்து, ஆகாரமென்னும் ஆதரவுகோலை முற்றிலும் முறித்தார். அவர்களுக்கு முன்னாலே ஒரு புருஷனை அனுப்பினார்; யோசேப்பு சிறையாக விற்கப்பட்டான்" (சங் 105:16,17).

"அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்; உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்; ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான்" (பிர 3:11).

ஒரு சில சம்பவங்கள் முரண்பாடாய் நடப்பது போல நமக்கு தெரிகிறது. ஆனாலும் கர்த்தர் அதன் மூலமாகவும் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிலுவையிலே தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார். இயேசுகிறிஸ்துவின் மரணம் அநேகர் இரட்சிக்கப்பட்டு நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு காரணமாயிற்று.

கர்த்தர் தம்முடைய நாமமகிமைக்காக ஒவ்வொரு காரியத்தையும் நிறைவேற்றுகிறார். கர்த்தர் செய்கிற காரியங்களில், நாம் நமக்கு மகிமையை தேடக்கூடாது. கர்த்தருக்குரிய மகிமையை நாம் அவருக்கே செலுத்தவேண்டும். யோசேப்பின் சகோதரர் அவரை எகிப்திற்குப் போகிறவர்களிடத்தில் விற்றுப்போட்டார்கள். யோசேப்பு அதைப்பற்றிச் சொல்லும்போது, "நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்திற்கு அனுப்பினார்" (ஆதி 45:8) என்று சொல்லுகிறார்.

யோசேப்பு இப்போது எகிப்து தேசத்திலே உயர்ந்த அதிகாரியாயிருக்கிறார். அவர் இந்த அளவுக்கு உயர்ந்திருப்பதற்கு, தாங்களே காரணம் என்று நினைத்து அவருடைய சகோதரர்கள் பெருமைப்படக்கூடாது. கர்த்தரே யோசேப்பை உயர்த்தியிருக்கிறார். யோசேப்பு உயர்ந்திருப்பதற்கு, அவருடைய சகோதரர்கள் காரணமல்ல.

தேசத்தில் ஏற்கெனவே இரண்டு வருஷமாக பஞ்சம் உண்டாயிருக்கிறது. இன்னும் ஐந்து வருஷம் உழவும் அறுப்பும் இல்லாமல் பஞ்சம் இருக்கும். இந்த பஞ்சகாலத்தில் யாக்கோபும், அவருடைய குடும்பத்தாரும் அழிந்துபோகக்கூடாது. யோசேப்பு தன்னுடைய குடும்பத்தாரை பஞ்சகாலத்தில் பாதுகாக்கவேண்டும் என்று விரும்புகிறார்.

யோசேப்பு தன் சகோதரரை நோக்கி, "நீங்கள் சீக்கிரமாய் என் தகப்பனிடத்தில் போய்: தேவன் என்னை எகிப்து தேசம் முழுதுக்கும் அதிபதியாக வைத்தார்; என்னிடத்தில் வாரும், தாமதிக்கவேண்டாம். நீரும், உம்முடைய பிள்ளைகளும், அவர்களுடைய பிள்ளைகளும், உம்முடைய ஆடுமாடுகளோடும் உமக்கு உண்டாயிருக்கிற யாவற்றோடும் கோசேன் நாட்டில் வாசம்பண்ணி என் சமீபத்தில் இருக்கலாம்" (ஆதி 45:9,10) என்று சொல்லச் சொல்லுகிறார்.

கோசேன் நாடு எகிப்தின் கிழக்குப் பகுதியிலுள்ள தாழ்வான சமபூமி. இது எபிரோனிலிருந்து 120 மைல் தூரத்திலுள்ளது. அரபியாவை நோக்கியுள்ளது. ஆடுகள் மேய்ப்பதற்கு நல்ல மேய்ச்சல் நிலம் இங்குண்டு. நைல்நதி இங்கு பாய்வதால் பூமி எப்போதும் பசுமையாக இருக்கும்.

யாக்கோபின் சந்ததியார் எண்ணிக்கையில் அதிகமானவர்கள். யாக்கோபு ஆரானை விட்டுப் புறப்பட்ட போது அவரிடத்தில் ஏராளமான அடிமைகள் இருந்தார்கள். ஆபிரகாம், ஈசாக்கு, ஆகியோரின் ஐசுவரியங்களையும் வேலையாட்களையும் யாக்கோபு சுதந்தரித்துக் கொண்டார். ஆபிரகாமிடம் 318 கைபடிந்த வேலையாட்கள் இருந்தார்கள். இவர்கள் தவிர, ஏராளமான பணிவிடைக்காரர்களும் ஆபிரகாமிடம் இருந்தார்கள். (ஆதி 14:14)

ஈசாக்கிடமும் அதிக பணிவிடைக்காரர்கள் இருந்தார்கள். (ஆதி 26:14). யாக்கோபு எகிப்துக்குப் போவதற்கு முன்பாக 215 வருஷ காலமாக இவர்களுடைய எண்ணிக்கை அதிகளவில் பெருகிற்று. ஆதி 46:26 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் 66 பேர்கள் யாக்கோபுடைய கர்ப்பப்பிறப்பாய் இருந்து அவர்மூலமாய் எகிப்திலே வந்தவர்கள்.

யாக்கோபின் சந்ததியாரும், அவருடைய வேலையாட்களும், அவர்களுடைய குடும்பத்தார்களுமாக எகிப்தில் பலுகிப் பெருகினார்கள். இஸ்ரவேல் தேசமாக எகிப்தை விட்டு வெளியேறினார்கள். (யாத் 12:38; எண் 11:4).

யோசேப்பின் சகோதரர், யாக்கோபினிடத்தில் போய், "உமக்கும் உம்முடைய குடும்பத்தாருக்கும் உமக்கு இருக்கிற யாவற்றிகும் வறுமைவராதபடிக்கு, அங்கே உம்மைப் பராமரிப்பேன்; இன்னும் ஐந்து வருஷம் பஞ்சம் இருக்கும் என்று, உம்முடைய குமாரனாகிய யோசேப்பு சொல்லச்சொன்னார்" (ஆதி 45:11) என்று சொல்லவேண்டும்.

யோசேப்பு தன் தகப்பனாருடைய குடும்பத்தாருக்கு எகிப்து தேசத்திலே வாசம்பண்ண கோசேன் நாட்டை ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார். அங்கே அவர்களை பராமரிப்பதாக யோசேப்பு வாக்குப்பண்ணுகிறார்.

யோசேப்பைப்போலவே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் பரலோகத்தின் அதிகாரத்திற்கும், அதன் மேன்மைக்கும், மகிமைக்கும் உயர்த்தப்பட்டிருக்கிறார். அங்கே தம்முடைய பிள்ளைகள் எல்லோரும் தம்மோடு கூடயிருக்கவேண்டும் என்றும், அங்கே தம்முடைய மகிமையில் பங்குபெறவேண்டும் என்றும் கிறிஸ்துவானவர் விரும்புகிறார்.

"பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன்" (யோவா 17:24).

யோசேப்பின் சகோதரர் அவருக்கு முன்பாக கலக்கமுற்றிருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் யோசேப்புக்கு உத்திரம் சொல்லக்கூடாமல் இருக்கிறார்கள். அப்பொழுது யோசேப்பு, தன் சகோதரரை நோக்கி, "இதோ, உங்களோடே பேசுகிறவாய் என் வாய்தான் என்பதை உங்கள் கண்களும் என் தம்பியாகிய பென்யமீனின் கண்களும் காண்கிறதே" (ஆதி 45:12) என்று சொல்லி, அவர்களுடைய மனக்கலக்கத்தைப் போக்குகிறார்.

யோசேப்பின் சகோதரர், எகிப்து தேசத்திலே அவருக்கு உண்டாயிருக்கிற சகல மகிமையையும், அவர்கள் கண்ட யாவையும், தங்கள் தகப்பனாகிய யாக்கோபுக்கு அறிவிக்கவேண்டும் என்றும், அவரை இவ்விடத்திற்கு சீக்கிரமாய் வரும்படி செய்யவேண்டும் என்றும், யோசேப்பு தன் சகோதரரிடத்தில் சொல்லுகிறார் (ஆதி 45:13).

யோசேப்பின் சகோதரர் எகிப்தில் கண்ட யாவையும் யாக்கோபிடம் கூறும்போது அவரையும், அவருடைய குடும்பத்தாரையும் யோசேப்பால் பராமரிக்க முடியும் என்று யாக்கோபிற்குத் தெரிய வரும். யோசேப்பு ஏற்கெனவே கூறியிருந்த தீர்க்கதரிசன சொப்பனங்களை யாக்கோபு நம்புவார் (ஆதி 37:5-11).

யோசேப்பு தன் சகோதரரோடே பேசும்போது, அவருடைய அழுகையை அவரால் அடக்கிக்கொள்ள முடியவில்லை. யோசேப்பு தன் தம்பியாகிய பென்யமீனின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுகிறார்; பென்யமீனும் யோசேப்பின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுகிறான் (ஆதி 45:14).

பின்பு யோசேப்பு தன் சகோதரர் யாவரையும் முத்தஞ்செய்து, அவர்களையும் கட்டிக்கொண்டு அழுகிறார். அதற்குப்பின் அவருடைய சகோதரர் அவரோடே சம்பாஷிக்கிறார்கள் (ஆதி 45:15). அதுவரையிலும் அவர்கள் யோசேப்புக்கு முன்பாக கலக்கமுற்றிருந்தார்கள். அவர்கள் அதுவரையிலும் யோசேப்புக்கு ஒரு உத்திரமும் சொல்லாமல் அமைதியாயிருந்தார்கள்.

யோசேப்பும் அவருடைய சகோதரர்களும் தங்களுடைய அன்பையும் பாசத்தையும் பரஸ்பரம் பரிமாறிக்கொள்கிறார்கள். யோசேப்பு முதலாவதாக, தன் சகோதரரில் இளையவனாகிய பென்யமீனின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுகிறார். யோசேப்பு தன் சகோதரரை விட்டு எகிப்து தேசத்திற்குப் புறப்பட்டுப்போனபோது, பென்யமீனுக்கு ஒரு வயது மாத்திரமே ஆயிற்று. இப்போது பல வருஷங்களுக்கு பின்பு யோசேப்பு தன் சகோதரன் பென்யமீனைப் பார்க்கிறார்.

பார்வோனுடைய கரிசனை ஆதி 45:16-24

ஆதி 45:16. யோசேப்பின் சகோதரர் வந்தார்கள் என்கிற சமாசாரம் பார்வோன் அரமனையில் பிரசித்தமானபோது, பார்வோனும் அவனுடைய ஊழியக்காரரும் சந்தோஷம் அடைந்தார்கள்.

ஆதி 45:17. பார்வோன் யோசேப்பை நோக்கி: நீ உன் சகோதரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: உங்கள் கழுதைகளின்மேல் பொதியேற்றிக்கொண்டு புறப்பட்டு, கானான்தேசத்துக்குக் போய்,

ஆதி 45:18. உங்கள் தகப்பனையும் உங்கள் குடும்பத்தாரையும் கூட்டிக்கொண்டு, என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு எகிப்துதேசத்தின் நன்மையைத் தருவேன்; தேசத்தின் கொழுமையைச் சாப்பிடுவீர்கள்.

ஆதி 45:19. நீங்கள் உங்கள் குழந்தைகளுக்காகவும் உங்கள் மனைவிகளுக்காகவும் வண்டிகளை எகிப்துதேசத்திலிருந்து கொண்டுபோய், அவர்களையும் உங்கள் தகப்பனுடனே ஏற்றிக்கொண்டுவாருங்கள்.

ஆதி 45:20. உங்கள் தட்டுமுட்டுகளைக் குறித்துக் கவலைப்படவேண்டாம்; எகிப்துதேசமெங்குமுள்ள நன்மை உங்களுடையதாயிருக்கும் என்று சொல்லச் சொல்லி, உனக்கு நான் இட்ட கட்டளைப்படியே செய் என்றான்.

ஆதி 45:21. இஸ்ரவேலின் குமாரர் அப்படியே செய்தார்கள். யோசேப்பு பார்வோனுடைய கட்டளையின்படியே அவர்களுக்கு வண்டிகளைக் கொடுத்ததுமன்றி, வழிக்கு ஆகாரத்தையும்,

ஆதி 45:22. அவர்களில் ஒவ்வொருவனுக்கும் மாற்று வஸ்திரங்களையும் கொடுத்தான்; பென்யமீனுக்கோ முந்நூறு வெள்ளிக்காசையும் ஐந்து மாற்று வஸ்திரங்களையும் கொடுத்தான்.

ஆதி 45:23. அப்படியே தன் தகப்பனுக்குப் பத்துக் கழுதைகளின்மேல் எகிப்தின் உச்சிதமான பதார்த்தங்களும், பத்துக்கோளிகைக் கழுதைகளின்மேல் தன் தகப்பனுக்காக வழிக்குத் தானியமும் அப்பமும் மற்றத் தின்பண்டங்களும் ஏற்றி அனுப்பினான்.

ஆதி 45:24. மேலும், நீங்கள் போகும் வழியிலே சண்டைபண்ணிக் கொள்ளாதிருங்கள் என்று அவன் தன் சகோதரருக்குச் சொல்லி அனுப்பினான்; அவர்கள் புறப்பட்டுப்போனார்கள்.

எகிப்தின் அதிபதியாகிய பார்வோன் யோசேப்பின் மீது கரிசனையோடிருக்கிறான். யோசேப்பின் நிமித்தமாக, பார்வோன் அவருடைய குடும்பத்தார்மீதும் கரிசனையோடிருக்கிறான். யோசேப்பின் சகோதரர் வந்தார்கள் என்கிற சமாசாரம் பார்வோன் அரமனையில் பிரசித்தமாயிற்று. அப்போது, பார்வோனும் அவனுடைய ஊழியக்காரரும் சந்தோஷம் அடைகிறார்கள் (ஆதி 45:16).

எகிப்து தேசத்திலே கொடிய பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. பார்வோனோ இந்தப் பஞ்சகாலத்திலும், யோசேப்பின் குடும்பத்தார் எல்லோரும் எகிப்து தேசத்திலே வந்து தங்கியிருக்கவேண்டும் என்று அன்போடு அழைக்கிறான். பார்வோன் யோசேப்பை நோக்கி, "நீ உன் சகோதரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: உங்கள் கழுதைகளின்மேல் பொதியேற்றிக் கொண்டு புறப்பட்டு, கானான்தேசத்துக்குக் போய், உங்கள் தகப்பனையும் உங்கள் குடும்பத்தாரையும் கூட்டிக்கொண்டு, என்னிடத்தில் வாருங்கள்" (ஆதி 45:17,18) என்று சொல்லச் சொல்லுகிறான்.

பார்வோன் யாக்கோபின் குடும்பத்தாருக்கு எகிப்து தேசத்தின் நன்மையை தருவதாக வாக்குப்பண்ணுகிறான். அவர்கள் எகிப்து தேசத்தின் கொழுமையை சாப்பிடுவார்கள்.

யோசேப்பு பார்வோனுடைய கட்டளை பிரகாரம், தன் சகோதரரை கானான் தேசத்திற்கு அனுப்பவேண்டும். அவர்கள் தங்கள் குழந்தைகளுக்காகவும் தங்கள் மனைவிகளுக்காகவும் வண்டிகளை எகிப்துதேசத்திலிருந்து கொண்டுபோய், அவர்களையும் அவர்கள் தகப்பனுடனே ஏற்றிக்கொண்டுவரவேண்டும் (ஆதி 45:19).

யாக்கோபின் குடும்பத்தார் தங்களுடைய தட்டுமுட்டுகளைக்குறித்துக் கவலைப்படவேண்டாம்; எகிப்து தேசமெங்குமுள்ள நன்மை அவர்களுடையதாயிருக்கும் என்று சொல்ல பார்வோன் அவர்களுக்கு கட்டளையிட்டிருக்கிறான் (ஆதி 45:20).

பார்வோன் தனக்கு கட்டளையாய்ச் சொன்னதை, யோசேப்பு தன் சகோதரருக்கு சொல்லுகிறார். இஸ்ரவேலின் குமாரரும் யோசேப்பு தங்களுக்கு சொன்னபடியே செய்கிறார்கள்.

யோசேப்பு பார்வோனுடைய கட்டளையின்படியே அவர்களுக்கு வண்டிகளைக் கொடுக்கிறார். மேலும் அவர்களுக்கு வழிக்கு ஆகாரத்தையும், அவர்களில் ஒவ்வொருவனுக்கும் மாற்று வஸ்திரங்களையும் கொடுக்கிறார்; பென்யமீனுக்கோ யோசேப்பு முந்நூறு வெள்ளிக்காசையும் ஐந்து மாற்று வஸ்திரங்களையும் கொடுக்கிறார் (ஆதி 45:21,22).

பூர்வகாலத்தில் ராஜாக்கள் தங்களைப் பார்க்க வரும் விருந்தினர்களுக்கு மாற்று வஸ்திரங்களை அன்பளிப்பாகக் கொடுப்பது வழக்கம். யாரையாவது பெருமைப்படுத்த வேண்டுமென்றாலும், அவர்களுக்கு மெல்லிய வஸ்திரங்களைக் கொடுத்து அவர்களைக் கனப்படுத்துவார்கள்.

எகிப்து தேசத்தின் அதிபதியாகிய பார்வோன் யோசேப்பின் மேலும், அவருடைய குடும்பத்தார் மேலும் கரிசனையோடிருக்கிறார். யோசேப்பின் மூலமாக எகிப்து தேசத்திலே மிகுந்த நன்மை உண்டாயிற்று. யோசேப்பின் ஞானமும் புத்தியுமுள்ள ஆலோசனையின் பிரகாரம், பார்வோனின் அரண்மனையிலுள்ளவர்கள் செய்து, இந்த பஞ்சகாலத்திற்கு தப்பிக்கிறார்கள்.

யோசேப்பு தன்னுடைய சகோதரர்மீதும், தன் தகப்பனார்மீதும் அன்பாயிருக்கிறார். பார்வோனுடைய கட்டளையின் பிரகாரம், யோசேப்பு தன்னுடைய சகோதரரை கானான் தேசத்திற்கு அனுப்புகிறார். கானான் தேசத்திலுள்ள யாக்கோபையும், அவருடைய குடும்பத்தார் எல்லோரையும் எகிப்து தேசத்திற்கு வரவழைக்க ஒழுங்கு செய்கிறார்.

யோசேப்பு தன் சகோதரருக்கு விசேஷமான வெகுமதிகளைக் கொடுத்தனுப்புகிறார். அவர் தன் தகப்பனுக்குப் பத்துக் கழுதைகளின்மேல் எகிப்தின் உச்சிதமான பதார்த்தங்களும், பத்துக்கோளிகைக் கழுதைகளின்மேல் தன் தகப்பனுக்காக வழிக்குத் தானியமும் அப்பமும் மற்றத் தின்பண்டங்களும் ஏற்றி அனுப்புகிறார் (ஆதி 45:23).

யோசேப்பு தன் சகோதரரை கானான் தேசத்திற்கு அனுப்பும்போது, அவர்களை நோக்கி, "நீங்கள் போகும் வழியிலே சண்டைபண்ணிக்கொள்ளாதிருங்கள்" (ஆதி 45:24) என்று சொல்லுகிறார். யோசேப்பின் சகோதரர் எகிப்து தேசத்திலிருந்து, கானான் தேசத்திற்கு புறப்பட்டுப்போகிறார்கள்.

இப்பொழுது யோசேப்பு தன் சகோதரரை வித்தியாசமாக வழி அனுப்புகிறார். கடந்த தடவை அவர்களைச் சோதித்துப் பார்த்தார். இப்பொழுது அவர்கள் யோசேப்பின் ஆசீர்வாதங்களோடும், வெகுமதிகளோடும் யாக்கோபிடத்திற்குத் திரும்பிப் போகிறார்கள்.

அவர்கள் சண்டை பண்ணக்கூடியவர்கள். அவர்கள் யாக்கோபைப் பார்த்து, யோசேப்பிற்குத் தாங்கள் செய்த அநியாயங்களையெல்லாம் விவரித்துக் கூற வேண்டும். இதனால் மனவருத்தங்கள் உண்டாகும். அவர்களுக்குள் சண்டைகள் வரலாம்.

யோசேப்பின் நல்ல செய்தியை அறிவிக்கும்போது யாக்கோபிற்குச் சந்தோஷம் உண்டாகும். தான் மரிப்பதற்கு முன்பாக யாக்கோபு தன் நேசகுமாரனாகிய யோசேப்பைக் காண விரும்புவார். யாக்கோபு மேலும் 17 வருஷங்கள் ஜீவனோடு இருக்கிறார் (ஆதி 47:9,28).

தன் சகோதரர் தனக்கு செய்த தீங்குகளையெல்லாம் யோசேப்பு இப்போது முற்றிலுமாய் மறந்துவிட்டார். தன்னுடைய சகோதரர்கள் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கவேண்டும் என்று யோசேப்பு விரும்புகிறார்.

யோசேப்பின் சகோதரரைப்போலவே விசுவாசிகளாகிய நாமும் கிறிஸ்துவுக்குள் சகோதரராயிருக்கிறோம். நாம் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கவேண்டும். நமக்குள்ளே சண்டை போட்டுக்கொள்ளக் கூடாது. நம் எல்லோருக்கும் ஒரே பிதாவே தேவனாயிருக்கிறார். கிறிஸ்துவானவர் நம்முடைய சமாதானமாகவும், நமக்கு சமாதான கர்த்தராகவும் இருக்கிறார். விசுவாசிகளாகிய நாம் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்ளும்போது, நம்முடைய பரலோகப்பிதாவின் நாமத்தை நாம் தூஷிக்கிறவர்களாயிருப்போம்.

யாக்கோபின் ஆறுதல்
ஆதி 45:25-28

ஆதி 45:25. அவர்கள் எகிப்திலிருந்து போய், கானான் தேசத்திலே தங்கள் தகப்பனாகிய யாக்கோபினிடத்தில் வந்து:

ஆதி 45:26. யோசேப்பு உயிரோடிருக்கிறான், அவன் எகிப்து தேசத்துக்கெல்லாம் அதிபதியாயிருக்கிறான் என்று அவனுக்கு அறிவித்தார்கள். அவன் இருதயம் மூர்ச்சை அடைந்தது; அவன் அவர்களை நம்பவில்லை.

ஆதி 45:27. அவர்கள் யோசேப்பு தங்களுடனே சொன்ன வார்த்தைகள் யாவையும் அவனுக்குச் சொன்னபோதும், தன்னை ஏற்றிக்கொண்டு போகும்படி யோசேப்பு அனுப்பின வண்டிகளை அவன் கண்டபோதும், அவர்களுடைய தகப்பனாகிய யாக்கோபின் ஆவி உயிர்த்தது.

ஆதி 45:28. அப்பொழுது இஸ்ரவேல்: என் குமாரனாகிய யோசேப்பு இன்னும் உயிரோடிருக்கிறானே, இது போதும்; நான் மரணமடையுமுன்னே போய் அவனைப் பார்ப்பேன் என்றான்.

யாக்கோபின் புத்திரர் நல்ல செய்தியோடு எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு வருகிறார்கள். "யோசேப்பு உயிரோடிருக்கிறார்" என்பதும், "அவர் எகிப்து தேசத்திற்கெல்லாம் அதிபதியாயிருக்கிறார்" என்பதும் நற்செய்தியாயிருக்கிறது.

யோசேப்பின் சகோதரர் எகிப்திலிருந்து புறப்பட்டு, கானான் தேசத்திலே, தங்கள் தகப்பனாகிய யாக்கோபினிடத்தில் வந்து, இந்த நற்செய்தியை அவருக்கு அறிவிக்கிறார்கள். ஆனால் யாக்கோபோ தன் குமாரரை நம்பவில்லை. யாக்கோபின் இருதயம் யோசேப்பைப்பற்றி நல்ல செய்தியை கேள்விப்பட்டவுடன் மூர்ச்சையடைகிறது.

தன்னுடைய குமாரர்களின் பேச்சை யாக்கோபால் நம்ப முடியவில்லை. ஏனெனில் அவர்கள் எப்போதும் முன்னுக்குப்பின் முரணாகப் பேசக்கூடியவர்கள். இப்பொழுது யாக்கோபு நம்பும் விதத்தில் அவர்கள் உண்மையை எடுத்துக் கூறியதினால் யாக்கோபு அவர்களுடைய பேச்சை நம்புகிறார் (ஆதி 45:27-28).

யாக்கோபால் நம்ப முடியாத அளவுக்கு, யோசேப்பைபற்றிய செய்தி மிகவும் நல்ல செய்தியாயிருக்கிறது. அவர் யோசேப்பைபற்றி கேள்விப்பட்டவுடன் மூர்ச்சையடைந்து, மயங்கி விழுந்துவிடுகிறார்.

இதற்கு முன்பு யோசேப்பு மரித்துப்போனார் என்று அவருடைய சகோதரர் யாக்கோபினிடத்தில் சொன்னார்கள். யோசேப்பு மரித்துப்போன செய்தியை யாக்கோபு உடனே நம்பினார். இப்போதோ அவர்கள், யோசேப்பு உயிரோடிருக்கிறார் என்று யாக்கோபுக்கு சொல்லுகிறார்கள். ஆனால் யாக்கோபால் இந்த நல்ல செய்தியை நம்பமுடியவில்லை.

யாக்கோபின் இருதயம் மென்மையாயிருக்கிறது. அவருடைய மனது தன் குமாரன் யோசேப்புக்காக துடித்துக் கொண்டிருக்கிறது. யாக்கோபைப்போல பலவீனமான இருதயமும், மென்மையான ஆவியுமுள்ளவர்களிடத்தில் நம்பிக்கையைவிட பயமே அதிகமாயிருக்கும்.

யாக்கோபின் குமாரர் யோசேப்பு தங்களுடனே சொன்ன வார்த்தைகள் யாவையும் யாக்கோபுக்குச் சொல்லுகிறார்கள். தன்னை ஏற்றிக்கொண்டு போகும்படி யோசேப்பு அனுப்பின வண்டிகளை யாக்கோபு பார்க்கிறார். அப்போது யாக்கோபின் மயக்கம் தெளிகிறது. அவருடைய ஆவி மறுபடியும் உயிர்பெறுகிறது. யாக்கோபு மயக்கம் தெளிந்து எழும்புகிறார். மரித்துப்போனவர் மறுபடியும் பிழைப்பதுபோல அவர் எழும்புகிறார்.

யாக்கோபு தன்னுடைய குமாரன் யோசேப்பின் மேன்மையைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. யோசேப்பு எகிப்து தேசத்திற்கெல்லாம் அதிபதியாயிருக்கிறார். யாக்கோபுக்கு அது பெரியதாய்த் தெரியவில்லை. யோசேப்பு உயிரோடிருக்கிறார் என்னும் செய்தியே யாக்கோபுக்கு முக்கியமான செய்தியாயிருக்கிறது.

அப்பொழுது இஸ்ரவேல், "என் குமாரனாகிய யோசேப்பு இன்னும் உயிரோடிருக்கிறானே, இது போதும்; நான் மரணமடையுமுன்னே போய் அவனைப் பார்ப்பேன்" (ஆதி 45:28) என்று சொல்லுகிறார். யோசேப்பு உயிரோடிருக்கிறார் என்பதே அவருக்கு போதுமானதாயிருக்கிறது.

இந்த வசனத்தில் யாக்கோபு "இஸ்ரவேல்" என்று அழைக்கப்படுகிறார். பலவீனம், அவிசுவாசம் ஆகியவை வரும்போது அவருடைய பெயர் யாக்கோபு. (ஆதி 45:26-27) பெலன், விசுவாசம் ஆகியவை வரும்போது அவருடைய பெயர் இஸ்ரவேல் (ஆதி 45:28).

46 அதிகாரம்

யாக்கோபு தன்னுடைய முதிர்வயதில் எகிப்து தேசத்திற்குப் போகிறார். கானான் தேசத்தில் கொடிய பஞ்சமுண்டாயிருக்கிறது. இந்தப் பஞ்சகாலத்தில், யோசேப்பு யாக்கோபை எகிப்து தேசத்திற்கு வருமாறு அழைக்கிறார். கர்த்தரும் யாக்கோபை எகிப்து தேசத்திற்குப் போக அனுமதிக்கிறார். யாக்கோபுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று (ஆதி 46:1-4).

யாக்கோபு எகிப்து தேசத்திற்குப்போகும்போது, அவரோடுகூட அவருடைய குடும்பத்தார் எல்லோரும் அங்கே போகிறார்கள் (ஆதி 46:5-27). யோசேப்பு எகிப்து தேசத்திலே யாக்கோபை அன்போடு வரவேற்கிறார் (ஆதி 46:28-34).

கர்த்தருடைய வார்த்தை ஆதி 46:1-4

ஆதி 46:1. இஸ்ரவேல் தனக்கு உண்டான யாவையும் சேர்த்துக்கொண்டு புறப்பட்டுப் பெயெர்செபாவுக்குக் போய், தன் தகப்பனாகிய ஈசாக்குடைய தேவனுக்குப் பலியிட்டான்.

ஆதி 46:2. அன்று இரவிலே தேவன் இஸ்ரவேலுக்குத் தரிசனமாகி: யாக்கோபே, யாக்கோபே என்று கூப்பிட்டார்; அவன் இதோ, அடியேன் என்றான்.

ஆதி 46:3. அப்பொழுது அவர்: நான் தேவன், நான் உன் தகப்பனுடைய தேவன், நீ எகிப்துதேசத்துக்குப்போகப் பயப்படவேண்டாம்; அங்கே உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன்.

ஆதி 46:4. நான் உன்னுடனே எகிப்துக்கு வருவேன்; நான் உன்னைத் திரும்பவும் வரப்பண்ணுவேன்; யோசேப்பு தன் கையால் உன் கண்களை மூடுவான் என்று சொன்னார்.

கானான் தேசத்தில் கொடிய பஞ்சமுண்டாயிருக்கிறது. யாக்கோபும் அவருடைய குடும்பத்தாரும், எபிரோனிலே தங்கியிருக்கிறார்கள். யோசேப்பு யாக்கோபையும், அவருடைய குடும்பத்தாரையும், எகிப்து தேசத்திற்கு வருமாறு அழைக்கிறார். யாக்கோபு தன் குமாரன் யோசேப்பின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, எகிப்து தேசத்திற்கு பிரயாணம்பண்ண ஆயத்தமாகிறார்.

யாக்கோபு எகிப்து தேசத்திற்கு போகும் முன்பாக, பெயர்செபாவுக்கு புறப்பட்டுப்போகிறார். யாக்கோபு இங்கே தன் தகப்பனாகிய ஈசாக்குடைய தேவனுக்கு பலியிடுகிறார் (ஆதி 46:1).

யாக்கோபு இப்போது மம்ரேயில் இருக்கிறார். பெயர்செபா மம்ரேயிலிருந்து 25 மைல் தூரத்தில் உள்ளது.

இந்த வசனத்தில் தேவனைப்பற்றிச் சொல்லப்படும்போது, அவர் ஆபிரகாமின் தேவன் என்று கூறப்படாமல், ஈசாக்கின் தேவன் என்று கூறப்பட்டிருக்கிறது. ஈசாக்கு தன் குமாரனாகிய யாக்கோபிற்கு மெய்யான தேவனைப் பற்றிக் கற்றுக் கொடுத்தார்.

அன்று இரவிலே தேவன் இஸ்ரவேலுக்குத் தரிசனமானார். தேவன் எட்டாம் முறையாக யாக்கோபிற்கு தரிசனமான சம்பவம். (ஆதி 28:13-15; ஆதி 31:3,11-13; ஆதி 32:1-3,24-32; ஆதி 35:1-5, 9-15; ஆதி 46:1-4).

ஆபிரகாம் இந்த ஸ்தலத்தில் தேவனை சந்தித்தார். "ஆபிரகாம் பெயெர்செபாவிலே ஒரு தோப்பை உண்டாக்கி, சதாகாலமுமுள்ள தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை அவ்விடத்தில் தொழுது கொண்டார்" (ஆதி 21:33).

யாக்கோபின் தகப்பனாகிய ஈசாக்கும், பெயர்செபாவிலே தேவனைத் தொழுதுகொண்டார். "அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, அங்கே தன் கூடாரத்தைப் போட்டான். அவ்விடத்தில் ஈசாக்கின் வேலைக்காரர் ஒரு துரவை வெட்டினார்கள்" (ஆதி 26:25).

யாக்கோபு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப் பார்க்கும்போது, அவரை ஈசாக்குடைய தேவனாகப் பார்க்கிறார். கர்த்தர் ஈசாக்கோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். அவர் தேவனை உடன்படிக்கையின் தேவனாகப் பார்க்கிறார்.

யாக்கோபு பெயர்செபாவிலே தேவனுக்கு பலியிடுகிறார். யாக்கோபின் ஜீவியத்திலே ஆசீர்வாதமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது. யாக்கோபுக்கு முதிர்வயதாகயிருந்தாலும், அவர் எதிர்பாராத நன்மைகளெல்லாம், அவருடைய ஜீவியத்திலே இப்போது நடைபெறுகிறது. யாக்கோபு தன் குமாரன் யோசேப்பு உயிரோடிருக்கிறார் என்னும் நல்ல செய்தியை கேள்விப்பட்டிருக்கிறார். தேவன் தனக்கும், தன்னுடைய குடும்பத்தாருக்கும் செய்த நன்மைகளையெல்லாம் நினைவுகூரும் வண்ணமாக, யாக்கோபு தேவனுக்கு பலிசெலுத்துகிறார்.

யாக்கோபு இப்போது கானான் தேசத்திலிருந்து எகிப்து தேசத்திற்கு புறப்பட்டுப்போகிறார். அவர் அந்நிய தேசத்திற்கு பிரயாணமாய்ப்போகும்போது, தேவனுடைய பிரசன்னம் அவரோடு கூடயிருக்கவேண்டும். தேவன் யாக்கோபோடு கூடவந்தால்தான், அவருக்கு பிரயாணத்தில் ஆசீர்வாதம் கிடைக்கும். தேவனுடைய பரிசுத்தமான பிரசன்னம் தன்னுடைய பிரயாணத்தில் தன்னோடு கூட வரவேண்டும் என்று விரும்பி, அவர் தேவனுக்கு பலியிடுகிறார்.

யாக்கோபு தேவனுடைய வார்த்தையைக் கேட்க விரும்புகிறார். எகிப்து தேசத்திற்கு அவர் போகும் பிரயாணத்தைக் குறித்து, கர்த்தரிடத்தில் விசாரிக்க விரும்புகிறார். புறஜாதியார் பலிசெலுத்தி, தங்கள் தெய்வங்களிடத்தில், தங்கள் காரியங்களைக் குறித்து விசாரிப்பது வழக்கம். ஒருவேளை யாக்கோபு, புறஜாதியாரின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி, தேவனுக்கு பலி செலுத்தி, தேவனிடத்தில் தன்னுடைய காரியங்களைக் குறித்து விசாரித்திருக்கலாம்.

தேவனுடைய அனுமதியில்லாமல் யாக்கோபு கானான் தேசத்தை விட்டு எகிப்து தேசத்திற்கு புறப்பட ஆயத்தமாயில்லை. கர்த்தர் அனுமதி கொடுக்கவில்லையென்றால் யாக்கோபு எகிப்து தேசத்திற்கு போகமாட்டார். கானான் தேசத்தில் பஞ்சம் கொடியதாயிருந்தாலும், யாக்கோபு தன் குடும்பத்தாரோடு, கானான் தேசத்திலேயே இருந்துவிடுவார்.

தேவன் இஸ்ரவேலை சந்திக்கிறார். யாக்கோபுக்கு இஸ்ரவேல் என்னும் மறுபெயருமுள்ளது. அன்று இரவிலே, தேவன் இஸ்ரவேலுக்கு தரிசனமாகிறார். நாம் தேவனிடத்தில் கருத்தாய் ஜெபம்பண்ணினால், அவர் நம்மையும் சந்திப்பார். நாம் தேவனுடைய சமுகத்தில் எப்படி பேசவேண்டுமோ அப்படி பேசினால், அவரும் நம்மோடு கூட பேசுவார்.

அன்று இரவிலே தேவன் இஸ்ரவேலுக்குத் தரிசனமாகி, "யாக்கோபே, யாக்கோபே" என்று கூப்பிடுகிறார்; யாக்கோபு "இதோ, அடியேன்" என்று சொல்லுகிறார். அப்பொழுது தேவன், "நான் தேவன், நான் உன் தகப்பனுடைய தேவன், நீ எகிப்துதேசத்துக்குப்போகப் பயப்படவேண்டாம்; அங்கே உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன்" (ஆதி 46:2,3) என்று சொல்லுகிறார்.

தேவன் தம்மை ஈசாக்கின் தேவன் என்று அழைத்துக் கொள்கிறார். தன் தகப்பனாகிய ஈசாக்குடைய தேவனுக்கு இஸ்ரவேல் பலியிடுகிறார் (ஆதி 46:1).

தேவன் யாக்கோபுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். தான் எகிப்து தேசத்திற்கு போவது தேவனுடைய சித்தமா அல்லது அது தேவனுடைய சித்தமில்லையா என்பது யாக்கோபுக்கு இதுவரையிலும் தெரியவில்லை. தேவனோ யாக்கோபை நோக்கி, "நீ எகிப்து தேசத்திற்குப்போக பயப்படவேண்டாம்" என்று ஆறுதலாகச் சொல்லுகிறார்.

எகிப்து தேசத்திற்குப் போக ஈசாக்கிற்குத் தடைபண்ணப்பட்டிருந்தது. (ஆதி 26:2) ஆதி 15:13-14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனத்தின் மீதமுள்ள பகுதி நிறைவேற வேண்டிய காலம் இப்போது வந்திருக்கிறது. ஆகையினால் இஸ்ரவேல் எகிப்துக்குப் போவதற்கு அனுமதி கிடைக்கிறது.

ஒரு அந்நிய தேசத்தில் ஏராளமான ஜனங்களையும், கால்நடைகளையும் எப்படி அழைத்துச் சென்று, அங்கு தங்க வைப்பது என்னும் சந்தேகமும், பயமும் யாக்கோபின் மனதில் இருக்கிறது (ஆதி 46:3). ஆகையினால் தேவன் யாக்கோபிற்குத் தரிசனமாகி, எகிப்திற்குப் போகப் பயப்பட வேண்டாம் என்று கூறுகிறார்.

தன்னுடைய சந்ததியார் எகிப்து தேசத்தில் ஒடுக்கப்படுவார்கள் என்பது இஸ்ரவேலுக்குத் தெரியும்(ஆதி 15:13-14). உடன்படிக்கையின் பிரகாரம் இஸ்ரவேல் சந்ததியார் எகிப்தில் வந்து தங்க வேண்டும். இதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு தான், யாக்கோபு தேவனிடமிருந்து ஒரு நிச்சயமான செய்தியை எதிர்பார்க்கிறார்.

நாமும் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக வரும்போது, யாக்கோபைப்போல பயபக்தியோடு வரவேண்டும். நாம் கர்த்தருடைய சமுகத்திலே பயத்தோடும் நடுக்கத்தோடும் சந்தோஷமாயிருக்க வேண்டும்.

யாக்கோபு எகிப்து தேசத்திற்கு பிரயாணம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார். பிரயாணத்தைக் குறித்து அவருடைய மனதிலே பலவிதமான சிந்தனைகள் உண்டாயிற்று. யாக்கோபு இப்போது வயதுமுதிர்ந்தவராயிருக்கிறார். கானான் தேசத்திலிருந்து எகிப்து தேசத்திற்கு நீண்ட தூரம் பிரயாணம் பண்ணவேண்டும்.

எகிப்து தேசம் விக்கிரகாராதனை மிகுந்த தேசம். தன்னுடைய குமாரர்கள் எகிப்து தேசத்திற்குப் போனால், அங்கே அவர்கள் எகிப்தியரின் விக்கிரகாராதனையை பின்பற்றுவார்களோ என்னும் பயம் யாக்கோபின் மனதில் உண்டாயிற்று. யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்குடைய தேவனை தொழுதுகொண்டு, அவருக்கு பலிசெலுத்துகிறார். தன்னுடைய பிள்ளைகள், தங்கள் முற்பிதாக்களின் தேவனை மறந்துவிட்டு, எகிப்தியரின் விக்கிரகங்களை பின்பற்றிப்போய்விடுவார்களோ என்னும் பயமும் யாக்கோபின் மனதில் உண்டாயிற்று.

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். அந்த தேசத்தில் இப்போது பஞ்சம் கொடிதாயிருக்கிறது. ஆனாலும் கானான் தேசமே கர்த்தர் இஸ்ரவேலருக்கு வாக்குத்தத்தமாகக் கொடுத்திருக்கிற தேசம். எகிப்து தேசம் நைல் நதி ஓடுகிற செழிப்பான தேசம். ஆனாலும் அது இஸ்ரவேலருக்கு அந்நிய தேசம். தன்னுடைய குமாரர் எகிப்து தேசத்தின் அழகிலும், ஆடம்பரத்திலும் மயங்கி, வாக்குத்தத்த தேசமாகிய கானான் தேசத்தை மறந்துவிடுவார்களோ என்னும் பயமும் யாக்கோபின் மனதில் உண்டாயிற்று.

தேவனோ யாக்கோபை ஆசீர்வதிக்கிறார். "எகிப்து தேசத்திலே உன்னை பெரிய ஜாதியாக்குவேன்" என்று தேவன் யாக்கோபுக்கு சொல்லுகிறார். யாக்கோபு எகிப்து தேசத்திற்கு போனாலும், தேவனுடைய பிரசன்னம் அவரோடு கூடப்போகும். "நான் உன்னுடனே எகிப்துக்கு வருவேன்" என்று தேவன் யாக்கோபுக்கு வாக்குப்பண்ணுகிறார்.

எகிப்து தேசத்திலே யாக்கோபோ அல்லது அவருடைய குடும்பத்தாரோ காணாமல்போய்விடமாட்டார்கள். யாக்கோபு எகிப்து தேசத்தில் மரித்தாலும், அவர் கானான் தேசத்திலே அடக்கம்பண்ணப்படுவார். கர்த்தர் யாக்கோபை நோக்கி, "நான் உன்னை திரும்பவும் வரப்பண்ணுவேன்" என்று சொல்லுகிறார்.

யாக்கோபு எகிப்து தேசத்திலே மரித்துப்போனார். ஆனாலும் அவருடைய சரீரம் கானான் தேசத்திற்கு கொண்டு வரப்பட்டு, அங்கே அடக்கம்பண்ணப்படுகிறது. இஸ்ரவேலின் சந்ததியார் கானான் தேசத்திலே குடியேறுகிறார்கள். கர்த்தர் வாக்குமாறாதவராயிருக்கிறார்.

யாக்கோபைப்போல, நம்முடைய ஜீவியத்தில் நாமும் வேதனையான பள்ளத்தாக்குகளில் இருக்கலாம். நம்முடைய வருங்காலம் எப்படியிருக்குமோ என்னும் நிச்சயமில்லாதவர்களாய் நாம் தவிக்கலாம். ஆனாலும் நாம் தேவனை நோக்கிக் கூப்பிடும்போது தேவன் நம்மை கைவிடமாட்டார். அவர் நம்மைக் கரம்பிடித்து வழிநடத்துவார். நாம் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமும், அவருடைய வழிநடத்துதலின் பிரகாரமும், நாம் எங்கே போனாலும், அங்கே தேவனுடைய பரிசுத்த பிரசன்னம் நம்மோடு கூட வரும். நாம் ஆராதிக்கிற தேவன், நாம் போகவேண்டிய இலக்குக்கு, நம்மை கரம் பிடித்து வழிநடத்துவார்.

நாம் மரண பள்ளத்தாக்கிலே நடந்தாலும், நம்முடைய தேவன் அங்கேயும் நம்மை கைவிடமாட்டார். அவர் நம்மை மரணப்பள்ளத்தாக்கிலிருந்து மேலான மகிமைக்கு அழைத்து செல்வார்.

யாக்கோபு தேவனுக்கு பலி செலுத்தி அவரைத் தொழுதுகொள்கிறார். தன்னுடைய போக்கிலும் வரத்திலும் தேவன் தன்னோடு கூடயிருப்பார் என்னும் நம்பிக்கை அவருடைய மனதிலிருக்கிறது. ஆகையினால் யாக்கோபின் ஜீவியமும் மரணமும் அவருக்கு ஆறுதலாயிருக்கிறது. "யோசேப்பு தன் கையால் உன் கண்ணை மூடுவான்" என்று தேவன் யாக்கோபுக்கு சொல்லுகிறார். இது யாக்கோபுக்கு ஆறுதலான வார்த்தையாயிருக்கிறது.

"யோசேப்பு தன் கையால் உன் கண்களை மூடுவான்" என்னும் வாக்கியத்திற்கு, "மரணத்தின்போது சமாதானமாக மரணமடையவாய். நீ மரித்த பின்பு, உன் பிள்ளை உன் கண்களை மூடும்" என்று பொருள். கிழக்கு தேசத்தில் ஒருவர் மரித்த பின்பு, அவருடைய நெருங்கிய உறவினர்கள் அவருடைய கண்களை மூடுவது வழக்கம். தன்னுடைய குமாரன் தன் கண்களை மூடுவான் என்னும் வாக்குத்தத்தம் யாக்கோபிற்கு ஆறுதலாக இருக்கிறது (ஆதி 50:1).

எகிப்திற்கு போனவர்கள்
ஆதி 46:5-27

ஆதி 46:5. அதற்குப்பின்பு, யாக்கோபு பெயெர்செபாவிலிருந்து பிரயாணம் புறப்பட்டான். இஸ்ரவேலின் குமாரர் தங்கள் தகப்பனாகிய யாக்கோபையும் தங்கள் குழந்தைகளையும் தங்கள் மனைவிகளையும் பார்வோன் அனுப்பின வண்டிகளின்மேல் ஏற்றிக்கொண்டு,

ஆதி 46:6. தங்கள் ஆடுமாடுகளையும், தாங்கள் கானான் தேசத்தில் சம்பாதித்த தங்கள் பொருட்களையும் சேர்த்துக்கொண்டு, யாக்கோபும் அவன் சந்ததியார் யாவரும் எகிப்துக்குப் போனார்கள்.

ஆதி 46:7. அவன் தன் குமாரரையும் தன் குமாரரின் குமாரரையும் தன் குமாரத்திகளையும் தன் குமாரரின் குமாரத்திகளையும் தன் சந்ததியார் அனைவரையும் எகிப்துக்குத் தன்னோடே அழைத்துக் கொண்டுபோனான்.

ஆதி 46:8. எகிப்துக்கு வந்த இஸ்ரவேலரின் நாமங்களாவன: யாக்கோபும் அவனுடைய குமாரரும்; யாக்கோபுடைய மூத்தகுமாரனான ரூபன்.

ஆதி 46:9. ரூபனுடைய குமாரர் ஆனோக்கு, பல்லூ, எஸ்ரோன், கர்மீ என்பவர்கள்.

ஆதி 46:10. சிமியோனுடைய குமாரர் எமுவேல், யாமின், ஓகாத், யாகீன், சொகார், கானானிய ஸ்திரீயின் குமாரனாகிய சவுல் என்பவர்கள்.

ஆதி 46:11. லேவியினுடைய குமாரர் கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்கள்.

ஆதி 46:12. யூதாவினுடைய குமாரர் ஏர், ஓனான், சேலா, பாரேஸ், சேரா என்பவர்கள்; அவர்களில் ஏரும் ஓனானும் கானான்தேசத்தில் இறந்துபோனார்கள்; பாரேசுடைய குமாரர் எஸ்ரோன், ஆமூல் என்பவர்கள்.

ஆதி 46:13. இசக்காருடைய குமாரர் தோலா, பூவா, யோபு, சிம்ரோன் என்பவர்கள்.

ஆதி 46:14. செபுலோனுடைய குமாரர் செரேத், ஏலோன், யக்லேல் என்பவர்கள்.

ஆதி 46:15. இவர்கள் லேயாளின் சந்ததியார்; அவள் இவர்களையும் தீனாள் என்னும் ஒரு குமாரத்தியையும் பதான் அராமிலே யாக்கோபுக்குப் பெற்றாள்; அவள் குமாரரும் அவள் குமாரத்திகளுமாகிய எல்லாரும் முப்பத்துமூன்று பேர்.

ஆதி 46:16. காத்துடைய குமாரர், சிப்பியோன், அகி, சூனி, எஸ்போன், ஏரி, அரோதி, அரேலி என்பவர்கள்.

ஆதி 46:17. ஆசேருடைய குமாரர் இம்னா, இஸ்வா, இஸ்வி, பெரீயா என்பவர்கள்; இவர்களுடைய சகோதரி செராக்கு என்பவள்; பெரீயாவின் குமாரர் ஏபேர், மல்கியேல் என்பவர்கள்.

ஆதி 46:18. இவர்கள் லாபான் தன் குமாரத்தியாகிய லேயாளுக்குக் கொடுத்த சில்பாளுடைய பிள்ளைகள்; அவள் இந்தப் பதினாறுபேரையும் யாக்கோபுக்குப் பெற்றாள்.

ஆதி 46:19. யாக்கோபின் மனைவியாகிய ராகேலுடைய குமாரர் யோசேப்பு, பென்யமீன் என்பவர்கள்.

ஆதி 46:20. யோசேப்புக்கு எகிப்து தேசத்திலே மனாசேயும் எப்பிராயீமும் பிறந்தார்கள்; அவர்களை ஓன்பட்டணத்து ஆசாரியனாகிய போத்திபிராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத் அவனுக்குப் பெற்றாள்.

ஆதி 46:21. பென்யமீனுடைய குமாரர், பேலா பெகேர், அஸ்பேல், கேரா, நாகமான், எகி, ரோஷ், முப்பீம், உப்பீம் ஆர்து என்பவர்கள்.

ஆதி 46:22. ராகேல் யாக்கோபுக்குப் பெற்ற குமாரராகிய இவர்கள் எல்லாரும் பதினாலுபேர்.

ஆதி 46:23. தாணுடைய குமாரன் உசீம் என்பவன்.

ஆதி 46:24. நப்தலியின் குமாரர் யாத்சியேல்,கூனி, எத்செர், சில்லேம் என்பவர்கள்.

ஆதி 46:25. இவர்கள் லாபான் தன் குமாரத்தியாகிய ராகேலுக்குக் கொடுத்த பில்காள் யாக்கோபுக்குப் பெற்றவர்கள்; இவர்கள் எல்லாரும் ஏழுபேர்.

ஆதி 46:26. யாக்கோபுடைய குமாரரின் மனைவிகளைத் தவிர, அவனுடைய கர்ப்பப்பிறப்பாயிருந்து அவன் மூலமாய் எகிப்திலே வந்தவர்கள் எல்லாரும் அறுபத்தாறுபேர்.

ஆதி 46:27. யோசேப்புக்கு எகிப்திலே பிறந்த குமாரர் இரண்டுபேர்; ஆக எகிப்துக்குப் போன யாக்கோபின் குடும்பத்தார் எழுபதுபேர்.

யாக்கோபு எகிப்து தேசத்திற்கு புறப்பட்டுப்போவதற்கு முன்பாக தேவனுக்கு பலிசெலுத்துகிறார். அவர் தேவனுடைய ஆறுதலான வார்த்தைகளையும், ஆசீர்வாதமான வார்த்தைகளையும் பெற்றுக்கொள்கிறார்.

அதற்குப்பின்பு, யாக்கோபு பெயெர்செபாவிலிருந்து பிரயாணம் புறப்படுகிறார். இஸ்ரவேலின் குமாரர் தங்கள் தகப்பனாகிய யாக்கோபையும் தங்கள் குழந்தைகளையும் தங்கள் மனைவிகளையும் பார்வோன் அனுப்பின வண்டிகளின்மேல் ஏற்றிக்கொண்டு பிரயாணம்பண்ணுகிறார்கள் (ஆதி 46:5).

அவர்கள் தங்கள் ஆடுமாடுகளையும், தாங்கள் கானான் தேசத்தில் சம்பாதித்த தங்கள் பொருட்களையும் சேர்த்துக்கொண்டு, யாக்கோபும் அவர் சந்ததியார் யாவரும் எகிப்துக்குப் போகிறார்கள் (ஆதி 46:6).

யாக்கோபு தன் குமாரரையும் தன் குமாரரின் குமாரரையும் தன் குமாரத்திகளையும் தன் குமாரரின் குமாரத்திகளையும் தன் சந்ததியார் அனைவரையும் எகிப்துக்குத் தன்னோடே அழைத்துக் கொண்டுபோகிறார் (ஆதி 46:7).

"தன் குமாரத்திகளையும் தன் குமாரரின் குமாரத்திகளையும்" என்பது தீனாளும், அவளுடைய குமாரர்களுடைய குமாரத்திகளும் ஆகும் (ஆதி 46:15,17). இவர்கள் எல்லோருமே கர்ப்பப் பிறப்பின் பிரகாரம் யாக்கோபின் குமாரத்திகள் என்று கருதப்படுகிறார்கள். (ஆதி 46:26).

யாக்கோபு தேவனை நம்பி எகிப்து தேசத்திற்கு பிரயாணம்பண்ணுகிறார். யாக்கோபு வயது முதிர்ந்தவராகயிருந்தாலும், தேவன் தன்னை பெலப்படுத்துவார் என்றும், அவர் தன்னோடுகூட எகிப்து தேசத்திற்கு வருவார் என்றும் யாக்கோபு நம்பிக்கையோடு போகிறார்.

கானான் தேசத்தை விட்டு பிரிந்துபோவது யாக்கோபுக்கு வருத்தமான காரியம். ஆனாலும் தேவன் யாக்கோபுக்கு, "நான் உன்னை கானான் தேசத்திற்கு திரும்பவும் வரப்பண்ணுவேன்" என்று வாக்குப்பண்ணியிருக்கிறார். தேவனுடைய வாக்குத்தத்த வார்த்தை யாக்கோபுக்கு ஆறுதலாயிருக்கிறது.

யாக்கோபு எகிப்து தேசத்திற்குப்போனாலும் அவருடைய சரீரம், கானான் தேசத்தில் அடக்கம்பண்ணப்படும் என்பது அவருக்கு மிகப்பெரிய ஆறுதலாயிருக்கிறது. யாக்கோபு தன்னுடைய கல்லறையை நோக்கி பிரயாணம்பண்ணவும் ஆயத்தமாயிருக்கிறார். கல்லறைக்கு முன்பாக என்னென்ன காரியங்கள் சம்பவித்தாலும், அதையும் சந்திப்பதற்கு அவர் ஆயத்தமாயிருக்கிறார். யாக்கோபைப்போலவே, விசுவாசிகளாகிய நாமும், கர்த்தருடைய அடிச்சுவடுகளை விசுவாசத்தோடு பின்பற்றி, நமக்கு நியமிக்கப்பட்ட இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லவேண்டும்.

எகிப்து தேசத்திற்கு வந்த இஸ்ரவேலரின் நாமங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் இஸ்ரவேலின் புத்திரர். பிற்காலத்தில் இவர்கள் இஸ்ரவேலின் வெவ்வேறு கோத்திரங்களுக்கு பிதாக்களாயிருக்கிறார்கள். அவர்கள் குடும்பங்களுக்கு தலைவர்களாகவும் இருக்கிறார்கள்.

யாக்கோபு கானான் தேசத்தைவிட்டு எகிப்து தேசத்திற்கு புறப்பட்டுப்போகும்போது, தன்னுடைய குடும்பத்தார் எல்லோரையும், தன்னோடுகூட கூட்டிக்கொண்டு போகிறார். கானான் தேசத்திலே பஞ்சம் கொடிதாயிருக்கிறது. யாக்கோபு தன்னுடைய குடும்பத்தார் யாரையும், இந்தப் பஞ்சகாலத்திலே, கானான் தேசத்தில் விட்டுவிடவில்லை.

கர்த்தர் ஆபிரகாமுக்கு கானான் தேசத்தை கொடுப்பதாக வாக்குத்தத்தம் பண்ணினார். இப்போது அந்த வாக்குத்தத்தம் சொல்லப்பட்டு 215 வருஷங்களாயிற்று. கர்த்தர் ஆபிரகாமின் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போல பெருகப்பண்ணுவதாக சொன்னார். இப்போது யாக்கோபின் குடும்பத்தில் எழுபது பேர் மாத்திரமே இருக்கிறார்கள் (ஆதி 46:27).

கர்த்தர் தமக்கு சித்தமான வேளையிலே, கொஞ்சம் பேராயிருக்கிறவர்களை, அநேகம் பேராய் மாற்றுவார்.

"சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்; கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்" (ஏசா 60:22).

எகிப்துக்கு வந்த இஸ்ரவேலரின் நாமங்களாவன: யாக்கோபும் அவருடைய குமாரரும்; யாக்கோபுடைய மூத்தகுமாரனான ரூபன். ரூபனுடைய குமாரர் ஆனோக்கு, பல்லூ, எஸ்ரோன், கர்மீ என்பவர்கள். சிமியோனுடைய குமாரர் எமுவேல்,யாமின், ஓகாத், யாகீன், சோகார், கானானிய ஸ்தீரியின் குமாரனாகிய சவுல் என்பவர்கள் (ஆதி 46:8-10).

இந்த வசனப்பகுதிகளில் கூறப்பட்டிருக்கும் பெயர்களுக்கும், அதே நபர்களுக்கு வேதாகமத்தின் மற்ற பகுதிகளில் கூறப்பட்டிருக்கும் பெயர்களுக்கும் வேறுபாடு உள்ளது. வேதாகமத்தில் ஒரே நபருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட பெயர்கள் கொடுக்கப்படுவது வழக்கமான சம்பவமாகும்.

எகிப்து தேசத்தின் பழங்கால ஓவியங்களில் தாடிகள் வளர்த்திருக்கும் செமிட்டிக் இனத்தார் (எபிரெயர்) எகிப்து தேசத்திற்குள் குடியேற வருவது பற்றி வரையப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்கள் உடமைகளைச் சுமந்து கொண்டு, தங்கள் மனைவி பிள்ளைகளோடு எகிப்து தேசத்திற்கு வருகிறார்கள்.

யாக்கோபுடைய மூத்தகுமாரனான ரூபன் தன்னுடைய சேஷ்டபுத்திரபாகத்து ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ள வில்லை. யாக்கோபின் மறுமனையாட்டியோடு இவன் சயனித்ததினால், இவனுக்கு ஆசீர்வாதம் கொடுக்கப்படவில்லை (ஆதி 35:22). ரூபனுக்குப் பதிலாகச் சேஷ்டபுத்திரபாகத்து ஆசீர்வாதம் யோசேப்பிற்குக் கொடுக்கப்படுகிறது (1நாளா 5:1-2).

யூதாவுக்கும், சிமியோனுக்கும் கானானிய ஸ்திரீகளின் மூலமாக குமாரர்கள் பிறந்திருக்கிறார்கள் (ஆதி 46:10; ஆதி 38:1-30).

லேவியினுடைய குமாரர் கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்கள். யூதாவினுடைய குமாரர் ஏர், ஓனான், சேலா, பாரேஸ், சேரா என்பவர்கள்; அவர்களில் ஏரும் ஓனானும் கானான்தேசத்தில் இறந்துபோனார்கள்; பாரேசுடைய குமாரர் எஸ்ரோன், ஆமூல் என்பவர்கள். இசக்காருடைய குமாரர் தோலா, பூவா, யோபு, சிம்ரோன் என்பவர்கள். செபுலோனுடைய குமாரர் செரேத், ஏலோன், யக்லேல் என்பவர்கள் (ஆதி 46:11-14).

ஏரும் ஓனானும் கானான்தேசத்தில் இறந்துபோனார்கள். இவ்விருவரும் சந்ததி இல்லாமல் கானான் தேசத்தில் இறந்துபோன படியினால், எகிப்துக்குப் போனவர்களுடைய அட்டவணையில் இவர்களுடைய பெயர்கள் சேர்க்கப்படவில்லை.

யூதாவின் குமாரரைப் பற்றி கூறப்படும்போது, இயேசுகிறிஸ்து பாரேசின் வம்சவழியில் வருகிறார். (ஆதி 46:12; ரூத் 4:18; 1நாளா 2:5; மத் 1:3; லூக்கா 3:33).

யோபுவின் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் யோபு இந்த மனுஷனாக இருக்கலாம்.

இவர்கள் லேயாளின் சந்ததியார்; அவள் இவர்களையும் தீனாள் என்னும் ஒரு குமாரத்தியையும் பதான் அராமிலே யாக்கோபுக்குப் பெற்றாள்; அவன் குமாரரும் அவன் குமாரத்திகளுமாகிய எல்லாரும் முப்பத்துமூன்று பேர் (ஆதி 46:15).

லேயாளின் சந்ததியார் முதலாவதாகக் கூறப்படுகிறார்கள். ஏனெனில் யாக்கோபிற்கு இவள் மூலமாகவே முதலாவதாக பிள்ளைகள் பிறந்தார்கள். (ஆதி 46:8-15) சில்பாளின் பிள்ளைகள் இரண்டாவதாகக் கூறப்படுகிறார்கள். ஏனெனில் இவள் லேயாளின் வேலைக்காரி. (ஆதி 46:16-18) இதற்குப் பின்பு ராகேலின் குமாரர்களும் (ஆதி 46:19-22) அதன் பின்பு அவளுடைய வேலைக்காரியாகிய பில்காளின் குமாரர்களும் வரிசையாகக் கூறப்பட்டிருக்கிறார்கள் (ஆதி 46:23-25).

"அவன் குமாரரும் அவன் குமாரத்திகளுமாகிய எல்லாரும் முப்பத்துமூன்று பேர்" என்று ஆதி 46:15 ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதி 46:18,22,25 ஆகிய வசனங்களில் அவர்கள் 37 பேர் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

யாக்கோபு லேயாள் ஆகியோருக்கு 33 குமாரர்கள் பிறக்கிறார்கள். அவர்களின் விவரம் வருமாறு :

1. ரூபனும், அவனுடைய 4 குமாரரும் (ஆதி 46:8-9)

2. சிமியோனும், அவனுடைய 6 குமாரரும் (ஆதி 46:10)

3. லேவியும் அவனுடைய 3 குமாரரும் (ஆதி 46:11)

4. யூதாவும், அவனுடைய 5 குமாரரும், 2 பேரப்பிள்ளைகளும் (ஆதி 46:12)

5. இசக்காரும், அவனுடைய 4 குமாரரும் (ஆதி 46:13)

6. செபுலோனும், அவனுடைய 3 குமாரரும் (ஆதி 46:14)

காத்துடைய குமாரர், சிப்பியோன், அகி, சூனி, எஸ்போன், ஏரி, அரோதி, அரேலி என்பவர்கள். ஆசேருடைய குமாரர் இம்னா, இஸ்வா, இஸ்வி, பெரீயா என்பவர்கள்; இவர்களுடைய சகோதரி செராக்கு என்பவள்; பெரீயாவின் குமாரர் ஏபேர், மல்கியேல் என்பவர்கள். இவர்கள் லாபான் தன் குமாரத்தியாகிய லேயாளுக்குக் கொடுத்த சில்பாளுடைய பிள்ளைகள்; அவள் இந்தப் பதினாறுபேரையும் யாக்கோபுக்குப் பெற்றாள் (ஆதி 46:16-18).

யாக்கோபு, சில்பாள் ஆகியோருக்கு 15 குமாரர்கள் பிறக்கிறார்கள். அவர்களின் விவரம் வருமாறு :

1. காத்தும், அவனுடைய 7 குமாரரும் (ஆதி 46:16)

2. ஆசேரும், அவனுடைய 6 குமாரரும் (ஆதி 46:17)

யாக்கோபின் மனைவியாகிய ராகேலுடைய குமாரர் யோசேப்பு, பென்யமீன் என்பவர்கள். யோசேப்புக்கு எகிப்து தேசத்திலே மனாசேயும் எப்பிராயீமும் பிறந்தார்கள்; அவர்களை ஒன்பட்டணத்து ஆசாரியனாகிய போத்திபிராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத் அவனுக்குப் பெற்றாள். பென்யமீனுடைய குமாரர், பேலா பெகேர், அஸ்பேல், கேரா, நாகமான், எகி, ரோஷ், முப்பிம், உப்பிம் ஆர்து என்பவர்கள். ராகேல் யாக்கோபுக்குப் பெற்ற குமாரராகிய இவர்கள் எல்லாரும் பதினாலுபேர் (ஆதி 46:19-22).

யாக்கோபு, ராகேல் ஆகியோருக்கு 14 குமாரர்கள் பிறக்கிறார்கள். அவர்களின் விவரம் வருமாறு :

1. யோசேப்பும், அவருடைய 2 குமாரரும் (ஆதி 46:19-20)

2. பென்யமீனும், அவனுடைய 10 குமாரரும் (ஆதி 46:19,21)

பென்யமீனுக்குப் பத்து குமாரர்கள் பிறந்தார்கள் ஆதி 43:8; ஆதி 44:20,22,30-34 ஆகிய வசனங்களில் பென்யமீன் பிள்ளையாண்டான் என்று கூறப்பட்டிருப்பதினால், அவன் அப்போது சிறுபிள்ளையாக இருந்திருக்க முடியாது. அப்போது பென்யமீனின் வயது 30. பென்யமீன் தன்னுடைய 15 அல்லது 20 வயதிற்குள் திருமணம் செய்திருக்க வேண்டும்.

தாணுடைய குமாரன் உசீம் என்பவன். நப்தலின் குமாரர் யாத்சியேல்,கூனி, எத்செர், சில்லேம் என்பவர்கள். இவர்கள் லாபான் தன் குமாரத்தியாகிய ராகேலுக்குக் கொடுத்த பில்காள் யாக்கோபுக்குப் பெற்றவர்கள்; இவர்கள் எல்லாரும் ஏழுபேர் (ஆதி 46:23-25).

யாக்கோபு, பில்காள் ஆகியோருக்கு 7 குமாரர்கள் பிறக்கிறார்கள். அவர்களின் விவரம் வருமாறு :

1. தாணும், அவனுடைய குமாரனும் (ஆதி 46:23)

2. நப்தலியும், அவனுடைய 4 குமாரரும் (ஆதி 46:24)

யாக்கோபுடைய குமாரரின் மனைவிகளைத் தவிர, அவருடைய கர்ப்பப்பிறப்பாயிருந்து அவர் மூலமாய் எகிப்திலே வந்தவர்கள் எல்லாரும் அறுபத்தாறுபேர். யோசேப்புக்கு எகிப்திலே பிறந்த குமாரர் இரண்டுபேர்; ஆக எகிப்துக்குப் போன யாக்கோபின் குடும்பத்தார் எழுபதுபேர் (ஆதி 46:26,27).

யாக்கோபின் கர்ப்பப்பிறப்பான 66 பேர்களைப்பற்றிய விவரம் வருமாறு:

1. யாக்கோபுடைய சொந்த 11 குமாரரும், ஒரு குமாரத்தியும் = 12

2. ரூபனின் குமாரர்கள் = 4 (ஆதி 46:9)

3. சிமியோனின் குமாரர்கள் = 6 (ஆதி 46:10)

4. லேவியின் குமாரர்கள் = 3 (ஆதி 46:11)

5. யூதாவின் குமாரரும், பேரப்பிள்ளைகளும் = 5 (ஆதி 46:12)

6. இசக்காரின் குமாரர்கள் = 4 (ஆதி 46:13)

7. செபுலோனின் குமாரர்கள் = 3 (ஆதி 46:14)

8. காத்தின் குமாரர்கள் = 7 (ஆதி 46:16)

9. ஆசேரின் குமாரரும், பேரப்பிள்ளைகளும், பேத்தியும் = 7 (ஆதி 46:17)

10. தாணின் குமாரன் = 1 (ஆதி 46:23)

11. நப்தலியின் குமாரர்கள் = 4 (ஆதி 46:24)

12. பென்யமீனின் குமாரர்கள் = 10 (ஆதி 46:21)

மொத்தம் (ஆதி 46:26) = 66பேர்

யூதாவின் இரண்டு குமாரர்கள் கானானில் மரித்துப் போனார்கள். ஆகையினால் இவர்கள் யாக்கோபோடு எகிப்துக்குப் போனவர்களின் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. யோசேப்பும், அவருடைய குமாரரும் ஏற்கெனவே எகிப்தில் இருக்கிறார்கள்.

"எகிப்திலே வந்தவர்கள் எல்லாரும் அறுபத்தாறுபேர்" என்பதற்கான விளக்கம் வருமாறு : ஆதி 46:27 ஆவது வசனத்தில் 70 பேர் என்றும், அப் 7:14 ஆவது வசனத்தில் 75 பேர் என்றும் கூறப்பட்டிருப்பதிலிருந்து இது வேறுபிரித்து காண்பிக்கப்படுகிறது. இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் 66 பேரில் யாக்கோபு, யோசேப்பு, யோசேப்பிற்கு எகிப்தில் பிறந்த இரண்டு குமாரர்கள் ஆகியோரின் பெயர்கள் சேர்க்கப்படவில்லை. 70 பேர் என்று கூறப்பட்டிருக்கும்போது இந்த நான்கு பேரும் அட்டவணையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஸ்தேவான் கூறிய 75 பேரில் யோசேப்பின் பேரப்பிள்ளைகள் 5 பேரும் சேர்த்து கணக்கிடப்பட்டிருக்கிறார்கள். இந்த 5 பேரும், மனாசே, எப்பிராயீம் ஆகியோருக்குப் பிறந்த குமாரர்கள். (அப் 7:14)

"எகிப்துக்குப் போன யாக்கோபின் குடும்பத்தார் எழுபதுபேர்" என்பதற்கான விளக்கம் வருமாறு : யோசேப்பும், யாக்கோபின் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் கானான் தேசத்திலிருந்து எகிப்து தேசத்திற்குப் போனவர். இந்த எழுபதுபேரில், குமாரருடைய மனைவிகள், பேரப்பிள்ளைகள், வேலையாட்கள், அவருடைய குடும்பத்தார் ஆகியோர் யாரும் கணக்கில் சேர்க்கப்படவில்லை. (ஆதி 45:11)

யாக்கோபும் யோசேப்பும் ஆதி 46:28-34

ஆதி 46:28. கோசேன் நாட்டிலே தன்னை யோசேப்பு சந்திக்க வரும்படி சொல்ல, யூதாவைத் தனக்கு முன்னாக அவனிடத்தில் யாக்கோபு அனுப்பினான்; அவர்கள் கோசேனிலே சேர்ந்தார்கள்.

ஆதி 46:29. யோசேப்பு தன் இரதத்தை ஆயத்தப்படுத்தி, அதின்மேல் ஏறி, தன் தகப்பனாகிய இஸ்ரவேலைச் சந்திக்கும்படி போய், அவனைக் கண்டு, அவனுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு, வெகுநேரம் அவன் கழுத்தை விடாமல் அழுதான்.

ஆதி 46:30. அப்பொழுது இஸ்ரவேல் யோசேப்பைப் பார்த்து: நீ இன்னும் உயிரோடிருக்கிறாயே, நான் உன் முகத்தைக் கண்டேன், எனக்கு இப்போது மரணம் வந்தாலும் வரட்டும் என்றான்.

ஆதி 46:31. பின்பு, யோசேப்பு தன் சகோதரரையும் தன் தகப்பனுடைய குடும்பத்தாரையும் நோக்கி: நான் பார்வோனிடத்துக்குப் போய், கானான் தேசத்திலிருந்து என் சகோதரரும் என் தகப்பன் குடும்பத்தாரும் என்னிடத்தில் வந்திருக்கிறார்கள்.

ஆதி 46:32. அவர்கள் மேய்ப்பர்கள், ஆடுமாடுகளை மேய்க்கிறது அவர்கள் தொழில்; அவர்கள் தங்கள் ஆடுமாடுகளையும் தங்களுக்கு உண்டான எல்லாவற்றையும் கொண்டுவந்தார்கள் என்று அவருக்குச் சொல்லுகிறேன்.

ஆதி 46:33. பார்வோன் உங்களை அழைத்து, உங்கள் தொழில் என்ன என்று கேட்டால்,

ஆதி 46:34. நீங்கள், கோசேன் நாட்டிலே குடியிருக்கும்படி, அவனை நோக்கி: எங்கள் பிதாக்களைப்போல, உமது அடியாராகிய நாங்களும் எங்கள் சிறுவயதுமுதல் இதுவரைக்கும் மேய்ப்பர்களாயிருக்கிறோம் என்று சொல்லுங்கள்; மேய்ப்பர்கள் எல்லாரும் எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கிறார்கள் என்றான்.

யாக்கோபு தன் குடும்பத்தாரோடுகூட எகிப்து தேசத்திற்கு வருகிறார். எகிப்து தேசத்திலே யாக்கோபின் குமாரனாகிய யோசேப்பு இருக்கிறார். யாக்கோபு எகிப்து தேசத்திலுள்ள கோசேன் நாட்டிற்கு போகிறார்.அந்த நாட்டிலே யோசேப்பு தன்னை வந்து சந்திக்கவேண்டுமென்று யாக்கோபு விரும்புகிறார். இதற்காக யாக்கோபு தன் குமாரனாகிய யூதாவை தனக்கு முன்னாக யோசேப்பினிடத்திற்கு அனுப்புகிறார். அதன் பின்பு யாக்கோபும் அவருடைய குடும்பத்தார் எல்லோரும் கோசேனிலே வந்து சேருகிறார்கள் (ஆதி 46:28).

யாக்கோபு யோசேப்பை சந்திக்க யூதாவைத் தெரிந்தெடுக்கிறார். யோசேப்பை அவருடைய சகோதரர் அடிமையாக விற்றுப் போட்டபோது, அவருடைய இரண்டு சகோதரர்கள் யோசேப்பிற்காகப் பரிந்து பேசினார்கள். அவர்களில் யூதாவும் ஒருவன். பென்யமீனுக்காக யூதா பரிந்து பேசினான். (ஆதி 44:18-34).

யூதா நம்பிக்கைக்குரியவன். தலைவனுக்குரிய நல்ல சுபாவங்கள் அவனிடம் இருக்கிறது. தீர்க்கதரிசனத்தில் சகோதரர்களுக்குள் யூதா மேன்மையானவனாகக் கூறப்பட்டிருக்கிறான். யூதாவின் சந்ததியிலிருந்து மேசியா வருவார். யூதா ஆளும் கோத்திரம். மேசியா உலகம் முழுவதையும் நித்திய காலமாக ஆளுகை செய்வார்.

இஸ்ரவேலின் வரலாற்றில், யூதா கோத்திரத்தார் இஸ்ரவேலை ராஜ்யபாரம் பண்ணியிருக்கிறார்கள். தாவீதின் காலத்திலிருந்து, பாபிலோனிய சிறையிருப்பு வரையிலும் 473 வருஷங்கள் யூதா கோத்திரத்தார் இஸ்ரவேலை ஆட்சி புரிந்தார்கள். யூதா கோத்திரத்தாரும், பென்யமீனும், மற்ற கோத்திரங்களிலிருந்து சேர்ந்து கொண்ட திரளான ஜனங்களும் இஸ்ரவேலின் வடக்கு தேசத்தைவிட 133 வருஷங்கள் அதிகமாகத் தங்களை ராஜ்யபாரம் பண்ணினார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தபோது, யூதா கோத்திரத்தார் தலைமையேற்று வழிநடத்தினார்கள். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் மனுஷனாக அவதரிக்கும் வரையிலும் யூதாகோத்திரத்தாருக்கு இஸ்ரவேலை ஆளுகை செய்வதில் முக்கிய பொறுப்பு கொடுக்கப்பட்டிருந்தது. ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், தேவனுடைய நித்திய ஆளுகையிலும் யூதா கோத்திரத்தாருக்கு முக்கிய பங்கு இருக்கும்.

யோசேப்பு தன் தகப்பனாரை சந்திப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார். யோசேப்பு தன் இரதத்தை ஆயத்தப்படுத்தி, அதின்மேல் ஏறி, தன் தகப்பனாகிய இஸ்ரவேலைச் சந்திக்கும்படி போகிறார். யோசேப்பு யாக்கோபைக் கண்டு, அவருடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு, வெகுநேரம் அவர் கழுத்தை விடாமல் அழுகிறார் (ஆதி 46:29).

யோசேப்பு தன்னுடைய தகப்பனாராகிய யாக்கோபை அதிகமாய்க் கனம்பண்ணுகிறார். யோசேப்பு அவர்மீது அதிகமாய் அன்பாயிருக்கிறார். யாக்கோபை கனம்பண்ணுவது யோசேப்பின் கடமை. பிள்ளைகள் தங்கள் பெற்றோரைக் கனம்பண்ணவேண்டும். யோசேப்பு எகிப்து தேசத்திலே உயர்ந்த அதிகாரியாகயிருந்தாலும், தன் தகப்பனாகிய இஸ்ரவேலை சந்திக்கும்படி, தானே நேரில் வருகிறார்.

யோசேப்புக்கு தன் தகப்பனாகிய இஸ்ரவேல் மீது அதிகமான அன்பும், அதிகமான பாசமும் இருக்கிறது. அவர்கள் இருவரும், பலவருஷங்களாக ஒருவரையொருவர் பார்க்கவில்லை. பல வருஷங்களுக்கு பின்பு அவர்கள் இப்போதுதான் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கிறார்கள். ஆகையினால், யோசேப்பு, அன்பின் மிகுதியினால், யாக்கோபுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு வெகுநேரம் அழுகிறார். யாக்கோபை மறுபடியும் பார்ப்பது யோசேப்புக்கு மிகுந்த ஆனந்தமாயிருக்கிறது. யோசேப்பின் கண்களில் வடியும் கண்ணீர், அவர் யாக்கோபின்மீது வைத்திருக்கும் அன்புக்கு அடையாளமாயிருக்கிறது.

அப்பொழுது இஸ்ரவேல் யோசேப்பைப் பார்த்து, "நீ இன்னும் உயிரோடிருக்கிறாயே, நான் உன் முகத்தைக் கண்டேன், எனக்கு இப்போது மரணம் வந்தாலும் வரட்டும்" என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் மேலும் பதினேழு வருஷங்கள் உயிரோடிருக்கிறார் (ஆதி 47:28).

யாக்கோபின் குடும்பத்தார் எகிப்து தேசத்திலே யோசேப்பின் விருந்தினராக வந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் எகிப்து தேசத்திலே தங்குவதற்கு யோசேப்பு உதவி செய்யவேண்டும். ஒரு காலத்தில் யோசேப்பின் சகோதரர், அவரை தங்களைவிட்டு வெளியே துரத்தவேண்டுமென்று விரும்பினார்கள். அவர்கள் யோசேப்பை இஸ்மவேலரிடத்தில் அடிமையாக விற்றுப்போட்டார்கள்.

தன்னுடைய சகோதரர் தனக்கு செய்த தீமைகளுக்கு பதிலாக, யோசேப்பு அவர்களுக்கு நன்மை செய்கிறார். தன் சகோதரரை பழிவாங்கவேண்டும் என்னும் எண்ணம் யோசேப்பின் மனதில் இல்லை. தன்னுடைய தகப்பனாரும், சகோதரரும், அவர்களுடைய குடும்பத்தாரும் எகிப்து தேசத்திலே தங்குவதற்கு யோசேப்பு ஆயத்தம்பண்ணுகிறார்.

யாக்கோபும் அவருடைய குடும்பத்தாரும் எகிப்து தேசத்திலே கோசேன் நாட்டிலே தங்கவேண்டும் என்பது யோசேப்பின் திட்டம். கோசேன் நாடு கானான் தேசத்திற்கு அருகாமையிலுள்ளது. இந்த தேசத்தில் எகிப்தியர்கள் குறைந்த எண்ணிக்கையிலிருக்கிறார்கள். கோசேன் நாட்டில் மேய்ச்சல் நிலமும் ஏராளமாயிருக்கிறது. யாக்கோபும் அவருடைய குடும்பத்தாரும் எகிப்தியரை விட்டுப் பிரிந்து, கோசேன் நாட்டிலே தனியாக இருக்கவேண்டும் என்பது யோசேப்பின் திட்டம்.

யாக்கோபின் குடும்பத்தார் கோசேன் நாட்டில் தனியாகயிருக்கும்போது, எகிப்தியர் மூலமாக அவர்களுக்கு பாதிப்பு வராது. எகிப்தியரின் விக்கிரகாராதனையும் யாக்கோபின் குடும்பத்தார் மத்தியிலே பரவாது. யாக்கோபின் குடும்பத்தார் கோசேன் நாட்டிலே குடியிருப்பதினால், எகிப்தியர் மூலமாக அவர்களுக்கு துன்பங்களும் வராது என்று யோசேப்பு நினைக்கிறார்.

மேய்ப்பர்கள் எல்லாரும் எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கிறார்கள். யாக்கோபின் குடும்பத்தார் எல்லோருமே மேய்ப்பர்களாயிருக்கிறார்கள். அவர்கள் மற்ற பட்டணங்களில், எகிப்தியரோடுகூட தங்கியிருந்தால், எகிப்தியர்கள் அவர்களை அருவருப்பார்கள். அவர்கள் யாக்கோபின் குடும்பத்தாரை வெறுத்து ஒதுக்கி தள்ளிவிடுவார்கள். தன்னுடைய குடும்பத்தாருக்கு இப்படிப்பட்ட பிரச்சனைகள் வரக்கூடாது என்று நினைத்து, யோசேப்பு அவர்களை கோசேன் நாட்டிலே தனியாக தங்க வைக்கிறார்.

யோசேப்பு எகிப்து தேசத்திலே உயர்ந்த அதிகாரியாயிருக்கிறார். ஆனாலும் யோசேப்பு எகிப்தின் அதிபதியாகிய பார்வோனுக்கு, தன்னுடைய குடும்பத்தார் கானான் தேசத்திலிருந்து தன்னிடத்தில் வந்திருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் மேய்ப்பர்கள் என்பதையும், அவர்கள் கோசேன் நாட்டிலே குடியிருப்பது சம்பந்தமாகவும் அறிவிக்கவேண்டும் என்று விரும்புகிறார்.

யோசேப்பு தன் சகோதரரையும் தன் தகப்பனுடைய குடும்பத்தாரையும் நோக்கி: "நான் பார்வோனிடத்துக்குப் போய், கானான் தேசத்திலிருந்து என் சகோதரரும் என் தகப்பன் குடும்பத்தாரும் என்னிடத்தில் வந்திருக்கிறார்கள். அவர்கள் மேய்ப்பர்கள், ஆடுமாடுகளை மேய்க்கிறது அவர்கள் தொழில்; அவர்கள் தங்கள் ஆடுமாடுகளையும் தங்களுக்கு உண்டான எல்லாவற்றையும் கொண்டுவந்தார்கள் என்று அவருக்குச் சொல்லுகிறேன்" (ஆதி 46:31,32) என்று சொல்லுகிறார்.

பார்வோன் யாக்கோபையும் அவருடைய குடும்பத்தாரையும் தன்னிடத்தில் அழைத்து விசாரிக்கிறார். அப்போது அவர்கள் பார்வோனுக்கு எப்படிப்பட்ட பிரதியுத்தரம் சொல்லவேண்டும் என்றும் யோசேப்பு அவர்களுக்கு கற்றுக்கொடுக்கிறார்.

யோசேப்பு தன் சகோதரரையும், தன் தகப்பனுடைய குடும்பத்தாரையும் நோக்கி, "பார்வோன் உங்களை அழைத்து, உங்கள் தொழில் என்ன என்று கேட்டால், நீங்கள், கோசேன் நாட்டிலே குடியிருக்கும்படி, அவனை நோக்கி: எங்கள் பிதாக்களைப்போல, உமது அடியாராகிய நாங்களும் எங்கள் சிறுவயதுமுதல் இதுவரைக்கும் மேய்ப்பர்களாயிருக்கிறோம் என்று சொல்லுங்கள்; மேய்ப்பர்கள் எல்லாரும் எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கிறார்கள்" (ஆதி 46:33,34) என்று சொல்லுகிறார்.

"கோசேன்" மெம்பிஸ் பட்டணத்திற்குக் கிழக்கில் உள்ள பகுதி. கானானுக்கு அருகில் உள்ளது. நல்ல விளைச்சல் நிலம் நிறைந்த பூமி. எகிப்தியரிடமிருந்து வேறுபிரிந்து கோசேனில் ஜீவிக்கலாம். சோவான் வெளி (சங் 78:12,43) என்று இந்தப் பகுதி அழைக்கப்படுகிறது. இங்கு செமிட்டியர்களும், எகிப்தியர் அல்லாத மற்ற இனத்தாரும் குடியேறினார்கள்.

மேய்ப்பர்கள் எல்லாரும் எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கிறார்கள். யோசேப்பின் காலத்தில் பார்வோனாக இருந்த அபேபி மேய்ப்பனாக இருந்தவன். ஆதி 47:6 ஆவது வசனத்தில் யோசேப்பு தன் இனத்தாருக்குக் கூறும் ஆலோசனையின் பிரகாரம், இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து ஜனங்களிடமிருந்து வேறுபிரிந்து ஜீவிக்க முடியும். எகிப்து தேசத்தில் விவசாயம் செய்கிறவர்கள் நாகரிகம் உள்ளவர்களாகவும், மந்தைகளை மேய்க்கிறவர்கள் நாடோடிகளாகவும் கருதப்பட்டார்கள்.

மேய்ப்பர்கள் எல்லாரும் எகிப்தியருக்கு அருவருப்பாயிருந்தாலும், ஆடுமாடுகளை மேய்ப்பது மெய்யாகவே அருவருப்பான தொழில் அல்ல. ஒரு வேலையும் செய்யாமல் சோம்பேறியாக சும்மாயிருப்பதுதான் அருவருப்பு. தாங்கள் மேய்ப்பர்கள் என்பதை பார்வோனிடத்தில் சொல்லுவதற்கு யாக்கோபின் குடும்பத்தார் வெட்கப்படக்கூடாது. நாம் சாதாரண உத்தியோகம் பார்த்தாலும், அந்த உத்தியோகத்தில் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். நமக்கு கொடுக்கப்படும் வேலைகளை நேர்த்தியாய்ச் செய்து முடிக்கவேண்டும்.

47 அதிகாரம்

யோசேப்பு தன் சகோதரரில் ஐந்து பேரை முதலாவதாகவும், அதன் பின்பு தன் தகப்பனாரையும் பார்வோனுக்கு முன்பாக கொண்டுபோய் நிறுத்துகிறார் (ஆதி 47:1-10). யாக்கோபும், யோசேப்பின் சகோதரரும் எகிப்து தேசத்திலே நல்ல நாடாகிய ராமசேஸ் என்னும் நாட்டிலே குடியேற்றப்படுகிறார்கள் (ஆதி 47:11,12).

யாக்கோபு மரணமடையும் காலம் சமீபித்தபோது, அவர் தன் குமாரன் யோசேப்பை தன்னிடத்தில் அழைக்கிறார். யோசேப்பு தன் தகப்பனாருக்கு மரியாதை கொடுக்கிறார் (ஆதி 47:27-31).

பஞ்சம் மிகவும் கொடிதாயிருக்கிறது. பஞ்சகாலத்திலே யோசேப்பு பணத்தையும், ஆடுமாடுகளையும், நிலங்களையும் கிரயமாகப் பெற்றுக்கொண்டு தானியத்தை விற்பனை செய்கிறார் (ஆதி 47:13-20).

யோசேப்பு தன்னுடைய சொந்தக் காரியங்களிலும், எகிப்து தேசத்தின் காரியங்களிலும் ஞானமுள்ளவராயிருக்கிறார். அவர் எல்லோருக்கும் நன்மை செய்கிறார்.

பார்வோனும் யோசேப்பின் சகோதரரும் ஆதி 47:1-6

ஆதி 47:1. யோசேப்பு பார்வோனிடத்தில் போய்: என் தகப்பனும் என் சகோதரரும், தங்கள் ஆடுமாடுகளோடும் தங்களுக்கு உண்டான எல்லாவற்றோடுங்கூடக் கானான்தேசத்திலிருந்து வந்தார்கள்; இப்பொழுது கோசேன் நாட்டில் இருக்கிறார்கள் என்று சொல்லி;

ஆதி 47:2. தன் சகோதரரில் ஐந்துபேரைப் பார்வோனுக்கு முன்பாகக் கொண்டுபோய் நிறுத்தினான்.

ஆதி 47:3. பார்வோன் அவனுடைய சகோதரரைநோக்கி: உங்கள் தொழில் என்ன என்று கேட்டான்; அதற்கு அவர்கள்: உமது அடியாராகிய நாங்களும் எங்கள் பிதாக்களும் மந்தை மேய்க்கிறவர்கள் என்று பார்வோனிடத்தில் சொன்னதுமன்றி,

ஆதி 47:4. கானான் தேசத்திலே பஞ்சம் கொடிதாயிருக்கிறது; உமது அடியாரின் மந்தைகளுக்கு மேய்ச்சல் இல்லாமையால், இத்தேசத்திலே தங்கவந்தோம்; உமது அடியாராகிய நாங்கள் கோசேன் நாட்டிலே குடியிருக்கும்படி தயவுசெய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள்.

ஆதி 47:5. அப்பொழுது பார்வோன் யோசேப்பை நோக்கி: உன் தகப்பனும் உன் சகோதரரும் உன்னிடத்தில் வந்திருக்கிறார்களே.

ஆதி 47:6. எகிப்துதேசம் உனக்கு முன்பாக இருக்கிறது; தேசத்திலுள்ள நல்ல இடத்திலே உன் தகப்பனையும் உன் சகோதரரையும் குடியேறும்படி செய்; அவர்கள் கோசேன் நாட்டிலே குடியிருக்கலாம்; அவர்களுக்குள்ளே திறமையுள்ளவர்கள் உண்டென்று உனக்குத் தெரிந்திருந்தால், அவர்களை என் ஆடுமாடுகளை விசாரிக்கிறதற்குத் தலைவராக வைக்கலாம் என்றான்.

யோசேப்பு எகிப்து தேசத்திலே பெரிய அதிகாரியாயிருக்கிறார். பார்வோன் அந்த தேசத்திற்கு அதிபதியாயிருக்கிறான். யோசேப்பு பெரிய அதிகாரியாகயிருந்தாலும், அவர் பார்வோனுடைய அதிகாரத்திற்கு கீழ்ப்படிந்து, அவனுடைய கட்டளைகளை நிறைவேற்றுகிறார்.

யாக்கோபையும், யோசேப்பின் சகோதரரையும் எகிப்து தேசத்திற்கு அழைத்து வருமாறு, பார்வோன் யோசேப்புக்கு ஏற்கெனவே கட்டளை கொடுத்திருக்கிறான். யோசேப்பும் அவர்களை அழைத்து வர தன்னுடைய பரிவாரங்களை அனுப்புகிறார். யாக்கோபு தன்னுடைய குடும்பத்தாரோடு எகிப்து தேசத்திற்கு வருகிறார். ஆனாலும் யோசேப்பு பார்வோனுக்கு தெரியாமல், தன்னுடைய குடும்பத்தாரை, எகிப்து தேசத்திலே குடியேற்ற விரும்பவில்லை.

தான் எதை செய்தாலும் அதை பார்வோனுடைய அனுமதியை பெற்ற பின்பே செய்யவேண்டும் என்று யோசேப்பு நினைக்கிறார். யாக்கோபும், தன்னுடைய சகோதரரும் எகிப்து தேசத்திற்கு வந்திருக்கிற செய்தியை யோசேப்பு பார்வோனுக்கு தெரியப்படுத்துகிறார்.

யோசேப்பு பார்வோனிடத்தில் போய்: "என் தகப்பனும் என் சகோதரரும், தங்கள் ஆடுமாடுகளோடும் தங்களுக்கு உண்டான எல்லாவற்றோடுங்கூடக் கானான் தேசத்திலிருந்து வந்தார்கள்; இப்பொழுது கோசேன் நாட்டில் இருக்கிறார்கள்" (ஆதி 47:1) என்று சொல்லுகிறார்.

யோசேப்பின் சகோதரர் அவருக்கு மிகப்பெரிய தீங்குகளை செய்திருக்கிறார்கள். அவர்கள் யோசேப்பை இஸ்மவேலருக்கு அடிமையாக விற்றுப்போட்டார்கள். ஆனால் யோசேப்போ தன் சகோதரருக்கு எகிப்து தேசத்திலே நன்மை செய்கிறார். யோசேப்பு தன் சகோதரரில் ஐந்து பேரை பார்வோனுக்கு முன்பாக கொண்டுபோய் நிறுத்துகிறார் (ஆதி 47:2).

ஒரு மரத்திலுள்ள எல்லா கிளைகளும் அந்த மரத்தின் உச்சியிலிருப்பதில்லை. சில கிளைகள் மரத்திலே உச்சியிலிருக்கும். வேறு சில கிளைகளோ அதே மரத்தில் சற்று தாழ்வான இடத்திலிருக்கும். ஒரு கிளை அந்த மரத்தின் தாழ்வான இடத்திலிருப்பதினால் , அது அந்த மரத்தின் கிளையல்ல என்று சொல்ல முடியாது. ஒரு மரத்தின் கிளைகள் உயரத்திலிருந்தாலும், தாழ்வான இடத்திலிருந்தாலும், அவையெல்லாமே அந்த மரத்தின் கிளைகளாகவே இருக்கும்.

யோசேப்பும் அவருடைய சகோதரரும் எகிப்து தேசத்திலே வெவ்வேறு அந்தஸ்துக்களிலிருக்கிறார்கள். யோசேப்பு எகிப்து தேசத்திலே மிக உயர்ந்த அதிகாரியாயிருக்கிறார். அவருடைய சகோதரர்களோ எகிப்து தேசத்திலே பஞ்சம் பிழைக்க வந்திருக்கிறார்கள். ஆனாலும் யோசேப்பு தன்னுடைய சகோதரரை, தனக்கு சகோதரர் என்று சொல்ல வெட்கப்படவில்லை. யோசேப்பைப்போலவே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், நம்மை தம்முடைய சகோதரர் என்று சொல்லிக்கொள்ள வெட்கப்படுகிறவரல்ல.

யாக்கோபும், யோசேப்பின் சகோதரரும் எகிப்து தேசத்திற்கு அந்நியராயிருக்கிறார்கள். அவர்களுக்கு எகிப்து தேசத்திலே யோசேப்பை தவிர வேறு யாரையும் தெரியாது. யோசேப்பு தன்னுடைய சகோதரரை பார்வோனுக்கு முன்பாக கொண்டு போய் நிறுத்தி, அவர்களை பார்வோனுக்கு அறிமுகம் செய்து வைக்கிறார்.

யோசேப்பு அவர்களைப்பற்றி பார்வோனிடத்தில் சொல்லப்போவதை, ஏற்கெனவே அவர்களுக்கு சொல்லியிருக்கிறார். அவர்களும் பார்வோனிடத்தில் எப்படி பேசவேண்டும் என்றும் யோசேப்பு அவர்களுக்கு ஏற்கெனவே கற்றுக்கொடுத்திருக்கிறார் (ஆதி 46:31-34).

பார்வோன் யோசேப்பினுடைய சகோதரரை நோக்கி, "உங்கள் தொழில் என்ன" என்று கேட்கிறான்; அதற்கு அவர்கள், "உமது அடியாராகிய நாங்களும் எங்கள் பிதாக்களும் மந்தை மேய்க்கிறவர்கள்" என்று பார்வோனிடத்தில் சொல்லுகிறார்கள் (ஆதி 47:3).

யோசேப்பின் சகோதரர், பார்வோனிடத்தில் தங்களை மேய்ப்பர்கள் என்று சொன்ன பின்பு, அவர்கள் அவனை நோக்கி மேலும், "கானான் தேசத்திலே பஞ்சம் கொடிதாயிருக்கிறது; உமது அடியாரின் மந்தைகளுக்கு மேய்ச்சல் இல்லாமையால், இத்தேசத்திலே தங்கவந்தோம்; உமது அடியாராகிய நாங்கள் கோசேன் நாட்டிலே குடியிருக்கும்படி தயவுசெய்யவேண்டும்" (ஆதி 47:4) என்று வேண்டிக்கொள்கிறார்கள்.

யோசேப்பின் சகோதரரில் ஐந்துபேரும் பார்வோனை நோக்கி, "இத்தேசத்திலே தங்கவந்தோம்" என்று சொல்லுகிறார்கள். இந்த வாக்கியத்திற்கு தற்காலிகமாகத் தங்க வந்தோம் என்று பொருள். பஞ்சம் முடியும் வரையில் எகிப்தில் தங்கியிருக்க வேண்டுமென்பது அவர்களுடைய எண்ணம். அவர்களுக்கு எகிப்து தேசத்தில் அதிக வரவேற்பு கொடுக்கப்பட்டதினால் அங்கேயே தங்கி விடுகிறார்கள். பின்பு அவர்கள் அங்கு அடிமையாகிறார்கள். ஆதி 15:13-15 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் நிறைவேறுகிறது.

இந்த பூமியில் வாசம்பண்ணுகிற எல்லா மனுஷரும், தங்களுடைய திராணிக்குத்தக்கவாறு ஏதாவது ஒரு வேலை செய்யவேண்டும். தேசத்தின் தலைவர்கள் தங்கள் குடிமக்களுடைய வேலைகளையும், அவர்களுடைய திராணிகளையும் அறிந்திருக்கவேண்டும். ஒருவரும் சும்மாயிருக்கக்கூடாது. தேன்கூட்டிலுள்ள ஒவ்வொரு தேனீயும், தேனை சேகரிப்பதற்கு உதவி செய்கிறது. அதுபோல ஒரு தேசத்திலுள்ள எல்லோருமே ஏதாவது ஒரு வேலையை செய்து, அந்த தேசத்தின் முன்னேற்றத்திற்காக பாடுபடவேண்டும்.

கானான் தேசத்தில் பஞ்சம் கொடிதாயிருக்கிறது. அங்கே யாக்கோபின் குடும்பத்தாருடைய ஆடு மாடுகளுக்கு மேய்ச்சல் இல்லை. அவர்கள் இப்போது எகிப்து தேசத்திலே பரதேசியாய்த் தங்க வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மந்தையை மேய்க்கிற வேலை மாத்திரமே தெரியும். அவர்கள் மேய்ப்பர்கள். அவர்களுக்கு என்ன வேலை தெரியுமோ, அந்த வேலையை அவர்கள் எகிப்து தேசத்திலே செய்யவேண்டும்.

யாக்கோபும் அவருடைய குடும்பத்தாரும் கோசேன் நாட்டிலே தங்குவதற்கு பார்வோன் அனுமதி கொடுக்கிறான். யோசேப்பு எகிப்து தேசத்திற்கு நன்மை செய்திருக்கிறார். இந்தக் கொடிய பஞ்சகாலத்தில், எல்லா ஜனங்களுக்கும் ஆகாரம் கிடைப்பதற்கு யோசேப்பு திட்டங்களை வகுத்து கொடுத்திருக்கிறார். பார்வோன் யோசேப்பின் புத்தியையும் ஞானத்தையும், உதவியையும் அறிந்திருக்கிறான். பார்வோன் யோசேப்புக்கு நன்றி சொல்லும் வண்ணமாக, அவருடைய குடும்பத்தார் எல்லோரும் கோசேன் நாட்டிலே தங்குவதற்கு அனுமதி கொடுக்கிறான்.

பார்வோன் யோசேப்பை நோக்கி, "உன் தகப்பனும் உன் சகோதரரும் உன்னிடத்தில் வந்திருக்கிறார்களே. எகிப்துதேசம் உனக்கு முன்பாக இருக்கிறது; தேசத்திலுள்ள நல்ல இடத்திலே உன் தகப்பனையும் உன் சகோதரரையும் குடியேறும்படி செய்; அவர்கள் கோசேன் நாட்டிலே குடியிருக்கலாம்; அவர்களுக்குள்ளே திறமையுள்ளவர்கள் உண்டென்று உனக்குத் தெரிந்திருந்தால், அவர்களை என் ஆடுமாடுகளை விசாரிக்கிறதற்குத் தலைவராக வைக்கலாம்" (ஆதி 47:5,6) என்று சொல்லுகிறான்.

யோசேப்பின் குடும்பத்தார் கோசேன் நாட்டிலே தங்கியிருந்து தங்களுடைய ஆடுகளையும் மேய்க்கலாம். அவர்கள் பார்வோனுடைய ஆடு மாடுகளையும் விசாரிக்கலாம். ராஜாவின் ஆடு மாடுகளை மேய்ப்பது மேய்ப்பர்களுக்கு உயர்வான உத்தியோகம்.

பார்வோனும் யாக்கோபும் ஆதி 47:7-12

ஆதி 47:7. பின்பு, யோசேப்பு தன் தகப்பனாகிய யாக்கோபை அழைத்துக்கொண்டுவந்து, அவனைப் பார்வோனுக்கு முன்பாக நிறுத்தினான். யாக்கோபு பார்வோனை ஆசீர்வதித்தான்.

ஆதி 47:8. பார்வோன் யாக்கோபை நோக்கி: உமக்கு வயது என்ன என்று கேட்டான்.

ஆதி 47:9. அதற்கு யாக்கோபு: நான் பரதேசியாய்ச் சஞ்சரித்த நாட்கள் நூற்றுமுப்பது வருஷம்; என் ஆயுசுநாட்கள் கொஞ்சமும் சஞ்சலமுள்ளதுமாயிருக்கிறது; அவைகள் பரதேசிகளாய்ச் சஞ்சரித்த என் பிதாக்களுடைய ஆயுசு நாட்களுக்கு வந்து எட்டவில்லை என்று பார்வோனுடனே சொன்னான்.

ஆதி 47:10. பின்னும் யாக்கோபு பார்வோனை ஆசீர்வதித்து, அவன் சமுகத்தினின்று புறப்பட்டுப்போனான்.

ஆதி 47:11. பார்வோன் கட்டளையிட்டபடியே, யோசேப்பு தன் தகப்பனுக்கும் தன் சகோதரருக்கும் எகிப்துதேசத்திலே நல்ல நாடாகிய ராமசேஸ் என்னும் நாட்டிலே சுதந்தரம் கொடுத்து, அவர்களைக் குடியேற்றினான்.

ஆதி 47:12. யோசேப்பு தன் தகப்பனையும் தன் சகோதரரையும் தன் தகப்பனுடைய குடும்பத்தார் அனைவரையும், அவரவர்கள் குடும்பத்திற்குத்தக்கதாய் ஆகாரம் கொடுத்து ஆதரித்துவந்தான்.

யோசேப்பு தன் தகப்பனாராகிய யாக்கோபையும் கனம்பண்ணுகிறார். யோசேப்பு தன் தகப்பனாகிய யாக்கோபை அழைத்துக்கொண்டுவந்து, அவரைப் பார்வோனுக்கு முன்பாக நிறுத்துகிறார். யாக்கோபு பார்வோனை ஆசீர்வதிக்கிறார் (ஆதி 47:7).

யாக்கோபு பார்வோனை ஆசீர்வதிக்கிறார். யாக்கோபு பார்வோனுக்கு வந்தனம் செலுத்துகிறார் (2இராஜா 4:29). வெகுமதிகளைக் கொடுக்கிறார் (2சாமு 8:10) யாக்கோபு பார்வோனுடைய ஷேமத்திற்காக ஜெபம்பண்ணுகிறார் (எண் 6:23-27). பார்வோனுடைய அன்பிற்காக யாக்கோபுக்கு நன்றி கூறுகிறார்.

பார்வோன் யாக்கோபை நோக்கி: "உமக்கு வயது என்ன" என்று கேட்கிறான். அதற்கு யாக்கோபு, "நான் பரதேசியாய்ச் சஞ்சரித்த நாட்கள் நூற்றுமுப்பது வருஷம்; என் ஆயுசுநாட்கள் கொஞ்சமும் சஞ்சலமுள்ளதுமாயிருக்கிறது; அவைகள் பரதேசிகளாய்ச் சஞ்சரித்த என் பிதாக்களுடைய ஆயுசு நாட்களுக்கு வந்து எட்டவில்லை" (ஆதி 47:8,9) என்று பார்வோனுடனே சொல்லுகிறார்.

பொதுவாக வயது முதிர்ந்த பெரியோர்களைப் பார்க்கும்போது, அவர்களுடைய வயதைப்பற்றி விசாரிப்பது வழக்கம். முதிர்வயது கனமுள்ளது. அவர்களுக்கு நல்ல அனுபவம் இருக்கும்.

"நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம் பண்ணி, உன் தேவனுக்குப் பயப்படுவாயாக; நான் கர்த்தர்" (லேவி 19:32).

யாக்கோபு பார்வோனுக்கு விநோதமான பிரதியுத்தரம் சொல்லுகிறார். யாக்கோபு யோசேப்பின் தகப்பனராகயிருந்தாலும், அவர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு முற்பிதாவாகவும் இருக்கிறார். யாக்கோபு பார்வோனுக்கு முன்பாக, இஸ்ரவேலின் முற்பிதாவாகயிருந்து, பார்வோனை ஆசீர்வதிக்கிறார்.

யாக்கோபு தன் வயதைப்பற்றிச் சொல்லும்போது, "நான் பரதேசியாய் சஞ்சரித்த நாட்கள் நூற்றுமுப்பது வருஷம்" என்று சொல்லுகிறார். இந்தப் பூமியில் ஜீவனோடிருப்பது, யாக்கோபுக்கு பரதேசியாய் சஞ்சரிப்பதுபோல தெரிகிறது. கர்த்தருடைய ஜனம் இந்தப் பிரபஞ்சத்திற்கு அந்நியராயிருக்கிறார்கள். பரமதேசமே அவர்களுக்கு சொந்த தேசம். இந்தப் பூமியானது நமக்கு நிரந்தர வாசஸ்தலமல்ல. இது நாம் பரதேசியாய் தங்கியிருக்கிற ஸ்தலம். விசுவாசிகளாகிய நமக்கு இந்தப் பூமியானது நமக்கு நித்திய வீடாகயிராமல், நாம் வந்துபோகும் சத்திரத்தைப்போல இருக்கிறது.

யாக்கோபு தன்னுடைய வயதைப்பற்றிச் சொல்லும்போது, அதை நாட்களில் கணக்கிட்டுச் சொல்லுகிறார். "நான் பரதேசியாய் சஞ்சரித்த நாட்கள்" என்று தன்னுடைய வயதைப்பற்றி யாக்கோபு பார்வோனுக்கு சொல்லுகிறார். தன்னுடைய ஆயுசுநாட்கள் கொஞ்சமும் சஞ்சலமுள்ளதுமாயிருக்கிறது என்று யாக்கோபு பார்வோனுக்கு தன்னைப்பற்றிச் சொல்லுகிறார்.

யாக்கோபு இதுவரையிலும் வாழ்ந்த காலமெல்லாம், அவருக்கு சஞ்சலம் நிரம்பிய காலமாகவே இருந்திருக்கிறது. சந்தோஷமான காலம் அவருக்கு இனிமேல் தான் வரப்போகிறது. யாக்கோபின் ஆயுசுநாட்கள், அவருடைய முற்பிதாக்களின் ஆயுசுநாட்களோடே ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவை கொஞ்சமாயிருக்கிறது.

யாக்கோபு பார்வோனிடத்தில் பேசுவதற்கு முன்பாகவே அவனை ஆசீர்வதிக்கிறார். அவர் பார்வோனிடத்தில் தன்னைப்பற்றி சொன்ன பின்பு, அவர் மறுபடியும் பார்வோனை ஆசீர்வதித்து, அவனுடைய சமுகத்தினின்று புறப்பட்டுப்போகிறார் (ஆதி 47:10). யாக்கோபு இஸ்ரவேலுடைய முற்பிதாவின் ஸ்தானத்திலிருந்து பார்வோனை ஆசீர்வதிக்கிறார். யாக்கோபு தீர்க்கதரிசியின் அதிகாரத்தை பயன்படுத்தி, அவர் பார்வோனுக்காக ஜெபம்பண்ணுகிறார்.

"நான் பரதேசியாய்ச் சஞ்சரித்த நாட்கள் நூற்றுமுப்பது வருஷம்" என்று யாக்கோபு சொல்லுகிறார். யாக்கோபின் வயது 130. இதன் அடிப்படையில் பார்க்கும்போது, யாக்கோபின் புத்திரருக்கு கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வயதாக இருக்க வேண்டும் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

ரூபன் - 51 வயது

சிமியோன் - 50 வயது

லேவி - 49 வயது

யூதா - 48 வயது

தாண் - 46 வயது

நப்தலி - 45 வயது

காத் - 44 வயது

ஆசேர் - 43 வயது

இசக்கார் - 42 வயது

செபுலோன் - 41 வயது

தீனாள் - 40 வயது

யோசேப்பு - 39 வயது

பென்யமீன் - 30 வயது

தன் ஆயுசுநாட்கள் கொஞ்சமும் சஞ்சலமுமாய் இருக்கிறது என்று யாக்கோபு பார்வோனிடம் கூறுகிறார். ஆபிரகாமின் வயது 175 ஆதி 25:7). ஈசாக்கின் வயது 180 (ஆதி 35:28-29). இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது யாக்கோபின் வயது கொஞ்சம்தான்.

சஞ்சலம் என்பதற்கான எபிரெய வார்த்தை "ரா" என்பதாகும். யாக்கோபின் வருஷங்கள் எல்லாமே சஞ்சலம் நிறைந்ததாக இருக்கிறது. அவர் பல பாடுகளை அனுபவித்தார். ஏசாவோடும், லாபானோடும் யாக்கோபிற்குப் பிரச்சனை உண்டாயிற்று. தன் குமாரரோடும், யாக்கோபிற்குப் பிரச்சனை வந்தது.

யாக்கோபு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் இராட்சதரோடு குடியிருந்து, அநேக பாடுகளை அனுபவித்தார். தனக்கென்று சொந்தமாக எந்த இடமுமில்லை. தன்னுடைய குடும்பத்தார், வேலையாட்கள், கால்நடைகள், உடமைகள் ஆகிய அனைத்தையும் எடுத்துக் கொண்டு ஒவ்வொரு ஊராகப் பரதேசியாய்ச் சுற்றி அலைந்தது யாக்கோபிற்குச் சஞ்சலம் நிறைந்ததாக இருந்திருக்க வேண்டும். (ஆதி 15:13-15; அப் 7:5-17; எபி 11:9).

யாக்கோபு தன்னுடைய ஜீவனை ஆபிரகாமோடும், ஈசாக்கோடும் ஒப்பிடுகிறார். அவர்களும் அந்நிய தேசத்தில் பரதேசிகளாகச் சஞ்சரித்தார்கள். 430 வருஷங்களாக தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்கள் அந்நிய தேசத்தில் பரதேசியாய்ச் சஞ்சரித்து வருகிறார்கள். (அப் 7:3-7; எபி 11:8-16) தேவன் ஆபிரகாமை அழைத்து 215 வருஷம் ஆயிற்று. இந்த 215 வருஷத்தில் ஈசாக்கு பிறப்பதற்கு முன்பான 25 வருஷங்களும் அடங்கியிருக்கிறது. (ஆதி 12:4; ஆதி 21:5) யாக்கோபு பிறப்பதற்கு முன்பாக 60 வருஷமும் (ஆதி 25:26), யாக்கோபு எகிப்திற்குப் போவதற்கு முன்பாக ஜீவித்த 130 வருஷங்களும் (ஆதி 47:9), இந்த 215 வருஷங்களில் அடங்கும்.

ஆபிரகாம் (ஆதி 12:1-25:11), ஈசாக்கு (ஆதி 21:1-35:29) யாக்கோபு (ஆதி 25:19-47:9), யோசேப்பும், அவருடைய சகோதரரும் (ஆதி 37:1-47:9) ஆகியோருடைய ஜீவியகாலம் மேலே கூறப்பட்டிருக்கும் முதலாவது 215 வருஷத்திற்குள் நடைபெறுகிறது. இக்காலத்தில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு ஆகியோருடைய ஜீவியங்கள் தொடர்ச்சியாக வருகின்றது.

இஸ்ரவேலின் வரலாற்றில் இரண்டாவது 215 வருஷங்கள் யாக்கோபு எகிப்திற்குள் நுழைவதிலிருந்து ஆரம்பமாகி, மோசேயின் 80 ஆவது வயது வரையிலும் வருகிறது. (ஆதி 47:9 - யாத் 12:41). தேவன் ஆபிரகாமை கானானுக்குப் புறப்பட்டு வருமாறு அழைத்த நாளிலிருந்து 430 ஆவது வருஷத்தில் "அன்றைய தினமே" இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்தை விட்டுப் புறப்பட்டு போகிறார்கள். (ஆதி 12:1-4; யாத் 12:40-51).

யோசேப்பின் பஞ்சகால நிர்வாகம்
ஆதி 47:13-26

ஆதி 47:13. பஞ்சம் மிகவும் கொடிதாயிருந்தது; தேசமெங்கும் ஆகாரம் கிடையாமற்போயிற்று: எகிப்துதேசமும் கானான் தேசமும் பஞ்சத்தினாலே மெலிந்து போயிற்று.

ஆதி 47:14. யோசேப்பு எகிப்து தேசத்திலும் கானான் தேசத்திலுமுள்ள பணத்தையெல்லாம் தானியம் கொண்டவர்களிடத்தில் வாங்கி, அதைப் பார்வோன் அரமனையிலே கொண்டுபோய்ச் சேர்த்தான்.

ஆதி 47:15. எகிப்துதேசத்திலும் கானான்தேசத்திலுமுள்ள பணம் செலவழிந்தபோது, எகிப்தியர் எல்லாரும் யோசேப்பினிடத்தில் வந்து: எங்களுக்கு ஆகாரம் தாரும்; பணம் இல்லை, அதினால் நாங்கள் உமது சமுகத்தில் சாகவேண்டுமோ என்றார்கள்

ஆதி 47:16. அதற்கு யோசேப்பு: உங்களிடத்தில் பணம் இல்லாமற்போனால், உங்கள் ஆடுமாடுகளைக் கொடுங்கள்; அவைகளுக்குப் பதிலாக உங்களுக்குத் தானியம் கொடுக்கிறேன் என்றான்.

ஆதி 47:17. அவர்கள் தங்கள் ஆடுமாடு முதலானவைகளை யோசேப்பினிடத்தில் கொண்டுவந்தார்கள்; யோசேப்பு குதிரைகளையும் ஆடுகளையும் மாடுகளையும் கழுதைகளையும் வாங்கிக்கொண்டு, அந்த வருஷம் அவர்களுடைய ஆடுமாடு முதலான எல்லாவற்றிற்கும் பதிலாக அவர்களுக்கு ஆகாரம் கொடுத்து, அவர்களை ஆதரித்தான்.

ஆதி 47:18. அந்த வருஷம் முடிந்தபின், மறுவருஷத்திலே அவர்கள் அவனிடத்தில் வந்து: பணமும் செலவழிந்துபோயிற்று; எங்கள் ஆடுமாடு முதலானவைகளும் எங்கள் ஆண்டவனைச் சேர்ந்தது; எங்கள் சரீரமும் எங்கள் நிலமுமே ஒழிய, எங்கள் ஆண்டவனுக்கு முன்பாக மீதியானது ஒன்றும் இல்லை; இது எங்கள் ஆண்டவனுக்குத் தெரியாத காரியம் அல்ல.

ஆதி 47:19. நாங்களும் எங்கள் நிலங்களும் உம்முடைய கண்களுக்கு முன்பாக அழிந்து போகலாமா? நீர் எங்களையும் எங்கள் நிலங்களையும் வாங்கிக்கொண்டு, ஆகாரம் கொடுக்கவேண்டும்; நாங்களும் எங்கள் நிலங்களும் பார்வோனுக்கு ஆதீனமாயிருப்போம்; நாங்கள் சாகாமல் உயிரோடிருக்கவும், நிலங்கள் பாழாய்ப்போகாமலிருக்கவும், எங்களுக்கு விதைத் தானியத்தைத்தாரும் என்றார்கள்.

ஆதி 47:20. அப்படியே எகிப்தியர் தங்களுக்குப் பஞ்சமேலிட்டபடியால் அவரவர் தங்கள் தங்கள் வயல் நிலங்களை விற்றார்கள்; யோசேப்பு எகிப்தின் நிலங்களை விற்றார்கள்; யோசேப்பு எகிப்தின் நிலங்கள் யாவையும் பார்வோனுக்காகக் கொண்டான்; இவ்விதமாய் அந்தப் பூமி பார்வோனுடையதாயிற்று.

ஆதி 47:21. மேலும் அவன் எகிப்தின் ஒரு எல்லைமுதல் மறு எல்லைவரைக்குமுள்ள ஜனங்களை அந்தந்தப் பட்டணங்களில் குடிமாறிப்போகப்பண்ணினான்.

ஆதி 47:22. ஆசாரியருடைய நிலத்தை மாத்திரம் அவன் கொள்ளவில்லை; அது பார்வோனாலே ஆசாரியருக்கு மானியமாகக் கொடுக்கப்பட்டிருந்ததினாலும், பார்வோன் அவர்களுக்குக் கொடுத்த மானியத்தினாலே அவர்கள் ஜீவனம்பண்ணிவந்ததினாலும், அவர்கள் தங்கள் நிலத்தை விற்கவில்லை.

ஆதி 47:23. பின்னும் யோசேப்பு ஜனங்களை நோக்கி: இதோ, இன்று உங்களையும் உங்கள் நிலங்களையும் பார்வோனுக்காக வாங்கிக்கொண்டேன்; இதோ, உங்களுக்குக் கொடுக்கப்படுகிற விதைத் தானியம், இதை நிலத்தில் விதையுங்கள்.

ஆதி 47:24. விளைவில் ஐந்தில் ஒரு பங்கைப் பார்வோனுக்குக் கொடுக்கவேண்டும்; மற்ற நாலுபங்கும் வயலுக்கு விதையாகவும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் ஆகாரமாகவும் உங்களுடையதாயிருக்கட்டும் என்றான்.

ஆதி 47:25. அப்பொழுது அவர்கள்: நீர் எங்கள் பிராணனைக் காப்பாற்றினீர்; எங்கள் ஆண்டவனுடைய கண்களில் எங்களுக்குத் தயவு கிடைக்கவேண்டும்; நாங்கள் பார்வோனுக்கு அடிமைகளாயிருக்கிறோம் என்றார்கள்.

ஆதி 47:26. ஐந்தில் ஒன்று பார்வோனுக்குச் சேரும் வாரம் என்று யோசேப்பு இட்டகட்டளைப்படி எகிப்து தேசத்திலே இந்நாள்வரைக்கும் நடந்துவருகிறது; ஆசாரியரின் நிலம் மாத்திரம் பார்வோனைச் சேராமல் நீங்கலாயிருந்தது.

யோசேப்பு தன் தகப்பனாரையும், தன் சகோதரரையும் எகிப்து தேசத்திலுள்ள நல்ல இடத்திலே குடியேறும்படி செய்யவேண்டும். இது பார்வோன் யோசேப்புக்கு கொடுத்திருக்கிற கட்டளை (ஆதி 47:6). அதே வேளையில் தன் குடும்பத்தாருக்கு நன்மை செய்வது யோசேப்பின் கடமையாகவும் இருக்கிறது.

பார்வோன் கட்டளையிட்டபடியே, யோசேப்பு தன் தகப்பனுக்கும் தன் சகோதரருக்கும் எகிப்துதேசத்திலே நல்ல நாடாகிய ராமசேஸ் என்னும் நாட்டிலே சுதந்தரம் கொடுத்து, அவர்களைக் குடியேற்றுகிறார். யோசேப்பு தன் தகப்பனையும் தன் சகோதரரையும் தன் தகப்பனுடைய குடும்பத்தார் அனைவரையும், அவரவர்கள் குடும்பத்திற்குத்தக்கதாய் ஆகாரம் கொடுத்து ஆதரித்துவருகிறார் (ஆதி 47:11,12).

"ராமசேஸ்" என்பது கோசேனின் பிற்காலத்து பெயர். (ஆதி 46:34). இஸ்ரவேலர்கள் பிற்காலத்தில் இதை மறுபடியும் கட்டினார்கள். (யாத் 1:11).

யோசேப்பு எகிப்து தேசத்தில் பெரிய அதிகாரியாயிருக்கிறார். அவர் தன்னுடைய குடும்பத்தை பராமரிப்பதுபோல, எகிப்து தேசத்தையும் பராமரிக்கவேண்டும். பஞ்சம் மிகவும் கொடிதாயிருக்கிறது; தேசமெங்கும் ஆகாரம் கிடையாமற்போயிற்று: எகிப்து தேசமும் கானான் தேசமும் பஞ்சத்தினாலே மெலிந்து போயிற்று (ஆதி 47:13).

நம்முடைய அன்றாட தேவைகளுக்கு நாம் கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பை சார்ந்து ஜீவிக்கவேண்டும். நம்முடைய ஜீவியத்தில், சிறிதுகாலம் செழிப்பான காலம் போலவும், வேறு சில காலங்கள் பஞ்சகாலங்கள் போலவும் இருக்கும். கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, நமக்கு கிடைக்கும் அப்பம் என்னும் ஆதரவு கோலை சிறிதுகாலத்திற்கு முறித்துப்போடுகிறார். அப்படிப்பட்ட காலத்தில், கர்த்தர் நமக்கு உதவிசெய்யவில்லையென்றால், நாம் எல்லோரும் மரித்துப்போவோம். பட்டினியினால் அழிந்துபோவாம்.

நமக்கு எவ்வளவுதான் செல்வமும் ஆஸ்தியும் இருந்தாலும், நமக்கு தானியம் இல்லையென்றால், நமக்கு போஜனமில்லை. நம்முடைய ஐசுவரியம் நம்முடைய பசியைப் போக்காது. மெய்யான ஆசீர்வாதம் பரலோகத்திலிருந்தான் வரும். கர்த்தர் வானத்தை திறந்து, இந்தப் பூமிக்கு மழையைக் கொடுக்கவில்லையென்றால், பூமியிலே கொடிய பஞ்சம் உண்டாகும்.

தேசத்திலே இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்கு மழையே பெய்யவில்லையென்றால் பூமி வறண்டுபோகும். தானிய விளைச்சல் இருக்காது. மனுஷருக்கு புசிக்க போஜனம் இருக்காது. ஆடு மாடுகளுக்கு மேய்ச்சல் நிலமும் இருக்காது. சர்வசிருஷ்டிகளும் தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும், தெய்வீக பராமரிப்பையும் நம்பி ஜீவிக்கிறது. நாம் கர்த்தருடைய அன்பிலே நிலைத்திருக்கும்போது, அவருடைய தெய்வீக பராமரிப்பு நமக்கு கிடைக்கும்.

தேசத்தில் பஞ்சம் மிகவும் கொடிதாயிருக்கிறது. இதற்கு முன்பு தேசத்திலே ஏழு வருஷங்கள் தாராளமாயும் செழிப்பாயும் இருந்தது. செழிப்பான காலங்களில், யோசேப்பு விளைச்சலில் ஒரு பகுதியை சேமித்து வைத்தார். பஞ்ச காலத்திற்கு தப்பிப்பதற்காக, செழிப்பின் காலத்திலே தானியம் சேமிக்கப்படுகிறது. இது மனுஷருடைய ஞானம். கர்த்தரே மனுஷருக்கு இப்படிப்பட்ட ஞானத்தைக் கொடுக்கிறார்.

பஞ்சகாலத்திற்கு தப்பிப்பதற்காக, எகிப்தியர்கள் பரிபூரண காலத்தில் விளைந்த தானியத்தை சேமித்து வைக்கிறார்கள். அவர்கள் செய்த காரியம், விசுவாசிகளாகிய நமக்கு ஒரு முன்மாதிரியாக சொல்லப்பட்டிருக்கிறது.

நமக்கும் செழிப்பின் காலமும், பஞ்சகாலமும் மாறி மாறி வரும். செழிப்பின் காலத்தில் நமக்கு கிடைக்கிற எல்லா ஆசீர்வாதங்களையும் மொத்தமாக செலவு பண்ணிவிடக்கூடாது. நம்முடைய வருமானத்தின் ஒரு பகுதியை சேமிக்கவேண்டும். நம்முடைய வாழ்க்கையில் நமக்கு குறைவு உண்டாகும்போது, நம்முடைய சேமிப்பு நமக்கு உதவியாயிருக்கும்.

எகிப்துதேசத்திலும் கானான் தேசத்திலுமுள்ள பணம் செலவழிந்தபோது, எகிப்தியர் எல்லாரும் யோசேப்பினிடத்தில் வந்து: "எங்களுக்கு ஆகாரம் தாரும்; பணம் இல்லை, அதினால் நாங்கள் உமது சமுகத்தில் சாகவேண்டுமோ" (ஆதி 47:15) என்று சொல்லுகிறார்கள். இது வரையிலும் ஜனங்கள் பணத்தைக் கொடுத்து தானியத்தை வாங்கினார்கள். இப்போதோ அவர்களிடத்தில் பணம் இல்லை. அவர்களுடைய பணமெல்லாம் செலவழிந்து போயிற்று.

யோசேப்பு அவர்களை நோக்கி, "உங்களிடத்தில் பணம் இல்லாமற்போனால், உங்கள் ஆடுமாடுகளைக் கொடுங்கள்; அவைகளுக்குப் பதிலாக உங்களுக்குத் தானியம் கொடுக்கிறேன்" (ஆதி 47:16) என்று சொல்லுகிறார். யோசேப்பு ஜனங்களிடத்தில் பணத்திற்கு பதிலாக ஆடு மாடுகளை பெற்றுக்கொண்டு அவர்களுக்கு தானியம் கொடுக்கிறார்.

அவர்கள் தங்கள் ஆடுமாடு முதலானவைகளை யோசேப்பினிடத்தில் கொண்டுவருகிறார்கள்; யோசேப்பு குதிரைகளையும் ஆடுகளையும் மாடுகளையும் கழுதைகளையும் வாங்கிக்கொண்டு, அந்த வருஷம் அவர்களுடைய ஆடுமாடு முதலான எல்லாவற்றிற்கும் பதிலாக அவர்களுக்கு ஆகாரம் கொடுத்து, அவர்களை ஆதரிக்கிறார் (ஆதி 47:17).

ஒரு வருஷம் முடிந்த பின்பு, ஜனங்களிடத்தில் ஆடு மாடுகளும் இல்லை. அவர்களுடைய பணமும் ஏற்கெனவே செலவழிந்து போயிற்று. தேசத்தில் பஞ்சம் மிகவும் கொடிதாயிருக்கிறது. தேசமெங்கும் ஆகாரம் கிடையாமல் போயிற்று.

அந்த வருஷம் முடிந்தபின், மறுவருஷத்திலே அவர்கள் யோசேப்பினிடத்தில் வந்து, "பணமும் செலவழிந்துபோயிற்று; எங்கள் ஆடுமாடு முதலானவைகளும் எங்கள் ஆண்டவனைச் சேர்ந்தது; எங்கள் சரீரமும் எங்கள் நிலமுமே ஒழிய, எங்கள் ஆண்டவனுக்கு முன்பாக மீதியானது ஒன்றும் இல்லை; இது எங்கள் ஆண்டவனுக்குத் தெரியாத காரியம் அல்ல. நாங்களும் எங்கள் நிலங்களும் உம்முடைய கண்களுக்கு முன்பாக அழிந்து போகலாமா? நீர் எங்களையும் எங்கள் நிலங்களையும் வாங்கிக்கொண்டு, ஆகாரம் கொடுக்கவேண்டும்; நாங்களும் எங்கள் நிலங்களும் பார்வோனுக்கு ஆதீனமாயிருப்போம்; நாங்கள் சாகாமல் உயிரோடிருக்கவும், நிலங்கள் பாழாய்ப்போகாமாலிருக்கவும், எங்களுக்கு விதைத் தானியத்தைத்தாரும்" (ஆதி 47:18,19) என்று சொல்லுகிறார்கள்.

"அந்த வருஷம் முடிந்தபின், மறுவருஷத்திலே" என்பது பஞ்சம் முடிவதற்கு இரண்டு வருஷத்திற்கு முன்பாக இருக்கலாம். யாக்கோபு, எகிப்திற்குப் போன இரண்டுவருஷத்திற்குப் பின்பு பஞ்சம் முடிவு பெற்றது. (ஆதி 45:6). ஜனங்கள் தங்களுடைய பணத்தை எல்லாம் செலவழித்து விட்டார்கள். தங்களுடைய ஆடுமாடுகளை வைத்து, இரண்டு வருஷங்களுக்குத் தானியங்களை வாங்கினார்கள். இப்பொழுது தங்களுடைய நிலங்களையும், தங்களையும் யோசேப்பிடம் கொடுத்து, தானியம் வாங்குகிறார்கள் (ஆதி 45:11).

எகிப்தியர் தங்களுக்கு பஞ்சம் மேலிட்டபடியால், அவரவர் தங்கள் ஆடுமாடுகளையும், அதன்பின்பு தங்கள் நிலங்களையும் விற்கிறார்கள். யோசேப்பு எகிப்தின் நிலங்கள் யாவையும் பார்வோனுக்காகக் கொள்கிறார்; இவ்விதமாய் அந்தப் பூமி பார்வோனுடையதாயிற்று.

பார்வோன் ஏற்கெனவே மெலிந்த பசுக்களை தன்னுடைய சொப்பனத்தில் கண்டான். இப்போது எகிப்து தேசத்திலுள்ள பசுக்களெல்லாம் மெலிந்து காணப்படுகிறது. எகிப்து தேசத்தாருக்கு புசிக்கவும் தானியமில்லை. விதைக்கவும் தானியமில்லை. அவர்களுடைய மந்தைகளுக்கும் தீவனமில்லை. அவர்கள் தங்களிடத்திலுள்ள எல்லாவற்றையும் விற்றுவிட்டார்கள். இனிமேல் விற்பதற்கு அவர்களிடத்தில் ஒன்றுமில்லை. "எங்கள் சரீரமும், எங்கள் நிலமுமே ஒழிய, எங்கள் ஆண்டவனுக்கு முன்பாக மீதியானது ஒன்றுமில்லை" (ஆதி 47:18) என்று சொல்லுகிறார்கள்.

எகிப்தியர்கள் தங்கள் நிலத்தையும் விற்றுவிட்டார்கள். இனிமேல் அவர்களுடைய சரீரம் மாத்திரமே, பார்வோனுக்கு முன்பாக மீதியாயிருக்கிறது. தங்கள் போஜனத்திற்காக அவர்கள் தங்கள் சரீரத்தையும் விற்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்களுடைய சரீரத்தினால் அவர்கள் கடினமாய் வேலை செய்ய முடியும். அவர்கள் இனிமேல் தங்கள் சரீர உழைப்புக்கு கூலியாக தானியத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அவர்களுடைய பிராணன் காப்பாற்றப்படவேண்டும்.

அந்தப் பூமி பார்வோனுடையதாயிற்று. யோசேப்பு செய்தது சரிதானா என்று சிலர் விவாதம் பண்ணுகிறார்கள். அவர் பார்வோனுக்கு உண்மையுள்ள வேலைக்காரராக நடந்து கொள்கிறார். தானியம் பார்வோனுடையது. செழிப்பான காலத்தில் பார்வோனுடைய தானியத்தை யோசேப்பு சேர்த்து வைத்தார். யோசேப்பு தானியத்தைச் சேர்த்து வைக்கவில்லை என்றால், பஞ்சக்காலத்தில் ஒருவருக்கும் உணவு கிடைத்திருக்காது. தங்களுடைய விளைச்சலில் ஐந்தில் ஒன்றை ஜனங்கள் பார்வோனுக்குக் கொடுக்கிறார்கள். பார்வோன் யாரையும் அடிமைப்படுத்தவில்லை. (ஆதி 47:24).

யோசேப்பு எகிப்து தேசத்திலே ஜனங்களுக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தி தருகிறார். மேலும் யோசேப்பு எகிப்தின் ஒரு எல்லைமுதல் மறு எல்லைவரைக்குமுள்ள ஜனங்களை அந்தந்தப் பட்டணங்களில் குடிமாறிப்போகப்பண்ணுகிறார். கிராமத்திலிருக்கிறவர்கள் எல்லோரும் இப்போது நகரத்தில் குடியேற்றப்படுகிறார்கள். இது மிகவும் கடினமான வேலையாகயிருந்தாலும், தேசத்தில் பஞ்சம் கொடிதாயிருப்பதினால், ஜனங்கள் யோசேப்பின் கட்டளைக்கு கீழ்ப்படிகிறார்கள் (ஆதி 47:21).

ஜனங்களுக்கு ஆகாரம் கொடுப்பதற்கு எளிதாக இருப்பதற்காகவும், தானியத்தைப் பங்கிடும் வேலையை எளிதாக்குவதற்காகவும் யோசேப்பு ஜனங்களை அந்தந்தப் பட்டணங்களில் குடிமாறிப்போகப்பண்ணுகிறார்.

யோசேப்பு ஆசாரியருடைய நிலத்தை மாத்திரம் கொள்ளவில்லை; அது பார்வோனாலே ஆசாரியருக்கு மானியமாகக் கொடுக்கப்பட்டிருந்ததினாலும், பார்வோன் அவர்களுக்குக் கொடுத்த மானியத்தினாலே அவர்கள் ஜீவனம்பண்ணிவந்ததினாலும், அவர்கள் தங்கள் நிலத்தை விற்கவில்லை (ஆதி 47:22).

எகிப்து தேசத்தில் காணப்படும் பழங்கால சுவடிகளில் எழுதப்பட்டிருக்கும் செய்திகளும், வேதாகமத்தில் இந்தப் பகுதியில் எழுதப்பட்டிருக்கும் செய்திகளும் ஒன்றுக்கொன்று முரண்படாமல் ஒன்றுபோல் உள்ளது.

தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிருக்கிறது. பார்வோனுடைய களஞ்சியங்களை தவிர வேறு எங்கும் தானியமில்லை. ஜனங்கள் எல்லோரும் பார்வோனிடத்தில் தானியத்திற்காக வருகிறார்கள். அவர்களிடத்திலுள்ள பணமெல்லாம் செலவழிந்துபோயிற்று. அவர்கள் தங்கள் ஆடுமாடுகளை கொடுத்தும் தானியம் வாங்குகிறார்கள். இப்போது அவர்களிடத்தில் ஆடுமாடுகளும் இல்லை.

யோசேப்பு எகிப்து தேசத்திலுள்ள தானியத்திற்கு விலை கிரயம் நிர்ணயம்பண்ணுகிறார். அவர் தானியத்தின் விலைக்காக யாரிடத்திலும் பேரம் பேசவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஜனங்கள் தானியத்திற்கு எந்தக் கிரயத்தையும் கொடுப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் ஒன்றும் இல்லாதபோது அவர்கள் தங்களுடைய நிலத்தையும் சரீரத்தையும் தானியத்திற்காக கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார்கள்.

யோசேப்பு தேசத்தில் ஏற்பட்டிருக்கிற பஞ்சத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி, ஜனங்களை வஞ்சிக்க விரும்பவில்லை. யோசேப்பு அவர்களை அதிகமாக துன்பப்படுத்தவும், வேதனைப்படுத்தவும் விரும்பவில்லை. அதே வேளையில் யோசேப்பு அவர்களுக்கு இலவசமாக தானியத்தைக் கொடுக்கவும் ஆயத்தமாயில்லை. யோசேப்பு ஒரு புதிய திட்டத்தை வகுத்து அதை தானியம் வாங்க வருகிற ஜனங்களுக்கு சொல்லுகிறார்.

யோசேப்பு ஜனங்களை நோக்கி, "இதோ, இன்று உங்களையும் உங்கள் நிலங்களையும் பார்வோனுக்காக வாங்கிக்கொண்டேன்; இதோ, உங்களுக்குக் கொடுக்கப்படுகிற விதைத் தானியம், இதை நிலத்தில் விதையுங்கள். விளைவில் ஐந்தில் ஒரு பங்கைப் பார்வோனுக்குக் கொடுக்கவேண்டும்; மற்ற நாலுபங்கும் வயலுக்கு விதையாகவும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் ஆகாரமாகவும் உங்களுடையதாயிருக்கட்டும்" (ஆதி 47:23,24) என்று சொல்லுகிறார்.

ஐந்தாவது பகுதி இரக்கத்தையும், நீதியையும் குறிக்கும். அரசாங்கத்தை நடத்துவதற்கு வேறு எவ்வித வரியும் விதிக்கப்படாமல் ஐந்தில் ஒரு பங்கு விளைச்சல் மூலமாக அரசாங்கம் நடைபெறுகிறது. யோசேப்பு பார்வோனுக்கு ஞானமாக எல்லாவற்றையும் செய்து முடிக்கிறார்.

ஜனங்கள் தங்களுக்கு நீதி செய்யப்பட்டதாக நம்புகிறார்கள். பார்வோனுடைய நிலத்தில் தாங்கள் பயிரிடுகிறவர்களாக இருப்போம் என்று வாக்குப்பண்ணுகிறார்கள்.

கிழக்கு தேசங்களில் இந்தப் பழக்கம் இன்றும் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. நிலத்தில் வேலை செய்கிறவர்கள் நில உடமையாளருக்கு இருபது சதவிகிதம் விளைச்சலைக் கொடுக்கிறார்கள்.

இந்த புதிய ஒப்பந்தத்தின் பிரகாரம் ஜனங்களுக்கு நிலமும் தானியமும் கொடுக்கப்படும். அவர்கள் அந்த தானியத்தை நிலத்தில் விதைக்கும் விதை தானியமாக பயன்படுத்தவேண்டும். விளைவில் ஐந்தில் ஒரு பங்கு பார்வோனுக்கு. மற்ற நாலுபங்கு ஜனங்களுக்கு. இதனால் பார்வோனுடைய களஞ்சியத்திலும் தானியம் நிரம்புகிறது. ஜனங்களுக்கும் தானியம் கிடைக்கிறது.

யோசேப்பின் திட்டம் ஜனங்களுக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. அவர்கள் யோசேப்பின் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, அவரை நோக்கி, "நீர் எங்கள் பிராணனைக் காப்பாற்றினீர்; எங்கள் ஆண்டவனுடைய கண்களில் எங்களுக்குத் தயவு கிடைக்கவேண்டும்; நாங்கள் பார்வோனுக்கு அடிமைகளாயிருக்கிறோம்" (ஆதி 47:25) என்று சொல்லுகிறார்கள்.

விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கு என்பது பார்வோனுக்கு சேரும் வாரம் என்று அழைக்கப்படுகிறது. இது யோசேப்பு இட்ட கட்டளை. இந்தக் கட்டளையின் படியே எகிப்து தேசத்தில் இந்நாள் வரைக்கும் நடந்து வருகிறது (ஆதி 47:26). யோசேப்பு எகிப்து தேசத்தின் நிலங்கள் யாவையும் பார்வோனுக்காக கொள்கிறார். ஆனாலும் ஆசாரியரின் நிலம் மாத்திரம் பார்வோனை சேராதிருக்கிறது. ஆசாரியரின் நிலத்தை பார்வோன் அவர்களுக்கு மானியமாக கொடுத்திருக்கிறார். அந்த மானியத்தினால் அவர்கள் ஜீவனம் பண்ணி வருகிறார்கள்.

யோசேப்பு எகிப்து தேசத்திலுள்ள தானியத்தை ஜனங்களுக்கு விற்று, பணமாகவும், ஆடு மாடுகளாகவும், நிலமாகவும் பெற்றுக்கொள்கிறார். அவர் பணத்தையோ, ஆடுமாடுகளையோ, நிலத்தையோ தனக்கு சொந்தமாக்கிக் கொள்ளவில்லை. அவையெல்லாம் பார்வோனையே சேருகிறது. யோசேப்பு பார்வோனுக்கு உண்மையுள்ள ஊழியக்காரனாயிருக்கிறார். இதனால் அந்தப் பூமி பார்வோனுடையதாயிற்று.

யோசேப்பு எகிப்தின் ஒரு எல்லை முதல் மறு எல்லை வரைக்குமுள்ள ஜனங்களை அந்தந்த பட்டணங்களில் குடிமாறிப்போகப் பண்ணுகிறார். இது ஜனங்களுக்கு மிகவும் கஷ்டமான காரியம். ஆனாலும் அவர்கள் யோசேப்பின்மீது அதிக மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள். ஜனங்கள் யோசேப்பை நோக்கி, "நீர் எங்கள் பிராணனைக் காப்பாற்றினீர்" என்றும், "நாங்கள் பார்வோனுக்கு அடிமைகளாயிருக்கிறோம்" என்றும் சொல்லுகிறார்கள். ஆகையினால் ஜனங்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட பட்டணங்களில் குடிமாறிப்போகும்போது, அதனால் ஏற்படும் கஷ்டங்களை தாங்கிக்கொள்கிறார்கள். அவர்கள் யோசேப்புக்காகவும், பார்வோனுக்காகவும் எதையும் செய்ய ஆயத்தமாயிருக்கிறார்கள்.

ஆசாரியர்களுக்கு தானியம் மானியமாக கொடுக்கப்படுகிறது. அவர்கள் தாங்கள் பெற்றுக்கொள்ளும் தானியத்திற்கு கிரயம் எதுவும் செலுத்தவேண்டியதில்லை. இதனால் ஆசாரியர்களும் யோசேப்பின்மேலும், பார்வோன் மேலும் அன்பாயும் பிரியமாயும் இருக்கிறார்கள்.

யாக்கோபும் யோசேப்பும் ஆதி 47:27-31

ஆதி 47:27. இஸ்ரவேலர் எகிப்து தேசத்திலுள்ள கோசேன் நாட்டிலே குடியிருந்தார்கள்; அங்கே நிலங்களைக் கையாட்சி செய்து, மிகவும் பலுகிப் பெருகினார்கள்.

ஆதி 47:28. யாக்கோபு எகிப்து தேசத்திலே பதினேழு வருஷம் இருந்தான்; யாக்கோபுடைய ஆயுசு நாட்கள் நூற்று நாற்பத்தேழு வருஷம்.

ஆதி 47:29. இஸ்ரவேல் மரணமடையும் காலம் சமீபித்தது. அப்பொழுது அவன் தன் குமாரனாகிய யோசேப்பை வரவழைத்து, அவனை நோக்கி: என்மேல் உனக்குத் தயவுண்டானால், உன் கையை என் தொடையின்கீழ் வைத்து என்மேல் பட்சமும் உண்மையுமுள்ளவனாயிரு; என்னை எகிப்திலே அடக்கபண்ணாதிருப்பாயாக.

ஆதி 47:30. நான் என் பிதாக்களோடே படுத்துக்கொள்ளவேண்டும்; ஆகையால், நீ என்னை எகிப்திலிருந்து எடுத்துக்கொண்டுபோய், அவர்களை அடக்கப்பண்ணியிருக்கிற நிலத்திலே என்னையும் அடக்கம்பண்ணு என்றான். அதற்கு அவன்: உமது சொற்படி செய்வேன் என்றான்.

ஆதி 47:31. அப்பொழுது அவன்: எனக்கு ஆணையிட்டுக்கொடு என்றான்; அவனுக்கு ஆணையிட்டுக்கொடுத்தான். அப்பொழுது இஸ்ரவேல் கட்டிலின் தலைமாட்டிலே சாய்ந்து தொழுதுகொண்டான்.

எகிப்து தேசத்தார் தங்கள் நிலங்களை தானியத்திற்காக விற்கிறார்கள். இஸ்ரவேலும் அவருடைய குடும்பத்தாரும் எகிப்து தேசத்திலுள்ள கோசேன் நாட்டிலே குடியிருக்கிறார்கள்; அங்கே அவர்கள் நிலங்களைக் கையாட்சி செய்து, மிகவும் பலுகிப் பெருகுகிறார்கள் (ஆதி 43:27).

இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தேசத்திலிருந்தாலும், அங்கே அவர்கள் கர்த்தருடைய கிருபையினால் செழித்திருக்கிறார்கள். யாக்கோபு எகிப்து தேசத்திலே பதினேழு வருஷம் இருக்கிறார்; யாக்கோபுடைய ஆயுசு நாட்கள் நூற்று நாற்பத்தேழு வருஷம் (ஆதி 47:28).

யாக்கோபு எகிப்து தேசத்திற்கு வந்தபோது அவருடைய வயது 130. யாக்கோபு மரிக்கும்போது அவருடைய வயது 147 (ஆதி 47:9,28).

யாக்கோபு எகிப்து தேசத்திலிருந்தாலும், அவருடைய இருதயத்தில் கானான் தேசத்தைப்பற்றிய நினைவேநிரம்பியிருக்கிறது. இஸ்ரவேல் மரணமடையும் காலம் சமீபிக்கிறது. அப்பொழுது அவர் தன் குமாரனாகிய யோசேப்பை வரவழைத்து, அவரை நோக்கி, "என்மேல் உனக்குத் தயவுண்டானால், உன் கையை என் தொடையின்கீழ் வைத்து என்மேல் பட்சமும் உண்மையுமுள்ளவனாயிரு; என்னை எகிப்திலே அடக்க பண்ணாதிருப்பாயாக. நான் என் பிதாக்களோடே படுத்துக் கொள்ளவேண்டும்; ஆகையால், நீ என்னை எகிப்திலிருந்து எடுத்துக்கொண்டுபோய், அவர்களை அடக்கப் பண்ணியிருக்கிற நிலத்திலே என்னையும் அடக்கம்பண்ணு" (ஆதி 47:29,30) என்று சொல்லுகிறார்.

சபை எடுத்துக் கொள்ளப்படுதல், ஆயிரம் வருஷ அரசாட்சி ஆகியவை நடைபெறும் வரையிலும் எல்லோருக்கும் மரணம் உண்டு. (1கொரி 15:24-28; எபி 9:27). இந்த வாக்கியத்தில் இஸ்ரவேல் மரணமடையும் காலம் என்பது யாக்கோபின் மரணத்தைக் குறிக்கும். இது யாக்கோபுடைய சந்ததியார் அனைவருடைய மரணத்தையும் குறிக்கவில்லை. (ஆதி 47:27; ஆதி 32:28)

கானான் தேசமே இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்த தேசம். இந்த தேசம் பரலோகமாகிய பரமகானானுக்கு அடையாளமாயிருக்கிறது. இந்தப் பூமியிலுள்ள எல்லா தேசங்களையும்விட, பரமகானானே மேலான தேசம். யாக்கோபு தன்னுடைய ஜீவியகாலமெல்லாம் பரமதேசத்திற்காக காத்துக்கொண்டிருக்கிறார்.

"இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே. அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே" (எபி 11:14-16).

யாக்கோபு எகிப்து தேசத்திலிருக்கும்போதே, அவர் மரணமடையும் காலம் சமீபித்திருக்கிறது. யாக்கோபு எகிப்து தேசத்தில் மரித்தாலும், அவருடைய சரீரம் கானான் தேசத்தில் அடக்கம்பண்ணப்படவேண்டும் என்று அவர் விரும்புகிறார். மரித்த பின்பு யாக்கோபால் கல்லறையிலிருந்து எழும்பி கானான் தேசத்திற்கு நடந்து போகமுடியாது. மரித்தோர் நடப்பது இயலாத காரியம். யாக்கோபுக்கு உயிரோடிருப்பவரின் உதவி தேவைப்படுகிறது. தான் எகிப்து தேசத்தில் மரித்தாலும், தன்னுடைய சரீரத்தை எகிப்திலிருந்து எடுத்துக்கொண்டுபோய், கானான் தேசத்தில் அடக்கம்பண்ண வேண்டுமென்று, யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்பினிடத்தில் கேட்டுக்கொள்கிறார். அதற்கு யோசேப்பு, "உமது சொற்படி செய்வேன்" என்று சொல்லுகிறார்.

யோசேப்பு தன்னுடைய வார்த்தைகளை உறுதிபண்ண வேண்டுமென்று யாக்கோபு எதிர்பார்க்கிறார். இதற்காக யாக்கோபு யோசேப்பை நோக்கி, "எனக்கு ஆணையிட்டுக்கொடு" என்று சொல்லுகிறார். யோசேப்பு யாக்கோபுக்கு ஆணையிட்டுக்கொடுக்கிறார். அப்பொழுது இஸ்ரவேல் கட்டிலின் தலைமாட்டிலே சாய்ந்து தொழுதுகொள்கிறார் (ஆதி 47:31). இந்த வாக்கியத்திற்கு, யாக்கோபு தன்னை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கிறார் என்று பொருள்.

"இஸ்ரவேல் கட்டிலின் தலைமாட்டிலே சாய்ந்து தொழுது கொண்டார்" என்பது யாக்கோபின் மரணத்தைக் குறிக்கிறது. இதுபோலவே எபி 11:21 ஆவது வசனத்தில் "கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டார்" என்பதும் யாக்கோபின் மரணத்தைக் குறிக்கிறது. ஆதி 47:31 ஆவது வசனம் யாக்கோபு ஆணையிட்ட வேளையைக் குறிக்கிறது. ஆதி 48:1 ஆவது வசனத்தில் "அதற்குப்பின்பு" என்று கூறப்பட்டிருப்பதினால் யாக்கோபு இன்னும் மரிக்கவில்லை என்பதும், இப்பொழுது மரிக்கும் தருவாயில் இருக்கிறார் என்பதும் தெரியவருகிறது.

48 அதிகாரம்

இஸ்ரவேல் மரணமடையும் காலம் சமீபித்து வருகிறது. அவர் மரிக்கும் முன்பாக யோசேப்பின் இரண்டு குமாரரையும் ஆசீர்வதிக்கிறார். யாக்கோபு தன்னுடைய பேரப்பிள்ளைகளை, தன்னுடைய இரண்டு குமாரராக பாவித்து, அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

யாக்கோபுக்கு வருத்தமாயிருக்கிறது என்று யோசேப்புக்கு அறிவிக்கப்படுகிறது. யோசேப்பு தன் இரண்டு குமாரரோடுகூட, மரணப்படுக்கையிலிருக்கும் தன் தகப்பனாரைப் பார்க்கப்போகிறார் (ஆதி 48:1,2). யாக்கோபு யோசேப்பின் இரண்டு குமாரரையும் தன்னுடைய குமாரர் என்று சொல்லுகிறார் (ஆதி 48:3-7).

யாக்கோபு மனாசேயையும், எப்பிராயீமையும் ஆசீர்வதிக்கிறார் (ஆதி 48:8-16). யாக்கோபு அவர்களை ஆசீர்வதிக்கும்போது தன் வலது கையை இளையவன்மீதும், இடது கையை மூத்தவன்மீதும் வைத்து ஆசீர்வதிக்கிறார். இவ்வாறு கைமாறி வைத்து ஆசீர்வதிப்பதற்கான காரணத்தையும் யாக்கோபு சொல்லுகிறார் (ஆதி 48:17-20). யாக்கோபு யோசேப்புக்கு விசேஷித்த ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார் (ஆதி 48:21,22).

யாக்கோபின் வார்த்தைகள் ஆதி 48:1-7

ஆதி 48:1. அதற்குப்பின்பு, உம்முடைய தகப்பனாருக்கு வருத்தமாயிருக்கிறது என்று யோசேப்புக்குச் சொல்லப்பட்டது. அப்பொழுது அவன் தன் இரண்டு குமாரராகிய மனாசேயையும் எப்பிராயீமையும் தன்னோடேகூடக் கொண்டுபோனான்.

ஆதி 48:2. இதோ, உம்முடைய குமாரனாகிய யோசேப்பு உம்மிடத்தில் வந்திருக்கிறார் என்று யாக்கோபுக்கு அறிவிக்கப்பட்டது; அப்பொழுது இஸ்ரவேல் தன்னைத்திடப்படுத்திக்கொண்டு, கட்டிலின்மேல் உட்கார்ந்தான்.

ஆதி 48:3. யாக்கோபு யோசேப்பை நோக்கி: சர்வவல்லமையுள்ள தேவன் கானான் தேசத்திலுள்ள லூஸ் என்னும் இடத்தில் எனக்குத் தரிசனமாகி, என்னை ஆசீர்வதித்து:

ஆதி 48:4. நான் உன்னைப் பலுகவும் பெருகவும் பண்ணி, உன்னைப் பல ஜனக்கூட்டமாக்கி, உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தை நித்திய சுதந்தரமாகக் கொடுப்பேன் என்று என்னோடே சொன்னார்.

ஆதி 48:5. நான் உன்னிடத்தில் எகிப்துக்குப் வருமுன்னே உனக்கு எகிப்துதேசத்தில் பிறந்த உன் இரண்டு குமாரரும் என்னுடைய குமாரர்; ரூபன் சிமியோன் என்பவர்களைப்போல, எப்பிராயீமும் மனாசேயும் என்னுடையவர்கள்.

ஆதி 48:6. இவர்களுக்குப்பின், நீ பெறும் பிள்ளைகள் உன்னுடையவர்கள்; அவர்கள் தங்கள் தங்கள் சகோதரருடைய பேரால் அழைக்கப்பட்டு அவர்களுக்குரிய சுதந்தரத்தில் பங்குபெறுவார்கள்.

ஆதி 48:7. நான் பதானை விட்டு வருகையில், கானான்தேசத்தில் எப்பிராத்தாவுக்குக் கொஞ்சம் தூரம் இருக்கும்போது, வழியிலே ராகேல் என்னண்டையில் மரணமடைந்தாள்; அவளை அங்கே பெத்லகேம் என்னும் எப்பிராத்தா ஊருக்குப் போகிற வழியிலே அடக்கம்பண்ணினேன் என்றான்.

யாக்கோபு மரணமடையும் காலம் சமீபித்திருக்கிறது. அவர் மரணப்படுக்கையிலிருக்கிறார். அவருடைய சரீரத்தில் வேதனையும் வருத்தமும் உண்டாயிற்று. "உம்முடைய தகப்பனாருக்கு வருத்தமாயிருக்கிறது" என்று யோசேப்புக்கு சொல்லப்படுகிறது. அப்பொழுது யோசேப்பு தன் இரண்டு குமாரராகிய மனாசேயையும் எப்பிராயீமையும் தன்னோடேகூட்டிக் கொண்டு, தன் தகப்பனாராகிய யாக்கோபை பார்க்கப்போகிறார் (ஆதி 48:1).

வியாதிப்படுக்கையிலிருக்கிறவர்களையும், மரணப்படுக்கையிலிருக்கிறவர்களையும் நாம் சந்தித்து அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லவேண்டும். வியாதியஸ்தர்களுக்காக விசுவாசத்தோடு ஜெபம்பண்ணவேண்டும். அவர்களுக்கு நம்மால் செய்யக்கூடிய நன்மைகள் ஏதாவது இருக்குமென்றால், அதை நாம் சந்தோஷமாய்ச் செய்யவேண்டும். வியாதியஸ்தருக்கு உதவி செய்வது நம்முடைய கடமை.

யோசேப்பு தன் தகப்பனாராகிய யாக்கோபை பார்க்கப்போகும்போது, தன்னோடுகூட, தன்னுடைய இரண்டு குமாரரையும் அழைத்துக்கொண்டு போகிறார். யாக்கோபு மரணப்படுக்கையிலிருக்கிறார். யாக்கோபின் ஆசீர்வாதத்தை யோசேப்பின் குமாரரும் பெற்றுக்கொள்ளவேண்டும். மனாசேயையும் எப்பிராயீமையும், பார்க்கும்போது யாக்கோபுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகும். இந்த சந்திப்பை யோசேப்பின் குமாரரும் மறக்கமாட்டார்கள்.

"இதோ, உம்முடைய குமாரனாகிய யோசேப்பு உம்மிடத்தில் வந்திருக்கிறார்" என்று யாக்கோபுக்கு அறிவிக்கப்படுகிறது; அப்பொழுது இஸ்ரவேல் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு, கட்டிலின்மேல் உட்காருகிறார் (ஆதி 48:2). யாக்கோபு மரணப்படுக்கையிலிருந்தாலும் அவர் தன்னைத் திடப்படுத்திக்கொள்கிறார்.

வியாதியஸ்தரும், வயோதிகரும், தங்களை விருந்தினர்கள் பார்க்க வரும்போது, தங்களால் முடிந்த வரையிலும் தங்களைத் திடப்படுத்திக் கொள்ளவேண்டும். அவர்கள் மற்றவர்களுக்கு முன்பாக சந்தோஷமாயும், உற்சாகமாயும், ஜீவனோடும் இருக்கவேண்டும். வியாதியஸ்தர் தங்களுடைய வியாதியை எப்போதும் நினைத்துக்கொண்டிருந்தால் அவர்களுக்கு சோர்வு வந்துவிடும். வயோதிகர் தங்களுடைய மரணத்தைப்பற்றியே எப்போதும் நினைத்துக்கொண்டிருந்தால், அவர்களுக்கு மரணபயம் வந்துவிடும்.

விசுவாசிகளாகிய நமக்கு வியாதியோ, பிரச்சனைகளோ, கஷ்டங்களோ இருந்தாலும், நம்மைநாமே திடப்படுத்திக்கொள்ளவேண்டும். கர்த்தர் நம்மைத் திடப்படுத்துவார். யோசேப்பு தன்னுடைய இரண்டு குமாரரோடு யாக்கோபை பார்க்க வந்திருக்கிறார். அப்போது யாக்கோபு கட்டிலின் மேல் உட்கார்ந்திருக்கிறார்.

கர்த்தர் யாக்கோபை ஆசீர்வதித்திருக்கிறார். கர்த்தருடைய ஆசீர்வாதத்தை யாக்கோபு மறந்துவிடவில்லை. யாக்கோபு இப்போது கர்த்தருடைய ஆசீர்வாதத்திற்கு சொந்தக்காரர்.

யாக்கோபு யோசேப்பை நோக்கி, "சர்வவல்லமையுள்ள தேவன் கானான் தேசத்திலுள்ள லூஸ் என்னும் இடத்தில் எனக்குத் தரிசனமாகி, என்னை ஆசீர்வதித்து: நான் உன்னைப் பலுகவும் பெருகவும் பண்ணி, உன்னைப் பல ஜனக்கூட்டமாக்கி, உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தை நித்திய சுதந்தரமாகக் கொடுப்பேன் என்று என்னோடே சொன்னார்" (ஆதி 48:3,4) என்று சொல்லுகிறார்.

யோசேப்புக்கு எகிப்து தேசத்திலே இரண்டு குமாரர் பிறந்திருக்கிறார்கள். யாக்கோபு அவர்கள் இருவரையும் தன்னுடைய சொந்த பிள்ளைகளாகப் பாவிக்கிறார். கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கும் விசேஷித்த ஆசீர்வாதத்தினால், யோசேப்பின் புத்திரரை ஆசீர்வதிக்கவேண்டும் என்று யாக்கோபு விரும்புகிறார்.

யோசேப்பின் புத்திரர் இருவரும் யாக்கோபுக்கு பேரப்பிள்ளைகளாயிருக்கிறார்கள். ஆனால் யாக்கோபோ அவர்கள் இருவரையும் தன்னுடைய சொந்தப் பிள்ளைகளாகப் பாவிக்கிறார். "என் பேரும், என் பிதாக்களாகிய ஆபிரகாம் ஈசாக்கு என்பவர்களின் பேரும் இவர்களுக்கு இடப்படக்கடவது" (ஆதி 48:16) என்று யாக்கோபு சொல்லுகிறார்.

யாக்கோபு யோசேப்பை நோக்கி, "நான் உன்னிடத்தில் எகிப்துக்குப் வருமுன்னே உனக்கு எகிப்துதேசத்தில் பிறந்த உன் இரண்டு குமாரரும் என்னுடைய குமாரர்; ரூபன் சிமியோன் என்பவர்களைப்போல, எப்பிராயீமும் மனாசேயும் என்னுடையவர்கள். இவர்களுக்குப்பின், நீ பெறும் பிள்ளைகள் உன்னுடையவர்கள்; அவர்கள் தங்கள் தங்கள் சகோதரருடைய பேரால் அழைக்கப்பட்டு அவர்களுக்குரிய சுதந்தரத்தில் பங்குபெறுவார்கள்" (ஆதி 48:5,6) என்று சொல்லுகிறார்.

தேவன் தனக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கும் பெரிய தேசத்தில் எப்பிராயீமுக்கும், மனாசேக்கும் பங்குள்ளது என்று யாக்கோபு கூறுகிறார். இவர்கள் இருவரும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களில் இரண்டு கோத்திரங்களுக்கு முற்பிதாக்களாக இருக்கிறார்கள். ஒருவன் யோசேப்பின் ஸ்தானத்தை எடுத்துக் கொள்கிறான். மற்றொருவன் லேவியின் ஸ்தானத்தை எடுத்துக் கொள்கிறான்.

லேவி கோத்திரத்தார் ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆகையினால், கானான் தேசத்தைப் பங்கு பாகம் பிரிக்கையில், லேவி கோத்திரத்தாருக்குப் பங்கும், பாத்தியமும் கொடுக்கப்படவில்லை.

இஸ்ரவேல் கோத்திரத்தாரைப் பற்றி பல அட்டவணைகள் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவற்றில் எட்டு அட்டவணைகளில் லேவி ஒரு கோத்திரமாகச் சேர்க்கப்படவில்லை. (யோசு 13:33; எண் 18:20). வேறு ஏழு அட்டவணையில் லேவி ஒரு கோத்திரமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஆதி 29, ஆதி 35 ஆகிய அதிகாரங்களில் லேவியின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆதி 46, ஆதி 49; யாத் 1; எண் 34; உபா 33; நியா 5; 1நாளா 2; வெளி 7 ஆகிய அதிகாரங்களிலும் மேலும் சில இடங்களிலும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரில் ஒருசில கோத்திரங்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை.

யாக்கோபு மரிக்கும் தருவாயில்கூட தன்னுடைய ராகேலைப் பற்றி நினைவுகூருகிறார். அவள்மீது யாக்கோபு வைத்திருக்கும் அன்பு மாறாமல் இருக்கிறது. (ஆதி 48:7; ஆதி 29:18-20,30).

யாக்கோபு இப்போது மரணப்படுக்கையிலிருந்தாலும், எகிப்து தேசத்திலே உயிரோடிருக்கிற இஸ்ரவேலின் குடும்பத்தாருக்கு பிரயோஜனமான ஆலோசனைகளை சொல்லுகிறார். எகிப்து தேசம் அவர்களுக்கு சொந்தமான தேசமல்ல. அந்த தேசத்திலே அவர்கள் சிறிதுகாலம் பரதேசியாய்த் தங்கியிருக்கிறார்கள். கானான் தேசமே இஸ்ரவேல் புத்திரருக்கு வாக்குத்தத்த தேசம். கானான் தேசத்தில் பஞ்சம் விலகிப்போன பின்பு, இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்தை விட்டு, கானான் தேசத்திற்கு திரும்பி வரவேண்டும்.

இஸ்ரவேலின் குடும்பத்தார் எகிப்து தேசத்திலிருக்கும் காலத்திலே, எகிப்தியரோடு சம்பந்தம் கலக்கக்கூடாது. அவர்கள் எகிப்தியரின் விக்கிரகாராதனையில் பங்குபெறக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்தாலும், அவர்கள் கானான் தேசத்திற்கு திரும்பி வந்து, அந்த தேசத்தை சுதந்தரித்து, அதை தங்களுக்குள்ளே பங்கிட்டு, அங்கே குடியேறவேண்டும். இதுவே யாக்கோபின் விருப்பம். மோசே எகிப்தின் பாவமான சந்தோஷத்தை வெறுத்ததுபோல, இஸ்ரவேல் புத்திரரும் எகிப்தியரின் பாவங்களை வெறுக்கவேண்டும்.

"விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்" (எபி 11:24-26).

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளில் அநேகரை அதிகமாய் ஆசீர்வதித்திருக்கிறார். அவர்களிடத்தில் உலகப்பிரகாரமான நன்மைகள் ஏராளமாயிருக்கும். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பாவம். கர்த்தருடைய பிள்ளைகள் உலகப்பிரகாரமான ஐசுவரியங்களினாலும், ஆசீர்வாதங்களினாலும் சோதிக்கப்பட்டு, கர்த்தரை விட்டு விலகிப்போய்விடக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகள் வறுமையிலிருந்தாலும், கஷ்டங்களையும் பாடுகளையும் அனுபவித்தாலும், அவமானப்படுத்தப்பட்டாலும், கர்த்தரை விட்டு விலகிப்போய்விடக்கூடாது. அவர்கள் தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொண்டு, கர்த்தரை உண்மையாய்ப் பின்பற்றவேண்டும்.

யாக்கோபு யோசேப்பின் புத்திரரைப்பற்றிச் சொல்லும்போது, ராகேல் மரணமடைந்த சம்பவத்தையும் நினைவுகூர்ந்து சொல்லுகிறார். யாக்கோபு யோசேப்பை நோக்கி, "நான் பதானை விட்டு வருகையில், கானான்தேசத்தில் எப்பிராத்தாவுக்குக் கொஞ்சம் தூரம் இருக்கும்போது, வழியிலே ராகேல் என்னண்டையில் மரணமடைந்தாள்; அவளை அங்கே பெத்லகேம் என்னும் எப்பிராத்தா ஊருக்குப் போகிற வழியிலே அடக்கம்பண்ணினேன்" (ஆதி 48:7) என்று சொல்லுகிறார்.

ராகேலின் மரணத்தைப்பற்றிய சம்பவம் ஆதி 35:19 ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "ராகேல் மரித்து, பெத்லகேம் என்னும் எப்பிராத்தா ஊருக்குப் போகிற வழியிலே அடக்கம்பண்ணப்பட்டாள்" (ஆதி 35:19). நமக்கு மிகவும் பிரியமானவர்கள் மரித்துப்போகும் போது அவர்களை அடக்கம்பண்ணுகிறோம். அதுபோலவே நாமும் மரித்துப்போகும்போது நம்மையும் அடக்கம்பண்ணுவார்கள். எல்லோருக்கும் மரணம் நியமிக்கப்பட்டிருக்கிறது.

யோசேப்பின் குமாரருக்கு ஆசீர்வாதம் ஆதி 48:8-20

ஆதி 48:8. இஸ்ரவேல் யோசேப்பின் குமாரரைப் பார்த்து: இவர்கள் யார் என்று கேட்டான்.

ஆதி 48:9. யோசேப்பு தன் தகப்பனை நோக்கி: இவர்கள் இவ்விடத்தில் தேவன் எனக்கு அருளின குமாரர் என்றான். அப்பொழுது அவன்: நான் அவர்களை ஆசீர்வதிக்கும்படி அவர்களை என் கிட்டக்கொண்டுவா என்றான்.

ஆதி 48:10. முதிர்வயதினால் இஸ்ரவேலின் கண்கள் மங்கலாயிருந்தபடியால், அவன் நன்றாய்ப் பார்க்கக்கூடாதிருந்தது. அவர்களை அவனண்டையிலே சேரப்பண்ணினான்; அப்பொழுது அவன் அவர்களை முத்தஞ்செய்து அணைத்துக்கொண்டான்.

ஆதி 48:11. இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி: உன் முகத்தைக் காண்பேன் என்று நான் நினைக்கவில்லை; ஆனாலும், இதோ, உன் சந்ததியையும் காணும்படி தேவன் எனக்கு அருள்செய்தார் என்றான்.

ஆதி 48:12. அப்பொழுது அவனுடைய முழங்கால்கள் நடுவே இருந்த பிள்ளைகளை யோசேப்பு பின்னிடப்பண்ணி, அவனுடைய முகத்துக்கு முன்பாகத் தரைமட்டும் குனிந்து வணங்கினான்.

ஆதி 48:13. பின்பு, யோசேப்பு அவ்விருவரையும் கொண்டுவந்து, எப்பிராயீமைத் தன் வலதுகையினாலே இஸ்ரவேலின் இடது கைக்கு நேராகவும், மனாசேயைத் தன் இடதுகையிலே இஸ்ரவேலின் வலது கைக்கு நேராகவும் விட்டான்.

ஆதி 48:14. அப்பொழுது இஸ்ரவேல், மனமறிய, தன் வலதுகையை நீட்டி, இளையவனாகிய எப்பிராயீமுடைய தலையின்மேலும், மனாசே மூத்தவனாயிருந்தும், தன் இடதுகையை மனாசேயுடைய தலையின்மேலும் வைத்தான்.

ஆதி 48:15. அவன் யோசேப்பை ஆசீர்வதித்து: என் பிதாக்களாகிய ஆபிரகாமும் ஈசாக்கும் வழிபட்டு வணங்கிய தேவனும், நான் பிறந்த நாள்முதல் இந்நாள்வரைக்கும் என்னை ஆதரித்துவந்த தேவனும்,

ஆதி 48:16. எல்லாத் தீமைக்கும் நீங்கலாக்கி என்னை மீட்ட தூதனுமானவர், இந்தப் பிள்ளைகளை ஆசீர்வதிப்பாராக, என் பேரும் என் பிதாக்களாகிய ஆபிரகாம் ஈசாக்கு என்பவர்களின் பேரும் இவர்களுக்கு இடப்படக்கடவது; பூமியில் இவர்கள் மிகுதியாய்ப் பெருகக்கடவர்கள் என்றான்.

ஆதி 48:17. தகப்பன் தன் வலதுகையை எப்பிராயீமுடைய தலையின்மேல் வைத்ததை யோசேப்பு கண்டு, அது தனக்குப் பிரியமில்லாதபடியால், எப்பிராயீமுடைய தலையின் மேல் இருந்த தன் தகப்பனுடைய கையை மனாசேயினுடைய தலையின்மேல் வைக்கும்படிக்கு எடுத்து:

ஆதி 48:18. என் தகப்பனே, அப்படியல்ல, இவன் மூத்தவன், இவனுடைய தலையின்மேல் உம்முடைய வலதுகையை வைக்கவேண்டும் என்றான்.

ஆதி 48:19. அவன் தகப்பனே தடுத்து: அது எனக்குத் தெரியும், என் மகனே, எனக்குத் தெரியும்; இவனும் ஒரு ஜனக்கூட்டமாவான், இவனும் பெருகுவான்; இவனுடைய தம்பியோ இவனிலும் அதிகமாய்ப் பெருகுவான்; அவனுடைய சந்ததியார் திரளான ஜனங்களாவார்கள் என்றான்.

ஆதி 48:20. இவ்விதமாக அவன் அன்றைத்தினம் அவர்களை ஆசீர்வதித்து: தேவன் உன்னை எப்பிராயீமைப்போலவும் மனாசேயைப்போலவும் ஆக்குவாராக என்று இஸ்ரவேலர் உன்னை முன்னிட்டு வாழ்த்துவார்கள் என்று சொல்லி, எப்பிராயீமை மனாசேக்கு முன்னே வைத்தான்.

யாக்கோபு யோசேப்பின் இரண்டு குமாரரையும் ஆசீர்வதிக்கிறார். இந்த ஆசீர்வாதம் மிகவும் விசேஷமானது. எபிரெயருக்கு நிருபம் எழுதின ஆசிரியர் இந்த ஆசீர்வாதத்தைப்பற்றி நிருபத்திலே சொல்லியிருக்கிறார்.

"விசுவாசத்தினாலே யாக்கோபு தன் மரணகாலத்தில் யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து, தன்கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான்" *(எபி 11:21).*

யாக்கோபு முதிர்வயதிலிருக்கிறார். அவருடைய கண்கள் மங்கலாயிருக்கிறது. அவரால் நன்றாய் பார்க்க முடியவில்லை. யோசேப்பின் இரண்டு குமாரரும் யாக்கோபுக்கு அருகாமையிலிருக்கிறார்கள். அப்பொழுது இஸ்ரவேல் யோசேப்பின் குமாரரைப் பார்த்து, "இவர்கள் யார்" என்று கேட்கிறார். யோசேப்பு தன் தகப்பனை நோக்கி, "இவர்கள் இவ்விடத்தில் தேவன் எனக்கு அருளின குமாரர்" என்று சொல்லுகிறார். அப்பொழுது யாக்கோபு, "நான் அவர்களை ஆசீர்வதிக்கும்படி அவர்களை என் கிட்டக்கொண்டுவா" என்று சொல்லுகிறார் *(ஆதி 48:8,9).*

யோசேப்பின் குமாரரை யாக்கோபு ஏற்கெனவே பார்த்திருக்கிறார். இப்பொழுது முதிர்வயதினால் யாக்கோபின் கண்கள் மங்கலாய் இருக்கிறது. ஆகையினால் யோசேப்போடு இருப்பவர்களை யாக்கோபால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. *(ஆதி 48:10).*யோசேப்பின் பிள்ளைகளுக்கு இப்பொழுது 22 வயது, 24 வயது இருக்கும் *(ஆதி 41:46,53-54; ஆதி 45:6; ஆதி 47:9,28).*

யாக்கோபின் தகப்பனாராகிய ஈசாக்கு முதிர்வயதிலிருந்தபோது, அவருடைய கண்களும் மங்கலாயிருந்தது. அவராலும் நன்றாய் பார்க்க முடியவில்லை. ஈசாக்கைப்போல இப்போது யாக்கோபின் கண்களும் மங்கலாயிருக்கிறது. முதிர்வயதில் இதுபோன்ற சரீரப்பிரச்சனைகள் எல்லோருக்கும் வரும். இந்தப் பிரச்சனைகள் சரீரத்திற்கு பாரமாகவும் வேதனையாகவும் இருக்கும். முதிர்வயதிலிருக்கிறவர்கள் தங்களுக்கு வரும் சரீரப்பிரச்சனைகளை தாங்கிக்கொண்டு, தங்களுக்கு இருக்கும் ஆரோக்கியத்தில் திருப்தியாயிருக்கவேண்டும்.

நம்முடைய சரீரத்தின் கண்கள் மங்கலாகயிருந்தாலும், நம்மால் நன்றாய் பார்க்க முடியாமலிருந்தாலும், நம்முடைய ஆவிக்குரிய விசுவாசக்கண்கள் தெளிவாயிருக்கவேண்டும். நாம் ஆவிக்குரிய காரியங்களை விசுவாசத்தினால் தெளிவாகப் பார்க்கவேண்டும்.

யோசேப்பு தன்னுடைய குமாரர் இருவரையும், யாக்கோபண்டையில் சேரப்பண்ணுகிறார். அப்பொழுது யாக்கோபு யோசேப்பின் குமாரரை முத்தம் செய்து அணைத்துக்கொள்கிறார். யாக்கோபின் கண்கள் மங்கலாயிருந்தாலும், அவருடைய கைகள் அன்பும் பாசமும் நிரம்பியதாகயிருக்கிறது.

இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி, "உன் முகத்தைக் காண்பேன் என்று நான் நினைக்கவில்லை; ஆனாலும், இதோ, உன் சந்ததியையும் காணும்படி தேவன் எனக்கு அருள்செய்தார்" (ஆதி 48:11) என்று சொல்லுகிறார்.

யோசேப்பின் இரண்டு குமாரரும் யாக்கோபுடைய முழங்கால்கள் நடுவே இருக்கிறார்கள். யோசேப்பு தன்னுடைய இரண்டு பிள்ளைகளையும் பின்னிடப்பண்ணுகிறார். அதன் பின்பு யோசேப்பு யாக்கோபுடைய முகத்திற்கு முன்பாக தரை மட்டும் குனிந்து, தன்னுடைய தகப்பனாரை வணங்குகிறார்.

யாக்கோபு யோசேப்பையும் அவருடைய இரண்டு குமாரரையும் ஆசீர்வதிப்பதற்கு முன்பாக, கர்த்தர் தனக்கு கொடுத்த ஆசீர்வாதங்களையும் நன்மைகளையும் அவர்களுக்கு எடுத்து சொல்லுகிறார்.

யாக்கோபின் பிதாக்களாகிய ஆபிரகாமும் ஈசாக்கும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை வழிபட்டு வணங்கி வந்தார்கள். அந்த தேவன் யாக்கோபை இந்நாள் வரைக்கும் ஆதரித்து வந்திருக்கிறார். கர்த்தருடைய தூதனானவர் எல்லா தீமைக்கும் நீங்கலாக்கி யாக்கோபை மீட்டுக்கொண்டார் (ஆதி 48:15,16).

"எல்லாத் தீமைக்கும் நீங்கலாக்கி என்னை மீட்ட தூதனுமானவர்" என்று யாக்கோபு சொல்லுகிறார். தூதனானவர் என்பது தேவனைக்குறிக்கும். தேவன் யாக்கோபை பெத்தேலில் ஆசீர்வதித்தார். தேவன் யாக்கோபின் ஜீவியகாலம் முழுவதிலும் அவரைப் பாதுகாத்து, பராமரித்து வந்திருக்கிறார் (ஆதி 31:11-13; ஆதி 32:24-32; ஓசி 12:4-5).

"பூமியில் இவர்கள் மிகுதியாய்ப் பெருகக்கடவர்கள்" என்று யாக்கோபு யோசேப்பின் குமாரரை ஆசீர்வதிக்கிறார். சமுத்திரத்திலுள்ள மச்சங்களைப் போல திரளாய்ப் பெருகுதல் என்பது இதன் பொருள். பெருகுதல் என்பதற்கான எபிரெய வார்த்தை "தாகா" என்பதாகும் (ஆதி 1:20).

கைகளைத் தலையின்மேல் வைத்து ஆசீர்வதிப்பது எபிரெயருடைய பழக்கம். பிற்காலத்தில் இஸ்ரவேல் தேசத்தில் இந்த வழக்கம் பிரபல்யமாயிற்று. திருச்சபையிலும் தலையின்மீது கைவைத்து ஆசீர்வதிக்கும் பழக்கம் உண்டாயிற்று.

எப்பிராயீமின் சந்ததியார் எண்ணிக்கையிலும், வல்லமையிலும் பெருகினார்கள் (எண் 1:32-33; எண் 2:18-20; உபா 33:17). சமஸ்த இஸ்ரவேல் ராஜ்ஜியம் வடக்கு ராஜ்ஜியம், தெற்கு இராஜ்ஜியம் என்று இரண்டாகப் பிரிந்த பின்பு, எப்பிராயீமின் பெயர் இஸ்ரவேலைக் குறிப்பதற்குப் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற காலம் வரையிலும், நாம் கர்த்தரோடு தொடர்ந்து ஐக்கியத்திலிருக்கவேண்டும். அப்போது கர்த்தர் நமக்கு கொடுக்கும் நன்மைகள் ஒருபோதும் குறையாது. நாம் எந்நாளும் கர்த்தருடைய நன்மைகளை தொடர்ந்து அனுபவிப்போம். கர்த்தர் நம்முடைய அன்றாட தேவைகளை சந்தித்து நமக்கு ஆதரவாயிருப்பார். இந்நாள் வரைக்கும் நம்மை ஆதரித்து வருகிற தேவன், இனிமேல் வரப்போகிற நாட்களிலும் நம்மை ஆதரிப்பார். கர்த்தருடைய தூதனானவர் யாக்கோபை எல்லா தீமைக்கும் நீங்கலாக்கி மீட்டுக்கொண்டதுபோல, நம்மையும் மீட்டுக்கொள்வார்.

யாக்கோபு யோசேப்பின் குமாரரை ஆசீர்வதிக்கும்போது, "என் பிதாக்களாகிய ஆபிரகாமும் ஈசாக்கும் வழிபட்டு வணங்கிய தேவன்" என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் சந்ததியார் ஆபிரகாம் ஈசாக்கு ஆகியோருடைய முன்மாதிரிகளைப் பின்பற்றவேண்டும் என்னும் பொருளில் யாக்கோபு இந்த வாக்கியத்தை சொல்லுகிறார். ஆபிரகாமும் ஈசாக்கும் கர்த்தரை நம்பினார்கள். அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தார்கள். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொண்டார்கள். அவர்களைப்போலவே இஸ்ரவேல் சந்ததியாரும் கர்த்தரை விசுவாசிக்கவேண்டும். கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும்.

யாக்கோபு யோசேப்பின் குமாரர் இருவரையும் ஆசீர்வதிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார். அப்பொழுது யோசேப்பு, தன்னுடைய குமாரர் இருவரையும் கொண்டுவந்து, எப்பிராயீமைத் தன் வலதுகையினாலே இஸ்ரவேலின் இடது கைக்கு நேராகவும், மனாசேயைத் தன் இடதுகையிலே இஸ்ரவேலின் வலது கைக்கு நேராகவும் விடுகிறார் (ஆதி 48:13).

ஆனால் யாக்கோபோ மனமறிய, தன் வலதுகையை நீட்டி, இளையவனாகிய எப்பிராயீமுடைய தலையின்மேலும், மனாசே மூத்தவனாயிருந்தும், தன் இடது கையை மனாசேயுடைய தலையின்மேலும் வைக்கிறார் (ஆதி 48:14).

யாக்கோபு தன் வலதுகையை எப்பிராயீமுடைய தலையின்மேல் வைத்ததை யோசேப்பு காண்கிறார். யாக்கோபு இவ்வாறு செய்வது யோசேப்புக்கு பிரியமில்லாதிருக்கிறது. ஆகையினால் யோசேப்பு எப்பிராயீமுடைய தலையின் மேல் இருந்த தன் தகப்பனுடைய கையை மனாசேயினுடைய தலையின்மேல் வைக்கும்படிக்கு எடுக்கிறார். யோசேப்பு யாக்கோபை நோக்கி, "என் தகப்பனே, அப்படியல்ல, இவன் மூத்தவன், இவனுடைய தலையின்மேல் உம்முடைய வலதுகையை வைக்கவேண்டும்" (ஆதி 48:17,18) என்று சொல்லுகிறார்.

யாக்கோபு வயது முதிர்ந்தவராயிருக்கிறார். அவருடைய கண்களும் மங்கலாயிருக்கிறது. ஆகையினால் அவர் கைபிசகாக தன்னுடைய வலது கையை நீட்டி இளையவனாகிய எப்பிராயீமுடைய தலையின்மேலும், மனாசே மூத்தவனாயிருந்தும், தன் இடது கையை மனாசேயுடைய தலையின்மேலும் வைத்திருப்பார் என்று யோசேப்பு நினைக்கிறார். ஆனால் யாக்கோபோ மனமறிய தன் வலது கையை எப்பிராயீமுடைய தலையின்மீதும், தன் இடது கையை மனாசேயுடைய தலையின்மீதும் வைத்திருக்கிறார்.

யாக்கோபு தன்னுடைய கைகளை, யோசேப்பின் குமாரர்மீது மாறி வைத்திருப்பது தேவனுடைய வழிநடத்துதலாயிருக்கிறது. அவர் தப்பிதமாக தன்னுடைய கைகளை இவ்வாறு வைக்கவில்லை. அல்லது யோசேப்பின் குமாரருக்கு வேடிக்கை காண்பிக்கவேண்டும் என்பதற்காகவோ அல்லது விளையாட்டு காண்பிக்கவேண்டும் என்பதற்காகவோ இவ்வாறு செய்யவில்லை.

யோசேப்பின் குமாரர்மீது யாக்கோபுக்கு பட்சபாதமான அன்பும் இல்லை. அவர் இரண்டு குமாரரில் ஒருவனை அதிகமாய் நேசித்து, மற்றவனை குறைவாக நேசிக்கவில்லை. யாக்கோபு தீர்க்கதரிசன ஆவியினால் ஏவப்பட்டு, வழிநடத்தப்பட்டு, தன்னுடைய வலதுகையை எப்பிராயீமுடைய தலையின்மேலும், தன்னுடைய இடது கையை மனாசேயுடைய தலையின்மேலும் வைக்கிறார்.

யாக்கோபு யோசேப்பின் புத்திரரை ஆசீர்வதிப்பதன் மூலமாக, மனாசே பெரியவனாயிருப்பான். எப்பிராயீமோ அவனைவிட அதிகம் பெரியவனாயிருப்பான். யோசுவா, யெரொபெயாம் ஆகியோர் எப்பிராயீமின் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். மனாசே கோத்திரம் பிற்காலத்தில் இரண்டாகப் பிரிகிறது. அவர்களில் பாதிக்கோத்திரத்தார் யோர்தானுக்கு அப்புறத்திலும், மீதி கோத்திரத்தார் யோர்தானுக்கு இப்புறத்திலும் குடியேறுகிறார்கள். இதனால் மனாசே கோத்திரத்தாரின் வல்லமை குறைந்துபோயிற்று.

யாக்கோபு யோசேப்பின் புத்திரருடைய தலைகளின்மேல் தன்னுடைய கைகளை மாறி வைத்து, அவர்களை ஆசீர்வதிக்கிறார். கிருபை என்பது கர்த்தர் இலவசமாகக் கொடுக்கும் ஈவு. தேவனுடைய கிருபைக்கும் இயற்கையின் பிரமாணத்திற்கும் தொடர்பு இல்லை. கர்த்தர் தமக்கு பிரியமானபடி, தமக்கு பிரியமானவர்களுக்கு, தமக்கு பிரியமான கிருபைகளைக் கொடுக்கிறார்.

கர்த்தருடைய கிருபைகளை பெற்றுக்கொள்வதற்கு நமக்கு ஒரு தகுதியுமில்லை. கர்த்தருடைய கிருபைகளை நம்மால் கிரயம் செலுத்தியும் விலைக்கு வாங்க முடியாது.

கர்த்தர் பல சமயங்களில், இளையவனை மூத்தவனுக்கு மேலாக உயர்த்தியிருக்கிறார். இதுவும் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக, அவருடைய கிருபையினால் நடைபெறுகிறது. கர்த்தர் காயீனைவிட ஆபேலை அதிகமாய் உயர்த்தினார். அதுபோலவே யாபேத்தைவிட சேம் உயர்த்தப்பட்டான். நாகோர், ஆரான் ஆகியோர் ஆபிரகாமின் சகோதரர்கள். கர்த்தரோ ஆபிரகாமை அவருடைய சகோதரர்களுக்கு மேலாக உயர்த்தினார்.

ஏசா மூத்தவனாகயிருந்தாலும், கர்த்தர் இளையவனாகிய யாக்கோபை உயர்த்தினார். யாக்கோபின் புத்திரரில் ரூபன் மூத்தவன். அவனே சேஷ்ட புத்திரன். ஆனால் சேஷ்ட புத்திர ஆசீர்வாதம் ரூபனுக்கு கிடைக்கவில்லை. ரூபனைவிட யூதாவும் யோசேப்பும் கர்த்தருக்கு பிரியமானவர்களாயிருக்கிறார்கள்.

ஆரோன் மோசேயின் மூத்த சகோதரன். ஆனாலும் கர்த்தர் ஆரோனைவிட மோசேயை அதிகமாய் உயர்த்தி, அவரை அதிகமாய் பயன்படுத்தினார். தாவீது, சாலொமோன் ஆகியோர் தங்களுடைய சகோதரரில் இளையவர்கள். அவர்களுக்கு மூத்த சகோதரர்கள் இருந்தாலும், இளையவர்களாகிய தாவீதையும் சாலொமோனையும் கர்த்தர் அதிகமாய் உயர்த்தினார்.

"கர்த்தர் சாமுவேலை நோக்கி: நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்கவேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்" (1சாமு 16:7).

தன்னுடைய மூத்த குமாரனை, யாக்கோபு தன்னுடைய வலது கையினால் ஆசீர்வதிக்கவேண்டும் என்பது யோசேப்பின் விருப்பம். ஆனால் யாக்கோபோ தன் வலது கையை நீட்டி இளையவனாகிய எப்பிராயீமுடைய தலையின்மேல் வைத்து அவனை ஆசீர்வதிக்கிறார். யாக்கோபு இதை தெரிந்தே செய்கிறார்.

யாக்கோபு யோசேப்பிடம் இதுபற்றிச் சொல்லும்போது, "அது எனக்குத் தெரியும், என் மகனே, எனக்குத் தெரியும்; இவனும் ஒரு ஜனக்கூட்டமாவான், இவனும் பெருகுவான்; இவனுடைய தம்பியோ இவனிலும் அதிகமாய்ப் பெருகுவான்; அவனுடைய சந்ததியார் திரளான ஜனங்களாவார்கள்" (ஆதி 48:19) என்று சொல்லுகிறார்.

இவ்விதமாக யாக்கோபு அன்றைத்தினம் அவர்களை ஆசீர்வதிக்கிறார். யாக்கோபு யோசேப்பின் குமாரரை நோக்கி, "தேவன் உன்னை எப்பிராயீமைப்போலவும் மனாசேயைப் போலவும் ஆக்குவாராக என்று இஸ்ரவேலர் உன்னை முன்னிட்டு வாழ்த்துவார்கள்" என்று சொல்லி, எப்பிராயீமை மனாசேக்கு முன்னே வைக்கிறார் (ஆதி 48:20).

யோசேப்புக்கு ஆசீர்வாதம் ஆதி 48:21,22

ஆதி 48:21. பின்பு, இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி: இதோ, நான் மரணமடையப் போகிறேன்; தேவன் உங்களோடே இருப்பார்; அவர் உங்கள் பிதாக்களின் தேசத்துக்கு உங்களைத் திரும்பவும் போகப்பண்ணுவார் என்றும்,

ஆதி 48:22. உன் சகோதரருக்குக் கொடுத்ததைப்பார்க்கிலும், நான் என் பட்டயத்தாலும், என் வில்லினாலும், எமோரியர் கையிலிருந்து சம்பாதித்த ஒரு நிலத்தை உனக்கு அதிகமான பங்காகக் கொடுத்தேன் என்றும் சொன்னான்.

யாக்கோபு யோசேப்பின் குமாரரை ஆசீர்வதித்த பின்பு, அவர் யோசேப்பையும் ஆசீர்வதிக்கிறார். யாக்கோபின் குடும்பத்தார் இப்போது எகிப்து தேசத்திலே இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் கானான் தேசத்திற்கு திரும்பி வரவேண்டும். யாக்கோபு யோசேப்புக்கு இந்த விசேஷித்த ஆசீர்வாதத்தையும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி, "இதோ, நான் மரணமடையப் போகிறேன்; தேவன் உங்களோடே இருப்பார்; அவர் உங்கள் பிதாக்களின் தேசத்துக்கு உங்களைத் திரும்பவும் போகப்பண்ணுவார்" (ஆதி 48:21) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அணியணியாய் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணினார் (யாத் 12:51) மோசே தன்னோடேகூட யோசேப்பின் எலும்புகளை எகிப்து தேசத்தை விட்டு எடுத்துக் கொண்டு போனார் (ஆதி 50:25; யாத் 13:19).

யாக்கோபைப்போலவே நமக்கு பிரியமானவர்களும் இந்த உலகத்தில் மரித்துப்போவார்கள். அப்போது, யாக்கோபு இங்கு சொல்லுகிற வார்த்தைகள், நமக்கு மிகவும் ஆறுதலாயிருக்கும். கர்த்தர் நம்மை பரமகானானுக்கு அழைத்துக்கொண்டு போவார். நமக்கு முன்பாக மரித்துப்போன, நம்முடைய ஆவிக்குரிய சிநேகிதர்கள் எல்லோரும் பரமகானானிலே இருக்கிறார்கள்.

தேவனோ நம்மோடு கூடயிருந்து, நம்மையும் பரமகானானுக்கு அழைத்துக்கொண்டு போவார். அங்கே அவர்களை நாம் காண்போம்.

தேவன் நம்மோடு கூடயிருப்பதினால், நாம் இந்தப் பிரபஞ்சத்திலே கலங்கவேண்டியதில்லை. நம்முடைய ஆவிக்குரிய சிநேகிதர்கள் மரித்துப்போனாலும், அவர்கள் இந்தப் பூமியிலே நம்மோடுகூட இருக்காவிட்டாலும், நம்முடைய தேவன் இங்கே நம்மோடு கூடயிருக்கிறார். நம்முடைய தேவன் நம்மை, நம்முடைய பிதாக்களின் தேசத்திற்கு, போகப்பண்ணுவார். அவரே நம்மை கரம்பிடித்து வழிநடத்தி அழைத்துக்கொண்டு போவார். ஆகையினால் நாம் இந்தப் பூமியிலே ஜீவிக்கும் காலம் முழுவதும், நம்பிக்கையில்லாதவர்களைப்போல துக்கமாயிருக்கக்கூடாது. நமக்கு ஒரு ஆனந்த பாக்கிய நம்பிக்கை உண்டு.

யாக்கோபு யோசேப்பின் சகோதரர்கள் எல்லோருக்கும் தன்னுடைய ஆசீர்வாதத்தைக் கொடுத்திருக்கிறார். அவர் யோசேப்புக்கோ ஒரு விசேஷித்த ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார். யாக்கோபு யோசேப்பை நோக்கி, "உன் சகோதரருக்குக் கொடுத்ததைப்பார்க்கிலும், நான் என் பட்டயத்தாலும், என் வில்லினாலும், எமோரியர் கையிலிருந்து சம்பாதித்த ஒரு நிலத்தை உனக்கு அதிகமான பங்காகக் கொடுத்தேன்" (ஆதி 48:22) என்று சொல்லுகிறார்.

சேஷ்டபுத்திரனாகிய ரூபனுக்கு யாக்கோபு தன்னுடைய ஆசீர்வாதத்தை கொடுக்கவில்லை. ரூபன் தன் தகப்பனுடைய மறுமனையாட்டியோடே சயனித்து, பாவம் செய்தபடியினால், அவன் தன் தந்தையின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக யாக்கோபு யோசேப்பிற்கு சேஷ்டபுத்திரபாக ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார் (ஆதி 49:3-4; 1நாளா 5:1-2).

49 அதிகாரம்

இந்த அதிகாரம் தீர்க்கதரிசன அதிகாரமாகும். யாக்கோபு இப்போது மரணப்படுக்கையிலிருக்கிறார். அவர் தன்னுடைய குமாரருக்கு தீர்க்கதரிசன வார்த்தைகளை சொல்லுகிறார். யாக்கோபின் பன்னிரண்டு குமாரரும் வளர்ந்து பெரியவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் இக்காலத்தில் பிரபல்யமானவர்கள். இவர்கள் மூலமாக இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தார் வருவார்கள். யாக்கோபின் பன்னிரண்டு புத்திரருக்கு இப்போதிருக்கும் மேன்மையைவிட, வரப்போகிற காலத்தில் இன்னும் அதிகமான மேன்மை உண்டாகும்.

யாக்கோபு தன் குமாரரை தன்னிடத்தில் அழைக்கிறார். கடைசி நாட்களில் அவர்களுக்கு நேரிடும் காரியங்களை அறிவிக்கிறார் (ஆதி 49:1,2).

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கும் யாக்கோபு சொல்லுகிற தீர்க்கதரிசன வார்த்தைகள் (ஆதி 49:3-28).

தான் மரித்த பின்பு தன்னுடைய சரீரத்தை கானான் தேசத்திலே அடக்கம்பண்ணவேண்டுமென்று யாக்கோபு சொல்லுகிறார் (ஆதி 49:29-32). யாக்கோபின் மரணம் (ஆதி 49:33).

யாக்கோபின் ஆசீர்வாதம் ஆதி 49:1,2

ஆதி 49:1. யாக்கோபு தன் குமாரரை அழைத்து: நீங்கள் கூடிவாருங்கள், கடைசி நாட்களில் உங்களுக்கு நேரிடும் காரியங்களை அறிவிப்பேன்.

ஆதி 49:2. யாக்கோபின் குமாரரே, கூடிவந்து கேளுங்கள்; உங்கள் தகப்பனாகிய இஸ்ரவேலுக்குச் செவிகொடுங்கள்.

யாக்கோபின் தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு இந்த வசனங்கள் முன்னுரையாக சொல்லப்பட்டிருக்கிறது. யாக்கோபு தன்னுடைய பன்னிரண்டு குமாரரையும், தன்னிடத்தில் கூடி வருமாறு அழைக்கிறார். யாக்கோபின் பன்னிரண்டு குமாரரும் அவரோடு கூடயிருக்கிறார்கள். யாக்கோபு மரணப்படுக்கையில், மரிக்கும் தருவாயிலிருக்கிறார். இப்படிப்பட்ட காலத்தில் தன்னுடைய குமாரர் எல்லோரும் தன்னோடு கூடயிருப்பது யாக்கோபுக்கு ஆறுதலாகயிருக்கிறது.

"நீங்கள் கூடிவாருங்கள்" என்றும், "யாக்கோபின் குமாரரே கூடிவந்து கேளுங்கள்" என்றும் யாக்கோபு மறுபடியும் மறுபடியுமாகச் சொல்லுகிறார். அவர்கள் அன்பினால் ஒற்றுமையாகயிருக்கவேண்டும். இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும், இஸ்ரவேல் புத்திரர் என்னும் ஒரே ஜனமாயிருக்கவேண்டும். யாக்கோபு அவர்களுடைய ஒற்றுமையை உறுதிபண்ணுவதற்காக, அவர்களை "கூடிவாருங்கள்" என்று சொல்லுகிறார்.

யாக்கோபு தன்னுடைய கடைசி காலத்தில் தன் குமாரருக்கு பெரிய பிரசங்க செய்தி எதையும் சொல்லவில்லை. தான் அவர்களுக்கு சொல்லப்போவதை ஆரம்பத்திலேயே சுருக்கமாகச் சொல்லுகிறார். "கடைசி நாட்களில் உங்களுக்கு நேரிடும் காரியங்களை அறிவிப்பேன்" (ஆதி 49:1) என்று யாக்கோபு சொல்லுகிறார்.

யாக்கோபு தன்னுடைய ஒவ்வொரு குமாரர், கோத்திரத்தார் ஆகியோருடைய வருங்கால வரலாற்றைப் பற்றிய தீர்க்கதரிசனத்தை சொல்லுகிறார். அவர் மேசியாவின் வருங்கால ஆளுகையைப் பற்றியும், முன்னுரைக்கிறார் (ஆதி 49:10).

பரிசுத்த வேதாகமத்தில் கடைசி நாட்களைப்பற்றி பல வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் முதல் இரண்டு வருகைகளுக்கு முந்திய நாட்கள் "கடைசி நாட்கள்" என்று அழைக்கப்படுகிறது.

யாக்கோபின் பன்னிரண்டு குமாரரும், அவரிடத்தில் கூடிவந்தால் மாத்திரம் போதாது. அவர்கள் தங்கள் தகப்பனாகிய இஸ்ரவேலுக்கு செவிகொடுக்கவும் வேண்டும் (ஆதி 49:2). இஸ்ரவேலின் வார்த்தைகள் அவருடைய பன்னிரண்டு குமாரரின் இருதயங்களிலும் பதிந்திருக்கவேண்டும்.

ரூபன்
ஆதி 49:3,4

ஆதி 49:3 ரூபனே, நீ என் சேஷ்டபுத்திரன்; நீ என் சத்துவமும், என் முதற்பெலனுமானவன்; நீ மேன்மையில் பிரதானமும் வல்லமையில் விசேஷமுமானவன்.

ஆதி 49:4. தண்ணீரைப்போல தளம்பினவனே, நீ மேன்மை அடையமாட்டாய்; உன் தகப்பனுடைய மஞ்சத்தின்மேல் ஏறினாய்; நீ அதைத் தீட்டுப்படுத்தினாய்; என் படுக்கையின்மேல் ஏறினானே.

யாக்கோபு தன் மூத்த குமாரனாகிய ரூபனுக்கு, தீர்க்கதரிசன வார்த்தைகளை முதலாவதாக சொல்லுகிறார். ரூபன் யாக்கோபுக்கு சேஷ்ட புத்திரனாகயிருக்கிறான். ஆனால் அவன் தன் தகப்பனுடைய மஞ்சத்தின்மேல் ஏறி, அதைத் தீட்டுப்படுத்தினான். ரூபன் தன் தகப்பனாருடைய மறுமனையாட்டியோடு சயனித்து வேசித்தனம்பண்ணினான். இதனால் ரூபன் தன்னுடைய சேஷ்டபுத்திர சுதந்தரத்தை இழந்துபோகிறான்.

யாக்கோபின் குமாரர்களில் ஒருவன் என்னும் ஆசீர்வாதம் ரூபனுக்கு கிடைக்கும். ஆனால் யாக்கோபின் சேஷ்ட புத்திரன் என்னும் விசேஷித்த ஆசீர்வாதம் ரூபனுக்கு கிடைக்காது. ரூபன் கோத்திரத்தில் நியாயாதிபதிகளோ, தீர்க்கதரிசிகளோ, பிரபுக்களோ வரவில்லை. அந்தக் கோத்திரத்தில் இஸ்ரவேல் தேசத்தாரில் பிரபல்யமானவர்கள் யாரும் எழும்பவில்லை.

மோசே இஸ்ரவேல் ஜனத்தாரை வனாந்தரத்தில் வழிநடத்தி சென்றபோது, தாத்தானும், அபிராமும் அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். இவர்கள் இருவரும் ரூபன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்.

ரூபன் யாக்கோபின் மூத்த குமாரனாகயிருந்தாலும், அவனுக்கு தன்னுடைய சகோதரர் மத்தியிலே மதிப்போ மரியாதையோ இல்லை. ரூபன் சேஷ்டபுத்திரனாகயிருந்தாலும், அவனுடைய சகோதரர்கள், அவனுடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை.

"அப்பொழுது ரூபன் அவர்களைப் பார்த்து: இளைஞனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதிருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா? நீங்கள் கேளாமற்போனீர்கள்; இப்பொழுது, இதோ, அவன் இரத்தப்பழி நம்மிடத்தில் வாங்கப்படுகிறது என்றான்" (ஆதி 42:22).

யாக்கோபு ரூபனுக்கு தீர்க்கதரிசன வார்த்தைகளை சொல்லும்போது, ஆரம்பத்தில் அவனைப்பற்றி மேன்மையான காரியங்களை சொல்லுகிறார். "ரூபனே, நீ என் சேஷ்டபுத்திரன்; நீ என் சத்துவமும், என் முதற்பெலனுமானவன்; நீ மேன்மையில் பிரதானமும் வல்லமையில் விசேஷமுமானவன்" (ஆதி 49:3) என்று யாக்கோபு சொல்லுகிறார்.

"மேன்மையில் பிரதானமும் வல்லமையில் விசேஷமுமானவன்" என்பது சேஷ்டபுத்திரபாகத்து ஆசீர்வாதத்தைக் குறிக்கிறது. ஆனால் இந்த ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு ஒருசில சேஷ்டபுத்திரர்கள் பாத்திரவான்களாக இல்லை.

ஆனாலும் ரூபன் தண்ணீரைப்போல தளம்பினவனாகயிருப்பான். அவன் மேன்மையடையமாட்டான். அவனிடத்தில் உறுதியான குணமும், ஸ்திரத்தன்மையும் இருக்காது. ரூபன் இச்சையடக்கமில்லாதவன். அவனால் தன்னைத்தானே ஆளுகை செய்துகொள்ள முடியாது.

யாக்கோபு ரூபனைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொல்லும்போது, "தண்ணீரைப்போல தளம்பினவனே, நீ மேன்மை அடையமாட்டாய்; உன் தகப்பனுடைய மஞ்சத்தின்மேல் ஏறினாய்; நீ அதைத் தீட்டுப்படுத்தினாய்; என் படுக்கையின்மேல் ஏறினானே" (ஆதி 49:4) என்று சொல்லுகிறார்.

ரூபன் தண்ணீரைப்போல தளம்பினவன். அவன் மேன்மை அடையமாட்டான். அவன் தன் தகப்பனுடைய மஞ்சத்தின்மேல் ஏறி, அதைத் தீட்டுப்படுத்தினான். ரூபன் சேஷ்டபுத்திரனாக இருந்தும், தன்னுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு இடம்கொடுத்து, தன் சேஷ்டபுத்திர ஆசீர்வாதங்களை இழந்து போனான்.

ஏசாவைப் போல ரூபனும் தன்னுடைய மாம்ச இச்சையினால் சேஷ்டபுத்திர ஆசீர்வாதங்களை இழந்தான் (1நாளா 5:1-2). இஸ்ரவேல் கோத்திரத்தாரின் வரலாற்றில் ரூபன் கோத்திரத்தார் ஸ்தானத்திலும், பெலத்திலும் மற்ற கோத்திரத்தார்களைவிட தாழ்வாகவே இருந்தார்கள்.

ரூபனைப்போல உறுதியான மனதில்லாதவர்களும், ஸ்திரத்தன்மையில்லாதவர்களும், தங்கள் வாழ்க்கையில் முன்னேற மாட்டார்கள். அவர்கள் வளர்ந்து பெருகமாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் மேன்மையடைமாட்டார்கள்.

ரூபனுடைய மேன்மை அவனை விட்டு விலகிப்போகும். அவன் தண்ணீரைப்போல தளம்பினவனாயிருப்பான். தண்ணீரை நிலத்திலே கொட்டினால், அதை மறுபடியும் கூட்டிச் சேர்க்க முடியாது. அதுபோலவே ரூபனுடைய மேன்மையும், நிலத்திலே கொட்டப்பட்ட தண்ணீரைப்போல காணாமல் போய்விடும். நம்முடைய நற்குணத்தை நாம் இழந்துவிட்டால், நாம் மேன்மையடைவதற்கு வாய்ப்பில்லை.

சிமியோனும், லேவியும்
ஆதி 49:5-7

ஆதி 49:5. சிமியோனும், லேவியும் ஏகசகோதரர்; அவர்களுடைய பட்டயங்கள் கொடுமையின் கருவிகள்.

ஆதி 49:6. என் ஆத்துமாவே, அவர்களுடைய இரகசிய ஆலோசனைக்கு உடன்படாதே; என் மேன்மையே, அவர்கள் கூட்டத்தில் நீ சேராதே; அவர்கள் தங்கள் கோபத்தினாலே ஒரு புருஷனைக் கொன்று, தங்கள் அகங்காரத்தினாலே அரண்களை நிர்மூலமாக்கினார்களே.

ஆதி 49:7. உக்கிரமான அவர்கள் கோபமும் கொடுமையான அவர்கள் மூர்க்கமும் சபிக்கப்படக்கடவது; யாக்கோபிலே அவர்களைப் பிரியவும், இஸ்ரவேலிலே அவர்களைச் சிதறவும்பண்ணுவேன்.

யாக்கோபு ரூபனுக்கு தீர்க்கதரிசன வார்த்தைகளை சொல்லிவிட்டு, அதன் பின்பு சிமியோனுக்கும் லேவிக்கும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். சிமியோனும் லேவியும் ஏகசகோதரர். ஆனால் அவர்கள் இருவரிடத்திலும், தங்கள் தகப்பனாகிய யாக்கோபின் நல்ல சுபாவம் எதுவுமில்லை. அவர்களிடத்தில் பொறுமையும் அமைதியுமில்லை. சிமியோனும் லேவியும் மற்றவர்களை பழிவாங்க துடிக்கிறவர்கள். "அவர்களுடைய பட்டயங்கள் கொடுமையின் கருவிகள்" (ஆதி 49:5) என்று யாக்கோபு சொல்லுகிறார்.

சிமியோனும் லேவியும் முற்கோபிகள். அவர்களுடைய கோபங்களை அவர்களால் கட்டுப்படுத்த முடியாது. தங்களைப் பாதுகாப்பதற்கு அவர்கள் பட்டயங்களை பயன்படுத்துகிறார்கள். அதேவேளையில் தங்கள் கோபத்தினால் மற்றவர்களை தாக்குவதற்கும், அவர்களுக்கு தீங்குகளும் கொடுமைகளும் செய்வதற்கும் தங்கள் பட்டயங்களை பயன்படுத்துகிறார்கள். ஆகையினால் அவர்களுடைய பட்டயங்கள் கொடுமையின் கருவிகளாயிருக்கிறது.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல சுபாவங்களை கற்றுத்தரலாம். அவர்களுக்கு நல்ல புத்திமதிகளையும் சொல்லலாம். ஆனாலும் சுயபலத்தினாலோ, சுயவல்லமையினாலோ பெற்றோரால் தங்கள் பிள்ளைகளை திருத்த முடியாது. யாக்கோபு அமைதியான சுபாவமுள்ளவர். ஆனால் அவருடைய குமாரராகிய சிமியோனும் லேவியும் கோபக்காரராயிருக்கிறார்கள்.

சிமியோனும் லேவியும் சீகேமியருக்கு விரோதமாக எழும்பி, தங்கள் பட்டயத்தினால் அவர்களை சங்காரம்பண்ணினார்கள். இதனால் யாக்கோபின் இருதயம் விசனப்பட்டது. சிமியோனும் லேவியும் ஏகசகோதரராயிருந்து, தங்கள் பட்டயங்களை கொடுமையின் கருவிகளாய் பயன்படுத்தினார்கள்.

"அப்பொழுது யாக்கோபு சிமியோனையும் லேவியையும் பார்த்து: இந்தத் தேசத்தில் குடியிருக்கிற கானானியரிடத்திலும் பெரிசியரிடத்திலும் என் வாசனையை நீங்கள் கெடுத்ததினாலே என்னைக் கலங்கப்பண்ணினீர்கள்; நான் கொஞ்ச ஜனமுள்ளவன்; அவர்கள் எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடி, நானும் என் குடும்பமும் அழியும்படி என்னை வெட்டிப்போடுவார்களே என்றான்" (ஆதி 34:30).

சிமியோனும் லேவியும் தீயசுபாவமுள்ளவர்கள். அவர்களுடைய கெட்ட சுபாவம் இனிமேலும் மாறாது. அவர்கள் இருவரும் தங்கள் தகப்பனாரின் ஆலோசனைகளுக்கும், புத்திமதிகளுக்கும் செவிகொடுக்கமாட்டார்கள். யாக்கோபின் நல்ல சுபாவங்களை அவர்கள் இருவரும் தங்களுக்கு சொந்தமாக்கிக்கொள்ளமாட்டார்கள்.

யாக்கோபு சிமியோனுக்கும் லேவிக்கும் தீர்க்கதரிசனம் சொல்லும்போது, "என் ஆத்துமாவே, அவர்களுடைய இரகசிய ஆலோசனைக்கு உடன்படாதே; என் மேன்மையே, அவர்கள் கூட்டத்தில் நீ சேராதே; அவர்கள் தங்கள் கோபத்தினாலே ஒரு புருஷனைக் கொன்று, தங்கள் அகங்காரத்தினாலே அரண்களை நிர்மூலமாக்கினார்களே" (ஆதி 49:6) என்று சொல்லுகிறார்.

சிமியோன், லேவி ஆகியோருடைய பட்டயங்கள் கொடுமையின் கருவிகள். சீகேமைச் சங்காரம் பண்ணுவதற்கு இவர்கள் முன்சென்றார்கள். (ஆதி 49:5-7; ஆதி 34:25).

"என் ஆத்துமாவே, அவர்களுடைய இரகசிய ஆலோசனைக்கு உடன்படாதே" என்று யாக்கோபு சொல்லுகிறார். அவர்களுடைய ஆலோசனையில் உடன்பட்டு, அவர்களுடைய கூட்டத்தில் சேரக்கூடாது. அவர்கள் தங்கள் கோபத்தினால் கொலைபண்ணுகிறவர்கள். அவர்கள் அகங்காரமுடையவர்கள். (ஆதி 34:25).

சிமியோனும் லேவியும் அரண்களை நிர்மூலமாக்கினார்கள். ஒருசில மொழிபெயர்ப்புக்களில் "அவர்கள் பாவமில்லாத மனுஷரைக் கொலைபண்ணினார்கள், பிரபுவைச் சந்தோஷமாகக் கொன்றார்கள்" என்று எழுதப்பட்டிருக்கிறது. தீனாளைக் கெடுத்த பிரபுவை அவர்கள் கொன்றதினால் இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம்.

"யாக்கோபிலே அவர்களைப் பிரியவும், இஸ்ரவேலிலே அவர்களைச் சிதறவும் பண்ணுவேன்" (ஆதி 49:7) என்று யாக்கோபு சொல்லுகிறார். சிமியோன் மிகச்சிறிய கோத்திரம். ஆகையினால் சிமியோன் கோத்திரத்தாருக்குக் கானான் தேசத்தில் பங்குவீதம் தனியாகக் கொடுக்கப்படவில்லை. யூதாவின் ஒரு பகுதி சிமியோன் கோத்திரத்தாருக்குக் கொடுக்கப்பட்டது. (யோசு 19:1; யோசு 21:9; 1நாளா 4:23-43). லேவி கோத்திரத்தாருக்கும் இஸ்ரவேலில் சுதந்தரவீதம் இல்லை. எல்லாக் கோத்திரங்களிலும் சிதறியிருக்கும் பட்டணங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது (யோசு 13:33; யோசு 21:1-45).

ஆதி 49:7-ஆவது வசனத்தில் "யாக்கோபு" என்னும் பெயர் முதன் முறையாக சமஸ்த இஸ்ரவேலைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

யாக்கோபு தான் சொல்லுகிற தீர்க்கதரிசன வார்த்தைகள் மூலமாக, தான் துன்மார்க்கமான சுபாவங்களை எதிர்ப்பதை தெளிவுபடுத்துகிறார். அதோடு சிமியோன் லேவி ஆகியோருடைய துன்மார்க்கத்தில், தனக்கு பங்கில்லை என்பதையும் உறுதிபண்ணுகிறார்.

சிமியோனும் லேவியும் கோபமும் மூர்க்கமுமுள்ளவர்கள். யாக்கோபு அவர்களுடைய தீயகுணங்களை சபிக்கிறார். அவர் தன்னுடைய குமாரராகிய சிமியோனையும் லேவியையும் சபிக்கவில்லை. ஆனாலும் அவர்களுடைய துன்மார்க்கமான குணங்களை யாக்கோபு சபிக்கிறார்.

"உக்கிரமான அவர்கள் கோபமும் கொடுமையான அவர்கள் மூர்க்கமும் சபிக்கப்படக்கடவது; யாக்கோபிலே அவர்களைப் பிரியவும், இஸ்ரவேலிலே அவர்களைச் சிதறவும்பண்ணுவேன்" (ஆதி 49:7) என்று யாக்கோபு சிமியோனையும் லேவியையும் குறித்து தன்னுடைய தீர்க்தரிசன வார்த்தைகளை சொல்லுகிறார்.

யாக்கோபைப்போலவே நாமும் பாவிகளையும், அவர்களுடைய பாவங்களையும் வேறுபிரித்து வித்தியாசம் காணவேண்டும். நாம் பாவிகளை சிநேகிக்கவேண்டும். அவர்களுடைய பாவங்களை வெறுக்கவேண்டும். கிறிஸ்துவானவர் பாவிகளை நேசிக்கிறார். ஆனாலும் அவர் அவர்களுடைய பாவங்களை வெறுக்கிறார்.

யாக்கோபு சிமியோனுக்கும் லேவிக்கும் தீர்க்கதரிசன வார்த்தைகளை சொல்லும்போது, "யாக்கோபிலே அவர்களை பிரியவும், இஸ்ரவேலிலே அவர்களை சிதறவும் பண்ணுவேன்" என்று சொல்லுகிறார். அவர்களுடைய சந்ததியார் மீது இஸ்ரவேலுக்கு பிரியம் இருக்காது.

யாக்கோபு தீர்க்கதரிசனமாய்ச் சொன்னதுபோல, லேவி கோத்திரத்தார், இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தார் மத்தியிலும் சிதறிப்போனார்கள். இஸ்ரவேல் கோத்திரத்தாருக்கு, கானான் தேசத்திலே பங்குவீதம் பிரித்துக்கொடுக்கப்பட்டபோது, சிமியோன் கோத்திரத்தாருக்கு ஒரே இடத்தில் பங்குவீதம் கிடைக்கவில்லை. அவர்களுடைய பங்குவீதங்கள் வெவ்வேறு இடங்களில் பிரிந்திருந்தது.

யாக்கோபு தன் குமாரனாகிய லேவிக்கு சாபமான வார்த்தைகளை சொன்னாலும், பிற்காலத்தில் அவர்களுடைய சாபம் ஆசீர்வாதமாக மாறுகிறது. ஆனால் சிமியோன் கோத்திரத்தாருக்கோ ஆசீர்வாதம் கிடைக்கவில்லை. அவர்கள் ஆரம்பத்தில் சபிக்கப்பட்டதுபோலவே பிற்காலத்திலும் சபிக்கப்பட்டிருக்கிறார்கள். சிமியோன் கோத்திரத்தார் பிற்காலத்தில் சபிக்கப்பட்டதற்கு, சிம்ரியின் பாவம் காரணமாயிற்று.

"மீதியானிய ஸ்திரீயோடே குத்துண்டு செத்த இஸ்ரவேல் மனிதனுடைய பேர் சிம்ரி; அவன் சல்லூவின் குமாரனும், சிமியோனியரின் தகப்பன் வம்சத்தில் ஒரு பிரபுவுமாயிருந்தான்" (எண் 25:14).

யூதா
ஆதி 49:8-12

ஆதி 49:8. யூதாவே, சகோதரரால் புகழப்படுபவன் நீயே; உன் கரம் உன் சத்துருக்களுடைய பிடரியின்மேல் இருக்கும்; உன் தகப்பனுடைய புத்திரர் உன்முன் பணிவார்கள்.

ஆதி 49:9. யூதா பாலசிங்கம், நீ இரை கவர்ந்துகொண்டு ஏறிப்போனாய்; என் மகனே, சிங்கம்போலும் கிழச்சிங்கம்போலும் மடங்கிப் படுத்தான்; அவனை எழுப்புகிறவன் யார்?

ஆதி 49:10. சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்.

ஆதி 49:11. அவன் தன் கழுதைக்குட்டியைத் திராட்சச்செடியிலும், தன் கோளிகைக் கழுதையின் குட்டியை நற்குல திராட்சச்செடியிலும் கட்டுவான்; திராட்சரசத்திலே தன் வஸ்திரத்தையும், திராட்சப்பழங்களின் இரத்தத்திலே தன் அங்கியையும் தோய்ப்பான்.

ஆதி 49:12. அவன் கண்கள் திராட்சரசத்தினால் சிவப்பாயும், அவன் பற்கள் பாலினால் வெண்மையாயும் இருக்கும்.

யூதா கோத்திரத்தாருக்கு மகிமையான காரியங்கள் தீர்க்கதரிசன வார்த்தைகளாக சொல்லப்படுகிறது. யூதா என்னும் பெயருக்கு துதி என்று பொருள். யாக்கோபு யூதாவுக்கு தீர்க்கதரிசன வார்த்தைகளை சொல்லும்போது, "யூதாவே, சகோதரரால் புகழப்படுபவன் நீயே" (ஆதி 49:8) என்று சொல்லுகிறார்.

இயேசுகிறிஸ்து யூதா கோத்திரத்திலிருந்து வந்திருக்கிறார். இயேசு கிறிஸ்துவில், "உன் தகப்பனுடைய புத்திரர் உன் முன் பணிவார்கள்" என்னும் இந்த வாக்கியம் நிறைவேறுகிறது (பிலி 2:10; சங் 72:1-14). தாவீதிலும், இந்த வாக்கியம் நிறைவேறிற்று. (2சாமு 5:1-8). யூதா கோத்திரத்தைப் பார்த்து மற்றவர்கள் பயப்படுவார்கள். யூதா பயமுறுத்துகிற கோத்திரம் (எண் 24:9).

யூதாகோத்திரத்தார் யுத்தங்களிலே ஜெயம்பெறுவார்கள். இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரைவிட, யூதாகோத்திரத்தார் உயர்ந்தவர்களாகவும், மேன்மையுள்ளவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் எண்ணிக்கையிலும் அதிகரித்திருப்பார்கள். அது மாத்திரமல்ல அவர்கள் பலத்திலும் பராக்கிரமத்திலும், சிறந்து விளங்குவார்கள். யூதாகோத்திரத்தார் இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரை ஆளுகை செய்வார்கள். "உன் கரம் உன் சத்துருக்களுடைய பிடரியின்மேல் இருக்கும்; உன் தகப்பனுடைய புத்திரர் உன்முன் பணிவார்கள்" (ஆதி 49:8) என்று யூதாகோத்திரத்தாருக்கு யாக்கோபு தீர்க்கதரிசன வார்த்தைகளை சொல்லுகிறார்.

யூதா நியாயப்பிரமாணிகனாகவும் இருப்பான். "நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை" (ஆதி 49:10) என்று யாக்கோபு யூதாவுக்கு தீர்க்கதரிசன வார்த்தைகளை சொல்லுகிறார். "கீலேயாத் என்னுடையது, மனாசேயும் என்னுடையது, எப்பிராயீம் என் தலையின் பெலன், யூதா என் நியாயப்பிரமாணிகன்" (சங் 60:7).

யூதாகோத்திரத்தார், இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரை வனாந்தரத்தில் வழிநடத்திச் சென்றார்கள். அவர்கள் கானான் தேசத்தை சுதந்தரிக்கும்போது, யூதாவின் சேனை, மற்ற கோத்திரத்தின் சேனைகளுக்கு முன்னால் சென்றது.

"யோசுவா மரித்தபின் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி: கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணும்படி, எங்களில் யார் முதல்முதல் எழுந்து புறப்படவேண்டும் என்று கேட்டார்கள். அதற்குக் கர்த்தர்: யூதா எழுந்து புறப்படக்கடவன்; இதோ, அந்த தேசத்தை அவன் கையிலே ஒப்புக்கொடுத்தேன் என்றார்" (நியா 1:1,2).

யூதா கோத்திரத்தார் பலமும், பராக்கிரமமுமுள்ளவர்களாயிருப்பார்கள். அவர்கள் தைரியசாலிகளாகவும் இருப்பார்கள். மற்ற கோத்திரத்தாரை ஆளுகை செய்யும் அதிகாரம் யூதா கோத்திரத்தாருக்கு இருக்கும். "யூதா பாலசிங்கம்" (ஆதி 49:9) என்று யாக்கோபு சொல்லுகிறார்.

காட்டிலுள்ள மிருகங்களில் சிங்கமே ராஜாவைப்போல இருக்கிறது. மற்ற மிருகங்களுக்கெல்லாம் சிங்கம் தலைவர் போல இருக்கும். யாக்கோபு யூதாவைப்பற்றிச் சொல்லும்போது, "யூதா பாலசிங்கம், நீ இரை கவர்ந்துகொண்டு ஏறிப்போனாய்; என் மகனே, சிங்கம்போலும் கிழச்சிங்கம்போலும் மடங்கிப் படுத்தான்; அவனை எழுப்புகிறவன் யார்?" (ஆதி 49:9) என்று சொல்லுகிறார்.

சிங்கம் தன்னுடைய வாயில் இறையைக் கவ்வியிருக்கும்போது, அந்த இறையை அதின் வாயிலிருந்து யாராலும் பறித்துக்கொள்ள முடியாது. சிங்கத்திற்கு விரோதமாக எந்த மிருகத்தாலும் எதிர்த்து நின்று யுத்தம்பண்ண முடியாது. யாக்கோபு யூதாகோத்திரத்தாரின் மேன்மைகளை தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறார். யூதாகோத்திரத்தாருக்கு ஏராளமான யுத்தங்களில் வெற்றி கிடைக்கும். அவர்கள் யுத்தத்திற்கு புறப்பட்டுப்போகும்போது, அவர்களை யாராலும் எதிர்க்க முடியாது.

யூதாகோத்திரத்தார் சமாதானத்திற்காக யுத்தம்பண்ணுவார்கள். யுத்தத்தின் முடிவில் கிடைக்கும் சமாதானமே அவர்களுக்கு வெற்றியாயிருக்கும். அந்த வெற்றியை யூதாகோத்திரத்தார் எல்லோரும் சந்தோஷமாய் அனுபவிப்பார்கள். யுத்தம்பண்ணி மற்ற தேசத்தை அபகரித்துக்கொள்ளவேண்டும் என்னும் பேராசை யூதாகோத்திரத்தாருக்கு இல்லை. அவர்கள் சமாதானத்திற்காகவே யுத்தம்பண்ணுவார்கள்.

கெர்ச்சிக்கிற சிங்கம் எப்போதும் இறையைக் கவ்விக்கொண்டிருக்கும். அது இரைதேடுவதற்கு சுற்றி அலைந்துகொண்டிருக்கும். ஆனால் யூதாகோத்திரத்தார் கெர்ச்சிக்கிற சிங்கமாகயிராமல் பாலசிங்கமாகயிருப்பார்கள். பாலசிங்கம் தன் இரையை கவர்ந்துகொண்டு, அதன் பின்பு அமைதியாய்ப் படுத்திருக்கும். அதுபோலவே யூதாகோத்திரத்தாரும் யுத்தங்களில் வெற்றி பெற்ற பின்பு, சமாதானமாயிருப்பார்கள். தங்கள் வெற்றியில் திருப்தியோடிருப்பார்கள். அவர்கள் தேவையில்லாமல் மற்ற தேசத்தாருக்கு விரோதமாகயுத்தம்பண்ணபோகமாட்டார்கள். இது யூதாகோத்திரத்தாரின் நல்ல சுபாவமாகும்.

யூதாகோத்திரத்தார் ராஜரீக கோத்திரமாகயிருப்பார்கள். மேசியா யூதாகோத்திரத்திலிருந்து வருவார். "சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதில்லை" (ஆதி 49:10) என்று யாக்கோபு தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். இஸ்ரவேலின் செங்கோலை யாக்கோபு தன் தரிசனத்தில் காண்கிறார்.

செங்கோல் என்பது ஆளுகையைக் குறிக்கும். யூதா ஆளுகை செய்யும் கோத்திரம். மேசியா யூதா கோத்திரத்திலிருந்து வந்திருக்கிறார். அவருடைய ஆளுகை நித்திய ஆளுகையாக இருக்கும். யூதா தேவனுடைய நியாயப்பிரமாணிக்கன் என்று அழைக்கப்படுகிறான். (சங் 60:7; சங் 108:8; ஏசா 33:22; யாக் 4:12)

யூதாவின் ஆளுகை எதுவரைக்கும் இருக்கும் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். அதன் விவரம் வருமாறு :

1. சமாதானக்கர்த்தர் வருமளவும். (ஆதி 49:10). சமாதானக் கர்த்தர் என்பதற்கான எபிரெய வார்த்தை "சைலோ" என்பதாகும். சைலோ என்னும் வார்த்தை மேசியாவிற்குக் கொடுக்கப்படும் அடைமொழி. இது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கிறது.

2. ஜனங்கள் அவரிடத்தில் சேரும் வரைக்கும். (ஆதி 49:10). சமாதானக் கர்த்தரிடத்தில் ஜனங்கள் கூடிச்சேருவார்கள். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது இஸ்ரவேல் ஜனம் பூமியின் நான்கு முனைகளிலிருந்தும், கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். மேசியா இஸ்ரவேலை ஆளுகை செய்வார். (ஏசா 9:6-7; லூக்கா 1:32-33) இயேசு கிறிஸ்து வரும்போது எல்லா தேசங்களையும் ஆட்சி புரிவார்.

யாக்கோபு செங்கோலைக் குறித்து சொல்லுகிற தீர்க்கதரிசனம், தாவீதின் மூலமாக நிறைவேறிற்று. தாவீதின் சந்ததியார் இஸ்ரவேலை ஆளுகை செய்கிற ராஜாக்களாயிருக்கிறார்கள். சமாதான கர்த்தர் யூதாகோத்திரத்தில் வருகிறார். கிறிஸ்துவானவர் சமாதானமுள்ளவராகவும், சமாதானம்பண்ணுகிறவராகவும் வந்திருக்கிறார். அவர் ஆசீர்வாதமானவராகவும், ஆசீர்வதிக்கிறவராகவும் இருக்கிறார். மேசியாவே உலக இரட்சகர்.

"சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதில்லை" என்று யாக்கோபு சொல்லுகிறார். யூதா கோத்திரத்தாரே சிறையிருப்புக்குப் போகும்வரையிலும், இஸ்ரவேல் தேசத்தாரை ஆளுகைசெய்கிறார்கள். தாவீதின் காலத்திலிருந்து, இஸ்ரவேல் ஜனத்தார் சிறையிருப்புக்குப்போகும் காலம் வரையிலும் செங்கோல் யூதாகோத்திரத்தாரிடமே இருந்தது.

யூதா கோத்திரத்தாரோடு லேவி கோத்திரத்தாரும் சேர்ந்துகொள்கிறார்கள். ரோமப்பேரரசின் காலத்தில் யூதேயா தேசம் தனி தேசமாயிற்று. இயேசுகிறிஸ்து பிறந்த காலத்தில், யூதா தேசம் தனி தேசமாகவே விளங்கிற்று.

"அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று அகஸ்துராயனால் கட்டளை பிறந்தது......... அப்பொழுது யோசேப்பும், தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்த படியினாலே, தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப்பெழுதப்படும்படி, கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனான்" *(லூக் 2:1-5).*

இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் அறையப்படும்போது, யூதர்கள் அகஸ்துராயனை தங்களுக்கு ராஜாவாக அங்கீகரிக்கிறார்கள். "எங்களுக்கு ராயனைத் தவிர வேறு ராஜா இல்லை" என்று யூதர்கள் சொல்லுகிறார்கள்.

யூதா கோத்திரத்தார் செழிப்படைந்திருக்கிறார்கள். "அவன் தன் கழுதைக்குட்டியைத் திராட்சச்செடியிலும், தன் கோளிகைக் கழுதையின் குட்டியை நற்குல திராட்சச்செடியிலும் கட்டுவான்; திராட்சரசத்திலே தன் வஸ்திரத்தையும், திராட்சப்பழங்களின் இரத்தத்திலே தன் அங்கியையும் தோய்ப்பான். அவன் கண்கள் திராட்சரசத்தினால் சிவப்பாயும், அவன் பற்கள் பாலினால் வெண்மையாயும் இருக்கும்" *(ஆதி 49:11,12)* என்று யாக்கோபு யூதா கோத்திரத்தார் அனுபவிக்கும் ஆசீர்வாதங்களை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்.

யாக்கோபு யூதாவுக்கு சொல்லும் தீர்க்கதரிசன வார்த்தைகளில் பல, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் சொல்லப்படுகிறது. இயேசுகிறிஸ்துவிலே, நம்முடைய ஆத்துமாக்களுக்கு தேவையான போஜனம் தாராளமாய்க் கிடைக்கிறது. இயேசுகிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் சந்தோஷமாயும் சமாதானமாயும் இருப்பார்கள்.

"ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்" *(ஏசா 55:1).*

செபுலோன்
ஆதி 49:13

ஆதி 49:13. செபுலோன் கடல்துறை அருகே குடியிருப்பான்; அவன் கப்பல் துறைமுகமாய் இருப்பான்; அவன் எல்லை சீதோன் வரைக்கும் இருக்கும்.

செபுலோன் கோத்திரத்தாருக்கு கடற்கரையிலே பங்குவீதம் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் வியாபாரம் பண்ணுகிறவர்கள். செபுலோன் கோத்திரத்தார் கடல் கடந்து அந்நிய தேசங்களுக்குப்போய் வியாபாரம் பண்ணுகிறார்கள்.

யாக்கோபு செபுலோன் கோத்திரத்தாருக்கு, "செபுலோன் கடல்துறை அருகே குடியிருப்பான்; அவன் கப்பல் துறைமுகமாய் இருப்பான்; அவன் எல்லை சீதோன் வரைக்கும் இருக்கும்" *(ஆதி 49:13)* என்று தீர்க்கதரிசன வார்த்தைகளை சொல்லுகிறார்.

யாக்கோபு தீர்க்கதரிசனம் சொல்லி இருநூறு அல்லது முந்நூறு வருஷங்களுக்கு பின்பு கானான் தேசம் இஸ்ரவேலின் கோத்திரத்தாருக்கு பங்குவீதமாக பிரித்துக்கொடுக்கப்படுகிறது. அப்போது யாக்கோபு சொன்ன பிரகாரமாகவே, செபுலோன் கோத்திரத்தாருக்கு, கடல்துறை அருகே பங்குவீதம் கிடைக்கிறது.

"மூன்றாம் சீட்டு செபுலோன் புத்திரருக்கு விழுந்தது; அவர்களுக்கு அவர்கள் வம்சங்களின்படி கிடைத்த சுதந்தரபங்கு வீதம் சாரீத்மட்டுமுள்ளது" *(யோசு 19:11).*

இசக்கார்
ஆதி 49:14,15

ஆதி 49:14. இசக்கார் இரண்டு பொதியின் நடுவே படுத்துக்கொண்டிருக்கிற பலத்த கழுதை.

ஆதி 49:15. அவன், இளைப்பாறுதல் நல்லது என்றும், நாடு வசதியானது என்றும் கண்டு, சுமக்கிறதற்குத் தன் தோளைச் சாய்த்து, பகுதிகட்டுகிறவனானான்.

இசக்கார் கோத்திரத்தார் கடினமாக உழைக்கக்கூடியவர்கள். அவர்களுடைய சரீரம் வலுவாயிருக்கிறது. அவர்கள் கழுதைகளைப்போல பொறுமையாக சுமை சுமக்கிறவர்கள். "இசக்கார் இரண்டு பொதியின் நடுவே படுத்துக்கொண்டிருக்கிற பலத்த கழுதை" (ஆதி 49:14) என்று யாக்கோபு இசக்காரைக் குறித்து தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்.

இசக்கார் கோத்திரத்தார் விவசாய வேலைகளை செய்கிறார்கள். அவர்கள் ஆடு மாடுகளை மேய்க்கிற மேய்ப்பர்களாயிருக்கிறார்கள். இசக்கார் கோத்திரத்தார்மீது இரண்டு பாரங்கள் சுமத்தப்படுகிறது. அவற்றில் ஒன்று விவசாய வேலை. மற்றொன்று பகுதி கட்டுவது.

யாக்கோபு இசக்காரைப்பற்றிச் சொல்லும்போது, "அவன், இளைப்பாறுதல் நல்லது என்றும், நாடு வசதியானது என்றும் கண்டு, சுமக்கிறதற்குத் தன் தோளைச் சாய்த்து, பகுதிகட்டுகிறவனானான்" (ஆதி 49:15) என்று சொல்லுகிறார்.

இசக்கார் கோத்திரத்தார் எவ்வளவு கடினமான வேலையாகயிருந்தாலும், அந்த வேலையை பொறுமையாக செய்கிறவர்கள். ஆனாலும் அவர்கள்மீது அதிகமாக வரிகள் சுமத்தப்படுகிறது. அவர்கள் வேலையின் பாரங்களை சுமப்பதுபோல, வரியின் பாரங்களையும் சுமக்கிறார்கள்.

எஸ்தரேலோன் பள்ளத்தாக்கு விளைச்சல் நிலம் மிகுந்தது. சத்துருக்கள் அடிக்கடி இங்கு வந்து, இவர்களைக் கொள்ளையிடுவார்கள். தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இசக்கார் கோத்திரத்தார் விரோதிகளுக்குப் பகுதி கட்டிவிடுவார்கள் (ஆதி 49:14-15).

தாண்
ஆதி 49:16-18

ஆதி 49:16. தாண் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒரு கோத்திரமாகி, தன் ஜனத்தை நியாயம் விசாரிப்பான்.

ஆதி 49:17. தாண், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவன் மல்லாந்து விழும்படியாய் அதின் குதிகாலைக் கடிக்கிறதற்கு வழியில் கிடக்கிற சர்ப்பத்தைப்போலவும், பாதையில் இருக்கிற விரியனைப்போலவும் இருப்பான்.

ஆதி 49:18. கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்புக்குக் காத்திருக்கிறேன்.

தாண் யாக்கோபின் மறுமனையாட்டிகளுடைய குமாரரில் ஒருவன். ஆனாலும் "தாண் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒரு கோத்திரமாகி, தன் ஜனத்தை நியாயம் விசாரிப்பான்" (ஆதி 49:16) என்று யாக்கோபு சொல்லுகிறார்.

தாண் கோத்திரத்தாரிடம் அறிவும் ஆற்றலும் இருக்கும். மற்றவர்கள் எதிர்பார்க்காத காரியங்களை தாண் கோத்திரத்தார் செய்வார்கள். அவர்களுடைய வேலைகள் எல்லாமே ஆச்சரியமானதாயிருக்கும். அவர்கள் தங்கள் சத்துருக்களை மறைந்திருந்து திடீரென்று தாக்குவார்கள். தாண் கோத்திரத்தாரிடத்தில் சர்ப்பத்தின் தந்திரம் இருக்கும்.

யாக்கோபு தாணைப்பற்றிச் சொல்லும்போது, "தாண், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவன் மல்லாந்து விழும்படியாய் அதின் குதிகாலைக் கடிக்கிறதற்கு வழியில் கிடக்கிற சர்ப்பத்தைப்போலவும், பாதையில் இருக்கிற விரியனைப்போலவும் இருப்பான்" (ஆதி 49:17) என்று தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் கோத்திரத்தார் எல்லோரும் ஒரே சுபாவத்தாராயிராமல், வெவ்வேறு சுபாவத்தாராயிருக்கிறார்கள். யூதாகோத்திரத்தார் பாலசிங்கத்தைப்போல இருக்கிறார்கள். தாண் கோத்திரத்தாரோ சர்ப்பத்தைப்போலவும், விரியனைப்போலவும் தந்திரமுள்ளவர்களாயிருக்கிறார்கள். கானான் தேசத்திலே கானானியர்கள் குடியிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கானானியரை துரத்திவிட்டு, கானான் தேசத்தை சுதந்தரித்துக்கொள்ளவேண்டும்.

கானானை சுதந்தரிப்பது மிகப்பெரிய யுத்தம். இஸ்ரவேல் புத்திரர் ஒற்றுமையாயிருந்து கானானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். இந்த யுத்தத்தில் வெற்றிபெறவேண்டுமென்றால் பாலசிங்கத்தைப்போல வலிமையுள்ள யூதாகோத்திரத்தாரும் தேவைப்படுகிறார்கள். சர்ப்பத்தைப்போலவும், விரியனைப்போலவும் தந்திரமுள்ள தாண் கோத்திரத்தாரும் தேவைப்படுகிறார்கள்.

யாக்கோபு தன்னுடைய குமாரரில் ஒரு சிலருக்கு கடைசி நாட்களில் அவர்களுக்கு நேரிடும் காரியங்களை அறிவித்த பின்பு, தன்னைப்பற்றியும் சொல்லுகிறார். "கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்புக்குக் காத்திருக்கிறேன்" (ஆதி 49:18) என்று யாக்கோபு சொல்லுகிறார். அவர் மனுஷருடைய உதவிக்காக காத்திருக்காமல், கர்த்தருடைய இரட்சிப்புக்காக காத்திருக்கிறார்.

காத்

ஆதி 49:19

ஆதி 49:19. காத் என்பவன்மேல் ராணுவக்கூட்டம் பாய்ந்துவிழும்; அவனோ முடிவிலே அதின்மேல் பாய்ந்துவிழுவான்.

காத் என்னும் பெயருக்கு ராணுவக்கூட்டம் என்று பொருள். காத் கோத்திரத்தார் ராணுவக்கூட்டத்தார் போலவே இருப்பார்கள். அவர்கள் யுத்தத்திற்கு புறப்பட்டுப்போக எப்போதுமே ஆயத்தமாயிருப்பார்கள்.

"காத்தியரில் பரிசையும் ஈட்டியும் பிடித்து, சிங்கமுகம்போன்ற முகமும், மலைகளிலிருக்கிற வெளிமான் வேகம் போன்ற வேகமுமுள்ளவர்களாயிருந்து, யுத்தசேவகரான பராக்கிரமசாலிகள் சிலரும் வனாந்தரத்திலுள்ள அரணான இடத்தில் இருக்கிற தாவீது பட்சமாய்ச் சேர்ந்தார்கள்" (1நாளா 12:8).

காத் கோத்திரத்தார் யோர்தானுக்கு அப்புறத்திலே குடியிருக்கிறார்கள். மோவாபியர், அம்மோனியர் ஆகியோர் அவர்களுக்கு அருகாமையிலிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் இஸ்ரவேல் புத்திரருக்கு சத்துருக்கள். இஸ்ரவேலரின் சத்துருக்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரும்போது, அவர்கள் முதலாவதாக தங்களுக்கு அருகாமையில் குடியிருக்கும் காத் கோத்திரத்தார் மீது யுத்தம்பண்ணுவார்கள். "காத் என்பவன்மேல் ராணுவக்கூட்டம் பாய்ந்துவிழும்" என்று யாக்கோபு தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறார். "அவனோ முடிவிலே அதின்மேல் பாய்ந்துவிழுவான்" என்றும் யாக்கோபு காத்தைக் குறித்து சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் வரலாற்றில் காத் கோத்திரத்தாருக்கு விரோதமாக ஏராளமான யுத்தங்கள் நடைபெற்றிருக்கிறது. அந்நிய தேசத்தின் ராணுவக்கூட்டத்தார், காத்கோத்திரத்தார்மீது யுத்தம் பண்ணியிருக்கிறார்கள். ஆனாலும் இந்த யுத்தங்களிலெல்லாம், காத் கோத்திரத்தாரே முடிவிலே வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

சவுலின் காலத்திலும், தாவீதின் காலத்திலும், மோவாபியரும் அம்மோன் புத்திரரும் முற்றிலுமாய் ஒடுக்கப்பட்டிருந்தார்கள்.

"ரூபன் புத்திரரிலும், காத்தியரிலும், மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரிலும் கேடகமும் பட்டயமும் எடுத்து, வில்லெய்து, யுத்தத்திற்குப் பழகி, படைக்குப் போகத்தக்க சேவகர் நாற்பத்துநாலாயிரத்து எழுநூற்று அறுபதுபேராயிருந்தார்கள். அவர்கள் ஆகாரியரோடும், யெத்தூர் நாப்பீஸ் நோதாப் என்பவர்களோடும் யுத்தம்பண்ணுகிறபோது, அவர்களோடே எதிர்க்கத் துணை பெற்றபடியினால், ஆகாரியரும் இவர்களோடிருக்கிற யாவரும் அவர்கள் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள்; அவர்கள் யுத்தத்திலே தேவனை நோக்கிக் கூப்பிட்டு, அவர்மேல் நம்பிக்கைவைத்தபடியினால் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளினார்" (1நாளா 5:18-20).

விசுவாசிகளாகிய நமக்கு இந்தப் பிரபஞ்சத்திலே உபத்திரவங்களும், போராட்டங்களும் உண்டு. நாம் இவையெல்லாவற்றிலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால், ஜெயம் கொள்கிறவர்களாயிருக்கிறோம்.

“உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப் போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப்பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே” (ரோம 8:35-37).

ஆசேர்
ஆதி 49:20

ஆதி 49:20. ஆசேருடைய ஆகாரம் கொழுமையாயிருக்கும்; ராஜாக்களுக்கு வேண்டிய ருசிவர்க்கங்களை அவன் தருவான்.

ஆசேர் கோத்திரத்தார் ஐசுவரியம் மிகுந்தவர்களாயிருப்பார்கள். “ஆசேருடைய ஆகாரம் கொழுமையாயிருக்கும்; ராஜாக்களுக்கு வேண்டிய ருசிவர்க்கங்களை அவன் தருவான்” (ஆதி 49:20) என்று யாக்கோபு ஆசேரைக் குறித்து தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்.

ஆசேர் கோத்திரத்தாரிடத்தில் தேவைக்கு அதிகமாக தானியம் இருக்கும். அவர்கள் மற்ற கோத்திரத்தாருக்கும் தங்கள் தேசத்தின் தானியங்களை ஏற்றுமதி பண்ணுவார்கள்.

நப்தலி
ஆதி 49:21

ஆதி 49:21. நப்தலி விடுதலைபெற்ற பெண்மான்; இன்பமான வசனங்களை வசனிப்பான்.

நப்தலி என்னும் பெயருக்கு போராட்டம் என்று பொருள். போராட்டத்தின் முடிவிலே வெற்றி கிடைக்கும். நப்தலியின் போராட்டம் ஆசீர்வாதமாய் முடியும். “நப்தலி விடுதலைபெற்ற பெண்மான்; இன்பமான வசனங்களை வசனிப்பான்” (ஆதி 49:21) என்று யாக்கோபு சொல்லுகிறார்.

நப்தலி கோத்திரத்தார் பெண்மானைப்போல எல்லோரோடும் இன்பமான வார்த்தைகளைப் பேசுவார்கள். அவர்கள் அனைவரோடும் சமாதானமாயிருப்பார்கள். நப்தலி கோத்திரத்தார் மற்றவர்களுக்கு கீழ்ப்படிவார்கள்.

யாக்கோபு நப்தலி கோத்திரத்தாரைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் விடுதலை பெற்ற பெண்மான் என்று சொல்லுகிறார். அவர்கள் தங்கள் விடுதலைக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். அவர்கள் சிறையிருப்பை விரும்பமாட்டார்கள்.

நப்தலி கோத்திரத்தார் சோம்பேறியாக சும்மா படுத்திருக்கும் மான்களைப் போன்றவர்களல்ல. அவர்கள் வேகமாக ஓடுகிற மான்களைப்போன்றவர்கள். நப்தலி கோத்திரத்தார் எந்த வேலையையும் சுறுசுறுப்பாயும், வேகமாயும் செய்து முடிப்பார்கள்.

“அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப்போலாக்கி, என்னுடைய உயர்தலங்களில் என்னை நிறுத்துகிறார்” (சங் 18:33).

யாக்கோபுக்கு பன்னிரண்டு குமாரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தார் என்று அழைக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு கோத்திரத்தாரின் சுபாவமும் வித்தியாசமாயிருக்கிறது. யூதா கோத்திரத்தார் பால சிங்கத்தைப்போலவும் இசக்கார் கோத்திரத்தார் கழுதையைப்போலவும் தாண் கோத்திரத்தார் சர்ப்பத்தைப்போலவும், நப்தலி கோத்திரத்தார் பெண்மானைப்போலவும் இருக்கிறார்கள்.

இஸ்ரவேல் கோத்திரத்தாரின் சுபாவங்கள் வித்தியாசமானதாகவும், வேறுபட்டதாகவும் இருக்கிறது. ஆனாலும் அவர்கள் எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து, இஸ்ரவேலின் நன்மைக்காகவும், அதன் முன்னேற்றத்திற்காகவும் உழைக்கிறார்கள். தன்னுடைய குமாரர் ஒன்றாயும் ஒற்றுமையாயும் இருக்கவேண்டுமென்று யாக்கோபு விரும்புகிறார். ஆகையினால், அவர் ஆரம்பத்திலே, தன்னுடைய குமாரரை அழைக்கும்போது, "நீங்கள் கூடிவாருங்கள்" என்றும், "யாக்கோபின் குமாரரே, கூடிவந்து கேளுங்கள்" என்றும் சொல்லுகிறார். யாக்கோபு "கூடிவருவதற்கு" முக்கியத்துவம் கொடுக்கிறார்.

யோசேப்பு ஆதி 49:22-26

ஆதி 49:22. யோசேப்பு கனிதரும் செடி; அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும் செடி; அதின் கொடிகள் சுவரின்மேல் படரும்.

ஆதி 49:23. வில்வீரர் அவனை மனமடிவாக்கி, அவன்மேல் எய்து, அவனைப் பகைத்தார்கள்.

ஆதி 49:24. ஆனாலும், அவனுடைய வில் உறுதியாய் நின்றது; அவன் புயங்கள் யாக்கோபுடைய வல்லவரின் கரங்களால் பலத்தன; இதினால் அவன் மேய்ப்பனும் இஸ்ரவேலின் கன்மலையும் ஆனான்.

ஆதி 49:25. உன் தகப்பனுடைய தேவனாலே அப்படியாயிற்று, அவர் உனக்குத் துணையாயிருப்பார்; சர்வவல்லவராலே அப்படியாயிற்று, அவர் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், ஸ்தனங்களுக்கும் கர்ப்பங்களுக்கும் உரிய ஆசீர்வாதங்களினாலும் உன்னை ஆசீர்வதிப்பார்.

ஆதி 49:26. உன் தகப்பனுடைய ஆசீர்வாதங்கள் என் பிதாக்களுடைய ஆசீர்வாதங்களுக்கு மேற்பட்டதாயிருந்து, நித்தியபர்வதங்களின் முடிவுமட்டும் எட்டுகின்றன; அவைகள் யோசேப்புடைய சிரசின் மேலும், தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின் மேலும் வருவதாக.

யாக்கோபு தன்னுடைய குமாரருக்கு ஆசீர்வாதம் சொல்லும்போது, தனக்கு மிகவும் பிரியமான குமாரர்களாகிய யோசேப்புக்கும், பென்யமீனுக்கும் கடைசியிலே ஆசீர்வாதம் சொல்லுகிறார். யோசேப்பு இவர்களுக்கு ஆசீர்வாதம் சொன்ன பின்பு, தன் கால்களை கட்டிலின்மேல் மடக்கிக்கொண்டு, ஜீவித்துப்போய், தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுகிறார்.

யாக்கோபு யோசேப்புக்கு சொல்லுகிற ஆசீர்வாதம் அதிகமாயும், பரிபூரணமாயும் இருக்கிறது. "யோசேப்பு கனிதரும் செடி; அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும் செடி; அதின் கொடிகள் சுவரின்மேல் படரும்" (ஆதி 49:22) என்று யாக்கோபு சொல்லுகிறார்.

யாக்கோபு நெருக்கங்களை அனுபவித்த தேசத்திலே, தேவன் யோசேப்பை கனிதரும் செடியாக ஆசீர்வதித்திருக்கிறார்.

"நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்தில் தேவன் என்னைப் பலுகப்பண்ணினார் என்று சொல்லி, இளையவனுக்கு எப்பிராயீம் என்று பேரிட்டான்" (ஆதி 41:52).

யோசேப்பின் இரண்டு குமாரராகிய மனாசேயும், எப்பிராயீமும், கனிதரும் செடியிலுள்ள இரண்டு கொடிகளாயிருக்கிறார்கள். அந்தக் கொடிகள் சுவரின்மேல் படருகிறது.

கர்த்தர் யோசேப்பைக் குறித்து விசேஷித்த சித்தங்கொண்டிருக்கிறார். யாக்கோபு தான் சொல்லுகிற தீர்க்கதரிசன வார்த்தைகளிலே, யோசேப்பைக் குறித்த கர்த்தருடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறார்.

"வில்வீரர் அவனை மனமடிவாக்கி, அவன்மேல் எய்து, அவனைப் பகைத்தார்கள். ஆனாலும், அவனுடைய வில் உறுதியாய் நின்றது; அவன் புயங்கள் யாக்கோபுடைய வல்லவரின் கரங்களால் பலத்தன; இதினால் அவன் மேய்ப்பனும் இஸ்ரவேலின் கன்மலையும் ஆனான்" (ஆதி 49:23,24) என்று யாக்கோபு யோசேப்பைக் குறித்து தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்.

யோசேப்புக்கு மனமடிவும், நெருக்கமும் உண்டாகும். சத்துருக்கள் யோசேப்பை பகைப்பார்கள். யோசேப்பு இப்போது எகிப்து தேசத்திலே உயர்ந்த அதிகாரியாயிருக்கிறார். அவர் ஒரு குறைவுமில்லாமல் சம்பூரணமாயும், சமாதானமாயும் ஜீவிக்கிறார்.

ஆனாலும் யோசேப்பின் கடந்தகாலம் பாடுகளும், வருத்தங்களும், வேதனைகளும் நிறைந்ததாயிருந்தது. அவருக்கு அநேக சத்துருக்கள் இருந்தார்கள். யாக்கோபு அந்த சத்துருக்களை, "வில்வீரர்" என்று சொல்லுகிறார். அவர்கள் யோசேப்பின்மீது குறிபார்த்து தங்கள் அம்புகளை எய்தார்கள். வில்வீரர் யோசேப்பை மனமடிவாக்கினார்கள்.

யோசேப்பின் சகோதரரே அவருக்கு சத்துருக்களாயிருந்தார்கள். யோசேப்பு தன்னுடைய தகப்பனார் வீட்டிலிருந்தபோதே, யோசேப்பின் சகோதரர் அவரைப் பகைத்தார்கள். யோசேப்பின் சகோதரர், வில்வீரர் போல, யோசேப்பை மனமடிவாக்கி, யோசேப்பின்மேல் தங்கள் அம்புகளை எய்து, அவரைப் பகைத்தார்கள் (ஆதி 49:23).

யோசேப்பு போத்திபாரின் வீட்டிலே வேலை பார்த்துக்கொண்டிருந்தார். போத்திபாரின் மனைவி வில்வீரரைப்போல யோசேப்பின்மேல் அம்புகளை எய்தாள். யோசேப்புக்கு அங்கே பாதுகாப்பு இல்லை. கர்த்தர் யோசேப்பின் மனச்சாட்சியை பலப்படுத்தினார். யோசேப்பு போத்திபாரின் மனைவிக்கு தப்பித்தார்.

யோசேப்பு இப்போது பார்வோனுடைய அரண்மனையிலே உயர்ந்த அதிகாரியாயிருக்கிறார். இவர் எகிப்து தேசத்தார் அல்ல. அந்நிய தேசத்திலிருந்து வந்தவர். பார்வோனுடைய அரண்மனையிலே எகிப்து தேசத்து அதிகாரிகள் ஏராளமானோர் இருப்பார்கள். பார்வோனோ யோசேப்பை உயர்த்தியிருக்கிறார். யோசேப்பு உயர்த்தப்பட்டதை, எகிப்து தேசத்தார் பார்த்து, அவர்மீது பொறாமைப்படுவார்கள். அவருக்கு தீங்கு செய்ய முயற்சி செய்வார்கள். யோசேப்பின் சத்துருக்களும் வில்வீரரைப்போல, அவர்மீது அம்புகளை எய்வார்கள்.

யோசேப்புக்கு ஏராளமான பிரச்சனைகள் வந்தாலும், கர்த்தருடைய கிருபையும் பாதுகாப்பும், பராமரிப்பும் அவரோடுகூட எப்போதும் வருகிறது. ஆகையினால் யோசேப்பு தனக்கு வரும் எல்லா பிரச்சனைகளையும் உறுதியாயிருந்து மேற்கொள்கிறார்.

யாக்கோபு யோசேப்பைக் குறித்து சொல்லும்போது, "ஆனாலும், அவனுடைய வில் உறுதியாய் நின்றது; அவன் புயங்கள் யாக்கோபுடைய வல்லவரின் கரங்களால் பலத்தன; இதினால் அவன் மேய்ப்பனும் இஸ்ரவேலின் கன்மலையும் ஆனான்" (ஆதி 49:24) என்று சொல்லுகிறார்.

யோசேப்புடைய வில் உறுதியாய் நின்றது என்னும் வாக்கியத்திற்கு, அவர் தேவன்மீது தான் வைத்திருக்கும் விசுவாசத்தைவிட்டு விலகவில்லை என்பது பொருள். யோசேப்பின் புயங்கள் யாக்கோபுடைய வல்லவரின் கரங்களால் பலத்தன. யோசேப்புக்கு சத்துருக்கள் மூலமாக பிரச்சனைகள் வந்தாலும், கர்த்தர் மூலமாக உதவிகளும் வருகிறது.

கர்த்தர் யோசேப்பை தம்முடைய விசேஷித்த கிருபைகளினால் ஆசீர்வதிக்கிறார். கர்த்தர் யோசேப்புக்கு ஞானத்தையும், பெலத்தையும், தைரியத்தையும், நீடிய பொறுமையையும் கொடுக்கிறார். இவையெல்லாம் வில்வீரருடைய அம்புகளைவிடவும், சத்துருக்களுடைய மற்ற ஆயுதங்களைவிடவும் அதிக பலமுள்ளவை.

யாக்கோபுடைய வல்லவர் என்னும் வாக்கியம், யாக்கோபின் தேவனாகிய கர்த்தரைக் குறிக்கிறது. தேவனே யோசேப்பை பலப்படுத்துகிறார். நமக்கு வரும் எல்லா ஆசீர்வாதங்களும், பலமும், பொறுமையும், மற்ற கிருபைகளும் சர்வவல்லவருடைய கரங்களிலிருந்தே நமக்கு வருகிறது.

நமக்கு வரும் சோதனைகளை தாங்கிக்கொள்வதற்கும், அவற்றை எதிர்த்து நிற்பதற்கும் நமக்கு தேவனுடைய கிருபைகள் தேவை. அதுபோலவே நமக்கு வரும் பாடுகளையும், உபத்திரவங்களையும் சகித்துக்கொள்வதற்கும், தேவனுடைய கிருபை நமக்கு தேவைப்படுகிறது. நாம் கர்த்தரை பூரணமாய் நம்பும்போது, தேவனுடைய கிருபை நமக்கு போதுமானதாயிருக்கும். நம்முடைய பலவீனத்தில் கர்த்தருடைய பலம் நம்மை பூரணமாய் தாங்கும்.

யாக்கோபு யோசேப்பை ஆசீர்வதிக்கும்போது, "அவர் மேய்ப்பனும், இஸ்ரவேலின் கன்மலையுமானார்" என்று சொல்லுகிறார். யோசேப்பு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் அடையாளமாயிருக்கிறார். கர்த்தர் தமது கிருபையினால் யோசேப்பை ஆசீர்வதித்து உயர்த்துகிறார். அவரை பலப்படுத்தி பயன்படுத்துகிறார்.

யாக்கோபு யோசேப்புக்கு கர்த்தருடைய ஆசீர்வாதங்களையும், வாக்குத்தத்தங்களையும் சொல்லுகிறார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், நாம் தேவனுடைய வல்லமையையும், அவருடைய நன்மையையும் அனுபவித்து வருகிறோம். அவையெல்லாம் நம்மை இதுவரையிலும் பலப்படுத்தியிருக்கிறது .நமக்கு இதுவரையிலும் உதவி செய்த கர்த்தர், இனிமேலும் உதவிசெய்வார். நாம் கர்த்தருடைய உதவியை விசுவாசத்தோடு எதிர்பார்க்கலாம்.

யாக்கோபு யோசேப்பை ஆசீர்வதிக்கும்போது, "உன் தகப்பனுடைய தேவனாலே அப்படியாயிற்று, அவர் உனக்குத் துணையாயிருப்பார்; சர்வவல்லவராலே அப்படியாயிற்று, அவர் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், ஸ்தனங்களுக்கும் கர்ப்பங்களுக்கும் உரிய ஆசீர்வாதங்க ளினாலும் உன்னை ஆசீர்வதிப்பார்" (ஆதி 49:25) என்று சொல்லுகிறார்.

தேவன் யோசேப்பையும், அவருடைய சந்ததியையும் திரளாக ஆசீர்வதிப்பார் (ஆதி 49:25-26). இந்த ஆசீர்வாதத்தின் மூலமாக எப்பிராயீம் சந்ததியார் பாலஸ்தீனத்தின் மையப்பகுதியைச் சுதந்தரித்துக் கொண்டார்கள். எப்பிராயீம் சந்ததியார், யூதாவைப்போல வலிமையோடு இருந்தார்கள். இதனால் இவ்விரண்டு கோத்திரங்களுக்கும் யுத்தங்கள் நடைபெற்றன. இவர்களுடைய சண்டையின் விளைவினால் சாலொமோனுக்குப் பின்பு சமஸ்த இஸ்ரவேல் ராஜ்ஜியம் வடக்கு ராஜ்ஜியம் என்றும், தெற்கு ராஜ்ஜியம் என்றும் இரண்டாகப் பிரிந்தது.

நம்முடைய விசுவாசம், எபனேசராகிய கர்த்தர்மீது கட்டியெழுப்பப்படவேண்டும். கர்த்தர் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினால் நம்மை ஆசீர்வதிப்பார். கர்த்தருடைய ஆசீர்வாதத்தினால், ஏற்ற காலங்களில் வானத்திலிருந்து மழை பெய்யும். சீதோஷ்ண நிலமை மனுஷருக்கு ஆசீர்வாதமாயிருக்கும். ஒவ்வொரு சீதோஷ்ணகாலமும், அதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிற காலங்களில் நேர்த்தியாய் வரும்.

யோசேப்புக்கு வானத்திலிருந்தும் ஆசீர்வாதமுண்டாகிறது. அவருக்கு பூமியின் கீழே ஆழத்திலிருந்தும் ஆசீர்வாதமுண்டாகிறது. பூமியிலே இருக்கும் சுரங்கங்களும், நீரூற்றுகளும், எண்ணெய் கிணறுகளும் யோசேப்புக்கு ஆசீர்வாதமாகயிருக்கும்.

யோசேப்புக்கு வானத்திலிருந்தும், பூமியின் ஆழங்களிலிருந்தும் ஆசீர்வாதம் வருவதுபோல, பர்வதங்களிலிருந்தும் ஆசீர்வாதம் வருகிறது.

யாக்கோபு யோசேப்பை ஆசீர்வதிக்கும்போது, "உன் தகப்பனுடைய ஆசீர்வாதங்கள்என் பிதாக்களுடைய ஆசீர்வாதங்களுக்கு மேற்பட்டதாயிருந்து, நித்தியபர்வதங்களின் முடிவுமட்டும் எட்டுகின்றன; அவைகள் யோசேப்புடைய சிரசின் மேலும், தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின்மேலும் வருவதாக" (ஆதி 49:26) என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார்.

கர்த்தருடைய ஆசீர்வாதம் பரிபூரண ஆசீர்வாதங்களாயிருக்கும். அவை தற்காலிக ஆசீர்வாதங்களாயிராமல், நிலைத்திருக்கிற ஆசீர்வாதங்களாயிருக்கும்.

"மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின்உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்" *(ஏசா 54:10).*

பென்யமீன்
ஆதி 49:27

ஆதி 49:27. பென்யமீன் பீறுகிற ஓநாய்; காலையில் தன் இரையைப் பட்சிப்பான், மாலையில், தான் கொள்ளையிட்டதைப் பங்கிடுவான் என்றான்.

யாக்கோபு பென்யமீனுக்கு ஆசீர்வாதம் சொல்லுகிறார். "பென்யமீன் பீறுகிற ஓநாய்; காலையில் தன் இரையைப் பட்சிப்பான், மாலையில், தான் கொள்ளையிட்டதைப் பங்கிடுவான்" *(ஆதி 49:27)* என்பதே யாக்கோபு பென்யமீனுக்கு சொல்லும் ஆசீர்வாதமாகும். யாக்கோபு தீர்க்கதரிசன ஆவியினால் ஏவப்பட்டு, பென்யமீனுக்கு இந்த வார்த்தைகளை சொல்லுகிறார்.

யாக்கோபு பென்யமீன் மீது மிகவும் பிரியமாயிருக்கிறார். யாக்கோபு சொல்லுகிற தீர்க்கதரிசன வார்த்தைகள், அவருடைய மாம்சத்தின் பிரகாரம் சொல்லப்படவில்லை. அவர் ஆவியினால் ஏவப்பட்டு பேசுகிறார். யாக்கோபு தன்னுடைய மாம்சத்தினால் ஏவப்பட்டு, தனக்கு இஷ்டமான வார்த்தைகளை சொல்லியிருந்தால், அவர் பென்யமீனுக்கு இப்போது சொல்லுவதைவிட இன்னும் நலமான வார்த்தைகளையும், இன்னும் மேன்மையான ஆசீர்வாதங்களையும் சொல்லியிருப்பார்.

பென்யமீனின் பிற்கால சந்ததியார் யுத்தசன்னத்தராயிருப்பார்கள். அவர்கள் பலமுள்ளவர்களாகவும், பராக்கிரம சாலிகளாகவும் இருப்பார்கள். பென்யமீன் கோத்திரத்தார் தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம் செய்து அவர்களை கொள்ளையிடுவார்கள். பென்யமீன் கோத்திரத்தார் கொள்ளைப் பொருட்களினால் ஐசுவரியவான்களாயிருப்பார்கள்.

பென்யமீன் கோத்திரத்தார் இந்தப் பிரபஞ்சத்தில் ஓய்ந்திராமல், சுறுசுறுப்பாயிருப்பார்கள். அவர்கள் எப்போதும் ஏதாவது ஒரு வேலையை செய்துகொண்டேயிருப்பார்கள். பென்மீன் கோத்திரத்தாருக்கு அருகாமையிலிருக்கிற ஜாதியார், அவர்களைப் பார்த்து பயப்படுவார்கள்.

இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரிடமிருந்து பென்யமீன் கோத்திரத்தார் வேறுபட்டிருக்கிறார்கள். இவர்கள் துணிச்சல் உள்ளவர்கள். சாதுரியம் உள்ளவர்கள். கானான் தேசத்தில் இவர்களுக்குப் பங்கு வீதமாகப் பிரித்து கொடுக்கப்பட்ட பகுதியைச் சுற்றிலும் விரோதிகள் அதிகமாக இருந்தபடியினால், இவர்கள் எப்போதும் யுத்தத்திற்கு ஆயத்தமாக இருந்தார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் அப்போஸ்தலராகிய பவுல் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

"இப்படியிருக்க, தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ என்று கேட்கிறேன், தள்ளிவிடவில்லையே; நானும் ஆபிரகாமின் சந்ததியிலும் பென்யமீன் கோத்திரத்திலும் பிறந்த இஸ்ரவேலன்" *(ரோம 11:1).*

"நான் எட்டாம் நாளில், விருத்த சேதனமடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்" *(பிலி 3:5).*

பென்யமீன் காலையில் தன் இரையைப் பட்சிப்பான், மாலையில், தான் கொள்ளையிட்டதைப் பங்கிடுவான் என்று யாக்கோபு சொல்லுகிறார். பென்யமீன் கோத்திரத்தை சேர்ந்த பவுல், தன்னுடைய ஜீவியத்தின் ஆரம்ப காலத்தில், கர்த்தருடைய சபையை துன்பப்படுத்தினார். அவர் தன்னுடைய ஜீவியத்தின் பிற்பகுதியில், இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஜனங்களுக்கு பிரசங்கித்து, ஆத்துமாக்களை கொள்ளையாய்ப் பங்கிட்டார்.

யாக்கோபின் மரணம்
ஆதி 49:28-33

ஆதி 49:28. இவர்கள் எல்லாரும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தார்; அவர்களுடைய தகப்பன் அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களுக்குச் சொன்னது இதுதான்; அவனவனுக்குரிய ஆசீர்வாதம் சொல்லி அவனவனை ஆசீர்வதித்தான்.

ஆதி 49:29. பின்னும் அவன் அவர்களை நோக்கி: நான் என் ஜனத்தாரோடே சேர்க்கப்படப்போகிறேன்; ஏத்தியனான எப்பெரோனின் நிலத்திலுள்ள குகையிலே என்னை என் பிதாக்களண்டையிலே அடக்கம்பண்ணுங்கள் என்று கட்டளையிட்டு;

ஆதி 49:30. அந்தக் குகை கானான் தேசத்திலே மம்ரேக்கு எதிராக மக்பேலா என்னப்பட்ட நிலத்தில் இருக்கிறது; அதை நமக்குச் சொந்தக் கல்லறைப் பூமியாயிருக்கும்படி, ஆபிரகாம் ஏத்தியனாகிய எப்பெரோன் கையில் அதற்குரிய நிலத்துடனே வாங்கினார்.

ஆதி 49:31. அங்கே ஆபிரகாமையும் அவர் மனைவியாகிய சாராளையும் அடக்கம்பண்ணினார்கள்; அங்கே ஈசாக்கையும் அவர் மனைவியாகிய ரெபெக்காளையும் அடக்கம் பண்ணினார்கள்; அங்கே லேயாளையும் அடக்கம்பண்ணினேன்.

ஆதி 49:32. அந்த நிலமும் அதில் இருக்கிற குகையும் ஏத்தின் புத்திரர் கையில் கொள்ளப்பட்டது என்றான்.

ஆதி 49:33. யாக்கோபு தன் குமாரருக்குக் கட்டளையிட்டு முடித்தபின்பு, அவன் தன் கால்களைக் கட்டிலின்மேல் மடக்கிக் கொண்டு ஜீவித்துப்போய், தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்.

யாக்கோபு தன்னுடைய பன்னிரண்டு குமாரருக்கும் ஆசீர்வாதங்களை சொல்லுகிறார். ரூபன், சிமியோன், லேவி ஆகியோருக்கு ஆசீர்வாதமான வார்த்தைகள் கிடைக்கவில்லை. யாக்கோபின் பன்னிரண்டு குமாரரும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாராயிருக்கிறார்கள்.

"அவர்களுடைய தகப்பன் அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களுக்குச் சொன்னது இதுதான்" (ஆதி 49:28) என்று இந்த வசனத்தில் பொதுவாக சொல்லப்பட்டிருக்கிறது. யாக்கோபு, தன்னுடைய குமாரரில் அவனவனுக்குரிய ஆசீர்வாதம் சொல்லி அவனவனை ஆசீர்வதிக்கிறார். அவர் யாரையும் ஆசீர்வதியாமல் விட்டுவிடவில்லை. ஈசாக்கு தன்னுடைய குமாரனாகிய ஏசாவை ஆசீர்வதியாமல் தள்ளி வைத்துவிட்டார். யாக்கோபோ, ஈசாக்கைப்போல, தன்னுடைய குமாரரில் யாரையும் ஆசீர்வதியாமல் தள்ளி வைக்கவில்லை.

எப்பிராயீம் யோசேப்பின் இடத்தையும், மனாசே லேவியின் இடத்தையும் எடுத்துக் கொள்கிறார்கள். எப்பிராயீமும், மனாசேயும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தார்களில் இரண்டு கோத்திரங்களாக ஆசீர்வதிக்கப் படுகிறார்கள். லேவி கோத்திரத்தாருக்குச் சுதந்தரவீதம் கொடுக்கப்படவில்லை. அவர்கள் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ஆசாரிய ஊழியம் செய்ய வேண்டியவர்கள் (யோசு 13:33; யோசு 21:1-45).

யாக்கோபு இப்போது மரிக்கும் தருவாயில் இருக்கிறார். தன்னுடைய சரீரத்தை எகிப்து தேசத்தில் அடக்கம்பண்ணாமல், கானான் தேசத்தில் அடக்கம்பண்ணவேண்டுமென்று யாக்கோபு தன்னுடைய குமாரருக்கு கட்டளையிடுகிறார். யாக்கோபு தன் குமாரரை நோக்கி, "நான் என் ஜனத்தாரோடே சேர்க்கப்படப்போகிறேன்; ஏத்தியனான எப்பெரோனின் நிலத்திலுள்ள குகையிலே என்னை என் பிதாக்களண்டையிலே அடக்கம்பண்ணுங்கள்" (ஆதி 49:29) என்று கட்டளையிடுகிறார். அவர் இதே கட்டளையை, ஏற்கெனவே யோசேப்புக்கு சொல்லியிருக்கிறார்.

யாக்கோபு தன்னுடைய மரணத்தைப்பற்றிச் சொல்லும்போது, "நான் என் ஜனத்தாரோடே சேர்க்கப்படப் போகிறேன்" என்று சொல்லுகிறார். யாக்கோபு மரிக்கும்போது, அவர் இந்த உலகத்தில், தன்னுடைய பிள்ளைகளை விட்டுப் பிரிக்கப்படுவார். மரணம் நம்மையும் நம்முடைய பிள்ளைகளையும் பிரிக்கும். ஆனாலும் அதே மரணம் நம்மையும், கர்த்தருக்குள் ஏற்கெனவே மரித்துப்போன நம்முடைய முற்பிதாக்களையும் ஒன்றாய்ச் சேர்க்கும். யாக்கோபு மரிக்கும்போது, தன்னுடைய குமாரரை விட்டு பிரிக்கப்பட்டாலும், அவர் ஏற்கெனவே மரித்துப்போன தன்னுடைய ஜனத்தாரோடே சேர்க்கப்படுவார். மரணத்தின் மூலமாய் இம்மையில் பிரிவும், மறுமையில் சேருதலும் உண்டாகும்.

யாக்கோபு தன்னுடைய குமாரருக்கு, தான் அடக்கம்பண்ணப்படவேண்டிய குகையைப்பற்றி விரிவாக எடுத்து சொல்லுகிறார். அந்த குகை எங்கே இருக்கிறது, அது யாரிடத்திலிருந்து கிரயத்திற்கு கொள்ளப்பட்டது, அந்தக் குகையில் இதற்கு முன்பு யாரெல்லாம் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறார்கள் என்னும் விவரங்களையெல்லாம் யாக்கோபு தன்னுடைய குமாரருக்கு எடுத்து சொல்லுகிறார்.

யாக்கோபு அடக்கம்பண்ணப்பட வேண்டிய குகை ஏத்தியனான எப்பெரோனின் நிலத்திலுள்ளது. அந்தக் குகை கானான் தேசத்திலே மம்ரேக்கு எதிராக மக்பேலா என்னப்பட்ட நிலத்தில் இருக்கிறது; அதை தங்களுக்குச் சொந்தக் கல்லறைப் பூமியாயிருக்கும்படி, ஆபிரகாம் ஏத்தியனாகிய எப்பெரோன் கையில் அதற்குரிய நிலத்துடனே வாங்கினார் (ஆதி 49:30).

அந்தக் குகையில் ஆபிரகாமையும் அவர் மனைவியாகிய சாராளையும் அடக்கம்பண்ணினார்கள்; அங்கே ஈசாக்கையும் அவர் மனைவியாகிய ரெபெக்காளையும் அடக்கம் பண்ணினார்கள்; அங்கே யாக்கோபு லேயாளையும் அடக்கம்பண்ணினார். அந்த நிலமும் அதில் இருக்கிற குகையும் ஏத்தின் புத்திரர் கையில் கொள்ளப்பட்டது (ஆதி 49:31,32).

ஆபிரகாமும், சாராளும் (ஆதி 23:1-20; ஆதி 25:7-11); ஈசாக்கும், ரெபெக்காளும் (ஆதி 35:27-29); யாக்கோபும், லேயாளும் (ஆதி 49:31; ஆதி 50:1-14) அங்கே அடக்கம் பண்ணப்பட்டார்கள். ஆதி 49:31 ஆவது வசனத்தைத் தவிர லேயாள் அடக்கம் பண்ணப்பட்டதைப் பற்றி வேறு குறிப்பு எதுவுமில்லை. ராகேலை பெத்லகேமிற்கு அருகில் அடக்கம் பண்ணினார்கள் (ஆதி 35:19-20; 1சாமு 10:2).

யாக்கோபு தன்னுடைய குமாரருக்கு சொல்ல வேண்டிய ஆசீர்வாதங்களையும், கொடுக்கவேண்டிய கட்டளைகளையும் சொல்லி முடித்துவிட்டார். இப்போது அவர் மரிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார். யாக்கோபின் மனதிலே மரணபயமில்லை. அவர் சந்தோஷமாய் மரிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார். யாக்கோபை பொறுத்தவரையில், தன்னுடைய ஜனத்தாரோடு சேர்க்கப்படுவதே அவருக்கு மரணமாயிருக்கிறது.

யாக்கோபு தன் கால்களைக் கட்டிலின்மேல் மடக்கிக் கொண்டு ஜீவித்துப்போய், தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுகிறார் (ஆதி 49:33). தேவனாகிய கர்த்தரே ஆவிகளின் பிதாவாயிருக்கிறார். யாக்கோபு தன்னுடைய ஆவியை தேவனுடைய கரங்களில் ஒப்புக்கொடுக்கிறார். யாக்கோபு ஏற்கெனவே சொன்ன பிரகாரமாக, அவர் தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுகிறார்.

50 அதிகாரம்

யாக்கோபை அடக்கம்பண்ணுவதற்கு ஆயத்த வேலைகள் நடைபெறுகிறது (ஆதி 50:1-4). யாக்கோபின் அடக்க ஆராதனை (ஆதி 50:7-14).

யாக்கோபு மரித்த பின்பு யோசேப்பும் அவருடைய சகோதரரும் தங்களுடைய சகோதர பாசத்தை மறுபடிம் உறுதிபண்ணிக்கொள்கிறார்கள் (ஆதி 50:15-21). யோசேப்பின் வயதும் அவருடைய மரணமும் (ஆதி 50:22-26).

இவ்வாறாக ஆதியாகமம் புஸ்தகம் முடிவு பெறுகிறது. இந்தப் புஸ்தகத்தின் ஆரம்பத்தில் வெளிச்சம், ஜீவன் ஆகியவை உண்டான விதம் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தின் முடிவிலோ, இருளையும் மரணத்தையும் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம்.

யோசேப்பின் துக்கம்
ஆதி 50:1-6

ஆதி 50:1. அப்பொழுது யோசேப்பு தன் தகப்பனுடைய முகத்தின்மேல் விழுந்து, அழுது, அவனை முத்தஞ்செய்தான்.

ஆதி 50:2. பின்பு, தன் தகப்பனுக்குச் சுகந்த வர்க்கமிடும்படி யோசேப்பு தன் ஊழியக்காரராகிய வைத்தியருக்குக் கட்டளையிட்டான்; அப்படியே வைத்தியர் இஸ்ரவேலுக்குச் சுகந்தவர்க்கமிட்டார்கள்.

ஆதி 50:3. சுகந்தவர்க்கமிட நாற்பதுநாள் செல்லும்; அப்படியே அந்த நாட்கள் நிறைவேறின. எகிப்தியர் அவனுக்காக எழுபதுநாள் துக்கங்கொண்டாடினார்கள்.

ஆதி 50:4. துக்கங்கொண்டாடும் நாட்கள் முடிந்தபின், யோசேப்பு பார்வோனின் குடும்பத்தாரை நோக்கி: உங்கள் கண்களில் எனக்குத் தயவுகிடைத்ததானால், நீங்கள் பார்வோனுடைய காது கேட்க அவருக்கு அறிவிக்கவேண்டியது என்னவென்றால்,

ஆதி 50:5. என் தகப்பனார் என்னை நோக்கி: இதோ, நான் மரணமடையப்போகிறேன்; கானான் தேசத்திலே நான் எனக்காக வெட்டிவைத்திருக்கிற கல்லறையிலே என்னை அடக்கம்பண்ணுவாயாக என்று என்னிடத்தில் சொல்லி, ஆணையிடுவித்துக் கொண்டார்; நான் அங்கே போய், என் தகப்பனை அடக்கம்பண்ணி வருவதற்கு உத்தரவு கொடுக்க வேண்டிக்கொள்ளுகிறேன் என்று சொல்லுங்கள் என்றான்.

ஆதி 50:6. அதற்குப் பார்வோன்; உன் தகப்பன் உன்னிடத்தில் ஆணையிடுவித்தபடியே, நீ போய், அவரை அடக்கம்பண்ணிவா என்றான்.

யாக்கோபு தன்னுடைய குமாரருக்கு இனிமேல் நடைபெறப்போகிற சம்பவங்களை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். அவர் தன்னுடைய குமாரருக்கு கட்டளையிட்டு முடிந்த பின்பு, தன் கால்களை கட்டிலின்மேல் மடக்கிக்கொண்டு ஜீவித்துப்போகிறார். யாக்கோபு தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுகிறார். அப்பொழுது யோசேப்பு தன் தகப்பனுடைய முகத்தின்மேல் விழுந்து, அழுது, அவரை முத்தஞ்செய்கிறார் (ஆதி 50:1).

யோசேப்பின் தகப்பனார் மரித்துப்போனார். மரித்துப்போன அவருக்கு யோசேப்பு தன்னுடைய இறுதி மரியாதைகளை செலுத்துகிறார். மரித்தோருக்கு முன்பாக அழுவதும் முத்தம் செய்வதும் துக்கத்திற்கு அடையாளம். யாக்கோபு மரித்துப்போனதினால், யோசேப்பின் இருதயத்திலே மிகுந்த துக்கமும் வேதனையும் உண்டாயிற்று. அவர் தன்னுடைய துக்கத்தை கண்ணீராலும், முத்தத்தாலும் வெளிப்படுத்துகிறார்.

யாக்கோபின் ஆவி அவரை விட்டுப் பிரிந்துவிடுகிறது. யோசேப்பு யாக்கோபின் சரீரத்திற்கு முன்பாக எவ்வளவுதான் அழுதாலும், அவர் அந்த சரீரத்திற்கு எவ்வளவுதான் முத்தம் கொடுத்தாலும், அவருடைய கண்ணீர்களும், முத்தங்களும் யாக்கோபின் ஆத்துமாவை போய்ச்சேராது. யோசேப்பால் மரித்துப்போன தன் தகப்பனாருடைய சரீரத்திற்கு மாத்திரமே மரியாதை செலுத்த இயலும்.

நம்முடைய சரீரம் இந்தப் பூமியிலே அழிவுள்ளதாக அடக்கம்பண்ணப்படுகிறது. மரித்துப்போன நம்முடைய சரீரம், கர்த்தருடைய உயித்தெழும் வல்லமையினால், மகிமையுள்ள சரீரமாக மறுபடியும் உயிரோடு எழும்பும்.

எகிப்து தேசத்திலே மரித்துப்போனவர்களுடைய சரீரங்களுக்கு சுகந்தவர்க்கமிடுவது வழக்கம். யோசேப்பு தன் தகப்பனாருக்குச் சுகந்த வர்க்கமிடும்படி தன் ஊழியக்காரராகிய வைத்தியருக்குக் கட்டளையிடுகிறார்; அப்படியே வைத்தியர் இஸ்ரவேலுக்குச் சுகந்தவர்க்கமிடுகிறார்கள் (ஆதி 50:2).

மரித்துப்போன சரீரத்திற்குச் சுகந்த வர்க்கமிடுவது மிகவும் கடினம். அதற்கு நாற்பது நாள் செல்லும். அதிகப் பணம் செலவாகும். மரித்த சரீரத்திலுள்ள மூளையையும், குடல்களையும் வெளியே எடுத்துவிடுவார்கள். சரீரத்தின் தலைப்பகுதியிலும், வயிற்றுப் பகுதியிலும் விலையுயர்ந்த வாசனைத் திரவியங்களால் நிரப்புவார்கள் (ஆதி 50:3).

யாக்கோபின் புத்திரர் அவருடைய சரீரத்தை எகிப்து தேசத்தில் அடக்கம்பண்ணக்கூடாது. அவர்கள் அந்த சரீரத்தை கானான் தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போகவேண்டும். யாக்கோபின் சரீரத்திற்கு சுகந்தவர்க்கமிடவில்லையென்றால், நாலாம் நாளிலே, அது துர்நாற்றம் வீசும். ஆகையினால் யாக்கோபின் சரீரத்திற்கு சுகந்தவர்க்கமிடுகிறார்கள்.

எகிப்தியர்கள் சுகந்தவர்க்கமிடுவதை ஒரு சடங்காகவே கொண்டாடுவார்கள். அதிகமான வதியுள்ளவர்கள், அதிக பொருள் செலவு செய்து பல நாட்களுக்கு சுகந்த வர்க்கமிடுவார்கள். யாக்கோபின் சரீரத்திற்கு சுகந்தவர்க்கமிட நாற்பதுநாள் சென்றது. அப்படியே அந்த நாட்கள் நிறைவேறின பின்பு, எகிப்தியர் யாக்கோபுக்காக எழுபதுநாள் துக்கங்கொண்டாடுகிறார்கள் (ஆதி 50:3).

எகிப்தியர்கள் யோசேப்பின்மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள். அவர்கள் யோசேப்பின் நிமித்தமாக, அவருடைய தகப்பனாராகிய யாக்கோபுக்கு மரியாதை காண்பிக்கிறார்கள்.அவர்கள் யாக்கோபுக்காக எழுபது நாள் துக்கம் கொண்டாடுகிறார்கள்.

யாக்கோபின் சரீரத்தை கானான் தேசத்திலே அடக்கம்பண்ணவேண்டும். யோசேப்பு பார்வோனுடைய அனுமதியோடு கானானுக்கு போக விரும்புகிறார். எகிப்து தேசம் விஸ்திரமான தேசம். யாக்கோபு எகிப்து தேசத்திலே மரித்துப்போனதால், அவரை அந்த தேசத்திலேயே அடக்கம்பண்ணலாம் என்று பார்வோன் சொல்லுவான். ஆனாலும், தான் மரித்த பின்பு, தன்னுடைய சரீரத்தை எகிப்து தேசத்திலே அடக்கம்பண்ணாமல், வாக்குத்தத்த தேசமாகிய கானான் தேசத்திலே அடக்கம்பண்ணவேண்டுமென்று, யாக்கோபு தன் குமாரருக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

யாக்கோபுக்காக துக்கம் கொண்டாடும் நாட்கள் முடிகிறது. அவர்கள் எழுபது நாள் துக்கம் கொண்டாடுகிறார்கள். அதன் பின்பு யோசேப்பு கானான் தேசத்திற்கு போக பார்வோனின் அனுமதியை கேட்கிறார். யோசேப்பு பார்வோனிடத்தில் நேரடியாகப் பேசாமல், அவனுடைய குடும்பத்தார் மூலமாக, தன்னுடைய விருப்பத்தை, பார்வோனுக்கு சொல்லியனுப்புகிறார்.

யோசேப்பு பார்வோனின் குடும்பத்தாரை நோக்கி, "உங்கள் கண்களில் எனக்குத் தயவுகிடைத்ததானால், நீங்கள் பார்வோனுடைய காது கேட்க அவருக்கு அறிவிக்கவேண்டியது என்னவென்றால், என் தகப்பனார் என்னை நோக்கி: இதோ, நான் மரணமடையப்போகிறேன்; கானான் தேசத்திலே நான் எனக்காக வெட்டிவைத்திருக்கிற கல்லறையிலே என்னை அடக்கம்பண்ணுவாயாக என்று என்னிடத்தில் சொல்லி, ஆணையிடுவித்துக் கொண்டார்; நான் அங்கே போய், என் தகப்பனை அடக்கம்பண்ணி வருவதற்கு உத்தரவுகொடுக்க வேண்டிக்கொள்ளுகிறேன் என்று சொல்லுங்கள்" (ஆதி 50:4,5) என்று சொல்லுகிறார்.

எகிப்து தேசத்தில் துக்க நாட்களில் புருஷர்கள் முகத்தைச் சவரம் பண்ணமாட்டார்கள். அந்நாட்களில் அவர்கள் வெளியில் யாருடனும் பேசமாட்டார்கள். அவர்களோடு பேசுவது தீட்டான செயல்.

யோசேப்பு கானான் தேசத்திற்குப்போனாலும், மறுபடியும் எகிப்து தேசத்திற்கு திரும்பி வருவதாக வாக்குப்பண்ணுகிறார். "நான் கானானுக்குப் போய் என் தகப்பனை அடக்கம்பண்ணி விட்டு எகிப்துக்கு வருவேன்" என்று யோசேப்பு சொல்லுகிறார். யோசேப்புக்கு எகிப்து தேசத்திலே மிகப்பெரிய பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் எகிப்து தேசத்தில் உயர்ந்த அதிகாரியாயிருக்கிறார். யோசேப்பு தன்னுடைய தகப்பனாரை அடக்கம்பண்ணவேண்டும். அது அவருடைய கடமை. அதே வேளையில், அவர் எகிப்து தேசத்திலே தான் செய்ய வேண்டிய உத்தியோக கடமைகளையும் நிறைவேற்றவேண்டும். அதுவும் அவருடைய கடமை.

எகிப்து தேசத்தின் அதிபதியாகிய பார்வோன், யோசேப்பின்மீதும், அவருடைய குடும்பத்தார்மீதும் அன்பாயிருக்கிறான். யோசேப்பு கானான் தேசத்திற்கு போய் வர பார்வோன் அவருக்கு அனுமதி கொடுக்கிறான். பார்வோன் யோசேப்பை நோக்கி, "உன் தகப்பன் உன்னிடத்தில் ஆணையிடுவித்தபடியே, நீ போய், அவரை அடக்கம்பண்ணிவா" (ஆதி 50:6) என்று சொல்லுகிறான்.

மரித்தோரின் சரீரத்தை அடக்கம்பண்ணிய பின்பு நாம் வீட்டிற்கு வருகிறோம். நம்முடைய குடும்பத்தாரிடமும், சிநேகிதரிடமும், "மரித்துப்போனவர்களை கல்லறையில் விட்டு விட்டு வந்திருக்கிறோம்" என்று சொல்லுகிறோம். ஆனால் மரித்துப்போனவர்கள்தான், நம்மை இந்தப் பூமியில் விட்டுவிட்டு, பரலோகத்திற்குப் போய்விடுகிறார்கள். நாம் மரிக்கும் நாளிலே, ஏற்கெனவே மரித்துப்போன பரிசுத்தவான்களோடே சேர்க்கப்படுவோம்.

யாக்கோபின் அடக்க ஆராதனை ஆதி 50:7-14

ஆதி 50:7. அப்படியே யோசேப்பு தன் தகப்பனை அடக்கம்பண்ணப்போனான். பார்வோனுடைய அரமனையிலிருந்த பெரியவர்களாகிய அவனுடைய சகல உத்தியோகஸ்தரும் எகிப்து தேசத்திலுள்ள சகல பெரியோரும்.

ஆதி 50:8. யோசேப்பின் வீட்டார் யாவரும், அவன் சகோதரரும், அவன் தகப்பன் வீட்டாரும் அவனோடேகூடப் போனார்கள். தங்கள் குழந்தைகளையும், தங்கள் ஆடுமாடுகளையும்மாத்திரம் கோசேன் நாட்டிலே விட்டுப்போனார்கள்.

ஆதி 50:9. இரதங்களும் குதிரைவீரரும் அவனோடே போனதினால், பரிவாரக்கூட்டம் மிகவும் அதிகமாயிருந்தது.

ஆதி 50:10. அவர்கள் யோர்தானுக்கு அக்கரையில் இருக்கிற ஆத்தாத்தின் போர்க்களத்தில் வந்தபோது, அவ்விடத்திலே பெரும் புலம்பலாகப் புலம்பினார்கள். அங்கே தன் தகப்பனுக்காக ஏழுநாள் துக்கங்கொண்டாடினான்.

ஆதி 50:11. ஆத்தாத்தின் களத்திலே துக்கங்கொண்டாடுகிறதை அத்தேசத்தின் குடிகளாகிய கானானியர் கண்டு: இது எகிப்தியருக்குப் பெரிய துக்கங்கொண்டாடல் என்றார்கள். அதினால் யோர்தானுக்கு அப்பால் இருக்கிற அந்த ஸ்தலத்திற்கு ஆபேல்மிஸ்ராயீம் என்னும் பேர் உண்டாயிற்று.

ஆதி 50:12. யாக்கோபின் குமாரர், தங்களுக்குக் கட்டளையிட்டிருந்தபடியே,

ஆதி 50:13. அவனைக் கானான் தேசத்துக்குக் கொண்டுபோய், ஆபிரகாம் மம்ரேக்கு எதிரே இருக்கிற மக்பேலா என்னும் நிலத்திலே தனக்குச் சொந்தக் கல்லறை பூமியாக ஏத்தியனாகிய எப்பெரோனிடத்தில் வாங்கின நிலத்திலுள்ள குகையிலே அவனை அடக்கம்பண்ணினார்கள்.

ஆதி 50:14. யோசேப்பு தன் தகப்பனை அடக்கம்பண்ணின பின்பு, அவனும் அவன் சகோதரரும், அவனுடைய தகப்பனை அடக்கம் பண்ணுவதற்கு அவனோடேகூடப் போனவர்கள் யாவரும் எகிப்துக்குத் திரும்பினார்கள்.

யாக்கோபு எகிப்து தேசத்திலே மரித்துப்போகிறார். அவர் மரிக்கும்போது, அங்கே அவருடைய குடும்பத்தார் எல்லோரும், அவரோடு கூடயிருக்கிறார்கள். யாக்கோபின் சரீரத்தை நாற்பது நாட்களாக சுகந்தவர்க்கமிடுகிறார்கள். அதன் பின்பு எகிப்தியர் யாக்கோபுக்காக எழுபது நாட்கள் துக்கம் கொண்டாடுகிறார்கள். யாக்கோபுக்காக துக்கம் கொண்டாடுகிற நாட்கள் முடிந்துபோயிற்று. இப்போது யாக்கோபின் சரீரத்தை அடக்கம்பண்ண வேளை வந்திருக்கிறது.

யாக்கோபு எகிப்து தேசத்தில் மரிக்கும்போது, அவருக்கு நல்ல அடக்க ஆராதனை நடைபெறுகிறது. எகிப்து தேசத்திலே, யோசேப்புக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் இருக்கிறது. எகிப்தியர்கள் யோசேப்பின் நிமித்தமாக, அவருடைய தகப்பனாராகிய யாக்கோபுக்கும் மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறார்கள். யாக்கோபின் குடும்பத்தார், அவருடைய மரணத்திற்காக துக்கம் கொண்டாடும்போது, எகிப்தியரும் அவருக்காக எழுபது நாள் துக்கம் கொண்டாடுகிறார்கள்.

யாக்கோபின் அடக்க ஆராதனை, எகிப்து தேசத்தின் அரசாங்க மரியாதையோடு நடைபெறுகிறது. யாக்கோபின் அடக்க ஆராதனையில், அவருடைய குடும்பத்தாரோடு, எகிப்து தேசத்திலே பிரபல்யமானவர்கள் எல்லோரும் பங்குபெறுகிறார்கள்.

யோசேப்பு தன் தகப்பனை அடக்கம்பண்ணப்போகிறார். யோசேப்பின் வீட்டார் யாவரும், அவர் சகோதரரும், அவர் தகப்பன் வீட்டாரும் அவரோடேகூடப் போகிறார்கள். பார்வோனுடைய அரமனையிலிருக்கிற பெரியவர்களாகிய அவனுடைய சகல உத்தியோகஸ்தரும் எகிப்து தேசத்திலுள்ள சகல பெரியோரும். யோசேப்போடுகூட போகிறார்கள். இரதங்களும் குதிரைவீரரும் யோசேப்போடே போனதினால், பரிவாரக்கூட்டம் மிகவும் அதிகமாயிருக்கிறது (ஆதி 50:7-9).

யாக்கோபின் குடும்பத்தார் மாத்திரம் யோசேப்போடுகூட யாக்கோபை அடக்கம்பண்ணப்போகிறார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளையும், தங்கள் ஆடுமாடுகளையும் கோசேன் நாட்டிலே விட்டுப்போகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளில் அநேகருக்கு இதுபோன்ற மகிமையான அடக்க ஆராதனை நடைபெறுவதில்லை. விசுவாசிகளில் அநேகர் மரிக்கும்போது, அவர்களுடைய அடக்க ஆராதனையில் ஏராளமான ஜனங்கள் பங்குபெறமாட்டார்கள். நாம் இந்த உலகத்திற்கு அறிமுகமில்லாதவர்களாயிருக்கிறோம். விசுவாசிகளாகிய நாம் இந்த உலகத்தாருக்கு அந்நியராயிருக்கிறோம். ஆகையினால் நம்முடைய அடக்க ஆராதனைகள், யாக்கோபின் அடக்க ஆராதனையைப்போல சிறப்பாக நடைபெறுவதில்லை. மிகவும் சாதாரணமாக, எளிமையாக நடைபெறுகிறது.

நம்முடைய அடக்க ஆராதனை எளிமையாக நடைபெற்றாலும், நாம் அதற்காக வருத்தப்பட வேண்டியதில்லை. நாம் மரிக்கும்போது, நம்மை பரலோகத்திற்கு அழைத்து செல்ல, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்மோடு கூடயிருக்கிறார். நம்முடைய அடக்க ஆராதனையில் ஏராளமான ஜனங்கள் பங்குபெறாவிட்டாலும், நாம் ஆராதிக்கிற தேவன், தம்முடைய தூதர்களோடு சேர்ந்து பங்குபெறுவது, நமக்கு கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம்.

யாக்கோபை அடக்கம்பண்ணுவதற்காக, யோசேப்பும், யாக்கோபின் குடும்பத்தாரும் எகிப்து தேசத்திலுள்ள சகல பெரியோரும், பார்வோனின் அரண்மனையிலுள்ள சகல உத்தியோகஸ்தரும் யோர்தானுக்கு அக்கரையில் இருக்கிற ஆத்தாத்தின் போர்க்களத்தில் வருகிறார்கள். அவ்விடத்திலே அவர்கள் எல்லோரும் பெரும் புலம்பலாகப் புலம்புகிறார்கள். அங்கே யோசேப்பு தன் தகப்பனுக்காக ஏழுநாள் துக்கங்கொண்டாடுகிறார் (ஆதி 50:10).

"யோர்தானுக்கு அக்கரையில்" என்னும் வாக்கியம் யோர்தானுக்குக் கிழக்குப் பகுதி என்று பொருள்படாது. எபிரோன் எருசலேமிற்குத் தென்பகுதியில் உள்ளது. யோர்தான் அதற்கு அப்பால் உள்ளது. "யோர்தானுக்கு அக்கரையில்" என்பதை வாசிக்கும் பொழுது, ஆதியாகமத்தை எழுதிய மோசே இதை எழுதும்போது எந்த இடத்திலிருந்து எழுதினார் என்று கவனிக்க வேண்டும். ஆகையினால் யோர்தானுக்கு அக்கரை என்பது யோர்தானின் மேற்குப் பகுதியைக் குறிக்கும். மோசே ஆதியாகமத்தை எழுதும்போது யோர்தானின் கிழக்கு பகுதியிலிருந்து எழுதினார்.

ஆத்தாத்தின் களத்திலே துக்கங்கொண்டாடுகிறதை அத்தேசத்தின் குடிகளாகிய கானானியர் காண்கிறார்கள். அவர்கள் யாக்கோபுக்காக துக்கம் கொண்டாடுவதைப் பார்த்து, "இது எகிப்தியருக்குப் பெரிய துக்கங்கொண்டாடல்" (ஆதி 50:11) என்று சொல்லுகிறார்கள். அதினால் யோர்தானுக்கு அப்பால் இருக்கிற அந்த ஸ்தலத்திற்கு ஆபேல்மிஸ்ராயீம் என்னும் பேர் உண்டாயிற்று.

எகிப்தியர்கள் மரித்தவர்களுக்காக புலம்புவதை ஒரு பெரிய சடங்காகச் செய்தார்கள். அவர்கள் துக்க நாட்களில் மது அருந்தமாட்டார்கள். வாசனைத் திரவியங்களைப் பூசமாட்டார்கள். உயர்ந்த வஸ்திரங்களை அணியமாட்டார்கள். உச்சிதமான பதார்த்தங்களைப் புசிக்கமாட்டார்கள். தலையில் சாம்பல் பூசிக்கொள்வார்கள். தலையிலுள்ள முடியையும், தாடியையும் சவரம் பண்ணாமல் விட்டுவிடுவார்கள். துக்க நாட்களில் ஒவ்வொரு நாளும் இரண்டுமுறை புலம்பல் பாடுவார்கள். ஒப்பாரி பாடுவதற்காக அதற்கென்று ஆட்களை கூலிக்கு நியமித்துக் கொள்வார்கள். (ஆதி 50:10-11)

மரித்தவர்களுக்காக துக்கங்கொண்டாடுதல் ஏழு நாட்கள் நடைபெறுகிறது. அது தீட்டான நாட்களாக இருக்கும். (எண் 19:11,19; 1சாமு 31:13). சில சமயங்களில் எபிரெயர்கள் முப்பது நாட்களுக்கு துக்கம் கொண்டாடுகிறார்கள். (எண் 20:29; உபா 34:8)

யோசேப்பு எகிப்து தேசத்தாருக்கு நன்மை செய்திருக்கிறார். யோசேப்பு தங்களுக்கு செய்த நன்மைகளை எகிப்து தேசத்தார் மறந்துவிடக்கூடாது. ஆபேல்மிஸ்ராயீம், எகிப்தியரின் பிற்கால சந்ததியாருக்கு, ஒரு நினைவுச்சின்னம்போல இருக்கிறது. அவர்கள் ஆபேல்மிஸ்ராயீமை நினைவுகூர்ந்து, யோசேப்பு தங்களுடைய முற்பிதாக்களுக்கு செய்த நன்மைகளையும் நினைவுகூரவேண்டும். ஆனால் எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரரை பிற்காலத்தில் ஒடுக்குகிறார்கள்.

யாக்கோபின் குமாரர், தங்களுக்குக் கட்டளையிட்டிருந்தபடியே, அவர்கள் யாக்கோபின் சரீரத்தை கானான் தேசத்துக்குக் கொண்டுபோகிறார்கள். ஆபிரகாம் மம்ரேக்கு எதிரே இருக்கிற மக்பேலா என்னும் நிலத்திலே தனக்குச் சொந்தக் கல்லறை பூமியாக ஏத்தியனாகிய எப்பெரோனிடத்தில் வாங்கின நிலத்திலுள்ள குகையிலே யாக்கோபின் சரீரத்தை அடக்கம்பண்ணுகிறார்கள் (ஆதி 50:12,13).

யோசேப்பு தன் தகப்பனை அடக்கம்பண்ணின பின்பு, அவரும் அவர் சகோதரரும், அவருடைய தகப்பனை அடக்கம் பண்ணுவதற்கு அவரோடேகூடப் போனவர்கள் யாவரும் எகிப்துக்குத் திரும்பி வருகிறார்கள் (ஆதி 50:14). யோசேப்பு பார்வோனுக்கு சொன்னதுபோல, கானான் தேசத்திலே தன் தகப்பனை அடக்கம்பண்ணிவிட்டு, எகிப்து தேசத்திற்கு திரும்பி வருகிறார்.

யோசேப்பும் அவருடைய சகோதரரும் ஆதி 50:15-21

ஆதி 50:15. தங்கள் தகப்பன் மரணமடைந்ததை யோசேப்பின் சகோதரர் கண்டு: ஒருவேளை யோசேப்பு நம்மைப் பகைத்து, நாம் அவனுக்குச் செய்த எல்லாப் பொல்லாங்குக்காகவும் நமக்குச் சரிக்குச் சரிகட்டுவான் என்று சொல்லி, யோசேப்பினிடத்தில் ஆள் அனுப்பி,

ஆதி 50:16. உம்முடைய சகோதரர் உமக்குப் பொல்லாங்கு செய்திருந்தாலும், அவர்கள் செய்த துரோகத்தையும் பாதகத்தையும் நீர் தயவுசெய்து மன்னிக்கவேண்டும் என்று உம்முடைய தகப்பனார் மரணமடையுமுன்னே, உமக்குச் சொல்லும்படி கட்டளையிட்டார்.

ஆதி 50:17. ஆகையால், உம்முடைய தகப்பனாருடைய தேவனுக்கு ஊழியக்காரராகிய நாங்கள் செய்த துரோகத்தை மன்னிக்கவேண்டும் என்று அவனுக்குச் சொல்லச் சொன்னார்கள். அவர்கள் அதை யோசேப்புக்குச் சொன்னபோது, அவன் அழுதான்.

ஆதி 50:18. பின்பு, அவனுடைய சகோதரரும் போய், அவனுக்கு முன்பாகத் தாழவிழுந்து: இதோ, நாங்கள் உமக்கு அடிமைகள் என்றார்கள்.

ஆதி 50:19. யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நான் தேவனா?

ஆதி 50:20. நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்.

ஆதி 50:21. ஆதலால், பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்.

யாக்கோபு மரித்துவிட்டார். யோசேப்பும் அவருடைய சகோதரரும் தங்கள் தகப்பனார் யாக்கோபின் சரீரத்தை கானான் தேசத்திலே அடக்கம்பண்ணிவிட்டு, எகிப்து தேசத்திற்கு திரும்பி வருகிறார்கள். யோசேப்பின் சகோதரர் அவருக்கு ஏராளமான பொல்லாங்குகளை செய்திருக்கிறார்கள். இதனால் அவர்களுடைய மனதில் குற்றவுணர்வு உண்டாயிற்று. அவர்கள் யோசேப்பினுடைய பாசத்தின்மீதும், பராமரிப்பின்மீதும் சந்தேகப்படுகிறார்கள்.

தங்கள் தகப்பன் யாக்கோபு இதுவரையிலும் உயிரோடிருந்ததினால்தான், யோசேப்பு தங்கள்மீது அன்பாயிருந்தார் என்றும், யாக்கோபு மரணமடைந்ததினால், யோசேப்பு இனிமேல் தங்களை பகைப்பார் என்றும் அவருடைய சகோதரர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் தங்கள் சந்தேகத்தை யோசேப்புக்கு நேரடியாக சொல்லாமல், ஒரு ஆள் மூலமாக சொல்லியனுப்புகிறார்கள். யோசேப்பு தங்களைப் பகைப்பார் என்றும், தாங்கள் அவருக்கு செய்த எல்லா பொல்லாங்குக்காகவும் அவர் தங்களுக்கு சரிக்கு சரிக்கட்டுவார் என்றும் யோசேப்பின் சகோதரர் பயப்படுகிறார்கள்.

நம்முடைய குடும்பத்தில், குடும்பத்தலைவர் மரணமடையும்போது, குடும்பத்தில் புதிய சூழ்நிலைகள் உண்டாகும். பெற்றோர் மரித்த பின்பு, பிள்ளைகள் குடும்ப பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். பெற்றோரின் சுபாவமும், பிள்ளைகளின் சுபாவமும் ஒன்றுபோல் இருக்காது. ஆனாலும் குடும்பத்தின் ஒற்றுமையைக் காத்துக்கொள்ளவேண்டுமென்றால் குடும்பத்திலுள்ளவர்கள் எல்லோரும் தங்களுக்குள்ளே அன்பின் ஒற்றுமையைக் காத்துக்கொள்ளவேண்டும். குடும்பத்தில் அன்பு இல்லையென்றால் அங்கே ஒற்றுமையும் இருக்காது.

யோசேப்பின் சகோதரர் அவருடைய அன்பை சந்தேகப்படுகிறார்கள். இதன் மூலமாக தங்கள் குடும்பம் இனிமேல் ஒற்றுமையாகயிருக்குமா என்பதையே சந்தேகப்படுகிறார்கள். அவர்கள் யோசேப்பின் அன்பை உறுதிபண்ண விரும்புகிறார்கள். தாங்கள் யோசேப்புக்கு செய்த பாதகத்தையும், துரோகத்தையும், அவர் தயவாய் மன்னிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

யோசேப்பின் சகோதரர் ஒரு ஆள் மூலமாக, தங்கள் மனதின் எண்ணங்களை யோசேப்புக்கு சொல்லியனுப்புகிறார்கள். அந்தச் செய்தியில் அவர்கள் தங்கள் தகப்பனாராகிய யாக்கோபுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

யோசேப்பின் சகோதரர், ஒரு ஆள் மூலமாக, "உம்முடைய சகோதரர் உமக்குப் பொல்லாங்கு செய்திருந்தாலும், அவர்கள் செய்த துரோகத்தையும் பாதகத்தையும் நீர் தயவுசெய்து மன்னிக்கவேண்டும் என்று உம்முடைய தகப்பனார் மரணமடையுமுன்னே, உமக்குச் சொல்லும்படி கட்டளையிட்டார். ஆகையால், உம்முடைய தகப்பனாருடைய தேவனுக்கு ஊழியக்காரராகிய நாங்கள் செய்த துரோகத்தை மன்னிக்கவேண்டும்" (ஆதி 50:16,17) என்று யோசேப்புக்கு செய்தி சொல்லியனுப்புகிறார்கள். அந்த ஆளும் அவர்கள் சொன்ன செய்தியை யோசேப்புக்கு சொல்லுகிறார்.

யாக்கோபு நடைபெறப்போகும் காரியங்களை ஏற்கெனவே முன்னறிந்து இவ்வாறு கட்டளையிட்டிருக்கிறார். யோசேப்பு தவறு செய்வார் என்பதற்காக அல்ல. தன்னுடைய பிள்ளைகளைத் திடப்படுத்துவதற்காகவே யாக்கோபு இவ்வாறு கூறினார். இதன் மூலமாக யோசேப்பின் சகோதரர்கள் தாங்கள் செய்த பாவத்திற்கு மனம் வருந்தி, தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு, திருந்தி, நல்லவர்களாக ஜீவிப்பார்கள்.

தங்களுடைய தகப்பனார் உயிரோடிருந்தது வரையிலும், அவர்கள் யாக்கோபின் பாதுகாப்பிலும் நிழலிலும் இருந்தார்கள். தங்கள் குடும்பம் ஒற்றுமையாயிருக்கும் என்றும், யோசேப்பு தங்களை பாதுகாத்து பராமரிப்பார் என்றும், யோசேப்பின் சகோதரர் நிச்சயமாய் நம்பினார்கள். ஆனால் இப்போதோ அவர்களுடைய தகப்பனார் யாக்கோபு மரணமடைந்துவிட்டார். இனிமேல் யோசேப்பின் மனது மாற்றமடையவதற்கு வாய்ப்புள்ளது என்று அவருடைய சகோதரர்கள் நினைக்கிறார்கள்.

யோசேப்பின் சகோதரர் அவருக்கு ஏற்கெனவே ஏராளமான பொல்லாங்குகளை செய்திருக்கிறார்கள். அவர்கள் செய்த துரோகங்களினிமித்தமும், பொல்லாங்குகளினிமித்தமும், அவர்களுடைய மனச்சாட்சி அவர்களைக் குற்றப்படுத்துகிறது. இதனால் அவர்களுக்கு யோசேப்பை நினைக்கும்போது, மனதிலே பயமுண்டாகிறது. நாம் மனுஷருக்கு பயப்படாதிருக்க வேண்டுமென்றால், நம்முடைய மனச்சாட்சி குற்றமில்லாமல் சுத்தமாயிருக்கவேண்டும்.

யோசேப்பின் சகோதரர் தங்களுடைய அக்கிரமங்களையும், பாதகத்தையும் அங்கீகரிக்கிறார்கள். யோசேப்பு தங்களை தயவாய் மன்னிக்கவேண்டுமென்று அவருக்கு பணிவோடு செய்தி சொல்லியனுப்புகிறார்கள். யோசேப்பின் தகப்பனாராகிய யாக்கோபு, அவர்களுடைய பாவங்களைக் குறித்து, யோசேப்புக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். இது யோசேப்புக்கும் தெரியும்.

யாக்கோபு உயிரோடிருக்கையில், அவர் யோசேப்பை நோக்கி, "உம்முடைய சகோதரர் உமக்குப் பொல்லாங்கு செய்திருந்தாலும், அவர்கள் செய்த துரோகத்தையும் பாதகத்தையும் நீர் தயவுசெய்து மன்னிக்கவேண்டும்" என்று, அவர் மரணமடையும் முன்னே, கட்டளையிட்டிருக்கிறார். தகப்பனாரின் கட்டளையை, அவருடைய குமாரர்கள், ஒரு ஆள் மூலமாக, யோசேப்புக்கு ஞாபகப்படுத்துகிறார்கள்.

யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்புக்கு முன்பாக தங்களை தாழ்த்துகிறார்கள். அவர்கள் யோசேப்பினிடத்தில் தங்களைப்பற்றிச் சொல்லும்போது, "உம்முடைய தகப்பனாருடைய தேவனுக்கு ஊழியக்காரராகிய நாங்கள்" என்று சொல்லுகிறார்கள். இந்த வாக்கியத்திற்கு, "நாங்கள் உம்முடைய ஊழியக்காரர்கள்" என்று பொருள். யோசேப்பின் சகோதரர் யாக்கோபின் பெயரையும், யாக்கோபுடைய தேவனின் பெயரையும் இங்கு சொல்லுவதன் மூலமாக, அவர்கள் தங்களுக்கும் யாக்கோபுக்கும், யாக்கோபின் தேவனுக்கும் தொடர்பு இருப்பதாக சொல்லுகிறார்கள்.

யோசேப்புக்கும் அவருடைய சகோதரர் எல்லோருக்கும் யாக்கோபு ஒரே தகப்பனாயிருக்கிறார். யோசேப்பின் சகோதரர் தங்களுக்குள்ளே இருக்கும் ஐக்கியத்தைப்பற்றிச் சொல்லும்போது, தாங்கள் எல்லோரும் ஒரே கர்த்தரை ஆராதிப்பதாகவும் சொல்லுகிறார்கள். யோசேப்பு எந்த தேவனை ஆராதிக்கிறாரோ, அந்த தேவனையே அவருடைய சகோதரரும் ஆராதிக்கிறார்கள். தங்களுக்குள்ளே இதுபோல ஏராளமான ஒற்றுமைகள் இருக்கிறது என்று யோசேப்பின் சகோதரர் தங்களைப்பற்றி யோசேப்புக்கு பணிவாக சொல்லுகிறார்கள்.

யோசேப்பு தன் சகோதரர் சொல்லியனுப்பின செய்திகளைக் கேட்டு, மிகவும் அழுகிறார் (ஆதி 50:17). யோசேப்பு தன் சகோதரர் மீது அன்பாயும், மனவுருக்கமாயும், கரிசனையாயும் இருக்கிறார். அவர்கள் தனக்கு செய்த பொல்லாங்குகளை யோசேப்பு ஏற்கெனவே மன்னித்து மறந்துவிட்டார். அவர் இப்போது தன்னுடைய சகோதரரோடு பகையில்லாமல் முற்றிலுமாய் ஒப்புரவாகியிருக்கிறார்.

ஆனால் யோசேப்பின் சகோதரரோ, அவருடைய அன்பை சந்தேகப்படுகிறார்கள். அவருக்கு தாங்கள் செய்த பொல்லாப்புக்காக, அவர் தங்களுக்கு சரிக்கு சரிக்கட்டுவாரோ என்று பயப்படுவார்கள். ஆனால் யோசேப்போ தன் சகோதரரின் வார்த்தைகளைக் கேட்டு அழுகிறார்.

தன்மீதும், தன்னுடைய மாயமில்லாத அன்பின்மீதும், தன்னுடைய சகோதரர்கள் சந்தேகப்படுகிறார்கள் என்பதை நினைக்கும்போது, யோசேப்புக்கு அழுகை வருகிறது. இது வருத்தத்தின் அழுகை. அவருடைய கண்களில் துக்கத்தினால் கண்ணீர் வருகிறது. ஆனாலும் யோசேப்பின் சகோதரர், யோசேப்புக்கு முன்பாக தங்களை வெகுவாகத் தாழ்த்துகிறார்கள். அவர்களுடைய கீழ்ப்படிதலை நினைத்தும் யோசேப்பு மிகுந்த அன்பினாலும், பாசத்தினாலும் கண்ணீர் விட்டு அழுகிறார்.

யோசேப்பு அழுவதைப் பார்த்து, அவருடைய சகோதரர் அவரிடத்திற்கு அருகாமையில் போய், அவருக்கு முன்பாக தாழவிழுகிறார்கள். அவர்கள் யோசேப்பை நோக்கி, "இதோ, நாங்கள் உமக்கு அடிமைகள்" (ஆதி 50:18) என்று சொல்லுகிறார்கள்.

தன்னுடைய சகோதரர் தனக்கு செய்த துரோகத்தையும், பாதகத்தையும் மன்னிப்பதற்கு தான் பாத்திரவானல்ல என்றும், தன் சகோதரரை மன்னிக்க தனக்கு எந்த தகுதியுமில்லை என்றும் யோசேப்பு நினைக்கிறார். ஆகையினால் யோசேப்பு மிகுந்த மனத்தாழ்மையோடு, தன் சகோதரரை நோக்கி, "நான் தேவனா" என்று கேட்கிறார். இந்த வாக்கியத்திற்கு, "உங்களை மன்னிப்பதற்கு நான் தேவனா" என்று பொருள்.

யோசேப்பின் சகோதரர்கள் தேவனோடு சமாதானமாயிருக்கவேண்டும். தேவனோடு சமாதானமாயிருக்கிறவர்கள் மனுஷரோடும் சமாதானமாயிருப்பார்கள். யோசேப்பின் சகோதரர் தேவனோடு ஒப்புரவாகி, அவரோடு சமாதானமாயிருந்தால், அதன் பின்பு யோசேப்போடு சமாதானமாயிருப்பது அவர்களுக்கு இலகுவாயிருக்கும்.

யோசேப்பின் சகோதரரோ அவரைப் பார்த்து பயப்படுகிறார்கள். அவர்கள் யோசேப்புக்கு முன்பாக வரும்போது, தாழவிழுந்து, இதோ நாங்கள் உமக்கு அடிமைகள்" என்று சொல்லுகிறார்கள். யோசேப்பு அவர்களை நோக்கி, "பயப்படாதிருங்கள்" என்றும் சொல்லுகிறார்.

யோசேப்பு தன்னுடைய சகோதரர் தனக்கு செய்த துரோகத்தையும், பாதகத்தையும் அவர்களுக்கு உணர்த்துகிறார். யோசேப்பு தன் சகோதரரை நோக்கி, "நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்" (ஆதி 50:20) என்று சொல்லுகிறார்.

யோசேப்பின் சகோதரர் அவருக்கு தீங்கு செய்திருந்தாலும், கர்த்தர் அவர்கள் செய்த தீங்கை, அவர்களுக்கு நன்மையாக மாற்றுகிறார். ஆகையினால் அவர்கள் தங்களுடைய துரோகத்திற்கும் பாதகத்திற்கும் வருத்தப்படவேண்டியதில்லை என்று யோசேப்பு சொல்லுகிறார். யோசேப்பு அவர்களை மன்னிக்க ஆயத்தமாயிருக்கிறார்.

கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. அவர் தீமையான காரியங்களிலிருந்து நன்மையான காரியங்களை உண்டுபண்ணுகிறவர். தேவனுடைய தெய்வீக திட்டங்களும், அவருடைய பராமரிப்புக்களும், அவருடைய சித்தத்தின் பிரகாரமாக நிறைவேறும். மனுஷர் பாவம் செய்தாலும், அந்தப் பாவத்தின் மூலமாக, தேவன் முடிவிலே நன்மையை உண்டுபண்ணுகிறவர். இதனால் தேவனே அந்தப் பாவத்திற்கு காரணர் என்று சொல்லக்கூடாது. தேவன் ஒருபோதும் மனுஷருடைய பாவத்திற்கு காரணரல்ல. மனுஷன் தன் சுயஇச்சையினாலே சோதிக்கப்பட்டு பாவம் செய்கிறான்.

தேவன் சர்வஞானமுள்ளவராகயிருப்பதினால், அவர் மனுஷருடைய பாவங்களையும், நன்மையான காரியங்களாக மாற்றுகிறார். யூதர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்தார்கள். அவர்கள் கிறிஸ்துவானவரை அவமானப்படுத்தினார்கள். அவரை வேதனைப்படுத்தினார்கள். பிதாவாகிய தேவனோ, இயேசுகிறிஸ்துவினுடைய மரணத்தின் மூலமாக, மனுக்குலத்திற்கு இரட்சிப்பை உண்டுபண்ணினார்.

"அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள். தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக்கூடாதிருந்தது" (அப் 2:23,24).

யாக்கோபு மரணமடைந்ததினால், யோசேப்பு இனிமேல் தங்களையும் தங்கள் குமாரரையும் போஜனம் கொடுத்து பராமரிப்பாரா என்னும் சந்தேகமும், யோசேப்பின் சகோதரருடைய மனதிலே உண்டாயிற்று. யோசேப்பு தன் சகோதரரை நோக்கி, "பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன்" (ஆதி 50:21) என்று, சொல்லுகிறார். யோசேப்பு அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசுகிறார்.

யோசேப்பின் மரணம் ஆதி 50:22-26

ஆதி 50:22. யோசேப்பும் அவன் தகப்பன் குடும்பத்தாரும் எகிப்திலே குடியிருந்தார்கள். யோசேப்பு நூற்றுப்பத்து வருஷம் உயிரோடிருந்தான்.

ஆதி 50:23. யோசேப்பு எப்பிராயீமுக்குப் பிறந்த மூன்றாம் தலைமுறைப் பிள்ளைகளையும் கண்டான்; மனாசேயின் குமாரனாகிய மாகீரின் பிள்ளைகளும் யோசேப்பின் மடியில் வளர்க்கப்பட்டார்கள்.

ஆதி 50:24. யோசேப்பு தன் சகோதரரை நோக்கி: நான் மரணமடையப்போகிறேன்; ஆனாலும் தேவன் உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து, நீங்கள் இந்தத் தேசத்தை விட்டு, தாம் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற தேசத்துக்குப் போகப்பண்ணுவார் என்று சொன்னதுமன்றி;

ஆதி 50:25. தேவன் உங்களைச் சந்திக்கும்போது, என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோவீர்களாக என்றும் சொல்லி; யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணையிடுவித்துக்கொண்டான்.

ஆதி 50:26. யோசேப்பு நூற்றுப்பத்து வயதுள்ளவனாய் மரித்தான். அவனுக்குச் சுகந்தவர்க்கமிட்டு, எகிப்து தேசத்தில் அவனை ஒரு பெட்டியிலே வைத்துவைத்தார்கள்.

யோசேப்பும் அவர் தகப்பன் குடும்பத்தாரும் எகிப்திலே குடியிருக்கிறார்கள். யோசேப்பு நூற்றுப்பத்து வருஷம் உயிரோடிருக்கிறார் (ஆதி 50:22).

யோசேப்பின் குடும்பம் எகிப்து தேசத்திலே கட்டியெழுப்பப்படுகிறது. யோசேப்பு தன்னுடைய ஜீவிய காலத்திலே, தன்னுடைய பேரப்பிள்ளைகளையும், அவர்களுடைய பிள்ளைகளையும் பார்க்கிறார்.

யோசேப்பு எப்பிராயீமுக்குப் பிறந்த மூன்றாம் தலைமுறைப் பிள்ளைகளையும் காண்கிறார். மனாசேயின் குமாரனாகிய மாகீரின் பிள்ளைகளும் யோசேப்பின் மடியில் வளர்க்கப்படுகிறார்கள் (ஆதி 50:23).

யோசேப்பின் இரண்டு குமாரர்களாகிய மனாசேயும் எப்பிராயீமும், யாக்கோபின் மற்ற குமாரரைப்போல, இஸ்ரவேலின் கோத்திரப்பிதாக்களாயிருக்கிறார்கள். தன்னுடைய இரண்டு குமாரரும், தன்னுடைய சகோதரருக்கு சமமாயிருப்பதை யோசேப்பு மிகுந்த சந்தோஷத்தோடு பார்க்கிறார்.

யோசேப்பின் சகோதரரும் அவரோடேகூட எகிப்து தேசத்திலே இருக்கிறார்கள். யோசேப்பு தன்னுடைய கடைசி கால விருப்பத்தை, தன் சகோதரருக்கு சொல்லுகிறார்.

யோசேப்பு தன் சகோதரரை நோக்கி, "நான் மரணமடையப்போகிறேன்; ஆனாலும் தேவன் உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து, நீங்கள் இந்தத் தேசத்தை விட்டு, தாம் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற தேசத்துக்குப் போகப்பண்ணுவார்" (ஆதி 50:24) என்று சொல்லுகிறார்.

தேவன் இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்து தேசத்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்திற்கு அழைத்துப் போவார். யாத் 13:19 - யோசு 24:32 ஆகிய வசனங்களில் இது நிறைவேறுகிறது. யோசேப்பிற்கு தீர்க்கதரிசன வரமும், வியாக்கியானம் பண்ணும் வரமும் இருக்கிறது. யோசேப்பிற்கு முன்பாகவே தேவனுடைய பிள்ளைகளில் சிலர் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருந்தார்கள். யோசேப்பு மட்டுமே தனக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவர் மூலமாகப் பேசுகிறார். (ஆதி 41:38). இந்தச் செய்தியை யாக்கோபு யோசேப்பிற்குக் கூறியிருக்கிறார். (ஆதி 48:3-4,15-16,21).

யோசேப்பு எகிப்து தேசத்திலே மரணமடையப்போகிறார். ஆனாலும் தன்னுடைய எலும்புகள் எகிப்து தேசத்தில் அடக்கம்பண்ணப்படாமல், கானான் தேசத்தில் அடக்கம்பண்ணப்படவேண்டும் என்பது யோசேப்பின் விருப்பமாயிருக்கிறது. யோசேப்பு தன்னுடைய கடைசிகால விருப்பத்தை தன் சகோதரருக்கு சொல்லுகிறார்.

யோசேப்பு தன் சகோதரரை நோக்கி, "தேவன் உங்களைச் சந்திக்கும்போது, என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோவீர்களாக" (ஆதி 50:25) என்று சொல்லுகிறார். யோசேப்பு தன்னுடைய கடைசிகால விருப்பத்தை, தன் சகோதரருக்கு சொன்னது மாத்திரமல்ல, இதை அவர்கள் செய்யவேண்டுமென்று யோசேப்பு, இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணையிடுவித்துக்கொள்கிறார்.

யாக்கோபு மரித்த போது, அவருடைய சரீரத்தைக் கானான் தேசத்திற்குக் கொண்டுபோய், அடக்கம் பண்ணினார்கள். ஆனால் யோசேப்பின் சரீரத்தைக் கானான் தேசத்தில் அடக்கம் பண்ணவில்லை. யோசேப்பின் சரீரம் எகிப்து தேசத்தில் 144 வருஷங்களாக இருக்கிறது. (யாத் 13:19; யோசு 24:32).

யோசேப்பு தன் சகோதரருக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லுகிறார். அவர்களுக்கு ஆறுதலையும் ஆசீர்வாதத்தையும் சொல்ல யாக்கோபு இப்போது உயிரோடில்லை. ஆகையினால் யோசேப்பு அவர்களுடைய தகப்பனாரின் ஸ்தானத்திலிருந்து, அவர்களை நோக்கி, "தேவன் உங்களை நிச்சயமாய் சந்திப்பார்" என்றும், "அவர் உங்களை கானான் தேசத்திற்கு போகப்பண்ணுவார்" என்றும் சொல்லுகிறார்.

யோசேப்பின் சகோதரர் அவருடைய வார்த்தைகளை நம்பவேண்டும். அவர்களுடைய இருதயம் கானான் தேசத்தை நோக்கிப் பார்க்கவேண்டும். கானான் தேசமே அவர்களுக்கு வாக்குத்தத்த தேசம். எகிப்து தேசத்திலே தானியமும், ஆடம்பரமும் இருந்தாலும் இஸ்ரவேல் புத்திரருக்கு அது சொந்த தேசமல்ல.

எகிப்து தேசத்திலே விக்கிரகாராதனை நிரம்பியிருக்கிறது. தங்களுடைய பின்சந்ததியார் எகிப்தின் பாவங்களிலே மூழ்கிப்போய்விடுவார்களோ என்று நினைத்து, இஸ்ரவேல் புத்திரர் பயப்படவேண்டிய அவசியமில்லை. தேவன் அவர்களை நிச்சயமாய் சந்திப்பார். தேவன் அவர்களை இந்த தேசத்தைவிட்டு கானான் தேசத்திற்கு நிச்சயமாய்ப் போகப்பண்ணுவார். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அழிந்துபோகமாட்டார்கள். அவர்கள் கானான் தேசத்திற்கு, ஜெயத்தோடே திரும்பிப்போவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை நம்பவேண்டும். யோசேப்பு கர்த்தருடைய வார்த்தையை நம்புகிறார். அவர் கர்த்தர் மீது தான் வைத்திருக்கும் விசுவாசத்தை உறுதிபண்ணும் வண்ணமாக, தான் மரித்த பின்பு, தன்னுடைய எலும்புகளை கானான் தேசத்திற்கு கொண்டு போகவேண்டும் என்று சொல்லுகிறார்.

யோசேப்பு எகிப்து தேசத்திலே மரித்துப்போகிறார். அவருடைய சரீரத்தை, எகிப்து தேசத்திலே ஒருபெட்டியிலே வைத்து வைக்கிறார்கள். யோசேப்பின் சரீரத்தை எகிப்துதேசத்திலே அடக்கம் பண்ணவில்லையென்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். அவருடைய சரீரம் வைக்கப்பட்ட பெட்டி, கானான் தேசத்திற்கு கொண்டுபோகப்பட்டது என்றும், யோசுவா யோசேப்பின் சரீரத்தை கானான் தேசத்திலே அடக்கம்பண்ணினார் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

யோசேப்பு தன் சகோதரரை நோக்கி, "தேவன் உங்களை சந்திக்கும்போது, என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோவீர்களாக" என்று சொல்லி இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணையிடுவித்துக்கொள்கிறார். யோசேப்பு சொல்லுகிற இந்த வாக்கியத்திற்கு, "என்னுடைய சரீரத்தை எகிப்து தேசத்திலே அடக்கம்பண்ணக்கூடாது என்றும், அதை கானான்தேசத்திற்கு எடுத்துக்கொண்டுபோய், அங்கே அடக்கம்பண்ணவேண்டும்" என்றும் பொருளாகும்.

யோசேப்பு நூற்றுப்பத்து வயதுள்ளவராக எகிப்து தேசத்திலே மரிக்கிறார். யோசேப்பின் சரீரத்திற்கு சுகந்த வர்க்கமிடுகிறார்கள். அவருடைய சரீரத்தை எகிப்து தேசத்திலே ஒரு பெட்டியிலே வைக்கிறார்கள் (ஆதி 50:26). யோசேப்பின் சரீரம் எகிப்து தேசத்திலே அடக்கம் பண்ணப்படவில்லை. இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தை சுதந்தரிக்கும்போது, அவர்கள் யோசேப்பின் சரீரத்தை கானான் தேசத்திலே அடக்கம்பண்ணுகிறார்கள்.

யோசேப்பு மற்ற முற்பிதாக்களைப்போல அதிக வருஷம் வாழவில்லை. அவர்களைவிட வயதில் குறைவாக இருக்கும்பொழுதே யோசேப்பு மரித்துவிடுகிறார். ஆபிரகாமைவிட 65 வயது குறைவு (ஆதி 25:7); ஈசாக்கைவிட எழுபது வருஷம் குறைவு (ஆதி 35:28); யாக்கோபைவிட 37 வயது குறைவு (ஆதி 47:28); சாராளைவிட 17 வயது குறைவு (ஆதி 23:1); இஸ்மவேலைவிட 27 வயது குறைவு (ஆதி 25:17); மோசேயைவிட 10 வயது குறைவு (உபா 31:2)

"இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலேயிருந்து கொண்டுவந்த யோசேப்பின் எலும்புகளை, அவர்கள் சீகேமிலே யாக்கோபு சீகேமின் தகப்பனாகிய எமோரியருடைய புத்திரரின் கையில் நூறு வெள்ளிக்காசுக்குக் கொண்ட நிலத்தின் பங்கிலே அடக்கம்பண்ணினார்கள்; அந்த நிலம் யோசேப்பின் புத்திரருக்குச் சுதந்தரமாயிற்று" (யோசு 24:32).

இவ்வாறாக ஆதியாகமம் புஸ்தகம் முடிவு பெறுகிறது. இந்தப் புஸ்தகத்தின் ஆரம்பத்தில் ஜீவனைப்பற்றியும், இந்தப் புஸ்தகத்தின் முடிவில் மரணத்தைப்பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. மனுஷருடைய பூமிக்குரிய ஜீவியம், ஜீவனில் ஆரம்பித்து மரணத்தில் முடிவு பெறுகிறது.

சவப்பெட்டியைப் பற்றி வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் முதலாவது குறிப்பும், கடைசிக் குறிப்பும் இதுதான். எகிப்து தேசத்தில் யூதர்கள் சவப்பெட்டிகளைப் பயன்படுத்தவில்லை. ஆதியாகமம் புஸ்தகம் தேவனை மையமாக வைத்து ஆரம்பிக்கிறது. மனுஷனை மையமாக வைத்து முடிவு பெறுகிறது. தேவன் ஆதியிலே வானத்தைச் சிருஷ்டிக்கிறார். ஆதியாகமம் கடைசியில் மனுஷனுடைய ஜீவன் எகிப்தில் ஒரு சவப்பெட்டியில் போய் முடிவடைகிறது.

பரிசுத்த வேதாகமத்தில் மனுஷருடைய மரணத்தைப்பற்றி மிகவும் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

மிருகங்களுக்கும் தாவரங்களுக்கும் மரணம் என்பது அதன் அழிவைக் குறிக்கும். அத்துடன் அதன் ஜீவன் முடிந்து போகிறது. மனுஷனுக்கு மரணம் என்பது அவனுடைய ஜீவனின் முடிவல்ல. மனுஷன் சரீரப் பிரகாரமாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். அதே வேளையில் அவன் ஆவிக்குரிய பிரகாரமாகவும் ஜீவிக்கிறான். ஆகையினால் மனுஷனுடைய சரீர மரணம் என்பது அவனுடைய மற்றொரு ஜீவனின் ஆரம்பமாகும்.

மரணத்தில் மூன்று வகைகள் உள்ளன. அவையாவன: 1. சரீர மரணம், 2. ஆவிக்குரிய மரணம், 3. நித்திய மரணம் என்பனவாகும். முதலாவது சரீர மரணம் ஆபேலுக்கு உண்டாயிற்று. ஆபேலின் சகோதரன் காயீன் இவனைக் கொன்று போட்டான் (ஆதி 4:8). தேவன் தாமே சரீரமரணத்தையும் ஆவிக்குரிய மரணத்தையும் பற்றி குறிப்பிட்டிருக்கிறார் (ஆதி 2:17). ஆதியாகமத்தில் வீழ்ச்சி என்பது சரீர மரணத்தையும் ஆவிக்குரிய மரணத்தையும் குறிக்கும். இந்த வீழ்ச்சி பாவத்தின் விளைவினால் உண்டாயிற்று (ரோம 5:12-21).

மனுஷன் மரித்த பின்பு அவன் பாதாளத்திற்குப் போவான் என்று பழங்காலத்து எபிரெய ஜனங்கள் நம்பினார்கள். இந்த உலகத்திலுள்ள தன்னுடைய உற்றார் உறவினர் ஆகிய அனைவரையும் விட்டுவிட்டு மனுஷன் மரித்தபின்பு பாதாளத்திற்குப் போகிறான். அவன் தேவனையும் விட்டு பிரிந்து செல்கிறான். தேவன் சங்கீதக்காரர்களுக்கு ஒரு சத்தியத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். மீட்பராகிய தேவன் பரலோகத்திலும் பாதாளத்திலும் இருக்கிறார் (சங் 139:7-8). பாதாளத்திலிருந்து அவரால் மனுஷனை வெளியே கொண்டுவர முடியும் (1சாமு 2:6).

எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமை அற்றவர்களாக ஆனார்கள் (ரோம 3:23). ஆவிக்குரிய பிரகாரமாக எல்லோருமே மரித்துப் போனார்கள். ஆவிக்குரிய ஜீவனுக்கு ஆதாரமாக இருக்கும் தேவனை விட்டு பிரிந்து போனார்கள். பாவத்தின் விளைவினால் மனுஷன் வெளிச்சத்தையும் சத்தியத்தையும் பகைக்கிறான். தேவனுடைய பிரமாணத்தை மீறுகிறான். இயேசு கிறிஸ்துவினால் ரட்சிக்கப்படாதவர்கள் அனைவரும் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்துப்போயிருக்கிறார்கள் (லூக் 15:32; எபே 2:1-3; கொலோ 2:13).

வேதாகமத்தில் இரண்டாம் மரணத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது (வெளி 2:11). இது நித்திய மரணமாகும். மனுஷன் தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிந்து இரண்டாம் மரணத்தில் நரகத்திற்குப் போகிறான். இரண்டாம் மரணம் என்பது அக்கினி கடலுக்கு ஒப்பானதாகும் (வெளி 20:14). "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" (வெளி 21:8).

அப்போஸ்தலர் பவுல் மரணத்தை சத்துரு என அழைக்கிறார். பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணமாகும் (1கொரி 15:26). இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த போது சரீரப் பிரகாரமான மரணத்தையும், ஆவிக்குரிய மரணத்தையும், நித்திய மரணத்தையும் ஜெயித்தார். மரணபயம் மனுஷரை அடிமைப்படுத்துகிறது (எபி 2:15). "நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது; அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்" (2தீமோ 1:10).

ஒரு தரம் பிறப்பதும் பின்பு ஒரேதரம் மரிப்பதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. மனுஷனுடைய மரிக்கும் காலம் யாருக்கும் தெரியாது. தேவன் வெளிப்படுத்தினால் மட்டுமே அது தெரியும். ஆனாலும் எல்லோரும் மரித்துப் போகவேண்டுமென்று மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கிறது. (எபி 9:27) சவுலின் மரணத்தைக் குறித்து ஒரு அசுத்தஆவி அவனுக்கு வெளிப்படுத்திற்று. (1சாமு 28:19= 1நாளா 10:13-14). ஆயினும் சில சமயங்களில் மனுஷன் மரிப்பதற்கு முன்பாகவே தேவன் அவனுடைய மரணத்தை குறித்து வெளிப்படுத்தியிருக்கிறார். இதன் விவரம் வருமாறு:

1. யாக்கோபு (மரிப்பதற்கு ஒருநாளுக்கு முன்பு) (ஆதி 48:1; ஆதி 49:29-33)

2. ஆரோன் (மரிப்பதற்கு ஒருநாளுக்கு முன்பு) (எண் 20:23-29)

3. மோசே (மரிப்பதற்கு ஒருநாளுக்கு முன்பு) (உபா 31:2; உபா 32:48-52; உபா 34:1-8)

4. யோசுவா (மரிப்பதற்கு ஒருநாளுக்கு முன்பு) (யோசு 23:14)

5. எசேக்கியா (மரிப்பதற்கு ஒருநாளுக்கு முன்பு - ஆனால் கர்த்தர் இதை 15 வருஷமாக மாற்றினார்) (2இராஜா 20:1-8; ஏசா 38)

6. எசேக்கியேலின் மனைவி (மரிப்பதற்கு ஒருநாளுக்கு முன்பு) (எசே 24:15-20)

7. ஐசுவரியமுள்ள மதியீனன். (மரிப்பதற்கு சிலமணி நேரங்களுக்கு முன்பு) (லூக்கா 12:16)

பரிசுத்த வேதாகமத்தில் மூன்றுவிதமான மரணத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. சரீர மரணம் - சரீரத்திலிருந்து உள்ளான மனுஷன் பிரிக்கப்படுவது. (யாக் 2:26)

2. ஆவிக்குரிய மரணம் - பாவத்தின் நிமித்தமாக ஒரு மனுஷன் தேவனிடமிருந்து பிரிக்கப்படுவது. (எபே 2:1,5; ஏசா 59:2; மத் 8:22; கொலோ 2:13; 1தீமோ 5:6)

3. நித்திய மரணம் - மனுஷன் பாவத்தில் ஜீவித்து தேவனிடமிருந்து பிரிந்து வாழவேண்டுமென்று தீர்மானம் பண்ணுவதினால் தேவனிடத்திலிருந்து நித்திய காலமாகப் பிரிக்கப்படுவது. (மத் 10:28; மத் 25:41,46; வெளி 2:11; வெளி 14:9-11; வெளி 20:11-15; வெளி 21:8; வெளி 22:15; ஏசா 66:22-24) இந்த மரணம் இரண்டாம் மரணம் அல்லது தேவனிடமிருந்து இரண்டாம் முறையாகப் பிரிக்கப்படுதல் என்று அழைக்கப்படுகிறது. (வெளி 2:11; வெளி 20:14; வெளி 21:8)

மனுஷன் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். அந்த நோக்கத்திலிருந்து பிரிக்கப்படுவதே மரணம் என்னப்படுகிறது. சரீர மரணத்தில் மனுஷனுடைய சரீரம் மரித்து மண்ணுக்குத் திரும்புகிறது. (ஆதி 3:19; யாக் 2:26) ஆவியும் ஆத்துமாவும் அழியாதவை. சரீரம் மரித்தாலும் ஆவியும், ஆத்துமாவும் பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ மரிக்காமல் உயிரோடு இருக்கும் (1பேதுரு 3:4; லூக்கா 12:5; லூக்கா 16:23).

மனுஷன் மரித்த பின்பு எங்கே போகிறான் என்பதற்கும் பரிசுத்த வேதாகமத்தில் தெளிவான விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

எல்லா மனுஷருக்கும் மரணம் சம்பவிக்கும். ஒரேதரம் மரிப்பது மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. மரித்த பின்பு, மனுஷனுடைய நிலை என்ன என்பதைக் குறித்து பல்வேறு விதமான கருத்துக்கள் கூறப்படுகின்றன.

மரணம் என்றால் என்ன என்பதற்கும் பரிசுத்த வேதாகமத்திலே விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

தேவன் மனுஷனை ஒரு நோக்கத்தோடு சிருஷ்டித்திருக்கிறார். அந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியாதவாறு மனுஷன் ஒதுக்கி வைக்கப்படுவதை மரணம் என்று கூறலாம். மரணத்தில் மூன்று வகைகள் உண்டு. அவையாவன: 1. சரீர மரணம் 2. ஆவிக்குரிய மரணம் 3. இரண்டாம் மரணம்

புறம்பான மனுஷனிலிருந்து உள்ளான மனுஷன் பிரிக்கப்படுவது சரீர மரணமாகும். அதாவது சரீரத்திலிருந்து ஆவியும், ஆத்துமாவும் பிரிக்கப்படுவது. (யாக் 2:26).

மனுஷன் தேவனிடமிருந்து பிரிக்கப்படுவது ஆவிக்குரிய மரணமாகும். மனுஷனுடைய பாவத்தின் விளைவினால் அவன் தேவனோடு வைத்திருக்கும் ஐக்கியத்தை இழந்துபோகிறான். ஒருவன் சரீரப்பிரகாரமாக ஜீவனோடு இருந்தாலும், அவன் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தவனாகவும் இருக்க முடியும். (மத் 8:22; கொலோ 2:14; 1தீமோ 5:6). ஒருவன் சரீரப் பிரகாரமாக மரித்துப்போயிருக்கலாம். ஆனாலும் நரகத்தில் ஜீவனோடு இருப்பான். அவனுடைய ஆவியும், ஆத்துமாவும் மரிப்பதில்லை. உணர்வுள்ளதாகவே இருக்கும். அதாவது உள்ளான மனுஷன் ஒருபோதும் மரிப்பதில்லை.

இதற்கு நித்திய மரணம் என்னும் மறுபெயரும் உள்ளது. தேவனிடமிருந்து இரண்டாம் முறையாக பிரிக்கப்பட்டு, நித்திய அக்கினியில் தள்ளப்படுவது. தேவனிடமிருந்து முதல் முறையாகப் பிரிக்கப்படும்போது அவனுக்கு ஆவிக்குரிய மரணம் உண்டாகிறது. தேவனிடமிருந்து இரண்டாம் முறையாகப் பிரிக்கப்படும்போது அவனுக்கு நித்திய மரணம் உண்டாகிறது. (வெளி 2:11; வெளி 20:6, 14; வெளி 21:8).

பாவத்தின் சம்பளம் நித்திய மரணம். அதாவது தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிக்கப்பட்டு, நரகத்தில் தள்ளப்படுவது. சரீர மரணம் பாவத்தின் சம்பளமாகக் கொடுக்கப்படவில்லை. ஏனெனில் சன்மார்க்கரும், துன்மார்க்கரும் சரீரப் பிரகாரமாக மரித்துப் போகிறார்கள். சரீர மரணம் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அல்ல.

சரீர மரணம் மனுஷனுடைய பாவத்திற்கான தேவனுடைய நியாயத்தீர்ப்பாக இருக்குமென்றால் தேவனால் அவனை மறுபடியும் தண்டிக்க முடியாது. சரீர மரணம் மட்டுமே பாவிக்கு தண்டனையாக இருக்கும். சரீர மரணம் நரகத்திற்கு அல்லது பரலோகத்திற்குச் செல்வதற்கு முன்பாக ஏற்படும் சம்பவம். சரீர மரணத்தை அனுபவிக்கிறவர்களில் சிலர் பரலோகத்திற்கும், சிலர் நரகத்திற்கும் போவார்கள். ஆகையினால் பாவத்தின் சம்பளம் சரீர மரணமல்ல. இரண்டாம் மரணமாகிய நித்திய மரணமே பாவத்தின் சம்பளமாகும்.

பாவத்தின் சம்பளம் ஆவிக்குரிய மரணமுமல்ல. ஆவிக்குரிய மரணம் என்பது மனுஷன் பாவம் செய்யும்போது அவனுக்கு உண்டாகும் நிலைமை. ஆவிக்குரிய மரணத்தை அனுபவிக்கிறவர்கள் தங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பினால், கர்த்தர் அவர்களை இரட்சிப்பார். இரட்சிக்கப்பட்டவர்கள் ஆவிக்குரிய மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்படுகிறார்கள். புதிய ஜீவனைப் பெற்றுக் கொள்கிறார்கள். எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும். எல்லோரும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது தேவனுடைய சித்தம் (ரோமர் 3:23).

பாவத்தின் சம்பளம் சரீர மரணமோ, ஆவிக்குரிய மரணமோ அல்ல. தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கும் நித்திய மரணமே பாவத்தின் சம்பளமாகும். ஆவிக்குரிய மரணம், நித்திய மரணம் ஆகியவற்றின் விளைவினால் சரீர மரணம் உண்டாகிறது. ஆவிக்குரிய மரணத்திற்குத் தண்டனையாக நித்திய மரணம் கொடுக்கப்படுகிறது. (எபே 2:1-9).

மரணத்திலிருந்து உயிர்த்தெழுவதைப்பற்றியும் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

ஒருவன் பாவம் செய்கிறபோது, அவன் ஆவிக்குரிய ரீதியாக மரித்துப்போகிறான். அவன் இரட்சிக்கப்படும்போது ஆவிக்குரிய மரணத்திலிருந்து உயிர்த்தெழுகிறான். (எபே 2:1-10) அவன் மறுபடியும் பிறக்கிறான். (யோவான் 3:1-8) அவன் புதிய சிருஷ்டியாகிறான். (2கொரி 5:17-18) இயேசு கிறிஸ்து மூலமாக அவன் தேவனோடு முழுவதுமாக மறுபடியும் ஒப்புரவாகிறான். (2கொரி 5:14-21; எபே 2:12-16; கொலோ 1:20-22; கொலோ 2:6-13)

ஆத்துமா மரிப்பதில்லை. ஆவியும், ஆத்துமாவும் சேர்ந்து, உள்ளான மனுஷன் என்று அழைக்கப்படுகிறது. ஆவியும், ஆத்துமாவும் மரிப்பதில்லை. சரீரம் மரித்த பின்பும், மரித்த சரீரம் உயிர்த்தெழுந்த பின்பும், ஆவியும், ஆத்துமாவும் நித்திய காலமாக ஜீவனோடு இருக்கும். அவை ஒருபோதும் மரிப்பதில்லை.

சரீரம் மரித்துப்போகும். சரீரம் மண்ணாயிருக்கிறது. அது மண்ணுக்குத் திரும்பும். (ஆதி 3:19; பிர 3:19-21; எபி 9:27; யாக் 2:26). பாவம் ஒழிக்கப்பட்டு, மரணம் அழிக்கப்படும் வரையிலும் மனுஷருடைய சரீரம் மரித்துக் கொண்டேதான் இருக்கும் (1கொரி 15:24-28; வெளி 21:3-7; வெளி 22:3).

பரிசுத்த வேதாகமத்தில் மரித்தோரின் உயிர்தெழுதலைப்பற்றியும் விளக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

ஒருவர் மரிக்கும்போது அவருடைய சரீரம் மட்டுமே மரித்துப் போகிறது. அவருடைய ஆவியும், ஆத்துமாவும் ஒருபோதும் மரிப்பதில்லை. மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்பது மரித்த சரீரங்களின் உயிர்த்தெழுதலைக் குறிக்கும். மண்ணுக்குப்போன சரீரம் மறுபடியும் மண்ணிலிருந்து உயிர்த்தெழும். (தானி 12:2; யோவான் 5:28-29; 1கொரி 15; 1தெச 4:13-17; வெளி 20:4-6,11-15).

மரித்தோரின் சரீரம் மட்டுமே உயிர்த்தெழும். ஆவிக்குரிய உயிர்த்தெழுதலென்று ஒன்றுமே இல்லை. ஆவியும், ஆத்துமாவும் உயிர்த்தெழுவதில்லை. ஒரு மனுஷன் மரிப்பதற்கு முன்பாக அவன் ஜீவனோடு இருக்கும் காலத்தில் ஆவிக்குரிய உயிர்த்தெழுதல் நடைபெறுவதற்கு வாய்ப்புள்ளது (எபே 2:1-10; கொலோ 2:11-13)

மனுஷருடைய சரீரம் மரித்த பின்பு, அவனுடைய ஆவியும் ஆத்துமாவும் உயிரோடு இருக்கும். அவை உயிர்த்தெழுவதில்லை. இம்மையில் ஒருவன் ஆவிக்குரிய ரீதியாக உயிர்த்தெழவில்லையென்றால், மறுமையில் அவன் ஆவிக்குரிய ரீதியாக மரித்தவனாகவே இருப்பான். அவன் தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிந்திருப்பான். (எபி 9:27; எபி 22:11).

சரீரம் மரித்துப்போகும். மரித்துப்போன சரீரம் உயிர்த்தெழுந்தபின்பு, அது மறுபடியும் மரித்துப் போவதில்லை. உயிர்த்தெழுந்த சரீரம் நித்திய காலமாய் ஜீவனோடு இருக்கும்.

சரீர மரணத்திற்கும், சரீர உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட நிலமை உண்டு. அதன் விளக்கம் வருமாறு :

சரீர மரணத்தில் சரீரம் மண்ணுக்குப் போகிறது. (ஆதி 3:19; பிர 3:19-21; யாக் 2:26) உள்ளான மனுஷனாகிய ஆவியும், ஆத்துமாவும் சரீரத்திலிருந்து பிரிந்து போகிறது. உயிர்த்தெழும் நாள் வரையிலும் சரீரம் மரித்ததாகவே இருக்கும். உயிர்த்தெழும் நாளில் சரீரம் மறுபடியும் உயிரோடு எழும்புகிறது. உயிர்த்தெழுந்த சரீரம் ஒருபோதும் மரித்துப் போவதில்லை. (1கொரி 15:35-54). இந்த இடைப்பட்ட காலத்தில் ஆவியும், ஆத்துமாவும் மரித்துப் போகாமல் ஜீவனோடு இருக்கும்.

அவை பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ இருக்கலாம். சரீரம் உயிர்த்தெழும் நாள் வரையிலும் அவை அங்கிருக்கும். உயிர்த்தெழும் நாளில் சரீரம் உயிர்த்தெழும்போது அதன் ஆவியும், ஆத்துமாவும் அதன் சரீரத்தோடு சேர்ந்து கொள்ளும்.

சரீர மரணத்தின்போது ஆவியும், ஆத்துமாவும் சரீரத்தை விட்டுப் பிரிந்து போகிறது. (யாக் 2:26). ஒருவன் இரட்சிக்கப் பட்டு மரித்துப்போனால், அவன் மரணமடைந்தவுடன், அவனுடைய ஆவியும், ஆத்துமாவும், உடனடியாகப் பரலோகத்திற்குச் செல்லும். அங்கு அவை அவனுடைய சரீரத்தின் உயிர்த்தெழுதலுக்காகக் காத்திருக்கும். (லூக்கா 20:38; யோவான் 11:25-26; 2கொரி 5:8; எபே 3:15; எபே 4:8-10; பிலி 1:21-24; எபி 12:22-23; வெளி 6:9-11).

ஒருவன் இரட்சிக்கப்படாமல் பாவியாக மரித்துப் போனால், அவன் மரணமடைந்தவுடன் அவனுடைய ஆவியும், ஆத்துமாவும் உடனடியாக நரகத்திற்குச் செல்லும். அங்கு அவை அவனுடைய சரீரத்தின் உயிர்த்தெழுதலுக்காகக் காத்திருக்கும் (ஏசா 14:9;லூக்கா 16:19-31; 2பேதுரு 2:9; வெளி 20:11-15).

பாதாளத்தில் மரித்தோரின் ஆவிகள் இருக்கும் இடங்களைப்பற்றிய விவரம் வருமாறு:

பாதாளத்தில் மரித்தோரின் ஆவிகளுக்கு ஐந்து சிறையிருப்புக்கள் உள்ளன. அவையாவன:

1. டார்டரஸ் எனப்படும் காவல் 2. பரதீசு 3. நரகம் 4. பாதாளம் 5. அக்கினிக்கடல்

1. டார்டரஸ் எனப்படும் காவல் (1பேதுரு 3:19; 2பேதுரு 2:4; யூதா 1:6-7). ஜலப்பிரளயத்தின் காலத்திற்கு முன்பாக விழுந்துபோன தூதர்களைக் காவல் பண்ணி வைத்திருக்கும் இடம். இந்தச் சிறைச்சாலைக்கு மனுஷருடைய ஆவிகளோ, பிசாசுகளோ போவதில்லை (2பேதுரு 2:4)

2. பரதீசு (லூக்கா 16:19-31; லூக்கா 23:43). நீதிமான் மரித்த பின்பு, அவனுடைய ஆவியும், ஆத்துமாவும் தங்கியிருக்கும் இடம். நீதிமான்களின் சித்தத்திற்கு எதிராகப் பிசாசு இவர்களை இங்கு சிறை வைத்திருந்தான். கிறிஸ்து மரணத்தையும், நரகத்தையும், பாதாளத்தையும் ஜெயித்த பின்பு, அவர் பூமியின் தாழ்விடங்களுக்குச் சென்று அங்கு காவலிலிருந்த நீதிமான்களின் ஆவிகளை விடுவித்தார். இப்பொழுது இந்த பரதீசில் நீதிமானின் ஆவிகள் ஒன்றுமில்லை. இயேசு கிறிஸ்து நீதிமானின் ஆவிகளைச் சிறைபிடித்து அவர் பரமேறியபோது தம்மோடு அவர்களையும் பரலோகத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டார். இப்போது நீதிமான் மரிக்கும்போது அவனுடைய ஆவி பரதீசிற்குச் செல்லாமல் நேராக பரலோகத்திற்கே சென்றுவிடுகிறது. (லூக்கா 16:22; எபே 4:8; எபி 2:15)

3. நரகம் (மத் 16:18; லூக்கா 16:19-31). சீயோல் அல்லது பாதாளத்தில் உள்ள பகுதி. துன்மார்க்கர் மரித்துப்போகும்போது அவர்களுடைய ஆவிகள் இங்கே செல்லும். ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவு வரையிலும் துன்மார்க்கர் மரித்துப் போகும் போது அவர்களுடைய ஆவிகள் இங்குதான் போய் கொண்டிருக்கும். ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் துன்மார்க்கருடைய ஆவிகளும், ஆத்துமாக்களும் அவர்களுடைய உயிர்த்தெழுந்த சரீரங்களோடு சேர்க்கப்படும். அதன் பின்பு, அவர்கள் நித்திய அக்கினிக் கடலில் நித்திய காலமாகப் பாடுகளை அனுபவிக்குமாறு தள்ளப்படுவார்கள். (வெளி 20:11-15).

4. பாதாளம் (லூக்கா 8:26-31; ரோமர் 10:7; வெளி 9:1-3,11; வெளி 11:7; வெளி 17:8; வெளி 20:1-10) இது பிசாசுகளுக்கும், சில தூதர்களுக்கும் நியமிக்கப்பட்டிருக்கும் பகுதி. மனுஷருடைய ஆவியும், ஆத்துமாவும் இங்கு போவதில்லை. பழைய ஏற்பாட்டில் அபத்தோன் என்னும் சொல் இந்தப் பாதாளத்தையே குறிக்கிறது. (யோபு 26:6; யோபு 28:22; யோபு 31:12; சங் 88:11; நீதி 15:11; நீதி 27:20).

5. அக்கினிக்கடல் இது நித்திய நரகம். விழுந்துபோன தூதர்களும், பிசாசுகளும் துன்மார்க்கரும் இங்கு நித்திய காலமாக பாடுகளை அனுபவிப்பதற்காகத் தள்ளப்பட்டிருப்பார்கள். (வெளி 20:6,11-15; வெளி 21:8; வெளி 22:15). கிரேக்க மொழியில் "கெயென்னா" என்னும் வார்த்தை இந்த அக்கினிக் கடலையே குறிக்கும். (லூக்கா 12:5) பிசாசுக்கும், அவனுடைய தூதர்களுக்கும் இந்த அக்கினிக்கடல் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. (மத் 25:41) அக்கினிக் கடலில் தள்ளப்படுகிறவர்கள் இங்கு நித்திய காலமாக வேதனை அனுபவிக்கவேண்டும். (ஏசா 66:22-24; மத் 25:46; வெளி 14:9-14; வெளி 19:20; வெளி 20:10-15).